# புதுச்சிருஷ்டியில் ஒழுங்குமுறைகள்

சகோ. சார்லஸ் டேஸ் ரசல்

# புதுச்சிருஷ்டியில் ஒழுங்குமுறைகள்

[*தமிழாக்கம்*]

பாஸ்டர் சார்லஸ் டேஸ் ரசல் அவர்களினால்,
புதுச்சிருஷ்டியில் காணப்பட வேண்டிய ஒழுங்குமுறைகள் தொடர்பாக
எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கின தொகுதி.

**இராஜாதிராஜாவுக்கும் கர்த்தாதிகர்த்தாவுமானவருக்கும்**

புத்திர சுவிகாரத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும்

அர்ப்பணிக்கப்பட்ட அவருடைய பரிசுத்தவான்களின் நலனுக்காக

---

**இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.**

---

**"சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது."**

**— 1 கொரி. 14:40**

# முகவுரை

ஒழுங்குமுறையின் மீது நம்முடைய சிந்தனையைச் செலுத்துகையில் கொரிந்து பட்டணத்தில் குழப்பத்தில் காணப்பட்ட சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுலினால் எழுதப்பட்ட வேதவாக்கியத்தை நாம் நினைவுகூருகின்றோம். ஆம்! நாம் 1 கொரிந்தியர் 14:33-ஆம் வசனத்தையே குறிப்பிடுகின்றோம்... அதன் BBE மொழியாக்கம் பின்வருமாறு:

"ஏனென்றால் தேவன் ஒழுங்கின்மையை தம்முடைய வழியாக கொண்ட தேவன் அல்ல, மாறாக சமாதானத்தின் தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது."

பிரபஞ்சத்தின் தேவனும், சகல ஜீவராசிகளின் தேவனும் (யோபு 12:10) மற்றும் புதுச்சிருஷ்டியின் தந்தையாம் பிதாவுமானவர் ஒழுங்கின் தேவனாய் இருக்கின்றார் என்று நாம் உணர்கின்றோம். இந்த ஒழுங்கானது தேவனுடைய பல்வேறு கிரியைகளாகிய சகல சிருஷ்டிப்புகளிலும், மனிதனுக்கான தேவனுடைய தெய்வீகத் திட்டத்திலும் விளங்குகின்றது. இந்த ஒழுங்கு என்பது தேவனுடைய பரிசுத்த ஆவியின் - தேவனுடைய மனதின் வெளிப்பாடாய் இருக்கின்றது; மேலும் இந்த ஆவியைப் பெற்றிருப்பவர்கள் யாவருக்கும் தெளிந்த மனம் கொடுக்கப்படுகின்றது என்று பிரியமான அப்போஸ்தலன் பவுல் நமக்குத் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்த உலகமும் விழுந்துபோன நிலமையில் (ரோமர் 5:12) இந்த ஒழுங்கிற்கு அந்நியர்களாகவும், அதைக் குறித்து அறியாதவர்களாகவும் காணப்படுகையில், இந்தச் சுவிசேஷயுகத்தில் முதற்பலன்களாகவும், (யாக்கோபு 1:18) ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதன் வாயிலாக இரட்சிப்பையும், ஜீவனையும் அடையப்போகிறவர்களுமான புதுச்சிருஷ்டிகள் என்பவர்கள் ஒழுங்குமுறையெனும் இக்கொள்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்களாகவும், இதற்கு நேராய் வழிக் காட்டப்பட்டவர்களாகவும் காணப் படுகின்றனர். இது தேவனுடைய பரிபூரண சிருஷ்டிகள் யாவற்றிற்கும் இன்றியமையாத ஓர் அம்சமாய்க் காணப்படுகின்றது.

ஆனால், இந்த ஒழுங்கு என்பது நம்முடைய விழுந்துபோன நிலைமையிலுள்ள சீரழிந்த மற்றும் விழுந்துபோன சுபாவத்தின் இயல்பாய்க் காணப்படுகிறதில்லை. உண்மையில் இதற்கு நேர்மாறாக ஒழுங்கின்மையும், குழப்பமுமே இயல்பாய் இருக்கின்றது. ஆகையால், தேவனுடைய இந்தக் கொள்கைகளின் மீது அதிகமான தியானமும், ஆராய்ச்சியும், அதற்குக் கீழ்ப்படிய மனமார்ந்த விருப்பமும் அவசியமாய் இருக்கும்; இப்படியாகத் திவ்விய சாயலுக்கும், அதற்கொத்த சாயலுக்கும் மறுரூபமாக முடியும். நாம் சிந்தனை செய்வதற்கு இத்தகைய உணவுகளை அருளுவதே, இப்புத்தகத்தைத் தொகுத்து, மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதற்கான நோக்கமுமாய்க் காணப்படுகின்றது.

நம்முடைய பிதாவுக்கும், நம்முடைய ஆண்டவருக்கும், அவர்களுடைய இத்தகைய கிருபைக்காக ஸ்தோத்திரம் செலுத்தியும், ஊக்கமாய் ஜெபித்தும் இந்தப் புத்தகத்தை உங்கள் யாவருக்கும் சமர்ப்பிக்கின்றோம். ஒவ்வொரு புதுச்சிருஷ்டியிலும் இந்த ஒழுங்கானது அடையப்பெறுகையில், அதன் தாக்கத்தினைக் குறித்து நமக்குத் தெரிவிக்கும் ஒரு வேதவாக்கியத்தோடு இந்த முன்னுரையை நிறைவுசெய்கின்றோம். அதை நாம் BBE மொழியாக்கத்திலிருந்து வாசித்தறியலாம்:

"ஆனால் தூய்மையான உள்ளம், நல்ல மனச்சான்று, வெளிவேடமற்ற விசுவாசம் ஆகியவற்றினின்று வெளிப்படுகிற அன்பே ஒழுங்கின் பலனாக இருக்கிறது" (1 தீமோத்தேயு 1:5).

தேவன்தாமே நம்முடைய இருதயங்களிலும், ஜீவியங்களிலும் இந்தப் பிரயாசங்களை ஆசீர்வதிப்பாராக!

- வெளியீட்டாளர்.

# பொருளடக்கம்


| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| பாகம் 1 - மெய்ச்சபை ஒழுங்குமுறைகள் | | | |
| 1. | R536 | சபை நிர்வாகம் | 3 |
| 2. | R1889 | நல்லொழுக்கமாயும், கிரமமாயும் | 7 |
| 3. | R1883 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 46 |
| 4. | R1521 | பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் | 48 |
| 5. | R5587 | சபையின் ஏற்படுத்துதல் | 84 |
| 6. | R664/R295 | எக்ளீஷியா | 88 |
| 7. | R5809/R5186 | தேவாலயத்தில் கொண்டிருக்கவேண்டிய நல்லொழுக்கம் | 96 |
| பாகம் 2 - பிரதான அவசியமாகிய தாழ்மை | | | |
| 8. | R2654 | சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும்,... | 103 |
| 9. | R5793 | சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை | 110 |
| 10. | R4033 | தேவனோடே போர்ப்புரிதல் | 118 |
| 11. | R3795 | பரலோக இராஜ்யத்தில் பெரியவன் | 123 |
| 12. | R4163/R2449 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 125 |
| 13. | R5321 | சீஷயத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி | 126 |
| 14. | R2995 | யுக மாற்றங்களைக் கவனித்தல் | 131 |
| 15. | R5315 | ஒரு நல்ல மனிதனின் பாவம் | 133 |
| பாகம் 3 - மாபெரும் பொல்லாப்பாகிய பெருமை | | | |
| 16. | R5955 | ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம் | 137 |
| 17. | R3613 | தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை | 156 |
| 18. | R3638 | நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார் | 162 |
| 19. | R3864 | லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல் | 165 |

| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 20. | R4380 | நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை | 182 |
| | | **பாகம் 4 - சபையாரும், ஊழியக்காரர்களும்** | |
| 21. | R3033 | அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து | 189 |
| 22. | R3745 | தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும் | 199 |
| 23. | R3171 | மூப்பருக்குரிய பொறுப்புகள் | 208 |
| 24. | R5939 | உண்மையான மற்றும் தவறான ஏற்படுத்துதல்கள் | 219 |
| 25. | R5981 | சோதனை காலம் | 227 |
| 26. | R4501 | சண்டைக்காரராயிருந்து | 246 |
| 27. | R1956 | கைகளை வைத்தல் | 259 |
| 28. | R5020 | உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு | 263 |
| 29. | R5185 | மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை | 268 |
| 30. | R5304 | உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை | 275 |
| 31. | R3014 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 277 |
| 32. | R4994 | சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும் | 278 |
| 33. | R5921 | சபையில் அன்பு | 284 |
| 34. | R2924 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 289 |
| 35. | R4458/R5935 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 290 |
| 36. | R5501 | கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம் | 304 |
| 37. | R3011 | நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல் | 307 |
| 38. | R4968 | வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான... | 313 |
| 39. | R4345 | உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 313 |
| 40. | R5346 | நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால் | 315 |
| 41. | R2220 | பரிசுத்த பவுலினுடைய இருதயம் வெளியானது | 326 |

| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 42. | R1720 | அறிமுகக் கடிதங்கள் | 332 |
| 43. | R1847 | Tract Society-இன் அறிமுகக் கடிதங்கள் | 338 |
| 44. | R3744 | சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல் | 344 |
| 45. | R5336 | மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் | 346 |
| 46. | R4183 | இவர்களிலும் நீ என்னில் அன்பாயிருக்கின்றாயா? | 350 |
| 47. | R3751 | ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் | 357 |
| 48. | R2951 | உதவிக்காரனாகிய ஸ்தேவான் கிறிஸ்தவ இரத்தசாட்சி | 362 |
| 49. | R4929 | அறுவடை என்பது விசேஷித்த சோதனைகாலமாகும் | 372 |
| 50. | R5350 | மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் | 374 |
| 51. | R5368 | அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள் | 377 |
| 52. | R3943 | உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 379 |
| 53. | R4472 | எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் | 382 |
| 54. | R2442 | தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும் | 383 |
| 55. | R3135 | நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் | 387 |
| 56. | R3142 | உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல | 402 |
| 57. | R5929 | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 407 |
| 58. | R5644 | தேவனிடத்திலான தனிப்பட்ட நம்முடைய பொறுப்பு | 410 |
| 59. | R4977 | நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல் | 412 |
| 60. | R4197 | ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல் | 424 |
| 61. | R1159 | ஓர் உருவகக் கதை | 429 |
| 62. | R5388 | மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை | 433 |
| 63. | R1136 | இராஜரிக ஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு | 437 |

| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 64. | R3077 | தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார் | 438 |
| 65. | R3938 | பொருளாசையின் அபாயம் | 440 |
| 66. | R1475 | நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர் | 441 |
| 67. | R4927 | மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு | 445 |
| 68. | R3906 | பயண சகோதரர்களின் ஊழியங்கள் | 449 |
| 69. | R4312 | சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம் | 451 |
| 70. | R4709 | அவர் அரைக்கட்டிக்கொண்டு, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் | 455 |
| 71. | R3210 | தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை | 457 |
| 72. | R4251 | சபை என்றால் என்ன? | 460 |
| 73. | R5409 | சில சுவாரசியமான கடிதங்கள் | 466 |
| 74. | R4359 | கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி | 471 |
| 75. | R5888 | கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புபவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர் | 473 |
| 76. | R5954 | சுவாரசியமான கடிதங்கள் | 475 |
| 77. | R4417 | தெசலோனிக்கேயருக்குப் பவுல் அடிகளார்...ஆலோசனை | 478 |
| 78. | R5888 | சுவாரசியமான கடிதங்கள் | 485 |
| 79. | R2264 | ஏதோ புதுமையென்று திகையாமல் | 488 |
| 80. | R3004 | ஆதி காலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள் | 503 |
| 81. | R5704 | சுவாரசியமான கடிதங்கள் | 505 |
| 82. | R5789 | சுவாரசியமான கடிதங்கள் | 509 |
| 83. | R5122 | சுவாரசியமான கடிதங்கள் | 511 |
| 84. | R241 | யார் பிரசங்கிக்க வேண்டும் | 514 |
| 85. | R4771 | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 515 |

| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 86. | R5698 | சாந்தகுணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 518 |
| 87. | R5161 | சுவாரசியமான கேள்விகள் | 521 |
| 88. | R5922 | சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக | 522 |
| 89. | R2079 | பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் | 523 |
| 90. | CR122 | பயண ஊழியர்கள், மூப்பர்கள் & உதவிக்காரர்களுக்கான... கூட்டம் | 528 |
| | | **பாகம் 5 - சபையில் ஸ்திரீகள்** | |
| 91. | R4121 | போதித்தல் என்றால் என்ன? | 545 |
| 92. | R3826 | ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு | 552 |
| 93. | R1548 | தேவனுடைய ஒழுங்கில் புருஷனும்-ஸ்திரீயும் | 561 |
| 94. | R5922 | சுவாரசியமான கடிதங்கள் | 581 |
| 95. | R5161 | சுவாரசியமான சில கடிதங்கள் | 581 |
| 96. | R1902 | உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும்.. | 585 |
| 97. | R1034/R1539 | யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம் | 587 |
| 98. | R5984 | உலகளாவிய மேய்ப்பரது வேலை | 588 |
| 99. | R1075 | தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற...ஏற்றபடியே | 605 |
| | | **பாகம் 6 - மத்தேயு 18:15-17** | |
| 100. | R4984 | மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான வேதவாக்கிய விதி | 613 |
| 101. | R5517 | நாவை அடக்குவது அவசியமாகும் | 622 |
| 102. | R4802 | சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள் | 623 |
| 103. | R5528 | தீமை பேசுதல் என்றால் என்ன? | 633 |
| 104. | R5122 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 643 |
| 105. | R4770 | கெட்ட வார்த்தை என்றால் என்ன? | 644 |
| 106. | R4597 | எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்? | 645 |

| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 107. | R2156 | உன் நாவைப் பொல்லாப்புக்கு விலக்கிக் காத்துக்கொள் | 648 |
| 108. | R2278/R3593 | நாட்கள் பொல்லாதவைகளானதால்... | 652 |
| | | **பாகம் 7 - கூட்டங்கள்** | |
| 109. | R3089 | நீங்கள் உறுதிப்பட்டிருந்தும் | 675 |
| 110. | R1900 | வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் குழுக்கள் | 683 |
| 111. | R1866 | பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக... | 687 |
| 112. | R5918 | நல்ல, மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி | 702 |
| 113. | R5142 | பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள் | 705 |
| 114. | R3517 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள் | 709 |
| 115. | R3800 | அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி | 715 |
| 116. | R3769 | மே மாதத்திற்கான பெரோயா வேதாகம ஆராய்ச்சி | 718 |
| 117. | R5703 | பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் | 718 |
| 118. | R4008 | அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி | 719 |
| 119. | R5131 | அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை | 734 |
| 120. | R4821 | புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி | 736 |
| 121. | R5384 | ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை | 741 |
| 122. | R5474 | நல் நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள் | 750 |
| 123. | R2291 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 753 |
| 124. | R1793 | நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு | 757 |
| 125. | R5255 | பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக் கூட்டங்கள் | 758 |
| | | **பாகம் 8 - பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்** | |
| (i) | சபை | | 763 |
| (ii) | பொதுவான கேள்விகள் | | 776 |

| வ. எண். | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| (iii) | ஏற்படுத்துதல் | 790 |
| (iv) | சகோதரிகள் | 802 |
| (v) | மேய்ப்பரது வேலை | 810 |
| (vi) | தேர்ந்தெடுத்தல் | 816 |
| (vii) | கூட்டங்கள் | 869 |
| | **பாகம் 9 - தொகுதி - VI** | |
| (i) | அத்தியாயம் - 5 | 909 |
| (ii) | அத்தியாயம் - 6 | 954 |
| | **அட்டவணை** | |
| (i) | ரீப்பிரிண்ட்ஸ் அட்டவணை | 1041 |
| (ii) | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்களுக்கான அட்டவணை | 1042 |

## பாகம் – 1

# மெய்ச்சபை ஒழுங்குமுறைகள்

# சபை நிர்வாகம்

"எக்ளீஷியா" என்ற தலைப்பில் டவர் வெளியீட்டில் வந்திட்டதான கட்டுரையின் காரியங்களானது, கிறிஸ்துவின் சபை என்றால் என்ன என்றும், சத்தியம் மற்றும் அன்பின் ஆவியானது யுகம் முழுவதிலுமுள்ள பரிசுத்தவான்களைக் கட்டி இணைக்கின்றது என்றும் நம்மைப் புரிந்துகொள்ளச் செய்தது. ஆனால் சபை பிரிவுணர்ச்சியினின்று, ஆதியிலிருந்ததும் மற்றும் ஈடுபலியில் விசுவாசமுள்ள பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகள் யாவரையும் உள்ளடக்கும் உண்மையானதுமான ஒரே சபையினிடத்திற்குத் திரும்பி வந்துகொண்டிருக்கின்றதான அநேகம் ஊழியக்காரர்களிடமிருந்தும் மற்றும் இன்னும் பலரிடமிருந்தும், கேள்விகள் நமக்கு வருகின்றன; ஒவ்வொரு பட்டணங்களிலும் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் பெற்றிருக்கும் உள்ளூர் அமைப்புகளை அப்போஸ்தலர்கள் நிறுவினதை நாங்கள் அங்கீகரிக்கின்றோமா? ஒருவேளை நாங்கள் அப்படியாகப் பெற்றிருக்கவில்லை என்றால், ஏன்? அப்போஸ்தலர்களுடைய நாட்களில் காணப்பட்டிருந்த organization/அமைப்பானது, இப்பொழுது பெற்றிருப்பது சரியாய் இராதா? இப்படியாக எந்த அமைப்புகளும் இல்லையெனில் சுவிசேஷ ஊழியமும், போதித்தல்களும் எப்படி வெற்றிகரமாக நடத்தப்படுகின்றது?" என்றும் நம்மிடம் கேட்கின்றார்கள்.

நம்முடைய நாட்களின் சூழ்நிலைகளிலிருந்து, அப்போஸ்தலருடைய நாட்களின் சூழ்நிலைகள் வேறுபட்டிருக்கின்றது என்று நாங்கள் பதிலளிக்கின்றோம்; எப்படியெனில் அவர்களது வேலையானது அப்போதுதான் துவங்குகின்றதான யுகத்தின் வேலைக்கு ஒழுங்குப்படுத்துவதாகவும், அஸ்திபாரம் போடுவதாகவும் அதிகம் காணப்பட்டது; ஆனால் நம்முடைய வேலையோ இதற்கு நேர்மாறானதாகும்; இப்பொழுது இந்த யுகத்தின் முடிவாக அல்லது அறுவடைகாலமாக இருக்கின்றது; அப்போதும், இப்போதுமுள்ள வழிமுறைகளானது, விவசாயி விதை விதைப்பதற்கும் மற்றும் அறுவடையை அறுப்பதற்கும் பயன்படுத்தும் வழிமுறைகளும், கருவிகளும் வேறுபடுவது போன்று, வேறுபடுகின்றது.

யூதயுக அறுவடையின் போதான இயேசுவின் வழிமுறைகளானது, தற்போதைய வேலைக்கு நல்லதொரு வழிக்காட்டியாய் இருக்கின்றது. அவருக்கு எப்படியோ, அப்படியே நமக்குமாகும். அவரது ஊழியம் சமாதானம் கொண்டுவருவதாய் இராமல், பட்டயத்தை - பிரிவினையைக்கொண்டு வருவதாய் இருந்தது (மத்தேயு 10:34). சிலவிதங்களில் பிரிப்பதும், இடிப்பதுமாகிய வேலைகள் கட்டியெழுப்பும் வேலை போன்று மனதுக்குகந்த வேலையாய் இருப்பதில்லை; ஆனால் நாம் எஜமானுடைய சித்தத்தைச் செய்திடுவதற்கு ஆவலுள்ளவர்களாய் இருப்போமானால், இது தவிர நமக்கு வேறு எந்த விருப்பமும் இராது மற்றும் அதிலும் விசேஷமாகப் பரிசுத்தவான்களை மகிமைப்படுத்துவதற்கும் மற்றும் அவர்கள்

வாயிலாகப் பொதுவாயிருக்கும் மனுக்குலத்திற்கென ஆசீர்வாதத்தின் யுகத்தினைக் கொண்டுவருவதற்கும் பிரித்தல் அவசியம் என்று அவர் நமக்குக் காண்பித்திருப்பாரெனில், இது தவிர, நமக்கு வேறு எந்த விருப்பமும் இராது. இப்படிப் பார்க்கையில் அறுவடையானது, திராட்சத்தோட்டத்தில் மிகுந்த மகிழ்ச்சிகரமான வேலையாகிடும்.

இயேசு யூத அறுவடையின் போது சீஷர்களோடு காணப்படுகையில், அவர் சபைகளை ஏற்படுத்தவில்லை என்பதினால், நாமும் அப்போஸ்தலர்களினால் நிறுவப்பட்டதான எளிமையான மற்றும் பிரிவற்ற அமைப்புகள் அவசியம் என்றோ அல்லது விரும்பத்தக்கது என்றோ நாம் கருதுகிறதில்லை. நமது கர்த்தர் மறுபடியுமாக வந்திருக்கின்றார்; "அடிமையின் ரூபத்தில் அல்ல," மாம்சத்தில் அல்ல, மாறாக ஆவிக்குரிய ஜீவியாக வந்திருக்கின்றார்; அவர் வந்து காணப்படுகின்றபடியால், அவர் அனைத்திலும் ஒவ்வொரு ஊழியக்காரனுக்கு வழிகாட்டியாகவும், வழிநடத்துபவராகவும் காணப்படுகின்றார்.

ஆனால் எந்தப் பூமிக்குரிய அமைப்பும் உருவாக்கப்பட முற்படவில்லை என்றாலும், நாம் அனைவரும் ஒன்றாய் ஒரே தலையானவருடன் இணைக்கப்பட்டிருக்கின்றோம் மற்றும் அவரது வசனம் மற்றும் ஆவியின் வழிநடத்துதல்களைப் பின்பற்றிக்கொண்டிருக்கின்றோம். நம்மில் எவரேனும் வழிவிலகுவதையும், "சத்தியத்தை விட்டுவிலகி மோசம் போகுவதையும்" நாம் காண்கையில், ஒவ்வொரு அங்கத்தினனும், இப்படியாக விலகிப்போகிறவனைச் சத்தியத்திற்குள்ளாகச் சீர்ப்பொருந்தப் பண்ணுவதற்குத் தன்னால் முடிந்தவற்றைச் செய்திடுவதற்கான அன்பின் கடமையினை உணர்கின்றவனாய் இருப்பான்; எனினும் சீர்ப்படுத்துதல் முதலியவைகளிலுள்ள மேலான பொறுப்பானது, வந்திருக்கும் நமது ஆண்டவருடையது என்றும், அவர் இதைச் செய்யவும் செய்வார் என்றும் நாம் உணர்வோம். அவர் சித்தம் செய்ய நாம் செயல்பட்டு, பலனை அவரிடம் விட்டுவிடுவோம்.

நம்முடைய ஊழியக்காரர்கள் ஒருவேளை கூடிவந்திருந்தால் - எப்படி இயேசுவின் பின்னடியார்கள் முதலாம் வந்திருத்தலின்போது பரிசேயர், வேதபாரகர்களிடமிருந்து வேறுபட்டுக் காணப்பட்டார்களோ, அதுபோலவே இவர்கள், "பெயர்ச்சபையை" சேர்ந்தவர்களிடமிருந்து பலமாய் வேறுபட்டுக் காணப்படுவார்கள்.

பெயர்ச்சபை ஊழியக்காரர்கள் பிரபலத்திற்காக நாடி, அதைப் பெற்றுக்கொள்கின்றனர்; மற்றும் அவர்களது ஊழியங்களுக்குத் திரளாய் ஆதரிக்கப்பட்டு, கனப்படுத்தப்படுவதன் வாயிலாகப் பலன் கிடைக்கின்றது. தாலந்துள்ள ஒரு வாலிபனுக்குப் பெயர்ச்சபை ஊழியத்திற்குள்ளாகப் பிரவேசிப்பதைக் காட்டிலும், வேறெதுவும் கனங்களுக்கும், சுகங்களுக்கும் மற்றும் சௌகரியமான ஜீவியங்களுக்கும் நேரான சுலபமான அல்லது நேர் வழியாய்

இருக்காது. ஆனால் சத்தியத்தின் மீதான அன்பின் காரணமாகவும், தேவனுக்கு மகிமை சேர்க்க வேண்டும் என்பதற்காகவும் மனிதர்கள் கேட்கின்றார்களோ இல்லையோ, அவர்களுக்குத் தேவனுடைய ஆலோசனை வழங்குவதற்குச் செல்பவர்களின் விஷயம் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவர்களுக்கு எந்த விதத்திலும் தேவனுடைய சுதந்தரத்தின் மீதான இறுமாப்பான ஆளுகையானது சம்பளமாக வழங்கப்படுகிறதில்லை; மாறாக இவர்கள் தங்களது ஆண்டவரைப் போன்று, மனுஷரால் வெறுத்து, புறக்கணிக்கப்படுகின்றனர்; ஆனால் இவர்கள் தேவனுடைய மகிமை வெளிப்படுவதற்காக சந்தோஷத்தோடு எதிர்நோக்கி, தற்காலத்தின் துன்புறுத்தல்கள், கஷ்டங்கள் மற்றும் சோதனைகள் எனும் கூலியினைப் பெற்றுக்கொள்வதைச் சிலாக்கியமெனக் கருதுகின்றனர். இவர்கள் எந்தத் தாலந்துகளைப் பெற்றிருந்தாலும், அவைகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பினும், அதை நன்மைக்கேதுவாய்ப் பயன்படுத்துகின்றனர். "டவர்" வெளியீட்டுனுடைய பக்கங்கள் வாயிலாக சிலர் தங்களுக்குள் பெற்றிருக்கும் வரங்களைத் தட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றனர் மற்றும் சிலருக்கு வாய்ப்பு இருப்பதற்கேற்ப ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பிரயாணம்பண்ணி வார்த்தைகள் மூலமாகவும், அச்சடிக்கப்பட்ட பக்கங்கள் மூலமாகவும் பிரசங்கிக்கின்றனர்; அவ்வளவுக்குப் பரந்த வாய்ப்புகளற்ற வேறு சிலர் தங்கள் சொந்த இடங்களில் ஊழியத்தில் ஈடுபட்டுக் காணப்படுகின்றனர். சிலருக்குத் தங்களுடைய முழு நேரத்தையும் நேரடியாக சுவிசேஷபணிக்குக் கொடுத்துவிட முடிகின்றது; பெரும்பான்மையானவர்கள், "எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுவதற்கென" சொந்த கைகளினால் உழைத்திடக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

கிறிஸ்துவின் இந்த ஊழியக்காரர்களில் (வேலைக்காரர்களில்) பெரும்பான்மையானவர்கள் பரிசுத்தவான்களைத் தேடுவதன் மூலம் தங்கள் வேலையைச் செய்கின்றனர்; இந்தப் பரிசுத்தவான்களுக்கே தற்கால சத்தியங்களானது ஏற்றகால சத்தியமாகக் காணப்படுகின்றது மற்றும் இப்பாடங்களைக்குறித்த உரையாடல் மூலமாகவும், குறிப்பிட்ட சில கட்டுரைகளுள்ள காகிதங்களை வாசிக்க இரவலாகக் கொடுப்பதன் மூலமாகவும், இவர்கள் அவர்களை மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றனர்; வேதவசனத்தை அதிகப் பூரணமாய்ப் புரிந்துகொள்வதற்கு உதவுகின்றனர்; அதாவது ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அப்பொல்லோவுக்குச் செய்ததுபோன்று செய்கின்றனர் (அப்போஸ்தலர் 18:26); மற்றும் ஒவ்வொருவனும் தன் கைக்கு அகப்படுவதை முழுப்பலத்தோடு செய்கின்றான்; தான் பெற்றிருக்கும் தாலந்துகள் எதையும் பயன்படுத்தி, இப்படியாக தேவனுடையதான தனது சரீரத்திலும், ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்த நாடுகின்றான். தேவபக்திக்கு ஏதுவான கைப்பிரதி அல்லது அச்சிடப்பட்டப் பக்கம் என்று உரிமைப் பாராட்டும்

எதையும், பகுத்தறியாமல் விநியோகிக்கும்போது கர்த்தருடைய காரணங்களுக்காக ஊழியம் புரிந்துள்ளதாக எண்ணிக்கொள்வது அநேகம் கிறிஸ்தவர்களின் தவறாய்க் காணப்படுகின்றது மற்றும் இது குறித்து அனைவரும் ஜாக்கிரதையாயும் காணப்பட வேண்டும். இது விஷயத்திலும், தான் செய்திடும் எல்லாவற்றிலும் கவனமுள்ள ஊழியக்காரன் விவேகமாகவும், நல்லது, கெட்டதைப் பகுத்தறிந்து வேற்றுமை காண்கிறவனாகவும் காணப்படுவான். இதுவே பெரும்பான்மையான வர்களின் எளிமையான வழி முறைகளாகக் காணப்படுகின்றது மற்றும் இவர்களது வேலையானது, தேவனுடைய வழிக்காட்டுதலின் கீழ் அரண்களை நிர்மூலமாக்கக் கூடியதாய்க் காணப்படுகின்றது. இவர்களது சத்தியத்திற்கு முன்பாக, இங்குக் கொஞ்சமாகவும், அங்குக் கொஞ்சமாகவும் பாபிலோனும், அவளது தப்பறை எனும் மதில்களும் உடைந்துகொண்டிருக்கின்றது. இப்பாடம் சம்பந்தப்பட்ட வேறொரு கேள்வி:

## ஊழியத்திற்கான அழைப்பு என்றால் என்ன?

அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யாவரும் (அவர்கள் பின்பற்றும் பட்சத்தில்) ஆவியினால், தேவனுடைய காருண்யம் மற்றும் அன்பான திட்டங்கள் குறித்த அதிகமதிகமான புரிந்துகொள்ளுதலுக்குள்ளாக வழிநடத்தப்படுவார்கள்; மற்றும் இவர்கள் அன்பின் ஆவியினால் நிரம்பி மற்றும் தாங்கள் இத்தனை இலவசமாய்த் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதும், தங்களை இவ்வளவுக்கு ஆசீர்வதித்ததும், தங்களுக்கு உதவினதுமான விலையேறப்பெற்ற சத்தியத்தினை அறிவதற்குரிய அவசியமுடைய மற்றவர்களைக் காண்கையில் - இதுவே இவர்கள் தங்களது தாலந்துகளைப் பயன்படுத்தி மற்றும் பரலோகத்திலுள்ள தங்களது பிதாவுக்கு மகிமை உண்டாகத்தக்கதாக தங்கள் வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ணி, சத்தியத்தினை அறிவித்திடுவதற்குரிய தேவனுடைய அழைப்பாகும்.

தலையைப் போன்றே, அபிஷேகிக்கப்பட்ட சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" (ஏசாயா 61:1).

இப்போதும்கூட ஆண்டவர் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரிடம்: "நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள் - நீங்கள் சும்மா நிற்கிறதென்ன?" என்கிறார்.

# நல்லொழுக்கமாயும், கிரமமாயும்

*"சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது." (1கொரிந்தியர் 14:40)*

சமீபக்காலங்களில் பரிசுத்தவான்களுடைய கூடுகைகளின் மத்தியிலுள்ள பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக, நம்முடைய கவனமானது, சபையில் ஒழுங்கு குறித்த பாடத்தின்மீது கடந்துவந்துள்ளது. அறுவடை சத்தியம் எனும் அரிவாளினால், "பாபிலோனிடமிருந்து" பிரித்தெடுக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது பெருகிவருகையிலும் மற்றும் பெரிய (அ) சிறிய கூட்டங்களாகக் கர்த்தர் கட்டளையிட்டப் பிரகாரம் கூடிவருகையிலும் (எபிரெயர் 10:25), எப்போதும் விழிப்பாயுள்ள எதிராளியானவனுடைய மிகுதியான செயல்பாடுகளின் காரணமாகக் குறிப்பாய்ப் புதிய பிரச்சனைகள் எழும்புவதைக் கண்டுபிடிக்கின்றோம் மற்றும் புதிய அபாயங்கள் எழும்புவதைக் காண்கின்றோம். இவைகள் அப்பாடத்தை வேதவாக்கியங்களினுடைய வெளிச்சத்தில் மிகக் கவனமாய் ஆராய்வதற்கு நம்மை மீண்டுமாய் வழிநடத்தியுள்ளது.

பரிசுத்தவான்கள் கூடிவருதலிலுள்ள ஒழுங்கு தொடர்புடைய விஷயத்தில், ஆதி திருச்சபையினரிடம் அப்போஸ்தலர்கள் கூறுவதற்கு அநேக காரியங்கள் இருந்தது; நாமோ இந்த ஞானமிக்க ஆலோசனையானது குறைந்த முக்கியத்துவமுடையது என்று எண்ணி, இதில் கவனக்குறைவாக இருந்தோம்; காரணம் சபையானவள் தனது ஓட்டத்தின் நிறைவுபகுதியில் காணப்படுகின்றாள் மற்றும் அறுவடையானது பிரித்தெடுத்தலுக்கான வேளையாக இருக்கின்றது என்பதேயாகும். ஆனால் "நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி முன்பு எழுதப்பட்டவைகளுக்கு" மிகவும் கவனமாய்ச் செவிக்கொடுக்கத் தொடர்வது என்பது பாதுகாப்பானதேயாகும். நம்முடைய பூமிக்குரிய ஓட்டத்தை முடிப்பதற்கான காலம் குறைவாய் இருப்பினும், அந்தகாரத்தின் அதிகாரிகள் மற்றும் துரைத்தனங்களுடனான யுத்தத்தில் பிரச்சனைகளானது மிகமிக ஆபத்தானவைகளாகிக் கொண்டிருக்கின்றது மற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட நபரிடத்திலும், போராட்டங்களின் விஷயமானது மிகவும் கடுமையாகிக்கொண்டும், தீர்மானம் எடுக்க வேண்டிய கட்டத்திற்குக் கொண்டு வருகின்றதாகவும் இருக்கின்றது.

அறுவடை என்பது பிரித்தெடுத்தலுக்கான காலம் என்பது உண்மையாயினும், அது சேர்க்கப்படுதலின் காலமும்கூட. விவசாயியானவன் தனது தானியங்களைக் கதிரடித்துப் பிரித்தெடுத்த பின்பு, தரையிலேயே சிந்திக்கிடக்கட்டும் என்று விட்டுச்செல்வதில் மனநிறைவுடன் காணப்படுவானோ? இல்லை; தான் தானியங்களைக் கூட்டிச்சேர்த்து, சேகரித்து வைக்கவில்லையெனில், தனது பிரயாசங்கள் வீணாகிவிடும் என்பதை அவன் அறிவான்; தானியங்கள் தரையிலேயே கிடந்து அழுகிப்போய்விடும் அல்லது பறவைகள் வந்து,

அவைகளைத் தின்றுவிடும். கர்த்தர் ஞானமுள்ள பயிரிடுகிறவர் ஆவார் மற்றும் பிரித்தலும், சேர்த்தலுமாகிய இரண்டுமே அறுவடை வேலையின் பாகங்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணமாக, "என் ஜனங்களே நீங்கள் அவளைவிட்டு வெளியே வாருங்கள் (பாபிலோனிடமிருந்து உங்களைப் பிரித்துக்கொள்ளுங்கள்)" என்றும், மீண்டுமாக "பலியினாலே என்னோடே உடன்படிக்கைப்பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" என்றும் கூறுகின்றார்.

ஆகையால் பாபிலோனினின்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாகிய நாம், ஒருவரிடமிருந்து இன்னொருவர் பிரிந்து, தனித்துக் காணப்படக்கூடாது; நமக்கு முன்பாய் ஐசுவரியமாயும், திரளாயும் காணப்படுகின்றதான அறுவடையின் பந்தியை - கர்த்தருடைய பந்தியைச் சூழ்ந்து கிறிஸ்தவ உறவிலும், ஐக்கியத்திலும் நாம் ஒன்றுகூடிட வேண்டும். "பிணம் (உணவு) எங்கேயோ, அங்கே (பசியுள்ள மற்றும் தொலைவிலிருந்தே உணவை அடையாளங்கண்டு கொள்ளக்கூடியவர்களாகிய தொலைப் பார்வையுள்ள கழுகு வகுப்பார்) கழுகுகள் வந்து கூடும் (மத்தேயு 24:27, 28). நாம் ஒன்றுகூடி, அன்பு மற்றும் ஐக்கியத்தின் பிணைப்புகளைப் பெலப்படுத்திட வேண்டும் மற்றும் இதை "நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறோமோ, அவ்வளவாய்ச் செய்திடுவோமாக." மேலும் இப்படியாகச் செய்யும் விஷயத்தில், இவ்விதமாய்க் கூடிக்கொள்ளும் பரிசுத்தவான்களுடைய பல்வேறு கூட்டத்தாரின் நன்மைக்காக வேதவாக்கியங்கள் எவற்றை முன்வைக்கின்றது என்று நாம் கவனமாய்க் கவனிப்பதும் விசேஷித்த முக்கியத்துவம் உடையதாய் இருக்கின்றது.

## ஆதி சபையில் காணப்பட்ட ஒழுங்குமுறை

ஆதி சபையின் நாட்களில், சத்தியத்தினுடைய ஊழியங்களின் விஷயத்தில் அச்சிடும் அச்சகம் இருக்கவில்லை மற்றும் ஜனங்களுடைய கரங்களில் தேவனுடைய வார்த்தைகளுள்ள மூலப்பிரதிகள்கூட இருக்கவில்லை; ஜனங்கள் வாசிக்கும் திறன்கூட இல்லாமலேயே இருந்தனர். புதிய ஏற்பாட்டினுடைய வேதவாக்கியங்கள்கூட உருவாகிக்கொண்டு மாத்திரமே காணப்பட்டது. காலப்போக்கில் அப்போஸ்தலரின் கடிதங்களானது சபையார்களுக்கிடையே கொடுத்து வாங்கப்பட்டது மற்றும் மறுபரிசீலனைக்காகவும், அறிவுரைக்காகவும் பார்த்து எழுதி எடுக்கப்பட்டது (copied).

நாம் இப்போது பெற்றிருக்கின்றதும், ஆதி சபையினர் பெற்றிராததுமானவைகள், அவர்களுடைய தேவைக்கேற்ப, சபையின் மாபெரும் தலையானவரால் பல்வேறு வரங்கள் - அந்நிய பாஷை, வியாக்கியானம் சொல்லுதல், தீர்க்கத்தரிசனம் சொல்லுதல் முதலான வரங்கள் மூலம் ஈடுசெய்யப்பட்டன; இந்த வரங்களில் அநேகமானவைகள் பவுலினால் சொல்லப்பட்டது போல (1 கொரிந்தியர் 13:8) இப்பொழுது ஒழிந்துபோய்விட்டது மற்றும் இதற்குப் பதிலாகப் பிற்காலங்களின்

ஐசுவரியமான ஆசீர்வாதங்கள் காணப்படுகின்றது - அதாவது கல்வியறிவு என்பது பொதுவானதாகியுள்ள ஜனங்களின் கரங்களில் சுருக்கமான மற்றும் முழுமையான தேவனுடைய வார்த்தைகள் காணப்படுகின்றது மற்றும் இதனை புரிந்துகொள்வதற்கு வியக்கத்தக்க அனைத்து உதவிகளாகிய சொல் விளக்கப்பட்டியல் தொகுதிகள் (concordances), வேதாகம அகராதிகள் முதலானவைகள் காணப்படுகின்றது.

அந்த ஆரம்பக்காலங்களில் சபைகூட்டங்களானது, நன்மைப் பயக்கின்றதாய்க் காணப்படத்தக்கதாக, அவர்களது காரியங்களுக்காக அப்போஸ்தலர்களினால் முறையான ஏற்பாடானது கட்டளையிடப்பட்டு, விசுவாசிகளுள்ள பல்வேறு கூட்டத்தாரால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்நிய பாஷைஅல்லது அந்நிய பாஷைக்கு அர்த்தஞ்சொல்லுதல் எனும் வரமுடையவர்கள் அல்லது தீர்க்கத்தரிசன வரமுடையவர்கள் ஒரே நேரத்தில் பேசுவதற்கு அனுமதித்திடவில்லை; அந்நாட்களிலுள்ள (விசேஷமாக கொரிந்து பட்டணத்திலுள்ள இது தொடர்பான ஜூலை 93, பக்கம் - 201-இல் இடம்பெறும் கட்டுரையைப் பார்க்கவும்) படிப்பறிவில்லாத மற்றும் கல்லாத ஸ்திரீகள் கூட்டங்களில் குறுக்கிடவோ, குழப்பவோ கூடாது; இதுபோல் இன்னும் முழு ஆராதனையுமே மேன்மையுடனும், தெளிந்த புத்தியுடனும், பயபக்தியுடனும் காணப்பட வேண்டும்; அதே வேளையில் மிகவும் எளிமையாயும், ஒழுங்காயும் காணப்பட வேண்டும் மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் பக்திவிருத்தி அடையப்பண்ணும் பணியில் அவரவருடைய பல்வேறு திறமைகளுக்கேற்ப அவ்வப்போது பங்கெடுத்திட வேண்டும். சிலர் சபைக்குத் தெளிந்த உபதேசத்தினை உபதேசிக்கும் திறமை உடையவர்களாய் இருப்பார்கள்; சிலர் அந்நிய பாஷை பேசிடுவதற்கும் மற்றும் அதற்கு அர்த்தம் சொல்லும் வரம் உடையவர்களாய் இருப்பார்கள்; சிலர் புத்திமதி கூறிடுவதற்கும், உற்சாக மூட்டுவதற்கும் முடிகின்றவர்களாய் இருப்பார்கள்; மற்றும் அனைவருமே தங்களுடைய இருதயங்களை ஜெபத்தில் இணைக்க முடிகிறவர்களாகவும், துதிப்பதிலும், சங்கீதங்களிலும், கீர்த்தனைகளிலும், ஞானப்பாட்டுகளிலும் தங்களது சத்தத்தினை உயர்த்த முடிகின்றவர்களாய் இருப்பார்கள் (1 கொரிந்தியர் 14:15; எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). இப்படியாக ஒருவரோடொருவர் பழக்கம் கொண்டிடும்போது, அவர்கள் ஒருவர் இன்னொருவருடைய பாரங்களைச் சுமக்க முடிகின்றவர்களாகுவார்கள் மற்றும் அவர்கள் ஒன்று சேர்ந்து - கர்த்தர் மூலமாயுமுள்ள பக்திவிருத்தி அடைவதற்குரிய வழிவகைகளினால் மற்றும் அப்போஸ்தலர்களுடைய அறிவுரை மூலமாயுமுள்ள சபைக்குரிய முறையான முறைமைகளினால் - கிறிஸ்தவ வளர்ச்சி மற்றும் விருத்தியில் அபிவிருத்தி அடைவார்கள்.

சபைக்கான கூட்டங்கள் நடத்துவது தொடர்புடையதான இந்த

ஒழுங்குமுறையானது, இப்படியாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டு, சபையால் பின்பற்றிவரப்பட்டிருக்க, சபைக்கான வழிநடத்துனர்கள் மற்றும் சபைக்கான பல்வேறு கடமைகள் தொடர்புடைய விஷயத்திலும் ஓர் ஒழுங்குமுறை காணப்படுகின்றது. உதாரணத்திற்குப் பவுலும், பர்னபாவும் லீஸ்திரா, இக்கோனியா மற்றும் அந்தியோகியாவில் விசுவாசிகள் அடங்கின கூட்டத்தாரைக் கூட்டிச்சேர்த்திட்டப்பின்பு, அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி, அவர்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, பின்பு புறப்பட்டுச் சென்றார்கள் என்று பார்க்கின்றோம் (அப்போஸ்தலர் 14:21-23). பட்டணங்கள்தோறும் சென்று, ஒவ்வொரு இடத்திலும் மூப்பர்களை ஏற்படுத்தும்படிக்கு (நியமிக்கும்படிக்கு) தீத்துவுக்குப் பவுல் கட்டளையிட்டு அனுப்பினார்; இந்த மூப்பர்கள் என்பவர்களுக்குத் தாங்கள் இருக்கும் இடத்திலுள்ள கர்த்தருடைய மந்தையினை மேற்பார்வையிடுவதும், அவர்களைச் சத்தியத்தினால் போஷிப்பதும், ஆட்டுத்தோலைப் போர்த்திக் காணப்படும் ஓநாய்களினின்று அவர்களைக் காத்துக்கொள்வதும், பொதுவான விதத்தில் அவர்களது பிரதிநிதியாகச் செயல்படுவதும் கடமையாகக் காணப்பட்டது (தீத்து 1:5; அப்போஸ்தலர் 14:23; 20:17, 28; 1 பேதுரு 5:1, 2; அப்போஸ்தலர் 15:6, 23-28). இந்த மூப்பர்களுக்கான தகுதிகளுங்கூட, அப்போஸ்தலர்களினால் மிகத் தெளிவாக முன் வைக்கப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 3:1-13; தீத்து 1:5-11).

## ஒழுங்கு இன்றும் அவசியமாய் இருக்கின்றது

இந்த ஒழுங்குமுறையானது, ஆதிசபையினருடைய ஆவிக்குரிய வளமைக்குத் தேவையாய் இருந்ததுண்டானால் மற்றும் எந்த இடத்திலும் இந்த ஒழுங்கிற்கு மறுப்புத் தெரிவிக்கப்படாத அளவுக்கு அத்தேவையானது கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்வளவுக்கு அதிகாரப்பூர்வமாய்க் கட்டளையிடப்பட்டு மற்றும் இவ்வளவுக்கு எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் காரணத்தினால், இன்றுள்ள விசுவாசிகள் அடங்கின கூட்டத்தார்களில் அதே தேவை காணப்படுகின்றதா என்ற கேள்வியானது, நிச்சயமாகவே கருத்தில் எடுத்துக்கொள்வதற்குப் பாத்திரமான கேள்வியாகவே காணப்படுகின்றது.

அந்த ஒழுங்குமுறைக்கும், மூப்பர்களை நியமிப்பதற்குமான அதே அவசியம் இன்றும் காணப்படுகின்றது என்றும், அன்று நிலவினதான அதே நற்காரணங்கள் இன்றும் காணப்படுகின்றது என்றும் நாம் நம்புகின்றோம்; அக்காரணங்கள் பின்வருமாறு:

(1) காரணம் குடும்பத்தில் காணப்படுவதுபோலவே, சபையிலும் பல்வேறு அளவிலான ஆவிக்குரிய வளர்ச்சி நிலைகள் காணப்படுகின்றது. சிலர் குழந்தைகளாகக் காணப்பட்டு, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால்

வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்; மற்றவர்களுக்கோ பலமான ஆகாரம் வேண்டியதாயிருக்கின்றது; ஆகையால் இதைச் செய்திடுவதற்குரிய நிலையில் "போதகசமர்த்தனாய்" இருக்கும் ஒருவர் அவசியப்படுகின்றார். எல்லோரும் சந்தித்திடுவதற்கு ஒரே மாதிரியான ஆயத்த நிலைமையில் இல்லாத அளவுக்குள்ள பல்வேறு சோதனைகளும், பரீட்சைகளும், பிரச்சனைகளும் மற்றும் அபாயங்களும்கூட உண்டு. ஆகையால்தான் ஞானமுள்ள மற்றும் விவேகமுள்ள மேற்பார்வையாளர்களின், சில அனுபவமும், திறமையுமுள்ள மனிதர்களின், அனைவருடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களில் ஆழ்ந்த அக்கறைகொண்டுள்ளவர்களின் மற்றும் சத்தியத்தில் உபதேசிக்க திறமையுடையவர்களின் அவசியம் காணப்படுகின்றது.

(2) காரணம் இப்பொழுதும், அன்று போன்று ஆதிசபை மத்தியில் "கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணுகின்ற" ஆட்டுத்தோல் போர்த்தின ஓநாய்கள் காணப்படுகின்றனர்; இந்த வேதப்புரட்டுகளை எதிர்த்து, மந்தையைப் பாதுகாக்க முடிகின்றவர்களாகத் தெரிந்தெடுக்கப்படும் மூப்பர்கள் காணப்பட வேண்டும் மற்றும் முற்றும் முழுமையான சத்திய அறிவிற்குள் மந்தையை நடத்திடுவதன் மூலம் மந்தையை வேதப்புரட்டுகளுக்கு எதிராக ஆயுதம் தரித்துக்கொள்ள செய்ய முடிகிறவர்களாகக் காணப்பட வேண்டும். அன்றுபோல் இன்றும் அப்போஸ்தலன், "உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று" முன்னெச்சரித்தது போலவே காணப்படுகின்றது (அப்போஸ்தலர் 20:30); மற்றும் உண்மையுள்ள மூப்பர்கள் இவைகளைத் தாமதமின்றி கண்டுகொள்ளுகிறவர்களாய் இருந்து, உடனே எச்சரிக்கைக் கொடுப்பவர்களாய் இருந்து, மந்தையை இம்மாதிரியான ஆதிக்கங்கள் யாவற்றிடமிருந்தும் எதிர்த்துப் பாதுகாத்திடுவார்கள் (அப்போஸ்தலர் 20:28-30; தீத்து 1:10, 11; 2 பேதுரு 2:1-3).

(3) காரணம் அப்போஸ்தலர்களினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள முறையான வழிமுறையில் ஒருவேளை இத்தகைய ஏற்பாடுகளும், நியமனங்களும் செய்யப்படவில்லையெனில், யாரோ ஒருவர் வழிநடத்தும் ஸ்தானத்தினை எடுத்துக்கொண்டு, அதைக் கால வரைமுறையின்றி வைத்திருக்கக்கூடும்; மற்றும் முழுச்சபையாருமே, பெரும்பாலும் அவர்களையும் அறியாமல் அந்நபரின் கீழ் ஏறக்குறைய அடிமைத்தனத்திற்குள்ளாகுவார்கள். இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்பட்டுள்ளது மற்றும் வழிநடத்தும் ஸ்தானத்தை எடுத்துக் கொண்டுள்ளதான சகோதரனைக் காயப்படுத்தாமல் அல்லது கோபப்படுத்தாமல் / அவமதியாமல் எவ்வாறு தாங்கள் விடுவிக்கப்படலாம் என்பதற்காகச் சில யோசனைகளைக் கேட்டுச் சகோதரர்கள் எங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர்.

இப்படி வழிநடத்தும் ஸ்தானத்தை எடுத்துக்கொள்வது என்பது அநேக

சந்தர்ப்பங்களில் உண்மையில் அவசியமானதாகவே இருந்துள்ளது மற்றும் பொதுவாய்த் தூய்மையான நோக்கத்தின் பேரில்தான் மேற்கொள்ளப்படுகின்றது மற்றும் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரையிலும் நன்மையான பலன்களையே கொணர்ந்தும் உள்ளது; உதாரணத்திற்குப் பின்வருமாறு நடக்கலாம்: கர்த்தருடைய காரணங்களுக்காக வைராக்கியமும், சத்தியத்திற்கான அன்பும் நிறைந்த சகோதரன் ஒருவர், சத்தியத்தினை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட சிலரைத் தன்னோடு கூடச்சேர்த்துக்கொள்கின்றார். அவர்கள் இன்னும் உபதேசிக்கப்படுவதற்கான வாஞ்சையுடனும், தேவையுடனும் இருந்து, இதை அச்சகோதரன் மிகவும் வளர்ந்துள்ளபடியால் கொடுக்க முடிகின்றவராய் இருக்கின்றார் மற்றும் அவர்கள் ஒன்று சேர்ந்து சத்திய அறிவில் வளர்ந்துக்கொண்டிருக்கின்றனர் மற்றும் அவர்களது ஒருங்கிணைந்த வைராக்கியத்தின் காரணமாக, கூட்டத்தின் எண்ணிக்கையும் பெருகுகின்றது. இறுதியில் வீட்டு அறையினின்று, பெரிய அறைக்கு/ஹாலுக்குக் கூடுகையினை மாற்றிடுவதற்கு ஆலோசித்து முடிவெடுக்கப்படுகின்றது. இச்சமயத்தில் சபையாரிலுள்ள வேறொரு சகோதரன் பெரிய மற்றும் அதிக அளவிலான பொது ஊழியங்களுக்கு மிகவும் திறமிக்கவராக இருப்பது தெரியவர, மிகவும் திறமிக்கவராய்க் காணப்படும் இச்சகோதரன் வழிநடத்தும் பொறுப்பிற்கு வருவதற்குப் பரிந்துரைக்க அனைவருமே அஞ்சுகின்றனர்; காரணம் குறைவான திறனைக்கொண்டவராக இருப்பினும், நீண்ட காலமாய்த் தங்களால் அங்கீகரிக்கப்பட்டவராகவும் மற்றும் இன்னமும் தங்களுக்கு அன்புக்குரியவராகவும் காணப்படும் சகோதரனைச் சினமூட்டி விடுவோமோ என்ற அச்சத்தினாலேயே ஆகும். சிலருடைய விஷயங்களில் வேறு சகோதரரைப் பரிந்துரைத்துக் குறிப்பிடுதல்கூட, கோபத்தை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாய் இருக்கிறது மற்றும் அச்சகோதரன் சபையாரின் மத்தியில் உரிமைக்காரர் போன்று எண்ணும் நிலையில் காணப்படுகின்றார் என்பது தெளிவாகுகின்றது மற்றும் அவர் அவர்களைக் கர்த்தருடைய ஜனங்கள் என்று கூறிடுவதற்குப் பதிலாக, தன்னுடைய ஜனங்கள் என்று அவர்களைக் குறித்துப் பேசுகின்றார் மற்றும் எண்ணுகின்றார். ஆனால் எல்லாச் சம்பவங்களும் இப்படியாக இருப்பதில்லை என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றோம்; ஏனெனில் சில சமயங்களில் சாந்தம் என்னும் கிருபையானது தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்றது மற்றும் கர்த்தருக்கான ஊழியத்திற்குரிய வைராக்கியத்தில், சுயமானது தொலைந்து போய்விடுகின்றது.

இன்னுமாகச் சிலசமயங்களில் பின்வருமாறும் நடக்கின்றது: தாழ்மை எனும் கிருபையில் மிகக் குறைவுபட்டிருப்பவர், இதன் காரணமாக சூழ்நிலைக்குப் பொருத்தமற்றவராய் இருப்பவர் அந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள முன்னேறிடுவார் மற்றும் அதைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென மன அமைதியற்றிருப்பார்; ஒருவேளை அவர் விசுவாசத்தில் தெளிவற்றவராய்

இருப்பாரெனில், சபையார் சீக்கிரத்தில் தவறான உபதேசத்தினால் அல்லது ஊகங்களினால் தொல்லைக்குட்படுத்தப்படுவார்கள், அநேகர் இடறிப்போயிடலாம்.

(4) சபையில் ஒருவேளை எவ்விதமான முறையான ஏற்பாடு இல்லாமலிருந்தால், சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்களில் மிகவும் அக்கறை உடையவர்கள் மற்றும் சபைக்கான ஊழியங்களில் ஈடுபடத்தக்கதாகவும், ஈடுபட்டிருப்பதற்காகவும் ஆவல்கொண்டிருப்பவர்கள் மிகவும் தர்மசங்கடமான நிலைக்குள்ளாவார்கள். சத்தியத்திற்கு உண்மையாய் இருத்தல் என்பது, அடிக்கடி பிரிவினைகளை உண்டுபண்ணுகின்றது. மேலும் உண்மையுள்ளவர்களின் ஊழியமானது விரும்பப்படுகிறதில்லை என்பதாக அனைவருடைய அல்லது சபையாரில் பெரும்பான்மையானவர்களின் உணர்வுகளானது இருக்கவில்லை என்றபோதிலும் - இந்த உண்மைத் தன்மையை விரும்பிடாத சிலர், உண்மையுள்ளவர்களின் ஊழியமானது விரும்பப்படுகிறதில்லை என்று கடுமையாய்த் தெரிவித்திடலாம். இப்படியானவர் ஆதரவு இல்லாதவராகக் காணப்பட்டு, கிட்டத்தட்ட யார் உதவியும் இல்லாமல், தனியே மந்தையைப் பாதுகாத்திடுவதற்கான போராட்டத்தில் போராடிட வேண்டும் அல்லது மந்தையை எதிராளியின் தயவிற்கு விட்டுவிட வேண்டும்.

எவ்விதமான முறையான ஒழுங்குமுறை இல்லாமல் அருகில் காணப்படும் எந்தச் சபையார் மத்தியிலோ காரியங்கள் அமைதியாய் நடந்துகொண்டிருக்கின்றது என்ற உண்மையோ அல்லது சபையாருடைய சுயாதீனங்கள், உரிமைகள், கடமைகள் குறித்து அக்கறைகொள்ளப்படுகின்றது என்ற காரியமோ, இப்படியாகவே எப்போதும் நடந்துகொண்டிருக்கும் என்பதற்கு உத்தரவாதமாய் இராது. எப்போதும் விழிப்பாய் இருக்கும் நம்முடைய எதிராளியானவன் நிச்சயமாகவே ஏதோ ஒரு தருணத்தில் ஒட்டுமொத்த சபையிலும், அதன் தனிப்பட்ட அங்கத்தினர்களிடத்திலும் பாதுகாப்பற்றுக் காணப்படும் ஒவ்வொரு இடத்தை அல்லது கொள்கையைப் பயன்படுத்திடுவான். ஆகையால் சபையாகவும் சரி, தனிப்பட்ட நபர்கள் விஷயத்திலும் சரி, நாம் . . ."பாதுகாப்பற்ற எவ்விடத்தையும், ஆத்துமாவின் எந்தப் பெலவீனத்தையும் விட்டுவிடாமல், ஒவ்வொரு ஒழுங்கையும், ஒவ்வொரு கிருபையையும் கொண்டு முழுவதும் வலுப்படுத்திடுவோமாக."

சமாதானமும், அமைதியும் உள்ள காலங்களானது, நாம் சபையாக ஒட்டுமொத்தமாகவும் மற்றும் தனிப்பட்ட விதத்திலும் சந்திக்க வேண்டிய புயல் மற்றும் சூறாவளியினால் ஏற்படும் நெருக்கடிக்கு ஆயத்தமாகிக்கொள்ளும் காலங்களாக இருக்கின்றது. சாதகமான வானிலைக்கு மாத்திரமே ஆயத்தமாயுள்ள கப்பல் ஒன்றைக் கடலில் ஓட்டிச்செல்லும் கப்பல் தலைவனும், சிப்பந்திகளும் தொலை நோக்குப் பார்வையில் மிகவும் குறைவுபட்டவர்களாக இருப்பார்கள். எவ்வளவுதான் வானிலை சாதகமாய்க் காணப்பட்டாலும், எவ்வளவுதான் கடல் அமைதியாகக் காணப்பட்டாலும், எவ்வளவுதான்

பிரயாணத்தின் துவக்கத்தில் காற்றுத் தென்றலாய்க் காணப்பட்டாலும், புயலை எதிர்க்கொள்வதற்கான ஏற்பாடுகள் கப்பல் தளத்தில் காணப்பட வேண்டும் - ஜீவனுக்கான முன்னேற்பாடுகள் - படகுகள், ஜீவனைக் காத்துக்கொள்ளும் உபகரணங்கள், கப்பல்தளபுழை வாயிலை (Hatch/emergency door) மரச்சட்டத்தால் இறுக்கமாக அடைத்து வைப்பதற்கான உபகரணங்கள், கப்பல் தளத்தில் காணப்பட வேண்டும் என்று ஞானமானது ஆலோசனை வழங்கிடும். இம்மாதிரியான சோதனை வேளைகளில், சாத்தான் விசேஷமாய்த் தன்னுடைய எதிர்ப்பில் மிகவும் விறுவிறுப்பாயும், தந்திரமாயும் காணப்படுகையில், நம்முடைய பாதுகாப்பிற்கெனக் கர்த்தரால் அப்போஸ்தலர்கள் வாயிலாக ஆலோசனையாக அருளப்பட்டுள்ளதான முன் எச்சரிக்கையான ஏற்பாடுகள் யாவையும், நாம் கண்நோக்கிப் பார்ப்பது அவசியமாகும்.

## அப்போஸ்தலர்களின் ஆலோசனையைப் பரிந்துரைக்கிறோம்

சம்பவிப்பதற்கு வாய்ப்புள்ளதான இவைகள் அனைத்தையும் வைத்துப் பார்க்கையில், மந்தையைப் "போஷிப்பதற்கும்" மற்றும் "அவர்களை மேற்பார்வையிடுவதற்கும்" ஒவ்வொரு சபையாரும் தங்கள் மத்தியிலிருந்து மூப்பர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்களாக எனும் அப்போஸ்தலரின் ஆலோசனையை, எல்லா இடங்களிலுமுள்ள சிறிய அல்லது பெரிய எண்ணிக்கையில் காணப்படும் சபைகளுக்குப் பரிந்துரைப்பதற்கு நாங்கள் எந்தத் தயக்கமும் கொள்ளவில்லை. தேவன் சபையில் சிலரை விசேஷித்த உதவியாளர்களாக, போதகர்களாக இருக்கும்படிக்கு ஏற்படுத்தியுள்ளார் என்றும், அனைவருமே இப்படியாய்த் தகுதியுடையவர்களாக இருப்பதில்லை என்றுமுள்ள அப்போஸ்தலரின் போதனைக்கு இசைவாக, இப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் ஒவ்வொரு சபையாரிலும் அருளிடுவாரென எதிர்ப்பார்த்து ஆதிசபையில் செய்யப்பட்டது போன்று, தங்கள் மத்தியில் தேடப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 12:28, 29). வெளியிடங்களிலுள்ள சபையாரிடமிருந்து வரும் சகோதரர்கள் பணியினைத் துவங்கிட உதவிடலாம் மற்றும் அவர்களுடைய அவ்வப்போதான வருகையினால், ஒரு சபையார் உற்சாகமூட்டப்படலாம், எனினும் ஒவ்வொரு சபையாரும் தங்கள் சொந்த மூப்பர்களைப் பெற்றிருந்து, தங்களுக்கு முன்பாக வழித் திறக்கப்படுகையில், கர்த்தருடைய வேலையிலுள்ள தங்களுக்கான பங்கினை நிறைவேற்றிட வேண்டும். ஒவ்வொரு சபையாருக்கும் ஊழியம் புரிந்திடுவதற்கான விசேஷித்த களம், அவர்களது சொந்த இடமேயாகும்; இங்கு அவர்களால் இயன்றமட்டும் தங்கள் செல்வாக்கினைச் செயல்படுத்தி ஊழியம் புரிந்திடலாம்; மேலும் அவர்கள் மத்தியில் அனலுள்ள தேவபக்தியும், கொழுந்துவிட்டு எரிகிற பக்திவைராக்கியமும் பலன்கொடாமல் இராது. ஒருவேளை

கொஞ்சமே கோதுமை மணிகள் சேர்க்க முடிந்ததானால், சத்தியத்திற்கான சாட்சியாகிலும் மிகுதியாய்ச் சுமந்து செல்லப்படுகிறதாய் இருக்கும். இராஜ்யத்தின் இந்தச் சுவிசேஷமானது, "சாட்சியாகவும்" பிரசங்கிக்கப்பட வேண்டும் மற்றும் "அவரது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படிக்கும்" பிரசங்கிக்கப்பட வேண்டும். தொழிற்கூடங்களிலும், கடைகளிலும், தெருக்களிலும் மற்றும் அடுப்படியின் அருகிலும் கைப்பிரதிகளை விநியோகித்தல், தனிப்பட்ட விதத்தில் சந்தித்தல், தனிப்பட்ட விதத்தில் கடிதம் எழுதுதல் மற்றும் (ஞானமாயும், விவேகமாயும்) தனிப்பட்ட விதத்தில் உரையாடுதல் என்பவைகள் சிறந்த மற்றும் நிலையான கிறிஸ்தவ குணலட்சணங்களோடுகூட, அயலாருக்கு அன்பாய் உதவுவதோடுகூடச் செய்யப்படுவது என்பது சத்தியத்திற்கடுத்த காரியங்களுக்கான ஆற்றல் மிக்க வழிவகைகளாக இருக்கின்றது மற்றும் இவற்றை அனலுள்ள பக்திவைராக்கியமானது கவனிக்க தவறுவதுமில்லை. இந்தப் பல்வேறு விதங்களில் அனைவருமே சுவிசேஷத்தினைப் பிரசங்கித்திடலாம்; ஏனெனில் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யாவரும் பிரசங்கிப்பதற்கென அபிஷேகம்பண்ணப் பட்டுள்ளனர் மற்றும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினால் அவர்களை அபிஷேகிக்கையில் கொடுத்திடும் அதிகாரத்தைவிட வேறெந்த அதிகாரமும் அவர்கள் பிரசங்கம்பண்ணிடுவதற்கு அவசியமில்லை. இந்த நோக்கத்திற்காக நமது கர்த்தரும், தலையுமானவர் அபிஷேகிக்கப்பட்டார்; மற்றும் அதே அபிஷேகமானது, அவரது சரீரமாகிய சபையின் அங்கத்தினர்கள் யாவருக்கும் கடந்து வருகின்றது (ஏசாயா 61:1-3; லூக்கா 4:16-21; 1 யோவான் 2:27).

## மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் தருணம்

மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், கர்த்தருடைய மனமானது, அவரது அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் வாயிலாக நன்கு உறுதிசெய்யப்படலாம் என்று நாம் கருத்துத் தெரிவிக்கின்றோம். சபை (அதாவது மீட்பருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலான இரட்சிப்பை விசுவாசிப்பவர்கள் மற்றும் அவருக்கு உண்மையாய் அர்ப்பணம்பண்ணினவர்கள் மாத்திரமே) கர்த்தருடைய சித்தம் குறித்த தங்களது பகுத்துணர்தலை, வாக்கு (vote) மூலம் வெளிப்படுத்துவார்களாக; மற்றும் இது குறிப்பிட்ட இடைவெளியில் திரும்பத்திரும்ப நிகழ்த்தப்படுமானால் - அதாவது வருடந்தோறுமாகச் செய்யப்படுமானால் - சபையாருடைய சுயாதீனங்களானது பாதுகாக்கப்படும் மற்றும் மூப்பர்களும் தேவையில்லாமல் தர்மசங்கடமான நிலைக்குள்ளாவதிலிருந்து தப்புவார்கள். ஒருவேளை தொடர்ந்து விரும்பப்படுகிறதெனில் மற்றும் கர்த்தருடைய சித்தமும் மிகவும் தெளிவாய்த் தெரிகிறதெனில், அதே மூப்பர்களை வருடாவருடம் மீண்டும் தேர்ந்தெடுப்பதற்கு எந்தத் தடையும் இல்லை; மேலும் ஒருவேளை மாற்றம்

வேண்டுமென விரும்பப்படுகிறதெனில், எவர் சார்பிலும் பிணக்குகள் அல்லது வேதனையான உணர்வுகள் வெளிப்படுத்தப்படாமல் மாற்றமானது கொண்டு வரப்படலாம்.

சபையின் வாக்கு (vote) என்பது, ஒவ்வொரு நீதிமானாக்கப்பட்ட மற்றும் முழுமையாய் அர்ப்பணித்துள்ள விசுவாசிக்கு, ஒரு காரியம் தொடர்புடையதான தனது சொந்த சித்தத்தையல்ல - மாறாக கர்த்தருடைய சித்தம் குறித்த தனது நம்பிக்கையினை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை மாத்திரமே அளிக்கின்றதாய் இருக்கின்றது. ஏனெனில் அவன் கர்த்தருடையவனாய் முழுமையாக இருப்பானானால், அவன் தன் சொந்த சித்தம் மரித்துப்போனதாக எண்ணுவான் மற்றும் தான் என்ன செய்ய வேண்டுமெனக் கர்த்தர் விரும்புவாரோ, அதையே தான் செய்திடவும், பேசிடவும் வேண்டுமென உணர்ந்து கொள்வான். இம்முறைமையானது அனைவருக்கும் சமமான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் உரியதாக்குகின்றது. இது அநேகமாக ஆதிசபையில் இக்காரியத்தைப் பார்த்துக் கொண்டதான தீத்து மற்றும் மற்றவர்களின் முறைமையாகவே இருக்கின்றது; ஏனெனில் (சபையாரின் அங்கத்தினர்கள் குறித்து) அதிகம் பரிச்சயம் இல்லாதவர்களாய் இருக்கும் இவர்கள் தங்களைக் காட்டிலும் நன்கு அறிமுகப்பட்டிருக்கும் சபையாரிடம் எவ்விதமான ஆலோசனையும் செய்யாமல், மூப்பர்களைத் தன்னிச்சையாக நியமித்திருந்திருப்பார்கள் என்று நாம் எண்ணிட முடியாது. இதே முறைமைதான் அப்போஸ்தலர் 6:3-5-ஆகிய வசனப்பகுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்களும் வேலைக்காரர்களையே (ஊழியக்காரர்களையே) தேர்ந்தெடுக்கின்றீர்களே ஒழிய, எஜமான்களையோ அல்லது அதிபதிகளையோ அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். இம்முறைமையானது பல்வேறு சபைபிரிவுகளில் நடைமுறையில் காணப்படும் முறைமைகளினின்று முற்றிலும் வேறுபட்டதாகும்; இந்தச் சபை பிரிவுகளிலுள்ள முறைமைகளானது, பெரும்பான்மையான சிலாக்கியங்களை, ஜனங்களை இறுமாப்பாய் ஆளும் "குருமார் வகுப்பாரின்" கட்டுப்பாட்டிற்குள்ளாக்குகின்றது மற்றும் சபையாருக்கு வாக்குரிமைக் காணப்படும் காரியங்களிலும்கூடக் காரியமானது, முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள, அடிமையாயிராத, ஆவியினால் வழிநடத்தப்படுகின்றதான தேவனுடைய பிள்ளைகளின் கரங்களில் காணப்படாமல், மாறாக உபதேசங்கள் மற்றும் ஒழுங்குமுறை தொடர்புடைய விஷயத்தில் சபை பிரிவுணர்ச்சியின் அடிமைத்தனத்திற்குக் கட்டுப்பட்டவர்களுடைய கரங்களிலேயே காணப் படுகின்றது; இவர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர்க்கூடத் தேவனுக்கு முழுமையாய் அர்ப்பணிப்புள்ளதாகக் கூறுபவர்களாக இருப்பதில்லை. ஆனால் நாம் கர்த்தருடைய மனதை அறியத்தக்கதாக, (vote) வாக்கு விஷயத்தில், கிறிஸ்துவினுடைய ஈடுபலியின் மீதான விசுவாசத்தினால் நீதிமானாக் கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாகவும்

தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக் கொள்பவர்களை மாத்திரமே அங்கீகரித்திடுவதில் நாம் உறுதியாய் இருத்தல் வேண்டும். ஆகையால் வாக்கு எடுக்கப்படுவதற்கு முன்னதாக இந்த வகுப்பாரைத் தங்கள் கைகளை உயர்த்தச் சொல்லுவதன் மூலமாகவோ அல்லது அறையில் இன்னொரு பக்கத்தில் இருக்கைகளில் அமரும்படியாகக் கேட்டுக் கொள்வதன் மூலமாகவோ அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். விசுவாசமும், அர்ப்பணிப்பும் இல்லாமல், எவராலும் ஜெயங்கொள்ளும் சபையாராகுவதற்கு எதிர்ப்பார்த்திட முடியாது எனும் விஷயத்தினை யாவருடைய மனங்களுக்கு முன்பாய்ப் பிரத்தியேகமாக முன்வைத்திடுவது, சிலருக்கு உதவியாய்க் காணப்படும் மற்றும் இந்த நல்ல அறிக்கையினைச் சாட்சி பகருதல் என்பது அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு எப்போதும் ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

உண்மைதான் ஒருவர் அல்லது சிலர் தங்கள் அறிக்கைக்கு முரணாக இருப்பார்கள்; எனினும் பெரும்பான்மையான வாக்கானது, சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தருடைய வழிக்காட்டுதலின் பேரிலும், அவருடைய சித்தத்தினுடைய வெளிப்பாடாகவும் காணப்படும்; மற்றும் முழுமையான விசுவாசத்துடன், அது இப்படியானதாகக் கருதப்பட வேண்டும். எனினும் சபையுடைய வாக்கை மாத்திரமே பெற்றிருக்கத்தக்கதாக தாங்கள் ஜாக்கிரதையுடன் காணப்பட்டபோதிலும், சபையில் பெரும்பான்மையானவர்களின் வாக்கானது, தவறாய்க் காணப்படுவதற்கும், கர்த்தருடைய மனதை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது என்று சிலரால் வலியுறுத்தப்படலாம்; யூதாசின் இடத்தினை நிரப்பத்தக்கதாகப் பதினொரு அப்போஸ்தலர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியாவின் விஷயமும் மற்றும் அவர்களது தேர்ந்தெடுத்தலைக் கர்த்தர் வெறுமனே புறக்கணித்துச் சென்று, பவுலைத் தெரிந்து கொண்டார் என்ற உண்மையும், தோல்விக்கான உதாரணமாகச் சுட்டிக்காண்பிக்கப்படலாம்.

அது பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலின் கீழான சபையினுடைய தெரிந்தெடுத்தலாக இருக்கவில்லை; ஏனெனில் இது பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக, பரிசுத்த ஆவி வழங்கப்படாமல் இருந்தபோது சம்பவித்ததாகும் (யோவான் 7:39); மற்றும் சீஷர்களும் தேவனால் சபையாக இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை. இதுமாத்திரமல்லாமல் அப்போஸ்தலர்களில் எவருமே, பல்வேறு சபையாரின் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதே முறைமையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை மற்றும் தேர்ந்தெடுக்கப்படவும் முடியாது; கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது அப்போது இன்னும் உருவாகிடவில்லை. சபையின் தலையானவர் மாத்திரமே அப்போது அங்கீகரிக்கப்பட்டிருந்தார் மற்றும் அவர் இன்னமும் அப்போது மகிமையடையவில்லை. பன்னிரண்டு பேரும் கர்த்தரினால் நேரடியாக தெரிந்துகொள்ளப்பட்டார்கள் மற்றும் அவர்கள் ஏற்றவேளையில்

முழுச்சரீரத்திற்குமாக தங்களது விசேஷித்த ஊழியத்திற்காக தகுதியடைந்தார்கள். அப்போஸ்தலர்களினால் கட்டளையிடப்பட்டபடியே "அந்தந்த இடத்திற்கு மூப்பர்களை" நியமித்தலானது, கர்த்தரினால் நேரடியாய்ப் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் நியமிக்கப்பட்ட காரியத்திலிருந்து முற்றும் வேறுபட்ட மற்றும் வேறான காரியமாய் இருக்கின்றது; அப்போஸ்தலர்களைக் கர்த்தர் நேரடியாய் நியமித்த விஷயத்தில், சபைக்கு எந்தவிதமான வாக்குரிமையும் இல்லை மற்றும் வாக்குரிமைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது.

ஒவ்வொரு சபையிலும் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய மூப்பர்களின் எண்ணிக்கைத் தொடர்புடைய விஷயத்தைப் பார்க்கையில், இது அக்கூட்டத்தாரில் ஊழியத்திற்குத் தகுதியுடையவர்களாய் இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையினைச் சார்ந்துள்ளது. ஒருவேளை இரண்டு அல்லது மூன்று பேர் திறமிக்கவர்களாய் இருப்பார்களானால், சபையாருக்கான ஊழியங்களானது அவர்களுக்குள்ளாக மாறி மாறி செய்யப்படுகையில், இது அவர்கள் ஒவ்வொருவரின் தாலந்துகள் வளர்வதற்கு உதவுகின்றதாய் இருக்கும் மற்றும் வாய்ப்பிருக்கும் பட்சத்தில் உள்ளூர் சபையாரைத் தாண்டியும் ஊழியங்கள் விரிவாகிடலாம் மற்றும் இப்படியாகச் சபையாரும், அனைவருடைய பல்வேறு தாலந்துகளினால் பயனடைவார்கள். இல்லையேல் ஒருவேளை ஒன்று அல்லது இரண்டு பேரின் தகுதிகளானது, ஒப்புயர்வற்றதாக அடையாளம் கண்டுகொள்ளப்படுமாயின், அவர்கள் சிறந்த விதத்தில் தகுதிப் பெற்றிருக்கும், ஊழியத்தினுடைய அந்தப் பாகங்களானது, அவர்களுக்குக் கொடுக்கப்படலாம்.

மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் தருணமானது, எப்போதுமே பயபக்தியுடன் செய்யப்படுகிறதாய் இருத்தல் வேண்டும். அது கர்த்தருடைய காரியமாகும் மற்றும் அது ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படுத்தப்பட வேண்டும். இக்கருத்தினை, கூட்டத்தினைத் தலைமை தாங்கி நடத்துபவராக (chairman) செயல்படப்போகும் சகோதரன் அனைவருடைய மனதிலும் பதியவைத்திட முயற்சித்திட வேண்டும். சபையாரிலுள்ள ஒவ்வொருவனும் தேவனுடைய சித்தத்தினை அறிவதற்கும், செய்திடுவதற்கும் நாடிடுவானாகில் மற்றும் இக்காரியத்தில் கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கின்றதெனத் தன்னால் நம்பப்படுகிறதை தன்னுடைய அர்ப்பணிப்பிற்கு இசைவாக வெளிப்படுத்தினால், பிற்பாடு "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்துவார்" எனும் வாக்குத்தத்தத்தின் பெலத்தில், இப்படியான ஆழ்ந்து சிந்தித்தல்களின் முடிவானது, யாவராலும் கர்த்தருடைய மனம் என்றும், அவரது அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் வாயிலாக இவ்விதமாய் பரிசுத்த ஆவியானது பேசுகின்றது என்றும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் (சங்கீதம் 25:9). இப்படியான ஆழ்ந்து சிந்தித்தல்களின் முடிவானது, ஏகமனதான ஒப்புதலாகவே பொதுவாய்க் காணப்படும்.

# மூப்பர்களுக்கான தகுதிகள்

1 தீமோத்தேயு 3:1-7-வரையிலான வசனங்களில் (Diaglott மொழியாக்கம் பார்க்கவும்) அப்போஸ்தலன் மூப்பருக்கான அல்லது மேற்பார்வையாளருக்கான தகுதிகளை விவரிக்கின்றார் மற்றும் 8 முதல் 13-வரையிலான வசனங்களில் உதவிக்காரரின் தகுதிகளானது விவரிக்கப்பட்டுள்ளது. இந்த வசனங்களானது, வாக்கு எடுக்கப்படுவதற்கு முன்னதாக வாசிக்கப்பட வேண்டும் மற்றும் பிரதான ஊழியத்திற்குரிய மூப்பர் அல்லது மூப்பர்கள் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் மற்றும் உதவியாளர்கள் தேவைப்படுவார்களானால், அவர்கள் பிற்பாடு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்த உதவிக்காரர்கள் மத்தியில், சகோதரிகள் சிலர் காணப்படுவதும் தகுதியானதே; ஏனெனில் சில ஊழியங்களானது, விசேஷமாக நோயுற்றிருக்கும் சகோதரிகளைச் சந்திக்கும் ஊழியங்களானது, சகோதரிகளால் சிறப்பாய்ச் செய்யப்பட முடியும். இதன் 11-ஆம் வசனமும், உரோமர் 16:1-ஆம் வசனமும் இந்தப் பெண் உதவியாளர்களைக் குறிப்பதாகவே அநேகர் எண்ணுகின்றனர் மற்றும் ஆதிசபையில் அநேகம் சகோதரிகள் ஊழியம் புரிந்ததாக மிகவும் தெளிவாகவே தெரிகின்றது. தெரிந்தெடுத்தலானது அல்லது (vote) வாக்குக் கொடுக்கப்படுவது, கர்த்தருடைய சித்தம் குறித்த ஒவ்வொருவரின் பகுத்துணர்தலுக்கு ஏற்ப வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான தகுதிகள் குறித்து முழுவதும் தெரிந்த நிலையில் செய்யப்பட வேண்டும்.

"கண்காணிப்பை (கண்காணிக்கும் ஊழியத்தினை) விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். (கிறிஸ்துவின் சரீரத்திற்கு நம்மால் ஏறெடுக்க முடிந்த எந்த ஊழியமும், ஆசீர்வாதமான ஊழியமேயாகும்). ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும் (நற்குணமுள்ளவனும்), ஒரே மனைவியை உடைய புருஷனும் [திருமணமான மனுஷராக இருக்க வேண்டிய கட்டாயமில்லை; ஏனெனில் கர்த்தரும், அப்போஸ்தலனும், அதாவது இருவருமே திருமணமாகாத நிலையினையே சிறந்ததெனப் பரிந்துரைக்கின்றனர் (மத்தேயு 19:12; 1 கொரிந்தியர் 7:32,33); ஒன்றிற்கு மேல் மனைவியை அவன் பெற்றிருக்கக்கூடாது; இக்கட்டளையானது, தற்காலத்தைக் காட்டிலும், அந்த நாட்களுக்கே மிகவும் பொருத்தமானதாய்க் காணப்படும்], ஜாக்கிரதையுள்ளவனும் தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக்

குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (1 தீமோத்தேயு 3:1-5). "For if a man know not how to rule his own house, how shall he take care of the church of God?" (KJV) "but if any one knows not how to preside over his own Family, how can he take care of a Congregation of God?" (Diaglott). (1 தீமோத்தேயு 3:5). சபையின் இந்த ஊழியக்காரர்கள் சபையை ஆண்டிட வேண்டும் - அதாவது சபைக்காகச் சட்டங்களை இயற்றி, தங்கள் சித்தத்திற்குச் சபையினைக் கீழ்ப்பட்டிருக்கும் நிலையில் வைத்துக்கொள்ளுதல் என்று ஆங்கில common மொழியாக்கத்தில் இடம் பெறும் rule எனும் வார்த்தைத் தெரிவிக்கும் அர்த்தமாக, உண்மையான அர்த்தம் காணப்படாமல் மாறாக அன்புடன்கூடிய அக்கறையில், இந்த ஊழியக்காரர்கள் சபையைத் தலைமைத் தாங்கி நடத்தி (preside), அதன் நலன்கள் மற்றும் காரியங்களைப்பார்த்துக்கொண்டு, தேவனுடைய உண்மையுள்ள உக்கிராணக்காரர்களென ஆலோசனை வழங்கியும், உதவி புரிந்தும் காணப்பட வேண்டும் என்பது அர்த்தமாகும்/கருத்தாகும். (Emphatic Diaglott மொழியாக்கத்தினைப் பார்க்கவும்). கர்த்தராகிய இயேசுவே, சபைக்கு அவசியமான ஒரே கர்த்தராய் இருக்கின்றார்; ஒரே கர்த்தரும், தலையுமானவருடைய ஆளும் உரிமையினை எந்தக் குருமார் குழுக்களோ அல்லது மேலவைகளோ அல்லது குருமார்களோ அல்லது மூப்பர்களோ எடுத்திடுவதற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. சபையிலுள்ள சகோதரர்கள் அறிவுரையும், புத்திமதியும் கூறிடலாம்; ஆனாலும் இதைச் செய்கையில், அவர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களின்படி இல்லாமல், தேவனுடைய வாக்கியங்களின்படி பேசிடுவதற்கு எப்போதும் முயற்சித்திட வேண்டும் - "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக" (1 பேதுரு 4:10, 11). அவர்களது புத்திமதியானது, கர்த்தருடைய ஆவியின்படி மற்றும் வசனத்தின்படி இருக்கும் பட்சத்தில் மாத்திரமே, சபைக்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட வேண்டும் மற்றும் அது கர்த்தருடைய ஆவி மற்றும் வசனத்தின்படி

காணப்படுகின்றதாவென அனைவருமே தனிப்பட்ட விதத்தில் பகுத்துணர்ந்திட வேண்டும். ஆனால் அவர்களது புத்திமதியானது தேவ வசனத்தின் அடிப்படையில் காணப்படுகிறதென்றால், தேவ வசனத்தினுடைய கட்டளைகள் மற்றும் கற்பனைகளிடத்தில் கவனத்தைத் திருப்புகிறதென்றால், அது சாந்தமான ஆவியில், அனைவராலும் கவனமாய்க் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். மேலும் எவரேனும் இருதயத்தினுடைய பெருமையின் நிமித்தம் அத்தகைய அறிவுரையினை அவமதிப்பதன் மூலமாகவோ அல்லது கவனத்திற்குக் கொண்டுவருவதற்கெனத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டுள்ளதான மனித பாத்திரங்ளைப் பொருட்படுத்தாததன் மூலமாகவோ அசட்டைப் பண்ணுவார் களானால், இது - கர்த்தருக்கும், அவரது வழிகளுக்கும் எதிராக எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றதாய் இருக்கும்.

இதன் காரணமாகவே, "ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும், யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்க முண்டாக்குகிறதினால், அநேகர் தீட்டுப்படாதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" என்று அப்போஸ்தலன் நமக்கு வலியுறுத்துகின்றார் (எபிரெயர் 12:15); ஏனெனில் தேவனுடைய சித்தத்தினை அவருடைய வசனத்தில் தெளிவுப்படுத்தி, வெளிப்படுத்துகின்ற தேவகிருபையானது, தேவதயவானது, முக்கியமாக அவரது தெரிந்தெடுக்கப்பட்ட மனித கருவிகள் வாயிலாகவே சபைக்குக் கடந்து வருகின்றது. மேலும் ஒருவன் வாதினாலாவது/கட்சிமனப்பான்மையினாலாவது அல்லது வீண் பெருமையினாலாவது அல்லது வேறு ஏதேனும் நோக்கத்தின் காரணமாகவோ, கர்த்தருடைய மந்தையின் நம்பிக்கையினைத் தெளிவற்றதாக்கிடுவதற்கு நாடுவானானால், இன்னுமாக சத்தியத்தினை முன்வைக்கும்படிக்கும் மற்றும் சத்தியத்திற்காகப் போராடும்படிக்கும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட இத்தகைய ஊழியக்காரர்களுக்கு எதிராக மந்தையினுடைய இருதயங்களில் கசப்பின் வேரை நடுவதற்கு நாடுவானானால், அவன் மந்தைக்கான தேவகிருபையினைத் தடைப்பண்ணுகிறவனாய் இருப்பான் மற்றும் இதன் விளைவாகக் கிட்டத்தட்ட அநேகர் தீட்டுப்படுத்தப்படுவார்கள் என்பது நிச்சயமே. இப்படியாய் நடந்து கொள்பவன் நியாயத்தீர்ப்பு அடைவதற்காகக் கர்த்தருடைய கரத்தில் இருப்பான்; மற்றும் இத்தகையவர்களுடைய அறிக்கைகள் என்னவாக இருப்பினும், இவர்கள் சீக்கிரமாய், இவர்களுடைய கேடான வழிகளைப் பின்பற்றின யாவரோடும்கூடத் தோல்விக்குள்ளாகுவார்கள். கர்த்தருக்கும் மற்றும் ஒருவருக்கொருவரும் மற்றும் மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளுக்கும் உண்மையாய் இருக்கும் சகோதரர்கள், கர்த்தருடைய சித்தம் தொடர்பான தங்களது பகுத்துணர்தல்களில்

வேறுபடுவார்களானால், இவர்கள் அன்பில் வேற்றுமைக்காட்டவும் வாய்ப்புண்டு; ஆனால் இவர்கள் ஜெபத்தின் வாயிலாகவும், கவனமான வேத ஆராய்ச்சி மூலமாகவும் மற்றும் உள்ளப்பூர்வமான பிரயாசம் மூலமாகவும் சத்தியத்திற்குத் தங்களை அபாத்திரமாக்கிடும் எத்தன்மைகளினின்றும் தங்களது இருதயங்களை மிகவும் தூய்மைப்படுத்திடுவதற்கும், விசுவாசத்தினுடைய ஐக்கியத்தில் துரிதமாய் வந்திடுவதற்கும் பிரயாசம் எடுத்திட வேண்டும் - "ஆகையால் நம்மில் (இருதயத்தில், சித்தத்தில்) தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" (பிலிப்பியர் 3:15, 16).

"அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு [அனுபவமற்ற] நூதன சீஷனாயிருக்கக்கூடாது". [அதாவது அவன் தாழ்த்தப் படுவதற்கு அவசியமாகுமளவுக்கு, சாத்தான் போன்று மாபெரியவராகிடுவதற்குப் பேராசைக்கொள்வான். ஏனெனில் அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமையாய்" இருக்கின்றது - ஏசாயா 14:13, 14; பிலிப்பியர் 2:5-9 Diaglott].

அவன் நிந்தனையிலும் (மாய்மாலத்தினுடைய நிந்தனையிலும்), பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் (உலகத்தால்) (நேர்மைக்கும் மற்றும் பொதுவான நீதியான குணலட்சணத்திற்கும்) நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்."

"அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும். மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்பட வேண்டும்; குற்றஞ்சாட்டப் படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், தெளிந்தபுத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக்குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்" (1 தீமோத்தேயு 3:8-12).

பவுல் தீத்துவுக்கு எழுதின தன்னுடைய கடிதத்தில் இந்தத் தகுதிகளோடுகூடப் பின்வருபவற்றையும் சேர்க்கின்றார் - அதாவது, "ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம்

பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும். அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடைக்க வேண்டும்" (தீத்து 1:9-11). மந்தையினுடைய வளமைக்கு அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்களிடத்தில் இந்தத் தகுதிகளானது காணப்படுவது எவ்வளவு அவசியமாய் இருக்கின்றது! இவை அனைத்திற்கும் மேலாக அவர்கள், "உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவர்களும்," "விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களுமானவர்களை" தேர்ந்தெடுக்க வேண்டும் மற்றும் மனித ஊகங்களையும், வீணான தத்துவ ஞானங்களையும் கொண்டிருப்பவர்களையும் மிகவும் கவனமாய்த் தவிர்த்திட வேண்டும். இந்த எச்சரிக்கையானது, சபை தனது விசுவாசம் யாது என்று திட்டவட்டமாய்த் தெரிந்திருக்க வேண்டும் என்றும், அதன் மூப்பர்களுடைய விசுவாசத்தின் ஆரோக்கியத்தினையும் பகுத்துணர முடிகிறதாய் இருத்தல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ("கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்" என்று) பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டதான விசுவாசமானது, பின்தொடர்ந்து வரும் முற்போக்கான சத்தியங்களுடைய ஒவ்வொரு அம்சத்தினையும் பரீட்சித்திட வேண்டும். அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, கற்பனையான ஊகங்களும், தத்துவ ஞானங்களும் இழிவானதாய்ப் பார்க்கப்பட்டு, ஆதரிக்கப்படக்கூடாது (1 தீமோத்தேயு 6:20).

## மூப்பர்களுக்குரிய அப்போஸ்தலரின் கட்டளைகள்

மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஊழியத்தினை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்போது, தீமோத்தேயுவுக்கான (2 தீமோத்தேயு 3:16, 17; 4:1-5) மற்றும் தீத்துவுக்கான (தீத்து 2:1, 7, 8, 11-15) பவுல் அடிகளாரின் கட்டளைகளும் மற்றும் பேதுரு அடிகளால் அவருடைய பொதுவான நிருபத்தில் (1 பேதுரு 5:1-11) எழுதப்பட்டுள்ள கட்டளைகளும், சபையார் முன்னிலையில் அவர்களுக்கு வாசிக்கப்பட்டு; பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களும், சபையாரும் சேர்ந்து கர்த்தருடைய ஊழியத்தில் ஒத்துழைக்கையில், தேவன் தங்களையும், தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களையும் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபம்பண்ணிடலாம்.

அப்போஸ்தலர்களுடைய இந்த வார்த்தைகளானது, மிகவும் மனதில்

ஆழப்பதியக்கூடிய பயபக்திக்குரிய வார்த்தைகளாகும். பவுல் அடிகளார் பேசுவதைக் கேளுங்கள்:- "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16, 17).

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் (தீமோத்தேயுவாகிய உனக்கு) கட்டளையிடுகிறதாவது: (உனக்குச் சௌகரியமாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும்) சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், (புதிதான, விநோதமான ஏதோ ஒன்றிற்காக - மனித ஊகங்கள் மற்றும் தத்துவ ஞானங்களுக்காக) செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும். (இந்தத் தீமையான தாக்கங்கள் மற்றும் மனவிருப்பங்களுக்கு எதிராக) நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி (காரணம், இது ஊழியத்தில் உண்மையுள்ளவர்கள் அனைவருக்கும் வரும் மற்றும் விழிப்பாய் எதிராளியானவனை எதிர்ப்பவர்கள், எதிராளியானவனுடைய கோபத்திற்கு ஆளாகுவார்கள்); சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" (2 தீமோத்தேயு 4:1-5).

தீத்துவிடம் அவர் கூறுவதாவது: "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளைப் பேசு. நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக. ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த

பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் (சொந்த அதிகாரத்தோடு அல்ல, தேவ வசனத்தின் அதிகாரத்தோடு) கடிந்துகொள்" (தீத்து 2:1, 7, 8, 11-13, 15).

பேதுரு கூறுவதையும் கேளுங்கள்: "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல (வற்புறுத்துதலினால் அல்ல), மனப்பூர்வமாயும் (ஊழியத்தினுடைய பிரயாசங்கள் மற்றும் பொறுப்புகளை மனப்பூர்வமாய் எடுத்துக்கொண்டு) அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, (கர்த்தருக்கும், ஆடுகளுக்கும் மற்றும் சத்தியத்திற்கும் ஊழியம் புரிந்திட விரும்பும்) உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1 பேதுரு 5:1-5).

"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக." (1 பேதுரு 5:6-11).

## சுயாதீனத்தைச் செயல்படுத்துவதே, அடிமைத்தனத்திற்குள்ளாகுதலுக்கு எதிரான பாதுகாப்பாகும்

பாபிலோனின் அடிமைத்தனத்தினின்று விடுதலையடைவதினால் மிகவும் மகிழ்ச்சிக்கொள்ளும் சிலர், ஒழுங்குமுறையே இல்லாத - எதிர்மறையான மிதமிஞ்சின நிலைக்குப் போவதற்கு எதிராக எச்சரிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சபை பிரிவுணர்ச்சியின் அடிப்படையிலான பூமிக்குரிய அமைப்புகளின் அடிமைத்தனத்திற்குச் சிலர் மிகவும் அச்சமடைகிறபடியால், குறிப்பிட்ட ஊழியங்களுக்கெனக் கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலாய் இருக்குமெனத் தங்களால் நம்பப்படுகிற, தங்கள் மத்தியில் காணப்படுபவர்களை நியமிப்பதற்கென்றுள்ள தங்களது தனிப்பட்ட சுயாதீனத்தினைப் பயன்படுத்திடு வதற்கு அஞ்சுகின்றனர். இப்படியாக அவர்கள் தவிர்க்க விரும்பிட்ட அதே அடிமைத்தனத்திற்குள், அடிமைப்படுகிறார்கள். ஊசல்குண்டு/Pendulam போன்று மிதமிஞ்சின ஒரு நிலைப்பாட்டினின்று, மிதமிஞ்சின மறுநிலைப்பாட்டிற்குச் செல்வதே யாவருடைய மனப்பாங்காய் இருக்கின்றது; ஆனால் திருவசனம் மற்றும் சத்தியத்தினுடைய ஆவியானது, உங்களை "ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவதற்கு" ஏதுவானதாகும். எந்த இடத்திலும் காணப்படும் கர்த்தருடைய மந்தைக்கான ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களானது, மனம்போன போக்கில், ஒழுங்கில்லாமல் செய்யப்படுவதற்கு விட்டுவிட முடியாத அளவுக்கு மிகவும் கருத்தூன்றி கவனிக்க வேண்டிய மற்றும் முக்கியமான காரியங்களாய் இருக்கின்றது; ஒருவேளை ஒழுங்கில்லாமல் செய்யப்படுவதற்கு விட்டுவிடப்பட்டால், நிச்சயமாகவே சாத்தான் ஒரு கட்டத்தில் அதைச் சாதகமாகப் பயன்படுத்திடுவான்.

பாபிலோனின் அடிமைத்தனத்தினின்று நாம் தப்பித்துள்ளதான காரியமானது, நம்முடைய காரியங்களிலுள்ள அனைத்து ஒழுங்கையும், ஒழுங்குமுறைமையையும் விலக்கிட வேண்டுமல்லவா என்பதற்குக் காரணம் ஆகாது; ஆதிசபையாருக்கும் இதே பயங்கள் இருந்திருக்கலாம்; ஏனெனில் அவர்களும் அப்போதுதான் யூத மார்க்கத்தின் அடிமைத்தனத்தினின்று தப்பினவர்களாய்க் காணப்பட்டனர் மற்றும் அவர்களும் அடிமைத்தனத்தின் நுகத்திற்குள்ளாக மீண்டும் அடிமைப்படாதபடிக்கு இருக்கத்தக்கதாக அறிவுறுத்தப்பட்டனர் (கலாத்தியர் 5:1). அடிமைத்தனத்தின் நுகம் என்பது ஒழுங்கு மற்றும் ஒழுங்குமுறை பற்றியதாக இல்லாமல், மாறாக பழைய யூத விசுவாசம் - அதாவது நியாயப்பிரமாண உடன்படிக்கைப் பற்றியதாகவே இருந்தது. இதிலிருந்தே அவர்கள் சுதந்தரமடைந்து நிலைத்திருக்க வேண்டும்; ஏனெனில் கிறிஸ்து

தம்முடைய பலியின் வாயிலாக, அவர்களை விடுதலைப்பண்ணினார். சபைகளுக்குக் கட்டளையிடப்பட்டதும், அவர்கள் யாவராலும் கைக்கொள்ளப்பட்டு வந்ததுமான ஒழுங்குமுறையானது, அடிமைத்தனமாக கருதப்படவேயில்லை; ஒழுங்குமுறையானது ஏற்படுத்தப்பட்டது மற்றும் ஒவ்வொரு இடத்திலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள்; மற்றும் இதற்கேற்ப கர்த்தருடைய வேலையும் செழித்தோங்கியது.

ஒழுங்குமுறையின் கொள்கையும் மற்றும் முறையாய் நியமிக்கப்பட்ட மற்றும் கர்த்தருடைய ஆவியினால் தகுதியடைந்துள்ள மூப்பர்களை அங்கீகரித்தல் (இப்படியாக கடவுளியல் கல்லூரிகளில் செய்யப்படுகிறதில்லை) மற்றும் அவர்கள் ஊழியம்புரிகின்றதான சபையாரின் அங்கீகாரம் மற்றும் ஒத்துழைப்பின் வாயிலாக அவர்களை, அவர்களது ஊழியங்களில் ஆதரித்தல் எனும் கொள்கையும் சரியானதே; இல்லையேல் அப்போஸ்தலர்கள் இதை ஆதிசபையாருக்குக் கட்டளையிட்டதில் தவறு செய்தவர்களாய் இருப்பார்கள்; மற்றும் இந்த ஏற்பாட்டினை எதிர்க்காததில் ஆதிகிறிஸ்தவர்களும் தவறு செய்தவர்களாய் இருப்பார்கள். ஆனால் நிச்சயமாகவே அப்போஸ்தலர்களும், ஆதிசபையினரும் தவறு செய்யவில்லை. தங்கள் காரியங்களுக்கான இந்த எளிமையான ஒழுங்குமுறையும், ஏற்பாடுகளும் ஆசீர்வாதமாய் அமைந்தது; கர்த்தரும்கூட இந்த ஏற்பாட்டினை அங்கீகரிப்பதைத் தெரிவிக்கும் வண்ணமாக உதாரணத்தினை, ஆசியாவிலுள்ள ஏழுச் சபைகளுக்குமான தம்முடைய வெளிப்படுத்துதலைத் தெரிவிக்கையில், தம்முடைய செய்தியை, அச்சபைகளின் பிரதிநிதிகளான மூப்பர்கள், "தூதர்கள்," தூதுவர்கள் அல்லது ஊழியக்காரர்கள் வாயிலாக தெரிவித்ததில் வழங்கினார் (வெளிப்படுத்தல் 2:1, 8, 12, 18; 3:1, 7, 14).

ஒழுங்கு விஷயத்தில், பெயர்ச் சபைகளானது கிறிஸ்துவுக்குள்ளாக அந்த எளிமையையும் மற்றும் அவர் தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலர்கள் வாயிலாக கட்டளையிட்டதான ஒழுங்குமுறையையும் அவர்கள் எல்லை மீறி தாண்டிச் சென்று, தேவபக்தியே இல்லாமல் போகுமளவுக்கு, தேவபக்திக்கான வேஷங்களை அதிகமாய்ப் பெருக்கிக்கொண்டதிலும்தான் தவிர, மற்றபடி ஒழுங்கு விஷயத்தில், பெயர்ச் சபைகளுடன் எங்களுக்கு எந்தக் கருத்துவேறுபாடும் இல்லை. ஒரு விஷயத்தினைப் பெயர்ச்சபைகள் பெற்றிருக்கின்றார்கள் என்ற காரணத்திற்காக நாம் எதையும் உதறித் தள்ளிடக்கூடாது; ஆனால் தவறாய்க் காணப்படும் யாவற்றையும், தேவனுடைய ஆவிக்கும், வசனத்திற்கும் முரண்பாடான யாவற்றையும் நாம் மறுத்திட வேண்டும். பல்வேறு சபை பிரிவுகள் மீதான கண்மூடித்தனமான பகைமையினால் மாத்திரமே நாம் வழிநடத்தப்படுவோமானால்,

பெயர்க் கிறிஸ்தவ அமைப்புகளினால் இப்பொழுது மிகக் குறைவான பற்றினால் பற்றிக் கொள்ளப்பட்டிருப்பினும், இன்னமும் அவர்களால் பற்றிக் கொள்ளப்பட்டிருக்கும் சில பழைய மற்றும் விலையேறப்பெற்ற சத்தியங்களைத் தூக்கி எறிந்துவிடும்/ஒதுக்கிவிடும் மிதமிஞ்சின நிலைக்குள் நாம் கடந்துபோக நேரிடும்; உதாரணத்திற்குப் பாவநிவாரணத்தின் அல்லது ஞானஸ்நானத்தின் அல்லது கர்த்தருடைய இராப்போஜனத்தின் உபதேசத்தை, பெயர்ச்சபையினர் பெற்றிருந்தார்கள் என்ற காரணத்திற்காக மாத்திரம், இவ்வுபதேசங்களை நாம் ஒதுக்கித் தள்ளிவிடுபவர்களாகிடுவோம். ஆனால் தேவ வசனத்தினால் கற்பிக்கப்பட்டவர்களாகிய நாம், நலமானவற்றைப் பற்றிக்கொண்டிருக்க கற்றுக்கொண்டிருக்கின்றோம் மற்றும் கர்த்தருடைய நோக்கங்களுக்காக நாம் செய்திடும் யாவையும், "நல்லொழுக்கமாயும், கிரமமாயும்" செய்திடுவது என்பது நலமானவைகளில் ஒன்றாகும்; ஆனால் அது ஆவிக்குரிய ஒழுங்காய் இருப்பதாக; தேவனுடைய மந்தையின்மேல் ஒரு வகுப்பாரை உயர்த்தி, சபையின் மீது உரிமையான அதிகாரமுடைய ஒரே ஒருவராகிய உண்மையான தலையானவரைப் புறக்கணிக்கும் பாபிலோன் ஒழுங்கின்படியாக இருக்கக்கூடாது. "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்; உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்" என்பதை மறந்துவிடாதீர்கள். கிறிஸ்துவின் சரீரம் பக்திவிருத்தி அடைவதற்கான கண்ணோட்டத்தில், "சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது" (1 கொரிந்தியர் 14:40, 26).

## சபையின் தலையானவருடைய சிறப்புரிமைகள்

உண்மை சபையானது எந்தப் பொறுப்புகளுக்கும் கடமைப்பட்டவர்கள் அல்ல என்றும், நாம் விரும்பியவற்றைச் செய்திடுவதற்கு - அதாவது நாம் விரும்பினால் சபை கூடிவருதலை விட்டுவிடுவதற்கு அல்லது நாம் விரும்பினால் மற்றவர்களோடு நாம் ஐக்கியங்கொள்ளுவதற்கு அல்லது இங்கும் அங்குமாகச் சென்று நல்ல, கெட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட போஜன பந்திகளிலிருந்து சிறு உணவுத் துண்டுகளைக் கொண்டுவந்திடுவதற்கு நமக்குச் சுதந்தரம் இருக்கின்றது என்றும் ஊகிப்பது தவறாகும். நாம் உண்மையிலேயே கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருப்போமானால், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் மற்றும் சாத்தான் நம்மீது சுமத்தும் நுகங்கள் யாவற்றிலிருந்தும் விடுதலை அடைவது, நாம் அனுபவிக்கும் ஒரே சுதந்தரமாக இருக்கும். கிறிஸ்து இயேசுவுக்குள் காணப்படுகிறவர்களுக்கு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுதல் இல்லை என்பதே

நம்முடைய விடுதலையாய் இருக்கின்றது; நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் மற்றும் பாவம் எனும் ஆளோட்டிகளுக்கு இனிமேல் நாம் அடிமைகள் அல்ல. அந்த அடிமைத்தனத்திற்குட்பட்டிருந்த பழையவைகள் யாவும் ஒழிந்துபோயின மற்றும் எல்லாம் புதிதாயின. இதுவே தேவனுடைய புத்திரர்களுக்குரிய ஆசீர்வாதமான சுயாதீனமாகும். இது இப்பொழுது விசுவாசத்தினால் உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளது மற்றும் கொஞ்சம் நிஜமாகவும் உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளது; ஆனால் விரைவில் (விழுகையின் நிமித்தம் கறைப்படிந்ததும், அபூரணமானதுமான) சாவுக்கேதுவாகிய இது சாவாமையைத் தரித்துக்கொள்ளும்போது முழுமையாய் உணர்ந்துகொள்ளப்படும்.

இப்படியாகப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று கிறிஸ்துவினால் விடுவிக்கப்பட்டுள்ளபடியால், நமது பரம பிதாவினுடைய சித்தமாய் இருக்கின்ற கிறிஸ்துவின் சித்தத்தினைச் செய்திடுவதற்கென, அவரோடுகூட ஓர் உடன்படிக்கை உறவிற்குள்ளாகக் கடந்து வந்திருக்கின்றோம்; கிறிஸ்துவும்: "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்; என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே வந்தேன்" என்று கூறி, தேவனோடு உடன்படிக்கைப் பண்ணினார். ஆகையால் நமது கர்த்தர் கூறினதுபோல, சாத்தானுடைய பாரமான நுகத்தினின்று அவரால் விடுவிக்கப்பட்டுள்ள நாம், மகிழ்ச்சியான பணியாகிய கிறிஸ்துவின் நுகம் மற்றும் சுமையினை நம்மீது ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் (மத்தேயு 11:29, 30). ஆகையால் இதுவே நாம் நம்முடைய உடன்படிக்கைக்கு உண்மையாய் இருக்கும்பட்சத்தில் நம்முடைய சுயாதீனத்திற்கான பரப்பளவாகும் மற்றும் நம்முடைய அடிமைத்தனத்திற்கான பரப்பளவாக இருக்கும். அவருடைய அருமையான நாமத்திற்குத் துதி ஏறெடுப்போமாக! நமது கர்த்தரும், மீட்பருமானவருடைய நுகம் மெதுவாயும், அவரது சுமை இலகுவானதாகவும் இருக்கின்றதை நாம் காண்கின்றோம்; காரணம் நமக்கான அவரது அன்பும் மற்றும் அவருக்கான நமது அன்பும் ஆகும்.

"பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிறவர்களாகிய" உண்மை சபையானது, அநேக சூழ்நிலை மாற்றங்களுக்குள்ளானாலும் - அதன் அங்கத்துவமானது தொடர்ந்து மாறிக்கொண்டிருந்தாலும், அது தற்காலத்திலும் சந்தேகத்திற்கிடமின்றி ஓர் organization/அமைப்பேயாகும்; ஆனால் அது ஒரு பரலோக அமைப்பே ஒழிய, பூமிக்குரிய அமைப்பல்ல. இரண்டு விதத்தில் கிறிஸ்துவின் உண்மை சபையானது கருதப்படலாம்: (1) சுவிசேஷ யுகத்தினுடைய துவக்கம் முதல் முடிவுவரையிலுமுள்ள அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளின் முழுக்கூட்டத்தாருமே ஒரே சரீரமாக, ஒரே சபையாகக் காணப்படுகின்றனரே ஒழிய, அநேகம் அல்ல; ஏனெனில் கர்த்தர் ஒரு சபையையே ஸ்தாபித்தார். மேலும் அந்த ஒரு சபைக்கு, அவரே ஒரே "கர்த்தராகவும்"

மற்றும் "தலையானவராகவும்," மாபெரும் "பிரதான மேய்ப்பராகவும்" மற்றும் "போதகராகவும்" மற்றும் ஒரே அதிகாரியாகவும் காணப்படுகின்றார். இதுவே "பரலோகத்தில் பேரெழுதப்பட்டவர்களாகிய" "முதற்பேறானவர்களின் சபையாக" இருக்கின்றது (எபிரெயர் 12:23); மற்றும் தங்களது ஓட்டத்தின் முடிவு வரையிலும் தங்கள் பெயர்களை அங்கே எழுதப் பெற்றிருந்து, உண்மையின்மையின் காரணமாக (வெளிப்படுத்தல் 3:5) கிறுக்கிப்போடப்படாமல் தங்கள் பெயர்களை அங்கே எழுதப் பெற்றிருப்பவர்கள், நமது கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்து வெளிப்படும்போதும் மற்றும் இராஜ்யத்திலும் காணப்படும் ஜெயங்கொள்ளும் சபையில் முழுமையான அங்கத்தினத்திற்குள்ளாக அனுமதிக்கப்படுவார்கள் (2 தீமோத்தேயு 4:8; தீத்து 2:13; 1 பேதுரு 1:7; 5:4).

கர்த்தர்தாமே சபைக்கான புஸ்தகத்தினை - நம்முடைய பெயர்களின் பதிவுகள் மற்றும் ஒவ்வொரு அங்கத்தினன் குறித்த தனித்தனி பதிவுகள் - ஆகியவற்றைப் பார்த்துக்கொள்கின்றார்; அதற்கும் நமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. உண்மையாய் அர்ப்பணம்பண்ணியுள்ள விசுவாசிகள் யாவருடைய பெயர்களையும் அவர் பதிவு செய்துகொள்கின்றார் மற்றும் பூமியிலுள்ள எந்த வல்லமையினாலும், அவர்களை அவர் கையிலிருந்து பறித்துக்கொள்ளவோ அல்லது பரலோகத்தில் பதிவுபண்ணினதிலிருந்து, அவர்களது பெயர்களைக் கிறுக்கிப்போடவோ முடியாது (யோவான் 10:28, 29; உரோமர் 8:35-39; வெளிப்படுத்தல் 3:5). இதற்கும் மற்றும் தலைக்குரிய கடமைகள் யாவற்றிற்கும், அவரது தவறிழைக்காத ஞானம் மாத்திரமே போதுமானதாகும். ஆகையால் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்த ஓர் அங்கத்தினனும் இறுமாப்படைவது என்பது - சபையின் தலையானவரின் அதிகாரத்தினை எடுத்துக்கொள்வது என்பது, மிகவும் கண்ணியமற்றதாக மற்றும் கண்டனத்திற்குரியதாக இருக்கும். மேலும் அத்தகையவன் கர்த்தருடைய சிட்சையினால் சீக்கிரமாய்க் குணமடையவில்லையெனில், அவன் அறுப்புண்டுபோய், அவரது சரீரத்தில் இடம்பெறுவதற்கு அபாத்திரனாகப் புறந்தள்ளப்படுவான் (2 தெசலோனிக்கேயர் 2:11).

(2) சபை கருதப்படுவதற்கான மற்றொரு விதம் - அதாவது ஆவிக்குரிய விதமாகக் காணப்படுகிற இந்த விதம் - ஒரு பங்கானவர்களை முழுமையானவர்களைப் போன்று கருதுவதாகும் (பிலேமோன் 2; வெளிப்படுத்தல் 2:1). இப்படியாக ஜீவித்துக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்கள் அனைவரும் இன்றிருக்கும் சபையெனப் பேசப்படலாம் அல்லது ஜீவித்துக்கொண்டிருக்கும் சபையில் எத்தனை பேர்கள் ஓரிடத்தில் கூடினாலும், அவர்கள் அவ்விடத்திலுள்ள சபை என்று அழைக்கப்படலாம் (உதாரணத்திற்கு: பிலேமோன் 2; வெளிப்படுத்தல் 1:4; 2:1; 2 கொரிந்தியர் 11:28). ஏனெனில் எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர்

கூடுகின்றார்களோ, அவர்கள் நடுவில் தாம் காணப்படுவாரெனக் கர்த்தரும், தலையுமானவர் வாக்களித்துள்ளார் (மத்தேயு 18:20). அங்கத்தினர்கள் யாவரும் கர்த்தரோடுகூட ஒன்றுசேரும்போதும் மற்றும் மகிமையடையும் போதுதான், சர்வசங்க சபை காணப்படும்.

உண்மை சபையினுடைய அங்கத்தினர்களை எப்படி நாம் அறிந்துகொள்வது என்று யாரேனும் கேட்பார்களானால், அதற்கு நம்முடைய பதில்: கிறிஸ்துவுக்குள்ளான தங்களது விசுவாசத்தினைக் குறித்த அவர்களது அறிக்கையின் மூலமாகவும் மற்றும் அவர்களில் வெளிப்படும் கிறிஸ்துவின் ஆவியின் மூலமாகவும் நாம் அவர்களை அறிந்துகொள்ளலாம் என்பதேயாகும். அவர்கள் நடுவில் வெளிப்படுகிறதான அவரது சத்தியமும், அவரது ஆவியும் மற்றும் அவரது பிரசன்னமும்தான் - அவர்களை ஒன்றுகூடத் தூண்டுகின்றது மற்றும் கிறிஸ்தவ அன்பு மற்றும் ஐக்கியத்தின் கட்டுகளில் அவர்களது இருதயங்களை ஒருங்கிணைக்கின்றது மற்றும் அவர்களை அதே நம்பிக்கையினாலே ஏவி, அதே சந்தோஷத்தினால் அவர்களை உயிரூட்டி, கர்த்தருடைய வேலையில் ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பதற்கு, அவர்களை நடத்துகின்றதாய் இருக்கின்றது. நம் மத்தியில் ஒழுங்கற்று நடக்கிறவரின் பெயரினை அங்கத்தினர்களின் பட்டியலிலிருந்து நாம் விலக்கிட முடியாததினால், அத்தகையவரை நாம் எப்படிக் கையாளுவது? என்று கேள்வி எழுப்பப்படுகிறதென்றால்; இதற்கு நம் பதில் என்னவெனில்: இவ்விஷயத்திற்கு நமக்கு மிகவும் தெளிவான கட்டளைகளைப் பெற்றிருக்கின்றோம். ஆதிசபையில் இருந்ததுபோல இப்பொழுதும் அங்கத்தினர்கள் மத்தியில் பல்வேறு அளவிலான வளர்ச்சி நிலைகள் காணப்படுகின்றது; மற்றும் பவுல் அடிகளாரோ: சிலர் திடனற்றவர்களாய் இருப்பார்கள், அவர்களைத் தேற்றுங்கள்; சிலர் பலவீனர்களாய் இருப்பார்கள், அவர்களைத் தாங்குங்கள்; எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய்/ பொறுமையாய் இருக்கும் போதிலும், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள் என்று கூறுகின்றார் (1தெசலோனிக்கேயர் 5:14). ஒழுங்கில்லாதவர்களைப் பலவீனர்களென்று தவறாய் எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேற்றிக்கொண்டிரா தேயுங்கள்; மாறாக நீடிய சாந்தத்துடனும், பொறுமையுடனும், அன்புடனும் ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள். ஆனால் நீங்கள் அத்தகைய ஒருவருக்கு உண்மையாய்ப் புத்திசொன்ன பிற்பாடு, அவர் தொடர்ந்து சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் இருப்பாரானால், "அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி புத்தி சொல்லுங்கள்." கர்த்தர் அவனை அறுப்புண்டுபோகப்பண்ணியிருக்கிறார் என்பது வெளிப்பட்ட பிற்பாடே,

நாம் அவனிடத்தில் சகோதர அக்கறைக்கொள்வதை நிறுத்திடலாம் (2 தெசலோனிக்கேயர் 3:14, 15).

சகோதரர்களுக்கிடையே பிரச்சனைகள் ஏற்படும் சூழ்நிலைகளுக்கும் கூடக் கர்த்தர் தெளிவான கட்டளைகளைக் கொடுத்துள்ளார் (மத்தேயு 18:15-17).

சபையின் மாபெரும் தலையானவர், தம்முடைய ஜனங்களைப் பக்திவிருத்தியடையப் பண்ணுவதற்கு - அவர்களை மகா பரிசுத்த விசுவாசத்தில் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் கிறிஸ்தவ குணலட்சணத்தில் அவர்களது வளர்ச்சிக்குமாக திரளான வழிவகைகளையும் அருளியுள்ளார். பூமியில் நம்முடைய ஓட்டம் முழுவதிலும், அவரது ஓயாத மேற்பார்வையினையும் மற்றும் வழிநடத்துதலையும் நாம் பெற்றிருக்கின்றோம். அவர் நம்முடைய தலையாக இருக்கின்றார், நாம் அவரது சரீரமாக இருக்கின்றோம்; அவர் நம்முடைய மேய்ப்பனாக இருக்கின்றார், நாம் அவரது ஆடுகளாக இருக்கின்றோம்; அவர் நமது தளபதியாய் இருக்கின்றார், நாம் அவரது போர்ச் சேவகர்களாய் இருக்கின்றோம். இப்பொழுது நாம் தகுதிக்கான தேர்வின்கீழ், பரீட்சையின்கீழ் உள்ள சபையாக இருக்கின்றோம்; விரைவில் உண்மையுள்ள போர்ச் சேவகர்கள் என்று அங்கீகரிக்கப்படுவோம் என்றும், வல்லமையிலும், மகா மகிமையில் காணப்படும் ஜெயங்கொள்ளும் சபையின் முழு அங்கத்துவத்திற்குள் அனுமதிக்கப்படுவதற்குப் பாத்திரவான்களாகிடுவோம் என்றுமுள்ள நம்பிக்கையில் நமக்கான போர்களின் மத்தியில், இப்பொழுது நாம் போர்புரியும் சபையாகக் காணப்படுகின்றோம்.

இப்படியாக, நமக்காக வாக்களிக்கப்பட்டுள்ள கானானை நோக்கி, வனாந்தரம் வழியாய் நாம் பிரயாணிக்கையில், தகுதிக்காணும் இந்நிலையிலும்கூட எப்படி முற்றிலுமாகக் கிறிஸ்துவின் உண்மை சபையானது, அதன் தலையாகிய கிறிஸ்துவின் கீழ் நிர்வகிக்கப்படுவதை நாம் காண்கின்றோம். நாம் அனைவரும் நம்முடைய மாபெரும் அதிபதியினுடைய கட்டளைகளின் கீழ்க் காணப்படுகின்றோம்; தேவனுடைய ஜனங்களுக்கு வைக்கப்பட்டுள்ளதான இளைப்பாறுதலை அடைய விரும்பும் யாவரும் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்றிட வேண்டும். ஓ! நாம் சொந்தமாய்ச் செயல்படக்கூடாது மற்றும் எவ்விஷயத்திலும் நம்முடைய சொந்த சித்தத்தின்படி செய்திடுவதற்கு எந்த உரிமையும் நமக்கு நிச்சயமாகவே இல்லை. அனைத்தும், நம்முடைய சிந்தனைகளும்கூடக் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கின்றது; மற்றும் இதை அடையாளம் கண்டுகொள்வதிலும் மற்றும் மகிழ்ச்சியுடன், அன்புடன் கீழ்ப்படிவதிலுமுள்ள நம்முடைய உண்மையின் மீதே - அவரது சபையிலுள்ளதான நம்முடைய அங்கத்துவமானது சார்ந்திருக்கப்பண்ணப்பட்டுள்ளது. எவ்விஷயத்திலும் நம்முடைய விருப்பத்தின்படி நம்மால் செய்திட முடியாது; நாம் கிறிஸ்துவுக்குள்ளான

பிரமாணத்திற்கு விதிவிலக்கற்ற விதத்தில் கட்டுப்பட்டிருக்கின்றோம்; அவரது பரிசுத்த ஆவியானது நம்முடைய ஒவ்வொரு கிரியையும், வார்த்தையையும் மற்றும் சிந்தையையும் ஆண்டிட வேண்டும்; மற்றும் இப்படியாக நம்முடைய ஒவ்வொரு வல்லமையையும், தாலந்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்துவதே தொடர்ந்து நம்முடைய பிரயாசமாகக் காணப்பட வேண்டும்.

கிறிஸ்துவுக்கு அடிமைப்பட்டிருக்கும் இந்த ஆசீர்வாதமான அடிமைத்தனத்தில், அன்பிற்கு அடிமைப்பட்டிருக்கும் அடிமைத்தனத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் பாவத்தின் சங்கிலிகள் நம்மிடமிருந்து கீழே விழும்போது, உயர்ந்த பட்ச சுயாதீனம் காணப்படுகின்றது. உலகமும், அதன் கருத்துகளும், வீணான குறிக்கோள்களும், அறிவீனங்களும், பெருமையும் மற்றும் மூட நம்பிக்கைகளும், பயங்களும் நம்மை இனியும் விலங்கிடுகிறதில்லை மற்றும் தெய்வீகக் கிருபையின் மகிமையான வெளிச்சம் உள்ளே வருமளவுக்கு நம்முடைய மனங்கள் மற்றும் இருதயங்களின் ஜன்னல்கள் அகலமாக திறக்கின்றன மற்றும் நம்முடைய இருதயங்களானது களிகூர்ந்து பாடுகின்றன.

## அப்போஸ்தலரின் கட்டளை, கர்த்தருடைய கட்டளையாக இருக்கின்றது

இப்படியாகச் சபையின் மாபெரும் தலையானவர், நமக்கான வழியினை நமக்கு வகுத்துள்ளார். "வழி இதுவே, இதிலே நடவுங்கள்" என்று அவர் கூறியுள்ளார். அவர் அனைத்து வரையறைகள் மற்றும் ஏற்பாடுகள் முதலானவைகளை வகுத்தமைத்துள்ளார் மற்றும் அவரது கட்டளைகளை உண்மையாய்க் கைக்கொள்வதே நம்முடைய பங்காய் இருக்கின்றது. சபை காரியங்களுக்கடுத்த ஒழுங்குமுறை ஏற்பாடுகளைக் கர்த்தரே கொடுத்ததாகக் குறிப்பிடும் வகையில் அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு கூறுகின்றார்:-

"மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" (எபேசியர் 4:11-13). இங்கு, 1 கொரிந்தியர் 12:12-20-வரையிலான வசனங்களைப் போலவே மனித சரீரத்தின்

அவயங்களைக்கொண்டு அப்போஸ்தலன், சபை ஒருவரோடொருவரும் மற்றும் கர்த்தரோடும் கொண்டிருக்கும் உறவினைச் சித்தரிக்கின்றார்; சரீரமானது சீரான அமைப்படையத்தக்கதாகவும், பூரணமடையத்தக்கதாகவும் ஒவ்வொரு அவயமும்/அங்கத்தினனும் போஷிக்கப்பட வேண்டும் மற்றும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மறுபடியுமாக அதே அப்போஸ்தலன் நம்மிடம்: "தேவன் தமது சித்தத்தின்படி, அவயங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். [தன்னுடைய விஷயத்திலும், மற்றவர்கள் விஷயத்திலும் கர்த்தருடைய நியமனங்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு ஒவ்வொருவரும் நாடிட வேண்டும்; மற்றும் கர்த்தரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி மாத்திரமே ஊழியம் புரிந்திட ஒவ்வொருவரும் நாடிட வேண்டும்]. ஏனெனில் சரீரமானது ஓர் அவயவமாயிராமல், அநேகம் அவயங்களாய் இருக்கின்றது . . . தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு இன்னும் பலரையும் ஏற்படுத்தினார்" என்று கூறுகின்றார். சுவிசேஷ யுகம் முழுவதிலும் தம்முடைய சபைக்கு ஊழியர்களை அருளி, தம்முடைய பங்கினைக் கர்த்தர் உண்மையாய்ச் செய்திருக்கின்றார்; ஆனால் அவருடைய ஜனங்கள் - அவரது தகுதியுள்ள மற்றும் நியமனத்தின்படியானவர்களுக்காகக் கவனித்துப் பார்த்தவர்களாக எல்லாத் தருணங்களிலும் இருந்ததில்லை என்பது நிச்சயமே மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி, இப்படித் தவறிப்போவதன் காரணமாகவும், அத்தகையவர்களுக்குப் பதிலாக தன்னைத்தானே நியமித்துக்கொண்ட, தன்னைத்தானே உயர்த்திக்கொண்ட, தன்னைத்தானே போதித்துக் கொண்ட மற்றும் தன்னைத்தானே என்றென்றுமாக நியமித்துக் கொண்ட "குருமாரை" ஏற்றுக்கொண்டதன் காரணமாகவும் அநேகவற்றை அவரது ஜனங்கள் இழந்தும்போனார்கள்.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களே இருந்தனர் மற்றும் தேவ ஏவுதலின் பேரிலான இவர்களது ஊழியமானது, முழுச்சபைக்கும், யுகத்தின் முடிவுவரையிலும் காணப்படுகின்றது. இவர்களுக்கு வாரிசுகள் இருந்ததில்லை; மாறாக மந்தைக்கு உபதேசிக்கவும், மந்தையினுடைய நலனுக்கடுத்த காரியங்களைப் பார்த்துக்கொள்ளவும் முடிகின்ற வெவ்வேறு அளவிலான திறமைகளுடைய போதகர்களையும் மற்றும் மேய்ப்பர்களையும் கர்த்தர் அவ்வப்போது எழுப்பிக்கொண்டிருந்தார்.

"மூப்பர்" எனும் வார்த்தையானது, சபை பக்திவிருத்தியடையத்தக்கதாகக் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட யாவருக்கும் அல்லது இந்த ஊழியக்காரர்கள் அனைவருக்கும் பொருந்துகின்றதாய் இருக்கும்; இந்த ஊழியர்களில் சிலர் பிரதான ஊழியத்தினைப் பெற்றவர்களாகவும், மற்றவர்கள் உதவியாளர்களாகவும்

காணப்படுகின்றனர். ஆகவேதான் அப்போஸ்தலர்கள் தங்களை மூப்பர்களெனத் தெரிவிக்கின்றனர் (1 பேதுரு 5:1). "மூப்பர்" என்ற வார்த்தையானது, மூத்த சகோதரனைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; வயதில் மூத்தவராக இருப்பது அவசியமல்ல, மாறாக கிறிஸ்தவ குணலட்சணத்தில் முதிர்ச்சியடைந்தவராக இருத்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தீமோத்தேயுவும், தீத்துவும் அநேகமாக வாலிபர்களாகக் காணப்பட்டனர் (1 தீமோத்தேயு 4:11, 12; தீத்து 1:4; 2:15).

ஒரு சபையில், சத்தியத்தினைப் பொதுவிடங்களில் முன்வைத்திடுவதற்கான தாலந்தினைக் குறிப்பிடத்தக்க விதத்தில் ஒருவரோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களோ பெற்றிருப்பதாக தென்படுகையில், அது சபையார் யாவராலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, அதைப் பயன்படுத்திக் கொள்ளும் விஷயத்தில் அனைவருமே ஒத்துழைத்திட வேண்டும்; மேலும் இதற்காக விசேஷித்த கூட்டங்கள் ஏற்படுத்தப்படலாம். இம்மாதிரியான கூட்டங்கள் ஆதிசபையில் அரிதாய் இருந்தது; காரணம் பவுல் அல்லது அப்பல்லோ அல்லது பேதுரு போன்ற வரம்பெற்ற பேச்சாளர்கள் போன்று அநேகர் அப்போது இருக்கவில்லை. ஆனால் அத்தகைய தாலந்துகள் கண்டுபிடிக்கப்பட்டபோது, அவைகள் பயன்படுத்தப்பட்டன மற்றும் பிரயோஜனமாயும் இருந்தன. இப்படியாகவே நம் மத்தியிலும் காணப்பட வேண்டும். பொது ஊழியங்களுக்குரிய பேச்சாற்றலானது சாதாரணமானதாகவோ அல்லது அசாதாரணமானதாக இருக்கலாம்; எனினும் இரண்டுமே பக்திவிருத்திக்கு ஏதுவானதாய் இருக்க வேண்டும். இதைப் பகுத்துணர்கிறவர்கள் சபையார்களே ஆவார்கள் மற்றும் ஒருவேளை பொதுப் பிரசங்கித்தல் ஊழியங்களுக்கான தாலந்துகள் இல்லையெனில், அவ்வூழியங்கள் மேற்கொள்ளப்படாமல் இருப்பது நல்லது மற்றும் இதற்குப் பதிலாக அதிக பக்திவிருத்தியடையப்பண்ணும் மற்ற ஊழியங்கள் - அதாவது இதற்குப் பொருத்தமான தாலந்துகள் சபையார் மத்தியில் காணப்படுகையில் - இந்த மற்ற ஊழியங்கள் செய்யப்படலாம்.

## பரிசுத்தவான்களின் கூடுகைகளில் அடையப்பட வேண்டிய நோக்கங்கள்

பரிசுத்தவான்களின் கூடுகைகள் மற்றும் மூப்பர்களுடைய ஊழியங்கள் முதலியவைகளில் அடையப்பட வேண்டிய நோக்கங்களையும் கவனியுங்கள் - இதன் நோக்கமானது கூடி உரையாடி மகிழ்வதோ அல்லது வழக்கமான ஊழியங்களைத் தொடர்வதோ அல்ல; மாறாக அதன் நோக்கமானது (1) "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டுச் சுவிசேஷஊழிய வேலைக்காக" வரும் இந்தச் சபை கூடிவருதல்களானது - கர்த்தருடைய ஊழியத்திற்கு, அதாவது எதிர்க்கால

மகிமையான ஊழியத்திற்கு மாத்திரமல்லாமல், இந்த யுகத்திலும், அதாவது மணவாட்டி எதிர்க்கால ஊழியத்திற்கெனத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு உதவுகிற - சபைக்கான அவசியமான ஊழியத்திற்காகவும்கூட, பரிசுத்தவான்கள் யாவரும் மிக முழுமையாய்த் தயார்படுத்தப்படுவதற்கு ஏதுவான பயிற்சி - பள்ளிக்கூடங்களாகக் காணப்பட வேண்டும். இந்நோக்கத்திற்காகப் பரிசுத்தவான்கள் யாவரும் கடும்முயற்சி எடுக்கும் மாணவர்களாய் இருக்க வேண்டும் மற்றும் வழங்கப்படும் அறிவுரைகளும் முடிந்தமட்டும் முறையாயும், ஒழுங்காயும், சந்தோஷப்படுத்துவதற்காக இல்லாமல் முழுமையான வளர்ச்சிக்கு ஏதுவாய் இருக்கும் கண்ணோட்டத்தில் வழங்கப்பட வேண்டும். "காலத்தைப் பார்த்தால் (உங்களுக்கு இந்தச் சிலாக்கியங்கள் கிடைத்திட்டதான காலத்தைப் பார்த்தால்) போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்" என்று கூறி, தங்கள் வாய்ப்புகளைப் போதுமானவளவுக்குப் பயன்படுத்தி வளர்ச்சியடைந்து, உறுதிப்பெறாத சிலரை பவுல் அடிகளார் கடிந்துகொண்டது நமக்கு நினைவிருக்கிறது (எபிரெயர் 5:12).

(2) அதன் நோக்கமானது - கிறிஸ்துவினுடைய சரீரம் பக்திவிருத்தி யடைவதற்காக - அனைவரும் ஒரே சரீரமாகக் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சிக்கு நேராக கிறிஸ்தவக் குணலட்சணத்திலும், கிருபையிலும் மற்றும் அறிவிலும் வளர்வதில் முன்னேறத்தக்கதாக, அனைவரும் விசுவாசத்திலும், ஆவியிலும், அன்பிலும், தேவனுக்கான அர்ப்பணிப்பிலும் ஒருமைப்பட்டு இணைவதற்காக ஆகும்.

நாம் ஒன்றாய்க் கூடிவருதலுக்கான நோக்கத்தினைப்பற்றின இக்கண்ணோட்டத்தின்படி, நாம் நிறைவேற்றிடுவதற்கு மிக முக்கியமான வேலையைப் பெற்றிருக்கின்றோம் என்று காண்கின்றோம். ஆகையால் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும், ஊழியக்காரனாயும் நம்மைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதை யாயிருப்போமாக. இப்பாடம் தொடர்புடையதான இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான், ஊழியத்திற்கு நம்மை ஆயத்தமாக்குவதில் முழுமைக்கும், பூரணத்திற்கும் உதவியாக மற்றும் கிருபைக்கான வழிவகைகளில் ஒன்றாக [ஒரே வழிவகை என்று இல்லாமல் மாறாக காணப்படும் பல்வேறு வழிவகைகளில் ஒன்றாக] செப்டம்பர் மாத நம்முடைய வெளியீட்டில் நாங்கள் குறிப்பிட்டுள்ளதான "வேத ஆராய்ச்சிக்கான டாண் குழுக்கள்" (Dawn Circles for Bible Study) திட்டத்தினைப் பரிந்துரைத்திருந்தோம்.

இதற்காக ஒவ்வொரு வாரமும், ஒரு கூட்டம் கர்த்தருடைய நாளிலோ அல்லது வாரத்தினுடைய வேறேதாகிலும் நாளினுடைய மாலைப்பொழுதிலோ நடத்தப்படுவதாக என்று நாங்கள் அறிவுரையாகக் கூறுகின்றோம். யுகங்களுக்கடுத்த திட்டம்தான் - தெய்வீகத் திட்டம் என்றும், இந்த அறுவடை காலத்திற்கான ஏற்றகால சத்தியமாய் இருக்கின்றது என்றும், அதன் காலங்களும், வேளைகளும் தெய்வீக, நியமனத்தின்படியானது என்றும் நாம் உண்மையாய் நம்புவோமானால், நம்மிடத்திலிருக்கும் நம்பிக்கைக்கான விளக்கத்தினைக் கொடுக்க முடிகிறவர்களாய் நாம் இருக்கத்தக்கதாக, அதை/யுகங்களுக்கடுத்த திட்டத்தினை முழுமையாய்க் கற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தினை நாம் புரிந்திருப்போம். அதுதான் இந்தப் "பொல்லாத நாட்களின்" - கொடிய காலங்களின் போராட்டங்களுக்காக ஆயுதம் தரித்துக்கொள்வதற்கு, அனைவருக்கும் அவசியமானதாய் இருக்கின்றது மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி இந்த ஒரு நோக்கத்திற்காகவே அது நமக்குத் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான கூட்டங்களில், பெலவீனர்கள் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தினைத் தரித்துக்கொள்ள உதவிடுவதற்கும் மற்றும் ஒரே பிரம்மாண்டமான, சீராய் இணக்கமுள்ளதான தெய்வீகத் திட்டத்தில், எப்படி முன்வைக்கப்படும் ஒவ்வொரு வேதவாக்கியமும், அத்திட்டத்தில் அதனதன் இடத்தில் பொருந்துகின்றது என்று காண்பித்துக்கொடுப்பதற்கும், பலவான்கள் பெரியளவில் ஊழியம் புரிந்திடலாம். இக்கூட்டமும் மற்றும் அனைத்துக் கூட்டங்களும் எப்போதும் துதி ஆராதனையோடு துவங்கி முடிக்கப்பட வேண்டும்.

ஜெபமும், துதித்தலும், சாட்சியும் உள்ளடக்கின இடைவாரக் கூடுகையினையும் (உபதேச ரீதியில் இல்லாமல், பக்தி மற்றும் உரையாடல் ரீதியிலான கூடுகையினையும்) நாங்கள் பரிந்துரைக்கின்றோம்; இக்கூட்டங்களினுடைய விசேஷித்த நோக்கம் பக்தியின் ஆவியினையும் மற்றும் கிறிஸ்தவ நட்புறவை/அந்நியோனியத்தை, அன்பை மற்றும் ஐக்கியத்தை வளர்த்தி உருவாக்கிடுவதற்காகும். இப்படியாக நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி மற்றும் ஒருவருக்கொருவர் நற்கிரியைகளுக்கு ஏவிடுவோம். இந்தக் கூட்டங்கள் இரண்டினுடைய நல் அம்சம் என்னவெனில், இவை சுதந்தரமாய்ப் பங்கெடுப்பதற்கும் மற்றும் ஒருவரையொருவர் பக்திவிருத்தி அடையப்பண்ணுவதற்குமென யாவருக்கும் வாய்ப்புகள் அளிக்கும் காரியமேயாகும்.

## அலிகெனி சபையில் காணப்படும் ஒழுங்குமுறை

அலிகெனியில், இங்குள்ள சபையில் காணப்படும் ஒழுங்குமுறையினை அறிந்துகொள்வதற்கு அநேகர் விரும்புவார்கள் மற்றும் அது அநேகருக்குப்

பிரயோஜனமாய் இருக்கும். அங்கத்தினர்களின் பட்டியலை நாங்கள் வைத்திருப்பதில்லை; ஏனெனில் அந்தப் புஸ்தகத்தின் காரியத்தினைக் கர்த்தரிடமே முழுமையாய் விட்டுவிட்டோம்; தம்முடையவர்கள் யாவரையும் அவர் அறிவார்; மற்றும் அவர்களிடத்தில் வெளிப்படும் அவரது ஆவியின் மூலம் நாம் அவர்களை அடையாளம் கண்டுகொள்கின்றோம். பிரசங்கமும், ஜெபமும், துதித்தலும் 1.30 முதல் 2.30 pm-வரை ஜெர்மானிய மொழியில் நடைபெறும் மற்றும் ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் 3pm-கு ஆங்கில மொழியில் நடைபெறும் மற்றும் மாலையில் 7.30 மணிக்கு ஒரு பொதுவான வேத ஆராய்ச்சி நடைபெறும் மற்றும் இது தொடங்குவதற்கு முன்னதாக அரைமணி நேரம் துதி ஆராதனை நடைபெறும்.

நாங்கள் மிகவும் தொலைத்தூரமாகச் சிதறிக்காணப்படுவதினால், பொதுவான இடைவாரக் கூட்டங்களுக்காகப் புதன்கிழமை மாலையில், இரண்டு பட்டணங்களினுடைய பல்வேறு பகுதிகளில் 7-வீட்டுக் கூட்டங்களைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் வெள்ளிக்கிழமை மாலைப்பொழுதன்று அநேகம் "டாண் குழுக்கள்" துவங்கப்பட்டு வருகின்றது. இந்தக் கூட்டங்களைப் பொறுப்பேற்று நடத்திடுவதற்கு அநேகம் திறமிக்கச் சகோதரர்கள் சபையாருடைய வாக்கின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; மற்றும் ஒவ்வொரு காலாண்டுதோறும், இவர்கள் மாற்றிக்கொள்ளப்படுகின்றனர் (exchange); இதனால் ஒவ்வொரு கூட்டத்திற்கும் பலவகையினைக் கொடுக்க முடிகின்றது மற்றும் இவ்விடத்திலுள்ள முழுச்சபையினுடைய ஆவிக்குரிய நிலைமையினை வழிநடத்துபவர்கள் நன்கு தெரிந்துகொள்ள முடிகின்றது. சில சமயங்களில் அருகாமையிலுள்ள பட்டணங்களிலுள்ள, மற்றச் சிறு சபையார்களுக்கு உதவிக்கரம் அளிக்கும்படிக்குச் சிலர் செல்வதுமுண்டு. சபையில் முடிந்தமட்டும் அதிகமான தாலந்தினை வெளிக்கொணர்வதும், வளர்த்திடுவதும், எங்களுடைய பிரயாசமாகக் காணப்படுகின்றது; சிலசமயங்களில் காலாண்டினுடைய முடிவில் (ஊழியத்தின் விஷயத்தில்) ஒன்று அல்லது இரண்டு பேரின் பெயர்களைப் பட்டியலிலிருந்து விலக்கிக்கொண்டு, புதியவர்கள் கொண்டுவரப்படுகின்றார்கள் மற்றும் பின்னர் அந்த நபர்களின் பெயர்கள் மறுபடியுமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, ஊழியத்திற்கென வாக்கெடுப்புப் பண்ணி (vote) கொண்டுவரப்படுகின்றன.

இந்த வழிநடத்துபவர்களோடுகூட, வீடு சந்திப்பதிலும், மேய்ப்பரின் கீழாக உதவிபுரியும் ஊழியத்திலும் சகோதரரோடு ஒத்துழைக்கின்ற அநேகம் (பத்து) சகோதரிகளையும் சபையார் நியமித்துள்ளனர். இந்தச் சகோதரிகள் விசேஷமாக ஊழியத்திற்குரிய தகுதி, நேரம் முதலானவைகளைப் பெற்றிருப்பதின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். மாலை நேர கூட்டங்களை வழிநடத்தும் சகோதரர்கள், சகோதரரைப் பிரதானமாய்ப் பார்த்துக்கொள்கையில்,

இச்சகோதரிகளுடைய வேலை பிரதானமாய்ச் சகோதரிகள் மத்தியிலேயே காணப்படுகின்றது.

இவ்வேற்பாடானது, ஒருவரையொருவர் கவனித்துக்கொள்வதற்கான அனைவருக்குமுரிய கடமை மற்றும் சிலாக்கியத்தினைக் குறுக்கிடுகிறதில்லை; மாறாக அது அனைவர் மீதுமான ஓர் ஒழுங்கான பராமரிப்பிற்கு உறுதியாய் வழிவகுக்கின்றதாய் இருக்கின்றது; இவ்வேற்பாடு இல்லையெனில், இக்கடமையானது கொஞ்சம் கவனிக்கத் தவறப்படும், ஏனெனில் அனைவருக்குமே நேரம் முதலானவைகளில் சாதகமான நிலைமை இல்லாமல் இருப்பதாகும் மற்றும் நம்முடைய நேரமானது பல்வேறு வழிகளில் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதினால், இம்மாதிரியான உதவிகள் இல்லாமல் இந்த மேய்ப்பரது கடமைகளைச் சரியாய் நிறைவேற்றிடுவது கூடாத காரியமாய் இருக்கும்.

ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் இந்தப் பிரதிநிதியாகிய சகோதரர்களோடும், சகோதரிகளோடும் நாம் கூடி, இங்குள்ள சபையின் ஆவிக்குரிய நிலைமைகள் மற்றும் தேவைகள் குறித்துத் தகவல் கேட்டுக்கொள்வோம். இந்த உடன்வேலையாட்களிடத்தில் எவ்விதமான சண்டையோ அல்லது பூசல்களோ அல்லது வீண்புகழ்ச்சியோ எப்போதும் வெளிப்பட்டதில்லை என்பதைக் கூறிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வேலையானது அன்பின், சாந்தத்தின் ஆவியிலும், நன்மை செய்திடுவதற்கான விருப்பத்திலும் மேற்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படுகின்றது மற்றும் இவ்விடத்திலுள்ள அருமையான மந்தை பக்திவிருத்தியடைவதற்கு மிகவும் ஆசீர்வாதமாயும் இருக்கின்றது.

## சபையாருக்கும், மூப்பர்களுக்குமான உறவு

சபையில் மூப்பர்கள் ஸ்தானத்தில் காணப்படுபவர்களுக்குக் கர்த்தர்: "நீங்களோ ரபீ [மாபெரும் மனுஷர், குருக்கள்] என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள் (மத்தேயு 23:8) என்று கூறுகின்றார்; தம்முடைய ஜனங்களடங்கிய சபையாரிடத்திலும் அவர்: "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். நீங்கள் (உங்களில் யாரையாகிலும்) குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள் (இவ்வகையான பட்டங்களைக் கொடுக்காதீர்கள், பெற்றுக்கொள்ளவும் செய்யாதிருங்கள்); கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" என்று கூறுகின்றார் (மத்தேயு 23:9, 10).

கிறிஸ்துவின் சரீரத்தில் வேறுபடுத்திக் காண்பிப்பதற்கான எந்த

அடையாளங்களோ அல்லது சின்னங்களோ அல்லது எவ்வகையான முகஸ்துதி மரியாதையோ பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது. முகஸ்துதியினை எந்தச் சகோதரனும், அவர் எவ்வளவுதான் திறமிக்கவராக அல்லது பயனுள்ளவராக இருப்பினும் விரும்பிடக்கூடாது அல்லது மறுப்பும், கடிந்துகொள்ளுதலும் பண்ணாமல் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படக்கூடாது; மற்றும் அதை அளிப்பது தொடர்புடைய விஷயத்திலும் எவரும் கர்த்தருடைய எச்சரிப்பை மறந்துவிடக் கூடாது. நீங்கள் எல்லாரும் சகோதரராய் இருக்கிறீர்கள் - பாடுள்ள சகோதரர்களாகவும், அனைவரும் பலவீனத்திற்கு ஆளானவர்களாகவும் இருக்கின்றனர்; ஆகையால் "ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாக (பெருமை அல்லது இறுமாப்பு அல்லது வேறு ஏதேனும் தீமைக்கு ஏதுவான) தடுக்கலையும், இடறலையும் போடலாகதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்" என்ற வார்த்தைகளுக்கு ஒவ்வொருவரும் செவிக்கொடுப்போமாக (உரோமர் 14:13). ஆவிக்குரிய காரியங்களில் தங்களுக்கு ஊழியம் புரிகின்றதான மூப்பராயிருக்கின்ற சகோதரர் சோதனைக்குள்ளாக மாட்டார்கள் அல்லது இடறுவதற்கான வாய்ப்பற்றவர்கள் என்று மந்தையின் சார்பில் காணப்படுகின்றதான ஆதாரமற்ற ஊகங்களின் காரணமாய் எழும்பும் அளவுக்கு மீறின பாராட்டு, தொழுதுகொள்ளும் விதமான மரியாதையாகிய - முகஸ்துதியினால்/இச்சக வார்த்தைகளினால் மேற்கொள்ளப்படுகிறவர்களில் அநேகர், சபையிலுள்ள முதன்மையானவர்களாகவே காணப்படுகின்றனர். கர்த்தருடைய கட்டளையைக் கவனிக்கத் தவறின இக்காரியமே, வழிநடத்தும் சகோதரருக்கான ஸ்தானத்தினை அடிக்கடி, விசேஷித்த ஆபத்தான ஒன்றாக்குகின்றது. மாபெரும் சீர்த்திருத்தத்தின் தலைவர்களுக்கு இச்சக வார்த்தைகள் பேசப்பட்டதே, அந்த நல்ல வேலை தொடர்வதைத் தடைப்பண்ணினது மற்றும் அவர்களிலுள்ள அறிவாளிகளில் அநேகரைத் தங்கள் உறுதியினின்று விழுந்துபோகப்பண்ணிற்று (தானியேல் 11:34, 35). ஆனால் இப்படியாக நம்மத்தியில் காணப்படாமல் இருப்பதாக; மற்றவர்களைச் சோதனையிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் மற்றும் நீதியின், சத்தியத்தின் ஒவ்வொரு கொள்கையிலும், உலகத்தின் ஆவியினுடைய மயக்கும் வண்ணமான தாக்கங்கள் யாவற்றிற்கும் எதிரான விழிப்பிலும், தெளிந்த மனதிலும் மற்றவர்களைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் பக்திவிருத்தியடையப் பண்ணுவதற்கும் நாம் ஒவ்வொருவரும் நாடிடுவோமாக.

உண்மையான ஊழியம் குறித்த உளங்கனிந்த நன்றியுடன்கூடிய பாராட்டுதல், ஆரோக்கியமான உள்ளன்போடுகூடிய சகோதர அன்பு, பரிவிரக்கம் ஆகியவற்றிற்கும் மற்றும் உலகத்தின் ஆவியினுடைய சுவைக்கொண்டதும்,

பொய்யாயிருப்பதினால் எப்போதும் நிலையில்லாததுமான பாதகமான உணர்ச்சிவயப்படும் தன்மைக்கும் இடையில் பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது. இச்சகப்பேச்சின் மற்றும் தொழுதுகொள்ளும் விதமான மரியாதையின் சுவையினைப் பெற்றிருக்கின்றதான அனைத்தையும், முதிர்ச்சியடைந்துள்ள புருஷனாய்க் காணப்படும் கிறிஸ்தவன் எப்போதும் ஆதரிப்பதில்லை/ஊக்குவிப்பதில்லை மற்றும் இச்சக வார்த்தைகளும், தொழுதுகொள்ளும்வண்ணமாக மரியாதையும் வழங்கப்படுகையில், அவன்: "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார், நானும் ஓர் ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்" என்று வார்த்தையில் சொல்லாவிட்டாலும், இப்படியாக நடந்துகொள்வான் (வெளிப்படுத்தல் 22:9); ஆனால் குறைவாய் முதிர்ச்சியடைந்திருப்பவர்கள் தங்களுக்கும் பாதகமாய் அமையும் வகையில் இச்சக வார்த்தைகளை வேண்டி அணுகி, பெற்றுக்கொள்வார்கள். இதன் காரணமாகவே வழிநடத்தும் ஸ்தானத்திற்கு "நூதன சீஷனுக்குப் பதிலாக," உறுதியான குணலட்சணமுடைய மூத்த சகோதரரைத் தேர்ந்தெடுப்பதற்கு அப்போஸ்தலன் அறிவுறுத்துகின்றார். சபை சில அப்போஸ்தலர்களை, மூப்பர்களை, மேய்ப்பர்களை, போதகர்களை, சுவிசேஷகர்களை இன்னும் சிலரைப் பெற்றிருக்கும்படிக்குக் கர்த்தர் ஏற்பாடுபண்ணியிருந்தபோதிலும், இந்தப் பெயர்களில் எதையேனும் கனத்திற்குரிய பட்டங்களாக நாம் பயன்படுத்துவதற்கு அவர் விரும்புகிறதில்லை; ஆகையால் சபையில் இந்த ஊழிய ஸ்தானங்களை நாம் அங்கீகரித்தாலும், இந்தச் சகோதரர்களை நாம் வெறுமனே சகோதரர்களென - கர்த்தருக்குள்ளான அருமை சகோதரர்களெனத்தான் எப்போதும் அழைத்திட வேண்டும் மற்றும் இவர்களைக் குறித்துக் குறிப்பிட வேண்டும்.

உலகப்பிரகாரமான வீண் புகழ்ச்சிக்கு எதிராய்ச் சபையானவள் ஒருபக்கத்தில் இப்படியாகப் பாதுகாக்கப்பட்டாலும், இன்னொரு பக்கத்தில், பொறாமையுள்ள பரிசேய ஆவியில், "நீ தேவனை மகிமைப்படுத்து, இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்று கூறுகின்றதான உணர்ச்சியற்ற, புரிந்துகொள்ளாத, குற்றம் கண்டுபிடிக்கிற மனப்பான்மைக்கும் எதிராக அவள் பாதுகாக்கப்படுகின்றாள். "அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:12, 13).

மீண்டுமாக அவர், "தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை

நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் (அதாவது கர்த்தருடைய வழிமுறைகளின்படி நீங்கள் சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளீர்களெனில், அல்லது கர்த்தர் சுட்டிக்காண்பித்துள்ளதான வழியில் அவர் உங்களுக்காக தேர்ந்தெடுத்திடும்படி அவரை அனுமதித்துள்ளீர்களானால்) பின்பற்றுங்கள்" (எபிரெயர் 13:7).

## கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒருமைப்பாடு

ஆகையால் தேவனுடைய சுதந்தரத்தை, இறுமாப்பாய் ஆளுவதற்கு எதிராக மூப்பர்கள் எச்சரிக்கைப்பண்ணப்பட்டிருக்கிற அதே வேளையில், மூப்பர்களை எதிர்ப்பதற்கு அல்லது அவர்களது போதனைகளைத் தேவவசனத்தைக்கொண்டு நிரூபித்ததை அறியாமல், கண்மூடித்தனமாயும், தொழுதுகொள்ளும் விதமாயும் அவர்களைப் பின்பற்றிடுவதற்கு எதிராக மந்தையும் எச்சரிக்கப்படுகின்றனர்; அனைவரும் தாழ்மையிலும், சாந்தத்திலும் ஒரே சரீரமென, சரீரத்தை அன்பிலும், சகல கிறிஸ்தவ கிருபைகளிலும் கட்டியெழுப்பிடுவதற்கும் மற்றும் கர்த்தருடைய வேலையின் பொதுவான முன்னேற்றத்திற்கும் என்று ஒன்றாய் இசைந்து ஒத்துழைத்திட வேண்டும் (1 பேதுரு 5:1-11).

சபைக்கான ஒழுங்குமுறை குறித்த அநேகம் அம்சங்களுள்ள இப்பாடத்தினை முடிப்பதற்கு முன்னதாக, முழுச் (ஜீவனுள்ள) சபையானது, எப்படித்தான் உலகெங்கும் சிதறிக் காணப்பட்டாலும், அவர்கள் ஒன்றாய் ஒன்றுபட்டு இருத்தல் வேண்டும் என்ற கர்த்தருடைய நோக்கத்தினைச் சுருக்கமாய்க் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். இப்படியாகத்தான் அப்போஸ்தலர்களின் நாட்களில் காணப்பட்டது மற்றும் இப்பொழுதும் இப்படியாகவே காணப்பட வேண்டும். தொலைத் தொடர்புக்கான வழிவகைகள் அவர்களுக்கு மிகவும் வரையறைக்குட்பட்டதாக இருந்தபோதிலும், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உடனடியாக, ஓர் இடத்தில் காணப்படும் சபைகள், மற்ற இடங்களிலுள்ள சபையாருக்குக் கிறிஸ்தவ வாழ்த்துதல்களையும் மற்றும் உபகாரங்களையும் அனுப்பிவைப்பதைக் கவனிப்பதற்கு இன்பமாயுள்ளது (அப்போஸ்தலர் 15:23; 1 கொரிந்தியர் 16:19; 2 கொரிந்தியர் 13:13; பிலிப்பியர் 4:21-23; கொலோசெயர் 4:14-15; 1 பேதுரு 5:13; தீத்து 3:15; 3 யோவான் 14); மேலும் அப்போஸ்தலர்களினால் நிறுவப்பட்டதான அதே ஒழுங்குகளுக்குக் கீழ்ப்படிந்து, "ஒரே கர்த்தரையும், ஒரே விசுவாசத்தையும் மற்றும் ஒரே ஞானஸ்நானத்தையும்" கொண்டிருந்தார்கள். "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கும்" மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரிவினையைத்

தவிர்த்திடுவதற்குமே அவர்களது ஊக்கமான பிரயாசம் காணப்பட்டது (எபேசியர் 4:3-13; 1 கொரிந்தியர் 12:25).

அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதிசபையின் மூப்பர்கள் மத்தியில் எத்தகையதொரு அருமையான ஆவியின் ஒருமையும் மற்றும் விசுவாசத்தின் ஒருமையும் மற்றும் எத்தகையதொரு உறுதியான ஒத்துழைப்பும் இருந்ததெனவும் கவனிக்க முடிகின்றது. அவர்கள் அனைவரும் "ஒரே காரியத்தினை, தங்களால் முழுமையாய் நம்பப்பட்டுள்ளதான சத்தியத்தின் "ஆரோக்கியமான உபதேசத்தினை" பிரசங்கித்திடுவதற்கு வைராக்கியத்துடன் பிரயாசம் எடுத்தார்கள். அவர்களில் ஒருவரும் தன்னுடைய சொந்த புதிய ஏதோ சில கூற்றுகளை உண்டுபண்ணி, அதனால் மற்றவரை ஒளியிழக்கச் செய்திட முயற்சிக்கவில்லை. அப்பல்லோ, பவுலினுடைய போதனைகளைக் குறைவாய் மதித்திட முயற்சிக்கவில்லை; ஊகங்கள் மற்றும் வீணான தத்துவ ஞானங்கள் எனும் குறுக்குப் பாதைக்குள்ளாக, மந்தையைத் தங்கள் பராமரிப்பின் கீழ் வழிநடத்திடுவதற்குப் பல்வேறு சிறுசிறு கூட்டத்தார்களின் மூப்பர்கள் முயற்சித்திடவில்லை. இல்லை, இப்படியாகச் செய்திடவில்லை; அவ்வப்போது சீஷர்களைத் தங்களுக்குப் பின்னாக இழுத்துக்கொள்ளத்தக்கதாக, இவைகளைச் செய்திட முயற்சித்த வீண்புகழ்ச்சி எனும் தீய ஆவியுடைய கள்ளப்போதகர்கள் அவர்கள் மத்தியில் எழும்பினார்கள்; ஆனால் உண்மையுள்ளவர்களோ, கர்த்தருக்கு உண்மையுள்ளவராக இருந்ததுபோல, ஒருவருக்கொருவர்கூட உண்மையுள்ளவர்களாய் இருந்தனர். பவுல் நட்டார், அப்பல்லோ நீர் பாய்ச்சினார் மற்றும் தேவன் விளையப்பண்ணினார்.

இந்த ஆவியானது, இன்றும் அதிக அளவில் நிலவிவருகின்றது என்பதைத் தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் மற்றும் இது நாம் அனைவரும் விசுவாசத்தில் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியினை - கர்த்தருடைய வேலையாகிய மாபெரும் அறுவடை வேலைக்கான அன்பிலும், வைராக்கியத்திலும் ஒன்றாய் இணைக்கப்பட்டிருந்து, அவரது கட்டளையின் கீழ், அவரது சித்தத்தினைச் செய்வதில் இசைந்து ஒன்றாய் ஒத்துழைக்கும், ஒரே தலையாகிய கிறிஸ்து இயேசுவின் கீழான ஒரே சரீரமென ஆகிடுவது வரைக்கும் - அதிகமதிகமாய் நிலவிடும் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.

## பரலோகத்திற்குரிய சபை அமைப்பும், பூமிக்குரிய சபை அமைப்பும்

இதுவரையிலும் நாம் "பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருப்பவர்களாகிய" சபையினுடைய அமைப்பின் அருமையையும், எளிமையையும் மற்றும் முழுமையையும்

பார்த்திருக்கின்றோம். அதன் ஒரே அதிகாரியும், தலையுமானவராகிய கர்த்தர் இயேசு தவறிழைக்காதவராவார்; தேவன் இவரது கரத்தில் அதிகாரத்தினை வைத்துள்ளார் மற்றும் சபை அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் வார்த்தைகளிலும், நடத்தையிலும் மாத்திரமல்லாமல், தங்கள் சிந்தனைகளிலும் கூட, அவருக்கு அன்பாய், நேர்மையாய் மற்றும் உடனடியாய்க் கீழ்ப்படிய எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். அவரே அங்கத்தினராகுவதற்கு அனுமதிக்கின்றார் மற்றும் தேவைப்படும்போது, நேர்மையற்றவர்களை நீக்கிப்போட்டு, அவர்களது பெயர்களைக் "கிறுக்கிப்போடுகின்றார்."

அதன்/சபை அங்கத்தினர்கள் - ஆண்டவருடைய அன்பின் ஆவியிலுள்ள தங்களது வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக, அதன் தலையோடு உறுதியாய் ஒன்றுபட்டிருப்பார்கள் மற்றும் இப்படியாக ஒருவரோடு ஒருவர் ஒன்றுபட்டிருப்பவர்கள் - கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றும், நமக்காக வேண்டிக்கொள்ளும்படியாக சதாகாலங்களும் உயிரோடிருக்கின்றார் என்றும் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள விசுவாசத்தோடுகூட," இந்த அன்பின் ஆவியினையும், அர்ப்பணிப்பினையும் கொண்டிருப்பவர்கள் யாவரையும் "சகோதரரென" அடையாளம் கண்டுகொள்வதற்கு ஒன்றுபட்டிருப்பவர்கள் எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். இவர்கள் ஒன்றுகூடவும் மற்றும் ஒருவரையொருவர் பக்தி விருத்தியடையப் பண்ணவும் மற்றும் ஒழுங்காயும், முறையாயும் தங்களது கூட்டங்களை நடத்திடவும் மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளும், ஏற்பாடுகளும் சுட்டிக்காட்டுகின்ற தகுதியான மூப்பர்களுக்காக தங்கள் மத்தியில் நாடி, (வாக்கு மூலமாய்) அவர்களுக்குத் தங்களது வெளியரங்கமான அங்கீகரிப்பையும், ஊழியத்தில் தங்களது ஒத்துழைப்பையும் கொடுத்திடவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இச்சபையானது ஒழுங்குப்படுத்தப்படுவதற்கு அவசியமில்லை; ஏனெனில் அது பெந்தெகொஸ்தேயின்போதே ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் ஒருவேளை ஒரு புதிய கூடுகைத் துவங்கப்படுகிறபோது, இத்தகையவர்கள் ஒழுங்கையும், அதன் தலையையும், அவரது பிரமாணங்களையும் அடையாளம் கண்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிய மாத்திரமே செய்திட வேண்டும்.

ஆனால் இதற்கும் மற்றும் பல்வேறு மனித பாரம்பரியங்களின்படியாக ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ள பூமிக்குரிய சபைக்கும் எத்தனை பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது; இந்தப் பூமிக்குரிய சபையில் "சாதாரணமான வகுப்பார்" மீது இறுமாப்பாய் ஆளும் தங்களைத் தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட "குருமார் வகுப்பார்" சாதாரணமான வகுப்பாரிடமிருந்து எடுத்துக் கொள்கின்ற - இழிவான ஆதாயங்கள், கனங்கள், மரியாதைகள், பட்டங்கள் முதலான கொள்கைகளைத் (spoils) தங்களுக்குள்ளாக பங்கிட்டுக்கொள்கின்றனர் மற்றும் தவறிழைக்காதவர்

என்று உரிமைப் பாராட்டிக்கொள்ளுகின்ற போப் முதற்கொண்டு "கீழ்நிலை ஊழியர்கள்" வரையிலும் - இவர்களில் அபூர்வமானவர்கள் மாத்திரமே உண்மையுள்ள ஊழியக்காரர்களாக (தேவனுடைய மந்தைக்கான வேலையாட்களாகக் காணப்படுகின்றனர்; பெரும்பான்மையானவர்கள் தங்களது மந்தை அனுமதிக்கும் அளவுக்கு, தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகின்றவர்களாய் இருக்கின்றனர். எரேமியா 23:1-4; எசேக்கியேல் 34:1-16-வரையிலான வேதவாக்கியங்களைக் கவனமாய் வாசியுங்கள்).

பரலோகத்திற்குரிய சபையிலுள்ள அன்பின் கட்டிற்குப் பதிலாக, பூமிக்குரிய சபை அமைப்பில், சபை பிரிவுணர்ச்சியின் பெருமை எனும் சுயநலமான கட்டும், பூமிக்குரிய சபைக்கு வெளியே மரிப்பது என்பது நித்திய கேடாய் இருக்கும் என்ற அச்சமும் காணப்படுகின்றது. பரலோகத்திற்குரிய சபையின் எளிமையான மற்றும் ஆற்றல் மிக்க விசுவாசத்தினுடைய அறிக்கைக்குப் பதிலாக, இவர்கள் பிரிவினையை உண்டுபண்ணும் விரிவான அறிக்கைகளையும், பரீட்சைகளையும் கொண்டு வந்துவிட்டனர். பூமிக்குரிய சபைகளின் பலமானது, அவர்களது மாம்சத்திலும் மற்றும் கர்த்தருடைய வசனம் குறித்தும், தங்களது தனிப்பட்ட சுயாதீனங்கள் குறித்துமான அறியாமையிலுள்ள அவர்களது சாதாரணமான வகுப்பாரின் அறியாமையிலுந்தான் காணப்படுகின்றது. அவர்களது அங்கத்தினர்கள் தங்களைச் சபை பிரிவு பெயர்களுடனும், அதன் கடமை பொறுப்புகளுடனும், அதன் விசுவாச அறிக்கைகளுடனும் இணைந்து கொண்ட போதே, தங்களது தனிப்பட்ட விசுவாசம், பகுத்துணர்தல் மற்றும் சுயாதீனத்தைச் சபையாருக்குக் கையளித்துவிடுகின்றனர்; மற்றும் சபையாருடைய விசுவாசமும், பகுத்துணர்தல்களும் மற்றும் சுயாதீனங்களும் மூப்பராகிய சங்கத்தாரிடம் மற்றும் மேலவைக் குழுக்களிடம் அல்லது பூமிக்குரிய போப்பிடம் கையளிக்கப்படுகின்றது. பரலோகத்திற்குரிய சபை organization/அமைப்பில், எவர் வேண்டுமானாலும் கர்த்தருடைய வசனத்தினைச் சுட்டிக்காண்பித்திடலாம் மற்றும் அறிவுரை கூறிடலாம்; எனினும் இதைக்காட்டிலும் அதிகமாய்ச் செய்கையில், பிரமாணங்களை மீறி, இச்சபையின் மாபெரிய மற்றும் தவறிழைக்காத தலையானவரால் நீக்கப்படும் அபாயத்திற்குள்ளாகியே, எவராலும் செய்திட முடியும்.

பரலோகத்திற்குரிய சபையின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும், அவர்களுக்குள் ஒருவர் இன்னொருவரிடத்தில் பெற்றிருக்கும் தனிப்பட்ட சுயாதீனமும், கர்த்தருக்கு ஒவ்வொருவரும் முழுமையாய் அடிமைப்பட்டிருக்கும் காரியமும் மாத்திரம்தான், மனித சபை அமைப்புகளினின்று முற்றிலும் வேறுபடுகின்றதான கர்த்தருடைய அமைப்பின்/organization அம்சங்களாய் இருக்கின்றன.

கிறிஸ்துவின் சபையானது மற்றக் காரணங்களினால் என்பதைவிட, வழிநடத்துபவராக ஆகிடுவதற்கான பதவி ஆசை மற்றும் பெருமையின் காரணங்களினாலே அநேகமாக மிகவும் பாடுபட்டுள்ளது. தங்களில் யார் பெரியவனாய்க் கருதப்பட வேண்டுமென்று வாக்குவாதம் பண்ணினதற்காகச் சீஷர்கள் அவ்வப்போது கடிந்துகொள்ளப்பட்டார்கள் மற்றும் தங்களைத் தாங்களே உயர்த்திக்கொள்ளும் இத்தகைய ஆவியானது, இதைப் பெற்றிருக்கும் அனைவரையும் வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்திற்குப் புறம்பாக்கிடும் என்று நமது கர்த்தர் அவர்களுக்குக் கூறினார். அவர்: "புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்" (மத்தேயு 20:25-28).

கிறிஸ்துவின் சபையில் உயர்ந்த ஸ்தானம் என்பது, "ஊழியக்காரனாய்" இருப்பதாகும் மற்றும் தாம் சபையின் பிரதான ஊழியக்காரராய் அல்லது பணிவிடைக்காரராய் இருப்பதை அவர்தாமே கூறியுள்ளார். மேலும் "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" என்றால் - அப்படியானால் கூட்டங்களை வழிநடத்துபவர்கள் தொடர்புடைய மற்றும் கர்த்தருடைய காரணங்களுக்கடுத்த நலன்கள் பற்றின மற்ற அனைத்துக் காரியங்கள் தொடர்புடைய கர்த்தருடைய சித்தம் குறித்த தங்களது பகுத்துணர்தலை வெளிப்படுத்திடுவதற்குச் சகோதரர்கள் அனைவரும் சமமான உரிமைப்பெற்றிருக்க வேண்டும். ஒரே போதகரான கிறிஸ்துவினால் சமமான நிலையில் வைக்கப்பட்டவர்கள் மத்தியில் ஆளுகைகளோ, தலைமைத்துவங்களோ, ஆதிக்கங்களோ காணப்படக்கூடாது. இருண்ட காலங்களில் சபையில் "குருமார் வகுப்பார்" மற்றும் "சாதாரண வகுப்பார்" என்று காணப்பட்ட பிரிவானது, கர்த்தரிடமிருந்தும், அப்போஸ்தலர்களிடமிருந்தும் உண்டாகாமல், மாறாக மாபெரும் சத்துருவாகிய சாத்தானால் வளர்க்கப்பட்ட பதவி ஆசையினால் உண்டானவையாகும்.

தற்கால சத்தியத்தில் களிகூரும் சகோதரர்களும், சகோதரிகளும், கடந்தகாலங்களில் கர்த்தருடைய காரணங்களுக்கு அதிகளவில் ஊறுவிளைவித்த அந்த நிலைமைகளுக்கு எதிராய் விழிப்பாய் இருப்பார்கள் என்று நாம் விசுவாசிக்கின்றோம்; கடந்த காலங்களில் கர்த்தருடைய காரணங்களுக்கு

அதிகளவில் ஊறுவிளைவித்த அந்தக் காரியங்களானது, கண்ணுக்குப் புலப்படாமல் துவங்கி, பின் வழக்கமாக மாறி, பின் வழக்கமானது அடிமைத்தனமாகுவது வரையிலும் வளர்ந்தது; இந்த அடிமைத்தனமானது தேவனுடைய ஒழுங்குமுறையை மாறுபடுத்தி, அவருடைய பிள்ளைகள் அநேகருடைய தாலந்துகள் வளர்வதைத் தடைப்பண்ணி, சபையாரில் ஒன்று அல்லது இரண்டுபேர் தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டிடுவதற்கு அனுமதிக்கின்றது, அதாவது (பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலின் கீழ்) சபையார், தேவவசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான ஊழியத்திற்கான தகுதிகளை உடையவர்களாய் யார் காணப்படுகின்றனர் என்று தங்களுக்கெனத் தீர்மானித்துக் கொள்வதற்கான உரிமையினைப் பெற்றிருக்கின்றனர் எனும் காரியத்தினை அடையாளம் கண்டுகொள்ளாமல் - இறுமாப்பாய் ஆண்டிடுவதற்கு அனுமதிக்கின்றது.

தேவனுடைய மந்தைக்கு ஊழியம்புரிவதற்குரிய தகுதியும், வைராக்கியமும் பெற்று, அனைத்து இடங்களிலும் காணப்படுகின்றதான சகோதரர் யாவரும், கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு உண்டாக்கின சுயாதீனங்களில் தலையிடுவதைக் கவனமாய்த் தவிர்த்துக்கொள்ளும்படிக்கு வலியுறுத்துகின்றோம். கனம்பண்ணுவதிலே ஒருவருக்கொருவர் முந்திகொள்கின்றதான தன்னடக்கத்தை மற்றும் தேவையான தாலந்துகள் காணப்படுவதற்கேற்ப, மற்றவர்கள் ஒவ்வொருவரையும் ஊழியத்தில் ஈடுபட வைக்க உதவுவதற்கு நாடுகின்றதான தன்னடக்கத்தைப் பெற்றிருக்க நாம் பரிந்துரைக்கின்றோம் மற்றும் ஈடுபலியின் மீது விசுவாசம் கொண்டிருப்பதாகவும், கர்த்தருடைய ஊழியத்திற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளதாகவும் அறிக்கைப் பண்ணுகிறவர்களில் பெரும்பான்மையானவர்களாகிலும், ஒருவரால் வழி நடத்தப்படும்படிக்கான விருப்பத்தினை வெளிப்படுத்தினால் தவிர, மற்றப்படி யாரும் ஒரு சிறு கூட்டத்தாரைக் கூட வழிநடத்திடுவதற்கு மறுத்திடும் தன்னடக்கத்தைக் கொண்டிருக்க நாம் பரிந்துரைக்கின்றோம். மேலும் இந்தத் தெரிந்தெடுத்தலானது, நிரந்தரமான ஒன்றாய்க் காணப்படக்கூடாது; தேவனுடைய ஜனங்களின் மனம் குறித்து அறிந்திடுவதற்குக் குறைந்த பட்சமாக வருடந்தோறுமாகிலும் நாடப்பட வேண்டும் மற்றும் பெரும்பான்மையானவர்கள் மாற்றத்தினை விரும்புகின்றனர் என்று எண்ணிடுவதற்குக் காரணங்கள் இருக்குமானால் (அதை அறிந்திடுவதற்கு) அடிக்கடி நாடப்பட வேண்டும். மந்தையினுடைய சுயாதீனங்களைப் பாதுகாத்திடுங்கள்; ஏனெனில் அவை உங்களுடையதாய் இராமல், கிறிஸ்துவின் காரணங்களுக்கான சுயாதீனங்களாகும். "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்; நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" (மத்தேயு 23:8).

# பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்

## அவர்களுடைய அழைப்பும், பணியும், அதிகாரமும்

*“இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா?” (யோவான் 6:70)*

கர்த்தராகிய இயேசு, தம்முடைய சரீரமாகிய சபைக்குத் தகுதியான மற்றும் தெய்வீக நியமனத்தினால் ஏற்படுத்தப்பட்ட தலையாக இருக்கின்றபடியினால், சுவிசேஷயுகம் முடிவு வரையிலும், அதாவது சபையினுடைய தகுதிக்காண் காலம் வரையிலும் (Probation) கர்த்தர் தம்முடைய சபையின் நலனுக்கடுத்த அனைத்து விஷயங்களில் எவ்வளவு ஞானத்துடன், ஆழமாக அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை நாம் பார்க்கலாம்.

நமது கர்த்தர் தமது 40-நாள் தியானம் மற்றும் வனாந்தரத்தில் ஏற்பட்ட விநோதமான சோதனைகளுக்குப் பிற்பாடு, வரவிருக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினவராகக் காணப்பட்டார். மேலும், தாம் கூறின காரியங்களை மகிழ்ச்சியுடனும், விசுவாசத்துடனும் கேட்டு, தம்முடைய சீஷர்கள் ஆனவர்கள் மத்தியிலிருந்து புதிய யுகத்திற்கான அப்போஸ்தலர்களாய் இருக்கும்படிக்கு 12-மனிதர்களைத் தேர்ந்தெடுத்தார். இந்த 12-அப்போஸ்தலர்களும், எளிமையான ஜீவியம் கொண்டவர்களாக இருந்தார்கள். இந்த 12-பேரில், நான்கு பேர் மீனவர்களாகவும், ஒருவர் இழிவாய்க் கருதப்பட்ட ஆயக்காரனாகவும் இருந்தார், மீதமானவர்கள் எப்படியாக அழைக்கப்பட்டார்கள் என்பது தொடர்பான பதிவுகள் பதிவு செய்யப்படவில்லை.

பன்னிரண்டு நபர்கள் தெரிந்துகொள்ளப்பட்டது தொடர்பான விஷயத்தில், இவர்கள் அனைத்தையும் துறந்து, தம்மைப் பின்தொடர்ந்து வரும்படிக்கு, இவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு சூழ்நிலைகளில் கர்த்தரால் அழைக்கப்பட்டிருந்தாலும், இவ்வழைப்பிற்கு இவர்கள் உடனடியாகக் கீழ்ப்படிந்திருந்தாலும், இவர்கள் அப்போஸ்தலர்கள் எனும் ஸ்தானத்திற்குரிய பணிக்குக் கர்த்தரால் அர்ப்பணம் பண்ணப்பட்ட ஒரு விசேஷமான தருணமும் இருந்தது என்று நாம் அறிந்துகொள்கின்றோம். (மத்தேயு 4:17-22; மாற்கு 16:20; 3:13-19; லூக்கா 5:9-11). இது தொடர்பாக லூக்கா அவர்கள் பதிவு செய்துள்ள காரியம் என்னவெனில், இப்படியாக இவர்களைக் கர்த்தர் அப்போஸ்தலர்களாக அர்ப்பணிக்கும் இச்சம்பவம் நிகழ்வதற்கு முன்பு, கர்த்தர் ஜெபம் பண்ணும்படிக்கு அதாவது, வருங்கால சபைக்கடுத்த நலன்கள் தொடர்பான விஷயத்தில், தேவனிடத்தில் ஆலோசனை பெற்றுக்கொள்ளும்படிக்கு இராமுழுவதும் ஜெபத்தில் காணப்பட்டார் என்பதாகும். “அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில்

பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" (லூக்கா 6:12, 13). இவ்விதமாக, பன்னிரண்டு பேரும், கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் வேறுபட்ட, பிரிக்கப்பட்ட வகுப்பாராய்க் காணப்பட்டார்கள். மேலும் 17-ஆம் வசனமும் கூட இந்தப் பன்னிரண்டு பேருக்கும் மற்றும் மற்றச் சீஷர்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுகின்றது.

அப்போஸ்தலர்களாக தெரிந்துகொள்ளப்படாத மற்றச் சீஷர்கள் கர்த்தரால் நேசிக்கப்பட்டவர்களாகவும், இந்தப் பன்னிரண்டு பேரின் நியமித்தலுக்கு இணக்கம் கொண்டவர்களாகவும், இந்த அப்போஸ்தலர்களின் நியமித்தல் என்பது நடை பெறவிருக்கும் வேலைகளுக்கான நலனுக்கே என்று உணர்ந்து கொண்டவர்களாகவும் இருந்தார்கள். கர்த்தர் இந்தப் 12-பேருடைய இருதயத்தில் காணப்பட்ட வாஞ்சையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதோடுகூட, இவர்களுக்கு முன்பாகக் காணப்படும் புதிய வேலைக்கு இவர்களுடைய தகுதியையும், சூழ்நிலைகளையுங்கூடக் கவனத்தில் எடுத்துக்கொண்டார் என்பதில் ஐயமில்லை. உதாரணத்திற்கு அவர் செபதேயுவின் குமாரர்களை, எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தம்மைப் பின்சென்று வரும்படிக்கு அழைத்தபோது, கர்த்தர் குமாரர்களைத்தான் அழைத்தாரே ஒழிய, அவர்களுடைய தகப்பனை அழைக்கவில்லை என்று பார்க்கின்றோம். பின்சென்று வருவது என்பது மனரீதியில் தம்முடைய உபதேசங்கள் முதலியவைகளை மாத்திரமே பின்செல்லுவதைக் குறிக்காமல், கர்த்தரோடுச் செல்வதற்கு அல்லது அவருடைய வழிநடத்துதலின் கீழ் வேலைக்கு ஈடுபடுவதில் தொழிலையும், வீட்டையும், நண்பர்களையும், பூமிக்குரிய திட்டங்களையும், பூமிக்குரிய எதிர்க்கால வாய்ப்புகள் முதலியவைகளையும் விட்டு வருதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இந்தப் 12-பேரைப் பிரித்தெடுத்த விஷயத்தின் மகா முக்கியத்துவம் குறித்து, பிரித்தெடுத்த சமயத்திலேயே வெளிப்படுத்திவிட்டார் என்று நாம் சொல்ல முடியாது. ஏனெனில், அப்போது அக்காரியங்களை அப்போஸ்தலர்கள் புரிந்துகொள்வது என்பது கூடாத காரியமாய் இருந்தது; ஆனால், எளிமையான வாழ்க்கையிலிருந்து, கர்த்தருடைய விசேஷித்த ஸ்தானாதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அருமையான சகோதரர்கள் தற்காலத்தில் தங்களுக்கான பலனாக இழப்பும், துன்புறுத்தப்படும் நிலையும் காணப்படும் என்பதை அறிந்திருந்த நிலையிலும் மற்றும் அச்சமயத்தில் தங்களுக்கான எதிர்க்காலத்திற்குரிய பலனைத் தங்களால் தெளிவாகப் புரிந்து/உணர்ந்துகொள்ள முடியாத நிலையிலும், தங்களுக்கு அருளப்பட்டுள்ள (ஸ்தானாதிபதிக்குரிய) சிலாக்கியத்தை உணர்ந்து ஏற்றுக்கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள்.

இந்தப் 12-பேரும், தங்களின் எதிர்க்கால அப்போஸ்தலப் பணிக்குத் தகுதியடையும்படிக்கு அவர்களுக்குப் பயிற்சியும், போதனைகளையும், கொடுப்பதை

ஆரம்பிப்பதற்கே இவர்களைக் கர்த்தர் அச்சமயத்தில் தேர்ந்தெடுத்ததற்கான நோக்கமாகும். ஏனெனில், இந்தப் 12-பேரும் பெந்தெகொஸ்தே நாள்வரையிலும் அப்போஸ்தலருக்குரிய பணியில் முழுமையாய்ப் பிரவேசிக்கவில்லை. இவர்கள் அப்போஸ்தலர் பணிக்கென அமர்த்தப்பட்டப் பின்னர், இந்தப் பன்னிருவரும், கர்த்தருடைய வழிநடத்துதலின் கீழ் முழுமையாகவும் மற்றும் அவரோடுகூட அதிக நேரமும் காணப்பட்டார்கள். இவர்கள் அவருடைய குணலட்சணங்களையும், அவருடைய சுவிசேஷத்தையும், அவருடைய வழிமுறைகளையும் கவனிக்கும்/கற்கும் கவனமுள்ள மாணவர்களாய்க் காணப்பட்டார்கள்.

## அப்போஸ்தலர்களுக்கான பணி

கர்த்தர் மற்றும் ஒட்டுமொத்த சபையின் பணியைப்போன்றே அப்போஸ்தலர்களுடைய பணியும் இருந்தது. இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே அப்பணியாகும். (ஏசாயா 61:1-2; லூக்கா 4:17-21; மத்தேயு 10:5-8; மாற்கு 3:14-15; லூக்கா 10:1-17 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்). மேலும், இந்தப் பணிக்கே, அப்போஸ்தலர்கள், கர்த்தர் தங்களோடு இருந்த காலத்திலும், அதற்குப்பின் உள்ள காலங்களிலும், தங்களை வைராக்கியத்துடன் அர்ப்பணித்தார்கள். எனினும், இப்பணியின் விஷயத்தில், அப்போஸ்தலர்கள் கர்த்தர் தங்களோடு இருந்த காலத்தில், கர்த்தரால் இதே ஊழியத்திற்கென்று நியமிக்கப்பட்ட 70 சீஷர்களைக்காட்டிலும் அதிகமாகச் சாதித்ததாக எவ்விதமான குறிப்புகளும் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால், இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்கான இந்தப் பொதுவான பணியுடன் கூட, கர்த்தர் இந்தப் 12-பேரையும், எதிர்க்காலத்தில் அவர்கள் செய்ய வேண்டிய ஒரு விசேஷமான வேலைக்கும் அவர்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருப்பதையும், அவர்களுக்குப் படிப்படியாகக் காண்பித்தார். அதாவது, தம்முடைய மரணத்திற்குப் பிற்பாடு, தம்மைக்குறித்த சாட்சியை அறிவிப்பதற்கான தம்முடைய சாட்சியாளர்களாக இந்த 12-பேரும் காணப்படும்படிக்குக் கர்த்தர் இவர்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தார். கர்த்தருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், அவரோடுகூட அப்போஸ்தலர்கள் இருந்தவர்கள் என்றும், மற்றும் அவருடைய உபதேசங்கள் மற்றும் நோக்கங்களை அறிந்தவர்கள் என்றுமுள்ள விதத்தில் அப்போஸ்தலர்கள் சாட்சியாளர்களாகவும், ஜனங்கள் காரியங்களை அறிந்துகொள்வதற்கு, நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாகவும் காணப்பட வேண்டும் (யோவான் 15:27; லூக்கா 24:48). இதுமாத்திரமல்ல, தெய்வீக ஏற்பாட்டின் கீழ் இந்த 12-பேரும், ஏற்றகாலத்தில் உன்னதத்திலிருந்து வரும் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்ட பின்னர், சுவிசேஷயுக சபைக்கான நிறுவனர்களாகவும் (Founders) மற்றும் விசேஷித்தப் போதகர்களாகவும் இருக்க வேண்டும்.

வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், இந்த 12-பேரையும் நமது கர்த்தர் தெரிந்துகொண்டதற்கான நோக்கமானது, தேவனுடைய சத்தியம் தொடர்பான

விஷயத்தில், இவர்களுடைய சாட்சியை நிலைவரப்படுத்தும் வண்ணமாக, இவர்களுக்கு பயிற்சியும், அதிகாரமும் கொடுத்து, பின்னர் இவர்கள் வாயிலாக நீதியின்மேல் பசித்தாகம் உள்ளவர்களைச் சத்தியத்தினால் திருப்தியடையச் செய்து, பின்னர் இப்படியாகத் திருப்தியடைந்தவர்கள் மத்தியிலிருந்து, தம்முடைய நாமத்திற்கெனச் சில (கிறிஸ்துவின் மணவாட்டிகள் - சபை) ஜனங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாக உயர்த்தப்படும்படிக்கு, பயிற்சியும், ஆயத்த உதவியும் பண்ணுவதற்குமேயாகும். 12-பேரைத் தெரிந்தெடுத்ததற்கான மேற்கூறப்பட்டுள்ள இந்த நோக்கமானது, கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு ஏறெடுத்த ஜெபத்தில் வெளிப்படுகின்றது. "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு (அப்போஸ்தலர்கள்) உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை (உபதேசத்தை) நான் அவர்களுக்குக் கொடுத்தேன் அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்கள் உம்முடையவர் களாயிருக்கிறார்களே. நான் இவர்களுக்காக (அப்போஸ்தலர்கள்) வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் (முழுச்சுவிசேஷயுகத்திலும்) என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் (இருதயத்திலும், நோக்கத்திலும், அன்பிலும்) ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் (பாவிகளாக இருந்த போதிலும், தேவனால் அன்புகூரப்பட்ட உலகம்) விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் (ஒன்றாயிருக்கவும் - என்பதே அப்போஸ்தலர்களையும், கிறிஸ்துவின் முழுச்சரீரத்தையும் தெரிந்தெடுப்பதற்கான நோக்கமாகும் என்று இங்குக் கர்த்தர் வெளிப்படுத்துகின்றார்) வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:6-9, 20, 21).

அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை, யாக்கோபின் புத்திரர்களாகிய இஸ்ரயேல் கோத்திரத்தினுடைய தலைவர்களும், பிரதிநிதியுமாய் இருந்தவர்களுடைய எண்ணிக்கைக்குச் சமமாக இருக்கின்றது. இந்த (மாம்சீக) இஸ்ரயேலின் கோத்திரங்கள் ஒருவிதத்தில் ஒட்டுமொத்த சுவிசேஷ யுகத்தின் சபைக்கும், இன்னொருவிதத்தில் முழு உலகத்திற்கும் நிழலாய் இருக்கின்றார்கள்

(ஆசரிப்புக்கூடார நிழல்களைப் பார்க்கவும்). மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகத்தில், இந்த 12-அப்போஸ்தலர்கள், மகிமையடைந்த சபையாகிய, புதிய எருசலேமின் பன்னிரெண்டு அஸ்திபாரங்களாகக் குறிப்பிடப்படுகின்றனர் (வெளிப்படுத்தல் 21:14; எபேசியர் 2:20, 21). ஆகவே, சபையைத் தாங்கும்படியாக ஏற்படுத்தப்பட்ட அஸ்திபாரங்கள், இறுதியில் முழு உலகத்தையும் தாங்கும்படியாக ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது. ஆனால், ஒருவேளை இந்த அஸ்திபாரக்கற்கள், மணல்மேல் போடப்பட்டிருந்தால், இதன்மேல் கட்டப்படும் கட்டிடத்திற்குப் பாதுகாப்பும் இராது, அக்கட்டிடம் என்றென்றும் காணப்படவும் முடியாது (மத்தேயு 7:25-27). ஆனால், இந்த அஸ்திபாரக்கற்கள் மணல்மேல் போடப்படாமல், உறுதியும், அசையாததுமாகிய கிறிஸ்து இயேசு என்னும் பாறையின் மீதே போடப்பட்டுள்ளது. (மத்தேயு 16:16-18; 1 பேதுரு 2:4-8).

பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் ஆரம்பத்திலேயே அவரோடு கூடக் காணப்பட்டப்படியால் கர்த்தருடைய சாட்சிகளாக விளங்கும்படிக்கு, அவருடைய ஊழியத்தின் ஆரம்பக் காலங்களிலேயே தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இப்பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வீழ்ச்சிக்குள் கடந்துபோய், நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவனாகப் போனபிற்பாடு, யூதாசின் இடத்தில், கர்த்தர் உயிர்த்தெழுந்து பரத்திற்கேறின பின்னர், காணப்பட்ட மகிமைக்கு சாட்சியாக விளங்கின பவுலைக் கர்த்தர் நியமித்தார். (அப்போஸ்தலர் 26:13; 1 கொரிந்தியர் 15:8). ஆகவே, கர்த்தருடைய ஊழியத்திற்கும், மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் கண்களினாலும், காதுகளினாலும் சாட்சியாளர்களாகிய 11-பேர் மற்றும் கர்த்தருடைய மகிமையான உயர்நிலைக்குச் சாட்சியாக விளங்கின பன்னிரண்டாவது நபர் சேர்ந்து, இந்த யுகத்தின் முடிவு வரையிலுமுள்ள முழுச்சபையாருடைய விசுவாசத்திற்கான உறுதியான அஸ்திபாரமாக விளங்கினார்கள். யூதாசின் இடத்தை நிரப்பும் வண்ணமாக 11-அப்போஸ்தலர்களால் தெரிந்துகொள்ளப்பட்ட மத்தியாவின் காரியம் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், இது மனித தவறாகும். அதாவது, கர்த்தருடைய வேலையை அவருடைய வழிநடத்துதல் இல்லாமல் அநாவசியமாக தலையிடும் செயலாகும். இக்காரியத்தை அப்போஸ்தலர் பரிசுத்த ஆவி இறங்கி வந்த பெந்தெகொஸ்தே நாளுக்கு முந்தின நாள் செய்தார்கள். இந்த 11-அப்போஸ்தலர்களும், இரண்டு நபர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள இரண்டு பேரில் ஒருவரைத் தெரிந்துகொள்ளும்படியாகவும், மேலும் கர்த்தர் தேர்ந்தெடுக்க விரும்புபவர் பேரில் சீட்டு விழும்விதத்தில் அதைத் தங்களுக்கு வெளிப்படுத்தும்படிக்கு, கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணினார்கள். நிச்சயமாக சீட்டு இரண்டு பேரில், ஒருவர் பேரில்தான் விழும். ஆனால், இதுவே கர்த்தருடைய சித்தமாக இருந்தது என்று எங்கும் சுட்டிக் காண்பிக்கப்படவில்லை. கர்த்தரோ அவர்கள் தெரிந்துகொண்டவரைத் தள்ளி, ஏற்றகாலத்தில் பவுலைத்

தெரிந்துகொண்டதன் மூலம் தம்முடைய விருப்பத்தை வெளிப்படுத்தினார். மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் காரியங்களை வெளிப்படுத்தும்போது, புதிய எருசலேமுக்கு 12 அஸ்திபார கற்களே உண்டு என்று வெளிப்படுத்தினாரே ஒழிய 13 என்று வெளிப்படுத்தவில்லை. மத்தியா அநேகமாக மிக நல்ல சகோதரனாகத்தான் இருந்திருக்க வேண்டும் ஆனாலும், அவர் அப்போஸ்தலன் அல்ல.

ஆனால் சபைக்கான அப்போஸ்தலர்கள் எனும் முக்கியமான பணிக்கு இந்தச் சாதாரணமான பன்னிரண்டு மனிதர்கள்தான் நியமிக்கப்பட்டார்கள் என்பதற்கான ஆதாரம் என்ன? என்று நாம் கேட்கலாம். நம்முடைய கர்த்தர் உயிர்த்தெழுந்து, பரத்திற்கு ஏறிப்போன பிற்பாடு, இந்த அப்போஸ்தலர்களே, புதிதாய் உருவாக ஆரம்பித்த சபைக்கு ஆறுதலாகவும், பலமாகவும் இருந்தார்கள் என்பதே ஆதாரமாகும். இவர்கள் கர்த்தருடைய சீஷர்களாகவும், அவரோடுகூடத் தொடர்ந்து காணப்பட்டபடியினாலும், கர்த்தருடைய அற்புதமான வல்லமையைக் கண்களால் கண்ட சாட்சிகளாக இருந்தபடியினாலும், கர்த்தரோடுகூட நிந்தனைகளைச் சுமந்துகொண்டதின் மூலம் இவர்கள் கர்த்தரிடத்தில் கொண்டிருந்த தங்களுடைய நேர்மையையும், உண்மையையும் நிரூபித்தவர்களாகக் காணப்பட்டபடியினாலும், இவர்கள் காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த பரிசுத்தவான்கள், தங்கள் விசுவாசத்திற்கான ஆதார தூண்களை, இவர்களிடத்தில் கண்டார்கள், மேலும், இவர்களுடைய போதனைகள் மீது சார்ந்து நின்று, இவர்களுடைய மாதிரியினால் தைரியம் கொண்டவர்களாகக் காணப்பட்டு, இவர்களுடைய ஆலோசனைகளுக்கு ஞானமாய் செவிச் சாய்த்தார்கள். ஆனால், இப்படிப்பட்ட உதவிகளைக்காட்டிலும் மேலானவைகளையும் அப்போஸ்தலர்கள் செய்யவேண்டும் என்ற நோக்கம் இருந்ததா? மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாய்த் தெய்வீக மனதை வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைகளையுடைய அதிகாரப்பூர்வமான போதகர்களாகக் காணப்பட வேண்டும் என்ற நோக்கமும் இருந்ததா?

ஆம் என்பதே நம்முடைய பதிலாகும். மேலும், அப்போஸ்தலர்களைக் குறித்தும், அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய தம்முடைய முழுச்சரீரத்திற்கு இவர்கள் உதவிபுரிய வேண்டும் எனத் தாம் நோக்கம்கொண்டுள்ள உதவிகரமான ஊழியங்களைக் குறித்தும், இவை சபையாரால் அதிகாரப்பூர்வமானது என்று கருத வேண்டும் என்றும் கர்த்தர் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். நாம் சாட்சிகளைக்குறித்துப் பார்க்கலாம்:-

(1) நாம் ஏற்கெனவே பார்த்த வண்ணமாக, இந்தப் பன்னிரண்டு மனுஷர்களும், விசேஷமாக அழைக்கப்பட்டு, மற்றச் சீஷர்களிடமிருந்து, பிரித்தெடுக்கப்பட்ட வகுப்பாராக, முறையாக அப்போஸ்தலருக்குரிய பணியில் அமர்த்தப்பட்டு, மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கத்தக்கதாக,

இவர்களுக்குத் தனிப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள பெயராகிய அப்போஸ்தலர்கள் என்ற நாமம் சூட்டப்பட்டது.

(2) நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தின் காலப்பகுதியில் அப்போஸ்தலர்களுடைய பணிக்கும், மற்ற 70 சீஷர்களின் பணிக்குமிடையே எவ்விதமான வித்தியாசமும் காணப்படவில்லை என்றும், இவர்களுடைய பிரயாசங்கள் 70 சீஷர்களின் பிரயாசங்களைக்காட்டிலும் குறிப்பிடத்தக்க விதத்தில் ஆசீர்வதிக்கப்படவில்லை என்றும் நாம் ஏற்கெனவே பார்த்திருந்தாலும், இந்த 12-பேரும், கர்த்தர் அளித்த பயிற்சியின் கீழ் நேரடியாகவும், தொடர்ச்சியாகவும் காணப்பட்டார்கள். மேலும், இந்த 12-பேரும் அல்லது இவர்களில் சிலர், கர்த்தருடைய 3½ வருட ஊழியத்தின் காலத்தில், நடந்த ஒவ்வொரு குறிப்பிடத்தக்க அம்சத்திற்கும்/நிகழ்விற்கும் மற்றும் அவர் நடந்துகொண்ட முறைக்கும் சாட்சியாளர்களாக இருப்பதற்குத் தெரிந்தும் கொள்ளப்பட்டார்கள். (லூக்கா 9:6; 10:7). இந்த 12-பேரும்தான் கர்த்தருடைய போதனைகளுக்கும், அவருடைய தனிப்பட்ட குணலட்சணத்திற்கும், அவருடைய ஜீவியத்தின் நடத்தைக்கும், அவருடைய அற்புதத்திற்கும் மற்றும் அவருடையப் போதனைகளும், வேலைகளும் அவர் நாட்களில் ஏற்படுத்தின விளைவுகளுக்கும் சாட்சியாளர்களாகக் காணப்படுகின்றார்கள். இந்த 12-பேர்தான், கடைசி பஸ்கா போஜனத்தில், அவரோடுகூடப் பங்குகொள்வதற்கும், அந்த வேளைக்கான போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அதாவது பஸ்கா போஜனத்தின் நிழலான முக்கியத்துவம் தொடர்பாகவும், மாற்றப்பட்ட அதன் புதிய அம்சங்கள் தொடர்பாகவும், அதுமுதல் அந்தப் புதிய அனுசரிப்பானது, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியை நினைவுகூருவது தொடர்பாகவும் உள்ள போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அழைக்கப்பட்டிருந்தார்கள். மேலும், இவர்கள்தான் அவருடைய கெத்செமனே துயரத்திற்கும், அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட காரியத்திற்கும், அவர் கைதுச் செய்யப்பட்டது குறித்தும், கர்த்தர் தமக்கு வரும் என்று அவர் எதிர்ப்பார்த்த இச்சம்பவங்களின் போது, அவர் தம்மை அமைதலுடன் ஒப்புக்கொடுத்ததற்கும், சாட்சியாளர்களாகவும் இருந்தார்கள். இவர்கள்தான் அவருடைய சிலுவையில் அறையப்படுதல், மரணம், கல்லறையில் அடக்கம் பண்ணினது மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலின் உண்மை ஆகிய சம்பவங்கள் தொடர்பான அனைத்துச் சூழ்நிலைகளுக்குச் சாட்சியாளர்களாகவும் இருந்தார்கள்.

(3) நமது கர்த்தர் உயிர்த்தெழுந்த பிற்பாடு, தமது மரணத்தினால் சற்று நின்றுபோயிருந்த தமது வேலையை உடனடியாக, அது நின்ற நிலையிலிருந்தே தொடங்குவதை நாம் பார்க்கின்றோம். அதாவது, முழுச்சபைக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமான சாட்சி கொடுப்பதற்குத் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட சாட்சியாளர்களாகிய அப்போஸ்தலர்களை, இன்னும் அதிகம் ஆயத்தப்படுத்தும்

வேலையை, உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடும் கர்த்தர் தொடர்ந்தார். கர்த்தர் ஒரேசமயத்தில் 500 சீஷர்களுக்கு முன் தோன்றினாலும், தமது உயிர்த்தெழுதல் தொடர்பான உண்மையை அப்போஸ்தலர்களுக்குத் தெளிவாக உறுதிப்படுத்துவதில், கர்த்தர் விசேஷித்த கவனம் செலுத்தினதையும் நாம் பார்க்கின்றோம். (1 கொரிந்தியர் 15:5-8). பதினொரு அப்போஸ்தலர்களில், ஒவ்வொருவர் மேலும் அவர் அக்கறையுடன் கவனம் செலுத்துவதை நம்மால் பார்க்க முடிகின்றது. கல்லறைக்கு முதலாவதாக வந்த ஸ்திரீகள், தமது உயிர்த்தெழுதல் குறித்த உண்மையை ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் தெரிவிக்கும்படியாகவும், மற்றும் பேதுரு சற்றுமுன்பு உண்மையற்ற விதத்தில் நடந்துகொண்டதின் நிமித்தம், அவர் சோர்வினால் மேற்கொள்ளப்படாதபடிக்கும், பேதுருவின் பெயரை விசேஷமாகக் குறிப்பிட்டு அவருக்குத் தெரிவிக்கும் படியாகவும் கர்த்தர் ஸ்திரீகளை அனுப்பி வைத்தார் (மாற்கு 16:7). இன்னுமாக, எம்மாவூருக்குப் போகின்ற வழியில் இரண்டு சீஷர்களின் புரிந்துகொள்ளுதலின் கண்களையும் திறந்துவைத்தார் (லூக்கா 24:27, 32). தோமாவின் சந்தேகத்தையும் தீர்த்து வைத்தார். இன்னுமாக, பேதுருவின் பணியைக்குறித்து அவருக்கு மீண்டும் விசேஷமாக வலியுறுத்தி, அனைத்து அப்போஸ்தலர்களையும் முழுமையாய் நம்பச்செய்து, மீண்டும் அவர்களை வேலைபுரிய அனுப்பி வைத்தார் என்று பார்க்கின்றோம். (யோவான் 20:26-28; 21:15-17; அப்போஸ்தலர் 1:1, 2; லூக்கா 24:52)

(4) இன்னுமாக, இந்த 11-பேர்தான், கர்த்தர் பரத்திற்கு ஏறிப்போன சம்பவத்திற்கும் சாட்சியாளர்களாக இருக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்டும் இருக்கின்றார்கள். கர்த்தர் பரத்திற்கு ஏறிப்போன சம்பவத்தில் அப்போஸ்தலர்கள் தவிர, வேறெவரும் காணப்பட்டார்கள் என்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை. அப்போஸ்தலர் 1:1-13-வரையிலான வசனங்களை வாசித்துப் பார்க்கவும். "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துப் பார்த்து நிற்கிறீர்கள்?" என்ற வார்த்தை கலிலேயர்களாகக் காணப்பட்ட இந்தப் பதினொரு அப்போஸ்தலர்களைத்தான் குறிக்கின்றது. லூக்கா 24:48-51 மற்றும் மத்தேயு 28:16-19 வரையிலான வசனங்களையும் பார்க்கவும்.

கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மற்றவர்களால் பார்க்கப்பட்டிருந்தாலும், அப்போஸ்தலர்களே அவருடைய உயிர்த்தெழுதலுக்கு விசேஷித்த சாட்சியாளர்களாகக் காணப்படுகின்றார்கள். இவ்விதமாக, இவர்களுடைய சாட்சியில் நம்முடைய விசுவாசமானது தெளிவாக உறுதிப்படுத்தப்படும்படிக்கு, இவர்களைக் கர்த்தர் பொருத்தமான சாட்சியாளர்களாக ஏற்படுத்தினார். "யூதருடைய தேசத்திலும், எருசலேமிலும் அவர் செய்தவைகள் எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படிச் செய்யாமல்,

அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படிச் செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்" (அப்போஸ்தலர் 10:39-43). (அப்போஸ்தலர் 13:31; 1 கொரிந்தியர் 15:3-8 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்).

(5) அப்போஸ்தலர்களுடைய சாட்சியானது ஆரம்பத்தில், யூதர்களுக்குள்ளாகவே வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, எருசலேம் துவங்கி, சகல தேசத்தாருக்கும் தம்முடைய நாமத்தில் பாவத்திற்கு மனம் திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்பு குறித்துப் பிரசங்கம் பண்ண, அப்போஸ்தலர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். இன்னுமாக, "நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றும், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றும் கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் கூறினார் (லூக்கா 24:48, 49; அப்போஸ்தலர் 1:8). "பூமியின் கடைசி பரியந்தம்/கடைசி எல்லைவரைக்கும்" எனச் சொல்லப்படும் விஷயத்தில், உதாரணத்திற்கு அமெரிக்கா பகுதிகளை, அப்போஸ்தலர்கள் தங்கள் ஜீவியகால நாட்களில் அடைந்து, அங்கு ஊழியம் புரிவது முடியாது என்பதினால் அப்போஸ்தலர் 1:8-ஆம் வசனத்தின் மேற்கூறப்பட்டுள்ள வார்த்தைகள், அப்போஸ்தலர்களுடைய மரணத்திற்குப் பிற்பாடு, இவர்கள் சாட்சி பகருவது, பெரும்பான்மையாக இவர்கள் எழுதிவைத்த எழுத்துக்கள் மூலமே நடக்கும் என்பதை வெளிப்படுத்துகின்றது. இவ்விதமாகவே, அப்போஸ்தலர்கள் நமக்கும் சாட்சி பகர்ந்துள்ளார்கள். மேலும், இவ்விதமாக சாட்சி பகரும் பணியை, இவர்கள் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள் என்றும், இவர்கள் கர்த்தரிடத்தில் தனிப்பட்ட விதத்தில் பெற்றுக்கொண்ட பயிற்சியானது, இவர்கள் பகரும் சாட்சிக்குச் சிறப்பான அங்கீகாரமாகவும், இவர்களுடைய சாட்சிகள் நம்பத்தகுந்தவைகளாக இருக்கின்றன என்பதற்கான உத்திரவாதமாகவும் இருக்கின்றது என்றும் நாம் கருதுகின்றோம்.

(6) வாக்களிக்கப்பட்டுள்ள வல்லமை வரும்வரைக் காத்திருக்க வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக, அப்போஸ்தலர்களும், மற்றச் சீஷர்களாகிய சுமார் 120 பேர் எருசலேமிலேயே தங்கியிருந்து, பெந்தெகொஸ்தே

நாளில் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதமாகிய "உன்னதத்திலுள்ள வல்லமையெனும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது வரையிலும், மாடியறையில் ஒன்றுகூடி, ஒவ்வொருநாளும் ஜெபத்துடன் காத்துக் கொண்டிருந்தார்கள்" (அப்போஸ்தலர் 1:14). அப்போஸ்தலர்களுக்கென விசேஷமாக வாக்களிக்கப்பட்டிருந்த மேற்கூறிய மாபெரும் ஆசீர்வாதத்தில் அவர்கள் கூடக் காணப்பட்ட உண்மையுள்ள ஆத்துமாக்கள் அனைவரும் பங்கடைந்தார்கள். "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அப்போஸ்தலர் 2:4). எனினும், அப்போஸ்தலர் 2:7-ஆம் வசனத்தை வைத்துப் பார்க்கும்போது, (கலிலேயர்களாகக் காணப்பட்ட) பதினொரு அப்போஸ்தலர்களும் பொதுப் பேச்சாளர்களாக இருந்ததைக் காணமுடிகின்றது. பரிசுத்த ஆவியானது, இவர்களுடைய மனங்களுக்கு, தெய்வீகச் சத்தியத்தின் தெளிவான சாட்சிகளைக் கொடுத்து, இவர்களுடைய இருதயங்களைச் சந்தோஷத்தினாலும், துதியினாலும் நிரப்பியது. ஆகவே, தங்களுடைய இருதயத்தில் பொங்கிக்கொண்டிருக்கும் காரியங்களினாலும், இவர்கள் அங்குக் கூடியிருந்த ஜனங்களுடைய பல்வேறு பாஷைகளை, பரிசுத்த ஆவியினால் அற்புதத்தினால், பேசமுடிகிற ஆற்றலைப் பெற்றிருந்தபடியினாலும் இவர்கள் அருமையான ஜீவனுக்குரிய வார்த்தைகளைப் பேசினார்கள். இந்த வல்லமையின் விளைவாக, அந்த நாளில்தானே, 3000 ஆத்துமாக்கள், கிறிஸ்தவர்களாக மாறினார்கள். பெந்தெகொஸ்தே நாளில் விசேஷமாகப் பொழியப்பட்ட ஆவியில், அன்று உண்மையுடன் காத்திருந்த அனைத்து நபர்களும் பங்கடைந்திருந்தாலும் மற்றும் அதே ஆவியானது பின்னாட்களில் புறஜாதிகள் மீதும் பொழியப்பட்டிருந்தாலும் மற்றும் இன்றுவரையிலுமுள்ள உண்மையுள்ளவர்களாகிய அர்ப்பணம் பண்ணப்பட்டவர்கள் அனைவர் மீதும் அதே ஆவியானது கடந்து வந்து கொண்டிருந்தாலும், அன்றைய தினத்தில் பதினொரு அப்போஸ்தலர்களும் அங்குக் காணப்பட்டார்கள் என்றும், அவர்களில் ஒருவராகிலும் பரிசுத்த ஆவியின் இந்த வரத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறவில்லை என்றும் நாம் விசேஷமாக உறுதி பெற்றுக்கொள்ளலாம். இவர்கள் இந்த ஆவியைப் பெற்றுக் கொள்ளவில்லையெனில், இவர்களுடைய அப்போஸ்தலத்துவம் அங்கீகரிக்கப்பட முடியாததாகக் காணப்படும் (அப்போஸ்தலர் 1:13, 14; 2:1).

(7) கர்த்தரோடு கூடவே இருப்பதற்கும், அவரால் அளித்த தனிப்பட்ட விதமான போஷிப்புகள், முதலானவைகளாகிய சிலாக்கியங்கள் அனைத்தும் மற்றும் மற்றவர்கள் அனுபவித்த பெந்தெகொஸ்தே நாளிற்குரிய பரிசுத்த ஆவியின் பொழிவும், கடந்து முடிந்து போவதுவரையிலும், புதிய யுகம் தொடர்பான சத்தியம் குறித்த விஷயங்களில் அறியாமையிலேயே சவுல் இருப்பதற்கும், சவுல் பரிசேயர்கள் மத்தியில் ஒரு பரிசேயனாக இருந்து தேவனுடைய சேவை புரிவதற்கும்

அனுமதித்திட்ட காரியமும் மற்றும் யூதாஸ், அப்போஸ்தலர்கள் மத்தியில் ஒருவராகக் காணப்படுவதற்குக் கர்த்தர் அனுமதித்திட்ட காரியமும் குறிப்பிடத்தக்க விஷயமாக இருப்பினும், இதிலும்கூட மற்றொரு ஞானமுள்ள திறமையும் வெளிப்படுகின்றது. ஏனெனில், மகிமையடைந்த கர்த்தருக்கு, சாட்சியாளர்களாக பவுல் ஏற்படுத்தப்பட்டார். அதாவது, சபை மகிமையடைந்து, உயர்த்தப்பட்டு, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதற்கு ஏதுவாக, அவருக்கு ஒப்பாகக் காணப்படுகின்ற காலத்திற்கு முன்பு, அகால பிறவிபோன்று பிறந்தவராக, அதாவது காலத்திற்கு முன்பு மரணத்திலிருந்து பிறந்தவர்போன்று பவுல் காணப்பட்டார் (1 கொரிந்தியர் 15:8; 1 யோவான் 3:2). நமக்கு நம்பத்தகுந்த மற்றும் பொருத்தமான சாட்சியாளராகப் பவுல் இருப்பதற்கு, அவர் குறைவுப்பட்டிருந்த காரியங்களை, தரிசனங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மூலம் கர்த்தர் பவுலுக்குத் தெரியப்படுத்தினார் (2 கொரிந்தியர் 12:1-4, 7; கலாத்தியர் 1:11, 12; 2:2).

மேலும், பவுலைக்குறித்து கர்த்தர் தாமே "அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்" என்று சாட்சி அளிக்கின்றார் (அப்போஸ்தலர் 9:15). மேலும், கர்த்தருடைய இந்த வார்த்தைகள் யாவும், பவுல் 12-அப்போஸ்தலர்களில் ஒருவர் என்று பவுலுக்குத் தேவையான உத்திரவாதமாகக் காணப்படுகின்றது. சத்தியத்தைச் சாட்சி பகரும் விஷயத்தில் பவுல் கொண்டிருந்த வைராக்கியத்திற்கும், அவரிடத்தில் வெளிப்படும் பரிசுத்த ஆவியின் வல்லமைக்கும் உரிய நமது கர்த்தருடைய சாட்சியுடன்கூட, பவுலுங்கூடத் தன்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கின்றார், "மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின் படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிப் பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று" கூறினார் (கலாத்தியர் 1:11, 12; 2:8).

பவுல், சிறப்பாகப் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலராகவும், மற்றவர்கள் விசேஷமாக யூதர்களுக்கு அப்போஸ்தலர்களாகவும் காணப்பட்டார்கள். ஆகவேதான், பவுல் தன்னுடைய அதிகமான நிரூபங்கள் வாயிலாக அநேக காரியங்களை நமக்குக் கூறுகின்றவராகக் காணப்படுகின்றார். ஆனால், அப்போஸ்தலர்களுடைய நாட்களிலேயே பவுலைக்காட்டிலும் பதினொரு பேரில் பேதுருவும், யாக்கோபும் மற்றும் யோவானும் சபையார் மத்தியில் மிக முக்கியமானவர்களாகக் காணப்பட்டார்கள். மேலும், இந்த 3 அப்போஸ்தலர்களைக் குறித்து இவர்கள் சபையார் மத்தியில் தூண்களாகக் கருதப்படுவதைக்குறித்தும்

பவுல் தெரிவிக்கின்றார் (கலாத்தியர் 2:9). பவுலோ முயன்று கொண்டிருக்கும் முன்னோடியாகக் காணப்பட்டார். மேலும், அவர் புறஜாதிகள் மத்தியில் செய்துகொண்டிருந்ததான வேலை, மனுஷர் கணிப்பில் கனமிக்க வேலையாகக் கருதப்படவில்லை. புறஜாதிகளின் மத்தியில் பவுலுடைய வேலையின் நிமித்தம் அவர் அனைத்துவிதமான ஆபத்துக்களுக்கும், உபத்திரவங்களுக்கும், இழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்டார். மேலும் சபை ஜனங்கள் மத்தியிலுங்கூடப் பவுலுடைய வைராக்கியமானது முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவுமில்லை, உணர்ந்து கொள்ளப்படவுமில்லை. ஆகையால்தான் அவர் அடிக்கடி தன்னுடைய அப்போஸ்தலத்துவத்திற்கான ஆதாரங்களை முன்வைத்து, அவைகளைச் சபையாருக்கு நினைப்பூட்டி, மற்ற அப்போஸ்தலர்களைக்காட்டிலும், "தான் ஒன்றும் குறைவுள்ளவனல்ல" என்று நிரூபித்துக் காட்டுகின்றவராகவும் காணப்பட்டார். (1 கொரிந்தியர் 9:1; 2 கொரிந்தியர் 11:5)

அடுத்ததாக, சபையில் அப்போஸ்தலர்களின் பணி என்ன என்று நாம் ஆராயலாம். கர்த்தரையும், அவருடைய போதனைகள் குறித்தும் அப்போஸ்தலர்கள் அளிக்கும் வரலாற்று ரீதியிலான சான்றின் மீது மாத்திரமே நாம் சார்ந்திருக்க வேண்டுமா? அல்லது இன்னும் அதிகமானவைகளை இவர்களுடைய சாட்சி உள்ளடக்குகின்றதா?

அப்போஸ்தலர்கள் உண்மையில் தாங்கள் அறிந்துள்ள அனைத்து விஷயங்கள் குறித்தும், பரிசுத்த ஆவியின் விசேஷமான வழிநடத்துதலின் கீழ்த் தாங்கள் கற்றுள்ள அனைத்தையும் குறித்தும் சாட்சிப்பகர வேண்டியவர்களாகக் காணப்பட்டார்கள். இப்படியாகச் சாட்சிப்பகரும் பட்சத்தில்தான், இவர்களுக்குப் போதிக்கப்பட்ட காரியங்களுக்கு இவர்கள் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருக்க முடியும். "இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்" (1 கொரிந்தியர் 4:1). இதே கருத்துதான் "உங்களை நான் மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன்" மற்றும் "என் ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் மேய்ப்பாயாக" என்ற கர்த்தருடைய வார்த்தைகளில் விளங்குகின்றது. "அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை (எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் கிறிஸ்துவின் உடன் சுதந்திரவாளிகள் ஆகலாம் எனும் இரகசியத்தை) அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய (நீதிமான்களாக்கப்பட்டு, அர்ப்பணிக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் என்று

கருதப்படும்) பரிசுத்த அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனானேன். பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." (KJV மொழிப்பெயர்ப்பு). "அந்த மறைபொருள் எனக்கு இறை வெளிப்பாட்டின் வழியாகவே தெரியப்படுத்தப்பட்டது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சுருக்கமாக உங்களுக்கு எழுதியிருக்கிறேன்; அதை நீங்கள் வாசிக்கும்போது, கிறிஸ்துவை பற்றிய மறைபொருளை நான் புரிந்துகொண்டேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம் என்பதே; அந்த மறைபொருள் மற்றத் தலைமுறைகளில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இப்போது தூய ஆவி வழியாகத் தூய திருத்தூதருக்கும், இறைவாக்கினருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைப்பொருள்; கடவுள் வல்லமையோடு என்னுள் செயல்பட்டு எனக்கு அளித்த அருள்கொடைக்கு ஏற்ப, அந்த நற்செய்தியின் தொண்டன் ஆனேன். கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப் பற்றிய நற்செய்தியைப் பிற இனத்தாருக்கு அறிவிக்கவும், எல்லா ஊழி காலமாக மறைந்திருந்த இந்த மறைபொருளின் திட்டம் இன்னதென யாவருக்கும் தெளிவுபடுத்தவும், இறைமக்கள் அனைவருள்ளும் மிகவும் கடையவனாகிய எனக்கு இந்த அருள் வழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம் பலவகையில் விளங்கும் கடவுளின் ஞானத்தை ஆட்சிபுரிவோர், வான்வெளியில் அதிகாரம் செலுத்துவோர் ஆகியோருக்கு இப்போது திருச்சபை வழியாக வெளிப்படுத்த முடிகிறது. இவ்வாறு கடவுள் ஊழி காலமாகக் கொண்டிருந்த திட்டத்தை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாகக் கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அணுகும் உரிமையும் துணிவும் நமக்குக் கிடைத்துள்ளது" (எபேசியர் 3:3-11; திருவிவிலியம் மொழிப்பெயர்ப்பு). இப்படியாகச் சபை எப்படி

அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகளின் அஸ்திபாரத்தின் மேலும், இந்த அஸ்திபாரத்தின் மூலைக் கல்லாகிய இயேசு கிறிஸ்துவின் மேலும் கட்டப்பட வேண்டும் என்று பவுல் கூறின பிற்பாடு, "இதினிமித்தம் (தேவனுடைய ஆலயமாகிய சபையைக் கட்டும் விஷயத்தில்) பவுலாகிய நான் புறஜாதியாயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்" என்றும் கூறுகின்றார் (எபேசியர் 3:1; 2:20-22).

இவ்விதமாக அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவைக்குறித்த வரலாற்றுச் சாட்சிகளைக் கொடுப்பவர்களாக மாத்திரம் இல்லாமல், தேவனுடைய ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்வதற்கும், போதிப்பதற்கும், பரிசுத்த ஆவியினுடைய தாக்கத்தினால் விசேஷித்த விதமாக ஆயத்தம்பண்ணப்பட்டு, அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளனர்; மேலும் இவர்கள் முழுச்சபையினுடைய நன்மைக்காகவும், போஷிப்பிற்காகவும், கட்டியெழுப்புவதற்காகவும், இவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஆசீர்வாதங்களுக்கு இவர்கள் விவேகமும், உண்மையுமுள்ள உக்கிராணக்காரர்களாகவும் காணப்பட்டார்கள். "இலவசமாய் பெற்றுக்கொண்டீர்கள், இலவசமாய் கொடுங்கள்" என்று கர்த்தர் கூறினார், மேலும் இக்கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் இவர்கள் கவனமாகவும் இருந்தார்கள்; இவர்கள் மூலமாக நமக்கு, அதாவது பூமியின் கடைசி எல்லை பரியந்தம் அந்த ஆசீர்வாதங்கள் கடந்து வந்தது.

ஆனால், நாம் இன்னும் ஒருபடி முன்வந்து, இந்த அப்போஸ்தலர்கள் சபையில் எஜமான்களாக /கர்த்தாக்களாகக் கருதப்பட்டார்களா? அல்லது வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் சபையின் தலையும், கர்த்தருமாய் இருந்த இயேசு போனபிற்பாடு, இவர்களில் எவரும் தலையின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார்களா? அல்லது அப்போஸ்தலர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இயேசுவிற்குரிய தலை ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, அரசாங்கத்தின் ஆளுகைகளை எடுத்துக்கொண்டார்களா? அல்லது ரோமின் போப்மார்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குத் தாங்கள் கிறிஸ்து இயேசுவுக்குப்பதிலாக Vicars-ஆக மற்றும் வாரிசுகள் என்று கூறிக்கொண்டது போன்று அப்போஸ்தலர்கள் ஸ்தானம் எடுத்துக்கொண்டார்களா? என்ற ஆராய்ச்சியைத் தொடர்வதற்கு நாம் பயபக்தியுடன் நாடுகின்றோம்.

இப்படியான கோட்பாடுகளுக்கு எதிராக, நாம் பவுலுடைய எளிமையான வார்த்தைகளைப் பெற்றிருக்கின்றோம்; "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்" (எபேசியர் 4:4, 5). ஆகவே, சபையாகிய சரீரத்தில் பல்வேறு அங்கங்களின் மத்தியில், சிலருடைய முக்கியத்துவம் எவ்வளவுதான் அதிகமாய் இருந்தாலும், ஒருவரே கர்த்தரும், தலையுமாக இருக்கின்றார். இக்காரியத்தைக்குறித்து நமது கர்த்தர் இரண்டு தருணங்களில் தெளிவாகப் போதித்துள்ளார்; "பின்பு இயேசு ஜனங்களையும்

தம்முடைய சீஷர்களையும் நோக்கி: வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள். நீங்களோ ரபீ என்றழைக்கப் படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" (மத்தேயு 23:1, 2, 6, 8). "அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையான வனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனா யிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்" (மாற்கு 10:42-45).

ஆதிசபை ஜனங்கள், அப்போஸ்தலர்களைக் கர்த்தாக்களாக/பிரபுக் களாகக் கருதினதாகவோ அல்லது இப்படியான அதிகாரத்தையோ, மதிப்பையோ எப்போதாகிலும் அப்போஸ்தலர்கள் எடுத்துக்கொண்டதாகவோ நமக்கு எவ்விதமான ஆதாரங்களும் இல்லை. அப்போஸ்தலர்களுடைய இந்த நடத்தை, கர்த்தத்துவம் குறித்த போப்மார்களின் கருத்திடமிருந்து அதிகம் வேறுபட்டதாகும். உதாரணத்திற்குப் போப் தனக்குப் பெயர்ச் சூட்டிக்கொள்வது போன்று, பேதுரு ஒருபோதும் தன்னை அப்போஸ்தலர்களுக்கு பிரபு என்றோ, அப்போஸ்தலர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பட்டங்கள் சூட்டிக்கொண்டோ அல்லது இத்தகைய மரியாதையைச் சபையாரிடமிருந்து பெற்றுக்கொள்ளவோ இல்லை. அப்போஸ்தலர்கள் ஒருவரையொருவர் குறிப்பிடும்போது எளிமையாக பேதுரு, யோவான், யாக்கோபு, பவுல் அல்லது சகோதரன் பேதுரு, சகோதரன் யோவான் என்றே அழைத்துக்கொண்டார்கள். மேலும், சபை ஜனங்களும் ஒருவரையொருவர் கிறிஸ்துவுக்குள் சகோதரன், சகோதரி என்றுதான் அன்பின் வாழ்த்துக்களைப் பரிமாறினவர்களாகக் காணப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 9:17; 21:20; ரோமர் 16:23; 1 கொரிந்தியர் 7:15; 8:11; 2 கொரிந்தியர் 8:18; 2 தெசலோனிக்கேயர் 3:6, 15; பிலமோன் 7, 16). இன்னுமாக, இவர்களைச் சகோதரர் என்று அழைப்பதில் கர்த்தரும் வெட்கப்படவில்லை என்று எழுதப்பட்டுள்ளது. (எபிரெயர் 2:11). கர்த்தரும் கூடத் தம்முடைய கர்த்தத்துவத்தை (அ) அதிகாரத்தைச் செயல்படுத்தும் விஷயத்தில் அகந்தையான மனப்பான்மைக்கு அப்பாற்பட்டவராகவே

காணப்பட்டார்.

சொந்த ஊரிலும், வெளியூரிலும் அப்போஸ்தலர்களைப்போலவே பொதுவாக மேற்பார்வை பண்ணின கண்காணிகளும் இருந்தது உண்மைதான். சத்தியம் மற்றும் இதரக்காரியங்களில் மிகவும் முதிர்ச்சி அடைந்தவர்கள், மூப்பர்களாக இருந்த அந்தந்தச் சபையின் காரியங்களை மேற்பார்வை பண்ணினதும் உண்மைதான் (அப்போஸ்தலர் 14:23). பல்வேறு இடங்களில் காணப்படும் சபையாருக்கடுத்த பூமிக்குரிய பணிக்கு விசேஷமான பொறுப்பேற்றுப் பண்ணின உதவியாளர்கள் இருந்ததும் உண்மைதான். (அப்போஸ்தலர் 6:1-3) மற்றும் பிரயாணம் மேற்கொண்டு தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கம் பண்ணும் சுவிசேஷகர்கள் இருந்ததும் உண்மைதான். ஆயினும், இவர்களில் எவரும் இந்தப் பெயர்களைக் கனத்திற்குரிய பட்டங்களாக ஒருபோதும் பயன்படுத்தினதில்லை. சபையில் இப்படியாக வேலைகள் புரிவதற்குத் தேவையான தகுதிகள் 1 தீமோத்தேயு 3:1-13; 2 தீமோத்தேயு 4:1-5 ஆகிய வசனங்களில் இடம்பெறுகின்றது.

ஆதிசபை ஜனங்கள் மத்தியில் முன்னிலை வகித்த இந்த ஊழியர்கள் குருமார்களின் உடைகள் தரித்துக்கொண்டு சென்றதாகவோ அல்லது சிலுவையை, ஜெபமாலையை எடுத்துக்கொண்டு வெளியே திரிந்ததாகவோ, ஜனங்களிடமிருந்து பயபக்தியையும், மரியதையையும் எதிர்பார்த்தவர்களாகவோ காணப்படவில்லை. ஏனெனில், இவர்களில் எவர்கள் அதிகமாக பணிவிடைச் செய்கின்றார்களோ, அவர்களே இவர்களின் மத்தியில் பிரதானமானவராகக் காணப்படுவார்கள் என்று கர்த்தர் இவர்களுக்குப் போதித்துள்ளார். உபத்திரவங்கள் சபையைச் சிதறடித்தபோது, சபைஜனங்களை எருசலேமிலிருந்து வெளியே துரத்திவிட்டபோது, பதினொரு அப்போஸ்தலர்களும், எதையும் சந்திக்கத்தக்க தைரியத்துடன் காணப்பட்டார்கள். ஏனெனில், இந்தச் சோதனையான கட்டத்தில் வெளிதேசத்தில் காணப்படும் சபைஜனங்கள் உதவிக்காகவும், உற்சாகத்திற்காகவும் எருசலேமில் காணப்படும் இவர்களைக் (அப்போஸ்தலர்களை) கண்ணோக்குவார்கள். மேலும், ஒருவேளை அப்போஸ்தலர்களும் எருசலேமிலிருந்து பயத்தினிமித்தம், மறைந்து ஓடிப்போயிருப்பார்களானால், முழுச்சபையும் பெரும் அச்சத்தினால் ஆட்கொள்ளப்பட்டு, நடுநடுங்கி போயிருப்பார்கள். யாக்கோபு, ஏரோதின் பட்டயத்தினால் கொல்லப்படுகின்றார், பேதுருவோ சிறைச்சாலையில் இரண்டு போர்ச்சேவர்கள் மத்தியில் சங்கிலிகளில் கட்டப்பட்டவராகக் காணப்பட்டார் (அப்போஸ்தலர் 12:1-6). மேலும், பவுலும் சீலாவும் அநேக அடிகளினால் அடிக்கப்பட்டு, அவர்கள் பாதங்கள் தொழுமரத்தில் கட்டப்பட்ட நிலையில் சிறைச்சாலையில் போடப்பட்டார்கள். மேலும், பவுல் மிகுந்த போராட்டங்களைச் சகித்தவராகக் காணப்பட்டார். (அப்போஸ்தலர் 16:23, 24; 2 கொரிந்தியர் 11:23-33).

இவர்கள் கர்த்தாக்கள் போன்று பாவனைச் செய்தார்களா? இல்லை என்றே நாம் எண்ணுகின்றோம்.

பேதுரு இக்காரியங்களைக்குறித்து, தேவனுடைய மந்தையை மேய்க்கும்படி மூப்பர்களுக்கு அறிவுரை கூறினபோது, மிகவும் தெளிவாகக் காணப்பட்டார். இன்றைய காலத்தில் அநேக ஊழியர்கள் கூறுவதுபோன்று பேதுருவும், உங்கள் மந்தை, உங்கள் ஜனங்கள், உங்கள் சபை என்று கூறாமல் மாறாக, தேவனுடைய மந்தை என்றே கூறுகின்றார். மேலும், மூப்பர்கள் அடக்கி இறுமாப்பாய் ஆளுகிறவர்களாய் இராமல், தாழ்மை, உண்மை, வைராக்கியம் மற்றும் தேவபக்திக்குரிய மாதிரிகளாக மந்தைக்கு இருக்கும்படிக்கும் கூறுகின்றார். "எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும், தூதருக்கும், மனுஷருக்கும் வேடிக்கையானோம். நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர்.... நாங்கள் பலவீனர்.... நாங்கள் கனவீனர்.....இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்" (1 பேதுரு 5:1-3; 1 கொரிந்தியர் 4:9-13). இவைகளையெல்லாம் பார்க்கும்போது, அப்போஸ்தலர்கள் அடக்கி இறுமாப்பாய் ஆளுகின்றவர்கள்போல் தெரியவில்லை. இன்னுமாக, தேவனுடைய மந்தையை அடக்கி இறுமாப்பாய் ஆள ஆசைப்படும் சில சகோதரர்களின் கருத்துக்களுக்கு எதிராக பவுல், "இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே "என்று பேசுகின்றார் (1 கொரிந்தியர் 4:8). இன்னுமாக, இவ்விஷயத்தில் தாழ்மையாய் இருப்பதே சிறந்த வழி என்று கூறி, அதற்கு மாதிரியாய் இருக்கும் தன்னைப் பின்பற்றுங்கள் என்று கூறுகின்றார். பின்னர், "எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக் கொள்ளக்கடவன்" என்றும் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 4:1).

"சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை; தேவனே சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக

உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை. உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல" என்று கூறினார் (1 தெசலோனிக்கேயர் 2:4-7).

இன்னுமாக, அப்போஸ்தலர்கள் ஒருபோதும் போதனைகள் விஷயத்திலும், சபைக்கான ஊழியங்களில் தங்களுக்கு மாத்திரம் பிரத்தியேக ஆதிக்கமான தனி உரிமை இருக்கின்றது என்று உரிமை பாராட்டிக்கொள்ளவுமில்லை. கர்த்தரும், அவர்கள் இப்படியாகச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லவுமில்லை. "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்ப்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்ப்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" (எபேசியர் 4:11-15).

தேவன் இவ்விதமாய் பல்வேறு உதவி புரியும் ஊழியர்களை எழுப்பினார். மேலும், ஆதி சபையிலும் சரி, சுவிசேஷ யுகத்திலும் சரி, இந்த ஊழியர்களின் பணிகளை அதிகமாய் ஆசீர்வதித்தும் உள்ளார். ஆனாலும் முன்னிலை ஸ்தானத்தையுடைய அப்போஸ்தலர்களே நமக்கு ஆவிக்குரிய காரியங்களால் ஊழியம் புரிவதற்கென விசேஷமாய் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தார்கள். போதகர்கள் மற்றும் மற்ற உதவிகளைப் புரியும் ஊழியர்களுக்கான பல்வேறு வரிசைகள் அல்லது ஒழுங்குமுறைகள் தொடர்பான கர்த்தருடைய நியமித்தலையும், தனிப்பட்ட மேற்பார்வையையும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகின்றார்; "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கத்தரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா?" (1 கொரிந்தியர் 12:28, 29). இல்லை, நிச்சயமாக இல்லை, ஒருவேளை நாம் கர்த்தரால் வழிநடத்தப்படுகிறவர்களாய் இருந்தால், சபைக்குப் போதிப்பதற்கும், போஷிப்பதற்குமெனத் தேவன்

முன்வைத்துள்ள, அவருடைய நியமனம் தொடர்பான இந்த ஒழுங்குமுறையை ஏற்றுக்கொள்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் கிறிஸ்துவினுடைய ஐசுவரியங்களை அறிவிக்கின்றவர்களாய் இருப்பினும், அவர்கள் மத்தியில், அப்போஸ்தலர்களே முதன்மை ஸ்தானத்தில் இருக்கின்றார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். (எபிரெயர் 5:12).

அப்போஸ்தலர்களுடைய இந்தப் பிரதான ஸ்தானத்தை நாம் ஒத்துக்கொள்கையில், சபை போஷிக்கப்படுவதற்காகக் கர்த்தரால் அருளப்பட்ட மற்ற உதவி புரிகிறவர்களின் ஊழியங்களை நாம் குறைவாக எடை போடுகின்றவர்களாகவோ அல்லது மதிப்புக் குறைத்தோ பேசுகிறதில்லை. உதாரணத்திற்குச் சுவிசேஷகர்களாகிய மாற்கு, லூக்கா மற்றும் ஸ்தேவானின் சாட்சிகள், அப்போஸ்தலர்களுடைய சாட்சிகள்போல் நம்பத் தகுந்ததாகவே இருக்கின்றது. ஏனெனில், "இவர்கள் அனைவரும் ஒரே சிந்தையை உடையவர்களாகக் காணப்பட்டார்கள்." சுவிசேஷ யுகம் முழுவதும் காணப்படும் இத்தகைய உண்மையுள்ள மற்றும் கர்த்தரால் எழுப்பப்பட்ட சாட்சியாளர்களுக்கு, அப்போஸ்தலர்கள் கட்டளைக்கொடுப்பதை 2 தீமோத்தேயு 4:1-6 வரையிலான வசனங்களில் பார்க்கலாம்.

ஆகவே புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாய்க் காணப்பட்ட பவுல் தன்னுடைய ஓட்டத்தை முடிக்கப்போகிற வேளையில், சபையின் மூப்பர்களிடம், நலன்களுக்கடுத்த வேலைகளின் பொறுப்பை அளிக்கின்றவராகக் காணப்படுகின்றார். மேலும், பவுலினுடைய இந்தக் கட்டளை, அன்றைய நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் மூப்பர்களுக்கு மாத்திரம் பொருந்துவதாய் இராமல், நம்முடைய நாட்களில் உள்ளவர்களுக்கும் பொருந்தும். கர்த்தருக்கும், சபைக்கும், தான் ஊழியக்காரனாய் இருந்த விஷயத்தில் தன்னுடைய உண்மையைப்பற்றியும், மாபெரும் வேலையின் மீதான தன்னுடைய அக்கறையைப்பற்றியும் பவுல் கூறின பிற்பாடு, "மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள். இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள

வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன். ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்" (அப்போஸ்தலர் 20:17, 28-35).

இதைப் போலவே பேதுருவும் மூப்பர்களுக்குப் புத்திமதிக் கூறுகின்றார்... "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்" (1 பேதுரு 5:1-3).

இத்தகைய போதகர்கள், பரிசுத்த ஆவியினால், சபையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று நாம் நிதானித்துக் கொண்டாலும், இவர்களுடைய போதனைகள், சபைக்குத் தலையாக இருக்கும் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகள் போன்றுதான் காணப்படுகின்றதோ எனப் பார்ப்பது நம்முடைய கடமையாகும்; கர்த்தர் முதலாம் வருகையில் காணப்பட்டபோது, வெளிப்படுத்துவதற்கு ஏற்றதாய் இராதவைகளைப் பின்னர், தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மூலம் வெளிப்படுத்தின தெய்வீகத் திட்டத்தின் ஆழமான காரியங்களை நமக்குப் போதிப்பதற்கு அவர் அப்போஸ்தலர்களுக்கு விசேஷமாக அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கர்த்தர் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். (யோவான் 16:12; எபேசியர் 3:5). சத்தியமானது, தெய்வீக ஏவுதலினால், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதிகளாகிய, அப்போஸ்தலர்களால் முதலாவதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஒருவேளை இந்த அப்போஸ்தலர்கள் கூட இடறிப்போனாலும், இந்தச் சத்தியமானது தடைப்பண்ணப்பட முடியாது (ஆனால் இந்த 11-அப்போஸ்தலர்கள் மற்றும் பவுலும் இடறிப் போகவில்லை) என்பது வெளிப்படுத்தல் 21:14-ஆம் வசனத்தில் வெளிப்படுகின்றது. இதைக்குறித்து பவுல் தெளிவாக, கலாத்தியர் 1:8-12 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார்.

ஆதிசபை ஜனங்கள் அப்போஸ்தலர்களின் மேன்மையான ஆவிக்குரிய அறிவு மற்றும் ஞானத்திற்குச் சரியான மரியாதைக்கொடுத்து, அப்போஸ்தலர்கள் தங்களுக்காக கர்த்தரால் விசேஷமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட

ஸ்தானாதிபதிகளாகக் கருதி கற்றுக்கொள்ளும்படி, அப்போஸ்தலர்களின் பாதப்படியினருகே அமர்ந்தார்கள். ஆனாலும், சபைஜனங்கள் வெறுமையான மற்றும் எக்கேள்விகளும் அற்ற மனமுடையவர்களாக இராமல், அப்போஸ்தலர்களின் ஆவியைப் பகுத்தறிந்து, அவர்களுடைய சாட்சிகள் உண்மையுள்ளனவா என்று அறியும் மனப்பான்மையில், அப்போஸ்தலர்கள் பாதமருகே அமர்ந்தார்கள். (1 யோவான் 4:1; 1 தெசலோனிக்கேயர் 5:21; ஏசாயா 8:20). அப்போஸ்தலர்களும் கூட, (ஆதி) சபைஜனங்களுக்குப் போதிக்கும்போது, அவர்களிடம் மேற்கூறப்பட்ட மனப்பான்மை இருப்பதைக்கண்டு மகிழ்ந்து, அம்மனப்பான்மையை உற்சாகப்படுத்தி, அவர்களது இம்மனப்பான்மையைச் சந்திக்க ஆயத்தமாய்க் காணப்பட்டார்கள். அதாவது, (மனித தத்துவம் மற்றும் கூற்றுகளாகிய) மனித ஞானத்தின் மயக்கும் வார்த்தைகளால் அம்மனப்பான்மையைச் சந்திக்க அப்போஸ்தலர்கள் முற்படாமல், ஆவி மற்றும் வல்லமையை வெளிப்படுத்திக் காட்டுவதன் மூலம், சபையினுடைய விசுவாசத்தை மனித ஞானத்தின்மேல் நிற்க செய்யாமல், தேவனுடைய வல்லமையின்மேல் நிற்க செய்யத்தக்கதாக அப்போஸ்தலர்கள் ஆயத்தமாய்க் காணப்பட்டார்கள் (1 கொரிந்தியர் 2:4, 5). அப்போஸ்தலர்கள், தங்களுக்கெனச் சபைஜனங்கள் மத்தியில் கண்மூடித்தனமான, மூடநம்பிக்கையான பக்தியை/மதிப்பை வளர்த்தவில்லை.

பெரோயாவிலுள்ளவர்கள் குறித்து, “அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்” என்று வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 17:11). முற்காலத்து தீர்க்கத்தரிசிகளினால் மறைப்பொருள்களாக அறிவிக்கப்பட்ட அதே சுவிசேஷத்தைத்தான், தாங்களும் பிரகடனம் பண்ணிக்கொண்டிருக்கின்றனர் என்பதைக் காட்டுவதே அப்போஸ்தலர்களுடைய தொடர்ச்சியான பிரயாசமாக இருந்தது. “உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கத்தரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு (அப்போஸ்தலர்கள்), இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்” (1 பேதுரு 1:10-12). ஜீவன் மற்றும்

அழியாமைக்கான சுவிசேஷம் கர்த்தரால் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்றும், இது தொடர்பான அதிகமான வெளிச்சம் சபைக்கு, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் மூலம் விசேஷமான வெளிப்படுத்தல்கள் அல்லது ஏதேனும் இயல்பானமுறையில் அப்போஸ்தலர்களாகிய தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு, சபைக்கு வெளிப்படுத்தப்படும் என்றும், தங்கள் மூலம், முழுச்சபைக்கும் வெளிப்படுத்தப்படும் என்றும் காட்டவே அப்போஸ்தலர்களுடைய தொடர்ச்சியான பிரயாசம் காணப்பட்டது. "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் (முதலாவது அப்போஸ்தலர்களையும், பின்னர் அவர்கள் வாயிலாக முழுச்சபையாரை) உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் (தனியாய்) பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி (உங்களுக்கான என்னுடைய செய்தி கொடுப்பவராக பரிசுத்த ஆவி இருந்து) வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்" (யோவான் 16:12-15).

ஆகவே அப்போஸ்தலர்கள் அளித்த சாட்சியானது, நியாயப்பிரமாணங்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகள் உரைத்தவைகளுக்கும் இசைவாக இருக்கின்றதா என்று பார்க்கவும், அவர்களுடைய சாட்சிகளை, கர்த்தருடைய வார்த்தைகளுக்கு ஒப்பிட்டுப்பார்க்கவும், பெரோயர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தது சரியான காரியமே ஆகும். "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கின்றது" என்று கர்த்தரும் கூடத் தம்முடைய சாட்சியை நிரூபிக்கும்படி, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்ற அழைப்பை விடுக்கின்றார். நியாயப்பிரமாணம் மூலமாயும் சரி, தீர்க்கத்தரிசிகள் மூலமாயும் சரி, கர்த்தர் அல்லது அப்போஸ்தலர்கள் மூலமாயும் சரி வெளிப்படுத்தப்படும் தெய்வீகச் சாட்சியானது இசைவுடன் காணப்பட வேண்டும். இவர்கள் அனைவரின் சாட்சியில் காணப்படும் இசைவானது, இவர்கள் தெய்வீக ஏவுதலினாலேயே பேசியுள்ளனர் என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது. இப்படியாக, அனைத்துச் சாட்சிகளும் இசைவுடன் காணப்படுவதினால், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் அடங்கிய முழு வேதவாக்கியங்களும், கர்த்தர் அழைப்பதுபோன்று, "தேவ சுரமண்டலமாகவே" காணப்படுகின்றதினால் தேவனுக்கு நன்றி (வெளிப்படுத்தல் 15:2). இந்தச் சுரமண்டலம்/இசைக்கருவியின் பல்வேறு நரம்புகள், நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகளினால் உரைக்கப்பட்ட பல்வேறு சாட்சிகளாகக் காணப்படுகின்றது. மேலும், இந்த நரம்புகள் நம்முடைய

இருதயங்களில் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியினால் தொடப்பட்டு, தெய்வீகச் சத்தியத்தை ஆராயும் பக்தியுள்ள ஆராய்ச்சியாளரின் விரல்களினால் அந்த நரம்புகள் அசைக்கப்படும்போது, மிக அருமையான எழுச்சியூட்டும் இசையை அளிக்கின்றது. கர்த்தர் இயேசு மூலமும், அப்போஸ்தலர்கள் மூலமும், தீர்க்கத்தரிசிகள் மூலமும், வந்த சாட்சியின் வாயிலாக நாம் கற்றுக் கொண்டுள்ள மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலிலுள்ள சிறந்த இராகத்திற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றோம்.

கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய சாட்சியானது, நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் உரைத்தக் காரியங்களுக்கு இசைவாக இருக்க வேண்டும் என்றாலும், இவர்களது சாட்சிகள் பழையவைகளைக் குறித்துச் சாட்சி கொடுப்பதோடல்லாமல் புதியவைகள் குறித்துச் சாட்சயளிக்க வேண்டுமென நாம் எதிர்ப்பார்க்க வேண்டும். ஏனெனில், இப்படியாக நாம் எதிர்ப்பார்க்கத்தக்கதாகவே தீர்க்கத்தரிசிகள் நம்மை வழிநடத்தியுள்ளனர் (மத்தேயு 13:35; சங்கீதம் 78:2; உபாகமம் 18:15, 18; தானியேல் 12:9). ஆகவே கர்த்தரும், அப்போஸ்தலர்களும் முற்காலத்துத் தீர்க்கத்தரிசனங்களில் மறைந்திருந்த சத்தியத்தை வெளிப்படுத்தியதோடுகூட, சத்தியத்தின் புதிய வெளிப்படுத்தல்களையும் வெளிப்படுத்துகின்றவர்களாகக் காணப்பட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம்.

சுவிசேஷயுகத்தின் சபையானது, பேதுரு எனும் பாறையின் மீது கட்டப்பட்டுள்ளார்கள் என்றும், அந்தப் பேதுருவினிடத்திலும், அவருக்குப் பின் அவர் ஸ்தானத்தில் இருக்கப்போகிறவர்களாகிய போப்புகளுக்குப் பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், திறப்பதற்கும், மூடுவதற்கும், தாங்கள் விரும்பும் எவரையும் அனுமதிப்பதற்கும் அல்லது விரும்பாதவர்களை அனுமதிக்காமல் இருப்பதற்கும் யாரையும் அல்லது எதையும் அவர்கள் விரும்பும்பட்சத்தில் கட்டுவதற்கோ அல்லது கட்டவிழ்ப்பதற்கோ அதிகாரம் உடையவர்கள் என்றும் உள்ள உரோம சபையின் அந்திக்கிறிஸ்தவ அமைப்பின் வாதங்களை நாம் இங்குக் கவனிப்பது நலமாயிருக்கும்.

இவ்வமைப்பு இவ்வாதங்களை, மத்தேயு 16:15-19 வரையிலான வேதவாக்கியங்களின் அடிப்படையில் கூறுகின்றது; "அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் (petros - ஒரு கல்) இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் (petra பாறை, ஒரு பெரிய கல்) என் சபையைக் கட்டுவேன்." ஏசாயா 8:14-ஆம் வசனம் போன்ற பல்வேறு பழைய ஏற்பாடு வசனங்களுக்கு இசைவாகப்

பார்க்கும்போது, சபை கட்டப்படும் மாபெரும் பாறையாகக் கர்த்தர் இருக்கின்றார் என்றும், கிறிஸ்துவாகிய நம்முடைய இரட்சிப்பின் கன்மலை/பாறையாகிய அந்தப் பாறையின் மீது கட்டப்படும் தேவனுடைய மகிமையான ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களில், ஒரு கல்லாக பேதுரு இருக்கின்றார் என்றும் தெரிகின்றது. தான் உள்ளடங்கிக் காணப்படும் ஜீவனுள்ள கற்களுக்கும் மற்றும் மாபெரும் அஸ்திபாரக் கல்லாகிய, பாறையாகிய/கன்மலையாகிய கிறிஸ்து இயேசுவுக்கும் இடையேயுள்ள உறவினைப் பேதுரு குறிப்பிடுகின்றார்; "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1 பேதுரு 2:4, 5).

நம்முடைய கர்த்தருடைய பல உவமைகளில் காட்டப்பட்டதுபோன்று, சுவிசேஷயுக சபையானது, ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் பரலோக இராஜ்யமாக இருக்கின்றது (மத்தேயு 13). மேலும், அதன் சிலாக்கியங்களும், வல்லமைகளும், யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் (அப்போது) திறக்கப்படவிருக்கின்றது. உண்மையில் கர்த்தர்தான் தமது சபைக்கான கதவைத் திறந்து வைத்தார். கர்த்தருடைய நாமத்தில், இவ்வேலையைச் செய்யும்படிக்கு, பேதுரு, தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதியாக மாத்திரமே இருந்தார். அதாவது, பெந்தெகொஸ்தே நாளில் தனது செய்தியின் மூலம் யூதர்களுக்குக் கதவைத் திறந்தவராகவும் (அப்போஸ்தலர் 2:14, 40), மூன்றரை வருடங்களுக்குப் பிற்பாடு, அதே கதவைக் கொர்நேலியு மற்றும் அவருடைய வீட்டாருக்கு, தான் கொடுத்த செய்தியின் மூலம், புறஜாதிகளுக்கும் பேதுரு திறந்து வைத்தார் (அப்போஸ்தலர் 10:33, 46). இந்தக் கனம் பொருந்தின ஊழியமே, அடையாளமான வார்த்தையில், "இராஜ்யத்தின் திறவுகோல்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (மத்தேயு 16:9). ஆனால், ஒருமுறை திறக்கப்பட்ட அந்தக் கதவைப் பேதுருவானாலும் வேறெந்த மனுஷனாலும் சரி, மூட முடியாது. "தாவீதின் திறவுகோல்" தம்மிடம் இருப்பதாகக் கர்த்தர் உரைக்கின்றார் (வெளிப்படுத்தல் 3:7). மேலும், தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையுள்ள சபையின் கடைசி அங்கமானது, மகிமைக்குள் பிரவேசித்து முடிவது வரையிலும், அவருடைய இராஜ்யத்தின் இந்தக் கதவு அடைக்கப்படுவதில்லை. பேதுரு பயன்படுத்தின திறவுகோலானது பரிசுத்த ஆவியினால், பேதுருவின் மனதிற்குத் தெளிவுப்படுத்தப்பட்ட யுகத்திற்கடுத்த சத்தியமாகும்.

பூமியிலும், பரலோகத்திலும் எதையாகிலும் கட்டுவதற்கும், கட்டவிழ்ப்பதற்குமான வல்லமையானது பேதுருவுக்கு மாத்திரமல்லாமல், அனைத்து அப்போஸ்தலர்களுக்குமே அருளப்பட்டக் காரியமாகும். மேலும், சபைக்குச் சத்தியத்தை முன்வைக்கும் விஷயத்தில், தேவன் அப்போஸ்தலர்களுக்கு, பேச

வேண்டிய வார்த்தைகளில் வழிநடத்துதல் கொடுத்ததினால், அனைத்து உண்மையுள்ளவர்களும், அப்போஸ்தலர்களுடைய போதனைகள் மீது நம்பிக்கைக்கொள்ளலாம். அவர்கள் சபையின் மீது எவைகளையெல்லாம் கடமைகள் எனக்காட்டினார்களோ, அவைகள் பரலோகத்திலும் அங்கீகரிக் கப்பட்டது என்றும், அவர்கள் எவைகளையெல்லாம் கட்டவிழ்த்துவிட்டார்களோ, அவைகளில் அவர்கள் தேவனால் வழிநடத்தப்பட்டபடியால், (உதாரணத்திற்கு: மோசேயின் நியாயப்பிரமாண அநுசரிப்புத் தொடர்புடைய விஷயம்) அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டது அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டது என்றும் நாம் அறிகிறோம்.

## ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள்

சபைக்கு ஊழியம் புரியும்படிக்குக் கர்த்தர் எப்படி 12-அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அதிகாரமும், கட்டளையும் கொடுத்தார் என்பவைகளைப் பார்த்த பிற்பாடு, அவர்களுடைய போதனைகள் வெறும் வாய்மொழிச் சொற்களா அல்லது ஏவப்பட்டுக் கூறின போதனைகளா என்று நாம் பார்க்கலாம். பின்வரும் காரியங்களை நாம் கவனிக்கலாம்:-

(1) அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தின் மூலமாக பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தம் முழுச் சபைக்கு வருவதாய் இருந்தாலும், தேற்றரவாளராகிய பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தம் விசேஷமாக அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டதை நாம் கவனிக்கின்றோம் (யோவான் 16:13-15). கடைசி இராப்போஜனத்தின் இரவில், யூதாஸ் வெளியே கடந்துபோன பிற்பாடு இந்தப் பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தமானது, 11-அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்கப்பட்டது (யோவான் 13:31). மேலும், 12-ஆம் அப்போஸ்தலனாக பவுல் நியமிக்கப்பட்டபோது, இந்த வாக்குத்தத்தமானது இவருக்கும் சரிசமமாகப் பொருந்தி நிறைவேறினதாகவும் இருந்தது. "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 14:26; 16:13).

இப்படியாக, அப்போஸ்தலர்களுக்கான ஏவுதல் மூன்று விதமான தன்மைகளைக்கொண்டது என்று நாம் அறிகின்றோம். அவை, (a) தெய்வீகத் திட்டம் மற்றும் நோக்கங்கள் தொடர்பான அனைத்துச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளும்படியான ஒரு வழிநடத்துதல், (b) இவர்கள் கர்த்தரோட காணப்பட்டபோது அவர் கொடுத்த அனைத்துப் போதனைகளை இவர்கள் தங்கள்

ஞாபகத்தில் கொண்டுவந்து, அனைத்தையும் ஒப்புவிக்கும்படியாக இவர்களுடைய ஞாபகங்கள் புது வலுவூட்டப்படுதல் மற்றும் (c) கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மற்றும் பரிசுத்த ஆவி கடந்துவருவது வரையிலும், கர்த்தர் கூறவேண்டியிருந்ததும், புரிந்துகொள்ள முடியாமல் இருந்ததுமான "அநேக காரியங்களாகிய" வரவிருக்கின்ற காரியங்கள் தொடர்பான விசேஷித்த வெளிப்படுத்தல்கள் ஆகும் (யோவான் 16:12).

## அப்போஸ்தலர்களுடைய ஊக்கம்

உண்மையான சாட்சிகளாகவும், சரித்திர ஆசிரியர்களாகவும் நாம் அப்போஸ்தலர்களில் நம்பிக்கை வைத்திருப்பது நல்லது. அவருடைய சாட்சிகளில் நேர்மை என்ற முத்திரைப் பதிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அதில் அவர்கள் செல்வத்தையோ, மனிதர்களின் புகழ்ச்சியையோ நாடாமல் உயிர்த்தெழுந்து, மகிமையடைந்த ஆண்டவருக்காக, அவர்கள் தங்கள் உலகப்பிரகாரமான நலன்களைத் தியாகம்பண்ணும்படியான அவர்களுடைய வைராக்கியத்தைக் காண்கிறோம். இதைக் காட்டிலும் மேலான காரியங்கள் சொல்லப்படாவிட்டால் அவர்களுடைய சாட்சி பிரயோஜனமற்றதாகிவிடும். ஆனால் அவர்கள் ஆண்டவரால் ஏவப்பட்ட பிரதிநிதிகளாக உபயோகப்படுத்தப்பட்டார்கள் என்று வேதம் போதிப்பதை நாம் காண்கிறோம். மேலும் அவர்கள் சபையில் உண்டான பழக்கங்கள், உபதேசங்கள், சாட்சியைக்குறித்ததான காரியங்கள் போன்றவைகளுக்கு ஆண்டவரால் வழிநடத்தப்பட்டார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள் கேள்விப்பட்ட, கண்ட காரியங்களுக்காக மாத்திரம் சாட்சிகளாக இருக்கவில்லை, அதற்குமேலாகப் பரிசுத்த ஆவியின் மூலம் அவர்கள் பெற்ற போதனைகளுக்கும் சாட்சிகளாயிருந்தார்கள். அதினிமித்தம் அவர்கள் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருந்தார்கள். "எந்த மனுஷனும் எங்களை... தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன் என்று எண்ணிக்கொள்ளக்கடவன்" என்று பவுல் சொன்னார் (1 கொரிந்தியர் 4:1). ஆண்டவரும், பன்னிருவரைக்குறித்து "நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்," என்றும் "என் ஆடுகளை மேய்ப்பாயாக," "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்றும் சொல்லும்போது இதே சிந்தையை வெளிப்படுத்தினார். அப்போஸ்தலரும் முற்காலங்களில் மறைக்கப்பட்டிருந்த இரகசியம் (கிறிஸ்துவைக்குறித்துப் புதுச்சிருஷ்டிகளின் உன்னத அழைப்பிற்கான சுவிசேஷத்தின் ஆழமான சத்தியங்கள்) இப்போது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கத்தரிசிகளுக்கும் ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வெளிப்பாட்டின் நோக்கம் இப்படியாகக் கூறப்பட்டுள்ளது: "தேவனுக்குள்ளே ஆதிக்காலங்கள் முதல் மறைக்கப்பட்டிருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் (புதுச்சிருஷ்டியில் பங்குபெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்) இன்னதென்று

எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு" (எபேசியர் 3:3-11). இயேசு கிறிஸ்துவை மூலைக் கல்லாகவும், அப்போஸ்தலர்களையும், தீர்க்கத்தரிசிகளையும் அஸ்திபாரமாகவும் கொண்டு சபை எப்படிக் கட்டப்பட வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறும்போது அப்போஸ்தலர் சொல்லுகிறார்: "இதினிமித்தம், (தேவனுடைய ஆலயமாகிய சபையைக் கட்டுவதற்கு) பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்" (எபேசியர் 2:20, 22; 3:1).

"எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவதற்காக" தேற்றரவாளன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டார். "அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 14:26; 16:13). சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இது முழுச்சபைக்கும் உரியதாகும்; ஆனால் விசேஷமாக அது அப்போஸ்தலருக்கு உரியதாக இருந்தது. உண்மையிலேயே மிஞ்சியிருக்கிற சபைக்கு இப்பொழுதும்கூட அது அப்போஸ்தலர் மூலம் கிரியை செய்கிறது. இன்றைக்கும் அவர்களுடைய வார்த்தை நமக்குப் புதியதும், பழையதுமான காரியங்களைக் கற்றுக்கொடுப்பதற்கு வழிகளாக உள்ளன. இந்த வாக்குத்தத்தத்திற்கு இசைவாக அப்போஸ்தலருக்கான ஏவுதல் மூன்று விதமான குணாதிசயங்களைக் கொண்டது என்று நாம் புரிந்துகொள்ளலாம்.

1. ஞாபகத்திலுள்ளவைகள் புத்துணர்வு பெற்றபடியால் ஆண்டவருடைய தனிப்பட்டப் போதனைகளை மறுபடியும் நினைப்பூட்டி மறுபடியும் சொல்ல வைத்தது.

2. யுகங்களின் தெய்வீகத் திட்டத்தைக்குறித்துச் சத்தியங்களைக் கிரகித்துக்கொள்ளும்படியான ஒரு வழிநடத்துதல்.

3. வரவிருக்கிற காரியங்களைக்குறித்து விசேஷவெளிப்பாடு. ஆண்டவர் இதைக்குறித்து "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்போது தாங்கமாட்டீர்கள்" என்று கூறினார் (யோவான் 16:12).

அப்போஸ்தலர்களுடைய ஞாபகத்தில் உள்ளவைகள் புத்துணர்வு பெற்றன என்பது நம்முடைய ஆண்டவர் சொன்ன அதே சொற்றொடர், அல்லது ஆண்டவருடைய வார்த்தைகள் அவைகள் சொல்லப்பட்ட வரிசையின் பிரகாரம் மறுபடியும் வந்தது என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்போஸ்தல எழுத்துக்களும் இப்படி மறுபடியும் சொல்லப்பட்டதற்கான ஆதாரத்தைக் கொடுக்கவில்லை. ஆண்டவருடைய வாக்குத்தத்தமே எப்படியாயினும், அவர்களுடைய அறிக்கைகளின் உண்மைக்கு உத்திரவாதம் அளிக்கிறது. நான்கு சுவிசேஷங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டவருடைய ஆரம்பகால ஜீவியத்தைக்குறித்தும், ஊழியத்தைக்குறித்தும் உள்ள சரித்திரம் நமக்கு இருக்கிறது. இருந்தபோதிலும் ஒவ்வொன்றிலும் எழுதியவரின் தனித்தன்மை

வெளிப்படுகிறது. ஒவ்வொருவரும் அவர்களுக்கே உரித்தான நடையில் அவர்களுக்கு மிக முக்கியமாகத் தோன்றுகிறவைகளைக் குறிப்பிடுகிறார்கள். மேலும் ஆண்டவருடைய மேற்பார்வையின் கீழ் இந்தப் பலவித குறிப்புகள் மொத்தமாகச் சபையின் விசுவாசத்தை உறுதிப்படுத்தத் தேவையான ஒரு முழுச்சரித்திரத்தையும், தீர்க்கத்தரிசிகளின் மேசியாவாக இயேசுவை அடையாளம் காட்டவும், அவரைக் குறித்ததான தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறுதலைக் காட்டும்படியான, அவரது வாழ்க்கை சரித்திரத்தையும் அவருடைய போதனைகளையும் அளிக்கின்றன. ஏவப்பட்டது வாய் மூலம் வந்திருந்தால் (ஒவ்வொரு வார்த்தை வார்த்தையாகச் சொல்லுதல்) சொல்லப்பட்டவைகளை மறுபடியும் சொற்றொடரில் பல மனிதர்கள் கூறவேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஒவ்வொரு தனி எழுத்தாளரும் அவர் தன்னுடைய தனிப்பட்டத் தெரிவிக்கும் முறையிலுள்ள சுதந்தரத்தை உடையவராயிருந்து, குறிப்பிடும்படியான தகுதியும் மிக முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகளைத் தெரிந்துகொண்ட விதம் பாராட்டுக்குரியது. ஆண்டவர் தமது பரிசுத்த ஆவியின் மூலமாக அவ்வளவு மேற்பார்வையிட்டதால் முக்கியமானதொன்றும் விடப்படவில்லை, தேவையானவைகள் எல்லாம் தவறாமல் குறிக்கப்பட்டுள்ளன. "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" அவைகள் அருளப்பட்டுள்ளன. அப்போஸ்தலர் யோவானுடைய குறிப்புகள் மற்ற மூன்று சுவிசேஷகர்களான மத்தேயு, மாற்கு, லூக்காவுக்கு அனுபந்தங்கள் போன்று இருப்பதைப் பார்ப்பது சுவாரசியமாக இருக்கிறது. அவர் முக்கியமாக மற்றவர்களால் விடப்பட்டச் சூழ்நிலைகளையும் முக்கியம் பெற்ற சம்பவங்களையும் எடுத்துரைக்கிறார்.

ஆண்டவருடைய கூற்றுப்படி, அவர் பரிசுத்த ஆவியின் மூலம் அப்போஸ்தலர்களை வழிநடத்துவார் என்றும், அவர்கள் மூலமாகப் புதுச்சிருஷ்டியை "எல்லாச் சத்தியத்திற்குள்ளும்" வழிநடத்துவார் என்றும், வழிநடத்துதல் என்பது பொதுவானது என்றும், தனிப்பட்ட விதத்தில் எல்லாச் சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவது என்றும் அர்த்தப்படும். இப்படியாக நடைபெறுவதைக் குறிப்புகளில் சொல்லப்பட்டதிலிருந்து காணலாம். பவுலைத் தவிர மற்ற அப்போஸ்தலர்கள் சாதாரண கல்வியறிவில்லாத மனிதர்களாக இருந்தபோதிலும் அவர்கள் வேதத்தைப்பற்றிச் சொன்ன காரியங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. அவர்களால் "ஞானிகளை வெட்கப்படுத்த முடிந்தது." வேத வல்லுநர்களை அன்றும் இன்றும் வெட்கப்படுத்த முடிந்தது. தவறு எவ்வளவு திறமையுள்ளதாய் இருந்தாலும், அதனால் அவர்கள் பிரமாணத்திலிருந்து, தீர்க்கத்தரிசிகளிலிருந்து, ஆண்டவருடைய போதனைகளிலிருந்து எடுத்துச் சொல்லும்போது முன்னால் நிற்கமுடியவில்லை. பிரமாணத்தில் வல்லுனர்களாயிருந்த யூதர்கள் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். நாம் வாசிக்கிறோம், "அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்கள் என்றும் அறிந்து கொண்டார்கள். "அதாவது அவர்கள் அவருடைய உபதேசத்தைக் கற்று அவருடைய

ஆவியைப் பிரதிபலித்தார்கள் (அப்போஸ்தலர் 4:5, 6, 13).

ஆண்டவருடைய வார்த்தைகளையும், பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டவைகளையும் ஆதாரமாகக் கொண்டுள்ள அப்போஸ்தல நிருபங்கள், இப்படியான நியாயமான வாக்குவாதங்களை உடையனவாக இருக்கின்றன. இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஆண்டவர் தம்முடைய ஜனங்கள் மூலமாக நமக்கு முன்பாக வைத்திருக்கிற வாக்கைப் பின்பற்றுவதன் மூலம் அதே ஆவியில் பங்குபெற்றவர்கள் எல்லாரும் உண்மையான தீர்மானங்களுக்குள் வழிநடத்தப்படுகிறார்கள். ஆகவே நம்முடைய விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் இருக்கிறது (1 கொரிந்தியர் 2:4, 5). இருந்தபோதிலும், இந்தப் போதனைகளிலும் அவர்கள் சரித்திரப் பிரகாரமாகக் கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்தும் ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லப்பட்டதற்கு நமக்கு ஆதாரம் கிடையாது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத்தரிசிகள் செய்ததுபோல, இயந்திரம் செயல்படுவது போன்று பேசி, எழுதும்படி ஆண்டவரால் சொல்லப்பட்டவைகள் என்பதற்கும் நமக்கு ஆதாரம் கிடையாது (2 பேதுரு 1:21). இதைக்காட்டிலும் அப்போஸ்தலருடைய மனது பிரகாசிக்கப்பட்டதினால், அவர்களுக்குத் தெளிவான நோக்கம் கிடைத்ததினால் அவர்களால் திவ்விய நோக்கங்களைத் தெளிவாகக் காணவும் அவைகளை அறிந்துகொள்ளவும் உதவியாக இருந்தது. அதனால் அவைகளைத் தெளிவாக எடுத்துரைக்க முடிந்தது. இதன்படி, இக்காலத்திலிருந்து ஆண்டவருடைய ஜனங்கள் எல்லாரும், அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளரும்படியாக உதவி செய்தது. அது மாத்திரமல்ல, "சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறியவும்" உதவிற்று (எபேசியர் 3:18, 19).

இருந்தபோதிலும், அவர்களுடைய மற்றப் போதனைகளும், அவர்களுடைய சரித்திரபிரகாரமான கூற்றுகளும், ஆண்டவரால் அவ்வளவாய் மேற்பார்வையிடப் பட்டதினால் தகுதியற்ற வார்த்தைகள் தவிர்க்கப்பட்டன, மேலும் அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை விசுவாச வீட்டாருக்கு "ஏற்ற காலத்தில் ஆகாரமாயிருக்கும் படியாக" அமையக்கூடிய விதத்தில் சத்தியம் முன்பாக வைக்கப்பட்டது என்ற நம்பிக்கை வைப்பதில் நாங்கள் முழுமையாக நியாயப்படுத்தப்பட்டுள்ளோம். அப்போஸ்தலர்கள் திவ்விய மேற்பார்வைக்குட்பட்டிருப்பார்கள் என்பதை ஆண்டவருடைய வார்த்தை முன்கூட்டியே பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறது: "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" (மத்தேயு 18:18). இது ஆண்டவர் தம்முடைய உரிமையை விட்டுவிடுவார் என்பதையோ, அப்போஸ்தலர்கள் சொல்லுவதற்கெல்லாம் கீழ்ப்படிவார் என்பதையோ

குறிக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்வோம். ஆனால் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, சபையில் அவர்கள் எடுக்கும் தீர்மானங்களில் எந்தக் காரியங்கள் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும், எந்தக் காரியங்கள் விருப்பத்தின்படி செய்யப்படலாம் என்பதைக் குறித்ததான தீர்மானங்கள் சரியானவைகளாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஆகவே மொத்தத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முடிவெல்லாம் இறுதியாக ஆண்டவருடையதும், அப்போஸ்தலருடையதும் ஆகும் என்று சபையானது அறிந்துகொள்ளும்.

## அப்போஸ்தலர்களின் உறுதி

மேற்கூறியவைகளிலிருந்து அப்போஸ்தலர்கள் எவ்வளவாக பரிசுத்த ஆவியின் மூலமாக ஆண்டவரால் வழிநடத்தப்பட்டார்கள் என்றும், அவர்கள் வெளியரங்கமாய்ப் பேசினவைகளெல்லாம், சபை கண்டித்து உணர்த்தும்படியாக திவ்விய ஏவுதலினால் வந்தவை என்றும், கடந்த காலங்களில் தீர்க்கத்தரிசிகள் கூறியவைகள் உண்மையில் (பிழையற்ற தன்மையில்) குறைவுபடவில்லை என்றும் நாம் நம்புவது நியாயமானதே என்று உணருகிறோம். ஆனால் அவர்களுடைய சாட்சியைப் பொறுத்தவரை உண்மையானவைகள் என்றும், அவர்கள் சபைக்குக் கூறியவைகள் எல்லாம் திவ்விய ஒப்புதலைப் பெற்றிருந்தவைகளாக இருந்தன என்றும் நாம் நிச்சயத்திருந்தாலும், அப்போஸ்தலர் தங்களுடைய போதனைகளில் பிழை செய்யவில்லை என்ற கருத்துக்குப் பொதுவாக எதிர்மாறாக புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வித்தியாசமான சூழ்நிலைகளை நாம் கவனமாக ஆராய்ந்து பார்ப்பது நல்லது. நாம் அவைகளைத் தனித்தனியாக ஆராய்ந்து பார்ப்போம்.

(1) நம்முடைய ஆண்டவரை அவருடைய சிலுவை மரணத்துக்கு முன்பாக மறுதலித்தது. இங்கே பேதுரு ஒரு பெரிய தவற்றைச் செய்தார் என்பதை மறுக்க முடியாது, இதைக்குறித்து உண்மையாகவே மனம் வருந்தினார். ஆனாலும் இந்த மறுதலிப்பு அவர் அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்பட்டப் பின்னர் ஏற்பட்டது என்றபோதிலும், அவர் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு முன்பதாக ஏற்பட்டதாகும். மொத்தத்தில் அவர் அப்போஸ்தலராக திவ்விய நியமனம் பெறுவதற்கு முன்பதாக ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மேலும், அப்போஸ்தலர்கள் பிழை செய்யாதவர் என்று நாம் கூறுவது, அவர்கள் வெளிப்படையாகக் கூறிய அவர்களுடைய போதனைகளுக்கும், அவர்கள் எழுதியவைகளுக்கும் உரித்தனதாகும், ஆனால் இவைகள் அவர்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் சின்னஞ்சிறிய காரியங்களைக் குறிப்பிடுவதாக இல்லை. ஏனெனில் இவைகள் சந்தேகத்துக் கிடமில்லாமல் மண்பாண்டங்களாக இருந்தபோது ஏற்பட்ட கறைகள் மாத்திரமல்ல, ஆதாமின் பெரிய வீழ்ச்சியால் எல்லாப் பிள்ளைகளுமே பாதிக்கப்பட்டது போல

அவர்களுக்கும் நடந்தது. "இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டத்தில் பெற்றிருக்கிறோம்" என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகள், அவரையும் மற்ற அப்போஸ்தலர்களையும் குறிப்பது தெரிகிறது; மாத்திரமல்ல பரிசுத்த ஆவியைப் பெற்ற சபை அங்கத்தினர் அனைவரையும் குறிக்கிறது. நம்முடைய பங்கானது, நம்முடைய ஆண்டவரின் பெரிய மீட்பு வேளையில், புதுச்சிருஷ்டியாயிருக்கிற நம்முடைய வாஞ்சைகளுக்கு எதிராயிருக்கிற மாம்சத்தின் கறைகளை மூடுகிறது.

ஆண்டவருக்கும், சபைக்கும் ஊழியஞ்செய்யும்படியான அப்போஸ்தல உத்தியோகம், மாம்சத்தின் பெலவீனங்களிலிருந்து தனித்து இருக்கிறது; அவர்கள் மனுஷீக பிரகாரம் பூரணமானவர்கள் என்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படாமல், அவர்கள் ஆமோதித்தப்படியே, நம்மைப்போல "பாடுள்ள மனுஷர்களாக" இருந்தபடியால் அளிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 14:15). அவர்களுடைய உத்தியோகம் அவர்களை முன்னிலைக்குக்கொண்டுவரவில்லை, அவர்களுடைய அழிந்துபோகிற சரீரங்களுக்கும் பூரணத்தைக் கொண்டுவரவில்லை; ஆனால் புதிய மனதையும், இவைகளை வழி நடத்தும்படியாக பரிசுத்த ஆவியையும் கொண்டுவந்தது. அது அவர்களுடைய சிந்தைகளையும், செயல்களையும் பூரணமாக்கவில்லை. ஆனால் அதற்குமேலாக பன்னிருவரின் போதனைகள் ஆண்டவருடைய வார்த்தைகளைப் பிழையற்றவைகளாக இருக்கும்படியாகப் பார்த்துக் கொண்டது. போப்பாண்டவர்களுக்கும் இம்மாதிரியான பிழையற்றத் தன்மை உண்டென்று உரிமைப் பாராட்டப்படுகிறது. போப்பாண்டவர் தனது பதவிக்கு அப்பால் அல்லது உத்தியோகப் பூர்வமாகப் பேசும் போது அது தேவனுக்கு மேற்பட்டது என்றும் அவர் பிழை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார் என்றும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. "ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்" என்ற வேத போதனையை மறுதலித்து ஒதுக்கிவிட்டு, போப்பும் அப்போஸ்தலர் என்று உரிமைப் பாராட்டி, தவறு செய்யாதவர் என்று சொல்லப்படுகிறது.

(2) ஒருமுறை பேதுருவும் மாயம்பண்ணினார், இருபக்கமும் பேசுவது என்ற குற்றம் புரிந்தார் (கலாத்தியர் 2:11-14). இது அப்போஸ்தலர்கள் தங்கள் நடத்தையில் பிழையற்றவர்களாக இருக்கவில்லை என்பதற்கு ஓர் ஆதாரம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. இதை அப்போஸ்தலர்களும் ஒத்துக்கொண்டார்கள் என்று நாம் நினைக்கிறோம் (அப்போஸ்தலர் 14:15). ஆனாலும் மறுபடியும் சொல்லுகிறோம், அவர்கள் அப்போஸ்தலர்களாகப் பயன்படுவதற்கோ அல்லது அவர்களுடைய வேலையைத் தடைசெய்யவோ இந்த மாம்ச பலவீனங்கள் அனுமதிக்கும்படியாக விடப்படவில்லை, அவர்கள் "பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை" பிரசங்கித்தார்கள் (1 பேதுரு 1:12; கலாத்தியர் 1:11, 12). அதை அவர்கள் மனுஷீக ஞானத்தினால் பிரசங்கியாமல், தேவ ஞானத்தினால் பிரசங்கித்தார்கள் (1 கொரிந்தியர்; 2:5-16). பேதுருவின் இந்தப் பிழையைத் தேவன்

அப்போஸ்தலராகிய பவுல் மூலம் உடனடியாகச் சரிசெய்தார். பவுல் அன்புடன், ஆனால் உறுதியுடன், பேதுருவின்மேல் குற்றம் சுமத்தினதினால் முகமுகமாய் எதிர்த்தார். பேதுருவும் இதை நல்மனதுடன் ஏற்றுக்கொண்டார். அவர் யூதருக்குப் பட்சமாய்க் காணப்பட்ட அவருடைய பலவீனத்தை அவர் நல்ல முறையில் மேற்கொண்டார் என்று அவருடைய இரண்டு நிருபங்கள் மூலமாக வெகுத் தெளிவாகத் தெரிகிறது. எப்படியெனில் இந்த நிருபங்களில் இந்த விஷயத்தைக்குறித்து மனதளவில் எந்தத் தடுமாற்றமும் இல்லை என்பதோடு, ஆண்டவரோடு ஒத்துப்போவதிலும், அறிக்கை செய்வதிலும் எந்தக் குறையும் தென்படவில்லை.

(3) அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய வருகை வெகு சீக்கிரத்தில், ஒருவேளை அவர்களுடைய ஜீவிய நாட்களிலேயே இருக்கும் என்று எதிர்ப்பார்த்தார்கள் என்றும், இவ்விஷயத்தில் அவர்கள் உபதேச கோணத்தில் பார்க்கும்போது பிழை செய்தார்கள் என்றும், ஆகவே அவர்களுடைய உபதேசங்கள் நம்பப்படத்தக்கவைகள் அல்லவென்றும் கூறப்படுகிறது. ஆண்டவர் தனது இரண்டாம் வருகையைக் குறித்தும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்தும் நிச்சயமற்ற நிலையில் அவர்களை விட்டதை ஆண்டவர் அறிவித்தார் என்று நாம் பதில் கூறுகிறோம். பொதுவாக உலகம் இந்த விஷயத்தைக்குறித்து இருக்கிற வண்ணமாக, இருளில் இராமல் இது எப்போது நடக்கும் என்று அறியும்படியாக அவர்கள் கவனித்துப்பார்க்க வேண்டும் என்றுதான் ஆண்டவர் கூறினார். ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்னர் இந்த விஷயத்தைக்குறித்து அவர்கள் கேட்டபோது, "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என்ற பதில் வந்தது. ஆகவே, ஒருகாலம் வரும்வரை இது ஒரு திவ்ய இரகசியமாக இருக்கும் என்று ஆண்டவர் அறிவித்ததற்கு அப்போஸ்தலர்களைக் குற்றப்படுத்தலாமா? நிச்சயமாக இல்லை. இருந்தபோதிலும், "வரவிருக்கிற காரியங்களை" குறித்து ஆவியின் வழிநடத்துதலின்படி அப்போஸ்தலர்கள் இரண்டாம் வருகையைக் குறித்து அறிவிப்பதில் மிகவும் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருந்தார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள், அதைத் தங்களுடைய ஜீவிய காலத்திலேயே எதிர்ப்பார்த்தார்கள் என்பதற்கு எதிர்மாறாக அவர்களுடைய வார்த்தைகள் இருந்தது என்று காண்கிறோம்.

உதாரணமாக பேதுரு, தான் மரித்தப்பின்பு அவருடைய சாட்சியங்கள் சபையோடுகூட இருக்கும் என்ற எண்ணத்துடன் தன்னுடைய நிருபங்களை எழுதினார் என்று தெளிவாகக் கூறுகிறார். இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரை அவர் ஜீவிக்கும்படி எதிர்ப்பார்க்கவில்லை என்பதற்கு இது ஒரு தெளிவான உதாரணமாய் இருக்கிறது (2 பேதுரு 1:15). அப்போஸ்தலனாகிய பவுல், "காலம் குறுகியதாயிருக்கிறது" என்று அறிவிக்கும்போது எவ்வளவு குறுகியதாயிருக்கிறது

என்று கூறுவதைப்போல பாவனை செய்யவில்லை. உண்மையாகவே ஏழாயிரம் வருட நாட்கள் என்ற ஒரு வார கணக்கைப் பார்க்கும்போது - அதில் ஏழாவது பாகம் இராஜ்யத்தைக் கொண்டுவரும் - ஏற்கெனவே ஆறில் நான்கு பங்கான காத்திருப்புக் காலம் கடந்துவிட்டது. இதேமுறையில்தான் பூலோகக் காரியங்கள் சம்பந்தப்பட்டவைகளைப் பற்றிப் பேசினோம். வியாழக்கிழமையன்று வாரம் சீக்கிரமாக முடிந்துவிடும் என்று கூறுகிறோம். பவுலும்கூட அவர் மரிக்கப்போவதைக் குறித்தும், அவருடைய ஜீவியத்தைப் பலிக்கொடுக்க ஆயத்தமாய் இருப்பதைக்குறித்தும், அப்படிச்செய்ய அவர் விரும்புவதைக் குறித்தும் சொன்னார். ஆண்டவருடைய நாள் இரவிலே திருடனைப்போல் வரும் என்று பவுல் சுட்டிக்காட்டினார். இந்த விஷயத்தைக் குறித்த சில தவறான எண்ணங்களைச் சரிப்படுத்தும்படியாக அவர் "ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாக தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாய் இருப்பதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள்" என்று கூறினார். "மேலும் எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது" என்பது போன்றவைகளைக் கூறினார். மேலும் "நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு இப்பொழுது அவனைத் தடைசெய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே" என்றும் சொன்னார்.

(4) "இதோ நீங்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் ஒரு பிரயோஜனமும் இராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலாத்தியர் 5:2) என்று பவுல் சொன்னதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. அது தீமோத்தேயு விருத்தசேதனம்பண்ணுவதற்கு வழி வகுத்தது (அப்போஸ்தலர் 16:3). ஆகவே, அவர் தவறாக போதிக்கவில்லையா, அவருடைய சொந்த சாட்சியை மறுப்பதுபோல் இல்லையா என்று நாம் கேட்கப்படுகிறோம். நாங்கள் அப்படியில்லை என்று பதில் கூறுகிறோம்; தீமோத்தேயு ஒரு யூதன், அவனுடைய தாயார் யூத பெண்ணாக இருந்தபடியாலும் (அப்போஸ்தலர் 16:1) யூதர்கள் மத்தியில் விருத்தசேதனம் தேசிய அளவிலான சடங்காச்சாரமாக இருந்தபடியினாலும், இது மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முன்னரே ஆரம்பித்திருந்தபடியாலும், கிறிஸ்து தன் சிலுவையின்மேல் ஆணியடித்து நியாயப்பிரமாணத்திற்கு (உடன்படிக்கைக்கு) முற்றுப்புள்ளி வைத்த பின்னரும் அது வழக்கத்தில் இருந்தது. சீனாய் மலையில் இஸ்ரயேல் தேசத்திற்கென நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 வருடங்களுக்கு முன்னரே விருத்தசேதனம் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுக்கப்பட்டது. பேதுரு விருத்தசேதனம்

உள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படியானார் (அதாவது - யூதர்களுக்கு) பவுல் விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கு (அதாவது புறஜாதியாருக்கு) அப்போஸ்தலனாக்கப்பட்டார் (கலாத்தியர் 2:7, 8).

கலாத்தியர் 5:2-இல் உள்ள அவரது வாக்கு யூதர்களுக்கு அல்ல, அவர் புறஜாதியினருக்குக் கூறினார். ஏனெனில் அவர் விருத்தசேதனத்தைப் பற்றி நினைத்ததற்கு உண்டான ஒரே காரணமே, சில கள்ள போதகர்கள் அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டும், அதோடுகூடக் கிறிஸ்துவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் குழப்பி, அவர்கள் கிருபையின் உடன்படிக்கையை அலட்சியப்படுத்தும் படியாக வழி நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விருத்தசேதனம்பண்ணப்படுவது (இப்படி எந்தக் காரணத்தினாலும்) கிருபையின் உடன்படிக்கையை மறுப்பதாகும், ஆகவே அது கிறிஸ்துவின் முழுக்கிரியையுமே மறுப்பதாகும் என்று அப்போஸ்தலர் இங்கே காட்டுகிறார். யூதர்கள் தங்கள் தேசிய முறைமைகளின்படியான விருத்தசேதனத்திற்கு மறுப்புத் தெரிவிக்கக் காரணம் காணவில்லை. இது 1 கொரிந்தியர் 7:18,19-இல் உள்ள அவருடைய வார்த்தைகளிலிருந்தும், தீமோத்தேயுவோடு அவர் தொடர்பு கொண்டதிலிருந்தும் தெரிகிறது. தீமோத்தேயுவோ அல்லது வேறு எந்த யூதனோ விருத்தசேதனம் பண்ணப்படுதல் அவசியம் என்றபடியல்ல, ஆனால் அது முறைமைக்கு மாறானதல்ல, மேலும் ஓரளவுக்கு யூதர்கள் மத்தியிலே அவர் செல்ல வேண்டியிருந்தபடியால், அது அவருக்கு நன்மையாயிருந்தது. யூதர்களின் நம்பிக்கையை அவர் பெற்றார். ஆனால் இதைத் தவறாகப் புரிந்துகொண்ட சிலர் முழுவதும் கிரேக்கனாயிருந்த தீத்துவையும் விருத்தசேதனத்திற்கு வழிநடத்த வேண்டும் என்றபோது பவுல் இந்த விஷயத்தில் முழு எதிர்ப்பைத் தெரிவித்தார் என்று காண்கிறோம் (கலாத்தியர் 2:3-5).

(5) அப்போஸ்தலர் 21:20-26-இல் சொல்லப்பட்டப்பிரகாரமாக பவுல் செய்தது, சத்தியத்தைக் குறித்து அவர் போதித்ததற்கு மாறாகப் பிரதிபலிப்பதுபோல் எடுத்துக்கொள்ளப்படுகிறது; அது உபதேசங்களையும், முறைமைகளையும் குறித்த விஷயங்களில் அவருடைய தவறு எனச் சுட்டிக்காட்டுகிறது என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது; மாத்திரமல்ல, இந்த இடத்தில் இழைத்த தவறினால் பவுல் கைதியாக அதிகமாக உபத்திரவம் அனுபவிக்க அனுமதிக்கப்பட்டார் என்றும், கடைசியில் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளிலிருந்து இப்படியான கருத்தைக்கொள்ள முடியாது. குறிப்புகள் காட்டுகிறபடி இந்த அனுபவத்தின்போது பவுலுக்கு மற்ற அப்போஸ்தலர்களுடைய அனுதாபமும், ஆதரவும் இருந்தது. ஆனால் இதற்கும் மேலாக, ஆண்டவருடைய சலுகை தொடர்ந்து இருந்தது. அவர் மற்ற அப்போஸ்தலர்கள் சொன்னபடி நடந்தார். அவர் எருசலேமுக்குச் செல்வதற்கு முன்னால் தீர்க்கத்தரிசனமாக உரைக்கப்பட்டது (அப்போஸ்தலர் 21:10-14)

என்னவெனில் கட்டுகளும், சிறைவாசமும் அவரை எதிர்நோக்கியிருப்பது என்பதாகும். அவர் தன்னுடைய ஊழியத்தினிமித்தம் கீழ்ப்படிதலோடு முன்கூட்டியே சொல்லப்பட்டதுன்பங்களைத் தைரியமாக நோக்கினார். இந்தத் துன்பத்தின் நடுவிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று "பவுலே திடன்கொள், நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல உரோமாபுரியிலும் சாட்சிக்கொடுக்க வேண்டும்" என்றார். பின்னர் நாம், ஆண்டவர் மறுபடியும் பவுலுக்குச் சிலாக்கியமாக இப்படியாகக் கூறினார் என்று வாசிக்கிறோம். "என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவர் என்னிடத்தில் வந்து நின்று பவுலே, பயப்படாதே நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ உன்னுடனேகூட யாத்திரைப்பண்ணுகின்ற யாவரையும் தேவன் உனக்கு தயவுபண்ணினார்" (அப்போஸ்தலர் 23:11; 27:23, 24).

இந்த விஷயங்களிலிருந்தும், பவுலின் ஒரே மாதிரியான துணிச்சலான நல்நடத்தையிலிருந்தும், ஊழியத்தையும் சாட்சியையும் பெரிதாக எண்ணியதிலிருந்தும், தேவன் ஆட்சேபிக்காமல் ஆதரித்தார் என்று பார்க்கும்போது நாம் இதை நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் 21:21-27 வசனங்களை நாம் தியானிக்கும்போது, பவுல் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட யூதர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் பண்ணக்கூடாது என்று அவர் போதியாமல் இருந்தது மாத்திரமல்ல, மோசேயின் நியாயப்பிரமாணத்தை மறுக்கவுமில்லை, ஆனால் அதற்கு மாறாக அவ்வளவு பலவந்தமாக உன்னதமான உண்மைகளை நிழலாட்டமாய்க் காட்டின மோசேயின் நியாயப்பிரமாணம் சுட்டிக்காட்டுவதைக் காட்டி அதைக் கனப்படுத்தினார் என்பதை நாம் காண்கிறோம். ஆகவே, மோசேக்கு மறுப்புத் தெரிவிக்காமல், அதற்குப் பதிலாக நியாயப்பிரமாணம் நலமானதாயும் பரிசுத்தமுள்ளதுமாயிருக்கிறது என்று கூறி மோசேயைக் கனப்படுத்தினார். மேலும் அதனால் பாவத்தின் கொடிய தன்மையைக் குறித்ததான அறிவு அதிகரித்துள்ளது, நியாயப்பிரமாணம் அவ்வளவு உன்னதமானதாக இருந்தபடியால் பூரணமில்லாத எந்த மனிதனும் அதற்குக் கீழ்ப்படிய முடியாது என்று சுட்டிக்காட்டியதோடு கிறிஸ்து அதைக் கடைப்பிடித்ததால் அதனால் வரும் பலன்களைப் பெற்றார் என்றும், இப்பொழுது கிருபையின் உடன்படிக்கையின் கீழாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முடியாதவர்களுக்கு நித்திய வாழ்க்கையையும், ஆசீர்வாதங்களையும் இலவசமாகத் தருகின்றார் என்றும், ஆனால் விசுவாசத்தினால் அவருடைய பூரணமான கீழ்ப்படிதலையும், பலியையும் அவர்களுடைய பூரணமற்ற நிலையை மூடுவதாக ஏற்றுக்கொண்டவர்கள், நீதியின் பாதையில் அவரைப் பின்பற்றுகிறவர்கள் ஆனார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

யூத யுகத்தின் சடங்காச்சாரங்களாகிய, உபவாசங்கள், மாதப்பிறப்பு, ஓய்வு நாட்கள், பண்டிகைகளைக் கொண்டாடுவது போன்றவைகள் சுவிசேஷயுக

ஆவிக்குரிய காரியங்களுக்கு நிழலாக இருந்தன. அப்போஸ்தலர் தெளிவாகக் காட்டுகிறது என்னவெனில் புது உடன்படிக்கையின் சுவிசேஷம் இவைகளை கட்டளையிடவோ, தடைசெய்யவோ இல்லை. (ஆண்டவருடைய இராப்போஜனமும், முழுக்கு ஞானஸ்நானமும் மாத்திரமே நமக்கு அடையாளமாயிருக்கும்படி கட்டளையிடப்பட்டது, அவைகள் புதியவைகளாகும்) (கொலோசெயர் 2:16, 17; லூக்கா 22:19; மத்தேயு 28:19).

நாம் இப்பொழுது பார்க்கின்ற யூதர்களுடைய அடையாளமான சடங்காச்சாரங்களில் ஒன்றான "சுத்திகரிப்பு" என்பது பவுலாலும் நான்கு யூதர்களாலும் கடைபிடிக்கப்பட்டது. யூதர்களாக இருந்தபடியால், அவர்கள் தெரிந்துகொண்டால் அவர்களை கிறிஸ்துவுக்குள் தேவனுக்குத் தங்களை அர்ப்பணம் செய்யும் உரிமை மாத்திரம் அல்லாது இந்த அடையாளமாய் இருக்கிற சுத்திகரிப்பையும் செய்ய அவர்களுக்கு உரிமை இருந்தது. இதைத்தான் அவர்கள் செய்தார்கள். பவுலோடு இருந்த மனிதர்கள் ஆண்டவருக்கும், ஜனங்களுக்கும் முன்பாக, தங்கள் தலைகளைச் சவரம்பண்ணிக்கொள்வதன் மூலம் அதிகமாக தாழ்த்தும்படி ஒரு பொருத்தனைச் செய்து கொண்டார்கள். இந்த அடையாளமான சடங்காச்சாரங்களுக்கு பணச்செலவு உண்டு. இதற்கான செலவு ஒருவேளை தேவாலயத்தின் செலவுகளைச் சந்திக்கும்படியாக ஒவ்வொருவருக்கும் என ஏற்படுத்தப்பட்ட காணிக்கைப் பணமாகும்.

அப்போஸ்தலராகிய பவுல் ஒருபோதும் யூதர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள் என்று கற்றுக்கொடுக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவன் ஜீவிக்கும் காலம்வரை அவன்மேல் அதற்கு ஆதிக்கம் உண்டு என்று கற்றுக்கொடுத்தார். இருந்தபோதிலும் ஒரு யூதன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரோடு மரிப்பானாகில், இப்படிப்பட்ட யூதன்மேலுள்ள நியாயப்பிரமாண உடன்படிக்கையின் உரிமை முற்றுபெறும். மேலும் அவனை கிறிஸ்துவுக்குள் தேவனுடைய விடுதலையாக்கப்பட்ட மனிதனாக ஆக்கிற்று (உரோமர் 7:1-4). ஆனாலும் மனமாற்றமடைந்த புறஜாதியினருக்கு, அவர் அவர்கள் ஒருபோதும் யூத நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்ததில்லையாதலால், யூத நியாயப்பிரமாண சடங்காச்சாரங்களையும், பண்டிகைகளையும் கைக்கொள்ள முயற்சி செய்வார்கள் என்றால் அது அவர்கள், தங்களுடைய இரட்சிப்புக்கு அந்த அடையாளங்கள்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றும் கிறிஸ்துவின் பலியினால் வரும் புண்ணியத்தின்மேல் முழுமையாகச் சார்ந்திருக்கவில்லை என்று பொருள்படும் என்றும் அவர் கற்றுக்கொடுத்தார். இதற்கு அப்போஸ்தலர்கள் இசைவு தெரிவித்தார்கள் (அப்போஸ்தலர் 21:25; 15:20, 23-29-யைப்பார்க்கவும்).

நாங்கள் முடிவாகக் கூறுவது என்னவெனில், பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் தேவன் ஆச்சரியமாக உபயோகப்படுத்தினார். அவர்களை

அவர் அவருடைய சத்தியத்திற்காக மிகவும் திறமையுள்ள ஊழியக்காரர்களாக்கி அவர்கள் எழுதிய விஷயங்களில் அவர்களை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வழிநடத்தினார். ஆகவே, தேவனுடைய மனிதனை தேறியவனாக்கும் எந்த ஒரு காரியமும் விடப்படவில்லை. அவர்களுடைய ஆதிக்கால எழுத்துக்களில் அப்போஸ்தலர்களோடுகூடப் புரிந்துகொள்ள முடியாதளவுக்கு ஒரு கரிசனையும், ஞானமும் இருந்தன. நம்முடைய விசுவாசத்தின் நிச்சயமான இந்த அஸ்திபாரத்திற்காகத் தேவனை ஸ்தோத்திரிப்போம்.

---

R5587 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சபையின் ஏற்படுத்துதல் (ORDINATION)

## மத்தேயு 28:16-20; லூக்கா 24:36-49

*"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்." (மத்தேயு 28:20)*

இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலைப் பின்தொடரும் நாற்பது நாட்களளவும் கொடுத்திட்ட செய்திகள் மூலம், தம்முடைய சபையிடம் அவர் பணியை ஒப்படைப்பதுப் பற்றியே நம்முடைய இப்பாடம் அமைகின்றது. முதலாவதாக எருசலேமுக்கு அருகாமையிலான எம்மாவு என்னும் கிராமத்திற்குச் சீஷர்களில் இருவர் போய்க் கொண்டிருக்கும்போது, அந்தச் சாயங்கால வேளையில் ஆண்டவரினால் கொடுக்கப் பெற்ற வார்த்தைகளை நாம் பெற்றிருக்கின்றோம். அடுத்ததாக இயேசு தம்முடைய சீஷர்களை விட்டுப்பிரிந்து, எடுத்துக் கொள்ளப்படுவதற்குச் சற்று முன்னதாக இயேசுவினால் கூறப்பட்ட பணியின் காரியங்களையும் நாம் பெற்றிருக்கின்றோம்.

### இதோ உங்களுடனேகூட இருக்கிறேன்

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்திட்ட ஆசியும், தம்முடைய நற்செய்தியைத் தெரிவிப்பதற்கான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்ததும் பற்றியதான பரிசுத்தவானாகிய மத்தேயு அவர்களின் பதிவானது, நம்மை வெகுவாய் ஈர்க்கின்றது. கர்த்தர் சந்திப்பேன் என்று கூறியப் பிரகாரமாகவே, பதினொரு பேரும் அவரைக் கலிலேயாவிலுள்ள மலை ஒன்றில் சந்தித்தார்கள். அவர் கொஞ்சம் நேரந்தான் அவர்களுக்குக் காட்சியளித்துத் தோன்றினார்.

அவர்கள் அவரைப் பணிந்துகொண்டனர், சிலர் முழுமையாய் நம்பிக்கொண்டனர், சிலர் தடுமாற்றத்திலேயே காணப்பட்டனர். இப்படியாக தடுமாற்றத்தில் இருப்பவர்களை நம்ப செய்வதற்கே, இயேசு நாற்பது நாட்கள் பூமியில் காணப்பட்டார். பதினொரு பேரையும் நம்ப வைக்கும் தமது வேலையை, கர்த்தர் முழுமையாய் நிறைவேற்றினார் என்பதில் நமக்கு உறுதியே; ஏனெனில், அவர்கள் மேல்வீட்டறையில், பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்களுக்காகக் காத்திருக்கும்போது, ஒரே இருதயமும், ஒரே மனமும் கொண்டவர்களாய்க் காணப்பட்டார்கள் என்று பார்க்கின்றோம்.

இயேசு அவர்கள் அருகாமையில் வந்து, பூமிக்குரிய காரியங்கள் மற்றும் பரலோகத்திற்குரிய காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தமக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இவ்விஷயத்தை அவர்கள் உணர்ந்துகொள்ளாதது வரையிலும், அவர்களால் சரியான விதத்தில், உலகத்திற்கு முன்னதாக அவரை அடையாளங்காட்ட முடியாது. இந்த ஓர் அதிகாரத்தையும், வல்லமையையும் அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் காலத்தில் கொண்டிருக்கவில்லை. அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தினுடைய காலப் பகுதியில், மரணம் வரையிலுமான, அதாவது சிலுவையின் மரணம் பரியந்தமுமான தம்முடைய உண்மையுடன்கூடிய நேர்மைக்கான பரீட்சையின் கீழ்க் காணப்பட்டார். ஆனால் அவர் தம்முடைய நேர்மையை நிரூபித்துக் காட்டின பிற்பாடு, பிதா அவரை மரணத்திலிருந்து மகிமையான பூரண வல்லமைக்கான நிலைமைக்கு எழுப்பினார். இப்படியாக அவர் மரணத்திலிருந்ததான தம்முடைய உயிர்த்தெழுதல் வாயிலாக, வல்லமையுள்ள தேவனுடைய குமாரனாக அழைக்கப்பெற்றார். தாம் இனி ஒருபோதும் மனிதனுக்கான எல்லைகளின் கீழ் அல்லது மரண உடன்படிக்கையினுடைய எல்லைகளின் கீழ்க்காணப்படுவதில்லை என்பதை கர்த்தர் தம் சீஷர்கள் அறிய வேண்டுமென விரும்பிட்டார். அந்த வேலையைக் கர்த்தர் நிறைவேற்றிவிட்டார். அவர் ஆசீர்வாதத்திற்குள், பலனுக்குள் இப்பொழுது பிரவேசித்திட்டார். அவர் சுபாவ மாற்றத்தை அடைந்துவிட்டார் மற்றும் இப்பொழுது அவர் பூமிக்குரிய காரியங்களில் மாத்திரமல்லாமல் பரம காரியங்களிலும் அனைத்து வல்லமையையும் பெற்றுள்ளார்.

வானோர் மற்றும் பூதலத்தார் அனைவரும் அவருக்கு முன்பாக வணங்கிடுவார்கள் என்பதாகத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்க்கத்தரிசனமானது நிறைவேற ஆரம்பிக்கும் நிலைக்கு அவர் வந்திருக்கின்றார். அவர் பரத்திற்கு ஏறிச்சென்றார்; அங்குத் தேவதூதர்கள் அனைவரும் அவரைப் பணிந்துகொண்டு, அவர் பிதாவினால் உயர்த்தப்பட்டவரென

அவருக்குச் செவிக்கொடுக்கின்றனர். தீர்க்கத்தரிசனத்தின்/வாக்குத்தத்தத்தின் ஒரு பாகம் இன்னமும் நிறைவேறவில்லை. அதாவது, பூலோகத்தார் யாவரும் அவர் முன் வணங்கிட வேண்டுமென்ற பாகம் இன்னமும் நிறைவேறவில்லை. இப்படியாகச் சம்பவிப்பதற்கான காலம், ஆயிர வருடங்கள் கொண்ட அவருடைய மேசியாவின் இராஜ்யத்திலேயே ஆகும். ஆனால் தற்காலத்தில் இயேசு, தேவனுடைய குமாரன் என்ற அறிவிற்குள்ளாக வருபவர்கள் அனைவரும், அவர் பிதாவின் பிரதிநிதி என்ற விதத்தில், தங்கள் முழங்கால்களை அவருக்கு முன்பாக மகிழ்ச்சியுடன் முடக்குகின்றனர். இப்படியாகவே உலகமும் அவரை ஒரே பேறான குமாரன் என்று அடையாளம் கண்டுகொண்டு, அவருக்குக் கீழ்ப்படிவார்கள்.

இறுதியில் எல்லா முழங்கால்களும் முடங்கும், எல்லா நாவுகளும் அறிக்கைப் பண்ணும்; தெய்வீக ஏற்பாட்டின்படி, தேவனுடைய மகிமைப்படுத்தப்பட்ட குமாரனை ஏற்றுக்கொள்ள தவறுபவர்கள் அனைவரும் அழிக்கப்படுவார்கள்; அதாவது, தேவன் கிறிஸ்து மூலமாய் விழுந்துபோன சந்ததிக்கு வடிவமைத்திட்ட ஆசீர்வாதங்களையும், தேவக் கிருபைகளையும், இன்னமும் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரர்களாகக் கருதப்படுவார்கள்.

## ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் உபதேசம்பண்ணுங்கள்

இங்குதான் உருவாகின்றது, ஊழிய பொறுப்பு ஒப்படைக்கப்படும் காரியம். முதலாவது இந்தப் பணி பதினொரு அப்போஸ்தலர்களுக்கு உரியதாய் இருந்தது; பின்னர், இதனுள் யூதாசுக்குப் பதிலாக வந்த பரிசுத்தவானாகிய பவுலும் இடம் பெறுகின்றார். "மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்" என்று பவுல் குறிப்பிடுகின்றார் (2 கொரிந்தியர் 11:5). அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்குமான வாய்க்கருவிகளாக, உலகத்திற்குக் காணப்படுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு வாரிசாக, அப்போஸ்தல கண்காணிகள் காணப்படுகின்றார்கள் எனச் சொல்லப்படுவது அனைத்தும் தவறான காரியமாகவும், வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததுமாக இருக்கின்றது. அப்போஸ்தலர்களுக்குப் பின்வரும் அப்போஸ்தலர்கள் என்று எவரும் இல்லை; அப்போஸ்தலர்கள் இன்னமும் நம்முடன் காணப்படுகின்றனர்; இவர்கள் மூலமான ஆண்டவருடைய செய்தியானது, நமக்குப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப்

படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது” (2 தீமோத்தேயு 3:16, 17). அப்போஸ்தலர்களிடமே சபையை ஆரம்பித்து வைப்பதற்கான மாபெரும் வேலை ஒப்படைக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளன்று வல்லமையினைப் பெற்றுக்கொண்டார்கள்.

இயேசு 12-அப்போஸ்தலர்களைச் சபைக்கான வாய்க்கருவிகளாக/ பிரதிநிதிகளாக விசேஷமாய் நியமித்தது, அவர்கள் பூமியிலே எதைக் கட்டுகிறார்களோ, அது பரலோகத்திலும் கட்டப்படும் என்றும், அவர்கள் பூமியிலே எதை அவிழ்க்கின்றார்களோ, அது பரலோகத்திலும் அவிழ்க்கப்படும் என்றும் தெரிவித்திருந்தாலும், சபையினுடைய ஒவ்வொரு அங்கமும் தம்முடைய பிரதிநிதியாக இருக்கத்தக்கதாகவும், அவரவருடைய வாய்ப்பு மற்றும் திறமைக்குத்தக்கதாக சுவிசேஷச்செய்தியை அறிவிக்கும் வேலையில் பங்கடையத்தக்கதாகவும் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகத்தையும், ஜெநிப்பித்தலையும் அடைந்தவர்கள், ஏசாயா 61:1-3-ஆகிய வசனங்களின்படி, அபிஷேகிக்கப்பட்ட தலையாகிய இயேசுவின் கீழ், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

“கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார் இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டவும் . . . அவர் என்னை அனுப்பினார்” (ஏசாயா 61:1-3). பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டுள்ள அனைவரும் இப்படியாக அவன் (அ) அவளுடைய வாய்ப்பு (அ) வரம்பு (அ) சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிரசங்கிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளனர். சகோதரிகள் பொதுவிடங்களில் போதிக்கக்கூடாது என்பது அப்போஸ்தலர் கொடுத்திட்ட ஒரு கட்டுப்பாடாகும் (1 தீமோத்தேயு 2:12). எனினும் அனைவருக்கும், அநேகமான வாய்ப்புகள் உள்ளது.

ஆனால் கிறிஸ்தவ மண்டலத்தின் குருமார் வகுப்பார் (clergy class), அதாவது தாங்கள் மாத்திரமே தேவனுடைய செய்தியைப் போதிப்பதற்கு (அ) பிரசங்கிப்பதற்கு அதிகாரம் உடையவர்கள் என்று தங்களைக் குறித்துக் கூறிக் கொள்பவர்களாகிய குருமார்கள், மாபெரும் தவறை செய்துள்ளனர். இயேசுவும் சரி, அப்போஸ்தலர்களும் சரி, குருமார் வகுப்பாரை (clergy) (அ) கிறிஸ்தவ பொதுமக்கள் வகுப்பாரை (laity) தங்கள் மத்தியில் கொண்டிருக்கவில்லை. மாறாக நமது கர்த்தர், “நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். . . கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்” என்றே கூறியுள்ளார் (மத்தேயு 23:8, 10). ஆண்டவரும், அவரது பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் ஆண்டவருடைய சீஷர்கள் மத்தியில் குறிப்பிட்ட வகுப்பாரை, மாபெரியவர்கள் போல் நாடுவதையும் மற்றும் குருமார் வகுப்பார் போன்ற காரியத்தையும் தடை பண்ணுகிறவர்களாகவே காணப்பட்டனர்.

# எக்ளீஷியா

இந்தக் கிரேக்க வார்த்தையானது, சபை என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இதன் அர்த்தம் ஒரு கூட்டத்தார், சபை அல்லது சேர்ந்து ஒன்றாய்க் காணப்படும் ஜனங்கள், குழு ஆகும்.

இன்று சபை என்று உரிமை பாராட்டிக்காணப்படும் அநேகம் அமைப்புகள் காணப்படுகின்றன மற்றும் இவைகள் வெவ்வேறு ஐக்கியத்தின் கட்டினைப் பெற்றிருக்கின்றன; ஆனால் தேவனுடைய வசனத்தினுடைய ஆதாரத்துடன், எந்த எக்ளீஷியாவை, சரீரத்தை அல்லது சபையை இயேசு ஸ்தாபித்தார் என்றும் மற்றும் அதன் ஐக்கியத்தின் கட்டுகள் என்னவாயிருக்கின்றது என்றும் நாம் அறிய விரும்புகின்றோம்; இரண்டாவதாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் அச்சபைக்குரியவனாகிட வேண்டும் என்பதை நாம் வெளிப்படுத்த விரும்புகின்றோம்; மூன்றாவதாக தவறான எக்ளீஷியா அல்லது சபையில் இணைந்துகொள்வதினால் ஏற்படும் பாதகமான விளைவுகள்; மற்றும் நான்காவதாக, சரியான சபையில் இணைந்துகொண்ட பிற்பாடு, நமது அங்கத்துவத்தினை இழப்பதினால் உண்டாகும் விளைவுகளை நாம் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

முதலாவதாக, இயேசு தம்முடைய ஊழியத்தின்போது சேர்த்துக்கொள்ள துவக்கினதும் மற்றும் அவர்களுக்கான ஈடுபலி கொடுக்கப்பட்ட பிற்பாடு, பெந்தெகொஸ்தேயின் போது, பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டதுமான சபையானது, பூமிக்குரிய நேரத்தையும், தாலந்துகளையும், ஜீவியத்தையும் தேவனுக்கு ஒரு பலியாக அர்ப்பணித்துக்கொண்ட சீஷர்கள் அடங்கின ஒரு சிறு கூட்டத்தாராக இருந்தனர். இவர்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டு, ஒரு சமுகத்தின் அங்கத்தினர்களென ஒன்றிணைந்து கட்டப்பட்டிருந்தனர் மற்றும் இவர்கள் பிரமாணங்களையும், நடைமுறைகளையும்/நிர்வகிப்புகளையும் பெற்றிருந்தனர் மற்றும் ஒரு தலையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆளும் அதிகாரத்தினைப் பெற்றிருந்தனர். கட்டுகளானது, அன்பு மற்றும் பொதுநலனின் கட்டுகளாகக் காணப்பட்டது. அனைவரும் அதிபதியாகிய இயேசுவின் கீழ்ச் சேர்க்கப்பட்டிருந்தபடியால், ஒருவருடைய நம்பிக்கைகள் மற்றும் அச்சங்கள், சந்தோஷங்கள் மற்றும் துக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் போன்றே, மற்றவர்களுடையதும் காணப்படுகின்றது; மற்றும் இதனால் இவர்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எந்த ஒரு விசுவாச பிரமாணத்தினுடைய அடிப்படையிலான ஒன்றிணைதலினால் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதைக்காட்டிலும், மிகப் பூரணமான இருதயத்தினுடைய ஒன்றிணைதலைப் பெற்றிருந்தனர். இப்படியாக இவர்களது அமைப்பானது, ஆவியினாலானதாய் இருந்தது; ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்தி ஆளும் அவர்களுக்கான பிரமாணமாய், அன்பானது காணப்பட்டது மற்றும் அனைவருமே, அவர்களது கர்த்தருடைய ஜீவியத்திலும், கிரியைகளிலும் மற்றும் வார்த்தைகளிலும்

வெளிப்பட்டதான "ஆவியின் பிரமாணத்தின் கீழ்" கீழ்ப்படியப் பண்ணப்பட்டிருந்தனர். "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று சொன்னவருடைய சித்தமே அவர்களை நிர்வகித்ததாய் இருந்தது.

இப்படியாக ஆதிசபை இயேசுவினுடைய தலைமைத்துவத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, பூரண ஒருமையிலும் மற்றும் இணக்கத்திலும் காணப்பட்டதை நாம் பார்க்கின்றோம். இந்தச் சபை அமைப்பை, இதைப்போன்று பின்பற்றிவருவதாக இப்பொழுது பாசாங்குப்பண்ணிக் கொண்டிருக்கும், அதாவது பல்வேறு சபைபிரிவு அமைப்புடன் ஒப்பிட்டு வித்தியாசம் அறியுங்கள்; இந்த அமைப்புகள் ஒவ்வொன்றும் அதன் அங்கத்தினர்களை ஏதோ ஒரு விசுவாசப்பிரமாணம் அல்லது அதன் (இன்பகரமாய் உள்ள அநேகவற்றை உள்ளடக்கியுள்ள) சொந்த கொள்கைகளின் தொகுப்பேட்டின் அடிப்படையில் மன ஒற்றுமைக்குள் பிணைத்துவிடுகின்றது மற்றும் இவை ஒவ்வொன்றும் அதன் சொந்த பிரமாணங்களைப் பெற்றிருக்கின்றன.

இந்தப் பிரமாணங்களானது, இவர்களது தலையானவர்களிடமிருந்து மற்றும் அதிகாரிகள் அல்லது நியாயப்பிரமாணிக்கன்களிடமிருந்து தோன்றினவைகளாகும்; ஆகையால் இந்தத் தற்காலத்திலுள்ள சபைகளானது, தங்களது விசுவாசப்பிரமாணங்களை ஆதிகாலத்தில் நிறுவினவர்களை - தங்களுக்கான ஆளும் அதிகாரிகளாக அல்லது தலைகளாகப் பெற்றிருக்கின்றனர் மற்றும் அடையாளம் கண்டுகொள்கின்றனர் என்பது தெளிவாய்த் தெரிகின்றது; பல்வேறு விசுவாசப்பிரமாணங்களை நிறுவினவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்டிருப்பினும், இவர்களது குருமார்கள்/ஊழியக்காரர்கள் கலந்தாய்வு கூட்டங்களிலும், மேலவைகளிலும், குருமார் பேரவைகளிலும், மூப்பர் சங்கங்களிலும் தேவவசனத்தை அவமாக்கிடும் "முன்னோர்களின் பாரம்பரியங்களை" பலவகையாக விளக்கி அமுல்படுத்துகின்றனர். இவைகள் சபையினுடைய மெய்யான தலையாகிய - இயேசுவின் இடத்தையும், மெய்யாய்ப் போதித்து, சகல சத்தியத்திற்குள்ளாய் வழிநடத்தும் பரிசுத்த ஆவியின் இடத்தையும் எடுத்துக்கொள்கின்றது. இதைக் குறித்துத் தீர்க்கத்தரிசியாகிய ஏசாயா கூறுவதைக் கேளுங்கள். "மூப்பனும் கனம்பொருந்தினவனுமே தலை, பொய்ப்போதகம்பண்ணுகிற தீர்க்கத்தரிசியே வால்" (ஏசாயா 9:15). முழுப்பெயர்ச்சபை அமைப்புமே, வெளிப்படுத்தின விசேஷத்தில் "பாபிலோன்" - குழப்பம் - போப்மார்க்கம் தாய் மற்றும் புராட்டஸ்டண்ட் மகள்கள் என்று சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதை இவர்கள் ஒத்துக்கொள்வார்களா? இல்லை; ஏனெனில் இன்றுள்ள வெதுவெதுப்பான பெயர்ச்சபையானவள், தான் நிர்ப்பாக்கியமுள்ளவளாகவும், பரிதபிக்கப்படத்தக்கவளாகவும், தரித்திரமானவளாகவும், குருடானவளாகவும்,

நிர்வாணியானவளாகவும் இருக்கிறதை அறியாமல், தன்னை ஐசுவரியமானவள் என்றும், திரவியசம்பன்னவள் என்றும், தனக்கு ஒரு குறைவுமில்லை என்றும் நம்புகின்றாள் (வெளிப்படுத்தல் 3:17).

இது "கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?" ஆனால் இது நம்முடைய உபதேசமல்ல; இது "கவனித்திருப்பதற்கு நலமாயிருக்கின்றதான அதிக உறுதியான தீர்க்கதரிசனத்தின்" எச்சரிப்புச் சத்தமாய் இருக்கின்றது. அன்பான தொனியில், நமது ஆண்டவர் மறுபடியுமாக, "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்" என்று கூறுகின்றார்.

கிறிஸ்துவின் உண்மை சபையானது, இரண்டு விதங்களில் கருதப்படலாம்: அதாவது ஆதிசபையார் போன்று நமது பிதாவினுடைய சித்தத்தைச் செய்வதற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களும், அவருடைய சித்தத்திற்கும் மற்றும் அவரது நிர்வகிப்பிற்கும் மாத்திரம் இணங்குபவர்களும், வேறு யாரையும் அங்கீகரியாமலும், யாருக்கும் கீழ்ப்படியாமலும் காணப்படுகின்றதான யாவரும் - சுவிசேஷயுகத்தினுடைய துவக்கம் முதல் அதன் முடிவு வரையுள்ள இந்தப் பரிசுத்தவான்கள், இந்த வகுப்பாரிலுள்ள யாவரும் முத்திரிக்கப்படும்போது, பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாகிய "முதற்பேறானவர்களின் சபையாக" காணப்படுவார்கள். இவர்கள் அனைவரும் குறிக்கோளிலும், நம்பிக்கையிலும் மற்றும் பாடுகளிலும் ஒன்றாயிருப்பார்கள் மற்றும் ஏற்றகாலத்தில் மாபெரும் சுதந்தரத்தில் இயேசு கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்தரர்களாக - தேவனை அன்பு கூருகின்றவர்களுக்கு அவர் வாக்களித்துள்ளதான இராஜ்யத்தில் சுதந்தரர்களாகிடுவார்கள்.

இதே வகுப்பார் அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றதான மற்றொரு விதமானது - ஒரு பகுதியினரை, முழுச்சபையாக கருதுவதாகும்; இப்படியாக இந்த வகுப்பாரில் ஜீவித்துக் கொண்டிருப்பவர்கள் யாவரும் சபையெனக் கூறப்படலாம்; அல்லது இவ்வகுப்பாரிலுள்ள ஜீவனுள்ள அங்கத்தினர்களின் ஏதேனும் பாகம், ஒன்று கூடிடும்போது, சபை என்று அழைக்கப்படலாம்; ஏனெனில் இயேசுவின் வார்த்தைகள் மூலமாக, எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் கூடுகிறார்களோ, அவர்கள் நடுவில் அவர் காணப்படுவதாக நாம் அறிந்துகொள்கின்றோம்; ஆகையால் அது சபை கூடுகையாய் இருக்கும் - "முதற்பேறானவர்களுடைய சபை" கூட்டமாய் இருக்கும். சபை முழுவதும் தங்கள் தலையாகிய இயேசுவுக்கு ஒப்பானவர்களாக்கப்பட்டு, அவரோடுகூட மகிமைப்படுத்தப்படும்போதுதான் இவர்களின் சர்வசங்கம் காணப்படும்.

இதுவே கிறிஸ்துவின் சபைக்கான நம்முடைய விளக்கமாகும்; இது பவுல் அடிகளார் சபையை, மனித சரீரத்தோடு ஒப்பிடுகையில் மிகச் சிறப்பாய் விவரிக்கப்பட்டுள்ளது (உரோமர் 12:4, 5). இந்த உருவகத்தில், இயேசு தலையினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் மற்றும் அவருடையவர்கள் யாவரும்,

தலையினால் எதன்மேல் மற்றும் எதன் வாயிலாக ஆளுகை செலுத்தப்படுகின்றதோ அந்தச் சரீரத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இயேசு தம்முடைய ஒட்டுமொத்த சபையின் மீது தலையாக இருந்துள்ளார் மற்றும் எப்போதும் இருப்பார்; இதுபோலவே அவர் ஒட்டுமொத்த ஜீவனுள்ள சபையின் தலையாகவும், அதிகாரியாகவும் இருக்கின்றார் மற்றும் அவருடைய நாமத்தில் இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிடும் ஒவ்வொரு கூடுகையிலும், அவர் தலையாக, அதிகாரியாக மற்றும் போதகராக இருக்கின்றார்.

அவர் எந்தவிதத்தில் போதிக்கின்றார்? என்று கேட்கப்படலாம். தலை அல்லது போதகருடைய தன்மைகளைச் செயல்படுத்துவதன் மூலம், அங்குக் காணப்படும் ஒருவரையோ அல்லது அநேகரையோ சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கும், விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்கும், நம்பிக்கையை ஊக்குவிப்பதற்கும், வைராக்கியத்தினை ஊக்குவிப்பதற்கும் தம்முடைய வாய்க்கருவிகளெனப் பயன்படுத்துவதன் மூலம் ஆகும். அதாவது ஓர் அவயம், இன்னொன்றிற்கு ஊழியம்புரிவதற்கென உங்களது சரீரத்தினுடைய தலையானது அழைக்க முடிகிறது போலாகும் என்று நாம் பதிலளிக்கின்றோம். ஆனாலும் எச்சரிப்பின் ஒரு வார்த்தை என்னவெனில்: ஒருவர் வலதுகரமெனப் பயனுள்ள பாத்திரமாகுகின்றாரெனில், அவர் தலையாகிடுவதற்கு விரும்பிடாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். பெருமிதம் கொள்ளாதீர்கள், பெருமையானது நம்மை செயலற்றுப் போகச் செய்து, நம்மைப் பயனற்றவர்களாக்கிடும். "நீங்களோ ரபீ (போதகர்) என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் (தலையாயிருக்கிறார்) போதகராய் இருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்." சிறிய அங்கத்தினன்கூடத் தனது பணியினை அசட்டையாய் எண்ணாதிருப்பானாக; ஏனெனில், "அவையெல்லாம் ஒரே அவயமாயிருந்தால், சரீரம் எங்கே?" "சரீர அவயவங்களில் பலவீனமுள்ள வைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது" - "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18, 19; மத்தேயு 23:8).

அமைப்பு/organization தொடர்பான தேவனுடைய திட்டமானது எத்துணை எளிமையாயும், அருமையாயும் மற்றும் விரும்பிய பலனைக் கொடுக்கிறதாயும் உள்ளது!

இப்பொழுது நம்முடைய இரண்டாம் ஆய்விற்கு வரலாம்: அதாவது அனைத்துக் கிறிஸ்தவர்களும், இந்த அமைப்புடன் இணைந்துகொள்ள வேண்டும். இயேசுவினால் ஒழுங்குப்படுத்தப்பட்ட சபையாய் இருக்கும் வகுப்பினரைக் குறித்து இதுவரையிலும் சொல்லப்பட்டிருப்பவைகளின் வெளிச்சத்தில், ஒருவேளை நீங்கள் உங்கள் சித்தம், தாலந்து, நேரம் முதலானவைகளை ஒப்புக்கொடுத்துள்ளீர் களானால், நீங்கள் இயேசுவினால் பின்னடியாராக, எக்ளீஷியாவின் அல்லது அவர்

தலையாய் இருக்கும் சரீரத்தின் அங்கமாக, பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ளவர்களாக அடையாளம் கண்டுகொள்ளப்படுவீர்கள் என்பது உறுதியே. இப்படியாக நாம் இயேசுவின் சபையில் இணைந்துகொண்டு, அர்ப்பணிப்பின் வாயிலாக அங்கத்தினர்களென நம்முடைய பெயர்களானது பதிவு பண்ணப்படுகின்றது. ஆனால் பூமியிலுள்ள ஏதோ ஓர் அமைப்புடன் நான் இணைந்துகொண்டு, ஏதோ ஒரு விசுவாசப்பிரமாணத்திற்கு ஒப்புதல் அளித்து மற்றும் பூமியில் என் பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டாமோ? என்று உங்களில் யாரேனும் கேட்கலாம்? இல்லை; இயேசுதான் உங்கள் முன்மாதிரி மற்றும் போதகர் என்றும், இன்னுமாக தேவ வசனத்தை அவமாக்கிப்போடுகின்றதும், கிருபையிலும், அறிவிலும் நீங்கள் வளர்வதைத் தடைப்பண்ணுகிறதாகிய அடிமைத்தனத்திற்குள்ளாக்கும் முன்னோர்களின் பாரம்பரியங்கள் மற்றும் விசுவாசப்பிரமாணங்களுடன் உங்களை இணைத்துக்கொள்ளும்படிக்கான எந்த ஓர் அதிகாரத்தினையும் அவரது வார்த்தைகளிலோ, கிரியைகளிலோ உங்களால் கண்டுபிடிக்க முடியாது என்றும், இன்னுமாக இவைகளுக்கு எதிராகவே "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலாத்தியர் 5:1) என்று பவுல் அடிகளார் கூறி உங்களை எச்சரிக்கின்றார் என்றும் நினைவில் கொள்ளுங்கள்.

ஆனால் சிலர் பின்வருமாறு சொல்லிடலாம்: இந்தத் தற்கால பெயர்ச்சபைகள் எவற்றுடனும் இணைந்துகொள்வது சரியற்றது என்றால், நாமாகவே கண்களுக்குப் புலப்படுகிற ஓர் அமைப்பினை உருவாக்கிடுவது சரியாய் இருக்குமா? ஆம், அதைத்தான் நாம் பெற்றிருக்கின்றோம் - ஆதிசபை போன்று பின்பற்றி ஓர் organization/அமைப்பினைப் பெற்றிருக்கின்றோம். அந்த ஆதி எளிமைக்கு நாம் வந்துள்ளதாக எண்ணுகின்றோம். கர்த்தர் இயேசு மாத்திரமே நம்முடைய தலையாக அல்லது நியாயப்பிரமாணிக்கனாக இருக்கின்றார்; பரிசுத்த ஆவியானது நமக்கு விளக்கம் அளித்து, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துகின்றது; நம்முடைய பேர்கள் அனைத்தும் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன; நாம் அன்பினாலும், பொது நலனினாலும் ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்றோம்.

ஒருவரையொருவர் அறிந்துகொள்வது எப்படி - என்று கேட்கின்றீர்களா? நமது போதகரின் ஆவியானது, வார்த்தையிலும், கிரியையிலும் மற்றும் நடத்தையிலும் மற்றும் பார்வையிலும் வெளிப்படுகையில், நாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளலாமல்லவா என்பது நம்முடைய பதிலாய் இருக்கின்றது. ஆம், ஜீவனுள்ள விசுவாசம், மாயமற்ற அன்பு, நீடியபொறுமையுடன்கூடிய சாந்தம், குழந்தைகளிடத்தில் இருப்பது போன்ற எளிமை, இதனோடுகூட உறுதியும், முதிர்ச்சியின் வைராக்கியமும், தேவனுடைய குமாரர்களை வெளிப்படுத்துகின்றது

மற்றும் பூமியில் பதிவுபண்ண வேண்டியதின் அவசியம் நமக்கில்லை; காரணம் இவர்களின் பெயர்கள் அனைத்தும், ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

வியாதியஸ்தர்கள் சந்திக்கப்பட வேண்டுமா அல்லது உதவி பண்ணப்பட வேண்டுமா? இவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட நேரத்துடன் ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர். கர்த்தருடைய ஊழியத்திற்குப் பணம் அவசியமாயுள்ளதா? இவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட பணவளத்துடன் ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர். அவரது ஊழியமானது, உலகத்தாரிடமிருந்தும், சீர்க்கெட்டுப்போன பெயர்ச் சபையிடமிருந்தும் நிந்தனைகள் கொண்டுவருகின்றதா? இவர்களும் நற்பெயரை - அனைத்தையும் - தேவனுக்காக அனைத்தையும் பலிசெலுத்தியுள்ளனர்.

ஆனால் நம் மத்தியில் ஒழுங்கற்று நடப்பவர்களை நாம் எப்படிக் கையாளுவது என்றும், நம்மைச் சுற்றிக்காணப்படுகின்றது போன்ற எந்த அமைப்பையும் நாம் பெற்றிருக்கவில்லையெனில், நாம் செய்திடும்படி கர்த்தர் எதிர்ப்பார்ப்பவைகளைச் செய்து, இத்தகையவர்களிடமிருந்து நம்மை எப்படி விடுவித்துக்கொள்ளலாம் என்றும் கேட்கின்றீர்களா? இயேசுவும், பவுலும் கட்டளையிட்டதைச் செய்திடுங்கள் என்று நாம் பதிலளிக்கின்றோம்.

ஆதிசபையில் காணப்பட்டதுபோலவே, இப்பொழுதும் தனிப்பட்ட அங்கத்தினர்கள் மத்தியில் வளர்ச்சி பல்வேறு அளவுகளில் காணப்படுகின்றது. திடனற்றவர்களாய்ச் சிலர் இருப்பார்கள், அவர்களைத் தேற்றுங்கள் என்றும், பலவீனராய்ச் சிலர் காணப்படுவார்கள், அவர்களைத் தாங்குங்கள் என்றும், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய்/பொறுமையாய் இருக்கும் அதேவேளையில் ஒழுங்கில்லாதவர்களுக்குப் (கிறிஸ்துவின் உண்மையான ஆவியினின்று விலகிப் போகிறவர்களுக்கு) புத்திசொல்லுங்கள் என்றும் பவுல் அடிகளார் கூறுகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:14). ஒழுங்கில்லாதவர்களைப் பலவீனர் என்று தவறுதலாய் எடுத்துக்கொண்டு அவர்களைத் தாங்கிவிடாதீர்கள் மற்றும் ஒழுங்கில்லாதவர்களைத் திடனற்றவர்கள் என்று தவறுதலாய் எடுத்துக்கொண்டு அவர்களைத் தேற்றாதீர்கள். அவர் யாரை ஒழுங்கில்லாதவர்களென்று கூறுகின்றார்? சந்தேகத்திற்கிடமின்றி ஒழுங்கில்லாமல் நடப்பதற்கு அநேகம் வழிகள் காணப்படுகின்றன; 2 தெசலோனிக்கேயர் 3:11-ஆம் வசனத்தில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் இருக்கின்றார்கள் என்றும், இவர்கள் யாராலும் குற்றஞ்சாட்டப்படாதவர்களாகக் காணப்படத்தக்கதாக, தன்னைப்போல் வேலை செய்திட வேண்டும் என்றும், வேலை செய்யவில்லையெனில், சாப்பிடவும் கூடாது என்றும் கூறுகின்றார். மற்றவர்களுக்கு முன்மாதிரியாகக் காணப்படத்தக்கதாக, இப்படியாக அவர் கூறவும், இதைச் செய்யவும் செய்தார். அவர் நல்லொழுக்கமற்ற மற்றும் அநீதியான நபர்களைக் குறித்தும் மற்றும் வேதவாக்கியங்களைப் புரட்டி, இப்படியாய்த் தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாய்க் காண்பிக்கின்றவர்கள்

குறித்தும் நம்மை எச்சரிக்கின்றார். மறுபடியுமாக 14-ஆம் வசனத்தில் அப்படியானவனுக்குப் புத்திமதி கூறின பிற்பாடும், அவன் "கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப்புத்திசொல்லுங்கள்" என்று கூறுகின்றார் (2தெசலோனிக்கேயர் 3:14,15).

இன்னுமாக இரண்டு சகோதரர்களுக்கு இடையில் மனஸ்தாபம் காணப்படுகிற காரியத்திற்கு, இயேசு தெளிவான கட்டளைகளைக் கொடுக்கின்றார் (மத்தேயு 18:15, 17). "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் (ஒன்றுகூடிடும் சகோதரர் கூட்டத்தாருக்கு) தெரியப்படுத்து; அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக." நமது தலையானவருடைய ஒழுங்கின் கீழ், நாம் அவரை அன்புகூரும் காரணத்தினால், அவரது கட்டளைகளுக்குச் செவிக்கொடுப்போமானால், சகோதரர்கள் மத்தியில் பிரச்சனைகளும் மற்றும் மனஸ்தாபங்களும் எத்தனை சொற்பமாய்க் காணப்படும்.

இந்த ஒழுங்கு முறைமையானது, கர்த்தரினால் நியமிக்கப்பட்ட மற்றும் வழிநடத்தப்படுகின்றதான சுவிசேஷகர்களை, மேய்ப்பர்களை மற்றும் போதகர்களைப் பெற்றிருக்கின்றது. இவர்களுக்கு "அப்போஸ்தல வாரிசுகள்" என்று அழைக்கப்படுபவர்களினால் கைகள் வைக்கப்படுவது அவசியமல்ல; ஏனெனில் "கர்த்தரின் ஆவியானது" "பிரசங்கம்பண்ணுவதற்கெனச்" சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் யாவரையும் அபிஷேகித்துள்ளது (ஏசாயா 61:1) மற்றும் சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனும், சக அங்கத்தினர்களுடைய பக்திவிருத்திக்கெனத் தனது இந்த வேலையினைச் செய்திடுவது கடமையாக இருக்கின்றது. பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ளதும், அன்பினால் கட்டப்பட்டுள்ளதும் மற்றும் ஆவியினால் நடத்தப்படுகிற அங்கத்தினன் உரிமையுமுடைய கிறிஸ்துவினுடைய சபையின் ஒழுங்கு முறையானது, எத்துணை முழுமையானதாய்க் காணப்படுகின்றது மற்றும் பெயர்ச்சபையை மெய்ச்சபை என்று தவறாய்ப் புரிந்துகொண்டது எத்துணை மோசமான தவறாய் இருக்கின்றது!

நம்முடைய நான்காம் ஆய்வுபொருளின் முக்கியத்துவமானது வலியுறுத்தப்படுவதற்கு அவசியமில்லை. கிறிஸ்துவின் சரீரத்தில் அல்லது

மெய்சபையிலுள்ள நம்முடைய அங்கத்துவத்தினை இழப்பது என்பது பயங்கரமான துன்பமாக இருக்கும் என்பது உண்மையே. மரித்ததாக கருதப்படும் பழைய சுபாவமானது மறுபடியும் உயிரடைந்து பெருமையின், சுயநலத்தின், பொறாமையின், தீமைபேசுதலின் உருவம் எடுத்துக் காணப்படுகின்றதா அல்லது இல்லையா என்று விழிப்புடன் கவனம் செலுத்தாவிடில், எந்த அங்கத்தினனும் இந்த அபாயத்திற்கு நீங்கலாய் இருப்பதில்லை. ஆனால் ஒருவேளை (பலிச்செலுத்துவதற்கு ஆயத்தமாயிருக்கும்) அன்பினால் நிரம்பிக் காணப்பட்டு, தாழ்மையினைத் தரித்துக்கொண்டு, மீட்கும் இரத்தத்தினுடைய மூடுதலின் கீழ்க் காணப்படுவோமானால், "நமக்கு இராஜ்யத்தைக் கொடுக்க நம் பிதா பிரியமாயிருக்கிறார்" என்ற நிச்சயத்தினைப் பெற்றிருந்து, சபையில் (சரீரத்தில்) பாதுகாப்பாய் இருப்போம்.

ஆம், இராஜ்யமே, மெய்ச்சபையின் - இப்பொழுது அவமானத்தின் பாதையில் நடந்து, மரணத்தினுடைய கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ணும் சிறுமந்தையினரின் மகிமையான நோக்கமாகக் காணப்படுகின்றது. நம்மில் வெளிப்படப்போவதான மகிமையானது, விசுவாச கண்களுக்குத் தவிர, மற்றப்படி தெரியாது; ஆனாலும் சோதனைகளும், பரீட்சைகளும் எல்லாப் பக்கங்களிலும் மிகவும் பார்க்கக்கூடிய விதத்தில் காணப்படும். "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (எபிரெயர் 4:1).

இப்படியாக பவுல் அடிகளார் மற்றவர்களை எச்சரித்தார் மற்றும் மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற அவர் ஆகாதவராய்ப் போகாதபடிக்கு அச்சம் கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 9:27). பெயர்ச் சபைகளில் இருப்பவர்களால், நம் நாமங்கள் பொல்லாததென்று தள்ளிவிடப்படலாம்; எனினும் "பரலோகத்தில் நம்முடைய நாமங்கள் எழுதப்பட்டிருப்பதினால் நாம் சந்தோஷப்பட்டுக் களிகூருவோமாக." அவர்கள் உங்களிடத்தில் கோபமுகத்தினைக் காண்பித்து, பலவித தீமையான மொழிகளையும், உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்லிடலாம் அல்லது உங்களது செல்வாக்கினை நாங்கள் இழந்திட விரும்பவில்லை, எங்களோடு தரித்திருப்பதினால் நீங்கள் மிகுந்த நன்மையினைச் செய்திடலாம் என்று கூறி முகஸ்துதி செய்து, உங்கள் மனதை மாற்றிட நாடிடலாம். ஓ! இந்தத் "தீங்கு நாளில்"...

"உலகத்தின் பயமூட்டும் கோபப்பார்வையினால் அசைவுறாத,
அதன் முகஸ்துதி புன்முறுவலுக்குக்கவனம் செலுத்திடாத,
உபத்திரவத்தின் கடல்களினால் மூழ்கடிக்க முடிந்திடாத,
சாத்தானின் தந்திரவஞ்சனையால் மூழ்கடிக்க முடிந்திடாத
விசுவாசம் ஆம் விசுவாசம் எத்துணை அவசியமாயுள்ளது."

அருமையான அன்புக்குரியவர்களே, "ஆனபடியினாலே, நீங்கள் - கொஞ்சமேனும் - மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" எனும் எச்சரிப்பை மறுபடியுமாக நாம் திரும்பக்கூறுகின்றோம் (கலாத்தியர் 5:1). வேதவாக்கியங்களினால் அங்கீகரிக்கப்படுகின்றதும் மற்றும் "என் ஜனங்களே அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று வேதவாக்கியங்கள் எதிர்த்துப் பேசுகின்றதான பாபிலோன் அமைப்புகள் யாவற்றிலிருந்தும் முற்றிலும் தனித்துச் சுதந்தரமாய்க் காணப்படுகின்றதுமான ஒரே சபையில் நீங்கள் காணப்படுகின்றீர்களாவென உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

---

R5809 & R5186

# தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம்

*"நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்." (பிரசங்கி 5:1)*

ஞானி சொல்லர்த்தமான பாதங்களையோ அல்லது சொல்லர்த்தமான நடைகளையோ குறித்துப் பேசவில்லை என்பதிலும், மாறாக தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் நாம் ஏற்றுக்கொள்வது போன்று, ஏற்றுக் கொள்ளத்தக்கதாக, ஞானமுள்ள ஆலோசனை சிலவற்றைக் கொடுக்கின்றார் என்பதிலும் ஐயமில்லை. தங்களுடைய அன்றாட ஜீவியத்தில் தாங்கள் ஜாக்கிரதையாய்க் காணப்பட வேண்டும் என்று அவர் கூறுவதாக, அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் புரிந்து கொண்டனர்.

"உன் நடையைக் காத்துக் கொள்." நீ போய்க்கொண்டிருக்கிற இடத்தைக் கவனி. சந்தைக்கோ அல்லது கேளிக்கை இடங்களுக்கோ செல்வது போன்று, நீ தேவாலயத்திற்குச் செல்லாதே. தேவன் தம்முடைய ஜனங்களைச் சந்திக்கிற இடத்திற்குச் செல்வது போன்று அங்குச் செல்வாயாக. மேலும் தொடர்ந்து தேவாலயத்தில் என்ன கேட்கும் என்று ஞானி கற்பனைப்பண்ணுகின்றார். "மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதற்கு" ஆயத்தமாய் இராதே என்று அவர் கூறுகின்றார். இது நகைப்பை, விளையாட்டு தன்மையை, புத்தியீனமான பேச்சை மற்றும் பரியாசத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இந்த வேதவாக்கியமானது, தற்காலத்திலுள்ள தேவஜனங்கள் யாவருடைய இருதயத்திற்குள்ளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாய் இருக்கின்றது. பயபக்தி என்பது மிகவும் தகுதியானதாகும். தேவன் நம்மை நித்தியமான சித்திரவதைக்குள் தள்ளிடுவார் என்ற பயம் நமக்கு இப்போதில்லை. இப்படிப்பட்ட தீமையான நோக்கத்தினை அவர் தம்முடைய சிருஷ்டிகள் யாதொன்றின் மீதாகிலும் கொண்டிருக்கின்றார் என்று ஊகிப்பதைப்பார்க்கிலும், நம்முடைய பரம பிதாவைக் குறித்து நாம் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனாலும் சந்தைக்குப் போவதுபோன்று, நாம் தேவாலயத்திற்குச் செல்லக்கூடாது. தேவனைத் தொழுதுகொள்ளும் எல்லா இடங்களிலும் நல்லொழுக்கம் அவசியமாய் இருக்கின்றது என்ற உண்மையினைக் கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் புரிந்துகொள்வதில்லை.

நிழலான ஆலயத்தில் தேவன் காணப்படாத ஒரு விதத்தில், நாம் தேவனைச் சபையில் பெற்றிருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். சபையின் அங்கத்தினர்கள் எங்கெல்லாம் கூடுகின்றார்களோ, அங்குத் தாம் காணப்படுவதாகக் கர்த்தர் உரைத்துள்ளார். சொல்லர்த்தமான கற்களினாலான ஆலயத்தைப் போலவே, ஜீவனுள்ள கற்களினாலான தேவனுடைய ஆலயமும் முழுக்க பயபக்தியுடன் பார்க்கப்பட வேண்டும்.

நாம் அறையிலோ அல்லது சபையிலோ அல்லது கொட்டகையிலோ கூடினாலும் சரி, தேவனுடைய ஜனங்கள் அங்குக் கூடியுள்ள காரியமானது, அக்கட்டடத்தினைப் பரிசுத்த இடமாக்குகின்றது. ஆகையால் அங்குக் கூடுவதற்கு வரும் எவரும், தன் நடையினைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் வரும்போது, தான் இருக்கும் இடம் யாது என்று உணர்ந்தவராய் இருக்க வேண்டும் மற்றும் கேட்பதற்கு - செவிக்கொடுப்பதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டுமே ஒழிய, ஆரவாரம் பண்ணுவதற்கல்ல. சம்பாஷணைகள் யாவும், ஆவிக்குரிய காரியங்களின் அடிப்படையில், கட்டியெழுப்பும் - பக்திவிருத்தி உண்டுபண்ணும் விதத்தில் காணப்பட வேண்டும். இப்படியாகப் பேசமுடியவில்லையெனில், தேவ செய்தியினைக் கேட்டுவிட்டு, கூடிப்பாடி, கலைந்து செல்வது நலமாயிருக்கும்.

என்ன உரையாடல் காணப்பட்டாலும், அவ்விடத்திற்காக மாத்திரமல்லாமல், அத்தருணத்திற்காகவும் என்றுள்ள பயப்பக்தியுடன் உரையாடப்பட வேண்டும். இங்குமங்குமாக திரும்பிப் பார்த்து, "இந்தச் சகோதரர், அந்தச் சகோதரர், இந்தச் சகோதரி, அந்தச் சகோதரி வருகின்றார்; அவர்கள் பாடுவதை நாங்கள் கேட்கின்றோம்" என்று சொல்லக்கூடாது. இத்தகைய நடத்தை என்பது மிகவும் தகுதியற்றதாகும்.

பயபக்தியைவிடக் கர்த்தருடைய ஜனங்கள் கற்றுக்கொள்வதற்கு அவசியமாய் இருக்கும் வேறு எந்தப் பாடத்தையும் நாம் அறியோம். பயபக்தி இல்லாத எவரையும் கர்த்தர் அழைக்கிறதில்லை மற்றும் அந்தப் பண்பானது, பலமடைய அவர்

விருப்பமுள்ளவராய் இருக்கின்றார். ஆனால் பயம் துரத்தப்படும்போது, பயபக்தி குறைவு ஏற்பட வாய்ப்பாகுகின்றது. இந்த விஷயத்திற்கு - நாம் தேவாலயத்திற்கோ அல்லது திவ்விய ஆராதனை நடைப்பெறும் எந்த ஓர் இடத்திற்கோ செல்லுகையில் - விசேஷித்த கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

## மற்றவர்களுடைய உரிமைகளைக் கருத்தில் கொள்ளுதல்

தேவாலயத்திற்குச் செல்லுகையில் நம்முடைய நடையை நாம் கவனித்துக்கொள்வது மாத்திரமல்லாமல், நாம் நம்மோடு எடுத்துச் செல்பவைகளைக் குறித்தும், நாம் கவனிக்க வேண்டும். நாம் அங்குச் சுத்தமாய்ச் செல்வதற்குக் கவனிக்க வேண்டும்; நம்முடைய வஸ்திரங்களில் பூச்சிகளைக் கொண்டுபோகாதபடிக்குக் கவனிக்க வேண்டும்; நம்மிடமிருந்து கெட்ட வாசனைகள் வராதபடிக்குக் கவனிக்க வேண்டும். சரிவர பயிற்சியளிக்கப்படாத பிள்ளைகளை அங்குக் கூட்டிச் செல்லாதபடிக்கு நாம் கவனிக்க வேண்டும். இப்படிச் செய்வோமானால், மற்றவர்களுக்குத் தொந்தரவாய் இருக்கும் அபாயத்திற்குள்ளாகாதிருப்போம்.

பிள்ளைகளைத் தனியே வீட்டில் விட்டுவரும் வாய்ப்புகள் இருக்கலாம். இப்படிச் செய்ய முடியாவிட்டால், கூடுகைகளுக்கு வரும் விஷயத்தில், பெற்றோர்கள் சுழற்சி முறையில் வருவது நலமாயிருக்கும். பிள்ளைகள் கூடுகைகளில் கலந்துகொள்வது என்பது மற்றவர்களுடைய ஆவிக்குரிய நலன்களுக்குத் தீங்கு விளைவிப்பதாய் இருக்கும் பட்சத்தில், அத்தகைய பிள்ளைகளைக் கூடுகைகளுக்குக் கொண்டுவருவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. வகுப்பிற்குத் தொந்தரவு உண்டுபண்ணாத வயதை அடைவது வரையிலும், அவர்களை வீட்டில் விட்டுவருவதற்கு வழி ஒன்று ஏற்பாடு பண்ணப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுடைய வழக்கங்களுக்குப் பழகிப்போனவர்களாய் இருப்பதினால், குழந்தையினுடைய ஒவ்வொரு சலனங்களினாலும் அநேகமாக மற்றவர்கள் தொந்தரவிற்குள்ளாகுகையில், பெற்றோர்கள் இதனை உணரமுடியாதவர்களாய் இருக்கின்றனர். நம்மால் உண்டாகும் இத்தகைய சோதனைகள் தவிர, மற்றப்படி மற்றவர்களுக்கு அவர்களது பொறுமையினைச் சோதனைக்குள்ளாக்கும் சொந்த சோதனைகளும் காணப்படவே செய்கின்றது.

## காலந்தவறாமை குணலட்சணத்திற்கான ஒரு சான்று

சிலர் தங்களது நடையை மாத்திரமல்லாமல், தங்கள் கைக்கடிகாரத்தினையும் கவனிப்பது அவசியமாய் இருக்கின்றது. கூடுகைக்குக் காலதாமதமாக வருதல் என்பது நீதி மற்றும் அன்பு, இரண்டின் கொள்கைகளுக்கும் முரணானவையாகும். கூடுகையில் கலந்துகொள்பவர்கள் யாவரும், மற்றவர்களுக்கு நீதியாய்க் காணப்படும் வகையில், தாங்கள் சரியான நேரத்திற்கு

வரத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். நியமிக்கப்பட்ட நேரத்திற்குக் கூடுகைக்குத் தாங்கள் தாமதமின்றி வரத்தக்கதாக, தங்கள் அலுவல்களை ஒழுங்குப்படுத்திக்கொள்ள வேண்டும்.

காலந்தவறாமல் காணப்படுவதற்கும் மற்றும் மற்றவர்களுக்குத் தொந்தரவளிக்காமல் இருப்பதற்குமான நம்முடைய பிரயாசங்களானது, கர்த்தரினால் கிறிஸ்தவ குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்கான சான்றுகளாகச் சந்தேகத்திற்கிடமின்றி பார்க்கப்படும் மற்றும் இவைகள் அவரால் அங்கீகரிக்கப்படும் மற்றும் இவைகள் இராஜ்யத்திற்கு நாம் ஆயத்தமாகுவதற்கு உதவுகிறதாக இருக்கும். மற்றவர்களுடைய உரிமைகளின் விஷயத்தில் அலட்சியமாய் இருப்பவன், தான் அன்பின் ஆவியில், கிறிஸ்துவின் ஆவியில் குறைவுப்பட்டிருப்பதை வெளிப்படுத்துபவனாய் இருப்பான். கிறிஸ்துவின் ஆவியில்லாமல், நன்கு வளர்ச்சியடையாமல் இருப்பவன் எவனும், இராஜ்யத்தில் இடம் பெறான்.

ஆகையால் இவ்விஷயங்கள் - அதாவது ஒழுங்கற்ற பிள்ளைகள், கூடுகைகளுக்குத் தாமதமாய் வருதல் முதலானவைகள் - இராஜ்யத்தில் இடம்பெறுவதற்குரிய நம் தகுதி நிலையினைப் பாதிப்பவைகளாய் இருக்கின்றன. இதனிமித்தம் நம்முடைய கிரியைகளின் அடிப்படையில் நாம் நியாயந்தீர்க்கப் படுகின்றோம் அல்லது மற்றவர்களை அவர்களது கிரியைகளின் அடிப்படையில் நியாயந்தீர்ப்பதற்கு நாம் உரிமை பெற்றிருக்கின்றோம் என்ற அர்த்தத்தில் நாம் சொல்லுகின்றோம் என்பதாகாது. "குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று கர்த்தர் கூறியுள்ளார். கர்த்தருடைய சித்தத்தைச் செய்திடுவதற்கான நம்முடைய பிரயாசங்களானது, நம்முடைய இருதயங்களுடைய விருப்பங்களுக்குச் சமமாய் இருக்கின்றது என்பதை நாம் காட்ட வேண்டும். இப்படியாக ஜீவிப்பதற்கான தீர்மானங்களைச் செயல்படுத்துவோமானால், உயிர்த்தெழுதலில் நம்முடைய மறுரூபமடைதலை நாம் அனுபவிக்கும்போது நாம் மகிழ்ச்சியடைபவர்களாய் இருப்போம்.

# நாடிடுவதற்குப் பாத்திரமானவைகள்

சோர்வினாலோ, ஊக்கமின்மையினாலோ வீழ்த்த முடியாத
பொறுமையுடன்கூடிய விடாமுயற்சிதனை அடைய நாடிடு.

தான் செய்கையில் மகிழ்வுறுவது போலவே, பிறன் செய்யும்
மாபெரும் வேலையிலும் அகமகிழும் பட்சபாதமின்மைதனை அடைய நாடிடு.

உன்னை நீ மன்னிப்பதைக் காட்டிலும், உந்தன் சகோதரனை
மன்னிக்கத் துரிதப்படும் ஆவிதனை அடைய நாடிடு.

செய்த தவற்றில் உந்தன் பங்கினை மறைப்பதற்குப் பதிலாக,
தவறைச் சரிசெய்ய முற்படும் நீதிதனை அடைய நாடிடு.

பாதகம் தெரிந்து செய்யப்பட்டதாய்த் தோன்றியப்போதிலும், நல்நோக்கம்
உண்டோவென எப்போதும் தேடித்திரியும் அன்புதனை அடைய நாடிடு.

உந்தன் இடறுதல்களும், தோல்விகளும்கூட உன்னை
மனம் உடையப்பண்ணாத நேர்மை/விசுவாசந்தனை அடைய நாடிடு.

உந்தன் சத்துரு தோல்வியுறுகையில் துயரமடையும் மற்றும்
நீ தாழ்த்தப்படுகையில் அகமகிழும் பணிவுள்ள ஆவிதனை அடைய நாடிடு.

எவ்வேளையில் பேசிடவும், எவ்வேளையில் அமைதி காக்கவும்
அறிந்திருக்கும் ஞானம் உடைய ஆவிதனை அடைய நாடிடு.

போதும் என்பதை அறியாத மற்றும் புகழ்ச்சியை அடைய நாடாத,
பாராட்டுகளை ஏற்றிடாத பக்திவைராக்கிய ஆவிதனை அடைய நாடிடு.

மன்னிப்பை வார்த்தையில் தெரிவித்தும், தவறை மறுபடியும் குறிப்பிடாமல்,
அதன் உண்மைதனை நிரூபிக்கும் மன்னிப்பின் ஆவிதனை வளர்த்திட நாடிடு.

மற்றச் சகோதரனுக்கு ஊழியத்தில் கனமிக்கப் பகுதியினை விட்டுக்கொடுத்து,
அற்பமான, அதிகம் விரும்பிடாத பாகந்தனை தெரிவு செய்யும் தாழ்மைதனை நாடிடு.

சகோதரர் முன்னிலையில் நடப்பது போலவே, நம் இல்லங்களிலும்
ஜீவித்திட ஜாக்கிரதைகொள்ளும் கிறிஸ்தவம்தனை நாடிடு.

- Bro.Benjamin .H. Barton.

## பாகம் - 2

# பிரதான அவசியமாகிய
# தாழ்மை

# சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள்

*“நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.” (1 பேதுரு 3:8; 5:5, 6)*

அப்போஸ்தலர் இங்குச் சபையின் மூப்பர்களிடம், தேவனுடைய மந்தையைப் பராமரிக்கும் விஷயத்தில் அவர்கள் கவனம் செலுத்தும்படிக்குப் புத்திக்கூறி, இப்படிப்பட்ட ஊழியம் புரிவதற்கு எது நெருக்கி ஏவும் செல்வாக்காகக் காணப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். அவருடைய அனுதாபம் அவர்கள் மேல் காணப்படுகின்றது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளத்தக்கதாக தானும் ஒரு மூப்பன் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றார்; பின்னர்ச்செல்வாக்குள்ள எந்த ஸ்தானத்திலும் காணப்படும் விழுந்துபோன மனுக்குலத்தின் சகல அங்கத்தினருக்கும் இயல்பாகக் காணப்படும் ஒரு தன்மைக்கு எதிராக - அதாவது தங்களுடைய ஸ்தானத்தைக் குறித்துத் தவறாய்ப் புரிந்துகொள்வதும் மற்றும் மந்தைக்குத் தங்களை வேலைக்காரர்கள் என்று எண்ணுவதற்குப் பதிலாக, தங்களைத் தேவனுடைய சுதந்தரத்தின் மீது இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக எண்ணிக்கொள்வதுமாகியவைகளுக்கு எதிராக அவர்களை எச்சரிக்கின்றார்.

சகல கிறிஸ்தவ பிரிவுகளிலும், சபையின் ஊழியக்காரர்களை மந்தையிலிருந்து வேறுபட்ட வகுப்பாராக, அதாவது தேவனிடமிருந்து அதிகாரம் பெற்றுக்கொண்ட ஒரு வகுப்பாராக மற்றும் சரீரத்தின் சகல அங்கங்களும் உட்படுத்தப்பட்ட அதே கட்டுப்பாடுகளுக்கு, உட்படாத வகுப்பாராகக் கருதும் நீண்டகாலமாக நிலவி வரும் வழக்கத்தினால், நம்முடைய நாட்களில் இவ்விதத்திற்கு நேரான மனப்பான்மையே அதிக அளவில் காணப்படுகின்றது. ஆனால் இது எவ்வளவு பெரிய தவறு! ஊழியக்காரன் ஆளுகிறவன் அல்ல என்றும், ஊழியக்காரனுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் அப்போஸ்தலர் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். உண்மை சபையைப் பொறுத்தமட்டில், சபையின் தலையாகிய கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், அவருடைய வாய்க்கருவிகளாக இருக்கும்படிக்கு அவரால் விசேஷமாக தெரிந்துகொள்ளப் பட்டவர்களாகிய அப்போஸ்தலர்களின் வார்த்தைகளுக்கும்தான் அதிகாரம் உள்ளது.

இவர்கள் ஒரு விஷயமாக பேசுகையில், கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள அனைவரும் செவிகொடுப்பதற்குக் கவனித்திருக்க வேண்டும். இவர்கள் ஒரு விஷயத்தில் அமைதலாய் இருக்கும் போது, ஒருவருக்கும் பேசுவதற்கு அதிகாரம் இல்லை. போதிப்பதற்கான (எக்காரியம் தொடர்பான நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய அறிவுரையைச் சுட்டிக்காட்டுவதற்கான) விசேஷித்த திறமையின் காரணமாக, மந்தையைப் போஷிப்பதற்காகவும், மந்தைக்கு ஊழியம்

புரிவதற்காகவும் உரிய ஸ்தானத்திற்கு மூப்பர் தெரிந்தெடுக்க வேண்டியிருப்பினும் மற்றும் இப்படியாக மூப்பர், இந்த விதத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய அனைவரின் கவனத்தையும், வேதவாக்கியங்களின் தெய்வீக அதிகாரத்திற்குத் திருப்புவதன் மூலம் விசேஷித்த விதமாய் உதவிகரமாய் இருப்பினும், கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்த ஓர் அங்கத்திற்கும் இதே சிலாக்கியம் உள்ளது - அதாவது அதிகாரம் செலுத்துவதாக இராமல், மாறாக வேதவாக்கியங்களுடைய அதிகாரத்திடம் சகல சகோதரருடைய கவனத்தைத் திருப்பும் இதே சிலாக்கியம் உள்ளது. மூப்பர்கள் சபையில் எவ்விதத்திலும் அதிகாரி ஸ்தானத்தை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, "மந்தைக்கு மாதிரிகளாக" இருக்கும்படிக்கு மூப்பர்களுக்கு அப்போஸ்தலர் புத்திமதியைக் கூறுகின்றார். சாந்தத்திற்கும், பொறுமைக்கும், சகோதர சிநேகத்திற்கும், இணக்கத்திற்கும் மூப்பர்கள் மாதிரியாக இருக்க வேண்டும் இதினிமித்தம் சகோதரர்கள் அதிகமாக இந்த மூப்பர்களைப் பார்த்துப் படிக்கும்போது, மந்தையின் மத்தியில் கர்த்தருடைய ஆவி அதிகமாகக் காணப்படும் மற்றும் ஆவியின் கனிகளும், கிருபைகளும்கூட வெளிப்படும். மாறாக ஒரு சிறு கூட்டமான கர்த்தருடைய ஜனங்களுக்கான மூப்பர் (அ) வழிநடத்துபவர் தனது உரிமைகளை வலியுறுத்துபவராகவோ/பிடிவாதமானவராகவோ, கர்வமிக்கவராகவோ, நடத்தையிலும், தொனியிலும் அல்லது பார்வையிலும் அதிகார தோரணை உள்ளவராகவோ இருப்பாரானால் இதன் விளைவாக இப்படிப்பட்ட மூப்பருடைய செல்வாக்கின் கீழ்க் காணப்படுபவர்கள் மத்தியில் யார் பெரியவன் என்பதற்கான போராட்டங்களும், போட்டிமனப்பான்மைகளும், பேராசைகளும், சண்டைகளுமே ஏற்படும்.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில், மூப்பர் ஸ்தானத்தில் காணப்படும் ஒருவர், ஜனங்களின் எண்ணிக்கை எவ்வளவு கொஞ்சமாக இருப்பினும், அவர் - கர்த்தருக்கும், மந்தைக்கும், பொறுப்புகளையும் மற்றும் தனக்கு நெருக்கங்களையும் உள்ளடக்கின ஸ்தானத்தில் காணப்படுகின்றார். சபையில் மூப்பர்கள் (அ) வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முடிந்தமட்டும் இந்த ஊழியத்திற்கான சிலாக்கியத்தின் மூலம் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திக்கொள்ளாதவர்களைத் தேர்ந்தெடுப்பதில், அதாவது தாழ்மையிலும், கர்த்தருடைய ஆவியின் சகல கிருபைகளிலும் மந்தைக்கு உண்மையில் மாதிரிகளாக இருக்கக்கூடியவர்களை இந்த ஸ்தானத்திற்கெனத் தேர்ந்தெடுப்பதில் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய ஒவ்வொரு கூட்டத்தாரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். சபையில் ஊழியம் புரிவதற்கான இந்த ஸ்தானத்தை வகிப்பவர்களுக்குரிய விசேஷமான சோதனை குறித்துதான், "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் என்பதாகத் தெரிகின்றது (யாக்கோபு 3:1).

"மூப்பர்" என்ற வார்த்தை, "வயதில் முதிர்ந்தவர்" என்ற அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதாக இருப்பினும், கர்த்தருடைய சகோதரர் மத்தியில், மாம்சீக வயது கணக்கு மாத்திரம் கருத்தில் எடுத்துகொள்ளப்படக் கூடாது; கர்த்தருடைய குடும்பத்தில், சில சமயம் நாம் நரை முடியுள்ள "குழந்தை" போன்றவர்களைக்

காண்கின்றோம். அதேசமயம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டது முதல் கடந்துபோன வருடங்களின் கணக்குப்படியும் ஒருவரை மூப்பர் என நாம் எடுத்துக்கொள்ள முடியாது, ஏனெனில் சிலர் வேகமாக வளர்ந்து, விரைவாக (ஆவியில்) முதிர்ச்சியடைந்து விடுகின்றனர்; சத்தியத்தை ஏற்றுக்கொண்ட சிலரோ இவ்வுலகத்தின் கவலைகள் மற்றும் ஐசுவரியத்தின் மயக்கமாகிய, "முட்களை," சத்திய வார்த்தையை நெருக்கிப்போடும்படிக்கு அனுமதித்து விடுகின்றனர், இதினிமித்தம் இப்படிப்பட்டவர்கள் "குழந்தைகள்" நிலையிலிருந்து ஒருபோதும் தாண்டுவதேயில்லை, அதாவது ஆவியின் முதிர்ந்த கனிகளை ஒருபோதும் கொடுப்பதில்லை.

அதே சமயம் ஒருவர் தெய்வீகத் திட்டம் தொடர்பான அறிவைப் பெற்றிருக்கும் அளவிற்கு ஏற்ப, அவரை மூப்பர் என்றும் நாம் எண்ணிக் கொள்ள முடியாது, ஏனெனில் சிலர் அதிகமான அறிவைப் பெற்றுக்கொண்டிருந்தும், கர்த்தருடைய கணிப்பின் கண்ணோட்டத்தில் "சத்தமிடுகிற வெண்கலம்" போன்று காணப்படவும் வாய்ப்புண்டு என அப்போஸ்தலர் நமக்கு உறுதியளிக்கின்றார். ஆகவே மூப்பர் ஒருவர், "போதகசமர்த்தனாக" இருப்பதற்கென ஓரளவிற்கு தெய்வீகத் திட்டம் குறித்த அறிவை அடைந்திருக்க வேண்டியதாய் இருப்பினும், அவர் மூப்பர் ஊழியத்திற்கான தகுதியை உடையவர் என்பதற்கான உண்மையான சான்று, அவருடைய அறிவின் அடிப்படையில் மாத்திரம் கணிக்கப்படாமல், இன்னும் ஆவியின் கிருபையில் உள்ள அவருடைய வளர்ச்சியின் அடிப்படையிலும் காணப்பட வேண்டும். தெய்வீகத் திட்டம் குறித்த தெளிவான அறிவு பெற்றவர்களாகவும், போதகசமர்த்தம் உள்ளவர்களாகவும், இன்னுமாக கிருபையில் வளர்ந்துள்ளார்கள் என்பதற்கான துல்லியமான சாட்சியை வெளிப்படுத்து கிறவர்களாகவும், அன்றாட ஜீவியத்தில் கர்த்தருடைய ஆவியின் கனிகளை, போதுமான அளவு முதிர்ச்சியுடன் கொடுப்பவர்களாகவும் இருப்பவர்கள், மூப்பர்களுக்கான தகுதியுடையவர்களாகக் கருதப்படலாம் மற்றும் இப்படிப் பட்டவர்களை, இவர்களுடைய மாம்சீக வயது என்னவாக இருந்தாலும் கூட, சகோதர சகோதரிகளால் மூப்பர் ஊழியத்திற்குத் தெரிந்துகொள்ளலாம்.

மாம்சத்தின்படி பேதுருவும், அப்போஸ்தலர்களில் அநேகரும் நம்முடைய கர்த்தரைக் காட்டிலும் வயதில் மூத்தவராக இருந்தாலும்கூடத் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைவருக்கும் ஆவியின்படி நமது கர்த்தரே மூத்த சகோதரனாக இருக்கின்றார். மாம்சத்தில் தீமோத்தேயுவும், தீத்துவும் இளைஞர்களாக, அதாவது வயதில் சிறியவர்களாக இருந்தார்கள், ஆகவே இவர்களில் ஒருவருக்கு, "உன் இளமையைக்குறித்து அசட்டைப் பண்ணாதபடிக்கு ஜாக்கிரதையாயிரு" என்று அப்போஸ்தலர் எழுதுவது அவசியமாய் இருந்தது. எனினும் இந்த இளைஞர்களை அப்போஸ்தலர் சபையின் மூப்பர்களாக அங்கீகரிக்கின்றார். இவர்கள் கொண்டிருந்த ஆவிக்குரிய வளர்ச்சியின் காரணமாகவும், தெய்வீகத் திட்டம் குறித்துக்கொண்டிருந்த அறிவின் காரணமாகவும், போதக சமர்த்தர்களாக இருந்த காரணமாகவும், தேவனுடைய மந்தையைப் போஷிப்பதற்கும், அதன் மேல் கண்காணிகளாகவும் இருப்பதற்குத் தகுதியுடையவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால் இவர்கள் மந்தையின் மீது

ஆளுகை செய்கிறவர்களாகவும், அதிகாரிகளாகவும், ஆண்டவன்மார்களாகவும் இருக்கவில்லை மற்றும் இவர்களுக்கு எவ்விதமான அதிகாரமும் அளிக்கப்படவுமில்லை, மாறாக மாபெரும் மேய்ப்பன் மற்றும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரெண்டு உதவியாளர்களின் சத்தத்திடம் மந்தையின் கவனத்தைத் திருப்புவதும் மற்றும் அவர்களைத் தெய்வீகச் சத்தியத்தின் பசுமையான புல்களிடமும், அமர்ந்த தண்ணீர்களிடமும் வழிநடத்துவதுமாகிய சிலாக்கியத்தை மாத்திரமே பெற்றிருந்தார்கள்.

மந்தையில் இப்படியாக மிகுந்த வளர்ச்சியும், அதிகமான தகுதியும் கொண்டிருப்பவர்களுக்குத் தன்னடக்கம் மற்றும் தாழ்மை குறித்து விசேஷமாகக் கட்டளையிட்ட பிற்பாடு, கர்த்தருடைய மந்தையிலுள்ள ஒவ்வொருவரும் அதிகாரி (அ) ஆளுகிறவன் (அ) எஜமான் என்றவிதத்தில் வழிநடத்துனனாக வேண்டுமென நாடுவதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் கீழ்ப்படிய நாட வேண்டுமென அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார், அதாவது மந்தையில் உள்ளவர்களிலே மிகவும் எளியவராய் இருப்பவருடைய கருத்துக்களை மகிழ்ச்சியுடன் கேட்பதற்கும் மற்றும் தனது கணிப்பும், மனசாட்சியும் அனுமதிக்கும் பட்சத்தில் சொந்த விருப்பங்களை விட்டுக்கொடுத்துவிட விருப்பம் கொள்வதற்கும் என அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார். இப்படியாக இந்த ஆவியின் கீழ்ச் செயல்படும் சபையானது, சண்டைகள் இல்லாது காணப்படும், ஏனெனில் ஒவ்வொருவரும் கர்த்தருடைய காரணத்தின் நலன் தொடர்பான விஷயத்தில் மிகவும் அக்கறை கொண்டவர்களாகக் காணப்படுவார்கள் மற்றும் மற்றவர்களுடைய விருப்பங்களுக்குப் பணிந்துபோக மிகவும் விரும்புவார்கள், மேலும் எந்த ஒரு காரியத்திலும் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தை எடுத்துக்கொள்வதிலும் திருப்திக் கொள்ளாமல், மாறாக அனைவருமே, முடிந்தமட்டும் கிட்டத்தட்ட ஏகமனதாய் ஒப்புதல் அளிக்கத்தக்கதான மாற்றம் செய்யப்பட்ட முடிவை அடையவே நாடுபவர்களாய் இருப்பார்கள்.

மூப்பர்களின் சார்பிலும், மற்ற அனைவரின் சார்பிலும் இப்படியான சரியான நடத்தை காணப்படுவதற்கு அவசியமான பண்பு தாழ்மையென அப்போஸ்தலர் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். "மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்" என்ற அவரது புத்திமதி எவ்வளவு அருமையாய் உள்ளது. "மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள்" (1 பேதுரு 5:5; திருவிவிலியம்); அதாவது அனைத்துக் குணலட்சணத்தின் அலங்கரிப்பின் மீது, அதாவது அனைத்து மற்றக் குணலட்சணங்களை மூடினவிதத்தில், பெருமைக்கு எதிரான பண்பாகிய இந்த மனத்தாழ்மையின் வஸ்திரம் காணப்பட வேண்டும் என்பதே வசனத்தின் கருத்தாகும்.

அப்போஸ்தலன் தன்னுடைய வாதத்தை உறுதிபடுத்தும்படியாக, நமது கர்த்தர் தம்முடைய மந்தையையும், மற்றவர்கள் அனைவரையும் கையாளுவதற்குப் பயன்படுத்தும் கொள்கையைக் குறித்து நமக்கு நினைப்பூட்டுகின்றார், அதாவது கர்த்தர் பெருமையை அங்கீகரிப்பதில்லை என்றும், பெருமையினால் இயக்கப்படுபவர்கள் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பதிலாக, ஐக்கியத்திற்குள்ளாகக் காணப்படுவதற்குப் பதிலாக, வழிநடத்தப்படுவதற்குப்

பதிலாக, ஆசீர்வதிக்கப்படுவதற்குப் பதிலாக, கர்த்தரினால் எதிர்க்கப்பட்டு, அவரிடமிருந்து தள்ளிவிடப்படுவார்கள் என்றும் உள்ள நமது கர்த்தருடைய கொள்கையை நினைப்பூட்டுகின்றார். இப்படியாகக் கர்த்தரினால் எதிர்க்கப்படுவதினால், இவர்கள் பெருமை மற்றும் புகழார்வத்தின் ஆவியினுடைய செல்வாக்கின் கீழ்க்காணப்படும் காரணமாக இவர்களுடைய மனப்போக்கு, சத்தியத்திற்கும், எவ்விதமான ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகளுக்கு நேராகக் காணப்படாமல், மாறாக இவைகளிடமிருந்து வெகுத்தொலைவிலேயே காணப்படுகின்றது. "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கின்றார்." ஆகவே அன்பான சகோதரர்களே வாருங்கள், கர்த்தர் மிகவும் விரும்பும் மற்றும் அங்கீகரிக்கும் மற்றும் பலன் கொடுப்பதாக வாக்களித்துள்ள இந்தத் தாழ்மையை விருத்திச் செய்வோமாக என அப்போஸ்தலர் கூறுகின்றார், "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6).

பொதுவாய் இருக்கும் மனுக்குலத்தையும் மற்றும் அதன் காரியங்களையும் கையில் எடுத்து குழப்பங்களைச் சரிபடுத்தத்தக்கதாக, கர்த்தருடைய வல்லமையுள்ள கரம் இதுவரையிலும் நீட்டப்படவில்லை; மாறாக கர்த்தருடைய வல்லமையுள்ள கரம் இன்று அவருடைய மந்தையாகிய, அவருடைய சபையின் மீது நீட்டப்பட்டுள்ளது. நாம், "அவருடைய ஆடுகளாய்" இருக்கும்படிக்கு அவர் நம்மை அழைத்தார் மற்றும் நாமும் அவருடைய அழைப்புக்கு இணங்கி, அவருடைய பராமரிப்பின் கீழ், வழிக்காட்டுவதற்கு, வழிநடத்துவதற்கு உரிய அவருடைய வல்லமையுள்ள கரங்களின் கீழ் - நாம் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைபவர்களாகவும்," "நாம் தேவனுடைய சுதந்தரராகவும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரராகவும், கிறிஸ்துவுடன் பாடுபட்டு, அவருடனேகூட மகிமை அடைகின்றவர்களாகவும் இறுதியில் ஆகுவதற்கும்" ஏதுவாக நம்மை ஒப்புக்கொடுத்துள்ளோம் (ரோமர் 8:17; கொலோசெயர் 1:12).

இப்படியாக நாம் தேவனுடைய இந்த வல்லமையுள்ள கரங்களின் கீழ் இருக்கும்போது, அதுவும் நம்முடைய சொந்த விருப்பத்திற்கு ஏற்றாற்போலவே தேவனுடைய இந்த வல்லமையுள்ள கரங்களின் கீழ் இருக்கும்போது, நாம் எப்படிச் செயல்பட வேண்டும்? நாம் நம்மை அவருடைய சித்தத்திற்கென்று ஒப்புக் கொடுத்துவிட்டு, "அவருடைய தயவுள்ள சித்தத்தின்படி, நம்மில் விருப்பத்தையும், செய்கையையும் உண்டு பண்ணத்தக்கதாகவும்", இறுதியில் நாம் உயர்த்தப்படும் படியாகவும் அவரை அனுமதிப்போமா அல்லது கர்த்தருடைய வல்லமையையும், அறிவுரை கூறும் அவருடைய வார்த்தைகளையும் எதிர்த்து நின்று, தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரிடத்தில் நமக்கு முன் வைக்கப்பட்ட சாந்தத்தையும், தாழ்மையையும் எதிர்த்து நின்று, உலகத்திலோ (அ) சபையிலோ நம்மை நாமே குறிப்பிடத்தக்கவராக உயர்த்த நாடுவோமா? இல்லை, தெய்வீக ஒழுங்கிற்கு எதிராக கிரியை புரிய முயற்சிப்பது என்பது அறிவீனமான காரியமாக இருக்கும் என்பதை நினைவில்கொள்வோமாக. நாம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வெற்றி அடைந்துள்ளது போன்று தோன்றலாம் மற்றும் இப்படியாக எதிர்த்து நிற்பதன் காரணமாக, தவறான ஆவியினிமித்தம் நாமும், மற்றவர்களும் தேவனிடமிருந்து

பிரிந்து செல்பவர்களாகவே இருப்போம்; மேலும் தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே தேவன் அளிப்பதாக வாக்களித்துள்ள இப்போதுள்ள ஆவியில் ஐக்கியம் தொடர்பான விஷயத்திலும், பிற்பாடு மகிமையில் ஐக்கியம் தொடர்பான விஷயத்திலும் உள்ள தேவதயவுகளை முடிவில், முற்றிலும் இழந்து விடுகிறவர்களாகக் காணப்படுவோம். தகுதியான தூண்டுதல்கள் அனைத்துமே நமக்குக் கூறுவதாவது: உங்களைத் தாழ்த்துங்கள்; சிறு பிள்ளைகள் போலாகுங்கள்;சுயத்தை மறந்து, சுயநலமான ஆசைகள் அற்றவர்களாக அதிகமாய் மாறுங்கள்; கர்த்தருக்கு ஊழியம் புரிவதற்கும், அவருடைய மந்தைக்கு ஊழியம் புரிவதற்கும், அவருடைய நோக்கத்திற்காக, சத்தியத்திற்காக ஊழியம் புரிவதற்கும் உரிய வாஞ்சையினால் மாத்திரமே இயக்கப்படுகின்றவர்களாய் இருங்கள்; சுயத்தை முற்றிலுமாக மறந்துவிடுங்கள் என்பதேயாகும்.

அநேகமாக இதன் காரணமாக, தற்கால ஜீவியத்தில் ஊழியம் புரிவதற்கான நமது வாய்ப்புகளையும், பொறுப்புகளையும் கர்த்தர் அதிகமாக்கலாம் மற்றும் ஒருவேளை அவர் அதிகமாக்காமலும் இருக்கலாம், இது ஒரு பொருட்டல்ல. தற்கால ஜீவியத்திற்கானவைகளுக்காக நாம் நாடுகின்றவர்களாக, தேடுகின்றவர்களாக இல்லை, மாறாக கர்த்தரை அன்புகூருகிறவர்களுக்கு - அதாவது அவருடைய வார்த்தைக்குச் செவிசாய்த்து, அவருடைய பார்வைக்குப் பிரியமாய் இருக்கும் குணலட்சணங்களை வளர்க்க நாடி, தேவனுடைய அருமையான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான சாயலை அடைய அதிகமாய் நாடும் அளவுக்கு அவரை மிகவும் அன்புகூருகின்றவர்களுக்கு அவர் வாக்களித்துள்ள மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கே நாம் நாடி, தேடுகின்றவர்களாக இருக்கின்றோம்.

"உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" என்றும் அப்போஸ்தலர் கூறுகின்றார். தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்கள் அனைவரும் முழுமையாய்க் கவலைக் கொண்டவர்கள் ஆவார்கள். அவர்கள் கர்த்தருடைய வேலையில் அக்கறை கொண்டுள்ளனர்; இதைக்குறித்த கவலை அவர்களுக்கு இருக்கின்றது. அவர்களால் சீயோனின் நலனுக்கடுத்த விஷயங்களில் கவலையற்றவர்களாக இருக்கமுடியாது. அவர்களுடைய இருதயங்களும், கவலைகளும், நேசங்களும், மதப்பிரிவினர் வட்டாரத்துக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும், பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாகிய ஆவிக்குரிய சீயோனின் உண்மையான ஜனங்கள் மீதே வைக்கப்பட வேண்டும். ஆகவே சபையிலுள்ள ஒவ்வொரு மூப்பரும், "கிறிஸ்துவின் மந்தையைப் போஷிக்கும்" வேலைக்கென, தான் நியமிக்கப்பட்டுள்ள மந்தை தொடர்பான விஷயத்தில், இத்தகைய கவலையைப் பெற்றிருக்க வேண்டும்... மந்தையைப் பிரித்துவிடக்கூடாது, மந்தையைப் பயமுறுத்தக் கூடாது, மந்தையை அடிக்கக்கூடாது, மந்தையின் மீது இறுமாப்பாய் ஆளுகை செலுத்தக்கூடாது, மாறாக மந்தையைப் போஷிக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களிடம் (மற்றும் அனைத்து மூப்பர்களிடமும் அல்லது சபையில் வளர்ச்சி அடைந்துள்ளவர்களிடம்) காணப்பட வேண்டிய இந்தக் கவலை சரியானதாக இருப்பினும், இது ஆபத்தாகக்கூட மாறிவிடலாம். மூப்பர்கள் தனித்தனியாக அல்லது சேர்ந்து, பரிசுத்த ஆவிக்குள்ளான தங்களது சொந்த

சமாதானத்தையும், சந்தோஷத்தையும் இழந்துபோகுமளவுக்கு மந்தையைக் குறித்து மிகவும் நடுநடுங்கி கவலையுடன் காணப்படுகின்றனர்; மேலும் இதனால் மந்தையின் நலனுக்கு அவசியமென இவர்கள் தங்களுடைய மிஞ்சின வைராக்கியத்துடனான கணிப்பின்படி காரியங்களைக் கருதி, பல்வேறு சரியற்ற நடவடிக்கை எடுக்கவும் வழிநடத்தப்படுகின்றனர். கடந்த காலங்களில் அநேகர் இத்தகைய கவலையின் தாக்கத்தினால், இந்த (அ) அந்த (அ) மற்றக் காரியங்களில் மந்தையின் சுயாதீனம் பாதகமாக இருக்கும் என்ற அச்சத்தில், மந்தையின் சுயாதீனத்தை எடுத்துப்போட்டுவிடும் பல்வேறு வழிகளுக்குள் நடத்தப்பட்டுள்ளனர். இப்படியான கவலையின் ஆவியும், மிதமிஞ்சின கவலையின் ஆவியும் கடந்த காலங்களில் வேதவாக்கியங்களுக்கு எதிராகவும், கிறிஸ்து தம்முடைய ஜனங்களை விடுவித்த சுயாதீனத்திற்கு எதிராகவும் கர்த்தருடைய மந்தை மீது விதிக்கப்பட்ட பல்வேறு விசுவாச பிரமாணங்களிலும், கட்டுப்பாடுகளிலும் மற்றும் கட்டளைகளிலும் தெளிவாய்த் தெரிகின்றன. கவலைப்படுவதற்கான நோக்கங்கள் சில விதங்களில் சந்தேகத்திற்கு இடமின்றி நல்லதுதான்; சில மூப்பர்களிடம், சில வளர்ச்சியடைந் துள்ள ஆடுகளிடம் உள்ள பிரச்சனை என்னவெனில், இவர்கள் மந்தையின் நலனுக்கடுத்த விஷயங்களில் கவலை/அக்கறை கொள்ளும்போது, இவர்கள் தாங்கள் மந்தையின் ஊழியர்கள் மாத்திரமே என்பதையும், மந்தையின் எவ்விஷயத்திலும் எவ்விதமான சட்டங்களை அல்லது கட்டுப்பாடுகளை ஏற்படுத்திட அதிகாரம் இல்லாதவர்கள் என்பதையும் மறந்துவிடுகின்றனர். கர்த்தர் இன்னமும் தமது மந்தைக்கு நல்ல மேய்ப்பராக இருக்கின்றார் என்பதையும், மந்தையின் மீதான தமது பராமரிப்பையும், தமது அதிகாரத்தையும் அவர் யாருக்கும் கொடுக்கவில்லை என்பதையும், மந்தையை இறுமாப்பாய் ஆளுவதற்கு அல்லது மந்தைக்குத் தேவையான அனைத்துச் சட்டங்களையும், ஒழுங்குகளையும் அவரே ஏற்படுத்தியுள்ளபடியால், மந்தைக்கு (இவர்கள்) எவ்விதமான சட்டங்களை ஏற்படுத்துவதற்கு அவர் அனுமதி வழங்கவில்லை என்பதையும், தாம் மந்தைக்கு அளித்திட்ட சுயாதீனத்தில் தமது மந்தை முழுமையாகக் காணப்பட வேண்டும் என விரும்புகின்றார் என்பதையும் இவர்கள் மறந்துவிட்டனர்.

சீயோனின் நலன் கருதின இத்தகைய அங்கீகரிக்கப்படாத மிதமிஞ்சின கவலைகள் அனைத்திற்குமான மருந்தாக, அப்போஸ்தலர், "(மந்தையின் மேய்ப்பனாகிய) அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் (அனைவரின்) கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" என்று கூறுகின்றார். ஒவ்வொரு ஆடும் மேய்ப்பனின் வல்லமையுள்ள கரம் (வல்லமை) இன்னமும், தம்முடைய ஜனங்கள் மத்தியிலேயே காணப்படுகின்றது என்பதையும், அவருடைய பராமரிப்பு இருப்பதினால் நாம் நம்மையே கவலையினால் அதிக பாரபளுவுக்குள் ஆக்கிக்கொள்ள தேவையில்லை மற்றும் நாம் கற்பனை பண்ணிக்கொள்ளும் புதிய நெருக்கடிகளைச் சந்திக்கத்தக்கதாக அவருடைய திட்டங்களிலும், ஏற்பாடுகளிலும் நாம் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என எண்ணவேண்டியதில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இப்படியாக மிதமிஞ்சின கவலைகள், பயத்தை ஏற்படுத்துகின்றது மற்றும் பயமானது, மேய்ப்பனிடத்திலான விசுவாசக் குறைச்சலையும், நம்பிக்கைக் குறைவையும்

சுட்டிக்காட்டுகின்றது மற்றும் இந்தப் பயம், கர்த்தருடைய ஜனங்களைத் தவறான பாதையில் வழிநடத்துவதற்கு மாபெரும் எதிராளியானவனால் பயன்படுத்தப்படும் அவனுடைய மிகுந்த பலமிக்க ஆயுதங்களில் ஒன்றாகும்.

ஆகவே நாம் அனைவரும் (வளர்ச்சியடைந்துள்ள அனைவரும் அல்லது மூப்பர் அனைவரும்) மந்தைக்காகக் கவலைக்கொள்வோமாக. ஆம், ஆழமான கவலைக்கொள்வோமாக. ஆனால், இந்தக் கவலையின் பளுவைக் கர்த்தர் மேல் வைத்துவிடுவோமாக மற்றும் இப்பொழுது தம்முடைய வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ள "யுகங்களைக் குறித்த திட்டம்" என்னும் மிகுந்த பிரமாண்டமான மற்றும் மகிமையான திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டுவருகிறவர், அனைத்துச் சந்தர்ப்பங்களுக்கும், அனைத்துச் சூழ்நிலைகளுக்கும், அனைத்துக் காரியங்களுக்கும் முழு ஏற்பாடுகள் பண்ணியுள்ளார் என நமது விசுவாசம் அவரை நம்பக்கடவது மற்றும் அவருடைய வார்த்தைகளுக்கு இசைவாக நாம் அவருடன் ஒத்துழைப்பதற்கு ஆயத்தமாகக் காணப்படுவோமாக. நாம் அனுப்பப்படாத இடத்திற்கு நாம் ஓடவும் கூடாது, நமது கர்த்தருடைய ஸ்தானத்தை எவ்விதத்திலும் நாம் எடுக்கக்கூடாது, கர்த்தருடைய வேலையைச் செய்ய நாம் முயற்சிக்கவும் கூடாது. தாழ்மையான மனம் கொண்டவர்கள் மாத்திரமே தற்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ, நமது கர்த்தருடைய கரங்களிலிருந்து ஏதேனும் நித்திய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும், ஏனெனில் பெருமையுள்ளவர்களுக்குக் கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார் மற்றும் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கின்றார் என்று பார்க்கின்றோம்.

---

R5793

# சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை

**கே**ள்வி: "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்று மத்தேயு 20:27-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் முதன்மையானவனாய் இருக்க விரும்புவது என்பது முறையான விருப்பம்தானா மற்றும் பரலோக இராஜ்யத்தில் ஸ்தானங்களானது, இங்கு நம்மால் ஏறெடுக்கப்படும் ஊழியத்தினுடைய அளவின் அடிப்படையில்தான் வழங்கப்படுமா?

பதில்:- தம்முடைய சீஷர்களுக்கு, அவர்களுக்கு இருக்கும் குறிப்பிட்டப் பெலவீனம் ஒன்றினை - அதாவது பெரியவர்களாய்க் காணப்படுவதற்கான ஒரு விருப்பத்தினை - அதாவது மனுஷகுடும்பத்தில் பொதுவாய்க் காணப்படுகின்றதான

ஒரு விருப்பத்தினை - பேராசையின்/குறிக்கோளின் ஆவியினைக் கர்த்தர் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தார். இவ்வசனத்தினுடைய முந்தின வசனங்களானது, புறஜாதிகள் மத்தியில், சிலர் அடக்கி ஆளும் அதிகாரம் செலுத்துபவர்களாய்க் காணப்பட்டு, மற்றவர்களைத் தங்களுக்குப் பணிவிடைச் செய்யப் பண்ணுகின்றார்கள் என்றும், ஆனால் இவ்விதமாய் இயேசுவின் சீஷர்கள் மத்தியில் காணப்படலாகாது என்றும் தெரிவிக்கின்றது. சீஷர்கள் வேறே ஆவியினால் இயக்கப்படுபவர்களாய் இருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்களிடத்தில் - இறுமாப்பாய் ஆளுவதற்குரிய, மற்றவர்களை அடக்கி ஆளுவதற்குரிய ஆவி இருத்தல் கூடாது; மாறாக மற்றவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கும், மற்றவர்களுக்காகக் காரியங்களைச் செய்திடுவதற்கும் நாடிடும் அன்பின் ஆவியானது, மற்றவர்களுக்காக ஊழியம் புரிய தனது தனிப்பட்ட நலனுக்கடுத்தவைகளைப் பலிச் செலுத்திட விரும்பும் ஆவியானது காணப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் நாம் இவ்வசனத்தினுடைய மற்ற வார்த்தைகளைப் பார்க்கின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் சிலர் முதன்மையானவர் களாய்க் காணப்படுவார்கள்; இப்படியாகவே தாலந்துகளை அதிகமாகப்பெற்ற நிலையிலுள்ள சிலரையும் மற்றும் குறைவாகப்பெற்ற நிலையிலுள்ள சிலரையும் பெற்றிருக்கும் எவ்விடத்திலும் - அதாவது தாலந்துகளில் சமமாய் இராத ஜனங்கள் காணப்படும் எந்த ஒரு கூட்டத்தில் அல்லது வகுப்பில் நிச்சயமாய்க் காணப்படும். யாரோ ஒருவர் முதன்மையானவராய் நிச்சயமாய்க் காணப்பட வேண்டும். முற்றும் முழுமையான சரிசமம் என்பது கூடாத காரியமாகும்.

தேவனுடைய பரிசுத்தவான்கள் மத்தியில், சபையை வழிநடத்திடுவதற்குச் சிலர் காணப்பட வேண்டும் என்பதும்கூடத் தகுதியானதே. அப்படியானால் யார் முதன்மையானவராய் இருக்க வேண்டும் என்பதற்கான தகுதிநிலை என்னவாக இருக்கும்? மற்றவர்களைப் பயமுறுத்தக்கூடிய ஒருவர் முதன்மையானவராய் இருக்கலாமா? இல்லை; இது தகுதிநிலையல்ல. ஆதிக்க வல்லுநராகவும், இனிமையான சொற்களைப் பேசுபவராகவும், ஏதோ சில தாலந்துகளைப் பெற்றிருப்பதன் காரணமாக அல்லது சிறப்பான கல்வியோ, ஐசுவரியமோ பெற்றிருப்பதன் காரணமாக - இவ்வகையான எதையாகிலும் பெற்றிருப்பதன் காரணமாக மாத்திரம் ஆதிக்கம் பண்ணுபவராகவும் இருக்கும் ஒருவர் முதன்மையானவராய் இருக்கலாமா? இல்லை; இது தகுதிநிலையாக இருக்க முடியாது. அப்படியானால், சபையில் முதன்மையானவர்களென அடையாளம் கண்டுகொள்ளப்படுபவர்களுக்குரிய தகுதிநிலை என்னவாக இருக்கும்?

## சுய மகிமைக்காக எந்த ஆசையும் கொள்ளாதீர்

ஊழியம்புரிவதற்கான ஆவியினை மிகுதியாய்ப் பெற்றிருப்பவர்களை நாம் நாடித்தேடிட வேண்டும் என்பதே எங்களுடைய பதிலாய் இருக்கின்றது.

பெருமளவில் ஊழியம்புரிந்து, சபையாருக்குப் பெருமளவில் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருபவன் - அதாவது உண்மையாய் ஊழியம் புரிவதற்கென மிகவும் பிரயாசம் எடுக்கிறவன் - இத்தகையவனை முதன்மையான வனாகக் கருதுங்கள். நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளானது, ஒரு தனிப்பட்ட நபருக்கென்று மாத்திரம் இல்லாமல், அப்போஸ்தலர்கள் அனைவருக்குமாகப் பேசப்பட்டபோதிலும், இவ்வார்த்தைகள் தனிநபருக்கும் பொருந்தும். நம்மில் எவரேனும் ஏதேனும் விசேஷித்த விதத்தில் ஊழியம்புரிய விரும்புவோமானால், நாம் உலகப்பிரகாரமான ஜனங்கள் போன்று செய்திடக்கூடாது என்கிற சிந்தையானது நம் ஒவ்வொருவருடைய இருதயத்திற்குள்ளும் கடந்து வரவேண்டும். நாம் அவர்களுக்கு எதிர்மாறான பாதையினை எடுத்துக்கொண்டு, மனுஷரிடமிருந்து வரும் எந்தக் கனத்தையும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்குத் தகுதியற்றதென முற்றிலுமாய் விட்டுவிட வேண்டும். இக்காரியத்தினைத் தேவன் தமக்கு நலமாய்த் தோன்றும் விதத்தில் கையாளத்தக்கதாக, அவரிடமாய் நாம் விட்டு விட்டு, சகோதரருக்கு ஊழியக்காரனாய் இருப்பதற்கு மாத்திரம் திருப்தியடைந்து இருக்க வேண்டும். இப்படியான விதத்தில் ஊழியம் செய்திடுவதற்கு நீங்கள் எவ்வளவாய் விருப்பமுடையவர்களாய் இருக்கின்றீர்கள் என்று கர்த்தர் காண்பாராக. எந்தக் குறிக்கோளும்/ஆசையும் இல்லாதவர், எதையும் செய்யமாட்டார். நாம் விதைத்தாலும் அல்லது உழுதாலும் அல்லது நாம் எதைச் செய்தாலும் நமக்குக் குறிக்கோள்கள் காணப்பட வேண்டும் - நாம் செய்துகொண்டிருக்கின்ற எதையும், திருப்திகரமான விதத்தில் செய்யும்படிக்குத் தூண்டிடுவதற்கு நமக்குக் குறிக்கோள் தேவையாய் உள்ளது. ஆகையால் சத்தியத்திற்கு ஊழியம்புரிவதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைக்கையில், முடிந்தமட்டும் மிகவும் ஆற்றல்மிக்க விதத்தில் அதற்கு ஊழியம் செய்திட நாம் நாடிட வேண்டும். இல்லையேல் நாம் கர்த்தருக்கு ஆற்றல் மிக்க ஊழியக்காரர்களாய் இருக்க முடியாது.

ஆனால் சுய மகிமைக்காக ஆசைப்பட்டு, முதன்மையானவர்களாக விரும்பும் எந்த ஒரு விருப்பத்தினையும் நாம் புறம்பே தள்ளிட வேண்டும். நம்மால் அறிய முடிந்திருக்கும் சிறந்த விதத்தில் கர்த்தருக்கு ஊழியம்புரிந்திட நாம் நாடிட வேண்டும். என்னைக்காட்டிலும் உங்களால் சில விதங்களில் கர்த்தருக்குச் சிறப்பாய் ஊழியம் புரிய முடிகிறதாய் இருக்கும் பட்சத்தில் மற்றும் உங்களிடமிருந்து நான் சிலவற்றைக் கற்றுக்கொள்ளமுடிகிறதென்றால், அது நல்லது, நன்மையுமாகும். பிற்பாடு உங்களால் என்னிடமிருந்து ஏதோ சிலவற்றைக் கற்றுக்கொள்ள முடிகிறதென்றால், அப்படியே காணப்படுவதாக. உண்மைதான் விசேஷமாய்ப் பாராட்டத்தக்கதாய்க் காணப்படும் எதையும் நாம் பின்பற்றுகிறவர்களாய் இருந்து, கர்த்தருடைய காரணங்களை நடந்தேற்ற நம்மால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும். மேலும் இந்த ஊழியமானது, அன்பினால் இயக்கப்பட வேண்டும். அன்பினால் இயக்கப்படாத எந்த ஊழியமும், கர்த்தருடைய பார்வையில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

# தாழ்மை மிக முக்கியமான தேவை

கண்காணி ஊழியத்தினை விரும்புகிறவன் நல்ல ஊழியத்தை விரும்புகின்றான் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். அது ஓர் உயர்வான ஊழியமாகும். இந்த ஊழியமானது, இன்றைய நாட்களில், பெயர்ச்சபை அமைப்புகளில் உயர்வான அதிகாரப்பூர்வமான பதவியாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது போன்று அப்போஸ்தலனுடைய நாட்களில் இருக்கவில்லை. அந்நாட்களில் கண்காணி என்பவர், ஆடுகளின் நலனுக்கடுத்தவைகளைப் பார்த்துக்கொள்ளும் சபையின் பெயரற்ற மற்றும் தாழ்மையான ஊழியக்காரன் ஆவார். சபையின் ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னால் முடிந்தமட்டும் தேவனுடைய மந்தையின் மீது திறமிக்க மேற்பார்வையாளராக இருக்க விரும்பிட, நாடிட வேண்டும். இந்த மூத்த சகோதரர்கள் - சபையாருக்கான மேய்ப்பர்கள் மத்தியில், வெவ்வேறு இயல்பான திறமைகளை உடையவர்களாய்க் காணப்படுவார்கள். ஒவ்வொருவரும் தனது தாலந்துகளை, தனது வாய்ப்புகளை, கர்த்தருக்கான, சகோதரருக்கான மற்றும் சத்தியத்திற்கான ஊழியத்தில் பயன்படுத்திடுவதற்கு நாடிட வேண்டும்.

இன்றைய நாட்களிலுள்ள கர்த்தருடைய ஜனங்களில் ஒருவர், ஆண்டவர் இங்கு முன்வைக்கின்றதான நெறிமுறைகளை மறந்துபோவது என்பது பரிதாபத்திற்குரிய காரியமாகும். இத்தகையவர்கள் தாங்கள் மூப்பர் ஊழியத்திற்குச் சபையாருடைய, கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின கூட்டத்தாருடைய vote / வாக்கினால் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், கர்த்தருடைய ஜனங்களின் வாக்கானது, சபையினுடைய குரலாய் இருக்கின்றது என்றும் உணர்ந்து கொள்வதற்குப் பதிலாக, உரிமையின் காரணமாக தங்களுக்கு மூப்பர் ஊழியம் கிடைத்துள்ளது என்று எண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர். பிரித்தெடுக்கப்பட்ட வர்களுடைய, சபையினுடைய - vote/வாக்கினை முழுமையாய் ஏற்றுக்கொள்வதற்கு விருப்பமுள்ளவர்களாக, ஒவ்வொருவருடைய மனப்பான்மையும் காணப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவன் மற்றவர்களோடு அனைத்திலும் பங்குகொள்வதன்மூலம், சபையாரில் ஓர் அங்கமாகியுள்ளானெனில், இவ்விதம் அவன் அதிகமான சதவீதத்தில் அல்லது ஒரு எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர்களாய்க்காணப்படும் அதிகாரமுடைய பெரும்பான்மையானவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒழுங்குகளுக்குக் கீழ்ப்பட்டவனாகுகின்றான். இதைச் செய்த பிற்பாடு, அவன் மூப்பனாகவோ அல்லது வேறொருவர் மூப்பனாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இதே மனப்பான்மையினைத் தொடர்ந்து கொண்டிருக்க நாடிட வேண்டும்.

ஏற்ற தகுதிகளைக் கொண்டிராத ஒரு சகோதரனை மூப்பனாக தேர்ந்தெடுக்கும் தவறினை சபையார் மிக அடிக்கடி செய்துவருகின்றனர். இது

அந்தச் சபையாரில் சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தி, சிலர் பிரிந்துபோய், இன்னொரு சபையினை ஏற்படுத்திடுவதற்கு வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது. இது ஞானமான நடக்கையாய் இராது என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவேளை அந்தச் சபையார் தவறு செய்துவிட்டார்களெனில், அதை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிடுவதற்குக் கர்த்தர் வல்லவராய் இருக்கின்றார்; மற்றும் பிரிந்து போய்விடுபவர்கள் தங்களுக்கு விலையேறப்பெற்றதாய்க் காணப்படுவதற்கு ஏதுவான சில அனுபவங்களை இழந்துபோகின்றவர்களாய் இருப்பார்கள்.

எனினும் சபையார் தவறு செய்துவிட்டனர் என்று நாம் எப்போதும் உறுதியாய்ச் சொல்லிட முடியாது. இவ்விஷயத்தில் கர்த்தர் படிப்பினை சிலவற்றை வைத்திருக்கிறார் என்பதை நாம் எப்படி அறிவோம்? தேர்ந்தெடுக்கப்படுபவர் யாராயிருப்பினும், அவருக்காக நாம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தினை வேண்டியிருப்போமானால், அந்தத் தேர்வுடன் நாம் இணங்கி போக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படாதவர் ஒருவேளை சத்தியத்தினை நன்றாய் முன் வைத்திடுவதற்கான ஆற்றல் உடையவராகவும், தான் பயன்படுத்தப்படுவதற்கும், பயனாய்க் காணப்படுவதற்கும் ஏதுவான அநேகம் இடங்களை அறிவாரானால், அச்சகோதரன் தனக்கு வரும் எந்த ஒரு வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் சபையை விட்டுப் பிரிந்து செல்ல தேவையில்லை. தன் கையில் கிட்டும் எந்த ஊழியத்தினையும் அவர் புரிந்திடலாம். அநேகமாக அவர் தனது நேரத்தையும், தாலந்துகளையும் புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலையில் (class extension work) பயன்படுத்திடலாம் - இதுவிஷயத்தில் தான் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனும் காரணம் தனக்குத் தடையாக இருக்கின்றது என்று கருதிட வேண்டாம். அவர் கடந்துபோய், ஊழியங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டடையலாம். ஆகையால் மூப்பர்களாக வேறு சகோதரர் வந்திருக்கும் காரியமானது, தேர்ந்தெடுக்கப்படாத சகோதரனுக்கு அல்லது மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படாத சகோதரனுக்கு - அவர் பயனாகும் வேறொரு களத்தினைக் கர்த்தர் சுட்டிக்காட்டுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கூடுதலாய்ப் பயன்படும் விதத்தில் கர்த்தருடைய வழிநடத்துதலானது அவரை நடத்திடலாம்.

உலகத்தின் மனுஷர்கள் நம்மைக்குறித்து என்ன சொல்லுவார்களோ அல்லது என்ன எண்ணுவார்களோ என்ற எண்ணத்தினால் நாம் தாக்கத்திற் குள்ளாகுதல் கூடாது. இது முக்கியமற்றக் காரியமாகும்; மற்றும் சபை என்ன எண்ணுமோ என்பதும் முக்கியத்துவமற்றக் காரியமாகும். நாம் கர்த்தரைப் பிரியப்படுத்திடவே நாடிட வேண்டும். நாம் நம்மைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், நம்முடைய கணிப்பில் மற்றவர்களுக்கு முன்னுரிமைக் கொடுப்போமாக. பரலோக இராஜ்யத்தில் ஸ்தானங்கள் அருளப்படுவது என்பது, பரிசுத்த ஆவியினுடைய கனிகளின் வளர்ச்சியினுடைய அளவின் அடிப்படையிலேயே ஆகும் என்று நாம் புரிந்திருக்கின்றோம் மற்றும் இது கர்த்தருடைய ஊழியத்தில்

வைராக்கியம் கொள்வதற்கு வழிநடத்திடும் அன்பினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

## மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல்

சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர் களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/நியமங் களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும்தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர மற்றபடி சபையில் - ஒரு வாக்கில் (vote) பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்றவர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில் 51-பேர்கள், சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், தீர்மானிப்பதற்கு உரிமைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரந்தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதான வாக்கினைச் செலுத்திட

நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A, B, C, D, E, F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A - அவர்களுக்கு 100-வாக்குகளும்; B - அவர்களுக்கு 90-வாக்குகளும்; C - அவர்களுக்கு 80-வாக்குகளும்; D - அவர்களுக்கு 70-வாக்குகளும்; E - அவர்களுக்கு 60-வாக்குகளும்; F - அவர்களுக்கு 50-வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறுபேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்க குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளதான தகுதி நிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/ கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே - அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக் கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார் (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கின்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும்

நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

முழுமையான அர்ப்பணம்பண்ணி, அதைத் தண்ணீர் முழுக்கு எனும் வழக்கமான அடையாளத்தின் மூலம் தெரிவித்துள்ளவர்கள் யாவரும் தவிர மற்றபடி எவரும் வாக்களிக்கக்கூடாது என்பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். இப்படியாக தங்களது அர்ப்பணத்தினை அடையாளத்தின் மூலமாக தெரிவித்திடாதவர்கள், சகோதரர்கள் அல்ல என்று புறக்கணிக்கப்படக்கூடாது, மாறாக சபையாருக்கு ஊழியம் புரிவதற்கு யார் தகுதியானவர்களாய் இருப்பார்கள் என்பதில் தங்களது எண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கு ஆற்றலற்றவர்களாய் இருப்பதினால் மிகவும் வளர்ச்சியற்றவர்களாய் இருப்பவர்களெனக் கருதப்பட வேண்டும் மற்றும் இவர்கள் ஊழியக்காரர்களாகுவதற்கும் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள்.

## வாக்குறுதி

இங்கும் அங்குமாக எழும்பி தலையிடுகிறதான இன்னொரு கேள்வி - நம்மில் அநேகர் மிகவும் உதவிகரமாக உள்ளது என்று கண்டுகொண்டுள்ளதும் மற்றும் அனைவருக்கும் பரிந்துரைக்கப்பட்டதுமான விசேஷித்த வாக்குறுதியை/(vow) எடுத்துக்கொள்ளாதவர்கள் சபைக்கான ஊழியக்காரராக தேர்ந்தெடுக்கப்படலாமா? என்பதேயாகும். கர்த்தர் தாமே விசேஷமாய் அதை இந்தக் காலக்கட்டத்தில் கொண்டு வந்துள்ளார் என்றும், அது ஓரளவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் பரீட்சையாக விளங்கும்படிக்கு நோக்கம் கொண்டுள்ளார் என்றும் நாம் நம்பினாலும், வாக்குறுதியைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் ஆக்கிவிட முடியாது; அதைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக்குவதற்கு வேதமும் நமக்கு அதிகாரம் வழங்கிடவில்லை. மூப்பர்களுக்கான தகுதிகளின் மத்தியில் குறிப்பிடப்படவில்லை என்கிறபோதிலும், முன்மொழியப்படும் சகோதரனுடைய விநோதமான பாணிகள் அல்லது சரியற்ற ஆங்கில மொழிப்பேச்சானது கவனிக்கப்பட/கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பாத்திரமானவைகளாய் இருப்பதுபோன்று, வாக்குறுதியும் தெய்வீகக் கட்டளையின் காரியமாய் இராமல், மாறாக பகுத்துணரும் காரியமாய்க் காணப்படுகின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள அன்புக்குரிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவருமே - வாக்குறுதி நியாயமான ஒன்று என்றும், அது தெய்வீக வார்த்தைகளுடனும், நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியுடனும் இசைவாய் இருப்பதையும் மற்றும் இவைகளை நிறைவுப்படுத்தும் இளநீல தொங்கல்களாக அது இருக்கின்றது என்றுமுள்ள ஒருமித்தக் கருத்தில் பார்க்கின்றார்கள் என்று நாம் அறிவோமானால், இதினிமித்தம் நாம் பெரிதும் களிகூருவோம். அந்த வாக்குறுதிக்குக் கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி

என்ன மறுப்புத் தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் யாராலும் இருக்க முடியாது. அவர்களின் மறுப்பானது, அவர்களின் இருதயத்தினுடைய நோக்கங்களில் ஏதேனும் தவறு காணப்படக்கூடும் அல்லது அவர்களது புரிந்துகொள்ளுதலில் ஏதேனும் குறைபாடு இருக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டுகின்றது என்று நம்மில் சிலருக்குத் தோன்றலாம். எனினும் மிகவும் நன்றாய் நியாயந்தீர்ப்பதற்கு நாம் வல்லவர்களல்ல. "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

வாக்குறுதியை எடுத்துக்கொண்டுள்ளவர்களுக்கும், அதுகுறித்த ஒருமித்த கருத்தினைக் கொண்டிருப்பவர்களுக்கும், மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முன்னுரிமைக் கொடுக்கப்படலாம் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. எனினும் ஒருவேளை சபையாரை வழிநடத்துவதற்குத் திறமிக்கவர்களாய் இருக்கும் சகோதரர்கள், மற்ற அனைத்து விதங்களிலும் ஏற்கத்தகுந்தவர்களாகவும், வாக்குறுதியினை எதிர்க்காத வர்களாகவும் இருப்பார்களானால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாகவே - தங்களால் முடிந்தமட்டும், வாக்குறுதி உள்ளடக்கியுள்ள காரியங்கள் அனைத்திற்கும் இசைவாக தாங்கள் வாழ்வதாகக் கூறிக்கொண்டு, அந்த எளிமையான வாக்குறுதி மற்றவர்களுக்கு உதவியாக இருக்க, அந்த வாக்குறுதியைத் தாங்கள் எடுப்பது என்பது ஏதேனும் விதத்தில் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தினால், அதை எடுக்க மறுக்கிறவர்களாக மாத்திரம் காணப்படுபவர்களுக்கும் பொருந்தும். நம்மால் ஒருவேளை அவர்கள் இருதயங்களினுடைய எண்ணத்தினையோ, அவர்களது மனதின் விவாதங்களையோ புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், எனினும் இம்மாதிரியான தருணங்களில் நம்மால் புரிந்து கொள்ள அல்லது உணர்ந்துகொள்ள முடியாதவைகளை விட்டுவிடலாம்.

---

R4033

## தேவனோடே போர்ப்புரிதல்

ஆலோசனை சங்கத்தாரிலுள்ள தனது யூத நண்பர்கள் ஆதிகால சீஷர்களைக் கடினமாய்க் கையாண்டிட முற்பட்டபோது, அவர்களுக்குக் கமாலியேல் கூறின அறிவுரையில், இவரது ஞானம் விளங்குகின்றது. இவரது ஞானமுள்ள வார்த்தைகள் பின்வருமாறு: "இஸ்ரயேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் இந்நாட்களுக்கு

முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறு பேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அவர்களுக்குப் பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்து போனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ் செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்த தேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்" (அப்போஸ்தலர் 5:35-39). அந்தோ பரிதாபம்! கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்களும் மற்றும் பரிசுத்த ஆவியில் கொஞ்சம் பங்கடைந்துள்ளவர்களும் மற்றும் ஓரளவுக்குக் கிறிஸ்துவின் பள்ளியில் போதிக்கப்பட்டிருப்பவர்களும் மற்றும் ஓரளவுக்குப் பரத்திலிருந்து வரும் ஞானத்தினைப் பெற்றிருப்பவர்களுமானவர்களில் மிக அதிகமான பேர்கள் - அந்தோ பரிதாபம்! இப்படிப்பட்டவர்களில் மிக அதிகமான பேர்கள் மேலே மேற்கோளிடப்பட்டுள்ளதான கமாலியேலின் வார்த்தைகளில் வெளிப்பட்டுள்ளதான ஞானத்தைப் பார்க்கிலும் குறைவான ஞானத்தை உடையவர்களாய் இருக்கின்றனர்.

சில ஜனங்கள் சுபாவப்படி எதிர்த்துப் போராடும் மனப்பான்மையை மிகவும் குறைவாய்க் கொண்டிருப்பதினால், இவர்கள் குணலட்சணத்தினுடைய பலத்தின் விஷயத்தில் குறைவு உடையவர்களாகவும், எளிதில் வசப்படுகிறவர்களாகவும், "பலமில்லாதவர்களாகவும்" காணப்படுகின்றனர்; இவர்கள் ஜெயங்கொள்வதற்கான தன்மைகளில் குறைவுபட்டவர்களாகவும், சத்தியம் மற்றும் நீதிக்கு ஆதரவாய்த் தாங்கள் நிற்கத்தக்கதாகப் பரத்திலிருந்து வரும் கிருபையையும், உதவியையும் தொடர்ந்து நாடவேண்டியதன் அவசியம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இப்படிச் செய்யவில்லை என்றால் இவர்கள் முற்றிலும் ஜெயங்கொள்பவர்களாகுவதற்கு நிச்சயமாய் எதிர்ப்பார்த்திட முடியாது. குணலட்சணத்தையும், உறுதியையும், பலத்தையும், அதோடுகூடச் சாந்தத்தையும், நிதானத்தையும், பொறுமையையும், அன்பையும் கொண்டிருப்பவர்களை, தம்முடைய சிறு மந்தைக்காக கர்த்தர் நாடித்தேடுகின்றார். எனினும் கர்த்தர் நாடுகின்றதான இத்தகைய இன்பகரமான கலவை எங்குமே காணப்படுவதில்லை. அவரிடத்திற்கு வருபவர்கள் யாவரும், தாங்கள் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக சிலவிதங்களில் நெறிப்படுத்தப்படுவது/மாற்றப்படுவது அவசியமாய் இருக்கின்றது. ஆகையால் வலுவான குணலட்சணங்களை உடைய சிலர் இயல்பாகவே மிகவும் பலமாய் எதிர்த்துப் போராடும் தன்மையினை உடையவர்களாய் இருப்பதினால், இது

இவர்களைத் தொடர்ந்து பிரச்சனைக்குள்ளாக்குகின்றது மற்றும் இது கட்டுப்படுத்தப்படுவதும், வரைமுறைக்குள் வைக்கப்படுவதும் அவசியமாகுகின்றது.

இரண்டு வகுப்பாரில், யாருக்கு மற்றவரைக்காட்டிலும் அநுகூலம் உள்ளது என்று சொல்வது சிரமமே. ஒரு வகுப்பார் கட்டுப்படுத்திட வேண்டியதை, மற்ற வகுப்பார் வளர்த்திக்கொள்ள வேண்டும் மற்றும் அநேகமாக அனைத்துக் காரியங்களையும் கருத்தில் எடுத்துப் பார்க்கையில், ஓட்டத்தில் ஜெயம் அடையும் விஷயத்தில் வாய்ப்புகள் இருவகுப்பாருக்குமே சமமாகவே உள்ளது. எனினும் அதிகமாகப் போராடும் மனப்பான்மை உடையவர்கள், ஆவேசமானவர்கள், பலவந்தம்பண்ணுகிறவர்கள் பொதுவாகவே இத்தன்மைகளின் நிமித்தம் சபையில் பெரிதும் கவனத்திற்குள்ளாவார்கள் மற்றும் ஒருவரையொருவர் அன்பு கூருகின்றவர்கள் மத்தியில் இவர்களுக்குச் சத்துருக்கள் உண்டாவதில்லை என்றாலும், இவர்கள் பொதுவாகவே மிகுதியான எதிர்ப்பினை அடைபவர்களாய் இருப்பார்கள். மிகவும் வளைந்துகொடுப்பவர்களும் மற்றும் பணிவுடையவர்களும் - தங்களைக்குறித்துத் தாங்களே நல்லெண்ணம் கொண்டிருப்பதற்கும் மற்றும் இராஜ்யத்திற்கான இவர்களது தகுதிகள் தொடர்புடைய விஷயத்தில் மற்றவர்களாலும் மிகவும் அன்போடு/நல்லெண்ணத்தோடு கருதப்படுவதற்கும் வாய்ப்புள்ளது. வலுவானவர்களும், பலவந்தமானவர்களும் மற்றவர்களினால் மிகவும் கடுமையாகக் கண்டிக்கப்படுவதற்கும் மற்றும் இதுகுறித்து, அவர்கள் ஒன்றுமே தெரியாதவர்களாகவும் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. ஓ! நாம் அனைவரும் தெளிந்த புத்தியுள்ள மனங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்! ஆனால் இது கூடாத காரியம் என்பதினால், ஓ! நாம் அனைவரும் தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியினையும் மற்றும் தெய்வீக அளவுகோலுடன் நம்மை ஒப்பிட்டுப்பார்க்க முடியும் ஆற்றலையும் அதிக அளவில் பெற்றுக்கொள்வோமாக!

இந்த வார்த்தைகளானது, அதிகளவிலான போராடும் மனப்பான்மையினால் சிரமப்படும், மிகவும் ஆவேசம் கொள்வதற்கு ஏதுவாய்க் காணப்படும் அன்புக்குரிய சகோதரருக்கும் மற்றும் சகோதரிகளுக்கும் உதவும் வண்ணமாக விசேஷித்த நோக்கத்துடனே சொல்லப்பட்டுள்ளது. பன்னிரண்டு பேர்கள் மத்தியிலிருந்து கர்த்தர் சில விதங்களில் தமக்கு அபிமானமானவர்கள் என்று அப்போஸ்தலர்களிலேயே மிகவும் ஆவேசமிக்க மற்றும் தீவிரமான மூன்று பேர்களாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானைத் தேர்ந்தெடுத்தப்போது, அவர் வலுவான பாத்திரங்களுக்கான தம்முடைய பிரியத்தினைத் தெளிவாகவும், குறிப்பாகவும் வெளிப்படுத்தினவராய் இருந்தார். ஆகையால் சுபாவத்தின்படி ஆவேசமிக்க தன்மையுடையவர்கள், இத்தன்மையானது - "நல்லது" என்ற கர்த்தருடைய வார்த்தையினைத் தாங்கள் அடைவதற்குத் தடையாக உள்ளது என்று எண்ணிடக்கூடாது; மாறாக இத்தன்மையானது - கட்டுப்படுத்தப்பட்டு, சரியான வரைமுறைக்குள்ளாகக்

கொண்டுவரப்பட்டால் - நல்ல தன்மையாய்க் காணப்படும். இவர்கள் கமாலியேல் போன்று, தங்கள் போராடும் மனப்பான்மையினையும் மற்றும் ஆவேசமான தன்மையையும் கர்த்தருக்கு எதிராகவும், சத்தியத்திற்கு எதிராகவும், சகோதரருக்கு எதிராகவும் பயன்படுத்திடுவதற்கு ஏதுவாய் இருக்கும் அபாயத்தினைக் கண்டுகொள்ள வேண்டும்.

“யாருக்கு ஊழியம் புரிகின்றீர்களோ அவருக்கு நீங்கள் ஊழியக்காரர்கள்” என்று நமது கர்த்தர் கூறுகின்றார் (உரோமர் 6:16). யாருக்கு ஊழியம் புரிவதாக நாம் அறிக்கைப்பண்ணுகின்றோம் என்பதோ, யாருக்கு நாம் ஊழியம் புரிவதாக நாம் எண்ணிக்கொள்கின்றோம் என்பதோ கேள்வியாய் இராமல், மாறாக யாருடைய காரணங்களுக்காக நாம் உண்மையில் ஊழியம் புரிகின்றோம் என்பதே கேள்வியாய் இருக்கின்றது. இக்கண்ணோட்டத்திலிருந்து, இன்றுள்ள கிறிஸ்தவ மண்டலத்தை ஏறெடுத்துப் பார்த்து, நாம் நம்மிடமே கேட்டுக்கொள்ள வேண்டியதாவது: எத்தனை பேர் தேவனுக்கு ஊழியம் புரிகின்றார்கள்? மேலும் எத்தனைபேர் உண்மையில் எதிராளியானவனுக்கு ஊழியம் புரிந்துகொண்டிருக்க - தேவனோடே போர் செய்து, கிறிஸ்தவ மண்டலத்துக்கு ஊழியம் புரிந்து கொண்டிருக்க, தாங்கள் தேவனுக்கு ஊழியம் புரிவதாகக் கற்பனை பண்ணிக்கொண்டிருக்கின்றனர்? சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக்கொள்ளும் பல்லாயிரம் பேர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக்கொள்ளும் பலகோடி பேர்கள் மெத்தேடிஸ்ட், பேப்டிஸ்ட், கத்தோலிக்கர் முதலான பல்வேறு கொடிகளின் கீழ்ப் போராடிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். ஆனால் இவர்கள் யாரோடு போர்ப் புரிந்து கொண்டிருக்கின்றனர்? சாத்தானோடா? தப்பறையோடா? இவர்களில் அநேகர் தர்சு பட்டணத்துச் சவுலைப் போன்று, சீக்கிரத்தில் பின்வரும் உண்மைக்கு - அதாவது சிலுவையின் போர்ச் சேவகர்களாய் இருப்பதற்குப் பதிலாக, தாங்கள் தேவனுக்கு எதிராயும், சிலுவையின் உண்மையான போர்ச் சேவகர்களாகிய, ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியார்களுக்கு எதிராகவும் போர்ப் புரிபவர்களாக இருந்துள்ள உண்மைக்குத் தங்களது கண்களைத் திறக்கப் பெற்றிருப்பார்கள். அப்போது இவர்களுக்கு இது எத்தகைய கசப்பான ஏமாற்றமாயிருக்கும்! இவர்கள் மாபெரும் பிரதான அதிபதியின் கட்டளைகள் மற்றும் வழிநடத்துதலின்படி போர்ச் செய்யாமல், கிரியை புரியாமல் “இருண்ட யுகங்களில்” மரித்து, அடக்கம் பண்ணப்பட்டதான சிலரை உள்ளடக்கின மனித தலைவர்கள் மற்றும் அதிபதிகளின் கட்டளைகள் மற்றும் வழிநடத்துதல்களின்படியே செய்கின்றார்கள் என்று கண்டுணரத்தக்கதாக, மாபெரும் பிரதான அதிபதியினுடைய கட்டளைகளை, இப்பொழுது அவர்கள் கண்நோக்கும்படிக்கு அவர்களை விழிக்கப்பண்ணுவதற்கு நாம் எவ்வளவாய் விரும்புகின்றோம்.

பரலோகத்திலிருந்து ஒருவேளை சத்தியமானது, திடீரெனப்

பிரகாசிக்கப்பண்ண முடிந்ததானால், சபை பிரிவுணர்ச்சிக்காக இப்பொழுது போராடிக்கொண்டிருப்பவர்களும் மற்றும் அந்திக்கிறிஸ்துவுக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்களுமான இந்தப் பலமான பாத்திரங்களில் அநேகர் அதிர்ச்சியடைந்து, அவமானமடைந்து, "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?" என்று கதறி ஆண்டவரின் பாதத்தில் விழுவார்கள் என்று நாங்கள் எண்ணுகின்றோம்.

"பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்றுள்ள அப்போஸ்தலன் வாயிலான கர்த்தருடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்வோமாக (1 பேதுரு 5:5, 6). இந்த வார்த்தைகளானது நாம் சுட்டிக் காண்பித்துள்ளதான தவறுகளுக்கான விடையாக இருக்கின்றது என நாம் விசுவாசிக்கின்றோம். கொஞ்சம் பெருமையினால் தாக்கத்திற்குள்ளான வலுவான ஒருவர், தன்னால் திரும்பிட கிட்டத்தட்ட முடியாத தவறான நடக்கையினைக் கொண்டிருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் ஒருவேளை தாழ்மை காணப்பட்டால், இதற்கேற்ப போராடும் மனப்பான்மையும், வலுவான தன்மையும் கட்டுப்பாட்டிற்குள் காணப்படும் மற்றும் அந்நபருக்குக் கர்த்தரிடமிருந்து சரியான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதும் மற்றும் அதைப் பின்பற்றுவதும் மற்றும் இராஜ்யத்தில் ஓர் இடத்தினைப் பெற்றுக்கொள்வதற்கெனத் தகுதியாகிடுவதும், மெருகூட்டப்படுவதும், ஆயத்தமாக்கப்படுவதும் அதிகம் சுலபமானதாயிருக்கும். இதே கொள்கையானது, தற்கால சத்தியத்தினுடைய வெளிச்சத்தினைக் கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதமாக ஏற்கெனவே பெற்றுக்கொண்டவர்கள் மத்தியிலும் பொருந்துகின்றதாய் இருக்கும். நாம் குணலட்சணத்திலும், பலத்திலும் மிகவும் குறைவுபட்டிருந்தோமானால், அதை ஒப்புக்கொண்டு, அதைக் கர்த்தரிடமிருந்து நாடிப் பெற்றுக்கொள்வதற்கு உதவும் தாழ்மையானது நமக்கு இன்னமும் அவசியமாயுள்ளது. கர்த்தருக்கு எதிராகவோ அல்லது சத்தியத்திற்கு எதிராகவோ அல்லது சகோதரருக்கு எதிராகவோ போர்ப் புரிபவர்களாக நாம் காணப்படாதபடிக்கு, வார்த்தை, கிரியை, சிந்தை அனைத்தும் கர்த்தருடைய சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்திலும்கூட ஒவ்வொரு வார்த்தையையும், கிரியையையும், சிந்தையையும் கவனமாய்க் கவனித்துக்கொள்ளும் தாழ்மையானது நமக்கு இன்னமும் அவசியமாயுள்ளது. நம்முடைய சொந்த அனுபவங்களில் மாத்திரமல்லாமல், மற்றவர்களுடைய வார்த்தைகளிலும், அனுபவங்களிலும்கூடக் கர்த்தருடைய வழிநடத்துதல்களுக்காக நாம் கவனித்திருப்பதற்கும் மற்றும் குறிப்பாக அனைத்தையும் நம்முடைய சொந்த கருத்துக்கள், விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் அல்லாமல், தெய்வீக நிலைப்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்திடுவதற்கும் நாம் எத்துணைக் கவனத்துடன் காணப்பட வேண்டும்!

# பரலோக இராஜ்யத்தில் பெரியவன்

## மத்தேயு 18:1-14

மறுரூப மலையின் சம்பவத்தின்போது, கர்த்தரோடுகூட அங்குக் காணப்படாத சீஷர்கள், தரிசனத்தைப் பார்த்திட்டவர்களும், அதைப் பிற்பாடு தங்களுக்குத் தெரியப்படுத்தினவர்களுமானவர்கள் மீது கொஞ்சம் பொறாமை அடைந்தனர். இது மலையில் கர்த்தரோடுகூடக் காணப்பட்டதான பேதுருவும், யாக்கோபும், யோவானும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் மற்றச் சீஷர்களைக் காட்டிலும் மிக அதிகமாய்ச் சலுகைகள் பெற்றுக்கொள்வார்கள் என்பதைக் குறிக்கக்கூடுமோ? இயேசுவுக்குப் பின் சற்றுத் தொலைத் தூரத்தில் அவர்கள் பிரயாணம்பண்ணிக்கொண்டிருக்கையில், வரவிருக்கின்ற இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்பது தொடர்பான வாக்குவாதம் சூடேறியது. அவர்களது வாக்குவாதங்கள் என்ன என்பதை நமது கர்த்தர் அப்போதே அறிந்திருந்தார் மற்றும் மிகவும் தவறாய்க் காணப்படுபவர்களை மட்டும் தனித்துக் கடிந்துகொள்வதற்குப் பதிலாக அவர் இக்காரியத்தினைப் பொதுவான படிப்பினையாகவும், யாவருக்கும் பிரயோஜனமாகவும், உதவிகரமாகவும், பலப்படுத்துகிறதாயும் இருக்கும்படி செய்தார். அவரது மாதிரியானது அவரது பின்னடியார்களுக்கு விலையேறப் பெற்றதாய் இருக்கின்றதல்லவா? நாமும் முடிந்தமட்டும் தனி மனித பண்புகளையும் மற்றும் தனிப்பட்ட ஏதேனும் ஒரு நபரையும் குறித்து விசேஷமாய்க் குறைகூறுவதை/விமர்சனத்திற்குள்ளாக்குவதைத் தவிர்ப்பது ஞானமான காரியமாய் இருக்குமல்லவா? மனுக்குலம் யாவரிடத்திலும் குற்றங்களும், குறைகளும், ஒருவருக்கு ஒன்றிலும், இன்னொருவருக்கு இன்னொன்றிலும் காணவேபடுகின்றது மற்றும் விசேஷமாகக் கடுமையாய்க் கண்டிப்பதற்கெனக் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருவரைத் தனியாகப் பிரிப்பது ஞானமாய் இருந்ததில்லை; இத்தருணத்தில் ஆண்டவர் செய்ததுபோன்று செய்வது நலமானதாய் இருக்கும் - அதாவது அனைவருக்கும், தவறுச் செய்தவருக்கும், தங்களின் கண்ணோட்டங்களிலும், முடிவுகளிலும் கிட்டத்தட்ட சரியாய்க் காணப்படுபவர்களுக்கும் கூட உதவிக்கரமாய் இருக்கும் விதத்தில் அவ்விஷயம் குறித்த பொதுவான படிப்பினையைக் கொடுப்பதாகும்.

தற்காலத்தில் சபையானது, இராஜ்யமானது - கருநிலைமையில், இன்னும் மகிமைப்படுத்தப்படாமல், உலகத்தால் அடையாளம் கண்டுகொள்ளப்படாமல் காணப்படுகின்றது; ஆனால் சபை ஒருவர் இன்னொருவரினாலும், கர்த்தரினாலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. சகோதரர் மத்தியில் தாழ்மையும், குழந்தைக்கு ஒத்த தன்மையும், கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி உண்மையான மேன்மைக்கான அடையாளமாக மதிக்கப்பட வேண்டும்.

குழந்தைக்கு ஒத்த தன்மையுள்ள வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் - பூமியின் குடிகள் யாவையும் ஆசீர்வதிக்கும் தேவனுடைய பிரதிநிதியென இராஜ்யமானது வல்லமையிலும், மகா மகிமையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கையில், எதிர்க்காலத்தில் - மிக உயர்வாய்க் கனப்படுத்தப்படுவார்கள் என்பதில் நிச்சயமே.

தாழ்மையுள்ளவர்கள், கற்பிக்கப்படத்தக்கவர்கள், எளிமையானவர்கள், மாய்மாலமற்றவர்கள் - பெரியவர்களென எண்ணப்பட வேண்டும் எனும் இக்கருத்திற்கு இசைவாக, அனைத்துச் சபைகளிலும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின அனைத்துக் கூட்டங்களிலும், சபையில் மூப்பர்த்துவத்திற்கும், முதன்மையான ஊழியங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், சபையாரிலேயே மனதிலும், நடத்தையிலும் மிகத் தாழ்மையாய்க் காணப்படுபவர்கள் மத்தியிலிருந்து எடுக்கப்பட்டவர்களாக இருப்பதைக் காணவே நாம் எதிர்ப்பார்த்திட வேண்டும். ஆனால் இப்படி இல்லாமல் வேறு நிலைமைக் காணப்படுமானால், அது நம்முடைய இப்பாடத்தினுடைய சம்பவம் தொடர்பான கர்த்தருடைய கருத்தினைச் சபையார் சரியாய்ப் புரிந்துகொள்ளவில்லை மற்றும் உணர்ந்துகொள்ளவில்லை மற்றும் அதற்குக் கீழ்ப்படியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

எனினும் இது ஐந்து தாலந்துகளையுடைய சகோதரன் அவற்றைக்குறித்து முற்றிலும் உணர்வற்றவராகவும், அவற்றைப் பயன்படுத்தாமல் அலட்சியம் பண்ணுபவராகவும் காணப்பட வேண்டும் என்று குறிப்பதாகாது. இது இவர் சகோதரர் மத்தியில் வேறு சிலர் கொஞ்சம் தாலந்துகளை உடையவர்களாய் இருக்கின்றனர் என்ற காரியத்திற்குக் கண்களை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்று குறிப்பதாய் இராது; மாறாக இது இவர் தனது தாலந்துகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில், அதைக் கர்த்தருடைய காரணங்களுக்கடுத்த நன்மைக்காகப் பயன்படுத்திட வேண்டும் என்ற விருப்பத்தை மாத்திரமே கொண்டிருக்குமளவுக்கு, அத்தகையதொரு அன்பையும், அத்தகையதொரு தாழ்மையையும் பெற்றிருக்க வேண்டுமென்று குறிக்கின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக தன்னுடைய தாலந்துகளை - தனிப்பட்ட இலட்சியங்களுக்காகவும், தற்பெருமையாய்ப் பேசுகிறதற்காகவும் அல்லது தன்னுடைய தாலந்துகள் மாத்திரம் அடையாளம் கண்டுகொள்ளப்படத்தக்கதாக, மற்றவர்களுடைய தாலந்துகளை, வாய்ப்புகளை மற்றும் சிலாக்கியங்களை நசுக்கிட நாடிடுவதற்காகவும் - பயன்படுத்துவதற்கு ஒரு கணம்கூட இவர் சிந்தியாதளவுக்கு, இவர் மிகவும் தாழ்மையான மனதையும், கர்த்தருக்காக மிகுந்த வைராக்கியத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இது இவர் ஐந்து தாலந்துகளை உடையவராய் இருப்பாரானால் மற்றும் சரியான, குழந்தைக்கொத்த தாழ்மையின் ஆவியினைப் பெற்றிருப்பாரானால், இவர்

அருமையான சகோதரரிடத்தில் அப்படியொரு அக்கறைகொண்டிருந்து, கர்த்தருடைய முழுக்காரணத்திற்கடுத்த நன்மைக்காகவும், பல்வேறு சகோதர சகோதரிகளுடைய கட்டியெழுப்பப்படுதலுக்கும், பெலப்படுத்தப்படுதலுக்கும் மற்றும் பரஸ்பர பக்திவிருத்திக்கும் ஏதுவாய்க் காணப்படும் விதத்தில், அந்தச் சகோதர சகோதரிகளின் பல்வேறு தாலந்துகளானது உபயோகமாகத்தக்கதாகவும் - இவர் தன்னால் முடிந்த நியாயமான அனைத்தையும் செய்திடுவார் என்பதைக் குறிப்பதாய் இருக்கும்; இப்படியாகக் கிறிஸ்துவின் முழுச்சரீரமும், அதன் குறைவுகளையும், தேவைகளையும் மற்றும் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலுமான ஆறுதல்களையும் சந்தித்துக்கொள்ளும்.

---

R4163 & R2449 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

கர்த்தருடைய பின்னடியார்களாக உண்மையாய்க் காணப்படும் அனைவரும் சாந்தம் மற்றும் தாழ்மை மற்றும் அவருடைய சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிதல் எனும் போதகரின் ஆவிக்கான உண்மையான மாதிரிக்குக் கவனமாய்க் கவனித்து, அப்படியே பின்பற்றுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இக்காரியங்கள் அனைத்தும், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான் களாயிருப்பீர்கள்" என்ற வார்த்தைகளுக்குள் அடங்குகின்றது (யோவான் 13:16, 17).

தாலந்துகளோ அல்லது திறமைகளோ உடையவர்களும் அல்லது வாழ்க்கையில் கனம் வாய்ந்த ஸ்தானங்கள் வகிப்பவர்களும் மற்றும் சபையில் செல்வாக்கு நிறைந்த ஸ்தானங்களில் விசேஷமாகக் காணப்படுகிறவர்களுமாகிய கர்த்தருடைய ஜனங்களில் அநேகர், விசேஷமாக போட்டி மனப்பான்மை, வாக்குவாதம் பண்ணும் மனப்பான்மை, வீண் செருக்குக்கொள்ளும் தன்மை முதலியவைகளினால் ஆட்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆகவே மாம்சத்தின் இந்த விஷயங்களுக்கு எதிராக விசேஷ வண்ணமாக ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும் என்றபோதிலும், "பொறாமையுடன் ஏறெடுத்துப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமை உண்டு மற்றும் ஏளனத்துடன் கீழாய்ப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமையும் உண்டு" என்ற வாசகமானது மறக்கப்படக் கூடாது. எவ்விஷயத்தைக்

குறித்தாகிலும் பெருமை காணப்படுமாகில் அது தேவனுடைய பார்வையில் குற்றத்திற்குரியதாகவும், அவருக்குப் பிரியமற்றதாகவும் காணப்படும். "பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ள வர்களுக்கோ அவர் கிருபையளிக்கின்றார்." ஆகவே, கர்த்தருடைய அன்பில் நிலைத்திருக்கிறவர்கள் தாழ்மையாய் இருக்கும் விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். அதாவது, மிகவும் தாழ்மையாக, நடத்தையில் மிகவும் தாழ்மையாக, எளிமையாக, குறிப்பாக மனதில் தாழ்மையாக இருப்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும் (யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5).

---

R5321

# சீஷத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி

*"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்." (மத்தேயு 20:27)*

சரியான விருப்பங்களானது, அதை உடையவருக்கும் மற்றும் அவர் தொடர்புக்குள் வருகிறவர்களுக்கும் மிகவும் பிரயோஜனமானதாகும். நம்முடைய கர்த்தர் விருப்பம் ஒன்றினைப் பெற்றிருந்தார். அவரைக் குறித்து, "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்தார்" என்று நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 12:2). தகுதியான தூண்டுதல்கள் என்பவைகள் இருக்கின்றன; இல்லையேல் பிதா இப்படியான ஒன்றைத் தம்முடைய குமாரனுக்கு முன்பாக வைத்திருக்க மாட்டார். இந்தத் தற்காலத்தினுடைய காரியங்களில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தோமானால், கர்த்தர் நம்மை அநேகவற்றின்மீது அதிகாரியாக வைப்பார் என்ற சிந்தையே நம்மை ஊக்குவிக்கின்றதாய் இருக்க வேண்டும். தேவனை அன்பு கூருகிறவர்களுக்கெனத் தேவன் வைத்து வைத்துள்ளதானவைகளை அடைவதற்கான தீவிரமான விருப்பம் என்பது நலமார்ந்ததேயாகும்; ஏனெனில் இவைகள் தேவனுடைய ஆசீர்வாதங்களாய்க் காணப்படுகின்றன.

ஒவ்வொரு புதுச்சிருஷ்டியும் உயர்வான விருப்பங்களைக் கொண்டிருக்கின்றனர். உண்மையைச் சொல்லப்போனால், ஒவ்வொருவனும் தான் நாடுகின்ற காரியத்திற்கு நேரான குறிக்கோள் ஒன்றினைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அதை அடைவதற்கான இவ்விருப்பத்தினைக் கொண்டிருப்பது என்பது,

விருப்பத்திற்குப் பின்னாக ஒரு நோக்கம் காணப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். மனதிற்கு முன்பாகச் செயல் தூண்டுதல்களைப் பெற்றிருப்பது சரியே மற்றும் எவைகள் நாம் பிரயாசங்கள் எடுப்பதற்குப் பாத்திரமானவைகள் என்று அறிந்துகொள்வதும் சரியே; இல்லையேல் தவறானவைகள் நம்மைத் தவறான வழிக்கு வழிநடத்திவிடும். நம்முடைய ஆதார வசனத்தில் மிகவும் நலமார்ந்த விருப்பம் ஒன்று நம்முன் வைக்கப்படுகின்றது.

கிறிஸ்துவின் பிரதிநிதியாகக் காணப்படும் சபையானது, மாம்சத்தில் இருக்கும் நமது கர்த்தருடைய சபையாக இருக்கின்றது. விருப்பங்கள் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பேசுகையில், தாங்கள் மந்தைக்குப் போதகர்களாக, அறிவுரை வழங்குபவர்களாக ஆகத்தக்கதான மிகவும் பிரயோஜனத்திற்கு ஏதுவான விருப்பங்களைக் கொண்டிருக்கும்படியாகச் சபைக்கு அறிவுரை கூறுகின்றார்; ஏனெனில் இது சபையில் மிகவும் பயனுள்ள ஊழியமாய்க் காணப்படுகின்றது. பரிசுத்த பவுல் அடிகளாரின் நாட்களில் காணப்பட்ட வரங்களில் ஒன்று, அந்நிய பாஷையில் பேசுதல் என்பது தெரிந்த விஷயமாகும். அது மிகவும் குறிப்பிடத்தக்க வரமாகும். ஆனாலும் சபையில் பிரயோஜனமுள்ளதாய்க் காணப்படும் வரங்களை நாடுகிறது போல், இந்த அந்நிய பாஷைபேசும் வரமானது அவ்வளவுக்கு நாடப்பட வேண்டாம் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அற்புதகரமான வரங்களைத் தற்காலத்தில் நாம் பெற்றிருக்கிறதில்லை; ஆனாலும் நாம் தேவவசனத்தையும் மற்றும் கர்த்தருடைய சத்தியத்தினை அறியப்பண்ணிடுவதற்கான விருப்பத்தையும் பெற்றிருக்கின்றோம். ஆகையால் பேச்சாற்றலுக்கான வரமானது இன்னும் விரும்பத்தக்கதாகவே காணப்படுகின்றது. மேலும் ஆவியின் கனிகளானது, நம்மேல் அடக்கியாளும் தாக்கத்தினைச் செலுத்தத்தக்கதாக, நாம் ஆவியின் கனிகளைப் பெற்றுக்கொள்ள வாஞ்சித்திட வேண்டும் என்று அப்போஸ்தலன் அடுத்ததாகச் சுட்டிக்காட்ட முற்படுகின்றார்.

## ஒவ்வொரு சபையாரின் மீதான பொறுப்பு

சபையில் ஊழியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தாம் அதை ஏற்படுத்துவார் என்று கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார். "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18). சரீரத்தில் இப்படியாக தேவன் ஏற்படுத்தியுள்ளார்; உதாரணத்திற்குக் கண்ணினுடைய பணியினைப் பார்க்கலாம். கண் எனும் அவயம் மனித சரீரத்திற்கு உதவி செய்கின்றபடியால் சபையின், கண் அவயமென இருப்பவர்கள், கிறிஸ்துவின் சரீரத்திற்கு மிகவும் உதவியாய் இருப்பார்கள். காது எனும் அவயங்களும், கால் எனும் அவயங்களும், கைகள் எனும் அவயங்களும் மற்றும் நாவு எனும் அவயங்களும் இருக்கின்றனர். இந்த வெவ்வேறு அவயங்களானவர்கள் முழுச்சரீரத்திற்கான நலனுக்கடுத்த விஷயங்களில் வெவ்வேறான ஊழியங்களைப் புரிகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். கையானது, காலை நோக்கி: நீ எனக்கு வேண்டுவதில்லை என்றோ அல்லது மாறி மாறி இப்படியாகச் சொல்லக் கூடாது

(1 கொரிந்தியர் 12:14-31).

ஒருவேளை சரீரமானது கையைக்கொண்டு நடக்க முற்படுமானால், அது திவ்விய ஒழுங்காய் இராது. சரீரமானது காலினாலேயே நடக்க வேண்டும். இப்படியாகவே சபையாரிலும் இருத்தல் வேண்டும். ஆனால் ஒருவேளை சபையார் மிகுதியாய்க் கால் அவயங்களாய் இருப்பவர்கள் மீது சார்ந்து இருப்பார்களெனில், சபையார் கை அவயங்களாய் இருப்பவர்களின் பிரயோஜனத்தை இல்லாமலாக்கி விடுபவர்களாய் இருப்பார்கள். பல்வேறு அவயங்களானது, மிகுந்த பலனுக்கேதுவான ஊழியத்தினைச் செய்வதற்கு ஏதுவான ஊழியங்களில் காணப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் ஒவ்வொரு நபர் செய்யத்தக்கதாக தேவன் ஆயத்தம் பண்ணியுள்ளதான ஊழியத்தினைக் குறித்து அறிந்துகொள்வதற்குச் சபையார் நாடிட வேண்டும். சரியான நபரை, சரியான இடத்தில் வைப்பதற்குத் தங்களது சிறந்த பகுத்துணர்தலைப் பயன்படுத்திடுவதற்கு அவர்கள் நாடிட வேண்டும்.

கால்களைக்கொண்டு இல்லாமல், கைகளைக்கொண்டு நடக்க முயற்சித்துக்கொண்டிருக்கும் சபையார்களை நாம் அவ்வப்போது காண்கின்றோம். அந்தச் சபையார் தெய்வீக வழிநடத்துதலினால் ஒவ்வொரு அங்கத்தினனும் விசேஷமாய்த் தகுதிப்படுத்தப்பட்டுள்ள ஸ்தானத்தில், ஒவ்வொரு அங்கத்தினனையும் வைத்திடுவதற்குத் தவறியுள்ளனர். இப்படியாகச் செய்வது சபையாருடைய கடமையாக இருக்கின்றது. எனினும் ஒருவேளை சபையார் சரீரத்தைக் கால்களைக் கொண்டு நடப்பதற்குப் பதிலாக, கைகளைக்கொண்டு நடக்கப்பண்ணுவதற்கு முயற்சிப்பார்களானால், காலப்போக்கில் கைகளை அதற்குரிய இடத்தில் வைத்திடுவதற்கும் மற்றும் கால்களை அதற்குரிய இடத்தில் வைத்திடுவதற்கும் சபையார் கற்றுக்கொள்வார்கள் மற்றும் இறுதியில் ஒவ்வொரு அங்கத்தினனும் தான் எப்பணிக்குப் பொருத்தமானவனோ, அப்பணியினைச் செய்திடுவான்.

## தேவனுடைய ஊழியத்திற்கு இன்றியமையாததான தாழ்மை

அங்கத்தினர்கள் தவறான ஸ்தானங்களில் காணப்படுவது மாத்திரம் சபையாருக்குப் பாதகமாய்க் காணப்படுவதில்லை; தாங்கள் செய்ய வேண்டிய ஊழியங்களை விட்டு மற்ற ஊழியங்களைச் செய்திட அங்கத்தினர்கள் முயற்சிப்பதும் தவறான காரியமாகும். நாம் எதைச் செய்ய முடிகிற சுபாவமுடையவர்களாய் இருக்கிறோமோ, அதிலிருந்து நம்மையே மாற்றிக் கொள்வது நம்முடைய அதிகாரத்திற்குட்பட்டதல்ல. சரீரத்தில் இன்னொரு பாகத்தில் ஊழியம் புரிவதற்குத் தெய்வீக வல்லமை மாத்திரமே நம்மை ஆயத்தப்படுத்த முடியும். கிறிஸ்துவின் சரீரத்திற்கு உண்மையில் ஊழியம் புரிய வேண்டும், கர்த்தருக்கு ஊழியம் புரிய வேண்டும் என்பதே நம்முடைய சரியான

மனப்பான்மையாகக் காணப்பட வேண்டும். நம்மால் செய்ய முடிகின்றதான ஊழியம் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ, அதை நாம் கவனித்திட வேண்டும். "உங்கள் கைக்கு அகப்படுவதெதுவோ, அதை முழுப்பெலத்தோடு செய்யுங்கள்."

வேறு யாரோ செய்துகொண்டிருப்பவைகளை, அதாவது தங்களால் மற்றவர்களிடத்தில் பாராட்டப்படுகின்றவைகளைத் தாங்கள் செய்திடுவதற்கு விருப்பங்கொள்வதே, சபையில் அநேகருடைய பிரச்சனையாக இருக்கின்றது. சமயம் வாய்க்கும் போது சகல மனுஷருக்கும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு - தங்களால் எப்போதும் செய்ய முடிகிறவைகளைச் செய்திடுவதற்கு இவர்கள் கவனித்திருப்பதில்லை. இவர்கள் சீஷத்துவத்தின் சரியான ஆவியினைப் பெற்றிருக்கவில்லை. ஆகையால் நம்முடைய ஆதார வசனத்தினுடைய கட்டளையானது, அவர்களைத் தங்களுக்குள்ளாகப் பின்வருமாறு சொல்லிட வழிநடத்திட வேண்டும்: "கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும் விதத்தில் ஊழியம் செய்வதே என்னுடைய உயர்ந்த குறிக்கோளாய் இருக்க வேண்டும் மற்றும் நான் எவ்விடத்தில்/எந்த ஸ்தானத்தில் ஊழியம் புரியலாம் என்பதை அவரே பார்த்துக்கொள்ளட்டும். இங்கு ஒரு சிறு இடம் இருக்கின்றது, ஒரு சிறு மூலை (corner) இருக்கின்றது; இங்கிருந்து என்னுடைய ஸ்தானத்தில் அவசியமாய்ச் செய்ய வேண்டியதாய்க் காணப்படுவதை நான் செய்திடுவேன். ஒருவேளை கர்த்தர் வழியைத் திறந்து, மிகவும் முக்கியமானதாய்த் தோன்றும் எதையேனும் எனக்குக் காண்பிப்பாரானால், அதை நான் கையில் எடுத்துக்கொள்வேன். நான் செய்யக் கடமைப்பட்டுள்ளதானவைகளை - அது துடைப்பத்தால் பெருக்குவதாகவோ அல்லது கூட்டத்திற்காக அறையை ஒழுங்குப்படுத்துவதாகவோ காணப்பட்டாலும், அதை என் முழுப்பலத்தோடு செய்திடுவேன். எந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்திட்டாலும், அதை நான் செய்திடுவேன்" என்பதேயாகும்.

இது நாம் விருப்பங்களைக் கொண்டிருக்கக்கூடாது என்பதைக் குறிப்பதாகாது. சபைக்கு ஊழியம் புரிய வேண்டும் என்பதே நம்மைக் கட்டுப்படுத்தி ஆளும் தூண்டுதலாகக் காணப்பட வேண்டும். இங்கு நாம் நலமார்ந்த நோக்கத்தினை, தகுதியான விருப்பத்தினைப் பெற்றிருக்கின்றோம். ஆனால் சிலர் முதன்மையானவர்கள் ஆகிடுவதற்கான குறிக்கோளை உடையவர்களாய் இருக்கின்றனர். முதன்மையான இடத்தை விரும்புகின்றவனை, அவன் நாடிடும் இடத்தினை அடைவதற்கு உதவிடக் கூடாது என்பது நம்முடைய குறிக்கோளாய் இருத்தல் வேண்டும் (மற்றும் இது கர்த்தருடைய சிந்தையாக இருக்கும் என்றும் நாம் நம்புகின்றோம்). அவனது இத்தகைய நடவடிக்கையில் அவனுக்கு உதவுதல் என்பது, அவனுக்கும் மற்றும் கர்த்தருடைய நோக்கத்திற்கும் ஊறு விளைவிக்கின்றதாய் இருக்கும். ஆனால் தன் கைக்கு அகப்படுவது எதுவோ, அதைத் தன் முழுப்பலத்தோடு செய்ய நாடுகின்ற யாரையேனும் நாம் காண்போமானால், அது கர்த்தரினால் அங்கீகரிக்கப்படும் என்று நாம்

உறுதிக்கொள்ளலாம் மற்றும் தமக்கு உண்மையாய் ஊழியம் புரிந்துள்ளதைக் கர்த்தர் அங்கீகரித்தவராக, பிற்பாடு அவனுக்கு ஏதேனும் சில மிக முக்கியமான ஊழியங்களை அநேகமாகக் கொடுத்திடுவார்.

## தன்னல நாட்டமானது எதிர்க்கப்பட வேண்டும்

கர்த்தரால் தனக்குத் தரப்படுபவைகளில் ஒவ்வொருவரும் திருப்தியடைந்திருக்க வேண்டும். அவன் தன்னல நாட்டம் உடையவனாய் இருத்தல் கூடாது. "தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்து கிறவன் உயர்த்தப்படுவான்" (லூக்கா 18:14). தன்னை உயர்த்துகிறவனெவனும் சபையால் உயர்த்தப்படக்கூடாது; ஏனெனில் அவன் கர்த்தரால் உயர்த்தப்படுகிறதில்லை. தன்னைத் தாழ்த்துகிறவன் சபையாருடைய வாக்கினாலோ (vote) அல்லது கர்த்தருடைய சித்தத்தினாலோ உயர்த்தப்படுவான்.

நம்முடைய ஆதார வசனத்தினைக் கர்த்தர் பின்வரும் அர்த்தத்திலேயே குறிப்பிட்டார் என்று நாம் எண்ணுகின்றோம்: உங்களில் சிலர் நிச்சயமாகவே முதன்மையானவர்களாக அடையாளம் கண்டு கொள்ளப்படுவீர்கள். பல்வேறு வகையான ஊழியங்கள் காணப்படுகின்றன மற்றும் ஒவ்வொரு சபையாருக்கான ஊழியங்கள் தொடர்பான விஷயத்தில் முதன்மையானவர்களைப் பெற்றிருப்பதும் அவசியமாய் இருக்கின்றது. இதைத் தேவன் தாமே அங்கீகரித்துள்ளார். தேவன் இயேசுவை முதன்மையானவராக்கினார். தன்னலத்தினை நாடினவராகிய சாத்தானைப் புறக்கணித்தார். அவர் இயேசுவைத் தெரிந்துகொண்டு, அவருக்குப் பாதையினை மிகவும் நெருக்கமானதாக்கினார்! ஆனால் இயேசு தம்முடைய தாழ்மையினை நிரூபித்தப் பிற்பாடு, பிதா அவரை உயர்வாய் உயர்த்தி, வாக்களித்த மாபெரும் பலனை அவருக்குக் கொடுத்திட்டார்.

கர்த்தர் இயேசு வெளிப்படுத்திட்டது போன்றதான தாழ்மையின் அதே ஆவியினை, ஊழியத்தின் அதே ஆவியினைப் பெற்றிருப்பவர்களை இப்பொழுது பிதா தேடிக்கொண்டிருக்கின்றார். அவரைக் கவனித்துப் பார்க்கையில், முதன்மையானவராகிடுவதற்கான நிலையினைப் பிதா முன்வைத்தபோது, ஊழியக்காரனாய் இருக்கும் நிபந்தனையை முன்வைத்ததையும்கூட நாம் காண்கின்றோம். இயேசு எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருந்தார் என்று பார்க்கின்றோம். ஆகையால் தேவன் அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தினை அவருக்குத் தந்தருளினார்.

இப்படியாகவே சபையிலுள்ள ஒவ்வொரு சிறு சிறு சபையாரிடத்திலும் காணப்பட வேண்டும். சபையாரின் முதன்மையான ஊழியர்களாய்க் காணப்படும் அனைவரும், முதன்மையானவர்களாக அடையாளம் கண்டுகொள்ளப்படக்கூடாது என்பது கர்த்தருடைய சித்தமாய் இருக்கின்றது. சகோதரருக்காக ஒருவன்

செய்துள்ள ஏதாகிலும் காரியத்தில், தன்னைத் தாழ்மையுள்ள மனம் உடையவனாக வெளிப்படுத்துபவனையே கர்த்தர் முதன்மையானவனாக அடையாளம் கண்டு கொள்வார், அப்படியானவர்கள் உங்கள் ஊழியக்காரர்களாய் இருப்பார்களாக. உங்கள் மத்தியில், கர்த்தருடைய சகோதரர் மத்தியில், ஊழியக்காரனாய் இருப்பதே பிரதானமான கனமாய்க் காணப்படுகின்றதென ஒவ்வொருவனும் கவனித்துக் கொள்வானாக. மிகவும் உண்மையுள்ளவனாய் இருப்பவனுக்கே, ஊழியம் புரிவதற்கான வாய்ப்பானது கொடுக்கப்பட வேண்டும். இவ்விதத்திலேயே அவன் உங்களுக்கு முதன்மையானவனாகக் காணப்படுவான்.

---

R2995 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# யுக மாற்றங்களைக் கவனித்தல்
## அப்போஸ்தலர் 11:4-15

### *பேதுருவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள்*

கொர்நேலியுவைக் கிறிஸ்தவனாக அங்கீகரித்ததற்கும், அவருக்கும், அவரது வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததற்கும் பேதுரு குற்றஞ்சாட்டப்படாமல், மாறாக பேதுரு அவர்களது இல்லங்களுக்குச் சென்று, அவர்களோடுகூட அப்பம் புசித்துள்ளார் - அதாவது யூத வழக்கத்திற்கு முற்றிலும் முரணான நடக்கை - அதாவது யூதர்களுக்குச் சமமாகப் புறஜாதியாரை அவர் அங்கீகரித்தக் காரியம் குற்றஞ்சாட்டப்பட்டது; இப்படி நடந்துகொள்வதற்கு முரணாகவே பழங்காலம் முதல் அவர்களது வழக்கமாகக் காணப்பட்டது. அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய வாதத்தில் அவர்களது குற்றச்சாட்டுகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, தான் ஏதோ புறஜாதியாரைக் கிறிஸ்தவ சகோதரத்துவத்திற்குள்ளாக ஏற்றுக்கொண்டதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டது போன்று, தன்னைக் குற்றப் பழியினின்று விலக்கிக்கொள்ள முற்பட்டார். எனினும் பேதுருவின் நடவடிக்கை மிகச் சரியானதாகும் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி, அவர் அப்படியாகவும் வழிநடத்தப்பட்டிருந்தார். இதில் கர்த்தருடைய ஜனங்களுக்கான படிப்பினை என்னவெனில்: மனிதனுடைய பாரம்பரியங்கள் மற்றும் நுணுக்கமான ஆசரிப்புகள், வழக்கங்கள் முதலானவைகள் குறித்து எதிர்த்து வாதாடுவதற்குப் பதிலாக, அடிப்படை கொள்கைகளையும், திவ்விய பிரமாணங்களையும் கலந்துரையாடிடுவது எப்போதும் நலமாயிருக்கும் என்பதேயாகும். பேதுரு மூல அடிப்படை அம்சங்களை அவர்கள் அனைவரின்

மனதிற்கு முன்பாக நேரடியாய்க் கொண்டு நிறுத்தினபோது, சமுக வழக்கங்கள் தொடர்பான கேள்விகள் அனைத்தும் முடிவிற்கு வந்தன; ஆனால் ஒருவேளை அவர் சமுக வழக்கங்களினுடைய ஏற்புடைமையைக் குறித்து விவாதித்திருந் திருப்பாரானால், பெரிதான கேள்வியானது, தீர்வில்லாமலேயே இருந்திருக்கும்.

பேதுருவின் எளிமையான, தாழ்மையான ஒளிவுமறைவில்லாத விளக்கமானது, அவ்விஷயம் தொடர்பான உண்மைகளை ஒப்புவித்தலாகவே காணப்பட்டது. தன்னை நம்பச்செய்த சான்றுகளானது, தனக்குப் போலவே அவர்களையும் நம்பச்செய்திடும் என்று அவர் கருதினார் மற்றும் இப்படிக் கருதினதில் அவர் சரியாகக் கருதினவராகவே காணப்பட்டார். அவர் ஒருவேளை கௌரவம் கொண்டவராக இது தன்னுடைய காரியமே ஒழிய, அவர்கள் காரியமல்ல என்றும், தான் ஓர் அப்போஸ்தலன் மற்றும் அப்போஸ்தலர்களிலேயே மூத்தவர் மற்றும் கர்த்தரினால் விசேஷமாய் வழி நடத்தப்பட்டவர் என்றும் மற்றும் தான் இராஜ்யத்தின் திறவுகோல்களைப் பெற்றுக்கொண்டு, பயன்படுத்திடுவார் என்று முன்கூட்டியே கர்த்தரும் தெரிவித்துள்ளார் என்றும், திறவுகோல்களில் முதலாவதை, பெந்தெகொஸ்தே நாளின் போதான திவ்விய கிருபையை அறிவித்ததில் பயன்படுத்தியுள்ளார் என்றும், இப்பொழுது மற்றத் திறவுக்கோலைப் புறஜாதியாருக்கான கிருபையின் கதவைத் திறப்பதற்கு, தான் பயன்படுத்தியுள்ளார் என்றும் சொல்லியிருந்திருக்க முடியும். இப்படியாய் நடந்துகொள்வது என்பது, இதில் அநேகம் உண்மைகள் காணப்பட்டாலுங்கூட, அது ஞானமற்ற போக்காகவே காணப்பட்டிருந்திருக்கும்; அவர் எடுத்துக்கொண்ட தாழ்மையான, அன்பான, சகோதரத்துவத்திற்குரிய நடவடிக்கையானது, அவரது இருதய நிலைமையை, அவரது தாழ்மையை, சகோதரருக்கான அவரது அன்பினை, எவரும் தனது நடவடிக்கையினால் இடறிப்போகாத வண்ணம் காரியங்களை மிகவும் தெளிவுப்படுத்துவதற்கான, மிகவும் எளிமைப்படுத்துவதற்கான, மிகவும் விளங்கப்பண்ணுவதற்கான அவரது விருப்பத்தினைக்குறித்து நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை அவர் இறுமாப்பாய் நடந்திருப்பாரானால், சபையில் பெரிய பிளவு ஏற்பட்டிருக்கும்; ஆனால் இப்படியாக நடக்கவில்லை; கர்த்தர் பொறுப்பேற்றிருந்தார் மற்றும் பேதுரு ஒருவேளை சரியான இருதய நிலையில் காணப்படவில்லையெனில், அவர் பயன்படுத்தப்பட்டிருந்திருக்க மாட்டார் மற்றும் ஏதோ ஓர் எளிமையான சகோதரன் இவ்வூழியத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பார். இதில் நம் அனைவருக்கும் - விசேஷமாகக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கியுள்ள பல்வேறு கூடுகைகளில் காணப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிநடத்துபவர்களுக்கும் நல்ல படிப்பினைக் காணப்படுகின்றது. தாழ்மையும், சகோதர சிநேகமும், அன்பும் படிப்பினையாகக் காணப்படுகின்றது. இறுமாப்பு மற்றும் நடத்தையிலோ, தொனியிலோ ஆணவம்

என்பவை எந்தக் கர்த்தருடைய ஜனங்களுக்கும், விசேஷமாக அவருக்கு ஊழியம் செய்ய நாடுபவர்களுக்கும் தகுதியற்ற ஒன்றாகவே காணப்படும்; இறுமாப்பின் ஆவியைப் பெற்றிருக்கும் வழிநடத்துபவர்கள், அவர்கள் அதைப் பெற்றிருக்கும் அளவிற்கேற்ப அவ்வூழியத்திற்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட வேண்டும். தாழ்மையான நடத்தையையும், இத்தருணத்தின் போதான பேதுருவின் ஆவியையும் வெளிப்படுத்துபவர்கள், இதைப் பெற்றிருப்பதற்கேற்ப அனைவராலும் உயர்வாய் எண்ணப்பட வேண்டும்.

---

R5315 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஒரு நல்ல மனிதனின் பாவம்

## எண்ணாகமம் 20:1-13

### *ஆவிக்குரிய வழிநடத்துபவர்களுக்கான பாடங்கள்*

"பூமியிலேயே சாந்தமானவராகக் காணப்பட்ட மனுஷனே" பல வருட அனுபவங்கள் மற்றும் பயிற்சிக்குப் பிற்பாடு தவறிடுவாரானால், இதினிமித்தமான ஆவிக்குரிய வழிநடத்துனர்களுக்கான பாடமானது ஆழப்பதியக்கூடிய ஒன்றாயிருக்கும். இது "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" என்று நமக்குக் கூறுகின்றது(1 கொரிந்தியர் 10:12). மோசே மற்றும் ஆரோனுடைய பாவம், அவிசுவாசமாகக் காணப்பட்டது என்று 12-ஆம் வசனத்தில் கர்த்தர் தெரிவித்துள்ளார். "பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரயேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்" (எண்ணாகமம் 20:12).

கற்பாறையை அடிக்கும் விஷயத்தில் மோசேக்கு தேவனிடத்தில் விசுவாசம் இருந்தது. அவருக்கு ஜனங்களிடத்திலேயே நம்பிக்கை இல்லாமல் இருந்ததாக தெரிகின்றது. அவர் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்திட - அவர்கள் மனதில் என்றும் அழியாப் பாடம் ஒன்றினைப் பதியப்பண்ணிட விரும்பினார் என்பதாகத் தெரிகின்றது. ஜனங்கள் மோசேயைப் பார்த்து மலைத்துப் போய் நின்றிருந்திருக்க வேண்டும்; எனினும் அவ்விஷயத்தைக் கையாளுவதற்குரிய சிறந்த வழி இதுவல்ல; ஏனெனில் இது தேவனுடைய வழியாய் இருக்கவில்லை. மோசே தன்னை மறைத்து - தன்னைத் தாழ்த்தி, யேகோவாவின் நாமத்தில் கன்மலையிடம் தண்ணீர்

கேட்டிருந்திருப்பாரானால், அது நலமாயிருந்திருக்கும்.

சபையின் வழிநடத்துனர்களும், மூப்பர்களும், கிறிஸ்துவினுடைய சபையின் ஊழியக்காரர்களும் - தேவனால் ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளதான ஆசீர்வாதங்களானது அடிக்கப்பட்ட இயேசுவிடமிருந்தே, அவருடைய ஜனங்களுக்குக் கடந்து வரும் மற்றும் அது வேண்டிக்கொள்ளப்படும் போது வரும் என்றும், "கன்மலையை" அடிப்பதற்கோ அல்லது கிருபை மற்றும் சத்தியத்தின் தண்ணீர்கள் வந்திடுவதற்குத் தாங்கள் அவசியமானவர்கள் என்று தேவ ஜனங்களுக்கு முன்பாகக் காண்பித்துக் கொள்வதற்கோ தங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்றும் நினைவில் கொண்டிருப்பது நலமாயிருக்கும்.

இன்னொரு பக்கத்தில் இப்பொழுது காணப்படுகின்றதான சத்தியத்திற்காகவும், கிருபைக்காகவும் தாகம்கொண்டிருக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேல், போதக ஊழியங்களில் காணப்படுபவர்களிடத்தில் மிகுந்த அனுதாபம் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரருடைய நேர்மையும், உண்மையும் இப்போது கடுமையாய்ப் பரீட்சைக்குள்ளாவதைப் போன்று, வேறு எப்போதும் காணப்பட்டதில்லை. அனைவருக்கும் சாந்தமும், பொறுமையும், நீடிய பொறுமையும், சகோதர சிநேகமும், அன்பும், தேவனுக்கான நேர்மையும் - தங்களது உடன்படிக்கைக்கான உண்மையும் கொண்டிருப்பது அவசியமாயிருக்கின்றது.

---

## தாழ்மை

தாழ்மை என்பது விநோதமான ஒன்று - அதை நீங்கள்
பெற்றிருக்கின்றீர்கள் என்று எண்ணுகிற அந்த நொடிப்பொழுதிலே
அதை இழந்து போவீர்கள்.

சத்தியத்தின் மாபெரும் நண்பன் "நேரம்" ஆவான் - மற்றும்
சத்தியத்திற்கு நித்திய காலமும் தோழியாய் இருப்பவள் தாழ்மையாவாள்.

தாழ்மை என்பது விநோதமான ஒன்று - அதை நீங்கள்
பெற்றிருக்கின்றீர்கள் என்று எண்ணுவீர்களானால்; உண்மையில்
நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ளவேயில்லை என்பதுதான் நிஜம்.

- Deep Waters and Bubbling Brook.

---

# பாகம் - 3

# மாபெரும் பொல்லாப்பாகிய பெருமை

# ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம்

எத்தோற்றத்திலும் மற்றும் யாருக்குள்ளும் இருப்பினும், பெருமை அபாயகரமானதேயாகும். "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுகைக்கு முன்னானது மனமேட்டிமை" எனும் நீதிமொழியானது உலக ரீதியிலும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது மற்றும் நியாயமாய்ப் பெருமைக்கொள்ளத்தக்கதாக, எதையாகிலும் மிகமிகச் சொற்பமானவர்களே பெற்றிருக்கின்றனர் என்பதிலும் நிச்சயமே! தாங்கள் ஏதோ சிறந்த பூமியின் தூளினின்று விசேஷமாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதுபோல் கர்வத்தின் ஆவியினுடைய பெருமையினால் இறுமாப்பாய் இருக்கும் சிலரிடத்தில், அவர்களது மூதாதையர் குறித்துப் பெருமையடித்துக்கொள்வதற்கு உண்மையில் எதுவுமிராது. கடந்த காலங்களிலுள்ள வெகுசில சந்ததியினரே பெருமைப் பாராட்டிக்கொள்வதற்கு ஏதுவானவர்களாய்க் காணப்பட்டனர்.

ஐசுவரியங்கள் குறித்துப் பெருமையடித்துக்கொள்வது ஞானமாயிராது என்று உலகம் கற்றுக்கொண்டு வருகின்றது; காரணம் எவ்வாறு மற்றும் யாரால் அந்தச் செல்வங்கள் குவிக்கப்பட்டன என்றும், அவைகள் நேர்மையாய்ச் சம்பாதிக்கப்பட்டவைகளா என்றும் யாராகிலும் கேள்விக் கேட்பார்கள் என்ற பயத்தினாலாகும். கல்வியைக் குறித்த பெருமையும் பொருத்தமற்றதாகும்; காரணம் பொதுவாக கல்வி என்பது மற்ற ஜனங்கள் கண்டுபிடித்துள்ளவைகளை அல்லது வரலாறாக எழுதியுள்ளவைகளைக் கற்றுக்கொள்வதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய நாட்களில் தங்களின் மிகுந்த கல்வியறிவு குறித்துத் தற்பெருமையடித்துக்கொள்பவர்களுக்குத் தாழ்மை அவசியமாய் உள்ளது; காரணம் அவர்கள் எதைக்குறித்துப் பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அது பிந்தய கால ஆராய்ச்சிகளினால் தவறு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. 1900-ஆம் வருடத்தின் அறிவியல் புத்தகங்களானது, இன்று தரமானவைகள் என்று ஏற்கப்படுகிறதில்லை மற்றும் அவைகளிலுள்ள கூற்றானது தற்காலத்தினுடைய அறிவின் வெளிச்சத்திற்கு முன்னாக நிலைநிற்கிறதுமில்லை. ஆகையால் அறிவைக்குறித்துப் பெருமைப்பாராட்டுவது சரி எனில், பெருமைப்பாராட்டுகிறவன் இன்று வரையிலுள்ள அறிவினைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த கவனத்துடன் காணப்படுவது அவசியமாகும்.

தன் அழகைக்குறித்தோ அல்லது சரீர ரீதியிலான பூரணம் குறித்தோ பெருமைப்பாராட்டிக் கொள்வதுகூட நியாயம் என்று சொல்ல முடியாது; ஏனெனில் வடிவம் மற்றும் முகத்தோற்றத்தின் அழகானது மரபுவழிவந்ததாகும் மற்றும் பிள்ளையை விட பெற்றோரே பெருமைப்பாராட்டிக்கொள்வதற்குக் கொஞ்சமேனும் காரணங்களைப் பெற்றிருக்கின்றனர். ஆடை, அலங்காரம் விஷயத்திலெல்லாம் பெருமையடித்துக்கொள்வது என்பது மதியீனமாகும். ஒருவேளை கைத்திறன் விஷயத்தில் ஆடையையோ அல்லது ஆபரணங்களையோ உண்டுபண்ணின வனுக்குப் பெருமைப்பாராட்டிடுவதற்குச் சில காரணங்கள் இருக்கலாம், ஆனால்

நிச்சயமாய் ஆடையை அணிபவனுக்குக் காரணங்கள் இருக்காது! அவன் மற்றவர்களுடைய கைத்திறனையும் மற்றும் உழைப்பையும் சொந்தமாக்கி மாத்திரம் கொள்கின்றான்.

## ஆவிக்குரிய பெருமையே எல்லாவற்றிலும் மோசமானது

ஆனால் நம்முடைய கருப்பொருள் ஆவிக்குரிய பெருமையாகும்! நாம் அதை இரண்டு வகையாகப் பிரிக்கின்றோம்: முதலாவது பெயரளவிலான கிறிஸ்தவனாக (அ) தன்னைக் கிறிஸ்தவன் என்று அறிக்கைப்பண்ணிக்கொள்கின்றவனாக மாத்திரம் காணப்படுகின்றவனுடைய ஆவிக்குரிய பெருமை; மற்றும் இரண்டாவது உண்மை கிறிஸ்தவர்களைப் பாதிக்கக்கூடிய ஆவிக்குரிய பெருமையாகும்.

பெயர்ச்சபைக்குப் போகிறவனுடைய ஆவிக்குரிய பெருமை என்பது முற்றும் மாய்மாலமானதல்ல. அவன் ஆவிக்குரிய சடங்குகளையும், ஆச்சாரங்களையும் கவனித்துக்கொள்கின்றான்; ஆவிக்குரிய பாடல்களையும், பிரசங்கங்களையும் கேட்கின்றான் மற்றும் அநேக தருணங்களில் தன்னை உண்மை கிறிஸ்தவன் என்று உணராமல் இருக்கின்றான். அவன் சபை கூடுகைகளுக்கு ஒழுங்காய்ப் போகிறவனல்லவா? ஆராதனை ஸ்தாபனங்களுடைய செலவுகளுக்கு மாத்திரமல்லாமல், கர்த்தருக்கடுத்தக் காரியங்ளை - தருமங்கள் முதலானவைகளைச் செய்திடுவதற்கான வாய்ப்புகள் அவனுக்கு அவ்வப்போது வருகையில் இவைகளுக்காகவும் அவன் தவறாமல் நன்கொடைகள் அளிப்பவனல்லவா?

தாங்கள் வாரமுழுவதும் எப்படி ஜீவித்திருந்தாலும் சரி, இறைச்சிக் கடைக்காரனிடத்திலும் மற்றும் ரொட்டி விற்பவனிடத்திலும் எப்படி நடந்து கொண்டிருந்தாலும் சரி, பெயர்ச்சபைக்குப் போகும் பெரும்பான்மையானவர்கள் - ஆலயக் கட்டடங்கள் மீது அலைப் பாய்கின்றதான சில பகட்டான வகுப்பாருடன் இணைந்துகொள்வதில் அமோக பெருமை கொள்பவர்களாக இருக்கின்றனர். ஆவிக்குரிய பெருமைகொண்டிருப்பவர்கள் பொதுவாகவே பகட்டான மற்றும் மிகுந்த உயர்மட்ட மற்றும் உயர்பாணியுள்ள ஆராதனை ஆலயங்களையே விரும்பித் தேர்ந்தெடுக்கின்றனர். ஆராதனை முடியும் போது, அவர்கள் தங்களில் திருப்தியடைகின்றனர். தாங்கள் தேவனைத் தொழுது கொண்டிருக்கின்றார்களல்லவா? அனைத்து ஜனங்களும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டுமல்லவா? எத்தனைபேர்கள் இப்படித் தொழுதுகொள்ளாமல் இருக்கின்றனர்! கலந்துகொள்ளாதவர்களுடன் தங்களை ஒப்பிட்டுப்பார்க்கையில், அவர்கள் ஆவிக்குரிய பெருமை கொள்கின்றனர் அல்லது தங்களை மேலானவர்கள் என்று எண்ணுகின்றனர்.

அவர்கள் ஆவிக்குரிய அறிவுரையைப் பெற்றுக்கொள்வதற்காகச் செல்லவில்லை; ஒருவேளை அவர்கள் போகிற இடங்களில் ஆவிக்குரிய அறிவுரை கொடுக்கப்பட்டாலும், அவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படாதபடியினால், அவற்றை

ஏற்றுக்கொள்ளுகிற நிலைமையிலும் அவர்கள் இல்லை. நீதிக்காகவோ, சத்தியத்திற்காகவோ, அவர்களுக்கு உண்மையான பசி ஏதுமில்லை. அவர்கள் கடமையின் ஓர் உணர்வினை மாத்திரம் திருப்திபடுத்தியுள்ளனர். அவர்கள் ஒருவிதத்தில் தங்கள் பாவங்களுக்குப் பிராயச்சித்தமே செய்துள்ளனர் மற்றும் இது ஏதோ விதத்திலும் மற்றும் எப்போதோ ஒரு காலக்கட்டத்தில் தங்களுக்கு நன்மை பயக்கும் என்று நம்புகின்றனர் - ஒருவேளை இது உத்தரிக்கும் ஸ்தலத்தினுடைய மோசமான பாடுகள் சிலவற்றிலிருந்து தங்களைத் தப்புவிக்கும் என்று - ஒருவேளை தங்களைப் பரலோகத்திற்குக்கூடப் பாத்திரவான்களாக்கிடும் என்று நம்புகின்றனர். அவர்கள் தங்களுக்கடுத்தவைகளுக்கு இடம்கொடாமல், அவரைத் தொழுது கொள்ளுவதற்குச் செல்லத்தக்கதாக, தங்கள் விலையேறப்பெற்ற சில மணிநேரங்களைச் செலவழித்துள்ளதினிமித்தம், தேவன் தங்களிடத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பாரல்லவா? என்று எண்ணுகின்றனர்.

தாங்கள் இப்படியாக முயற்சிப்பதையெல்லாம் தேவன் கண்டுகொள்ளாமல் இருந்து மற்றும் இதற்குப் பொருத்தமான பலனை அளிக்கவில்லையெனில், அவர் மிகவும் அநீதியுள்ளவராக இருப்பார் என்று அவர்கள் எடுத்துரைக்கவில்லை என்றாலும், இப்படியாய் எண்ணிடுவார்கள். அவர்கள் ஆவிக்குரிய பெருமை கொண்டவர்களாகவும், சுயதிருப்திக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள் மற்றும் இந்நிலைமையில் காணப்படுமளவும், சத்தியத்தினால் இழுக்கப்படுவதில்லை. இத்தகையவர்கள் மீது மாபெரும் எதிராளியானவன் விசேஷமாய்த் தனது கவனத்தைக் கொடுத்துக்கொண்டிருப்பான் என்றும் நாம் எண்ணிட வேண்டாம்; காரணம் அவர்கள் அவனுடைய செல்வாக்கின் கீழ்ப் பாதுகாப்பாய்க் காணப்படுகின்றனர். பெருமையை முதலாவதாக வெளிப்படுத்தினவனாகி, தனது இருதயத்தில், "நான் தேவனுடைய புத்திரர்களுக்கு மேலாக என்னை உயர்த்துவேன் (மற்றவர்களுக்கு மேலாக என்னை உயர்த்துவேன்); உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்று சொன்னவன் அவனல்லவா. ஆவிக்குரிய பெருமைதான் நிச்சயமாகவே சாத்தானின் பெருந்தவறாகும் மற்றும் அதுவே அவனது முழுமையான வீழ்ச்சிக்கு வழிநடத்தினதாய் இருந்தது.

தேவன் மீதோ அல்லது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீதோ அல்லது வேதாகமத்தின் மீதோ நம்பிக்கை உண்டென எவ்விதமான பாசாங்குப் பண்ணிடாத சிலர் ஒருவிதமான பெருமையைப் பெற்றிருக்க வாய்ப்புள்ளது. ஒழுக்கமுள்ள ஜீவியம் ஜீவிப்பதினிமித்தம், ஜீவியத்தில் நல்லொழுக்கத்துடனும், கண்ணியத்துடனும் தாங்கள் ஜீவிக்க முடிந்ததினிமித்தம் - ஒருபோதும் மதுபானம் பருகாததன் நிமித்தம், அநேகரால் செய்யப்படுகின்றதான சில மோசமான பாவச் செயல்களையும், கெட்டக்காரியங்களையும் செய்யாததன் நிமித்தம் - தங்களைக் குறித்துப் பெருமையாய் எண்ணுகின்றனர். பெருமையிலும், தற்பெருமையிலும் இத்தகையவர்கள்: "ஒரு சபையின் அங்கத்தினன்போலவே, நானும் நல்லவனாக இருப்பதாக என்னால் உணரமுடிகின்றது மற்றும் நான் சபைக்கு ஒருபோதும் செல்லுகிறதில்லை என்று சொல்லிடுவார்கள். இதன் அர்த்தம், 'சபையின்

அங்கத்தினனைக் காட்டிலும் நான் நல்லவன்/மேம்பட்டவன் என்று நான் என்னைக் குறித்து எண்ணுகின்றேன்" என்பதேயாகும். இவர்கள் தாங்கள் சொல்வதைக் கேட்பவரிடத்தில் சிறந்த தாக்கத்தினை எது ஏற்படுத்தும் என்று எண்ணுவதற்கேற்ப பெருமையின் சிந்தனையை இவர்கள் தன்னடக்கமான வார்த்தைகளுடன் இணைக்க மாத்திரமே செய்கின்றனர்.

இவர்கள் எந்தெந்த நற்கிரியைகளைச் செய்வதில் சந்தோஷம் கொள்கிறார்களென விசாரிக்கப்பட்டால் - இவர்கள் எப்படி (odd fellows, masons) "நண்பர் கழக உறுப்பினர்களென," "உடன்பிறப்புணர்ச்சியுடன் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளும் கேண்மை கழக உறுப்பினர்களென" அவ்வளவுக்கு வியாதிப்பட்டிராதவரும், அவ்வளவுக்குக் கவனிக்கப்பட அவசியம் பெறாதவரும் மற்றும் தன்னைப் பராமரித்துக்கொள்வதற்குப் - பயிற்சிபெற்ற தாதியைப் (nurse) பெற்றிருப்பவருமான கழகத்திலுள்ள ஒரு சகோதரனுடன், தாங்கள் இராமுழுவதும் இருந்து பராமரித்தார்கள் என்றும், தாங்கள் தலைச்சிறந்த அறச்செயலைச் செய்துள்ளது போன்று உணர்ந்தார்கள் என்றும் நமக்குத் தெரிவிப்பார்கள். தாங்கள் சட்டங்களை மீறவில்லை என்பதிலும், தாங்கள் நல்லொழுக்கத்துடன், கண்ணியமாய் ஜீவித்துள்ளார்கள் என்பதிலுமே இவர்களது பெருமைக் காணப்படுகின்றது. இதில் பெருமைப்பாராட்டிக்கொள்வதற்கு, தன்னையே விசேஷமாய்ப் பாராட்டிக்கொள்வதற்கு உண்மையில் என்ன இருக்கின்றது? இந்தச் சட்டங்களானது நல்ல ஜனங்களுக்காக இல்லாமல், தீமை செய்பவர்களுக்கே இயற்றப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவுகூருகையில், எந்த மனுஷன் (அ) மனுஷி சட்டங்களைக் கைக்கொள்ளாமல் இருப்பான் மற்றும் அச்சட்டங்களைக் கைக்கொள்ளத் தவறினால், இதினிமித்தம் வெட்கம் அடையாமல் இருப்பான்?

## உண்மை சபையில் ஆவிக்குரிய பெருமை

இப்பொழுது இருப்பவைகளிலேயே மிக அபாயகரமான விஷயத்திற்கு வருகின்றோம்! உலகத்தாரிடமும், பெயரளவிலான கிறிஸ்தவர்களிடமும் காணப்படும் பட்சத்தில் அறிவீனமானதாகவோ அல்லது அரைப்பாசாங்காகவோ மாத்திரமே காணப்படும் பெருமையானது, ஒருவேளை தேவனுடைய பிள்ளையின் இருதயத்தையும், ஜீவியத்தையும் தாக்கும் பட்சத்தில் மிகவும் அபாயகரமான காரியமாகிவிடுகின்றது. ஆனால் ஏன் இப்படி நாம் வித்தியாசப்படுத்துகின்றோம். ஆவிக்குரிய பெருமை என்பது உலகத்தாரின் விஷயத்தில் முட்டாள்தனத்தைக் காட்டிலும் கொஞ்சம் மேலானது என்று சொல்லி, ஏன் இது கர்த்தருடைய பரிசுத்தவான்களில் ஒருவனுக்கு மிகவும் அபாயகரமானது என்று நாம் சொல்லுகின்றோம்? ஆ! வித்தியாசம் என்னவெனில் - இவர்கள் உலகத்தில் தேவனுடைய விசேஷித்த பிரதிநிதிகளாக இருக்கின்றனர் மற்றும் இவர்கள் கர்த்தரினால் அழைக்கப்பட்டுள்ளதான மகிமை, கனம் மற்றும் அழியாமையை அடைய வேண்டுமெனில் தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாக வேண்டும்.

இவர்கள் தங்களை முற்றிலுமாய்க் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, மீட்பருடைய பலியின் புண்ணியத்தின் வாயிலாகப் பாவங்களினின்று நீதிமானாக்கப்பட்டு மற்றும் இவர்கள் இப்படியாய்த் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டனர் மற்றும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டபோது - இவைகள் இவர்களுக்கு மிகுந்த மாற்றத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. பழையவைகள் ஒழிந்துபோயின; அனைத்தும் புதிதாயின. இவர்கள் - ஆம், இவர்கள் மாத்திரமே இந்தச் சுவிசேஷயுகத்தில் நித்திய ஜீவனா (அ) நித்திய மரணமா எனும் பரீட்சையில் காணப்படுகின்றனர். இவர்களுக்கான சோதனைகள் மற்றும் வஞ்சனைகள் அனைத்திலுமே, ஆவிக்குரிய பெருமை எனும் பாவமே, அநேகமாக அனைத்திலும் மிகவும் அபாயகரமாய் இருப்பவைகளில் ஒன்றாய் இருக்கின்றது. எந்தளவுக்கு அது உள்ளே கடந்து வருகின்றதோ, அவ்வளவாய்க் கர்த்தருடைய ஆவியானது வெளியேறுகின்றது மற்றும் அந்நபருடைய ஆவிக்குரிய தன்மையானது ஓய்ந்துவிடுகின்றது. இந்த ஆவிக்குரிய நோயானது கட்டுப்படுத்தப் படவில்லையெனில், நிச்சயமாய் இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்திவிடும்; ஏனெனில் "கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்" (யாக்கோபு 4:6).

"ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்று சபைக்கு அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகையில், ஆவிக்குரிய பெருமை எனும் இந்தச் சுற்றிவளைக்கும் அபாயத்தினை அவர் மனதில் கொண்டிருந்தார் என்பது உறுதியே (1 பேதுரு 5:6). "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று ஆண்டவர் கூறியுள்ளார் (லூக்கா 14:11).

## இந்த ஆத்தும நோய்க்கான ஓர் அறிகுறி

ஆவிக்குரிய பெருமையை நாம் எப்படிக் கண்டறிவது? என்று கேட்கப்படலாம். ஆவிக்குரிய பெருமையின் விஷயத்திலுள்ள மிக அபாயகரமான காரியம், அதனை பெற்றிருப்பவர் அதைக்குறித்து மிக அபூர்வமாகவே அறிந்திருப்பார். அவர்கள் சிலசமயம் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களாகக் காணப்படுகின்றனர். இந்தத் தேவபக்தியின் வேஷமானது மற்றவர்களை மாத்திரம் வஞ்சியாமல், அவர்களையும் வஞ்சித்து, தங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றதும், மற்றவர்களால் மிகத் தெளிவாய்க் காணமுடிகின்றதுமான ஆவிக்குரிய பெருமையை அவர்கள் கண்டுகொள்வதைத் தடுத்துவிடுகின்றதாயும் இருக்கின்றது.

சபை கூடுகைகளில் நீங்கள் கலந்துகொள்ளுதல் குறித்தோ, வேதாகம பாடங்கள் ஆராய்ச்சி புத்தகத்திலிருந்து நாளொன்றிற்கு அதிகமான பக்கங்களை

நீங்கள் படிப்பதுகுறித்தோ, அநேக பிரதிகளை நீங்கள் விநியோகிப்பதைக்குறித்தோ அல்லது அநேக புத்தகங்களை நீங்கள் மற்றவர்கள் படிப்பதற்கெனக் கடனாகக் கொடுக்கிறதுகுறித்தோ பெருமையடித்துக்கொள்வதற்குத் தோன்றுகின்றதா? - அப்படியானால் எச்சரிக்கையாயிருங்கள்! தற்பெருமையடித்துக் கொள்வதற்கான இந்த விருப்பம் என்பது, சாதகமான சூழ்நிலை அமைகையில், நீங்கள் ஆவிக்குரிய பெருமையினால் பிடிக்கப்படுவதற்கான அபாயத்தில் இருக்கின்றீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. மேற்கூறப்பட்ட செயல்பாடுகள் அனைத்தும் நற்காரியங்களும், பாராட்டத்தக்கவைகளும்தான், அனைத்தும் தகுந்த காரியங்கள்தான்; மற்றும் அன்றாட செய்தித்தாள்களையோ அல்லது நாவல்களையோ வாசிப்பதை, சிற்றுரையாடல்களை வாசிப்பதை அல்லது சிற்றுரையாடல்களை எழுதுவதை விட்டுவிட்டு, (மேலே கூறப்பட்டுள்ள செயல்பாடுகளாகிய) நியாயமான செயல்பாடுகளை, மிகவும் தகுதியான செயல்பாடுகளை, தெய்வீகச் சித்தத்திற்கு மிகவும் இசைவாகக் காணப்படும் செயல்பாடுகளைச் செய்திடுவதற்கு விருப்பம் கொண்டவராகவும் மற்றும் அப்படிச் செய்ய முடிகிறவராகவும் நீங்கள் இருப்பதை நீங்கள் காணும்போது, நீங்கள் தகுதியான விதத்தில் உங்களில் மகிழ்ச்சிகொள்ள வேண்டும். ஆனால் இச்செயல்பாடுகள் குறித்துத் தற்பெருமையடித்துக் கொள்வதற்கான தன்மையானது/விருப்பமானது காணப்படுமாயின், இதினிமித்தம் கர்த்தருடைய ஊழியத்திற்கென்றுள்ள இந்தச் செயல்பாடுகளின் பின்னால் உள்ள நோக்கங்களை - சிந்தனைகளைக் கவனமாய்ச் சோதித்தறிய நீங்கள் வழிநடத்தப்படவேண்டும்.

மற்றவர்களை உற்சாகமூட்டத்தக்கதாக அல்லது நாம் கர்த்தரை அன்புகூருகின்றோம் என்பதற்கும், அவருக்கு ஊழியம்புரிய நாம் ஆவலாய் இருக்கின்றோம் என்பதற்குமான ஆதாரமாகக் காணப்படத்தக்கதாக, இந்தச் செயல்பாடுகள் அனைத்தையும் சாட்சியாக வெளிச்சொல்வது முறையற்றது என்ற அர்த்தத்தில் நாம் சொல்லவில்லை. கர்த்தருடைய பிள்ளையென நாம் இருக்கக்கூடிய விதம் அல்லது செய்யும் எதையேனும் குறித்துத் தற்பெருமையடித்துக் கொள்ளும் விருப்பம் அல்லது ஆவிக்கு எதிராகவே நாம் எச்சரிக்கையாயிருக்கும் படிக்குக் கூறுகின்றோம். இதில் தற்பெருமையடித்துக் கொள்வதற்கு நமக்கு எதுவுமில்லை. ஆவிக்குரிய தரித்திரரைப் போஷிப்பதற்கென நம்முடைய உடைமைகள் அனைத்தையும் நாம் ஒருவேளை கொடுத்திட்டாலும், சத்தியத்தைப் பரப்புவதற்கென நம்முடைய நேரம் முழுவதையும் கொடுத்திட்டாலும், கர்த்தருடைய நாமத்தைக் கனப்படுத்துவதில் நம்முடைய சக்தி/ஆற்றல் முழுவதையும் கொடுத்திட்டாலும், அனைத்தையும் செய்து முடித்த பிற்பாடு, நம்முடைய கர்த்தருக்கு உண்மையில் நம்மால் பிரயோஜனம் ஏற்படவில்லை என்று நாம் எண்ணிட வேண்டும்; மேலும் அவருடைய கரங்களினின்று நாம் ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ளதான எண்ணற்ற ஆசீர்வாதங்களையும் மற்றும் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கும் பட்சத்தில் நம்முடையதாய்க் காணப்படுமென அவர் வாக்களித்துள்ளதான இன்னும் அதிகமான வியக்கத்தக்க கிருபைகளையும்

நன்றியோடு ஏற்றுக்கொண்டுள்ள நம்முடைய இருதயங்களின் பக்தியில் கொஞ்சத்தை அவருக்கு வெளிப்படுத்திடுவதற்கான வாய்ப்பை நாம் பெற்றுக்கொள்ள மாத்திரமே செய்திருக்கின்றோம் என்று நாம் எண்ணிட வேண்டும். கவிஞன் பின்வரும் வரிகளைச் சரியாய்த்தான் எழுதியுள்ளான்:

"பெருமையோ அல்லது பேராசையோ இல்லாத
ஓர் அணுகுமுறை எந்தனுக்கு வேண்டுமே!"

## இன்னும் கூடுதலான அறிகுறிகள்

ஆவிக்குரிய பெருமை எனும் இந்த நோயின் மற்றொரு வடிவமானது, குற்றம் கண்டுபிடிக்கும் மனோ நிலையில் வெளிப்படுகின்றது. ஒருவர் சாட்சிக் கூட்டத்திலோ அல்லது பெரோயா வகுப்பிலோ கலந்துகொள்கையில், தன்னுடைய சாட்சியைத் தவிர வேறு எந்தச் சாட்சியும் அவருக்கு உண்மையில் நல்ல சாட்சியாகத் தோன்றவில்லையெனில், கலந்தாய்வு செய்யப்படும் ஏதோ ஒரு கேள்விக்குத் தன்னுடைய பதிலைத் தவிர வேறெந்தப் பதிலும் சரியான பதிலாக அவருக்குத் தோன்றவில்லையெனில், கூடுகையை எப்படி நடத்திட வேண்டும் என்று அறிந்துள்ள (தகுதிவாய்ந்த) மூப்பரை அவரால் அங்கு ஒருபோதும் பார்க்க முடியவில்லையெனில் - இவைகள் ஆவிக்குரிய பெருமைக்கான அபாயக்கரமான அறிகுறிகளாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

மேற்கூறியவைகள் அனைத்தும் நடக்க வாய்ப்பில்லை என்று சொல்லிட முடியாது; எனினும் அப்படியாக தொடர்ந்து நடந்துகொண்டிருக்காது என்பதில் நிச்சயமே. வேதவாக்கியம் அங்கீகரியாத நடவடிக்கைகளையோ அல்லது செய்யப்படும் ஊழியங்களானது ஆற்றல்மிக்கதாய் இருப்பதற்கு இடையூறாய் அமையக்கூடியதான மிகுந்த குறைபாடுள்ள கணிப்புகள் கணிக்கப்படும் தருணங்களையோ உடனடியாக அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக நாம் இப்படியானதொரு கவனம் கொடுப்பதும், நன்கு விளக்கம் அறிந்தவர்களாகவும் காணப்படுவதும் முற்றிலும் தகுதியானதே. சபைக்கான சிறந்த நலனுக்கடுத்த காரியங்கள் செய்யப்படாததை நாம் எப்போதேனும் காணும் பட்சத்தில், அதுவும் கொஞ்சம் காலம் நாம் பொறுமையாய்க் காத்திருந்த பிற்பாடும்கூட, அவைகள் சரிச்செய்யப்படப்போவதில்லை என்று நாம் அறியும் பட்சத்தில், சபையார் மத்தியிலோ அல்லது மூப்பரிடத்திலோ அல்லது மிகுந்த பலனுக்கேதுவானதும், குறைவாய்ச் சுட்டிக்காட்டுகிறதுமான ஏதேனும் விதத்தில் அத்தவற்றினைச் சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியில் கவனத்திற்கு நாம் கொண்டுவருவது முற்றிலும் தகுதியானதாகவே இருக்கும். "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல்," எல்லாம் தேவனுடைய மகிமைக்காகச் செய்யப்பட வேண்டும்.

இதிலும்கூட நம் கருத்துகளுக்கு இசைவாயுள்ள அனைத்தும் தேவனுக்கு மகிமை சேர்க்கும் என்றும், நம்முடைய கருத்துகளுக்கு இசைவாயிராத அனைத்தும் அவருக்குப் பிரியமாயிராது என்றுமுள்ள சிந்தனைகளுக்குள் போய்விடாதபடிக்கு நாம் கவனமாய் இருப்பது அவசியமாகும். "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து," 'See then that ye walk circumspectly, not as fools, but as wise…" (எபேசியர் 5:15) என்று அப்போஸ்தலன் சரியாய்த்தான் எழுதியுள்ளார். இவ்வசனத்தில் இடம்பெறும் "circumspectly"/கவனமாய் எனும் வார்த்தையானது ஒவ்வொரு விஷயத்திலும், அதிலும் விசேஷமாகச் சிந்தனைகள், நோக்கங்கள், உள்நோக்கங்கள் தொடர்புடைய விஷயத்தில் கவனமான சோதித்தறிதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதை நாம் அறிந்துகொள்வது நலம்.

## உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக

"என் சகோதரரே அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று பரிசுத்த யாக்கோபு சரியாய்த்தான் எழுதியிருக்கின்றார் (யாக்கோபு 3:1). நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்திருந்தது போலக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவருமே ஆவிக்குரிய பெருமையினால் விசேஷமாய் எளிதில் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றபோதிலும், அவருடைய சத்தியத்தைப் பிரகடனம்பண்ணும் விஷயத்தில் ஏதேனும் விதத்தில் தொடர்புபட்டிருப்பவர்கள் அனைவரையும் ஒரு விசேஷித்த அபாயம் சூழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

கேட்கும் செவிகளுடைய அனைவரிடமும் தேவனுடைய கிருபைபற்றின செய்தியை அறிவிப்பது என்பது உண்மையில் ஒரு விசேஷித்த சிலாக்கியமேயாகும். இந்தச் சிலாக்கியமானது - ஒரு காலத்தில் ஊகிக்கப்பட்டதுபோன்று குருமார் வகுப்பாருக்கு மாத்திரம் உரியதல்ல என்பதினாலும்; இன்னுமாகக் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாக இருப்பவர்களும் மற்றும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும் மற்றும் சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவும், இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டவும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டவர்களுமான அனைவருக்கும் இச்சிலாக்கியம் உரியது என்பதினாலும் நாம் எவ்வளவாய் நன்றி ஏறெடுக்கின்றோம் (ஏசாயா 61:1). அயலகத்தாருடனும், நண்பர்களுடனுமான நம்முடைய தனிப்பட்ட (சத்திய) உரையாடல்களையும் உள்ளடக்கும் இச்சிலாக்கியத்தினிமித்தம் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். தேவனுடைய ஸ்தானாபதிகளாக இருப்பதும் மற்றும் அவரது நாமத்தில் வரவிருக்கின்ற இராஜ்யம் குறித்தும், இயேசுவினுடைய மரணத்தின் மூலமாக தேவன் ஏற்கெனவே பண்ணியுள்ளதான மாபெரும் ஏற்பாடுகளைக்குறித்தும், இதன் பிரம்மாண்டமான விளைவுகுறித்தும், அந்த

இராஜ்யத்திற்கான இராஜாக்களும், ஆசாரியர்களும் எப்படி இப்பொழுது உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, தங்கள் எதிர்க்கால வேலைக்காய் ஆயத்தமாகுவதற்குச் சுபாவ மாறுதலை அடைந்துவருகின்றனர் என்பது குறித்தும் அறிவிப்பது என்பதும் எப்படிப்பட்டச்சிலாக்கியமாயிருக்கிறது!

தூது/செய்தி பழையதாய் இருப்பினும், அது சரியாய் முன்வைக்கப்படுகையில் மிகவும் புதியதாகவும், வியப்பானதாகவும், கேட்கும் உத்தம இருதயத்தாரிடம் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறதாகவும் காணப்படும். இந்தச் சாதாரணமான மனுஷன் (அ) மனுஷி எப்படி இத்தகைய வியத்தகுக் காரியங்களைப் புரிந்துகொண்டார்கள் மற்றும் இவ்வளவு அருமையாய்ச் சித்தரித்து விளக்கமுடிபவராய் இருக்கின்றனர் என்று நம்மைக்குறித்து தூதைக் கேட்ட அந்த உத்தம இருதயத்தார்கள் ஆச்சரியப்படுகின்றனர். அநேகமாக அவர்களது இந்த வியப்பை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். அத்தருணத்தில்தான் ஆவிக்குரிய பெருமை எனும் நோயினால் பிடிக்கப்படுவதற்கான அபாயகரமான தருணம் வருகின்றது. மனமானது கொஞ்சம் தடுமாறிவிடுகின்றது மற்றும் 'மனுக்குலத்தில் திரளான ஜனங்களானவர்கள் இவைகள் எல்லாவற்றையும் குறித்துக் கொஞ்சமேனும் அறியாமலிருக்க மற்றும் வேத வசனங்களைக் கையாளுகிற மிகுந்த திறமிக்க மற்றும் ஆற்றல்மிக்க ஊழியக்காரர்களில் சிலர்கூட வேதாகமத்தின் இக்காரியங்கள் குறித்து அறியாதிருக்க, நான் இவைகளையெல்லாம் அறிந்திருப்பது ஆச்சரியமான காரியந்தான்' என்று நீ எண்ணிடுவாய்.

ஆவிக்குரிய பெருமை எனும் நோயினை நீ உள்வாங்கிடும்போது, உன் முதுகெலும்பு சந்தேகத்திற்கிடமின்றி நிமிர்ந்திடும். உன்னை நீ மிக முக்கியமானவனாக எண்ணிடுவதற்கும் மற்றும் மிகவும் மேன்மையானவனாய்த் தோற்றமளிப்பதற்கும், பெரியவனாய் எண்ணிடுவதற்கும் நீ ஆரம்பிப்பாய். உன்னுடைய குரல்கூட இதை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கும் மற்றும் நீ பேசுவதைக் கேட்கிறவன், இதனை கவனிப்பான்; அவன் நீ பேசுவது கர்த்தருடைய வார்த்தையல்ல மாறாக நீ காண்பித்துக்கொள்கிறது போல, உன்னால் உருவாக்கப்பட்ட ஏதோ காரியங்கள்தானென - உன்னால் கொடுக்கப்பட்ட ஏதோ விளக்கந்தானென எண்ணத்துவங்கிடுவான் மற்றும் இதினிமித்தம் நீ பேசினவைகளை அவன் பொருட்டாய் எடுத்துக்கொள்கிறதில்லை.

சத்தியத்தை மற்றவர்களுக்குச் சொல்வதற்கான வாய்ப்புகள் தொடர்புடைய விஷயத்தில் மிகவும் மேட்டிமை மற்றும் பெருமையடித்துக்கொள்வதற்குப் பதிலாக, கர்த்தருடைய ஜனங்கள் மிகுந்த தாழ்மைக் கொள்வது தகுதியான மனோநிலையாக இருக்குமென அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். நமது அபாத்திர நிலையை நாம் உணர்ந்திட வேண்டும். திட்டம் நம்முடையதல்ல என்றும், நாம் அதைக் குறித்துக் கேட்டறிந்தவர்களாக மாத்திரமே காணப்படுகின்றோம் என்றும், அது உண்மையில் தேவனுடைய திட்டமேயாகும் என்றும், நாம் அதைப் பிரகடனப்படுத்தும் அவரது ஊழியர்களெனக் கனப்படுத்தப்பட்டிருக்கின்றோம்

என்றும் நாம் உணர்ந்திட வேண்டும். ஆனால் நம்முடைய ஏதேனும் ஞானத்தினாலோ அல்லது ஏதேனும் திறமையினாலோதான் செய்தியானது அருமையாய்த் தோற்றமளிக்கின்றதென ஏதேனும் எண்ணத்தினை வெளிப்படுத்துவோமானால், அவ்வளவாய் நாம் கர்த்தருக்கு உரியதான மகிமையை நமக்கென எடுத்துக்கொள்கிறவர்களாக இருப்போம் மற்றும் தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும் கர்த்தரினால் பயன்படுத்தப்படுவதற்கு நாம் பாத்திரவான்களாய் இருக்கின்றோம் என்பதை நிரூபிக்க தவறுவதற்கேற்ப, நமக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறவர்களாக இருப்போம். கர்த்தருடைய ஸ்தானாபதிகளெனப் பேசிடுவதற்கும், அவரது மகத்துவங்களையும், திட்டத்தையும் குறித்து அறிவிப்பதற் குமான அருமையான சிலாக்கியமானது - பலத்தில் மேம்பட்டிருப்பவர்களும், இந்த மிக அருமையான செய்தியை அறிவிப்பதில் அவரால் பயன்படுத்தப்பட முடிகின்றவர்களுமாகிய தேவத்தூதர்களை அவர் பெற்றிருந்த போதிலும், நமக்கு அவர் சிலாக்கியம் அருளியுள்ளார் எனும் எண்ணம் - நம்மைத் தாழ்மைக்கொள்ள செய்திட வேண்டும்.

## மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் மீதான விசேஷித்த சோதனை

சபையாரால், மூப்பர்களென மற்றும் உதவிக்காரர்களெனத் தேர்ந்தெடுக்கப்படும் அருமையான சகோதரர்கள் தங்கள் தாழ்மையின் விஷயத்தில் இன்னும் பரீட்சைக்குள்ளாகுகின்றனர். இந்த ஸ்தானத்தில் ஆவிக்குரிய பெருமை என்று அழைக்கப்படும் நோயினால் பிடிக்கப்படுவதற்குரிய மகாபெரும் அபாயமில்லாமல் எவரும் காணப்பட முடியாது. நூதன சீஷன், புதிதானவன், சத்தியத்தில் குழந்தையாய் இருப்பவன் ஒருவன், எவ்வளவுதான் அறிவுமிக்கவனாகவும், எவ்வளவுதான் படித்தவனாகவும் இருப்பினும், அவன் மூப்பனாகவோ அல்லது உதவிக்காரனாகவோ தெரிந்தெடுக்கப்படக்கூடாது என்று பரிசுத்த பவுலினால் கொடுக்கப்பட்டதான எச்சரிப்பைச் சிலசமயம் கர்த்தருடைய ஜனங்கள் முற்றிலுமாக மறந்துபோய்விடுகின்றனர்; அவன் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணம் என்னவெனில், அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளதுபோல அவன் தேவனுடைய பிள்ளைக்குச் சத்துருவாகிய - ஆவிக்குரிய பெருமையினால் விசேஷமாய் எளிதில் பாதிக்கப்படக்கூடியவனாய் இருப்பான் (1 தீமோத்தேயு 3:6).

ஆனால் நூதன சீஷன் மாத்திரம் அபாயத்தில் இல்லை. கர்த்தருடைய ஜனங்களுக்கு ஊழியம் புரிவதற்கென நியமிக்கப்படும் அனைவரும், ஆவிக்குரிய வீழ்ச்சிக்கும், இரண்டாம் மரணத்தில் அழிவதற்கும் ஏதுவான மாபெரும் சோதனைக்குள்ளாகுகின்றனர். அநேகமாக தங்களது ஊழியக்காரர்களெனத் தேர்ந்தெடுக்கப்படப்போகிறவர்களின் விஷயத்தில், இவைகளையெல்லாம் கர்த்தருடைய ஜனங்கள் போதுமான அளவுக்குச் சிந்திக்காதவர்களாய் இருக்கின்றனர். அநேகமாக சகோதரர்களுடைய வாக்குகளின் (Votes)

அடிப்படையில், ஊழியத்திற்கான இந்த ஸ்தானங்களை ஏற்றுக்கொள்பவர்களும்கூட, இதை ஏற்றுக்கொள்வதினால் தாங்கள் என்னென்ன அபாயங்களுக்குள்ளாவார்கள் என்று உணர்ந்துகொள்ளுகிறதுமில்லை. ஒருவேளை உணர்ந்திருப்பார்களானால், சந்தேகத்திற்கிடமின்றி அந்த உணர்ந்து கொள்ளுதலானது, அதனை ஏற்றுக்கொள்வதில் அவர்களைத் தயக்கம் கொள்ளச்செய்திடும்; மற்றும் ஊழியத்திற்கென அவர்கள் மிகவும் தெளிவாய்/வெளிப்படையாய் நியமிக்கப்படாதது வரையிலும், ஊழியஞ்செய்ய முற்படாமல் இருப்பதற்குத் தாழ்மையானது அவர்களை நிச்சயமாய் வழிநடத்திடும்.

ஆனால் நாம் எதைப் பார்க்க நேரிடுகின்றது? அந்தோ பரிதாபம்! மூப்பர் அல்லது உதவிக்காரர் ஸ்தானம் அடைந்திடுவதற்கான மனநிலையைச் சிலரிடத்தில் பார்க்கின்றோம். தாங்கள் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாகப் பேரம் பேசிடுவதற்கும் மற்றும் 'விரும்பியதை அடைய இரகசியமாகச் செல்வாக்கினைப் பயன்படுத்திடுவதற்குமான' மனோ நிலையைக்கூடச் சிலரில் பார்க்கின்றோம்; தாங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லையெனில், எரிச்சலடையும் மனோநிலையைச் சிலரில் பார்க்கின்றோம்; தேர்ந்தெடுத்தலின்போது தங்களுக்கு எதிராக வாக்களிப்பவர் யாரிடத்திலும், கோபங்கொள்ளும் மனோநிலையைச் சிலரில் பார்க்கின்றோம். அந்தோ பரிதாபம்! அந்தோ பரிதாபம்! ஒருவேளை இந்த அருமையான சகோதரர்கள் தங்கள் மனதில் எது அரித்துக்கொண்டிருக்கின்றது என்றும் மற்றும் இப்படியெல்லாம் நடந்துகொள்ளுவதற்கு எது தூண்டிக் கொண்டிருக்கின்றது என்றும் உணர்ந்துகொள்வார்களானால் - ஓ! அவர்கள் எப்பேர்பட்ட வித்தியாசமான வழிமுறையை/போக்கினை எடுத்துக்கொள்பவர்களாய் இருப்பார்கள்! சகல சாந்தத்திலும், தாழ்மையிலும், அப்படிப்பட்டதான பொறுப்பை உடைய ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, அவர்கள் அச்சம் கொள்ளவேண்டும். சபையில் உள்ள அனைவருமே, தங்களது சத்திய அறிவிற்கேற்ப போதகர்களாகுவதற்குத் தகுதிப்பட்டிருக்கவேண்டும் என்றபோதிலும், போதகர்களாய் இருப்பவர்கள் கடுமையான சோதனைக்குள்ளாவார்கள் என்று அறிந்து போதகராகாதிருப்பதே பாதுகாப்பானது என்பதுதான் எச்சரிப்பாய் இருக்கிறது. கர்த்தருக்கும் மற்றும் சகோதர சகோதரிகளுக்குமான பொறுப்புணர்வு மாத்திரமே ஒருவரை இப்படியாக ஊழியம்புரிந்திட விரும்பிடுவதற்கு, சபையில் கர்த்தருடைய பிரதிநிதியாக விரும்பிடுவதற்குத் தூண்டிட வேண்டும்.

மூப்பனாகுவதற்கான அல்லது பெரியவனாகுவதற்கான அதிகம் பிரியமும், பெருமையின் தன்மையிலுள்ள அனைத்தும், அந்நபருக்கு அபாயகரமாய் மாத்திரமல்லாமல், அவன் சம்பந்தப்பட்டுள்ளதான முழுச்சபையாருக்கும்கூட அபாயகரமானதாகும். நோயின் தொற்றுத்தன்மைபோன்று இந்த ஆவியும் தொற்றுகின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஆவிக்கு எதிரான சண்டை, வீண் பெருமை, பேராசை விரைவில் வெளிப்படும். இதைத் தொடர்ந்து கோபம்,

துர்க்குணம், பொறாமை, பகைமை, தீமைபேசுதல், பொல்லாத சம்சயங்கள் கடந்து வருகின்றது. இவைகளைப் பரிசுத்த பவுல் அடிகளார், "மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள்" என்று நம்மிடம் கூறுகின்றார். இந்தப் பாதகம் அனைத்தும், எதிராளியானவனுடைய இந்த ஆவி அனைத்தும் - ஒன்றில் சபையாருடைய ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மூப்பர்களினாலோ அல்லது வழிநடத்துனர்களி னாலோ, இல்லாவிடில் மூப்பர்களாகவோ, வழிநடத்துனர்களாகவோ ஆகிடுவதற்கு ஆசைகொண்டுள்ளதான ஒருவராலோ, ஒன்றிற்கு மேற்பட்டவர்களாலோ சபையாருக்குள் கொண்டுவரப்படக்கூடிய வாய்ப்புள்ளது.

இப்படியாக நடைபெறுகின்றது என்பதினால் நாம் வருத்தமடைகின்றோம்; இன்னுமாக தேவனுடைய அருமையான பிள்ளைகள் அநேகரைக்கொண்டுள்ள (பல்வேறு இடங்களிலுள்ள) அநேகம் சபைகளில், முன்மாதிரியாகக் காணப்பட்டிருந்த அநேகர், இந்நிலைக்குள்ளாகியுள்ளனர் என்பதையும் நாம் அறிவோம். கர்த்தருடைய ஆவியானது முழுக்கட்டுப்பாட்டையும் பெற்றிருப்பதற்குப் பதிலாக, தீமையான ஆவி (அ) பண்பானது, கூடுகைகளில், பல்வேறு விதங்களில் அடிக்கடி வெளிப்படுகின்றதாய் இருக்கின்றது. எண்ணிக்கையில் / விரிவாக்கத்திலும் சரி, ஆவிக்குரிய விஷயத்திலும் சரி, சபையார் வளர்வதற்குத் தவறுகின்றனர். இவைகளே ஆவிக்குரிய பெருமை எனும் இந்தத் தீமையின் கசப்பான கனிகளாக இருக்கின்றன.

வாட்ச் டவர் வெளியீட்டின் வாசகர்கள் அதன் உண்மையான தோற்றத்தையும், கொடூரமான தன்மையையும் காணத்தக்கதாக, அவர்கள் முன்பாக அதை வெளிப்படுத்துவதற்கான மொழியின் ஆற்றல் எங்களுக்கு இருக்குமானால், நிச்சயமாய் அது சீயோனில் அச்சத்தை உண்டுபண்ணியிருக்கும்! இப்படியாக ஆவிக்குரிய பெருமைக்குள்ளாகுபவர்கள் பெரும்பாலும் அருமையான பாத்திரங்களாகவும், உண்மையில் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதான தேவப் பிள்ளைகளாகவும் காணப்படுகின்றனர் என்று கவனிக்கப்படத்தக்கதாக வாட்ச் டவரிலிருந்து எச்சரிப்பு மணியடிக்க நாங்கள் விரும்புகின்றோம். அப்படியானவர் களில் சிலர் கடந்த காலங்களில் ஓட்டத்தை நேர்த்தியாய் ஓடினவர்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம். இவர்களது குணலட்சணங்களானது, தவறான திசையில் மாறியுள்ளதற்கான அறிகுறிகளைக் காண்கையில் நாம் மிகவும் வருத்தமடைகின்றோம்! "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று சொன்னவருக்குச் செவிச் சாய்ப்போமாக (மத்தேயு 7:16).

## ஆவிக்குரிய பெருமைக்கு எதிராக விழித்திருத்தல்

ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளது போன்று, ஆவிக்குரிய பெருமை எனும் இந்த நோயின் விஷயத்திலுள்ள மிக அபாயகரமான காரியம், இந்நோயைப்

பெற்றிருப்பவர்கள், தாங்கள் (நோயைப்) பெற்றிருப்பதை அறியாமல் இருப்பதேயாகும். மற்றுமொரு சிரமம் - அவர்களைத் திருத்திடுவதும் மற்றும் நோயைப் பெற்றிருப்பதை அவர்கள் அறியப்பண்ணிடுவதும் கூடாத காரியமாகும். இதுகுறித்து ஒருவேளை அவர்களிடம் பேசப்பட்டால், தங்களால் நன்மையடைந்தவன், தங்களது சத்துருவாகியுள்ளான் என்றும், தங்கள் மீது அவன் பொறாமைக் கொண்டுள்ளான் என்றும், தங்கள் ஸ்தானம், முதலானவைகளை எடுத்துக்கொள்ள விரும்புகின்றான் என்றும் உடனடியாக எண்ணிடுவார்கள். ஆகையால் ஒன்றில் சபையார் உதவிச்செய்தாலொழிய, இல்லாவிடில் கர்த்தருடைய வழிநடத்துதல் இடைப்பட்டாலொழிய, மற்றப்படி இந்நோயானது கிட்டத்தட்டக் குணப்படுத்தப்பட முடியாது.

இத்தகைய பெருமையானது வளருவதைச் சபையார் கவனிக்கும் பட்சத்தில், சபையார் உடனடியாகவும் மற்றும் அன்புடனும் மற்றும் நல்நோக்கங்களுடனும் செயல்படும் வண்ணமாக - ஆவிக்குரிய பெருமை - மேட்டிமை அடைந்துவரும் ஒரு நபரைச் சபையாருக்கென்றுள்ள எந்த ஓர் ஊழியத்திற்கென்றும் தேர்ந்தெடுக்காமல் மாத்திரம் காணப்பட வேண்டும். இப்படிச் செய்ததின் நிமித்தம் அந்நபர் கோபமடைந்தாரெனில், அவருடைய மற்றும் சபையாருடைய நன்மைக்கெனச் சுயநலவாதியான அந்நபர் அமைதியாய் தணிந்திடவும் மற்றும் பொறுமை காக்கவும் என்று அவரை விட்டுவிடுவது அவசியமெனக் கருதப்பட வேண்டும். இப்படியாய்ச் சபையார் உதவி செய்ய தவறிடும் போது, அந்நபருடைய நன்மைக்கென - ஒன்றில் தொழிலில் பின்னடைவுகள் (அ) இழப்புகள் மூலம் அல்லது சரீரப்பிரகாரமான நோய் மூலம் அல்லது அந்நபருக்குச் சிறந்ததாயிருக்குமென்றுள்ள ஏதோ ஒன்றின் மூலம், அந்நபரை கர்த்தர் சிட்சிப்பது தவிர, வேறேதும் வழியில்லை. கர்த்தருடைய பிள்ளையாயும் மற்றும் நீதியில் சரிப்பண்ணப்படுவதற்கு அவசியமான நிலையில் காணப்படுபவர்களாயும் உள்ள ஒவ்வொருவருக்கும், இதைக் கர்த்தர் செய்வார் என்று நாம் நம்பிக்கைக்கொண்டிருக்கிறோம். "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து (தண்டிப்பார்)" என்று எழுதப்படவில்லையா? (உபாகமம் 32:36).

## இந்தப் பாவத்திற்கான ஒரு வேதாகம உதாரணம்

இந்தப் பாவம் தொடர்புடையதான அநேக உதாரணங்களை வேதாகமம் கொடுக்கின்றதாய் இருக்கின்றது, எனினும் நாம் மிகவும் பிரசித்திப்பெற்ற ஒருவரைத் தேர்ந்தெடுக்கின்றோம். பழைய ஏற்பாட்டின் காலங்களில் ஒரு பரிசுத்தமான, கர்த்தருக்குப் பிரியமான, உயர்பண்புகளுள்ள, சுயத்தைப் பலிச் செலுத்தின ஒரு மனுஷன், கர்த்தருடைய தீர்க்கத்தரிசியானவர் காணப்பட்டார். அவர் கர்த்தருக்கும் மற்றும் அவரது ஜனங்களுக்கும் உண்மையாயும், அருமையாயும், நாற்பது வருடக் காலங்கள் ஊழியம் புரிந்தவராவார்; ஆனால்

முடிவிலோ அவர் தன்நம்பிக்கை - ஆவிக்குரிய பெருமை எனும் இந்தப் பாவத்துக்குள்ளானார். இவைகள் அனைத்திலும் ஆச்சரியம் என்னவெனில், இந்த மனுஷன் தன் ஊழியத்தினுடைய துவக்கத்தில், "பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" என்று வேதாகமத்தில் நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதேயாகும் (எண்ணாகமம் 12:3).

ஆம்! மோசேயே அந்தப் பெரும் சிறப்பு மிக்க நபராவார்; இவர் கர்த்தருடைய ஊழியக்காரரெனக் காணப்பட்ட ஆரம்பக் காலங்களில் மிகவும் சாந்த குணமுள்ளவராகவும், மிகவும் தாழ்மையுள்ளவராகவும் காணப்பட்டார்; ஆனால் தனது ஊழியத்தின் முடிவிலோ, கர்த்தருக்கு மகிமையைச் சாற்றுவதற்குப் பதிலாக ஆவிக்குரிய பெருமை அல்லது தன்னம்பிக்கைக்கொண்டதற்கான தண்டனையாக, வாக்களிக்கப்பட்டத் தேசத்திற்கு செல்வதில் தடைப்பண்ணப்பட்டார். அச்சூழ்நிலையினை நாம் நினைவுக்குக் கொண்டுவருகின்றோம்: கர்த்தருடைய விசேஷித்த ஊழியக்காரனாகிய மோசே, கானானை நோக்கின பிரயாணத்தில் இஸ்ரயேலரை எகிப்திலிருந்து, செங்கடல் வழியாய் வனாந்தரத்திற்குள் வழிநடத்தினார். கர்த்தருடைய கட்டளையின் பேரில், பிரயாணத்தின்போது, அவர் அநேகம் அற்புதங்களைச் செய்தார். இதில் ஒன்று ஜனங்கள் தண்ணீருக்காய்க் கடும் தாகம் கொண்டபோது, கன்மலையை அடித்த சம்பவமாகும். தேவன் கன்மலையை அடிக்கும்படிக்குக் கட்டளையிட்டார் மற்றும் ஜனங்கள் புத்துணர்வு அடையத்தக்கதாக, கன்மலையினின்று தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது.

வேதாகமத்தின்படி, அந்தக் கன்மலையானது கிறிஸ்துவுக்கு - "யுகங்களுக் கடுத்த கன்மலைக்கு" அடையாளமாய்க் காணப்படுகின்றது (1 கொரிந்தியர் 10:4). கர்த்தருடைய ஏற்பாட்டின்படியே - உத்தம இஸ்ரயேலர்களாகி, எகிப்தினின்று - உலகத்தினின்று - கீழ்ப்படிதலுக்குள்ளும், கர்த்தருடன் ஐக்கியத்திற்குள்ளும் - கடந்துவருபவர்களாகிய ஆதாமின் சந்ததியார் யாவருக்கும் ஜீவத்தண்ணீரானது, இயேசுவிடமிருந்து வரத்தக்கதாக "யுகங்களுக்கடுத்த இந்தக் கன்மலையானது" அடிக்கப்பட்டது.

இப்படியாகக் கன்மலையை அடித்து, 40-வருடங்களுக்குப் பிற்பாடு, இஸ்ரயேலர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கான காலத்திற்காகக் காத்திருந்து, இங்கும் அங்குமாகப் பிரயாணிக்கையில், அவர்கள் மீண்டுமாக - வறண்டதும், தண்ணீரற்றதுமான இதே இடத்திற்கு வந்தார்கள். ஜனங்கள் மோசேயிடம் கூக்குரலிட்டனர் மற்றும் என்ன செய்யப்பட வேண்டுமென, ஜனங்கள் சார்பாக மோசே கர்த்தரிடத்தில் கூக்குரலிட்டார். மோசே முன்பு அடித்திட்டதான கன்மலையை நோக்கிப் பேச வேண்டும் என்றும், அப்பொழுது தண்ணீர் வரும் என்றும் கர்த்தருடைய பதில் காணப்பட்டது. ஆனால் தகப்பன் பிள்ளைகளைக் கையாளுவதுபோன்று, நாற்பது வருடங்கள் இஸ்ரயேலர்களை வழிநடத்திட்டதான மோசே, இயல்பாகவே அதிகளவில் தன்னம்பிக்கை அடைந்தவராகிவிட்டார். அவரால் இத்தகையதொரு அனுபவத்திற்குள்ளும் கடந்து சென்று, அவரால்

பூமியிலேயே சாந்தமுள்ள மனிதராக தொடர்ந்து காணப்பட்டிருக்க முடியும்.

இப்பொழுது மோசே கர்த்தருடைய கட்டளையைப் புறக்கணித்தவராக, கன்மலையினிடத்திற்குச் சென்று, ஜனங்களை நோக்கி "கலகக்காரரே உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமோ?" என்று கூறி, கன்மலையைத் தன் கோலால் இரண்டாம் முறையாக அடித்தார் (எண்ணாகமம் 20:1-12). அந்தோ பரிதாபமான மோசே! இவர் மகிமை அனைத்தையும் கர்த்தருக்குச் சாற்றுவதற்குப் பதிலாக, தனக்கு எடுத்துக்கொண்டவரானார். தான் பண்ணின தவற்றை மோசே உடனடியாக உணர்ந்து கொண்டார். இதுவே அவர் செய்திட்ட ஒரே தவறு என்றுகூடச் சொல்லப்படலாம்; எனினும் இதினிமித்தம் அவர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கான சிலாக்கியத்தின் விஷயத்தில், கர்த்தரால் மறுக்கப்பட்டார் மற்றும் பிரவேசிப்பதற்குப் பதிலாக யோர்தான் நதியின் ஒரு பக்கத்திலிருந்து தேசத்தைப் பார்த்திடுவதற்கும், அங்கேயே அவரை அடக்கம்பண்ணிடுவதற்கும் மாத்திரமே கர்த்தர் அனுமதி வழங்கினார்.

ஆவிக்குரிய பெருமையும், தன்னம்பிக்கையும், கர்த்தருடைய பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்கதாய் இருக்கின்றது என்று இந்த ஓர் உதாரணத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம் அல்லவா? நம்முடைய எச்சரிப்பிற்காக எழுதப்பட்டுள்ளதான இந்த மாபெரும் பாடத்தினின்று வேறு ஏதேனும் கருத்துகளை நாம் அடையப்பெறலாமா?

## ஆறுதலான ஒரு வார்த்தை

மோசேயைப்பார்க்கிலும் தாங்கள் மோசமாய் நடந்துள்ளனர் என்றோ அல்லது அதிகம் தன்னம்பிக்கையுடன் தாங்கள் இருந்துள்ளனர் என்றோ அல்லது கர்த்தரைக் கனப்படுத்தும் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையற்றவர்களாக தாங்கள் இருந்துள்ளனர் என்றோ அல்லது அதிகமாய் ஆவிக்குரிய பெருமையுடன் தாங்கள் இருந்துள்ளனர் என்றோ வருந்துகின்றவர்களுக்கு ஆறுதலாக, இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்டனையானது கடுமையாய் இருப்பதற்கான காரணம், அது நிழலின் ஒரு பாகமாய்க் காணப்படுவதினாலேயே ஆகும் என்பதைக் கவனத்தில் கொண்டுவருகின்றோம். கன்மலையை முதல்விசை அடிப்பது என்பது, நமது கர்த்தருடைய சிலுவை மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றபடியால், கன்மலையை இரண்டாம்விசை அடிப்பது என்பது, எபிரெயர் 6:6-ஆம் வசனத்தில் பரிசுத்த பவுலினால் விவரிக்கப்பட்டுள்ளது போன்று, தேவனுடைய குமாரனை மறுபடியும் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்துகிறதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. (இரண்டாம் விசை) கன்மலை அடிக்கப்படுதலானது, இயேசுவையும், அவரது போதனைகளையும், அவரது நோக்கங்களையும் வெளிப்படையாய் மறுதலிப்பதை அடையாளப்படுத்துகின்ற

படியால், யோர்தானைக் கடந்து கானானுக்குச் செல்வதில் மோசே தடைப் பண்ணப்பட்டது என்பது இரண்டாம் மரணத்தை அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது. மோசே ஒருபோதும் கானானுக்கு வரமாட்டார் என்றோ, அவர் இரண்டாம் மரணம் மரித்துவிட்டார் என்றோ நாம் எண்ணிடாமல், மாறாக இந்த ஒரு நிழலானது, அவரது அனுபவங்களில் காண்பிக்க மாத்திரமேபட்டுள்ளது என்றே எண்ணிட வேண்டும்.

ஆவிக்குரிய பெருமையை வெளிப்படுத்தினவர்களாகவும், கர்த்தருடைய நாமத்திலும், சபையின் நாமத்திலும் செய்யாமல், தங்களுடைய நாமத்தினால் காரியங்களைச் செய்பவர்களாகவும் காணப்படும் சகோதரர்கள், மரணத்திற்கேதுவான பாவத்தைச் செய்துள்ளதாக நாம் எண்ணியும் விடக்கூடாது. எனினும் ஆவிக்குரிய பெருமையினால் பயங்கரமான அபாயம் ஏற்படும் என்றும், அதிலே தொடர்ந்து காணப்படும் பட்சத்தில், நிச்சயமாய் இரண்டாம் மரணம் நேரிடும் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இதை உணர்கையில், நம்மில் காணப்படும் அதற்குரிய ஒவ்வொரு அறிகுறியை அழித்துப்போடுவதற்கு மாத்திரமல்லாமல், அந்நோய் நம்மைத் தொற்றாதபடிக்கு அல்லது ஏதேனும் விதத்தில் நாம் அதன் ஆதிக்கத்தின்/தாக்கத்தின் கீழ் வந்துவிடாதபடிக்கு அல்லது அதன் அறிகுறிகள் எதையேனும் பெற்றுவிடாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருப்பதற்கும் நாம் எவ்வளவு கவனத்துடனும், எவ்வளவு வைராக்கியத்துடனும் காணப்படுவோம்!

## ஆவிக்குரிய பெருமை - தடுப்பு மற்றும் குணப்படுத்துதலுக்கான நடவடிக்கைகள்

இந்நோய்க்கு ஆளாகிவிட்டால், இதற்கான சிகிச்சையின் விஷயத்திலுள்ள சிரமத்தை நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம். சிரமத்தின் பிரதான அம்சம் - இந்நோய் மனசாட்சியை அழிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதேயாகும். மனமானது - பொன்னான பிரமாணத்தினுடைய எளிமையான கொள்கைகளுக்கும், சகோதரருக்கான நமது கர்த்தருடைய புதிய கற்பனையினுடைய, இன்னும் மேலான பிரமாணத்திற்கும் - ஏறக்குறைய மந்தமாகிவிடுகின்றது. சபையாருக்கான ஊழியக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலோ அல்லது சபை கூடுகைகளை ஒழுங்குப்படுத்தும் விஷயத்திலோ சபையாரைக் கட்டாயப்படுத்துவதற்கான முயற்சிகள் ஒவ்வொன்றிலும், பொன்னான பிரமாணம் புறக்கணிக்கப்படும் காரியம் வெளிப்படுகின்றது.

கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள கட்டளைகள் தெரிந்தவைகளாயிருக்க, சபையாரிடமே அதிகாரம் உள்ளது என்பது அடையாளம் கண்டு கொள்ளப்பட்டிருக்க, இதை மூப்பர் ஒருவர் மாற்றிடுவதற்கோ அல்லது வேறு மாதிரியாக்கிடுவதற்கோ முற்படுகையில், அவன் தனக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றானோ, அதை அவன் மற்றவர்களுக்குச் செய்யாமல் இருப்பது போன்று காணப்படும். சபையாரில் ஒருவனாக, அவன் எந்த ஒரு காரியத்திலும் கர்த்தர் சித்தம் குறித்த தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கு உரிமைப்

பெற்றிருக்கின்றான். அவன் தனது கணிப்பை வெளிப்படுத்துவதற்கு உரிமையுடையவனாய் இருக்கின்றான். ஆனால் மற்றவர்கள் தங்கள் கணிப்பை வெளிப்படுத்துவதைத் தடுத்திடுவதற்கு அவனுக்கு எந்த உரிமையும் இல்லை; மற்றும் இப்படிப்பட்டதான (அவனது) ஒவ்வொரு தலையிடுதலானது, பொன்னான பிரமாணத்தை மீறுவதாகவும், அன்பின் பிரமாணத்தை மீறுவதாகவும் மற்றும் தேவனைக் கனப்படுத்திட வேண்டும் என்றுள்ள முதலாம் கற்பனையை மீறுவதாகவும் இருக்கும்; ஏனெனில் இம்மாதிரியான காரியங்களுக்காக அருளப்பட்டுள்ளதான தெய்வீக ஒழுங்குமுறைகளைப் புறந்தள்ளுவதை, அவனது தலையிடுதலானது குறிக்கின்றதாயிருக்கும்.

ஆனால் மூப்பர் ஒருவர் பொன்னான பிரமாணத்தினுடைய கொள்கையினை எதிர்ப்பவராகக் காணப்பட்டு சபையார் மீது ஆதிக்கம் செலுத்தவும், தன் இஷ்டப்படி, தன் விருப்பத்தின்படி சபையார் செய்யத்தக்கதாக, அவர்களை வசப்படுத்திடவும் அல்லது கட்டாயப்படுத்திடவும் முயற்சிக்கையில், அவன் தன் மனதையே சீரழிக்கின்றவனாயிருப்பான். அவனது மனசாட்சி மழுங்கிப்போய் விடுகின்றது. தன்னிடத்திலுள்ள தவற்றைத் தெளிவாய்க் கண்ட பிற்பாடும், அதைத் திருத்திடுவதற்குரிய கொள்கைகளைப் புறக்கணிப்பதன் மூலம் தன் மனசாட்சியைத் திரும்பத் திரும்ப மீறுகிறவன், தன் மனசாட்சியைப் படிப்படியாய் அழித்துப்போடுகிறவனாய் இருப்பான்.

ஒரு விஷயத்திலுள்ள உண்மை அல்லது போலியை, நீதி அல்லது அநீதியை, சரி அல்லது தவறை உறுதிப்படுத்திக்கொள்வதற்கென்று நம்முடைய பகுத்துணர்தலுக்கு ஒப்புவிக்கப்படும் பல்வேறு காரியங்களின் விஷயத்தில் பகுத்துணர்வதற்கு உதவியாக மனசாட்சியே அளவுகோலாகக் காணப்படுகின்றது. இந்த அளவுகோலானது மிகவும் நயமற்றதாகவோ அல்லது மிகவும் நேர்த்தியானதாகவோ காணப்படலாம். இது மிகவும் நுணுக்கமாய் வேற்றுமை கண்டறியும் தன்மையுடையதாகவோ அல்லது காரியங்களை நயமற்றும், பக்குவம் இல்லாமலும் மாத்திரம் பார்க்கக்கூடியதாகவோ காணப்படலாம். கிறிஸ்தவன் ஒருவன் நீண்டகாலமாய்க் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் காணப்படுவானானால், அவன் மிகவும் உணர்வுமிக்க மனசாட்சியை உடையவனாய் இருக்க வேண்டும் மற்றும் ஜீவியத்தின் காரியங்கள் தொடர்புடையதாக எழும்பும் கேள்விகள் அனைத்தின் விஷயத்திலும் சமநிலையை அடையத்தக்கதாக தேவனுடைய வார்த்தைகளிலிருந்து அவன் (சமநிலை அடைவதற்கான) எடை கற்களை (weights) எடுக்க முடிகிறவனாகவும் மற்றும் ஜீவியத்தின் காரியங்களிலுள்ள சரி அல்லது தவறை, இவைகள் எந்தளவுக்குக் கர்த்தருக்குப் பிரியமாக அல்லது பிரியமற்றதாகக் காணப்படும் என்பதை மிகவும் துல்லியமாய்த் தீர்மானிக்க முடிகிறவனாகவும் காணப்பட வேண்டும். இந்த அளவுகோலானது வலுவற்றதாய் இருப்பது என்பது, சகல பாவங்களின் விஷயத்திலும் மகா அபாயகரமானதாகும் மற்றும் இப்படியாகவே விசேஷமாக ஆவிக்குரிய பெருமை எனும் பாவத்தின் விஷயத்திலும் காணப்படும் என்று நமக்குத் தோன்றுகின்றது. இந்த அளவுகோலானது சரிப்படுத்தப்படாதது

வரையிலும், எதுவும் செய்யப்பட முடியாது.

கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் மனசாட்சியை முற்றிலுமாக நீதிக்குட்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்றும், தொழில் விஷயத்திலோ அல்லது ஒரு விவாதத்தின் விஷயத்திலோ அல்லது சபையின் தேர்தல் விஷயத்திலோ - ஒரு சகோதரனையோ அல்லது வேறொருவரையோ பயன்படுத்திடுவதற்கு விருப்பமற்று இருக்க வேண்டும் என்றும் எண்ணிடுவது எத்துணை முக்கியமானதாகும்! நீதியினின்றுள்ள தன் சார்பிலான சிறிதளவு மீறுதலுக்கேதுவான சிந்தனையானது, உண்மையான ஒவ்வொரு தேவபிள்ளையினுடைய இருதயத்திலும், தலையிலும் பின்வருமாறு அபாய அறிவிப்பு மணியொலியை உரக்கத் தொனிக்கச் செய்திட வேண்டும்: "நீதிக்கு இசைவாகக் காணப்படுவேன் என்று உடன்பட்டுள்ளவனாகிய நான் அநீதிக்கு இசைவாயாகியுள்ளேனோ? என்னுடைய நடக்கையிலுள்ள அநீதியான காரியம் எதையேனும் நான் கண்டுகொள்ளாமல் இருக்கின்றேனா? என் மனசாட்சியினை அசுசிப்படுத்துகிறவனாயிருந்து, அதனால் ஏற்படும் பயங்கரமான விளைவுகள் அனைத்திற்கும் நான் பொறுப்பாளியாகிவிடுவேனா?"

ஒரு தவறான போக்கினைச் சரிச்செய்து கொள்வது என்பது, இது நித்திய மரணம் அல்லது ஜீவன் சம்பந்தப்பட்டிருப்பதால், இதற்கு ஏற்ப ஜாக்கிரதையுடன் இருதயங்களிலும், மனங்களிலும் நீதியின் கொள்கைகளை மறுபடியும் நிறுவுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். நீதியானது நம்முடைய மனங்களில் மீண்டுமாக நிறுவப்பட்டிருக்கும்போது, அது நம்முடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் கட்டுப்படுத்துகின்றதாயிருக்கும். பின்னர்ப் படிப்படியாக தவறு செய்தவர், தான் எவ்வளவு கீழ்த்தரமாய்க் கொள்கைகளை மீறியுள்ளார் என்பதையும், இராஜ்யம் பற்றின தனது எதிர்கால நம்பிக்கைகளை எப்படி ஆவிக்குரிய பெருமையானது கிட்டத்தட்ட அழித்துள்ளது என்பதையும் காணத்துவங்குவார். இத்தகையவர் நிச்சயமாய் இருதயத்தில் மனஸ்தாபப்பட்டு, இனிவரும் தருணங்களுக்கென முழுமையானத் தீர்மானங்களை எடுப்பவராய் இருப்பார்.

## சுயபரிசோதனைக்கான மிகுந்த அவசியம்

இந்த ஆவிக்குரிய பெருமையின் நயவஞ்சகமான தன்மைகளையும், தீயத் தாக்கங்களையும்/ஆதிக்கங்களையும் அறிந்திருக்கிற நாம், இதிலிருந்து நம்மை நாம் எப்படிப் பாதுகாத்துக்கொள்வது? நாம் நம்மைத் தேவனுடைய அன்பில்தான் காத்துக்கொண்டிருக்கின்றோம் என்றும், ஆவிக்குரிய பெருமையினிடத்திற்குத் திசைமாறிடவில்லை என்றும் எப்படி நாம் அறிந்துகொள்வது?

நம்முடைய ஆலோசனை, நாம் ஏற்கெனவே வாட்ச் டவர் வெளியீட்டில் குறிப்பிட்டுள்ள அதே ஆலோசனையாகவே உள்ளது: கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொரு நாளினுடைய துவக்கத்திலும் அவரிடத்தில் சென்று, தெய்வீக ஞானத்தையும், அவரது மேற்பார்வையையும் கேட்டுக்கொள்வதும் மற்றும்

நாள்முழுவதும் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்திற்கேற்ப ஜீவித்திட நாடிடுவதும் மாத்திரம் போதாது; இதனோடுகூட நாளினுடைய இறுதியில், கர்த்தருக்கென்றுள்ள நமது அர்ப்பணிப்பின் வாக்குறுதிக்கேற்ப அன்றைய நாளில் செய்யப்பட்டுள்ள விஷயங்கள் குறித்தும், செய்ய வேண்டிய, ஆனால் நம்மால் செய்யாமல் விடப்பட்டுள்ள விஷயங்கள் குறித்தும், செய்யக்கூடாதவைகளாயிருக்க ஆனால் நம்மால் செய்யப்பட்டுள்ள விஷயங்கள் குறித்தும் விசேஷித்த சுயப்பரிசோதனை செய்திடுவதற்கு நாம் பரிந்துரைத்தோம். இப்படியாக ஒவ்வொரு இரவிலும் கர்த்தருடன் கணக்குகளையும், கடன்களையும் நாம் பார்ப்பது தொடரும் பட்சத்தில், அதுவும் இவைகள் உத்தமமாய்ச் செய்யப்படும் பட்சத்தில், மாறுபாடற்றதாயும், சீராயும் உள்ள மனச்சாட்சியினால் செய்யப்படும் பட்சத்தில், கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாய்ச் செயல்படும் இத்தகையவர்கள், தங்களைத் தேவனுடைய அன்பிலே காத்துக்கொள்பவர்களாய் இருப்பார்கள் என்று நாம் நிச்சயமாய் எண்ணலாம். இவர்கள் கிருபையில் வளருகிறவர்களாகவும், அறிவில் வளருகிறவர்களாகவும், அன்பில் வளருகிறவர்களாகவும் இருப்பார்கள் மற்றும் "பொல்லாங்கன் அவர்களைத் தொடான்."

மற்றவர்களுடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் கண்ணோக்கும் விஷயத்தில் மிகவும் கடுமையற்றுக் காணப்பட்டு, அவர்களிடத்தில் நல்நோக்கங்கள் வெளிப்படும் பட்சத்தில் அதை மாத்திரமே அவர்களிடத்தில் குறிப்பிடுகிறவர் களாயிருக்க, நம்முடைய சொந்த இருதயங்களையும், நம்முடைய சொந்த நோக்கங்களையும் நம்முடைய முழுப்பெலத்துடன் நாம் ஆராய்ந்திட வேண்டும் என்பதை நாம் மறவாமல் இருப்போமாக. ஏன் நான் இதைச் செய்தேன் அல்லது அதைச் செய்யவில்லை? ஏன் இதை நான் இன்னவிதத்தில் செய்தேன்? ஏன் நான் அப்படியானதொரு தொனியில் பேசினேன்? என்று நம்மிடமே கேள்விக் கேட்டுக்கொள்ள வேண்டும். இம்மாதிரியாகச் சிந்தைகளையும், வார்த்தை களையும், கிரியைகளையும் கவனமாய்ச் சுயப்பரிசோதனைச் செய்வதும், நிதானிப்பதும், கர்த்தருக்கு இசைவுடன் காணப்படுவதில் விருப்பமற்றிருக்கும் ஒருவருக்கு மிகவும் பிரியமற்றதாயிருக்கும். ஆனால் கர்த்தருடன் உடன்படிக்கைப் பண்ணியுள்ளவரும், அந்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராகக் காணப்படுப வருமானவருக்கு இந்த வழிமுறையானது (சுயப்பரிசோதனையானது) - மாபெரும் ஆசீர்வாதமானதாகவும், அத்தருணங்களில் அவர்களது இருதயங்களை ஆறுதல்பண்ணுகிறதாகவும், எதிர்க்காலத்தில் அவர்களைப் பலப்படுத்து கிறதாகவும் மற்றும் கர்த்தருடைய வழிநடத்துதலோடுகூடப் பரலோக இராஜ்யத்தின் ஸ்தானங்களுக்காக அவர்களைப் பொருத்தி, ஆயத்தப்படுத்துவதற்கு ஏதுவானதாகவும் காணப்படும்.

# தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை

## கொலோசெயர் 2:18

கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பெரிய எண்ணிக்கையான கூடுகைகளிலும், சொற்ப எண்ணிக்கையான கூடுகைகளிலும், அவர்களை அனைத்துக் காலக்கட்டங்களிலும் அச்சுறுத்திய தவறான மனோபாவத்திற்கு எதிராகவே, நமக்கு அப்போஸ்தலன் எச்சரிக்கை வழங்குகின்றார்; நமக்கு அல்லது சபையில் வேறுசில மனிதர்களுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்தல் மற்றும் "தமது சரீரமாகிய சபைக்குத் தலையாக" இருக்கும் கர்த்தருக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்காமல் இருத்தல் எனும் அபாயத்திற்கு எதிராகவே அப்போஸ்தலன் நமக்கு எச்சரிக்கின்றார். சில அங்கத்தினர்கள் "கிறிஸ்துவே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்" என்ற உண்மையினை மறந்துபோனவர்களாக, தலைக்குரிய ஸ்தானத்தை எடுத்துக்கொள்கின்றனர் மற்றும் இந்த மறதியின் விளைவாக தங்களைக்குறித்து மகிவும் அதிகமாய் எண்ணிக்கொள்பவர்களாகவும், கர்த்தருடைய நோக்கங்களுக்கடுத்த முழுப்பாரமும், பொறுப்பும் மற்றும் அழுத்தமும் தங்கள் மீதுதான் காணப்படுகின்றது என்று கற்பனை கோட்டைக் கட்டுகிறவர்களாகவும், தலைமைத்துவத்தினை மிகவும் அதிகமாய் எடுத்துக்கொள்பவர்களாகவும் ஆகிவிடுகின்றனர் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

இத்தகைய தவறான ஸ்தானம் எடுத்துக்கொள்ளுதலுக்கு அங்கீகரிப்பையும், ஆதரவையும் வழங்குகின்றதான சபையிலுள்ள முதன்மை வகுக்காத மற்ற அங்கத்தினர்களை எச்சரிக்கும் வண்ணமாக, அவர்களது இத்தகைய பணிந்து செல்லுதலானது மிதமிஞ்சினது என்றும், அவர்களுக்கும், அவர்கள் ஊழியம் புரிகின்றதான நோக்கங்களுக்கும் ஊறுவிளைவிக்கின்றதாய் இருக்கும் என்றும், தூதுவர்கள், செய்தியாளர்கள், சபையினுடைய பிரதிநிதியானவர்கள் என்பவர்கள் அவர்களது உண்மை, நற்கிரியை மற்றும் தாழ்மைக்குத்தக்கதாக உயர்வாய் எண்ணப்பட்டாலும், தொழுதுகொள்ளப்படக்கூடாது என்றும் அவர்களுக்கு உறுதிப்படுத்துகின்றார் (வெளிப்படுத்தல் 1:20; 2:1). தங்களை முற்றிலுமாய்ப் புறக்கணித்துப்போட்டு, இந்தத் தூதர்கள் அல்லது மூப்பர்கள் மீது பாரம், பொறுப்பு மற்றும் ஆளும் வல்லமை யாவற்றையும் வைத்துவிடும் இத்தகைய பணிவானது - சரியற்றது என்றும், கிறிஸ்துவுக்கு உண்மையற்று இருப்பதையும், அவரது ஏற்பாடுகளைச் சரியாய்ப் புரிந்துகொள்ள தவறியுள்ளதையும் சுட்டிக்காட்டுகின்றது என்றும் அப்போஸ்தலன் மற்ற அங்கத்தினர்களை எச்சரிக்கின்றார்.

## எதிர் எதிராயுள்ள மிதமிஞ்சின நிலைப்பாடுகளிலுள்ள அபாயங்கள்

இப்படி எதிர் எதிராயுள்ள மிதமிஞ்சின நிலைப்பாட்டினைப் பெற்றிருக்கும் இருவகுப்பினரையும் கண்டித்தப் பிற்பாடு, அடுத்ததாக இவ்விரு தரத்தாரின் பிரச்சனையானது, தலையானவரை - அதாவது சபையின் ஒரே உண்மையான தலையானவரை அவருக்கே உரிய கனம்கொடுத்து, பற்றிக்கொள்ள தவறுவதேயாகும் என்று விவரிக்க அப்போஸ்தலன் தொடருகின்றார். நம்மை நாமே உயர்த்திக்கொண்டு, சபையில் நமது கர்த்தருக்கான ஸ்தானத்தைப் பிடுங்கி எடுத்து மற்றும் அவரது வார்த்தைகளையும், ஏற்பாடுகளையும் புறக்கணித்து, அவரது ஊழியக்காரர்கள் என்று பெருமைக்கொண்டிருந்தாலும் சரி அல்லது இம்மாதிரியான விஷயங்களுக்கு அமைதியாய்ப் பணிந்துபோய், கர்த்தருடைய சரீரத்தில், அவரது ஸ்தானத்தைப் பிடுங்கி எடுத்துக்கொள்பவர்களை வணங்கிக்கொண்டிருந்தாலும் சரி, இருதரப்பிலுமே பிரச்சனை ஒன்றே - அதாவது உண்மையான தலையினைச் சரியாய் அடையாளம் கண்டுகொள்ள தவறுவதே ஆகும்.

கிறிஸ்துவே சபையின் தலையானவர் எனும் உண்மையினை நாம் ஏற்றுக்கொள்வோமானால், அதன் அடிப்படையில் அனைத்து விவாதங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடுவோமாக; நாம் உடன்படிக்கைப் பெட்டியினைச் சமநிலைக்குக் கொண்டுவர பிடிக்கவில்லையெனில், எல்லாம் துண்டுகளாக உடைந்துபோய்விடும் என்றோ, சீயோனின் எந்த ஒரு சிறு கூட்டத்திற்கடுத்த தெய்வீகத் திட்டம் தொடர்புடைய விஷயத்தில் நாம்தான் முக்கிய பிரதிநிதி என்றோ ஒரு கணம்கூட எண்ணிவிட வேண்டாம் (1 நாளாகமம் 13:10). இத்தகைய தற்பெருமையான எண்ணங்கள் யாவும் நம்முடைய இரட்சிப்பின் அதிபதி தொடர்புடைய விஷயத்தில் துரோக தன்மையுடையவையாக இருக்கின்றது, ஏனெனில் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று அவர் கூறியிருக்கின்றார் மற்றும் நாமும் அவரது வார்த்தையினை நம்புகின்றோம். கர்த்தர் தம்முடைய காரணங்களுக்காக ஊழியம் புரிவதற்கெனச் சபையில் ஏற்படுத்தியுள்ளதான, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும் - தெய்வீகத் திட்டம் நடந்தேறுவதற்கு, முற்றிலும் தான் அவசியமற்றவன் என்றும், தெய்வீகத் திட்டத்தில் ஒரு பங்கினைத் தனக்கு அருளப்பெற்றிருப்பது சுத்த கிருபையே ஆகும் என்றும், தன்னால் ஏறெடுக்க முடிந்திட்டதான எந்தச் சிறு ஊழியங்களையும், பலிகளையும் மிஞ்சுமளவுக்கு நாள்தோறும் தனக்கான ஆசீர்வாதங்கள் காணப்படுகின்றது என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகையால் அவன் தனது சகோதர சகோதரிகள் மத்தியில் ஓர் ஊழியக்காரனாக,

தேவனுடைய மாபெரும் திட்டத்தில் ஏதேனும் பங்கினை பெற்றிடுவதற்கு, தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றான் என்ற சிந்தனையால் இறுமாப்படையாமல், தாழ்மைகொள்ள வேண்டும் மற்றும் கர்த்தரே அவரது சபையின் தலையாக இருப்பதினால், நம்பிக்கைக்குப் பாத்திரமாய் ஒப்படைக்கப்பட்ட ஸ்தானங்களில், தாழ்மையுடன் காணப்படத் தவறும் யார் ஒருவரும் தாழ்த்தப்படுவார் மற்றும் தனக்கும், மற்றவர்களுக்கும் இழப்பாய் அநேகமாய்க் காணப்படும் விதத்தில் சிலாக்கியங்களையும், வாய்ப்புகளையும் இழந்துபோய்விடுவார் என்று அவன் தெளிவாய் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு சகோதரன் தங்கள் மத்தியில் தன்னைத்தான் உயர்த்திக் கொள்வதற்கும் மற்றும் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ எண்ணிக்கையில் காணப்படும் கூடுகையினைக் குறித்து "என் சபை," "என் பின்னடியார்கள்" என்று அவர் பேசிடுவதற்கும் அமைதியாய் அனுமதித்துக் கொண்டிருக்கும், அந்தத் தாழ்மையுள்ள சகோதரர்களும் சகோதரிகளும் அந்தச் சகோதரனுக்குத் தீங்கிழைக்கின்றவர்களாகவும், தவறாய் நடப்பதற்கு அவரை ஊக்குவிப்பவர்களாகவும் இருப்பது மாத்திரமல்லாமல், சபையின் உண்மையான தலையாய் இருப்பவருக்கும் உண்மையற்றவர்களாகி விடுகின்றனர். இம்மாதிரியான சூழ்நிலைகளுக்கும், வார்த்தைகளுக்கும் பணிந்துசெல்கின்றவன், "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீனத்தை" சரிவர உணராமல் இருப்பதை நிரூபிக்கின்றான் - ஒன்றில் தான் "கிறிஸ்துவில் குழந்தையாய்" இருக்கின்றான் என்று அல்லது சபை மற்றும் சபையின் தலைக்குரிய கனம் தொடர்புடைய விஷயத்தில் உரிய விழிப்புக்கொண்டிருப்பதில் உறங்கிப்போய் விட்டான் என்று நிரூபிக்கின்றான். மனப்பூர்வமாய்ச் சொல்லப்படவில்லை என்று இம்மாதிரியான காரியங்களுக்கு விளக்கம் கொடுப்பதில் பிரயோஜனமில்லை. இம்மாதிரியான வார்த்தைகளும், உரிமைப்பாராட்டுதல்களும், ஏற்கெனவே ஏதோ சில கவலைக்கிடமான விஷயம் சம்பவித்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; ஏனெனில் கிறிஸ்துவின் தலையைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக தன்னைக்குறித்துப் பேசுவதற்கோ, கர்த்தருடைய ஜனங்களைத் தன்னுடைய சபை என்று பேசுவதற்கோ, கர்த்தருக்கு உண்மையாய் இருக்கும் கிறிஸ்துவின் சபைக்கான எந்தத் தாழ்மையுள்ள மூப்பரும் எண்ணவே மாட்டார்.

இப்படியான வெளியரங்கமான குற்றங்களுக்கு வெளியரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டு மன்னிப்புக் கேட்கப்பட வேண்டும்; இல்லையேல் இத்தகைய வழிநடத்துபவர்கள் பின்னிருக்கைக்கு அனுப்பப்பட வேண்டும். எண்ணிப்பார்க்கப்பட முடியாதளவுக்கு அவருக்குப் பேச்சுத்திறமைக் காணப்பட்டாலும், பொது ஊழியங்களுக்கென வேறு எவருக்குமே தாலந்துகள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தன்னைக் குறித்துத் தற்பெருமையடைந்து, சபையில் தலையானவருடைய

ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளும் ஒருவனைக்காட்டிலும், சரீரத்திலேயே மிகவும் குறைவுள்ள, பெலவீனமான, மிகவும் சிறப்பற்ற நிலையிலுள்ள அங்கத்தினனே கர்த்தருடைய கணிப்பில் போதிப்பதற்கு நன்கு தகுதியுடையவனாய்க் காணப்படுவான். "கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக்கொள்ளாமல், மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்" (கொலோசெயர் 2:18, 19) எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக் கவனியுங்கள்.

## சுயம் முதலாவது, தேவன் இரண்டாவது

"மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் (மற்றும் பொதுவாய் மேல் அதிகாரங்களுக்கும்) கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" என்று அப்போஸ்தலன் நமக்கு உறுதிப்படுத்துகின்றார் (2 தீமோத்தேயு 3:1-5).

இக்காட்சி நம்முடைய நாட்களில் பெயரளவிலான கிறிஸ்தவமண்டலத்திற்கு நன்கு பொருந்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இந்த ஆவியானது அவ்வப்போது பரிசுத்தவான்களுடைய பாளயத்தை - உலகம் மற்றும் அதன் ஆவியினை ஜெயங்கொள்வதற்கென நாடிக்கொண்டிருக்கின்றதான அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அடங்கின சிறு கூட்டத்தினரைப் படையெடுத்துவர முற்படும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இது விஷயம் குறித்து அப்போஸ்தலன் இத்தனை அழுத்தத்துடன் எழுதுவது என்பது, அவர் சார்பில் அனுதாபக்குறைவு காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இராது மற்றும் அவரது வார்த்தைகளை நாம் மேற்கோளிடுவது என்பது நம் சார்பில் அனுதாபக்குறைவு காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறதாயும் இராது என்பது உறுதியே. ஆனால் இப்பிரச்சனை என்பது, இத்தகைய இறுமாப்புடைய சகோதரருக்கு விசேஷமாய்த் தீங்கு விளைவிக்கி

றதாயும், துன்பம் கொடுக்கிறதாயும் காணப்படும்; மற்றெல்லாவற்றைக்காட்டிலும் இது நிச்சயமாய் ஆவிக்குரிய சத்துவத்தினை அழித்துப்போட்டு, உபதேச ரீதியிலும் மற்றும் ஆவிக்குரிய ரீதியிலும் இருளுக்குள் வழிநடத்திவிடுகிறதாய் இருக்கும்.

கர்த்தருடைய ஜனங்களில் மிகுந்த தாலந்துடையவர்களாய் இருப்பவர்களைச் சூழும் இந்த அபாயத்திற்கு எதிராக அப்போஸ்தலனாகிய யாக்கோபு நம்மை எச்சரிக்கின்றார். "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1) என்று அவர் எழுதியுள்ளார். சகோதரருக்கான எங்களது அன்பின் காரணமாகவும், அவர்களைக்குறித்த எங்களது உயர்வான எண்ணங்கள் காரணமாகவும் மற்றும் அவர்களது ஊழியங்களை நாங்கள் மதிப்பதன் காரணமாகவும் மற்றும் தற்போது மாத்திரமல்லாமல், நித்தியமாய் எதிர்க்காலத்திலும் அவர்கள் கர்த்தருக்கான ஊழியத்தினைத் தொடர வேண்டும் என்ற எங்களது விருப்பத்தின் காரணமாகவுந்தான், தனிப்பட்ட விதத்திலல்ல, மாறாக பொதுவாய் இக்கருத்தினை அழுத்தி வலியுறுத்துவது அவசியமென நாங்கள் எண்ணுகின்றோம்.

சரீரத்தில் தாழ்மையான ஸ்தானங்களிலோ அல்லது குறிப்பிடத்தக்க ஸ்தானங்களிலோ கர்த்தரால் நியமிக்கப்படுபவர்கள் யாவரும், அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நினைவுகூரும்படிக்கு - அதாவது நமது கர்த்தர் தம்மைத்தாமே தாழ்த்தி, பின்பு உயர்த்தப்பட்ட காரியமானது பிதாவின் திட்டத்தில் காணப்படும் கொள்கை ஒன்றினை விவரிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் இதன் கீழ் அவரது இராஜரிக ஆசாரிய கூட்டத்தார் யாவரும், ஏற்றகாலத்தில் உயர்த்தப்படத்தக்கதாக தங்களைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில்கொள்ளும்படிக்கு நாம் வலியுறுத்துகின்றோம். "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6) என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். உயர்த்தப்படுவதற்குரிய காலம் இதுவல்ல; தற்கால சூழ்நிலைகளின் கீழ் நம்மையோ அல்லது மற்றவர்களையோ நாம் உயர்த்த முற்படுவது என்பது விழுந்துபோவதற்கு ஏதுவான மகா ஆபத்திற்கு உள்ளாகிவிடுவதாயிருக்கும். ஆகையால் உண்மையும், தாழ்மையுமுள்ள இருதயமுடைய யாவரும், சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்பம் துவங்கி, இவ்வகுப்பாருடைய பாதையில் மிக மோசமான இடறுதலின் கல்லாக இருந்துவந்துள்ள இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்போஸ்தலர்கள் மத்தியிலேயே, இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்பது தொடர்பாக வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஞாபகம்கொள்கின்றோம். அவர்களைக் கண்டிக்கும் வண்ணமாக நமது கர்த்தர்: "நீங்கள் பிள்ளைகளைப்போல் தாழ்மைக்கொள்ளாவிட்டால், இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" என்று கூறின வார்த்தைகளையும்கூட நாம் ஞாபகத்தில் கொண்டிருப்போமாக.

# தாழ்மையுள்ளவர்கள் மாத்திரமே பாதுகாப்பாய் இருப்பார்கள்

இராஜ்யத்தில் இடம்பெறுவதற்கு மிகவும் அடிப்படையான அவசியங்களில் ஒன்றாக தாழ்மைக் காணப்படுகின்றது என்று இப்படியாக நமது கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். இதன் முக்கியத்துவத்தையும், இதற்கான காரணத்தையும் நம்மால் காணமுடிகின்றது. தனது தாழ்மையின் ஆவியினை முழுமையாய் நிரூபித்திடாத ஒருவரை இராஜ்யத்தின் மகிமைக்கும், கனத்திற்கும் மற்றும் அழியாமைக்கும் மற்றும் திவ்விய சுபாவத்திற்கும் உயர்த்திடுவது என்பது அந்நபர் இன்னொரு சாத்தான், இன்னொரு எதிராளியாக மாறிடுவதற்குரிய ஸ்தானத்தில் வைத்திடுவதாயிருக்கும் மற்றும் அந்நபர் ஒன்றன்பின் ஒன்றாக வஞ்சனைக்குள்ளாகி பிதாவினுடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் உண்மையில் இருப்பவர்கள் யாவருக்குமான நமது பரலோகப் பிதாவின் ஏற்பாடுகளுடைய தயாளத்திற்கும் மிஞ்சி, திவ்விய கனங்களைப் பங்கிட்டுக்கொள்ள விரும்புகிறவராகிவிடுவார்.

இன்னும் அதிகக் காலமில்லை, பிரியமான சகோதரரே - பொறுமையாய் இருப்போமாக. விசுவாசமும் கொண்டிருப்போமாக; சந்தேகிக்கிறவர்களாக இருக்க வேண்டாம். சபையில் அதிகாரத்தினைப் பெற்றிடுவதற்கும், பயன்படுத்திடுவதற்குமான பிரயாசங்கள் அநேகமானவைகள், ஆரம்பத்தில் நல்நோக்கங்களுடனே, சபையினுடைய மேலான நலனுக்கடுத்தக் காரியங்களைச் செய்திடுவதற்கான விருப்பத்துடனே ஏறெடுக்கப்படுகின்றது. அத்தருணங்களில் தெய்வீகத் திட்டத்திற்கு நாம் எவ்வளவு அவசியமற்றவர்கள் என்றும், தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாக ஒவ்வொரு சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங்களையும் கர்த்தர் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிடுவதற்கு வல்லவராய் இருக்கின்றார் என்றும் உணர்ந்து கொள்ளுமளவுக்கு விசுவாசமானது போதுமான அளவுக்குப் பலமானதாய்க் காணப்படவில்லை. சபையின் காரியங்களை நிர்வகிக்கும் விஷயத்தில் கர்த்தருடைய வல்லமையின் மீது அதிகமான விசுவாசம் கொண்டிருத்தல் என்பது, தங்கள் சொந்த ஞானம் மற்றும் திறமையின் அடிப்படையில் சபையின் காரியங்களை நிர்வகிப்பதற்கு ஏதுவான அவரது ஜனங்கள் சிலரின் பிரயாசங்களைப் பெரிதும் எதிர்த்துச் செயல்படுவதாய் இருக்கும். அவர் தம்முடைய சித்தத்தின்படி அனைத்தையும் செய்திடுவதற்கு விருப்பமும், வல்லமையுமுள்ளவராக இருக்கின்றார் என்பதை நினைவில் கொள்வோமாக. நமக்கான உயர்ந்த ஸ்தானம் என்பது தாழ்மை நிலையினை எடுத்துக்கொள்வதாக இருக்கின்றது என்றும், பெரிதான வெற்றி என்பது, சுயத்தை வெல்வதாய் இருக்கின்றது என்றும், நமது கர்த்தருடைய மற்றும் அவரது வார்த்தையினுடைய ஸ்தானத்தையும், அதிகாரத்தையும் பிடுங்கியெடுப்பதில் என்னதான் வெற்றியடைந்தாலும், அது இறுதியில் அனுகூலமற்ற விளைவையே நமக்குக் கொண்டு வரும் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக. ஆகவே நம்மைக் காத்துக்கொள்வதற்கும், சபையினுடைய நலனுக்கடுத்தக் காரியங்களுக்காகவும் மற்றும் கர்த்தரைக்

கனம்பண்ணும் பொருட்டாகவும், நாம் சுயத்தை அடக்கிவைப்பது அவசியமாய் இருக்கின்றது. கவிஞனின் வார்த்தைகளை நாம் நினைவில்கொள்வோமாக மற்றும் அவற்றை தினந்தோறும் செயல்படுத்திடுவோமாக:

ஓ! ஒன்றுமில்லாதவனாய், ஒன்றுமில்லாதவனாய் ஆகிடுவதற்கு,
எந்தனை தாழ்த்திடுவது மிகுந்த வலி தருவதாயினும்;
புழுதிமட்டும் எந்தனை தாழ்த்துகின்றேனே - அப்போதே
உலகம் எந்தன் இரட்சகரைக் காண இயலுமே.

ஒன்றுமில்லாதவனாய், ஒன்றுமில்லாதவனாக ஆக விரும்புகின்றேனே
அவருக்கே உலகத்தின் துதிகள் எழும்பிட;
அவரே ஆசீர்வாதத்திற்கு ஊற்றாயிருக்கிறாரே,
ஆம், அவரே துதிக்குப் பாத்திரர்."

"நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:5) என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளையும், மாதிரியையும் எப்போதும் நினைவில் வைத்திருப்போமாக.

---

R3638 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார்

## தானியேல் 6:10-23

பொய்யான புகழ்ச்சியும், வீண்புகழ்ச்சியும், கர்த்தருடைய ஜனங்களுக்குத் தீங்குபண்ணுவதற்கான எதிராளியானவனுடைய கருவிகளாய்க் காணப்பட்டிருக்கின்றன மற்றும் அநேகந்தரம், தீங்கும் விளைவித்துள்ளது மற்றும் இந்த உண்மையினை அடையாளம் கண்டுகொள்பவர்கள் யாவரும் விசேஷமாய் ஜாக்கிரதையாய்க் காணப்பட வேண்டும். உண்மைதான் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களில் எவருமே தரியு இராஜா போன்று அதிகாரம் அல்லது கீர்த்தியின் உப்பரிகையில் வைக்கப்படுகிறதுமில்லை, சொல்லர்த்தமாய்த் தொழுதுகொள்ளப்படுவதற்கும் வாய்ப்புமில்லை; எனினும் சிறு உலகங்கள், சிறு

சாம்ராஜ்யங்கள், அதாவது அதே கொள்கைகள் ஏறத்தாழ செயல்படுத்தப் படுகின்றதான அறிமுகமான சிறுவட்டாரங்கள் காணப்படவே செய்கின்றன.

கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒவ்வொரு சிறு கூட்டங்களிலும், தாலந்துகள் காரணமாகவோ அல்லது வேறு தேவ செய்கையினால் ஏற்பட்டச் சந்தர்ப்பங்கள் காரணமாகவோ கூட்டத்தாருடைய அன்பிலும், மதிப்பிலும் முதன்மையாய்க் காணப்படுகிற ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் இருப்பார்கள் மற்றும் இது நியாயமானது மாத்திரமல்லாமல், நீதியானதும்கூட என்று கர்த்தருடைய வசனமானது சுட்டிக்காட்டுகின்றது. அவர்கள் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாய் இருப்பார்களானால், அவர்களது ஊழியத்தின் நிமித்தமாக அவர்கள் அன்புகூரப்பட வேண்டும் மற்றும் கனப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அவர்கள் இன்னமும் சகோதரர்கள்தான் என்றும், கர்த்தருக்கு மாத்திரம் உரியதான கனமும், மரியாதையும் எவ்விதத்திலும் அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடாது என்றும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். தேவனானவர் எல்லா விதத்திலும் பிரதானமானவராகவும், தொழுதுகொள்ளுவதற்குப் பாத்திரமான ஒரே ஒருவராகவும் இருக்கின்றார் என்ற இந்தக் கொள்கையில், எந்தச் சபை அல்லது தேசக்கூட்டமைப்பினாலும் தலையிட முடியாது. சபையிலுள்ள சகோதரர்களும், சகோதரிகளும் உண்மையுள்ள வழிநடத்துனர்களை மிகவும் உயர்வாய் எண்ணுகையில், தங்களால் கர்த்தருடைய மற்றும் அவரது மந்தையினுடைய ஊழியக்காரர்களென ஒப்புக்கொள்ள முடிபவர்களை முகஸ்துதி அல்லது தற்பெருமைக்கொள்ளச் செய்து, அல்லது எவ்விதத்திலாகிலும் இறுமாப்படையச் செய்து, இப்படியாய் அவர்களைச் சீரழித்துப் போடாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதுபோலவே தேவனுடைய குடும்பத்தில் காணப்படும் ஒவ்வொரு வழிநடத்துனனும், பெருமை, பேராசை மற்றும் இச்சையினுடைய நயவஞ்சகமான தாக்கங்களுக்கு எதிராகவும் மற்றும் சத்தியத்தின் நிமித்தமும், அதுபற்றின அறிவின் நிமித்தமும், அதை மற்றவர்களுக்கு முன்வைத்திடுவதற்கான ஏதோ சில திறமைகள் நிமித்தமும், தேவனுக்குச் சேரவேண்டிய கனத்தினைத் தனக்கென ஏற்றுக்கொள்ளும் காரியத்திற்கு எதிராகவும் விழிப்பாய் இருந்திட வேண்டும். தாழ்மை என்பது சந்தேகத்திற் கிடமின்றி நமக்கான படிப்பினைகளில் மிகவும் முக்கியமானதொன்றாய் இருக்கின்றது - இதை எந்த அளவிலாகிலும் புறக்கணிப்பவர்கள், நிச்சயமாக இதன் காரணமாக துன்பத்திற்குள்ளாவார்கள்.

ஜெபத்திற்கான ஒழுங்கு மற்றும் அவசியம் குறித்தும் நாம் பார்க்கலாம். கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணுகின்ற சிலர் - முழு ஜீவியமே ஜெபமாக இருக்க வேண்டும் என்றும், தொழுதுகொள்ளும் போதும், ஸ்தோத்திரிக்கும்போதும், கர்த்தருக்கு முன்பாக முழங்கால்படியிடும் ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்படக்கூடாது என்றுமுள்ள - ஒழுங்கில்லாத

ஜெபத்தினை வலியுறுத்துவது குறித்து அவ்வப்போது கேட்கையில் நாங்கள் ஆச்சரியமடைகின்றோம். இத்தகைய புதுக்கருத்துக்களானது எங்களுக்கு அதிர்ச்சியுண்டாக்குகின்றது - இக்கருத்துக்களின் காரணக்காரியமானது, புரிந்துகொள்ள முடியாதவைகளாகக் காணப்படுகின்றன. உண்மைதான் நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ணிட வேண்டும். கர்த்தருக்காகவும், அவரது காரணங்களுக்காகவும் நம்முடைய முழு ஜீவியமே மிகவும் அர்ப்பணிக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் அவரது காருண்யத்தினைக் குறித்த நன்றியுணர்வால் நம்முடைய மனங்களானது மிகவும் நிரம்பிக் காணப்பட வேண்டும் மற்றும் அவரிடத்திலான நம்முடைய விசுவாசமானது, மிகவும் உறுதியாகவும், மிகவும் பிரகாசமாகவும் காணப்பட வேண்டும் - இப்படி இருந்தால் ஒவ்வொரு காரியத்திலும் மனதில் அவர் சித்தத்தினையே எப்போதும் நாம் பெற்றிருப்போம் மற்றும் இப்படியாய்த் தொடர்ச்சியாக இருதயத்தில் ஜெப சிந்தையுடன் காணப்படுவோம். ஆனாலும் இந்த இருதய நிலையினை - மிகவும் குறிப்பான மற்றும் ஒழுங்கான விதத்தில் ஒருவேளை விரும்பும்பட்சத்தில் முழங்காற்படியிட்டு மற்றும் கூடுமானால் சிலசமயங்களில் தனிமையிலாகிலும் கர்த்தரிடம் செல்லாமல், எந்தக் கிறிஸ்தவனாலும் தக்கவைத்திட முடியாது - "உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு."

இது குடும்ப ஜெபங்கள் அல்லது கர்த்தருடைய குடும்ப வட்டாரமாகிய சபையில் ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் பற்றின சிந்தனைக்குத் தடைவிதிக்கிற தில்லை. நமது கர்த்தர் இதற்குத் தமது ஒப்புதலைத் தெரிவிக்கும் வண்ணமாக, அவர் தனித்து ஜெபம்பண்ணத்தக்கதாக தனிமையில் மாத்திரமல்லாமல், சில சமயங்களில் சீஷர்களுக்காக, சீஷர்களோடு ஜெபித்துமுள்ளார். உதாரணத்திற்கு, யோவான் 17-ஆம் அதிகாரத்தில் பதிவு பண்ணப்பட்டுள்ளதான ஜெபம் காணப்படுகின்றது மற்றும் சபையில் ஜெபம் பண்ணுதல் தொடர்பான அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் காணப்படுகின்றன மற்றும் ஜெபத்தில் கலந்து கொள்ளும் மற்றவர்களாலும் புரிந்துகொள்ளப்படத்தக்கதான தொனியிலும், குரலிலும் ஜெபம் ஏறெடுக்கும் ஒழுங்கினைக் குறித்துக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றதான அப்போஸ்தலரின் வார்த்தைகளும் காணப்படுகின்றன. இவைகளுக்கு எதிர்மாறாகப் போராடுகின்றவர்கள், தங்களால் புரிந்துகொள்ளப் படாத காரியங்களுக்கு எதிராக போராடுகின்றதாக அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். இவர்கள் எவ்வளவுதான் திறமிக்கவர்களாய் இருப்பினும், இவர்களுக்குக் கர்த்தருடைய ஜனங்களின் கூடுகைகளில் முதன்மையான ஸ்தானங்கள் கொடுக்கப்படக்கூடாது. மந்தையில் வழி நடத்துனர்களாக இருக்கும்படிக்கு, இவர்கள் அழைக்கப்படுவதற்கு முன்னதாக, முதலாவதாக இவர்கள் கற்றுக் கொள்வார்களாக. இதே கொள்கையானது - ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரித்தல் தொடர்புடைய விஷயத்திற்கு எதிராகப் போராடுகிறவர்களுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

இத்தகையவர்கள் அன்பாய் நடத்தப்பட வேண்டும்; ஏனெனில் நம்முடைய சத்துருக்கள்கூட அன்பாய் நடத்தப்பட வேண்டும்; ஆனால் இவர்கள் - அதாவது பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்தின் அறிவும், அவ்விசுவாசத்திற்கு மதிப்பும் கொண்டிராதவர்கள் மற்றும் கர்த்தரினாலும், அவரது அப்போஸ்தலர்களினாலும் நிறுவப்பட்ட நடைமுறைகள் யாவற்றிற்கும் மதிப்புக் கொண்டிராதவர்கள் - கர்த்தருடைய மந்தைக்கான ஊழியக்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது.

---

R3864

## லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல்

*"ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்." (மல்கியா 3:2,3)*

முழு மனுக்குலத்தின் மீது - விசேஷமாக கிறிஸ்தவ மண்டலத்தின் மீது வரவிருக்கின்றதான மகா ஆபத்துநாள் குறித்த வேதவாக்கியங்களினுடைய போதனையைப் புரிந்துகொண்டதின் விளைவாக, ஆசீர்வாதங்கள் நமக்குக் கடந்துவந்துள்ளது. யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் இல்லாத ஓர் ஆபத்துக்காலத்தைக் குறித்து வேதவாக்கியங்களானது, உண்மையிலேயே போதிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் அக்காலம் குறித்து இப்பொழுதும், நம்முடைய கர்த்தரால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது போல், "பூமியின்மேல் வருபவைகள் குறித்துப் பயந்து எதிர்ப்பார்த்திருக்கிறதினால், மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகின்றது" (லூக்கா 21:26). உலகத்தின் மீது திருடனைப் போன்றும், கண்ணியைப் போன்றும் கடந்துவருகின்றதான இந்த ஆபத்துக்காலமானது, நம்மீது இப்படியாகக் கடந்துவரவில்லை என்பதினாலும், அதன் விவரங்கள் அநேகவற்றையும், மகிமையான விளைவையும், பரலோகத்தின் கீழ்த் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலையும் நாம் விசுவாசத்தினால் ஏற்கெனவே பார்த்து வருகின்றோம் என்பதினாலும் நாம் களிகூருகின்றோம். உலகத்தின்மீது

கடந்துவருகின்றதும், சில விதங்களில் நாம் தப்புவிக்கப்படுவோம் என்று நம்மால் எதிர்ப்பார்க்கப்படுகின்றதுமான இந்த மாபெரும் ஆபத்தானது, கர்த்தருடைய ஜனங்கள் சிலரின் மனதின் கவனத்தை ஈர்த்துள்ளப்படியால், இது சபைக்கான விசேஷித்த மற்றொரு வகையான சோதனையினை அவர்களது கவனத்தினின்று மறைத்துள்ளது; சபைக்கான இந்த விசேஷித்த சோதனையானது, உலகத்திற்கான ஆபத்துநாள் வருகிறதற்கு முன்னதாக, நம்மேல் கடந்துவந்து, நம்மைப் பரீட்சித்து, நம்மை நிரூபித்திட வேண்டும். சபையின் மீதான இந்த ஒரு சோதனை நாள்தான், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான இந்த ஒரு விசேஷித்த பரீட்சைத்தான், நம்முடைய ஆதார வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள்

லேவி வீட்டார், ஆசாரிய கோத்திரமானது, இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய விசுவாச வீட்டாருக்கு நிழலாய் இருக்கின்றனர். லேவியர்கள் மத்தியில் ஆசாரியர்கள் என்பவர்கள் உயர் வகுப்பாராய் அல்லது முறைமையானவர்களாய் இருப்பதுபோல, இராஜரிக ஆசாரியக் கூட்டத்தார், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டவர்கள், இந்தச் சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்கள், ஆவிக்குரிய லேவியர்களாகிய, விசுவாச வீட்டார் மத்தியில் உயர் வகுப்பாராய் இருக்கின்றனர். ஆகையால் தீர்க்கத்தரிசி வாயிலாக கர்த்தர் லேவி வீட்டாரின் பரீட்சை மற்றும் சுத்திகரித்தல் குறித்துக் கூறுகையில், அது "விசுவாச வீட்டார்" யாவரையும், "சிறுமந்தையினரை" மற்றும் "திரள் கூட்டத்தாரை" உள்ளடக்குகின்றதாய் இருக்கும். இந்த யுகத்தினுடைய முடிவானது, முழு விசுவாச வீட்டாரையும் கர்த்தர் சோதித்துப்பார்க்கும் காலமாய் இருக்கின்றது; மற்றும் சோதித்துப் பார்த்தலானது வீட்டாரின் மேல்மட்டத்தினின்று துவங்குகின்றது, பரிசுத்தவான்களிடமிருந்து துவங்குகின்றது; ஆனால் ஒவ்வொரு அர்ப்பணிக்கப்பட்டவர்களிடமும் கடந்துவரும். புடமிடுகிறவரின் பற்றி எரிகிற அக்கினிக்கு உட்படுத்தப்படும் இரண்டு வகுப்பார், பொன் மற்றும் வெள்ளியினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும், சகோதரருக்காகவும் தங்கள் ஜீவியங்களைத் தியாகம் பண்ணிடும் தங்களது அன்பிலும், வைராக்கியத்திலும், கர்த்தருக்கான தங்களது நேர்மையினை விசேஷமாய் நிரூபிப்பவர்களைப் பொன் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இவர்களே பொன் வகுப்பாராய் இருக்கின்றனர் மற்றும் இவர்கள் மணவாட்டி வகுப்பாரென, பூமியின் குடிகள் யாவற்றையும் ஆசீர்வதிப்பதற்கென மாபெரும் இராஜாதி இராஜனோடும், கர்த்தாதி கர்த்தனோடும், அவரது உலகளாவிய சாம்ராஜ்யத்தில், அவரோடுகூட உடன்சுதந்தரராய் இருப்பது இவர்களது பங்காய் இருக்கும். நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும்

வெள்ளியினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான மற்ற வகுப்பார், அவர் பார்வையில் குறைந்த மதிப்புடைய வகுப்பாராய் இருக்கின்றனர்; வெளிப்படுத்தல் விசேஷத்தினுடைய 7-ஆம் அதிகாரத்தில் பேசப்படுகின்றதான இந்தத் திரள்கூட்டத்தினர், 45-ஆம் சங்கீதத்தில், மகிமையின் இராஜாவினுடைய முன்னிலையில் அழைத்துக் கொண்டுவரப்படுகின்றதான மணவாட்டியின் "பின்னாலே செல்லும், அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள்" என்று கூறப்பட்டுள்ளனர்.

"அவர் சோதித்துப் பார்க்கையில் நிலைநிற்பவன் யார்?" என்ற வார்த்தைகளானது, நம்முடைய இருதயத்தை நடுங்கப்பண்ணுகிறதென்றால், பின்வரும் சிந்தனையால் நமக்குத் துயர் தணிகின்றது; அதாவது: சோதித்துப்பார்த்தலானது மிகவும் கடுமையாயும், மிகவும் ஊடுருவி சோதிக்கிறதாயும் இருப்பினும் - அக்கினியின் சோதனையானது களிம்பை முற்றிலுமாய்ப் பிரித்து, பொன்னையும், வெள்ளியையும் சுத்திகரிக்கிறதாய் இருப்பினும் - இப்படியாகச் சோதித்துப் பார்க்கின்றவர், இப்படியாகச் சோதிக்கின்றவர், இப்படியாய்ச் சுத்திகரிக்கின்றவர், இப்படியாகப் புடமிடுகின்றவர், தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை வாங்கினவரும், தம்முடைய அன்பையும், பரிவையும் நமக்கு நிச்சயப்படுத்தினவருமான நமது கர்த்தராகவும், ஆண்டவராகவும் இருக்கின்றார்; இவர் நம்முடைய திராணிக்குமேல் நாம் சோதிக்கப்பட நம்மை விடுவதில்லை என்றும், சோதனையோடுகூடத் தப்பித்துக் கொள்ளும் போக்கையும் அருளுவார் என்றும், அப்போஸ்தலனிடத்தில் வாக்களித்துள்ளவராய் இருக்கின்றார்; மற்றும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாகிய நாம் தேவனிடத்தில் அன்புகூருகிறபடியால், சகலமும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாய் நடக்கும் என்றும் நமக்கு நிச்சயமளித்தவராய் இருக்கின்றார் (1 கொரிந்தியர் 10:13; உரோமர் 8:28).

## எதிர்ப்பார்க்காத திசைகளிலிருந்து சோதனைகள்

விசுவாசத்திற்கான மற்றும் அன்பிற்கான மற்றும் கொள்கைக்குரிய அர்ப்பணத்திற்கான மற்றும் கர்த்தருக்கும், சகோதரருக்குமுரிய நேர்மைக்கான ஒவ்வொரு சோதனையும் எப்படி வருமென நாம் முன்கூட்டியே அறிந்திருப்போமானால், அதை எதிர்க்கொள்ள நாம் ஆயத்தமாய்க் காணப்படுவோம் மற்றும் இப்படி இருக்குமானால், சோதனையானது கடுமையற்றதாக இருக்கும் மற்றும் இதற்கேற்ப நம்முடைய தாழ்மையும், பொறுமையும், அன்பும் குறைவாகவே சோதிக்கப்பட்டிருக்கும். ஆனால் கர்த்தர் இவைகள் விஷயத்தில் நம்மைச் சோதித்திட விரும்புகின்றார்; ஆகையால் எதிர்ப்பார்க்காத திசைகளிலிருந்து நமக்கான சோதனைகளானது பொதுவாக

கடந்துவருகின்றது. இது சோதனையை மிகவும் கடுமையானதாக்கி, நம்முடைய இருதயங்களினுடைய உண்மையான உணர்வுகளை நன்றாய் நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. சுயசித்தம், தனிப்பட்ட குறிக்கோள், பெருமை - போன்ற களிம்புகள் யாவற்றையும் நம்மிடமிருந்து சுத்திகரிக்கக் கர்த்தர் விரும்புகின்றார்; தமக்கும் மற்றும் தம்முடைய குணலட்சணத்தில் வெளிப்படுகின்ற நீதியின் கொள்கைக்குமான நேர்மையினை நம்மிடத்தில் வளர்த்திட அவர் விரும்புகின்றார் மற்றும் தம்முடைய வார்த்தைகள் வாயிலாக நமக்குப் புத்திமதி கூறுகின்றார்.

பொதுவான கிறிஸ்தவ மண்டலத்தினை ஏறெடுத்துப் பார்க்கையில், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையினுடைய பக்கத்தில், "ஆயிரம்பேர் விழுவார்கள்" என்று தீர்க்கத்தரிசி கூறுவது நமக்குக் கேட்கின்றது. நாம் விழுகை நடந்துகொண்டிருப்பதை, மீட்பராகிய கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினின்று விழுந்துகொண்டிருப்பதை மற்றும் பரிணாமம், உயர் விமர்சனம், கிறிஸ்தவ விஞ்ஞானம் முதலானவைகளுக்குள் விழுந்துகொண்டிருப்பதைக் காண்கின்றோம். ஆனால் நாம் இப்பொழுது வீட்டை, சரீரத்தின் அங்கத்தினர்களை, அதாவது இவர்களில் யார் நம்முடைய நாட்களின் சோதனைகளில் நிலைநிற்க முடியும்?" என்று காணும்படிக்கு நாம் உற்றுக் கவனிக்கின்றோம். "யார் நிலைநிற்கக்கூடும்?" என்று அப்போஸ்தலன் கேட்கின்றார் (வெளிபடுத்தல் 6:17). "அவர் சோதித்துப் பார்க்கையில், நிலை நிற்பவன் யார்?" என்று நம்முடைய ஆதார வசனத்தில் தீர்க்கத்தரிசி கேட்கின்றார். பரிசுத்தவான்கள் யாவருக்குமான சோதனை விஷயத்தில், சோதித்துப் பார்த்தலானது - மிகக் கடுஞ்சோதனையாக இருக்கும் என்பதே சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது என்பது உறுதி.

கர்த்தருடைய கிருபையுள்ள ஏற்பாட்டினால், வாட்ச் டவரானது, அறுவடை களத்தின் மீது அத்தகையதொரு பார்வையைக் கொண்டிருப்பதினால், அஞ்சல் வாயிலாக, பயண ஊழியர்கள் வாயிலாக, தொகுதி விநியோகிப்பவர்கள் வாயிலாக கர்த்தருடைய ஜனங்களாகிய சிறுமந்தையினர் யாவரிடத்திலும் அத்தகையதொரு தொடர்பினைக் கொண்டிருப்பதினால், அநேகமாக மற்றவர்களைக் காட்டிலும் எங்களால் மாபெரும் புடமிடுகிறவரின் நெருப்பானது ஏற்கெனவே பற்றி எரிந்து கொண்டிருப்பதையும், பொன்னும், வெள்ளியும் சோதித்துப் பார்க்கப்பட்டுக் கொண்டிருப்பதையும் உய்த்துணர முடிகின்றது. சிலர் இவ்வேளையின் சோதனைகளில் நன்றாய் நிற்கக் கூடாமல் போவதை அவ்வப்போது காண்கையில் ஓ! அது எத்துணை வேதனையை எங்களுக்குத் தருகின்றதாய் இருக்கின்றது! இப்பொழுது சோதனையின் சூளையில் காணப்படும் கர்த்தருடைய அருமையானவர்கள் யாவரையும் நாம் அன்புகூருகின்றோம்; புடமிடுகிறவராகிய கர்த்தர் தாமே அவர்களை அதிகமாய் அன்புகூருகின்றார் என்பதிலும் நமக்கு நிச்சயமே. பெலவீனங்களையும், நோக்கத்திற்கு நேர்மையற்று இருப்பதையும், பெயருக்காகவும், கீர்த்திக்காகவும் அல்லது ஸ்தானத்திற்காகவும் குறிக்கோள்

கொண்டிருப்பதையும், பெரியவர்களாகிடுவதற்கான விருப்பம் இருப்பதையும், தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டிடுவதற்குரிய மனப்போக்கினைக் கொண்டிருப்பதையும் நாம் கண்டுகொள்கையில், இவைகளைக் கண்டு நாம் மனவேதனை அடைவோமானால், வருந்துவோமானால், சிலரில் ஏமாற்றமடைவோமானால், மாபெரும் புடமிடுகிறவர் அக்கறையற்றவராக இருப்பார் என்று நாம் எண்ணக்கூடுமோ? நிச்சயமாக இல்லை! அவர் தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார் என்று அவரைக்குறித்து எழுதப்பட்டுள்ளது; மற்றும் பதிவுகளை வைத்துப் பார்க்கையில், அவர் மிகவும் பொறுமையோடு காணப்பட்டார் மற்றும் சுயநல நாட்டமுள்ள, பேராசையுள்ள, சத்தியத்தினை விற்ற, கர்த்தரை விற்ற யூதாசை தறித்துப்போடுவதில் மெதுவாகவே செயல்பட்டார் என்று நாம் பார்க்கின்றோம். எந்தளவுக்கு ஆண்டவருடைய குணலட்சணத்தையும், சாயலையும் அடைகின்றோமோ, அப்போது வழிவிலகிப் போகிறவர்கள் அனைவரிடத்திலும் நாம் மிக அனுதாபம் உடையவர்களாய்க் காணப்படுவோம். இப்படி வழிவிலகிப் போகிறவர்கள், சீர்த்திருந்திவிடவில்லையெனில் இவர்கள் நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலரினாலும் கூடச் சுட்டிக்காண்பிக்கப்பட்டது போல் "அக்கினியிலகப் பட்டு தப்புகிற" திரள்கூட்டத்தின் அங்கத்தினர்களாகக் காணப்பட்டாலும், இவர்கள் நிச்சயமாய்ச் சரீரத்தினுடைய அங்கத்துவத்திலிருந்து தள்ளுண்டுபோவார்கள் (1 கொரிந்தியர் 3:15).

## நீடிய சாந்தத்துடனும், பொறுமையுடனும் கடிந்துகொள்ளுங்கள்

இரண்டு காரணங்கள் நிமித்தமாக, ஆபத்தில் காணப்படுவதாக தோன்றும் அனைவருக்கும் நாங்கள் கடிதம் எழுதுவது கூடாத காரியமாய் இருக்கின்றது.

(1) நேரம் போதுமானதாய் இல்லை; இவ்வேளைக்கான மற்றக் கடமைகளும் காணப்படுகின்றன; (2) ஒருவேளை அவர்கள் கர்த்தருடைய வசனத்திற்குச் செவிக்கொடுக்க மாட்டார்களெனில், ஒருவேளை அவர்கள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் மற்றும் மோசேயின் மற்றும் தீர்க்கத்தரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்க மாட்டார்களெனில், அவர்கள் எங்கள் வார்த்தைகளுக்குச் செவிக்கொடுப்பார்களென்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது. ஆகையால் நாங்கள் கூறுபவைகள், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாக இருப்பினும் இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாக இருக்குமென நாம் நம்புகின்றோம் என்றாலும், முன்னே சொல்லப்பட்டது போன்ற எச்சரிப்பின் வார்த்தைகளை அவ்வப்போது கொடுப்பது மிகவும் சரியான வழிமுறையாக இருக்குமென எங்களுக்குத் தோன்றுகின்றது.

விநோதமாய்த் தோன்றிடலாம் - எனினும் கடந்த காலங்களிலுள்ள பதிவுகள்

யாவற்றுடன் முழு இசைவாய்க் காணப்படுகிறதென்னவெனில் - இந்தப் பற்றியெரிகிற சோதனைகளும், இந்தப் புடைத்தெடுத்தல்களும், அநேகம் சந்தர்ப்பங்களில் மந்தையினை வழி நடத்துபவர்கள் மத்தியிலேயே மிகுந்த களிம்பைக் கண்டுபிடிக்கின்றதாய்த் தெரிகின்றது. இதற்குக் காரணம், அநேகமாக இவர்கள் மிகவும் கவனத்தினை ஈர்க்கும் நிலைமையில் காணப்படுகின்றனர்; இவ்வளவு பெரிதான முதன்மையான நிலைமையில் காணப்படாத அநேகர் உண்மையில் விழுந்து, வெந்துபோய், "நஷ்டமடைந்து" மற்றும் "அக்கினியிலகப்பட்டுத் தப்பினது" போன்று அநேகமாக இவர்களும் இருப்பார்கள். கர்த்தர் மாத்திரமே இருதயத்தை ஆராய முடியும் மற்றும் எண்ணங்களையும், நோக்கங்களையும் வகையறுக்க முடியும் மற்றும் இப்பொழுது லேவி வீட்டாரின், விசுவாச வீட்டாரின் ஒவ்வொரு அங்கத்தினனையும் தூய்மைப்படுத்துவதும், சுத்திகரிப்பதும், புடமிடுவதும் கர்த்தருடைய சித்தமாய் இருக்கின்றது; மற்றும் நம்முடைய நாட்களிலுள்ள பற்றியெரிகிற சோதனைகளானது, தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாய் வேலையைக் கர்த்தர் நிறைவேற்றத்தக்கதான, அவரது ஏற்பாடுகளாக, அவரது தூற்றுக்கூடைகளாகக் காணப்படுகின்றது.

டாண் 6-ஆம் தொகுதியானது, தொகுதி வரிசையிலுள்ள மற்றத் தொகுதிகள் போன்று, அதன் ஏற்றகாலத்தில் வந்தது என்று நாம் நம்புகின்றோம் மற்றும் அதைச் சிலவிதங்களில் இவ்வேளைக்கான புடமிடும் நெருப்புகளை எரியப்பண்ணிடும், காற்று ஊதும் பூமிக்குரிய துருத்தி குழாயெனக் கர்த்தர் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார் என்பதிலும் ஐயமில்லை. மற்றத் தொகுதிகள் போன்று, அந்தத் தொகுதியிலும் (volume) நாம் நம்முடைய சொந்த கருத்துக்களை முன்வைப்பதற்கல்ல, மாறாக வசனத்தினுடைய போதனைகளையே முன்வைத்திட முயற்சித்தோம் மற்றும் இது சில தருணங்களில் - சுத்த இருதயத்தினின்று புறப்படும் அன்பும், சபையினுடைய மகிமையான சுயாதீனங்கள் குறித்த உணர்ந்து கொள்ளுதலும் மாத்திரமே காணப்பட வேண்டிய சில வழிநடத்துபவர்களின் இருதயங்களில் கோபத்தின் ஆவியினை, மனக்கசப்பினை எழுப்பியுள்ளதாகத் தெரிகின்றது. வழிநடத்துபவர்கள் என்பவர்கள் மந்தையினுடைய எஜமான்களல்ல என்றும், இறுமாப்பாய் ஆளும் ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளும் எந்த வழிநடத்துனனும், கிறிஸ்துவிலுள்ள தன்னுடைய சொந்த உறவு நிலையை அபாயத்திற்குள்ளாக்குவதோடு, கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையில் மந்தை முன்னேறுவதற்குத் தடைப்பண்ணுகிறவனாய் இருந்து விடுகின்றான் என்றுமுள்ள உண்மையினைச் சகோதரருடைய கவனத்திற்குக் கொண்டுவரும் கடமையையே நாம் செய்தோம். கர்த்தருடைய மந்தையிலுள்ள யாரேனும், இத்தகைய பேராசையுள்ள வழிநடத்துபவர்களோடு ஒத்துழைப்பார்களெனில், இவர்கள் அவர்களுக்குத் தீங்குபண்ணுபவர்களாகவும் மற்றும் தங்களுக்கும், தங்களோடுகூட வேதவார்த்தைகளின் ஆராய்ச்சியில் இணைந்துள்ள

மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றதான அங்கீகரிக்கப்படாத அளவுக்கு மீறின மரியாதையினை அளிக்கின்றவர்களாகவும் இருப்பார்கள்.

## தவறுவது என்பது மனுஷீகம், மன்னிப்பது என்பது தெய்வீகம்

"தவறுவது என்பது மனுஷீகம்" என்று எழுதப்பட்டுள்ளது மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பினும், நாம் அனைவரும் புதிய சுபாவம் எனும் பொக்கிஷத்தினை மண்பாண்டங்களிலே பெற்றிருப்பதினால், நாம் தவறு செய்திடுவதற்கு ஏதுவானவர்களாய் இருக்கின்றோம் என்பதை நாம் அறிவோம். இதை உணர்ந்தவர்களாக, சபையினால் நியமிக்கப்படாமல் அல்லது தேவனுடைய சபையில் வழிநடத்தும் ஸ்தானத்தினைத் தங்களுக்கென எடுத்துக்கொள்ளும் மனநிலையிலுள்ள அல்லது தாங்கள் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிற்பாடு, மற்றவர்களுடைய உரிமையினை அலட்சியம்பண்ணிடும் மனநிலையிலுள்ள வழிநடத்துனர்களை நாம் கடினமாயும், இரக்கமற்றும் கையாண்டிடக்கூடாது. எனினும் சபையார் அன்பாயும், நிதானமாயும், உறுதியாயும், அதன் காரியங்கள் அனைத்தையும் அதன் கட்டுப்பாட்டில் கொண்டிருக்க வேண்டும் மற்றும் சபையாரின் வாக்கானது, அர்ப்பணிக்கப்பட்டவர்களின் வாக்காய் இருக்கின்றதென வழிநடத்துபவர்கள் அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாகச் சபையார் பார்த்துக்கொள்ள வேண்டும். இது அனைவருக்கும் அனுகூலமாய் இருக்கும்; அதாவது இது வழிநடத்துபவரைத் தாழ்மைக் கொண்டிருக்க செய்யும், தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஓர் அங்கத்தினன் மாத்திரமே என்றும், தான் கர்த்தரின் வழிநடத்துதலின்பேரில் சபைக்கு ஊழியம் புரிகின்றான், காரணம் அவர்களுக்கு தான் ஊழியம் புரிய சபையார் விரும்புகின்றனர் மற்றும் அதைக் கர்த்தருடைய சித்தமென, தான் கருதுகின்றான் என்றும் அவரை நினைவில் கொண்டிருக்கச் செய்திடும். இது இறுமாப்படைவதிலிருந்தும், மனமேட்டிமைக் கொள்வதிலிருந்தும், சபையாரை "என்னுடைய ஜனங்களென," "என்னுடைய சபையென," "என்னுடைய சபையாரென," "என்னுடைய வேலையென" அகங்காரமாய்ப் பேசுவதிலிருந்தும் வழிநடத்துபவரைக் காத்துக்கொள்ள உதவிடும். இது சபையாரை, "கர்த்தருடைய ஜனங்கள்," "கர்த்தருடைய சபை," "கர்த்தருடைய சபையார்," "கர்த்தருடைய வேலை" என்றும், சபையின் ஊழியக்காரனாய் இருப்பது என்பது ஒரு கனம், ஒரு கிருபை என்றும், அதன் அதிபதியாக, அதன் "அதிகாரியாக" இருப்பது தன்னுடைய அதிகாரத்திற்குட் பட்டதல்ல என்றும் அடையாளம் கண்டுகொள்ள அவனுக்கு உதவிடும்.

இப்படிச் செய்வது என்பது சபையாருக்கும்கூட நன்மை பயக்கின்றதாய் இருக்கும்; அதாவது இவர்களது பிரதிநிதியென, சபையாருக்கு ஊழியக்காரனாக அல்லது வழிநடத்துபவராக ஒருவரை இவர்கள் ஆதரித்து, அங்கீகரிப்பதற்கு ஏற்ப,

கர்த்தருக்கும் அவரது நோக்கத்திற்குமான இவர்களது பொறுப்பு இருக்கும் என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கின்றதாய் இருக்கும். வழிநடத்துபவரினால் செய்யப்படும் தவறுகள் எல்லாம் அச்சபையாருடைய பெரும்பான்மையானவர்களின் குற்றமாயிருக்கும் மற்றும் தங்கள் பொறுப்பினை இவர்கள் உணர்ந்துகொள்ளுதல் என்பது, இவர்களது குணலட்சணங்கள் பெலப்படுவதையும், இவர்களது மனங்கள் தெளிவாகுவதையும் மற்றும் இங்கும் மற்றும் இனிமேலும் உள்ள கர்த்தருடைய ஊழியத்திற்கு இவர்கள் ஆயத்தப்படுவதையும் குறிக்கின்றதாய் இருக்கும். தேவ செய்தி கொடுக்கையில், சபையாரை முன்னிலை விதிப்படி, உதாரணத்திற்கு "நீங்கள் இதைச் செய்யக் கூடாது" என்று மூப்பர் ஒருவர் சொல்வதைக் கேட்பதே காதிற்கு எரிச்சலூட்டுதலாய் இருந்திட வேண்டும். மூப்பர்கள் யாவரும், சபையில் அங்கீகரிக்கப்பட்ட போதகர்கள் யாவரும், எவ்விதத்திலும் வழிநடத்துபவர்களாய்க் காணப்படுபவர்கள் யாவரும், பெயர்ச்சபையில் குருமாரை ஒரு வகுப்பாராகவும், மற்றொரு வகுப்பாரைச் சாதாரண வகுப்பாராகவும் அடையாளங்கண்டு கொள்ளும் வழக்கத்தைப் போன்று, சபையாரைத் தங்களிடமிருந்து வேறுபட்ட ஒரு வகுப்பாராகப் பேசிடாதபடிக்குப் பார்த்துக் கொள்வதற்குக் கவனம் செலுத்திட வேண்டும். மாறாக வழி நடத்துபவர் புத்திமதியினைச் சபையாருக்குக் கூறுகையில், தன்னையும் உள்ளடக்கிக் கூறுவதே தாழ்மையான முறைமையாக, சிறந்த முறைமையாகக் காணப்படும்; உதாரணத்திற்கு "நாம் இக்காரியங்களைச் செய்திடக் கூடாது" என்று சொல்லுவதாகும்.

## அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது

நம் அனைவரின் இருதயங்களிலும், அன்பின் ஆவியானது பெரிதும் வளர்ந்திருக்குமானால், இவ்விஷயம் குறித்து எந்த ஒரு கண்ணோட்டத்திலும் நாம் ஆராய்வதற்கு அவசியமிராது; ஆனால் ஆவியின் கனிகளில் நாம் பகுதியளவே வளர்ச்சியடைந்திருக்கின்றோம்; ஆகையால்தான் நமக்குச் சிரமம் காணப்படுகின்றது; மேலும் ஒரே சரீரத்தின் சகஅங்கத்தினர்களென நம்முடைய உறவானது நாம் முடிந்த மட்டும் யாவருக்கும் உதவிகரமாய்க் காணப்படத்தக்கதாக, ஒருவருக்கொருவர் உதவுவது, மகா முக்கியமானதாய்க் காணப்படுகின்றது. ஒரு வழிநடத்துனனுடைய நடவடிக்கைத் தொடர்பாக, நம்முடைய இருதயங்களில் ஏதேனும் குறைகுற்றத்தின் எண்ணம் தோன்றுமாயின், பின்வருமாறு நம்மிடத்திலேயே கூறிக்கொள்வது சரியான மற்றும் அன்பான வழிமுறையாய் இருக்கும் - அதாவது, "ஒருவேளை வழிநடத்துபவனின் இடத்தில் நான் இருந்திருப்பேனாகில், சரீரத்தைக் கீழ்ப்படுத்தும் விஷயத்தில் - கர்த்தரோடும், சகோதரரோடும் தாழ்மையாய் நடந்திடும் விஷயத்தில் - தனக்கானவைகளை நாடாத, சினமடையாத, இறுமாப்படையாத, தீங்கு நினையாத பூரண அன்பிற்கு மாதிரியாக இருக்கும்

விஷயத்தில் - அவரால் செய்யப்படுகிறதைக்காட்டிலும் அநேகமாக என்னால் அதிகமாய் ஒன்றும் செய்திட முடியாது" (1 கொரிந்தியர் 13:5) என்பதேயாகும்.

பேராசையே சாத்தானுடைய விழுகைக்குக் காரணமாய் இருந்தது என்றும், அதுவே தாயாகிய ஏவாளின் கீழ்ப்படியாமைக்கும் காரணமாய் இருந்தது என்றும், அதுவே கடந்த காலங்களிலுள்ள தேவனுடைய ஜனங்களில் உள்ள சிறந்தவர்களில் அநேகரின் இடறிப்போகுதலுக்கும் காரணமாய் இருந்தது என்றும் நாம் உணர்ந்துகொள்கையில், நாம் எந்த ஒரு நிலைமையில் காணப்பட்டாலும், இந்த ஒரு படிப்பினையின் தாக்கமானது நம்மிடத்தில் குறைந்துபோய் விடக்கூடாது. இது வழிநடத்துபவர்கள் ஆளாகுகின்றதான மாபெரும் பரீட்சைகள் மற்றும் சோதனைகளின் நிமித்தமாக அவர்கள்பால் நமக்கு அனுதாபத்தினை உண்டுபண்ணிட வேண்டும் மற்றும் இது வழிநடத்துபவர்களுக்கு மிகுந்த விழிப்பையும், ஜாக்கிரதைத் தன்மையையும், கவனமாய் இருத்தலையும் கொடுத்திட வேண்டும்; இல்லையேல் கடந்தகாலங்களில் அநேகருக்குத் தீங்குவிளைவித்ததும் மற்றும் கர்த்தர் பெருமையுள்ளவர்களை எதிர்த்து, தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபைப் பாராட்டுவதன் காரணமாக - அவருடைய பார்வையில் மிகவும் விசனத்திற்குரியதுமான, இத்தவற்றினால் இவர்கள் ஏதேனும் விதத்தில் மேற்கொள்ளப்படுவார்கள் (யாக்கோபு 4:6).

நாம் ஒருபோதும் மறந்துபோகக்கூடாத மற்றொரு கருத்தென்னவெனில்: வழிநடத்துபவரினால் முன்வைக்கப்படும் விருப்பம்தான், சபையாருடைய விருப்பமாகவும் இருக்கின்றது என்று தெளிவாய்த் தெரிவிக்கப்பட்டால் ஒழிய மற்றப்படி அவரால் முன்வைக்கப்படும் விருப்பங்கள், சபையாருடைய விருப்பமாகவும் இருக்கின்றது என்று முடிவுப்பண்ணப்படக்கூடாது என்பதுபோல், மற்ற எந்த ஓர் அங்கத்தினனுடைய விருப்பம் அல்லது பகுத்தறிதலானது முழுச்சபையாருடைய பகுத்தறிதலென முடிவுப்பண்ணப்பட வேண்டுமென ஒரு கணம்கூட நாம் கருதிடக்கூடாது. ஒருவேளை ஏதேனும் ஒரு சகோதரன், ஒரு கூட்டத்தின் வழிநடத்துனன், ஞானமான அல்லது தேவவாக்கியங்களின் அடிப்படையிலான சிறந்த வழிமுறையின்படி செய்யவில்லை என்று கடமை உணர்ச்சியில் உணருகிறாரெனில், அவர் தனிமையில் அந்த வழிநடத்துனனிடத்தில் சென்று, பரிவோடும், அன்போடும் அவரிடம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திடலாம்; ஆனால் இவரது அபிப்பிராயத்தின்படி அந்த வழிநடத்துனன் கண்டிப்பாய்ச் செய்திட வேண்டுமென்றில்லை. அந்த வழிநடத்துபவன்: "இது ஓர் அபிப்பிராயமாய் இருக்கின்றது மற்றும் என்னுடைய அபிப்பிராயமானது எவ்விதத்திலும் மதிக்கத்தக்க இன்னொன்றாய் இருக்கின்றது" என்று கூறிடலாம் மற்றும் அவர் தனது அபிப்பிராயத்தினைத் தழுவியே தொடர்ந்து காணப்படலாம் அல்லது அதைச் சிறிது மாற்றிப் பெற்றிருக்கலாம். எந்த ஒரு விஷயத்திலும் முழுச்சபையாரின் வாக்கே (vote) நாடப்பட வேண்டும் மற்றும் இதுவே - தேவவசனத்தினின்று

அறியப்பட்டுள்ள தெய்வீகச் சித்தம் தொடர்புடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களின் புரிந்துகொள்ளுதலின்படி - சபையில் அனைத்துக் காரியங்களையும் முடிவு செய்கிறதாய் இருக்க வேண்டும்.

## இன்னொரு பக்கத்திலிருந்து வரும் ஓர் அபாயம்

யார் ஒருவரும் காரியங்கள் குறித்த தன்னுடைய கண்ணோட்டமே, வழிநடத்துனரின் கண்ணோட்டத்தைவிடச் சிறந்தது அல்லது ஆரோக்கிய மானதென மிகவும் அவசரமாய் முடிவிற்கு வந்துவிடக்கூடாது. மாறாக சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வழிநடத்துனர் என்பவர், சபையாருடைய நலனுக்கடுத் தவைகளைக் கவனிப்பதற்கென்று அவர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நன்கு பொருத்தமான ஒருவராய் இருக்கின்றார் என்ற உண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் சில குறிப்பிட்ட விஷயங்களில் தனக்கு வேறுப்பட்ட கருத்துக் காணப்படுவதற்குக் காரணம் இருப்பதாக எண்ணிடும் சகோதரன் அல்லது சகோதரி கொஞ்சம் தயக்கங்கொள்ள வேண்டும்; காரியத்தினைக் குறித்து மறுபரிசீலனைச் செய்திட வேண்டும்; கவனமாய்ச் சீர்த்தூக்கிப் பார்த்திட வேண்டும்; ஒருவேளை அவனால் அல்லது அவளால் காரியத்தினை இப்படியாக வேதவாக்கியங்களில் கண்டுபிடிக்க முடியுமானால், காரியத்தினை வழிநடத்துனனின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்திட முயற்சிக்க வேண்டும். இவை அனைத்திற்கும் பிற்பாடும் அவன் அல்லது அவள் இன்னும் உறுதிகொண்டு இருக்கும் பட்சத்தில், சடுதியாக, அவசரமாக, தீவிரமாக அவனது அல்லது அவளது கண்ணோட்டங்களை வற்புறுத்த முயற்சிப்பதன் வாயிலாக முழுச்சபையாரையும் தொல்லைப்படுத்துவது என்பது அவனது (அ) அவளது கடமையாகவோ, அவனது (அ) அவளது சிலாக்கியமாகவோ இருப்பதில்லை. "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" என்று அப்போஸ்தலன் கூறுவதுபோல், அவனது (அ) அவளது சாந்தகுணமானது வெளிப்படுத்தப்பட வேண்டும் (பிலிப்பியர் 4:5). வழிநடத்துபவரால் அங்கீகரிக்கப்படுபவைகளை அவன் (அ) அவள் அங்கீகரித்திட வேண்டும் மற்றும் அவரது நடவடிக்கையில் சில விஷயங்களுக்கு ஆட்சேபணைத்/மறுப்புத் தெரிவிக்கையில், அது சகல பரிவுடனும், தன்னடக்கத்துடனும், சகோதர அன்புடனும், நிச்சயமாய்ச் சாந்தத்துடனும் தெரிவிக்கப்பட வேண்டும்.

பொதுமக்கள் மத்தியில் மக்கள் சேவகர்களுடைய செயல்களானது, பொதுமக்களுடைய பரிசீலனைக்கும், விமர்சனத்திற்கும் உள்ளாகுவது போன்று, சபையினை வழிநடத்துபவர்களின் வெளிப்படையான போதனைகளும், வெளிப்படையான நடத்தையும், அவர்களது சகோதரரின் விமர்சனத்திற் குள்ளாகுகின்றது; எனினும் அன்பு மற்றும் அனுதாபத்தின் ஆவியானது எப்போதும் நிலவ வேண்டும் மற்றும் எதுவும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது

செய்யப்படக்கூடாது; மற்றும் தூக்கியெறிய வேண்டும் என்ற திட்டவட்டமான கண்ணோட்டத்தில் மூப்பர் ஒருவரை விமர்சிக்கும் யார் ஒருவனும், மிகவும் ஆபத்தானவனாகக் கருதப்பட வேண்டும் மற்றும் இத்தகைய சுயநலமுள்ள, தன்னல நாட்டமுள்ள ஆவி அபாயகரமானது என்றும், அந்நபருடைய நலனுக்கும், சபையாருடைய நலனுக்கும் இருவருக்குமே தீங்கு விளைவிக்கக் கூடியது என்றும் அனைவரும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். கர்த்தருடைய தாழ்மையுள்ள பின்னடியார்கள் மத்தியில் வழிநடத்துபவராக இருப்பதற்குரிய சரியான இருதய நிலைமையில் காணப்படும் சகோதரன், வார்த்தையிலும், நடத்தையிலும் - எல்லாவற்றிலும் தாழ்மையினை வெளிப்படுத்திட வேண்டும். இப்படி வெளிப்படுத்திடாத மற்றவர்களைக் காண்கையில் வெறுப்பினால் முகம் சுளிக்கப்படவோ அல்லது வெளிப்படையாக அவர்கள் கடிந்துகொள்ளப்படவோ வேண்டியதில்லை; மாறாக அவர்கள் ஊக்குவிக்கப்படக்கூடாது - அதாவது அவர்களுக்கும், அவர்களுடைய செல்வாக்கின்கீழ் வரும் மற்றவர்களுக்கும் தீங்கு ஏற்படாதபடிக்கு, அவர்கள் சபையில் செல்வாக்குரிய இடங்களில் வைக்கப் படக்கூடாது.

## பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது

சபையினுடைய நலனுக்கடுத்தவைகள் தொடர்புடைய விஷயத்தில் செயல்படுவதற்கு மிகவும் அவசரப்படாதீர்கள். உங்கள் நோக்கங்களானது நன்மையானதாகவும், தூய்மையானதாகவும், நீங்கள் யாரை விமர்சிக்கின்றீர்களோ, அவர்களிடத்தில் அன்பானதாகவும் இருக்கின்றதா என்று முதலாவது உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்; புறங்கூறுதலுடன் உங்களுக்கு எந்த உடன்பாடும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்; கர்த்தரால் கொடுக்கப் பட்டதான சபைக்கான சுயாதீனங்களை மாத்திரமே நீங்கள் நாடுகின்றீர்கள் என்பதையும், கூட்டத்தினுடைய காலம், இடம், தன்மை மற்றும் வழிநடத்துபவர்கள் தொடர்புடையதான சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்களை மாத்திரமே நீங்கள் நாடுகின்றீர்கள் என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்; மற்றும் கருத்தைத் தெரிவித்திடுவதற்கான உங்களது உரிமைகளானது அலட்சியம் பண்ணப்படக்கூடாது அல்லது புறக்கணிக்கப்படக்கூடாது என்று நீங்கள் தொடர்ந்து வேண்டிக்கொள்ளும் அளவிற்கு, மற்றவர்களும் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்திடுவதற்கான உரிமைகளைப் பெற்றிருக்க வேண்டுமென நீங்கள் அக்கறையோடு இருக்கின்றீர்களா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

மிகச் சிறிய எண்ணிக்கையிலுள்ள சபையாராகவோ அல்லது தவிர்க்க முடியாத காரணத்தினாலோ தவிர, மற்றப்படி ஒரே வழிநடத்துபவரை அல்லது மூப்பரை ஒரு சபையார் அடுத்தடுத்து, தொடர்ந்து பல வருடங்களாகப் பெற்றிருப்பது

என்பது அனுகூலமற்றதாகவே இருந்துள்ளது. சபையின் ஊழியக்காரர்களாய் இருப்பதற்குரிய வாஞ்சையுடனும், இச்சிலாக்கியத்திற்குத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்றும், ஊழியத்திற்குத் தகுதியற்றவர்கள் என்றுமுள்ள எண்ணங்களுடனும், வார்த்தைகளுடனும் தாழ்மையோடு துவங்கின சிலர், வருஷா வருஷம் அந்த ஸ்தானத்தில் தொடர்ந்து காணப்பட்டால், பிற்பாடு கடுமையான பரீட்சை மற்றும் சோதனைக்குள்ளாகுகின்றார்கள் மற்றும் போகப் போக, தங்களுக்கு அந்த ஸ்தானம் உரியது என்றும், வேறு யாரையாகிலும் ஊழியத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுவது தங்களுக்கு அவமதிப்பு என்றும் எண்ணிடும் அபாயத்திற்குள்ளாகுகின்றார்கள். இது முற்றிலும் தவறான காரியமாகும்; இது தொடர்பான ஓர் உதாரணத்தையும் நாம் வேதவாக்கியங்களில் பெற்றிருக்கின்றோம். "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாய் இருந்தான்" என்று நாம் வாசிக்கின்றோம் (எண்ணாகமம் 12:3). இதுவே மோசேயை தம்முடைய ஜனங்களுக்கான வழிநடத்துனனாகக் கர்த்தர் தெரிந்துகொண்டதற்கான காரணம் என்பதில் ஐயமில்லை. நாற்பது வருடங்களாக இஸ்ரயேல் தேசத்தார் ஒவ்வொரு நெருக்கடி நிலைமையின்போதும், இவரையே நோக்கிப்பார்த்தனர் மற்றும் கானான் தேசத்திற்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படாத அளவுக்கு அந்த நாற்பது வருடங்களின் இறுதியில், பூமியிலேயே மிகுந்த சாந்தகுணமுள்ளவராகக் காணப்பட்ட மனுஷன் மிகவும் அகந்தையடைந்துபோன காரியம் நம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறதில்லை. போதுமான அளவுக்குச் சாந்தமாய்க் காணப்படாததினால், மோசே கானானுக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தினை இழந்தவரானார்; காரணம் தனது ஆதி சாந்தத்தினை அதிகளவில் அவர் இழந்திருந்தபடியால், "கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமோ" என்று சொல்லி, வனாந்தரத்தில் கன்மலையை அடித்தார் (எண்ணாகமம் 20:10)

## வழிநடத்துபவர்கள் யாவருக்குமான ஒரு படிப்பினை

பூமியிலேயே மிகுந்த சாந்தகுணமுள்ளவராகக் காணப்பட்ட மனுஷன் மற்றும் உலகத்தின் சரித்திரத்திலுள்ள மாமனிதர்களில் ஒருவர், இவ்விதமாய் ஜனங்கள் மத்தியிலான தன்னுடைய ஸ்தானத்தின் சூழ்நிலைகளினால் மேற்கொள் ளப்பட்டாரெனில், ஆவிக்குரிய இஸ்ரயேல் மத்தியில் சாந்தமானவர்களாகவும், தாழ்மையானவர்களாகவும் துவங்கின சிலர் ஏறக்குறைய அகந்தையுள்ளவர் களாகி, தாங்கள் செய்பவைகளையும், செய்ய வேண்டியவைகளையும் குறித்துப் பேசுபவர்களாகவும், ஜீவத்தண்ணீருக்காக மற்றவர்கள் தங்களைச் சார்ந்திருப்பதாக எண்ணுபவர்களாகவும் இருப்பதை நாம் காண்போமானால், நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. மோசேயினுடைய இந்த நிழலை நாம் நோக்கும் போதெல்லாம், அது நம் அனைவரிடமும், அதிலும் விசேஷமாக வழிநடத்துபவர்கள்

அனைவரிடமும் "என் ஆத்துமாவே விழிப்பாயிரு" என்று சொல்லிட வேண்டும். கர்த்தரை எப்போதும் நோக்கிப்பார்க்கிறதும், இந்த அபாயம் குறித்து உணர்ந்து கொள்ளுகிறதும், அதற்கு எதிராய்த் தொடர்ச்சியாய் எதிர்த்துப் போராடுகிறதும்தான் - நம்மை நமது மீட்பருடைய அருகில் - சாந்தமும், தாழ்மையுமுள்ள இருதயமுடையவரின் அருகில் - தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகித்த மாபெரும் போதகரின் அருகில் - சாந்தத்துடன் தம்முடைய ஜீவனை அன்பின் ஊழியத்திற்கென ஒப்புக்கொடுத்திட்டவருடைய அருகில் - தன்னலத்தை, கனத்தை நாடாமல் மரணப்பரியந்தம், சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினவரின் அருகில் - நம்மைப் பாதுகாப்பாய் வைத்திடும் (எபிரெயர் 12:3). இதைக் குறித்து அப்போஸ்தலன், "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்று கூறுகின்றார் (1 பேதுரு 5:6). சபையில் உயர்த்தப்படுதல், செல்வாக்கு, ஸ்தானம், அதிகாரம் என்பவைகள் கூடுதல் சோதனைகளையும், கூடுதல் பலிச்செலுத்துதல்களையும், கூடுதல் அபாயங்களையும் கொண்டுவருகின்ற தாயிருக்கும். ஒருவர் எவ்வளவு உயருகிறாரோ, அவ்வளவுக்கு - தன் நிலைமையை இழந்து, விழுந்துபோகாதபடிக்கு - அவர் மிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

சிலசமயம் நற்பண்புகளையும், நல்ல தன்மைகளையும் உடையவராக இருக்கும் மற்றும் சபையினுடைய விருப்பங்களைப் புறக்கணித்தவராக, சபையைத் தன்னுடைய சொந்த கருத்துக்களின் அடிப்படையில் நடத்திடுவதற்கு விடாப்பிடியாய்க் காணப்படும் மூப்பரினால், சபையாரின் பொறுமையானது கடுமையாய்ச் சோதனைக்குள்ளாகுகின்றது. ஒருவேளை மூப்பரை எதிர்க்கின்ற காரணம், நல்லொழுக்கமற்ற விஷயமாக இருக்குமாயின் அல்லது திவ்விய வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளதான அடிப்படை சத்தியங்கள் தொடர்பான தவறான உபதேசங்கள் விஷயமாக இருக்குமாயின் - உதாரணத்திற்கு ஈடுபலி தொடர்பான தவறான உபதேசமாக இருக்குமாயின், இது விஷயங்களில் சபையார் தேவனுக்கும், மனுஷருக்கும் முன்பாகப் பொறுப்பாளியாகக் காணப்படுவதினால், நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். இது விஷயங்களில் கவனக் குறைவு என்பது பொறுத்துக்கொள்ளப்பட முடியாது; காரியமானது சபையாரால் உறுதியாய்க் கையாளப்பட வேண்டும். ஒருவேளை உபதேசத்தில் அல்லது அடிப்படை சத்தியங்களில் வழிநடத்துபவர் கர்த்தருக்கும், அவரது வசனத்திற்கும் மற்றும் அறுவடை செய்திக்கும் நேர்மையாய்க் காணப்படுவாரானால் மற்றும் ஒருவேளை சபையாரில் அவரை நெருக்கமாய் அறிந்திருப்பவர்கள் பார்வையில் அவதூற்றிற்கு இடம்கொடாதவராக இருப்பாரானால் மற்றும் ஒருவேளை சபையாரில் பெரும்பான்மையானவர்கள் கேட்டுக்கொண்டுள்ள இடத்திலோ அல்லது வேளையிலோ அல்லது அம்சத்திலோ கூடுகைகளை நடத்திட அவரது விருப்பமின்மை மாத்திரமே அவரது முரண்பாடாய் இருக்குமானால், சமாதானம்

கருதி, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட காலமானது, நிறைவு பெறுவது வரையிலும் அவரைத் தொடர அனுமதிப்பது ஞானமான வழிமுறையாய் இருக்கும்.

தேர்ந்தெடுத்தல் (election) வரும்போது, அவரைக்குறித்துக் குறிப்பாய்ச் சொல்லாமல் அல்லது அவரிடத்தில் அன்பற்ற வார்த்தை ஏதும் கூறாமல், சபையார் அவரை முழு அதிகாரமுள்ள எந்த ஊழியத்திற்கும் மறுபடியுமாக தேர்ந்தெடுக்காமல் இருப்பதற்குத் தங்களுக்கும், கர்த்தருக்கும், சத்தியத்திற்கும் கடமைப்பட்டிருக் கின்றனர். ஆனால் இது அச்சகோதரன் முற்றிலுமாய் வழிநடத்தும் பணியினின்று விலக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பதாகாது; மாறாக அவர் நடத்திட விரும்பிட்டதான அந்தக் குறிப்பிட்டக் கூட்டங்களும், அக்கூட்டங்களின் அம்சங்களும் புரிந்துகொள்ளப்பட்டு, எதிர்க்காலத்தில் மனஸ்தாபங்கள் காணப்படாதபடிக்கு, அக்காரியங்களின் அடிப்படையில் அவரது தேர்ந்தெடுத்தல் காணப்பட வேண்டும் மற்றும் சபையாருக்கு ஊழியம் புரிவதற்குரிய தகுதிகளையுடைய மற்றவர்களை - அதாவது தம்முடைய பார்வையின் கீழ் முழுச்சூழ்நிலையையும் வைத்திருக்கும் கர்த்தர், பிளவை நிரப்புவதற்கென மற்றவர்களை ஆயத்தம்பண்ணி வைத்திருப்பார் என்ற எதிர்ப்பார்ப்புடன் நாடப்பட வேண்டும்.

## பட்சமாயிருங்கள்

ஒருவேளை அச்சகோதரனுடைய நடத்தையானது இப்படி அன்போடும், கனிவோடும் கடிந்து கொள்ளப்பட்ட பிற்பாடும், அவர் தொடர்ந்து சொந்த சித்தம் கொண்டவராகவும், அகந்தையுடையவராகவும், சபையாருடைய கருத்துக்களின் அடிப்படையில், அவர்களுக்கு ஊழியம் புரிந்திட விருப்பமற்றவராகவும் காணப்படுவாரானால், அவரை வழிநடத்தும் ஊழியத்தினின்று முற்றிலுமாய்க் கொஞ்சக்காலம் விலக்கி வைப்பது ஞானமான காரியமாயிருக்கும். ஆனாலும் எதுவும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யப்படாமல் இருப்பதாக - எந்த அன்பற்ற வார்த்தைகளும் சொல்லப்படாமல் இருப்பதாக. மாறாக கடந்த காலங்களில் பண்ணப்பட்டதான ஊழியங்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; அவர் [கடந்தகாலங்களில்] செய்திட்ட அந்த ஊழியங்களுக்காக மதிக்கப்பட வேண்டும். அதிகாரமுடைய ஏதோ ஒரு மனிதன் இல்லாமல்போனால், காரியங்கள் அனைத்தும் மோசமான நிலைமைக்குள்ளாகிடும் என்று பயப்பட வேண்டாம். கர்த்தருக்குள்ளான ஒவ்வொரு சகோதரனும், ஊழியக்காரனும், அவர்களது கிரியைகள் மற்றும் குணலட்சணங்களுக்கு ஏற்ப மிகவும் உயர்வாய் மதிக்கப்படும் அதேவேளையில், கர்த்தர்தாமே நம்முடைய ஆயராக, நம்முடைய கண்காணியாக, நம்முடைய மேய்ப்பராக, நம்மை வழிநடத்துபவராக இருக்கின்றார் என்றும், நாம் அவரது ஆடுகளாய் இருக்கின்றோம் என்றும் நாம் எப்போதும் நினைவில் கொள்வோமாக. ஒருவேளை சபையார் தங்கள் ஆவிக்குரிய ஆறுதலுக்காக, புத்துணர்விற்காக மற்றும் பக்திவிருத்திக்காக ஏதோ ஒரு நபர்மேல்

மிகவும் சார்ந்திருப்பார்களானால், ஏதோ தவறு உள்ளது மற்றும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் காரியங்களானது, சீக்கிரத்தில் கவலைக்கிடமான நிலைக்குள்ளாகும். சத்தியத்திற்குள் வந்திருப்பவர்கள் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்பிடலாம்; ஒருவரையொருவர் பக்திவிருத்தியடையப் பண்ணிடலாம் மற்றும் பல்வேறு வகையான பெரோயா வேதவாக்கிய ஆராய்ச்சிகளில் ஒருவருக்கொருவர் உதவிடலாம் மற்றும் இவைகளைச் செய்வதன் மூலம் அநேகமாக அதிகம் முன்னேற்றம் காணலாம் - அதாவது ஒருவேளை தேவனுடைய சுதந்தரத்தை வழிநடத்துபவர்கள் ஆளுவதற்கும் மற்றும் பெரும்பான்மையானவர்களின் விருப்பங்களுக்கு மாறாக சபையை நிர்வகிப்பதற்கும் சபையார் தொடர்ந்து அனுமதிப்பதினால் ஏற்படும் முன்னேற்றத்தைக் காட்டிலும் அநேகமாக அதிகம் முன்னேற்றம் காணலாம்.

பெரும்பான்மை எனும் வார்த்தைக்கு நாம் அழுத்தம் கொடுக்கின்றோம்; காரணம் அடிக்கடி சிறுபான்மையினர் அதிகாரம் செலுத்த முற்படுகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். சரீரத்தினுடைய வெவ்வேறு அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கின்றதான அன்புடன்கூடிய அக்கறையானது - பெரும்பான்மையினர், சிறுபான்மையினருடைய - தனிப்பட்ட நபர்களுடைய - விருப்பங்களையும், விருப்புசார்புகளையும் கொஞ்சம் அங்கீகரித்திடுவதற்கு ஒப்புக்கொள்ள முற்றிலுமாய் விரும்புமளவுக்கு - அவர்களை அனுதாபங் கொள்ளவும், அன்புடன் ஒத்துழைக்கவும் செய்திட வேண்டும் என்பது நம்முடைய கருத்தாய் இருக்கின்றது. வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், பெரும்பான்மையினர் சுயநலமாய்க் காணப்படக்கூடாது மற்றும் பெரும்பான்மை என்பது அதிகாரத்தினைக் கொடுப்பதினால், அந்த அதிகாரத்தினை - அதாவது கொஞ்சம் வேறுபட்ட கண்ணோட்டங்களை உடைய தங்களது சகோதரரைப் புறக்கணித்து அந்த அதிகாரத்தினைச் செயல்படுத்துவது தகுதியானதே என்று பெரும்பான்மையினர் முடிவெடுக்கக்கூடாது. வேதவசனத்தினுடைய கொள்கைகள் சம்பந்தப்படாத காரியங்களில், ஒவ்வொருவரும் மற்றும் அனைவருமே அவனது அல்லது அவளது சொந்த சுபாவ விருப்பங்கள், விருப்புவெறுப்புகள் சிலவற்றைப் புறக்கணிப்பது என்பது இருதய ஒற்றுமையாகும்.

இந்தக் கட்டுரையிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் - சகோதர அன்பினால் நிறைந்த இருதயத்தினாலும், தனிப்பட்ட விரோதமோ அல்லது வேறெந்த தீமையான ஆசைகளோ, தூண்டுதல்களோ இல்லாமல், மாறாக கர்த்தருடைய அருமையான ஜனங்கள் பக்திவிருத்தி அடைவதற்கான வாஞ்சையினாலும் எழுதப்பட்டுள்ளது என்று பிரியமான உங்களுக்கு நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. நாங்கள் உங்களுக்கான நன்மையையே நாடுகின்றோம். நாங்கள் யாவரோடும் தொடர்பு வைத்திருப்பதினால், நடந்துகொண்டிருக்கின்றதான புடைத்தெடுத்தல்களையும், சோதனைகளையும் நாங்கள் அறிந்திருப்பதினால் மற்றும் யாருக்கும் தீமை செய்யாமலும், அநேகருக்கு ஆசீர்வாதமாய்க் காணப்படத்தக்கதாகவும் உதவிகரம்

நீட்ட விரும்புகின்றோம். இவைகளையெல்லாம் சிந்தித்துப்பாருங்கள் மற்றும் இது தொடர்பான டாண் ஆராய்ச்சிகளின் ஆறாம் தொகுதியில் (volume) நாங்கள் கூடுதலாகக் கொடுத்திருக்கும் யோசனைகளையும் பாருங்கள்.

நம்முடைய ஆதார வசனத்தினை மீண்டும் நினைவுகூருகையில், மாபெரும் புடமிடுகிறவரின் பிரசன்னத்தில் நாம் காணப்படுகின்றோம் எனும் கருத்தானது, லேவி வீட்டார் யாவரும் இப்பொழுது கடந்துபோய்க் கொண்டிருக்கின்றதான கடுமையான சோதனைகளை அவர் மேற்பார்வைப் பண்ணிக்கொண்டிருக்கின்றார் எனும் கருத்தானது, நம்மை உயிர்ப்பித்திட வேண்டும், நம்மை ஊக்குவித்திட வேண்டும், நம்மை விழிப்பாய் இருக்கச்செய்திட வேண்டும் என்று நாம் கருத்துத் தெரிவிக்கின்றோம். நாம் இப்பொழுது அவரது பரிசோதனையின் கீழ்க் காணப்படுகின்றோம். இது இறுதி சோதனையாக இருக்கின்றது என்றும், தற்கால அனுபவங்களினால் தூய்மையாக்கப்படுபவர்கள் மற்றும் பெருமை, இலட்சியம், சுயநலத்திலிருந்து சுத்திகரிக்கப்படுபவர்கள், இருதயத்தில் சாந்த குணமுள்ளவர்கள், நிச்சயமாய் இராஜ்யத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப் படுவார்கள் என்றும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. அங்குத் தாழ்மையுள்ளவர்கள் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் உயர்த்தப்படுவார்கள். இதற்காக நாம் காத்திருக்க வேண்டாமோ? நம்மை நாம் தாழ்த்திடலாமல்லவா? அப்படிச் செய்திடுவதற்கு நாம் விரும்புகின்றோமல்லவா? தாழ்மையாகும் இப்பணியானது நம்முடைய சொந்த இருதயங்களில் நடந்தேறத்தக்கதாகவும் மற்றும் சபையின் எளிமையான ஊழியக்காரர் முதற்கொண்டு, மிகவும் முதன்மையான ஊழியக்காரர் வரையிலும், முழுச்சபையிலும் தாழ்மையின் ஆவியானது ஊற்றப்பட்டிருக்கத் தக்கதாகவும் - நாம் யாவருடைய இருதயங்களையும், மனங்களையும், ஜெபங்களையும் மற்றும் பிரயாசங்களையும் ஒன்றிணைத் திடலாமல்லவா?

## நீதியாய்க் காணிக்கைச் செலுத்தும்படிக்கும்

நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும் "நீதியாய்க் காணிக்கைச் செலுத்தும்படிக்கும்" எனும் வார்த்தைகளானது, இரண்டு வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கப்படலாம்; இரண்டும் உண்மையானவைகளே. (1) அது சரியான ஒரு காணிக்கையை, தகுதியான ஒரு காணிக்கையை, அங்கீகரிக்கப்படத்தக்கதான ஒரு காணிக்கையைக் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளலாம்; அல்லது (2) நீதிக்காகக் காணிக்கைச் செலுத்தப்படுதலைக் குறிக்கின்றதாக நாம் புரிந்துகொள்ளலாம்; அதாவது இஸ்ரயேலின் பாவநிவாரண பலிகள், பாவ நிவாரண நாளானது, நீதிக்கான பலிகளாக அல்லது நீதியைச் செயல்படுத்துவதற்கான - பாவத்தை இரத்துச் செய்திடுவதற்கான பலிகளாக இருந்தது போன்ற விதத்திலாகும்.

இரண்டு கருத்துகளும் உண்மையே; நம்முடைய சரீரங்களை நாம்

ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்திருக்கின்றோம் மற்றும் தேவனும் அதைக் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்; அதுவும் நாம் அவரது பிரியமான குமாரனுடைய சாயலுக்கு ஒத்த சாயலை அடைவோம் என்றும், அவரது அறிவுரை மற்றும் வழிகாட்டுதல் மற்றும் ஆசீர்வாதம் மற்றும் உதவியின் கீழ்க் கிறிஸ்துவுக்கு ஒத்த குணலட்சணத்தினை அடைவோம் என்றுமுள்ள புரிந்துகொள்ளுதலுடனாகும். ஆனால் ஒருவேளை இதை அடையத் தவறுவோமானால், ஒருவேளை பெருமையோ அல்லது பேராசையோ அல்லது வேறு ஏதேனும் காரியமோ, கர்த்தருக்கு ஒத்த சாயலிலுள்ள நம்முடைய வளர்ச்சியினைத் தடைப்பண்ணுமானால், நம்முடைய காணிக்கையானது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது மற்றும் நாம் அழைக்கப்பட்டுள்ளதான உன்னத மகிமையில் ஓர் இடத்தினை நாம் பெற்றுக்கொள்ளமாட்டோம். இதுபோலவே கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதைச் சபையானது நிறைவேற்றி வருகின்றது என்றும், பலிச்செலுத்துவதில் தலையானவரால் வழிகாட்டப்படுகின்ற, கிறிஸ்துவின் சரீரமாகிய நாம், பாவநிவாரண நாளினுடைய பலிகளில், நாம் பாவநிவாரண பலியாகிய கர்த்தருடைய ஆட்டினால் அடையாளப்படுத்தப்படுகின்றோம் என்றும் நாம் பார்த்திருக்கின்றோம். நாம் பங்கடைகிறதும், கர்த்தரினால் உலகத்தை நீதிமானாக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படப்போகிறதுமான கர்த்தரினால் ஏறெடுக்கப்பட்ட பலியானது, அவருடன் இசைவுக்குள் வரும் யாவரையும் நித்தியமான நீதிக்குள் இறுதியில் கொண்டுவந்திடும். இந்தப் பலிச் செலுத்துதலில் பங்கடைய எதிர்ப்பார்க்கப்படுகின்றதான காலப்பகுதியில்தான் நாம் இன்னமும் காணப்படுகின்றோம் - “அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்” - இல்லாவிட்டால் அவரோடேகூட ஆளுகைசெய்வதில்லை. மகிமையிலும், பூமியின் குடிகள் யாவற்றையும் ஆசீர்வதிக்கும் மாபெரும் வேலையிலும், நமக்கு கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்துவம் காணப்படத்தக்கதாக, நிழலில் அடையாளப்படுத்தப்படுகிற அங்கீகரிக்கப்படத்தக்க பலியினை நாம் ஏறெடுக்க முடிகிறவர்களாகக் காணப்படுவதற்கு நாம் மிகவும் வாஞ்சிக்கிறோம். இக்காரியமானது மிகவும் முக்கியமான காரியமாகும் என்று முன்பில்லாத அளவுக்கு மிகவும் கருத்தாய் நாம் யாவரும் முடிவிற்கு வரலாமா? கர்த்தர் தம்முடைய வழிநடத்துதல்கள் வாயிலாகவும், தம்முடைய வார்த்தைகள் வாயிலாகவும் களிம்பு அனைத்திலிருந்தும், நம்முடைய இருதயங்களைச் சுத்திகரித்திடுவதற்கும் மற்றும் களிம்பிற்குப் பதிலாக அவரது சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியினால் நம்மை நிரப்பிடுவதற்கும், நாம் யாவரும் புதிய வைராக்கியத்துடன் அவரை அனுமதிக்கலாமா?

# நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை

## யாக்கோபு 3:1-12

*"தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக்காக்கிறான்." (நீதிமொழிகள் 21:23)*

இன்றைய நமது பாடமானது நடைமுறை கருத்துக்களை உடையதாய் இருந்து, பொதுவான விதத்தில் நாவிற்கும், விசேஷமாகச் சபையில் மூப்பர்களாக அல்லது போதகர்களாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டிருப்பவர்களிலுள்ள நாவன்மைக்கும் பொருந்துகின்றதாய் இருக்கும். ஆகையால் நம்முடைய பாடமானது, "(போதகர்களாகிய நாம்) அதிக நியாயத்தீர்ப்பு அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக; ஏனெனில் நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்" என்ற புத்திமதியோடு துவங்குகின்றது. போதகராகிடுவதற்கோ, "ரபியாகிடுவதற்கோ" முற்படுபவர்கள், சபையிலுள்ள சாதாரண அங்கத்தினன் மீது வரும் விமர்சனத்தைக் காட்டிலும், அதிகமான விமர்சனத்திற்குள்ளாகும் நிலைக்குள்ளாகுகின்றான் என்பதே கருத்தாகும். ஒருவேளை அவர் தவறுசெய்வாரானால், அவர் இதே தவற்றைத் தனது தனிப்பட்ட கணிப்பில் பார்க்கையில் மேற்கொள்ளும் விமர்சனத்தையும், கடிந்துகொள்ளுதலையும் காட்டிலும் மற்றவர்களால் மிகக் கடுமையான விமர்சனத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் ஆளாவார். மேலும் கர்த்தருடைய கண்ணோட்டத்தில் அவர் சுவிசேஷத்தின் ஸ்தானாபதியாகவும் மற்றும் கர்த்தருடைய வாயாகவும் ஆகுகையில் அதிகமான பொறுப்பை உடையவராய் இருக்கின்றார். ஒருவேளை உண்மையும், ஜாக்கிரதைத் தன்மையும் அவருக்கு மாபெரும் ஆசீர்வாதத்தையும், பலனையும் கொண்டு வருமேயானால், உண்மையின்மை அல்லது அஜாக்கிரதை என்பது இதற்குத் தகுந்தார்போல் அதிக ஆக்கினையைக் கொண்டு வந்திடும்.

அப்போஸ்தலனின் இந்த வார்த்தைகளும் மற்றும் நாம் விருந்திற்கு அழைக்கப்படுகையில், நாம் முதன்மையான ஆசனங்களை எடுத்துக்கொள்ளாமல், தாழ்மையான ஆசனங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், நாம் "ரபி" என்று அழைக்கப்பட நாடக்கூடாது என்றும், "சிறுபிள்ளைகள்" போன்று தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றுமுள்ள நமது கர்த்தருடைய அறிவுரைகளும் - சபையின் மிக உயர்வான அதிகாரமுடையவரின் இந்த அறிவுரைகளும், "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்னும் பரிசுத்த பேதுருவின் புத்திமதிகளும், சபையில் போதகனுடைய ஸ்தானத்திற்குரிய பொறுப்புக் குறித்து நம்மை அச்சங்கொள்ள செய்ய வேண்டும். ஒருவேளை கர்த்தருடைய ஏற்பாட்டினால் நாம் இத்தகையதொரு ஸ்தானத்தில் காணப்படுவோமானால், நாம் சோதனைக்குள்ளாகி, நம்மையும், மற்றவர்களையும் தப்பறையில் சிக்கவைத்திடாத

படிக்கு, அந்த ஸ்தானத்தில் மிகவும் தாழ்மையோடும், மகா பயத்தோடும் மற்றும் தொடர்ச்சியான விழிப்போடும், ஜெபத்தோடும் நாம் காணப்பட வேண்டும்.

## விழுதலுக்கு முன்னானது அகந்தை

ஆம், இந்த அபாயத்திற்கு ஒரு காரணம் இருக்கின்றது. அக்காரணம் குறிக்கோளில் காணப்படுகின்றது; இது சிலசமயம் பெருமையின் வழியை எடுத்துக்கொள்கின்றது மற்றும் சிலசமயங்களில் பாராட்டப்படுவதற்கான விருப்பம் எனும் வழியை எடுத்துக்கொள்கின்றது. இவைகளில் முதலாவதாக உள்ள அகந்தையானது, எப்போதும் கண்டனத்திற்குரியதாய் இருக்கின்றது; இது ஒருபோதும் பொறுத்துக்கொள்ளப்பட முடியாததாகும்; ஏனெனில் நம்முடைய இனத்திலுள்ள எந்த அங்கத்தினன் ஒருவனுக்கும் பெருமைக்கொள்வதற்கான - அதுவும் அவர் மனுக்குலத்திலுள்ள மீதமானவர்களுடன் தன்னை ஒப்பிட்டுப்பார்க்கையில், தான் அநேகரைக்காட்டிலும் குறைவான விழுகையை உடையவனாய் இருப்பதாக எண்ணிக்கொண்டாலும்கூட, பெருமைக்கொள் வதற்கான எந்த நியாயமான, காரணக்காரியத்திற்குட்பட்ட அடிப்படை இருப்பதில்லை. குறிக்கோளின் இரண்டாம் அபாயமாகிய மற்றவர்களுடைய பாராட்டை விரும்புதலானது, ஒருவேளை தேவன் திசையில் சரியாய்ச் செயல்படுத்தப்பட்டால் சரியானதாய் இருக்கும் - ஆனால் அது மனித பாராட்டை நாடிடும் அளவுக்குத்தக்கதாய், அது அபாயமாய்க் காணப்படும்; ஏனெனில் நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நம்மைப்போன்று அபூர்ணர்களாய் இருப்பதினால், அவர்கள் நமது கர்த்தரால் நிராகரிக்கப்படுபவைகளையும், கண்டிக்கப்படுபவைகளையும் எப்போதும் அங்கீகரிக்கிறவர்களாகவும், பாராட்டுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆகையால் தேவனுக்குப் பிரியமாய் இருக்க வேண்டும் என்றும், அவரது அங்கீகரிப்பையும், இறுதியில் "நல்லது" எனும் அவரது வார்த்தையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் விரும்புவதே, அனுமதிக்கப்பட்டுள்ள ஒரே குறிக்கோளாய் இருக்கின்றது. ஆம் இது கர்த்தருடைய ஆவியை - "கிறிஸ்துவின் சிந்தையை" கொண்டிருக்கும் கர்த்தருடைய சகோதரருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்பத்தையும், எதிர்ப்பார்ப்பையும் இரண்டாம் நிலையில் குறிக்கின்றதாய் இருக்கும்; இது சகல மனுஷர்களுடைய அன்பையும், மரியாதையையும் ஏற்றுக்கொள்ளுதலையும்கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கலாம். ஆனால் இவைகள் நம்முடைய குறிக்கோளினுடைய எந்த ஒரு பாகவுமாகிவிடக்கூடாது; மற்றும் பொதுவான மனுக்குலமானது நீதியினாலும், சத்தியத்தினாலும், இவைகளின் ஆவியினாலும் மிகவும் ஏவப்பட்டு, கர்த்தருக்கு மிகவும் பிரியமாய்க் காணப்படுபவைகளை அங்கீகரித்திடுவார்கள் மற்றும் பாராட்டுத் தெரிவித்துவிடுவார்கள் என்று நாம்

எதிர்ப்பார்த்திடவும் கூடாது. மாறாக ஒரு மனுஷன் உலகத்தையும், அதன் அங்கீகரிப்பையும், பாராட்டையும் அன்புகூருவானானால், அவனில் பிதாவுக்கான அன்பில்லை என்பதாக இருக்கும். அவன் உலகத்தின் அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வானானால், அவன், "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது, உங்களுக்கு ஐயோ" என்ற கர்த்தருடைய வார்த்தைகளை நினைவில்கொள்ள வேண்டும் (லூக்கா 6:26). இது அவன் ஒரு முக்கியமான விதத்திலும், அளவிலும் கர்த்தருக்கும், அவரது செய்திக்கும் முரண்பாடாய்க் காணப்படுகின்றான் என்பதற்கான அடையாளமாய்க் காணப்படுகின்றது; இல்லையேல் உலகமானது கிறிஸ்துவைப் பகைத்து, "அவரைச் சிலுவையில் அறையும்" என்று கத்தினதுபோல, அவனையும் பகைத்திருக்கும்.

## கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்

பரிசுத்த யாக்கோபு ஊழியத்திற்கு எதிராக நம்மை எச்சரிக்கவில்லை; ஒருவருக்கொருவர் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனப் புரிந்திடும் சகல நற்கிரியைகள் யாவற்றையும் நாம் புரிவதைத்தடுக்க நாடவுமில்லை. (பள்ளிக்கூடத்தில்) நாம் போதகர்களாகிடுவதற்குரிய (அ) எஜமான்களாகிடுவதற்குரிய நம்முடைய முற்படுதலுக்கு எதிராகவே அவரது எச்சரிப்புக் காணப்படுகின்றது. இந்த யுகம் முழுவதிலும் கிறிஸ்துவினுடைய முழுச்சபைக்குமே ஒரேயொரு போதகர் அல்லது பள்ளி ஆசிரியர் காணப்படுகின்றார். அவரே தம்முடைய சரீரமாகிய சபைக்குத் தலையாக இருக்கின்றார் - அங்கத்தினர்களுக்கான இயக்குனராக, மேற்பார்வையாளராக, பொறுப்பாளராக, உபாத்தியாராகக் காணப்படுகின்றார்.

உண்மைதான் "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். கண், காது மற்றும் நாவானது தலைப் பண்புகளாகவும், கை, கால் முதலானவைகள் சரீர பண்புகளாகவும் காணப்படுகின்றது என்று அவர் தெரிவிக்கின்றார். நம் மத்தியில் இல்லாதிருக்கிற கர்த்தர் அல்லது தலையானவர், தம்முடைய ஜனங்கள் காணப்படும் ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாரோடும் காணப்படுவதாக வாக்களித்துள்ளார். "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார் மற்றும் அவர்களது கூட்டத்திற்குச் சில விதத்தில் மற்றும் சில பிரதிநிதிகள் வாயிலாக தலைமைத்துவத்தைச் செயல்படுத்துவதற்கும், போதகராயிருப்பதற்கும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கின்றார். அவர் தமது தலைமைத்துவத்தினை நம்மீது திணிக்கிறதில்லை. தமது சித்தத்தை அறியவும், அதைச் செய்யவும் விருப்பமுடைய சரியான இருதய நிலையுடையவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களுக்கும் வழிக்காட்டுவதற்கும், போதிப்பதற்கும், ஊழியம் புரிவதற்கும் அவர்

காத்திருக்கின்றார். தம்முடைய சித்தத்தைக் குறித்துத் தம்முடைய ஜனங்களுக்கு உபதேசத்திட்ட பிற்பாடு, தாம் அருளுவதற்குச் சித்தமாயிருக்கும் ஆசீர்வாதத்தினை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், அவர்கள் தமது அறிவுரைகளைக் கடைப்பிடிக்கும்படிக்கு அவர் எதிர்ப்பார்க்கின்றார். ஆகையால் அவர்கள் அவருடைய நாமத்தில் கூடி, அவரது வசனத்தின் வழிக்காட்டுதல்களைப் பின்பற்றி, வேதவாக்கியங்களிலுள்ள அவரது சத்தத்திற்குச் செவிக்கொடுத்து, அவரது ஆவியின் வழிநடத்துதல்களுக்காய் விழித்திருந்து, அதைக் காண்கையில் ஒருவருக்கொருவர் அதை அங்கீகரிப்பார்களானால், இதற்கேற்ப அவரது ஆசீர்வாதம் காணப்படும்.

இப்படியாக வேறு யாரையுமல்ல, மாறாக அர்ப்பணிக்கப்பட்டவர்களை தங்கள் வழி நடத்துபவராக அங்கீகரிப்பது என்பது ஒவ்வொரு சிறு சிறு கூட்டத்தாருடைய பொறுப்பாய் இருக்கின்றது. செம்மறியாட்டை வழி நடத்து வதற்குரியவராக, எந்த வெள்ளாடும் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது; தனது இருதயத்தினுடைய உண்மைக்கும், ஆண்டவருடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கான வாஞ்சைக்குமாக வெளிப்புற நடத்தையில் சாட்சிப்பகராத எந்தச் செம்மறியாடும் கூடத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது. பெருமையும், மந்தையை இறுமாப்பாய் ஆளுவதற்குரிய தன்னல நாட்டமுள்ள குறிக்கோளும் சகித்துக் கொள்ளப்படக்கூடாது; காரணம் இவை விசுவாசிகளுடைய சபைக்குப் மாத்திரமல்லாமல், அவர்களை நடத்திட நாடிடும் இறுமாப்புடையவர்களுக்கும் கூடப் பாதகமாய்க் காணப்படும். ஆகையால் ஆவிக்குரிய விருந்துகளில் முதன்மையான ஆசனங்களை எடுத்துக் கொள்வதற்குத் தடைப்பண்ணப்பட வேண்டிய போது, சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் இது விஷயத்தில் அதிகப் பரீட்சைகளும், சோதனைகளும் காணப்படும் என்பதை நினைவில்கொண்டும், "நீயும் சோதிக்கப்படாத படிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்றும், தடையானது அன்பான, பரிவான விதத்தில் செயல்படுத்தப்பட வேண்டும் (கலாத்தியர் 6:1).

"நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்" என்று பரிசுத்த யாக்கோபு கூறுகின்றார். நாம் அனைவரும் பாவத்திற்குள்ளாக அல்லது கொடிதான தப்பறைக்குள்ளாக விழுவோம் என்ற அர்த்தத்தில் அவர் கூறாமல், மாறாக நாம் மாம்சத்தில் காணப்படுவது வரையிலும், கர்த்தருடைய ஆவியில், அவரது செய்தியும் நமது பூரணமற்ற வல்லமைகள் வாயிலாக தெரிவிக்கப்படுகின்றபடியால், எவரும் தவறிழைக்க முடியாதவர்களாய்க் காணப்படுவதில்லை என்ற அர்த்தத்திலேயே அவர் கூறியுள்ளார். ஆகையால் "பரிசுத்தவான்களின்" கூடுகைகளில் வழிநடத்துபவராகிடுவதற்கு விருப்பம் கொள்ளாதவர்கள் - இருதயத்தின் தாழ்மையினை வெளிப்படுத்துகிறவர்களும், தங்களுக்கு ஊழியம் புரிய பிரயாசப்பட்டு, தங்களுக்கு ஜீவ அப்பத்தைப் பிட்டுத் தருகின்றவர்களுமான சகோதரர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க முற்படக்கூடாது. இப்படிப்பட்டவர்களது அனைத்துப் போதித்தல்களும் தகுதியானவை என்று ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், இவர்களது

கிரியைகளின் நிமித்தமாக இவர்கள் அன்புகூரப்பட வேண்டும் மற்றும் மதிக்கப்பட வேண்டும். இந்த மன உணர்வுகளானது வாய் வழியாகப் பேசிடும் போதகர்களுக்கு மாத்திரமல்லாமல், கூட்டத்தில் ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தும் அச்சிடப்பட்ட பக்கத்திற்கும்கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

---

STORIES TWICE TOLD

## முழங்காலில் தஞ்சம்

இரண்டு வழிகாட்டிகளோடு, ஒரு சிறந்த சமயப் போதகர் ஓர் உயர்ந்த மலையின் கொடுமுடியின் மீது ஏறிச் சென்றுகொண்டிருந்தார். பல கடினத்திற்கு பிறகு, உச்சியை அடைந்தனர், வீசிக்கொண்டிருந்த கடுங்காற்றைப் பொருட்படுத்தாது, காட்சியை எழுந்து நின்று ரசிக்கத் தொடங்கினார் சமயப் போதகர். உடனடியாக வழிகாட்டி, அவரை அழைத்து கீழே இழுத்து, 'முழங்காலிடுங்கள்; முழங்காலேயன்றி வேறு எதிலும் பாதுகாப்பு இல்லை' என்றுரைத்தார். கிறிஸ்துவ அனுபவங்கள் மற்றும் சிலாக்கியங்களின் கொடுமுடியிலும் கூட, முழங்கால்களேயன்றி எதிலும் நாம் பாதுகாப்பாக இருக்க முடியாது. பள்ளத்தாக்குகளில் தேவைப்பட்டது போலவே, மலை உச்சியிலும் ஜெபம் தேவை.

Cyclopedia of Religious Anecdotes -- The Cheltenham Examiner.

---

## பாகம் - 4

# சபையாரும், ஊழியக்காரர்களும்

# அன்பில் – பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து

*"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, . . . நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து..."* *(யூதா 21-23)*

ஆதி பாவத்தின் காரணமான விழுகையினால் நம் அனைவரின் மனங்களும் சீரற்று இருக்க, அதுவும் அனைவரும் ஒரே விஷயத்தில், ஒரே மாதிரி வீழ்ச்சிக்குள்ளாகவில்லை என்றாலும் - நாமும் சரி, கிறிஸ்துவுக்குள்ளான மற்றச் சகோதர சகோதரிகளும் சரி, தேவனுடைய வார்த்தைகளில் முன் வைக்கப்பட்டுள்ளதான சில குறிப்பிட்ட கொள்கைகளைப் பொருத்திச் செயல்படுத்துவதில் ஏறக்குறைய குழப்பத்தில் காணப்படுவதைப் பார்ப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. உதாரணத்திற்கு அன்பானது தெய்வீகப் பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது என்றும், சகோதர சகோதரிகளிடத்திலான அன்பு என்பது நாம் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டு இருக்கிறோம் என்ற சாட்சியங்களில் ஒன்று என்றும், காண்கிற சகோதரனிடத்தில் நாம் அன்புகூரவில்லையெனில், இது நாம் காணாத நம்முடைய பரம பிதாவை நாம் உண்மையில் அன்புகூரவில்லை என்பதற்கான நிச்சயமான நிரூபணமாகும் என்றும் நாம் போதிக்கப்பட்டுள்ளோம் (உரோமர் 13:10; 1 யோவான் 3:14; 4:20). தெய்வீக நீதி நெறிகள் முன்வைக்கும் இவைகளை அடைந்திடுவதற்கான பிரயாசங்களில் சிலர் எதிரான நிலையில் தவறிழைத்திடுவதற்கான அபாயத்தில் - அதாவது சகோதரனுடைய நலனுக்காகச் சகோதர சிநேகமானது காண்பிக்கப்படக்கூடாது என்றுள்ள சில தருணங்களில், சகோதர சிநேகத்தை வெளிப்படுத்திவிடும் அபாயத்தில் காணப்படுகின்றனர். பரமபிதா செயல்படுத்துகின்ற மற்றும் வெளிப்படுத்துகின்றதான பல்வேறு வகை அல்லது அளவிலான அன்பை நாம் கவனிக்கலாம்.

முதலாவது - உலகத்திற்கான அன்பாகும். "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை - நமக்காக மரிக்க - தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). இரண்டாவது கொஞ்சம் உயர்வான மற்றும் விசேஷித்த விதத்திலும், "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" - அதாவது இயேசு கிறிஸ்துவைத் தங்களது மீட்பராக ஏற்றுக்கொண்டுள்ளவர்களும், அவருடைய நாமத்தினாலும், பலத்தினாலும், புண்ணியத்தினாலும் அவருக்கு அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களும், மாம்சத்திற்கேற்றப்படியாக இல்லாமல், ஆவிக்கேற்றப்படியாக நடக்க இப்பொழுது நாடிக்கொண்டிருப்பவர்களுமான - உங்களைச் சிநேகிக்கிறார் (யோவான் 16:27) என்பதாகும். ஆனால் தேவனுடைய இந்த விசேஷித்த அன்பானது கொஞ்சமாகவோ அல்லது முடிவில் முழுமையாகவோ இழந்துபோகப்படலாம் என்பது, "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளினால்,

தெளிவாய் முன்வைக்கப்பட்டுள்ளது (யூதா 21). தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பலன்களையும் ருசிப்பார்த்தப் பிற்பாடு மற்றும் பரிசுத்த ஆவி முதலானவைகளில் பங்காளிகளான பிற்பாடு, யாரேனும் ஆவிக்கேற்றப்படி நடவாமல், மாம்சத்திற்கேற்றப்படி நடப்பார்களானால், இதற்கேற்ப அப்படியானவர்கள் தேவனுடைய அன்பை இழக்கின்றவர்களாய் இருப்பார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே மற்றும் ஒருவேளை அந்நபர் தொடர்ந்து இப்படியாகவே காணப்படுவாரானால், இதன் விளைவாக இறுதியில் அந்நபர் "அவருடையவர்களில்" ஒருவராக இருப்பதில்லை. இப்படியானவனை - அதாவது தன்னுடைய அறிவின் காரணமாகவும், பிரயாசங்களின் காரணமாகவும் மற்றும் கீழ்ப்படியாத போக்கின் காரணமாகவும் துன்மார்க்கனாகியுள்ள இப்படியானவனை அன்புகூருவதற்குப் பதிலாக, கர்த்தர் தாம் "பாவியின்மேல் சினங்கொள்ளுகிறார்" என்றும், "துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்" என்றும் தெரிவித்துள்ளார் (சங்கீதம் 7:11; 145:20; எபிரெயர் 6:4-6; 10:26-29).

பரலோகத்திலுள்ள நம்முடைய பிதாவைப்போன்று காணப்படுவதற்கும், அவர் தம்முடைய அருமை குமாரனாகிய நமது கர்த்தரில் முன்வைத்துள்ளதான சாயலுக்கு ஒப்பாகக் காணப்படுவதற்கும், உன்னதமானவருடைய குமாரர்களென நாடுகின்ற நாம் தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாகவும் மற்றும் தேவனுடைய நேரத்திலும், ஒழுங்கிலும் உலகத்தாரைச் சீர்தூக்கிவிடுவதற்கான எதையும் மற்றும் செய்ய முடிகின்ற யாவற்றையும் செய்வதற்குப் பிரியங்கொள்ளும் - பரந்த அனுதாபத்துடன்கூடிய கருணையையும், இரக்கத்துடன்கூடிய அன்பையும் பொதுவான உலகத்திற்கென்று கொண்டிருக்க வேண்டும். நம்முடைய பிதாவைப் போன்றும், நம்முடைய மூத்த சகோதரன் போன்றும், நாம் சகோதர சகோதரிகளைச் "சுத்த இருதயத்தோடே ஊக்கமாய்" - உண்மையாய் அன்புகூர வேண்டும். சகோதரருக்கான இந்த அன்பு என்பது, உலகத்திற்கான அன்பு போன்றதல்ல; அது கருணை அன்பல்ல, வெறும் இரக்கமல்ல; அது மேலானதாகும்; அது சகோதர சிநேகமாகும். தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் புதுச் சிருஷ்டிகளாகிய சகோதரர்களாய் இருக்கின்றனர்; இந்தச் சகோதர சகோதரிகள் அனைவரும் கர்த்தர் இயேசுவுடனும், தாங்கள் பங்கடைவதற்கு எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்றதான பரலோக இராஜ்யத்துடனும் ஒன்றுபட்டுள்ளதான நம்பிக்கைகளை, எதிர்ப்பார்ப்புகளை, நலன்களை மற்றும் வாக்குத்தத்தங்களைப் பெற்றிருக்கின்றனர். இந்தச் சகோதர சகோதரிகள் அனைவரும் ஒருவருக் கொருவரும் மற்றும் கர்த்தருடனும் உடன் சுதந்தரர்களாகவும், சக - சுதந்தரர்களா கவும் காணப்படுகின்றனர். இவர்கள் கூட்டாளிகளாக இருக்கின்றனர்; இவர்களது அக்கறையானது, பரஸ்பரமாயும், ஒருங்கிணைந்தும் காணப்படுகின்றது.

இதனோடுகூட இவர்கள் விசேஷித்த பரஸ்பர உருக்கமான இரக்கம் பெற்றிருக்கின்றனர்; ஏனெனில் புதுச்சிருஷ்டிகளாக இவர்கள் திவ்விய

கிருபைகளிலும், வாக்குத்தத்தங்களிலும் ஐசுவரியமாய்க் காணப்பட்டாலும், இவர்கள் அனைவரும் மாம்சத்தின் கடுமையான பெலவீனங்களை - குறைப்பாடுகளைப் பெற்றிருக்கின்றனர்; கர்த்தர் இவர்களை மாம்சத்தின்படி நியாயந்தீர்க்காமல், ஆவியின்படி, நோக்கத்தின்படி, இருதயத்தின் வாஞ்சைப்படி நியாயந்தீர்த்திட்டாலும், இவர்கள் ஒவ்வொருவரும் மற்றும் அனைவரும், இந்தப் பூமிக்குரிய கூடாரத்தினுடைய அபூரணங்கள் மற்றும் பெலவீனங்கள் காரணமாக எழும்பும் பிரச்சனைகளைப் பெற்றிருக்கின்றனர்; மற்றும் இதன் காரணமாக இவர்கள் "தவிக்கின்றனர்" மற்றும் மற்றவர்கள் தவிக்கையில் ஒருவருக்கொருவர் அனுதாபம் கொள்கின்றனர். அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர - முழுச்சபையின் - மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்." இப்படியாக தேவனுடைய புத்திரர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர அனுதாபமும், அன்பும், அக்கறையும், ஒருவரிலொருவர் கவனமும், ஒருவருக்கொருவர் உதவும் தன்மையும் பெற்றிருக்கின்றனர், அதுவும் இது உலகத்தால் புரிந்துகொள்ள முடிகின்ற (அ) உலகத்திடம் காண்பிக்கப்படுகின்ற எந்த உணர்வுகளுக்கும் முற்றிலும் அப்பாற்பட்டதாகவும், மேலானதாகவும் மற்றும் புறம்பானதாகவும் காணப்படுகின்றது; ஏனெனில் உலகத்தாருக்கு பழைய சுபாவத்திற்கும், புதிய சுபாவத்திற்கும் இடையிலான எந்தப் போராட்டமும் இல்லை; பலியினாலான எந்த உடன்படிக்கையும் பண்ணவில்லை; பிரியமானவரில் எந்த ஏற்றுக்கொள்ளப்படுதலும் இல்லை; இருதயத்திலும், நோக்கத்திலும், எதிர்ப்பார்ப்பிலும் மற்றும் ஆவியிலும் எந்த ஐக்கியமும் இல்லை. ஓ! ஆம்! ஊக்கமாய் அன்புகூருவதற்கான புத்திமதியானது, நமக்கே விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

இப்பொழுது நாம் இன்னொரு கருத்திற்கு வருகின்றோம். சகோதரருக்கான நம்முடைய அன்பு என்பது அனைவரிடத்திலும் துல்லியமாய் ஒரே அளவிலும், துல்லியமாய் ஒரே தீவிரத்திலும் காணப்பட முடியாது; அதைக் கட்டுப்படுத்துகின்ற ஏதோ ஒன்றுள்ளது. அது என்ன? அது - நாம் தேவனையும், அவரது குணலட்சணங்களில் வெளிப்படுகின்ற நீதியின் மகிமையான கொள்கைகளையும் அன்புகூருகின்றோம் மற்றும் இதே நிலைப்பாட்டில் நமது கர்த்தராகிய இயேசு நற்பண்பிற்கும், உண்மைக்கும், நீதிக்கும், அன்பிற்கும், காருண்யத்திற்கும், தயாளம் யாவற்றிற்கும் மாதரியாக இருக்கின்றாரென்று நாம் அவரை அன்புகூருகின்றோம் மற்றும் சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பு என்பது சகோதர சகோதரிகள் நமது கர்த்தருக்கொத்த சாயலில் காணப்படுவதாக நாம் காணும் அளவுக்குத்தக்கதாக இருப்பது அவசியம் என்பதேயாகும். நாம் மாம்சத்தில் ஒத்த சாயலைக் குறிப்பிடவில்லை; மாறாக கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படியான சாயலை - அதாவது ஆவியில் ஒத்த, இருதயத்தில் ஒத்த, உள்நோக்கத்தில் ஒத்த, நோக்கத்தில் ஒத்த, நீதி, சத்தியம் முதலானவைகளுக்கான அன்புடன்கூடிய வைராக்கியத்தில்

ஒத்த சாயலைக் குறிப்பிடுகின்றோம். ஆகையால் நாம் தேவனுடைய அன்பிலும், கிறிஸ்துவின் அன்பிலும், இவர்கள் வெளிப்படுத்துகின்ற கொள்கைகளின் மீதான அன்பிலும் வளருகையில், நாம் அனைத்து மனுஷரிடத்திலான மற்றும் சகோதரரிடத்திலான அன்பிலும் வளருவோம்; ஆனால் குறிப்பாய்க் கர்த்தருக்கொத்த சாயலில் அதிகமாய் வளர்ந்து கொண்டிருப்பவர்கள் மீதான நமது அன்பு வளருகின்றது. இது பாரபட்சமல்ல; இது - மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றோமோ, அதற்கு எதிர்மாறாய் நாம் மற்றவர்களுக்குச் செய்வதைக் குறிப்பதாயிராது. இது கர்த்தராகிய இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுவதாகும்; ஏனெனில் அவரது அப்போஸ்தலர்கள் அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாய் இருப்பினும், அவர்கள் மத்தியில் மூன்று பேர் விசேஷித்த அன்புக்குரியவர்களாய் இருந்தார்கள் என்று நாம் பார்க்கின்றோம்; மற்றும் அந்த மூன்று பேரிலும்கூட ஒருவர் விசேஷமாய், "இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்" என்று குறிப்பிடப்படுகின்றார். இவர் விசேஷமாய் அன்புகூரப்பட்டார், காரணம் இவர் விசேஷமாய் அன்புகூரப்படத்தக்கவராய் இருந்தார்; மற்றும் இப்படியாகவே நம் விஷயத்திலும், சகோதர சகோதரிகள் விஷயத்திலும் காணப்படுகின்றது. நாம் சகோதர சகோதரிகள் யாவரையும் மனமுவந்தும், ஊக்கமாயும்/ஆழமாயும் அன்புகூர வேண்டும்; ஆனால் கண்டிப்பாய் வெவ்வேறு அளவிலான ஊக்கத்தில்/ஆழத்தில் அன்புகூர வேண்டும் மற்றும் நமது அந்த ஊக்கமானது நம்மால் அன்பு செலுத்தப்படுபவர், நமது கர்த்தருக்கொத்த இருதய ஒத்திருத்தலில் வளருவதை, நாம் காண்பதற்கேற்றபடி பெருக்கிட வேண்டும்.

இப்படியாக இருக்குமானால், சத்திய அறிவிற்குள்ளாகக் கடந்துவந்த பிற்பாடு, அதன் நற்பண்புகளை ருசிப்பார்த்து, உணர்ந்துகொண்ட பிற்பாடு, பாவத்திற்குள்ளாக விழுந்துபோகிறவர்களைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? - ஆவியின்படி நடப்பதை நிறுத்தி, மாம்சத்தின்படி நடக்க ஆரம்பிப்பவர்களைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இப்படியானவர்களுக்கான நம்முடைய அன்பானது முன்பு இருந்ததுபோலவே கொழுந்துவிட்டெரியக் கூடுமோ? முடியாது; இப்படியாக இருக்கக்கூடாது. அப்போஸ்தலன் நம்முடைய ஆதார வசனத்தில் சொல்லியுள்ளது போன்று, நாம் பகுத்தறிதல் கொண்டிருத்தல் வேண்டும். இப்படியாகச் செய்யும்போது, நாம் நம்முடைய பரலோக தந்தையினுடைய மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாய் இருப்போம்; ஏனெனில் ஆவிக்கேற்றபடி நடக்கும்போது மாத்திரமே நாம் நம்மைத் தேவனுடைய அன்பில் காத்துக்கொள்ள முடியும் என்று சற்று முன்புதான் கவனித்தோம். இம்மாதிரியான நடக்கையைப் பின்பற்றும்போது மாத்திரம்தான் ஒருவன் தன்னைச் சகோதர சிநேகத்தில் தக்கவைத்துக்கொள்ள முடியும். இந்நடக்கையில் ஏதேனும் திசைத்திரும்புதல் என்பது அதற்கேற்ப சகோதர சிநேகத்தில் மற்றும் ஐக்கியத்தில் இழப்பைக்

கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

இந்தப் பகுத்தறிதலானது/வேற்றுமைகாணுதலானது சபையின் தூய்மைக்கும், வளர்ச்சிக்கும் உண்மையில் அவசியமாகும். ஆவிக்கேற்றப்படி நடக்கிற சகோதரர்களையும் மற்றும் ஒழுங்கற்று (அ) மாம்சத்திற்கேற்றப்படி நடக்கிற சகோதரர்களையும் நாம் பகுத்தறியவில்லையெனில், நாம் ஆவிக்கேற்றப்படி நடக்கிறவர்களுக்கு கர்த்தர் நோக்கம் கொண்டுள்ளதான ஆசீர்வாதத்தையும், மதிப்பையும் எடுத்து விடுகிறவர்களாய் இருப்போம் மற்றும் மதிப்பைக் கொடுப்பதற்குக் கர்த்தர் நோக்கம் கொண்டிராதவர்களுக்கு - கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எதிராகவும், மாம்சத்திற்கு ஏற்றப்படியும் நடக்கிறவர்களுக்கு மதிப்பைக் கொடுப்பவர்களாய் இருப்போம். இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்கள் என்று நாம் காண்கிறவர்களிடத்தில் ஐக்கியம் கொண்டிருப்பது, அதுவும் ஊக்கமாய் ஐக்கியம் கொண்டிருப்பது நம்முடைய கடமையாக இருப்பது போன்று, ஐக்கியங்கொள்வதற்கு அபாத்திரமாய்க் காணப்படுபவர்களிடமிருந்து ஐக்கியத்தைத் தவிர்ப்பதும் நம்முடைய கடமையாக இருக்கின்றது. தவறு செய்பவர்களை ஊக்குவித்திடும் தவறானப் போக்கினை நாம் எடுத்திடுவதற்கு, அன்பே நம்மை இயக்குகின்றது என்று நாம் எண்ணக்கூடாது; அது அன்பல்ல; மாறாக அது அறியாமையே ஆகும்; கர்த்தரைக் குறித்து அவருடைய வார்த்தையிலிருந்தும், அவருடைய மாதிரியிலிருந்தும் கற்றுக்கொள்வதே, அறியாமைக்கான மருந்தாகும்.

சகோதரர் விஷயத்திலான நம்முடைய கடமை குறித்தும் மற்றும் பல்வேறு சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு அவர்களிடம் நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்தும் அப்போஸ்தலன் பவுல் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரும் வண்ணமாகப் பின்வருமாறு கூறுகின்றார்: அதாவது உண்மையுள்ள சகோதரர்கள் அவர்களது கிரியைகளின் நிமித்தம் மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளப்பட வேண்டும்; ஒழுங்கில்லாத மற்றச் சகோதரர்கள் புத்தி சொல்லப்பட வேண்டும்; சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் திறனில் திடனற்றவர்கள் (குறைவுள்ளவர்கள்) பெலப்படுத்தப்பட வேண்டும், பலவீனர்கள் உதவப்பட வேண்டும், தாங்கப்பட வேண்டும்; மற்றும் எல்லோரிடமும் நீடிய சாந்தத்துடன் காணப்பட வேண்டும் என்பவையாகும் (1 தெசலோனிக்கேயர் 5:12-14).

ஒழுங்கற்ற சகோதரர்கள்பால் கொண்டிருக்கப்பட வேண்டிய சரியான மனோநிலை குறித்தே நாம் இப்பொழுது இங்கு விசேஷமாய்க் குறிப்பிடுகின்றோம் - கிரியைகளின் நிமித்தம் மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளப்படுகின்றவர்கள் போன்று இப்படியானவர்கள் நடத்தப்படக்கூடாது; இல்லையேல் இப்படியானவர்கள் ஒழுங்கற்று இருப்பதற்கு மேலும் ஊக்கப்படுத்தப்பட்டு விடுவார்கள். இப்படியானவர்கள் - அன்புடனும், உண்மையுடனும் மற்றும் பொறுமையுடனும் புத்திமதி கூறப்பட வேண்டும், எச்சரிக்கப்பட வேண்டுமே ஒழிய, இவர்கள் ஏதோ இயேசுவின்

அடிச்சுவடுகளிலும் மற்றும் அவரது வார்த்தைகளினுடைய கட்டளைக்கு இசைவாயும் சீராய் நடந்துகொண்டிருப்பது போன்று, முன்பிருந்த அதே அன்புடனும், மதிப்புடனும் கையாளப்படக் கூடாது. நம்முடைய அன்பு மற்றும் மதிப்பிற்கான அறிகுறிகளும், சான்றுகளும் உண்மையாய் இருக்க வேண்டும் மற்றும் அது - சத்தியத்தின் ஆவிக்கேற்றபடி நடப்பதாகிய சரியான இருதயத்தின் விருப்பங்களுக்கான ஆதாரங்களைச் சகோதரர்களிடத்தில் நாம் காணும் அளவுக்குத்தக்கதாகக் காணப்பட வேண்டும். நிராகரிப்பை வெளிப்படுத்தும் அளவுக்கு முக்கியமானது என்று நம்முடைய கணிப்பில் காணப்படும் தருணங்களின் போது, எப்படி நம்முடைய நிராகரிப்புக் காண்பிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டுகின்றார்.

ஒவ்வொரு வார்த்தையிலும் மற்றும் ஒவ்வொரு கிரியையிலும் சகோதர சகோதரிகள் குற்றம் கண்டுபிடிக்கத்தக்கதாக ஒருவரையொருவர் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும் எனும் அர்த்தத்தில் அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை என்பதில் நிச்சயமே; மாறாக அற்ப காரியங்களானது, மாம்சத்தின் பெலவீனம் மாத்திரமே என்றும், இருதயத்தினுடைய, நோக்கத்தினுடைய விளைவானது அல்ல என்றும் எண்ணி, முற்றிலுமாய் விட்டுவிடுமளவுக்குச் சகோதர சகோதரிகள் ஒருவரிலொருவர் முழுக்க அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். நிராகரிப்பும், எச்சரிப்பும் வெளிப்படுத்துவதற்குப் பாத்திரமான காரியங்களானது, கர்த்தருக்கு வெறுப்பாய் இருக்குமென்றும், சகோதரர் மீது (அ) விசுவாச வீட்டார் மீது பாதகமான தாக்கம் கொண்டுள்ளது என்றுமுள்ள விஷயத்தில் ஐயமில்லை என்று சொல்லுமளவுக்கு மிகவும் வெளிப்படையாக, பகிரங்கமாகக் காணப்படுகின்ற காரியங்களாய் இருத்தல் வேண்டும். உதாரணத்திற்கு ஒரு சகோதரன் மதுபானம் அருந்தியிருப்பதாகக் காணப்படுதல்; மிகவும் வெட்கக்கேடான (அ) மோசமான வார்த்தைகளைப் பேசக்கேட்டல்; ஒருவன் பாவத்தில் வாழ்கின்றான் என்று பொதுப்படையாகவே தெரிதல் இவைகளையே அப்போஸ்தலன் மனதில் கொண்டிருந்தார் என்று நாம் நம்புகின்றோம். ஆனால் இருதயம் மற்றும் தனிப்பட்ட காரியங்கள் - நேரம் (அ) பணம் முதலானவைகள் பயன்படுத்தப்படுதல் தொடர்புடைய விஷயத்தில் ஒருவரையொருவர் நியாயந்தீர்ப்பதற்கு மற்றும் குற்றம் கண்டுபிடிப்பதற்குரிய - ஆவியை வளர்த்திடுவதற்கு அப்போஸ்தலன் எந்த நோக்கமும் கொண்டிருக்கவில்லை என்பதில் உறுதியே. இம்மாதிரியான விஷயங்கள் நம்முடைய தனிப்பட்ட உக்கிராணத்துவத்திற்கு உட்பட்டதாகும் மற்றும் கர்த்தர் ஒவ்வொருவருக்கும் அருளியுள்ளதான மனசாட்சி மற்றும் நடத்தைக்கடுத்த சரியான சுயாதீனத்தின் விஷயத்தில் தலையிடுவதற்கு யாரும் பிரயாசம் எடுத்துவிடக்கூடாது. நம்முடைய இருதயங்களினின்றும், ஜீவியங்களினின்றும் கழித்துப்போடப்பட வேண்டியதான பழைய புளித்த மாவாகிய கசப்பின் வேர்களுக்கும், தவறான புரிந்துகொள்ளு

தலுக்கும், ஐக்கியமற்ற நிலைமை முதலானவைகளுக்கும் பெரும்பாலும் வழிநடத்துகின்றதான - ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கும் காரியத்திற்கு எதிரான தனது கண்டனத்தின் விஷயத்தில் அப்போஸ்தலன் மிகவும் கண்டிப்புடன் காணப்படுகின்றார் (உரோமர் 14:10, 13).

"எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால்," இத்தகையவனுடைய நடத்தை முதலானவைகள் தொடர்புடையதான அப்போஸ்தலனுடைய வேதவாக்கிய அறிவுரையானது, "அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள்" என்பதாகும். எனினும் மிதமிஞ்சி ஒரு நிலைப்பாட்டினின்று மறுநிலைப்பாட்டிற்குச் செல்லுதல், அதாவது ஒன்றில் மிதமிஞ்சிய இரக்கம் காட்டுதல் அல்லது மிதமிஞ்சிய கடுமையுடன் இருத்தல் எனும் விழுந்துபோன மனிதனுடைய போக்கினை அறிந்தவராக அப்போஸ்தலன், "ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்" என்று கூறுகின்றார் (2 தெசலோனிக்கேயர் 3:13-15). சகோதரனாக எண்ணி அவனுக்குப் புத்திசொல்லுங்கள் என்பது, கடுமையாகவும் மற்றும் கொடுமையாகவும் தாக்கிப்பேசுவதைக் குறிப்பதில்லை; தயவின், சாந்தத்தின், பொறுமையின் ஆவியில் மற்றும் சகோதரனிடத்தில் தவறு நிச்சயமாய்க் காணப்படுகின்றது என்றும், அது நம் சார்பிலான தீமையான அனுமானமல்ல என்றும் நம்மால் நிச்சயிக்க முடிகின்ற அந்தத் தவறை அச்சகோதரன் கண்டிடுவதற்கு உதவிடவேண்டும் எனும் உண்மையான வாஞ்சையில் புத்திசொல்லுதலைக் குறிப்பதாகும்.

உயர்வாய் மதிக்கப்படவேண்டிய சகோதரர்களையும் மற்றும் எச்சரிக்கப்படவேண்டிய சகோதரர்களையும் வேறுபடுத்திடும் இக்காரியமானது, நடக்கையின் அடிப்படையில் மாத்திரமல்லாமல், உபதேசம் அடிப்படையிலும் காணப்பட வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய யோவான் நமக்குக் காட்டுகின்றார். எனினும் முக்கியத்துவமற்ற கேள்விகளின் விஷயத்தில் சில வேறுபட்ட கருத்துக்கள் மாத்திரம் காணப்படுவதற்காக, நாம் ஒரு சகோதரனை ஐக்கியத்தினின்று ஒதுக்கிவைக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் பேசவில்லை என்பதில் நமக்கு நிச்சயமே. அப்போஸ்தலனின் வார்த்தைகள் கிறிஸ்துவைப் பற்றின உபதேசத்தின் அடிப்படைகளுக்கு - உதாரணத்திற்கு தேவனில் விசுவாசம், நம்முடைய மீட்பரென இயேசுவில் விசுவாசம்; திவ்விய வார்த்தைகளினுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் என்பவைகளுக்கு - மாத்திரமே நிச்சயமாய் பொருந்தும் என்பதில் நமக்கு நிச்சயமே. இந்த அடிப்படைகளானது, கிறிஸ்தவ நடக்கைகள், சத்தியத்தின் ஆவிக்கேற்றபடி நடத்தல் என்பவைகளோடுகூடச் "சகோதரனுக்கான" அடையாளங்களாய் இருக்கின்றது; மிகவும் தெளிவாகவும் மற்றும் திட்டவட்டமாகவும் வேதவாக்கியங்களில் முன்வைக்கப்படாத தேவனுடைய திட்டம் தொடர்புடையதான சில அம்சங்களின் விஷயங்களில், நம்மிடமிருந்து வேறுபடுகின்றதான வேறு

கண்ணோட்டங்களைச் சகோதரன் கொண்டிருந்தாலும் பரவாயில்லை. ஆனால் கிறிஸ்துவைப் பற்றின மூலக்கொள்கைகளினின்று, உபதேச ரீதியாக வழி தவறியுள்ளனர் என்று நாம் அடையாளம் கண்டுகொள்பவர்களின் விஷயத்தில், மிகவும் தீவிரமான/கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது ஏற்றது என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார்; ஆனாலும் அது துன்புறுத்துதல்களாகவோ, விரோதித்தல்களாகவோ; கசப்பான மற்றும் எரிச்சலுடன்கூடிய வாக்குவாத மாகவோ; பகிரங்கமாகவோ (அ) இரகசியமாகவோ பகைப்பதாகவோ இராமல்; மாறாக அத்தகையவனினால் முன்வைக்கப்படுகின்ற மற்றும் போதிக்கப்படுகின்ற தவறான உபதேசங்களுடன் நம்முடைய ஐக்கியமற்ற நிலையைச் சரியாய் வெளிப்படுத்துவதாகும்; நம்முடைய செல்வாக்கானது எந்த விதத்திலாகிலும் (அ) எந்த அளவிலாகிலும் சுவிசேஷத்தின் அடிப்படைகள் விஷயத்திலான அவனது மறுதலிப்புகளை ஆதரித்திடுவதற்குப் பயன்படுத்தப்படாதபடிக்கு பாதுகாத்தலாகும். இந்தத் தீவிரமான/கண்டிப்பான நடவடிக்கையானது அப்போஸ்தலனால் பின்வரும் வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது... "ஒருவன் உங்களிடத்தில் வந்து (நம்முடைய இனத்தை மீட்பதற்காகக் கிறிஸ்து மாம்சத்தில், உலகத்திற்கு வந்தார் முதலானவைகளை அறிக்கைப்பண்ணும்) இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்; அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" (2 யோவான் 10, 11)

நம்முடைய ஆதார வசனம் சுட்டிக்காட்டுவதுபோன்று, நாம் பகுத்தறிவை, பகுத்துணர்வைப் பயன்படுத்திட வேண்டும் - "அல்லாமலும், நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டுங்கள்." துணிகரமாயோ, அறிந்தோ, சொந்த விருப்பத்துடனோ இல்லாமல், மாறாக சிலர் எதிராளியானவனால் பாவத்திலோ அல்லது தவறான உபதேசத்திலோ சிக்கவைக்கப்பட்டவர்களாய் மாத்திரம் காணப்படுவதை நம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது. இம்மாதிரியானவர்களுடன் நாம் இன்னமும் இசைந்திடாத மனப்பான்மையைத் தக்கவைத்துக்கொண்டாலும், இவர்களது தவறு தற்காலிகமான தவறுதான் என்று நமது நம்பிக்கை காணப்படுவதை வெளிப்படுத்திடலாம்; இவர்களை உபதேசம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அல்லது இவர்களது ஒழுக்கக்கேடான நடத்தை சம்பந்தப்பட்ட விஷயத்தில், இத்தகையவர்களைக் கர்த்தருடனும் மற்றும் அவருடன் ஐக்கியம் கொண்டுள்ள சகோதரர் அனைவருடனும் ஐக்கியம் கொள்ளும் நிலைக்குச் சீர்ப்பொருத்திட நாடலாம். மற்ற "சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்திட வேண்டும்." இவர்களிடத்தில் மிகவும் தெளிவாய்/ஒளிவு மறைவில்லாமல் பேசிடுவதற்கு நாம் கடமைப்பட்டிருப்போம்; இத்தகையவர் களிடத்தில் இவர்களது ஒழுக்கக்கேடான நடத்தையின் நிமித்தமான புண்களை,

இவர்களது கண்களுக்கு முன் கிழித்து, வெளிப்படுத்த - இவர்கள் ஈடுபட்டுள்ளதான தப்பறையின் கடுமையை (அ) பாவத்தின் கடுமையை வெளிப்படுத்த நாம் கடமைப்பட்டிருப்போம்; அதுவும் கடினமான வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லையெனில், இவர்களது தூக்கமயக்கத்தினின்று இவர்களை விழிக்கப்பண்ண முடியாது என்று நாம் உணர்கிற பட்சத்தில் அப்படியாகவே பயன்படுத்தப்படவும் வேண்டும். இவர்களைப் பாவத்திலிருந்து இழுத்துவிடும்போது, இவர்களை நாம் "அக்கினியிலிருந்து - இரண்டாம் மரணத்திலிருந்து - இழுத்துவிடுகின்றோம்." அப்போஸ்தலனாகிய யாக்கோபும் இதே வகுப்பாரைக் குறித்து, "உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஓர் ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சிக்கிறான்" என்று பேசுகையில், பாவியாகிய ஒரு சகோதரனை, அதாவது சத்தியத்தில் விலகி மோசம் போன சகோதரனைக் குறித்து விவரிக்கின்றார் (யாக்கோபு 5:19, 20).

இறுதியாக நாம் தெரிவிப்பது என்னவெனில், ஒழுங்கில்லாதவர்களின் விஷயத்திலான சகோதரர்களின் நடவடிக்கையானது, தண்டனைவிதமாக இருத்தல் கூடாது; ஏனெனில் தண்டிப்பது என்பது நமக்கடுத்தக் காரியமல்ல. "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." நம்முடைய எச்சரிப்பு/புத்திமதி அல்லது கண்டித்தல் அல்லது ஐக்கியத்தினைத் தவிர்த்தல் என்பவைகள் அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, அப்படிப்பட்டவனைச் சீர்ப்பொருந்தப்பண்ண வேண்டும் எனும் கண்ணோட்டத்தில், திருத்தும்விதமாக மாத்திரமே காணப்பட வேண்டும். "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு - அதே விதத்தில் இல்லையென்றாலும், வேறு ஏதேனும் விதத்தில், நீ பெலவீனமாய்க் காணப்படும் விஷயத்தில் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு" (கலாத்தியர் 6:1).

மனந்திரும்பியுள்ளதற்கும், சீர்த்திருந்தியுள்ளதற்கும் எவை போதுமான சான்றாயிருக்கும் எனும் விஷயத்தில் தீர்மானிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் மாபெரும் ஞானமும், கிருபையும் அவசியமாகுகின்றது. எவனுடைய இருதயத்தில் சகோதர சிநேகம் ஐசுவரியமாய்க் காணப்படுகின்றதோ, எவனுடைய இருதயம் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கின்றதோ, எவனுடைய இருதயம் தன் சொந்த அபூரணத்தையும் மற்றும் பிரியமானவர் மற்றும் புதியதான உடன்படிக்கை மூலமாக மாத்திரமுள்ள தன்னுடைய ஏற்றுக்கொள்ளப்படுதலையும் உணர்ந்துகொண்டுள்ளதோ - அவனுடைய இருதயமே ஒழுங்கில்லாத சகோதரனிடமிருந்து வெளிப்படும் மனவருத்தம் மற்றும் மனந்திரும்புதலுக்கான

முதல் ஆதாரத்தைக் கண்டு களிகூரும். ஒருவேளை முழுக்க அன்பினால் நிரம்பியிருந்தால், நமது இருதயமானது மிகவும் துரிதமாய் (மனவருத்தம் வெளிப்படுத்தின) ஒழுங்கில்லாச் சகோதரனிடத்திற்குச் செல்லும்; நாம் நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வது அவசியமாகும்; அதிலும் விசேஷமாக இரண்டு (அ) மூன்று முறை அதே தவறு செய்திருக்கும் (அ) மிகவும் வருத்தத்திற்குரிய தவறு செய்திருக்கும் (ஒழுங்கில்லா) சகோதரன் விஷயத்தில், நாம் நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வது அவசியமாகும். மனந்திரும்புதலுக்கு இசைவான கிரியைகளை எதிர்ப்பார்ப்பதும், செய்த தவறுக்குச் சீர்ப்பொருந்தியுள்ளதாகச் சில வெளிப்படுத்தல்கள் வெளிப்பட அல்லது இருதயமானது தேவனுக்கும், சத்தியத்திற்கும் மற்றும் நீதிக்கும் அதன் நேர்மை நிலைக்கும் திரும்பியுள்ளது என்பதற்குச் சாட்சியாக, நடத்தையில் அத்தகையதொரு பகிரங்கமான மற்றும் தீவிரமான மாற்றத்திற்கான வெளிப்படுத்தல்கள் வெளிப்பட காத்திருப்பதும் நமது கடமையாகும்.

தவறிழைத்த சகோதரனும், உண்மையாய் மனந்திரும்பியுள்ளவனும் இத்தகைய சாட்சியங்களைக் கொடுத்திட/வெளிப்படுத்திட விருப்பமில்லாமல் இருக்கமாட்டான்; சீர்ப்பொருந்தியுள்ளதற்கான தனது அறிக்கையானது இப்படியாக உறுதிப்படுத்தப்படுவது நியாயமல்ல என்றும் எண்ணமாட்டான். இப்படிப்பட்டச் சகோதரன் தனது மனநிலையின் காரணமாகவும் மற்றும் (தேவ) காரணங்களுக்கு/நோக்கங்கள் மீது தான் கொண்டுவந்திட்டதான அவமானம் காரணமாகவும் மிகவும் தாழ்மையடைந்தவனாகி, அவன் ஒன்றில் சிலகாலம் சகோதரர் மத்தியில், தவறை நினைத்து வருந்துவதினிமித்தம் வராமல் இருக்க வேண்டுமென்றோ அல்லது தான் சார்ந்துள்ள சபையாருக்குச் சம்மதமானால், பின் இருக்கையில் அமர வேண்டுமென்றோ - சகோதரர் மத்தியில் மிகவும் தாழ்மையான ஸ்தானம்/இடம் வகிக்க வேண்டுமென்றோ எண்ணுவான் என்று நாம் எதிர்ப்பார்த்திடலாம். ஒருவேளை தவறு செய்து மனந்திரும்பியுள்ளவர் சபையார் மத்தியில் வழிநடத்தும் ஸ்தானம் வகிப்பாரெனில், அவர் சபையில் அதிகாரப்பூர்வமான அல்லது வழிநடத்தும் எந்த ஸ்தானத்திற்கும் போதுமான காலம் - அவரது சீர்ப்பொருந்துதலின் உண்மைக்கான மிகுதியான சாட்சியங்கள் கொடுக்கப்படுவது வரையிலும் - மீண்டுமாகக் கொண்டுவரப்படக்கூடாது என்பதை 'அவர் சார்பிலான தாழ்மையும்,' 'சகோதரர் சார்பிலான பகுத்தறிவும்' சுட்டிக்காட்டுகின்றதாயிருக்கும்.

நாம் இப்பாடத்தைத் துவங்கினபோது கூறினதுபோலவே, நிறைவு செய்யும்போதும் . . . தீமையான செய்கைகள் அல்லது தீமையான உபதேசங்களே ஒழிய தீமையான அனுமானங்களோ, அறிவோ, வதந்திகளோ ஆவிக்குரிய ஐக்கியத்தினை விலக்கிக்கொள்ளுதலுக்கான அடிப்படையல்ல என்ற உண்மைகளை வலியுறுத்துகின்றோம். கர்த்தருடைய கற்பனையைக் (மத்தேயு 18:15)

கைக்கொள்வது அவசியமாகும். சகோதரனில் உள்ள தவறைக் காண்கையில் நம்முடைய கண்களை நாம் மூடிக்கொள்ளக்கூடாது என்றாலும், எந்தத் தவறும் வெளிப்படையாய்த் தெரியாத பட்சத்தில், தவறு கண்டுபிடிக்கத்தக்கதாகத் தேடிடும் காரியத்தினைச் செய்திடுவதற்கு அன்பானது மறுத்திடும். மேலும் தவறானது தெளிவாய்க் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அது "சகோதரர் மத்தியில் கலந்துரையாடப்படக்/விவாதிக்கப்படக் கூடாது; மாறாக கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளது போன்று, காரியங்களைக் கண்டுபிடித்தவரால் தவறு செய்துள்ளவரிடம் நேரடியாய் எடுத்துச்செல்லப்பட வேண்டும்; மற்றும் தவறு செய்துள்ளவர் செவிகொடுக்க மறுக்கும்போதுதான் - தவறைச் சரிச்செய்ய மறுக்கும்போதுதான் மற்றவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். ஓ! இந்தக் கற்பனை முழுமையாய்க் கைக்கொள்ளப்பட்டால் எத்தனை பிரச்சனைகள் இல்லாமல் போகும்! எத்தனை தவறுகள் மற்றும் இருதய வலிகள் தவிர்க்கப்படும்!

---

R3745

# தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும்

**கே**ள்வி -- சகோதரர் ரசல் அவர்களே: நீங்கள் தவறிழைக்காதவராகக் கருதப்பட முடியாது என்று எழுதப்பட்ட கடிதம் ஒன்றினை நான் சமீபத்தில் பெற்றுக்கொண்டேன்; இப்படி எழுதிடுவதற்கான காரணம், அக்கடிதத்தினை எழுதினவர், கர்த்தருடைய ஊழியத்தினை மேற்பார்வையிடத்தக்கதாக தங்கள் மத்தியிலிருந்து மூப்பர்களைக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின பல்வேறு கூடுகைகளில் தேர்ந்தெடுத்தல் ஒழுங்கு தொடர்புடைய உங்களது கண்ணோட்டங்கள் மாற்றமடைந்துள்ளதாகக் குற்றம் சாட்டுகின்றார் என்பதினாலாகும். நான் குறிப்பிடும் அக்கடிதத்தினை எழுதினவர் ஒரு காலத்தில் பரிசுத்த லூயி சபையாரின் மூப்பராக இருந்தவர் என்று நான் எண்ணுகின்றேன்; சபையாரால் அவர் பிற்பாடு தேர்ந்தெடுக்கப்படாததால், சபையார் "பாபிலோன்" போன்றாகி விட்டனர் என்று கூறி, அவர்கள் ஐக்கியத்தினின்று ஒதுங்கிக் கொண்டவராவார். நான் குறிப்பிடும் அக்கடிதத்தில், அவர் பழைய வாட்ச் டவர் வெளியீட்டின் ஒரு பகுதியினைத் தெரிவிக்கின்றார்; அப்பகுதியானது, மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அவசியம் இல்லை என்பதாகத் தாங்கள் அக்காலத்தில் கருதியுள்ளதாகத் தெரிகின்றது. பிற்பாடு அவர் - மூப்பர்களைத்

தேர்ந்தெடுப்பதற்கான தங்களது பரிந்துரை மற்றும் மூப்பர்களுக்குரிய வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகள் தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்கும் தங்களது வார்த்தைகள் இடம்பெற்றுள்ள சமீபக்கால வாட்ச் டவர் மற்றும் மில்லேனியேல் டாண், தொகுதி VI-ஆம் வெளியீடுகளிலிருந்தும் - அக்கடிதத்தில் மேற்கோளிட்டுள்ளார்

என்னுடைய கேள்வி என்னவெனில்: இது உண்மைதானா? இவ்விஷயம் குறித்த தங்களது கண்ணோட்டத்தினைத் தாங்கள் மாற்றிக்கொண்டுள்ளீர்களா மற்றும் மாற்றிக்கொண்டுள்ளீர்களானால், ஏன் என்று நான் அறிந்துகொள்ளலாமா?

**பதில்:** முதலாவதாக நான் தவறிழைக்காத் தன்மையுள்ளவன் என்று ஒருபோதும் உரிமைபாராட்டிக்கொள்ளவில்லை என்பதை உங்களுக்கு உறுதிப் படுத்துகின்றேன். கர்த்தருடைய கிருபையினால், நான் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்கு முன்பாக, தவறிழைக்காத் தன்மையுள்ளவனாய் இருந்திட என்னால் எதிர்ப்பார்த்திட முடியாது; முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடே நிறைவானது வரும்போது, குறைவானது ஒழிந்துபோம்; நாம் அறியப்பட்டிருக்கிற படியே அறிந்துகொள்வோம்; மற்றும் பார்க்கப்பட்டிருக்கிறபடியே பார்ப்போம்.

எந்தத் தப்பறையும் இல்லாதபடிக்குக் கர்த்தரினால் மேற்பார்வையிடப் பட்டுள்ளதான பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய எழுத்துக்களை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். நீங்கள் பூமியிலே எவற்றைக் கட்டுகின்றீர்களோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டதாக அங்கீகரிக்கப்படும் என்றும், நீங்கள் பூமியிலே எவற்றைக் கட்டவிழ்கின்றீர்களோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்கப்பட்டதாக அங்கீகரிக்கப்படும் என்றும் எழுதினவர்களாகிய அப்போஸ்தலர்களைக் குறித்துக் கர்த்தர் கூறியிருக்கின்றார். ஆகையால் பரிசுத்த ஆவி வழங்கப்பட்ட காலப்பகுதியில் கர்த்தருடைய விசேஷித்த பிரதிநிதிகளாக இருக்கும்படிக்கு, அவரால் திட்டமிடப்பட்டதான அந்தப் பன்னிரண்டு மனிதர்களால் முன்வைக்கப்பட்ட காரியங்களானது, தவறற்றவையாக, உண்மையானவையாக, பிழையற்றதாக நாம் கருதிடலாம். ஆனால் அந்தப் பன்னிரண்டு பேரும் தேவவல்லமையினால் அற்புதகரமாகத் தாங்கப்பட்டது போன்று, அப்போஸ்தலர்கள் அல்லாத வேறு எவரும், தாங்கப்பட்டதாகவோ அல்லது வேதவாக்கியங்களுக்கு மேலாக மற்றவர்களுடைய வார்த்தைகளையும், எழுத்துக்களையும் நாம் கருதும்படியாக தேவவார்த்தைகள் நமக்கு அதிகாரமளிக்கின்றது என்றோ நம்பிடுவதற்கு நமக்கு எந்த ஆதாரமும் இல்லை. இதையே நாம் எப்போதும் முன்வைத்து வருகின்றோம். நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்று தேவன் தம்முடைய வார்த்தைகளைக் கொடுத்துள்ள பிரகாரமாகவே, தேவவார்த்தைகளை உண்மையாய் முன்வைப்பதே நம்முடைய பிரயாசமாக இருந்துவருகின்றது - நம்முடைய ஆண்டவருக்கே நாம் நிற்போம் அல்லது சாய்வோம். கர்த்தருடைய

ஆவியினால் வழிநடத்தப்பட்டு, இப்பொழுது தற்கால சத்தியத்தினுடைய வெளிச்சத்தில் நடந்துகொண்டிருக்கும் கர்த்தருடைய அருமையான ஜனங்களுடைய அங்கீகரிப்பை, நம்முடைய வழிமுறையானது பெற்றிருக்கின்றதென நாம் விசுவாசிக்கின்றோம்.

## நமது கண்ணோட்டம் வேறுபட்டுள்ளது

நாங்கள் அறிவில் வளர்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதையும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய பல்வேறு சிறு கூடுகைகளில் மூப்பர்கள் அல்லது வழிநடத்துபவர்கள் பற்றின கர்த்தருடைய சித்தத்தினைக் கொஞ்சம் வேறுபட்ட வெளிச்சத்தில் இப்பொழுது பார்க்கின்றோம் என்பதையும் நாங்கள் மறுக்கவில்லை. ஆரம்பக்காலங்களில் சத்தியத்திற்குள்ளாக வந்து, அந்தந்தச் சிறு கூட்டத்திற்குத் தானாக வழிநடத்துபவர்களானவர்களிடத்தில் நாம் அதிகமாக எதிர்ப்பார்த்ததே நம்முடைய கணிப்பில் உள்ள தவறாய் இருந்தது. இத்தகையவர்களிடத்திலுள்ள சத்திய அறிவானது, அவர்களிடத்தில் தாழ்மைகொள்ளச் செய்வதற்கு ஏதுவான தாக்கத்தினை ஏற்படுத்தி, தங்களுக்கு எந்தச் சிறப்பும் இல்லை என்பதை உணரச் செய்திடும் என்பதும் மற்றும் தேவனுடைய வாய்க் கருவிகளாகத்தான் மற்றும் அவரால் பயன்படுத்தப்படுவதினாலும்தான் தாங்கள் அறிய அருளப்பெற்றிருக்கும் எதையும், மற்றவர்களுக்கு முன்வைத்திட முடிகிறவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை உணரச்செய்திடும் என்பதும், இத்தகையவர்களைக் குறித்து நாம் அன்புடன் கொண்டிருந்த உயர்வான கண்ணோட்டமாய் இருந்தது. இத்தகையவர்கள் எல்லாவிதத்திலும் மந்தைக்கு மாதிரியாய் இருப்பார்கள் என்பது நம்முடைய உயர்வான நம்பிக்கையாய் இருந்தது; இன்னுமாகக் கர்த்தருடைய வழிநடத்துதலின் பேரில் இத்தகையவர்களைப் போன்று, சத்தியத்தினை முன்வைத்திடுவதற்குச் சமமான திறமையுள்ள அல்லது அதிகமான திறமையுள்ள ஒருவரோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களோ அந்தச் சிறு கூட்டத்திற்குள்ளாக வருகையில், அன்பின் ஆவியானது கனம்பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திகொள்ளச் செய்திட வழிநடத்திடும் என்றும், இப்படியாகக் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குரிய ஊழியத்தில் பங்கெடுக்கப்பண்ண ஒருவருக்கொருவர் உதவிசெய்திடவும், ஊக்குவித்திடவும் வழி நடத்திடும் என்றும் இத்தகையவர்கள் குறித்து நம்முடைய உயர்வான எதிர்ப்பார்ப்புக் காணப்பட்டது.

இக்கருத்துக்களை மனதில் கொண்டவர்களாகவும், இப்பொழுது ஏற்ற காலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதும் மற்றும் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களினால் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதுமான பெரியளவிலான கிருபைகள் மற்றும் சத்தியங்களின் காரணமாகவும் - ஆதிதிருச்சபையாருக்கு அப்போஸ்தலர்களினால் திட்டமிடப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளதான வழி

முறையினை, இப்பொழுது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் பின்பற்ற அவசியமிராது என்று நாங்கள் அப்போது முடிவெடுத்தோம். தெய்வீக மேற்பார்வையின் கீழ் அப்போஸ்தலர்களினால் திட்டமிடப்பட்டுள்ளதான ஏற்பாடுகளானது, மற்றவர்களால் திட்டமிடப்படும் எந்த ஏற்பாட்டைக் காட்டிலும் மேம்பட்டது என்பதையும் மற்றும் உயிர்த்தெழுதலில் நாம் மறுரூபமடைவதினால் நாம் அனைவரும் முழுமையும், பூரணமும் அடைந்து, ஆண்டவரோடு நேரடியான தொடர்புக்குள் வரும் அந்த உயிர்த்தெழுதலுக்கு முன்புவரை, முழுச்சபைக்குமே அப்போஸ்தலர்களினால் நிறுவப்பட்டதான ஒழுங்குமுறைகள் அவசியமாய் இருக்கும் என்பதையும் உணர்ந்துகொள்ள தவறிப்போனதிலேயே எங்கள் தவறு காணப்படுகின்றது.

அருமையான சகோதரர்கள் மத்தியில் கொஞ்சம் போட்டிமனப்பான்மைக் காணப்படுவதைக் கண்டபோது மற்றும் அநேகரிடத்தில் கூடுகைகளில் மூப்பர்த்துவத்தினை ஊழியமாகப் பார்த்திடுவதற்குப் பதிலாக பதவியென அடைந்திடுவதற்கான ஆசைக் காணப்படுவதைக் கண்டபோது மற்றும் தங்களைப் போன்று சமமான திறமையுடையவர்களாகவும், சமமான சத்திய அறிவுடையவர் களாகவும், ஆவியின் பட்டயத்தினைக் கையாளுவதற்குத் திறமையுள்ளவர் களாகவும் காணப்படும் மற்றச் சகோதரர்கள் வழிநடத்துபவர்களாக வருவதிலிருந்தும் மற்றும் வளருவதிலிருந்தும் தடைப்பண்ணுவதைக் கண்டபோது - எங்களுடைய தவறு எங்களுக்குப் புரியவந்தது. தேவனுடைய ஜனங்களை இறுமாப்பாய் ஆண்டிட ஒரு சகோதரன் விரும்புகிறாரெனில் - தான் ஏதோ தவறிழைக்காத தன்மையுடையவர் போன்றும், சகோதர சகோதரிகள் ஏதோ தரம் குறைந்தவர்கள் போன்றும் எண்ணி, சபையை நடத்திட அச்சகோதரன் விரும்புகிறாரெனில், இம்மாதிரியான சூழ்நிலையில் என்ன செய்யப்பட வேண்டும் என்று விசாரிக்கும் அன்புடன்கூடிய கேள்விகள் எனக்குக் கர்த்தருடைய ஜனங்களுள்ள பல்வேறு சிறுசிறு கூடுகைகளிலிருந்து வந்தது. நாங்கள் அனைவருக்கும் நிதானத்தை அறிவுறுத்தினோம்; விசேஷமாகப் போதிக்கும் திறமையில் சிறந்த நிலை என்பது விசேஷமாய் அபாயகரமானது எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை நண்பர்களுக்கு நினைப்பூட்டி, குற்றம் சாட்டப்பட்டுள்ள சகோதரன் இரக்கத்துடன் நியாயம் தீர்க்கப்பட வேண்டும் என்றும், இப்படியான சகோதரனை அவர்கள் சீர்ப்படுத்துகையில், அவ்விஷயத்தில் தங்களுக்கிருக்கும் அபாயங்களையும், சொந்த பெலவீனங்களையும் நினைவில்கொண்டிருக்க வேண்டும் என்றும், அறிவுறுத்தினோம். மேலும் திவ்விய ஒழுங்கிலும்சரி, பகுத்தறிவின்படியான ஒழுங்கிலும் சரி அர்ப்பணிக்கப்பட் டவர்களின் முழுச்சபையாரும், தங்களுக்கான வழிநடத்துபவர் தொடர்புடைய கர்த்தருடைய சித்தத்தினை நாடிட வேண்டும் மற்றும் தீர்மானித்திட வேண்டும்

என்றும், சபை செய்ய வேண்டிய இக்காரியத்தினை அவர்களிடமிருந்து பறித்திடுவதற்கும், ஊழியத்திற்கென்றுள்ள கர்த்தருடைய தேர்வாக, தான் ஒருவன் மாத்திரமே காணப்படுவதாக, சபையாருக்கெனத் தீர்மானிப்பதற்கும், எந்த மனுஷனையும் அனுமதித்திடக் கூடாது என்றும் நாங்கள் அவர்களுக்கு உறுதியாகக் கூறினோம்.

சுயநாட்டத்தின் ஆவி மற்றும் பெரியவராய் இருப்பதற்கான ஆசையையும் வெளிப்படுத்தும் ஒருவர் அந்த ஊழியத்திற்குப் பொருத்தமற்றவராய் இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது என்றும், வழிநடத்துபவராக "இறுமாப்புள்ள" ஒருவர் தொடர்வது என்பது, சபையாருக்குப் பாதகமாய் இருப்பது மாத்திரமல்லாமல், வழிநடத்தும் அவருக்கும் பாதகமாய் இருக்கும், காரணம் தேவன் பெருமை உள்ளவர்களையும், சுயநாட்டம் உடையவர்களையும் எதிர்க்கின்றார் மற்றும் தாழ்மையுள்ளவர்களுக்குத் தம்முடைய கிருபைகளை அருளுகின்றார் என்ற வேதவாக்கிய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கின்றோம் என்றும் நாங்கள் அறிவுரை வழங்கினோம். புதிய மனதிற்கு இசைவான புதிய சரீரத்தின் பூரணமானது, மாம்சத்தினுடைய தற்போதைய அபூரணத்தினுடைய இடத்தினை முழுமையாய் எடுத்துக்கொள்ளும் காலமாகிய - "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" - என்பதே அப்போஸ்தலனுடைய புத்திமதியாய் இருக்கின்றது (1 பேதுரு 5:6).

நீங்கள் பரிசுத்த லூயிசிலுள்ள சபையாரைக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள் மற்றும் அந்தச் சிறு கூட்டத்தாருக்கு வழிநடத்துபவர் நிமித்தம் சிரமம் இருந்தது மற்றும் அநேகமாக உங்களால் குறிப்பிடப்படும் அக்கடிதத்தினை எழுதினவருடன்தான் இருந்தது என்பது எனக்கு நினைவில் இருக்கின்றது. அவர் சபையின் காரியங்கள் அனைத்தையும் நிர்வகிப்பதற்கு அனுமதிக்கப்படாததன் காரணமாக, முழுச்சபையாரிடத்திலும் கோபம் அடைந்தார். தேவன் தன்னை அந்த ஸ்தானத்திற்கு நியமித்ததை அவர் அறிந்துள்ளதாகவும், இவ்விஷயத்தில் தனக்கு ஆதரவு வழங்குவதைத் தவிர, சபையார் வேறு எதுவும் செய்யக்கூடாது என்றும், தனக்கு ஆதரவு வழங்குகையில், சபையார் கர்த்தரையும், கர்த்தருடைய சித்தத்தையும் ஆதரிப்பவர்களாய் இருப்பார்கள் என்றும் வலியுறுத்தி, அவர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவர் தான் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது என்றும், தனக்கு வாக்குகள் அளிக்கப்படக் கூடாது என்றும், மாறாக தான் தெய்வீக நியமனமானவராக, சபையாரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதை நான் சபையாருக்கு வலியுறுத்திட விரும்பிட்டார்.

நான் பொறுமை காத்து, என்னால் முடிந்தமட்டுமான கனிவான விதத்தில், நம்முடைய சொந்த நடக்கை தொடர்புடையதான கர்த்தருடைய சத்தம் என்னவென்று, நம்முடைய மனங்களில், வேத வாக்கியங்களினுடைய உதவியின்

மூலம் ஆராயப்பட வேண்டும் என்றும், சபை தொடர்புடையதான கர்த்தருடைய சத்தம் என்னவென்று, அர்ப்பணிக்கப்பட்ட அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்றமட்டும் தேவவார்த்தையினின்று அடையப்பெற்றதான ஆவியின் மனதினை வெளிப்படுத்த நாடுவதினால் - இவர்கள் யாவருடைய மன உணர்வுகளின்/கருத்துகளின் வெளிப்படுத்தல் வாயிலாக ஆராயப்பட வேண்டும் என்றும், அவருக்குச் சுட்டிக்காட்டினேன்.

அச்சகோதரனுடைய தெய்வீக நியமனத்தினை நான் அங்கீகரியாததால், அவர் மனம் புண்பட்டது மற்றும் பலவருடத்திற்குப் பிற்பாடு அந்த மனக்கசப்பானது இப்பொழுது, நீங்கள் குறிப்பிடும் கடிதத்தின் வாயிலாக வெளிப்படுகின்றது என்று எண்ணுகின்றேன்; இக்கடிதத்தின் நகல்களானது உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது போன்று, மற்றவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்பதை நான் அறிவேன்.

இந்த உண்மைகள் மற்றும் அனுபவங்களானது, "பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்துதலாகிய" அப்போஸ்தல முறைமையின் ஞானத்தினை என் மனதிற்கு நிரூபித்தது மாத்திரமல்லாமல், இம்முறைமையின் அவசியத்தினையும் என் மனதிற்கு நிரூபித்ததாய் இருந்தது (தீத்து 1:5). இம்முறைமை இல்லையெனில் கர்த்தருடைய ஜனங்கள் அறிவிலும், ஆவியின் கிருபைகளிலும் நேர்த்தியாய் வளர்ச்சியடைய முடியாமல் காணப்படுவார்கள், இன்னுமாக கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையினைப் பற்றியும் மற்றும் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசித்து, அவருடைய ஊழியத்திற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள அனைவரும் சமமாய்ச் சகோதரர்களாக, ஒரே வகுப்பினராக, ஒரே கூட்டத்தாராக, ஒரே சரீரமாக இருப்பது பற்றியுமுள்ள முழுமையான உணர்ந்து கொள்ளுதலுக்குள்ளாக வரமுடியாமல் காணப்படுவார்கள்.

இக்கேள்வி தொடர்புடைய விஷயத்தில் நான் ஆரம்பத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டைக் குறித்தோ அல்லது இப்பொழுது நான் கொண்டிருக்கும் நிலைப்பாட்டைக் குறித்தோ நான் வெட்கமடையவில்லை. நான் முழுச் சூழ்நிலையினையையும் கிரகித்துக் கொள்ளாததற்காகவும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடும், பரத்திற்குரியவைகளை நாடின பிற்பாடும், பரத்திலிருந்து வரும் ஞானத்தினால் நடத்தப்படுவதற்கு முயற்சித்தப் பிற்பாடும், நண்பர்களுடைய மாம்சத்தில் இன்னமும் காணப்படுகின்றதான சுயநலம் மற்றும் பேராசைகளைக் குறித்துக் கவனத்தில் எடுத்துக்கொள்வதற்கு நான் தவறிவிட்டதற்காகவும் நான் ஆச்சரியப்படவில்லை.

தற்காலத்தில் கர்த்தருடைய வாய்க்கருவிகளாகக் காணப்படும் யாரையாவது அல்லது என்னை, இந்த யுகத்தினுடைய துவக்கத்தில் கர்த்தரினால் அற்புதகரமாக வழிநடத்தப்பட்டதான விசேஷித்த அந்தப் பன்னிரண்டு வாய்க் கருவிகளுடன் நான் ஒப்புமை பண்ணிடாமல், அக்காலத்தில் பிரதானமாய்க்

காணப்பட்டவர்களில் சிலருக்குக்கூட, பல்வேறு காரியங்களில் ஆவியின் மனநிலையை உணர்ந்துகொள்வது அவசியமாய் இருந்தது என்ற உண்மையினைக் கவனத்திற்குக் கொண்டுவர பிரயாசம் எடுக்கின்றேன்; உதாரணத்திற்கு: யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இடையே தடையாக இருந்த நடுச்சுவர் உடைந்து விட்டது என்றும், இதனால் இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய நிபந்தனைகளின் கீழ் இப்பொழுது கர்த்தருடைய தயவுகள் விஷயத்தில், விசேஷித்த முன்னுரிமை தொடர்புடைய விஷயத்தில் யூதனென்றோ, புறஜாதியென்றோ, அடிமையென்றோ, சுயாதீனனென்றோ இல்லை என்றும் உள்ள படிப்பினைகளைக் கற்றுக் கொள்வதற்கு முன்னதாக, அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கு ஒரு தரிசனமும், அதைத் தொடர்ந்து அனுபவங்களும் வேண்டியிருந்தது. அக்காரியம் தொடர்பான சத்தியத்தினைப் பேதுருவுக்குக் காண்பித்திட, அவர் ஒருவகையான தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார்; நான் இன்னொரு வகையான தரிசனத்தைப் பெற்றுக்கொண்டேன் - அதாவது அப்போஸ்தல முறைமையினிடத்திற்கு என்னை வழிநடத்திட்ட மற்றும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையினுடைய சரியான வளர்ச்சிக்கும், கட்டப்படுதலுக்கும், அபிவிருத்திக்கும் அந்த முறைமையானது இன்னமும் அவசியமாய் இருக்கின்றதென என்னை நம்பச் செய்திட்டதான அனுபவ பாடத்தினைக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின பல்வேறு சிறு சிறு சபையார்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன்.

## நடைமுறையில் எம்மாற்றமும் இல்லை

வழிநடத்துபவர்கள் தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, அந்தந்த சிறு சிறு சபையார் தங்களுக்கான வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உண்மையானது, நாங்கள் சபை பிரிவாகிவிட்டோம், பாபிலோன் போன்றாகி விட்டோம் என்பதை நிரூபிக்கின்றதாக, அச்சகோதரனுடைய கடிதம் தெரிவிப்பதாக, நீங்கள் கூறுவதாக நான் புரிந்து கொள்கின்றேன். சத்தியத்தின் ஆவியினை இழக்கத் துவங்கியுள்ளவர்களுக்கு மற்றும் இருளுக்குள்ளாகப் போகத் துவங்கியுள்ளவர்களுக்குக் காரியங்கள் எப்படியாய்த் தோற்றமளிக்கும் என்று கூறுவது சிரமமே. உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், ஒருவர் தன்னைத் தெய்வீக நியமனத்தின்படியானவராக எண்ணுவதாகக் கூறினதற்காக மாத்திரம், அவரைச் சபையார் வழிநடத்துபவராக அங்கீகரித்திட வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் பரிந்துரைக்கவில்லை. சத்தியத்தினைப் பெற்றிருப்பவர்கள் யாவரும் ஒரே இருதயத்துடன், ஒரே மனதுடன், ஒவ்வொருவரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திடுவதற்கும் மற்றும் தங்களால் முடிந்தமட்டும்

மற்றவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கும், மகிழத்தக்கதாய் அவர்கள் மத்தியிலுள்ள கர்த்தருடைய ஆவியானது, அவர்களை இயக்கிடும் என்பதும் மற்றும் இப்படியாகக் கர்த்தருடைய சித்தம் நிறைவேற்றப்படும் என்பதும் நம்முடைய கருத்தாய் இருந்தது. உடன் ஊழியர்களிடத்தில் நாம் அதிகம் எதிர்ப்பார்ப்புக் கொண்டிருந்ததிலும், ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய அப்போஸ்தல முறைமையாகிய "கைகளை நீட்டும் முறைமையினை" அல்லது இவ்விஷயம் தொடர்பான கர்த்தருடைய மனம் குறித்த அர்ப்பணிக்கப்பட்டவர்களின் கருத்தினை உறுதிப்படுத்திடுவதற்கான வேறு ஏதாகிலும் முறைமையினைப் பின்பற்றிடுவதற்கு நாம் தவறினதிலும்தான், முழுத்தவறும் காணப்படுகின்றது.

## இப்பொழுது அமைப்பல்ல/organization

நாங்கள் ஒரு சபை பிரிவை/denomination அல்லது உட்பிரிவை/sect உருவாக்கிவிட்டோமெனச் சொல்பவர்கள், உண்மையினைத் திரித்துக் கூறுபவர்களாய் இருக்கின்றனர். உட்பிரிவு/sect என்பது பிரிதலைக் குறிக்கின்றது மற்றும் நாங்கள் எதிலிருந்தும் பிரியவில்லை. தேவனுடைய ஜனங்கள் யாவரையும் கர்த்தரோடும், ஒருவரோடு ஒருவரும் இருதய உறவிற்குள்ளாகவும், ஐக்கியத்திற்குள்ளாகவும் கொண்டுவருவதற்கே நம்முடைய பிரயாசம் காணப்படுகின்றது. விலையேறப்பெற்ற இரத்தத்தினைத் தங்களுக்கான மீட்பின் கிரயம் என்று விசுவாசிப்பவர்களும் மற்றும் கர்த்தருக்கான ஊழியத்திற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைப் பண்ணுகிறவர்களும் மற்றும் இதற்குச் சாட்சி பகிர்கின்றவர்களுமானவர்கள் யாவரையும் நாம் சகோதரர்களென ஏற்றுக்கொள்கின்றோம். இவ்விஷயங்களில் இசைவாய்க் காணப்படுபவரை - ஆனால் இவையல்லாதவைகளிலும், குறைவான முக்கியத்துவம் உள்ள பாடங்களிலும் அவரது கருத்துகள் என்னவாக இருப்பினும், அவரைக் கிறிஸ்தவ ஐக்கியத்தினின்று நாம் புறந்தள்ளுவதில்லை.

நாம் ஒரு சபை பிரிவினர்/denomination அல்ல; ஏனெனில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை அல்லாமல், வேறெந்த நாமத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. நாங்கள் கிறிஸ்தவர்கள். நாங்கள் வேத வாக்கியங்களில் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான அனைத்து நாமங்களையும் ஏற்றுக் கொள்கின்றோம், எனினும் இவைகளில் ஒன்றையாகிலும் கிறிஸ்தவ சபை பிரிவுகளிலுள்ள நம்முடைய நண்பர்கள் சூட்டிக்கொள்வது போன்று, வேறுபடுத்திக் காண்பிக்கும் நாமமாக நாம் பயன்படுத்துகிறதில்லை. ஒவ்வொரு தனிநபரும், கர்த்தரோடுகூடத் தனது உறவினைக் கொண்டிருக்கின்றான் மற்றும் கர்த்தரோடு

உறவு பெற்றிருப்பதின் காரணமாக, இப்படியாகக் கர்த்தரோடு உறவு பெற்றிருக்கும் யாவரோடும் உறவு பெற்றிருப்பான்; ஏனெனில் கிறிஸ்துவின் சபை ஒன்றாய் இருக்கின்றது. கர்த்தரோடுள்ள இந்த நம்முடைய ஒன்றிணைதலானது, வேத வாக்கியங்களின் படியான ஒன்றிணைதலாகும் மற்றும் இது ஒன்று மாத்திரமே உள்ளது; மற்றும் நாங்கள் அறிந்திருக்கிறவரைக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின வேறெந்த கூட்டத்தாரும் இந்த ஒரு நிலைக்கு முழுமையாய் வந்ததாக இல்லை. கர்த்தருடைய கிருபையினால், இந்த ஓர் உறவு நிலையில், அவர் "நல்லது!" என்று கூறி, நம்மைத் தம்முடைய மகிமையான இராஜ்யத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்வது வரையிலும் நிற்போமென நாம் நம்புகின்றோம்.

## பாபிலோன் என்ற வார்த்தை

"பாபிலோன்" என்ற வார்த்தையின் அர்த்தமாவது, நாம் அடிக்கடி சுட்டிக்காண்பிப்பது போன்று, குழப்பத்தினைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஒழுங்குமுறைச் சார்ந்த விஷயத்தில் குழப்பம் இல்லை; ஏனெனில் பாபிலோனின் பல்வேறு பகுதிகளானது, அதன் பல்வேறு சபை பிரிவுகளானது, எந்தக் குழப்பமும் அனுமதிக்கப்படாத அளவுக்கு மிகவும் வரம்புள்ள ஒழுங்குமுறைகளை உடையதாய் இருக்கின்றது. பாபிலோனின் குழப்பமானது, அவளது உபதேசங்களில் காணப்படுகின்றது; அவை வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாதவை களாகவும், குழப்பமானவைகளாகவும், முரண்பாடானவைகளாகவும், பெரும்பான்மை யானவைகள் தவறானவைகளாகவும் காணப்படுகின்றது. உங்களால் குறிப்பிடப்பட்டுள்ளதான கடிதத்தினை எழுதின சகோதரன், பாபிலோனின் நிலைக்குள்ளாகும் அபாயத்தில் காணப்படுபவராகக் காணப்படுகின்றார் என்று நாம் அஞ்சுகின்றோம் - மூப்பர்கள் சார்புடைய அவரது கருத்துக்களானது முழுவதும் குழப்பமானவைகளாகக் காணப்படுகின்றது என்பது உறுதி. தானும், மற்ற மூப்பர்களும் எந்த மனித நியமனத்தின் பேரில் இல்லாமல், மாறாக திவ்விய நியமனத்தின் பேரில் சபையை ஆண்டிட வேண்டும் என்று அவர் வலியுறுத்துகையில், பாபிலோன் என்று நாம் எண்ணுகின்றதான உரோமின் போப் செய்வதைக் காட்டிலும் மிகவும் மிஞ்சி செயல்படும் நிலைக்குள்ளாகுகின்றார்; ஏனெனில் உரோமின் போப் கூடத் தகாதவிதமாய்க் கைப்பற்றுவதன் மூலம் இந்த, தன் ஸ்தானத்தை அடைந்திடாமல், மாறாக Cardinal/கார்டினல்களினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

# மூப்பருக்குரிய பொறுப்புகள்

## அப்போஸ்தலர் 20:28-38

*“வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டும்.”*

எபேசுவில் நடந்த கலகத்திற்குப் பிற்பாடு, அங்கிருந்து புறப்படும்போது அப்போஸ்தலனாகிய பவுல் மீண்டுமாக எருசலேமுக்குப் போக வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார், ஆனால் முதலாவதாக ஐரோப்பியாவிலுள்ள சபைகளை - மக்கெதோனியாவிலும், கிரேக்கிலும் உள்ள சபைகளைச் சந்திக்க வேண்டுமென்றிருந்தார். மக்கெதோனியாவில் இருக்கும்போதுதான் அவர் கொரிந்தியருக்கான தனது இரண்டாவது கடிதத்தை எழுதியுள்ளதாக அனுமானம் காணப்படுகின்றது; இந்தப் பிரயாணத்தில் கொரிந்து பட்டணத்தில் சுமார் மூன்று மாதங்கள் காணப்பட்ட போது, அவர் உரோமர்களுக்கான தனது நிருபத்தை எழுதியுள்ளதாக அனுமானம் காணப்படுகின்றது. அந்த ஒரு காலக்கட்டத்தில் 21-வயதான நீரோ, உரோமின் சக்கரவர்த்தியாகக் காணப்பட்டார் மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு 56-வயதாக இருந்தது - தனது கிறிஸ்தவ ஜீவியம் மற்றும் அனுபவங்களின் முழு நிறைவு பகுதியில் காணப்பட்டார்.

வாணிக கப்பல் ஒன்றில் அப்போஸ்தலன் எருசலேமுக்குப் போய்க் கொண்டிருக்கையில், கப்பலானது எபேசுவிலிருந்து 30-மைல் தூரத்திலுள்ள மிலேத்து துறைமுகத்தில் நின்றது; இங்கே நம் பாடம் ஆரம்பமாகுகின்றது. எத்தனை நாட்கள் கப்பலானது நிற்கும், சரக்கை ஏற்றி இறக்கும் இவை முதலானவைகள் திட்டவட்டமாய்ச் சொல்ல இயலாது; ஆகையால் அப்போஸ்தலன் எபேசுவிற்குச் செல்வதற்குப் பதிலாக, அங்குள்ள சபையின் மூப்பர்கள் மிலேத்துவில் தன்னிடம் வருவதற்கும், இப்படியாகத் தனது கப்பலானது பிரயாணத்திற்குப் புறப்பட ஆயத்தமாகும்போது, கப்பலை தான் தவறவிடாமலும், அவர்களோடு அதிகக் காலம் செலவழிக்கத்தக்கதாகவும், மூப்பர்களுக்கு ஆள் அனுப்பினார். மூப்பர்கள் வந்தார்கள் மற்றும் அவர்களுக்கு அப்போஸ்தலன் கூறியவைகளை நம்முடைய பாடத்தில் காணலாம். அவர்கள் அநேக நாட்கள் அவரோடுகூடக் காணப்பட்டிருக்க வேண்டும் மற்றும் அநேகமாக அவரும் அநேகம் காரியங்களைப் பேசியிருக்க வேண்டும்; ஆனால் லூக்காவின் மனதில் காணப்பட்டதும், இவரால் காலக்கிரமமாகத் தொகுத்து வழங்கப்பட்டதும், அப்போஸ்தலனுடைய இறுதி வார்த்தைகளாக, முழு உரையாடலின் சுருக்கமாக இருக்கின்றது; இது ஆற்றல்மிக்கதாயும், நெஞ்சைத் தொடுகிறதாயும் பொதுவாய்க் கருதப்படுகிறது. இது உள்ளூர் கண்காணிகளுக்கான, பொதுக்கண்காணியினுடைய பேருரையாகும் மற்றும் இது புரிந்து கொள்ளப்பட வேண்டுமானால் இந்த ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்பட வேண்டும்.

“உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்;” தங்கள் சொந்த

இருதயத்தையே காத்துக்கொள்ள முடியாதவர்களினால், பொதுவான சபைக்கான நலனுக்கடுத்த விஷயங்களில் உண்மையாய் ஊழியம் புரிய முடியாது என்று அப்போஸ்தலன் சரியாகத்தான் உணர்ந்திருக்கின்றார். பக்தியும், அன்பும் வீட்டில்தான் துவக்கம் கொண்டிருக்க வேண்டும். இது தொடர்பாக ஜான் கேல்வின் அவர்கள் கூறியுள்ளதாவது: "தன்னுடைய சொந்த இரட்சிப்பை அலட்சியம் பண்ணுகிறவன், மற்றவர்களுடைய இரட்சிப்புக்கடுத்த விஷயங்களில் ஆக்கப்பூர்வமாய்க் கவனம் செலுத்திட முடியாது; ஏனெனில் அவனே மந்தையில் ஒரு பாகமாகத்தான் காணப்படுகின்றான்." இதே கருத்தானது அப்போஸ் தலனாலும் பின்வருமாறு கூறுகையில் முன்வைக்கப்படுகின்றது: "தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த (நீங்களும் உள்ளடங்கும்) மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையா யிருங்கள்;" And (take heed) to all the flock, <u>over the which</u> the holy spirit hath made you overseers;" - "<u>In the which</u>" என்று ரிவைஸ்டு மொழியாக்கத்தில் (Revised Version) இடம்பெறும் வார்த்தைகள் மிகவும் சரியாய் உள்ளது; கண்காணிகளானவர்கள் சபையின் மீது அதிகாரிகளாகக் கருதப்படாமல், சக அங்கத்தினர்கள் தொடர்பான பொறுப்பினையுடைய சபையின் அங்கத்தினர்களாகக் கருதப்பட வேண்டும். கண்காணியினுடைய பராமரிப்பானது மந்தையில் பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும், கல்வியிலும் அல்லது வேறு எதிலாகிலும் நன்கு வளம் பெற்றுள்ளதான அங்கத்தினர்களுக்கு மட்டும் எல்லைக்குட்படுத்தப்படாமல், மாறாக அப்போஸ்தலன் கூறுவதுபோன்று "மந்தை முழுவதற்கும்" - ஏழைகளாகவும், இயல்பாகவே விநோதமானவர்களாகவும் காணப்படுபவர்களை உள்ளடக்கின நிலையில் பொதுவாய்க் காணப்பட வேண்டும்.

மூப்பர்கள் என்பவர்கள், சரீர ரீதியில் வயோதிப புருஷர்களாகக் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்றுமில்லை; ஏனெனில் கிறிஸ்துவின் சபையில் மாம்சம் என்பது மரித்ததாக எண்ணப்படுகின்றது; அவர்களது வயதும், அவர்களது முதிர்ச்சியும், அவர்களது மூப்பர்த்துவமும் புதுச்சிருஷ்டியின் அடிப்படையிலாகும். இவர்கள் சபையால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருப்பினும் இவர்கள் தங்கள் பொறுப்பானது பரத்திலிருந்து வருகின்றதெனக் கருத வேண்டும்; இவர்களது நியமனம் தொடர்புடைய விஷயத்தில் மனிதர்கள் சம்மந்தப்பட்டிருந்தாலும், இவர்களது கடமையானது, கர்த்தருடைய பரிசுத்த ஆவியின் மூலமான கர்த்தருடைய பிரதிநிதி என்ற வண்ணமாகவே உண்மையில் ஆகும். "மூப்பர்கள்" (Elders) என்ற வார்த்தையும் 1 தீமோத்தேயு 4:14-ஆம் வசனத்தில் இடம்பெறும் "மூப்பராகிய சங்கத்தார்"/ Presbytery என்ற வார்த்தையும் ஒன்றே ஆகும். வேதவாக்கியங்கள் எங்கும் "Overseers" என்றும், "Bishop" என்றும் வழங்கப்பட்டுள்ளதான கண்காணி என்ற வார்த்தையானது, மற்றவர் சார்ந்த கடமை/பொறுப்பைப் பெற்றுக்கொண்டவர் ஆவார் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. Bishop or Overseer எனும் கண்காணி என்ற இந்த வார்த்தையானது,

நவீன காலங்களில் அதன் ஆதி எளிமை இல்லாமல் காணப்படுகின்றது. கிறிஸ்துவினுடைய சபையின் மூப்பர்கள், அதன் கண்காணிகளாகக் காணப்படுகின்றனர் மற்றும் இவர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளதான ஊழியத்திற்குரிய பொறுப்பினை உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் பொதுவான விதத்தில் கண்காணியாக இருந்துள்ளார்; இதை அவர்தானே, "எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது" என்று குறிப்பிடுகையில் வெளிப்படுத்துகின்றார்; அதிலும் குறிப்பாகக் கர்த்தருடைய வழிநடத்துதலின் பேரில், சத்தியத்தில் நிலைவரப்படுத்தப்படுவதற்கு அவர் வழிவகையாக யாருக்கெல்லாம் இருந்தாரோ, அவர்கள் குறித்தும் அல்லது தனிப்பட்ட விதத்திலான அவரது ஊழியத்தின் மூலமாகவோ (அ) கடிதத்தின் மூலமாகவோ அவரது ஊழியங்களை ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் அனைவர் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை அவரை நாள்தோறும் நெருக்கியது. இவ்விஷயங்களைப் பரிசுத்த ஆவியானது மேற்பார்வையிடுகிறதென்றாலும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய சபையார் - கண்காணிகளை நியமிக்கும் விஷயத்தில் ஆவியினுடைய வழிநடத்துதலைக் கவனிப்பதும் மற்றும் அப்படியானவர்களை, ஆம் அப்படியானவர்களை மாத்திரம் ஏற்றுக்கொள்வதும், கர்த்தருடைய ஏற்பாடு என்று தாங்கள் நம்புகின்றதான கண்காணிப்பையும், மேற்பார்வையையும் ஏற்றுக்கொள்வதும் - சபையாரின் காரியமாய் இருக்கின்றது.

காட்டுவிலங்குகள் குறித்த புகழ்பெற்ற ஆராய்ச்சியாளரான திரு. தாம்சன் செட்டன் (Thompson Seton) அவர்கள் "லைவ்ஸ் ஆப் தி ஹண்டட்/Lives of the Hunted" எனும் தனது புத்தகத்தில் குறிப்பிடுவதாவது: "மந்தைகளின் தலைவர்கள், வழிநடத்துனர்கள் என்ற தங்கள் ஸ்தானத்தை, மந்தையின் மீதான ஏதோ அதிகாரத்தினால் பெற்றுக்கொள்வதுமில்லை மற்றும் தக்கவைத்துக் கொள்வதுமில்லை; மாறாக நல்ல புல்வெளிகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் தங்களை அறிவுள்ளவர்கள் என்றும், சத்துருக்களினின்று பாதுகாப்பதில் மிகவும் திறமிக்கவர்கள் என்றும், மந்தைகள் தங்களை நம்புவதற்குக் கற்றுக்கொண்டுள்ளது என்றும் காண்பிக்கின்ற காரியங்களின் அடிப்படையிலேயே ஆகும்."இது வேதவாக்கியங்களின்படி கர்த்தருடைய ஜனங்களால் கண்காணிகளாக, மூப்பர்களாக, மேற்பார்வையாளராக ஏற்றுக் கொள்ளப்படுகிறவர்களிடத்திலான, கர்த்தருடைய ஜனங்களின் மனோநிலை என்னவாக இருக்க வேண்டும் என்பதை நன்கு விவரிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் அந்தோ பரிதாபம்! பெயர்ச்சபையில், அப்போஸ்தலனால் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதான தலைமைத்துவத்திற்கான சரியான பண்புகள் ஏதும் இல்லாத அநேக வழிநடத்துனர்கள் இருப்பதை நாம் பார்க்கின்றோம்; அவை: (1) மந்தைக்கான பொதுவான நலனுக்கடுத்தவைகளை மேற்பார்வையிடுதல்/கண்காணித்தல் அல்லது எச்சரிக்கையாயிருத்தல் மற்றும் (2) மந்தையைப் போஷித்தல் ஆகும். மிகுந்த பக்தி,

ஞானம் மற்றும் அனுபவத்தினால் சரியாய் வருகின்றதான அதிகாரம் தவிர மற்றபடி கண்காணியின் ஸ்தானம் என்பது சபையின் மீதான எந்த அதிகாரத்தையும் கொடுப்பதில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். மந்தையானது தப்பறையான உபதேசங்களினின்றும் மற்றும் தவறான போதகர்களிடமிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் தேவனுடைய வார்த்தைகளாகிய ஐசுவரியமான மேய்ச்சல் களிடத்திற்குள்ளும் மற்றும் அருமையான கிறிஸ்தவ அனுபவங்களுக்குள்ளும் மற்றும் மாபெரும் பயன்பாடு (usefulness) எனும் களங்களுக்குள்ளும்/ வயல்களுக்குள்ளும் வழிகாட்டப்பட வேண்டும்.

இது விஷயம் குறித்துப் புகழ்மிக்க எழுத்தாளர் ஒருவர் பின்வருமாறு எழுதுகின்றார்:-

"மில்டன் லைசிடாஸ்-இல் (Milton's Lycidas) குருடான வாய்கள்" எனும் விநோதமான சொற்டொருக்கு திரு. ரஸ்கின் (Ruskin) அவர்கள், தனது சீசாமி மற்றும் லில்லீஸ் (Sesame and Lilies) எனும் வெளியீட்டில் பின்வருமாறு விளக்கமளிக்கின்றார்: இந்த இரண்டு சொற்களும் சபையினுடைய இரண்டு மாபெரும் பணிகளின் - கண்காணி மற்றும் மேய்ப்பன் பணிகளின் சரியான அம்சங்களுக்கு நேரெதிரானவைகளைத் துல்லியமாய்த் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. கண்காணி என்பவன் காண்கின்ற/பார்க்கின்ற மனுஷனாவான்; மேய்ப்பன் என்பவன் போஷிப்பவனாவான்; ஒரு மனுஷனிடத்தில் கண்காணிக்குத் தகுதியில்லாத தன்மை என்பது குருடனாய் இருப்பதாகும் மற்றும் மேய்ப்பனுக்குத் தகுதியில்லாத தன்மை, மற்றவரைப் போஷிப்பதற்குப் பதிலாக, தானே போஷிக்கப்பட வேண்டிய நிலைமையாகும். சபையின் விஷயத்திலான பெரும்பாலான தீமைகளானது, வெளிச்சத்தை நாடிடுவதற்குப் பதிலாக அதிகாரத்தைக் கண்காணிகள் நாடினதால் எழும்பினவைகளாகவே காணப்படுகின்றது. இவர்கள் அதிகாரத்தையே விரும்பினார்கள், கண்காணிக்கும் வேலையை விரும்பவில்லை. (நம்முடைய இராஜாவாகிய கிறிஸ்துவின்) இராஜாவின் பணியே ஆளுகை செய்வதாகும்; கண்காணியின் பணி மந்தையைக் கண்காணிப்பதாகும்; மந்தையின் இலக்கத்தை எண்ணிக் கணக்கிட்டுப் பார்த்தலாகும்; மந்தையைக் குறித்த கணக்கை ஒப்புவிப்பதற்கு எப்போதும் ஆயத்தமாயிருப்பதாகும்."

இத்தனை அக்கறையுடன்கூடிய புத்திமதிக்கான காரணத்தை அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார்: (1) அவர்கள் கண்காணிக்கின்ற மற்றும் போஷிக்கின்றதான சபையானது, தேவன் "*தம்முடைய (குமாரனின்) சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட," அவருடைய சபையாக அடையாளங்கண்டுகொள்ளப்பட வேண்டும். [*இது நமது கர்த்தராகிய இயேசு "தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை வாங்கினார்" எனும் கருத்தைத் தெரிவிக்கும் மற்ற வேதவாக்கியங்களின் அறிக்கைகளுக்கு முரணானது என்று புரிந்துகொள்ளப்படக்கூடாது. இரண்டு கருத்துகளுமே

சரிதான்; இந்த இரண்டு கருத்துகளும் காரியத்தை இரண்டு வெவ்வேறு கோணத்திலிருந்து காண்கின்றதாயிருப்பினும், இரண்டு கருத்துகளுமே சரிதான். பெரிதான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, தேவனே முழு இரட்சிப்பின் திட்டத்தைத் தோற்றுவித்தவராய் இருந்தார் - துவக்கம் முதல் முடிவு வரை அவரே இரட்சகராவார். ஆனால் அவர் இரட்சிப்பைக் குமாரன் மூலம் நிறைவேற்றினார்; "(நமக்கு) சகாயஞ்செய்யத்தக்க சக்தியை ஒரு சவுரியவான்மேல் - முழுக்க தகுதியுள்ளவர்மேல் - வைத்தார்." (ஏசாயா 43:11; 1 தீமோத்தேயு 2:5; 4:10; சங்கீதம் 89:19) இப்படியாக நம்முடைய இரட்சிப்பிற்கான ஒவ்வொரு அம்சமும் அப்போஸ்தலன் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுவதுபோன்று, குமாரன் மூலமாய்ப் பிதாவுடையதாகும். 1கொரிந்தியர் 8:6] தேவனால் மிகவும் விலையேறப்பெற்றதாகக் கருதப்பட்டதும், இத்தனை மாபெரும் விலைக்கொடுத்துச் சம்பாதித்துக் கொண்டதுமானது/மந்தையானது அவருக்கும், மந்தைக்கும் ஊழியக்காரர்களாய் இருப்பவர்கள் அனைவராலும் மிகவும் விலையேறப்பெற்றதாய்க் கருதப்பட வேண்டும். (2) இரண்டாம் காரணம் ஆபத்துகளும், சத்துருக்களும் உருவாகும் என்பதினாலேயே ஆகும்; இவைகள் தெய்வீக அனுமதியில்லாமல் வரமுடியாது என்றாலும், இவைகள் முழு மந்தைக்கும், மூப்பர்களுக்கும், கண்காணிகளுக்கும், மேய்ப்பர்களுக்கும் விசுவாசம் மற்றும் உண்மையின் விஷயத்தில் பரீட்சைகளாக அமைவது தெய்வீகச் சித்தத்தினுடைய ஒரு பாகமாய்க் காணப்படுகின்றது. தீமைக்கு எதிராய் இப்படி எதிர்த்து நிற்பதற்கு அவசியமான ஆற்றலானது, தேவன் தம்முடைய மந்தையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பெற்றிருக்கும்படி தாம் விருப்பங்கொள்ளும் குணலட்சணங்களை வளர்த்திடுவதற்கு ஏதுவானதாகும். தேவன் அவர்களுடைய திராணிக்குமேல், அவர்கள் சோதிக்கப்படுவதற்கு அனுமதிப்பதில்லை மற்றும் ஒவ்வொரு சோதனையிலும் தப்பித்துக்கொள்வதற்கான போக்கையும் உண்டாக்குவார்; ஆனால் அவர்கள் தம்மை விசுவாசிப்பதற்கும், விசுவாசத்தைச் செயல்படுத்துவதற்கும் மற்றும் கீழ்ப்படிவதற்கும் மற்றும் விழிப்பாய் இருப்பதற்கும் மற்றும் தீமையை எதிர்த்து நிற்பதற்கும் கற்றுக்கொள்ள செய்கின்றார்.

தான் இனிமேல் மறுபடியும் இந்த அருமையான சகோதரர்களைப் பார்க்கப்போவதில்லை என்றும் சகோதரர் விஷயத்திலான தன்னுடைய ஊழியம் நிறைவடையப்போகின்றது என்றும் ஏதோ ஒரு வகையான உந்துதலினால் அறிந்துகொண்டார் மற்றும் உண்மையான உடன்மேய்ப்பனாக, மந்தையின் நலனுக்கடுத்தவைகளில் கவனம் செலுத்தினார். அநேகமாக தானியேலின் தீர்க்கத்தரிசனம் மூலமாக மாபெரும் விசுவாச துரோகம் நேரிடவிருக்கின்றது என்றும், ஒரு மாபெரும் அந்திகிறிஸ்து அமைப்பை உருவாக்கிடுவதற்கு எதிராளியானவன் அனுமதிக்கப்படவிருக்கின்றான் என்றும் அப்போஸ்தலன் அறிந்திருந்தார்; இதையே அவர் பிற்பாடு தெசலோனிக்கேயாவிலுள்ள சபைக்கு எழுதியுள்ளார்; உள்ளூர் கண்காணிகள் தங்கள் ஸ்தானத்திற்குரிய பொறுப்பினை

உணர்ந்துகொண்டு, விழிப்பாயிருக்க வேண்டுமென்று அப்போஸ்தலன் விரும்பினார். "மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்;" வல்லமை, செல்வாக்கு முதலியவைகளுக்கான பேராசைகொண்டவர்களாக, இவர்கள் தங்களுடைய சொந்த முன்னேற்றத்திற்காக மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளை வியாபாரம் பண்ணிடுவதற்கும் தயங்கமாட்டார்கள். அபாயத்திற்கான மற்றுமொரு காரணி - "உங்களிலும்" சிலர் எழும்புவதாகும் - இவர்கள் தங்களுக்கென்று பின்னடியார்கள், ஆதரவாளர்கள் வேண்டுமென்ற பேராசையில், தங்களுக்கும் மற்றும் இவர்களால் தவறாய் வழிநடத்தப் படுகிறவர்களுக்கும் பாதகமாய் அமையும் தப்பறையான உபதேசங்களுக்குள்ளாக வழிநடத்திடுவார்கள்.

இவைகள் பற்றின அறிவானது, வெளியிலிருந்து வரும் ஓநாய்களுக்கு எதிராக மாத்திரமல்லாமல், தங்கள் மத்தியிலிருந்து எழும்புகின்ற பேராசைமிக்கவர்களுக்கும் எதிராக அவர்களைத் தொடர்ச்சியாக எச்சரிக்கையாய் இருக்கப்பண்ணிடும் - ஒருவரையொருவர் குறித்து விழிப்பாயிருத்தல் மாத்திரமல்லாமல், ஒவ்வொருவனும் மிகுதியான சுயமதிப்பு அல்லது பெரியவராகுவதற்கான மிகுதியான ஆசை எனும் விஷயங்களின் நிமித்தமான எதிராளியானவனுடைய இரகசியமான தாக்குதல்களுக்கு எதிராக விழித்திருந்து, தன்னுடைய சொந்த இருதயத்தை விசேஷமாய்க் காத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் மத்தியிலான தனது நடக்கையை - தாழ்மையான சிந்தைக்கும் மற்றும் மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளுக்கான வைராக்கியத்திற்குமான மாதிரியாகத் தன்னால் சுட்டிக்காட்ட முடிந்ததற்கு அப்போஸ்தலன் மகிழ்ச்சியடைந்திருப்பார் என்பதில் நமக்கு நிச்சயமே. "ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப்போஸ்தலர் 20:31). அப்போஸ்தலனுடைய வைராக்கியத்திற்கான இரகசியம் - தான் தேவனுடைய ஸ்தானாபதி என்றும், உடன்வேலையாளாக இருப்பதற்குத்தான், சிலாக்கியமடைந்துள்ள கர்த்தருடைய இந்த வேலையானது மிகவும் முக்கியமான ஒன்று என்றும் - அவ்வேலை முதலாவதாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய பரிசுத்தவான்களின் இரட்சிப்பு மற்றும் பூரணப்படுத்துதல் தொடர்புடையதும் மற்றும் இறுதியில் இவர்கள் மூலமாய்ப் பூமியின் குடிகள் அனைத்தினுடைய ஆசீர்வதிக்கப்படுதல் தொடர்புடையதான வேலை என்றுமுள்ள உண்மைகளை அவர் உணர்ந்துகொண்டதேயாகும். ஒருவேளை அந்த மூன்று வருட காலப்பகுதியிலும் அப்போஸ்தலன் மந்தையினுடைய ஆவிக்குரிய நலன்களை அசட்டைப்பண்ணியிருந்திருப்பாரானால், அவரால் இப்படியானதொரு உரையை மூப்பர்களிடம் கொடுத்திருக்க முடியாது. அவர் ஒருவேளை பின்வருமாறு அதாவது: "உங்களோடுகூட நான் அற்பத்தனமான எத்தனை பொழுதுபோக்குகளில்

கலந்துகொண்டிருக்கின்றேன் என்றும், அம்மாதிரியான பொழுதுபோக்கு விருந்துகளை ஒழுங்குப்படுத்த உதவியிருக்கின்றேன் என்றும் நினைவில் கொள்ளுங்கள்; நாம் சேர்ந்து சென்றதான, சிப்பி மீன் உணவு இராவிருந்துகள், பீச் மற்றும் கிரீம் விழாக்கள் (Peach and Cream Festivals), நாடகக் கொட்டகைகள், காட்சி கூடாரங்கள், விடுகதை விளையாட்டுகள், வேடிக்கை விளையாட்டுகள் மற்றும் பணம் ஈட்டுவதற்கு நாம் போட்ட திட்டங்கள் முதலானவைகளை நினைவில் கொள்ளுங்கள்" என்று கூறியிருந்தாரானால், அது ஏற்றதாய் இருந்திருக்காது. தான் இராஜாதிராஜனின் ஸ்தானாபதி என்ற உண்மையைக் குறித்து அப்போஸ்தலன் கொண்டிருந்த உணர்ந்துகொள்ளுதலானது எப்போதுமே அவருக்குக் காணப்பட்டது மற்றும் இதுவே - நீதியின் சார்பிலும் மற்றும் ஆவிக்குரியவைகள் சார்பிலுமான அவருடைய வேண்டுதல்களுக்கு, அதுவும் அற்பத்தனமானவைகளைக் காட்டிலும் மிகச் சிறந்ததான கண்ணீருடன்கூடிய அவரது வேண்டுதல்களுக்கு - ஆற்றலையும், சிரத்தையையும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

வரவிருக்கின்றதான பிரச்சனைகள் மற்றும் சோதனைகளின் இருளான காட்சியினின்று அப்போஸ்தலன் திரும்பி, அடுத்ததாக அவர் - தங்கள் இரட்சிப்பின் அதிபதியை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்கள் எதிராளியானவனால் தீங்கிழைக்கப்படாதபடிக்கு, அதுவும் இந்தத் தேவ கிருபையானது, அவர்களுக்குத் தேவனுடைய வார்த்தைகள் மூலம் வரும் என்று உறுதிப்படுத்திக்கொண்டு, சபையை விலைக்கொடுத்து சம்பாதிக்குமளவுக்கு அதை அன்புகூர்ந்தவரும், அதன் நலனுக்கடுத்தவைகளைக் கவனிக்கின்றவருமான கர்த்தரிடத்தில் சகோதரரை ஒப்புக்கொடுத்தார். கல்லூரிகளுக்கும், குருமார்களுக்கான பயிற்சிக் கல்லூரிகளுக்கும் மற்றும் உலகப்பிரகாரமான அறிவியலுக்கும் எதிராய் அப்போஸ்தலன் எதுவும் பேசவில்லை; எனினும் எதிராளியானவனுடைய தந்திரங்களுக்கு எதிராய்க் கர்த்தருடைய ஜனங்களைக் காக்கும் வல்லமையைக் குறிப்பிடுகையில், அப்போஸ்தலன் தன்னுடைய உடன்வேலையாட்களிடம் மேற்கூறப்பட்டுள்ள கல்லூரிகள், அறிவியல் போன்றவற்றைச் சுட்டிக்காட்டாமல், மாறாக ஆவியின் பட்டயமாகிய, தேவனுடைய வார்த்தையையே குறிப்பிடுகின்றார். தற்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாமும், இந்தச் சாட்சியத்தை இருதயத்தில் வைத்துக்கொள்வோமாக; ஏனெனில் கர்த்தருடைய மந்தைகளைச் சத்துருக்கள் அனைத்துத் திசைகளிலும் இன்று தாக்கிக்கொண்டிருக்கின்றனர்; அறிவியல் எனும் ஓநாய்களானது மந்தையைத் தப்பவிடாமல், கர்த்தருடைய ஜனங்களின் விசுவாசத்தினை, நம்பிக்கையை, எதிர்ப்பார்ப்பினை மோதி உடைக்கின்றது மற்றும் இதற்குப் பதிலாக நிலைவரமான எதையும் திருப்பிக்கொடுப்பதுமில்லை; தங்களது மேம்பட்ட கல்வியறிவு குறித்தும், தெய்வீக ஏவுதலுக்கும், ஏவுதல் இல்லாமைக்கும் இடையிலான வித்தியாசத்தை வேறுபடுத்திக் கண்டறியும் தங்கள் திறமை குறித்தும்

பெருமையடித்துக் கொள்பவர்களும் மற்றும் ஆடுகளுக்காக எப்போதாகிலும் தேவனுடைய வார்த்தைகளினின்று புல்லை தெரிந்தெடுத்துத் தருவோமெனச் சொல்பவர்களுமான "உயர் விமர்சகர்கள்," ஆடுகள் போஷாக்கைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அதிகப்படியான கல்வியறிவு வேண்டுமென்று ஆடுகளுக்கு உறுதிப்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர்.

இன்றும்கூட நம் மத்தியிலேயே சிலர் எழும்பி, தங்களுக்குப் பின்னாக சீஷர்களை இழுக்க நாடிடும் இதே போக்கினை - அனைத்துத் திசைகளிலும் நாம் பார்க்கின்றோம்; மேலும் ஆடுகளுக்கான தற்காப்பு என்பது பூமிக்குரிய ஞானத்தில் காணப்படாமல், தேவனுடைய வார்த்தைகளிலும், திட்டத்திலும் அடையாளப்படுத்தப்படும் தேவனுடைய வல்லமையிலேயே காணப்படுகின்றது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். எபேசுவின் இந்த மூப்பர்களுக்கு அப்போஸ்தலன் கூறினதுபோலவே, தேவனுடைய வார்த்தைகளே - நம்மை உறுதியாய்க் கட்டியெழுப்புகிறதாகவும், "கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுத்தக்கூடியதாகவும்," "பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் சுதந்தரத்தை" நமக்கு இறுதியில் கொடுக்கக்கூடியதாக இருப்பதை, அவர் நம்மிடமும் கூறுவதை நாம் கேட்க முடிகின்றது.

வேதவாக்கியங்களில் கர்த்தருடைய ஜனங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளதான சுதந்தரம் மற்றும் நித்திய பலன்கள் யாவும் "பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கே" என்று - இவைகள் வேறு எந்த வகுப்பாருக்கும் வாக்களிக்கப்படவில்லை என்று இங்குக் கவனிக்கப்பட வேண்டும். நம்முடைய Watch Tower Society -இன் தொகுதி விநியோகிப்பவர்களில் (Colporteurs) ஒருவர் சமீபத்தில் நமக்குப் பின்வரும் சம்பவத்தை எழுதி அனுப்பியிருந்தார்: டாணின் தொடர் தொகுதிக்காக (Volume) முன்பணம் செலுத்தியிருந்த ஒரு ஸ்திரீக்குத் தொகுதியை விநியோகிக்கச் சென்றபோது, அந்த ஸ்திரீ ஆட்சேபணைத் தெரிவித்து, புத்தகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மறுத்து, இப்புத்தகமானது நித்திய சித்திரவதைக்கான நரகம் குறித்துப் போதிக்கின்றதான வேதவாக்கியங்களை மறுக்கின்றதென, தான் புரிந்துகொண்டுள்ளதாகக் கூறியிருக்கிறாள்; மேலும் இதற்கு மாறானவைகளையே தான் நம்புவதாகவும், அப்படி ஓர் இடம் இருக்க வேண்டும் என்பதாகவும் கூறியிருக்கிறாள். தொகுதி விநியோகிப்பவரோ, யார் இரட்சிக்கப்படுவார்கள் என்று அவள் நம்புவதாகக் கேட்டுள்ளார்; அதற்கு அவளோ: நம்முடைய இந்தப் பாடத்தில் அப்போஸ்தலனால் குறிப்பிடப் பட்டுள்ளதான "பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்தான்" என்று பதிலளித்திருக்கின்றாள். தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள பரிசுத்தவான்களில் ஒருவளாக அவள் இருப்பதாக, அவள் கூறுகின்றாளா என்று தொகுதி விநியோகிப்பவர் கேட்டிருக்கின்றார். அவள் "இல்லை" என்று பதிலளித்திருக்கின்றாள். அதற்கு அவரோ: "அப்படியானால் நீங்கள் நித்தியத்தைச் சித்திரவதையில் செலவழிக்க விருக்கின்றீர்களா?" என்று கேட்டிருக்கின்றார்.

உடனடியாக அந்த ஸ்திரீ தவறான வாதத்தினுடைய ஆற்றலைக் கண்டுகொண்டு, புத்தகத்தை வாங்குவதாகக் கூறியிருக்கிறாள் மற்றும் பரிசுத்தமாக்கப்பட்ட வகுப்பாரில் அடங்கிடாத அனைவரும் நித்தியமான சித்திரவதைக்குள் கடந்துபோவார்களானால், முழுச்சந்ததியினுடைய எதிர்க்காலமே கொடூரமானதாக இருக்குமென்று கூறியிருக்கிறாள். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, பரிசுத்தமாக்கப்பட்டவர்களின் சுதந்தரம் இராஜ்யமாக இருக்கும் என்றும், அப்போது ஸ்தாபிக்கப்படும் இராஜ்யமானது தேவனைப் பற்றின தெளிவான அறிவினாலும், நமது கர்த்தராகிய இயேசுவின் மூலமாய்ப் பரிசுத்தமாக்கப்படுவதற்கேதுவான அவரது கிருபையையும், இரக்கத்தையும் மற்றும் ஆசீர்வாதத்தையும் மற்றும் நித்தியமான ஜீவனையும் ஏற்றுக்கொள்வதற்கான முழு வாய்ப்பினாலும், முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்கான தெய்வீகப் பிரதிநிதியாகக் (இராஜ்யம்) காணப்படும் என்றும் நமக்குக் காண்பிக்கின்றதான தெய்வீகத்திட்டம் பற்றின தெளிவான அறிவில் நாம் எத்தகைய இளைப்பாறுதலைக் கண்டடைகின்றோம்.

அவர்களைத் தேவனுடைய வார்த்தைகளிடம் ஒப்புக்கொடுத்த பிற்பாடு, தான் அவர்களோடுகூடக் காணப்பட்டபோதுள்ள தனது சொந்த வாழ்க்கை முறைமையை, பரிசுத்தமாக்கப்பட்டுள்ள இருதயத்திலுள்ள சுவிசேஷத்தின் தாக்கத்திற்கான சரியான உதாரணமென - அவர்கள் பின்பற்றுவதற்கு நாடவேண்டியதென - சபையில் மூப்பர் மற்றும் கண்காணிக்கான சரியான மாதிரியென அப்போஸ்தலன் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார். இதைக்குறித்து இப்பொழுது அவரால் இந்தச் சகமூப்பர்களிடம் பேச முடிந்தது; ஆனால் இதைக்குறித்து எபேசு சபையில், தான் அவர்களுக்கு ஊழியஞ்செய்து கொண்டிருந்தபோது, சொல்ல தயக்கம் காண்பித்திருந்திருப்பார்; ஏனெனில் இப்படிப் பேசுவது சிலரால் தற்பெருமையடித்துக் கொள்வதாகக் கருதப்படும். எபேசுவிலுள்ள சபைக்கான தனது ஊழியத்தின் போது, அவர்களது வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் தான் இச்சிக்கவில்லை, மாறாக தன்னுடைய சொந்த கைகளாலேயே வேலை செய்துள்ளார் மற்றும் இப்படியாக அவர்களும் மூப்பர்களென (presbyters) மற்றும் கண்காணிகளெனப் (bishops, episcopos) பலவீனரைத் தாங்கிடுவதற்கும், "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைப்பதற்கும், எல்லா விஷயத்திலும் தான் அவர்களுக்கு மாதிரியாய் இருந்துள்ளார் என்பதை இந்த மூப்பரும், கண்காணிகளுமான சகோதரர்கள் கவனிக்கச் செய்தார்.

இப்படியாக அப்போஸ்தலனால் சபைக்குரிய சரியான ஊழியக்காரனுக்கான மாதிரியாகத் தன்னைச் சுட்டிக்காட்ட முடிந்தது; காரணம் அவர் மாபெரும் தலையாகிய இயேசுவின் மாதிரியை மிகவும் கவனமாகப் பின்பற்றினவராயிருந்தார்.

வாங்குகிறது பாக்கியம்தான், ஆனால் கொடுக்கிறது என்பது அதனிலும் பாக்கியமானதாகும். தேவன் கொடுக்கிறதில் மாபெரியவராய் இருக்கின்றார்; நமக்குத் தொடர்ந்து கிருபைகளை அருளுகின்றவராய் இருக்கின்றார்; நல்லோருக்கு மாத்திரமல்லாமல், தீயோருக்கும் அருளுகின்றவராய் இருக்கின்றார் - அனைவருக்கும் மீட்கும்பொருளினை அவர் கொடுத்தார் மற்றும் ஏற்றகாலங்களில் இதற்குரிய சாட்சி விளங்கிவருகிறது. "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்ற நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளானது, எந்த ஒரு சுவிசேஷபுத்தகங்களிலும் பதிவு செய்யப்படவில்லை. முனைவர். பிலிப்பு ஸ்காப்/ Dr. Philip Scorff நமக்குத் தெரிவிப்பதென்னவெனில்: "சுவிசேஷ புத்தகங்களில் தெய்வீக ஏவுதலின் பேரில் பதிவுசெய்யப்பட்டுள்ளவைகளைத் தாண்டி இயேசு பேசியுள்ளதாக, இருபது வார்த்தைகளின் சில பதிவுகள் நம் மத்தியில் வெளியிலிருந்து பரவி கடந்துவந்துள்ளது." இவைகளில் ஒன்றைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு மேற்கோளிடுகின்றார் மற்றும் இதன் நம்பகத்தன்மை குறித்து நமக்கு எந்தச் சந்தேகமுமில்லை; மற்றும் இது நம்முடைய அருமை மீட்பருடைய நடக்கைக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது. அவர் தொடர்ந்து மற்றவர்களுக்காகக் கொடுத்து, கொடுத்து, கொடுத்துக்கொண்டுவந்த விஷயத்தில் பிதாவைப் பின்பற்றினவராகவே இருந்தார். தமக்கு எவ்வளவு சௌகரியம், சுகம் மற்றும் கனம் கிடைக்கும் என்று அவர் சுயநலத்துடன் பார்க்கவில்லை, நம் நிமித்தமாக அவர் புகழ் எதையும் தேடிக்கொள்ளவில்லை; பூமிக்குரிய விஷயத்திலும் அதேசமயம் ஆவிக்குரிய விஷயத்திலும் மற்றவர்களுக்கு உதவி செய்யத்தக்கதாக தம்முடைய ஜீவனைத் தினந்தோறும் கொடுத்துவந்து, அவர் பெற்றிருந்த அனைத்தையும் நமக்காகக் கொடுத்துவிட்டவராக, இறுதியில் பலியைக் கல்வாரியில் நிறைவு செய்தார்.

கிறிஸ்துவினுடைய சபையின் மூப்பர்கள் அனைவரும், இயேசு மற்றும் அப்போஸ்தலன் பவுலினுடைய இந்த மேன்மையான முன்மாதிரிகளை முழுமையாய் இருதயத்திற்குள் எடுத்துச் செல்வார்களானால் மற்றும் தங்களையே முற்றிலும் மறக்குமளவுக்குச் சுவிசேஷத்தின் செய்தியினாலும், தேவனுடன் உடன் வேலையாட்களாக இருப்பதற்கான சிலாக்கியத்தினாலும் முழுமையாய் வைராக்கியமுடையவர்கள் ஆகுவார்களானால், இது இவர்களுக்கும் சரி, மந்தையின் நலனுக்கடுத்தவைகளைக் கவனிக்கவும், மந்தையைப் போஷிக்கவும் வேண்டி கர்த்தருடைய வழிநடத்துதலினால், பரிசுத்த ஆவியானது இவர்களைக் கண்காணிகளாக வைத்துள்ளதான கர்த்தருடைய ஜனங்களின் பல்வேறு சிறுசிறு கூட்டத்தாருக்கும் சரி, மாபெரும் ஆசீர்வாதமாய் அமையும். இன்று உண்மையுள்ள சகோதரர் யாருமில்லை என்று நாம் சொல்லவரவில்லை. இதற்கு மாறாகவே நாம் சொல்லுகின்றோம். ஆனால் நாம் அனைவரும் அதிகமதிகமாய் உண்மையுள்ளவர்களாகக் காணப்படத்தக்கதாகவும், அதிகமதிகமாய்த் தேவனுடைய

அருமையான குமாரனின் சாயலுக்கொத்தச் சாயலை அடையத்தக்கதாகவும், சீயோனின் நன்மைக்கடுத்த விஷயங்களில் சுயத்தைப் பலிச்செலுத்தும் அளவிலான அர்ப்பணிப்புக்கொண்டிருக்கும் விஷயத்தில் அதிகமதிகமாய் மாபெரும் அப்போஸ்தலனைப் போலாகத்தக்கதாகவும், அப்போஸ்தலனுடைய கருத்தான புத்திமதியை இருதயத்தில் கொண்டிருப்பது நமக்கு நலமாயிருக்கும் என்றே நாம் சொல்ல வருகின்றோம்.

கூட்டத்தின் முடிவில், கப்பல் புறப்பட ஆயத்தமாயுள்ளது என்று அறிவிக்கப்பட்டபோது, அப்போஸ்தலன் எபேசுவிலிருந்து வந்துள்ள சகோதரருடன் ஜெபிப்பதற்கு முழங்காற்படியிட்டார்; அந்த ஜெபத்தின் குரல் நன்கு கற்பனை செய்து புரிந்து கொள்ளப்படலாம். பின்னர் விடைப்பிரிதல் நடந்தது மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி அந்த அருமையான சகோதரர்கள் அப்போஸ்தலனுடைய ஊழியங்கள் மூலமாக தேவன் தங்களுக்கு எத்துணை மாபெரும் ஆசீர்வாதங்களை அருளியுள்ளார் என்று முன்பில்லாத அளவுக்கு முழுமையாய் உணர்ந்துகொள்ள ஆரம்பித்தார்கள் மற்றும் அப்போஸ்தலனைத் தாங்கள் இனி மீண்டுமாகப் பார்க்கப்போவதில்லை என்ற எண்ணமானது, அவர்களைத் துயரத்தில் ஆழ்த்தினது மற்றும் கப்பல் மட்டும் அவரோடுகூடச் செல்கையில் அவர்கள் அழுதார்கள்.

பிரிந்திருக்கும் காலங்களானது சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும் என்றும், நாம் ஒருவரையொருவர் சந்திக்கும் காலமாய் மாத்திரமல்லாமல், மீட்பரையும் கிறிஸ்து இயேசுவில் உண்மையுள்ளவர்களாய் இருந்தவர்கள் அனைவரையும் சந்திக்கும் காலமுமாய் இருக்கும் - ஒன்றிணைதலின் மற்றும் ஐக்கியத்தின் பாக்கியமான நித்திய காலங்கள் சீக்கிரமாய்த் துவங்கும் என்றுமுள்ள சிந்தனையினால், அப்போஸ்தலன் அவர்களைத் தேற்றியிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. நமது கர்த்தரும்கூட இவ்விஷயம் குறித்து "கொஞ்சக்காலம்" என்று குறிப்பிட்டார். இடையே காணப்பட்ட 18 நூற்றாண்டுகளானது, அன்று துவங்கி இப்பொழுதுவரை எவரேனும் வாழ்ந்திருப்பாரானால், அது அவருக்கு நீண்ட காலமாய்த் தோன்றியிருக்கும்; ஆனால் அவர்களது "நித்திரையானது" சுயநினைவற்ற இடைவெளியாக இருப்பதினால், தேவன் இரக்கத்துடன் அவர்களது கண்களுக்குத் திரையிட்டு, "சீக்கிரமாய்," "விரைவாய்," "கொஞ்சக்காலம்" என்பவற்றின் - தமது பெரிய கண்ணோட்டத்திலிருந்து மாத்திரம் அவர்களைத் தேற்றினது நல்லதே. ஆனால் இப்பொழுதோ அந்த இராஜ்யமானது, சமீபித்துள்ளது, வாசலருகே வந்துள்ளது; நம்முடைய இருதயங்களானது, இனிமேலும் "ஓ! ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்று கதறுவதில்லை; அல்லேலூயா! விடியலின் நட்சத்திரம் உதயமாகியுள்ளது - காலை இதோ வந்துள்ளது!

# உண்மையான மற்றும் தவறான – 'ஏற்படுத்துதல்கள்'

கிறிஸ்தவ ஊழியங்களுக்குப் பொருந்துகின்றதான Ordination/ ஏற்படுத்துதல் எனும் வார்த்தையானது, பெரும்பான்மையான ஜனங்களினால் - ஊழியக்காரர்களினால்கூட மிகவும் அரைக்குறையாகவே புரிந்துகொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிகின்றது. தங்கள் ஊழியக்காரர்களை நியமிக்கையில் கிறிஸ்தவ ஜனங்கள் சிலரால் கடைப்பிடிக்கப்படுகின்றதான சடங்குமுறையாகிய, கைகளை வைத்தல் முதலானவைகள் ஏற்படுத்துதலாய் இராமல், ஏற்படுத்துதல் தொடர்புடைய ஒரு சடங்காய் மாத்திரமே உள்ளது. Ordination/ஏற்படுத்துதல் என்ற வார்த்தையானது, ஏதோ ஒரு குறிப்பிட்ட பணிக்காக அல்லது ஊழியத்திற்காகத் தெரிந்துகொள்ளப்படுவதை, அங்கீகரிக்கப்படுவதை அல்லது நியமிக்கப் படுவதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது.

அப்போஸ்தலர்கள் "அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தினதாக" நாம் வாசிக்கையில், வேதாகமத்தினால் கொடுக்கப்படும் கருத்தே, ஏற்படுத்துதல் சம்பந்தப்பட்ட சரியான கருத்தாகும் (அப்போஸ்தலர் 14:23). இதுபோலவே இன்றும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில், சபையாருடைய (vote) வாக்கினால் - சபையார் தங்கள் கைகளை நீட்டுவதன் மூலம், மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் அல்லது நியமிக்கப்படுகின்றனர் அல்லது அங்கீகாரமளிக்கப்படுகின்றனர். (கைகளை வைப்பதன் மூலமாக இல்லாமல், மாறாக) "கைகளை நீட்டுதல்" எனும் வாக்கினால் வேத வாக்கியங்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மூப்பனும் மற்றும் ஒவ்வொரு உதவிக்காரரும், இவ்விதமாய் அந்தந்த ஊழியம் புரிவதற்கென ஏற்படுத்தப் படுகின்றனர் அல்லது நியமிக்கப்படுகின்றனர் அல்லது அங்கீகாரமளிக்கப்படுகின்றனர்.

இப்படியாக மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் ஏற்படுத்திடும் விஷயத்தில், கர்த்தருடைய ஜனங்கள், கர்த்தருடைய மனதை அறிந்துகொள்வதற்கு நாடும்படிக்கு அறிவுறுத்தப்படுகின்றனர். அவர்கள் சகோதரரில் ஒருவரை உதவிக்காரனாகவோ அல்லது மூப்பனாகவோ vote/வாக்களித்து, தேர்ந்தெடுக்கும் காரியமானது, அந்நபர் தேவனால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளதான அவ்வூழியத்திற்குரிய தகுதிகளை உடையவராய் இருக்கின்றார் என்று அவர்கள் நம்புவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஏசாயா 61:1-ஆம் வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பிரகாரம், பிரசங்கிப்பதற்கான அல்லது போதிப்பதற்கான திவ்விய அங்கீகாரமான பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தலை அடைந்துள்ளதற்கான சாட்சியங்களைக் கொணராத எவருக்கும் வாக்களிக்கப்படக் கூடாது.

இந்த ஒரு பொதுவான விதத்தில் - கர்த்தருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஜனங்கள் யாவரும், ஆண்டவருடைய நாமத்தில், அருமையான ஜீவ வார்த்தைகளை, தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளுக்கு ஏற்ப பேசிடுவதற்கு "ஏற்படுத்தப்பட்டுள்ளனர்". ஆனால் இவ்விதமாய் ஏற்படுத்தப்பட்ட, ஆவியில்

ஜெநிப்பிக்கப்பட்டுள்ள தேவனுடைய பிள்ளைகள் அடங்கின சபையார், தங்கள் மத்தியிலிருந்து சிலரை மூப்பர்களாகவும், சிலரை உதவிக்காரர்களாகவும் தேர்ந்தெடுக்கும்போது, இது இவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்தவர்கள் விசேஷித்த தகுதியுடையவர்களாகவும், "போதக சமர்த்தனாகவும்" - வார்த்தையிலும், நடத்தையிலும் சகோதரருக்கு மாதிரியாக இருப்பதாகவும் கருதுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது (1 தீமோத்தேயு 3:2).

ஏற்படுத்துதல் தொடர்புடைய விஷயத்தில், திவ்விய அபிஷேகித்தலைப் (ஏசாயா 61:1) பொருட்படுத்தாமல், தேர்ந்தெடுக்கப்படுகிறவரின் கல்வியறிவையும், தாலந்துகளையும் மாத்திரமே கண்நோக்குதல் என்பது, ஏற்படுத்துதல் பற்றின தவறான கருத்தாகும். இப்படியாய்த் திவ்விய பரீட்சையினைப் பொருட்படுத்தாமல், இன்று கிறிஸ்துவினுடைய சபையில் - ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதாகத் தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணிக் கொள்ளாதவர்களும், இதற்கு எந்த வெளியரங்கமான சாட்சியினைப் பகராதவர்களுமான அநேகர் ஊழியக்காரர்களாகவும், மூப்பர்களாகவும் ஊழியம் புரிந்துகொண்டு வருகின்றனர். இத்தகையவர்கள் முறையாய் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய ஊழியக்காரர்கள் அல்ல மற்றும் இவர்களின் சபை ஏற்படுத்துதலானது, திவ்விய ஆசீர்வாதத்தினையோ அல்லது அதிகாரத்தினையோ இவர்களுக்கு அருளுகிறதில்லை.

ஏற்படுத்துதல் குறித்த மிகவும் தவறான கருத்தானது, மூன்று பழமை மிக்க கிறிஸ்தவ சபை பிரிவுகளால் முன்வைக்கப்படும் கருத்தாய் இருக்கின்றது; அச்சபைகள் - உரோம கத்தோலிக்க திருச்சபை, இங்கிலாந்தின் எபிஸ்கோப்பல் திருச்சபை மற்றும் கிரேக்க கத்தோலிக்க திருச்சபையாகும். இந்தப் பழமை வாய்ந்த சபைகளைப் பொறுத்தமட்டில், ஏற்படுத்துதல் என்பது முற்றிலும் வேறுபட்ட பொருளை உடையதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களுக்கு **அப்போஸ்தல வாரிசு உரிமையின்படியான அதிகாரம்** இருப்பதாக உரிமைப்பாராட்டுகின்றனர் - அதாவது ஆரம்பத்தில் அப்போஸ்தலர்களே போதிப்பதற்கான அல்லது பிரசங்கிப்பதற்கான உரிமையினைக் கொண்டிருந்தனர் என்றும், மற்றப் போதகர்கள் அல்லது பிரசங்கிப்பவர்கள், அப்போஸ்தலர்களுடைய கரங்களிலிருந்து அங்கீகாரத்தையும், திவ்விய அதிகாரத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது என்றும் இவர்கள் கூறுகின்றனர். அப்போஸ்தலர்கள் மரிப்பதற்கு முன்பு, சபையில் ஒரு விசேஷித்த கண்காணிகள் வகுப்பார் ஏற்படுத்தப்பட்டிருந்தனர் என்றும், அப்போஸ்தல வல்லமையும், அதிகாரமும் அந்தக் கண்காணிகளுக்குக் கடந்து வந்தது என்றும் மற்றும் இவ்விதமாய் நம்முடைய நாட்கள் பரியந்தமும் கடந்துவந்து, இந்தச் சபை பிரிவுகளிலுள்ள கண்காணிகளிடத்தில் இருக்கின்றது என்றும் இவர்களால் வலியுறுத்தப்படுகின்றது. தங்களால் ஏற்படுத்தப்படுபவர்களே, கிறிஸ்தவ ஊழியக்காரர்களாய் இருப்பார்கள் என்றும் இவர்களால் வலியுறுத்தப்படுகின்றது.

சுருக்கமாகச் சொல்லப்போனால், இந்த மூன்று பழமைமிக்க திருச்சபைகளானது, திவ்விய ஏற்படுத்துதலை, பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகித்தலை முற்றிலுமாய்ப் புறந்தள்ளி, இதற்குப் பதிலாக அப்போஸ்தல "வாரிசுரிமையின்படியான" வல்லமை மற்றும் அதிகாரம் என்று அழைக்கப்பட்டு வருகின்றதான ஓர் அங்கீகாரத்தினைக் கொண்டுவந்துவிட்டனர். பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மாத்திரமே உண்டு என்று மாத்திரம் இயேசு நம்மோடு கூறாமல், வெளிப்படுத்தல் 2:2-ஆம் வசனத்தில், அப்போஸ்தலர் அல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலர்கள் என்று பொய்யாய் உரிமைப்பாராட்டிடும் இந்தக் கொடிதான தவற்றினைச் சுட்டிக்காட்டவும் செய்கின்றார்.

## சில முக்கியமான கேள்விகள்

கிறிஸ்தவ ஊழியக்காரர்களை ஏற்படுத்துதல் என்பதன் உண்மையான பொருள் என்னவென்று விளக்கும் மேற்கூறப்பட்டுள்ளதான சுருக்கமான விளக்கமானது, முழுமையாய்ப் புரிந்துகொள்ளப்படுவது வரையிலும், திரும்பத்திரும்ப வாசிக்கப்பட வேண்டும். பின்னர்க்கீழே இடம்பெறும் கேள்விகளும், பதில்களும் எளிமையாகப் புரிந்துகொள்ளப்படலாம்:

(1) தேவனுடைய ஜனங்கள் அடங்கின சபையாரால் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் யாவரும் திவ்விய ஏற்படுத்துதலின் படியானவர்கள் என்று கருதப்பட வேண்டுமா?

இல்லை, பரிசுத்த ஆவியினாலான ஜெநிப்பித்தலை அடையாத எவரும் தெய்வீக ஏற்படுத்துதலின் படியானவர்கள் என்று கருதப்பட முடியாது. தேவனுக்குத் தன்னை முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாகவும், பரிசுத்த ஆவியினாலான ஜெநிப்பித்தலை அடைந்ததாகவும் தன்னைக்குறித்து அறிக்கைப்பண்ணிடாத ஒருவரைச் சபையார் ஊழியராக ஏற்படுத்திக்கொள்வது என்பது, சபையார் செய்திடுவதற்குக் கர்த்தரால் அங்கீகாரம் அளிக்கப்படாத காரியத்தினை, அவர்கள் செய்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அந்நபர், இப்படியாய் இவரை ஊழியராக ஏற்படுத்தின சபையாரின் பிரதிநிதியாகத்தான் இருப்பாரேயொழிய, கர்த்தருடைய பிரதிநிதியாக இருப்பதில்லை.

ஆனால் ஒரு சகோதரன் குறித்த கர்த்தருடைய அங்கீகாரத்தினை ஒரு சபையார் அடையாளம் கண்டுகொள்வார்களானால் மற்றும் இன்னுமாக அச்சகோதரன் போதக சமர்த்தனாய் இருப்பதையும், தெய்வீக வார்த்தைகளுக்கு ஏற்ப ஊழியத்திற்குப் பொருத்தமான பண்புகளை உடையவராய் இருப்பதையும் அடையாளம் கண்டுகொள்வார்களானால், கர்த்தருடைய நாமத்தில் சபையாரின் பிரதிநிதியாகிடுவதற்கு அச்சகோதரனை முறையாய்த் தேர்ந்தெடுத்திட அல்லது ஏற்படுத்திட வேண்டும். கர்த்தருடைய ஜனங்களின் வேண்டுகோளில்லாமல், எந்த

ஒரு சகோதரனும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒரு கூட்டத்தாருக்கு ஊழியம் புரிந்திட முற்படக்கூடாது; சபையாருடைய வேண்டுகோள் அல்லது அவர்களது vote/வாக்குகளானது - அந்த ஊழியத்திற்குச் சகோதரனை நியமிக்கின்றதாய் இருக்கின்றது, அதாவது வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் சகோதரனை அவர்கள் ஊழியத்திற்காக ஒரு நாளோ அல்லது ஒரு வருஷக்காலமோ நியமிக்கின்றதாய் அல்லது ஏற்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

(2) இவ்விதமாய் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் யாவரும் ஏற்படுத்தப்படுவது முறையானது என்றும் மற்றும் ஏற்படுத்தப்படாமல் எவரும் தொடர்ச்சியாய் ஊழியம் புரிந்திட முற்படக்கூடாது என்போமானால், பரிசுத்த பவுல் அடிகளார் "மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயே அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நான்" என்று என்ன அர்த்தத்தில் கூறினார்? (கலாத்தியர் 1:1)

ஓர் அப்போஸ்தலனைத் தேர்ந்தெடுப்பதற்கோ அல்லது நியமிப்பதற்கோ எந்த ஒரு மனுஷனோ அல்லது சபையாரோ பொருத்தமானவர்களல்ல. எந்தச் சபையாருடைய வாக்குகளும், சகோதரரில் ஒருவரை அப்போஸ்தலனாக்கிட முடியாது. அது தெய்வீக ஏற்படுத்துதலினால் மாத்திரமேயான ஒரு விசேஷித்த ஊழியம் அல்லது பணியாகும். ஆகவே கர்த்தர் இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களை மாத்திரம் - "ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களை" ஏற்படுத்தினார்; அப்போஸ்தல ஸ்தானத்தினை இழந்திட்டதான யூதாசின் இடத்தினை, பரிசுத்த பவுல் அடிகளார் எடுத்துக்கொண்டார் (வெளிப்படுத்தல் 21:14; சங்கீதம் 109:8; அப்போஸ்தலர் 1:20). இந்த ஒரு விஷயத்தில்தான் உரோம சபையும், இங்கிலாந்து சபையும் மற்றும் கிரேக்க சபையும், தேவனுடைய வார்த்தைகளின் கொள்கையினை மீறுகின்றவர்களாய் இருக்கின்றனர்; அதாவது அப்போஸ்தல அதிகாரமும், வல்லமையும் உடைய கண்காணிகளை - அப்போஸ்தல கண்காணிகளை நியமிப்பதாக வலியுறுத்துகின்றனர்; ஆனால் உண்மையில் இப்படி ஏற்படுத்திட முடியாது.

தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தின் ஏற்படுத்துதல் ஒருபக்கமிருக்க, மற்றபடி தனக்கான பூமிக்குரிய ஏற்படுத்துதலை தான் பொருட்படுத்தவில்லை என்பதாக நாம் புரிந்துகொள்ள வேண்டுமெனப் பரிசுத்த பவுல் அடிகளார் சொல்லவில்லை. மாறாக அந்தியோகியாவிலுள்ள சபையார் அநேகமாக தங்களது சொந்த செலவில் சுவிசேஷத்தினை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லும் தங்களது பிரதிநிதியாகக் காணப்படும்படிக்குப் பவுலையும், பர்னபாவையும் ஏற்படுத்தினார்கள் மற்றும் பின்னர்ப்பவுலையும், சீலாவையும் ஏற்படுத்தினார்கள். அப்போஸ்தலனாகிய பவுலை, அந்தியோகியா சபை அப்போஸ்தலனாக ஏற்படுத்தாமல், மாறாக தங்களது சுவிசேஷஊழியக்காரனாக அவரை ஏற்படுத்தினார்கள் மற்றும் அவரும் அவர்களது ஏற்படுத்துதலை ஏற்றுக்கொண்டு, அப்போஸ்தலர் நடபடிகளில் பதிவு

செய்யப்பட்டுள்ளது போன்று, அவர்களுக்கு அறிக்கை விவரம் கொடுத்தார் என்று பார்க்கின்றோம் (அப்போஸ்தலர் 14:26-28).

(3) வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டியானது (Watch Tower Bible and Tract Society) அறுவடை வேலைக்காக ஊழியக்காரர்களை அல்லது பிரதிநிதிகளை எப்போதேனும் ஏற்படுத்தினதுண்டா?

ஆம் ஏற்படுத்தினதுண்டு. அனைத்துப் பயண ஊழியக்காரர்களுமே ஊழியத்தின் அந்த விசேஷித்த பணிக்காக இவ்விதம் ஏற்படுத்தப்படுகின்றனர், நியமிக்கப்படுகின்றனர் அல்லது தெரிந்தெடுக்கப்படுகின்றனர். சடங்கு என்பது ஏற்படுத்துதலாய் இராமல், மாறாக நியமித்தலும், கட்டளையிடுதலுந்தான் ஏற்படுத்துதலாய் இருக்கின்றது. சொசைட்டியானது, அதனுடைய பிரதிநிதிகளாகவும், அதேவேளையில் கர்த்தருடைய மற்றும் அவரது வார்த்தைகளுடைய பிரதிநிதிகளாகவும் காணப்படும் பயண ஊழியர்களை ஏற்படுத்துகின்றது, அங்கீகரிக்கின்றது, அவர்கள் செல்லும் இடங்களைக் குறித்துக் கட்டளையிடுகின்றது.

(4) வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டியிற்கு, ஒரு பயண ஊழியச் சகோதரனுடைய ஏற்படுத்துதலை நீக்கிடுவதற்கான/withdraw உரிமை உள்ளதா?

ஆம், நிச்சயமாக! அதற்கு ஏற்படுத்திடுவதற்கும், கட்டளையிடுவதற்கும் அதிகாரம் இருக்குமானால், முந்தைய காலங்களில் அது செய்திட்டதான நியமித்தல்களையும், கட்டளைகளையும் நீக்கிடுவதற்கும் அதற்கு அதிகாரமுள்ளது.

(5) சொசைட்டியின் ஏற்படுத்துதல் அல்லது நியமித்தலானது நீக்கப்படுதல் என்பது, இப்படியாகக் சொசைட்டியினுடைய ஊழியத்தினின்று தற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பட்டுள்ள பயண ஊழியக்காரன், அதன் பிறகு பிரசங்கம் பண்ணிடுவதற்கு உரிமையற்றவர் என்பதைக் குறிக்குமா?

நிச்சயமாக இல்லை! பயண ஊழியக்காரனிடமிருந்து சொசைட்டியானது அதன் நியமனத்தை நீக்கிடுதல் என்பது, ஏதோ சில காரணங்களினால் அந்தப் பயண ஊழியக்காரன் இனிமேல் சொசைட்டியின் பிரதிநிதியாக இருப்பதில்லை என்பதை, அவருக்கோ அல்லது அவரது போதனைகளுக்கோ அல்லது அவரது நடத்தைக்கோ அல்லது வாழ்க்கை பராமரிப்பிற்கோ இனிமேல் சொசைட்டி பொறுப்பாய் இருக்காது என்பதை மாத்திரம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். பயண ஊழியக்காரர்களுடைய பட்டியலினின்று இப்படியாக நீக்கப்பட்டுள்ளதான அந்தப் பயண ஊழியச் சகோதரன், தொடர்ந்து சகோதரனாகவே காணப்படுவார் மற்றும் இப்படியாகவே சொசைட்டியினாலும் கருதப்படுவார்; ஆனாலும் - குணலட்சணத்தினுடைய சில பெலவீனங்களை வெளிப்படுத்துவதன் காரணமாகவோ அல்லது போதக சமத்துவத்தில் சில குறைபாடுகளின் காரணமாகவோ அல்லது ஊக்குவிக்கப்படக் கூடாது என்று சொசைட்டியானது எண்ணுகிற சில காரணங்களுக்காகவோ அல்லது சொசைட்டி பொறுப்பேற்க

விரும்பிடாத சில விஷயங்களுக்காகவோ அல்லது பல தரப்பட்ட காரணங்களுக் காகவோ, நோய் முதலானவைகள் என்ற காரணங்களுக்காகவோ - அச்சகோதரன் இனிமேல் சொசைட்டியினுடைய பிரதிநிதியாய் இருப்பதற்குப் பொருத்தமான நபராக கருதப்படுவதில்லை.

(6) V. D. M. - என்பதன் அர்த்தம் என்ன? மற்றும் V. D. M. பட்டம்/degree கொடுக்கப்படுவது எதைக் குறிக்கின்றதாய் இருக்கும்?

V. D. M. என்பது மிகவும் பழைய பெயராகும். இப்பெயருடைய பயன்பாடானது நீண்ட காலமாய் வழக்கத்தில் இல்லாதபடியினால், வெகு சிலரே இதன் அர்த்தத்தினை அறிந்தவர்களாய் இருக்கின்றனர். இந்த மூன்று எழுத்துக்களானது, Verbi Dei Minister எனும் இலத்தீன் வார்த்தைகளைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இதன் ஆங்கில வார்த்தை "Minister of Divine Word"/ "திவ்விய வார்த்தைகளினுடைய ஊழியக்காரன்" என்பதாகும். இருண்ட யுகங்களில் திவ்விய வார்த்தைகள் பயன்பாட்டில் இல்லாமல் போய், இதற்குப் பதிலாக விசுவாசப் பிரமாணங்கள் பயன்பாட்டில் காணப்பட்ட போது, இப்பெயரும் பயன்பாட்டில் இல்லாமல் மற்றும் புறக்கணிக்கப்பட்டுப் போயிற்று. திவ்விய வார்த்தைகளுக்கு ஊழியக்காரன் யாரும் இல்லாமல் போயிற்று; காரணம் திவ்விய வார்த்தையானது பிரசங்கிக்கப்படாமல், இதற்குப் பதிலாக மனுஷருடைய விசுவாசப் பிரமாணங்கள் பிரசங்கிக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய பொது ஊழியர்கள் தொடர்புடைய விஷயத்தில், சரியான சிந்தையினை மிக அருமையாய் வெளிப்படுத்துகின்றதான இந்த எளிமையான வார்த்தைகளையுடைய இப்பெயருக்குப் பதிலாக, இன்று வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாத Reverend/ரெவரண்ட் மற்றும் Doctor of Divinity/வேதசாஸ்திரி போன்ற பகட்டான பட்டங்கள் காணப்படுகின்றது. திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரன் எனும் பட்டம் கொடுக்கப்படுவது என்பது, ஊழியராக ஏற்படுத்தப்படுதலைக் குறிப்பதாய் இராது; மாறாக சொசைட்டியானது இப்பட்டத்தினைக் கொடுக்கையில், அது அந்நபருடைய நற்பெயரை ஆராய்ந்துள்ளது என்பதையும் மற்றும் முடிந்தமட்டும் அந்நபருடைய குணலட்சணத்தையும், விசேஷமாக அந்நபருடைய உபதேச ரீதியிலான வளர்ச்சியையும் ஆராய்ந்துள்ளது என்பதையும் மற்றும் (V. D. M. கேள்விக்கான பதில்களை) மதிப்பீடு செய்யும் குழுவினுடைய அங்கத்தினர்களின் கணிப்பில், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரன் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியானவராய் இருக்கின்றார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் மாத்திரமே இருக்கின்றது.

(7) இத்தகைய திவ்விய வார்த்தைக்கான ஊழியர்கள் இப்போது இருக்கின்றார்களா?

ஆம், நிச்சயமாக! சொசைட்டியினால் அனுப்பப்படும் ஒவ்வொரு பயண ஊழியக்காரனும், விசுவாச பிரமாணங்களினுடைய அல்லது "அமைப்புகளுடைய /isms"

ஊழியக்காரர்களாய் இல்லாமல், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரனாகவே அனுப்பப்படுகின்றான்; உண்மையில் தேவனுடைய வார்த்தைக்கான ஊழியக்காரனாகவே அனுப்பப்படுகின்றான். எந்த ஓர் இடத்திலுமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின சபையார், அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள ஒரு தேவனுடைய பிள்ளையை, மூப்பராகத் தேர்ந்தெடுக்கும் போதெல்லாம், சபையார் தங்களுடைய தெரிந்துகொள்ளுதலின் வாயிலாக அல்லது தேர்ந்தெடுத்தலின் வாயிலாக, அந்த மூப்பர் திவ்விய வார்த்தைக்கான ஊழியராய் இருக்கின்றார் - அதாவது தேவனுடைய வார்த்தைகளிலுள்ள சத்தியங்களைப் பிரசங்கிப்பவர், பரப்புபவர், பகிர்ந்தளிப்பவராய் இருக்கின்றார் என்று சுட்டிக்காட்டுகின்றவர்களாய் இருக்கின்றனர்.

(8) ஒரு கேள்வி பட்டியலைத் தொகுத்து, இக்கேள்விகளுக்குச் சொஸைட்டியிடம் திருப்திகரமான விதத்தில் பதிலளிக்கும் நபர், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரனாக கருதப்படுவார் என்று கூறுவதில், சொஸைட்டியிக்குக் காணப்படும் நோக்கமென்ன?

அக்கேள்விகளானது, நீண்டகாலமாய் வாஞ்சிக்கப்பட்டதை நிறைவு செய்யும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அக்கேள்விகளானது, மதவெறியின் அடிப்படையானது அல்ல; அவை யாவும் வேதவாக்கியங்களின் அடிப்படையினாலானதாகும். இப்பொழுது ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பயண ஊழியர்களிடமிருந்து அல்லது எதிர்க்காலத்தில் சொஸைட்டியின் பிரதிநிதிகளாய், பயண ஊழியர்களாய்க் காணப்படப்போகின்றவர்களிடமிருந்து, கிறிஸ்துவின் சுவிசேஷம் தொடர்புடையதான இந்த அடிப்படையான கேள்விகள் பற்றின அவர்களது புரிந்துகொள்ளுதல்களையும், அவர்களது கருத்துக்களையும், அவர்களது சிந்தனைகளையும் அறிந்துகொள்வதற்குக் சொஸைட்டியானது விரும்புகின்றது. அக்கேள்விகளுக்குப் பதிலளிக்க விரும்பிடாத எந்தச் சகோதரனும், மனதில் குழப்பம் கொண்டிருப்பவராகவும், உறுதியற்றவராகவும், இதினிமித்தம் போதிப்பதற்குத் தகுதியற்றவராக, "போதகசமர்த்தனாய்" இல்லை என்பதாகவும் கருதப்படுவார். இது அவர் தொடர்ந்து சகோதரராக இல்லை என்பதைக் குறிக்கின்றதாய் இராது; மாறாக பயண ஊழியத்திற்குப் பொருத்தமான சகோதரனாக அவர் கருதப்படுவதில்லை என்பதையே குறிக்கின்றதாய் இருக்கும். இன்னுமாக அச்சகோதரன் பிரசங்கிக்கக் கூடாது என்பதைக் குறிப்பதாய் இராது; மாறாக சொஸைட்டியானது அவரைத் திவ்விய வார்த்தையின் விரிவுரையாளராய்ப் பரிந்துரைக்காது என்பதை மாத்திரமே குறிக்கின்றதாய் இருக்கும்.

எந்த ஒரு சகோதரன் கேள்விகளுக்குப் பதிலளிக்க விருப்பமுள்ளவனாகக் காணப்பட்டும், ஆனால் தன்னுடைய பதில்களில் கொஞ்சம் குழப்பத்தினை வெளிப்படுத்துகிறவராக இருப்பாரானால், இது அவர் சொஸைட்டியிக்கும், தேவனுடைய வார்த்தைத் தொடர்புடையதாக எது சத்தியம் என்று சொஸைட்டியினால்

நம்பப்படுபவைகளுக்கும் பிரதிநிதியாகிடுவதற்கும் முன்னதாக, இன்னும் அதிகமான போதனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்று எங்களுக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அத்தகைய சகோதரன் அநேகமாக Brooklyn/புரூக்கிளினுக்குக் கொண்டு வரப்பட்டு, கொஞ்சக்காலம் மற்ற ஊழியங்களில் பங்கெடுப்பதற்கு வாய்ப்பு அருளப்படுவார் மற்றும் ஒவ்வொரு மதிய வேளையிலும் நடைபெறும் வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளிலும் பங்கெடுக்கும் வாய்ப்பினை அடைவார்; இன்னுமாக முழுக்காரியமும் முழுமையாய்ச் சரியாகிவிடவும், தெளிவாய்ப் பார்த்து, புரியப்படத்தக்கதாகவும் சத்தியம் தொடர்பான பாடங்களில், எவ்வகையான கேள்விகளைக் கேட்பதற்கான வாய்ப்பினை முழுச்சுயாதீனத்துடன் பெற்றிருப்பார்.

## சிநேக பாவமான ஒரு யோசனை

பெத்தேல் குடும்பத்திலுள்ள/Bethel family சகோதரிகளில் அநேகர், இக்கேள்விகளைக் குறித்துக் கேள்விப்பட்டவர்களாக, பயிற்சியாய் இருக்கும் மற்றும் அறிவடைதலாய் இருக்கும் எனும் கண்ணோட்டத்தில், இக்கேள்விகளுக்குத் தாங்கள் பதில் கொடுக்கத்தக்கதாக, தங்களுக்கு அக்கேள்வி பட்டியலைத் தரும்படிக்கு விசேஷித்த வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதைப்போலவே பல்வேறு சபைகளிலுள்ள மூப்பர்களும், உதவிக்காரர்களும் கேள்விகளுக்காக வேண்டிக்கொண்டுள்ளனர். சொசைட்டியினுடைய V.D.M. degree/ பட்டத்திற்குத் தகுதியடையத்தக்கதாக, இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முடிகின்றவர்களை, மூப்பர் ஊழியத்திற்குத் தேர்ந்தெடுப்பது என்பது, அனைத்து இடங்களிலுமுள்ள வேதமாணவர்கள் அடங்கியுள்ளதான சபையார் யாவருக்கும் நன்மை பயக்கின்றதாய் இருக்கும். இது மூப்பர்கள் மத்தியில் அநேகம் மாற்றங்களைக் கொண்டுவந்திடும்; ஆனாலும் அவை நன்மையான மாற்றமாய் இருக்குமென நாங்கள் நம்புகின்றோம். இன்னுமாகச் சத்தியத்தினை, அதாவது சத்தியத்தினை மாத்திரம் போதித்திட உள்ளப்பூர்வமாய் விரும்புகின்றதான மூப்பர்கள் யாவரும், இக்கேள்விகளால் கிடைக்கப்பெறும் உதவியினைப் பெற்றுக்கொள்வதில் சந்தோஷமடைவார்கள் என்று நாம் நம்புகின்றோம் .

சிலசமயம் அருமையான நண்பர்களில் சிலர், தாங்கள் மூப்பர்களாகத் தெரிந்துகொள்ளும் அல்லது ஏற்படுத்தும் நபர்களின் விஷயத்தில் எவ்வளவு அஜாக்கிரதையாய்க் காணப்படுகின்றனர் என்று பார்க்கையில் - கர்த்தருடைய வார்த்தைகளின் கட்டளைக்கு முரணாகப் பெரும்பாலும் நூதன சீஷர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, இப்படியாய் நூதன சீஷனுக்கும், சபையாருக்கும் பாதகம் உண்டாக்குவதைப் பார்க்கையில் - நமக்கு ஆச்சரியமே ஏற்படுகின்றது (1 தீமோத்தேயு 3:1-7). மூப்பர் ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட, ஆவியினால்

ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையை மாத்திரமே தேர்ந்தெடுக்கும் விஷயத்திற்கு அடுத்தப்படியாக இருக்க வேண்டிய கேள்வி - எந்தளவுக்கு அச்சகோதரன் ஆராய்ச்சியையும், அறிவடைவதற்கான சிலாக்கியங்களையும் பயன்படுத்தியுள்ளார்? என்பதேயாகும். ஒருமுறையேனும் வேதாகம பாடங்களின் ஆறு தொகுதிகள்/volumes அனைத்தையும் வாசித்திராத அல்லது வாட்ச் டவர் இதழின் தொடர்ச்சியான வாசகனாக இராத, எந்த ஒரு சகோதரனையும் மூப்பராகத் தேர்ந்தெடுப்பது ஞானமற்ற காரியமாய் இருக்கும் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. சொசைட்டியானது எந்த அதிகாரத்தையும் செலுத்தவில்லை, எந்த விமர்சனமும் செய்யவில்லை, மாறாக கர்த்தருடைய காரணங்கள் மற்றும் கர்த்தருடைய ஜனங்களின் நலனுக்காய், அறிவுரை மாத்திரமே கொடுப்பதாக நினைவில் வைக்கப்படுவதாக.

---

R5981

# சோதனை காலம்

இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய நிறைவு பகுதியானது முழு உலகத்தின் மேலும் கடந்துவரும் "சோதனைகாலமாய்" இருக்குமெனக் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு அறிவுறுத்தனது வீணா? (வெளிப்படுத்தல் 3:10). நிச்சயமாகவே கர்த்தரினால் நாம் வீணாய்க் கற்பிக்கப்படவில்லை! மற்றும் அவருக்கு நேர்மையாய் இருப்போர் அனைவரும் மார்க்கவசத்தையும், தலைச்சீராவையும், பாதரட்சை களையும் இறுக்கிக் கட்டிக்கொண்டிருக்கின்றனர் மற்றும் பட்டயத்தையும், கேடகத்தையும் கையில் எடுக்கப்பெற்றிருக்கின்றனர். ஒருவேளை நாம் இதுவரையிலும் கடுமையான போராட்டங்களுக்குள்ளாக வில்லையெனில், அவைகளைச் சீக்கரத்தில் எதிர்ப்பார்க்கலாம் என்றும், நாம் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும் என்றும், "சோதனைகாலத்தின்போது" வல்லமையுடன் எதிர்க்கொள்ளச் செய்திடும் அத்தகைய பயிற்சியினையும், அனுபவத்தையும் நாம் பெற்றிருக்க வேண்டும் என்றும் நாம் அறிவோம்.

இந்தச் "சோதனைகாலமானது" முழு உலகத்தின் மீதும், சபையின் மீதும் கடந்துவருமென்று நாம் கற்பிக்கப்பட்டிருக்கின்றபடியால், அது அனைவரையும் பாதிக்கும் வகையில், ஆகாயத்தில் சம்பவிப்பதாக இருக்க வேண்டுமென நாம்

புரிந்திருக்கின்றோம். இந்தச் சோதனையானது, ஒவ்வொரு திசையிலும் படிப்படியாகப் பரவக்கூடிய ஒன்று என்றும் நாம் நம்புகின்றோம்; மற்றும் அந்த நாட்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தம் இராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதன் மூலம் குறைக்கப்படாதிருந்ததானால், மாம்சம் ஏதும் பிழைப்பதில்லை என்று ஆண்டவர் நமக்கு உறுதிப்படுத்தியும் இருக்கிறார்.

ஜாதிகள் மத்தியில் ஏற்கெனவே செயல்பட்டுவருகின்றதும் மற்றும் வணிக விஷயத்தில் மேல்நிலையை அடைய யுத்தம் புரிவதற்கென அவர்களை வெறித்தனமாய் இயக்கிக் கொண்டிருக்கின்றதுமான சுயநலம் மற்றும் பேராசையின் ஆவியானது, அதிகமதிகமாய்ப் பெருகி, அனைவரையும், அனைத்தையும் தாக்கத்திற்குள்ளாக்கிடும் என்று நாம் புரிந்திருக்கின்றோம். இந்த ஆவியானது, நம்முடைய தேசங்களில் நடைபெறும் வேலை நிறுத்தம் (strike) முதலானவைகளில் பார்க்கப்படலாம் - அனைவருமே சுயம் திருப்தி அடைவதற்கே கவலைப்படுகின் றனர் மற்றும் கனங்கள், உரிமைகள், ஸ்தானங்கள் முதலானவைகளுக்காகப் போராடுவதற்கே விரும்புகின்றனர்.

ஆனால் நாமோ சபை மீதும், எப்படி இந்தச் "சோதனைகாலம்" கர்த்தருடைய ஜனங்களுக்கு வரும் என்பதன் மீதும்தான் அதிகம் ஈர்க்கப்பட்டுள்ளோம். எப்படி நடக்குமென நாம் எண்ணுகிறவைகளுக்கு அப்பாற்பட்டவைகளையே நாம் இங்கு எழுதப்போகின்றோம்; மேலும் இதை எழுதுவது என்பது கர்த்தருடைய காரணங்கள் மற்றும் ஜனங்கள் தொடர்புடையதான நம்முடைய கடமையாக இருக்கின்றதென நமக்குத் தோன்றுகின்றது. வேத மாணவர்கள் மீது ஒரு மாபெரும் ஆபத்துக் காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம் மற்றும் அது எத்தனை சீக்கிரமாய்க் கண்டுணரப்படுகின்றதோ, அவ்வளவாய் அச்சோதனையானது மிக வெற்றிகரமாய்க் கடந்துபோகப்படும். இது பிரிவினைகளை அர்த்தப்படுத்து கின்றதாய் இருக்கலாம்; மேலும் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உபதேசங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முறைமைகள் உணர்ந்துகொள்ளப்படத்தக்கதாகவும் மற்றும் உண்மையான போதகர்கள் மிக முழுமையாய் அடையாளம் கண்டுகொள்ளப்படத்தக்கதாகவும், அப்போஸ்தலர் கூறியுள்ளதுபோன்று பிரிவினைகள் சிலசமயம் அவசியமாகவே இருக்கின்றன (1 கொரிந்தியர் 11:18, 19).

அத்துயரளிக்கும் அம்சத்தினைக் குறிப்பிடுவதற்கு முன்னதாக, யாவரும் ஊக்கமடைவதற்கு ஏதுவான ஒன்றை நாம் குறிப்பிடுகின்றோம்; அதென்னவெனில் மாநாடுகளில் கூடிடும் நண்பர்களுடனான உரையாடல் வாயிலாக, நாம் அறிந்திருக்கிறவரை முன்னொருபோதும் இல்லாதளவுக்கு வேத மாணவர்கள் சாந்தம், தயாளம், பொறுமை, அன்பு, பக்தி, விசுவாசம், சந்தோஷம் என்பவைகளைப் பெற்றவர்களாக இப்பொழுதே காணப்படுகின்றனர்.

## உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

சபைக்கான பெரும்பான்மையான அபாயமும், இடர்பாடும், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் வாசலருகேயே காணப்படுகின்றது என்று எழுதிடுவது உண்மையாய்த் துயரமளிக்கின்றதாய் இருக்கின்றது - எனினும் அனைவருக்கும் இப்படியாகக் காணப்படுவதில்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம்; திகைப்படைந்து காணப்படும் ஆடுகள், தாங்கள் மேற்கொள்ள வேண்டிய சரியான வழிமுறை குறித்த அறிவுரையினைக் கேட்டு அவ்வப்போது அலுவலகத்திற்கு எழுதி அனுப்பும் கடிதங்களை வைத்துப்பார்க்கையில், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களில் ஒரு சிறு சிறுபான்மையினரே இப்படி அபாயகரமாகக் காணப்படுகின்றனர் என்பதாகத் தெரிகின்றது. உண்மையான மூப்பர்கள், உதவிக்காரர்களுக்கும் மற்றும் உண்மையற்ற மூப்பர்கள், உதவிக்காரர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தினைக் கர்த்தருடைய ஜனங்களால் உணர்ந்து கொள்ளப்படுவதற்கேற்ப, சபையிலுள்ள உண்மையுள்ள, நேர்மையுள்ள ஊழியக்காரர்கள் கர்த்தருடைய ஜனங்களினால் மதிக்கப்படுவார்கள். உண்மையற்றவர்களைச் சோர்வுப்படுத்தும் கண்ணோட்டத்தில் நாம் எழுதாமல், மாறாக அவர்கள் எதிராளியானவனுடைய கண்ணியினின்று நீக்கப்படுவதற்கும், இடையூறாளர்களாய் இருப்பதற்குப் பதிலாகக் கர்த்தருடைய மந்தைக்கு உதவுபவர்களாகிடுவதற்கும் ஏதுவாய், உண்மையான சூழ்நிலைக்கு இவர்களது கண்கள் திறக்கப்படுவதற்கே நாம் எழுதுகின்றோம்.

“உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே (தம் குமாரன்) சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்” என்று அப்போஸ்தலன் எபேசு பட்டணத்திலுள்ள சபையின் மூப்பர்களுக்கு அறிவுறுத்தினபோது, அவர்களுக்குச் சுட்டிக்காட்டப் பட்டுள்ள அதே சூழ்நிலைமைகளே, நாம் அறிந்திருக்கிறவரை இன்று, வேத மாணவர்கள் மத்தியில் நிலவி வருகின்றது (அப்போஸ்தலர் 20:28). “நான் போனபின்பு மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷக்காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள். இப்பொழுதும் சகோதரரே . . . தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்” என்று கூறின அப்போஸ்தலர் பவுலின் தீர்க்கத்தரிசனம் உண்மையாயிற்று (அப்போஸ்தலர் 20:29-32).

# தேவனுடைய இரண்டு ஊழியக்காரர்களின் வேறுபட்ட நடைமுறை

பேராசையே லூசிபரை முதலில் தவறாய் வழிநடத்தி, தேவனுடைய ஒரு மகிமையான ஊழியக்காரனை, எதிராளியானவனாக மாற்றிப்போட்டதுபோன்றே, அவனது ஆவியானது இன்றுவரையிலும் அபாயமானதாகவே இருந்துவருகிறது. இதற்கு முற்றிலும் எதிர்மாறானதாக நமது ஆண்டவருடைய ஆவி காணப்பட்டுள்ளது. பிதாவின் சித்தத்தைச் செய்வதில், "அவர் தம்மை மரணபரியந்தம் தாழ்த்தினவரானார்." பெருமை அல்லது பேராசையின் ஆவியில் அல்லது சுயநல நாட்டமான ஆவியில் எதையும், எந்த விதத்திலும், நம்முடைய ஆண்டவரிடத்தில் நம்மால் காணமுடிகிறதில்லை. நாம் அவரோடுகூட, அவருடைய இராஜ்யத்தில் உயர்த்தப்படும்படிக்கு விரும்புவோமானால், நாமும் அவரது மாதிரியின்படி, நம்மைத் தாழ்த்திக்கொள்ளும்படிக்கு, அப்போஸ்தலனால் நமக்குப் புத்திமதி கூறப்பட்டுள்ளது.

ஆனால் இராஜ்யத்தில் எந்தவொரு ஸ்தானத்தை நாம் அடைவதற்கும் அவசியமாயிருக்குமென நாம் கர்த்தருடைய ஜனங்களின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டுவந்துள்ளதான இந்த வேதவாக்கியங்களை, எத்தனைபேர் முற்றிலும் மறந்துபோனவர்களாய்க் காணப்படுகின்றனர்! எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தகவலின்படி, தேர்ந்தெடுத்தல் நடக்கவிருக்கும்போது, சில சபையார் மத்தியில் பயங்கரமான சூழ்நிலைகள் நிலவுகின்றன. சபையின் ஊழியக்காரர்கள் இறுமாப்பாய் ஆளுவதற்கு, சர்வாதிகாரியாய் ஆளுவதற்கு முற்படுகின்றனர் - சிலசமயங்களில் தாங்களும், தங்களது விசேஷித்த நண்பர்களும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாய்ப் பார்த்துக்கொள்ளும்படிக்குக் கூட்டங்களுக்குக் கூட்டத்தலை வராய்த் தலைமைத்தாங்கியும் நடத்துகின்றனர். சபையாரில் ஒருவர் தனக்கு வாக்குகள் (vote) செலுத்தாததினால், அவரிடம் மூப்பர் பேச மறுத்துள்ள சம்பவங்களையும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். எனினும் அந்தக் குறிப்பிட்ட மூப்பர், தான் தன்னடக்கத்திற்கும், தாழ்மைக்கும் மற்றும் சாந்தத்திற்கும் எடுத்துக்காட்டாய் இருப்பதாகச் சந்தேகத்திற்கிடமின்றி எண்ணுகின்றார்.

வேதவசனத்தினுடைய போதனைகள் குறித்தும், ஆண்டவரோடுகூட உடன்சுதந்தரர்களாகுவதற்கான நிபந்தனைகள் குறித்துமான எந்த அறிவையும் பெற்றிருப்பவர்கள் மத்தியில் மேல்கூறப்பட்டுள்ள இத்தகைய ஓர் ஆவி காணப்படுவது என்பது, ஓ! எத்துணை அவமானத்திற்குரியதாகும்! ஆம் நிச்சயமாகவே இம்மாதிரியான காரியங்களில், வெட்கக்கேடுகள் பல்வேறு

அளவுகளில் காணப்படும். சிலர் தங்களுக்கும், தங்களது நண்பர்களுக்கும் விசேஷமாய்ச் சாதகமாய்க் காணப்படும் ஏதோ சில சமயங்களில் தேர்ந்தெடுத்தலைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக வாய்ப்புகளைப் பயன்படுத்திடுவதற்கு அமைதியாய் முயற்சிக்கின்றனர். சபையில் தொடர்ந்து கலந்து கொள்வதற்கான எந்த எண்ணமும் இல்லாமல், தங்களது நண்பர்களில் ஒருவருக்கு வாக்களிப்பதற்கென நட்பிணக்கத்தின் அடிப்படையில் மாத்திரம் வருகைத்தரும் சிலரை - தங்கள் நண்பர்களைக் கூட்டத்தில் பெற்றிருப்பதற்குச் சிலர் நாடுகின்றனர்.

இன்னுமாக இப்படியாக வழிநடத்துபவர்களாகவும், போதகர்களாகவும் ஆக வேண்டி இப்படியான பேராசையினை/இலட்சியத்தினை வெளிப்படுத்துபவர்களும், பொன்னான பிரமாணத்தினையும், புதுச்சிருஷ்டிக்கான விசேஷித்த அறிவுரைகளையும் புறக்கணிப்பவர்களுமானவர்கள் பொதுவாகவே தவறான உபதேசங்களைக் கொண்டுவருபவர்களாக இருப்பார்களென எதிர்ப்பார்க்கப் படலாம். சபையில் கனத்தினை நாடும்படிக்கு இவர்களை வழிநடத்துகின்றதான, எதிராளியானவனின் அதே பேராசையின்/இலட்சியத்தின் ஆவியானது, இவர்களை மாபெரும் போதகர்களென - புது வெளிச்சத்தைக் கொண்டுவருபவர் களெனக் காண்பித்துக்கொள்ள வழிநடத்துவதாகவும் தெரிகின்றது. இதுவும்கூடச் சாத்தானின் தன்மைகளாக இருக்கின்றதென அப்போஸ்தலன் விவரிக்கின்றார். "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே" (2 கொரிந்தியர் 11:14). ஒளியின் பிள்ளைகள் மத்தியில் தன்னை ஒரு வழிநடத்துபவராகக் காண்பித்துக் கொள்ளுவான் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்.

அநேகம் சந்தர்ப்பங்களில் சபையாரே, அவர்களது அறிக்கையை வைத்துப்பார்க்கையில் குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவாயிருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் கர்த்தருக்குத் தங்களை அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைக் கூடப்பண்ணிடாத அல்லது தங்களது அர்ப்பணிப்பினை அடையாளப்படுத்திக் காண்பித்திடாத நபர்கள் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். ஏன்? ஏனெனில் சபையார் மத்தியில் விசேஷித்த தாலந்துடை யவர்கள் யாரும் இல்லாத காரணத்தினால், சகோதரனே இல்லாத ஒருவர், கிறிஸ்துவுக்குள்ளாக புதுச்சிருஷ்டியாக இல்லாத ஒருவர், பேச்சாற்றல் சிலவற்றைப் பெற்றிருப்பதினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இப்படி வேதத்தின் மாணவர்கள் மத்தியில் போதகருடைய ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கும் இத்தகைய ஒரு நபரிடமிருந்து நாம் என்னதான் எதிர்ப்பார்த்திட முடியும்? கர்த்தருடைய காரணங்களுக்குத் தீங்கினையும், இவ்விதமாய்க் கர்த்தருடைய வார்த்தைகளின் கட்டளைகளுக்கு முரணாக முன்னுக்குத் தள்ளப்படுகின்ற அந்நபருக்குப்

பாதகத்தினையும் மாத்திரமே ஏற்படுத்திடும் என்பதை நாம் எதிர்ப்பார்த்திட முடியும். ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் ஆவிக்குரியவைகளை நிதானிக்க முடியாதவனாய் இருக்க, அவனால் எப்படிக் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு ஆவிக்குரியவைகளைப் பகிர்ந்தளித்திட முடியும்? இத்தகையவரை, அதாவது கர்த்தருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிடுவதற்கெனத் தனது ஜீவியத்தினையும் மற்றும் அவரது வார்த்தைகளினால் கற்பிக்கப்படும்படிக்கும் ஒப்புக்கொடுத்திடாத ஒருவரைக் கர்த்தர் வழிநடத்திடுவாரென எப்படி நம்மால் எதிர்ப்பார்த்திட முடியும்?

தகுதியற்ற வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது நிச்சயமாகவே பாவமாகும் மற்றும் அது தகுதியற்ற வழிநடத்துபவர்களைப் பெற்றிருக்கும் சபையாருக்குப் பழிச்சொல்லுக்கு ஏதுவானதாயிருக்கும். சபையாருடைய வாக்குகள் (votes) இல்லாமல் இத்தகையவர்கள் கர்த்தருடைய ஜனங்களின் பிரதிநிதியாயிருக்கும் ஸ்தானத்திற்கு எப்படி வரமுடியும்? கூடுகைகளில் பேசிடுவதற்கான திறமை என்பது மூப்பர்களுக்கான பல தகுதிகளில் ஒன்று மாத்திரமேயாகும் என்பதைக் கர்த்தருடைய ஜனங்கள் எப்போது கற்கபோகின்றார்கள்? பெயர்ச்சபையினர் செய்வதுபோன்று, ஆவிக்குரிய ரீதியில் இல்லாமல், சரளமாகப் பேசும் ஆற்றல் உடையவர்களை முன்நிறுத்துவதினால், எப்படிக் கர்த்தருடைய காரணங்களுக்கு இடையூறளிக்கப்பட்டிருக்கின்றது என்றும், எப்படிச் சகோதரர் மத்தியில், ஆவிக்குரிய விஷயத்தில் திணறடிக்கப்பட்டிருக் கின்றனர் என்றும் நாம் அவ்வப்போது கவனித்திருக்கின்றோம்.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களுக்கு, சபையாரின் சார்பிலான பெருமைதானே - உலகத்திற்கு முன்பு மாம்சத்தில் பகட்டாய்க் காண்பித்துக் கொள்வதற்கான விருப்பம்தானே காரணம். இல்லை என்றால், பின்னர் ஏன் இத்தகைய நபர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்? ஒருவேளை அவர்கள் தவறு செய்திருந்தார்களானால், அவர்கள் ஏன் அமைதியாயும், உறுதியாயும் அதை உடனே சரிப்படுத்திடவில்லை? மூப்பர்கள் சபையாரைத் தங்கள் வல்லமை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவருவதற்கு நாடி, வெற்றிக் காணும்போது, இது கர்த்தர் விரும்புவதாக நம்மிடம்கூறும் அந்த ஒரு தன்மையில் - தைரியத்தில், ஜெயங்கொள்ளுதலில் - சபையார் குறைவுப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிற தல்லவா? இறுமாப்பாய் ஆள விரும்பும் அவரை, வேதவாக்கியங்களுக்கு முரணான முறைமைகளில் வெற்றிக்காணும்படிக்கு அனுமதித்ததில் - அவருக்கும் மற்றும் தங்களுக்கும் சபையார் தீங்குபண்ணுகிறார்கள் அல்லவா?

## வஞ்சிப்பவர்களும் மற்றும் வஞ்சிக்கப்படுபவர்களும்

ஒழுங்கின்மைக்கு நேராய் வழிநடத்திக்கொண்டு செல்லும் உலகத்திலுள்ள பேராசை மற்றும் சுயநலமான ஆவியினை நாம் ஏற்கெனவே குறிப்பாகக்

காட்டிவிட்டோம்; மற்றும் எப்படி அதே சுயநலமான, பேராசையின் ஆவியானது, சபையிலும் ஒழுங்கின்மைக்கு நேராக நடத்திக்கொண்டிருக்கின்றது என்றும் நாம் சற்று முன்புதான் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இதன் காரணமாக உலகத்தின் மீதுவரும் ஓர் உபத்திரவக்காலத்தினையும் மற்றும் சபைமீது வரும் ஓர் உபத்திரவக்காலத்தினையும் நாம் எதிர்ப்பார்க்கின்றோம். உலகத்தாரால் இந்த வகுப்பாரிடமிருந்து, தானாகவே அதனை விடுவித்துக்கொள்ள முடியாது; ஏனெனில் தலைவர்களும், வழிநடத்தப்படுபவர்களும் உலகத்தின் ஆவியினைப் பெற்றிருக்கின்றனர் மற்றும் அது நிச்சயமாகவே மிக மோசமாய்ப் பெருகிடும். ஆனால் கிறிஸ்துவின் சபையில் இப்படியல்ல. ஆண்டவருடைய ஆவியாகவும், சத்தியத்திற்கு நேர்மையாய் இருக்கும் ஆவியாகவும், பொன்னான பிரமாணத்தினுடைய ஆவியாகவும், சகோதர அன்பின் ஆவியாகவும், சுயாதீனத்தின் ஆவியாகவும், உதவும் ஆவியாகவும், சத்தியமென்று நம்மால் நம்பப்படுகிறவைகளுக்கு உண்மையாயிருக்கும் ஆவியாகவும் - நம்முடைய ஆவிக் காணப்படுகின்றது. இந்த ஆவியினையுடைய சபையானவள் பேராசைமிக்க புருஷர்களின் (சில சமயங்களில் பேராசைமிக்க ஸ்திரீகளின்) அதிகாரத்தின் கீழ்த் தொடர்ந்துகாணப்படுவது என்பது பொறுக்க முடியாத ஒன்றாகும். சபையார் தங்கள் சபை காரியங்களைச் சரியான காரியங்களின் அடிப்படையில் நடத்திக்கொண்டு வராமல் இருந்தார்களானால், சரியாய் நடத்துவதற்கு அவர்கள் உடனே செயல்பட வேண்டுமல்லவா? இதுவே கர்த்தருடைய வீட்டை ஒழுங்குமுறைக்குள் கொண்டுவருவதற்கான காலம் என்று நாம் நம்புகின்றோம்.

ஆனால் யாராகிலும் பின்வருமாறு கூறலாம்; "எங்கள் மீது எங்களது அதிகாரிகளாகவும், வழிநடத்துபவர்களாகவும் தங்களை ஏற்படுத்திக் கொண்டவர்களின் விருப்பங்களுக்கு எதிர்மாறாக நாம் எதையேனும் செய்ய முற்படுவோமானால், அது மிகுந்த கலக்கத்தினை ஏற்படுத்திவிடும். ஒரு பிரயாசம் எடுக்க முற்பட்டாலுங்கூட அது சபை பிரிந்து போவதற்குரிய அபாயத்தைக் கொண்டுவரும் மற்றும் இத்தகைய பேரழிவை உண்டுபண்ணும் காரியத்தினைக் குறித்து எப்படி எங்களால் சிந்திக்க முடியும்?"

ஆனால் நாமோ: கர்த்தர் சுட்டிக்காட்டினவைகளுக்கு இசைவாகக் குறைந்த எண்ணிக்கையினாலான சபையைப் பெற்றிருப்பது நலமா? அல்லது கர்த்தர் அருளியுள்ளவைகளுக்கு முரணான கொள்கைகளை ஆதரித்து, தங்களைத் தீங்கிற்குள்ளாக்கி, தங்கள் செல்வாக்கிற்கு இடையூறு உண்டாக்கி மற்றும் "ஓநாயாக" அல்லது "ஓநாயின் ஆவிக்குள்ளாகத் தவறுதலாய் நடத்தப்பட்டுள்ள ஒரு செம்மறியாடாக" இருக்கும் ஒருவரை, அதாவது வழிநடத்துபவராக இருப்பவரை ஆதரிக்கும் அதிக எண்ணிக்கையிலுள்ள சபையைப் பெற்றிருப்பது நலமா? என்று கேள்விக்கேட்கின்றோம். இம்மாதிரியான பிரச்சனைக்குள் காணப்படும் அருமையான சகோதரர்கள், வீரமாய்ச் செயல்படும்படிக்கு நாம்

ஊக்குவிக்கின்றோம்; எதையும் வீண்பெருமையினாலாவது அல்லது வாதினாலாவது செய்யாமலிருக்கத்தக்கதாகப் பார்த்துக் கொண்டு, தாங்கள் கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையை மீண்டுமாகப் பெற்றுக் கொள்ளத்தக்கதாவும், எந்த மனித அடிமைத்தனத்திற்குள்ளாக மீண்டும் சிக்கிக் கொள்ளாமல் இருக்கத்தக்கதாகவும், அனைத்தையும் சாந்தம் மற்றும் அன்பின் ஆவியில் செய்யும்படி பாருங்கள்.

## உபதேச ரீதியிலான பரீட்சைகளைக்குறித்தும் நினைவில்கொள்ளுங்கள்

வாட்ச் டவர் சொசைட்டியின் வெளியீட்டுக் கட்டுரைகளை வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளில் பயன்படுத்துவதற்குத் தங்களது மூப்பர்கள் தங்களுக்குத் தடைவிதிப்பதாக அடிக்கடி வேத மாணவர்கள் நமக்கு எழுதிவருகின்றனர். இந்த மூப்பர்களில் சிலர் இந்தக் கட்டுரைகளிலுள்ள அநேக விஷயங்கள் முரணானவைகளாக இருக்கின்றன என்றும் கூடச் சபையாருக்குச் சொல்லுமளவிற்குக் காணப்படுகின்றனர். சில சமயங்களில் வகுப்புகளில் இப்புத்தகங்கள் பயன்படுத்தப்படுவதை அதிகாரிகள் போல் தடைப்பண்ணுகின்றனர். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் என்ன செய்ய வேண்டுமென்று நம்மிடம் கேட்கப்படுகின்றது.

இத்தகைய வழிநடத்துபவர்களைப் பின்பற்ற விரும்புகின்றவர்கள் அப்படியே செய்யட்டும் - இப்படிச் செய்வது அவர்களுக்கான உரிமையாய் இருக்கின்றது என்று நாம் பதிலளிக்கின்றோம். அவர்களுக்கு அனைத்தும் நன்றாய்க் காணப்படும்படிக்கு வாழ்த்துகின்றோம். ஆனால் நாம் அவர்களைப் பின்தொடராமலிருப்போமாக; ஒரு கணம்கூட இத்தகைய ஏற்பாடுகளுக்கு அடிப்பணியாது இருப்போமாக. இப்படியான விஷயத்தில் அந்த வழிநடத்துபவர் தலையிடுவதும் மற்றும் சபையார் என்ன செய்ய வேண்டும் என்றும், என்ன செய்யக்கூடாது என்றும் சபையாருக்குச் சொல்ல முற்படுவதும், அந்த வழிநடத்துபவரின் சார்பிலான உச்சபட்ச அவமதித்தலாகும். தேர்ந்தெடுப்பதற்கான அதிகாரம் சபையாரின் கரங்களில் காணப்படுவதுபோன்று, நீக்கிடுவதற்கான அதிகாரமும், அவர்களுடைய கரங்களில் காணப்படுகின்றது. அப்படிப்பட்ட மூப்பரிடம் அவரது ஊழியங்களானது இனிமேல் விரும்பப்படுகிறதில்லை என்று அன்புடன் கூறி, அவரை அவ்வூழிய ஸ்தானத்திலிருந்து நீக்கிடுவதற்குச் சபையார் வாக்குகள் (votes) செலுத்திடும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம். அநேகமாக அவர் கொஞ்சக்காலம் பின்னிருக்கையில் அமர்ந்து, அக்காரியம் குறித்துச் சிந்திக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்கையில் அது அவருக்குப் பிரயோஜனமாய் இருக்கும் மற்றும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிடுவதற்குத் திறமையுடையவரோ அல்லது வகுப்புகளை நடத்திடுவதற்குப்

பழக்கப்பட்டவரோ சபையில் யாரும் இல்லாமலிருந்தாலும் சபையார் இத்தகைய ஒரு நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டதின் நிமித்தம் பெரிதும் உதவப்படுவார்கள். உங்கள் சுயாதீனத்தைத் தக்கவைத்துக்கொள்ளத்தக்கதாகவும் மற்றும் ஆராதனையையும், ஆராய்ச்சி வகுப்புகளையும், உரிய ஒழுங்கின் அடிப்படையில் தொடரத்தக்கதாகவும், உங்களில் யாரையாகிலும் கூட்டத்தலைவராக நியமித்துக் கொள்வதோ அல்லது கூட்டத்தைத் துவக்கும் மற்றும் முடிக்கும் காரியத்தில் (take turns) சுழற்சியில் மாறிமாறிச் செய்திடுவதற்கு என நியமித்துக்கொள்வதோ நல்லதாய் இருக்கும்.

வேதாகமத்தை - கிறிஸ்துவின் உபதேசங்களைத் திட்டவட்டமாய்ப் போதிப்பதற்கும் மற்றும் அந்த உபதேசங்களைச் சிறிது வேறுபாடான விதத்தில் போதிப்பதற்கும் இடையிலான வேற்றுமையை வகைப்படுத்திப்பார்ப்போமாக. எந்த இரண்டு நபர்களும் ஒரேமாதிரியான வார்த்தைகளைத் துல்லியமாய்ப் பயன்படுத்திடுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது; ஆனால் பெரும்பான்மையான வேத மாணவர்களின் கண்ணோட்டத்தில் உறுதியானதும், அசைவுறாததுமான சில குறிப்பிட்ட உபதேசங்கள் காணப்படுகின்றன. அவைகளுக்கு நல்லிசைவுடன் காணப்படாத எவரும் கொஞ்சமேனும் ஊக்குவிக்கப்படாமல் தடைப்பண்ணப்பட வேண்டும். ஒருவேளை அவனுக்கு வேறான கண்ணோட்டங்கள் இருக்குமாயின் அவனைத் துன்புறுத்தாதீர்கள் - இருண்ட யுகத்தின் வழிமுறைகளைப் பின்பற்றாதீர்கள், மாறாக அவனைத் தனியே விட்டு விடும் அல்லது அவன் காண்கிற விதத்தில் காரியங்களைக் காண விரும்புகிறவர்களோடு விட்டுவிடும் சரியான வழிமுறையைக் கையாளுங்கள்.

இதுவரையிலும் இத்தனை பலமான/கடுமையான அறிவுரைகளை நாம் கொடுத்ததில்லை; அருமையான ஆடுகளில் அநேகர் பாதிப்பிற்குள்ளாகி, வளர்ச்சியடைவதற்குத் தடைப்பண்ணப்பட்டுப் பலவந்தம்பண்ணப்பட்டுள்ளனர் என்று நாம் உணர்கின்றோம். இதற்கேற்ப இத்தகையதான மூப்பர்களும், உதவிக்காரர்களும் அதிகம் துணிச்சல்கொள்வதையும் நாம் பார்க்கின்றோம் மற்றும் சரியான ஆவியுடையவர்களும், யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினுடைய நம்முடைய ஆராய்ச்சியிலுள்ள, கர்த்தருடைய வழிக்காட்டுதலின் கீழ் - நாம் "தந்திரமான கட்டுக்கதைகளை" பின்பற்றினவர்களாக இருக்கவில்லையென்று உணர்ந்துகொண்டவர்களுமான அனைவரும், தங்களுக்கான நலனுக்காகவும், தவறான ஆவியை வெளிப்படுத்தும் வழிநடத்துபவர்களுக்கான நலனுக்காகவும் மற்றும் ஒருபோதும் முன்பில்லாத அளவிற்குக் கர்த்தருடைய வழியைக்குறித்து விசாரிக்கும் ஜனங்களுடைய நலனுக்காகவும் வேண்டி, உறுதியான நிலைப்பாட்டினை இப்பொழுது எடுத்துக்கொள்வது மிகுந்த அவசியமானதாய் உள்ளது.

உறுதித்தன்மையையும், தைரியத்தையும் நாம் ஊக்குவிக்கையில்,

தாழ்மையான ஆவியை வெளிப்படுத்துபவர்களும், சபையாருடைய உரிமைகளுக்கும், சுயாதீனங்களுக்கும் இசைந்து செல்பவர்களும், நன்றாய் ஊழியஞ்செய்ய நாடுபவர்களுமாகிய கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களின் மத்தியில் சண்டைச் சச்சரவு அல்லது குற்றம் கண்டுபிடிக்கும் மற்றும் குற்றம் சாட்டும் ஆவியினை ஊக்குவிக்க நாம் விரும்புகிறதில்லை. தேர்ந்தெடுக்கப்படக் கூடாதவர்களின் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டபோது சரியான நிலைமையில் காணப்பட்டும், பிற்பாடு மாறுபாடான மற்றும் பேராசையான ஆவியினை வெளிப்படுத்தினவர்களின் செல்வாக்கின் கீழிலிருந்து, சபையை மாற்றிட வேண்டும் எனும் கண்ணோட்டத்தின் அடிப்படையிலான ஒரே நோக்கத்துடன், "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல் அனைத்தையும் தேவனுக்கு மகிமை உண்டாகும்படிச் செய்யுங்கள்" என்று கூறுகின்றோம். இன்னுமாக சபை உறுதியாய் இருப்பதோடுகூடப் பரிவையும் கொண்டிருக்க, மேற்கூறியவர்கள் மனந்திரும்பும் பட்சத்தில் இவர்களுக்கென இரக்கத்தையும் கொண்டிருக்க நாம் அறிவுரை கூறுகின்றோம், அதாவது பிற்பாடு அவர்களை நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலையில் திரும்ப ஏற்றுக் கொள்வதற்குரிய கண்ணோட்டத்தில் நீங்கள் இவைகளையும் பெற்றிருக்க நாம் அறிவுரை கூறுகின்றோம். "நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன்; உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு, மார்க்கப் பேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே" (1 கொரிந்தியர் 11:18,19) என்று அப்போஸ்தலன் எழுதியுள்ளார். பிரிவினைகள் இங்குக் கண்டிப்பாய் வந்தாக வேண்டும்; மற்றும் அது எத்தனை சீக்கிரமாய் வருகின்றதோ அவ்வளவிற்கு அது சத்தியத்திற்கும், அதனை அன்புகூருகிற யாவருக்கும் நலம் பயக்கின்றதாய் இருக்கும்.

## என் ஆவியினாலே ஆகும் என்று கர்த்தர் கூறுகின்றார்

"ஜென்ம சுபாவமுள்ள மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் ஆவிக்குரிய பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14) என்ற அப்போஸ்தலனின் அறிவுரையை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. பரிசுத்த ஆவியினால் நாம் ஜெநிப்பிக்கப்பட்டப்பிற்பாடுங்கூட ஆவிக்குரியவைகளைப் புரிந்துகொள்வதற்கான நமது ஆற்றலானது - நம்மை ஞானவான்களாக்கிடுவதற்கு ஏதுவான வேதவாக்கியங்களின் மீதான நம்முடைய ஆராய்ச்சியின் மீது மாத்திரம் சார்ந்ததாயிராமல், நாம் பெற்றிருக்கும் பரிசுத்த ஆவியினுடைய அளவைச் சார்ந்ததாகவும் இருக்கின்றது என்று அனுபவங்களும்

கூட நமக்கு நிரூபித்துள்ளது. ஆகவேதான், "ஆவியில் நிறைந்திருங்கள்" - என்று அப்போஸ்தலர் புத்திமதி கூறுகின்றார் (எபேசியர் 5:18).

இது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரமே தேவனுடைய ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்வார்கள் என்று குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் அவர்கள் பரிசுத்தத்தின் ஆவியினால், தேவ ஆவியினால், கிறிஸ்துவின் ஆவியினால், சத்தியத்தின் ஆவியினால் அதிகமதிகமாய் நிரம்புவதற்கேற்ப, அவர்களது புரிந்துகொள்ளுதலும் காணப்படும் என்றும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒவ்வொரு வேத மாணவனும் புதுச்சிருஷ்டியாகிய தான், மாம்சத்தின்படியாக நடந்து ஆவியின்படியாக நடவாமலிருந்தால், அவனது மனமானது ஏறத்தாழ இருளடைந்துவிடும் மற்றும் தேவனுடைய ஆழமான காரியங்கள் குறித்துள்ள அவனது புரிந்துகொள்ளுதலின் ஆற்றலானது குறைவதோடு மாத்திரமல்லாமல் கர்த்தருடைய வசனம்குறித்த அவனது நினைவாற்றலும் குறையும் என்று உணர்ந்துகொள்ள வேண்டும்; இன்னுமாக அவன் இப்படியாக இல்லாமல் கர்த்தருக்கு நெருங்கி ஜீவித்தும், மாம்சத்தின்படியாக நடக்காமல் ஆவியின்படி நடப்பானானால், திவ்விய வார்த்தைக்குறித்த அவனது நினைவாற்றலும் மற்றும் அவ்வார்த்தையினுடைய ஆவிக்குரிய புரிந்துகொள்ளும் ஆற்றலும் பெருகிடும் என்று உணர்ந்துகொள்ள வேண்டும்.

கல்வியறிவு உடையவர்களும், தாலந்து உடையவர்களுமான அனைவரும் கர்த்தருடைய வார்த்தைக்குறித்த சரியான புரிந்துகொள்ளுதலை அடைவதில்லை. மாறாக சாந்தமுள்ள மற்றும் கற்பிக்கப்படத்தக்கதான நிலையில் இருப்பவர்களுக்கே மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கற்றும், அதன்படி ஜீவித்தும், அதன் ஆவியை உள்வாங்கியும் இருப்பவர்களுக்கே சரியான புரிந்துகொள்ளுதல் கடந்துவருகின்றது என்று நினைவில்கொள்வோமாக. "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சகரியா 4:6) என்ற திவ்விய வார்த்தை நமக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு சகோதரனோ (அ) சகோதரியோ அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாகவும், எவ்வளவு திறமையுடையவர்களாகவும் இருப்பினும், இது இவர்களைக் கர்த்தருடைய ஜனங்களுக்கு வழிநடத்துபவர்களாக்கிடுவதற்குத் தகுதியாக்கிடாது. இதோடுகூடச் சகோதரருக்கு முக்கியமான அம்சங்கள் அனைத்தும் காணப்பட வேண்டும்; அவை முதலாவதாகக் கர்த்தருடைய வார்த்தைக்குறித்த அறிவு மற்றும் இரண்டாவதாகச் சத்தியத்தின் ஆவியினைப் போதுமானளவில் பெற்றிருத்தல் - கர்த்தருடைய ஸ்தானாபதியென எப்போதும் நம்பப்படுவதற்குப் பாத்திரமாய் இருத்தல் ஆகும். வேறு எவரும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் போதகர்களாக அல்லது வழிநடத்துபவர்களாக அடையாளம் கண்டு கொள்ளப்படக்கூடாது. உயர்ந்தவர்களும், கல்விமான்களும், திறமையுடைய

வர்களுமாய்க் காணப்படுபவர்கள் மாத்திரந்தான் கர்த்தருடைய வார்த்தைகளுக்கான ஊழியர்களாய் இருக்க வேண்டும் என்பது திருச்சபை மயமான சார்ந்திருத்தலுக்கு (churchianity) உரிய கருத்தாய்க் காணப்படுகின்றது; ஆனால் இதற்கு எதிர்மாறானதாகவே வேதாகமம், காரியத்தை முன்வைக்கின்றதாய் இருக்கின்றது. "கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்மேல் இருக்கிறது; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" (ஏசாயா 61:1).

கர்த்தருடைய ஆவியையும், சாந்தத்தின் ஆவியையும், தயாளத்தின் ஆவியையும், பொறுமையின் ஆவியையும், நீடிய பொறுமையின் ஆவியையும், சகோதர சிநேகத்தின் ஆவியையும் மற்றும் அன்பின் ஆவியையும் வெளிப்படுத்துபவர்களும் - வேதவசனம் மற்றும் தெய்வீகத் திட்டம்குறித்து நல்லறிவைப் பெற்றிருப்பவர்களும் - சத்தியத்தின் ஆவியையும், பரிசுத்தத்தின் ஆவியையும் மதிக்கிறதை வெளிப்படுத்துபவர்களும் - போதகசமர்த்தனுமாயும் இருக்கும் மூப்பர்களை இரட்டிப்பான கனத்துடன் எண்ணிடுவதற்கும் மற்றும் மற்றவர்களை மறுத்திடுவதற்கும் எவ்விடத்திலுமுள்ள வேத மாணவர்களின் சபையாரை வலியுறுத்துவது, மேற்கூறிய கண்நோக்கங்களினுடைய கண்ணோட்டத்தின்படி பார்க்கையில் நியாயமாய் உள்ளது என்று எண்ணுகின்றோம்.

## V. D. M. கேள்விகள்

பெயர்ச் சபையால் தங்கள் ஊழியர்களுக்குச் சாற்றப்படும் பெயர்களில் அநேகமானவைகள் முற்றிலும் வேதவாக்கியங்களுக்கு முரணாக, போற்றுதலுக்குரிய (Reverend), மிகவும் போற்றுதலுக்குரிய (Most Reverend), வேதசாஸ்திரி (Doctor of Divinity) என்பதாகவெல்லாம் காணப்படுகின்றது என்று நீண்டகாலத்திற்கு முன்பாகவே நாம் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தோம். இவைகள் வேதவாக்கியங்களினுடைய எழுத்துக்களுக்கு மாத்திரமல்லாமல், அதன் ஆவிக்கும்கூட எதிரானவையாகக் காணப்படுகின்றது. மூப்பர், உதவிக்காரர் மற்றும் பாஸ்டர் எனும் வார்த்தைகளானது வேதவாக்கிய வார்த்தைகளாக இருக்கின்றது என்ற உண்மையையும் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தோம். Verbi Dei Minister (V. D. M) என்ற இலத்தீன் பெயரையும் நாம் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தோம் மற்றும் இந்தப் பெயரானது பொதுவிடங்களில் பிரசங்கிக்கும் கிறிஸ்துவின் ஒவ்வொரு பிரதிநிதியும், திவ்விய வார்த்தையினுடைய ஊழியக்காரனாய் இருக்கின்றான் - மனித விசுவாசப்பிரமாணங்களினுடைய அல்லது சுயத்தினுடைய ஊழியக்காரன் அல்ல என்ற வேதாகமத்தின் கருத்தினை அப்படியே வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. தேவனாலும், அவருடைய

ஜனங்களினாலும் அங்கீகரிக்கப்படும் வேத மாணவர்கள் அனைவரும் தங்கள் தாலந்துகள், வாய்ப்புகள் மற்றும் வேதவாக்கியத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான வரையறைகளுக்கு ஏற்ப - திவ்விய வார்த்தையினுடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றனர்.

தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் தகுதிகள் தொடர்புடைய விஷயத்தில் போதுமானளவிற்கு விவரங்கள் தெரியாத நிலையில் வேத மாணவர்கள் அடங்கிய அநேகம் சபையார் காணப்படுகின்றனர் என்ற கண்ணோட்டத்தில், V. D. M. கேள்விகள் என்று அழைக்கப்படும் அநேகம் கேள்விகளை நாங்கள் தொகுத்துள்ளோம் மற்றும் இந்தக் கேள்விகளை ஆராய்கையில் அது அனைவருக்கும் பிரயோஜனமாய் இருக்கும் என்றும், அவைகளுக்கான பதில்களானது திவ்விய வார்த்தைக்குறித்த நியாயமானதொரு அறிவைப் பெற்றிருப்பவர்களை அறிய உதவிடும் மற்றும் அத்தகையவர்களின் ஊழியங்களானது பாதகமாய் இராமல் பிரயோஜனமாய் இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படலாம். இந்தக் கேள்விகள் சபை பிரிவுணர்ச்சி சார்ந்தது அல்ல, எந்தவொரு பிரிவிலும் காணப்படும் எந்தவொரு ஊழியக்காரனுக்கும் பொருத்தமானதாய் இருக்கும். அவை கவனமற்றவர்களை இடறச் செய்யும் நோக்கமுடைய, சிக்கவைக்கும் கேள்விகளும் அல்ல. அவைகள் எளிமையான நல்நம்பிக்கைகளின் அடிப்படையிலான கேள்விகள் ஆகும் மற்றும் அவைகளுக்குப் பதிலளிப்பது என்பது ஒவ்வொரு தனிநபருக்கும் உதவிகரமானதாய் இருக்கும் மற்றும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் போதகர்களாகவும், வழிநடத்துபவர் களாகவும், இருப்பதற்குப் பொருத்தமானவர்களை நியமிப்பதற்கும் விசேஷமாய் உதவியாய் இருக்கும்.

இவைகளை நாம் ஆயத்தம்பண்ணி, பயண ஊழியர்களுக்கு - Watch Tower Bible and Tract Society-இன் சார்பிலாக அனுப்பிவைக்கப்படும் பயண பிரசங்கிமார்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது மற்றும் எங்குமுள்ள சொசைட்டியினுடைய பிரதிநிதிகள் யாவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பின்னர்ப் பல்வேறு இடங்களிலுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களிடமிருந்தும் மற்றும் வேத மாணவர்களிலுள்ள மற்றவர்களிடமிருந்தும் இக்கேள்விக்கான விண்ணப்பங்கள் வந்தது. அனைத்து வேத மாணவர்களும் கேள்விகளை வாசித்து அதற்குப் பதிலளிக்கும்படிக்கு நாம் அறிவுறுத்தினோம். நாம் அநேக விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டோம் மற்றும் கேள்விகளுக்கான பதில் நிரப்பப்பட்டு எங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. நியாயமானவிதத்தில் இக்கேள்விகளுக்குப் பதில்கூற முடியாத எந்தச் சகோதரனும் பொருத்தமான பிரதிநிதியாகக் கருதப்பட வேண்டாம் என்பது அனைத்துச் சபைகளுக்குமான நம்முடைய பரிந்துரையாகும்.

அனைத்து வேத மாணவர்களும் இக்கேள்விகளைப் பெற்றுக்கொள்ளத்தக் கதாகவும், அவற்றின் எளிமையினைக் கண்டுகொள்ளத்தக்கதாகவும் அவற்றைக் கீழே நாம் வெளியிடுகின்றோம். சகோதரர்கள் Sturgeon, Burgees மற்றும் Stephenson, பயண ஊழியர்களால் அனுப்பப்படும் பதில்களை மதிப்பிடுவதற் கென்றுள்ள குழுவினராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அனைவருடைய பதில்களும் திருப்திகரமாக இருக்கும் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை. நற்காரணங்களினால் அல்லாமல் மற்றபடி யாரும் நிராகரிக்கப்படுகிறதில்லை மற்றும் காரணங்களானது முறையாய்ச் சுட்டிக்காண்பிக்கப்படும். இந்தக் கேள்விகளுக்கு நியாயமான, திருப்திகரமான பதிலை அளிக்காதவர்கள் மூப்பர்களாகவோ அல்லது உதவிக்காரர்களாகவோ தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் என்று நியூயார்க் பட்டணத்திலுள்ள சபையார், வாக்கினால் (vote) தீர்மானம் எடுத்துள்ளனர். இதே மாதிரி அனைத்துச் சபையார் மத்தியிலும் பின்பற்ற நாம் யோசனை கூறுகின்றோம். கேள்விக்கான பதிலை மதிப்பிடுபவர்கள் சபையார் மத்தியிலிருந்து ஏற்படுத்தப்படும் ஒரு குழுவினராக இருக்கலாம் அல்லது மேலே கூறப்பட்டுள்ள சொசைட்டியின் பிரதிநிதியானவர்கள் பதில்களை மதிப்பிடவும் மற்றும் தங்கள் விமர்சனத்தைத் தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப்படலாம்.

## வளர்ச்சியடைந்துள்ள வேத மாணவர்களுக்கான V. D. M. கேள்விகள்

1. தேவனுடைய முதலாவது சிருஷ்டிப்பின் செயல்பாடு எது?

2. தேவகுமாரனோடு தொடர்புடைய லோகோஸ் (Logos) என்ற வார்த்தைக்கான அர்த்தம் என்ன? மேலும் பிதா மற்றும் குமாரன் என்ற வார்த்தைகள் எதைத் தொடர்புபடுத்துகிறது?

3. உலகில் எப்பொழுது, எப்படிப் பாவம் நுழைந்தது?

4. பாவிகள்மேல் வந்த பாவத்திற்கான தெய்வீகத் தண்டனை என்ன? மேலும் பாவிகள் யார்?

5. மாம்ச சாயலை எடுக்க, "லோகோசுக்கு" ஏன் அவசியமாயிற்று? அவர் அவதாரம் எடுத்தாரா?

6. மனிதனாகிய கிறிஸ்து இயேசு, குழந்தைப்பருவத்திலிருந்து மரணம் வரை என்ன சுபாவத்திலிருந்தார்?

7. இயேசு உயிர்த்தெழுந்தது முதல், என்ன சுபாவத்திலிருக்கிறார்? மற்றும் யேகோவா தேவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் என்ன?

8. இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது, பெந்தெகொஸ்தே முதல் தற்போது வரை இயேசுவின் பணி என்னவாக இருக்கின்றது?

9. யேகோவா தேவனால் உலக மனுக்குலத்துக்கு இம்மட்டும் செய்யப்பட்டது என்ன? அதுபோலவே இயேசுவினால் செய்யப்பட்டது என்ன?

10. சபை நிறைவடைந்த பிறகு, அதனை குறித்த தெய்வீக நோக்கம் என்ன?

11. உலக மனுக்குலத்தைப் பொறுத்தவரையில், தெய்வீக நோக்கம் என்ன?

12. சீர்திருத்த முடியாதவர்களைக் குறித்த இறுதி முடிவு என்ன?

13. மேசியாவின் இராஜ்யத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக, உலக ஜனங்களுக்கு வரவிருக்கின்ற வெகுமதி அல்லது ஆசீர்வாதங்கள் என்ன?

14. பரலோக பிதாவோடும், கிறிஸ்துவோடும் உறவுக்குள் நுழைய, பாவிகள் என்ன படிகளை எடுக்கவேண்டும்?

15. தேவனுடைய வசனத்தில் வழிகாட்டியபடி, ஒரு கிறிஸ்தவன் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, அவனது நடைமுறை எப்படி இருக்க வேண்டும்?

16. ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்யும்படிக்கு நீ பாவத்திலிருந்து மனந்திரும்பியிருக்கிறாயா?

17. கர்த்தருடைய ஊழியத்துக்கு உன் எல்லா வல்லமைகளையும், தாலந்துகளையும் செலவிட, உன்னை அவருக்கு முழுத்தத்தம் செய்திருக்கிறாயா?

18. அடையாளமான தண்ணீர் முழுக்கின் வழியாக உன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருக்கிறாயா?

19. வேத மாணவரின் பரிசுத்தமான வாழ்வு வாழ வாக்குறுதி எடுத்திருக்கிறாயா?

20. வேதாகமப்பாடங்களின் ஆறு தொகுதிகளையும் முழுமையாகவும், கவனத்தோடும் படித்திருக்கிறாயா?

21. அந்த ஆறு தொகுதிகளிலிருந்து அதிக வெளிச்சமும், ஆதாயமும் பெற்றிருக்கிறாயா?

22. வேதாகமத்தின் மெய்யானதும், நிரந்தரமுமான அறிவைப் பெற்றிருக்கிறேன் என்றும், இந்த அறிவு கர்த்தருடைய ஊழியக்காரனாக, உன் எஞ்சியுள்ள வாழ்க்கையில் அதிக திறம்படச் செயல்படுவதற்கு உதவும் என்றும் நம்புகிறாயா?

**குறிப்பு:** இதை நிரப்பும் ஒவ்வொருவரும் தங்கள் அறிவின்படியே நிரப்ப வேண்டும். மற்றவரிடம் கேட்டோ அல்லது மற்றவரின் பதில்களைப் பார்த்தோ எழுதக்கூடாது. வேதாகமம் மற்றும் வேதாகமப்பாடங்கள் மற்றும் ஆசரிப்புக்கூடாரத்தின் நிழல்கள் பயன்படுத்தப்பட்டு, வேதவாக்கியங்கள் குறிப்பிடப்படலாம்.

## எதிர்ப்புகளுக்கான பதில்

இதற்கு எழுந்துள்ளது ஒரே ஒரு எதிர்ப்பு, இது பாபிலோனிய தன்மையுடையதாய், சபை பிரிவுணர்ச்சியாய் இருக்குமோ என்ற பயமாகும். ஆ! சரியானதை தவறு என்றும், வெளிச்சத்தை இருள் என்றும் காட்டுவதற்கு எப்படி மாபெரும் எதிராளியானவன் எப்போதும் நாடுவதைக் காண்கையில் வியப்பாகவே உள்ளது. எல்லா வல்லமையையும் மற்றும் அதிகாரத்தையும் தேவனுடைய ஜனங்களின் கைகளிலிருந்து எடுத்து, அதை ஒரு நபரிடமோ அல்லது கண்காணியிடமோ அல்லது மூப்பரிடமோ அல்லது போதகர்களின் குழுவிடமோ கொடுப்பதே பாபிலோனிய முறைமையாகும். ஒவ்வொரு எக்ளீஷியாவின் சுயாதீனத்தைப் பாதுகாத்திடுவதும், ஒவ்வொரு எக்ளீஷியாவும் அதன் சொந்த அதிகாரம் மற்றும் கடமையை அடையாளம் கண்டுகொள்ள செய்வதும்தான் எங்களுடைய நோக்கமாக எப்போதும் இருந்துள்ளது.

எதிர்ப்புத் தெரிவித்துள்ள சகோதரனுக்கு நாங்கள் கொடுத்த பதில் வாசகர்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும். ஆகவே அதை நாங்கள் கீழே கொடுத்துள்ளோம்:

அன்புள்ள சகோதரனுக்கு:-

தேவனுடைய சபையின் உரிமைகள் மற்றும் சுயாதீனம் பற்றின காரியங்களில் நீங்கள் கவனமாய் இருப்பதையும் மற்றும் சபை பிரிவுணர்ச்சியின் தன்மையில் தோற்றமளிக்கும் எதையும் எதிர்த்திட வேண்டும் என்று நீங்கள் கவனமாய் இருப்பதையும் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

சபை பிரிவுணர்ச்சி என்பது - உபதேசம் மற்றும் நடைமுறை விஷயத்தில் ஒருவரையொருவர் அடக்கி ஆளத்தக்கதாக அநேகம் கூட்டத்தார் அல்லது சபையார் ஏறெடுக்கும் முயற்சியாய் இருக்கின்றது என்று நான் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். நாங்கள் இதைப்போல் எந்த ஆலோசனையையும் முன்வைக்கவில்லை மற்றும் இதைப்போன்ற செயல்களுக்கு, உங்களைப் போன்று நாங்களும் எதிர்ப்பையே தெரிவிக்கின்றோம். நாங்கள் தேவனுடைய ஜனங்கள் காணப்படும் சபையாரை நிர்வகிக்கும் எந்தச் சட்டங்களையோ அல்லது விதிமுறைகளையோ கொண்டு வர முயற்சிக்கவில்லை மாறாக அவர்களைக் கொண்டே அவர்கள் மத்தியில் நியமத்தையும், ஒழுங்கையும் ஏற்படுத்த ஆலோசனை மாத்திரம் சொல்கின்றோம்.

உதாரணத்திற்கு ஒவ்வொரு சபையாரிலுமுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கு வாக்குகள் செலுத்திடும் விஷயத்தில், வாக்குச் செலுத்துவதற்கு முன்பு, தான் வாக்களிக்கும் நபர்களின் தகுதிகளைக் கண்டிப்பாக எண்ணிப்பார்க்க வேண்டும். அதாவது: (1) வேதத்தின் அடிப்படையான சத்தியங்கள் பற்றின அந்த நபரின் விசுவாசம் தொடர்புடையதான அறிக்கைகள் என்ன? (2) சத்தியத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு அதை மற்றவருக்கும் போதிப்பதற்கு ஏதுவாக, வாக்களிக்கபடுகிறவர் சத்தியத்தைத் தெளிவாய்ப் புரிந்துள்ளாரா அல்லது இல்லையா? (3) அந்த நபர் கர்த்தருக்குத் தன்னைத் தத்தம் செய்துள்ளாரா; மேலும் அதை அடையாளத்தில் காண்பித்துள்ளாரா அல்லது இல்லையா? (4) உயர் நன்னெறி கொள்கைகள் அவரிடத்தில் வெளிப்படுகின்றதா? மற்றும் வாக்குறுதியின் உயர்வான கொள்கைகளுக்கு உடன்பாடு தெரிவிக்கின்றாரா அல்லது இல்லையா?

இதுவரையிலும் சபையார் இந்தக் காரியங்களை ஊகித்து அறிய வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தனர்; ஆனால், இப்பொழுதோ சபையார் ஊக மதிப்பீடு செய்யாமல் சகோதரர்களிடம் இந்த வி. டி. எம் கேள்விகளையோ அல்லது சபையார் விரும்பும் வேறே வகையான கேள்விகளையோ கேட்கலாம் என்றும், சபையாருக்குத் தகுதியான பிரதிநிதிகள், ஊழியக்காரர்கள் யார் என்று தீர்மானிக்கும் முன்பு அவர்களிடம் கேள்விகள் கேட்டு, பதில்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் நாங்கள் யோசனை கூறுகின்றோம். இப்படிச் செய்வதன் மூலம் சபையாரின் அதிகாரம் தக்கவைக்கப்படுகின்றது; இதைப்போல, பிரிவுணர்ச்சியின் அடிப்படையிலான எந்த அமைப்பும், செய்ய முடியாது; மேலும் இது

சபையாரைப் பிரதிநிதிகளின் தகுதிகளை நிதானிக்க செய்து, அதை வேதத்தில் சொல்லப்பட்ட வண்ணமாக கைகளை நீட்டி, ஒருவரைச் சபையாருக்குப் பிரதிநிதியாக ஊழியம்செய்ய அங்கீகரிக்க அல்லது ஏற்படுத்த ஏதுவாக்குகின்றது.

உங்கள் கடிதத்தில் வி.டி.எம். கேள்விக்கான பதில்களை மதிப்பீடு செய்ய நியமிக்கப்படும் மூன்று சகோதரர்களுக்கான ஏற்புடைமை பற்றிக் கேள்வி எழுப்பி உள்ளீர்கள்.

ஒவ்வொரு சபையாரும் இறுதியான முடிவை எடுக்கத்தக்கதாக - இக்கேள்விகளுக்கான பதில்களை மதிப்பீடு செய்யவும், திருப்திகரமான விதத்தில் பதில்கள் வராதபட்சத்தில் அது குறித்துத் தகவல் கொடுக்கவும் தக்கதாக, இது விஷயத்தில் நம்பிக்கைக்குப் பாத்திரமான பகுத்துணர்தலை உடைய சில சகோதரர்களை அடையாளம் கண்டுகொள்ள அல்லது நியமிக்க நிச்சயமாகவே சபையார் உரிமைபெற்றிருக்கின்றனர் என்று நான் பதிலளிக்கிறேன். வாக்கெடுப்பிற்குமுன் சபையாரிலுள்ள ஒவ்வொருவரும், கேள்விக்கான பதில்களைத் தெரிவிப்பதைவிட, இதுவே சுலபமான வழியாய்க் காணப்படும் என்று நம்புகின்றோம். எனினும் சபையாரே இதைக் குறித்துத் தீர்மானம் செய்ய வேண்டும். (NewYork City) நியூயார்க் பட்டணத்தின் சபையார் விஷயத்தில், மதிப்பீடு செய்யும் குழுவினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மூன்று சகோதரர்களின் பரந்த மனப்பான்மையின்படியான தீர்மானத்தின் மீது, எல்லோரும் நம்பிக்கைக் கொள்வோம் என்று ஏகமனதாய் வாக்குகள் செலுத்தப்பட்டுள்ளது.

### “**வாக்குறுதி**” **பற்றி:**

இதைக் குறித்து நீங்கள் கொஞ்சம் எதிர்ப்பதும், உங்கள் கடிதத்தில் தெரிய வருகிறது மற்றும் அதனுடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்வது தேவையில்லை என்ற எண்ணம் இருப்பதும் தெரிகிறது. அந்த வாக்குறுதியில் எது மறுப்பிற்கிடமாய் உள்ளது என்று நேரிடையாய்த் தெரிவிப்பதற்குப்பதிலாக, வாக்குறுதியின் வார்த்தைகளானது அப்படியே வேதவாக்கியங்களில் இல்லை என்ற உங்களது கருத்திற்குப் பின்பாக ஒளிந்து நிற்கின்றீர்கள். ஆங்கிலமொழியில் காணப்படும் யாதொன்றையும் வேதவாக்கியங்களில் காணமுடியாது; ஏனென்றால், அது வேறு மொழியில் எழுதப்பட்டிருந்தது என நினைவூட்ட விரும்புகிறோம். நம்முடைய பாடல்களை வேதவாக்கியங்களில் காணமுடியாது. நமது விசுவாசத்தினை அறிக்கையிடுவதற்கு நாம் பயன்படுத்தும் வார்த்தைகளை அப்படியே வேதவாக்கியங்களில் நாம் இன்று காணமுடியாது. வேதவாக்கியங்களானது, நீதியான வாழ்க்கை வாழத் தேவையான பொதுவான கொள்கைகளையும் மற்றும் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டதான விசுவாசம் பற்றின அடிப்படை சத்தியங்களையும் நமக்கு முன்வைக்கின்றன. நாம் பாடும் பாடல்கள், போதிப்பவைகள், ஜெபங்கள், எழுதுபவைகள் மற்றும் செயல்கள் அனைத்தும்

வேதம் முன்வைக்கும் இந்த அடிப்படையான கொள்கைகளுடன் இசைவாய்க் காணப்படத்தக்கதாக நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த வாக்குறுதியின் சொல்நடையானது, தேவனுடைய வார்த்தையின் ஆவி மற்றும் சாரத்திற்கு முழு இசைவுடன் இருக்கின்றது என நம்புவதாக, வாட்ச் டவரின் பெரும் திரளான வாசகர்கள் தகவல் கொடுத்துள்ளார்கள். எந்த ஒரு சகோதரனும் இதற்கு எதிர்த்து நின்றால், அவன் தேவனுடைய வார்த்தையின் ஆவிக்கு விரோதமாகச் செயல்படுகிறான் என்று அர்த்தமாகாதா? இப்படி இருப்பவர் மூப்பர் அல்லது உதவிக்காரராக வேதமாணவர்களின் சபையாருக்குத் தகுதியான பிரதிநிதியாக இருக்க முடியுமா? இல்லை என்றே நாங்கள் நினைக்கிறோம். "வாக்குறுதியில்" ஏதேனும் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால், அதாவது அது தேவனுடைய வார்த்தையின் எழுத்துக்கள் மற்றும் சாரத்திற்கு இசைவு இல்லாமல், மாறானதாகக் காணப்படுமாயின் அதை அறிய விரும்புகின்றோம் - அதை எல்லா வேதமாணவர்களும் அறிய விரும்புவார்கள். இதுவரையிலும் யாரும் இந்த வாக்குறுதியின் வார்த்தைகள் மற்றும் ஆவியானது, தேவனுடைய வார்த்தைக்கும், ஆவிக்கும் எதிராக இருக்கின்றது எனக் காண்பிக்கவில்லை. ஆகவே, ஒருவன் வாக்குறுதிக்கு இசைவாய் இருக்க மறுத்தாலும், அதைத் தன்னுடையதாக ஆக்கிக்கொள்ள விருப்பமற்று இருந்தாலும், அவனிடத்தில் ஏதோ ஒரு காரியம் உள்ளது - அவனுடைய சிந்தை அல்லது இருதயம் தேவனுடைய வார்த்தைக்கும், அதன் ஆவிக்கும் இசைவற்று இருக்கின்றது என்பது எங்களது பகுத்துணர்தலாய் இருக்கின்றபடியால், அவன் பொருத்தமான மூப்பராகவோ அல்லது உதவிக்காரனாகவோ இருக்கமாட்டான் என்று எல்லாச் சபையாருக்கும் ஆலோசனை கூறுகின்றோம்.

ஆகவே அன்பான சகோதரனே, நீங்கள் இதை வாசித்து, சிந்தித்து, ஜெபம் பண்ணும்போது, நீங்கள் தவறாய் முதலில் கணித்துவிட்டீர்கள் என்று உணர்ந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன் அல்லது நான் முழுமையாகப் பதில் அளிக்கவில்லை, சிலவற்றை விட்டுவிட்டேன் என்று நீங்கள் கண்டால், அதை எனக்கு நீங்கள் தெரிவிப்பதில் மகிழ்ச்சிக் கொள்வேன்.

நான் நினைப்பூட்டுவது என்னவென்றால்: இந்த வாக்குறுதியினை நாம் கர்த்தரிடத்தில் பண்ணுகிறோம் சகோதரரிடத்தில் அல்ல; ஆகையால் யார் ஒருவர் தான் வாக்குறுதி பண்ணினதாக அறிக்கை செய்கிறாரோ, அதன்மூலம் அவர் எந்த ஒரு சகோதரனுக்கும் அடிமையாகி விடுவதில்லை; மாறாக தான் அடையாளம் கண்டுகொண்டுள்ள கடமையினையும், அதைத் தேவனுக்கு அறிக்கைப் பண்ணியுள்ளதையும் மாத்திரம் சகோதரருக்கு அறிக்கை செய்கிறார். ஆகவே வாக்குறுதி எடுத்துள்ள சகோதரனின் காரியத்தில் தலையிட்டு ஆராய்ச்சி செய்வது, சகோதரர்களுக்கடுத்த காரியமல்ல. வாக்குறுதியை உண்மையாகத் தக்கவைப்பது என்பது, கர்த்தருக்கும் அவனுக்கும் இடையில் உள்ள காரியம்.

வாக்குறுதியானது அவனுடைய சகோதரர்கள் மற்றும் சபையாருக்கான அவனது பொறுப்பினைக் கூட்டவோ குறைக்கவோ செய்யாது. வாக்குறுதி பண்ணினதாக அவன் அறிக்கை பண்ணுவது என்பது நன்னெறியோடு ஜீவிப்பதற்கு, தான் அடையாளம் கண்டுகொண்டுள்ள மற்றும் பின்பற்ற நாடுகின்றதான உயர் நிலைப்பாட்டினைச் சகோதரர்களுக்குத் தெரிவிப்பதாய் மாத்திரமே இருக்கும்.

---

R4501

## சண்டைக்காரராயிருந்து

*"தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும்." (ரோமர் 2:6-8)*

மேற்கூறப்பட்டுள்ளதான அப்போஸ்தலனுடைய வார்த்தைகளானது, கொஞ்சம் எல்லோருக்குமே பொருந்துகின்றதாக இருப்பினும், இவைகள் விசேஷமாய்ச் சபைக்குப் பேசப்பட்டுள்ளது மற்றும் சபைக்குப் பொருந்துகின்ற தாகவும் இருக்கின்றது. பொதுவாகவே தாங்கள் தெய்வீகச் சித்தமென அறிந்திருக்கிற எவற்றிற்கும் அன்புடன் கீழ்ப்படிந்த நிலையில் மேலானவைகளையும், உன்னதமானவைகளையும் நாடுகின்றவர்கள், அவர்களது பாதையானது இடுக்கமானதாகவும், குறுகலானதாகவும் இருப்பினும், தினந்தோறும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருக்கின்றனர். ஆனால் சண்டைக்காரர்களாயும், குற்றம் கண்டுப்பிடிக்கிறவர்களாயும், எளிதில் கோபங் கொள்ளுகிறவர்களாயும், திருப்தியற்றவர்களாயும் இருப்பவர்கள் தங்களுக்கும், மற்றவர்களுக்கும் தொடர்ந்து பிரச்சனை உண்டுபண்ணுகிறவர்களாக இருப்பார்கள் மற்றும் தேவனாலும், தேவனுக்கு இசைவாய்க் காணப்படுகின்றவர்களாலும் அங்கீகரிக்கப்படாத ஒரு பண்பினை, நித்திய ஜீவனைப் பலனாகப் பெறமுடியாத ஒரு பண்பினை வளர்க்கின்றவர்களாய் இருப்பார்கள்; பிரச்சனையைத் தொடர்ந்து, கொண்டுவருகிறதும், இறுதியில் தோல்வியடையப் பண்ணுகிறதுமான ஒரு பண்பினை வளர்க்கின்றவர்களாய் இருப்பார்கள்.

ஆனால் அப்போஸ்தலன் இங்கு இவ்வார்த்தைகளைத் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்குப் பொருத்துவது போன்று, நாமும் பொருத்திப்பார்க்கும்போதே, நம்முடைய இந்தப் பாடம் மிகவும் தெளிவாய்ப் பிரகாசிக்கின்றதாய் இருக்கும். சிலரே - சிறுபான்மையானவர்களே தேவனுடைய சிறந்த மற்றும் பிரமாண்டமான ஈவிற்காக -- மீட்பரோடுகூட அவரது மகிமையின் இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாய் இருப்பதற்கும், அவரது மகிமையான திவ்விய சுபாவத்தில் பங்காளிகளாகுவதற்கும் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் நாடுகின்றனர். இந்த மாபெரும் பரிசினை வெற்றிகரமாய் நாடிடுவதற்கு ஒரே ஒரு வழியுள்ளது; அது நமது மீட்பருக்கொத்த குணலட்சணத்தின் சாயலைப் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் நமக்குள் விருத்திச்செய்து, வளர்த்திக் கொள்வதாகும் (உரோமர் 8:29). கர்த்தருக்கு ஊழியம் புரிந்திடுவதற்கான பல்வேறு வாய்ப்புகள் நம்முன் வைக்கப்பட்டுள்ளது மற்றும் அவைகள் ஆசீர்வாதமான சிலாக்கியங்களாக இருக்கின்றன; கிறிஸ்தவ குணலட்சணங்களில் நாம் வளர்ச்சியடைவதே இந்த ஊழியங்களை அனுமதித்திடுவதற்கான தெய்வீக நோக்கம் மற்றும் எண்ணமாகக் காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம். அனைத்து மனுஷர்களுக்குமான கட்டளை - தேவனைப் பிரதானமாய்க் கனம்பண்ணுதல் மற்றும் நம்மை நாம் அன்புகூருவதுபோன்று பிறரை அன்புகூர்ந்தவர்களாக, நம்மை மற்றவர்கள் நீதியாய்க் கையாளப்படுவதற்கு நாம் விரும்புவது போன்று, நாம் மற்றவர்களை நியாயமாய்க் கையாளுதலாகும்; ஆனால் புதுச்சிருஷ்டிக்கான விசேஷித்த கட்டளை - நம்முடைய மூத்த சகோதரன் சுயத்தைப் பலிச்செலுத்தி, நம்மை அன்புகூர்ந்தது போன்று, நாம் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் என்பதாகும். நாம் ஒருவருக்கொருவர் செய்திடுவதற்கு அனுமதிக்கப்படும் எதுவும், தேவனிடத்திலுள்ள நம்முடைய உண்மைக்கான, உலகத்தாரிடத்திலுள்ள நம்முடைய நீதிக்கான அல்லது சகோதர சகோதரிகளுக்கான நம்முடைய அன்புடன்கூடிய அர்ப்பணிப்பிற்கான பரீட்சையின் விதத்திலேயே காணப்படும்.

கர்த்தருடைய முன்மாதிரியைப் பின்பற்றினவர்களாக, நாம் சகோதர சகோதரிகளுக்கான ஊழியத்தில் நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களாகக் காணப்பட வேண்டும். இந்தக் கட்டளையானது, நம்முடைய சுயத்தைப் பலிச்செலுத்தலானது சகோதர சகோதரிகளுக்குத் தேவையாக இருக்கின்றது என்பதற்காக மாத்திரமல்லாமல், நம்முடைய அன்பு வளருவதற்கும் மற்றும் நமது அன்பிற்கான பரீட்சைக்குமான நம்முடைய தேவைக்குமாகும். "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார் (1 யோவான் 3:16).

ஆசாரியக்கூட்டத்தாரின் நலனுக்கடுத்தவைகளில் சுயத்தைப் பலிச்செலுத்திடுவதற்குத் திரளான வாய்ப்புகள் உள்ளன. இருளிலும், அறியாமையிலும்

மற்றும் மூடநம்பிக்கையிலும் சகோதரர்களில் சிலர் காணப்பட்டு, தற்கால சத்தியத்திற்கான மகிமையான வெளிச்சத்திற்குள் வழிநடத்தப்படுவதற்காக நம்முடைய உதவி தேவைப்படும் நிலையில் இருக்கிறவர்களாக மாத்திரம் காணப்படாமல், இதனோடுகூடச் சகோதரர்களில் சிலர் பெலவீனங்களையும், குறைப்பாடுகளையும் பெற்றவர்களாய் இருந்து, ஆறுதலளிக்கும் நம்முடைய அனுதாபங்களுக்கும் மற்றும் பலப்படுத்தும் உற்சாகமூட்டுதல்களுக்கும் அல்லது அன்புடன்கூடிய கடிந்து கொள்ளுதல்களுக்கும் தேவைப்பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். எவ்வளவாய் இக்காரியங்களில் எல்லாம் நாம் உண்மையாய்க் காணப்படுகின்றோமோ, அவ்வளவாய் நாம் சுயத்தைப் பலிச்செலுத்துபவர் களாகவும், நமது பரலோகப் பிதாவிற்கும், நமது மீட்பருக்கும் பிரியமாகவும், அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாகவும் காணப்படுவோம்.

மூப்பனாய்க் காணப்பட்ட தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் விவரித்ததாவது: அவரை எதிர்ப்பவர்களை அவர் சாந்தத்துடன் கண்டித்திட வேண்டும் மற்றும் தீமைக்குத் தீமை செய்திடக்கூடாது; பழிச்சொல்லுக்குப் பழிச்சொல் கூறக்கூடாது; குற்றச்சாட்டிற்குப் பதில் குற்றஞ்சாட்டிடக்கூடாது; மாறாக சாந்தத்துடனும், பொறுமையுடனும், அன்புடனும், தயவுடனும் சகோதர சகோதரிகளுக்கு மிகச் சிறந்த வழியைக் காண்பித்திட வேண்டும் மற்றும் கிறிஸ்துவுக்கொத்த குணலட்சணத்தில் நாம் வளர்த்திட வேண்டும் என்பதேயாகும். "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்கிறதன் மூலம்," "கிறிஸ்துவுக்கொத்த குணலட்சணத்தினைச் சோர்ந்துபோகாமல் வளர்த்திடுவதன் மூலம்," இப்படி வளர்த்திடுபவர்களுக்குத் தேவன் வாக்களித்துள்ளதான மகிமை, கனம் மற்றும் அழியாமையினை வெற்றிகரமாய் நாடி அடைந்திட முடியும். ஏனெனில் அப்போஸ்தலன் சுட்டிக்காண்பித்துள்ளதுபோன்று, தெரிந்தெடுக்கப்பட்ட சபையில், மணவாட்டி வகுப்பாரில் அடங்குபவர்கள் அனைவரும், குணலட்சணத்தில், இருதயத்தில் தம்முடைய குமாரனுக்கொத்த சாயலாக வேண்டுமென்று தேவன் முன்குறித்திருக்கின்றார் (உரோமர் 8:29).

அந்தோ! வெகுசிலரே கிறிஸ்துவுக்கொத்த குணலட்சணத்தின் சாயலில் நன்கு வளர்ந்திருக்கின்றனர். அந்தோ பரிதாபம்! அநேகர் தேவன் அங்கீகரிக்கமாட்டார் என்று தாங்கள் அறிந்திருக்கிறதான - அதாவது ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் வளர்ப்பதற்குப் பதிலாக, விசுவாசத்தினை அழித்துப்போடுகிறதும், சமாதானத்தை அழித்துப்போடுகிறதும், நற்பண்புகள் அனைத்தையும் அழித்துப்போடுகிறதுமான தவறான ஆவியை - சண்டையிடும் ஆவியினை, குற்றம் கண்டுபிடிக்கும் மனப்பான்மையினை அபிவிருத்திச் செய்துகொண்டிருக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

அந்தோ பரிதாபம்! சத்தியத்தில் காணப்படுபவர்கள் மத்தியில், இந்தச்

சண்டைக்காரர்கள் அதிகமான எண்ணிக்கையில் காணப்பட்டு, உதவும் பணியைப் பண்ணுவதற்குப் பதிலாக அழிவின் பணியை, பாதகமான பணியைப் பண்ணுகிறவர்களாக இருக்கின்றனர். இத்தகையவர்கள் தங்கள் குணலட்சணத்திற்குப் பாதகமும், களங்கமும் தாங்கள் உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றனர் என்றும், தங்களை இராஜ்யத்திற்கு அல்லது எந்தத் தளத்திலுமுள்ள நித்திய ஜீவனுக்குப் பாத்திரமாகும் நிலையில் குறைவுப்படுத்திக் கொண்டே வருகின்றனர் என்றும் அறிந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தாங்கள் அழிவுக்கேதுவான பணியைச் செய்து கொண்டுவருகின்றனர் என்று இத்தகையவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இத்தகையவர்கள் தாங்கள் விரோதத்தை விதைக்கின்றனர் என்றும், கசப்பின் வேர்களை முளைத்தெழுப்பிக் கொண்டிருக்கின்றனர் என்றும், இவைகள் அநேகருக்குப் பாதகமாய் விளங்கும் பொல்லாத பலன்களை நிச்சயமாய்க் கொணரும் என்றும் அறிந்துகொள்ள வேண்டும். சபைக்குப் பாதகம் உண்டுபண்ணுகிறவர்களுக்குத் தேவன் வெளிப்படுத்தியுள்ளதான விசேஷித்த கண்டனத்தை, இத்தகையவர்கள் நிச்சயமாய் அறிந்துகொள்ள வேண்டும் (மத்தேயு 18:6; லூக்கா 17:2).

இத்தகையவர்களுக்கான பலன் என்ன? மகிமையும், கனமும், அழியாமையுமல்ல; மாறாக உபத்திரவமும், வேதனையும், உக்கிர கோபாக்கினையே என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆனால் இவைகள் நித்தியமான கோபாக்கினையாகவும், வேதனையாகவும் இருக்கும் என்னும் அர்த்தத்தில் அப்போஸ்தலனும் குறிப்பிடவில்லை, நாமும் குறிப்பிடுகிறதில்லை. தேவனை எதிர்ப்பதற்கான உச்சக்கட்டமான தண்டனை, "இரண்டாம் மரணமாக" காணப்படுகின்றது என்பதை நாம் அறிந்திருப்பதினால், உபத்திரவமும், வேதனையும் தற்கால ஜீவியம் தொடர்புடையதாக இருக்கும் என்றே நாம் அனுமானிக்கின்றோம் - ஒன்றில் இத்தகையவர்கள் "திரள்கூட்டத்தாரில்" பங்கடைபவர்களாகக் காணப்பட்டு, மகா உபத்திரவக்காலம் வழியாய்க் கடந்துசென்று, இதில் தாங்கள் முன்பு கற்க தவறின படிப்பினைகளைக் கற்கின்றவர்களாய் இருப்பார்கள் அல்லது பண்புகளில் புளிப்படைந்தவர்களாக, ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களெனத் தாங்கள் பெற்றிருந்திருக்க வேண்டிய சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மற்றும் அன்பையும் தொலைத்து விட்டவர்களாக, திருத்தமுடியாதவர்களென, தேவனுடைய கிருபையையும், அவரது வார்த்தைகளினுடைய அறிவுரைகளையும் வீணாய்ப் பெற்றுக்கொண்டவர்களென "இரண்டாம் மரணம்" மரிப்பவர்களாய் இருப்பார்கள். திராட்சக்கனிகளால் அடையாளப்படுத்தப்படுகின்ற குணலட்சணத்தை வளர்த்திடுவதற்குப் பதிலாக, இத்தகையவர்கள் அழிவுக்கு வழிநடத்தும் முட்புதர்களின் இயல்புகளை வளர்த்துகின்றவர்களாய் இருப்பார்கள்.

# மறுரூபமாகுங்கள்

நன்கு செய்துகொண்டிருப்பவர்கள் மற்றும் நன்கு நாடிக்கொண்டிருப்பவர்கள் சார்பிலும் மற்றும் தீமை செய்துகொண்டிருப்பவர்கள் மற்றும் சண்டையிடுபவர்கள் சார்பிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லையெனில், திவ்விய கட்டளைகளாகிய இவைகள் மீது கவனத்தினைத் திருப்பிடுவதிலோ, கண்டனம் பண்ணும் இவ்வார்த்தைகளை அப்போஸ்தலன் எழுதிடுவதிலோ நமக்கு எந்தப் பிரயோஜனமும் இராது. இந்தக் கண்டனங்களானது, நம்முடைய குணலட்சணங்களைச் சரியான திசையில் உறுதிப்படுத்திடுவதற்கு நமக்கு உதவிசெய்வதற்கு நோக்கம் கொண்டிருக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்தக் கட்டுரையைப் படிக்கும் யாரேனும், தான் தவறான திசையில் போய்க்கொண்டிருப்பதையும், சண்டையிடுகிற மற்றும் குற்றம் கண்டுபிடிக்கிற ஆவியை அபிவிருத்திச் செய்வதையும் மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் மற்றும் அன்பின் ஆவியையும் குறைத்துப் போடுகிற மனப்பான்மையை அபிவிருத்திச் செய்வதையும் உணர்வார்களானால், தேவனுடைய கிருபையினால் மாறான நடக்கையை எடுத்திடுவதற்கு உடனடியாய்த் தீர்மானித்திடுவது நலமானதாய் இருக்கும். சோர்ந்துபோகாமல் நற்கிரியைச் செய்வதன் மூலமாகச் சரியான விதத்தில் பரலோக அழைப்பிற்கான மகிமையையும், கனத்தையும் மற்றும் அழியாமையையும் நாடிக்கொண்டிருப்பவர்கள் சரியான பாதையில் சோர்ந்துபோகாமல் காணப்படத்தக்கதாகவும், அதிகமதிகமாய் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகவும் மற்றும் அதிகமதிகமாய்ப் பாதுகாப்பாய்க் காணப்படத்தக்கதாகவும் மற்றும் தேவன் அங்கீகரிக்கக்கூடியதும், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று அவர் சொல்வதற்கு ஏதுவானதுமான குணலட்சணத்தில் பலப்படுத்தப்படத்தக்கதாகவும் உறுதிப்படுத்தப்படத்தக்கதாகவும் - உற்சாகமூட்டப்பட மற்றும் விழிப்படையப் பண்ணப்பட வேண்டும்.

தங்களைச் சண்டையிடும் தன்மையுடையவரென, குற்றம் கண்டுபிடிக்கும் தன்மையுடையவரென, மற்றும் ஆக்கப்பூர்வமாய் இருப்பதற்குப் பதிலாக தீங்கானவரென, எப்போதும் குற்றம் கண்டுப்பிடித்துக் கொண்டிருப்பவரென உணர்ந்துகொள்பவர்கள், மிகவும் துரிதமாய்ச் சீர்த்திருந்திடும்படி நாம் வலியுறுத்துகின்றோம். சபையினுடைய பரீட்சை நிலைமைக்கான முடிவை நாம் நெருங்கிகொண்டிருக்கின்றோம் என்றும், நாம் ஏற்கெனவே பரீட்சையின் காலத்தில் காணப்படுகின்றோம் என்றும், சரியான குணலட்சணங்களை வளர்த்திடாத காரணத்தினால், அநேகர் விழுந்துகொண்டிருக்கின்றனர் என்றும் இத்தகையவர்களுக்கு நாம் ஞாபகப்படுத்துகின்றோம். இத்தகையவர்கள் உடனடியாகக் காரியத்தை ஜெபத்தில் கர்த்தரிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும்

மற்றும் உதவிகரமான அவரது கிருபையின் மூலமாக உடனடியாக தங்களுடைய ஜீவியத்தின் இந்தத் தவறான திசையிலான ஓட்டங்களைத் திருப்பிடுவதற்கும் நாம் வலியுறுத்துகின்றோம். இத்தகையவர்கள் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்த்து, "சமாதானத்தைத் தேடி, அவரைப் பின்தொடரக்கடவர்கள்" மற்றும் முடிந்தமட்டும் "எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருக்க" வேண்டும் மற்றும் "தேவசமாதானம் அவர்களின் இருதயங்களில் ஆளக்கடவது" மற்றும் ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ளதான ஆசீர்வாதங்களுக்காக நன்றியுடன் காணப்படுவார்களாக. இப்படிப்பட்டதான இருதய நிலைமையானது, கர்த்தரிடத்திலோ அல்லது அவரது ஜனங்கள் மற்றும் அவரது வேலைகள் தொடர்புடையதான அவரது வழிநடத்துதல்களில் குற்றம் கண்டுபிடித்திடாது. இவர்கள் அனைவரிடமும் மற்றும் தங்களுக்கு பிரியமாய் இராதபடிக்குக் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட அனைத்திலும் - குற்றம் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, "அவரிடத்தில் கற்றுக்கொள்ளுகிறவர்களாக" இருப்பார்கள்.

நிழலான இஸ்ரயேலர்கள் மத்தியில் காணப்பட்டதான முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும் கானானுடைய ஆசீர்வாதங்களுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனும் உண்மையானது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு நாம் அனைவருக்கும் வலியுறுத்துகின்றோம் (1 கொரிந்தியர் 10:10). தெய்வீக ஏற்பாடுகளுக்கு எதிரான முறுமுறுப்புகளானது உண்மையில் கர்த்தருக்கு எதிரான முறுமுறுப்புறுகளாகக் காணப்படுகின்றது எனும் அர்த்தத்தைக் கொடுக்கும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் ஞாபகப்படுத்துகின்றோம். முறுமுறுக்காமல், முறையிடாமல், குற்றம் கண்டுப்பிடிக்காமல் நம்முடைய கைகளுக்கு அகப்படுபவைகளை நம்முடைய முழுப்பலத்துடன் செய்வோமாக (பிலிப்பியர் 2:14). தேவன் அவரது வேலைகளை நடத்திடுவதற்கு, அவரிடம் விட்டுவிடுவோமாக. ஒருவேளை அவரது வேலைகள் அனைத்தையும் அவர் நம் வசத்தில் ஒப்படைத்தாலும், நாம் அதை நடத்த முடியாதவர்களாய்க் காணப்பட்டு, திரும்பி அவரிடத்திலேயே எடுத்துச் செல்வதற்கும், அவரது வேலையை அவரே மேற்பார்வையிடுவதற்கு வேண்டிக்கொள்வதற்கும் கட்டாயத்திற்குள்ளாகுவோம் என்பதைத் தாழ்மையில் உணர்ந்துகொள்வோமாக.

கர்த்தரைக் காட்டிலும் நம்மால் நன்கு நிர்வகிக்க முடியும் என்றும், அவர் ஒழுங்குபண்ணியிருக்கிறதைக்காட்டிலும் நம்மால் அறுவடை வேலையை நன்கு வழிநடத்திட முடியும் என்றுமுள்ள எண்ணங்கள் நமக்கு வருமாயின், அவ்வெண்ணமானது - எதிராளியானவன் நம்மைச் சிக்கவைப்பதற்கு ஏதுவான கண்ணியாய் இருக்கின்றது என்று உணர்ந்து ஓடிவிடுங்கள். தெய்வீக ஏற்பாட்டில் குற்றம் கண்டுபிடித்து, அதில் மாற்றங்கள் பண்ணிடுவதற்கு முயற்சிப்பதற்குப் பதிலாக, கர்த்தர் நடத்திக்கொண்டுவருகிறதும் மற்றும் வழிகாட்டிக்

கொண்டுவருகிறதுமான வேலைகளில், நம்முடைய மனசாட்சி மற்றும் தாலந்துகள் அனுமதிக்கிறதற்கேற்ப ஒத்துழைப்புடனும், முறையிடாமலும் நம்முடைய பங்கை உண்மையாய்ச் செய்திடுவோமாக. ஒருவேளை கர்த்தர் தம்முடைய அறுவடை வேலைக்கடுத்த முழு நிர்வாகத்தையும் நம் கைகளில் ஒப்புக்கொடுத்தாரெனில், நாம் அவரைக் காட்டிலும் சிறப்பாய்ச் செய்ய முடியுமா என்பதை நிச்சயமாய் நாம் அறியோம்; ஆகையால் தேவன் நம்மை ஏற்றகாலங்களில் உயர்த்தத்தக்கதாக, அவரது பலத்தக் கரங்களின் கீழ் நாம் நம்மைத் தாழ்த்துவோமாக.

இப்படியாக தங்களைத் தாழ்த்திக்கொண்டு, தேவனுடைய கிருபையையும், ஞானத்தையும் உணர்ந்துகொண்டு, இதற்கு இசைவாய்க் காணப்படுபவர்கள் மாத்திரமே, இராஜ்யத்தின் வேலையில் ஏதேனும் பங்கினை அடைவார்கள் என்பதை நாம் திட்டவட்டமாய்த் தெரிந்துகொள்வோமாக. இறுமாப்பானவர்கள், மேட்டிமைக்கொண்டவர்கள், சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள், சண்டைக்காரர்கள், திருப்தியடையாதவர்கள் தற்காலத்தினுடைய நன்மைகளையும் சரி, எதிர்க்காலத்தினுடைய கனங்களையும் சரி அடைவதில்லை.

## கடுமையான சோதனையை அடைவீர்கள்

"என் சகோதரரே, அதிக (மாபெரும் நியாயத்தீர்ப்பு அல்லது சோதனை) ஆக்கினை (போதகர்களாகிய நாம்) அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம் - நாம் அனைவரும் பூரணமற்றவர்கள்" என்று கூறிப் போதகர்களாக விரும்புபவர்களை ஆட்கொள்ளும் விசேஷமான அபாயங்கள் தொடர்பாக அப்போஸ்தலனாகிய யாக்கோபு சகோதரரை எச்சரிக்கின்றார் (யாக்கோபு 3:1).

அப்போஸ்தலனுடைய வார்த்தைகளிலுள்ள சத்தியத்தினை அனைவரும் அடையாளம் கண்டுகொண்டிருந்தாலும், இவ்வார்த்தைகளானது வெகுசிலரையே பெரிதும் தடுத்துள்ளதாய்க் காணப்படுகின்றது. இதன் விளைவாக, அநேகர் சபையில் போதகராகும்படிக்கு நாடுகின்றனர் என்று நாம் காண்கின்றோம். போதகர்களென இவர்கள் கடுமையான சோதனைக்குள்ளாகுகின்றனர் என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளின் உண்மையையும் மற்றும் சத்தியத்தில் இடறி, விழுபவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த (போதக) வகுப்பாராகவே காணப்படுகின்றனர் என்றும் நாம் காண்கின்றோம். போதகர்கள் என்பவர்கள் அவசியமற்றவர்கள் என்றோ அல்லது தெய்வீக ஏற்பாடுகளுக்குப் புறம்பானவர்கள் என்றோ தெரிவிக்க வேண்டும் என்று நாம் இப்படியாக எழுதவில்லை; மாறாக போதகப் பணிக்குள் பிரவேசிக்கும் எவனும், தான் மேற்கொள்ளும் முக்கியமான பொறுப்புக் குறித்தும் மற்றும் பரம பட்டணத்தை நோக்கின தனது பாதையில் சூழும்

சோதனைகள் அல்லது பரீட்சைகள் குறித்தும் உணர்ந்த நிலையில், அப்பணியினைச் செய்திட வேண்டும் என்று தெரிவிப்பதற்காகவே இப்படியாக எழுதியுள்ளோம்.

"கண்காணிப்பை (மேய்ப்பனுக்கான, கண்காணிக்கான பணியினை) விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்" என்று பரிசுத்த பவுலடிகளார் எழுதியுள்ளார் மற்றும் இதன் காரணமாக யார் ஒருவன் சுத்தமான இருதயத்தில், ஆடுகளுக்கான உடன் மேய்ப்பன் என மற்றும் மீட்பருடன் உடன் வேலையாட்கள் எனக் கர்த்தருடைய காரணங்களுக்காக ஊழியம் புரிந்திட நாடுகின்றானோ, அவன் மிகவும் சிறந்த ஊழியத்தில் ஈடுபடுகின்றவனாக இருக்கின்றான். மந்தைக்கு ஊழியம் புரிந்திடுவதற்கான அக்கறையுடன்கூடிய வாஞ்சையில், மாபெரும் மேய்ப்பனுக்கு முழு இசைவுடன் காணப்பட வேண்டும் என்ற அக்கறையுடன்கூடிய வாஞ்சையில் - இந்த ஒரு நிலைப்பாட்டில் அவன் இவ்வூழியத்தினை நாடுவானாகில், அவன் இந்தளவுக்குக் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்பதினால், களிகூருவதற்கு வெட்கமடையக் கூடாது. ஆனால் ஒருவேளை அவன் தனக்குள் பேராசையின் ஆவியையோ, மேட்டிமையின் ஆவியையோ, தற்பெருமையடித்துக்கொள்ளும் ஆவியையோ, விசுவாச வீட்டாரின் சகோதர சகோதரிகளை இறுமாப்பாய் ஆளுவதற்கான ஆசையோ அதிகளவில் அல்லது கொஞ்சமேனும் காணப்படுவதைக் கண்டுபிடிப்பானானால், அவன் பயம் கொள்ளக்கடவன். நடுங்கின இருதயத்துடன் அவன் ஒன்றில் அவ்வூழியத்தினின்று விலகிடுவானாக அல்லது கிருபையின் சிங்காசனத்திடத்திற்குப் போய், தன்னுடைய இருதயங்களிலுள்ள பொல்லாத பேராசைகளினின்று தன்னைச் சுத்திகரித்துக்கொண்டு, ஆண்டவருடைய ஆவியினால் நிரப்பப்படுவானாக. அந்தப் பரிசுத்த ஆவியானது, சாந்தத்தின், தயவின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின், அன்பின் ஆவியாய் இருக்கின்றது; அது தேவனுக்கு மகிமை சாற்றிடுவதற்கும் மற்றும் அவரது ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கும் விரும்புகின்றதாய் இருக்கின்றது; அது மந்தைக்கு உதவி செய்யத்தக்கதாக அல்லது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் சமாதானத்திற்காக எத்தருணத்திலும் சுயத்தைப் பலிச்செலுத்திடுவதற்கு ஆயத்தமாய்க் காணப்படும் ஆவியாய் இருக்கின்றது.

சபையில் போதிக்க முற்படும் சகோதரருக்கான விசேஷித்த அபாயங்களைக் குறித்து ஏன் இப்படியாக அப்போஸ்தலன் எழுதிட வேண்டும் என்று சிலர் யோசிக்கலாம். அவரது வார்த்தைகள் தெய்வீக ஏவுதலினாலானது என்று நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என்றும், இன்னுமாக அனுபவங்களானது அவ்வார்த்தைகளின் உண்மையினை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது என்றும் நாம் பதிலளிக்கின்றோம். இன்னுமாகப் போதகம் பண்ணும் விஷயத்தில் ஈடுபடாத கர்த்தருடைய அருமையான

ஜனங்கள், தங்களால் போதகர்கள் என்று அங்கீகரிக்கப்படுபவர்களின் மற்றும் தங்களையும் அறியாமல் தங்களால் சோதனைக்குள் வழிநடத்தப்படுபவர்களின் திசைமாற்றங்களுக்குப் பெரும்பாலும் தங்களையும் அறியாமல் பொறுப்பு வகிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். போதகர்களைச் சுற்றி வளைப்பவைகள் (1) பெருமை மற்றும் (2) இறுமாப்பாகும்.

(1) சகோதர சகோதரிகளுடைய பாராட்டுப் பேச்சுகளினால் உற்சாகமூட்டப்படுகிறதினால், இவர்கள் தங்களைக் குறிப்பிடத்தக்கவர் என்று எண்ணும் விதத்திலேயும் மற்றும் தங்கள் பிரயாசங்களுக்குரிய வெற்றிக்கான காரணம் சத்தியத்தின் வியக்கத்தக்க ஆற்றலும், அருமையுமேயாகும் என்று சாற்றிடுவதற்குப் பதிலாக, தங்களுடைய இயற்கையான திறமைகள், தாலந்துகள் முதலானவைகளே வெற்றிக்கான காரணம் என்று சாற்றும் விதத்திலேயும் இவர்களுடைய மனப்போக்கானது காணப்படுகின்றது. இப்படியாகவே ஊழியக்காரர்கள் பொதுவாகக் கண்ணிக்குள்ளாகுகின்றார்கள்; காரணம் நம்முடைய சக அங்கத்தினர்கள் முன்னிலையில் மகிமையின் இராஜாவிற்கான ஸ்தானாபதிகளென நிற்பது உண்மையில் மிகவும் கனமிக்கக் காரியமாகும். சபை பிரிவிலுள்ளவர்களின் எண்ணிக்கையையும், ஞானத்தையும் குறித்துத் தற்பெருமையடித்துக்கொள்ளுவதே பொதுவாய் நிலவும் மனோநிலையாகக் காணப்படுகின்றது. ஆனால் "தற்கால சத்தியத்தினுடைய" வெளிச்சத்தில் காணப்படுபவர்கள் மத்தியில் தனிப்பட்ட விதத்தில் பெருமைக்கொள்வதற்கான சோதனை அநேகமாக இன்னும் அதிகமாகவே காணப்படும்.

திட்டம் நம்முடையதல்ல என்றும், அதன் நீளங்களும், அகலங்களும், உயரங்களும் மற்றும் ஆழங்களும் தேவனுடையது என்றும், அது அவரது ஜனங்கள் அனைவருக்குமானது என்றும், முடிந்தமட்டிலுமான மிகுந்த தாழ்மையான விதத்தில் அத்திட்டத்தினை அறிவிப்பது நமக்கான கனமாகும் என்றுமுள்ள உண்மைகளை நன்கு நினைவுகூருவதே மருந்தாகும்.

கர்த்தருக்கு உண்மையாய் இருத்தலானது அனைத்துக் கனமும், மகிமையும் இரட்சிப்பின் திட்டத்திற்கான மகா ஆசிரியருக்கும், இத்திட்டத்திற்கு மையமாய்க் காணப்படும் பலியைச் செலுத்தினவரும் மற்றும் நம்முடைய செய்தி முழுவதிலும் அடங்கியுள்ள அன்பினைச் செலுத்தினவருமான மாபெரும் மீட்பருக்கும் சேரத்தக்கதாக, நம்மையே மறைத்துக்கொள்ளத்தக்கதாக நம்மை நடத்திட வேண்டும். இவ்வெண்ணங்களை நம் மனதில் பதியப்பெற்றவர்களாக, நமக்கு அனுமதிக்கப்பட்ட ஊழியம் பெரியதாய் இருக்கையில், நம்முடைய தாழ்மையும் மற்றும் மகிமையின் மகா கர்த்தருக்கான வாய்க்கருவிகளாக இருப்பதற்கு நமது அபாத்திர நிலைப் பற்றின நமது உணர்ந்துகொள்ளுதலும் பெரிதாய்க் காணப்பட

வேண்டும்.

(2) இறுமாப்பு என்பது நாம் குறிப்பிட்டிருக்கிறபடி, சுற்றி நெருக்குகிற விஷயத்தில் ஒன்றாக இருக்கின்றது. அந்தோ பரிதாபம்! கர்த்தரால் அவரது செய்திக்கான அவரது வாய்க்கருவியாக இருப்பதற்கு ஒருவன் கனப்படுத்தப் பட்டிருப்பதினிமித்தம், அவன் தனது கர்த்தருடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்வதற்கும் மற்றும் சகோதர சகோதரிகளிடத்தில் இறுமாப்பாய் நடந்து கொள்வதற்கும் முற்படுவது என்பது அல்லது அப்போஸ்தலன் சொல்லுவது போன்று "தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகை" செய்ய முற்படுவது என்பது எவ்வளவு பொருத்தமற்றக் காரியமாய்க் காணப்படுகின்றது (1 பேதுரு 5:3). போதகர்களாய் ஊழியம் புரிந்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதான அந்தச் சகோதரர்கள், சபைக்கு அதிகாரிகளாக/சபையை இறுமாப்பாய் ஆளுகிறதற்காக இருப்பதற்குப் பதிலாக, சபையின் ஊழியக்காரர்களாக மாத்திரமே காணப்பட வேண்டுமென்றுள்ள முற்றிலும் மாறான ஒரு நிலைப்பாட்டினை வேதவாக்கியங்கள் நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. இவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருப்பினும், இவ்விஷயம் தொடர்பான தெய்வீக வழிகாட்டுதலானது, சபை மூலமாய் நாடப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் மூப்பர்கள், மேய்ப்பர்கள் அல்லது போதகர்களுடைய சபையின் தேர்ந்தெடுத்தலானது - சபைக்குரிய ஊழியங்களுக்கான, அதாவது சபைக்குப் பரிசுத்தக் காரியங்களில் ஊழியம் செய்திடுவதற்கும், சபைக்கு தேவகிருபையில் ஊழியம் செய்திடுவதற்கும், சபைக்குத் தெய்வீக வார்த்தைகளாகிய ஆவிக்குரிய உணவினைப் பரிமாறுவதற்கும் என்றுமுள்ள கர்த்தருடைய தேர்ந்தெடுத்தல் என்று அவர்களால் கருதப்படுபவர்களின் தேர்ந்தெடுத்தலாய் இருக்கின்றது.

மூப்பராகிய சகோதரர்கள் மற்றும் போதகர்கள் இடறும் விஷயத்தில், சபையாரும் அதிகளவில் பொறுப்பு வகிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். சபையார் தீமை நினைக்கக்கூடாது, தீமையாய்க் கற்பனை பண்ணிக்கொள்ளக்கூடாது அல்லது இறுமாப்பு என்று கற்பனை பண்ணிக்கொள்ளக்கூடாது என்றாலும், இந்தச் சகோதரர்களைத் தேவைக்கு மிஞ்சி முகஸ்துதி செய்யாதபடிக்கு, அவர்களைத் தேவைக்கு மிஞ்சி உற்சாகமூட்டாதபடிக்கு, புதிய வெளிச்சத்தை உண்டு பண்ணத்தக்கதாக அவர்களைத் தூண்டிவிடாதபடிக்கு, அவர்கள் விஷயத்திலுள்ள தங்கள் கடமைகளுக்கும் மற்றும் பொறுப்புகளுக்கும் சபையார் மிகவும் விழித்திருக்க வேண்டும்.

ஆவிக்குரியவர்களாகக் காணப்படும் அனைவரும் இந்த மூப்பர்களாகிய சகோதரர்களுக்கு உதவுபவர்களாகக் காணப்பட வேண்டும்; மற்றும் கர்த்தருக்கான அவர்களது உண்மையைக் குறித்து வாழ்த்திட/மகிழ்ச்சித் தெரிவித்திட வேண்டும் மற்றும் பழம்பெரும் காரியத்திற்கே (சுவிசேஷத்திற்கே) ஒழிய, மற்றப்படி

கற்பனையான கட்டுக்கதைகளுக்காகப் பாராட்டப்படக்கூடாது அல்லது கட்டுக்கதைகளின் விஷயத்தில் தொடர்ந்து ஊக்குவிக்கக்கூடாது. கிருபையின் சுவிசேஷமானது இன்னும் மாறிடவில்லை; அது இன்னமும் இயேசுவையும், அவரது அன்பையும் குறித்தும் மற்றும் பிதாவின் அன்பையும் குறித்துமான பழம்பெரும் காரியத்தைக் குறித்தே தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; அது வேத வாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ளதான நிபந்தனைகளுக்கு உண்மையாய் இருப்பதற்குரிய நமக்கான அழைப்பையும், தெரிந்துகொள்ளு தலையும் குறித்த சிந்தனைகளை இன்னமும் பெற்றிருக்கின்றது. இவைகள் தொடர்பாகவே சகோதரர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமேயொழிய, தேவவார்த்தைகளினுடைய எந்த அங்கீகரிப்பும் இல்லாமல், யூகம் பண்ணி நிழல்களை உண்டுபண்ணுகிறது தொடர்பாக ஊக்குவிக்கப்படக்கூடாது.

வழிநடத்துபவர்களின் சார்பிலான இறுமாப்பின் விஷயத்திலும் மற்றும் அவர்கள் சபை மீது இறுமாப்பாய் ஆளும் விஷயத்திலும், சபைக்கே மாபெரும் பொறுப்பு இருக்கின்றது என்று நாம் நம்புகின்றோம். பரிசுத்த பவுலடிகளார் சுட்டிக்காட்டுவது போன்று, புதிதாய் வந்துள்ளவர்கள் வேகமாய் முன்னுக்குத் தள்ளப்படக்கூடாது மற்றும் சத்தியத்தில் நன்கு வளர்ந்துள்ள மூப்பராய்க் காணப்படும் சகோதரரில் யாரேனும் இறுமாப்பிற்கும், சபையாரின் குரலை/வாக்கை அலட்சியம் பண்ணுதலுக்கும் மற்றும் சபை சார்ந்த காரியங்கள் தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகள் அனைத்திற்கும் இணங்கிட மனம் இல்லாமல் இருத்தலுக்குமான அறிகுறிகளை வெளிப்படுத்த துவங்குவாரெனில், இத்தகைய சகோதரனை இன்னும் தொடர்ந்து தேர்ந்தெடுக்க மறுப்பதன் மூலமும் மற்றும் சபையாருடைய உரிமைகளைக் குறித்து வலியுறுத்துவதன் மூலமும், இத்தகைய இறுமாப்பினைச் சபையார் உடனடியாய்க் கண்டித்திட வேண்டும். இப்படி வலியுறுத்திக் கூறும்போது, கோபத்துடன் (அ) சண்டைச் சச்சரவுடன் வலியுறுத்திடாமல், மாறாக அன்புடனும், சகோதரத்துவத்துடனும், பெருந்தன்மையுடனும் சபையின் உரிமைகளானது வலியுறுத்தப்பட வேண்டும் மற்றும் இது விஷயம் குறித்த சபையாரின் வாக்குகள் (Votes) கேட்கப்பட வேண்டும். ஒருவேளை சபையின் உரிமையைப் பாதுகாத்திட நாடிட்ட சகோதரனுக்கு வாக்குகள் (Votes) எதிராகக் காணப்படும் பட்சத்தில், அச்சகோதரன் தயவாய்க் கீழ்ப்படிந்திட வேண்டும்; ஏனெனில் அச்சகோதரனாலும்கூடச் சபையாருடைய வாக்கானது, முடிவு (decision) என்பதாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

தேவனுடைய ஏற்பாட்டின்படி கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய சபையில் மூப்பர்களாகவும் மற்றும் போதகர்களாகவும் ஸ்தானம் வகிக்கும் அருமையான சகோதரர்களுக்காக நாம் மிகுந்த அனுதாபம் கொள்கின்றோம். ஆகையால் இத்தகையவர்கள் ஆளாகக்கூடியதான கடுமையான சோதனைகளைக்

கவனத்திற்குக் கொண்டு வந்தபோதிலும் மற்றும் சபையார் தங்கள் கடமையைச் செய்திடுவதற்கும் மற்றும் இத்தகையவர்கள் தாழ்மையாயும், உண்மையாயும் காணப்படுவதற்குச் சபையார் உதவிடுவதற்கும் வலியுறுத்தினபோதிலும், அப்போஸ்தலனுடைய மொழிநடையிலேயே நாம் இன்னும் வலியுறுத்துவது என்னவெனில்: உயர் பண்புகளுடனும், தாழ்மையுடனும், சுயத்தைப் பலிச்செலுத்தியும் காணப்படுபவர்கள், மிக உயர்வாகவும் பார்க்கப்பட முடியாது மற்றும் மிக நேர்மையாயும் ஆதரவு அளிக்கப்பட முடியாது. அப்போஸ்தலனின் வார்த்தைகள் பின்வருமாறு: "தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணு கிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே" (எபிரெயர் 13:7, 8, 17); மீண்டுமாக "அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:13)

கிறிஸ்துவின் சபையில் மூப்பர் மற்றும் போதகர் ஸ்தானம் என்பது மிகவும் ஆபத்தான ஒன்றாகவும், தேவனுக்கும், சகோதரர்களுக்கும் பிரியமான விதத்தில் செயல்படுவதற்கு மிகக் கடினமான ஒரு ஸ்தானமாகவும் மற்றும் முழுக்க சோதனையுள்ள ஒரு ஸ்தானமாகவும் காணப்படுமாகில், சபையானது சோதனையை அதிகரிக்காதபடிக்கும், சோதனையைத் தூண்டிவிட்டுப் பொல்லாத கனிகளைக் கொணராதபடிக்கும், அனுதாபத்தினால் மிகவும் விழிப்புடன் காணப்பட வேண்டும். எங்கெல்லாம் உண்மையுள்ள ஊழியக்காரர் காணப்படுகின்றாரோ, இப்படிப்பட்டவருக்கு உண்மையுள்ள சகோதர சகோதரிகள் யாவரும் உதவியாய் இருப்பதற்கும் மற்றும் ஒத்துழைப்பதற்கும் எல்லா விதத்திலும் நாடிடவேண்டும்; குற்றம் கண்டுபிடிப்பதற்கும் மற்றும் அந்தக் காரியத்தையாவது, இந்தக் காரியத்தையாவது, வார்த்தையையாவது, தொனியையாவது, பார்வையையாவது, நடத்தையையாவது விமர்சிப்பதற்கு முற்படுவதற்குப் பதிலாக சகோதர சகோதரிகள் முழுக்க அன்பினாலும், அனுதாபத்தினாலும் நிறைந்து காணப்பட்டு மற்றும் அந்த ஊழியக்காரனுடைய அன்புடன்கூடிய வைராக்கியத்தையும், அர்ப்பணிப்பையும் மற்றும் தாழ்மையையும் மிகவும் உணர்ந்து, மதித்தவர்களாகி, முக்கியத்துவமற்ற, அற்ப காரியங்களைச் சுட்டிக்காட்டிடாமலும், கவனிக்காமலும் விட்டுவிட வேண்டும்.

அவ்வூழியக்காரனுடைய பணியின் பொறுப்பினை உணருகையில், சகோதர சகோதரிகள் தங்களால் ஒருவேளை அவர் வகிக்கும் ஸ்தானத்தில் நல்ல அல்லது மிகுந்த ஆற்றலுடனும், தாழ்மையுடனும் செயல்பட முடியுமா என்று சிந்தித்துப்பார்க்க முடிகின்றவர்களாகக் காணப்படுவார்கள்.

மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் தங்கள் மீது பொறுப்பானது காணப்படுகின்றது என்று நினைவில் கொண்டிருக்க வேண்டும் மற்றும் தெய்வீகச் சித்தம் குறித்துக் கருத்தூன்றி சிந்திக்காமலும் மற்றும் தெய்வீக வழிகாட்டுதலுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படாமலும் எந்த வாக்கும் (Vote) அளிக்கப்படக்கூடாது. இக்காரியம் தொடர்பான கர்த்தருடைய சித்தத்தை உறுதிப்படுத்த நாடுகையில், வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ளதான போதகருக்கான பண்புகளை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; அவை பின்வருமாறு: (1) ஐயத்திற்கிடமின்றி போதகர் என்பவர் போதிப்பதற்குரிய திறமிக்கவராகக் காணப்பட வேண்டும்; அவர் புரிந்திருப்பவைகளை எளிமையான விதத்தில் முன்வைப்பதற்குரிய இயல்பான திறன் அல்லது திறமை பெற்றிருக்க வேண்டும். (2) இன்னும் மிக முக்கியமானது என்னவெனில், அவருக்குப் போதிக்கும் திறமை இருக்குமானால், அவர் தப்பறையை அல்ல, மாறாக சத்தியத்தைத் தெளிவாய் முன்வைக்கத்தக்கதாக, அவர் சத்தியத்தில் தெளிவுள்ளவராய்க் காணப்பட வேண்டும். (3) தாழ்மையும், தேவபக்தியும் மூப்பருக்குத் தலைமையான மற்றும் அடிப்படையான/முதன்மையான தகுதிகளாகக் கருதப்பட வேண்டும். போதகர் ஒருவர் எவ்வளவுதான் திறமிக்கவராக இருப்பினும், எவ்வளவுதான் உபதேசத்தில் தெளிவானவராக இருப்பினும், அவருக்குத் தாழ்மையும், தேவபக்தியும் இல்லாதது வரையிலும் மற்றும் அவரது வார்த்தைகளும், கிரியைகளும், சகோதர சகோதரிகளுக்கான அவரது அன்பை வெளிப்படுத்தாதது வரையிலும் - அவர் இந்த ஸ்தானத்திற்குப் பொருந்தாதவராகக் காணப்படுவார். ஏனெனில் வேதவாக்கியங்கள் முன்வைப்பதுபோல, இந்தப் பண்புகளானது, தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. முன்பு போலவே இப்பொழுதும் - நன்மை செய்திடுவதற்கான மாபெரும் வாய்ப்புகளானது, பாதகம் செய்வதற்கான மாபெரும் வாய்ப்புகளாகக்கூடக் காணப்படுவதற்கு ஏதுவாய் இருக்கிறது என்பது உண்மையாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் தற்கால நிலைமைகளின் கீழ்ப் பூமிக்குரிய நோய்கள் போலவே, ஆவிக்குரிய ஆரோக்கியத்தைக் காட்டிலும் ஆவிக்குரிய நோயும், தொற்றுகளும், மிக வேகமாக பரவுகின்றது மற்றும் தொற்றிவிடுகின்றதாய் இருக்கின்றது.

# கைகளை வைத்தல்

## *மேற்கு வெர்ஜீனியா*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

நவம்பர் 15, 95-இன் டவர் வெளியீட்டில், "சபையினுடைய ஒழுங்கு" எனும் பாடம் தொடர்பான உங்களது மனமும், ஆராய்ச்சியும், எங்களுடையதற்கு மிகவும் துல்லியமாய் ஒத்திருப்பதைக் கண்டு நான் மனநிறைவடைந்தேன். அவ்விஷயம் தொடர்பான உங்கள் கருத்து எதையும் பார்ப்பதற்கு முன்னதாகவே, இங்குள்ள சபையானது, அதிக ஒழுங்கிற்கான அவசியத்தை உணர்ந்துகொண்டிருந்தார்கள் மற்றும் நீங்கள் கொடுத்திருந்ததான முழுப்பாடத்தையும் ஆராய்வதற்கு நிர்பந்தத்திற்குள்ளானார்கள்.

எனினும் நீங்கள் கவனிக்கத்தவறினதாகத் தெரிகிற அல்லது ஆராய்வதற்கு அவசியமற்றது என எண்ணினதாகத் தெரிகிற ஒரு காரியம் இருக்கின்றது; அது தொடர்பான உங்கள் கருத்தினை அறிந்திடுவதற்கு நான் பெரிதும் விரும்புகின்றேன்; அதாவது "கைகளை வைத்தல்" வழக்கம் தொடர்பாக ஆகும்.

முடிந்தமட்டும் மாதிரியைப் பின்பற்றிடும் விஷயத்திற்கு நானும் உங்களோடுகூட இருதயப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன் மற்றும் அப்படியாகச் செய்கையில், தேவனுடைய வரங்களுக்கான அங்கீகாரமானது, மூப்பராகிய சங்கத்தார் கைகளை வைப்பதாகிய பயபக்தியான முறைவாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றது என்ற எனது ஆராய்ச்சியின் முடிவினை என்னால் கண்டுகொள்ளாமல் விடமுடிகிறதில்லை. இப்பொழுதும் என்னுடைய ஆராய்ச்சி முடிவானது தவறாக இருக்குமானால், தயவாய் எனக்கு உதவிடுங்கள். ஒருவேளை உங்கள் புரிந்துகொள்ளுதலின்படி என்னுடைய ஆராய்ச்சி முடிவு தவறாய் இருக்குமானால் தயவாய் அப்போஸ்தலர் 6:6; 1 தீமோத்தேயு 4:14; 5:22-ஆகிய வசனங்களை விளக்கவும். "கண்காணி" மற்றும் "மூப்பர்" என்ற வார்த்தைகள் ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகளா?

இந்த ஓர் ஏற்படுத்துதலின் விஷயத்தில், ஆதிசபையார் எந்த விசேஷித்த வல்லமையை அருளிடவில்லை, தங்கள் மீது யாரையும் அதிகாரியாக அல்லது எஜமானாக ஏற்படுத்திடவில்லை என்பதை நான் அறிவேன்; எனினும் "மூப்பரை" அல்லது "கண்காணியை," இவர்கள் மேல் கைகளை வைக்கிறவர்களுக்கான பிரதிநிதியாக அல்லது ஊழியக்காரர்களாக, இந்த ஒரு முறையானது ஆக்குகின்றதல்லவா? நாங்கள் பெரிதும் மதிக்கின்றதான உங்கள் கருத்தானது இக்கேள்வியின் விஷயத்தில் எங்களைத் தெளிவுப்படுத்திடுமென நாங்கள் நம்புகின்றோம்.

நாங்கள் மூன்று "மூப்பர்களை" நியமித்திருக்கின்றோம் - அதில் ஒருவர் இவ்விடத்திலுள்ள வேலைகளை மேற்பார்வையிடுவார் மற்றும் மீதி இருவரும்

அருகாமையிலுள்ள இடங்களின் வேலைகளைப் பார்த்துக்கொள்கின்றனர்; அந்த இருவரில் நானும் ஒருவராவேன். நியமிக்கப்பட்டிருக்கின்றோம் என்றுதான் நான் குறிப்பிடுகின்றேன்; எங்கள்மேல் கைகள் ஏதும் வைக்கப்படவில்லை; ஆனால் இக்கேள்வியானது சகோதரர்களினால் இப்பொழுது விவாதிக்கப்பட்டு வருகின்றது மற்றும் சீக்கிரத்தில் இறுதி தீர்வுக்குள் வருமெனத் தோன்றுகின்றது.

உங்களுக்கான சகோதர அன்பில் தங்கள்,
சி. ஏ. மக்கிலங்

[பதில்:- வேதவாக்கிய வார்த்தைப் பயன்பாட்டின்படி "Presbytery" எனும் வார்த்தையானது "மூப்பர்கள் சங்கத்தினைக்" குறிக்கின்றதாய் இருக்கின்றது; "வயதான மனுஷன்" எனும் அர்த்தமுள்ள கிரேக்க வார்த்தையிலிருந்து, இவ்வார்த்தை வருகின்றதாய் இருக்கின்றது. "Bishop" எனும் வார்த்தை "கண்காணியைக்" குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் அப்போஸ்தலர் 20:28-ஆம் வசனத்தில் மூப்பர்களைக் குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் நிச்சயமாகவே பிலிப்பியர் 1:1-ஆம் வசனத்தில் மூப்பர்களுக்கான மற்றொரு பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1 தீமோத்தேயு 5:22-ஆம் வசனமானது, கைகளை வைத்தலின் மூலம் ஏற்படுத்துதலைக் குறிக்கின்றதாக இருக்கலாம்; ஆனால் உறுதியாய்ச் சொல்ல முடியாது.

மூப்பராகிய சங்கத்தார் (மூப்பத்துவத்தினை) தீமோத்தேயுவின் மேல் கைகளை வைத்தல் தொடர்பாகப் பார்க்கையில், இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்படும் மூப்பர்கள் என்பவர்கள் அப்போது இன்னும் ஜீவித்துக்கொண்டிருந்ததான அப்போஸ்தலர்களாய்க் காணப்பட்டனர். பவுல் தன்னால் துவங்கப்பட்ட ஊழியத்தினை, தனக்குப் பின் தொடரும்படிக்குத் தீமோத்தேயுவைத் தெரிந்துகொண்டார் மற்றும் அப்போஸ்தலர்கள் அனைவரும் இதை அங்கீகரித்திட வேண்டுமெனப் பவுல் விரும்பினது நிச்சயமே. அல்லாமலும் விசுவாசம் வைத்தவர்கள் யாவர்மேலும் கைகளை வைப்பதும் மற்றும் இப்படியாக ஆவியின் வரங்களைப் பகிர்ந்து கொடுப்பதும் அந்நாட்களில் அப்போஸ்தலர்களுடைய வழக்கமாய் இருந்தது. இப்படியாக வரத்தினைத் தீமோத்தேயு பெற்றிருப்பதை, அவருக்குப் பவுல் நினைப்பூட்டினார். அப்போஸ்தலர்களால் மாத்திரமே இவ்வரங்களை அளித்திட முடியும் என்பதற்கு ஆதாரமாக - மாயவித்தைக்காரனாகிய சீமோன் என்பவன் தான் யார்மேலும் கைகளை வைக்கையில், அவர்கள் ஆவியின் வரங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, தான் இவ்வல்லமையைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு அப்போஸ்தலர்களுக்குப் பணம்கொடுக்க முற்பட்ட

சம்பவத்தை நினைப்பூட்டுகின்றோம். அப்போஸ்தலர் 19:6-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பவத்தையும் நாம் நினைவுகூருகின்றோம்; இன்னுமாக அப்போஸ்தலர் 8:13-19-வரையிலான வசனங்களில், (சுவிசேஷகராகிய) பிலிப்பு சமாரியர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்திருந்த போதிலும் மற்றும் அவர்களும் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றிருந்தபோதிலும், இவர்கள்மேல் பிலிப்பு கைகளை வைக்கவுமில்லை, பரிசுத்த ஆவியினைப் பகிர்ந்து கொடுக்கவுமில்லை; மாறாக அப்போஸ்தலர்களாகிய பேதுருவுக்கும், யோவானுக்கும் செய்தி அனுப்பிவைக்கப்படுகின்றது மற்றும் இவர்கள் வந்து, அவர்களோடு கூட ஜெபம் பண்ணி, ஆவியின் வரங்களை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவைகள் அனைத்துமே, அப்போஸ்தலர்கள் மாத்திரமே ஆவியின் இந்த வரங்களைப் பகிர்ந்துகொடுப்பதற்கான வல்லமையைப் பெற்றிருந்தார்கள் என்பதைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அப்போஸ்தலர்கள் மூப்பர்கள் அல்லது மூப்பராகிய சங்கத்தார் என்று அழைக்கப்படுவது சரியே மற்றும் அவர்கள் தங்களை இப்படியாகவே தெரிவித்தும் கொண்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் உயிரோடிராததால், கைகளை வைத்தலின் மூலம் ஆவியின் வரங்களைப் பகிர்ந்துகொடுக்க முடிகின்றவர்கள் எவரும் இல்லை.

மேலும் ஆதி சபையில் கைகளை வைக்குதலானது, ஒப்புதலைச் சுட்டிக்காட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டது என்பதைக் கவனியுங்கள்; இதற்கு உதாரணமாக, அந்தியோகியாவிலுள்ள சபையானது, தங்கள் ஊழியக்காரர் களாகவும், சுவிசேஷவேலையின் பிரதிநிதிகளாகவும் இருப்பதற்குப் பவுலையும், பர்னபாவையும் தெரிந்தெடுத்த சம்பவம் காணப்படுகின்றது. இந்தச் சபையார் உபவாசம் இருந்து, ஜெபித்து, தங்கள் கைகளைப் பவுல் மற்றும் பர்னபாவின் மீது வைத்து, அவர்களை அனுப்பி வைத்தார்கள். இந்த ஒரு சந்தர்ப்பத்தில் கைகளை வைத்தலானது, எந்த வரத்தையாகிலும் பகிர்ந்துகொடுப்பதைக் குறிக்கிறதாக இராமல், மாறாக பிரதிநிதித்துவத்தினை மாத்திரம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அதாவது முற்காலத்து ஆசாரியர்களின் விஷயத்தில், மிருகம் அடிக்கப்படுவதற்கு முன்னதாக, பலிச்செலுத்துபவர், மிருகத்தின் மீது தனது கையை வைக்கையில், அது - கைகள் எந்த மிருகம் அல்லது நபர் மீது வைக்கப்படுகின்றதோ, அந்த மிருகம் அல்லது நபர் அதன் அல்லது அவன் மீது கைகளை வைத்த நபருக்குப் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது போன்றதாகும். இப்படியாக அந்தியோகியா விலுள்ள சபையார், அவர்கள் இருவரையும் தங்கள் மத்தியிலிருந்து, வேலைக்கான

தங்களது பிரதிநிதிகளென அனுப்பிவைத்தார்கள். அவர்களுடைய பிரயாணத்திற்கென இவர்கள் பணமும் கொடுத்தார்கள் என்பதிலும் மற்றும் பவுலும், பர்னபாவும் தங்களது பிரயாணத்தினை மேற்கொண்ட பிற்பாடு, அந்தியோகியா சபைக்குத் திரும்பி, இவர்களது பிரதிநிதிகளெனவும், கர்த்தருடைய பிரதிநிதிகளெனவும் தாங்கள் பண்ணின ஊழியத்தைக் குறித்த அறிக்கையையும் சபையாருக்குக் கொடுத்தார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. அப்போஸ்தலர் 14:26-27; 15:3-ஆகிய வசனங்களைப் பார்க்கவும்.

இவைகளைத் தற்காலத்திற்குப் பொருத்தி, நாம் கூறுகிறதாவது: ஐரோப்பியாவிலும், அமெரிக்காவிலும் பிரதிநிதித்துவத்தினைச் சுட்டிக்காட்டு வதற்குரிய கைகளை வைத்தல் வழக்கமானது இப்பொழுது நடைமுறையில் இல்லை - அதாவது எப்படிப் புருஷர்கள் மத்தியில் முத்தம் கொடுக்கும் வழக்கம் இப்பொழுது நடைமுறையில் இல்லாமல் இருப்பது போன்றதாகும். ஆனால் இவ்விரு வழக்கங்களும் இன்றளவும் கிழக்குத் தொலைவில் நடைமுறையில் இருக்கின்றது. ஆகையால் உள்ளூர் பொறுப்புகள் பார்க்கும் அல்லது பிரயாணம்பண்ணும் மூப்பர்களைச் சபையார் அங்கீகரித்தல் தொடர்புடைய விஷயத்தில் தேர்ந்தெடுத்தலும், உபவாசித்தலும், ஜெபித்தலும் நம்முடைய கணிப்பின்படி, தகுதியான செயல்களாகவே இருக்கின்றன; ஆனால் ஆவியின் வரங்களைப் பகிர்ந்து கொடுக்காததும், நம் நாட்டு வழக்கத்தில் பிரதிநிதித்துவத்தினைச் சுட்டிக் காட்டாத வழக்கமுமான கைகளை வைத்தலானது இனி மேலும் பொருத்தமானதாய் இராது. இது முறையற்றது என்று, பொதுவாய் நிலவும் வழக்கங்கள் மற்றும் பழக்கங்களின் கண்ணோட்டத்தின்படி கருதுகின்றோம்; ஏனெனில் அது தவறாய்ப் புரிந்துகொள்ளப் படலாம் மற்றும் அதைச் செய்கின்றவர்கள் தவறான கூற்றினை ஆதரிக்கின்றார்கள் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றதாய் இருக்கும் - அதாவது உரோமன் கத்தோலிக்கர்கள், கிரேக்க கத்தோலிக்கர்கள், எபிஸ்கோப்பலியர்கள், மார்மன்ஸ் மற்றும் சிறிய அளவில் கிட்டத்தட்ட மற்றச் சபை பிரிவினர்கள் யாவராலும் செய்யப்பட்டுவருவது போன்று, அங்கீகாரம் வழங்கிடுவதற்கும், பொறுப்பு ஒப்படைப்பதற்கும் மற்றும் கைகள் யார்மேல் வைக்கப்படுகின்றதோ, அந்நபருக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைகளைக் கொடுப்பதற்குமான வல்லமையோடுகூட, அப்போஸ்தல வாரிசு உரிமையானது தொடர்ந்து காணப்படுகின்றது என்ற அநேகருடைய கூற்றினை, அதைச் செய்கின்றவர்களும் ஆதரிக்கின்றார்கள் என்ற எண்ணத்தை உருவாக்கு கின்றதாய் இருக்கும்.]

# உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு

## மத்தேயு 5:33-37; யாக்கோபு 3:1-12; 5:12

*"அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்."* (எபேசியர் 4:25)

நம்முடைய கடந்த பாடத்தில் நாம் நியாயப்பிரமாண கடமைகள் தொடர்புடைய விஷயத்தில் பரிசேயருடைய போதனைகளிலிருந்து, இயேசுவினுடைய போதனையை வேறுபடுத்திப் பார்த்தோம். "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்ற தீர்மானத்திற்குள் நாம் வந்தோம். இன்றைய பாடத்தில் அவருடைய போதனைகளுக்கும், அவரது நாட்களில் காணப்பட்ட மதத்தலைவர்களுடைய போதனைகளுக்கும் இடையிலான வித்தியாசத்தினை வேறுபடுத்திப் பார்க்கப்போகின்றோம். சத்தியம்பண்ணும் பழக்கத்தினைக் கட்டுப்படுத்த மற்றவர்கள் முற்பட்டவர்களாய் இருந்தனர், ஆனால் மாபெரும் போதகரோ: "சத்தியம் பண்ண வேண்டாம்" என்றார். சத்தியம் பண்ணுதல் யாவும் எத்துணை மதியீனமான காரியமாய் இருக்கின்றது! சட்டத்தினால் எதிர்ப்பார்க்கப்படுகின்றதான சட்டரீதியான சத்தியம் செய்தல்களுக்கோ அல்லது சூளுரைகளுக்கோ நாம் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்பவர்கள் "தெளிந்த புத்தியுள்ள ஆவியினைப்" பெற்றிருப்பார்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் சொல்லியுள்ளது உண்மையே. இவர்கள் சத்தியம் பண்ணுதலின் அல்லது தங்களது வார்த்தைகளை உறுதிப்படுத்துவதற்குச் சத்தியம்பண்ணுவது அவசியமென எண்ணிக் கொள்ளுதலின் மதியீனத்தையும் மற்றும் இழிவான தன்மையையும் உணர்ந்துகொள்ள சீக்கிரம் ஆரம்பிப்பார்கள். ஒருவன் தான் பேசுவது உண்மை என்று கடுமையாய்ச் சத்தியம்பண்ணும் காரியமானது, தான் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பவர் தனது எளிமையான வார்த்தையை நம்பமாட்டார் என்று உணர்வதைச் சுட்டிக் காட்டுகின்றது; மேலும் இது தனது வார்த்தைகள் சாதாரணமாகவே நம்பிக்கைக்குப் பாத்திரமற்றது என்பதைக் குறிப்பாய்த் தெரிவிக்கின்றதாகவும் இருக்கின்றது.

"உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" என்ற ஆண்டவருடைய கட்டளையைக் கவனியுங்கள் (மத்தேயு 5:37). ஆம் என்று நீங்கள் சொல்லும்போது, அது ஆம் என்பதாகவே இருப்பதாக; இல்லை என்று நீங்கள் சொல்லும்போது, அது இல்லை என்பதாகவே இருப்பதாக! என்பதே ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு அர்த்தமாய் இருக்கின்றது என்பதில் உறுதியே. உண்மையைச் சொல்லுங்கள்! போகப்போக உங்களது நண்பர்களும் மற்றும் அயலகத்தார்களும் உங்களது வார்த்தைகளை எப்படி மதிப்பிடுவது என்று கற்றுக்கொள்வார்கள். வேறு

வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், உங்கள் வார்த்தையினுடைய உண்மையினை உறுதிப்படுத்துவதற்குச் சத்தியம் பண்ணவோ அல்லது உங்களது உண்மையை நிரூபிப்பதற்கு - நீங்கள் உண்மையற்றோ, உண்மைக்கு மிஞ்சியோ பேசவில்லை என்பதை நிரூபிப்பதற்கு, எவ்வகையான விசேஷித்த பலமான வார்த்தைகளைப் பயன்படுத்தவோ அவசியமிராத அளவுக்கு உங்களது பேச்சனைத்திலும் மிகவும் உண்மையாய்க் காணப்படுங்கள்.

## ஊழியர்கள் உண்மையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்

நம்முடைய ஆராய்ச்சியினுடைய இரண்டாம் பகுதியில், "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்" என்று பரிசுத்த யாக்கோபு புத்திமதி கூறுகின்றார் (யாக்கோபு 3:1, 2). கிறிஸ்தவர்கள் அனைவருமே தங்கள் நாவுகளுக்குக் கடிவாளமிட வேண்டியது அவசியமாய் இருப்பினும், மிகவும் உயர்த்தப்பட்ட ஸ்தானங்களில் இருப்பவர்களே இது தொடர்புடைய விஷயத்தில் மிகவும் தவறிடுவதற்கு ஏதுவானவர்களாய் இருப்பார்கள் என்று பரிசுத்த யாக்கோபு கூறுவதுபோன்று தெரிகின்றது. மிகவும் உயர்வான ஸ்தானங்களில் இருப்பவர்கள் பேச்சாற்றல் எனும் விசேஷித்த வரம் கொண்டவர்களாகவும், இந்தப் பேச்சாற்றலைப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பு எனும் விசேஷித்த ஈவினைக் கொண்டவர்களாகவும் இருப்பதினிமித்தம், மிகுந்த செல்வாக்கினை உடையவர்களானபடியால், இதற்கேற்ப இவர்கள் பொறுப்பாளிகளாக இருப்பார்கள்.

ஊழியக்காரர்களையோ அல்லது மற்றவர்களையோ நியாயந்தீர்ப்பது நமக்கடுத்தக் காரியமல்ல; நியாயந்தீர்க்க ஒருவர் இருக்கின்றார்; அவர் கர்த்தர் ஆவார். தாங்கள் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் அல்லது பேச வாய்ப்புப் பெற்ற ஒவ்வொரு வார்த்தைகளுக்குமான தங்களது பொறுப்புக் குறித்து அநேகம் ஊழியக்காரர்களும், எளிமையான நிலைகளில் காணப்படும் கிறிஸ்தவர்களும் முழுமையாய் உணர்ந்து கொள்ளத்தவறுகின்றனர் என்று நாம் பெரிதும் அஞ்சுகின்றோம். தாங்கள் விசுவாசிக்காதவைகளைத் தாங்கள் வருடக்கணக்காகப் பிரசங்கித்ததாக, அநேகர் நம்மிடம் கூறினதுண்டு. எவ்வளவு பயங்கரமாய்க் காணப்படுகின்றது! அவர்களால் செய்யப்பட்டது பொருளற்றதாகிவிட்டதே! அவர்களது கிறிஸ்தவ அடையாளம் எத்துணைப் பழிக்கிடமாகிவிட்டது! எனினும் இறுதியில் அவர்களது மனசாட்சிகளானது ஜெயம் கொண்டுள்ளதற்காக நாம் களிகூர வேண்டும்.

## சிறு தீக்குச்சிப் பெரிய தீயைக் கொளுத்திவிடும்

பரிசுத்த யாக்கோபு சில பலமான விளக்க உதாரணங்களைக் கொடுக்கின்றார். தங்களது குதிரைகளின் வாய்களில் கடிவாளம் போடுவதுபோன்று, கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த வாய்க்கும் கட்டுப்பாடு எனும் கடிவாளம் போட்டிட வேண்டும். கப்பலுக்குச் சுக்கானைப் பயன்படுத்துவதுபோன்று, ஜீவியத்தில் தங்கள் சொந்த வாழ்க்கைப் போக்கினைத் திசையறிந்து திருப்புவதற்குச் சுக்கானை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். சரீரத்தினுடைய அவயவங்களிலேயே நாவானது சிறியதாய் இருப்பினும், அதுவே அனைத்திலும் மிகுந்த ஆதிக்கமுடையது என்பதை அவர்கள் நினைவில் கொண்டிருக்க வேண்டும். கைமுட்டினால் குத்தும்போது, அது அருகாமையில் இருக்கும் ஒரு நபரை வேண்டுமானால் காயப்படுத்திடலாம்; ஆனால் கசப்பான வார்த்தையோ, விஷமுள்ள அம்புபோன்று தொலைவில் போய்த் தாக்கும்; ஆம் அது பெரிய துப்பாக்கியிலிருந்து குண்டுவெடித்து, பெரிய சேதத்தை ஏற்படுத்துவதுபோன்று, ஏற்படுத்திவிடும். ஆம்! இன்னும் அதிகமாய்ச் செய்திடும்; அதன் செல்வாக்கானது தொலைப்பேசிகள், தந்தி (telegraph) கம்பிகள் மற்றும் கம்பியில்லா கருவிகள் வாயிலாக, பூமியினுடைய மூலை, முடுக்கெல்லாம் கடந்துசெல்லும் மற்றும் உலகமெங்குமுள்ள செய்தித்தாள்களில் கொண்டுவரப்பட முடியும். அதற்கு எத்துணை ஆற்றல்மிக்க வல்லமை காணப்படுகின்றது! அது நமக்குக் கொடுக்கப்பட்டதான எத்தகையதொரு புனிதமான சொத்தாயுள்ளது! சரியாய் அல்லது தவறாய்ப் பயன்படுத்துவதற்குரிய எத்தகையதொரு தாலந்தாய் அது காணப்படுகின்றது!

மேலே கூறப்பட்டுள்ளது போன்று, நன்மை அல்லது தீமைக்கு ஏதுவான பரந்த அளவிலான வாய்ப்புகள் நம் அனைவருக்கும் இருப்பதில்லை; எனினும் நம்முடைய சொந்த இல்லங்களில், நாம் வேலை பார்க்கும் ஸ்தலங்களில், கடைகளில், சந்தைகளில் - ஒன்றில் சந்தோஷத்தை அல்லது துயரத்தை உண்டுபண்ணுகிறதற்கு ஏதுவாக, ஒன்றில் குணலட்சணத்தைக் கட்டியெழுப்புகிற அல்லது சீர்க்குலைக்கிறதற்கு ஏதுவாக, ஒன்றில் உதவிசெய்வதற்கு அல்லது சோர்வுபடுத்துகிறதற்கு ஏதுவாக - நாம் நன்மையான அல்லது தீமையான செல்வாக்கினை/தாக்கத்தினைப் பரப்பிடக்கூடும். எந்தக் கிறிஸ்தவனும் தனது மிகவும் ஆற்றல்மிக்க இந்த அவயத்தின் விஷயத்தில் அலட்சியமாய் இருத்தல் கூடாது. சிறு தீக்குச்சியானது பெரிய காட்டையே கொளுத்திவிடுவதுபோல, நாவும்கூட பெரிய தீயைக் கொளுத்திவிடும், பெரிய குழப்பத்தினை ஏற்படுத்திடும் மற்றும் பெரிதளவில் பாதகம் பண்ணிடும் என்று பரிசுத்த யாக்கோபு தெரிவிக்கின்றார். தற்பெருமையடித்துக்கொள்வது என்பது நாவினுடைய மிகவும்

அபாயகரமான பயன்பாடுகளில் ஒன்று என்று தெரிவிக்கின்றார். இதற்கு நம்முடைய அனுபவங்களும் சாட்சி பகர்கின்றன. பெருமையாய்ப் பேசுதல் என்பது - நம்மைப் பெரும்பாலும் தப்பறைக்குள் நடத்தி, அதில்தானே நம்மை இறுக்கிக் கட்டிப்போட்டு விடுகின்றது; காரணம் தவறை ஒப்புக்கொள்வதற்கு நாம் தாழ்மையற்றவர்களாய் இருப்போம்; அது நாம் தப்பித்துக்கொள்வதற்குச் சிரமப்படுகின்றதான அசத்தியத்திற்குள் நம்மைப் பெரும்பாலும் நடத்திவிடும். இது பெருமைக்கான அறிகுறியாகும் மற்றும் இதினிமித்தம் கிறிஸ்துவுக்கு ஒத்த சாயல் அற்றவர்களாகவும், சரியற்றவர்களாகவும் காணப்படுவோம்.

கோபமான வார்த்தைகள், கசப்பான வார்த்தைகள், ஏளனமான வார்த்தைகள், வசைமொழிகள் முழு வாழ்க்கைச் சக்கரத்தையும் கொளுத்தி விடுகிறதாய் இருந்து, வாழ்க்கையைக் கோபத்தின் சக்திகளினால் இரண்டாம் மரணத்திற்கு, கெஹன்னாவிற்கு நேராக இயக்குகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் தீமையில் பிறப்பிடம் கொண்டுள்ள வார்த்தைகளானது, அழிவுக்கு நேராய் வழிநடத்தும் கெஹன்னாவின் நெருப்பாய் இருக்கின்றது என்று பரிசுத்த யாக்கோபு தெரிவிக்கின்றார்.

## நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது

மிருகங்கள், பறவைகள் மற்றும் மீன்கள் யாவும் மனுஷனுடைய கட்டளையின் கட்டுப்படுத்தும் வல்லமைக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றது, ஆனால் எந்த மனுஷனாலும் இன்னொரு மனுஷனுடைய நாவினை அடக்கமுடியாது என்று அப்போஸ்தலன் நமக்கு நினைப்பூட்டுகின்றார். ஆம், எந்த விழுந்துபோன மனுஷனாலும் தன் சொந்த நாவினை அடக்கமுடியாது என்று கூறிடலாம் அல்லவா? தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கும் நிலைக்கும், சத்தியம் மற்றும் நீதி மற்றும் அன்பிற்கான வேலையாளாகப் பயன்படும் நிலைக்கும் நம்முடைய நாவுகளானது கொண்டுவரப்படுவதற்குரிய ஒரேயொரு வழி, நாவை மாற்றமடைந்த நிலைக்குக் கொண்டு வருவதேயாகும். நாவானது இருதயத்தின் உணர்வுகளுக்கான பேசும் பிரதிநிதியாய் இருப்பதினால், இருதயமே மாற்றத்திற் குள்ளாக வேண்டும். "எல்லாம் புதிதாகத்தக்கதாக" குணலட்சணத்தினுடைய உண்மையான மாற்றத்திற்குரிய வல்லமையானது, தேவனுடையதேயாகும்.

பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதான தேவனுடைய பிள்ளையானவன், தனது நாவை அடக்கி ஆளும் விஷயத்தில், ஜெநிப்பிக்கப்படாதவர்களுக்கு இல்லாத உதவியினைப் பெற்றிருப்பவனாய் இருக்கின்றான். "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா!" இருதயத்தினின்று ஜீவ ஊற்றுப் புறப்படும்; இருதயத்தினுடைய நிறைவினால், இருதயத்தினுடைய தியானத்தினால்

வாய்ப் பேசும் எனும் செய்தியானது எத்துணை முக்கியமானதாய்க் காணப்படுகின்றது.

சுபாவ மனுஷனுடைய நாவானது, முழுக்க சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது என்று பரிசுத்த யாக்கோபு கூறுகின்றார். அவர் அதைச் சர்ப்பத்திற்கு ஒப்பிடுவதுபோன்று தெரிகின்றது. நமது விழுந்துபோன நிலையில், "உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது!" என்று நாவைக் குறித்துக் கூறுவது மிகவும் உண்மையே (உரோமர் 3:13). சுயநலத்திற்குப் பதிலாக நாம் அன்பின் ஏவுதலையும், இயக்கும் புதிய ஆற்றலையும் உடைய புதுச்சிருஷ்டிகளாகும்போதுதான், அந்த விஷப்பற்கள் பிடுங்கப்படுகிறது. பின்னர் புதிய மனமானது, புதுச்சிருஷ்டியானது, உதடுகளைத் தேவனுடைய துதிகளை அறிவிக்கவும், சகமனுஷனை ஆசீர்வதிப்பதற்கும் பயன்படுத்தமுடியும்.

## தேவனைத் துதித்தலும் - மனுஷனுக்குப் பாதகம் பண்ணுதலும்

தேவனுடைய ஜனங்களாகியுள்ள சிலர் தேவனுக்குப் பயபக்தியுடன் காணப்படுபவர்களில் சிலர், தெய்வீகத் துதித்தலைப் பாடிடுவதற்கும், தெய்வீக இரக்கத்தை அறிவித்திடுவதற்கும் தாங்கள் பயன்படுத்துகிற அதே நாவையே, தங்கள் சகமனிதர்களைக் குறித்துப் புறங்கூறவும், தீமைபேசவும், அவதூறு பேசவும், நசுக்கிடவும், அவமானப்படுத்தவும், காயப்படுத்தவும், வன்மையாய்க் கண்டிக்கவும் பயன்படுத்துகின்றனர் எனும் உண்மையினைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர் என்ற காரியத்தை அப்போஸ்தலன் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றார் என்பதைக் கவனியுங்கள்! அந்தோ! இக்குற்றச்சாட்டினுடைய உண்மையினை நாம் உணர்ந்துகொள்கின்றோம்! இப்படி உணர்ந்துகொள்ளுதல் என்பது, தெய்வீகத் திட்டத்தின்படி செய்திடவும், மீட்பருடைய உண்மையுள்ள சீஷர்களாக இருக்கவும் நாடுகின்றவர்கள் தங்களைச் சரிச்செய்துகொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தூய்மையான தண்ணீரும், கசப்பான தண்ணீரும் புறப்பட முடியாது. ஆகையால் நம்முடைய நாவுகளினால் நாம் நம்முடைய சகமனிதர்களுக்குத் தீங்குபண்ணுகிறோம் என்றால், தேவனுடனான நமது உண்மையான மனநிலை தொடர்புடைய விஷயத்தில், நாம் நம்மையே வஞ்சித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் அறிந்திருப்போம். கசப்பினாலும், கோபத்தினாலும், துர்க்குணத்தினாலும், பகைமையினாலும், பொறாமையினாலும், வாதினாலும் முழுக்க நிரப்பப்பெற்றும் மற்றும் இவைகளைக் கடுமையான பேச்சினால் வெளிப்படுத்தும் இருதயத்திலிருந்து வரும் ஜெபங்களையும், ஆராதனையையும் தேவன் ஏற்க மறுப்பார் என்பதை நாம் அறிந்திருப்போம்.

வசைமொழி என்பது, "பிசாசின் இயற்கைப் பாஷையாகும்" என்று கார்லைல் அவர்கள் விவரித்துள்ளார். "வசைமொழியினால் எவருமே திருந்தினதாக இல்லை; வெளிப்படையான வசைமொழிகளினால் நொறுக்கப்பட்டிருக்கின்றார்களே யொழிய, தேவன் அருகே ஒருபோதும் அதனால் இழுக்கப்பட்டதில்லை" என்று பேபர் அவர்கள் எழுதியுள்ளார். "புறங்கூறுதலுக்கு அன்பே மருந்தாகும்" என்று ராபர்ட்சன் அவர்கள் எழுதியுள்ளார். நிச்சயமாகவே பொன்னான பிரமாணமானது, நம்முடைய பேச்சு விஷயத்திலும், நமது கிரியைகள் விஷயத்திலும் செயல்படுத்தப்படுவது அவசியமாகும். "சமாதானத்திற்கும் மற்றும் அன்பிற்கும் தூதுவனாக இருப்பதற்குப் பதிலாக, நாவானது பொறாமை மற்றும் தீய எண்ணங்களைத் தூண்டி விடுகிறதாகவும் மற்றும் இரக்கமின்மையின் கசையடியாகவும் மற்றும் பகைமையின் போர்க்கருவியாகவும் மாறியுள்ளது" என்று ஆயர் ஜேக்சன் அவர்கள் உண்மையாய் எழுதியுள்ளார்.

---

R5185

## மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை

*"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6)*

தெய்வீகக் கிருபை மற்றும் தெய்வீக நோக்கம் குறித்த அறிவைப் பெற்றிருப்பவர்களாகிய கர்த்தருடைய ஜனங்கள் சரியானதும், தகுதியானதும், முறையாய்ச் செயல்படுத்தப்பட வேண்டியதும், ஒழுங்கிற்கு உட்படுத்தப்பட வேண்டியதும் மற்றும் நெறிப்படுத்தப்பட வேண்டியதுமான சில குறிக்கோள்களைப் பெற்றிருப்பார்கள். யாருமே நலமார்ந்த குறிக்கோள்கள் இல்லாமல் இருக்கக் கூடாது. குறிக்கோள்கள் எதுவும் இல்லாமல் தேவன் இருப்பார் என்று நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாது. குறிக்கோள்கள் இல்லாதவர்கள் வாழ்க்கையில் சுற்றிக்கொண்டிருப்பவர்களாய்க் காணப்பட்டு, தங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ எதையும் சாதித்திடாதவர்களாகக் காணப்பட்டு, தாங்கள் ஏறெடுக்கிற பிரயாசம் அனைத்திலும் தோற்றுப்போகிறவர்களாக இருப்பார்கள்.

மேன்மையான மற்றும் கனவீனமான குறிக்கோள்கள் இருக்கின்றன. சில ஜனங்கள் பெரியவர்களாக, புகழ்மிக்கவர்களாக ஆகிவிட வேண்டும் என்ற குறிக்கோளுடையவர்களாய் இருக்கின்றனர்; சிலர் ஆளவேண்டுமென்ற

குறிக்கோளுடையவர்களாகவும்; இன்னும் சிலர் ஆஸ்தியுடையவர்களாக, சமுதாயத்தில் அந்தஸ்து உடையவர்களாக அல்லது மனுஷர் மத்தியில் கனங்களும், பெயர்களும் பெறுபவர்களாக ஆகிடவேண்டும் என்ற குறிக்கோளுடையவர்களாகவும் இருக்கின்றனர். இவைகள் அனைத்தும் சுயநலமான குறிக்கோள்களாகக் காணப்படுகின்றன; எனினும் இவைகள் இன்று உலகத்தை - தொழில், சமுதாயம், அரசியல் மற்றும் மதவட்டாரங்களில் இயக்கும் வல்லமையாக இருக்கின்றன. இவைகள் அனைத்தும் தவறான குறிக்கோள்களாய் இருக்கின்றன மற்றும் இவைகள் அனைத்துமே தீமையை விளைவிக்கவில்லை என்றாலும், இவைகள் அனைத்தும் சுயநலமானவைகளாகவும், தீமைக்கு ஏதுவானவைகளாகவும் காணப்படுகின்றன. செய்திடுவதற்குத் தங்கள் மனசாட்சியானது சம்மதித்திடாதவைகளைச் செய்திடத்தக்கதாக அநேகர் சுயநலமான குறிக்கோள்களினால் வஞ்சிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்.

கிறிஸ்தவன் தனக்கு முன்பாக மிகவும் மேன்மையான குறிக்கோளை வைத்திருக்கின்றவனாய் இருக்கின்றான். தேவன் தம்முடைய நாமத்திற்கென்று ஒரு ஜனத்தை உலகத்திலிருந்து அழைக்கின்றார். இவர்களுக்கு முன்பாக அவர் நலமார்ந்த குறிக்கோள்களை வைத்திருக்கின்றார். இவர்கள் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்தரர்களாகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்தக் குறிக்கோளானது, இவர்கள் பரலோக தந்தை மற்றும் கர்த்தருடனான ஐக்கியத்திற்கு, நட்புறவிற்கு, தோழமைக்குத் தங்களை ஆயத்தப்படுத்தத்தக்கதாக - குணலட்சணம் மற்றும் மனதின் உயர் பண்புகள் யாவற்றையும் வளர்த்துக்கொள்வதற்கு ஏவுகின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய வார்த்தைகளுக்குச் செவிக்கொடுப்பதற்கு மிகவும் உண்மையான பிரயாசம் எடுப்பதற்கு உந்துதலாகக் காணப்படத்தக்கதாக - இந்த மேலான குறிக்கோளை நம்முன் வைத்துக்கொள்வோமாக.

இப்போக்கினை மேற்கொள்பவர்கள் பிதாவுக்கு மிகவும் பிரியமானவர்களாகக் காணப்படுவார்கள். நிறைவேற்றிடுவதற்கு அவர் ஒரு மாபெரும் பணியினைப் பெற்றிருக்கின்றார் மற்றும் அதைச் செய்திடும் ஜனங்களுக்காக அவர் நாடித்தேடிக்கொண்டிருக்கின்றார். கிறிஸ்து இயேசு அந்த மாபெரும் வேலைக்குத் தலையாக இருக்கின்றார் மற்றும் தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் தேவன் விளங்கச்செய்வதற்காக, அவருடைய இராஜ்யமானது உலகத்தை ஆளவும், ஆசீர்வதிக்கவும் இருக்கின்றது (எபேசியர் 2:6). இந்தப் பரம அழைப்பினை உணர்ந்து மதிப்பவர்கள், தேவன் தங்களை எங்கு அழைத்துள்ளாரோ, அங்குக் காணப்படுவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள். தேவன் அருளியுள்ளவற்றைப் பொருட்படுத்தாதவர்கள் அல்லது நிபந்தனைகளுக்கு உட்பட விருப்பமற்றவர்கள், பரிசைப் பெறுவதற்குரிய ஓட்டத்திற்குள் பிரவேசிக்க முடியாதவர்களாய் இருப்பார்கள்.

பரம குறிக்கோளினைப் பெற்றிருப்பவர்கள், தாங்கள் புதிய சுபாவத்தினை மண்பாண்டங்களில் பெற்றிருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த வகுப்பாருக்கே, ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்பும் விஷயத்தில், ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்வது என்பது நலமார்ந்த குறிக்கோளாகிறது. மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணினாள் (வெளிப்படுத்தல் 19:7). ஆகையால் இவர்கள் தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்வதற்கும் மற்றும் தேவனுடைய அருமையான குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு உதவிசெய்திடுவதற்கும் நாடிட வேண்டும்.

## மூப்பத்துவத்தில் காணப்படும் அபாயம்

கண்காணிக்குரிய, மேய்ப்பனுக்குரிய பணியினை விரும்புவது என்பது நல்லதொரு விருப்பமாகும்/குறிக்கோளாகும் (1 தீமோத்தேயு 3:1). ஒருவர் மந்தையை மேய்த்துப் பேணும் பணியைச் சரியாய்க் கவனித்துக்கொள்வாரானால், மற்றக் காரியங்களுக்கு அவருக்கு நேரமிராது. கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலிருந்து மூப்பர் ஊழியத்திற்கென்று அழைக்கப்படுபவர்கள், அதனை கர்த்தரிடமிருந்து வந்துள்ள சிலாக்கியமாகவும், கனமாகவும் கருதிட வேண்டும்; மற்றும் அதனை இழிவான ஆதாயத்திற்காக அல்ல, மாறாக ஆயத்தமான மனநிலையுடன் ஜாக்கிரதையாய் நாடிட வேண்டும் (1 பேதுரு 5:1-4). ஆனாலும் இந்த ஊழியத்தை நாடுகையில், அதில் பெருமை வளர்ந்திடுவதற்கும், அதிகார கர்வம் கொள்ளுவதற்குமான அபாயம் உள்ளது என்று ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளுவார்களாக.

மூப்பராக ஊழியம் புரிவதற்கான மேலான சிலாக்கியத்தினை உடையவர்கள், தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளாமல், "ஒப்படைக் கப்பட்டவர்களை அடக்கி ஆளாமல்" இருக்கத்தக்கதாக தங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும் (1 பேதுரு 5:3; திருவிவிலியம்). தாங்கள் பிரதான மேய்ப்பனல்ல என்றும், தாங்கள் உடன் மேய்ப்பர்களாய் மாத்திரமே இருக்கின்றனர் என்றும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். யாரேனும் ஒருவர் மந்தையினை அடக்கியாள முற்படுவாரானால், அவர் தனக்கும், சபைக்கும் தீங்கு விளைவிக்கிறவராய் இருப்பார்; ஏனெனில் அடக்கியாள முற்படுகையில் அவர் பெருமையின் ஆவியினை வளரப் பண்ணுகிறவராய்க் காணப்படுவார்.

"பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ள வர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" என்று பரிசுத்த பேதுரு அடிகளார் நமக்குக் கூறுகின்றார் (1 பேதுரு 5:5). ஆகையால் ஒருவர் கர்த்தருடைய ஊழியத்தில் தாழ்மையுடன் காணப்படுவாரானால், அவரது நடத்தையானது சபையாருக்கு நன்மை பயக்கின்றதாய் மாத்திரம் இராமல், அது இராஜ்யத்தில் ஒரு ஸ்தானத்தைப்

பெற்றுக்கொள்வதற்குமான ஒரே வழியாகவும் காணப்படுகின்றது. மாபெரும் சிலாக்கியங்களை மாத்திரமல்லாமல், மகா சோதனைகளையும், மகா அபாயங்களையும் உடைய கனமிக்க ஊழியமாக, மூப்பர் ஊழியம் காணப்படுகின்றது. "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று பரிசுத்த யாக்கோபு அடிகளார் கூறுகின்றார் (யாக்கோபு 3:1).

செய்யவேண்டிய அவசியமுள்ள ஒரு பணியினைச் செய்பவர்களாகிய மூப்பர்களுக்கு, "தேவனுடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்கும்படிக்கு" அப்போஸ்தலன் அறிவுரை கூறுகின்றார். யாவும் தேவனுடைய பலத்த வல்லமையினால் செய்யப்படுகின்றது மற்றும் அந்த வல்லமையினாலேயே அவர் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாய்ச் செய்கின்றார். நம்மால் தெய்வீகச் சித்தத்தினைக் குறுக்கிட முடியாது. பெருமை அல்லது பேராசைகளை அனுமதிப்பதின் மூலம் நாம் நம்முடைய சொந்த வளர்ச்சியினைத் தடைப்பண்ணிடலாமே ஒழிய, தேவனுடைய திட்டத்தினை நம்மால் தடைப்பண்ணிடமுடியாது.

நாம் அனைவருமே மற்றவர்களுக்குச் சிறந்த விதத்தில் ஊழியம் புரிந்திடுவதற்கும் மற்றும் மாபெரும் பலனை அடையவும் நாடுகின்றோம். பரிசுத்த பேதுரு அடிகளார் அந்த வழியினை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார்; அது -- "உங்களைத் தாழ்த்துங்கள்" என்பதாகும். கவிஞன் ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"என்னை அதிகம் அபாயத்திற்குள்ளாக்குபவைகளில்
இறங்கிட நான் அஞ்சுகின்றேனே."

இந்த ஆவியானது, பெருமையையோ அல்லது ஆரவார பேச்சையோ அல்லது மற்றவர்களை அடக்கி ஆளுவதற்கான ஆசையையோ வளர்த்துவதற்கு நம்மை மிகவும் அச்சம் கொள்ளச் செய்திடும். ஆகையால் நாம் நம்மைத் தாழ்த்திக்கொண்டு, மிகவும் தாழ்மையுடன் காணப்படுபவர்களையும், கர்த்தரில் மிகவும் விசுவாசம் கொண்டுள்ளவர்களையும் தேவன் விசேஷமாய் ஆசீர்வதிப்பார் என்றும், ஏற்றகாலத்தின்போது - நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது உயர்த்திடுவார் என்றும் நினைவில் கொள்வோமாக.

சபையில், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள தாழ்மையுள்ளவர்கள், சில சமயங்களில் இந்த முக்கியமான குணலட்சண பண்பில் குறைவுபட்டிருப்பவர்கள் சிலரைப் பார்க்கிலும், குறைவாய் மதிக்கப்படுவார்கள். மனுக்குலத்தாருக்குப் பொதுவாகவே அச்சுறுத்துபவர்கள் மீதே நாட்டம் காணப்படுகின்றது. சாந்தத்துடனும், கனிவுடனும் காணப்படுபவர்களைப் பார்க்கிலும், தங்களைக்

கடுமையாய் நடத்துபவர்கள் யாரேனும், தங்கள் மீது காணப்படுவதையே மனுஷர்கள் விரும்புகின்றனர். ஆகையால் அவர்கள் நம்மை விரும்புவதில்லை. நம்மில் அவர்களுக்கு நன்றாய்ப் பிடிக்கும் காரியத்தினை நாம் அடைய நாடுகிறவர்களாய் இருத்தல் கூடாது. மாறாக நாம் கர்த்தரை அவருடைய வழியில் சேவிக்க வேண்டும் என்றும், கர்த்தருடைய பார்வையில் நம்முடைய பிரதான பொறுப்பு நம்மைப் பற்றினதாக இருக்கின்றது என்றும் நினைவில் கொள்வோமாக. தேவன் நம்மை ஏற்றகாலத்தில் உயர்த்தத்தக்கதாக, அவரது பலத்த கரத்தின் கீழ் நம்மைத் தாழ்த்திக் கொள்வோமாக.

## சத்திய அறிவின் நிமித்தம் பெருமைகொள்ளுதல் பாதகமானதாகும்

இந்தக் காரியங்கள் அனைத்தும், தாழ்மையே நமக்கான தகுதியான மனநிலையாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய இருதயத்தின் உணர்வுகளானது பெருமையானதாகக் காணப்படாமல், மாறாக சாந்தமானதாகவும், தாழ்மையானதாகவும், உண்மையானதாகவும் காணப்பட வேண்டும்.

பெருமை என்பது சுயநலம் விதைக்கப்பட்டுள்ளதின் விளைவைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. சுயநலத்தின் ஆவியானது, அதனால் நல்லது மற்றும் விலையேறப்பெற்றது என்று காண்பவைகளை - அதாவது ஆஸ்தி, அறிவு, கனம், கீர்த்தி மற்றும் மனுஷர் மத்தியில் அந்தஸ்து ஆகியவைகளைப் பேராசையுடன் சேர்த்துக்கொள்கின்றது. இந்தப் பொக்கிஷங்களைச் சம்பாதிப்பதில் ஓரளவுக்கு வெற்றிக் காணுதல் என்பது சுயநலமுள்ள ஆன்மாவை மனநிறைவு கொள்ளவும், பிறர் ஆதரவு சாராமல் காணப்படவும் மற்றும் மற்றவர்களுடைய நலனுக்கடுத்தக் காரியங்களில் அக்கறையற்று இருக்கவும் செய்கின்றது. படிப்படியாக ஆனால் வேகமாக, இறுமாப்பாகவும், தன் கருத்தினை நிலைநாட்டுகிற பெருமையாகவும் வளர்கின்றதான இந்த ஆவியானது, பூமிக்கடுத்த ஐசுவரியத்தினுடைய சூரிய வெளிச்சத்தின் ஒவ்வொரு கதிர்களிலும் கனியத் தொடங்குகின்றது. சுயநலமானது கனியும்போது, அது கேலிக்கிடமாகும் அளவிற்கு அதிகரித்து, தன்னைக் குறித்தே பெருமையாய்ப் பேசுவதில் மகிழும் மற்றும் தான் கனப்படுத்தப்படுவதற்கும், பாராட்டப்படுவதற்கும் பாத்திரவானாய் இருப்பதாகவும், தனக்கு முக்கியத்தும் இருப்பதாகவும், கற்பனை கோட்டைக்கட்டி இருப்பவைகளில் மகிழும்.

தாழ்மையின் போக்கானது எத்துணை எளிமையானதாகவும் மற்றும் எத்துணை ஞானமானதாகவும் காணப்படுகின்றது! தாழ்மையின் ஆவியானது, தனக்கானவைகளை நாடுவதில்லை; இறுமாப்பு அடையாது; கற்பனை கோட்டையான முக்கியத்துவங்களை ஊகித்திட முற்படுவதில்லை; தன்னைக்குறித்து

எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணிடாது; மாறாக தெளிந்த எண்ணத்துடன் எண்ணிடும் - அதாவது அது அடைந்திருப்பவைகளை அல்லது சம்பாதித்திருப்பவைகளை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மதிப்பிடாமல் இருக்கும்; (கற்பனை கோட்டை அடிப்படையில் இல்லை மாறாக) தாழ்மையானது ஸ்திரமான ஆதாரத்தின் அடிப்படையிலேயே செயல் புரிய எப்போதும் நாடினாலும், அது உண்மையான தகுதி நிலையை அடைவதற்கும், தெய்வீகப் பாராட்டு மற்றும் தயவின் உண்மையான மகிமையைச் சம்பாதிப்பதற்கும் நியாயமாய்ப் போராடுகின்றதாய் இருக்கின்றது.

ஏதோ சத்தியத்தினை நாம்தான் தோற்றுவித்ததுபோன்று, அநேகர் சத்தியத்தின் நிமித்தமாக தற்பெருமையடித்துக் கொள்கின்றனர். இது எத்துணை அறிவீனம்! நாம் சத்தியத்தினைத் தோற்றுவிக்கவில்லை. நம் கண்களைக் கடந்தகாலங்களில் குருடாக்கி வைத்த சில தப்பறைகளை நாம் அப்புறப்படுத்த மாத்திரமே செய்தோம். சத்தியம் தேவனுடையதாகும். அவரே அறியாமை மற்றும் மூடநம்பிக்கை எனும் இருளினின்று, அவரது திட்டம் குறித்த சத்தியத்தினைக் காண நம்மை அனுமதித்துள்ளார். ஒரு மனுஷன் ஓர் அழகான ஓவியத்தைப் பார்த்துவிட்டு, அதைத் தான்தான் வரைந்ததாகத் தற்பெருமையடித்துக் கொள்வானானால், நாம் அவனை நோக்கி: "மூடனே! நீ இந்த ஓவியத்தினை வரையவில்லை. நீ அதைப் பார்க்க மாத்திரமே செய்துள்ளாய். அது தொடர்பாகத் தற்பெருமையடித்துக் கொள்வதற்கு உனக்கு எதுவுமில்லை" என்று சொல்லுவோம்.

யுகங்களுக்கடுத்த தேவனுடைய திட்டத்தின் எந்தவொரு பாகத்தினையும் நாம் உருவாக்கிட வில்லை. அப்படி உருவாக்க முயற்சித்திருப்போமானால், நாம் தோல்வியையே அடைந்திருப்போம். ஆகையால் நம்முடைய மனநிலையானது, "தேவன் என்ன ஏற்பாடு பண்ணியுள்ளார், தேவன் என்ன திட்டம் தீட்டியுள்ளார் என்று நாங்கள் உங்களுக்கு காண்பித்துத் தருகின்றோம், வாருங்கள்" என்றே காணப்படவேண்டும். இப்படியாக நாம் தேவனை மகிமைப்படுத்துகின்றவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவுபவர்களாகவும் இருப்போம்; ஏனெனில் சத்தியம் தொடர்புடைய விஷயத்தில் நாம் எவ்வளவாய்ப் பெருமையை அல்லது தன்னிறைவை வெளிப்படுத்துகின்றோமோ, அவ்வளவாய் நமக்கும், மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிப்பவர்களாக இருப்போம். "எங்களுக்குச் சத்தியத்தினைப் போதிக்கத்தக்கதாக, உங்களது சபையில் ஞானமுள்ளவர்களை நீங்கள் பெற்றிருப்பது போலவே, நாங்களும் திறமிக்க நியாயசாஸ்திரிகளைப் பெற்றிருக்கிறோம்" என்று உலகம் கூறிடும்.

ஆகையால் நாம் சரியான ஆவியில் - அதாவது ஆண்டவருடைய சாந்தத்தின், தாழ்மையின் ஆவியில் காணப்படுகின்றோமா என்பதை ஆரம்பத்திலே உறுதிப்படுத்திக்கொள்வது, தகுதியான காரியமாக இருக்கும். தேவன் தம்முடைய

வார்த்தைகள் தொடர்புடைய விஷயத்தில், எவற்றிற்கு வெளிச்சத்தினைச் சுடர்விடப்பண்ணுவதற்கான ஏற்றவேளை வந்துள்ளதோ, அவற்றை நாம் காண்பதற்கு அனுமதிக்கின்றார். படமானது (திட்டம்) முன்பிலிருந்தே இருந்துவருகின்றது; ஆனால் மேகங்களும், இருளும், அதன் அழகினை நாம் காணமுடியாதபடிக்கு, படத்தினை மிகவும் மங்கலாகக் காண்பித்தது. இப்பொழுது விளக்கு எரிகின்றது மற்றும் கவிஞன் சொல்லியுள்ளதுபோன்று.....

"வேதத்தில் நாம் அருமையானவைகளைக் காண்கின்றோமே."

சுயநம்பிக்கைக் கொள்வதற்குப் பதிலாக, ஞானமானது - சுயத்தினுடைய பெலவீனத்தையும் மற்றும் பூரணமின்மையையும் நினைவுகூரப்பண்ணி, சுயத்தின் மீது நம்பிக்கையின்மைக் கொள்ளச் செய்கின்றது மற்றும் தேவன் மீது மிகுந்த பக்திவைராக்கியம் கொள்ளச் செய்கின்றது மற்றும் தேவன் மீது சார்ந்து நிற்க செய்கின்றது; தேவன் மீது சார்ந்து இருத்தல் என்பது எல்லாவற்றைப் பார்க்கிலும் நம்மைப் பெலப்படுத்துகிறதாகவும், நம்முடைய விழுந்துபோன சுபாவத்தினுடைய தீமையினின்று விலகவும் உதவி செய்கின்றது.

தாழ்மையின் பாதையில் நடப்பதும், மனுஷீக விருப்பங்களைத் தொடர்ந்து கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதும் மற்றும் முழுமையாய்ப் பட்சிக்கப்படுவது வரையிலும் பலியினைப் பலிபீடத்தில் தக்கவைத்துக்கொள்வதும் உண்மையில் சுலபமானக் காரியமல்ல. ஆனால் இப்படித்தான் - அதுவும் சாந்தமும், தாழ்மையுமுள்ள இருதயமுடைய ஸ்தோத்திரத்திற்குரிய நம்முடைய முன்னோடியானவரின் அடிச்சுவடுகளில் கவனமாய் நடப்பவர்களாகிய உண்மையுள்ள ஜெயங் கொண்டவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளதான பரிசை நாம் அடையாமல் போகாதப்படிக்கு, பயத்தோடும், நடுக்கத்தோடும் தெய்வீகச் சுபாவத்திற்கான நம்முடைய சொந்த இரட்சிப்பினை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (பிலிப்பியர் 2:8, 12).

இப்படியாக நாம் தாழ்மையுடனும், உண்மையுடனும் காணப்படும்போதுதான், கர்த்தர் தம்முடைய நாமத்தை மற்றவர்களுக்குப் பிரஸ்தாபப்படுத்துவதற்குரிய அவரது தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களாக நம்மை ஏற்படுத்துவார். இப்படியாகச் சுயத்தினை வெறுமையாக்கி, அவரது ஆவியினாலும், அவரது சத்தியத்தினாலும் நாம் நிரப்பப்படும்போது, நாம் சேனைகளின் கர்த்தருடைய பெலத்திலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் பலத்துடன் முன்னேறி, சிலுவையின் போர்ச் சேவகர்களென வல்லமையான ஊழியங்களைச் செய்திடுவோம்.

# உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை

*"கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்." (சங்கீதம் 75:6, 7)*

## சபையினுடைய ஒழுங்குகள் குறித்த காரியங்கள்

நம்முடைய ஆதார வசனத்தைக் குறிப்பாக சபைக்கு - கர்த்தரினால் விசேஷமாய் நடத்தப்படுகின்றவர்களும், அவர் விசேஷமாய் அக்கறைக் கொண்டிருப்பவர்களுமாகிய சபைக்குப் பொருத்திப் பார்த்திடலாம். அவர் சபையினுடைய இந்த அங்கத்தினர்களை அவர்களுக்குரிய இடத்தில் வைத்திடுவதற்கு ஏற்பாடுகளை அருளியுள்ளார். "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்தார்." "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும் . . . ஏற்படுத்தினார்" - இவைகள் கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள பற்பல அலுவல்களைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோன்று தேவன் அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

இருபதுபேர் அல்லது முப்பதுபேர் அல்லது முந்நூறுபேர் அல்லது ஐந்நூறுபேர் அல்லது ஆயிரம்பேர் தங்களை அவர் சித்தத்துடன் இசைய பண்ணிடும்போது, அவர் சிலரை மூப்பர்களாக, சிலரை உதவிக்காரர்களாக, இன்னும் சிலராக வைப்பார். அவர் எப்படி அவர்களை வைப்பார்? சபையினுடைய வாக்கின் (vote) மூலமாகவேயாகும். சபையில் உதவிக்காரனாக நியமிக்கப்படுகிறவன் எவனும் கர்த்தருக்கும், சகோதரருக்கும் உண்மையாய்க் காணப்பட வேண்டும். மூப்பனாக நியமிக்கப்படுகிற எவனும், இதை ஒரு சிலாக்கியமாகக் கருதிட வேண்டும் மற்றும் கர்த்தருக்கும், சகோதரருக்கும் உண்மையாய்க் காணப்பட வேண்டும்; இதினிமித்தம் அவன் சபைக்கு நன்மை பயக்கும் விதமாயும், சகோதரருக்குப் பிரியமாயும் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தருக்குப் பிரியமாயும் காணப்படலாம்.

இந்த ஒரு கருத்தையே அப்போஸ்தலன் எபேசு சபையின் மூப்பர்களுக்கு விடைகொடுக்கும்போது பேசிய வார்த்தைகளில் தெரிவிக்கின்றார் (அப்போஸ்தலர் 20:17-38). அவர்கள் மந்தையைப் போஷிக்கத்தக்கதாக, தங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு அவர்களுக்குக் கூறுகின்றார். கர்த்தரிடமிருந்தும், சகோதரரிடமிருந்தும் வருகின்றதெனத் தங்களால் அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டியதான, தங்கள் வாய்ப்புகளுக்காகவும் மற்றும் பொறுப்புகளுக்காகவும்

கணக்குக் கொடுக்க வேண்டியவர்களெனத் தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் எப்படிக் காணப்பட வேண்டுமென்று பல ஆலோசனைகளை அப்போஸ்தலன் கொடுத்திட்டார்.

சிலசமயம் கர்த்தருடைய அனுமதியின் காரணமாக - நிச்சயமாய் அவரது அனுமதி இல்லாமல் அல்ல, அவரது அனுமதியின் காரணமாகவே - கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்கான தங்களது பிரயாசத்தில் சபையார் பின்வருமாறு கூறிடலாம்: 'இந்தச் சகோதரன் கடந்தமுறை மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் மற்றும் இம்முறை நாம் அவரை மூப்பராகத் தேர்ந்தெடுக்க வேண்டாம்'; இல்லையேல் அவர்கள் பின்வருமாறு கூறிடலாம்: 'இவர் கடந்தமுறை உதவிக்காரனாக இருந்தார் மற்றும் இம்முறை நாம் அவரை உதவிக்காரனாகத் தேர்ந்தெடுக்க வேண்டாம், அவரை விட்டுவிடலாம்.' இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்படும் சகோதரனுடைய மனோநிலை என்னவாக இருக்க வேண்டும்?

## கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தல்

தங்கள் திறமையை சபையார் அடையாளம் கண்டுகொள்ளாததிலும், தங்களை மீண்டுமாகத் தேர்ந்தெடுக்காத விஷயத்திலும் சபையார் தவறு செய்துள்ளனர் என்று தாங்கள் எண்ணுவதாக, தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்பட்டவர்களிடமிருந்து கடிதங்கள் நமக்கு வந்த அனுபவங்கள் நமக்குண்டு. சபையாரின் இத்தகைய செய்கைக்குப் பின்னாக இருக்கும் கருத்து என்ன என்பது எங்களுக்குத் தெரியாது என்றும், சபையார் ஞானமாய் நடந்துகொண்டார்களா அல்லது இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது என்றும், ஆனாலும் அச்சகோதரன் இந்தத் தீர்மானம் கர்த்தரிடத்திலிருந்து வந்ததென ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது என்றும் எங்களுடைய பதில் காணப்பட்டது.

அப்படியான சகோதரன் தன்னிடம் பின்வருமாறு கூறிக்கொள்ள வேண்டும்: 'நான் இந்தச் சபையாருடைய ஊழியக்காரனாக இருந்திருக்கிறேன் மற்றும் இது குறித்து நான் நன்கு உணர்ந்தும் இருந்திருக்கின்றேன். அந்த ஊழிய உயர்வானது கர்த்தரிடமிருந்து வந்தது என்றும், எனக்குக் கொடுக்கப்பட்டதான ஊழியமானது கர்த்தரிடமிருந்து வந்தது என்றும் நான் உணருகின்றேன். ஆனால் இப்பொழுது தேவனுடைய வழிநடத்துதலின்படி நான் ஒரு வருடக் காலமாக (அ) ஆறுமாதக் காலமாக (அ) சில காலமாகக் கண்காணியாக இருக்கப்போவதில்லை. அநேகமாகக் கர்த்தர் எனக்கு இதில் நல்லதொரு பாடம் வைத்திருப்பார். அநேகமாகத் தாம் யாரை உயர்த்துவார் மற்றும் யாரை உயர்த்தமாட்டார் என்பதைக் காண்பிப்பதற்குக் கர்த்தர் விரும்புகின்றார். ஆகையால் இது விஷயம் குறித்துக்

காயமடைவதற்கு அல்லது கொஞ்சம் கோபமடைவதற்கு அல்லது வருத்தமடைவதற்குப் பதிலாக நான் என்னிடம் சொல்லப்போவதென்னவெனில்: ஒருவேளை என்னுடைய கடமையைச் செய்வதில் நான் எதிலாகிலும் தவறியுள்ளதாக நான் காண்கின்றேன் என்றால், இது கர்த்தரிடமிருந்து எனக்கு வந்த சிட்சை எனக் கருதிடுவேன். "சகோதரர் தாங்கள் உயர்வு பெறும்போது மகிழ்ச்சியடைவார்களாக! மற்றும் சகோதரர் தாங்கள் தாழ்நிலை அடையும்போதும் மகிழ்ச்சியாய் இருப்பார்களாக!" என்னும் வேத வாக்கியத்தின் வார்த்தைகளை நான் நினைவில்கொள்வேன் (யாக்கோபு 1:9, 10 திருவிவிலியம்) கர்த்தருடைய சித்தம் என்னவென்று தாங்கள் கருதுவதைச் செய்திடும் விஷயத்தில் சபையார் சுதந்தரமாய்ச் செயல்படுவதைப் பார்ப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாச் சூழ்நிலையிலும் உயர்வானது கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் வராது என்றும், தேவனே நியாயாதிபதியாக, தீர்மானிப்பவராக இருக்கின்றார் என்றும், அவருக்குப் பிரியமாய் இருக்கும் எவரையும், அவர் சபையின் காரியங்கள் மீது வைப்பார் என்றும் நான் அடையாளம் கண்டுகொள்ள முயற்சிப்பேன்' என்பதேயாகும்.

---

R3014 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

பெயர்க்கிறிஸ்தவ அமைப்புகளில், சபையார் மத்தியிலுள்ள ஒரே அங்கத்தினனைக் கொண்டு பிரசங்கம் அனைத்தையும், போதித்தல்கள் அனைத்தையும் செய்திடும் வழக்கமானது, மிகுதியான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள ஒன்றாய் இருக்கின்றது; இது சபை இரண்டு வகுப்பினராய் - குருமார் வகுப்பார் மற்றும் சாதாரணமானவர்கள் வகுப்பாரென்று பிரிவுப்படுவதற்கு ஏதுவாயிற்று; இன்னுமாக இது இந்தத் தற்கால ஜீவியத்தின் காரியங்கள் மீது கவனம் செலுத்த முடியாத அளவுக்கும், மனுஷர் முன்பாக யோக்கியமான வைகளைச் செய்யமுடியாத அளவுக்கும் சொற்ப எண்ணிக்கையில் காணப்படும் குருமார் வகுப்பார் மீது அதிகப்படியான வேலையினைக் குவித்துவிட்டதாய் இருக்கின்றது; மற்றும் பெரும்பான்மையான கர்த்தருடைய ஜனங்களிடமிருந்து, அவர்களது பொறுப்பினையும், ஊழியத்தில் அவர்களுடைய பங்கினையும் எடுத்துப்போடுவதினால் - அவர்களை ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதத்தினை இழக்கவும் செய்து மற்றும் சத்தியத்தின் ஊழியக்காரர்களென அவர்கள் வளர்ச்சியடை வதையும், கிருபையில் வளர்வதையும் தடைப்பண்ணுகின்றதாய் இருக்கின்றது.

சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்குரிய தாலந்துடையவர்களால், அது பிரசங்கிக்கப்படுவதை நாம் எதிர்த்திடவில்லை; மாறாக கர்த்தர் தம்முடைய ஜனங்களின் கூட்டங்கள் அனைத்துமே பிரசங்கிக்கும் வகையாக இருப்பதற்கு ஒருபோதும் நோக்கம் கொள்ளவில்லை என்பது நம்முடைய எண்ணமாக இருக்கின்றது. இப்படியாக ஆதி திருச்சபையில் இருக்கவில்லையென்று அப்போஸ்தலன் 1 கொரிந்தியர் 12; 1 தெசலோனிக்கேயர் 5:11-ஆம் வேதவாக்கிய பகுதிகளில் விவரிக்கின்றார். எந்தவொரு சிறு கூட்டத்தார் மத்தியிலும் காணப்படும் தாலந்துகள் எதுவாயினும், அது வளர்க்கப்படுவதற்குப் பிரயாசம் எடுக்கப்பட வேண்டும் - அதாவது வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ளதான தெய்வீகத் திட்டம் தொடர்புடையதாகக் கருத்துகள் சொல்ல, விளக்கம் சொல்ல தூண்டிடுவதற்கும், இவைகளை வெளிக்கொணர்வதற்கும் பிரயாசங்கள் எடுக்கப்பட வேண்டும். பிரசங்கிக்கத் தாலந்துடையவர்கள், தன்னடக்கத்துடன் பிரசங்கிப்பார்களாக; இவர்கள் மற்றவர்களுக்குச் சத்தியத்திற்கான ஊழியத்திலுள்ள பல்வேறு பங்குகளில் உதவியும் செய்வார்களாக. ஒவ்வொருவரும் கிருபையில் வளர்வதற்கும் மற்றும் மற்றவர்களுக்கு உதவிடுவதற்கும் நாடுகையில் - அநேகமாக அருகாமையிலுள்ள ஊர்களிலோ அல்லது அதே பட்டணத்திலுள்ள ஏதோ ஒரு பகுதியிலோ - வாய்ப்புகளுக்கான கதவினை இன்னுமாகவும், அகலமாகவும் - கர்த்தர் திறந்தருளுவார். அறுவடையோ மிகுதி மற்றும் வேலையாட்களோ குறைவாய்க் காணப்படுகின்றனர் மற்றும் கர்த்தருக்கும், அவரது நோக்கங்களுக்கும் உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்கள் யாவரும், ஒருவருக்கொருவர் ஊழியம் புரிந்திடுவதற்கு மாத்திரமல்லாமல், மற்றவர்கள் ஊழியம் புரியத்தக்கதாக, அவர்களுக்கு உதவி புரிந்திடுவதற்கும் ஒருவருக்கொருவர் எப்போதும் பிரயாசம் எடுப்பவர்களாகக் காணப்பட வேண்டும்.

---

R4994

# சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும்

*"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133:1)*

**ச**ங்கீதம் 133-ஆம் அதிகாரமானது, தீர்க்கத்தரிசனமான ஒன்றாகவும், "கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள" சகோதரரைக் குறிப்பதாகவும்

இருக்கின்றது என்பதில் நிச்சயமே. இக்கருத்தானது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் மீது வடிகிற பரிசுத்த ஆவியினை அடையாளப்படுத்திக் காண்பிக்கிறது. "அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும் . . . ஒப்பாயிருக்கிறது" என்று இரண்டாம் வசனத்தில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுவது இன்பமான காட்சியாக எப்போதும் இருப்பினும், இந்தச் சங்கீதமானது விசேஷமாய் நம்முடைய நாட்களுக்குப் பொருந்துகின்றதாய்த் தெரிகின்றது. துன்புறுத்தப்படும் காலங்களில், ஒருமித்திருத்தல் பெரிதும் காணப்படும்; ஏனெனில் சபையுடன் தாங்கள் ஒருமித்துக் காணப்படுவதற்குச் சொற்பமானவர்களே காணப்படுவார்கள்; உண்மையில் அர்ப்பணம் பண்ணியிருப்பவர்களைத் தவிர, மற்றப்படி அனைவரையுமே வெளியிலிருந்து வரும் துன்புறுத்தல்களானது அச்சமூட்டி தடுத்துவிடும். இம்மாதிரியான துன்புறுத்துதல்களின்போது, அனைவருமே இப்படியாகத்தான் எண்ணுவார்கள் மற்றும் ஒரே நோக்கமும், ஒரே காரணங்களும் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே ஒருமித்துக் காணப்பட இழுக்கப்படுவார்கள்.

ஆனால் துன்புறுத்தல்கள் ஓயும்போதும், சபைக்குள் மிகவும் வைராக்கியம் அற்றவர்கள் அநேகம் பேர் வந்திடும்போதும், சச்சரவு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் பெருகிடும். இன்றும் வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கு எதிராக எதிர்ப்புகள் அநேகம் காணப்பட்டாலும், துன்புறுத்துதல்கள் என்பது குறைவாகவே உள்ளது. சத்தியத்தினால் ஈர்க்கப்பட்டவர்களில் சிலர், அநேகமாக அவர்கள் என்னவாகக் காணப்பட வேண்டுமோ, அப்படியாக இல்லை. உண்மையைச் சொல்லப்போனால், அவர்களில் எவருமே, தேவனுடைய நேசகுமாரனுடைய சாயலுக்கு ஒத்த சாயலாகுவதற்கான தங்களது விருப்பத்தின்படி ஆகவில்லை; மாறாக ஒவ்வொருவரும் மற்றும் அனைவருமே அந்நிலையினை அடைய நாடிக்கொண்டிருக்க வேண்டும்.

## பிணக்குகளுக்கான காரணங்கள் பெருகிவருகின்றன

தேவ தயவு பெற்றிருக்கும் பிள்ளைகளுக்கிடையே பிணக்குகள் ஏதேனும் ஏற்படுதல் என்பது முதலில் விநோதமாய்த் தோன்றிடலாம். அவர்களுடைய இருதயங்கள் பரிசுத்த ஆவியினால் மிகவும் நிரம்பிக்காணப்படுவதினால், அவர்கள் இருதயத்தில் பகைமை, பொறாமை, சண்டை எனும் களைகள் காணப்படுவதற்கு இடமிராது என்றும், பரிசுத்த ஆவியின் கனிகள் குவிந்து காணப்படும் என்றும் ஒருவர் எண்ணக்கூடும். அநேகமாக இப்படித்தான் நாம் முதலாவது அர்ப்பணம்பண்ணினபோது நிலைமை காணப்பட்டது; மற்றும் மாம்சத்தின் இந்தக் கிரியைகளுக்கு இடம் இல்லாதிருந்தது. ஆனாலும் பிணக்குகளுக்கான

காரணங்கள் குறைவதற்குப் பதிலாகப் பெருகிவருவதாகவே தெரிகின்றது. ஆகையால் பிரச்சனைக்கான காரணத்தினை நாம் கவனிப்பது ஏற்றதாயிருக்கும் மற்றும் இப்படியாக அபாயத்தினைத் தவிர்த்திடுவதற்கும், சகோதரர் மத்தியில் சமாதானம்பண்ணுகிறவர்களாகுவதற்கும் நாம் உதவப்பட முடியும். "பலமுள்ளவர்களாகிய நாம் பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்" (உரோமர் 15:1). இவ்வசனத்தின் நிலைமையானது அளவுகோலாய் வைத்துப் பார்க்கப்பட்டால், நாம் எதிர்ப்பார்க்கிற அளவுக்குப் பலமுள்ளவர்கள் அதிகமாய்க் காணப்படமாட்டார்கள்; ஆகையால் இது நாம் ஒவ்வொருவரும் பலமுள்ளவர் களாகுவதற்கும், சபையில் பெலவீனமான சகோதரருக்கு உதவியாய் இருப்பதற்கும் ஏவுகின்றதாய் இருக்கின்றது.

உலகத்தில் இருப்பவர்கள் மத்தியில் இருப்பதைக் காட்டிலும், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புதுச்சிருஷ்டிகளாக இருப்பவர்கள் மத்தியிலேயே பிணக்குகள் ஏற்படுவதற்கான அதிகப்படியான வாய்ப்புகள் இருக்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாய் இருக்கின்றது; அதாவது அதிகமாய்ப் பிரகாசிக்கப்பட்டவர்களும், சத்தியத்தினால் பெலமடைந்தவர்களுமான ஜனங்கள் அடங்கின கூட்டத்தாரைப் பார்க்கிலும், பெயர்ச்சபையில் காணப்படும் ஜனங்களுக்கு ஒற்றுமையிலும், சமாதானத்திலும் ஒன்றாய் ஜீவிப்பது என்பது சுலபமானதாய் இருக்கும். இந்தக் கருத்தானது முதலில் விநோதமாய்த் தோன்றலாம்; ஆனால் அதைக்குறித்து நாம் ஆராயும்போது, அது மிகவும் தெளிவடைகின்றது. பெயர்ச்சபையில் தேவபக்தி என்பது பெரிதும் ஆச்சாரமாகவே இருக்கின்றது. பெயர்க் கிறிஸ்தவர்களுக்கு ஆடை உடுத்திக்கொள்வதும், கூடுகைகளில் கலந்துகொள்வதும், அங்கு அமைதியாய் அமர்ந்துவிட்டு, பின்னர் வீடு திரும்புவதும் வழக்கமான காரியமாக இருக்கின்றது. இனிமையானவைகள், அதாவது உதாரணத்திற்குச் சூரிய ஒளி, மலர்கள், பெண்களின் தலையணிகள் (bonnets), முதலானவைகள் அவர்களால் கவனிக்கப்படுகின்றது; இப்படியாக நாளானது அவர்களுக்குக் கடந்து செல்கின்றது. ஆனால் மிகவும் பிரகாசிக்கப்பட்டவர்களுடைய மனதிற்கும், சிந்தனைகளுக்கும் அதிக சுறுசுறுப்புக் காணப்படும். நாம்கூட மலர்களையும், நம்முடைய பரம பிதாவினால் நமக்கு அருளப்பட்டுள்ளதான அனைத்தையும் விரும்புகின்றோம். இவைகள் குறித்து நாமும் கலந்துரையாடுகின்றோம் மற்றும் கலந்துரையாடுவதற்கு அதிகமான வாய்ப்புகள் நமக்கு இருக்கின்றது; ஏனெனில் எந்த இரண்டு மனிதர்களுமே துல்லியமாய் ஒன்றுபோல் தோற்றத்தில் இல்லாததுபோலவே, எந்த இரண்டு மனிதர்களும் துல்லியமாய் ஒன்றுபோல் சிந்திக்கிறதில்லை.

கர்த்தருடைய ஜனங்களில் சிலர் தாங்கள் சுயமாய்ச் சிந்தனைச் செய்வதாக தற்பெருமையடித்துக் கொள்கின்றனர். ஆனால் எதையும் உறுதிப்படுத்திக் கொள்வது நமக்கு ஞானமான காரியமாய் இருக்கும். சில கருத்துக்களானது அறிவு

சம்பந்தப்பட்டதாக இராமல், மாறாக அனுமானம் சம்பந்தப்பட்டதான காரியங்களாய் இருக்கின்றன. நாம் தேவனால், போதிக்கப்பட்டிருக்கின்றோம். அவர் இப்படியாகவே நமக்குக் கூறுகின்றார் மற்றும் இப்படியாகவே அவருடைய வார்த்தைகளிலும் காணப்படுகின்றது மற்றும் ஒருவேளை இந்தப் புதுக் கருத்துக்களானது, கர்த்தரிடமிருந்து வந்ததாக நாம் ஏற்றுக்கொள்வோமானால், அதை நாம் அதிகம் விவாதம்பண்ணாமல் ஏற்றுக்கொண்டிடலாம். தேவனுடைய வார்த்தைகள் போதிப்பவைகளைக் குறித்து ஆழ்ந்து ஆராய்வது உண்மையில் இன்பமானதே; நமக்குக் கர்த்தர் தெரிவித்திருப்பவைகளை விசுவாசிப்பது என்பது நமக்கான சிலாக்கியமாகும். ஆனால் நாம் எந்த ஆழ்ந்த ஆராய்ச்சிப் பண்ணினாலும் சரி, அது தெய்வீக வார்த்தைகளுக்கு இசைவுடனும் மற்றும் கட்டுப்பாட்டுடனும் காணப்பட வேண்டும். நாம் ஆழ்ந்து ஆராய்ச்சிப் பண்ணும்போது, மற்றவர்களும்கூட ஆழ்ந்து ஆராய்ச்சிப் பண்ணுகிறார்கள் என்பதை நாம் நினைவில்கொள்கையில், உபதேச ரீதியிலான இடர்பாடு எப்படித் தோன்றுகின்றது என்பதை நாம் அறிகிறோம்.

இந்த வெவ்வேறான உபதேச ரீதியான கருத்துக்களானது வேத வாக்கியங்களிலிருந்து எடுக்கப்படுகின்றது. ஆனால் (வேதவாக்கியங்களில்) எழுதப்படாத கருத்துக்களை நாம் பகுத்தறிகையில், சண்டை சச்சரவிற்கான அபாயம் ஏற்படுகின்றது. தேவவார்த்தைகளில் மிகவும் ஊன்றிக் காணப்படுபவன், இதினிமித்தம் தான் நன்மை அடைகிறதோடல்லாமல், மற்றச் சகோதரர்களோடும், அவர்களது பகுத்தறிவு சிந்தித்தல்களுடனும் வாக்குவாதம்பண்ணுவதைத் தவிர்த்துக்கொள்ள முடிகிறவனாகவும் இருப்பான். சில விஷயங்கள் குறித்துச் சில கருத்துக்களை நாம் வெளிப்படுத்துவதில் கர்த்தர் வெறுப்புக்கொள்வதில்லை என்று நாம் எண்ணுகின்றோம். நாம் ஒரு கருத்தைப் பெற்றிருந்து, அதைச் சகோதரருக்கு முன்வைத்து, அது அவர்களுக்கு முன்பின் முரணானதாய்த் தோன்றும் பட்சத்தில், நாம் அதை அவர்களிடத்தில் திணிக்கக்கூடாது என்பதும், அவர்களும் அவர்களது கருத்தினை நம்மீது திணிக்கக்கூடாது என்பதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். இம்மாதிரியான விஷயங்களில் அடக்கத்துடன் காணப்பட்டு, காரியத்தினை அமைதியாய் விட்டுவிடுவது சரியான வழிமுறையாக இருக்க, இதற்குப் பதிலாக முடிவுபரியந்தமும் அக்கருத்திற்காகப் போராடும் மற்றும் அனைவரையும் நம் கருத்தினை ஒப்புக்கொள்ளச் செய்வதற்குப் போராடும் - மனப்பான்மை காணப்படுவதே பிரச்சனையாக இருக்கின்றது.

ஒவ்வொரு சகோதரனுக்கும், தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு உரிமை இருக்கின்றது. ஆனாலும் நம்முடைய கண்ணோட்டங்களை - பரீட்சைகளாக மாற்றிடுவதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை. பரீட்சைகள் என்பவைகள், வேதவாக்கியங்களில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வைகளேயாகும்; உதாரணத்திற்கு: இயேசு கிறிஸ்துவை அபிஷேகிக்கப்பட்டவர்

என்றும், உலகத்தின் இரட்சகர் என்றும் விசுவாசிக்க வேண்டும் என்பதும், நாம் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகவும், அவருடைய சுதந்தரத்தில் பங்கடைபவர்களாகவும் இருக்கப்போகின்றோம் என்று விசுவாசிக்க வேண்டும் என்பதும், நாம் விலைக்கொடுத்து வாங்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், இந்தத் தற்காலத்திலுள்ள பாடுகளிலும் மற்றும் பின்தொடரும் மகிமைகளிலும் நமது கர்த்தரோடு நாம் பங்கடையப் போகிறதை விசுவாசிப்பது என்பதும் - நமக்கும் மற்றும் சகோதரருடனான நம்முடைய உறவு நிலைக்கும் பரீட்சையாக இருக்கின்றது.

இத்தகைய எளிமையான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான வார்த்தைகள் நம்முடைய விசுவாசத்திற்கான அடிப்படையாக இருக்க வேண்டுமே ஒழிய, இவைகளுக்குச் சிலரால் கொடுக்கப்படும் கற்பனையான வியாக்கியானங்களல்ல. சிலர் பொதுவான முக்கிய அம்சங்களையே (outlines) அதிகம் கண் நோக்குகின்றனர்; சிலர் நுணுக்கங்களைப் பார்க்கின்றனர் மற்றும் பொதுவான முக்கிய அம்சங்களைப் பார்க்கத் தவறுகின்றனர். வேறுப்பட்ட மனப்பார்வைகளைக் கொண்டிருப்பவர்கள் குற்றஞ்சாட்டப்படவோ, பாராட்டப்படவோ முடியாது என்றாலும், இவர்கள் பின்வருபவற்றைக் கிரகித்துக்கொள்ள வேண்டும் - அதாவது நமது தேவனுக்கான, சகோதரருக்கான மற்றும் சத்தியத்திற்கான நேர்மையின் காரணமாக, சத்தியத்திற்காக பாடுபட நாம் விருப்பமுள்ளவர்களாய் இருக்கின்றோம் எனும் கருத்தினைக் கிரகித்திட வேண்டும்.

## சத்தியம் பலமான பாத்திரங்களைக் கவருகின்றது

ஒருமித்து வாசம்பண்ணுவதற்குச் சிரமப்படுகின்றதான இந்தச் சகோதரர்களின் சிரமத்திற்கான ஒரு காரணம், இவர்களது உண்மையான உள்ளியல்பான குணலட்சணமேயாகும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். களிமண் போன்ற குணலட்சணத்தினை உடையவர்களாகச் சிலர் காணப்படுகின்றனர்; ரப்பர் பந்தில் செய்ய முடிகிறதுபோல, சிலரில் நீங்கள் சிக்கிரத்தில் மனத்தளர்வு ஏற்படுத்திடலாம்; இன்னும் சிலர் வைரங்கள் போன்று காணப்படுகின்றனர். வைரம் போன்றிருக்கும் வகுப்பார் உறுதியான தன்மையை, குணலட்சணத்தை அடைந்தவர்களாய் இருக்கின்றனர். நாம் களிமண்ணாலான அநேகம் பந்துகளையும், அநேகம் ரப்பர் பந்துகளையும் மற்றும் அநேகம் வைரங்களையும் ஒரு பாத்திரத்தில் போட்டு குலுக்குவோமானால், வைரமானது அது தொடும் அனைத்தையும் உரசிடும், காரணம் அவைகள் மிகக்கடினமான தன்மை உடையதாக இருக்கின்றன. ரப்பர் பந்து வகுப்பாரையோ, களிமண் பந்து வகுப்பாரையோ கர்த்தர் இப்பொழுது தேடுகிறதில்லை. நியமிக்கப்பட்ட காலத்தில் அனைத்து வகையான வகுப்பார்களையும் - அதாவது களிமண் வகையான ஜனங்களையும் மற்றும் ரப்பர் பந்து வகையான ஜனங்களையும் கர்த்தர்

கையாளுவார். ஆனால் இப்பொழுதோ அணிகலன் வகுப்பாரை, வைரம் வகுப்பாரை மாத்திரமே சத்தியமானது கவருகின்றதாய் இருக்கின்றது.

ஒருவருக்கொருவர் இடறல் உண்டுபண்ணுவதற்கு, ஒருவரையொருவர் காயப்படுத்துவதற்குரிய அபாயம் இருக்கின்றது என்பதை அறிந்துகொள்கையில், அறிவானது நமக்கு ஞானத்தினைத் தந்திட வேண்டும். இந்தச் சகோதரர்கள் உறுதியான குணலட்சணத்தைக் கொண்டிருக்கின்றனர் என்றும், இவர்கள் களிமண் வகையினர் இல்லை என்றுமுள்ள உண்மையினை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இவர்களது வித்தியாசங்கள்கூடக் குணலட்சணத்தினை வெளிப்படுத்துகின்றது. இவ்வுண்மையினை உணர்ந்துகொள்ள நாம் முயற்சித்து, அவர்களுக்கு எரிச்சலூட்டாமல் இருப்பதற்கு நாம் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். நாம் அவர்களுக்குப் புத்திமதிக் கூறவேண்டும் மற்றும் அவர்களும் புதுச்சிருஷ்டிகளென, நம்மைப் போலவே கர்த்தரைப் பிரியப்படுத்த விருப்பம் கொண்டவர்களாய் இருக்கின்றனர் என்று நினைவில்கொள்ள வேண்டும். ஆகையால் நாம் ஒருவரோடு ஒருவர் பொறுமையுடன் காணப்பட வேண்டும். புதிய ஏற்பாட்டில் ஒரு வசனம் பின்வருமாறு கூறுகின்றது: "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்" (1 யோவான் 3:14). இது தெரிவிப்பது என்னவெனில்: சகோதரரில் சிலரை அன்புகூருவது என்பது கடினம் மற்றும் நாம் மரணத்தைவிட்டு ஜீவனுக்குட்படாதது வரையிலும், நாம் அவர்களை அன்புகூர முடியாமல் காணப்படுவோம் என்பதேயாகும்.

சத்தியமானது பெலவீனமானவர்களைக்காட்டிலும், பலமான பாத்திரங்களையே பற்றிக் கொள்கின்றதாய் இருக்கின்றது. ஜெயங்கொள்ளும் சிறுமந்தையின் அங்கத்தினர்களெனக் கர்த்தரால் ஏற்றுக்கொள்ள முடியாதளவுக்கு மிகவும் வளையும் தன்மை உடையவர்களாகவும் மற்றும் பலமற்றவர்களாகவும் காணப்படும் மற்ற அநேகரைக் காட்டிலும், இந்தப் பலமான பாத்திரங்களானவர்கள் தங்களது மாம்சத்தில் உறுதியானவர்களாகவும், மனோதிடம் கொண்டவர்களாகவும், போராடுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். இப்படியாக நம்மைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு நம்மை ஆளாக்கின அந்த ஒரு பண்பே மற்றும் ஜெயங்கொள்ளும் நிலைமைக்கு அவசியமான அந்த ஒரு தகுதியே - இத்தகைய பண்புள்ளவர்கள் அநேகர் சபையாக ஒன்றுகூடுகையில், சில விதங்களில் கடுமையான பாதிப்பு ஏற்படுத்தும் காரியமாய்க் காணப்படுகின்றது.

சேற்றினால் சூழப்பட்டிருக்கும் ஒரு வைரமானது, எதையும் வெட்டாது, எதையும் உரசிடுவதில்லை; ஆனால் திரளான வைரங்களைச் சேர்த்துவைத்துப் பாருங்கள். சேறானது அதிகம் அப்புறப்படுத்தப்படும்போது, உராய்வுகளும், உரசும் சத்தங்களும், வெட்டுதல்களும் அதிகமாய்க் காணப்படும். இப்படியாகவே

கர்த்தருடைய சம்பத்தானவர்கள் - அதிகமதிகமாய் ஒன்றுகூடி வருகையில், அதிகமதிகமாய் விழிப்படைகையில், பிணக்குகள் ஏற்படுவதற்கான அதிகம் வாய்ப்புகளும் ஏற்படுகின்றது மற்றும் அனைவருமே பரிசுத்த ஆவியினால் முழுமையாய் நிறைந்திருப்பதற்கும் மற்றும் மூடியிருப்பதற்கும் அதிகம் அவசியமாகுகின்றது; எண்ணெய் மிருதுவானதாகவும், வழுவழுப்பானதாகவும் காணப்பட்டு, உராய்வுகளைத் தவிர்ப்பது போன்று, இந்தப் பரிசுத்த ஆவியும் காணப்படுகின்றது.

---

R5921

# சபையில் அன்பு

"நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே" நம்முடைய போதகரின் கட்டளையாக இருக்கின்றது (யோவான் 15:12). "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று அப்போஸ்தலனும் எழுதுகின்றார் (1யோவான்3:16). "பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூருகிறான்"(1யோவான் 5:1). சொல்லப்போனால் கிறிஸ்துவின் சபைக்குரியவர்கள் யாவரும், தாங்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுகையில் அன்பின் ஆவியினைப் பெற்றிருக்கின்றனர். மேலும் இராஜ்யத்திற்கென்றுள்ள ஆயத்தத்தில் நாம் முன்னேறுகையில், அந்த அன்பின் ஆவியானது, உயிர்த்தெழுதலில் பூரணப்படும்வரை அதிகமதிகமாய்ப் பெருகி அதிகரித்திடும்; உயிர்த்தெழுதலின்போது நாம் நமது புதிய சரீரங்களைப் பெற்றிருப்போம் மற்றும் இது நம்முடைய அன்புள்ள இருதயங்களானது, அன்பை முழுமையாக வெளிப்படுத்திடுவதற்கு அனுமதித்திடும். ஆனால் இதற்கிடையில், கர்த்தருடைய அன்புக்குரிய சகோதரர்கள் எத்தனைதரம் ஒருவரையொருவர் சோதிக்கின்றனர், ஒருவரையொருவர் எரிச்சலூட்டுகின்றனர் மற்றும் அன்பிற்கும், நற்கிரியைகளுக்கும் ஏவத்தவறி, சண்டைகளைத் தூண்டிவிடுகின்றனர்!

இத்தகைய பெலவீனங்கள் புதுச்சிருஷ்டியினுடையதல்ல, மாறாக பழைய சிருஷ்டியினுடையது என்று நாம் சரியாய்க் காரணம் கற்பித்தாலும், புதுச்சிருஷ்டியினுடைய வளர்ச்சி என்பது, பழைய சிருஷ்டியினுடைய மரணத்தைக் குறிக்கின்றதாய் இருக்கும் என்றும், பாவத்திற்கும், சுயநலத்திற்கும் நம்முடைய

மாம்சமானது எவ்வளவாய் மரித்திருக்கவில்லையோ, அவ்வளவாய் நாம் அடையும்படிக்கு நாடிக்கொண்டிருக்கின்றதான நிலைமையினை, புதுச்சிருஷ்டிகளாகிய நாம் இன்னமும் அடையாமல் இருக்கின்றோம் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும் என்றும் நாம் மறந்துவிடக்கூடாது.

சபையினுடைய மூப்பர்களிடமிருந்து, தாங்கள் எவ்வாறு சபையாரைக் கையாள வேண்டும் என்பதற்கும் மற்றும் சபையாரிலுள்ள அங்கத்தினர்களிடமிருந்து, தாங்கள் எவ்வாறு தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் கையாள வேண்டும் என்பதற்கும் ஆலோசனை வேண்டி எழுதப்படும் கடிதங்களை இதழாசிரியர் அடிக்கடி பெற்றுக்கொள்கின்றார். சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியக்காரர்கள், தங்களைத் தேர்ந்தெடுத்த சகோதரர்கள், தங்களிடத்தில் போதுமான நம்பிக்கைக் கொள்வதில்லை என்றும், சபையாருடைய காரியங்களை நிர்வகிப்பதற்குத் தங்களிடத்தில் முழுமையாய்ப் பொறுப்பைவிடுகிறதில்லை என்றும், சபையார் தங்கள் காரியங்களை நிர்வகித்துக்கொள்வதற்கும் மற்றும் மூப்பர்களுடைய ஆலோசனை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கும் விரும்புகின்றனர் என்றும் பெரும்பாலும் எண்ணுகின்றனர். இப்படியான சந்தர்ப்பத்தில், சபையார் ஒட்டுமொத்தமாகக் கர்த்தருக்குப் பிரதிநிதித்துவமாய் இருக்கின்றனர் என்றும், சபையின் எந்த ஊழியக்காரனுக்கும், சபையார் தங்கள் வாக்கினால் அவனுக்கு அளித்திடும் அதிகாரத்தின் எல்லையைத் தாண்டிடும் உரிமையில்லை என்றும் நினைவில்கொண்டு, மூப்பர்கள் முழுமையாய் மனநிறைவு கொண்டிருக்க நாம் பரிந்துரைக்கின்றோம்.

வேதமாணவர்கள் - கர்த்தர் தங்கள் மீது வைத்திட்டதான தங்களது பொறுப்புகளையும், உரிமைகளையும் பாதுகாத்திடுவதற்கு மிகுந்த அவசியம் இருப்பதாய் உணர்வதை எங்கள் அனுபவத்தில் கண்டிருக்கின்றோம். நம்மைச் சுற்றிலும் புரோட்டஸ்டாண்டினர்கள் மற்றும் கத்தோலிக்கர்கள் மத்தியில் காணப்படும் உலகப்பற்றுள்ள குருமார்களின் அதிகாரம் குறித்தும் மற்றும் வல்லமையையும், அதிகாரத்தையும் பிடித்துக்கொள்வதற்கும், சபையாரைப் புறக்கணிப்பதற்குமான குருமார்களின் மனவிருப்பம் குறித்தும் காணப்படும் உதாரணங்களின் கண்ணோட்டத்தில் - வேதமாணவர்கள் இவ்விஷயத்தில் மிக அதிகமான கவனம் செலுத்தினால்கூட, அது நிச்சயமாகப் பொறுத்துக் கொள்ளப்படலாம்.

இன்னொரு பக்கத்தில் சபையார், தங்களது மூப்பர்கள் தங்கள் மீது ஆதிக்கம் அல்லது அதிகாரம் செலுத்துகின்றார்களென எண்ணுகின்றனர் - இப்படியாக உண்மையிலேயே செலுத்தப்படுகிறதோ அல்லது இல்லையோ, ஆனால் அவர்கள் இப்படி அடிக்கடி எண்ணுகின்றனர். சிலசமயம் மூப்பர்கள் பிரசங்கம் பண்ணிடுவதற்கான பரபரப்பை அடைந்து, எல்லாத் தருணங்களிலும் போதிப்பதற்கு விருப்பம் அடைகின்றனர்; சிலசமயம் ஜெபத்தினையும், சாட்சிக்கூட்டங்களையும்,

பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளையும் போதிக்கும் சந்தர்ப்பங்களாக்கி விடுகின்றனர் என்று சபையார் முறையிடுகின்றனர். ஒருவேளை பெரோயா பாடங்களானது விரும்பப்படுகின்றது என்றும், சபை ஒழுங்குமுறையின் மாற்றங்களானது விரும்பப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறதென்றால், சிலசமயம் மூப்பர்கள் முழுச்சபையாரிடத்திலும் கோபமடைந்து, தாங்கள் மதிக்கப்படுகிறதில்லை என்று கூறுகின்றனர்; மற்றும் இன்னும் சில தருணங்களில், காரியத்தை அன்பாய்த் தங்களிடத்தில் குறிப்பிடுவதற்குத் தைரியமாய் முன்வந்த தனிப்பட்ட நபர்மேல் மூப்பர்கள் கோபமடைகின்றனர் அல்லது அந்நபர் ஒரு விதிவிலக்கு என்று எண்ணிக்கொள்கின்றனர் மற்றும் தாங்கள் சபையாரைப் பிரியப்படுத்திக் கொண்டிருக்கின்றதாகக் கற்பனைபண்ணிக்கொண்டிருக் கின்றனர் - அதாவது இது மிகவும் அதிகமான சுய மதிப்புக்கொடுத்திடும் சந்தர்ப்பமாய்ச் சில சமயங்களில் காணப்படுகின்றது.

## சபையாருக்கான மேய்ப்பனுடைய ஆலோசனை

மூப்பர்கள் கர்த்தருடைய ஆவி இல்லாமல், தெளிந்த மனதினுடைய சீரான நிலைமையினை இழந்து காணப்படுவதாகத் தோன்றும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், எப்படிச் சபைகளுக்கு ஆலோசனை கொடுப்பது என்பது சிரமமான காரியமாகவே காணப்படுகின்றது. எங்களிடத்தில் விசாரிப்பவர்களுக்கு நாங்கள் பொதுவாகவே இவ்விஷயம் குறித்து வேதாகம பாடங்களிலுள்ள 6-ஆம் தொகுதியின் கட்டுரையையே குறிப்பிட்டு, அதை மீண்டுமாக வாசித்து, அதன்படி நடந்துகொள்ளும்படிக்குக் கேட்டுக்கொள்வோம். ஆனால் அதை வாசித்தப் பிற்பாடும்கூடக் கர்த்தருடைய அருமையான ஆடுகளில் சிலர், எப்படி வேத வாக்கியங்களின்படியான முறையான ஒழுங்கினை அடையப்பெறுவது என்பதையும், எப்படிச் சபையாருடைய சுயாதீனங்களைக் காத்துக்கொள்வது என்பதையும் மற்றும் எப்படி மூப்பர் தனக்கும், சபையாருடைய நலனுக் கடுத்தவைகளுக்கும் தீங்கு செய்ய அனுமதிப்பதைத் தவிர்ப்பது என்பதையும் அறியாமல் இருக்கின்றனர்!

இத்தகைய காரியங்களை, அதுவும் சபையில் கர்த்தருடைய சித்தமென நாம் நம்பிடுபவைகளைச் செய்திடுவதற்கான எந்த மற்றும் ஒவ்வொரு வாய்ப்பையும் குறித்துக் கவனித்துக்கொண்டிருக்கும் அதேவேளையில், சகோதரர்கள் இத்தகைய காரியங்களைக் கர்த்தரிடத்தில் ஜெபத்தில் எடுத்துச் செல்லுங்கள் என்பது நம்முடைய பொதுவான அறிவுரையாக இருக்கின்றது. இன்னொரு பக்கத்தில் மூப்பர் ஒருவரை ஆதிக்கம்பண்ண அல்லது பரிசுத்த பேதுரு அடிகளார் கூறியுள்ளது போன்று "கர்த்தருடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆள" சபையார் அனுமதிப்பது என்பது முற்றிலும் தவறான காரியம் என்று நாம் ஒப்புக்கொள்ளவே வேண்டும் (1 பேதுரு 5:3). இது மூப்பருக்கும், சபையாருடைய நலனுக்கடுத்தவைகளுக்கும் - இருவருக்குமே தீங்காய்க் காணப்படும்.

இன்னொரு பக்கத்தில் பார்க்கையில், சபையார் குற்றங்கண்டுபிடிக்க மற்றும் குறைகூற தவிர்ப்பதற்கு நாடிட வேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆவியை, அர்ப்பணிப்பின் ஆவியை, சத்தியத்தின் அறிவை மற்றும் சத்தியத்தை முன்வைப்பதற்கான தாலந்துகளை - இவைகள் எங்குக் காணப்பட்டாலும், இவற்றிற்கு மதிப்புக்கொடுத்திட வேண்டும் மற்றும் கர்த்தரால் ஒவ்வொருவருக்கும் அருளப்பட்டுள்ள தாலந்துகளுக்கு ஏற்பவும் மற்றும் கர்த்தருடைய வசனத்திலுள்ள வழிக்காட்டுதல்களுக்கு இசைவாகவும் - போதிப்பிலும், கிருபையிலும், அறிவிலும் வளர்ச்சியடைந்திடுவதற்கான வாய்ப்புகளுக்கு ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியோடு உதவிட வேண்டும். ஒருவருக்கொருவர் பொறுத்துக்கொள்ளுதல், ஒருவர் இன்னொருவரின் பாதங்களை அடையாளமான விதத்தில் கழுவிடுவதற்கான விருப்பமும், கிறிஸ்துவுக்கொத்த குணலட்சணங்களின் நிமித்தம், ஒருவரையொருவர் மேன்மையாய் எண்ணுதல் ஆகியவைகளை வளர்த்தி உருவாக்க வேண்டும்.

சபையாருடைய அனைத்து ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்புடைய விஷயத்தில், சபையாருடைய விருப்பத்தை அறிந்துகொள்வதற்கென ஒவ்வொரு மூப்பராலும் கவனமாய் நாடப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு சபையாராலும் அது முழுமையாய் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், எப்படிச் சபையினுடைய விருப்பம் தெரிவிக்கப்படுகின்றது என்பது தொடர்பாய் நாம் மிகவும் இம்மியும் பிசகாமல் எதிர்ப்பார்க்கக்கூடாது. வேறுவார்த்தைகளில் சொல்லப்போனால், சபையாரில் பெரும்பான்மையானவர்களுக்கு எது திருப்தியாய் இருக்கின்றது என்று நாம் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். சபையாருடைய திருப்தியானது ஏதோ சில விசேஷித்த குறிப்பிட்ட விதத்தில் தெரிவிக்கப்படவில்லை என்பதற்காக மூப்பர்கள் குற்றம் சாட்டப்படக் கூடாது. வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், சபையாரிலுள்ள சிறுபான்மையானவர்களால் பரிந்துரைக்கப்பட்டதான வழிமுறைகளானது, துல்லியமாய்க் கடைபிடிக்கப் படவில்லை என்பதற்காக, சபையாரை மனக்கலக்கமுறச் செய்து, பிரச்சனையைத் தூண்டிடுவதற்கு இவர்களுக்கு உரிமையில்லை. சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும் தகுந்தக் காலங்களில் - விசேஷமாகத் தேர்ந்தெடுத்தல் காலத்தில் தனது கருத்தினைத் தெரிவிப்பதற்கு முழுச்சுயாதீனம் உடையவனாய் இருக்கின்றான்; ஆனால் தனது கருத்தையும், விருப்பத்தையும் தெரிவித்தப் பிற்பாடு, அவன் பெரும்பான்மையான வர்களின் விருப்பத்திற்கு, அது ஆதரவாகவோ அல்லது எதிர்மறையாகவோ தெரிவிக்கப்பட்டிருப்பினும் அதற்கு இணங்கிடுவதற்கு முழுமையாய்த் திருப்தி கொண்டிருக்க வேண்டும்.

## முதலாவது நீதி - பின்பு அன்பு

நாம் அன்பையும், அதன் பூரண சற்குணத்தின் கட்டையும் நாடிடும்

அதேவேளையில், நம்முடைய சொந்த நடவடிக்கையானது, முதலாவதாகப் பூரணநீதியினால் சரிப்பார்க்கப்பட வேண்டும் மற்றும் பின்னர் அன்பானது கூட்டிவழங்கப்படலாம். உதாரணத்திற்குத் தேர்ந்தெடுத்தலின்போது, ஏதோ ஒரு சகோதரன், சபையாருக்கான ஏதோ ஓர் ஊழியத்திற்கென, அந்த ஊழியத்திற்குத் தகுதியற்ற ஒரு சகோதரனை ஞானமற்ற விதத்தில் முன்மொழிந்திடலாம். நாம் அச்சகோதரனிடத்தில் குற்றம் கண்டு பிடிக்கக்கூடாது; ஏனெனில் முன் மொழிந்திடுவதற்கும், தனது ஞானமின்மையை வெளிப்படுத்துவதற்குமான சுயாதீனத்தை அச்சகோதரன் உடையவனாயிருக்கிறார்; ஆனால் இன்னொரு பக்கத்தில் நாம் அவருடைய முன்மொழிதலுக்குக் கட்டுப்பட்டுள்ளோம் என்று நாம் எண்ணிட வேண்டாம்; இவ்விஷயத்தில் கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கின்றது என்று நாம் புரிந்துள்ளதை வாக்கின் (vote) மூலம் நாம் வெளிப்படுத்திடுவதை, முன்மொழியப்பட்டச் சகோதரனை அவமதித்திடுவோமா என்ற அச்சமானது தடைப்பண்ணிட நாம் அனுமதிக்கவும் கூடாது. மேலும் சபையாரால் வாக்கினால் (vote) நிராகரிக்கப்பட்டாரெனில், முன்மொழியப்பட்ட சகோதரன் கோபம் கொள்வதற்கு எந்த உரிமையும் பெற்றிருப்பதில்லை; தன்னை நிராகரிப்பதில் சகோதரர்களால் வெளிப்படுத்தப்பட்டதான தைரியத்தினை அவர் பாராட்டிடவே வேண்டும்.

சபையாரால் நிராகரிக்கப்பட்டவர், சபையாரிடத்திலோ அல்லது அதன் அங்கத்தினர்கள் யாரிடத்திலோ, ஏன் தனக்கு எதிராக வாக்குகள் அளித்தார்கள் என்று கேள்வி கேட்பதற்கு உரிமை பெற்றிருப்பதில்லை. அது அவர்கள் காரியமாகும் மற்றும் இவரது காரியமல்ல. அவர்கள் தாங்கள் பெற்றிருப்பதான உரிமையினை, தங்களது மனசாட்சியின்படி செயல்படுத்த மாத்திரமே செய்துள்ளனர். அது நீதியின் காரியமாகும். சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனாலும் பின்பற்றப்படும் படிக்குக் கர்த்தருடைய வசனமானது விதிகளை முன்வைத்துள்ளதான விஷயங்களில் தீர்மானம் எடுப்பதற்கு, மனித அனுதாபமாகிய அன்பிற்கு இடமில்லை. நீதியின் கொள்கைகளை அடையாளம் கண்டுகொள்ள தவறுவதே, கிட்டத்தட்ட எல்லாச் சபையாருடைய பிரச்சனைகளுக்கான அடிப்படையாக இருப்பதாகத் தோன்றுகின்றது. இம்மாதிரியான பிரச்சனைக்குள்ளாகும் யாவரும், காரியத்தினை ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச் செல்லவும், பின்னர் பூரண நீதியின் அடிப்படையில் அக்காரியத்தினைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவும் நாம் வேண்டிக்கொள்கின்றோம்.

கூடுமானால் சபையாருடைய சித்தமானது பெரும்பான்மையினரால் - அதாவது முழு எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 85 சதவீதமானவர்களால் தெரியப்படுத்தும்படிக்கு வேதாகம பாடங்களினுடைய 6-ஆம் தொகுதியில் நாம் பரிந்துரைத்திருந்தோம். ஆனால் இது - நீதியோ அல்லது அன்போ, சபையாருடைய காரியங்கள் அனைத்தையும், மீதமிருக்கும் 15 சதமானவர்களிடத்தில் ஒப்படைக்கச்

செய்திடும் மற்றும் இவர்கள் காரியங்களை நிர்ணயிக்கும்படிக்கு அனுமதித்திடும் என்று அர்த்தப்படாது; அதாவது உதாரணத்திற்குச் சிறுபான்மையானவர்கள் மொத்த எண்ணிக்கையில் 15 சதவீதமாக இருப்பதினாலும், தங்களது குறிக்கோள்கள் அடையப்பட வேண்டும் அல்லது சபையாருடைய முழு வேலையும் நிறுத்தப்பட வேண்டுமென்று இவர்கள் வலியுறுத்துவதினாலும், எந்த மூப்பர்களும், உதவிக்காரர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டாம் என்று நிர்ணயிக்க சிறுபான்மையானவர்களை அனுமதிக்க வேண்டும் என்று அர்த்தப்படாது. இப்படி ஒருவேளை அனுமதிக்கப்பட்டால், அது அன்பாகவோ, நீதியாகவோ இருக்காது மற்றும் இப்படியாக ஒப்படைக்கப்படக்கூடாது.

பெரும்பான்மை விதி என்பது நீதியின் தர நிலையாக/அளவுகோலாக இருக்கின்றது மற்றும் இதற்கும் மேலாக நாம் யோசனையாக தெரிவித்தது, அன்பினால் விட்டுக்கொடுக்கப்படுவதை குறிக்கின்றதாய் இருக்கின்றது - அதாவது கூடுமானமட்டும் முழுச்சபையாரின் அல்லது சபையாரில் பெரிதளவிலான பெரும்பான்மையானவர்களுக்காகிலும் இருக்கும் விருப்பங்கள் சந்திக்கப்பட முயற்சிப்பதாகும். முடிந்தமட்டும் சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் பொருத்தமாய் இருக்கும் விதத்தில், சபையின் காரியங்களை ஒழுங்குப்படுத்திட பெரும்பான்மையானவர்கள் அன்புடன் விரும்பிட வேண்டும்; மற்றும் இதைச் செய்ய எந்தளவுக்குத் தவறப்படுகின்றதோ, அந்தளவுக்கு உடன்பாடின்மைக்கும், சபையாரில் பிரிவினைக்கும் வரவேற்பு இருக்கும். விருப்பத்தினுடைய பாகுபாட்டின் காரணமாக இரண்டு சபையாராகப் பிரிந்திடுவது என்பது எப்போதும் வருத்தப்படுவதற்குரியதாகவும், எதிர்த்துப் போராடப்படுவதற்கு நாடப்பட வேண்டியதாகவும் இருப்பினும் மற்றும் "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக்" காத்துக்கொள்வதற்கென அனைவராலும் தியாகங்கள் பண்ணப்பட வேண்டியதாகவும் இருப்பினும், சிலகாலம் சபையார் பிரிந்திருப்பது என்பது சம்பந்தப்பட்டவர்கள் யாவருடைய ஆவிக்குரிய வளர்ச்சியினைத் தடைப்பண்ணிடும் தொடர்ச்சியான சண்டைச் சச்சரவுக்குப் பதிலாக சிறந்ததாக நிச்சயமாகவே காணப்படும்.

---

R2924 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

தேவனுடைய ஆவியின் பரிசுத்த அபிஷேகித்தலுடைய தாக்கத்தின் கீழ் வந்திருப்பதற்கான சான்று பகருகின்றவர்களை மாத்திரமே வழிநடத்துபவர்கள்

முதலானவர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு கர்த்தருடைய ஆடுகள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். வழிநடத்துபவராக விரும்புபவர் எவ்வளவுதான் திறமைகள் கொண்டிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல; அவர் அதிகமாய்த் திறமைகள் கொண்டிருக்கும்போது, அவரது வழிநடத்துதலிலிருந்தும் மிகுந்த ஆபத்து வருகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்கள் மாத்திரமே, எவ்விதத்திலும் தலையானவருடைய வாய்க்கருவிகளெனவும், பிரதிநிதிகளெனவும் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும். நமது கர்த்தராகிய இயேசுவின் மீதான தேவனாகிய கர்த்தரின் ஆவியானது, சுவிசேஷத்தினைப் பிரசங்கிப்பதற்கு அவரை அபிஷேகித்தது அல்லது தகுதிப்படுத்தினதுபோல, அவரிடம் பெற்றுக்கொள்ளப்பட்டதான அதே அபிஷேகம்தான் கர்த்தரினால் அங்கீகரிக்கப்படுகிற விதத்திலும், அவரது மந்தைக்குப் பிரயோஜனமாய் இருக்கும் விதத்திலும், சாட்சிபகரும் அல்லது பிரசங்கிக்கும் இவ்வூழியத்திற்காக ஒருவரைத் தகுதிப்படுத்துகின்றதாய் இருக்கும் (ஏசாயா 61:1). கர்த்தருக்கு முழு அர்ப்பணம் பண்ணியுள்ள, தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படிதலுள்ள மனநிலையில் காணப்படாத யாவரும், ஒருவகையில் எதிர்ப்பவர்களாகவே இருப்பார்கள்; மற்றும் அவர்கள் எந்தளவுக்கு எதிர்ப்பவர்களாய் இருப்பார்களோ, அவ்வளவுக்கு அவர்கள் தவறானவர்களாக அல்லது பொல்லாதவர்களாகக் காணப்படுவார்கள். "சிட்சையை நீ பகைத்து (கர்த்தருடைய ஏற்பாடுகளுக்குத் தங்களைக் கீழ்ப்படுத்த மறுத்து), என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக (அலட்சியமாய்) எறிந்துபோடுகிறாய்" (சங்கீதம் 50:17).

---

R4458 & R5935

# உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்

### அப்போஸ்தலர் 20:2-38

*"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."*
*(பிலிப்பியர் 4:13)*

கலகத்திற்குப் பின்னர்ப் பரிசுத்தவானாகிய பவுல், எபேசுவிலிருந்து போன பிற்பாடு, அவர் ஸ்தாபித்த ஐரோப்பியாவிலுள்ள சபைகளைச் சந்திக்கும்படி

பிரயாணம் மேற்கொண்டார். கொரிந்து பட்டணத்தை நோக்கி, அவர் மக்கெதோனியா வழியில் செல்கையில், அவர் மீண்டும் எபேசுவுக்குத் தெற்கே 50 மைல் தொலைவில் காணப்பட்ட மிலேத்துவுக்குக் கப்பலில் வந்தார். ஆசியா மைனரிலுள்ள பல்வேறு சபையின் பிரதிநிதிகளும் அவரோடேகூடப் பிரயாணப்பட்டிருந்தார்கள். அவர் எருசலேம் நோக்கிப் பிரயாணப்பட்டிருந்தார்; எருசலேமிலுள்ளவர்கள் ஏழைகளாக இருந்தபடியால், அவர் பிரசங்கித்துக் கொண்டிருந்த நான்கு மாகாணத்திலிருந்து அவர்களுக்கு உதவிகளைச் சேகரித்தார். தெசலோனிக்கேயா, பெரோயா, தெர்பை மற்றும் எபேசு பட்டணத்திலுள்ள சபையின் பிரதிநிதிகளாகிய, ஏழு நபர்களும் பவுலோடு சேர்ந்து வழித்துணையாய்ப் பிரயாணம் பண்ணினார்கள். இந்தப் பிரயாணத்திற்குப் பல மாதக்காலம் தேவைப்பட்டிருக்கும் என அனுமானிக்கப்படுகின்றது. மேலும், அவர் இப்பொழுது மிலேத்துவை அடைந்திருந்த இத்தருணமானது எபேசு பட்டணத்துச் சபையின் மூப்பர்களுக்குப் பிரியாவிடைக் கொடுப்பதற்கான கடைசி சந்தர்ப்பமாக இருந்தது. எருசலேம் துறைமுகத்தை நோக்கிப் பிரயாணித்த அவர்கள் சென்ற கப்பலானது மிலேத்துவில் நிறுத்தினபோது பவுல், எபேசுவிலுள்ள மூப்பர்களை வரும்படி செய்தி அனுப்பினபோது அவர்கள் மிலேத்துவுக்கு வந்தார்கள்.

இந்த மூப்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகளைக் குறித்தே விசேஷமாக நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கப் போகின்றோம். அவர் இவைகளைப் பெருமையாகப் பேசினார் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது, மாறாக தான் பேசும் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் முழுமையாக ஒப்புக்கொள்ளக்கூடிய காரியங்களையே அவர் மீண்டும் எளிமையாகப் பேசினார். மேலும், இதில் பெருமைபாராட்டிக் கொள்ளுவதற்கும் ஒன்றுமில்லை. அவர் தனக்காகவோ அல்லது தன்னைப் புகழ்வதற்காகவோ இவைகளைக்குறித்து மீண்டும் பேசாமல், அந்தச் சகோதரர்களுக்கு அக்காரியங்களைக்குறித்து நினைப்பூட்டி, அக்காரியங்கள் அவர்களிடத்தில் நன்கு பதிய வேண்டும் என்பதற்காகவே பேசினார். அவர்கள் மூன்று வருட காலமாகத் தன்னைத் தனிப்பட்ட விதத்தில் அறிந்திருந்திருந்தார்கள், தனது ஜீவியத்தை அறிந்திருந்திருந்தார்கள் மற்றும் கர்த்தருக்கும், சத்தியத்திற்கடுத்த ஊழியங்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கடுத்த ஊழியங்களுக்கும், தான் கொண்டிருந்த அர்ப்பணிப்பையும் அறிந்திருந்திருந்தார்கள் என்று நினைப்பூட்டினார். தன்னுடைய தாழ்மையான மனதையும், தான் பெருமைபாராட்டாதவன் என்றும், தன்னுடைய நடத்தைகள் கர்வமற்றது, ஆணவமற்றது என்றும், சபையை "இறுமாப்பாய் ஆளுவதற்கு", நாடவில்லை என்றும் நினைப்பூட்டினார்; இன்னுமாக தனக்கு யூதர்களாலும், கள்ளச்சகோதரர்களினாலும் வந்திட்ட கஷ்டங்கள் மற்றும் அநேக சோதனைகளை அவர்களோடு அவர் சகித்ததையும் நினைப்பூட்டினார்.

பவுலுடைய வேலையைக்குறித்தும், அவர் சகித்துப்போராடினதைக்

குறித்தும், சபைக்கு நன்மையாயிருக்கும் யாதொன்றையும் அவர் மறைத்து வைக்காததைக்குறித்தும், வாய்ப்புகள் அவருக்கு கிடைக்கும்பட்சத்தில் அவர் தனிப்பட்ட விதத்திலும், பொதுவாகவும் போதித்தார் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். யூதர்களிடமும், கிரேக்கர்களிடமும் கிறிஸ்துவின் ஒரே ஒரு சுவிசேஷம்தான் உள்ளது என்றும், அது விசுவாசத்தின் மூலமும், பாவத்திலிருந்து திரும்புவதன் மூலமும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் பவுல் சாட்சி பகர்ந்திருந்தார். இப்படியாக தன்னுடைய குணலட்சணங்களின் இவ்வம்சங்கள் மீது அவர்களுடைய கவனத்தைத் திருப்புவதன் வாயிலாக, தன்னுடைய பக்திவைராக்கியம் மற்றும் உண்மையை அவர்களும் பின்பற்ற வேண்டும் என்ற தனது அடுத்த புத்திமதிக்கான அடித்தளத்தைப் போட்டார். அவர் அவர்களது நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக்கொண்ட உண்மையுள்ள கண்காணியாக இருந்துள்ளார். ஆவிக்குரிய விஷயங்களில் அவர்கள் போஷிக்கப்படத்தக்கதாக பார்த்துக்கொள்வதிலும், அவர்களது நலனுக்கடுத்தவைகளில் வழிநடத்துவதிலும் உண்மையுள்ள மேய்ப்பராக இருந்துள்ளார். இவைகள் அனைத்தும் உண்மை என்று அவர்கள் அறிந்திருப்பதினால், இத்தகைய ஒருவரிடமிருந்து வரும் அவருடைய கடைசி புத்திமதியையும் - அதாவது அவர் அவர்களுக்குக் கொடுக்கப்போகும் மாபெரும் பாடத்தையும் - ஏற்றுக்கொள்ள நன்கு ஆயத்தமாயும் இருந்திருப்பார்கள்.

## ஆவியிலே கட்டுண்டவனாய்

தான் சரீரத்தில் சுதந்திரமாய் இருப்பினும், தன்னால் தட்டிவிட முடியாத அளவுக்கு தனது மனம் கட்டப்பட்டிருப்பதை உணர்ந்திருக்கின்றார் என்றும், தான் எருசலேமுக்குப் போக வேண்டும் என்றும், அப்படிச் செய்வதே தனக்கான கர்த்தருடைய வழிநடத்துதலாய் இருக்கின்றது என்றும், அதே வேளையில் கட்டுகளும், உபத்திரவங்களுமே தனக்கு எருசலேமில் வைக்கப்பட்டுள்ளது என்று "வரங்கள்" வாயிலாக மற்றவர்கள் மூலம் தனக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சகோதரர்களுக்குப் பவுல் அறிவித்தார். அப்போஸ்தலர் பின்னர்த் தைரியமான வார்த்தைகளைப் பேசுகின்றார். அதாவது, "அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 20:24, 25). மற்றவர்களைக்காட்டிலும், எபேசு பட்டணத்துச் சபையாரோடு அப்போஸ்தலர்

மிகவும் நெருக்கமாக இருந்தார். இக்காரியமே அவர்களுக்கு மிகப்பெரிய ஐசுவரியமாக இருந்ததாக தெரிகின்றது. கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, அவர்களோடு பவுல் அதிகக் காலம் செலவிட்டார் மற்றும் இதனால் உண்டாகியுள்ள பலன்களைப் பார்க்கையில், அவர் நீண்ட காலம் தங்கினதை நியாயப்படுத்துகின்றதாகவும் இருக்கின்றது. நண்பர்கள் பிரியும் விஷயம் மிகவும் வேதனையுடையதாகும். திரைக்கு இப்பக்கத்தில் இனி மீண்டும் பார்ப்பதற்கான நம்பிக்கையில்லாமல் பிரியும் சம்பவமானது இரட்டிப்பான கடும் வேதனையாக இருக்கும்.

## தேவனுடைய இராஜ்யத்தைப் பிரசங்கித்தல்

"தேவனுடைய இராஜ்யம் குறித்துப் பிரசங்கித்தலே"- கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் என்றுள்ள அப்போஸ்தலரின் விசேஷமான வலியுறுத்துதலை நாம் இங்குக் கவனிக்கின்றோம். இந்தச் சுவிசேஷத்தையே நாம் இன்று பிரசங்கித்துக்கொண்டிருக்கிறோம் என்று நம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமானால் நல்லது; ஒருவேளை இல்லையெனில், நாம் சரியானதைப் பிரசங்கிக்கவில்லை என்றதாகிவிடும். தேவனுடைய கிருபையானது, அவருடைய ஈவாகிய குமாரனிடத்தில் வெளிப்பட்டது. மேலும் தேவனுடைய கிருபையினால் குமாரனானவர் எல்லா மனுஷருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கிறவரானார். கிறிஸ்துவின் மரணமானது எப்படி நம்முடைய மனுக்குலத்திற்கு ஆசீர்வாதம் கொண்டுவரும்படி திட்டமிடப்பட்டுள்ளது என்பதில் - தேவனுடைய கிருபையானது இன்னுமாக வெளிப்பட்டுள்ளது. அதென்னவெனில்:-

(1) மனுக்குலத்தை ஆளுவதற்கும், பாவம் மற்றும் மரணத்தை அடக்குவதற்கும், சத்துருக்களால் கட்டுண்டவர்களைச் சீர்த்தூக்குவதற்கும், பரலோகத்தின் கீழ் இராஜ்யம் இறுதியில் ஸ்தாபிக்கப்படுவதன் மூலம் தேவனுடைய கிருபை வெளிப்படுகின்றது.

(2) "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று நாம் ஜெபிக்கும் உலகத்திற்குரிய பொதுவான ஆசீர்வாதங்கள் வருவதற்கு முன்னதாக, அந்த இராஜ்யத்தில் அருமையான மீட்பரோடு உடன்சுதந்தரர்களாகிடுவதற்குச் "சிறுமந்தையினர்" முதலாவதாக தெய்வீக அறிவிப்பினால் அழைக்கப்படுகின்றனர். தேவனால் நமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட காரியங்களை நாம் அறிந்துகொண்டு, இவ்விதமாக நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்வதற்கு நாம் உதவிபெற்றிடவும்வேண்டி - இருண்ட யுகத்தின் பாரம்பரியங்களினால் நமது பார்வையிலிருந்து நீண்ட காலமாய் மறைக்கப்பட்டிருந்த தேவனுடைய இராஜ்யம் மற்றும் தேவனுடைய கிருபைக் குறித்ததான இந்த விலையேறப்பெற்றச் சத்தியங்களானது - இப்பொழுது ஆவியினாலும், நம்முடைய

கண்கள் பிரகாசிக்கப்பட்டிருப்பதினாலும் வெளியாகிக் கொண்டிருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி.

"தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்" (அப்போஸ்தலர் 20:26, 27) என்ற அழுத்தமிக்க வார்த்தைகளை அப்போஸ்தலர் குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லையே. மூன்று வருடங்களாக எபேசு பட்டணத்துச் சபையாரோடு அவர் தங்கி போதித்த அதே விஷயங்களே, பல்வேறு சபைகளுக்கு அவர் எழுதிட்ட நிருபங்களின் வாயிலாகத் தெய்வீக ஏற்பாட்டினால் நமக்கும் வந்துள்ளது. பரிசுத்த பவுலின் செய்திகளில் - தெய்வீகத் திட்டத்தின் பாகமாயிராத நித்தியத்திற்குரிய சித்திரவதைக் குறித்த எந்த ஒரு வார்த்தையும் இடம் பெறாததை நாம் கவனிக்கலாம். பரிசுத்த பவுல், கர்த்தருடைய அருமையான ஜனங்களை உற்சாகப்படுத்துவதிலும், போதிப்பதிலும், கடிந்துகொள்வதிலும் மிகப் பொறுமையாக இருந்தார் என்பதை இந்த நிருபங்களின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளலாம். பவுல் தன்னை முற்றிலும் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்திருந்தபடியால் அவர் கர்த்தரால் அதிகம் பயன்படுத்தவும் பட்டிருந்தார்.

இங்குத் தேவனுடைய பரிசுத்த ஆவியின் செயல்பாட்டிற்கும், பரிசுத்தமில்லாத ஆவிகளாகிய விழுந்துபோன ஆவிகளின் செயல்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கலாம். இரண்டு விஷயங்களிலும்/பக்கத்திலும் எந்தளவுக்கு அந்த நபர் தனது சொந்த சித்தத்தை விட்டுக்கொடுக்கின்றாரோ, அவ்வளவாய் (ஆவியின்) கட்டுப்பாடும் காணப்படும். ஆனால், அதிர்ஷ்டவசமாக மனுக்குலமாகிய நாம் அனைவரும் நம்மை முற்றிலும் அர்ப்பணிக்க/ ஒப்புக்கொடுக்க இயற்கையாகவே பயம் கொண்டுள்ளோம். இப்படியான சுபாவம் இல்லையெனில், சந்தேகத்திற்கிடமின்றி இன்று முழு உலகமும், அல்லது பெரும்பான்மையானவர்கள் விழுந்துபோன ஆவியின் கட்டுப்பாட்டிற்குள் போயிருந்திருப்பார்கள். ஆவியுலக ஊடகர்கள்கூடத் தங்கள் சித்தத்தைப் பகுதியளவே ஒப்புக்கொடுத்துள்ளபடியால், முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று ஆவிகள் வலியுறுத்துகின்றன. முழுமையாக சித்தத்தை ஆவிகளுக்கு ஒப்புக்கொடுத்து, இதனால் தீய ஆவிகள் முழு அதிகாரத்தையும் எடுக்க ஒப்புக்கொடுப்பது என்பது மாபெரும் அபாயம் என ஆவியுலக இடையீட்டார்களுக்கு, ஆவியுலக புத்தக வெளியீடுகளில் எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தோ பரிதாபமான ஆவியுலக இடையீட்டாளர்கள்! இவர்கள் தங்கள் மூலம் தொடர்புகொள்ளும் அனைத்து ஆவிகளும் பொல்லாத ஆவிகள் என்றும், பிசாசுகள், விழுந்துபோன ஆவிகள் என்றும், மனிதர் போன்று

வேஷம் தரித்த ஆவிகள் என்றும், நம்முடைய மரித்த நண்பர்கள் போன்று வேஷம்போடும் ஆவிகள் என்றும் அறியாமலிருக்கின்றார்கள்.

புருஷர்களும், மனைவிகளும்கூடத் தங்களுடைய சித்தங்களை ஒருவருக்கொருவர் முற்றிலும் ஒப்புக்கொடுக்கத் துணியும் விஷயத்திலும் பாதிப்புக்கேதுவான ஆபத்தில்லாமல் இல்லை. பெற்றோர்களும்கூடத் தங்களுடைய பிள்ளைகளின் விஷயத்தில், பிள்ளைகள் தங்களுக்கென்று சொந்த சித்தம் வைக்காத அளவுக்கு அவர்களைக் கட்டுப்படுத்த/வற்புறுத்த முயற்சிக்கக்கூடாது. பிள்ளைகள் எவ்வளவாய்க் கட்டுப்படுத்துகிறார்களோ, அவ்வளவாய்ப் பெற்றோர்கள் அவர்களை பாதிப்புக்குள்ளாக்கி, அவர்களின் தனிமனித பண்புகளைக் குலைத்துப்போட்டு, விழுந்துபோன ஆவிகள் எளிதில் அவர்களை வஞ்சிக்கும் நிலையில் உள்ளாக்கிவிடுவார்கள்.

நாம் நம்மை முற்றும் முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டிய ஒரே ஒருவர் கர்த்தராவார். இவரே தம்மிடத்தில் முழுமையாகச் சித்தத்தை ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கின்றார். மேலும் நாம் அவருடைய நாமத்தினால், அவருடைய ஸ்தானாபதிகளாக இருந்து, நமது பிள்ளைகளையும், நமது நண்பர்களையும், நமது அயலகத்தாரையும் கர்த்தரிடத்தில் தங்கள் இருதயத்தை முழுமையாக ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கலாம். எந்தளவுக்குச் சித்தங்கள் முழுமையாக அர்ப்பணிக்கப்படுகின்றதோ, அந்தளவுக்கு ஒப்புக்கொடுத்தலும் அதிகமாயிருக்கும். அத்தகைய அனுபவமும் மிக ஆசீர்வாதமாய் இருக்கும். அதாவது, கர்த்தருடைய வேலைகளில் அதிகம் பயனுள்ளவர்களாகவும் இருப்போம். இதுவே, "ஆவியினாலே நிறைந்து," உங்களைப் பரிசுத்தப்படுத்தி, முற்றிலுமாகக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுங்கள் என்ற பரிசுத்த பவுல் அவர்களின் புத்திமதியில் உள்ள சாராம்சமாகும். இந்த அர்ப்பணிப்பு அல்லது சித்தத்தை ஒப்புக்கொடுக்கும் அளவிற்கு ஏற்ப, நாம் கர்த்தருடைய வேலைக்கு, சத்தியத்தின் வேலைக்கு, மந்தையின் வேலைக்கு ஆயத்தமாய் இருக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்படலாம். கர்த்தருக்கென்று முழுமையாகச் சுயத்தை அர்ப்பணிக்கும் விஷயத்திலும், ஆவியில் நிரப்பப்படும் விஷயத்திலும், சுயசித்தத்தை வெறுமையாக்கும் விஷயத்திலும், உலகத்திற்கும் அதன் திட்டத்திற்கும் அதன் சித்தத்திற்கும் அதன் வேலைகளுக்கும் மரிக்கும் விஷயத்திலும், பரிசுத்த பவுல் சிறந்த முன்மாதிரியாக விளங்குகின்றார்.

இப்படியாக, அப்போஸ்தலன் தான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, தன்னைச் சகோதரர்கள் பின்பற்றுங்கள் என்று சொன்னதில் ஆச்சரியமில்லையே. கிறிஸ்து பிதாவின் ஆவியினால் நிரப்பப்பட்டவராக இருந்தார். பரிசுத்த பவுல், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின்பற்றுகிறவராக இருந்து, அவரைப்போன்றே ஆவியில் நிரப்பப்பட்ட அனுபவம் பெற்றிருந்தார். எனினும், குறைந்த அளவிலேயே நிரப்பப்பட்டிருந்தார். மேலும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகத்

தேவபக்தியாய் ஜீவிக்கிற அனைவரும்கூட அவருடைய ஆவியினால், கிறிஸ்துவின் சித்தத்தினால், பிதாவின் சித்தத்தினால் நிரப்பப்பட்டு, பூமிக்குரிய நோக்கங்களுக்கு மரித்தவர்களாயிருக்க வேண்டும். மூப்பர்களை வரவழைப்பதற்கான அப்போஸ்தலனுடைய நோக்கமானது, தன்னைப்போன்று, கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணினவர்களாக மாத்திரமல்லாமல், சபையில் போதகர்களாகவும் காணப்படும் அவர்கள், தங்களைக்குறித்தும் மற்றும் தங்களைக் கண்காணிகளாகக் கர்த்தர் ஏற்படுத்தியுள்ள சபைக்குறித்தும், இரண்டுமடங்கு பொறுப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர் எனும் உண்மையினை, அவர்களது மனதில் பதியவைப்பதற்கேயாகும். "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய (குமாரனுடைய) சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக (கிரேக்க வார்த்தை, episcopos - bishops) வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" எனும் அவரது வார்த்தைகளைக் கவனியுங்கள் (அப்போஸ்தலர் 20:28).

"Take heed un to yourselves, and to all the flock, **<u>in which</u>** the holy spirit hath made you bishops, to feed the church of God which he purchased with the blood of his own son." (Revised Version)

"Take heed to yourselves therefore and to all the flock **<u>among whom</u>** the holy spirit made you oversees to feed the church ..." (Diaglott)

அப்போஸ்தலர் 20:28-ஆம் வசனத்திலுள்ள பல்வேறு விஷயங்களானது, மிகவும் கவனமாய்க் கவனிப்பதற்குப் பாத்திரமானவைகளாகும். ரிவைஸ்ட் மொழியாக்கத்தில் "<u>In the which</u> – the Holy Spirit hath made you bishops" என்று இடம்பெறும் மொழிப்பெயர்ப்பானது, சபையின் மூப்பர்களானவர்கள் மேற்பட்ட வகுப்பார் அல்லது "குருமார்" வகுப்பார் எனும் விதத்தில் சபை மீது ஏற்படுத்தப்படாமல், மாறாக சபை வாயிலான கர்த்தருடைய நியமித்தலின்படி அவர்கள் சபையில் - அதன் அங்கத்தினர்களாக - மேற்பார்வையிடும் அங்கத்தினர்களாக, உதவி செய்யும் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றனர் எனும் வேதவாக்கியத்தின் காரியத்திற்கு இசைவாயுள்ளது. இரண்டு விஷயங்களைக் கவனிக்கவும்:-

(1) அவர்கள் தங்களைக்குறித்தும் மற்றும் மந்தையைக்குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சபையில் மேய்க்கும் பணியினைச் செய்ய முற்படும் எவரும், முதலாவதாக தான் சோதனைக்குள் விழுந்துபோகாதபடிக்கு விழிப்பாய் இருப்பது அவசியம்; ஏனெனில் அப்போஸ்தலன் கூறுவது போன்று, சபையில் மூப்பர்களுடைய - போதகர்கள், மேற்பார்வையாளர்களுடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்பவர்கள் விசேஷித்த சோதனைகள், விசேஷித்த இடர்பாடுகளுக்கு உள்ளாவார்கள். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற இவர்கள், ஆகாதவர்களாய்ப் போய்விடாதபடிக்கு, இவர்கள் முதலாவது, தங்களைக்குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

(2) "திவ்விய ஒழுங்குமுறையின் கீழ் மூப்பராகிய சகோதரர்களெனச் சபையில் ஊழியத்தினை ஏற்றுக்கொள்பவர்கள், தாங்கள் ஒரு கனமான பொறுப்பினை எடுத்துக்கொண்டுள்ளனர் என்றும், அது விஷயம் தாங்கள் தேவனுக்குக் கணக்குக்கொடுக்க வேண்டும் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். இது சகோதரரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கிறதைக் குறிக்கின்றதாய் இராது. இது சகோதரருக்குப் பிரசங்கம் பண்ணுவதை மாத்திரமோ அல்லது வியாதியஸ்தர்களைப் போய்ச் சந்திப்பதை மாத்திரமோ மற்றும் பிரச்சனையில் இருப்போருக்கு ஆலோசனை வழங்குவதை மாத்திரமோ குறிப்பதாகாது. இது சபையாருடைய மற்றும் அதன் தனித்தனி நபர்களுடைய - இருவருடைய நலனுக்கடுத்த காரியங்கள்குறித்த ஓர் ஆவிக்குரிய மேற்பார்வையை, பராமரிப்பைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த ஜீவியத்திற்கடுத்த கவலைகளினால் பாரமடைந்திருப்பவர்கள், ஜீவனுள்ள தேவனுடைய சபையில் இந்த ஊழியத்திற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்குரிய நிலைமையில் எவ்விதத்திலும் காணப்படாதவர்களாய் இருப்பார்கள். மேலும் இத்தகையவர்கள் அப்பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள அழைக்கப்படவும் கூடாது, மூப்பர் என (voted) வாக்களிக்கப்படக் கூடாது. கர்த்தருடைய இராஜ்யம் மற்றும் அதன் நீதிக்கடுத்தவைகளை முதலாவது நாடுபவர்கள் மாத்திரமே எவ்விதத்திலும், சபையிலுள்ள இத்தகைய ஊழியத்திற்குப் பொருத்தமானவர்களாய் இருப்பார்கள். மற்ற அங்கத்தினர்கள் எப்படி வளர்ந்து கொண்டிருக்கின்றனர், விசேஷமாக அவர்களது ஆவிக்குரிய காரியங்களில் எப்படி வளர்ந்து கொண்டிருக்கின்றனர் என்று கவனிப்பது தங்களது பொறுப்பினுடைய ஒரு பாகமாக இருக்கின்றது என்று மூப்பர்கள் கருதிட வேண்டும். வாய்ப்புக் கிடைப்பதற்கேற்ப மற்ற அங்கத்தினர்கள் யாவருக்கும் புத்திமதி கூறுவதும், உற்சாகமூட்டுவதும், உதவிசெய்வதும் தங்களது கடமையினுடைய ஒரு பாகமாக இருக்கின்றது என்று இவர்கள் உணர்ந்திட வேண்டும்.

தாங்கள் சம்பந்தப்பட்டிருக்கும் ஏதோ தனிப்பட்ட காரியமாய் இருந்தால் ஒழிய, மற்றப்படி ஒவ்வொருவரையும் சரிப்படுத்த முயற்சிப்பது என்பது சகோதர சகோதரிகள் யாவருக்குமான சிறப்புரிமையல்ல. தனிப்பட்ட காரியமாய் இருக்கும் சந்தர்ப்பங்களில், மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களில் கொடுக்கப் பட்டுள்ளதான நமது கர்த்தருடைய அறிவுரையானது கண்டிப்பாய்ப் பின்பற்றப்பட வேண்டும். மூப்பர் ஒருவர் இந்தத் தனது ஊழியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், சபையாரின் காரியங்கள் மீதான இத்தகைய கண்காணிப்பைப் பண்ணிடவும், சந்தர்ப்பத்தினுடைய தன்மைக்கேற்ப புத்திமதி வழங்கிடவும், கடிந்துகொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்; மேலும் இவற்றைச் செய்கையில் - தானும் ஒருவேளை இதே விஷயங்களில் சோதனைக்குள்ளாகவில்லை என்றாலும், வேறு ஏதேனும் விஷயங்களில் சோதனைக்குள்ளாகக்கூடும் என்று நினைவில் கொண்டு சாந்தத்துடன் செய்திட வேண்டும். மூப்பரும்கூட மத்தேயு 18:15-17-ஆம்

வசனங்களின் காரியங்களை நடைமுறைப்படுத்திட வேண்டும்.

## கொடிதான ஓநாய்களும், மாறுபாடானவைகளைப் போதிப்பவர்களும்

கண்காணிக்கும் இக்கடமையினை மூப்பர்களிடத்தில் பதியவைக்கும் வண்ணமாய்க் கர்த்தர் இந்த மந்தையைத் தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்தார் என்றும், கர்த்தருடைய பார்வையில் காணப்படும் இந்த விலையேறப்பெற்றக் காரியமானது - அவர்களால் ஏறெடுக்க முடியும் எந்த ஊழியத்திலும் சகோதரருக்கெனத் தங்கள் ஜீவியங்களைத் தியாகம் பண்ணிடுவதற்கு அவர்கள் விரும்பத்தக்கதாக - அவர்களது மனங்களில் மிக ஆழமாய்ப் பதிய பெற்றிருக்க வேண்டும் என்றும், அவர்களுக்குப் பரிசுத்த பவுல் அடிகளார் நினைப்பூட்டினார்.

முன்னமே கொடுக்கப்பட்ட எச்சரிப்பிற்கு அழுத்தம் கொடுக்கும் வண்ணமாக அப்போஸ்தலன் தீர்க்கத்தரிசனமாய், இவர்கள் தங்களுக்காகவும், மந்தைக்காகவும், தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருப்பது மிகவும் அவசியம் என்றும், மூப்பர்கள் மத்தியிலிருந்து விசேஷமாக மனுஷர்கள் எழும்பிச் சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்றும் கூறினார். தலைவர்களாகிட வேண்டுமென்ற ஆசையில், தங்கள் பதவி ஆசை நிறைவேற உதவும்படிக்கு சபையில் பிரிவினையை உருவாக்கிடுவதற்கு இவர்கள் தயங்கிடமாட்டார்கள். வசனம் 30-இல் இடம் பெறும் 'perverse' (மாறுபாடானவைகள்) எனும் வார்த்தை அதன் மூல பாஷையில், திரித்துக்கூறுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஆவியினை இழக்கத் துவங்குபவர்கள், சத்தியத்தினைப் பற்றின தங்களது தெளிவான புரிந்துகொள்ளுதலையும் இழக்கத் துவங்குவார்கள் என்பதே கருத்தாகும். சுயநலமான மற்றும் தனிப்பட்ட ஆசைகளானது அவர்களது கண்பார்வையினை மறைக்கையில், அவர்கள் வேதவாக்கியங்களை மிகமிக மங்கலாய்க் காண்பார்கள் மற்றும் அவை தங்களது சொந்த ஆசையினை ஆதரிக்கத்தக்கதாக, அவற்றைத் தாராளமாய்த் திரித்திடுவார்கள்.

அப்போஸ்தலனின் வார்த்தைகள் எத்துணை உண்மையாய் உள்ளது! இவைகள் விஷயத்தில் விசேஷமாய் மூப்பர்களுக்கு, மந்தையினுடைய கண்காணிகளுக்கு எத்துணை மகா ஆபத்து உள்ளது! நிச்சயமாகவே சுயநலமான ஆசை என்பது இவர்கள் எதிர்த்துப் போராட வேண்டிய மாபெரும் சத்துருக்களில் ஒன்றாய் இருக்கின்றது. இந்தப் பதவி ஆசைகளானது, சடுதியாய் முளைத்து, பூப்பூத்து, கனிகொடுத்துவிடுவதில்லை. இது ஒரு படிப்படியான காரியமேயாகும்; ஆகையால் மிகவும் அபாயகரமானதாகவும், மிகவும் வஞ்சனையுள்ளதாகவும்,

கவனிக்கத்தவறப்படுகிறதாகவும் காணப்படுகின்றது. ஆகையால் கர்த்தருடைய மந்தையில் அனைவரும், விசேஷமாக மூப்பர்கள் தங்களைக்குறித்து எச்சரிக்கையாக இருப்பதும், தங்கள் நடத்தைகளை அதிலும் குறிப்பாக தங்கள் செய்கைகளுக்குப் பின்னுள்ள நோக்கங்களைக்கூர்ந்து கவனிப்பதும் எவ்வளவு முக்கியமாயுள்ளது. சித்தத்தில் முழுமையான தூய்மை என்பது அவசியமாயுள்ளது என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. கலந்திடும் ஒவ்வொரு சுயநலமும், எவ்வளவு சிறியதாயிருப்பினும், அது கவனிக்கப்படாத பட்சத்தில், இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்திவிடும் நச்சுக்கிருமியாயிருக்கும். "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்பதே அப்போஸ்தலனின் எச்சரிப்பாய் இருக்கின்றது. ஏனெனில், மூப்பர்கள் மத்தியில்தான் சில மனுஷர் எழும்பி சீஷர்களைத் தங்கள் பக்கமாக இழுக்கவும், மந்தையில் தலைவர்களாக இருக்கவும், மனுஷனுடைய பாராட்டு மற்றும் கனம் பெற்றுக்கொள்ளும் காரணங்களுக்காக மாறுபாடானவைகளைப் பேசுவார்கள். ஆ! தெய்வீகக் கிருபையையும், நித்தியத்திற்குரிய ஜீவனையும் இழப்பது என்பது எத்துணைப் பெரிய விலை!

"கொடிதான ஓநாய்கள்" என்பது இரக்கமற்ற ஓநாய்களாகும். கொஞ்சக்காலம் இவர்கள் தங்கள் ஓநாய் சுபாவத்தை மூடிமறைத்துள்ள வெளிப்புறமான நடத்தையினாலும், வெளிப்புறமான அறிக்கையினாலும், செம்மறி ஆடுகளை ஏமாற்றிடலாம். மந்தையை வஞ்சிப்பதற்கான இவர்களது வெளித்தோற்றமான நடத்தையை, வேதவாக்கியங்களானது, "ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டுள்ள ஓநாய்" என்று குறிப்பிடுகின்றது (மத்தேயு 7:15, 16). இவர்களது குணலட்சணமானது, செம்மறி ஆடுகளுக்கு வெளிப்படுவதற்கு வெகுக்காலத்திற்கு முன்னதாகவே, மேய்ப்பன் அவைகளை அறிந்திருப்பார். ஆனால் ஓநாய்களானது, மந்தையைக் கடிக்கவும், பட்சிக்கவும், சிதறடிக்கவும் துவங்குவது வரையிலும் சாதுவான மற்றும் கபடற்ற ஆடுகளானது வஞ்சிக்கப்பட்டே காணப்படும். கோபத்தின், துர்க்குணத்தின், பகைமையின், பொறாமையின், சண்டைச்சச்சரவின் ஊளைகளானது, வேதவாக்கியங்களில் "மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது - இவை நீதியின், சமாதானத்தின் மற்றும் அன்பின், கர்த்தருடைய ஆவியின் கிரியைகள் அல்ல - ஓநாயானது அதன் வாயினாலே தீங்கு செய்கின்றது; அதுபோலவே "கொடிதான ஓநாய்களும்" செய்கின்றன. புறங்கூறுதல், தூற்றுதல் மற்றும் சகல பொல்லாத கிரியைகளைச் செய்கின்றனர். எவற்றை எதிர்ப்பார்த்திடலாம் என்று எபேசுவின் மூப்பர்களை அப்போஸ்தலன் எச்சரித்தார் மற்றும் அவரது வார்த்தைகள் உண்மையாகவுமானது. "இமெனே, அலேக்சந்தர், பிகெல்லு, எர்மொகெனே என்பவர்களுடைய நாமங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 1:20; 2 தீமோத்தேயு 1:15; 2:17). அதே கொள்கை இன்றளவும் கிரியைச் செய்கின்றது. அதே எச்சரிப்பிற்கு இன்றும் செவிக்கொடுக்கப்பட வேண்டும். ஆம்

இதுபோன்றதான பல்வேறு அனுபவங்களானது, சுவிசேஷயுகம் நிறைவடைகின்றதும், நாம் இப்பொழுது ஜீவித்துக்கொண்டிருக்கின்றதுமான, "பொல்லாத நாட்களில்" சபை மீது வருமென வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன.

## இரவும், பகலும் கண்ணீரோடே

வசனம் 31-இல், அப்போஸ்தலன் இரண்டு காரியங்களை நமக்கு முன்வைக்கின்றார். இவ்வளவுக்குச் சித்தரிக்கப்பட்டுள்ளதான இந்தத் தீமைகளுக்கு எதிராய் முதலாவதாக மூப்பர்கள் விழித்திருக்க வேண்டும். அவர்கள் ஓநாய்களுக்கு எதிராய், மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும். ஆடுகளில் யாரேனும் ஓநாயினுடைய வெறிக்கடியினால் (Rabies) வெறியடைந்து, ஜலபய வியாதிக்கான (hydrophobia) அறிகுறிகளை வெளிப்படுத்திடும் நிலை ஏற்படாதபடிக்கு, மூப்பர்கள் ஆடுகளுக்குப் புத்திமதி கூறிட வேண்டும்; ஒருவரையொருவர் புறங்கூறுதல் என்பது, ஜலபய வியாதியின் வழக்கமான அறிகுறியாகும் - இதோடுகூடச் சத்தியத்திற்கு அடையாளமான தண்ணீருக்கான தாகம் இருப்பது போன்று காணப்பட்டும், அதைப் பருகிடுவதற்கு மறுத்தல் - அதாவது அதற்கு எதிராய் மாறிவிடுதல் என்பதுமாகிய அறிகுறியும் காணப்படும்.

இரண்டாவதாக மூப்பர்கள் தங்கள் மத்தியிலிருந்து, நிச்சயமாக எழும்புபவர்களுக்கு எதிராகவும் கண்காணித்துக்கொள்ள வேண்டும். சரியாய்க் கண்காணித்தல் என்பது, நம்முடைய சொந்த இருதயங்களில் துவங்குகின்றதாயிருந்து, "ஆண்டவரே நானோ?" என்று கேட்டிட வேண்டும். இப்படியாகக் கண்காணிக்கும்போது, இமெனேயும் பிலேத்துவையும் போன்றவர்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். மேலும் சரியாய்க் கண்காணித்தலானது, உரிய காலத்தில் அத்தகைய பாத்திரங்களை அடையாளம் கண்டு கொண்டு, அத்தகையவர்களை - அவர்களின் மீதான எந்தவொரு கசப்பின் காரணமாக இல்லாமல், மாறாக மந்தையினுடைய பாதுகாப்பிற்காக அத்தகையவர்களை வெளிப்படுத்திடும் (1 தீமோத்தேயு 1:20; 2 தீமோத்தேயு 1:15; 2:17).

இப்படியாகத்தான் தன்னுடைய நடத்தைக் காணப்பட்டதாக, பரிசுத்த பவுல் அடிகளார் சகோதரருக்கு நினைப்பூட்டினார் - அதாவது அவர்கள் மீதும், ஆசியா மைனரிலுள்ள சபைகள் அனைத்தின் மீதும் மிகுந்த அக்கறையும், கவலையும், கண்காணிப்பும் உள்ள ஒன்றாய்த் தன்னுடைய நடத்தைக் காணப்பட்டதாக அவர்களுக்கு நினைப்பூட்டினார். "இரவும், பகலும் கண்ணீரோடு" எனும் வார்த்தைகளானது - கிறிஸ்துவோடு ஆயிரம் வருடங்கள் ஆளுகை செய்திடும், கிறிஸ்துவினுடைய மகிமைப்படுத்தப்பட்ட சரீரத்தின் அங்கத்தினர்களாக இருக்கப்போகின்றவர்களை அழைப்பதற்கும், ஆயத்தப்படுத்துவதற்கும் உதவி

செய்யத்தக்கதாக, சபையின் மாபெரும் தலையானவரால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதான "புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரரென," கர்த்தருடைய மந்தைக்கான கண்காணியென, உடன் மேய்ப்பனென, இராஜாதி இராஜனுடைய ஸ்தானாபதியென, தேவனுடைய ஊழியக்காரனெனத் தன்மீது காணப்படும் பொறுப்பினுடைய பாரத்தினைச் சரியாய் அவர் உணர்ந்து கொண்டிருந்ததைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

## தெய்வீக உதவி அருளப்பட்டுள்ளது

அப்போஸ்தலனுடைய அறிவுரையின் இறுதி வார்த்தைகளானது, அப்போஸ்தலன் தன்னுடைய வார்த்தைகளானது, தனது இந்த உள்ளார்ந்த போதித்தல்களானது, மூப்பர்களைத் தங்களது பொறுப்புகள் குறித்து விழிப்பிற்குள்ளாக்குவது மாத்திரமல்லாமல், இப்படியாகச் சுட்டிக் காண்பிக்கப் பட்டுள்ளதான ஆபத்தின் விஷயத்தில் எந்தப் பாதுகாப்பின் மீது தாங்கள் சார்ந்திருக்க வேண்டும் என்று விசாரித்திட அவர்களை வழிநடத்திட வேண்டும் என்று அப்போஸ்தலனின் எண்ணம் காணப்பட்டதாகத் தெரிகின்றது. நமது ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் மகா மையமாகக் காணப்படுபவரும், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் அளிப்பவருமான தேவன் நம்முடைய சார்பிலும், அவரது ஏற்பாடுகளுடன் ஒத்துழைப்பதற்கு நாடிடும் அனைவரின் சார்பிலும் காணப்படுகின்றார் எனும் உண்மையினிடத்திற்கு அப்போஸ்தலன் கவனத்தைத் திருப்புகின்றார்.

இன்னும் விவரிக்கும் வண்ணமாக, அவர் வேதவாக்கியங்களை, தேவனுடைய கிருபையுள்ள வசனத்தை, சுவிசேஷ செய்தியினைக் குறிப்பிடுகின்றார். தேவவசனமானது நம்மைக் கட்டியெழுப்ப முடிகிறதாகவும், அவசியமான குணலட்சணத்தினுடைய வளர்ச்சியினைக் கொடுக்க முடிகிறதாகவும், இந்தச் செய்தியினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் யாவருக்குமாக தேவன் வைத்துள்ளதான மாபெரும் சுதந்தரத்தில், நமக்கு ஒரு பங்கினை இறுதியில் கொடுக்க முடிகிறதாகவும் காணப்படுகின்றது என்று அவர்களுக்கும் மற்றும் நமக்கும்கூட அவர் கூறுகின்றார். இவை அனைத்தையும் இருதயத்தில் வைத்துக்கொள்வோமாக. தேவ வசனத்தைப் புறக்கணித்தல், அவரது வாக்குத்தத்தத்தைப் புறக்கணித்தல் என்பது, நமக்கான சோதனையைச் சகிப்பதற்கான பலத்தில் குறைவுப்பட்டிருப்போம் என்பதாகும். இது நம்மைக் குழப்பத்தக்கதாக, இருளுக்குப் பதிலாக வெளிச்சத்தையும், வெளிச்சத்திற்குப் பதிலாக இருளையும் சாத்தான் முன்வைத்திடுவதற்கு அவருக்குக் கதவைத் திறப்பதையும் குறிக்கின்றதாய் இருக்கும். மேலும், இதில் எச்சரிப்பாய் இருப்பதற்குக் கவனம் செலுத்தத் தவறினவர்கள் - ஆட்டினுடைய சத்தத்திற்கும், இரவில்

ஊளையிடும் ஓநாயின் சத்தத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ள முடியாத நிலைக்குப் போவதைக் குறிக்கின்றதாகிவிடும். மேலும், கர்த்தருடைய வார்த்தையாகிய எக்காளத்தைப் பற்றிப்பிடித்து ஊதுகிறவர்களுக்கும் மற்றும் மந்தையைப் பிரித்துத் தங்கள் பக்கமாக ஆடுகளை இழுத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக மாறுபாடானவைகளைப் பேசி ஆடுகளின் மத்தியில் பிரிவினைகளைக் கொண்டுவர நாடுபவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியாத நிலைக்குப் போகின்றதைக் குறிக்கின்றதாகிவிடும்.

தவறு செய்யாதிருப்போமாக. கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மத்தியில் பங்கு உண்டு அல்லது பங்கு இல்லை என்பதுதான் கேள்வியாகும். கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் கர்த்தரையும், பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய விஷயங்கள் தொடர்பான, அவருடைய சகல ஆசீர்வாதங்கள் தொடர்பான அவருடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளுகிறவனாயிருந்து, தொடர்ந்து வைராக்கியத்துடன் காணப்பட்டு மேய்ப்பனின் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வான். ஆனால், ஏற்றகாலச் சத்தியத்தையும், இந்த அறுவடை காலத்தின் விசேஷமான ஏற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளாதவனோ ஆயத்தமற்றவனாயிருந்து, தன்னை வஞ்சிக்கவும், இழுத்துக்கொள்ளவும் நாடுபவர்களால் வஞ்சிக்கப்பட்டுப்போவான்.

## மந்தைக்கான ஒரு முன்மாதிரி!

போரடிக்கிற மாடானது கூலிக்குப் பாத்திரமாய் இருப்பதுபோல, ஆவிக்குரிய விஷயங்களில் சபைக்கு ஊழியம் செய்த ஒருவன், தான் சேவித்தவர்களின் பூமிக்குரிய ஆசீர்வாதங்களின் ஒரு பங்கை நியாயமாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பரிசுத்த பவுல் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், தான் பூமிக்குரிய விஷயங்களைப்பார்க்கிலும் மிக விலையேறப்பெற்ற ஆவிக்குரிய விஷயங்களில் சபைக்கு ஊழியம் செய்திருக்கிறபடியால், தன்னுடைய பூமிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் சபை புரியும் ஊழியம் சிறு காரியமே என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டியுள்ளார். இவைகள் சபையாரால் கடைப்பிடிக்க வேண்டிய நியாயமான விஷயங்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும், அவைகளை அவர்களிடம் அப்போஸ்தலனாகிய பவுல் எதிர்ப்பார்க்கவில்லை. இந்த விஷயங்களைச் சரியான வெளிச்சத்தில் பார்ப்பது அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும். ஆனால் பூமிக்குரிய விஷயங்களில் தனக்கும், சத்தியத்தின் மற்ற ஊழியர்களுக்கும் உதவிகள் புரியும் தங்களுக்குரிய சிலாக்கியங்களை அவர்கள் பார்க்கத் தவறினாலும், இதனால் அவர் சத்தியத்தின் சேவையில் சுயத்தைப் பலிச்செலுத்துவதற்கும், சுயத்தை வெறுப்பதற்கும் அதிக வாய்ப்புகளைப் பெற்றதாக உணர்ந்திருந்தார். அவர்கள் செய்யத் தவறின விஷயங்களுக்காகக்

கோபம்கொண்டு நீங்கள் என் பூமிக்குரிய தேவைகளைச் சந்திக்க மறுத்தபடியினால் நானும் உங்கள் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்க மறுக்கிறேன் என்று கூறவில்லை. மாறாக, அவருடைய எண்ணம் இப்படியாக இருந்தது:- இந்த அருமையான ஆடுகளுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் தேவையாய் உள்ளது. மேலும், அவர்களுக்கு அவைகளை அளிப்பதற்கான கர்த்தருடைய ஊழியக்காரனாகும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளபடியினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எந்த அளவிற்கு என்னிடம் சுயத்தைப் பலிச்செலுத்தலும், சுயத்தை வெறுத்தலும் காணப்படுகின்றதோ, அவ்வளவாய் அது நான் அவருக்காகவும், அவருடைய சத்தியத்திற்காகவும், அவருடைய மந்தைக்காகவும் கொண்டுள்ள அன்பை நிரூபிக்கின்றதாய் இருக்கும். மேலும் தம்முடைய பலியின் மூலமாய் ஆடுகளைச் சம்பாதித்த மாபெரும் மீட்பருக்கு ஒத்து நான் அதிகம் காணப்படுவதினால், மாபெரும் மேய்ப்பனின் கிருபையையும் நான் அதிகமாய் பெற்றுக்கொள்வேன் என்பதேயாகும்.

இவ்வாறாகத் தற்பெருமைக்காக அல்லாமல், அவர்களுடைய நலனுக்காக, கர்த்தருடைய உடன் மேய்ப்பனுக்குரிய சரியான குணலட்சணங்களை அவர்கள் நன்கு புரிந்துகொள்ளத்தக்கதாகத் தன்னுடைய நடத்தையின் மீது அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பினார். "ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" என்று கூறினார் (அப்போஸ்தலர் 20:33). சொத்துக்களைக் குவிப்பதற்கோ அல்லது தற்கால ஜீவியத்தின் சொகுசுகளை அடைவதற்கோ அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்கு ஊழியம் புரியவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுடைய இருதயத்தையே இச்சித்தார். சபையின் மாபெரும் தலையோடு அவர்களை உறவிற்குள் கொண்டுவரும் சந்தோஷத்தையே அவர் இச்சித்தார். கிறிஸ்துவின் சரீர அங்கங்களை ஆயத்தப்படுத்துவதிலும், தேவனுடைய வார்த்தையில் வாக்களிக்கப்பட்டுள்ள மகிமையான விஷயங்களுக்கு அவர்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்ள உதவுவதிலுமான புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரனான தனது சிலாக்கியங்களை அப்போஸ்தலர் பவுல் உணர்ந்திருந்தார்.

"நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது" (அப்போஸ்தலர் 20:34) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். பரிசுத்த பவுலோடுகூடப் பிரயாணம் மேற்கொண்டவர்களில் சிலருக்குத் தொழில் தெரியாத காரணத்தினாலும், இலாபகரமான வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாததாலும், அப்போஸ்தலனாகிய பவுலின் கூடாரஞ்செய்யும் தொழிலானது பல்வேறு கடலோரப் பட்டணங்களில் வரவேற்கப்பட்ட நிலையில் இருந்ததினாலும், பவுலின்மீது இந்தச் சகோதரர்கள் அவர்களின் பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய

தேவைகளுக்குப் பெரிதளவில் சார்ந்திருந்தார்கள் என்பது தெரிகின்றது. அப்போஸ்தலர் பவுல் என்றுமே இதைக்குறித்து முறையிடவில்லை. இந்த வேதப்பகுதியிலும்கூட அவர் குற்றஞ்சாட்டவில்லை. மாறாக, கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கும் என்று தன்னால் நம்பப்பட்டதும், தன்னால் பின்பற்றப்பட்டதெனத் தான் நம்பினதுமான தகுதியான நடத்தையினை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார். அவர்களும் இதேவிதத்தில் சுயத்தைப் பலிச்செலுத்தி கர்த்தருக்காகவும், சபைக்காகவும், சத்தியத்திற்காகவும் அன்பின் ஆவியைக் கொண்டிருக்க வேண்டுமென்று தெரிவித்தார். இவ்விதமாக அவர்கள் தேவனுடைய இரக்கத்தின் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாகவும், அவருடைய மந்தையை உண்மையாய்க் கண்காணிக்கிறவர்களாகவும் இருக்க முடியும். இதையே அவர் 35-ஆம் வசனத்தில் தெரியப்படுத்துகின்றார். "இப்படி பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றார்."

---

R5501

# கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம்

"இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளே - சகோதர சகோதரிகளாக நாம் ஒன்று கூடுவதற்கு, நமக்கு அதிகாரம் கொடுத்தது என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. (மத்தேயு 18:20) இது கர்த்தருடைய ஜனங்களெனக் கூடுவதற்கு நமக்கான உரிமை பத்திரமாக இருப்பதினால் இதன் அடிப்படையில் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் அவருடைய நாமத்தில் கூடி வர விரும்பும் தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் சரிசமமான உரிமை இருப்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தக்கொள்கைப் பற்றின வேதாகமத்தின் உதாரணத்தை நாம் நினைவில்கொள்ள வேண்டும்: ஒரு தருணத்தில் பன்னிரண்டு சீஷர்களும், பிரசங்கம் பண்ணிவிட்டு திரும்பினபோது, பரிசுத்த யோவான், இயேசுவை நோக்கி, "ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால், அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு:

தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்" என்று கூறினார். (லூக்கா 9:49, 50) இங்கு யோவான் தடுத்த அந்நபர், இன்று நாம் கலந்துகொள்ளும் கூடுகைகளையல்லாமல் வேறே கூடுகைகளை நடத்திவரும் சிலருக்கு ஒத்திருக்கின்றார். இயேசு என்ன கூறினார்? "அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்" என்றார் (மாற்கு 9:39; 38-40).

இதுபோன்ற காரியங்களிலுள்ள தேவனுடைய சித்தம் தொடர்பாக, அவருடைய ஜனங்களுக்குப் போதிப்பதற்கு உதவும் பொதுவான கொள்கை இங்குக் காணப்படுகின்றது. நம்முடைய ஏற்பாடுகள்/ஒழுங்குகள் கர்த்தருக்கு மிகவும் பிரியமாய் இருக்கின்றது என்றே நாம் எண்ணுகின்றோம், இல்லையேல் இந்த ஒழுங்குகளை நாம் நடைமுறைப்படுத்தியிருக்க மாட்டோம். ஒருவேளை மற்றவர்கள் வித்தியாசமாக எண்ணினார்கள் என்றால், பொறுப்பு அவர்களுடையதும், கர்த்தருடையதுமாய் இருக்கின்றது. அவர்களைத் தடுப்பது நமக்கடுத்தக் காரியமல்ல, மாறாக அவர்களை ஆசீர்வதிப்பது (அ) அவர்களை ஆசீர்வதிக்காமல் இருப்பது என்பது, கர்த்தருடைய வேலைகளை நிர்வகிக்கும் விஷயத்தில், அவரது ஞானத்தின் அடிப்படையிலான, அவருடைய காரியமாய் இருக்கின்றது.

இந்தக் கருத்தின்படிச் செயல்படுத்தப்படுவது என்பது, கர்த்தருடைய ஜனங்களின் கூடுகைகளை மிகச் சிறிய வகுப்புகளாகப் பிரித்துவிடுவதாக இருக்காதா எனச் சிலர் கேட்கலாம். இது அந்தச் சகோதர சகோதரிகளைச் சார்ந்துள்ளது என்று நாம் பதிலளிக்கின்றோம். இரண்டு பேராகவும், மூன்று பேராகவும் அல்லது அதிக எண்ணிக்கைக்கொண்டவர்களாகவும் கூடுவதற்கு இவர்கள் உரிமை உடையவர்களாய் இருக்கின்றனர். ஒருவேளை இவர்கள் அதிக எண்ணிக்கையில் கூடுவதை அநுகூலமானதாகக் கண்டார்களானால், இப்படியாக இவர்கள் கூடுவதில் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் ஐயமில்லை. இது இயேசுவினுடைய நேரடியான மற்றும் அப்போஸ்தலர்கள் வாயிலான போதனைகளின் வார்த்தைகளுக்கும், ஆவிக்கும் உட்பட்ட நிலையில், சபையில் அதிகளவிலான சுயாதீனம் இருப்பதைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது.

சகோதர சகோதரிகள் சபையாராகக் கூடுகையில், தங்களுடைய தனிப்பட்ட சுயாதீனங்கள் மற்றும் சிலாக்கியங்களில் சிலவற்றை விட்டுக்கொடுக்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தனிப்பட்ட விருப்பங்கள் என்பது சபையாரின் விருப்பத்திற்கென ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். சபையில் பெரும்பான்மையானவர்கள், சிறுபான்மையானவர்களின் விருப்பங்களைக்கூடக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; கூடுமானால் அனைவருக்கும் அறையில் இடம் இருக்கத்தக்கதாகவும், செய்தியாளர்கள் விஷயத்திலும், கூட்டம் நடைபெறும் இடத்தின் விஷயத்திலும், கூட்டத்தின் வகை திருப்திகரமாய் இருக்கத்தக்கதாகவும், ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஒருவரும் தன்னுடைய விருப்பங்களையும், நன்மைகளையும்,

சுயநலமாய்க் கருத்தில்கொள்ளக் கூடாது. ஒத்துழைக்கும் சிந்தையும், பொன்னான பிரமாணமும், அன்பின் ஆவியும் நிலவ வேண்டும். ஆண்டவருடைய ஆவியில் நிரப்பப்பட்டு, அவரோடு நெருக்கமாய் வாழும் அனைவரும், அனைவரின் நலன்கருதி, தனிப்பட்ட விருப்பங்களை விட்டுக்கொடுத்து, ஒருவருக்கொருவர் ஐக்கியம்கொள்வார்கள்.

## மனசாட்சி மதிக்கப்பட வேண்டும்

மனசாட்சியின் விஷயங்கள் எனும் காரியம் மாத்திரமே, பெரும் பான்மையானவர்களின் சித்தத்திற்கென்று ஒப்புக்கொடுக்கப்பட வேண்டியதில்லை. ஒருவனும் தன்னால் பாவம் என்றும், அநீதி என்றும், தவறு என்றும் நம்புகிற விஷயத்தை, மீதமான சகோதர சகோதரிகள் அனைவரும் அதைச் சரியான விஷயம் என்று எண்ணினாலும் கூட அவன் அதைச் செய்யக்கூடாது. ஒரு காரியத்தை ஒருவனுடைய மனசாட்சியானது செய்வதற்கு வழிநடத்துகையில், மீதமான சகோதர சகோதரிகள் அதைச் செய்யாமல் விட்டுவிட்டாலும், அவன் அதைச் செய்யாமல் விடக்கூடாது.

மனசாட்சியானது, எப்பொழுதும் மதிக்கப்பட வேண்டும், ஒருபோதும் அது கொல்லப்படக்கூடாது (அ) மீறப்படக்கூடாது. தன்னுடைய மனசாட்சிக்கு உண்மையாய் நிற்கும் எவர் ஒருவரும், அவருடைய சகோதர சகோதரிகள் அக்காரியத்தை வித்தியாசமான கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும்கூட, அவரை அவமதித்திடக்கூடாது. மாறாக அவருடைய திடமான நம்பிக்கையில் அவர் தைரியமாய் நிற்பது மதிக்கப்பட வேண்டும்.

இந்தக்கொள்கைகளின் அடிப்படையில் கிறிஸ்துவின் சரீரத்தில் சுயாதீனம் தக்கவைக்கப்படலாம்; மேலும் எந்தளவுக்கு ஒத்த மனமுடையவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியம்கொள்ள முடிகின்றதோ, அவ்வளவாய் நாம் ஆசீர்வாதத்தை அடைய முடியும். ஐக்கியம் தக்கவைக்கப்படாத இடங்களில், ஒன்று கூடுதல் என்பது விரும்பத்தகாததாகவும், தெய்வீக ஒழுங்குகளுக்கு இசைவற்றதாகவும் காணப்படும். மேலும் வெவ்வேறு கூட்டங்களில் கூடுவது, அநுகூலமாய் இருப்பதாகச் சகோதர சகோதரிகள் காண்பார்களானால், உண்மையில் தனிப்பட்ட சுயாதீனத்தின் மீது மிகுந்த கட்டுப்பாடு செலுத்தப்பட்டுள்ளது என்றும், சிறுபான்மையாக இருக்கும் சகோதர சகோதரிகளுடைய உணர்வுகளுக்குப் பெரும்பான்மையாய் இருக்கும் சகோதர சகோதரிகள் மிகவும் அக்கறையற்று இருந்துள்ளனர் என்றும் நாம் நம்புகின்றோம்.

ஒரே பட்டணத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட கர்த்தருடைய ஜனங்களின் கூடுகை அவசியமானதாக (அ) விரும்பத்தக்கதாகக் காணப்பட்டாலும்கூட, நிச்சயமாய் அவர்கள் ஒரே மனமும், ஒரே இருதயமுமே கொண்டிருக்க வேண்டும்;

இன்னுமாக அபிஷேகிக்கப்பட்ட தலையின் கீழ் ஒரே சகோதரத்துவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். இவர்கள் ஒருவருக்கொருவருடைய நலன்கருதி ஒருவரையொருவர், "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஏவும்படிக்குத்" தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் (எபிரெயர் 10:24).

---

R3011 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல்

## அப்போஸ்தலர் 14:8-19

*"நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி." (2 தீமோத்தேயு 2:3)*

பிசீதியா நாட்டிலுள்ள, அந்தியோகியாவை விட்டுப் புறப்பட்டு, பவுலும், பர்னபாவும் 100 மைல் தொலைவிலுள்ள இக்கோனியா பட்டணத்திற்குப் போனார்கள். அங்கும்கூட அவர்கள் வசனத்தை உண்மையாய்ப் பிரசங்கம் பண்ணினார்கள் மற்றும் அங்கும்கூட எதிர்ப்புகள் எழும்பி, துன்புறுத்தல்கள் அச்சுறுத்தின; "இவர்களை அவமானப்படுத்தவும் கல்லெறியவும் வேண்டுமென்று, புறஜாதியாரும் யூதரும் அவர்கள் அதிகாரிகளும் அமளிபண்ணுகையில், இவர்கள் அதை அறிந்து, லிக்கவோனியா நாட்டிலுள்ள பட்டணங்களாகிய லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் ஓடிப்போய்விட்டனர்;" (அப்போஸ்தலர் 14:5-6) தைரியத்துடனும், திடமனதுடனும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதைப் பயமானது தடைப்பண்ணுவதற்கு, இவர்கள் தங்களில் அனுமதித்திடவில்லை; அவர்கள் அச்சுறுத்தல்களைக் குறித்தும் பயப்படவில்லை; ஆனால் துன்புறுத்தலானது உறுதியடைந்தபோது, அவர்கள் தாமதிக்காமல், ஓடிப்போய்விட்டனர். அவர்கள் ஏன் காத்திருந்து, அற்புதகரமான ஏதோ ஒரு விடுதலையைக் கர்த்தர் தங்களுக்குத் தருவார் என்று எதிர்ப்பார்த்திருக்கவில்லை? தேவனுடைய வல்லமையா அல்லது சாத்தானுடைய வல்லமையா, எது பலமுள்ளது என்று பார்ப்பதற்கு, தங்களை எதிர்ப்பவர்களுக்கு அவர்கள் ஏன் அறைகூவல் விடவில்லை? தெய்வீகச் சித்தம் குறித்து அவர்கள் நன்கு போதிக்கப்பட்டிருந்ததே காரணம் என்று நாம் பதிலளிக்கின்றோம். அவர்கள் கர்த்தருடைய அறிவுரைகளைப் பின்பற்றிக் கொண்டிருந்தனர். "துன்புறுத்துதல்களைக் கண்டு பயப்படுங்கள்; உங்கள் நற்செய்தியை நிறுத்தி வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் உங்கள் வெளிச்சத்தை மரக்காலால் மூடிவையுங்கள்" என்று அவர்களிடத்தில் அவர்

கூறவில்லை; இதற்கு நேர்மாறாகவே அவர் கூறியிருந்தார். “எந்த அபாயமும் இல்லாதபோது, பயந்து ஓடிப்போய்விடுங்கள்” என்றும் அவர் கூறவில்லை; மாறாக அவரோ: “ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால், மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்” என்றே கூறியுள்ளார்.

லீஸ்திராவை வந்தடைந்து, ஏதோ தங்கள் முன் எந்த எதிர்ப்புகளுமே இல்லாததுபோன்று தைரியத்துடன், சுவிசேஷத்தின் பிரசங்கமானது மீண்டுமாகத் துவங்கப்பட்டது. கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவன் சப்பாணியாகக் காணப்பட்டான்; அநேகமாக யூதனாகவோ அல்லது யூத மார்க்கத்தமைந் தவனாகவோ காணப்பட்டிருக்க வேண்டிய இவன், அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்கான மிகுந்த ஆர்வத்தினை வெளிப்படுத்தினவனாக இருந்தான். இதைப் பவுலடிகளார் உணர்ந்தவராகவும், அந்த மனுஷன் விசுவாசத்தைப் பெற்றிருப்பதைக் கண்டவராகவும், தனது பிரசங்கத்தைச் சற்று நிறுத்தி, ஒருபோதும் நிமிர்ந்துநிற்க முடியாதவனாகிய அந்த மனுஷனை நோக்கி: “நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்” என்று உரத்த சத்தத்தில் சொன்னார். அவசியமான விசுவாசத்தினை அவன் பெற்றிருந்தவனாய்க் காணப்பட்டு, அப்போஸ்தலனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான்; மற்றும் இப்படியாக நிச்சயமாய் அங்குக் கூடியிருந்தவர்கள் யாவரும் ஆச்சரியம் அடையத்தக்கதான அற்புதம் நிகழ்ந்தது. இதன் தாக்கம் ஜனங்கள்மீது ஆற்றல்மிக்கதாய்க் காணப்பட்டது மற்றும் அவர்கள் அவர்களது பேச்சு வழக்கில் “தேவர்கள் நம்மைச் சந்திக்க இறங்கி வந்திருக்கிறார்கள்!” என்று சத்தமிட்டுச் சொன்னார்கள்.

லீஸ்திரா பட்டணமானது புராணக்கதை நிகழ்வு ஒன்று நடந்திட்ட பட்டணமாக திகழ்ந்தது; புராணக்கதை தேவர்களில் இருவராகிய மெர்க்குரி மற்றும் யூப்பித்தர் ஒருமுறை மனித ரூபத்தில் தங்கள் பட்டணத்திற்கு வந்தார்கள் என்றும், அவர்கள் வந்தபோது எங்குமே அவர்களுக்குத் தங்க இடமளிக்கப்படவில்லை என்றும், ஏழை ஒருவன் அவனால் முடிந்த மட்டும் அவர்களைத் தனது ஏழ்மையான குடிசையில் உபசரித்தான் என்றும், அவனுடைய குடிசையை, அழகான கோயிலாக மாற்றிடுவதன் மூலம் அவர்கள் அவனுக்கு கைமாறு செய்தனர் என்றும், பட்டணத்திலுள்ள மற்றவர்களை வெள்ளத்தினால் தண்டித்தார்கள் என்றும் இப்பட்டணத்திற்கான பாரம்பரிய நம்பிக்கைக் காணப்படுகின்றது. இந்தப் பாரம்பரிய நம்பிக்கைகளானது மிகவும் பழமையானவைகளாகும்; எனினும் பட்டணத்தினுடைய வாயிலில், அதன் பாதுகாக்கும் கடவுளெனக் காணப்படும் யூப்பித்தரின் விக்கிரகத்தினால், இந்நம்பிக்கைத் தொடர்ந்து நீடித்துக்கொண்டிருந்தது. எப்படி மூடநம்பிக்கையையும், அறியாமையையும் பெற்றிருந்த ஜனங்கள் - பாரம்பரியத்திடமிருந்து பெற்றுக்கொண்டதான யூபித்தர் மற்றும் மெர்க்குரியின் வருகையினுடைய இன்னொரு வருகைதான் பவுல் மற்றும் பர்னபாவின் இந்த

வருகை என்று முடிவு செய்ய முடிந்தது என்பது எளிமையாய்ப் புரிந்து கொள்ளப்படலாம். அவர்கள் பவுலை மெர்க்குரி என்று அழைத்தார்கள், காரணம் அவர்களது பாரம்பரியத்தின்படி, மெர்க்குரி பிரசங்கியாய்க் காணப்பட்டார் மற்றும் பர்னபாவை யூபித்தர் என்று அழைத்தார்கள்; பர்னபா மற்றும் பவுலின் உருவில், தங்கள் மத்தியில் மனுஷர்களாகத் தேவர்கள் வந்திருக்கிறார்கள் என்று தாங்கள் எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கு மரியாதைச் செலுத்தும் விதமாக - அவர்களது பட்டணத்து வாசலண்டையிலுள்ள யூபித்தரின் சிலைக்கு எருதைப் பலிச்செலுத்திட யூபித்தருடைய பூஜாசாரி ஏற்பாடு பண்ணினான்.

பட்டணத்திலுண்டான பரபரப்பைக் குறித்தும், செலுத்தப்படவிருக்கின்ற பலிக் குறித்தும் கேள்விப்படுவதற்கு முன்பு வரையிலும், அநேகமாக அந்த ஊழியக்காரர்கள் மிகவும் ஆர்வமாய்க் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்குப் பிரசங்கித்தும் மற்றும் அமைதியாய் விளக்கிக்கொண்டும் இருந்திருக்க வேண்டும். ஜனங்களுடைய மூடநம்பிக்கையை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, தங்களை ஏதோ மாபெரியவர்கள் போன்று காண்பித்துக்கொள்வதற்கு ஒரு கணம்கூடச் சிந்திக்கவில்லை; இல்லையேல் தேவன்தான் யூபித்தர் என்றும், இயேசுதான் மெர்க்குரி என்றும், தாங்கள் அவர்களது பிரதிநிதி என்றும் கூறி, அந்நிகழ்வை சத்தியத்திற்கு ஊழியம் புரிவதற்கேதுவானதாக மாற்றிக்கொள்வதற்கும் அவர்கள் முற்படவில்லை. மாறாக ஜனங்கள் இப்படியாகச் செய்யாதபடிக்கு அவர்கள் மிகவும் கருத்தாயும், தாழ்மையாயும் வேண்டிக்கொண்டார்கள் மற்றும் தாங்கள் அந்த ஜனங்களைப் போலவே "பாடுள்ள மனுஷர்களாக," பூரணமற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்றும், அந்த ஜனங்கள் யூகித்தவைகளுக்கு நேர்மாறானவைகளாகவே தங்களது பணி காணப்படுகின்றது என்றும், யூபித்தரும், மெர்க்குரியும், அந்த ஜனங்களின் புராண கதைகளும் வெறும் கற்பனைகளினாலும், அறியாமையினாலும், மூடநம்பிக்கையினாலும் மாத்திரம் உண்டானவைகளேயாகும் என்றும் அந்த ஜனங்களுக்கு விளக்கினார்கள். ஜனங்கள் முழுப்பரவசத்தில் பலிகளை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கும் போது, அவர்கள் ஜனங்களுக்குள்ளாக ஓடினார்கள் மற்றும் சிரமப்பட்டு, தாங்கள் ஒன்றுமில்லாதவர்கள் என்று வலியுறுத்தி எதிர்த்துப் போராடி, தங்களை மரியாதைப் பண்ணும் விதத்தில், ஜனங்கள் பலிச் செலுத்துவதைத் தடைப்பண்ணினார்கள். அவர்கள் உயர்ப்பண்புள்ள மனிதர்களாகக் காணப்பட்டனர் மற்றும் இந்த ஊழியத்திற்கு அவர்களை அனுப்பிடுவதற்கான தெய்வீகத் தேர்ந்தெடுத்தலிலுள்ள ஞானத்திற்கு, அவர்கள் கர்த்தருக்கும், சத்தியத்திற்கும் கொண்டிருந்த உண்மையானது சான்று பகருகின்றது.

இந்தச் சம்பவத்திலிருந்து, கர்த்தருடைய ஸ்தானாபதிகளாகவும், பிரதிநிதிகளாகவும், சத்தியத்தைப் போதிப்பவர்களாகவும் எவ்விதத்திலாகிலும்

காணப்படுகின்றதான கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் உதவிகரமான படிப்பினையைப் பெற்றுக்கொள்ளலாம். சத்தியமானது விசேஷமாக நம்முடைய நாளில் விளங்கும் வெளிச்சத்தில் மிகவும் அற்புதகரமாகவும், மிகவும் ஒளிமிக்கதாகவும் காணப்படுகின்றபடியால், அது இயல்பாகவே அதன் பிரதிநிதிகளினிடத்தில் அதன் ஒளியினைக் கொஞ்சம் பிரகாசிக்கப் பண்ணுகின்றதாய் இருக்கின்றது என்பதினால், மனுஷர்கள் ஆச்சரியமடைந்து, முற்காலத்தார் கூறினதுபோன்று, "இம்மனுஷனுக்கு இந்த ஞானம் எப்படி வந்தது? என்று கூறுவதற்கு ஏதுவாய் இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் இது கர்த்தருடைய ஸ்தானாபதிகள் ஏற்றுக்கொள்வதற்குப் பாத்திரமற்ற, தகுதிக்கு மிஞ்சின மதிப்புக் கொடுக்கப்படுவதற்கும், தகுதிக்கு மிஞ்சின கனம் சாற்றப்படுவதற்கும், அளவுக்கு மீறின மரியாதைக் கொடுக்கப்படுவதற்கும், வழிநடத்திடலாம் மற்றும் லீஸ்திரா ஜனங்கள் பவுல் மற்றும் பர்னபா மீது சாற்றவிருந்த கனங்களை ஏற்க மறுத்திட்டதுபோன்று, இவற்றைக் கர்த்தருடைய ஸ்தானாபதிகள் உடனடியாகவும், முற்றும் முழுவதுமாகவும் மறுத்துத் தள்ளிவிட வேண்டும். உலகத்தின் கண்ணோட்டத்தில், இப்படியாகச் செய்வது என்பது ஞானமற்ற நடக்கையாகக் காணப்படும்; தகுதிக்கு மிஞ்சின புகழையும் மற்றும் முகஸ்துதிப் பேச்சையும், கனத்தையும் ஏற்றுக்கொள்பவர்கள், எதிராளியானவனால் அப்பாதையில் ஓரளவுக்கு செழித்தோங்கப் பண்ணப்படுவார்கள் மற்றும் உலகத்தின் ஆவியானது உலகப்பிரகாரமான கதாநாயகர்களை, யூபித்தர்களை, எலியாக்கள் முதலானோர்களைத் தொழுது கொண்டிட விரும்பும் என்றும் உணர்ந்து கொள்வார்கள். ஆகையால் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கான ஒரே ஞானமுள்ள நடத்தையானது, நம்முடைய பாடத்தில் இடம்பெறும் இந்த ஊழியக்காரர்களால் பின்பற்றப்பட்டதுபோல, முழுமையாக ஏற்க மறுப்பதேயாகும்; தாங்களும் மற்றவர்களைப்போன்று பாடுள்ள மனிதர்கள் என்று தெரிவிப்பதாகும்; தங்களை மறைத்துக்கொள்வதற்கும் மற்றும் தாங்கள் முற்றிலுமாகப் பொருட்படுத்தப்படாமல் போவதற்கும் என்று தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தினை உயர்த்திப்பிடித்துக் கொள்வதாகும். இது இப்பொழுது கர்த்தர் கூட்டிச்சேர்த்துக்கொண்டிருக்கின்றதான உண்மையான தேவ பிள்ளைகளைக் கண்டுபிடித்தல் மற்றும் அவர்களது வளர்ச்சி தொடர்புடையதான காரியத்திற்கு மாத்திரம் நன்மை பயக்கின்றதாய் இராமல், இது கர்த்தருடைய ஸ்தானாபதிகளுக்கும்கூட நன்மை பயக்கின்றதாய் இருக்கும்; ஏனெனில் இப்படியான விதத்தில் இவர்கள் கர்த்தருடைய கிருபையிலும், அவருக்கு ஒத்த சாயலிலும் - இதன் பிரதான அம்சமாகிய தாழ்மையிலும் வளருகின்றவர்களாய் இருப்பார்கள். இப்படியாக இவர்கள் அவருடைய அன்பில் நன்கு தரித்திருந்து, இறுதியில் தற்கால சூழ்நிலைகளின் கீழ் உண்மையுடனும், தாழ்மையுடனும்

காணப்படுகின்றதான தேவனுடைய பிள்ளைகள் யாவருக்கும், அவரால் வாக்களிக்கப்பட்டுள்ளதான இன்னும் மேலான உயர்த்தப்படுதலை அடைகின்றவர்களாய் இருப்பார்கள்.

லீஸ்திராவின் ஜனங்களிடம், அவர்களது எண்ணங்களானது, வீணானவைகள் என்று எடுத்துக் கூறுகையில், இது கேட்டுக்கொண்டிருப்பவர்களது தயவினை தனக்குப் பெற்றுத் தராது என்று அப்போஸ்தலன் நன்கு அறிந்திருந்தார்; காரணம் நம்முடைய அறிவீனங்கள் குறித்துச் சொல்லப்படுவதை மனுஷீக சுபாவமானது ஏற்றுக்கொள்கிறதில்லை. அவர்களது தயவினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் அவர் - அவர்கள் மிகவும் ஞானமாய் நடந்துகொண்டார்கள் மற்றும் அவர்கள் மிகவும் சரியாய் நடந்துள்ளார்கள் என்றெல்லாம் கூற வேண்டியிருந்திருக்கும் - அதாவது பொய்க்கூற வேண்டியிருந்திருக்கும். நேர்மையுடன் காணப்படுவதற்கும், சத்தியத்திற்கு ஊழியம் செய்திடுவதற்குமான அவரது பிரயாசத்தில், அவர் அவர்களது அதிருப்திக்கும், கோபத்திற்கும் ஆளானார்; மேலும் இதை முன்கூட்டியே அவர் அறிந்திருந்தார் மற்றும் என்ன விளைவு உண்டாகுமென எதிர்ப்பார்க்கலாம் என்றும் அறிந்திருந்தார். எனினும் தேவனுடைய வாய்க்கருவியென/பிரதிநிதியென, தனக்கும் மற்றும் தன்னுடைய வேலைக்குமான பலன் என்னவாக இருப்பினும், முழுச்செய்தியையும் சொல்லுவதை அவர் தவிர்த்துவிடவில்லை. இங்குக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் நல்ல படிப்பினைகள் காணப்படுகின்றது. நமக்கொத்த விலையேறப்பெற்ற விசுவாசத்திலும் மற்றும் கீழ்ப்படிதலிலும் காணப்படுபவர்கள் மத்தியில், சத்தியத்திற்கு உண்மையாய்க் காணப்படுவதற்கும் மற்றும் சிலுவையின் போர் வீரர்களாய் இருப்பதற்கும் ஒப்பிட்டுப்பார்க்கையில் குறைவான தைரியமே தேவையாயிருக்கும்; ஆனால் மனுஷரிடத்திலிருந்து வரும் தகாத கனத்தினை நாம் ஏற்க மறுக்கையில், இந்த மறுத்தலானது, அவர்களது கனத்தையும், தோழமையையும் நாம் இழக்கச் செய்திடுவது மாத்திரமல்லாமல், நம்மை அவர்களது பார்வையில் இழிவானவர்களாக்கிவிடும் என்றும், அவர்களை நம்முடைய சத்துருக்களாக்கிவிடும் என்றும் நாம் முன்கூட்டியே அறிந்திருக்கும் நிலையில், தகாத அவர்களது கனத்தினை ஏற்க மறுப்பதற்கு அதிகளவிலான தைரியம் அவசியமாயிருக்கும். சிலுவையின் உண்மையான போர்ச்சேவகர்களுக்கு இன்னமும் அதே சோதனை காணப்படுகின்றது மற்றும் இன்னமும் தீங்கனுபவித்தல் - அதாவது கர்த்தருடைய ஊழியத்தில் தீங்கனுபவிக்கும் அனுபவம் - அதாவது இவைகளை அனுபவித்து, கர்த்தருக்குள் சந்தோஷமாய் ஜெயங்கொள்ளும் அனுபவம் அவசியப்படுகின்றது. கிறிஸ்துவில் குழந்தைகளாக இருப்பவர்கள், பெலவீனர்கள், சோதனைக்குள்ளாகாதவர்கள், சோதனைக்குள்ளும், அனுபவங்களுக்குள்ளும், குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்குள்ளும் கடந்துசெல்லாதவர்கள் - உறுதியடையாதவர்களாய்க் காணப்படுகின்றனர் மற்றும்

இம்மாதிரியான அனுபவங்களில் நிலைநிற்க முடியாதவர்களாய் இருப்பார்கள். ஆகையால்தான் சபையில் ஓர் ஊழியத்திற்கு முறையாய் உயர்த்தப்படும் விஷயமும்கூட நூதன சீஷனுக்குக் கொடுக்கப்படக்கூடாது என்று அப்போஸ்தலன் ஆலோசனை கூறுகின்றார்; ஒருவேளை கொடுக்கப்பட்டால் நூதன சீஷன் இறுமாப்படைந்து, தனக்கும், மற்றவர்களுக்கும் பாதகம் ஏற்படுத்துகின்றவனாய் இருப்பான் (1 தீமோத்தேயு 3:6). எப்படிச் சகோதரர்களிடமிருந்து அல்லது மற்றவர்களிடமிருந்து வருகின்ற தகுதியான கனங்களைச் சரியாய் ஏற்றுக்கொள்வது மற்றும் மதித்திடுவது அல்லது தகுதியற்ற கனங்களையும், மரியாதைகளையும் ஏற்க மறுத்துவிடுவது என்பதை அறிந்துகொள்வதற்குக் காலமும், அனுபவமும் அவசியமாய் இருக்கின்றது.

லீஸ்திரா ஜனங்கள் பலிச் செலுத்திட வந்திட்ட இந்த நிகழ்வினைத் தொடர்ந்து, ஒருவேளை இப்படிச் சோதனையான அனுபவம் தொடரவில்லையெனில், யாருக்குத் தெரியும், ஒருவேளை அப்போஸ்தலன் - சுபாவத்தின்படியான எந்த மனுஷனும் தன்மீது கனங்கள் குவிக்கப்படும்போது அதை மனமாற துறக்கையில் தன்னில் மனநிறைவு கொள்வது போன்று - மனநிறைவு கொண்டிட வாய்ப்பிருந்திருக்கலாம். அவர் தனது குணலட்சணத்தினுடைய பெலத்தில் மேன்மைப்பாராட்டிட வாய்ப்பிருந்திருக்கும்; ஆனால் அவரது அனுபவங்களோ அவரை வேறுமாதிரி வழிநடத்தினதாய் இருந்தது; மற்றும் இதைக் குறித்து அவர் பிற்பாடு, "உபத்திரவங்களிலே மேன்மைப் பாராட்டுகிறோம்" என்று எழுதினார். இங்குக் கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் அனைவரும் நற்படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளலாம்; தங்களுடைய அனைத்துக் காரியங்களிலும் - சாதகமாய்த் தோன்றும் காரியங்களில் மாத்திரமல்லாமல், சாதகமற்றதாயும், துன்பங்கள் விளைவிக்கிறதாயும் காணப்படும் காரியங்களிலும்கூட உள்ள கர்த்தருடைய வழிநடத்துதலை விசுவாசித்திடுவதற்குக் கற்றுக்கொள்ளலாம். பவுலடிகளார் தம்முடைய ஊழியத்திற்கெனத் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாய் இருக்கின்றார் என்று அவரைக் குறித்துக் கர்த்தர் கூறுகையில், "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்றார். இப்பாடத்திலிருந்து நாம் உணர்ந்துகொள்வது என்னவெனில்; கர்த்தருடைய ஊழியக்காரர்கள் (தவறு செய்ததற்காக இல்லாமல்; கோபம், பகைமை, துர்க்குணம், சண்டை, புறங்கூறுதல் காரணமாக இல்லாமல்; அவர் நிமித்தமாக) அவருடைய நாமத்தினிமித்தமாகப் பாடுபடுவதற்கு அனுமதிக்கப்படும் போது அது - நிழலில் ஆபேலுடைய பலியானது நெருப்பினால் அங்கீகரிக்கப்பட்டது போன்று - அவர்களது பலி அங்கீகரிக்கப்பட்டது என்ற கர்த்தருடைய தயவிற்கான உறுதி/சான்று அளித்தலாக இருக்கும்.

---

R4968 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான...

சத்தியமே தரநிலையாகக் காணப்பட வேண்டும். மற்றவை அனைத்தும் திவ்விய சித்தத்திற்கு முற்றிலும் முரணானவைகளாக இருக்கின்றன; மற்றும் சத்தியத்தினைத் தனது அன்றாட ஜீவியத்தில் கடைப்பிடிக்க தவறுகின்ற நபர், தான் சரியான அளவில் கர்த்தருடைய ஆவியினைப் பெற்றிருக்கவில்லை என்பதை நிரூபிக்கின்றவராய் இருப்பார். ஆகையால் நம்மில் எவரேனும், நம்முடைய அன்றாட ஜீவியங்களில், நம்முடைய உதடுகளைக்கொண்டு நாம் போதித்தவைகளுக்கு இசைவாக நாம் ஜீவிக்கவில்லை என்பதைக் கண்டுகொள்வோமானால், அது கவலைக்கிடமான காரியமாயிருக்கும்; ஏனெனில் தன்னுடைய இருதயத்தில் கர்த்தருக்கு இசைவாக இல்லாதவர் எவரும், சீக்கிரத்தில் தன்னால் போதித்தவைக்கும் இசைவற்றுப் போய்விடுவார் என்பது நமக்குத் தெரியும்.

ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய சபையார் மத்தியில் வெளிப்புறத்தில் போதகனுக்குரிய மிகுந்த திறமைப்பெற்றிருந்து, ஆனால் தனது அன்றாட ஜீவியத்தில் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதற்கும், மாம்சத்தின்படி இல்லாமல், ஆவியின்படி நடக்க நாடுவதற்கும் சான்று பகராதவராய் காணப்படும் ஒருவர், மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ முன் மொழியப் பட்டிருப்பாரானால், அவர் மூப்பர் அல்லது உதவிக்காரர் எனும் உயர் ஊழியங்களுக்கு நியமிக்கப்படுவதற்கு மிக ஆபத்தான நபராக கருதப்பட வேண்டும். எவ்வளவுக்குச் சீக்கிரமாய் அவர் தனிமையில் விடப்படுகின்றாரோ, அவ்வளவுக்கு நலமாயிருக்கும். இப்படிப்பட்ட நபர்கள் அநேகர் ஊழியத்திற்கு முன்கொண்டுவரப்படும்போது, அது அவர்களுக்கும், அவர்கள் ஊழியம் புரியவேண்டியதான சபையாருக்கும் பாதகமாய் அமையும்.

---

R4345 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

எபேசு சபையின் மூப்பர்களுக்கு உரைக்கப்பட்டதான அப்போஸ்தலனின் வார்த்தைகள் தேவ ஜனங்களிலேயே, இன்றுள்ளவர்களுக்கு மிகப் பொருத்தமாய் இருந்தளவுக்கு, யாருக்கும் இருந்ததில்லை. "உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத

கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்றுவருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" என்று அவர்களிடம் அவர் கூறினார் (அப்போஸ்தலர் 20:28-31).

எங்கும் காணப்படும் மூப்பர்கள் விசேஷித்த எச்சரிக்கைக்கொள்வது அவசியமாய் இருக்கின்றது; ஏனெனில் ஒவ்வொரு சோதனைகளிலும் மிகவும் கிருபைப் பெற்றவர்களும், மிகவும் முதன்மையாகக் காணப்படுபவர்களும் கடுமையான இன்னல்களுக்கும், பரீட்சைகளுக்கும் ஆளாவார்கள். ஆகையால்தான், "என் சகோதரரே கடுமையான சோதனைக்குள்ளாவீர்கள்" என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று அப்போஸ்தலன் புத்திமதிக் கூறுகின்றார். இது போலவே இருதயத்தில் தூய்மையும், சுய நலமில்லாமையும் கொண்டிருக்கும் மூப்பர்கள் யாவரும் - அவர்கள் மனுக்குலம் யாவருக்கும் அன்பு மற்றும் நல்லெண்ணங்களை கொண்டிருக்கவும், அவர்கள் பரிசுத்த ஆவியின் கனிகளாலும், கிருபைகளாலும் அதிகமதிகமாய் நிரம்பிக் காணப்படவும் மற்றும் மந்தையைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்கவும் நாங்கள் புத்திமதி கூறுகின்றோம். மந்தை கர்த்தருடையது என்றும், உங்களுக்குக் கர்த்தரிடத்திலும், அவர்களிடத்திலும் ஒரு பொறுப்புக் காணப்படுகின்றது என்றும் நினைவில்கொள்ளுங்கள். மாபெரும் பிரதான மேய்ப்பனுக்கு அவர்களது ஆத்துமாக்களுக்காக (நலன்களுக்காக) உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் நீங்கள் விழித்திருக்க வேண்டும் என்பதை நினைவில்கொள்ளுங்கள். அனைத்திலும் அன்பே பிரதானம் என்றும் நினைவில் கொள்ளுங்கள்; அவர்கள் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ளவர்களாகத்தக்கதாகவும் மற்றும் தெய்வீகச் சித்தத்திற்கு ஏற்ப இந்தத் தீங்கு நாளில் இடறிப்போகாமலும், அனைத்தையும் செய்து முடித்தப்பிற்பாடு, கிறிஸ்துவில், அவரது சரீரத்தில், அவரது அங்கத்தினர்களில், அவரோடு உடன்பலிச்செலுத்துபவர்களில், அவரோடு உடன்சுதந்தரர்களில் முழுமையடைந்து நிற்கத்தக்கதாகவும் - உபதேசங்களைப் புறக்கணியாமல், அவரது சரீரத்தின் பல்வேறு அவயவங்கள் மத்தியில் கர்த்தருடைய ஆவி வளர்ந்திடுவதற்கு மிக விசேஷித்த கவனம் கொடுத்திடுங்கள்.

# நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால்

*"நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்." (1 யோவான் 3:14)*

நம்முடைய வாசகர்களில் பெரும்பான்மையானவர்களாகக் காணப்படும் வேதமாணவர்கள், கடந்த சில வருடங்களாகக் கிருபையில் வளர்ந்து வருகின்றார்கள் என்று நம்பிக்கைக்கொள்வதற்கு அநேகம் காரணங்கள் இருக்கின்றன என்பதைத் தனிப்பட்ட விதத்திலும், கடிதங்கள் வாயிலாகவும் அறிந்திருக்கின்றோம் என்பதைச் சாட்சியாகக் கூறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். தற்போதுள்ள நிலைமையை மூன்று அல்லது ஆறு அல்லது பத்து வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையுடன் வேறுபடுத்திப் பார்க்கும்போது, ஆவிக்குரிய விஷயத்தில் - கர்த்தருடைய ஆவியில் - அன்பின் பரிசுத்த ஆவியில் மகா அபிவிருத்தியை நாங்கள் காண்கின்றோம்.

இது சத்தியத்திற்கடுத்த ஊழியங்களிலுள்ள நடவடிக்கைகளில் மாத்திரம் வெளிப்படாமல், ஒருவருக்கொருவர் மற்றும் கிறிஸ்தவர்கள் அனைவருக்காகவும் மற்றும் தவிக்கும் சர்வ சிருஷ்டிக்காகவும் கொண்டுள்ளதான பரந்த அளவிலான அனுதாபங்களிலும்கூட வெளிப்படுகின்றதாய் இருக்கின்றது. மேலும் "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" என்பதினால், ஏற்ற குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்கு அவசியமான அடிகள் மற்றும் சிட்சைகளின் விளைவாக, எந்த ஒரு குறைவான ஆசீர்வாதத்தை ஒருவன் பெற்றவனாக இருந்தாலும், இராஜ்யத்தில் பங்கிருக்காது என்பதை நினைவில் கொண்டு, கிறிஸ்துவுக்கொத்த சாயலில் ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு வாரமும் வளர்ச்சியடைய வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் குணலட்சணத்தின் விஷயத்தில், தனித்தனியாக நமது கர்த்தருக்கு ஒத்திருக்க வேண்டும் என்பதே சபை தொடர்புடைய விஷயத்திலுள்ள திவ்விய முன்தீர்மானம் காணப்படுகின்றது என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளையுங்கூட நாம் நினைவுகூருகின்றோம் (உரோமர் 8:29). நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திடுவதற்கான நிபந்தனைகள் மற்றும் தெய்வீகச் சித்தம் குறித்த இத்தகைய தெளிவான வார்த்தைகளானது, நிச்சயமாகவே நம்மை ஊக்குவிக்கிறதாக இருக்கும்.

இப்படியான வளர்ச்சிகள் எல்லாம் இருக்கின்றபோதிலும், சிறு எண்ணிக்கையிலுள்ள சபைகள் அநேகவற்றில் உராய்வுகள்/பிணக்குகள் ஏற்பட்டு, இதனால் ஏறத்தாழ கவலையையும், மகிழ்ச்சியின்மையையும் உண்டாக்குகின்றது. சத்தியம் நம்மை விடுதலைப்பண்ணி, நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறப்பதினால், அது நம்முடைய சொந்த அபூரணங்களையும், சகோதர சகோதரிகளுடைய அபூரணங்களையும் மற்றும் உலகத்தாருடைய அபூரணங்க

ளையும் முன்பில்லாதளவுக்கு மிகவும் தெளிவாய் நாம் காண உதவுகின்றது. அதிகமாய் அன்பில்லாவிடில், இப்படி அபூரணங்களைக் காணும் காரியமானது, குற்றம் கண்டுபிடிப்பதற்கும், குறைகூறுவதற்கும் உரிய தன்மைக்கு ஏதுவாகிவிடும்.

இப்படி நம்முடைய சொந்த குணலட்சணங்களை நாம் கையாளும் விஷயத்தில் அதிகப்படியான சுதந்தரத்தை நாம் அனுமதிப்பது பாதுகாப்பானதே. நன்மைக்கேதுவாய் நாம் நம்மிடத்தில் குற்றங்கண்டுபிடிக்கலாம் மற்றும் நம்முடைய குறைகளை நாமே நமக்குச் சுட்டிக்காண்பித்திடலாம். எனினும் நம்முடைய அபூரணமான கிரியைகளின்படியாக இல்லாமல், நம்முடைய இருதய நோக்கத்தின்படியே கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார் எனும் அவருடைய கிருபையுள்ள வாக்குத்தத்தத்தை நாம் மறந்துபோகுமளவுக்கு, அளவுக்குமீறியும் நம்மில் நாம் குற்றம் கண்டுபிடிக்கக்கூடாது. அநேகமாக நம்முடைய சொந்த குறைவுகள் குறித்தும் மற்றும் அவைகள் வேண்டுமென்றே செய்யப்படாதவைகள் என்றும் நம்மால் நன்கு உணர்ந்துகொள்ள முடிகின்றது; ஆனால் குறைவுகள் மற்றவர்களுடையதாயிருக்க, அவை நம்முடைய அன்பு, பொறுமை, சகோதர சிநேகம், சாந்தம், நற்பண்புகள்/நிதானம் முதலானவற்றைப் பரீட்சிக்கின்றதாய் இருக்கின்றது. எனினும் இம்மாதிரியான பரீட்சைகள் மிகவும் நன்மைக் கேதுவானதாகும். பரிசுத்த ஆவியின் கிருபைகளில் வளர்வதற்குக் கர்த்தர் நமக்கு உதவும்படிக்கு நாம் கர்த்தரிடத்தில் ஜெபம் ஏறெடுக்கின்றோம். இவ்விஷயங்களில் தேவன் பரீட்சைகள் கொடுப்பதே, நமக்கு உதவுவதற்கான ஒரே வழியாகக் காணப்படுகின்றது என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. நாம் எந்தளவுக்குச் சரியான ஆவியில் இந்தப் பரீட்சைகளை ஏற்றுக்கொள்கின்றோமோ, அவ்வளவாய் நமது குணலட்சணத்தினுடைய பெலமும், இந்த ஆவியின் கிருபைகளிலுள்ள நம்முடைய வளர்ச்சியும் காணப்படும்.

## புதுச்சிருஷ்டிகள் என்ற உறவிற்கான நிரூபணம்

சகோதர சகோதரிகளுக்கான அன்பு என்பது, கிறிஸ்தவனுடைய மிக அருமையான அனுபவங்களில் ஒன்றாயிருக்கின்றது என்று நமது ஆதார வசனம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. யார் ஒருவன் தன்னிடத்தில் சகோதர சகோதரிகளுக்கான அன்பும், அவர்களுக்கான அனுதாபமும் முழுக்கக் காணப்படுகின்றது என்று காண்கின்றானோ, அவன் - புதுச்சிருஷ்டியாக இருக்கின்றான் என்பதற்கும், தான் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்பதற்கும் வேதவாக்கியத்தின்படியான பலமான நிரூபணத்தை விசேஷமாகப் பெற்றிருக்கிறான். யாரொருவன் சகோதரர் எவரிடத்திலாகிலும் அன்பிற்குப் பதிலாக வேறேதேனும் உணர்வுகளைப் பெற்றிருப்பானாகில், அவன் தேவனுடன் தனக்குப் புதுச்சிருஷ்டி எனும் விதத்தில் இருக்கும் தனது உறவிற்கான

நிரூபணத்தில் குறைவுப்பட்டவனாய் நிச்சயம் இருப்பான்.

இதை எப்போதும் நாம் மனதில் கொண்டிருப்போமானால், இதன் உதவி நமக்கு எத்துணை விலையேறப்பெற்றதாகக் காணப்படும்! கர்த்தருடைய தயவு குறித்தும், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கும் புதுச்சிருஷ்டிகளென அவருடனான நம்முடைய உறவு தொடர்ந்து கொண்டிருப்பதைக்குறித்தும் நாம் மறுபடியும் உறுதிப்பெற்றிடுவதற்கு அடிக்கடி நாம் விரும்புகின்றோமல்லவா? நாம் விரும்புவோமானால், ஆதார வசனம் இதோ நமக்குள்ளது மற்றும் நாம் சரியான நிலைமையில் காணப்படும் பட்சத்தில், ஆதார வசனத்தின் காரியமானது, சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டுவருகின்றதாய் இருக்கும். ஒருவேளை நாம் சரியான நிலைமையில் காணப்படவில்லையெனில், ஆதார வசனத்தின் காரியமானது புதுச்சிருஷ்டிகளென நம்முடைய சொந்த பாதுகாப்பிற்கான அபாய அறிவிப்பைக் கொடுக்கிறதாய் இருக்கும்.

அநேகம் சபைகளில் ஊராய்வுகள்/பிணக்குகள் ஏற்படும் காரியங்களில் ஒன்று சபையாருக்கும், அதன் ஊழியக்காரர்களுக்கும் இடையிலான உறவின் விஷயமாகும். நம்மால் நிதானிக்க முடிந்தவரையிலும் தவறானது சிலசமயம் (இவர்கள் இருவரில்) ஒருவரிடத்திலும் மற்றும் சில சமயம் மற்றவரிடத்திலும் காணப்படுகின்றது. மூப்பர்களுடைய கடமைகள் குறித்தும், சபையாருடைய பொறுப்பு முதலானவைகள் குறித்தும் கேள்விகள் நம்மிடத்தில் அடிக்கடி கேட்கப்படுகின்றது. இத்தகைய கேள்விகள் அனைத்திற்கும், வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியிலுள்ள, இவ்விஷயம் குறித்ததான நம்முடைய முழுமையான ஆய்வுரையையே பரிந்துரைப்பதற்கு நாம் பொதுவாய் விரும்புகின்றோம். ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களை இன்னும் அபிவிருத்தி செய்வது எப்படி என்பது நமக்குத் தெரியவில்லை.

அத்தொகுதியில் எங்களால் எழுதியுள்ள காரியங்கள் முழுவதுமாய் ஆராயப்படுமாயின், அதில் கொடுக்கப்பட்டுள்ளதான அறிவுரைகளானது, ஒவ்வொரு சூழ்நிலைகளுக்கும் போதுமானதாய்க் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

உபதேச ரீதியான விஷயங்களில் தனிப்பட்ட விதத்தில் நாம் கடிதம் எழுதுவதை விரும்பவில்லை; ஏனெனில் எங்களிடமிருந்து கடிதங்களைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்கள், ஒன்றில் காரியங்களைத் தவறாய்ப் புரிந்துகொண்டவர்களாகவோ அல்லது காரியங்களை விவாதிக்கையில் கடிதங்களில் உள்ளவைகளின் பகுதியை மாத்திரமே மற்றவர்களுக்குத் தெரிவிப்பவர்களாகவோ காணப்பட்டிருந்த சம்பவங்கள் சிலவற்றை நாங்கள் அறிந்திருக்கின்றோம். இன்னுமாக சிலர்: "சகோ. ரசல் அவர்கள் இன்னென்ன விதமாய் வேதாகம பாடங்களினுடைய தொகுதியில் எழுதியிருக்கின்றார்; ஆனால் எங்களிடம் அவர் பிற்காலங்களில் எழுதியுள்ள கடிதம் ஒன்றுள்ளது மற்றும்

அக்கடிதமானது அவர் வேறு கருத்துக் கொண்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது” என்று கூறியிருக்கின்றனர். ஏதேனும் முக்கியமான சத்தியங்கள் குறித்த எங்களுடைய கண்ணோட்டம் மாறும் பட்சத்தில், அந்த மாற்றத்தை முடிந்தமட்டும் விரைவாக நாம் வாட்ச் டவர் இதழின் வாசகர்கள் அனைவரின் முன்பாகவும் முன்வைத்திடுவோம் என்று அருமையான நண்பர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென நாம் விரும்புகின்றோம். வாட்ச் டவர் வெளியீட்டில்/இதழில் இம்மாதிரியான மாற்றங்கள் குறித்துக் குறிப்பிட்டிருப்பதை நீங்கள் காணாதது வரையிலும், எதையும் பொருட்படுத்திட வேண்டாம்; வேதாகம பாடங்களினுடைய தொகுதிகளிலுள்ள வார்த்தைகளை, ஏதோ அவைகள் நேற்றைய தினம்தான், உங்களுக்கே நேரடியாய் எழுதப்பட்டு உங்களுக்கு வந்ததுபோன்று மதித்திடுங்கள்.

## சபை நிர்வாக முறைக்கான கொள்கைகள்

கிறிஸ்துவின் சபையை நிர்வகிக்கும் கொள்கைகளைச் சுருக்கமாய்ப் பார்க்கையில், சபை நிர்வாகம் குறித்த விஷயத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் இரண்டு கண்ணோட்டங்கள் நிலவி வருகின்றன; அவை பின்வருமாறு:

(1) கிறிஸ்தவ சபை சார்ந்த கண்காணிகளின் ஆட்சிகொள்கை எனும் (Episcopal View) கண்ணோட்டத்தின்படி, சபையானது கண்காணிகளால் நிர்வகிக்கப்பட மற்றும் நடத்தப்பட வேண்டும்; ஏனெனில், இந்தக் கண்காணிகள் அப்போஸ்தல கண்காணிகள் என்று வலியுறுத்தப்படுகின்றது; அதாவது இவர்கள் அப்போஸ்தலர்களின் வாரிசுகள் என்றும், சபை மற்றும் அதன் காரியங்களை ஒழுங்குப்படுத்துவதற்கென அப்போஸ்தல ஞானமும், ஏவுதலும் மற்றும் அதிகாரமும் வழங்கப்பெற்றவர்கள் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தை உரோம கத்தோலிக்கர்களும், கிரேக்க கத்தோலிக்கர்களும் மற்றும் எபிஸ்கோப்பல் திருச்சபையினரும் உடையவர்களாய் இருக்கின்றனர்.

(2) மற்றுமொரு கண்ணோட்டம் (Congregationalist) சபையார் ஆட்சி கொள்கையாகும் மற்றும் இது - கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய ஒவ்வொரு சபைகூட்டமும் ஒரு குழு என்றும், அது அதனை நிர்வகிப்பதற்கும் மற்றும் தெய்வீக வழிநடத்துதலின் கீழ் அதன் நலனுக்கடுத்தக் காரியங்களுக்காக ஒழுங்குகள் பண்ணிடுவதற்கும் உரிமை கொண்டிருக்கின்றது என்றும் வலியுறுத்துகின்றது. காங்கிரிகேஷனலிஸ்ட், பேப்டிஸ்ட் மற்றும் இன்னும் சில பிரிவினர்கள் இக்கண்ணோட்டத்தின்படி தாங்கள் நிர்வகிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். இன்னுமாக ஏறக்குறைய குழப்பத்திலும் மற்றும் உறுதியற்ற நிலையிலும் காணப்படும் சில சபை பிரிவினர், நிர்வகிக்கும் அதிகாரத்தினை ஊழியர்கள் மற்றும் சபை அங்கத்தினர்களுக்கிடையே பங்கிட்டுக்கொள்கின்றனர்.

எபிஸ்கோப்பல் மற்றும் காங்கிரிகேஷனல் எனும் இரண்டு கொள்கைகளையும் இணைந்து ஒருசேர கொண்டிருப்பதே வேதாகம ஏற்பாடு என்று நாம் வலியுறுத்துகின்றோம். பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் கண்காணிகளாக இருந்தார்கள் - இவர்கள் மட்டுமே தெய்வீக ஏவுதலின் பேரிலான மற்றும் அதிகாரமுடைய அப்போஸ்தல கண்காணிகளாக இருந்தார்கள் மற்றும் இன்னும் தொடர்ந்து இப்படியாகக் காணப்படுகின்றனர் என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றதாய் இருக்கின்றது. இவர்களால் பூமியில் கட்டப்படும் எதுவும், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் கட்டப்பட்டதாக இருக்கும். இவர்களால் கட்டவிழ்க்கப்பட்டதாக அறிவிக்கப்படும் எதுவும், பரலோகத்தின் முன்னிலையில் சபையாரின் மீது கட்டாயமாக்கப்படுவதில்லை. இந்தக் கண்ணோட்டத்தின்படி, அப்போஸ்தல கண்காணிகளென அழைக்கப்பட்டு வரும் மற்றவர்கள் அனைவர் குறித்ததான இயேசுவின் வார்த்தைகள் மிகவும் திட்டவட்டமாய்க் காணப்படுகின்றது. அப்படிப்பட்டவர்கள் "கள்ள அப்போஸ்தலர்கள் மற்றும் பொய்யரென்று" அவர் குறிப்பிடுகின்றார்; அவர்கள் எந்த விதத்திலும் அப்போஸ்தலர்களல்ல (வெளிப்படுத்தல் 2:2; 2 கொரிந்தியர் 11:13). ஆகையால் தங்களுக்கு அப்போஸ்தல வல்லமை இருக்கின்றது என்றும், தாங்கள் அப்போஸ்தலர்களின் வாரிசுகள் என்றும் எண்ணிக்கொள்ளத்தக்கதாகச் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டுள்ளவர்களாகிய இந்தக் கண்காணிகளுடைய வலியுறுத்தல்களுக்கு நாம் செவிச்சாய்க்கவும் கூடாது மற்றும் இவர்களின் வலியுறுத்தல்களை எவ்விதத்திலும் அங்கீகரிக்கவும் கூடாது.

தேவனுடைய ஜனங்கள் அதிகாரத்திற்கும், வழிகாட்டுவதற்குமென்று, உண்மையான கண்காணிகளாகிய, ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைப் பெற்றிருப்பதினால், அவர்கள் இப்படியாக ஆயர் நிர்வாகத்தின் அல்லது அப்போஸ்தல கண்காணிகளினுடைய நிர்வாகத்தின் கீழ்க் காணப்பட்டாலும் - உண்மையில் அவர்களது நிர்வாகம் சபையார் சார்ந்ததேயாகும். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அடங்கின ஒவ்வொரு கூட்டத்தாரும் முற்றிலுமாகச் சுதந்தரமானவர்களாய் இருக்கின்றனர் மற்றும் வேதத்திலும், அதிலுள்ள விலையேறப்பெற்ற சகல சத்தியத்திலும் சொந்தமாய் விசுவாசத்தைப் பெற்றிருக்க வேண்டும். எந்தச் சபையாரும் மற்றும் எந்தத் தனி நபரும், வேறொரு சபையாரின் அல்லது வேறொரு தனி நபரின் vows/வாக்குறுதிகளினால் கட்டப்பட முடியாது.

ஒன்றாய்ச் செயல்படுவதற்கும், ஒன்றுகூடித் தொழுதுகொள்வதற்கும், தேவக் காரணங்களுக்கு/நோக்கங்களுக்கு ஊழியம் புரிவதற்கும் என்று ஒன்றுகூடி வரும் சபையார், பிரித்தெடுக்கப்பட்டவர்கள், சபை இப்படியாகவே செயல்பட வேண்டும்; காரணம் தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் குறித்ததான அவர்களது பரஸ்பர புரிந்துகொள்ளுதலாகும். வேதாகம கண்காணி நிர்வாகமாகிய,

அப்போஸ்தலரின் போதனைகளின் கீழ்த் தவிர மற்றப்படி, சபையாருடைய நிர்வாகத்தின் கீழும் காணப்படுவதில்லை. ஒவ்வொரு சபையிலுமுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அந்தந்தச் சபையாரால் வேதாகமத்தின் அறிவுரைகளுக்கேற்ப, தங்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டும். தெய்வீக நியமனத்தின்படியான பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய அறிவுரைகள் விஷயத்திலும் மற்றும் அப்போஸ்தலரின் அறிவுரைகளுக்கு இசைவாகக் கூடிடுவதற்கு உடன்பட்டுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின கூட்டத்தார்கள் விஷயத்திலும் தலையிடுவதற்கு, எந்தப் பூமிக்குரிய வல்லமைக்கும் உரிமையில்லை. இக்கருத்தானது, போப்மார்க்கத்தின் சகல அதிகாரங்களையும் மற்றும் அப்போஸ்தல கண்காணிகளெனப் போலியாய் அழைக்கப்படுபவர்களுடைய சகல அதிகாரங்களையும் ஒரேயடியாக ஒழித்துவிடுகின்றது.

சகோதர சகோதரிகளுடைய வாக்குகள் (Votes) மூலமாக உதவிக்காரர்களும், மூப்பர்களும், மேய்ப்பர்களும், போதகர்களும் ஊழியம் மற்றும் கனமிக்க ஸ்தானத்திற்கு உயர்த்தப்படுகிறதினால், இது சபையாரையே, அதன் ஊழியக்காரர்களைக் காட்டிலும் மிகுந்த அதிகாரமுடைய நிலைமையில் வைக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் அதற்கென்று சபையார் தங்கள் விருப்பங்களைத் திணிப்பதற்கு முற்படாமல், மாறாக வேதாகமத்தில் அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்டதான தெய்வீக வழிகாட்டுதலுக்கு இசைவாக உண்மையாய்ச் செயல்படுகிறவர்களாக மாத்திரம் காணப்பட வேண்டும். இப்படியாகப் பார்க்கும்போது இவ்விஷயம் குறித்த தெய்வீக நிலைப்பாட்டின்படியான சத்தியமானது, பல நூற்றாண்டுகள் காலமாகப் பெருமளவில் கவனிக்கப்படாமல் போய்விட்டப்படியால், சபைக்கு அனுகூலமற்ற நிலைமையே நிலவுகின்றது - சிலர் சத்தியத்தின் ஒரு பாகத்தை உள்வாங்கியும் மற்றும் வேறுசிலர் வேறு பாகத்தை உள்வாங்கியுமுள்ளனர்; முழுமையாய்ச் சத்தியத்தை உள்வாங்கியுள்ளவர்கள் சிலராகிலும் காணப்படுகின்றார்களா என்பதில் ஐயமே. ஆம், உண்மைதான், இந்நிலைமையே கிட்டத்தட்ட ஒவ்வொரு உபதேசத்தின் விஷயத்திலும் காணப்படுவதாக நாம் காண்கின்றோம்.

விவரங்கள், வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், நாம் மேலே சொல்லியுள்ளவைகளிலேயே கொள்கைகள் காணப்படுகின்றன. கொள்கைகளை முற்றும் முழுமையாகக் கிரகித்துத்துக்கொள்ள முடிகிறவர்களால், விவரங்களையும் புரிந்துகொள்ள முடியும். ஆகையால் வேதவாக்கியங்களுக்கு இசைவாக எந்த ஒரு சிறு சபையாரின் காரியங்கள் குறித்த விவரங்கள் அனைத்தின் விஷயத்திலும் தெளிவாகுவதற்கு - சிந்தித்தலும், பொறுமையுடன்கூடிய நிதானமான ஆராய்தலும்தான் காரியமாயுள்ளது. இப்படியாகச் சபையின் மூப்பர்களாக இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கரங்களில் சபையானது சில அதிகாரத்தையும்,

ஊழியத்தையும் கொடுத்து, மூப்பர்களுக்கு வேலையில் உதவியாய் இருக்கத்தக்கதாக மற்றச் சிலரை உதவிக்காரர்களாகச் சபையானது நியமித்திட்டாலும், மூப்பர்களும், உதவிக்காரர்களுமாகிய இருவரும் சபையாருக்கு - பிரித்தெடுக்கப்பட்ட சபைக்கு எதிலும் பதில் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

## சபையார் தங்கள் ஊழியக்காரர்களிலும் மேம்பட்டவர்கள்

ஏதேனும் தர்க்கத்தின் சந்தர்ப்பங்களில், சபையாரின் கணிப்பே (அ) தீர்மானமே அப்போதைக்குச் சரியானதென்று காணப்பட வேண்டும். ஆனால் பிற்பாடு அத்தீர்மானம் ஞானமற்றதாகக் காணப்படும் பட்சத்தில், கணிப்பிலுள்ள தவற்றை நன்மைக்கு ஏதுவாய் - அதாவது அறிவுரையாகக் காணப்படும் விதத்தில் கர்த்தரால் மாற்றிவிட முடியும். உதாரணத்திற்கு: மூப்பர் அல்லது மூப்பர்களுடைய கணிப்பிலிருந்து எப்போதேனும் சபையாருடைய கணிப்பு வேறுபடும் பட்சத்தில், மேல் அதிகாரமாகக் காணப்படும் சபையாருக்கு, சபைக்கு, பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள் அடங்கிய கூட்டத்திற்கு (Ecclesia) மூப்பர்கள் இணங்கிடுவதே சரியான காரியமாய் இருக்கும்; நியமிக்கிறவன் நியமிக்கப்படுகிறவனுக்கு மேலானவனாகக் காணப்படுவதினால், சபையாரே மேல் அதிகாரம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். சபையாருக்கு அல்லது Ecclesias/பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள் அடங்கின கூட்டங்களுக்கான நமது கர்த்தருடைய ஏற்பாடானது: "இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்பதேயாகும். கர்த்தர் சபையாரோடு இருப்பதாக வாக்களித்துள்ளார். அவர் பின்வருமாறு: "எங்கே மூப்பர் இருக்கின்றாரோ, அங்கே நான் இருப்பேன் மற்றும் மூப்பரிடத்திற்குச் சபையார் கூடிக்கொள்ளுங்கள்" என்று கூறவில்லை. மாறாக அவர் பின்வருமாறே: "எங்கே சபையார் இருக்கின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்; மற்றும் அவர்கள் மூப்பரை நியமித்திடலாம்; மூப்பர் எவ்வளவாய் அந்தச் சபையாரை ஆசீர்வதிப்பதில் என்னுடைய ஊழியக்காரனாய் இருப்பதற்குரிய பொருத்தமான பாத்திரமாயிருப்பதற்கு முயற்சிக்கின்றாரோ, அவ்வளவாய் அவரைச் சபைக்கும், அதன் நலன்களுக்குமான பிரதிநிதியென நான் அங்கீகரித்து, ஆசீர்வதிப்பேன்" என்று கூறியுள்ளார்.

மூப்பருக்கும், சபையாருக்கும் இடையிலான இந்த உண்மையான உறவைப் பற்றின இந்தப் புரிந்துகொள்ளுதலானது, பரிசுத்த பவுலடிகளால் பரிசுத்த ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகள் என்று விவரிக்கப்படும் சாந்தத்தை, பொறுமையை, சகோதர சிநேகத்தை, நீடிய பொறுமை, நற்குணம், அன்பு முதலானவைகளைத் தங்களுக்குள் அபிவிருத்திச் செய்திடுவதற்கு, மூப்பர்களுக்கு உதவுகிறதாய்

இருக்கும். ஆனால் இன்னொரு பக்கத்தில் தங்களுக்கு மூத்த ஒரு சகோதரனாக இருந்து ஊழியம் புரிந்திடுவதற்கும் மற்றும் தங்களுடைய நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக் கொள்வதற்குமென்று, தங்கள் மத்தியிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுத்துள்ள சபையார், தாங்கள் கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இசைவாக ஞானமாய்த் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும். இப்படியாக நம்பிக்கைக் கொண்டிருக்கையில், அவர்கள் எந்தளவுக்குத் தங்கள் மூப்பர் கர்த்தரின் சித்தத்தை அறிவதற்கும் மற்றும் அதைச் செய்திடுவதற்கும் மற்றும் தனது நேரத்தையும், தாலந்துகளையும் சபையாருக்கான ஊழியங்களில் உண்மையாய்ப் பயன்படுத்திடுவதற்கும் நாடிடுவதைக் காண்கின்றார்களோ, அவ்வளவாய் மூப்பருக்கு ஆதரவையும், உற்சாகத்தையும் கொடுப்பதற்கு ஆயத்தத்துடன் காணப்பட வேண்டும். ஆனால் பிற்பாடோ மூப்பரின் தேர்ந்தெடுத்தல் தொடர்புடையதான அப்போஸ்தலனின் அறிவுரைகளைத் தாங்கள் முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை மற்றும் பின்பற்றிடவில்லை என்று அறிந்து கொள்வார்களானால், இப்படியாக இருப்பினும், அவரைத் தேர்ந்தெடுத்ததிலுள்ள தவறு தங்களுடையது என்றும், தவறு அடுத்த தேர்தலிலேயே சரிப்பண்ணப்பட முடியும் என்றும் நினைவுகூர்ந்து, அடுத்த தேர்தலில் கர்த்தருடைய சித்தத்தைத் தாங்கள் அதிகமாய் அறிந்துகொள்வார்கள் மற்றும் தேர்தலில் ஞானமாய் இருப்பார்கள் என்று நம்பிக்கொண்டும், ஜெபம் பண்ணியும், அந்த மூப்பரிடத்தில் - இரக்கத்துடனும், கனிவுடனும்/சாந்தத்துடனும் சபையார் காணப்பட வேண்டும்.

## சபையாரின் கடமைகள்

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, எத்தனை கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும், எங்கு அவைகள் நடத்தப்பட வேண்டும், யாரால் நடத்தப்பட வேண்டும், எவ்வகையான பாடங்கள் (அ) ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் முதலானவைகள் தொடர்புடையதான அனைத்தையுமே சபையாரே உறுதிப்படுத்திட வேண்டும். சபையின் அங்கத்தினர்களில் ஒருவராக, சக அங்கத்தினர்களுக்குக் காணப்படுவது போன்று, மேற்கூறிய விஷயங்களில் தனது கருத்துகளை மூப்பர் சொல்லிடுவதற்கு உரிமை கொண்டிருந்தபோதிலும் - இவைகள் மூப்பரானவர் தீர்மானம்பண்ணுவதற்கடுத்த காரியங்கள் அல்ல. எந்தளவுக்கு அவர் உயர்வாய் மதிக்கப்படுகின்றாரோ, அவ்வளவுக்கு அவரது கருத்துகளுக்குச் சபையாரிடத்தில் (அ) சபையிடத்தில் (அ) பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களடங்கிய கூட்டத்தில் (Ecclesia) மதிப்புக் காணப்படும்; எனினும் எவ்வளவுதான் மூப்பர் உயர்வாய் மதிக்கப்படுபவராக இருப்பினும், அவர் தங்களது வழிகாட்டியல்ல என்கிற விஷயத்தை, சபையார் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

பரிசுத்தமான வேதவாக்கியங்களினுடைய போதனைகளை இந்த மூப்பர்களும், மற்றவர்களும் ஞானமாய்க் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்று கண்டுகொள்ளப்படுவதற்கேற்ப, அவர்களுக்குச் செவிசாய்க்கப்பட வேண்டும்.

இந்தக் கொள்கையானது கண்டுகொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு மற்றும் இவைகளே எதிர்ப்பார்க்கப்பட்டால், சபைகளில் உராய்வுகள்/பிணக்குகள் குறைந்துவரும் என்று நாம் நம்புகின்றோம். தங்களுக்குரியதான எல்லையில் காணப்பட்டு மற்றும் அவ்வெல்லைக்கு இசைவாகவே மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு ஊழியம்புரிவதற்கு நாடுகின்றதான மூப்பர்கள் - சபை அங்கத்தினர்கள் மத்தியில் பிரச்சனைகளை ஏற்படுத்திடுவதற்கு ஏதுவானதும், தங்கள் எல்லைக்குட்படாததுமான அநேகக் காரியங்களைச் செய்வதிலிருந்தும், பேசுவதிலிருந்தும் கட்டுப் படுத்தப்படுவார்கள்.

## கருத்துவேறுபாடுகள் அனைத்திற்குமான பெரிய காரணி

சபையாரின் கருத்துவேறுபாடுகள் அனைத்திற்கும் பெருமையே பெரிய காரணியாகக் காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம். மூப்பர் தங்களுக்குச் செய்ய வேண்டுமென்று சபையார் விரும்புகிறதற்கு அதிகமாகவும், மூப்பருக்குச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதற்கு அதிகமாகவும், சபையாருக்குச் செய்திடுவதற்கெனச் சில சமயங்களில் மூப்பர் முற்படுகின்றார். அல்லது கிறிஸ்தவ மண்டலம் எங்கும் நிலவும் கருத்துகளினால் தவறாய் வழிகாட்டப்பட்டவராகி, தனது மூப்பத்துவத்தை, சபை மீதான அதிகாரத்தின் ஸ்தானம் என்று எண்ணி விடுகிறவராகவும், அது கனமிக்க ஊழியம் என்றும், அதிகாரம் சபையாரிடத்தில் உள்ளது என்றும் எண்ணாதவராகவும் காணப்படுகின்றார். சில சமயங்களில் பிரச்சனை சபையாரிடத்திலுள்ள ஓர் அங்கத்தினனிடத்தில் காணப்படுகின்றது; இந்த அங்கத்தினன் சபையாருடைய உரிமைகளையும், அதிகாரத்தையும் தக்கவைப்பதற்கென நாடுகையில், மிதமிஞ்சி போய், தேவையில்லாமல் மூப்பருக்குத் தொல்லைக் கொடுத்து, மூப்பர் சரியான காரியத்தைச் செய்திருந்தபோதிலும், மூப்பர் எப்படியாகச் செய்திருக்க வேண்டுமென்று இந்த நல் நோக்கமுள்ள சகோதரன் எண்ணுகின்றானோ அவ்விதத்தில் மூப்பர் செய்யவில்லை என்பதினால், மூப்பரை விமர்சித்துக்கொண்டிருப்பான்.

அன்பானது பொன்னான சட்டத்தைச் செயல்படுத்திட வேண்டும். நாம் ஒருவேளை மூப்பருடைய இடத்தில் காணப்பட்டால், நாம் செயல்படுத்துவதற்காக அனுபவிக்க விரும்பும் நியாயமான சுயாதீனத்தை - தேவ வார்த்தைகளுக்கு முழு இசைவுடன் காணப்படும் அந்த நியாயமான சுயாதீனத்தை ஊழியத்தில் காணப்படும் மூப்பருக்கும் கொடுத்திடுவதற்கு நாம் விருப்பமுள்ளவர்களாகக்

காணப்பட வேண்டும். இன்னுமாக மூப்பர் அந்தந்த சபைகூட்டத்தார் யாவருக்கும் ஊழியக்காரனாய் இருக்கிறாரே ஒழிய, சபையில் விசேஷமாய் ஏதோ ஓர் அங்கத்தினனுடைய ஊழியக்காரன் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகையால் மூப்பருடைய நடத்தைக்குறித்த எந்த விமர்சனமும் சபையாரிடமிருந்து வரவேண்டும் மற்றும் சபையாரிலுள்ள தனிப்பட்ட அங்கத்தினரிடமிருந்து மாத்திரம் வரக்கூடாது. ஒருவேளை ஒரு தனிப்பட்ட அங்கத்தினன் ஏதேனும் முக்கியமான கருத்தைக் கொண்டிருந்து, அதை மூப்பர் பொருட்படுத்தவில்லையெனில், இவ்விஷயம் தொடர்பாக தனக்கு அறிவுரையாகக் காணப்படுவதற்கு ஏதுவாகவும் மற்றும் மூப்பருக்கு அறிவுரையாகக் காணப்படுவதற்கு ஏதுவாகவும், இது விஷயம் குறித்த சபையாருடைய கணிப்பைக் கேட்பதற்கு அந்த அங்கத்தினன் உரிமை உடையவனாய் இருக்கின்றான்; ஆனால் எந்தத் தனிப்பட்ட அங்கத்தினனும் மூப்பரைக்குறித்து விமர்சிப்பதற்கோ அல்லது அவரது வழிமுறைகளில் குற்றம் கண்டுபிடிப்பதற்கோ முற்படக்கூடாது.

ஒருவேளை இதுவிஷயத்தில் சபையார் மூப்பரை அங்கீகரிப்பார்களானால், மாற்றுக் கருத்துக் கொண்டிருக்கும் அந்தத் தனிப்பட்ட அங்கத்தினர்கள், தொடர்ந்து தாங்கள் விரும்புகிறபடியே எண்ணிக் கொண்டு காணப்படுவதற்கான சுயாதீனமுடையவர்களாய் இருக்கின்றனர், எனினும் அவர்கள் பெரும் பான்மையானவர்களுடைய கருத்திற்கு விட்டுக்கொடுத்திட வேண்டும். வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் சபையார் மத்தியில், சமாதானம், ஒழுங்கு என்பவைகளை வளர்த்திக்கொள்வது என்பது, வேதாகம ஆராய்ச்சிகளின் விஷயத்தில் மிகவும் விலையேறப்பெற்ற காரியங்களாய்க் காணப்படுகின்றன. ஒரு காரியம் தொடர்புடைய விஷயத்தில் உண்மையிலேயே தவறு இருந்தால், அது வேதவாக்கியங்களுக்கு முரண்பாடாய் இருந்தால் ஒழிய, மற்றப்படி சமாதானத்தையும், ஒழுங்கையும் குலைத்துப் போடும் எதுவும் செய்யப்படக்கூடாது. வேதவாக்கியங்களுக்கு முரண்பட்டதென, தான் கருதும் காரியங்களைக் கவனத்திற்குக் கொண்டுவரும் சகோதரனோ அல்லது சகோதரியோ, தனது சொந்த கருத்தைக் குறித்து அதிகமாய்ச் சொல்லாமல், மீறப்பட்டுள்ளதாக, தான் நம்புகின்றதான வேதவாக்கியங்களின் கட்டளைகளையே பிரதானமாய்க் கையாண்டிட வேண்டும்.

## சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது

இந்தப் பத்திரிக்கைக் கடந்துபோகும் இடங்களிலெல்லாம், இந்த யோசனைகளானது, கர்த்தருடைய சகோதர சகோதரிகள் மத்தியில் சமாதானத்தையும், ஒற்றுமையையும் வர்த்திக்கப்பண்ண வேண்டும் என்ற

நோக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரே ஆவியினால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் சரியானவைகளை - தேவனுக்குப் பிரியமாயும், அவரால் அங்கீகரிக்கப்படுகிறதாயும் மற்றும் அவரது நோக்கங்களுக் கடுத்தவைகளாயும் உள்ளவைகளை - அறிந்திடுவதற்கும் மற்றும் செய்திடுவதற்கும் விரும்புகின்றார்கள் என்ற நம்பிக்கையை நாம் கொண்டிருக்கின்றோம். "ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு இருக்கின்றோம்." "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." நாம் அனைவருமே கர்த்தருடன் ஒன்றுபட்டுள்ளதால் - ஒரே இருதயம், ஒரே சித்தம் உடையவர்களாகியுள்ளதால் - நம்முடைய சிரமம்/பிரச்சனை முழுக்க நம்முடைய தலைகளிலேயே - திவ்விய ஏற்பாடுகளை நிர்வகிக்கும் கொள்கைகள் சிலவற்றை நாம் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளதிலேயே காணப்படுகின்றது என்பது நம்முடைய கருத்தாய் இருக்கின்றது. இந்தக் கொள்கைகளானது, பூரணமானவைகள், சரியானவைகள் என்பதில் நமக்கு நிச்சயமே. எந்தளவுக்கு நம்மால் இந்தக் கொள்கைகளுக்கு இசைவாய் வரமுடிகின்றதோ, அவ்வளவாய் நாம் ஒருவரோடு ஒருவர் சமாதானமாய்க் காணப்பட முடியும் மற்றும் நமது கர்த்தரோடுகூட நாம் பங்கடையப் போகின்றதான இராஜ்யத்திற்கு நேராக ஒருவரையொருவர் சந்தோஷத்துடன் வழிநடத்திடுவதில் உதவிட முடியும்.

சகோதர சகோதரிகள் யாவரிடத்திலுமான அன்பானது, நாம் புதுச்சிருஷ்டிகளென அன்புகூருகின்றோம் என்பதற்கான நிச்சயமான அறிகுறியாக இருக்கின்றது என்பதை எப்போதும் நினைவில் கொள்வோமாக. சகோதர சகோதரிகளுக்கான அன்பு என்பது, நாம் அவர்களுக்கு எந்தத் தீமையையும் செய்யாமல் இருப்பதை, கண்டிப்பான அவசியம் ஏற்படும் கட்டம் தவிர மற்றப்படி எந்தத் தீமையையும் பேசாமல் இருப்பதை மற்றும் இறுதியாக அவர்களது வார்த்தைகள் மற்றும் கிரியைகள் குறித்து எவ்விதமான தீமையான சம்சயங்கள்/ ஊகங்கள்கூட நாம் பண்ணாமல் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." "அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் (தமது ஆவியின் மூலம்) நிலைத்திருக்கிறார்." நமக்கு உண்டான யாவற்றையும் நாம் அன்னதானம் பண்ணினாலும், நீதியின் நலனுக்கடுத்த விஷயங்களுக்காக நம்முடைய சரீரங்களைப் பலியாக நாம் சுட்டெரிக்கக்கொடுத்தாலும், அன்பு - அன்பின் ஆவி நமக்கிராவிட்டால், நாம் தேவனுடைய பார்வையில் ஒன்றுமில்லாதவர்களாய் இருப்போம் (உரோமர் 13:10; 1 யோவான் 4:16; 1 கொரிந்தியர் 13:3).

---

# பரிசுத்த பவுலினுடைய இருதயம் வெளியானது

## அப்போஸ்தலர் 20:22-35

*“வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டும்.” (அப்போஸ்தலர் 20:35)*

எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களிடத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் பேசியுள்ள வார்த்தைகளைக் காட்டிலும், அநேகமாக வேறெந்த வார்த்தைகளும், அப்போஸ்தலனுடைய இருதயத்தை நாம் தெளிவாய் அறிந்துகொள்ள உதவுகிறதில்லை. அவ்வார்த்தைகளானது அவரது விறுவிறுப்பான வாழ்க்கைக்கான, இயக்கும் தூண்டுதல்களாய்க் காணப்பட்டவைகளை, நமக்குக் காண்பித்துத் தருகின்றதாய் இருக்கின்றது. அவர் சௌகரியத்தையோ அல்லது புகழையோ அல்லது உலகப்பிரகாரமான இன்பங்களையோ நாடிடவில்லை. பூமிக்குரிய பலன்களை எதிர்ப்பார்க்காமல் மற்றும் துன்புறுத்துதல்களையும், அவமானங்களையும், தூற்றுதல்களையும், தவறாய் எண்ணப்படுவதையும் பொருட்படுத்தாமல், தேவனைக் கனப்படுத்துவதிலும், அனைவருக்கும் நன்மை செய்வதிலும் பிரியப்பட்டதான தனது போதகருடைய பரிசுத்த ஆவியினை அப்போஸ்தலன் முழுமையாய்ப் பெற்றிருந்தார்.

ஆகஸ்ட் 29-ஆம் தேதியின் போதான நம்முடைய பாடத்தில், அப்போஸ்தலன் மக்கெதோனியாவிற்குப் புறப்பட இருக்கையில், எபேசுவில் அவர் எப்படி “உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தார்” என்பதைப் பார்த்தோம். அவர் சுமார் பத்து மாதக் காலங்கள் மக்கதோனியாவிலும், கிரேக்கிலும் காணப்பட்டு, பிலிப்பி, தெசலோனிக்கேயா, பெரோயா மற்றும் கொரிந்து பட்டணங்களின் சபைகளைப் போய்ச் சந்தித்தார் மற்றும் இவைகளுக்கிடையில் இதற்கு முன்பு, தான் போய்ச் சந்திக்காததும், ஆனால் மற்றவர்களால் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் விழித்தெழப் பண்ணப்பட்டதுமான வடக்கிலுள்ள மற்றப் பட்டணங்களுக்கும் ஊழியம் புரிந்திட்டார். சுற்றி சந்தித்தப் பிற்பாடு அவர் மக்கெதோனியா மற்றும் கொரிந்து சபைகளினுடைய காணிக்கைகளுடன் எருசலேமுக்குப் போய்க்கொண்டிருந்தார். எருசலேமில் பஸ்காவின் காலத்தில் சென்றடைய வேண்டுமென்பதால், அவருக்குக் காலம் குறைவாகக் காணப்பட்டது மற்றும் தரைவழியாய்ப் பிரயாணம்பண்ணி, ஆசியா மைனரிலுள்ள (Asia-Minor) சபைகளைப் போய்ச் சந்திப்பதற்குப் பதிலாக, கடல்வழி பிரயாணம் மேற்கொண்டவராய், தன்னை வந்து சந்திக்கும்படிக்கு எபேசு சபை மூப்பர்களுக்கு, மிலேத்துத் துறைமுகத்திலிருந்து, எபேசுவுக்குத் தூது அனுப்பினார் மற்றும் அவர்களுக்கு அவர் கொடுத்திட்டதான செய்தி குறித்த லூக்கா அவர்களின் பதிவு பற்றியே நம்முடைய பாடம் காணப்படுகின்றது.

தனக்கு எருசலேமில் ஏதோ ஒன்று விசேஷமாய்ச் சம்பவிக்கவிருக்கின்றது

என்றும், இதன் காரணமாகத் தனக்கு மாம்சத்தில் இந்த அருமையான சகோதரர்களை இனிமேல் மீண்டும் சந்திக்கும் சிலாக்கியம் கிடைக்காது என்றும் தேவன் அப்போஸ்தலனுக்குத் தெரியப்பண்ணியிருந்தார். இக்காரியம் சபையினுடைய மூப்பர்கள் அல்லது பிரதிநிதிகளுடனான இந்தச் சந்திப்பை, விசேஷமாய் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக்கியது மற்றும் அவரது சம்பாஷணையின் முடிவில், அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் கண்ணீருடன் காணப்பட்டனர்.

எபேசுவிலுள்ள கர்த்தருடைய ஜனங்களிலேயே மிகவும் மனப்பூர்வமாகவும், வைராக்கியமாகவும் காணப்படுபவர்களில் உள்ளடங்குபவர்களெனக் கருதப்படுவதற்கு ஏதுவான அச்சபையின் மூப்பர்களென அல்லது விசேஷித்த ஊழியக்காரர்களெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதான இந்த அருமையான சகோதரர்களை ஊக்குவிக்க விரும்பினவராக, அப்போஸ்தலன் வெகு சுருக்கமாய், அவர்கள் ஏற்கெனவே அறிந்திருந்த காரியங்களை - அதாவது கிறிஸ்துவின் ஊழியக்காரரெனத் தன்னுடைய வழிமுறைகளையும், செயல்முறைகளையும் பற்றின காரியங்களை, அவர்களது மனங்களுக்கு நினைப்பூட்டினார். அவர் தனது அர்ப்பணிப்பின் ஆவியினை, போதகருடைய ஆவியினைக்குறித்து - அவர்கள் கர்த்தர் மற்றும் அவரது ஜனங்களுக்கான ஊழியக்காரர்களாய் அதிக உண்மையுடன் காணப்படுவதற்கு ஏதுவாய்ச் சொல்லிக்கொடுக்க விரும்பிட்டார். சபைக்கு ஊழியம் புரிந்த போதுள்ள தனது சொந்த மனத்தாழ்மைக் குறித்தும், பெருமை ஏதுமற்று அவர்களுக்கு நினைப்பூட்டினார்; இன்னுமாக எப்படி அவர்களுக்குப் பிரயோஜனமாய்க் காணப்பட்ட எதையும் தான் அவர்களுக்கு மறைத்துவைக்காமல், தான் அறிந்திட்டதான தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் குறித்த காரியங்கள் அனைத்தையும் அவர்களுக்குத் தெரிவித்திட நாடினார் என்றும், சான்று இல்லாத மேதாவித்தனமான கருத்துகளைத் தான் சொல்லவில்லை என்றும் அவர்களுக்கு நினைப்பூட்டினார். அப்போஸ்தலன் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், அதுமுதற்கொண்டு தங்களுக்கு அதிகப்படியான பொறுப்புக் காணப்படுகின்றது என்றும், பரலோகத்திலிருந்து வழிகாட்டப்படும் அதே பாதையில் பின்தொடருவதற்குத் தாங்கள் நாடிட வேண்டும் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

தனக்கான சோதனைகள் இன்னும் முடிவடையவில்லை என்றும், நிச்சயமாகவே இன்னும் பாதகமான காரியங்களே தனக்குக் காத்திருக்கின்றது என்றும் அவர்களிடத்தில் கூறுகையில், அவர் தைரியத்துடன், "ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே

விரும்புகிறேன்" (அப்போஸ்தலர் 20:24) என்றார்.

பிரயோஜனமான எதையும் தான் மறைத்து வைக்கவில்லை எனும் விஷயத்திலுள்ள தன்னுடைய உண்மைத் தன்மையைக்குறித்து அவர்களது கவனத்திற்குக் கொண்டுவந்த பிற்பாடு மற்றும் வீழ்ந்துபோகிறவர்கள் எவர் விஷயத்திலும் தான் பொறுப்பாளியல்ல என்று இப்படியாக உறுதிப்படுத்திக் கொண்டு, தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் பின்வரும் விஷயங்களில் எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கு, கவனமாய் இருக்கும்படிக்குப் புத்திமதிக் கூறினார்: (1) அவர்கள் தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்; அதாவது அவர்கள் தங்கள் சொந்த அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், அவர்கள் ஆண்டவரால் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாய்க் காணப்படத்தக்கதாக, ஆண்டவருடைய அடிச்சுவடுகளில் இப்படியாய் நடந்துகொள்வதற்கும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். மேலும் (2) அவர்கள் ஊழியக்காரர்கள் என்ற விசேஷித்த நியமனத்தை ஏற்றுக்கொண்டுள்ளபடியால், கர்த்தருடைய மந்தை சார்பில் கூடுதலான பொறுப்பினைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர் என்றும் நினைவில்கொண்டிட வேண்டும். ஓ! கர்த்தருடைய காரணங்களுக்கான ஊழியக்காரர்கள் யாவரும் இந்தப் புத்திமதியினை இருதயத்திற்குள் எடுத்துக்கொண்டு, பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம்புரியும் அனைவர் மீதான பொறுப்பினை உணர்ந்துகொள்வார்களாக. (இது இன்னும் விரிவான விதத்திலும் பொருத்தப்படலாம்; ஏனெனில் ஒவ்வொரு சகோதரனும் மற்றும் ஒவ்வொரு சகோதரியும் சில விதத்தில் தன் சகோதரன் மற்றும் சகோதரிக்குக் காவலாளியாகக் காணப்படுகின்றார் மற்றும் கர்த்தருடைய மந்தையைப் பார்த்துக்கொள்வதற்குப் பொறுப்புடையவராகக் காணப்படுகின்றார்). பரிசுத்தமானவைகளில் தங்கள் ஊழியக்காரர்களாய் இருந்திடுவதற்கென, மூப்பர்களைத் தேர்ந்தெடுத்தான சபை பற்றினதாக மாத்திரம், மூப்பர்களுடைய பொறுப்பானது காணப்படாமல், மூப்பர்கள் பரிசுத்த ஆவியினுடைய பிரதிநிதிகளாகியுள்ளனர் என்பதினால், இவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதான பொறுப்பினைச் சாதாரணமாய் எண்ணிவிடக்கூடாது என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அடங்கிய முழுச்சபையும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர் மற்றும் இதனால் தெய்வீக வழிகாட்டுதலுக்கேற்ப தங்களுக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதிலுள்ள கடமை உணர்ச்சியுடன்கூடிய இவர்களது செயல்பாடானது, பரிசுத்த ஆவியினுடைய செயல் மற்றும் தேர்ந்தெடுத்தலாகக் கருதப்பட வேண்டும்.

இந்த மூப்பர்கள் நியமிக்கப்படுவதற்கான நோக்கமானது, அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றது போன்று கிறிஸ்துவின் சபையைப் போஷிப்பதற்கும், திவ்விய சத்தியமாகிய அமர்ந்த தண்ணீர்களையும், பசுமையான புல்வெளிகளையும் மந்தையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும் ஆகும். ஆடுகளை மனிதனால்

ஏற்படுத்தப்பட்ட பிரிவுகளுக்குள் சேர்த்து அடைத்துவிடுவதற்கும் மற்றும் இப்படியாகக் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளதானவைகளிடத்தில் மேய்வதிலிருந்து ஆடுகள் தடைப்பண்ணப்படுவதற்கும் இந்த மூப்பர்கள் பொறுப்பினைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆடுகள் நன்கு கொழுத்திருப்பதினால் தாங்களே ஆடுகளைப் புசித்திடலாம் என்றும், ஆடுகளின் பொன்னான மயிரினையும் தங்கள் சொந்த ஆதாயத்திற்கென்று, கத்தரித்துக்கொள்ளலாம் என்றும் இவர்கள் எண்ணிவிடக்கூடாது; மாறாக சபை தங்களுடையதாய் இராமல், விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்ட தேவனுக்குரியது என்று இவர்கள் நினைவில்கொள்ள வேண்டும். ஆகையால் இவர்கள் கர்த்தருடைய மந்தைக்கு ஊழியக்காரர்களென (அ) வேலைக்காரர்களென நடந்துகொள்ள வேண்டுமே ஒழிய, மந்தையினுடைய அதிகாரிகளாகவும், ஆண்டவன்மார்களாகவும் நடந்துகொள்ளக்கூடாது.

மந்தைக்குள் பேராசைமிக்க ஓநாய்கள் நுழைந்துவிடும் என்றும், இவர்கள் முழுக்கச் சுயநலமுடையவர்களாய் இருப்பதினால், மந்தையின் நலனுக்கடுத்த விஷயங்களில் அக்கறையற்றவர்களாகவும், தங்களது சொந்த நலன்கள் குறித்து மாத்திரம் கவனம் கொண்டவர்களாகவும் காணப்படுவார்கள் என்ற காரியங்கள் குறித்து, தான் அறிந்திருப்பவைகளை அப்போஸ்தலன் தீர்க்கத்தரிசனமாய்ப் பேசினார். இந்த "ஓநாய்களானது," "ஆட்டுத்தோல் போர்த்திக்கொண்டு" தங்களை வஞ்சகமாய் முன் வைக்கின்றது; ஏனெனில் மந்தைகள் ஓநாய்கள் குறித்து விழிப்புள்ளவர்களாய்க் காணப்படுகின்றனர். இதனிலும் கொடிதானவைகளை அப்போஸ்தலன் தீர்க்கத்தரிசனமாய்ப் பின்வருமாறு குறிப்பிட்டார்: மந்தைகள் மத்தியிலிருந்து சில "இறுமாப்புள்ளவர்கள்" எழும்புவார்கள்; பெயர், புகழுக்காக ஆசைக்கொள்ளும் இவர்கள் "சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி" தப்பறைகளைப் பிரசங்கம் பண்ணிடுவார்கள். அந்தோ! இந்தத் தீர்க்கத்தரிசனமானது எபேசுவிலுள்ள சபைக்கு மாத்திரம் உண்மையாய் இராமல், அன்று முதல் இன்று வரையிலும் சபைக்கு உண்மையாய் இருந்துள்ளது! தங்களைக்குறித்துப் பிரசங்கிக்காமல், கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கம் பண்ணுவதற்கும், (தங்களுடைய அல்லது மற்ற மனிதர்களுடைய) மனித தத்துவங்களைக்குறித்துப் பிரசங்கிக்காமல், கிறிஸ்துவினுடைய சிலுவையையும், தேவனுடைய வல்லமையையும், விசுவாசிக்கிற யாவருக்குமான தேவ ஞானத்தையும் குறித்துப் பிரசங்கம்பண்ணுவதற்கும் அப்போஸ்தலன் விரும்பினது போன்று விரும்புபவர்கள் எத்தனை சொற்பமானவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்விஷயங்களிலெல்லாம் அவர்களையும் மற்றும் முழுச்சபையையும் மூன்று வருஷகாலமாய், தான் பாதுகாத்துவந்ததாய் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

இவர்கள் மாறுபாடானவைகளைப் பேசிடுவார்கள் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்; அதாவது இவர்கள் பெற்றிருக்கின்றதான மற்றும் மற்றவர்களிடம்

பதிய வைக்க இவர்கள் விரும்புகின்றதான ஏதோ சில கருத்துகளுடன் சத்தியத்தினை இசைவாக்கிடத்தக்கதாக, சத்தியத்தைத் திரித்துக்கூறி, புதிய வெளிச்சத்தைக் கண்டுபிடித்தவர்களெனத் தங்களையே உயர்த்திக்கொள்வார்கள். இதற்கு முன்பும், பின்பும் எபேசு சபையில் எழும்பிட்டதான இப்படிப்பட்ட ஐந்து தவறான போதகர்கள் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டுள்ள அப்போஸ்தலனின் நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர் -- இவர்கள் இமெனேயும், அலெக்சந்தரும், பிகெல்லும், எர்மொகெனேயும், பிலேத்தும் ஆவர் (1 தீமோத்தேயு 1:20; 2 தீமோத்தேயு 1:15; 2:17).

அவர்கள் மீது வரவிருக்கின்றதானவைகளை உணர்ந்தவராகவும் மற்றும் அவைகளை அவர்களிடம் தன்னால் பகிர்ந்துகொள்ள முடியாது என்கிறபோது, சபையின் பிரதிநிதிகளாகிய அவர்களுக்கு அப்போஸ்தலன் என்ன பரிந்துரைத்தார்? "இப்போதும் நான் உங்களைக் கடவுளிடம் ஒப்படைக்கிறேன்: அவரது அருள் வார்த்தைக்கும் கட்டுப்படுவீர்களாக! அவ்வார்த்தை வளர்ச்சியையும் தூயோர் அனைவருக்குமுரிய உரிமைப்பேற்றையும் உங்களுக்குத் தரவல்லது" (அப்போஸ்தலர் 20:32 திருவிவிலியம்) எனும் இந்த வார்த்தைகள் மூலம் பிரமாண்டமான ஆலோசனையை அவர்களுக்கு வழங்கினார். ஆ! ஆம், திவ்விய வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்றும், தங்களைத் தாங்களே குருடாக்கிக்கொண்டு, எதிராளியானவனால் இன்னும் அதிகமாய் இருளுக்குள் வழி நடத்தப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொள்வதற்கு ஏதுவாய் வேதவாக்கியங்களைத் தாங்கள் புரட்டிடாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்றுமுள்ள பரிந்துரையைப்பார்க்கிலும், வேறு எதுவும் சிறந்த பரிந்துரையாய் இருக்க முடியாது. இப்படியாய் அவர்கள் பரலோகச் சுதந்தரத்திற்கு இன்னும் ஆயத்தமாகவில்லை என்றும், அவர்கள் முதலாவதாகப் பரிசுத்தமாக்கப்படுதலில் வளர்ச்சியடைய வேண்டும் என்றும், அவர்களுக்குள் காணப்படும் கர்த்தருடைய வார்த்தைகளின் ஆவியானது, இருதயம் மற்றும் ஜீவியத்தின் பரிசுத்தமாகுதலை அதிகமதிகமாய் உண்டுபண்ணுகிறதாயிருக்க வேண்டும் என்றும் அப்போஸ்தலன் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

"ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" (அப்போஸ்தலர் 20:33) என்று எத்தகைய சிறந்ததொரு சாட்சியினைப் பவுலடிகள் தேவனுடைய கிருபையினால் கொடுக்க முடிந்துள்ளது! கூடாரம் செய்யும் தனது தொழிலை, அவர் தன்னுடைய தேவைகள் சந்திக்கப்படுவதற்காக மாத்திரமல்லாமல், தன்னோடுகூடச் சுவிசேஷபணியில் இணைந்துள்ளவர்களுக்குப் பொருளாதார ரீதியில் உதவிடுவதற்கும் பயன்படுத்தினார். அர்ப்பணிப்பின் விஷயத்தில் இத்தனை சிறந்ததொரு முன்மாதிரிக்காகத் தேவனைத் துதிப்போமாக! அப்போஸ்தலன் தனது மீட்பர் போன்று சகிக்க முடியாது மற்றும் அவரைக்காட்டிலும் அதிகம் சகிக்கவில்லை

மற்றும் அவரைப்போன்று சகிக்கவுமில்லை என்றாலும், அவர் மேலான முன்மாதிரி என்று கருதப்பட முடியாது என்றாலும், முழுமையான அர்ப்பணிப்பிற்கு அவரது வாழ்க்கையானது அளிக்கும் உதாரணமானது, நமக்கு மிகுந்த நன்மைக்கேதுவாய்க் காணப்படுகின்றது; ஏனெனில் நமது கர்த்தர் பூரணமானவர் - பரிசுத்தர், மாசற்றவர், பாவிகளுக்கு விலகினவர் என்று நாம் நினைவுகூருகின்றோம் - ஆனால் அப்போஸ்தலனோ: அவர் "நம்மைப்போன்று பாடுள்ள மனுஷனாக" இருக்கின்றார் என்றும், தான் பூரணமற்றவர் என்றும், தனது புதிய மனதிற்கு, கிறிஸ்துவுக்குள்ளான தேவ சித்தத்திற்கு, தனது சரீரத்தை, தான் கீழ்ப்படுத்திட கடமைப்பட்டிருக்கின்றார் என்றும் கூறுகின்றார்.

இப்பொழுதே இச்சம்பாஷணையின் பின்வரும் முக்கியமான வார்த்தைகளுக்கு நாம் வந்திருக்கின்றோம்: "இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்கு (நடப்பித்து) காண்பித்தேன்" (அப்போஸ்தலர் 20:35). இந்த வார்த்தைகள் நம் அனைவருடைய ஞாபகங்களிலும் ஆழமாய்ப் பொறிக்கப்பட்டிருப்பதாக. பலவான்களுக்கு ஆதரவுக்கொடுத்து (அ) பலவான்களைத் தாங்குவதும், பலவீனர்கள் நமக்கு ஆதரவு அளிக்கத்தக்கதாகக் கூடிவர வேண்டும் என்றும், நம்மை ஆதரிக்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்ப்பதும், உலகத்தின் நியதியாகவும், விழுந்துபோன சுபாவத்தினுடைய பொதுவான மனப்பான்மையாகவும் காணப்படுகின்றது. இது சுயத்தைத் திருப்திப்படுத்தும் விஷயமாகும் - விழுந்துபோன சுபாவத்தினுடைய வழிமுறையாகும்; ஆனால் இதற்கு நேர்மாறானது "புதுச்சிருஷ்டிகளுடைய" வழிமுறையாகும் - புதுச்சிருஷ்டிகள் மற்றவர்களுடைய, அதிலும் விசேஷமாகத் தங்கள் சொந்த குடும்பங்களிலுள்ளவர்களுடைய நலனுக்கடுத்தவைகளை, ஆறுதலுக்கடுத்தவைகளைக் கவனிப்பதில் விழிப்பாய் இருக்க வேண்டும் மற்றும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைச் சபைக்குப் பொருத்துகையில், அது "விசுவாச வீட்டாரிலுள்ள" பலவீனமான அங்கத்தினர்களுக்கு உதவிசெய்வதற்கு விழித்திருக்க வேண்டும் எனும் கருத்தினை மனதில் பதியவைக்கின்றதாய் இருக்கின்றது. பலவான்கள் ஒவ்வொருவரும் பலவீனர்களுக்கும், குறைவாய்க் கற்றிருப்பவர்களுக்கும் உதவி செய்திடுவதிலும், அனைவரையும் கிறிஸ்துவில் பூரண புருஷனுக்குரிய நிலைக்கு முடிந்தமட்டும் கொண்டுவருவதிலும் மகிழ்ச்சியுடன்கூடிய விருப்பம் கொண்டிருத்தல் வேண்டும்.

அப்போஸ்தலன் இங்குக் கர்த்தரின் ஊழியக்காரனெனத் தான் தலைச் சிறந்திருப்பதற்கான இரகசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றார் மற்றும் தன் ஜீவியத்தை மாதிரியாக அவரால் சுட்டிக்காட்ட முடிந்ததற்கான காரணம், மாபெரும் போதகரின் வார்த்தைகளை அவர் நினைவுகூர்ந்து, நடைமுறைப்படுத்தியதேயாகும். தன்னையே கொடுப்பது என்பது சந்தோஷமான கிறிஸ்தவ ஜீவியத்திற்கான

இரகசியங்களில் ஒன்றாய் இருக்கின்றது. அவர் முதலாவது தனது சித்தத்தைக் கர்த்தருக்குக் கொடுத்தார்; அடுத்து தனது நேரத்தையும், தனது பலத்தையும்/ ஆற்றலையும், தனது தாலந்துகளையும் கர்த்தர் மற்றும் அவரது ஜனங்களுக்கான ஊழியத்திற்கென்று கொடுத்தார். மற்றவர்கள் அறிகிறார்களோ இல்லையோ மற்றும் உணர்ந்துகொள்கின்றார்களோ இல்லையோ, அவர் கொடுப்பதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் விருப்பங்கொண்டிருந்தார்; விரைவில் வாங்கிக்கொள்வதற்கான அவரது காலமும் - கொடுத்திடுவதற்கான கர்த்தருடைய காலமும் வரும். இப்படியானவர்களுக்கு கர்த்தர் நித்தியமான ஜீவனையும், நித்தியமான மகிமையையும், தம்முடைய இராஜ்யத்தில் தம்மோடுகூடப் பங்கையும் கொடுத்திடுவார்.

---

R1720

## அறிமுகக் கடிதங்கள்

பயணம்பண்ணி போதிக்கும் சகோதரருக்கான அறிமுகக் கடிதத்திற்கு வேறொரு வார்த்தைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நம்முடைய கடந்த வெளியீட்டில் நாம் தெரிவித்திருந்தோம்; மற்றும் அதை நாங்கள் கீழே கொடுத்திருக்கின்றோம். தவறான புரிந்து கொள்ளுதலுக்கு இடமளிக்காமல் இருக்கத்தக்கதாக விளக்கமளிப்பது சரியாய் இருக்கும்:-

(1) இந்தக் கடிதங்களானது பிரசங்கித்திடுவதற்கான அங்கீகாரமல்ல. இந்த அங்கீகாரமானது எந்த மனுஷனாலும் கொடுக்கப்படமுடியாது. விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசங்கொண்டு, கர்த்தருக்கான ஊழியத்தில் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களாகிய உண்மையான சீஷர்கள் அனைவருமே, தங்களால் முடிந்த எந்த மற்றும் அனைத்து விதத்திலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குத் தேவனுடைய வசனத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளனர்; இவர்கள் தங்களுடைய தாலந்துகள் மற்றும் வாய்ப்புகளுக்கேற்ப தங்களால் முடிந்த பிரசங்கித்தல் அனைத்தையும் பொதுப்படையாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ வார்த்தைகள் அல்லது பேனா அல்லது அச்சடிக்கப்பட்ட பக்கங்கள் வாயிலாகச் செய்திடுவதில் மகிழ்ச்சியாய்க் காணப்பட வேண்டும் (மத்தேயு 28:9). அப்போஸ்தலனாகிய பவுல் ஊழியக்காரன் என்றுள்ள தனக்கான அங்கீகாரம் அல்லது ஏற்படுத்துதலானது, மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, தேவனாலே மாத்திரமேயாகும் என்று நமக்கு உறுதியளிக்கின்ற அதே வேளையில்,

அவர் கர்த்தருடைய பிரதிநிதியெனவும், அந்தியோகியாவிலுள்ள சபையின் பிரதிநிதியெனவும் அந்தியோகியாவிலுள்ள சபையினுடைய ஆதரவின் கீழ் பர்னபாவுடனான தனது ஊழியத்திற்குப் புறப்பட்டுப்போனார் (கலாத்தியர் 1:1; அப்போஸ்தலர் 13:3; 14:26, 27). அவர் நிச்சயமாகவே இப்படியான ஒரு கடிதத்தைக் கொண்டுபோனார்; ஏனெனில் இத்தகைய நிருபங்களை/கடிதங்களைக் கொடுப்பதும், கொண்டு செல்வதும் வழக்கமாய் இருந்தது (பிலிப்பியர் 2:28-30; உரோமர் 16:1-15, 17; 1 கொரிந்தியர் 16:3; அப்போஸ்தலர் 18:27). இது குறித்துக் கொரிந்தியருக்கு அவரால் எழுதப்பட்டுள்ள நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "மீண்டும் நாங்கள் எங்களைப்பற்றி நற்சான்று அளிக்கத் தொடங்குகிறோமா? சிலரைப் போல நற்சான்றுக் கடிதங்களை உங்களுக்குக் காட்டவோ அல்லது உங்களிடமிருந்து பெறவோ எங்களுக்குத் தேவை உண்டா?" (2 கொரிந்தியர் 3:1 திருவிவிலியம்). பவுலுக்குக் கொரிந்துவிலுள்ள சபையிடம் செல்வதற்கு இத்தகைய கடிதம் தேவைப்படவில்லை; காரணம் அவர் அங்கு விவரிப்பதுபோன்று, அவர் அச்சபையை நிறுவி ஸ்தாபித்துள்ளபடியால், அவர்களைப் போன்று அவரைக்குறித்து அறிந்திருந்தவர்களும் அல்லது அவரைப்போன்று அவர்களைக்குறித்து அறிந்திருந்தவர்களும் சொற்பமானவர்களே ஆவர். ஆனால் அவர் முதல்முறை எருசலேமிலுள்ள சபையைச் சந்திக்கச் சென்றபோது, அவருக்குக் கடிதங்கள் அல்லது அவரைக்குறித்த அறிமுகம் தேவைப்பட்டது (அப்போஸ்தலர் 9:26, 27-ஆம் வசனங்களைப் பார்க்கவும்). இந்த அப்போஸ்தலருடைய வழக்கத்தையும், மந்தையைப் பாதுகாக்கும் வழக்கத்தையும்தான் நாம் இப்பொழுது - அனைவருடைய நலன் கருதி பின்பற்றிட நாடுகின்றோம். எங்குத் தனிப்பட்ட நபர்கள் அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அங்குத் தனிப்பட்ட நபர்களின் கடிதங்கள் போதுமாயிருக்கும் அல்லது எங்குச் சபைகள் அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அங்குச் சபையின் கடிதங்கள் போதுமாயிருக்கும்; ஆனால் நம் விஷயத்தில் Tract Society/டிராக்ட் சொசைட்டி குறித்து உங்கள் அனைவருக்கும் தெரியும் மற்றும் சொசைட்டியின் அறிமுகப்படுத்துதலானது, சிதறிக் காணப்படும் அனைவராலும் மதிக்கப்படும் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

(2) Zions Watch Tower Tract Society என்பது அதற்கு இன்று நிலவும் சாதாரண அர்த்தத்தின் படியாக ஒரு மத சொசைட்டி அல்ல; ஏனெனில் அதற்கு எந்த விசுவாசப் பிரமாணங்களோ அல்லது விசுவாச அறிக்கைகளோ காணப்படுகிறதில்லை. அது முற்றிலுமாக ஓர் association/அலுவலகமாகக் காணப்படுகின்றது; அதன் வேலை அலுவல் விதத்தில் காணப்படுகின்றது. அது எவ்வளவு உண்மையாய் அதற்கான நோக்கத்தை நிறைவேற்றியுள்ளது என்பதற்கு அதன் நண்பர்களும், அதன் சத்துருக்களும் சாட்சி பகருகின்றனர்.

டிராக்ட் சொசைட்டியினுடைய அமைப்புத் தன்மையானது, அதன் பணக்காரியங்களை, அதன் நிர்வாகிகளுடைய தனிப்பட்ட காரியங்களிலிருந்து

முற்றிலுமாய்ப் பிரித்து வைப்பதேயாகும். இந்த ஒரு சௌகரியத்தினாலான பலன் இப்பொழுதைக்காட்டிலும், எதிர்க்காலத்திலேயே தெரிகின்றதாயிருக்கும்; ஏனெனில் இது நிதிகளை நிர்வகிக்கும் எவராவது அல்லது அனைவருடைய மரணமானது, சொசைட்டியைச் சீர்க்குலைத்துப்போடாமலும், விசுவாச வீட்டாருக்கான பிரதிநிதியென, விசுவாச வீட்டாரின் பயன்பாட்டிற்கும், நன்மைக்கும், சமயம் பரப்பும் ஊழியத்திற்கு ஆதரிக்கும் வண்ணமாகக் கைப்பிரதிகள் முதலானவைகளுக்குப் பொருளாதார உதவியளித்தல் எனும் சொசைட்டியின் வேலை முற்றிலும், தடைப்பட்டுப் போகாதப்படிக்குப் பார்த்துக்கொள்ளும் என்று நம்பப்படுகின்றது.

(3) நீங்கள் அல்லது வேறு எவரேனும் இத்தகைய கடிதங்களைக் கொடுத்து அனுப்புவது என்பது குறிப்பது போலவே, இந்த அறிமுகக் கடிதங்கள் கொடுக்கப்படுவது என்பது, அறிமுகப்படுத்தப்படுபவரின் குணலட்சணம், திறமை முதலானவைக் குறித்து நன்கு அறிந்திருக்கும் அனுபவமிக்க சகோதரரின் கணிப்பைக் குறிக்கின்றதாய் இருக்கும் (அப்போஸ்தலர் 16:2-ஆம் வசனத்தைப் பார்க்கவும்).

இப்படியாக "வஞ்சிக்கிறவர்கள்" காணப்படுகின்ற இந்த நாட்களில், நாங்கள் கடமை உணர்வோடு அக்கறைகொண்டிருக்கிறோம் என்று நீங்கள் அறிந்து, நாங்கள் யாருக்குச் சாட்சி பகருகின்றோமோ, அத்தகையவர்களை நீங்கள் மிகவும் தாமதமின்றி ஏற்றுக்கொள்ளலாம் (2 தீமோத்தேயு 3:1-13; உரோமர் 16:18; மத்தேயு 24:24; எபேசியர் 4:11-14).

(4) இந்த அறிமுகக் கடிதத்தில் இடம்பெறும் 8 தகுதிகளில் அஸ்திபாரமாகிய ஈடுபலியைத் தவிர, வேறு எதுவும் உபதேசம் சம்பந்தப்பட்டவையல்ல என்று கவனிக்கப்படலாம்; இந்த அடிப்படை உபதேசத்தை விசுவாசியாதவர் எவரும் கிறிஸ்தவர்களே அல்ல என்று நாம் கருதுகின்றோம். மற்றத் தகுதிகள், குணலட்சணம் சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றது மற்றும் இவைகள் நியாயமான தகுதிகளென நாம் நம்புகின்றோம் மற்றும் தேவனுடைய கிருபையினால் தன்னை உண்மையுள்ளவனாக அறிக்கைப்பண்ணிடாத எவரையும், ஜீவனுள்ள தேவனுடைய சபையில், போதகனாகவோ அல்லது தகுதியுள்ள ஊழியக்காரனாகவோ காணப்படுவதற்குரிய, தகுந்த நபர் என்று நாம் அறிமுகம் பண்ணிட விரும்புகிறதில்லை.

இத்தகுதிகளைப் பெற்றிருப்பதாகத் தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணுபவர்கள், அந்தக் கிறிஸ்தவ கிருபைகளிலும், தகுதிகளிலும் பூரணப்பட்டிருப்பதாய் வலியுறுத்துவதாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது; மாறாக பரிசுத்தமானவைகளில் சபையின் ஊழியக்காரனாய்க் காணப்படத்தக்கதாக, கிறிஸ்துவின் பிரதிநிதி ஒருவர் இக்கிருபைகளைப் பெற்றிருக்க வேண்டுமெனத் தாங்கள் ஒப்புக்கொள்ளும் ஒரு அளவுக்குத்தக்கதாகத் தாங்கள் அக்கிருபைகளைப்

பெற்றிருப்பதாக, அவர்கள் நம்புவதாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும். சரியான ஆவியை உடையவர்கள் அனைவரும், கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் மற்றும் சகல நற்கிரியைகளிலும் தொடர்ந்து வளர்த்திடுவதற்கு விரும்பி நாடிடுவார்கள் மற்றும் தாங்கள் கர்த்தருக்கு ஒத்த சாயலில் உயிர்த்தெழுதலில் எழும்போதுதான் தாங்கள் பூரணமடைய முடியும் என்றும் எதிர்ப்பார்க்கின்றவர்களாய் இருப்பார்கள் (1 கொரிந்தியர் 15:42, 43).

இந்த அறிமுகக் கடிதமானது டிசம்பர் 31-ஆம் தேதியோடு காலாவதியாகிடும் மற்றும் புதியது விரும்பப்படும் பட்சத்தில், புதுப்பிக்கப் படுவதற்கான வேண்டுதலுடன், அந்தத் தேதியிலேயே திருப்பி அளிக்கப்பட வேண்டும். சொசைட்டியானது எப்போதேனும் அதன் இயக்குநர்களின் குழு வாயிலாக கடிதத்தைத் திரும்பிக் கேட்கையில், கடிதத்தின் உரிமையாளர் அதைச் சொசைட்டிக்குத் திருப்பி அளித்திட ஒப்புக்கொள்கின்றார்.

## அறிமுகக் கடிதத்தின் பிரதி:-

அலிகெனி, P. A., U. S. A-இன் Zions Watch Tower Tract Society-இன் அறிமுகக் கடிதம்.

பரலோகத்தில் பெயரெழுதப்பட்டுள்ள ஜீவனுள்ள தேவனுடைய சபைக்கு வாழ்த்துக்கள்! (1 தீமோத்தேயு 3:15; எபிரெயர் 12:23).

உங்களது கிறிஸ்துவ ஐக்கியத்திற்குள்ளாக, உங்களுக்கு உதவுபவராக மற்றும் ஆலோசனை வழங்குபவராக நீங்கள் ஏற்றுக்கொள்ளும்படிக்கும் எங்களது அருமையான சகோதரனும், உடன் வேலையாளுமான______________ அவர்களை நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

இவர் கர்த்தருக்குள்ளான பிரியமான சகோதரனாகவும், இவரை அறிந்திருக்கும் சகோதரரால் நற்சாட்சி அளிக்கப்பெற்றவராகவும், நம்மால் தேவனுடைய பிள்ளை என்றும், கிறிஸ்துவின் பின்னடியார் என்றும் அடையாளம் கண்டுகொள்ளப்படுபவராகவும் காணப்படுகின்றார் (இது அவர்கள் நல்லொழுக்க குணலட்சணங்களையும் உள்ளடக்குகின்றது) மற்றும் விசுவாச வீட்டாருக்கு விசேஷித்த ஊழியம் புரிந்திடுவதற்குரிய, கீழ் இடம்பெறும் தகுதிகளை இவர் பெற்றிருப்பதாக நாம் நம்புகின்றோம்:

(1) குறைக் காணமுடியாதளவுக்கு, சத்தியத்தினால் மெருகூட்டப்பட்ட நல்லொழுக்க குணலட்சணங்கள் பெற்றிருக்கின்றார்.

(2) சாந்தம் - அதாவது இறுமாப்படைந்து, உங்களுக்கு உதவிசெய்ய நாடுகையில் தனக்குத் தீங்குவிளைவித்துக்கொள்ள முடியாத அளவுக்குச்

சாந்தத்தை உடையவராய் இருக்கின்றார்.

(3) கர்த்தருடைய மாபெரும் திட்டத்தைக்குறித்து தெளிவாகப் புரிந்துகொண்டவராகவும், அதன் ஆவியில் பெரிதும் பங்கெடுத்தவராகவும் இருக்கின்றார்.

(4) சத்தியத்தை, அதற்கேயுரிய வல்லமையிலும், எளிமையிலும் (நாவன்மை உடையவராய் இல்லாவிட்டாலும்) மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்குரிய திறமையுடையவர்.

(5) ஆதாமினாலும், அவர் வாயிலாக மரணத்தைச் சுதந்தரித்துக்கொண்ட அவரது சந்ததியாலும் இழந்துபோகப்பட்ட ஜீவனுக்கான சரிநிகர்சமான விலை அல்லது பதிலாள் எனும் ஒரே உண்மையான அர்த்தமுள்ள ஈடுபலி உபதேசத்திற்கு விசுவாசமானவராக அறியப்பட்டிருக்கிறார்.

(6) தன்னைக்குறித்துப் பிரசங்கம்பண்ணாமல், கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கம் பண்ணிடுவதற்கும் - தன்னுடைய அறிவைக் குறித்துச் சத்தமிட்டுக் கொண்டிராமல், மாறாக தேவனுடைய வார்த்தையினை அதற்கேயுரிய தூய்மையிலும், எளிமையிலும் முன்வைத்திடுவதற்கும் நாடிடும் தாழ்மையான மனதினைப் பெற்றவராவார்.

(7) வசனத்தினுடைய மற்றும் சீர்ப்படுத்தப்பட்ட எண்ணமுடைய மற்றும் நன்கு ஸ்திரமும், உறுதியடைந்துமுள்ள மாணவன் ஆவார்; நூதன சீஷனல்ல; மனித ஊகங்களின், கற்பனைகளின், ஆங்கில இஸ்ரயேலிய வாதத்தின், பொதுவுடைமைக் கோட்பாட்டின், அரசியலின், வானசாஸ்திர கூற்றுகளின் அல்லது ஆவிக்குரிய பிரயோஜனத்திற்கு ஏதுவாயிராமல், கேட்பவர்களைக் கவிழ்த்துப்போடும் ஏதோ ஒன்றின் போதகன் அல்ல (2 தீமோத்தேயு 2:15-17; 1 தீமோத்தேயு 4:7; 6:20, 21); மாறாக

(8) அவர் ஒரே கர்த்தரை, ஒரே விசுவாசத்தை, ஒரே ஞானஸ்நானத்தை, அனைவருக்குமாகக் கொடுக்கப்பட்டுள்ளதான ஒரே பலியின் அடிப்படையின் படியானதும், அங்கீகரிப்பின்படியானதுமான ஒரே சுவிசேஷத்தை முன்வைத்து, சபையாருடைய விசுவாசத்தையும், குணலட்சணத்தையும் ஸ்திரப்படுத்திட வேண்டுமென்ற நாட்டத்துடன் உங்களிடத்தில் வருகின்றார்.

எங்களுக்கு அவர் எழுதினபோது, தேவனுடைய கிருபையினால் ஏற்கெனவே தான் இத்தகுதிகளைப் பெற்றிருப்பதாகவும், அவைகளைத் தனது கிரியைகளிலும், வார்த்தைகளிலும் மற்றும் எண்ணங்களிலும் பூரணப்படுத்துவதற்குத் தினந்தோறும் தான் முயற்சித்துக்கொண்டிருப்பதாகவும் அவர் எங்களுக்கு உறுதிப்படுத்தினார் மற்றும் இந்தக் கடிதத்தை மற்றவர்களுக்குக் காண்பிப்பதன் வாயிலாக, அதே அறிக்கையினை அவர் மற்றவர்களுக்கும் அறிவிக்கின்றவராய் இருப்பார்.

விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசமாயிருக்கும் முழுமையாய்

அர்ப்பணம் பண்ணியுள்ள விசுவாசிகள் அனைவருக்கும் பொருந்துகின்ற நமது கர்த்தருடைய வசனத்தினால் உண்டான பொதுவான ordination/ஏற்படுத்துதல் மற்றும் commission/பொறுப்பு ஒப்படைக்கப்படுதலின் கீழாக அவர் உங்களிடத்தில் கடந்து வருகின்றார் (மத்தேயு 28:19, 20; ஏசாயா 61:1-3); மேலும் மேலே இடம்பெறும் 8 விசேஷித்த தகுதிகளின் காரணமாக - நீங்கள் சத்தியத்தின் அறிவிலும், அதை நடைமுறைப்படுத்துவதிலும் கட்டியெழுப்பப்படத்தக்கதாகவும், உங்களது சிரமங்களில் நீங்கள் உதவப்படத்தக்கதாகவும், இந்தத் தீங்குநாளில், சாத்தானுடைய தந்திரங்களுக்கும், அவனது திரளான வஞ்சனைக்குரிய தப்பறைகளுக்கு எதிராய் எதிர்த்து நீங்கள் நிற்பதற்கு உதவப்படத்தக்கதாகவும், நாங்கள் அவரைக் குறிப்பாய் உங்களுக்குப் பரிந்துரைக்கின்றோம். வாயின் வார்த்தைகள் வாயிலாகவும், அச்சடிக்கப்பட்ட பக்கங்கள் வாயிலாகவும் நீண்டகாலங்களாக உங்கள் அயலகத்தார் மத்தியில் நீங்கள் பொறுமையாய் விதைத்துக்கொண்டு வந்ததான சத்தியத்தின் நல்விதைகள் சிலவற்றை - அவர் வந்து மீதி கேள்விகளுக்கு விடையளிப்பதன் வாயிலாகவும், அயலகத்தாரில் உள்ளவர்களைச் சத்திய அறிவில் திருப்தியும், உறுதிப்படுத்துவதன் வாயிலாகவும், தண்ணீர் பாய்ச்சி அவ்விதைகளில் சிலவற்றை வளர்ச்சியடையப்பண்ணிடுவார் என்றும், "பரிசுத்தமாக்குதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தும்" ஜீவியம் முழுவதுமான மாபெரிய வேலையனைத்திலும் உங்களை ஆதரித்திடுவார் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளது போன்று அவர் பரிசுத்த வேதவாக்கியங்களுடைய போதனைகள் மற்றும் கட்டளைகளுக்கு இசைவாக, அடையாளமான ஞானஸ்நானத்தைக் கொடுத்திடுவதற்கும் மற்றும் நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதில் அல்லது ஆராதனையில் அல்லது வேதாகம ஆராய்ச்சியில் - "விசுவாச வீட்டாருடைய" கூடுகையில் வழிநடத்திடும் பங்கைச் செய்திடுவதற்கும் முழு அங்கீகாரமுடையவராய் இருக்கின்றார்; ஆனாலும் இந்த ஊழியத்திற்கான விசேஷித்தத் தகுதிகளானது கொடுக்கின்ற அங்கீகாரம் தவிர மற்றபடி, அர்ப்பணிக்கப்பட்ட எந்தவொரு விசுவாசியைப் போலவே இவருக்கும், மேல் பத்தியில் குறிப்பிடப்படும் commission/பொறுப்பின் கீழ், எந்த மேலான அதிகாரமும் காணப்படுகிறதில்லை. எங்களது அறிமுகக் கடிதத்துடனும், பரிந்துரையுடனும் உங்களிடத்தில் வரும் அவர் - உள்ளூர் வழிநடத்துனர் இதே மாதிரியான பரிந்துரையின் கடிதத்தைப் பெற்றிருப்பினும் - வந்திருக்கும் அவர் அங்குத் தங்கிக் காணப்படுவது வரையிலும் எந்தவொரு கூட்டங்களிலும் அவர் தலைமைத் தாங்கிடலாம் என்பதில் ஐயமில்லை. அவரை அன்பின் ஆவியிலும், கிறிஸ்தவ ஐக்கியத்திலும் ஏற்றுக்கொண்டு, உங்கள் ஜெபம் மற்றும் ஒத்துழைப்பின் வாயிலாக அவருக்கு ஆதரவாயிருங்கள் (கொலோசெயர் 1:7; 4:7-9; பிலிப்பியர் 4:3). எனினும் அவரால் முன்வைக்கப்படும் ஒவ்வொரு காரியங்களையும் கவனமாய்க்

கர்த்தருடைய வார்த்தையைக்கொண்டு சோதித்தறிந்துகொள்ளுங்கள். நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் (1 தெசலோனிக்கேயர் 5:21).

இராஜாதி இராஜனுக்கும், கர்த்தரும், மீட்பரும், சபையின் தலையானவருமான கிறிஸ்துவுக்குமான அன்பிலும், ஊழியத்திலும்

உங்களது அன்புக்குரிய ஊழியக்காரர்கள்,

Zions Watch Tower Tract Society.

{Corporate}____________________ President. ______________________________

{seal}_________________________ Secretary.______________________________

---

R1847

# Tract Society-இன் அறிமுகக் கடிதங்கள்

Zion Watch Tower Tract Society/சீயோன் வாட்ச் டவர் டிராக்ட் சொசைட்டி சார்பாக வெளியிடப்பட்டுள்ள அறிமுக கடிதங்கள் அனைத்தையும் திரும்பப்பெற்றுக்கொள்வது நலமாயிருக்கும் என்றும், இனிமேலும் அவைகளை வெளியிட வேண்டாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Zion Watch Tower Society/சீயோன் வாட்ச் டவர் சொசைட்டி என்பது ஓர் அலுவல் சமுதாயமேயாகும் (இது எந்த விசுவாசப் பிரமாணங்களையோ அல்லது அறிக்கைகளையோ பெற்றிருப்பதில்லை). இது இதன் அலுவலர்களிடம் சத்தியத்தினைப் பரப்பும் விஷயத்திற்கு, அவர்களது சிறந்த கணிப்பின்படி பயன்படுத்திடுவதற்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளதான வைப்பு நிதி சம்பந்தப்பட்டதாகும்; அதிலும் விசேஷமாகத் தேவனுடைய இரக்கத்தினால் நன்கொடையாளிகளில் அநேகரை இருளினின்று, அவரது ஆச்சரியமான வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திட்டதான மில்லினியல் டாண் வெளியீடுகளிலும், சீயோன் வாட்ச் டவர் வெளியீடுகளிலும் முன்வைக்கப்படுகின்றதான சத்தியத்தினைப் பரப்பிடும் விஷயத்திற்காகும். நன்கொடையாக அளிக்கப்படும் நிதிகளானது இதழாசிரியரின் வழிகாட்டுதலுக்கு இணங்க எப்படி இந்தச் சொசைட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகப் பயன்படுத்தப்பட்டதோ, அப்படியே இப்பொழுதும் பயன்படுத்தப்படுகின்றது (இவர் Tract Society/டிராக்ட் சொசைட்டியின் தலைவராவார்). இது "அறுவடை" முடிவடைவதற்கு முன்னதாக ஒருவேளை இதழாசிரியர் மரித்துப்போகும் பட்சத்தில், "அறுவடை" வேலையின் தொடர்ச்சிக்குறித்த கண்ணோட்டத்தில் நண்பர்கள் மற்றும் நன்கொடையாளர்களில் சிலருடைய வேண்டுகோளுக்கு இணங்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆகையால் வேறெந்த அலுவலகங்களுக்கு இருப்பதுபோலவே இந்தச் சொசைட்டிக்கும், இது பாத்திரமாய்க் கருதிடும் எவருக்கும் அறிமுக கடிதத்தினைக் கொடுத்திடுவதற்கு அதே உரிமையினைப் பெற்றிருக்கும். எனினும் "சொசைட்டி" என்ற வார்த்தையானது சிலரால் சபை என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றும், இந்தச் சொசைட்டியின் அறிமுகக் கடிதங்களை, ஆணைகளென, அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென அல்லது நியமனப் பத்திரங்களெனச் சிலரால் கருதப்படுவதற்குமான அபாயம் காணப்படுகின்றது என்றும் நாம் கண்டுபிடித்தோம். வசனம் போதிக்கிறபடி, "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும்" தவிர்த்துவிட நாம் விரும்பும் காரணத்தினால், இந்தக் கடிதங்களை நாம் நிறுத்தப்போகின்றோம்.

கர்த்தருடைய நாமத்தில் பிரசங்கிப்பதற்கான அதிகாரத்தை ஒரு மனிதனாலோ அல்லது பல மனிதர்கள் சேர்ந்தோ ஒருவருக்குக் கொடுக்கவோ அல்லது எடுத்துப்போடவோ முடியாது. தேவனால் மாத்திரமே இத்தகைய அதிகாரத்தினைக் கொடுக்க முடியும்; மற்றும் அவரால் மாத்திரமே அதை நீக்கிப் போடவும் முடியும். அவர் இந்த அதிகாரத்தினைத் தம்முடைய ஜனங்கள் அனைவருக்கும், "என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையைச் சொல்வானாக," என்று கூறிக் கொடுத்திருக்கின்றார் (எரேமியா 23:28). அறிமுக கடிதங்களானது அதிகாரமளிக்கும் கடிதங்கள் ஆகும் - என்றுள்ள கருத்துக்கள் எழும்பாதபடிக்கு நாம் விசேஷமாய் நாடினோம் மற்றும் இதை மிகத் தெளிவாக அக்கடிதங்களே தெரிவிக்கின்றன; ஆனாலும் அவைகள் சிலரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதினால், பிற்பாடு அவைகள் அநேகராலும் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படலாம். ஆகையால் அவைகள் தீங்கு உண்டு பண்ணுவதற்கு முன்பாக, அவைகள் திரும்பப்பெற்றுக்கொள்ளப்படுகின்றது. தேவன் மாத்திரமே அங்கீகாரம் வழங்கிடுவதற்குத் தகுதியான ஒருவர் என்று, இப்படி அழுத்தம் கொடுத்துக் கவனத்திற்குக் கொண்டுவருவதினாலும், Zion's Watch Tower Tract Society என்பது மத அமைப்பாக இராமல், மாறாக அலுவல் சமுதாயமாகக் காணப்படுகின்றது என்று மறுபடியுமாகச் சுட்டிக்காட்டுவதினாலும், நன்மையே உண்டாகும். இந்தச் சொசைட்டியானது எவ்வித விசுவாசப்பிரமாணங்களையும் கொண்டிருப்பதில்லை; (சொசைட்டி) அது - பெற்றுக்கொள்ளப்பட்டதும், செலவிடப்பட்டதுமான பணங்கள் குறித்தக் கணக்குகளை வைத்துக் கொள்ள மாத்திரமே செய்கின்றது; அதாவது எப்படி வங்கியானது போடப்பட்ட பணங்களைப் பெற்றுக் கொண்டு, பணம் என்ன செய்யப்பட்டிருக்கின்றது என்பதைக் காண்பிப்பதற்கு இரசீதுகளைக் கொடுப்பது போலாகும். (சொசைட்டி) அது கோரிக்கைகளை வைப்பதில்லை, வரி விதிப்பதில்லை, பணத்திற்காகக் கெஞ்சவோ அல்லது வற்புறுத்துகிறதோ இல்லை. சாத்தானின் இருளினின்று, தேவனுடைய அன்பான திட்டத்தின் சூரிய வெளிச்சத்திற்குள்ளாக வருவதற்கு உதவப்பட்டவர்களால்

அனுப்பப்படும் பணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், முடிந்தமட்டிலும் ஞானமாய்ப் பயன்படுத்திடுவதற்கும் (சொசைட்டி) அது ஆயத்தமாய் இருக்கின்றது என்று மாத்திரமே அது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

ஆனால் ஈடுபலியினை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கும் சத்தியத்தினை விட்டுச்சென்ற ஒருவரிடமிருந்து மந்தையினைப் பாதுகாத்திடுவதற்கு என்ன செய்யப்படலாம்? "ஆட்டுத் தோலைப் போர்த்திக்கொண்டு காணப்படுபவர்களுக்கு"- "செம்மறியாடுகள்" எச்சரிக்கையாய் இருப்பதற்கு நன்கு கற்றுக்கொண்டு வருகின்றனர் மற்றும் அவர்கள் அதிக ஜாக்கிரதையாய்க் காணப்பட்டு, அதன் ஆவியினை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்க வேண்டும். பிசாசின் தந்திரங்களுக்கு அவர்கள் மிகவும் ஜாக்கிரதையாய் விழித்திருக்க வேண்டும். உண்மையான ஆவியானது பின்வருமாறு காணப்படும் என்பதை நினைவில்கொள்வார்களாக; உண்மையான ஆவியானது:-

(1) "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமுமாக" இருக்கும். வார்த்தையிலும், கிரியையிலும் அல்லது தனிப்பட்ட தோற்றத்திலும் முரட்டுத்தனம், இழிவு அல்லது ஏதேனும் அசுசி அல்லது அசுத்தம் ஆகிய எதற்கும் மற்றும் எல்லாவற்றிற்கும் அவர்கள் எச்சரிக்கையாயிருப்பார்களாக.

(2) அவர்கள் கிறிஸ்துவின் ஆவியானது, சாந்தமும், தயவும் இல்லாமல் இராது என்பதை நினைவில் கொள்வார்களாக. எதிர்த்துப்போராடுகிற, சண்டையிடுகிற, முரட்டுத்தனமான, சுயநலமான ஆவி என்பது, இதைப் பெற்றிருப்பவர் போதகனாய் இருப்பதற்கோ அல்லது "கிறிஸ்துவில் குழந்தைகளாய்" இருப்பதற்கோ தகுதியற்றவர் என்பதைத் திட்டவட்டமாய்ச் சுட்டிக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் மாய்மாலமாய் மென்மையானவர்களாகவும், சாந்தமானவர்களாகவும் காணப்பட்டு, சந்தேகங்களையும், அவநம்பிக்கைகளையும், பயங்களையும் தோற்றுவித்து, போலியான அன்பினாலும், கண்ணீர்களாலும் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அழித்துப் போடுகிறவர்களுமான சிலரைக்குறித்து விசேஷமாய் எச்சரிக்கையாயிருங்கள். இந்த ஆட்டுத்தோலைப் போர்த்தியுள்ள ஓநாய்களைக்காட்டிலும், வெளிப்படையாய் எதிர்ப்பவர்கள் கொஞ்சம் ஆபத்துக் குறைவானவர்களே.

(3) நமக்கான ஈடுபலி விலைக்கிரயமெனக் கிறிஸ்துவினால் செய்யப்பட்டுள்ளதான பணியின் புண்ணியத்தினை வெளிப்படையாய் மறுக்கிறவர்களை அல்லது ஈடுபலியினைப் பற்றிக் கொண்டிருப்பதாக அறிக்கையிட்டும், அதற்குத் தவறான அர்த்தங்களைச் சாற்றி மற்றும் ஈடுபலி எனும் வார்த்தைக்கு, *antilutron* எனும் அதன் கிரேக்க வார்த்தைக்குமான, சரிநிகர்சமான விலை எனும் அதன் உண்மையான அர்த்தத்தைத் தங்கள் சாதுரியமானப் போலி வாதத்தினால் புறக்கணிப்பவர்களை - உடனே மறுத்து, அவர்களோடு அந்நியோனியமோ அல்லது ஐக்கியமோ கொள்ள வேண்டாம். இத்தகைய

தப்பறைகளானது மோசமானவைகளாகவும் மற்றும் மிகுந்த சீர்க்குலைவிற் கேதுவானவைகளாகவும் இருப்பினும், எளிமையாகத் தவறானவை என்று நிரூபிக்கப்படலாம் - ஒன்று அல்லது இரண்டு கணங்கள் போதும்; பிற்பாடு உண்மையான கொள்கையின் அடிப்படையில் செயல்பட்டு மற்றும் அவர்களோடு ஐக்கியம் கொள்ளாதிருங்கள் மற்றும் இதற்கு மேலாக ஆராயச் செல்லாதீர்கள்.

(4) குணலட்சணத்திற்கான வெளிப்படையான நிரூபணங்களானது திருப்திகரமாய்க் காணப்படலாம் மற்றும் ஈடுபலி மூலமாக பாவம் மற்றும் அதன் தண்டனையினின்று மீட்டு கிறிஸ்து நமக்கு இரட்சகராகக் காணப்படுகின்றார் என்ற விசுவாச - உபதேச சோதனை முதலாவதாக மேற்கொள்ளப்படுகிறதிலும் வெற்றிகரமாய்க் கடந்துசென்றிடலாம்; ஆனால் இப்பொழுது வருகின்றது அடுத்த ஆய்வு. ஏனெனில் குறைவான முக்கியத்துவமுடைய போதனைகளுங்கூட அவைகள் தேவ வசனத்திற்கு இசைவாய்க் காணப்படுகின்றது என்று கண்டுகொள்ளப்படாத பட்சத்தில், அவைகளை நாம் விழுங்கிவிடக்கூடாது. அவைகளைக்குறித்து நீங்கள் முழுமையாய் நிச்சயமடைவது வரையிலும், எந்த ஒரு புதுக்கருத்தையும் நிரூபிக்கின்றவிதமாய் ஏதேனும் வேத வாக்கியங்கள் காணப்படுகின்றதா என்று பாருங்கள். தியானிக்கும் கருப்பொருளோடு நன்றாய் இசைந்து வருகிற வசன பகுதிகளின் கருத்துகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளவும். இந்த விதியினைப் புறக்கணிப்பதன் மூலம் அநேகர் தவறு செய்திடுவதற்கு ஏதுவாய்க் காணப்படுகின்றனர்.

(5) Preaching/ "பிரசங்கித்தல்" என்பது அறிவுரைகளைக் கொடுப்பதற்கும், பெற்றுக்கொள்வதற்குமுரிய மிகச் சிறந்த வழிமுறைகளில் ஒன்றாய் இருப்பினும், இது விஷயத்தில் சில திறமை உடைவர்களுக்கு மாத்திரமே இது தகுதியானதாய் இருக்கும். மற்றவர்கள் "அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக" மற்ற விதங்களில் ஊழியம் செய்திடுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும் (மத்தேயு 25:15). பொது மேடைகளில் செய்திக்கொடுக்கும் பேச்சாளர்களாய் இராத சிலர், மற்றப்படி சிறந்த "போதகசமர்த்தனாய்" காணப்படுகின்றனர் மற்றும் இது உணர்ந்துகொள்ளப்பட்டு, வேதாகம வகுப்புகளில்/Bible class talk-இல் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் நல்வசனிப்பைக் கொண்டிருந்தும், தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப் பவர்களைக் குழப்புகிற சிலரைப் போன்றில்லாமல், ஒருவர் போதகசமர்த்தனாய் - காரியங்களைத் தெளிவுப்படுத்துவதற்குரிய திறமையுடையவராய் ஆகிடுவது வரையிலும் இத்தகைய நாவன்மை உடையவர்கூட ஊக்குவிக்கப்படக்கூடாது. சிறு கூடுகைகளைப் பொறுத்தமட்டில் sermons/பிரசங்கங்களைக் காட்டிலும் "வேதாகம வகுப்பு" ஆராய்ச்சிகளும், வீடுகளின் வரவேற்பறைகளில் கூட்டங்கள் நடத்துவதும் சிறந்ததாய் இருக்கும் என்பது எங்களது கணிப்பாய் இருக்கின்றது.

(6) சபையில் அடையாளங்கண்டுகொள்ளப்பட்ட பிரசங்கிக் கிறவர்/Preacher இருப்பினும், கூடுமானால், மேலே இடம்பெறும் 1, 2, 3 மற்றும் 4-

இன் கருத்துகளுடைய அடிப்படையில், அனைவரும் பேசுவதற்குரிய கூட்டம் ஒன்று - அதாவது ஒரு வேதாகம ஆராய்ச்சி வகுப்பானது நடத்தப்பட வேண்டும்.

(7) கூடுமானமட்டும் வாரத்திற்கு ஒருமுறை ஜெபிப்பதற்கும், துதிப்பதற்கும் மற்றும் சாட்சியைப் பகருவதற்குமான கூடுகைக் காணப்பட வேண்டும் - இது உபதேச ரீதியாகக் கலந்துரையாடுவதற்குரிய கூட்டமாய் இராமல், மாறாக ஆவிக்குரிய பயிற்சிக்கும், சந்தோஷத்திற்கும் மற்றும் தன்னைப் பரிசோதித்துக் கொள்வதற்கும், பரிசுத்தத்திற்கடுத்த காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவிடுவதற்குமான கூட்டமாய்க் காணப்பட வேண்டும்.

(8) அப்போஸ்தலர்களால் நிறுவப்பட்டதான சபைகளானது, சபையார் சார்ந்த அம்சங்களையும் மற்றும் கண்காணிகள் சார்ந்த அம்சங்களையும், இரண்டையும் பெற்றிருப்பதாகத் தெரிகின்றது. சபையார் சார்ந்த அம்சமானது, ஒவ்வொரு சபையாரும், அதன் தலையாகிய கர்த்தரின் கீழ் அதன் காரியங்களுக்கடுத்த அதிகாரத்தைப் பெற்றிருப்பதில் தெரிகின்றது; இந்தத் தலையானவருக்கு மாத்திரமே சபையார் கடமைப்பட்டிருக்கின்றனர் மற்றும் ஒவ்வொரு சபையாரும், அதன் ஊழியங்களை நிர்வகித்துக்கொள்கின்றனர்.

கண்காணிகள் சார்ந்த அம்சமானது, தம்முடைய ஆடுகளுக்கு மாபெரும் மேய்ப்பனாய்க் காணப்படும் கர்த்தர் சுவிசேஷஊழியத்தின் வேலைக்காகப் பரிசுத்தவான்கள் சீர்ப்பொருந்தும் பொருட்டு அவர் மேய்ப்பர்கள், போதகர்கள் முதலானவர்களை அருளுவார் என்று புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது மற்றும் இப்படியாக எதிர்ப்பார்க்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையில் விளங்குகின்றது (எபேசியர் 4:11-13). சபையார் இது விஷயத்தில் கர்த்தருடைய வழி நடத்துதலுக்காகப் பார்க்கின்றனர் மற்றும் அதேவேளையில் எதிராளியானவனால் உருவாக்கப்பட்டுள்ள அநேக கள்ளப் போதகர்கள் காணப்படுகின்றார்கள் என்றும், தங்களுக்கான போதகர்களைத் தாங்கள் சோதித்தறிய வேண்டும் என்றுமுள்ள காரியங்களைக்குறித்து அவர்கள் அக்கறையற்றும் காணப்படக்கூடாது.

போதகர்கள் தேவனால் அருளப்பட்டிருப்பதாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு இருக்கும்போதும் மற்றும் இருப்பதுவரையிலும் மற்றும் அவர்களது நடக்கையின் மூலமாகவும், தேவ வசனத்தின் மூலமாகவும், அவர்கள் சபையாரால் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாகக் காணப்படும்போதும் மற்றும் காணப்படுவது வரையிலும், அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் கனத்திற்குரியவர்களாய் இருப்பார்கள்; மற்றும் அவர்களது கருத்துக்களுக்கு அதிகம் மதிப்பும் கொடுக்கப்படும் (1 தீமோத்தேயு 5:17; எபிரெயர் 13:17; உரோமர் 12:10; 13:7). ஆனால் தேவனுடைய வார்த்தை மற்றும் சித்தம் தொடர்புடைய விஷயத்தில் தங்களது பகுத்துணர்தலுக்கு ஏற்ப, எந்தப் போதகரையும், மறுத்திடவும் சபையாருக்கு அதிகாரம் காணவேபடுகின்றது.

(9) அன்பே பூரண சற்குணத்தின் - பூரணத்தின் - ஒரே கட்டாக

இருக்கின்றது. உங்களையோ, மற்றவர்களையோ வேறேதாவது கட்டோடு கட்டிக்கொள்ளாதிருங்கள். தேவனைப் பிரதானமாய் அன்பு கூருவது என்பது, மற்றவைகள் எல்லாவற்றையும்விட அவரது வார்த்தைகளுக்கு உண்மையாய் இருப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும்; சகோதரருக்கான அன்பு என்பது முடிந்தமட்டும் ஒருவர் இன்னொருவருடைய நற்பண்புகள் மற்றும் தாலந்துகளைப் பார்த்திடுவதற்கும் மற்றும் ஒருவர் இன்னொருவருடைய மேலான ஆவிக்குரிய நலன்களை எப்படியாகிலும் நாடுவதற்கும் பெருந்தன்மையுடன் ஆயத்தமாய் இருப்பதைக்குறிக்கின்றதாய் இருக்கும்.

(10) "அமைப்புகள்" யாவற்றையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்; தேவனுடைய குடும்பமெனக் கூடிக்கொள்ளுங்கள்; விலையேறப்பெற்ற இரத்தத்தின்மீதான விசுவாசத்தினால் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொண்டதாக அறிக்கைப்பண்ணுகிறவர்களும், "பாவத்திற்கு எதிராய்த் தாங்கள் போராடுவதைத்" தங்களது அன்றாட ஜீவியத்தின் வாயிலாகக் காண்பித்துக்கொள்பவர்களுமான யாவரையும் "சகோதரரென" அடையாளங்கண்டு கொள்ளுங்கள்; உங்கள் மத்தியிலிருந்து கனத்திற்குரிய உங்களது ஊழியர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள். தெரிந்துகொள்கையில் உங்கள் சொந்த சித்தத்தையோ அல்லது உங்களுக்கு மகிமை சேர்க்கவோ, உங்களது சகோதரருடைய சித்தத்தையோ, அவர்களுக்கு மகிமை சேர்க்கவோ நாடாமல், இது தொடர்பாக வேத வாக்கியங்களில் இடம் பெறுபவைகளை நினைவில்கொண்டு, தேவனுடைய சித்தத்தையும், அவருக்கு மகிமை சேர்க்கவும் மாத்திரம் நாடுங்கள்.

ஒருவேளை இதழாசிரியர் உங்களிடத்தில் ஏதேனும் விசேஷித்த தூதுவரை அனுப்ப வேண்டிய தருணங்கள் ஏற்படுகையில், தனது பரிந்துரையின் கடிதத்தினை, இதழாசிரியர் அநேகமாக அவரிடம் கொடுத்தனுப்புவார் (இப்படிக் கடிதங்கள் கொடுத்தனுப்புவது என்பது கிறிஸ்தவ அல்லது உலக நண்பர்கள் மத்தியில் வழக்கமான காரியமேயாகும். மேலும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தான் யாரை நண்பர்கள் என்று அங்கீகரிக்கின்றார் அல்லது யாரை தேவ ஜனங்களுக்குப் போதகர்களென அறிமுகப்படுத்தி வைக்கின்றார் என்பது தொடர்புடைய விஷயத்தில் விசேஷித்த பொறுப்பினைக் கொண்டிருக்க வேண்டும்). இதழாசிரியரினால் கையெழுத்திடப்பட்டக்கடிதம் ஒன்றினைப் பெற்றிருக்கும் சகோதரன் ஒருவர் உங்களிடத்திற்கு வருவாரானால், அவரை இதழாசிரியருக்கு நன்குத் தெரியும் என்றும், உங்களுக்கு ஜீவ அப்பத்தினைப் பரிமாறிடுவதற்குரிய சில விசேஷித்தத் தாலந்துகளை அவர் பெற்றிருப்பதாக இதழாசிரியர் நம்புகின்றார் என்றும் நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

# சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல்

தெய்வீக வார்த்தைகளுக்கு இசைவாகத் தங்கள் ஜீவியங்கள் காணப்படுவதற்கென ஊக்கமாய் நாடிக்கொண்டிருக்கின்றதான அன்பான சகோதர சகோதரிகளில் சிலர் மில்லேனியல் டாண் தொகுதி VI-ஐ வாசிக்கையில், முன்பில்லாத அளவுக்கு மிகத் தெளிவாய் மத்தேயு 18:15-ஆம் வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான செயல்முறைகள் தொடர்பான திவ்விய ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றனர். அதில் முன்வைக்கப்பட்டுள்ளதான கட்டளைகள் அனைத்தையுமே கைக்கொள்வது அவர்களுக்கு அவசியமில்லை என்று சிலருக்கு நினைப்பூட்டப்படுவது அவசியமாய் இருக்கின்றது. சகோதரனுடைய தவறை அவர்கள் விட்டுவிடலாம் என்று எண்ணுவார்களானால், அது அவர்களது சிலாக்கியமாகும்; ஆனால் ஒருவேளை தவறை அவர்களால் விட்டுவிட முடியவில்லையெனில், அது அவர்களைத் தொடர்ந்து பாதித்துக் கொண்டிருக்கின்றதென்றால், அக்காரியத்தைக் குறித்து அவர்கள் மற்றவர்களிடத்தில் சொல்லாமல், மாறாக தவறைச் சரிப்படுத்துவதற்கு இருக்கும் ஒரே செயல்முறையென அவ்வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளதான கர்த்தருடைய கட்டளைகளைப் பின்பற்றிட வேண்டும்.

கீழ்ப்படியாமல் பிடிவாதமாய்க் காணப்படுபவர்களுக்கான - அதாவது செய்யப்பட்ட தவறுகளுக்கு எதிரான சகோதரனுடைய தனிப்பட்ட தெரிவித்தல்களுக்குச் செவிசாய்க்காமலும், இரண்டு (அ) மூன்று சகோதரருடைய ஆலோசனைக்குச் செவிசாய்க்காமலும், சபையாருடைய வார்த்தைகளுக்கும் செவிசாய்க்காமலும் இருப்பவர்களுக்கான தண்டனை வகை குறித்துச் சிலர் கேட்கின்றனர் - என்ன தண்டனை இத்தகையவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று நம்மிடம் கேட்கப்படுகின்றது. நம்முடைய சகோதரனைத் தண்டிப்பதற்கான உரிமை நமக்கு இல்லவேயில்லை என்பதே நம்முடைய பதிலாகும். அதைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று கூறுகின்றார் மற்றும் தற்காலத்தில் ஒருவர் இன்னொருவரின் மாம்சத்தின்படியான பெலவீனத்தின் அளவைக்குறித்து நியாயந்தீர்க்கும் விஷயத்தில் நாம் திறமிக்கவர்களல்ல மற்றும் இதன் காரணமாக ஒருவர் இன்னொருவரின் பெலவீனத்தின் விஷயத்தில் மற்றவர் கொண்டிருக்கும் பொறுப்பின் அளவைக்குறித்து நியாயந்தீர்க்கும் விஷயத்திலும், நாம் திறமற்றவர்களாய் இருக்கின்றோம் மற்றும் கர்த்தர் நியாயமாய் இவைகளை நியாயந்தீர்ப்பார். மன்னிப்பதே நம்முடைய காரியமாய் இருக்கின்றதே ஒழிய, தண்டிப்பது நம்முடைய காரியமல்ல; நமக்குச் செய்யப்படும் பாதகத்தை நிறுத்த நாடுவது நம்முடைய சிலாக்கியமாய் இருக்கின்றது; ஆனால் கடந்த காலங்களில் நடந்துள்ளதான எதற்கும், எந்தத் தண்டனையையும் நாம் அளித்திடக்கூடாது.

மத்தேயு 18:15-ஆம் வசனத்தில் இடம்பெறும் கர்த்தருடைய கட்டளைகளிலுள்ள முழுப்பாடம் என்னவெனில்: இப்படியாக நமது சகோதரனுடைய

அன்பை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் நமக்கு இன்னுமாய் அச்சகோதரன் பாதகம் பண்ணுவதிலிருந்து அவனைத் தடுப்பதற்கும் நாம் நாடிட வேண்டும் என்பதேயாகும். இப்படிச் செய்வதில் நாம் ஜெயமடைவோமானால், அதினால் அவனை நம்முடைய சகோதரர் என மீண்டுமாய்ப் பெற்றுக்கொள்வோம், அவனைக் குணமடையச் செய்வோம். ஆகையால் சகோதரனைச் சபையார் முன்னிலையில் கொண்டுவருவது தண்டனைக்கொடுப்பதற்கே என்பது எண்ணமாயிருப்பதில்லை, மாறாக கண்டிக்கப்படுவதற்காக, திருத்தப்படுவதற்காக, அவன் தன் நடத்தையிலுள்ள தவற்றினைக் கண்டு, அதை ஒப்புக்கொண்டு, தவறு செய்வதை விட்டுவிடத்தக்கதாகக் கடைசிமுறையாக மாத்திரமே அவன் சபையார் முன்னிலையில் கொண்டுசெல்லப்படுகின்றான். ஒவ்வொரு நடவடிக்கையிலும், சகோதரனைச் சரியான வழிக்குத் திருப்பிடுவதற்கே பிரயாசம் காணப்பட வேண்டுமே ஒழிய, அவன் தவற்றை அம்பலப்படுத்துவதற்காகவோ, அவனுக்குப் பாதகம்பண்ணுவதற்காகவோ, அவனைத் தண்டிப்பதற்காகவோ பிரயாசம் காணப்படக்கூடாது; ஏனெனில் "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன்" என்று கர்த்தர் சொல்லியுள்ளார்.

இந்த ஒரு வேதவாக்கியத்தின்படி சபையார் செய்ய முடிகிறது என்னவெனில்: அச்சகோதரனை மனந்திரும்பப்பண்ணுவதற்கும், சீர்ப்பொருந்தபண்ணுவதற்கும் எடுத்த பிரயாசங்களினால் பிரயோஜனம் இல்லாமல் போகுகையில், அவன் சரியானவற்றைச் செய்வதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்துவது வரையிலும், சபையார் அவனிடமிருந்து விசேஷித்த சகோதர ஐக்கியத்தினை நீக்கிக்கொள்ளலாம். அவன் விருப்பத்தினை வெளிப்படுத்தின பிற்பாடு, அவன் மீண்டுமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பிட்டக்காலம் சகோதரனை, "அஞ்ஞானியைப் போலவும், ஆயக்காரனைப் போலவும்" நடத்துவதும்கூட, அவனுக்கு பாதகம் பண்ணுவதை, அவனைத் தண்டிப்பதை, அவனைத் தாக்கி பழித்தூற்றுவதை, உலகத்திற்கு முன்னிலையில் அவனை அவமானப்படுத்துவதை (அ) அவமதிப்பதைக் குறிப்பதில்லை. இவைகளை - (பாதகம்பண்ணுதலையோ, தண்டிப்பதையோ, தாக்கிப் பழித்தூற்றுவதையோ, அவமானப்படுத்துவதையோ) - அஞ்ஞானிக்கோ (அ) ஆயக்காரனுக்கோ செய்திடுவதற்கும் நாம் அனுமதிக்கப்படவில்லை. எந்த ஓர் அஞ்ஞானியையோ அல்லது ஆயக்காரனையோ நாம் நடத்துவதுபோன்று, அச்சகோதரனை நாம் அன்பான, மரியாதையான விதத்தில் நடத்திட வேண்டும் மற்றும் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வகுப்பாராகிய சபைக்கு உரியதான விசேஷித்த உரிமைகள் (அ) சிலாக்கியங்கள் (அ) வாழ்த்துக்கள் (அ) வாக்குகள் (vote) அளிக்கும் வாய்ப்புகள் கொடுக்க மறுக்கப்பட வேண்டும்.

# மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல்

சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும்தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர, மற்றபடி சபையில் - ஒரு vote/வாக்கில் பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்றவர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில், 51 பேர்கள் சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில் தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரந்தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதான வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு

யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு நபர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A, B, C, D, E, F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A - அவர்களுக்கு 100-வாக்குகளும்; B - அவர்களுக்கு 90-வாக்குகளும்; C - அவர்களுக்கு 80-வாக்குகளும்; D - அவர்களுக்கு 70-வாக்குகளும்; E - அவர்களுக்கு 60-வாக்குகளும்; F - அவர்களுக்கு 50-வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறுபேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்க குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளதான தரநிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/ கொள் கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைப்பாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே - அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக் கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார் (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கின்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய

சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

முழுமையான அர்ப்பணம்பண்ணி, அதைத் தண்ணீர் முழுக்கு எனும் வழக்கமான அடையாளத்தின் மூலம் தெரிவித்துள்ளவர்கள் யாவரும் தவிர மற்றபடி எவரும் வாக்களிக்கக்கூடாது என்பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். இப்படியாகத் தங்களது அர்ப்பணிப்பினை அடையாளத்தின் மூலமாகத் தெரிவித்திடாதவர்கள், சகோதரர்கள் அல்ல என்று புறக்கணிக்கப்படக்கூடாது, மாறாக சபையாருக்கு ஊழியம் புரிவதற்கு யார் தகுதியானவர்களாய் இருப்பார்கள் என்பதில் தங்களது எண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கு ஆற்றலற்றவர்களாய் இருப்பதினால் மிகவும் வளர்ச்சியற்றவர்களாய் இருப்பவர்களெனக் கருதப்பட வேண்டும் மற்றும் இவர்கள் ஊழியக்காரர்களாகுவதற்கும் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள்.

இங்கும் அங்குமாக எழும்பி தலையிடுகிறதான இன்னொரு கேள்வி, - நம்மில் அநேகர் மிகவும் உதவிகரமாக உள்ளது என்று கண்டுகொண்டுள்ளதும் மற்றும் அனைவருக்கும் பரிந்துரைக்கப்பட்டதுமான விசேஷித்த வாக்குறுதியை/vow எடுத்துக்கொள்ளாதவர்கள் சபைக்கான ஊழியக்காரராகத் தேர்ந்தெடுக்கப் படலாமா? என்பதேயாகும். கர்த்தர் தாமே விசேஷமாய் அதை இந்தக் காலக்கட்டத்தில் கொண்டு வந்துள்ளார் என்றும், அது ஓரளவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் பரீட்சையாக விளங்கும்படிக்கு நோக்கம் கொண்டுள்ளார் என்றும் நாம் நம்பினாலும், வாக்குறுதியைச் சகோதரத்துவத் திற்கான பரீட்சையாக நாம் ஆக்கிவிட முடியாது; அதைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக்குவதற்கு வேதமும் நமக்கு அதிகாரம் வழங்கிடவில்லை. மூப்பர்களுக்கான தகுதிகளின் மத்தியில் குறிப்பிடப்படவில்லை என்கிறபோதிலும் முன்மொழியப்படும் சகோதரனுடைய விநோதமான பாணிகள் அல்லது சரியற்ற ஆங்கில மொழிப்பேச்சானது கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பாத்திரமானவைகளாய் இருப்பதுபோன்று, வாக்குறுதியும் (vow) தெய்வீகக் கட்டளையின் காரியமாய் இராமல், மாறாக பகுத்துணரும் காரியமாய்க் காணப்படுகின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள அன்புக்குரிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவருமே - வாக்குறுதி நியாயமான ஒன்று என்றும், அது தெய்வீக வார்த்தைகளுடனும், நம்முடைய அர்ப்பணிப்பின்

வாக்குறுதியுடனும் இசைவாய் இருப்பதையும் மற்றும் இவைகளை நிறைவுப்படுத்தும் இளநீல தொங்கல்களாக அது இருக்கின்றது என்றுமுள்ள ஒருமித்தக் கருத்தில் பார்க்கின்றார்கள் என்று நாம் அறிவோமானால், இதினிமித்தம் நாம் பெரிதும் களிகூருவோம். அந்த வாக்குறுதிக்குக் கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி என்ன மறுப்புத் தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் யாராலும் இருக்க முடியாது. அவர்களின் மறுப்பானது, அவர்களின் இருதயத்தினுடைய நோக்கங்களில் ஏதேனும் தவறு காணப்படக்கூடும் அல்லது அவர்களது புரிந்து கொள்ளுதலில் ஏதேனும் குறைபாடு இருக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டுகின்றது என்று நம்மில் சிலருக்குத் தோன்றலாம். எனினும் மிகவும் நன்றாய் நியாயந்தீர்ப்பதற்கு நாம் வல்லவர்களல்ல. "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

வாக்குறுதியை எடுத்துக்கொண்டுள்ளவர்களுக்கும், அதுகுறித்த ஒருமித்த கருத்தினைக் கொண்டிருப்பவர்களுக்கும், மூப்பர்கள் அல்லது உதவிக்காரர் களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முன்னுரிமைக் கொடுக்கப்படலாம் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. ஒருவேளைச் சபையாரை வழிநடத்துவதற்குத் திறமிக்கவர்களாய் இருக்கும் சகோதரர்கள், மற்ற அனைத்து விதங்களிலும் ஏற்கத்தகுந்தவர்களாகவும், வாக்குறுதியினை எதிர்க்காதவர்க ளாகவும் இருப்பார்களானால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாகவே - தங்களால் முடிந்தமட்டும், வாக்குறுதி உள்ளடக்கியுள்ள காரியங்கள் அனைத்திற்கும் இசைவாகத் தாங்கள் வாழ்வதாகக் கூறிக்கொண்டு, அந்த எளிமையான வாக்குறுதி மற்றவர்களுக்கு உதவியாக இருக்க, அந்த வாக்குறுதியைத் தாங்கள் எடுப்பது என்பது ஏதேனும் விதத்தில் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தினால், அதை எடுக்க மறுக்கிறவர்களாக மாத்திரம் காணப்படுபவர்களுக்கும் பொருந்தும். நம்மால் ஒருவேளை அவர்கள் இருதயங்களினுடைய எண்ணத்தினையோ, அவர்களது மனதின் விவாதங்களையோ புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், எனினும் இம்மாதிரியான தருணங்களில் நம்மால் புரிந்துகொள்ள அல்லது உணர்ந்துகொள்ள முடியாதவைகளை விட்டுவிடலாம்.

# இவர்களிலும் நீ என்னில் அன்பாய் இருக்கின்றாயா?

நமது கர்த்தர் பேதுருவை ஏறெடுத்துப்பார்த்து, பேதுருவை பாறை என்று அழைக்காமல், சீமோன் என்று அழைத்து "இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா?" என்று கேட்டபோது, பரிதாபத்திற்குரிய பேதுரு கர்த்தரை தான் மறுதலித்த விஷயத்தில் ஏதேனும் பிராயச்சித்தம் செய்வதற்குரிய அநுகூலமான வாய்ப்புக் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்புடன்தான் காணப்பட்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இந்த வலைகள், படவுகள் மற்றும் இந்த மீன் பிடிக்கும் தொழிலைக் காட்டிலும் அதிகமாய் நீ என்னை அன்புகூருகிறாயா? என்ற அர்த்தத்தில் அவர் கேட்டிருக்கலாம் அல்லது மற்றச் சீஷர்களைக் காட்டிலும் அதிகமாய் நீ என்னை அன்புகூருகிறாயா? என்ற அர்த்தத்தில் அவர் கேட்டிருக்கலாம். பேதுரு கர்த்தரை மறுதலித்த அதே இரவில், கர்த்தருக்கான தனது அன்பைக் குறித்துத் தான் பெருமையாய்ப் பேசினவைகளை அவர் மனதின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு ஏதுவான வாய்ப்பாக இத்தருணம் இருந்தது. "எல்லோரும் உம்மைவிட்டுப் போனாலும், நான் உம்மைவிட்டுப் போகிறதில்லை" என்று பேதுரு சொல்லியிருந்தார். பேதுரு தன்னை மற்றவர்களுடனோ அல்லது மீன்பிடிப்பதற்குரிய உபகரணங்களுடனோ ஒப்பிடாமல், "ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று பதிலுரைத்தார். நமது கர்த்தர் அன்பிற்கு *'agapao'* வார்த்தையினைப் பயன்படுத்தினார், ஆனால் பேதுருவோ உளங்கனிந்த, தனிப்பட்ட பாசம்/அன்பு எனும் அர்த்தம் கொடுக்கும் 'phileo' எனும் வேறு வார்த்தையினைப் பயன்படுத்தினார். இதைக் கூறின மாத்திரத்தில், "என் ஆட்டுக்குட்டிகளை, என் சிறு ஆடுகளைப் பேணி வளர்ப்பாயாக" (திருவிவிலியம்) என்று நமது கர்த்தர் பதிலளித்தார். இதில் ஊழியத்தின் விஷயத்தில் பேதுரு பகுதியளவு சீர்ப்பொருத்தப்பட்டுள்ளார் எனும் கருத்து வெளிப்படுகின்றது. மூன்று வருடங்களுக்கு முன்னதாக பேதுருவின் படகிலிருந்து, நமது கர்த்தர் திரளான ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்; பிற்பாடு, வலை கிழிந்துபோகும் அளவுக்கு, திரளான மீன்களை அருளின அற்புதத்தினைச் சீஷர்களுக்குப் பண்ணினார். இந்த நிகழ்வினைத் தொடர்ந்து, நமது கர்த்தர் பேதுருவையும், யாக்கோபையும் மற்றும் யோவானையும் நோக்கி: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார். இப்பொழுதும் அதே போன்றதொரு அற்புதத்தினை அவர் பண்ணினார் மற்றும் 153 - பெரிய மீன்கள் பிடிப்பட்டபோதிலும், வலைக் கிழியவில்லை மற்றும் இப்படி மீன் பிடித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் மறுபடியுமாக அப்போஸ்தலர்கள், பெந்தெகொஸ்தே நாளில், உன்னதத்திலிருந்து வரும் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்டது முதற்கொண்டு துவங்கும் சுவிசேஷயுகத்தின் கீழ் அவர்கள் மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக்குவதற்கு விரும்பிட்டார். நமது கர்த்தர் பேதுருவை நேரடியாகக்

கண்டிக்கவில்லை. அவரது தவற்றின் மற்றும் அவரது மறுதலிப்பின் மோசமான நிலையினை அவர் மனதில் பதியப்பண்ணினார் மற்றும் அச்செய்கையினால் அப்போஸ்தலர்களில் ஒருவர் என்றுள்ள பேதுருவின் ஸ்தானத்தை அவர் இழந்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார். பேதுரு மந்தையினுடைய ஆட்டுக்குட்டிகளை மேய்த்திடலாம் என்பதான இந்தப் புதிய கடமையானது, பேதுரு ஆடுகள் மத்தியில் முழுமையான மேய்ப்பனாக இருப்பதில்லை என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் நமது கர்த்தர் மீண்டுமாக அதே கேள்வியினை, அதே வார்த்தைகளைக் கொண்டே கேட்டார் மற்றும் பேதுருவும் அதே வார்த்தைகளைக் கொண்டே பதிலளித்தார். பின்னர் இயேசு பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்டதான கடமையினை, "என் ஆடுகளை மேய்ப்பாயாக" (திருவிவிலியம்) ஆடுகளைப் பராமரித்துக்கொள், ஆடுகளுக்கு ஊழியம் புரிவாயாக என்று கூறி விரிவாக்கினார். இந்த இரண்டு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்ட விஷயத்தில் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்ப்பதற்கு அதிகாரம் பெற்றுக்கொண்டவராகவும், ஆடுகளை மேய்க்க மாத்திரம் அதிகாரம் கொண்டவராகவும், மேய்ப்பனுக்குரிய சுயாதீனங்கள் முழுவதையும் இன்னும் பெற்றுக்கொள்ளாதவராகவும் பேதுரு காணப்பட்டார். பேதுரு மூன்று தரம் கர்த்தரை மறுதலித்துள்ளபடியால், நமது கர்த்தரும் அவரை மூன்றாம் முறை கேள்விகேட்டார்; எனினும் இம்முறை phileo எனும் வார்த்தையை அன்பிற்குப் பயன்படுத்திக் கேட்டார். இதை அநேகமாக பேதுரு அடையாளங்கண்டு கொண்டிருக்க வேண்டும்; எப்படி இருப்பினும் தன்னுடைய அன்பு குறித்த இந்த மூன்றாம் கேள்வியினிமித்தமும் மற்றும் இம்முறை நமது கர்த்தர் phileo - வார்த்தைப் பயன்படுத்தினதினிமித்தமும், அவர் மிகுந்த ஆழ்ந்த துயரமடைந்தார். "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர், என்ற பேதுருவின் பதிலானது பரிதாபகரமானதாகும். இந்த மூன்றாம் ஒப்புக்கொள்ளுதலுக்குப் பிற்பாடு, நமது கர்த்தர் "என் ஆடுகளைப் பேணிவளர்ப்பாயாக" என்று கூறி, அவரைக் கண்காணியாக (அ) மேய்ப்பனாக முழுமையாகச் சீர்ப்பொருத்தினார். அவர் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்ப்பதற்கும், ஆடுகளை மேய்ப்பதற்கும் மாத்திரம் அதிகாரம் வழங்கப்படாமல், இறுதியில் ஆடுகளைப் பேணிவளர்ப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டார். பேதுருவுக்காக நாம் சந்தோஷப்படுகின்றோம் மற்றும் கண்டிக்கும் விஷயத்தில் இத்தகைய சாதுரியமான வழிமுறையைக் கையாண்டதையும், மிகவும் கடுமையாய்க் கண்டிக்காததிலுள்ள நமது கர்த்தரின் பெருந்தன்மையையும் நாம் கண்டு வியக்கின்றோம். இந்த மாபெரும் மாதிரியானவரிடமிருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்வோமாக! நமது கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து நாம் கற்கத்தக்கதாக, வேறு பாடங்கள் உள்ளனவா? கர்த்தருக்காக உளங்கனிந்த,

ஆழமான, உண்மையான அன்புகொண்டிருக்கின்றோமா அல்லது இல்லையா? அல்லது நமது அன்பு பொதுவான ஓர் அன்பாகவும், பாசமாகவும் மாத்திரம் காணப்படுகின்றதா? என்று நாம் ஒவ்வொருவரும் நம்நம் சொந்த இருதயங்களிடத்தில் கேட்டுக்கொள்வது நலமாய் இருக்குமல்லவா? இந்தக் கேள்விகளுக்கு நாம் உறுதியாய்ப் பதில் கூறமுடிகிறவர்களாகவும் மற்றும் நிலங்கள் அல்லது வீடுகள், படவுகள் அல்லது வலைகள், பெற்றோர்கள் அல்லது பிள்ளைகள், கணவன் அல்லது மனைவி அல்லது நம்மைக்காட்டிலும், நாம் அவரையே அதிகமாய் அன்புகூருகின்றோம் என்று அவருக்கு உறுதியளிக்கமுடிகிறவர்களாகவும் இருப்பதற்கு உதவுகிற ஆண்டவருடனான அத்தகையதோர் தனிப்பட்ட ஐக்கியத்தினைப் பேணி வளர்த்திட நாம் நாடிட வேண்டும். நமது பரம மணவாளன், நாம் அன்புகூருவதற்குப் பாத்திரமாய்க் காணப்படுவதினால் மற்றும் இத்தகைய அன்பினை நாம் அவரிடத்தில் கொண்டிருக்க முடியவில்லையெனில், நாம் இராஜ்யத்திற்குப் பாத்திரவான்களாய் இருப்பதில்லை, மணவாட்டியின் அங்கத்தினர்களாகுவதற்கு, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகுவதற்கு நாம் பாத்திரவான்களாய் இருப்பதில்லை. கர்த்தருக்கான நம்முடைய அன்பின் அளவு தொடர்புடைய விஷயத்தில், அதை நாம் எப்படி அறிந்துகொள்ளலாம், எப்படி நம்முடைய சொந்த இருதயத்தினை இது தொடர்புடைய விஷயத்தில் பரிசோதித்திடலாம்? சோதனைகள், பிரச்சனைகள், எதிர்ப்புகள் முதலானவைகள் நம்மை மேலோங்க அனுமதிப்பதின் மூலமேயல்லாமல், வேறு எப்படிக் கர்த்தர் நம்மைப் பரீட்சித்துப்பார்ப்பார். நமது கர்த்தர் தம்மை அப்போஸ்தலர்களிடமிருந்து மூன்று வாரங்கள் மறைத்துக்கொண்டதுபோன்று, எனினும் அவர்கள் சமீபமாய்க் காணப்பட்டு, அவர்களைக் கவனித்துக்கொண்டிருந்து, தேவையான பாடங்களைப் புகட்டிடுவதற்கான மிகுந்த சாதகமான தருணத்தினைப் பயன்படுத்திடுவதற்கு ஆயத்தமாய்க் காணப்பட்டதுபோன்று - தேவையான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் நமக்குக் கொடுக்கத்தக்கதாக, நம்முடைய நலனுக்கடுத்த தேவைகளை அவர் கவனிக்கிறார் என்று நாம் உறுதியடையலாம்; ஒருவேளை சிலசமயங்களில், அவர் தமது முகத்தினைக் கடுமையான சூழ்நிலைகளுக்குப் பின்பாக மறைத்து வைத்திருக்கிறாரெனில், அது சிங்காசனத்தின் ஒரு ஸ்தானத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தும் விஷயத்தில் நமக்கு உதவியாயிருக்கும் சில விலையேறப்பெற்றப் படிப்பினைகளை நாம் கற்றுக்கொள்வதற்கு நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும், நம்மைப் பலப்படுத்த, ஆசீர்வதிக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தின் காரணத்தினாலேயே ஆகும். ஆகையால் உபத்திரவங்கள் என்ன உண்டுபண்ணுகின்றது என்று அறிந்து, உபத்திரவத்தில் களிகூருவோமாக மற்றும் அம்மாதிரியான உபத்திரவத்தில், நான் கர்த்தரைப் பிரதானமாய் அன்புகூருகின்றேன் என்பதை நான் எப்படிக் காண்பிக்கின்றேன்? என்று நாம் நம்மிடமே கேள்விக் கேட்டுக்கொள்வோமாக.

பேதுரு தன்னுடைய அன்பினை அறிக்கைப்பண்ணினதால், அவர் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்த்து, ஆடுகளை மேய்த்து, பேணிவளர்த்திட வேண்டும் என்று நமது கர்த்தர் கூறினதுபோலவே, அவரது பின்னடியார்கள் யாவரிடமும் அவர் கூறுகின்றார். கர்த்தருடைய பிரியமான மந்தை தொடர்புடைய விஷயத்தில், நம்மால் அப்போஸ்தலருக்குரிய கனமிக்க ஸ்தானத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் கூறவில்லை, மாறாக நாம் ஒவ்வொருவருமே தேவனுடைய மந்தையினை மேய்ப்பதற்கு/பராமரிப்பதற்கு மற்றும் உதவுவதற்கு, போஷிப்பிப்பதற்கு வாய்ப்புகளைக் கண்டடையலாம், அதிலும் விசேஷமாகக் கர்த்தருடைய ஏற்பாட்டின்பேரில் சபையில் மூப்பர்களாக ஏற்படுத்தப்பட்டுள்ள யாவரும் கண்டடையலாம் என்று அவர் கூறினார்; ஆகையால்தான் பரிசுத்த ஆவியால் மேற்பார்வையாளர்களாக, கண்காணிகளாக, மேய்ப்பர்களாக வைக்கப்பட்டவர்கள், தேவனுடைய மந்தையை மேய்க்கும்படிக்கு அப்போஸ்தலனாகிய பவுல், எபேசு பட்டணத்தின் மூப்பர்களிடம் கூறினார் (அப்போஸ்தலர் 20:28). எனினும் ஒவ்வொருவனும் தன் விஷயத்தில், பூலோகக் கடமைகள் விஷயத்தில் எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடிட வேண்டும்; ஒவ்வொரு உடன் மேய்ப்பனும், தன்னுடைய சொந்த ஆவிக்குரிய போஷிப்பு மற்றும் புத்துணர்வு அடைதல் விஷயத்தில் கவனம் செலுத்துவது அவசியமானதாகவும் மற்றும் ஏற்றதாகவும் காணப்படுகின்றது; எனினும் மந்தை தொடர்பாக ஆண்டவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதான பணியானது நம் இருதயங்களில் முதன்மையான இடத்தைப் பெற்றிருப்பதும் மற்றும் கர்த்தருடைய நாமத்தில் அவருடைய பின்னடியார்களைப் போஷிப்பது, மேய்ப்பது மற்றும் முடிந்தமட்டும் ஆண்டவருடைய சுயத்தை வெறுத்தலின், சுயத்தைப் பலிச்செலுத்துதலின் ஆவியில், அன்பின் ஊழியத்தில், அவர் செய்ததுபோன்று, ஆடுகளுக்காக நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பது மாபெரும் சிலாக்கியமென நாம் சரியாய் மதிப்பதும் மிகவும் முக்கியமான காரியமாகும். ஆடுகள் மீது கவனமற்ற ஒருவர், எந்த விதத்திலும் மூப்பராகவோ, வழிநடத்துபவராகவோ அங்கீகரிக்கப்படக்கூடாது மற்றும் சுயநலமான அல்லது உலகப்பிரகாரமான காரணங்களுக்காக இல்லாமல், மாறாக மாபெரும் மேய்ப்பனுக்கடுத்த நோக்கங்களிடத்திலும், மந்தையினிடத்திலுமுள்ள அன்புடன்கூடிய பக்திவைராக்கியம் மற்றும் அர்ப்பணிப்பிற்குச் சான்று பகிர்ந்துள்ள காரணத்திற்காகவே, ஒருவர் அவரது சகோதர சகோதரிகளால் மதிக்கப்பட வேண்டும் மற்றும் ஊழியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சபையில் மூப்பருக்கான, உடன் மேய்ப்பனுக்கான முதன்மையான தகுதி, கர்த்தருக்காகக் கொண்டிருக்கும் அன்பாகத்தான் கண்டிப்பாய் இருத்தல் வேண்டும். கிரியை புரிவதற்கு முக்கிய தூண்டுதலாயுள்ள மாபெரும் மேய்ப்பனுக்கான அன்பைத் தவிர மற்றப்படியுள்ள பேச்சுத்திறமை யாவும் மற்றும்

பக்திவைராக்கியம் யாவும் மந்தையினுடைய நலனுக்கடுத்த விஷயங்களுக்கு இடையூறாகவும், பாதகமாகவுமே காணப்படும். யார் கர்த்தருக்காக அன்புகொண்டிருக்கின்றார்கள் என்றும், அதன் அளவு என்ன என்றும் நாம் எப்படி அறிந்துகொள்வது? நாம் காண்கின்ற சகோதர சகோதரிகளை அன்புகூரவில்லையெனில், காணமுடியாத தேவனை அன்புகூருவதாக நாம் கூறிக்கொள்ளும் விஷயத்தில் நாம் நம்மையே வஞ்சிக்கின்றவர்களாய் இருப்போம் என்று அப்போஸ்தலன் மூலமாக நமது கர்த்தர் நமக்குக் கூறுகின்றார். ஆகையால் கர்த்தருக்கான அன்பானது, அதனை சகோதர சகோதரிகளுக்கான அன்பில் வெளிப்படுத்திடுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது மற்றும் பிரியமான மந்தைக்காக மிகுந்த அன்பினையும், பரிவையும், பரந்த மனப்பான்மையையும், பொறுமையையும், சாந்தத்தையும், சகோதர சிநேகத்தையும் வெளிப்படுத்துகிறவர்கள் மாத்திரமே உண்மையுள்ள மேய்ப்பர்களென அல்லது மூப்பராயிருப்பதற்குத் தகுதியானவர்களெனக் கருதப்பட வேண்டும். சுயத்திற்கான நாட்டம்கொண்டவர்களையும், பேராசைக்கொண்டவர்களையும் குறித்து அச்சம் கொள்ளப்பட வேண்டும் மற்றும் இத்தகையவர்கள் ஊக்குவிக்கப்படக்கூடாது.

## இவன் காரியம் என்ன?

நமது கர்த்தர் அப்போஸ்தலனாகிய பேதுருவிடம் கேள்வி கேட்டதைத் தொடர்ந்து, பேதுரு வயதான மனுஷனாகும் வரை ஜீவிப்பார் என்றும், வயதாகும்போது பேதுரு தன் இஷ்டபடி செய்ய முடியாமல் இருப்பார் என்றும், அவரைக் குறித்துத் தீர்க்கத்தரிசனம் ஒன்றினைக் கூறினார். இது பேதுருவின் எதிர்க்காலம் மிகவும் பிரகாசமானதாக இருக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டது; இது அவரது உண்மை குறித்துள்ள இன்னும் அதிகமான பரீட்சையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருந்தது. அப்போஸ்தலன் சோர்ந்துபோய்விடவில்லை என்றும், அவர் மரணம்வரை உண்மையுள்ளவராய் இருந்தார் என்றும் நாம் அறிந்து மகிழ்கின்றோம். இந்தத் தீர்க்கத்தரிசனமானது - பேதுருவுக்கும், அங்குக் காணப்பட்டதான மற்ற அப்போஸ்தலர்களுக்கும், தாங்கள் புதிதாக ஈடுபடப்போகின்றதான பணியில், தாங்கள் இராஜ்யத்தின் கனங்களையும், ஆசீர்வாதங்களையும் எதிர்ப்பார்க்கக்கூடாது என்றும், 'ஊழியக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல எனவும், மனுஷர்கள் எஜமானை நிந்தித்ததையே தவிர மற்றப்படி, வேறு எதையும் ஊழியக்காரன் எதிர்ப்பார்க்கக்கூடாது எனவும்' முன்னொரு தருணத்தில் கர்த்தர் உரைத்திட்டவைகளையே தாங்கள் நினைவுகூர வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினதாய் இருந்தது. இந்தத் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்கள், தங்கள் மீது வைக்கப்பட்டதான பல்வேறு பரீட்சைகளையும்,

நிபந்தனைகளையும் எத்துணைக் கம்பீரமாய் எதிர்க்கொண்டவர்களானார்கள்! இது தொடர்புடைய விஷயத்தில் நமக்கும் ஒரு படிப்பினை உள்ளது, அதாவது நம் ஆண்டவருக்கு நாம் கொண்டிருக்கும் உண்மை என்பது ஏதோ ஒருவகையான உபத்திரவங்களை நமக்குக் கொண்டு வரும் என்பதேயாகும். ஆகையால் நாம் நமது சொந்த சித்தங்களை அல்லது நம் சொந்த வழிகளை நாடாமல், மாறாக நம்முடைய நலனுக்கடுத்த விஷயங்களில் கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலுக்காக எதிர்ப்பார்த்திட வேண்டும் மற்றும் அதையே ஏற்றுக்கொண்டிட வேண்டும் மற்றும் இதற்கே, அதாவது புதுச்சிருஷ்டிகளென நம்முடைய நன்மைக்கு ஏதுவாய்ச் சகலத்தையும் அவர் மாற்ற வல்லவர் என்பதை அறிந்து, இதற்கே முன்னுரிமை கொடுத்திட வேண்டும். பேதுரு கொடுமையானதொரு மரணம் அடைவார் என்று நமது கர்த்தருடைய வார்த்தைகள் குறிப்பதாகவும், இறுதியில் "என்னைப் பின்பற்றிவா," என் மாதிரியினைக் கவனித்து, அதைப் பின்பற்றிவா என்று இயேசு கூறினதாகவும் யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார்.

உரையாடல் தன்னைப் பற்றியே அதிகமாய்க் காணப்படுகின்றது என்று பேதுரு உணர்ந்துகொண்டார் மற்றும் கொஞ்சம் உரையாடலை மாற்றிட நாடினவராக, கர்த்தருடைய அபிமான சீஷன் என்று தான் அறிந்திருந்த யோவானைக்குறித்து, "ஆண்டவரே, இவன் காரியம் என்ன?" யோவானைக் குறித்த உம்முடைய தீர்க்கத்தரிசனமென்ன மற்றும் அவர் விஷயத்தில் உம்முடைய ஏற்பாடென்ன? என்ற விதத்தில் கேட்டார். நமது கர்த்தருடைய பதிலானது கிட்டத்தட்டச் சுருக்கென்றும், வெடுக்கென்றும் காணப்பட்டது; "உன் சொந்தக் காரியத்தினைப் பார்; நீ செய்ய வேண்டியது அநேகம் உள்ளது" என்று சொல்வதற்குச் சமமாக, ஆனால் மிகுந்த மரியாதையான விதத்தில் காணப்பட்டது. அதற்கு இயேசு கூறினதாவது: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால்...

## உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா

இது கர்த்தருடைய பின்னடியார்கள் கற்றுக்கொள்வதற்கு இருப்பதிலேயே கடினமான பாடமாகவும், அதே சமயம் மிகவும் முக்கியமான பாடமாகவும் காணப்படுகின்றது. நாம் சுற்றிப்பார்க்கவும், நமக்குத் கர்த்தரால் அனுமதிக்கப்படுகின்றதான அதே அளவிலான சிட்சைகள் அல்லது சோதனைகள் அல்லது பிரச்சனைகள் அல்லது பாரங்கள் ஏன் சகசீஷன் ஒருவருக்கு அனுமதிக்கப்படவில்லை என்று சிந்திக்கவும் முற்படுவோமானால் மற்றும் கர்த்தர் குறித்தும், அவரது ஞானம் குறித்தும், அவரது செய்கைகள் குறித்துமுள்ள விஷயத்தில் நியாயந்தீர்க்கிறவர்களாகுவதற்கு நாம் நம்மை அனுமதிப்போமானால்,

விளைவு நமக்கே பாதகமாய்க் காணப்படும். இது நம்முடைய சமாதானத்தை அழித்துப்போடும் மற்றும் நம்முடைய விசுவாசத்தினை வலுவற்றதாக்கிவிடும் மற்றும் இராஜ்யத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திடுவதற்கு அவசியமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்குத் தடையாகக் காணப்படும். தெய்வீக வழிநடத்துதல்கள்/செய்கைகள் குறித்து இத்தகைய விமர்சனங்கள்/குறைக் கூறுதல்கள் நம்முடைய மனங்களில் தோன்றுமானால், பேதுருவிடத்தில் நமது கர்த்தர் கூறின பதிலைப்போலவே நாமும் நம்மிடம், "உனக்கென்ன, நீ பின்பற்றிவா. இந்தக் காரியங்களை எல்லாம் ஒழுங்குப்படுத்துவதற்கு நீ திராணியற்றவன்; இன்னும் ஆண்டவர் தமது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் அனைத்தையுமே உனக்கு விவரித்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை, அது தகுதியாயும் இராது. விசுவாசத்தையும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தலையும் மற்றும் நம்பிக்கையையும் கற்றுக்கொள்வது உனக்கு நலமானதாய் இருக்கும்" என்று உடனடியாகக் கூறிட வேண்டும். நம்மில் எந்த இரண்டுபேரும் ஒரே மாம்ச சுபாவத்தினைக் கொண்டிருப்பவர்கள் அல்ல, ஆகையால் கர்த்தருடைய கரத்தினின்று ஒரே மாதிரியான பயிற்சியினை அவசியமாய்ப் பெற்றிருப்பவர்களாக எந்த இரண்டு பேரும் காணப்படுவதில்லை. நாம் அவரது ஞானம் மற்றும் அன்பின் மீது நம்பிக்கைக் கொண்டிருக்கின்றோம்; நமக்கான சோதனைகள் அதிகமாய் இருக்குமானால், அதற்கேற்ப நம்முடைய ஆசீர்வாதங்களும் அதிகமாய் இருக்கும் என்றும், "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்று கர்த்தர் பவுல் அடிகளாரிடம் கூறினதுபோன்று, நம் ஒவ்வொருவரிடமும் கூறுவார் என்றும் உணர்ந்து, நமது நம்பிக்கையினை வெளிப்படுத்திடுவோமாக (2 கொரிந்தியர் 12:9). ஆகையால் நமது சோதனைகளுக்கேற்ப கர்த்தருடைய கிருபை காணப்படுமானால், நாம் அவரது கிருபையினை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அவர் அனுப்பிடும் சோதனைகள் யாவற்றையும் களிகூர்ந்து ஏற்றுக்கொள்வோமாக! என்று அப்போஸ்தலனோடுகூட நாமும் கூறிடுவோமாக. மேய்ப்பனை அறிந்துகொள்வதும், அவரைப் பின்பற்றுவதும், முடிந்தமட்டும் தன் பாதங்களுக்கு வழியினைச் செம்மையாக்கிக்கொள்வதும், மந்தை மற்றும் அதன் தேவைகள் விஷயத்திலுள்ள பொதுவான கண்காணிப்பினை மேய்ப்பனிடத்தில் விட்டுவிடுவதும், மேய்க்கும் வேலையிலும் மற்றும் கர்த்தருடைய நாமத்தில் அவரது பிரியமான மந்தைக்கு ஆலோசனை வழங்குவதிலும் அல்லது உதவிபுரியும் விஷயத்திலும் உதவி செய்யத்தக்கதான வாய்ப்புகளைச் சகோதர சகோதரிகள் வாயிலாகக் கர்த்தர் அருளும் அளவுக்கு ஏற்ப, அவைகளில் கவனம் செலுத்திடுவதும் ஒவ்வொரு ஆட்டிற்கடுத்தக் காரியமாய் இருக்கின்றது.

# ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

*"சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும். நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்." (கலாத்தியர் 5:13-15)*

கர்த்தருடைய ஆவி எங்கேயோ, அங்கே சுயாதீனம் காணப்படும். இது உலகத்தின் சரித்திரத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் விளங்கியுள்ளது. யூதர்களானவர்கள் நியாயப்பிரமாணத்தினுடைய அறிவுரையைப் பெற்றிருந்ததினாலும், அதன் ஆவியையும் ஓரளவுக்குப் பெற்றிருந்ததினாலும், பல நூற்றாண்டுகள் காலமாக, அவர்கள் ஜெயிக்க முடியாத ஜனங்களாக அறியப்பட்டிருந்தார்கள். அதாவது அவர்கள் அவ்வப்போது சிறைப்பிடிக்கப்பட்டனர், எனினும் சுயாதீனத்தின் ஆவியினால் அவர்கள் மிகவும் ஆட்கொள்ளப்பட்டவர்களாய் இருந்ததினால், அவர்கள் தங்களைச் சிறைப்படுத்தினவர்களுக்கும் மற்றும் பெரிய அண்டை நாடுகளுக்கும் எப்போதும் பிரச்சனைப்பண்ணுபவர்களாகவே இருந்து வந்தனர்.

இதைப் போலவே, ஆனாலும் அதிகமான அளவில், கிறிஸ்தவத்தின் விஷயத்திலும் இருந்துள்ளது; எங்கெல்லாம் தேவனுடைய வார்த்தைக் கடந்து சென்றுள்ளதோ, அதற்கேற்ப சுயாதீனத்தின் மீதான விருப்பத்திற்குரிய தூண்டப்படுதலே விளைவாக இருந்துமுள்ளது. "இருண்ட யுகங்களில்" தேவனுடைய வார்த்தையானது "இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கும் போதும்" மற்றும் இதன் இடத்தில் தவறான போதனைகள் இடம்பெற்றபோதும், சுயாதீனத்தின் ஆவியானது தூங்கிகொண்டிருந்தது மற்றும் உலகத்திலும் ஓரளவுக்குச் சமாதானமும், ஜனங்கள் பொதுவான அடிமை நிலைக்குள்ளாகக் காணப்படும் காரியமும் நிலவினது. சீர்த்திருத்த இயக்கம் வந்த மாத்திரத்தில் சுயாதீனத்திற்கான விருப்பம் மறுபடியுமாக மலர்ந்தது. இதற்குரிய சமீபக்காலத்து உதாரணம் ரஷ்யாவில் பார்க்கப்படலாம்.

கிறிஸ்துவும், அவரது அப்போஸ்தலர்களும் யுத்தத்தையும், அதிருப்தியையும் மற்றும் சண்டைகளையும் கற்பித்துக்கொடுத்ததாகவோ - மோசேயும், நியாயப்பிரமாணமும் இவற்றைக் கற்பித்துக்கொடுத்ததாகவோ நாம் சொல்லவரவில்லை. மாறாக அன்பு, சமாதானம், சகோதர சிநேகம், தயவு, பொறுமை, சாந்தம் முதலானவைகளே நமது கர்த்தர் மற்றும் அவரது ஊழியக்காரர்களுடைய போதனைகளாக இருந்தது. தேவவார்த்தையினின்று புறப்படும் தாக்கமானது இருவகைப்படும். சிலர் பிரகாசிப்பித்தல் மற்றும் சுயாதீனம்

ஆகியவற்றோடுகூடத் தெய்வீக அறிவுரைகளையும் பெற்றுக்கொண்டவர்களாக, ஆவியின் கனிகளைப் பேணி வளர்த்து உருவாக்கிட நாடுகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்; வேறு சிலர் அறிவின் வாயிலாகச் சுயாதீனத்தின் ஆவியினைப் பெற்றுக்கொண்டாலும், சத்தியத்தின் ஆவியினைப் பெற்றுக்கொள்ளாதவர்களாகக் காணப்பட்டு, அறிவினை விழுந்துபோன சுபாவத்தினுடைய சுயநலப்போக்குடன் இணைத்துக்கொண்டவர்களாகி, தங்கள் அறிவுத்திறனுடைய பெருக்கத்தின் காரணமாக மிகவும் அதிருப்திக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

## சபையின் மீதான சத்தியத்தின் தாக்கம்

உலகத்தின் உண்மையான ஒரு முக்கியப் பாகமாகவும், மேலும் திவ்விய வார்த்தை மற்றும் திட்டம் குறித்த குறைவான அறிவு பெற்றும் மற்றும் திவ்விய அறிவுரைகளுக்குச் செவிச் சாய்ப்பதற்குரிய குறைவான பிரயாசங்களுடன் பூசிமெழுகுகின்றதாகவும் காணப்படும் - பெயர்ச்சபை என்ற ஒன்றும் உள்ளது; ஆனால் பாவத்திலிருந்து திரும்பி, சிந்தையிலும் வார்த்தையிலும் மற்றும் கிரியையிலுமுள்ள முழுமையான அர்ப்பணிப்புடன் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களை மாத்திரமே மெய்ச்சபையானது உள்ளடக்கிப் பெற்றுள்ளது. இத்தகையவர்களிடத்தில் சத்தியமானது எத்தகைய தாக்கத்தினைக் கொண்டிருக்கின்றது? இந்தப் "புதுச்சிருஷ்டிகளும்கூடத்" தாங்கள் பெற்றுக் கொண்டுள்ளதான அறிவும் மற்றும் அந்த அறிவின் வாயிலாக வரும் சுயாதீனத்தின் ஆவியும், தங்கள் மாம்சத்தின் மீது ஒருவகையான தாக்கத்தினையும் மற்றும் தங்கள் சித்தங்கள், தங்கள் இருதயங்கள் மீது இன்னொரு வகையான தாக்கத்தினையும் கொண்டிருப்பதைக் காண்கின்றார்கள். இவர்கள் தங்கள் இருதயங்களில் - தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்வதற்கும், யாவரோடும் சமாதானமாய்க் காணப்படுவதற்கும், கிறிஸ்துவினுடைய ஆவியின் கிருபைகளையும், கனிகளையும் பேணிவளர்த்து உருவாக்கிடுவதற்கும் மற்றும் கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள சகஅங்கத்தினர்களிடம் அன்பாயும், கனிவாயும் நடந்து கொள்வதற்கும் மாத்திரமல்லாமல், உலகத்தாரிடமும் கனிவாய் நடந்து கொள்வதற்கும் விரும்புகின்றனர். ஆனாலும் தங்கள் சொந்த மாம்சத்துடன் போராடும் விஷயத்திலும் மற்றும் வார்த்தையிலும், கிரியையிலும், மாம்சத்தின்மீது புதிய மனமானது ஆதிக்கம் பண்ணிடுவதற்கு அனுமதிக்கும் விஷயத்திலும் அவர்களில் சிலர் அதிகமாயும், சிலர் குறைவாயும் சிரமத்திற்குள்ளாகுகின்றனர்.

"நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால்" எனும் நமது ஆதார வசனத்தினுடைய வார்த்தைகளின் அர்த்தத்தினை எந்தக் கிறிஸ்தவன் அனுபவத்தின் வாயிலாக அறியாமல் இருப்பான்? ஒருவேளை மாம்சத்தினுடைய

பெலவீனம் மற்றும் ஒருதலையான விருப்பு வெறுப்புகளினின்று விலக்கி, பிரித்துவைத்து, ஒருவேளை தேவஜனங்களின் இருதயங்களிடம், அவர்களது சித்தங்களிடம், அவர்களது நோக்கங்களிடம், விசாரிக்கப்பட்டால்/கேட்டுக்கொள்ளப்பட்டால், அவர்கள் ஒவ்வொருவருமே தனது சகோதர சகோதரிகளுடன் சமாதானமாய் வாழ்வதற்கும், தனது சாந்தத்தின், அமைதலான பண்புகளின், தனது கனிவின், சகோதர சிநேகத்தின் வாயிலாக தேவனை மகிமைப்படுத்திடுவதற்கும், உரிய தனது விருப்பத்தின் விஷயத்தில் பூரணமாய் இணங்குபவர்களாய் இருப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் இப்படியாக முடியாது, ஏனெனில் சுயநலத்தினால் வருந்தத்தக்க விதத்தில் உருச்சிதைக்கப்பட்டு, திரிந்த நிலையில் காணப்படுகின்றதான பழைய சரீரத்தில் புதிய சித்தத்தினைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் புதிய சித்தமானது, மாம்சத்திற்கு எதிராக "நல்லதொரு போராட்டம் போராடிட வேண்டும்" மற்றும் நீதியானவைகளை, மேலானவைகளை, நலமானவைகளைச் செய்ய - இவைகளைக் குறைபாடுகளுடனே அடையப் பெற்றாலும் - இவைகளைச் செய்ய நாடிடவும் மற்றும் இவைகளை விரும்பிடும் அளவிற்காகிலும் நாம் ஜெயம் கொண்டிட வேண்டும்.

சத்தியமானது பெலவீனமானவர்களைவிட பலமான பாத்திரங்களையே பற்றிக்கொள்கின்றதாகத் தெரிகின்றது. ஜெயங்கொள்பவர்களாகிய "சிறுமந்தையினரில் அங்கத்தினர்களாய் இருப்பதற்குக் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படாத பலமில்லாதவர்கள் மற்றும் எளிதில் மிகவும் வளைந்து கொடுப்பவர்கள் அநேகரைக் காட்டிலும் இந்தப் பலமான பாத்திரங்கள் தங்களது மாம்சத்தில் மிகுதியான உறுதியையும், மனோதிடத்தையும், எதிர்த்துப்போராடும் தன்மையையும் பெற்றிருக்கின்றனர். இப்படியாகப் பார்க்கும்போது நம்மைக் கர்த்தர் ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக்கின அதே பண்பே மற்றும் ஜெயங்கொள்ளும் நிலைக்கு ஏதுவாக்கின அந்த ஒரே தகுதியே, வீரியமான பாத்திரங்கள் சபையாகக் கூடிடும்போது, சில விதங்களில் கவலைக்கிடமாய் அனுகூலமற்றதாகக் காணப்படுகின்றது. சேற்றினால் சூழ்ந்திருக்கும் வைரத்தினால் எதையும் வெட்டமுடியாது, எதையும் கீறிட முடியாது; ஆனால் திரளான வைரங்களை ஒன்றாய் வைத்துப் பாருங்கள், சேறு அதிகமாய் அப்புறப்படுத்தப்படும்போது, கீறல்களும், உரசல்களும், வெட்டுதல்களும் அதிகமாய் ஏற்படுகின்றது. இப்படியாகவே கர்த்தருடைய சம்பத்தின் விஷயத்திலும் காணப்படுகின்றது - அவர்கள் அதிகமாய் ஒன்றுகூடுகையில், அவர்கள் அதிகமாய் விழிப்படைகின்றார்கள்; பிணக்குகளுக்கும் அதிகம் வாய்ப்புக் காணப்படும் மற்றும் வழவழப்பாகவும், பிசுபிசுப்பாகவும், உராய்வைத் தடுக்கிறதாகவும் உள்ள எண்ணெய் போன்றதான பரிசுத்த ஆவியினால் அவர்கள் அனைவருமே முழுமையாய் நிரம்பப் பெற்றிருப்பதற்கும், மூடப்படுவதற்கும் மிகுந்த அவசியம் காணப்படுகின்றது.

## சோதனைகள் அதிகரிக்கும்

ஒரு விதத்தில் பார்க்கையில், கர்த்தருடைய ஜனங்கள் கிருபையிலும், அறிவிலும் மற்றும் ஆவியின் கனிகளிலும், வரங்களிலும் வளர்கையில், சபையில் பிணக்குகள் ஏற்படுவதற்கான அபாயம் குறைவானதாகவே இருக்க வேண்டும் என்று நாம் காண்கின்றோம்; ஆனால் இன்னொரு விதத்தில் கரடுமுரடானவைகளைக் காட்டிலும், மெருகிடப்பட்டுள்ளதான வைரங்களே அதிகமான உரசலை ஏற்படுத்தும் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. சத்தியத்திலுள்ள நமது ஆரம்பக்காலக்கட்ட அனுபவங்களின்போது, நாம் கொஞ்சம் குழந்தைகளைப் போலவே காணப்பட்டிருந்தோம் - நாம் கற்றுக்கொண்டு வருகின்றதான பாடங்கள் தொடர்புடைய விஷயத்தில் ஒருவரோடொருவர் சண்டையிடுவதற்கும், வாக்குவாதம் பண்ணுவதற்கும் நமக்கு அதிகம் தெரியாமல் இருந்தது. ஒவ்வொருவரும் அறிவிலும், சத்தியத்தின் புரிந்துகொள்ளுதலிலும் வளரும்போது, இதுபோலவே சத்தியத்தின் ஆவியிலும் வளர வேண்டும்; இல்லையேல் ஒருவர் அறிவின் விஷயத்தில் வளர்ந்திருப்பது என்பது, அவர் அறிவின் விஷயத்தில் குழந்தையாய்க் காணப்பட்டபோது இருந்ததைக்காட்டிலும் இப்போதே தனது அருமையான சகோதர சகோதரிகளுக்கு மிக அதிகமான விதத்தில் சோதனையாய் அமைவதைக் குறிக்கின்றதாயிருக்கும்.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கையில், நம்முடைய நாட்களில் வெளிப்படும் ஒவ்வொரு சத்தியத்தினுடைய, விசேஷமாக தேவ வார்த்தையினுடைய வெளிச்சத்தில், வருடாவருடம் பிணக்குகள் அதிகம் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது என்றும், 1906-வருடத்திற்கான "சகோதரரே நீடிய பொறுமையாயிருங்கள்" (யாக்கோபு 5:7) என்ற வசனத்தினை நாம் நினைவில்கொள்வதற்கு மிகுந்த அவசியத்தினைப் பெற்றிருக்கின்றோம் என்றும் அறிந்துகொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவ்வசனத்தினுடைய முந்தின பாகமானது - இவ்வார்த்தைகள், விசேஷமாய் யுகத்தினுடைய முடிவு காலத்திற்குப் பொருத்திடுவதற்கான நோக்கத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு உபத்திரவத்தின் காலமானது, அதாவது ஐசுவரியவான்களுக்கும், தரித்திரருக்கும் இடையில் விழுந்துபோன சுபாவத்தினுடைய சுயநலம் மற்றும் அறிவு பெருக்கத்தின் அடிப்படையில் வரவிருக்கின்றதான போராட்டமானது, துல்லியமாய் விவரிக்கப்பட்டுள்ளது. பின்னர் "சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்; இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்" என்ற புத்திமதி கடந்துவருகின்றது (யாக்கோபு 5:9, 7).

நாம் பார்த்துவருகிற பாடமும், நாம் ஆராய்ந்துவருகின்றதான

இவ்வசனத்திற்கு முழு இசைவாகவே காணப்படுகின்றது. நமக்குப் பொறுமை அவசியமாய் இருக்கின்றது; முக்கியமாய் நம்மைப் போலவே இடுக்கமான வழியில் நடப்பதற்கும், இராஜ்யத்தில் நமது கர்த்தருடன் உடன் சுதந்தரத்தை அடைவதற்கும் நாடுகிறவர்களுக்கு எதிராக எவ்வகையான விரோதங்களையோ அல்லது கடுமையான உணர்வுகளையோ நாம் கொண்டிருப்பது, நமக்குத் தகுதியாய் இராது என்பதை நாம் நினைவில் கொள்வது அவசியமாய் உள்ளது. மற்றவர்களுடைய நலனுக்காக நாம் நமது சொந்த உரிமைகள், சுயாதீனங்கள் மற்றும் சிலாக்கியங்கள் சிலவற்றினைத் தியாகம் பண்ணிட விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இது சத்தியம் தவறாய்ப் பேசப்படும்போது, அதற்காக பேசிடுவதற்கு நாம் உரிமையினையும், வாய்ப்பினையும் கொண்டிருக்கும்போது, நாம் அமைதலாய் இருந்து, அதைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படவில்லை. சத்தியத்திற்கு ஆதரவாய், தப்பறைக்கு எதிராய் நாம் கருத்தூன்றி போராடிட வேண்டும், ஆனால் நாம் சகோதர சகோதரிகளுக்கு எதிராகப் போராடிடக் கூடாது. கர்த்தர் அப்போஸ்தலர்கள் வாயிலாக நமக்குக் கொடுத்திட்டதான நமது கிறிஸ்தவ விசுவாசத்தினுடைய அஸ்திபாரமாகிய ஈடுபலியினை மறுதலிக்கிறவர் யாரேனும் காணப்படும் பட்சத்தில், இத்தகையவரிடத்தில் எவ்வகையான ஐக்கியமும் நாம் வைத்திருப்பது தொடர்புடைய விஷயத்தில், எத்தனை உறுதியாய்க் காணப்பட வேண்டும் என்பதில் எந்த ஐயமும் நாம் அடைய வேண்டியதில்லை (1 கொரிந்தியர் 5:11). ஆனால் சத்தியத்தின் கொள்கை உட்படாத நிலையில் சகோதர சகோதரிகளின் மத்தியில் பிணக்குகள்/உராய்வுகள் ஏற்படக்கூடிய பல்லாயிரம் விஷயங்கள் காணப்படும்; மற்றும் இவைகளை ஒற்றுமை, சமாதானம் மற்றும் ஐக்கியத்தின் நலன் கருதி, விட்டுவிட விருப்பமும், மகிழ்ச்சியும் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். எனினும் இது சரியான தருணங்களில், சத்தியம் பற்றின நம்முடைய புரிந்துகொள்ளுதல்களை நாம் முன்வைத்திடக்கூடாது என்பதைக் குறிக்கின்றதாய் இராது; மாறாக காரியங்களை நாம் பார்க்க முடிகின்றதுபோல, பார்க்க முடியாதவர்களிடத்தில் நாம் முன்வைக்கும் காரியங்களை வற்புறுத்தவோ, திணிக்கவோ வேண்டாம்.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தில் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலும்கூடச் சிலர் மற்றவர்களுடைய முரட்டுத்தன்மை மற்றும் அவதூறுகளினால் "கடிக்கப்பட்டு" காயமடைவதோடு மாத்திரமல்லாமல், பழிக்குப்பழி வாங்கும் மனப்பான்மை உண்டாகும் இம்மாதிரியான சூழ்நிலை ஏற்படும் என்றும், அது தேவபிள்ளைகளுக்குத் தகுதியாயிராததும், நாய்கள் சண்டையிடுவதற்குக் கிட்டத்தட்ட ஒத்திருக்கிறதுமான சண்டைச்சச்சரவாய்க் காணப்படும் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதாகத் தெரிகின்றது.

"நீங்கள் ஒருவரையொருவர் பட்சிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்"

என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். சுவிசேஷத்தின் மூலமாய் நம்முடையது என்று நாம் அறிந்திருப்பதான சுயாதீனம் பற்றின நம்முடைய புரிந்துகொள்ளுதலில், நாம் சிறியதும், பெரியதுமான நம்முடைய சுயாதீனங்களுக்காக நாம் மிகவும் போராடுகிறவர்களாய் இருந்து, இதனால் கிறிஸ்து மரித்துள்ளதான ஏதோ ஒரு சகோதரனை நாம் பட்சித்துப்போடுவோமானால் என்னவாகும்! ஒருவரைக் காயப்படுத்துவதினால், நம்முடைய சொந்த ஆவிக்குரிய ஜீவியங்களை விஷமாக்கிப்போட்டு, நாமும் பட்சிக்கப்பட்டுப் போகுமளவுக்கு - கர்த்தர் நம்மை அழைத்துள்ளதும், ஓட்டத்தினை நாம் ஓடுவதற்குமான கிருபையான காரியங்கள் தொடர்புடைய விஷயங்களில் இழப்பிற்குள்ளாகுமளவுக்கு, சண்டையின் ஆவி நம்மிடத்தில் கிரியைப் பண்ணுமானால், என்னவாகும்! "நீங்கள் ஒருவரையொருவர் பட்சிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகள் நம்முடைய இருதயங்களில் ஒலித்துக்கொண்டிருப்பதாக.

இந்தச் சிந்தையினை நம்முடைய மனங்களில் கொண்டவர்களாக, நம்முடைய சொந்த மாம்ச பெலவீனங்களுக்கு எதிராக போராடுவதற்காகவும் மற்றும் உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனுக்கு எதிராக நல்லதொரு போராட்டம் போராடத்தக்கதாக மாதிரியினாலும், வார்த்தையினாலும் சகோதரருக்கு உதவி செய்து, அவர்களுக்காகப் போராடத்தக்கதாகவும் அதிகமதிகமாய்த் தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக் கொள்வோமாக.

---

R2951

# உதவிக்காரனாகிய ஸ்தேவான், கிறிஸ்தவ இரத்தசாட்சி

## அப்போஸ்தலர் 6:7-15

*"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்."*

**ஸ்**தேவான் இரண்டாம் கிறிஸ்தவ இரத்தச்சாட்சி என்று ஒப்புக் கொள்ளப்படலாம் - ஏனெனில் நிச்சயமாகவே நமது கர்த்தர் இயேசுவே முதலாவதாவார். இந்தப் பாத்திரமிக்கச் சிலுவையின் போர்வீரனுடைய சரித்திரத்தை அறிந்து கொள்வதற்காக, நம்முடைய பாடத்திற்கு ஆதாரமாய்த் தெரிந்துகொண்டுள்ள அதிகாரத்தினுடைய முதலாம் வசனம் துவங்கி நாம் பார்த்திட வேண்டும். சபையில் எழும்பின ஒரு நெருக்கடியின் காரணமாக, ஆவிக்குரியதல்லாத பல்வேறு காரியங்களைப் பார்த்துக்கொள்வதற்கு ஏழு உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் இந்த ஏழு பேரில் ஒருவராக

ஸ்தேவான் காணப்பட்டார் மற்றும் இந்த ஏழு பேரும் அப்போஸ்தலர்களினால் இல்லை, மாறாக சபையாரால் பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற மனுஷர்களென அடையாளம் கண்டு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தச் சம்பவமானது, ஆதிசபையினுடைய அமைப்பின் தளர்வான அம்சத்தினை நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அது - கர்த்தராகிய மீட்பரே சபையின் தலையானவராய் இருக்கின்றார் என்றும், இன்னுமாக அவரைத் தங்கள் இரட்சகரும், கர்த்தரும் என்று அங்கீகரித்து, அவருக்கு அர்ப்பணம்பண்ணி, அவரது ஆவியினைப் பெற்றுக்கொண்டு, அவரது நியமித்தலின்படியும், பரிசுத்த ஆவியினுடைய ஏற்படுத்தலின்படியும் விசேஷித்த விதமாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டதான அவரது அப்போஸ்தலர்கள், சபைக்கான அங்கீகரிக்கப்பட்ட போதகர்களாக இருக்கிறார்கள் என்று அடையாளம் கண்டுகொள்பவர்கள் மாத்திரமே அங்கத்தினர்களாக இருப்பார்களே ஒழிய, வேறு எவரும் இல்லை என்றும் உள்ளவைகள் தவிர - வேறு எந்த இருப்புக்கோல் சட்டங்களையும், பிரமாணங்களையும் பெற்றிருக்கவில்லை. இதுதவிர ஒவ்வொரு தருணத்திலும் எழும்பின தேவைகளுக்கு, வழிநடத்துதல் கிடைத்தது; சபையினுடைய ஏற்பாடுகள் அனைத்தின் விஷயத்திலும் மற்றும் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் மூலம் கர்த்தரை யுகம் முழுவதும் விசுவாசிக்கிறவர்களுடைய பிரயோஜனத்திற்காகவும், அப்போஸ்தலருடைய போதித்தலின் விஷயத்திலும் பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதல் இருந்தது என்று நாம் நம்பிக்கையுடன் எண்ணிடலாம்.

வேறொரு பாடத்தில் பொதுவுடைமைக் கொள்கையானது சபையில், ஆரம்பத்தில் ஓரளவுக்கு நிறுவப்பட்டது என்று பார்த்தோம்; ஆனால் இப்பாடத்தினுடைய சம்பவமானது, அக்கொள்கையானது வரையறைக்குட் பட்டிருந்தது என்றும், ஆஸ்திகள் முழுவதுமாக பங்கிடப்படவில்லை என்றும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. வாழ்வதற்குப் பிழைப்பு இல்லாமல் தங்கள் மத்தியில் காணப்படும் ஏழைகளின் காரியங்களைச் சந்திக்க வேண்டும் என்பது ஆதிசபையினுடைய நோக்கமாக இருந்தது என்பது உறுதியே. இப்படிச் சந்திக்கப்பட்டவர்களில் முக்கியமாய் வருமானம் இல்லாமல் காணப்பட்ட விதவைகளும் அடங்கினார்கள்; இத்தகையவர்கள் அக்காலங்களில் உதவியற்றவர்களாகவும், தருமங்களைச் சார்ந்திருப்பவர்களாகவும் காணப்பட்டனர்; ஏனெனில் ஸ்திரீகளுக்குப் பிழைப்பிற்காக வேலை செய்வதற்குரிய வாய்ப்புகள் வெகுகுறைவாகவே காணப்பட்டது.

எபிரெய ஸ்திரீகளைப்பார்க்கிலும், கிரேக்க ஸ்திரீகள் புறக்கணிக்கப் பட்டார்கள் அல்லது அவர்கள் விஷயத்தில் வேண்டுமென்றே ஏதோ பாரபட்சம் பார்க்கப்பட்டது என்று நாம் எண்ணிவிடக் கூடாது. வேண்டுமென்று செய்யப்படவில்லை என்பது தெளிவாய்த் தெரிகின்றது மற்றும் அப்போஸ்தலர்க ளாகிய அவ்வூரார், அந்நிய ஊர் விதவைகளின் தேவைகளைக் காட்டிலும் சொந்த ஊர் விதவைகளின் தேவைகளை மிகவும் கூர்மையாய் உணர்ந்திருந்தபடியாலே

இவ்விஷயம் எழும்பியிருக்கக்கூடும். இந்த ஸ்திரீகள் பாலஸ்தீனியாவில் பிறந்திருந்தாலும் அல்லது கிரேக்க நாட்டில் பிறந்திருந்தாலும், அவர்கள் யாவரும் யூத ஸ்திரீகளாகவே இருந்தனர். அக்காலக்கட்டம் வரையிலும் சுவிசேஷமானது மற்றவர்களுக்கு - புறஜாதிகளுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. முறையிடுதல் வந்ததற்கு ஏதோ சில நியாயமான காரணங்கள் இருந்தது என்பதில் ஐயமில்லை. எப்படி இருப்பினும் பிரச்சனையைச் சரிப்பண்ணுவதற்கென உடனடியாக நடவடிக்கை எடுத்ததில், தங்கள் நோக்கத்தின் நேர்மையினை அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தினார்கள். இதில் கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் பின்வரும் படிப்பினை உள்ளது, அதென்னவெனில்: 'ஆவிக்குரியதல்லாத காரியங்களின் அடிப்படையில் பிரச்சனைகள் எழும்பி "கசப்பின் வேரினை" முளைக்கப்பண்ண ஏதுவாயிருக்கிறது என்றால் அல்லது சபையில் பிரிவினை உண்டாக்குவதற்கு ஏதுவாயிருக்கிறது என்றால், முழுச்சபையாருடைய தோள்களின்மேல் பொறுப்பினை வைத்துவிடுவதும் - அக்காரியத்திற்கு அதிகம் கவனம் செலுத்த முடிகிறவர்களும், அனைவருக்கும் நியாயமாய்ச் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கின்றவர்களுமான சிலரைச் சபையாரிலிருந்து தேர்ந்தெடுப்பதற்குச் சபையாரிடம் கேட்டுக்கொள்வதும் முறையான நடவடிக்கையாக இருக்கும்.' மற்றச் சம்பவங்களிலும், இச்சம்பவத்திலும் கர்த்தரானவர் - ஒட்டு மொத்தச் சபையும் தம்முடைய மேற்பார்வை, தம்முடைய பராமரிப்பின் கீழ்க் காணப்படுகின்றனர் என்றும், இதன் காரணமாகச் சபையின் பொதுவான காரியங்களானது ஒரு தனி மனிதனாலோ, குருமார் வகுப்பினராலோ நடத்தப்படாமல், சபையாரால் நடத்தப்பட வேண்டும் என்றும் தெளிவாய்ச் சுட்டிக்காண்பித்துள்ளார்.

பணம் திரட்டுவதும், உணவு விநியோகிப்பதுமான பந்தி விசாரித்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் சிலர் கிரேக்க சகோதரருக்குப் பிரதிநிதிகளாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை; கிரேக்க சகோதரருக்குப் பிரதிநிதியானவர்கள், கிரேக்க வழக்கங்களின் அம்சங்களை அறிந்தவர்களாய் இருப்பதினால், இவர்கள் கிரேக்க விதவைகளுடைய நலனுக்கடுத்தவைகளை நன்கு பார்த்துக்கொள்ள முடிகிறவர்களாய் இருப்பார்கள். இங்குதான் உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவராகிய ஸ்தேவான் நமக்கு அறிமுகமாகுகின்றார். "Deacon" என்ற வார்த்தையானது, பணியாளர், வேலைக்காரர், உதவிக்காரர் எனும் அர்த்தத்தினைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. சபைக்கான "மூப்பர்கள்" என்பவர்கள் மிகவும் குறிப்பாக அவர்களது கிறிஸ்தவ குணலட்சணம் மற்றும் போதிப்பதற்கான திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், ஆனால் உதவிக்காரர்கள் என்பவர்கள் கிறிஸ்தவ குணலட்சணம் மற்றும் ஆவிக்குரியதல்லாத பணிக்கடுத்த திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இருத்தரப்பினரின் விஷயத்திலும் கிறிஸ்தவ குணலட்சணமும், ஆவியில் பரிசுத்தமும், ஞானமும் கருத்தில் எடுத்துக் கொள்வதற்குரிய அடிப்படையான விஷயங்களாய் இருக்கின்றன. இப்படியாகவே

இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்கள் விஷயத்திலும் காணப்பட வேண்டும் - அதாவது எந்த ஓர் ஊழியத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், சபையாரில் சிறந்தவர்களாகவும், ஞானமிக்கவர்களாகவும் முதலாவது அடையாளங்கண்டு கொள்ளப்பட்டிருக்க வேண்டும் - விலை யேறப்பெற்ற பரிசுத்தமான, சாந்தமான மற்றும் அமைதலின் ஆவி உடையவர்களா என்று கவனமாய்க் கவனிக்கப்பட வேண்டும் - அடுத்துத் திறமைகளானது கவனிக்கப்பட வேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களைத் தம்முடைய ஊழியத்தில் படிப்படியாக அபிவிருத்திப்பண்ணுவதற்குக் கையாளும் அவரது வழிமுறைகளுக்கான விளக்கத்தினை ஸ்தேவானின் விஷயத்தில் நாம் காணலாம், அவை: (1) ஸ்தேவான் சத்திய அறிவை அடையும் சிலாக்கியமடைந்தவராய் இருந்தார்; இதனை அவர் ஏற்றுக்கொண்டு உண்மையாய் இருந்து, கர்த்தருக்காக வைராக்கியம் கொண்டிருந்து, நீண்ட காலமாய் இப்பண்புகளை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார் மற்றும் பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலில், இவர் உதவிக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (2) இதில், பந்திவிசாரிக்கும் பணியில் உண்மையாய் இருந்திட்டக்காரியமானது, இன்னும் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாய் அவரை ஆயத்தமாக்கிற்று மற்றும் (3) சத்தியத்திற்கான தனது ஊழியத்தினை உறுதிப்படுத்துவதற்கென அவர் அடையாளங்களை நடப்பிக்கிறதையும் மற்றும் சுகமளிக்கும் வரங்களைச் செயல்படுத்துவதையும் நாம் பார்க்கின்றோம்; இது சபையில் ஸ்தேவான் மூப்பருக்கானதொரு நிலையினை உண்மையில் அடைந்துவிட்டதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. அப்போஸ்தலர்கள் அனைவரும் மூப்பர்களாய் இருக்க, எருசலேமில் தங்கியிருந்த அப்போஸ்தலர்கள் அநேகமாக அவசியமில்லாமல் மூப்பர்களுக்கான தேர்ந்தெடுத்தலைப் பண்ணினார்கள். (1 பேதுரு 5:1). ஸ்தேவான் சத்தியத்தின் ஆவியினால் மிகவும் நிறைந்திருந்தவராகவும், அதன் ஊழியங்களுக்கடுத்த விஷயங்களில் அர்ப்பணிப்புமிக்கவராகவும் காணப்பட்டப்படியால், (4) அவர் பலியின் மரணத்தில் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்தொடரும் சகோதரரில் முதல் நபராய் இருப்பதற்குரிய கனமடைந்தவரானார். இங்கு ஊழியத்திலும், அதன் கனங்களிலும் அபிவிருத்தி அடைந்தது என்பது கர்த்தருடைய ஜனங்கள் யாவரையும், அதே ஆண்டவருக்கு ஊழியஞ்செய்வதற்கும் மற்றும் அவரைப் பிரியப்படுத்துவதற்கும் அதிகமாய்ப் பிரயாசம் எடுப்பதற்கு ஊக்குவித்து, உற்சாகப்படுத்திடும். அர்ப்பணம்பண்ணின ஸ்தேவானை இப்படியாக ஏற்றுக்கொண்டு, தம்முடைய ஊழியத்தில் அவரைப் படிப்படியாக அபிவிருத்திப் பண்ணின ஆண்டவர், அதே போன்று அர்ப்பணம் பண்ணி, பரலோக வைராக்கியத்தினால் எரிந்து கொண்டிருப்பவர்களை எடுத்து, பயன்படுத்திடுவதற்கு இன்றும் விருப்பமுள்ளவராகவும், ஆயத்தமுள்ளவராகவும் காணப்படுகின்றார். இத்தகையவர்கள் ஏற்றகாலத்தில் தம்மோடுகூட மகிமைப்படத்தக்கதாக, தம்மோடுகூடப் பாடுபடுவதற்கு விரும்பும் பட்சத்தில், இவர்களைச் சபையில் எரிகிற

மற்றும் பிரகாசிக்கிற விளக்குகளாக்கிடுவதற்கு விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் (உரோமர் 8:17).

இன்றுவரையுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கு விசுவாசம் மற்றும் வல்லமை எந்த விஷயங்களின் அடிப்படையில் கடந்து வந்ததோ, அதே விஷயங்களின் அடிப்படையில் ஸ்தேவானுக்கும் அவரது விசுவாசமும், வல்லமையும் மற்றும் ஊழியத்திற்கான வாய்ப்புகளும் கடந்துவந்ததாய் இருந்தன - அதாவது கர்த்தருக்கும், அவருடைய ஜனங்களுக்கும் மற்றும் சத்தியத்திற்குமான முழு இருதயத்துடன்கூடிய அர்ப்பணிப்பின் அடிப்படையிலேயே கடந்துவந்தது. "தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." ஒருவேளை ஸ்தேவான் சுயநாட்டம் உடையவராகவும், மனுஷர்கள் அல்லது சகோதரர்கள் மத்தியில் கனத்திற்கு ஆசைக்கொண்டவராகவும் இருந்திருப்பாரானால், அதைக்குறித்து நாம் கொஞ்சமேனும் தெரிவிக்கப்பட்டிருந்திருப்போம் என்பதில் நமக்கு நிச்சயமே; இல்லாவிட்டால் இவர் பாராட்டு எதிர்ப்பார்த்திருந்திருப்பாரானால், இவரும் அனனியா போன்று, தீயச் செய்கைக்கு உதாரணமாகியிருந்திருப்பார். இது சபையினால் எந்த ஓர் ஊழியத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு சகோதரனையும் சூழும் அபாயமாய் இருக்கின்றது. ஆகையால்தான், "உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று அப்போஸ்தலன் எச்சரிக்கின்றார். ஆகவேதான் சபையானது தாழ்மையுள்ளவர்களை மாத்திரமே அதன் ஊழியக்காரர்களாய்த் தேர்ந்தெடுப்பது அவசியமாயிருக்கிறது. எதிராளியான வனுடைய கண்ணிக்குள் விழாதபடிக்கும், மற்றவர்களுக்குப் பிரசங்கித்த பிற்பாடு, தாங்கள் ஆகாதவர்களாய்ப் போகாதபடிக்கும் இந்த ஊழியக்காரர்கள் கவனமாய் இருப்பதும் அவசியமாயிருக்கிறது (யாக்கோபு 3:1; 1 தீமோத்தேயு 3:6-7; 1 கொரிந்தியர் 9:27).

பிரசங்கித்துக்கொண்டிருக்கையில், ஸ்தேவான் தன்னுடைய நாட்களில் காணப்பட்ட சிலருடன் வாதத்திற்குள்ளானார் மற்றும் அவர்களால் அவருக்கு இணையாகக் காணப்படமுடியவில்லை. "அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று" (அப்போஸ்தலர் 6:10) என்று நாம் வாசிக்கின்றோம். நாவன்மை உடையவர்களிலேயே ஸ்தேவானே பெரியவர் என்றோ, அவர் வாதம்பண்ணிக்கொண்டிருந்தவர்களில் திறமையுடையவர்கள் எவரும் இருக்கவில்லை என்றோ நாம் எண்ணிவிடக்கூடாது. இவருடைய விஷயத்தில், "தன்னுடைய நிலைப்பாட்டினை நீதியான விதத்தில் கொண்டிருப்பவன் மூன்று மடங்கு பலசாலியாவான்" எனும் பழமொழி நன்கு பொருந்துகின்றதாய் இருக்கின்றது. ஸ்தேவான் சத்தியத்தினை உடையவராகவும், வாதத்தினுடைய சரியான கோணத்தினைக் கொண்டவராகவும் இருந்ததினாலும் மற்றும் தேவன் அவரோடுகூட இருந்ததினாலும், அவரது எதிராளிகள் எவரும் அவருக்கு நிகரானவர்களாக இருக்கவில்லை.

அதே தேவன் இன்னமும் தம்முடைய ஜனங்களுடன் காணப்படுகின்றார் மற்றும் "உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்" (லூக்கா 21:15) எனும் கர்த்தருடைய வார்த்தையானது இன்னமும் உண்மையாக இருக்கின்றது. கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள தாழ்மையுள்ளவர்களுக்கு, அவர்களது எதிராளியானவர்கள் யாவரும் நிகரற்று இருக்கையில் - இதே கொள்கையானது விளங்குவதை நாம் பார்க்க முடிகின்றதல்லவா? சத்தியமானது ஜெயம்கொண்டது என்று எப்போதும் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றாலும், ஸ்தேவானின் சத்துருக்களினால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றாலும், அது வல்லமையுள்ளதானபடியால், அது ஜெயங்கொள்கின்றதாய் இருக்கின்றது.

சத்தியத்தினைப் பொதுவிடங்களில் விவாதம்பண்ணுவதை நாங்கள் ஆதரிக்கிறதில்லை. விவாதங்கள் அதிகம் நன்மைப் பயக்கிறதில்லை என்று நாங்கள் நம்புகின்றோம்; ஏனெனில் சத்தியத்தினை எதிர்ப்பவர்கள் - தங்கள் விவாதங்களை நியாயமற்ற விதத்திலும், வஞ்சனையான விதத்திலும் செய்ய வல்லவர்கள் - சத்தியத்திற்காக நாடிடுவதற்குப் பதிலாக, வெற்றியடைவதற்கென நாடுவதில் வல்லவர்கள். எனினும் ஸ்தேவானுடைய இந்தச் சந்தர்ப்பத்தினைப் போன்று, இன்றும் காணப்படும் சந்தர்ப்பங்களில் சத்தியத்தினை எதிர்ப்பவர்கள், வெறியர்களாய்/சண்டைக்காரர்களாய் இருக்கின்றனர்; மேலும் இதுமாதிரியான சந்தர்ப்பங்களில் சத்தியத்தினை உடையவர்கள் அதனை குறித்து வெட்கப்படாமல் மற்றும் பயங்கொள்ளாமல், அத்தருணத்திற்குத் தேவையான வார்த்தைகள் மற்றும் ஞானத்திற்கான கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் விசுவாசம்கொள்ள வேண்டும். ஸ்தேவான் பண்ணின விவாதம் குறித்து நமக்கு விவரங்கள் கொடுக்கப்படவில்லை; ஆனால் பிற்பாடு ஸ்தேவானால் கொடுக்கப்பட்டதான செய்தியிலிருந்து நன்கு விளங்கும் அவரது குணலட்சணம் குறித்து நாம் அறிந்திருக்கும் விஷயத்திலிருந்து, அவர் இரக்கமான, பரந்த மனப்பான்மையான, நியாயமான விதத்தில் எதிர்ப்பவர்களிடத்தில் பேசினார் என்றும், ஆத்திரமடையவோ, சீற்றமடையவோ, தவறான விவாதங்கள் செய்ய முற்படவோ இல்லை என்றும் சொல்ல வேண்டியது அவசியமாயிருக்கின்றது. அவர் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்திலும் கருக்கானதான சத்தியத்தினைப் பெற்றிருந்தார் மற்றும் அப்போஸ்தலருடைய கட்டளைக்கேற்ப, அவர் சத்தியத்தினை அன்போடு பேசினார் என்பதில் நமக்கு உறுதியே (எபேசியர் 4:15).

ஸ்தேவானோடு விவாதம்பண்ணினவர்கள் நிச்சயமாகவே கிரேக்க யூதர்களாய் இருந்தனர் மற்றும் ஸ்தேவானும்கூட அநேகமாக இவ்வகுப்பாரைச் சேர்ந்தவரேயாவார். பிற்காலங்களில் அப்போஸ்தலனாகிய பவுலாக மாறின, தர்சுவின் சவுலும், ஸ்தேவானோடுகூட விவாதம்பண்ணினவர்கள் மத்தியில் காணப்பட்டார்; ஏனெனில் அவரைக் கொன்றவர்கள் மத்தியில், கலகத்தலைவன்

போன்று தான் காணப்பட்டதாக பவுல் அடிகளார் தாமே நமக்குக் கூறுகின்றார் (அப்போஸ்தலர் 22:20). கமாலியேலினால் கற்பிக்கப்பட்டவரும், தர்க்கவாதங்களில் திறமிக்கவரும், நியாயசாஸ்திரியுமான வாலிபனாயிருந்த சவுல், ஸ்தேவானின் விவாதத்திலிருந்து எந்தளவுக்குப் படிப்பினைகள் சிலவற்றினைப் பெற்றிருந்திருப்பார் மற்றும் கருத்துகள் சிலவற்றினைக் கிரகித்திருந்திருப்பார் என்று நாம் யோசிக்கின்றோம்; எனினும் அவரது வாழ்க்கைப் போக்கினை மாற்றிடும் அளவுக்குப் போதுமானதாய் இல்லை.

ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில், தன் ஜனங்களின் அதிகாரிகளுக்கு, இயேசு மற்றும் அவரது உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்டிருக்கும் சுவிசேஷத்தின் பிரசங்கத்தினைப் பிரசங்கிக்கத்தக்கதாக ஸ்தேவானுக்கு வாய்ப்பு வந்தது. விவாதத்தில் அவரைத் தோற்கடிக்க முடியாத அவரது பகைஞர்கள், அவரை அழித்துப்போடுவதற்குத் தீர்மானமாய் இருந்தார்கள்; மூடநம்பிக்கையினால் வஞ்சிக்கப்பட்ட மத வெறியர்கள் போன்று, இவர்களும் தங்களது உயர்கொள்கையினால் ஏவப்பட்டவர்களாக, அவரைச் சட்டப்பூர்வமாய் அழித்திட - அதாவது சட்டத்தின்படி செய்வதுபோன்ற தோற்றத்தில் அழித்திட விரும்பிட்டார்கள். அந்தோ பரிதாபம்! இப்போதும், அப்போதும் சிறந்த மனமுள்ள அநேகம் ஜனங்கள், ஒரு தவற்றினைச் சட்டத்தின்படியான தோற்றத்தில் செய்தால், அந்தத் தவறானது சரியானதாகிவிடும், நன்மையானதாகிவிடும் என்று எண்ணுமளவுக்குத் தங்களையே வஞ்சித்தவர்களாய் இருக்கின்றனர்! கர்த்தருடைய ஜனங்கள் நியாயப்பிரமாணத்தின் ஆவியினை, நியாயத்தின் ஆவியினை, நீதியின் ஆவியினை உடையவர்களாய் இருப்பது அவசியம்; இவை இல்லாத பட்சத்தில் வைராக்கியம், மூடநம்பிக்கை அல்லது தப்பறையினுடைய அழுத்தத்தின் கீழ் சமச்சீரான மனங்களுடைய சிறந்தவர்கள்கூடத் தவறாய் வழிநடத்தப்பட்டுவிடுவர்.

நியாயசாஸ்திரிகளும், ஆலோசனை சங்கத்தின் அங்கத்தினர்களும் (தர்சுவின் சவுலும் இதில் அங்கத்தினனாய் இருந்திருக்கக்கூடும்) குற்றச்சாட்டுகளை நேரடியாய்ச் சொல்லும் வகுப்பினராய் இருக்கவோ, சிறந்த ஒரு மனுஷனை அழிப்பதில் தாங்கள் விருப்பம் கொண்டிருப்பதுபோன்று தோற்றமளிக்கவோ விரும்பவில்லை. ஆகையால் அவர்கள் தங்களது சிதைந்துபோன பகுத்துணர்தலைக்கொண்டும், மனச்சாட்சியைக்கொண்டும் மரணத் தீர்ப்பினை அளிக்கத்தக்கதாக வாய்ப்பளிக்கும் வகையான சாட்சியினைச் சொல்வதற்கு மற்றவர்களை ஏற்பாடுபண்ணினார்கள். விநோதமாகவே இரண்டாம் இரத்த சாட்சியும், முதலாம் இரத்த சாட்சியினைப் போலவே தேவனுக்கும், ஆலயத்திற்கும் எதிராக தூஷணம் புரிந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார் மற்றும் தனக்கு முன்மாதிரியான ஆண்டவரின் விஷயத்தில் இருந்ததுபோலவே, ஸ்தேவானுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கும் எவ்வித அடிப்படையும் இல்லாமல்

இருந்தது. குற்றச்சாட்டுகள் திரித்துக்கூறப்பட்டன என்பது உண்மைதான், எனினும் அதில் கொஞ்சம் உண்மையும் இருந்தது. இப்படியாகக் கர்த்தரையும், ஸ்தேவானையும் குற்றவாளி என்று தீர்த்திட்டவர்களுக்கு எவ்வளவாய் இவ்விஷயத்திற்கெனச் சலுகைப் பாராட்டப்படலாம் என்பதைப் பகுத்துணர்தல் என்பது அநேகமாக நமக்குச் சிரமமான காரியமாகும். பகுத்துணர அவசியமுமில்லை, ஏனெனில் இத்தகைய காரியங்களில் பகுத்துணர்தல்/ நியாயந்தீர்த்தல் என்பது நம்முடைய கரங்களில் வைக்கப்படவில்லை. தவறான அபிப்பிராயம் கொண்டுள்ள மனமானது, எந்தளவுக்குச் சத்தியத்தினைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும், வெளிச்சம் இருளாகவும், சத்தியம் தப்பறையாகவும் காணப்படத்தக்கதாகப் பகுத்துணர்தலை குருடாக்குவதில் எதிராளியானவன் எந்தளவுக்கு விஜயம் கொண்டுள்ளான் என்றும் கர்த்தர் மாத்திரமே அறிவார்.

தனக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஸ்தேவான் கேட்டு, விவகாரத்தின் போக்கினைக் கவனித்தபோது, தனக்கு எதிராக சாட்டப் பட்டுள்ளதான குற்றச்சாட்டுகளுக்கும், தனது ஆண்டவருக்குச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் இடையிலான ஒற்றுமையினை மனதில் கவனித்தார் என்பதில் ஐயமில்லை. மனதின் சந்தோஷத்தினால் மிகவும் வியக்கத்தக்க விதத்தில் அவரது முகம், ஒளிவீசினபோது அவர் மனதில் இத்தகைய சில எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தது என்பதினாலேயே, ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த யாவரும் "அவர்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவர் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதில் நமக்கு நிச்சயமே. ஆனால் தேவதூதன் முகம்கூட அத்தகைய இருதயங்களை இத்தருணத்திலும், ஆண்டவருடைய தீர்ப்பின்போதான தருணத்திலும், உட்கார்ந்திருந்த அதே நபர்கள் சிலருடைய இருதயங்களை அசைத்திடவில்லை. ஸ்தேவானுடைய சாட்சி பகருதலானது, அவர் பேசினவைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் விஷயத்தில் பலனளிக்கவில்லை போன்று தோற்றமளிக்கின்றது; இப்படியாகவே நமது ஆண்டவருடைய விசாரணை மற்றும் சாட்சியின் விஷயத்திலும் காணப்பட்டது. எனினும் ஆண்டவருடைய சாட்சியானது பெந்தெகொஸ்தே நாளிலும், அதற்குப் பிற்பாடும் பலன் கொடுத்ததாய் இருந்தது; ஆகவே ஸ்தேவானுடைய சாட்சியும் பின்நாட்களில் பலன்கொடுத்ததாய் இருந்தது. சுடர்விட்ட அந்தத் தேவதூதன் முகமானது - தமஸ்குவிற்குப் போகிற வழியில் கர்த்தரால் குறுக்கிடுவது வரையிலும், தர்சு பட்டணத்துச் சவுலினால் சிலகாலம் எதிர்த்துப் போராடி வரப்பட்ட "முட்களுள்" ஒன்றாய் இருந்தது என்பதினை யாரால் மறுத்திட முடியும்?

இந்த இரத்தசாட்சியின் விஷயத்தில் காணப்பட்ட அனுபவங்களானது

சவுலுக்கு மாத்திரமல்லாமல், மற்றவர்களுக்கும்கூட விலையேறப்பெற்றதாய் அமைந்தது என்று யாரால் மறுத்திட முடியும்? சம்பவங்களானது நன்மையினை அதிகமாகவோ அல்லது கொஞ்சமாகவோ கொணர்ந்ததாகத் தோற்றமளித்தாலும், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், அனைத்துச் சூழ்நிலைகளிலும் உண்மையாய் இருப்பது என்பதே, என்ன நடந்தாலும் நம்முடைய கடமையாய் இருப்பது போல, ஸ்தேவானுக்கும் கடமையாகவும் இருந்தது. கர்த்தருடைய வேலையானது, அவரது கரங்களில் இருக்கின்றது என்றும், அவருக்கும், சத்தியத்திற்கும், நமக்கு அருளப்பட்டிருக்கும் வாய்ப்புகளுக்கும் உண்மையாய் இருப்பதே நம்முடைய காரியமாய் இருக்கின்றது என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

இதழாசிரியரானவர் தானும், பயண ஊழியர்கள் யாவரும், எங்குமுள்ள சபை மூப்பர்கள் யாவரும் மற்றும் பொதுவிடங்களிலோ அல்லது தனிமையில் சந்தித்தோ, இயேசுவின் நாமத்தில் பேசுகிறவர்களாகிய சகோதரர் யாவரும், பிரகாசித்த ஸ்தேவானின் முகத்தினைத் தங்கள் ஞாபகங்களில் பதியப்பெற்றிருக்க விரும்புகின்றார். இப்படிச் செய்வோமானால் நமது கர்த்தருடைய பிரதிநிதிகளென நாம் தனிமையில் அல்லது பொதுவிடங்களில் மனுஷர் முன் நிற்கும் ஒவ்வொரு தருணத்திலும், நாம் அவரது ஆசீர்வாதத்தினையும், அவரது ஊழியக்காரர்களாய் இருப்பதற்குரிய நமக்கான சிலாக்கியத்தினையும் உணரமுடிந்தவர்களாகி, அதினால் நம் இருதயங்கள் நிரம்பி, நம்முடைய முகங்கள் - ஊழியம் புரிவதற்குரிய சிலாக்கியத்திற்கான நன்றியில், மகிழ்ச்சியில் பிரகாசித்திடும்; அப்போதுதான் நாமும் உயர்வான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வோம் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி சத்தியத்திற்காய் ஆயத்தமான இருதயமுடையோர் யாவருக்கும் மற்றும் இன்னுமாகச் சத்தியத்திற்காக இன்னமும் ஆயத்தமடையாமல், தர்சு பட்டணத்துச் சவுல்போன்று, சத்தியத்திற்காக ஆயத்தமாகும் வண்ணமாகக் கர்த்தருடைய வழிநடத்துதல் மற்றும் பயிற்சியின் கீழ்க் காணப்படுபவர்களுக்கும் - பெரிய அளவிலான ஆசீர்வாதத்தினை நாம் கொண்டுவருபவர்களாய் இருப்போம்.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனம், இவ்விஷயத்திற்கு மிகவும் பொருத்தமானதாய்க் காணப்படுகின்றது. கர்த்தருடைய ஜனங்கள் விசேஷமாகச் சத்தியம் தொடர்பான தங்களது உண்மை பற்றின விஷயத்தில் சோதனைக்குள் காணப்படுகையில், ஆண்டவருடைய இந்த வார்த்தைகளை நினைவில்கொள்ள வேண்டும். மனிதர்கள் நம்முடைய சரீரங்களைக் கொன்றுபோடலாம் அல்லது நம்மைக் குறித்துத் தீமையாய்ப் பேசிடலாம் அல்லது நிந்தித்திடலாம்; எனினும் நம் புதுச்சிருஷ்டிகளுக்கு அவர்களால் தீங்குச் செய்யவோ அல்லது எதிர்க்கால ஜீவியம் குறித்த நம்முடைய நம்பிக்கைகளை அழித்துப்போடுவதோ அவர்களால் கூடாத காரியமாய் இருக்கின்றது. கர்த்தர் தம்முடைய உண்மையுள்ளவர்களுக்கு வாக்களித்துள்ளதான அந்த ஜீவனோ - உயிர்த்தெழுதலின் ஜீவனோ -

மனுஷனுடைய வல்லமைக்கு அப்பாற்பட்டது. அது நித்தியகாலமான, விலைமதிக்கமுடியாத ஜீவனாகும். தற்கால ஜீவன் மற்றும் அழிந்துபோகும் சரீர நிலைமை தொடர்புடைய விஷயத்தில் இழப்புகளைப் பொருட்படுத்தாமல், அந்த ஜீவனை அடைவோமானால், நாம் மகா விலை பேசி, மாபெரும் பரிசினை அடைந்தவர்களாய் இருப்போம். அதனை உண்மையாய் உணர்ந்துகொள்பவர்கள் யாவரும், அதனை "விலையுயர்ந்த ஒரு முத்தாக" காண்கின்றனர்; இதற்காக ஆண்டவர் போன்று அனைத்தையும் ஒப்புக்கொடுக்க விரும்புகின்றனர் - அதனை தாங்கள் அடையத்தக்கதாக, தாங்கள் பெற்றிருக்கும் அனைத்தையும் விற்பதற்கு விரும்புகின்றனர்.

தேவன் ஆத்துமாவினைக் கொல்ல வல்லவராய் இருக்கின்றார் - ஜீவனை முற்றிலுமாய் அழித்துப்போட வல்லவராய் இருக்கின்றார் மற்றும் முழுமையான வெளிச்சம் மற்றும் அறிவிற்கு எதிரான துணிகரமான பாவம் செய்யப்படும் சந்தர்ப்பங்கள் அனைத்திலும், இப்படியாக அழித்துப்போடுவார் என்று அவர் எச்சரித்தும் இருக்கின்றார். இது ஆறுதலடையவும் மற்றும் அச்சமடையவும் வேண்டிய விஷயமாகும். இது திரளான ஜனங்கள் நித்தியகாலமும் வேதனையடைவார்கள் என்ற தவறான மனித போதனைக்கு எதிராய், ஆறுதலளிக்கின்றதாய் இருக்கின்றது; இது தெய்வீகக் கிருபையினை ருசிப்பார்த்தும், அவருக்குக் கீழ்ப்படிபவர்களுக்குரிய தேவனுடைய கிருபையான ஏற்பாடுகளைக் கற்றறிந்த பிற்பாடும், நம்மில் எவரேனும் பின்வாங்கிப்போய், நம்முடைய அனைத்தையும் - ஜீவனை இழந்துபோகாதபடிக்கு நம்மைப் பயமடையச் செய்கின்றது!

ஜீவியத்தில் சரியான ஓட்டம் மேற்கொள்ள வேண்டுமெனில், நமக்குவரும் ஜீவியத்தின் பிரச்சனைகள் மற்றும் சோதனைகளை எதிர்க்கொள்ள முடியவேண்டுமெனில், உபத்திரவத்தில் களிகூரும் ஆவியில் மற்றும் கர்த்தர் வழிகாட்டியுள்ள பிரகாரம் இத்தகைய அனுபவங்கள் அனைத்தையும் சந்தோஷமாய் எண்ணி சோதனைகளையும், பிரச்சனைகளையும் சரியான ஆவியில் எதிர்க்கொள்ள வேண்டுமெனில் - கண்ணியைக் கொண்டுவரும் மனுஷனுக்கான சகல பயத்தையும் அகற்றிடுவது அவசியமாகும். யேகோவா தேவனுக்குப் பயப்பட வேண்டும் என்றும், அழிந்துபோகிற சக மனிதர்களுக்குப் பயப்பட வேண்டாம் என்றும் நமது கர்த்தருடைய கட்டளைக் காணப்படுகின்றது. நீதிமான் சிங்கத்தைப்போன்று தைரியமுள்ளவனாகவும், புறாவைப் போன்று கனிவாயும் மற்றும் ஆட்டுக்குட்டியினைப் போன்று சாந்தமாகவும் காணப்படுவார். இந்த விநோதமான கலவை ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் காணப்பட வேண்டும்; மற்றவர்களிடத்தில் இப்படிக் காணப்படுமா என்பது சந்தேகத்திற்குரியதேயாகும்.

# அறுவடை என்பது விசேஷித்த சோதனை காலமாகும்

**நா**ம் "அறுவடையின் காலங்களில்" இருக்கின்றோம் என்று நாம் அடையாளம் கண்டு கொண்டுள்ளது போன்று, கர்த்தர் இப்பொழுது விசேஷமாய்க் "கோதுமையை" முதிர்வுறப்பண்ணிக் கொண்டிருக்கின்றார் என்றும், அதைக் "களைகளினின்று" பிரித்துக்கொண்டிருக்கின்றார் என்றும் மற்றும் கோதுமையை இருவகுப்பாராகப் பிரித்துக்கொண்டிருக்கின்றார் என்றும் நாம் கருதிட வேண்டும். இந்த அறுவடைகாலத்தினுடைய இந்த விசேஷித்த சோதனையைக் குறித்துதான் வேதவாக்கியங்களானது, குறிப்பாய் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவந்து கொண்டிருக்கின்றது மற்றும் தேவனுடைய முழுச்சர்வாயுதவர்க்கங்களை நாம் தரித்துக்கொள்வதின் அவசியத்தினைக்குறித்தும் மற்றும் அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருந்து, ஆவியிலே அனலாயிருந்து, கர்த்தருக்கு ஊழியம்புரிதலின் அவசியத்தினைக்குறித்தும் அடிக்கடி அறிவுறுத்துகின்றது.

நாம் எதிர்ப்பார்த்திருக்கும் அந்தச் சோதனைகளானது, கர்த்தருடைய முதிர்ந்த கோதுமை நிலம் எங்கும் வளர்ந்துவருவதை நாங்கள் காவல் கோபுரத்திலிருந்து காண்கின்றோம். தெய்வீக வழிநடத்துதல்களானது, அன்பிற்கான, நேர்மைக்கான, விசுவாசத்திற்கான, கீழ்ப்படிதலுக்கான, சகோதர சிநேகத்திற்கான, பொறுமைக்கான சோதனைகளை அனுமதித்து வருகின்றது. மந்தைக்கு உதவ வேண்டிய, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய, அவர்களை எச்சரிக்க வேண்டிய, ஆதரிக்க வேண்டியவர்களாகிய மூப்பர்கள் வாயிலாகச் சோதனைகளானது சிலசமயம் சபையாருக்கு வருகின்றது. சிலசமயங்களில் மூப்பர்கள் திவ்விய வசனத்திற்கும், மாதிரிக்கும் முற்றிலும் எதிர்மாறாய், இறுமாப்பாய் ஆளும் மனநிலையினைக்கொண்டிருந்து, சகோதரர்களின் பொறுமையையும், அன்பையும் சோதனைக்குள்ளாக்குகின்றனர்.

சிலசமயங்களில் சோதனையானது மறுபக்கத்திலிருந்து வருகின்றது. சபையாரில் சில அங்கத்தினர்கள் மிகவும் பூரணத்தை எதிர்ப்பார்க்கின்றவர்களாக, கொசுவில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குவதற்கு மகிவும் ஆயத்தமாயிருக்கிறவர்களாக, மேலும் மூப்பர் எவ்வளவுதான் உண்மையானவராய் இருப்பினும், அவர் செய்யும் எல்லாவற்றிலும் குற்றம் கண்டுபிடிக்க மிகவும் ஆயத்தமாயிருக்கிறவர்களாக இருந்திடலாம். இத்தகைய அனுபவங்களானது இப்பக்கத்திலிருந்து வந்தாலும் சரி அல்லது அந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும்சரி, இவைகள் சோதனைகளாக இருக்கின்றன மற்றும் இது கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொருவனும் எவ்வாறு இந்தச் சோதனைகளை ஏற்றுக்கொள்கின்றான் என்றும், அவைகள் எத்தகைய தாக்கத்தினை அவனது சொந்த இருதயம் மற்றும் குணலட்சணத்தின் மீது கொண்டிருக்கின்றன என்றும் பார்த்துக்கொள்வதை

இன்றியமையாததாக்குகின்றது. ஒருவேளை இவ்வனுபவங்களானது அவனைக் கசப்புக்கொள்ள, கோபங்கொள்ளச் செய்கின்றதானால் அல்லது அவனது பெருமையினை ஆழமாய்த் தொட்டுப் புண்படுத்துகின்றதானால், இது - அவனது குறைவினை அவனுக்கு வெளிப்படுத்துவதற்கும் மற்றும் இரக்கத்திற்காகவும், உதவிக்காகவும் பரலோக கிருபையின் சிங்காசனத்தை அவனுக்குச் சுட்டிக்காட்டி, இத்தகைய கடிந்து கொள்ளுதலின் அனுபவங்கள் அவனுக்கு அவசியமாயிருக்கின்றது என்று நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது.

இன்னுமாக அருமையான சில சபையார் தவறான உபதேசங்கள் வாயிலாக எதிராளியானவனால் தாக்கப்படுகின்றனர் மற்றும் சத்தியத்தை, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தை ஆதரிப்பதற்கும், அதற்கு இசைவாகத் தங்களுடைய நிலைபாட்டினைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்குமுரிய பிரயாசங்களில் கஷ்டங்களைப் பெற்றிருக்கின்றனர். இல்லையேல் அருமையான நண்பர்களில் சிலர் குற்றம் கண்டுபிடிப்பவர்களாக இருப்பதினாலும் மற்றும் எவ்வித கருத்து வேறுபாடுகள் இல்லாதிருக்க, கருத்து வேறுபாடுகளை உருவாக்கிட முயற்சிப்பதினாலும், இணக்கத்தின் ஆவியைவிட சண்டையின் ஆவியினை - அன்பைவிட உடன்பாடின்மையைத் தூண்டிடுவதினாலும் கஷ்டங்கள் ஏற்படலாம்.

அன்புக்குரிய சகோதரர்களே மற்றும் சகோதரிகளே, நாம் யாவராலும் ஒப்புக்கொள்ள முடிகிற காரியத்தையே நாம் அறிவுறுத்துகின்றோம்; அதாவது நாம் சோதனை காலத்தில் காணப்படுகின்றோம் மற்றும் இந்தப் பல்வேறு காரியங்களானது நமக்கான சோதனைகளாக இருக்கின்றன என்பதேயாகும். சத்தியத்திற்காகவும், சகோதரருக்காகவுமான அதிக அனலான ஆவியையும், அதிக வைராக்கியத்தையும் நாம் செயல்படுத்துவதினால் மாத்திரமே, நாம் உண்மையாய் நிற்கவும், மற்றவர்கள் உண்மையாய் நிற்க உதவுபவர்களாக இருக்கவும் நாம் எதிர்ப்பார்த்திடலாம். சோர்ந்துபோகாமல் இருப்போமாக. நாம் சோர்ந்துபோகாமல் இருப்போமானால், நாம் நம்முடைய பலனைச் சீக்கிரத்தில் அறுப்போம் மற்றும் "நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று ஆண்டவர் கூறுவதைக் கேட்போம்.

பரவலாக அமைதியின்மை, அதிருப்தி முதலானவைக் காணப்படும் காலக்கட்டத்தில் நாம் காணப்படுகின்றோம். ஒரு கணம்கூட இத்தகைய அதிருப்திகளையும், முறுமுறுப்புகளையும், "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்டதான விசுவாசத்திற்கான" போராட்டங்களென எண்ணாதிருப்போமாக. மாறாக பரிசுத்த ஆவியினுடைய கனிகளையும், கிருபைகளையும் அதிகமதிகமாய் வளர்த்துப் பேணிடுவோமாக. இவைகளை "விசுவாச வீட்டாரின்" நமது சகோதரர்கள் தொடர்பாக விசேஷமாய்ச் செயல்படுத்திடுவோமாக; நிச்சயமாய் "நமக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சகல மனுஷருக்கும் நன்மை

செய்வதையும்” புறக்கணியாமல் இருப்போமாக மற்றும் ஒருவருக்கொருவர் பொறுமையாயும், ஒருவரையொருவர் தாங்கியும் இருப்போமாக. “ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய” கிறிஸ்துவின் சரீரத்தில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், நன்மையையும், வளமையையும், கிருபையில் வளர்ச்சியையும் அபிவிருத்திச் செய்திடுவதற்கு விசேஷமாய் நாடுபவர்களுக்குக் கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதம் கடந்து வந்திடும்.

---

R5350

# மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல்

சபை கூடுகைகளில் வாக்களிப்பதற்குரிய உரிமை பெற்றவர்கள் ஒப்புரவாகுதலின் விசுவாசிகளாகவும், தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணினவர்களாகவும் மற்றும் அந்த அர்ப்பணிப்பினை அடையாளத்தின் மூலம் செய்துகொண்டவர்களாகவும் இருப்பவர்கள் மாத்திரமே என்று சமீபத்தில் இதழாசிரியர் தெரிவித்த போது, அவர் ஒன்றைக்குறித்து எழுத சித்தங் கொண்டிருக்க, அதற்குப் பதிலாக அவர் வேறொன்றை எழுதிய காரியமாகிவிட்டது. அடையாளப்படுத்துதல் எனும் வார்த்தைச் சேர்த்ததிலேயே தவறு காணப்படுகின்றது. தண்ணீர் முழுகுதலினுடைய உண்மையான அர்த்தத்தினையும், முக்கியத்துவத்தையும் காண்பதற்கு முன்னதாக, நம்மில் அநேகர் உண்மையாகவே கிறிஸ்தவர்களாகவும், கர்த்தரினால் உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், “பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையின்” அங்கத்தினர்களாகவும் உண்மையில் காணப்பட்டிருந்தோம் (எபிரெயர் 12:23). இத்தகையவர்கள் யாவரும் சபையின் தேர்ந்தெடுத்தல்களில் வாக்களிப்பதற்கு உரிமைப் பெற்றிருக்கின்றனர் என்று நாம் எப்போதுமே கருத்துக்கொண்டவர்களாக இருக்கின்றோம். (வேதாகம பாடங்கள், தொகுதி 6-ஐ பார்க்கவும்). ஆம், வாக்களிப்பது - தங்களது பகுத்தறிதலின்படி சபைக்கான ஊழியக்காரர்கள் தொடர்புடைய விஷயத்தில் கர்த்தருடைய சித்தத்தினை வெளிப்படுத்துவது - அவர்களது கடமையாக இருக்கின்றது.

ஆனால் நாங்கள் வலியுறுத்த விரும்பிட்டது என்னவெனில், தனது அர்ப்பணிப்பினை முறையாய் அடையாளப்படுத்துவது தொடர்புடையதான வேதாகம போதனைகளை இதுவரையிலும் ஏற்றுக்கொண்டிராத எந்தச்

சகோதரனும், சபையில் உதவிக்காரராகவோ அல்லது மூப்பராகவோ முறையாய் நியமிக்கப்படும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கமாட்டார் என்பதேயாகும். முழுக்கக் கவனக்குறைவின் காரணமாகவே, அதில் நாங்கள் அத்தகையவர்கள் வாக்களிக்கக்கூடாது என்று குறிப்பிட்டவர்களானோம்.

முன்மொழிதல்கள் தொடர்புடைய விஷயத்தில் சில சபைகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது. முன்மொழியும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்பட்டபோது, சகோதரன் ஒருவரின் தகுதிகள் முறையாய்க் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாமலேயே மூப்பராக அல்லது உதவிக்காரராக முன்மொழியப்படுகின்றது. அவருக்கான முன்மொழிதலானது, வழிமொழியவும்படுகின்றது; மற்றும் முழுச்சபையாரும் அச்சகோதரனை அன்புகூருவதினால், தங்கள் மீது மனஸ்தாபம் ஏற்படக்கூடாது என்பதற்காக, அச்சகோதரனுக்கு எதிராக தங்கள் வாக்குகளை அளிப்பதற்கு மனமில்லாமல் காணப்படுகின்றனர்.

சபையில் எந்த ஓர் ஊழியத்திற்கும், எவரேனும் தேர்ந்தெடுக்கப்படும் காரியத்தில், ஒரு காரணம் இருத்தல் வேண்டும். மூப்பர் ஒருவர் போதிக்க வல்லவராகவும், பரந்த மனப்பான்மையுடையவராகவும், ஆலோசனை தேவைப்படு பவர்களுக்கு உதவிகரமான ஆலோசனை வழங்க முடிகிறவராகவும், தேவனுடைய வார்த்தைகளை ஆழமாய் ஆராய்கிறவராகவும், சபையில் நல் செல்வாக்குடையவராகவும் மற்றும் ஞானமுள்ள ஆலோசகராகவும் இருத்தல் வேண்டும். யாருமே இந்த நற்பண்புகள்/தகுதிகள் யாவற்றையுமே சரிசமமான அளவில் பெற்றிருக்க முடியாது. சிலர் ஒன்றை அதிகமாகவும், வேறு சிலர் மற்றொரு தகுதியினை அதிகமாகவும் பெற்றிருப்பார்கள்; ஆனால் அவைகளில் சிலவற்றையாகிலும் அனைவரும் பெற்றிருக்கவேண்டும்; ஒருவரின் தேர்ந்தெடுத்தலில் பழிச்சொல்லுக்கு இடமிருக்கக்கூடாது. இதுபோலவே உதவிக்காரராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், ஊழியம் புரிய நேரம் ஒதுக்கமுடிகிறவராகவும் மற்றும் வருங்காலத்தில் மூப்பராகுவதற்கு ஏதுவான சில திறமைகளைப் பெற்றிருப்பவராகவும் மற்றும் சபைக்கு ஊழியம் புரிவதற்குரிய விருப்பம் உடையவராகவும் காணப்படவேண்டும்.

மூப்பர்கள், உதவிக்காரர்கள் முதலானவர்களை முன்மொழியும் விஷயத்தில், ஒருவேளை ஏதேனும் சிரமம் காணப்படும் பட்சத்தில் அல்லது பெரும்பான்மையானவர்கள் விரும்பும் பட்சத்தில் - வாக்குச்சீட்டு முறைமையைப் பயன்படுத்துவது மிகவும் நல்லதொரு முறையாக இருக்குமென எங்களுக்குத் தோன்றுகின்றது. இதனை செயல்படுத்திடுவதற்கு எழுதுகோலும் (Pencil), காகிதத் துண்டுகளும் தேவைப்படும். வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும், பின்வருமாறு எழுதிட வேண்டும்: "நான் __________ என்ற சபையில், பின்வரும் __________ மாத

காலங்கள் மூப்பர்களாகுவதற்கு பின்வருபவர்களை முன்மொழிகின்றேன்.” பிற்பாடு பெயர்கள் இடம்பெற வேண்டும். எண்ணிக்கையினைச் சபையார் கூட்டவோ அல்லது குறைக்கவோ விரும்புகிறார்களெனில், இது முன்மொழிதலுக்குப் பிற்பாடு, தேர்ந்தெடுத்தலின்போது செய்யப்படலாம்.

வாக்குச்சீட்டுகளானது சேகரிக்கப்பட்ட பிற்பாடு, முடிவுகளானது பட்டியலிடப்பட்டு, சபையாருக்கு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும். சபையாருக்கு எத்தனை மூப்பர்கள் தேவையாய் உள்ளது என்று சபையார் முடிவு செய்திட வேண்டும். ஒருவேளை மூன்று பேர் தேவை என்று சபையார் தீர்மானிப்பார்களானால், அதிகமான முன்மொழிதல் வாக்குச்சீட்டுகளைப் பெற்றிருக்கின்றதான ஆறு சகோதரர்களுக்கு வாக்குகள் அளிக்கப்பட வேண்டும். கைகளை நீட்டுவதன் மூலமான வாக்குகளை அதிக எண்ணிக்கையில் பெறும் மூன்று பேர், சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகக் கருதப்பட வேண்டும். அல்லது இன்னொரு வழி என்னவெனில்: வாக்குச்செலுத்தினவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குச் சமமான எண்ணிக்கையில் வாக்குச்சீட்டுகளைப் பெற்றிருப்பவர்களாகிய முன்மொழியப்பட்டிருப்பவர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்வதும் மற்றும் இவர்கள் யாவரையும் முடிந்தமட்டும் ஏகமனதான வாக்குகளுடன் தேர்ந்தெடுப்பதாகும்; இந்த ஏற்பாடானது சிறுபான்மையானவர்கள்கூட மூப்பர்கள் மத்தியில் இடம் பெறுவதற்கு வாய்ப்பளிப்பதற்கு நோக்கம் கொண்டதாகும்.

எப்போதும் மனதில் நிறுத்தப்பட வேண்டிய சிந்தை என்னவெனில்: சபையார் யாவருடைய பகுத்துணர்தலும்/தீர்மானமும் முடிந்தமட்டும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். பெரும்பான்மையானவர்களே தீர்மானிக்கிறவர்களாய் இருப்பினும், சபையாருடைய மூப்பர்கள் விஷயத்தில், அங்கத்தினர்கள் யாவருடைய உணர்வுகளும் பிரதிபலிக்கத்தக்கதாக பெரும்பான்மையானவர்கள், சிறுபான்மை யானவர்களுக்குச் சிலவற்றில் இணங்குவது எப்போதும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். எப்படி இந்த முடிவானது அடையப்பெற்றாலும், நாம் ஞானமாய் நடந்து கொண்டவர்களாய் இருப்போம்; மற்றும் வேறே முடிவானது அடையப்பெற்றால், அது ஞானமற்றதாகவும், சபையாருடைய சமாதானம் மற்றும் ஒற்றுமைக்கு இடர் உண்டாக்குகிறதாகக் காணப்படும். சகோதர சிநேகமானது எப்போதுமே, அனுதாபத்தையும், இரக்கத்தையும், அன்பையும் மற்றும் முக்கியமான கொள்கையுடன் தொடர்புபடாத பட்சத்தில், இணங்கிச் செல்வதற்கு விரும்புவதையும் குறிக்கின்றதாகக் காணப்படும்.

# அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள்

I. B. S. A-இன் அன்புக்குரிய நண்பர்கள் சபையாருக்காக மூப்பர்களை மற்றும் உதவிக்காரர்களைத் தாங்கள் தேர்ந்தெடுப்பது தொடர்புடைய விஷயத்திலும் மற்றும் கர்த்தருடைய நாமத்தில் தாங்கள் செய்யும் அனைத்துக் காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலும் பொறுப்புணர்வினை முறையாகக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அநேகமாக பாராளுமன்ற பிரமாணங்களைக் குறித்து வெகு சிலரே நன்கு அறிந்தவர்களாய் இருப்பதினால், சபைகூட்டங்கள் தொடர்புடைய விஷயத்தில் பாராளுமன்ற பிரமாணங்களை நடைமுறைப்படுத்துவது என்பது அன்பற்றதாகவும், ஞானமற்றதாகவும் காணப்படும் என்று ஏற்கெனவே நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம். பாராளுமன்ற பிரமாணங்களானது உண்மையில் நல்லவைகளாகவும், ஞானமானவைகளாகவும் மற்றும் பொதுவாய் நன்மை பயக்கிறதாகவும் காணப்படுகின்றது. பாராளுமன்ற பிரமாணங்களின் ஆவியானது, எல்லாவிடத்திலும் பொருந்தக் கூடியதாகும்; காரணம் அவைகள் அனைவருடைய நலனுக்கடுத்தவைகளைப் பாதுகாத்தல் எனும் பொன்னான பிரமாணத்தின் அடிப்படையிலும் மற்றும் குறைந்தபட்ச பிணக்குடனும், தாமதத்துடனும் காரியங்களைச் செய்யும் விதத்திலும் இயற்றப்பட்டவைகளாகும்.

கர்த்தருடைய ஜனங்களைப் பொறுத்தமட்டில், அன்பானது எப்போதுமே முதன்மையான இடத்தினைப் பெற்றிருக்க வேண்டும். அன்பானது எப்போதுமே பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக இருப்பினும், அது நேர்மையான நீதிக்கும் மேலாகச் செய்திடுவதற்கு எப்போதும் சுயாதீனம் உடையதாய் இருக்கின்றது. ஆகையால் கர்த்தருடைய சகோதரர்கள் யாவரும் கொள்கை உட்படாத விஷயத்தில், மற்றவருடைய நலனுக்காக தங்கள் சிறு விருப்பங்களை விட்டுக்கொடுத்துவிடுவதற்கு முற்றிலும் விருப்பமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். அன்பும், சந்தோஷமும், சமாதானமும் ஒவ்வொரு சபையிலும் மேலோங்கிக் காணப்பட வேண்டும். இவைகள் சார்புடைய யாவும் மற்றும் தேவனுக்கும், அவரது வார்த்தைகளுக்கும் உண்மையாய் இருத்தலுக்கு முழு இசைவுடன் காணப்படும் யாவும் ஆதரிக்கப்பட வேண்டும்.

சமீபத்தில் வந்திட்டதான அநேகம் கடிதங்களில், சபை தேர்ந்தெடுத்தல்கள், **முன்மொழிதலுக்கான** வழிமுறைகள் முதலானவைகள் குறித்த கேள்விகளும் மற்றும் இன்னுமாக வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முன்மொழிதல் முறைமையினின்று சற்று வித்தியாசமான முறைமையைப் பின்பற்றிடுவது முறையாக இருக்குமா அல்லது இல்லையா என்பது பற்றியும் உள்ள கேள்விகளும் கேட்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான விஷயங்கள் அனைத்திலும் சபையாருடைய விருப்பமே பிரமாணமாக இருக்கும் என்று நாங்கள்

பதிலளிக்கின்றோம். கர்த்தர் காரியத்தினைச் சபையினுடைய கரங்களிலேயே விட்டிருக்கின்றார்; மற்றும் சபையின் ஒவ்வொரு சிறுசிறு பாகங்களும், அதன் பகுத்துணர்தலின்படி திவ்விய ஏற்பாட்டினைப் பின்பற்றிடுவதற்கான முழு அதிகாரத்தையும் உடையதாய் இருக்கின்றது.

சில சந்தர்ப்பங்களில் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் **முன்மொழிதலை,** வாக்குச்சீட்டு மூலம் முன்மொழிவது மிகவும் நல்லதொரு திட்டமாயிருக்கும்; இதற்கு முதலில் எத்தனை பேர்கள் அவ்வருஷத்திற்கு ஊழியம்புரிய விரும்பப்படுகிறார்கள் என்பது குறித்துத் தீர்மானிக்கப்பட வேண்டும். ஒருவேளை சபையாருக்கு இரண்டு மூப்பர்களும், ஐந்து உதவிக்காரர்களும் அவசியம் என்று கருதப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது வாக்குச்சீட்டில் அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவனும், தான் முன்மொழிகிற விஷயத்தில் கர்த்தருடைய சித்தத்திற்குக் கருத்தூன்றிட வேண்டும். அவன் மூப்பர்களாக தன்னால் முன்மொழியப்படுகிற இரண்டு பேரின் பெயர்களையும் மற்றும் உதவிக்காரர்களாக தன்னால் முன்மொழியப்படுகிற ஐந்து பேரின் பெயர்களையும் எழுதிடலாம். இல்லையேல் அவன் தனது இரண்டு வாக்குகளை (votes) ஒரு மூப்பருக்கும் மற்றும் தனது ஐந்து வாக்குகளை ஓர் உதவிக்காரருக்கும் அல்லது அவன் விருப்பப்படி அந்த வாக்குகளைப் பங்கிட்டுக் கொள்ளலாம். இந்த விதத்தில் சபையாரிலுள்ள சிறுபான்மையானவர்கள், மூப்பர்கள் மத்தியில் இடம்பெறுவதற்கு வாய்ப்பினைப் பெற்றிடலாம்.

வாக்குச்சீட்டு பதிவு முடிந்து, கணக்கிட்ட பிற்பாடு, அதிக எண்ணிக்கையில் முன்மொழிதல் வாக்குச்சீட்டினைப் பெற்றிருக்கும் மூப்பர்களுக்கான இரண்டு பேரும் மற்றும் இப்படியாகவே உதவிக்காரர்களுக்கான ஐந்து பேரும் சபையாரின் தெரிவாகக் கருதப்பட வேண்டும். பின்னர் வாக்களித்தல் (vote) முறையாக இருக்கும். அதிக எண்ணிக்கையில் வாக்குச்சீட்டுகளைப் பெற்றிருப்பவர்களுக்கு, கைகளை நீட்டுதல் மூலம் வாக்களித்து ஏகமனதுடன் தேர்ந்தெடுப்பது என்பது பொதுவாகவே திருப்திகரமாயும், பொருத்தமாயும் காணப்படும்.

உங்களுடைய சித்தத்தை எப்படி நிறைவேற்றிடலாம் என்பதல்ல, மாறாக கர்த்தருடைய சித்தம் செய்ய வேண்டும் என்ற கண்ணோட்டத்தில், ஒவ்வொரு சகோதரன் மற்றும் சகோதரிக்கு உங்களால் எப்படி முழுமையாய் வாய்ப்பினைக் கொடுக்கவும், அதை நீங்களும்கூடப் பெற்றிருக்கவும் முடியும் என்பதுதான் எப்போதும் நோக்கமாகக் காணப்பட வேண்டும் என்பதை மறந்துவிடாதீர்கள். எவ்வகையில் முடிவுகள் அடையப்பட்டாலும், அவைகள் ஒருவேளை பெரும்பான்மையானவர்களின் அல்லது சபையார் அனைவரின் பகுத்துணர்தலைத் திருப்திகரமாய் வெளிப்படுத்துகிறதாய் இருக்குமானால், அப்போது காரியமானது முற்றிலும் நீதியானதாகவும், வேதாகமத்தின் கொள்கைகளுக்கு இசைவானதாகவும் இருக்கும்.

"சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது." சகோதர சகோதரிகளுக்காக நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கு நாடிடுவோமாக. நம்மால் கர்த்தருக்கு நேரடியாய் ஊழியம் புரிய முடியாது, ஆனால் சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் புரிவதன் மூலமும், நம்முடைய பொறுமையையும், அனுதாபத்தையும் மற்றும் அன்பையும் அவர்களுக்கு வெளிப்படுத்துவதன் மூலமும், கர்த்தருக்கு மறைமுகமாக நாம் ஊழியம் புரிந்திடலாம்.

---

R3943

## உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

"ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்போஸ்தலர் 20:28) எனும் பரிசுத்த பவுலடிகளின் வார்த்தைகளானது, முன்பில்லாதளவுக்கு இப்பொழுது நாம் கவனம் செலுத்திடுவதற்கு மிகவும் பாத்திரமானவைகளாய்க் காணப்படுகின்றது. சீயோன் காவல் கோபுரத்திலிருந்து பார்க்கையில், சத்தியமானது அனைத்துத் திசைகளிலும் பிரம்மாண்டமாய் முன்னேறிக்கொண்டிருக்கையில், "தீங்குநாளும்" - ஏற்கெனவே ஆசீர்வதிக்கப்பட்டு, பிரகாசிக்கப்பட்டவர்களாய்க் காணப்படுபவர்களைச் சோதிக்கும் காலமும் நம்மீது காணப்படுகின்றது என்பதை நாம் தெளிவாய்ப் பார்க்கின்றோம். ஆகையால் தற்கால சத்தியத்தினுடைய செய்தியினைக் கேட்பதற்குரிய செவிகளினால் யார் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்பது மாத்திரம் கேள்வியாயிராமல், இன்னுமாக யார் "தீங்குநாளிலே எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கும் திராணியுள்ளவர்களாயும் மற்றும் நம்மில் அன்புகூர்ந்தவரும் மற்றும் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நம்மை வாங்கிகொண்டவருமானவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக" மகிமைப்படுத்தப்படுபவர்களாயும் இருப்பார்கள் என்பதும் கேள்வியாய்க் காணப்படுகின்றது (எபேசியர் 6:13; உரோமர் 8:37).

நம்முடைய தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதான எதிராளியானவனின் தாக்குதலை அனைத்துத் திசைகளிலும் நம்மால் கவனிக்க முடிகின்றது - நம் மத்தியில் தப்பறை மற்றும் பேராசை எனும் துன்புறுத்தும் ஓநாய்களை நம்மால்

கவனிக்க முடிகின்றது. நாங்கள் அபாய அறிவிப்பை விடுத்து, "சோதனை காலமானது" - அதாவது கடந்த முப்பது வருடக்காலமாக நாம் எதிர்க் கொள்வதற்கென ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றதான அந்தச் சோதனை காலமானது வந்துள்ளது என்று நாங்கள் உங்களுக்குக் கூறவேண்டியுள்ளது. நமக்கருளப்பட்டிருக்கும் அறிவின் காரணமாக, இந்த அபாயகரமான தருணத்தில் தூங்கிப்போய்விடாமல் இருப்போமாக; இச்சூழ்நிலையினைத் தெரிந்த நிலையிலும், ஜெபத்துடனும், உண்மையுடனும் எதிர்க்கொள்வோமாக.

நம்முடைய அறிவு என்பது பொறுப்புக் கூட்டப்பட்டுள்ளதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்றும், அறிவானது - பூரணத்தின் நிறைவாகவும், திவ்விய பிரமாணத்தினுடைய அல்லது திவ்விய எதிர்ப்பார்ப்பினுடைய நிறைவேறுதலாகவும் காணப்படுகின்றதான அன்புடன் இணைந்து, செயல்படவில்லையெனில், அறிவினால் நமக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லையென்றும் நாம் நினைவில் கொள்வோமாக. எத்தனை ஆசீர்வாதங்களை நமக்குக் கர்த்தர் அருளியிருக்கின்றார் மற்றும் நம்மீது இப்பொழுது கடந்து வந்துள்ளதான சோதனையை எதிர்த்து நிற்க நமக்கு உதவுகின்றதான தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களைத் தரித்துக்கொள்வதற்குக் கர்த்தர் எத்தனை வாய்ப்புகளை அருளியிருக்கின்றார் !

"உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று முதலாவது அப்போஸ்தலன் ஞானமாகவே கூறியிருக்கின்றார். இது நம்முடைய முதலாம் பொறுப்பாய் உள்ளது. நாம் பொறாமையினாலோ அல்லது பேராசையினாலோ அல்லது ஏதேனும் சுயநலமான நோக்கங்களினாலோ எவ்வளவேனும் இயக்கப்பட்டிருக்கின்றோமா என்று நம்முடைய சொந்த இதயங்களை நாம் ஒவ்வொருவரும் முதலாவதாக ஆராய்ந்திட வேண்டும். இதை நாம் நன்கு செய்ய வேண்டுமெனில், நாம் நம்மை மற்றவர்களுடன் ஒப்பிட்டோ அல்லது நம்முடைய அபூரண நிலையுடன்/அளவுகோலுடன் ஒப்பிட்டோ ஆராய்ந்திடாமல், கர்த்தருடைய தரநிலையுடன்/அளவுகோலுடன் - பூரண அன்புடன் ஒப்பிட்டு ஆராய்ந்திட வேண்டும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பெலத்தோடும் அன்புகூருவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் (விசேஷமாக கர்த்தருக்குள்ளான உன் சகோதரனிடத்திலும்) அன்புகூருவாயாக." ஓ! இது - எத்துணைச் சகோதர சிநேகத்தையும், எத்துணை உருக்கமான வார்த்தையையும், கிரியையும், ஒவ்வொருவருடைய பெலவீனங்களில் ஒருவர் இன்னொருவர் மீது எத்துணை அனுதாபத்தையும், ஒருவர் இன்னொருவருடைய சிறந்தப் பண்புகளை எவ்வளவாய்ப் பாராட்டுதலையும், எத்துணை நீடிய

பொறுமையுடன்கூடிய இரக்கத்தையும், அன்பில் பொறுமையுடன் சகித்தலையும், தன்னுடையது போன்று ஒருவர் இன்னொருவருடைய நலன்களுக்காக, உரிமைகளுக்காக மற்றும் சுயாதீனங்களுக்காக எத்துணை அக்கறைகொண்டிடச் செய்திடும் மற்றும் இப்படிக் குறிக்கின்றதாய் இருக்கும்!

"நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்" என்று இதே அப்போஸ்தலன்தான் எழுதியுள்ளார் (2 கொரிந்தியர் 13:5). உபதேசத்தில் தெளிவாயிருப்பது மிகவும் அவசியமானதாகும்; ஆனால் இதுமாத்திரம் போதாது; ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் மற்றும் விசேஷமாகக் கர்த்தருடைய சபையின் காரியங்கள் அனைத்திலும் - கர்த்தரிடத்தில் விசுவாசம் கொள்ளும் விதத்திலும்கூட - நாம் "விசுவாச முள்ளவர்களாக" காணப்பட வேண்டும். சூழ்நிலைகளானது சபையின் காரியங்களிலுள்ள வேதவாக்கியங்களின்படியான ஏற்பாடுகளினின்று நம்மைத் திசைமாற்றிட, நாம் எப்போதேனும் அனுமதிப்போமாகில், அது நாம் தேவன் திட்டமிட்டுள்ளபடியான "விசுவாசத்தில்" இல்லையென்பதை வெளிப்படுத்து கின்றதாய் இருக்கின்றது. ஏனெனில் தேவனிடத்திலும் மற்றும் நன்மைக் கேதுவாய் மாற்றிப்போடும் அவருடைய ஞானம் மற்றும் வல்லமை மீதான நம்பிக்கையானது ஒருபோதும் சூழ்நிலையினிமித்தம், "நன்மை உண்டாகத் தக்கதாக நாம் தீமையைச் செய்வோமாக" - "கர்த்தருடைய நோக்கங்களின் விஷயங்களில் சிறந்த நன்மை உண்டாகத்தக்கதாக, வேதவாக்கியம் அங்கீகரியாதக் காரியங்களை நாம் செய்வோமாக" என்று சொல்லிடுவதற்கு அனுமதித்திடாது. பலியைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிதல் உத்தமம் என்றும், அவரை அன்புகூருகிறவர்களுக்கும், அவருக்கு ஊழியஞ் செய்கிறவர்களுக்கும், அவர் சகலத்தையும் நன்மைக்கேதுவாய்ச் செய்ய வல்லவர் என்றும் விசுவாசமானது உத்தரவிடுகின்றதாய் இருக்கின்றது.

அன்பான சகோதர சகோதரிகளே, இதுவே நமக்கான சோதனை என்றும், இப்பொழுது நம்முடைய சோதனை காலமாய் இருக்கின்றது என்றும் நாம் நினைவில் கொள்வோமாக; மற்றும் கர்த்தருக்காகவும், அவரது சகோதர சகோதரிகளுக்காகவும் மற்றும் அவரது வார்த்தைகளுக்காகவுமான அன்பானது, நம்முடைய உதடுகளுக்கும், நம்முடைய நடத்தைக்கும் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய இருதயங்களுக்கும் எப்போதும் கட்டளையிடுகின்றதாய் இருப்பதாக. "இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:10, 11). இவைகள் அனைவருக்கும் பொருந்துவது

போல, சபையில் விசேஷமான உக்கிராணத்துவம் எனும் சிலாக்கியம் பெற்றுக்கொண்டவர்களாகிய - மூப்பர்களுக்கு - முழு உலகத்தின் மீதும் மற்றும் குறிப்பாய்த் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீதும் காணப்படுகின்றதான இந்தச் சோதனையான வேளையில் - விசேஷித்த விதத்தில் உண்மையாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது (வெளிப்படுத்தல் 3:10).

---

R4472 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள்

சபையினுடைய சுயாதீனங்களையும், அதிகாரத்தையும் குறித்தும் மற்றும் மேய்ப்பர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் என்பவர்கள் சபையினுடைய வேலைக்காரர்களே ஒழிய, அவளை ஆளுகிறவர்களல்ல என்பது குறித்தும் சுட்டிக்காட்டியதில் சபைக்கு நாங்கள் கொண்டிருந்த எங்களது உண்மைதான், மூப்பர்கள் மற்றும் வழிநடத்துபவர்களில் சிலர் வேதாகமப் பாடங்களினுடைய 6-ஆம் தொகுதியை எதிர்ப்பதற்குக் காரணமாக இருக்குமோ என்று நாங்கள் எண்ணினதுண்டு. சபையினுடைய சுயாதீனங்கள் வழிநடத்துபவர்களால் பறிக்கப்பட்ட மற்றும் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கென இத்தகைய வழிநடத்துபவர்கள் "வாட்ச் டவர்" வெளியீட்டுகளின் வாயிலாக - கர்த்தருடைய மந்தைக்குரிய சரியான பாதையை மந்தைக்குத் தெரிவித்திடும் மேய்ப்பனின் சத்தத்தை மந்தைக் கேட்காதப்படிக்குத் தடைப்பண்ணிட முற்பட்டுள்ள சில சந்தர்ப்பங்களானது எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. யாரையும் நியாயந்தீர்ப்பது எங்கள் காரியமல்ல. "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்." அனைவரும் எந்தளவுக்குக் கர்த்தருடைய வார்த்தைகளின் போதனைக்குத் தனிப்பட்ட விதத்திலும் மற்றும் சபையாராகவும், சபைகளாகவும் நெருக்கமாய்த் துல்லியமான இசைவிற்குள்ளாக வருவார்களோ, அவ்வளவுக்கு நம்மீது காணப்படுகின்றதான கடுமையான சோதனைகளில் நிற்பதற்கு ஆயத்தமாகவும், நிற்பதற்கு முடிகிறவர்களாகவும் காணப்படுவார்கள் என்று எங்கள் செல்வாக்கிற்கு உட்பட்டவர்கள் யாவருக்கும் முன்னெச்சரிக்கை வழங்குவதே எங்கள் காரியமாய் இருக்கின்றது.

இந்தச் "சோதனைகாலத்தின்" விசேஷித்த சோதனைகளானது, வழிநடத்துபவர்களுடன் துவங்கி, இருளினின்று தேவனுடைய ஆச்சரியமான

ஒளியினிடத்திற்கு அழைத்துக் கொண்டு வரப்பட்டவர்கள் மத்தியில் அதிகமதிகமாய்ப் பெருகிடும் என்பது எங்களுடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது என்று நாம் சொல்ல விரும்புகின்றோம். பிற்பாடு அந்தச் சோதனையானது, பெயர்ச் சபைகளில் குருமார்கள் மீதும் மற்றும் சாதாரண வகுப்பார் மீதும் மற்றும் இறுதியில் ஜனக்கூட்டத்தார் மீதும் கடந்துவரும். "நான் மூன்று வருஷக்காலமாய் இரவும், பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்துக் கொள்ளுங்கள்" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளானது, எங்களது செல்வாக்கு காணப்படுகின்ற யாவரிடத்திலுமான எங்களது மனவுணர்வுகளை நன்கு பிரதிபலிக்கின்றதாய் இருக்கின்றது (அப்போஸ்தலர் 20:31).

---

R2442 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும்

*"நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது." (யாக்கோபு 3:8-10)*

அப்போஸ்தலன் இருவகை ஞானம் இருப்பதாக, பரலோக வகையான ஞானமும், பூமிக்குரிய வகையான ஞானமும் இருக்கின்றது என்றும், இதைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் வேறுபாடறிந்து கொள்ள வேண்டும் என்றும் மற்றும் தாங்கள் பரலோக வகையான ஞானத்தினைப் பெற்றிருக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். தங்களையே சபையாகக் கருதிக்கொள்கின்றவர்களும், உலக ஞானத்தின் அடிப்படையிலான நோக்கங்களினால் தங்களைச் சபையோடு இணைத்துக் கொண்டவர்களும், தாங்கள் விரும்புகின்றதும், தங்களுக்குச் சாதகமாக ஒருவேளை தங்களால் மாற்றிட முடிகின்றதுமான சில ஞானமும், நியாயமும் வேதவாக்கியங்களுடைய போதனைகளில் காணப்படுகின்றதென அடையாளம் கண்டுகொண்டவர்களுமான சிலர் சபையில் காணப்படுவார்கள் என்றே அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். இவர்கள் இறுமாப்படைவார்கள் என்றும், தங்கள் ஞானத்தைப் பகட்டாகக் காண்பித்துக்கொள்வார்கள் என்றும், அதனால்

பெருமைக்கொள்வார்கள் என்றும், இவர்கள் சகோதர சிநேகம், தயவு, சாந்தம், பொறுமை, அன்பு ஆகிய கிறிஸ்தவ குணலட்சணங்களானது ஏற்புடையது என்று வெளிப்புறத்தில் ஒப்புக்கொண்டாலும், இவர்கள் தங்கள் இருதயங்களில் கசப்பான பொறாமைகளையும், போராட்டங்களையும் - அதாவது பெயரும், புகழும் பெற்றிடுவதற்கான போராட்டத்தினை - இவைகளை அதிகமாய்ப் பெற்றிருப்பவர் களாகக் காணப்படுவோரின் மீது பொறாமையினைக் கொண்டிருப்பார்கள் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

இத்தகையவர்கள் சகோதரரைச் சபிப்பதைத் (தீமை பேசுவதை, காயப்படுத்துவதை) தவிர்ப்பதற்குச் சிரமப்படுபவர்களாக, தவிர்ப்பதற்கு முடியாத வர்களாகக் காணப்படுவார்கள் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். இவை இவர்களுக்கு மிகவும் இயல்பான தன்மைகளாக இருப்பதினால், இதை இவர்களால் தவிர்க்க முடியாது; காரணம் இவர்கள் சுத்தமான இருதயங்களைப் பெற்றிருப்பதில்லை - மறுபடியும் புதுப்பிக்கப்பட்ட இருதயங்களை இவர்கள் பெற்றி ருப்பதில்லை. இவர்களது இருதயங்களானது, மறுபடியும் புதுப்பிக்கப்பட்டிருப்பினும், நாய் தான் கக்கினதைத் தின்னவும், பன்றி சேற்றிலே புரளவும் திரும்பிடுவது போன்று திரும்பினவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். தங்கள் இருதயங்களில் பொறாமையான மற்றும் கசப்பான உணர்வுகளைப் பெற்றிருப்பவர்களுக்கான அப்போஸ்தலனுடைய அறிவுரையானது:- இவர்கள் பெருமையடித்துக்கொள்வதற்கோ அல்லது மகிமைப் பாராட்டிக்கொள்வதற்கோ எந்தக் காரணமும் இல்லை; மாறாக இவர்கள் இருதயத்தில் இத்தகைய தீமையான நிலைமையினைக் கொண்டிருப்பதால், தாங்கள் கிறிஸ்தவர்களே அல்ல என்று ஒப்புக்கொள்ள வேண்டும்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்ப் பேசுதலை நிறுத்திக்கொள்ள வேண்டும்; மாய்மாலமாய், போலியாய் நடிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்; புதுப்பிக்கப்பட்ட இருதயங்களை உடையவர்கள் என்றும், கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்றும் தொடர்ந்து உரிமை பாராட்டுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

இவர்களது ஞானமானது, இவர்களது அறிவானது தேவனிடமிருந்து, பரிசுத்த ஆவியிடமிருந்து வருபவை அல்ல என்று அவர் தெளிவாய்க் கூறுகின்றார். "இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்தது மாயிருக்கிறது. வைராக்கியம் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு" (யாக்கோபு 3:15, 16).

அப்போஸ்தலனுடைய கண்டனமானது, உத்தம இஸ்ரயேலனாகத் தன்னை அறிக்கைப்பண்ணிக்கொள்ளும் யாருக்கும் பொருந்துகின்றதாய் இருப்பினும்,

அவர் விசேஷமாய்ச் சபையில் போதகர்களாக, போதுமான ஞானம் இருப்பதாக அறிக்கைப்பண்ணுகிறவர்களுக்கு தனது வார்த்தைகளைக் குறிப்பாய்ப் பேசுகின்றார். இவரது வார்த்தைகளானது, சபைக்குப் பகிர்ந்துகொடுக்கப்பட்டதான பல்வேறு வரங்களைக் குறித்துப் பேசுகையில், அதிகமான அறிவுடையவர்களுக்குரிய அபாயங்களைச் சுட்டிக்காட்டும் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளையும் நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது மற்றும் யாக்கோபு அடிகளார் முன்வைத்ததான இந்தக் கொள்கையைச் சித்தரிக்கும் வண்ணமாக பவுலடிகளார் கூறுவதாவது:-

"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கத்தரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கத்தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்" (1 கொரிந்தியர் 13:1-8).

அறிவும், நாவன்மையும் மிகவும் முக்கியமான பரீட்சைகளாக இருப்பதில்லை என்றும், இதயத்தில் ஊடுருவி, ஜீவியத்தின் போக்கனைத்திலும் கடந்துவந்து, நம்முடைய அழிந்துபோகும் சரீரங்களை இயக்கி, செயல்படுத்தும் அன்பே, உண்மையான பரீட்சையாக - நம்முடைய திவ்விய உறவிற்கான மெய்யான நிரூபணமாக இருக்கின்றது என்றும் அப்போஸ்தலன் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றார். தேவனுடைய வரங்களைப் பெற்றிருப்பவர்கள் அன்பை ஒருவேளை இழந்திருந்தால், கிறிஸ்துவின் ஆவியினை ஒருவேளை இழந்திருந்தால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருந்து "ஒன்றுமில்லாதவர்களாகிவிடுவார்கள்" என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார்; காரணம், "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (உரோமர் 8:9).

அப்போஸ்தலர்களிலேயே பிரதானமான இரண்டு பேரிடமிருந்து வரும்

இந்தத் திவ்விய அறிவுரைகளைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் குறிப்பாய்க் கவனிப்பார்களானால் நலமாயிருக்கும் மற்றும் நாவன்மையோ, அறிவோ விலையேறப்பெற்றவைகளாய் இருப்பினும், இவை சகோதரர்கள் சரியான வழியில் காணப்படுகின்றார்கள் என்பதற்கோ, இவர்களது செல்வாக்கானது தீங்கு விளைவிக்கிறதாயிராமல், உதவிகரமாயிருக்கும் என்பதற்கோ நிரூபணங்களாய் இருக்குமெனக் கருதப்படக்கூடாது என்பதைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் நினைவில் கொள்வதும் நலமாயிருக்கும். சபைக்கான ஊழியக்காரர்களாக, பரிசுத்த காரியங்களில் ஊழியம் புரிபவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுபவர்கள் அனைவரிடத்திலும், முதலாவதாக அன்பின் ஆவியானது இயக்கும் அம்சமாய்க் காணப்படுகின்றதா என்று பார்க்கப்பட வேண்டும். அறிவும், திறமையும் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாம் சொல்லவரவில்லை, மாறாக இவைகள் இரண்டாம் நிலையிலேயே கருதப்பட வேண்டுமே ஒழிய, (பிரதான முக்கியத்துவமுடையதாய்க் கருதப்படும் வழக்கத்தின் படியாக இல்லாமல்) பிரதான முக்கியத்துவமுடையதாய்க் கருதப்படக்கூடாது. கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின பல்வேறு கூட்டத்தாருடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களைப் பொறுப்பேற்கத்தக்கதாக, உங்கள் மத்தியிலுள்ள பரிசுத்த மனுஷர்களை, பரிசுத்த ஆவியினால் முழுமையாய் நிரம்பிக் காணப்படுபவர்களை நாடிடுங்கள். சபையின் ஊழியக்காரர்களிடத்தில் எதிர்ப்பார்க்க வேண்டிய பண்புகள் தொடர்பான திவ்விய விளக்கத்திற்காக 1 கொரிந்தியர் 13:4-8; 1 பேதுரு 1:22, 23; 2 பேதுரு 1:1-13-ஆகிய வசனப்பகுதிகளைப் பார்க்கவும். வேறு பண்புகளை உடையவர்களும், பெருமையையும், தேவனுடைய சுதந்தரமான சபையை இறுமாப்பாய் ஆளுவதற்குமுரிய விருப்பத்தையும் வெளிப்படுத்துபவர்களும் அல்லது பொறாமை, சண்டைச் சச்சரவு, கசப்பு, தீமை பேசுதலை வெளிப்படுத்துபவர்களுமானவர்கள் அனைவரும், பரத்திலிருந்து வராததும், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறதுமான தவறான ஆவிக்கான சாட்சி பகருகின்றவர்களாக - இவர்களது சொந்த நன்மைக்காகவும், சபையினுடைய நன்மைக்காகவும் தேர்ந்தெடுக்கப்படாமல், கடந்துபோகப்பட வேண்டும். இவர்கள் பாதுகாப்பற்ற போதகர்களாவார்கள் மற்றும் இவர்கள் என்னதான் அறிவைப் பெற்றவர்களாய் இருப்பினும், நன்மைக்குப் பதிலாக, தீமையையே அதிகம் செய்பவர்களாய் இருப்பார்கள்.

---

# நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்

## 1 தெசலோனிக்கேயர் 5:14-28

கர்த்தருடைய ஜனங்கள் கிருபையில் வளர்வதற்கும், உண்மையுள்ளவர்களாய் இருப்பதின் வாயிலாக இறுதியில் தங்கள் மீட்பர் மூலமாக ஜெயங்கொண்டவர்களாகுவதற்குமென அவர்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டிய சரியான மனநிலைமையைப் பற்றியதாகவே நம்முடைய இந்தப் பாடம் காணப்படுகின்றது. ஆதார வசனத்தின் வார்த்தைகளானது தெசலோனிக்கேயா பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்கென்று கூறப்பட்டிருந்தாலும், இது எழுதப்பட்ட காலம் துவங்கி, தற்காலம் வரையிலுமுள்ள கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உண்மையுள்ளவர்கள் அனைவருக்கும் இந்தத் தலைச்சிறந்த வார்த்தைகளானது, பலத்திற்கும், உற்சாகத்திற்கும் மற்றும் நெறிமுறைப்படுத்துதலுக்குமான ஆதாரமாய்க் காணப்பட்டு வருகின்றது. தெய்வீக ஆலோசனைகளையுடைய இந்த வார்த்தைகளைத் தேவனுடைய பிள்ளைகள் எவரும் புறக்கணித்துவிடக் கூடாது; மேலும் எந்தளவுக்கு நாம் ஒவ்வொருவரும் இவைகளுக்குச் செவிகொடுக்கின்றவர்களாய் இருக்கின்றோமோ, அவ்வளவாய் நாம் நிச்சயமாய்க் கிறிஸ்துவைப்போல் அதிகமாய் ஆகுவோம் மற்றும் இவ்வாறாக நாம் அதிகமாய்க் கர்த்தருக்குப் பிரியமாய்க் காணப்படுவோம் மற்றும் இறுதியில் ஆயிர வருட அரசாட்சியிலும், அதன் மகிமைகளிலும், மனுக்குலத்தின் உலகத்தை ஆசீர்வதிக்கும் அதன் வேலையிலும், அவருடன் உடன் சுதந்தரர்களாகுவதற்குரிய நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிச் செய்கிறவர்களாகவும் இருப்போம். அப்போஸ்தலனின் இந்தக் கட்டளைகளை நாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பார்க்கலாம்.

மூப்பர்கள் என்பவர்கள் ஏதோ ஒரு தனிப்பட்ட வகுப்பினராகவும், சகோதர சகோதரிகளை தங்களது பராமரிப்பின் கீழ்க் கொண்டிருப்பவர்கள்போல் கையாளுபவர்களாகவும், அதிகாரம் செலுத்துபவர்களாகவும் இருப்பதுபோல், இங்கு மூப்பர்களுக்கென்று மாத்திரம் அப்போஸ்தலனால் புத்திமதி கூறப்படவில்லை; அப்போஸ்தலன் "சகோதரர்களுக்கு" இவைகளைக் கூறுகின்றார், அதாவது முழுச்சபைக்கும், சகோதிரிகளையும் உள்ளடக்கிக் கூறுகின்றார். ஆனால் அதற்கென்று இவ்வாலோசனைகளானது, விசேஷமாக மூப்பர்களுக்குப் பொருந்தாது என்று அர்த்தமாகாது, ஏனெனில் மூப்பர்கள் என்பவர்கள் சகோதரர் மத்தியிலிருந்து கிறிஸ்தவ உபதேசத்திலும், அதை நடைமுறைப்படுத்துகின்ற விஷயத்திலும் மிகவும் முன்னேற்றம் அடைந்தவர்கள் என்று தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும், கர்த்தருடைய மந்தைக்கான நலனுக்கடுத்த விஷயங்களை விசேஷமாய்க் கவனித்துக்கொள்வதற்காகச் சபையின் பிரதிநிதிகளாகவும், தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகளானது, தேவனுடைய வழிநடத்துதலின் கீழ், அவருடைய மந்தைகளை மேய்க்கத்தக்கதாக, அவரது சபையின் மீது மேற்பார்வை பண்ணும் பொறுப்பைப் பெற்றுள்ள மூப்பர்களுக்கு விசேஷித்த அழுத்தத்துடன் கடந்து வருகின்றதாக இருப்பினும், இவ்வார்த்தைகளானது மந்தையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுக்கும், அவனவன் ஆற்றல் மற்றும் திறமைக்கு ஏற்ப பொருந்துகின்றதாயுள்ளது (அப்போஸ்தலர் 20:28). ஆகவே இங்குக் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளை நிறைவேற்றிடுவதற்கு அனைத்துச் சகோதர சகோதரிகளும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றாலும், இந்தக் கட்டளைகள் தொடர்புடைய விஷயத்தில் ஒவ்வொரு சபையிலுள்ள மூப்பர்களும், விசேஷித்தப் பொறுப்பினை உணர்ந்துகொண்டவர்களாகக் காணப்பட வேண்டும்; அதாவது சபையின் பிரதிநிதிகளென, சபைக்கான கொள்கைகளைச் சுமப்பவர்களெனத் தாங்கள் காணப்படும் ஸ்தானத்தினால் உண்டான பொறுப்பினை உணர்ந்துகொண்டவர்களாகக் காணப்பட வேண்டும்.

இங்கு ஒழுங்கில்லாதவர்கள் என்பவர்கள், திடனற்றவர்களிடமிருந்தும், பலவீனமானவர்களிடமிருந்தும் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளனர். தெய்வீக ஏற்பாடுகள் என்பது முழுக்க ஒழுங்கு உடையதாகவும், முழுக்கச் சுயாதீனம் உடையதாகவும் காணப்படுகின்றது; மேலும் இதனை சரியாகப் புரிந்து கொள்ளும் போது, ஒழுங்கின் மூலமாக, சுயாதீனமானது சிறந்த விதத்தில் பாதுகாக்கப்பட முடியும் மற்றும் தனிப்பட்ட சுயாதீனம் குறித்த நியாயமான அடையாளங்கண்டு கொள்ளுதலின் காரணமாக ஒழுங்கானது சிறந்த விதத்தில் தக்கவைத்துக் கொள்ளப்பட முடியும். ஆனால் பூமிக்குரிய சட்டங்களை இயற்றுபவர்களாலும், கண்டிப்பான ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பவர்களாலும் மாத்திரமல்லாமல், கிறிஸ்துவினுடைய சபையிலுங்கூட அடிக்கடி செய்யப்படும் தவறு, மிதமிஞ்சி செயல்படுவதேயாகும், அதாவது ஒழுங்கின் விஷயத்திலோ (அ) சுயாதீனத்தின் விஷயத்திலோ மிதமிஞ்சி செயல்படுவதேயாகும். சுயாதீனம் என்கிறபோது, சட்டத்திட்டங்களுக்கு உட்படாத நிலையில் காணப்படுவதை, ஒழுங்கீனமாய், தாறுமாறாக நடப்பதைக் குறிக்கின்றது எனச் சிலர் தவறாய்ப் புரிந்து கொள்கின்றனர். இன்னும் சிலர் நல்ல நோக்கங்களைக் கொண்டவர்களாக, மந்தையினுடைய தனிப்பட்ட சுயாதீனங்களைக் குறுக்கிப் போடுமளவுக்கு ஒழுங்குகளையும், கட்டளைக்குக் கீழ்ப்படிதலையும் செயல்படுத்துவதற்கு முற்பட்டுவிடுகின்றனர். இவ்விஷயத்தில், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் பிணக்குகளைத் தவிர்ப்பதற்கும், அன்பு மற்றும் சமாதானத்தினுடைய கட்டுகளினால், ஆவியில் ஒருமைப்பாட்டினைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் அதிகமான கிருபை அவசியமாய் இருக்கின்றது.

கர்த்தருடைய ஜனங்கள் கூடிடும் விஷயத்தில், ஒழுங்குகளை, விதிகளை,

பிரமாணங்களைப் புறக்கணித்துப் போடுமளவுக்கு, தனிப்பட்ட சுயாதீனம் குறித்த தவறான கருத்துக்களை உடையவர்களாக நாம் இருக்கக்கூடாது; ஒழுங்கில்லா தவர்களும் மற்றும் தங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொள்பவர்களும் மற்றும் சபை வேண்டிக்கொள்ளாத போதிலும் எதிலும் தலையிடுபவர் களுமானவர்கள் - கட்டுப்பாட்டில் வைக்கப்பட வேண்டும், புத்தி சொல்லப்பட வேண்டும் மற்றும் இவர்களது நடத்தை கர்த்தருடைய ஆவிக்கும், அவருடைய பிரதிநிதிகளாகிய அப்போஸ்தலர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் அனைத்திற்கும் எதிராக இருக்கின்றது என்று சுட்டிக்காண்பிக்கப்பட வேண்டும். மேலும் இவர்களது நடத்தையானது சபைக்கு ஆசீர்வாதமாகவும், சமாதானத்திற்கு, சந்தோஷத்திற்கு மற்றும் வளர்ச்சிக்கு ஏதுவானதாகவும் இருப்பதற்குப் பதிலாக, சபைக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கின்றது என்றும், இவர்களுக்கும் பாதிப்பாக இருக்கின்றது, அதாவது இவர்களது இத்தகைய நடத்தைகளானது, இவர்களுக்குள் ஏற்கெனவே அதிகமாகவே காணப்படும் சுயமதிப்பை (அ) சண்டைப்போடும் தன்மையை இன்னும் வளர்த்துவதற்கு ஏதுவாகி, இப்படியாகத் தேவனுக்குரிய காரணங்களுக்கு மாத்திரமாக பாதிப்பாய் இராமல், இன்னும் இராஜ்யத்தில் பங்கடைவதற்கு அவசியமான குணலட்சணத்தின் சாயலை இவர்கள் அடைவதற்குத் தடையாகக் காணப்படும் என்றும் இவர்களுக்குப் புத்திமதி கூறப்பட வேண்டும்.

இப்படியாகச் சிலருக்குப் புத்திகூறப்பட்டு, கட்டுப்பாட்டில் வைக்கப்பட வேண்டியதாயிருக்க, திடனற்றவர்களும், பலவீனமானவர்களுமான சிலருக்கு உதவிசெய்தலும், தாங்குதலும், உற்சாகமூட்டுதலும் அவசியமாய் இருக்கின்றது; இயல்பாகவே மந்தமானவர்களாகவும், தன்னம்பிக்கை இல்லாதவர்களாகவும், தன்னைப் பற்றி மதிப்பாய் எண்ணுதலிலும், போராடும் தன்மையிலும் குறைவுப்பட்டவர்களாகவும் இருப்பவர்கள் - இவர்கள் உற்சாகமடைவதற்கும், விசுவாச வீட்டார் முழுமையாய் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஏதுவாய் இவர்கள் உண்மையில் பெற்றிருக்கும் தாலந்துகளை வெளியே கொண்டுவருவதற்குக் கொஞ்சம் முன்னுக்கு வரத் தூண்டப்பட வேண்டும்.

"எல்லாரிடத்திலும் நீடிய (பொறுமையாயிருங்கள்) சாந்தமாயிருங்கள்" என்கிற வார்த்தைகளானது, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் நன்கு சீரான நிலைமையில் காணப்படுபவர்கள், மேற்கூறப்பட்டுள்ள (ஒழுங்கில்லாதவர்கள், திடனற்றவர்கள், பலவீனர்கள்) வகுப்பார்களிடத்தில் பொறுமையுடன் கூடிய சாந்தத்துடன் காணப்பட்டு, அவர்களை அனுதாபத்தோடு பார்த்திட வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; மேற்கூறப்பட்டுள்ள பலவீனர் களிடத்திலும், திடனற்றவர்களிடத்திலும் மாத்திரமல்லாமல், அனைவரிடத்திலும் மற்றும் அதிகமான துணிவும், சுய உந்துதலும் உடையவர்களிடத்திலுங்கூடப் பொறுமையுடன்கூடிய சாந்தத்துடன் காணப்பட்டு, அனுதாபத்துடன் பார்த்திட

வேண்டும். "பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்று வேத வாக்கியங்கள் திரும்பத்திரும்ப நமக்குப் புத்திமதி கூறுகின்றது மற்றும் இந்தத் தேவைப் பற்றின உண்மையை வளர்ந்துவருகிற கர்த்தருடைய பிள்ளைகள் நாளுக்குநாள் உணர்ந்துகொண்டு வருகின்றனர் மற்றும் பொறுமையானது, பிரதானமான கிறிஸ்தவ குணலட்சணங்களில் ஒன்றாக இருக்கின்றது என்பதையும் உணர்ந்துகொள்கின்றனர். (1) அறிவில் வளர்தல் என்பது, பொறுமை எனும் இப்பண்பில் நாம் வளர்வதற்கு உதவியாய் இருக்கின்றது, ஏனெனில் பரம பிதா நம்மிடத்தில் பொறுமையாய் இருப்பதைக் குறித்து நாம் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளும்போது, இதே கொள்கையை மற்றவர்களிடத்தில் செயல்படுத்துவதற்கு நமக்கு இந்த உணர்ந்துகொள்ளுதலானது உதவியாய் இருக்கின்றது. (2) நம்முடைய இனத்தின் மீது வந்துள்ள மாபெரும் துன்பத்தை, அதாவது நம்முடைய விழுந்துபோன நிலைமையை நாம் உணர்ந்துகொள்ளும் நிலைமைக்கு வரும்போது மற்றும் எவ்வாறு விழுகையானது சிலரை சில விதங்களில் அதிகமாய்ப் பாதித்துள்ளது என்றும், மற்றவர்களை வேறு விதங்களில் அதிகமாய்ப் பாதித்துள்ளது என்றும், அதாவது சிலரைப் பிரதானமாய் மன ரீதியிலும், சிலரைப் பிரதானமாய்ச் சரீர ரீதியிலும், சிலரைப் பிரதானமாய் ஒழுக்க ரீதியிலும் பாதித்துள்ளது என்று நாம் உணர்ந்துகொள்ளும் நிலைமைக்கு வரும்போது, இதினிமித்தம் நம்முடைய சகமனிதர்களிடத்திலான நம்முடைய அனுதாபம் பெருகுகின்றது மற்றும் அவர்களைக் கையாளும் விஷயத்தில் இப்படியாக நம்முடைய பொறுமையை அதிகரிக்கின்றது. இது விசுவாச வீட்டார் தொடர்புடைய விஷயத்தில் குறிப்பாய் உண்மையாகக் காணப்படுகின்றது; தேவன் கிருபையாய் அழைத்துள்ள விசுவாச வீட்டார் மத்தியிலுள்ள சிலர் அதிகம் குறைவுடையவர்களாகக் காணப்படுவதை நம்மால் பார்க்க முடிகின்றது; சில விஷயங்களில் அவர்கள் நம்மைக்காட்டிலும் குறைவுகள் உடையவர்களாகக்கூடக் காணப்படலாம், ஆனால் நாமோ வேறு சில விஷயங்களில் அவர்களைக் காட்டிலும் மிகவும் பூரணமற்றவர்களாய்க் காணப்படுகின்றவர்களாய் இருப்போம். நமது பரம பிதா ஒருவரில் கிருபை கூர்ந்து, அழைத்துள்ளார் என்ற கருத்தானது, அழைப்புத் தொடர்புடைய விஷயத்தில் கர்த்தரோடுகூட நாம் ஒத்துழைப்பதிலும், நம்மால் முடிந்தமட்டும், இடுக்கமான வழியில் நம்மோடுகூடக் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நடந்திடுவதற்கு நாடுபவர்களுக்கு உதவியாய் இருப்பதிலும், நம்மை மிகவும் கவனமாய் இருப்பதற்கு ஏவுகின்றதாய் இருக்கின்றது. ஆகவே சகோதர சகோதரிகளிடத்தில் நாம் விசேஷித்தப் பொறுமைகொண்டிருக்க வேண்டும் (உரோமர் 14:15; 1 கொரிந்தியர் 8:11).

"ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்." முற்காலங்களில் நமது கர்த்தருடைய பின்னடியார்களுக்கு எவ்வளவு தீமை செய்யப்பட்டது என்பதை நாம் நினைத்துப் பார்க்கும் போதே, மேற்கூறிய

புத்திமதி, விசேஷித்த ஆற்றல்மிக்கதாய்க் காணப்படும். தெசலோனிக்கேயா பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்கு நிருபங்களை எழுதின பவுலும், அப்பட்டணத்துப் பரிசுத்தவான்களும், கர்த்தருடைய வார்த்தைகளை, சுவிசேஷத்தை, ஜீவ வார்த்தைகளைப் பறைசாற்றுவதில் காண்பித்த உண்மையின் நிமித்தம் அநேகம் பாடுகள் பட்டவர்களாய் இருந்தனர். கர்த்தருடைய பின்னடியார்கள் தங்கள் சத்துருக்களுக்குப் பதிலுக்குப்பதில் தீமை செய்வதன் மூலமாக, அல்லது வேறு ஏதாகிலும் விதத்திலோ தங்கள் சத்துருக்களைப் பழிவாங்குவதற்கு முற்படக்கூடாது என்பதே மேற்கூறப்பட்டுள்ள புத்திமதிக்கான அர்த்தமாகும். நாம் அடைந்திட்ட தீமைக்கு, நன்மையையே நாம் பதிலாகச் செய்திட நாடிட வேண்டும் என்று கர்த்தருடைய அறிவுரை காணப்படுகின்றது; இந்தப் புத்திமதி நம்முடைய வார்த்தைகளையும், நம்முடைய நடத்தைகளையுங்கூட உள்ளடக்குகின்றது; நாம் பதிலுக்குப் பதில் வார்த்தைகளையோ, பழிச்சொற்களுக்குப் பழிச்சொற்களையோ, குற்றப்படுத்துதல்களுக்குக் குற்றப்படுத்துதல்களையோ, அவதூறுகளுக்கு அவதூறுகளையோ, அடிக்கு அடியையோ சரிக்கட்டுதல் கூடாது. இந்தப் புத்திமதியானது நம்முடைய சிந்தனைகளையுங்கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது, ஏனெனில் நாம் கோபத்திற்குக் கோபத்தையோ, குரோதத்திற்குக் குரோதத்தையோ, பொறாமைக்குப் பொறாமையையோகூடச் சரிக்கட்டக் கூடாது. இரண்டு தீமைகள் சேர்ந்து, ஒருபோதும் ஒரு நன்மையை உண்டுபண்ணிட முடியாது; இரண்டு தவறுகள் ஒருபோதும் ஒரு சரியான காரியத்தை உண்டுபண்ணிட முடியாது. குருடாக்கப்பட்டுள்ள நம்முடைய சத்துருக்களுக்காக அனுதாபங்கொள்வது என்பது, எண்ணத்திலும், வார்த்தையிலும் மற்றும் கிரியையிலும் அவர்களிடத்திலான நமது பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் வளர்த்திடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது (1 பேதுரு 2:21-23).

பழிச்சொற்களுக்கு, பழிச்சொற்களையோ அல்லது தீமைக்குத் தீமையையோ கர்த்தருடைய ஜனங்கள் சரிக்கட்ட முற்படாமல், "நன்மை செய்ய நாடிட வேண்டும்;" அதாவது கர்த்தர் அங்கீகரிக்கும் காரியங்களை, நன்மையான காரியங்களைச் செய்ய நாடிட வேண்டும். இது இராஜரிக ஆசாரியக் கூட்டத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும் தன்னால் முடிந்தமட்டும் நீதியானவைகளைச் செய்ய நாடுவதை, அதாவது நல்ல மற்றும் உயர்வான உணர்வுகள் அனைத்தையும் கொண்டிருக்க நாடி, கர்த்தரில் உதாரணமாய் விளங்கும் பரிபூரணத்தின், நீதியின் உயர்வான கொள்கைகளுக்கு ஏற்ப முடிந்தமட்டும் வாழ நாடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நன்மை செய்வதற்குரிய இந்த நாடுதலானது, இதே நாடுதலையுடைய சகோதர சகோதரிகள் மத்தியில் மாத்திரம் செயல்படுத்தப்படாமல்/தக்கவைக்கப்படாமல், இன்னுமாக மற்றவர்களாகிய உலகத்தாருடனான நம்முடைய கையாளுதலின் விஷயத்திலும் செயல்படுத்தப்பட வேண்டும். உலகத்திலுள்ள சிலர், நாம் கூறும் காரியங்களைக்காட்டிலும், நாம் தீமையைத்

தவிர்ப்பதையும் மற்றும் நீதியை, நன்மையைச் செய்ய நாம் தொடர்ந்து நாடுவதையும் காணுவதன் மூலமாக சுவிசேஷத்தை அதிகமாய்க் கற்றுக்கொள்கின்றவர்களாகக் காணப்படுகின்றனர்; மேலும் இப்படிப்பட்டவர்கள் நமக்குள் இருக்கும் புதிதான ஜீவனைக் கண்டுபிடிக்கும்போது, நமக்கு இத்தகைய மாற்றத்தினைக் கொண்டுவந்திட்ட சுவிசேஷத்தின் செய்தியினைக் கேட்பதற்குரியச் செவியினைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்குப் படிப்படியாக வருவதற்கு வாய்ப்புண்டு.

அப்போஸ்தலனுடைய இந்த ஆலோசனையை உலகத்தின் ஆவியானது அங்கீகரிப்பதில்லை, மாறாக நம்மை எப்படி மற்றவர்கள் நடத்துகின்றார்களோ, அப்படியே நாமும் மற்றவர்களை நடத்திட வேண்டும் என்றும், நமக்குச் செய்யப்படுகின்ற நன்மைக்கு ஏற்ப நன்மைசெய், இன்னுமாக நமக்குச் செய்யப்படுகின்ற தீமைக்கு ஏற்ப தீமை செய் என்றும் வலியுறுத்துகின்றது. உலகத்தின் ஆவியை உடையவர்கள் சிலசமயம் கர்த்தருடைய பின்னடியார்களைக் கோழைகள் என்று பழிச்சுமத்துகின்றனர். தைரியம் என்பது மனுஷீகத்தினுடைய தலைச்சிறந்த பண்புகளில் ஒன்றாகும்; மேலும் தங்களைக் கோழைகள் அல்லது தைரியமற்றவர்கள் என்று மற்றவர்கள் கருதுவது என்பது சிலருக்கு மிகவும் சோதனையான விஷயமாகக் காணப்படுகின்றது; மேலும் வார்த்தையிலும், கிரியையிலும் உணர்ச்சிவசப்படாமல், கட்டுப்பாட்டுடன் காணப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ள காரியமானது, இத்தகையவர்களுக்கு இன்னும் சோதனையான காரியமாக இருக்கின்றது. கர்த்தருடைய ஆலோசனையானது, கோழைத்தனத்திற்கு (அ) தைரியமின்மைக்கு ஏதுவானது என்று சொல்லப்படுவது உண்மையல்ல. இக்காரியம் குறித்து இன்னொரு ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"கிறிஸ்துவினாலும், அவரது அப்போஸ்தலர்களாலும் ஸ்தாபிக்கப்பட்ட (கிறிஸ்தவ) சமுதாயத்தில் வெட்ட வெளிச்சமாய்க் காணப்படும் ஓர் அம்சமானது, மரணம் மற்றும் சித்திரவதையின் தருணத்தில், ஆண்களால் மாத்திரமல்லாமல், பலம் குறைந்த பெண்களாலும், சிறுபிள்ளைகளாலும் வெளிப்படுத்தப்பட்ட அசாதாரணமான வீரமாகும். இந்த வீரமானது தத்துவ ஞானத்தின் உதவியினால் மனவலிமையை அடைய நாடிக்கொண்டிருக்கும் புறஜாதி நீதிபதிகளை வியப்பிற்குள்ளாக்கியுள்ளது. போர்புரிவதற்குப் படையெடுத்து வருபவர்களைக் காட்டிலும், சுவிசேஷத்தைக் கொண்டுவரும் ஊழியக்காரர்களையே பயமுறுத்துவதற்குக் கடினம், என்று கண்டுபிடித்த பயங்கரமான காட்டுமிராண்டி கள்கூட வியப்படைந்து, அவர்களது சாந்தத்தை, கோழைத்தனம் என்று தவறாய்ப் புரிந்துகொண்டனர். மூர்க்கத்தனமாய் எதிர்ப்பதைப்பார்க்கிலும், அமைதியாய்ச் சகித்தல் என்பதே மிகவும் வீரமான காரியமாகும்; மேலும் தன்மீது வரும் அவமதிப்பு மற்றும் கெடுதல்களைச் சாந்தமாய்ச் சகித்துக்கொள்ள வேண்டும் என்பதான

கிறிஸ்தவ பிரமாணமானது, உச்சக்கட்டமான தைரியத்தையும், உண்மையான வீரத்தையும் வளர்த்துவதற்கு உதவுவதாக இருக்கின்றது. இந்தப் பிரமாணத்திற்கு ஏற்ப வாழ்வதைக் காட்டிலும், வேறு எதுவும், சரித்திரம் முழுவதிலும் மிகவும் தைரியமான காரியமாகவும், மிகவும் வீரமான காரியமாகவும் இருக்காது.”

“எப்போதும் சந்தோஷமாயிருங்கள்” என்ற இதே புத்திமதியை அப்போஸ்தலன், பிலிப்பு பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்கும் கொடுத்திட்டார். கிறிஸ்தவனுடைய சந்தோஷம் என்பது உணர்ச்சிகளின் கோளாறினால் ஏற்படாமல், மாறாக நிலைவரமான கொள்கைகளின் அடிப்படையிலும், ஜீவியத்தின் சகல புயல்காற்றுகள், சோதனைகள் மற்றும் அதிர்ச்சிகளின் மத்தியில் உறுதியாய் நிற்கின்ற தெய்வீக வார்த்தைகளுடைய ஆறுதலளிக்கும் நிச்சயங்கள் மற்றும் வாக்குத்தத்தங்களின் அடிப்படையிலும் ஏற்படுகின்ற சந்தோஷமாகும்.

“இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்.” கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கொஞ்சம் வளர்ச்சியடைந்த வர்களாகக் காணப்படும் மாணவர்கள் மாத்திரமே, மேற்கூறப்பட்டுள்ள இந்தப் புத்திமதியைத் தெளிவாய்ப் புரிந்துகொள்வதற்கு ஆயத்தமாய்க் காணப்படு கின்றனர். கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் சித்தங்களையும், தற்கால ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களையும் கர்த்தரிடத்தில் ஒப்படைத்துவிட்டவர்களாகவும், பரத்திற்குரிய காரியங்களுக்காகப் பூமிக்குரிய காரியங்களை விட்டுக் கொடுப்பவர்களாகவும் காணப்படுவதினால், மற்றவர்களைப் போன்று இவர்கள் இடைவிடாமல் பூமிக்குரிய நன்மையான காரியங்களுக்காக ஜெபம்பண்ணு வதில்லை. இவர்கள் பரத்திற்குரியவைகளை நாடுவதினால், இவர்களுடைய ஜெபமும் ஆவிக்குரிய காரியங்கள் தொடர்புடையதாகவே இருக்கின்றது; அதாவது பரம வஸ்திரம், பரம உணவு, பரம தயவு தொடர்புடையதாகவே இருக்கின்றது. தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்குச் சிறந்ததெனக் கிருபை நிறைந்த கர்த்தர் கருதி, அனுமதிக்கும் அனுபவங்களில், எப்போதும் தாங்கள் சந்தோஷமாய்க் காணப்படுவதற்குத் தங்களுக்குத் தெய்வீகக் கிருபையினுடைய அத்தகைய ஓர் உதவி வேண்டும் என்றும், அத்தகைய ஒரு தெய்வீக வழிநடத்துதல் வேண்டும் என்றும்தான் இவர்களது ஜெபங்கள் விசேஷமாய்க் காணப்படுகின்றது. ஏற்கெனவே பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காகவும், இனிமேல் வரப்போகின்றதும், விசுவாசத்தின் கரங்களினால் இவர்கள் கைப்பற்றிக் கொண்டதுமான ஆசீர்வாதங்களுக்காகவும் ஏறெடுக்கப்படுகின்ற ஸ்தோத்திரங்களினால், இவர்களது ஜெபங்கள் அதிகமதிகமாய் நிரம்புகின்றது.

இவர்கள் இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறவர்களாய் இருக்கின்றார்கள் என்பது, இவர்கள் கர்த்தருடன் ஐக்கியம் கொண்டுள்ள நிலையிலும், அவருடைய சித்தம் செய்வதற்கென முழுமையாய் அர்ப்பணிக்கப்பட்டுள்ள நிலையிலுமுள்ள இருதயத்தின் நிலையைக்கொண்டிருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது;

அதாவது ஒவ்வொரு நாளினுடைய ஆரம்பத்தில் இவர்கள் அவரது ஆசீர்வாதத்தை மன்றாடிக் கேட்பவர்களாயும், நாளின் இறுதியில் தங்கள் நன்றியை/ ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றவர்களாயும் மாத்திரம் காணப்படாமல், மாறாக ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும், தாங்கள் தங்களுடைய அனைத்தையும் கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணியுள்ளதை நினைவில் கொண்டிருக்க நாடி, ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும், விசுவாசத்தின் மூலம் அவரை ஏறெடுத்துப் பார்க்கின்றவர்களாயும், விசுவாசத்தின் மூலம் ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் தேவனுடைய பராமரிப்பிற்குத் தொடர்பு இருப்பதை உணர்கின்றவர்களாகவும், அதற்கு நன்றி செலுத்துபவர்களாயும் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படிச் செய்வதே நம்மைக்குறித்த தேவனுடைய சித்தமாயிருக்கிறது; இப்படியாக நாம் தொடர்ந்து அவரது சித்தத்திற்காகவும், அவரது ஆசீர்வாதத்திற்காகவும் அக்கறை காட்டும் மனநிலையில் ஜீவிப்பது அவரது சித்தமாய் இருக்கின்றது; இப்படியாக நாம் காணப்படுவதற்கு அவர் சித்தங்கொண்டிருப்பதற்கான காரணம், இப்படியாகக் காணப்படும் நிலைமையே, இடுக்கமான வழியில் நம்முடைய முன்னேறுதலுக்கான மிகுந்த அனுகூலமான / சாதகமான நிலைமையாகவும், நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நமக்குச் சிறப்பாய் உதவக்கூடிய நிலைமையாகவும் இருக்கின்றது என்பதினாலேயே ஆகும்.

கர்த்தரிடத்திலான சபையின் சரியான மனநிலையானது, எப்பொழுதும் சந்தோஷமாயிருத்தலாகவும், இடைவிடாமல் ஜெபம்பண்ணுதலாகவும், ஸ்தோத்திரஞ்செலுத்துதலாகவும், அவரது வழிநடத்துதல்களை ஏற்றுக்கொள்ளுத லாகவும் காணப்பட வேண்டும் என்று சுருக்கமாகக் கூறிவிட்டப் பிற்பாடு, அடுத்ததாக அப்போஸ்தலன் சபையார், கர்த்தருடைய வார்த்தைகளை ஒன்றுசேர்ந்து புசிக்கையில் சபையார் ஒருவரிடத்தில் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மைக் குறித்துச் சுருக்கமாய்ப் புத்திமதி கூறும் வண்ணமாக,

"ஆவியை அவித்துப்போடாதிருங்கள்.
தீர்க்கத்தரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள்.
எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.
பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்"
என்று கூறுகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:19-22).

இந்தப் புத்திமதிகளைப் பின்பற்றுவதன் வாயிலாக, கர்த்தரிடத்திலான சபையின் ஐக்கியமானது, மிகவும் நன்மை உண்டாக்குகின்றதாக இருக்கும் மற்றும் கர்த்தருடைய பின்னடியார்களாகிய சபையார் தாங்கள் அழைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான கொள்கையினிடத்திற்கு நேராக அதிகம் முன்னேறுவதற்கு உதவப்படுவார்கள். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் கர்த்தருடைய

ஆவியானது, கர்த்தர் மற்றும் அவரது நோக்கங்கள் தொடர்புடைய அனைத்திற்குமான "புனிதமான அன்பின் ஜூவாலைக்கு" ஒப்பிடப்படுகின்றது; இந்த ஜூவாலையானது ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினரிலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகையில், தெய்வீகச் செய்தியின் மூலம் நெருப்பு மூட்டப்படுகின்றது மற்றும் இப்படியாக இந்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ், முழுச்சபைக்கும் இந்த ஜூவாலையானது உரியதாகுகின்றது. சபையார் அறிவிலும், அன்பிலும், கர்த்தருடனான ஐக்கியத்திலும் எவ்வளவாய் வளர்கின்றார்களோ, அவ்வளவாய்ப் "புனிதமான அன்பின் இந்த ஜூவாலையானது," சபையாரை உலகத்தில் வெளிச்சமாக, மறைக்கப்பட முடியாத மலை மீதுள்ள பட்டணமாக ஆக்குகின்றது. அழிவின் அடையாளமாக வழக்கமாகப் பயன்படுத்தப்படும் நெருப்பு/ஜூவாலையானது, இங்கு வேறு அர்த்தமுள்ள அடையாளமாகக் காணப்படுகின்றது.

புனிதமான அன்பின் ஜூவாலையானது, பாவத்தைப் பட்சிக்காது மற்றும் அழிக்காது என்பது உண்மைதான், மாறாக அது பாவத்தின் நிமித்தம் அனுதாபம் கொள்கின்றது; பாவமானது, புதிய சிருஷ்டியினுடைய பாகம்/அம்சம் அல்ல; புதிய சிருஷ்டியானது பாவத்தை எதிர்க்கின்றது மற்றும் அதை அழித்திடுவதற்கு முற்படுகின்றது; அதாவது நீதி மற்றும் சத்தியத்தின் வெளிச்சமானது மிகவும் பிரகாசிக்கத்தக்கதாய்ப் பாவத்தை அழித்துப்போட விரும்புகின்றது. "புனிதமான அன்பின் இந்த ஜூவாலையானது" நம்முடைய அழிவுக்கேதுவான சரீரங்களை, சத்தியத்திற்கடுத்த ஊழியங்களில் ஜீவப்பலியெனப் பட்சித்துப்போடுகின்றது. மேலும் இப்படியான பட்சித்துப்போடுதல்களுக்குப் புதிய மனமானது முழு இசைவுடன் காணப்படுகின்றது மற்றும் பரலோகத்தில் தனக்கு நித்தியமான குடியிருப்பு இருப்பதைப் புதிய மனமானது உணர்ந்துகொண்டு களிகூருகின்றது மற்றும் கர்த்தருடைய நோக்கங்களுக்காகப் பாடுபடுவதற்குப் பாத்திரமாய்க் கருதப்பட்டதை எண்ணி புதிய மனமானது சந்தோஷப்படுகின்றது. "புனிதமான அன்பின் இந்த ஜூவாலையானது" தனித்தனியாகப் பரிசுத்தவான்களிடத்திலும், ஒட்டுமொத்த சபையார் அனைவரிடத்திலும் அதிகமாய் எரியும்போது, அனைத்து நற்காரியங்களிலுமான வளர்ச்சியும் அதிகமாய்க் காணப்படும். ஆகையால் நமது வார்த்தைகள், நடத்தைகள், சீயோனுடைய நலனுக்கடுத்த பொதுவான பொறுப்புகள் ஆகியவை, நம் அனைவரின் இருதயங்களிலும், ஜீவியங்களிலும் இந்த அன்பின் ஆவியானது சுதந்தரமாய் இயங்குவதற்கு அனுமதிப்பதற்கு நாம் விசேஷமாய் விழிப்புடன் காணப்பட வேண்டும்; மேலும் இந்த அன்பின் ஆவியானது தவறான உபதேசங்களினால் (அ) சடங்காச்சாரங்களினால் (அ) மிகவும் கடுமையான சட்டங்களினால் (அ) உலகத்தின் ஆவியினால் (அ) இந்த ஜீவியத்திற்கடுத்தக் கவலைகளினால் (அ) வேறு ஏதாகிலும் காரியங்களினால் (அ)

நம்முடைய சூழ்நிலைகள் (அ) நிலைமைகளினால் அவித்துப் போடப்படாமல் இருப்பதற்கும் நாம் விசேஷமாய் விழிப்புடன் காணப்பட வேண்டும்.

சபையார் தீர்க்கத்தரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருக்க வேண்டும்; முற்காலத்துப் பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசின தீர்க்கத்தரிசனங்களை நாம் அற்பமாய் எண்ணாதிருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை, மற்றும் இப்படியாகச் சபையாருக்கு எச்சரிப்பு வழங்குவதற்கும் அவசியமில்லை. நம் மத்தியில் கூறப்படும் தீர்க்கத்தரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருக்க வேண்டும் என்பதாகவே புத்திமதி கூறப்பட்டுள்ளது. நாம் முன்னமே பார்த்திருக்கிறபடி, வரவிருக்கும் சம்பவங்களைப் பற்றி முன்னறிவிக்கும் தீர்க்கத்தரிசன வரமானது, கர்த்தரால் ஏவப்பட்டுக் கூறப்படும் செய்திகள் இல்லாதக் காலங்களில், கர்த்தருடைய ஜனங்களை ஸ்திரப்படுத்த உதவும்படிக்கு, அப்போஸ்தலனின் நாட்களில், சபையில் காணப்பட்ட ஆவியின் வரங்களில் ஒன்றாக இருந்தது. “தீர்க்கத்தரிசனம்” எனும் இந்த வார்த்தையை அப்போஸ்தலன் அடிக்கடி, பொதுவிடங்களில் பிரசங்கித்தல், பொதுவிடங்களில் போதித்தல் தொடர்பாகப் பயன்படுத்துவதை நாம் பார்க்கின்றோம். ஆதி திருச்சபையினர் ஒருவருக்கொருவர் உதவிடுவதற்கும், கட்டியெழுப்புவதற்குமெனப் பொதுவான கூடுகைகள் கூடிக்கொள்ளும் வழக்கத்தை உடையவர்களாய் இருந்தனர் மற்றும் இவர்கள் சத்தியம் தொடர்புடையதான வாதம் முறையிலான பிரசங்கங்களைக்காட்டிலும், அற்புதங்கள் மற்றும் அந்நிய பாஷையில் பேசும் வரங்களைக் குறித்து அதிகமாய் எண்ணிக்கொள்வதற்குரிய அபாயத்தில் காணப்படுவதற்குரிய வாய்ப்பு இருந்தது. மற்ற ஆசீர்வாதங்களை ஒதுக்கித் தள்ளாமலும், இந்தத் தீர்க்கத்தரிசனத்தை அற்பமாய் எண்ணாதிருக்கவும் வேண்டும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்; நமது கர்த்தர் ஒரு பிரசங்கியாகவும், அப்போஸ்தலர்கள் பிரசங்கிகளாகவும் இருந்தார்கள் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மத்தியில் போதகர்களை எழுப்பி வருகின்றார் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். ஆகையால் இம்மாதிரியான ஊழியமானது, அற்பமாய் எண்ணப்படக்கூடாது (அ) புறக்கணிக்கப்படக்கூடாது.

இவ்விஷயத்திற்கு நேர்மாறான ஒரு காலப்பகுதியில் நாம் வாழ்கின்றவர்களாய் இருக்கின்றோம்; பிரசங்கிப்பதற்கு மிக அதிகமான நேரத்தையும், மிக அதிகமான கவனத்தையும் கொடுத்தும், ஆனால் சத்தியத்தை மனதில் ஆழமாய்ப் பதியவைப்பதற்கும், கர்த்தருடைய மந்தையை ஊக்கப்படுத்துவதற்கும், “மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், பக்திவிருத்திப்பண்ணுவதற்குமுரிய” மற்ற வழிமுறைகளுக்குப் போதுமான நேரமும், கவனமும் கொடுக்காமலும் இருக்கும் அபாயமுள்ள காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்; வழிநடத்துபவர்கள் மீதும் மற்றும் அவர்கள் கொடுக்கும்

சத்திய தூதுகளின் மீதும் அதிகமாய்ச் சார்ந்திருக்கும் அபாயமுள்ள ஒரு காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்." கர்த்தருடைய ஜனங்கள் தீர்க்கத்தரிசனங்களுக்கு அல்லது பொதுப்பிரசங்கித்தல்களுக்கு மதிப்புக்கொடுக்கும் நிலைக்கு வந்திட்டாலுங்கூட, அவர்கள் கேட்கிற எதையும், சரியான திரனாய்வு மற்றும் ஆராய்ந்துகொள்ளுதல் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது எனும் காரியத்தையும் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் கேட்கின்ற யாவையும் சோதித்துப் பார்க்க வேண்டும்; எவைகள் காரணகாரியத்திற்கு உட்பட்டது, வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றது என்றும், எவைகள் எல்லாம் வெறும் ஊகங்கள், தவறான வாதங்கள் என்றும் அறிந்துகொள்வதற்கு, மனதின் வேற்றுமை கண்டறியும் திறன் செயல்படுத்தப்பட வேண்டும். தெய்வீக வார்த்தைகளுடைய பரீட்சைகளில் நிலைநிற்பவைகளும், பரிசுத்த ஆவிக்கு இசைவானதென நிரூபணமாகுபவைகளுமாகிய அனைத்தையும் பற்றிக்கொள்ள வேண்டும் என்றும், இந்தப் பரீட்சைகளில், தோற்றுப்போகும் எதையும் உடனடியாகவும், முழுமையாகவும் தள்ளிவிட வேண்டும் என்றுமுள்ள கண்ணோட்டத்தில் கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் கேட்கும் காரியங்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும். அந்தோ! இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்கள் இந்தப் புத்திமதிக்குக் கவனம் செலுத்துவது பெரிதும் அவசியமாய்க் காணப்படுகின்றது; ஏனெனில் காரணகாரியத்திற்கு உட்படாதவைகளாகவும், வேதவாக்கியங்கள் அங்கீகரியாததாகவும் தேவனுடைய வார்த்தைகளின் எழுத்தோ (அ) ஆவியோ ஆதரிக்காததாகக் காணப்படும் அநேகம் விஷயங்கள் கர்த்தருடைய நாமத்தில் அவருடைய வார்த்தைகளின் போதனைகள் என்று முன்வைக்கப்படுகின்றது; நலமானது அல்லாதவைகள் புறக்கணிக்கப்பட வேண்டும். இப்படியாக வேறுபடுத்திப் பார்க்கும் காரியங்களானது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் மத்தியில் காணப்படுமாயின், பெயரளவிலான கிறிஸ்தவ ஆச்சாரங்களுடைய பதர்கள் எவ்வளவு புறக்கணிக்கப்பட்டிருக்கும் மற்றும் பரீட்சைகளில் நிலைநிற்கிறதுமான, தேவனுடைய நல்வார்த்தைகளுக்காக எத்தகைய ஒரு தாகமும், பசியும், தேடுதலும் காணப்பட்டிருக்கும்! இவ்விஷயம் குறித்த அப்போஸ்தலனுடைய புத்திமதிக்கு நாம் உண்மையாய்ச் செவிக் கொடுப்போமாக.

"எல்லா வகையான தீமைகளையும் விட்டு விடுங்கள்" [திருவிவிலியம் சரியான மொழிப்பெயர்ப்பு] பல்வேறு விதமான பொல்லாங்குகள் நம்முன் கடந்துவருகின்றன; இவைகளில் சில அதற்கே உரிய பயங்கரமான தோற்றத்திலும், சில போலியான வேஷம் தரித்தும் காணப்படுகின்றன. அதாவது அதற்கே உரிய பொல்லாப்பினையும், கர்த்தருடைய ஜனங்களைப் பாவத்திற்குள் சிக்கவைப்

பதற்கான முயற்சியையும் வெளியரங்கமாகவே காட்டும் சில பொல்லாப்புகள் காணப்படுகின்றன; மற்றவகை பொல்லாப்புகளோ ஒளியின் தூதர்களைப் போன்று காண்பித்துக்கொண்டு, தவறாய் வழிநடத்திடுவதற்கும், வஞ்சிப்பதற்கும் நாடுகின்றன. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும், அது நன்மையின் தோற்றத்திலோ (அ) தீமையின் தோற்றத்திலோ எப்படியாகக் காணப்பட்டாலும் சரி, அவைகள் எதிர்க்கப்பட, புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதே புத்திமதியாக இருக்கின்றது. "நன்மை உண்டாகத்தக்கதாக, நாம் தீமை செய்யலாம்" என்று நாம் சொல்லக்கூடாது. எந்தச் சூழ்நிலையாயினும் சரி, அனைத்திலும் கர்த்தருடைய ஜனங்கள் நீதியின் கொள்கைகளுக்கு உண்மையாய்க் காணப்பட வேண்டும். இதற்கு மாறாக செயல்படுவார்களானால் அவர்கள் கட்டுவதற்கு நாடும் குணலட்சணங்களை வலுவற்றதாக்கிப் போடுபவர்களாய் நிச்சயம் காணப் படுவார்கள்.

"பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" என்பது இன்னொரு கருத்தாகும்; அதாவது இக்கருத்தானது, அப்போஸ் தலனுடைய வார்த்தைகளின் உண்மையான கருத்தினின்று வேறுபட்டதாய் இருப்பினும், இக்கருத்துத் தெளிந்த புத்தியுள்ள கொள்கையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. பொல்லாங்கானவைகள் எத்தகைய வடிவிலோ (அ) தோற்றத்திலோ காணப்பட்டாலும், அதை நாம் நிச்சயமாய் விட்டுவிலக வேண்டியது மாத்திரமல்லாமல், நன்மையானவைகள் என்று நாம் அறிந்திருப்பதும் மற்றும் நம்முடைய நண்பர்களால் (அ) அயலகத்தாரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப் படுவதற்கும், தீமையானவைகள் என்று கருதிக்கொள்வதற்கும் வாய்ப்புள்ள வைகளை நாம் முடிந்தமட்டும் விட்டுவிலகிட வேண்டும். கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவுமான நமது செல்வாக்கு அதிகமாய்க் காணப்படத்தக்கதாக, தெளிந்த புத்தியுள்ள மனமானது, எல்லா வகையான தீமைகளை மாத்திரமல்லாமல், பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகும்படிக்கு ஆணையிடுகின்றது.

நிறைவாக, அப்போஸ்தலன் தனது ஆசியை வழங்குகின்றார். இது ஒரு பிராத்தனையாகும்; அதாவது அவர்கள் சார்பிலான, அவரது இருதயத்தினுடைய வாஞ்சையின் வெளிப்படுத்தலாகும்; அதாவது சமாதானத்தின் தேவன்தாமே அவர்களை முற்றிலும் பரிசுத்தமாக்கும்படியான அப்போஸ்தலனுடைய இருதயத்தின் வாஞ்சையினுடைய வெளிப்படுத்தலாகும். இவ்விதமாக தேவன் கலகத்திற்கு, குழப்பத்திற்கு, கிளர்ச்சிக்குத் தேவனாயிராமல், மாறாக சமாதானத்தின் தேவனாய் இருக்கின்றார் என்றும், எந்தளவுக்கு நாம் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் அவரால் போதிக்கப்படுகின்றோமோ, அவ்வளவாய் நாம் சமாதானத்தை விரும்புபவர்களாகுவோம் மற்றும் தேவனுடைய சமாதானமானது நம்மில் வாசமாயிருந்து, நம்மில் அதிகமதிகமாய்ப் பெருகி, பரிசுத்தமான

குணலட்சணம் தொடர்புடைய விஷயத்தில் நம்மைக் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது மற்றும் நம்முடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் நம்மைச் சமாதானத்திற்கு ஆதரவாளர்களாக ஆக்குகின்றது என்றுமுள்ள உண்மையை அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9). இருதயத்தில் காணப்படும் சமாதானமானது, பார்வையிலும், வார்த்தையிலும் மற்றும் நடத்தையிலும் வெளிப்படுவது என்பது முற்றிலுமான பரிசுத்தமாகுதலுக்கும்/ஒப்புக்கொடுத்தலுக்கும் சாட்சியமாக இருக்கின்றது என்றும், இப்படியான பரிசுத்தமாக்கப்பட்ட இருதயத்திற்குள் தேவனுடைய ஆவியானது கடந்துவந்து எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமாகிய, அவருடைய சமாதானத்தினால் இருதயத்தை நிரப்புகின்றது என்பதற்கும் சாட்சியமாக இருக்கின்றது என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

"உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக." இங்கு அப்போஸ்தலன் ஒட்டுமொத்த சபையைக் குறிப்பிடுகின்றாரே ஒழிய, தனிப்பட்ட அங்கத்தினர்களை அல்ல; ஏனெனில் தெசலோனிக்கேயா பட்டணத்துப் பரிசுத்தவான்கள் மாத்திரம் கர்த்தருடைய பிரசன்னத்தின் நாட்கள் வரை உயிரோடு இருப்பார்கள் என்றோ, தான் அக்காலம்வரை உயிரோடு இருப்பார் என்றோ அப்போஸ்தலன் நிச்சயமாய் எதிர்ப்பார்க்கவில்லை (2 தீமோத்தேயு 4:7-8; 2 பேதுரு 1:12-15). தெசலோனிக்கேயா பட்டணத்து ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனுடைய ஆவி மற்றும் ஆத்துமா மற்றும் சரீரம் குறித்து அப்போஸ்தலன் இங்குக் குறிப்பிடாமல், மாறாக சபையினுடைய ஆவியைக் குறித்தும், சபையினுடைய சரீரத்தைக் குறித்தும் மற்றும் சபையினுடைய ஆத்துமாவைக் குறித்தும் குறிப்பிடுகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தெசலோனிக்கேயா பட்டணத்துச் சபை, சுவிசேஷ யுகம் முடிவு வரையிலும், கர்த்தருடைய ஆவியில் நிறைந்து, அவருக்கடுத்த வேலையில் தைரியம் கொண்ட, சிறந்த மற்றும் உண்மையுள்ள சபையாக தொடர்ந்து காணப்பட வேண்டும் என்பதே அப்போஸ்தலனின் வாஞ்சையாக இருந்தது. ஆனால் அப்போஸ்தலனின் இந்த நல்வாஞ்சைகள் (அ) ஜெபங்கள் நிறைவேறவில்லை என்பதை நாம் அறிவோம்; ஏனெனில் அப்போஸ்தலன் ஸ்தாபித்திட்ட மற்றச் சபைகள் போன்று, இந்தச் (தெசலோனிக்கேயா) சபையும் இல்லாமல் போயிற்று; அதாவது அப்போஸ்தலனுடைய அறிவுரைகளுக்கும், புத்திமதிகளுக்கும் போதுமான கவனம் செலுத்தாமலும், எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்காமலும், நலமானதைப் பிடித்துக்கொள்ளாமலும், பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகாமலும், முற்றிலும் பரிசுத்தமாகாமலும், தங்கள் மத்தியிலான கர்த்தருடைய ஆவியை

அவித்துப்போட்டும் இருந்து, ஒரு சபையாராக இல்லாமல் போய்விட்டனர்; ஒளியானது ஆசீர்வதித்து, உறுதிப்படுத்தின சிலரோ, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை" நாடினவர்களாக மற்றப் பட்டணங்களுக்குக் கடந்துபோனார்கள்.

"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" (1 தெசலோனிக்கேயர் 5:24). தெசலோனிக்கேயா பட்டணத்துச் சபையானது, அப்போஸ்தலனுடைய பிராத்தனைக்கு ஏற்றப்படி நீடிக்கவில்லை என்பதற்குக் காரணம், தேவன் உண்மையற்றவராகக் காணப்பட்டார் என்பதாக இராமல், மாறாக அப்போஸ்தலனின் அறிவுரைகளைப் பெற்றவர்கள் (அ) அச்சபையில் அவர்களுக்குப் பின் வந்தவர்கள் உண்மையற்றவர்களாகவும், புத்திமதிகளைப் புறக்கணித்தவர்களாகவும் காணப்பட்டதேயாகும். இப்படியாகவே கர்த்தரால் அழைக்கப்பட்ட நம் ஒவ்வொருவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. நாம் நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த வேண்டுமென்றால், நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மூலமான அவரது செய்தியைக் கேட்டு, செவிக்கொடுக்க வேண்டும். அவர் அனுப்பின வழியில் வரும் செய்தியை நாம் கேட்கவில்லையெனில், தவறு நம்மிடத்திலேயே உள்ளது. நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராக இருக்கின்றார் மற்றும் நாம் அவரது ஏற்பாடுகளை விசுவாசத் தினால் ஏற்றுக்கொண்டு, அவரது வார்த்தைகளினுடைய வழிநடத்துதல்களைப் பின்பற்றுவோமானால், நாம் கேட்டுக்கொள்வது (அ) எண்ணுவதைக் காட்டிலும் அதிகமான மேன்மையான காரியங்களை நமக்குச் செய்வதில் தேவன் களிகூருகின்றவராய் இருக்கின்றார்.

"சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" (1 தெசலோனிக் கேயர் 5:25). அப்போஸ்தலனிடம் போப் அல்லது ஆண்டவன்மார்களின் எக்காரியமுமில்லை; கர்த்தருடைய மந்தையின் அனுகூலங்களுக்காக, தான் ஜெபம் ஏறெடுப்பதாகவும், ஆனால் தனக்கு அவர்களுடைய ஜெபங்கள் தேவையில்லை என்பதாகவுமுள்ள எந்த பெருமிதமான எண்ணங்கள் அப்போஸ்தலனிடம் இல்லை. இப்படியான ஆவியே, கர்த்தருடன் சரியான உறவுகொண்டிருக்கும் அனைவரிடமும் காணப்படுகின்றது; அதாவது தாழ்மையின் ஆவியும், விசுவாச வீட்டார் அனைவரையும் மற்றும் கிருபையின் சிங்காசனத்தினிடத்திலான அவர்களது வேண்டுதல்களையும் பற்றியதான ஓர் உணர்ந்துகொள்ளுதலும், கர்த்தருடன் சரியான உறவுகொண்டிருக்கும் அனைவரிடமும் காணப்படுகின்றது; அதாவது கர்த்தருடைய ஜனங்களிலேயே மிகவும் எளியவருக்கு, பரம கிருபையின் சிங்காசனத்தினிடத்திற்குச் செல்ல முடியும் என்றும், தேவையின் நேரங்களில் உதவிடுவதற்குரிய பலத்தைக் கண்டடைந்து, இரக்கத்தை அடைய முடியும் என்றுமுள்ள உணர்ந்துகொள்ளுதல் கர்த்தருடன் சரியான உறவுகொண்டிருக்கும் அனைவரிடமும் காணப்படுகின்றது.

“சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்” (1 தெசலோனிக்கேயர் 5:26). கைகளைக் குலுக்குதல் அல்லது வணக்கம் செய்தலாகிய தற்போதைய வழக்கத்திற்கு ஒத்த வழக்கத்தில், வரவேற்கும் ஆதிகால வழக்கமே இவ்வசனத்தில் குறிப்பிடப்படுகின்றது. புருஷர்கள் ஒருவருக்கொருவர் முத்தம் செய்துகொள்ளும் காரியமானது, இன்னமும் கிழக்கத்திய நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது. கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் அனைவரின் மத்தியிலும் உள்ளன்பு காணப்பட வேண்டும் என்பதும், இந்த ஐக்கியமானது நியாயமான வரவேற்பு/வாழ்த்துதல் முறைகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் அப்போஸ்தலனுடைய கருத்தாக இருக்கின்றது. அவர்களோடு அவர் இருக்க விரும்புவதையும், அவர்களைத் தனிப்பட்ட விதத்தில் வரவேற்க விரும்புவதையும் தெரிவிக்கும், “நான் வாழ்த்துகிறேன்” என்ற அர்த்தத்திலேயே அவர் அநேகமாக இக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

சபையார் மீதான கர்த்தருடைய ஆசீர்வாதத்தை வழங்குவதற்கு முன்னதாக, இந்த நிருபமானது யாருக்கு அனுப்பப்படுகின்றதோ, அவர்களால் இது தனிப்பட்ட கடிதமாக (அ) செய்தியாகக் கருதப்படாமல், மாறாக கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் அனைவருக்கும் தன்னால் எழுதப்பட்டதாகக் கருதப்பட்டு, அனைவருக்கும் வாசிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் மிகவும் உறுதியாய் ஆணையிடுகின்றார். வழிநடத்தும் சகோதரர்கள் மத்தியில் அதிகார ஆவியானது உருவாகி, தங்களுக்கென்று மாத்திரம் அப்போஸ்தலனுடைய கடிதமானது வைக்கப்பட்டு, தாங்கள் வாசித்தப் பிற்பாடு தங்களுடைய கணிப்பின்படி விவேகமானது என்று தோன்றும் கடிதத்தின் பாகங்களையோ (அ) முழுக்கடிதத்தையோ கொஞ்சம் கொஞ்சமாகச் சபையாருக்குக் கொடுக்க வழிநடத்திவிடும் என்று அப்போஸ்தலன் அஞ்சினதாகத் தெரிகின்றது. எந்தச் சபையிலுமுள்ள மூப்பர்கள் மத்தியிலான இப்படிப்பட்ட ஆவியானது கண்டனத்திற்கு ஏதுவானதாகும். தேவனுடைய வார்த்தைகளானது, தேவனுடைய ஜனங்களுக்குரியதாகும் மற்றும் அதைத் தடைப்பண்ணுபவர்கள் எவராக இருப்பினும், அவர்கள் ஆண்டவருக்குக் குற்றம் புரிகின்றவர்களாக இருப்பார்கள். நிருபமானது சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்ற காரியத்தை வைத்துப்பார்க்கும்போது, தெசலோனிக்கேயா பட்டணத்து மூப்பர்களின் உண்மை விளங்குகின்றது. இவ்விஷயம் தொடர்புடைய காரியங்களில், இன்றுள்ள சிலருக்கு ஜாக்கிரதை அவசியமாகும்; அநேக பிரசங்கிமார்கள், போதகர்கள், யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தில் ஆயிர வருட விடியலின் வெளிச்சத்தை உணர்ந்துகொண்டுள்ளனர்; ஆனால் இதை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்குப் பதிலாக, தங்கள் மந்தைகள் முன்னதாக தாங்கள் பிரகாசிக்கத்தக்கதாக, தங்களை வெளிச்சமூட்டிக்கொள்வதற்கெனக் கர்த்தருடைய ஜனங்களிடமிருந்து

மறைத்துப்போட நாடுகின்றனர். இந்தத் தங்களுடைய முறைமையைத் தந்திரம் என்றும், தங்களை “ஞானிகள் என்றும், கல்விமான்கள்” என்றும் எண்ணிக்கொள்ளுகின்றனர் மற்றும் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்துகிறார் என்பதையும் மறந்து போய்விடுகின்றனர். (லூக்கா 10:21) கர்த்தருடைய வார்த்தைகளின் பிரகாரமாக, இந்த வகுப்பார் அதிகம் முன்னேறுவதில்லை; அவர்களிடமிருந்து சத்தியம் வெளியேறுகின்றது மற்றும் அதற்கேற்றப்படி இருள் வருகின்றது; ஏனெனில் இவர்கள் சத்தியத்தின் மீதான அன்பின் காரணமாக அல்லாமல், மாறாக சுயத்தின் மீதான அன்பின் காரணமாகவே சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் (2 தெசலோனிக்கேயர் 2:10). சத்தியமானது எந்த வழியாக வந்தாலும், கர்த்தருக்காகவும், அவரது மந்தைக்காகவும் மற்றும் அவரது சத்தியத்திற்காகவுமான நேர்மை என்பது, சத்தியத்தை நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்த மட்டும், அதற்கே உரிய தூய்மையில், முடிந்தமட்டிலுமான வேகத்தில், கர்த்தர் சித்தங்கொண்டுள்ள அவரது மந்தைக்கடுத்த நன்மைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு இசைவாக அறிவிப்பதை எதிர்ப்பார்க்கின்றது. தங்களைப் போஷித்துக் கொண்டு, மந்தைகளைப் போஷிக்காத மேய்ப்பர்கள், கர்த்தருடைய அதிருப்தி குறித்து எச்சரிக்கப்படுகின்றனர்; மேலும் இப்படிப்பட்ட மேய்ப்பர்கள் ஆவியில் தழைத்தோங்குவதோ அல்லது கர்த்தருடைய முகப்பிரகாசத்தின் வெளிச்சத்தைப் பார்ப்பதோ இல்லை (எசேக்கியேல் 34:2, 7-10).

---

R3142

# உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல

அநேக கர்த்தருடைய செம்மறியாடுகள் மனிதனுடைய பல்வேறு விசுவாசப் பிரமாணங்களுக்குக் கீழ்க்கூண்டில் அடைக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர் மற்றும் இப்படியாக உணவைப் பெற்றுக்கொள்வதிலிருந்தும், மாபெரும் மேய்ப்பனானவர் அவர்கள் பெற்றிருக்க வேண்டுமென்று நோக்கம் கொண்டுள்ளதான சுயாதீனத்தைச் செயல்படுத்துவதிலிருந்தும் தடைப் பண்ணப்பட்டிருக்கின்றனர். மாபெரும் பிரதான மேய்ப்பனுடைய செம்மறியாடுகளானது, கூண்டினால் ஒருவரிடமிருந்து ஒருவர் பிரித்து வைக்கப்படுவதும் மற்றும் தொழுவத்தின் தகுதியான சுயாதீனங்கள் அவர்களுக்குத் தடைப்பண்ணப்படுவதும்,

அவருடைய சித்தத்திற்கு எதிரானவையாகும். இந்த யுகத்தினுடைய உண்மையான செம்மறியாடுகள் மற்றும் மந்தை அனைத்தும் ஒரு பொதுவான வேலியடைப்பிற்குப் பின்னாகவே காணப்படுகின்றனர்; மற்றும் இதற்கு ஒரேயொரு வாசல் - அதாவது தாம் தான் வாசல் என்று கர்த்தர் நமக்குத் தெரிவிக்கின்றார்.

இந்த ஒரு தொழுவத்தையும், அதன் ஒரே வாசலையும் குறித்து அனைவரும் கொஞ்சம் அறிந்திருப்பார்கள் என்று நாம் எண்ணக்கூடும்; ஆனால் இது தவறாகும்; கிறிஸ்தவ மண்டலத்தில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எண்ணற்ற தொழுவங்களினிமித்தம், அநேகர் மிகவும் குழம்பிப்போய்க் காணப்படுகின்ற படியால், அநேகர் இவைகளை, உண்மையான தொழுவத்துடன் குழப்பிக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். "ஆடுகளுக்காக" ஜீவனைக்கொடுத்த நல்ல மேய்ப்பன், ஆடுகளுக்காகச் சில வரையறைகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றார் என்று "ஓநாய்கள்" அறிகையில் ஏமாற்றத்திற்குள்ளாகு கின்றனர்; மற்றும் ஆடுகள் அவருடைய சத்தத்திற்குக் (அவருடைய வார்த்தைகளுக்குக்) கீழ்ப்படியும் பட்சத்தில், ஆடுகளினால் அந்த வரையறையைத் தாண்டிச் சென்றிட முடியாது மற்றும் அவர்கள் உண்மையாய் அவரது ஆடுகளாய் இருக்கும் பட்சத்தில் அந்த வரையறையைத் தாண்டிச் சென்றிட விரும்பிடவும் மாட்டார்கள்.

சுவருகளுடனான இந்த உண்மையான தொழுவத்தினை, "மனிதனால் ஏற்படுத்தப்பட்ட கூண்டு" என்று அழைக்க விரும்புபவர்கள், அப்படியே அழைக்கட்டும் - இதன் பாதுகாப்பினை அனுபவிப்பவர்கள், இதன் சுயாதீனத்தையும் அனுபவிக்கட்டும். இதற்கு ஒரேயொரு, உயரமான, மாபெரும் சுவர் காணப்படுகின்றது; இது இதுவரையிலும் ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு வருபவர்களை - ஆடுகளைப் போன்று பாவனைப்பண்ணுபவர்களைத் தவிர - மற்றப்படி ஓநாய்கள் உள்ளே வர தடுத்துள்ளது. இந்தச் சுவரானது, கல்வாரியில் நிறைவேற்றப்பட்டதான - மனிதனுக்கான ஈடுபலியாகிய - கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வது என்பதாகும்.

வேலியானது உள்ளே அனுமதித்திடாத எவரும் "ஆடுகளல்ல." அந்த எளிமையான, அதே சமயம் பலமான விசுவாசம் எனும் வேலிக்குப் பின்பாகக் கர்த்தருடைய "செம்மறியாடுகளுக்குத்" தகுதியான சுயாதீனம் அனைத்தும் காணப்படுகின்றது - எனினும் அச்சுயாதீனம் "வெள்ளாடுகளுக்கு" அநேகமாய்ப் போதுமானதாக இருப்பதில்லை.

இந்த உண்மையான தொழுவத்திற்குள்ளாகச் சபை பிரிவுக்கேதுவான வேலிகளை உடன் மேய்ப்பர்களோ அல்லது வேறு யாராவதோ ஏற்படுத்திடுவதோ அல்லது "ஆடுகளை" இப்படியான பிரிவுகளுக்குள்ளாக மயக்கி இழுத்து, இப்படியாய்த் தொழுவத்திற்குள்ளாகவே அவர்களது சுயாதீனங்களைக் கட்டுப்படுத்திடுவதோ தவறாய் இருக்கும்; உண்மையான தொழுவத்தின்

உண்மையான வேலியடைப்பிற்குள்ளாக "ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு காணப்படும் ஓநாய்களிடமிருந்தும்" மந்தையினைப் பாதுகாத்திடுவது உண்மையான உடன்மேய்ப்பனுக்குத் தகுதியானது மாத்திரமல்லாமல், கடமையின் பாகமாகவும் காணப்படுகின்றது. (பிரியமான) தாவீது தனது மந்தைகளைப் பாதுகாக்கையில், சிங்கத்தையும், கரடியையும் கொன்றுப்போட்டு, தன் பொறுப்பின் கீழ்க் காணப்பட்ட ஆடுகளை விடுவித்தக் காரியமானது, சந்தேகத்திற்கு இடமின்றி கர்த்தருடைய மந்தைக்கான உண்மையான மேய்ப்பனுக்கு நிழலாய் இருக்கின்றது.

மாபெரும் பிரதான மேய்ப்பனாகிய நமது கர்த்தர், உடன் மேய்ப்பர்களுக்கு மாதிரியை முன்வைத்தார்; மற்றும் அவரால் நியமிக்கப்படுபவர்களில் உண்மையுள்ளவர்கள் அனைவரும், அதே ஆவியைப் பெற்றிருப்பது அவசியமாகும்; இல்லையேல் சீக்கிரமாய்த் தங்கள் பொறுப்பினை இழந்துபோகிறவர்களாய் இருப்பார்கள். அவர்தாமே உண்மையான ஆடுகளைப் பின்வருமாறு கூறி முன்னெச்சரித்தவராய் இருந்தார்: "கள்ளத்தீர்க்கத்தரிசிகளுக்கு (போதகர் களுக்கு) எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு (கர்த்தருடைய மந்தையென்று அறிக்கைப் பண்ணி, ஆனால் உண்மையில் அப்படி இல்லாதவர்கள்; காரணம் தங்கள் பாவங்கள் அனைத்திற்குமாக ஒருதரம் செலுத்தப்பட்ட மாபெரும் பலியில் நம்பிக்கையில்லா மையாகும்) உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (இவர்கள் ஈடுபலியின் மீதான உங்கள் விசுவாசத்தினை அழித்துப்போட்டு, இப்படியாக உங்களை ஆடுகள் என்று இல்லாமலாக்கிப் போடுபவர்கள்); மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாத வனுமான கூலியாள் ஓநாய் (கள்ளப் போதகர்கள்) வருகிறதைக் கண்டு, ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் (கள்ளப் போதகர்கள்) ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" (மத்தேயு 7:15; யோவான் 10:12-15).

ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டுள்ள அல்லது ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொள்ளாமலேயே காணப்படும் ஓநாய்களின் அங்கீகரிப்பானது, உண்மையான உடன் மேய்ப்பன் நாடிட வேண்டிய காரியமல்ல. உண்மையான உடன்மேய்ப்பனானவன் பிரதான மேய்ப்பனின் மற்றும் ஞானேந்திரியங்களைப் பயன்படுத்தப் பயிற்சிப்பெற்றவர்களாகிய வளர்ச்சியடைந்துள்ள செம்மறியாடுகள் அனைவரின் அங்கீகரிப்பைப் பெற்றிட வேண்டும். விசுவாசிகளாகவும்,

"ஆடுகளாகவும்" இல்லாமல் இருக்கையில், தங்களை விசுவாசிகள் எனவும், ஆடுகள் எனவும் காட்டிக்கொள்கின்றவர்களாகிய இத்தகைய கள்ளப்போதகர் களுக்கு எதிராக அப்போஸ்தலனாகிய பவுல் கடினமாய்ப் போராடினவராய்க் காணப்பட்டார். இது குறித்து எபேசு பட்டணத்தின் சபையினுடைய மூப்பர்களிடத்தில் (உடன் மேய்ப்பர்களிடத்தில்) பேசுகையில், அவர் பின்வருமாறு கூறினார்:-

"எல்லோருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறே னென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே (விலைக்கு வாங்கின காரியத்தின் மீதான விசுவாசமே அவர்களை "ஆடுகளாக்கிற்று") சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக (மேய்ப்பர்களாக) வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் (ஆம்! ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரும்; மற்றப்படி உள்ளே ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை) உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, (பின்னடியார்கள்) சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி (பவுலாகிய நான் போதித்தவைகளிலிருந்து, மாறுபட்டவைகளை) மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்றுவருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப்போஸ்தலர் 20:26-31).

அப்போஸ்தலனாகிய பேதுருவும்கூட இதைப்போன்ற வேண்டுகோளினை உடன் மேய்ப்பர்களிடத்தில் பின்வருமாறு வைத்திட்டார்: "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிற தென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்;" "கள்ளத்தீர்க் கத்தரிசிகளும் (கடந்த காலங்களில் "ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு") ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் (ஆக்கினைக்குள்ளான தீர்ப்பிற்கும் மற்றும் புறந்தள்ளுதலுக்கும் வழிநடத்தும் தப்பறைகள்) தந்திரமாய் (வஞ்சகமாய்த் தங்கள் போதனைகளுடைய உண்மையான நோக்கத்தினை மறைத்து) (தொழுவத்திற்குள்) நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட

நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்”-1 பேதுரு 5:1-4; 2 பேதுரு 2:1, 2.

அப்போஸ்தலனாகிய யோவானும் நம்மை எச்சரிக்கைப்பண்ணும் வண்ணமாகப் பின்வருமாறு கூறியுள்ளார்: “உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். மனுஷகுமாரன் தம்மை அனைவருக்குமான ஈடுபலியாகக் கொடுத்திடுவதற்கு வந்தார் எனும் (மத்தேயு 20:28; 1 தீமோத்தேயு 2:6) கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். (ஆடுகளுக்கான போதகன் என்று) ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். (கிறிஸ்துவினால் போதிக்கப்பட்டதான ஈடுபலி எனும்) இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் (அல்லது நாம் கர்த்தரினால் விலைக்கொடுத்து வாங்கப்படவில்லை எனும் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுதல்களைப் பரப்ப மறைமுகமாக உதவுபவன்) (வெளிப்படையாயும், வெளியரங்கமாயும் அவனால் செய்யப்படும்) துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனா கிறான்” (2 யோவான் 8-11).

இப்படியாக மந்தையைத் தந்திரமான ஓநாய்களிடமிருந்து பாதுகாத் திடுவதும், ஏற்றகால சத்தியத்தினால் மந்தையைப் போஷிப்பதுமாகிய உடன் மேய்ப்பர்களின் கடமையானது, ஆரம்பக்காலங்கள் துவங்கி அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுக் காணப்படுகின்றது என்று நாம் பார்க்கின்றோம்; காரணம் ஆரம்பம் துவங்கியே இம்மாதிரியான ஓநாய்கள் காணப்பட்டன. மேலும் யுகத்தினுடைய முடிவில், “பொல்லாதவர்களும், வழிநடத்துபவர்களும்” மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள் என்றும், இவர்களைக் கருவியாகப் பயன்படுத்தி சாத்தான் அசத்தியத்தைப் பரவச் செய்திடுவான், ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்திடுவான் என்றும் பரிசுத்த ஆவியானது விசேஷித்த எச்சரிப்புகளைக் கொடுத்திருக்கிறபடியால், இந்த உண்மைகளையெல்லாம் ஆடுகள் யாவும் அடையாளம் கண்டுகொள்வதற்கும், தந்திரமான வார்த்தைகளினாலும், நயவசனிப்பினாலும் வஞ்சிக்கப்படாமல் இருப்பதற்கும் ஏற்றகாலம் வந்துள்ளதல்லவா? உண்மையான ஆடானது, சக ஆட்டினை, ஆட்டுத்தோலை வைத்துக் கணிக்கக்கூடாது; ஏனெனில் ஓநாய்க்கு, ஆட்டினுடைய தோலினைப் போர்த்திக்கொள்ள முடியும்; ஆடானது மேய்ப்பனுடைய சத்தத்தையும், பாணியையும் - நேரடியாய் அவரது வார்த்தைகளின் வாயிலாகவும் மற்றும் மறைமுகமாய் - அவரால் பயன்படுத்தப்படும் அவரது பிரதிநிதிகள் வாயிலாகவும்,

அதாவது மந்தையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவியானது வைத்தக் கண்காணிகள் (மேய்ப்பர்கள்) வாயிலாகவும் கவனிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இப்படியாக அப்போஸ்தலன் உடன் மேய்ப்பர்களுக்கு மாத்திரம் வழிக்காட்டிடாமல், இந்த அறிவுரையை அவர் சபைக்குச் சுட்டிக்காட்டுகின்றார், ஏனெனில் இப்படியாகவே பிரதான மேய்ப்பன் தமது மந்தையை வழிநடத்தி, மேய்த்து, பாதுகாக்கின்றார் (எபிரெயர் 13:17; எபேசியர் 4:11-16; 1 கொரிந்தியர் 12:27-31; சங்கீதம் 91:11-12).

ஆகையால் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைக்கொண்டிருப்போமாக; மனிதனால் ஏற்படுத்தப்பட்ட விசுவாசப் பிரமாணங்களினால் எவரும் நம்மைக் கூண்டில் அடைத்துப்போட அனுமதியாமல் இருப்போமாக; பிரதான மேய்ப்பனால் நமக்கு வரையறுக்கப்பட்ட எல்லைகளைத் தாண்டி, அவர் ஒருபோதும் அங்கீகரித்திடாத சுயாதீனங்களுக்குள்ளும், உரிமைகளுக்குள்ளும் மற்றும் கற்பனை கோட்டைகளுக்குள்ளும் எவரும் நம்மை வழிநடத்திடுவதற்கு நாம் அனுமதியாமல் இருப்போமாக. அப்போஸ்தலன் கூறினதுபோன்று, தேவனுடைய அன்பிலே நம்மைக் காத்துக்கொண்டு, நாம் அவரில் நிலைத்திருப்போமாக.

---

R5929

## உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்

“வைரம் வைரத்தை வெட்டும்” எனும் பழமொழியினை நாம் அனைவருமே கேட்டிருக்கின்றோம். வைரங்கள் அனைத்தும் மிகவும் கடினத்தன்மை உள்ளவைகளாகவும், மிகவும் தூய்மையானவைகளாகவும் இருக்கின்றன. இந்தக் கடினத்தன்மையானது, அதன் மதிப்பினை அதிகரிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் வைரங்களாக இருக்கின்றனர் - கர்த்தருடைய கிருபையினால் தூய்மையாக்கப்பட்ட வர்களாய் மாத்திரமல்லாமல், உறுதிப்பெற்ற குணலட்சணத்தை உடையவர்களாய் இருக்கின்றனர். இது உண்மையாக இருக்கும்பட்சத்தில், நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, குறைவான கடினத்தன்மையுள்ள பொருட்கள் கூடிக் காணப்படுகையில் இருப்பதைக்காட்டிலும் கடினத்தன்மையுள்ளவைகள் கூடிக் காணப்படுகையிலேயே வெட்டப்படுவதற்கும் மற்றும் உராய்வதற்குமான

அதிக அபாயம் காணப்படும். களிமண்ணானது வெட்டுதல் எதையும் பண்ணுகிறதில்லை - களிமண் போன்ற தன்மையிலுள்ள பாத்திரங்களும் வெட்டுதல் எதையும் பண்ணுகிறதில்லை.

இதை நினைவில்கொண்டு, கர்த்தருடைய ஜனங்கள் ஒருவருக்கொருவர் மிகவும் அனுதாபம் பாராட்டுபவர்களாகவும், ஒருவரையொருவர் மிகவும் மதிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். "குணலட்சணத்தின் உறுதிநிலை, குணலட்சணத்தின் வலிமைநிலை," நோக்கத்தின் மாறாநிலை என்பவைகளை - அதாவது குணலட்சணத்தினுடைய இத்தன்மைகளானது சில சமயங்களில் சில பிரச்சனைகளை ஏற்படுத்துகிறதாய் இருப்பினும், இவைகளை - கர்த்தர் போன்று நாமும் மதித்திட கற்றுக்கொள்கின்றோம். உலகப்பிரகாரமான அமைப்புகளில் காணப்படுவது போலவே, பெரோயா வேதாகம வகுப்புகளிலும் சிலசமயம் சிரமங்கள் காணப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

## கர்த்தருடைய ஜனங்கள் சண்டையை வளர்ப்பவர்களல்ல

கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டுமே ஒழிய, சண்டையினை வளர்ப்பவர்களாக இருக்கக்கூடாது என்றுள்ள தங்களது ஆண்டவரின் விசேஷித்த கட்டளையினை நினைவில்கொள்ள வேண்டும். பிரச்சனையைக் கிளறிவிடுவதற்கு எந்த மாபெரும் திறமையும் தேவைப்படுகிறதில்லை. இருப்பதிலேயே சிறந்த நோக்கங்களுடன் கர்த்தருடைய ஜனங்கள் சண்டைச் சச்சரவைத் தடுத்திடுவதற்கு, அவர்களுக்குச் சாந்தமும், நிதானமும், பொறுமையும், பரிசுத்த ஆவியினுடைய மற்றக் கனிகளும் அதிகமாய்த் தேவைப்படுகின்றது. எதிராளியானவன் நம்மைச் சமாதானத்தின் பாதையினின்று வழிவிலகப்பண்ணத்தக்கதாக, நம்மைச் சோதிக்காதபடிக்கு நாம் அனைவருமே விழிப்பாயிருப்பது எவ்வளவு அவசியமாயிருக்கின்றது!

நமக்கும், மற்றவர்களுக்கும் இடையே காணப்படும் கருத்துவேறுபாடு ஒன்றின் விஷயத்தில், அது கொள்கை சம்பந்தப்பட்டுள்ளதா என்றோ, அதில் அடிப்படை சத்தியம் ஏதாகிலும் சம்பந்தப்பட்டுள்ளதா என்றோ அல்லது அது கொள்கை சம்பந்தப்படாமல், விருப்புவெறுப்புகள் மற்றும் அபிப்பிராயம் சம்பந்தப்பட்டது மாத்திரமா என்றோ நாம் சரியாய் நிதானிப்பதற்குப் போதுமான அளவுக்கு அனுபவமும், பரத்திலிருந்து வருகின்ற ஞானமும் அவசியப்படுகின்றது. ஒருவேளை அது விருப்புவெறுப்பு மற்றும் அபிப்பிராயம் சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கும்பட்சத்தில், சமாதானம் ஏற்படத்தக்கதாக நாம் எதற்கும் அடிபணிய விருப்பமுடையவர்களாய் இருக்க வேண்டும்; ஆனால் இப்படி, கொள்கைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நம்மால் செய்ய முடியாது. எனினும் சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளினால் ஆதரிக்கப்பட்டதாகவே நம்முடைய விருப்பு

வெறுப்புகள் காணப்படுகின்றது என்ற வஞ்சனைக்குள் நாம் பெரும்பாலும் உள்ளாகுகின்றோம். இது தவறு என்று அனுபவத்தின் வாயிலாக நாம் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இம்மாதிரியான ஒவ்வொரு எண்ணங்களையும் நாம் கவனமாய் ஆராய்ந்து, நம்முடைய விருப்பு வெறுப்பு மாத்திரமே சம்பந்தப்பட்டதாக இருக்கும் காரியத்திற்கும், கொள்கைகளும், தேவனுடைய போதனைகளும் சம்பந்தப்பட்டதாக இருக்கும் காரியத்திற்கும் இடையிலான வித்தியாசத்தினை நாம் காண உதவும்படிக்கு, கர்த்தருடைய ஞானத்தினை வேண்டிக்கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு ஒரு சபையில், ஒரு விஷயத்தைக் குறிப்பிட்ட விதத்தில் செய்துவருவது முந்தின காலங்களிலுள்ள வழக்கமாக இருக்கின்றபடியினாலோ அல்லது அவ்விதமே சிறந்த விதமாக இருக்கும் என்று நம்பும் காரணத்தினாலோ, அவ்விஷயத்தினை அக்குறிப்பிட்ட விதத்தில் செய்யும்படிக்குச் சகோதரரோ அல்லது சகோதரிகளோ விமர்சித்து, வலியுறுத்துகின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். தங்களது விருப்பத்தின்படி செய்யப்படவில்லையெனில், அவர்கள் சண்டையிட ஆயத்தமாய் இருக்கின்றனர். விடாப்பிடியாகக் காணப்படும் பட்சத்தில், அதுவும் சரியான பலன் அடையப்பெறுமானால் - அதாவது சபையாருடைய சித்தம் உண்மையில் அடையப்பெறுமானால், மற்றவர்களுடைய விருப்பங்களுக்கு ஆதரவாக, நம் விருப்பங்களை விட்டுக்கொடுத்துவிடுவது ஞானமான வழிமுறையாகும்; ஏனெனில் சபையாருடைய சித்தமே, கர்த்தருடைய சித்தமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்; இல்லையேல் கர்த்தர் காரியத்தினை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டு, இதன் மூலம் சபையாருக்காக, நமக்குப் படிப்பினை ஒன்றினை அருளுவார்.

சபையிலுள்ள ஒவ்வொரு மற்றும் அனைத்து அங்கத்தினர்களுமே சபையில் பரிசுத்த ஆவியின் கனிகளை - அதாவது சாந்தம், தயவு, பொறுமை, சகோதர சிநேகம், அன்பு, சந்தோஷம், சமாதானம் ஆகியவைகளை அபிவிருத்திச் செய்திடுவதற்கு ஊக்கமாய் நாடிட வேண்டும். இந்தப் பண்புகளை நினைவில் கொண்டு, அவைகளை நாம் செயல்படுத்துவதன் மூலம் இந்த அபிவிருத்தி சம்பவிக்கின்றது; இப்படியாக நாம் மற்றவர்களுக்கு மாதிரியாகக் காணப்பட்டு, நம்முடைய சொந்த இருதயங்களிலும், ஜீவியங்களிலும் கிரியைச் செய்யும் பரிசுத்த ஆவியின் ஆதிக்கத்தினை வெளிப்படுத்துகிறவர்களாக இருப்போம்.

## அடிக்கடி செய்யும் தவறு

நாம் நமது பகுத்துணர்தலைப் பயன்படுத்தி மற்றும் அதன்படி செயல்படுவதோடு நம்முடைய பொறுப்பு நிறைவடைகின்றது என்பதை மறந்துபோய் - முழுப்பொறுப்பும் நம் மீதுதான் காணப்படுகின்றது என்று எண்ணுவது நாம்

அடிக்கடி செய்யும் தவறாய் இருக்கின்றது.

சில நுணுக்கமான விஷயங்களில், சபையில் சண்டை சச்சரவுகளைக் கொண்டுவரும் தவறானது, கர்த்தரில் விசுவாசக்குறைச்சல் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றது. சபை மீதும், தம் ஜனங்கள் யாவர் மீதுமான கர்த்தருடைய அக்கறையையும் மற்றும் நம்முடைய அனுபவங்களையும் - மற்றவர்களுடைய அனுபவங்களையும் நன்மைக்கேதுவாக மாற்றிப்போட அவர் வல்லவராகவும், சித்தமுள்ளவராகவும் இருக்கிறதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை காரியங்களானது சபையில் நமக்குப் பிரியமாய் நடந்தேறவில்லையெனில் மற்றவர்களுக்கு அல்லது சபையில் பெரும்பான்மையானவர்களுக்காகிலும் திருப்திகரமாய்க் காணப்படும் அல்லது காணப்படுவதாகத் தோன்றுகிற அக்காரியங்களைக் குறித்துத் தொடர்ச்சியாகக் குற்றங்கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, காரியத்தினை ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச்செல்வது மிகவும் நலமானதாயிருக்கும்.

---

R5644 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தேவனிடத்திலான தனிப்பட்ட நம்முடைய பொறுப்பு

*"ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்." (1 தெசலோனிக்கேயர் 5:15)*

## *கிறிஸ்தவன் பொதுக் காவல்துறையாளன் அல்ல*

**ஒ**ருவேளை நீங்கள் காயப்படுத்தப்பட்டிருப்பீர்களானால், அதைச் சரி செய்துகொள்ள நீங்கள் விரும்புகிறதற்குக் காரணமும் காணப்படும். சரி செய்துகொள்ளும் விருப்பம் காணப்பட்டாலும், பழிக்குப்பழி வாங்கும் விஷயம், எவ்விதத்திலும் காணப்படக்கூடாது. நாம் தீமைக்குத் தீமை செய்யக்கூடாது, நாம் எவருக்கும் தீமை செய்யக்கூடாது என்ற கடமையின் கீழ்க் காணப்படுகின்றோம். "ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்" என்ற வார்த்தைகளானது, கிறிஸ்தவன் பொதுக்காவலன் போன்று இருந்து, தனது சகோதர சகோதரிகள், அயலார்கள் மற்றும் அனைவரும் தீமை செய்யாதபடிக்குப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது எனத் தவறாக சிலரால் புரிந்து கொள்ளப்படுகிறது. இது தவறான கருத்தாகும். குடும்பத்தின்

தலைவர்கள் மாத்திரமே, இவ்விஷயத்திற்கு விதிவிலக்காகக் காணப்படுகின்றனர். குடும்பத்தாரின் தலைவராக இருக்கும் ஒருவர், தனது வீட்டாரின் நடத்தைகளைக் கவனிப்பதற்கு, சட்டத்தின் கீழும், தெய்வீகப் பிரமாணத்தின் கீழும் கடமைப்பட்டுள்ளார்.

சிலர் அப்போஸ்தலரின் இந்த வார்த்தைகள், ஒவ்வொரு சபையாரின் மூப்பர்கள், தங்களுடைய சபையாரின் அங்கங்கள் தவறு செய்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அர்த்தமாகின்றது என எண்ணுகின்றனர். இதுவும் சரியான கருத்தல்ல. மற்றொருவன் தீமைக்குத் தீமை செய்யாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று வேதவாக்கியங்கள் மூப்பர்களுக்கு எங்கும் அதிகாரம் கொடுப்பதில்லை. அவ்வசனத்தின் அர்த்தமாவது: உங்களில் ஒவ்வொருவரும், நீங்கள் தீமைக்குத் தீமை செய்யாதபடிக்கு உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்பதேயாகும்.

குடும்பத்திலுள்ள ஒரு நபர் தவறு செய்யும்போது, அக்குடும்பத்திலுள்ள மற்ற நபர், தவறு செய்தவருக்கு உதவி செய்யும் சில சரியான வழிமுறைகள் உள்ளன. உதாரணத்திற்கு, ஒருவேளை C என்ற நபருக்கு, B என்ற நபர் அநீதி செய்வதை A என்ற நபர் கண்டால், A என்ற நபர் அதை... விளக்கி எடுத்துக்கூறலாம். A என்ற நபர்: சகோதரனே (சகோதரியே) என B என்ற நபரை அழைத்து, நீங்கள் இவ்விஷயத்தைக் குறித்து இப்படி, இப்படியாகச் சிந்திக்கவில்லையா? என்று சொல்லலாம். இப்படியாகவேதான் சபையிடத்திலும் செயல்பட வேண்டும். சபையின் நலனுக்கடுத்த விஷயங்களைப் பார்க்கவே மூப்பர்கள் விசேஷமாகப் பொறுப்பேற்றுள்ளார்கள். ஒருவேளை மூப்பர்கள், சபையில் ஒருவர் வேதவாக்கியங்களின் நியமங்களின்படி ஜீவிக்கவில்லை என்பதைக் கண்டால், அவ்விஷயத்தைக் குறித்த யோசனைகளைக் கொடுப்பது சரியான முறையாகும். ஆனால் மற்றவர்களின் விஷயங்களில், வீண் அலுவல்காரராய் நாம் காணப்படக்கூடாது.

நாம் ஒருவரையொருவர் கட்டியெழுப்பிட வேண்டும், ஏனெனில் இவ்விதத்திலேயே, மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணிக்கொள்கிறாள். நாம் நன்மையை அல்லாமல், தீமையைச் செய்துவிடாதபடிக்கு, ஜெபத்தில் வைத்த பின்னர், இவ்விஷயங்கள் கூடுமானமட்டும் ஞானமான முறையிலேயே அணுகப்பட வேண்டும். நாம் அனைவரும், நம்மை நீதிக்கு அர்ப்பணித்திருக்கின்றோம் என்றும், நன்மையானவைகளைச் செய்வதற்கும் அர்ப்பணித்திருக்கின்றோம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் அனைத்துச் சந்தர்ப்ப, சூழ்நிலைகளிலும் நன்மையானவைகளைச் செய்வோம் என நம்முடைய ஜீவியத்தை அர்ப்பணித்துள்ள காரணத்தினால், நாம் சபையார் மத்தியில் மாத்திரமல்லாமல், சகல ஜனங்கள் மத்தியிலும், அவர்கள் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளில் உள்ள நியமங்களின்படி, கிறிஸ்துவின் சீஷர்கள், சகல ஜனங்களின் மத்தியில் மிகவும் மெருகூட்டப்பட்டவர்களாகவும், மிகவும் நேர்த்தியானவர்களாகவும், மிகுந்த நற்பண்புகள் உடையவர்களாகவும், மிகுந்த அன்பும், கரிசனையும் கொண்டவர்களாகவும் காணப்பட வேண்டும். இந்தப் பண்புகள், உலகத்தாரிடம் காணப்படுவது போன்று வெளித்தோற்றமாகக் காணப்படாமல், இவர்களிடம் கர்த்தருடைய ஆவியும், நீதியின் ஆவியும், இரக்கம் மற்றும் அன்பின் ஆவியும் காணப்படுவதால், இருதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் அன்பும், தயவும் காணப்பட வேண்டும். இவ்விதமாக இவர்கள் தங்களிடத்திலுள்ள ஒளியை, தங்கள் ஜீவியத்தில் பிரகாசிப்பிக்க வேண்டும்.

---

R4977

# நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல்

*"நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெய்யைப்போல் இருக்கும்; அது என் தலையை நொறுக்கிப் போடுவதில்லை." (சங்கீதம் 141:5; சரியான மொழியாக்கம்)*

வேதவாக்கியங்களில் நீதிமான் என்ற வார்த்தையானது இரண்டு விதங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு விதத்தில் அது முற்றும் முழுமையான நீதியான நிலையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; உதாரணத்திற்கு, "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." நம்முடைய ஆதார வசனத்தில், நமது கர்த்தர் இயேசு குட்டுகிற நீதிமானாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இப்படியான விதத்தில் பார்க்கும்போது, சிட்சைகள் என்பது நமது கர்த்தரிடத்திலிருந்து வருகின்றதாய் இருக்கின்றது; மற்றும் சிட்சையைப் பெற்றுக்கொள்கின்றவன், இப்படியான கண்டித்தலிலுள்ள தேவனுடைய ஞானம், நீதி மற்றும் அன்பை அறிந்தவனாக, அதை உணர்ந்துகொண்டுள்ள நிலையில் ஏற்றுக்கொள்வான். ஆனால் இன்னொரு விதத்தில் நீதிமான் என்ற வார்த்தையானது, மனுக்குலத்திற்குப் பொருந்தும் வகையிலும் பயன்படுத்தப்படுகின்றது. வேதவாக்கியங்களில் பல்வேறு நபர்கள் நீதிமான்கள் என்று குறிப்பிடப் படுகின்றனர்; காரணம் அவர்கள் பூரணமானவர்கள் என்பதினால் இராமல், மாறாக அவர்கள் சரியான நோக்கமும், சரியான சித்தமும் உடையவர்களாய் இருந்து, தங்கள் நடக்கையில் தேவனுடைய ஆவியை, நீதியின் ஆவியை வெளிப்படுத்தின தினாலேயே ஆகும்.

இப்படியாக நீதிமான் என்ற இந்த வார்த்தையை, ஆதார வசனத்தில் பொருத்திப் பார்க்கும்போது, அது கர்த்தருடைய ஜனங்களாய் இருப்பவர்கள் அனைவரும் யாரை திருத்திட முயற்சிக்கின்றார்களோ, அவர்களுக்கு உதவியாகவும், அவர்களுடைய நன்மைக்காகவும் இருக்கும் வகையில், நீதியாய்க் கண்டித்தலையும், நெறிப்படுத்துதலையும் செய்யமுடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும்; அதுவும் ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும், புத்துணர்வையும் கொண்டுவரும் விதத்தில் செய்ய முடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும்; அதுவும் நீண்ட காலம் நிலைத்திருக்கும் நறுமணம் கொண்டுள்ள நறுமண எண்ணெய் போன்று இருக்கும் விதத்தில் செய்யமுடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இந்தக் கருத்துக்களை நம்முடைய மனங்களுக்கு முன்பாகக் கொண்டிருக்கும்போது, இதில் நமக்கு விலையேறப்பெற்ற படிப்பினைகள் கிடைக்கின்றதாய் இருக்கும். முதலாவதாக நாம் கர்த்தரிடமிருந்து வரும் சரிப்படுத்துதல்களை ஏற்றுக்கொள்பவர்களில் அடங்குகின்றவர்களாக இருத்தல் வேண்டும் மற்றும் ஏதேனும் காரியத்தில் நாம் தவறு செய்திருந்தால், அதனை சரிசெய்துகொள்வதில் மகிழ்ச்சியாய் இருப்பவர்களாக இருத்தல் வேண்டும்; அடுத்தப்படியாகக் கண்டித்தல் வழங்கப்படுவது ஏற்றதாக இருக்குமென்றால், அது பாதிப்பை ஏற்படுத்துகிற விதமாய் இராமல், மாறாக ஆவிக்குரியதாகவும், தூக்கிவிடுவதாகவும், புத்துணர்வு ஊட்டுவதாகவும் காணப்பட வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்படியாகக் காணப்பட வேண்டுமெனில், கண்டித்தல் என்பது அனுதாபத்துடன்/இரக்கத்துடன்கூடிய ஒன்றாகக் காணப்பட வேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் மாம்சத்தில் விழுந்துபோனவர்களாகவும், ஆனால் கிறிஸ்துவில் புதுச்சிருஷ்டிகளாகவும் காணப்படுகின்றனர் என்றும், அவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகள் என்றால் அவர்கள் கர்த்தருடைய மனதையும், அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தையும் கொண்டிருப்பார்கள் என்றும் நாம் நினைவில் கொண்டிருத்தல் வேண்டும். இந்த ஒரு கண்ணோட்டத்திலிருந்து கண்டித்தலை வழங்கக்கூடிய எந்த ஒரு சகோதரரும், தான் யாரைக் கண்டிக்கின்றாரோ அந்நபர் தீமையான நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதை அடையாளம் கண்டுகொண்டு, முடிந்தமட்டும் தயவாயும், இரக்கமாயும், உண்மை விவரங்களை விளக்கிக்கொடுப்பவராய்க் காணப்படுவார். இம்மாதிரியான கண்டித்தலானது திடீரென்று கொடுக்கப்படக்கூடாது; மற்றும் கண்டித்தலை வழங்கும் நபர், வழங்கப்படவேண்டிய தண்டனை மற்றும் அதற்கான ஏற்றவேளை முதலானவைகள் கர்த்தருக்குரியது என்பதையும் நிதானித்துக்கொள்ள வேண்டும். இப்படியாகவே நீதிமானாய்க் காணப்படும் யாவரும், மற்றவரைக் கண்டிக்கும்போது காணப்பட வேண்டும். ஜாக்கிரதையாய்க் கருதிக்கொண்டும்,

ஜெபத்தில் வைத்த பிற்பாடும்தான், கண்டித்தல் பண்ண வேண்டும் மற்றும் இப்படிக் கண்டிப்பதே ஒரு சகோதரனுக்கு (அ) சகோதரிக்கு உதவி செய்வதற்கு இருப்பதிலேயே மிகச் சிறந்த வழியாய் இருக்கும் என்ற முடிவிற்கு வந்த பிற்பாடே கண்டிக்க வேண்டும். இப்படியான நிலைமையில் கண்டிப்புகள் யாவும் கொடுக்கப்பட்டால், இது சாதாரணமாய் வழங்கப்படும் கண்டிப்புகளைக் காட்டிலும், மிகவும் உதவிகரமானதாகக் காணப்படும் என்று நம் அனைவராலும் ஒத்துக்கொள்ள முடியும்.

## நொறுக்கும் விதமான கண்டித்தல் என்பது அநீதியானதாகும்

ஆதார வசனத்தில் இடம்பெறும் "அது என் தலையை நொறுக்கிப்போடுவதில்லை" என்பதான வார்த்தைகளானது, கண்டித்தல் துன்பத்தைக் கொடுக்கிறதாகவோ, நொறுக்கிப்போடுகிறதாகவோ காணப்படாமல், ஆசீர்வாதமாய்க் காணப்பட வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவருடைய தலையை நொறுக்கிப்போடுதல் என்பது, அந்நபரைக் கொன்றுபோடுவதான காரியமாகும். மற்றவர்களுக்குப் பாதகம் ஏற்படுத்துவ தற்கான (அ) மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதற்கான நோக்கத்திற்காக நீதிமான்கள் உலகத்தில் காணப்படாமல், மாறாக உலகத்தில் நன்மை புரிவதற்கான நோக்கத்திற்காகவே காணப்படுகின்றனர். மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றவர்கள், இப்படிச் செய்ததற்கு ஏற்ப அநீதிமான்களாய் இருப்பார்கள். தங்களால் கண்டிக்கப்படுப வர்களை நொறுக்கிப்போடத்தக்கதாக தங்களது விமர்சனங்களையும்/ குற்றஞ்சாட்டுதல்களையும் மற்றும் கண்டனங்களையும் பயன்படுத்துகின்றவர்கள் நீதிமான்கள் அல்ல. இப்படிப்பட்டவர்கள் குற்றங்களைச் சரியாய் எப்படிச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்கள் அப்போஸ்தலனின், "கடிந்துகொள்ளுதல்," "கண்டனம் பண்ணுதல்" முதலான வார்த்தைகள், தேவனுடைய ஜனங்கள் அனைவரிடமும் கூறப்படாமல், மாறாக மூப்பனாகிய தீமோத்தேயுவிடம் கூறப்பட்டதை அறிந்துகொள்ள வேண்டும். இதனால்தான் சாந்தகுணமுள்ள மனிதர்களாகவும், வளர்ச்சியடைந்துள்ள மனிதர்களாகவும், தங்களது சொந்த ஜீவியங்களையும், சொந்த நாவுகளையும் கட்டுப்படுத்தியுள்ள மனிதர்களாகவும் இருப்பவர்கள் மாத்திரமே மூப்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்; இதினிமித்தம் இவர்கள் மற்றவர்களை நொறுக்கிப்போடுகின்றவர்களாய் இராமல், மாறாக இவர்களது கடிந்து கொள்ளுதலானது, மற்றவரைக் கர்த்தரிடம் நெருக்கமாய்க் கொண்டுவருவதற்கு நோக்கமாயும் மற்றும் இதற்கு உதவியாயும் மற்றும் உற்சாகமூட்டுகிறதாயும் மற்றும் துணைப்புரிகின்றதாயும் காணப்படும்.

## முதிர்வயதுள்ளவரைக் கடிந்துகொள்ளாமல்

முதிர்வயதுள்ளவரைக் கடிந்துகொள்ளாமல், அவரைத் தகப்பனைப்போன்று பாவிக்கும்படிக்கு, பரிசுத்தவனாகிய பவுல், தீமோத்தேயுவுக்குப் புத்திமதி கூறினபோது, அப்போஸ்தலன் இங்குச் சபையிலுள்ள மூப்பரைக் குறித்துக் குறிப்பிடாமல், மாறாக ஒரு நபரைக்காட்டிலும் வயதில் முதிர்ந்தவராய் இருப்பவரைக் குறித்துக் குறிப்பிடுகின்றார். உன்னைக்காட்டிலும் வயதில் முதிர்ந்தவரைக் கடிந்துகொள்ளாதே என்றும், அவரைத் தகப்பன்போன்று பாவிக்க வேண்டும் என்றும், இதுபோலவே முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய புருஷர்களைச் சகோதரர்கள்போலவும், பாலிய ஸ்திரீகளைச் சகோதரிகள் போலவும், நடத்தவேண்டும் என்றும் உள்ள விதத்தில் அப்போஸ்தலன் குறிப்பிடுள் ளார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், மற்றவர்களுடைய சுயாதீனங்களை நசுக்கிடுவதற்கோ (அ) மற்றவர்களை அச்சுறுத்துவதற்கென்றோ, சபையில் மூப்பர்கள் நியமிக்கப்படவில்லை. தயவு, காருண்யம் முதலானவைகளின் ஆவியே பரிசுத்த ஆவியாய் இருக்கின்றது. இவைகள் அல்லாத வேறே ஆவியில் ஒரு மூப்பர் கடிந்துகொள்வாரானால், அவர் தன்னால் கடிந்துகொள்ளப்படும் நபர் ஒரு குழந்தை அல்ல என்பதையும், அந்நபர் குழந்தை போன்று நடத்தப்படக்கூடாது என்பதையும், அந்நபர் கடிந்து கொள்ளப்படவோ (அ) தாக்கிப்பேசப்படவோ (அ) "இவைகள் அனைத்துமே தவறு!" என்று கூறப்படவோ கூடாது என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். ஞானமற்ற விதங்களில் வழங்கப்படும் கடிந்துகொள்ளுதலானது, பிரச்சனைக்கான பலமான காரணமாய் அமைகின்றது.

வயதில் முதிர்ந்த ஒருவர், ஒரு காரியத்தை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது என்று, வயதில் குறைந்த ஒரு நபர் எண்ணி, "இவைகளையெல்லாம் நீங்கள் அறிய வேண்டியிருக்கிறது, நான் உங்களுக்குப் பாடம் புகட்டுகிறேன்" என்று வயதில் குறைந்தவர் கூறுவதும், பொறுமையை இழந்துபோவதும், ஞானமுள்ள காரியமாகவோ (அ) இரக்கமுள்ள காரியமாகவோ (அ) தயவுள்ள காரியமாகவோ இருந்திடாது. இம்மாதிரியான ஆவியானது, அநேக இடங்களில் பிரச்சனையை ஏற்படுத்தியுள்ளது. இம்மாதிரியான நடக்கைகளுக்கு எதிர்மாறாகவே அப்போஸ்தலனுடைய புத்திமதி காணப்படுகின்றது மற்றும் அவர் இரக்கத்தையும், தயவையும், வயதை கருத்தில்கொள்ளும் தன்மையையும் மற்றும் இது விஷயத்தில் தேவையான அனைத்தையும் அறிவுறுத்துகின்றவராய்க் காணப்படுகின்றார். அநேக வேதவாக்கியங்களைப் பார்க்கும்போது, நம் நாட்களில் நாம் காணமுடியாத அளவு, முற்காலங்களில் குடும்பத்தின் மீதான ஓர் அனுதாபம் காணப்பட்டுள்ளது என்பது நிச்சயமே; இதுவே அப்போஸ்தலனின் பின்வரும் வார்த்தைகளிலும் வெளிப்படுகின்றது. "முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்போலவும், முதிர்வயதுள்ள

ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து, புத்திசொல்லு" (1 தீமோத்தேயு 5:1-2).

இன்றைய நாட்களில் அந்நியர்களிடம் மிகவும் பரிவுடன்/பண்பட்ட விதத்தில் நடந்துகொள்வதும், ஒருவருடைய சொந்த குடும்பத்தாரிடம் மிகவும் பரிவற்ற/பண்பற்ற விதத்தில் நடந்துகொள்வதும் வழக்கமாய்க் காணப்படுகின்றது; சிலர் வெளியாட்களிடம் மிகவும் பரிவுடன்/பண்பட்ட விதத்தில் நடந்து கொள்வார்கள், ஆனால் தாங்கள் யாருக்கு இரக்கமும், உதவியும் மற்றும் அனுதாபமும் காண்பிக்க வேண்டுமோ அத்தகையவர்களிடம் மிகவும் பரிவற்று/பண்பற்று நடந்துகொள்வார்கள். இதே கருத்தே, "சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள்" என்ற புத்திமதியில் வெளிப்படுகின்றது. ஆனால் இன்றைய நாட்களில் நீங்கள் உண்மையான நண்பர்களைத் தேடுகையில், நீங்கள் சொந்தக் குடும்பத்திற்குள் பெரும்பாலும் தேடிடுவதில்லை. இந்த விஷயத்தில் நம்முடைய வளர்ச்சி என்பது பரிணாம வகையாய் நிச்சயமாய்க் காணப்படுவதில்லை. தகப்பன், தாய், சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் அக்கறையுடனும், இரக்கத்துடனும், அன்புடனும் நடத்தப்பட வேண்டும். மேலும் இந்தக் கொள்கையானது விசுவாச வீட்டாரிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

## அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குச் செய்யாது

2 தீமோத்தேயு 4:2-ஆம் வசனத்தில், தேவனுடைய கிருபையின் ஊழியக்காரனாக அப்போஸ்தலன், சுவிசேஷம் அறிவிக்கப்படும் விஷயத்தில் அடங்கும் மூன்று அம்சங்களை அதாவது: (1) கண்டனம்பண்ணுதல்; (2) கடிந்துகொள்ளுதல்; (3) புத்திசொல்லுதல் எனும் அம்சங்களைக் குறித்து விவரிக்கின்றார். ஆனால் முதல் இரண்டு அம்சங்களைத் தாராளமாய்ப் பயன்படுத்தும் விஷயத்திற்கு எதிராக, கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் எச்சரிக்கப்படுவது பாதுகாப்பானதாகும். சரியாய்க் கண்டனம் பண்ண வேண்டுமெனில் இருதயமானது, அன்பினாலும், அனுதாபத்தினாலும் மிகவும் நிரம்பிக் காணப்பட வேண்டும்; இல்லையேல் கண்டனங்களும், கடிந்துகொள்ளுதல் களும் கூர்மையுடன் கடந்துவருகின்றதாய் இருந்து, நன்மையைப் பார்க்கிலும், பாதகத்தையே உண்டுபண்ணுகிறதாய் இருக்கும். இருதயம் முழுக்க அன்பினால் நிரம்பி இருந்தாலும், யாருக்கு உண்மையில் அவசியப்படுகின்றதோ, அப்படிப்பட்ட வர்களுடைய நன்மைக்கு ஏதுவாக கடிந்துகொள்ளுதல்களையும், கண்டித்தல் களையும் பயன்படுத்த முடிகின்றதான மிகுந்த சீரான தலையும்கூட அவசியமாய் உள்ளது. இதில் தேவனுடைய ஜனங்கள், "சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர் களாகவும், புறாக்களைப்போலக் கபடற்றவர்களாகவும்" காணப்பட வேண்டும். "புத்திசொல்லும்" வகை ஊழியமானது, பெரும்பான்மையான கர்த்தருடைய

ஜனங்களினால் நன்கு பயன்படுத்தப்படலாம். இந்த வகை பிரயாசங்களும், மற்ற வகை பிரயாசங்களும், பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும், சகோதர சிநேகத்துடனும் கையாளப்பட வேண்டும்.

## எப்போது மன்னிப்பு ஏற்றதாய் இருக்கும்?

"உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக" (லூக்கா 17:3-4).

நாம் நமது பாவங்களை ஒப்புக்கொண்டு, தேவனிடம் மன்னிப்புக் கேட்காதது வரையிலும், அவர் நம்முடைய பாவங்களை மன்னிப்பதில்லை. நமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்திருப்பவர்கள் விஷயத்தில், நாம் நமது முழுமையான மன்னிப்பை வெளிப்படுத்துவதற்கு முன்னதாக, அவர்கள் தங்கள் தவறைக் கொஞ்சம் ஒப்புக்கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்ப்பது ஏற்புடையதென நமது கர்த்தர் தெளிவாய்த் தெரிவிக்கின்றார். "ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக."

நாம் தெய்வீகக் கட்டளையினுடைய ஒரு பாகத்தை ஏற்றுக்கொண்டு, மற்றொரு பாகத்தைப் புறக்கணிக்கிறவர்களாகக் காணப்படக்கூடாது. "அவனுக்கு மன்னிப்பாயாக" என்று கர்த்தர் கூறினபோது, அவர் மன்னிக்க வேண்டும் என்று அர்த்தம் கொண்டிருந்தார் என்றும், "அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக" என்று கர்த்தர் கூறினபோது, அவர் மன்னிக்க வேண்டும் என்று அர்த்தங்கொள்ளவில்லை என்றும் நாம் கூறக்கூடாது. தவறுசெய்கின்றவர்கள் மனஸ்தாபப்படுவது, அவர்களுக்கான கடமையாய் இருக்கின்றபடியால், பெரும்பான்மையான ஜனங்களின் விஷயத்தில் மனஸ்தாபப்படுவது ஏற்புடையது என்று வலியுறுத்திக் கொண்டிருப்பது அவசியமற்றதாய் உள்ளது. தங்களிடம் மன்னிப்புக் கேட்பது வரையிலும், மன்னிப்பு வழங்குவதற்கும் பெரும்பான்மையான ஜனங்கள் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர்.

## நாம் அற்பத்தனங்களுக்கு அப்பாற்பட்டு ஜீவிக்க வேண்டும்

இன்னொரு பக்கத்தில் ஜாக்கிரதையும் அவசியமாய் உள்ளது. கிறிஸ்தவன் என்பவன் அன்பான, பெருந்தன்மையுடன் கூடிய இருதயதன்மையை

உடையவனாகவும், பரம பிதாவினுடைய பண்புகளின் சாயலாகவும் காணப்பட வேண்டும். அறிந்து செய்யாமலும் மற்றும் துணிகரம் இல்லாமலும் இருக்கும் பட்சத்தில், எப்படித் தேவன் கிறிஸ்துவின் நிமித்தமாக நம்மைக் கையாளுகின்றாரோ அதுபோலவே மற்றவர்களின் சிறு தவறுகளைக் கிறிஸ்தவனும் கவனியாமல் விட்டுவிடத்தக்கதாக அவன், முக்கியத்துவம் இல்லாதவைகளின் விஷயத்தில் மிகவும் அனுதாபமும், அன்பும் கொண்டவனாக இருக்கவேண்டும். இப்படியான கொள்கை கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுமானால், அதாவது வேண்டுமென்றே செய்யப்படாத எதையும் குற்றமென அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது என்ற உறுதியான தீர்மானம் காணப்படுமானால், இது அனைவருக்கும் மாபெரும் ஆசீர்வாதமாய்க் காணப்படும் மற்றும் தேவனுக்கொத்த நடக்கையாகவும் காணப்படும். நமது கர்த்தரால் அவ்வசனத்தில் குறிப்பிடப்படும் பாவங்களானது, முக்கியத்துவமில்லாத காரியங்களாகவோ, பின்விளைவுகள் உண்டுபண்ணாத காரியங்களாகவோ, கற்பனைகளாகவோ (அ) பொல்லாத அனுமானங்களாகவோ, கற்பனைபண்ணப்பட்ட அவமதிப்புகளாகவோ இராமல், நமக்கு எதிராய்ச் செய்யப்படும் உண்மையான தவறுகளாய் இருக்கின்றது; இப்பாவங்கள் ஏற்கத்தக்க நிரூபணங்களை உடையவைகளாய் இருப்பதினால், இதன் காரணமாக நாம் தவறை அடையாளம் கண்டுகொண்டுள்ளோம் என்றும், அது நம்மைத் துன்பப்படுத்தியுள்ளது என்றும், நமக்கு வலியுண்டாக்கியுள்ளது என்றும் கொஞ்சம் சுட்டிக்காட்டும் வண்ணம், கொஞ்சம் ஏற்றவிதமான கடிந்துகொள்ளுதலை ஞானமாயும், அன்பாயும், இரக்கமாயும் வழங்குவது நமக்கான கடமையாய்க் காணப்படுகின்றது. கடிந்துகொள்ளுதல் வழங்கப்படுவதற்கான ஒரே ஓர் ஏற்ற வழிமுறை குறித்ததான திவ்விய பிரமாணமானது, நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டுள்ளது (மத்தேயு 18:15-17) மற்றும் இதைக்குறித்து விவரமாய் நம்முடைய வெளியீடுகளில் பார்த்திருக்கின்றோம். நமது கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் காணப்படுவது என்பது, சீஷத்துவத்திலுள்ள குறைப்பாட்டிற்கான ஆதாரமாகுகின்றதாகக் கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். கர்த்தர் வெகு சில குறிப்பிட்ட கட்டளைகளைக் கொடுத்திருந்தபோதிலும், மனக்குறைகளைச் சரிச் செய்துகொள்வதற்கான ஒரே ஒரு வழியென, அவர் இந்த ஒரு கட்டளையைக் கவனமாய்க் கொடுத்திருக்க, இது அநேக வளர்ந்துள்ள கிறிஸ்தவர்களினால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் இருக்கின்றது.

## கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல

மன்னிப்பதற்கான மனப்பாங்கு எப்போதும் நம்மிடத்தில் காணப்பட வேண்டும் மற்றும் அது அனைத்து நேரங்களிலும் நம்மால் வெளிப்படுத்தவும் படவேண்டும்.

நம்முடைய அன்புடன்கூடிய பெருந்தன்மையும், இரக்கமும், கொஞ்சமும் தீங்குநினைக்க விரும்பாத தன்மையும், நம்முடைய வார்த்தைகள் மற்றும் ஜீவியத்தின் கிரியைகள் அனைத்திலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இது தேவனுக்கொத்த நடக்கையாகக் காணப்படும். நாம் பாவிகளாகவே இருந்தபோதிலும், தேவன் நம்மிடத்தில் இரக்கமுள்ள, பரந்த மனப்பான்மையுள்ள பெருந்தன்மையுடன்கூடிய உணர்வினையே கொண்டிருந்தார். பாவிகள் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று அவர் காத்திருக்கவுமில்லை, மாறாக இசைவிற்குள்ளாக வந்திடுவதற்கான தமது விருப்பத்தையும், மன்னிப்பதற்கான தமது ஆயத்தத்தையும் உடனடியாக வெளிப்படுத்தினவராகவே காணப்பட்டார். இதற்கு இசைவான ஒட்டுமொத்த சுவிசேஷத்தின் செய்தியானது, "தேவனோடே ஒப்புரவாகுங்கள்" என்பதாகும். நம்முடைய முகங்களானது, கடினமான பார்வையைக் கொண்டிராத அளவுக்கு, நம்முடைய வார்த்தைகளில், கடுமையான வலிக்கொடுக்கும் கண்டித்தல் காணப்படாத அளவுக்கு, நம்முடைய இருதயங்களானது மன்னிக்கும் இந்த மனப்பாங்கை முழுக்கக் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய முகங்களும், வார்த்தைகளும், அனைத்துச் சமயங்களிலும் நம்முடைய இருதயங்களில் நாம் பெற்றிருக்க வேண்டிய, அன்புடன்கூடிய மன்னிப்பை வெளிப்படுத்திட வேண்டும்.

இதமான வார்த்தைகளுடன்கூடிய வெளித்தோற்றமான மற்றும் சம்பிரதாயமான மன்னிப்பிற்கும், இருதயத்திலிருந்து கடந்துவரும் உண்மையான மன்னிப்பிற்கும் இடையிலான வித்தியாசத்திற்கு நேராக நமது கர்த்தர் குறிப்பாய் நமது கவனத்தைத் திருப்புகின்றார். வெளித்தோற்றமான மன்னிப்பு என்பது, உதட்டளவு மாத்திரமானதாகவும், மற்றும் உள்ளுக்குள் எரிச்சல் காணப்படுவதையும், மன்னிப்பு வழங்காத ஆவி காணப்படுவதையும் மற்றும் அடக்கிவைக்கப்பட்டதான குரோதம் மற்றும் பகைமையின் உணர்வுகளானது, இன்னும் கொஞ்சம் காலத்திற்குள்ளாக அவதூறு வார்த்தைகளாக வெளிப்படும் என்பதையும் அர்த்தப்படுத்துகிறதாகவும் இருக்கும். தேவன் இருதயத்தைப் பார்க்கின்றவர் ஆவார் மற்றும் உதட்டளவிலான அறிக்கைகள் என்னவாக இருப்பினும், அவ்வார்த்தைகளுடன் இருதயமும், ஜீவியமும் இசைவாய்க் காணப்படாதது வரையிலும், அவர் அதைக் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை. ஆகையால் "என் சகோதரனை நான் அன்புகூருகின்றேன்" என்று ஒருவர் கூறிக்கொண்டு, மற்றும் அதே வேளையில், வார்த்தையினாலோ அல்லது கிரியையினாலோ சகோதரனுக்குப் பாதிப்புண்டாக்க நாடும்போது, அவ்வார்த்தைகள் வீணானதேயாகும். தீமை பேசுதல், குரோதம், பகைமை, பொறாமை, வாக்குவாதம்/சண்டை ஆகிய அனைத்தும், இருதயத்திலுள்ள பொல்லாப்பிட மிருந்தே கடந்துவருகின்றது; ஆகையால் கர்த்தருடைய சரீரமாக இருப்பதற்கு விரும்புகின்றவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் சரீரத்தில், அதாவது புளிப்பில்லாத அப்பத்தில் அங்கத்தினர்களாகத் தக்கதாக, "துர்க்குணம் எனும் புளித்தமாவை" அப்புறப்படுத்துவது அவசியமாய் உள்ளது.

"உங்கள் இருதயங்களில்" மன்னித்தல் என்பது, எப்போதும் நீங்கள் அடையப்பெற வேண்டிய ஒரு நிலையாகும். மற்றவர்கள் நமக்கு எதிராக எவ்வளவு கடுமையாகக் குற்றம் புரிந்திருந்தாலும், நாம் அனைவருக்குமான நல்லெண்ணத்தையும், மன்னிப்பையுமே நம் இருதயங்களில் கொண்டிருக்க வேண்டுமே ஒழிய, வேறு எந்த எண்ணங்களுக்கும் நாம் புகலிடம் கொடுக்கக்கூடாது. இப்படியாக இருக்கும் பட்சத்தில், மனந்திரும்புகிறவர்களை நாம் வெளிப்படையாய் மன்னிப்பதற்கும் மற்றும் அதை வெளிப்படுத்துவதற்கும், நாம் ஆவலும், ஏக்கமும் உள்ளவர்களாய்க் காணப்படுவோம். ஆகையால் தவறுக்காக மனம் வருந்துபவரின் சார்பிலிருந்து மிகவும் விளக்கமான அறிக்கையினை வற்புறுத்திக் கேட்பதற்கு நாம் நாடுகின்றவர்களாய் இருக்க மாட்டோம்; மாறாக கெட்டக் குமாரனுடைய தந்தையைப்போன்று நாமும், மனம் வருந்துகிறவர் தாழ்மையான மனநிலையோடு வருகிறதைக் காண்கையில், நாம் இருதயங்கள் தொடப்பட்டவர்களாக இருந்து, நாமும் பாதித் தூரம் சந்திக்கச் செல்லத்தக்க தாகவும், அவரை மன்னிக்கத்தக்கதாகவும், அவரை அன்போடு வரவேற்கத்தக் கதாகவும் மற்றும் முழுமையான ஐக்கியம் மற்றும் சகோதரத்துவத்தின் வஸ்திரத்தை உடுத்துவிக்கத்தக்கதாகவும் தூண்டப்படுகிறவர்களாக இருப்போம்.

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்தேயு 6:15).

## பாவத்தை வெறுத்துவிடுங்கள், பாவியையல்ல

"காயப்படுத்தாதே" எனும் வார்த்தையானது, நாம் சரீரப்பிரகாரமாக நமது சத்துருக்களைக் கொல்லவோ (அ) காயப்படுத்தவோ கூடாது என்பதைக் குறிப்பதாக நாம் முற்காலங்களில் அர்த்தம் எடுத்துக்கொண்டோம்; ஆனால் போதகரை நாம் பார்க்கும்போதும், அவரது வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்கும் போதும், அவர் "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறுவதைக் கேட்கின்றோம் மற்றும் அவர் பாவம் எதுவும் செய்யாமலும், அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படாமலும் இருந்தபோதிலும், "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவ ருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:22-23) என்று அப்போஸ்தலரோடுகூட நாமும் கவனிக்கின்றோம்.

நாம் உண்மையுள்ள மாணாக்கர்களாகக் காணப்படுவோமானால், இருதயத்தினுடைய எண்ணங்களையும், நோக்கங்களையும் பகுத்தறியத்தக்கதாக, கிறிஸ்துவின் பிரமாணத்தை, சுயாதீனத்தின் பூரண பிரமாணத்தைப்

பெற்றிருக்கத்தக்கதாக நாம் பார்த்துக்கொள்வோம் மற்றும் நாம் பாவம் அனைத்தையும் வெறுக்க வேண்டியவர்களாயிருக்க, நாம் எந்தப் பாவியையும் வெறுக்க முடியாதவர்களாகக் காணப்பட்டு, தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் பூரணப்பட்டிருக்க நாம் பார்த்துக்கொள்வோம். நம்முடைய சத்துருக்களை நாம் பழிக்குப் பழி வாங்கவும் மற்றும் தூஷிக்கவும் கூடாது என்பது மாத்திரமல்லாமல், இப்படியாகச் செய்வதற்கு நாம் விரும்பவும் கூடாது. தீமையான விருப்பங்கள் ஜெயங்கொள்ளப்பட வேண்டும் மற்றும் இம்மாதிரியான விருப்பங்களைக் கொடுத்திட்டதான சுயநலமான நிலைமைகளும், முற்றிலுமாய் அழிக்கப்பட்டு மற்றும் அவைகளுக்குப் பதிலாக அன்பு, அதாவது கிறிஸ்துவின் ஆவி நிரப்பப்பட வேண்டும்.

## தேவனுடைய அன்பின் குமாரனைப் பின்பற்றுதல்

யோவான் ஸ்நானன் மற்றும் நமது கர்த்தராகிய இயேசு ஆகிய இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரங்களில் ஒவ்வொருவரும், தெய்வீக ஏற்பாட்டிற்கு ஏற்ப தங்களுக்கான பணிகளை நிறைவேற்றினார்கள். ஆனாலும், அவர்களுக்கு வெவ்வேறு பணிகள் இருந்தது எனும் உண்மையிலிருந்து, நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். யோவானுடைய பணி என்பது பிரதானமாகக் கண்டிப்பவராகவும், சீர்த்திருத்தவாதியாகவும் இருப்பதேயாகும் மற்றும் அவர் மேற்கொண்டுள்ள பணி தொடர்புடைய பல்வேறு அம்சங்கள் பற்றின காரியங்களில், அவர் தீர்க்கத்தரிசியாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வழிநடத்தப்பட்டார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் நமது கர்த்தருடைய பணியோ, வேறுபட்ட ஒன்றாகும்; யோவானுடைய ஊழியமானது யாரிடத்தில் நீதியையும் மற்றும் கர்த்தருடைய சித்தத்தை அறிவதற்கும், அதைச் செய்வதற்குமான வைராக்கியத்தையும் தூண்டினதோ, அத்தகையவர்களைத் தம்மிடமாய்ச் சேர்த்துக்கொள்வதே கர்த்தருடைய பணியாய்க் காணப்பட்டது.

கிறிஸ்துவினுடைய சரீரமாயிருப்பதற்கும் மற்றும் அவரைப் பின்பற்றுவதற்கு மென்று அழைக்கப்பட்டுள்ள நாம், மேற்கூறிய விஷயத்திலிருந்து, நமக்கான சரியான நடக்கை தொடர்புடைய பாடம் ஒன்றினைக் கற்றுக்கொள்ளலாம். வனாந்தரத்தில் தங்குவதற்கும் மற்றும் ஜீவிப்பதற்கும் மற்றும் விநோதமாய் வஸ்திரம் உடுத்திக்கொள்வதற்கும் மற்றும் அனைத்தையும் மற்றும் அனைவரையும் பற்றி வெளிப்படையாய்க் கண்டனம் பண்ணுவதற்கும் மற்றும் குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் என்று நாம் யோவான் போன்று அனுப்பிவைக்கப்படவில்லை. இம்மாதிரியான பணிகள் விசேஷமானவைகளாகவும்,

மிகவும் அபூர்வமானதாகவும் காணப்படுகின்றன என்று கர்த்தருடைய அருமையான சில ஜனங்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்; மற்றும் சில சமயங்களில் தங்களுக்குரியதல்லாத மாதிரியைப் பின்பற்றுவதன் மூலம், இவர்கள் கர்த்தருடைய காரணங்கள் மீது திட்டமிடாமலேயே அவதூறைக் கொண்டு வருகின்றனர்.

தேவனுடைய அன்பின் குமாரனாகிய நமது கர்த்தரையே நாம் பின்பற்றுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும் மற்றும் நாம் யோவான் ஸ்நானனைப் பின்பற்றுகிறவர்களாய்க் காணப்படக்கூடாது. மற்ற ஜனங்களுடைய காரியங்களில் தலையிடுவதற்கு முயல்வதின் மூலமாகவோ, இந்த உலகத்தின் காரியங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு நாடுவதின் மூலமாகவோ, சக்கரவர்த்திகள், இராஜாக்கள், அதிபதிகள் முதலானவர்களைக் கண்டிக்க முற்படுவதன் மூலமாகவோ நாம் சண்டைகளைத் தூண்டிவிடக்கூடாது; மாறாக அனுமதிக்கப்படுவதற்குப் பாத்திரமானவைகள் எவைகள் என்று தேவன் காண்கின்றாரோ, அவைகள் சகிக்கப்படுவதற்கும் பாத்திரமானவைகள் என்பதாக நாமும் காணலாம் என்பதை நினைவுகூருவதற்கு, அப்போஸ்தலனால் நாம் அறிவுறுத்தப்படுகின்றோம். நம்மால் அங்கீகரிக்க முடியாத அநேகக் காரியங்கள் இருந்திட்டாலும், அவைகள் அனைத்தையும் அதிலும் விசேஷமாகக் கர்த்தருடைய வார்த்தைகளை நிறைவேற்றும் விஷயங்களில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாதவைகளை, விசேஷித்த விதத்தில் வெளிப்படையாய்க் கண்டிப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்கும் வாய்ப்புள்ளது. "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (உரோமர் 12:18) என்று கூறி, அப்போஸ்தலன் சரியான நிலையைக் குறித்துச் சுட்டிக்காட்டுகின்றார். "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9) என்று நமது கர்த்தர் கூறி, இதே கருத்தை வலியுறுத்தினவராகக் காணப்படுகின்றார்.

## ஞானமற்ற நடக்கை

மேற்கூறப்பட்டுள்ள காரியம் தொடர்புடைய விஷயத்தில், தங்கள் சொந்த குடும்பத்தின் காரியத்தில் கர்த்தருடைய ஜனங்களிலேயே பரிசுத்தமானவர்களாய்க் காணப்படும் சிலர் தவறு செய்தவர்களாகிப்போய், தேவையற்ற தப்பான அபிப்பிராயங்களையும், எதிர்ப்புகளையும் உருவாக்கிக் கொண்டு, பரிசுத்தத்திற்குரிய நியமங்களின் அளவுக்கும், சிலுவை சுமத்தலுக்குரிய அளவுக்கும் உயர்வானதாய் இராத காரியங்களிலும், அதே வேளையில் இயல்பில்

பொல்லாங்கானதாகவோ (அ) நல்லொழுக்கமற்றதாகவோ காணப்படாத காரியங்களிலும் தொடர்ந்து குறைக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பவர்களாய்க் காணப்பட்டு, தங்கள் இல்லங்களை மகிழ்ச்சியற்றதாக ஆக்கிவிடுகின்றனர். ஒழுக்கக்கேடுகள் முதலானவைகள் தொடர்புடைய விருப்பங்கள் அனைத்திற்கும் எதிராக, பெற்றோர்களும், பாதுகாவலர்களும் நிச்சயமாய்ப் பாதுகாத்திடவே வேண்டும், ஆனால் தாங்கள் அன்புகூருகின்றவர்கள் பெயர்க் கிறிஸ்தவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதினாலும் மற்றும் உலகப்பிரகாரமான ஆவியைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதினாலும், அவர்களிடத்தில் குற்றங்கண்டுபிடிப்பது என்பது நிச்சயமாய் ஞானமற்ற காரியமாகவே காணப்படும். பரிசுத்த ஆவிக்குள்ளான சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலுமான ஜீவியம் ஜீவித்தல் என்பதே கர்த்தருடைய ஜனங்கள் கொடுக்க முடிந்த, உலகப்பிரகாரமான ஜீவித்தலுக்கு எதிரான மிகச் சிறந்த கண்டனமாகவும், அவர்கள் அறிக்கைப்பண்ணுகின்றதான மகிமையான சுவிசேஷத்திற்கான மிகச் சிறந்த சிபாரிசாகவும் காணப்படுகின்றது. இந்த நிருபமே வாசிக்கப்படும் மற்றும் இதுவே இருளைக் கண்டிக்கிறதான ஒளியாகவும் காணப்படும்.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நம்மிடமுள்ள சுயத்தை வெறுத்தலுக்கான அம்சங்களை நாம் அர்ப்பணம்பண்ணாதவர்களிடம் எதிர்ப்பார்க்கவும் முடியாது மற்றும் அதை அவர்களிடத்தில் திணிக்கவும் நாம் முற்படக்கூடாது. முழுமையான அர்ப்பணிப்பு என்பது, அவர்கள் செலுத்தக்கூடிய "புத்தியுள்ள ஆராதனை" என்று அவர்கள் கண்டுகொண்டு, அவர்கள் தங்கள் சரீரங்களை, தேவனுக்கான ஜீவப்பலிகளாக ஒப்புக்கொடுப்பது வரையிலும் நாம் காத்திருக்க வேண்டும். பரிசுத்தம் மற்றும் அர்ப்பணிப்பிற்கான அளவுகோல்களைக் குறைத்துப் போடத்தக்கதாக அநேக செல்வாக்குகள் தொடர்ச்சியாகச் செயலாக்கத்தில் காணப்படுகின்றன என்பதை உணர்ந்த நிலையில், மேய்ப்பர்களும், போதகர்களும், கர்த்தருடைய அர்ப்பணம்பண்ணியுள்ளதான "மந்தைக்கு" முன்னதாக, தொடர்ந்து உயர்ப்பட்ச வேதவாக்கியங்களின் அளவுகோல்களை வைத்திடுவதற்கு நாடிட வேண்டும்.

## நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்?

சுவிசேஷ யுகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம், இந்த யுகத்திற்கான சிலாக்கியங்களையும் மற்றும் வாய்ப்புகளையும் உயர்வாய் மதித்தவர்களாக, "நம் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு" நாடிட வேண்டும்! (2 பேதுரு 1:4-11). "பணிவிடை வீட்டாராகும்படிக்கு," பூமிக்குரிய

அழைப்பைப் பெற்றுக்கொண்டுள்ளவர்கள், (உதாரணத்திற்கு யோவான் ஸ்நானன் போன்று) கர்த்தருடைய வேலையில் வைராக்கியமாய் ஈடுபட்டதின் வாயிலாக, ஒரு புத்தியுள்ள ஆராதனையைச் செலுத்தி உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்டார்களானால், மிகவும் அதிகமாய்த் தயைப் பாராட்டப்பட்டவர்களாகிய நாம், எத்தனை அதிகமான வைராக்கியத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்திட வேண்டும்? "நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2 பேதுரு 3:11).

இந்தப் "பரம அழைப்பானது," இராஜ்யத்தில் நமது கர்த்தருடன் உடன் சுதந்தரர்களாகும்படிக்கான இந்தப் "பரலோக அழைப்பானது," மிகவும் விசேஷமானது என்பதையும், மிகவும் வரையறைக்குட்பட்ட அழைப்பு என்பதையும், சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்பதையும், தெய்வீக வெளிப்படுத்தல்களின்படி, இனி மீண்டுமாக அழைப்பு வராது என்பதையும் நாம் நினைவில் கொள்வோமாக. இப்படியான கண்ணோட்டத்தைக் கொண்டவர்களாக, "மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1).

---

R4197 [ தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் ]

# ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல்

**1 சாமுயேல் 10:1-27**

*"மானிடரை ஆளுபவன், நீதியோடு, இறை அச்சத்துடன் ஆள்பவன்."*
*(2 சாமுயேல் 23:3; திருவிவிலியம்)*

## சவுலைத் தேவன் தேர்ந்தெடுத்தது தெரிவிக்கப்பட்டது

கர்த்தர் ஏற்படுத்திய ஒழுங்கின் கீழ்க் காணப்படுவதற்குப் பதிலாக, ஓர் இராஜா வேண்டும் என்று ஜனங்கள் கேட்டுக்கொண்ட விஷயத்தில், அவர்கள் ஞானமாய் நடந்துகொள்ளவில்லை என்றும், ஜனங்கள் விரும்பிக் கேட்டுக்கொண்ட

விஷயத்தின் அடிப்படையிலேயே அவர்களுக்கு ஓர் அனுபவம் வழங்கிட கர்த்தர் விரும்புகின்றார் என்றும், இஸ்ரயேலின் ஜனங்களின் மத்தியிலிருந்து யார் இந்த இராஜாவிற்குரிய முக்கிய ஸ்தானத்திற்கு வரப்போகிறார் என்று கர்த்தரிடத்தில் விசாரித்து அறிந்துகொள்ளும்படிக்கு ஜனங்களாகிய அவர்கள் ஒன்று கூட்டப்பட்டுள்ளனர் என்றும், குறிப்பிட்ட ஏற்றத் தருணத்தின்போது சாமுயேல் எழுந்து நின்று, ஜனங்களுக்கு விளக்கினார். கர்த்தர் தேர்ந்தெடுக்கும் நபர் எக்கோத்திரத்தைச் சேர்ந்தவர் என ஜனங்கள் முதலாவதாக கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள். பன்னிரண்டு கோத்திரங்களை அடையாளப்படுத்தும் பன்னிரண்டு கோல்கள் பேரில் போடப்பட்ட சீட்டில், இராஜா பென்யமீன் கோத்திரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற பதில் கிடைத்தது. அடுத்ததாக பென்யமீன் கோத்திரத்திலுள்ள பல்வேறு குடும்பங்களின் பேரிலும், பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பத்தின் அங்கங்கள் பேரிலும் சீட்டுப் போடப்பட்டு, சாமுயேல் ஏற்கெனவே அறிந்திருந்ததுபோல சீட்டு, கீசின் குமாரனாகிய சவுல் பேரில் விழுந்தது; சாமுயேலுடைய வார்த்தைகளின் நிமித்தமாகவும், அவர் அபிஷேக தைலத்தினால் தன்னை அபிஷேகம் பண்ணியிருந்ததின் நிமித்தமாகவும், சீட்டு தன் பேரிலேயே விழும் எனச் சவுலும் அறிந்திருந்தார். இவ்விதமாக, ஜனங்களுக்கு கர்த்தர் தம்முடைய தேர்ந்தெடுத்தலைக் காட்டுவதற்கும், அவர்களுடைய பல்வேறு விஷயங்களில் அவர்கள் தெய்வீக வழிநடத்துதலை நோக்குவதற்கு கற்றுக்கொடுப்பதற்கும் கர்த்தர் செயல்பட்டார்.

பல்வேறு சபைகளில், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்கும் இங்கு ஒரு படிப்பினை உள்ளது. அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும், தேர்ந்தெடுத்தல் (election) விஷயத்தில் தன்னுடைய பங்கை நிறைவேற்றும் போது, தான் கர்த்தருடைய கருவியாக மாத்திரமே செயல்பட வேண்டும் என்பதையும், கர்த்தருடைய சித்தமே முற்றும் முழுமையாகச் செய்யப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தவராகக் காணப்பட வேண்டும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் புறக்கணிக்கப்பட வேண்டும்; மேலும் குணலட்சணம் தொடர்பான விஷயத்தில் வேத வாக்கியங்களுக்கு இசைவாக மாத்திரமே வாக்கு (vote) செலுத்துபவர்களுடைய மனதில் தாக்கம் ஏற்படுத்துவதற்கு முற்படுதலும், செல்வாக்கைப் பயன்படுத்த முற்படுதலும் இருக்க வேண்டும் மற்றும் சண்டையிடுவதற்காகவோ அல்லது வீண்பெருமையினாலாவது எதுவும் செய்யப்படாமல், மாறாக அனைத்தும் தேவ மகிமைக்காகவே செய்யப்பட வேண்டும். பரிசுத்த ஆவி மற்றும் பரிசுத்தமான வார்த்தைகளுடைய வழிநடத்துதலின்படி, தேர்ந்தெடுக்கும் காரியம் தங்களுடைய கரங்களில் இருக்கின்றது என்பதை உணர்ந்தவர்களாக தேவனுடைய ஜனங்களென, தேவ

வாக்கை (oracles of god) அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றபடியால், இந்தத் தேர்ந்தெடுத்தல் விஷயத்தில், பூமிக்குரிய உறவுகள் எவ்விதமான செல்வாக்கையும் செலுத்தக்கூடாது.

கீசின் குமாரனாகிய சவுல், இராஜாவாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்ட பொழுது, அவர் தேடப்பட்டார் என்றும், அவர் எங்கு இருக்கின்றார் என்பது தெரியாமல் இருந்தது என்றும் பதிவுகள் தெரிவிக்கின்றன. கர்த்தரிடத்தில் விசாரித்தப்போது, சவுல் தளவாடங்கள் இருக்கிற இடத்தில் ஒளிந்துக் கொண்டிருக்கின்றார் என்ற உண்மையைக் கர்த்தர் வெளிப்படுத்தினார். சவுலின் தன்னடக்கம் பாராட்டத்தகுந்ததாகும். கர்த்தர் தன்னை அபிஷேகம்பண்ணினதால், ஜனங்கள் ஒன்று கூடியிருக்கின்ற தருணத்தில் தான்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதை சவுல் அறிந்திருந்தபோதிலும், அவர் தன்னடக்கத்துடன் மறைந்து போய்விட்டார். இருதயத்தின் மிகுதியான தன்னடக்கமானது, (சவுல் சொல்லர்த்தமாக ஒளிந்துகொண்டு தனது தன்னடக்கத்தை வெளிப்படுத்தின விதத்திலிருந்து வேறுபட்ட விதத்தில் வெளிப்படுத்தப்படும் நிலைமை) கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அனைவரின் மத்தியிலும் காணப்பட வேண்டும், அதிலும் விசேஷமாக கர்த்தருடைய மந்தைக்கு எந்த விதத்திலாகிலும் ஊழியம் புரிவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மத்தியில் காணப்பட வேண்டும். ஒரு மனுஷன் கர்த்தருக்கும், அவருடைய மந்தைக்கும் ஊழியக்காரனாய் இருப்பதினால் இருக்கும் கனத்தை எவ்வளவுதான் உணர்ந்துகொண்டவனாக இருப்பினும், ஊழியம் செய்வதற்கான ஸ்தானத்தினை அடைவதற்கு ஆசைப்படுவதற்குப் பதிலாக தன்னை மறைத்துக்கொண்டிருப்பவனாக இருக்க வேண்டும்.

சவுல் இராஜாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவர் அதிகாரமாய் ஆணையிடும் ஆவியையும், அதிகாரத்தையும் செலுத்தாமல், கர்த்தர் தனக்கு இராஜ்யபாரத்தைக் கொடுத்து ஆசீர்வதிப்பது வரையிலும் -- தன் சார்பில் தான் எதையாகிலும் செய்ய வேண்டும் என்று கர்த்தர் சுட்டிக்காட்டும் காலம் வரும் வரையிலும், தன்னுடைய சொந்த நிலத்தில் பணிகள் செய்வதற்கெனக் கடந்துபோன விஷயத்தில் சவுலினுடைய தன்னடக்கம் இன்னும் அதிகமாக வெளிப்படுகின்றது. இப்படியே நம்முடைய விஷயத்திலும் காணப்பட வேண்டும்; "அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்" என்று அப்போஸ்தலன் கூறுகிற பிரகாரமாக நாமும் செய்ய வேண்டும் (1 கொரிந்தியர் 7:20). ["தேவன் அழைத்தபோது இருந்தபடியே ஒவ்வொருவனும் இருக்கட்டும்" - ERV] இப்படியாக என்றென்றும் இருக்க வேண்டிய அவசியமில்லை, மாறாக கர்த்தருக்கும், அவருடைய ஜனங்களுக்கும் ஊழியம் செய்வதற்கெனக் கர்த்தருடைய வழிநடத்துதல், கதவைத் திறந்து ஒருவனை அழைக்கும் காலம் வரும்வரையிலும் இருக்க வேண்டும். ஒருவேளை ஓர் ஊழியம் கர்த்தருடைய

ஊழியமாக இருக்குமானால், கர்த்தர் வாய்ப்பையும், வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துவதற்கான ஞானத்தையும் அருளுவார். ஒருவேளை ஊழியம் கர்த்தருடையதாய் இராமல் இருக்கும் பட்சத்தில், அத்தகைய ஊழியங்களுக்குள் எவ்வளவேனும் ஈடுபடாமல் இருப்பது நலமாகும்.

## தேவனால் ஏவப்பட்ட இருதயங்களை உடையவர்கள்

இராணுவத்தில், தேவனால் மனதில் ஏவப்பட்டவர்கள், சவுலோடேகூடப் போனார்கள் என்று 26-ஆம் வசனம் நமக்குத் தெரிவிக்கின்றது. 27-ஆம் வசனமோ, மற்றவர்களாகிய "பேலியாளின் மக்கள்," சவுலை அசட்டைப்பண்ணி, சவுலுக்கு அன்பளிப்புகளையும் கொண்டுவராமல், "இவனா நம்மை இரட்சிக்கப்போகிறவன்" என்று கூறினார்கள். அநேகமாக சவுலோடுகூடச் சென்ற மனுஷர்களைக்காட்டிலும் இந்தப் பேலியாளின் மக்கள் திரளாய் இருந்திருக்க வேண்டும். சவுலைப் பற்றின இச்சம்பவமானது, நமது கர்த்தர் அபிஷேகம் அடைந்த மாத்திரத்தில், அவரிடத்தில் "தேவனால் ஏவப்பட்ட இருதயங்களை உடையவர்கள்" ஈர்க்கப்பட்டார்கள் என்பதை நமக்கு நினைப்பூட்டுகின்றது; இவர்கள் அவருடைய சீஷர்களாகவும், பின்னடியார்களாகவும் ஆனார்கள், மேலும் இவர்கள் சுமார் 500 பேராக இருந்தார்கள் என அப்போஸ்தலர் நமக்குத் தெரிவிக்கின்றார். இயேசுவை எதிர்த்த பேலியாளின் சில குமாரர்களும் இருந்தார்கள்; இவர்களைக் குறித்துத் தீர்க்கத்தரிசி, "அவரைப் பார்க்கும் போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது, அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்" என இவர்கள் கூறுவதைக் குறிப்பிட்டுள்ளார். "இவனா நம்மை இரட்சிக்கப்போகிறவன்?" என்று இவர்களும் எண்ணினார்கள்; மேலும் இவர்களுடைய கணிப்பில் அவரிடத்தில் விரும்பத்தக்கதான எதுவும் காணப்படவில்லை.

அன்றுமுதல் இன்றுவரையிலும் கர்த்தருடைய நோக்கம் மற்றும் உண்மையான ஜனங்களுடைய விஷயத்தில், அதிலும் குறிப்பாக அவருக்கான ஊழியத்தில் முதன்மையான ஸ்தானங்களில் காணப்படுபவர்களின் விஷயத்தில் மேற்கூறிய விஷயங்கள் உண்மையாக நிகழ்ந்துள்ளது. சிலர் தேவனுடைய கையாளும் விதங்களை அங்கீகரித்து, அவருடைய வழிநடத்துதல்களை அடையாளம் கண்டுகொண்டு, அதற்கு இசைவாக தங்களுடைய விசுவாசத்தின் மூலம் செயல்படுகின்றனர். இவர்களே தேவனால் ஏவப்பட்ட இருதயங்களைக் கொண்டவர்கள் ஆவார்கள். "உம்முடைய வசனமே சத்தியம்" எனும் சத்தியத்தின் வாயிலாகவே தற்காலத்தில் தேவனுடைய வழிநடத்துதல்களும், ஏவுதல்களும் முக்கியமாகக் காணப்படுகின்றது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்." பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய வழிநடத்துதலை

நோக்கிப் பார்க்கின்றவர்களாய் இருக்கின்றார்கள், மேலும் வழிநடத்துதல்களைப் புரிந்துகொள்வதற்கும் இவர்கள் உதவப்படுகின்றனர். மற்றொரு பக்கத்தில், சவுலின் நாட்களிலும், நம்முடைய கர்த்தருடைய நாட்களிலும் இருந்ததுபோன்று, அன்றுமுதல் இன்றுவரை தேவனுடைய வழிநடத்துதல்களினாலும், அவருடைய தீர்க்கத்தரிசியின் வார்த்தைகளினாலும் வழிநடத்தப்படுவதற்கு விருப்பம் இல்லாதவர்களும், சண்டையிடுகிறவர்களுமாகிய பேலியாளின் மக்கள் காணப்படவே செய்கின்றனர். சண்டையிடும் இந்த மக்கள், ஒழுக்கம் குறைந்தவர்கள் மத்தியில் உள்ளவர்களாகவும் எப்போதும் இருப்பதுமில்லை; உதாரணத்திற்கு நம்முடைய கர்த்தருடைய காலக்கட்டத்தில் பொறாமையினால் ஏவப்பட்ட சதுசேயரும், பரிசேயரும், வேதபாரகரும் (ஒழுக்கமுள்ள மக்கள்) இந்தப் பேலியாளின் மக்களாகக் காணப்பட்டார்கள்; ஒட்டுமொத்த மனுக்குலத்தையும் மிகவும் வாதிக்கும் சாத்தானுடைய பண்பாகிய பொறாமை இந்தப் பரிசேயர், சதுசேயரிடமும் காணப்பட்டது. நம்முடைய தனிப்பட்ட காரியங்களில் மற்றும் விசேஷமாக கர்த்தருடைய இராஜ்யத்தின் விஷயங்களில் நாம் ஒருபோதும் கர்த்தரை மறந்துவிடக்கூடாது என்பதே நமக்கான படிப்பினையாகும். "தேவனோடே போர்ச்செய்கிறவர்களாய்" நாம் காணப்படாதப்படிக்கு நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் நம்மை மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கச்செய்யத்தக்கதாக, மேற்கூறின படிப்பினையை நாம் உள்வாங்கினவர்களாகக் காணப்பட வேண்டும் (அப்போஸ்தலர் 5:39).

## வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் தாமதமின்மை

கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, சவுலுக்கு வாய்ப்பு வந்தது. மேலும் அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதில் அவரிடத்தில் காணப்பட்ட துரிதமானது, பெரும்பான்மையான ஜனங்களுடைய அன்பை அவருக்குச் சம்பாதித்துக் கொடுத்தது. சத்துருவாகிய மோவாபியர்கள் யாபேசை தாக்கி, அதற்கு முற்றுகைப்போட்டார்கள்; யாபேஸ் பட்டணத்தாரைக்காட்டிலும், சத்துரு வலிமைக்கொண்டவர்களாகவும் இருந்தார்கள். யாபேஸ் பட்டணத்தின் ஜனங்கள் தங்களுடைய கண்களைப் பிடுங்கக் கொடுக்கும் நிபந்தனையின் பேரில் அவர்கள் ஜீவன் உயிரோடேவிடப்படும் எனும் செய்தி யாபேஸ் பட்டணத்தாருக்கு அறிவிக்கப்பட்டது. சவுல் உடனடியாக அனைத்துக் கோத்திரத்தாரும் தங்களுடைய சகோதரராகிய யாபேஸ் பட்டணத்தாருக்கு உதவ வரும்படி, அனைத்துக் கோத்திரங்களுக்கும் செய்தி அனுப்புகின்றார். மேலும் இப்படியாக கூட்டிச் சேர்க்கப்பட்ட நபர்களைக் கொண்டு சவுல் சத்துருவைத் துரத்தியடித்து, ஜனங்களை விடுவித்தார். இதிலிருந்து தேவனால் பரிசுத்த ஆவியைக்கொண்டு அபிஷேகம்பண்ணப்பட்டவர்கள், இறுதியில் இராஜ்யத்தில் இயேசுவுடன் உடன்

சுதந்தரர்களாக ஆகும் விஷயம் தொடர்பான கண்ணோட்டத்தில் நாம் ஒரு விளக்கத்தை எடுத்துக்கொள்ளலாம். நாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட பிற்பாடு, தெய்வீக ஊழியம் செய்வதற்கான சில வாய்ப்புகளுக்காக நாம் எதிர் ப்பார்த்துக்காணப்பட வேண்டும், மேலும் அப்போஸ்தலர் வலியுறுத்தியுள்ளது போல, நாம் அழைக்கப்பட்ட நிலைமையிலேயே நிலைத்திருக்கும் போதும்கூட நாம் வாய்ப்புகளுக்காக எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். கர்த்தருடைய ஜனங்களில் சிலரைக் குருடாக்கியுள்ள மற்றும் மற்றவர்களைக் குருடாக்குவதற்கு அச்சுறுத்திக்கொண்டிருக்கின்ற ஒரு சத்துருவை நாம் அறிவோம். இம்மாதிரியான சூழ்நிலை, ஊழியம் புரிவதற்கான அழைப்பாக நமக்கு மாறுகின்றது; கர்த்தருடைய நாமத்தினாலும், பலத்தினாலும் மற்றும் நம்முடைய சகோதரரை குருடாக்கும் வல்லமையினின்று விடுவிப்பதற்குக் கர்த்தர் ஏற்பாடுபண்ணியுள்ள அனைத்துக் காரியங்களுடைய உதவியினாலும் நாம் கடந்துசெல்ல வேண்டும். யார் ஒருவன் இப்படியான வாய்ப்பைக் கண்டும், அதைப் பயன்படுத்த தவறுகின்றானோ அவனுக்கு, இராஜரிக ஆசாரியக்கூட்டத்தில் ஒருவனாகுவதற்குரிய சரியான இருதய நிலைமை இல்லை என்பதையும், கர்த்தர் பேரிலும், அவருடைய ஜனங்கள் பேரிலும், அவனுக்கு அதிக அன்பு வளர வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

---

R1159

# ஓர் உருவகக் கதை

என்னுடைய வேலையினுடைய களைப்பில், நான் நாற்காலியில் அமர்ந்திருந்தேன்; என்னுடைய உழைப்பானது, கடுமையாகவும், நீண்டகால உழைப்பாயும் இருந்தது. சபை முன்னேற்றத்துடனும், வளமையுடனும் இயங்கிவந்தது; எப்பக்கத்திலிருந்தும் மகிழ்ச்சியும், நம்பிக்கையூட்டுதலும், தைரியப்படுத்துதலுமே காணப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில், நான் என்னுடைய வேலையில் மகிழ்ச்சியாய் இருந்தேன்; என்னுடைய சகோதர சகோதரிகள் அனைவரும் ஒற்றுமையுடன் காணப்பட்டனர்; என்னுடைய பிரசங்கமும், புத்திமதிகளும், எனக்குச் செவிகொடுத்தவர்கள் மத்தியில் நல்லப் பலனைக்கொடுத்தது; என்னுடைய சபையில் ஜனங்கள் குவிந்து காணப்பட்டனர்;

என்னுடைய சபையார் அனைவரும் ஏறக்குறைய எழுப்புதல் உடையவர்களாகவே காணப்பட்டனர்; ஆகவே வேலை இப்படியாக நன்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. சபையின் முன்னேற்றத்திற்காக நான் என்னுடைய சக்தி முழுவதும் பயன்படுத்தப்படும் அளவுக்கு உழைப்பவரானேன்.

என்னுடைய வேலை களைப்பினால், நான் கொஞ்சம் அரைத் தூக்கம் போன்ற நிலைக்குள் கடந்து போய்விட்டேன், ஆனாலும் நான் இருந்த இடமும், என்னைச் சுற்றியிருந்த அறையின் விஷயங்களும் எனக்குத் தெளிவாகவே தெரிந்தது. கதவைத் தட்டாமல் அல்லது நான் உள்ளே வாருங்கள் என்று சொல்லாமலேயே ஓர் அந்நியர் அறைக்குள் வந்தார். அந்த அந்நியருடைய முகத்தில் நான் அன்பையும், அறிவுத்திறனையும், நற்பண்புகளையும் பார்த்தேன்; ஆனால் அந்த அந்நியர் நல்ல ஆடை அணிந்தவராகவும், சுமாரானவராகவும் இருந்தாலுங்கூட, அவர் அளவுகோல்களையும், இரசாயனப் பொருள்களையும், கருவிகளையும் தூக்கிக்கொண்டு வந்தது, மிகவும் விநோதமாய் இருந்தது.

அந்த அந்நியர் என்னிடத்திற்கு வந்து, தனது கையை நீட்டி, "உம்முடைய பக்திவைராக்கியம் எப்படி இருக்கின்றது?" என்று கேட்டார்.

அவர் பேச ஆரம்பித்தபோது, அவர் ஏதோ என் ஆரோக்கியத்தைக் குறித்துக் கேட்கப் போகிறார் போலும் என்று எண்ணினேன்; ஆனால், அவர் பக்திவைராக்கியம் குறித்துக் கேள்விக் கேட்டது எனக்குச் சந்தோஷமாய் இருந்தது; ஏனெனில் என்னுடைய பக்திவைராக்கியத்தினுடைய விஷயத்தில் எனக்கு நன்கு திருப்தியிருந்தது மற்றும் வந்துள்ள அந்நியர் என்னுடைய பக்திவைராக்கியத்தின் அளவை அறியும்போது புன்னகைப்பார் என்று நான் உறுதியாயிருந்தேன். தானாகவே பக்திவைராக்கியத்தை நான் ஒரு திடப்பொருளாக மாற்றிக்கொண்டு, பக்திவைராக்கியத்தை வெளியே எடுத்து, அந்த அந்நியர் சோதனை செய்யத்தக்கதாகக் கொடுத்தேன்.

அவர் அதை வாங்கிக்கொண்டு, தனது தராசில் வைத்து, கவனமாய் எடைப்பார்த்தார். "நூறு பவுண்ட்ஸ்" என்று அவர் கூறுவதை நான் கேட்டேன்.

நான் திருப்தியடைந்துள்ளதை வெளிப்படுத்தும் சத்தத்தை என்னால் வெளிக்காட்டாமல் அடக்கி வைக்க முடியவில்லை; ஆனால் அவர் எடையைக் குறித்துக்கொண்டபோது, அவரது பார்வையைக் கவனித்தேன் மற்றும் அவர் இன்னமும் இறுதி முடிவிற்கு வரவில்லை என்பதையும், அவர் இன்னமும் தமது சோதனையைத் தொடரவிருக்கின்றார் என்பதையும் உடனடியாய்க் கண்டுகொண்டேன்.

அவர் அந்தத் திடப்பொருளை (பக்திவைராக்கியத்தை) மிகச் சிறு அணுக்களாக உடைத்து, அவைகளைத் தமது மட்பாத்திரத்தில் போட்டு, பின்

பாத்திரத்தை நெருப்பின் மீது வைத்தார். திடப்பொருளின் அணுக்களானது முழுமையாக உருகினபோது, அவர் அதை நெருப்பிலிருந்து எடுத்து, குளிரும்படி விட்டார். அது குளிர்ந்தபோது உறைந்து போனது மற்றும் அது அடுப்பங் கரையினிடத்திற்குக் கொண்டு வரப்பட்டப்போது, அது பார்ப்பதற்கு வரிசை வரிசையான அடுக்குகளை உடையதாகக் காட்சியளித்தது; அது சுத்தியலினால் அடிக்கப்பட்டப்போது, உடைந்தது மற்றும் அவைகள் கடுமையாய்ப் பரிசோதனை செய்யப்பட்டன மற்றும் எடைப் பார்க்கப்பட்டன; இவைகள் நடைபெறுகையில் அந்த நபர் குறிப்புகளையும் குறித்துக்கொண்டார்.

அவர் அனைத்தையும் முடித்த பிற்பாடு, பதிவு செய்திட்டக் குறியீடுகளை என்னிடம் கொடுத்து, கவலையும், அனுதாபமும் கலந்த ஒரு பார்வையுடன் "தேவன் உன்னைக் காப்பாற்றுவாராக!" என்று மட்டும் கூறி, அறையைவிட்டு வெளியேறினார்.

நான் குறியீடுகளுள்ள காகிதத்தைத் திறந்து வாசித்தேன்; அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

"ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பும் ஜீனியஸ் அவர்களின் பக்திவைராக்கியத்தினுடைய பாகங்கள் பற்றின ஆய்வு: அதன் மொத்த எடை 100 பவுண்ட்ஸ் ஆகும்; அதன் பாகங்கள் பற்றின ஆய்வின்படி, 100 பவுண்ட்ஸ் பக்திவைராக்கியத்தில் . . . .

10 - பாகங்கள் - மதவெறி/குருட்டுத்தனமான பிடிவாதம்
23 - பாகங்கள் - தனிப்பட்டக் குறிக்கோள்கள்
14 - பாகங்கள் - தாலந்துகள் குறித்த பெருமை
19 - பாகங்கள் - புகழ், பாராட்டிற்கான ஆசை
15 - பாகங்கள் - சபை பிரிவு குறித்த பெருமை
12 - பாகங்கள் - அதிகாரத்தின் மீதான ஆசை
4 - பாகங்கள் - தேவன் மீதான அன்பு
3 - பாகங்கள் - மனிதன் மீதான அன்பு

அந்த அந்நியருடைய விநோதமான நடந்துகொள்ளுதலினாலும், அதிலும் குறிப்பாக அவர் அறையைவிட்டு வெளியேறும்போது கொண்டிருந்த பார்வையும், கூறிச்சென்ற வார்த்தைகளும் என்னைக் கலக்கத்தில் ஆழ்த்தினது; ஆனால் அவர் காகிதத்தில் குறித்துத் தந்திருந்த எண்ணங்களைப் பார்த்தபோது, என்னுடைய இருதயமானது, எனக்குள்ளாக நலிந்துபோனது. ஒருவேளை பதிவு செய்யப்பட்டிருப்பவைகள் சரியாக இருக்குமோவென எதிர்த்து யோசித்திட முயன்றேன்; ஆனால் வெளியேறின அந்த அந்நியர் முகப்பு அறையை (hall)

தாண்டிடும்போது, வருத்தத்தால் முனங்கின சத்தத்தினால் நான் திடீரென நேர்மையான உணர்வின் நிலைக்குக்கொண்டுவரப்பட்டேன்; மேலும் திடீரென ஓர் இருள் என்னை மூடிக்கொண்டபோது, என் கையில் இருந்த பதிவுகளின் குறிப்பானது, உடனடியாக மங்கலானது மற்றும் படிக்க முடியாத அளவுக்குத் தெளிவில்லாததாகியது,

"கர்த்தாவே என்னைக் காப்பாற்றும்/இரட்சியும்!" என்று நான் திடீரெனக் கதறினவனானேன்.

காகிதத்தை என்னுடைய கையில்கொண்டவனாகவும், அதன்மேல் என் கண்களைப் பதிய வைத்தவனாகவும், நான் முழங்காற்படியிட்டிருந்தேன். உடனே அந்தக் காகிதம், "ஒரு கண்ணாடியாக மாறினது மற்றும் அதில் நான் என் இருதயத்தைப் பார்க்க முடிந்தது. பதிவு செய்யப்பட்டிருந்தவைகள் உண்மையே! நான் அதைப் பார்த்தேன்; நான் அதை உணர்ந்தேன்; நான் அவைகளை ஒப்புக்கொண்டேன்; அவைகளுக்காக வருத்தப்பட்டேன்; மேலும் என்னிடமிருந்தே என்னைக் காப்பாற்றும்படிக்கு, மிகுந்த கண்ணீர்களோடு நான் தேவனை நாடினேன். பொறுக்கமுடியாத வேதனையினால், அடக்கிக்கொள்ள முடியாத பலத்த அழுகையின் சத்தத்தோடு விழித்தேன்.

-- தெரிந்துகொள்ளப்பட்டவை.

தேவனுடைய அர்ப்பணம்பண்ணப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் அவரது ஸ்தானாபதிகளாகக் காணப்படுகின்றபடியால், இந்த உருவகக் கதையானது அனைவருக்கும் பிரயோஜனமாக இருக்கும். தேவன் மீதான அன்பும், நம்முடைய சக மனுஷர்கள் மீதான அன்பும் மாத்திரமே உண்மையான பக்திவைராக்கியத்தினுடைய அம்சங்களாக/பாகங்களாகக் கதையில் இடம்பெறும் ஆய்வில் காணப்படுகின்றது. கதையின் ஆய்வில் வரும் மற்றப்பாகங்களானது, தேவனுடைய பார்வையில் வெறுக்கத்தக்க கழிவுகளாகக் காணப்படுகின்றது மற்றும் நாமும் கணிக்கும் விஷயத்தில் தேவனுடைய கண்ணோட்டத்தைக் கொண்டிருப்போமானால், நமக்கும் அந்த மற்றப் பாகங்களானது, வெறுக்கத்தக்கக் கழிவுகளாகவே காணப்படும். தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பிடும் ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னுடைய சொந்த இருதயத்தைப் பரிசோதித்து, தன் சொந்த பக்திவைராக்கியத்தையும், தன் சொந்த நோக்கங்களையும் ஆராய்ந்து பார்ப்பானாக.

# மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை

*"நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்."*
*(அப்போஸ்தலர் 20:29-30)*

இந்த வார்த்தைகளானது, எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களுக்குக் கூறப்பட்டவையாகும். பரிசுத்த பவுலடிகளார் எருசலேமுக்குப் போகையில், எபேசு பட்டணத்திற்கு அருகாமையில் காணப்பட்டபோது, தான் அங்குக் கொஞ்சம் காலம் காணப்படப்போவதாகவும், அவர்களை மீண்டும் ஒருமுறை சந்திப்பதில் மகிழ்ச்சியாய் இருப்பார் என்பதாகவும் கூறி (எபேசு சபையின்) மூப்பர்களுக்கு ஆளனுப்பி வைத்தார். அவர்களும் வந்து, அவரோடுகூட நீண்டதொரு கலந்துரையாடல் பண்ணினார்கள். நமது ஆதார வசனமானது, அவர்களுக்கு அவரால் கொடுக்கப்பட்ட செய்தியின் ஒரு பாகமாய் இருந்தது. அவர்களை பட்டணத்திற்கு அருகாமையில் காணப்பட்டபோது, தான் அங்குக் கொஞ்சம் காலம் காணப்படப்போவதாகவும், அவர்களை மீண்டும் ஒருமுறை சந்திப்பதில் மகிழ்ச்சியாய் இருப்பார் என்பதாகவும் கூறி (எபேசு சபையின்) மூப்பர்களுக்கு ஆளனுப்பி வைத்தார். அவர்களும் வந்து, அவரோடுகூட நீண்டதொரு கலந்துரையாடல் பண்ணினார்கள். நமது ஆதார வசனமானது, அவர்களுக்கு அவரால் கொடுக்கப்பட்ட செய்தியின் ஒரு பாகமாய் இருந்தது. அவர்களை மறுபடியுமாக சந்திக்கப்போவதில்லை என்று அவர் அவர்களிடத்தில் கூறி, அவர்கள் தங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்று அறிவுரை கூறினார். இது மற்றவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருத்தல் என்பதைவிட, தன்னைக் குறித்தே எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவருக்கும் கடமையாக்குகின்றது. ஒரு மனுஷன் தன் சொந்த மனதை அடக்குகிறதற்குக் கற்றுக்கொள்ளாதது வரையிலும், அவன் மற்றவர்களை அடக்குவதற்கு ஏதுவான நிலையில் காணப்படான்.

இது மூப்பர்கள் அனைவரின் விஷயத்திலும் குறிப்பாய் உண்மையாகக் காணப்படுகின்றது. அவர்கள் தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். சபையார் அவர்களுக்குக் கொடுத்திடும் கனத்தின் நிமித்தமாக, அவர்கள் தற்பெருமையினால் - இறுமாப்புணர்ச்சியினால் இழுக்கப்பட்டுப் போவதற்குரிய அபாயத்தில் காணப்படுகின்றனர். அவர்கள் கர்வமுள்ளவர்களாகுவதற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். அவர்கள் தங்களைக் குறித்தும் மற்றும் தங்களைக் கண்காணிகளாக வைத்த தேவனுடைய மந்தையைக்குறித்தும் எச்சரிக்கையாய் இருக்கும்படிக்குச் செய்தி கொடுக்கப்பட்டது. அவர்கள் சபையாருக்கு மாத்திரமல்லாமல், கர்த்தருக்கும்கூடப் பிரதிநிதிகள் என்ற தங்களது ஸ்தானத்தை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். நியமிக்கப்பட்ட வழியில் -

அதாவது கைகளை நீட்டி தேர்ந்தெடுக்கும் வழி மூலமாய் இந்த ஸ்தானம் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளபடியால், இதை அவர்கள் சபையாருடைய வார்த்தையாக எடுத்துக்கொள்வது மாத்திரமல்லாமல், இன்னுமாக தாங்கள் பரிசுத்த ஆவியினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். சபையை இப்படியாகப் பராமரிப்பது என்பது தங்களுக்கான மாபெரும் ஊழியமென, கர்த்தருடைய நாமத்தில் ஏறெடுக்கப்பட வேண்டிய முக்கியமான ஊழியமென அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

## ஓநாய்களும், கள்ள ஆடுகளும்

ஏன் மூப்பர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாம் காரணமானது, அப்போஸ்தலன் சொல்லியுள்ளது போன்று, மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய் அவர்களுக்குள்ளே வரும் என்பதாகும். ஓநாய்களானது எந்த ஒரு காலப்பகுதியிலும் மந்தையில் அங்கம் வகிப்பவர்களாக இருக்கவில்லை என்பது சுட்டிக்காண்பிக்கப் படுகின்றது. இவர்கள் தங்களை ஓநாய்கள் என்று காண்பித்துக் கொள்வதில்லை. ஓநாய் சுபாவமுள்ள ஒரு குறிப்பிட்ட வகுப்பார், சபையாருடன் தங்களை இணைத்துக்கொள்ள நாடிடுவார்கள் என்று அப்போஸ்தலனுடைய எச்சரிப்பானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" என்று நமது கர்த்தர் எச்சரித்துள்ளார் (மத்தேயு 7:15). இது வஞ்சிப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது - ஆடுகள்போன்று நடந்து, ஆடுகள் மத்தியில் காணப்பட்டு மற்றும் ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு, தங்களை ஆடுகள் என்று காண்பித்துக்கொள்பவர்கள், ஆனால் ஒருபோதும் உண்மையான ஆடுகளாக இராதவர்கள் என்பதை சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. மந்தைக்குள் இவர்கள் வருவதற்கான நோக்கம் சுயநலமானதேயாகும் மற்றும் இவர்களது ஆதிக்கமானது, ஆடுகள் மத்தியில் ஓநாய் கொண்டிருக்கும் ஆதிக்கமாகவே இருக்கின்றது. ஓநாயானது ஆடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றதாய் இருக்கின்றது - ஓநாய் ஆடுகளைக் கொன்று, அவைகளின் இரத்தத்தினை உறிஞ்சிடுவதற்கே நோக்கம் கொண்டிருக்கின்றது.

நமது கற்பனைக்கு அப்பாற்பட்ட நிலையில், எந்தக் காரணமுமில்லாமல் சத்தியத்தைப் புரட்டுகிற, மந்தையை பாதிப்பிற்குள்ளாக்குகிற, மந்தையைக் குழப்புவதற்கு ஏதுவாயும், அவர்களைப் புதுச்சிருஷ்டிகளென அழித்துப் போடுவதற்கு ஏதுவாயும், அவர்களை மரணத்திற்கு இழுத்துச்செல்வதற்கு ஏதுவாயும் வாக்குவாதங்களை எழுப்புகிற ஒரு வகுப்பார் காணப்படுவார்கள் என்பதாகத் தெரிகின்றது. அநேகமாக யுகம் முழுவதிலும் இம்மாதிரியான வகுப்பார்

காணப்பட்டிருக்கின்றனர். நம்முடைய ஆதார வசனமானது, ஆடு ஓநாய்களாக மாறும் என்று சுட்டிக்காண்பிக்கவில்லை என்றாலும், ஒரு காலத்தில் ஆடுகளாய் இருந்து பிற்பாடு ஓநாய் சுபாவத்தினை வெளிப்படுத்தி மற்றும் மந்தையைப் பாதிப்பிற்குள்ளாக்கும் விஷயத்தில் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்திடுவதில் பிரியம் கொண்ட சில நபர்களை, நம்மில் சிலர் ஒருவேளை அறிந்திருக்கலாம். ஆடுகள் மத்தியில் வந்து தங்களை ஆடுகள் போல் காண்பித்துக்கொள்பவர்களைக் குறித்து நாம் ஜாக்கிரதையாய் இருக்கும்படிக்கு கர்த்தரும், அப்போஸ்தலர்களும் நம்மை எச்சரிக்கின்றனர்.

ஓநாய்களிடமிருந்து வரும் இந்த அபாயத்துடன்கூட, உள்ளிலும் அபாயங்கள் காணப்படும். இதனை மிகவும் சூழ்ச்சிகரமான அபாயம் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். ஓநாய் சுபாவம் உள்ளவர்கள் ஒருபக்கம் இருக்க, சபையாரில் சிலர் போதகர்களாக ஊழியம் புரிபவர்களாகக் காணப்பட்டு, மாறுபாடானவைகளைப் போதிப்பதன் மூலம், சீஷர்களைத் தங்களிடத்திற்கு இழுத்துக்கொள்வதற்கு நாடிடுவார்கள். ஏதோ சீஷர்கள் அவர்களுக்குச் சொந்தமானவர்கள் போன்று, இழுத்துச் செல்வதற்கு நாடிடுவார்கள். சபை கர்த்தருடைய மந்தையாக இருக்கின்றனர் என்றும், அவர்கள் கர்த்தருடைய ஆடுகளாய் இருக்கின்றனர் என்றும், அடையாளம் கண்டுகொள்ளாமல் - இது என்னுடைய சபையார், என்னுடைய மந்தை என்பது இவர்களது உணர்வுகளாய் இருக்கும். இம்மாதிரியான உணர்வுகளில், கர்த்தருடைய மற்றும் வேதவாக்கியங்களுடைய ஆவிக்கு எதிரான சுயநலமான மனப்பான்மையே காணப்படுகின்றது. "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்பது திவ்விய நிர்வாகத்தின் கொள்கையாகும் (லூக்கா 14:11). உண்மையான மூப்பராகவும், கர்த்தருக்கு உண்மையான ஊழியக்காரனாகவும் இருக்க விரும்பும் எவரும், இவைகளை நினைவில் கொண்டிருக்க வேண்டும் மற்றும் சுயநல நாட்டத்தின் ஆவியாயிருக்கும் அனைத்தையும் தவிர்த்திட வேண்டும். இப்படியாக இல்லையேல் அவன் தனக்கு மாத்திரமல்லாமல், இம்மாதிரியான நடக்கையின் வாயிலாக மற்றவர்களுக்கும் பாதகம்பண்ணுகிறவனாய் இருப்பான் என்பதைத் தெரிந்துகொள்வானாக.

## திறமைக்கு ஏற்ப பொறுப்பு

செம்மறியாடுகள் மிகவும் அச்சம்கொள்ளும் விலங்குகளாகும் மற்றும் சில வழிநடத்துதல் அவைகளுக்குத் தேவைப்படுகின்றது. மேய்ப்பன் இல்லாமல் இருக்கையில், அவைகளை வழிநடத்துவதற்கு, அவைகளின் மத்தியிலிருந்து, ஒன்று காணப்படுவது அவசியமாய் இருக்கின்றது. ஆட்டுமந்தையில், ஞானமுள்ள ஆடுகள் - மந்தையின் ஆட்டுக்கடாக்கள், வழிநடத்துபவைகளாக

காணப்படுகின்றன; இவைகளை மேய்ப்பன் இல்லாமல் இருக்கையில், பின் தொடருவதற்கு ஆடுகள் கற்றுக்கொள்கின்றன. மந்தையிலுள்ள இந்த மூத்த ஆட்டுக்கடாக்கள், கிறிஸ்துவின் சபையிலுள்ள மூப்பர்களுக்கு அடையாளமாய் இருக்கின்றன. ஆட்டுக்கடாக்களின் கொம்புகளானது பாதுகாக்கும் வழிவகையாகக் காணப்படுகின்றது; இதனால் ஆட்டுக்கடாவானது, தாக்குதலின்போது, எதிரியைத் துரத்தமுடியும் மற்றும் செம்மறியாடுகளானது ஆட்டுக்கடாவிற்குப் பின்பாக போய் நிற்கமுடியும்.

ஆனால் மந்தையினுடைய சில ஆட்டுக்கடாக்களைக் குறித்துள்ள - கர்த்தருடைய ஜனங்களுக்கான சில வழிநடத்துபவர்களைக் குறித்துள்ள அபாயம் பற்றி வேதவாக்கியங்கள் கூறுகின்றன (எசேக்கியேல் 34:17-23); இந்த ஆட்டுக்கடாக்களானது, ஓடைக்குள் இறங்கி, அதைச் சேறாக்கி, தண்ணீரை அசுசிப்படுத்துகின்றது. வெள்ளாடுகள்கூடக் குறிப்பிடப்பட்டுள்ளன; இது கிறிஸ்துவின் சபையிலுள்ள சில மூப்பர்களுடைய மனப்பான்மையைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் இதை நாம் மறந்துபோய்விடக்கூடாது. செம்மறியாடுகளின் சொந்தக்காரர்கள் சிலசமயம் மந்தையை வழிநடத்துவதற்கு வெள்ளாடுகளைப் பயன்படுத்துவார்கள் என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது; காரணம் செம்மறியாட்டைப்பார்க்கிலும் வெள்ளாடானது, எதிர்த்து நிற்கும் தன்மையை அதிகமாய்ப் பெற்றதாய் இருக்கின்றது மற்றும் இப்படியாக வெள்ளாடானது, செம்மறியாடுகளுக்குத் தேவைப்படும் தைரியம் முதலியனவற்றை அளிக்கின்றதாய் இருக்கின்றது. எத்தனை கர்த்தருடைய மந்தைகள் வெள்ளாடுகளினால் வழிநடத்தப்படுகின்றனர் என்பதை நாம் அறியோம். ஆனால் ஒருவர் வெள்ளாட்டினுடைய சுபாவத்தினை வெளிப்படுத்தும்போது அவரை, வழிநடத்துபவராக்குவதைச் சபையார் கண்டிப்பாய் தவிர்த்திட வேண்டும்.

தகுதியான பண்புகளை வெளிப்படுத்துபவர்களே தகுதியான வழிநடத்துபவர்கள். சபையானது பெரும்பாலும் வழிநடத்துபவர்களைச் சார்ந்திருக்கின்றது; ஆகையால் வழிநடத்துபவர்களே பெரிதளவில் பொறுப்பினை உடையவர்களாய் இருக்கின்றனர். ஆகையால்தான் போதகனாய் இருக்கும் மனுஷன் கடுமையான சோதனைக்குள்ளாவான், கடுமையான பரீட்சைக்குள்ளாவான் என்பதை அறிந்து, என் பிரியமான சகோதரரே, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் (யாக்கோபு 3:1). அவன் தன்னுடைய திறமைக்கேற்ப அதிகம் பொறுப்புடையவனாக இருப்பான். ஆகையால் மூப்பர்களின் ஸ்தானத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருமே ஒருவிதத்தில் மந்தைக்குப் பிரதான மேய்ப்பனாகக் காணப்படுகின்றதான கர்த்தரைப் பிரதிநிதித்துவம் பண்ணுகின்றவர்களாய் இருப்பார்கள்.

---

# இராஜரிக ஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு

**வே**தவாக்கியங்களானது தனிப்பட்ட குருமார் வகுப்பாரை அங்கீகரிப்பதில்லை, மாறாகக் கிறிஸ்துவின் முழுச்சபையாருமே ஆசாரியக்கூட்டத்தாராய் இருக்கின்றனர் என்றும், அப்போஸ்தலர்கள் மற்றும் கர்த்தர் கட்டளையிட்ட எதையும் தங்களுக்கு இருக்கும் திறமைக்கேற்ப செய்திடுவதற்கு ஒவ்வொருவருக்கும் மற்றும் அனைவருக்குமே ஒரே மாதிரி அதிகாரம் காணப்படுகின்றது என்றும் நாம் சுட்டிக்காண்பிக்கையில், நாம் ஒழுங்கின்மையை வலியுறுத்துவதாக யாரும் அனுமானித்திட வேண்டாம். ஒவ்வொரு சபையாரும், தங்கள் மத்தியில் நன்கு தகுதியுடையவர்களாய்க் காணப்படுபவர்கள் சிலரை இந்த ஊழியங்களுக்கெனத் தேர்ந்தெடுப்பது தகுதியானதேயாகும். ஆனால் இப்படியாக ஊழியம் புரிகிறவர், அவரை இப்படி ஊழியம்புரியும்படிக்குத் தேர்ந்தெடுத்த அவரது சகோதரரைக் காட்டிலும் உயர்ந்த ஒரு வகுப்பாருக்கு அல்லது ஜாதியாருக்கு உட்பட்டவர்களல்ல என்று எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். "கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்." சபையின் இத்தகைய ஊழியக்காரன் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் பயபக்திக்குரியவரென அல்லது புனிதமானவரெனக் கருதப்படக்கூடாது; ஒருவேளை அவர் மிகவும் உண்மையுள்ள மற்றும் கிறிஸ்துவுக்கொத்த சாயலுடைய ஊழியக்காரனாகக் காணப்பட்டாலுங்கூட, அவர் "அவரது கிரியைகளினிமித்தமாக" மிக உயர்வாய் எண்ணப்பட வேண்டும்; காரணம் அவரது அன்பான மற்றும் உண்மையான ஊழியத்தினாலே ஒழிய, வேறெந்தக் காரணத்தினாலுமல்ல (1 தெசலோனிக்கேயர் 5:13). அவர் தேவனுடைய பார்வையில் "குருவாய்" இருப்பதில்லை; ஏனெனில் இத்தகைய எந்த வகுப்பாரையும் தேவன் அங்கீகரிக்கிறதில்லை மற்றும் அவரது வசனமானது இத்தகைய எந்த வேறுபாட்டையும் அங்கீகரிக்கிறதில்லை.

சபையின் இத்தகைய ஓர் ஊழியக்காரன் அல்லது வேலைக்காரன் பெற்றிருக்கும் எந்த "அதிகாரமும்," அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரமாகவே இருக்கின்றது; கர்த்தருடைய சகோதரரில் எளிமையான சகோதரனாய்க் காணப்படுபவர் பெற்றிருப்பதைக்காட்டிலும் அதிகமான எந்த அதிகாரத்தை இந்த ஊழியக்காரர் பெற்றிருப்பதில்லை; சுவிசேஷத்தை அறிவிக்கவும் மற்றும் வேதவசனமானது செய்யும்படிக்குக் கட்டளையிடும் எதையும் அல்லது எல்லாவற்றையும் அவனவனுடைய தாலந்துகள், வாய்ப்புகளுக்கு ஏற்ப செய்திடுவதற்கு மற்றும் ஊழியம் புரியும்படிக்கு சகவிசுவாசி விரும்பிடுவதற்கும் ஏற்ப செய்திடுவதற்கு, முழுச்சபையிலுள்ள யாருக்கும் வேதவசனத்தினுடைய அதிகாரம் காணப்படுகின்றது (மத்தேயு 28:19, 20). பிரசங்கித்திடுவதற்கோ அல்லது வேறுவிதத்தில் ஊழியம்புரிந்திடுவதற்கோ அதிகாரம் என்பது மற்ற

ஊழியக்காரர்களாலோ அல்லது குருமார் பேரவைகளாலோ கொடுக்கப்பட முடியாது. ஒவ்வொரு இராஜரிக ஆசாரியன், அதிகாரத்தின் விஷயத்திலும், ஆசாரியத்துவத்திற்குரிய மதிப்பின் விஷயத்திலும் ஒருவருக்கொருவர் இணையானவர்களே; ஆனால் தாலந்துகள், அறிவு முதலானவைகளிலும், திறமை விஷயத்திலும் இவர்கள் ஒருவருக்கொருவர் சமமாய்க் காணப்படுவதில்லை. அனைவருக்கும் ஊழியக்காரர்களாய் ஊழியம்புரிந்திடுவதற்கென ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் காரியமானது, இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் மற்றவர்களுக்கு இப்படியாய் உயர்வான ஊழியம்புரிந்திடுவதற்குரிய ஏதோ தகுதிகளைப் பெற்றிருக்கின்றனர் என்பதையும், அவை அனைவருக்குமான ஊழியத்திற்காகவும், பிரயோஜனத்திற்காகவும் அவர்களால் மனமுவந்து மற்றும் மனப்பூர்வமாய்ப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது அல்லது சுட்டிக் காட்டுகின்றதாய் இருக்க வேண்டும்.

---

R3077 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார்

## உபாகமம் 34:1-12

*“நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.”*
*(அப்போஸ்தலர் 20:29-30)*

### *யோசுவா புதிய தலைவனானார்*

**யோ**சுவாவுக்கு அப்பொழுது 80-வயதாயிருந்தது மற்றும் இவர் மோசேக்குப் பின்வருபவராக, இஸ்ரயேலர்களால் முறுமுறுப்பில்லாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டார். இஸ்ரயேலர்கள் சந்தேகத்திற்கிடமின்றி தங்களது வனாந்தரப் பயிற்சியின்போது சில விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்றுக்கொண்டனர். மோசே சீனாய் மலைக்குச் சென்று, அங்கு நியாயப்பிரமாணங்களைப் பெற்றுக்கொண்ட போது, யோசுவா காணப்பட்டார் என்ற ஞாபகம் நமக்கு இருக்கின்றது; உண்மையில் வனாந்தரப் பிரயாணம் முழுவதிலும், மற்றவர்கள்

அனைவருக்கும் மேலாக, மோசேயால் இவர்மேலேயே முழுமையாய் நம்பிக்கை வைக்க முடிந்தது. இவரும் காலேபுமாகிய இரண்டு வேவுக்காரர்கள் மாத்திரமே சாதகமான தகவல் அறிக்கையினைக் கொண்டுவந்து, கர்த்தருடைய உதவியினால், இஸ்ரயேல் முன்னேறிச் சென்று, நிச்சயமாய் நாட்டைச் சொந்தமாக்கிக்கொள்ளலாம் என்று தெரிவித்தனர். தலைவர் மாற்றப்பட்டதில் இஸ்ரயேல் இன்னொரு மாபெரும் பாடத்தைக் கற்றுக்கொண்டனர்; அதாவது அவர்களது நம்பிக்கையும், விசுவாசமும் மனுஷனிடத்தில் காணப்படக்கூடாது; மற்றும் அவர்கள் கர்த்தரைத் தங்களது தலைவராக அங்கீகரித்துக் காணப்படுவது வரையிலும், அவர்கள் பாதுகாப்பும், நம்பிக்கையும் கொள்ளலாம்; ஏனெனில் மற்றவர்கள் கடந்து போய்விட்டாலும்கூட, கர்த்தர் எப்போதும் உண்மையுள்ள வராகக் காணப்படுவார் மற்றும் தம்மால் நலமானவர்கள் என்று கண்டு கொள்ளப்படும் தலைவர்களை எப்போது வேண்டுமானாலும் எழுப்ப வல்லவராய் இருக்கின்றார் என்பதாகும்.

இதில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் ஒரு பாடம் உள்ளது. வழிநடத்துபவர்கள் மீது நாம் நம்பிக்கையை வைக்காமல், கர்த்தரில் நம்பிக்கை வைக்க வேண்டும். இது நாம் வழிநடத்துபவர்களை நம்பவே கூடாது என்றும், வழிநடத்துபவர்களை அங்கீகரித்திடக் கூடாது என்றும் அர்த்தப்படுகிறதில்லை; ஏனெனில் நிழலான மற்றும் நிஜமான தம்முடைய ஜனங்களுடனான கர்த்தருடைய கையாளுதலின் சரித்திரமானது, மேலான கிருபையிலிருந்து கிருபைக்கும், அறிவிலிருந்து மேலான அறிவிற்கும் தம்முடைய ஜனங்களை வழிநடத்துவதிலும், போதிப்பதிலும், அவர் தம்முடைய பிரதிநிதிகளென மனித கருவிகளைப் பயன்படுத்துவதற்குச் சித்தம் கொண்டிருந்திருக்கின்றார் என்று நமக்குக் காண்பித்துத் தருகின்றதாய் இருக்கின்றது. தம்முடைய வேலை நிர்வகிப்பதற்குக் கர்த்தர் முழுத்திறமையுடையவராக இருக்கின்றார் என்பதும், மனித கருவிகள் வாயிலாக அவரது வழிநடத்துதல்களுக்காக நாம் ஏறெடுத்துப் பார்த்திட்டாலும், நம்முடைய நம்பிக்கையானது, அவர்களிலோ, அவர்களது ஞானத்திலோ, அவர்களது பெலத்திலோ காணப்படாமல், மாறாக அவர்களை வழிநடத்துகிறதும், அவர்கள் வாயிலாக நம்மை வழிநடத்துகிறதுமான கர்த்தருடைய ஞானத்திலும், பெலத்திலுமே காணப்பட வேண்டும் என்பதும் கற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாடங்களாய் இருக்கின்றன.

# பொருளாசையின் அபாயம்

## ஆதியாகமம் 13:1-13

*"பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்." (KJV)*

*"கவனமாக இருங்கள், எல்லா வகையான சுயநலமிக்க செயல்களுக்கும் எதிராக உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்." (லூக்கா 12:15; ERV - தமிழ்)*

### *எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாதேயும்*

பெரும்பாலும் சுயநலம் மற்றும் பொருளாசை (பேராசை) காரணமாகவே குடும்பத்திலும், சபையிலும் சண்டைகள் எழுகின்றது; மேலும் கர்த்தருக்கு அருகாமையிலும், அவருடைய குணலட்சணத்திற்கு ஒத்த சாயலில் அதிகமாக வளர்ந்துள்ள நிலையிலும் காணப்படுபவர்கள் எல்லாவிதமான சண்டையிலும் மிகவும் பெருந்தன்மையுடன் காணப்படுவது என்பது இத்தகையவர்களுக்கான சிலாக்கியமாகும். பெரும்பான்மையான சண்டைகள் விட்டுக்கொடுக்கப்படாத அற்ப அல்லது முக்கியத்துவமற்ற விஷயங்கள் நிமித்தமே காணப்படுகின்றது; கொள்கைகள் விஷயங்களில் மாத்திரமே கர்த்தருடைய ஜனங்கள் உண்மையாகப் போராடலாம். கொள்கை விஷயத்திலான போராட்டத்திலும்கூட அன்பு மற்றும் பரந்த மனப்பான்மையுடனே காணப்பட வேண்டும்; அதாவது தனிப்பட்ட விருப்பங்கள் தொடர்புடைய விஷயத்தில், முடிந்தமட்டும் மற்றவருக்கு விட்டுக்கொடுக்கும் விருப்பத்தின் சிந்தை காணப்பட வேண்டும், ஆனால் கர்த்தருடைய வார்த்தை மற்றும் நீதியின் கொள்கையைப் பொறுத்தவரையில், உறுதியாகவே காணப்பட வேண்டும். சபையில் சண்டை எழும்பும் போது, பொதுவாக தவறான புரிந்துகொள்ளுதல் அல்லது சுயநலம், பேராசை, பிரதானமாக பெரியவராய் இருப்பதற்கான ஆசை ஆகியவைகளே அடிப்படையாகக் காணப்படுகின்றது. இப்படியான சந்தர்ப்பங்களில் கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவரும் எதிர்மாறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ள தன்னுடைய சகோதரனுக்கு உதவிசெய்ய முற்படுவதற்கு முன்னதாக, தனது சொந்த இருதயத்தை நன்கு பரிசோதித்துக்கொள்ள வேண்டும் மற்றும் தனது சொந்த கண்கள் நலமாய் இருக்கின்றதா எனப்பார்த்துக்கொள்ளவும் வேண்டும். இப்படியாக ஒருவர் விட்டுக்கொடுக்கும் அளவுக்கு நோக்கமும், விருப்பமும், சொந்த இருதயத்தில் பெருந்தன்மையும் கொண்டிருப்பதையும், மற்றவர்களிடத்தில் நலமானதைக் காணவும், ரசிக்கவும், அங்கீகரிக்கவும் தன்னால் முடியும் என்பதையும் தனக்குள் நிச்சயம் பண்ணினவர், மற்றவர்களோடு கலந்துபேசவும், சூழ்நிலைப் பற்றிய சரியான, பரந்த மற்றும் பெருந்தன்மையுமான கண்ணோட்டத்தை மற்றவர்களும் எடுக்கத்தக்கதாக, உதவவும் ஆயத்தமாய்க் காணப்படுவார்.

வீட்டிலும், சபையிலும் "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது" செய்யக்கூடாது என அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார்.

மரணத்தினின்று ஜீவனுக்குள் பிரவேசித்தவர்களாகிய, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டிகள் மத்தியில் அன்பு மாத்திரமே ஊக்குவிக்கும் வல்லமையாகக் காணப்பட வேண்டும். இப்படியாக அனைத்துப் பிரச்சனைகளைச் சமாதானமான விதத்தில் சரிசெய்துகொள்வதற்கான வழி உள்ளது, மேலும் இதை நம் கர்த்தர் தாமே முன்வைத்துள்ளார்; மேலும் இதை விரிவாக நாம் டாண் வெளியீட்டில் தொகுதி - VI, அதிகாரம் VI-இல் கொடுத்துள்ளோம். ஆனால் எங்கு அனைத்து வழிகளும் தோல்வியடைகையில், அங்குச் சகோதரத்துவத்தின் ஆவியை அணையச்செய்து, பகைமை (அ) கோபத்தின் ஆவியை நிலவச்செய்வதற்குப் பதிலாக, தங்களால் அன்பில் ஒன்றாக ஐக்கியம் வைத்துக்கொள்ள முடியாது என்று கண்டுகொள்பவர்கள், ஆபிரகாம் மற்றும் லோத் சூழ்நிலைபோன்று, பிரிந்துசெல்வதின் மூலம் ஆவியில் ஐக்கியத்தைத் தக்கவைத்துக்கொள்ள நாட வேண்டும். இப்படிச் செய்வது என்பது, உள்ளுக்குள்ளே சண்டைகள் கொண்டிருப்பதைவிட, கடைசி தீர்வு என அங்கீகரிக்கப்பட்டாலும், இப்படியான நடவடிக்கை என்பது நிச்சயமாக கவலைக்குரிய ஒன்றாகும்; மற்றும் இது அக்கூட்டத்தாரில் அனைவரும் இல்லை என்றாலும், சிலராகிலும் புதிய சுபாவம் தொடர்பான விஷயங்களில் மிகவும் வளர்ச்சியற்ற நிலையில் காணப்படுகின்றார்கள் என்பதையும், சமாதானம்பண்ணுகிறவர்களுக்குரிய வல்லமையில் மிகவும் குறைவுபட்டவர்களாய் இருக்கின்றார்கள் என்பதையும், திரளான பாவங்களை மூடிப்போடுகிறதும், நீடிய பொறுமையுடனும், அன்புடனும், பொறுமையுடனும், இரக்கத்துடனும் சகிக்கும் சகோதர சிநேகத்தில் மிகவும் குறைவுபட்டிருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

---

R1475

## நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர்

### சங்கீதம் 23:5

கர்த்தர் பந்தி ஒன்றினை ஆயத்தப்படுத்துகின்றார் என்றால், அதனை பற்றின பல காரியங்கள் குறித்து நமக்கு உறுதியே; அதென்னவெனில்: முதலாவதாக, அது சுத்தமானதாக இருக்கும்; இரண்டாவதாக, அது நல்லதாக இருக்கும்; மூன்றாவதாக, அது முறையாயும், திரளாயும் மற்றும் அருமையாயும் இருக்கும். சத்தியமானது இவ்வளவு கவனம்செலுத்தி விசுவாச வீட்டாருக்கு அச்சு, பேனா அல்லது மேடை மூலம் முன்வைக்கப்படும் எங்கும், கர்த்தருடைய ஆவியானது கிரியைசெய்து, காரியத்தினை வழிநடத்தி, மேற்பார்வையிடுகின்றது

என்பதில் நமக்கு உறுதியே. தீர்க்கத்தரிசியான ஏசாயா, "போஜனபீடங்களெல்லாம் வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை" என்று கூறினபோது, இப்பொழுது பெயர்க்கிறிஸ்தவ ஜனங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள பிரபலமான இறையியல் பந்தியின் தற்போதைய நிலைமையைச் சித்தரித்து விவரித்துள்ளார் (ஏசாயா 28:8). கடந்த பல நூற்றாண்டுகளாக அவர்கள் மனித பாரம்பரியம் எனும் கவலைக்கிடமான உமியை உண்டுவந்திருக்கின்றனர்; இப்போது எதிர்விளைவானது ஏற்பட்டு, அவர்கள் தீட்டானவைகளை வாந்திப்பண்ணுகின்றனர் மற்றும் அவர்களது பந்திகளானது அசுத்தங்களினால் நிரம்பிக் காணப்படுகின்றது.

பழையதும், மாசுள்ளதுமான பந்திகளின் நிமித்தமான வெறுப்பினால், அவைகளினின்று திரும்பிடுபவர்கள் - புதிய பாரம்பரியங்கள் மற்றும் மனித ஊகங்களுடைய அநேகம் பந்திகளினிடத்திற்கு உடனடியாக வரவேற்கப்படுகின்றனர். இவைகள் அனைத்திலும், சபையினுடைய மாபெரும் எதிராளியானவன் - ஜனங்களைச் சென்றடைவதற்கான மிகவும் ஆற்றல்மிக்க இரண்டு பிரதிநிதியாகிய பத்திரிக்கை மற்றும் பிரசங்க மேடை ஆகியவற்றின் மாபெரும் செயல்விளைவினைப் பயன்படுத்தி, தனது கைத்தேர்ந்த சூழ்ச்சிகள் மற்றும் தந்திரங்கள் அனைத்துடன் கடுமையாகவும், உண்மையாயும் வேலை புரிந்துகொண்டிருக்கின்றான்.

இத்தகைய பத்திரிக்கைகளானது, தெய்வீக வெளிப்படுத்தல் சார்ந்த காரியங்கள் விஷயத்தில், மனித அபிப்பிராயங்களை வெளிப்படுத்திடுவதற்கான வழி/ஊடகம் மாத்திரமே என்றும், ஒவ்வொரு தனி மனிதனும் அவற்றிலிருந்து தான் உண்மை என்று பார்க்கக்கூடியதைப் பிரித்தெடுத்து, மற்றவைகளைப் புறந்தள்ளிட வேண்டும் என்றுமுள்ள - பிரபலமான கருத்தானது மதரீதியான இதழாசிரியர்கள் மத்தியில் பெருகிக்கொண்டு வருகின்றது. ஆனால் துல்லியமாய் இதைத்தான் வாசகர்களாலும் மற்றும் பெரும்பாலும் இத்தகைய பத்திரிக்கைகளினுடைய இதழாசிரியர்களாலும்கூடச் செய்யமுடியவில்லை மற்றும் மிகுந்த குருட்டுத்தன்மைக்கும், அடர்த்தியான இருளுக்கும் ஏதுவாய்ப் பரவலான குழப்பம் மாத்திரமே அதிகரித்துள்ளது மற்றும் இப்படியாக எதிராளியானவனுடைய நோக்கமானது நிறைவேறுகின்றது.

பொதுவாக போதகராகும் ஒவ்வொரு மனுஷனும் அவன் உணருகின்றானோ, இல்லையோ, அவன் தேவனிடத்தில் ஆழமான பொறுப்பைக் கொண்டவனாகுகின்றான். "ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" (மத்தேயு 5:19).

தம்முடைய வார்த்தைகளில் வழிக்காட்டுதல்களைக் கொடுத்துள்ளதான வீட்டின் மாபெரும் தலையானவருக்குக் கீழ்ப்படிதலுள்ள கைகளினால் மற்றும் முழுக்க ஒப்புக்கொடுக்கப்பட்ட கைகளினால் மற்றும் ஜாக்கிரதையுள்ள கைகளினால் - பரிமாறப்படாத எந்தப் பந்தியும், விசுவாச வீட்டார் வரவேற்கப் படுவதற்குப் பொருத்தமானதல்ல. வீட்டாருக்கு ஊழியம் புரிந்திடுவதற்குத் தேவனால் அருளப்பட்டிருப்பவர்களுக்கும், தாங்கள் எதைத் தெரிவிக்கும்படிக்கு அவர் விரும்புகின்றார் என்று அறியும்படிக்கு (அவரது வார்த்தைகளை ஆராய்பவர்களுமானவர்களுக்கும்) காவலிலே தரித்திருப்பவர்களுமானவர்களுக்கும் (ஆபகூக் 2:1) தேவன் கூறுவதாவது: "நீ தரிசனத்தை (திவ்விய சத்தியத்திலிருந்து நீங்கள் கண்டிருப்பவைகளை) எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே தீர்க்கமாக வரை" (ஆபகூக் 2:2); அதாவது "கடந்தோடுகிறவன்" - பரிசிற்காக ஓடுகிறவன் - "வாசிக்கும்படி," அதை முறையாக, ஒழுங்காக முன்வைத்தலாகும். அனைத்து மனிதர்களும் வந்து, சத்தியத்தைத் தீர்க்கமாக/தெளிவாக வைத்திடுவதற்கு அழைக்கப்படவில்லை என்பதையும், இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்பாரில் சிலர், மீதமானவர்கள் யாவருடைய நன்மைக்காக அதைச் செய்யும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதையும் கவனியுங்கள். வேதவாக்கியங்களில் அனைவராலும் பார்க்கவும், புரிந்துகொள்ளவும் முடிகின்ற நிலையிலுள்ள அநேகம் மேற்பரப்புச் சத்தியங்கள் காணப்படுகின்றன; மேலும் வேண்டுமென்றே மறைக்கப்பட்டும், தெளிவற்ற நிலையில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்படும் அநேகவற்றை உள்ளடக்கின தெய்வீகத் திட்டத்தினை முறைப்படி ஒழுங்குப்படுத்தி, அதன் ஆச்சரியமான விவரங்களை வெளிக்கொண்டுவருவது, நியமிக்கப்பட்டுள்ள காலத்திற்கென்று வைக்கப்பட்டுள்ளது. அந்த நியமிக்கப்பட்ட காலம் வருகையில், திவ்விய சத்தியத்தினுடைய முறைப்படியான இசைவினைக் காணத்தக்கதாக, உண்மையாய்க் கவனிப்பவர்கள் வழிநடத்தப்படுகின்றனர் - அதைக்குறித்து அனுமானம் பண்ணுவதற்கோ அல்லது அதைக்குறித்து ஊகம்பண்ணுவதற்கோ அல்ல, மாறாக தெளிவாய்க் காணத்தக்கதாக வழிநடத்தப்படுகின்றான் மற்றும் இதனால் அவன் மற்றவர்களுக்குத் தெளிவாயும், காரணகாரியத்திற்கு உட்பட்ட நிலையிலும், வேதவாக்கியங்களின் அடிப்படையிலும் விளக்க முடிகிறவனாகுகிறான்; பின்னர் இப்படியாகக் காண்கின்றவன், தனக்குக் கர்த்தரால் தெளிவுப்படுத்தப்பட்டவற்றை மற்றவர்களுக்குத் தெளிவுப்படுத்துவதற்குரிய சிலாக்கியமுடையவனாகுகிறான். இப்படிப்பட்டவன் இது விஷயத்தில் தனக்கிருக்கும் திறமையையும் மற்றும் இன்னுமாக தேவனைப் பற்றின முழுமையான அறிவினால் பரிசுத்தவான்களை ஆசீர்வதிப்பதற்கும் மற்றும் அவர்கள் மிகுந்த உண்மையுடன் காணப்படத்தக்கதாக,

அவர்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் புத்திசொல்லுவதற்கும் ஏங்குகின்றதான வல்லமையுள்ள அன்பையும் மற்றும் கிடைக்கும் வாய்ப்புகளையும் - சத்தியத்தைத் தெளிவாய் முன்வைப்பதற்குரிய, தனக்கான கர்த்தருடைய அழைப்பாய் இருக்கின்றது என்று கருதிடலாம்.

ஆனாலும் இப்படிப்பட்டவன் - சத்தியத்தினை தெளிவற்றதாக்குவதற்கு இல்லை, மாறாக அதைத் தெளிவாய் முன்வைத்திடுவதே பணியாக இருக்கின்றது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். ஒரு மனுஷனிடத்தில் தெளிவாய் முன்வைத்திடுவதற்குச் சத்தியம் இல்லாமல், இன்னுமாக சத்தியத்திற்காக தேடிக்கொண்டு மாத்திரம் அவன் இருப்பானானால், மற்ற மனங்களைக் குழப்பிடுவதற்கு ஏதுவான தனது முரண்பாடான மற்றும் திருத்தம் பெறாத கருத்துக்களை அவன் வெளிக்கொணர முயற்சிப்பது என்பது, அவன் மாபெரும் தவறைச் செய்வதாகவே இருக்கும். இத்தகையவன் காரியங்களைத் தெளிவாய்ப் பார்த்து மற்றும் இப்படியாய் மற்றவர்களுக்குப் போதிக்க தகுதியுள்ளவனாகுவது வரையிலும், சீஷனுக்குரிய, கற்றுக்கொள்பவனுக்குரிய சரியான நிலையினைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அவன் உண்மையுள்ள மாணவனாகவும், தேவனுக்கு முன்பாக தன்னை உத்தமனாக நிறுத்தும்படிக்கு முயற்சிக்கிறவனாகவும்/கற்கிறவனாகவும் இருப்பானானால், விரைவில் ஏதோ ஒரு வழியில் மற்றவர்களுக்குச் சத்தியத்தினை அறிவிக்கக்கூடிய சிலாக்கியத்தினை அனுபவிப்பவனாகவும், அப்படிச் செய்வதினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான்.

திருத்தம் பெறாத, சரியாக விவரிக்க முடியாத கருத்துக்களை அர்ப்பணிக்கப்பட்டவர்களில் எவரும் அச்சடிக்கத் துரிதப்பட்டு, மற்றவர்களுடைய பாதையில் தடுக்கலின் கற்களாகாதிருப்பார்களாக. நீங்கள் பெற்றுக்கொண்டதும் மற்றும் உங்களுக்குத் திருப்திகரமாகக் காணப்படுவதுமான சத்தியத்தினை, பசியோடு இருக்கும் மற்றப் பரிசுத்தவான்களுக்கு முன்வைத்திட நாடுங்கள்; பந்தியைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுங்கள்; வீணான ஊகங்களைத் திரளாய்ப் பரப்பிடுவதன் மூலம், உங்களது குறைவான அறிவிற்கு ஈடுசெய்யாதீர்கள். வேறே நிலைமையிலுள்ள திரளானவைகளைப் பார்க்கிலும், சுத்தமான பந்தியிலிருந்துள்ள சிறு துண்டுகள் சிறந்ததாய் இருக்கும். போகப் போக இந்தச் சிறு துண்டுடன், வேறு துண்டுகள் கொடுக்கப்படும் மற்றும் ஏற்றகாலத்தில் தெய்வீகத் தயாளத்தின் ஐசுவரியம் உணர்ந்துகொள்ளப்படும்.

---

# மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு

*"அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்." (உரோமர் 15:1)*

நம்முடைய ஆதார வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான மாபெரும் கொள்கையானது, அன்பின் கொள்கையாகும், அதாவது தெய்வீக ஆவியின் சாரமாகும். தேவன் அன்பாகவே இருக்கிறார்; மற்றும் அன்பின் ஆவியானது, தேவனுடைய ஆவியாக இருக்கின்றது. தேவனுடைய ஜனங்கள் மத்தியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இந்த ஆவியானது, அவர்களை ஒருவருக்கொருவர் அக்கறைகொள்ளச் செய்கின்றது. இது சுயநலத்தின் ஆவிக்கு எதிர்மாறானதாகும். இது தனது நலனுக்கடுத்தவைகளோடுகூட, மற்றவர்களுடைய நலனுக்கடுத்தவைகளை, அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாரின் நலனுக்கடுத்த வைகளை நாடுகின்றது.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும், கூடுமானமட்டும் பலவீனருக்கும், உதவி அவசியப்படுபவர்களுக்கும் உதவிடுவது நம்முடைய மனநிலையாய்க் காணப்பட வேண்டும். பலவீனமாய் இருப்பவர்களை ஏளனமாய் அவமதித்து, "அவர்களுக்கு என்னுடைய அனுதாபம் காணப்படுகின்றது" என்று கூறிடுவது, உலகத்தாருடைய பொதுவான மனநிலையாய் இருக்கின்றது. ஆனால் உண்மையில் பெலவீனர்கள் அதிகமாய் அனுதாபங்களைப் பெற்றுக்கொள்வதில்லை. மிகவும் வெற்றிகர மானவர்களை, வல்லமை உள்ளவர்களை, ஐசுவரியவான்களை உலகமானது பாராட்டுகின்றது. ஆனால் தேவன் பெலவீனர்களுக்காகவும், எளியவர்களுக் காகவும் அனுதாபம்/இரக்கம் கொண்டிருப்பது போன்று, அனுதாபப்படுவதற்கான அவசியத்தில் இல்லாதவர்களைக் காட்டிலும், அனுதாபப்படுவதற்கான அவசியத்தில் இருப்பவர்களுக்கே நாம் அனுதாபம் காண்பிக்க வேண்டும். சபையில் அறிவில் பலமுள்ளவர்களாகச் சிலரும், அறிவில் பலவீனர்களாகச் சிலரும், சரீரத்தில் பலமுள்ளவர்களாகச் சிலரும், சரீரத்தில் பலவீனர்களாகச் சிலரும், ஆவிக்குரியவற்றில் பலமுள்ளவர்களாகச் சிலரும், ஆவிக்குரியவற்றில் பலவீனர்களாகச் சிலரும் காணப்படுகின்றனர்.

நாம் எந்தளவுக்குப் பலமுள்ளவர்களாகக் காணப்படுகின்றோமோ, அவ்வளவுக்கு மற்றவர்கள் தங்கள் பலவீனங்களை ஜெயங்கொள்வதற்கு நாம் உதவுவது மாத்திரமல்லாமல், அனைவருக்கும் உதவுகிறவர்களாகவும், ஊக்குவிப்பவர்களாகவும் மற்றும் எப்படி அவர்கள் தங்கள் குறைப்பாடுகளை ஜெயங்கொள்ளலாம் என்று சுட்டிக்காண்பிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். எனினும் இந்தச் சுட்டிக்காட்டுதல்களை நாம் மிகவும் வற்புறுத்திடக்கூடாது;

ஏனெனில் அநேக ஜனங்கள் தங்கள் சொந்த பலவீனங்களை உணராதவர்களாய் இருக்கின்றனர்; இத்தகையவர்களது, கடினத்தைப் பலமுள்ளவர்கள் சகித்துக்கொள்வதோடுகூட, அவர்களது கண்மூடித்தனமான செயல்கள் சிலவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டும். யாராவது தன் சொந்த பலவீனத்தைக் கண்டு கொள்வானானால், அது பிரயாசம் எடுப்பதற்குரிய அருமையான தூண்டுதலாய் இருக்கும். ஆகையால் புண்படுத்தாமல் அல்லது இடறப்பண்ணாமல், மற்றவர்களுக்கு, அவர்களது பலவீனத்தைக்குறித்துக் கவனத்திற்குக் கொண்டுவருவதே பலமுள்ளவர்களுக்கான கடமையாக இருக்கும். ஒருவேளை பலவீனங்களானது தவறான விதத்தில் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அவர்கள் இடறிடுவதற்கு வாய்ப்புள்ளது; ஆனால் ஒருவேளை ஞானமான விதத்தில் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அவர்களுக்கு உதவியாயிருக்கும். இது ஜீவியத்தின் சிக்கல்கள் யாவற்றிற்கும் பொருத்தப்படலாம். நம்முடைய சொந்த பலவீனங்களைக் கண்டுகொள்வதற்கும், அதை ஜெயங்கொள்வதற்கும் நாம் எப்போதும் விழிப்புடன் காணப்பட வேண்டும் மற்றும் காரியங்களைச் சகோதரர்களின் கண்ணோட்டத்திலிருந்துப் பார்த்து, நமது உதவியினை அவர்களுக்கு அளித்து, இப்படியாகச் சகோதரருடைய நலனுக்கடுத்தவைகளில் நாம் ஈடுபடுவதற்கும் மற்றும் ஈடுபடுவதிலும் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்.

சபையிலுள்ள மூப்பர்கள், உண்மையில் மூத்தச் சகோதரர்களாக இருந்திட வேண்டும். குடும்பத்தில் மூத்த சகோதரன், தகப்பனுக்கு அடுத்தப்படியாக, மற்ற அங்கத்தினர்களுடைய நலனுக்கடுத்தவைகளுக்காக, உதவுகிறவராகவும், ஆதரிக்கிறவராகவும், தன்னையே தியாகம் பண்ணுபவராகவும் காணப்படுகின்றார். இப்படியாகவே சபையிலும் ஆகும். சத்தியத்தில் முதிர்ந்தவர்கள், சத்தியத்தில் மிகவும் வளர்ந்திருப்பவர்கள், இளையவர்களை ஊக்குவித்திட, ஆதரித்திட, தூக்கிவிட மற்றும் பாதுகாத்திட வேண்டும். இதை நாம் ஒவ்வொரு குடும்பத்திலும், பூமிக்குரிய ஜீவியத்தின் காரியங்களில் காண்கின்றோம். குடும்பத்தில் மூத்தவர்கள் என்பவர்கள், தங்கள் சொந்த சௌகரியங்களை, தங்கள் சொந்த விருப்பங்களைத் தியாகம்பண்ணி இளையவர்களை ஆதரித்து, குடும்பத்தில் உதவுபவர்களாக இருக்கின்றனர்; குடும்பத்திலுள்ள இளையவர்களுடைய நலனுக்கடுத்தவை களுக்காக, அவர்களது சொந்த சந்தோஷங்களானது விட்டுக்கொடுக்கப்பட வேண்டியுள்ளது. பலமுள்ளவர்கள் மற்றும் பலவீனமானவர்கள் இருவருமே தங்களை ஆவிக்குரிய காரியங்களில் பயிற்றுவித்துக்கொள்வதன் வாயிலாகக் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே அப்போஸ்தலனின் கருத்தாய் இருக்கின்றது.

## நாம் நமக்கே பிரியமாய் நடவாமல்

"நாம் நமக்கே பிரியமாய் நடவாமல்" எனும் வசனத்தினுடைய பின்பாகமானது கொடுக்கும் கருத்தென்னவெனில் . . . நாம் கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணியுள்ளபோதிலும், பாவங்களிலிருந்து நாம் திரும்பி இருக்கின்ற போதிலும், நாம் பாவஞ்செய்திடுவதற்கான மனநிலையை, மனப்பாங்கைப் பெற்றிருக்கின்றோம். புதுச்சிருஷ்டியினுடைய மனநிலையானது, பாவம் செய்யக்கூடாது மற்றும் சரி எதுவோ அதைச் செய்ய வேண்டும் என்றும், தன்னை "மகா பரிசுத்தமான விசுவாசத்தில்" கட்டியெழுப்ப வேண்டும் என்றும் காணப்படுகின்றது. எனினும் தன்னை "மகா பரிசுத்தமான விசுவாசத்தில்" கட்டியெழுப்ப நாடுகையில், அவன் தன் மனதில் தன்னலத்தின் சில விஷயங்கள் முதன்மையாய் நிற்பதற்கு அனுமதிக்கக்கூடும். தன்னுடைய நலனுக்கடுத்த வைகளை, தன்னுடைய சொந்த கட்டியெழுப்பப்படுதலை, தனது மனதில் அவன் முதன்மையாய்ப் பெற்றிருக்க வேண்டிய அதேவேளையில், கிறிஸ்துவின் ஓர் அங்கத்தினனாக, தான் பொறுப்பினைப் பெற்றிருப்பதினால், அவன் தன்னைத்தான் பிரியப்படுத்திடுவதற்கு மாத்திரம் நாடாமல், தான் மற்றவர்களுக்கு ஊழியம் புரியத்தக்கதாக, தகுதியான மற்றும் சரியான காரியங்களில் சிலவற்றை விட்டுக்கொடுப்பதற்கு விருப்பம் உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதையும் அவன் நினைவில் கொள்ள வேண்டும் மற்றும் இப்படியாக, கர்த்தருடைய செயலினால் படிப்பினை ஒன்றைப் பெற்றுக்கொள்கின்றான். உதாரணத்திற்கு ஊழியக்காரியங்களைப் பற்றி ஆலோசிக்கப்படுகையில், ஆவிக்குரியவற்றில் மிகவும் வளர்ச்சியடைந்திருப்பவர்கள் விட்டுக்கொடுக்கிறவர்களாக இருக்கலாம். மேலும் அவர்கள் தங்கள் சொந்த விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் பார்த்து, சகோதரருக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் விதத்தில் தங்கள் சொந்த காரியங்களை ஒழுங்குப்படுத்திக்கொள்ள நாடிட வேண்டும் என்பது அப்போஸ்தலனுடைய புத்திமதியாகத் தெரிகின்றது.

கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின பல்வேறு சபையார் மத்தியில், வேதமாணவர்களின் சபைகளில், மிகவும் வளர்ச்சியடைந்திருப்பவர்கள் மத்தியில், தங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளும், மற்றவர்களிடமிருந்து தங்களை விலக்கிக்கொள்ளும் மனநிலைக் காணப்படுகின்றது. இந்த மனநிலைக்கு எதிராக போராடிடுவதற்கு நாங்கள் பிரயாசம் எடுத்திருக்கின்றோம். குறைவான அறிவுடையவர்கள் சிலர் காணப்படுவார்களானால், கற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்பினை அவர்கள் பெற்றுக்கொள்ளட்டும். அவர்கள் நல்லதும், கடினமானதுமான கேள்விகளை எழுப்புவார்களானால், அது மிகவும் நல்லது.

கூட்டங்கள் நடத்தப்படும் நேரம் மற்றும் இடம் தொடர்புடைய விஷயத்தில், நாம் நமக்கு மாத்திரம் பிரியமாய் நடவாமல் இருப்போமாக. கடந்து வந்து கலந்துகொள்வதற்கு மிகவும் சிரமமான இடங்களில் கூட்டங்களை நடத்திட சிலர் விரும்பிடுவதை நாம் காணலாம்; ஆனால் நாம் சுயநலமாக அல்லது தன்னலத்தை நாடுகின்றவர்களாய் இராமல், மாறாக பெரும்பான்மையானவர்களின் நலனுக் கடுத்தவைகளில், அவர்களைப் பிரியப்படுத்திட நாடிட வேண்டும். ஒருவேளை இந்த ஆவியானது சபைகளில் காணப்படுமானால், அதிகமான வளர்ச்சிக் காணப்படும்; மற்றும் எல்லாக் கர்த்தருடைய ஜனங்களும் இந்தப் படிப்பினையைக் கற்று வருகின்றனர்.

இதே கருத்தானது, சபையின் ஊழியக்காரர்களுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. மூப்பர்கள் பின்வருமாறு: அதாவது நாம் ஒன்றுகூடி, நமக்குள்ளாக பல்வேறு காரியங்களைக்குறித்துக் கலந்தாலோசித்திடலாம் என்று கூறிடுவதற்கு ஏதுவான ஒரு மனநிலைக் காணப்படுகின்றது. இது தவறான நோக்கத்தின் பேரில் செய்யப்படுகிறதில்லை. இப்படியாக எப்போதாவது செய்வது ஞானமாய் இருக்கலாம். ஆனால் கர்த்தருடைய ஊழியத்தில் உதவிக்காரர்களும் இணைந்துகொள்ளத்தக்கதாக பொதுவாகவே மூப்பர்கள், உதவிக்காரர்களோடு கூடி, அவர்களை நம்பிக்கையோடு நடத்திட வேண்டும்; அனைவருமே ஒன்று கூடிடுவது நலமானதாய் இருக்கும் மற்றும் சபையிடமிருந்து இரகசியங்களை வைத்துக்கொள்வதற்குப் பதிலாக பெரும்பான்மையான காரியங்களில் சபையாருக்கு அனைத்தையும் தெரியப்படுத்திடுவது நலமாயிருக்கும். சில சமயங்களில் சில விஷயங்கள் வெளிப்படையாக அறிவித்திட முடியாதுதான்; எனினும் சபையில் நேரமும், ஆற்றலுமுள்ள யாவருக்கும் ஆதரவாய்க் காணப்படத்தக்கதாக மூப்பர்களும், உதவிக்காரர்களும் தங்கள் கூட்டங்களை ஒழுங்குப்படுத்திட நாடிட வேண்டும்; இதனால் எவ்விதமான வகுப்பினர்-பிரிவும் இல்லை என்று சபையார் எண்ணிடுவார்கள்.

நூற்றாண்டுகள் முன்னதாக, குருமார் வகுப்பார் என்பவர்கள் சபையில் ஒரு தனிப்பட்ட வகுப்பார் என்றும், மற்றவர்கள் சபையின் குழந்தைகளாக அல்லது பிள்ளைகளாக இருக்கின்றனர் என்றுமுள்ள கோட்பாடானது கத்தோலிக்க நண்பர்களால் துவக்கப்பட்டது. இந்தக் கோட்பாடானது பிற்பாடு புரோட்டஸ்டண்டி னரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்படியாக குருமார்கள் தங்களைத் தாங்களே ஒரு தனிப்பட்ட வகுப்பாராக ஏற்படுத்தி வைத்துக் கொண்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம். கர்த்தர் சபையில் சிலரை மூப்பர்களாக ஏற்படுத்திவைத்துள்ள காரியமானது, அவர்களைப் பிரித்து வைக்கிறதில்லை. நாம் அனைவரும் ஒரே வகுப்பாரே. ஆகையால்தான் கண்ணானது, காலை நோக்கி: "நீ எனக்கு வேண்டுவதில்லை" என்று சொல்லிடமுடியாது என்று அப்போஸ்தலன்

கூறுகின்றார். ஒவ்வொரு அவயவமும் கவனிக்கப்பட வேண்டும்; மற்றும் ஒருவரும், மற்றவர்கள் மீது ஆளும் ஒரு ஸ்தானத்தினை எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒருவர் மேலான ஊழியத்தினை ஒருவேளைப் பெற்றிருப்பாரானால், அதை அவர் மற்றவர்களுக்காகப் பயன்படுத்திட வேண்டும்; ஒருவேளை ஒருவர் முதன்மையற்ற ஊழியத்தினைப் பெற்றிருப்பாரானால், அதை அவர் பொதுவான நலனுக்காகப் பயன்படுத்திட வேண்டும். ஆகையால் நாம் அங்கத்தினர்களாகக் காணப்படும் அபிஷேகிக்கப்பட்டவரின் சரீரத்தினுடைய, முழுமையான வளர்ச்சியினை அனைவரும் அடைவது வரையிலும், சபையானவள் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எதற்காகவும் கொள்கைகளானது ஒருபோதும் விட்டுக்கொடுக்கப்படக் கூடாது; ஆனால் சுயாதீனங்களும், தனிப்பட்ட உரிமைகளும் அடிக்கடியும் மற்றும் தேவனைப் பிரியப்படுத்துவதற்காகவும், மற்றவர்களுடைய நலனுக்கடுத்த காரியங்களுக்காகவும் பொருட்படுத்தப்படாமல் இருக்கலாம். கொள்கையை ஆதரிக்க அப்போஸ்தலனாகிய பவுல் இயன்றமட்டும் போராடுவதற்கு ஆயத்தமாய் இருந்தார் (கலாத்தியர் 2:5-11). கிறிஸ்துவுக்காகவும், சபைக்காகவும் என்று பூமிக்குரிய உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பலிச் செலுத்திடும் விஷயத்தில், அப்போஸ்தலன் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு அடுத்தப்படியாகக் காணப்பட்டார் மற்றும் முழுச்சபைக்கும் சிறந்த உதாரணமாய்த் திகழ்ந்தார்.

"தேவக்கட்டளைகள் எத்துணை ஞானமானவைகள்;
அவரது கற்பனைகள் எத்துணை மெய்யானவைகள்!"

---

R3906 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பயண சகோதரர்களின் ஊழியங்கள்

இந்த வகை ஊழியங்களானது, மிகவும் பிரயோஜனமான ஒன்று என்றும், கடந்த காலங்களில் கர்த்தருடைய அருமையான மந்தைக்கு மிகவும் பிரயோஜனமாய் இருந்துள்ள ஒன்று என்றும் நாம் நம்புகின்றோம். "பயண சகோதரர்கள்"/Pilgrims என்ற சகோதரர்கள் சத்தியத்தினைப் பற்றின தெளிவான அறிவுடையவர்களாய் மாத்திரம் இராமல், கூடவே சத்தியத்தினை முன்வைப்பதற்கு

சராசரிக்கு மேலான திறமையை உடையவர்களாயும் இருப்பார்கள். சொசைட்டியினுடைய செலவில் இவர்கள் ஓரிடத்திலிருந்து, இன்னொரு இடத்திற்குச் சென்று, ஒவ்வொரு முறையும் அருமையான நண்பர்களை வழக்கமாக இரண்டு நாட்கள் காலம் சந்திக்கின்றனர். இவர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகள் பண்ணப்படும்பட்சத்தில், இவர்கள் ஒருநாளில் இரண்டுமுறை பேசுவதற்கு ஆயத்தத்துடன் காணப்படுவார்கள். எந்த இடத்திலும் ஒழுங்குபண்ணப்படும் கூட்டங்களில் பாதிப் பொதுக்கூட்டத்திற்கு என்றும், மீதி பாதி விசேஷமாய்ச் சத்தியத்தின் மீதான ஆர்வமுள்ளவர்களுக்கு என்றும் செலவிடப்படுவதாக என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம் மற்றும் வரக்கூடிய வருஷத்தில் பயண ஊழியக்காரர்களுடைய வருகையின்போது, அவர்கள் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளை எப்படிச் சிறப்பாய் நடத்துவது என்பதற்கு மாதிரிகளை விசேஷமாய்க் கொடுத்திடும்படிக்கு நாம் வலியுறுத்துகின்றோம்.

இந்தப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளை நாங்கள் நடத்தி வருகின்றோம்; காரணம் அவைகளைச் சரியாய் நடத்திடுவதற்குக் கற்றுக்கொண்டிருப் பவர்களுக்கு இந்த ஆராய்ச்சி வகுப்புகளானது எத்தனை பிரயோஜனமானவை களாக இருக்கும் என்பதையும், அவைகளின் உண்மையான ஆவியானது அதை வழிநடத்துபவராலும், சபையாராலும் புரிந்துகொள்ளப்படாத பட்சத்தில், அவை எவ்வளவு சுவாரஸ்யமற்று இருக்கும் என்பதையும் நாம் அறிவோம். எந்தச் சபைகளில் இந்த ஆராய்ச்சி வகுப்புகளானது மிகவும் கவனமாயும், கருத்தாயும் கையாளப்படுகின்றதோ மற்றும் எங்குத் திறமையான வழிநடத்துபவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்களோ - அதாவது வழிநடத்துபவரே பதிலைக் கொடுத்துக்கொண்டிருக்காமல், சபையாரிடமிருந்து கேள்விக்கான பதிலை வரவழைத்து மற்றும் இறுதியில் பதில்களைச் சுருக்கிக்கூறும் வழிநடத்துபவர் எங்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றாரோ - அங்குப் பலன்கள் மிகவும் சிறப்பாய்க் காணப்படும். அருமையான நண்பர்கள் யாவரும் இந்தப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளை நடத்துவார்கள் என்று நாம் நம்புகின்றோம். பெரும்பான்மையான ஜனங்கள் எப்படி ஆராய வேண்டுமென்றோ, எப்படிப் போதிக்க வேண்டுமென்றோ அறியாதிருப்பதினால், தாங்கள் கேட்பவற்றிலிருந்து, வாசிப்பவைகளிலிருந்து உண்மையான உணவை, போஷாக்கைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிடுகின்றனர். வருகிற வருஷத்தில் இந்த விஷயத்தில் உங்களுக்கு உதவிடும்படிக்குப் "பயண ஊழியர்களை" அனுமதித்திடுங்கள்.

திட்டவட்டமான வேண்டுகோள் நமக்கு விடுக்கப்படும்போது மாத்திரமே "பயண ஊழியர்களின்" சந்திப்புத் திட்டம் திட்டமிடப்படுகின்றது மற்றும் ஒவ்வொரு மே மாதமும் நாம் தகவல் அறிந்துகொள்வதற்கான கேள்விகளை வெளியிட்டு, "பயண ஊழியக்காரர்களின்" வருகையினை விரும்புகிறவர்கள் பதிலளிக்கும்படிக்கு

வேண்டிக்கொள்கின்றோம்; இதனால் பொது மற்றும் தனிப்பட்ட கூடுகைகளுக்கான அவசியம் மற்றும் சாத்தியக்கூறுகளை நன்கு எங்களால் பகுத்துணர முடிகின்றது. இவற்றை அருமையான நண்பர்கள் எவரிடமிருந்தும் நாம் பெற்றுக்கொள்வதற்கு எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்கின்றோம் மற்றும் Tract-வைப்பு நிதிக்கான உங்களது நன்கொடைகள் நன்றியுடன் மதிக்கப்பட்டாலும், அவைகள் இக்காரியத்தில் அதிகாரம் செலுத்த அனுமதிக்கப்படுகிறதில்லை. தேவைப்படும் இடங்களிலெல்லாம் "பயண ஊழியர்களை" அனுப்பிவைக்க நாம் நாடுகின்றோம் மற்றும் இதற்கான செலவுகளுக்குரிய வழிவகைகளைப் பார்த்துக்கொள்ளும் காரியத்தினைக் கர்த்தரிடமே விட்டுவிடுகின்றோம். நீங்கள் மிகத் தொலைத்தூரத்தில் காணப்படுகிற காரியமானது, எங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பதிலிருந்து உங்களைத் தடைப்பண்ணிட வேண்டாம் மற்றும் எங்களால் உங்களது வேண்டுகோளின்படி செய்யமுடிகிற அளவுக்குத்தக்கதாகவும், எங்கள் வசத்தில் சகோதரரும், செலவுகளும், பணங்களும் காணப்படும் அளவுக்குத்தக்கதாகவும், நாங்கள் இணங்கிடுவோம் என்றும் நீங்கள் உறுதிக்கொள்ளலாம். "பயண ஊழியக்காரர்" ஒருவர் உங்கள் வழியே வந்துகொண்டிருக்கிறதை கவனித்து, வேண்டுகோள் விடுப்பது என்பது மிகவும் தாமதமாய் வேண்டுகோள் விடுப்பதாய் இருக்கும்; ஏனெனில் அவர்களது பிரயாண பாதைகளானது முன்கூட்டியே பல மாதங்களுக்கு முன்னதாக திட்டமிடப்படுகின்றது மற்றும் அவர்கள் பொதுவாகவே தொடர்ச்சியாய்ப் பிரயாணம் பண்ணிடுவார்கள்; இதனால் பெருமளவில் பிரயாணத்தின் செலவுகள் மிச்சமாகுகின்றது.

---

R4312

# சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம்

அலிகெனியிலுள்ள பிட்ஸ்பர்க் சபையிலுள்ள அருமையான நண்பர்கள், பைபிள் ஹவுஸ் குடும்பத்தின் (Bible House Family) புறப்படுதல், அண்மையில் உள்ளதைக்குறித்து வேதனையுடன் காணப்படுகின்றனர்; எனினும் கர்த்தர் எங்குமுள்ள தம்முடைய ஜனங்களின் நலனுக்கடுத்தவைகளைப் பார்த்துக் கொள்வதற்கு மிகவும் வல்லமையுள்ளவராக இருக்கின்றார் என்றும், இந்த அனுபவத்தின் வாயிலாக அவர் தங்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொடுத்து, ஆவிக்குரிய காரியங்களில் தங்கள் மீது அதிகம் பொறுப்பை

வைத்துள்ளார் என்றும் எங்களோடுகூட அவர்களும் ஒத்துக்கொண்டுள்ளார்கள்.

கிறிஸ்மசுக்கு முன்னதாக புதன்கிழமை இரவன்று, எங்களுக்குத் தெரியாமல், அவர்கள் பைபிள் ஹவுஸ் சாப்பலில் ஒரு விசேஷித்த ஐக்கிய கூட்டத்தினை ஒழுங்குபண்ணியிருந்தனர் மற்றும் சகோதரர் ரசல் அவர்கள் வரவும், சில வார்த்தைகளைப் பேசவும் வேண்டிக்கொண்டனர். அவர் வந்தபோது, நியமிக்கப்பட்ட பேச்சாளர் ஒருவர், தங்களது பாஸ்டருக்கான சபையாரின் அன்பைத் தெரிவித்தார் மற்றும் தங்களது அன்பினை வெளிப்படையாய் வெளிப்படுத்த விரும்பி, அவர்கள் மென்மையான வெல்வெட் கம்பள விரிப்பு ஒன்றையும், கருங்காலி மரத்தினால் செய்யப்பட்ட மேஜை ஒன்றையும், அழகான நாற்காலி ஒன்றையும், சிறு மேஜை மற்றும் கடிதம் வைக்கும் பெட்டியையும் தெரிந்தெடுத்துள்ளதாகத் தெரிவித்தார்கள். இந்த அன்பளிப்புகளைக் கொடுப்பதற்காக எதிர்ப்பார்க்கப்பட்ட தொகைக்கும் அதிகமாகவே காணிக்கை வந்ததால், மீதமிருந்த 138 டாலர்களும் சகோதரர் ரசல் அவர்களுடைய புதிய புரூக்கிளின் இல்லத்திலுள்ள அவரது அறைக்குப் பொருத்தமான எதையாகிலும் வாங்கிடுவதற்குப் பயன்படுத்தும்படிக்கு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அன்பிற்கு அடையாளமான இவைகளை (சகோ ரசல்) நாம் இருதயப்பூர்வமான உணர்ந்துகொள்ளுதலுடன் ஏற்றுக்கொண்டோம் மற்றும் இந்த இடமாற்றமானது கர்த்தருடைய முன்னேற்பாடு என்றும், இது அவரது வேலையில் ஓரடி முன்னோக்கி வைத்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது என்றுமுள்ள எங்களது திடநம்பிக்கை மாத்திரமே சபையாரின் பாஸ்டராக முப்பது வருடங்களுக்கும் மேலாக நாம் ஐக்கியப்பட்டிருந்த அன்புக்குரியவர்கள் அநேகரை மகிழ்ச்சியோடு நாம் விட்டுப் பிரிந்துபோக செய்கின்றது என்று அருமையான நண்பர்களிடம் நாம் தெரிவித்தோம்.

## சகோதரர் ரசல் மீண்டுமாக மேய்ப்பராக/பாஸ்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு முன்னதாக, 1908-ஆம் வருஷத்தினுடைய கடைசி இரவன்று, ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்படும் என்றும், அதில் வரவிருக்கின்றதான வருடத்திற்குச் சபையாருக்கு யார் ஊழியம் புரிந்திடுவார்கள் என்பதைச் சபையார் தேர்ந்தெடுப்பார்களென எதிர்ப்பார்க்கப் படுகின்றது என்றும் அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. முழுமையான அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே வரவேற்கப்பட்டுள்ளனர் என்று தெளிவாய்த் தெரிவித்திருந்தப் போதிலும், பைபிள் ஹவுஸ் சாப்பலில் கூட்டம் குவிந்திருந்தது. முப்பது வருடங்களுக்கும் மேலாக சபையாரை, தான் மேய்த்திட்ட விஷயங்கள் தொடர்பான நிகழ்வுகள் சிலவற்றைச் சகோதரர் ரசல் அவர்கள் சுருக்கமாய் எடுத்துரைத்தப்போது கூட்டத்தில் நிசப்தம் நிலவினது. அந்தக் காலங்கள்

அனைத்திலும் சத்தியத்திற்கு உண்மையுள்ள ஆதரவாளர்களாய் அங்கிருந்த சிலரின் பெயர்களை அவர் குறிப்பிட்டார். இருபது வருடங்களாக, பதினைந்து வருடங்களாக, பத்து வருடங்களாக, ஐந்து வருடங்களாக, ஒரு வருடமாக சத்தியத்திற்கு அறிமுகமாகியிருந்த அநேகர் அங்கிருந்தனர். தான் செய்யும்படிக்கு விரும்பிட்ட அனைத்தையும் தான் அவர்கள் அனைவருக்காகவும் அல்லது தனிப்பட்ட விதத்திலும் செய்திடவில்லை என்றும், ஆனால் தன்னால் முடிந்தமட்டும் அவர்களுடைய நலனுக்கடுத்தவைகளில் தான் ஊழியம் புரிந்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். தான் அறிந்திருக்கிற வரையிலும் மற்றும் நம்புகிற வரையிலும், வார்த்தையிலோ அல்லது சிந்தையிலோ அவர்களில் யாருக்கும் தீங்கு செய்யவில்லை என்றும் தெரிவித்தார். காரியங்கள் இப்படியாக இருந்ததினால், அவர் மேடையை விட்டு இறங்குகையில், மிகுந்த திருப்திக்கொண்டிருந்தார். முடிவில் ஏதேனும் சமயத்திலோ அல்லது இடத்திலோ தான் யாருக்கேனும் ஏதேனும் விதத்திலோ, அளவிலோ, வார்த்தையிலோ அல்லது கிரியையிலோ தீங்கு செய்துள்ளதாக யாரேனும் எண்ணுவார்களானால், தான் அதை அறிந்து கொள்ளத்தக்கதாகவும் மற்றும் மன்னிப்புக் கேட்பதற்குரிய வாய்ப்பினை தான் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும், அத்தகையவர்கள் பேசிடும்படிக்கு தான் எதிர்ப்பார்ப்பதாக வேண்டிக்கொண்டார். இந்த வேண்டுகோளுக்கு எந்தப் பதிலும் வராததால், தான் அவர்களுக்கு வார்த்தையிலோ அல்லது கிரியையிலோ தீங்கிழைக்காமல் இருந்தது மாத்திரமல்லாமல், தன்னுடைய சிந்தையில் அவர்கள் பேணப்பட்டார்கள், அன்புகூரப்பட்டார்கள் என்றும், அவர்களுக்காக தான் மனதுருக்கம் கொண்டிருந்தார் மற்றும் ஜெபம்பண்ணினார் என்றும் அவர்களுக்கு உறுதியளித்தார்.

மேடையை விட்டு இறங்குகையில் பயண ஊழியர் சகோதரர் ரூதர்போர்ட் அவர்கள் வந்திருக்கின்றார்கள் என்றும், 1909-ஆம் வருடத்திற்குரிய சபையினுடைய ஊழியக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும்படிக்கு ஆயத்தம் பண்ணப்பட்டதான அலுவல் கூட்டத்திற்குச் சிறந்த கூட்டத் தலைவராய் (chairman) இருப்பார் என்றும் சகோதரர் ரசல் அவர்கள் குறிப்பிட்டார். மறுப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லையெனில், அக்கூட்டத்திற்காகக் கூட்டத்தலைவராகச் சகோதரர் ரூதர்போர்ட் அவர்கள் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்படுவதாகக் கருதப்படும் என்று தெரிவித்தார். அமைதியானது ஒப்புதலைத் தெரிவித்தப்படியால், சகோதரர் ரூதர்போர்ட் அவர்கள் மேடைக்கு ஏறினார் மற்றும் சகோதரர் ரசல் அவர்கள் கீழே இறங்கி, நண்பர்களுடன் தனது இருக்கையில் அமர்ந்துகொண்டார்.

அந்த வருடம் ஊழியம் புரிந்திட்டதான பாஸ்டர் மற்றும் மூப்பர்களுக்கு நன்றியுரை அளிக்கப்படலாமா என்று முன்வைக்கப்பட்டு, அதற்கு வழிமொழியப்பட்டு, ஏகமனதுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. கூட்டத் தலைவரினால் கூட்டத்தின் நோக்கம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது மற்றும் அனைத்தும் ஒழுங்கின்படியுள்ளது

என்பதற்கு ஒரு சைகைக் கொடுக்கப்பட்டது. உடனடியாகச் சகோதரர் டாக்டர் ஸ்பில் அவர்கள் எழுந்து, 1909-ஆம் வருடத்திற்காகச் சபையாரின் பாஸ்டராக சகோதரர் ரசல் மீண்டுமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் சகோதரர் ரசல் அவர்கள் எப்போதாவதுதான் சபையாருடன் காணப்பட்டாலும்கூட, அவர் பாஸ்டராக/மேய்ப்பனாகத் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது, சபைக்கு இன்னும் அதிகமான பராமரிப்பை உறுதி செய்கிறதாயும், அதன் காரியங்கள் மற்றும் நலனுக்கடுத்த விஷயங்களுக்கு இன்னும் அதிகமாய் மனம் திறந்து ஆலோசனைகளை அவர் வழங்கும்படி செய்கிறதாயும் இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார். அநேகம் சபையார் இப்படியாகச் சகோதரர் ரசல் அவர்களைப் பாஸ்டராக தேர்ந்தெடுக்கும் வழக்கத்தில் இருக்கின்றனர் என்றும், இதை அவர்கள் தங்களது அன்பையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதற்கு மாத்திரமல்லாமல், தங்கள் நலனுக்கடுத்த காரியங்களில் அவரது விசேஷித்த மேற்பார்வையைப் பெற்றிடுவதற்கான தங்களது விருப்பத்தை அவருக்கு உறுதிப்படுத்துவதற்குமே மற்றும் எப்போதாவது, அவர் தங்கள் மத்தியில் காணப்படுகையில், அவர் தங்கள் மத்தியில் சகஜமாய் உணர வைக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்திலுமே செய்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். அநேக சகோதரர்கள் இந்தக் கருத்திற்கு வழிமொழிந்தனர். சகோதரர் ரசல் அவர்கள் எழுந்துநின்று முன்மொழிந்தவருக்கும், வழிமொழிந்தவருக்கும் நன்றி தெரிவித்தார் மற்றும் தான் தேர்ந்தெடுக்கப் படாவிட்டாலும், அவர்கள் தனது அன்பையும், பிராத்தனைகளையும், எல்லாவிதத்திலுமான ஆதரித்தலையும் எப்போதும் பெற்றிருப்பார்கள் என்று அருமையான நண்பர்களுக்கு உறுதிப்படுத்தினார். எதிர்க்காலத்தில் தன்னால் அடிக்கடி அவர்களோடு காணப்பட முடியாது என்று அவர்கள் புரிந்துகொள்ளும் படிக்கு அவர் விரும்புவதாகக் கூறினார். கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக, அவரால் மாதத்திற்கு ஒருமுறை மாத்திரம் அல்லது அவ்வப்போதுதான் அவர்களைச் சந்திக்க முடிந்த காரியத்திற்காகவும்கூடத் தான் மகிழ்வதாகவும்; ஏனெனில் இதுவே அனைவரையும் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்தப் பிரிந்து செல்லுதலைச் சுலபமாய்ச் சந்திக்க உதவினதாகவும் தெரிவித்தார். இப்படித் தேர்ந்தெடுக்கும் காரியமானது, தன்னை அடிக்கடி பிட்ஸ்பர்கிற்கு வரவழைத்திடும் என்ற எண்ணத்தில் எவரும் தனக்கு வாக்களித்திட (vote) தான் விரும்பவில்லை, காரணம் பொதுவான ஊழியங்களுக்கடுத்தக் காரியங்களில் தான் ஈடுபட வேண்டியுள்ளது என்று தெரிவித்தார். அதுவும் ஏகமனதுடன் இல்லாததுவரையிலும், தன்னால் இத்தகைய தேர்ந்தெடுத்தல்களை ஏற்றுக்கொள்வதற்குச் சிந்திக்க முடியாது என்றும்கூட அவர் குறிப்பிட்டார். வாக்கு எடுக்கப்பட்டது மற்றும் அது ஏகமனதுடன் நடைமுறைப்படுத்தும்படியாகத் தெரிவிக்கப்பட்டது.

சகோதரர் ரசல் அவர்களுடைய யோசனையின்படி, பைபிள் ஹவுஸ்

குடும்பத்தினர், இந்தத் தேர்ந்தெடுத்தலில் வாக்களிப்பதற்கு மறுத்தனர், காரணம் தாங்கள் அதிகக்காலம் இங்கு இருக்கப் போவதில்லை என்பதால், அவர்கள் ஒரு தெரிந்துகொள்ளுதலை வெளிப்படுத்துவது தகுதியாய் இராது. கூட்டத் தலைவராகிய ரூதர்போர்ட் இதைக்குறிப்பிட்டார் மற்றும் உள்ளூர் சபையார் ஏகமனதுடன் வாக்களித்துள்ளப்படியால், பைபிள் ஹவுஸ் குடும்பத்தினரையும் உள்ளடக்கி இன்னொரு வாக்குப் பதிவு செய்து, சகோதரர் ரசல் அவர்களுக்கான தங்களது அன்பை வெளிப்படுத்துவதற்கும் எந்த மறுப்பும் இருக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். காரியம் முன்மொழியப்பட்டு, பைபிள் ஹவுஸ் குடும்பத்தினரின் வாக்களிப்பானது ஏகமனதுடன் நடைப்பெற்றது.

முந்தைய வருடங்களின் வழக்கத்தின்படியே, சகோதரர் ரசல் அவர்கள் மூப்பர்களாக, உதவிக்காரர்களாக, பெண் உதவிக்காரர்களாக - சபைக்கு உண்மையுள்ள ஊழியக்காரர்களாக இருப்பார்களென, தான் நம்பும் சிலரின் பெயர்களை யோசனையாக முன்வைத்தார். இவைகள் வெறும் யோசனைகள்தான் என்றும், பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் யார் ஒருவரும் அல்லது அனைவரும் நிராகரிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். அவர்களை அவர் முன்மொழிவதுகூட இல்லை, மாறாக யோசனையாக மாத்திரம் முன்வைத்ததாகவும், சபையார் தங்கள் சொந்த முன்மொழிதல்களைப் பண்ணும்படிக்கு விட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். சகோதரர் ரசல் அவர்களின் யோசனையின் படியானவர்கள் முன்மொழியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டனர் - சபையாரால் ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தக் கூட்டம் முழுவதுமே மகிழ்ச்சிகரமாய்க் காணப்பட்டது. தேர்ந்தெடுத்தலைத் தொடர்ந்து ஜெபம் மற்றும் துதிசெலுத்தும் கூட்டமும், சாட்சிக்கூட்டமும், நடு இரவையும் தாண்டி நீடித்தது. அருமையான நண்பர்களில் சிலர் இந்த இரவு கூட்டத்தினுடைய அபிஷேகத்தையும், உண்மையையும் குறித்தும் பிற்பாடு கருத்துத் தெரிவித்தனர்.

---

R4709 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அவர் அரைக்கட்டிக்கொண்டு, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்

அந்தோ பரிதாபம்! சுயாதீனம் என்பது எத்தகைய ஆபத்தான ஒன்று என்றும், நமக்குப் பிரயோஜனப்படும் வகையில் அது எத்தனை ஜாக்கிரதையாய்ப்

பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் மற்றும் நம்முடைய நித்திய அபாயத்திற்கு ஏதுவாய் அது எத்தனை சுலபமாய்த் தவறாய்ப் பயன்படுத்தக்கூடும் என்றும், எத்தனை சொற்பமானவர்களே உணர்ந்திருக்கின்றனர்! தேவன் நம்மைச் சுதந்தரமாய்ச் செயல்படுபவர்களாய்ச் சிருஷ்டித்திருப்பதன் காரணத்தினால், இது அவரது சாயலின் ஒரு பாகமாய் இருப்பதன் காரணத்தினால், முன்னேறுகிற ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் குறிக்கோள் என்பது ஒரு பாகமாகக் காணப்பட வேண்டும் என்ற காரணத்தினால், சுதந்தரமாய்ச் செயல்படும் இத்தன்மையும், குறிக்கோளும் சேர்ந்து, நம் அனைவரையும் குணலட்சண பரீட்சையின் கீழாகக் கொண்டு வருகின்றது. நம்முடைய திறமைகள் அதிகமாய்க் காணப்படுகையில், நம்முடைய தாலந்துகள் அதிகமாய்க் காணப்படுகையில் மற்றும் நம்முடைய செல்வாக்கு பரந்துவிரிகையில், குறிக்கோளின் வல்லமையும் பலமாகுகின்றது. பின்னரே சோதனை வருகின்றது. அதாவது இந்த நலமான குறிக்கோள் திவ்விய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்படுமா - மரணம் வரையிலும் கர்த்தருடைய சித்தத்தைச் செய்யத்தக்கதாக முற்றும் முழுமையாய் அர்ப்பணிக்கப்பட்டிருக்குமா? என்ற சோதனைக் கடந்து வருகின்றது.

ஒருவேளை கர்த்தருக்கான நமது அர்ப்பணிப்பானது முழுமையாகக் காணப்படுமானால், நம்முடைய எண்ணங்களையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் முழுக்கக் கட்டுப்பாட்டில் கொண்டிருப்போமானால், நம்முடைய சுயாதீனமும், பெரிதான குறிக்கோளும் சரியாய்ச் செயல்படுகிறதாயும், நமக்கும், மற்றவர்களுக்கும் இறுதியில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறதாயும் இருக்கும். ஆனால் ஒருவேளை திவ்விய சித்தமானது முதலாவதாகக் காணப்படாமலும், நம்முடைய சித்தங்களை முழுமையாய்க் கட்டுப்படுத்துகிறதும் இல்லையெனில், நாம் அதிகம் குறிக்கோளும், அதிகம் சுயாதீனமும் கொண்டிருப்பதற்கேற்ப, நமக்கான அபாயமும் அதிகமாய் இருக்கும். எங்குக் கர்த்தர் தொழுதுகொள்ளப்படுகிறதில்லையோ மற்றும் இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும் மற்றும் பலத்தோடும் அவருக்குக் கீழ்ப்படிகிறதில்லையோ - வேறு யாரோ, அதாவது கணவனோ (அ) மனைவியோ, பெற்றோர்களோ (அ) பிள்ளைகளோ அல்லது சுயமோ - நமது இருதயங்களில் செல்வாக்கு கொண்டிருக்கின்றனர் என்பதாயிருக்கும். நம்முடைய இருதயங்களானது கர்த்தருக்கு முற்றிலும் நேர்மையாகவும், சுய சித்தமும், மற்ற ஒவ்வொரு சித்தமும் முற்றிலுமாய்த் திவ்விய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருப் பதாகவும் இல்லையேல், நாம் ஜெயங்கொள்பவர்களாகிட முடியாது. இதுவே ஜெயம் கொள்பவர்களுக்கான ஜீவியம் முழுவதுமான படிப்பினையாக இருக்கின்றது. ஒவ்வொரு போராட்டங்களின் போதும், இறுதியில் தேவ கிருபையால் நாம் சமநிலையடைகையில் நாம் எவ்வளவாய்க் களிகூருகின்றோம்!

இந்த விஷயங்களில் மிகவும் முதன்மை வகிக்கும் சகோதரர்கள், மிகவும்

கடுமையான சோதனைக்குள்ளாகுகின்றனர் என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த நிலைமையின் காரணமாகத்தான், "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1) என்று அப்போஸ்தலன் நம்மை முன்னெச்சரிக்கைப் பண்ணுகின்றார். போதகர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் சிலரின் திசைமாறுதல் என்பது, போதகர்களல்லாத மற்றவர்களுக்கு விசேஷித்த சோதனைகளை உண்டாக்குகிறதாய் இருந்து, கர்த்தரிடத்தில் எந்தளவுக்குத் தனிப்பட்ட உறவைக்கொண்டிருக்கின்றனர் என்பதை நிரூபிக்கின்றதாகவும் இருக்கும் - அதாவது அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளின் வாயிலாகவும், அவருக்கான தனிப்பட்ட அர்ப்பணிப்பின் வாயிலாகவும் மற்றும் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் அவரது வார்த்தைகள் மற்றும் தீர்க்கத்தரிசனங்கள் மூலமான அவரது அறிவுரைகள் வாயிலாகவும், கர்த்தரிடத்தில் எந்தளவுக்குத் தனிப்பட்ட உறவைக் கொண்டிருக்கின்றனர் என்பதை நிரூபிக்கின்றதாகவும் இருக்கும். அநேகர் மற்றவர்களைச் சார்ந்திருக்கும் பழக்கத்தில் காணப்படுகின்றனர்; இந்த மற்றவர்கள் இடறி விழுகையில், இந்த அநேகருக்கு விபரீதங்களைக்கொண்டு வருகின்றதாயிருக்கும். இந்தக் கொள்கையினை நாம் நீண்டகாலமாக அடையாளம் கண்டு கொண்டுள்ளபடியாலே, நாம் எழுதுகையில், நாம் கர்த்தருடைய செய்தியை, அவருடைய செய்தியாகவே முன்வைத்துள்ளோமே ஒழிய, எங்களுடைய செய்தியாக அல்ல; ஒவ்வொரு உபதேசத்திற்கான வேத அதிகாரத்தையும், வசனத்தையும் கொடுத்துள்ளோம்.

---

R3210 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை

## 2 தீமோத்தேயு 3:14 - 4:8

தனது ஓட்டத்தின் நிறைவை உணர்ந்த அப்போஸ்தலன், முடிந்தமட்டிலும் தனது ஆவியையும், வைராக்கியத்தையும் - தீமோத்தேயு மிகவும் உண்மையுள்ள மற்றும் திறமிக்க தேவ ஊழியக்காரனாய்க் காணப்படத்தக்கதாக, தீமோத்தேயுவில் பதியப்பண்ணிட முற்பட்டார். இந்தப் புத்திமதியானது மற்றவர்களுக்கு ஏதேனும் விதத்தில் ஊழியம்பண்ணிட நாடும் யாவருக்கும் விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இது கர்த்தருடைய ஜனங்கள் அனைவரையும் உண்மையில்

உள்ளடக்குவதாக இருக்கும்; இவர்களில் ஒவ்வொருவருமே ஜீவனுள்ள நிருபங்களாக இருந்து, கர்த்தருடைய ஸ்தானாபதிகளென, அவரது சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களாகவும், பேசுகிறவர்களாகவும் காணப்பட வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் இப்பாடத்தின் வார்த்தைகளை நமக்குப் பொருத்திப் பார்ப்போமாக.

தீமோத்தேயு முதலாவதாக, அவரது சிலாக்கியங்களானது எவ்வளவு பெரியவைகளாய் இருந்தன என்பது குறித்து, அதாவது குழந்தைப்பருவம் முதற்கொண்டு மத அறிவுரைகளின் கீழ் வளர்க்கப்பட்டார் என்பது குறித்து நினைப்பூட்டப்படுகின்றார். எவ்வாறு வேதவாக்கியங்களுடைய புரிந்து கொள்ளுதல்களை அப்போஸ்தலன் வாயிலாகப் பெற்றுக்கொண்டார் என்றும், அவர் கேள்விப்பட்டவைகள் தேவனிடமிருந்து வரும் அறிவுரைகளாய் இருக்கின்றது என, அப்போஸ்தலன் தேவனுடைய வார்த்தைகளையே பேசினார் என அவருக்கு உறுதிப்படுத்தப்பட்டது என்றும் மிகவும் தன்னடக்கமான விதத்தில் தீமோத்தேயுவுக்கு நினைப்பூட்டப்பட்டது; "எங்களுக்குச் செவிகொடுக்கிறவன், தேவனுக்குச் செவிக்கொடுக்கிறான்." வேதவசனமானது மாபெரும் வெளிச்சமாக அல்லது விளக்காக இருந்து, இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்குகின்றது என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். அவர் பிரதானமாய் பழைய ஏற்பாட்டைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்; ஏனெனில் புதிய ஏற்பாடு அப்போது இன்னமும் நிறைவடைந்திருக்கவில்லை; ஆனாலும் பழைய ஏற்பாடானது கர்த்தருடைய ஜனங்களுக்கு அறிவுரை வழங்குவதில் விலையேறப்பெற்றதாய் இருக்குமானால், புதிய ஏற்பாடும் அதன் திறவுகோலாகவும், விளக்கமாகவும் காணப்பட்டு, இன்னும் அதிக விலையேறப்பெற்றதாய்க் காணப்படும் என்பதில் ஐயமில்லை.

"திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு! கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" என்று எழுதப்பட்டப்படி கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் போதகர்களாய்க் காணப்படுகின்றனர் (ஏசாயா 61:1). சபையின் தலையாகிய நமது கர்த்தர்மீது வந்திட்டதான ஆவியின் இந்த அபிஷேகித்தலானது, கீழே இறங்கி, சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் மூடி, கேட்க செவியுள்ளவர்கள் அனைவருக்கும் இயேசுவின் வாயிலான தேவனுடைய கிருபையின் மற்றும் இரக்கத்தின் மற்றும் சமாதானத்தின் நற்செய்தியினைப் பிரசங்கிப்பதற்கு அவருக்குப் போலவே, ஒவ்வொருவரையும் அபிஷேகித்துள்ளது. துணிகள் துவைக்கும் கிறிஸ்தவ ஸ்திரீயானவள் இந்தச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திட வேண்டும்; கிறிஸ்தவ தொழிலதிபரும் மற்றும் கூலியாளும் மற்றும் வீட்டுத் தலைவியும், ஒவ்வொருவரும் அவரவரது வாய்ப்புகளுக்கேற்ப பிரசங்கித்திட வேண்டும்; மற்றும் அனைவருக்குமே சில வாய்ப்புகளானது நிச்சயமாய்க் கிடைக்கும். "இருளிலிருந்து ஆச்சரியமான

ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய புண்ணியங்களை" அனைவரும் அறிவிக்க முடிபவர்களாகக் காணப்பட வேண்டும் மற்றும் அனைத்து மனுஷர்களாலும் வாசித்து, அறியப்படும் ஜீவனுள்ள நிருபங்களாகக் காணப்பட வேண்டும் (1 பேதுரு 2:9). வசனத்தைப் பிரசங்கிப்பதை நாம் ஜீவியத்தின் பிரதான வேலையாகவும் மற்றும் ஜீவியத்திற்கடுத்த பிழைப்புகளையும், சௌகரியமாய்க் காணப்படுவதற்குமான பிழைப்புகளையும் இரண்டாவதாகவும், நாம் கர்த்தரினால் அழைக்கப்பட்டதான ஒரே அழைப்பிற்கு முன் முக்கியத்துவமற்றதாகவும் நாம் கருதிட வேண்டும். சத்திய வார்த்தைகளைப் பேசாமல் அடக்கிவைக்கிறவன், ஒரு காரணத்தோடே செய்திருக்க வேண்டும் மற்றும் அந்தக் காரணமும் நியாயமான காரியமாகவும் இருக்காது. ஒருவேளை அவன் சத்தியத்தின் மீதான அன்பில் சத்தியத்தினை ஏற்றுக்கொண்டிருப்பானானால், அதை அறிவித்திட விரும்பிடுவான் மற்றும் அவன் அடக்கிவைக்கிறான் என்றால், இது அவன் மனுஷனுக்குப் பயப்படுகிறான் அல்லது கர்த்தர் மற்றும் அவரது வார்த்தைக்குறித்து வெட்கமடைகிறான் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; மற்றும் இத்தகையவர்கள் இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்களாய் - இவர்கள் வேறு எதற்குத் தகுதியுடையவர்களாய் இருப்பினும், மணவாட்டி வகுப்பாருக்குத் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள் என்று ஆண்டவர் தெரிவித்துள்ளார் (லூக்கா 9:62).

"எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு." புத்திமதியினுடைய இப்பாகமானது, அனைவருக்கும் ஒன்றுபோல் பொருந்துகிறதில்லை; அநேகர் கண்டனம்பண்ணி, கடிந்துகொள்ளலாம் என்று சகஜமாய் எண்ணிவிடுகின்றனர். அநேகருக்குக் கடிந்துகொள்ளுதல்கள் அவசியமாயிருக்கிறது மற்றும் அநேகரைக் கண்டனம்பண்ணுவது அவசியமாயிருக்கிறது என்பதில் ஐயமில்லை; ஆனாலும் எத்தனை சொற்பமானவர்களால்தான் இதை நன்மையான விதத்திலும், பாதகம்பண்ணாத விதத்திலும் செய்ய முடிகின்றது! கிறிஸ்துவின் சபையில் காணப்பட்ட அனுபவமிக்க மூப்பனாகவும், மூப்பர்கள் மத்தியில் சில விதங்களில் மேற்பார்வையாளராகவும் காணப்பட்ட தீமோத்தேயுவுக்குக் குறிப்பிட்ட விதத்தில், அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளைக் குறிப்பிட்டார். இந்த வார்த்தைகளைப் பொதுவான விதத்தில் பொருத்திப்பார்ப்பதும், கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொருவரும் எந்தளவுக்குத் தன் சகோதரரை, தான் கண்டனம்பண்ணி, கடிந்துகொள்ளலாம் என்று காண்பதற்குப் பொருத்திப்பார்ப்பதும் மாபெரும் தவறாகிவிடும். மாறாக தேவனுடைய சபையிலுள்ள பொறுப்பானது இதை அவசியமாக்கிடும் கடமையின் காரணத்தினால் தவிர, மற்றப்படி இந்தக் கடிந்துகொள்ளுதல்களும், கண்டித்தல்களும் தவிர்க்கப்படும் அளவுக்கு அனுதாபம் கடந்துவர வேண்டும். தனது கடிந்துகொள்ளுதலும், கண்டித்தலும்,

அறிவுறுத்தலும் - பொறுமையோடும், தயவோடும், சாந்தத்தோடும், நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் காணப்பட்டு மற்றும் எங்கு நீதியின் கொள்கைகளானது மீறப்பட்டுள்ளது என்று தெளிவாய்க் காண்பித்துக்கொடுத்து, அது தொடர்பான கர்த்தருடைய வசனத்தையும் தெளிவாய்ச் சுட்டிக் காட்டுகிறதாய்க் காணப்படத்தக்கதாக மிகவும் அனுபவமிக்க மூப்பனாகவும், மேற்பார்வையாளராகவும் காணப்படும் தீமோத்தேயுகூடப் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது (2 தீமோத்தேயு 4:2). இந்தக் கடமையானது, சபையில் முதன்மையான ஸ்தானம் வகிப்பவர்களிடத்தில் இன்னமும் காணப்படுகின்றது மற்றும் இதற்காகவே இவர்கள் கர்த்தருடைய ஏற்பாட்டின்படி நியமிக்கப்பட்டுள்ளனர்; மற்றும் எந்தளவுக்கு இவர்கள் கர்த்தருடைய அன்பின் ஆவியினாலும், தயவினாலும், சாந்தத்தினாலும், பொறுமையினாலும் நிரம்பிக் காணப்படுகின்றார்களோ, அவ்வளவாய்த் தேவைப்படும்போது, மிகவும் தன்னடக்கமான பாஷையில், மிகவும் சாதகமான சூழ்நிலைகளின் கீழ்க் கடிந்துகொள்ளுதல் மற்றும் கண்டித்தல் எனும் இந்த இனிமையற்ற மற்றும் கவனமாய்க் கையாளப்பட வேண்டிய வேலையைப் புரிந்திட நாடிடுவார்கள்.

---

R4251

## சபை என்றால் என்ன?

"மெய்யான ஒரே சபை" என்ற கட்டுரை வெளிவந்தது முதற்கொண்டு, சபையாரில் ஒரு பகுதியினர் பிரிந்துபோய்விடுவது மற்றும் தனிச் சபையென அதுவே அதன் கூடுகைகளை நடத்திடுவது தொடர்புடைய உரிமை அல்லது சிலாக்கியம் குறித்து எங்களிடம் விசாரிப்பதற்கு அநேகர் தொடர்பு கொண்டிருக்கின்றனர். அக்கட்டுரையில் ஏற்கெனவே சுட்டிக்காண்பிக் கப்பட்டுள்ளது போன்று, நமது கர்த்தருடைய வார்த்தைகளானது - உண்மையுள்ள, அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களில் இரண்டு அல்லது மூன்று பேர் தம்முடைய நாமத்தில் கூடிக்கொள்கையில், அதை அங்கீகரித்திட அவர் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் என்றும், அத்தகைய அங்கத்தினர்களுடன் தலையானவரின் பிரசன்னமானது காணப்படுகையில், அது வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஒரு சபையாக இருக்கின்றது என்றும் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இது உண்மையாக இருப்பினும், நமது கர்த்தருடைய மற்றும் அவரது அப்போஸ்தலர்களுடைய போதனைகளும் மற்றும் ஆதிசபையினரின் நடைமுறைகளும் - “நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்ற” புதிய கற்பனையானது, கர்த்தருடைய அருமையான ஜனங்கள் சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்து போவதற்குப் பதிலாக, அவர்கள் ஒன்றுகூடிடுவதற்கு அவர்களை ஆவல்கொள்ள வழிநடத்துகின்றதான, அத்தகைய ஓர் ஆவியின் நெருக்கமான ஐக்கியத்தினைச் சுட்டிக்காட்டும் கருத்திற்கு இசைவாகவே உள்ளது என்பதும்கூட உண்மையாய் இருக்கின்றது. “நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல” எனும் வார்த்தைகளானது, மிகவும் ஆழமான, உள்ளார்ந்த அன்பையே சுட்டிக்காட்டு கின்றதே ஒழிய, வெறும் சகித்தலை அல்ல என்று நாம் கவனமாய்க் கவனித்திட வேண்டும். தம்முடைய ஜீவனை நமக்குக் கொடுத்திடும் அளவுக்குக் கர்த்தர் நம்மை அன்புகூர்ந்தார் மற்றும் அவரை அப்போஸ்தலன் நமக்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டி, “நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம்” என்று கூறுகின்றார். இப்படியாகவே அவர் நம்மில் அன்புகூர்ந்தார். இது சபையார் மத்தியில் ஒரு பிரிவினருக்கான பிரிவுணர்ச்சியினால் உள்ள அன்பு அல்ல, மாறாக அனைவருக்குமான அன்பாகும்; காரணம் அவர்கள் அவருடையவர்களாய் இருக்கின்றனர் என்பதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். உண்மைதான் அனைவரையும் ஒரே அளவில் அன்புகூர முடியாதுதான், ஆனாலும் நம்முடைய ஜீவன்களை அவர்களுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு விரும்புகிற அளவுக்கு, அனைவரையும் அன்புகூர்ந்திடலாம்; ஏனெனில் கர்த்தருடைய சிறியவர்களிலேயே எளியவர்கள்கூட நம்முடைய சிறந்த அன்பினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவானவர்களாய் இருக்கின்றனர், காரணம் அவனும் மீட்கப்பட்டு, பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் இம்மானுயேலாகிய தளபதியின் கீழ் இணைந்து கொண்டவனாக, அவரது ஊழியத்திற்கெனத் தனது ஜீவனை ஒப்புக்கொடுத்துவிடுவதாக தனது ஆண்டவருடன் உடன்படிக்கையின் ஒப்பந்தத்தை மேற்கொண்டவனாய் இருக்கிறானல்லவா? நாம் ஊழியம்புரிகின்ற தான அதே ஆண்டவருக்குத் தங்களுடைய அனைத்தையும் அர்ப்பணித்துள்ள வர்களையும் நாம் அன்புகூர வேண்டுமல்லவா; மேலும் அத்தகையவர்களை ஆண்டவர் ஏற்றுக்கொள்கின்றார் மற்றும் அவர்களைத் தமது சகோதரரென அழைத்திடுவதற்கு அவர் வெட்கப்படுகிறதில்லை எனும் உண்மைகளானது - நாமும் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அவர்களைக் குறித்து வெட்கப்படாமல், மாறாக அவர்களை அன்புகூர்ந்து, அவர்களுக்கு ஊழியம் புரிய, அதுவும் அவர்களுக்கு உதவுவதற்கென ஜீவியத்தின் மணி நேரங்களை அல்லது நாட்களை ஒப்புக்கொடுத்துவிடும் அளவுக்கு ஊழியம்புரிய மகிழ்கிறவர்களாக நாம்

காணப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களாய் இருக்கின்றன.

கர்த்தருடைய ஆவியோடும், அவரது வார்த்தைகளினுடைய அறிவுரைகளோடும் சம்பந்தமுள்ள எல்லாமே, அவரது சரீரத்தின் அங்கத்தினர்கள் மத்தியில் பிரிவினை எனும் கருத்தினை எதிர்ப்பதாகவே உள்ளது. இதற்கான அருமையான உதாரணமானது, எங்குமுள்ள அருமையான நண்பர்கள் கிருபையிலும், அறிவிலும் வளருகையில், அவர்கள் ஒருநாள் மாநாடுகளுக்கும் மற்றும் இன்னும் அதிகமாய்ப் பொது மாநாடுகளுக்கும் ஒன்றுகூடி வருவதற்குரிய வாஞ்சையினால் அதிகமதிகமாய் ஊறிக் காணப்படுகிறதில் விளங்குகின்றது; மற்றும் இப்படிக் கூடுகையில் ஒருவரோடொருவருக்கான ஏக்கங்களும், ஐக்கியங்களும், நாம் நமது கர்த்தரோடும், "பரலோகத்தில் தங்கள் பேரெழுதப்பட்டவர்களாகிய" முதற்பேறானவர்களின் சர்வசங்கத்தினுடைய அவரது உண்மையானவர்கள் அனைவரோடும் கூடிடுவது வரையிலும் முழுத்திருப்தியினை அடைகிறதில்லை எனும் கருத்தும் எப்போதும் வெளிப்படுகின்றதாய் இருக்கின்றது.

மார்க்கப்பேதத்தை அப்போஸ்தலன் கண்டனம்பண்ணினது நம் அனைவருக்கும் நினைவில் இருக்கின்றது மற்றும் அதை அவர் பட்சபாதத்தின் ஆவி என்று அடைமொழியில் குறிப்பிடுகின்றார் மற்றும் அதற்கு அவரது ஆதரவு காணப்படுகிறதில்லை மற்றும் அது மாம்ச மனப்பான்மை காணப்படுவதற்கான சான்று என்றும், ஆவிக்குரிய காரியங்களில் குறைவான வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார். "ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா?" (1 கொரிந்தியர் 3:3,4). "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" என்று அவர் கேட்கின்றார். இன்னுமாக இவர்கள் நம்மை மீட்கவில்லை, கிறிஸ்து மாத்திரமே மீட்டார் என்றும், நாம் அனைவரும் அவரது சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கின்றோம் என்றும், இதனால் ஒருவரோடொருவர் உறவுகொண்டிருக்கின்றோம், காரணம் நாம் நமது தலையானவராகிய அவரோடு உறவு உடையவர்களாய் இருக்கின்றோம் என்றும் கூறுகின்றார் மற்றும் இன்னுமாகத் தொடர்ந்து அவர் சரீரத்தில் பிரிவினையுண்டாயிரக்கூடாது, அதாவது பேதமோ, பிரிவோ காணப்படக்கூடாது என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 12:25; 1:13).

அருமையான நண்பர்களே நாம் இதைக்குறித்து உணர்கின்றோமோ அல்லது இல்லையோ, ஆனால் ஓரிடத்தில் சரியாய்க் கூடிடுவதற்குத் தொலைத் தூரமானது தடையாய் இருக்கும் காரணத்தினால் உண்டாகும் பிரிதலாய் இல்லாமல், வேறே காரணங்களினால் உண்டாகும் சபையாரின் பிரிவினையை ஆதரிக்கும் ஆவியானது, சபை பிரிவுணர்ச்சியின் அல்லது பாரபட்சத்தின் ஆவியாகவே காணப்படும் என்பதில் ஐயமில்லை. சிலசமயங்களில் இது

வழிநடத்துபவராகிட விரும்பியும், தனது தாலந்துகளைச் சபையின் ஊழியக்காரரெனப் பயன்படுத்திடுவதற்குரிய முழுமையான வாய்ப்பை விரும்பியும் காணப்படும் சகோதரன் ஒருவரால் ஏற்படுகின்றது. சிலசமயங்களில், அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளதுபோன்று, சபையாரில் ஒரு சாராரின் பாரபட்சத்தினால், பரிசுத்த பவுல் அவர்களின் விஷயத்தில் காணப்பட்டதுபோல, வழிநடத்துபவர்களே விரும்பிடாமல் இருக்கையில், வழிநடத்துபவர்களைப் பின்பற்றிட வேண்டும் எனும் விருப்பத்தினால் உண்டாகுகின்றது. இது விஷயத்தில் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்குப் பதிலாக, தனிப்பட்ட விதத்தில் நம்முடைய சொந்த இருதயங்களைக் கூர்ந்து ஆராய்வது எப்பொழுதுமே நமக்கு நன்மைப் பயக்கின்றதாய் இருக்கும். சில இடங்களில் பிரிவதற்கும், தனித்துக் கூட்டங்களை நடத்திடுவதற்கும் சிலரின் சார்பில் காணப்படுகின்றதான மனப்பான்மைக்கு, சில உண்மையான காரணம் இருக்க வாய்ப்புள்ளது; ஆனால் அந்த இடர்ப்பாட்டினைச் சரிப்படுத்திக்கொண்டு, ஒன்றாய்க் காணப்படுவதே சிறந்த வழியாய் இருக்கும். சில சமயங்களில் கர்த்தருடைய ஜனங்கள் உணர்வற்றவர்களாய் மிகவும் குறுகிய மனதுடன் காணப்பட்டு, ஓர் ஏற்பாடானது முடிந்த மட்டும் அனைவரையும் திருப்திப்படுத்த, சந்தோஷப்படுத்த மற்றும் அனைவருக்கும் பிரயோஜனமாக இருக்கத்தக்கதாக பிரயாசம் எடுப்பதற்குப் பதிலாக, பெரும்பான்மையான வர்களுடைய சித்தத்தின்படி, சபையின் ஏற்பாடுகளை மிகவும் அதிகமாய்க் கட்டுப்படுத்திவிடுகின்றனர்.

"அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்போமாக" என்று அப்போஸ்தலன் புத்திமதி கூறுகின்றார் (எபிரெயர் 10:24). இது நன்கு கல்வியறிவு உடையவர்களாக அல்லது இயல்பாகவே சிறந்தவர்களாக அல்லது ஐசுவரியவான்களாக அல்லது நாகரிகமாகக் காணப்படுபவர்களின் விருப்பங்களை மற்றும் இஷ்டங்களை நாம் கவனிக்க வேண்டும் என்று மாத்திரமல்ல, மாறாக சரீரத்தினுடைய அருமையான அங்கத்தினர்கள் அனைவரையும் கவனிப்பதற்கு நாம் நாடிட வேண்டும் என்று குறிக்கின்றதாய் இருக்கின்றது. நாகரிகமானவர்களை, கல்வியறிவுடையவர்களை, ஆவிக்குரியவற்றில் நன்கு வளர்ச்சி அடைந்திருப்பவர்களை அன்புகூருவது என்பது சுலபமானதே மற்றும் இவர்களை அன்புகூருவது என்பது, "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும், ஆயக்காரரும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே" என்று புறஜாதியாரால்கூடச் செய்யப்படுகின்றதென நமது கர்த்தரால் குறிப்பிடப்பட்டவைகளுக்கு ஒத்ததாகக் காணப்படுகின்றது (லூக்கா 6:32). "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று" அப்போஸ்தலனால் குறிப்பிடப்படுகின்றதான சகோதர அன்பானது - இந்த அன்பானது

நாகரிகமானவர்களை மற்றும் நேர்த்தியானவர்களை மற்றும் திறமிக்கவர்களை மற்றும் உயர்பண்புடையவர்களை அன்புகூருவதை மாத்திரம் குறிக்கிறதில்லை. மரணத்தைவிட்டு ஜீவனுக்குக் கடந்துபோகாதவர்களை, அநேகம் ஜனங்கள் அன்புகூருகின்றனர். நாம் சகோதரரை அன்புகூருவதாவது, நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்பதற்குச் சாட்சியமாகக் காணப்படுகின்றது; இச்சகோதரரில் அநேகர் இழிவானவர்கள் என்றும், "தேவன் உலகத்தில் அற்பமானவர்களைத் தெரிந்துகொண்டார்" என்றும் அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார். சகோதரரில் இயல்பாகவே அற்பமானவர்களாய்க் காணப்படுபவர்களை நாம் அன்புக்கூரும் நிலைமைக்கு வருகையிலேயே, இது புதிய சுபாவமானது மனதைக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கின்றது என்பதற்குச் சான்றாய் இருக்கின்றதென நாம் கருதிடலாம். நாம் அவர்களது அற்பமான தன்மைக்காகவோ, அவர்களது அறியாமைக்காகவோ, அவர்களது அறிவீனத்திற்காகவோ, அவர்களது வறுமைக்காகவோ, அவர்களை நாம் அன்புகூராமல், மாறாக அவர்கள் அவருடையவர்களாய் இருப்பதினாலும், அவருடையவர்கள் அனைவரும் நம்முடையவர்களாய் இருப்பதினாலும், நம்மோடுகூட அவர்களும் அதே கொடியின் கீழ் ஒரே போராட்டத்தில் இணைந்திருப்பதினாலும், பிதா தம்முடைய ஆவியினால் ஜெநிப்பிக்கையில், அவர்களைத் தமது பிள்ளைகளென அங்கீகரித்துள்ளதினாலும், நாம் அவர்களை அன்புகூருகின்றோம். இக்காரணங்களானது, சீயோன் மலையில் ஏறிடுவதற்கு ஒருவருக்கொருவர் நமது உதவியை அளிப்பதற்கும், நம்முடைய அனுதாபம் பாராட்டப்படுவதற்கும், நம்முடைய அன்பு காட்டப்படுவதற்கும் வலியுறுத்துகின்றதாய் இருக்கின்றது.

சகோதரருக்கான நமது அன்பினால், அவருக்கான நம்முடைய அன்பானது அளவிடப்பட்டுப் பார்க்கப்படும் என்று நமது கர்த்தர் தெரிவித்துள்ளார் மற்றும் நம்முடைய தேவைகளுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் கர்த்தருடைய மனதுருக்கமும், கிருபைகளும் காணப்படுவது போன்று, மற்றவர்களுடைய தேவைகளுக்கேற்ப மற்றவர்கள் மீது நமது அனுதாபமும், அன்பும் செலுத்தப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார். வளர்ச்சி ரீதியிலும், மனரீதியிலும் அல்லது ஆவிக்குரிய ரீதியிலும் நம்முடைய அளவிற்கு இணையாகக் காணப்படுபவர்களின் தோழமையைப் பிரதானமாய் நாடுதல் என்பது, நம்மையே பிரியப்படுத்துகிறதாய் இருக்கும் மற்றும் நாம் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் அல்லது ஒருவருக்கொருவர் ஊழியம் புரிந்திட வேண்டும் என்றும், நாம் நம்மைப் பிரியப்படுத்திடக் கூடாது என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார் மற்றும் இன்னுமாக கிறிஸ்துவும் தமக்குப் பிரியமாய் நடக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றார். இன்னுமாக நம்முடைய மாம்ச

சரீரங்களிலும்கூட, நாம் சில சமயங்களில் ஆரோக்கியமாய் இருக்கும் பாகங்களுக்குச் செலுத்தும் பராமரிப்பைக் காட்டிலும், ஆரோக்கியமற்ற கைக்கோ அல்லது பாதத்திற்கோ, அதன் அவலட்சணத்தை மூடத்தக்கதாக அதிக கவனம் செலுத்துபவர்களாய் இருப்போம் என்றும், இப்படியாகவே நாம் கிறிஸ்துவின் சரீரத்திலும் செய்திட வேண்டும் என்றும், கிறிஸ்துவின் முழுச்சரீரமும் பக்திவிருத்தியடைந்து, தலையாகிய கிறிஸ்துவின் கீழ், அவரது அங்கத்தினர்களென அன்பின் கட்டுகளினால் இணைக்கப்பட்டு, கட்டப்படத்தக்கதாக, நம்முடைய பரிவும், உதவியும் மற்றும் ஐக்கியமும், அதிகமாய் யாருக்குத் தேவைப்படுகின்றதோ அவர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவது போன்று, சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனும் நமக்குத் தேவையாயிருக்கின்றனர் மற்றும் நமக்கு முன்பு இருக்கும் சோதனையான வேளைகளானது, மிகவும் கடுமையாகிடுகையில், ஒருவர் இன்னொருவருக்கும் கொண்டிருக்கும் உண்மையான ஒத்துழைப்பும், ஆதரித்தலும், பரிவும் நமக்கு அதிகமதிகமாய்த் தேவைப்படும். ஆகையால் நாம் பிரிவினைகளையும், “அமைப்புகளையும்” தவிர்த்துக்கொள்வோமாக மற்றும் சரீரத்திற்குத் தகுதியான ஒருமைப்பாட்டின் ஆவியினைப் பெற்றுக்கொண்டிருப் போமாக; ஏனெனில் நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவில் ஒன்றாயிருக்கின்றோம் மற்றும் ஒருவருக்கொருவர் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றோம். இம்மாதிரியான காரியங்கள் அனைத்திலும் கண்ணுக்குக் கண் பார்க்கத்தக்கதாக நாம் அதிகமதிகமாய் நாடிடுவோமாக.

* * * * * * *

**கேள்வி:-** அடையாளமான தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளாத ஒருவர் மூப்பராக தேர்ந்தெடுக்கப்படுவது சரியாய் இருக்குமா?

**பதில்:-** அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் மற்றும் ஈடுபலியில் விசுவாசம் இருப்பதாகவும், கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணியுள்ளதாகவும் அறிக்கைப்பண்ணுபவர்கள் அனைவரும், தண்ணீர் ஞானஸ்நான அடையாளத்திற்கான அவர்களது கீழ்ப்படிதலானது பொருட்படுத்தப்படாமலேயே சகோதரர்களென, சபையின் அங்கத்தினர்களெனக் கருதப்படுவதற்கும் மற்றும் கையாளுவதற்கும் நாம் வலியுறுத்தினாலும், இத்தகைய ஒருவரைச் சபையின் மூப்பராகத் தேர்ந்தெடுப்பது என்பது ஞானமாகவோ அல்லது கர்த்தருடைய போதனைகளுக்கு இசைவாகவோ இருக்குமென நாம் எண்ணுகிறதில்லை. இத்தகைய ஒருவர்

"பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்டதான விசுவாசத்தில்" தெளிவாய் இருக்கிறாரென நம்மால் கருதமுடியாது. இவரை நாம் சகோதரன் என்று ஏற்றுக்கொண்டாலும், இவர் சத்தியத்தில் நன்கு வளர்ந்துள்ளவராக நம்மால் கருதிட முடியாது. ஆகையால் தெய்வீகத் திட்டம் முதலானவைகள் குறித்து மற்றவர்களுக்குக் கற்பிப்பதற்கென்று விசேஷமாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு ஒரு பொருத்தமான நபராய் இவரை நாம் கருதிட முடியாது.

---

R5409 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சில சுவாரசியமான கடிதங்கள்

## *தனிப்பட்ட உரிமைகள் மற்றும் சபையாரின் உரிமைகள்*

மிகவும் அன்பிற்குரிய பாஸ்டர் அவர்களே:-

என்னுடைய அன்பைத் தெரிவிக்கவும் மற்றும் நான் வாக்குறுதியை (vow) எடுத்துள்ளேன் என்று உங்களுக்குத் தெரிவிக்கவும் விரும்பிட்ட அந்த ஒரே ஒரு தருணத்தைத் தவிர, மற்றப்படி உங்களுக்குக் கடிதம் எழுதுவது ஞானமாகவோ அல்லது உகந்ததாகவோ இருக்குமென நான் ஒருபோதும் எண்ணினதில்லை. உங்களது நேரத்தினை ஞானமற்ற விதத்தில் நான் குறுக்கிடக் கூடாதே என்ற எண்ணமே, இப்பொழுது உங்களுக்கு நான் எழுதும்போதும் எனக்குக் காணப்படுகின்றது; ஆனால் இப்பொழுது எழுதுவது சரியே என்று உணர்கின்றேன்.

கொஞ்சம் நாட்களுக்கு முன்பாக, சகோதரர்களில் சிலர் தங்களுடைய இல்லங்களில் சபையாரால் ஏற்பாடு பண்ணப்படாத நிரந்தரமான கூட்டங்களை நடத்திக்கொண்டு வந்தனர். சில சந்தர்ப்பங்களில் இக்கூட்டங்களானது மூப்பர்களாகவோ, உதவிக்காரர்களாகவோ இல்லாத சகோதரர்களால் நடத்தப்பட்டு வந்தது. வேறு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட சில உதவிக்காரராகிய சகோதரர், தங்களது அன்பின் காரணமாகவும், வைராக்கியம் காரணமாகவும் புதியவர்கள் சிலருக்கு உதவும் வாய்ப்பினைக் கண்டடைந்தனர் மற்றும் கொஞ்சக் காலங்களுக்குப் பிற்பாடு அவர்களது நலன்கருதி, நிரந்தரமான கூட்டங்களை நடத்தத் துவங்கினர்; இந்தக் கூட்டங்களானது, சபையினுடைய நிரந்தர (regular) கூட்டங்களுக்கு இடைஞ்சலாக இல்லாத மாலை வேளைகளில் நடத்தப்பட்டது.

இக்காரியங்கள் சபையாருடைய கவனத்திற்கு வந்து, கலந்தாலோசிக்கப்பட்டு, பின்வரும் தீர்மானமானது வாக்கின் (vote) அடிப்படையில் எடுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது; அது பின்வருமாறு:

கலந்து கொண்டவர்களின் சார்பிலான கர்த்தருக்கான மற்றும் சகோதரருக்கான நல்நோக்கங்களையும், அன்பையும் மற்றும் பக்திவைராக்கியத்தையும் நாம் ஒரு கணம்கூடச் சந்தேகிக்கவில்லை என்றபோதிலும், சபையாரால் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கும் கூடுகைகளுக்கு அப்பாற்பட்டு, ____________அவர்களின் இல்லத்தில் நடைபெறும் நிரந்தரக் கூட்டங்களானது எங்களது கணிப்பின்படி,____________என்ற நம்முடைய இடத்திலுள்ள சபையாருடைய ஆவிக்குரிய பிரயோஜனத்திற்கு உரியதாய்க் காணப்படாமல், மற்றச் சில காரணங்களோடுகூட, தற்காலத்தில் மிகவும் அவசியமானது என்று நாம் எண்ணுகின்றதான முழுமையான ஐக்கியத்தினைச் சரீரத்தின் மத்தியில் தடைப்பண்ணுகிறதற்கு ஏதுவானதாய் இருக்குமென நாங்கள் முடிவிற்கு வந்துள்ளோம்.

இதற்கு வாக்குக் கேட்கப்பட்டபோது, நானும் தனிப்பட்ட விதத்தில் இத்தீர்மானத்தை ஆதரித்தேன். ஆனால் பிற்பாடு நான் ஞானமாய்த்தான் செயல்பட்டிருக்கின்றேனா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டதினால், இக்காரியத்தினை அதிகம் ஜெபத்தோடு சிந்திக்கத் துவங்கி, உதவிக்காக டவர் (ரீப்பிரிண்டஸ்) மற்றும் டாண் (volumes) புத்தகங்களில் தேடிப் பார்த்தேன். இறுதியில் நான் தவறு செய்துள்ளேன் என்றும், மற்றவர்களுடைய சுதந்தரம் மற்றும் சுயாதீனத்தில் தலையிடுகிற தன்மையிலுள்ளதாக, என் மனதிற்குத் தோன்றும் தீர்மானம் ஒன்றில் நான் பங்கெடுத்திருக்கின்றேன் என்றுமுள்ள முடிவிற்கு நான் வந்தேன்.

நேற்றைய இரவில் வழக்கமான அலுவல் கூட்டத்தின்போது, அக்காரியமானது மீண்டுமாகக் கலந்துரையாடத்தக்கதாக வந்தது; அக்கூட்டங்கள் சிலவற்றில் அக்கறைக் கொண்டிருந்த சகோதரர்கள், தங்கள் கூட்டங்களுக்குக் கூட்டத்தலைவர் ஒருவரை நியமித்துத் தரும்படிக்குச் சபையாரிடம் வேண்டிக்கொள்ளும் கடிதம் ஒன்றினைச் சபைக்குக் கொடுத்திருந்தனர். மூன்று மணிநேர கலந்தாலோசனை நடந்தும், காரியம் தீர்வுக்குள்ளாக வரவில்லை. மேலும் நான் ஒரு கவலைக்கிடமான பிரச்சனையை எதிர்க்கொள்ள வேண்டியவனாய் இருக்கின்றேன். நான் மற்ற மூப்பர்களிடமிருந்து மாறான கண்ணோட்டத்தை எடுத்துக்கொண்டவனாகவும், நான் எடுத்துக்கொண்ட நிலைப்பாட்டில் தனித்து நிற்கும் மூப்பனாக நின்றுகொண்டிருக்கின்றேன்; அதாவது எங்களால் எடுக்கப்பட்ட தீர்மானமானது ஞானமற்றது என்பதும், உகந்ததல்ல என்பதும், தனிப்பட்ட சுயாதீனத்தை அழித்துப்போடுவதற்கு ஏதுவானதாகவும், எங்களுடைய

சகோதரரில் சிலருக்கு விசேஷமாய்ப் பாதகமானதாகவும் காணப்படுகின்றது என்பதும் நான் கொண்டிருக்கும் நிலைப்பாடாய் இருக்கின்றது.

எவ்விதத்திலும் மற்றவர்களுடைய உரிமைகளைக் குறுக்கிடுவதற்கோ, அடிமைப்படுத்துகிறதற்கோ இந்தத் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்ற கண்ணோட்டம் காணப்பட்டது. ஆனால் எனக்கு அது ஒருவிதத்தில் "பொல்லாங்காய்த் தோற்றமளித்தது;" இத்தீர்மானத்தினால் ஒரு கண்ணோட்டத்தி லிருந்து பார்க்கப்படுகையில் அடையப்பெறுகிற நன்மையானது, வேறொரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படுகையில் இதனால் உண்டாகும் பாதகத்திற்கு ஈடுசெய்திட முடியாது எனும் கருத்தினை என் மனதில் பெற்றிருந்து, இதை விட்டுவிலக நான் விரும்புகின்றேன்.

நான் எதிர்த்துச் சண்டைப் போடவில்லை, போடவும் மாட்டேன்; ஆனால் நான் கர்த்தருடைய சித்தத்தை அறியவும், அதையே செய்ய வேண்டுமென்றும் இருக்கிறேன்; மேலும் மற்ற மூப்பர்களிடமிருந்தும், சபையாரிலுள்ள மற்ற அங்கத்தினர்களில் சிலரிடமிருந்தும் எதிர்மாறான கண்ணோட்டத்தினை நான் கொண்டிருப்பவனாக என்னை நான் காண்கின்றபடியினால், நான் மிகவும் கவலையடைந்து, உங்களது அறிவுரையைக் கேட்கின்றேன். சபையாருடைய தற்போதைய மற்றும் எதிர்க்கால நலனுக்கடுத்த காரியங்களைக் கருத்தில் எடுத்துக்கொள்கையில், இக்காரியம் இப்பொழுது மிகவும் முக்கியமானதென நான் எண்ணுகின்றேன். இப்படிக்கு, அவரது ஆசீர்வாதமான ஊழியத்தில் தங்கள்,

- ஜெ. ஜெ. பி.

### மேலே இடம்பெறும் கடிதத்திற்கான எங்களது பதில்:

இக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள காரியங்கள் சம்பந்தமான வேதவாக்கி யங்களின் அடிப்படையிலான போதனைகள் என்று நாம் நம்புகிறவைகளை, வேதாகம பாடங்களினுடைய 6-ஆம் தொகுதியில் முன்வைத்திட நாம் பிரயாசப்பட்டிருக்கின்றோம். அதைத் திரும்பவும் கூறி, அதைக் கேள்வியில் இடம்பெறும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்த நாடிடும்படிக்கு நாம் கூறுவதாவது:

ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், தான் அபிஷேகிக்கப்பட்டுள்ளதன் காரணமாகப் பேசிடுவதற்கும், பிரசங்கம் பண்ணிடுவதற்கும், தனது பரலோகத் தந்தையின் வார்த்தைகளையும், செய்தியையும் அறிவித்திடுவதற்கும் உரிமை உடையவனாய் இருக்கின்றான். பிரசங்கித்திடுவதற்கான உரிமை என்பது பிஷப்புகளுக்கோ அல்லது அவர்கள் யார்மேல் கைகளை வைக்கிறார்களோ, அவர்களுக்கோ மாத்திரம் எல்லைக்குட்பட்டதல்ல அல்லது சபையாரால் கைகளை நீட்டுதல் என்று வேதவாக்கியம் கூறிடும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களுக்கோ,

உதவிக்காரர்களுக்கோ மாத்திரம் எல்லைக்குட்பட்டதல்ல. ஏதேனும் காரணங்களினால் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் கவனத்தைச் சிதறாமல் தக்கவைத்துக் கொள்வதற்குரிய திறமையின்மை எனும் குறைபாடுகள் காணப்படலாம். சகோதரிகள் பொது இடங்களில் பிரசங்கம் பண்ணக்கூடாது எனும் அப்போஸ்தலனின் கட்டுப்பாடு தவிர மற்றப்படி எந்தக் கட்டுப்பாடுமில்லை.

திவ்விய அதிகாரம் அளிக்கப்பட்டிருத்தல், அபிஷேகித்தல் அல்லது பரிசுத்த ஆவியின் அங்கீகாரம் குறித்த இந்தப் பரந்த கண்ணோட்டத்தில், ஒருவருக்கும் இன்னொருவரைத் தடைப்பண்ணிடுவதற்குரிய உரிமையில்லை என்று நாம் புரிந்திருக்கின்றோம். இயேசு அப்போஸ்தலனாகிய யோவானிடம் கூறினது போன்று, "அவனைத் தடுக்க வேண்டாம்" (மாற்கு 9:39).

யாருமே தனது சகோதரனைத் தடைப்பண்ணவோ அல்லது கட்டுப்பாடு பண்ணவோ முடியாது என்றாலும், நாம் நம்முடைய சுயாதீனங்கள் சிலவற்றை விட்டுக்கொடுத்திடலாம். தேவன் ஒழுங்கின் தேவனாய் இருக்கின்றார் என்றும், ஒவ்வொரு நற்கிரியையும் ஒழுங்கினாலேயே வளம்பெறுகின்றது என்றும் அடையாளம் கண்டுகொண்டு மற்றும் தம்முடைய பின்னடியார்கள் ஒரே சரீரமென ஒன்றுகூடிட வேண்டும் என்று கர்த்தர் கொடுத்திட்டதான கட்டளைகளைப் பின்பற்றுகையில், சரீரத்தில் நமக்கான இடத்தை நாம் எடுத்துக்கொள்கையில், நாம் நமது தனிப்பட்ட சுதந்தரம், சுயாதீனங்கள், சிலாக்கியங்களில் சிலவற்றை இழக்கின்றோம் என்று நாம் உணர்ந்து கொள்கின்றோம். இதை நாம் செய்வதில் மகிழ்கின்றோம்; காரணம் அது கர்த்தருடைய சித்தம் என்று நாம் நம்புகின்றோம்; ஏனெனில் அவர், "சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்" என்று நமக்குக் கட்டளையிட்டுள்ளார். ஆகையால் வேதத்தின் மாணவர்கள் காணப்படும் சபையில் அங்கத்தினர்களாகியுள்ள அனைவரும் தனிப்பட்ட உரிமைகளை ஒப்புக்கொடுத்து விடுகின்றனர். அவர்கள் ஒரு சபையாராகச் செயல்பட்டு, எந்தக் கூட்டங்கள் தேவையாய் இருக்கின்றது என்றும், எந்தக்கூட்டங்கள் தேவையில்லை என்றும், தங்கள் மத்தியிலுள்ள யார் நன்கு வழிநடத்துபவராகக் காணப்பட்டு, சபையாருக்கு ஊழியஞ்செய்பவர்கள் என்றும், யார் மற்ற ஊழியங்களைச் செய்வார்கள் என்றுமுள்ளவைகளைத் தீர்மானிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், சபையார் மத்தியிலுள்ள சகோதரர்கள், புதிய வகுப்புகளை/சபைகளைத் தொடங்கி மற்றும் இன்னமும் தங்களை அந்தப் பழைய சபையாரின் அங்கத்தினர்களெனத் தொடர்ந்து கருதிக்கொள்வதும் சரியான காரியமாய் இராது. ஒரு சபையார் மத்தியிலுள்ள அங்கத்தினன் ஒருவன், தனது சபையாரால் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ளவைகளுக்கு அப்பால் வேறொரு வகுப்பை/சபையைத் தனிப்பட்ட விதத்தில் துவங்குவது என்பது, அந்தப் பழைய சபையாரைப் புறக்கணிப்பதாகவும், பழைய சபையாரோடுள்ள தனது உறவினைத் துண்டிப்பதாகவும் இருக்கும் மற்றும் இனிமேல் அச்சபையின்

ஊழியக்காரனாகவோ அல்லது அதன் அங்கத்தினனாகவோ அல்லது அதன் சிலாக்கியங்களில் பங்குகொள்பவராகவோ தான் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். தனது சொந்த தனிப்பட்ட சுயாதீனத்தை மீண்டுமாகக் கையில் எடுத்துக்கொள்ளும்போது, அவன் சபையாரின் ஓர் அங்கத்தினன் என்றுள்ள தனது சிலாக்கியங்களைக் கையளித்துவிடுபவனாக இருப்பான்.

ஆகையால் இந்த நிலைப்பாட்டின்படி, இச்சந்தர்ப்பத்தில் புதிய சபையை/வகுப்பை ஏற்படுத்துவதில் பங்கெடுக்கச் சகோதரர்களும், சகோதரிகளும், நிச்சயமாகவே சிறந்த நோக்கங்களை மாத்திரம் பெற்றிருந்தனர் என்றும், அநேகமாக சபையை ஏற்படுத்தும் தங்களது செயல்பாட்டின் உண்மையான அர்த்தத்தை மற்றும் தாக்கத்தை அத்தருணத்தில் சிந்தித்துப் பார்க்காதவர்களாய் இருந்துள்ளனர் என்றும் நாம் சொல்லலாம்.

இன்னுமாக பழைய சபையாரும், அதன் மூப்பர்களும், உதவிக்காரர்களும், சபையாருடைய விருப்பங்கள் மற்றும் தேவைகள் யாவற்றையும் முழுமையாய்ச் சந்திக்கவில்லை என்பதும் தெரிகின்றது; இல்லையேல் சபையாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளவைகளுக்கு அப்பால் புதிய வகுப்புகளை/சபைகளை உருவாக்கிடுவதற்கான காரணம் வேறெதுவும் இருக்கமுடியாது. தேவையுடையவர்களுக்கான ஆவிக்குரிய தேவைகளானது சந்திக்கப்படும்படிக்குப் பார்த்துக் கொள்ளத்தக்கதாக எப்போதும் சபையாருடைய ஊழியக்காரர்கள் கவனித்திருக்க வேண்டும்; மற்றும் போதுமான எண்ணிக்கையில் மூப்பர்களும், உதவிக்காரர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட வேண்டும்.

அத்தீர்மானத்தை எடுத்திட்ட சகோதரர்களின் உணர்வுகளை நாம் மதிக்கிறோம் என்றாலும், அவர்களது செயல்பாட்டினுடைய ஞானத்தினைக் குறித்து நாம் ஐயம்கொள்ளவே செய்கின்றோம். சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்குமான சிறந்த வழி, அனைத்துத் தரப்பினரும் தங்கள் தவறுகளை அறிக்கையிடுவதாகவே இருக்கும் என்று நாம் நம்புகின்றோம். சபையாரும், மூப்பர்களும் பின்வருமாறு கூறிடலாம்: "அன்பான சகோதர சகோதரிகளே, கூட்டங்கள் தொடர்புடையதான சபையாரின் தேவைகளை நாங்கள் சந்தியாமல் போனதின் காரணம், அப்போது நாங்கள் சூழ்நிலையைக் கிரகிக்க முடியாதவர்களாய் இருந்தோம். அதற்காக நாங்கள் வருந்துகின்றோம். எதிர்க்காலத்தில் எங்கள் கடமைகள் விஷயத்தில் நாங்கள் மிகவும் உண்மையாய் இருப்போமென்று நாங்கள் வாக்களிக்கின்றோம்."

புதிய வகுப்பை/சபையைத் தொடங்கினவர்களும் பின்வருமாறு கூறிடுவது நலமாயிருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம்: அதாவது "அருமையான சகோதர சகோதரிகளே, நாங்கள் இவ்விஷயத்தைக் குறித்துப் போதுமான பரந்த கண்ணோட்டம் பெற்றிராததற்கும், சபையாருடைய நியமித்தலின்படி தேவையானது

சந்திக்கப்பட வேண்டும் என்றுள்ள நோக்கத்தில் கூட்டத்திற்கான வேண்டு கோளை முன்வைத்திடாததற்கும் நாங்கள் வருந்துகின்றோம்.”

இப்படியாகத் தவறை வருத்தத்தோடு ஒப்புக்கொண்டு மற்றும் பொறுத்துக் கொள்வதோடு, முழுக்காரியமும் சரியாகிவிடும் என்றும், அனைவரும் மனபதற்றத்திலிருந்து விடுதலையடைவதை உணருவார்கள் என்றும் நாம் நம்புகின்றோம் மற்றும் அநேகமாக இந்த விளைவுகளானது, பழைய சபையாருடைய நியமித்தலின் கீழ்ப் புதிய கூட்டங்கள் நடத்தப்படாதது வரையிலும் சிறப்பாய் இராது.

---

R4359 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி

பவுலையும், பர்னபாவையும் தவிர அந்தியோகியாவில் மூன்று (சத்திய தூதளிக்கிறவர்கள்) பேச்சாளர்கள் இருந்தார்கள் என்றும், இவர்கள் சுயத்தை வெறுத்தும், ஊழியம் செய்தும் கொண்டிருக்கையில், மற்றவர்களுக்குத் தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் விசேஷித்த வேலையைப் பர்னபாவும், பவுலும் செய்திட வேண்டும் என்று பரிசுத்த ஆவியானது திருவுளம்பற்றினது என்று நம்முடைய இந்தப் பாடம் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இதிலிருந்து, தேவைக்கும் அதிகமாகவே (சத்திய தூதளிக்கிற வர்கள், பேச்சாளர்கள்) போதகர்கள், பெரோயா பாட வழிநடத்துனர்கள் முதலான வர்கள் காணப்படும் எந்த இடத்திலும் நாடப்பட வேண்டிய சரியான வழிமுறை தொடர்புடைய ஆலோசனையை நாம் பெற்றுக்கொள்கின்றோம். விலையேறப்பெற்ற நேரத்தையும், ஆற்றலையும் வீணடிப்பதற்குப் பதிலாக, அனைவருமே காரியத்தினுடைய உண்மையினை அடையாளம் கண்டுகொண்டு, இப்பாடத்தினுடைய அறிவுரைகளுக்கு இணங்கி, சிலரைக் கிறிஸ்தவத்தைப் பரப்பும் விசேஷித்த பிரயாசத்திற்காகப் பிரித்திட வேண்டும். கர்த்தருடைய வேலையின் மற்றும் ஊழியத்தின் சிலாக்கியங்களுடைய ஆழத்தினைக் கவனிக்கத் தவறுதல் என்பது சிலருக்குச் சோதனையாக அமைந்து, ஒருவருக்கொருவர் ஊக்கமளிப்பதற்கும், பரிவோடு உதவுவதற்கும், கர்த்தருடைய சந்தோஷத்தில் பெருகிடுவதற்கும் மற்றும் சத்தியத்தைப் பரப்புவதற்கும் பதிலாக, குற்றம் கண்டுபிடிப்பதற்கும், சண்டையிடுவதற்கும், இருதயத்தைக் காயப்படுத்துவதற்கும் மற்றும் மனத்தளர்வடைவதற்கும் நேராய் வழிநடத்திவிடுகின்றது. கிறிஸ்துவின் ஒவ்வொரு அங்கத்தினனும், விசேஷமாகப் போதிக்கும் திறமையுள்ள ஒவ்வொருவரும், கர்த்தருடைய வேலைதொடர்புடைய விஷயத்தில் முடிந்தமட்டிலுமான பரந்த கண்ணோட்டத்தை எடுத்துக்கொள்ளவும் மற்றும் சக

ஊழியக்காரர் ஒவ்வொருவருடைய பிரயாசங்களை மிகவும் அன்பாயும், மனதார பாராட்டும் கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ளவும் நாட வேண்டும். இவ்வழிமுறையானது ஒருவரையொருவர் கட்டியெழுப்புவதற்கு ஏதுவாய் வழிநடத்திடும்; ஆனால் வேறுவிதமான வழிமுறையானது, உணர்வற்ற நிலைமைக்கும், வளர்ச்சியற்ற நிலைமைக்கும் வழிநடத்தி, ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்துப் போடுவதற்கும் நேராய் வழிநடத்திவிடும்.

## அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பிடும் இந்த ஊழியத்திற்குச் சபையார் அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார்கள். கைகளை வைத்தல் என்பது ஏதேனும் ஆவிக்குரிய அல்லது மாய வல்லமைக் கொடுக்கப்பட்டதையும் குறிக்கிறதில்லை. அது அவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டதையும் குறிக்கிறதில்லை. இது அந்தியோகியாவிலுள்ள கர்த்தருடைய சபையார், இந்த இரண்டு மனுஷர்களையும் தேவனுடைய ஊழியக்காரர்களாக அங்கீகரித்ததையும் மற்றும் தங்களது பிரதிநிதிகளென அவர்கள் கடந்துபோவதற்குத் தாங்கள் அங்கீகரித்ததையும் மற்றும் தங்களது செலவில் அவர்கள் மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தின் செய்தியை எடுத்துச் செல்வதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆசாரியர்கள், பலியில் தங்களை அடையாளப்படுத்துகின்றதான விலங்குகள் மீது தங்கள் கைகளை வைப்பதுபோன்று சபையாரும், சத்தியத்தின் ஊழியத்தில் தங்களது பிரதிநிதியாகக் காணப்படப் போகின்றவர்கள் மீது தங்கள் கைகளை வைத்தார்கள்.

நற்செய்தியைப் பிரகடனப்படுத்துவதற்கெனப் பயண ஊழியர்களை அனுப்புகையில், பரிசுத்த ஆவியின் கட்டளை என்று நாம் நம்புகிறதையே இன்று நாம் பின்பற்றிக்கொண்டிருக்கின்றோம். இவர்களும் "பிரசங்கிப்பதற்கு" நாங்கள் மனுஷனாலோ அல்லது மனுஷர்களாலோ அல்லது மனித அமைப்புகளாலோ அதிகாரமளிக்கப்படாமல், மாறாக "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் - அதாவது முன்புபோல் யூதர்களை மாத்திரமல்லாமல், சகல ஜாதிகளிலுமுள்ள ஜனங்களையும் - சீஷராக்குங்கள் என்று கூறினவராலே அதிகாரமளிக்கப் பட்டுள்ளோம்" என்ற காரியத்தை அப்போஸ்தலர்கள் போன்று தெரிவித்துக் கடந்துபோகின்றனர். "எங்களுடைய ஒப்புதலுடன், நீங்கள் எங்களது பிரதிநிதிகளாகக் கடந்து செல்லுங்கள் மற்றும் உங்களது செலவுகள் அனைத்தும் Tract-நிதியிலுள்ள எங்களது நன்கொடைகளினால் சந்திக்கப்படும். கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்யுங்கள் மற்றும் சொசைட்டியின் வழிவகைகள் வாயிலாக எங்களுக்குத் தகவல் அறிக்கைக் கொடுங்கள்" என்று சொல்வது, சபையார் பயண ஊழியர்கள் மீது கைகளை வைக்கின்றதாய் இருக்கின்றது.

# கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புபவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்

கர்த்தரைத் தொழுதுகொள்வதிலும், அவரது வசனத்தை ஆராய்வதிலும் பவுலும், பர்னபாவும் அந்தியோகியாவிலுள்ள சபையாரோடு அதிகமான காலம் செலவிட்டனர். இந்த வேதப்பாடங்களின் விளைவாகச் சபையார் ஒட்டுமொத்தமாக வளர்ச்சியடைந்தனர் மற்றும் சுவிசேஷத்தைப் பரப்பிடுவதற்கான வழிவகைகளைக் குறித்து ஜெபிப்பதற்கும், கருதுவதற்குமுரிய நிலைக்கு வந்தார்கள். சபையில் அநேகத் தீர்க்கத்தரிசிகள் (public orators - பொதுப் பேச்சாளர்கள்) மற்றும் போதகர்கள் காணப்பட்டனர்; மற்றும் இவர்களை எப்படித் தேவனுக்கு மகிமை சேர்க்கும் விதமாகவும் மற்றும் தாங்கள் எப்படிச் சத்தியத்தினால் ஆசீர்வதிக்கப் பட்டார்களோ, அப்படியே மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படும் விதமாகவும் பயன்படுத்திடலாம் என்று சபையார் சிந்திக்கத் துவங்கினார்கள்.

இப்படிதான் சத்தியத்தினை நல்லதும், நேர்மையுமான இருதயங்களில் ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரின் காரியமாக எப்போதும் காணப்படுகின்றது. தாங்கள் போஷிக்கப்படுவதற்கும், கர்த்தரில் பலமடைவதற்கும் விரும்புகின்றனர். சத்தியம் ஏற்றுக்கொள்ளப்படுகையில், அது ஒரு பலத்தையும் மற்றும் அந்தப் பலத்தைப் பயன்படுத்துவதற்கான வாஞ்சையையும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது அன்றுபோன்று, இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது. சத்தியம் கொண்டுவருகின்றதான பரிசுத்தமாக்கப்படுதலானது, நம்முடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலோடு துவங்குகின்றது; மற்றும் ஊழியம் புரிவதற்கான ஆற்றலானது, ஆவியின் உயிர்ப்பிக்கப்படுதலுடன் தொடர்புடையதாய் இருக்கின்றது.

அந்தியோகியா சபையில், அவர்களது தேவைக்கும் அதிகமாய்ப் போதகர்கள் காணப்பட்டனர் மற்றும் ஊழியம் புரிவதற்கான பெரிய வாய்ப்புகளைத் தேடிடுவதற்கு அவர்கள் துவங்கினார்கள். அவர்கள் எந்த வழிமுறையைத் தாங்கள் பின்பற்றிட வேண்டும் என்பதைக்குறித்துத் தெளிவற்றுக் காணப்பட்டபடியால், அவர்கள் சபையின் மெய்யான தலையாகிய கர்த்தரை நோக்கிப்பார்த்தார்கள். அவர்கள் உபவாசமிருந்தனர் மற்றும் அவர்கள் ஜெபமும் ஏறெடுத்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு நிச்சயமே. அதன் விளைவாக, கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் வேலைக்கான பிரதிநிதிகளெனத் தங்கள் மத்தியில் காணப்பட்ட பர்னபாவையும், பவுலையும் அனுப்பிவைப்பதற்கான முடிவிற்கு வந்தார்கள்.

எப்படி இந்தத் தீர்மானத்திற்கு வரக் கர்த்தர் அவர்களை வழிநடத்தினார் என்பது குறித்து நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. நாம் இன்று இதே காரியம் போன்ற காரியத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, "வேதவாக்கியங்களை

ஆராய்ந்து, ஜெபம்பண்ணி, கர்த்தருடைய சித்தத்தை அறிவதற்கு நாடின பிற்பாடு, நம் மத்தியில் காணப்படும் இன்னென்ன நபர்கள் சத்தியத்திற்கடுத்த பொது ஊழியங்களுக்குச் செல்ல வேண்டும் என்பது அவரது சித்தமாயிருக்கும் என்று நாம் நம்புகின்றோம். பெருமை அல்லது பேராசை அல்லது பணநோக்கத்தினால் இல்லாமல், பரிசுத்த ஆவியினாலேயே இந்த முடிவிற்கு நேராய் நாம் வழிநடத்தப்பட்டிருக்கின்றோம் என்று நாம் நம்புகின்றோம். மற்றவர்களுக்கு வெளிச்சத்தை எடுத்துச் செல்வதற்கு இந்தப் பிரதிநிதிகளைச் சபையாராக நாம் அனுப்பிவைப்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கும் என்று நாம் நம்புகின்றோம்" என்று கூறுவது போன்றே - அன்று அவர்களது காரியம் காணப்பட்டிருந்திருக்க வேண்டும்.

இது தங்கள் கடமை மற்றும் சிலாக்கியம் என்று ஏதோ விதத்தில் அந்தியோகியாவின் சபையாருக்குப் பலமாய்த் தோன்றியுள்ளது. இந்த ஊழியத்திற்குச் சபையார் தங்கள் சிறந்த பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து, இப்படியாகச் சுயத்தைப் பலிச்செலுத்தும் ஆவியினை வெளிப்படுத்தினது கவனிக்கப்படத்தக்கது. இதற்கேற்ப கர்த்தர் சபையாரை ஆசீர்வதித்து மற்றும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் ஊழியத்திற்கென்று மிகவும் தாலந்துமிக்க இந்த இரண்டு சகோதரர்களைச் சபையார் கொடுத்ததில் அடைந்திட்ட இழப்பினைக் கர்த்தர் ஈடுகட்டியிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

## ஏற்படுத்துதலும், கைகளை வைக்குதலும்

காரியம் முடிவுபண்ணப்பட்டிருக்க, சபையார் உபவாசமிருந்து, ஜெபம்பண்ணி, பவுல் மற்றும் பர்னபா மீது கைகளை வைத்து, வாழ்த்துக்களுடன் இருவரையும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் அவர்களது சுற்றுப் பயணத்திற்கு அனுப்பி வைத்தார்கள். சபையாருடைய பிரதிநிதிகளாகிய மூப்பர்கள் வாயிலாகவே அநேகமாக கைகளை வைத்தலானது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப்படிச் செய்யப்பட்டது, இன்று பரவலாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றதான "ஏற்படுத்துதல்"/ordination அல்ல; ஏனெனில் பவுலும், பர்னபாவும் அந்தியோகியாவிலுள்ள சபையில் காணப்பட்ட பிரதானமான போதகர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மத்தியில் அடங்குபவர்களாக நீண்டகாலமாய் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டிருந்தனர். அது இன்று பல்வேறு பிரிவினர்களிலுள்ள கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல் குறித்துப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றது போன்று, பிரசங்கிப்பதற்கான அதிகாரம் வழங்குதலைக் குறிக்கிறதில்லை.

அவ்வனுசரிப்பின் எளிமையான அர்த்தமாவது: "அந்தியோகியா சபையாராகிய நாங்கள், எங்களது பிரதிநிதிகளாகிய மூப்பர்கள் இப்படிக் கைகளை

வைப்பதன் வாயிலாக, பவுல் மற்றும் பர்னபாவாகிய இவ்விரண்டு மனுஷர்களையும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான சுற்றுப் பிரயாணமாக அனுப்பி வைக்கின்றோம்; அவர்கள் கர்த்தருடைய பிரதிநிதிகளாக மாத்திரமல்லாமல், அந்தியோகியாவிலுள்ள கர்த்தருடைய சபையின் பிரதிநிதியாகவும்கூடக் கடந்துசெல்கின்றனர்; மற்றும் இவர்களுக்குரிய பராமரிப்பிற்கான வழிவகைகளை நாங்களே பொறுப்பேற்றுக்கொள்கின்றோம். அவர்களுக்குத் தேவையான ஆதரவுகளை நாங்கள் சந்தித்திடுவோம் மற்றும் இப்படியாக உடன் வேலையாட்களாக, அவர்களது பிரயாசங்களில் பங்கெடுத்து, அவர்களது சிரமங்களிலும், சோதனைகளிலும் பரிவுகொண்டு, அவர்களது தேவைகளில் உதவிபுரிந்து, அவர்களது பிரயாசங்களின் விளைவாக வரும்பலன்கள் எதிலும்கூட நாங்கள் பங்கெடுத்திடுவோம்" என்பதேயாகும்.

சமயத்தைப் பரப்பிடுவதற்கான இந்தச் சுற்றுப்பயணத்திற்குப் பிற்பாடு, இவ்விரண்டு சகோதரரும் அந்தியோகியாவிற்குத் திரும்பி, தகவல் அறிக்கையினைக் கொடுத்திட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம். ஆனால் பிற்பாடு அந்தியோகியாவிலுள்ள சபையைச் சார்ந்திராமலும் - இப்படியான எந்த ஜெபித்தல்களும் மற்றும் கைகள் வைக்குதல் இல்லாமலும் மற்றும் பிரயாசங்களுக்கான பலன் குறித்த அறிக்கைகள் கொடுக்காமலும் அப்போஸ்தலன் பவுல் பிரயாணம் மேற்கொண்டார் என்பதாகத் தெரிகின்றது - ஆனாலும் நாம் நிதானிக்க முடிந்தவரை அச்சபையார் மீது அன்பும், அவர்களிடத்தில் பரிவும் அவர் தொடர்ந்து வைத்தவராகவே இருந்தார்.

---

R5954 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சுவாரசியமான கடிதங்கள்

### *எப்போது விவாகரத்துப் பெற்றுக்கொண்டவர்கள் திருமணம் பண்ணிடுவதற்குச் சுதந்தரமாய் இருக்கின்றனர்?*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

வேதாகம பாடங்களுடைய 6-ஆம் தொகுதியானது, ஒவ்வொரு அனுபவங்கள், சிரமங்கள் மற்றும் புதுச்சிருஷ்டியாகிய கர்த்தருடைய ஜனங்களுக்கான சரியான வழிமுறைகள் குறித்துத் தெரிவிக்கின்றது என நான் நன்கு அறிவேன்; எனினும் ஒரு குறிப்பிட்ட கேள்வியானது எழும்பி, எங்களது

சபையில் சில குழப்பங்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது மற்றும் பிரிவினையை உண்டுபண்ணிவிடும்போன்று தோன்றுகின்றது. எங்கள் சபையின் அங்கத்தினர்களாகிய ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் எங்கள் ஐக்கியத்தினை அனுபவித்து வந்தனர்; ஆனால் அச்சகோதரிக்கு முன்பும் ஒரு திருமணம் நடந்திருக்கின்றது என்றும், அவளது முதலாம் கணவன் இன்னமும் ஜீவனோடு காணப்படுகின்றார் மற்றும் மறுமணம் செய்துகொண்டுள்ளார் என்றும் எங்களுக்குத் தெரியவந்தது.

எங்கள் சபையாரில் சிலர் இந்தச் சகோதரனையும், சகோதரியையும், கூடுகைகளில் கலந்து கொள்வதற்குத் தடைப்பண்ணிட வேண்டுமென்று விரும்புகின்றனர். மத்தேயு 19:9-ஆம் வசனத்தில் இடம்பெறும் இயேசுவின் பின்வரும் வார்த்தைகளின் அடிப்படையிலேயே முக்கியப் பிரச்சனை ஏற்பட்டுள்ளது - "எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்." இவ்விஷயத்தில் அச்சகோதரியுடைய முதலாம் கணவன் வேசித்தனம் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று வலியுறுத்தப்படுகின்றது; ஆனால் இது அவள் மறுமணம் செய்துகொள்வதற்கு அவளை விடுவித்துவிடுகிறதில்லை என்று மற்றவர்கள் வலியுறுத்துகின்றனர்; ஏனெனில் (முறையே விவாகரத்துப்பண்ணியோ அல்லது இல்லாமலோ இருக்கும்) விவாகரத்தான ஸ்திரீயைத் திருமணம் பண்ணும் எவனும், வேசித்தனம் புரிந்தவனாய் இருப்பான் என்று இயேசு கூறியிருக்கின்றார். இது விஷயமாக எங்களுக்குக் கொஞ்சம் அதிகமான வெளிச்சத்தினைத் தயவாய்க் கொடுத்தருளவும்.

உங்கள், உண்மையுள்ள சகோ, ________________

[பதில்:- இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இக்காரியமானது பிரிவினையை அல்லது குழப்பத்தை உண்டுபண்ண அனுமதிப்பதில் சபையார் நிச்சயமாகவே தவறே செய்கின்றனர். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கூடுகையில் கலந்துகொள்வதற்குத் தடைப்பண்ண அவர்களுக்கு எந்த முகாந்தரமும் இல்லை. அதிகப்பட்சமாக சபையாரால், சம்மந்தப்பட்டவர்களுக்கு ஐக்கியத்தினை மறுப்பதும் மற்றும் சம்மந்தப்பட்டவர்களின் இல்லங்களுக்குச் செல்வதற்கு அல்லது சபையாரின் இல்லங்களில் அவர்களை வரவேற்பதற்கு மறுப்பதும் மற்றும் அச்சகோதரனை மூப்பர் அல்லது உதவிக்காரன் ஊழியத்திற்கு நியமிப்பதற்குச் சபையார் மறுப்பதும் கூடும். ஆனால் பொதுக்கூடுகைகளில் கலந்துகொள்ளும் சிலாக்கியங்களை அவர்களுக்கு மறுப்பது என்பது மிகவும் முரண்பாடான காரியமாய் இருக்கின்றது;

ஏனெனில் எல்லா வகையான பாவங்களில் வாழும் அனைத்து வகையான ஜனங்களும் கூடுகைகளுக்கு அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றனர் மற்றும் இப்படியாக வருகையில் அவர்கள் பிரயோஜனமடைந்து, குணமடைவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

இவ்விஷயத்தில் வேசித்தனமே விவாகரத்திற்கான அடிப்படையாக இருக்கின்றது என்றும், தவறு கணவனிடத்தில்தான் இருந்துள்ளது என்றும் ஒப்புக் கொள்ளப்படுகின்றபடியால், இவ்விஷயமானது "வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி" என்று நமது கர்த்தரினால் குறிப்பிடுகின்ற விதி விலக்கிற்குள்ளாகவே வந்துள்ளது. அன்றியும் ஒருவேளை இது உண்மையிலேயே பிரிதலுக்கான காரணமாய் இல்லாமல் இருப்பினும், முன்னாள் கணவன் மறுதிருமணம் செய்துள்ள காரியமானது, அவர் திருமண பந்தம் முறிக்கப்பட்டதாகக் கருதியுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது; ஆகையால் அவனது முதல் மனைவி, அதன் கடமைகளினின்று விடுதலைப்பண்ணப்பட்டுள்ளாள். இக்கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள சகோதரியானவள் அவள் பக்கத்தில் இந்த இரண்டு நிரூபணங்களையும் பெற்றிருக்கின்றாள் மற்றும் மறுமணம் செய்வது ஞானமான மற்றும் சரியான காரியமாய் இருக்குமென அவள் எண்ணும்பட்சத்தில், மறுமணம் செய்வதற்குரிய எல்லா உரிமையையும் உடையவளாய் இருக்கின்றாள்.

கணவன் மற்றும் மனைவியின் இடையிலான ஒரு பிரிவினையை மாத்திரமே நமது கர்த்தர் குறிப்பிட்டார் என்று எண்ணிக்கொள்ள முடியாது; ஏனெனில் ஒருவேளை அவிசுவாசி பிரிந்துபோனால், பிரிந்துபோகட்டும் - அதைத் துன்பமாகக் கருதாமல், அதை ஓர் ஆசீர்வாதமாய்க் கருதுங்கள் என்று பரிசுத்த பவுலடிகளார் ஆலோசனை கூறுகின்றார். கணவனோ அல்லது மனைவியோ இப்படிப் பிரிந்து போவது, விவாகரத்தாகுவதாகும் என்று அவர் கூறவில்லை. விவாகரத்து என்பது உண்மையான திருமண ஒப்பந்தத்தை முழுமையாய் முறித்துப் போடுவதாகும். திருமண பந்தத்தை மிகவும் அக்கறையற்ற விதத்தில் கையாளப்படுவதை இயேசு குறையாய்க் கூறி, கண்டனம்பண்ணினார். வேசித்தனத்தினால் மாத்திரமே தவிர மற்றப்படி திருமண ஒப்பந்தமானது முழுமையாய் முறிக்கப்பட முடியாது.

நம்முடைய நாட்களில் இக்காரியங்களானது நீதிமன்றங்களினால் நடத்தப்படுகின்றது. இதோடுகூட வேதமாணவர்கள் தேவவசனத்தினால் தங்களைச் சரிப்படுத்திக்கொள்கின்றனர். ஆண்டவரால் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே காரணம் காணப்படும் பட்சத்தில் மாத்திரமே தவிர, மற்றப்படி நீதிமன்றமானது விவாகரத்து அளிக்கும் காரியமானது, திருமண ஒப்பந்தத்திலிருந்து விடுதலையாக்குவதாக ஒரு வேதமாணவனால் கருதப்படக்கூடாது. ஆனால் வேசித்தனத்தின் காரணமான நீதிமன்ற விவாகரத்தானது அல்லது பிரிந்திருப்பவரின் இரண்டாம் திருமணம் காரணமான நீதிமன்ற விவாகரத்தானது மதிக்கப்பட வேண்டும்].

# தெசலோனிக்கேயருக்குப் பரிசுத்த பவுலடிகளார் மேய்ப்பரெனக் கொடுத்த ஆலோசனை

### 1 தெசலோனிக்கேயர் 5:12-24

## கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்து

*"அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து..." (1 தெசலோனிக்கேயர் 5:12)*

கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்குமான மனசாட்சியினுடைய சுயாதீனத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் விஷயத்தில் வேதவாக்கியங்களானது மிகவும் குறிப்பாய்க் காணப்பட்டப்போதிலும் மற்றும் கிறிஸ்துவில் ஆண் என்றோ பெண் என்றோ இல்லை, அடிமை என்றோ சுயாதீனன் என்றோ இல்லை, அவரது அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யாவரும் அவரில் ஒன்றாய் இருக்கின்றனர், அவரது அங்கமாய் இருக்கின்றனர் என்று வேதவாக்கியங்களானது நமக்கு உறுதியளித்திட்ட போதிலும், தேவனே அவரது ஜனங்களுக்கான காரியங்களைக் கவனித்துக் கொள்கின்றார் என்றும், அவர்கள் கர்த்தருடைய தலைமைத் துவத்தினையும், தேவனால் சரீரத்தில் வைக்கப்பட்டவர்களாகிய - அப்போஸ்தலர்கள், தீர்க்கத்தரிசிகள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள் முதலானவர்களையும் அங்கீகரித்துக்கொள்ளுதலின் பலனாகவே அவர்களது வளமைக் காணப்படும் என்றுமுள்ள கருத்தினை வேதவாக்கியங்களானது மிகவும் தெளிவாய் நமக்கு முன்வைக்கின்றதாய் இருக்கின்றன. "கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையினை" உடையவர்களாகிய தேவனுடைய பிள்ளைகளெனக் கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் காணப்படுகின்றனர்; எனினும் பாவம் செய்வதற்கான சுயாதீனத்தையல்ல, மாறாக பாவத்திலிருந்தும் அதன் அடிமைத்தனத்திலிருந்தும், அதன் அழிவிலிருந்துமுள்ள ஒரு விடுதலையையே அவர் நமக்குக் கொடுத்திருக்கின்றார். இப்படி விடுதலைப் பண்ணப்பட்டவர்கள் விசுவாசத்தின் மற்றும் அர்ப்பணிப்பின் வாயிலாகத் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டுள்ளபடியால், இவர்கள் பிதாவின் வீடும், அதன் ஏற்பாடுகள் அனைத்துமே, பரலோகத்தின் முதல் சட்டமாகிய - ஒழுங்கின்கீழ்க் காணப்படுகின்றன என்பதை உணர்ந்துகொள்வது அவசியமாய் இருக்கின்றது. இந்த ஒழுங்கினை - இவர்கள் தாங்கள் திவ்விய அன்பிலும், தயவிலும் நிலைத்திருப்பதற்கும், குடும்ப ஆசீர்வாதத்தில் பங்கடைவதற்குமான நிபந்தனையென, அதற்கு விருப்பத்தோடும், மகிழ்ச்சியோடும் கீழ்ப்படிவதற்கு முதலாவது கற்றுக்கொள்ள வேண்டும். இதனை புறக்கணிக்கும்போது, இவர்களால்

அந்த வீட்டாருக்கடுத்த ஆவிக்குரிய காரியங்களில் ஆழமாயும், அதிகமாயும் ஒருபோதும் வளர்ந்திட முடியாது; மாறாக இவர்கள் திறமையற்ற குழந்தைகளெனவும், ஒழுங்கில்லாதவர்களெனவும், (nursery) குழந்தைகள் நிலையினைத் தாண்ட முடியாதவர்களாகக் காணப்படுவார்கள்.

கர்த்தரை அடையாளம் கண்டுகொள்ளுதலும் மற்றும் அவரது வார்த்தைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் வாயிலான அவரது வழிகாட்டுதலுக்குக் கவனித்திருப்பதும், கர்த்தருக்குள் தங்களை விசாரணை செய்யும்படிக்குத் தங்கள் மீது அவரால் ஏற்படுத்தப்பட்டவர்களை, கர்த்தருடைய ஜனங்கள் கண்டுகொள்ள உதவிடும். ஆகையால் திவ்விய ஒழுங்கில் சபையானது அதன் ஊழியக்காரர்களை, மூப்பர்களை, உதவிக்காரர்களை, மேய்ப்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றாலும், ஒவ்வொரு அங்கத்தினனும் தன்னுடைய சொந்த பகுத்தறிதலுக்கு இசைவாய் மாத்திரமல்லாமல், திவ்விய சித்தம் குறித்த தன்னுடைய புரிந்துகொள்ளுதலுக்கு இசைவாக வாக்களிப்பதற்கென (vote) "தனது கையினை நீட்டிட" வேண்டும். ஒருவேளை கர்த்தருடைய வழிநடத்துதலில், இது விஷயமான நம்முடைய கருத்தானது உணர்ந்துகொள்ளப்படவில்லையெனில், ஒருவேளை நியாயமான புரிந்துகொள்ளுதல் மற்றும் வாக்களித்தலின் (vote) கீழ், தெய்வீகச் சித்தம் குறித்த நம்முடைய கருத்திற்கு எதிர்மாறாக, யாரோ ஒருவர் சபையை விசாரிக்கும்படிக்கு ஏற்படுத்தப்பட்டால், நாமும் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்து, நம்மால் முடிந்தமட்டும் அத்தகையவருக்கு ஒத்துழைப்புக்கொடுத்திட வேண்டும்; ஏனெனில் திவ்விய ஞானத்தையும், வல்லமையையும் அடையாளம் கண்டு கொண்டவர்களாக, அர்ப்பணிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்களின் சித்தமானது தெய்வீகச் சித்தமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவேளை சிலசமயங்களில் சபையானவளின் மேலான நலன்களுக்கு எதிராக காரியங்கள் நடைபெறத்தக்கதாக கர்த்தர் அனுமதிப்பதுபோன்று தோன்றிடலாம்; நாம் அச்சம்கொள்ளக்கூடாது, மாறாக அனைத்தையும் அவரிடத்தில் ஒப்படைத்துவிட்டு, நம்மைப்போன்று மற்றவர்கள் பார்க்கின்றார்களோ அல்லது இல்லையோ, கர்த்தருடைய சித்தம் குறித்த நம்முடைய பகுத்தறிதலை முழுமையாய் வெளிப்படுத்துவதில் திருப்தியடைந்திட வேண்டும்.

நம்முடைய இந்தப் பாடத்தில், தெசலோனிக்கேயா சபையானது ஒழுங்குமுறையின்படி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும், கர்த்தருடைய நாமத்தில் தங்கள் மத்தியிலிருந்து சிலரைத் தங்களை விசாரிக்கும்படிக்கு - வேலைக்கடுத்த நலன்கள் தொடர்புடைய விஷயத்தில் மேற்பார்வைப் பண்ணவும், கொஞ்சம் அதிகாரம் கொண்டிருக்கவும் நியமித்துள்ளனர் என்றும் அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றனர். இத்தகையவர்கள் தனிப்பட்ட விதத்தில் மாத்திரமல்ல, சபையின் ஊழியர்களெனவும் மற்றும் சபை மூலமான திவ்விய

நியமித்தலின்படியானவர்களெனவும் மதிக்கப்படும்படிக்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். சபையார் இவர்களிடமிருந்து ஆலோசனைகளை எதிர்ப்பார்த்திட வேண்டும். இவர்கள் தாங்கள் உண்மையுள்ள ஊழியர்களாகக் காணப்பட்டு, சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்களைக் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்று உணர்ந்துகொள்ள வேண்டும். கர்த்தரையும், சத்தியத்தையும் அன்புகூருகிற யாவரும், தங்களால் முடிந்தமட்டும் தங்கள் பாதையில் இடர்ப்பாடுகளைக் கொண்டுவராமல் இருப்பதற்கு நாடிட வேண்டும் மற்றும் தங்கள் புத்திமதிகளையும், தகுதியான செல்வாக்கினையும் நிலைநிற்கப்பண்ணத்தக்கதாக தங்களால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும். இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களானவர்கள் சகோதரர்கள் மத்தியில் பிரயாசம் ஏறெடுப்பவர்களாகவும், அவர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவும் இருப்பார்கள். சபைக்கான ஊழியம் என்பது, கனத்திற்குரியது மாத்திரமேயல்ல. "Minister" எனும் வார்த்தையின் அர்த்தம் பணிவிடைக்காரன் ஆகும் மற்றும் இது பொருத்தமான மற்றும் மிகவும் அர்த்தமுள்ள அர்த்தமாகவும் காணப்படுகின்றது - அநேகரால் கவனிக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமான அர்த்தம் கொண்டவையாகும்.

தொடர்ந்து, "அவர்கள் பணியின்பொருட்டு, அவர்களை உயர்வாகவும் அன்புடனும் கருதுங்கள்" என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:13; திருவிவிலியம்). உங்கள் சொந்த இருதயத்திற்குள்ளாக வருவதற்கும், மற்றவர்களில் கசப்பின் வேர்களாகக் காணப்படுவதற்கும் ஏதுவாக, போட்டிமனப்பான்மையின் ஆவி எதையும் அனுமதித்திடாதீர்கள். சபையினுடைய எந்த ஓர் ஊழியக்காரனுக்கும் எதிராக குறைக்கூறும் அன்பற்ற வார்த்தைகள் எதுவும் உங்கள் உதடுகளினின்று புறப்படுவதற்கு அனுமதித்திடாதீர்கள். மாறாக அவர்களது ஸ்தானங்களில் ஒருவிதத்தில் அவர்கள் கர்த்தரைப் பிரதிநிதித்துவம் பண்ணுகிறதால், அவர்களை உயர்வாய் எண்ணிடுங்கள், அவர்களைக் கனப்படுத்திடுங்கள். சபையில் அவர்களது அன்பின் பிரயாசங்களானது பாராட்டப்படுவதற்கு ஏதுவாய்க் காணப்படுமளவுக்குத்தக்கதாக அவர்களைக் கனப்படுத்திடுங்கள். கிறிஸ்துவுக்கொத்த சாயலை அதிகமாய்ப் பெற்றிருப்பவர்கள், அதிகமாய் அன்புகூரப்பட வேண்டும்.

இன்னுமாக, "உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்" என்று பரிசுத்த பவுலடிகளார் புத்திமதி கூறுகின்றார். ஏன்? உலகத்தை விட்டு வந்தவர்களாகவும், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டவர்களாகவும் மற்றும் சமாதானத்தின் பிரபுவினுடைய பின்னடியார்களென ஒன்றுகூடியுள்ளவர்களாகவும் காணப்படுபவர்கள் மத்தியில் சமாதானம், இணக்கம் காணப்பட வேண்டும் என்று புத்திமதி கூறப்படுவதற்குரிய அவசியமென்ன? இவர்களது சமாதானத்தை எது குலைத்துப்போடும்? நிச்சயமாகவே இவர்களில் ஒவ்வொருவரும் உலகத்தினுடைய

சண்டைச் சச்சரவுகளைக்குறித்து அனுபவம் வாயிலாக அறிந்திருப்பார்கள். செம்மறியாடுகளென இவர்களில் ஒவ்வொருவரும் கொஞ்சம் ஓநாய்களினால் தொல்லைக்கொடுக்கப்பட்டிருப்பர் அல்லது பயமுறுத்தவாகிலும்பட்டிருப்பர். ஆனால் தொல்லைக்குட்படுத்தப்பட்டதான இந்தச் செம்மறியாடுகளானது, ஒன்றுகூடி வந்திருக்கையில், இவர்கள் மாபெரும் மேய்ப்பனுடைய குமாரனின் மற்றும் அவரால் நியமிக்கப்பட்டுள்ள அவர்களுக்கான உடன்மேய்ப்பர்களின்கீழ் ஆறுதலையும், சமாதானத்தையும், இளைப்பாறுதலையும், சந்தோஷத்தையும் கொண்டிருக்க வேண்டுமல்லவா? இதுவே அடைய வேண்டிய சமாதானம், அன்பு, இணக்கமாகும். எதை விலைக்கொடுத்தேனும் வரும் சமாதானமல்ல, எதை விலைக்கொடுத்தேனும் வரும் இணக்கமல்ல, மாறாக கிறிஸ்துவின் சரீரத்தில் திவ்விய நிலைப்பாடானது/தரநிலைகளானது நன்கு ஆதரிக்கப்பட்டிருக்கும் காரணத்தினால் மற்றும் மூப்பர்கள், உதவிக்காரர்கள் முதலானவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விஷயத்தில் ஆண்டவருடைய சத்தத்திற்குச் செவிக்கொடுத்துக் கொண்டிருக்கும் காரணத்தினால் மற்றும் கர்த்தரையும், அவரது சித்தத்தையும், அவரால் சபையாரை விசாரிக்கும்படிக்கு அவரால் ஏற்படுத்தப்பட்டவர்களை மதிக்கிறதற்கு அனைவரும் நாடிக்கொண்டிருக்கும் காரணத்தினால் மற்றும் அனைவராலும் மேய்ப்பனுடைய சத்தத்திற்குச் செவிக்கொடுக்கப்பட்டு வார்த்தையிலும், கிரியையிலும் சுயநல நாட்டத்தின் ஆவிக்கு எதிராய்ப் போராடப்படும் காரணத்தினால் உண்டாகும் சமாதானம் மற்றும் இணக்கமேயாகும்.

## ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள்

“மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்” (1 தெசலோனிக்கேயர் 5:14). இந்த வார்த்தைகளை அப்போஸ்தலன் முழுச்சபையாருக்கும் கூறுகின்றார் என்றும், இந்தப் புத்திமதியினுடைய சில அம்சங்கள் சபையினுடைய தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய - மூப்பர்களுக்கு விசேஷமாய் உரியது என்றும் நாம் எண்ணிட வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்த ஓர் அங்கத்தினனும், எந்த ஒரு சகோதரனுக்கும் முறையாய்ப் புத்திமதிக் கூறிடலாம் என்பதும், திடனற்றவர்களைத் தேற்றலாம் என்பதும், பலவீனரைத் தாங்கிடலாம் என்பதும், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய் இருப்பது என்பதும் சரியானதாக இருப்பினும், இந்தக் கடமைகளில் சில, தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பர்களுக்கு விசேஷமாய் உரியதாகும்; இவர்கள் அறிவிலும், குணலட்சணத்திலும் மிகவும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றதான

“மூத்த” சகோதரர்கள் என்ற உண்மையின் கண்ணோட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இளைய சகோதரர்கள், அதாவது சபையால் “மூப்பர்” என்று விசேஷமாக நியமிக்கப்படாதவர்கள் அக்கறையும், கவனமும் கொண்டிருக்க வேண்டும்; ஆனாலும் ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லிடும் விஷயத்தில், சபையார் மூப்பராகிய சகோதரர்களெனச் சிலரை விசேஷமாய் நியமித்துள்ளனர் என்றும், இவர்களுக்கு இத்தகையவைகளைச் செய்வதற்கான கடமை விசேஷமாய்க் காணப்படுகின்றது என்றும் இளைய சகோதரர்கள் உணர்ந்து மிகுந்த ஜாக்கிரதைக் கொண்டிருக்க வேண்டும். ஒழுங்கில்லாதவர்கள் சரிப்படுத்தப்பட வேண்டியதாய் இருப்பினும், அது மிகவும் ஞானமாய்ச் செய்யப்பட வேண்டும், இல்லையேல் நன்மையுண்டாவதற்குப் பதிலாக மிகுந்த பாதகமே உண்டாகிவிடும். இப்பாடத்தினைக் கற்றுக்கொள்வதும் மற்றும் ஒரு காரியத்தினைக் கவனித்துக் கொள்ளத்தக்கதாக, திவ்விய ஏற்பாட்டின் கீழ் இன்னொருவர் நியமிக்கப் பட்டிருக்க, தாங்கள் அக்காரியத்தைக் கவனிக்க முற்பட்டு, ஒழுங்கில்லாதவர் களாகிப்போய்விடாமல் காணப்படத்தக்கதாக, தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதைக் கற்றுக்கொள்வதும், கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அநேகருக்கு அவசியமானதாய் இருக்கின்றது.

நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, “மூப்பர்” என்ற வார்த்தையானது, வயதைக் குறிப்பதாய் இராமல், மாறாக ஆவிக்குரிய வளர்ச்சியினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு இளைஞனாகக் காணப்பட்ட தீமோத்தேயு, சபையில் மூப்பராகக் காணப்பட்டார். ஆகையால் தெசலோனிக்கேயாவிலுள்ள இந்தப் புதியதாய் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சபையிலும், அவர்களில் யாருமே நீண்டகாலமாய்ச் சத்தியத்தில் காணப்பட்டவர்களாய் இல்லாமல் இருந்தபோதிலும், “கிறிஸ்துவின் மந்தையைப் போஷிக்கும் மேற்பார்வையாளர்களாக” மற்றவர்களுக்கு ஊழியம்புரியத்தக்கதாக, சிலர் தகுதியுள்ளவர்களாகக் காணப்பட்டனர்.

அப்போஸ்தலன் வாயிலான கர்த்தருடைய அறிவுரையிலுள்ள ஞானத்தினைக் கவனியுங்கள். இது சமாதானம் காணப்படுவதற்கேயாகும்; ஆனாலும் விலைக்கொடுத்து சமாதானத்தை அடைவதற்காக அல்ல. ஒழுங்கில்லாதவர்களுக்கு, குழப்பம் ஏற்படுத்துகிறவர்களுக்குப் புத்திமதி வழங்கப்பட வேண்டும். திடனற்றவர்கள் தேற்றப்பட வேண்டும். பலவீனமானவர்கள் தாங்கப்பட வேண்டும். சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனும், மற்ற அங்கத்தினனிடம் சாந்தமாயும், பொறுமையாயும், நீடியபொறுமையாயும் காணப்படுவதற்கு முயற்சித்திட வேண்டும். இக்காட்சி எத்துணை அருமையானதாய்க் காணப்படுகின்றது! அப்போஸ்தல கண்ணோட்டத்திலிருந்தும், திவ்விய கண்ணோட்டத்திலிருந்தும், நம்முடைய கண்ணோட்டத்திலிருந்தும்

பார்க்கப்படுகையில் சபை அடைய வேண்டிய நிலை எத்துணைப் பிரம்மாண்டமானதாய்க் காணப்படுகின்றது.

இவைகளுக்கு நேராக நாம் ஒவ்வொருவரும் அதிகமதிகமாய்ப் பிரயாசம் எடுப்போமாக. நம்மைக் கர்த்தர் தனிப்பட்ட விதத்திலும் கையாளுகின்றார் மற்றும் நம்மை ஒட்டுமொத்தத்திலும் கையாளுகின்றார் என்பதை நினைவில் கொள்வோமாக. நம் ஒவ்வொருவரிடத்திலும் தனிப்பட்ட விதத்தில் கிறிஸ்துவுக்கு ஒத்த சாயலில் வளர்ச்சியும், வனைதலும், மெருகூட்டுதலும் காணப்பட வேண்டும் என்றபோதிலும், இதே கருத்தானது ஒட்டுமொத்த சபை தொடர்பாகவும் காணப்பட வேண்டும். எந்த மனுஷனும் தனக்காக ஜீவிக்கிறதில்லை, தனக்காக மரிக்கிறதில்லை மற்றும் கிறிஸ்துவினுடைய சபையிலுள்ள எந்த ஓர் அங்கத்தினனுக்கும், கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள சக அங்கத்தினனைப் புறக்கணிக்க உரிமையில்லை. இதுவே இப்பாடத்திலுள்ள அப்போஸ்தலனுடைய நிலைப்பாடாய் இருக்கின்றது.

## ஒருவனும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்

ஆம் ஒவ்வொருவனும், தான் மற்றவர்களுக்குத் தீமைக்குத் தீமை செய்யாதபடி முதலாவதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்; மேலும் இரண்டாவதாகச் சபையானது, ஐக்கியத்தில் காணப்படும் அதன் அங்கத்தினர்களில் யாரேனும் இப்படிச் செய்யாதபடிக்குப் புத்திமதிக் கூறிப்பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி, இது விசேஷமாய் "மூப்பர்களுடைய" கடமையாய் இருக்கின்றது - அதாவது மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகள் யாவற்றையும் மற்றும் சபைக்கும், மற்றவர்களுக்கும் இடையிலான உறவையும் பார்த்துக்கொள்வது, இவர்களது கடமையாய் இருக்கின்றது. சபை கர்த்தருடைய குடும்பமாக இருக்கின்றது மற்றும் நீதிக்கும், அன்பிற்கும் எதிராய் எந்தவொரு காரியத்தினையும் செய்திடும் இக்குடும்பத்திலுள்ள அங்கத்தினன் ஒருவன், அங்கத்தினர்கள் யாவருக்கும் மற்றும் விசேஷமாக வீட்டின் தலையாகிய நமது அருமை மீட்பருக்கும் நிந்தையை அல்லது கனவீனத்தைக்கொண்டு வருகின்றவனாய் இருப்பான்.

## தீர்க்கத்தரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள்

நாம் தீர்க்கத்தரிசனங்களை அற்பமாய் எண்ணிடக்கூடாது; மாறாக அவைகளை மதிக்க வேண்டும் மற்றும் அவைகளுக்குச் செவிக்கொடுத்திட வேண்டும். ஆனால் இதைக்குறித்து அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை.

“தீர்க்கத்தரிசனம் உரைத்தல்” எனும் வார்த்தையானது, போதித்தலை, பொதுவில் போதித்தலைக் குறிக்கும் விதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். கிறிஸ்துவின் சபையில் தேவனுடைய பிள்ளையென யார் ஒருவரும் போதிக்கும் எதையும் அற்பமாய் எண்ணாதிருங்கள். மீட்பரிலும், அவரது பலியிலுமுள்ள விசுவாசத்தினைக் குறித்து இவர் அறிக்கைப்பண்ணுகிற காரியத்திலிருந்தும் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியத்தின் வாயிலாக கர்த்தரை இவர் அறிக்கைப்பண்ணுகிற காரியத்திலிருந்தும், போதிப்பவர் உண்மையான கிறிஸ்தவனாக இருக்கின்றார் என்பதை உங்களால் கிரகிக்க முடிந்தவரையிலும், இப்படியானவருக்குச் செவிக்கொடுக்க விருப்பமாய் இருங்கள். கருத்து வேறுபாடுகளைப் பற்றி அவரோடு வாதாடாதீர்கள்; மாறாக ஒருவேளை அஸ்திபாரத்திற்கு இசைவான எதையேனும் இவர் பெற்றிருப்பாரானால், மேலும் அது மற்றவர்களுக்கும், சபைக்கும் உதவிகரமாய் இருக்கும் என்று இவர் நம்புவாரானால், திவ்விய திட்டத்தின் சத்தியம் குறித்த தனது கண்ணோட்டத்தினை இவர் சொல்லிடும்படிக்கு அனுமதித்திடுங்கள். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமெனில் சகோதரர்களுக்குச் செவிக்கொடுக்காதவர்களாய் இருந்துவிடாதீர்கள். எனினும் எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பற்றிக்கொள்ளுங்கள் - அதாவது பரீட்சையில் நிலை நிற்பவைகளைப் பற்றிக்கொள்ளுங்கள். ஒரு சகோதரன் உண்மையுள்ளவர், நேர்மையுள்ளவர் என்பதினால், வேதவாக்கியங்களுக்கான அவரது விளக்கங்கள் சரியானது என்பதாகாது. இத்தகையவர் சபையில் எந்தவொரு வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ளாதபடிக்குத் தேவனால் தடைப்பண்ணிட முடியும். எனினும் இவர்களைத் தேவன் அனுமதித்துக்கொண்டிருப்பது என்பது சரியான இருதய நிலைமையில் காணப்படும் யாவருக்கும் ஓர் ஆசீர்வாதத்தை உருவாக்குவதாய் இருக்கும். உங்களால் இவரது கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றாலும், அப்பாடத்தினை ஆராய்வதும், அக்கூற்றினைச் சோதித்தறியத்தக்கதாக வேதவாக்கியங்களை ஆராய்வதும், உங்களுக்கு நிலையான பலனைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும் மற்றும் முன்பில்லாதளவுக்குச் சத்தியத்தில் - உங்களை உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கும். ஆனாலும் நலமானதைப் பற்றிக்கொள்வதில் நாம் கவனமாய் இருப்போமாக. இந்த ஆலோசனையானது கவனமாய்க் கைக்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களை நாம் அறிவோம். சில தீமையானது, நலமானவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் விளைவு சொல்ல முடியாதளவுக்குரிய தீமையை உண்டாக்குகின்றது.

# சுவாரசியமான கடிதங்கள்

## *தெளிந்த புத்தியின் ஆவி*

மிகவும் அன்புக்குரிய பாஸ்டர் அவர்களே:-

நான் எந்தப் பெயரையோ அல்லது முகவரியையோ குறிப்பிடுகிறதில்லை; ஏனெனில் இப்படிக் குறிப்பிடுவது ஞானமாய் இருக்கமென எனக்குத் தோன்றவில்லை மற்றும் ஒருவேளை தகுதியாய் இராது என்று நீங்கள் கருதுவீர்களானால், இந்தக் கடிதத்தை நீங்கள் குறிப்பிட வேண்டாம். இல்லையேல் டவர் வெளியீட்டில் உங்களால் வெளியிடக்கூடுமானால், நீங்கள் வெளியிடுவதற்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

__________ என்ற இடத்திலிருந்து வந்த சகோதரி ஒருவர், அச்சபையில் 1925-ஆம் வருடம் வரைச் சபையானது மகிமைப்படும் என்று எதிர்ப்பார்க்கப்பட முடியாது என்றும்; இது உங்களுடைய கருத்தாகவும் இருக்கின்றது என்றும் போதிப்பதாக எங்களிடம் தெரிவித்தார்கள்; இதன் விளைவு உணர்வற்ற ஆவியினை உண்டுபண்ணுகின்றது மற்றும் அநேகர் தொழில் காரியங்களிலும், லௌகீக காரியங்களிலும் பெரிதும் நாட்டம் கொள்கின்றனர். அப்படி இருந்தாலும் சரி அல்லது இல்லாவிட்டாலும் சரி, அது என்னைப் பொறுத்தவரையில் நான் ஆயத்தமாய்க் காணப்படத்தக்கதாக நான் விழிப்பாய் இருப்பதற்கும், அரைகளில் கச்சைக் கட்டிக்கொண்டும், விளக்கை எரியப்பெற்றும், "விழித்திருந்து, காத்திருப்பதற்கும்" ஏவுகின்றதாய் இருக்கின்றது.

ஐந்து வருடங்கள் காலமாக "தற்கால சத்தியத்தினுடைய" மகிமையான செய்தியினை நான் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு காணப்படுகின்றேன் மற்றும் அது எப்போதும் மிகவும் விலையேறப்பெற்றதாகிக்கொண்டு வருகின்றது. நான் இங்கிலாந்து சபையில் வளர்க்கப்பட்டேன் மற்றும் ஆக்ஸ்போர்ட்டில் வாழ்ந்தேன்; அது மிகவும் பெரிய சபையாய் இருந்தபடியால், நீங்களே அறிவீர்கள் நான் எவ்வளவுக்கு முன்பு கற்றுள்ளவைகளை ஒழிக்க வேண்டியிருந்திருக்கும்.

அருமையான சகோதரனே, உங்களை "அந்த ஊழியக்காரனாக" தேவன் எழுப்பியுள்ளதற்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்கின்றேன். நீங்கள் எங்களுக்கு "ஏற்றகால சத்தியத்தினைக்" கொடுக்கத்தக்கதாக, தேவன் உங்களை இன்னும் அதிகமதிகமாய் ஆசீர்வதிப்பாராக. இந்தப் பயங்கரமான போர் நடைப்பெறுவதற்கு முன்னதாக, அருமை கர்த்தர் என்னை இந்த நாட்டிற்குக் கொண்டுவந்ததற்காகவும் மற்றும் என்னுடைய ஜனங்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டு, நான் நம்பிக்கைக் குலைந்திருக்க, "மரித்தவர்கள் எங்கே இருக்கின்றனர்" என்று என்னைப் புரிந்துகொள்ள செய்ததற்காகவும், நான் அவருக்கு நன்றி ஏறெடுக்கின்றேன்.

நான் குறிப்பிடுவதற்கு விரும்புகின்ற இன்னொரு சிறு காரியம் இருக்கின்றது. நான் கலந்து கொள்ளும் சபையின் மூப்பர் ஒருபோதும் ஆயத்தமாய்க் காணப்படுகிறதில்லை. கூட்டங்களில் அந்நாளுக்கான மன்னா வசனம் எங்கிருக்கிறது என்பது அவருக்குத் தெரியாது மற்றும் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டமாக இருப்பினும், அவர் தற்போதைய நாட்டு நடப்புகள் மற்றும் போர் ஆபத்துக்கள் குறித்த தனது கண்ணோட்டங்களைக் கொடுப்பதிலேயே அதிக நேரம் எடுத்துக்கொள்வார். வேறு யாருக்கும் நேரம் கிடைக்கிறதில்லை.

நான் குறைக்கூறுகின்றேன் என்று நீங்கள் எண்ண மாட்டீர்கள் என்று நம்புகின்றேன்; நான் பெரிதும் மதிப்பதற்குப் பழகியுள்ளதான இந்தச் சிறிய பழைய சபையில் மூப்பர் கொட்டாவி விட்டுக் கொண்டும், உறங்கிக்கொண்டும் அல்லது தனது நகங்களையும், பற்களையும் குத்திக்கொண்டும் இருப்பது - மிகவும் ஒவ்வாதவைகளாகக் காணப்படுகின்றன! இவர் தனது மூன்று வயது குழந்தையையும் தன்னோடு அழைத்துவந்து, சபையாருக்கு மிகுந்த தொந்தரவு ஏற்படுத்துகின்றவராய் இருக்கின்றார். இவர் 15 வருடங்களாகச் சத்தியத்தில் காணப்படுவதாகக் கூறுவதால், இவரிடத்தில் எதையும் கூறிட யாரும் விரும்புகிறதில்லை. இவர் விசேஷமாய் ஒரு தொழிலதிபராக இருப்பதினால், ஆவிக்குரிய விஷயத்தில் இவரால் நாங்கள் உதவப்படுவதாக எங்களுக்குத் தோன்றுகிறதில்லை. கூட்டம் துவங்குவதற்கு முன்னதாக, இவர் தொழில்குறித்துப் பேசுகின்றார் மற்றும் முடிந்த மாத்திரத்தில் கடையைக்குறித்துப் பேசுகின்றார்.

ஓ! அருமையான சகோதரனே, நான் தீமையாய்ச் சிந்திப்பதற்கோ அல்லது தீமையாய்ப் பேசிடுவதற்கோ விரும்புகிறதில்லை! இது விஷயமாக எங்களில் அநேகர் ஜெபம் ஏறெடுத்துள்ளனர். குழந்தைகளினாலும் எங்களுக்குத் தொந்தரவு ஏற்படுகின்றது; ஆனாலும் நான் கடுமையான ஆங்கில வர்க்கக்கருத்துக்களை உடையவளாய் இருக்கின்றேனென என்னிடம் சொல்லப்படுகிறதினால், இக்காரியம் குறித்துப்பேசிட நான் துணிகிறதில்லை. அவரது உணர்வுகளைக் காயப்படுத்த நான் விரும்பவில்லை; ஆகையால் நான் தவறு செய்கிறேனாகில், நான் எழுதியுள்ளவைகளைப் புறக்கணித்து விடுங்கள். நான் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிடுவதற்கும் மற்றும் எனது பெருமையினைக் கீழ்ப்படுத்தி வைப்பதற்கும் மற்றும் அருமை ஆண்டவர் செய்தது போன்று என்னையே வெறுமையாக்கிடுவதற்கும் முயற்சித்துக்கொண்டிருக்கின்றேன் என்று அருமை கர்த்தர் அறிவார். உங்கள் விலையேறப்பெற்ற நேரத்தை எடுத்துக்கொண்டதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன் அருமை பாஸ்டர் அவர்களே,

அவரது கிருபையில் உங்கள் சகோதரி.

## இதழாசிரியரின் பதில்:

தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தெளிந்த புத்தியுள்ள ஆவியினை - அவரது ஆவியினை, அவரது மனதைக் கொடுப்பதாக அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். ஆனால் இதை நமது நேர்மைக்கும், கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் செவிசாய்ப்பதற்கும் ஏற்ப நாம் பெற்றுக்கொள்வோம். எவ்வளவு அதிக காலமாய் நாம் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் காணப்படுகின்றோமோ, நாம் சரியான மாணவர்களாய்க் காணப்படுவோமானால், நாம் அவரை நன்கு அறிந்திருப்போம் மற்றும் அவரது குணலட்சணத்தையும், போதனைகளையும் மாதிரிப்படுத்த நன்கு முடிகிறவர்களாகவும் காணப்படுவோம்.

கடிதத்தை எழுதினவரின் பெயர் தெரியாதபடியாலும், யார் அந்த மூப்பர் என்பது குறித்துக் கொஞ்சமும் எங்களால் அறியமுடியவில்லை. அவர் நல்நோக்கமுடையவராகவே காணப்படுவார் என்று நாம் பாவித்துக்கொள்ளலாம். எனினும் கர்த்தருக்கு ஊழியம்புரியும் விஷயத்தில், தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியினை மாதிரித்துவப்படுத்துவதற்குப் போதுமாய் விழித்துக்கொள்ளவில்லை என்றும் நாம் பாவித்துக்கொள்ளலாம். இல்லையேல் அவர், தான் தேவனை மகிமைப்படுத்தத்தக்கதாகவும், அவரது ஜனங்களுக்கு மிகவும் உதவிகரமாகக் காணப்படத்தக்கதாகவும் இருப்பதற்கென்று தனது கிரியைகளிலும், வார்த்தைகளிலும் மிகவும் ஜாக்கிரதையாய் இருந்திருப்பாரல்லவா?

பயபக்தி குறைப்பாடானது எங்கும் வெளிப்படுகின்றது, ஆனால் அது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் கூடுகைகளில் விசேஷமாகப் பொருத்தமற்ற ஒன்றாய்க் காணப்படுகின்றது. நாம் ஏற்கெனவே சொன்னதுபோன்று, நாம் மறுபடியுமாகச் சொல்வதென்னவெனில், நம்முடைய தாலந்துகள் எவ்வளவு குறைவாக இருப்பினும், நம்முடைய கிரியைகள் வாயிலாகவும் மற்றும் செயல்வகை பாணியின் வாயிலாகவும், இருளினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்துவந்தவருடைய புண்ணியங்களை அதிகமதிகமாக நாம் பேசிடலாம்.

வாட்ச் டவர் வெளியீடு என்ன கூறுகின்றது என்று தாங்கள் நம்புவதாகத் தெரிவித்தும், அதன் போதனைகள் குறித்துத் தவறாய் விவரம் கூறிக்கொண்டும் அருமையான நண்பர்களில் அநேகர் காணப்படுகின்றனர். இவர்கள் அதன் போதனைகளுக்கு அதிகம் செவிக் கொடுத்திடவில்லை என்பதே நமது அன்பான கருத்தாய் இருக்கின்றது. இல்லையேல் அதன் பத்திகளினின்று 1925-ஆம் வருடத்தையோ, வேறு ஏதேனும் வருடத்தையோ நாங்கள் எதிர் நோக்கிக் கொண்டிருக்கவில்லை என்பதை இவர்கள் அறிந்து கொண்டிருப்பார்கள். வாட்ச் டவரில் நாங்கள் விளக்கமாகத் தெரிவித்துள்ளது போன்று, நாங்கள் தொடர்ந்து கடந்து போய்க் கொண்டிருக்கின்றோம்; எங்களால் கடைசியாக தெரிவிக்கப்பட்ட வருடமானது, கடந்து போய் ஒருவருடத்திற்கும் மேலாகிவிட்டது.

# ஏதோ புதுமையென்று திகையாமல்

*"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்."*

*(1 பேதுரு 4:12, 13)*

இப்போது இருப்பதுபோல, அறுவடை வேலையின் மீதான மாபெரும் எதிராளியானவனின் தாக்குதலானது இவ்வளவுக்கு ஆற்றல்மிக்கதாக வேறு எப்போதும் இருந்ததாக நாங்கள் அறியவில்லை. ஒவ்வொரு திசையிலுமிருந்து - பற்றியெரிகிற அக்கினிகளும், மறைவான ஆபத்துக்களும், துன்புறுத்தல்களும் தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தினைப் பின்பற்றினவர்களுக்கும் மற்றும் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருக்கத்தக்கதாக தீர்மானத்தோடு காணப்படுகிறவர்களுமானவர்களுக்கு எதிராக செயல்படுத்தப் படுகின்றன அல்லது ஆயத்தப்படுத்தப்படுகின்றன என்று தகவல் எங்களுக்கு வருகின்றது. எங்களுக்கு வரும் கடிதங்கள் அனைத்தையும் நாங்கள் வெளியிடுவது நலமானதாய் இருக்காது; ஏனெனில் அநேகமானவைகள் ஊக்கமிழக்கச் செய்கிறதாக இருப்பினும், அநேகமானவைகள் ஊக்கமூட்டவும் செய்கின்றதாக இருக்கின்றது; இப்படி ஈடுசெய்கிறதற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றோம். எனினும் சிலவற்றை அனைவரும் பொதுவான விதத்தில் இரண்டு காரணங்களுக்காக அறிந்திருக்க வேண்டுமென நாம் விரும்புகின்றோம்; அவை: (1) இது அவர்களுக்கு இம்மாதிரியான தருணங்கள் வருகையில், அதை எதிர்க்கொள்ளத்தக்கதாக, அவர்களை வலிமைப்படுத்திடும் மற்றும் (2) இது அவர்களில் அனுதாப அன்பினை வளர்த்திடும்; ஏனெனில் சரீரத்தில் ஓர் அவயவம் பாடுபட்டால், அதோடுகூடப் பாடுபடுகிறதன் வாயிலாக அவயவங்கள் அனைத்திற்கும் பிரயோஜனம் உண்டாகிறது.

இங்கு ஒரு விவகாரத்தை நாம் குறிப்பிடுகின்றோம், காரணம் அதன் காரியங்களானது, சிலருக்குப் படிப்பினையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். சகோதரர் Bahret-இன் கடிதமானது பிரச்சனையைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது --

## நியூயார்க்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:--

எங்களது அனுபவங்களைக்குறித்து நான் உங்களிடம் சொல்லிட வேண்டும். கடந்த ஜூன் மாதம் சகோதரர் W. de Ronden Pos அவர்கள் நியூயார்க்

பட்டணத்திலிருந்து இங்கு வந்து, மாலையில் கூட்டம் ஒன்றினை நடத்தி, அதில் உரோமர் 8-ஆம் அதிகாரத்தின் அடிப்படையில் உரையாற்றினார் மற்றும் அது மிகவும் நல்ல மற்றும் ஆசீர்வாதமான கூட்டமாகவே இருந்தது என்று நான் சொல்லிடுவேன். அப்போது அவர் தனது பெயர்ச்சபையை தான் விட்டுவிலகிடவும், வேறு ஏதேனும் தொழிலில் ஈடுபடவும் நோக்கம்கொண்டிருப்பவராகவும் மற்றும் ஒருவேளை சாத்தியமாகும் பட்சத்தில், அவர் இங்குக் குடிப்பெயர்வார் என்பதாகவும் கூறினார். அவரை எங்கள் மத்தியில் பெற்றிருக்க நாங்கள் மகிழ்ச்சியாய் இருப்போம் என்ற எங்கள் விருப்பத்தினை நாங்களும் தெரியப்படுத்தினோம்; ஆனால் இதற்கப்பால் எதுவும் செய்யப்படவில்லை. பின்னர் மீண்டுமாக அவர் எங்கள் பட்டணத்தில் ஒருவாரக்காலம் வருகைதந்து, ஒரு சில கூட்டங்களை நடத்தினார்; ஆனால் சகோதரனே, நான் ஜெர்மனியில் அப்போது காணப்பட்டப் படியால், நான் இங்குக் காணப்படவில்லை மற்றும் நாங்கள் திரும்பிவருவது வரையிலும், என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டதென்று அறியாமல் இருந்தோம். அவர் இங்கு வருவதற்கும், தனக்குக் கிடைக்கும் எந்த ஒரு தொழிலிலும் ஈடுபடலாம் என்று, உதாரணத்திற்கு agency-இல் வேலை பார்க்கலாம் என்று அல்லது பிழைப்பிற்காகக் காய்கறிகள் மற்றும் கோழிகளை வளர்க்கத்தக்கதாகப் பட்டணத்தினுடைய புறநகர் பகுதிகளில் இடம் ஒன்றைக்கொள்ளலாம் என்று முடிவெடுத்துள்ளார் என்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் கொஞ்சம் வசதியுள்ளவர் என்றும், இதனால் முழுமையாக அவர் தனது தொழிலைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை என்றும் நான் அறிந்துகொண்டேன். அவர் அதிகம் முன்னின்று நடத்துவார் என்றும், மற்றபடி எங்களது கூட்டங்களானது முன்பு போலவே தொடரும் என்று எண்ணினோம்; எங்களால் முடிந்தமட்டும் பூலோகத்திற்கடுத்தவைகளில் அவருக்கு உதவிட விரும்பினோம் மற்றும் நான் ஐரோப்பியாவிலிருந்து திரும்பின கொஞ்சக்காலத்திற்குள்ளாகவே, அவரும் இங்கு வந்து சேர்ந்தார். அவருக்கு மாதத்திற்கு 15 டாலர் நாம் கொடுக்கலாம் என்று நான் கூறினேன் மற்றும் எங்களது பொருளாளரிடம், பற்றாக்குறையினை நான் சந்திப்பேன் என்று தெரிவித்தேன்.

அவர் வந்த பிற்பாடு நல்ல சில கூட்டங்களைப் பெற்றிருந்தோம். புதன் இரவு கூட்டங்கள் ஒன்றில், நாம் (ஊழியர் தேர்ந்தெடுத்தல் நடத்த) ஒழுங்குமுறைக்குள் வரவேண்டும் என்று முன் வைத்தார். நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு முன்னதாக நாம் அனைத்தையும் நன்கு கருதிப் பார்க்கலாம் எனும் யோசனையை நான் முன்வைத்தேன்; ஆனால் அவர் ஒழுங்குமுறைக்குட்படுத்துதலுக்கு ஆதரவளிப்பவர்கள் அனைவரும் எழுந்துநிற்பதன் மூலம் அதைத் தெரிவித்திட வேண்டும் என்று சொல்லி வாக்கெடுக்க கடந்துபோனார் மற்றும் அனைவருமே எழும்பி நின்றார்கள்; நானும் தயக்கத்தோடே எழும்பி நின்றேன்; மறுப்புத் தெரிவிப்பதற்கு எந்தத் திட்டவட்டமான காரியங்களை நான் பெற்றிராத போதிலும்,

எனக்கு வாக்களிக்க விருப்பமில்லாமல்தான் இருந்தது. எனினும் ஒழுங்குமுறை ஏற்படுத்துவதற்குரிய நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக இன்னொரு கூட்டம் நடத்திட வேண்டும் என்று நான் கூறினேன்.

நாங்கள் சகோதரர்கள், கூட்டம் ஒன்றினை நடத்தினோம் மற்றும் அவரும் காணப்பட்டார்; ஆனால் முழு நேரமும் ஞானஸ்நானம் குறித்துப் பேசினதிலேயே செலவழிந்துபோனது; ஞானஸ்நானத்தினைக் கட்டாயமாக்கிட வேண்டும் என்று அவர் எண்ணம்கொண்டிருந்தார்; ஆனால் தேவனுடைய பிள்ளையாகவும், இயேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவராகவும் காணப்படும் யாரேனும், தண்ணீர் ஞானஸ்நானத்தைக்குறித்து நாம் காணுகின்றது போன்று காணமுடியாததன் காரணமாக, அவர்களை வற்புறுத்தவோ அல்லது தள்ளிவைக்கவோ கூடாது என்று நாங்கள் வலியுறுத்தினோம். இவ்விஷயத்தில் அவர் எங்களுடன் இணங்கினார் என்று நாங்கள் எண்ணினோம் மற்றும் டிசம்பர் 15-ஆம் தேதியன்று மாலையில் நாங்கள் கூட்டம் ஒன்றினைப் பெற்றிருந்தோம் மற்றும் அவர் சில வார்த்தைகளைப் பேசின பிற்பாடு, அவரால் வடிவமைக்கப்பட்ட "அறிக்கை" ஒன்றினை வாசித்து, அதில் நாங்கள் கையெழுத்திட்டோம்; நான்தான் முதலாவதாகக் கையெழுத்திட்டேன்; ஏனெனில் அதற்குக் கையெழுத்திட என்னால் எப்போதும் கூடும். நாங்கள் கையெழுத்திட்டதான "அறிக்கையானது" மிகவும் எளிமையானதாகவும், பரமபிதாவையும், நமது இரட்சகரும், ஆண்டவருமான அவரது குமாரனான இயேசுவையும் அங்கீகரித்ததாகவும் இருந்தது. அந்த இரவில் 22 பேர் அதில் கையெழுத்திட்டார்கள் என்று எண்ணுகின்றேன்; இதில் சிலரை நாங்கள் பார்த்ததேயில்லை; அவர்கள் எங்களை விட்டுப் பிரிந்துபோய், எங்களுக்கு உலகத்தார் போன்று காணப்படுபவர்களாய் இருந்தவர்கள் ஆவர். அவர் நீண்ட நேரம் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பேசி, ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் எவரையும் அவர் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுக்க அனுமதிப்பதில்லை என்றும், அது தனது சொந்த தாயாராகவும் காணப்பட்டாலுங்கூட, இப்படி அனுமதியாதது, அவள் இருதயத்தினை நொறுக்கிப்போடும் என்றாலும் தான் அனுமதிப்பதில்லை என்றும் கூறினார். எங்களில் சிலர் தங்கள் பெயர்களைப் பட்டியலிலிருந்து அழிக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டனர்; சிலர் மறுப்புத் தெரிவித்தனர் மற்றும் பிரச்சனைத் துவங்கினது.

அதே கூட்டத்தில்தான் அவர் - தானும் மற்ற அங்கத்தினர்கள் போன்று தான் என்றும், எப்போதேனும் தான் "ஏதோவாக" ஆக வேண்டுமென எண்ணங்கள் தனக்குள் உதித்திருந்தாலும், தான் அதை முற்றிலுமாய்க் கைவிட்டுவிட்டார் என்றும், எந்தச் சகோதரனும் தனக்கு இணையாகவே காணப்படுகின்றார் என்றும்; இதனால் அங்கத்தினர்கள் பட்டியலில் தனது பெயரை முதலாவதாக, தான் எழுதிடாமல், கடைசியில்தான் கையெழுத்திடுவார் என்றும் கூறியிருந்தார். ஆகையால் அதேகூட்டத்தில், ஞானஸ்நானம் எடுக்காதவர்களைக்குறித்து

மற்றவர்கள் வேறே கருத்தில் காணப்படுகின்றனர் என்று அவர் அறிந்திருந்தபோதிலும், அவர் ஞானஸ்நானம் எடுக்காதவர்களை, கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்க அனுமதிப்பதில்லை என்று கூறினதானது சிலருக்கு விநோதமாய் இருந்தது.

அடுத்து நடந்தது என்ன என்று விவரமளிப்பதற்கு முன்னதாக, வேறொரு விவரத்தையும் நான் கொடுக்க வேண்டியுள்ளது; இதற்கு முந்தின ஞாயிற்றுக் கிழமையன்று, அவர் "கர்த்தருடைய இராப்போஜனமானது" வாரந்தோறும் ஆசரிக்கப்பட வேண்டும் என்ற தனது கருத்தைக் கூட்டத்தில் முன்வைத்தார். இது விஷயத்தில் சிலர் அவருக்கு இணங்கினார்கள் மற்றும் மற்றவர்கள் இணங்கிடவில்லை.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நாங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தோம் மற்றும் சகோதரர் Pos அவர்கள் உரோமர் 14-ஆம் அதிகாரத்தை வாசித்து, ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் விஷயத்தில் என்ன செய்திட வேண்டும் என்று கர்த்தர் தனக்குக் காண்பித்துக் கொடுத்ததாகக் கூறினார் (நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்ததுபோல, கையெழுத்துப் போட்டிருந்தவர்களில் சிலர் யார் என்று எங்களுக்குத் தெரியாது, காரணம் அவர்கள் முந்தின கூட்டங்களில் சிலமுறைகள் கலந்து கொண்டவர்களாகவும், சிலர் கூட்டங்களில் ஒருபோதும் கலந்து கொள்ளாதவர்களாகவும் காணப்பட்டனர்; அவர்கள் "டிசைப்பில்ஸ்/ சீஷர்கள்/Disciples" எனும் சபை பிரிவைச் சேர்ந்தவர்களாவர்; அவர்கள் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டவர்கள், எனினும் எங்கள் அனைவருக்குமே பெயர்ச்சபையினராகவே தோற்றமளித்தனர்); இந்த விதியை நடைமுறைப்படுத்து வதற்கு, ஞானஸ்நானம் எடுத்தும், உலகத்தாராய் இருக்கும் சில ஜனங்களை உள்ளே அனுமதிப்பதாகவும், நம்மோடு இசைவான நிலையில் காணப்படும் மற்றவர்கள் தள்ளிவைக்கப்படுவார்கள் என்பதாகவும் தெரிவித்தார் மற்றும் இப்படியாக இவர்களை மறுபடியுமாக உள்ளே அனுமதித்து, மற்றவர்களை அப்போது புறக்கணித்தார்; மற்றும் பிற்பாடு அவர்களையும் மறுபடியுமாக உள்ளே அனுமதித்தார் மற்றும் இவர்களே அவரது பிரதான ஆதரவாளர்களாக இப்பொழுது காணப்படுகின்றனர். இப்படியாகக் காரியங்கள் ஜனவரி மாதம், முதலாம் வாரம்வரை நடந்துகொண்டிருந்தது; அப்போது நாங்கள் சில ஒழுங்கினைப் பெற்றிருப்பதன் அவசியத்தைக் கண்டுகொண்டோம் மற்றும் சில மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்டது; இது வேதவாக்கியங்களின் அடிப்படையில் காணப்படுகின்றது என்றும், நவம்பர் 15, '95 வாட்ச் டவர் வெளியீட்டிலும் உங்களது அறிவுரையும் இப்படியாகக் காணப்பட்டது என்றும் நாங்கள் கண்டுகொண்டோம். இதற்கிடையில் அவர் பிரசங்கம் பண்ணிடுவதற்குத் திறமைமிக்க ஒருவராய் இருக்கின்றார் என்று நான் கருதினதையும், அதை அவரால் முழுமையாகப் பிரயோஜனப்படுத்த முடியாததற்காகப் பரிதாபம் கொள்கின்றேன்

என்பதையும், அவரை நீங்கள் வாட்ச் டவர் பைபிள் டிராக்ட் சொசைட்டியினால் வேலையில் அமர்த்திடும் திட்டம் ஒன்றினை உங்களுக்கு யோசனையாகக் கூறியும் கடிதம் உங்களுக்கு எழுதியனுப்பியிருந்தேன். நீங்கள் அவருடன் தொடர்ச்சியாய்த் தொடர்பில் காணப்படுவதாக நான் எண்ணிக்கொண்டிருந்தபடியால், சமீபக்காலமாக, அவரிடமிருந்து எந்தத் தொடர்பும் உங்களுக்கில்லை என்று உங்களிடம் தகவலறிந்தபோது, அது எனக்கு விநோதமாகவே இருந்தது; எனினும் நான் உங்களுக்குக் கடிதம் எழுதியுள்ளதைக்குறித்தும், அதை நீங்கள் நன்றாய் வரவேற்றது குறித்தும், ஆயினும் அவர் வாயிலாகவே நீங்கள் கேட்க விரும்பினது குறித்தும் அவர் அறிந்திட வேண்டும் என்றும் நான் எண்ணினேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியமன்று, கூட்டத்திற்குப் பிற்பாடு, அவரிடம் பேசிட வேண்டுமென்றிருந்தேன்; மற்றும் அவர் மற்றவர்களுடன் பேசிமுடித்துவருவதற்கு நான் காத்துக்கொண்டு நின்றேன்; திடீரென அவர் மில்லேனியேல் டாணின் (volume) உபதேசங்களானது பாதாளத்திலிருந்து வந்ததென வெளிப்படையாய்த் தாக்கிப்பேசத் துவங்கினார் மற்றும் கர்த்தர் வந்துள்ளதாகச் சொல்லிடும் ஜனங்களைக் கர்த்தர் மன்னிப்பாராக என்று கூறினார். நான் உடனே: "சகோதரனே நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்பதைக்குறித்து ஜாக்கிரதையாய் இருங்கள்; ஒரு விஷயம் பிசாசிடமிருந்து வருகின்றது என அவசரப்பட்டுக் கூறிவிடாதீர்கள்" என்று கூறினேன். அதற்கு அவர்: "அது பிசாசிடமிருந்துதான் வந்துள்ளது மற்றும் அதன் உபதேசங்களினால் அநேகர் இடறிபோய் விட்டனர்" என்றார் மற்றும் அவற்றை மிகுதியாய்த் தாக்கிப் பேசினார்.

நாங்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்துவிட்டோம்; நான் அதிர்ச்சி யடைந்து போனேன்; அப்போது இவைகளைக்குறித்து உங்களுக்கு எழுதிட எனக்கு மனதில்லாமல் இருந்தது; ஏனெனில் இவைக்குறித்து அவரிடம் பேசுவதற்கும், விவரித்திடுவதற்கும், அவரது தவறை அவர் கண்டுகொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்குமென நான் எண்ணினேன். ஆனால் காரியங்கள் மிகவும் மோசமானது.

இரண்டு வாரங்களுக்கு முன்னதாக, மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கென ஒரு கூட்டமானது எங்களுக்கு நடைப்பெற்றது. அது சகோதரர்களுக்கான கூட்டமாக மாத்திரம் காணப்பட்டது; ஏனெனில் சபையினை நிர்வகித்தல் விஷயத்தில், பவுலினுடைய போதித்தல்கள்படி ஸ்திரீயானவள் அமைதியாகக் காணப்பட வேண்டும் என்று அவர் கூறினார் மற்றும் இதில் நாங்கள் அவருக்குப் பகுதியளவு இணங்கினோம். மேலும் ஸ்திரீகள் மிக எளிமையாக வஞ்சிக்கப்படுகிறவர்களானபடியால், அவர்களை வாக்களிக்க அனுமதிப்பது பாதுகாப்பாய் இராது; ஏனெனில் தகுதிகளின் அடிப்படையில் இல்லாமல், தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுப்பவர்களாய்க் காணப்படுகின்றனர் என்று அவர் கூறினார். பின்னர் மூப்பர்கள் அல்லது கண்காணிகள் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்? என்ற கேள்வி எழும்பினது. தீமோத்தேயு மற்றும்

தீத்துவுக்கு எழுதப்பட்டுள்ள நிருபங்களை வாசிக்கையில், அங்கு அவர்களுக்கான தகுதிகளானது தெளிவாய்க் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், பின்னர் ஒவ்வொருவரும் தனது பகுத்தறிவின் அடிப்படையில் தேர்ந்தெடுப்பானாக என்றும் நான் முன்வைத்தேன். அவர் இதற்கு மறுப்புத் தெரிவித்து, தன்னோடு நன்கு ஒத்துழைப்புக்கொடுத்து வேலை பார்ப்பவரென, தான் கருதுபவரைத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லது முன்மொழிந்திடுவதற்கு, மேய்ப்பனாகிய/பாஸ்டராகிய தனக்கு உரிமை காணப்படுவதாக, தான் எண்ணுவதாகத் தெரிவித்தார்; நாங்கள் அவர் தேர்ந்தெடுத்தவரை அங்கீகரித்திடலாம் அல்லது அங்கீகரிக்கவில்லையெனில் வேறொருவரை, தான் தேர்ந்தெடுப்பதாகக் கூறினார். இதுவரையும் அவர் பாஸ்டராக எங்களால் கருதப்படவில்லை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

சரி, நமக்கு இதுவரை பாஸ்டர் யாரும் இல்லையெனில் மற்றும் இதுவரையிலும் நான் தற்காலிகமான பாஸ்டராகத்தான் இருந்துள்ளேனானால், நாம் செய்ய வேண்டிய முதல் காரியம், ஒரு பாஸ்டரைத் தேர்ந்தெடுப்பதுதான்; மேலும் நான் உங்களது பாஸ்டர் இல்லையெனில், நான் இனிமேல் கூட்டத்தினைத் தலைமைத் தாங்கி நடத்திடமாட்டேன் என்று அவர் கூறினார். நாங்களோ: நாங்கள் செய்யும்படிக்கு வேதாகமம் அங்கீகரிப்பவைகளை மாத்திரமே நாங்கள் செய்ய விரும்புகின்றோம்; இந்த விதத்தில் ஒரு மேய்ப்பனைத் தேர்ந்தெடுக்க வேதாகமம் எங்களுக்கு அங்கீகாரம் அளிக்கின்றதானால், அதை நாங்கள் செய்வோம்; ஆனால் முதலாவதாக இது விஷயத்தில் நாங்கள் அறிய வேண்டிய காரியங்கள் இருக்கின்றன என்று கூறினோம்.

அதுவரையிலும் முன்புபோல் கூட்டத்தினை நடத்திடும்படியாக அவரிடம் கேட்டுக்கொண்டோம். அதைச் செய்ய ஒப்புக்கொண்டார்; ஆனாலும் மேய்ப்பனுக்கான தேர்ந்தெடுத்தலானது வேறுபட்ட ஒன்று என்றும், இதில் சகோதரர்கள் போன்றும் சகோதரிகளும் கருத்துத் தெரிவித்திடலாம், காரணம் அவர்கள் இதில் மிகவும் ஆர்வம் கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவித்தார். வேதாகமம் போதிப்பது எதையும் நாங்கள் செய்திடுவோம், ஆனாலும் இந்த இரவில் எதையும் செய்திட நாங்கள் ஆயத்தமாக இல்லை என்றும் தெரிவித்தோம். அவரோ: நீங்கள் சொல்வது எதிலும் சகோதரிகள் திருப்தியடைந்துவிடுவார்கள் என்று நான் அறிவேன்; ஆனாலும் நீங்கள் பாஸ்டர் ஒருவரைப் பெற்றிருந்தீர்கள் என்றும், இப்பொழுது பாஸ்டர் இல்லாதவர்களாக இருக்கின்றீர்கள் என்றும் அறிந்தால் ஜனங்கள் (பொதுமக்கள்) உங்களைக்குறித்து என்ன சொல்லுவார்கள் என்று சொன்னார். நாங்களோ: உலகம் என்ன சொல்லும் என்று நாங்கள் கவலைப்படப்போவதில்லை என்றோம். பின்னர் நாங்கள் அந்த இரவில் எதுவும் செய்யப் போவதில்லை என்று அவர் கண்டு, அவர் கூறினதாவது: "நான் பரிசுத்த ஆவியினால் இங்கு வந்தேன்; சபையை ஒழுங்குப்படுத்தினேன்; மந்தையைக் கூட்டிச் சேர்த்தேன் மற்றும் இனிமேல் நான்தான் மேய்ப்பனாய்க் (பாஸ்டராய்)

காணப்படுவேன் மற்றும் நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், நான் என்னையே மேய்ப்பனாக அறிவித்துக்கொள்கின்றேன்" என்றார்.

இது வேதவாக்கியங்களின்படியானது என்றால், இதை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்; அப்படி இல்லையேல் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தெரிவித்தோம். நேரமாகிக்கொண்டிருந்தபடியால் கூட்டமானது ஒருவாரம் தாண்டி திங்கள் கிழமைக்கெனத் தள்ளிவைக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையன்று அவர் நெகேமியாவைக்குறித்த பாடம் ஒன்றினைப் பிரசங்கித்தார்; (நெகேமியாவின் இடத்தில் தன்னை நிறுத்திப் பிரசங்கித்தார்) மற்றும் நெகேமியாவின் வேலையை அழித்துப்போட மற்றவர்கள் அனைத்து வழிகளிலும் முயற்சித்தார்கள் என்றும், அவரின் சார்பில் கர்த்தர் காணப்பட்டபடியால், அவர் இறுதியில் ஜெயித்தார் என்றும் சுட்டிக்காட்டினார்.

திங்கட்கிழமையன்று அவர் "சீஷர்களின்/Disciples" பிரிவினரின் மாநாட்டிற்குச் சென்றார்; அங்கு அவர் புதன் மதியம் வரைக் காணப்பட்டார். திங்கள் இரவன்று கூட்டம் நடத்தப்பட்டு, இரண்டு மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; சகோ. Knauss மற்றும் நானும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்; மேலும் நம்மத்தியில் போதிப்பதற்கும், கூட்டங்களை நடத்திடுவதற்கும் திறமிக்கவர்கள் காணப்படுவதாக நாங்கள் எண்ணுவதினால், உதவி ஊழியராக அல்லது உதவிக்காரராக (Deacon) ஒருவர் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று நாங்கள் முன்வைத்தோம் மற்றும் சகோதரர் W.de Ronden Pos அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். எங்களது கூட்டத்தின் முடிவுகளைக் குறித்து சகோதரர் Pos அவர்களிடம் தெரிவிக்கும்படிக்கு ஒரு குழுவானது நியமிக்கப்பட்டது. சகோதரர் Knauss, சகோதரர் Doughty மற்றும் நானும் நியமிக்கப்பட்டிருந்தோம் மற்றும் நாங்கள் அவர் இல்லத்திற்குச் சென்று, அவருக்கு விவரத்தைக் கூறினோம். அவரோ: "என்னால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. நான் நியமிக்கப்பட்ட மூப்பனாகவும், சுவிசேஷகனாகவும் இங்கு வந்தேன் மற்றும் நான்தான் உங்களது முதல் மூப்பன் மற்றும் சபையைக் கூடிவரும்படிச் செய்து, அனைவருக்கும் இதைத் தெரிவித்திடுவேன்; அவர்கள் எனக்கு ஆதரவாக இருக்கின்றார்களா அல்லது இல்லையா என்று தெரிவித்திடலாம். அதுவுமல்லாமல் "Disciples/சீஷர்கள்" பிரிவிலிருந்து ஒரு சகோதரன் ஒன்றிரெண்டு வாரங்களில் இங்கு வந்திடுவார் மற்றும் இப்பட்டணத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் உட்காரும் மரத்தினாலான கட்டிடத்தை அமைக்கப்போகின்றோம் மற்றும் நீங்கள் எனக்கு ஆதரவு வழங்கவில்லையெனில், முன்புபோல் நீங்கள் உங்கள் கூட்டங்களை நடத்திடலாம்" என்றார்.

அன்று மாலையில் கூட்டத்தினை நடத்திடுவதற்கான சிலாக்கியத்தினை

நான் கேட்டுக் கொண்டேன். தற்போதுள்ள இந்த அறுவடையின் காலத்தின் போதுள்ள நமது கடமைக்குறித்தும், அறுவடைப்பண்ணுவதா அல்லது விதைகளை மேலுமாக விதைப்பதா, எது நம்முடைய பிரதான கடமையாயிருக்கிறது என்பது குறித்தும் பேசிட வேண்டுமென்றிருந்தேன். சில விஷயங்களைத் தெளிவு பண்ணிட வேண்டும் என்று எண்ணி எதிர்ப்பார்த்திருந்தேன்; ஆனால் அவரோ: "நான் சில விஷயங்களை முதலாவது ஜனங்களிடம் பேசிட வேண்டும் மற்றும் அவர்கள் பிற்பாடு நீங்கள் பேசுவதைக் கேட்க விரும்பினால், நீங்கள் பேசிடலாம்" என்றார். கூட்டத்தில் அவர் முதலாவதாக . . . தான் இதுவரையிலும் தற்காலிகமான பாஸ்டராகத்தான் இருந்துள்ளதாக சிலர் எண்ணுவதாகவும் மற்றும் தன்னுடைய ஸ்தானம் என்ன என்பதை தான் அறிய விரும்புகின்றார் என்பதாகவும், இச்சபைக்குப் பாஸ்டர் இருக்கிறாரா அல்லது இல்லையா என்று அறிய தான் விரும்புகின்றார் என்பதாகவும் கூறி, இதினிமித்தம் சபையானது தன்னுடைய நிலைப்பாட்டினைத் தெரிவிப்பதே இந்த ஞாயிற்றுக்கிழமை மதியவேளையில் முதலாம் காரியமாயிருக்கின்றது என்று கூறினார்.

அவர் பேசி முடிந்தபிற்பாடு, நான் சில வார்த்தைகளைப் பேச வேண்டும் என்றேன்; ஆனால் அவரோ: இது அலுவல் கூட்டமல்ல, நாம் பக்திவிருத்தி யடைவதற்காக ஒன்றுகூடி வந்திருக்கின்றோம் என்று கூறி, வேதவாக்கியங்க ளிலிருந்து வாசிக்கத் துவங்கி, எனக்கு அனுமதி வழங்காமல் இருந்தார். கூட்டம் முடிவது வரையிலும் நான் காத்திருப்பேன் என்றும், விளக்கமளிக்கும் சில வார்த்தைகளைக் கேட்க விரும்புபவர்கள் அங்குக் காத்திருக்கலாம் என்றும் கூறினேன். கூட்டம் முடிந்தவுடன், அனைவரும் நேராக வீடுகளுக்குச் சென்று ஜெபிக்கும்படியாக, தான் அறிவுறுத்துவதாகக் கூறினார். தன்னைப் பிரியப்படுத்த வேண்டும் என்று விரும்பினால் மற்றும் மற்றவர்களுடையதைக் காட்டிலும் தன்னுடைய பகுத்துணர்வே மேலானது என்று அவர்கள் கருதினால் அவர்கள் வீட்டிற்குச் சென்றிட வேண்டும் என்றார். நானோ ஒரு விஷயத்தினுடைய ஒரு பக்கத்தின் விவரத்தில் மாத்திரம் திருப்தியடைந்திருப்பவர்கள் அனைவரும் வீட்டிற்குச் சென்றிடலாம் என்றும், மற்றவர்கள் காத்திருக்கும்படிக்குக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் என்றும் கூறினேன். சிலர் வீட்டிற்குத் திரும்பியும், சிலர் காத்தும் இருந்தனர். இது நடைபெறுவதற்கு முன்னதாக இந்த விஷயமானது ஞாயிற்றுக்கிழமைக்குக் கொண்டுவரப்படாமல், வேறொரு நாளில் நடக்க வேண்டும் என்று சகோதரர் Knauss அவர்கள் யோசனை தெரிவித்தார்கள்; ஆனால் சகோ. Pos அவர்கள் ஞாயிற்றுக்கிழமையன்று நடக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்; மற்றவர்கள் அச்சமடையத்தக்கதாக, பெரிய கூட்டத்தார் முன்னிலையில் இது நடைப்பெற வேண்டும் என்பதே அவரது நோக்கம் என்று நான் கண்டுகொண்டேன்.

ஆனால் அது அவருக்குச் சாதகமற்றதாகவே போனது. முடிந்தமட்டும் பிரச்சனையைத் தவிர்த்துக்கொள்ளத்தக்கதாக, எங்களை ஒரு சபை பிரிவோடு இணைப்பது அவரது திட்டமாக இருப்பதினாலும், சிலருடைய பெயர்களை ஒப்புதல் இல்லாமலேயே செய்தித்தாள்களில் அவர் வெளியிட்டுள்ளபடியாலும், நாங்கள் ஒரு சபை பிரிவோடு இணைந்திட விரும்பவில்லை என்று சுருக்கமான வார்த்தைகளில் அவருக்கு எழுதினோம். கையெழுத்திடப்பட்ட காகிதங்களைச் சனிக்கிழமை இரவன்று நான் அவரிடம் கொடுத்து, காரியங்களை எளிமையாக்கிடவே நாங்கள் இப்படிச் செய்ததாகவும், ஞாயிற்றுக்கிழமையன்று வேதாகம ஆராய்ச்சி ஒன்றையும், ஜெபக்கூட்டத்தையும் மாத்திரமே கொண்டிருக்க சகோதரர்கள் விரும்புவதாகவும் அவருக்குத் தெரிவித்தோம். அவரோ: தனது நண்பர்கள் அனைவரும் அங்கு வருவதினால் அவர் முதலாவது காரியத்தை முன்வைப்பதாகவும், பிற்பாடு எங்கள் பக்கக்கருத்துகளைத் தெரிவிப்பதற்கு எனக்குப் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் கொடுப்பதாகவும்; பின்னர் அவர் பிரசங்கம்பண்ணிடுவார் என்றும், அதற்குப் பிறகு எங்கள் விருப்பப்படி நாங்கள் செய்திடலாம் என்றும் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை மதியமும் வந்தது மற்றும் சில புதியவர்கள் வந்திருந்தார்கள். மற்றவர்களுடன் அவர் அமர்ந்திருந்தார் மற்றும் நேரம் வந்தபோது கூட்டத்தலைவர் இல்லாததினால், கூட்டத்தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்றார். நானோ: சபையின் நியமிக்கப்பட்ட மூப்பராய் நான் காணப்படுவதினால், நான் அப்பொறுப்பை எடுத்துக்கொள்ளுகிறேன் என்று கூறினேன் மற்றும் கூட்டத் தலைவராகச் செயல்பட்டேன். கீர்த்தனை ஒன்றைப் பாடி, ஜெபம் ஏறெடுத்தோம்; பின்னர் என்னால் முடிந்தமட்டும் விவரங்களை அளித்துவிட்டு, அவ்வாரத்திற்கான கூட்டங்களைக்குறித்து அறிவிப்புக் கொடுத்தேன்; பின்னர்ப்பிரசங்கம் பண்ணிடுவதற்குச் சகோதரர் Pos அவர்கள் கூறியிருந்தார்கள் மற்றம் அதற்கு நாம் அவருக்கு வாய்ப்பளிக்கின்றோம் அல்லது அவர் ஏதேனும் சொல்ல விரும்பினால், அவர் சொல்லிடலாம் என்றேன்.

அவரோ: இச்சூழ்நிலையில் தன்னால் பிரசங்கம் பண்ணிட முடியாது என்றும், உங்களை வேறொரு சபை பிரிவோடு இணைக்கப்பண்ண நான் விரும்புவதாகச் சொல்லப்படுவது உண்மை இல்லை என்றும், மாறாக நம்மைப் போன்று ஒரே அஸ்திபாரத்தின் மீது காணப்படும் சகோதரர்களோடு நாம் ஐக்கியம் வைத்துக்கொள்வோமா என்பதுதான் கேள்வி என்றார்.

இப்பொழுது சகோதரர் Draper அவர்கள் இங்கு வருவது தொடர்பாகச் சொல்ல வேண்டுமெனில், அவர் இங்கு எப்போது வேண்டுமானாலும் வருகைத் தருவதைக்குறித்து நாங்கள் மகிழ்ச்சித்தான் கொள்வோம்; ஆனால் அவரால்

இங்கு நடந்தவைகளை மாற்றமுடியுமா என்பது ஐயம்தான், எனினும் இங்கு மீதியிருப்பவர்களைப் பலப்படுத்திட மாத்திரமே முடியும். அவரது முந்தின வருகையினால் நாங்கள் மிகவும் உதவப்பட்டோம் மற்றும் அது இந்த எரிகிற அக்கினியில் நிலைநிற்பதற்கான தைரியத்தினைக் கொடுத்தது என்று நான் உறுதியாய்ச் சொல்கின்றேன்.

கிறிஸ்தவ அன்பில் உங்கள்,

C. F. BAHRET.

* * * * * * *

இந்த வேதனையின்போது நிலைநின்ற அருமையான நண்பர்களை நாம் பாராட்டுகின்றோம். கிறிஸ்து உண்டாக்கின சுயாதீனத்தை இவர்கள் மிகவும் விரும்பியுள்ளப்படியால், இவர்கள் தங்களிடத்தில் ஆரம்பத்தில் தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தினைச் சுமந்துவந்த தூதுவனாகக் காணப்பட்டும், பிற்பாடு தன்னைத்தான் பாஸ்டராக அல்லது மேய்ப்பனாக நியமித்துக்கொண்ட ஒருவரினால் பாபிலோனின் அடிமைத்தனத்திற்குள்ளும், இருளுக்குள்ளும் மறுபடியுமாக வழிநடத்தப்படுகிறதில் விருப்பப்படவில்லை!

இந்த அருமையான நண்பர்களானவர்கள், நவம்பர் 15, '95-ஆம் வாட்ச் டவர் கட்டுரையில் முன்வைத்திட்டதான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான அறிவுரைகளுக்குச் சீக்கரமாய்க் கவனம் செலுத்தியிருந்திருப்பார்களானால், இச்சோதனைகள் சிலவற்றிலிருந்து தப்பியிருந்திருப்பார்கள்; அக்கட்டுரையில் "தேவனுடைய சுதந்தரத்தின்மீது இறுமாப்பாய் ஆளுகிறவர்களிடமிருந்தும்", சபையாருடைய தேர்ந்தெடுத்தலுக்கு மேலாக தங்களையே மேய்ப்பர்களாக நியமித்துக்கொள்ள முற்படுபவர்களிடமிருந்தும் மற்றும் தங்கள் சொந்தக் கண்ணோட்டங்களை நிலைநிறுத்த முற்படுகிறவர்களிடமிருந்தும், கர்த்தருடைய இராப்போஜனம் முதலான காரியங்களில் யார் பங்கெடுக்கலாம், யார் பங்கெடுக்கக்கூடாது என்று தீர்மானம் செய்ய முற்படுகிறவர்களிடமிருந்தும், கிறிஸ்துவினால் உண்டான தங்கள் சுயாதீனத்தைக் காத்துக்கொள்வதற்கான சரியான வழிமுறைக் குறித்த - சபையின் ஒழுங்குக்குறித்த காரியங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை இந்த நண்பர்கள் கவனிக்கத்தவறிப்போனபடியால், இவர்களது சுயாதீனங்கள் தாக்கப்பட்ட போது, இவர்கள் குழப்பத்திற் குள்ளானார்கள். எனினும், நாம் அவர்களைப் பாராட்டவே செய்கின்றோம் மற்றும் அவர்களை விடுவித்ததற்காகக் கர்த்தரைத் துதிக்கின்றோம்.

இந்த நண்பர்கள் மேய்ப்பன் என்பவர் உதவிக்காரர் என்று அனுமானித்துக்கொண்டதில் தவறிழைத்துள்ளனர். மூப்பர்கள் மேய்ப்பர்களாக அல்லது மேற்பார்வையாளர்களாகக் காணப்பட்டு, சபையினுடைய ஆவிக்குரிய

நலனுக்கடுத்தவைகளைப் பார்த்துக் கொண்டிருக்க, சபையினுடைய ஆவிக்குரிய வையல்லாத காரியங்களைக் கவனித்துக் கொள்வதற்காக ஆதிசபையில் உதவிக்காரர்கள் என்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒருவர் மேய்ப்பனாகவும், பிரதானமானவராகவும், மற்றவர்கள் அவருக்கான துணையாளர்களாகவும் மற்றும் உதவுபவர்களாகவும் மற்றும் ஆலோசகர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டால், இது வேதாகமத்தின் எந்தக் கட்டளைக்கும் முரணாய் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் ஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்கும் மற்றும் கர்த்தருடைய சபையை அச்சுறுத்துவதற்கும் மற்றும் மிதித்துப்போடுவதற்கும் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ நாடும் ஒருவரைத் தாங்கள் தேர்ந்தெடுப்பதைத் தேவன் விரும்பமாட்டார் என்று எண்ணினதிலும், அப்படித் தேர்ந்தெடுக்காமல் இருந்ததிலும் நண்பர்கள் சரியாகவே செயல்பட்டுள்ளனர்.

"பக்திவிருத்தியடைவதற்கெனச்" சபைகூட்டங்கள் எனும் உண்மையான கருத்தானது, பாபிலோனுக்கு ஒத்திருக்க வேண்டுமென்ற ஆவியின் காரணமாகப் பிரசங்கிப்பதற்கான பிரபலமான விருப்பத்தின் கீழ்த் தொலைந்து போய்விட்டது. பொதுப்பேச்சாளருக்கான திறமையானது ஒருபோதும் இழிவாகக் கருதப்படக்கூடாது அல்லது புறக்கணிக்கப்படக்கூடாது; ஆனாலும் அது பக்திவிருத்தி உண்டாவதற்கேதுவாக மாத்திரமே நாடப்பட வேண்டும் மற்றும் மதிக்கப்பட வேண்டும். அதிகமான பிரசங்கித்தல்கள், அதுவும் தவறான அடிப்படையில் காணப்படுகையில், அது பாதகமானதேயாகும்.

காரியங்களானது கையாளப்பட்டதான சாந்தத்தையும் நாம் பாராட்டுகின்றோம் - ஆனாலும் மிக அதிகமான சாந்தம் காணப்பட்டுள்ளது. இவர்கள் "கர்த்தருடைய இராப்போஜனம்" தொடர்புடைய பாடத்தில் தவறாய் வழிநடத்தப்பட்டுள்ளனர். வேதவாக்கியங்களில் எங்குக் காலை மற்றும் மதிய உணவுகளானது "இராப்போஜனம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அல்லது எப்படி இராப்போஜனம் எனும் வார்த்தைக்கு இப்படித் திரித்த அர்த்தம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று இவர்கள் கேட்டிருக்க வேண்டும். அவ்வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "மாலை நேர போஜனமே" ஒழிய, வேறு எதுவுமில்லை. நமது கர்த்தர் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதை ஆசரிக்கும் ஒரு விசேஷித்த நாளாய்க் காணப்படும் ஒரு நாளில் (ஞாயிற்றுக்கிழமையில்), அவரது மரணத்திற்கான நினைவுகூருதலை ஆசரித்தல் தொடர்பாக இவர்கள் ஏன் கேள்வி கேட்கவில்லை? ஆதி சபையினரால் கைக் கொள்ளப்பட்டு வந்ததான "அப்பம் பிட்குதலானது," கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்காக ஆசரிக்கப்படும் "கர்த்தருடைய இராப்போஜனமாய்" இராமல், எம்மாவூரில் நடந்த அப்பம் பிட்குதல் போன்றதேயாகும் என்று இவர்கள் ஏன் சுட்டிக்காண்பிக்கவில்லை? (லூக்கா 24:30; மத்தேயு 14:19). "அப்பம் பிட்குதலானது" கடைசி இராப்போஜனத்தின்

நினைவுகூருதலாய் இருக்குமானால், நமது கர்த்தருடைய சிந்தப்பட்ட இரத்தத்திற்கு அடையாளமான திராட்சரசத்தின் "பாத்திரத்திற்குக்" கடைசி இராப்போஜனம் பற்றின 1 கொரிந்தியர் 11:23, 24-ஆம் வசனங்களின் பதிவில் முழு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்க, "அப்பம் பிட்குதல்" தொடர்பான பதிவுகளில் அது குறிப்பிடப்படாதது ஏன் என்று இவர்கள் கேள்வி கேட்டிருக்க வேண்டும்.

சகோதரிகள் இல்லாமல் சகோதரர்கள் மாத்திரம் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதும் தவறாகும்; "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்." பொது இடங்களில் பேசுதல் தொடர்பான அவர்களுக்குரிய வரையறைகளானது, மிகைப்படுத்தப்படக்கூடாது. இது விஷயமான வேதவாக்கியங்கள் குறித்த எங்களது கண்ணோட்டமானது வாட்ச் டவரின் ஜூலை, 1893-ஆம் வருடத்தின் கட்டுரையில் இடம்பெறுகின்றது. Election/தேர்ந்தெடுத்தல் மீண்டுமாக நடத்தப்பட வேண்டும்; உங்களோடுகூட வழக்கமாகக் கூடுகிற யாவரும், ஈடுபலியில் விசுவாசம் வைத்து, கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைப்பண்ணுகிறவர்கள், தேர்ந்தெடுத்தலின்போது தங்களுடைய தெரிந்துகொள்ளுதலைத் தெரியப்படுத்துவதற்காக இல்லாமல், மாறாக வேதவாக்கியங்கள் முன்வைப்பவைகளுக்கு இசைவாயுள்ள கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலின்படியானவர்கள் என்ற தங்களது பகுத்துணர்தலைத் தெரியப்படுத்துவதற்கு அழைக்கப்பட வேண்டும்.

ஐக்கியத்திற்குத் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பரீட்சையாக்கிடுவதற்குச் சகோதரர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளதாலும் மற்றும் நமது கர்த்தரை அன்புகூருகிறவர்கள், சேவிக்கிறவர்கள் யாவருடனும் அவர்களது அறிவின் நீளத்தையும், ஆழத்தையும் பொருட்படுத்தாமல், ஐக்கியம் வைத்துக்கொள்ள தாங்கள் விரும்புவதை முழுமையாய் அறிக்கையிட்டதாலும் நாம் சந்தோஷப்படுகின்றோம்; ஏனெனில் கர்த்தரை அன்புகூருகிறவர்கள், அவரது வார்த்தைகளின் வாயிலாக அவரை அதிகமதிகமாய் அறிந்துகொள்ள நாடிடுவார்கள்.

"சீஷர்கள் சபை பிரிவினரின்" அறிக்கைக்கும், வேதாகம கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நிலைப்பாட்டிற்கும் இடையிலான வித்தியாசம் என்ன என்று கேட்கப்படலாம்; ஆகையால் இங்கு வித்தியாசங்களைச் சுருக்கமாய்த் தெரிவிக்கின்றோம்:

(1) ஒருவேளை "சீஷர்கள்" பிரிவினர் தாங்கள் அறிக்கைப் பண்ணுகிற தற்கேற்ப ஜீவிப்பார்களானால், அவர்கள் நம்மோடு கூட ஜீவித்திருந்திருப்பார்கள். அவர்கள் அறிக்கைப் பண்ணுபவைகள் முற்றிலும் சரியே - அவர்களது அறிக்கையானது, வேதாகமமே - ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம் மற்றும் ஒரே ஞானஸ்நானம் தொடர்பானவைகளுக்கான மற்றும் தேவனுக்கும்,

மனிதனுக்குமான நமது கடமை தொடர்பானவைகளுக்கான ஒரே விதியும், வழிகாட்டியாகும்; மற்றும் மதக்குருப் பற்றிலிருந்து முழுமையாக விடுதலையுடைய தாகும்.

இவை அனைத்தையும் நாம் ஒப்புக்கொள்கின்றோம் மற்றும் இதன்படி ஜீவிக்கின்றோம்; ஆனால் "சீஷர்கள்" பிரிவினர் இப்படிக் காணப்படுகின்றார்களா? நிச்சயமாக இல்லை! அவர்கள் மத்தியில் சென்று, தற்கால சத்தியத்தின் அறுவடை செய்தியினை முன்வைக்க முயன்று பாருங்கள்; எழுதப்படாத எத்தனை விசுவாசப்பிரமாணங்களை அவர்கள் பெற்றிருக்கின்றனர் என்றும், அது அவர்களை எவ்வளவு இறுக்கிக் கட்டிவைத்துள்ளது என்றும் பார்ப்பீர்கள். பாபிலோனின் பிரிவுகளிலேயே மிகுந்த சுயாதீனமுடையவர்களாய்த் தாங்கள் காணப்படுவதாக அவர்கள் வார்த்தையில் அறிக்கைப்பண்ணிக் கொண்டாலும், அவர்கள் (அவர்களையும் அறியாமல்) மிகவும் குறுகின நோக்கமுடையவர்களாகவும், மிகவும் தடைவிதிக்கிறவர்களாகவும் காணப்படுகின்றனர். இதை எங்களது இரண்டாம் கருத்தில் நிரூபித்திடுவோம்.

(2) இவர்கள் தண்ணீர் ஞானஸ்நானத்தினைப் பரீட்சையாக்குகின்றனர்; மற்றும் இது பாவங்களுக்கான மன்னிப்பிற்காகவும் என்று கூறுவதன் மூலம், குறிப்பிட்ட சில வார்த்தைகள்கூறி தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளாத Presbyterians, Methodists, Episcopalians, Protestant, Lutherans, Reformed மற்றும் United Presbyterians, Protestant, Methodists மற்றும் மற்ற அனைவரும், பாவிகள் - தேவனுக்கு அந்நியர்களாகவும், கிறிஸ்துவுக்குள்ளான அவரது கிருபைக்கும், சத்தியத்திற்கும் அஞ்ஞானிகளாய் இருக்கின்றனர் என்ற கூற்றிற்கு இவர்கள் ஒப்புதல் அளிக்கின்றனர். இதைவிட குறுகின நோக்கமுள்ள ஏதேனும் விசுவாசம் காணப்பட முடியுமா? ஒருவேளை இருக்கின்றதானால், எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்! ஆம், இவர்களைப் போன்று குறுகின நோக்கமுடைய Christadelphians எங்கள் ஞாபகத்திற்கு வருகின்றனர். Christadelphians பிரிவினர் பாவிகள் அழிக்கப்படுவார்கள் என்றும், "சீஷர்கள்" பிரிவினர் பாவிகள் நம்பிக்கையற்ற நித்திய சித்திரவதைக்குள் அனுப்பப்படுவார்கள் என்றும் சொல்கின்றனர் மற்றும் இக்கண்ணோட்டத்தின் தவற்றினை வேதாகமத்திலிருந்து காண்பித்துக்கொடுப்பதற்கான வாய்ப்பையும் இவர்கள் கொடுக்கிறதில்லை. ஒருவேளை வாய்ப்புக்கொடுப்பதில்லை என்று நாம் சொன்னது தவறென்றால், வாய்ப்பிற்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பைப் பெற்றுக்கொள்வதில் நாம் சந்தோஷப்படுவோம் மற்றும் சத்தியம் அவர்களுக்கு உடனே முன்வைக்கப்படத்தக்கதாகப் பார்த்துக் கொள்ளப்படும்.

# இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்

Rev. de Ronden Pos அவர்களை நாங்கள் முதலாவது கலிபோர்னியாவில் வைத்து அறிந்து கொண்டோம்; அதாவது பிப்ரவரி 1. '92-ஆம் வருடத்தின் நம்முடைய வெளியீட்டில் நாம் வெளியிட்டதான அவரது கடிதத்தை, அவர் எங்களுக்கு எழுதினபோதே, அவர் எங்களுக்கு அறிமுகமானார்.

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:- Los Angeles-இல் உள்ள ஒரு புத்தகக் கடையில் நான் பார்த்திட்ட மில்லேனியேல் டாணின் மூன்றாம் தொகுதியில் எவ்வளவு அதிகமாய்க் கவரப்பட்டேன் என்பதை நான் உங்களுக்கு எழுதியாக வேண்டும். நான் இக்கடிதத்தோடு ஐம்பது cents பணத்தினை அனுப்பிவைக்கிறேன்; அதைக்கொண்டு நீங்கள் உடனடியாகவே முதலாம் மற்றும் இரண்டாம் தொகுதிகளை எனக்கு அனுப்பித்தர விரும்புகின்றேன்; உங்களது Zion's Watch Tower-இன் ஒன்று அல்லது இரண்டு வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்; டாண் தொகுதி-3 போல் ஒருவேளை நான் எதிர்ப் பார்க்கிறவை களின்படி (ரீப்பிரிண்ட்ஸ்) அவ்வெளியீடானது காணப்படுமானால், நான் உடனே சந்தாதாரராகிடுவேன். தொகுதி-3 ஏற்கெனவே என் நண்பர்கள் மத்தியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கிறிஸ்துவின் இராஜ்யத்திற்காகக் காத்திருக்கும் உங்கள்,
W. DE RONDEN POS,
Pastor First Baptist Church.

அடுத்ததாக Kentucky-இலிருந்தும், பிற்பாடு Washington, D. C-இலிருந்தும், அவரிடமிருந்து கடிதங்கள் எங்களுக்கு வந்தன; பிற்பாடு Canada-விலுள்ள Montreal-இலிருந்து அவர் அங்குள்ள Episcopal சபையில் பாஸ்டராக இருப்பதாக எங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார் மற்றும் பிற்பாடு Baltimore, Md-யிலுள்ள Reformed Episcopal சபையில் பாஸ்டராகப் பொறுப்பேற்றுள்ளாரெனத் தெரிவித்திருந்தார். சபை பிரிவுணர்ச்சியிலிருந்தும், அதன் அடிமைத்தனத்திலிருந்தும் கிறிஸ்துவினால் உண்டான சுயாதீனத்தில் நம்மோடுகூடச் சுதந்தரமாய் நிலைநிற்க அவர் இறுதியில் முடிவெடுத்துள்ளதைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். இவர் நண்பர்களுடன் கொண்டிருக்கும் ஐக்கியத்தின் நிமித்தம் மிகுந்த பிரயோஜனம் உண்டாகும் என்று அதிகம் எதிர்ப்பார்த்திட்டோம்; எனினும் பாபிலோனுக்கும், அதன் தானிய களஞ்சியத்திற்குமான மகா பெலவீனத்தை வருடக்கணக்காக வெளிப்படுத்தியுள்ள ஒருவரிடமிருந்து அருமை நண்பர்கள் அதிகமாய் எதிர்ப்பார்ப்பதைக்குறித்தும் அஞ்சினோம்; எனினும் எங்களது

அச்சங்கள் குறித்த துப்பு எதையும், எவருக்குமே நாம் கொடுக்கவுமில்லை.

இவரது கடந்தகாலத் தொடர்புகளைக்குறித்து நாங்கள் அறிந்திருக்கும் நிலையில், ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளாத எவரையும் கர்த்தருடைய பந்திக்கு அனுமதிப்பதில்லை என்ற இவரது வீராந்த (Heroic) தீர்மானம் குறித்து நாங்கள் வாசிக்கையில், சிரிப்பே ஏற்பட்டது. இவர் Episcopalian மற்றும் Reformed Episcopalian ஆடுகளுக்குப் போதித்தும், மேய்த்தும், அவர்களது குழந்தைகளுக்குத் தண்ணீரைத் தெளித்தும், அவர்களுக்குச் சம்பிரதாயமாகவும், ஆச்சாரமாகவும் சடங்குகளை நடத்தியும் வந்த வருடங்களில் எங்கே போனது இவரது தைரியம் என்று எண்ணுகின்றோம். இவரது தற்போதைய "விசுவாசத்தின்படி," அந்த "ஆடுகள்," "ஆடுகளல்ல," மாறாக தங்கள் பாவங்களிலேயே காணப்படுபவர்கள் - காரணம் அவர்கள் பாவமன்னிப் புண்டாகத்தக்கதாக ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளவில்லை. இவர் அவர்களுடைய டாலர்களைத் தவறாமல் பெற்றுக் கொண்டு வந்தார் என்று நாம் எண்ணுகின்றோம்; ஏனெனில் Episcoplians பிரிவினர்கள் நன்கு சம்பளம் கொடுப்பவர்களாகக் கருதப்படுகின்றனர்; ஆனால் அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இவர் இருந்துள்ளாரா? மற்றும் தனது விசுவாசத்தின்படி அவர்கள் அனைவரும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுள்ள பாவிகளாக இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளாரா? தண்ணீர்தான் நித்திய ஜீவனுக்கான வழியென்று அவர்களுக்குச் சுட்டிக்காண்பித்துள்ளாரா? அல்லது அவர்களை வஞ்சித்து, போலியாய் நடத்தி, அவர்களது பணத்தினைப் பெற்றுக்கொண்டாரா? ஆம் நம்மால் இப்படிக் கூற முடியாது! இத்தகைய ஜனங்களின் இருதயங்களை நம்மால் நியாயந்தீர்க்க முடியாது! அநேகமாக இவரது மனசாட்சியானது அத்தனை வருடங்களாக உறங்கிக்கொண்டிருந்திருக்க வேண்டும் அல்லது அநேகமாக இவருக்கு மனசாட்சி இல்லாமல் இருந்திருக்கும்!

எனினும் சத்தியத்திற்கு ஒரு விலையேறப்பெற்ற இழப்பு ஏற்பட்டுள்ளது என்று நாம் நம்புகின்றோம். இத்தகைய ஜனங்கள் எதிர்த்திடுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்கின்றோம் மற்றும் அவர்களது வஞ்சகமான, அப்பட்டமான வெற்றுரைகளைவிட, அவர்களின் எதிர்ப்பே மேல். Parousia உள்பட்ட தேவனுடைய ஆழமான காரியங்கள் குறித்த அறிவானது இத்தகையவர்களுக்காகவேயாகும் என்று நம்பிடுவதற்கு எந்தக் காரணங்களும் இல்லை. தேவன் உலகத்தில் மூடர்களாகவும், பலவீனர்களாகவும் மற்றும் உலகத்தை ஜெயங்கொள்ளும் முக்கியத்துவமற்ற நேர்மையானவர்களாகவும் இருப்பவர்களைத் தம்முடைய உடன்சுதந்தரர்களாக இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றார் மற்றும் "கவர்ச்சிகரமானவர்களை," "மனிதர்களைப் பிரியப்படுத்துபவர்களை," உலகப்பொருட்களைத் தொழுதுகொள்பவர்களையும் விட்டு விலகிப்போகின்றார். "ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது"

(மத்தேயு 11:26). பிரியமான சக செம்மறியாடுகளே - எத்திசையிலிருந்தும் வரும் எதிராளியானவனின் அத்துமீறுதல்களையும், கவர்ச்சிகளையும், தந்திரங்களையும் மற்றும் தாக்குதல்களையும் எதிர்த்து நிற்பவர்கள், இதனால் பலமடைவார்கள் என்று நாம் நினைவில் கொள்வோமாக மற்றும் அன்பிலும், பரிவிலும் ஒன்றாய் மிக நெருக்கமாய்க் கட்டப்பட்டிருப்போமாக மற்றும் "சுயாதீன பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தின்" ஆவியிலும், எழுத்திலும் மிக உறுதியாய் ஸ்திரப்பட்டிருப்போமாக.

---

R3004 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஆதிகாலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள்

நம்முடைய பாடத்தில் தீர்க்கத்தரிசிகள் மற்றும் போதகர்களுக்கு இடையில் வித்தியாசம் காட்டப்படுவதை நாம் பார்க்கின்றோம். "தீர்க்கத்தரிசி" என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதற்கான கிரேக்க வார்த்தை "முன்னறிவிப்பவர்" என்னும் அர்த்தத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது வரவிருக்கும் நிகழ்வுகளை முன்கூட்டியே சொல்பவரை அல்லது முன்னறிவிப்பவரை அல்லது தீர்க்கத்தரிசனமாய் உரைப்பவரைக் குறிப்பதாகப் புரிந்துகொள்ளப்படலாம்; ஆனால் புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தைப் பொதுவாய்ப் பயன்படுத்தப்படுகையில் அது கர்த்தருடைய செய்தி கூறுவதை, அதாவது பிரகடனப்படுத்துவதை, பொதுவிடங்களில் போதிப்பதை அல்லது ஜனங்களுக்கு முன்பாக நின்று அறிவிப்பதைச் சுட்டிக்காட்டுவதாய்த் தெரிகின்றது. தீர்க்கத்தரிசிகள் மற்றும் போதகர்களுக்கு இடையிலான வித்தியாசம் என்னவெனில் - தீர்க்கத்தரிசி என்பவர் பொதுவிடங்களில், முறையான தூது கொடுக்கும் விதத்தில் சத்தியத்தைப் போதிப்பதற்கான தாலந்துகளையும், திறமைகளையும் இயல்பாகவே கொண்டிருக்கும் நபராவார்; ஆனால் போதகர்கள் என்பவர்கள் உபதேசிப்பதற்கெனத் தாலந்தையுடையவர்கள், ஆனால் வெளியிடங்களில் உபதேசிப்பவர் அல்ல அல்லது பிரசங்கம்/சொற்பொழிவு ஆற்றும் விதத்தில் உபதேசிப்பவர் அல்ல. இதே வித்தியாசமானது கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது; வெகுசிலரே பொதுவில் பேசிடுவதற்கு - கூட்டத்தாருக்கு உண்மையாய் உதவிகரமாய் இருக்கும் விதத்தில், முறையான விதத்தில் தூது கொடுப்பதற்கான தகுதிகளை உடையவர்களாய் இருக்கின்றனர்.

பொதுவில் தூதுகொடுப்பதற்கான திறமையில்லாத வேறு சிலர், பொதுவின் தன்மையில் இராத வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் முதலானவைகளில் சத்தியத்தினை முன்வைத்திடுவதற்கான தாலந்துகளையுடையவர்களாய் இருக்கின்றனர்.

கர்த்தரே தாம் நலமானது என்று காண்கிறதற்கு ஏற்ப தாலந்துகளை அருளுவார் மற்றும் ஒவ்வொரு தனிநபரும் மற்றும் ஒட்டுமொத்தச் சபையும் தாங்கள் பெற்றிருப்பதாகக் கண்டுகொள்ளும் தாலந்துகளைப் பயன்படுத்திடுவது அவர்களுக்கான காரியமாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய சிறுசிறு கூட்டத்தார் தாங்கள் வெளியிடங்களில் பிரசங்கிக்கும் ஊழியத்தை நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கிறவர்களாகவும் மற்றும் அதை நடத்தியே ஆக வேண்டும், அதாவது அருமையாகவோ அல்லது மோசமாகவோ, எப்படியாக இருப்பினும், அதை நடத்தியாக வேண்டும் என்று முயற்சிக்கிறவர்களாகவும் இருக்கக் கூடாது. மாறாக இது விஷயத்தில் கர்த்தருடைய மனதை அறிந்துகொள்வதற்கும், கர்த்தருடைய வழிநடத்துதல்களானது தங்களுக்குச் சாத்தியமாக்கிடும், மற்றும் தங்களுக்குத் தகுதியானதாக்கிடும் அத்தகைய கூட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நாடிட வேண்டும். ஒருவேளை ஒரு சபையார் மத்தியில் ஒன்று அல்லது இரண்டு அல்லது அதிகமான சகோதரர்கள் போதிக்கும் திறமையுடையவர்களாக இருப்பார்களானால் - சபைக்கான ஆராதனைகளை நடத்திடவும், வேதாகம வகுப்பில் சகோதரர்களிடமிருந்து கேள்விகளையும், பதில்களையும் வரவழைக்க முடிகிறவர்களையும், வேதாகம ஆராய்ச்சியில் மற்றவர்களோடுகூடத் தன்னுடைய கருத்துக்களையும் கொடுக்கிறவர்களாகவும் இருப்பார்களானால், இத்தகைய சகோதரர்களைச் சபையானது பயன்படுத்திட நாடவேண்டும். மேலும் ஒருவேளை பொதுவில், சொற்பொழிவு விதத்திலான பிரசங்கங்களைக் கொடுப்பதற்கான தாலந்தையுடையவர்கள் ஒருவரோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களோ காணப்படுவார்களானால், அத்தகையவர்கள் விரும்புவார்களானால் அவர்களையும் ஊழியத்தில் ஈடுபடுத்திடுங்கள். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொருவனுடைய ஆவிக்குரிய மற்றும் சுபாவத்தின்படியான திறமைகள் மற்றும் வளர்ச்சிக்கேற்ப சபையானது அதன் பல்வேறு அங்கத்தினர்கள் அனைவரையும் வளர்த்துவதும், பயன்படுத்துவதும், பயிற்றுவிப்பதும் சபையினுடைய நோக்கமாகக் காணப்பட வேண்டும்.

# சுவாரசியமான கடிதங்கள்

## சரிப்படுத்தப்பட வேண்டிய கடுமையான தவறுகள்

அருமை சகோதரர் ரசல் அவர்களே:--

சில சபைகளில் நடந்துகொண்டிருக்கும் சில காரியங்கள் குறித்து உங்களுக்கு எழுதிட வேண்டுமென்று நீண்ட நாட்களாக விருப்பங்கொண்டிருந்தேன்; எனினும் நான் தவறாய்ப் புரிந்திருப்பேனோ என்னும் அச்சத்தினால், எழுதுவதற்கான தைரியமற்று இருந்தேன். இக்காரியமானது மிகவும் அடிக்கடி எனது கவனத்திற்கு வந்துள்ளது மற்றும் இது கர்த்தருடைய காரணங்களுக்கு மிகவும் பாதகமானவையாகத் தோன்றுகின்றதினால், சில விஷயங்களை எழுதும்படிக்கு ஏவப்பட்டுள்ளேன் மற்றும் எனது சார்பிலான மோசமான கணிப்பாய் உங்களுக்குத் தோன்றிடும் எதற்காகவும், நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்.

சில அருமையான சகோதரர்கள் மூப்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இவர்கள் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு வைராக்கியமுடையவர்களாய்க் காணப்பட்டனர். பெரோயா கூட்டங்கள் நடத்தலாம் என்று முன்வைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளவும்பட்டது. இந்த அருமையான சகோதரர்களில் சிலர் வெளியில் காணப்படுபவர்களைப் "போஷிப்பதுதான்" முக்கியமானது என்றும், "தேவனுடைய மந்தையை மேய்ப்பது" அவ்வளவுக்கு முக்கியமல்ல என்றுமுள்ள கருத்துக்களை உடையவர்களாய்க் காணப்படுகின்றனர். ஆகையால் பெரோயா கூட்டத்திற்கு வரும்போதெல்லாம், கூட்டத்தைத் துவங்குகையில் வழிநடத்துபவர்: "அருமையான நண்பர்களே, இன்று பாடத்தை நான் பார்த்து வரமுடியாததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்" அல்லது "நான் இன்னென்ன காரியங்களில் மிகவும் ஈடுபட்டுக்காணப்பட்டிருந்தபடியால் (Busy) இன்றையப் பாடம் எதிலிருந்துத் துவங்குகின்றது என்று நான் அறியேன்" என்று சொல்லிவிடுவார். இன்னுமாக "சபையாருக்கு இப்பாடங்கள் அனைத்தும் நன்கு தெரியும், ஆகையால் இதைக்குறித்து அதிகம் அறிந்திருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் பரவாயில்லை" என்று வழிநடத்துபவர்கள் கூறுவதை நான் அடிக்கடி கேட்டிருக்கின்றேன்.

இச்சிந்தனைகளானது அவர்களைக் கவனமற்றவர்களாகவும், அக்கறையற்றவர்களாகவும் மாற்றுகின்றது. நல்ல ஒரு சபையில், வழிநடத்துபவர் தனது அறியாமையைத் தெரிவிப்பதைக் கேட்கையில் எனக்குப் பெரும் வேதனையளிக்கின்றதாய் இருக்கின்றது. இதன் விளைவென்ன? கூட்டம் துவங்குகின்றது; ஒரு கேள்வி கேட்கப்படுகின்றது; சகோதரர் A தனது கண்ணோட்டத்தைத் தெரிவிக்கின்றார், பின்னர்ச் சகோதரர் B, பின்னர்ச்

சகோதரர் C, பின்னர்ச் சகோதரி D தங்கள் கண்ணோட்டங்களைத் தெரிவிக்கின்றனர். கண்ணோட்டங்கள் முரண்படவும் செய்கின்றது. தனக்கு அனைத்தும் நன்றாய்த் தெரியுமென எண்ணுகின்ற சகோதரன்: "இதெல்லாம் தவறு; இன்னென்னவை தான் சரி" என்கிறார்; பின்னர்ச் சில கலந்தாய்வுகள் நடைபெறுகின்றன; பின்னர்த் தனக்கு அனைத்தும் நன்றாய்த் தெரியுமென எண்ணுகின்ற அதே சகோதரன் மறுபடியுமாக "இவைகள் சரியல்ல" என்று கூறுகின்றார். வழிநடத்துபவர் தர்மசங்கடத்திற்குள்ளாகின்றார் மற்றும் தனது பாடங்களை அவர் படித்து வராததினால், அவர் ஒரு வார்த்தைக்கூடச் சொல்வதில்லை மற்றும் இறுதியில் எந்தத் திட்டவட்டமான பதில் கிடைக்காத நிலையில் கேள்வியானது கடந்து செல்லப்படுகின்றது.

சில கூட்டங்களில் அருமையான நண்பர்களில் சிலர் தங்கள் வாயைத் திறக்காமலேயே வீட்டிற்குத் திரும்புகின்றனர்; காரணம் அவர்கள் பேசிடுவதற்கு ஊக்கமூட்டப்படுகிறதில்லை. நன்கு திறமையுடையவர்களாய்க் காணப்படும் சிலர் அனைத்து உரையாடலையும் பண்ணுகின்றனர் மற்றும் சில சமயங்களில் மூன்று அல்லது நான்கு பேருக்கு இடையிலான சிறு உரையாடல் வாதங்களைச் சபையார் அமர்ந்து, கேட்க மாத்திரமே முடிகின்றது.

இன்னொரு காரியம் என்னவெனில்: வாட்ச் டவரில் எத்தனை தரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சில வழிநடத்துபவர்களும், சபையாரும் கூட்டத்தைத் துவங்குகையில் கேள்வி புத்தகத்தை ஒரு கரத்திலும், வேதாகமப் பாடங்களை (volume) இன்னொரு கரத்திலும் வைத்திருக்கின்றனர். வாசிப்பதே அதிகமாய் இருப்பதினால், கலந்தாய்வு காணப்படுகிறதில்லை மற்றும் சில காரியங்கள் "பாடங்களில் மிகவும் தெளிவாய்க் கொடுக்கப்பட்டிருப்பதினால், கலந்தாய்ந்திட அவசியமில்லை" என்றும் அவ்வப்போது கூறி கலந்தாய்வு பண்ணுகிறதில்லை.

உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவந்திருப்பவைகள் சரியாய் இல்லை என்றால், சகோதரர் ரசல் அவர்களே இக்கடிதத்தை உங்களது குப்பைத்தொட்டியில் எறிந்துவிடுங்கள். எனினும் அருமையான சகோதரர்களாகிய மூப்பர்கள் இவ்வகையான கர்த்தருடைய ஊழியத்திலுள்ள - மந்தையைப் போஷிப்பதிலுள்ள தங்களது பொறுப்பினை உணர்ந்துகொள்ளத்தக்கதாக அவர்களுக்கும் உதவியாக இருக்கும் மற்றும் இந்நிலைமைகளைச் சரிப்படுத்தும் எதையேனும் தேவனால் வழிநடத்தப்படுகின்ற உங்களது பேனாவானது எழுதிடும்படிக்குக் கர்த்தரிடம் நான் ஊக்கமாய் ஜெபம் ஏறெடுக்கின்றேன்.

உங்களது சோதனைகளிலும், சந்தோஷங்களிலும் தேவனுடைய ஆறுதலும், பலமும் காணப்படத்தக்கதாக, உங்களை ஜெபத்தில் நான் தினந்தோறும் நினைவுகூருகின்றேன்.

ஒரே நம்பிக்கையில் உங்கள் சகோதரன் ____________________

[பதில்:- மூப்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சகோதரர்கள் திறமையற்றவர்களாய்க் காணப்படுவார்களானால், மற்றவர்களை தேர்ந்தெடுப்பது சபையாருடைய கடமையாக இருக்கின்றது -அதாவது ஒருவேளை குறைவான திறமை இருந்தும், ஆராய்ச்சி செய்வதன் மூலம், மிகவும் உதவிகரமாகக் காணப்படும் ஒருவரை - தேர்ந்தெடுப்பது சபையாருடைய கடமையாக இருக்கின்றது. ஒரு நல்ல வழிநடத்துபவர் என்பவர் - அதிகமாய்ப் பேசுபவரல்ல, மாறாக தன்னம்பிக்கையற்றிருப்பவர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம், அவர்கள் சரியாய்ப் பதில் சொல்லிடுவதற்கு அவர்களுக்கு உதவுபவர் ஆவார் அல்லது ஒரு நல்ல வழிநடத்துபவர் என்பவர் - ஒருவரால் கொடுக்கப்பட்ட பதில் தனது கணிப்பில் தவறாய் இருக்க, முன்வைக்கப்பட்டுள்ள தவறான கண்ணோட்டத்தினைக் குறிப்பிட்டுக் கூறாமல், சரியான கருத்தினை அன்பாய்க் கூறி, தனது கருத்துக்களுக்கு ஆதரவான வேதவாக்கியங்களையும், "வேதாகமப் பாடங்களிலிருந்தும் மேற்கோள்களையும் குறிப்பிடுபவர் ஆவார்.]

## பிரயோஜனமான பெரோயா ஆராய்ச்சிகள்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:--

இந்நாட்டிலுள்ள இவ்விடத்திலும், மற்றப்பாகங்களிலும் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளை நடத்திடும் சகோதரர்களில் சிலர், தாங்கள் அவ்வாராய்ச்சிகளில் அதிகமாய்ப் பேசிட வேண்டும் என்ற எண்ணத்தில் காணப்படுவதை நான் கவனித்துள்ளேன். ஓர் ஆராய்ச்சி வகுப்பினை நடத்தும் ஒருவர் ஒவ்வொரு கேள்விக்கு அல்லது கருத்திற்கு ஐந்து நிமிடங்கள் செய்திக்கொடுப்பது என்பது தவறாகும்; மாறாக ஆராய்ச்சியானது முறையான விதத்தில் நடத்தப்படுகின்றதா என்று பார்த்துக் கொள்வதும், முடிந்தமட்டும் அநேகரிடமிருந்து கருத்துக்களை வரவைப்பதற்குப் பிரயாசம் எடுப்பதும், பின்னர்த் தனது சுருக்கமான விளக்கத்துடன் கேள்வியினை நிறைவுபண்ணுவதும்தான் தனது காரியமாய் இருக்கின்றது என்று வழிநடத்துபவர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சபையில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான திறமையுள்ள ஒரு சகோதரர் சபையில் காணப்படுவதை நான் சிலசமயம் கவனித்திருக்கின்றேன். இவர் ஒவ்வொரு கேள்விக்கும் மற்றும் கருத்திற்கும் நீண்ட நேரம் விளக்கம் கொடுப்பவராய் இருப்பார். அதிகம் திறமையில்லாதவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கத்தக்கதாக, இத்தகைய திறமிக்கவர் தனது வைராக்கியத்தினைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்வது ஞானமாய் இருக்குமல்லவா? "சுருக்கமே பகுத்தறிவின் ஆன்மா" என்று நாம் சிலசமயம்

சொல்வதுண்டு. நம்முடைய பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளில் சுருக்கமாய்ப் பேசுதல் என்பது உதவியாய் இருக்கும். மிகுந்த கிறிஸ்தவ அன்புடன், நம்முடைய கர்த்தருக்குள் உங்கள்,

F.H. HARRISON.

**பதில்:**

[பெரோயா வகுப்பை வழிநடத்துபவர் மிகவும் உதவிகரமாய்க் காணப்பட்டு, சபையாரிடமிருந்து பதில்களை வரவழைக்க முடிகிறவராகக் காணப்பட வேண்டும் என்று நாம் ஒப்புக்கொள்கின்றோம் - இல்லையேல் சகோதரர் அவரவர் தங்களுக்காக இல்லங்களிலேயே இருந்து வாசித்துக்கொள்ளலாமே. இது குறித்தக் கருத்துக்களை வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் முன்வைத்திட பிரயாசம் எடுத்துள்ளோம். எனினும் வழிநடத்துபவரின் விளக்கமானது எப்போதுமே மிகச் சுருக்கமாகக் காணப்பட வேண்டுமென்ற கருத்துக்கு, மேலே இடம்பெறும் கடிதத்தை எழுதியுள்ளவருக்கு, நாங்கள் ஒப்புக்கொள்கிறதில்லை. மிகவும் சாமார்த்தியமான வழிநடத்துபவரால் கூடப் பதில்களைச் சரியாய்ச் சபையாரிடமிருந்து வரவழைக்க முடியாத சில கேள்விகள் காணப்படும். இம்மாதிரியான தருணங்களில் தன்னால் முடிந்தமட்டும் பதில்களை வரவழைத்தப் பிற்பாடு, வழிநடத்துபவர் அக்கேள்விக்கு மிகவும் முழுமையான விதத்தில், அதே சமயம் முடிந்தமட்டும் சுருக்கமாகப் பதிலைக்கொடுத்திடுவது சரியான காரியமேயாகும். உண்மைதான் அனைத்துப் பதில்களும் அல்லது கருத்துக்களும் சுருக்கமாகவும், குறிப்பாயும் இருக்க வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் நீண்ட நேரம் எடுத்துப் பதில் கொடுக்கும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருப்பவர்கள் ஆரம்பத்திலேயே வழிநடத்துபவரால் தனிப்பட்ட விதத்தில், சரியாய் நடந்துகொள்வது குறித்து அன்புடன் நினைப்பூட்டப்பட வேண்டும்; ஒருவேளை தேவைப்படும் பட்சத்தில் அன்பான விதத்தில் சபையார்முன்பும் நினைப்பூட்டப்படலாம். ஒருவேளை அவர் தொடர்ந்து அப்படியே காணப்பட்டால், மாற்றுவழி என்னவெனில் - பொதுவான விதத்தில் யார்வேண்டுமானாலும் பதில்கொடுப்பதற்குக் கேட்டுக்கொள்வதைத் தவிர்த்துக்கொண்டு, மாறாக நியாயமான வாய்ப்புகளை மாத்திரமே கொடுத்து, சபையாரிலுள்ள பல்வேறு அங்கத்தினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கேள்விக்கேட்பதாகும். ஒருவேளை இப்படிச் செய்வது தவிர்க்கப்பட வாய்ப்பிருக்குமானால், அப்போது இது விரும்பத்தகுந்ததாய் இராது.

# சுவாரசியமான கடிதங்கள்

## *வகுப்புகளைப் பிரித்தல் தொடர்பாக...*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

ஜூன் 1, வாட்ச் டவர், 1915 வெளியீட்டின், 2-ஆம் பக்கத்தில் சபையில் இருபது நபர்களுக்கு மேல் காணப்படுகையில் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளைப் பிரித்து நடத்துதல் குறித்தும், இதே விதியானது, ஜெபகூட்டங்களுக்கும் பிரயோஜனமாயிருக்குமென நீங்கள் எண்ணுவதாகப் பேசியிருந்தீர்கள். எங்கள் சபையிலுள்ள சிலர் புதன்கிழமை கூட்டத்தையும் பிரித்து நடத்திட விரும்புகின்றனர்; ஆனாலும் மற்ற வகுப்புகளைப் பிரித்து நடத்துவது குறித்து எதுவும் பேசிடவில்லை. நாங்கள் அனைவருமே நமது அருமை கர்த்தரின் சித்தத்தையே செய்ய வேண்டு மென்றிருக்கின்றோம் என்பதில் எனக்கு உறுதியே. பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தைப் பொருட்படுத்தாமல் வகுப்புகள் பிரிக்கப்பட வேண்டும் என்பது உங்களது கருத்தாகக் காணப்படுகின்றதா?

### இதழாசிரியரின் பதில்:

வாட்ச் டவரிலும், வேதாகமப் பாடங்கள் முதலானவைகளிலும் கொடுக்கப்பட்டுள்ள எல்லாமே, அறிவுரையாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும்; எதுவும் கட்டளையாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது. கர்த்தரும், பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் (யூதாசின் இடத்தில் பரிசுத்த பவுல் இடம்பெறுகின்றார்) மாத்திரமே தேவனுடைய ஜனங்களுக்குக் கட்டளையிடுவதற்கான உரிமையினை உடையவர்களாய் இருக்கின்றனர் என்றே நாங்கள் நம்புகின்றோம். இதழாசிரியர் உள்பட மற்றவர்களோ, ஆலோசனை வழங்குவதற்கு மாத்திரமே உரிமை உடையவர்களாய் இருக்கின்றனர். மேலும் அத்தகைய ஆலோசனைகளுக்கு ஆதரவாக வேதவாக்கியம் அல்லது தெளிவான காரணம் எப்போதும் காணப்பட வேண்டும்.

இருபதுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கொண்டிருக்கையில், வகுப்புகள் பிரிக்கப்படுவதாக என்று உலகம் முழுவதிலும் காணப்பட்டதான வேதமாணவர்களின் சபைகளுக்கு நாங்கள் பரிந்துரைத்தபோது, நாங்கள் அதே விதியையே பின்பற்றுகிறவர்களாகவே இருக்கின்றோம் - அதாவது ஆலோசனையாக மாத்திரம் தெரிவித்துள்ளோம். இதற்கு எந்த வேதவாக்கிய ஆதாரம் இல்லாதபடியால், நாங்கள் எங்கள் காரணங்களை முன்வைத்திருந்தோம், அவை: பெரிய

எண்ணிக்கையில் காணப்படுகின்றதான சபையார் ஆராய்ச்சிப் பாடங்களில் மிகச் சிறப்பாய்ப் பங்கெடுக்க முடியாது மற்றும் அவற்றிலிருந்து அதிக ஆசீர்வாதத்தினை பெற்றுக்கொள்ளவும் முடியாது. புதன்கிழமை மாலையில் நடைபெறும் சாட்சிக்கூட்டங்களில், அதில் பங்கெடுக்கும் அனைவருக்கும் ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் கடந்துவருகின்றதென நாம் நம்புகின்றோம் மற்றும் இதைப்போலவே பெரோயா வகுப்புகளில் பங்கெடுப்பதினாலும், ஆர்வம் அதிகமாகுகின்றது, பாடங்கள் ஆழப்பதிகின்றது மற்றும் இப்படியான ஆசீர்வாதங்களை அதிகமாக்குகின்றது என்றும் நாம் நம்புகின்றோம்.

எனினும் ஒவ்வொரு விஷயத்திலும் சபையாரே தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டும் மற்றும் தங்கள் சூழ்நிலைக்கு வகுப்பைப் பிரித்திடலாமா அல்லது இல்லையா என்றும் பெரும்பான்மையானவர்களின் வாக்கினால் தீர்மானித்திட வேண்டும். பொதுவான விதியானது சில குறிப்பிட்ட விஷயங்களில் அப்பியாசப்படுத்த முடியாது, காரணம் அது சம்மந்தப்பட்ட வேறே சூழ்நிலைகளாகும். வேதாகமத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான திவ்விய ஏற்பாட்டின்படி, சபையே அதன் ஒவ்வொரு கேள்விகளுக்கும் தீர்மானம் எடுத்துக்கொள்கின்றது என்பது எப்போதும் புரிந்துகொள்ளப்படுவதாக. வாக்கெடுக்கப்படுகையில் கலந்துகொண்டிருக்கின்ற அர்ப்பணிக்கப்படாதவர்களின் விருப்பங்களானது, அர்ப்பணிக்கப்பட்டவர்களால் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டாலுங்கூட, அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மாத்திரமே சபையாராக இருக்கின்றனர்.

ஒவ்வொரு சபையாரும்/கூடுகையும், எக்ளீஷியாவாக அல்லது சபையாகக் கருதப்படலாம் மற்றும் மற்றச் சபையாரிடமிருந்து முற்றும் சுதந்தரமானவர்களாகக் கருதப்படலாம் என்றாலும், ஒற்றுமையும், ஐக்கியமும் மிகவும் விரும்பத்தக்கவையாகும் மற்றும் ஒரு பட்டணத்திலுள்ள பல்வேறு சபையார்/கூடுகைகளானது ஒரு எக்ளீஷியாவில் அல்லது சபையில், ஆவியில் ஒன்றிணைக்கப்பட்டு, இப்படியாய் அவ்வப்போதான பொதுக்கூட்டங்களின், பொது ஐக்கியத்தின் பலன்களைப் பெற்றுக்கொள்வதும், ஊழியக்காரர்களாகிய - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் தேர்ந்தெடுக்கும் கூட்டு ஏற்பாட்டில் பங்கெடுப்பதும் மிகவும் சரியானதே. இப்படியாக ஆவியில் ஒன்றிணைகையில் ஒவ்வொரு சபையாரும், தனிப்பட்ட நபர்களும் ஒத்துழைப்பின் பலன்களுக்காகச் சுதந்தரங்களைத் தியாகம்பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள்.

# சுவாரசியமான கடிதங்கள்;

## *சபை ஒழுங்குத் தொடர்பான கேள்விகள்*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:--

எங்களில் சிலர் பின்வரும் இரண்டு காரியங்களில் உங்களது ஆலோசனை வேண்டுமென விரும்புகின்றனர்; அவை:

(1) சபையால் அங்கீகரிக்கப்படாத அல்லது நியமிக்கப்படாத சிறு கூட்டங்களை நடத்திடும் அச்சபையின் சகோதரர்கள்பால் நாம் எத்தகைய மனோநிலையைக் கொண்டிருக்க வேண்டும்?

(2) சாட்சிக்கூட்டங்கள் நடத்துவதற்கான உங்களது பரிந்துரையையும், அவைகள் குணலட்சணத்தின் வளர்ச்சியில் பிரயோஜனமாய் உள்ளன என்று நீங்கள் தெரிவித்துள்ளதையும் நாங்கள் கவனித்திருக்கின்றோம். ஆனால் இத்தகையக்கூட்டங்கள் நடத்திடுவதற்கு மூப்பர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கையிலும், சபை இக்கூட்டங்களைப் பெற்றிருக்க விரும்புகையிலும், நாங்கள் என்ன செய்திட வேண்டும்?

### இதழாசிரியரின் பதில்:

சபையில் ஓர் அங்கத்தினனாக உரிமைபாராட்டிடும் ஒரு சகோதரன், கூட்டங்கள் நடத்துவது தொடர்புடைய விஷயத்தில் அச்சபையாரை முற்றிலும் புறக்கணிப்பது என்பது ஞானமற்றக் காரியமாயிருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம். அவர் கூட்டங்களைத் துவங்குவதும், அது குறித்து விளம்பரமிடுவதும், மற்றும் சபைகூட்டம் வழக்கமாய் நடைபெறும் நேரங்களில் அவைகளை நடத்துவது என்பதும், சபையைப் புறக்கணிப்பதாகும்; மற்றும் ஒரே மணி நேரத்தில் கூட்டங்களை நடத்துவது என்பது எதிர்ப்பாகவே கருதப்படலாம். இப்படியெல்லாம் நடைபெற்றாலும் கூட, இவை குற்றத்திற்கான அல்லது சபையில் நீக்கப்படுவதற்கான காரணமாகாது. இராஜ்யத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுகிறதினால், அது பரிசுத்த பவுலடிகளார் தெரிவிப்பதுபோன்று, சுவிசேஷமானது விரோதமான மற்றும் எதிர்க்கிற விதமாய் பிரசங்கிக்கப்பட்டாலும், அது பிரசங்கிக்கப்படுகிறதினால் சபையார் களிகூர வேண்டும் (பிலிப்பியர் 1:15-18). எந்த ஒரு கிறிஸ்தவ பிரிவிலுள்ள கிறிஸ்தவ ஊழியக்காரனையும், அவரது பிரயாசத்தையும்குறித்துத் தீமையாய்ப் பேசிடுவதற்கு அல்லது சிந்திப்பதற்கு உரிமையில்லாததுபோல, அச்சகோதரனையும், அவரது பிரயாசங்களையும் குறித்துத் தீமையாய்ப் பேசிடுவதற்கு அல்லது சிந்தித்திடுவதற்கு சபையாருக்கு உரிமையில்லை.

ஒருவேளை வழக்கமான கூட்டமாக இல்லாமல், எதிர்க்கும் விதமான கூட்டமாக இல்லாமல், ஒரே கால நேரங்களில் நடத்தப்படும் கூட்டமாக இல்லாமல், மாறாக தனிமையில் ஒருவரைச் சந்திக்கையில் அல்லது கொஞ்சம் பேரைச் சந்திக்கையில், சிலருக்குச் சிறு உரைக்கொடுப்பதற்கென ஒரு சகோதரன் அழைக்கப்படுவாரானால், இதில் கண்டனம்பண்ணுகிறதற்கு எந்த முகாந்தரமுமில்லை. மாறாக நாம் அனைவரும் அவருடைய அன்பையும், வைராக்கியத்தையும் பாராட்டிட வேண்டும் மற்றும் சகோதரனுக்குக் கிடைத்த சிலாக்கியங்களுக்காகக் கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டும் மற்றும் நமக்கான நன்மைகளை நாடிட வேண்டும்.

கர்த்தருடைய வேலையை மேற்பார்வையிடுவதற்கான மற்றும் சுவிசேஷத்தை இன்னொருவர் பிரசங்கிப்பதைத் தடுப்பதற்கான உரிமையினை, அவர் நம்மில் யாருக்கும் கொடுக்கவில்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். முற்காலத்துச் சீஷர்கள் ஒருமுறை இப்படிச் செய்தார்கள் மற்றும் அவரோ: "அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்" (மாற்கு 9:39) என்று கூறிக் கடிந்துகொண்டார் (மாற்கு 9:38-40). மீண்டுமாக "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத்தேயு 18:20) என்றும் கூறினார். அவர் அந்த இரண்டு அல்லது மூன்று பேர், மனிதரால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும், அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறவில்லை. ஆகையால் அன்பின் அடிப்படையில், ஞானத்தின் அடிப்படையில், திவ்விய சித்தம் மற்றும் சபையின் ஒருமைப்பாட்டிற்கான மதிப்பின் அடிப்படையில் மாத்திரமே, சபையினுடைய எந்த ஒத்துழைப்பும் காணப்பட வேண்டும்.

நாம் மிகவும் வலியுறுத்தியுள்ளதான வாராந்தர சாட்சிக்கூட்டங்களுக்கு எதிர்ப்பவர்கள் இருக்கின்றார் என்று கேள்விப்படுகையில், நமக்கு ஆச்சரியமே ஏற்படுகின்றது. இவ்வகையான கூட்டமானது, எங்களுடைய அனுபவத்தின்படி, ஆவிக்குரியவற்றில் மிகவும் உதவிகரமானவைகளில் ஒன்றாகும். அநேகம் இடங்களில் ஒரு கூட்டம் நடத்தப்படும் அவசியம் என்று கருதப்பட்டால், சபையார் சந்தேகத்திற்கிடமின்றி வாராந்தர சாட்சிக் கூட்டத்தையே அனைத்திலும் சிறந்தது மற்றும் மிகவும் உதவிகரமானது என்பார்கள். புதன்கிழமை மாலை வேளையானது இவ்வகைக் கூட்டங்களுக்கு மிகப் பொருத்தமானதாக இருக்குமென்று நாம் பரிந்துரைக்கின்றோம். முந்தின வியாழக்கிழமைக்கான மன்னாவானது வாராந்தர ஆய்வுபொருளாக இருக்கும்படிக்கு நாம் ஏற்கெனவே பரிந்துரைத்திருக்கிறோம். இதைக் கடைப்பிடிக்கையில், உலகமெங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் ஒரே விஷயத்தின் அடிப்படையில் ஆராய்ந்திட முடியும் மற்றும் சிந்தித்திட முடியும் மற்றும் அதே அடிப்படையிலான அனுபவங்களைப் பகிர கேட்டிடலாம் மற்றும் இதனால் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

எங்குமுள்ள சபையார் இம்முறையை நடத்திப்பார்க்க நாங்கள் பரிந்துரைக்கின்றோம். ஜீவியத்தின் அனுபவங்களில் கர்த்தருடைய வழிநடத்துதலை எதிர்ப்பார்க்கும் பழக்கம் வந்திடுமானால் மற்றும் அனுபவங்களையும், படிப்பினைகளையும் கவனித்து, அவைகளைத் திவ்விய வார்த்தைகளுடைய அறிவுரையுடன் ஒப்பிட்டுப் பார்த்திடும் பழக்கம் வந்திடுமானால், அவர்கள் சாட்சி பகிர்ந்திடுவதற்கு அநேகவற்றைப் பெற்றிருப்பார்கள். இவ்வழிமுறையினைப் பின்பற்றுபவர்கள், முந்தையக் காலங்களைக் காட்டிலும் இப்பொழுது எப்படி ஒவ்வொரு நாளும் மிகவும் விலையேறப் பெற்றதாய் உள்ளது என்று கவனிக்கையில் ஆச்சரியமே அடைவார்கள்.

அநேகருக்கு வாழ்க்கை என்பது அன்றாடக் கடமையாக அல்லது ஒரு கனவாகக் காணப்படுகின்றது. புதுச்சிருஷ்டிகளென நாம் ஒவ்வொரு நாளையும், கிறிஸ்தவ அனுபவங்களினாலும் மற்றும் திவ்விய வார்த்தைகளினால் வழிநடத்தப்படும் மற்றும் வனையப்படும் எண்ணங்களினாலும் நிரம்பினவையாகப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம். இந்தப் பாக்கியமான நிலைமையானது, நாம் சுட்டிக்காட்டியுள்ளதான வழிமுறையினால் பெரிதும் அடையப்பெறுகின்றது. நாம் வாசித்திருக்கும் வசனங்களின் மற்றும் அதிகாரங்களின் எண்ணிக்கை அடிப்படையில், கிருபையிலுள்ள நம்முடைய வளர்ச்சியானது காணப்படாமல், மாறாக தேவனுடைய சித்தம் குறித்து நாம் ஏற்கெனவே அறிந்திருப்பவைகளை மற்றும் தினந்தோறும் கற்றுக் கொண்டிருப்பவைகளை நம்முடைய இருதயங்களும், மனங்களும், சித்தங்களும் செயல்படுத்துவதின் அடிப்படையிலேயே காணப்படுகின்றது.

மூப்பர்கள் அல்ல, சபையாரே, தாங்கள் என்ன கூட்டங்கள் நடத்த விரும்புகின்றார்கள் என்பதைத் தீர்மானித்திட வேண்டும். மேலும் சபையார் தீர்மானித்திடும் போதும்கூட, மூப்பர்கள் ஊழிய பொறுப்பினின்று விலகுவதற்குரிய (resigning) உரிமையினை உடையவர்களாகவே நிச்சயமாகக் காணப்படுகின்றனர். கர்த்தருடைய வீட்டாருக்கு ஊழியஞ்செய்ய விரும்புவதற்குப் பதிலாக, அதை ஆளுவதற்கு விரும்பிடும் இத்தகைய மூப்பர்கள் ஊழியத்தினின்று விலகுவது என்பது மூப்பருக்கும், சபையாருக்கும் நலம் பயக்கின்றதாய் இருக்கும்.

எங்களது அனுபவங்களின்படி, பெரும்பாலும் எதிர்ப்புகள் என்று தோன்றுகிறவைகள், தவறான புரிந்துகொள்ளுதல்களாய்க் காணப்படுகின்றன. மீண்டுமாக வேதாகம பாடங்களின் ஆறாம் தொகுதியினைக் கவனமாய் ஆராய்ந்திடும்படிக்கு நாம் ஆலோசனைக் கூறுகின்றோம். நம் அனைவரின் ஞாபகங்களானது எத்தனை ஓட்டை ஒழுக்காக இருக்கின்றது என்பதை அருமையான நண்பர்களே, உங்களுக்கு நினைப்பூட்டுகின்றோம்; வேதாகம பாடங்களினுடைய முழு ஆறு தொகுதிகளையும், ஒவ்வொரு வருடமும்,

நாளொன்றிற்குப் பன்னிரண்டு பக்கங்கள் வைத்து வாசிப்பதாகிய அநேகரால் பின்பற்றப்பட்டுவரும் வழிமுறையின் ஞானத்தை அருமையான நண்பர்களே, உங்களுக்கு நினைப்பூட்டுகின்றோம். இவ்வழிமுறையினைப் பின்பற்றுபவர்கள் மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதாகத் தகவல் கொடுத்துள்ளனர் மற்றும் சத்தியத்தில் மிகுந்த தெளிவாகியுள்ளதற்கு இவர்கள் சான்றும் பகர்கின்றனர்.

---

R241 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# யார் பிரசங்கிக்க வேண்டும்

ஆவியினுடைய அபிஷேகித்தலைப் பெற்றுக்கொண்டு மற்றும் இப்படியாய்க் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்தினர்களாய் அங்கீகரிக்கப்பட்டவர்கள் அனைவருமே பிரசங்கிக்க வேண்டும் என்று நாம் பதிலளிக்கின்றோம். தலை போலவே ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் - "சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கென அவர் என்னை அபிஷேகித்துள்ளார்" என்பது உண்மையாகவே இருக்கின்றது. நாம் ஒவ்வொருவருமே மற்றவர்களிடமிருந்து வேறுப்பட்ட விதத்தில் தாலந்துகளையும், வரங்களையும் பெற்றிருக்கின்றோம் மற்றும் நம்மில் எவருமே, நமது தலைப்போன்று பூரணமானவர்கள் அல்ல; ஆனாலும் ஒவ்வொருவனும் தன்னால் முடிந்தமட்டிலும் பிரசங்கிப்பதற்குரிய பொறுப்பினை உடையவனாய் இருக்கின்றான். சிலருக்குத் திரளான ஜனக்கூட்டங்களுக்குப் பிரசங்கிக்க முடியும்; வேறுசிலருக்கு இரண்டு அல்லது மூன்று பேருக்குப் பிரசங்கிக்க முடியும்; சிலருக்கு வீடு வீடாய்ச் சென்று பிரசங்கிக்க முடியும்; சிலருக்கு ஏற்றகாலத்தில் சில வார்த்தைகளைச் சொல்லிட முடியும்; சிலருக்குப் பிரதிகளை விநியோகித்திட முடியும்; சிலருக்கு மற்றவர்கள் பிரசங்கிக்க உதவத்தக்கதாக தங்களது உக்கிராணத்துவத்தின் கீழ்க்காணப்படும் அர்ப்பணிக்கப்பட்ட பணத்தைக்கொடுக்க முடியும். சிலருக்கு இவைகளில் அநேகவற்றைச் செய்ய முடியும் மற்றும் சிலருக்கு இவைகள் அனைத்தையும் செய்திட முடியும், மற்றும் அனைவராலுமே மறுரூபமாகுதலுக்கு ஏதுவான நற்செய்தியின் வல்லமையினைத் தங்கள் வாழ்க்கை மற்றும் வழக்கங்கள் மூலமாகப் பிரசங்கிக்க முடியும்; ஏனெனில் நாம் அனைவரும் மனுஷர் அனைவராலும் அறியப்படும் மற்றும் வாசிக்கப்படும் நிருபங்களாய் இருக்கின்றோம்.

நீங்கள் பிரசங்கித்துக்கொண்டிருக்கின்றீர்களா? பிரசங்கிப்பவர்களே

அல்லாமல் வேறு எவரும் சிறுமந்தையில் காணப்படமாட்டார்கள் என்று நாம் நம்புகின்றோம். உங்கள் தாலந்துகள் அனைத்தையும் கொண்டும் மற்றும் உங்கள் முழுப்பெலத்தோடும் நீங்கள் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்களா? பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் ஏற்ற காலத்தில், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று சொல்லக் கேட்பீர்கள். ஒருவேளை பிரசங்கிக்க வில்லையெனில் இப்போதே துவங்குங்கள்; நீங்கள் அபிஷேகிக்கப் படுவதற்கு முன்னதாகவே நீங்கள் உங்களுடைய அனைத்தையும் அர்ப்பணித்து விட்டீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் மற்றும் அர்ப்பணித்ததில் ஒரு பகுதியைத் திரும்ப எடுத்து வைத்துக்கொண்டு, உங்களால் ஜெயங்கொண்டவர்கள் ஆகிடமுடியாது.

---

R4771 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்

### 1 தெசலோனிக்கேயர் 5:13

நம்முடைய இந்த நாட்களில் பரவலாய் அதிருப்தியானது நிலவி வருவதினாலும் மற்றும் உலகத்தாராயிராத தேவனுடைய பிள்ளைகளானவர்கள் உலகத்தில் காணப்பட்டு, அதினால் தாக்கத்திற்குள்ளாகுகின்றபடியினாலும் - ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், தினந்தோறும் தனது சரீரத்தைக் கீழ்ப்படுத்தி வைப்பதற்கும், முறுமுறுக்காமல் தனது நாவை காத்துக்கொள்வதற்கும், தனது இருதயத்தை அதிருப்தியிலிருந்து விலக்கிக் காத்துக்கொள்வதற்கும், தேவனால் நமக்குப் பாராட்டப்பட்டதான அவருடைய நன்மைகள் யாவற்றையும் உணர்ந்து, தேவனுக்கான நன்றியுணர்வில் இருதயங்களானது நிரம்பிக் காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்வதற்கும் விழிப்பாயிருப்பது என்பது மிகவும் அவசியமாகுகின்றது.

இன்னுமாக இந்தச் சுவிசேஷயுகத்தில் கர்த்தரால் அழைத்து, இழுக்கப்படுகின்றதான பாத்திரங்களானவர்கள், அனைவரும் உறுதியானவர்களாக - பலமான பாத்திரங்களாகக் காணப்பட வேண்டும். இத்தகையவர்களையே தேவன் தம்முடைய குமாரனுடைய மணவாட்டிகளாகவும், உடன்சுதந்தரர்களாகவும் காணப்படும்படிக்கு நாடுகின்றார். இவர்களது உறுதியும், திடமும், மற்றவர்களுடைய அசட்டையான மற்றும் அலட்சியமான தன்மையிலிருந்து வேறுபட்டதாய்க்

காணப்படுகின்றது. இவர்களது பெலவீனங்களானது சுதந்தரிக்கப்பட்டவைகளாக இருப்பினும், மற்றவர்களுக்குக் காணப்படுவதுபோலவே, அதிகமாகவே காணப்படுகின்றது. ஆகையால் இவர்களில் அநேகர் ஒன்று கூடப்பண்ணப்படும் போது, அதாவது வேதாகம ஆராய்ச்சி வகுப்பிற்குக் கூடிவருகையில், ஒருவருக்கொருவர் மிகுந்த பொறுமையுடன்கூடிய சகிப்புத் தன்மையைப் பெற்றிருக்கும் அவசியமுடையவர்களாய்க் காணப்படுகின்றனர். ஒருவேளை கருத்துவேறுபாடுகளும், கருத்து மோதல்களும் ஏற்படுகையில், இவர்கள் ஒருவருக்கொருவர் உண்டுபண்ணிடும் பாதிப்பானது, பலம் குறைந்த குணமுடைய, உறுதி குறைந்த, ஸ்திரமற்ற தன்மையுடைய ஜனங்கள் மத்தியில் ஏற்படுவதைக் காட்டிலும் நிச்சயமாகவே அதிகமாயிருக்கும். இதனாலேயே இவர்கள், "பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகள், உண்மையாய் இருப்பதை அறிந்து கொள்கின்றனர்.

ஆகையால் இவ்வகுப்பார் சத்தியத்தோடுகூட, சத்தியத்தின் ஆவியையும், பரிசுத்தத்தின், சாந்தத்தின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின், அன்பின் ஆவியையும் பெற்றிருக்க வேண்டுமெனத் தேவன் கூறுகின்றார்; இவை இல்லையெனில் மோசமான பிணக்குகளும், பாதிப்புகளும் ஏற்படும்.

வேதமாணவர்கள் அடங்கியுள்ள எந்தவொரு சபையில், வேதாகம பாடங்களானது (volumes) புறக்கணிக்கப்படுகின்றதோ, அங்குப் பெலவீனமும், உலகப்பிரகாரமான போக்கும், சுகபோகப் பிரியமும், கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியக் குறைவு முதலானவைகள் நிச்சயமாய் வெளிப்படும். ஒருவேளை வேதாகம பாடங்களானது நடத்தப்பட்டும், ஆனால் அவைகள் இருதயத்திலும், ஜீவியத்திலும் அப்பியாசப்படுத்தப்படவில்லையெனில், ஆவியின் கனிகளாகிய - சாந்தம், தயவு முதலானவைகள் குறைவுப்பட்டுக் காணப்படும். புதுச்சிருஷ்டியினுடைய குணலட்சணத்தினை வளமாக்கிடத்தக்கதாக, மற்ற ஆவியின் கனிகளானது வளர்வதற்குரிய மண்ணிற்கான அஸ்திபாரமென அறிவின் ஒவ்வொரு அம்சமானது, பயன்படுத்தப்பட வேண்டும்.

தங்களுக்கான ஊழியக்காரர்களாய், மூப்பர்களாய் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை, தங்களது "அதிகாரிகளாக" அங்கீகரித்திடக்கூடாது என்றும், தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுவதற்குரிய எந்தப் பிரயாசங்களுக்கும் உடன்படக்கூடாது என்றும், சபையாருடைய கவனத்திற்கு நாம் கொண்டுவந்த தருணங்கள் இருக்கின்றன (1 பேதுரு 5:3). இன்னொரு பக்கத்தில் அங்கத்தினர்கள் சிலரைத் தவறான மனோநிலையினைக் கொள்வதற்கு வழிநடத்தத்தக்கதாக, குற்றம் கண்டுபிடிக்கும் ஆவியானது சபையாரால் உண்டுபண்ணப்படலாம் எனும் உண்மையினிடத்திற்கும் விசேஷித்த கவனத்தைக் கொண்டு வந்திடுவதற்கு நாம் விரும்புகின்றோம். சபையார்

மூப்பர்களை இறுமாப்பாய் ஆதிக்கம் பண்ணுவார்களானால், அது கர்த்தருடைய ஆவிக்கு முரணானதாகவே காணப்படும். அவர்கள் அன்புகூரப்பட வேண்டும், ஆதரிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்கள் சில அபூரணங்களைப் பெற்றிருக்கையில், அவர்களும் மற்ற மனுஷர்கள் போலவே அனுதாபம்கொள்ளப்படுவதற்கும், மன்னிக்கப்படுவதற்கும் மற்றும் பழியினை நிவர்த்திப்பண்ண பெறுவதற்கும் பாத்திரமானவர்களாகவே காணப்படுகின்றனர்.

எந்தளவுக்கு மந்தைக்கான ஊழியத்தில் மூப்பர்கள் அல்லது ஊழியக்காரர்கள் உண்மையாகவும், தாழ்மையாகவும், கடுமையான முயற்சி செய்கிறவர்களாகவும் காணப்படுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் சபையின் ஒவ்வொரு அங்கத்தினனுடைய இருதயப்பூர்வமான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்கின்றவர்களாய்க் காணப்படுவார்கள்.

உலகத்திலுள்ள சில ஜனங்களைப் போன்று, தேவனுடைய ஜனங்களில் சிலர் சில முக்கியத்துவமற்றக் காரியங்களைக் குறைக்கண்டுபிடிக்கும் கண்ணோட்டத்துடன் காண்கின்றனர்; உதாரணத்திற்குக் கூட்டங்கள் தொடர்புடைய விஷயங்களில், பாராளுமன்றத்தில் பயன்படுத்துவது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துதல் தொடர்பாகும். வேதாகமமானது எந்தக் குறிப்பிட்ட பாராளுமன்ற சட்டங்களை முன்வைத்திடாமல், தேவனுடைய ஜனங்களுக்கு, சபைக்கடுத்த காரியங்கள் அனைத்திலும், அவர்கள் ஒவ்வொருவரையும் நிர்வகிக்கிற ஒரு பரந்த, பொதுவான பிரமாணத்தையே கொடுத்திருக்கின்றார். இந்தப் பிரமாணத்தினை ஆண்டவர் சுருக்கமான வார்த்தைகளில், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறியுள்ளார் (யோவான் 13:34).

இந்த அன்பின் பிரமாணமானது, தேவனுடைய பிள்ளைகளென நமக்கிருக்கும் எல்லா உறவுகளையும் சீர்த்தூக்கிப் பார்த்திடுவதாக; நாம் தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பர்களில் ஒருவராகவோ அல்லது தெரிந்தெடுக்கப்படாதவர்களாகவோ இருப்பினும், அன்பின் பிரமாணமானது, நம்முடைய ஒவ்வொரு கிரியைகளையும், நம்முடைய ஒவ்வொரு வார்த்தைகளையும் - ஆம் நம்முடைய ஒவ்வொரு எண்ணங்களையும் சீர்த்தூக்கிப் பார்த்திடுவதாக. அருமையான சகோதரரே நம் அனைவராலும் இப்பிரமாணத்தினைத் தொடர்ந்து மனதில் நிலை நிறுத்திக் கொள்ள முடியுமானால், அது அநேகமான பிணக்குகளையும், மனஸ்தாபங்களையும் மற்றும் வலிகளையும் தவிர்த்துவிடும். அது நம்மை அதிகமாய் நமது ஸ்தோத்திரத்திற்குரிய ஆண்டவர் போன்றாக்கிடும் மற்றும் ஒருவர் இன்னொருவரின் முன்னிலையிலும், உலகத்தாரின் முன்னிலையிலும் அவரைச் சிறந்த விதத்தில் பிரதிபலிக்கிறவர்களாக்கிடும். அது நாம் செய்கிற அனைத்திலும்

முடிந்தமட்டும் ஜாக்கிரதையாயும், ஒழுங்காகவும் நம்மைக் காணப்படச் செய்து, மற்றும் நம்முடைய நடத்தையில் மற்றவர்கள் சரியான வழியின் அழகினைக் கவனித்து, கற்றுக்கொள்வது வரையிலும், மற்றவர்களிடம் அன்பாய் அதிகம் நாம் எதிர்ப்பார்க்காமல் காணப்படச் செய்யும். பெரும்பான்மையானவர்களின் விருப்பமாக/சித்தமாக விளங்கி, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு வழிமுறையிலும் நாம் திருப்திக் கொள்வோமாக. பெரும்பான்மையானவர்கள் நம்மைவிட ஞானம் குறைவானவர்களாய் இருப்பதாக நாம் கருதுவோமானால், அவர்கள் தங்கள் நடவடிக்கையினுடைய தவற்றை உணர்ந்து, அதைச் சரிசெய்வது வரையிலும் கர்த்தர் பொறுமையோடு காத்திருப்பதுபோன்று, நாமும் பொறுமையாய் இருக்கவும், காத்திருக்கவும் கற்றுக்கொள்வோமாக. சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமெனில், நாம் அதிகமதிகமாய்ச் சமாதானம் பண்ணுகிறவர்களாகிவிடுவதற்கு நாடிடுவோமாக: "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9).

---

R5698 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சாந்தகுணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும்

*"கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், எதிர்ப்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கிறவர்களுமாயிருக்க வேண்டும்." (2 தீமோத்தேயு 2:24, 25)*

இந்த நமது ஆதார வசனத்தை அப்போஸ்தலர் பவுல், சபையின் மூப்பராகிய தீமோத்தேயுவுக்கு எழுதினார். கிறிஸ்துவின் சரீரத்திற்குரியவர்களாகிய அனைத்துக் கர்த்தருடைய ஜனங்களும் தேவனுடைய குமாரர்களாக இருக்கிறார்கள். எனினும் அவர்களெல்லாரும் ஊழியர்கள் - இயேசு கிறிஸ்துவின் அடிமைகள் ஆவர். ஒவ்வொரு உண்மையான புத்திரனும் தனது பிதாவுக்கு, விசேஷமாக நீதியான, அன்பான ஒரு பிதாவுக்கடுத்தக் காரியங்களுக்கு ஊழியஞ்செய்ய விரும்புவான் மற்றும் உண்மையுள்ள ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னுடைய எஜமானுக்கடுத்த காரியங்களுக்கு - அதுவும் விசேஷமாக சிறந்தவரும், பாத்திரருமான ஓர் எஜமானுக்கு ஊழியஞ்செய்ய விரும்புவான். பரமபிதாவுக்கு விசேஷித்த குமாரனாயிருந்த நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பிதாவுக்கடுத்தக் காரியங்களுக்கு ஊழியஞ்செய்யவும், அவரது சித்தத்தை

நிறைவேற்றவும் வேண்டி, தம்மைத்தாமே எல்லாருக்கும் ஊழியக்காரனாக்கினார்.

நமது ஆதார வசனமானது, சகோதரர் மத்தியில் பொறுப்புடையவராக இருக்கும் அல்லது இல்லாதிருக்கும் கிறிஸ்துவின் சபையிலுள்ள எந்தவொரு அங்கத்தினருக்கும், எந்தவொரு தேவனுடைய ஊழியக்காரனுக்கும் பொருந்தும். இது சபையிலுள்ள யாவருக்குமுரிய கட்டளையாக இருக்கிறது. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள பாலினம் முதலான எல்லைக்குட்பட்டு, தனது வாய்ப்பு மற்றும் திறமைக்கேற்ப போதிக்க வேண்டும். "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும் அவர் என்னை அனுப்பினார்" (ஏசாயா 61:1). தீர்க்கத்தரிசியின் இந்த வார்த்தைகள் தலை மற்றும் சரீரம் அடங்கிய கிறிஸ்துவின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் பொருந்தும்.

## ஓர் உண்மையான போதகரின் தகுதி

கர்த்தரின் ஊழியக்காரன் "போதகசமர்த்தனாக" இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார் (1 தீமோத்தேயு 3:2; 2 தீமோத்தேயு 2:24). இங்குப் பரிசுத்த பவுல் ஒரு சபையின் மூப்பருக்கு விசேஷமாகப் பேசுகின்றார். போதகசமர்த்தனாக இருத்தல் என்பது போதிக்கக்கூடிய திறமையைக்குறிக்கிறது. மற்றவர்களுக்குக் காரியங்களைத் தெளிவாகப் பேசும் வரம், திறமை என்பது எல்லாருக்கும் உரியதல்ல. சிலர் அதிகமாகப் பேசியும், குறைவாகவே புரியவைக்க முடிகிறவர்களாக இருக்கின்றனர். தாங்கள் இந்த நிலைமையில் இருப்பதாகக் கண்டுகொள்பவர்கள், அச்சிடப்பட்டவைகளைப் பயன்படுத்திட வேண்டும் மற்றும் பிற்பாடு செய்தியானது - மற்றவர்கள் மனதில் நன்குப் பதியும்படி தெளிவாகவும், காரணகாரியத்துடனும் வழங்கிட கற்றுக்கொள்ள முயற்கிக்க வேண்டும். செய்தியை மற்றவர்களிடம் வழங்குவதற்குப் பொறுமை மிகவும் அவசியம். நீங்கள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்து, நீங்கள் போதித்துக் கொடுப்பவர்கள்மேல் இரக்கம் கொண்டு, எந்த ஒரு கருத்தையும் மறுபடியும் மறுபடியுமாகக் கூறித் தெளிவுபடுத்திடுவதற்கு ஆயத்தமாய் இருங்கள்.

பொதுக் கூட்டங்களிலோ அல்லது தனியே சந்தித்தோ சத்தியத்தை வழங்குகிறபோது, இறுமாப்பாய் நடந்துகொள்ளாதீர்கள், ஆணவத்தைக் காட்டாதீர்கள். ஒருபோதும் நீங்கள் எரிச்சலடைந்து: "நீங்கள் ஒரு வருடம்

எடுத்துக்கொண்டு அறிந்துகொள்வதை, நான் ஐந்தே நிமிடத்தில் அறிந்துகொள்வேன்” என்று பேசிடாதீர்கள்; இதை உங்கள் முகபாவனையிலோ அல்லது தொனியிலோ அல்லது பாணியிலோ காண்பிக்காதீர்கள்; பாருங்கள் உங்களின் இவ்வுணர்வுகளை நீங்கள் ஒரே சமயத்தில் இந்த நான்கு வெவ்வேறு வழிகள் மூலமாக வெளிப்படுத்திடக்கூடும்; ஆனாலும் இவைகளில் ஏதாவது ஒன்றுகூட, உங்களுக்கும் மற்றும் சத்தியத்தில் ஆவலை ஏற்படுத்த நீங்கள் முயற்சித்துக் கொண்டிருப்பவருக்கும் இடையே வேலி ஏற்படுத்த போதுமானதாக இருக்கும். நீங்கள் சாந்தமுடையவர்களாகவும், மனத்தாழ்மையுடையவர்களாகவும் அடக்கமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஒருவர் தன்னுடைய கருத்தானது, உங்கள் நிலைப்பாட்டிற்கு முரண்படுகின்றது என்று நம்பும் ஒரு வாதத்தையோ, ஒரு வசனத்தையோ உங்களிடம் முன்வைத்தால், நீங்கள்: “நல்லது, சகோதரரே, இது வேதப்போதனைக்கு ஒத்திருக்கிறதா என்று பார்க்கலாம். தேவவசனங்கள் யாவற்றுடனும் இசைவாய் இருப்பவைகளை மட்டுமே, நாம் சத்தியமென ஏற்றுக்கொள்ள வேண்டும். வாருங்கள் நாம் அதைச் சோதித்துப்பார்க்கலாம்” என்று கூறிட வேண்டும். ஒருவேளை அவர் கர்த்தருடைய உறுதியான வசனத்தைக்கொண்டு உங்களுக்கு எதையாகிலும் போதிக்கக்கூடுமானால், அதைக் கற்றுக்கொள்ள விருப்பமுள்ளவராக இருப்பதை வெளிப்படுத்தும் வண்ணமாய்ச் சாந்தமானவராகவும், போதிக்கப்படத்தக்கவராகவும் நடந்துகொள்ளுங்கள். இப்படியாக - ஒருவேளை தான் நியாயமாய் நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பும்பட்சத்தில், நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதைக் கேட்க மிகவும் ஆவலாய் இருப்பார்.

சந்தேகத்திற்கிடமில்லாமல் கர்த்தருடைய ஜனங்களை நமது ஆதார வசனத்தில் கூறப்பட்டுள்ள, “கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைப்பண்ணு கிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனாயிருக்க வேண்டும்” என்ற பாடத்தை மென்மேலும் கற்றுக்கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். இது மூப்பர், உதவிக்காரர் மற்றும் சபையின் ஒவ்வொரு அங்கத்தினர் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக இருக்கிறது. இது - நமது குணலட்சணத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் ஆண்டவருக்கு நாம் மிகவும் சிறப்பாக ஊழியஞ்செய்வதற்கும் அவசியமாக இருக்கிறது. ஆரம்பத்தில் நாம் சர்வாயுதத்தைத் தரித்து, ஆவியின் பட்டயத்தை எடுக்கும்போது, கொஞ்சம் வளர்ச்சியடைந்தும், அநேகமாக அடிக்கடி நன்மையைவிடத் தீமையைச் செய்தவர்களாகவும் இருந்திருந்தோம். நம்மிடம் யாரும் விவாதிக்க இயலாது என்று நினைத்திருந்தோம். மேலும் நாம் அதிகமாக கனிவாகவும், அதிகமாக ஞானமாகவும், அதிகமாக அன்பாகவும் காணப்படுவதற்குக் கற்றுவந்து

கொண்டிருக்கின்றோம் மற்றும் இப்படியாக மற்றவர்களுக்குப் போதிப்பதற்கு மிகவும் தகுதியுள்ளவர்களாகிறோம். நாம் சத்தியத்தைத் தவறான விதத்தில் முன்வைப்பதினால் எப்படிக் கர்த்தரின் காரணங்களுக்குத் தீங்கிழைக்கக்கூடும் என்பதையும் மற்றும் எப்படிச் சரியான விதத்தில் முன்வைப்பதினால் - கர்த்தரின் ஊழியத்தைச் செம்மையாகச் செய்ய முடியும் என்பதையும், பசிதாகமுடையவர் களைக் கண்டடைய முடியும் என்பதையும் மற்றும் நாம் எல்லோரும் யாரை அன்புகூர்ந்து, யாருக்கு ஊழியஞ்செய்ய ஏங்குகின்றோமோ, அந்த மகாராஜாவுக்கு மிகப் பிரியமாயும் காணப்பட முடியும் என்பதையும் பார்த்தோம்.

---

R5161 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சுவாரசியமான கேள்விகள்

## *பயண ஊழியர்களுக்கான சரியான வழிமுறை*

**கே**ள்வி:- சபையின் மூப்பராக இருந்தும், வாக்குறுதியோடும் (vow), சொசைட்டியின் (society) ஊழியங்களோடும் உடன்பாடு கொண்டிராத ஒருவரால், பிரயாணம் மேற்கொண்டுள்ள பயண ஊழியர் வரவேற்கப்பட்டு, உபசரிக்கப்படுவது ஞானமான அல்லது சரியான காரியமாய் இருக்குமா?

**பதில்:-** மிகவும் உறுதியாய் இல்லை என்பதே பதில். இன்னுமாக இப்படியான மூப்பர் ஒருவரைத் தேர்ந்தெடுத்ததில் சபையார் பெரிதும் தவறுசெய்துள்ளனர் என்று சபையாருக்குப் பயண ஊழியர் தெளிவுப்படுத்திட வேண்டும் மற்றும் முடிந்தமட்டிலும் விரைவாய்த் தவறைச் சரிசெய்திடுவதற்கு அவர்களுக்கு உதவிட வேண்டும்.

சொசைட்டியினுடைய ஊழியங்களின் மீது உடன்பாடில்லாத அந்த மூப்பரை ஒருவேளை தொடர்ந்து சபையார் விரும்புவார்களானால், சபையார் பயண ஊழியர்களின் ஊழியத்திற்காக சொசைட்டியிடம் வேண்டிக்கொள்ளக்கூடாது. கர்த்தருடைய அருமையான செம்மறியாடுகளில் சிலர் மிகவும் மதியீனமாய்க் காணப்படுகின்றனர். சாந்தமும், தயவும் பாராட்டத்தகுந்தவைகளே; ஆனால்

சிலசமயங்களில் அவைத் தேவனுக்கு நேர்மையற்றிருப்பதையும் சுட்டிக்காட்டு கின்றதாய் இருக்கும்.

---

R5922 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

எங்களது சபை ஒழுங்குமுறைக்குள் கொண்டுவரப்பட்டது முதற்கொண்டு, ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் எங்களது காரியக்கூட்டமானது (Business meeting) அதிகளவு நேரம் எடுத்துக்கொள்கின்றது; ஆனால் தற்போதைய ஏற்பாடுகளின் கீழ் அனைத்துக் காரியங்களும் சபையாரால் தீர்மானிக்கப்படுகின்ற படியால், எப்படி இத்தகைய கூட்டத்தைத் தவிர்ப்பது என்பதையும், கூட்டத்திற்குக் குறைவாய் நேரத்தைச் செலவழிப்பது என்பதையும் நாங்கள் அறியோம்.

உங்கள் பரந்த விரிந்த அனுபவத்தின் காரணமாக, இதுவிஷயம் குறித்த சில விலையேறப்பெற்ற யோசனைகளை உங்களால் எங்களுக்குக் கொடுக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம் மற்றும் சில புத்திமதிகளை எங்களுக்குக் கொடுப்பீர்களானால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். உங்கள் மீது கர்த்தருடைய ஐசுவரியமான ஆசீர்வாதம் இருப்பதற்காக ஜெபிக்கின்றோம். உங்கள்

- பரிசுத்த ஜோசப் [MO] சபையார்.

**பதில்:** சோதித்தறிவதன் மூலம், தங்கள் மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களில் ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் நல்ல காரிய சமர்த்தமும், உண்மையுமுள்ளவர்களாக இருப்பதை ஒரு சபையார் கண்டுகொள்வார்களானால், அங்கு அத்தகையவர்களுள்ள ஒரு காரிய/ அலுவல் குழுவினை ஏற்படுத்தி, அந்தக் குழுவிடம் காரிய நடைமுறைகளில் பெரும்பான்மையானவைகளை விட்டுவிடுவது சிலசமயங்களில் நல்லதொரு திட்டமாக இருக்கும். எனினும் காரியங்கள் முழுவதையும், சபையாரின் கரங்களினின்று எடுத்துவிடாமல் இருப்பதற்கு மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். அதிகாரத்தைப் பிடித்துக்கொள்வதற்கும், சபையாருடைய

விருப்பங்களை மீறிடுவதற்குமுரிய விருப்பங்களைக் கொண்டிருப்பதற்குச் சாட்சி பகருகின்றவர்களின் கரங்களில் அதிகம் வல்லமையைக் கொடுத்துவிடாத படிக்கும்கூட மிகுந்த கவனம் காணப்பட வேண்டும். எல்லாக் காரியங்களிலும் முடிவுகளை அடைவதற்கு எளிமையான மற்றும் அமைதியான வழிமுறையே நல்லது; ஆனால் சபையாருடைய அதிகாரம் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும். சபையாரையும், அவர்களின் விருப்பங்களையும் புறக்கணிக்கும் யார் ஒருவருக்கும் மூப்பர், உதவிக்காரர் போன்ற விசேஷித்த ஊழியம் கொடுக்கப்படாமல் விடப்படுவது நலம்.

---

R2079 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் - எண். 2

**யோவான் 4:23**

## *சக தூதுவர்களைத் தொழுதுகொள்ளுதல்*

**தே**வனுடைய ஜனங்கள் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் மற்றும் மேன்மையாய் எண்ணிட வேண்டும். அதுவும் ஒருவரிலொருவர் தேவனுடைய ஆவியை, கிறிஸ்துவின் ஆவியை, பரிசுத்தத்தின் மற்றும் சத்தியத்திற்கும், நீதிக்குமான அர்ப்பணிப்பின் ஆவியை அடையாளம் கண்டுகொள்வதற்கேற்ப இப்படியாகச் செயல்பட வேண்டும்; அதாவது உண்மையுள்ளவர்கள் "அவர்களுடைய கிரியையினிமித்தம், மிகவும் உயர்வாகக் கருதப்பட வேண்டும்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்றதாகும் (1 தெசலோனிக்கேயர் 5:13; திருவிவிலியம்); "கனம் பண்ணப்பட வேண்டியவர்களைக் கனம் பண்ணிடுவதற்குச்" சிலர் தவறிப்போய்விடுவதற்கான அபாயம் இருப்பினும் (உரோமர் 13:7), சத்தியத்திற்கடுத்த ஊழியங்கள் தொடர்புடைய விஷயங்களில் தேவன் பயன்படுத்துவதற்குப் பிரியப்படுகின்றதான மனித கருவிகளுக்கு மிகவும் அதிகமான கனத்தைச் சிலர் சாற்றிடுவதற்கான அபாயமும் காணப்படும் என்பதில் ஐயமில்லை. ஆகையால் முந்தைய தருணங்களின்போது கவனத்திற்குக் கொண்டுவந்ததுபோல, இங்கும் மனிதனை தொழுதுகொள்ளும் அபாயம் குறித்துக் கவனத்திற்குக் கொண்டுவருவது ஏற்றதாயிருக்கும். இது மிகவும் ஆற்றல்மிக்க

விதத்தில், வெளிப்படுத்தல் 22:9-ஆம் வசனத்தில், நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தின் யோவான் - சுவிசேஷயுகம் முழுவதும் ஜீவித்துக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்களுக்கு அடையாளமான யோவான், தெய்வீகத் திட்டத்தினுடைய பல்வேறு அம்சங்கள் திறக்கப்படுவதைப் பார்க்கச் சிலாக்கியம் பெற்றவர், இறுதியில் இவ்விஷயங்களைத் தனக்குக் காண்பித்த தூதனைத் தொழுதுகொள்ளும்படிக்குப் பணிந்து கொள்கின்றார். ஆகையால் பழையதும், புதியதுமானவைகளைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களென அவ்வப்போது பயன்படுத்தப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு அல்லது மனமாற்றத்திற்குக் காரணமாயிருந்த அல்லது வேறேதேனும் ஆவிக்குரிய பிரயோஜனத்திற்குக் காரணமாயிருந்த ஏதோ ஒரு குறிப்பிட்ட சகோதரனுக்கு அல்லது சகோதரிக்கு, அதிகப்படியான அன்பையும், மரியாதையையும் மற்றும் கனத்தையும் கொடுத்துவிடுவது, அநேகருடைய மனோநிலையாக இருந்துள்ளது மற்றும் இருந்தும் வருகின்றது. இந்த மனப்பான்மையானது ஆதி திருச்சபையில் காணப்பட்டது; சிலர் ஏதோ ஓர் அப்போஸ்தலனை மேன்மையாய் வைத்திருந்தனர் மற்றும் சிலர் இன்னும் வேறொருவரை தங்களுக்குப் பிரதானமானவராகவும், போதகராகவும் வைத்திருந்து, அந்நபருடைய சீஷர் எனத் தங்களை அழைத்துக்கொண்டனர்; "நான் பவுலைச் சார்ந்தவன்" அல்லது "நான் அப்பொல்லோவைச் சார்ந்தவன்" அல்லது "நான் பேதுருவைச் சார்ந்தவன்" என்பது போன்றெல்லாம் கூறினார்கள். இம்மனப்பான்மையானது, மாம்ச சிந்தையை ஓரளவுக்கு சுட்டிக்காட்டுகின்றது என்று அவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் உறுதிப்படுத்தினார் மற்றும் பவுல், அப்பல்லோ மற்றும் பேதுரு என்பவர்கள் யார் என்று வினவி, அவர்கள் உங்களைச் சத்தியத்தினால் ஆசீர்வதிப்பதற்குத் தேவன் அனுப்பிடுவதற்குப் பிரியப்பட்ட ஊழியக்காரர்கள் அல்லது பிரதிநிதிகள் மாத்திரம்தான் என்று கூறினார். "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்." இப்படியாக ஆசீர்வாதங்களானது கடந்து வருகின்றதான பாத்திரங்களையல்ல, மாறாகக் கர்த்தரை - தங்கள் ஆசீர்வாதங்களுக்கான காரணரைத் தேவனுடைய ஜனங்கள் அங்கீகரித்திட வேண்டும் மற்றும் அவர்களுக்காக மரித்து, அவர்களை மீட்டுக்கொண்டவருடைய நாமத்தையே உண்மையாய்த் தரித்துக்கொள்ள வேண்டுமேயொழிய, வேறு நாமத்தையல்ல என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

இதுபோலவே சபையானது, இருண்ட யுகங்களினுடைய காரிருளை, சீர்த்திருத்தவாதிகளாகிய லூத்தர், கல்வீன், சுவிங்கிலி மற்றும் இன்னும் பலருடைய உதவி மற்றும் அறிவுரையின் கீழ் அப்புறப்படுத்துவதற்குத் துவங்கினபோது, சீர்த்திருத்துதல் பணியில் கருவிகளாக இருப்பதற்குத் தேவனால் கனப்படுத்தப்பட்ட கருவிகள் மீது சபைக்கு, இயல்பாகவும், முறையாகவும் மிகுந்த மதிப்புக்

காணப்பட்டது. ஆனால் மீண்டுமாக தெய்வீக ஆசிரியரைத் தொழுது கொள்ளுவதற்குப் பதிலாக, மனித பிரதிநிதிகளை, தூது கொடுப்பவர்களைத் "தொழுதுகொள்ளும்" மனப்பான்மை வெளிப்பட்டது மற்றும் இன்று பல்லாயிரக்கணக்கானோர் தங்களை லூத்தர், கல்வின், வெஸ்லி, கேப்பெல், இன்னும் பலரின் நாமங்களில் அழைத்துக்கொண்டு, தேவனுடைய வார்த்தை களைக் காட்டிலும், இவர்களுடைய போதனைகளுக்கும், எழுத்துக்களுக்கும் அதிக மதிப்புக்கொடுப்பவராகிவிட்டனர் மற்றும் இதற்கேற்ப தங்களுக்குப் பாதகத்தையும் ஏற்படுத்திக்கொண்டனர்.

இதுபோலவே இன்றும், அதாவது முன்பு ஒருபோதும் இல்லாதளவுக்கு மிகவும் தெளிவாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதான தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திலும்கூடப் பார்க்கையில், கடந்த காலங்களில் மிகவும் தீங்கான தாக்கத்தினைக் கொண்டிருந்ததான மாம்ச ரீதியிலான இந்த மனப்பான்மைக்கு எதிராக, இன்றும் ஜாக்கிரதையாய் இருப்பது அவசியம் என்பதில் ஐயமில்லை.

தெய்வீகத் திட்டத்தினுடைய வியக்கத்தக்கக் காரியங்களைத் தனக்குக் காண்பித்திட்டதான தேவதூதனைத் தொழுதுகொள்ளும்படிக்கு யோவான் பாதத்தில் விழுந்தபோது, மரியாதையினை ஏற்றுக்கொள்வதற்குத் தேவதூதன் மறுத்தக் காரியமானது, தேவனுடைய ஊழியக்காரர்கள் (வேலைக்காரர்கள் - செய்தியாளர்கள்) யாவருக்கும் ஒரு படிப்பினையாகக் காணப்பட வேண்டும். "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; (உன் கர்த்தரும், ஆண்டவருமானவருடன்கூட அல்ல, மாறாக) உனக்கும், தீர்க்கத்தரிசிகளாகிய உன் சகோதரருக்கும், இந்தப் புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்கள் யாவருக்கும் நான் உடன் ஊழியக்காரனே; (இந்த ஆசீர்வாதங்கள் மற்றும் இந்த வெளிச்சம் யாவும் கடந்துவரும் ஆதாரமாகிய) தேவனைத் தொழுதுகொள்" என்று தேவதூதன் சொன்னார். தேவனுடைய ஊழியக்காரர்கள் அனைவரும், அவர்களது ஊழியத்தின் அளவு அல்லது காலப்பகுதி என்னவாக இருப்பினும், அவர்கள் உடன் ஊழியக்காரர்களே ஆவார்கள் (வெளிப்படுத்தல் 22:9).

கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் மனிதனைத் தொழுதுகொள்ளும் இம்மனப்பான்மையினை, "மாயமான தாழ்மையிலும், (செய்தியாளர்களுக்கு) தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" என்று கூறி அப்போஸ்தலன் கவனத்திற்குக் கொண்டுவருகின்றார் (கொலோசெயர் 2:18,19). இச்சோதனை யானது வணங்கிடுங்கள் என்ற வெளிப்படையான/நாணமற்ற கோரிக்கையின் விதத்தில் வராமல், மாறாக இரகசியமான, தந்திரமான விதத்தில் வருகிறதாக இருக்கும் என்று சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான பக்தி அல்லது தொழுதுகொள்ளுதல்களே, பெயர்ச்சபை ஊழியங்களில் பொதுவாய்க்

காணப்படுகின்றதாய் இருக்கின்றது. மிகவும் சாந்தமானவர்களாகவும், தங்களை வணங்கிடும்படிக்கு அல்லது தொழுதுகொள்ளும்படிக்கு கேட்கவேண்டுமென்று எண்ணிடாதவர்களுமான ஊழியக்காரர்கள் அநேகர், தங்கள் மந்தையினர் மனமார அளிக்கும் ரெவரண்ட்/Reverend என்னும் பட்டத்தினை ஏற்றுக்கொள்கின்றவர் களாய் இருக்கின்றனர்; மற்றும் அப்படித் தங்களை அழைப்பதையும் ஊக்குவிக்கின்றனர் மற்றும் இவ்வகையான வணக்கமோ அல்லது தொழுதுகொள்ளுதலோ தங்களுக்குச் செலுத்தப்படவில்லையெனில், இதனால் சினமும் அடைகின்றனர். ஆவிக்குரிய விஷயங்களில், ஊழியக்காரனுடைய வார்த்தை மற்றும் கணிப்பின்மீது அதிகப்படியான நம்பிக்கை வைப்பது என்பது விசுவாச வீட்டாருக்குப் பாதகமான தாக்கத்தினையே ஏற்படுத்தியுள்ளது மற்றும் ஏற்படுத்தியும் வருகின்றது; இதனால் அநேகர் தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் தங்கள் விசுவாசத்தினை உறுதிப்படுத்திடுவதற்கும் மற்றும் அதன் நம்பகத்தன்மையை முழுமையாய் நம்பிடுவதற்கும் தவறிவிடுகின்றனர்.

ரெவரண்ட்/Reverend எனும் பட்டத்தினைப் பயன்படுத்திடாதவர்கள் மத்தியிலும்கூட ஓர் அபாயம் காணப்படுகின்றது. (நவம்பர், 15, 95-ஆம் வருடத்தினுடைய நம்முடைய வெளியீட்டில் ஏற்கெனவே சுட்டிக்காண்பிக்கப் பட்டுள்ளது போன்று) அதிகாரம் சபையாரிடத்திலேயே காணப்படுகின்றதே ஒழிய, கொஞ்சம் பேருக்கோ அல்லது பல்லாயிரம் பேருக்கோ ஊழியம் புரிவதற்கெனத் தங்களைத் தாங்களே வழிநடத்துபவர்களாக நியமித்துக் கொள்பவர்களிடத்தில் இல்லை என்பது எப்போதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்துவினுடைய சபைகள், தங்கள் தலையானவரின் வழிநடத்துதலை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் மற்றும் தங்களை வழி நடத்துபவர்கள், அவருடைய விருப்பத்தின் படியானவர்களே என்று அறிவார்கள் (எபிரெயர் 13:7, 17, 24-ஆம் வசனங்களைப் பார்க்கவும்); எனினும் சபையாருடைய விசேஷித்த வேண்டுகோள் இல்லாமல், வழி நடத்துபவர்களின் ஸ்தானத்தை எடுத்துக்கொள்வதன் மூலம், சபையாருடைய உரிமைகளைத் தகாத வழியில் கைப்பற்றிடுவற்கான அல்லது அந்த உரிமைகளைப் புறக்கணித்திடுவதற்கான மனநிலையை உடைய யார் குறித்தும் சபையார் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்; கர்த்தருடைய விருப்பம் அறிவது தொடர்புடைய விஷயத்தில் சபையாருக்காக, பகுத்தறிவதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வழிநடத்துபவரே ஆற்றல் மிக்கவராய் இருக்கின்றார் என்று சபையார் எண்ணிக்கொள்ளத்தக்கதாக, அவர்கள் ஏமாற்றப்படுகையில், பகுத்தறிவில் சாந்தமுள்ளவர்களாகக் காணப்படும் அனைவரும் தம்முடைய சபையாக - "தம்முடைய சரீரமாக" இருப்பதினால், அவர்களை வழிநடத்திடுவதற்கு விருப்பமும், வல்லமையும் உள்ளவராகிய உண்மையான ஒரே போதகரெனத் தலையானவரைப் (கிறிஸ்துவை) பற்றிக்கொள்வதற்குத் தவறப்படுகின்றது.

ஒரே மேய்ப்பனிடமிருந்து, ஒரு சக ஆட்டினிடத்திற்கு மந்தையினுடைய கவனத்தை இப்படியாக திசைத்திருப்புவது என்பது எப்போதும் "விழிநடத்து

பவர்களின்” தவறாக மாத்திரம் காணப்படுவதில்லை; உண்மையான, தாழ்மையான ஆட்டினுடைய சுபாவம் உடைய அனைவருக்கும், ஒருவரையொருவர் பின்பற்றிடுவதற்கான தன்மை பொதுவாகவே காணப்படுகின்றது. ஆகையால் பிரதான மேய்ப்பன் (கிறிஸ்து) மற்றும் உடன் மேய்ப்பர்களின் (அப்போஸ்தலர்களின்) ஆவிக்கும், சத்தத்திற்கும் முழு இசைவுடன் காணப்படுபவர்களை மாத்திரம் ஒவ்வொரு ஆடுகளும், வழிநடத்துபவர்களாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்றும், மேய்ப்பனால் கட்டளையிட்டப்படியான “சுத்தமான தண்ணீரை” மாத்திரம்தான் மற்றும் “சுத்தமான உணவினை” மாத்திரந்தான் புசிக்கிறானா என்று ஒவ்வொரு ஆடும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றுமுள்ள படிப்பினைகள், அனைவரும் கற்க வேண்டியவைகளாகும் (எசேக்கியேல் 34:17-19-ஆம் வசனங்களைப் பார்க்கவும்); இது உபதேசம் மற்றும் நடைமுறை விஷயங்களில் கிறிஸ்துவினுடைய மந்தையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும், தன்தன் மனச்சாட்சியினைச் செயல்படுத்திட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது மற்றும் இது ஒவ்வொரு ஆட்டையும் குறித்து அறிந்தவராகவும் மற்றும் “தம்முடைய ஆடுகளைப் பேர்ச்சொல்லிக் கூப்பிடுகிறவராகவுமுள்ள” மேய்ப்பனுடன், ஒவ்வொருவனும் நெருக்கமும், ஐக்கியமும் கொண்டிருக்கச் செய்திடும். கர்த்தருடன் தனித்தனி கிறிஸ்தவனுக்கான இதே நெருக்கமான உறவானது, தலை மற்றும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகிய சபை உள்ளடங்கும் கிறிஸ்து எனும் உருவகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 12:12-27; எபேசியர் 4:15, 16).

சுவிசேஷத்தின் ஊழியத்தில், தேவனுடைய கிருபையினால் நாங்கள் கொஞ்சம் பயன்படுத்தப்பட்டுள்ளப்படியால், நாம் தனிப்பட்ட விதத்தில் அடிக்கடி கூறிவந்தவைகளையும் மற்றும் இதே இதழின் கடந்தகால வெளியீடுகளில் கூறிவந்தவைகளையும், இங்குக் குறிப்பிடுவது ஏற்புடையதாகவே இருக்கும் - அதாவது நாங்கள் (சகோ. ரசல்) சக ஊழியக்காரர்களுடைய மற்றும் முழு விசுவாச வீட்டாருடைய அன்பையும், அனுதாபத்தையும், நம்பிக்கையையும் மற்றும் ஐக்கியத்தையும் மதித்திட்டாலும், எங்களுக்கோ அல்லது எங்கள் எழுத்துக்களுக்கோ பாராட்டும், வணங்குதலும் வேண்டாம்; ரெவரண்ட்/Reverend அல்லது ரபி என்று அழைக்கப்படுவதற்கும் நாங்கள் விரும்பவில்லை. எங்களுடைய பெயரினால் யாரேனும் தங்களை அழைத்துக்கொள்வதையும் நாங்கள் விரும்பவில்லை. அனைவருக்குமாக மரித்தவரின் நாமம் - கிறிஸ்தவன் எனும் பெயர் - தேவனுடைய ஆவிக்குரிய புத்திரர்களை, கிறிஸ்துவினுடைய உண்மையான சகோதர சகோதரிகளை அழைத்திடுவதற்குப் போதுமானதாய் இருக்கின்றது; மற்றும் இதற்கு மிஞ்சினது/அப்பாற்பட்ட எதுவும் பொல்லாப்பினால், மாம்சத்தினால் வருகிறதாகவும் காணப்படும் மற்றும் இவைகளுக்கு ஏதுவானதாகவே காணப்படும்.

எங்களுடைய (சகோ. ரசல்) எழுத்துகள்/படைப்புகள் தலை வணங்கப்படுவதற்கோ அல்லது பிழையற்றவை என்று கருதப்படுவதற்கோ அல்லது பரிசுத்த

வேதவாக்கியங்களுக்குச் சரிசமமாகப் பார்க்கப்படுவதற்கோ நாங்கள் விரும்பிடவில்லை. எங்களுடைய போதனைகள் என்று எங்களால் வலியுறுத்தப் படுபவைகள் அல்லது வலியுறுத்தப்பட்டவைகள் தெய்வீக வார்த்தைகளுக்குரிய முரண்பாடற்ற மற்றும் சத்தியத்தின் ஆவிக்கு இசைவாயுள்ள விளக்கங்களேயாகும். முன்புபோல், இன்னமும் நாங்கள் வலியுறுத்துவதாவது - வேதவாக்கியங்களின் வெளிச்சத்தில் ஒவ்வொரு வாசகனும், நாங்கள் வைக்கின்றதான பாடங்களை ஆராய்ந்துபார்த்து, அனைத்தையும் வேதவாக்கியங்களினால் சோதித்தறிந்து, நலமானதைப் பற்றிக்கொண்டு, மற்றவைகளை மறுத்துவிடுவானாக. வேதத்தின் மாணவனானவன், பாடத்தினைத் தெய்வீக ஏவுதலின் பேரிலான வேதாகம பதிவில் அடையாளம் கண்டுபிடிக்கத்தக்கதாக, விசுவாசம் கட்டியெழுப்பப்பட வேண்டியதான அந்த வேதவாக்கியங்களுடைய மேற்கோள்களையும் மற்றும் மேற்கோள் காட்டுதல்களையும் தாராளமாய் அளித்துள்ளோம்.

---

CR 122

# பயண ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான விசேஷ - கூட்டம்

இந்தப் பிரசங்கமானது, 1910-ஆம் வருட மாநாடு தகவல் அறிக்கையில், பக்கம்-236 முதல் இடம்பெறும் பாஸ்டர் அவர்களின் பிரசங்கமாகக் காணப்படுகின்றது.

அருமை நண்பர்களே: இவ்வுலகத்தைப் பொறுத்தமட்டில் பரதேசிகளாகவும், அந்நியர்களாகவும், அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் வந்துள்ள கிறிஸ்துவின் சபையிலுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களாகிய உங்களை இந்தச் சாயங்கால வேளையில் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். உங்களுடன் சிறு உரையாடல் உரையாடிட வேண்டும் என்று நான் எண்ணினேன்; காரணம் முதலாவதாக உங்கள் மீது ஒரு மாபெரும் வேலை இருக்கின்றதெனவும் - கர்த்தருடைய அறுவடை வேலை தொடர்பான ஒரு மாபெரும் பொறுப்பு இருக்கின்றதெனவும் எனக்குத் தோன்றுகின்றது. இரண்டாவதாகக் கர்த்தருடைய வீட்டாரில் எந்த ஊழிய ஸ்தானத்திலும் காணப்படும் எவரும், இதற்கேற்ப கடுமையான சோதனைகளையும், பரீட்சைகளையும் கொண்டிருக்கின்றனர் என்று நான் நம்புகின்றேன் மற்றும் நம்மில் ஒவ்வொருவரும் ஊழிய ஸ்தானத்திற்கடுத்த பொறுப்பினைக் குறித்தும், நம்முடைய பாதங்களுக்குக் காணப்படும் அபாயங்கள்

குறித்தும் உணர்ந்துகொள்ள வேண்டும். மற்ற ஜனங்களைக் குறித்தும், மற்ற ஜனங்கள் விழுவதைக்குறித்தும், மற்ற ஜனங்கள் வழுக்கிடுவதைக்குறித்தும், மற்ற ஜனங்கள் சறுக்கிடுவதைக்குறித்தும் நாம் சிந்திப்பது மிகவும் சுலபமானது என்று நீங்கள் அறிவீர்கள்; ஆனால் நம்மைக்குறித்து, நாம் சிந்தித்துப்பார்ப்பது மிக முக்கியமான காரியமாய் இருக்கின்றது என்று நான் எண்ணுகின்றேன். கர்த்தருடைய வேலையின் பொதுவான நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக் கொண்டிருக்கையில், அபாயத்தில் காணப்படுபவர்களையும், சறுக்குபவர்களையும் மற்றும் வழுவிப்போகிறவர்களையும் நான் பார்த்திருக்கின்றேன்; இத்தகையவர்களில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்துவின் சபையில் செல்வாக்குமிக்க ஸ்தானங்களில் காணப்படுகிறவர்களாகவும் - கிறிஸ்துவினுடைய சரீரத்தில் முக்கியமான ஊழிய ஸ்தானங்களில் காணப்படுகிறவர்களாகவும் இருப்பதை நான் பல வருடங்களாகக் கவனித்து வந்துள்ளேன் மற்றும் "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1) என்று அப்போஸ்தலன் கூறினபோது அவரது வார்த்தைகள் அனுபவ பூர்வமானவைகளே என்று நான் எண்ணுகின்றேன். ஆகையால் கிறிஸ்துவினுடைய சரீரத்தில் ஓர் ஊழியக்காரனாய் இருப்பது என்பது மிகவும் கனமிக்க காரியமாய் இருப்பினும், அதனோடுகூடக் கனமான பொறுப்பும், அபாயமும் கடந்துவருகின்றது; மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நாம், ஆகாதவர்களாய்ப் போகாதபடிக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். நான் உணராத எதையும் உங்களுக்குக்கூற விரும்புகிறதில்லை - என்னுடைய சொந்தத் தனிப்பட்ட அனுபவத்தில் - இப்பாடமானது பல வருடங்களாக எனது இருதயத்தையும், மனதையும் அழுத்திக் கொண்டிருக்கின்றது. சத்தியத்திலிருந்து சிலர் வழுவிப்போகிறதை நான் கண்டு, எனக்குள்ளாகக் கூறிக்கொள்கிறதாவது: "இப்படி வழுவிப்போனவர்களில் சிலர் நல்ல அறிவுடையவர்களாய் இருக்கின்றனர்; இவர்களில் சிலரால் காரியங்களை மிகத் தெளிவாயாகிலும் பார்க்க முடிகிறவர்களாக இருக்கின்றனர்; ஒரு காலத்தில் தெளிவாய்ப் பார்க்க முடிகிறவர்களாகவும், சத்தியத்தில் மிகுந்த அறிவுடையவர்களாகவும் காணப்பட்டவர்கள், பிற்பாடு அதை இழந்து, அவை அனைத்திற்கும் இவர்கள் குருடாகிப் போனார்கள் என்றால், இதுபோலவே நானும்கூடத் தயவின் ஸ்தானத்தினின்றும், சத்தியத்தின் அறிவினின்றும் விழுந்துபோய்விடக்கூடும் அல்லவா? மேலும் எனது இருதயம் "ஆம்" என்று பதிலளித்தது மற்றும் கர்த்தரை நோக்கி: கர்த்தாவே என்னைக் காத்துக்கொள்ளும், உம்முடைய வல்லமையுள்ள கரங்களினால் என்னைத் தாங்கிக்கொள்ளும்" என்பதேயாகும்.

யாரையாவது நியாயந்தீர்க்கவும், "நீங்கள் இப்படியாகக் காணப் படுகின்றீர்கள் மற்றும் நீங்கள் அப்படிக் காணப்படுகின்றீர்கள் மற்றும் இது உங்களுக்கு அதிகமாகக் காணப்படுகின்றது மற்றும் அது உங்களிடத்தில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது" என்று கூறிடவும் நாம் முற்படுகிறதில்லை; எனினும் சில விஷயங்களை நாம் அசட்டையாகக் கருதிட முடியாது மற்றும் ஒருவர் வழுவிப்போகையில், "அவர் எதில் வழுவிப்போனார்" என்பதையாகிலும் சொல்வது

தவறாய் இருக்காது. அவ்வேளையில் ஒருவர் வழுவிப்போய்க்கொண்டிருக்கின்றார் என்றோ அல்லது அவரது இருதயம் தவறான நிலைமையில் காணப்படுகின்றது என்றோ நாம் நியாயந்தீர்ப்பது என்பது சரியாய் இருக்காது; காரணம் நம்மால் இருதயத்தினை நியாயந்தீர்த்திட முடியாது; ஆனால் ஒருவர் வழுவிப்போன பிற்பாடு, எதில் அந்நபர் வழுவிப்போனார் என்று அறிந்துகொள்ளத்தக்கதாக பார்க்கவேண்டும் என்பது சரியானதாகவும், தகுதியானதாகவும் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்.

நான் சிறுவனாக பிட்ஸ்பர்கிலுள்ள ஒரு தெருவழியாக மாலையில், பனியானது விழுந்தப் பிற்பாடு நடந்துபோனபோதான சம்பவம் எனக்கு நினைவில் இருக்கின்றது; மெல்லிய மின்னும் பனியினால் மூடியிருந்த நிலத்தடி கிடங்கின் அந்தப் பழைய, வழவழப்பான, இரும்புக் கதவுகளின்மேல் நான் நடந்து சென்றேன். அதன்மேல் கால்களை வைத்த மாத்திரத்தில் நான் வழுக்கிவிழுந்துவிட்டேன் (விரல் முறிவு ஏற்பட்டது). மேலும் நான் விழுந்தபோது, "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதிமொழிகள் 16:18) எனும் வேதவாக்கியத்தினை நினைவுகூர்ந்தேன். நிலத்தடி கிடங்கின் கதவின்மேல் கால் வைத்த மாத்திரத்தில், இவைகள் என் தலைக்குள் ஓடினது. அப்படி விழுவதற்கு ஏதுவான மனமேட்டிமையான சிந்தை எதுவும் அப்போது காணப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை, ஆனால் அதிலிருந்து நல்லதொரு பாடம் கற்றுக்கொள்ளலாம் என்று நான் எண்ணினேன். நான் கவனித்ததும், என்னுடைய அனுபவமும் என்னவெனில் . . . ஆவிக்குரியப் பாதையில் வழுக்கலான இடங்கள் காணப்படுகின்றன மற்றும் எதையாவது சிந்தித்துக்கொண்டும் மற்றும் கால்களைக் கவனிக்காமலும், நம் கால்களை எங்கு வைத்து நடக்கிறோம் என்று கவனிக்காமலும் அவ்விடங்களில் அஜாக்கிரதையாய் நடப்போமானால், அப்போதுதான் நாம் சீக்கிரமாய் வழுக்கிவிழுகிறதான நேரமாய்க் காணப்படும். என்னால் கணிக்க முடிந்தவரை விழுந்துபோனவர்களுக்கு மிக விபரீதமாய் இருந்தது, பெருமையின் ஆவியும், சுயநலமுமேயாகும். நான் என்ன சொல்ல வருகின்றேன் என்று நீங்கள் அறிவீர்கள். இது விஷயத்தில் நாம் மிக விழிப்பாய்க் காணப்படுவது நமக்கு எப்போதும் நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்; இதினிமித்தம் யாரையேனும் குறைவாய்ப் பார்ப்பதற்கு ஏதுவான ஏதேனும் எண்ணமானது, ஏதேனும் நேரத்தில் நமக்குள் நுழைவதை நாம் கண்டுகொள்கையில், "ஏன் நான் அந்தச் சகோதரனைக் குறைவாய்ப் பார்க்கின்றேன்?" என்றும், இது அவசியம் மற்றும் சரிதானா அல்லது நான் கொண்டிருக்கும் பெருமையா? என்றும் நாம் நம்மையே கேட்டுக்கொள்ளலாம். என்ன காரியமாய் இருப்பினும் நாம் நம்மையும், நம்முடைய சொந்த இருதயங்களையும் கவனமாய்க் கவனித்துக்கொள்ள வேண்டும். நிச்சயமாக நாம் நம்முடைய நாவுகளையும், ஜீவியத்தின் நடத்தைகள் யாவற்றையும் கவனித்திருக்க வேண்டும்தான், ஆனாலும் விசேஷமாய் நம்முடைய இருதயங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும். நோக்கம் என்ன? ஏன் அதைச் சொன்னாய்? ஏன்

அதைச் செய்தாய்? அச்செயலுக்குப் பின்னான நோக்கமென்ன? இப்படியாக நாம் நம்மையே விமர்சனத்திற்குள்ளாக்கிடும்போது, "நீங்கள் கவனமாய் நடந்துகொள்ளப்பாருங்கள்" என்று அப்போஸ்தலன் பவுல் கூறினதைச் செய்கின்றவர்களாய் இருப்போம். கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்தல் என்பது, நீங்கள் எங்கு அடியெடுத்து வைக்கின்றீர்கள் என்று சுற்றிலும் பார்த்துக்கொள்வதாகும். ஆகையால் நீங்களும், நானும் என் அருமை சகோதரர்களே, மாபெரும் இராஜாவிற்கு நாம் செய்வதற்கு ஊழியம் பெற்றிருக்கும் அளவிற்கேற்ப, நமது எதிராளியான பிசாசானவன், யாரை கண்ணியில் சிக்கவைக்கலாம் மற்றும் மாட்டவைக்கலாம் மற்றும் இடறவைக்கலாம் என்று சுற்றித்திரிகிறான் என்பதை உணர்ந்துகொள்வோமாக மற்றும் ஊழியம் பெற்றிருக்கும் அளவிற்கேற்ப அவன் நமக்கு விஷேசித்த கவனம் கொடுக்கின்றவனாய் இருப்பான். அவன் எனக்கு அதிகம் கவனம் கொடுக்கின்றான் என்று நம்புகின்றேன். ஆனால் மறுபக்கத்தில் கர்த்தரும் தமது கவனத்தை நமக்குக் கொடுக்கின்றார் என்பதில் மகிழ்கின்றோம். யார் எதிராளியானவனால் விசேஷமாய்ச் சூழப்படுகின்றார்களோ அவர்கள், அவருடையவர்களாயும் மற்றும் இருதயத்தில் நேர்மையாயும் ஒருவேளைக் காணப்படுவார்களானால், கர்த்தரும் அவர்களை விசேஷமாய்ப் பராமரித்திடுவார் என்றும் நாம் நிச்சயம்கொள்ளலாம்; "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங்கீதம் 34:7).

அடிமைத்தனத்திற்கேதுவான பயத்தின் ஆவியை மனதில் பதியப்பண்ணுவது என்னுடைய எண்ணமாக இராமல், மாறாக தேவனுக்கான மிகுந்த பயபக்தியையும், நாம் மிகவும் முக்கியமான வேலையில் காணப்படுகின்றோம் என்றும், நாம் தேவனுடைய ஊழியக்காரர்களென, சபையின் ஊழியக்காரர்களென அவ்வேலையில் காணப்படுகின்றோம் என்ற தீவிரமான உணர்வையும் பதிய வைத்திட எண்ணுகின்றோம் மற்றும் இது நம்முடைய முழு வல்லமையில் நாம் கிறிஸ்துவின் மந்தைக்கு ஊழியம் புரியவும் மற்றும் சுயநலமான நோக்கத்திலோ, தற்பெருமையின் ஆவியினாலோ அல்லது இறுமாப்பினாலோ அல்லது ஜனங்கள் முன்னிலையில் தன்னை உயர்த்திக்கொள்வதினாலோ எதையும் செய்யாமல் இருக்கவும், மாறாக கர்த்தருக்கும், அவருடையவர்களுக்கும் எப்படிச் சிறப்பாய் ஊழியம் புரியமுடியும்? என்று எண்ணவும் நம்மைக் கடமைக்குள்ளாக் குகிறது. இத்தகைய ஆவி உள்ளே காணப்படுகையில், அங்குப் பாதுகாப்பு இருக்கின்றது என்று நான் நம்புகின்றேன்; ஒருவேளை வேறு ஏதேனும் ஆவி காணப்படுமாயின், பதவி அடைவதற்கு நீங்கள் நாடுபவராக இருப்பதை நீங்கள் அடையாளம் கண்டுகொள்கின்றீர்களானால், நீங்கள் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றீர்கள் என்றும், விடுதலைக்காக நீங்கள் தேவனிடம் ஜெபிக்க வேண்டும் என்றும் நான் எண்ணுகின்றேன்.

நான் மாத்திரம் இதைக் கவனித்திடவில்லை. இதே விஷயங்கள் குறித்தும் சில அருமையான சகோதரர்கள் எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர்.

"சகோதரர் ரசல் அவர்களே, பயண ஊழியர்களாகிய எங்களைப் பாதுகாத்து, காத்துக்கொள்ள உதவும் எதையேனும் வாட்ச் டவர் வெளியீட்டில் நீங்கள் வெளியிடுவதற்கு விரும்புகின்றோம்." நாங்கள் கடந்துபோகும் இடங்களிலுள்ள அருமை நண்பர்கள், எங்களை மிதமிஞ்சி எண்ணப்பண்ணுகின்றனர் என்று அநேகம் பயண ஊழியர்களாகிய சகோதரர்கள் எனக்கு எழுதியிருக்கிறது நினைவில் இருக்கின்றது. "சிலசமயம் என் தலை பெருமிதத்தினால் உப்பிக்கொள்கின்றது மற்றும் இது ஆபத்தான உணர்வு என்று நீங்களே அறிவீர்கள்" என்று ஒருவர் எழுதியிருந்தார். அவர் கூறினது சரிதான். எல்லா இடங்களிலும் காணப்படும் கர்த்தருடைய ஜனங்கள் பகுத்துணர்ந்து காணப்படுவதும், யாரையும் மிகவும் புகழும் வார்த்தைகளைப் பேசாமல் இருப்பதும், சத்தியத்தையும் மற்றும் சத்தியத்தை நமக்கு அருளின கர்த்தராகிய - மாபெரியவரையும் குறித்துப் புகழ்ச்சியான வார்த்தைகளில் பேசிடுவதும் நலமாயிருக்கும். யாரையும் அளவுக்குமீறி பெருமிதம்பண்ணிடாதீர்கள். அதை எதிர்த்து நிலைநிற்க முடிகிற சிலர் இருப்பார்கள்; மற்றும் எதிர்த்து நிலைநிற்க முடியாத மற்றவர்களும் இருப்பார்கள் மற்றும் ஏதோ ஒரு சகோதரன் இடறிவிழுவதற்கு நாம் காரணமாய் இருந்திருக்கின்றோம் என்று காணும்போது, நீங்களும், நானும் மிகவும் கவலைக்குள்ளாவோம். சகோதரர்கள் இதைக் குறிப்பிடும் காரியமானது, என்னைத் தவிர மற்றவர்களும் இச்சூழ்நிலையின் முக்கியத்துவத்தையும், ஸ்தானத்தினுடைய பொறுப்பினையும் உணர்ந்திருக் கின்றனர் என்பது தெரிகின்றது.

இந்த மாலைவேளையில் இடம்பெறும் இச்சிறு உரையாடல் குறித்து நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, வேதவாக்கியங்களிலுள்ள ஒரு குறிப்பிட்ட வசனமானது, அதாவது அப்போஸ்தலனாகிய பவுல் எருசலேமுக்குப் போகும் வழியில் எபேசு பட்டணத்திற்குள் போக நேரமில்லாததினால், எபேசு பட்டணத்து மூப்பர்களை ஒன்றுகூடிட அழைத்தபோது அவர் பயன்படுத்தின வார்த்தைகள் என் நினைவிற்கு வந்தது. மூப்பர்கள் கப்பல் அருகே அவரைச் சந்திக்கும்படிக்கு வந்தார்கள் மற்றும் அவர்கள் ஒன்றுகூடினபோது, கர்த்தர் இயேசுவினுடைய பிரதிநிதியென அவர்: "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்றார் (அப்போஸ்தலர் 20:28). அப்போஸ்தலன் கூறும் விதத்தைக் கவனியுங்கள் - "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்". எனது அருமை சகோதரரே, இதுவே நம் அனைவருக்கும் முதலாவது காரியமாகும். நீங்கள் மற்றவர்களுக்கு என்ன செய்கின்றீர்கள் என்பதைவிட, நீங்கள் உங்களுக்கு என்ன செய்கின்றீர்கள் என்பது உங்களுக்கு மிக முக்கியமானதாய் இருக்கத் தேவன் விரும்புகின்றார் மற்றும் இப்படியாகவே என் விஷயத்திலும் நான் இருக்க விரும்புகின்றார்; அதாவது மற்றவர்கள் யாரையும்விட அவர்கள் யாராய் இருப்பினும் அவர்களைவிட, நான் என்னைக்குறித்து மிகவும் கவனம்கொண்டிருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரனாய் மற்றும் பிரதிநிதியாய் மற்றும் ஸ்தானாபதியாய்க் காணப்படுவதற்குரிய பொறுப்பினை நான் உணர்ந்திருப்பது நலமாகும் மற்றும் நீங்கள் பேசும் அனைத்திலும் மற்றும் நீங்கள் செய்யும் அனைத்திலும், உங்களது நடத்தை அனைத்திலும் உள்ள உங்களது பொறுப்பினை உணர்ந்திருப்பது நலமாகும் - அதுவும் இவைகள் மற்றவர்களிடத்திலும், இன்னும் முக்கியமாய் உங்களிடத்திலும் நன்மைக்கேதுவாய் அல்லது தீமைக்கு ஏதுவாய்க் கொண்டிருக்கும் செல்வாக்கைக் குறித்து நினைவில்கொண்டும் உணர்ந்திருப்பது நலமாகும். இவ்விஷயமானது உங்களிலிருந்து, அதாவது உங்கள் சொந்த இருதயத்திலிருந்து, எனக்கு என்னுடைய சொந்த இருதயத்திலிருந்து துவங்க வேண்டுமென்று தேவன் கூறுகின்றார். "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்." அருமையான நண்பர்களே இது நாம் செய்வதனைத்தையும் குறித்து மிகவும் கவனமாய்க் கவனிப்பதை - மிகக்கடுமையாய்க் கவனிப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும் - கடந்த வருடம் நீங்கள் எச்சரிக்கையாயிருந்து, ஆராய்ந்துபார்த்து, உங்கள் இருதயத்தின் நிலைமையைக் கண்டு, சரியாய் இருக்கின்றது என்று கண்டுகொள்வது மாத்திரம் போதாது. என்னுடைய அனுபவத்தை வைத்துப் பார்க்கையில், கர்த்தருடைய ஜனங்கள், அதிலும் விசேஷமாக முதன்மையான ஸ்தானங்களில் காணப்படுபவர்கள் ஒவ்வொரு இரவிலும் தங்கள் நிலைமையினை ஆராய்ந்துபார்ப்பது முக்கியமாகும். படுக்கைக்குப் போகும்முன் நீங்கள் இன்றிரவில் எப்படிக் காணப்படுகின்றீர்கள்? உங்களது இருதய நிலைமை எப்படிக் காணப்படுகின்றது? கர்த்தருக்கு எவ்வளவு அருகாமையில் நீங்கள் காணப்படுகின்றீர்கள்? உங்கள் வஸ்திரங்களில் ஏதேனும் கறைகளைப் பெற்றிருக்கின்றீர்களா மற்றும் கலியாண வஸ்திரத்தில் சுருக்கங்கள் காணப்படுகின்றதா? இருக்குமானால், அவைகளைச் சரிச் செய்திடுங்கள். ஒரே ஒரு வழிதான் உள்ளது. தனக்குவரும் கறைகளைக் கழுவிக்கொள்ளாதவன் மற்றும் தனக்கு வரும் சுருக்கங்களைச் சரிசெய்யாதவன், இவ்விஷயம் தொடர்பான எதையும் தேவனுடைய மந்தைக்குப் போதிக்கும் எந்த ஒரு நிலைமையிலும் இருக்கிறதில்லை. இவ்விஷயம் அருமையான நண்பர்களே நம்மில்தான் துவங்குகின்றது. "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்."

பின்னர் இரண்டாவதாக, தேவன் தமது சொந்த குமாரனுடைய இரத்தத்தினால் சம்பாதித்த, தேவனுடைய மந்தையைக்குறித்து எச்சரிக்கையாய் இருப்பதற்குரிய சரியான நிலைமையில் நீங்கள் காணப்படுவீர்கள். மந்தைக்கு எந்தளவுக்குக் கவனிப்புத் தேவைப்படுகின்றது? உங்களது குறைவுள்ள வல்லமைகள் அனைத்தும், என்னுடைய குறைவுள்ள வல்லமைகள் அனைத்தும் தேவைப்படுகின்றது. தேவனுக்கான ஸ்தானாபதிகளாக இருப்பது என்பதும், ஏதோ தேவன் பேசுவது போன்று பேசுவதும், ஏதோ நாம் அவரது வாய்க்கருவிகள் போன்று காணப்படுவதும் அருமையான சிலாக்கியமாகும். இது காட்சியாக்கிடுவதற்கான ஏதோ ஒன்று அல்ல அல்லது இறகு சூட்டுதலோ அல்லது பதக்கமோ அல்ல, மாறாக நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதான பொறுப்பாய்க் காணப்படுகின்றதென ஓ!

இங்கு நாம் உட்கார்ந்திருக்கும் மாலைவேளையிலும் மற்றும் ஒவ்வொரு நாளும் இதை உணருவோமானால் நலமாயிருக்கும்! உங்களுக்குப் பெரிய சிலாக்கியங்கள் காணப்படுகின்றதென்றால், உங்களுக்குப் பெரிய பொறுப்புகளும் காணப்படு கின்றன. கிறிஸ்துவின் சபையானது, உங்களுக்கு ஓர் ஊழிய ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறதென்றால், அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, நீங்கள் எச்சரிக்கையாய் இருப்பதற்கு நீங்கள் தேவனுக்குக் கடமைபட்டிருக்கின்றீர்கள்; "பரிசுத்த ஆவியானது உங்களைக் கண்காணியாக வைத்த" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் - தேவனுடைய மந்தை மாத்திரமே உங்களைக் கண்காணியாக ஏற்படுத்திடவில்லை; சபையில் நீங்கள் மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ காணப்படத்தக்கதாக அவர்கள் மாத்திரம் உங்களுக்காக வாக்களித்திடவில்லை; இக்காரியத்திற்குப் பின்னால் தேவன் இருந்துள்ளார் மற்றும் இந்த முழு ஏற்பாடும் அவருடையதேயாகும். உங்களைத் தேர்ந்தெடுத்த அந்தச் சகோதரர்களிடத்திலான உங்கள் பொறுப்பினை நீங்கள் அடையாளம் கண்டுகொண்டு, உணர்ந்துகொள்வது மாத்திரமல்லாமல், தேவன் முழு ஏற்பாட்டிற்கும் பின்னால் இருந்துள்ளார் என்றும், சகோதரர்கள் உங்களைத் தேர்ந்தெடுப்பதில் அவ்வேற்பாட்டிற்கு இசைவாய்ச் செயல்பட்டுள்ளனர் என்றும், தேர்ந்தெடுத்தலை நீங்கள் ஏற்றுக்கொள்கையில், கிறிஸ்துவுக்குள்ளான புதுச்சிருஷ்டிகள் அநேகரின் வாக்குகளென அவர்களது வாக்குகளுக்கு மதிப்புக்கொடுப்பது மாத்திரமல்லாமல், இப்படியாக வாக்களித்த அந்தச் சகோதரர்கள் வாயிலாக, வேதவசனத்தினுடைய வழிகாட்டுதல்களுக்கு இசைவாய்ப் பரிசுத்த ஆவியானது செயல்பட்டு, இயக்கிக் கொண்டிருக்கின்றதென நீங்கள் புரிந்துகொண்டுள்ளதாலும் மதிக்கின்றீர்கள் என்றும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்; ஆகையால் உங்களது பொறுப்பானது இரண்டு பொறுப்பாய்க் காணப்படுகின்றது - அதாவது அவர்களது வாக்களிப்பை ஏற்றுக்கொள்ளுதல் என்பது, அவர்கள் அருளியுள்ளதான ஊழியத்தினை ஏற்றுக்கொள்ளுவதாய் இருக்கும் மற்றும் கிறிஸ்துவினுடைய சபையின் காரியங்கள் அனைத்தும் தெய்வீக மேற்பார்வையின் கீழ்க்காணப்படுவதாக அடையாளம் கண்டுகொள்ளுதல் என்பது, தேவனிடத்திலான உங்கள் பொறுப்பாய் இருக்கும் என்றும் நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று, "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18) மற்றும் அவர் வைத்துள்ள நிலைக்கு நாம் உண்மையாய் இருக்கவில்லையெனில், அவர் அதை மாற்றிடவும், வேறு ஏற்பாட்டினைக் கொண்டுவரவும் மிகவும் வல்லமையுள்ளவராக இருக்கின்றார். ஆகையால் தேவனிடத்திலும், பரிசுத்த ஆவியினால் நாம் கண்காணிகளாக யாருக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோமோ, அந்த மந்தையிடத்திலுமான இந்தப் பொறுப்பினை முழுமையாயும், தீவிரமாயும் கவனித்திருப்பதில் நாமே மிகவும் கவனமாய்க் காணப்பட வேண்டும்.

அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியானது, குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக - குறிப்பிட்ட காரணத்தின் கண்ணோட்டத்தில் நம்மைக் கண்காணிகளாக ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கின்றார். அந்த நோக்கமென்ன? உலகத்தினைச் சந்தோஷிக்கப்பண்ண வேண்டும் என்பதுதான் பரிசுத்த ஆவியானது நம்மை மந்தையினுடைய கண்காணிகளாக வைத்ததற்கான காரணமாய் இருக்குமா? இல்லை. நாம் உலகத்தைப் போஷிக்க/மேய்க்க வேண்டும் என்பதற்காகவா? இல்லை. சபைக்குச் சிரிப்பு மூட்டுவதற்காகவா? இல்லை. நாம் நம்மையே காண்பித்துக்கொண்டு, பிரகாசித்துக்கொள்வதற்காகவா? இல்லை. நம்மைக் கண்காணிகளாக வைப்பதில் பரிசுத்த ஆவியினுடைய நோக்கமென்ன? அப்போஸ்தலனின் பதில் என்னவெனில் . . . மந்தையை மேய்க்கத்தக்கதாகவே பரிசுத்த ஆவியானது நம்மைக் கண்காணிகளாக வைத்துள்ளது. மந்தையை மேய்ப்பது என்றால் என்ன? அது அவர்களுக்கு ஏற்றகால சத்தியத்தினைக் கொடுப்பதை, போஷாக்குக் கொடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகாரமளிக்கும் தங்களை, அதிகமாய் மகிமைப்படுத்திடும் ஆகாரத்தினை மந்தைக்குத் தாங்கள் கொடுக்க வேண்டும் என்றும் எண்ணுகின்ற சிலர் காணப்படுகின்றனர் மற்றும் ஆகாரம் வழங்குவதில் தங்களை மகிமைப்படுத்திடும் வழி எதையாகிலும் தாங்கள் கண்டுபிடிப்பது வரையிலும், இவர்கள் யாருக்கும் ஆகாரம் வழங்கப் போவதில்லை. இது யாவும் தவறாகும். இது தவறு என்று நாம் அனைவரும் அறிவோம். இது தவறு என்று அவர்களும் அறிவார்கள். இத்தகையவர்கள் தங்கள் ஊழிய ஸ்தானத்திற்கடுத்த பொறுப்பினைக் குறித்துச் சிந்தித்துப்பார்க்காதவர்கள் ஆவர். என்னோடுகூட நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் நிச்சயம்கொண்டிருக்கின்றதான சரியான வழிமுறை அருமை சகோதரர்களே இதோ: தேவன் தம்முடைய மந்தை மேய்க்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றார்; இது விஷயத்தில் ஊழியம் புரிவதற்குரிய வாய்ப்பினை அவர் உங்களுக்கும், எனக்கும் கொடுத்திருக்கின்றார்; நமது சுயத்தை முழுமையாய்த் தள்ளிவைத்திடவும், சுயத்தைப் புறக்கணித்து, மந்தையை மேய்ப்பதற்கு நம்மால் முடிந்த அனைத்தையும் முழு ஆற்றலோடு செய்யத்தக்கதாக நம்மை நாம் ஈடுபடுத்திடவும் அவர் எதிர்ப்பார்க்கின்றார். உங்களை மதிக்கின்றார்களா அல்லது இல்லையா என்று ஒருபோதும் பார்க்காதீர்கள்; உங்களை மகிமைப்படுத்து கின்றார்களா அல்லது இல்லையா என்று ஒருபோதும் பார்க்காதீர்கள்; உள்ளே போய், மந்தையை மேய்த்திடுங்கள் - மற்றக் காரியங்களை அவைகளே பார்த்துக்கொள்ளட்டும். நீங்கள் அவர்களை மேய்த்தீர்களா அல்லது இல்லையா என்று மந்தையானது இறுதியில் அறிந்துகொள்ளும் என்பதும், இறுதியில் மந்தையானது உங்களை ஓர் ஊழியக்காரனாக மதித்திடும் என்பதும் என்னுடைய எண்ணமாக இருக்கின்றது. மந்தை உங்களைக் கர்த்தராகவும், எஜமானாகவும் மற்றும் தங்கள் மீது இராஜாவாகவும் மதிப்பதில்லை மற்றும் இப்படியாக மதித்திட வேண்டும் என்றும் விரும்பிடாதீர்கள். மந்தையினுடைய ஊழியர்களாய்க் காணப்படுவதற்குரிய சிலாக்கியத்தில் மகிழ்ச்சிக்கொள்வதே கர்த்தருடைய

ஜனங்கள் அனைவருக்குமான சரியான மனோநிலையாகும் மற்றும் இயேசு சொன்னது போன்று உங்களில் பெரியவனாயிருக்கிறவன், மிகவும் உயர்வாய் எண்ணப்படுகிறவன், எப்படிப்பட்டவன்? இறுமாப்படைகிறவனா? நிச்சயமாக இல்லை! எப்படிப்பட்டவன்? மிகுந்த ஊழியம் புரிபவன் - கர்த்தருடைய காரணங்களுக்கடுத்த சேவையில் தனது ஜீவனை முற்றும் முழுமையாய் ஒப்புக்கொடுத்துவிடுகிறவன் ஆவான். இதுவே மாபெரும் போதகர் உங்களுக்கும், எனக்கும் கொடுத்திட்ட பாடமாகும்; அதாவது நாம் அவருக்குப் பிரியமாய் நடந்தால், நாம் மற்றவர்களுக்குப் பிரியமாயிருக்கிறோமா அல்லது இல்லையா என்று நீங்களும், நானும் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் அனைவரையும், அதிலும் விசேஷமாக தேவனுடைய மந்தையைப் பிரியப்படுத்த விரும்ப வேண்டும்தான்; இது சரியும்கூட; எனினும் நாம் நமது பரமபிதாவுக்கும், நமது கர்த்தராகிய இயேசுவுக்கும் பிரியமாய்க் காணப்பட வேண்டும் என்பதை முதலாவதாக நம்முடைய சொந்த இருதயங்களிலும் மற்றும் முதலாவதாக நம்முடைய சொந்த மனங்களிலும் நிலைநிறுத்திட வேண்டும். நாம் இவர்களுக்குப் பிரியமாய்க் காணப்படுவதாக அறிவோமால், என்ன நடந்தாலும் பரவாயில்லை, பலனில் முழுமையாய்த் திருப்திக்கொள்வதற்கு நாம் முடிகிறவர்களாக இருப்போம். இதற்கு நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம் அல்லவா? நிச்சயமாக என்று நான் எண்ணுகின்றேன்.

ஆகையால் நான் கொடுக்க விரும்பும் விசேஷித்த அறிவுரை என்னவெனில் - பழைய மனுஷன் கடினமாய் உழைக்கின்றானா என்று பார்த்துக்கொள்வது தவிர, புதுச்சிருஷ்டியானது ஈடுபட்டுள்ளதான வேலை அனைத்திலும் புதுச்சிருஷ்டிக்கு உதவத்தக்கதாக, "பழைய மனுஷன்" முழுமையாய்த் தனது முதுகை வளைத்திருக்கிறாரா என்றும் பார்த்துக்கொள்வது தவிர, பழைய மனுஷனால் செய்ய முடிந்த அனைத்தையும் நீங்கள் அவனைக்கொண்டு செய்ய வைக்கின்றீர்களா - உங்களது பழைய மனுஷனை, சுபாவ மனுஷனை, மனித சரீரத்தை - எப்போதும் உங்களது அடிமையாய் வைத்துக்கொள்ளத்தக்கதாகப் பார்த்துக்கொள்வது தவிர, மற்றப்படி சுயத்தை முழுமையாய் மறந்துவிடுவோமாக. இங்குப் பேச்சாளர் (சகோ. ரசல்) எங்களது தந்தையை பழைய "மனுஷன்" என்று அழைத்து, அவமதித்ததினால் பேச்சாளரைப் பிடிக்கவில்லை என்று யாரும் கூறிடுவார்கள் என்று நான் எண்ணவில்லை. நம்முடைய பழைய மனுஷன் என்பது பழைய சுபாவமாகும் மற்றும் அப்போஸ்தலன் நமக்குக் கூறுவதுபோன்று, புதுச்சிருஷ்டிகளாகிய நமக்கு, நம்முடைய ஊழியக்காரனாய் இருக்கும்படிக்குப் பழைய சுபாவமானது கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் முந்தினக்காலங்களில் நம்மில் சிலர் பாவத்திற்கும், தீய செய்கைக்கும் நம்முடைய வல்லமைகளை ஒப்புக்கொடுத்திருந்தோம், ஆனால் இப்பொழுதோ சரீரங்களிலும் மற்றும் அவருடையதாகிய நம்முடைய ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்தத்தக்கதாக, புதுச்சிருஷ்டிகளென நாம் இந்தச் சரீரங்களை எடுத்துக்கொண்டு, நீதியானவைகள் ஒவ்வொன்றையும் செய்திடுவதற்கென அவற்றைப் பயன்படுத்திட வேண்டும்.

ஆகையால் ஊழியத்தில் சபையின் பிரதிநிதிகளென நமக்கு இருக்கும்

மிகப்பெரிய பொறுப்பானது நம் அனைவருடைய இருதயங்களுக்குள்ளும் காணப்படுவதாக - அதாவது இறுமாப்பாய் ஆளுவதற்காக அல்ல, மாறாக ஊழியம் புரிவதற்கே நியமிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், இரண்டாவதாக, கிறிஸ்துவின் மந்தையை மேய்ப்பதற்குக் கர்த்தருடைய ஊழியக்காரர்களாய்க் காணப்படும்படிக்கு அவரால் நியமிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், நம் அனைவருடைய இருதயங்களுக்குள்ளும் காணப்படுவதாக என்று நான் தெளிவாய்க் கூறியுள்ளேன் என்று நம்புகின்றேன். நாம் எந்தளவுக்குச் சுயத்தை மறந்து, சத்தியத்திற்கான ஊழியத்திலும் மிக முழுமையாய் ஈடுபடுவோமோ, அவ்வளவுக்கு நமது கர்த்தரை நாம் கனப்படுத்தி, முடிந்தமட்டும் அவரைப் பிரியப்படுத்திடுவோம். ஆகையால் எப்போதேனும் உங்கள் மனங்களில் - இதை நான் செய்தேனாகில், இது எனக்கு மகிமை சேர்த்திடாது; அதைச் செய்தால், அது எனக்கு மகிமை சேர்த்திடும் என்ற எண்ணங்களானது வந்ததானால் அல்லது வருமானால், புதுச்சிருஷ்டியாகிய உங்களுக்கு இத்தகைய எண்ணங்களானது - தகுதியற்றது மற்றும் துரோகமானது என்று கருதி, முழுமையாய் ஒழித்துவிடுங்கள். நம்முடைய ஊழியம் தொடர்புடைய விஷயத்தில் நீங்களும், நானும் மனங்களில் கொண்டிருக்க வேண்டியது என்னவெனில் . . . நாம் யாருக்காய் ஊழியம் புரிகின்றோமோ மற்றும் உண்மையாய் இருக்கும் பட்சத்தில், யாருடைய இராஜ்யத்தில் சீக்கிரத்தில் இணைந்திடுவதற்கென எதிர்ப்பார்த்திருக் கின்றோமோ அவருக்கு, நம்முடைய ஆண்டவருக்கு எது பிரியமாய் இருக்கும்? என்பதேயாகும். நாம் நம்மையே பிரியப்படுத்த நாடுவோமானால், நாம் அவரைப் பிரியப்படுத்தமாட்டோம் என்றும், மாபெரும் பரிசினை இழப்போம் என்றும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். நம்முடைய ஆண்டவருடைய சிந்தைக்கு முரணாக, அதாவது சுயத்தை நாடுபவராகவும், சுயநலமாகவும் காணப்படும் ஒரு நபரைக்கூட இராஜ்யத்தின் வகுப்பாரில் கொண்டிருக்கமாட்டார் என்பதில் நமக்கு நிச்சயமே - இதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்பதில் எனக்கு நிச்சயமே. ஆகையால்தான் தம்முடைய குமாரனுக்கு ஒத்த சாயலில் காணப்படப்போகிறவர்களின் தேர்ந் தெடுக்கப்படுதலைத் தேவன் முன்னறிவார் மற்றும் முன்குறித்துள்ளார் என்று அப்போஸ்தலன் நமக்குக் கூறுகின்றார்; ஆகையால் நீங்களும், நானும் கிறிஸ்துவுக்கு ஒத்த சாயலாகி, அவருடைய இராஜ்யத்தில், அவருடன் உடன் சுதந்தரர்களாகிட வேண்டுமெனில், அவர் அனைவருக்கும் ஊழியக்காரனாய் இருந்தார் என்ற இந்தக் குறிப்பிட்ட விதத்தில் நாம் அவருக்கு ஒத்த சாயலை அடைய வேண்டும்; மற்றும் எந்தளவுக்கு நீங்களும், நானும் அனைவருக்குமான ஊழியக்காரர்களாக அல்லது சிலருக்கான ஊழியக்காரர்களாக இருக்க முடிகின்றதோ, அந்தளவுக்கு நாம் இவ்வாய்ப்புக்களுக்காகச் சந்தோஷம் கொள்ள வேண்டும்.

இப்பொழுது இன்னொரு காரியத்திற்கு வருவோம்: நான் "பிரசங்கித்தல்" எனும் வார்த்தையினைப் பயன்படுத்துகையில், சொற்பொழிவிலோ அல்லது பிரசங்கத்திலோ செய்வதுபோன்று பிரசங்கித்தல் எனும் அர்த்தத்தில் மாத்திரம்

நான் குறிப்பிடுவதாகப் புரிந்துகொள்ள வேண்டாம். நாம் போதிக்கும் விதத்தில் பிரசங்கிக்கின்றோம். பெரோயா வகுப்பிலோ அல்லது வேறு ஏதாவது விதத்திலோ - பொதுவில் பேசப்படும் அனைத்துமே பிரசங்கிக்கும் விதமாகவே அல்லது செய்திக் கொடுப்பதாகவே இருக்கின்றது; இது பிரசங்கித்தல் அல்லது கர்த்தருடைய செய்தியை அனுப்புவதாகும். அருமையான நண்பர்களே நாம் பிரசங்கிக்கிறது, நாம் கொடுக்கிற செய்தியானது, மிக முக்கியமான ஒன்றாகும் மற்றும் அதிலிருந்து நம்முடைய மனங்களைத் திசைத்திருப்பிட எதிராளியானவன் மிகவும் விரும்பிடுவான் என்று உங்களுக்கு அறிவுறுத்த விரும்புகின்றேன். சபையார் தாங்கள் புதிய வெளிச்சத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர் என்று எண்ணிக்கொள்ளத்தக்கதாக, சிலர் புதிய காரியங்கள்பால் விலகிச்சென்றிட சோதனைக்குள்ளாகுகின்றனர். எந்த ஒரு புதிய வெளிச்சமும் உங்களுக்குத் தேவையாயிருக்கிறது என்று நான் எண்ணுகிறதில்லை. கர்த்தருக்கு எந்த ஒரு புது வெளிச்சமும் தேவையாயிருக்கின்றது என்று எனக்குத் தோன்றவில்லை. என் அருமையான நண்பர்களே புது வெளிச்சம் எதுவும் காணப்படுகிறதாக எனக்குத் தெரியவில்லை. நம்முடையதான மாபெரும் வெளிச்சமானது 1800-வருடங்களுக்கு முன்னதாகவே துவங்கிவிட்டது. முன்னோர்களின் பாரம்பரியங்களினால் அந்த வெளிச்சமானது தெளிவாய்த் தெரியாமல் இருந்ததே நமக்கான இடர்ப்பாடாகும் மற்றும் வெளிச்சம் பிரகாசிக்கத்தக்கதாக, கண்விழியைச் சுத்தீகரிக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். நாமும், நம்மைத் தேவன் கண்காணிகளாக வைத்துள்ள தேவனுடைய மந்தை அனைத்தும், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களால் கூறப்பட்டதான மாபெரும் சத்தியங்களைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளத்தக்கதாக முயற்சித்துக்கொண்டிருக்கின்றோம். ஆகையால் நமக்கு ஆபத்தானதாகவும், மந்தைக்கும் ஆபத்தானதாகவும் காணப்படும் புதிய சில வெளிச்சங்களை உருவாக்க முற்படுவதை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இயேசு பிரசங்கித்த சுவிசேஷத்தில் அதிகமான வெளிச்சம் இல்லையா? அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த சுவிசேஷத்தில் அதிகமான வெளிச்சம் இல்லையா? இன்னும் அதிகமாய் உங்களுக்கு எவ்வளவு வேண்டுமென, நான் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்? புதிய வெளிச்சத்தை உண்டுபண்ணுபவர்களாக நீங்களும், நானும் மாறிட தேவையில்லை என்று என் அருமையான நண்பர்களே நான் எண்ணுகின்றேன் மற்றும் இத்திசையில் ஓர் அபாயம் இருப்பதாக நான் எண்ணுகிறபடியாலே, உங்களை எச்சரிக்க நான் நாடுகின்றேன். கர்த்தர் இயேசுவினுடைய செய்தியும், தூதர்களால் அறிவிக்கப்பட்ட செய்தியும்தான், உலகம் புரிந்துகொள்ள வேண்டிய செய்தியாய் இருக்கின்றது என்று நான் நம்புகின்றேன்; தேவனுடைய மாபெரும் அன்பு குறித்தும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாபெரும் அன்பு குறித்தும் மற்றும் அவர் எப்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார் என்பது குறித்தும் மற்றும் இப்பொழுது அவர் அழைத்துக்கொண்டிருக்கும் வகுப்பார் குறித்தும் மற்றும் எப்படி நாம் நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வது என்பது குறித்தும் மற்றும் இயேசுவால் செலுத்தப்பட்ட ஈடுபலி விலைக்கிரயமானது எப்படி, இரட்சிப்பின்

முழுத்திட்டத்திற்கும் அடிப்படையாயிற்று மற்றும் இயேசுவின் மரணம் எனும் அஸ்திபாரத்தின்மேல்தான் திவ்விய கிருபையின் ஒவ்வொரு அம்சமும் கட்டப்பட்டுள்ளது என்பது குறித்தும் உள்ளவைதான் அச்செய்தியாகும். பிற்பாடே அதனோடு சம்பந்தப்பட்டுள்ள கோட்பாடுகள் அனைத்தும் வருகின்றன; இவைகள் அனைத்தும் சம்பந்தப்பட்டவைகளே; ஆனால் ஈடுபலி, திரும்பக்கொடுத்தல், பலி மற்றும் திவ்விய சுபாவம் - இவைகள் என்னால் பார்க்க முடிந்தவரை கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் அடிப்படைகளாகக் காணப்படுகின்றன. இவைகளையே இயேசுவும், அப்போஸ்தலர்களும் நமக்குப் போதித்தனர் மற்றும் இது தொடர்பான மாதிரியையும் நமக்கு முன்வைத்தனர். ஆண்டவருக்கும், வெளிப்படுத்தின விசேஷத்தின் 12-ஆம் அதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள கிரீடத்திலுள்ள தேவனால் நியமிக்கப்பட்டுள்ளதான பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் நீங்கள் மிகவும் நெருங்கி காணப்படுவதற் கேற்பவே, உங்களது நடத்தையானது தேவனுக்கு மிகப்பிரியமாய்க் காணப்படும் மற்றும் அவருடைய ஜனங்களை அவருக்கு இசைவாய்க் கொண்டுவருவதிலும், அவரது ஆவியின் ஐசுவரியத்தினால் அவர்களை ஆசீர்வதிப்பதிலும் மிகுந்த வெற்றியடைபவர்களாகக் காணப்படுவீர்கள்.

இன்னொரு காரியம்: வேதாகமத்தில் எவ்வளவுக்குக் கர்த்தர் இயேசு குறித்துக் கண்டுபிடிக்க முடிகின்றதோ, அவ்வளவுக்கு அருமையான சகோதரர்களில் சிலர் சகோதரர் ரசலையும் வேதாகமத்தில் கண்டுபிடிக்கின்றவர் களாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இது மாபெரும் தவறு என்று நான் எண்ணுகின்றேன். என்னால் வேதாகமத்தில் இப்படிக் கண்டுபிடிக்க முடியவில்லை. இது விஷயத்தில் நான் குருடாக்கப்பட்டுள்ளேன் என்றும், என்னைக்காட்டிலும் அவர்கள் அனைவராலும் நன்கு காணமுடிகின்றது என்று சிலர் கூறுகின்றனர். ஒருவேளை அவர்களால் பார்க்க முடிகிறதாய் இருக்கலாம், நான் அறியேன்; எனினும் இவ்விஷயத்தில் அபாயம் ஒன்று காணப்படுகின்றதென அருமையான நண்பர்களே நான் எண்ணுகின்றேன் மற்றும் உங்களை விழிப்பாக்கிட விரும்புகின்றேன். தேவன் பயன்படுத்தும் ஒவ்வொரு கருவிகளையும் நாம் அங்கீகரித்திட வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாய் இருக்கின்றதென நான் எண்ணுகின்றேன்; எனினும் தேவனுடைய எந்தக் கருவியையும், கர்த்தருக்கோ அல்லது அவரது திவ்விய ஏற்பாட்டிற்கோ போட்டியாக இருப்பதாக நாம் அங்கீகரித்துவிடக்கூடாது. அவரே ஆசீர்வாதத்தின் ஊற்றாய் இருக்கின்றார் மற்றும் அவர் மாத்திரமே மிகவும் துதிக்கப்படத்தக்கவர். இதுவே சரியான மனவுணர்வு என்று எண்ணுகின்றேன். இதை நீங்கள் அனைவரும் ஒப்புக்கொள்வீர்களென்று நம்புகின்றேன். இன்னுமாகச் சகோதரர் ரசலைப் பிரசங்கம் பண்ணும் அபாயமும் சில அருமையான நண்பர்களுக்குக் காணப்படுகின்றது. இப்படி நீங்கள் செய்வதைச் சகோதரர் ரசல் விரும்பமாட்டார். இது தேவனுக்கு மகிமையாய் இராது என்று அவர் எண்ணுகின்றார். அருமையான நண்பர்களே என்னுடைய கணிப்பின்படி, தேவனுடைய சுவிசேஷம் பற்றியும், அவரது திட்டம் பற்றியும் ஆராய்வதற்கு நமக்கு அதிக காரியங்கள் இருக்கின்றன மற்றும் அவரது புண்ணியங்களை அறிவித்திடுவதற்கான அநேக வாய்ப்புகள்

காணப்படுகின்றன, ஆகையால் இவ்விதத்தில் நம்முடைய நேரம் அனைத்தையும் ஈடுபடுத்தி, செலவழிப்போமாக என்று மறுபடியுமாகச் சொல்கின்றேன். ஆகையால் இதற்கு அப்பாற்பட்ட அனைத்திற்கும் நாம் மிகக்குறைவான கவனத்தைக் கொடுப்போமாக என்பதே என் ஆலோசனையாகும். யாரைக் கனப்படுத்த வேண்டுமோ, அவர்களைக் கனப்படுத்துவோமாக என்று வேதவாக்கியங்கள் சொல்கின்றன மற்றும் இது யாவருக்கும் மற்றும் அனைவருக்குமே பொருந்தும்; உதாரணத்திற்கு நாம் திரும்பிப்பார்க்கையில், நாம் மார்ட்டின் லுத்தரைப் பார்க்கின்றோம் மற்றும் அவர் ஒரு பிரம்மாண்டமான வேலையைச் செய்திருக்கின்றார் மற்றும் அவருக்காக நாம் தேவனை ஸ்தோத்தரிக்கின்றோம்; இதே போன்றே ஜான்வெஸ்லி அவர்களையும் குறித்து உண்மையாகவே கூறிடுவோம்; தேவனுடைய ஏற்பாட்டில் அவர் காணப்பட்டார் என்பதற்காகவும், அவர் ஓர் உண்மையுள்ள மனுஷனாக இருந்திருக்கிறார் என்பதற்காகவும் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இன்னும் கர்த்தருடைய ஜனங்களில் வேறு சிலரும் கடந்தகாலங்களில் காணப்பட்டனர். அனைவருக்காகவும் நாம் மகிழ்ந்து, களிகூருவோமாக மற்றும் நமக்கு உதவுவதற்கும், மற்றவர்களுக்கு உதவுவதற்கும், தேவனது மாபெரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் வேண்டி, அவர் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தியுள்ளதினால், நாம் தேவனை ஸ்தோத்திரிக்கின்றோம்; எனினும் மனிதரைத் தொழுதுகொள்ளும் எதற்குள்ளும் போகாதிருப்போமாக; ஏனெனில் இது கர்த்தருக்குப் பிரியமற்றதாகவும், நமக்குப் பாதகமாகவும் காணப்படும் என்பதில் உறுதியே. முப்பது வருடங்களுக்கு முன்னதாக வெளிப்படுத்தின விசேஷத்தில் சபையைச் சித்தரிக்கும் வேதவாக்கியத்தை உங்களது கவனத்திற்குக்கொண்டு வந்ததை, நான் மீண்டுமாக உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். வெளிப்படுத்தின விசேஷத்தினை எழுதின யோவான் காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், அவைகளை அவருக்குக் காண்பித்துக்கொடுத்த தூதனைத் தொழுதுகொள்ளும்படிக்குப் பணிந்து விழுந்தார் மற்றும் தூதனோ: "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்" என்றார் (வெளிப்படுத்தல் 22:9). ஆகையால் அருமையான நண்பர்களே நம்முடைய பரம பிதாவும், நமது பரம கர்த்தரும் ஏதேனும் அளவில் சகோதரர் ரசலைப் பயன்படுத்தியுள்ளார்களெனில், அப்படிப் பயன்படுத்தப்பட்டதற்காக அவர் மிகவும் மகிழ்ச்சிகொள்கிறார் மற்றும் நன்றி ஏறெடுக்கின்றார். இன்னும் அவரைப் பயன்படுத்த கர்த்தர் பிரியப்படுவாரானால், கடைசி மூச்சு வரைக்கும், தான் பயன்படுத்தப்படுவதில் மகிழ்ச்சிக்கொள்வார்; ஆனால் அவருக்கு எந்தத் தொழுதுகொள்ளுதலும் தேவையில்லை; தகாத வணக்கம் எதுவும் அவருக்குத் தேவையில்லை; அவருக்குப் பாராட்டு எதுவும் தேவையில்லை. கர்த்தருடைய சகோதரர்களாய் இருப்பவர்கள் அனைவரின் அன்பை அவர் பெற்றுக் கொள்வதிலும் மற்றும் தேவன் வாக்களித்துள்ளதான மகிமையான காரியங்கள் அனைத்தையும் அடைய நாடுபவராகவும், நமது தேவனாகிய கர்த்தரால்

அழைக்கப்படுபவர்கள் யாவருக்கும் மிகுந்த சந்தோஷத்திற்கேதுவான நற்செய்தியைச் சொல்லிட நாடுபவராகவும் காணப்படும் அனைவரோடுகூட உள்ள சக ஊழியனாகக் கருதப்படுவதிலும் அவர் மகிழ்ச்சியடைவார்.

இப்பொழுது என் அருமையான நண்பர்களே, இக்கருத்துக்களை நான் கூறி முடித்த பிற்பாடு, ஊழியம் தொடர்பான கேள்விகள் சிலவற்றை அல்லது வெவ்வேறு சபைகள் தொடர்பான கேள்விகளைக் கேட்பதற்குரிய வாய்ப்புத் தரப்படும். இப்படியாகச் சில நிமிடங்கள் செலவழிப்பது அநேகமாகப் பிரயோஜனமாய் இருக்குமென நான் எண்ணுகின்றேன். கேள்விகளை எழுதிட வேண்டாம்; கேள்விகளைக் கேட்கலாம்.

- சகோ. ரசல்.

---

# எந்தன் ஆண்டவருக்கு ஊழியம்புரிய ஏங்கினேனே

எந்தன் ஆண்டவருக்கு ஊழியம்புரிய ஏங்கினேனே;
ஆனால் பரந்துவிரிந்து கிடந்த அந்த வயல்தனில் உழைத்துக்கொண்டிருந்த,
அந்த விறுவிறுப்பான, மகிழ்ச்சியான வேலையாட்களிடமிருந்து,
அந்தோ! நான் தனிமை படுத்தப்பட்டிருந்தேனே!
அங்குச் சொற்பமானவர்களே, ஆம் சொற்பமானவர்களே,
வேலை புரிந்து நின்றார்களே.
என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே...
ஏன் நான் வேலைபுரிய அனுமதிக்கப்படவில்லை என்று
என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே...
நான் நினைத்ததுபோல் எதுவும் நடக்கவில்லையே.

எந்தன் ஆண்டவருக்கு ஊழியம்புரிய ஏங்கினேனே;
வேலை ஏராளமாய் உள்ளது என்பதையும் நான் அறிவேனே;
எந்தனுக்கு வேலை செய்வது என்பது சுலபமே,
ஆனால் ஐயோ, காத்திருப்பது கடினமாய் உள்ளதுவே;
எந்தன் இருதயத்திற்கு மிக அருமையான அந்த வேலைதனில்
ஈடுபட்டுள்ள அந்த அறுவடை வேலையாட்களின்
சத்தம் எந்தன் காதுகளில் தொனித்துக்கொண்டிருக்க,
ஒன்றும் செய்யாமல், அமைதியாய் இருப்பது ஓ! கடினமாய் உள்ளதுவே.

எந்தன் ஆண்டவருக்கு ஊழியம்புரிய ஏங்கினேனே;
ஓ! இது ஒன்றே எந்தனின் எண்ணமாய் இருந்ததுவே.
அவரது பாதப்படிதனை ஜெபத்தில் நாடுகையிலும்
இதற்காகவேதான் கெஞ்சிகொண்டிருந்தேனே -அவருடனான

இனிமையான மற்ற உரையாடல்களும் குறைந்தனவே.
அவருக்கான ஊழியம் மாத்திரமே எந்தன் இருதயத்தினை நிரப்பி இருந்ததே.
அவரல்ல, அவருக்கான ஊழியம் மாத்திரமே இருதயத்தினை நிரப்பி இருந்ததே.

எந்தன் ஆண்டவருக்கு ஊழியம்புரிய ஏங்கினேனே;
அவர் எந்தனை வனாந்தர இடத்திற்கு அழைத்துச் சென்றாரே,
அங்கே நானும், அவரும் சற்றே நின்று, இளைப்பாறினோமே,
அவரது கண்கள் கனிவான பார்வையோடு
எந்தன் முகம்தனை நோக்கினதுவே;
சோகம் கலந்த ஆச்சரியத்துடனே நானும் யோசித்து நின்றேனே;
எந்தன் ஊழியத்தின் விஷயத்தில் நான் முறுமுறுக்கின்றேன்
என்று அவர் எண்ணி விட்டாரோ?

"ஓ! என் ஆண்டவரே, உமக்கு ஊழியம்புரிய நான் ஏங்குகின்றேன்;
காலம் குறைவாய் உள்ளதுவே,
நானும் வயலுக்குள் போக அனுமதியும்" - என்று கெஞ்சினேனே.
"என்னால் ஒன்றும் செய்யாமல், இளைப்பாறிக்கொண்டிருக்க முடியவில்லை!"
அவரது பாதம் அருகில் முழங்கால்படியிட்டு, அவர்
முகம்தனை ஏறெடுத்துப் பார்த்தேன்;
அவரோ அன்பாய்: "என் பிள்ளையே, அன்பு இல்லையெனில்
உந்தன் ஊழியமும் ஒன்றுமில்லாததாய் இருக்குமே" என்றார்.

எந்தன் ஆண்டவருக்கு ஊழியம்புரிய ஏங்கினேனே;
கதிர்களை அறுப்பதில் தமது வேலையாட்களைச் சுறுசுறுப்பாய் வைப்பதே,
அவரது மாபெரும் அக்கறை என்று எண்ணியிருந்தேனே.
ஆனால் இந்தத் தனிமையான வனாந்தரம்தனிலே,
விறுவிறுப்புகள் இல்லாத தொலைவில் உள்ள இவ்வனாந்தரம்தனிலே,
எந்தன் மாபெரும் தவறு, மெதுவாய், துயரத்தோடே புரிய வந்ததே.

எந்தன் மனம் முழுவதையும் ஊழியம் பற்றின சிந்தை ஆக்கிரமித்திருந்ததே;
நான் எந்தனை, அவரிடமிருந்து வேறுபாதைக்குத் திருப்பியுள்ளேனே!
அவர் அந்தப் பழைய நம்பகத்தன்மையை எதிர்ப்பார்த்திருக்கின்றார்!
இருதயத்தோடு இருதயம் கொண்டிருக்கும்
அந்த ஒன்றிணைதலை எதிர்ப்பார்த்திருக்கின்றார்!
கண்களில் கண்ணீருடன் மன்னிப்பை நாடி, பெற்றுக்கொண்டேனே.
இப்பொழுதோ ஊழியம் விலையேறப்பெற்றதாய் இருப்பினும்,
முதலிடம் அவருக்கென்று எப்போதும் வைத்துக்கொண்டேனே.

- Poems of Dawn

## பாகம் - 5

# சபையில் ஸ்தீரீகள்

R4121

# போதித்தல் என்றால் என்ன?

## *சகோதரிகளுக்காக ஒரு வேண்டுகோள்*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

நான் விஷயத்திற்குள் கடந்துபோவதற்கு முன்னதாக, இப்படி எழுதுவதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய இந்தக் கேள்வியானது, அநேக வாரங்களாக, மிகவும் விடாப்பிடியாய் மனதை அழுத்திக்கொண்டிருந்தது மற்றும் அடக்கிப்போடப்படவும் முடியவில்லை. அதை நான் அடக்கவும், மறக்கவும், என் காரியமல்ல என்று விவாதித்து, அதை அசட்டைப்பண்ணவும் முயன்றேன்; "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்பதானது என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது மற்றும் அது என்னைத் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது மற்றும் அதை என்னால் மாற்றிப்போடவும் முடியவில்லை. அதை நான் கர்த்தரிடத்தில் எடுத்துச் சென்று, என்னுடைய பேனா எழுத்துக்களுக்குக் வழிக்காட்டும்படிக்கு அவரிடம் ஜெபித்துக்கொண்டேன்.

முதலாவது காரியம் - மனைவியின் கீழ்ப்படுத்தப்படுதல் குறித்தும், புருஷனுடைய தலைமைத்துவம் குறித்தும் அடிக்கடி குறிப்பிடுவதும், இவ்விஷயங்களை மிகவும் மிகைப்படுத்திக் கூறுவதும் சிலர் மத்தியிலான வழக்கமாய் இருக்கின்றது (ஐயத்திற்கிடமின்றி தங்களையும் அறியாமல்தான் இப்படிக் கூறுகின்றனர்); ஆனால் இவர்கள் (என் காதுகளுக்கு எட்டினது வரையிலும்) புருஷனுக்குரிய தலைமைத்துவம் தவிர, மற்றப்படி புருஷனுக்குரிய கடமைகளைக் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முற்றிலுமாகத் தவறிவிடுகின்றனர்; "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்தார்" என்றும், "உங்கள் மனைவியர் வலுகுறைந்தவர்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்கு மதிப்புக்கொடுங்கள்" எனும் கட்டளைகளைச் சுட்டிக்காட்டாமல் விட்டுவிடுகின்றனர் (எபேசியர் 5:25; 1 பேதுரு 3:7 திருவிவிலியம்). வேதவாக்கியங்களை இப்படி ஒரு சார்பாகச் செயல்படுத்துதல் என்பது ஒரு குறிப்பிட்ட வகை புருஷனை, துரதிருஷ்டவசமாக அரிதான வகையாய் இராதபுருஷனை, குறுகிய மனப்பான்மையுடைய கொடுங்கோலனாக்கி/அடக்குமுறையாளனாக்கி, மனைவி தனக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எப்போதும் அவளை நினைவுப்படுத்துகிறவனாக்கி, தான் யார் மீதோ எஜமானாக இருப்பதுபோன்ற எண்ணத்தினால் அவனைப் பெருமிதம்கொள்ளச் செய்கின்றது மற்றும் தன் சார்பிலான அவனது கடமையினை அவன் புறக்கணித்துவிடச்செய்கின்றது மற்றும் ஒருவேளை அவள் தாழ்வுபடுகிறவளாக இருப்பாளானால், அவளை அடிமை நிலைக்குத்

தாழ்வுப்படுத்துகின்றான். இப்படியாக அவளை அவன் வற்புறுத்துகையில், அவளை மதிப்பதை அவன் நிறுத்திவிடுகின்றான். இம்மாதிரியான போதித்தல்களானது சில குறிப்பிட்ட மனப்பண்பாற்றலுடைய புருஷர்களை (இத்தகைய அநேகரை), டெனிசீ அவர்களால் வாட்ச் டவர் நவம்பர்-15-ஆம் வெளியீட்டில் இடம்பெற்ற அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான பாத்திரங்களாக்கிவிடுகின்றது.

இப்படியான ஒரு துன்பம் எனக்கு இருக்கின்றதெனக் கற்பனைப் பண்ணப்படாதபடிக்கு, எனக்கு இப்படி ஒரு துன்பம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனது கணவர் சிறந்த கிறிஸ்தவ கண்ணியவான்களில் ஒருவராவார் மற்றும் என்னைப் பொறுத்தவரையில் அவர் விழுந்துபோன மனுஷீகத்தில் முடிந்தமட்டிலும் குடும்பத்தலைவருக்குரியவைகளை நிறைவேற்றுபவராகக் காணப்பட்டு, என்னுடைய ஜீவியத்தைப் பாசத்தினாலும், பாதுகாப்பினாலும், பராமரிப்பினாலும் அழகுபடுத்தியுள்ளார்.

இரண்டாவது காரியம் கல்வி கற்பிப்பவர்கள் அனைவரும், பொதுத் திறமைகளின் கல்வி கற்பிப்பவர்கள்கூட, மாணவர்களிடம் கேள்வி கேட்பதின் முக்கியத்துவத்தைக்குறித்துத் தெரிந்திருக்கின்றனர் மற்றும் புரிந்திருக்கின்றனர் (என் கணவரும், நானும் இப்படிப்பட்ட பணியினை 20-வருடங்களுக்கு மேலாகச் செய்துவருகின்றோம்; அவர் மருத்துவக் கல்லூரிகளிலும், நான் பொதுப் பள்ளிக்கூடங்களிலும் செய்துவருகின்றோம்); ஆனாலும் டாண் புத்தகங்களோடு அல்லது ஆசரிப்புக்கூடார நிழல்கள் புத்தகத்தோடு வேதாகம ஆராய்ச்சி பண்ணிடுவதற்காகக் கூடிக்கொள்ளும் எளிய வகுப்பில், ஒரு கேள்விகூடச் சகோதரிகள் ஒருவரிடம் கூடக் கேட்கப்படுகிறதில்லை. அவள் கஷ்டப்பட்டு உழைத்திருக்கிறாள்; வாரம் முழுக்கக் கூட உழைத்திருந்திருக்கலாம்; ஞாயிற்றுக் கிழமையிலுங்கூட அவள் உழைத்திருந்திருக்கலாம்; ஆண்களைத் திகைக்கப்பண்ணும் சுமையான வேலைகளை அவள் செய்கிறாள் - துணிகளைத் துவைக்கிறாள், துணிகளைச் சலவைச் செய்கிறாள், துப்புரவுச் செய்கிறாள், ரொட்டி சுடுகிறாள், துணி தைக்கிறாள், கணவனுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் சமைக்கிறாள், இப்படியாக வீட்டுவேலையோடு சம்பந்தப்பட்ட ஆயிரமாயிரமான வேலைகளைச் செய்கிறாள் - இதனால் வாசிப்பதற்கோ அல்லது கற்பதற்கோ நேரமில்லாமல் காணப்படுகிறாள்; ஆனாலும் அவள் வேதாகம வகுப்பில் கலந்துகொள்கையில், இந்த முக்கியமான உதவியானது அவளுக்கு மறுக்கப்படுகின்றது. அவளைச் சிந்திப்பதற்கு வழிநடத்துகிற, அவளது ஆவலைத் தூண்டுகிற அல்லது அவளது மனதைக் கவர்ந்து, அவளது கவனத்தை ஈர்க்கிற ஒரு கேள்விக்கூட அவளிடம் கேட்கப்படுகிறதில்லை. இதைக்குறித்துச் சிந்தித்துப் பாருங்கள்! கூட்டம் சுவாரசியமற்றுக் காணப்படுகிறதில் ஆச்சரியப்படுவதற்கில்லையே.

பாஸ்டர் ரசல் அவர்களே, இப்படியாகக் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (ஒரு

பகுதியினரிடமிருந்து) அங்கத்தினர்களிடமிருந்து, அறிவைப் பெறுவதற்கு ஏதுவான விலையேறப்பெற்றதாய் இருக்கும் இந்த உதவியானது பிடுங்கப்படுவதைத் தாங்கள் அங்கீகரிக்கின்றீர்கள் என்பதை, தங்களது கையெழுத்துடன் பார்த்தாலொழிய, மற்றப்படி நான் நம்பமாட்டேன். தனிப்பட்ட விதத்தில் சொல்ல வேண்டுமானால், என்னிடம் கேள்விக் கேட்கப்பட்டாலும் அல்லது கேள்விக் கேட்கப்படாமல் இருந்தாலும், அதினால் எனக்கு ஒன்றுமில்லை. சிந்திப்பதற்கும், வாசிப்பதற்கும், கற்பதற்கும், ஜெபிப்பதற்கும் எனக்கு நேரம் இருக்கின்றது மற்றும் இப்படி எனக்கு எப்போதும் இருக்கின்றபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்; ஆனால் நேரம் இல்லாதவர்களுக்காகவும் மற்றும் உள்ளடங்கும் கொள்கைகளுக்காகவும் நான் வேண்டிக்கொள்கின்றேன்.

எங்களுடைய கூடுகைகளில் முதன்மையடைய வேண்டும் என்று அல்லது என்னுடைய பிரயாசங்களினால் நான் அடையப்பெற்றவைகளை விளம்பரப்படுத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறதன் காரணத்தால் இப்படி மேலே நான் எழுதியுள்ளதாக எண்ணம் ஏற்படாதபடிக்கு, நான் மறுபடியுமாகத் தெரிவிக்க விரும்புகிறதென்னவெனில் . . . ஒருவேளை இவைகளை நான் விரும்புகின்றேன் என்றால், இவைகள் எனக்கு எட்டின தொலைவிலேயே காணப்படுகின்றது; இவற்றை நான் எங்கள் சிறு சபையார் மத்தியில் தேட வேண்டிய அவசியமுமில்லை. வேதவாக்கியங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவைகளுக்கு மேலாக, சபையில் எந்த ஒரு சிலாக்கியத்தினையும் அடைந்திட நான் ஒருபோதும் விரும்பினதில்லை. ஒரு ஸ்திரீ கண்காணியாகவோ அல்லது உதவிக்காரராகவோ காணப்பட வேண்டுமென்று நான் ஒருபோதும் எண்ணினதில்லை; 1 தீமோத்தேயு 1:13-ஆம் வசனமானது, அவளையும், அநேகம் புருஷர்களையும் விலக்கிவைக்கின்றது. பெண்ணின் சுபாவத்திலுள்ள ஏதோ ஒன்றானது, இத்தகைய அதிகாரம் செலுத்துதலை அவளுக்கு மறுத்திடுவதற்கு ஏதுவாக்கி இருக்கின்றது. கடந்தகாலங்களில் சபையில் என்னுடைய பணியானது ஜெபக்கூட்டங்கள் அல்லது சுவிசேஷக் கூட்டங்களில் (இதை ஜெபம்பண்ணுதல் மற்றும் தீர்க்கத்தரிசனமுரைத்தல் என்று நான் காண்கின்றேன்) பங்கெடுப்பதும், ஞாயிறு பள்ளிகளில் போதிப்பதுமாக இருந்தது மற்றும் இவைகளில் நான் உற்சாகத்தையும், தேவ ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டதை நான் அறிவேன்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தீமைகள் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் என்று நான் நம்புகின்றேன்.

கிறிஸ்துவுக்குள்ளான தங்கள்,
M. E.

* * * * * * *

## மேற்கூறப்பட்டவைகளுக்குப் பதில்

விழுகையின் காரணமாகச் சில புருஷர்களிடத்தில் புருஷனுக்குரிய தன்மையினுடைய குறைப்பாடும் மற்றும் கொடுங்கோன்மையும், சில ஸ்திரீகளிடத்தில் ஸ்திரீக்குரிய தன்மையினுடைய குறைப்பாடும் மற்றும் கொடுங்கோன்மையும் அதிகமாய்க் காணப்படுகின்றது என்று நாம் ஒப்புக்கொள்கின்றோம். பரம அழைப்பினால் அழைக்கப்பட்டவர்கள் மத்தியில்கூட, இந்த இழிவான பண்புகளானது வெளிப்படுகின்றது; காரணம் தேவன் சிறந்தவர்களைப் பிரதானமாய் அழைக்காமல், இழிவானவர்களையே அழைத்துக்கொண்டிருக்கின்றார். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியில் ஐசுவரியவான்கள் அநேகரில்லை, ஞானவான்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை; முதன்மையாய் உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி உலகத்தில் பலவீனமானவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார் (1 கொரிந்தியர் 1:26-28). இதற்குக் காரணம் பிரபுக்களும், மேன்மையானவர்களும் தங்கள் மீதே அதிகம் நம்பிக்கைக்கொள்பவர்களாகவும், கொடுக்கப்பட்டுள்ள ஒரே நாமத்தின் வாயிலாக மன்னிப்பையும், உதவியையும் மன்றாடிக் கேட்டுக் கொள்வதற்கும் மற்றும் ஏற்றுக்கொள்வதற்கும் ஆயத்தமற்றிருப்பவர்களாகவும் இருப்பார்கள் என்று நாம் காண்கின்றோம். ஆகையால் புருஷனுக்குரிய தன்மையினுடைய குறைபாட்டையும், ஸ்திரீக்குரிய தன்மையினுடைய குறைபாட்டையும் நாம் காண்கையில், அது நம்மைக் கோபங்கொள்ளவோ, கர்த்தரினால் அழைக்கப்பட்டவர்கள் யாவருக்குமான - சகோதரருக்கான நமது அன்பினைத் தடைப்பண்ணிடவோ கூடாது.

ஆனால் இன்னொரு பக்கத்தில், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைவரும், போதகர்களிலேயே மகா பெரிய போதகரைப் பெற்றிருக்கின்றனர் மற்றும் இவர்கள் தங்கள் மனோபாவத்தில் சிறந்தவர்களிலேயே தலைச்சிறந்தவர்களாகிட வேண்டும்; ஏனெனில் "அவர்கள் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது. வசனத்தின் வாயிலாக மனதில் பதியவைக்கப்படுகின்றதான ஆவியின் இந்தப் படிப்பினைகளானது, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் யாவரிடத்திலும் பரிசுத்த ஆவியின் கிருபைகளாகிய சாந்தம், நற்குணம், பொறுமை, சகோதர சிநேகம், அன்பு ஆகியவற்றை வளர்க்கின்றதாய் இருக்கின்றது. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் ஆவியின் இந்தக் கனிகளை மிகச் சீக்கிரமாயும், மிக ஏராளமாயும் வளர்த்துக்கொள்கின்றனர்; ஆனால் இவர்கள் இராஜ்யத்தில் சுதந்தரர்களென ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பு அனைவரும் இவைகளை இருதயத்தில் அடையப்பெற்றிருக்க வேண்டும் (மற்றும் நிச்சயமாய்க் கொஞ்சம் வெளிப்புறத்திலும்

பெற்றிருக்க வேண்டும்). எழுதப்பட்டிருக்கிறது போன்று, இவர்கள் அனைவரும் தேவனுடைய பிரியமான குமாரனும், நம்முடைய மீட்பருமானவருடைய சாயலாகிட வேண்டும்.

ஆனால் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளவர்கள் மத்தியில், இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று சிலருக்கு அடக்குமுறையாகத் தோன்றும் செயல்பாடுகள் சிலசமயங்களில் எப்படி நடைபெறுகின்றது? உதாரணத்திற்கு, பெரோயா வேதாகமக் கேள்விகளைக் கேட்கையில், சகோதரிகளிடம் கேள்விக் கேட்பதைத் தவிர்த்து கடந்து செல்லுதலாகும். இச்செய்கைக்கு ஒரு நல்லக் காரணம் இருக்குமென நம்மால் கருதிக்கொள்ள முடிவதுவரையிலும், இச்செய்கைக்குக் கெட்டக் காரணத்தினை/ நோக்கத்தினைச் சாற்றிட வேண்டாம் என்று நாம் யோசனை தெரிவிக்கின்றோம். உதாரணத்திற்குக் கூட்டத்தினை வழிநடத்துபவர், "உபதேசம்பண்ண ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவுக் கொடுக்கிறதில்லை" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை, தேவன் கொடுத்துள்ள பிரமாணமெனத் தன் மனதில்கொண்டிருக்கலாம். ஒருவேளை ஒரு சகோதரியிடம் கேள்விக் கேட்பது என்பது, அவளை உபதேசம்பண்ண வரவேற்பதாய் இருக்கும் என்றும், இப்படிச் செய்வது என்பது, தான் அப்போஸ்தலனுடைய கட்டளையை மீறுகிற காரியமாய் இருக்கும் என்றும் அவர் யோசித்திருக்கலாம். ஒருவேளை "யாரேனும் பதில் சொல்கிறீர்களா?" என்று கூறி சகோதரிகளுக்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்திடுவதன் வாயிலாக, அவர் தனது மனசாட்சி அனுமதிக்கும் அளவுக்குச் செயல்பட்டு - ஒவ்வொரு சகோதரியும் தனது மனசாட்சியின்படி இது விஷயமாகத் தீர்மானம் எடுத்து, அதன்படி செயல்படுவதற்கு விட்டுவிடலாம் என்று எண்ணியிருக்கலாம். இத்திட்டமானது பொறுப்பினைப் பிரிக்கின்றதாய் இருக்கின்றது. மிகவும் முதன்மை வகிக்கும் சகோதரர்கள், பதிலளிக்கும் சகோதரிகளிடத்தில் நிதானமின்மைக் காணப்படுமெனக் கருதுவதே இந்த விஷயத்திலுள்ள பிரதான சிரமமாகத் தோன்றுகின்றது.

சகோதரிகள் எந்த நற்கருத்துகளையும் பெற்றிருக்க மாட்டார்கள் மற்றும் அவைகளை வெளிப்படுத்துவதற்கு அவர்கள் திறமையற்றவர்கள் என்றும், சகோதரிகளால் தங்கள் சொந்த குமாரர்களுக்கும், குமாரத்திகளுக்கும் நன்கு போதிக்க முடியாது என்றுமுள்ள கண்ணோட்டத்தினைச் சகோதரர்களில் யாரும் பெற்றிருக்கமாட்டார்கள் என்று நாம் விசுவாசிக்கின்றோம். போதிக்கும் விஷயத்திலும், சிந்திக்கும் விஷயத்திலும், நிர்வகிக்கும் விஷயத்திலும் ஸ்திரீகள் ஆச்சரியப்படத்தக்கதான ஆற்றல்களை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை அனைவருமே ஒப்புக்கொள்ள வேண்டும். அனைத்து உயர் பண்புள்ள புருஷர்களும், விசேஷமாக வளர்ச்சியடைந்துள்ள சகோதரர்கள் யாவரும் "கனம்பண்ண வேண்டியவர்களைக் கனம்பண்ணிட" விரும்பிட வேண்டும் மற்றும் உயர்ப்பண்புள்ள தாய்மார்களையும், சகோதரிகளையும், மனைவிகளையும், மகள்களையும்,

பொதுவாயுள்ள பெண் இனத்தையும், அவர்களது அநேகம் உயர்ப்பண்புகள் மற்றும் நற்பண்புகளின் நிமித்தம் மிகவும் கனம்பண்ணிட வேண்டும். நிச்சயமாக இதுவே என்னுடைய இருதயத்தின் அணுகுதலாய்க் காணப்படுகின்றது.

உயர்ப் பண்புள்ள அப்போஸ்தலனாகிய பவுலை, ஸ்திரீகளை வெறுப்பவராகவோ அல்லது ஸ்திரீகளை அவமதிப்பவராகவோ நாம் எண்ணிட முடியாது. நிச்சயமாகவே அவரது நிருபங்களானது, அவரும் உண்மையான பெண்ணின் தன்மைகளைக் கனப்படுத்தியுள்ளதைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்" (எபேசியர் 5:25, 28) என்று அப்போஸ்தலன் எழுதினபோது, அவரைவிட இவ்வளவுக்குக் குறிப்பாய் ஸ்திரீகளுக்கான மதிப்பினை வேறுயாராகிலும் வெளிப்படுத்தினதுண்டோ? சபையில் ஸ்திரீகளுடைய செயல்பாடு எல்லைத்தொடர்பாக அவர் எழுதிடுவதற்கான காரணம், சந்தேகத்திற்கிடமின்றி தேவனுக்கு - கடமைக்கு, அவரது நேர்மையே ஆகும். நமது கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களைக்குறித்து, "பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று கூறினார் (மத்தேயு 16:19). நிச்சயமாகவே மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் பரிசுத்த பவுலடிகளாரையே - நியாயப்பிரமாணத்தினின்று கட்டவிழ்க்கப்படுகிறதைக் குறித்தும் மற்றும் "புதுச்சிருஷ்டிகள்" மீது கட்டப்படுகின்றதான கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் குறித்தும் தெரிவித்திட நமது கர்த்தர் பயன்படுத்திட்டார்.

## மிகவும் சிறந்த ஒரு வழி

இது விஷயம் குறித்து அதிக ஜெபமும், தியானமும் செய்தப் பிற்பாடு, "உபதேசம்பண்ண ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" எனும் வார்த்தைகளுக்கு மிகுந்த நியாயமான ஒரு கண்ணோட்டத்தினைப் பொருத்திடலாம் என்று நாம் எண்ணுகின்றோம். அது பின்வருமாறு:

போதித்தல் என்பது சகோதரர் யாவருக்கும் அடுத்த காரியமல்ல; மாறாக தெய்வீக ஏற்பாட்டினால் விசேஷமாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே உரிய காரியமாகும். இது பல்வேறு வேதவாக்கியங்களினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, எபேசு சபையின் மூப்பர்களிடம் பரிசுத்த பவுலடிகளார், "உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தி

னாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் (சபைக்குப் போதிப்பதற்கு) பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக (மூப்பர்களாக, மேய்ப்பர்களாக, கண்காணிகளாக) வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறினார் (அப்போஸ்தலர் 20:28). மறுபடியுமாக "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளைக் கவனியுங்கள் மற்றும் இவர்கள் மத்தியில் "போதகர்கள்" காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார் (1 கொரிந்தியர் 12:18, 28). மீண்டுமாக யாக்கோபின் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1). இன்னுமாக மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கையில், கவனிக்கப்பட வேண்டிய தகுதிகளில் ஒன்று, அவர்கள் "போதகசமர்த்தனாய்" இருக்க வேண்டியது என்பதாகும் (1 தீமோத்தேயு 3:2). இன்னுமாக ஆசாரிய அல்லது போதக ஊழியம் தொடர்புடைய விஷயத்தில், "ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" என்று நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 5:4). தம்முடைய (புருஷர்களையும், ஸ்திரீகளையும், அடிமையையும், சுயாதீனனையும் உள்ளடக்குகின்ற - இவர்கள் யாவரும் கிறிஸ்துவில் ஒன்றாய் இருக்கின்ற) சரீரமாகிய சபை வாயிலாகப் பேசுகிற கர்த்தர் மூப்பர் ஊழியத்திற்கு, "போதகசமர்த்தனாய்" காணப்படும் குறிப்பிட்ட சகோதரரைத் தேர்ந்தெடுக்கின்றார் மற்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று, கர்த்தருடைய மந்தையை மேய்ப்பது தொடர்புடைய விஷயத்தில் இவர்கள் மீது விசேஷித்த பொறுப்புக் காணப்படுகின்றது. "எல்லாரும் போதகர்களா?" என்று அவர் கேட்கின்றார் (1 கொரிந்தியர் 12:29).

ஆகையால் "உபதேசம்பண்ண ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" எனும் அப்போஸ்தனின் வார்த்தைகளானது, "சபையில் ஒரு பெண்-மூப்பர் காணப்படுகிறதற்கு நான் அங்கீகாரம் அளிக்கிறதில்லை" என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறதாக நாம் விளக்கலாமல்லவா. இப்படியாக ஒரு சிரமம் மாற்றப்படுகின்றது மற்றும் இந்தக் கண்ணோட்டத்திற்கு இசைவாய் நாம் பின்வருமாறு வாசிப்பது சரியாய் இருக்கும், அதாவது "சபையில் ஒரு ஸ்திரீ ஜெபமோ அல்லது தீர்க்கத்தரிசனமோ உரைக்கிறாள் (கூடுகைகளில் பேசுகிறாள்) என்றால் . . . அவள் தன் தலையை மூடிக்கொள்வாளாக;" ஏனெனில் சபையில் ஸ்திரீயானவள் சபைக்கு அடையாளமாகவும், புருஷன் சபையின் தலையாகிய கர்த்தருக்கு அடையாளமாகவும் காணப்படுகின்றனர்.

இது மேலே வெளியிடப்பட்டுள்ளதான கடிதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள காரியத்திற்குத் தீர்வாய் இருக்கும். ஆகையால் சகோதரர்களிடம் கேட்கப்படுவது போலவே சகோதரிகளிடமும் பெரோயா கேள்விகள் கேட்கப்படுவது நிச்சயமாகவே

சரியான காரியமாய் இருக்கும்; ஏனெனில் காரியத்தினைக் குறித்த இந்தக் கண்ணோட்டத்தின்படி, பெரோயா கேள்விக்குப் பதில்கொடுப்பவர்கள் யாரும் போதகராக இருப்பதில்லை, இது போதிப்பதாகவும் இராது; மாறாக கற்றுக் கொண்டிருக்கும் ஒருவர் அவன் அல்லது அவள் கற்றுக்கொண்டவைகளை அல்லது கர்த்தருடைய பாத்திரங்கள் அல்லது போதகர்கள் வாயிலாக தனக்குக் கற்பிக்கப்பட்டவைகளென்று தன்னால் கருதப்படுபவைகளை ஒப்புவிக் கின்றார்/எடுத்துரைக்கின்றார்.

இதழாசிரியருக்கு இக்கண்ணோட்டம் மிகவும் திருப்திகரமாகக் காணப்படுகின்றது மற்றும் இப்படியாகவே வாட்ச் டவர் வாசகர்கள் யாவருக்கும் காணப்படும் என்று அவர் நம்புகின்றார். ஒருவேளை கடந்தகாலங்களில் வசனமானது மிகவும் கடுமையாய்க் கைக்கொள்ளப்பட்டதன் காரணமாக அருமையான சகோதரிகளில் சிலர் காயமடைந்துள்ளார்களெனில், அவர்கள் குறுகிய சிற்றுணர்ச்சிகளைக் கடந்தவர்களாகக் காணப்பட்டு, இந்தக் கடுமைக்குக் காரணம் ஸ்திரீகளுக்கான அன்பின்மை என்று எண்ணாமல், மாறாக கர்த்தருக்கும், அவரது வார்த்தைகளுக்குமான பெரிதான அன்பேயாகும் என்று எண்ணிடுவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். கடுமையான/கண்டிப்பான கண்ணோட்டத்தினால் சரியாய்ப் பயிற்றுவிக்கப்படுபவர்கள் எவரும், இதற்கேற்ப ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள்; ஏனெனில் நமது கர்த்தர் தம்முடைய உண்மையுள்ளவர்கள் யாவருக்கும் மற்றும் ஒவ்வொருவருக்கும், அனைத்தையும் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிட வல்லவராயிருக்கின்றார்.

"மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன்" (கலாத்தியர் 6:6).

---

R3826 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு

கிட்டத்தட்ட எல்லாக் கேள்விகளுக்குமே இரண்டு பக்கங்கள் காணப்படும் மற்றும் ஸ்திரீ தொடர்பான கேள்வியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஸ்திரீகளுக்கென்று உரிமைகள் இருக்கின்றது மற்றும் புருஷர்களுக்கென்று உரிமைகள் இருக்கின்றது; மேலும் ஒவ்வொரு சிருஷ்டியும், அதன் அறிவிற்கேற்ப சில உரிமைகளைப் பெற்றிருக்கின்றது மற்றும் அது மதிக்கப்படுவது நீதியாய் இருக்கும். எனினும்

தற்போதைய சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் கீழ் வெகு சில புருஷர்களும், ஸ்திரீகளும் அல்லது விலங்குகளும் தங்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொண்டவர்களாக அல்லது பெற்றுக்கொள்ள முடிகிறவர்களாக இருக்கின்றனர் என்பதும் உண்மையே. மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதான ஆதி சாயலினை எந்தளவுக்கு ஒருவர் தக்கவைத்திருக்கின்றாரோ, அவ்வளவாய் அவர்கள் மற்றவர்களுக்கு அவர்களது உரிமைகளை அளிப்பதிலும் மற்றும் தங்கள் சொந்த உரிமைகளை உணர்ந்துகொள்வதிலும் நிச்சயம் பிரியப்படுகிறவர்களாய் இருப்பார்கள்.

ஆனால் அந்தோ பரிதாபம்! அனைவருமே அந்தப் பூரண சாயலிலிருந்து, சிருஷ்டிகருடைய அந்தப் பூரண ரூபத்திலிருந்து விழுந்துபோயுள்ளனர். ஆகையால் சந்ததியினுடைய ஒவ்வொரு அங்கத்தினனிடமும் கொஞ்சம் சுயநலமும், மனதின் பல்வேறு நல்ல மற்றும் கெட்டத் தன்மைகளும், பல்வேறு அளவுகளில் காணப்படுவதினால், இனம் முழுவதுமே தெளிந்த மனமில்லாதவர்கள் என்றும், சீரான நிலைமையில் இல்லாதவர்கள் என்றும், அநீதியானவர்களாய்க் காணப்படுகின்றார்கள் என்றும் கூறப்படுகின்றது மற்றும் உலகத்தின் ஆவியானது பொதுவாகவே நீதி, நியாயத்திற்கு முரண்படுகின்றதாகவும் இருக்கின்றது என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். கோபம், துர்க்குணம், பகைமை, பொறாமை, சண்டை, பெருமை, பேராசை முதலானவைகள் தெளிவான பகுத்தறிவிற்கு இடர்பாடுகளாய்க் காணப்படுகின்றன. இவைகளைக் கூறுகின்றதான தேவனுடைய வார்த்தைகளானது, நாம் பரத்திலிருந்து வரும் ஞானத்தினையும், கர்த்தருடைய சிந்தையையும் நாடும்படிக்குப் புத்திகூறுகின்றதாய் இருக்கின்றது மற்றும் இது - நம்முடைய சுபாவ மனங்களும், மனவிருப்பங்களும், தன்னம்பிக்கைகளும் அழிக்கப்பட்டு, வேதாகமத்தில் நமக்குக் கொடுக்கப் பட்டுள்ளதான திவ்விய நிலைப்பாடுகளுக்கு ஏற்ப நம்முடைய கண்ணோட்டங்கள் நெறிமுறைப்படுத்துவதன் மூலம் அடையப்பெறலாம் என்றும் புத்திகூறுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் நாம் நாடிட வேண்டிய காரியமானது, ஒவ்வொரு விஷயத்திலும் சிந்தையில் உயர்வான கிறிஸ்தவ நிலைப்பாடேயாகும் மற்றும் கர்த்தருடைய பின்னடியார்கள் யாவராலும் கர்த்தருடைய சிந்தையானது, கர்த்தருடைய வார்த்தையானது, அந்தத் தரநிலையாக/நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

நாம் உலகத்தாரை நோக்கிப்பார்க்கையில், யாருமே நடைமுறையில் பார்க்கையில் தனது உரிமைகளைப் பெற்றிருப்பதில்லை - நிச்சயமாகவே யாரும் தனது உரிமைகள், தனக்கு உரியது என்று கருதுபவைகளைப் பெற்றுக் கொள்கிறதில்லை - தேவனுடைய தயவினாலும், இரத்தத்தினாலும் மூழ்கடிக்கப்பட்டிருக்கும் மிகவும் தாழ்மையான மனம் கொண்டிருப்பவர்கள், எல்லாவிதத்திலும் தங்கள் தகுதிக்கும் மிக அதிகமாகவே தாங்கள்

கர்த்தரிடத்திலிருந்து ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ளதாகவும், தொடர்ந்து பெற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறிடுவதற்கு ஆயத்தமாய் இருக்கின்றனர். இவர்கள் நன்றியுணர்விலும் மற்றும் இதற்கேற்ப மகிழ்ச்சியாயும் காணப் படுகின்றார்கள். நன்றியற்றவர்களாகவும், மகிழ்ச்சியற்றவர்களாகவும் காணப் படுகின்ற மற்றவர்களோ, மனுக்குலத்தின் உலக ஜனங்களாகக் காணப் படுகின்றனர் - இவர்களில் பெரும்பாலானவர்கள், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

தம்முடைய பின்னடியார்கள் தங்களது பூமிக்குரிய உரிமைகள் அனைத்தையும் முழுமையாய் "பலிச் செலுத்தும்படி" கர்த்தர் வலியுறுத்தி மற்றும் அது தமக்கும் மற்றும் தாம் முன்வைக்கும் பிரமாணங்களுக்குமான அவர்களது அர்ப்பணிப்புக்குறித்த சாட்சியாக தம்முடைய பார்வைக்குப் பிரியமாய்க் காணப்படும் என்று அவர்களுக்கு உறுதிப்படுத்தியும், அது அவர்களுக்குத் தற்கால ஜீவியத்திற்கு நலம் பயக்கின்றதாகவும், அவர்களுக்கு நித்தியமும் நன்மைப் பயக்கின்றதாகவும் காணப்படும் என்று உறுதிப்படுத்தியும் காணப்படுகின்றார். ஆகையால் கிறிஸ்தவ ஆண்களும், பெண்களும், சுபாவ புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் என்ற தங்களது உரிமைகளானது தங்களால் கவனிக்கப்படுவதில்லை என்றும், அதற்காக உரிமைப்பாராட்டப்படுவதில்லை என்றும், அதற்காக நாடப்படுவதில்லை என்றும், அதற்காக போராடப்படுவதில்லை என்றும், இதற்குப் பதிலாக புதிய நம்பிக்கைகளும், புதிய குறிக்கோள்களுமுள்ள புதிய சுபாவத்தினை அவரிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள் என்றுமுள்ள ஓர் உடன்படிக்கையினைப் பண்ணியுள்ளனர்; இந்தப் புதிய சுபாவத்தின் உரிமைகளும், கனங்களும், சிலாக்கியங்களும், மேன்மைகளும் - முழுமையாக முதலாம் உயிர்த்தெழுதலில் வரும்போது, நிறைவானது வருகையில், குறைவானது ஒழிந்துபோகிறபோது, அவர்கள் தங்கள் கர்த்தரோடுகூட மகிமைப்படும்போது அவர்களுக்குக் கடந்துவருகின்றதாய் இருக்கும்.

## எங்கள் அனுதாபங்களும், ஆலோசனைகளும்

இந்தப் பத்திரிக்கையின் இதழாசிரியர் போன்று வெகு சிலரே, புதுச்சிருஷ்டிகள் மற்றவர்களுடன் தொடர்புக்குள் வருகையில் எதிர்க்கொள்ளும் சிரமங்கள் சிலவற்றை அறிந்துகொள்ளும் நல்வாய்ப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு வரும் ஜீவியத்தின் கடுமையான சோதனைகள் மற்றும் பிரச்சனைகள் எப்படி நன்கு எதிர்க்கொள்ளப்படுவது குறித்து ஆலோசனைகளைக் கேட்டும், சூழ்நிலைகளை விவரித்தும் எழுதப்படும் கடிதங்களைத் தொடர்ந்து பெற்றுக்கொள்கின்றவராக இதழாசிரியர் இருக்கின்றார். மற்றவர்களைக் காட்டிலும் அவருக்கு

அர்ப்பணிக்கப்பட்டவர்களுடன் அதிகமான தொடர்பு காணப்படுவதினால், அநேகமாக தவிக்கும் சிருஷ்டியாகிய சுபாவ மனுஷர்களுக்காக மாத்திரமல்லாமல், புதுச்சிருஷ்டிகளுக்காகவும் அனுதாபம் கொள்வதற்குரிய நல்வாய்ப்புப் பெற்றவராய் இருக்கின்றார். ஆகையால் புருஷர்களுக்கு அவர்களது மனைவிகளினால் அநியாயம் எப்போதும் செய்யப்படுகிறதில்லை என்றாலும், மனைவிகளுக்கு, அவர்களது புருஷர்களால் அடிக்கடி அநியாயம் செய்யப்படுவதைக்குறித்து அவர் நன்கு அறிந்தவராகவே இருக்கின்றார். இப்படியாக அநியாயமாய் நடத்தப்படுகிற வர்களுக்கு, வேதவாக்கியங்களின் பாஷையிலான அவரது பொதுவான அறிவுரை என்னவெனில் . . . "இப்படியிருக்க சகோதரரே கர்த்தர் வருமளவும் - அவரது நீதியின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அவரது மகிமையான சாயலுக்கு ஒத்த சாயலுக்கு மாறுவது சமீபித்திருப்பதினால் - நீடிய பொறுமையாயிருங்கள்" என்பதே ஆகும் (யாக்கோபு 5:7).

சாந்தமாய்க் காணப்பட்டும், நட்புமுறையில் அறிவுரைக்கூறியும், அன்பாய்ப் பொறுமையாய் இருந்த பிற்பாடு, நிலவரமானது தாங்கமுடிகிறதாய் இருக்கும் பட்சத்தில், கர்த்தரிடம் ஞானமும், தேவையான கிருபையும் கேட்டுக்கொண்டு, அதைச் சகித்துக்கொள்ளுங்கள். இருளினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவித்திட நாடிடுங்கள்; நம்மிடத்தில் ஐசுவரியமாய் வாசம்செய்யும் கிறிஸ்துவினுடைய ஆவியின் வல்லமையினை, அன்பின், தயவின், பொறுமையின், நீடிய பொறுமையின் மற்றும் சகிப்புத்தன்மையின் வாயிலாக உங்களது துணையாளனுக்கு வெளிப் படுத்திட நாடிடுங்கள்; முடிந்தமட்டும் மற்றவர்களின் வார்த்தை மற்றும் செயல்களி னால் அதிருப்திக்கொள்ளாமல், பாரம் சுமக்கும் மாபெரியவராகிய கர்த்தரிடம் போவதற்கு அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்ளுங்கள். "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபிரெயர் 12:3); காலம் குறைவாய்க் காணப்படுகின்றது என்று நினைவில்கொண்டு, தீமைக்குத் தீமை செய்யாமலும், உதாசனத்துக்கு உதாசனத்தைச் சரிக்கட்டாமலும், தூற்றுதலுக்குப் பதில் பழித்தூற்றாமலும், பட்டயத்திற்குப் பட்டயம் எடுக்காமலும் இருக்கும்படிக்குக் கூறும் வேதவாக்கியங்களின் புத்திமதிக்குச் செவிக்கொடுத்து, ஜீவியத்தின் பரீட்சைகளின் போது கர்த்தர் பொறுப்பேற்றிருக்கின்றார் என்றும், ஜீவியத்தின் பரீட்சைகளானது நம் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதத்தினை - அதாவது இதைப் பெற்றுக்கொள்வதற்குரிய சரியான இருதய நிலைமையில் நாம் காணப்படும் பட்சத்தில், ஆசீர்வாதத்தினை நமக்குக் கொண்டுவருகின்றதாய் இருக்கும் என்றுமுள்ள உணர்ந்துகொள்ளுதலில், ஜீவியத்தின் பரீட்சைகளில் நம்மை

முழுமையாய்க் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்க நாடுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும்.

"இவ்வுலகத்தின் அதிபதியின்கீழ்த்" தனக்கான உரிமைகளை விழுந்துபோன மற்றும் குருடாக்கப்பட்டுள்ள தன்னுடைய அயலார்களிடம் நாடிடும் மற்றும் எதிர்ப்பார்த்திடும் ஒவ்வொரு தேவபிள்ளையும், இது விஷயத்தில் நிச்சயமாகவே இருளிலே நடக்கிறவனாகவே இருப்பான். கர்த்தருடைய ஜனங்கள் "அவரால் கற்பிக்கப்படுகையில்," தங்களது உரிமைகளுக்காக நாடவோ, அவைகளை எதிர்ப்பார்க்கவோ கூடாது என்றும், அநீதி செய்கிறவர்களிடத்தில் பொறுமையோடும், நீடிய பொறுமையோடும் மற்றும் இரக்கத்தோடும் காணப்படுவதற்கும் சீக்கிரமாய்க் கற்றுக்கொள்வார்கள். தாங்கள் கொடுமைப் படுத்தப்படாத மற்றப் பாதைகளை நாடியும் மற்றும் தங்களைத் துன்புறுத்தி மற்றும் அநியாயமாய் நடத்துபவர்களிடமிருந்து தங்கள் சூழ்நிலைகளுக்கேற்ப ஓடிப்போகிறதுமாய் இருக்க, அவர்கள் தங்கள் சத்துருக்களை அன்புகூர்ந்திடு வதற்குக் கற்றுக்கொள்வது மாத்திரமல்லாமல், தங்களால் முடிந்த நன்மை யாவற்றையும் அவர்களுக்குச் செய்திடவும் மற்றும் உலகத்தாரிடம் காணப்படுகின்றதான பெரும்பான்மையான சுயநலமும், கீழ்த்தரமான செய்கைகளும் மற்றும் கொடுமைகளும் விழுகையின் விளைவான பாவம் மற்றும் அறியாமையின் விளைவுகளேயாகும் என்று அனுதாபத்தோடுகூட உணர்ந்து கொள்வதற்கும் கற்றுக்கொள்வார்கள். இதற்கேற்ப அவர்கள் "உம்முடைய இராஜ்யம் வருவதாக, பூமியிலே உமது சித்தம் செய்யப்படுவதாக" என்று ஏங்குபவர்களாகவும், ஜெபிப்பவர்களாகவும் காணப்படுவார்கள் மற்றும் இப்படியாக அவர்களது தற்காலத்துச் சோதனைகளும், கஷ்டங்களும், வரவிருக்கின்ற ஆசீர்வாதங்கள் மீது ஆழமான ஆர்வத்தை ஏற்படுத்துகின்றதாயிருக்கும் மற்றும் அவர்கள் தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், மிக அதிகமான நித்திய கனமகிமையை அடைவதற்கும் உதவுகின்றதாயிருக்கும்.

## சபையில் ஸ்திரீகள் செயல்படும் எல்லை

சரி எது, தவறு எது என்பது குறித்துக் குரல் எழுப்புவதில் புருஷர்களும், ஸ்திரீகளும் அதிகமதிகம் ஆர்வம் காட்டிடும் இக்காலக்கட்டத்தில் மற்றும் சுதந்தரத்திற்கான ஒவ்வொரு கட்டுப்பாட்டிற்கும் எதிர்ப்புத்தெரிவிக்கப்படுகின்ற இக்காலக்கட்டத்தில், இது விஷயத்தில் கர்த்தருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் நேர்மையாய் இருப்பவர் தவறாய்ப் புரிந்து கொள்ளப்படுவதற்கு - அதாவது சுதந்தரத்திற்கும், உரிமைகளுக்கும் எதிர்ப்பவராகவும், தவறுகளை ஆதரிப்பவராகவும் புரிந்து கொள்ளப்படுவதற்கு மிகுந்த அபாயம் காணப்படுகின்றது. இப்படியாக பொது

ஸ்தானங்களில் காணப்படுகின்றதான தேவனுடைய ஊழியக்காரனின் நேர்மைக்கான பரீட்சையானது அவன்மேல் திணிக்கப்படுகின்றது மற்றும் "உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்." இம்மாதிரியான ஸ்தானத்தில்தான் இப்பத்திரிக்கையின் இதழாசிரியர்கூடக் காணப்படுகின்றார் மற்றும் இவரும் ஆண்டவருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் முழுமையாய் நேர்மையுடன் காணப்பட விரும்புகின்றார். இப்படிச் செய்வதினால் இவர் ஸ்திரீகளுக்கு எதிரானவர் என்றும், இப்பாலினரை அவமதிப்போர் மற்றும் இழிவுப்படுத்துவோர் பக்கத்தில் காணப்படுபவர் என்றும் சிலரால் கருதப்படுகிறதற்கு ஏதுவாயிற்று. இது மிகவும் உண்மையற்றதும் மற்றும் எல்லா விதத்திலும் அநியாயமானதுமாகும்.

உண்மையுள்ள இருதயமுடைய மற்றும் உயர் சிந்தையுடைய ஒவ்வொரு மனுஷனும், எதிர்ப்பாலினரை, அதுவும் உண்மையான பெண்மைக்குரிய நற்பண்புகளுடன், தாலந்துகளும், வரங்களும் மற்றும் பரந்த மனப்பான்மையும், திறமைகளும் விசேஷமாய்க் காணப்படும் பட்சத்தில், நிச்சயமாகவே உயர்வாய் மதிக்கிறவனாய் இருப்பான். இம்மாதிரியான நிலைமைகளில் உயர்பண்புள்ள மனுஷனானவன், கிறிஸ்துவுக்குள்ளான அச்சகோதரிகளைச் சபையில் மிகவும் முதன்மையான நிலைக்குக் கொண்டுவந்திடுவதற்கு முற்படுவது அவனது இயல்பாய் இருக்கும். மேலும் இதற்கு ஏதேனும் மறுப்புத் தெரிவிக்கப்படுகையில், இது - கர்த்தருடைய வார்த்தையிலிருந்து (இதுவிஷயமான) அவரது சத்தம் தெளிவாய்க் கேட்கப்படுவதற்கு முன்பு வரையிலும், மறுப்புத் தெரிவித்தவர்கள் சார்பில் குறுகின மனப்பான்மை காணப்படுகின்றதென சந்தேகங்களானது புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் இருவரின் மத்தியில் எழுப்புகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய சத்தம் கேட்கையில், உண்மையான ஆடுகள் அனைத்தும், மாபெரும் மேய்ப்பனின் சத்தத்திற்குச் செவிக்கொடுத்து, இவ்விஷயம் தொடர்பான தங்களது சொந்த சித்தங்கள் மற்றும் எண்ணங்களைத் துறந்து, அவரது செய்தியை ஏற்றுக்கொள்கின்றது; "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிக்கொடுத்து, எனக்குப் பின்செல்லுகின்றது; அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்கிறதில்லை."

இந்த ஒரு நிலைப்பாட்டினைத்தான் இதழாசிரியர் மில்லேனியேல் டாண், வேதாகம பாடங்களின் ஆறாம் தொகுதியில் எடுத்துக்கொள்கிறதற்குக் கடமைப்பட்டுக் காணப்பட்டார். பொறுமையாயும் மற்றும் குறிப்பாயும் அவர் அதில் தனது சொந்த கருத்துக்களை முன்வைத்திடாமல், மாறாக அவர் அதில் முன்வைத்துள்ளவைகளானது, அநேக விதங்களில் அவரது சொந்த நிலைப்பாட்டிற்கு நேர்மாறானவைகளாகவே காணப்படுகின்றது. இந்த விஷயத்தில் அவர் தனது சித்தத்தினைக் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்து, தேவனுடைய பிரியமான குமாரனால் விசேஷமாய் நியமிக்கப்பட்ட

அப்போஸ்தலர்கள் வாயிலாகச் சபைக்குக் கொடுக்கப்பட்டதான செய்தியினை, கர்த்தருடைய வாய்க்கருவியென அவர் திரும்பக் கூற மாத்திரம் செய்தார். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்று தம்முடைய குமாரன் குறித்தப் பிதாவின் செய்தியைக்கேட்ட இதழாசிரியர், "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று தம்முடைய அப்போஸ்தலர்கள் குறித்துக் குமாரன் கூறிடும், குமாரனின் சத்தத்திற்கும் இதழாசிரியர் செவிக்கொடுத்தார் (மத்தேயு 18:18). வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில், அப்போஸ்தலர்களின் போதனைகளானது, தேவனுடைய குமாரனால் நேரிடையாய் ஏவப்பட்டுப் பேசப்பட்ட வார்த்தைகளாக - பிதாவின் வார்த்தைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்படிக்கு சபைக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆகையால் சபையில் ஸ்திரீகளினுடைய ஸ்தானம் குறித்து அப்போஸ்தலன் நம்மிடம் பேசுகையில், அவரது வார்த்தைகளை எதிர்த்து வாதாடுவதற்கோ, அதைக்குறித்து வாக்குவாதம்பண்ணிடுவதற்கோ, அதைப் புறக்கணிப்பதற்கோ நமக்கு அனுமதியில்லை. இப்படிச் செய்கிற எவரும் ஆவியினுடைய சத்தத்தைப் புறக்கணிக்கிறவர்களாகக் காணப்பட்டு, ஏதோ விதத்தில் நிச்சயமாய்ப் பின்விளைவை எதிர்க்கொள்பவர்களாய்க் காணப்படுவார்கள்.

இது விஷயத்தில் எங்களுடைய எந்தச் சொந்த போதனையையும் நாங்கள் முன்வைக்கவில்லை. நாங்கள் கர்த்தருடைய அப்போஸ்தலர்கள் வாயிலாக, அவரது சத்தத்தைக் கேட்டுள்ளபடியால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள சகோதரிகளின் ஸ்தானம் தொடர்பாக அவர்கள் மிகவும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டி யுள்ளவைகளை நாங்கள் கவனத்திற்குக் கொண்டுவர மாத்திரமே செய்துள்ளோம். பொதுவில் செய்யப்படும் ஊழியங்களும், போதிக்கும் ஊழியங்களும் சகோதரிகளுக்கு அருளப்படாமல், மாறாக அவைகள் குறிப்பாய் அவர்களுக்குத் தடுத்துவைக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காண்பிக்கையில், கிறிஸ்துவின் சரீரத்தில் சகோதரிகளின் ஊழியங்களானது முக்கியமில்லாத ஒன்று என்று எந்த விதத்திலும் நாங்கள் சொல்லிடவில்லை. மாறாக அவர்கள் சபையில் மிகவும் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கின்றனர் என்றும், நன்மைக்கு அல்லது தீமைக்கு ஏதுவான மிகவும் பரந்த செல்வாக்கினை - கணக்கிடமுடியாத செல்வாக்கினைத் திறமையாகப் பயன்படுத்த முடிகிறவர்களாக இருக்கின்றனர் என்றும், அந்தச் செல்வாக்கானது திவ்விய வார்த்தைகளுக்கு இசைவாகவே ஒழிய, முரணாக பயன்படுத்தப்படாதபடிக்கு, அந்தச் செல்வாக்கிற்குப் பொறுப்பாளி களாகக் காணப்படுவது, அவர்களது உக்கிராணத்துவத்தின் ஒரு பாகமாக இருக்கின்றது என்றும் நாங்கள் எண்ணுகின்றோம். திவ்விய ஒழுங்கில்

சபையிலுள்ள ஆண்கள் தலையாகிய கர்த்தருக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் ஸ்திரீகள் மணவாட்டியாகிய சபைக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர்.

இதுவே உண்மையுள்ள கீழ்ப்படிதலுக்கான வழிமுறையாகும்; மற்றும் "பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே" - அதாவது கீழ்ப்படியாமல் பொது ஊழியங்களில் கடுமையாய் உழைப்பதைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே - தேவனுடைய பார்வையில் மேன்மையாய்க் காணப்பட்டது என்ற வேதவாக்கியத்தையும் நாம் நினைவுகூருகின்றோம். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாகிய சகோதரர்களும், சகோதரிகளும், யாவரும் இது விஷயமாக டாண் தொகுதி 6-இல் இடம்பெறும் ஐந்தாம் அத்தியாயத்தை மறுபடியுமாக மிக ஜாக்கிரதையாக வாசிப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம். இவ்விஷயமானது இந்த அறுவடையின் காலக்கட்டத்தில், அவரது அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்குப் பரீட்சையின் ஒரு பாகமாகக் காணப்படத்தக்கதாக கர்த்தர் சித்தம் கொண்டுள்ளார் என்று நாங்கள் நம்புகின்றோம். இவ்விஷயத்தில் நமது சொந்த எண்ணங்களும், இது விஷயமாக மற்றவர்களிடத்திலான நம்முடைய வார்த்தைகளும், செல்வாக்கும், நம்மால் முடிந்தமட்டும் கர்த்தருடைய சிந்தையின்படியாக, அவரது வார்த்தைகள் போதிப்பவைகளுக்கு முழு இசைவாகக் காணப்படும்படிக்குத் தீர்மானித்துக் கொள்வோமாக. "இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசாயா 8:20).

## குழப்பமான போலிவாதங்களைத் தெளிவாக்குதல்

பரப்பப்படுகின்ற வஞ்சகமான போலிவாதங்கள் சிலவற்றை நாம் இங்குத் தெளிவுப்படுத்திடுவது தகுதியாய் இருக்கும் - இப்படியாக இது விஷயத்தில் கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் சரியான நிலைப்பாட்டினைப் பெற்றுக்கொள்ள நாம் உதவிட முடியும். இந்தப் போலிவாதங்களின் ஓர் அம்சம் என்னவெனில், கொரிந்துவிலுள்ள சபைக்கு அப்போஸ்தலனால் எழுதப்பட்டவைகளானது, அந்தத் தலைமை நகரத்தின் ஸ்திரீகளினுடைய தரக்குறைவின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது என்றும், அவர் மற்றச் சபைகளுக்கு இதே வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்க மாட்டார் என்றும், சபைக்கடுத்தப் பொது ஊழியங்களில் இதேபோல சகோதரிகளுக்கான உரிமைகளின் கட்டுப்பாட்டினை மற்றச் சபைகளுக்குச் சொல்லியிருக்கமாட்டார் என்றும், இதனால் அவரது வார்த்தைகளானது, தற்காலத்திற்குப் பொருந்துகிறதில்லை என்றுமாகும். இது போலி வாதமாகும், தவறான நியாயமாகும். கொரிந்தியர்களுக்கு எழுதப்பட்ட

நிருபங்களானது, அந்நாட்களிலுள்ள ஒழுக்கமில்லாத ஆண்களுக்கோ, பெண்களுக்கோ என்று எழுதப்படாமல், ஆண்களும், பெண்களுமாகக் காணப்பட்ட கொரிந்து பட்டணத்தின் பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்டது; மேலும் கொரிந்துவிலுள்ள ஒரு பரிசுத்தவான் என்பவர், எந்த ஓர் இடத்திலும் காணப்படும் ஒரு பரிசுத்தவான் போன்றவரேயாவார்; அதாவது பாவத்திலிருந்து நீதியினிடத்திற்குத் திரும்பி, இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருக்கு அனைத்தையும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணினவர் என்பவர் தான் பரிசுத்தவான்.

ஸ்திரீகளுக்கான செயல்பாடு எல்லை குறித்ததான அப்போஸ்தலனின் கட்டுப்பாடானது, மறுபக்க தரப்பினராலேயே ஏற்பட்டது என்பதாகத் தெரிகின்றது - அதாவது கொரிந்து பட்டணத்தில் இருந்த சபையார், மற்றச் சபையாரைக் காட்டிலும் தங்களை உயர்வானவர்களாக எண்ணி, மற்றச் சபைகள் சிந்தித்துக்கூடப் பார்க்காத உரிமைகளை இவர்கள் தங்கள் ஸ்திரீகளுக்குப் பெற்றுக்கொடுக்க விரும்பிட்டார்கள். ஆகையால்தான் பவுல் அவர்களைக் கடிந்துகொண்டு கேட்டதாவது, "வேதவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? [நீங்களாக அதை உண்டாக்கினீர்கள்? கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களைச் சுவிசேஷத்தின் விளக்கமளிப்பவர்கள் என்று நாங்கள் பார்க்க வேண்டுமா?] அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது? [மற்றவர்கள் பெற்றுக்கொண்டது போல்தானே நீங்களும் சுவிசேஷத்தினைப் பெற்றுக்கொண்டீர்கள்? அதைத் தோற்றுவித்தவர்கள் நீங்களல்ல என்று ஒத்துக்கொள்கின்றீர்களா? அதன் ஒழுங்குகளில், கூடச் சேர்ப்பதற்கோ அல்லது அதை மாற்றிடுவதற்கோ உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இவ்விஷயத்தினை நீங்கள் அதன் சரியான வெளிச்சத்தில் பார்க்கையில் தேவனுடைய கிருபையைப் பற்றின செய்தியினை, அவர் அனுப்பின வழியில் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் உங்கள் நடுவில் காணப்படுகின்றதான முன்னுரிமைப் பற்றி நீங்கள் ஊகித்திடும் சில போதனைகளுக்குப் பொருந்தத்தக்கதாக அச்செய்தியினைத் திருத்தம் செய்யும் எண்ணம் ஏதும் இல்லாமல், அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள்] (1 கொரிந்தியர் 14:36). "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டதான விசுவாசமானது" மாறுபடும் தன்மையுடையதல்ல, மாற்ற முடியாத ஒன்றாகும். ஆகையாலே "நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" (பிலிப்பியர் 3:16) என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார்.

R1548

# தேவனுடைய ஒழுங்கில் புருஷனும், ஸ்திரீயும்

வேதாகமத்தின் கண்ணோட்டத்தின்படி, அதிலும் விசேஷமாக அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுடைய போதனையின் வெளிச்சத்தில், ஸ்திரீயானவளுடைய செயல் எல்லையைக் கவனிப்பதற்கு இந்தப் பிரதியில் நாம் இடம் ஒதுக்குகின்றோம். அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக்குறித்துப் பொதுவாக நிலவிக்கொண்டிருக்கும் ஒரு தவறான புரிந்துகொள்ளுதலானது, அவர் ஆவியில் ஏவப்பட்ட விஷயம் குறித்துச் சந்தேகத்தின் ஆவியை உருவாக்கியுள்ளது, மேலும் இவ்வாறாக இது அவநம்பிக்கையை உண்டாக்க ஏதுவாயிற்று. இப்படிப்பட்டதான சந்தேகங்கள் மனதை ஆக்கிரமித்துக்கொள்ளும்போது, அது இப்பொழுது பெண்ணின் உரிமைகள் என அழைக்கப்படும், மிதமிஞ்சிய நிலைக்கு வழிநடத்துவதற்கு ஏதுவாய்க் காணப்படுகின்றது -- சிலரை மறுமுனைக்குத் தள்ளிவிடுகின்றது, அதாவது சிலர் புரிந்துகொள்வதுபோல் பெண்களை அடிமைகளாக, கடின வேலைகளைச் செய்பவர்களாக அல்லது ஆண்களை மகிழ்விப்பவர்களாக ஆக்கிவிடும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றது -- இப்படியாகத்தான் அப்போஸ்தலர்கள் போதித்துள்ளார்கள் எனத் தவறாக எண்ணிக்கொண்டு இப்படியாகச் செய்கின்றனர். R1521-இல் நாம் முன்வைத்துள்ள அப்போஸ்தலருடைய அதிகாரம் மற்றும் தவறிழைக்காத் தன்மையைக்குறித்து அநேகக் கேள்விகள் எழும்பியுள்ளபடியால், அப்போஸ்தலரின் அதிகாரம் மற்றும் தவறிழைக்காத் தன்மைக்கு ஆதரவாக இந்தப் பாடம் பிற்சேர்க்கையாகக் கருதப்படலாம்.

கிறிஸ்து இயேசுவுக்குள் ஆவிக்குரிய புதியச்சிருஷ்டிகளாக இருக்கும் நாம், வம்சாவளியின் அடிப்படையிலோ, ஸ்தானத்தின் அடிப்படையிலோ அல்லது பாலின வேறுபாட்டின் அடிப்படையிலோ தேவனால் மதிப்பிடப்படவில்லை என்றும், வரவிருக்கின்ற இராஜ்யத்தில் சுதந்தரத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதி பற்றின அவருடைய கணிப்பில், "யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, ஏனெனில் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்" மற்றும் "நமக்கு உண்டான அழைப்பினாலே அனைவரும் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம்" என்றுமுள்ள உண்மையை நாம் அறிந்துகொண்டிருந்தாலும், நாம் இன்னமும் மாம்சத்தில் காணப்படுகின்றோம் என்பதும், நமக்குப் பூமிக்குரிய சூழ்நிலைகளுடன் தொடர்பு இருக்கின்றது என்பதும், இன்னுமாக ஜீவியத்தின் பல்வேறு உறவுகள் விஷயத்தில் நம்முடைய சரியான மனோபாவம் மற்றும் இவைகள் தொடர்புடைய வேதவாக்கியங்களின் போதனைகளை நாம் உண்மையாய்க் கடைப்பிடித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் தெய்வீகத் தயவிற்கு நாம் பாத்திரவான்களா (அ) பாத்திரமற்றவர்களா என்பது கணிக்கப்படும் என்பதும்

உண்மையே (கலாத்தியர் 3:28; எபேசியர் 4:4). இந்த "ஆயத்தம்பண்ணும் நாளில்" உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த அனைத்துக் கேள்விகளும் எழும்பிக்கொண்டிருக்க அநேக நாத்திகர்களும், கிறிஸ்தவர்களும்கூடச் சேர்ந்து வேதாகமம் மனித அடிமைத்தனத்தைப் போதிக்கின்றது எனக் கூறிவருகிறபடியால், இக்காரியமும் ஜனங்கள் பரிசீலனைப்பண்ணுவதற்கும், சர்ச்சைப்பண்ணுவதற்கும் ஏதுவாக முன்வைக்கப்பட்டு வருகின்றது (நாகூம் 2:3).

ஆகவே இக்காரியம் தொடர்பான பல்வேறு நபர்களுடைய மனித ரீதியிலான தவறான அபிப்பிராயங்கள் என்னவாக இருப்பினும், சத்தியத்திற்கு வழிநடத்துவதற்குரிய ஒரே பாதுகாப்பான வழிக்காட்டி தேவனுடைய வார்த்தைகளே என்ற நிச்சயத்துடன் இக்காரியம் தொடர்பான வேதவாக்கிய கண்ணோட்டம் என, நாம் விசுவாசிக்கின்றவைகளை முடிந்தமட்டும் சுருக்கமாக முன்வைப்பதே நமது பிரயாசமாகும். இக்காரியம் தொடர்பாக, அவருடைய வார்த்தையானது விடையளிக்காமல் இல்லை; இக்காரியம் தொடர்பான வேதவாக்கியத்தின் அனைத்துச் சாட்சிகளையும் ஆராய்கையில், இது வேதாகமத்திற்கு எதிராக மேற்குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டை முற்றிலும் அமைதிப்படுத்திவிடுவதாக, நியாயமாக சிந்திக்கும் அனைத்துக் கிறிஸ்தவர்களின் கணிப்பில் காணப்படும் என நாம் நம்புகின்றோம்.

மனுஷன் முதலாவதாக உண்டாக்கப்பட்டான் மற்றும் பின்னர்த்தொடர்ந்து ஸ்திரீயானவள் மனுஷனுக்கு ஏற்ற ஆதரவாகவும், பொருத்தமான துணைவியாகவும் உண்டாக்கப்பட்டாள் என்ற குறிப்பிற்கு அப்பால், (நம் பாடத்தின்) இக்காரியம் தொடர்பான வேதாகமத்தின் முதலாவது வாக்குமூலமானது, விலக்கப்பட்டக் கனியைப் புசித்தப் பிற்பாடு, ஸ்திரீயானவளிடம் தேவன் உரைத்த வார்த்தைகளில் இடம்பெறுகின்றது -- "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்வான்." ஆண்டுகொள்வதற்கான/ஆளுகைச் செய்வதற்கான அதிகாரம் இயல்பாகவே புருஷனுடைய தலைமை நிலையில் அடங்கியிருக்க, இதைவிட அதிகமான காரியத்தையே கர்த்தர் குறிப்பிட்டுள்ளார் என்பதை எளிதில் காணமுடிகின்றது; ஏனெனில் ஆதிபாவத்திலுள்ள ஸ்திரீயானவளின் பங்கின் காரணமாக அவள்மீது வந்த தண்டனைக்குத் தொடர்புடையதாகவே கர்த்தரால் அவ்வார்த்தைகள் உரைக்கப்படுகின்றது (1 கொரிந்தியர் 11; 1 தீமோத்தேயு 2:13). ஸ்திரீயானவள் மீது புருஷனின் ஆண்டுகொள்ளுதல் அடக்குமுறையாக இருக்கும் என்பதும் மற்றும் வேறு விதத்தில் அவளால் அனுபவிக்க முடியாத அநீதியை அவள், புருஷனின் கீழ் அனுபவிப்பாள் என்பதும் குறிப்பாகச் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. பூரண நிலையில் தனது குடும்பத்தின் அனைத்து அங்கங்களினுடைய நலன் மற்றும் பாதுகாப்பிற்காகச் செலுத்தப்படக்கூடியதும், அன்பாகவும், வழிகாட்டுவதற்காகவும்

இருக்கக்கூடியதுமான புருஷனுடைய தலைமை நிலை (அ) ஆளுகையானது, பெரும்பாலானவர்களின் விஷயத்தில் விழுகையின் காரணமாகச் சுயநலத்துடன் கூடிய ஆளுகையாகவும், அச்சம் கொடுக்கிறதும், வலுக்கட்டாயப்படுத்து கிறதுமான ஆளுகையாகவும் ஆகியுள்ளது. உண்மையில் சிலர் தங்களுடைய சுயநலமான அடக்குமுறையை நியாயப்படுத்துவதற்கென இந்த வசனத்தையே பயன்படுத்துகின்றவர்களாக இருக்கின்றனர்.

இப்பாடத்தின் காரியம் தொடர்பான கர்த்தருடைய வாக்குமூலத்தினை, சம்பவித்துள்ள மெய்யான சம்பவங்கள் முழுமையாக உறுதிப்படுத்தினாலும், அதற்கென்று தங்களுக்கு இயற்கையாகவே காணப்படும் தலைமைத்துவத்தை இவ்வாறாக தவறாய்ப் பயன்படுத்துபவர்கள் மூலம் தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்படுகின்றது என அனுமானிப்பதும் பெரிய தவறாகும். மாறாக இவர்களின் செயல்பாடுகளில் மனிதன் தன் ஆதி தேவசாயலினின்று விழுந்ததின் காரணமாக பெண்ணினம் மீது வரும் தீமைக்குறித்ததான தேவனுடைய தீர்க்கத்தரிசனத்தையே நாம் பார்க்க வேண்டும். மேலும் எந்தளவுக்கு மனுஷன் சீர்கேடு அடைந்திருக்கின்றானோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவன் தன்னுடைய சொந்த சரீரமாகப் பேணவும், அன்பு செய்ய வேண்டியவளுமானவளை இரக்கமற்ற விதத்தில் நடத்துவதும் கவனிக்கப்படலாம்.

உலகத்தில் புருஷனுடைய செயல்பாட்டு எல்லையானது மிகத் தெளிவாகச் சிருஷ்டிகளுடைய தலை அல்லது பிரதானமானவர் என்று விளக்கப்பட்டிருக்கிறது. புருஷனுக்கு உதவி செய்பவளாக, வாழ்க்கைத் துணைவியாக இருக்கும் ஸ்திரீயானவளின் செயல் எல்லையானது மிகுந்த வாக்குவாதத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. "எந்தளவுக்கு ஸ்திரீயானவள், புருஷனுக்கு உதவிச் செய்யலாம்?" என்பதே கேள்வி; வேதாகமத்தின் போதனைப்படி ஸ்திரீயானவள் அவளால் முடிந்தமட்டும் மற்றும் வாய்ப்புகள் அனுமதிக்கும் அளவுக்கும் வீட்டிலும், சபையிலும், உலகத்திலும் புருஷனுக்கு உதவி செய்யலாம் என நாம் நம்புகிறவர்களாக இருக்க -- ஒருவேளை வீட்டில் இல்லையென்றாலும், சபையிலும், உலகத்திலுமாகிலும் அவளுடைய செல்வாக்கை அதிகமானளவில் எல்லைக்குட் படுத்துவதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் அநேக வேறுபாடான கருத்துக்களுள்ள குரல்கள் நமக்குக் கேட்கின்றது. ஆகையால் சபையில் ஸ்திரீயினுடைய ஸ்தானத்தைக் குறித்து வேதவாக்கியங்கள் கூறுவது என்ன என்று நாம் முதலாவதாகக் கேட்கலாம்.

## சபையில் ஸ்திரீயினுடைய இடம்

பாலினத்தைப் பொருட்படுத்தாமல் பேதுரு முழுச்சபையை நோக்கி: "நீங்களோ, உங்களை (அனைவரும் - ஆண்கள் மற்றும் பெண்கள்)

அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரிகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்றார் (1 பேதுரு 2:9). இன்னுமாக "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" என்றும் வாசிக்கின்றோம் (ஏசாயா 61:1). லூக்கா 4:18-20 வரையிலான வசனங்களையும்கூடப் பாருங்கள்; "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். பின்னர் அந்த ஏட்டைச் சுருட்டி ஏவலரிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். தொழுகைக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே உற்று நோக்கியிருந்தன" (திருவிவிலியம்). இதில் நமது கர்ததர் உரைக்கும் தீர்க்கத்தரிசனத்தில் ஒரு பகுதியே அவருக்குப் பொருந்துகின்றதாகவும், மீதி அவருடைய நாட்களுக்குரியதாய் இராமல், கிறிஸ்துவின் சரீரத்தினால் அறிவித்தல் - ஆண்களும், பெண்களும் - அறிவித்தல் பற்றியதாகவும் உள்ளது. இவ்வசனத்தில் இடம்பெறும் "ஏனெனில்" எனும் வார்த்தையானது, இவ்விதமாய் அபிஷேகிக்கப்பட்டவர்கள் ஆண்களோ அல்லது பெண்களோ சரி, அவர்கள் - நற்செய்தியினைப் பிரசங்கிக்க, அவர்களைத் தகுதியாக்கிடுவதே அபிஷேகித்தலுக்கான நோக்கமாய் இருக்கின்றதெனச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் அபிஷேகிக்கப்பட்டவர்கள் அனைவரும் - அவர்கள் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ, யூதர்களாகவோ அல்லது கிரேக்கர்களாகவோ, அடிமையானவனாகவோ அல்லது சுயாதீனனாகவோ இருப்பினும் - அவர்கள் அனைவரும் பிரசங்கிக்கும்படிக்கு அபிஷேகிக்கப்பட்டவர்கள் ஆவர்.

எபிரெயர் 5:12-ஆம் வசனத்தில் பவுலடிகளார் பாலின வித்தியாசம் ஏதும் குறிப்பிடாமல், ஊழியத்திற்குத் தங்களைத் தகுதிப்படுத்திடும் வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறின காரணத்தினால், போதிக்கத் திறமையற்றுக் காணப்படுவதற்காய்ச் சபையைக் கடிந்துகொள்ளும் விதமாய், "(செலவழிக்கப்பட்ட) காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்" என்று கூறுகின்றார். மீண்டுமாக, "அவனவன் (ஆண் அல்லது பெண்) பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல

கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (1 பேதுரு 4:10). "மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்" என்றும் பவுலடிகளார் கூறியுள்ளார் (1 கொரிந்தியர் 4:2). இதில் பாலின வேறுபாடுகள் இல்லை; தாலந்தையோ அல்லது வரத்தையோ உடைய ஒவ்வொருவரும் ஆண் அல்லது பெண், அத்தாலந்திற்கு உக்கிராணக்காரர் ஆகுகின்றனர்; மற்றும் கணக்கு ஒப்புவிக்கும் கர்த்தருடைய நாளில், ஒவ்வொரு உக்கிராணக்காரனும் தனது உக்கிராணத்துவத்தைக்குறித்துக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். பெற்றிருக்கும் தாலந்துகளைப் பயன்படுத்துகிற விஷயத்தில் அனைவரிடமும் உண்மை எதிர்ப்பார்க்கப்படும் (மத்தேயு 25:14-30).

இந்த வேதவாக்கியங்கள் போதிப்பவைகளுக்கு இசைவாகப் பார்க்கையில் ஸ்திரீகளும், புருஷர்களும் கொஞ்சமாகவோ அல்லது அதிகமாகவோ காணப்படும் தங்களது தாலந்துகளைச் சபையில் பயன்படுத்துகிற விஷயத்தில் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்று பார்க்கின்றோம் மற்றும் பவுலடிகளாருடைய போதனைகளை வைத்துப் பார்க்கையில், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தினுடைய செயல்பாடும், முழுச்சரீரத்தினுடைய பொதுவான ஆரோக்கியத்திற்கு அவசியமானதாய் இருக்கின்றது; இதற்கு அநேகம் உதாரணங்களை வேதவாக்கியங்களில் நாம் பெற்றிருக்கின்றோம். (1) கல்லறையில் உயிர்த்தெழுதலின் காலை வேளையில் முதலாவது வந்து காணப்பட்ட ஸ்திரீகள், தம்முடைய உயிர்த்தெழுதலைக்குறித்த முதலாம் செய்தியை அப்போஸ்தலர்களுக்கு எடுத்துச் செல்லுமாறு, கர்த்தரினால் அனுப்பிவைக்கப்பட்டனர். (2) கர்த்தர் உரையாடிக்கொண்டும், தம்மை மேசியாவென வெளிப்படுத்துவதற்குப் பிரியம்கொண்டு வெளிப்படுத்திட்ட சமாரியாவின் ஸ்திரீயானவள், பட்டணத்திற்குள் போய், அநேகருக்குச் செய்தியைத் தெரிவிப்பதற்குத் தடைப்பண்ணப்படவில்லை - இதை அவள் உடனடியாக, தனது தண்ணீர் குடங்களைவிட்டு விட்டு, துரிதமாய்ப் புறப்பட்டுப்போய்ச் செய்தாள். இதன் விளைவாக, அதுவும் அவள் எப்படிச் சாட்சி பகிர்ந்திருப்பினும், அவளது சாட்சி பகிர்தலின் வாயிலாக அநேகர் விசுவாசம் வைத்தார்கள் (யோவான் 4: 28-30,39).

இன்னுமாக ஸ்திரீகளும், புருஷர்களும் தீர்க்கத்தரிசனத்தின் வரத்தினை உடையவர்களாய்க் காணப்பட்டனர் என்று நாம் பார்க்கின்றோம்: இந்தத் தீர்க்கத்தரிசனம் உரைத்தலானது, "பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசப்படுபவைகள்" - அதாவது தேவனுடைய வரத்திற்கேற்ப போதிப்பதாக அல்லது புத்திமதி கூறுவதாக இருக்கும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கமளிக்கின்றார் (1 கொரிந்தியர் 14:3, 4). (1 கொரிந்தியர் 12:31-ஆம் வசனத்தையும் பார்க்கவும்). 1 கொரிந்தியர் 11-ஆம் அதிகாரத்தில் அந்நாட்களில் தன்னடக்கத்திற்கு விசேஷித்த அடையாளமாய் விசேஷமாக கிரேக்கர்கள்

மத்தியில் காணப்பட்டதான தலைக்கு முக்காடிட்டுக்கொள்ளுதலோடு, ஸ்திரீகள் பொது இடங்களில் ஜெபம்பண்ணுதல் மற்றும் தீர்க்கத்தரிசனம் உரைத்தல் என்பவற்றின் ஏற்புடைமையைப் பவுல் ஒப்புக்கொள்கின்றார். முக்காடிட்டுக் கொள்ளும் வழக்கத்தினைப் புறக்கணித்தல் என்பது, அதுவும் சுவிசேஷத்தின் சுயாதீனத்தை உணரத் துவங்குகையில், சிலரால் இவ்வழக்கம் புறக்கணிக்கப் படுதல் என்பது, கிறிஸ்துவின் காரணங்கள் மீதும், கிறிஸ்தவ விசுவாசத்தின் "தூதர்கள்," செய்தியாளர்கள் அல்லது ஊழியக்காரர்களாகிய - அப்போஸ்தலர்கள் மற்றும் மற்றவர்களின் மீதும் நிந்தனையைக்கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

ஸ்திரீகள் தீர்க்கத்தரிசனம் உரைத்ததற்கு நாம் சில உதாரணங்களைப் பெற்றிருக்கின்றோம்; உதாரணம்: அன்னாள் (லூக்கா 2:36-38); பிலிப்பின் நான்கு குமாரத்திகள் (அப்போஸ்தலர் 21:8, 9); மிரியாம் (மீகா 6:1-4); உல்தாள் (2 நாளாகமம் 34:21-28) மற்றும் தெபோராள் (நியாயாதிபதிகள் 4:4-24). இன்னுமாக யோயேல் 2:28, 29-ஆம் வசனங்களின் குறிப்பிடத்தக்கதான தீர்க்கத்தரிசனத்தையும் நாம் பெற்றிருக்கின்றோம்; இது பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்த அனைவரின் மீதும் பரிசுத்த ஆவி இறங்கி வந்தபோது, கொஞ்சமேனும் நிறைவேறினதெனப் பேதுரு குறிப்பிடுகின்றார் (அப்போஸ்தலர் 2:17, 18). ஆதிசபையில் சில குறிப்பிட்ட ஸ்திரீகளின் ஊழியங்களைப் பாராட்டி பவுல் குறிப்பிடவும் செய்கின்றார் - பிரிஸ்கில்லா, திரிபோனாள், திரிபோசாள், ரூபையின் தாயார், நேரேயுவின் சகோதரியாகிய யூலியாள் ஆவார்கள் (உரோமர் 16; பிலிப்பியர் 4:3). 1 கொரிந்தியர் 16:19-ஆம் வசனத்தைத் தவிர மற்றப்படி பிரிஸ்கில்லாவும், அவளது கணவன் ஆக்கில்லாவும் குறிப்பிடப்படும் எல்லா வசனங்களிலும், பிரிஸ்கில்லாவே இருவரிலும் மிக முதன்மையானவள் போலும், இருவரில் சுறுசுறுப்பானவள் போலும் முதலாவதாக குறிப்பிடப்படுகின்றாள் (உரோமர் 16:3; 2 தீமோத்தேயு 4:19; அப்போஸ்தலர் 18:18, 26 Revised Version - பார்க்கவும்). பிரிஸ்கில்லாவும், அவளது கணவனும் கொரிந்துவிலிருந்து எபேசு வரையிலான பவுலினுடைய யாத்திரைகள் ஒன்றில் கூடவே சென்றுமிருக்கின்றனர்; இங்கு இவர்கள் அப்பொல்லோவைக் கண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் கொண்டிருந்தார்கள் (அப்போஸ்தலர் 18:18-20). வேதவாக்கியங்களானது உலகத்தாருக்காய்ப் பேசப்படவில்லை என்றாலும், ஸ்திரீயின் சுபாவமும், கல்வியறிவும் அவளைத் தகுதிப்படுத்துகின்ற ஜீவியத்தின் நியாயமான பல்வேறு தொழில்களில் பெண்கள் ஈடுபடுவதற்கு முரணாக எந்த வார்த்தைகளையோ, உதாரணங்களையோ முன்வைக்கிறதில்லை. அந்தக் காலங்களிலெல்லாம் பெண்களுக்குக் கல்வி என்பது பின்தங்கியிருந்த போதிலும், வீட்டு வேலைகளைத் தவிர மற்ற வேலைகளில் ஸ்திரீகள் ஈடுபடுவது அபூர்வமாக இருந்தபோதிலும், இஸ்ரயேலில் ஒரு திறமிக்க பெண் நியாயாதிபதியாக, லபிதோத்தின் மனைவியாகிய தெபோராள் காணப்பட்டாள் என்ற சிறந்த உதாரணம்

காணப்படுகின்றது (நியாயாதிபதிகள் 4:4-24; 5:1-31). இவள் தீர்க்கத்தரிசியாகவும், மிகுந்த திறமையும், செல்வாக்குமுள்ள ஸ்திரீயாகக் காணப்பட்டாள். சல்லூமின் மனைவியாகிய உல்தாளும் தீர்க்கத்தரிசியாகவும், இஸ்ரயேலின் இராஜாவினால் அழைத்து அனுப்பப்பட்டவளுமாய் இருந்தாள் (2 இராஜாக்கள் 22:14-20).

இவைகள் அனைத்தையும் வைத்துப்பார்க்கையில், நபர்களுக்குப் பாரபட்சம் பார்த்திடாத தேவன் பெண் உக்கிராணக்காரர்களின் சார்பிலும், ஆண் உக்கிராணக்காரர்களின் சார்பிலும் அவர்களது தாலந்துகள் யாவற்றையும் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் - அதுவும் தங்கள் பாலினத்திற்கு விசேஷமாய்த் தேவைப்படும் தன்னடக்கத்துடன் செய்வது தவிர, வேறெந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல், அவர்களது தாலந்துகள் யாவற்றையும் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் உண்மையினை எதிர்ப்பார்க்கின்றார் என்று நாம் புரிந்துகொள்கின்றோம்; இன்னுமாக ஒருவேளை தேவன் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்தவொரு பெண் அங்கத்தினருக்குப் போதிப்பதற்கோ அல்லது தீர்க்கத்தரிசனம் உரைப்பதற்கோ தாலந்தோ அல்லது விசேஷித்த திறமையோ கொடுத்திருப்பாரானால், அதை ஊக்கமாய்ப் பேணி வளர்ப்பதும், ஞானமுள்ள மற்றும் உண்மையுள்ள உக்கிராணக்காரியென அந்தத் தாலந்தினைப் பயன்படுத்திடுவதும் அவளது சிலாக்கியமாய் மாத்திரம் காணப்படாமல், அவளது கடமையாகவும் காணப்படுகின்றது என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம். இதை அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 12:28-31-வரையிலான வசனங்களில் தெளிவாய்ப் போதிக்கின்றார்; அதாவது போதிப்பது என்பது முக்கியமான வரங்களில் ஒன்றெனத் தெரிவித்தப் பிற்பாடு, பாலின வேற்றுமை குறிப்பிடாமல், "முக்கியமான வரங்களை நாடுங்கள்" என்று அனைவருக்கும் வலியுறுத்துகின்றார்.

## மனுஷனிடத்திலுள்ள ஸ்திரீயின் உறவு

மேலே இடம்பெறும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட காரியங்களுக்கு நேரடியாய் முரண்பாடாக, அப்போஸ்தலன் பவுலின் வார்த்தைகளில் இடம்பெறுவதாகச் சிலரால் கருதப்படுபவைகளை, அடுத்ததாக நாம் பார்க்கலாம். "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும்." "But I suffer not a woman to teach, nor to usurp authority over the man, but to be in silence [hesuchia, quietness]." (1 தீமோத்தேயு 2:12) அப்போஸ்தலன் இந்தக் கட்டுப்பாட்டிற்கான தனது காரணத்தைக் கொடுக்கின்றார்; மற்றும் இப்படிக் காரணம் கொடுக்கையில் அவர் ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளுக்கிருந்த உண்மையான உறவினிடத்திற்கு

நம்மைத் திருப்பி, "என்னத்தினாலெனில் முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" என்று கூறுகின்றார் (1 தீமோத்தேயு 2:13, 14). ஆதியாகமம் 2:16, 17-ஆம் வசனங்களுக்கு வரும்போது, ஏவாள் சிருஷ்டிக்கப்படுகிறதற்கு முன்னதாக, "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" என்று பார்க்கின்றோம்.

ஆகையால் கர்த்தர் ஏவாளிடம் நேரடியாய்ப் பேசாமல் ஆதாமிடமே பேசினார் என்றும், தேவனிடமிருந்து ஆதாம் வாயிலாக ஏவாள் இந்த எச்சரிப்பைப் பெற்றுக்கொண்டாள் என்றும் தெளிவாகுகின்றது. இப்படியாக ஆதாம், தேவனுக்குக்கீழ்ப் போதிப்பவராகவும், ஏவாள் கற்றுக்கொள்பவளாகவும் காணப்பட்டனர். இந்த விதத்தில் பார்க்கையில் அப்போஸ்தலன் 1 தீமோத்தேயு 2:11-ஆம் வசனத்தில் ஆலோசனை கூறுவது போல் ஸ்திரீயானவள் "எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்" என்பது சரியானதாகவும், தகுதியானதாகவும் காணப்படும். மறுப்பதற்கு அவளுக்கு என்ன உரிமை இருக்கின்றது? தேவன் அவளது கணவனுக்குப் போதித்துள்ளார் மற்றும் அவளை அவனிடம் கொடுத்ததன் மூலம், கணவனுக்கான கடமைகளானது (அவளைக் கவனித்துக்கொள்வதற்கும், அவள் தேவைகளைச் சந்திப்பதற்குமான கடமைகளானது) அவன் மீது சுமத்தப்பட்டுள்ளது மற்றும் இந்தக் கடமையினை நிறைவேற்றிடும் வண்ணமாகவே, அவள் பாதுகாக்கப்படவும், தேவனுக்கு இசைவாய் அவள் காணப்படத்தக்கதாகவும் அவசியமாயிருந்த இந்த அறிவானது ஆதாமினால், ஏவாளுக்குக் கொடுக்கப்பட்டது. இப்படியாகத் தேவன் மனுஷனுடைய தலைமை ஸ்தானத்தைக்குறித்துக் கற்பித்தார் மற்றும் இதைக் கொரிந்து பட்டணத்து சபையார் தெளிவாய்ப் புரிந்துகொள்ள அப்போஸ்தலன் விரும்பிட்டார் (1 கொரிந்தியர் 11:3).

எதிராளியானவன் ஏவாளிடம் பேசினபோது, அவளது கணவன் வாயிலாக தேவன் கொடுத்திட்ட எச்சரிப்பை அலட்சியப்படுத்துவதற்கு, அவளைச் சோதனைக்குள்ளாக்கினான். இதை அவள் செய்தாள், அதுவும் தேவனுக்கு இசைவற்றுள்ள இந்தப் புதிய மற்றும் விநோதமான போதகருக்குச் செவிச்சாய்ப்பது சரியாய் இருக்குமோ என்று ஆதாமிடம் ஆலோசனை கேட்காமலேயே செய்துவிட்டாள். தேவனைச் சார்ந்திராமலும், தனக்குத் தேவன் அளித்த பாதுகாப்பாளனைச் சார்ந்திராமலும் அவள் செயல்பட்டதினால், அவள் மீறுதல் செய்தாள் மற்றும் இப்படி அவள் தேவனைப் புறக்கணித்தப்படியால், அவள் அவளாய்ச் சிந்தித்துச் செயல்படுவதற்கு முற்றிலும் தனித்துவிடப்பட்டாள் மற்றும்

அவளது நடவடிக்கையிலுள்ள அநீதி குறித்த விஷயத்தில் வஞ்சிக்கப்படாமல், அந்த நடவடிக்கையின் பலன் தொடர்புடைய விஷயத்தில் வஞ்சிக்கப்பட்டாள்; அதாவது அவளது இந்த நடவடிக்கையானது மரணத்திற்குப் பதிலாக, மாபெரும் ஆசீர்வாதத்திற்குள்ளாக (அறிவிற்குள்ளாக) நடத்திடும் என்று ஊகித்துக்கொண்டதில் வஞ்சிக்கப்பட்டாள். அவள் ஆதாமையும், ஆதாமின் வாயிலான தேவனுடைய புத்திமதியையும் புறக்கணித்தது மாத்திரமல்லாமல் மற்றும் தனது சொந்த கணிப்பின்படி செயல்பட்டது மாத்திரமல்லாமல், அவள் தனது புதிய உபதேசத்தை ஆதாமுக்குப் போதிக்க அல்லது ஆதாமை வழிநடத்த முற்பட்டு, இவ்விதமாய்த் தலைமைத்துவத்தின் திவ்விய ஒழுங்கினைத் தலைக்கீழாக்கிப் போட்டாள். இந்தத் தலைக்கீழான தலைமைத்துவத்தின் ஒழுங்கினைப் பின்பற்றினதில், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை என்றாலும், அவரும் மீறுதல் செய்தவரானார்.

இந்தக் காரணத்தின் நிமித்தமாகவே, "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆனால் இந்தக் கட்டுப்பாட்டினையும், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிற மற்றும் முரணாய் இருப்பதுபோன்று தோற்றமளித்த அந்த வேதவாக்கியங்களையும் எப்படி இசைவுக்குள் கொண்டுவருவது என்பது, அநேகருக்கு இன்னமும் சிரமமான கேள்வியாகவே காணப்படுகின்றது; ஆனால் இதற்கு நிச்சயமாய் ஏதோ ஒரு தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் முதலாவது நாம் கேட்பதென்னவெனில், தலைமைத்துவத்திற்கான இந்த ஒழுங்கானது பெண் இனத்தினின்று வேறுபட்டுள்ள ஆண் இன வகுப்பாருக்கு இயல்பாய் உள்ள ஒன்றா? அல்லது அது புருஷனுக்கும், மனைவிக்கும் இடையிலான உறவிற்கு மாத்திரமே பொருந்துகின்றதாய் இருக்குமா? முதலாவது காரியம் உண்மை என்றும், இது 1 கொரிந்தியர் 11:3-ஆம் வசனத்தினால் நிரூபணமாகின்றது என்றும் நாம் எண்ணுகின்றோம்; "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறா ரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்."

அப்படியானால் தலைமைத்துவத்தின் ஸ்தானம் என்பது எதைக் குறிக்கின்றதென நாம் கேட்கலாம்? இந்த அடையாளமானது, மனித சரீரத்தினுடைய அந்த முக்கியமான அவயமாகிய தலை, அதாவது அதன் பிரதான அவயத்தில் - அதாவது அதிகாரத்திற்கும் மற்றும் தலைமைத்துவத்திற்குமுரிய உரிமையினைப் பெற்றுள்ள அவயத்தில் கவனிக்கப்படலாம். இந்த விளக்கமானது, யேகோவா தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையிலான உறவிலுள்ள தலைமைத்துவத்தின் பூரண விளக்கத்தினால் உண்டாகுகின்றதாய்க் காணப்படுகின்றது. ஒருவரில் சட்டத்தை இயற்றும் தன்மையும், மற்றவரில் பிரதிநிதியென நிறைவேற்றிடுவதற்குரிய வல்லமையும் காணப்படுகின்றது. இந்த

விளக்கத்திற்கு இசைவாக, கிறிஸ்துவினிடத்திலான மனுஷனுடைய உறவும், மனுஷனிடத்திலான ஸ்திரீயின் உறவும், கீழ்ப்படிந்திருக்கும் ஒன்றாகவே இருக்க வேண்டும்; மேலும் ஒருவேளை புருஷர்களும், ஸ்திரீகளும் பூரணர்களாய் இருந்திருப்பார்களானால், இத்தகைய உறவின் அருமையான இசைவானது, இருவருக்கும் பூரண திருப்தியைக் கொடுத்திருக்கும். புருஷன் கிறிஸ்துவோடு இசைந்து காணப்பட்டிருந்திருப்பார்; ஸ்திரீ புருஷனோடு இசைந்து காணப்பட்டிருந்திருப்பாள் மற்றும் அனைவரும் யேகோவா தேவனோடு இசைந்து காணப்பட்டிருந்திருப்பார்கள். இப்படியாகத் தலைமைத்துவத்தின் திவ்விய ஒழுங்கானது, அனைவரையும் பரஸ்பர அன்பின் மற்றும் சமாதானத்தின் கட்டில் ஒருங்கிணைத்திருக்கும்.

ஆனால் கேள்வி என்னவெனில், தலைமைத்துவம் பற்றின இக்கருத்தானது எப்படித் தனிப்பட்ட சுயாதீனம் - அதாவது தேவனுடைய புத்திரர்களுக்கான மகிமையான சுயாதீனம் குறித்த கருத்திற்கு இணக்கமாய்க் காணப்பட முடியும்? இதற்காக தலை மற்றும் சரீரத்தின் உதாரணமானது அதன் உச்ச எல்லைவரை வலியுறுத்தப்பட வேண்டுமா? ஆரோக்கியமான நிலையில் இருக்கும் சரீரமானது, தலையினுடைய ஒப்புதல் மற்றும் அதிகாரம் அளிக்கப்படாமல், எதையும் செய்வதில்லை; மற்றும் ஆரோக்கியமான நிலைமையில் காணப்படும் கிறிஸ்துவின் மறைபொருளான சரீரமும் (சபையும்) கிறிஸ்துவின் சித்தத்தை அறியவும், செய்யவும் எப்போதும் நாடுகின்றதாய் இருக்கும் மற்றும் கிறிஸ்துவும் பிதாவின் சித்தத்தை அறியவும், செய்யவும் எப்போதும் நாடினார். ஆகையால் மனித குடும்பமானது பாவத்தினால் சீரழிக்கப்படவில்லையெனில், ஸ்திரீயானவள் தன் நிலைமையினை அனுபவித்தவளாகவும், புருஷன் தனது பலத்தை, மனதை அல்லது சரீரத்தைக் கொடுமைப்படுத்துவதற்குத் தவறாய்ப் பயன்படுத்தாதவராகவும் காணப் பட்டிருந்திருப்பார்கள். யேகோவா தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையிலான இந்த உறவின் பூரண விளக்கத்தினை மறுபடியுமாகப் பார்க்கையில், தலைமைத்துவத்தின் ஒழுங்கானது சரியாய்ச் செயல்படுத்தப்படும் பட்சத்தில், அது தேவனுடைய புத்திரர்களுக்கான மகிமையான சுயாதீனத்திற்கு முற்றிலும் இசைந்தே காணப்படும் என்று நாம் காண்கின்றோம். யேகோவா தேவன் கிறிஸ்துவின் தலையாய் இருப்பினும், அவர் தமது குமாரனைக் கனப்படுத்துவதிலும், அவரைச் சகல அதிகாரங்கள் மற்றும் துரைத்தனங்களின் தலையாக்கிடுவதிலும் பிரியப்படுவதையும், "பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல, குமாரனையும் கனம்பண்ணும்படிக்குச்" சகல மனுஷர்களுக்கு அவர் கூறுவதையும் நாம் காண்கின்றோம் [ஏனெனில் அவர் பிதாவின் பிரதிநிதியாகவும், அவரது தற்சொரூபமாகவும் காணப்படுவதினாலேயே ஆகும்] (கொலோசெயர் 2:10; 1:16; எபேசியர் 1:10). அவர் நியாயந்தீர்ப்பது அனைத்தையும்கூடக் குமாரனிடத்தில் ஒப்படைப்பதைப் பார்க்கின்றோம். அவர் குமாரனை முதலாவதாகச் சோதித்து,

நிரூபித்து, அவரை நம்பிக்கைக்குப் பாத்திரவானாய்க் கண்டுகொண்டார்; மற்றும் தம்முடைய திட்டங்களை அவருக்குத் தெரிவித்தப் பிற்பாடு, அவற்றை நிறைவேற்றுவதை அவரிடத்தில் ஒப்புவித்தார். ஆகையாலே, "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று வாசிக்கின்றோம் (யோவான் 5:22). மறுபடியுமாக, "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றும் நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 28:18).

யேகோவா தேவனிடத்தில் இயேசு பெற்றிருக்கும் இந்த உறவில் அடிமைத்தனத்திற்கு ஒத்த எதுவுமில்லை என்பதில் நிச்சயமே; மாறாக யேகோவா தேவனுடைய மேலான தலைமைத்துவத்தின் கீழ் முழுமையான சுயாதீனமும், கிறிஸ்துவின் உயர்ந்த வல்லமைகள் அனைத்தையும் வளர்த்திடுவதற்கும், பயன்படுத்திடுவதற்கும் பரந்த வாய்ப்பும் காணப்பட்டது. கிறிஸ்துவும்கூடத் தம்முடைய தலையாகிய யேகோவா தேவனுக்குக் கீழ்ப்பட்டுக் காணப்பட்டு, தம்முடைய வேலைகள் அனைத்திலும் யேகோவா தேவனுடைய ஞானமும், காருண்யமும் கட்டளையிடுகின்றதான அந்த வேலை திட்டத்திற்கும் மற்றும் செயல்முறை கொள்கைகளுக்கும் கீழ்ப்பட்டுக் காணப்பட்டார். யேகோவா தேவனுடைய தலைமைத்துவத்தின் இந்த எல்லைகளுக்குள்ளாக, தேவனுடைய ஒரே பேறான குமாரனுக்கான மகிமையான சுயாதீனம் காணப்பட்டது. இப்படியாகவே புருஷனும், அவனது தலையாகிய கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்; யேகோவா தேவன் போன்று, கிறிஸ்துவினுடைய மேற்பார்வையும், புருஷனது மனுஷீக வல்லமைகள் அனைத்திற்கும் பரந்த எல்லையை மற்றும் வளர்ச்சியினைத் தாராளமாய் அனுமதிக்கின்றதாய் இருக்கும். இப்படியாகவே புருஷனது தலைமைத்துவமும் ஸ்திரீயானவளுக்குச் செயல்படுகிறதாய் இருக்க வேண்டும் - கொடுமையின் அடிமைத்தனத்தின் கீழ் அவளது வல்லமைகளைக் குறைவுப்படுத்தி, வளர்ச்சியடைவதைத் தடுப்பதாய் இராமல், மாறாக அவளை உயர்த்திடவும், கண்ணியப்படுத்திடவும், தனது தலைமைத்துவத்தின் கீழ், அவளது வல்லமைகள் அனைத்தையும் நியாயமாய்ப் பயன்படுத்துவதற்குரிய முழுமையான சுயாதீனத்தை அருளிடவும், ஊக்குவித்திடவும் வேண்டும்.

"உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை"; "பெண்கள் கற்றுக் கொடுக்கவோ, ஆண்களைக் கட்டுப்படுத்தவோ நான் அனுமதிக்க மாட்டேன். அவர்கள் அமைதியாயிருக்க வேண்டும்" (திருவிவிலியம்). "But I suffer not a woman to teach, nor to usurp authority over the man" என்ற பவுலடிகளாரின் வார்த்தைகளுக்குத் திரும்பி வருகையில், கட்டுப்பாட்டிற்காகக் கொடுக்கப்பட்டக் காரணங்களுக்கு இசைவாகவும் மற்றும் ஸ்திரீகள் அநேகம் தருணங்களில்

போதித்துள்ளதாக வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதான உண்மையோடும் கூட, நாம் இவ்வசனத்தின் பிந்தைய பாகத்தினுடைய வெளிச்சத்தில் முந்தின பாகத்திற்கு அர்த்தம் பார்க்கப்போகின்றோம்; அதாவது வழிநடத்துபவரென மற்றும் போதகரெனப் புருஷனுக்குரிய ஸ்தானத்தை ஸ்திரீயானவள் பறித்திடக்கூடாது மற்றும் புருஷனுடைய தலைமைத்துவத்தை அவமதித்து, அந்தப் பொறுப்பை/நிலையை, அதாவது இயல்பிற்கு முரணாக, ஸ்திரீகளுக்குரிய பண்புகளுக்குப் பொருத்தமற்ற மற்றும் சரியாய்ச் சிந்திக்கும் ஜனங்கள் அனைவரின் கண்களுக்கும் அழகற்ற நிலையை/பொறுப்பை எடுத்துக் கொள்ளக்கூடாது. இங்கு இடம்பெறும் அப்போஸ்தலனின் வார்த்தைகளுக்குக் கொடுக்கப்படும் இந்த விளக்கத்துடன், மற்ற இடங்களிலெல்லாம் இடம்பெறும் அவரது போதனைகளானது, உதாரணத்திற்கு 1 கொரிந்தியர் 11:5-ஆம் வசனத்தின் போதனைகளானது முழு இசைவுடனே காணப்படுகின்றது.

ஸ்திரீயானவளை அவளது சிலாக்கியங்களினின்றும், ஞானமுள்ள உக்கிராணக்காரியாகவும் மற்றும் தனது உக்கிராணத்துவத்தைக் குறித்துக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவளாகவும், தனது தாலந்துகள் அனைத்தையும் அவள் நல்ல முறையில் பயன்படுத்துவதிலிருந்தும் தடைப்பண்ணுவது நோக்கமல்ல, மாறாக ஜீவியத்தில் அவளது செல்வாக்கினைப் பயன்படுத்திடுவதற்கான சிறந்த மற்றும் மிகவும் பயனுள்ள வழிகளை அவளுக்குச் சுட்டிக்காட்டுவதே நோக்கமாய் உள்ளது. புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் அவர்களது சுபாவமானது அவர்கள் பயனுள்ள விதத்தில் செயல்படுவதற்குரிய சரியான செயல்பாடு எல்லையைப் பொதுவாய்ச் சுட்டிக்காண்பித்திடும் என்பதில் ஐயமில்லை; ஆனால் யாருமே சுபாவ நிலையில் காணப்படுகிறதில்லை - அனைவருமே மனரீதியிலும், சரீர ரீதியிலும் மற்றும் நன்னெறி விஷயத்திலும் வீழ்ச்சியடைந்துள்ளனர் மற்றும் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகவும் மற்றும் பல்வேறுவிதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளனர். பெண் இயல்புகளுள்ள எந்த ஸ்திரீயும் சத்தமிட்டு உரத்துப்பேசும் சொற்பொழிவாளராக, பிடிவாதமாய் வலியுறுத்தும் வாதம் செய்பவராக, அனாவசியமாக தலையிட்டுப் பேசும் பேச்சாளராக, பேராசையுள்ள வழிநடத்துனராக தான் ஆகிட வேண்டும் என்று விரும்புகிறதில்லை. எனினும் பொருத்தமான தருணங்களில், சத்தியத்திற்கடுத்த நலன்களின் விஷயத்தில் தேவைப்படும் பட்சத்தில், அவள் ஸ்திரீகளுக்குரிய விதத்திலும், தலைமைத்துவத்திற்கான புருஷனுக்குரிய மேலான உரிமையினைக் கொஞ்சமும் எடுத்துக்கொள்ளாத விதத்திலும், தான் கூறுவதைக் கேட்கின்றவர்கள் எத்தனை பேர்களோ, அவர்கள் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ இருப்பினும், அவர்கள் யாவருக்கும் மகா சந்தோஷத்தின் நற்செய்தியினை அவள் தெரிவித்திடலாம்; சில தருணங்களில் சத்தியத்திற்கடுத்த விஷயங்களில், அவள் கேள்விக்குறித்த ஒரு விவாதம் பண்ண வேண்டிய அவசியம் ஏற்படுகையில், கேள்வி கேட்டு புரிய

வைத்திடலாம் மற்றும் இதைத் தைரியமாயும் செய்திடலாம். மனித சுபாவத்தினை நன்கு அறிந்திருப்பவர்கள், கேள்வி வழிமுறையின் வாயிலாக தவறான அபிப்பிராயங்களை அகற்றிடுவதும், சத்தியத்தை உறுதிப்படுத்துவதும் சிறந்ததாய் இருக்கும் என்று அறிவார்கள்.

இப்படி ஒரு ஸ்திரீ தேவனுடைய பிள்ளையெனத் தனது சுயாதீனத்தை முழுமையுமாகச் செயல்படுத்தி, கேட்க விரும்பும் அனைவருக்கும் முன்பாக தனது பலமான காரணங்கள் அனைத்தையும் கொண்டுவந்து, சத்தியம் குறித்த தனது நம்பிக்கையினைத் தெளிவாய் முன் வைத்திடலாம்; ஆனாலும் எப்போதும் தன்னடக்கத்துடனும், புருஷனுக்குரிய தலைமைத்துவத்தை அங்கீகரிக்கிறதும், அதிகாரத் தோரணையின் அல்லது அதிகாரத்தைப் பறித்தெடுப்பதின் தோற்றமாய் இருக்கும் எதையும் தவிர்த்திட விரும்பும் வெளிப்படையான பேச்சுடனும் அவள் முன்வைத்திடலாம்; மேலும் இத்தகைய மிக முதன்மையான ஸ்தானத்திற்குரிய பொறுப்பினின்று அவளை விடுவிக்க முடிகின்ற மற்றும் விடுவிக்கும் ஒரு மனுஷன் அங்குக் காணப்படுவாரானால், அவளது இயல்பான தன்னடக்கமானது, பொறுப்பை எடுப்பதிலிருந்து அவளை விலகச் செய்திட வேண்டும். "silence" அல்லது quietness - அமைதலாயிருக்க வேண்டும் என்று மேலே பார்க்கப்படும் வசனத்தில் அப்போஸ்தலனால் கட்டளையிடப்பட்டுள்ளதான வார்த்தையானது, முற்றிலுமாய்த் தடைப்பண்ணுகிற விதத்தில் புரிந்துகொள்ளப்படாமல், மாறாக ஸ்திரீகள் ஜெபம்பண்ணிடுவதற்கு அல்லது தீர்க்கத்தரிசனம் உரைப்பதற்கு அல்லது அப்போஸ்தலர்களின் நாட்களில் ஸ்திரீகளுக்கு வாய்ப்பும், திறமையும் இருக்கையில் அவர்கள் சத்தியத்தினை விவரித்ததற்கு அவர் அனுமதித்தது தொடர்புடைய விஷயத்திற்கு இசைவாய்க் காணப்படும் விதத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இதேபோல் 1 தெசலோனிக்கேயர் 4:10-12-வரையிலான வசனங்களில் சகோதரர்கள் அமைதலாய் இருக்கும்படிக்கு அப்போஸ்தலன் புத்திமதி கூறுகின்றார். "அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்; புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு, நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும்வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்." இதே வார்த்தையானது 1 தீமோத்தேயு 2:2-ஆம் வசனத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1 கொரிந்தியர் 14:34, 35-ஆம் வசனங்களில் அப்போஸ்தலன் பவுலினால் பேசப்பட்ட வார்த்தைகளானது, கிறிஸ்தவத்திற்கு மதம்மாறின கிரேக்கர்களுக்குப் பேசப்பட்டவை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; இந்தக்

கிரேக்கர்களுடைய பழக்கவழக்கங்களானது இன்றுள்ள சமுதாய பண்பாட்டிலிருந்தும், அந்நாட்களில் காணப்பட்ட எபிரெய மற்றும் உரோம சமுதாய பண்பாட்டிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டதாகும். கிரேக்க நாடு என்பது அதன் நாட்களில் கல்விக்கான மையமாகக் காணப்பட்டப் போதிலும், கிரேக்க நாட்டின் ஸ்திரீகள் மிகவும் அறியாமையில் காணப்பட்டவர்களாகவும், கீழான நிலையில் காணப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர்; ஆகையால் எபிரெய அல்லது உரோம கிறிஸ்தவ ஸ்திரீகளுக்குப் பேசுகையில், ஒருபோதும் பயன்படுத்திடாத அழுத்தத்துடன் கிரேக்கர்களில் சிலரிடம் அப்போஸ்தலன் பேச வேண்டியது அவசியமாய் இருந்தது. இந்த நிருபத்தை வைத்துப் பார்க்கையில், கொரிந்து பட்டணத்திலுள்ள சபையானது மிகவும் ஒழுங்கற்ற நிலைமையில் காணப்பட்டு வந்தது என்றும், அவர்களது கூடுகைகளானது பெரும்பாலும் குழப்பம் நிறைந்ததாகவும், பிரயோஜனமற்றதாகவும் காணப்பட்டு வந்தது என்றும் நாம் பார்க்கின்றோம். அப்போஸ்தலன் இந்த ஓர் அதிகாரத்தில் அனைத்தும் "நல்லொழுக்கமாயும், கிரமமாயும் (வசனம் - 40) செய்யப்படத்தக்கதாக, மிக முக்கியமான சில விதிமுறைகளையும், ஒழுங்குமுறைகளையும் முன்வைத்துள்ளார் மற்றும் ஒழுங்கற்ற ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் அவசியமான கண்டித்தலையும் வழங்கினார் (1 கொரிந்தியர் 11:17-22, 31-34; 6:5-11; 5:1-13; 3:1-3). அந்த ஸ்திரீகள் சபையில் பேசுவது அவமானமான காரியமாகும். இதற்கு முதல் காரணம் தங்கள் ஸ்திரீகள் எந்தவொரு விளம்பரத்திற்குள்ளாகுவது என்பது அங்கு அப்போது அவமானமாகக் கருதப்பட்டது; மற்றும் இரண்டாவது காரணம் அவர்கள் தகுந்தாற்போல் பேச அறியாதவர்களாயிருந்தனர்; ஆகையால் அவர்கள் சபைகூட்டங்களில் அமைதியாய்க் காணப்பட்டுக் கவனிப்பதும், மேலான விவரங்களை இல்லங்களில் தங்கள் கணவன்மார்களிடம் (சொல்லர்த்தமாய்ப் புருஷர்களிடம்) கேட்டுத் தெரிந்துகொள்வதும் நலமாயிருக்கும். இந்த அறிவுரை செயல்படுத்தப்படுவதை, முழு யுகத்திலுள்ள ஒட்டுமொத்த சபைமீது திணிப்பது என்பது, ஸ்திரீகளின் செயல்படும் எல்லைக் குறித்தும் மற்றும் மனிதனுக்கான தகுதியான மற்றும் பொருத்தமான, கர்த்தரால் சித்தம் கொண்டபடியான துணைவி என்ற விதத்தில் அவளுக்கு இருக்கும் பொறுப்புக் குறித்தும் உள்ள வேதவாக்கியங்களின் போதனைகளுடைய பொதுவான நடைமுறைக்கு ஊறுவிளைவிக்கின்றதாய் இருக்கும். ஒருவர் இன்னொருவருடைய பாதங்களைச் சொல்லர்த்தமாய்க் கழுவுதல் மற்றும் ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துதல் குறித்துத் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கின்ற கடமைகள் முழுச்சபை மீது காணப்படலாம்; எனினும் நாம் அவற்றை ஆவியில் அடையாளம் கண்டு கொள்கின்றோமே ஒழிய, எழுத்தில் அல்ல; நம்முடைய நாட்களிலுள்ள

உபச்சாரங்களும், மரியாதைகளும் அன்றைய நாட்களில் காணப்பட்டவைகளை விடச் சில விதங்களில் வேறுபட்டவையாக இருக்கின்றன; எனினும் இரண்டு காலக்கட்டங்களிலுமுள்ளவைகள் சரிசமமான உபச்சாரங்களாகவே காணப்பட்டன.

கொரிந்து சபையின் ஸ்திரீகளிடம் அப்போஸ்தலன் கடுமையாய்த் தோற்றமளிக்கின்ற வார்த்தைகளைப் பேசிடுவதற்கு அவசியமாக்கின சூழ்நிலைகளை நாம் அனைவரும் தெளிவாய்ப் பார்க்கத்தக்கதாக, கொரிந்து, எபேசு மற்றும் அந்நாட்களில் கிரேக்கப் பண்பாடுகளைக் கொண்டிருந்த பிரதானமான நகரங்களினுடைய சமுதாய அமைப்பை வெளிப்படுத்தும் பிரபலமிக்க எழுத்தாளர்களின் சில சுருக்கமான குறிப்புகளை மேற்கோளிடுகின்றோம்.

"முற்காலத்து ஏதென்சில் ஸ்திரீகளின் ஸ்தானம் மற்றும் செல்வாக்கு" எனும் கட்டுரையில், Scotland-இன், St. Andrews பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் Donaldson கூறுவதாவது:-

> "ஏதென்சில் அடிமைகள் நிலையில் காணப்படாத இரண்டு ஸ்திரீகள் வகுப்பினர் காணப்படுகின்றனர். ஒரு வகுப்பார் (குடிமகள்கள்) தங்கள் சொந்த அறையைவிட்டு ஒரு அடிகூட வெளியே நடமாட முடியாதவர்கள் ஆவர் மற்றும் இவர்கள் எல்லா விதத்திலும் கண்காணிக்கப்படுகின்றனர் மற்றும் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகின்றனர். இன்னொரு வகுப்பார் (விலை மகள்கள்/அந்நிய ஸ்திரீகள்) காணப்படுகின்றனர்; இவர்கள் மீது எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை; இவர்கள் எங்கு வேண்டுமானாலும் போய்வரலாம் மற்றும் தங்கள் பார்வைக்கு நலமாய்க் காணப்படுகிற எதையும் செய்திடலாம். குடிமகள்களுக்கு (மனைவிகளுக்கு) வீட்டின் மேலறை பொதுவாகவே ஒதுக்கிக்கொடுக்கப்படுகின்றது. இவர்கள் எந்த விருந்துகளிலும் கலந்துகொள்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தனர். ஆண்கள் தங்கள் குடிமகள்கள்/மனைவிகளை அந்நியர்களின் பார்வையில்பட விரும்பாததினால், ஆண்கள் ஆண்களோடுகூடவே பந்தி அமர்ந்துகொள்வர். வெறும் அடிப்படையான காரியங்களே குடிமகள்களுக்கு/பெண்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்தது. ஏதென்சின் தாய்மார்கள் கட்டுப்பாட்டில் இப்படி இருக்க, எப்படி ஏதென்சில் - இலக்கியத்திலும், கலையிலும் பெயர்ப் பெற்றிருந்த மிகச்சிறந்த மனிதர்கள் உருவானார்கள்? (ஆனால் ஏதென்சின் தாய்மார்கள் அனைவருமே, சாதாரண வீட்டுப்பெண்மணிகளாக இருக்கவில்லை; இந்தச் சிறந்த மனிதர்களைப் பெற்ற பெரும்பான்மையான ஏதென்சின் தாய்மார்கள், மனைவிகள்/

குடிமகள்கள் அல்ல; மாறாக விலைமகள்கள் ஆவர் - இவர்கள் கட்டுப்பாடுகளற்ற வகுப்பாராய் இருப்பினும், கல்வியறிவு உடையவர்களாய் இருந்தனர் மற்றும் அனைத்துச் சுதந்தரத்தையும் அருளப்பெற்றிருந்தனர்.) மாபெரும் சிந்தனையாளர்கள், கவிஞர்கள், சிற்பாசிரியர்கள், ஓவியர்கள் மற்றும் கலைஞர்களின் எண்ணற்ற ஓர் இனம் ஒரே காலக்கட்டத்தில், ஏதென்சில் இருந்ததுபோன்று எங்கும் இருந்ததாகச் சரித்திரம் இல்லை என்றாலும், ஏதென்சில் நல்லொழுக்கமுள்ள ஒரு ஸ்திரீகூட/குடிமகள்கூட இலக்கிய அல்லது கலை அல்லது அறிவியல் துறையில் ஒருபோதும் சிறந்தவர்களாகக் காணப்பட்டதேயில்லை.

நாம் ஏதென்சின் குடிமகள்களிடமிருந்து (மனைவிகளிடமிருந்து) சுதந்தரமான மற்ற ஸ்திரீகளிடத்திற்கு - அந்நிய அல்லது விலைமகள்களிடத்திற்கு வரலாம். இந்த அந்நிய ஸ்திரிகளினால் திருமணம் செய்ய முடியாது. இவர்கள் தாங்கள் விரும்பும் எதையும் செய்திடலாம். குடிமகள்கள் வீட்டிற்குள்ளாகவே காணப்பட்டார்கள் மற்றும் புருஷர்களுடன் உண்பதில்லை; ஆனால் புருஷர்களோ வீட்டில் காணப்படும் ஸ்திரீகளுடன்/குடிமகள்களுடன் மட்டும் பழகிடவில்லை. ஆகையால் அவர்கள் இந்த அந்நிய ஸ்திரீகளைத் தங்களது துணையாளிகளாக தேர்ந்தெடுத்துக் கொண்டனர்; மற்றும் இந்த ஸ்திரீகள் வகுப்பினருக்கு *'Hetairai'* அல்லது துணையாளிகள் என்ற பெயர் வழங்கப்பட்டிருந்தது. குடிமகள்கள் தாய்மார்களாகவும், மனைவிகளாகவும் காணப்பட வேண்டுமே ஒழிய, இதற்கும் மேலாக எதுவுமில்லை. அந்நிய ஸ்திரீயே துணைவிக்கான கடமைகளைச் செய்திட வேண்டும், ஆனால் இவர்கள் திருமணம் செய்து கொள்ளப்படுவதில்லை. இவர்களே ஏதென்சில் காணப்பட்டக் கல்வியறிவுடைய ஒரே ஸ்திரீகள் வகுப்பார் ஆவார்கள். கிட்டத்தட்ட ஏதென்சிலுள்ள ஒவ்வொரு மாமனிதனும் இத்தகையதொரு துணைவியை உடையவனாய் இருந்தான் மற்றும் இந்த ஸ்திரீகளானவர்கள் இந்த மாமனிதர்களின் உயர்வான கற்பனைகளுக்கும், ஆழ்ந்த தியானங்களுக்கும் உடன்பாடு கொண்டவர்களாய் இருந்தனர்.

ஆனால் ஏதென்சின் குடிமகள்களுக்கு ஆட்சி சார்ந்த அந்தஸ்தும் இருந்ததில்லை. அவர்கள் எப்போதுமே சிறுபான்மை சமுகத்தினர்களாகவே இருந்தனர். இந்த *'Hetairai'*-இன் குமாரர்கள் (விசேஷித்தக் கட்டளையினால்) குடிமகன்களாக அடையாளம்

கண்டுகொள்ளப்படும் அளவிற்கு இந்த *'Hetairai'* அந்தஸ்துமிக்க மனுஷர்களிடத்தில் தங்கள் பிடியினைப் பெற்றுக்கொண்டிருந்தனர். ஒழுக்கமுள்ள மனைவிகளின் பெயர்கள் சரித்திரத்தில் எங்கும் இடம் பெறுகிறதில்லை; ஆனாலும் *'Hetairai'* அடிக்கடி காட்சிக்கு வருகின்றவர்களாய் இருக்கின்றனர். இந்த *'Hetairai'* ஜீவியத்தின் அனைத்து அநுக்கிரகங்களையும் பெற்றுக்கொண்டனர்; கண்கவரும் விதத்தில் வஸ்திரங்களை அணிந்து கொண்டனர்; இவர்கள் நகைச்சுவை உணர்வு கொண்டவர்களாக இருந்தனர். எனினும் பாதுகாப்பற்றுக் காணப்பட்ட நூற்றுக்கணக்கான இத்தகைய ஸ்திரீகள் கீழ்த்தரமான உணர்வுகளுக்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு இருந்தனர் என்றும், பாசம் என்ற போர்வையின் கீழ் இந்த ஸ்திரீகள் ஆண்களைச் சீரழித்தவர்களாகவும், வறுமைக்குள் அனுப்பிவைத்தவர்களாகவும் இருந்தார்கள் என்றுமுள்ளவைகள் மறக்கப்படக்கூடாது."

இங்குப் பேராசிரியர் Donaldson அவர்களின் படைப்புகளிருந்து மேற்கோள் இடப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியமும், ஜெர்மனியின் பேராசிரியர் Becker அவர்களின் படைப்புகளில் இடம்பெறும், கிரேக்க ஆசிரியர்களின் மேற்கோள்களினால் ஆதரிக்கப்படுகின்றது; பேராசிரியர் Becker-அவர்களினால் மேற்கோளிடப்பட்டிருப்பவைகள் சந்தேகத்திற்கு இடமற்ற மேற்கோள்களாக, அதாவது முற்காலத்துக் கிரேக்க மற்றும் உரோமானிய வாழ்க்கைத் தொடர்புடைய மேற்கோள்களாக, சமீபக்கால எழுத்தாளர்கள் அனைவரினாலும் குறிப்பிடப் பட்டுள்ளது. அவரது "Charicles" எனும் படைப்பின் 463-ஆம் பக்கத்தில் அவர் கூறுவதாவது:-

"இந்த ஒருகாலக்கட்டத்தில் மற்றும் சமுதாயப்பண்பாடு உயர்ந்திருந்தக் காலக்கட்டங்களில் ஸ்திரீகளானவர்கள் கீழ்மட்ட ஜீவராசிகளாகவும், தீமைக்கு ஆளாகுபவர்களாகவும், இனவிருத்திக்கு மாத்திரம் பொருத்தமானவர்களாகவும், புருஷர்களின் உடல் வேட்கைகளைத் திருப்திபடுத்துவதற்கு உரியவர்கள் என்று கருதப்பட்டனர். சிறுமிகளுக்கு என்று எந்தக்கல்வி ஸ்தாபனங்களோ, வீட்டில் வைத்துத் தனிப்பட்ட ஆசரியர்களால் பயிற்றுவிக்கப்படுவதோ இருந்ததில்லை. அவர்கள் அந்நியர்களுடன் மாத்திரம் அல்லாமல், தங்களுடைய மிக நெருக்கமான உறவினர்களிடம் கூடப் பேசுவதற்கு அனுமதிக்கப்படாதவர்களாய் இருந்தனர் மற்றும் தங்கள் தகப்பன் மார்களையும் மற்றும் கணவன்மார்களையும்கூட எப்போதாவது

பார்க்க முடிந்தவர்களாய் இருந்தனர். திருமணமாகாத பெண்கள் திருமணம் ஆகுவதுவரையிலும் தனிமைப்படுத்தப்பட்டே வாழ்ந்து வந்தனர். அதாவது சாதாரண வழக்கில் சொல்ல வேண்டுமெனில் பூட்டுப்போட்டுப் பத்திரப்படுத்தப்பட்டவர்களாக இருந்தனர்." பக்கம் *287*-இல் - "ஏதேன்சில் குடிமகள் சந்தைக்குப் பொருட்கள் வாங்க வந்ததாகக் கேள்விப்படவே முடியாது."

"Old Greek Education" எனும் தனது படைப்பில் Dublin-ஐ சார்ந்த திருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் J. P. Mahaffy அவர்கள் 11-ஆம் பக்கத்தில் குழந்தைக் கொலைகள் அல்லது பட்டினியில் சாகப்போடுவது மற்றும் புறக்கணிக்கப்படுவது குறித்துக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியுள்ளதாவது:-

"புதிதாய்ப் பிறந்த சிசுக்களைக் கொல்வது என்பது பொது ஜனங்களால் ஒப்புதலளிக்கப்பட்டது மாத்திரமல்லாமல் உண்மையில் கிரேக்க நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வந்தது. *Plato* அவர்கள் தனது கொள்கையின் அடிப்படையில் சிசு கொலைகளைச் செய்திருக்கின்றார். ஒரே முறை தவிர மற்றபடி தாயானவளின் இருதயத்தினுடைய வியாகுலமானது, இவர்களது இலக்கிய படைப்புகளில் எங்குமே குறிப்பிடப்படவேயில்லை. அந்தவொரு சம்பவத்தைச் சாக்ரட்டீஸ் அவர்கள் பதிவு செய்துள்ளார்; ஓர் இளம் தாய் தனது முதல் சிசு கொல்லப்பட்டதின் நிமித்தம் எரிச்சல் அடைந்ததையும், இது விஷயமான சாக்ரட்டீசின் மாணவர்களுடைய கருத்துக்கள் தவறானது என்று மாணவர்களுக்கு நிரூபிக்கப்பட்ட போது மாணவர்கள் அடைந்திட்ட கோபத்தையும் அவர் பதிவு செய்துள்ளார். இதில் கொடுமை என்னவெனில், இந்த ஸ்திரீகள் இப்படியாக நடத்தப்படுவதால் மனம் கடினமடைந்துவிடுகின்றனர். பெண் சிசுக் கொலை என்பது சர்வ சாதாரணமான விஷயமாய் இருந்தது."

கிரேக்கச் சமுதாயப் பண்பாட்டின் கீழ், இப்படியாக ஸ்திரீகளின் நிலைமைக் காணப்பட்டிருக்க, கிரேக்க ஸ்திரீகள் சிலருக்கு அப்போஸ்தலனாகிய பவுலினால் பேசப்பட்டதான வார்த்தைகள் கிரேக்கப் பட்டணங்களிலேயே மிக மோசமான பட்டணங்களில் ஒன்றாக கொரிந்து பட்டணம் காணப்பட்டது எனப் பார்க்கப்படும் போது தெளிவாய்ப் புரிகின்றதாய் இருக்கும். பேராசிரியர் Becker அவர்கள் கூறுவதாவது:-

"*Hetairai* - விலைமாதர்களை எண்ணிக்கையில் அதிகமாய்ப் பெற்றுள்ள மற்றப் பட்டணங்களை எல்லாம் மிஞ்சின நிலையில்

> கொரிந்து பட்டணம் காணப்பட்டது; இந்த *Hetairai* ஸ்திரீகளுக்கு இவ்விடத்தினுடைய வளமையும், பெருஞ்சிறப்புகளும் மற்றும் ஐசுவரியமுள்ள வியாபாரிகளின் பெருங்கூட்டமும், ஐசுவரியங்களை ஈட்டிடுவதற்கான வாய்ப்புகளை அருளினதாய் இருந்தது."

இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, கொரிந்து பட்டணத்துப் புருஷர்கள் கிறிஸ்தவர்களான போது, காணப்பட்ட/நிலவியிருந்த சமுதாய எண்ணங்களைப் புறக்கணித்து, சபை கூட்டங்களுக்குத் தங்கள் மனைவிகளை/ குடிமகள்களை அழைத்து வந்தவர்களாய்க் காணப்பட்டனர்; இந்த ஸ்திரீகள் மிகவும் அறியாமையில் காணப்படுபவர்களாகவும் மற்றும் மரியாதையாய் நடந்துக்கொள்வதை அறியாதவர்களாகவும் காணப்பட்டப்படியால், பிரயோஜன மற்றக் கேள்விகளைக் கேட்பதின் மூலம் கூட்டங்களுக்குத் தொந்தரவு கொடுத்தவர்களாய் இருந்தனர்; இந்தப் பிரயோஜனமற்றக் கேள்விகளை இல்லத்தில் வைத்துத் தங்களுடைய புருஷர்களிடத்தில், அதாவது அவர்களுக்கு அவசியமான எளிமையான அறிவுரைகளைக் கொடுப்பதற்கு முடிகின்ற அவர்களது புருஷர்களிடத்தில் கேட்டுக் கொள்ளும்படிக்கு அப்போஸ்தலன் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்; ஏனெனில் இந்த ஸ்திரீகள் சபையில் பேசி அதன் சரியான, முறையான ஆராதனை முதலியவைகளுக்குத் தொந்தரவு கொடுப்பது என்பது முறையற்றக் காரியமாய் இருக்கும். இன்றுபோல் அன்றும் கிறிஸ்தவத்திற்குள் வந்தவர்கள் - மாமனிதர்கள் மற்றும் தத்துவ ஞானிகள் மத்தியிலிருந்து வந்தவர்களாயிராமல் ஏழை வகுப்பார் - சாதாரணமான ஜனங்கள் மத்தியிலிருந்து வந்தவர்கள் ஆவார்கள் என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கொரிந்து பட்டணத்து ஸ்திரீகளினுடைய இந்த நிலைமையானது தலையில் முக்காடிட்டுக் கொள்ளுதல் தொடர்பான 1 கொரிந்தியர் 11-ஆம் அதிகாரத்தில் இடம்பெறும் அப்போஸ்தலரின் கட்டளைகளுக்கான அவசியத்தினையும் மிகவும் தெளிவுப்படுத்துகின்றது; ஸ்திரீகள் தலையில் முக்காடிட்டுக்கொள்ளுதல் என்பது ஜனங்கள் மத்தியில் விசேஷமாகத் தன்னடக்கத்திற்கான அடையாளமாய்க் காணப்பட்டது. திடீரென - அதாவது சுவிசேஷத்தினால் உண்டாகும் சுதந்தரத்தை அவர்கள் காணத்துவங்குகையில், முக்காடிட்டுக்கொள்ளும் இவ்வழக்கத்தினை அவர்கள் புறக்கணிப்பது என்பது மற்றவர்களால் தவறாய்ப் புரிந்து கொள்ளப்படும் மற்றும் அவர்களது அறியாமையில் புருஷனுக்குரிய தலைமைத்துவத்தைப் புறக்கணிப்பதற்குரிய ஒரு மனப்பான்மையை உடையவர்களாகவும், தன்னம்பிக்கையுடையவர்களாகவும், தங்களது கருத்துக்களை நிலைநாட்டுபவர் களாகவும் அவர்கள் மாறிடுவதற்கும் அநேகமாய் வாய்ப்பு இருக்கும்.

உரோமானிய மற்றும் எபிரெய ஸ்திரீகளின் முற்றிலும் வேறுபட்டச் சூழ்நிலைகளைக் கவனிக்கும் போது, உரோமானிய மற்றும் எபிரெய கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் இத்தகைய அறிவுரைகள்/ கட்டளைகள் இல்லாதிருப்பதற்கான காரணத்தினை நாம் புரிந்துகொள்ளலாம்.

முனைவர் Smith பழமையான கிரேக்கம் மற்றும் உரோமானியம் குறித்துத் தனது கட்டுரைகளில் கூறுகிறதாவது:-

"திருமணத்திற்குப் பின்பு ஓர் உரோமானிய ஸ்திரீக்கு இருக்கும் ஸ்தானம் என்பது கிரேக்க ஸ்திரீகளிடமிருந்து முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது. உரோமானிய மனைவியானவள் இல்லத்தில் தலைமைத் தாங்குகிறவளாகவும், தனது கணவனுக்குக் காண்பிக்கப்படும் கனத்திலும், மரியாதையிலும் பங்கடைபவளாகவும் இருக்கின்றாள்."

மேலும் பேராசிரியர் Becker அவர்கள் கூறுவதாவது:-

> "உரோமானிய இல்லத்தரசியானவள் முழுவீட்டின் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் குடும்பத்தலைவியாகவும், குழந்தைகளுக்கு ஆசிரியையாகவும், இல்லத்தின் கனத்தைக் கட்டிக் காக்கிறவளாகவும், வீட்டிலும் சரி, வெளியிலும் சரி தனது கணவனுக்குச் சமமாக மதிக்கப்படுகிறவளாகவும் எப்போதும் காணப்படுகிறாள். ஸ்திரீகளும், புருஷர்களும் நாடக அரங்கங்களுக்கும், பொது விருந்துகளுக்கும் சேர்ந்து சென்று கலந்து கொண்டவர்களாய்க் காணப்பட்டனர்."

எபிரெய சமுதாயத்தில் காணப்பட்ட ஸ்திரீகளுக்கு இருந்த சுதந்தரம் குறித்து வேதவாக்கியங்களில் மிகவும் வெளிப்படுத்தப்படுகின்றபடியால் கூடுதல் சாட்சிகள் அவசியமில்லை. அவர்கள் கர்த்தரோடும், அப்போஸ்தலர்களோடும், மற்ற ஆண் சீஷர்களோடும் சகஜமாய்ப் பேசினார்கள் மற்றும் சபை கூட்டங்களிலும், ஜெப ஆலயங்களிலும் கலந்து கொண்டனர் மற்றும் முழுச்சுதந்திரத்துடன் போய் வந்தார்கள். ஆகையால் கிறிஸ்தவ மார்க்கத்தில் இந்த ஸ்திரீகள் வந்தபோது எவ்வித பாரம்பரிய கட்டுப்பாட்டு வழக்கங்களினுடைய தடைகள் இல்லாமல், கிறிஸ்தவ வேலைகளில் ஈடுபடுவதற்கு ஆயத்தமாய்க் காணப்பட்டனர்; ஆனால் மற்ற ஜனங்கள் மத்தியில் காணப்பட்டப் பாரம்பரியக் கட்டுப்பாடுகளானது, கிறிஸ்துவின் காரணங்களுக்கு நிந்தையைக் கொண்டுவராத விதத்தில், படிப்படியாய் ஜனங்களின் எண்ணங்கள் புதுப்பிக்கப்படுவது வரையிலும், கொஞ்சம் கடைப்பிடிக்கப்பட வேண்டியதாய் இருந்தது.

R5922 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சுவாரசியமான கடிதங்கள்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - இக்கடிதத்தோடுகூட நான் நான்கு கேள்விகளையும் இணைத்துள்ளேன்; அவைக் குறித்துப் பனாமாவிலுள்ள சபையாராகிய எங்கள் மத்தியில் பெரிதளவில் வேறுபட்டக் கருத்துக் காணப்படுகின்றது. இக்கேள்விகளானது உங்களால் பல தடவைகள் கையாளப்பட்டுள்ளன என்பதை நான் அறிவேன். ஆனால் நாங்கள் புரிந்துகொள்ளும் திறனில் மிகவும் மந்தமானவர்களாகவும், மிகவும் ஓட்டையான பாத்திரங்களாகவும் காணப்படுகின்றோம்!

கேள்விகள்: (1) "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில், அவர் பெரோயா ஆராய்ச்சி வகுப்பில் கருத்துக்களை முன் வைப்பதையும் உள்ளடக்கித்தான் கூறுகின்றாரா? (1 கொரிந்தியர் 14:34;1 தீமோத்தேயு 2:11-12).

**மேலே உள்ள கடிதம் மற்றும் கேள்விகளுக்குப் பதில்:**

உங்கள் கேள்விகளுக்கான எங்கள் பதில்: சகோதரிகள் பெரோயா பாட வகுப்பில் பங்கெடுப்பதில், அப்போஸ்தலனுடைய கட்டளையானது மீறப்படுகிறதில்லை என்று நாங்கள் புரிந்திருக்கின்றோம். அங்கு அர்ப்பணிக்கப்பட்ட அல்லது திறமையுள்ள சகோதரர் இல்லையெனில், சகோதரிகள் பெரோயா வகுப்பினை நடத்திடக்கூடாது என்று சொல்லிடுவதற்கு நான் எந்தக் காரணத்தையும் காண்கிறதில்லை.

- கர்த்தருக்குள்ளான உங்களது சகோதரனும், ஊழியக்காரனும்.

---

R5161 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சுவாரசியமான சில கடிதங்கள்

என் அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

நான் கடந்த இளவேனிற் காலத்தின்போதுதான் தற்கால சத்தியத்தினுடைய அறிவிற்குள்ளாக வந்திருந்தபடியால், என்னை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை; நான் நீண்ட காலமாகச் சத்தியத்திற்குப் பசியாய் இருந்தபடியால், ஜீவ அப்பம்

இல்லாமல் நீண்ட காலம் பட்டினிகிடந்தவர்கள் மாத்திரம் அறிந்திருக்கும் வைராக்கியத்துடனும், பேரார்வத்துடனும் வேதாகமப்பாடங்களிலுள்ள அனைத்தையும் ஏற்றுக்கொண்டேன்.

நான் அர்ப்பணம் பண்ணினேன், வாக்குறுதியை எடுத்துக்கொண்டேன் மற்றும் இவை இரண்டையும் ஞானஸ்நானத்தின் வாயிலாக அடையாளப்படுத்தினேன்.

நான் சத்தியத்திற்குள்ளாக வந்திருந்த காலக்கட்டத்தில், மக்கள் சமுதாய வாழ்க்கை/சோஷியாலஜி - குறித்து (பெண்கள் மாத்திரமேயுள்ள) ஒரு வகுப்பிற்கு உரையாற்றிக் கொண்டிருந்தேன்; இதற்கு முன்னதாக வரலாறு குறித்தும், வாழ்க்கைக் கோட்பாடு குறித்தும், மனிதநேய பாடங்கள் குறித்தும் விரிவுரை ஆற்றிவந்தேன். கடந்த 25 ஆண்டுகளாக மனித மேம்பாடு தொடர்புடைய பாடங்களில் பெண்களுக்கு விரிவுரை ஆற்றுவதில் என்னுடைய பெரும்பான்மையான நேரத்தை நான் செலவழித்துக்கொண்டிருந்தேன்.

எனக்கு காது அவ்வளவுக்குக் கேட்காததினாலும் மற்றும் விரிவுரையாற்றும் பாடங்களைத் தெளிவாய் முன்வைத்திடும் தாலந்தே நான் கொண்டிருக்கும் ஒரேயொரு தாலந்தாய்க் காணப்படுகின்றதினாலும், நான் ஆற்றிடும் பணியானது பிரயோஜனமானதாகவும், மேம்படுத்தும் விதமாகவும் இருக்கின்றதென எனது நண்பர்கள் நம்புகின்றனர். இப்பொழுதோ எங்கள் அருமை சகோதரி கால்கின்ஸ் அவர்களின் அறிவுரையின்படி, தீர்வுகாண வேண்டுமென்றுள்ள எனது பிரச்சனை ஒன்றிற்கு நான் தங்களது அறிவுரையைக் கேட்க விரும்புகின்றேன். நான் அர்ப்பணம்பண்ணின உடனே, என்னுடைய இருளான ஜீவியத்திற்குள்ளாகக் கடந்துவந்திட்டதான ஆச்சரியமான ஒளியைக்குறித்தும் மற்றும் "தேவனுடைய இராஜ்யமே" தற்காலத்தின் பிரச்சனைகளுக்கான ஒரேயொரு தீர்வாய் இருக்கின்றது என்றும் என்னுடைய வகுப்பில் நான் சாட்சிபகர்ந்து, இனிமேல் அந்த இராஜ்யத்தைத் தவிர வேறெந்தப் பாடத்தைக்குறித்தும் என்னால் விரிவுரையாற்ற முடியாது எனவும் தெரிவித்தேன்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வண்ணமாக, "சத்தியத்தில் காணப்படும்" சகோதரிகளில் சிலரை, என்னுடைய இல்லத்தில் வேதப்பாட வகுப்பிற்கு வரும்படியாக அழைத்தேன் மற்றும் படிப்படியாக நம்முடைய பாடத்தில் விருப்பத்தினைக் கொண்டிருக்கும், வெளியில் காணப்படும் அப்பெண்களை வரவேற்கலாம் என்று நான் எண்ணம் கொண்டிருந்தேன். ஆனால் சபையில் ஸ்திரீகளின் செயல்எல்லைத் தொடர்பான வேதவாக்கியங்களின் போதனைகளைக் கற்றுக்கொண்டபோது, என்னுடைய எதிர்க்கால வேலை தொடர்புடைய விஷயத்தில் தங்கள் ஆலோசனையைப் பெறவேண்டுமென நான் எண்ணினேன்.

அனைத்தையும் அர்ப்பணம்பண்ணிட நான் முழுவதுமாய் விரும்புகின்ற படியால் மற்றும் இதில் எனக்கிருக்கும் ஒரே தாலந்தும் உள்ளடங்குகின்றது என்றே நான் எண்ணியுள்ளேன் - ஆனால் என்னால் அமைதியாயிருக்க முடிகிறதில்லை -

நான் சந்திக்கும் அனைவரிடமும், நான் பேசினேன்; கிட்டத்தட்ட 20 பெண்களின் கரங்களில் "தெய்வீகத் திட்டத்தினை" நான் கொடுத்தேன்; முன்பு அடர்த்தியான இருளில் காணப்பட அநேக ஜனங்கள், வெளிச்சத்தைக் காணவருகின்றனர்.

ஆனால் கடந்த குளிர்க்காலத்திலும், அதற்கு முன்புள்ள குளிர்க் காலத்திலுமுள்ள எனது வகுப்பிலுள்ள பெண்கள், அவர்களுக்கு நான் மறுபடியுமாக விரிவுரையாற்றும்படிக்குக் கெஞ்சிக் கேட்கின்றனர். நான் எனது சொந்த பாடத்தைத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம் மற்றும் நான் "வேதாகமத்தின்மீது சில விளக்கவுரை" கொடுக்க விரும்புகின்றேன். இங்குள்ள ஓர் அருமையான சகோதரன் மற்றும் சகோதரியிடம் நான் ஆலோசனை கேட்டேன் மற்றும் விளக்கவுரை கொடுக்கும்படிக்கு அவர்கள் எனக்கு அறிவுரை வழங்கினார்கள் - இது அருமையான ஒரு வாய்ப்பு என்று அவர்கள் எண்ணுகின்றனர். இறுதியில் உங்களிடம் கேள்வியினை முன்வைத்திடலாமென நாங்கள் முடிவுசெய்தோம்.

சூழ்நிலையை முழு விவரங்களுடன் விளக்குவது சிரமமான காரியமாகும். ஆனால் முக்கிய காரியங்களை நான் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்று நான் எண்ணுகின்றேன். நான் பேசுவதற்குச் செவிக்கொடுப்பவர்கள், அவர்களாகவே வேதாகமப் பாடங்களை வாசிக்கப்பண்ணப் பிரயாசம் எடுப்பதே எனது முழு நோக்கமாகும்.

அருமையான சகோதரனே, நீங்கள் முழு நேரமும் வேலையில் காணப்படுகின்ற சகோதரன் என்று நான் அறிவேன் மற்றும் உங்களது விலையேறப்பெற்ற நேரத்தை எடுத்துக்கொண்டதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்; ஆனால் இக்காலத்தில், என்னால் செய்ய முடிகின்ற எந்த வேலையையும் செய்திடுவதற்கு நான் ஆவலாய் இருக்கின்றேன்; ஏனெனில் "ஒருவரும் கிரியைச் செய்ய முடியாத இராக்காலம் வருகின்றது." அதேவேளையில் நான் ஒழுங்கற்று நடக்கிறவளாய் அல்லது சபை மீது நிந்தையைக் கொண்டுவருபவளாய் இருக்க விரும்பவில்லை. நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தயவாய்ச் சொல்லிடுவீர்களா?

நீங்கள் விரும்பினால் என்னுடைய பாடங்களினுடைய பட்டியலையும், அவைகள் ஒவ்வொன்றின் பொருள் சுருக்கத்தையும் நான் உங்களுக்குக் கொடுக்கின்றேன்.

இந்த விஷயத்திலும் மற்றும் எல்லா விஷயத்திலும் சத்தியத்தின் ஆவியினால் நான் நடத்தப்படுவதற்கு மாத்திரம் ஜெபம் ஏறெடுக்கின்றேன்.

கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதரி,
Chariotte C. Heineman.

# பதில்

கிறிஸ்துவுக்குள்ளான அருமை சகோதரியே:-

உங்கள் கடிதத்தை நாங்கள் பெற்றுக்கொண்டு, முழுவதையும் வாசித்தோம். சத்திய அறிவைப் பெற்றுக்கொள்வதற்குக் கர்த்தர் உங்களைப் பாத்திரமாகக் கருதியுள்ள காரியத்திற்காக உங்களோடுகூட நாங்களும் சந்தோஷப்படுகின்றோம். அவரது வழிகாட்டுதலும், ஆசீர்வாதமும் எப்போதும் உங்களோடு காணப்பட்டு, உங்களுக்கு வரும் ஒவ்வொரு அனுபவங்களினாலும் நீங்கள் பிரயோஜன மடைவீர்களாக.

நீங்கள் பெற்றிருக்கும் தாலந்தை நீங்கள் பயன்படுத்தினால் கர்த்தர் பிரியப்படுவார் என்பது என்னுடைய எண்ணமாகக் காணப்படுகின்றது. நீங்கள் வேலை புரிவதற்கான ஒரு பகுதியினை அவர் உங்களுக்குத் தெளிவாய்க் கொடுத்திருக்கின்றார் மற்றும் அது விஷயத்தில் உங்களுக்கு அவரிடத்தில் பொறுப்புகள் காணப்படுகின்றது. ஆகையால் சத்தியத்தினை நீங்கள் முழுமையாய் அறிந்துகொண்ட பிற்பாடு, பெண்களுக்கான உங்களது விரிவுரையாற்றுதல்களை நீங்கள் மறுபடியுமாகத் துவங்கி, சத்தியத்தைத் தவிர வேறெதையும் விவாதிக்காமல், வேதாகமப் பாடங்கள் தொகுதியினுடைய போதனைகளுக்கு இசைவாய்ச் செயல்படும்படிக்கு நான் பரிந்துரைக்கின்றேன். ஸ்திரீகள் போதித்தல் தொடர்பாக பரிசுத்த பவுலடிகளார் வைக்கும் கட்டுப்பாடானது, சபைகூட்டங்கள் சம்பந்தப்பட்ட தாகும்; இக்கூட்டங்களானது பொதுவாகப் புருஷர்களையும், ஸ்திரீகளையும் உள்ளடக்கும் கூட்டங்களாகும். நீங்கள் பெற்றிருக்கும் கூட்டங்களானது, சபை கூட்டங்களாக இருப்பதில்லை மற்றும் என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி உங்கள் சந்தர்ப்பமானது எந்தவிதத்திலும் பரிசுத்த பவுலடிகளால் குறிப்பிடப் பட்டுள்ளதான தடையின் கீழ் வருகிறதில்லை. இன்னுமாக ஒருவேளை ஏதேனும் சில புருஷர்கள் ஸ்திரீகளோடு வந்து, உங்களது விரிவுரையாற்றுதல்களில் பங்கெடுத்தாலும், இதுவும் உங்களை எந்தக் குற்றச்சாட்டிற்கும் கீழாய்க் கொண்டுவருகிறதில்லை.

நீங்கள் உங்களது விரிவுரையாற்றுதல்களைத் திரும்பவும் தொடர்வது மாத்திரமல்லாமல், ஒருவேளை உங்களது பொருளாதாரம் அனுமதிக்கும் பட்சத்தில், நீங்கள் முன்பு ஊழியம் புரிந்திட்டதான மற்றப் பட்டணங்களிலுள்ள ஸ்திரீகளை மறுபடியுமாகச் சந்திக்கவும், பேசிடுவதற்காகவுமுள்ள வழி ஒருவேளை திறக்கும்பட்சத்தில், நீங்கள் உங்கள் வேலையை இதற்கேற்ப விரிவாக்கும்படிக்கும் நான் பரிந்துரைக்கின்றேன்.

கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்திடுவதற்கான உங்களுடைய பிரயாசங்களில் கர்த்தருடைய வழிகாட்டுதலும், ஞானமும், ஐசுவரியமான ஆசீர்வாதமும் காணப்படும்படிக்கு உங்களுக்காக வேண்டிக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

கர்த்தருக்குள்ளான உங்களது சகோதரன் மற்றும் ஊழியக்காரன்.

R1902 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் வார்த்தைகள்

***நியூயார்க்***

அன்புக்குரிய சகோதரர் மற்றும் சகோதரி ரசல் அவர்களே:-

எங்களது "வேத ஆராய்ச்சிக்கான டாண் குழு" பற்றிய ஒரு சிறு தகவலை உங்களுக்கு எழுதுகின்றேன். ஞாயிற்றுக்கிழமை மதிய வேளை கூட்டம் ஒன்றிற்காக நாங்கள் ஏங்கித் தவித்துக் காணப்பட்டோம் மற்றும் இத்தகைய ஒரு கூட்டத்தினைப் பொறுப்பேற்று நடத்தத்தக்கதாக எங்கள் மத்தியில் ஒரு சகோதரன் சத்தியத்தின் ஆவியினால் தொடப்படுவதற்காக நாங்கள் ஜெபம் ஏறெடுத்து வந்தோம். ஒரு கட்டத்தில் எங்கள் வேண்டுகோளானது அருளப்படுவதாக இருந்தது; ஆனால் ஆர்வமிக்கவர்கள் என்று நாங்கள் கருதிட்டதான நல்ல மனுஷர்கள் அனைவரின் மத்தியிலும் நாங்கள், விருப்பமின்மையை அல்லது பயத்தைக் கண்டபோது எங்கள் விண்ணப்பத்திற்குக் கிடைத்த பதிலில் எல்லா நம்பிக்கையும் எங்களுக்கு போய்விட்டது. ஆகையால் கூட்டமானது கைவிடப்பட வேண்டும் அல்லது நான் சில முயற்சிகளை எடுக்க வேண்டியிருந்தது மற்றும் நான் கர்த்தருடைய பெலத்தினால் அதைச் செய்யவும் செய்தேன் மற்றும் யுகங்களுக்கடுத்த திட்டத்தின் மீதான வரைபடம் விளக்கங்களுடன் கூடிய தொடர் வேதாகம ஆராய்ச்சிகளைக்குறித்து அறிவித்திட்டேன். கடந்த ஞாயிற்றுக்கிழமை, அங்குக் காணப்பட்ட பத்துப் பேருடன் நாங்கள் அதைத் துவங்கினோம்; வெற்றிடங்கள் யாவையும் நிரப்பக் கர்த்தர் அங்குக் காணப்பட்டார் மற்றும் நாங்கள் ஆசீர்வாதமாய் அந்த நேரத்தைச் செலவிட்டோம். அனைவரும் தங்களுக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும், நன்கு வெளிச்சமூட்டப்பட்டதாகவும், தவறாமல் கலந்துகொள்வதாகவும், மற்றவர்களையும் அழைத்து வருவதாகவும் தெரிவித்தனர். எல்லாமே கர்த்தரால் நடைபெற்றது.

துவங்கும்போது, வேத ஆராய்ச்சி தொடர்பான எனது கடந்தகால மற்றும் தற்கால அனுபவத்தினைப் பகிர்ந்துகொள்ள ஏவப்பட்டேன் மற்றும் அருமையான நண்பர்கள் அதினால் மிகவும் தொடப்பட்டதாகத் தெரிகின்றது.

கூட்டம் நடத்தப்படுகிற இடத்தில் துண்டுபிரதிகள் மற்றும் புத்தகங்கள் மற்றும் டவர் வெளியீடுகள் காணப்படும் மேஜை ஒன்றினை நாங்கள் பெற்றிருக்கின்றோம்; இவைகளை எடுத்துக் கொள்ளுமாறு நாம் கலந்து கொள்பவர்களுக்கு வலியுறுத்தினோம் மற்றும் கடந்த வாரத்தில் அவர்கள் மிகவும் சகஜமாய் நடந்துகொண்டார்கள்; ஆகையால் சத்தியத்தைப் பரப்பிடும் இவ்வழிமுறையின் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். நீங்கள் இப்பொழுது எங்களை உண்மையிலேயே ஒரு சிறு சபையாகக் கருதிக்கொண்டு, எங்களுக்காகத் தினந்தோறும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்கு மகிமை உண்டாகத்தக்கதாக அவர் பயன்படுத்த வேண்டிய பாவப்பட்ட மனித பாத்திரத்தை விசேஷமாய் ஜெபத்தில்

நினைவுகூருங்கள். இப்படிக்கு அவரது ஊழியத்தில் உங்கள் சகோதரி,
F. G. BURROUGHS.

[**பதில்**:- உங்களது "தேவ ஆராய்ச்சிக்கான டாண் முழு" பற்றின தகவலை அறிந்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அங்கு நிலவிய சூழ்நிலைகளில், நீங்கள் முயற்சி எடுத்துத் துவங்க முற்பட்டது சரியே மற்றும் பொது ஊழியங்களில் பொதுவாய்ச் சகோதரரைத் தெரிந்துகொள்ளும் கர்த்தருடைய சித்தத்திற்குச் சகல மரியாதையுடன், சாந்தமான ஆவியிலேயே இவற்றை நீங்கள் செய்துள்ளீர்கள் என்று நாங்கள் உணர்ந்துகொள்கின்றோம். ஆனால் ஒரு கூட்டத்தில் வழிநடத்துவதற்குப் போதுமான திறமையுடன் சகோதரர் இல்லை என்பதற்காக, அதுவும் தேவையானத் தகுதிகளையுடைய சகோதரி அர்ப்பணிக்கப்பட்டத் தாலந்துகளுடன், சாந்தத்துடன் மந்தைக்கு உண்மையாய் ஊழியம் புரியத்தக்கதாக ஆயத்தமாய் இருக்கையில், திறமையுள்ள சகோதரன் இல்லை என்பதற்காக மந்தையினுடைய நலனுக்கடுத்த காரியங்கள் கவனிக்கப்படாமல் விடப்படக்கூடாது. இஸ்ரயேலில் தேவன் ஒரு காலத்தில் ஒரு பெண் நியாயாதிபதியை எழுப்பினார் என்பது ஞாபகத்திற்கு வருகின்றது; ஒருவேளை பரவலாய்க் கல்வியறிவும், அறிவும் காணப்படுகின்றதான இந்த நாட்களில், மற்றவர்களைக் காட்டிலும் கொஞ்சம் முதன்மையான நிலையில், தமது மந்தைக்கு ஊழியம் புரியத்தக்கதாக அவர் குறிப்பிடத்தக்க சாந்தமும், உண்மையும், தெளிவும், திறமையுமுடைய ஏதோ சில சகோதரிகளை முன்னுக்குக் கொண்டு வருவாரானால், கர்த்தருடைய சித்தத்திற்கான இந்த அடையாளங்களை நாம் அசட்டைப்பண்ணாமல் இருப்போமாக. சத்திய அறிவில் நூதன சீஷனாகவோ அல்லது கிறிஸ்தவ அனுபவத்தில் வெறும் குழந்தையாகவோ காணப்படும் ஒரு சகோதரன், அவர் சகோதரனாய் இருக்கின்றார் என்பதற்காக, வழிநடத்தும் காரியத்தைப் பொறுப்பேற்க கேட்டுக்கொள்ளப்படக்கூடாது. ஒரு சகோதரிக்கு அதிகமான தாலந்துகள் இருக்குமானால், அவர்களைப் பயன்படுத்துங்கள். வரைப்பட விளக்கத்துடன் வகுப்பினைத் துவங்கினதில், நீங்கள் சரியாகவே செயல் பட்டிருக்கின்றீர்கள்.]

R1034 & R1539 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

# யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்

விசுவாசிகளுக்குத் தண்ணீரினால் யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம் எனும் இந்த அனுசரிப்புச் சம்மந்தப்பட்ட விஷயத்தில், சபை மாத்திரமே போதிப்பதற்கான அல்லது ஞானஸ்நானம் கொடுப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப் பெற்றுள்ளனர் என்பது தவிர மற்றப்படி வேறெந்த வரையறைகளும் வேதவாக்கியங்களில் முன்வைக்கப்படவில்லை. ஞானஸ்நானம் எனும் அனுசரிப்பை நிகழ்த்துபவரின் விசுவாசமும், அறிவும் பொருட்டல்ல, மாறாக ஞானஸ்நானம் எடுப்பவரின் விசுவாசமும், அறிவுந்தான் முக்கியமாய் உள்ளது. சில சமயங்களில் யாருக்காக ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றதோ அவரைக் காட்டிலும், ஞானஸ்நானம் எனும் அனுசரிப்பை நடப்பிப்பவர் எல்லாவிதத்திலும் தகுதியில் குறைந்தவராகக் காணப்படலாம் (யோவான் 3:14) மற்றும் சிலசமயம் இராஜ்யத்தை அல்லது சபை வகுப்பாரைக்குறித்து விசுவாசியாதவராகக்கூட இருக்கலாம் (மத்தேயு 11:11). நிச்சயமாகவே போதிப்பதற்கு அங்கீகாரம் பெற்ற யாவரும், ஞானஸ்நானம் கொடுத்திடுவதற்கும் அங்கீகாரம் சமமாய் உடையவர்களாய் இருக்கின்றனர் மற்றும் இது - ஊழியத்திற்கும், நியமனத்திற்கும் (மத்தேயு 28:19, 20) மற்றும் யோவான் 17:14-18,23-ஆம் வசனங்களின்படியான ஏற்படுத்துதலுக்குமுரிய பொதுவான அழைப்பின்படியான "யுகத்தின் முடிவுபரியந்தமுள்ள" கிறிஸ்துவின் ஒவ்வொரு உண்மையான பின்னடியாரையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. மேலும் இந்த நியமனமானது, "கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள" பெண்களை (ஞானஸ்நானம் கொடுக்கும்) இச்சேவைக்கு நிச்சயமாய்த் தடைப்பண்ணுகிறதில்லை (கலாத்தியர் 3:28); அபூர்வமாய்த் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் இத்தகைய ஊழியங்களைச் செய்யலாமே ஒழிய, மற்றப்படி இத்தகைய ஊழியங்கள் புரிவதைத் தன்னடக்கம், சௌகரியம் முதலான காரியங்களினால் அவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

R5984 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## உலகளாவிய மேய்ப்பரது வேலை

அசோசியேடெட் வேத மாணவர்களின் (Associated Bible Students) 500 சபைகளானது இதழாசிரியரைத் தங்கள் மேய்ப்பனாக மனமார தேர்ந்துகொண்டு, வாட்ச் டவர் பத்திரிக்கைகளின் பக்கங்கள் வாயிலாக அவர் உண்மைகளை வெளிப்படுத்தியும், மேய்க்கும் வேலையையும் செய்துகொண்டு வருவதோடுகூட, அவர் தங்களை ஜெபத்தில் நினைவுகூரவும் மற்றும் அவர்களுக்குப் பிரயோஜனமாகவும், கர்த்தருக்கு மகிமையாகவும் காணப்படும் என்று அவர் நம்புகிற ஆலோசனைகளை அவ்வப்போது பிரதிநிதிகள் வாயிலாகவும், தந்தி வாயிலாகவும் தங்களுக்கு அனுப்பும்படிக்கும் வேண்டிக் கொண்டு, அவரை மேய்ப்பனாகத் தெரிந்தெடுத்த காரியத்தினை Watch Tower Bible Tract Society-கு தெரியப்படுத்தியுள்ளனர்.

சகோதரர்கள் மத்தியில் கர்த்தருடைய ஊழியங்கள் நடைபெற்று வருவதைக்குறித்து நாம் சந்தோஷப்பட்டிருக்கின்றோம் மற்றும் மாபெரும் இராஜாவுக்கு ஊழியம் புரியத்தக்கதான மற்றும் அவரது பின்னடியார்களுக்கு உதவத்தக்கதான ஊழியங்களை அவர்கள் செய்யத்தக்கதான வழிகளையும், வழிவகைகளையும் திறந்துகொடுப்பதில் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்திருக்கின்றோம். ஆனால் சமீபத்தில் சகோதரிகள் தங்களுக்கும் மற்றும் கர்த்தருடைய நோக்கத்திற்கும் பிரயோஜனமுண்டாகும் விதத்தில் பங்கெடுக்கக்கூடிய ஒரு பெரிய வேலை எங்களது கவனத்திற்கு வந்துள்ளது.

அதைக்குறித்து வெளியூர்களில் இருக்கும் சபைகளுக்கு யோசனையாக முன்வைப்பதற்கு முன்னதாக, அதை நியூயார்க் பட்டணத்தில் நடைமுறைப்படுத்தி பரிசோதித்துப்பார்த்தோம். விளைவாகக் கிடைக்கப்பெற்ற வெற்றியானது மிகவும் தெளிவாய்க் காணப்பட்டப்படியால், தங்களது மேய்ப்பராக எங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதாகத் தகவல் தெரிவித்திருந்த சபைகள் யாவரின் கவனத்திற்குக் கொண்டுவர நினைத்து, ஒவ்வொரு சபைக்கும் பின்வரும் கடிதத்தினை - மூப்பர்கள் மற்றும் சபையாரின் பிரயோஜனத்திற்கு என்று சபையின் காரியதரிசிக்கும் ஒன்றும் மற்றும் இன்னொன்றை இந்த வேலையில் மேய்ப்பரது lieutenant/லெப்டினன்ட் - பிரதிநிதியெனத் தேர்ந்தெடுக்கப்படும் சகோதரியின் விசேஷமான பயனுக்காகவும் அனுப்பிவைக்கின்றோம். இக்கடிதங்களை இங்கு வெளியிடுவது என்பது அச்சபைகளிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் முழுக்காரியத்தையும் விளங்கப்பண்ணுகிறதாக இருக்கும்; ஏனெனில் சிலர் சபையில் வாசிக்கப்பட்டவைகளைக் கேட்காமலோ அல்லது கடிதத்தின் காரியங்களை மறந்தும் போயிருக்கலாம்.

## இவ்வேலையில் சகோதரிகளின் ஒத்துழைப்பு

பொதுக்கூட்டங்கள், Photo Drama காட்சிகள், தொகுதி விநியோகிப்பவர்கள் கொண்டிருந்த பட்டியல் முதலானவைகளிலிருந்து, மத விஷயங்களில் கொஞ்சம் ஆர்வம் கொண்டவர்களாகவும், சத்தியத்திற்கு ஏறக்குறைய இணங்குபவர்களாகவும் எண்ணப்பட்டுள்ள நபர்களின் முகவரி பெற்றுக் கொள்ளப்பட்டது தொடர்பாக, ஒரு முக்கியமான தொடர் வேலை (follow-up work) குறித்து வாட்ச் டவரின் வாசகர்களுடைய கவனத்திற்குச் சில மாதங்களுக்கு முன்பாகக் கொண்டு வந்திருந்தோம். அதுமுதற்கொண்டு நாம் இந்த முகவரிகளைப் பிரித்து, ஒழுங்குப்படுத்துவதற்கு முயன்றுகொண்டு வருகின்றோம்; ஆனால் அவை மிக அதிகமாகக் காணப்படுகின்றன மற்றும் நமக்கு நேரமும் மிகவும் குறைவாக இருப்பதினால், நாங்கள் வெகு சொற்பமானவைகளையே திட்டமிட்டப்படி ஒழுங்குபண்ண முடிந்தது. இந்த முக்கியமான வேலையை இன்னும் தாமதித்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, மேய்ப்பரது இந்த வேலையில் உதவுபவர்களாக இருப்பவர்களுக்கு முகவரி பட்டியல்களை அனுப்பிவைத்து, அதை மாவட்ட வேலையாட்கள் ஒவ்வொருவரால் பார்த்து எழுதப்பட்டு, பிரிக்கப்படலாம் என்று நாம் எண்ணினோம்.

இப்பிரிவு வேலையானது சகோதரிகளுக்காக மாத்திரமே என்று நோக்கம் கொள்ளப்பட்டிருக்கின்றது, காரணம் அவர்கள் இதில் மிக வெற்றிகரமாய்ச் செயல்பட முடிகிறவர்களாகவும், இவ்வேலையில் ஈடுபடுவதற்கென அதிகம் நேரம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர் என்றபோதிலும், I. B. S. A சபைகளைப் புறக்கணிக்கும் எதையும் நாம் முன்மொழிகிறதில்லை. எங்களால் முடிந்த மட்டும் என்னைத் தங்களது மேய்ப்பராகத் தேர்ந்தெடுத்ததாக எங்களுக்குத் தகவல் கொடுத்திட்ட சபைகளுக்கு மாத்திரமே இந்த வேலையைக்குறித்த யோசனையை முன்வைக்கின்றோம்.

ஒவ்வொரு சபையிலும் நேரமும், இவ்வேலைக்கான வேலையாட்களென இத்திட்டத்தின்கீழ் வேலை புரிவதற்கு விருப்பமும் கொண்டிருக்கும் சகோதரிகளைக் கூட்டிச்சேர்ப்பதே திட்டமாகும். இத்தகைய கூட்டத்தில், வேலைக்கென்று அதிகமான தாலந்துடையவர்களாகச் சிலரும், குறைவான தாலந்துடையவர்களாகச் சிலரும் காணப்படுவார்கள் மற்றும் சிலர் வேலையினுடைய ஒரு பாகத்தைச் செய்ய முடிபவர்களாகவும், மற்றப் பாகத்திற்கும் முற்றிலும் பொருத்தமற்றவர்களாய் இருப்பார்கள். ஆகையால் சகோதரிகள் தங்கள் மத்தியிலிருந்து, போதுமான நேரத்தையும், போதுமான செயல்படுவதற்குரிய திறமையையும் மற்றும் தனது ஸ்தானத்தை உணர்ந்து, அதைச் சரியாய்ப் பயன்படுத்தி, தனக்கும் மற்றவர்களுக்கும் ஞானமாய் வேலையைப் பிரித்துக்கொடுக்க முடிகின்றதான பரந்த மனதையும் பெற்றிருக்கும் சகோதரியை லெப்டினன்ட்டாக தெரிந்துகொள்வது நலமாயிருக்கும். லெப்டினன்ட்டாக

தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னதாக, இது விஷயத்தில் ஞானத்திற்காகவும், வழிநடத்துதலுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். நானும் இத்தகைய ஏற்பாடுகளின் மீது விசேஷித்த ஆசீர்வாதங்கள் வரும்படிக்கு ஏற்கெனவே கர்த்தரிடம் வேண்டிக்கொண்டுள்ளேன் மற்றும் தொடர்ந்து வேண்டிக்கொள்வேன். இவ்வேலைக்குத் தகுதியில்லாத எந்தச் சகோதரியும், நோக்கத்திற்கான நன்மைக்காக தன்னை விலக்கி வைத்துக்கொள்ளும் சிலாக்கியத்தினை, தான் பெற்றிருப்பதற்காகக் களிகூர்ந்து வேலைக்குத் தேவையான சாமார்த்தியத்தையும், மற்றத் தகுதிகளையும் உடைய வேறொரு சகோதரிக்கு உதவி செய்திடலாம். கர்த்தர் நம்முடைய இருதயங்களைப் பார்த்து, அவருக்கும், அவரது சத்தியத்திற்குமான நம்முடைய உண்மைக்கேற்ப நமக்குப் பதிலளிப்பாரே ஒழிய, நம்முடைய வேலையின் அளவிற்கு ஏற்ப அல்ல.

இக்குழுவினரின் செயல்களானது, குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளுக்குச் செல்வதும், ஆர்வம் இருப்பதை உறுதிப்படுத்துவதும், தவறான அபிப்பிராயங்களை அகற்றிடுவதும், வேதாகம பாடங்கள் புத்தகங்களை இரவலாக அளித்தல் முதலானவையாகும்; மற்றும் இவ்வேலையின் முக்கிய காரியம், முடிந்தமட்டிலும் அநேகரை ஆர்வத்திற்குள்ளாக்கி, அவர்களை வகுப்புகளாகக் கூட்டிச் சேர்ப்பதாகும் - முதலாவது தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைகளைக் கேட்கவும் மற்றும் பிற்பாடு தொடர்ந்து நடக்கும் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளாக்கிடுவதாகும். காரியம் போதுமான அளவுக்குச் செய்யப்பட்டப் பிற்பாடு, லெப்டினன்ட் I. B. S. A-இன் மூப்பர்களுக்கு, அவர்கள் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைகளைக் கொடுப்பதற்குரிய முற்றிலும் திறமிக்கவர்களாய்க் காணப்படும் சகோதரர்களை ஏற்பாடு பண்ணும்படிக்குத் தெரிவித்திடலாம். இதற்கிடையில் மூப்பராகிய சகோதரர் இதற்கு ஆயத்தப்பட்டிருக்க வேண்டும். சீக்கிரத்தில் "தெய்வீகத் திட்டத்தின் விளக்கவுரைக்கான குறிப்புத் தாளிற்கான" ஒரு புதிய வெளியீட்டை வெளியிடுவோம்; இது மூப்பர்களுக்கு உதவியாய் இருக்கும் மற்றும் இது இலவசமாகக் கொடுக்கப்படும். இதற்குத் தேவைப்படும் துணியிலான வரைப்படங்களையும் (cloths charts) நாங்கள் சீக்கிரமாய் ஆயத்தம்பண்ணிடுவோம்.

தெய்வீகத் திட்டத்தின் விளக்கவுரைகள் கொடுக்கப்பட்டப் பிற்பாடு மற்றும் ஆராய்ச்சி வகுப்புகள் ஏற்பாடுபண்ணப்பட்டப்பிற்பாடு, இவ்வகுப்புகளுக்குத் திறமிக்கப் போதகர்கள் தவறாமல் வழங்கப்படத்தக்கதாகச் சபையின் மூப்பர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். போதகர்களுக்கான தகுதியை - போதகசமர்த்தனாய் இருக்க வேண்டியது குறித்துக் காணப்படும் அப்போஸ்தலனின் புத்திமதிகளை நினைவில்கொள்ளுங்கள். ஒருதலைச்சார்பு/பாரபட்சம் எதையேனும் செய்வதின் மூலமாகவோ அல்லது மாம்சத்தின்படி கனத்தைக் கொடுக்கவோ, பெற்றுக் கொள்ளவோ நாடுவதன் மூலமாகவோ கர்த்தருடைய வேலையைச் சீரழித்துப் போடாதீர்கள். எல்லாவற்றிலும், "தேவனுக்கு முதலிடம்" மற்றும் சுயமும், மாம்சத்தின் அனைத்து வழிகளும் கீழ்ப்பட்டேயிருக்கும் என்பதை நம்முடைய பொன்மொழியாகக் கொண்டிருப்போமாக.

இத்திட்டமானது பிரமிக்க வைக்கும் வெற்றியுடன் பல்வேறு பெரிய பட்டணங்களில் ஏற்கெனவே நடைபெற்று வருகின்றது. இவ்வளவு காலம் இந்த வேலையின் முக்கியத்துவத்தை உணராமலும், அதைச் செயல்படுத்தாமலும் இருந்ததைக்குறித்து நாங்கள் விநோதமாகவே எண்ணுகின்றோம். ஆனால் அநேகமாக இது தற்கால வேலையினுடைய ஒரு பாகமாக இருக்கலாம் - அநேகமாக ஏதோ விதத்தில் இது எலியாவின் சால்வையைக் கொண்டு தண்ணீரை அடித்தல் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். இது நிழலை நிறைவேற்றிடும் என்று நாம் கூறவில்லை, மாறாக அது தொடர்பான விஷயங்களில் இது ஓர் அம்சமாக இருக்கலாம் என்று மாத்திரம் கூறுகின்றோம்.

இந்த வேலையினை இப்படி அறிமுகப்படுத்தி, காரியத்தினைக் கர்த்தருடைய ஜனங்களின் கரங்களில் விடுகின்றோம் மற்றும் மனப்பூர்வமாய் ஒத்துழைக்க விரும்பும் யாவர் மீதும் திவ்விய ஆசீர்வாதம் காணப்படும்படிக்கு வேண்டிக்கொள்கின்றோம்.

இதனோடுகூடச் செயல்முறைக்கான சில யோசனைக்குறிப்புகளையும் இணைத்துள்ளோம்.

கர்த்தருக்குள்ளான உங்களது சகோதரன் மற்றும் ஊழியக்காரன்,
சி. டி. ரசல்.

## பெரிய பட்டணத்தில் ஊழியம் புரியும் இவ்வேலையாட்களுக்கான குறிப்புகள்

சிலசமயம் விசேஷித்த பிரதிநிதிகள் வாயிலாகவும் மற்றும் சிலசமயம் சபையாரின் காரியதரிசி வாயிலாகவும் அனுப்பிவைக்கப்பட்டு, I. B. S. A-சபைகளில் வாசிக்கப்படுகின்றதான மேய்ப்பரது கடிதமானது, விவரிக்கப்பட்டுள்ள வேலைக்குரிய நேரத்தையும், பலத்தையும் பெற்றிருக்கும் சபையாரிலுள்ள சகோதரிகள் அனைவரும் ஒன்றுகூடிடுவதற்கான ஓர் அழைப்பை விடுக்கின்றதாய் இருக்கும். இவர்களது முதலாம் கூடிக்கொள்ளுதலானது, தங்கள் மத்தியில் ஒருவர் லெப்டினன்டாகவும் மற்றும் இன்னொருவர் இவ்வேலைக்கான காரியதரிசியாகவும், பொருளாளராகவும் இருப்பதற்கு யார் கர்த்தருடைய தெரிந்து கொள்ளுதலின்படியானவர்கள் என்று தங்களால் நம்பப்படுகிறவர்களின் தெரிந்தெடுத்தலுக்கானதாகும்.

[தவறான புரிந்துகொள்ளுதலின் காரணமாக எங்கள் பிரதிநிதி, மாநாடுகள் சிலவற்றில் லெப்டினன்டுகளை நியமித்துவிட்டதற்காகவும், பின்னர் லெப்டினன்டையும், காரியதரிசியையும் தேர்ந்தெடுக்கும்படியாக எங்களிடமிருந்து வந்த கடிதமானது சில குழப்பத்தை ஏற்படுத்தினது என்பதற்காகவும் நாம் வருந்துகின்றோம்சொசைட்டியின்பிரதிநிதிகள்முறையாய் நியமிக்கப்பட்டவர்கள்

ஆவார்கள்; ஆனால் சபையார்கள் சம்பந்தப்பட்ட காரியங்கள் அனைத்திலும் அவர்களது தெரிவு அல்லது எங்களது தெரிவிற்கு அவர்களது ஒப்புதல்தான் முடிவாய் இருக்கும்.]

இவ்வூழியத்திற்கு அவசியப்படும் மிதமான செலவுகளைச் சந்தித்துக் கொள்வதைச் சபையார் சிலாக்கியமாகக் கருதுவார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் அப்படியாக இல்லையெனில் மற்றும் அக்காரியம் கவனிக்கப்படவில்லையெனில், அதையும் மாதாந்தரத் தகவல் அறிக்கையில், மிகக் குறிப்பாய்க் குறிப்பிட்டு, கீழ் இடம்பெறும் முகவரிக்கு எழுதி தெரிவித்திடுங்கள்.

அனைத்துத் தகவல் அறிக்கைகளும் லெப்டினன்டினாலும் மற்றும் காரியதரிசி - பொருளாளரினாலும் கையெழுத்திடப்பட்டு அனுப்பப்பட வேண்டும். இந்த முதலாம் கூட்டம் நடைபெற்ற உடனே, கலந்துகொண்டவர்களின் எண்ணிக் கைக் குறித்தும், லெப்டினன்டாகவும், காரியதரிசி - பொருளாளராகவும் நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களையும் குறித்தும் எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

உங்கள் முதலாம் கூட்டமானது, நீங்கள் ஒருவரோடொருவர் பழகிடுவதற்கும், இவ்வேலைத் தொடர்பான உங்களது ஆர்வத்தைத் தூண்டிடுவதற்கும் மற்றும் எவற்றைப் பயன்படுத்த வேண்டியிருக்கும் மற்றும் எப்படிச் சிறப்பாய்ப் பயன்படுத்திடலாம் என்று கணக்கிடுவதற்கும் உதவுகிறதாய் இருக்கும். எங்கெல்லாம் அனுப்ப முடியுமோ, அங்கெல்லாம் ஒழுங்குப்படுத்துவதற்கும் மற்றும் பிரித்து வகைப்படுத்துவதற்கும் மற்றும் நாங்கள் வெற்றிகரமான செயல்முறையெனக் கண்டுகொண்டுள்ளவைகளை விளக்குவதற்குமென்று சகோதரி Genevieve Sanford அவர்களை நாம் அனுப்பிக்கொண்டிருக்கின்றோம். சகோதரி உங்களுடனே காணப்பட்டார்களானால், நாங்கள் இங்கு அளிக்கும் விவரங்கள் உங்களுக்கு அவ்வளவுக்கு முக்கியமாய் இராது; எனினும் சகோதரி கடந்து போய் விட்டப்பின்பு, இவைகளைத் தகவல் குறிப்புகளாக வைத்துக் கொள்வதற்கு விரும்புவீர்கள். ஆனால் ஒருவேளை ஏதேனும் காரணத்தினால் சகோதரி Sanford அவர்களால் உங்களிடத்திற்கு வரமுடியவில்லையெனில், நீங்கள் கர்த்தரையே அதிகமாய்ச் சார்ந்திருக்க வேண்டியிருக்கும் என்றும், அனைத்து ஏற்பாடுகளிலும் உங்களது சிறந்த ஞானத்தையும், நீதியையும், அன்பையும் செயல்படுத்திட வேண்டியிருக்கும் என்றும் நினைவில் கொள்ளுங்கள். "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாதிருங்கள்."

## இரண்டாம் கூட்டத்தில்

இக்கூட்டமானது நீண்ட நாள்களுக்கென்று தள்ளிப்போடப்படக்கூடாது - அதாவது "இரும்பு சூடாக இருக்கும்போது welding/வெல்டிங் பண்ண வேண்டும்." எந்தவொரு விஷயத்திலும் சிறந்த பலன்களை அடைவதற்கு

ஒழுங்குமுறை அவசியமென்பதை முதலாவது நினைவில்கொள்ள வேண்டும். இரண்டாம் கூட்டத்திற்கு முன்னதாக லெப்டினன்ட் முடிந்தமட்டும் தெளிவாயும், துல்லியமாயுமுள்ள பட்டணங்களுக்கான நான்கு நிலப்படத்தையும் (maps) மற்றும் பட்டணத்தின் தெருக்களுக்கான நான்கு அட்டவணை புத்தகங்களையும், ஒரு சிவப்புப் பென்சிலையும், ஒரு நீல பென்சிலையும், எழுதுவதற்குரிய கடினமான தாள்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். லெப்டினன்ட் தனக்கென முதல் நிலப்படத்தைத் (map) தயார்படுத்திக்கொண்டு, பிற்பாடு மற்ற மூன்று நிலப்படங்களை ஆயத்தமாக்கிக்கொள்ளத்தக்கதாக உதவி செய்பவர்களிடம் மாதிரியாய்க் கொடுத்திட வேண்டும்.

உங்கள் பட்டணத்தை ஒரு நிற பென்சிலைக்கொண்டு பிரித்துக் கொள்ளுங்கள். இப்படியாக நிலப்படத்தைப் பிரித்துக்கொண்டப் பிற்பாடு, மற்ற நிற பென்சிலைக் கொண்டு, பல்வேறு மாவட்டங்களுக்கு எண்கள் இட்டுக் கொள்ளுங்கள்.

சொசைட்டியினால் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் சில பெயர்கள், அட்டைகளில் கொடுக்கப்பட்டிருக்கும் மற்றும் அவைகளின் முகவரியினை சகோதரிகளில் சிலர் நிலப்படத்தில் அடையாளம் கண்டுபிடிப்பதற்கெனச் சொல்லப்படலாம். அவர்கள் எந்தப் பட்டணத்தார்கள் என்று கண்டுபிடிக்கப்படும் போது, வண்ண பென்சிலினால் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணானது, அட்டைகளில் குறித்துக்கொள்ளப்பட வேண்டும். இன்னும் உங்களுக்கு வேறு சில பெயர்கள் அட்டவணையில் அனுப்பப்பட்டிருக்கும் மற்றும் இவைகள் ஒவ்வொன்றும் ஒரு சிறு அட்டைத்தாளில் எழுதப்பட வேண்டும் மற்றும் அடுத்ததாக ஒவ்வொரு முகவரிக்கும், அதன் மாவட்டத்திற்குரிய வண்ண பென்சிலினால் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணானது குறித்துக்கொள்ளப்பட வேண்டும்.

கடினமான தாள்களை வசதியான அளவுகளுக்கு, அதாவது சிறு அஞ்சல் அட்டைகள் அளவுக்கு வெட்டப்படுவதன் வாயிலாகக் குறைந்த செலவில் கோப்பு அட்டைகளை (file cards) தயார் செய்துகொள்ளலாம். Photo Drama Card-லிருந்து அல்லது வேறெந்த நினைவுக்குறிப்புகளிலிருந்து அல்லது முகவரியிலிருந்து உடனடியாகப் பெயர்களை இந்தக் கோப்பு அட்டைகளுக்கு மாற்றிட வேண்டாம். முகவரிகளைக் கண்டுபிடித்து, அவைகளின் மாவட்டங்களை மாத்திரம் குறித்துக்கொள்ளுங்கள். அந்த முகவரியிலுள்ளவர்களின் ஆர்வம் குறித்து உறுதிப்படுத்திக்கொண்ட பிற்பாடு, முகவரியானது கோப்பு அட்டைகளுக்கு மாற்றப்படலாம்.

சபையார் மத்தியிலுள்ள ஒவ்வொரு சகோதரியினுடைய முகவரியையும் பெற்றுக்கொள்ளுங்கள் மற்றும் இவர்களுடைய பெயர்களுடன் கோப்பு அட்டைகளைத் துவங்கிடுங்கள் மற்றும் அவள் சத்தியத்தில் இருக்கிறாள் என்பதைச் சிவப்பு நிறச் சிலுவைக் குறியீட்டினால் குறித்துக்கொள்ளுங்கள். அவளது மாவட்டமும், நிலப்படத்தில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் ஒரு சிறு "x" குறியீடானது அவளது இடம் இருக்கும் இடத்தினைத்

துல்லியமாய்ச் சுட்டிக்காண்பித்திட வேண்டும்.

திறமைக்கேற்பவும் மற்றும் பாரப்பட்சம் இல்லாமலும் லெப்டினன்ட் மாவட்ட வேலையாட்களைத் தெரிவுசெய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு வேலையாளுக்கும், அவள் வாழும் இடத்தினை அல்லது பக்கத்து மாவட்டத்தினை அல்லது அருகாமையில் காணப்படுகின்றதான மாவட்டத்தினை, அவள் வேலை புரியும் களமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

ஒருவேளை உங்களுக்கு அதிகமான உதவியாளர்கள் இருப்பார்களானால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருவர் புத்தகங்கள் இரவலாகக் கொடுக்கும் பணியினைப் பார்த்துக்கொள்ளலாம் மற்றும் இன்னொருவர் முகவரிகளிலுள்ள வருக்கு அழைப்புகள் விடுக்கும் பணியினைச் செய்திடலாம்; ஆனால் ஒருவேளை போதுமான வேலையாட்கள் இல்லையெனில், முதலாவது அழைப்புகள் விடுக்கும் பணியானது செய்யப்படட்டும் மற்றும் புத்தகங்கள் இரவலாகக் கொடுக்கும் பணியானது, அடுத்தப்படியான வேலையாக இருப்பதாக; எனினும் அழைப்பு விடுக்கப்பட்ட நபர் புத்தகங்களைப் பெற்றிராமலும், இரவலாகத் தொகுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பிடும் தருணங்களில் புத்தகம் இரவலாகக் கொடுக்கும் பணியானது செய்யப்படலாம்.

சகோதரிகள் விவரங்களை லெப்டினன்டுக்கு ஒரு வாரத்திற்குள்ளாகத் தகவல் கொடுத்திட வேண்டும். வேலையாட்களாகக் காணப்படும் சகோதரிகளில் சிலர் வியாதிப்பட்டதினாலோ அல்லது அவர்கள் எதிர்ப்பார்த்த நேரம் அவர்களுக்குக் கிடைக்காததினாலோ தடைகள் அடைந்திட்டதை நீங்கள் காணலாம் அல்லது சிலர் தளர்ந்துபோய், சாமார்த்தியமற்றவர்களாய் நிரூபிக்கப்பட்டிருக்கலாம்; சிலருக்குக் கூடுதலான விவரங்களும், ஆதரவுகளும் தேவைப்படலாம். ஒரு வாரத்திற்குள்ளாகத் தகவல் கொடுக்கத் தவறிடும் சகோதரி ஒருவருக்கு, அவளை உற்சாகப்படுத்தியும், அவள் ஏற்கெனவே செய்திருப்பவைகளைக் குறித்துப் பாராட்டுத் தெரிவித்தும், அவள் எதிர்க்காலத்தில் மேம்பட்ட வளர்ச்சியினைக் காட்டுவாள் என்ற உங்களது நம்பிக்கையை வெளிப்படுத்தியும் மற்றும் அவள் எதையேனும் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் காணப்பட்டால், அது தொடர்பாக அவள் உங்களைத் தொடர்புகொள்ள தெரிவித்தும் அன்புடன் கடிதம் ஒன்றை எழுதுங்கள். ஊழியங்களைக் குறைவில்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

சகோதரிகள் தங்கள் தங்கள் மாவட்டங்களில் தங்கள் சந்திப்புகளை நிறைவு செய்கையில், எவ்வித ஆர்வம் காட்டிடாதவர்களின் அட்டைகளில் அல்லது அட்டவணைகளில் உள்ள முகவரிகள் லெப்டினன்டினால் அழித்துப் போடப்பட வேண்டும். பின்னர் ஆர்வத்தினைக் காட்டுபவர்களின் முகவரிகளானது மூன்று கோப்பு அட்டைகளில் எழுதப்பட வேண்டும் - ஒன்று உங்களது கோப்பில் (file) வைத்துக் கொள்வதற்கும், ஒன்று புரூக்கிளின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கும் மற்றும் மற்றொன்று மேலுமுள்ள பயன்பாட்டிற்கென மாவட்ட வேலையாட்களிடம் காணப்படுவதற்கும் ஆகும். எந்த முகவரிகளும் தொலைந்து போகாதபடிக்கு, அட்டைகளைக் கவனமாய்க் கையாள வேண்டுமெனச்

சகோதரிகளுக்குப் புரியவைத்திடுங்கள். இப்படி முகவரியினைக் கோப்பு அட்டையில் எழுதும் காரியமானது, முடிந்தமட்டும் காலந்தாழ்த்தாமல் செய்யப்பட வேண்டும்.

சில மாவட்டங்களில் இப்பணித் துவங்கின இரண்டு வாரத்திற்குள்ளாக தெய்வீகத் திட்டம் விளக்கவுரைக் கொடுத்திடுவதற்குச் சூழ்நிலை ஆயத்தமாகிடும். மிகுந்த கிறிஸ்தவ அன்புடன்,

கிறிஸ்துவுக்குள்ளான உங்களது சகோதரன் மற்றும் ஊழியக்காரன்,

**சி. டி. ரசல்.**

குறிப்பு: மாதாந்திர தகவல் அறிக்கை வெற்றுத் தாள்களை நாங்கள் உங்களுக்கு அனுப்பிவைக்கின்றோம். இதை ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் புரூக்கிளினுக்குக் கீழ் இடம்பெறும் முகவரிக்கு அனுப்பி வைத்திடுங்கள்.

Pastoral Work Department,
c/o. Mrs. Genevieve Sanford,
122 Columbia Hts., Brooklyn, N. Y.

## இவ்வேலை தொடர்புடைய விஷயத்தில் மாவட்ட வேலையாட்களுக்கான குறிப்புகள்

உங்களது முகவரி அட்டைகளையும், நினைவுக்குறிப்புகளையும் அகரவரிசையில் (alphabetically) வரிசைப்படுத்திக்கொள்ளுங்கள். அவற்றை இந்த அகர வரிசையில் ஒரு புத்தகத்தில் எழுதிக்கொள்ளுங்கள்; ஒவ்வொரு அகர எழுத்திற்கும் கீழ் நான்கு முதல் ஐந்து பெயர்களை எழுதுவதற்குரிய இடம் விட்டுக்கொள்ளுங்கள். பின்னர்த் தொடர்புக்கொள்கையில் உங்கள் சௌகரியத்திற்கேற்ப அட்டைகளை அடுக்கி வைத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை அட்டைகளில் ஏதேனும் அட்டையானது அவ்வளவுக்குத் தோற்றத்தில் தெளிவாய், நேர்த்தியாய் இல்லையெனில், திருப்தியற்ற நிலைகளில் அவைகளைப் பயன்படுத்திடுவதற்குப் பதிலாக, மறுபடியுமாக புதிதாய் அட்டையில் எழுதிக் கொள்ளுங்கள்.

இந்த அட்டைகளில் அல்லது நினைவுக்குறிப்புகளில், அந்நபர் ஏற்கெனவே சத்தியம் குறித்த புத்தகங்களின் விஷயத்தில் என்ன பெற்றிருக்கின்றார் என்பது பற்றின அடிக்குறிப்பு/குறிப்புரையை முடிந்தமட்டும் பெற்றிருக்க வேண்டும்; இது நீங்கள் தொடர்புகொள்ளும்போது, நீங்கள் என்ன பேசிடலாம் எனும் விஷயத்திற்கு உதவியாகக் காணப்படும். சந்திக்கச் செல்கையில், உங்களது நேரம் வீணாக்கப்படாத விதத்தில் அட்டைகளை ஒழுங்குப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு சந்திப்பிற்குப் பிற்பாடு, அட்டையில் சந்திப்புக்குறித்த சிறுகுறிப்புகளை எழுதிடுங்கள்; உதாரணத்திற்கு "ஆர்வம் இருக்கின்றது;

தெய்வீகத் திட்டம் விளக்கவுரைகளில் கலந்துகொள்வார்" அல்லது "ஆர்வமில்லை;" அல்லது "இடம் மாறிவிட்டனர்" என்பதுபோன்று எழுதிடலாம். ஒவ்வொரு அட்டையிலுமுள்ள இந்த விவரங்களை நீங்கள் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை லெப்டினன்டிக்குக் கொடுத்திட வேண்டும்; இதை அவள் தனது கோப்பில் (file) பதிவுசெய்து, "இடம் மாறிவிட்டனர்" அல்லது "ஆர்வமில்லை" என்று காண்பிக்கும் முகவரிகளை, அழித்துப்போடுவாள்.

நடத்தப்படப்போகும் கூட்டங்களானது I. B. S. A சபையாரின் மூப்பர்களினால் மேற்பார்வையிடப்படும் என்றாலும், நாமும் தொடர்பில் காணப்பட விரும்புகின்றோம். ஆகையால் கூட்டங்களில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையையும் மற்றும் உதவிக்கரமாய்த் தோன்றும் எதையும், புத்தகங்களை வாங்கினவர்கள் யாரேனும் இருந்தால், அவர்கள் பெயர்களையும் அஞ்சல் அட்டை மூலம் வாரந்தோறும் லெப்டினன்டுக்குத் தயவாய்த் தகவல் அளித்திடுங்கள். ஜனங்கள் புத்தகங்களை வாசிக்கும் விஷயத்தில் மிகவும் கருத்தூன்றிக் கவனம் கொடுக்கத்தக்கதாக, புத்தகங்கள் விலைக்கொடுத்து வாங்கப்படும் விஷயம் நலமானதாய் இருப்பினும், சத்தியத்தை வியாபாரம்பண்ணும் எந்த எண்ணமும் அங்கீகரிக்கப்படக்கூடாது என்பதை நினைவில்கொள்ளுங்கள். புத்தகங்களை விற்பதற்கு முயற்சிக்கும் தோற்றத்தைக் கொடுப்பதற்குப்பதிலாக, இரவலாகக் கொடுக்கப்படும் என்று சொல்லிடுங்கள்; ஆனால் ஒருவேளை ஒருவர் விலைக்கொடுத்து வாங்கிட விரும்பிட்டால், அதிலும் நமக்கு மகிழ்ச்சியே.

## மாவட்ட வேலையாட்களின் ஆய்வு/Canvass

"காலை வணக்கம்! இங்குத்தான் திருமதி உட் அவர்கள் வாழ்ந்து வருகின்றார்களா?"

"ஆம்"

"வீட்டு வேதாகம ஆராய்ச்சிக்காக நான் உலா நூலகம் (Circulating Library) தொடர்பாக வந்திருக்கின்றேன். சில காலங்களுக்கு முன்னதாக, தாங்கள் இதில் ஆர்வம் கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ளீர்கள் என்று எண்ணுகின்றேன். உங்களுக்கு விருப்பமானால், இக்காரியம் குறித்து உங்களிடம் பேச விரும்புகின்றேன்."

உள்ளே வரும்படிக்கு வரவேற்கப்பட்டப் பிற்பாடு நீங்கள் தொடர்ந்து:

"அப்போது தாங்கள் வேதாகம பாடங்கள் என்று அழைக்கப்படும் தொகுதிகளை திருமதி உட் அவர்களே வாங்கியுள்ளீர்கள் என்று நான் நம்புகின்றேன். அதில் எதுவேனும் உங்களுக்கு ஆர்வத்தைத் தூண்டினதா அல்லது

இல்லையா என்று நான் தெரிந்துகொள்ளலாமா?"

இது உரையாடலுக்கான ஒரு துவக்கம் மாத்திரமே மற்றும் இது சந்தர்ப்பங்களுக்கேற்ப, அதாவது அட்டையில் குறித்துவைத்திருக்கும் குறிப்புகளுக்கேற்ப மாறிடும். இதற்கு மேலாக என்ன பேச வேண்டும் என்பது, அங்கு ஏற்படும் சூழ்நிலைப் பொறுத்ததாகும். சிலசமயம் எதுவும் அந்நபருக்கு ஆர்வம் மூட்டினதாக இருக்கவில்லை என்றும், மிகவும் ஆர்வத்துடன் காணப்படும் சிலரை அறிவார்கள் என்றும் பதில் வரலாம். இப்படியாக மற்றவர்களுடைய முகவரியையும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும். அநேகமாக சிறு ஞானமான உரையாடலின் வாயிலாக, நீங்கள் உரையாடிக் கொண்டிருக்கும் அந்நபரின் ஆர்வத்தினை நீங்கள் தூண்டிவிடலாம்; அல்லது அவர்களுக்கான சிரமம் தவறான அபிப்பிராயமாக, தவறாய் விவரம் கேட்டிருப்பதாகவோ காணப்படலாம். தவறாய் மனதில் பதியப் பெற்றவைகளைச் சரி செய்வதற்குரிய இத்தகைய வாய்ப்புகளானது மிகவும் விலையேறப் பெற்றவையாகும். சரியானவைகளைப் பேசிடுவதற்குரிய ஞானத்திற்காகவும் மற்றும் நீதிக்கு இசைவாய் இருக்கும் யாவருக்கும் தன்னுடைய வார்த்தைகளானது சுகந்த வாசனையாகவும், அபிஷேகிக்கும் தைலமாகவும் காணப்படத்தக்கதாக இருதயத்தில் சாந்தம், பொறுமை, அன்பு எனும் கர்த்தரிடத்திலிருந்து வரும் கிருபைக்காகவும் ஒவ்வொரு வேலையாளும் ஊக்கமாகவும், தொடர்ச்சியாகவும் ஜெபம் ஏறெடுத்திட வேண்டும்.

ஒருவேளை அந்தப் பெண்மணியிடம் வேதாகம பாடங்களினுடைய புத்தகங்கள் இல்லையெனில், தொகுதியை அப்பெண்மணி இரவலாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவியுங்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் சீக்கிரத்தில் "தெய்வீகத் திட்டம்" விளக்கவுரை நடைப்பெறப் போவதைக்குறித்துத் தெரிவியுங்கள். வேதாகமம் நாம் புரிந்துகொள்ளத்தக்கதாகவும் மற்றும் புதிய புத்தகமாக ஆகத்தக்கதாகவும், எப்படி யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தின் வரைப்படமானது வேதாகமத்தைத் திறக்க உதவிடும் என்று அப்பெண்மணிக்கு விளக்கிடுங்கள். நீங்கள் இரவலாகக் கொடுப்பதாகக் கூறிடும் தொகுதியானது, அவளது ஆர்வத்தை வெகுவாய்த் தூண்டிடும், காரணம் அது மற்ற மதரீதியான புத்தகங்களினின்று வேறுபட்டது என்றும், அது வேறுமாதிரியானது என்று நம்மில் சிலர் ஊகித்திருப்பினும், அது வசனங்களையும், வேத அதிகாரங்களையும் குறிப்பிட்டு, அது உண்மையிலேயே தேவனுடைய வார்த்தையின் செய்தியாய் இருக்கின்றது என்று காண்பித்துத் தருகின்றது என்றும் அப்பெண்மணிக்கு உறுதிப்படுத்திடுங்கள். தெய்வீகத் திட்டம் விளக்கவுரை வகுப்பு ஏற்பாடுபண்ணப்படும் போது, அதுகுறித்துத் தகவல் தெரிவிக்கப்படுவதற்கு அவள் விரும்புகின்றாளா என்று கேட்டுக்கொள்ளுங்கள். அடுத்தமுறை வருகையில், அவள் அதிகம் வாசித்திருந்து, ஆழமாய் ஆர்வம் கொண்டவளாகக் காணப்படுவாள் என்று நீங்கள் நம்புவதாகவும் விடைப்பெறும்போது தெரிவித்துக்கொள்ளுங்கள்.

அடுத்த நபரைச் சந்திக்கப் போவதற்கு முன்னதாக உங்களது முகவரி நினைவுக்குறிப்பில் இந்தச் சந்திப்பின் சுருக்கமான விவரங்களை எழுதிடுங்கள். தெய்வீகத் திட்டம் விளக்கவுரையில் கலந்துகொள்வதற்குப் போதுமான ஆர்வம் கொண்டிருப்பவர்களை உங்களது மாவட்டத்தில் சுற்றித் தேடி அறிந்துகொள்கிற அதேவேளையில், கூட்டத்தை நடத்துவதற்கான ஓர் இடத்திற்காகக் கர்த்தருடைய வழிகாட்டுதலுக்கு நாடிடுங்கள் - அதாவது விருப்பத்தைத் தெரிவித்தவர்களாகவும், சாதகமாய்க் காணப்படும் பெரிய வரவேற்பறையை அல்லது உட்கார்ந்திருப்பதற்கான அறையை உடையவர்களாகவும் இருக்கும் ஓரிடத்திற்காக நாடிடுங்கள். ஒருவேளை அப்படிக் கண்டுகொள்ளும்போது, "நீங்கள் ஒருவேளை இங்கே கூட்டத்தை நடத்த விரும்புவீர்களானால், இத்தகைய கூட்டங்களுக்கு இந்த அறை எவ்வளவு சௌகரியமாய் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். இது மிகவும் பொருத்தமான இடமாக இருக்கும் அல்லது இருக்காது என்று நான் திட்டவட்டமாய்ச் சொல்லிட முடியாது, எனினும் இங்குக் கூட்டம் நடத்திடுவதற்கு நீங்கள் விரும்புவதாக ஒப்பந்தம்பண்ணுவது ஏற்புடையது என்று நீங்கள் எண்ணிச் செய்வீர்களானால், நாங்கள் மகிழ்ச்சிக்கொள்வோம்" என்று நீங்கள் சொல்லிடலாம்.

நீங்கள் கண்டுகொண்டவைகளையும், கூட்டத்தினை நடத்துவதற்குரிய மிகப் பொருத்தமான நேரத்தையும் மற்றும் மிகப் பொருத்தமான இடத்தையும் குறித்து லெப்டினன்டிக்குத் தகவல் கொடுங்கள் மற்றும் இது விஷயத்தில் திட்டவட்டமான தீர்மானத்தை எடுக்கும் சபையினுடைய மூப்பர்களிடத்தில் தொடர்பில் காணப்படும் லெப்டினன்ட் மூப்பர்களுக்குத் தகவல் கொடுப்பார்கள்.

தெய்வீகத் திட்டம் விளக்கவுரைக்கான வகுப்புகள் தொடர்பான தீர்மானத்திற்குள் வந்தவுடன், ஆர்வத்துடன் காணப்படுவதாகத் தெரிபவர்களை மறுபடியுமாகத் தொடர்புகொள்ளுங்கள். அவர்களிடம் ஏற்பாடுகள் குறித்துத் தெரிவித்து, அவர்கள் அங்கு வருவார்களென எதிர்ப்பார்த்திடலாமா என்று கேட்டுக்கொள்ளுங்கள். இதோடுகூடக் கூட்டத்திற்கு முந்தின நாள் சென்று சேரும் நிலையில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் அஞ்சல் அட்டைகளை எழுதி அனுப்புங்கள். அதில் பின்வருமாறு எழுதப்படலாம்: "நாம் நாளை, வியாழன் மாலையன்று, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரையினைக் கேட்பதற்கென 122, வெஸ்ட் சார்லஸ் தெருவிலுள்ள திருமதி உட் அவர்களின் இல்லத்தில் வைத்து 7.30 p.m.-கு சந்திக்கப்போகின்றோம் என்று நினைப்பூட்ட விரும்புகின்றேன். உங்கள் இல்லமானது திருமதி உட் அவர்களின் இல்லத்திலிருந்து ஒன்பது வீடுகள் தாண்டிதான் காணப்படுகின்றது. நீங்கள் வண்டியில் ஏறி இங்கு வந்து இறங்கிவிடலாம்" என்று எழுதி, நீங்கள் கையெழுத்திட்டுக்கொள்ளுங்கள்.

உங்கள் மாவட்டத்தில் நடைபெறும் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை வகுப்புகள் ஒவ்வொன்றிலும் நீங்கள் நிச்சயமாய்க் கலந்துகொள்ள வேண்டும் மற்றும் ஆர்வமுடன் காணப்படுபவர்களை ஆர்வத்தில் நிலைக்கொள்ளப்

பண்ணத்தக்கதாக தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள்; எனினும் நீண்ட நேரமாய்ப் பேச வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு வாரமும் அஞ்சல் அட்டை அனுப்பி ஞாபகப்படுத்தவும் செய்யுங்கள்.

தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை தொடர் வகுப்புகள் நிறைவடைகையில், தெய்வீகத் திட்டம் வரைப்படம் தொடர்பான ஒரு கேள்வி கூட்டம் நடத்தப்படுவது முறையாய் இருக்கும் மற்றும் இது குறித்து விளக்கவுரை கொடுத்தவரே அறிவிப்புக் கொடுத்திடலாம். இந்த முக்கியமான ஊழியத்திற்கும் ஞானமுள்ள மற்றும் திறமையுள்ள சகோதரர்களை மாத்திரம் மூப்பர்கள் தெரிந்துகொள்ளும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். ஒருவேளை அங்குக் காணப்படுபவர்களில் அதிகமானவர்கள் விரும்பும் பட்சத்தில், இந்தக் கூட்டத்தில் முதலாம் தொகுதியின் பெரோயா ஆராய்ச்சியானது துவங்கப்படும் என்று தெரிவிக்கப்படலாம்.

இதற்கிடையில் ஒருவேளை தெய்வீகத் திட்டத்திற்கான விளக்கவுரை வகுப்புகள் நடத்தப்பட்ட ஸ்திரீயின் இல்லத்தில் தொடர்ந்து பெரோயா ஆராய்ச்சிகளானது நடத்தப்படுவதற்கு ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லையெனில், பெரோயா ஆராய்ச்சியினை, தனது இல்லத்தில் வைத்து நடத்துவதற்கு விரும்பிடும் வேறு ஏதேனும் பெண்கள் இருக்கின்றார்களா என்று விசாரித்து வைத்துக்கொள்ளுங்கள். பெரோயா ஆராய்ச்சியானது, வேத மாணவர்களில் ஒருவரின் இல்லத்தில் நடத்தப்படுவது விரும்பத்தகுந்தது. கேள்விக் கூட்டத்தில், அதாவது தெய்வீகத் திட்டத்திற்கான விளக்கவுரை வகுப்புகளுக்கான நான்காவது இரவில் - நான்காவது வாரத்தில், முதலாம் தொகுத்திக்கான பெரோயா ஆராய்ச்சிக்கென்று வாக்கு (vote) எடுக்கப்படுவதாக.

பெரோயா வகுப்புச் சரியாய்த் துவங்கின பிற்பாடு, நீங்கள் கொஞ்சம் சுதந்தரமாய்க் காணப்படலாம் மற்றும் வேறு ஏதேனும் முக்கியமான வேலை வந்திட்டாலும், அவற்றைச் செய்திடலாம். வகுப்புடன் தொடர்பில் காணப்படுங்கள்; மற்றும் வகுப்பில் யாரேனும் இரண்டு வாரங்களாகக் கலந்துகொள்ள தவறுவார்களானால், மூன்றாம் கூட்டத்திற்கு முன்பாக அவர்களைத் தொடர்புகொள்ள பார்த்திடுங்கள்.

இந்த வகுப்புகளில் உள்ளவர்களின் ஆர்வம் வளர்ந்து வருகையில், இவர்களுக்குச் பொது விரிவுரையாற்றல்கள் அனைத்தையும் குறித்துத் தகவல் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் I. B. S. A-இன் சபைக்கூட்டங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வழக்கமாய்க் கலந்து கொள்ளும் வேதமாணவர்களில் அநேகர் இந்தத் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை வகுப்புகளிலும் மற்றும் பெரோயா ஆராய்ச்சிகளிலும் ஆரம்பத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பது விரும்பப்படத்தக்கதாகும்; ஏனெனில் இவர்களது வருகையினால், புதியவர்கள் தர்மச்சங்கடத்திற்குள்ளாகக் கூடும் மற்றும் அறையிலும் கூட்ட நெருக்கடி காணப்படக்கூடும்; மேலும் புதியவர்கள் தாராளமாய்க் கேள்விகள் கேட்கத்தக்கதாகவும், இடறலுக்குள்ளாகும் அபாயம் இல்லாமலும் காணப்படத்தக்கதாகவும், மூப்பர்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட, அனுபவமுள்ள சகோதரனாலேயே வழிநடத்துதலும் மற்றும் விரிவுரைகளும் - அனைத்தும் செய்யப்படுவதாக.

தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை வகுப்புகளிலும், பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளின் துவக்கத்திலும் பாடல் எதுவும் பாடப்பட வேண்டாம் என்று நாம் அறிவுரை கூறுகின்றோம். ஒவ்வொரு கூட்டமும் சுருக்கமான ஜெபம் ஒன்றுடன் முறையாய்த் துவங்கப்படுவதாக. கூட்டங்கள் உடனடியாகத் துவங்கப்பட வேண்டும் மற்றும் ஒரு மணி நேரத்திற்கு மேலாக நடத்தப்பட வேண்டாம். இவைகளை வழிநடத்துபவரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்.

தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை கூட்டங்களில், கலந்துகொள்பவர்கள் உங்களால் அழைத்து வரப்பட்டவர்கள் என்பதற்காக அக்கூட்டத்தில் எதையும் விற்பனை செய்யாதீர்கள். அவர்கள் ஒருவேளை புத்தகங்களைப் பெற்றிருக்க வில்லையெனில், புத்தகங்களை வாங்கும்படிக்கு யோசனை கூறிடுவதற்கு அவர்களது இல்லங்களே சரியான இடமாக இருக்கும்.

இத்தகைய வகுப்புகளுக்கு, கேள்விப் புத்தகங்களை சொசைட்டியானது லெப்டினன்ட் வாயிலாக இலவசமாக அளித்திடும்.

ஒவ்வொரு மாவட்ட வேலையாளும், மாவட்டத்தில் முதலாவதாக சந்திக்கச் செல்கையில் தன்னிடத்தில் வேதாகமப் பாடங்களினுடைய முதலாம் தொகுதி ஒன்றினை வைத்திருக்க வேண்டும்; இதனால் அதைக்காட்டி, "இந்த ஆராய்ச்சியே வேதாகமத்தின் விஷயங்களிலுள்ள உங்களது கவனத்தினை ஈர்த்திடும் என்று நான் நம்புகின்றேன்" என்று கூறிடலாம். பின்னர் அப்புத்தகம் குறித்து விரிவுரை அளிப்பதற்கு வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும் மற்றும் கேட்கிறவர் ஆர்வம் கொள்ளும் பட்சத்தில் அதை இரவலாகக் கொடுப்பதாகத் தெரிவித்திடலாம்.

நேரே சென்றோ அல்லது கடிதத்தின் மூலமாகவோ மேய்ப்பருடைய லெப்டினன்டிடம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையேனும் மற்றும் விரிவுரைகள் (lectures) நடந்து கொண்டிருக்கும் காலங்களில் ஒவ்வொரு வாரமும் தகவல் கொடுங்கள்.

உங்களுக்கு உதவி ஏதேனும் தேவைப்படும் பட்சத்தில் நீங்களே துணைக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்க முற்படாதீர்கள்; ஆனால் முழுப் பொறுப்பையுடைய மேய்ப்பரது லெப்டினன்டிடம் இதைக் குறித்துத் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் மாவட்டத்தில் வசிக்கும் வேதமாணவர் சகோதரிகளைத் தொடர்பு கொள்ளவும். அவர்கள் உங்களுக்குச் சில தகவல்களைக் கொடுக்க முடிகிறவர்களாய் இருப்பார்கள். இப்படியாக தொடர்பு கொள்ளும் போது சாதாரணமான சம்பாஷணைகளுக்கு இடம் கொடாமல் உங்களது வேலை குறித்து மாத்திரம் பேசுகிறவர்களாக இருந்து முன்மாதிரியாய் இருங்கள். ஒருவேளை சூழ்நிலைகள் சாதகமாக அமைகையில் இத்தகைய சகோதரியுடன் ஜெபம்பண்ணிடுவது சரியான காரியமாகவே இருக்கும். ஒருவேளை அச்சகோதரி எந்த ஊழியத்திலும் ஈடுபடாதவராக, ஆனால் அதற்கான நேரம் உடையவளாக இருப்பாளானால் அவள் எவ்வேலைக்கு நன்கு பொருத்தமாய் இருப்பாளென்று

மனதில் சிந்தித்து வைத்துக்கொண்டு, அக்காரியத்தைக்குறித்து லெப்டினன்டின் கவனத்திற்குக்கொண்டு வாருங்கள்; மேலும் அச்சகோதரியினுடைய நேரம், ஆரோக்கியம், வயது, இனம், செயல்பாடுகள், திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா முதலானவைகள் குறித்தும், அவளது ஆவிக்குரிய நிலைமைக் குறித்தும் மற்றும் சத்தியத்தில நன்கு தேறினவளா அல்லது இல்லையா என்பதுகுறித்தும் மற்றும் சத்தியத்தைத் தெரிவித்திட திறமையுள்ளவளா என்பதுகுறித்தும் முழு விவரங்களையும் கொடுத்திடவும். இந்தத் தகவல்களையெல்லாம் அச்சகோதரியைச் சலிப்படையப்பண்ணாத விதத்தில் அல்லது துருவி கேள்விக் கேட்காத விதத்தில் பெற்றுக் கொள்வதற்கு முடிந்த மட்டும் நாடுங்கள். இன்னுமாக அச்சகோதரி சாந்தத்தின் ஆவி உடையவளாக இருக்கின்றாளா அல்லது இல்லையா என்பதையும் கவனித்துக்கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்வதற்கும், வீட்டில் முடங்கிக்கிடப்பவர்களுக்கு வாசிப்பதற்கும், துண்டுப்பிரதிகளை மடிப்பதற்கும் அல்லது தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை வகுப்புகளில், Photo Drama-இல், விரிவுரைகள் ஆற்றப்படுகையில் தேவையானவைகள் வழங்கிடுவதற்கும் பொருத்தமான நபர்களை எதிர்க்காலத்தில் வரும் ஏதேனும் வேலைகளுக்கென்று தெரிந்தெடுப்பதற்கு மேற்கூறிய தகவல்கள் லெப்டினென்டிற்கும் பிரயோஜனமாய்க் காணப்படும்.

தெய்வீகத் திட்டத்தின் மகிமையான காரியங்கள் மற்றும் நமக்கான வியத்தகு வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்கள் தொடர்புடைய விஷயத்தில் நம்முடன் தொடர்புக்குள் வருபவர்கள் அனைவரையும் மற்றும் சத்தியத்தில் காணப்படும் சகோதரிகளையும் ஊக்கமூட்டுவது தொடர்புடையதான உங்களது சிலாக்கியத்தினைக் குறித்து எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

இங்கு நாம் சொல்லியிருப்பவைகளிலிருந்து புத்தகங்களை இரவலாய் வழங்கும் வேலையானது முற்றிலும் வேறுபட்ட ஒரு வேலையாகும்; எனினும் எங்கு உதவி புரிகிறவர்கள் அதிகமான எண்ணிக்கையிலும், ஆர்வம் காட்டுகிறவர்களின் முகவரி அட்டைகள் குறைவாகவும் காணப்படுகின்றதோ அங்கு மாவட்ட வேலையாட்கள் புத்தகங்களை இரவலாய்க் கொடுக்கும் வேலையையும் சேர்த்துச் செய்வதற்கு லெப்டினன்டின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தகைய வேலையை மேற்கொள்வதற்கு முன்னதாக - இந்த வேலையானது கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க அல்லது அவருக்குப் பிரியமாய் இருக்கக் காணப்படுவதற்கு முன்னதாக - இருதயமும், ஜீவியமும் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணிப்புடன் காணப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தைக் குறித்து நாம் முன்வைக்கின்றோம். அர்ப்பணமானது தொடர்ந்து காணப்பட வேண்டும். ஒவ்வொரு காலையிலும் திவ்விய ஆசீர்வாதமும், வழிக்காட்டுதலும் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்; மற்றும் ஒவ்வொரு மாலையிலும் தேவையின் பொழுதெல்லாம் சகாயம் செய்யும் கிருபையை நாம் அடையத்தக்கதாக நம்முடைய மகிமையான தலையானவரிடத்தில் நம்முடைய பிரயாசங்கள் குறித்தும், தோல்விகள்குறித்தும் மற்றும் வாஞ்சைகள்குறித்தும்

தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். நாம் தொடர்புகொண்ட ஒவ்வொருவரும் அன்பின் பரிசுத்த ஆவியை நாம் வெளிப்படுத்தினதில் தொடப்பட்டவர்களாகவும், பரிசுத்த ஆவி மாத்திரமே நம்முடைய சந்திப்பை ஏவியுள்ளது என்றுமுள்ள உண்மையினாலும் தொடப்பட்டவர்களாகவும் காணப்பட வேண்டும். எவ்விதத்திலும் நல்வாஞ்சையுடையவர்களாகக் காணப்படுபவர்கள் அனைவரிடத்திலும், திருச்சபை மயமான சார்ந்திருத்தலை ஆழமாய்க் கொண்டிருப்பவர்களிடத்திலும் (churchianity) நாம் அனுதாபம் கொண்டிருக்க வேண்டும்; ஏனெனில் அவர்கள் மேலானவைகளின் மீது ஆர்வம்கொண்டிருப்பவர்களாகக் கண்டுகொள்வதில் நாம் மகிழ்கின்றோம்; திருச்சபை மயமான சார்ந்திருத்தலிலிருந்து திரும்பி வந்துள்ளவர்களிடத்திலும் நாம் அனுதாபங்கொள்ள வேண்டும். காரணம் தற்போதைய சபை சூழ்நிலைகளின் கீழ் விசுவாசத்தினைத் தக்கவைத்துக்கொள்வது என்பது எவ்வளவு கடினம் என்பதை நாம் அறிவோம்; மற்றும் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ள மற்றவர்களிடத்திலும் நாம் அனுதாபங்கொள்ள வேண்டும். காரணம் வெதுவெதுப்பாய் இருப்பதைக்காட்டிலும் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்க விருப்பங்கொள்ளப் படுகிறதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

உங்கள் உண்மையுள்ள ஊழியக்காரன்,
**சி. டி. ரசல்.**

## சில கேள்விகளுக்கான பதில்:-

இவ்வேலை தொடர்பாக நாங்கள் பெற்றுக்கொண்டதான கேள்விகள் சிலவற்றிற்கு இங்குப் பொதுவில் பதிலளிப்பதற்குரிய வாய்ப்பினை எடுத்துக்கொள்கின்றோம்.

(1) இந்த வேலையில் சகோதரர்களும் ஈடுபட்டுக்கொள்ளலாமா?

இந்த வேலையில் ஈடுபடும்படிக்குச் சகோதரர்களை நாங்கள் அழைக்கவில்லை; ஏனெனில் சகோதரிகளால் செய்யமுடியாததும், ஆனால் சகோதரர்களால் செய்யமுடிகிறதுமான அநேக மற்றக் காரியங்களைச் சகோதரர்கள் பெற்றிருக்கின்றார்கள் என்று நாம் எண்ணுகின்றோம். இந்த வேலையில் நன்மை செய்கிறதைப்பார்க்கிலும், பாதகம் செய்கிறதற்கு ஏதுவான நிலையில் சாமார்த்தியமற்றச் சகோதரிகள் இருப்பினும், மிகவும் உதவிகரமாக, மிகவும் ஞானமாக சில சகோதரர்கள் காணப்படுகின்றார்கள் என்பது உண்மையாக இருப்பினும், சகோதரர்களைப் போலவே அல்லது அவர்களுக்கும் அதிகமாகவே சாமார்த்தியத்தை வெளிப்படுத்த முடிகிறவர்களாகச் சகோதரிகள் காணப்படுகின்றார்கள் என்று நாம் நம்புகின்றோம்; நாம் பொதுப்படையான வார்த்தைகளில் மாத்திரம் பேசுகின்றோம் மற்றும் சகோதரர்களால் இவ்வேலையைச் செய்யமுடிகிறதைக் காட்டிலும் சகோதரிகள் இவ்வேலையைச் சிறப்பாய்ச் செய்ய முடியும் என

நம்புகின்றோம் மற்றும் இவ்வேலையானது இராஜாவுக்கான சேவையில் விசேஷமான ஒன்றினைச் சகோதரிகள் செய்வதற்கு இடமளிக்கின்றதாய் இருக்கின்றது.

(2) இம்மாதிரியான ஒரு வேலையில் மேய்ப்பர் ஒரு சகோதரியைத் தனது லெப்டினன்டாகத் தேர்ந்தெடுப்பது சரியான மற்றும் வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரியமாக இருக்குமா?

இப்படியாகச் சகோதரிகள் பயன்படுத்தப்படலாம் என்பது கர்த்தருடைய போதனைகளுக்கு முழு இசைவிலே காணப்படுகின்றது என்று நம்புகின்றோம். ஏற்கெனவே சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது போன்று பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட அனைவருமே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கின்றனர். ஒரு சகோதரி பிரசங்கித்திடலாம் என்பதற்கான சூழ்நிலைகளை வரையறைக்குள்ளாக்குவது தகுதியானது என்று கர்த்தர் பரிசுத்த பவுலடிகளார் வாயிலாகக் கண்டுகொண்டுள்ளார் - அதாவது அவளது பிரசங்கித்தலானது பொது இடங்களில் பண்ணப்படும் ஊழியத்தின் தன்மையில் காணப்படக்கூடாது மற்றும் அவள் சபையில் போதகராகக் கருதப்படக்கூடாது. இதில் எதுவும் இங்கு நாம் குறிப்பிட்டுள்ளதான தனிப்பட்ட வகையான இவ்வேலையில் அவள் ஈடுபடுவதில் தடைவிதிப்பதில்லை.

(3) வேதாகம ஆராய்ச்சிக்கான வகுப்புகளைச் சகோதரிகள் ஒழுங்குப்பண்ணின பிற்பாடு, ஒருவேளை சபையில் அர்ப்பணிக்கப்பட்ட சகோதரன் யாரும் இல்லையெனில் அல்லது தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைக் கொடுப்பதற்கோ அல்லது வேறு ஏதேனும் உரைக்கொடுத்திடுவதற்கோ தகுதியானவர் யாரும் இல்லையெனில் என்ன செய்யப்பட வேண்டும்?

இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் இவ்வுதவியினை ஆற்றத்தக்கதாக அருகாமையிலுள்ள சபையார், தங்கள் மூப்பர்களில் ஒருவரை அனுப்பிவைத்திட கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். ஒருவேளை அருகாமையில் சபை இல்லையெனில் அல்லது யாரும் உதவி செய்ய வரமுடியவில்லையெனில், சகோதரிகள் தங்களில் ஒரு சகோதரியைத் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைக் கொடுப்பதற்கும், பிற்பாடு பெரோயா வேதாகம ஆராய்ச்சியினைத் தொடங்குவதற்கும், மேய்ப்பரது representative/வேலையாளாக செயல்படும்படிக்குத் தேர்ந்தெடுப்பதற்கு மேய்ப்பர் அங்கீகாரம் அளிக்கின்றார். அவள் தனது தலைக்கு முக்காடிட்டுக்கொண்டு தனது கடமைகளைச் செய்திட வேண்டும் மற்றும் இதன் முக்கியத்துவத்தைக்குறித்துக் கூட்டத்தாருக்கு விவரித்திட வேண்டும் மற்றும் சூழ்நிலையினுடைய தேவைக் காரணமாகவும், சில அர்ப்பணிக்கப்பட்ட சகோதரர் வழிநடத்துபவர் ஆகிடுவதற்கு அவசியமாய் இருக்கும் அறிவிலும், தகுதிகளிலும் வளர்வதுவரையிலும் மாத்திரமே, தான் இவ்வூழியம் புரிவதாக தெரிவித்துக்கொள்ள வேண்டும். இன்னுமாக அங்குக் கூடியிருப்பவர்கள் யாவருக்கும், சகோதரிகள் சபையில் போதிக்கக்கூடாது

என்றுள்ள அப்போஸ்தலரின் கட்டளையை நினைவுபடுத்திட வேண்டும் மற்றும் கேள்விகளுடன் வந்திருக்கும் கூட்டத்தார் அடங்கிய ஒரு வகுப்பானது வேதமாணவர்களின் ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட சபையாகவோ அல்லது ஒரு எக்ளீசியாகவோ அல்லது கிறிஸ்துவின் சரீரமாகவோ புரிந்துகொள்ளப்படாமல், மாறாக சீக்கிரமாய் முதிர்ச்சி நிலைக்கு வளர்ந்திடுவார்கள் என்று நம்பப்படுகின்றதான கற்றுக்குட்டிகள் அடங்கிய வகுப்பாக மாத்திரமே புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு அவள் நினைப்பூட்டிட வேண்டும்.

(4) புதிய சகோதரர்களில் சிலரை அவ்வப்போது இவ்வகுப்புகளில் உரையாற்றிட வைப்பதின் மூலம் இவ்வேலையில் அவர்கள் பயிற்றுவிக்கப்படலாமா?

நிச்சயமாகவே இந்த வேலையில் கற்றுக்குட்டிகள் அறிமுகப்படுத்தக் கூடாது. கர்த்தர் இருதயத்தின் நல்நோக்கங்களைக் கருத்தில் எடுத்துக் கொள்கின்றார்; ஆனாலும் வசனத்தினுடைய அறிவுரைகளை வைத்துப்பார்க்கையில் நல்நோக்கங்களுக்கும் மேலாக அதிகமான விஷயங்கள் அவருக்கு ஊழியம் புரியும் விஷயத்தில் தேவைப்படுகின்றது. பொது ஊழியங்களுக்காகப் பேசுவதற்கான ஆற்றல் உடையவர்களும், இதோடுகூடச் சத்தியம் குறித்த தெளிவான அறிவைப் பெற்றிருப்பவர்களும், போதகசமர்த்தனாய் இருப்பவர்களும் மாத்திரமே - இத்தகையவர்கள் மாத்திரமே, சத்தியம் குறித்த அறிவில் சமீபக்காலமாகத்தான் கொஞ்சம் வந்திருப்பவர்களும், தப்பறையான கருத்துக்களினால் ஏறக்குறைய தவறான அபிப்பிராயமுள்ள மனங்களை உடையவர்களுமான ஜனங்களை ஆர்வமூட்டும் இந்த முக்கியமான வேலைக்காய் நியமிக்கப்பட வேண்டும். சபையிலேயே மிகவும் திறமிக்கவர்கள் இவ்வேலைக்குப் பொருத்தமானவர்களாய் இருப்பார்கள்.

சபையில் ஞாயிற்றுக்கிழமைகளிலோ அல்லது வேறு ஏதோ சமயங்களிலோ பொது விரிவுரையாற்றுவதற்குக் கற்றுக்குட்டிகளானவர்கள் அழைக்கப்படுவதும் முற்றிலும் தவறான காரியமாய் இருக்கும். கர்த்தருடைய ஜனங்களும், பொது ஜனங்களும் bore/சலிப்பூட்டப்படக்கூடாது. சில தாலந்துகளை வெளிப்படுத்தும் இத்தகைய சகோதரர்கள் கற்றுக்கொள்வதற்கும், பயிற்சி எடுப்பதற்கும் ஊக்கம் ஊட்டப்பட வேண்டும். எனினும் மற்றவர்கள் மத்தியிலில்லாமல் தங்கள் மத்தியிலேயே பயிற்சி பண்ணிக்கொள்ள வேண்டும். நாம் ஏற்கெனவே பரிந்துரைத்ததை மீண்டுமாகப் பரிந்துரைக்கின்றோம். அது என்னவெனில் கர்த்தருக்கான ஊழியத்திற்கென்று தாங்கள் தாலந்துகள் பெற்றிருப்பதாக உணர்ந்துகொள்ளும் அனுபவமற்றச் சகோதரர்கள், அவர்களைப்போன்றவர்கள் (தாலந்துகள் பெற்றிருப்பதாக உணர்ந்துகொள்ளும் அனுபவமற்றச் சகோதரர்கள்) மத்தியில் கூட்டங்கள் நடத்திட உற்சாகம் ஊட்டப்பட வேண்டும். இக்கூட்டங்களில் அவர்கள் பேசுவதைக் கேட்பதற்கும், அவர்களது பாணி, தொனி, விதம், உபதேச ரீதியான அறிவு, வாதம் முதலானவைக்குறித்து அன்பாய் விமர்சனம் அளிக்கவும், நடுவராக ஓர் அனுபவமிக்க சகோதரனைப் பெற்றுக்கொண்டிருக்கலாம்.

இவ்வகுப்பில் இருப்பவர்கள் ஒருவரையொருவர் விமர்சிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும், எனினும் எளியவர்கள் சோர்வடைந்து மேலும் பிரயாசம் எடுக்காமல் போய்விடாதபடிக்கு விமர்சனங்கள் மிகவும் கடுமையாய்ப் பண்ணப்படக்கூடாது.

இந்தக் கற்றுக்குட்டிகள் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை ஆற்றுதலைப் பயிற்சி பண்ணிக் கொள்வது, அவர்களுக்கு நன்கு கற்பித்துக் கொடுக்கின்றதாய் இருக்கும் மற்றும் இது தெய்வீகத் திட்டத்தை எப்படி முன்வைப்பது என்பதைக் கற்றுக்கொள்வதற்கான மிகவும் திறமிக்க வழிகளில் ஒன்றாய் இருக்கும் என்று நாம் பரிந்துரைக்கின்றோம். இவர்கள் தெய்வீகத் திட்டம் குறித்த செய்திகளுக்கான (outlines) குறிப்புகளைக் கவனமாய்ப் பின்பற்றிடுவதற்கு ஊக்கமூட்டப்பட வேண்டும்.

தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைக்கான வகுப்புகளின் நான்காம் இரவின்போது, கூட்டத்தார் வரைப்படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளதான தெய்வீகத் திட்டத்தினுடைய ஒவ்வொரு அம்சம் தொடர்பாக கேள்விகள் எழுப்பும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். மேலும் இத்தகைய ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு திறமிக்க ஆசிரியரே பதில் கொடுக்க முடிகின்றவராய் இருப்பார். இதற்குக் கற்றுக்குட்டியைவிட மிக அதிகமான நிலைமையில் காணப்பட வேண்டும் மற்றும் கர்த்தருடைய ஜனங்களில் முதிர்ச்சியடைந்து காணப்படுபவர்கள்கூடத் தொடர்ச்சியாய்ப் படிப்பதன் மூலமாய்த் தங்கள் மனங்களைப் புத்துயிர் பண்ணவேண்டியவர்களாய்க் காணப்படுகின்றனர்.

---

R1075 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே

## பாகம் - 1

புருஷனுடைய தலைமை ஸ்தானம் என்ற அதே கோட்பாட்டைக் கருத்தில் வைத்துக்கொண்டு பவுல் மேலும் இவ்வாறு கூறுகிறார். "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும்" (1 தீமோத்தேயு 2:12). மிகப்பெரிய சந்தோஷத்திற்குரிய நற்செய்தியை மற்றவர்களுக்குச் சொல்லாத படிக்கு ஸ்திரீயானவள் தன்னுடைய உதடுகளை எப்போதுமே மூடியே இருக்க வேண்டும் என்று பவுல் நிச்சயமாகச் சொல்லவில்லை. "யூதனென்றும்

கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:28) என்று அதே அப்போஸ்தலன் சொல்லவில்லையா? அபிஷேகம்பண்ணப்பட்ட எல்லோரும் நற்செய்தியை அறிவிப்பதற்காகவே அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறார்கள் என்று தீர்க்கத்தரிசியான ஏசாயா கற்றுக் கொடுக்கவில்லையா? அப்படியானால், இதற்கு இசைவாகவே மேற்சொல்லப்பட்ட அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, அவருடைய சிந்தனை என்னவென்றால், நாம் எடுத்துச்சொல்ல நியமிக்கப்பட்டச் சத்தியம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், புருஷன் மீது அதிகாரம் அல்லது தலைமை ஸ்தானம் என்னும் நிலைப்பாட்டை ஒரு ஸ்திரீ எந்தவிதத்திலும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதே. எந்த இடத்திலும், எல்லா இடத்திலும், எவரிடத்திலும் அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மகா சந்தோஷத்திற்குரிய ஆசீர்வாதமான நற்செய்தியை அவள் சொல்லி, சத்தியத்தினுடைய கோட்பாடுகளைக் கற்றுக்கொடுக்கலாம்; ஆனாலும், அவளது சொந்த தனித்துவம் புலப்படாமல் போகத்தக்கதாக, எப்பொழுதும் தன்னடக்கத்துடனும், சத்தியத்தை மிகத் தெளிவாகவும் சொல்ல வேண்டும். குணலட்சணத்தினுடைய இந்த இவ்வம்சமானது, இயற்கையாகவே ஸ்திரீகளுக்குரியது; ஆனால் பொதுப்படையான ஊழியங்களில் வேலை செய்ய முயற்சிக்கும் ஸ்திரீகளினால் இது பொதுவாக வெகு சீக்கிரத்தில் இழந்துபோகப்படுகின்றது. பெரும்பான்மையான ஸ்திரீகளின் வேலை, தனிப்பட்டதுமாய், அமைதியானதுமாய் இருக்கின்றது; ஆனால், குறைந்த ஆற்றலுள்ள வேலையல்ல. தெய்வீக ஏற்பாட்டினால் அவளுக்கு நியமிக்கப்பட்ட எல்லைக்குள்ளாகவே அவள் ஏறெடுக்கும் முயற்சியே அவளுடைய மிகப்பெரிய செல்வாக்காக இருக்கின்றது. ஒருவேளை பொது இடங்களில் பயன்படுவதற்கு ஏதுவாய் அவசியமும், வாய்ப்பும் மற்றும் திறமையும் காணப்படுமானால், அந்த அவசியமும், வாய்ப்பும் இருக்கும் வரையில் அவள் அதை நிறைவேற்றலாம்; அதுவும் அப்படிச் செய்யும்போது, தேவபக்தியுள்ளவளென்று சொல்லிக்கொள்ளும் ஸ்திரீயானவளுக்குரிய - கிரியையிலும், வார்த்தையிலும் மற்றும் உடையிலும் உள்ள தன்னடக்கத்தையும், அமைதியான அணுகுமுறையையும் அவள் கொண்டிருத்தல் வேண்டும். "அவசியம்" என்று நாம் இங்கு வலியுறுத்தும்போது, நாம் சொல்ல வருவது என்னவென்றால், சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் அவளுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தும் விஷயத்தில், அவள் அழையாமல் தலையிடாத மற்றும் பலனுக்கேதுவான விதத்தினை நாடுவதற்குப்பதிலாக, அவள் தனக்கு விளம்பரத்தைத் தேட ஒருபோதும் நாடக் கூடாது என்பதேயாகும். விளம்பரத்தை நாடுவாளானால் அது அதிகாரத்தையும், சர்வாதிகாரத்தையும் எடுத்துக்கொள்வதைக்

குறிக்கின்றதாய் இருக்கும்; இது தகுதியற்றக் காரியமாகும்.

கணவன் மற்றும் மனைவியின் இந்த உறவில், கிறிஸ்து இயேசுவுக்கும் சபைக்கும் இடையேயுள்ள அருமையான உறவானது, சித்தரிக்கப்பட்டுள்ளது என்று மீண்டுமாகப் பார்க்கிறோம். நிழலில் இருப்பதுபோல நிஜத்திலும், சபை - கிறிஸ்துவின் மணவாட்டி, அவருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்; எல்லா நேரத்திலும் அவருடைய சித்தத்தை அறியவும், பின்பு அதைச் செய்வதில் மகிழ்ச்சியடையவும் ஆர்வத்தோடு நாட வேண்டும். ஒரு ஸ்திரீ எப்படி, தன் கணவனிடத்தில் அதிகாரம் செலுத்த எண்ணி அவரை வழிநடத்தக்கூடாதோ, அதுபோலவே சபையும் கர்த்தருடைய வேலையில் அதிகாரம் செலுத்த எண்ணி, அதை வழிநடத்துவதற்கு நாடக்கூடாது. ஆனால், "அமைதியாக" இருந்து அவருடைய திட்டங்களையும், முறைகளையும் விடாமுயற்சியுடன்தேடி, பின்பு அதை உண்மையாகப் பெருமுயற்சியுடன் செயல்படுத்த நாட வேண்டும்.

தேவனுடைய திட்டம் முழுமையாகச் செயல்பாட்டில் கொண்டுவரப்படும் பொழுது, அன்பான அதிகாரமும், சந்தோஷம் நிறைந்த கீழ்ப்படிதலும் இந்த முழுப்பிரபஞ்சத்தை ஓர் ஆசீர்வாதமான சமாதானத்திலும், நித்தியமான மகிழ்ச்சியினாலும் நிரப்புவதை நாம் காணலாம். மேலும், "தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்" - எல்லாருக்கும் தலையாகவும் இருப்பார் - அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படும் (1 கொரிந்தியர் 15:28). தேவனுடைய திட்டம் இதுதான் என்பதை நாம் பார்க்கும்போது, இப்பொழுது அந்த நோக்கத்தை நம்முடைய ஆற்றலுக்கேற்ப நடந்தேற்றுவதும், அதை விளக்கிக்காண்பிப்பதும்தான் நம்முடைய பிரயாசமாகக் காணப்பட வேண்டும். இது - கர்த்தரோடு இணைந்திருப்பவர்களால் மாத்திரமே முழுமையாக விளக்கிக்காட்ட முடியும். ஸ்திரீகள் தலைக்கு முக்காடிட்டுக் கொள்வது (1 கொரிந்தியர் 11:10) அதிகாரத்திற்குக் கீழ்படிவதைக் குறிக்கிறது; தேவனுடைய ஒழுங்கில் இருக்கும் தலைமைத்துவத்தினை அங்கீகரிப்பதைக் குறிக்கிறது. அது சபைக்கும், அவளுடைய தலையாய் இருக்கும் கிறிஸ்து இயேசுவுக்கும் இடையே உள்ள உறவை அடையாளப்படுத்துகிறது. இதே விஷயம் ஆசாரியனுடைய உடையில்கூட விளக்கப்பட்டிருக்கிறது: பிரதான ஆசாரியன் பாகை அல்லது கிரீடத்தை அணிந்திருந்தான், மேலும் உடன் ஆசாரியர்கள் (மணவாட்டி, சபையைக் குறிப்பவர்கள்) தாங்கள் தலை அல்லவென்றும், ஆனால் பிரதான ஆசாரியனின் அதிகாரத்திற்குக் கீழிருப்பவர்கள் என்றும் குறிப்பிடும் விதத்தில் குல்லாக்களை அல்லது தலைக்கு மூடலை அணிந்திருந்தார்கள்.

தங்கள் மத்தியிலிருந்த அநேக உண்மையுள்ள உடன் ஊழியக்காரிகளையும் மற்றும் உதவி செய்த ஸ்திரீகளையும் அப்போஸ்தலன் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, ஸ்திரீகளுக்காகவும், ஸ்திரீகள் செய்திட்ட வேலைகளுக்காகவும் அவர் கொண்டிருந்த உயர்வான மரியாதை தெரியவருகிறது (உரோமர் 16:1-6, 13 மற்றும்

பிலிப்பியர் 4:3 பார்க்கவும்). "அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக் கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது". மேலும் "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப்போஸ்தலர் 1:14). மேலும், "ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது (உபதேசிக்கிறபோதாவது), தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே" (1 கொரிந்தியர் 11:5).

அப்போஸ்தலர்களுடைய நாட்களில், அவர்களாலும், கர்த்தராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட வேலைகளை ஸ்திரீகள் செய்தார்கள் என்று இந்த வேதவாக்கியங்கள் நமக்குக் காட்டுகிறது. எனினும் சிறியக் கூடுகைகளில் மாத்திரமே பொதுவாக ஸ்திரீகள் பேசினார்கள். மேலும், "சபைகளில் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்" என்று பவுல் சொன்னபோது, ஏறக்குறைய விவாதம் (debating) செய்யும் வழக்கம் இருக்கும் பொதுவான கூடுகைகளைத்தான் அநேகமாக அவர் குறிப்பிட்டிருக்கலாம். இப்படிப்பட்டப் பொதுவான விவாதங்களில் (public debating) ஸ்திரீகள் பேசுவது ஏற்றதாக இருக்காது என்று பவுல் நினைத்திருந்தார் மற்றும் சிந்தனை செய்கின்ற அநேக ஆண்கள் மற்றும் பெண்களின் கூற்றும் இன்றைக்கு இதுவாகத்தான் காணப்படுகின்றது. ஆனாலும் அநேகர் இதை அளவிற்கு மீறி கொண்டுபோய் எந்தவொரு சந்தர்ப்பங்களிலும், தனிமறைவான (private) கிறிஸ்தவ கூட்டங்களிலும்கூட ஸ்திரீகள் ஜெபிக்கவோ, உபதேசிக்கவோ கூடாது என்று தடை செய்கிறார்கள்; இது நிச்சயமாகத் தவறான ஒன்றாகும்.

சபைகளில் ஸ்திரீகள் பேசாமல் இருக்கக்கடவர்கள் என்றும், அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷனிடத்தில் விசாரிக்கக்கடவர்கள் என்று பவுல் வலியுறுத்துகிறபோது, நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு கோட்பாடு கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார் என்றும் - ஒருவேளை அப்போதிருந்த சபையில் தொல்லைக் கொடுத்துக் கொண்டிருந்த ஸ்திரீகளின் தன்மையில்லாத சில ஸ்திரீகளைத் தடைசெய்வதற்காக அவர் சொல்லியிருக்கலாம் என்றும் நாம் அவரைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கோட்பாட்டினைக் கடுமையாய்ச் செயல்முறைப்படுத்துவது என்பது, பவுலின் உபதேசத்திலுள்ள பொதுவான ஆவியை அவமதிப்பதாக இருக்கும். கிறிஸ்துவின் ஆவி எங்கேயோ அங்கே விடுதலை உண்டு - அந்த விடுதலை, இயற்கையிலும், வெளிப்படுத்தப்பட்டவைகளிலும் வெளிப்படும் தேவனுடைய பிரமாணத்தையும்,

ஒழுங்கையும் அவமதிப்பதற்குரிய சுயாதீனமாய் இராமல், மாறாக தேவன் நிறுவின ஒழுங்கு மற்றும் பிரமாணத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழ், கிருபையிலும், ஞானத்திலும் வளர்ந்து முன்னேறுவதற்கான சுயாதீனமாக இருக்கிறது.

கிறிஸ்துவையும், அவருடைய மணவாட்டியாக இருக்கிற சபையையும் அடையாளப்படுத்தும்படியாக, புருஷனையும், ஸ்திரீயையும் தேவன் ஏற்படுத்தியிருக்கிறபடியால், இது - புருஷனுக்கு எப்போதும் அதிகப் பிரயாசங்கள் ஏறெடுக்கும் மற்றும் பொது இடங்களில் ஏறெடுக்கும் ஊழியங்கள் கொடுக்கப்பட்டு மற்றும் தேவனால் சரிசமமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற விதத்தில் ஸ்திரீகளுக்குத் தனிப்பட்ட விதத்தில் சந்தித்துப் போதித்தல் மற்றும் உதவி செய்தல் போன்ற ஊழியங்கள் கொடுக்கப்படுவது, ஒருவேளை ஒரு காரணமாக இருக்கலாம். அதனால் கிறிஸ்துவே தேவனுடைய திட்டங்களை நடத்தேற்றிடும் பிரதிநிதியாக இருக்கின்றார். அவரே எல்லாவற்றிலும் மேலான ஊழியக்காரனாய் இருக்கின்றார். மேலும் நாம் அவருடைய சபையாயிருப்பதினால் அவருடைய பயன்பாட்டிற்காக உதவி செய்யும்படிக்கு நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம், அதாவது மிக எளிமையான பாகத்தையே செய்வதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறோம், எனினும் அது தேவனுக்குப் பிரியமும், அவர் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாக இருக்கின்றது.

-திருமதி C. T. R.

---

# ஸ்திரீயின் ஊழியம்

ஸ்திரீயின் உரிமைகள் அவைகள் - யாவை?
வேலை செய்வதும், அன்புகூருவதும், ஜெபம் செய்வதும் - அவள் உரிமையாம்;
அழுவாரோடு அழுவதற்கானது அவள் உரிமையாம்;
மற்றவர்கள் தூங்குகையில் விழித்துக்கொள்வதும் அவள் உரிமையாம்.

வடியும் கண்ணீர்தனைத் துடைத்திடுவது - அவள் உரிமையாம்;
பதறவைக்கும் சூழ்நிலைதனைத் தணிப்பது அவள் உரிமையாம்;
கவலையுற்றுத் தவிக்கும் நெற்றிதனை வருடிவிடுவது அவள் உரிமையாம்;
சோர்வில் ஆறுதலின் வார்த்தைதனை மென்மையாய் பேசிடுவதும் அவள் உரிமையாம்.

பிரியும் இறுதி மூச்சுதனைக் கூடவேயிருந்து பார்ப்பது - அவள் உரிமையாம்;
மரணப்படுக்கையில் இருப்போரை ஆற்றி உற்சாகமூட்டுவது அவள் உரிமையாம்;
பூமிக்குரிய நம்பிக்கைகள் யாவும் தளர்ந்து போகையில்;
திரைக்கு இப்பக்கம் சிலவற்றைச் சுட்டிக்காட்டுவதும் அவள் உரிமையாம்.

வழிவிலகிப் போனவரை மீட்டெடுப்பது - அவள் உரிமையாம்;
அவமானத்தில் தொலைந்தவரை ஆதாயப்படுத்துவது அவள் உரிமையாம்;
விதவைகளையும், தகப்பனற்றவர்களையும்;
ஆற்றிடுவதற்கும், தேற்றிடுவதற்குமானதும் அவள் உரிமையாம்.

பிள்ளைகளை, நமக்காய் மரித்தவர் மீதான
எளிமையான விசுவாசந்தனில் வழிநடத்திடுவதற்கானது அவள் உரிமையாம்;
அவர்கள் வாலிப நாட்கள்தனை உள்ளார்ந்த அன்பினாலும்;
கனிவான பாராட்டுதலினாலும் ஆசீர்வதிப்பதும், உற்சாகமூட்டுவதும் அவள் உரிமையாம்.

பிள்ளைகளின் அறிவைப் பயிற்றுவிப்பது - மனதை
உயர்ந்த குறிக்கோளிடத்திற்கு நடத்திடுவது அவள் உரிமையாம்;
விளையாட்டுச் சாதனங்களுக்கு அப்பால் மனதை உயர்த்தக் கற்றுக்கொடுப்பது;
இருதயத்தைப் பரலோக சந்தோஷங்கள்மேல் வைத்திட உதவிடுவதும் அவள் உரிமையாம்.

ஸ்திரீயே! நீ அன்புகூரும் அவருக்காய், ஜீவிப்பது உந்தன் உரிமையாம்;
உந்தன் அன்பை நிரூபிக்க வேண்டியே, மரித்திடுவது உந்தன் உரிமையாம்;
பூமிக்குரிய இல்லங்கள்தனை இனிமையான புன்முறுவல்களினாலும்;
கனிவான பேச்சுத்தொனிகளினாலும் ஒளிமயமாக்குவதும் உந்தன் உரிமையாம்.

ஸ்திரீயே! உந்தன் உரிமைகள் அல்லவோ இவை - பிரயோஜனப்படுத்திடு;
இவைகளின் பரிசுத்த செல்வாக்கு ஆற்றல்மிக்கது;
இவைகள் உனதாயின் - ஏன் இன்னும் வேண்டுமெனக் கேட்கிறாய்?
போதுமான உரிமைகள் உனக்கும் இருக்கின்றதுவே!

ஸ்திரீயே! உந்தன் உரிமைகள் அல்லவோ இவை - அப்படியானால் முறுமுறுக்காதே;
**ஸ்திரீகளின் ஊழியமானது,** உந்தனின் பங்காய் இருக்கின்றதுவே;
தேவன் அருளியுள்ள தாலந்துகள்தனைப் **பயன்படுத்திடு**; நீ பூலோகக்
கடமைகளை முடிக்கவே, பரத்தில் உந்தன் இளைப்பாறுதலும் காணப்படுமே!

- Poems of Dawn.

# பாகம் - 6

# மத்தேயு 18:15-17

# மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான வேதவாக்கிய விதி

கர்த்தர் மத்தேயு 18:15-17 வரையிலான வசனங்களில் கொடுத்துள்ளவைகளைப் பார்க்கிலும் வேறொரு ஆலோசனையும், ஆறுதலும் சராசரியான அறிவுள்ள ஒரு சகோதரனுக்குத் தேவைப்படும் எந்த ஒரு சந்தர்ப்பத்தினை நம்மால் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க இயலாது. ஒருவேளை சகோதரன் ஒருவன் வீண் அலுவற்காரனாய் இருக்கும் விதத்தில் அனுதாபத்தினைப் பெற்றிட நாடும் பழக்கமுடையவனாய் இருப்பானாகில், சீக்கிரத்தில் தனது போக்கானது தவறு என்று அறிந்துகொள்வான். அவன் வேதவாக்கியங்களில் பின்வருமாறு தெளிவான அறிவுரைகள் காணப்படும் விஷயத்தில், அறிவுரைகளுக்கு இசைவாக தனது மனதினைப் பயன்படுத்திட கற்றுக்கொள்ள வேண்டும்; தனது சகோதரனுக்கு எதிராக எதையேனும் பெற்றிருக்கும் யாவருக்கும் கர்த்தர் கூறுவதாவது: "அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து;" ஒருவேளை அக்காரியம் சகோதரனிடத்தில் கூறுமளவுக்கு பெரிய காரியம் இல்லையெனில், அது கருத்தில் எடுத்துக் கவனிக்குமளவுக்குப் பெரியக் காரியம் இல்லை மற்றும் அது மறக்கப்பட வேண்டும்.

மத்தேயு 18:15-17 வரையிலான வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான கட்டளையின் விஷயத்திற்கு எந்த விதிவிலக்குமில்லை; எனினும் சில சந்தர்ப்பங்களில் அக்கட்டளைக்கு விளக்கம் கொடுக்கப்படலாம். உதாரணத்திற்கு அது குடும்பக் காரியமாக இருக்கும் பட்சத்தில், சூழ்நிலைகளின் நிமித்தம் குடும்பத்தின் தலைவரை அணுகுவது தகுதியானதாய்க் காணப்படும். ஒருவேளை காரியம், ஓர் அமைப்பில் காணப்படும் ஒரு நபர் பற்றினதாக இருக்கும் பட்சத்தில், அந்நபர் அக்கழகத்தினுடைய பிரதிநிதியாக மாத்திரம் காணப்படுகையில், கழகத்தினுடைய தலைவரை அணுகுவது தகுதியானதாய்க் காணப்படும். இப்படியாகச் செய்வது என்பது மத்தேயு 18:15-ஆம் வசனத்தினை நியாயமான பாணியில் பின்பற்றிடுவதாக இருக்கும். ஆனால் இவைகள் சிறு விஷயங்கள்தான்; இவைகள் தவிர்க்கவும்படலாம்; ஆனால் இவைகள் விஷயத்தில் இக்கட்டளைச் செயல்படுத்தப்படும் பட்சத்தில் ஞானம் பயன்படுத்தப்பட வேண்டும்.

உலகத்தில் பெரும்பான்மையான பிரச்சனைக்குக் காரணம் மனஸ்தாபம்/பிணக்கு என்பதில் ஐயமில்லை. ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் "பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்வதும் மற்றும் மற்றவர்கள் செய்கிற அநேகவற்றை மன்னித்துவிடுவதும் ஏற்புடையதாயிருக்கும் (கொலோசெயர் 3:14). எனினும் தனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்யப்பட்டுள்ளது என்று எண்ணுகிறவர், குற்றஞ்செய்துள்ள சகோதரனிடத்திற்குச் செல்வதும், மனஸ்தாபத்தைச் சரிச்செய்துகொள்வதும்

சரியானதாகவே இருக்கும். இப்படியாகச் செய்வது என்பது அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் நன்மையாகவே இருந்துள்ளது.

மத்தேயு 18:15-17-வரையிலான வசனப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான அறிவுரையானது சகோதர சகோதரிகளுக்கு மாத்திரமே, சபைக்கு மாத்திரமே உரியதாகும் மற்றும் இதன் காரணமாக, வெளியிலுள்ளவர்களுக்குச் செயல்படுத்தப்படக்கூடாது. எனினும் இந்த ஒரு பிரமாணத்தினைச் சகோதர சகோதரிகள் விஷயத்தில் செயல்படுத்திடுவதற்குக் கற்றுக்கொள்பவன், இதுவே ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்படுவதற்குரிய ஞானமுள்ள நடவடிக்கையாக இருக்கும் என்று கணித்துக்கொள்வான். இப்படியாக அவன் இயல்பாகவே இதே கொள்கைகளை உலகத்தின் காரியங்கள் மற்றும் உலகப்பிரகாரமான ஜனங்கள் விஷயத்திலும் செயல்படுத்த முற்படுகின்றவனாய் இருப்பான். எனினும் உலக விஷயத்தைக் கையாளும் காரியத்தில், எது ஞானமுள்ள வழிமுறையாக இருக்கும் என்று சிந்திக்கிறதற்கு அவன் ஞானத்தைப் பயன்படுத்துகிறவனாய் இருக்க வேண்டும். சபைக்குரியதான சில ஆழமான மற்றும் விலையேறப்பெற்றக் காரியங்களானது, உலகத்திற்குச் சினமூட்டுகின்றதாயிருக்கும். ஆகவேதான், "உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்" என்று கர்த்தர் எச்சரிக்கின்றார்.

நாம் சகல மனுஷருக்கும் நன்மை செய்ய பிரயாசம் எடுக்கையில், சகோதர சகோதரிகளின் விஷயத்தில் இக்காரியம் தொடர்பாக எந்த வேற்றுமை காணுதலும் இருத்தல் கூடாது. எனினும் கர்த்தருடைய ஜனங்களில் சிலர், சில விஷயங்களில் சரியற்ற விதத்திலும், நியாயமற்ற விதத்திலும், எண்ணுகின்றனர் என்று நாம் சொல்லலாம். உதாரணத்திற்கு ஒரு சகோதரன், சத்தியத்திலுள்ள மற்றொரு சகோதரன் அவனது உணர்வுகளின் விஷயத்தில் வேற்றுமைகளைப் பெற்றிருப்பதையும், அவன் தன்னைக் காட்டிலும் இன்னொருவரை அதிகமாய் மதிக்கிறவராய் இருப்பதையும் உணருவாரானால், இதைக் குற்றமாய் எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர் தனக்குள்ளாகப் பின்வருமாறு கூறிட வேண்டும்: "குணலட்சணத்திலும், மனப்பாங்கிலும் வித்தியாசங்கள் உண்டு; மற்றும் மற்றவரைக் காட்டிலும் சகோதரன் "B" அவர்களே, சகோதரன் "A" அவர்களுக்கு உயர்வாய்த் தோன்றலாம். சகோதரன் "A" அவர்கள் என்னை அன்புகூர்ந்திடவும், அவர் என்னைப் பகைக்காமல் இருப்பதையும், அவர் எனக்குப் பாதகம் பண்ணாமல் இருப்பதையும்தான் நான் எதிர்ப்பார்க்கின்றேன்." சகோதர சகோதரிகள் அனைவருமே ஒன்றுபோல் எண்ணப்பட வேண்டும் என்று தேவனுடைய வார்த்தைகளில் எதுவும் சுட்டிக்காட்டுகிறதில்லை!

நமது கர்த்தர்கூடத் தம்முடைய அன்பில், இம்மாதிரியான வேற்றுமைகளைக் கொண்டிருந்தார். எனினும் பட்சப்பாதமில்லாமலும் மற்றும் மாய்மாலம் இல்லாமலும், இப்படியாகச் செய்தார். ஆனால் நம்முடைய விழுந்துபோன சுபாவத்திலுள்ள

வேறுபாடுகள் காரணமாக, சகோதர சகோதரிகள் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் நம்முடைய மனதிற்கு ஒத்துப்போகிறவர்களாய் இருப்பார்கள். ஆகையால் சகோதர சகோதரிகளுடைய அன்பைப் பெற்றுக்கொள்வதில் நாம் மனநிறைவு கொண்டிட வேண்டும் மற்றும் அதை அதிகமாய்ப் பெற்றுக் கொள்ளத்தக்கதாகப் பிரயாசம் எடுத்திட வேண்டும். நம்முடைய வார்த்தைகளும் மற்றும் நடத்தையும் சகோதர சகோதரிகளுக்கு நாம் மிகவும் பிரியமானவர் களாகத்தக்கதாகக் காணப்பட வேண்டும் மற்றும் இப்படியாக அவர்களது நன்மதிப்பை அதிகமாய்ப் பெற்றிட வேண்டும். மிகுதியான அளவில் நம்மை அன்புகூராதவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிக்காமல், மாறாக முழுமையாய் அன்புகூரப்படுவதற்கு ஏதுவான குணலட்சணத்தினை வளர்த்திடுவதற்கு நாம் முயற்சித்திட வேண்டும்.

இப்படியான சூழ்நிலையானது மத்தேயு 18:15-ஆம் வசனத்தின்படி கையாளப்படவில்லையெனில், ஆலோசனையானது பின்வருமாறு கொடுக்கப்பட வேண்டும்: "அன்பான சகோதரனே, சகோதரன் 'A'-அவர்கள் உங்களிடத்தில் வேறு எதையுமல்ல அன்பின் உணர்வையே கொண்டிருக்கின்றார்." ஆனால் ஒருவேளை சகோதரன் 'B'-அவர்கள்: "சகோதரன் 'C'-அவர்கள், 'A' -அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதுபோல், சகோதரன் 'A' அவர்களின் அன்பும், தோழமையும் எனக்குக் கிடைக்கவில்லையென்று" சொல்வாரானால், இவரிடம்: "என் அன்பு சகோதரரே, நாம் ஒருவருக்குப் பாதகம் செய்யாத நிலையில், இன்னொருவருடன் விசேஷித்த ஐக்கியம் கொண்டிருப்பதற்கான உரிமையினைப் பெற்றிருக்கிறோ மல்லவா? உரிமைப்பெற்றிருக்கின்றோம் என்றும், இந்த விஷயத்திற்கு கர்த்தருடைய உதாரணத்தையும் பெற்றிருக்கின்றோம் என்றும் நாம் எண்ணுகின்றோம். இது நான் உங்களை அன்பற்ற விதத்தில் நடத்திட வேண்டுமென்று குறிப்பதாகாது. ஒரு சகோதரன் விருப்பு வெறுப்புகள் பெற்றிருப்பதில், அதுவும் இந்த விருப்பு வெறுப்புகளை அவர் இன்னொருவரை வேண்டுமென்றே தாக்குவதற்கு எனப் பயன்படுத்தாமல் இருக்கையில் - இத்தகைய விருப்பு வெறுப்புகளைப் பெற்றிருப்பதில் தவறில்லை" என்று ஒருவர் பதில் கொடுத்திடலாம்.

## அன்பின் பல்வேறு அளவுகள்

அன்பு என்பது நீதியல்ல. அன்பு கட்டளையிடப்பட முடியாது; அது தூண்டப்பட வேண்டும்; மற்றும் அன்பிற்கு ஒரு காரணமும் இருத்தல் வேண்டும். ஒருவேளை தேவன் அன்புகூரத்தக்கவராய் இல்லாமல் இருப்பாரானால் அவரை நாம் அன்புகூர வேண்டுமென்று ஒருவர் நம்மிடம் கூறுவது என்பது முறையற்ற ஒன்றாய் இருக்கும். அதுபோலவே அன்புகூரத்தகாத ஏதேனும் ஒரு சிருஷ்டியினை நம்மால் எப்படி அன்புகூர இயலும்? நாம் சகோதர சகோதரிகளை

அன்புகூருவதற்கான காரணம், நாம் அவர்களது நல்நோக்கங்களிலும் மற்றும் அவர்கள் தங்கள் இருதயங்களைக் கர்த்தருக்குக் கொடுத்துள்ளார்கள் எனும் உண்மையிலும், தேவசாயலுக்கொத்த ஏதோ சிலவற்றைக் காண்பதினாலேயே ஆகும்.

அதிகமாய் விழுந்துபோன நிலையிலுள்ள மாம்சத்தை உடைய சகோதரன் விஷயத்தில், அன்புடன்கூடிய பாசம் கொள்வதற்குப் பதிலாக, இரக்கத்துடன்கூடிய அன்பையே நாம் அதிகமாய்ப் பெற்றிருப்போம்; ஏனெனில் கிறிஸ்துவுக்கு ஒத்த குணலட்சணத்தின் சாயலை நாம் காணுமளவுக்குத்தக்கதாக மாத்திரமே, நம்மால் அவரது பின்னடியார்களை உண்மையாய் அன்புகூர்ந்திட முடியும். மேலும் நன்மைச் செய்வதற்கான உண்மையான வாஞ்சையுடனே நாம் ஒவ்வொரு சகோதரன் மற்றும் சகோதரியையும் கவனித்திட வேண்டும்; மற்றும் அதே அன்பானது, கிடைக்கும் சமயத்துக்குத் தக்கதாகப் பொதுவாயுள்ள உலகத்தாருக்கும் செலுத்தப்பட வேண்டும்.

மனஸ்தாபம் ஏற்பட்டுள்ள அநேக சந்தர்ப்பங்களில் காணப்படும் பெரிய பிரச்சனை - கர்த்தருடைய ஆலோசனையானது அப்படியே கடைப்பிடிக்கப்படாமல் காணப்படுவதேயாகும். நல்ல மற்றும் கனம்பொருந்திய சகோதரர்கள், சரியானவற்றைச் செய்ய விரும்புபவர்கள், மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுப்பதில் திறமிக்கவர்களாய் இருப்பவர்கள் - தங்களுடைய சூழ்நிலையானது வேறுபட்ட சூழ்நிலை என்று எண்ணுகின்றவர்களாய் இருக்கின்றனர் - சரியாய்ப் பகுத்தறியாதவர்களாய் இருக்கின்றனர். இத்தகையவர் குறிப்பிட்ட சகோதரனிடத்திற்குப் போய்ப் பின்வருமாறு சொல்வதற்குப் பதிலாக, அதாவது "மத்தேயு 18:15-ஆம் வசனத்தினுடைய ஆலோசனையைப் பின்பற்றினவனாக, ஒரு சிறு காரியம் தொடர்பாக, சகோதரனே உங்களைச் சந்திக்க வந்துள்ளேன்" என்று சொல்வதற்குப் பதிலாக, குறிப்பிட்ட சகோதரனைச் சந்தித்து, "சகோதரா, நீங்கள் இன்னின்ன விதமாய்ச் செய்திருக்கின்றீர்கள்" என்று சொல்லுகின்றார். இவர் ஒப்புரவாகுவதற்கெனச் சகோதரனிடத்தில் செல்லாமல், மாறாக ஏதோ தவறு நடந்துள்ளது என்று சகோதரனுக்குக் காண்பிக்கத்தக்கதாகச் சர்வாதிகாரி போன்று செல்கின்றார். இது சரியான வழிமுறையல்ல. நீதியானது, தேவனுடைய சிங்காசனத்திற்கு ஆதாரமாய் இருக்கின்றபடியால், மேற்கூறிய சரியற்ற வழிமுறையின்படி நடந்துகொள்பவர்கள் நீதியின் கொள்கைகளைப் பின்பற்றிடுவதற்குத் தவறுகின்றவர்களாய் இருப்பார்கள்; கர்த்தருடைய குணலட்சணத்தை வளர்க்க தவறுகின்றவர்களாய் இருந்து, பரிசை வெல்ல தவறிப்போய்விடுவார்கள்.

கர்த்தருடைய கட்டளையின் ஆவியானது, சகோதரனுக்கு உதவி செய்வதையே சுட்டிக்காட்டுகின்றதேயொழிய, மாறாக சகோதரனை ஏளனம் செய்வதையோ, சகோதரனைக் கோபம் மூட்டுவதையோ, அவரைக் கேலி செய்வதையோ சுட்டிக்காட்டவில்லை; அவர் சொல்லிடுவதற்கு நோக்கம்

கொள்ளாதவைகளை அவரைச் சொல்லவைத்து அவரைச் சிக்கிவைப்பதையோ, அவர் சொல்லியுள்ள வார்த்தைகளின் அர்த்தத்தினைத் திரித்துக்கூறிடுவதையோ சுட்டிக்காட்டவில்லை. இது சரியான ஆவியல்ல. எந்தச் சகோதரனையும், இப்படியான விதத்தில் அணுகிடக்கூடாது. மாறாக காரியமானது மிகவும் இரக்கமான விதத்தில் கையாளப்பட வேண்டும்; மற்றும் ஒருவேளை ஒருவரால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்து முடித்தப் பிற்பாடு தவறானது தொடர்கின்றது என்றால், நமக்குச் சொல்வதற்கு எதுவுமில்லை. சிலர் "அவர் மன்னிப்புக் கேட்கவில்லை" என்று சொல்லலாம். சகோதரன் மன்னிப்புக் கேட்பது குறித்து எதுவும் கர்த்தர் கூறிடவில்லை. ஆனால் ஒருவேளை சகோதரன் தனது தவறினை உணர்ந்தும், மன்னிப்புக் கேட்க தவறுவானாகில், அவன் தனக்கே பாதிப்பு உண்டுபண்ணுகிறவனாய் இருப்பான்.

## அந்நியக் காரியங்களில் தலையிடுவது குறித்து எச்சரிக்கையாயிருப்போமாக

ஒருவேளை மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களில் இடம்பெறுகின்றதான இரண்டாம் படியானது அவசியப்படுமாயின், அது - கர்த்தருடைய சித்தத்தைத்தான் செய்கின்றோமா என்பதை உறுதிப்படுத்து வதற்கான விருப்பத்துடன், மிகவும் ஆழமாய் ஆராய்ந்து, ஜெபம்பண்ணின பிற்பாடு செய்யப்பட வேண்டும். முதலாவதாக - சகோதரர்களைத் தன்னோடுகூடக் கூட்டிக்கொண்டு போவதற்குக் கேட்குமளவுக்குக் காரியம் முக்கியமானதா என்றும், காரியம் வேறொருவருக்கு எதிரானதாய் இராமல், நமக்கு எதிரான ஒன்றாய் இருக்கின்றதா என்றும், காரியமானது அந்நியக் காரியங்களில் தலையிடுதலாக இல்லையென்றும், (கடந்த காலத்தில் இல்லாமல்) இப்பொழுது செய்யப்பட்டுள்ள ஒரு காரியமாக இருக்கின்றதா என்றும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படியாகக் காரியம் இருக்குமாயின், இரண்டு பேரை அழைத்துச் செல்லுங்கள். "என்னோடுகூட வரும்படிக்கு நான் உங்களிடத்தில் கேட்பதால், என் பக்கமாய்க் காணப்படும்படிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறாதீர்கள். சிலசமயம் நாமே தவறுசெய்தவர்களாய் இருப்போம் மற்றும் இப்படியிருக்கும் பட்சத்தில் மற்றச் சகோதரன் சரியாக வேண்டுமென்பதற்குப் பதிலாக நாம் சரியாகுவதற்கே நாம் மிகவும் ஆவல் கொள்வோமாக.

ஒருவேளை காரியம் முக்கியமானது என்று நாம் உறுதிப்படுத்திக் கொள்வோமானால், நமக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற சகோதரனுக்கு நண்பர்களாய் இருப்பவர்கள் - நியாயமானவர்களாகவும், சபையில் கனமிக்கவர்களாகவும் இருப்பவர்கள் - என்று நாம் கருதுகின்ற இருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவர்கள் இருவரோடுகூட நமக்கெதிராய்க் குற்றம்புரிந்த

சகோதரன் சந்திக்கப்பட்டு, விஷயத்தை கலந்தாலோசனை பண்ணின பிற்பாடு, இந்தச் சகோதரர்கள் அறிவுரை வழங்குவது தகுதியானதாய் இருக்கும். ஒருவேளை அறிவுரையானது, நாம் பின்பற்ற முடிகின்றதாய் இருக்குமானால், நாம் அப்படியாகவே செய்து, சமாதானத்தையும், இணக்கத்தையும் கொண்டுவர வேண்டும்.

ஆனால் ஒருவேளை இப்படியாகச் செய்தும், பிரயோஜனம் ஏற்படாமல், பாதகச் செயல்கள் தொடருமானால், அப்பொழுது காரியத்தினைச் சபையாரின் கவனத்திற்கு நாம் கொண்டுவருவது தகுதியானதாய் இருக்கும். தீங்கு செய்கிறவன், தனது செய்கையினைச் சரிச்செய்துகொள்ளத்தக்கதாக அவனை இணங்கவைக்க முடியவில்லையென்று நம்மோடுகூடத் தீர்மானித்தவர்களாகிய - நம்மோடுகூட வந்த இரு சகோதரர்களும், சபையின் மூப்பரிடத்தில், விசாரிக்கப்படுவதற்குரிய வழக்கு ஒன்றினைத் தாங்கள் பெற்றிருப்பதாகக் கூறவேண்டும்; ஆனால் அவர்கள் குற்றஞ்சாட்டிடக்கூடாது. குற்றச்சாட்டிற்கு உண்மையான காரணம் ஏதேனும் உள்ளதா என்று காணத்தக்கதாகச் சபையார் காரியத்தைச் செவிகொடுத்துக் கேட்கின்றவர்களாக மாத்திரம் காணப்பட வேண்டும். இந்த ஒரு கட்டத்தில், சபையார் விசாரிப்பதற்கு ஒரு வழக்கு இருக்கின்றது என்று மாத்திரமே அறிந்து கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும். பின்னர் மூப்பர்கள் இந்த நோக்கத்திற்காக விசேஷமாய்க் கூடி, சபையாருக்கு முன்பாக ஒரு வழக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், காரியத்தினைக் கேட்பதற்கு எந்த நேரம் அவர்களுக்குச் சௌகரியமாய் இருக்கும் என்றும் சபையாரிடம் கேட்டிட வேண்டும். பின்னர் வழக்கினை விசாரிக்கத்தக்கதாக எப்போது கூடிடலாம் என்று தீர்மானித்திடவேண்டும்.

இக்காலக்கட்டத்தில் யாருக்கு எதிராய்க் குற்றச்சாட்டானது சாட்டப்பட்டுள்ளதோ, அவர் மூப்பர்களிடத்தில் பின்வருமாறு கூறிடலாம்: "அந்தச் சகோதரனாலும், பிற்பாடு அவரோடுக்கூட வந்திட்டதான அந்த இரண்டு சகோதரர்களினாலும் எனக்கு எதிராய்க் குற்றச்சாட்டுகள் சொல்வது உண்மைதான். ஆனால் சகோதரரே அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவை அல்ல. அக்காரியம் என்னுடைய தனிப்பட்ட விஷயமாய் இருக்கின்றது; மற்றவர்களுக்கு அதில் எந்தச் சம்மந்தமும் இல்லை என்று கூற விரும்புகின்றேன்" அல்லது அவர் கூற விரும்பும் எதையும் சொல்லிடலாம். பின்னர் அவ்விஷயமானது சபையாருக்கு முன்பாகக் கொண்டுவருமளவுக்குரிய விஷயந்தான் என்பதற்கும், அது அந்நியக் காரியங்களில் தலையிடும் விஷயமல்ல என்பதற்கும் சான்றுகள் பகரப்பட வேண்டும்; ஏனெனில் அந்நியக் காரியங்களில் தலையிடுவதற்குச் சபையார் ஒன்றுகூடிடக் கூடாது.

அந்த மனுஷனுடைய காரியத்தில் சபையாரின் தலையிடுதல் அந்நிய காரியத்தினுடைய தலையிடுதலாக இருக்குமா அல்லது இல்லையா என்று

தீர்மானிக்கத்தக்கதாக - அக்காரியமானது சபையாருக்கு முன்பாகக் கொண்டுவரப்படத்தக்கதான காரியமாய் இருக்கின்றதா எனத் தாங்கள் புரிந்துகொள்வதற்கு மாத்திரம் - காரியத்தினைக் குறித்துத் தெரிந்துகொள்வது மூப்பர்களுக்குத் தகுதியானதாய் இருக்கும். ஒருவேளை சபையாருக்கு முன்பாகக் கொண்டுவரப்படுவதற்குரிய காரியமாக அது இல்லையென்று மூப்பர்கள் கருதுவார்களானால், அவர்கள் குற்றஞ்சாட்டும் சகோதரனை நோக்கி: "இந்தச் சகோதரன் உங்களுக்குத் தீங்குச் செய்யவில்லை" என்று சொல்லிட வேண்டும். ஆனால் ஒருவேளை இரு சாராரில் எவரேனும், வழக்கானது சபையாருக்கு முன்பாகக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், இக்கட்டம் வரையிலும் மத்தேயு 18:15-17 வரையிலான ஆலோசனையானது முடிந்தமட்டும் கைக்கொள்ளப் பட்டுள்ளது என்றும் இன்னமும் எண்ணுவார்களானால் - ஒருவேளை அச்சபையாருக்கான மூப்பர்கள் காரியத்தினைச் சபையாருக்கு முன்பாகக் கொண்டுவருவதற்கு விருப்பமற்று இருப்பார்களானால், அப்போது வழக்கினைத் தாங்கள் விசாரிக்க வேண்டுமா அல்லது இல்லையா என்று சபையார் முடிவெடுப்பது தகுதியானதாய் இருக்கும் மற்றும் அவர்களது விசாரித்தலே இறுதியானதாகக் காணப்பட வேண்டும்.

## சபையார் எப்படி விசாரித்திட வேண்டும்

சபையார் முன்னிலையில் விசாரிக்கப்படும் எந்தக் காரியத்தின் விஷயத்திலும், வழக்கில் தனதுபக்கத்தின் விளக்கத்தினை முன்வைப்பதற்கு விரும்புகின்ற ஒவ்வொருவருக்கும் வாய்ப்பானது அளிக்கப்பட வேண்டும் - ஒருவர் தனது பிரச்சனையைக்கூற, மற்றவர் அதற்குப் பதிலளிக்க வேண்டும். நடவடிக்கையின் எந்த ஒரு கட்டத்திலும், அன்பற்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. இப்படியான வார்த்தைகளைப் பயன்படுத்திடுவதற்கு முற்படுபவர், இதினிமித்தம் கண்டனத்திற்குரியவராகவும் மற்றும் அவரது நடத்தையானது, தவறாய் உள்ளது என்று தீர்க்கப்படுவதற்கு ஏதுவானதாகவும் கருதப்பட வேண்டும். இம்முறைமையே பின்பற்றப்படுவதற்குக் கர்த்தர் நோக்கம் கொண்டுள்ளார் என்பதில் உறுதியே. மனதில் எப்போதும் கொண்டிருக்க வேண்டிய கருத்தென்னவெனில்: ஜனங்கள் மற்ற மனுஷருடைய காரியங்களில் உண்மையில் தலையிடுகின்றார்களா என்பதேயாகும் - இம்மாதிரியான நடக்கையானது சபையாரால் அல்லது மூப்பரால் ஆதரிக்கப்படக்கூடாது. பொன்னான பிரமாணத்திற்கும் மற்றும் மத்தேயு 18:15-ஆம் வசனத்தின் காரியத்திற்கும் நேர்மாறான விதத்தில் பொல்லாத ஆலோசனைகளில் ஜனங்கள் அதிகளவிலான நேரத்தினை வீணடிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

முக்கியமான, உறுதியான, தெளிவான குற்றச்சாட்டுகளைப் பொறுமையாய்ச்

சபையார் கேட்டப் பிற்பாடும் மற்றும் இந்தப் பல்வேறு முயற்சிகளுக்குப் பிற்பாடும், குற்றஞ்சாட்டப்படும் சகோதரன் உண்மையில் தவறு செய்தவராய் இருக்கின்றார் என்றும், அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றார் என்றும் கண்டு கொள்வார்களானால், குற்றஞ்சாட்டப்பட்டபடியே, அவர் குற்றம் புரிந்தவராய் இருக்கின்றார் என்ற தீர்மானத்திற்குள் வர வேண்டும். சபையாருடைய வாக்கானது (vote) ஏகமனதானதாக இருக்க வேண்டும்; கூடுமான மட்டும் பட்சபாதங்கள் அனைத்தும் புறக்கணிக்கப்பட வேண்டும். சபையார் யாரையும் நித்திய சித்திரவதைக்குள்ளாகத் தீர்க்காதபடியினாலும், எந்த விதத்திலும் சகோதரனை நியாயந்தீர்க்காதபடியினாலும், அவர்களது அறிவுரையில் எந்தத் தண்டனையும் இணைந்து காணப்படக் கூடாது. அச்சகோதரனுடைய நடத்தையானது, வேதவாக்கியங்களுக்கு எதிராய் இருக்கின்றது என்றும், அவர் தனது நடத்தையினை மாற்றிக்கொள்ளவில்லையெனில், அவரைக் கர்த்தருடைய ஜனங்களில் ஒருவராக தங்களால் இனிக் கையாள முடியாது என்றும் அச்சகோதரனுக்கு அறிவுரை மாத்திரம் வழங்குகின்றனர்.

சகோதரனை ஐக்கியத்தினின்று ஒதுக்கிவைக்கையில், அவர்கள் சகோதரனைத் துன்பப்படுத்திட/இழிவுப்படுத்திடக் கூடாது; ஏனெனில் நாம் இப்படியாக ஆயக்காரர்களையும், பாவிகளையும் இழிவுப்படுத்துவதில்லை. மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ அல்லது வேறு ஏதேனும் விதத்திலோ ஊழியம் புரியும்படிக்கு நாம் பாவிகளிடத்திலோ, ஆயக்காரர்களிடத்திலோ வேண்டிக்கொள்வதில்லை; இதுபோலவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சகோதரனும், ஜெபம் ஏறெடுக்க கேட்டுக்கொள்ளப்படக்கூடாது அல்லது வெளியாட்களிடம் செய்யும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படாத எதுவும், அச்சகோதரன் செய்யும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படக்கூடாது. இப்படியாகச் சபையார் தங்கள் ஐக்கியத்தினை ஒதுக்கி வைத்துக்கொள்வார்கள். அவர் இன்னமும் சகோதரன்தான், ஆனால் நல்ல உறவு நிலைமையில் இல்லாமல் காணப்படுகின்றார்; ஏனெனில் கர்த்தர் வழிக்காட்டியுள்ள விதத்தில், அவர் சகோதரருடைய சத்தத்திற்குச் செவிக்கொடுக்க மறுத்தவராய் இருக்கின்றார்.

சபையார் அனைவருமே ஒரு காரியத்தில் தங்களது கணிப்பில் தவறிப்போவதற்கும், சரியாய்ச் செயல்பட்டுள்ள சகோதரனுக்கு எதிராய்த் தீர்மானிப்பதற்கும் வாய்ப்புள்ளது. அத்தகைய சகோதரன் பின்வருமாறு கூறிடலாம்: "என்னுடைய அருமையான சகோதர சகோதரிகளே, இக்காரியத்தின் மீதான உங்களது கண்ணோட்டத்தினை நான் மதிக்கின்றேன்; மற்றும் என்னுடைய நடத்தையில் குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவாய் எதுவாகிலும் இருக்குமாயின், அதற்காக நான் மனம் வருந்துகின்றேன். என்னால் முடிந்தமட்டும் காரியத்தினை மாற்றிக்கொள்வேன் என்று நான் உங்களுக்கு வாக்களிக்கின்றேன். எனக்கே நான்

நீதியாய் நடந்துகொள்ள வேண்டுமெனில், என்னால் என்னுடைய கண்ணோட்டத்தினை மாற்றிக்கொள்ள முடியாது; எனினும் உங்களுடைய ஒருமித்தக் குரலை மதித்து, சரியென்று நான் எண்ணுகின்ற என்னுடைய பகுத்துணர்வின்படி, இக்காரியத்தில் நடந்துகொள்வதில்லை. ஆகையால் நான் அநியாயத்திற்கு ஆளாகுவேனானால், இதைக் கர்த்தர் அவரது சரீரமாகிய சபைக்கான பலி என்ற விதத்தில் எடுத்துக்கொள்வார். ஆகவே அன்பு சகோதர சகோதரிகளே, உங்களுடைய அன்பான உணர்வுகளின் நிமித்தமாக, உங்களுக்கு நன்றி ஏறெடுக்கும் அதேவேளையில், இதனால் எனக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று நீங்கள் அறிய விரும்புகின்றேன். ஒருவேளை எப்போதேனும் இக்காரியங்களில் உங்கள் மனம் மாறுமாகில், அதை நீங்கள் எனக்குத் தெரியப்படுத்துவீர்கள் என்று நான் எண்ணுகின்றேன்.”

ஒருவேளை அச்சகோதரன் உண்மையிலேயே தவறு செய்திருந்திருப்பாரானால், அவர் “சரி - என்னை வெளியே தள்ளுங்கள்!” என்று சொல்லக்கூடும். சபையார் பின்வருமாறு கூறிடலாம்: “நாங்கள் உம்மை வெளியே தள்ளவில்லை. எங்களிடமிருந்து உம்மை ஒதுக்கிக்கொள்வதாகக் கூறிட வேண்டாம். உம்முடைய வார்த்தைகளை, உம்முடைய பதில் என்று நாங்கள் எடுத்துக்கொள்வதில்லை. எங்களுடைய செயல்பாடுகளானது, மிகவும் இரக்கமானவைகள், சகோதரத்துவ மானவைகள் என்றும், சபையாரின் நிலைப்பாட்டிற்கு இசைந்திடுவது இப்பொழுது நமக்கான கடமையின் பாகமாக இருக்கின்றது என்றும் நீர் கண்டுகொள்ள கர்த்தர் செய்திடுவார் என்று நாங்கள் நம்புகின்றோம். நாங்கள் தவறு செய்துள்ளோம் என்று கர்த்தர் ஒருவேளை எங்களுக்குக் காண்பிப்பாரானால், அதை ஒப்புக்கொள்வதற்கு நாங்கள் மிகவும் மகிழ்வுறுவோம். ஆனால் அதற்கிடையில் அன்பான சகோதரனே, உம்மைக் குற்றஞ்சாட்டிட விரும்பவில்லை, மாறாகக் கர்த்தருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் எங்களது கடமையைச் செய்திட மாத்திரம் விரும்புகின்றோம்.”

இப்படிச் செய்வது தகுதியானதாய் இருக்கும்; நாம் சகோதரருக்குள் தடை அரண்களை எழுப்பிடக்கூடாது. “நல்லது, நீர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நீர் திரும்ப எடுத்துக்கொள்வது வரையிலும் உம் முகத்தை எங்களுக்குக் காண்பியாதேயும்” என்று சொல்லி, அச்சகோதரனுக்குப் பாதகம் பண்ணிடுவது சுலபம். பெரும்பான்மையான ஜனங்கள் தங்களைப் பற்றி மிகவும் உயர்வாய் எண்ணுவதினால், இத்தகைய வார்த்தைகளைக் கேட்ட பிற்பாடு திரும்பிட முடியாதவர்களாய் இருப்பார்கள்; எனினும் கர்த்தருடைய ஆவியும், அன்பின் ஆவியும், நீதியும் வெளிப்படும் பட்சத்தில் திரும்புகிறவர்களாய் இருப்பார்கள்.

# நாவை அடக்குவது அவசியமாகும்

## மத்தேயு 12:36

### *அனைவருக்குமான முக்கியமான ஒரு பாடம்*

மனுஷர்களின் ஒவ்வொரு கேடான வார்த்தைக்கும், அவர்கள் கணக்குக்கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் கூறியிருந்தாலும், அவர் பேசப்படும் வார்த்தைகளுக்குப் பின்னாகக் காணப்படும் எண்ணங்களைச் சுட்டிக்காட்டுகின்றார். இருதயத்தின் மனப்பான்மையே, அவருக்குப் பெரும் வேதனையை அளித்தது. பரிசேயர் மற்றும் சதுசேயரின் இருதய நிலைமை, அவர்களுக்கே பாதிப்பைக் கொண்டுவரும் என்று கர்த்தர் அறிந்திருந்தார்.

கர்த்தருடைய ஜனங்கள் நீதியாய் இருப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும், அவர்களுக்கு வேறு எதுவும் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை. அன்பாக இருப்பதும், இரக்கத்துடன் இருப்பதும், பெருந்தன்மையாய் இருப்பதும் சரியான காரியங்களாக இருந்தாலும்கூட, நீதியே குணலட்சணத்தின் ஆதாரமாய் இருக்க வேண்டும். நீதியை ஆதாரமாகக் கொண்டிராத அன்பும், இரக்கமும் கர்த்தருக்குப் பிரியமானதாகவும் இருப்பதில்லை, அவரைத் திருப்திப்படுத்துகிறதாகவும் இருப்பதில்லை. மற்றவர்களுடனான விஷயங்களில், ஒரு தேவனுடைய பிள்ளையானவன் - மற்றவர்களிடமிருந்து எதை எடுத்துப்போடலாம்? என்று யோசிக்காமல், மற்றவர்களுடைய உரிமைகள் என்ன? மற்றும் நான் என்ன செய்ய வேண்டும் என என்னுடைய பரம தந்தை விரும்புவார்? என்றே யோசிப்பான்.

எந்த ஒரு விஷயத்திலும், ஒரு மனுஷன் தனக்கான சொந்த உரிமைகளை அடையாளம் கண்டுகொள்வது இயல்பான காரியமாகும். ஆனால் விழுந்துபோன சுபாவமோ மற்றவருடைய உரிமைகளை உடனடியாக உணர்ந்துகொள்வதில்லை. ஆகவே கர்த்தருடைய ஜனங்கள், மற்றவர்கள் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவார்களோ, அதையே அவர்களும், மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும், அதாவது நீதியாய்ச் செய்ய வேண்டும் என்பதே அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான படிப்பினைகளில் ஒன்றாகும்.

கர்த்தருடைய அருமையான ஜனங்களில் அநேகர், புதிய சுபாவத்திற்குரிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது, மற்றவர்களுடைய விஷயத்தில் தாங்கள் "பொன்னான பிரமாணத்திற்கு" முழுமையாய்க் கீழ்படிவதைக் குறிக்கின்றதாய் இருக்கும் என்பதை முழுமையாய் உணர்ந்துகொள்ளவில்லை என நாம் அஞ்சுகின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் தங்களுக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென விரும்புகின்றார்களோ, அதையே மற்றவர்களுக்கும் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிரியையிலும், வார்த்தையிலும், முடிந்தமட்டும் ஒவ்வொரு எண்ணத்திலும் நீதி ஆளுகை செய்யத்தக்கதாக, சரீரத்தைக் கீழ்ப்படுத்துவது

என்பது புதிய சிருஷ்டியின் கடமையாகும். ஒருவன் தன்னுடைய செயல்களில் நீதியாய் இருப்பதற்கு முன்பு, அவன் தன்னுடைய எண்ணங்களில் நீதியாய்க் காணப்பட வேண்டும். அநீதியான எண்ணங்களை உடையவன், எவ்வளவுதான் நீதியான செயல்களைச் செய்ய முயற்சித்தாலும், அவன் அநீதியாகச் செயல்புரிகின்றவனாகவே இருப்பான்.

---

R4802

## சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்

*"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்."*
*(எபிரெயர் 12:3)*

"அவரை நினைத்துக்கொள்ளுங்கள்" என்பது, தமக்கு விரோதமாகப் பாவிகளால் ஏற்பட்டதான பல்வேறு எதிர்ப்புகளையும், சோதனைகளையும் நமது கர்த்தர் எவ்வாறு சகித்தார் என்பதைக் கவனிப்பதை, மனதில் கொண்டிருப்பதை, ஆழ்ந்து சிந்திப்பதை, எளிதில் மறந்துபோகாமல் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய சொந்த அனுபவங்களிலும்கூடக் கர்த்தருடைய பின்னடியார்களென நமக்கு விரோதமான பாவம் மற்றும் பாவிகளுடைய எதிர்ப்புகள் சிலவற்றைச் சகித்திருக்கின்றோம்; ஆனாலும் இரத்தம் சிந்தும் அளவுக்கு நாம் இன்னும் எதிர்த்து நிற்கவில்லை. அவர் கடந்து சென்றதான கடும்சோதனையான அனுபவங்களுக்குள் நாம் இன்னும் கடந்து செல்லவில்லை. நாமும் நம்முடைய அயலார்போன்று பாவப்பட்டவர்களாக, அபூரண சிருஷ்டிகளாக இருக்க, அவர் "பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், குற்றமில்லாதவராகவும்" இருக்கின்றார் என்பதை நாம் நினைவில்கொள்கையில், அவர் பாவிகளின் எதிர்ப்புகளைப் பொறுமையுடன் சகித்தார் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப்பார்ப்பது நலம் பயக்கின்றதாய் இருக்கும். அவருக்குக் கடுஞ்சோதனையான அனுபவங்கள் வந்திட்டபோது, அவைகள் எவர்களிடமிருந்து கடந்துவந்ததோ, அவர்களிடமிருந்து மாத்திரமே வந்ததாக அவர் கருதிடவில்லை; மாறாக பிதாவின் மேற்பார்வையின் கீழ்க் கடந்துவந்ததாக கருதினார். ஆகையால் இத்தகைய அனுபவம் அவருக்கு வர

பிதா அனுமதித்திருக்கிறாரெனில், பொறுமையாய்ச் சகிப்பதன் மூலம் தம்முடைய உண்மையினை நிரூபிப்பதற்கு அவர் கடமைப்பட்டிருக்கின்றார். "பிதா எனக்குக் கொடுத்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" என்று அவர் கூறினார் (யோவான் 18:11).

இப்படியாகவே ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நம் விஷயத்திலும் காணப்படுகின்றது . . . "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபாகமம் 13:3). ஜீவியத்தின் அனுபவங்களில் எந்தளவுக்கு நமது கர்த்தருடைய கண்ணோட்டத்தினைக் கொண்டிருக்க முடிகின்றவர்களாக இருக்கின்றோமோ, அவ்வளவுக்கு நாம் அமைதலுடன் காணப்படுவோம். நம்மைப் பரீட்சிப்பதற்காகவோ அல்லது மற்றவர்களைப் பரீட்சிப்பதற்காகவோ, நிரூபிக்கத்தக்கதாகவோ, நம்மால் புரிந்துகொள்ள முடியாத வழிகளில் பிதா கடுஞ்சோதனையான அனுபவங்களை அனுமதிப்பாரெனில், அவர் சித்தம் நடந்தேறுவதில் நாம் களிகூருகிறவர்களாகவே இருக்க வேண்டும். இக்கருத்தினைக் கவிஞன் பின்வரும் வரிகளில் அருமையாய் வெளிப்படுத்தியுள்ளார்...

"என் காலங்கள் உம்முடைய கரங்களில் உள்ளதுவே,
என் தேவனே அங்கு இருக்கவே யான் விரும்புகின்றேனே."

நாம் இறுதிவரை உண்மையாய்ச் சகித்து நின்றோமானால், பலன் நம்முடையதாய் இருக்கும். நாம் நம்முடைய நேர்மையினை நிரூபித்தவர்களாகி மற்றும் தேவன் நமது காரியங்களை மேற்பார்வை இடுகின்றார் என்றும், உத்தமமாய் நடப்பவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் என்றுமுள்ள நம்முடைய விசுவாசத்தினைக் காத்துக்கொள்வோமானால், நாம் ஒரு நாளில் "நல்லது உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று அவர் சொல்வதைக் கேட்போம்.

நமது கர்த்தர் சரீர ரீதியான எதிர்ப்புகளைச் சகித்தார் என்பதை நாம் அறிவோம். ஆனால் "Contradiction" எனும் நம்முடைய ஆங்கில வார்த்தையின் சரியான அர்த்தம் அவரது வார்த்தைகள், எதிர்த்துப் பேசப்பட்டதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய கர்த்தருடைய விஷயத்தைப் பார்க்கையில், ஜனங்கள் சரீர ரீதியாக எதிர்க்காமல், அவரது வார்த்தைகளை, அவரது போதனைகளை எதிர்த்தார்கள். அவரைச் சரீர ரீதியாகத் துன்புறுத்தி, மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கும் காரியமானது பிரதான ஆசாரியனிடத்திலும் மற்றும் ஆலோசனைச் சங்கத்தாரிடத்திலும் மற்றும் போர்ச் சேவகர்களிடத்திலும் விடப்பட்டது மற்றும் ஒருவேளை அவர் விரும்பி இருந்தாரானால், அவர் அவர்களை எதிர்த்திருந்திருக்க முடியும்.

# அவர் வையப்படும்போது பதில் வையாமலும் இருந்தார்

ஆகையால் அப்போஸ்தலன் கர்த்தருடைய வார்த்தைகளுக்கான எதிர்ப்பைக்குறித்துக் குறிப்பிடுவதாகவே தெரிகின்றது. இது பரிசுத்த பேதுருவினாலும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; "அவர் வையப்படும்போது பதில் வையாமலும் இருந்தார்" என்று பரிசுத்த பேதுரு தெரிவித்தார் (1 பேதுரு 2:23). ஆகையால் 3½ வருட கிறிஸ்துவினுடைய ஊழியத்தினை நாம் கவனித்துப் பார்க்கையில், அவரது உபதேசமானது எதிர்க்கப்பட்டதையும், அவர் தூஷிக்கப்பட்டதையும் நாம் காண்கின்றோம். அவர் பிசாசு பிடித்தவர் என்றும், அவர் பிசாசுகளின் அதிபதியினாலே அற்புதங்களைப் பண்ணுகிறார் என்றும், அவர் தேவதூஷணம் பண்ணுகிறவர் என்றும் யூதர்கள் கூறினார்கள். இவர்கள் சார்பிலான இந்த எதிர்ப்புகள் மற்றும் மறுப்புகளுக்கு, அவர் சார்பிலிருந்து அவர்களைப் பற்றியதான மிகவும் நியாயமான, உண்மையுள்ள வார்த்தைகளை அவரால் சொல்லியிருந்திருக்க முடியும். அவர்கள் அவரைச் சொன்னதைப்போன்று, அவராலும் அவர்களுக்கு நன்கு பதில்கொடுத்திருந்திருக்க முடியும். பிசாசு அவர்களுக்குள்தான் கிரியைச் செய்துகொண்டிருக்கின்றான் என்பது போன்றவைகளை அவரால் அவர்களுக்குச் சொல்லியிருந்திருக்க முடியும். அவர்கள் சொன்னவைகளுக்கு அதிகமாகச் சொல்லுமளவுக்கு அவர் வார்த்தைகளுக்குரிய பூரண வல்லமையினைக் கொண்டிருந்தார். அவருடைய வார்த்தைகளைக்கொண்டு அவரைச் சிக்கவைத்திட அவர்கள் எண்ணினபோது, அவர்களது வார்த்தையினாலே அவர்களைச் சிக்கவைத்தார். ஆனால் அவர் பதிலுக்குப் பதில் வையவில்லை. அவர் தீமைக்குத் தீமை செய்யவில்லை, பழிச்சொல்லுக்குப் பழிச்சொல் கூறவில்லை. இதுவே சரியான வழிமுறையாகும் என்று அப்போஸ்தலன் காண்பிக்கின்றார்.

ஆனால் அன்றாட ஜீவியத்தினுடைய காரியங்களில், ஜனங்கள் நமக்கு எதிராய்ப் பலவித தீமையான வார்த்தைகளைச் சொல்லுகையில், நம்மை வையும்போதும் பதிலுக்குத் தீமையான எதையாகிலும் சொல்லிடுவதற்கு விழுந்துபோன மாம்சம் சிந்திப்பது, அதன் இயல்பாய் இருக்கின்றது. இப்படியாக இவ்விஷயங்கள் நம்மீதான பரீட்சைகளாகுகின்றது. நாம் இத்தகைய ஒரு சிந்தைக்கு அடிப்பணிவோமானால், நாம் கர்த்தருடைய நடக்கையினைப் பின்பற்றுகிறவர்களாக இராமல், சத்துருவினுடைய நடக்கையினைப் பின்பற்றுகிறவர்களாகவே இருப்போம். எதிராளியானவனால் தாக்கப்படுகையில் - அவனது பிரதிநிதிகள் யாராக இருப்பினும், அவனது ஆயுதங்கள் என்னவாக

இருப்பினும் - "பாவிகளால் தமக்கு உண்டான எந்த எதிர்ப்பையும் மன உறுதியோடு தாங்கிக்கொண்ட அவரை எண்ணிப்பாருங்கள். அப்போது நீங்கள் மனம் சோர்ந்து தளர்ந்து போக மாட்டீர்கள்" (எபிரெயர் 12:3; திருவிவிலியம்). நாம் உண்மையாய்ச் சகிக்கும்பட்சத்தில், எதிராளியானவன் கர்த்தருடைய பார்வையில் நம்முடைய நற்பெயருக்குப் பாதகம் பண்ணிட முடியாது, மாறாக நற்பெயரைப் பெருகப்பண்ணிட மாத்திரமே முடியும் மற்றும் தேவன் தம்முடைய நோக்கங்களுக்காக நன்மைக்கேதுவாய் - அதுவும் நன்மைக்கேதுவாய் என்பது கோதுமையினின்று பதரையும், களைகளையும் புடைத்தெடுப்பதாய் இருப்பினும், அப்படி நன்மைக்கேதுவாய் மாற்றிப்போட முடியாத, எந்தவொரு புறத்தோற்றமான பாதகத்தையும் எதிராளியானவனால் செய்திட முடியாது.

சொல்லப்படும் தீமையான விஷயம் உண்மையாய் இருப்பினும், தீமைபேசுதல், புறங்கூறுதல், அவதூறு என்பவைகள் தேவனுடைய அன்பின் ஆவிக்கு முற்றிலும் முரணானது என்ற விதத்தில் தேவனுடைய ஜனங்களுக்குக் கண்டிப்புடன் தடைப்பண்ணப்பட்டுள்ளது. அவதூறான எதையும் தடைப்பண்ணும் வண்ணமாக, மனக்குறையைச் சரிப்படுத்துவதற்கான ஒரே வழியினை வேத வாக்கியங்களானது மிகவும் கவனமாய் முன்வைத்துள்ளது (மத்தேயு 18:15-17).

## கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப்பண்ணுபவர்களே பெரும்பாலும் மோசமான அவதூறுகாரர்களாய் இருக்கின்றனர்

மிகவும் வளர்ச்சியடைந்துள்ள கிறிஸ்தவர்களில்கூட அநேகர் இந்தத் தெய்வீகக் கட்டளைக் குறித்து முற்றிலுமாய் அறியாமையில் காணப்படுவதாகத் தெரிகின்றது மற்றும் இதன் காரணமாக கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப்பண்ணியுள்ளவர்களே பெரும்பாலும் மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் அவதூறுகாரர்களாய் இருக்கின்றனர். இது நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டதான சில விசேஷித்த, குறிப்பிட்டக் கட்டளைகளில் ஒன்றாயிருக்கின்றது; மற்றும் இக்கட்டளையினை "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" என்ற அவரது வார்த்தைகளுடன் தொடர்புபடுத்திப்பார்க்கையில், நமது கர்த்தருடைய கட்டளையாய்க் காணப்படும் இதனை, தொடர்ந்து மீறிக்கொண்டிருப்பது என்பது, அநேகர் சிநேகிதராய் இருக்கும் நிலையில் - சீஷத்துவத்தில் அவ்வளவுக்கு வளரவில்லை என்பதை நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது.

ஒருவேளை கைக்கொள்ளப்படும் பட்சத்தில் பிறரைக்குறித்துப் பேசுதலை, "புறங்கூறுதலை," "தீமை பேசுதலை" தவிர்க்கக்கூடியதான இக்கட்டளைக்குறித்து நாம் கவனமாய்ப் பார்க்கலாம் (மத்தேயு 18:15-17). சம்பந்தப்பட்டவர்கள் இடையில்

மாத்திரம் உரையாடல் எனும் இக்கட்டளையின் முதல் விதிமுறையானது, தான் பாதிக்கப்பட்டுள்ளதாக கருதும், குற்றஞ்சாட்டுபவர் சார்பிலான வெளிப்படையான பேச்சினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது குற்றஞ்சாட்டப் படுபவரைக் குறித்து எந்தத் தீமையும் தான் சிந்திக்காததையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. தன்தன் நடக்கை சரியானது என்று இருவருமே எண்ணிக்கொண்டு, விஷயத்தினைக் குறித்துக் கலந்துரையாடி, ஒரே கண்ணோட்டத்திற்குத் தாங்கள் வரமுடியுமா என்று பார்க்கத்தக்கதாக, "சகோதரர்களென" ஒன்றுகூடுகின்றனர். அவர்கள் ஒருமனப்பாட்டிற்குள் வந்தால், அப்போது அனைத்தும் சரியாகிவிடும்; காரியத்திற்குத் தீர்வுண்டாகும்; சமாதானம் உண்டாகும்; அச்சுறுத்தின பிரிவினை விலகிடும் மற்றும் இதைக்காட்டிலும் ஞானமானது எதுவுமிராது. பெரும்பான்மையான விவகாரங்களில், சம்பந்தப்பட்டவர்கள் இடையிலான மனம்விட்டு பேசுதல், வெளிப்படையான உரையாடல் என்பது இணக்கத்தினைக் கொண்டுவந்துவிடும். ஆனால் [சம்பந்தப்பட்டவர்கள்] இருவருமே ஒரேமாதிரி யதார்த்தமாய்க் காணப்பட வேண்டும் மற்றும் கர்த்தருடைய ஆவியினால் அடக்கி ஆளப்பட்டிருக்க வேண்டும்.

மாம்சம் மற்றும் பிசாசினுடைய ஒரு கிரியையினின்று, இன்னொரு கீழ்த்தரமான கிரியையினிடத்திற்கு வழிநடத்துகின்றதும் மற்றும் சத்தியத்திலும், அதன் அன்பின் ஆவியிலும் வளர்வதை நிறுத்திவிடுகின்றதுமான அவதூறு பேசுதல் எனும் சதி செய்கிற பாவத்தினின்று இப்படியாய் நமது கர்த்தர் தம்முடைய உண்மையான சீஷர்களைக் காத்துக்கொண்டார். அவதூறான பேச்சுகளைக் கேட்பதினால் அவதூறு பேசுகிறவர்களை அவர்களது தீயச் செய்கைக்கு ஊக்குவிக்கிறவர்கள், அவர்களது தீயச்செய்கையில் பங்காளிகளாக இருக்கின்றார்கள் என்பதையும், ஆண்டவருடைய கட்டளைகளை மீறின குற்றத்தில் கூட்டாளிகளாக இருக்கின்றார்கள் என்பதையும் நாம் கவனிப்போமாக. அவதூறு பேசுகிறவர்களுக்குச் செவிக்கொடுக்க தேவனுடைய உண்மையான ஜனங்கள் மறுத்திட வேண்டும் மற்றும் இத்தவறைச் செய்பவருக்குக் கர்த்தருடைய வார்த்தையையும், அங்கீகரிக்கப்பட்ட ஒரே வழிமுறையையும் சுட்டிக்காண்பித்திட வேண்டும். நாம் தேவனைவிட ஞானிகளா? நம்முடைய சொந்த கணிப்புகளை நம்மால் நம்ப முடியாது என்பதையும், மேய்ப்பனுடைய சத்தத்தை முழுமையாய்ப் பின்பற்றிடும்போதே நாம் பாதுகாப்பாய்க் காணப்படுவோம் என்பதையும் அனுபவமானது கற்றுத் தருகின்றது.

## பிறரைப் பற்றின பேச்சையும் மற்றும் அவதூறு பேச்சையும் செவிகொடுத்துக் கேட்டிடுவதற்கு நாம் மறுத்திட வேண்டும்

எந்த ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ மற்றவர்களைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டு வந்தால், உடனடியாக அவரை அன்புடனும், அதேசமயம்

உறுதியுடனும் தடுத்துவிடுங்கள். "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 5:11). சபையில் மிகுந்த பிரச்சனையை உண்டாக்குகின்றதான இந்த மீறுதலில் - ஆண்டவருடைய அக்கட்டளையினை மீறுதலில் எவ்விதமாய்ப் பங்குகொள்வதற்கும் மறுப்புத் தெரிவித்து விடுங்கள். ஒருவேளை அச்சகோதரனோ அல்லது சகோதரியோ, ஆவிக்குரிய காரியங்களில் "குழந்தையாய்" மாத்திரம் இருப்பார்களானால், இவ்விஷயம் தொடர்பான கர்த்தருடைய கட்டளையினை அவர்களது கவனத்திற்குக் கொண்டுவாருங்கள் (மத்தேயு 18:15; 1 தீமோத்தேயு 5:19). ஒருவேளை உரையாடலானது நேரடியாய் உங்களிடத்தில் இல்லாமல், மாறாகப் பேசப்படும் இடத்தில் நீங்கள் காணப்பட மாத்திரம் செய்கின்றீர்களானால், அவ்விடத்திலிருந்து ஒதுங்கிவிடுவதன் மூலம் உங்களது மறுப்பினை உடனடியாக வெளிப்படுத்துங்கள்.

ஒருவேளை இது விஷயம் குறித்த கர்த்தருடைய கட்டளையினைக் கவனத்திற்குக் கொண்டு வந்த பிற்பாடும், அவதூறு பேசுகிறவர் "தீமைபேசுதலிலும்," "புறங்கூறுதலிலும்" தொடர்ந்து காணப்பட்டு, தனது "பொல்லாத சம்சயங்களை/ஊகங்களைச் சொல்லிக்கொண்டிருப்பாரானால், நீங்கள் கடந்துபோகையில் மிகவும் தெளிவாய்/கடுமையாய்க் கண்டித்துக்கூற வேண்டியதாவது: "என்னால் நீங்கள் பேசுவதைக் கேட்க முடியாது; நான் கேட்கவும் கூடாது; காரணம் ஒருவேளை நான் செவிக்கொடுத்துக் கேட்பேனானால், கர்த்தருடைய கட்டளையை மீறின விஷயத்தில், நானும் உங்களைப் போன்று குற்றவாளி (criminal) ஆகிவிடுவேன். ஒருவேளை நீங்கள் கூறும் கதையை நான் கேட்க வேண்டியதாயினும், என்னால் அதை நம்ப முடியாது; ஏனெனில் கர்த்தருடைய வார்த்தையை மதியாமலும், மனஸ்தாபத்தைச் சரிப்படுத்திக் கொள்ளுவதற்குரிய அவருடைய திட்டத்தைப் பின்பற்றாமலும் இருக்கும் ஒரு கிறிஸ்தவன், கர்த்தருடைய ஆவியை மிகவும் குறைவாய் வெளிப்படுத்துகிறவனாய் இருப்பதினால், அவனது வார்த்தைகள் நம்பத்தகுந்தவையாக இருக்காது. கர்த்தருடைய வார்த்தைகளைத் தட்டிக்கழிக்கிறவனும், திரித்துக்கூறுகிறவனும், சக சீஷர்களுடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் தவறாய் எடுத்துக் காட்டுவதற்கும் மற்றும் திரித்துக் கூறிடுவதற்கும் தயங்கமாட்டான்." பின்னர் அத்தகையவன் தனது தவறுகளை ஒப்புக்கொண்டு, அதைச் சீர்த்திருத்தலுக்கான உறுதிகளுடன் உறுதிப்படுத்துவது வரையிலும், அவனிடமான ஐக்கியத்தினின்று ஒதுங்கிக்கொள்ளுங்கள். ஒருவேளை அத்தகைய சம்பாஷணைக்கு நீங்கள் எவ்வளவேனும் செவிக்கொடுத்திருப்பீர்களானால் அல்லது அக்காரியத்திற்கோ, பிறரைப் பற்றிப் பேசினவருக்கோ, அவதூறு பேசினவருக்கோ எவ்வளவேனும் ஆதரவு கொடுத்திருப்பீர்களானால், நீங்கள் அந்தப் பாவத்திலும் மற்றும் அதன் சகல பின்விளைவுகளிலும் பங்காளிகளாய் இருப்பீர்கள்; மேலும் இதன் காரணமாக

"கசப்பான வேர்" முளைத்திருக்குமானால், அதனால் அசுசிபடுகிறவர்களில், நீங்களும் ஒருவராக இருப்பீர்கள் (எபிரெயர் 12:15).

சுத்தமாயிருங்கள்: தேவன் விஷயத்திலும், மனுஷர் விஷயத்திலும் குற்ற மனசாட்சி இல்லாமல் இருக்கும் நிலையினைத் தக்கவைத்துக் கொள்ளுங்கள். இதனை இருதயத்திலிருந்து துவங்குங்கள்; எந்த விதத்திலும் தீமையாய்க் காணப்படும் எந்தச் சிந்தனைகளையும் குடிக்கொள்ள வைக்காதீர்கள். இப்படியாய்க் காணப்படுவதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு, கிறிஸ்து இயேசுவை உங்கள் மாதிரியாக உங்கள் மனதின் முன் அதிகமதிகமாய் நிறுத்திக்கொள்ளுங்கள். தீமையானது வெளியிலிருந்தோ அல்லது உள்ளிலிருந்தோ உங்களுக்குள் தலையிடும்போது, ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையினை வாக்களித்துள்ளவரிடத்தில், உங்கள் இருதயத்தினை ஜெபத்தில் உயர்த்திடுங்கள். "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" எனும் ஜெபத்தினை எப்போதும் ஏறெடுத்துக்கொண்டிருங்கள் (சங்கீதம் 19:14).

## தெய்வீகப் பிரமாணத்தினுடைய கொள்கைகளைப் பற்றின உணர்ந்துகொள்ளுதலை வளர்த்திக்கொள்வோமாக

வேதவாக்கியங்களின் பல்வேறு விசேஷித்தக் கட்டளைகளைப் பின்பற்றிட நாடுகையில், தெய்வீகப் பிரமாணங்களில் அடங்கியிருக்கின்றதான கொள்கைகளைப் புரிந்துகொள்வதற்கும் மற்றும் அவற்றிற்கு இசைவாய் வந்திடவும் அதிகமதிகமாய் நாடிடுவோமாக. கர்த்தருடைய வார்த்தைகளில் குறிப்பாகக் குறிப்பிடப்படாத வகையிலுள்ள, நம்முடைய வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் கிரியைகளிலுள்ள சரி மற்றும் தவறினைப் பகுத்துணர இந்தக் கொள்கைகள் நமக்கு உதவிடும். உண்மைதான் நாம் தெய்வீகப் பிரமாணத்தினுடைய கொள்கைகளைப் புரிந்துகொள்ளும் மற்றும் அவற்றிற்கு இசைவாய் வரும் நிலைக்கும் வருகையில், அதற்கேற்ப நாம் திவ்விய வார்த்தைகளினுடைய ஆவியினைப் பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம். இது விஷயம் குறித்த சங்கீதக்காரனின் பின்வரும் சாட்சியினைக் கவனியுங்கள்: "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம். நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப்பார்க்கிலும் ஞானமுள்ள

வனாயிருக்கிறேன். உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன். நீர் எனக்குப் போதித்திருக்கிறபடியால், நான் உம்முடைய நியாயங்களை விட்டு விலகேன். உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன். உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” (சங்கீதம் 119:97-105).

அன்பிற்கு எதிரானதென - கிறிஸ்துவின் மனநிலைக்கு அல்லது ஆவிக்கு எதிரானதென - இந்தச் சண்டையிடும் மற்றும் குற்றம் கண்டுபிடிக்கும் மனநிலையினைத் தவிர்த்திடுவோமாக. உலகத்தையும், மாம்சத்தையும் மற்றும் பிசாசையும் மற்றும் இவைகளின் பல்வேறு கண்ணிகளையும் ஜெயங்கொள்வதற்குக் கொஞ்சம் போராடுவதற்குரிய தைரியம் தேவைப்படுகின்றது. இந்தப் போராடும் தன்மையானது, முதலாவது நமக்குள்ளும், இரண்டாவதாக மற்றவர்களுக்குள்ளும் காணப்படும் பாவத்திற்கு எதிராக முறையாயும், ஞானமாயும் பிரயோகிக்கப்படுமாயின், கர்த்தருக்காகவும், அவருடைய ஜனங்களுக்காகவும் மற்றும் சாத்தானுக்கு எதிராகவும் மற்றும் அவனது சகல இருளின் அதிகாரங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுமாயின், அது நமக்கும், ஆண்டவருடைய காரணங்களுக்கும் விலையேறப்பெற்ற உதவிகரமாகக் காணப்படும். இது வேதவாக்கியங்களில், நல்லதொரு போராட்டம் போராடுதலென்று அழைக்கப்பட்டுள்ளது மற்றும் நாம் அனைவரும் நீதிக்கும், சத்தியத்திற்குமான இந்த யுத்தத்தில் வீரமுடைய போர்ச் சேவகர்களாகக் காணப்பட்டு, நம்முடைய அதிபதிக்குரிய கனத்தினையும், அவரது ஜனங்களுடைய சுயாதீனங்களையும் அன்பாய்க் காத்துக் கொள்ள வேண்டும்.

## தீமையின் அதிகாரங்களானது, எதிர்த்துப் போராடும் தன்மையினைப் பிரதான பண்பாக்குகின்றன

ஆனாலும் எதிர்த்துப்போராடும் தன்மையானது நல்லவிதமாய் இப்படிப் பயன்படுத்தப்படுகிற காரியமானது, இவ்வுலகத்தின் அதிபதிக்குப் பிரியமாய் இருப்பதில்லை; இவன் தன்னால் நேரடியாய்ப் பயன்படுத்த முடியாததைத் தவறான விதத்தில் பயன்படுத்திடுவதற்கு நாடிடுவான். இதன் விளைவாக, அவன் சிலரிடத்தில் எதிர்த்துப்போராடும் தன்மையினை, பிரதான பண்பாக்கிட முற்படுகின்றான். அனைத்தையும் மற்றும் அனைவரோடும் இவர்கள் எதிர்த்துப் போராடுவதற்கு ஊக்குவிக்கின்றான்; இருளின் அதிகாரங்களைப் பார்க்கிலும்

சகோதரரையும், பெயர்ச்சபை மனுஷர்களைக் குருடாக்கி - அவர்களை இப்படி மாற்றிப் போட்டதான தப்பறைகள் மற்றும் அறியாமையைப் பார்க்கிலும், பெயர்ச் சபை மனுஷர்களையும் அதிகம் எதிர்த்துப் போராடுவதற்கு ஊக்குவிக்கின்றான். உண்மையில் நம்மைத் தேவனோடே போர்ச்செய்ய வைப்பதே அவனது விருப்பமாய் இருக்கின்றது.

இவ்விஷயத்தில் நாம் கவனமாய் இருப்போமாக. மற்றவர்கள் முன்பு நாம் இடறலின் கற்களைப் போட்டுவிடாமல் இருக்கத்தக்கதாக, முதலாவது நாம் நம்மைப் பகுத்துணருவோமாக; அற்ப காரியங்களிலிருந்து மலைகளை உண்டுபண்ணிடு வதற்கு நாடுகின்றதும் மற்றும் முக்கியத்துவமற்ற விஷயங்களில் எல்லாம் குற்றம் காணுகிறவர்களாகவும் மற்றும் எதிர்த்துப் போராடுகிறவர்களாகவும் நம்மை மாற்றுகின்றதுமான நம்முடைய சொந்த இருதயங்களில் உள்ள தவறான ஆவிக்கு எதிராய் நாம் போராடுவோமாக. "பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன்" மகாபெரியவனாய் இருக்கின்றான் (நீதிமொழிகள் 16:32). சுயமகிமை எனும் உள்நோக்கத்திற்காக இல்லாமல், சத்தியத்திற்கான அன்பின் நிமித்தமாக, கர்த்தருக்கான, அவரது ஜனங்களுக்கான - சகோதரருக்கான அன்பின் நிமித்தமாக, சத்தியத்திற்கான நம்முடைய போராடுதல்கள் காணப்படத்தக்கதாக, நம்மை நாம் காத்துக்கொள்வோமாக. ஒருவேளை அன்புதான் இயக்கும் ஆவியாக அல்லது உள்நோக்கமாக இருக்குமானால், அது சக ஊழியர்கள் யாவரிடத்திலுமான அன்புடன்கூடிய, பொறுமையுடன்கூடிய, சாந்தத்துடன்கூடிய, தாழ்மையுடன்கூடிய நடக்கையில் வெளிப்படும். நாம் "யாவரிடத்திலும் சாந்தத்துடன்" காணப்படுவோமாக. ஜீவனும், வல்லமையுள்ளது மான தேவனுடைய வார்த்தையாகிய, ஆவியின் பட்டயமானது, வெட்டுதல் யாவற்றையும் செய்வதாக.

துர்க்குணம், பொறாமை, பகைமை, வாக்குவாதத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டுள்ள இருதயத்தினுடைய நிலைமைகள், எண்ணங்கள், உணர்வுகள் யாவற்றையும் குறித்து, எச்சரிக்கையாய் இருப்போமாக. இவைகளுக்கு ஒரு கணம்கூட உங்கள் இருதயத்தில் எந்த இடத்தையும் கொடுக்காதீர்கள்; ஏனெனில் அவை மற்றவர்களுக்குப் பாதகம் பண்ணிட உங்களை வழிநடத்திடுவதோடல்லாமல், உங்களுக்கும் மிகுந்த பாதகத்தினை நிச்சயமாய் உண்டுபண்ணிடும். தேவனிடத்திலும், அவரது சகல சிருஷ்டிகளிடத்திலும் அன்பினால் நிரம்பின நிலையில் உங்களது இருதயங்களை, உங்களது சித்தங்களை, உங்களது நோக்கங்களை மற்றும் விருப்பங்களைக் காத்துக்கொள்ளுங்கள் - தேவனிடத்தில் மிகவும் ஊக்கமாய் அன்புகொண்டிருங்கள்

மற்றும் இதற்கேற்ப அவருடைய ஆவியைப் பெற்றிருப்பவர்கள் மற்றும் அவர் வழிகாட்டும் வழியில் நடப்பவர்கள் யாவரிடத்திலும் அன்புகொண்டிருங்கள்.

## மனசாட்சியினை மாத்திரமே நம்பிவிடாதீர்கள்

மனசாட்சியே போதுமான வழிகாட்டியாக இருக்குமானால், உங்களுக்கு வேதவாக்கியங்களினுடைய அவசியம் இராது. பெரும்பான்மையானவர்களுக்கு மனசாட்சி என்ற ஒன்றே இருப்பதில்லை; ஏனெனில் அவர்கள் மனசாட்சிக்கு வழிக்காட்டும்படிக்கு அருளப்பட்டுள்ளதான தேவனுடைய பிரமாணங்களுக்கும், கொள்கைகளுக்கும் குருடர்களாய் இருக்கின்றனர்; இவர்களைவிட மோசமானவர்கள் 1 தீமோத்தேயு 4:1-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். ஆகையால் கர்த்தருடைய வார்த்தைக்குக் கவனமாய்ச் செவிக்கொடுப்பதும், அதன் வெளிச்சத்திற்கு ஜாக்கிரதையாய் நடப்பதும் கண்டிப்பாய் அவசியமாய் இருக்கின்றது.

நமக்கு எதிராய் மிகவும் அதிகமாய்ப் பேசப்பட்டுவிட்டது, ஆகையால் ஓட்டத்தை விட்டுவிடுவோம் என்று எண்ணத்தக்கதாக நம்முடைய மனதில் சோர்ந்தோ அல்லது தளர்ந்தோ போய்விடக் கூடாது. மாறாக நம்முடைய நன்மைக்கு ஏதுவாய் அனைத்துக் காரியங்களையும் நடப்பித்துக் கொண்டிருக்கின்றதான பிதாவுக்குத் தெரிந்தே, எதுவும் நம்மீது கடந்துவருமே ஒழிய, மற்றப்படி வேறெதுவும் வராது என்று நாமும் நமது கர்த்தர் போன்று உறுதியடைந்து காணப்பட வேண்டும். இப்படியாகத்தான் நமது கர்த்தர், அவருக்கான உயர்த்தப்படுதலுக்கு ஆயத்தமாக்கப்பட்டார். ஆகையால் நமக்கான பல்வேறு அனுபவங்களினால் நாம் நன்றாய்ப் பயிற்றுவிக்கப்பட்டால் மற்றும் நமக்கு வழிகாட்டத்தக்கதாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான கட்டளைகளை நாம் முடிந்தமட்டும் பின்பற்றினோமானால், நமது கர்த்தருக்குக் காணப்பட்டதுபோல, நமக்கும் நீதிக்கு எதிரான எதிர்ப்புகளும், அவதூறு பேச்சுகளும், வைதல்களும் ஆசீர்வாதங்களைக் கொணர்கிறதாய் இருக்கும்.

ஆனால் எப்படிக் கர்த்தர் எதிர்ப்புகளை உண்மையாய்ச் சகித்து அனுபவித்தார் என்பதைக் கவனிக்கத் தவறினபடியால், எத்தனை பேர் தளர்ந்துபோய், பரிசினை இழந்துபோவதற்குரிய அபாயத்தில் காணப்படுகின்றனர்! இவர்கள், பரிபூரணராய் இருந்த கர்த்தர் நீதியின் நிமித்தம் எல்லா விதத்திலும் அநியாயமாய்ப் பாடுபட்டார் என்றும், தங்கள் நடக்கைகளானது பூரணமற்றது என்றும் கவனிப்பார்களானால், இவர்கள் நன்மைச் செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்பார்கள்; "இயேசு கிறிஸ்துவின் நல்ல போர்ச் சேவகனெனத்

தீங்கநுபவிப்பதற்கும்" மற்றும் போராடுவதற்கும் கற்றுக்கொள்வார்கள்; "விசுவாசத்தில் நல்ல போராட்டத்தினைத் தொடர்ந்து போராடுவார்கள்." "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் (சபையைப்போல்) சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபிரெயர் 4:15).

---

R5528

# தீமை பேசுதல் என்றால் என்ன?

*"ஒருவனையும் தூஷியாமல் இருங்கள்." (தீத்து 3:2)*

அப்போஸ்தலனுடைய கட்டளையானது மிகவும் திட்டவட்டமாயுள்ளது; நாம் யாரைக்குறித்தும் தீமைபேசிடக்கூடாது. அப்படியானால், பரிசுத்த பவுல் இங்கு என்ன அர்த்தத்தில் பேசியுள்ளார்? மனுஷனுக்கு எதிரான தீமையான நோக்கத்தில், நாம் அம்மனுஷன் குறித்த எதையும் பேசிடக்கூடாது என்ற அர்த்தத்தில் கூறுகின்றாரா? அல்லது நோக்கம் என்னவாக இருப்பினும் சரி, தீமை பேசாதே எனும் அர்த்தத்தில் கூறுகின்றாரா? என்ற கேள்விகள் எழும்புகின்றன. தவறான நோக்கத்தோடு, தவறான எண்ணத்தோடு தீமை பேசுதல் என்பது, மிகக் கொடிதான குற்றமாக, விசேஷமாக தேவனுடைய பிள்ளைக்கு இருக்குமென நாம் நிச்சயமாய் அறிவோம் என்று நாம் பதிலளிக்கின்றோம். உங்களது நோக்கம் என்னவாக இருப்பினும் சரி, யாரைக்குறித்தும் தீமை பேசாதிருங்கள் எனும் அர்த்தத்திலேயே அப்போஸ்தலன் கூறியுள்ளார் என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவேளை இதுதான் அப்போஸ்தலனின் கருத்தாக இருக்குமானால் மற்றும் இதுதான் கருத்து என்பது மறுக்கப்பட முடியாது என்றும், அக்கருத்தானது, கர்த்தருடைய ஜனங்கள் அனைவர்மேலும் மிகவும் கண்டிப்பான கட்டளையை வைக்கின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் நம்புகின்றோம். தீமை பேசுவதற்கான நோக்கம் தீயதாக இருக்குமானால், காரியம் மிக மோசமானதாய் இருக்கும்; ஆனால் நல்லதோ, தீயதோ, "ஒருவனையும் குறித்துத் தீமை பேசாதிருங்கள்."

இப்பொழுது தீமை பேசுதல் என்றால் என்ன? என்ற வேறொரு கேள்வியும் எழும்புகின்றது. இவ்விஷயத்திற்கு அநேகம் பாகங்கள் இருக்கின்றன. தீமை பேசுதல் என்பது, கெடுதல் உண்டாக்குகிறதைப் பேசுகிறதாய் இருக்கும்;

ஆகையால் எந்த மனுஷனுக்கும் கெடுதல் உண்டாக்கும் எதையும் ஒருவன் பேசிடக்கூடாது. நாம் பொன்னான பிரமாணத்தைப் பொருத்திப் பார்ப்போமானால் இக்கட்டளையினுடைய நீதியும், நியாயமும் மிக எளிமையாகப் புரிந்துகொள்ளப் படலாம். யாரேனும் நமக்குத் தீமை செய்திட நாம் விரும்புவோமா? யாராவது - நம்மை மரியாதைக் குறைவாகப் பேசுவதை, நம்முடைய தவறுகள் குறித்து விமர்சிப்பதை அல்லது பேசுபவர் நம்மிடத்திலுள்ள தவறு என்று கருதிடும் காரியங்கள் குறித்து அவரால் விமர்சிக்கப்படுவதை மற்றும் இப்படியாக மற்றவர்களுடைய பார்வையில் நம்மை இழிவுப்படுத்திடுவதை - நாம் விரும்புவோமா? கர்த்தருடைய ஜனங்கள் பொன்னான பிரமாணத்தினை ஜீவியத்தின் ஒவ்வொரு காரியங்களிலும் செயல்படுத்திட கற்றுக்கொள்வார்களானால், அது நிச்சயமாய் மிகவும் உதவிகரமாயிருக்கும்.

இந்த விஷயத்தில் மிகுந்த கடமை உணர்சியுள்ள கிறிஸ்தவர்கள் சிலருக்குச் சிரமம் காணப்படுகின்றது. தீமை பேசுதல் எனும் இக்காரியத்தைச் சிந்திக்கையில், என்னுடைய நோக்கம் சரியானதா? என்று சிலர் சிந்திக்கின்றவர்களாய் இருக்கின்றனர். அப்போஸ்தலனுடைய கட்டளைக்கும், மற்றவர்களை இழிவாய்ப் பேசுவதிலுள்ள தங்களது நோக்கத்திற்கும் எச்சம்பந்தமும் இல்லை என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர். நோக்கம் என்னவாக இருப்பினும், நாம் தீமை பேசிடக்கூடாது. எனக்கு நல்ல நோக்கம் காணப்படுகின்றதா அல்லது கெட்ட நோக்கம் காணப்படுகின்றதா? என்பது கேள்வியல்ல; மாறாக நான் தீமை பேசுகின்றேனா? பொன்னான பிரமாணத்திற்கு முரணாக - அதாவது என்னைக்குறித்துப் பேசப்படுவதை நான் விரும்பிடாத - மற்றவர்களைக் குறித்த எதையாவது நான் பேசுகின்றேனா? என்பதுதான் கேள்வி. இக்கட்டுரையினை வாசிக்கும் ஒவ்வொரு வாசகனுடைய இருதயங்களிலும், மனங்களிலும் இக்கருத்தினைப் படிப்படியாகப் பதியவைத்திட நாம் விரும்புகின்றோம்.

## விதிமுறைகள் மீறப்பட்டது குறித்துத் தகவல் அளிப்பது தீமைபேசுதலா?

இப்பொழுது எழும் இன்னொரு கேள்வி என்னவெனில்: நம்முடைய ஆதார வசனத்தின் கட்டளையை நாம் எப்படி இல்லத்தில் அல்லது அலுவலகத்தில் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கடைப்பிடித்திட வேண்டும்? நாம் காணப்படுகின்றதான இல்லத்திலோ, அலுவலகத்திலோ, அந்த அலுவலகத்தின் அல்லது வீட்டின் நிர்வாகத்திற்கெனக் குறிப்பிட்ட சில விதிமுறைகள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்ளுவோம். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், அந்த விதிமுறைகள் மீறப்படுகிற காரியத்தினைக்குறித்து நாம் தகவல் கொடுப்பது நம்முடைய சார்பில் நாம் தீமை

பேசுவதாய் இருக்குமா? அது தீமை பேசுதலாய் இருக்குமென நாம் கருதுகிறதில்லை. ஒருவேளை நாமே விதிமுறைகளை மீறும் பட்சத்தில், நம்மைக்குறித்துத் தகவல் கொடுக்கும் நபர் சரியான காரியத்தையே செய்கின்றார் - அவர் நமக்குத் தீமையோ அல்லது கெடுதலோ அல்லது பாதகமோ செய்கிறதில்லை. விதிமுறைகள் மீறப்படுகிற காரியத்தைக்குறித்துத் தகவல் கொடுக்காத நபர், தவறான நடத்தையில் நாம் தொடர்ந்து கொண்டிருப்பதற்கு நம்மை ஊக்குவிப்பவராக இருந்திடுவார்.

எந்தவொரு வழிமுறையினை மேற்கொள்கையிலும், தேவனுடைய ஜனங்கள் எப்போதும் நல்ல நோக்கங்களையே கொண்டிருக்க வேண்டுமே ஒழிய, வேறு எதையுமல்ல. மற்றவர்களைக் கையாளும் விஷயத்தில் நல்நோக்கத்தினை இல்லாமல், வேறு நோக்கத்தினைக் கொண்டிருப்பது என்பது கொலைப்பாதக நோக்கத்தினைக் கொண்டிருப்பதாகும். மேலும் தீமை பேசுதல் விஷயத்தில், நாம் நோக்கத்தினை பொருட்படுத்திடக்கூடாது. ஓர் அலுவலகத்திலோ, ஓர் இல்லத்திலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ, வேலை ஒன்றினைப் பொறுப்பேற்கும் ஒருவர், அந்த வேலை தொடர்புடையதான நிபந்தனைகளுக்கும், பலவகையான விதிமுறைகளுக்கும்கூட ஒப்புக்கொள்கின்றார். அலுவலகத்திலோ அல்லது இல்லத்திலோ காணப்படுகின்றதான கிட்டத்தட்ட அனைத்து விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் யாருக்கேனும் பாதகம் ஏற்படுத்த வேண்டும் எனும் கண்ணோட்டத்தில் இல்லாமல், மாறாக தொழிலினுடைய அல்லது குடும்பத்தினுடைய பொதுவான நலனிற்காகவே ஏற்படுத்தப்படுகின்றது என்பதில் ஐயமில்லை. ஆகையால் இந்தக் கடமைகள் யாவற்றையும் கடைப்பிடிப்பது என்பது, முக்கியமான பொறுப்பாயுள்ளதெனக் கருதப்பட வேண்டும். விதிமுறைகள் மீறப்பட்டுள்ள காரியத்தினை ஒருவர் தீமையான விதத்தில் தகவல் கொடுக்காமல், மாறாக உண்மையை மாத்திரமே தகவல் கொடுத்திட வேண்டும்.

தகவல் கொடுத்திடும் ஒருவர், தான் யாரைக் குறித்துத் தகவல் கொடுக்கின்றாரோ, அவரின் இருதயத்தை நியாயந்தீர்ப்பதற்கு இவருக்கு அவசியமில்லை. கேள்வி, கெட்ட இருதயம் பற்றினதல்ல. ஒருவர் முட்டாளாகவோ அல்லது மறதியுடையவராகவோ அல்லது கவனமற்றவராகவோ காணப்பட்டு, முக்கியமான விதிமுறைகளை மீறுவாரானால், இவ்விஷயம் குறித்துத் தகவல் கொடுப்பது என்பது, அதுவும் தகவல் கொடுத்திடுவதற்கு விதிமுறைக் காணப்படும் சந்தர்ப்பங்களில் தகவல் கொடுப்பது என்பது, இருதயத்தை நியாயந்தீர்ப்பதாய் இருக்காது. அது கடமையாக மாத்திரமே காணப்படும் - கட்டளையிடப்பட்டதைச் செய்ததாக மாத்திரம் காணப்படும் மற்றும் இது அவசியமானதாகவும், முறையானதாகவும் இருக்கின்றது. இந்தக் கொள்கையானது, தேவனுடைய செய்கையாகிய நம்முடைய சரீரங்களில் காணப்படுவதை நாம் பார்க்கின்றோம்.

சரீரத்தில் ஏதாகிலும் நடக்கிறதெனில் - உதாரணத்திற்கு விரல் ஒன்று நசுக்கப்படுகிறதெனில், நரம்புகளானது உடனடியாக மூளைக்குச் செய்தி அனுப்பிவிடுகின்றது. ஒருவேளை பாதத்தில் காயம் ஏற்பட்டால், இச்செய்தி உடனடியாக மூளைக்கு அனுப்பிவிடுகின்றது. சரீரத்திலுள்ள ஓர் அவயவத்திற்கு ஏற்பட்ட தீங்கினை, மூளைக்குச் செய்தி அனுப்பிடுவதற்கான தொடர்பு வழிவகை இல்லையென்று வைத்துக்கொள்ளுங்கள்; செய்தியினை அனுப்பிடுவதற்கு உணர்ச்சி நரம்புகள் இல்லையென்று வைத்துக்கொள்ளுங்கள்; இப்படி இருக்குமானால், ஒருவன் தனது கைவிரலையோ அல்லது கால்விரலையோ தான் இழந்துள்ளானா அல்லது இல்லையா என்பதை அறியாதவனாய் இருப்பான். அவன் கால் தடுமாறி, விழுவது வரையிலும், தான் ஒரு காலை இழந்துள்ளான் என்பதை அறியாதவனாய் இருப்பான்.

## விஷயம் குறித்து, விதியைப் புறக்கணித்தவரிடம் விவாதிக்கப்படக்கூடாது

நம்முடைய சொந்த தனிப்பட்ட காரியங்களானது, தாக்கப்படக்கூடாது என்று எப்போதும் பார்த்துக்கொள்பவர்களாக நாம் காணப்படக்கூடாது. நாமும் சரி, மற்றவர்களும் சரி அபூரணங்களைப் பெற்றிருக்கின்றோம் என்பதை நாம் அறிவோம். ஒருவேளை மற்றவர்கள் கவனக்குறைவினால் நம்மைக் காயப்படுத்திடுவார்களானால், நாமும் சிலசமயங்களில் மற்றவர்களைக் காயப்படுத்திட வாய்ப்புண்டு என்பதை நாம் அறிவோம். ஆனால் தனிப்பட்ட காரியங்கள் என்பது குடும்பம் அல்லது அலுவலகம் சம்பந்தப்பட்ட காரியங்களிலிருந்து வேறுபட்டவைகளாய் இருக்கின்றன. இல்லத்தினுடைய அல்லது அலுவலகத்தினுடைய விதிமுறைகள் மீறப்படுகிற காரியத்தினைக் குறித்துத் தகவல் கொடுப்பது என்பது அந்நிய காரியங்களில் தலையிடுகிறதாய் இராது. ஒரு குடும்பத்தினுடைய அல்லது ஒரு நிறுவனத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனுடைய நலம் கருதியே, முறையான மற்றும் நியாயமான விதத்தில் முழுக்குழுவினருடைய நலன்களானது பார்த்துக்கொள்ளப்படுகின்றது.

அலுவலகத்தில் காணப்படும் ஒருவர், அலுவலகத்தில் காணப்படும் அனைவரையும் சரிப்படுத்த முற்படுவது என்பது முறையான காரியமல்ல. ஒருவன் சுற்றித்திரிந்து மற்றவர்களைச் சரிப்படுத்திட முற்படக்கூடாது; அது அவன் காரியமாய் இராது. ஒருவேளை வேறொருவன் விதிமுறைகளை மீறுகிறான் என்றால், உண்மைகளோடு எதையும் சேர்த்துச் சொல்லாமல், உண்மைகளைத் தகவல் கொடுப்பது அவனது காரியமாய் இருக்கும். ஒருவேளை இப்படி இல்லாமல், ஒருவேளை மீறுதலைக் கவனிக்கும் ஒவ்வொருவரும், விதிமுறைகளை

மீறினவரிடத்தில் போய், இப்படியாக அலுவலகத்திலோ, குடும்பத்திலோ காரியத்தைச் சரிப்படுத்த முற்படுவார்களானால், தொடர்ந்து குழப்பமே நிலவும். விதிமுறையினை மீறினவர் தன்னைத் தற்காத்துக்கொள்ளும் விதமாக, "என் நடத்தை அனைத்தும் சரியாகவே உள்ளது மற்றும் வாயிற்கதவு (gate) திறந்து கிடந்தாலும் சரி, மூடிக்கிடந்தாலும் சரி, அது உன் காரியமல்ல" என்று சொல்லிடலாம். ஆனால் ஒருவேளை வாயிற்கதவு மூடப்படாமல் திறந்தே கிடக்கிறதென்றால், உரிய அதிகாரியிடம் காரியத்தினைக்குறித்துத் தகவல் கொடுப்பது உங்கள் கடமையாயிருக்கின்றது மற்றும் இப்படியாக காரியத்தின் பொறுப்பினின்று நீங்கள் விடுவிக்கப்படலாம். இது மத்தேயு 18:15-18-வரையிலான வசனங்களின் அடிப்படையில் கையாளப்பட வேண்டிய ஒரு தனிப்பட்ட காரியமல்ல. காரியம் குறித்து டாம் அவர்களிடமோ, டிக் அவர்களிடமோ, ஹேரி அவர்களிடமோ, மேரி அவர்களிடமோ அல்லது ஜேன் அவர்களிடமோ போய்ச் சொல்வது நம்முடைய கடமையல்ல. நாம் சொல்ல வேண்டியது (உரிய அதிகாரியிடத்தில்தான்) ஒரேயொரு நபரிடத்தில்தான் மற்றும் தகவலானது சகல பரிவான உணர்வுகளுடனும் சொல்லப்பட வேண்டும்.

பல நபர்களிடத்திற்குச் சென்று, அவர்களைச் சரிப்படுத்துவதற்கு முற்படுவதன் வாயிலாக முழு வீட்டையும் அல்லது அலுவலகத்தையும் நடத்திட முற்படும் ஒருவர், சீக்கிரத்தில் தனக்குப் பிரச்சனையை வருவித்துக்கொள்வார். ஒருவேளை புதிதாய் ஒருவர் வேலைக்குச் சேர்ந்து, அவர் தற்செயலாய் விதிமுறை ஒன்றினை மீறிவிடுகிறாரெனில், அவரிடத்தில்: இங்கு இப்படி, இப்படிச் செய்ய வேண்டும் என்ற விதிமுறை உள்ளது - என்று சொல்லிடுவது சரியாய் இருக்கும், எனினும் இதை ஒருமுறைக்குமேல் அவரிடம் சொல்லிக்கொண்டிருப்பதும் சரியாய் இராது. இரண்டாம் விசை மீறுதல்பண்ணப்படும்போது, அன்பின் ஆவியில் அது குறித்துத் (உரிய அதிகாரியிடம்) தகவல் கொடுக்கப்பட வேண்டும்.

## பலவகையான சந்தர்ப்பங்கள்

நாம் சம்பந்தப்பட்டதான காரியங்களில், சபையில் நாம் மேற்கொள்ள வேண்டிய சரியான நடத்தைப் பற்றின விஷயத்தில் கேள்வியினைப் பொருத்திப்பார்ப்போமானால், நம்முடைய தனிப்பட்ட பொறுப்பு என்னவென்று நாம் காணலாம். "உன் சகோதரன் உனக்கு, விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில்போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து." வேறுயாருக்கோ எதிராக அவன் செய்திட்ட விஷயம் பற்றி நமது கர்த்தர் குறிப்பிடாமல், மாறாக "உனக்கு" விரோதமாக - என்றே குறிப்பிட்டுள்ளார். "இவர் அந்தச் சகோதரனுக்கு விரோதமாய் ஏதோ

செய்துகொண்டிருக்கின்றார் என்று நான் எண்ணுகின்றேன்” என்று சிலர் கூறிடலாம். “இந்தச் சகோதரன் தன்னுடைய மனைவியை நன்றாய் நடத்துகிறதில்லை என்று எண்ணுகின்றேன்” என்று சிலர் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். “அது அச்சகோதரனுடைய காரியமாகவும், அவரது மனைவியின் காரியமாகவும் இருக்கின்றது; அது உங்கள் காரியமல்ல. உங்கள் சொந்த மனைவியை அல்லது கணவனை, உங்கள் சொந்த பெற்றோரை, உங்கள் சொந்த குழந்தைகளைப் பார்ப்பதே உங்கள் காரியமாய் இருக்கின்றது; மற்றவர்களை விட்டுவிடுங்கள். உங்கள் விஷயத்தைப் பார்த்துக்கொள்வதற்கு நீங்கள் பழகிக்கொள்ள நாங்கள் அறிவுரை வழங்குகின்றோம். உங்கள் சொந்த காரியங்கள் குறித்த உங்கள் கடமைகளைச் செய்யுங்கள் மற்றும் மற்றவர்களின் காரியங்களைக்குறித்து விமர்சிப்பதைத் தவிர்த்திடுங்கள்” என்று நாம் பதிலளிக்கின்றோம்.

ஆனால் சில மோசமான தவறைப் பார்க்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்; நாம் தெரு வழியே போய்க்கொண்டிருக்கையில், ஒரு மனிதன் கொடூரமாய்க் குதிரை ஒன்றினை அடித்துத் துன்புறுத்துவதை நாம் பார்க்கின்றோம் என்று வைத்துக்கொள்வோம்; நாம் எதுவும் பேசக்கூடாதா? இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் நாம் ஒரு காவல்துறையாளரைக் காண்போமானால், அவரிடம்: “அந்த மனுஷன் அக்குதிரையைத் துன்புறுத்துவதைக் கவனித்துக்கொள்வீர்களா?” என்று கூறிடலாம் அல்லது அவ்விடத்தில் மனிதாபிமான சமுதாய அமைப்புகள் காணப்படும் பட்சத்தில், அவைகளுக்கு இது குறித்துத் தகவல் கொடுக்கப்படலாம். ஒருவேளை பெற்றோரில் ஒருவர் குழந்தையை மிருகத்தனமாய் அடித்துத் துன்புறுத்துவதையோ அல்லது இதுபோன்ற வேறு எதையாகிலும் காண்போமானால், அதைக் குறித்து உரிய அதிகாரிகளிடம் தகவல் கொடுப்பது சரியானதே. ஆனாலும் பொதுவாயுள்ள காரியங்கள் அனைத்தையும்போய், சரிப்படுத்த முற்படுவது என்பது அனைவருக்குமடுத்த காரியமல்ல. உலகம் முழுக்க தீமையினால் நிறைந்துள்ளது மற்றும் இப்படியாகவே இராஜ்யம் கட்டுப்பாட்டினை எடுக்கும் வரையிலும் காணப்படும்.

உலகத்தில் பார்க்கின்றதான எண்ணற்ற பிரச்சனைகளை, அதன் போக்கில் விட்டுவிடுவது சபைக்கு நலமாயிருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம்; ஏனெனில் தவறான யாவற்றையும் நாம் சரிபடுத்தத் தொடங்குவோமானால், இராஜாதி இராஜனும், கர்த்தாதி கர்த்தருமானவருக்கு ஊழியஞ்செய்திடுவதற்கு நமக்கு நேரம் இல்லாமல் போய்விடும். நமக்கு நேரம் கொஞ்சமாகவே உள்ளது. ஜனங்கள் ஏற்கெனவே நம்மைக்குறித்துத் தவறான கருத்துக் கொண்டிருக்கின்றனர்; ஆகையால் நாமும் எதிர்ப்பினைத் தேவையில்லாமல் அதிகரித்துக்கொள்ள வேண்டாம். ஒருவேளை சபைக்கும், நம்முடைய குடும்பங்களுக்குமான நம்முடைய

கடமைகள் யாவற்றிற்கும் செலவிடும் நேரம் போக, எப்போதேனும் நேரம் இருக்குமானால், அப்போது இந்த வெளிக் காரியங்கள் சிலவற்றைப் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் நமக்கு மிகக்குறைவான நேரமே உள்ளது மற்றும் இதனால் நமது இன்றியமையாத கடமைகள் மற்றும் கர்த்தருக்கும், சகோதரருக்குமான நம்முடைய ஊழியங்கள் போக, மற்றப்படி மற்றக் காரியங்களைப் பார்ப்பதற்கு மிகவும் குறைவான வாய்ப்புகளே நமக்குக் காணப்படுகின்றது. மேலும் இதற்காக நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்; ஏனெனில் நமக்கு விரோதமாய் எதிர்ப்புக் காணப்படுமானால், அது நமது பரலோக இராஜாவுக்கு நாம் உண்மையாய் இருந்ததன் காரணமாக மாத்திரமேயாகும்.

உலகத்தின் காரியங்களைச் சரிப்படுத்துவதற்கு நமது இராஜா நமக்கு அதிகாரம் அளித்திடவில்லை. எனினும் நமக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது, எவ்வித வாக்குவாதத்திற்குள்ளாகக் கடந்து செல்லாமல், நீதியின் கொள்கைகளை நாம் அறியப்பண்ணிட/முன்வைத்திட வேண்டும். நம்முடைய இராஜா வந்து, தம்முடைய ஆளுகையைத் துவங்குகையில் மற்றும் நாம் அவரோடுகூட உயர்த்தப்பட்டிருக்கையில், நிர்வாகம் என்பது எப்படி இருக்க வேண்டுமென்று நாம் உலகத்திற்குக் காண்பித்துக் கொடுப்போம்! ஆனால் இப்பொழுதும்கூடச் சட்டங்கள் எவ்வளவு நல்லவைகளாக இருக்கின்றன என்பது ஆச்சரியமாகவே உள்ளது. உதாரணத்திற்கு நியூயார்க் நாட்டின் நற்சட்டங்களைக்குறித்துச் சிந்தித்துப் பார்க்கையில், நாம் வியப்பே அடைகின்றோம். அந்த நாடானது எப்படிப் பெரும்பாலானவர்களின் நலனுக்கடுத்த காரியங்களைக் கவனித்திட முயற்சிக்கின்றது என்றும் மற்றும் அது ஜனங்களுக்காக எவ்வளவு காரியங்களைச் செய்துள்ளது என்றும் பார்ப்பதற்கு ஆச்சரியமாய் உள்ளது; பாவப்பட்ட உலகமானது, இவ்வளவுக்குச் செய்ய முடிந்தபடியால், நாம் மகிழ்வுறுகின்றோம். இத்தகைய பிரதிகூலமற்றச் சூழ்நிலைகளின்கீழ், அவர்கள் செய்துள்ளவைகளை நாம் பாராட்டுகின்றோம். அனைத்துமே நீதியின் பிரமாணத்தின் கீழ்க் காணப்படும்போது, அது எத்துணைப் பிரம்மாண்டமான காலமாய் இருக்கும் மற்றும் எத்துணைப் பிரம்மாண்டமான உலகமாய் இருக்கும்!

## கேள்வியின் இன்னொரு பாகம்

சபையில் தீமைபேசுதல் குறித்த காரியத்திற்கு இப்போது திரும்பிவருகின்றோம்; மூப்பர் அல்லது உதவிக்காரர் ஊழியத்திற்கு ஒரு சகோதரன் முன்மொழியப்பட்டிருக்கின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் நமக்கு மாத்திரமே தெரிந்திருக்கிறதும், ஆனால் மீதமுள்ள சபையாருக்குத் தெரிந்திராததுமான குறிப்பிட்ட சில காரணங்களினிமித்தம், நம்முடைய கணிப்பில்

அச்சகோதரன் அத்தகைய ஊழியத்திற்குத் தகுதியற்றவராக இருக்கின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவ்விஷயத்தில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? ஒருவரையும் குறித்துத் தீமை பேசக்கூடாது என்று நாம் எச்சரிக்கப்பட்டிருக் கின்றோம். நாம் எழும்பி நின்று, "சகோதரரே, சகோதரர் A அவர்கள் மூப்பராகிடுவதற்கு முற்றிலும் தகுதியற்றவர் என்று நான் கருதுகின்றேன்; அவர் இன்னின்ன காரியங்களையெல்லாம் செய்திருக்கின்றார்; ஒரு பெண்ணிடம், பணம் விஷயத்தில் ஏமாற்றியுள்ளார் அல்லது வேறு ஏதேனும் குற்றச்சாட்டு இருக்குமாயின், அதையும் குறிப்பிட்டு இவைகளையெல்லாம் நான் அறிவேன்" என்று நாம் சொல்லிட வேண்டுமா? இப்படியாக நாம் சொல்லிடலாமா? இல்லை! சபையினுடைய நலனுக்காக தீமைபேசுவதும், நன்மை வரத்தக்கதாக தீமை செய்வதும் நமது கடமையாக இருக்கின்றதா? நிச்சயமாக இல்லை! ஆனால் பழைய சிருஷ்டியானது, தீமை பேசிடுவதற்கான ஒரு வாய்ப்பினை எப்போதும் விரும்புகின்றது; அவனுக்குப் பகுதிவாய்ப்பினைக் கொடுத்துப்பாருங்கள், அவன் அனைவரிடமும், தான் அறிந்தவற்றை உடனே சொல்லிடுவான்!

அப்படியானால், நாம் என்ன செய்ய வேண்டும்? சரி, ஒருவேளை நாம் அச்சபையாரின் ஓர் அங்கத்தினனாய் இருப்போமானால், நாம் இப்படி முன்மொழியப்பட்டிருக்கும் சகோதரனிடத்திற்குப் போய் அவரிடம், "சகோதரன் A அவர்களே, யாரிடமும் தெரிவித்திட நான் விரும்பிடாத உங்களைக் குறித்த சில காரியங்களை நான் அறியவந்துள்ளேன். அருமையான சகோதரனே, உங்களைக்குறித்துத் தீமை பேசிட நான் விரும்பவில்லை. ஆனால் உங்களுடைய வாழ்க்கையிலுள்ள இக்காரியமானது தவறு என்றும், இந்தச் சபையார் உங்களைத் தெரிந்தெடுப்பது முறையாய் இருக்காது என்றும் நான் எண்ணுகின்றேன். இக்காரியத்தினை நான் சபையாரிடத்தில் சொல்ல விரும்பவில்லை. ஊழியம் புரிய நீங்கள் மறுப்புத் தெரிவிப்பீர்களா என்று உங்களிடத்தில் நான் கேட்க விரும்புகின்றேன். தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நீங்கள் மறுத்துவிடுவீர்கள் என்று நீங்கள் வாக்குத் தந்தால், அதுவே போதும். இல்லையேல் ஒருவேளை என் கருத்துச் சரியல்ல என்று நீங்கள் எண்ணுவீர்களானால், காரியத்தைச் சபையாரிடத்தில் வெளிப்படையாய்க் கூறிடுங்கள். ஒருவேளை இதை நீங்கள் செய்யவில்லையெனில் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நீங்கள் மறுப்புத் தெரிவிக்கமாட்டீர்களெனில், அப்புறம் நான் காரியத்தை வெளிப்படையாய்ச் சொல்ல வேண்டியிருக்கும் - நான் அறிந்திருப்பதை நான் சொல்ல வேண்டியிருக்கும்; ஏனெனில் நான் சொல்ல வேண்டியிருக்கும் என்பதை நீங்களும் அறிவீர்கள். உங்களிடத்தில் நான் அன்புடன்தான் வந்துள்ளேன் மற்றும் உங்களுக்குத் தீங்குசெய்வதற்கான விருப்பம் எனக்கில்லை" என்று சொல்லிடலாம்.

ஒருவேளை அச்சகோதரன்: "சரி சகோதரன் அவர்களே, முன்மொழியப்

பட்டிருப்பதிலிருந்து விலகிக்கொள்கின்றேன்; மற்றும் நீங்கள் குறிப்பிடும் காரியம் குறித்த விஷயத்தில், நான் ஜெயங்கொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கின்றேன்" என்பாரானால், நாம் மகிழ்ச்சியடைகிறோம் என்று அவரிடம் சொல்லலாம். இப்படியான விதத்தில் அந்தச் சகோதரனுக்கு நன்மை செய்கிறவர்களாய் இருப்போம் என்று நாம் எண்ணுகின்றோம். தீங்கிழைக்கிறதற்கு அல்லது சண்டைச் சச்சரவுக்கு ஏதுவானவைகளிலிருந்து நாம் சபையாரையும் பாதுகாக்கிறவர்களாயும் மற்றும் சமாதானத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருப்போம். ஒருவேளை இப்படியாக இல்லாமல், அச்சகோதரன் எதிர்த்து வாக்குவாதம் பண்ணுவாரானால், நாம் அவரிடம்: "ஒருவேளை முன்மொழியப்பட்டதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளவில்லையெனில், இக்காரியத்தினை நான் சபைக்கு விவரிப்பேன் என்பதை நீங்கள் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளலாம்; ஏனெனில் நீங்கள் உங்களது ஜீவியத்தின் நடத்தையினை அங்கீகரித்து, அதைத் திரும்பவும் தொடருவதாகவும் கூறுகின்றீர்கள்" என்று சொல்லிடலாம்.

ஆனால் ஒருவேளை காரியம் சகோதரனுடைய வாழ்க்கையில் நீண்ட காலத்திற்கு முன்னதாக நடைப்பெற்ற காரியம் பற்றியதாயிருக்கின்றது; ஒன்றோ அல்லது இரண்டோ அல்லது ஐந்து அல்லது எத்தனையோ வருடங்களுக்குள்ளாக, இப்பொழுது அவரும் முற்றிலுமாய் மாற்றமும் அடைந்து விட்டவராக இருக்கின்றார். அவர் பழைய நடத்தையினின்று மாறியிருப்பாரானால் நாம் மகிழ்ச்சி அடையலாம். நாம் அச்சகோதரனிடத்திற்குச் சென்று: "சகோதரனே நீங்கள் தேர்ந்தெடுத்தலில் இடம் பெற பங்கெடுப்பதை நான் கவனிக்கிறேன். உங்களது வாழ்க்கை முற்றிலுமாக மாற்றமடைந்துள்ளதா?" என்று கேட்கலாம். அவர் ஒருவேளை, "ஆம், சகோதரனே, என் வாழ்க்கை முற்றிலுமாக மாற்றமடைந்துள்ளது" என்று சொல்வாரானால், நாம் மகிழ்ச்சிக்கொள்ளலாம். ஆனால் ஒருவேளை அச்சகோதரன் கோபமடைந்து, அது உங்கள் காரியமல்ல என்று சொல்வாரானால், நாம் அவரிடம்: "சகோதரனே, இதைக்குறித்துச் சபையாருக்கு நான் தகவல் கொடுத்திட வேண்டும். உங்களது நடக்கையின் வாயிலாக, நீங்கள் முற்காலத்தில் மேற்கொண்ட அதே நடத்தையையே, இப்பொழுதும் மேற்கொள்ளுகிறீர்கள் என்பது சுட்டிக்காண் பிக்கப்படுகின்றது. ஒருவேளை நான் அத்தகைய தவறு செய்திருந்தேனாகில் மற்றும் தொடர்ந்து செய்து வருகின்றேனாகில், என் நடத்தைக் கண்டிக்கப்பட விரும்பிடுவேன். ஆகையால் உங்களை மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ பெற்றிருக்க வேண்டுமா என்பதை சபையார் மறுபடியும் சிந்தித்துப் பார்க்கத்தக்கதாக, இவ்விஷயத்தைக் குறித்து நான் தகவல் கொடுத்திடுவேன்" - என்று சொல்லிடலாம். ஆனால் ஒருவேளை அச்சகோதரன் சபையில் ஏதேனும் ஊழயத்திற்கென முன்மொழியப்படவில்லை என்று வைத்துக்கொள்வோம், அப்போது அவரது கடந்தகாலம் நம்முடைய காரியமல்ல என்று நாம் கருதிட வேண்டும்.

# இறுதி புத்திமதி

மற்றவருடைய உண்மையான நலனுக்கடுத்த காரியங்களுக்குத் தீங்காய் இருக்கும் எதுவும், ஒருபோதும் பேசப்படக்கூடாது. மற்றவர்கள் குறித்துள்ள நம்முடைய வார்த்தைகளில் நாம் மிகவும் ஜாக்கிரதையாகக் காணப்பட வேண்டும். சகோதரர்களில் சிலரை நம்பி வேறொரு சகோதரன் அல்லது சகோதரிக்கு அவப்பெயர் தேடித்தரும் சம்பவங்களையும், அவர்களது பெலவீனங்கள் சிலவற்றை வெளிப்படுத்தும் சம்பவங்களையும் பகிர்ந்துகொள்ளும் மனப்பான்மையானது கர்த்தருடைய பிள்ளைகள் சிலரிடத்தில் காணப்படுகின்றது. சகோதரருடைய அபூரணங்களை இப்படி வெளிப்படுத்திடும் தன்மையானது, நிச்சயமாகவே மூடிப்போடுகிற அன்பாய் இருக்கிறதில்லை (1 பேதுரு 4:8). இந்த ஒரு தன்மையைக்கூட இன்னமும் ஜெயங்கொள்ளாத நிலைமையில், நீண்டகாலமாய் இடுக்கமான வழியில் காணப்படுகின்றதான சிலரை நாம் அறிவோம். இவர்கள் - தாங்கள் விமர்சிக்கின்றதான சகோதரனை அல்லது சகோதரியைப் போன்றே, தங்களுக்கும் பெலவீனங்கள் அநேகமாக தெளிவாகவே காணப்படுகின்றது என்பதை மறந்து விட்டார்களா? நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும் ஆண்டவருடைய கட்டளையை இவர்கள் புறக்கணிக்கின்ற காரியமானது, இவர்கள் தங்கள் சொந்த வளர்ச்சியில் குறைவுப்பட்டிருப்பதை நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. எனினும் இவர்கள் தீமை பேசுகிறார்கள் என்று சுட்டிக் காண்பிக்கப்படும்போது, அநேகமாகக் கோபம் அடைகிறவர்களாகவும் காணப் படுகின்றனர்.

இவையனைத்தும் தூற்றுதல்களாக இருக்கின்றது என்றும், இது ஒரு சகோதரன் அல்லது சகோதரியுடைய நற்பெயரை மங்கப்பண்ணுகிறதாய் இருக்கின்றது என்றும், இது தேவ வசனத்தினால் மறுபடியும், மறுபடியுமாக முன்வைக்கப்பட்டதான கட்டளையை நேரடியாக மீறுவதாக இருக்கின்றது என்றும், நற்பெயரைக் களங்கப்படுத்துதல் என்பது, இன்னொருவருடைய நற்பெயரைத் திருடுவதாக இருக்கும் என்றும் - கிறிஸ்துவின் பின்னடியார்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு சீக்கிரமாய்க் கண்டுகொள்வார்களோ, அவ்வளவு சீக்கிரமாய் இவ்விஷயமானது கர்த்தருடைய பார்வையில் விகாரமானதாய்க் காணப்படுவதை உண்மையில் கண்டு கொள்வார்கள். இக்காரியத்தினைத் தெய்வீகக் கண்ணோட்டமாகிய, ஒரே உண்மையான கண்ணோட்டத்திலிருந்து ஒருவிசைப் பார்த்தப் பிற்பாடு, மாம்சம் மற்றும் பிசாசின் இத்தகைய கிரியைகளை ஜெயங்கொள்வதற்கான முடிந்தமட்டிலுமான மகா வீரியத்தில், தேவபிள்ளை விழித்துக் கொள்ள வேண்டும். இந்த வார்த்தைகளை வாசிக்கின்றதான

ஒவ்வொருவரும், அவனது அல்லது அவளது சொந்த இருதயத்தை ஆராய்ந்துபார்த்து, அவனது அல்லது அவளது சொந்த நடத்தைக்குறித்து எண்ணிப்பார்த்து, "நானோ?" என்று கேள்வி கேட்டுக்கொள்ளட்டும்.

சீக்கிரத்தில் வரவிருக்கின்றதான இராஜ்யத்தில் ஓர் இடத்தினைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமாய்க் கருதப்படத்தக்கதாக, ஒவ்வொருவரும் தன்னிடத்தில் ஒருவேளைக் காணப்படக்கூடிய துர்க்குணம், பொறாமை, புறங்கூறுதல் மற்றும் வாக்குவாதம் எனும் பழைய புளித்த மாவை - அவன் அல்லது அவள் தேவனுடைய பிரியமான குமாரனுடைய சாயலாகத்தக்கதாக - பழைய புளித்த மாவை புறம்பே கழித்துப்போடுவார்களாக. மாம்சம் மிகவும் தந்திரமுள்ளது மற்றும் தனக்கென்று அனைத்து விதமான சாக்குப்போக்குகளையும் முன்வைக்கும் போக்குடையதாகும். ஒவ்வொருவரும் இக்காரியத்தினை, தனிப்பட்ட விதத்தில் இருதயத்தை ஆராய்ந்துபார்க்கிற காரியமாக்கிக் கொள்வார்களாக. நம்முடைய குணங்களைப் பூரணப்படுத்திடுவதற்கு வெகு சொற்பக்காலமே இருக்கின்றது என்று நாம் நம்புகின்றோம். முன்பு ஒருபோதும் இல்லாதளவுக்கு, "கர்த்தாவே என் வாய்க்குக்காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" என்று மிக ஊக்கமாய் ஜெபம்பண்ணுவோமாக! (சங்கீதம் 141:3).

---

R5122 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

**கி**றிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் மூப்பர்களாகவும் மற்றும் இதனால் மற்றவர்களுக்குப் போதிப்பதற்குத் தகுதியானவர்களாகவும் காணப்படும் கிறிஸ்தவர்கள் வெளிப்புறமாய் மாத்திரமல்லாமல், உள்ளேயும் சுத்தமானவர்களாய் இருப்பார்கள். மாம்சத்தின் அசுசிகள் மற்றும் அருவருப்புகளிலிருந்து இவர்கள் திருவசனமாகிய தண்ணீரினால் கழுவப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இனிப் பாவத்திற்கு அடிமைகளாக இல்லாதபடியால், இவர்கள் விழுந்துபோன மாம்சத்தினுடைய பெலவீனங்கள், ஆசைகள் மற்றும் உலகத்தின் ஆவி முதலானவைகளினால் கட்டுப்படுத்தப்படுகிறதில்லை. இவர்கள் அநீதியின் கனிகளாகிய - கோபம், துர்க்குணம், பகைமை, வாக்குவாதம், புறங்கூறுதல், தீமை பேசுதல், பொல்லாத சம்சயங்களைக்கொண்டிருப்பதில்லை (2 கொரிந்தியர் 7:1).

---

# கெட்ட வார்த்தை என்றால் என்ன?

### எபேசியர் 4:29

கெட்ட வார்த்தை என்பது நற்கீர்த்திக்குப் பதிலாக துர்க்கீர்த்தியினை அல்லது துர்ச்செய்தியினைப் பரப்புவதாகும். நம்முடைய ஆதார வசனமானது, சாதாரண உரையாடல் சம்பந்தப்பட்ட கெட்ட வார்த்தையினைக் குறிப்பதாகப் புரிந்துகொள்ளப்படலாம். நம்முடைய மனங்களானது, அவைகளை நாம் கட்டுப் படுத்தவில்லையெனில் மற்றும் குறிப்பிட்ட எல்லைக்குள்ளாக வைக்கவில்லை யெனில், அவை நம்மிலும், மற்றவர்களிடத்திலும், சகலவிதமான பிரச்சனைக்குள் நம்மை உள்ளாக்கிடும்; ஆனால் நம்முடைய நாவுகளானது, நம்முடைய மனங்களைக்காட்டிலும் அதிகமான பாதகத்தைச் செய்திடும். நாம் சிந்திக்கிற விஷயங்கள் நம்மை மாத்திரமே பாதிக்கின்றதாய் இருக்கும்; ஆனால் நம்முடைய நாவுகளானது காரியத்திற்குள் நுழையும்போது நம்முடைய மனங்கள் அசுசிப்படுவதோடு மாத்திரமல்லாமல், தொற்றுநோய் ஏற்படுகின்றது, நச்சுத்தன்மை ஏற்படுகின்றது; ஏனெனில் நாவானது காரியத்தினைச் சுற்றிலும் பரப்பிவிடுகின்றது. விஷயம் உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ இருப்பினும், அதன் தாக்கம் சீரழிவாகவும், இழிவுப்படுத்துவதாகவும், சிலசமயம் நல்லொழுக்கமற்றுப் போவதற்கு ஏதுவானதாகவும் இருக்கும்.

உலகத்தார் மத்தியில் மாத்திரமல்லாமல், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலும் சிறுசிறு சம்பவங்களை விவரிக்கும் அல்லது குற்றங்கள் எடுத்துரைக்கும் மனப்பான்மைக் காணப்படுகின்றது; இவைகள் எப்போதும் பாவகரமானவைகளாக இல்லாமல் இருந்தாலும், தீமையின் முளைகள் முளைத்தெழுப்பப் பண்ணிடுவதற்கு ஏதுவானவைகளாக இருக்கின்றது. இதன் அடிப்படையில்தான், கெட்ட வார்த்தைகள் ஒன்றும் நம் வாயிலிருந்து புறப்படாமல் இருப்பதாக என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஒருவேளை ஏதேனும் சீரழிக்கும் தகவல் நம் கவனத்திற்குத் துரதிருஷ்டமாக வந்திருக்குமானால், அது மேலும் பரவாதபடிக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்குக் கேடு உண்டுபண்ணும் விதத்தில் நாவைப் பயன்படுத்துவது என்பது சுபாவ மனதினுடைய தன்மையா அல்லது இதற்கும், தீய ஆவிகளுக்கும் சம்பந்தம் உள்ளதாவென நாங்கள் சிலநேரம் சிந்தித்துப்பார்ப்பதுண்டு.

அப்போஸ்தலன் கட்டளையிட்டது போன்று, நாம் ஆகாத சம்பாஷணைகளை விட்டுவிடுவோமாக; அவைகளைத் தவிர்த்திடுவோமாக; மற்றும் பக்திவிருத்திக்கு ஏதுவானவற்றை மாத்திரம் பற்றிக்கொள்வோமாக; "பக்தி விருத்தி" எனும் வார்த்தையானது, ஒருவரையொருவர் கட்டியெழுப்புதல் எனும் அர்த்தத்தினை உடையதாய் இருக்கின்றது.

# எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்?

*"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக்கோபு 5:16)*

**நா**ம் குற்றம் புரிந்திருக்கையில், யாருக்கு விரோதமாய்ச் செய்யப்பட்டதோ, அவரிடம் குறிப்பாக உரிய வருத்தத்துடனும், முடிந்தமட்டிலுமான பிராயச்சித்தங்களுடனும் ஒப்புக்கொள்வதற்குரிய தாழ்மை மற்றும் விருப்பத்தின் - பொதுவான கொள்கையையே இவ்வசனம் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் பூரணர் இல்லை என்று மனம் திறந்து ஒப்புக்கொள்வது என்பது முற்றிலும் சரியானதே மற்றும் யாரும் பூரணராக தங்களைக் காட்டிக்கொள்வதற்கு முற்படக்கூடாது; மாறாக "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்றும், நம்முடைய நோக்கங்கள் மற்றும் பிரயாசங்களில் நீதியாய் மாத்திரம் இருக்கின்றோம் என்றும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் வாயிலாக, தேவனுடைய பார்வையில் முழுமையான மூடுதலுக்காய் நம்பியிருக்கின்றோம் என்றும் வேதவாக்கியங்கள் கூறுபவற்றையே நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மற்றவர்களுக்கு அனுகூலமாய்க் காணப்படத்தக்கதாகச் சிலசமயங்களில் குற்றங்களை வெளிப்படையாய் அறிக்கையிட வேண்டியிருக்கும் மற்றும் நம்முடைய சொந்த குறைபாடுகளைக் குறித்துக் கூறிடுவது என்பது மற்றவர்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கும் என்றால், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற கண்ணோட்டத்தில், அதைச் சரியான விதத்தில் சொல்லிடுவதற்கு நாம் தயக்கம் காண்பிக்கக்கூடாது; பொதுவாக நம்முடைய அபூரணங்களை மறைக்க முயற்சிக்கின்றோம்; ஆனால் நம்முடைய குற்றங்களை முழுவதுமாய் ஒழித்திடுவது என்பது தினந்தோறுமான நம்முடைய பிரயாசமாய்க் காணப்பட வேண்டும் என்பதே நம்முடைய கருத்தாகும்.

எனினும் இந்த வசனப்பகுதியில், அப்போஸ்தலன் ஆழமான சிந்தை ஒன்றைக் கொண்டிருக்கின்றார்; இங்குத் தேவனிடத்திலிருந்து ஒருவனை அந்நியனாக்கின மற்றும் அவனுக்கும், தேவனுக்கும் இடையில் மேகம் வர அனுமதித்திட்ட பாவம் ஒன்றினைச் செய்த ஒருவரின் காரியம் பற்றி அப்போஸ்தலன் பேசிக்கொண்டிருக்கின்றார். அது பாவங்களைத் திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருப்பதாகும். அவன் சரீரப்பிரகாரமாக வியாதிப்பட்டிருக்கின்றானோ, இல்லையோ, அவன் ஆவிக்குரியவற்றில் வியாதிப்பட்டிருக்கின்றான். அவனுக்காக ஜெபம்பண்ணும்படிக்கும், அவனுக்குக் கர்த்தருடைய நாமத்தினால் எண்ணெய்ப் பூசும்படிக்கும், சபையின் மூப்பர்களை அவன் வரவழைப்பதே அவனுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்"

(ஆவிக்குரிய பிணியாளி - என்று நாம் எண்ணுகின்றோம்) மற்றும் "அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்." அச்சகோதரன் தனது சொந்த நிலையினைக் கர்த்தரிடத்தில் பேசுவதற்குரிய நிலைமையில் இல்லை மற்றும் இதனால் நாம் நம்முடைய சகோதரரிடத்தில் அனுதாபங்கொள்ளவும், அவருக்கு உதவிசெய்யப்போகவும், அவருக்காக வேண்டிக்கொள்ளவும் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். நம்முடைய வேண்டுதல்களானது பலனளிக்கும் என்றல்ல, நீதிக்கு முன்பாக, குற்றங்களுக்கும், அபூரணங்களுக்கும் நமது பரிந்துபேசுபவரின் வேண்டுதல்தான் பலனளிக்கும்; ஆனால் நம்முடைய பரிந்து பேசுபவர் இப்படியாக அவ்வப்போது தம்மை நிறுத்தி வைத்துக்கொள்கின்றார் - அதாவது தவறில் காணப்படும் ஒருவரின் நன்மைக்காகவும், விஷயத்தை அறிந்திருக்கும் சகோதரர்களின் அனுதாபத்தினைத் தூண்டிடுவதற்காகவும், இவர்கள் தாங்களும் சோதனைக்குள்ளாகாமல் இருக்க வேண்டும் என்றும், தங்கள் உறுதியினின்று தாங்கள் விழுந்துபோகாமல் இருக்க வேண்டும் என்றும் நினைவில் கொண்டு உதவி புரிந்திட நாடிடுவதற்கும் மற்றும் இப்படியாகச் சபையில் அனுதாபத்தின் ஆவியும், ஒருவருக்கொருவர் உதவி, ஏந்திடும் தன்மையும் ஊக்குவிக்கப்படுவதற்கும் என்று அவ்வப்போது நமக்கான பரிந்துபேசுபவர் தம்மைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்கின்றார்.

விசேஷமாய் வேண்டிக்கொள்ளப்படாமலேயே, சபையிலுள்ள மூப்பராகிய சகோதரர், கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள சக அங்கத்தினர்களில் ஒருவருக்காக ஜெபம்பண்ணிடுவதற்கோ அல்லது சபையின் அங்கத்தினர் ஒருவர் இன்னொருவருக்காக பொதுவாய் ஜெபம்பண்ணிடுவதற்கோ எதிராய்ச் சொல்லப்படுவதற்கு எதுவுமில்லை. இது முற்றிலும் சரியே. ஒரு சகோதரன் தவறான பாதையில் செல்வதை ஒருவர் காண்பாரானால், அவருக்காக இவர் ஜெபம் மாத்திரம்பண்ணிடாமல், தன்னால் முடிந்தமட்டிலுமான ஞானமான விதத்தில் அவர் ஏறெடுத்துள்ளதான தவறான போக்கினை அவரது கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலம், அவரைச் சீர்ப்பொருந்தப்பண்ணுவதற்கு இவர் தாழ்மையான ஆவியில் நாடிட வேண்டும்; ஆகிலும் ஐயத்திற்கிடமின்றி இம்மாதிரியான முயற்சிகள் என்பது, மேலே சொல்லப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் - அதாவது தனது தேவையினை உணர்ந்து, தனக்காக ஜெபம்பண்ணும்படிக்கு மூப்பர்களைப் பிணியாளி அழைத்திடாதது வரையிலும் ஏறெடுக்கப்பட முடியாது.

தவறான வழியில் போகிறதாக தாங்கள் காண்கின்றவர்களுக்காக மூப்பர்கள் மாத்திரம் ஜெபம் பண்ணிடக்கூடாது; வாய்ப்பிற்கும், திறமைக்கும் ஏற்ப சபையின் சகல மற்ற அங்கத்தினர்களின் நலன்களைக் கவனிப்பதற்கான விசேஷித்தப் பொறுப்பினைக் கர்த்தர் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினன் - சபையின் ஒவ்வொரு அங்கத்தினன் மீதும் வைத்துள்ளார்; எனினும் முதிர்வயதுள்ள சகோதரனைச் சரிப்படுத்துவதற்கும், கடிந்துகொள்வதற்கும், அறிவுறுத்துவதற்கும்

முற்படும் விஷயத்தில் சபையிலுள்ள இளவயதுள்ள சகோதரனிடத்தில் அதே அளவிலான பொறுப்போ அல்லது ஏற்புடைமையோ இருக்கமுடியாது. "முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போல் பாவி" என்று தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் கூறுகின்றார்; இப்படியாகக் கர்த்தருடைய குடும்பத்தில் காணப்படும் இளவயதுள்ள சகோதரன் ஒருவர், சரியான நடத்தையினின்று விலகுதலாய் ஒரு காரியம் இருக்கின்றது என்று தான் உணரும் எதையேனும் காண்கையில், அவர் என்ன செய்திடலாம் என்று நாம் பார்க்கின்றோம். அவர் இக்காரியத்தினை அணுகுவதற்குத் தயக்கம் கொண்டிருக்க வேண்டும் மற்றும் தான் ஒருவேளை மிகவும் அனுபவம் மிக்கவராய் இருந்திருந்து அணுகுகையில் அடையப்பெறும் நற்பலன்களைப் போன்று, தன்னால் நற்பலன்களை அடையமுடியாது என்றும், தன்னுடைய அணுகுதல் பாதிப்பையே உண்டுபண்ணும் என்றும் எண்ணிட வேண்டும். ஆகையால் அவர் அந்நபருக்கு ஆலோசனை வழங்க முற்படுவதற்குப் பதிலாக, கொஞ்சக்காலம் அந்நபருக்காக இரகசியமாய் ஜெபம்பண்ணிடுவது ஞானமான காரியமாய் இருக்கும். ஆனால் ஒருவேளை இறுதியாக, அவசியம் என்று அவர் கருதுவாராகில், சபையின் மூப்பர்கள் சிலரிடத்தில் பேசி, அவர்களது அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொள்வது அல்லது அவர்கள் வாயிலாக அச்சகோதரனிடத்தில் பேசிடுவது நலமாய் இருக்குமென மூப்பர்கள் எண்ணுவார்களா என்று கேட்டுக்கொள்வது, அவருக்கு ஞானமாய் அநேகமாக இருக்கும். அவர் அந்நபரைக்குறித்துத் தீமையாய் ஊகிக்கின்றார் - அதாவது "தீமை பேசுகின்றார்" என்று நாங்கள் அனுமானிக்கவில்லை; மாறாக தவறான பண்புகளின் தன்மைகள், தவறான ஜீவப்பாதைக் குறித்த சிலவற்றை, தவறு என்று அவர் அறிந்திருக்கும் ஏதோ சிலவற்றை, வெளிப்படையாய்த் தென்படுகின்ற ஏதோ சிலவற்றை, கற்பனை பண்ணிடாத ஏதோ சிலவற்றைப் பற்றி முழுமையாய்க் கொஞ்சம் அறிந்திருக்கின்றார் என்று நாம் எண்ணுகின்றோம். தீமை பேசுதல் முதலானவைகளில் உள்ளடங்குபவைகளில் அநேகமானவைகள் முற்றிலும் கற்பனையானவைகளாக, அதாவது "அவர் இன்னவிதமாய்ச் செய்யப்போகின்றார் என்று நான் எண்ணினேன்" மற்றும் "அவள் இன்னவிதமாய் செய்து கொண்டிருக்கின்றாள் என்று நான் எண்ணினேன்" அல்லது "இன்னென்ன விதமாய்ச் செய்திடுவதற்கு அவள் நோக்கம் கொண்டிருந்தாள் என்று நான் எண்ணினேன்". . . என்பதாகவே காணப்படுகின்றது. இவைகள் தீமை பேசுதலாக வகுக்கப்படலாம். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஒரு சகோதரன், தான் மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடவில்லை என்றும், மிகவும் முக்கியமற்ற காரியங்களில் நியாயந்தீர்க்க தான் முற்படவில்லை என்றும், மற்றச் சகோதரனுக்கு விபரீதமான, கவலைக்கிடமான மற்றும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதுச்சிருஷ்டியென அச்சகோதரனுக்கு ஆபத்தான ஏதோ விஷயம் உண்மையிலேயே இருக்கின்றது என்றும்

அறியத்தக்கதாக, அக்காரியத்தினை ஜெபத்தில் வைத்திட வேண்டும்.

பொதுவான நடைமுறை, நமது கர்த்தர் மத்தேயு 18:15-ஆம் வசனத்தில் உபதேசித்துள்ளது போன்று, சம்பந்தப்பட்ட நபரிடத்தில் தனிமையில் செல்வதேயாகும்; மூப்பரிடத்தில் செல்வது என்பது, சம்பந்தப்பட்ட நபர் காரியத்தினைச் சரிப்படுத்துவதற்குத் தனது சொந்த ஆற்றல் முற்றிலும் போதாது என்று உணரும் சில மிகக் கவலைக்கிடமான காரியத்தில் மாத்திரமேயாகும். இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் மிகவும் சொற்பமாகவே காணப்படும் என்பது எங்களுடைய நம்பிக்கையாய் இருக்கின்றது. ஒருவேளை காரியம் தனக்கு விரோதமாய்ச் செய்யப்பட்டதாய் இருக்குமானால், அந்நபரிடத்தில் தனிமையில் செல்வது அவரது கடமையாக இருக்கும்; ஒருவேளை காரியம் சபைக்கு விரோதமானதாகவோ அல்லது வெளியரங்கமான ஒழுக்கக்கேடாகவோ, தவறாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நீதியின்கொள்கை எதையேனும் மீறியுள்ள காரியமாகவோ இருக்குமாயின், இது சற்று வேறுபட்ட நிலையிலுள்ள காரியமாய் இருப்பதினால், அதிகமாய் அதிகாரமுடைய ஒருவரை அழைத்திட வேண்டும்; காரணம் தனிப்பட்ட நபரின் உரிமைகளல்ல, மாறாக சபையினுடைய அல்லது சத்தியத்தினுடைய அல்லது கர்த்தருடைய காரணங்களுடைய நலனுக்கடுத்தவைகளுக்கு விரோதமாகவே குற்றஞ்செய்யப்பட்டுள்ளது; இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மூப்பர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி காரியத்தைக்குறித்து நன்கு பகுத்துணர முடிகின்றவர்களாகவும், காரியத்தை அணுகுவது எப்படி என்பதையும் நன்கு அறிந்தவர்களாகவும் இருப்பார்கள்.

---

R2156

# உன் நாவைப் பொல்லாப்புக்கு விலக்கிக் காத்துக்கொள்

## யாக்கோபு 3:1-13

*"உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்." (சங்கீதம் 34:13)*

"என் சகோதரரே, அதிகமாக நியாயந்தீர்க்கப்படுவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1; ரிவைஸ்ட் மொழியாக்கம்). இப்படியாக நாவினுடைய மிகுந்த செல்வாக்குக் குறித்துத்

தன்னால் சொல்லப்படப்போகிறவைகள், விசுவாசிகள் மத்தியில் போதகர்கள் ஆகுவதற்கு முற்படுகிறவர்களுக்கு, அதாவது ஒருவேளை போதகர்களாக இல்லாமல் இருக்கையில் பெற்றிருக்கக்கூடிய பொறுப்பினைக்காட்டிலும், போதகர்கள் ஆனதினிமித்தம் மிகுந்த பொறுப்பினை உடையவர்களாக இருப்பவர்களுக்குப் பெரிதும் பொருந்தக்கூடியதாய் இருக்குமென அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். போதிப்பதற்கான திறமை, வரம் இருப்பவர்களைத் தடைப்பண்ணுவது அப்போஸ்தலனுடைய விருப்பமாய் இராமல், மாறாக இப்படியான ஸ்தானத்தை எடுத்துக்கொள்பவர்கள் அனைவருக்குமான பொறுப்புக் குறித்து, அவர்களுக்கு எச்சரிக்கைப் பண்ணிடுவதே அவருடைய விருப்பமாய்க் காணப்படுகின்றது. ஒருவேளை அவர்கள் பேச்சாற்றல் உடையவர்களாய் இருப்பார்களானால் அவர்கள் நாவானது மாபெரும் ஆசீர்வாதத்திற்கு ஏதுவாக அநேகரை கர்த்தரிடத்திற்கும், சத்தியத்தினிடத்திற்கும் மற்றும் நீதியின் பாதையினிடத்திற்கும் திருப்புவதற்கான கால்வாயாகக் காணப்படலாம்; அல்லது ஒருவேளை தப்பறையினால் மாசுபட்டிருக்கும் பட்சத்தில், அந்நாவானது சொல்லமுடியாத அளவுக்கான பாதகங்களை - விசுவாசத்திற்கு, ஒழுக்கத்திற்கு, நற்கிரியைகளுக்குப் பாதகங்களை ஏற்படுத்திடக்கூடும். போதகம்பண்ணுவதற்கான வரத்தைப் பிரயோகிப்பவன் எவனும், தேவனுக்கும், மனுஷனுக்கும் முன்னிலையில் தன்னை அதிகப்படியான பொறுப்பிற்குள்ளாக்கு கின்றவனாய் இருப்பான். மத்தேயு 5:19; உரோமர் 2:20, 21; 1 பேதுரு 5:3; தீத்து 1:11; 1 தீமோத்தேயு 1:7; 2 தீமோத்தேயு 4:3; 2 பேதுரு 2:1-ஆம் வசனங்களைப் பார்க்கவும்.

இப்பாடத்தினுடைய எச்சரிப்பானது, நாவிற்கு எதிராக மாத்திரம் காணப்படாமல், நம்முடைய நாவைக்கொண்டு, நாம் மற்றவர்கள் மீது செலுத்திடும் ஆற்றலுக்கு/தாக்கத்திற்கு எதிராகவும் காணப்படுகின்றது. அனுபவம் பெற்றுள்ள ஒவ்வொருவரும், நாவானது சரீரத்தினுடைய மற்ற எந்த அவயவங்களைக் காட்டிலும் நன்மைக்கு அல்லது தீமைக்கு ஏதுவான அதன் ஆதிக்கத்தில் ஆற்றல்மிக்கது என்ற கூற்றினை முழுமையாக ஒத்துக்கொள்வார்கள். நாவைக்காட்டிலும், வேறெந்த அவயமும் கட்டுப்படுத்தப்படுவதற்கு எளிது என்று அனுபவம் கற்றுத் தந்துமுள்ளது. நாவு எனும் இந்த ஊழியக்காரன் மிகவும் திறமிக்கது என்பதினால், விழுந்துபோன சுபாவத்தினுடைய ஒவ்வொரு பேராசையும், விருப்பமும் மற்றும் உணர்வுகளும், இவ்வவயத்தைத் தீமைக்கான ஊழியக்காரனாய் அல்லது கால்வாயாகப் பயன்படுத்திடுவதற்கு நாடுகின்றது. ஆகையால் கிறிஸ்தவனானவன் தனது சரீரத்திலுள்ள இந்த அவயமானது தனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இடையூறாகக் காணப்படாமல், இடுக்கமான வழியில் உதவிகரமாகக் காணப்படத்தக்கதாக, இதனை ஆண்டிடுவதற்கும், இது கிறிஸ்துவுக்குள்ளான புதிய மனதின் கீழ்,

கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுவதற்கும் அதிகளவிலான விழிப்பும், ஞானமும் மற்றும் கவனமும் அவசியப்படுகின்றது. குதிரையினுடைய வாயிலுள்ள கடிவாளமானது, அதன் பலத்தினை இயக்குகிறதையும், கட்டுப்படுத்துகிறதையும் போன்று, கப்பலினுடைய சிறிய சுக்கானானது, அதன் திசையினைத் திருப்பிடுவது அல்லது வழிநடத்திடுவது போன்று, நாவும் அதன் பிரதிநிதியாகிய பேனாவும், நன்மைக்கு அல்லது தீமைக்கு நேராக, திரளான ஜனங்கள் மீது ஆதிக்கம் கொண்டு, திசைத்திருப்பிவிடுகிறதாக இருக்கும். ஆகையால் நாவானது எத்துணை முக்கியத்துவம் உடையதாய்க் காணப்படுகின்றது மற்றும் நன்மைக்கான பிரதிநிதியாய் இருப்பதற்குப் பதிலாக தீமைக்கான பிரதிநிதியாகவும், விசுவாசத்தினைக் கட்டி எழுப்புவதற்குப் பதிலாக, விசுவாசத்தினை இல்லாமலாக்கிப் போடுகிறதாகவும், நீதியையும், சமாதானத்தையும் உண்டுபண்ணுகிறதற்குப் பதிலாகச் சண்டைச் சச்சரவுகளின் விதைகளை விதைக்கிறதாகவும் நாவானது காணப்படுவதை எத்தனைதரம் நாம் கண்டிருக்கின்றோம்! இப்படியான நிலைமை உலகத்தாரின் மத்தியில் உண்மையாக இருப்பினும், தேவனுடைய ஜனங்கள் மத்தியிலும்கூட நிலைமை கொஞ்சம் இப்படியாகவே காணப்படுகின்றது மற்றும் ஒவ்வொருவனும் தான் ஏதோ ஒருவிதத்தில் போதகனாய் இருக்கின்றான் என்பதையும், தினந்தோறும் சத்தியம், நீதி மற்றும் சமாதானத்திற்கடுத்த நோக்கங்களை ஒன்றில் முன்னேறச் செய்கின்றான் அல்லது தடைப்பண்ணுகின்றான் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும்.

சீர்ப்பொருந்திடாத உலகத்தாரின் விஷயத்தில், நாவானது உண்மையில் நெருப்பாகக் காணப்பட்டு, முழுச்சரீரத்தையும் கறைப்படுத்துகின்றதும், விழுந்துபோன உணர்வுகளையும், ஆசைகளையும் தூண்டிவிடுகிறதுமான அனைத்தையும், பொறாமையையும், பகைமையையும், வாக்குவாதங்களையும், கோபத்தையும் கொளுத்திவிடுகின்றதாய் இருக்கின்றது. நாவானது கெஹன்னா அக்கினியினால் - இரண்டாம் மரணத்தினால் - கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது என்று அப்போஸ்தலன் அடையாள வார்த்தைகளில் குறிப்பிட்டதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அது கொழுந்துவிட்டு எரிகிற காரியமானது, நாவின் எஜமானை மாத்திரமல்லாமல், மற்றவர்களையும் அழிவுக்கு நேராய் வழிநடத்திடும்.

“அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்” என்ற வார்த்தைகளை, அப்போஸ்தலன் தானும், சபையாரும் தங்கள் நாவுகளை இத்தகைய பரிசுத்தமற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதைத் தெரிவிப்பதற்காகக் குறிப்பிட்டுள்ளதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது, மாறாக முழு உலகத்தைக் குறித்துப் பேசுகையில், சிலர் நாவைத் தேவனைத் துதிப்பதற்கும்

மற்றும் சிலர் அவரது பரிசுத்த நாமத்தைத் தூஷிப்பதற்கும் மற்றும் தங்கள் சக சிருஷ்டிகளைச் சபிப்பதற்கும் அதைப் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவித்துள்ளார். நாவானது எத்திசையில் வழிகாட்டப்படுகின்றதோ, அதற்கு இணங்கிட விருப்பமுள்ள ஊழியக்காரனாய்க் காணப்படுகின்றது; ஆகையால்தான் இவ்வளவு முக்கியமான ஊழியக்காரன், அதாவது அவயம் சரியாய் வழிகாட்டப்படுவது முக்கியமாய் உள்ளது. சபையிலும்கூடச் சிலர் ஒரே வாயினால் தேவனைத் துதிக்கவும் செய்கின்றனர் மற்றும் சக சிருஷ்டிகளைச் சபிக்கவும் செய்கின்றனர் - சபித்தல் எனும் வார்த்தைக்கான சாதாரண அர்த்தத்தின்படி எப்போதும் சபிக்கவில்லை என்றாலும், நாசகரமான அல்லது சபிக்கப்பட்ட அல்லது தீமையான நிலைமைக்கு வழிநடத்துகின்றதான பாதகமான வார்த்தைகளைப் பேசும் விதத்தில் விநோதமாகச் சபிக்கின்றனர்; ஏனெனில் ஒவ்வொரு தவறான போதித்தலும், அதைப் பெற்றுக்கொள்பவருக்குச் சாபமாகக் காணப்படுகின்றது. இப்படியான விதத்தில் அநேகர் ஒரே வாயினின்று நன்மைக்கு ஏதுவான மற்றும் தீமைக்கு ஏதுவான ஆதிக்கங்களைக் கொணர்கின்றவர்களாய் இருக்கின்றனர். இது தவறான நிலைமையாகும்; மற்றும் இதுவே "என் சகோதரரே, அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" எனும் எச்சரிப்பினை முக்கியமானதாக்கிற்று. யாரொருவர் திவ்விய வார்த்தைகள் கடந்துவருகின்றதான நீரூற்றாய்க் காணப்படுகின்றாரோ, ஆசீர்வாதத்தை, புத்துணர்வை மற்றும் பலத்தைச் சுமந்து செல்கின்றாரோ, அவர் போதிக்கும் கால்வாயாகிய தன்னில் சபித்தலாக, பாதகமாகக் காணப்படும் - அதாவது தேவனைக் கனவீனப்படுத்துகிறதும் மற்றும் அவரது வார்த்தைகளைத் தவறாய்ப் பொருள்கொள்ள செய்கின்றதுமான - கசப்பான தண்ணீர்கள், தவறான உபதேசங்கள் காணப்படாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கூட்டங்களுக்கு வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், மேலே சொல்லப்பட்டுள்ளதுபோன்று "நாவு/சொல்வன்மை" எனும் தகுதியானது பார்க்கத் தவறப்படக்கூடாது. நெருப்புத்தனமான/கொந்தளிக்கும் நாவுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது; மாறாக சாந்தமுள்ளவர்களும், நிதானம் உள்ளவர்களும், தங்கள் நாவுகளுக்குக் கடிவாளம் இடுபவர்களும், "தேவனுடைய வாக்கியங்களின்படி மாத்திரம் போதிக்கத்தக்கதாக, கவனமாய்ப் பிரயாசம் எடுப்பவர்களும்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இத்தகைய நாவுகளே கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன; ஆனால் மற்றவைகளோ அடிக்கடி காயப்படுத்தி எதிர்க்கின்றது. கர்த்தருடைய வார்த்தையானது, ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், கருக்கானதாயும் காணப்பட்டு, காரியத்தினை நடைமுறைப் படுத்துவதற்கெனக் கசப்பான மற்றும் கடுமையான/எரிச்சலான மற்றும் அன்பற்ற மனித சொற்களின் அவசியமில்லாமலேயே, இருதயத்தினை உருவக்குத்து கிறதாயும் இருக்கின்றது. ஆகையால்தான் நமக்கு "அன்புடன் சத்தியத்தைக்

கைக்கொள்ள" வேண்டும் என்ற தெய்வீக அறிவுரை காணப்படுகின்றது.

சபையில் போதகர்களுக்குரிய (ஞானத்திலும், அறிவிலும்) தகுதியுடையவர்கள், அவற்றை வார்த்தையினாலும், போதித்தல்களினாலும் மாத்திரம் காண்பித்திடாமல், இன்னுமாக தேவபக்திக்குரிய ஜீவியங்கள் மூலமாகவும், ஞானம் தரும் பணிவினாலும்/சாந்தத்தினாலும், நன்னடத்தையாலும் அவற்றைக் காண்பிக்கக்கடவன் என்ற புத்திமதியுடன், பாடம் நிறைவடைகின்றது (யாக்கோபு 3:13; திருவிவிலியம்).

இந்தப் பாடமானது விசேஷமாக "போதகர்களுக்குச்" சுட்டிக்காட்டப் படுகிறதாக இருப்பினும், இது அனைவராலும் கவனிக்கப்பட வேண்டிய பாடமாய் இருக்கின்றது. "அன்பான வார்த்தைகள் என்றுமே அழியமுடியாது" என்னும் பழமொழி உண்டு மற்றும் "அன்பற்ற வார்த்தைகள் என்றுமே அழிவதில்லை" என்று சொல்வதும்கூட உண்மையானதாகவே இருக்கும். உண்மையில் அன்பற்ற வார்த்தைகளானது, பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் - விசேஷமாய் உலகப்பிரகாரமானவர்களின் இருதயங்களில் நீண்டகாலம் நீடிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் எப்போதும் ஆசீர்வதிக்கிறவர்களாகவும் மற்றும் "கேட்கிறவர்களுக்கு பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகளைப் பேசுகிறவர்களாகவும்" காணப்படத்தக்கதாக, நாம் ஒவ்வொருவரும் மற்றும் நாம் அனைவருமே நம்முடைய நாவுகளைக் கீழ்ப்படுத்தும் விஷயத்தில் நமது ஆற்றல்களை இரண்டு மடங்காக்கி, பிரயோகிப்போமாக (எபேசியர் 4:29-ஆம் வசனத்தை வாசிக்கவும்).

---

R2278 & R3593

# நாட்கள் பொல்லாதவைகளானதால்...

*"ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்." (எபேசியர் 5:15, 16)*

இவ்வசனத்தில் இடம்பெறும் "கவனமாய்" என்ற வார்த்தைக்கான ஆங்கில வார்த்தை "Circumspect, Circum" என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது; இதன் அர்த்தமாவது விழிப்பாய் இருப்பதாகும். உண்மை கிறிஸ்தவனுடைய பாதை

மிக நெருக்கமானதாகும்; அது சோதனைகளினாலும், படுகுழிகளினாலும், பொல்லாங்கனின் சூழ்ச்சிகளினாலும் வெகுவாய் நிறைந்துள்ளபடியினால், நமக்கு அசம்பாவிதங்கள் நடைபெறுவதற்கான மாபெரும் ஆபத்து உள்ளது. நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிகளையும் கவனமாய்ப் பார்ப்பதோடு மாத்திரமல்லாமல், நாம் ஞானமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும்; அதாவது பூமியிலுள்ள நமது சக சிருஷ்டிப்புக்களைக் காட்டிலும் ஞானமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்; அதாவது பரத்திலிருந்து வருகிற பரிசுத்தமும், சமாதானமும், அன்புள்ளதுமான ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; எனினும் முதலாவதாக நாம் கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைக்கும் உண்மையுள்ளவர் களாக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் கடந்து சென்று கொண்டிருக்கும் பாடுகள், சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் குறித்து, கடிதங்கள் எங்களுக்கு வருவதால், முந்தைய காலங்களைக் காட்டிலும் அவர்களுடைய சோதனைகள் அநேகமாகவும், கடுமையாகவும் இருப்பதை நாம் உணர்கின்றோம். "கவனமாய் நடக்க" ஆவலுள்ள சோதனைக்குட்பட்டவர்களிடமிருந்து, ஜெபவிண்ணப்பங்களும், கர்த்தருடைய வழி குறித்ததான ஆலோசனை வேண்டி கடிதங்களும் வருகின்றன. நம்மால் முடிந்தமட்டும் கர்த்தரோடு நடக்கத்தக்கதாக வழிகாட்டும் விதமாக அமையும் வேதவாக்கியங்களைச் சுட்டிக்காட்டி, மகிழ்ச்சியோடு இவர்களுக்குப் பதிலளிக்கின்றோம்.

"நாட்கள் பொல்லாதவைகளானதால்", நமது எதிராளியானவன் விசேஷமாகக் கிரியை செய்வதால், தற்காலத்தில் நினைவுகூரப்படுவதற்கும், கடைபிடிக்கப்படுவதற்கும் அவசியமானதும், எல்லாக் காலக்கட்டங்களிலும் அவசியமானதும், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்திற்கும் பொருந்தக்கூடியதுமான சில பொதுவான கோட்பாடுகளை நாம் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம். யூத யுக அறுவடையின் போது காணப்பட்டது போன்று, சுவிசேஷயுக அறுவடையின் போதும் காணப்படும்; மேலும் எதிர்ப்புகள் ஜெப ஆலயங்களிலும், வேதபாரகர் மற்றும் பரிசேயரிடமிருந்து வந்ததுமல்லாமல், வீட்டிற்குள்ளாகவும் எதிர்ப்புகள் காணப்பட்டது . . . பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலும், கணவன் மனைவிக்கு இடையிலும் . . . கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலும் ஏற்பட்டது. எதிராளியானவன் எந்த அளவுக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்த நாடுகின்றானோ, அவ்வளவாய் அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வார்த்தையிலோ, கிரியையிலோ தவறு செய்யாதபடிக்கு மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கக்கடவர்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால். . . விசேஷித்த சோதனை மற்றும் பரீட்சையின் நாட்களாய் இருக்கிறபடியால் . . . கவனமாய் நடவுங்கள்.

# நம்முடைய அன்றாட ஜீவியத்திற்கான சில உதவிபுரியும் கோட்பாடுகள்

நாம் பரிந்துரைக்கும் கோட்பாடுகள் பின்வருமாறு:-

1. ஒவ்வொருவனும் தன்தன் காரியத்தைக் கவனிப்பதாக மனதில் முடிவெடுப்பானாக.

நாம் மற்றவருடைய காரியங்களில் தலையிடக்கூடாது என்று வேதவாக்கியங்கள் நமக்கு எச்சரிப்பூட்டுகின்றது. ஒவ்வொருவரும் வாழ்க்கையின் அனுபவங்கள் வாயிலாக இந்த அருமையான கோட்பாட்டைக் கற்றுக் கொண்டிருந்தாலும், வெகுசிலரே இக்கோட்பாட்டின்படி கவனமாய் நடக்கின்றார்கள். நம்முடைய கரங்களையும், நேரங்களையும், வாயையும் ஆக்கிரமித்துக் கொள்ளத்தக்கதாக நம்மிடத்தில் போதுமான அளவு நம் சொந்த காரியங்களும், கர்த்தருடைய ஊழியங்களும் இல்லையெனில், நம்மில் ஏதோ தவறு உள்ளது; மேலும் அது சரி செய்து கொள்ளப்படத்தக்கதாகக் கவனமாய் ஜெபிக்கவும், கவனமாய்த் தெய்வீக வார்த்தைகளால் கற்றுக்கொள்ளப்படவும் வேண்டும்.

நமது பராமரிப்பின் கீழ் இருப்பவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களில் கவனமற்றவர்களாக அல்லது நாம் பொறுப்பேற்றுள்ளவர்களின் விஷயத்தில் கவனமற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் இக்கோட்பாடு இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமது பொறுப்பின் கீழ் உள்ளவர்களுக்கு நாம் சில காரியங்களைச் செய்யும்போது கூட, நாம் அவர்களின் உரிமைகளையும் மற்றும் மற்றவர்களின் உரிமைகளையும் கருத்தில் கொண்டவர்களாகவும், அதிலும் விசேஷமாக நமது உரிமைகளை நாம் மேலோங்கச் செய்யவிடாமல் கவனமாய் இருக்க வேண்டும். நம்முடைய சொந்த விஷயங்களில் நமக்கு முழுமையான நீதி கிடைக்காவிட்டாலும், மற்றவரின் விஷயத்தில் நம்முடைய கையாளுதல் நீதியாய்க் காணப்பட வேண்டும், இரக்கம் காட்டப்பட வேண்டும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிட வேண்டாம்.

2. நாம் நம்மிடத்திலும், நம்முடைய பெலவீனத்திலும் பொறுமையாய் இருப்பதைக்காட்டிலும், மற்றவரிடத்திலும், அவர்களுடைய குற்றங்குறைகளைக் காணும்போதும் மிகுந்த பொறுமையுடன் காணப்பட வேண்டும்.

விழுகையின் காரணமாக முழு உலகமும் சரீர பிரகாரமாகவும், ஒழுக்கரீதியிலும், மனரீதியிலும் ஆரோக்கியமற்றவர்கள் என்பதை நாம்

நினைவுகூருகையில், அவர்களுடைய பெலவீனங்களுக்காக நாம் அனுதாபம் கொள்ளவேண்டும். கர்த்தர் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் நமது கறைகளை, கிருபையுடன் மறைக்கச் சித்தமுள்ளவராய் இருக்கையில், நம்மைக் காட்டிலும் மற்றவர்களுடைய பெலவீனங்கள் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தாலும் நாம் அவர்களிடத்தில் அனுதாபமும், உருக்கமான இரக்கமுமே கொள்ளவேண்டும். இக்கோட்பாடு விசேஷமாக உங்கள் குழந்தைகளுக்குப் பொருந்தும். உங்கள் பிள்ளைகளிடத்தில் காணப்படும் பெலவீனங்கள், உங்களிடத்திலிருந்து அல்லது உங்கள் வாயிலாகவே அவர்களுக்குக் கொஞ்சம் வந்துள்ளதால், அவர்களுடைய தப்பிதங்களை கையாளும்போது, நீங்கள் உங்கள் சொந்த தவறுகளை எவ்வாறு கையாளுவீர்களோ, அப்படியே அவர்களிடத்திலும் நீதியாய்க் கையாள வேண்டும். . ....அவர்கள் நீதியின்படி சரிசெய்யப்பட உண்மையுடனும், கண்டிப்புடனும் கையாளப்பட வேண்டும், அதேசமயம் இதை அனுதாபத்துடனும், இரக்கத்துடனும், அன்புடனும் செய்யவேண்டும்.

3. முன்கோபியாகவும், எளிதில் சினம்கொள்கிறவர்களாயும் இராதேயுங்கள்.

மற்றவர்களுடைய வார்த்தைகளையும், செயல்பாடுகளையும் இரக்கத்துடனும், பரந்த மனப்பான்மையுடனும் கண்ணோக்கம் கொள்ளுங்கள். அற்ப விஷயங்கள் அல்லது சிறு எதிர்த்தாக்குதல்கள் கண்டுகொள்ளப்படாமல் விடப்படலாம், அதாவது அன்பு மற்றும் பெருந்தன்மையின் சால்வையினால் மறைத்து மூடப்படலாம். கடுமையான குற்றங்கள் கூட, வேண்டுமென்றே செய்யப்படாததுபோல் கருதப்பட்டு, கோபத்தைத் தூண்டாதவாறு அன்பான வார்த்தைகளினால் விசாரிக்கப்பட வேண்டும், அதாவது கிருபை பொருந்தின வார்த்தைகளினால் விசாரிக்கப்பட வேண்டும். இப்படியாகக் குற்றமாகக் கருதப்பட்ட அநேக சந்தர்ப்பங்களில், குற்றம் இல்லை என்றும் நிரூபிக்கப்பட்டும் உள்ளது.

இக்கோட்பாடு, "கெட்ட சம்சயங்களில்" ஈடுபட வேண்டாம் என்ற வேதவாக்கியங்களில் அடங்குகின்றது . . . மற்றவர்களுடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகளுக்குப் பின்னாக தவறான/பொல்லாத நோக்கங்கள் இருப்பதாக நாம் கற்பனை செய்யக்கூடாது. கெட்ட சம்சயங்கள் என்பது நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எதிரானதாகவும், தேவபக்திக்கு எதிரானதாகவும் இருக்கின்றது என அப்போஸ்தலர் பட்டியலிடுகின்றார். கெட்ட சம்சயங்கள் என்பது பொறாமை மற்றும் சண்டையின் ஆவிக்கு ஒத்ததாக இருக்கின்றது. இது மாம்சம் மற்றும் பிசாசின் கிரியையாய் இருக்கின்றது. (1 தீமோத்தேயு 6:3-5; கலாத்தியர் 5:19-21).

## ஆவியின் பிரமாணமாகிய அன்பு

இதற்கு எதிர்மறையான விஷயங்களையும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார், அதாவது தேவனுடைய ஜனங்களை ஜெநிப்பித்துள்ள அன்பின் ஆவியினுடைய அம்சங்கள் குறித்தும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார். இந்த அன்பின் ஆவியைக் கர்த்தருடைய ஜனங்கள் நாள்தோறும் விருத்திச் செய்ய வேண்டும். இவைகள் அவர்களுக்குள் வளருமாயின், இது அவர்கள் ஜெயம்கொள்கிறவர்களாய் இருப்பதற்கான பிரதான நிரூபணங்களாகும். "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ்சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக் கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன். இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது." (1 கொரிந்தியர் 13)

இத்தகைய அன்பின் மனப்பான்மையினைப் பெற்றிருப்பவர்கள் மீது, தீமையானவர்கள் ஆதிக்கம் செலுத்திடுவார்களே என்று வலியுறுத்தப்படலாம். இந்த அன்பின் ஆவியைப் பெற்றிருப்பவர்கள் மென்மையானவர்களாகவோ

அல்லது மழுங்கினவர்களாகவோ இருக்க மாட்டார்கள் என்று நாம் பதில் அளிக்கின்றோம்; இந்த அளவிலான அன்பை வளர்ப்பதில் அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்களானது, அவர்களை வளர்த்திற்று, மேலும் "கர்த்தருக்குப் பயப்படுதலில் அவருக்கு உகந்த வாசனை உடையவர்களாக்கிற்று". அன்புடையவர்கள் - மறுக்கமுடியாத சான்றுகளினால் வலுக்கட்டாயமாக தீமை ஒருவரிடத்தில் இருக்கின்றது என்று ஒப்புக்கொள்ளவேண்டிய நிலையில் காணப்படும் போது தவிர, மற்றபடி குற்றத்தைச் சாற்றுவதை இவர்கள் தவிர்க்கின்ற போதிலும், தீமை தலைத்தூக்குவதைக் கண்ட மாத்திரத்திலேயே ஜாக்கிரதையாய் இருப்பார்கள்.

ஆனால் நாம் நம்மையும் தெரியாமல் ஒரு குற்றமற்ற நபர் மீது குற்றம் சுமத்தாதபடிக்குப் பெரும்பாலும் (பொறுமையாய்ச் சகித்து) சில சிறு (நற்பெயர் கெடுதல் போன்றதான) இழப்புகளை அனுபவிப்பதும், துணிந்து சில இழப்புகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்வதும் நலமாயிருக்கும். மேலும், இந்தக் கர்த்தருடைய ஆலோசனையின்படி செயல்பட்டவர்களுக்கு உண்டான எவ்விதமான இழப்புகளையும் ஈடுசெய்ய கர்த்தர் மிகுந்த வல்லமையுள்ளவராக இருக்கின்றார்.

தம்மை அன்புகூருபவர்களுக்கு இந்த அனைத்து அனுபவங்களையும் நன்மைக்கு ஏதுவாக மாற்ற அவர் வல்லமை கொண்டவராகவும், சித்தமுள்ளவராகவும் இருக்கின்றார். "நான் கட்டளையிட்டதை நீங்கள் செய்வீர்களானால், என் சீஷர்களாய் இருப்பீர்கள்" என்று அவர் கூறுவதின் மூலம் தம்முடைய ஏற்பாட்டில் பலிக்கு முன் கீழ்ப்படிதலை வைக்கின்றார்.

ஒருவன் மற்ற விஷயங்களில் எவ்வளவுதான் கவனமுள்ளவனாய்க் காணப்பட்டாலும், "தீமை பேசுதலைக்" குறித்த கர்த்தருடைய இந்தக் கட்டளையை அசட்டை பண்ணுவானானால், அவன் தானே சிக்கிக்கொள்வதற்கு ஏதுவாக தனக்கு வலையைப் பின்னுகிறவனாக இருக்கின்றான்; ஏனெனில் எந்த இருதயம் உடன்சிருஷ்டியின் மீது சந்தேகம் மற்றும் குற்றப்பார்வை கொண்டுள்ளதோ, அந்த இருயதம் தேவனையே சந்தேகிக்கும் அளவு கொஞ்சம் தயாராகியுள்ளது. கசப்பின் ஆவி என்பது கர்த்தருடைய ஆவிக்கும், அவருடைய அன்பின் ஆவிக்கும் எதிராக யுத்தம் பண்ணுகிறதாய் உள்ளது. இரண்டில் ஏதோ ஒன்று ஜெயம்கொள்ளும். தவறான ஆவி வெளியேற்றப்பட வேண்டும், இல்லையேல் அது புதுச்சிருஷ்டியைத் தீட்டுப்படுத்தி அவனை "புறம்பாக்கப்பட்டவனாக்கிவிடும்." மாறாக ஒருவேளை புதுச்சிருஷ்டி ஜெயம்கொண்டால், அதாவது தீமைபேசுதல் ஜெயம்கொள்ளப்பட்டால் தற்கால போராட்டங்கள், குழப்பங்கள், இடர்பாடுகளுக்கு எதிரான யுத்தத்தில், பாதி யுத்தம் முடிவு பெற்றதாகிவிடும். அனுமானங்கள் இருதயத்திலிருந்து எழும்புகின்றது, அது ஒன்றில் நன்மையான வார்த்தைகள், கிரியைகளுக்கு அல்லது தீமையான வார்த்தைகள், கிரியைகளுக்கு நேராக வழிநடத்துகின்றது.

4. நீங்கள் தீமையாய்ப் பேசப்பட்டால், உங்களைக் குற்றமற்றவர்களாகக்

காண்பித்துக் கொள்ளத்தக்கதாக வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ நீங்கள் விளக்கலாம், ஆனால் இதற்கு மேலாக செய்வதைத் தவிர்த்துவிடுங்கள்.

ஒருவேளை நீங்களும் பதிலுக்குத் தீமைபேசினால் தவறு செய்கிறவர்களாகி விடுவீர்கள். எந்த மனுஷனும் தீமைக்குத் தீமை செய்யாதிருக்கக்கடவன் . . . ஒருவேளை உங்கள் அயலார் பேசினது தவறானதாய் இருந்து, நீங்கள் பேசப்போவது உண்மையாய் இருந்தாலும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். இதை, உங்கள்மேல் சுமத்தப்பட்டக் குற்றத்திற்கு எதிராக விளக்கம் கொடுக்கும்போது நினைவில் கொள்ளுங்கள், அதாவது உங்களை குற்றம் சாட்டுபவர் மீது எதிர்குற்றச்சாட்டுகளைச் சுமத்த முற்படாதீர்கள்; ஏனெனில் நீங்கள் அப்படிச் செய்வீர்களானால், நீங்களும் தீமை பேசுகிறவராகிவிடுவீர்கள்.

## பொன்னான சட்டம்

இது வேதவாக்கியங்களின் அடிப்படையிலான சட்டமாகும். மற்றவர்கள் நமக்குச் செய்ததுபோல் அல்ல, மாறாக மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என நாம் விரும்புகின்றோமோ/கருதுகின்றோமோ, அதைத்தான் நாமும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும். நமக்குச் செய்யப்பட்ட தவறுகளானது, நாம் செய்யும் தப்பிதங்களை ஒருபோதும் நியாயப்படுத்தப் போவதில்லை. "நன்மை வரும்படி தீமை செய்யுங்கள்" என்பது போன்றதான சாத்தானின் வஞ்சனைகளுக்குத் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இடம் கொடுக்கக்கூடாது. தூஷிக்கிறவர்களின் பொய்யான மற்றும் தவறான குற்றச்சாட்டுகள் தவறு என்று நாம் விவரித்துக் காட்ட எவ்வித வேதவாக்கியங்களும் தடைவிதிக்கவில்லை என்றாலும் . . . ஒருவேளை ஒவ்வொரு எதிரிடையான பொல்லாத குற்றச்சாட்டுகளுக்கும் எதிராக போராடுவதில் நாம் சாத்தானையும், வஞ்சிக்கப்பட்ட அவனுடைய அநீதியான ஊழியர்களையும் பின்பற்றுகிறவர்களாக இருக்கும் பட்சத்தில், நாம் இவ்வேலையில் அதிகம் மும்மூரமாய் (busy) இருக்கும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதை அனுபவங்கள் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கும். ஒருவேளை நாம் இவ்வேலையைச் செய்ய விருப்பமுள்ளவர்களாய் இருப்பதைச் சாத்தான் கண்டானானால், மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நற்செய்தியை நாம் அறிவிப்பதற்கு, நமக்குப் போதுமான நேரம் இல்லாமல் போகத்தக்கதாக, ஒவ்வொரு குற்றச்சாட்டுகளுக்கு எதிராக போராடுவதில் நம்மை அதிகம் மும்மூரம் அடைய செய்திடுவான், பின்னர்ச் சாத்தான் ஜெயம்கொண்டவனாகவும், நாம் தோற்றவர்களாகவும் ஆகிவிடுவோம்.

மாறாக நம்முடைய பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக ஓடும் ஓட்டத்திற்கான அழைப்பிற்கு இசைவாக, நாம் கீழ்ப்படிதலுடன் அவருடைய பாதங்களில் சகலவற்றையும் சமர்ப்பித்த பலியின் ஒரு பாகமாக, நம்முடைய

நற்பெயரையும் கர்த்தரிடத்தில் சமர்ப்பிப்போமாக. நம்முடைய காரியங்களுக்காகப் போராடுவதின் மூலம், இராஜாவின் வேலையைப் புறக்கணிக்க மாட்டோம் என்று நாம் தீர்மானித்ததின் காரணமாக, நாம் சில நற்பெயர்களை இழந்தோமானால், நாம் கிறிஸ்துவுக்காக பாடுகள் சகித்தவர்களாகக் கருதப்படுவோம்; மேலும் இப்படிச் செய்யும் பட்சத்தில், பரலோகத்தில் நம்முடைய பலன் மிகுதியாகவும் இருக்கும். யுத்தம் முடிவடையும்போது, ஜெயம்கொண்டவர்கள் முடிசூட்டப்படுவார்கள்.

ஒவ்வொரு கர்த்தருடைய ஜனங்களும் தாங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் முடிந்தமட்டும் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். வெளிச்சத்தைப் பிரகாசிப்பதில் எந்த அளவு உண்மையும், வைராக்கியமும் காணப்படுகின்றதோ, அவ்வளவாய் நம்முடைய ஒவ்வொரு வார்த்தையும், கிரியையும் தீயதாய்க் காண்பிக்கத்தக்கதாக திரித்துக் காட்ட நாடுபவனாகிய நம்முடைய மாபெரும் எதிராளியானவனின் தூஷணமான எதிர்ப்புகள் காணப்படும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அவன் திரித்துப் பேசுவதற்கான காரணம், சகோதரரைக் குற்றம்சாட்டுகிறவனாகிய அவனால் உண்மையான எவ்வித குற்றச்சாட்டுகளையும் காண முடியாததாலேயே ஆகும். மேலும் அவன் பிரதான ஊழியக்காரனாகிய நமது கர்த்தருக்கு விரோதமாக வெறி கொண்டது போல, சத்தியத்தின் எளிமையான ஊழியர்களுக்கும் எதிராக வெறி கொண்டுள்ளான். நமது கர்த்தர் நியாயப்பிரமாணத்தை மீறினார் என்று சிலுவையில் அறையப்பட்டதையும், இவைகள் ஆலயத்தின் பிரதான வகுப்பார்முன்பு நடந்தது என்பதையும், அவருடைய சொந்த சீஷர்களுள், ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

எதிராளியானவனால் தாக்கப்படும்போது . . . அவனுடைய பிரதிநிதிகள் யாராயினும், அவர்களுடைய ஏவுகணைகள் எதுவாயிருந்தாலும், அத்தருணங்களில், "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபிரெயர் 12:3). ஒருவேளை நாம் உண்மையாய்ச் சகித்தோமானால் . . . அவனால் (சாத்தான்) தீங்கு செய்ய முடியாது, மாறாக கர்த்தருடைய பார்வையில் நம்முடைய நற்பெயர் பெருக மாத்திரமே செய்கின்றது மற்றும் தேவன் தமது நோக்கம் கருதி நன்மைக்கு ஏதுவாக மாற்ற முடியாத அளவு அவன் எவ்வித வெளித்தோற்றமான தீங்கையும் கூடச்செய்ய முடியாது . . . சிலசமயம் கோதுமையிலிருந்து களையையும், பதரையும் சலித்தெடுப்பதுக்கூட அந்த நன்மையாக இருக்கும்.

5. தீமை பேசுதல், தூஷணங்கள் மற்றும் பழிப்பேச்சுகள், தேவனுடைய ஜனங்களிடம் காணப்படக்கூடாது என்று கண்டிப்பாக தடைப்பண்ணப்பட்டுள்ளது.

ஒருவேளை தீமைபேச்சுகள் உண்மையாக இருப்பினும், இவைகள் அன்பின்

ஆவிக்கு முற்றிலும் எதிர்மாறானதாகும். பழிப்பேச்சுகள் பேசும் தன்மையைத் தடுக்கும்விதமாக வேதவாக்கியங்களானது, மத்தேயு 18:15-17-ஆம் வசனங்களில் மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திக் கொள்வதற்கான ஒரே வழிமுறையினைச் மிகக் கவனமாகச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களும்கூட இந்தத் தெய்வீகக் கோட்பாட்டைக் குறித்து அறியாமையிலேயே காணப்படுகின்றார்கள், ஆகவே கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப்பண்ணிக் கொள்கின்றவர்கள் பெரும்பாலும் (சதா பழித்தூற்றுகிறவர்களாக) புரளி பரப்புபவர்களாகக் காணப்படுகின்றனர். இக்கோட்பாடானது, நமது கர்த்தரால் கொடுக்கப்பட்ட சில விசேஷித்த கட்டளைகளில் ஒன்றாகும் மற்றும் இக்கோட்பாடானது "நான் கட்டளையிடும் யாவற்றையும் செய்வீர்களானால், நீங்கள் என் சீஷர்களாய் இருப்பீர்கள்" என்ற வாக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில், இது மீறப்படும் காரியமானது, அநேகர் இன்னமும் சீஷத்துவத்தில் முன்னேறவில்லை என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது.

## கர்த்தருடைய வழியைப் பின்பற்றுங்கள்

இக்கோட்பாட்டைக் கொஞ்சம் கவனமாகப் பார்ப்போம். ஒருவேளை இக்கோட்பாடு பின்பற்றப்பட்டால், தீமை பேச்சுகள், பழிப்பேச்சுகள், வதந்திகள்/ வீண்பேச்சுகள் தவிர்க்கப்படலாம்.

முதலாவதாகச் சம்பந்தப்பட்டவர்கள் மாத்திரம் கூடிப்பேச வேண்டும், அதாவது தான் பாதிக்கப்பட்டுள்ளதாக எண்ணி குற்றம் சாட்டுகிறவனுடைய வெளிப்படையான பேச்சு வார்த்தையாகும்; இந்த நபரை நாம் "A" என்ற பெயரில் அழைப்போம். குற்றம் சாட்டுபவர்மேல் தனக்குத் தீமையான எண்ணம் இல்லை என்று எண்ணுபவரை "B" என்ற பெயரில் அழைப்போம். இவர்கள் இருவரும் தங்கள், தங்கள் நடத்தைச் சரியாக இருக்கின்றது என்று எண்ணி, காரியத்தைக் குறித்து விவாதம் பண்ணி, இருவரும் ஒரே கண்ணோட்டத்தில் வரக்கூடுமோ என்று பார்ப்பதற்கென்று சகோதரர்களாகக் கூடிவந்துள்ளனர். ஒருவேளை அவர்கள் ஒன்றுபட்டால், எல்லாம் நலமாய் முடியும்; பிரச்சனையும் முடிவுக்கு வந்துவிடும்; சமாதானம் நிலவும்; அச்சுறுத்தும் பிரிவினை தடுக்கப்பட்டுவிடும்; மேலும் ஒருவரும் ஞானி என்று சொல்வதற்கில்லை.

ஒருவேளை இருவரும் உடன்பாட்டிற்குள் வரவில்லையெனில், "A" தனது கூற்றை வெளியே கூறி, பழித்தூற்ற ஆரம்பிக்கக் கூடாது. தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பர்களிடம் கூடச் சொல்லக் கூடாது. ஒருவேளை அவன் காரியத்தை வெளியே கூறி, பின்பு "எதுவும் வெளியே சொல்ல வேண்டாம்; விசேஷமாக நான் உன்னிடம் கூறினேன் என்று சொல்ல வேண்டாம்" என்று கூறலாமா? . . . இல்லை, கூடாது . . . காரியம் இன்னமும் "உனக்கும் அவனுக்கும் (A

மற்றும் B) இடையில்தான்" உள்ளது. ஒருவேளை "A" இவ்விஷயத்தை முக்கியம் என்று கருதி, இன்னும் பிரயாசங்கள் எடுக்க விரும்பினால், அவனுக்கு ஒரு வழி உள்ளது . . . அதாவது, தன்னோடு கூட "B"-ஐ சந்திக்க இரண்டு அல்லது மூன்று நபரைக் கூட்டிக்கொண்டு சென்று, அவர்கள் இரண்டு பக்கத்தின் காரியங்களையும் கேட்டு, சரி மற்றும் தவறு என்ன என்பது பற்றின தங்களுடைய பகுத்தறிதலைத் தெரிவிப்பதேயாகும். இந்த இரண்டு அல்லது மூன்று பேர் எப்படிப்பட்டவர்கள் மத்தியில் இருந்து தெரிந்துகொள்ளப்பட வேண்டுமெனில் . . .

(1) சாட்சியாளர்கள் ஒருவேளை தற்செயலாக "B"-க்கு ஆதரவாக தீர்வு கொடுத்தாலும், சாட்சியாளர்களின் கிறிஸ்தவ குணலட்சணங்கள் மற்றும் அறிவுநுட்பம் மற்றும் தெளிந்த புத்தியின் ஆவி மீது "A"-கு நம்பிக்கை இருக்க வேண்டும்; (2) சாட்சியாளர்கள் ஒருவேளை தற்செயலாக "A"-கு ஆதரவாக தீர்வு கொடுத்தாலும், சாட்சியாளர்களின் கிறிஸ்தவ குணலட்சணங்கள் மற்றும் அறிவுநுட்பம் மற்றும் தெளிந்த புத்தியின் ஆவி மீது "B" -கு நம்பிக்கை இருக்க வேண்டும்.

தான் தெரிந்துகொள்ள விரும்பும் இரண்டு அல்லது மூன்று சாட்சியாளர்கள் உள்ளடங்கியுள்ள நண்பர்களிடம் "A" காரியங்களைச் சற்று அதிகமாகவே கலந்துபேசுவது, அதாவது அவர்கள் (மறுபக்கம் செவிசாய்க்காமல்) தனக்கே ஆதரவு அளிக்கத்தக்கதாகவும், சாட்சியாளர்கள் தவறான அபிப்பிராயத்துடனும், "B"-கு எதிராக ஏற்கெனவே மனதில் நிர்ணயம் பண்ணிக்கொண்டு, பேச்சுவார்த்தைக்குச் செல்லத்தக்கதாகவும் "A" பேசுவது என்பது போதகரின் கட்டளையினுடைய ஆவிக்கும், நீதியின் ஆவிக்கும் முற்றிலும் எதிர்மாறானதாகும். இரண்டு பேர் நடுவில் உள்ள பிரச்சனைகளை, அவர்கள் இருவரின் முன்னிலையிலேயே கேட்பதற்கு, இரண்டு அல்லது மூன்று சாட்சியாளர்கள் உள்ளே கொண்டுவரப்படுவது வரையிலும், காரியம் A மற்றும் B இடையில் மாத்திரமே இருக்க வேண்டும்.

## உதவுவதற்கே ஒழிய காயப்படுத்துவதற்கல்ல

"சகோதரருடைய" தீர்ப்பு "B"-க்கு எதிராக இருக்குமாயின், அவர்களுக்கு "B" செவிசாய்க்க வேண்டும், மேலும் "B"-இன் மனஉணர்வு ஒத்துப்போக முடியாத அளவு (அவர்களின் தீர்ப்பில்) ஏதேனும் கோட்பாடுகள் காணப்பட்டால் தவிர, மற்றபடி "B" சாட்சியாளர்களின் கண்ணோட்டத்தை நீதியானதாகவும், நியாயமானதாகவும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருவேளை "சகோதரர்கள்", "B"-இன் கண்ணோட்டத்திலிருந்து பார்ப்பார்களானால், "A" தான் தவறு செய்ததை ஒப்புக்கொள்ள வேண்டும்; மேலும், மனசாட்சி தடைபண்ணினால் தவிர மற்றபடி, சூழ்நிலையை ஏற்றுக்கொண்டு, "B"-இடமும் மற்றும் சகோதரர்களிடமும்,

தன்னுடைய குறைவான மதிப்பீட்டினால் உண்டுபண்ணின தொல்லைக்காக மன்னிப்பைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் இப்பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற எவரும், "வெளிவராத" விதத்திலும்கூட மற்றவர்களிடம் காரியங்களைக் கூறி பழித்தூற்றுகிறவனாக மாறக்கூடாது.

ஒருவேளை தீர்ப்பானது "A"-கு எதிராக வழங்கப்பட்டால், ஒருவேளை அவர் இதினிமித்தம் காயமடைந்ததாகவும், சரியில்லாத சாட்சியாளர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட காரணத்தின் நிமித்தம் தனக்கு நீதி கிடைக்கவில்லை என்பதாகவும் எண்ணினார் என்றால், "A" (நமது கர்த்தருடைய இக்கட்டளைக்கு மீறாத விதத்தில்) வேறு (சாட்சியாளர்களை) ஆலோசகர்களை அழைத்து, முன்பு செய்த பிரகாரம் செயல்படுத்தலாம். இவர்களுடைய தீர்ப்பும் ஒருவேளை "A"-கு எதிராகவே காணப்பட்டால் அல்லது எல்லோரும் "B"-கு ஆதரவு கொடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்தில் "A" யாருடைய தீர்ப்பின் மீதும் நம்பிக்கை வைக்க முடியாத நிலையில் காணப்பட்டாரானால், "A" தன்னிடத்தில் இருக்கும் பிரச்சனை இறுமாப்பு என்று உணர்ந்து, உபவாசித்து, ஜெபம் பண்ணி, நீதியின் கோட்பாடுகள் குறித்துக் கவனமாய்க் கற்க வேண்டும். ஆனால் காரியங்களை வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ, சபைக்கோ அல்லது வேறு எவரிடமோ கூறுவதற்கு இப்பொழுதும் "A"-கு அதிகாரம் இல்லை. அப்படி ஒருவேளை "A" செயல்பட்டால், அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியாததையும், சத்தியம் மற்றும் அன்பின் ஆவிக்கு விரோதமான தீயதும், மாம்சீகமானதுமான ஆவி அவரிடம் இருப்பதையும் இச்செயல்பாடு சுட்டிக்காட்டுகின்றது.

ஒருவேளை சாட்சியாளர்கள் "B"-கு எதிராக கொஞ்சம் விஷயத்தில் எதிர்ப்பும், "A"-கு கொஞ்சம் விஷயத்தில் ஆதரவும் தெரிவித்தார்களானால், சகோதரராகிய "A" மற்றும் "B"-யும்கூடக் காரியங்களை அவ்விதத்திலேயே பார்த்து, சமாதானத்துடன் காரியங்களை ஒழுங்குபடுத்த நாடவேண்டும். இப்படியான சூழ்நிலைகளில் மற்றவருடைய காரியங்களை வெளியே சொல்வதற்கு இடம் இருக்காது.

ஒருவேளை சாட்சியாளர்கள் முற்றிலும் "B"-கு எதிராகவும், "A"-கு முற்றிலும் சாதகமாகவும் தீர்மானித்தும், அவர்களுக்கு "B" செவிசாய்க்காமலோ அல்லது தவறைச் சரிசெய்து கொள்ளாமலோ அல்லது "A"-கு காயம் விளைவிப்பதை நிறுத்தாமலோ காணப்பட்டாலும்கூட "A"-கு "B"-ஐ குறித்து வெளியே பழித்தூற்ற அதிகாரம் இல்லை, மேலும் சாட்சியாளர்களாகிய சகோதரர்களுக்குக்கூட "B"-ஐ குறித்துப் பழிதூற்ற அதிகாரமில்லை. "A" இன்னும் பிரயாசம் எடுக்க விரும்பினால், அவருக்கு ஒரே ஒரு வழி மாத்திரம் உள்ளது . . . "A"-யும், குழுவினரும் சேர்ந்து காரியத்தை சபைக்கு முன்வைப்பதே அவ்வழியாகும். சபையார், இருவரின் சார்பில் உள்ள விஷயங்களைக் கேட்க வேண்டும் . . . பின்னர் "A" அல்லது "B" இவர்களில் யாரேனும் சபையாரின்

ஆலோசனையை ஏற்க மறுப்பாரானால், சபையார் அனைவராலும் அச்சகோதரன் புறம்பாக்கப்பட்டவனாக - சபையார் அல்லாதவனாகக் கருதப்பட வேண்டும்; ஐக்கியம் அவனிடம் வைத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும்; அச்சகோதரன் மனம்வருந்தி, சீர்ப்பொருந்தும் வரை மரித்துப் போனவனாகக் கருதப்பட வேண்டும்.

ஓர் அங்கத்தினுடைய பொறுப்புகள் மற்றவரால் செய்ய முடியாது . . . ஒவ்வொருவரும் கர்த்தருடைய கட்டளையின்படி தனக்கானவைகளைச் செய்துகொள்ள வேண்டும். ஒருவேளை கர்த்தருடைய கட்டளை மீறப்பட்டு, பழித்தூற்றும் காரியங்கள் நடந்தேறி, சபையாரை உபத்திரவத்திற்குள்ளாக்கி, சபை முழுவதையும் அவமானப்படுத்துகிறதாய் இருக்கும் பட்சத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, அப்பிரச்சனையைக் கையாள வேண்டும். இவர்கள் பிரச்சனைகள் என்ன என்று விசாரிப்பதோடல்லாமல், அவதூற்றைப் பரப்பின உண்மையான கிளர்ச்சியாளர்களும் யாரென்று விசாரித்து, அவர்களைக் கடிந்து கொள்ளவும் வேண்டும்.

ஆனால், அனைவரும் ஏதோ விஷயங்களில் பூரணமற்றவர்கள் என்பதை நினைவுகூர்ந்து, அன்புடன் சகல கடிந்துகொள்ளுதலும் காணப்பட வேண்டும். எல்லா விஷயங்களிலும் நோக்கம், திருத்தம் செய்வதாக இருக்க வேண்டுமே ஒழிய, தண்டனை வழங்க வேண்டும் என்பதாக இருக்கக்கூடாது. தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் கர்த்தருக்கு மாத்திரம் உரியதாகும். மனம் திருந்தாத அந்தச் சகோதரனோடு ஒரு குறிப்பிட்ட காலம்வரைச் சபையார் ஐக்கியம் கொள்ளக்கூடாது மற்றும் மனம்திரும்புதல் பிரத்தியட்சம் ஆகும்போது, மீண்டும் சபையார் ஐக்கியம் கொள்வதைத் தொடர வேண்டும். நாம் அன்பு காண்பிப்பதையும், சந்தோஷம் மற்றும் சமாதானம் ஏற்படுத்துவதையுமே கர்த்தர் விரும்புகின்றார். மேலும் இவற்றை நாமும் அவருடைய சீஷர்களாக இருந்து செய்ய வேண்டும். வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டால் நிச்சயமாக பாதிப்பு ஏற்படும்.

இவ்விதமாக முதலில் மறைமுகமாகப் பழித்தூற்றும் பாவமாகக் காணப்பட்டு, பின்னர் மாம்சம் மற்றும் பிசாசின் கீழ்த்தரமான கிரியையாக மாறி சத்தியத்திற்குள்ளான வளர்ச்சியையும், அன்பின் ஆவியையும் தடுத்துப் போடுகிறதான காரியங்களிலிருந்து கர்த்தர் தமது உண்மையான சீஷர்களைப் பாதுகாக்கின்றார். மேலும் யாரொருவர் பழிப்பேசுபவர்களின் பேச்சுவார்த் தைகளைக் கேட்டு, பழித்தூற்றுபவர்களின் தவறான போக்கை உற்சாக மூட்டுகின்றாரோ, அவரும் அவர்களின் பொல்லாத செயல்பாடுகளுக்குப் பங்காளியாவார் என்பதையும்கூட நாம் தெரிவிக்கின்றோம்; மேலும் கர்த்தருடைய கட்டளையை மீறின காரியத்திலும் அவர்களோடு உடன்பங்காளியாவார் என்பதையும் தெரிவிக்கின்றோம். தேவனுடைய உண்மையான ஜனங்கள் பழித்தூற்றுபவர்களின் பழிப்பேச்சைக் கேட்க மறுத்து, அவர்களுக்குக்

கர்த்தருடைய வார்த்தையையும், வேதம் அங்கீகரிக்கும் ஒரே வழிமுறையையும் சுட்டிக்காண்பிக்க வேண்டும். "தேவனைப் பார்க்கிலும் நாம் ஞானவான்களோ?" . . . நாம் நம்முடைய சொந்த கணிப்புகளை நம்ப முடியாது என்றும், உடனே மேய்ப்பனின் சத்தத்தை நம்பிக்கையுடன் பின்தொடர்வதே பாதுகாப்பானது என்றும் அனுபவங்கள் நமக்குக் கற்பித்துத் தந்துள்ளது.

## அன்புடன் கடிந்துகொள்ளுங்கள்

ஒரு சகோதரனோ, சகோதரியோ மற்றவர்களைக் குறித்து உங்களிடம் பழித்தூற்ற ஆரம்பித்தால், அவரை உடனடியாகத் தடுத்துவிடுங்கள் . . . இதை அன்புடனும், அதே சமயம் உறுதியுடனும் செய்யுங்கள். "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 5:11). சபையில் மாபெரும் தொல்லையை ஏற்படுத்தக் கூடிய, நமது கர்த்தருடைய கட்டளைக்கு எதிரான இந்த மீறுதலில் பங்குகொள்ளும் எவ்விதமான காரியங்களையும் மறுத்துவிடுங்கள். ஒருவேளை குறைகூறும் சகோதரனோ, சகோதரியோ, ஆவிக்குரிய காரியங்களில் குழந்தையாக இருப்பார்களானால், அவர்களின் கவனத்துக்கு, இவ்விஷயத்தைக் குறித்ததான கர்த்தருடைய கட்டளையைக் கொண்டுபோங்கள். (அதாவது மத்தேயு 18:15; 1 தீமோத்தேயு 5:19 எடுத்துக்கூறுங்கள்). ஒருவேளை மற்றவரைக் குறித்த பழிப்பேச்சுகள் உங்களிடத்தில் நேரடியாகப் பேசப்படாமல், மற்றவரிடம் பேசிக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளில்/கூட்டங்களில், நீங்கள் நிற்க, உங்கள் செவியில் விழுமாயின் உங்கள் நிராகரிப்பை உடனடியாகத் தெரிவிக்கும் விதத்தில் (கூட்டத்தை விட்டு) பின்வாங்கிவிடுங்கள்.

ஒருவேளை பழித்தூற்றும் விஷயத்தைக் குறித்ததான கர்த்தருடைய கட்டளை, பழித்தூற்றுபவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும், பழித்தூற்றும் சகோதரன் இன்னமும் தீமைபேசுதலையும், பழிப்பேச்சையும், தூஷணங்களையும் தொடர்வாரானால், உங்களிடம் தொடர்ந்து தனது பழிப்பேச்சுகளைத் தொடர்வாரானால், அவரைத் திட்டவட்டமாகக் கடிந்துகொள்ளும் வண்ணமாக, "நீங்கள் இப்படிப் பேசுவதை என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியாது, நான் கேட்கவும் கூடாது; ஒருவேளை நான் கேட்டுக்கொண்டிருந்தால், நீங்கள் கர்த்தருடைய கட்டளையை மீறி குற்றவாளியாக (criminal) இருப்பது போல நானும் (criminal) குற்றவாளியாகிவிடுவேன். ஒருவேளை நான் உங்களின் இக்கதையைக் கேட்க வேண்டியதாய் இருப்பினும், என்னால் அதை நம்ப முடியாது, ஏனெனில் எந்தக் கிறிஸ்தவன் கர்த்தருடைய வசனத்தை மதியாமல்,

தவறுகளைச் சரிசெய்து கொள்வதற்கான அவருடைய திட்டத்தைப் பின்பற்றாமல் இருக்கிறானோ, அவனிடம் கர்த்தருடைய ஆவி இல்லாதபடியால், அவனுடைய வார்த்தைகளும் நம்புவதற்கு ஏதுவல்லாததாகும்" என்று கூறி கடந்துபோக வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளைத் தட்டிக்கழிக்கிறவனும், புரட்டுகிறவனும், உடன் சீஷர்களின் வார்த்தைகளையும், கிரியைகளையும் குறித்துப் புரட்டத் தயங்கமாட்டான். நீங்கள் இத்தகைய தூஷண பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்தாலோ அல்லது அப்பேச்சுக்களுக்கோ, அப்பேச்சைப் பேசுகிற வதந்தியாளர்களுக்கோ, பழித்தூற்றுபவர்களுக்கோ ஆதரவு தெரிவித்தாலோ, நீங்களும் அந்தப் பாவத்திற்கும் அதன் சகல பின்விளைவுகளுக்கும் பங்காளிகள் ஆவீர்கள்; ஒருவேளை இதினிமித்தம் "கசப்பான வேர்" முளைத்து விட்டால், இதனால் தீட்டுப்பட்டவர்களில், நீங்களும் ஒருவராக இருப்பீர்கள் (எபிரெயர் 12:15).

## அவதூறு பண்ணுகிறவர்கள் திருடர்கள் ஆவார்கள்

உலகத்தின் நிலைப்பாட்டைப் பொறுத்தமட்டில் அவதூறு பண்ணுகிறவர்கள் திருடர்கள் ஆவார்கள். ஷேக்ஸ்பியர் இப்படியாக எழுதுகின்றார்:

"என்னுடைய பணப்பையைத் திருடுகின்றவன், பயனற்றதையே திருடுகின்றான்;
ஆனால் என்னுடைய நற்பெயரை என்னிடத்திலிருந்து அபகரிப்பவனை
அது பணக்காரனாக்காது; உண்மையில் என்னைத்தான் அது ஏழ்மையாக்குகின்றது."

கிறிஸ்தவ நிலைப்பாட்டின்படியும், மாபெரும் போதகரின் கருத்துபடியும், அவதூறு பண்ணுகிறவர்கள் கொலைக்காரர்கள் ஆவார்கள். (மத்தேயு 5:22; 1 யோவான் 3:15 பார்க்கவும்). ஆகவே அவதூறு சொல்வதற்கான சிந்தனையானது, பிசாசின் ஆவி என்பது போல விலக்கப்பட வேண்டும்.

6. மிகப் பாதகமான வாதைகளிடமிருந்து ஒதுங்கியிருப்பதுபோல், தேவனுடைய ஜனங்கள் பெருமையைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

இக்கோட்பாடானது மிக நல்ல கோட்பாடாகும்; இது வேதவாக்கியங்கள் அளிக்கும் கோட்பாடாகும், மேலும் இது தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இரட்டிப்பாக அவசியப்படும் கோட்பாடாகும். இப்படிக் கூறுவது விநோதமாய் தோன்றலாம் . . . தேவனுடைய குணலட்சணங்கள் மற்றும் திட்டம் குறித்ததான மாபெரும் வெளிச்சம் கொடுக்கப்படும் காரணத்தினிமித்தம் அவருடைய ஜனங்கள் தங்களை மிகவும்

தாழ்த்தியும், தெய்வீக ஈவுகளின் மீது அதிகம் சார்ந்தவர்களாகவும், தேவன் மீது அதிகம் நம்பிக்கை கொண்டவர்களாகவும், தங்களின் மீது நம்பிக்கை வைக்காதவர்களாகவும் தானே காணப்படுவார்கள்? என்று நீங்கள் யோசிக்கலாம். தேவனுடைய ஜனங்கள் இப்பண்புடையவர்களாகத்தான் என்றென்றும், எப்போதும் காணப்பட வேண்டும், ஆனால் அந்தோ! . . . அநேகர் இப்படியாக இருப்பதில்லை.

அநேகர் யுகங்களைப் பற்றின திட்டத்தின் அறிவைப் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில் தங்களை விசேஷித்த ஞானிகள் அல்லது பெரியவர்கள் அல்லது நல்லவர்கள் என்று எண்ணிவிடுகின்றனர்; இவர்களோ தேவன் ஞானிகளுக்கும், பெரியவர்களுக்கும், சத்தியத்தை மறைத்துவிடுவார் என்பதையும், அவருக்கு முன்பாக எந்த மாம்சமானவைகளும் (தன்னைத்தான்) புகழ்ந்திடக்கூடாது என்பதையும் மறந்துவிட்டார்கள். ஆதாயம் கருதி, வியாபாரிகள் தங்கள் வாணிகச் சரக்குகளை விரும்புவது போன்று, இவர்களும் சத்தியத்தைச் சுயநலத்துடன் விரும்புகின்றனர். ஒருவேளை சத்தியத்தைக் கொடுத்து/விற்று இவர்கள் ஆஸ்திகளை எதிர்பார்க்காவிட்டாலும், கொஞ்சம் விளம்பரத்தை எதிர் பார்க்கின்றார்கள்; அதாவது மற்றவர்களைக் காட்டிலும் ஞானமுள்ளவர்கள் என்று காட்டிக்கொள்வதற்கு, அதாவது சத்தியத்தைச் சிறிது சிறிதாக எடுத்துக்கூறி, அதன்மூலம் தாங்கள் ஞானமுள்ளவர்கள் என்று தங்களைக் குறித்து விளம்பரப்படுத்தித் தங்களைப் பெருமைப்படுத்திக்கொள்ள நாடுகின்றனர்.

## தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை

இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்; ஏனெனில் இவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளாத பட்சத்தில் சீக்கிரத்திலோ அல்லது கொஞ்சம் காலம் கழிந்தோ முற்றிலும் வழி விலகி, உதவி செய்வதற்குப் பதிலாக, பாதிப்புகளை உண்டாக்கிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நோக்கத்திற்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை. மேலும் அவர்களுக்கு எவ்வளவுதான் திறமைகள் இருந்தாலும், அவர்களுடைய தற்பெருமையினாலே அவர்கள் இடறிப்போகும் படியாக நிச்சயமாக அனுமதித்துவிடுவார். உண்மையிலேயே திறமை உள்ளவர்கள் அல்லது திறமை தங்களுக்கு இருப்பது போன்று கற்பனை செய்து கொள்பவர்களே பெருமையின் ஆவியினால் உண்மையில் இன்னலுக்குள்ளாக அகப்படுகின்றார்கள். தேவன் பெருமை உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார், ஆனால் தாழ்மையுள்ளவர் களுக்கோ தமது கிருபையை அளிக்கின்றார். இந்த வெளியீட்டுகளின் இதழாசிரியர் தனது ஞானத்தையோ அல்லது ஆற்றலையோ குறித்து வெளிப்படை யாகவோ அல்லது மறைமுகமாகவோ தற்பெருமை அடித்துக்கொள்ளவில்லை என்பதற்கு நமது வெளியீடுகளின் வாசகர்கள் சாட்சிகளாக இருக்கின்றனர்.

நாங்கள் சத்தியத்தைக் குறித்துப் பெருமைப் பாராட்டியிருக்கின்றோம், இன்னும் அதைக் குறித்துப் பெருமைப் பாராட்டுவோம், அதாவது சத்தியத்தினுடைய பிரகாசமான மின்சாரம் போன்ற கதிருக்கு முன்பாக எந்த மனித தத்துவங்களும் ஒரு மெழுகுத்திரியின் வெளிச்சத்தைக் கூடக் காட்ட முடியவில்லை என்று பெருமைப் பாராட்டுகிறோமே ஒழிய, அச்சத்தியத்தை வெளிக்கொண்டுவந்தவர் நானே என்று ஒருபோதும் பெருமைப் பாராட்டிக்கொள்ளவில்லை. காரணம் என்னவெனில், அச்சத்தியங்களை நாங்கள் உருவாக்கவில்லை, மாறாக தேவன்தாமே "ஏற்றவேளையில்" "ஏற்றகாலத்தின் உணவாக/சத்தியமாக" வெளிப்படுத்தியுள்ளார். மேலும் நாங்களோ அல்லது வேறு எந்த மனுஷர்களோ உருவாக்கும் உபதேசங்களைக்காட்டிலும் இச்சத்தியங்கள் மிகவும் அருமையானவைகளாக இருப்பதினால், இச்சத்தியத்திற்குத் தேவனே ஆசிரியர் என்றும், அதனை வெளிப்படுத்தினவர் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

ஒருவேளை தேவனுடைய கிருபையினால், தற்கால அறுவடை சத்தியத்தை மற்றவருக்கு வெளிப்படுத்தும் வேலையில் நாங்கள் எந்தெந்த விதங்களில் பயன்படுத்தப்பட்டாலும், அவ்வேலையின் நிமித்தம் நாங்கள் களிகூருகின்றோம்; மேலும் எங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள உக்கிராணத்துவத்தில் உண்மையாய் இருக்க தொடருவோம், ஆனாலும் இவ்விஷத்தில் தற்பெருமை கொள்வதற்கு எங்களிடத்தில் இடமோ, அவசியமோ, காரணமோ இல்லை. இவ்வேலைக்குப் பாத்திரமானவர்களையும், பொருத்தமானவர்களையும், திறமை மிக்கவர்களையும் நமது எஜமான் உடனே கண்டுபிடிக்க வல்லவர் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த காரியமாய் உள்ளது. ஆனால், 1 கொரிந்தியர் 1:27-29 "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்ட வைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்" என்பதே நமக்கான விளக்கமாகும்.

ஆகவே தேவனுடைய கிருபையினாலே இருளிலிருந்து தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டவர்களாகிய அனைவரும் கர்த்தருக்கு முன்பாக அதிக தாழ்மையுள்ளவர்களாக இருக்கும்படி எச்சரிப் பூட்டுகின்றோம். ஏனெனில், ஒருவேளை பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிச்சமானது இருளாகிப் போகுமானால், அவ்விருள் எவ்வளவு பெரியதாக இருக்கும் . . . எத்துணை நம்பிக்கையற்ற நிலைமையாகக் காணப்படும்! அப்படிப்பட்டவர்களைக் குறித்துக் கூறுகையில், அப்போஸ்தலர் குறிப்பிட்டது போல, அவர்கள் ஜீவனுக்குரிய பாதையை அறியாமல் இருந்திருந்தால் அது அவர்களுக்கு நலமாய்

இருந்திருக்கும். உப்புச் சாரமற்றுப் போனால் அது ஒன்றிற்கும் உதவாது, சொல்லப்போனால் மண்ணைப் போன்றாகிவிடும்.

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

7. சுத்தமுள்ளவர்களாய் இருங்கள்.

தேவனிடத்திலும், மனுஷரிடத்திலும் குற்றமனசாட்சியற்ற நிலையைக் காத்துக்கொள்கிறவர்களாய் இருங்கள். இருதயத்தில், அதாவது எண்ணங்களில் சுத்தமுள்ளவர்களாய் இருங்கள்; பொல்லாப்பான எவ்வித எண்ணங்களுக்கும் இருதயத்தில் இடம் கொடாதிருங்கள். தீமையான எண்ணங்கள் குடிகொள்ளா தபடிக்கு கிறிஸ்து இயேசுவை உங்கள் மனதிற்கு முன்பாக மாதிரியாக நிறுத்திக்கொள்ளுங்கள். தீமையான எண்ணங்கள் வெளியிலிருந்தோ அல்லது உங்களுக்குள்ளிருந்தோ உங்களிடத்தில் அழையாமல் நுழைகிறது என்றால், தேவையான எல்லாச் சூழ்நிலைகளிலும் உதவி அளிக்கப்படும் என்று வாக்களித்தவரிடம் கிருபைக்காக உங்கள் இருதயங்களை ஜெபத்தில் உயர்த்துங்கள். "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" (சங்கீதம் 19:14) என்ற ஜெபமும், சிந்தையும் உங்களிடத்தில் எப்பொழுதும் காணப்படுவதாக.

8. வேதவாக்கியங்களின் பல்வேறு விசேஷித்தக் கட்டளைகளை மதிப்புடன் கருதி, அவைகளைக் கைக்கொள்ள நாடுகையில், அந்தத் தெய்வீகப் பிரமாணத்தின் அடிப்படையான கொள்கைகளை அதிகமதிகமாய்ப் புரிந்துகொள்வதற்கும், அதற்கு இசைவாக நடக்கவும் நாட வேண்டும்.

இப்படிச்செய்வோமேயானால் கர்த்தருடைய வார்த்தைகளில் குறிப்பாக ஒருவேளை சுட்டிக்காட்டப்படாத நம்முடைய வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் கிரியைகளில் காணப்படும் தவறுகளையும், சரியானவைகளையும் நம்மால் கண்டுபிடிக்க முடியும். நாம் எவ்வளவாக தெய்வீக பிரமாணத்தின் அடிப்படை கோட்பாடுகளைப் புரிந்துகொண்டு, அதற்கு இசைவாய்ச் செயல்படுகின்றோமோ, அவ்வளவாய் தெய்வீக வார்த்தையின் ஆவியைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருப்போம். சங்கீதம் 119:97-105 பார்க்கவும்.

9. கிறிஸ்துவின் குணலட்சணத்திற்கு அல்லது சிந்தனைக்கு எதிரான, குற்றம் கண்டுபிடிக்கும் மற்றும் சண்டையிடுகின்ற குணலட்சணங்களை விலக்கி/

தவிர்த்துவிடுங்கள், அதாவது அன்பிற்கு எதிர்மாறான இவைகளைத் தவிர்த்துவிடுங்கள்.

உலகம், மாம்சம் மற்றும் பிசாசையும், இவர்களின் பல்வேறு கண்ணிகளை யும் எதிர்த்து மேற்கொள்வதற்குக் கொஞ்சம் எதிர்த்துப்போராடுகிற மனப்பான்மையுடன் கூடிய தைரியம் தேவையாய் உள்ளது. இந்தப் போராடுகின்ற மனப்பான்மையானது ஒருவேளை ஞானமாகவும், சரியான விதத்திலும் கையாளப்பட்டால், அதாவது பாவத்திற்கு எதிராக முதலாவது நம்மிடத்திலும், இரண்டாவதாக மற்றவரிடத்திலும் கையாளப்பட்டால், இந்தப் போராடுகின்ற மனப்பான்மை கர்த்தருடைய நோக்கத்திற்கும், நமக்கும் மிக விலையேறப்பெற்றச் சகாயமாக விளங்கும். ஒருவேளை இப்போராடும் மனப்பான்மையானது கர்த்தருக்காவும், அவருடைய ஜனங்களுக்காகவும், சாத்தானுடைய இருளின் வல்லமைகள் மற்றும் மூடநம்பிக்கைக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டால் இப்போராடும் மனப்பான்மையானது நமக்கு விலையேறப்பெற்றச் சகாயமாக விளங்கும். இதுவே வேதவாக்கியங்களில், "நல்ல போராட்டத்தைப் போராடுதல்" என்று அழைக்கப்படுகின்றது; மேலும் நீதி மற்றும் சத்தியத்திற்கான இந்த யுத்தத்தில், நமது தலைவரின் கனத்தையும், அவருடைய ஜனங்களின் சுயாதீனங்களையும் காப்பாற்றுவதற்கென யுத்தம் பண்ணும் தைரியமான போர் வீரர்களாக நாம் அனைவரும் காணப்பட வேண்டும்.

## நல்ல போராட்டத்தைப் போராடுங்கள்

ஆனால் எதிர்த்துப்போராடும் மனப்பான்மையை இப்படியாக நல்ல விதத்தில் பயன்படுத்துவது என்பது இவ்வுலகத்தின் அதிபதியானவனுக்குப் பிரியமாய் இராது, ஆகையால் அவனால் நேரடியாகப் பயன்படுத்த முடியாத இம்மனப்பான்மையைத் தவறான வழியில் திருப்ப நாடி முயற்சிப்பான். இதன் விளைவாக அவன் (சாத்தான்) சிலரிடத்தில் இப்போராடும் மனப்பான்மையைப் பிரதானமான கடமை என்று எண்ணிக்கொள்ளத்தக்கதாக முயற்சி செய்வான். மேலும் சாத்தான் - அவர்கள் எல்லாவற்றோடும், அனைவரோடும் போராடும்படி அவர்களை ஊக்கமூட்ட முயற்சிப்பான், அதாவது இருளின் அதிகாரத்தைக் காட்டிலும் சகோதர சகோதரிகளையும், பெயரளவிலான கிறிஸ்தவர்களைக் குருடாக்கி வைத்துள்ள தப்பறைகளுக்கும், அறியாமைக்கும் எதிராக போராடுவதைக்காட்டிலும் பெயர்க்கிறிஸ்தவ மனிதர்களையும் எதிர்த்துப்போராட அவர்களைச் சாத்தான் ஊக்குவிப்பான். "தேவனுக்கு எதிராக போராடும்" நிலைக்கு நம்மைக் கொண்டு வந்து நிறுத்துவதே உண்மையில் சாத்தானுடைய விருப்பமாக உள்ளது.

இவ்விஷயத்தில் கவனமுள்ளவர்களாய் இருக்கக்கடவோம். நாம் மற்றவரின்

முன்பு தடுக்கலின் கல்லைப் போட்டுவிடாதபடிக்கு, முதலில் நாம் அனைவரும் நம்மை நாமே நிதானித்தறிவோமாக. அற்பவிஷயங்களை மலை அளவு பெரிதாக்கவும், சின்னஞ்சிறிய விஷயங்களையும், ஒன்றிற்கும் உதவாத விஷயங்களையும் குறித்துப் போராடுகிற மற்றும் குற்றம் காணும் (குறைகூறும்) இயல்புடையவர்களாகவும் நம்மை ஆக்கக்கூடிய தவறான ஆவிகளுக்கு எதிராக நம்முடைய சொந்த இருதயங்களில் நாம் போராடுவோமாக. "பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தம் மனதை அடக்குகிறவன் உத்தமன்" (நீதிமொழிகள் 16:32). சத்தியத்தின் மீதான அன்பினாலும், கர்த்தரின் மீதான அன்பினாலும், அவருடைய ஜனங்களாகிய சகோதர சகோதரிகளின் மீதான அன்பினாலும் தான் நாம் சத்தியத்திற்காகப் போராடுகிறோமே ஒழிய, சுயமகிமை தேடும் நோக்கங்களுக்காக நம்முடைய போராடுதல் காணப்படக்கூடாது என்பதில் நாம் நம்மைக்காக்க வேண்டியவர்களாக இருப்போமாக. நம்முடைய நோக்கம் அல்லது ஆவி ஒருவேளை அன்பின் அடிப்படையில் இருக்கும் பட்சத்தில், இவ்வன்பானது உடன் ஊழியர்களாகிய சகோதர சகோதரிகளிடத்திலான நம்முடைய பிரயாசங்கள் அன்பிலும், சாந்தத்திலும், பொறுமையிலும், தாழ்மையிலும் சாரம் ஏறினதாக வெளிப்படும். "எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவர்களாய்" நாம் இருக்கக்கடவோம் (2 தீமோத்தேயு 2:24). துரிதமும், ஆற்றலும் உள்ள "ஆவியின் பட்டயமாகிய" தேவனுடைய வார்த்தையே, துண்டித்துப்போடுகிற வேலை அனைத்தையும் செய்ய அனுமதிப்போமாக.

10. துர்க்குணம், பொறாமை, விரோதம், பகை ஆகியவைகளோடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய சகல எண்ணங்களையும், உணர்வுகளையும் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.

கணநேரம்கூட இவைகளுக்கு உங்களுடைய இருதயங்களில் எவ்வித இடத்தையும் கொடாதிருங்கள்; ஏனெனில் இவைகள் மற்றவருக்குப் பாதிப்பை ஏற்படுத்துவது ஒருபக்கமாக இருப்பினும் உங்களுக்கே நிச்சயமாக அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கும். உங்கள் இருதயம், உங்கள் சித்தம், உங்கள் நோக்கங்கள் மற்றும் விருப்பங்கள், தேவன் மீதான அன்பிலும், அவருடைய சகல சிருஷ்டிகள் மீதான அன்பிலும் நிரம்பி இருக்கட்டும் . . . தேவன்பால் அதிக அன்பும் மற்றும் இதற்கேற்ப அவருடைய ஆவியைப் பெற்றவர்களாக, அவர் காட்டும் வழியில் நடக்கின்ற யாவரோடும் அன்பும் காட்ட வேண்டும்.

11. உங்கள் மனசாட்சியை நம்பாதிருங்கள்.

மனசாட்சியின் மீது நம்பிக்கை வைக்காதீர்கள். ஒருவேளை மனசாட்சி யானது உங்களுக்குப் போதுமான வழிகாட்டியாக இருக்குமாயின், உங்களுக்கு

வேதவாக்கியங்களின் தேவை அவசியமாயிராதே. பெரும்பான்மையான ஜனங்களுக்கு, கொஞ்சமும் மனசாட்சி என்பதே கிடையாது, காரணம் மனசாட்சிக்கு வழிகாட்டியாக இருக்கும்படிக்குத் தேவன் கொடுத்துள்ள நியாயப்பிரமாணங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் ஜனங்கள் குருடர்களாய் இருக்கின்றனர். இவர்களைக் காட்டிலும் அவல நிலையில் இருப்பவர்களைத்தான் 1 தீமோத்தேயு 4:2-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்த்து, அது கொடுக்கும் வெளிச்சத்திற்கு ஏற்ப கவனமாய் நடப்பது தவிர்க்க முடியாத அவசியமாய் இருக்கின்றது.

12. நீதிக்கும் மற்றும் சத்தியத்திற்கும் தவிர மற்றபடி தைரியம் உள்ளவர்களாய் இருக்காதீர்கள்.

பாவத்தைக் குறித்தும், எஜமானுக்கு சினமூட்டுவதைக் குறித்தும், "நம்முடைய பரம அழைப்பிற்கான பந்தய பொருளாகிய" மாபெரும் பரிசை இழந்துபோக நேரிடும் நிலை குறித்ததுமான பயபக்தியுடன் கூடிய பயம் உங்களுக்கு இருப்பது நலமாயிருக்கும். "இடறி விழுந்துபோகிறவர்கள்" அனைவரிலும் பெரும்பாலானோர் முதலாவது சகல பயத்தையும் இழந்து, தன்னம்பிக்கை உள்ளவர்களாக ஆகிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் "... இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிடுவதில்லை" என்பதை மறந்து விடுகின்றார்கள். "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம். மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" என்பதற்கு இவர்கள் இந்தத் தகுதியான பயத்தை இழந்துபோனதே ஒரு காரணமாக இருக்கின்றது. (எபிரெயர் 6:6; 2 பேதுரு 1:5-10; எபிரெயர் 4:1)

---

STORIES TWICE TOLD

# மணலுக்கு ஏற்பட்ட தழும்புகள்

டாக்டர்.ஜே.எப்.கார்சன் அவர்கள் பாவத்திற்காக வருந்துபவருக்கு ஒரு செய்தியைக் கூறுகிறார்:

கடலின் அயராப் பொறுமையைப் போன்றது தேவனின் இரக்கமாகும். குழந்தைகள் தங்களின் சிறு மண்வெட்டியின் மூலம் மணலில் ஆழமான காயங்களை உண்டாக்கி, தங்க மணலினுடைய மேற்பரப்பின் மீது தழும்புகளை

ஏற்படுத்திச் சென்றுவிடுவர். பிறகு, அமைதியான பழங்கடல் திரும்பி வந்து, தழும்பின் அடையாளத்தையெல்லாம் முற்றிலும் நீக்கிவிட்டு, எப்போதும் போல் மணலைச் சமதளமாக்கிப் பளபளக்கச் செய்து விட்டுச் சென்றுவிடும். இக்காட்சி தினந்தோறும் நடக்கும் மற்றும் கடலானது இத்தழும்புகளைச் சரிப்படுத்துவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை... இதுவே சோர்ந்துபோகாத, இளைப்படையாத அநாதிதேவனின் சிறப்பு அடையாளமாகும்.

-- John F. Cowan.
5000 Best Modern Illustrations -- page 459.

---

# புறங்கூறுதல்

புறங்கூறுதலுக்குச் செவிக்கொடுக்காதீர்கள் - நீங்களும்
புறங்கூறுபவர்கள் ஆகிவிடுவீர்கள்.

மற்றவரைக்குறித்துப் பேசுகிறவன், தான் நம்பிக்கைக்குப்
பாத்திரமற்றவன் என்று நிரூபிக்கின்றவனாய் இருப்பான்.

புறங்கூறுபவன் என்பவன் உண்மைகள் எதையும் அறியாமல்
விவரங்களை மாத்திரம் கொடுப்பவனாய் இருப்பான்.

சுவிசேஷத்திற்கும் (Gospel) மற்றும் புறங்கூறுதலுக்கும் (Gossip)
இடையேயுள்ள வித்தியாசம் என்னவெனில் - சுவிசேஷம்
என்பது நற்செய்தியாகவும், புறங்கூறுதல் என்பது துர்ச்செய்தியாகவும்
இருக்கின்றது என்பதே ஆகும்.

வதந்திகளினுடைய பசைதன்மைக்கு ஈடாக
எந்தவொரு பசையும் காணப்படுகிறதில்லை.

- Deep Waters and Bubbling Brook.

---

## பாகம் - 7

# கூட்டங்கள்

# நீங்கள் உறுதிப்பட்டிருந்தும்

*"இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்."(2 பேதுரு 1:12)*

இங்கு எவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது? நிச்சயமாகவே சகல ஜாக்கிரதையுள்ளவர்களாய், விசுவாசத்தோடே நற்பண்பினையும்/தைரியத்தையும் (மனோதிடத்தையும்), தைரியத்தோடே/நற்பண்போடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும் (சுயக்கட்டுப்பாட்டையும்), இச்சையடக்கத் தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குவதற்கான அவசியமே ஆகும். ஏனெனில் இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை; இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பூரணமாய் அளிக்கப்படும் (வசனங்கள் 5-11).

சத்தியத்தில் உறுதிப்பட்டிருத்தல் என்பது குறிப்பது என்னவெனில், நாம் சத்தியத்தினைக் கவனமாய் ஆராய்வதையும், அதை "வேதாகமத்தைக் கொண்டும், சாட்சியாகமத்தைக் கொண்டும்" நாம் முழுவதுமாக உறுதிப்படுத்திக்கொள்வதையும் [ஏசாயா 8:20] மற்றும் இதன் விளைவாக அதன் உண்மைத்தன்மைக் குறித்து நாம் நம்பிக்கை அடைவதையும், இப்படியாய் நமது விசுவாசமானது உறுதியாயும், அசைவுறாததாயும் ஆகுகின்றது என்பதாகும்; அதாவது நாம் யாரை நம்புகின்றோம் என்பதை நாம் அறிவோம்; கர்த்தர் நல்லவர் என்பதை நாம் ருசித்திருக்கின்றோம், கண்டிருக்கின்றோம்;அவருடனான ஐக்கியத்தின் இன்பங்களை அனுபவித் திருக்கின்றோம்; யுகங்களுக்கடுத்த அருமையான தெய்வீகத் திட்டத்தில் வெளிப்படுகின்றதான கிருபையின் பரிபூரணத்தைக் குறித்த சந்தோஷமான உணர்ந்துகொள்ளுதலுக்கு வழிநடத்தப்படுவதற்கு ஏதுவான அளவுக்குத்தக்கதாய், அவருடைய தேவபக்தியின், விசுவாசத்தின், சாந்தத்தின் ஆவியில் பங்கெடுத்துள்ளோம்; மேலும் அந்தத் திட்டத்தினுடைய பல்வேறு அம்சங்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டதோடல்லாமல், இன்னுமாக நியமிக்கப்பட்ட காலங்களில், அதன் மகிமையான பலனானது முழுமையாய் அடையப்பெறுவதற்கு ஏதுவான அதன் பல்வேறு நடவடிக்கைகள் யாவற்றின் அவசியத்தையும் மற்றும் நியாயத்தையும்கூடப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். இதுதான் தற்கால சத்தியத்தில் உறுதிப்பட்டிருத்தலாகும். இது உண்மையில் மிகப் பாக்கியமான நிலைமையாகக் காணப்பட்டு அதனோடுகூட, உலகத்தால் கொடுக்க

முடியாததும், எடுத்துப்போட முடியாததுமான அத்தகையதொரு சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது.

ஆனால் நாம் இப்படியாகத் தற்கால சத்தியத்தில் உறுதிப்படுத்தப் பட்டிருந்தும், நாம் அழைக்கப்பட்டுள்ளதான உயர் ஸ்தானத்திற்கான நம்முடைய தெரிந்துகொள்ளுதலானது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை நாம் மனதில் கொண்டிருப்பது அவசியமாய் இருக்கின்றது. நம்முடைய பரம அழைப்பிற்கான பந்தையப்பொருளுக்குரிய பந்தயமானது இன்னமும் நம்முன் இருக்கின்றது மற்றும் நாம் இன்னமும் அநேகம் தந்திரமுள்ள மற்றும் வல்லமையுள்ள சத்துருக்களினால் சூழப்பட்டிருக்கும் சத்துருவின் நாட்டில்தான் காணப் படுகின்றோம்; ஆகையால் நாம் வெற்றியடைய வேண்டுமெனில், "நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், - தப்பறையின் மற்றும் மூடநம்பிக்கையின் மற்றும் உடன்பிறந்த பாவங்களின் - அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் (தேவனுடைய சத்தியமானது) தேவபலமுள்ளவை களாயிருக்கிறது என்பதை நினைவில்கொண்டும் மற்றும் "மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும், இப்பிரபஞ் சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்பதை நினைவில்கொண்டும், நாம் "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தினைப் போராடிட வேண்டும்" (2 கொரிந்தியர் 10:4; எபேசியர் 6:12).

நமக்கு முன்பாய்க் காணப்படும் போர் குறித்தும், நமக்கான சோதனைகளுடைய தந்திரம் குறித்தும், மாம்சத்தினுடைய பெலவீனம் குறித்துமான - இந்த உண்மைகளின் கண்ணோட்டத்தில்தான் - உண்மையுள்ள அப்போஸ்தல னாகிய பேதுரு - கிறிஸ்தவ கிருபைகளை உருவாக்கி வளர்த்திடுவதில் சகல ஜாக்கிரதைக் கொண்டிருக்கவும், நாம் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கேதுவாய் நாம் பலப்படுத்தப்படத்தக்கதாக, நாம் கற்றுக்கொண்டுள்ளதான விலையேறப்பெற்றச் சத்தியங்களைத் தொடர்ச்சியாய் நினைவுக்குக் கொண்டுவரவும் வலியுறுத்துகின்றார். விசுவாசம் என்பது நல்லதுதான்; ஆனால் நற்கிரியைகள் இல்லாத விசுவாசமானது செத்ததாய் இருக்கும்; மற்றும் சத்தியத்தினை அநீதியுடன் வைத்திருப்பது என்பது, அதைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கும்போதுள்ள நிலைமையைக் காட்டிலும் மோசமானதாய் இருக்கும். சத்தியமானது, நம் இருதயங்கள் மற்றும் ஜீவியங்கள் மீது அதன் பரிசுத்தமாக்கும் தாக்கத்தினைக் கொண்டிருக்கவே, சத்தியமானது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் அது நம்மிடத்தில் அதன் போக்கில் செயல்பட்டு, மகிமைப்படுவதாக. அதன் விலையேறப்பெற்ற கனிகள் நாளுக்குநாள் அதிகமதிகமாய்த் தோன்றிடுவதாக. உங்கள் விசுவாசத்தோடே நற்பண்பினை (திருவிவிலியம்)/கூட்டி வழங்குங்கள் - அதாவது முதல்தரமான குணலட்

சணத்தினை, அதாவது உலகத்தினின்றும், அதன் ஆவியினின்றும் பிரிந்திருப்பவர்களௌன உங்களை அடையாளம் காட்டும் அத்தகையதொரு குணலட்சணத்தின் முதல்தரத்தினைக் கூட்டிவழங்குங்கள். இப்படியானவர்கள் அனைவரிடத்திலும் உலகமானது, எவ்வளவுதான் நம்முடைய விசுவாசத்தினை எதிர்த்திட்டாலும், அவர்கள் அங்கீகரிக்கக்கூடிய அந்த நற்பண்புகளை இத்தகையவர்களிடத்தில் காண்பார்கள். மிகச்சிறந்த நேர்மையினை, உண்மையினை, தொழில் ரீதியான விஷயங்கள் யாவற்றிலும் நாணயத்தினைக் கொண்டிருங்கள்; சமுக உறவுகள் யாவற்றிலும் உத்தமமாய் இருங்கள்; அயலானுக்கு ஊறுவிளைவிக்காதபடிக்குச் சுத்தக் கைகளையும் மற்றும் தூய்மையான இருதயத்தையும் மற்றும் கடிவாளமிடப்பட்ட நாவையும் கொண்டிருங்கள். இவைகள் அனைத்தும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்களிடத்தில் எதிர்ப்பார்த்திடுவதற்கு உலகத்திற்கு உரிமை இருக்கின்றது; மற்றும் இவை அனைத்தும் நமது விசுவாசத்துடன் கூட்டிவழங்கப்பட வேண்டியதான நற்பண்புள்ள குணலட்சணத்தினுடைய இன்றியமையாத அம்சங்களாய்க் காணப்படுகின்றன. சுத்தமான கைகளானது நேர்மையற்ற எதிலும் கையிடுவதில்லை; அவைகள் தொழில் விஷயத்தில் அநீதியான திட்டங்கள் எவற்றுடனும் எத்தொடர்பும் கொண்டிருப்பதில்லை. தூய்மையான இருதயமானது பொல்லாங்கானவைகளைத் திட்டமிடாது அல்லது தீய எண்ணங்களைக் குடிக்கொண்டிருக்காது அல்லது தீங்கு செய்ய திட்டமிடாது. கடிவாளமிடப் பட்டதான நாவானது, புறங்கூறிடாது, மாறாக அதனால் நன்றாயும், ஞானமாயும் பேசிட முடியாதபோது அமைதிக் காத்திடும். ஆனால் அயலாருக்கு இப்படியாக ஊறுவிளைவிக்கின்ற எதையும் செய்திட வெறுமனே மறுக்கும் இந்த எதிர்மறையான அம்சங்களையும் தாண்டி வேறுகாரியங்களைச் செய்திட, நற்பண்புகளினுடைய தூண்டுதல்களானது ஏவிடும்; அவை சில விஷயங்களைச் செய்யாமல் இருப்பதற்கு மாத்திரமல்லாமல், சிலவற்றைச் செய்திடுவதற்கும் தூண்டுகின்றதாய் இருக்கின்றது - அதாவது மற்றவர்களில் துயரங்களைத் தணித்திடுவதற்கும், துயரப்படுவோர் மீது அனுதாபங்கொள்வதற்கும், வேதனையில் காணப்படுவோரை ஆறுதல்படுத்துவதற்கும் மற்றும் மற்றவர்களைத் தூக்கிவிடுவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் - வாய்ப்பிற்கேற்ப யாவருக்கும் உதவிடுவதற்கும் நாடுகின்ற பரந்தமனப்பான்மையுடன் கூடிய அன்பில் நன்மைசெய்வதற்கும் தூண்டுகின்றதாய் இருக்கின்றது.

இத்தகைய நேர்மையான நற்பண்புகளுடன் அறிவைக் கூட்டிக் கொள்ளும்படிக்கு, நமக்குப் புத்திமதி கூறப்பட்டுள்ளது; அதாவது தேவனுடைய குணலட்சணத்தினை நாம் மிகவும் முழுமையாய்ப் பின்பற்றத்தக்கதாக, அவரது குணலட்சணம் பற்றின அறிவையும், அவரது போதனைகளுக்கு மிகவும் இணங்கி காணப்படத்தக்கதாக, அவரது சத்தியம் பற்றின அறிவையும் கூட்டிக்

கொள்ளும்படிக்கு நமக்குப் புத்திமதி கூறப்பட்டுள்ளது; ஞானத்தோடு இச்சையடக்கத்தை - அனைத்திலும் சுயக்கட்டுப்பாட்டை, தன்னடக்கத்தை/சாந்தத்தைக் கூட்டிக்கொள்ள வேண்டும். "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக." நாம் அவசரபுத்தியுடையவர்களாகவும், முன்கோபியாகவும் அல்லது மூர்க்கத்தனமானவர்களாகவும், முன்யோசனையற்ற வர்களாகவும் காணப்படக் கூடாது. மாறாக நாம் சீரான நிலையில் காணப்படுவதற்கும், ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படுவதற்கும் மற்றும் கருத்தூன்றி கவனம் செலுத்துவதற்கும் நாடிட வேண்டும்; அதாவது கர்த்தருக்குப் பிரியமானவைகளைச் செய்திடுவது குறித்தும், அவரது பிரதிநிதிகளென அவரிடத்திலான நம்முடைய பொறுப்புக்குறித்தும், சகமனிதர்களிடத்திலான நம்முடைய செல்வாக்கானது எப்போதும் நன்மைக்கு ஏதுவாய் இருக்க மற்றும் ஒருபோதும் தீமைக்கு ஏதுவாய் இல்லாமல் இருக்க நாம் பார்த்துக்கொள்வது குறித்தும் நாம் எப்போதும் கவனமாய் இருப்பதைச் சுட்டிக்காட்டும் விழிப்பானது நம்முடைய ஒட்டுமொத்த நடத்தையில் காணப்பட வேண்டும்.

"இச்சையடக்கத்தோடே பொறுமையையும் கூட்டிக்கொள்ளுங்கள்." "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" (யாக்கோபு 1:4). ஆம் இந்த ஆவியின் கிருபையானது (பொறுமையானது), மற்ற ஒவ்வொரு கிருபைக்கான வழிகளிலுள்ள தடையினை அகற்றுகின்றதாய் இருக்கின்றது; காரணம் ஆவியின் கிருபைகள் அனைத்தும் பொறுமை மற்றும் தொடர்ச்சியான சுயக்கட்டுப்பாடு எனும் வழிமுறையின் கீழ் அடையப்பட வேண்டும். பொறுமை எனும் இக்கிருபையானது செயல்படுத்தப்படாமல், எந்த ஒரு வளர்ச்சியின் படிநிலையையும் அடையப்பெற முடியாது மற்றும் கிருபைகளில் உள்ள வேறு எந்தக் கிருபையைக் காட்டிலும் இந்த ஒரு கிருபையே கிறிஸ்தவக் குணலட்சணத்தினை அழகுப்படுத்துகின்றது அல்லது உலகத்தாருடைய மனசாட்சியின் ஒப்புதலைப் பெற்றுத்தருகின்றது அல்லது இக்கிருபைக்குத் தூண்டுதலாய் இருந்த சத்தியத்தின் காரணியாகிய சகல கிருபையுடைய தேவனை மகிமைப்படுத்துகின்றது. இது நீடிய பொறுமையுடன், சாந்தத்துடன், மனித பூரணமின்மை மற்றும் பெலவீனத்தின் பேரலைகளைச் சமாளித்து முன்னேறிடுவதற்கு ஊக்கமாய் நாடுகின்றது மற்றும் தெய்வீகச் சாயலை மீண்டும் அடைந்திடுவதற்குக் கடுமையாய்ப் பிரயாசம் எடுக்கின்றது. இது கோபங்கொள்ள தாமதிக்கின்றது/நீடிய சாந்தமாய் இருக்கின்றது மற்றும் மிகுந்த கிருபையுள்ளதாய் இருக்கின்றது; இது சத்தியம் மற்றும் நீதியின் பாதைகளை உணர்ந்துகொள்வதில் துரிதமாய் இருக்கின்றது மற்றும் அவைகளில் நடக்கவும் துரிதமாயுள்ளது; இது நம் சொந்த பூரணமின்மைகளைக்குறித்து நம்மை விழிப்பாய் இருக்கச் செய்து, மற்றவர்களுடைய பூரணமின்மைகள் மற்றும் குறைவுகள் குறித்து அனுதாபங்கொள்ளச் செய்கின்றது.

"பொறுமையோடே தேவபக்தியையும்" - அதாவது திவ்விய வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான திவ்விய குணலட்சணம் குறித்துக் கவனமாய்க் கற்று, பின்பற்றுதலை - கூட்டிக்கொள்ளுங்கள்.

"தேவபக்தியோடே சகோதர சிநேகத்தை" - திவ்விய குணலட்சணத்தினுடைய கொள்கைகளை நம்முடைய சகமனிதர்களிடத்தில் செயல்படுத்துவதை மற்றும் வெளிப்படுத்துவதை - கூட்டிக்கொள்ளுங்கள்.

"சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டிக்கொள்ளுங்கள்." சிநேகமானது - யார் மீது சிநேகம் பாராட்டப்படுகின்றதோ, அவர்பால் கொஞ்சமே அன்பு இருக்கும் தருணங்களின்போது - சிநேகமானது பாராட்டப்படுகின்றது; ஆனால் அனுதாபத்துடன்கூடிய அக்கறையானது எழவில்லையெனில், இத்தகைய சிநேக செயல்பாடுகளில் நாம் தொடர்ந்து நீடிக்கமுடியாது மற்றும் போகப்போக அந்த அக்கறையானது தொடர்ந்து செயல்பாட்டில் காணப்படுகையில், அது அன்பாகுகின்றது. நேசிக்கப்படும் அந்நபர் குணலட்சணத்தில் விரும்பத்தகாதவராக இருப்பினும், விழுந்துபோன மற்றும் சீரழிந்து போனவர்களுக்கான அனுதாப அன்பானது தொடர்ந்து வளருகின்றது; தவறிழைக்கும் குமாரனுக்காகப் பெற்றோர் கொண்டிருக்கும் அன்பிற்கு ஒத்ததாகவும் மற்றும் பரிவாயும், அக்கறையாயும் ஆகும்வரை வளர்கின்றது.

உண்மையில் பேதுரு மிகவும் விரும்பத்தக்க குணலட்சணத்தை விவரிக்கின்றார் மற்றும் இதை அடைவது என்பது ஜீவக்காலம் முழுவதுமான வேலையாக இருக்கும் என்று யார்தான் இதைப் படிக்கையில் உணராமல் இருப்பார்கள். அது ஒருநாளிலோ அல்லது ஒரு வருடத்திலோ அடையப்பெற முடியாது; மாறாக அதை அடைவதற்கு முழு ஜீவியமுமே கொடுக்கப்பட வேண்டும்; மற்றும் நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தால் நாளுக்குநாள், கிறிஸ்தவ குணலட்சணத்தினுடைய வளர்ச்சியிலும் மற்றும் கிருபையிலும் ஓரளவிற்கு இருக்கும் வளர்ச்சியினை நாம் உணர்கின்றவர்களாய் இருப்போம். சத்தியத்தை நாம் அறிந்திருந்து மற்றும் அதை அநீதியான நிலையில் வைத்திருப்பதில் மனநிறைவு கொள்வது என்பது தகுதியானதல்ல. சத்தியமானது அதன் முறையான மற்றும் அது நோக்கம் கொண்டுள்ளதான விளைவினைக் குணலட்சணத்தின்மீது கொணரத்தக்கதாக நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை சத்தியமானது இப்படியாக உண்மையும், நன்மையுமான இருதயத்திற்குள்ளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்குமாயின், நாம் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை என்றும், ஏற்றகாலங்களில் நமது கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்றும் அப்போஸ்தலன் நமக்கு நிச்சயமளிக்கின்றார்.

கர்த்தருடைய கட்டளைகள் மற்றும் உபதேசங்களை நம்முடைய மனங்களில் எப்போதும் கொண்டிருப்பதின் அவசியத்தினையும் மற்றும் நாம் சத்தியத்தில்

ஏற்கெனவே உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் ஊக்குவிக்கும் ஆவிக்குள் ஆழமாய் மூழ்கிடுவதன் அவசியத்தினையும் நாம் பார்த்துள்ளோம். விசுவாசத்தில் உறுதிப்பட்டிருப்பது என்பது ஒரு காரியமாகவும், ஆனால் கிறிஸ்தவ குணலட்சணத்திலும், ஆவியின் கிருபைகள் அனைத்திலும் உறுதிப்படுவது என்பது முற்றிலுமாய் இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது.

## ஒரு நடைமுறை யோசனை

நம்முடைய சொந்த இருதயங்களிலும், அருமையான விசுவாச வீட்டார் யாவருடைய இருதயங்களிலும் ஆவியின் கிருபை விஷயத்திலுள்ள ஆழமான வேலையின் அவசியத்தினை நாம் உணர்கையில், நம் யாவரின் சார்பிலும் இக்குறிப்பிட்ட காரியத்தின் திசையிலான அதிக விசேஷித்த பிரயாசங்களானது, அநேகமாக மிகுந்த பிரயோஜனத்திற்கேதுவாய் இருக்குமென எங்களுக்குத் தோன்றுகின்றது. வரவிருக்கின்றதென நாம் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டிருக் கின்றதான இரவின் இருண்ட அந்தகாரத்தின் காலப்பகுதியில், விசுவாசம் மற்றும் பொறுமை செயல்படுத்த வேண்டிய எப்படிப்பட்டதான நிலைக்குள் நாம் கடந்துபோக வேண்டியிருக்கும் என்பதை நாம் அறியோம்; ஆயினும் "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்" மற்றும் நாம் கிருபையை உண்மையாய்ப் பற்றிக்கொண்டு, பொறுமையோடே அதிலே தொடருவோமானால், அந்தந்த நாளுக்கு கிருபையானது போதுமானதாய் இருக்கும் என்பதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கின்றோம். ஒவ்வொரு நாளும் அதன் பரீட்சைகளைக் கொண்டுவருகையில், நாம் பரீட்சைகளினால் முறையாய்ப் பயிற்றுவிக்கப்படுகையில், ஒவ்வொரு நாளும் அதன் ஜெயத்தினைக் கண்டடைந்து - இப்படியாக நம்மைக் குணலட்சணத்திலும், விசுவாசத்திலும் மிக உறுதியாய் ஸ்திரப்படுத்தி, பெலப்படுத்துகின்றது.

கிறிஸ்தவ குணலட்சணத்தை விசேஷமாய் அபிவிருத்திச் செய்திடும் கண்ணோட்டத்தில், நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதும், அலிகெனி மற்றும் வேறு இடங்களிலுமுள்ள சபையாரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதுமான நம்முடைய யோசனை என்னவெனில்: எங்கெல்லாம் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் சிலரால் ஒன்று கூடிட வாய்ப்புள்ளதோ, இந்த விசேஷித்த நோக்கத்திற்காக ஓர் இடை வாரக்கூடுகையினை ஒழுங்குப்படுத்திடலாம். இத்தகைய கூடுகையானது, தொழுதுகொள்வதற்கும், ஜெபிப்பதற்கும் மற்றும் துதிப்பதற்கும் மற்றும் சகோதரருக்குப் புத்திமதி கூறிடுவதற்கும், சேர்ந்து உரையாடுவதற்கும் மற்றும் கலந்துபேசுவதற்கும் என்று ஒதுக்கப்பட வேண்டும் மற்றும் வேதாகம ஆராய்ச்சிக்காகவோ அல்லது எதிர்த்து வாதாடுவதற்கோ என்று ஒதுக்கப்பட வேண்டாம். உபதேச ரீதியான காரியங்கள் பற்றின ஆராய்ச்சிகள் யாவும், இத்தகைய கூட்டங்களில் தவிர்க்கப்பட வேண்டும் மற்றும் வாக்குவாதத்தினை

எழப்பண்ணுகின்றதான அத்தகைய பாடங்களானது தவிர்க்கப்பட வேண்டும் மற்றும் அத்தகைய காரியங்களானது வேறொரு கூட்டத்திற்கென, அதாவது அனைவரும் ஒன்றுகூடிவரும் கர்த்தருடைய நாளில், ஒரு பொருத்தமான வேளையில் ஏற்பாடு பண்ணப்பட்டும், வேறொரு கூட்டத்திற்கென ஒதுக்கப்பட வேண்டும்; இப்படிக் கூறுவதன் நோக்கம், உபதேசத்தைப் புறக்கணிக்கவோ அல்லது வேத ஆராய்ச்சி வேண்டாம் என்றோ இல்லை; மாறாக இந்த அவசியத்தினை (கர்த்தருடைய நாளில் ஒழுங்குப்பண்ணும்) ஒரு கூட்டத்தில் சந்திக்கையில் மற்ற (இடைவார) கூட்டமானது, எவ்விதமான குழப்பமும் இல்லாமல், சரிசமமான மற்ற அவசியத்தினைச் சந்திக்கின்றதாய் இருக்கும்.

அலிகெனி மற்றும் பிட்ஸ்பர்கில், இங்குள்ள எங்களது ஏற்பாடு பின்வருமாறு: எங்கள் சபையார் ஆங்காங்கே மிகவும் சிதறிக் காணப்படுவதினால், கலந்துகொள்ள விரும்பும் யாவருக்கும் இடம் போதுமானதாய்க் காணப்பட வேண்டும் எனும் அவசியத்தின் காரணமாக, அவர்களை அநேகம் சுற்றுவட்டார கூட்டங்களாகப் பிரித்திருக்கின்றோம்; மற்றும் ஒவ்வொரு கூட்டத்திற்குமென, திறமை விஷயத்தில் பகுத்தறிந்து, ஒரு வழிநடத்துபவர் நியமிக்கப்படுகின்றார். இவர்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டிருக்கிற - உபதேசத்தில் தெளிந்தவர்களாகிய, உண்மையுள்ளவர்களாகிய மற்றும் பக்தியுள்ளவர்களாகிய சகோதரராய் இருத்தல் வேண்டும். இந்தக் கூட்டங்களானது, ஒவ்வொரு சிறு கூட்டத்தார் மத்தியிலுள்ள ஏதோ ஓர் அங்கத்தினனுடைய இல்லத்தில், புதன்கிழமை சாயங்காலம் நடத்தப்படுகின்றது. கூட்டமானது, கீர்த்தனையோடும், ஜெபத்தோடும் துவங்கி, ஞாயிற்றுக்கிழமை மதியத்தினுடைய வசனப்பகுதியானது வழிநடத்துபவரால் வாசிக்கப்படுகின்றது; அடுத்ததாக ஒவ்வொருவராய் இடுக்கமான வழியிலுள்ள தனது வளர்ச்சி குறித்துக் கூறும்படிக்கு; எப்படிக் கிருபையில் வளர்ந்து கொண்டிருப்பதை மற்றும் எப்படி உலகம், மாம்சம் மற்றும் பிசாசினை ஜெயம்கொள்ள முயன்றுகொண்டிருப்பதைக் குறித்த - அவனது அல்லது அவளது தனிப்பட்ட அனுபவத்தினை - கூறும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இங்கு அவர்கள் தாழ்மையோடு தங்கள் ஜெயங்களைக்குறித்துக் கூறிடலாம் அல்லது தங்கள் சோதனைகள் குறித்துப் பேசிடலாம் அல்லது கடினமான சந்தர்ப்பங்களில், கிறிஸ்தவ ஆலோசனையையும், அனுதாபத்தையும் கேட்டுக் கொள்ளலாம்; பெரிய எண்ணிக்கையிலுள்ள கூடுகைகளில் பேசிடுவதற்கு வாய்ப்புள்ளதை (அ) தகுதியாய் இருப்பதைக் காட்டிலும் இத்தகைய சிறிய எண்ணிக்கையிலுள்ள கூடுகைகளில் மிகவும் மனந்திறந்து இங்குப் பேசிடுவார்கள். இங்கு அவர்கள் ஒருவர் இன்னொருவருடைய விண்ணப்பங்களைக் கேள்விப்படுகின்றார்கள் மற்றும் ஓர் இருதயத்திலிருந்து, இன்னொரு இருதயத்திற்குக் கிறிஸ்தவ அன்பும், அனுதாபமும் மிகத் தாராளமாய்ப் பொழிகின்றது.

இந்தக் கூடுகைகளில் மனதில் வைத்துக்கொள்ள வேண்டியதான நோக்கம் என்னவெனில் . . . கர்த்தருடனான மற்றும் அவரது ஊழியத்திலுள்ள புதிதான, இப்போதுள்ள, வாரந்தோறும் மற்றும் தினந்தோறுமுள்ள அனுபவங்கள் பகிரப்பட வேண்டும், மாறாக மிகவும் கடந்த காலத்திலுள்ள பழைய/மலர்ச்சியிழந்த அனுபவங்களை மாத்திரம் பகிரப்படுதல் அல்ல என்பதாகும். ஒரு தெளிவான கடந்த கால அனுபவம் பகிரப்படுதல் என்பது நல்லதுதான்; ஆனாலும் தெளிவான தற்கால அனுபவமானது பகிரப்படுதல் என்பது சிறந்ததாய், மிகவும் அதிகம் முக்கியமானதாய் இருக்கும். உபதேசம் எனும் வார்த்தைப் பொருந்துகின்றதான நம்பிக்கை, விசுவாசம், கீழ்ப்படிதல், தேவபக்தி, ஜெபம் முதலான வேதவாக்கியங்களின் போதனைகள் தவிர, மற்றப்படியுள்ள உபதேசங்களானது, இந்தக் கூடுகைகளில் தவிர்க்கப்படுகின்றது. சத்தியத்தினை அறிந்துகொள்வதில் திருப்திக்கொண்ட நிலையில், ஆனாலும் அதன்படி தினந்தோறும் மற்றும் ஒவ்வொரு மணிநேரமும் ஜீவித்திடுவதற்கு விசேஷித்தப் பிரயாசங்கள் ஏதும் எடுக்காத நிலையில் அநேகர் காணப்படுவதை நாம் காண்கின்றோம். இருதயத்தின் நேர்மையும், மீட்பரினால் நிறைவேற்றப்பட்டுள்ளதான வேலையின் மீதான விசுவாசமும், அவரது ஊழியத்திற்கென அர்ப்பணிப்பதும் "பரிசுத்த ஸ்தலத்திற்குள்" பிரவேசிப்பதற்கு அவசியமாய் இருக்கின்றபடியால் - அதாவது தெய்வீகத் திட்டத்தினுடைய ஆழமான அம்சங்களைப் புரிந்துகொள்ள முடிகின்ற மற்றும் முழுமையாய் உணர்ந்துகொள்ள முடிகின்றதான "பரிசுத்த ஸ்தலத்திற்குள்" பிரவேசிப்பதற்கு அவசியமாய் இருக்கின்றபடியால் - இந்தப் பண்புகளானது, தொடர்ந்து காணப்பட வேண்டும், நீடித்திருக்க வேண்டும்; இல்லையேல் ஒளியானது, இருளாகிடும் - ஒளியினின்று புறம்பான இருளுக்குள் நீங்கள் தள்ளப்பட்டுப் போவீர்கள்; இந்தப் புறம்பான இருளில்தான், ஆவியுலகக் கோட்பாடு, கிறிஸ்தவ விஞ்ஞானம், பிரம்ம ஞானம் மற்றும் மனித இனம் முழுமைக்கும் மீட்பு கிடைக்கும் என்ற கிறிஸ்தவ சபை பிரிவினரின் கோட்பாடு (Universalism) எனும் சுடர்விட்டு மின்னுகிற தப்பறையின் பின், உலகமும் பெயர்ச்சபையும் போய்க்கொண்டிருக்கின்றது.

இத்தகைய கூட்டத்திற்கென நியமிக்கப்பட்டுள்ளதான வழிநடத்துபவர், தான் நியமிக்கப்பட்டுள்ளதான ஒவ்வொரு சிறு கூட்டத்தாருடைய விசேஷித்த தேவைக்கென, தனது ஆலோசனையும், சீர்ப்படுத்துதலும் அல்லது உற்சாக மூட்டுதலும் போதுமானதாய்க் காணப்படத்தக்கதாக, அவன் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அவனது கடமை உணர்வும், ஒவ்வொருவரிடத்திலான தனிப்பட்ட அக்கறையும், அனைவருக்கும் நம்பிக்கையைக் கொடுக்கிறதாய் இருக்க வேண்டும். இத்தகைய இடைவாரக் கூட்டங்களானது, தெய்வீக ஜீவனில் உயர் தேர்ச்சி அடைவதற்கான படிக்கல்லாய்க் காணப்படுகின்றது என்றும், அனைவரும் பெரிதும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் மற்றும் நன்மை அடைவார்கள் என்றும்,

முழுச்சரீரமும், ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய காரியங்களில் மிகவும் பலனுக்கேதுவாய் ஊழியம்புரிந்திட உதவப்படுவார்கள் என்றும் நாங்கள் நம்புகின்றோம். ஒவ்வொரு மாதத்தினுடைய மத்திய புதன் மாலையன்று, ஜெப அம்சத்திற்கு அதிக கவனம் கொடுக்கப்படுகின்றது மற்றும் கிருபையின் சிங்காசனத்தை நோக்கி ஒருவர்பின் ஒருவராக இரண்டு அல்லது மூன்றுபேர் ஜெபித்திடுவதற்கான வாய்ப்பானது, யாவருக்கும் அருளப்படுகின்றது. காலாண்டில் ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையன்று நடைபெறும் இதே அம்சமுடைய பொதுக்கூட்டத்தில் இந்தப் பல்வேறு சிறு கூட்டத்தாருடைய ஆவிக்குரிய வளர்ச்சியினைக்குறித்து, வழிநடத்தினவர்களிடமிருந்தும், கலந்துகொண்ட பல்வேறு நபர்களிடமிருந்தும் கேட்டறிந்து கொள்கின்றோம் மற்றும் காலாண்டு தோறும், வழிநடத்துபவர்கள் மற்றக் கூட்டத்தார்களுக்கு இடமாற்றம் பண்ணப் படுகின்றனர்.

இந்த யோசனைகளோடுகூட, கர்த்தருடைய ஆசீர்வாதம் கடந்துவருவதாக மற்றும் பலனானது, கிறிஸ்தவ அன்பினுடைய கட்டினைப் பலப்படுத்துதலாகவும் மற்றும் எங்கும் பரஸ்பர பரிவாகவும், ஐக்கியமுமாகவும் காணப்படுவதாக.

---

R1900

## வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் குழுக்கள்

**செ**ப்டம்பர் 15-இன் நமது வெளியீட்டில், வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் குழுக்களானது - வேதாகம வாக்கியங்களை நிதானமாய்ப் பகுப்பதற்கும், புரிந்துகொள்வதற்கும் ஒரே சாத்தியக்கூறாய் உள்ள யுகங்களுக்கடுத்த ஒட்டுமொத்த திட்டங்களின் பொதுவான அம்சங்களில், ஒவ்வொருவரையும் உறுதிப்படுத்துவதன் வாயிலாகச் சபையைக் கட்டியெழுப்புவதற்குப் பிரயோஜனமான வைகள் என்று நாங்கள் பரிந்துரைத்திருந்தோம். இந்த வழிமுறைக்கு நான்கு வரவேற்கத்தக்க விசேஷித்த அம்சங்கள் காணப்படுகின்றன; அவை: (1) இது ஓர் அதிகாரத்திலுள்ள ஒரு சில வசனங்கள் மீது கவனத்தை எல்லைக்குட் படுத்துவதற்குப்பதிலாக, ஆதியாகமம் முதற்கொண்டு வெளிப்படுத்தல் விசேஷம் வரையிலுமான வேதவாக்கியங்கள் மொத்தத்தையும் ஆராய்வதற்கும், பயன்படுத்திடுவதற்கும் வழிவகுக்கின்றது. இது வேதாகமத்தினுடைய ஒரு வசனம் மற்றும் அதிகாரத்தின் ஆராய்ச்சியாக இராமல், தலைப்பின் கீழான ஆராய்ச்சியாக

இருக்கும். (2) இது ஆண்டவருடைய பண்டகசாலையிலிருந்துள்ள ஐசுவரியமான மற்றும் சத்தான ஆகாரமென நாம் கண்டுகொண்டுள்ளதானவைகளில் மனங்களையும், இருதயங்களையும் புத்துணர்வடையத்தக்கதாக வழிநடத்திடும் மற்றும் இருதயத்தைத் திருப்தியோ அல்லது பலப்படுத்திடவோ செய்திடாத வீணான மனித கற்பனைகளிலிருந்து தூர வழிநடத்திடும். (3) இது ஒவ்வொருவரும் சிந்திப்பதற்கும், ஆராயப்படும் விஷயம் குறித்து வேதவாக்கியங்கள் கூறும் அனைத்திற்கும் இசைவாய்ச் சத்தியம் பற்றின தனது கருத்தினைத் தொகுத்திட கற்றுக்கொள்வதற்கும் மற்றும் தான் காண்கின்றதான சத்தியங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திடுவதற்கும்கூடப் பழக்குவிக்கின்றது. (4) இவைகளே சபையிலுள்ள சகல போதித்தல்களுக்குமான நோக்கங்களாகும், அதாவது அப்போஸ்தலன் குறிப்பிடுவது போன்று, "பரிசுத்தவான்கள் பக்திவிருத்தி அடைவதற்காகவும், சுவிசேஷஊழியத்தின் வேலைக்காகவும்" ஆகும் (எபேசியர்4:12).

எனினும் இவ்வகைக் கூட்டங்கள் தொடர்பான யோசனைகளைச் சிலர், வெகு சிலர் முற்றிலும் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளனர் மற்றும் வேதாகமம் வாசிப்பதைக் கைவிடவும், அதற்குப் பதிலாக மில்லேனியல் டாண் வெளியீட்டை வாசிக்கவும் நாம் அறிவுரை வழங்கினதாகப் புரிந்து கொண்டிருக்கின்றனர் என்பதை நாங்கள் கவனித்தோம்; அவர்கள் வெகு சொற்பமானவர்கள்தான் என்று சொல்வதற்கு நாம் மகிழ்கின்றோம். அவர்கள் புரிந்திருப்பதுபோல் எங்கள் கருத்துகள் இருந்ததில்லை. வேதாகமத்தையோ, டாண் வெளியீட்டினையோ வெறுமனே வாசித்தல் என்பது, ஒவ்வொருவனாலும் தனக்கென்று தனிப்பட்ட விதத்தில் வாசித்துக்கொள்ளப்படலாம்.

இதற்கு மாறாக வேத ஆராய்ச்சிகளை வரையறையற்றதாக்கிடுவதே யோசனையாகும்; மற்றும் டாணில் முன்வைக்கப்பட்டுள்ளதான தேவனுடைய ஒழுங்கின்படியான திட்டத்தைப் படிக்கையில், வெளிச்சம் நமக்குக் கடந்து வந்திருக்கிறதென்றால், நாம் அதே கண்ணோட்டத்தில் தொடர்ந்து ஆராய்கையில் அத்திட்டமானது, அதன் நுட்பமான விவரங்கள் அனைத்திலும் அதிகமதிகமாய்த் தெளிவாகிடும். ஒருவேளை யுகங்களுக்கடுத்த திட்டமானது மாத்திரமே, தெய்வீகத் திட்டத்தினுடைய மெய்யான முக்கிய பொதுவான அம்சங்களைத் (outline) தெரிவிக்கிறதென்றால் மற்றும் அந்த முக்கிய பொதுவான அம்சங்களை (outline) நாம் முழுமையாகக் கற்றுக்கொண்டுள்ளோமானால், யுகங்களுக்கடுத்த தேவத்திட்டத்தினுடைய நுட்பமான விவரங்களைத் தொடர்ந்து ஆராய்வதிலும் அதே உதவிக்கரங்களை நாம் பயன்படுத்திடுவோமாக, அதே தெய்வீகத் திட்டத்தினைக் கவனிப்போமாக.

இந்த நோக்கத்திற்காகத்தான் நாம் "வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் குழுக்களை" ஆலோசனையாகத் தெரிவித்தோம் மற்றும் பரிந்துரைத்திட்டதான

இம்முறைமைக்கு உதாரணமாக, டாண் - ஒன்றாம் தொகுதியின் முதல் பத்தியினுடைய மாதிரி ஆராய்ச்சியினை வழங்கியுள்ளோம்:

திவ்விய வெளிப்படுத்தல் என்றால் என்ன? - 2 பேதுரு 1:21; 2 தீமோத்தேயு 3:16, 17.

எப்போது மற்றும் எப்படிப் பாவம் உலகத்திற்குள் வந்தது? - உரோமர் 5:12; etc.

நீதியின் சூரியன்" யார்? - மல்கியா 4:1, 2; மத்தேயு 13:43; தானியேல் 12:3.

இந்தச் "சூரியன்" எப்போது உதிப்பார்? - அப்போஸ்தலர் 3:19-21; கொலோசெயர் 3:4.

அதன் பிரகாசத்தின் விளைவு என்ன? - மல்கியா 4:1, 2; ஏசாயா 60:18, 19; 25:7-9; அப்போஸ்தலர் 3:23.

அதன் குணமாக்குதல் என்னவாக இருக்கும் மற்றும் அது எப்படி நிகழ்த்தப்படும்? - உரோமர் 5:18, 19.

பாவமும், மரணமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தற்காலத்தின் அழுகையையும், உபத்திரவத்தையும் உண்டுபண்ணினதா? எப்படி? எதன் அடிப்படையில் "விடியலையும் மற்றும் அதன் சந்தோஷங்களையும்" நாம் எதிர்ப்பார்த்திடலாம்? - உரோமர் 5:6-8; 14:9; 1 கொரிந்தியர் 15:3, 21; 2 பேதுரு 1:16, 19; நீதிமொழிகள் 4:18; யோபு 14:13-15; சங்கீதம் 49:14, 15.

இரவைத் தொடர்ந்து அந்த "மகிமையான நாள்" வருமா? -வெளிப்படுத்தல் 21:21-25; ஏசாயா 60:20, 21.

பிரயோஜனம் உண்டாகத்தக்கதாக, வேறு வேதவாக்கியங்கள் முன்கொண்டுவரப்படலாம்; எனினும் மிக அதிகளவிலான சுதந்தரமானது அனுமதிக்கப்படக்கூடாது என்பதின் அவசியத்தினை அனைவரும் பார்த்துக் கொள்ள வேண்டும் மற்றும் கூட்டத்தை வழிநடத்துபவர் தனது பகுத்துணர்தலைப் பிரயோகித்து, ஒருவர் அதிகமாய் வேறொன்றை விவரித்துக்கொண்டிருக்கையில்

அவருக்கு அன்போடு அதைக் குறித்து நினைப்பூட்டிட வேண்டும். சபையார் பல்வேறு வேதாகமங்களைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் இந்தக் கூட்டங்கள் யாவும் துதித்தலோடும், ஜெபத்தோடும் துவங்கி, முடிக்கும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம். எழுதுகோலை/பென்சிலைப் பெற்றிருந்து, தங்கள் டாண் புத்தகத்தின் ஓரத்தில் (margin) ஓரக்குறிப்புகளைக் குறித்துக்கொள்ளலாம் எனும் சிலருடைய திட்டமிடுதல்கூட வரவேற்கத்தக்கது. சத்தியத்தினைச் சந்தேகமுடையவர்களுக்கு மெய்ப்பித்துக் காண்பிப்பதற்கு மீண்டுமாகப் பிரயாசம் எடுப்பது என்பது, அனைவருக்குமே மிக உதவியாகக் காணப்படும்.

இந்த ஒரு பத்தியிலுள்ள காரியங்களிலிருந்து, மூன்றுபேர் கொண்ட ஒரு வகுப்பிற்குத் திரளான மற்றும் ஐசுவரியமான வேதாகம உணவினை ஒரு மணி நேரம் பெற்றுக்கொள்ளலாம்; மற்றும் பன்னிரண்டு பேருள்ள ஒரு பெரிய கூட்டத்தார் ஒரு கூடுகையில் அனைத்தையும் பார்த்து முடிக்க முடியாது. கர்த்தருடைய மந்தையின் இந்தச் சிறு சிறு கூட்டத்தார்கள், வாரத்தில், ஒருமுறை இந்த "வேத ஆராய்ச்சிக்கான டாண் குழுக்களை" பெற்றிருக்க நாம் பரிந்துரைக்கின்றோம். இது "சுவிசேஷவேலையினை" மற்றவர்களுக்குச் செய்திடுவதற்கு நிபந்தனையாகக் காணப்படும் வேதவசனத்தினுடைய புரிந்துகொள்ளுதலில் அனைவரையும் தேர்ச்சிப் பெற்றவர்களாக்கிடும் (எபேசியர் 4:12). இது - ஒன்றுகூடி, ஊகங்கள் செய்திடுவதற்கும், வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான ஒவ்வொரு நபரைக்குறித்தும் மற்றும் ஒவ்வொரு காரியத்தைக்குறித்தும் நிழல்களை உருவாக்கிடுவதற்கு முயற்சிப்பதற்கும் - அதாவது புதுக் கருத்துக்களை உண்டுபண்ணும் திறமையின் காரணமாகப் பெருமைக்குள்ளாக (மற்றும்) "புறம்பான இருளுக்குள்ளாக" அநேகரை வழிநடத்திட்டதான ஒரு திட்டத்தை முயற்சிப்பதற்கும் பதிலாக, இது - மிகவும் பாதுகாப்பான ஒரு வழிமுறையாகும். இது - தற்செயலாக ஏதோ ஒரு தலைப்பை அல்லது முன்கூட்டியே நியமிக்கப்படாத எந்த ஒரு தலைப்பை எடுத்துக் கொள்வதைப் பார்க்கிலும், மிகவும் பிரயோஜனமாகக் காணப்படும். ஒவ்வொரு பாடமும் அனைவராலும், அதிலும் விசேஷமாக வழிநடத்துபவரால் அல்லது மூப்பரால் நன்கு சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டும். கலந்துகொள்பவர் யார் ஒருவராலும் யோசனையாகத் தெரிவிக்கப்படும் வேறு எந்த ஒரு வேதாகம தலைப்பையும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு ஒவ்வொரு கூட்டத்தாரும் விருப்பத்துடன் காணப்பட வேண்டும் மற்றும் பிரயோஜனமான தலைப்பாக இருக்குமென அக்கூட்டத்தாரில் பெரும்பான்மையானவர்களால் கருதப்பட வேண்டும். இந்தக் காரணத்தின் நிமித்தம் (வேறு வேதாகம தலைப்புகள் ஆராயப்படுவதற்காக) டாண் பாடங்களானது தற்காலிகமாக நிறுத்தப்படலாம் அல்லது கூடுதலாக ஒரு கூடுகை நியமிக்கப்படலாம்.

# பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக...

கூட்டங்களை நடத்திடுவதற்கான மிகப் பிரயோஜனமான வழிமுறைகள் தொடர்பான அறிவுரை வேண்டி, சத்தியத்தில் காணப்படும் நண்பர்களிடமிருந்து அநேகம் வேண்டுகோள்களை நாம் பெற்றுக்கொண்டோம். ஒரு சகோதரன் பின்வருமாறு எழுதுகின்றார்:

"டாணை வாசித்துக்கொண்டிருக்கும் சில சகோதரர்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஆராயத்தக்கதாக ஏதோ ஓர் இடத்தில் கூடிடலாம் என்ற தங்கள் விருப்பத்தினைத் தெரிவித்துள்ளனர் மற்றும் புதிதாய்த் துவங்கியுள்ளவர்களுக்குப் பொருத்தமான ஒரு திட்டத்திற்காக தங்களது ஆலோசனையை நான் கேட்கின்றேன். நாங்கள் இந்த ஆராய்ச்சியைச் சரியான விதத்தில் துவங்கி, அநேகம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக எங்களுக்காய் ஜெபம்பண்ணுங்கள்."

- உங்கள் J. W. Mclane.

புதிய இடத்திற்குச் சமீபத்தில் இடமாறியுள்ள வேறொரு சகோதரன் கூறுகிறதாவது:

"இந்த இடத்தை வேலை பண்ணிடுவதற்கான நல்ல நிலமாக நான் காண்கின்றேன். நான் இங்குக் கைப்பிரதிகளைக் கொடுத்துள்ளவர்களில் அநேகர் ஆர்வத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களிடத்தில் நான் வேதப் பாடங்களைக் குறித்துத் தாராளமாய்ப் பேசியுள்ளேன் மற்றும் என் இல்லத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான அவர்களது வாக்கையும் பெற்றுள்ளேன். ஆகையால் தாங்கள் எனக்கு அறிவுரையளித்து உதவினால், நான் மிகவும் நன்றியுள்ளவனாய் இருப்பேன்."

ஆண்டவருடைய ஊழியத்தில் தங்கள்
அருமை சகோதரன்,
JOSHUA L. GREEN.

வேறொரு சகோதரன் எழுதினதாவது:-

"ஆராதனைக்கெனக் கூடிடுவதற்கென்று விரும்பும் அநேகர் இங்குக் காணப்படுகின்றனர். அதை எப்படிச் செய்வது என்பது தொடர்பான சில அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள நாங்கள் பிரியப்படுகின்றோம்.

எங்களுக்குத் திருப்திகரமாயிருக்கும் சில வழிமுறைகளை நீங்கள் எங்களுக்குச் சொல்லிடுவீர்கள் என்று நம்புகின்றோம். எங்களில் சிலர் (பெயர்)

சபைகளை விட்டு வந்தவர்களாகவும், மனித கட்டளைகள் யாவற்றிடமிருந்தும் சுதந்தரமடைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். நானும் Presbyterian சபையைவிட்டு வந்தவனாவேன்.

கிறிஸ்துவுக்குள் உங்கள்,
C. C. FLEMING.

யுகங்களுக்கடுத்த தேவனுடைய திட்டத்தைக் கற்றுக்கொள்வதற்கான விருப்பம் பெருகி வருவதையும் மற்றும் இதில் வழிமுறைகளின் மற்றும் ஒழுங்குமுறைகளின் முக்கியத்துவமும் அடையாளம் கண்டுகொள்ளப் பட்டுள்ளதையும் கவனிக்கையில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எங்களது அறிவுரை பின்வருமாறு:-

(1) இது தொடர்பாக மே 1, '93; பக்கம்-131; செப்டம்பர் '93; பக்கம்-259; அக்டோபர் 15, '93; பக்கம்-307; மார்ச் 1, '94; பக்கம்-73; ஏப்ரல் 1, '95; பக்கம்-78; மே 1, '95; பக்கம்-109 ஆகிய நம்முடைய வெளியீட்டுகளில் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள சில காரியங்களை முதலாவதாக மறுபடியும் வாசியுங்கள்.

(2) "அமைப்பை" குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அது முற்றிலும் அவசியமற்றதாகும். வேதாகம விதிமுறைகளே, உங்களுக்கு அவசியப்படும் ஒரே விதிமுறைகளாகக் காணப்படுகின்றன. மற்றவர்களுடைய மனசாட்சியினைக் கட்டிப்போடுவதற்கு நாடாதிருங்கள் மற்றும் மற்றவர்களும் உங்களுடைய மனசாட்சியினைக் கட்டிப்போடுவதற்கு அனுமதித்துவிடாதீர்கள். இன்றையதினம் தேவனுடைய வார்த்தைகளை உங்களால் புரியமுடிந்த அளவுக்கேற்ப அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படியுங்கள் மற்றும் இப்படியாக நாளுக்கு நாள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்வதற்குத் தொடருங்கள்.

(3) வேதாகமமானது நீங்கள் யாரிடம் "சகோதரரென" ஐக்கியங் கொள்ளலாம் என்று உங்களுக்குத் தெரிவிக்கின்றது - மாம்சத்தின்படி நடக்காமல், ஆவியின்படி நடப்பதற்கு நாடுகின்ற விசுவாசிகளுடன் மாத்திரமேயாகும். எதையாவது மற்றும் எல்லாவற்றையும் விசுவாசிக்கும் விசுவாசிகளல்ல, மாறாக மனுக்குலம் பாவத்திற்குள் விழுந்தது மற்றும் அதற்கான தண்டனை மரணம் என்றும், "அனைவருக்குமான (சரிநிகர் சமமான விலையென) ஈடுபலியென," "பாவமன்னிப்புண்டாகும்படிக்குச் சிந்தப்பட்ட," "அவரது இரத்தத்தின் மீதான விசுவாசத்தின்" வாயிலாகவே கிறிஸ்துவுக்குள்ளாக மாத்திரம் இரட்சிப்பு இருக்கின்றது என்றுமுள்ள சுவிசேஷத்தினுடைய பதிவுகளை விசுவாசிக்கும் விசுவாசிகளே ஆவர். கிறிஸ்துவைச் சிறந்த மற்றும் நல்ல நபர் என்றும், நீதியான வாழ்க்கைக்குரிய சிறந்த உதாரணம் என்றும் மாத்திரம் விசுவாசிப்பவர்கள் என்பவர்கள் அயலகர் அல்லது அறிமுகமானவர்கள் என்று கருதப்படலாம்; ஆனால் அவர்கள் "விசுவாசிகளல்ல" மற்றும் இதனால் அவர்களைப் போன்றே யூதர்கள்,

முகமதியர்கள், நாத்திகர்கள், ஆயக்காரர்கள் மற்றும் பாவிகள் இயேசுவைக் கருதுவதினால், இவர்களும், அவர்களும் "சகோதரர்களாய்" இருப்பதில்லை.

(4) பாவம் மற்றும் மரணத்திலிருந்து மிகவும் விலைக்கொடுத்து வாங்கப்பட்டுள்ளதினால், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளென ஒன்றுகூடிவந்து, இனிமேல் உங்களுக்காக இல்லாமல், உங்களுக்காக மரித்தவருக்காக ஜீவித்திடுவதற்கு முடிவெடுத்துள்ளீர்கள் (2 கொரிந்தியர் 5:15). உங்களது கூட்டங்களானது சில குறிப்பிட்ட நோக்கங்களைப் பெற்றிருக்க வேண்டும். அவை:-

(a)ஆராதனை, துதி மற்றும் ஜெபம்

(b)உலகம், மாம்சம் மற்றும் உள்ளிலும், வெளியிலுமுள்ள பிசாசுக்கு எதிராக வெற்றிகரமாய்ப் போர்ப்புரியத்தக்கதாக ஒருவருக்கொருவர் உதவுதல்.

(c)மேலும் இவைகளுக்காக, நமக்கு அறிவுரையாகவும் மற்றும் தேவனை அன்புகூருகிறவர்களுக்கும், அவருக்கு ஊழியஞ்செய்ய, அவரைக் கனப்படுத்த மற்றும் அவருக்குக் கீழ்ப்படியத்தக்கதாக தங்களது பிரயாசங்களின் வாயிலாக தங்களது அன்பினை ரூபகாரப்படுத்துகிறவர்களுக்கும் அவரால் ஆயத்தம் பண்ணப்பட்டதான அந்த ஆசீர்வாதங்களிடத்திற்கு நடத்துகின்றதான இடுக்கமான வழியில் நமக்கு உதவுவதற்காகவும் - அவர் அருளியுள்ளதான அவரது வார்த்தைகளை ஆராய்வதற்கும்கூட நீங்கள் ஒன்றுகூடிட வேண்டும்.

(5) இப்படியாக உபதேசங்களைப் பற்றின அறிவானது நாம் கூடிடுவதில் அடைந்தாக வேண்டிய நோக்கமாயிராமல், மாறாக குணலட்சணத்தைக் கட்டியெழுப்புவதற்கேயாகும்; இந்தக் குணலட்சணங்களானது, தேவனுடைய அருமையான குமாரனின் சாயலை அடைவதற்கான முயற்சிகளாக, "பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்படும்." ஆனால் தேவனுடைய கிருபையில் வளருவதற்குரிய நம்முடைய பிரயாசங்களுக்கு, அவரது வார்த்தையில் அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளதான உபதேசங்கள் குறித்த அறிவானது மிகவும் விலையேறப்பெற்றதாய் இருக்குமெனத் தேவன் தெரிவிக்கின்றார்.

ஆகையால் ஆராதனை, துதி மற்றும் ஜெபத்திற்குப் பிற்பாடு வேதாகம ஆராய்ச்சியானது, அதன் இரண்டு பாகங்களில் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும், அவை: (a) தேவனுடைய திட்டம் குறித்து ஆராய்ச்சி -- அவர் நமக்கும், உலகத்திற்கும் என்ன செய்துகொண்டிருக்கிறாரென அவர் நமக்குச் சொல்வது என்ன என்பது குறித்தும், அவர் என்ன செய்திருக்கின்றார் மற்றும் என்ன இனிமேல் செய்யவிருக்கின்றார் என்பது குறித்தும் நாம் ஆராய்வதினால் நாம் புத்திரர்களெனத் தேவனுடைய மாபெரும் வேலைக்குரிய ஆவியை அடையவும் மற்றும் அவரோடு அறிவுள்ள உடன் வேலையாட்களாகக் காணப்படவும் உதவப்படுவோம். (b) இப்பொழுதும், இனிவரும் யுகங்களிலும் தேவனுக்குப் பிரியமாயும், அவர் அங்கீகரிக்கத்தக்கதாயுமுள்ள அப்படியான குணலட்சணங்களை நாம் வளர்க்கத்தக்கதாக, தேவனுடைய ஊழியங்களில் ஒருவர்

இன்னொருவரிடத்திலும் மற்றும் நம்மில் ஒருவராய் இல்லாதவர்களாய் இருப்பவரிடத்திலும் கொண்டிருக்கும் நமது கடமைகள் மற்றும் சிலாக்கியங்கள் குறித்து ஆராய்வதாகும்.

பொதுவான சௌகரியத்தின் நிமித்தமாக இந்தக் கூட்டங்களானது ஒன்றரை முதல் இரண்டு மணி நேரங்களுக்கு மேலாக நடத்தக்கூடாது என்றபோதிலும், வாரந்தோறும் இரண்டு கூட்டங்களாகிலும், ஒன்று கிறிஸ்தவ கிருபைகள் மற்றும் சாட்சி மற்றும் ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகியவற்றிற்கான கூட்டமாகவும், மற்றொன்று வேதாகம ஆராய்ச்சிக்காகவும் இருப்பது பொதுவாக நலமாயிருக்கும். ஒவ்வொரு கூட்டத்திலும் நன்றியோடு தொழுதுகொள்வதற்கான நமது பாடல்கள், ஜெபங்கள் தேவனுக்கு முன்பு சுகந்தவாசனையாய் எழும்பிட வேண்டும் மற்றும் இந்த ஆராதனையில் அனைவரும் பங்கெடுக்க வேண்டும்.

ஆதிசபையில் இருந்தது போலவே, நம் மத்தியிலும் முறையாய் உரையாற்றும் பிரசங்கித்தல் என்பது அரிதாக வாய்ப்புகள் இருப்பதற்கேற்ப காணப்படுகின்றன. தேவையான தகுதிகளை - அதாவது சத்தியத்தைக் குறித்த தெளிவான புரிந்துகொள்ளுதல் மற்றும் அதைக் கர்த்தருடைய மந்தைக்கு உதவியாகக் காணப்படத்தக்கதாக முன்வைத்திடுவதற்கான திறமை, குரல், கல்வியறிவு போன்ற தகுதிகளையும் கூடப் பெற்றிருக்கும் ஏதோ சகோதரன் காணப்படும்போதே அந்த அரிதான வாய்ப்புகள் காணப்படுகின்றது மற்றும் இத்தகுதிகளோடுகூட, அவர் சாந்தமுள்ளவராகவும், இறுமாப்பு அடைவதற்கு ஏதுவாக இல்லாதவராகவும் அல்லது தன்னைக்குறித்துப் பிரசங்கியாமல், கிறிஸ்துவின் சிலுவையினைப் பிரசங்கிக்கிறவராகவும் காணப்பட வேண்டும்.

ஆனால் பிரசங்கித்தல் இருக்கின்றதோ அல்லது இல்லையோ, அனைவராலும் (சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இருவராலும்) பங்குகொள்ள முடிகின்ற மற்றும் அனைவரும் பங்குகொள்ள வேண்டிய மற்றக் கூட்டங்களானது தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்; மேலும் பரிசுத்தவான்களில் (அர்ப்பணம் பண்ணியுள்ள "விசுவாசிகளில்") ஒவ்வொருவரும் நன்மை செய்யவும், நன்மையை அடையவும் நாடிட வேண்டும் (உரோமர் 14:19; எபேசியர் 4:11-32; 1 தெசலோனிக்கேயர் 5:11 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்).

(6) நாம் எந்த அளவுகோலைக் கொண்டு சத்தியத்தை அறிந்துகொள்ளலாம் மற்றும் நிரூபித்துக்கொள்ளலாம்? வேதவார்த்தைகளானது, "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது" என்று நாம் பதிலளிக்கின்றோம் (2 தீமோத்தேயு 3:16, 17).

ஆனால் வேதாகமத்தைப் புரிந்துகொள்வது எப்படி? நூற்றாண்டுகளாக நல்ல மனுஷர்களும், கெட்ட மனுஷர்களும் அதன் பக்கங்களில் தேடியிருந்திருக்கின்றனர்.

இதில் ஆசீர்வாதங்களை நல்ல மனிதர்கள் கண்டடைந்துள்ளனர்; எனினும் உபதேசங்களைப் பொறுத்தமட்டில் குழப்பமே அடைந்துள்ளனர்; திருப்திகரமானத் திட்டம், ஒழுங்கு, நீதி மற்றும் ஞானம் குறித்தும் அவ்வளவு காலங்களாக எதுவும் கண்டுபிடிக்கப் படவில்லை. தேவ திட்டத்தின் இரகசியத்தினுடைய நிறைவேறுதலுக்குரிய ஏற்றவேளை வராமல் இருந்தது மற்றும் அது அந்த ஏற்றகாலம் வரையிலும் "முத்திரிக்கப்பட்டிருந்தது," "மறைத்து வைக்கப்பட்டிருந்தது." ஆனால் இப்பொழுது "பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்" காலங்களில் ஜீவித்துக் கொண்டிருக்கும் நாம் மற்றும் குறிப்பாக 1335-நாட்களின் முடிவிலுள்ள பாக்கியமான காலங்களிலும், தற்கால அறுவடையிலும் மற்றும் ஏழாம் எக்காளம் தொனிக்கத் துவங்கும் காலத்திலும் காணப்படும் நாம், கடந்த காலங்களிலுள்ள பரிசுத்தவான்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட அனுபவத்தைக் கொண்டிருக் கின்றோம். கடந்த காலங்களிலும் அநேகம் நீதியான மனுஷர்களும், அநேகம் தீர்க்கத்தரிசிகளும் காண்பதற்கு சிலாக்கியமடையாத, தேவனுடைய இராஜ்யங்களுக்கடுத்த இரகசியங்களை நாம் காணும்படிக்கு அருளப்பட்டிருக்கின்றது. தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்காக தேவனுக்கு நன்றி! இப்பொழுது நம்மால் தேவனுடைய ஒரு திட்டத்தினைக் காணமுடிகின்றது - கடந்தகால சரித்திரத்தின், எதிர்க்கால வெளிப்படுத்துதலின் ஒவ்வொரு அம்சங்களையும் உள்ளடக்கியுள்ள ஒரு திட்டமாகும்; முழுமையான ஒரு திட்டமாகும்; எப்பாகத்திலும் தொடர்பற்ற நிலைமையும், குறைப்பாடும் இல்லாத ஒரு திட்டமாகும்; தெய்வீக நீதி, ஞானம், வல்லமை மற்றும் அன்பிற்கும் மற்றும் திவ்விய வார்த்தைகள் ஒவ்வொன்றிற்கும் முற்றிலும் இசைவான ஒரு திட்டமாகும் மற்றும் இப்படியாக இது ஒரு நியாயமானத் திட்டமாக இருக்கின்றது என்று மாத்திரமல்லாமல், தேவனுடைய திட்டத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கையில், மற்ற அனைத்துக் கூற்றுகளும், திட்டங்களும் குறையுள்ளவைகளாகவும், நிச்சயமாய்த் தப்பறையானவைகளாகவும், திவ்விய குணாதிசயங்கள் மற்றும் திவ்விய வார்த்தைகளுக்கு முரணாகவும் காணப்படுகின்றது என்றும் நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது.

யுகங்களுக்கடுத்தத் திட்டம் குறித்த புரிந்துகொள்ளுதலுக்குள்ளாக வருபவர்கள், அது தேவனால் உண்டானது என்றும், மனிதனால் உண்டானதல்ல என்றும் அடையாளம் கண்டுகொள்கின்றனர். அது தேவனுடைய இரகசியங்களுக்குத் தேவன் தாமே அருளியுள்ளதான திறவுகோலாய்க் காணப்படுகின்றது மற்றும் இதற்காக அவருக்குத் துதியனைத்தையும் சாற்றிடும்படியாக நாம் அனைவரும் ஒன்றிணைந்துவிடுவோமாக. அதன் ஒளியானது, மில்லேனியேல் டானுடையதாய் இருந்து, ஆயிரமாயிரமானவர்களுக்குச் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் இறங்கி வருகின்றதான திவ்விய காரணக்கர்த்தாவிற்கு அனைத்துத்

துதியையும், கனத்தையும் உரித்தாக்குவோமாக மற்றும் இவர் தம்முடைய வாக்குத்தத்தத்திற்கேற்ப (லூக்கா 12:37) ஆவிக்குரிய "ஏற்றகால சத்தியத்தினை" கொண்டு தமது சபையைத் தொடர்ந்து போஷிக்கின்றார். தேவன் நம்முடைய போதகராகத் தொடர்ந்து காணப்பட்டு, இதுவரையிலும் அவருடைய ஜனங்களுக்கு தம்முடைய அறிவுரை வழங்கப்படத்தக்கதாகக் கருவிகளைப் பயன்படுத்தி வந்தார் மற்றும் மில்லேனியேல் டாணில் (volumes) முறையாய் முன்வைக்கப்பட்டவைகளைப் பயன்படுத்தி யுகங்களுக்கடுத்த தம்முடைய திட்டத்தைக்குறித்தும், இந்த அறுவடைகாலத்தின் போதான கடமைகள் மற்றும் சிலாக்கியங்கள் குறித்தும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகின்றார்; காரணம் "தேவரகசியம் நிறைவேறு வதற்கான" ஏற்றகாலம் வந்துள்ளது (வெளிப்படுத்தல் 10:7). தேவனால் அனுப்பப்பட்ட போதகராகிய மில்லேனியேல் டாண் வாயிலாகத் தனிப்பட்ட விதத்தில், வசனத்தில் கற்பிக்கப்பட்டவர்கள், அதைத் தங்களது தனிப்பட்ட ஆராய்ச்சியிலும், ஒன்றுகூடிப் பண்ணிடும் ஆராய்ச்சியிலும் தேவனுடைய வாய்க்கருவி இல்லையென்று புறக்கணிப்பதற்கு எக்காரணமும் அறியாதிருப்பார்கள்; அதாவது உயிருள்ள போதகர் ஒருவரை வாய்க்கருவி இல்லையென்று புறக்கணிப்பதற்கு எக்காரணமும் அறியாதிருப்பது போலவேயாகும்.

தற்கால சத்தியமென்னும் இந்த ஆசீர்வாதம் கடந்துவருவதற்கான கால்வாயாக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட எளிய மனித பாத்திரங்களைத் தொழுதுகொள்ள முற்படுபவர்களுக்கு நாம் சொல்வதாவது: "நீ இப்படிச் செய்யாதப்படிக்குப் பார்; உன்னோடும், உன் சகோதரரோடும், தீர்க்கத்தரிசி களோடும் (அனைத்து உண்மையான போதகர்கள் அல்லது தேவனுடைய வாய்க்கருவிகளோடு) . . . நானும் ஒரு ஊழியக்காரன் (நான் கர்த்தரல்ல); தேவனைத் தொழுதுகொள்" (வெளிப்படுத்தல் 22:9). ஜீவத்தண்ணீரும் மற்றும் அதைக் கொடுப்பவருமேதான் ஒழிய, அது அனுப்பப்படும் பூமிக்குரிய பாத்திரமானது தொழுதுகொள்ளப்படக்கூடாது. பூமிக்குரிய பாத்திரங்களானது மகிமைப்படுத்தப்படக்கூடாது. "அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" (1 கொரிந்தியர் 4:6, 7).

இந்தக் கொடிய அறுவடைகாலங்களில், ஊழியம் புரிவதற்கான பெலம் மற்றும் கிருபை மற்றும் ஞானத்தின் பொக்கிஷங்கள் வேண்டுமெனில், தேவனால் கொடுக்கப்பட்டதான யுகங்களுக்கடுத்த திட்டத்தையே நாம் அனைவரும் வேதாகமத்தின் ஆராய்ச்சியில் பயன்படுத்திட வேண்டும்; மற்றும் இதற்காகவே அது

தேவனால் அருளப்பட்டுமுள்ளது. அதைத் தேவனால் அருளப்பட்ட வெளிச்சமென அடையாளம் கண்டுகொள்ளும் ஒவ்வொருவரும் அதை வசனத்தினுடைய ஆராய்ச்சியின்போது பயன்படுத்திட வேண்டும். தேவன் சித்தம்கொண்டுள்ளது போன்று ஒவ்வொருவரும் அதைத் தனது சொந்த ஒளியாக ஆக்கிக்கொள்ள வேண்டும். தேவனுடைய பொதுவானத் திட்டம் குறித்துக் கேட்கப்படுவதற்கு வாய்ப்புள்ளதான ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்க முடிகிற அளவுக்கு, ஒவ்வொருவரும் அதைப் பயன்படுத்துவதில் கைத்தேர்ந்தவர்களாகக் காணப்பட வேண்டும். ஆனால் அந்தோ! அது சகோதரர் ரசலின் திட்டம் என்று சிலர் எண்ணி, தாங்களும் தங்கள் சொந்தத் திட்டத்தை உண்டுபண்ணிட வேண்டும் என்று எண்ணுகின்றனர். இது மாபெரும் தவறாகும். அது எங்களுடைய திட்டமல்ல, மாறாக தேவனுடைய திட்டமாகும். ஒருவேளை அது தேவனுடைய திட்டமில்லையெனில், அதற்கு எந்த முக்கியத்துவமும் இருப்பதில்லை. நமக்கு மனித திட்டங்கள் எதுவும் அவசியமில்லை. நிச்சயமாகவே தேவன் அங்கீகரிக்கத்தக்கதான திட்டங்களை, அவருக்காக மனுஷர்கள் ஏற்படுத்திட முடியாது; ஏனெனில் "உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே" அவரது திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. தேவன் ஒரே ஒரு திட்டத்தினை வைத்திருக்கின்றார் மற்றும் அது மாற்றியமைக்கப்பட முடியாது மற்றும் இப்பொழுது அதை அவர் வெளிப்படுத்தியுள்ளார்; அது அருமையாகவும், அதேசமயம் எளிமையாகவும், அழகாகவும் காணப்படுகின்றது என்று நாம் அறிக்கையிடுகின்றோம். அது மனிதனால் எண்ணிப் பார்க்கவோ அல்லது திட்டமிடவோ முடியாத ஒரு திட்டமாகும். அதன் சிந்தைகளானது, மனிதனுடைய சிந்தைக்கு அப்பாற்பட்டதாய் இருக்கின்றது மற்றும் இதனால்தான் கடந்த நூற்றாண்டுகளில் மனிதர்கள் யுகங்களுக்கடுத்த இந்தத் தெய்வீகத் திட்டத்தினை ஊகித்துக்கூடப் பார்த்ததில்லை.

ஆகையால் வேதாகமம் எனும் அளவுகோல் தரமானது, ஒவ்வொருவரும் அதில் திறமிக்கவர்களாக - அதில் திறமிக்க போதகனாகுவது வரையிலும், தேவனால் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் போதித்தல்களின் வெளிச்சத்தில் கற்றுக்கொள்ளப்பட வேண்டும். பின்னர் ஒவ்வொருவரும் தனது வெளிச்சத்தினைப் பிரகாசிக்கப்பண்ணிட வேண்டும் - தாழ்மையாய் அதை மற்றவர்களுக்குப் பரிமாறிட வேண்டும்.

அந்தோ பரிதாபம்! யுகங்களுக்கடுத்த தேவனுடைய அன்பான திட்டத்தினைக் காணத்தக்கதாக தங்கள் கண்கள் திறக்கப்பட்ட சிலர், ஆச்சரியமடைந்து, தற்கால சத்தியத்திற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துகிற போதிலும், அதிகமான ஆசைக்கொள்கின்றனர். தேவன் தம்முடைய ஜனங்களென நமக்கு ஏற்கெனவே கொடுத்துள்ளவைகளை நன்றாய்ப் பயன்படுத்துவதே,

இத்தகையவர்கள் செய்ய வேண்டிய காரியமாய் இருக்கின்றது. தேசத்தில் பஞ்சம் காணப்படுகின்றது; அது ஆகாரத்திற்கான பஞ்சமல்ல, ஜலத்திற்கான பஞ்சமல்ல, கர்த்தருடைய வசனத்திற்கான பஞ்சமாகும் (ஆமோஸ் 8:11). காத்துக்கொண்டிருக்கும் தம்முடைய ஜனங்களுக்காக நமது கர்த்தரும், ஆண்டவருமானவர் வந்துள்ளார் மற்றும் புதியதும், பழையதுமான சத்தியங்களை முறையாகப் பந்தியில் வைத்துள்ளார் (மத்தேயு 13:52). நமக்கு முன்வைக்கப்பட்டுள்ளவற்றை முழுமையாய்ப் புசியாதது வரையிலும், அதிகமான அல்லது வேறே ஆசீர்வாதங்களைக் கேட்பதற்கு நிச்சயமாய் நமக்கு அதிகாரமில்லை. புசித்துப் பிற்பாடு, பெற்றுக்கொண்டு பலத்தினால் மற்றவர்களுக்குப் போஜனத்தைப் பரிமாறுவதன் வாயிலாக நாம் பயிற்சி செய்ய வேண்டும். இதைச் செய்யத்தவறி, இன்னமும் திறக்கப்படாத பண்டகச் சாலையிலுள்ள மற்றப் பாகங்கள் எதையேனும் திறக்க முற்படுபவர் நிச்சயமாய் மோசமான நிலைமையிலேயே காணப்படுவார். யாரும் உள்ளே புகமுடியாத விதத்திலும் மற்றும் நியமிக்கப்பட்ட வேளையில் சுலபமாய்த் திறந்திடும் விதத்திலுள்ள, குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் திறக்கும் பூட்டின்/Time lock-இன் உதாரணத்தை நினைவில்கொள்ளுங்கள் (மில்லேனியேல் டாண், volume 2, தமிழ் பக்கம்-12; ஆங்கில பக்கம்-23).

"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே (மனித சாமார்த்தியத்தினாலோ அல்லது பிரயாசத்தினாலோ உண்டுபண்ணப்படவில்லை அல்லது அடையப்பெறவில்லை), அவைகளை உட்கொண்டேன்" (எரேமியா 15:16; வெளிப்படுத்தல் 10:10). நமது கர்த்தர் தம்முடைய சபையின் நலனுக்குத் தேவையான உணவினை எப்போதுமே கொடுத்துள்ளார் மற்றும் சம்பூரணமாகவே எப்போதும் கொடுத்துள்ளார். ஏற்கெனவே பெற்றுக்கொண்டதான உணவைப் புசிப்பதிலும் மற்றும் அதனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதான பலத்தைப் பயன்படுத்துவதிலும் சுறுசுறுப்பாய் இருப்பதே சபைக்கான சரியான மனப்பான்மையாய் இருக்க வேண்டும். அவள் திரளானவைகளைப் பெற்றிருக்கும் பந்தியை விட்டுவிட்டு, அதிகமானவைகளுக்காக ஜெபம் ஏறெடுக்கக் கூடாது. அதிகமானவைப் பிரயோஜனமாய் இருக்குமானால், அதிகமானவை, தேவன் மற்றும் சபையின் சில "ஊழியக்காரரின்" கரங்கள் வாயிலாக அனுப்பிவைக்கப்படும். உண்மையான "ஊழியக்காரன்" உணவைத் தயாரிக்க வேண்டிய அவசியத்தினைக் காண்பதில்லை; ஏனெனில் உணவானது மாபெரும் வீட்டெஜமானால் அவனுக்குக் கொடுக்கப்படும். அவ்வுணவானது அவனுக்குக் "கிடைத்திடும்" மற்றும் அவன் அதைக் கர்த்தருடைய குடும்பத்திற்கு முன்னதாக முன்வைக்கையில், அவர்கள் அதில் திவ்விய சத்தியத்தின் அடையாளங்களைக் கண்டுகொள்வார்கள். அதில்

அவர்கள் சம்பூரணமாய்ப் பங்குகொண்ட பிற்பாடு, அதை அவர்கள் மற்றவர்களுக்குப் பரிமாறிடுவார்கள்.

நமக்குச் சத்தியம் "கிடைக்கும்" போது, அதிகமான வேலையும் கடந்துவருகின்றது - அதைப் புசிப்பதற்கும், ஆராய்வதற்கும் மற்றும் அதை உள்வாங்கிக்கொள்வதற்குமான வேலையும் மற்றும் மற்றவர்களுக்கு அதைப் பரிமாறிடும் வேலையும் கடந்துவருகின்றது. சத்தியம் கிடைக்கையிலும், அதை முதலாவது சுவைக்கையிலும் - வேலை மற்றும் கசப்பான அனுபவங்கள் வருகிறதில்லை; மாறாக இவை நம்முடைய மற்றும் மற்ற ஜனங்களுடைய தவறான அபிப்பிராயங்களுக்குச் சத்தியமானது முரண்படுகையிலேயே வருகின்றதாய் இருக்கின்றது. பின்னரே மற்றவர்களுக்கும் சத்தியமானது சுலபமாய்க் கிடைத்து, அதை அவர்கள் புசிக்கத்தக்கதாக, மற்றவர்களுக்கும் பரிமாறிடும் இன்பகரமாய், ஆனால் பெரும்பாலும் வலியுள்ளதாய்க் காணப்படும் வேலையானது கடந்து வருகின்றது. சத்தியத்தைப் புசித்தல் (அதை மெய்யென்று கண்டுகொள்ளுதலும் மற்றும் பின்னர்ப் பலமடையத்தக்கதாக அதை உள்வாங்கிக் கொள்ளுதல்) என்பது சிறு வேலையல்ல. ஒரு புதிய ஆகாரம் நம்முன் வருகையில், நம்முடைய கண்களானது முதலாவது அதை விமர்சிக்கின்றது. ஒருவேளை அது நல்லதாய்க் காணப்படுகிறதென்றால், அதை நாம் எடுத்து, அதை முகர்கின்றோம்; நம்முடைய பற்களினால் அதைக் கடிப்பதன் மூலம், அதை இன்னுமாய்ப் பகுத்துணர்கின்றோம்; பின்னர் நம்முடைய சுவைப்புலனானது, சுவையை வைத்துப் பகுத்துணர்கின்றது மற்றும் நமது பற்களானது போஷாக்கைப் பெறுவதற்கு ஆயத்தமாய்க் காணப்படுகின்றது. ஆகையால் ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் கர்த்தர் அவனுக்கான ஆவிக்குரிய ஆகாரத்தினை அளித்தப் பிற்பாடு மற்றும் அவனுக்கு அது "கிடைத்த" பிற்பாடு, அதை மெய்யானது என்று கண்டுகொள்வதிலும் மற்றும் அதைப் புசிப்பதிலும், அவனுக்கு நிறைய வேலை காணப்படுகின்றது. மெய்யானது என்று நிரூபித்துக் கொள்ளுதல்/கண்டு கொள்ளுதல் அவசியமாய் இருக்கின்றது, காரணம் சாத்தான் தனது பிரதிநிதிகள் வாயிலாக நமக்கு விஷமான ஆகாரங்களைக் கொடுத்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றான். நாம் நமது ஆவிக்குரிய புலன்களைப் பயன்படுத்தி, நாம் புசிக்கும் அனைத்தையும் அளவுகோல் தரத்தினால் பகுத்தறிய அல்லது மெய்ப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் மற்றும் இப்படியாக தீமையினின்று நன்மையை வேறுபடுத்தி அறிய கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தேவன் விரும்புகின்றார். இந்த ஆராய்தலுக்கும், மெய்ப்பித்துக்கொள்ளுதல்களுக்கும் மற்றும் உள்வாங்கிக்கொள்ளுதல்களுக்கும் உலகம், மாம்சம் மற்றும் பிசாசிடமிருந்து எதிர்ப்புக் காணப்படுகின்றபடியால், இதற்கே அதிகமான சக்தியும், ஜெயங்கொள்ளும் தன்மையும் தேவையாய் இருக்கின்றது மற்றும் இதனால் மற்றவர்களுக்கு உதவுவதற்குக் கொஞ்சமே

நேரமும், சக்தியும் காணப்படுகின்றது.

"ஏற்றகால சத்தியமாய்" இராதபடியினால், பொருத்தமானதாய் இராது என்று தேவன் மறைத்துவைக்க விரும்பும் எந்த இரகசியங்களையும் நம்மால் உடைத்திட முடியாது மற்றும் இப்படிச் செய்ய நாம் விரும்பவும் கூடாது என்றும் நாம் நினைவில்கொள்வோமாக. கீழே விழும்வரை காய் பருவத்தில் காணப்படும் ஆப்பிளை அடிக்கிற சிறுவன், அது விழுகையில் தனக்கு ஆரோக்கிய கேட்டை உண்டுபண்ணும் ஆகாரத்தையே பெற்றுக்கொள்கின்றவனாய் இருப்பான். கனிந்த ஆப்பிளானது சுலபமாய் மரத்திலிருந்து பறிக்கப்படலாம். காய் பருவத்தில் காணப்படும் chestnut/செஸ்நட் கொட்டையானது, பறிப்பதற்கு மிகவும் சிரமமாய் இருக்கும் மற்றும் அதை உடைப்பதற்கும் மிகச் சிரமமே காணப்படும் மற்றும் அதை உடைத்தாலும், அதன் பருப்பு ஆரோக்கிய கேட்டையே கொண்டுவரும்; ஆனால் கனிந்த கொட்டையோ கீழே விழுந்து, தானாகவே உடைந்திடும் மற்றும் அதன் பருப்பு சுவையாய் இருக்கும். ஆகையால் நமது ஆண்டவர் நமக்கு என்ன தேவை என்பதை அறிந்திருக்கின்றார் என்றும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதை நமக்கு ஏற்றவேளையில் அளித்திடுவார் என்றும் நிச்சயம்கொண்டு, தெய்வீக வழிநடத்துதலினுடைய கனியும்பருவத்தினைக் கவனிப்பதிலும் மற்றும் வரும் காலங்களுக்கான ஐசுவரியமான பலன்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக நமது மனங்களையும், இருதயங்களையும் தாழ்மையுடன்கூடிய ஆயத்தத்துடன் காணப்பட வைப்பதிலுமே நாம் விழிப்பாய்க் காணப்பட வேண்டும்.

டாணினுடைய (volumes) வெளிச்சத்தில் வேதவசனங்களை ஆராய்கையில், ஒவ்வொருவரும் சொல்விளக்கப்பட்டியல் தொகுதியையும் (concordance) மற்றும் ஓரக்குறிப்புகளையும் (marginal references) மற்றும் வாய்ப்பிற்கேற்ப வேதவாக்கியங்களினுடைய பல்வேறு மொழிப்பெயர்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள் மற்றும் வேதவசனத்தின் எழுத்திற்கும், ஆவிக்கும் இசைவாய்க் காணப்படாத எதுவும் சத்தியமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது என்பதை நினைவில்கொள்ளுங்கள். தேவனுடைய வசனமே புசிக்கப்பட வேண்டும்; டாண்களும் (volumes) மற்றும் டவர்களும் (ரீப்பிரிண்ட்ஸ்) ஆகாரத்தினைப் போஷிக்கத்தக்கதாக - அதாவது "சத்தியவசனத்தை" நிதானமாய்ப் பகுத்திடுவதற்கும் மற்றும் இப்படியாய் அதைப் புசிப்பதற்கு எளிமையாக்குவதற்கும் நமக்கு உதவுவதற்குத் தேவனால் அளிக்கப்பட்ட உதவிகளாய்க் காணப்படுகின்றது.

யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டம் குறித்து இப்பொழுது வெளிப்படுத்தப் பட்டுள்ள வெளிச்சத்தில், வசனத்தை ஆராயும் இத்தகைய கூட்டங்களானது, "டாண் குழுக்கள்" என்று அழைக்கப்படுகின்றது. இத்திட்டமானது பல வருடங்களுக்கு முன்னதாக Baltimore-இன் சகோதரர் ரான் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது மற்றும் இதனால் அவரும், அவரது சபையின் அங்கத்தினர்களும்

பலன் அடைந்ததாகத் தகவல் அறிவித்தனர். இதே திட்டமுறையானது மற்றப் பட்டணங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் சரியாய் நடத்தப்படும் பட்சத்தில் வெற்றியே அடைந்தும் இருக்கிறது. உதாரணத்திற்கு டிசம்பர் 15, '94-ஆம் வெளியீட்டில் இடம்பெறும் சகோதரர் Townsend அவர்களின் கடிதத்தையும், ஜனவரி 1, '95-ஆம் வெளியீட்டில் இடம்பெறும் சகோதரர் Jeffery அவர்களின் கடிதத்தையும் பார்க்கவும். "டாண் குழுக்களின்" பலன் குறித்துச் சோதித்துப்பார்க்க வேண்டியதில்லை என்பதினாலும் மற்றும் அவைகளின் முக்கியத்துவமானது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளபடியாலும், சத்தியத்தின் மாணவர்கள் அனைவரும் மற்றவர்களுடைய அனுபவங்களினால் பலனடையத்தக்கதாக, இக்காரியத்தினை அறிவிப்பது நலமாயிருக்கும். இந்த டாண் குழுக்களை எங்கும் நடத்தும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம் மற்றும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் பலனில் விசுவாசமுள்ளவர்களையும், உண்மையான கிறிஸ்தவ குணலட்சணமுடையவர்களையும் மாத்திரம் இக்குழுக்களுக்கு வரவேற்றுக்கொள்ளும்படிக்கு நாங்கள் உங்களுக்கு யோசனை கூறுகின்றோம். ஆனால் தேவனுடைய வழியை மிகவும் பூரணமாய்க் கற்றுக்கொள்வதற்கு வாஞ்சிக்கும் யாரும் மனப்பூர்வமாய் அனுமதிக்கப்படலாம். அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, "விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் (கிறிஸ்துவுக்கு முழுமையாய் ஒப்புக்கொடுக்காதவனை) சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்" - அவிசுவாசியின் சந்தேகங்களைக் குறித்துக் கலந்தாராய்வதற்கு நீங்கள் கூடிடாமல், விசுவாசியின் விசுவாசத்தினை உறுதிப்படுத்திட கூடிடுங்கள் (உரோமர் 14:1; 1 கொரிந்தியர் 14:24, 25).

வழிநடத்துபவர் நல்லதொரு வாசகனாய் இருப்பதும் மற்றும் அவர் volume-1-இன் துவக்கத்துடன் துவங்குவதும் தகுதியானதாய் இருக்கும். அவர் ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் சற்று நிறுத்திட வேண்டும் மற்றும் தேவைப்படும் பட்சத்தில் (கலந்துகொள்பவர்கள்) கேள்விகள் கேட்கப்படுவதற்கோ அல்லது கருத்துரைப்பதற்கோ முழு வாய்ப்பினை அளித்திடலாம் மற்றும் ஒவ்வொரு பத்தியினுடைய முடிவிலும், அதன் பொருளடக்கம் குறித்தும் பொதுவாய்க் கலந்தாயவும் மற்றும் இதனோடுகூட அப்பத்தியில் இடம்பெறும் வசனங்களையும், அவ்விஷயம் சம்பந்தப்பட்ட மற்ற வசனங்களையும் ஆராயவும் கலந்து கொள்பவர்கள் ஊக்கமூட்டப்பட வேண்டும். அனைவருடைய கருத்துக்களை வெளிக்கொண்டு வருவதும், கலந்தாயப்படும் அக்காரியம் குறித்து அங்குக் காணப்படும் ஒவ்வொரு நபரும் புரிந்திருக்கின்றார்களா என்று பார்ப்பதும் வழிநடத்துபவரின் நோக்கமாய்க் காணப்பட வேண்டும். சிலசமயங்களில் ஒன்று அல்லது இரண்டு பக்கங்களில் அல்லது சிலசமயம் ஒன்று அல்லது இரண்டு

பத்திகளில் பிரயோஜனமான கலந்தாய்வு பண்ணிடுவதற்கு ஒரு முழுக்கூட்டமே தேவைப்படுகின்றது. டாண் குழுவில் காணப்படும் ஒவ்வொருவரும் சில வேதாகம மொழியாக்கங்களை அல்லது ஒரு "டாணை" (volume) கையில் பெற்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும், குழுவிலுள்ள ஒவ்வொருவரும், பாடம் குறித்த தனது சிந்தனையைச் சுருக்கமாய்ச் சொல்லிட முயற்சித்திட வேண்டும்; இதினிமித்தம் அவன் எவ்வளவு தெளிவாய்க் கிரகித்துள்ளான் என்று பார்க்கப்படலாம் மற்றும் பாடத்தினை அவனுக்கு மிக ஆழப் பதியவைப்பதற்கும் ஏதுவாயிருக்கும். அனைவருமே சத்தியத்தினை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கின்றனர் என்ற கண்ணோட்டத்தில், ஒவ்வொருவரும் கலந்தாயப்பட்ட பாடத்தினைக் குறித்துத் தனது சொந்த வார்த்தைகளில் கூறிடுவதற்கும், அதுவும் "டாணில்" முன் வைக்கப்பட்டுள்ள முறையில் கூறிடுவதற்கும் முயற்சிக்கும்படிக்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இவ்வகையான வேதாகம ஆராய்ச்சி வழிமுறையினைப் பார்க்கையில், volume-1-இன் முதல் அத்தியாயத்தில் எத்தனை சுவாரசியமான மற்றும் பிரயோஜனமான கலந்துரையாடல் பண்ணப்படலாம் என்பதைக் கவனியுங்கள். Volume-1-இன் முதலாம் அத்தியாயத்தின் முதல் பத்தியானது சங்கீதம் 30:5-ஆம் வசனத்தை: "அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." கவனத்திற்குக் கொண்டுவந்து கையாளுகின்றதாய் இருக்கின்றது. இது எத்தனை கருத்துக்களை, கலந்துகொள்ளும் ஒவ்வொரு தேவபிள்ளைக்குள் கொண்டுவருகின்றதாய் இருக்கும்! (1) பாவம் மற்றும் மரணம் ஆளுகை செய்யும் நீண்ட, இருண்ட இரவினை ஒவ்வொருவரும், இப்பொழுது விடிந்து கொண்டிருக்கின்றதும், கிறிஸ்துவின் மாபெரும் வேலையினால் நீதியும், ஜீவனும் ஆளுகை செய்யப்போகின்றதுமான நீண்ட மகிமையான நாளுடன் வேறுபடுத்திக் காண்பித்திடலாம். (2) இரவிற்கும், தெய்வீகத் தயவு மறுக்கப்பட்டதற்குமான காரணமாகிய கீழ்ப்படியாமையானது, காலைக்கான காரணமாகிய - நாம் தேவனுடைய குமாரனின் மரணத்தினால் அவருடன் ஒப்புரவாகிடும் காரியத்துடன் வேறுபடுத்திக் காண்பிக்கப்படலாம். (3) கண்ணீர் மற்றும் வேதனைக்கான காரணமாகிய - சாபமாகிய அல்லது நீதியான தீர்ப்பாகிய - "நீ சாகவே சாவாய்" என்பதானது, விடியலின் சந்தோஷம் மற்றும் களிப்பிற்கான காரணமாகிய - தேவன் அறிவித்துள்ளதான திரும்பக்கொடுத்தலின் காலங்களின், இளைப்பாறுதலின் காலங்களின்போதான "மரித்த உம்முடையவர்கள் எழுந்திருப்பார்கள்" எனும் காரியத்துடன் வேறுபடுத்திக் காண்பிக்கப்படலாம் (அப்போஸ்தலர் 3:19-21). பாவம் ஆளுகை செய்கின்றதான இருளான இரவு குறித்தும், இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கும் நீதியின் சூரியனுடைய கதிர்களின் வெளிச்சம் பற்றி, தான் உணர்ந்துள்ளவைகள் குறித்தும் மற்றும் தனது விசுவாசத்தின் கண்களுக்கு

இப்படியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதான மகிமையான நம்பிக்கைகள் குறித்தும், தான் அறிந்திருப்பவைகளைச் சொல்லிடுவதற்கு ஒவ்வொருவரும் ஊக்கமூட்டப்பட வேண்டும்.

இரண்டாம் பத்தியானது ஏசாயா 55:8, 9-ஆம் வசனங்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் சிந்திப்பதற்கும், பிரயோஜனமாய் உரையாடுவதற்கும் அதில் அநேகம் காரியங்கள் உள்ளன. இந்த இரண்டு பத்திகளுமே கூட்டத்திற்கான முழு நேரத்தையும் எடுத்துக்கொள்ளும்; மற்றும் ஒருவேளை குழுவானது அதிக எண்ணிக்கையானவர்களைப் பெற்றிருக்குமானால், இவைகளை முழுமையாய் ஜீரணிக்க இரண்டு கூட்டத்தொடர் அவசியப்படலாம்.

மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் பத்திகளானது சத்தியத்தைத் தேடுபவர்களென நாம் கொண்டிருக்க வேண்டிய நோக்கங்களையும், நாம் எதை நாட வேண்டும் என்பதையும், நாம் எதைக் கண்டடைவோமெனத் தேவன் வாக்களிக்கின்றார் என்பதையும் கையாளுகின்றதாய் இருக்கின்றது (யோவான் 16:13) மற்றும் வேறு வேதவாக்கியங்களும் நினைவுக்கு வருகின்றது. அடுத்ததாக ஆறாம் பத்தியானது வேதாகம ஆராய்ச்சிக்கான சரியான வழிமுறைகளைக் கையாளுகின்றது மற்றும் எபேசியர் 4:11-16-ஆம் வசனப்பகுதியைக் குறிப்பிடுகின்றது; இதுதவிர குழுவினருக்கு நினைவுக்கு வரும் மற்ற அநேகம் வேதவாக்கியங்களானது குறிப்பிடப்படலாம். எட்டு மற்றும் ஒன்பதாம் பத்தியானது ஆராய்ச்சிக்கான சரியான மற்றும் சரியற்ற வழிமுறைகளை வேறுபடுத்திக் காண்பிக்கின்றது மற்றும் புதிய சுவாரசியமான வேதவாக்கியங்களை முன்வைத்திட அழைக்கப்படலாம். மூன்று முதல் ஒன்பது வரையிலான பத்திகளானது, டாண் குழுக்கான இரண்டாம் கூட்டத்தொடருக்குப் பிரம்மாண்டமான மற்றும் உதவிகரமான வேதாகம மற்றும் திட்டம் குறித்த ஆராய்ச்சியினைக் கொடுக்கின்றதாய் இருக்கும்.

அடுத்த ஏழு - அதாவது 10 முதல் 16 வரையிலான பத்திகளானது, உலகத்தினுடைய தற்போதைய மத நிலவரத்தைக் கையாண்டு, சரியாய்ப் பயன்படுத்தும் பட்சத்தில் அருமையான மூன்றாம் பாடமாக அமையும். ஆராயப்படும் பாடம் சம்பந்தமான ஒரு டவர் கட்டுரையானது (ரீப்பிரிண்ட்ஸ்) (பிப்ரவரி '90, பக்கம்-3) பிரயோஜனமாய்க் காணப்படத்தக்கதாக உள்ளே கொண்டும் வரப்படலாம். எத்தனை சுவாரசியமான கேள்விகளும், சில சரியான மற்றும் சில சரியற்ற கருத்துக்களும் அனைவருடைய மனங்களில் கடந்துவருகிறதாய் இருக்கும் மற்றும் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்புவதில் எத்துணை உதவிகரமாய்க் காணப்படுவார்கள் மற்றும் வீடுகளுக்குத் திரும்புகையில், எத்தனைபேர் முன்பில்லாத அளவுக்கு உலகத்தின் பொதுவான இருளையும், வெளிச்சத்தின் மற்றும் அதற்குக் கண்கள் திறக்கப்படுவதின் முக்கியத்துவத்தையும் முழுமையாய் உணர்ந்து கொண்டவர்களாய்த்

திரும்பிடுவார்கள். இப்படியாக நாம் தொடர்ந்து செய்வோமானால், ஒவ்வொரு பாடமும் படிப்பினைகள் நிறைந்ததாகவும், வேதவாக்கியங்கள் சரியாய்ப் பொருத்திப் பார்க்கப்பட்டதாகவும் காணப்படும். டாண் குழுக்களானது, புதிதான "விசுவாசிகள்" சிலர் கலந்துகொள்கையில் மிகவும் சுவாரசியமாய்க் காணப்படும். டாண் குழுக்களில் ஆராயப்படும் சத்தியத்தில் சிறு ஆர்வம் காண்பிக்கும் உங்களது கிறிஸ்தவ நண்பர்களுக்குக்கூட இது குறித்துத் தெரிவிக்கப்பட்டு, முதலிலிருந்தே வந்து, கலந்துகொள்ளும்படிக்கு அழைக்கப்படலாம். ஆனால் குழுவில் அதிகம் பாடங்கள் கடந்துபோயுள்ள நிலையில், யாரேனும் புதிதாய் வந்து இணைந்து கொள்வார்களானால், அவர்களுக்காகத் திரும்பி முதலிலிருந்து வர அவசியமில்லை; ஏனெனில் அவைகளை (கலந்து கொள்ளாதப்போதுள்ள பாடங்களை) அவர்கள் இல்லங்களிலிருந்து வாசித்துக்கொள்ளலாம் மற்றும் பொருத்தமாய் இருக்குமென வழிநடத்துபவர் கருதுவாரானால் அவர் சுருக்கமான விளக்கங்களைக் கொடுத்திடலாம்.

ஆனால் சிலர் சொல்லிடலாம் . . . இந்த வேகத்தில் சென்றால் மில்லேனியேல் டாணின் முதலாம் தொகுதிக்கு (volume - 1) ஒரு வருடம் முழுக்க எடுத்துக்கொள்ளும் என்றும், மூன்று தொகுதிகளுக்கு, மூன்று வருடங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் சொல்லிடலாம். வருஷம் முழுவதும் ஆவிக்குரிய புத்துணர்வு அடையப்பெறுகின்றதானால், அது ஒரு நாளுக்கு மாத்திரமே காணப்படுவதைக் காட்டிலும், வருஷம் முழுவதும் காணப்படுவது நலமானதே; கடமைக்காக அல்ல, மாறாக நாமும் நமக்கெனத் தெளிவாய்ப் பார்த்துக் கொள்ளத்தக்கதாகவும், நம்மில் காணப்படும் நம்பிக்கைக்கான காரணத்தைக் குறித்துக் கேள்வி எழுப்பும் எவனுக்கும் நாம் பதிலளிக்க முடியத்தக்கதாகவும், வேதவசனத்தின் ஆராய்ச்சியில் ஆவிக்குரிய புத்துணர்வை அடைவதே நமது நோக்கமாகும். நீங்கள் ஆராய்ந்த தொகுதியினுடைய ஆராய்ச்சியின் முடிவில், யுகங்களுக்கடுத்தத் தெய்வீகத் திட்டத்தின் - திவ்விய வெளிப்பாட்டின் பல்வேறு அம்சங்களைப் பிரகாசிப்பிக்கும் - கர்த்தருடைய ஏவுதலின்பேரில் பேசப்பட்டதான எண்ணற்ற வேதவாக்கியங்களை ஆராய்ந்தவர்களாய் இருப்பீர்கள். வேதாகமத்தினை ஆயத்தம் பண்ணிடுவதற்குக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதானால், அதை நாம் பயபக்தியுடன் ஆராய்ந்திட வேண்டும்; சாதாரணமாய்ப் பார்த்து, எண்ணி செல்லக்கூடாது. இதுவுமல்லாமல், இப்படியாகப் பாடத்தினை நீங்கள் முற்றும்முடிய ஆராய்ந்திருப்பதினால், அது தொடர்பான எக்கேள்விக்கும் உடனடியாகப் பதிலளிப்பதற்கும் மற்றும் உங்கள் வார்த்தைகளை ஆதரிக்கும் வேதவாக்கியங்களை மேற்கோளிட்டுக் கூறிடவும் ஆயத்தமாய்க் காணப்படுவதற்கும் நீங்கள் மிகத் திறமிக்கவர்களாகிடுவீர்கள். "சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக" தங்களை ஆயத்தப்படுத்துவதற்காக மாத்திரமாக அனைவருக்கும் இத்தகைய ஆராய்ச்சிகளானது தேவையாய் இராமல்,

இன்னுமாக இந்தப் பொல்லாத நாட்களில் அதிகரித்துக் கொண்டுவரும் மோசங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் ஒவ்வொருவருக்கும் இத்தகைய ஆராய்ச்சிகளானது அவசியமாய்க் காணப்படுகின்றது.

டாண்களை வெறுமனே வாசிப்பது என்பது பரிந்துரைக்கப்பட்ட வழிமுறையாக இருப்பதில்லை; ஏனெனில் ஒவ்வொருவராலும் வீட்டிலேயே, தனிமையில் இருக்கையில் நன்கு வாசித்துக்கொள்ள முடியும். நம்மால் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறையானது, தேவனுடைய மகாபெரும் இரட்சிப்பின் திட்டத்திற்கான ஒரு பொது ஆராய்ச்சியாகும் - அதாவது தெய்வத்தன்மைக் குறித்த விசாலமான ஆராய்ச்சியாகும் - டாண்களைப் பயன்படுத்துகையில், அவை அனைவருடைய மனங்களையும் ஒரே ஆவிக்குரிய கால்வாய்க்குள்ளாகச் செலுத்தவும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்தறிய உதவவும் மாத்திரம் செய்கின்றது. இந்த ஆராய்ச்சிகளுக்குள்ளாகக் கொண்டுவரப்பட முடியாத நிலையில் எந்த வேதவாக்கியங்களும் இருப்பதில்லை; ஏனெனில் வேதவாக்கியங்கள் அனைத்துமே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேவனுடைய திட்டத்துடன் தொடர்புடையதாய் இருக்கின்றன. வேதாகமம் முழுவதையும், முழுமையான விதத்தில் ஆராய்வதும் மற்றும் ஆராயப்படும் பாடத்தின் மீது ஒளிக்கொடுக்கும் ஒவ்வொரு வசனத்தையும், கருத்துக்களையும் முன்னுக்குக் கொண்டுவருவதில் அனைவருடைய ஒத்துழைப்புக் காணப்படுவதும்தான் இவ்வாராய்ச்சியின் வடிவமைப்பாய் இருக்கின்றது.

நம்முடைய இனத்திலுள்ள அனைவரையும் பாதித்துள்ளதான இழிவு தன்மைக்குறித்து அறிந்தவர்களாக, நாம் ஒன்றுகூடி வரும்போதெல்லாம், ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியடையப்பண்ணும் மற்றும் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்புகின்றதானவைகளையும் தவிர மற்ற ஏதும் நம்முடைய வாயினின்று புறப்படாதபடிக்கு நாம் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் மற்றும் நாம் தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாராய்ச்சியானது, பிறரைக்குறித்துப் பேசுதலையும், வீணான பேச்சுகளையும் தடுத்துப்போட்டு, "நீதியானவைகளை மற்றும் உண்மையானவைகளை மற்றும் தூய்மையானவைகளை மற்றும் நற்கீர்த்தியுள்ளவைகளையே" நாம் சிந்திக்கவும், பேசவும்பண்ணுகின்றது. தன் மீதும், கர்த்தருடைய சரீரத்தின் மற்றவர்கள் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் வரவேண்டுமென ஜெபித்து, ஒவ்வொருவரும் கூட்டத்திற்கும் கடந்துவருவார்களானால், அதை உதவிகரமாய்க் காண்பார்கள். வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் அதிகமதிகமாய் நாடுகின்ற நம் அனைவரோடும் நமது பிதாவாகிய தேவன் மற்றும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், இரக்கமும், சமாதானமும் காணப்படுவதாக.

# நல்ல, மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி

**வே**தாகமத்தை, தேவவசனமென மதிக்கச் செய்திடும் ஒவ்வொரு பிரயாசமும் பாராட்டப்படத்தக்கதாகும். ஐம்பது முதல் நூறு வருடங்களுக்கு முன்னதாக கிரேட் பிரிட்டனிலும், அயர்லாந்திலும் கைக்கொள்ளப்பட்ட வேதாகம ஆராய்ச்சியானது, அதாவது வசனங்கள் மற்றும் வேதாகம அதிகாரங்களை மனப்பாடம்பண்ணி ஒப்புவித்தல் மற்றும் வேதாகமத்தைப் பள்ளிக்கூடங்களில் வாசிப்பதற்குப் பயன்படுத்துதல் ஆகியவை பிரயோஜனமானவைகளாகவே இருந்தன. இப்படி வேதாகமத்தின் வசனங்களில் பரிட்சயமாகுகின்றவர்கள், இதினிமித்தம் அவர்கள் ஒருவேளை பிற்பாடு கிறிஸ்தவர்களாகி, தேவ வார்த்தைகளின் அர்த்தத்தினை நாடுகையில், விலையேறப்பெற்ற தகவல்களை ஞாபகத்தில் பெற்றவர்களாய் இருப்பார்கள்.

வேறு வேதாகம ஆராய்ச்சிக்கான பிரயாசங்களானது பல்வேறு சபைபிரிவுகளில் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் இவைகள் - சபைபிரிவு விசுவாசப் பிரமாணங்களினால் தடங்கல் பண்ணப்பட்டது. அவ்வப்போது திறமையுள்ள போதகர்கள் தங்கள் சபையாருக்கு வேதாகமத்திலுள்ள வரலாறு காரியங்களைக் குறித்துத் தகவல் கொடுக்கின்றனர்; நிருபங்களின் எழுத்தாளர்களைக்குறித்தும், இவர்களது பிரயாண அனுபவங்கள் முதலானவைகள் குறித்தும் கலந்துரையாடுகின்றனர். சிலசமயம் போதகர்கள் உபதேசங்களுக்குள் கடந்துபோகின்றனர்; ஆனால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், அதுவும் ஒருவேளை அவர் மிகவும் புத்திசாலித்தனமாகக் காணப்பட்டு, சபையாரைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவில்லையெனில், பாடத்தின் விளைவாக வாக்குவாதமும், சிக்கலும்தான் ஏற்பட்டு, சபையார் இருந்ததைவிட, அதிகமான குழப்பத்தில் விடப்படுவார்கள்.

கொஞ்சம் காலங்களாக ஆதரவைப் பெற்றிருந்த வேதாகம ஆராய்ச்சிக்கான இன்னொரு பாணி, என்னவெனில்: அநேகம் கிறிஸ்தவ ஜனங்கள் ஒன்றுகூடி, வேதாகமத்தின் ஓர் அதிகாரத்தில் ஒவ்வொரு வசனமாக வாசிப்பார்கள். ஒவ்வொருவனும் தனக்கான வசனத்தை வாசித்தப் பிற்பாடு, தன்னுடைய விளக்கக் கருத்தினைக் கூறுவான். ஒருவேளை ஓர் அதிகாரத்தில் 40 வசனங்கள் காணப்படுமாயின், அநேகம் சிறுசிறு விளக்கக் கருத்துகள் கிடைக்கப்பெறும். கூட்டம் நிறைவுபெறும்போது, இப்படியாக வேதாகமத்தைக்

கையாண்டதிலும், சுவாரசியமான சில வசனங்களை வாசித்ததிலும், ஒருவரோடொருவர் ஐக்கியம்கொண்டதிலும், புத்துணர்வு அடைந்த உணர்வினை அடைகின்றனர்; ஆனால் இத்தகைய வேதாகம ஆராய்ச்சிகளிலிருந்து, தேவனை அல்லது யுகங்களுக்கடுத்த அவரது திட்டத்தைக்குறித்து மிகக்குறைவான அறிவே பெறப்படுகின்றது.

சமீபக்காலங்களாக - அதாவது கடந்த பத்து ஆண்டுகளுக்குள்ளாக, வேதாகமமானது, நம்மால் குறிப்பிடப்படும் பெரோயா ஆராய்ச்சிகளின் - வேதவாக்கிய ஆராய்ச்சிகளின் விதத்தில் ஆராயப்பட்டு வருகின்றது. இப்பொழுது உலகமெங்கும் பெரோயா வகுப்புகளானது நடைப்பெற்று வருகின்றது. மாபெரும் ஆசீர்வாதமும், மாபெரும் வெளிச்சமும் பலனாகக் காணப்படுகின்றது. இவ்வகை வேத ஆராய்ச்சிக்கு ஒரு பாடப் புத்தகமும், ஒரு கேள்வி புத்தகமும் கூடப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பாடப்புத்தகங்களானது வேதாகமப் பாடங்களின் பல்வேறு தொகுதிகளாக (volumes) காணப்படுகின்றன. இந்தத் தொகுதிகளில், வேதாகமத்தின் போதனைகளானது சேகரிக்கப்பட்டு, புரிந்துகொள்ளும் வடிவில் கொண்டு வரப்பட்டுள்ளது. உதாரணத்திற்குப் பரிசுத்த ஆவிக்குறித்த ஆய்வு என்றால், இத்தலைப்பின் கீழான ஆராய்ச்சியானது, வேதாகமத்தின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள போதனைகளை ஒன்றுசேர்த்து, அதைச் சபையார் முன், வரிசையாய் முன்வைக்கின்றதாய் இருக்கும். ஒருவேளை ஆய்வு "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவென்றால்," இதுவும் மேற்கூறப்பட்டுள்ளதுபோன்று கையாளப்படுகின்றது. ஒருவேளை ஆய்வு "லோகாஸ்" பற்றி என்றால், இதுவும் அதே விதத்தில் கையாளப்படுகின்றது. ஒருவேளை ஆய்வு "நீதிமானாக்கப்படுதல்," "பரிசுத்தமாக்கப்படுதல்," "பரிசுத்தவான்கள் மகிமைப்படுத்தப்படுதல்" என்றால், ஒவ்வொரு ஆராய்ச்சியும் முறைப்படி கையாளப்பட்டு - அதாவது சபையாருடைய மனங்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு, வேதாகமத்தில் இவைகள் குறிப்பிடப்பட்டுள்ளதான பல்வேறு பகுதிகள் குறித்த குறிப்புகளுடன், கலந்தாய்வு பண்ணப்படத்தக்கதாக முன்வைக்கப்படுகின்றது.

வேதாகம ஆராய்ச்சிக்கான இந்த வழிமுறையின் முக்கியத்துவத்தினை அறிந்தவர்களும், இதைப் பின்பற்றுகிறவர்களுமான தேவனுடைய ஜனங்கள் மற்றவர்களைக் காட்டிலும் வேதவசனத்தைக் குறித்தத் தெளிவான புரிந்துகொள்ளுதலைப் பெற்றிருப்பது குறித்து நாம் ஆச்சரியமடைகிறதில்லை.

ஆகையால் எவ்வகை வேதாகம ஆராய்ச்சியினை நாம் பரிந்துரைத்திட்டாலும், இந்த அறுவடை காலத்தின்போது தம்முடைய ஜனங்களை வெளிச்சமூட்டத்தக்கதாக, மற்றவைகள் யாவற்றைக் காட்டிலும் கர்த்தர் ஆசீர்வதித்துள்ளதான இந்த வழிமுறையை நாம் விசேஷமாய்ப் பரிந்துரைக்கின்றோம். இந்த வழிமுறையானது முழுச்சபையாரின் பிரயோஜனத்திற்கேதுவானதாகும். திறமையுள்ள வழிநடத்து பவர் கண்டிப்பாய் அவசியம் என்றில்லை. வேறுவகையான எந்த வேதாகம ஆராய்ச்சித் தொடர்புடைய விஷயத்தில் திறமையுள்ள வழிநடத்துபவருக்குரிய ஓர் அபாயமானது, அவர்களது திறமையானது சிலசமயங்களில் தவறான திசையில் செல்லும் காரியத்திலும், தவறாய் வழிநடத்திவிடும் காரியத்திலும் காணப் படுகின்றது.

இந்தப் பெரோயா ஆராய்ச்சிகளானது, வேதவசனத்தில் முழுச்சபை யாரையும் தேறின அறிவின் நிலைக்குக் கொண்டுவருகின்றது; காரணம் அவர்கள் முன் முழுப்பாடத்தையும் கலந்தாய்வுக்கு வைக்கப்படுகின்றது. எனினும் பெரோயா ஆராய்ச்சியிலும்கூட, கேள்விகள் பயன்படுத்தப்பட்டாலும், தாழ்மை மனமுள்ள திறமையுள்ள வழிநடத்துபவர், சகோதரருக்கு மிகுந்த உதவியாய்க் காணப்படுவார். இப்படியாகவே உலகம் எங்குமுள்ள கிட்டத்தட்ட ஒவ்வொரு சபையாரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. வாட்ச் டவரின் வாசகர்கள், ஏன் இந்தப் பெரோயா ஆராய்ச்சியாகிய வேதாகம ஆராய்ச்சியினை நாம் இவ்வளவுக்கு உள்ளார்ந்த விதத்தில் பரிந்துரைக்கின்றோம் என்பதை அறிய நாம் விரும்புகின்றோம். கர்த்தரினால் இவ்வளவுக்கு ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு வழிமுறைக்கு விரோதமாக எதிராளியானவன் கிரியைப் புரிகையில் நாம் ஆச்சரியமடையவும் வேண்டாம். பெரோயா வேதாகம ஆராய்ச்சிகளினால் மற்றும் கடந்த காலங்களில் தங்களால் அறியப்பட்டிருக்கும் அல்லது முயற்சிப் பண்ணப்பட்டிருக்கும் மற்றெல்லா-வகையான வேதாகம ஆராய்ச்சிகளினால் தங்கள் மனங்களிலும், தங்கள் இருதயங்களிலும், தங்கள் ஜீவியங்களிலும் உண்டான பலன்களை ஒப்பிட்டு வேறுபடுத்திப் பார்க்க நாம் அனைவருக்கும் வலியுறுத்துகின்றோம்.

# பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

உங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதான வேலையினைக் குலைத்துப் போடத்தக்கதாக, உங்களை எதிர்க்கின்றவர்கள் தங்கள் பிரயாசங்களை அதிகரித்து வருகின்றனர் என்பதை நான் கவனிக்கையில், இந்தத் தற்போதுள்ள தகவலை (Tabernacle) டேபர்நாக்கிளின் முகவரிக்கு நான் அனுப்பிவைக்கையில், உங்களுக்கு என்னுடைய உள்ளார்ந்த கிறிஸ்தவ அன்பைத் தெரிவிக்க நான் நெருக்கி ஏவப்படுவதை உணர்கின்றேன். உங்களுக்கு விரோதமாய்ப் பொது நாளிதழ்களில் செய்யப்படும் பல்வேறு தாக்குதலுக்குரிய சோதனைகளில், உங்களுக்கு எங்களுடைய ஜெபங்களும், எங்களுடைய அனுதாபங்களும் காணப்படுகின்றது. கடந்தகாலங்களில் உங்களைத் தாங்கிட்டதான அதே கிருபையானது, முடிவுபரியந்தம் உங்களுக்குப் போதுமானதாயிருக்குமென நான் நம்புகின்றேன்.

ஏதோ கடந்தகாலங்களில் காணப்பட்ட மந்தத்தை ஈடுசெய்வது போன்று, பெரும்பாலான சபைகள், ஆவிக்கடுத்த காரியங்களில் முன்னுக்குத் துள்ளிக்குதிப்பது போன்று தோன்றுகின்றது.

"செய்ததையே திரும்பத்திரும்பச் செய்யாமல் இருப்பதற்கு," தொடர்ந்து மாற்றம் செய்வது அவசியமெனச் சில சபையார் மிகவும் தவறாய் எண்ணுகிறதை நான் கவனிக்கின்றேன். ஒரு சபையில் கர்த்தர் மிகவும் திறமையுள்ள வழிநடத்துபவரின் அவசியத்தைக் கண்டார் மற்றும் தேவையான தகுதிகளுடைய ஒரு சகோதரனை அங்கு ஊழியம்புரியும்படிக்குக் கர்த்தர் அனுப்பி வைத்தார். இரண்டு ஆறுமாதக் காலப்பகுதிகள் அச்சகோதரன் ஊழியம்பண்ணின பிற்பாடு, மாற்றம் வேண்டும் என்ற அந்த ஆவியானது, அச்சகோதரனைத் தேர்ந்தெடுக்க மறுத்தது அல்லது அச்சகோதரன் மறுபடியுமாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்று எண்ணங்கொள்ளச் செய்தது. தற்போதுள்ள மூப்பர் ஒரு நல்ல சகோதரன்தான்; ஆனால் இருவரும் மூப்பர்களாகக் காணப்பட்டால், அவர்கள் ஒன்றிணைந்து அதிகமான ஊழியம்புரிந்திருக்க முடியும் (பிரசங்கி 4:9-12).

மாற்றம் வேண்டும் என்ற அதே கருத்தானது, இந்தச் சபையார் தங்கள் கூடுகைகளையும், ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளையும்கூட இடமாற்றம் செய்யக் காரணமாயிற்று; இதனால் அவ்வப்போது கலந்து கொள்பவர்களில் சிலர் தாங்கள் ஓர் இல்லத்திற்குச் சென்று, அங்குக் கூட்டம் நடத்தப்படவில்லை என்ற நிலைமைக் காணப்படுமோ என்ற அச்சத்தில், கூட்டங்களுக்குச் செல்ல வேண்டாம் என்று முடிவெடுக்கின்றனர். இது இவர்கள் தவறாமல் கலந்துகொள்பவர்களாக இராமல்போவதற்கான ஒரு காரணமாய் இருக்கின்றது.

இன்னொரு விஷயம் என்னவெனில், சில சபைகளுக்குப் பெரோயா

வகுப்புகள் நடத்துவது பற்றின ஆலோசனை தேவையாயிருக்கின்றது; அதுவும் பெரோயா வகுப்புகளைத் தாங்கள் பெற்றிருக்கும்போது, தாங்கள் உண்மையில் பிரசங்க ஆராதனையையே பெற்றிருப்பதாக எண்ணிடும் சபைகளுக்கு ஆலோசனை தேவையாயிருக்கின்றது. மூப்பர் கேள்விக் கேட்கின்றார்; ஒன்று அல்லது இரண்டு நண்பர்கள் மிகவும் சுருக்கமான பதிலைக் கொடுக்கின்றனர் மற்றும் பின்னர் மூப்பர் 10 முதல் 15 நிமிடங்கள் பிரசங்கம்பண்ணுகின்றார்; இப்படியே அடுத்துக் கேள்விக்கும் மற்றும் இறுதிவரைக்கும் தொடரப்படுகின்றது.

சில மிகச்சிறிய எண்ணிக்கையிலுள்ள மற்றும் பெலவீனமான சபைகளில் இப்படிச் செய்ய அனுமதிக்கப்படலாம் என்று நான் கற்பனை பண்ணிக்கொள்கின்றேன்; ஆனால் இப்படிச் செய்வதைத் தங்கள் வழிமுறையாகப் பெற்றிருப்பதை நான் கண்ட ஒவ்வொரு சபையிலும், இப்படிச் செய்திடுவதற்குக் காரணங்கள் சொல்லிடுவதற்கு ஏதும் இருப்பதில்லை.

இலினோனிசிலுள்ள சகோதரர்களுடன் நாம் விலையேறப்பெற்ற ஐக்கியத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் மற்றும் தேவனுக்கு மகிமை சேர்க்கும் காரணங்களுக்கடுத்த ஊழியத்தின் சிலாக்கியங்களிலும் பெரிதும் களிகூர்ந்துகொண்டிருக்கின்றோம். மிகுந்த கிறிஸ்தவ அன்புடன் அவரது விலையேறப்பெற்ற நாமத்தில் தங்கள்

- பென்ஜமின். H. பார்டன்.

## இதழாசிரியரின் பதில்

மேலே கொடுக்கப்பட்டுள்ளதான சகோதரர் பார்டன் அவர்களின் அறிக்கையினை ஒப்புக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தினை நான் பயன்படுத்திக் கொள்கின்றேன். நாம் சீரான நிலைமையில் காணப்படுவது அவசியமாகும். சபையார் தங்கள் காரியங்களின் மீதான முழுக்கட்டுப்பாட்டினைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும், எனினும் இது தெய்வீக வழிக்காட்டுதல் என்று தாங்கள் நம்புகின்றவைகளின் கீழ்த்தங்களது மூப்பர்களாக அல்லது வழிநடத்துபவர்களாக இருக்கும்படிக்குத் தங்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களை மரியாதைக் குறைவாகப் பேச அல்லது எண்ண வேண்டும் என்று குறிப்பதாய் இருப்பதில்லை. "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்வோமாக (எபிரெயர் 13:17).

சபையாரின் கரங்களினின்று அதிகாரத்தை எடுத்துக்கொள்வதற்கு முயற்சிக்காத ஓர் உண்மையுள்ள வழிநடத்துபவர் பெரிதும் நம்பப்படலாம் மற்றும்

நம்பப்பட வேண்டும். அவருடைய ஊழியம் அன்பின் ஊழியமாக இருக்கின்றதே ஒழிய இழிவான ஆதாயத்திற்காகவல்ல மற்றும் ஊழியத்தில் அவரது உண்மைக்கான பலனாக, முழுச்சபையாருடைய அன்பானது, அவருக்கு இலவசமாகச் செலுத்தப்பட வேண்டும். இது - அதிகாரமானது ஒரு மூப்பருடைய கரங்களில் விடப்பட வேண்டும் என்று; அவர் மிகவும் திறமையுள்ளவராக இருப்பினும், மற்றவர்களும் முன்னுக்குக்கொண்டுவரப்பட்டால், இதன் நிமித்தம் அவர் கோபமடைய வேண்டும்/அவமதிக்கப்பட்டதாய் எண்ண வேண்டும் என்று குறிப்பதாய் இராது. இளைய சகோதரர் யாவருக்கும் உதவிசெய்திடுவதற்காகவும், உற்சாகமூட்டிடுவதற்காகவும், வழிகாட்டிடுவதற்காகவும் வழிநடத்துபவர்கள் மூத்த சகோதரர்களெனக் கவனித்திருக்க வேண்டும் மற்றும் அவர்களை உதவிக்காரர் ஊழியத்திற்கும், பிற்பாடு மூப்பர் ஊழியத்திற்கும் என்றும் ஆயத்தப்படுத்துவ தற்காகவும் கவனித்திருக்க வேண்டும்.

கர்த்தருடைய அருமையான ஜனங்களில் சிலர் மிதமிஞ்சி செயல்படுகிறவர்களாகக் கொஞ்சம் காணப்படுகின்றனர். பலமான பாத்திரங்கள் எப்போதுமே மிதமிஞ்சிப் போவதற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" என்று அப்போஸ்தலன் புத்திமதி கூறுகின்றார். நம்முடைய காரியங்களை நல்லொழுக்கமாயும், கிரமமாயும் நடத்திடுவது என்பது, பாபிலோன் போன்று எந்தத் தீமையான விதத்திலும் இருக்காது. பரலோகத்தை விதிகளும், ஒழுங்குகளும், கட்டுப்பாடுகளும் இல்லாத ஒன்றாக நம்மால் கற்பனைப்பண்ணக் கூடுமா? ஒழுங்குதான் பரலோகத்தின் முதல் பிரமாணம் என்று நாம் அறிந்திருக்கிறோமல்லவா? தேவன் தமது சித்தத்தின்படி, பல்வேறு அவயவங்களைச் சரீரத்திலே வைக்கின்றார் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டினார் அல்லவா? அவரது சித்தத்தினை அங்கீகரிப்பதிலும், அதை நடந்தேற்றுவதிலும் நாம் தேவனோடு ஒத்துழைப்பது தவறாய் இருக்குமா? நிச்சயமாக இல்லை! நியாயமானதொரு எண்ணிக்கையிலுள்ள பெரும்பான்மை யினர், சிறுபான்மையினர் மீது அடக்குமுறைப்பண்ணுவது மோசமான காரியமாய் இருப்பது போலவே, சிறிய எண்ணிக்கையிலுள்ள சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் மீது அடக்குமுறைப்பண்ணுவதும் மோசமான காரியமாகவே இருக்கும். பொன்னான பிரமாணத்தினை நினைவில் கொள்வதற்கும், மற்றவர்கள் நம்மிடத்தில் தயவாய் இருக்க வேண்டுமென நாம் விரும்புவது போன்று, நாம் மற்றவர்களிடத்தில் தயவாய் இருப்பதற்கும் அன்பின் ஆவியானது நம்மை ஏவிடும்.

மாற்றத்திற்கான மிகுந்த விருப்பம் தொடர்புடையதான சகோதரர் பார்டன் அவர்களின் யோசனைகளுக்கு நான் முழுச்சம்மதத்தைத் தெரிவிக்கின்றேன். ஒரு சபையார் தங்களுக்கான வழிநடத்துபவர்களை வாராவாரம் சுழற்சி முறையில்

பெற்றிருக்கின்றனர் என்று சமீபத்தில் நாங்கள் கேள்விப்பட்டோம். ஒரு மாதக்காலம் அல்லது ஒரு காலாண்டுக்காலம் என்பது ஒவ்வொரு வழிநடத்துபவருக்கும் சரியாய் இருக்கும் என்று தோன்றினாலும், இப்படி வாராவாரம் சுழற்சி என்பது ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களுக்கு மிகவும் ஆகாததாய் இருப்பதில்லை. ஆனால் பெரோயா வேதப்பாடங்களைப் பொறுத்தமட்டில் வாராவாரம் மாற்றம் செய்வது என்பது வழிநடத்துபவருக்கும், சபையாருக்கும் மிகவும் ஊறுவிளைவிக்கின்றதாய் இருக்கும். முந்தையை பாடங்களின் தொடர்ச்சி, தொடர்பு இருப்பது என்பது மிகவும் விரும்பத்தக்கதாகும். பெரோயா வேதப்பாட நடத்துனர்கள் குறைந்தப்பட்சம் மூன்று மாதக்காலம் தொடர்ந்து பொறுப்பு வகிக்கும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

## பெரோயா வேதப்பாடங்கள் தொடர்பாக

சபையாரிடமிருந்து பதில்களை வரவழைப்பவரே ஒரு வெற்றிகரமான போதகர் ஆவார் என்ற சகோதரர் பார்டன் அவர்களின் கருத்துப் பொருத்தமானதே. இந்த விஷயத்தில்தான் பெரோயா வேதப் பாடங்களானது, கர்த்தருடைய ஜனங்களுக்கு அதிகமதிகமாய் உதவி செய்கின்றதாய் இருக்கின்றது. உரையாற்றிடுவதற்கு அல்லது பிரசங்கம்பண்ணிடுவதற்கு தாலந்துடைய சில நபர்கள் போதிப்பதற்கு, சபையாரிடமிருந்து பதில்களை வரவழைப்பதற்குப் போதுமான தாலந்தற்றவர்களாய் இருப்பார்கள் என்பது உண்மைதான். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் மூப்பர்களுக்கான தகுதிகளில் ஒன்றாக அப்போஸ்தலனால் விவரிக்கப்படுகின்ற போதகசமர்த்தத்தைத் தாங்கள் பெற்றிருக்கின்றார்களெனக் காட்டுவதற்கு, வேறு மூப்பர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுவது சரியாய் இருக்கும்.

முன்கூட்டியே சகோதரர்களைப் பாடங்களைப் படித்து வரவைக்க முடியவில்லை என்று அநேகம் சபை வழிநடத்துனர்கள் தெரிவிக்கின்றனர். இப்படிக் காணப்படுவது வருந்தத்தக்கதே, ஆனாலும் பாடங்களைப் படித்து வராததற்காக யாரையேனும் அவமதிப்பதோ அல்லது கடுமையாய்த் தாக்கிப் பேசுவதன் மூலம் யாரையேனும் கூட்டத்தில் கலந்துகொள்வதிலிருந்து தடைப்பண்ணுவதோ ஞானமற்றதாய் இருக்கும். நாங்கள் வேறொரு நடைமுறையைப் பரிந்துரைக்கின்றோம்: ஒவ்வொரு வகுப்பின் துவக்கத்திலும் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான வேதாகமப் பாடங்களின் (Volume) அந்தப் பக்கங்களானது, தெளிவாயும், அழுத்தத்துடனும் வாசிப்பதற்குத் திறமையுள்ள ஒருவரால் வாசிக்கப்படுவதாக; பின்னர்ப் புத்தகங்களை மூடி வைத்து, கேள்விகளின் அடிப்படையில் பாடம் கலந்துரையாடப்படுவதாக. வழிநடத்துபவர் துண்டு துண்டாய்க் காணப்படும் பதில்களைச் சேர்த்து, அவைகளை ஒன்றாய் ஒன்றிணைக்க உதவுவது, மிகவும்

உதவிகரமான ஒரு வழியாயிருக்கும். இப்படியாகப் பதிலளிப்பவர்களை அடுத்த தருணத்தில் பதில் அளிக்க ஊக்குவிப்பதும், பதில்களை அப்போது மிகவும் பிரயோஜனமானதாக்கிடுவதும்தான் நோக்கமாகும். ஆக மொத்தம் பெரோயா வேதப்பாடங்களானது, சத்தியத்தில் உறுதிப்படுத்தும், ஸ்திரப்படுத்தும் வேலையை மிகவும் திறம்படச் செய்கின்றது.

பெரோயா வேதப்பாடங்கள் அல்லாமல், மற்றப்படி வேதாகமப்பாடங்களில் (Volumes) பத்து முதல் பன்னிரண்டு பக்கங்களை வழக்கமாய் வாசிப்பதைத் தொடரும்படிக்கு அருமையான சகோதரர்கள் யாவருக்கும் நாம் வலியுறுத்துகின்றோம். நாம் வாசிப்பவைகளானது, வேதப்பாடங்கள் வகுப்புகளுக்கு மிகவும் உதவியாய்க் காணப்படும்.

---

R3517

# விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள்

## பெரோயா வேதாகமப்பாடங்கள் - பிரயோஜனமான ஆராய்ச்சி வகுப்புகளுக்கான யோசனைகள் மற்றும் முக்கிய காரியங்கள்

கொஞ்சக்காலங்களுக்கு முன்னதாக, எப்படிக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின சிறு சிறு கூட்டத்தார், தங்களது ஞாயிற்றுக்கிழமைக் கூடுகைகளுக்கான நேரத்தினை மிகவும் பிரயோஜனமான விதத்தில் பயன்படுத்திடலாம் என்று விசாரிக்கும் கடிதங்களை நாம் பெற்றுக்கொண்டிருந்தோம். இந்தக் கடிதங்களில் சில, மூப்பர்களாக அல்லது வழிநடத்துனர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சகோதரரிடமிருந்து வந்துள்ளது; இவர்கள் தாங்கள் நல்ல "பிரசங்கம்" ஒன்றைக் கொடுத்திடுவதற்குத் திறனற்றவர்களாய் இருக்கின்றனர் என்றும், கவரும் விதத்திலும், ஆர்வமூட்டும் விதத்திலும் தங்களால் வேதாகம ஆராய்ச்சி ஒன்றை ஆயத்தம் செய்யக்கூட முடியவில்லை என்றும், இப்படி இருப்பினும் அருமையான சகோதரர்கள் சத்தியத்திற்கான அன்பினை முழுமையாய்க் கொண்டவர்களாகக் குறைக்கூறாமல், தங்களை ஊக்குவிக்கவே செய்கின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

வேறு கடிதங்களானது சபைக்கடுத்த எந்த ஊழியங்களிலும் இல்லாதவர்களிடமிருந்து வந்ததாய் இருந்தது; இவர்கள் தங்களது கூட்டத்தை வழிநடத்து

பவர்கள், பெயர்ச்சபையில் சத்தியம் வழங்குபவர்கள் போன்று, சத்தியம் வழங்கிடு வதற்கு ஏறெடுக்கும் பிரயாசங்களின் மீது பரிவு கொண்டிருக்கும் அதேவேளையில், அனைவருக்கும் பிரயோஜனமானதாக, கூடுகைகளை மாற்றிடுவதற்குரிய உதவிக்கான ஏதேனும் கதவுகள் திறக்கப்படுவதற்கு விருப்பம் கொண்டவர் களாகவும், ஜெபம்பண்ணுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர்.

கர்த்தருடைய ஜனங்களுடைய இந்தக் கூக்குரலுக்குப் பிரதியுத்தரமாகவே நாம் வாட்ச் டவர் வேதாகமத்தை ஆயத்தப்படுத்தினோம், இந்த வேதாகமத்தின் ஓரங்களில் (margin) வேதாகம சுட்டுக் குறிப்புகளோடுகூட, டாண் (volume) மற்றும் டவர் (ரீப்பிரிண்ட்ஸ்) குறிப்பிலக்கங்களையும் சேர்த்திருந்தோம். இந்த வேதாகமத்தின் முன்பகுதியில் "பெரோயா வேதாகம ஆராய்ச்சிக்கான" சில யோசனைகளைக் கொடுத்திருக்கின்றோம் மற்றும் பின்பகுதியில் விரிவான சுட்டுக் குறிப்புகளும், தலைப்புவாரியான அட்டவணையையும் கொடுத்திருக்கின்றோம். இவைகள் தேவைகளைப் பூர்த்திச் செய்திடும் என்பது எங்களது நம்பிக்கையாக இருக்கின்றது; ஆனால் இவை போதுமானதாய் இல்லை. கர்த்தருடைய உண்மையுள்ளவர்களில் அநேகர் தங்களுக்கு ஆவிக்குரிய போஷாக்கென அளிக்கப்படும் எதையும் "விழுங்கிவிடும்" பழக்கத்தினை நீண்டகாலம் உடையவர்களாய்க் காணப்படுவதினால், அவர்கள் பிதாவின் போஜனப்பந்தியி லிருந்து எப்படித் தங்களைப் போஷித்துக்கொள்வது என்பதை ஒருபோதும் கற்றுக்கொள்ளாதவர்களாகக் காணப்படுகின்றனர். உணவை எப்படிச் சரியாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்கும் மற்றவர்களோ, தங்கள் நேரங்களைத் தங்களது நியாயமான தேவைகளைச் சம்பாதித்துக்கொள்ளும் தொழிலுக்கென்று மிகவும் செலவிட வேண்டியிருக்கிறபடியால், தலைப்புவாரியான அட்டவணையில் சத்தியம் முறைப்படுத்தி வழங்கப்பட்ட பிற்பாடும்கூடத் தங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பிரயோஜனமான விதத்தில் பாடங்களை ஆயத்தம்பண்ணிடுவதற்கு நேரத்தைக் குறைவாகவே பெற்றிருக்கின்றனர்.

## பெரோயா ஆராய்ச்சிகளானது இப்பொழுது பரிந்துரைக்கப்படுகின்றது

தேவைகளை உணர்ந்தவர்களாக, நாம் "பயண ஊழியக்காரர்கள்" போய்ச் சந்தித்திடும் பல்வேறு இடங்களில் இந்தப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளுக்கான மாதிரியைக் காண்பித்துக்கொடுக்கும்படிக்கு, "பயண ஊழியர்கள்" சிலரிடம் வேண்டிக்கொண்டோம். இதுவும்கூடப் பிரயோஜனப்படவில்லை; காரணம் முற்காலங்களிலுள்ள அப்போஸ்தலர்களைப் போன்று "பயண ஊழியர்களின்" சந்திப்பும் சொற்பமாகக் காணப்பட்டப்படியால், ஒரே ஒரு வகுப்பு நடத்திக் கொடுக்கப்பட்டதின் நிமித்தம் நண்பர்கள் அதிருப்தியே அடைந்தனர், ஏனெனில்

பெரோயா வகை வகுப்புகளின் முக்கியத்துவத்தினை விவரிப்பதற்கும், முறையான ஆர்வத்தை உருவாக்கிடுவதற்கும் அநேகம் பெரோயா வகுப்புகள் நடத்தப்படுவது அவசியமாயிருக்கும்.

ஆகையால் இந்தத் தேவைகள் அனைத்தையும் சந்திக்கும் வண்ணமாக, இந்த வருஷத்தின் மார்ச் மாதம் துவங்கி, ஒவ்வொரு மாதத்திற்கான பாடத்திட்டத்தினை நாம் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கின்றோம். இந்தப் பாடத்தின் தனித்தன்மை என்னவெனில், இவைகள் போதிப்பதில்லை, மாறாக கேள்வி மாத்திரமே கேட்டு, மாணவனுக்கு அதுசம்பந்தப்பட்ட வேதவாக்கியங்களையும், வாட்ச் டவர் கட்டுரைகளையும் குறிப்பிட மாத்திரமே செய்கின்றது. இப்படியாகச் சிந்தனை தூண்டப்படுகின்றது மற்றும் சத்தியமும் மிகத் தெளிவாக மனதில் பதிகின்றது.

கீழே இடம்பெறும் மார்ச் மாத பாடங்களுக்கான 30 கேள்விகளானது, முப்பது ஞாயிற்றுக்கிழமைகளுக்குப் போதுமானதாயிருக்கும்; எனினும் மிகவும் நல்ல உணவாய்க் காணப்படுகின்றபடியால் ஒவ்வொரு கூட்டத்தின் போதும் நாம் அநேகம் கேள்விகளைக் கையாளலாம். எத்தனை கேள்விகள் என்பது, கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையையும் மற்றும் அவர்கள் எவ்வளவுக்கு ஆராய்ச்சிப் பாடத்திற்குப் பழக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும், எவ்வளவுக்குக் கூட்டத்தை வழிநடத்துபவரின் திறமை காணப்படுகின்றது என்பதையும் சார்ந்திருக்கும். இதை நடத்துவதில் மிகவும் திறமிக்கவர்களாய் இருப்பவர்கள் யார் என்று கண்டுகொள்ளத்தக்கதாக திறமிக்க சகோதரர்களாய்த் தென்படுபவர்கள் அநேகரைச் சுழற்சியில் வழிநடத்திடுவதற்குச் சபையார் நியமித்திடுவது நலமாயிருக்கும். இப்படியானவர்கள் அநேகமாக உங்களால் மூப்பர்களாக ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மத்தியில் கண்டுபிடிக்கப் படலாம்.

ஒருவேளை சபையார் சிறிய எண்ணிக்கை உடையவர்களாய் இருப்பார்களானால், உதாரணத்திற்கு ஏழுபேர் காணப்படுவார்களானால், ஒவ்வொருவருக்கும் பின்வருகிற ஞாயிற்றுக்கிழமைக்கென ஒரு கேள்வியினைப் பிரித்துக்கொடுப்பது நலமாயிருக்கும். வாக்கு (vote) மூலம் மூப்பர்கள் கேள்விகளை இப்படிப் பிரித்திடுவதற்கு வேண்டிக்கொள்ளப்படலாம். ஒரு கேள்விக்கு ஒரு வாரக்காலம் படிப்பதற்குக் காணப்படுகின்றபடியால், அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருகையில் ஒவ்வொருவராலும் உதவிகரமாகவும், சுவாரசியமாகவும், அனைவருக்கும் பிரயோஜனமாகவும் காணப்படும் விதத்தில் கருத்துகளையும், வசனங்களையும், வாட்ச் டவர் (ரீப்பிரிண்ட்ஸ்) மற்றும் டாண் (volume) மேற்கோள்களையும் முன்வைத்திட முடியும். அனைவருமே வாட்ச் டவர் வாசகர்களாக இருப்பதினால், எண்களினால் கேள்விகள் பங்காகக் கொடுக்கப்படலாம், அதாவது சகோதரர் A-அவர்களுக்கு கேள்வி எண். 4;

சகோதரி H-அவர்களுக்குக் கேள்வி எண். 5 என்பது போலாகும்.

ஒருவேளை சபையார் அதிக எண்ணிக்கை உடையவர்களாய், அதாவது இருபது முதற்கொண்டு நாற்பதுபேர்களைக் கொண்டவர்களாய் இருப்பார்களானால், கேள்விகளுக்கான பதிலை முன்வைத்திடுவதற்குச் சபையாரிலேயே மிகவும் திறமையுடைய அங்கத்தினர்களிலுள்ள ஏழு அல்லது எட்டு அங்கத்தினர்களுக்குக் கேள்வியைப் பிரித்துக்கொடுப்பது நலமாய் இருக்கும். எனினும் இதற்கென நியமிக்கப்பட்டவர்களால் கேள்விக்கான பதில் முறையாக முன்வைக்கப்பட்ட பிற்பாடு, ஒவ்வொரு காரியமும் அல்லது கேள்வியும் பொதுவான கலந்தாராய்தலுக்கு முன் வைக்கப்பட வேண்டும்.

இப்படியாகக் கீழே இடம்பெறும் முப்பது கேள்விகளும் பயன்படுத்தப்பட்டால், இவை பெரிய எண்ணிக்கையிலுள்ள சபையாருக்குக் கிட்டத்தட்ட ஒரு மாதக்காலம் பிரயோஜனமான ஆராய்ச்சி மேற்கொள்வதற்குரிய திரளான உணவாய்க் காணப்படும். இந்த யோசனைகளின் பலனாக நமது கர்த்தருக்குத் துதியும், கனமும் உண்டாகத்தக்கதாகவும் மற்றும் அவரது ஜனங்களுக்குப் பலத்தையும், ஜெயத்தையும் கொண்டுவரத்தக்கதாகவும், இந்த யோசனைகளோடு எங்களது ஜெபங்களும் உங்களுக்குக் காணப்படுகின்றது.

* * * * * * *

## விசுவாசம் தொடர்பான - மார்ச் மாதப் பாடங்கள்

[ஒவ்வொரு கேள்வியைத் தொடர்ந்து, வேதவாக்கியமானது பதிலாக வழங்கப்பட்டுள்ளது; பின்னர் விளக்கவுரைக் கொடுக்கும் டாண் (volume) மற்றும் வாட்ச் டவரின் (ரீப்பிரிண்ட்ஸ்) பக்கத்தினுடைய எண்கள் கொடுக்கப்பட்டிருக்கும். டாண் தொகுதிகளானது ஆங்கில முதல் 6 எழுத்துக்களால் - A, B, C, D, E, F - சுட்டிக்காண்பிக்கப்பட்டிருக்கும் மற்றும் டவர்களானது (ரீப்பிரிண்ட்ஸ்) Z என்று எழுத்தினாலும், அதன் வருஷத்தோடு கொடுக்கப்பட்டிருக்கும். விளக்கவுரையைப் பெற்றிருக்கும் பத்தி எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும்].

(1) விசுவாசம் என்றால் என்ன? எபிரெயர் 11:1; 1 யோவான் 5:4; E. 125, par. 1; F. 689 (முதல் வரி).

(2) விசுவாசத்தின் அடிப்படையான இரண்டு உட்பொருட்கள் என்ன? Z. '95-134.

(3)எதையும் போதுமான அளவு ஆதாரங்களின்றி எளிதில் நம்பக்கூடிய இயல்பிலிருந்து, விசுவாசம் எவ்வகையில் வேறுபடுகிறது? F.689, par. 1.

(4)உண்மையான விசுவாசத்தின் முக்கியத்துவம் என்ன? எபிரெயர் 11:6; F.315,693, par. 1; Z.'94-329 (2nd col. par. 1-3).

(5) விசுவாசத்திற்கும், அறிவுக்கும் உள்ள தொடர்பு என்ன? ரோமர் 10:17; A.13, par. 1; A.20, par. 2; A.21, par. 1; Z.'94-329 (1st col. par. 2); Z.'99-3 (2nd col. par. 1).

(6)விசுவாசம், "தேவனுடைய ஈவாக" எவ்வாறு கருதப்படுகிறது? எபேசியர் 2:8; Z.'98-107 (1st col. par. 2); Z.'01-156 (1st col. par. 2,3).

(7)இரட்சிப்படைய கிறிஸ்துவுக்குள் விசுவாசம் அவசியமா? அப்போஸ்தலர் 4:10-12; யோவான் 3:16,36; A.102, par. 3; Z.'97-278. (See Topical Index,--"விசுவாசம்")

(8)இந்தச் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவுக்குள் வைக்கும் விசுவாசத்திற்கு உடனடியாகக் கிடைக்கும் பலன் என்ன? ரோமர் 5:1; A.231, par. 4; Z.'00-188 (1st col. par. 3, and 2nd col. par. 1,2).

(9)இயேசு எப்படியாக நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார்? எபிரெயர் 12:2; Z.'95-147 (1st col. par. 1).

(10)விசுவாசத்தை எளிமையாக அறிக்கையிடுவது அவசியமா? ரோமர் 10:10; Z.'00-149, (2nd col.); Z.'00-180 (1st col. par. 5); Z.'02-270 (1st col. par. 1,2,3).

(11) "உணர்வுகளுக்கு" விசுவாசத்தில் ஒரு முக்கிய பங்குள்ளதா? Z.'92-267.

(12)நீதிமானாக்கப்படுதலுக்கு அடிப்படையாய்க் காணப்படும் விசுவாசத்திற்கும் மற்றும் ஆவியின் கனிகளில் ஒன்றாகிய விசுவாசத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? F.688-692.

(13) "விசுவாசத்தின் நல்ல போராட்டம்" என்றால் என்ன? 1 தீமோத்தேயு 6:12; Z.'98-153,158, (2nd col.)

(14) நல்ல போராட்டத்தை நாம் எப்படிப் போராட வேண்டும்? Z.'95-201,202; Z.'98-158, (1st col. par. 2); Z.'98-159 (2nd col.); Z.'01-72 (2nd col. par. 3).

(15)நாம் யாருக்காக, யாரை எதிர்த்துப் போர்ப்புரிகிறோம்? பிலிப்பியர் 2:12; 1 யோவான் 3:16; எபேசியர் 6:12; Z.'98-153-155; F.599-658.

(16) "விசுவாசத்தினால் நடப்பது" என்பதற்குப் பொருள் என்ன? 2 கொரிந்தியர் 5:7; F.631, par. 2,3; Z.'00-57 (1st col.); Z.'95-92,93; F.142, par. 2.

(17)விசுவாசத்தின் சோதனைகள் ஏன் அனுமதிக்கப்படுகிறது? யாக்கோபு 1:3,4; 1 பேதுரு 4:12,13; F.642-644; Z.'96-54; Z.'95-134,135.

(18)விசுவாசத்தின் தற்போதைய வெகுமதிகள் என்ன? 1 கொரிந்தியர் 2:9, 10; F.689 (par. 2) to 692; F.686, par. 3.

(19) விசுவாசத்தினால் வருங்காலத்தில் நாம் பெறும் பயன் என்ன? 1 யோவான் 3:2; வெளிப்படுத்தல் 2:10; F.693,694, F.721 (par. 1,2) to 729.

(20) விசுவாசத்தில் இளைப்பாறுதல் என்பதன் பொருள் என்ன? எபிரெயர் 4:1-11; F.392-394; Z.'95-168,169; Z.'99-253 (1st col. par. 1).

(21) விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் பூரண நிச்சயம் என்பதற்கான விளக்கம் என்ன? எபிரெயர் 10:22; 6:11; Z.'00-169, par. 1.

(22)விசுவாசத்தின் முழு நிச்சயத்தை நாம் பெற்றுக்கொண்டு, அதை எப்படித் தக்கவைத்துக்கொள்வது? Z.'98-247; E.249,250.

(23)விசுவாசத்தின் பூரண நிச்சயத்திற்குத் தடையாய் இருப்பது எது? Z.'00-169,170.

(24) நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பது எப்படி? F.691, par. 2; Z.'96-86 (2nd col. par. 3).

(a) ஜெபம் மூலம். Z.'96-162,163.
(b) வேத ஆராய்ச்சி மூலம். F.315.
(c) தேவனுடைய வாக்குத்தத்தங்களைத் தொடர்ந்து நினைவுகூருவது மற்றும் உரிமைப்பாராட்டிக் கொள்வதன் மூலம். Z.'00-170 (1st col. par. 4).
(d) நம்முடைய அனுபவங்களைக் கவனிப்பது மூலம். Z.'00-170 (2nd col. par. 1,2).

(25)உங்களுடைய விசுவாசத்தை அதிகரிக்க "தற்கால சத்தியங்களின்" சில முக்கிய அம்சங்களைக் கூறவும்.

(26) கிரியைகளுக்கும், விசுவாசத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? யாக்கோபு 2:14,

17, 18, 22; Z.'00-343 (1st col. par. 1,2); Z.'01-231 (2nd col. par. 2,3).

(27) யார் இந்த "விசுவாச வீட்டார்"? கலாத்தியர் 6:10; Z.'00-368, (2nd col.)

(28) யாக்கோபு 5:14-16-ஆம் வசனங்களின் விளக்கம் கூறவும். யாக்கோபு 5:14-16; F.631-638.

(29) விசுவாசம் மற்றும் நம்பிக்கைத் தொடர்புடைய விஷயத்தில், கேடயம் மற்றும் நங்கூரம் எனும் அடையாளங்களுக்கான முக்கியத்துவம் என்ன? எபேசியர் 6:16; F.657, par. 5; எபிரெயர் 6:19; Z.'02-345 (1st col.)

(30) விசுவாசம் மற்றும் அறிவுக்கும் உள்ள தொடர்பு, ஆயிர வருட ஆட்சியில் எப்படிப்பட்டதாக இருக்கும்? Z.'00-238 (2nd col. par. 1, 2) to 239; F.106, (par. 3) to 107.

---

R3800 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி

இந்தப் பெரோயா வேதாகம பாடங்களினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது குறித்த நல்ல தகவல்களை நாம் கேள்விப்படுகின்றோம். ஒவ்வொரு சிறு கூட்டத்தாரும் இந்தப் பாடங்களுக்கென ஒரு விசேஷித்தக் கூட்டத்தைப் பெற்றிருக்கவும் மற்றும் ஒரு வழிநடத்துபவரைக் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்காகிலும் தெரிந்துகொள்ளவும் நாம் வலியுறுத்துகின்றோம்; அதாவது இவ்வாராய்ச்சிகளுடைய ஆவிக்குள்ளாகக் கடந்து செல்பவரும், சபையாரிட மிருந்து பதிலை எப்படி வரவழைப்பது என்பதைத் தெரிந்திருப்பவரும் மற்றும் பின்னர் ஒவ்வொரு கேள்வியின் முடிவிலும் சுருக்கமாய்க் கூற முடிகிறவருமான வழிநடத்துபவர் ஒருவர் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இந்த நடைமுறையினைப் பின்பற்றி அலிகெனியிலுள்ள சபையார் இந்த வகுப்புகளை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையிலும் பெற்றிருக்கின்றனர் மற்றும் இதிலுள்ள ஆர்வமானது, கடந்த எட்டு மாதங்களாகக் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை

இருமடங்காகியுள்ள உண்மையினால் வெளிப்படுகின்றது.

நன்கு வாசிப்பவர்கள் அநேகர் ஒரு சபையில் காணப்படுவார்களானால், ஒவ்வொருவருக்கும் ஒரு மேற்கோளானது வாசிக்கும்படி சொல்லப்படலாம்; ஒருவேளை சிலர்தான் இருப்பார்களானால், ஒருவரே அநேகம் மேற்கோள் பாகங்களை வாசிக்கும்படி சொல்லப்படலாம். (வாசிப்பது தெளிவாய் இருக்க வேண்டும் இல்லையேல் பிரயோஜனம் இராது). வேதவாக்கிய மேற்கோள் முதலாவதாகவும், பின்னர் டாண் (volumes) மேற்கோள் பாகங்களும் இடம்பெறுகின்றன; டாணின் ஆறு தொகுதிகளும் A, B, C, D, E, F என்ற ஆங்கில எழுத்துக்களினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; T-என்பது "ஆசரிப்புக் கூடார நிழல்களை" சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது மற்றும் S-என்பது "Spiritism"-ஐ சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; Z-என்ற எழுத்தானது வாட்ச் டவர் (ரீப்பிரிண்ட்ஸ்) கட்டுரைகளைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; '02-152 என்பது 1902-ஆம் வருடத்தின் 152-ஆம் பக்கத்திலுள்ள கட்டுரையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. பத்தி நிரல்கள் (columns) மற்றும் பத்திகளானது (paragraphs) col. 2, par. 3 என்று சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது.

## ஜூலை-1

1. அன்பு என்றால் என்ன? Z. '03-55 (2nd col. last par.); Z. '03-58; (1st col. par. 2).

2. அப்போஸ்தலன் அன்பை எப்படி விவரிக்கின்றார்?

1 கொரிந்தியர் 13:1, Z. '03-56 (1st col. Par. 1).
1 கொரிந்தியர் 13:2, Z. '03-56 (1st col. par. 2).
I கொரிந்தியர் 13:3, Z.'03-56 (1st col. par. 3; 2nd col. par. 1).
I கொரிந்தியர் 13:4, Z.'03-56 (2nd col. par. 2, 3); Z.'03-57 (1st col. par. 1, 2); Z.'97-247 (1st col. par. 1-4).
I கொரிந்தியர் 13:5, Z.'03-57 (1st col. par. 3 to 2nd col. par. 3); Z.'97-247 (1st col. par. 5 and 2nd col).
I கொரிந்தியர் 13:6, Z.'03-57 (2nd col. par. 4); Z.'97-248 (1st col. 1 to 3).
I கொரிந்தியர் 13:7, Z.'03-58 (1st col. par. 1); Z.'97-248 (2nd col. par. 1 to 3).
I கொரிந்தியர் 13:8, Z.'03-58 (1st col. par. 3); Z.'97-248 (2nd col. par. 4).
I கொரிந்தியர் 13:9-12, Z.'03-58 (2nd col. par. 1, 2); Z.'97-249 (1st col. par. 1 to 3).
I கொரிந்தியர் 13:13, Z.'97-249 (2nd col. par. 1).

3.------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------

வாசிப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவனும் தனது வேதாகமத்தை அல்லது டாணை (volume) அல்லது டவரை (ரீப்பிரிண்ட்ஸ்) கைகளில் பெற்றிருக்க வேண்டும்; முன்னமே வாசித்திருக்க வேண்டும் மற்றும் வழிநடத்துபவர் சொல்கையில், தாமதியாமல் வாசிப்பதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும். அனைவருமே வேதாகமங்களையும், டாண்களையும் பெற்றிருக்க வேண்டும் மற்றும் பழைய டவர் கட்டுரைகளைச் (ரீப்பிரிண்ட்ஸ்) சபையில் யாரேனும் பெற்றிருப்பார்கள்; மற்றும் இவர்கள் சபையாரின் பிரயோஜனத்திற்காக, புத்தகங்களை இரவலுக்குக் கொடுத்திட மகிழ்ச்சியோடு காணப்படுவார்கள்.

மேற்கோள் பாகங்களானது வாசித்தப் பிற்பாடும் மற்றும் வழிநடத்துபவர் பதிலைச் சுருக்கமாய் இறுதியில் கூறி, அடுத்த கேள்வியை வாசிக்க முற்படுவதற்கு முன்பாகவும், ஒவ்வொரு கேள்வியைக் குறித்துக் கலந்தாய்வதற்கான வாய்ப்பானது கொடுக்கப்பட வேண்டும். அச்சடிக்கப்பட்டக் கேள்விகளானது, அவைகள் அனைத்தும் கலந்தாய்வுபண்ணப்படுவது வரையிலும் அச்சடிக்கப்பட்ட வரிசைஒழுங்கின் வண்ணமாகவே, கண்டிப்பாய்க் கடைப்பிடிக்கும்படிக்கு வலியுறுத்துகின்றோம். பொதுவாகவே பாடம் பற்றின அனைத்துக் கேள்விகளுமே கொடுக்கப்பட்டிருக்கும். இதை (வரிசை ஒழுங்கை) வலியுறுத்துவதற்கான காரணம் என்னவெனில், ஒருவேளை கடைசியில் இடம்பெறும் கேள்விகளானது முன்னமே கொண்டுவரப்படுமாயின், பின்வரும் பாடங்களானது சீர்க்குலைவிற்குள்ளாகிடும். வழிநடத்துபவர் அன்போடும், கனிவோடும், அதே நேரம் உறுதியோடும் சபையாரைக் கலந்தாராயப்படும் கேள்வியினின்று திசைமாறாதபடிக்கு வைத்துக்கொள்ள வேண்டும் மற்றும் இதில் அவருக்கு, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினை ஆராயும் விஷயத்தில், ஒழுங்கின் முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டுகொள்ளும் யாவரின் ஒத்துழைப்பும் தேவைப்படும்.

R3769 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# மே மாதத்திற்கான பெரோயா வேதாகமஆராய்ச்சி

## *தீமை பேசுதல் மற்றும் பொல்லாத சம்சயங்கள்*

பெரோயா வகுப்புகளின் கூட்டத்தலைவர்கள், ஒவ்வொரு கேள்வியையும் அதற்கே உரிய வரிசையின்படி கலந்தாராய்வதிலிருந்து மாறாமல் கலந்தாய்வைத் தக்கவைத்துக்கொள்வதற்குப் பிரயாசப்பட வேண்டும். இல்லையேல் பின்னர் இடம்பெறும் கேள்விகளானது பகுதி, கலந்தாராயப்பட்ட நிலையிலும், முற்றிலும் உள்வாங்கப்படாத நிலைமையிலும், திருப்தி ஏற்படாத நிலைமையிலும் விடப்பட்டிருக்கும்.

முடிந்தமட்டிலுமான பிரயோஜனம் காணப்பட வேண்டுமெனில், வழிநடத்துபவர் முழுப்பாடத்தையும் படித்திருக்க வேண்டும் மற்றும் சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும் அவனுக்கு அல்லது அவளுக்குக் கொடுக்கப்பட்ட பாகத்தினைப் படித்திருக்க வேண்டும். மேற்கோளிடப்பட்டிருக்கும் டாண்களும் (volumes), புத்தகங்களும் மற்றும் டவர் கட்டுரைகளும் (ரீப்பிரிண்ட்ஸ்) கையில் காணப்பட வேண்டும்.

---

R5703 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள்

பல்வேறு திசைகளிலிருந்து, பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளானது பெருகிவருகின்றதென நாம் கேள்விப்படுகின்றோம். இது மிகுந்த மனநிறைவைக் கொடுக்கின்றது; ஆனால் அதே சமயம் இது சில குறிப்பிட்ட சிரமங்களுக்குள்ளும் வழிநடத்துகின்றது. சபையின் எண்ணிக்கை இருபதுக்கு மேலாகக் காணப்படுகையில், இவ்வகுப்புகளானது சமாளிக்க முடியாதவைகளாகக் காணப்பட்டு, குறைவான ஆசீர்வாதத்தையும், உதவியையுமே அளிக்கின்றதாகு கின்றது. எவ்வளவுதான் திறமிக்கவராக வழிநடத்துபவர் காணப்பட்டாலும், குறைவான மணி நேரங்களில் பெரிய எண்ணிக்கையிலுள்ள சபைக்குப் பிரயோஜனம் உண்டுபண்ணிட முடியாது. நாம் அளிக்கும் யோசனை என்னவெனில்: முழுச்சபையாருமே ஞாயிற்றுக்கிழமைகளில் கூடிடுவதற்கான விசேஷித்த ஒரு நேரத்தை அல்லது பல நேரங்களை ஒதுக்கி, அதில் திறமைகளை

வெளிப்படுத்தும் சகோதரர்கள் பலரால் ஒன்று அல்லது அநேகம் சுருக்கமான உரைகள் அளித்திட ஏற்பாடு பண்ணப்படலாம். பின்னர் வாரப்பகுதிகளில், வகுப்புகளை வழிநடத்துவதற்கான திறமைகளை வெளிப்படுத்துகிற பல்வேறு சகோதரர்களின்கீழ்ப் பட்டணத்தினுடைய பல்வேறு பாகங்களிலுள்ள இல்லங்களில் வகுப்புகளை நடத்திடுங்கள். பத்து முதல் பதினைந்து பேரைக் கொண்டிருக்கும் இந்தப் புதிய வகுப்புகளானது, வளர்வதற்குரிய வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வார்கள் மற்றும் காலப்போக்கில் பிற்பாடு தனிச் சபைகளாகிடுவார்கள். இப்படியாகச் சத்தியத்தின் சாட்சியானது, அநேகம் எண்ணிக்கையானவர்களிடம் கடந்துசென்றிடும் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் ஊழியம் நடைபெறும்; ஒவ்வொருவரும் எல்லாக் கூட்டங்களிலும் பங்கெடுப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்பார்கள்.

இதே விதியானது புதன்கிழமை மாலை நடைபெறும் ஜெபம், துதி மற்றும் சாட்சிக் கூட்டத்திற்கும் பிரயோஜனமாய் இருக்கும். அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு சகோதரனுக்கும், சகோதரிக்கும் ஆராய்ச்சி வகுப்புகளிலும், சாட்சிக் கூட்டங்களிலும் பங்கெடுப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுப்பதன் முக்கியத்துவத்தினை நாம் ஒருபோதும் மறந்துபோக வேண்டாம். "உந்தன் இருதயத்தில் நீ விசுவாசிப்பாயானால், அதை நீ உன் வாயினாலே அறிக்கையிடு" என்பதே தகுதியான உண்மைதன்மைக்கான கர்த்தருடைய ஆலோசனையாக இருக்கின்றது. இப்படியாய் உண்மையாய்க் காணப்படுபவர்களே பொதுவாக மிகுதியான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருப்பார்கள்.

---

R4008

## அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி

*"தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச்சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது." (1 தீமோத்தேயு 3:14, 15)*

கர்த்தருக்கென்றும், அவருடையவர்களாய் இருப்பதற்கென்றும் மற்றும் மரணப்பரியந்தம் அவருக்கு ஊழியம் புரிவதற்கென்றும் நம்மை அர்ப்பணம் பண்ணுவது என்பது ஒரு காரியமாகவும், அந்த ஊழியத்தினை ஜீவியத்தின்

அனைத்துச் சிறுசிறு காரியங்களிலும் ஒவ்வொரு நாளும் நிறைவேற்றுவது என்பது வேறு ஒரு காரியமாகவும் காணப்படுகின்றது. "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கின்றான்" எனும் நமது கர்த்தருடைய வார்த்தைகளானது பின்வரும் உண்மையினால் நன்கு விளக்கப்படுகின்றது - அதாவது நம்முடைய பலியை, தற்கொலைச் செய்துகொள்வதன் மூலமாகவோ அல்லது கழுமரத்தில் எரிக்கப்படுவதற்குச் செல்வதன் மூலமாகவோ முடித்திடுவது சுலபம்தான்; ஜீவியத்தின் சிறுசிறு காரியங்கள் அனைத்திலும், ஒவ்வொரு நாளிலும் நம்முடைய பலியைப் பலிப்பீடத்தில் - சுயத்தை வெறுத்தலுடன், பொறுமையுடன், விடாமுயற்சியுடன், சகோதர சிநேகத்துடன், சாந்தத்துடன் தக்கவைத்திடுவதும் மற்றும் வையப்படுவதை ஏற்றுக்கொண்டு, ஆனால் பதிலுக்கு வையாமல் இருப்பதும், மனதிலோ (அ) சரீரத்திலோ அடிக்கப்படுவதை ஏற்றுக்கொண்டு, ஆனால் பதிலுக்குப் பழிவாங்காமல் இருப்பதும் மிகவும் கடினமான காரியமாகும்; மெல்ல மெல்ல சம்பவிக்கும் சிலுவை மரணத்தைச் சகிப்பது மிகவும் கடினமான காரியமாகும். அர்ப்பணிப்பானது சரியான ஆவியை (அ) சிந்தையை (அ) நோக்கத்தை வெளிப்படுத்துவதாக இருக்க, படிப்படியாக அர்ப்பணிப்பை நடந்தேற்றுவது என்பது நமது கர்த்தருக்கொத்த குணலட்சணத்தை நம்மில் அதிகமதிகமாய் வளர்த்திடும் என்ற விதத்தில், கர்த்தருடைய திட்டமானது பெரிதும், நம்முடைய நன்மைக்கேதுவானதாகவே இருக்கின்றது என்பதை நம்மால் எளிதில் கண்டுகொள்ள முடிகின்றது. ஆகையால்தான் உபத்திரவங்களை - நாம் சரியான இருதய நிலையில் ஏற்றுக்கொண்டு, அவைகள் போதிக்கும் படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள நாடுகையில், அவைகள் கர்த்தருடைய ஆவியின் பல்வேறு கனிகளையும், கிருபைகளையும் நம்மில் உண்டுபண்ணிடும் என்று அறிந்து, அவைகளிலும்கூடக் களிகூருவதற்கு நாம் கற்றுக்கொள்ளும்படிக்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார்.

## சபையில் நல்நடக்கை

நாம் அனைவருமே மாம்சத்தின்படி குறைவுபட்டவர்கள் என்றும், நம்மில் எவராலும் பூரணத்திற்கான திவ்விய தரத்தினை எட்டமுடியாது என்றும், நம்முடைய ஒரே பூரணம், இருதயத்தினுடையது, சித்தத்தினுடையது மாத்திரம்தான் என்றும் அடையாளங்கண்டுகொண்டு - ஒவ்வொருவரின் சித்தமானது, விருப்பமானது, நோக்கமானது, அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஒருவரையொருவர் ஏவ வேண்டியதாகவும், கோபத்திற்கும், பகைமைக்கும், துர்க்கிரியைகளுக்கும் ஏவக்கூடாது என்றதாகவும் இருந்தபோதிலும், அவ்வப்போது ஒருவர் இன்னொருவரிடமிருந்து சோதனைகளையும் மற்றும் பரீட்சைகளையும் மற்றும்

கோபமூட்டுதல்களையும் பெற்றுக்கொள்கையில் நாம் ஆச்சரியப்படக்கூடாது (எபிரெயர் 10:24). நம் விஷயத்தில் தேவனுக்கொத்த சாயலை அடைய வேண்டியதே மிக உயர்ந்த நிலையென நாம் வைத்திருக்க வேண்டும் மற்றும் சரீரத்திலுள்ள மற்றவர்கள் விஷயத்தில் அவர்களுக்கான மற்றும் கர்த்தருக்கான நம்முடைய அன்பானது, நம்முன் தோன்றும் அவர்களின் திரளான குறைபாடுகளை/பிழைகளை மூடிட அனுமதிப்பதற்கு நாம் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும். ஒருவள் (அ) ஒருவன் எந்தளவுக்கு இந்தப் போக்கைக்கொண்டிருப்பானோ, அந்தளவுக்கு அவன் கர்த்தருக்குப் பிரியமாயிருப்பான், இருதயத்தில் சுத்தமுள்ளவனாயிருப்பான் - தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாயிருப்பான் மற்றும் மீட்பருடைய புண்ணியத்தின் வஸ்திரத்தினால் மூடப்பட்டிருக்கும் அவன், பூரணமற்ற அவனது மாம்சத்தின்படியாக இல்லாமல், மாறாக அவனது பூரண நோக்கமுள்ள இருதயம் அல்லது சித்தத்தின்படியாக, தேவனால் பார்க்கப்படுகின்றான். துணைத்தலைப்பில் இடம்பெறும் "சபையில்" என்ற வார்த்தையானது நமக்கு - கூடுகிற இடத்தில் என்று பொருள்படாமல், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் என்று பொருள்படுகின்றதாய் இருக்கின்றது. நாம் ஒன்றுகூடியிருக்கும்போது என்று மாத்திரம் பொருள்படாமல், ஒவ்வொரு நாளும் மற்றும் எல்லா நேரங்களிலுமுள்ள அவர்களுடனான நம்முடைய நடவடிக்கைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. மனுஷர் மத்தியிலான பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமாகிய கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினர்கள் மத்தியிலான நம்முடைய நடக்கை எவ்வாறு காணப்பட வேண்டுமென்ற பாடத்தைக் கற்றுக்கொள்வதற்கு நாம் அனைவரும் வாஞ்சித்திட வேண்டும்.

வேதாகமம் எங்கும் கர்த்தர் நம்முன் பூரண அன்பையே அடைய வேண்டிய நிலையாக/தரநிலையாக வைத்துள்ளார் மற்றும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் எனும் நிலையைக் கடந்துள்ளவர்களும், கர்த்தருடைய வார்த்தை மற்றும் ஆவி மூலமாய் அவரைப் பற்றி ஓரளவான அறிவிற்குள்ளாகக் கடந்து வந்துள்ளவர்களுமானவர்கள் - அடைய வேண்டிய நிலையாகிய இந்த அன்பு குறித்து அடையாளங்கண்டுகொண்டு, அதற்கு ஒத்திருக்கத்தக்கதாக நாடுகின்றனர் என்று நாம் எண்ணுகின்றோம். ஆகையால் இத்தகையவர்கள் மத்தியில் அவ்வப்போது எழும்புகின்றதான பிரச்சனைகள் என்பது, மாம்சத்தின் அபூரணம் காரணமாகவும், அன்பு எனும் நெறிமுறையைச் செயல்படுத்தும் விஷயத்தில் பூரணமற்ற அறிவு வளர்ச்சி மற்றும் அனுபவம் காரணமாகவும் எழும்புபவைகளாக இருக்கின்றன என்றே நாம் எண்ண வேண்டும். ஆகையால்தான் நாம் கிருபையிலும், அறிவிலும் வளர வேண்டும் என்றும், நாம் கர்த்தருடைய ஆவியினால், அன்பின் ஆவியினால், தெளிந்த புத்தியுள்ள ஆவியினால், சகோதர சிநேகத்தின் ஆவியினால், சாந்தத்தின் ஆவியினால், பொறுமையின் ஆவியினால் - பரிசுத்த ஆவியினால்

அதிகமதிகமாய் நிரம்பிட வேண்டும் என்றும் வேதவாக்கியங்களின் புத்திமதி காணப்படுகின்றது.

## வாதாடி போராடுதல் அவசியமா?

சிலசமயம் அவசியம், ஆனால் மிகவும் அடிக்கடியல்ல என்று நாம் பதிலளிக்கின்றோம். ஒரே ஒரு காரணத்திற்காகப் போராடுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் இது குறித்து, "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும்" என்ற வார்த்தைகளில் நாம் பார்க்கின்றோம் (யூதா 3). ஆனால் எதிர்த்துப் போராடுகின்ற ஆவியானது வேதாகமம் எங்கும் கண்டிக்கப்பட்டுள்ளப் படியால், நம்முடைய விசுவாசம் பற்றியதான முக்கியமான காரியங்களுக்காக மாத்திரமே போராட வேண்டுமென்ற அர்த்தத்திலேயே அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளாரென நாம் புரிந்துகொள்ள வேண்டும். பரம பிதாவினுடைய ஆள்தத் துவத்தை மறுதலிக்கின்றவருக்கும், தேவன் என்ற மாபெரியவர் எவரும் இல்லை, தேவன் என்பது நல்ல கொள்கை மாத்திரமே என்றும், இரும்பிலோ, மரத்திலோ, கல்லிலோ அல்லது வேறு ஏதாகிலும் பொருளிலோ பயனுள்ள விதத்தில் நன்மை இருக்குமானால், அதில் கடவுள் இருக்கின்றார் என்றும் சபையில் போதிக்கக் கூடியவருக்கும் நாம் இடம் கொடுத்திடக்கூடாது. இம்மாதிரியான வீணான தத்துவங்களானது - பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு அந்நியமாய் மாத்திரமல்லாமல், அந்த விசுவாசத்திற்கு முற்றிலும் முரண்பாடாய் இருக்கின்றது என்று கவனமாய் எதிர்த்துப் போராடப்பட வேண்டும். நாம் மீட்கும் பொருளுக்காகவும் போராட வேண்டும்; ஏனெனில் இதுவே - வேதவாக்கியங்களில் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் மற்றும் நாம் நீதிமான்களாக்கப்படத்தக்கதாக அவர் உயிர்த்தெழுந்தார் என்பதே - பரிசுத்தவான் களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதான விசுவாசத்திற்கான அஸ்திபாரமாக இருக்கின்றது. இது பின்வரும் பல்வேறு தவறான வலியுறுத்தல் களுக்கு எதிராக போராட வேண்டும்; அதாவது நமது கர்த்தர் மாம்சமாக்கப் படவில்லை என்றும், அவர் ஆவியின் ஜீவியாகவே தொடர்ந்து காணப்பட்டார் என்றும், அவருக்கு மரணம் வருவது என்பது சாத்தியமற்ற ஒன்று என்றும், அவர் கொஞ்சம் காலம் மனித சரீரத்தில் பாவனையாகத் தோற்றமளித்தார்; அது தாம்தான் என்பதுபோல காண்பித்துக்கொண்டிருந்தார் மற்றும் அந்தச் சரீரம் மரித்தபோது, தாம் மரித்ததுபோல் காண்பித்துக்கொண்டார் என்றுமுள்ள தவறான வலியுறுத்தல்களுக்கு எதிராக போராட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டு கின்றதாய் இருக்கின்றது.

உலகத்திற்குள் வருவதற்கு முன்னதாகப் பிதாவோடு தமக்கிருந்த மகிமையை நமது கர்த்தர் துறந்தார் என்றும், அவர் தம்மைத்தாம் தாழ்த்தினார் மற்றும் மாம்சமாக்கப்பட்டார் என்றும், இதை அவர் மாதிரியாக இருக்கும்படிக்குச் செய்யாமல், மாறாக தேவனுடைய கிருபையினால் "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கும்," நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரிக்கும்படிக்கும் செய்தார் என்றும் - பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதான விசுவாசத்தினை நாம் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். இது இன்னுமாக பின்வரும் காரியத்திற்கும் நாம் போராட வேண்டும் என்பதைக் குறிக்கின்றது; அவரது மரணம் அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் அவர் மரித்திட்டதான நிஜமான மரணமாகும், இல்லையேல் அவர் இரட்சகர் மற்றும் மீட்பர் என்று அவரிடத்திலுள்ள நமது விசுவாசம் இல்லாமல் போய்விடும். இன்னுமாக அவர் உண்மையாக மரித்தார் என்றும், தம்மையே தகப்பனாகிய ஆதாமுக்கான சரிநிகர்சமான விலையாக உண்மையில் கொடுத்து, இப்படியாக ஆதாமையும், அவருடைய சந்ததியையும் விலைக்கு வாங்கிகொண்டார் என்றும் நாம் விசுவாசிக்கவில்லையெனில், மரித்தோரிலிருந்துள்ள அவரது உயிர்த்தெழுதலை நாம் எப்படி விசுவாசிக்கக்கூடும்? மரணத்திற்குள்ளாகச் செல்லாத ஒருவரால், எப்படி மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட முடியும்? இந்தச் சுவிசேஷ யுகத்தில், கிறிஸ்துவின் மணவாட்டியை - முதற்பேறானவர்களின் சபையைத் தெரிந்துகொள்ளுவது தேவனுடைய வேலையாக இருக்கின்றது என்றும், நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது இந்தத் தெரிந்துகொள்ளுதல் நிறைவு பெறவே, இவ்வேலையானது - சிறுமந்தையினர், தங்கள் இராஜரிக தலையும், பிரதான ஆசாரியனுமான கிறிஸ்துவின் கீழ் இராஜரிக ஆசாரியக்கூட்டத்தினரென, மற்றும் அவர்கள் "உன் சந்ததிக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" எனும் ஆபிரகாமின் உடன்படிக்கையை நிறைவேற்றத்தக்கதாக ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாரென இராஜ்யத்தில் மகிமைக்கும், கனத்திற்கும் மற்றும் அழியாமைக்கும் உயிர்த்தெழும்போது இவ்வேலையானது - முழு நிறைவடைவதாயிருக்கும் என்றுமுள்ள மாபெரும் உண்மையை நாம் பற்றிக் கொண்டும், அதற்காகப் போராடியும் நாம் காணப்பட வேண்டும். நம்முடைய மார்க்கத்தினுடைய இந்த அடிப்படைகள் அனைத்திற்காகவும், அதுவும் ஆதாமினுடைய மீறுதல் காரணமாகப் பாவம் உலகத்திற்குள் பிரவேசித்தது என்றும், அவருடைய பாவம் மற்றும் அதற்கான தண்டனையை நாம் அனைவரும் சுதந்தரித்துக் கொண்டுள்ளோம் மற்றும் அனைவருக்கும் மீட்பு அவசியம் என்றுமுள்ளவைகளுக்காகவும் - விசுவாசத்தினுடைய இந்த முதலாம் கொள்கைகள் அனைத்திற்காகவும் நாம் நிற்க வேண்டும் மற்றும் போராட வேண்டும். இவைகள் விஷயத்தில் அலட்சியமாய் இருத்தல் மற்றும் தப்பறையானது உள்ளே நுழைவதற்கும் மற்றும் பிரகடனப்படுத்துவதற்கும், சபையில்

போதிக்கப்படுவதற்கும் அனுமதித்தல் என்பது, கடுமையான பாவமாகும் மற்றும் சிலுவையின் போர்வீரர்களென, அதனை ஆதரிப்பவர்களென பாதுகாவலர்களென இருப்போமென்று வாக்களித்துள்ளவர்கள் சார்பிலான உண்மையின்மையை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

ஆனால் இப்படிப்பட்ட அடிப்படை விஷயங்கள் தவிர மற்றப்படி தெளிவாய்த் தெரிவிக்கப்படாத ஏதேனும் உபதேசத்தின் கருத்துகள் விஷயத்தில் - வேதவாக்கியங்களிலேயே விவரிக்கப்படாத ஏதேனும் உவமையினுடைய அர்த்தம் தொடர்புடைய விஷயத்தில் - கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் மத்தியில் மிகுந்த சாந்தத்தைக் கொண்டிருக்க வேண்டும். சகோதரர் ரசல் தொடர்பாகவோ அல்லது வேறு ஏதேனும் சகோதரன் தொடர்பாகவோ எந்தப் பிரிவினையோ அல்லது வாக்குவாதமோ காணப்படக்கூடாது. தேவனுடைய வார்த்தைகளில் குறிப்பாய்/தெளிவாய்த் தெரிவிக்கப்படாத விஷயங்களைப் பொறுத்தமட்டில், ஒவ்வொருவனும் தன் சொந்த பகுத்தறிவைச் செயல்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும். வேதவாக்கியங்களில் குறிப்பாகவும் மற்றும் தெளிவாகவும் போதிக்கப்படாத எந்த ஒரு காரியத்தையோ அல்லது உபதேசத்தையோ பிரகடனப்படுத்த முற்படும் விஷயத்தில் ஒவ்வொருவனும் தயக்கம் அல்லது கவனம் கொண்டிருக்க வேண்டும் மற்றும் அனைத்திற்கும் மேலாக ஓர் ஊகம்/சிந்தனை குறித்து அவனே முற்றிலுமாக நம்பிக்கை அடையாமல் இருக்கும் நிலையில், அந்த ஊகத்தை/சிந்தனையைப் போதிக்கவோ அல்லது போதிக்க முற்படவோ கூடாது என்பதில் அவன் உறுதியாய் இருக்க வேண்டும். தெளிவாய்ப் புரிந்துகொள்ளப்படவில்லை என்று ஒத்துக்கொண்டிருக்கும் காரியங்களை ஒருவர் ஒப்புவிக்கிறதினால்/விளக்க முற்படுகிறதினால் ஏற்படும் கூடுதல் சிரமங்கள் தவிர, மற்றபடி ஒவ்வொருவனுக்குமே அவனவனுடைய சொந்த கணிப்பின் விஷயத்திலிருக்கும் குழப்பங்களோடும், வஞ்சனைகளோடும் எதிர்த்துப்போராடுவதற்கே போதுமான போராட்டங்கள் உள்ளன. நாம் பேசிடுவதற்கும், சிந்தித்திடுவதற்கும் ஊகங்கள் என்று தவிர்க்க முடியாத அளவுக்கும் தேவனுடைய வார்த்தைகளில் அநேகம் காரியங்கள் எளிமையாகவும், தெளிவாகவும் மற்றும் உறுதியாகவும் காணப்படுகின்றன. "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ நமக்கு உரியவைகள்" என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன (உபாகமம் 29:29).

## பொறுமையும், சகிப்புத்தன்மையும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது

ஏதேனும் ஓர் அன்பு சகோதரன் ஒரு விநோதமான கருத்தையோ (அ) வேலையையோ பெற்றிருந்து அதை அவன் சபையாருக்கு முன்வைப்பது வரையிலும் தனக்கு அமைதி வருவதில்லை என்று எண்ணுவானானால், அவனது இந்தக்

கற்பனைகளே சபையாருடைய பொதுவான கருத்தாயும் உள்ளது என்று சபைக்கு வருகை தந்திருப்பவர்கள் (Visitors) முடிவுசெய்துவிடாதபடிக்கு, அவன் அதைப் பொதுவில் பேசி சபையார் கேட்டறிந்துகொள்வது தகுதியாயிராது என்றாலும் - அவன் அவற்றைச் சொல்லிடுவதற்குச் சில வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஏதோ தருணங்கள் கொடுக்கப்பட்டு, அவன் பேசுவது கேட்கப்பட்டப் பிற்பாடு, மற்றும் அவனது கூற்றுகள் நியாயமற்றது என்றும், வேதவாக்கியங்கள் ஆதரிக்காதவைகள் என்றுமாகச் சபையினுடைய கணிப்புக் காணப்படுமானால், தனது கண்ணோட்டத்தை அவன் முன்வைத்ததில் அவன் திருப்தியடைந்துவிட வேண்டும்; ஆனால் அவன் திருப்தியடையாமல், மற்றவர்களுக்குத் தொந்தரவாகவும், ஆராதனையின் பொதுவான ஆவியையும், வேத ஆராய்ச்சியின் முன்னேற்றத்தைக் குறுக்கிடும் விதத்திலும் தனது கருத்தினை முன்னிறுத்துவதைத் தனது பொழுது போக்கு வேலையாகத் தொடர விரும்புவானானால், இது விஷயம் குறித்து அவனது கவனத்திற்குக் கொண்டுவருவதும், அவன் பேசுவது கேட்கப்பட்டுள்ளது என்பதை நினைப்பூட்டுவதும், அவன் அக்காரியத்தை வலியுறுத்திக்கொண்டே இருப்பது, அடிப்படை சத்தியத்திற்காக இல்லாமல், ஒரு கருத்திற்காகச் சண்டையிடுவது போன்றிருக்கின்றது என்றும், இம்மாதிரியாகச் சண்டையிடுவது என்பது கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய ஜனங்கள் மற்றும் அவனுக்கான நன்மைக்கும் எதிர்மாறானாது என வேதவாக்கியங்கள் எங்கும் கண்டனம் பண்ணப்பட்டுள்ளது என்றும், இதை அவன் தொடர்வதற்குத் தங்களால் அனுமதிக்க முடியாது என்று தெரிவிப்பதும் மூப்பர்களுடைய கடமையாக இருக்கின்றது (தீத்து 3:9).

"சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல்" இருப்பவர்களைக்குறித்து அப்போஸ்தலன் பேசுகின்றார் (உரோமர் 2:8). தாங்கள் ஏற்கெனவே அடையாளம் கண்டுகொண்டுள்ளதான சத்தியத்தின் ஆவிக்கேற்றப்படி ஜீவிக்காதவர்கள் மத்தியிலேயே சண்டையிடுகிற/ எதிர்த்துப்போராடுகிற ஆவி (அ) தன்மை பொதுவாய்க் காணப்படுகின்றது என்று சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்கள் கிருபையில் வளராமல் அன்பில், இரக்கத்தில், சாந்தத்தில், தயவில், பொறுமை முதலானவைகளில் வளராமல் - அறிவில் வளர்வதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர் மற்றும் இருதயத்தில் சரியாய்க் காணப்படுபவர்கள், இதுவே தங்கள் பிரச்சனை என்று கண்டுகொள்வதற்கும் மற்றும் இதைச் சரிச்செய்துகொள்வதற்கும் பிரியமாய் இருப்பார்கள்; காரணம் நம்முடைய கருத்துகளுக்காகச் சண்டையிட்டு, தேவனுடைய சபையில் குழப்பத்தை ஏற்படுத்தி, இறுதியில் கர்த்தரினால் கடிந்துகொள்ளப்படுவதினாலும் மற்றும் பூரண அன்பிற்கும், கிறிஸ்துவுக்கொத்த சாயலுக்குமான பரீட்சையில் ஜெயமடைய முடியாமல், மணவாட்டி வகுப்பாரில் இடம்பெறுவதற்குப் பாத்திரமற்றவர்களாகக் கருதப்பட்டுப்போவதினாலும், நமக்கு என்ன இலாபம்! நிச்சயமாய் இத்தகைய

சண்டைகள்/போராடுதல்கள், கற்பனையான கருத்துக்களை உண்டுபண்ணுதல்களையே அப்போஸ்தலன் கடிந்துகொள்கின்றார் மற்றும் இந்தக் கடிந்து கொள்ளுதலானது நம் அனைவராலும் செவிசாய்க்கப்பட வேண்டும்.

இது தொடர்புடைய மற்றுமொரு கருத்தினை, "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல்" எனும் அப்போஸ்தலனுடைய புத்திமதியானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது, அதென்னவெனில்: சிலர் இயல்பாகவே சண்டைப்பண்ணுகிறதின் ஆவியை உடையவர்களாய் இருப்பார்கள் மற்றும் இதனால் இது விஷயத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் ஜெயங்கொள்ள வேண்டியிருக்கும். தங்களையும் மற்றவர்களையும் பிரச்சனைக் குள்ளாக்கும் வீண் பெருமையின் ஆவியை, அகந்தை மற்றும் பேராசையின் ஆவியைச் சிலர் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இயல்பாகவே சண்டைப் பண்ணுகிறவர்களாகவும்/ எதிர்க்கிறவர்களாகவும், இயல்பாகவே பேராசைக் கொண்டவர்களாகவும் காணப்படுபவர்களை நாம் நிராகரிக்க வேண்டுமா? அவர்கள் சரீரத்தில் அங்கத்தினர்கள் இல்லை என்று அவர்களை விலக்கிட வேண்டுமா? இல்லவே இல்லை; இப்படிப்பட்டவர்களுக்கும் மற்றும் நம்முடன் தொடர்புக்குள் வரும் அனைவருக்கும் படிப்பினையைப் பதிய வைக்கத்தக்கதாக நம்முடைய நடத்தையில் சரியான நடக்கையினை மாதிரித்துவப்படுத்திட நாம் நாடிட வேண்டும். மற்றவரிடத்தில் நாம் தவறான ஆவியைப் பார்க்கும்போதெல்லாம், "அந்த ஆவியில்/பண்பில் எதுவாகிலும் என்னிடத்தில் காணப்படுகின்றதா?" என்பதே நம்முடைய முதலாவது எண்ணமாக இருக்க வேண்டும் மற்றும் நாம் முதலாவதாகத் திருத்தத்தை நம்முடைய சொந்த இருதயத்திலும், நடத்தையிலும் செய்ய வேண்டும். இப்படியாக நம்முடைய சொந்த கண்களில் காணப்படும் உத்திரத்தை எடுத்துப்போடுகையில், நாம் நம்முடைய சகோதரனை இரக்கத்துடனும், சாந்தத்துடனும் அணுகிடுவதற்கு நன்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருப்போம் மற்றும் தன் சிரமங்களிலிருந்து எழும்பிடுவதற்கு சகோதரனுக்கு உதவிடும் விஷயத்தில் தகாதமுறையில் நாம் செயல்படாமலும் இருக்கச் செய்யும்.

## முடிப்பதற்காகப் போராடும் பெரோயா பட்டணத்தார்

அருமையான இருதயமும், தலைச்சிறந்த நோக்கமும் கொண்டுள்ள கர்த்தருடைய அன்பார்ந்த சகோதரர்களில் சிலர் (Berean Studies) பெரோயரின் ஆராய்ச்சி வகுப்புத் தொடர்புடைய விஷயத்தில் சரியற்ற கருத்துகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களுக்குள் கூறிக் கொள்வதாவது: "(பெரோயரின் ஆராய்ச்சியில்) கலந்தாராயப்படும் கேள்வித் தொடர்புடைய விஷயத்தில் ஒரே ஒரு சரியான கருத்துதான் இருக்க முடியும் மற்றும் அந்த ஒன்றுதான் சத்தியமுமாகும் மற்றும் இங்குள்ள அனைவருக்கும் சத்தியம்

வேண்டும் மற்றும் அக்கேள்விக் குறித்து நாம் போராடி வாக்குவாதம் பண்ண வேண்டும். அங்குக் கூடியுள்ளவர்களில் ஒருவன் தன் கருத்தைக் கைவிட்டு, தான் தவறாய்ச் சொல்லியுள்ளான் என்று காணும்வரைத் தேவைப்படும்பட்சத்தில் இராமுழுவதும் கூடியிருந்து போராடியாக வேண்டும் என்பதே ஆகும்.” இது முற்றிலுமாகப் பொல்லாத சிந்தையாகும் மற்றும் இது பல்வேறு வகுப்புகளில் ஆவிக்குரிய தன்மைக்கு இடையூறையும், மகா அசௌகரியத்தையும், சாதகமின்மையையும் விளைவிக்கின்றதாய் இருக்கும். ஒரு பாடத்தின்/ஆராய்ச்சி செய்யும் தலைப்பின் விஷயத்தில், எவ்விதமான சிந்தனை செய்யாமலும் மற்றும் மற்றவர்களால் முன்வைக்கப்படும் வார்த்தைகளை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்பவர்களாகவும்/விழுங்கிக்கொள்பவர்களாகவும் மாத்திரம் காணப்படுபவர் களைப்பார்க்கிலும், கொஞ்சம் சிந்தனை செய்பவர்களை நாம் மிகவும் மதித்திட வேண்டும். ஆனாலும் சரியான வரையறைக் கைக்கொள்ளப்பட வேண்டும், அதென்னவெனில்: நாம் மெதுவாய்க் கற்றுக்கொள்கிற விஷயத்தில் கர்த்தர் நம் அனைவரிடத்திலும் மிகுதியான பொறுமை கொண்டிருந்தார் மற்றும் நாமும் ஒருவர் இன்னொருவரிடத்தில் பொறுமையாய் இருக்க வேண்டும். அவர் கற்பனையின்மேல் கற்பனையையும், பிரமாணத்தின்மேல் பிரமாணத்தையும் வைக்கின்றார் மற்றும் நீடிய சாந்தமுடையவராகவும்/பொறுமையுடையவராகவும், மிகுந்த கிருபையுள்ளவராகவும் மற்றும் தம்முடைய சித்தம் செய்ய விரும்புவதற்கான சான்றுகளை வெளிப்படுத்துகின்றவர்கள் அனைவரிடத்திலும் மிகவும் பெருந்தன்மையுடையவராகவும் காணப்படுகின்றார்.

அவருடைய நாமத்திலும், அவருடைய பிரதிநிதிகளெனவும் நாம் மேற்கூறியவைகளுக்குக் குறைவாக எதையும் செய்திடுவதற்கு நமக்கு நிச்சயமாய் அதிகாரம் வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில் நம்மிடத்தில் காணப்பட்டதான வேகக்குறைவைக் குறித்த நம்முடைய உணர்ந்துகொள்ளுதலானது, பார்ப்பதில் மெதுவாகவும், கேட்பதில் மெதுவாகவும், புரிந்துகொள்வதில் மெதுவாகவும் காணப்படும் மற்றவர்களிடத்தில் நம்மை மிகவும் அனுதாபங்கொள்ளச் செய்யும். ஆகையால் எந்த ஒரு கேள்வித் தொடர்புடைய விஷயத்திலும், தன்னுடைய கண்ணோட்டம் குறித்து முன்வைப்பதற்கான நியாயமான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டால், அதில் ஒவ்வொருவனும் திருப்திக்கொள்ள வேண்டும் மற்றும் அதை மற்றவர்களிடத்தில் வற்புறுத்தவும், திணிக்கவும் முயற்சிக்கக்கூடாது. ஒருவேளை இதழாசிரியர் (சகோ. ரசல்) ஒரு கேள்வியின் விஷயத்தில் தன்னுடைய கண்ணோட்டத்தைக் குறிப்பிட்டிருக்கிறாரெனில் மற்றும் ஒருவர் (அ) அதிகமானவர்கள் அக்கேள்வியை இதழாசிரியரின் கண்ணோட்டத்தின்படியாகப் பார்க்கவில்லையெனில் மற்றும் அக்கேள்வியானது அடிப்படை கொள்கைகள் பற்றினது இல்லை எனும் பட்சத்தில், அக்காரியத்தின் விஷயத்தில் அமைதி காப்பதும், மாபெரும் ஆசிரியராகிய கர்த்தர் தம்முடைய வழிநடத்துதல்கள் மூலம், நாம் முழுமையாய்க் கண்ணார காணத்தக்கதான நிலைக்கு நம்மைப் படிப்படியாகக்

கொண்டுவந்திடுவதற்கு அவரை அனுமதிப்பதும் ஏற்றகாரியமாய் இருக்கும் என்று இதழாசிரியர் கருதுவார். இதில் பொறுமைக்கான, சகிப்பிற்கான, சகோதர சிநேகத்திற்கான, சாந்தத்திற்கான, காருணியத்திற்கான, அன்பிற்கான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை நாம் பெற்றுக்கொள்கின்றோம்.

## ஒருவரையொருவர் தூண்டியெழுப்பக் கருத்தாயிருப்போமாக / ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து

சண்டைப்பண்ணுகிற மனநிலையை உடையவன் ஒருவன் சண்டைப் பண்ணுவானானால், அவன் மற்றவர்களிடத்தில் கோபத்தையும் மற்றும் துர்க்கிரியைகளையும் ஏவுவதில் எவ்வித சிரமமும் கொண்டிருப்பதில்லை; ஆனால் அன்பின் பரிசுத்த ஆவியை நம்முடைய இருதயங்களில் பெற்றிருப்பவர்களாகிய நாம் - "அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்பு வதற்குக் கருத்தாயிருப்போமாக" என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். அனுதாபத்தின் கண்ணோட்டத்தில், சிரமங்களிலும், பெலவீனங்களிலும் ஒருவருக்கொருவர் உதவிட வேண்டுமெனும் கண்ணோட்டத்தில், நாம் ஒருவர் இன்னொருவருடைய இயல்பான பண்புகளைக் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். இது எவ்வளவாய்ச் செய்ய இயலுகின்ற விஷயமாய் இருக்கின்றது! அனுதாபத்துடனும், அன்புடனும், சாந்தத்துடனும் அன்பான வார்த்தைகள் பேசுவதன் மூலமாக ஏதோ ஓர் அருமையான சகோதரனோ அல்லது சகோதரியோ சீரான நிலையில் இருப்பதற்கு நாம் உதவிட முடியும் - ஒருவேளை வெளிப்பட்டால் அவனுக்கும், சபைக்கும் (அ) மற்றவர்களுக்கோ பாதகமாய்க் காணப்பட வாய்ப்புள்ள அவனது (அ) அவளது பெலவீனங்களை ஜெயம்கொள்ளச் செய்திட முடியும். இந்த உதவும் சிந்தையை நாம் அனைவருமே எவ்வளவாய்க் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அதை அன்பின் ஆவியென, கர்த்தருடைய ஆவியென அடையாளங்கண்டுகொள்ள வேண்டும்! அமைதியான/ மெதுவான பதில், அன்பான, கனிவான வார்த்தையானது உதவிகரமாயிருந்து, கோபத்தை மாற்றிப்போடும் என்றும், கடுஞ்சொற்களும், வாக்குவாதமான சொற்களும், குத்தும்விதமான சொற்களும், ஏளனமான சொற்களும் நிச்சயமாய்க் கோபத்தை எழச்செய்யும் என்றும் நாம் நினைவில்கொள்வோமாக (நீதிமொழிகள் 15:1). ஆகையால் அனைவரிடத்திலும் கனிவுடன் இருப்பதற்கும், ஒருவருக்கொருவர் இரக்கத்துடனும், அன்புடனும் காணப்படுவதற்கும், தேவன் கிறிஸ்துவின் நிமித்தமாக நம்மை மன்னித்துள்ளதுபோல ஒருவரையொருவர் மன்னிக்கவும் அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்வோமாக (எபேசியர் 4:32).

பொறுமையும், கவனமும் மிகவும் அவசியப்படும் மற்றுமொரு விஷயம், வழிநடத்துபவர்களைத் தெரிந்து கொள்ளும் விஷயத்திலாகும். அர்ப்பணிப்புமிக்க

சில சகோதர சகோதரிகள் - அனைத்துக் காரியங்களிலுமே தங்களால் அங்கீகரிக்க முடியாத ஒருவரை மூப்பராகத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் தங்களுக்கு எந்தப் பங்கும் இருந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கின்றனர். எவ்விதமான பரிவை முன்னிட்டும், எந்த ஓர் ஒழுங்கீனமானவனும் மூப்பராய்த் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது. மூப்பர் ஒருவர் நல்லொழுக்கம் அற்றவராய்க் கண்டுபிடிக்கப்பட்டால், அவர் பொறுப்பினின்று விலகும்படிக்கு உடனடியாகக் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் பொதுவாய் இது வேறுபட்ட கருத்துகள் வருவதற்குக் காரணமாய் இருப்பதில்லை; ஏனெனில் நல்லொழுக்கமற்ற ஒருவனைக் கர்த்தருடைய ஜனங்கள் ஆவிக்குரிய விஷயங்களில் வழிநடத்துபவரென அல்லது நீதிநெறிகளைத் தாங்கிச் சுமப்பவரென வேண்டுமென்றே தேர்ந்தெடுக்கமாட்டார்கள். ஒருவேளை சபையில் பெரும்பான்மையானவர்களால் - மற்றவர்கள் அனைவரையும் காட்டிலும் ஒரு நபர், தங்கள் மூப்பர் (அ) வழிநடத்துபவர் ஆகுவதற்கு எல்லாவிதத்திலும் மிகவும் மேம்பட்டவராகவும், நன்கு தகுதியுடையவராகவும் இருக்கின்றார் என்று கருதப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் சபையில் ஒரு சிறுபான்மையானவர்கள் இன்னொரு சகோதரனுடைய அறிமுகத்தை அல்லது இவரது நடத்தை அல்லது இன்னும் வேறு சில விஷயங்கள் மீது விருப்பம் கொண்டுள்ளவர்களாக இருக்கின்றனர் என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் இன்னுமொரு சிறுபான்மையானவர்கள் வேறொரு சகோதரனுக்காக விருப்பம் கொண்டவர்களாக அல்லது கர்த்தருடைய மகிமைக்காகப் பயன்படக்கூடிய தாலந்துகளை அச்சகோதரன் பெற்றிருக்கின்றான் என்ற நம்பிக்கையில், அவன் சபைக்கான பொது ஊழியங்களில் கொண்டுவரப்படுவதைப் பார்ப்பதற்கான விருப்பம் கொண்டிருக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவினரும் என்ன செய்ய வேண்டும்? - கட்சி மனப்பான்மையின் அடிப்படையில் போராடி, எங்களிடம் வல்லமை இருக்கின்றது, ஆகையால் நாங்கள் விரும்பும் மனுஷனைத் தேர்ந்தெடுப்பதற்கான அதிகாரம் எங்களுடையதாகும் மற்றும் ஒன்றில் நீங்கள் இதில் இணைந்திட வேண்டும் அல்லது சபையைவிட்டுப் பிரிந்துபோய்விட வேண்டும் என்று சொல்லலாமா? இல்லவேயில்லை!

இது உலகத்தின் பார்வையில் "நல்ல அரசியலாக" இருக்கும்; ஆனால் இது சபையில் ஆள வேண்டியதான அன்பின் ஆவிக்கு முற்றிலும் இசைவற்றதாகும். இப்படிப்பட்டதான (அரசியல்) வெற்றியை அடைவோமானால், அதில் நாம் கர்த்தருடைய சகோதர சகோதரிகளில் ஒருவரையோ அல்லது அநேகரையோ காயப்படுத்துபவர்களாக இருப்போம்; நமது கர்த்தரைக் கோபமூட்டுகிறவர்களாக இருப்போம்; மாபெரும் பரிசிற்கான நம்முடைய ஓட்டத்தின் விஷயத்தில் நமக்கே கணக்கிடவே முடியாத அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றவர்களாய் இருப்போம். இப்படிப்பட்டதான "வெற்றி" என்பது, நம்முடைய உண்மையான

நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் விஷயத்தில் தோல்வியையும், நம்முடைய மாபெரும் எதிராளியானவனுடைய வெற்றியையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். நாம் ஒருவரையொருவர் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாமோ? அவனவன் தன்னுடைய சொந்த விருப்பங்களையல்ல, ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்பிடுவதற்கு நோக்க வேண்டாமோ? ஆகையால் அன்பின் ஆவியானது, இம்மாதிரியான சூழ்நிலைகளில் ஒன்றிற்கு மேற்பட்ட மூப்பர்களை தேர்ந்தெடுக்க ஏவிடும் - கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள பொதுவான கட்டளைகளை மீறாத நிலையில், சபையாரின் விருப்பங்களை நியாயமாய்க் கிரகித்து, இரண்டுபேரை அல்லது மூன்றுபேரை அல்லது அதிகமானவர்களைத் தேர்ந்தெடுக்க ஏவிடும். சகோதரரின் எண்ணிக்கைக் குத்தக்கதான ஒரு நியாயமான மற்றும் திருப்திகரமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். சிலர் விசேஷமாக ஒருவகையான கூட்டத்தினை நடத்துவதற்குப் பொருத்தமாய்க் காணப்படுவார்கள் மற்றும் மற்றவர்கள் வேறுவகையான தொன்றை நடத்துவதற்குப் பொருத்தமானவர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தினுடைய அவசியம் நமக்கிருப்பதினால், கண்ணானது கையையோ அல்லது பாதத்தைப் பார்த்து, நீ எனக்கு தேவையில்லை என்று சொல்ல முடியாதென அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் ஊழியஞ்செய்வதற்குத் திரளான வாய்ப்புகள் உள்ளன எனும் கருத்தினை நாம் மனதில்கொண்டிருக்க வேண்டும்.

மூப்பருக்கான தகுதிகளை அப்போஸ்தலன் நமக்குச் சுட்டிக்காட்டுகையில், "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவைப்போன்று இருக்கக்கடவீர்கள்" என்று கூறி, நாம் அனைவரும் அடைய வேண்டிய நிலையை நமது கர்த்தர் குறிப்பிட்டதுபோலவே, அப்போஸ்தலனும் அடைய வேண்டிய நிலையைக் குறிப்பிட்டுள்ளார். நாம் பரம பிதாவைப்போன்று முற்றும் முழுமையாக இருக்க முடியாது; எனினும் நாம் அடைவதற்கு நாடுகின்றதான நமக்கான மாதிரியாக அல்லது அடைய வேண்டிய நிலையாக/தரமாக அவரை நாம் வைத்திருக்கலாம். இதுபோலவே சில மூப்பர்களால் மாத்திரமே அப்போஸ்தலனால் குறிப்பிடப்பட்டுள்ளதான தகுதியின் நிலையினை எட்டிட முடியும்; ஆனாலும் இவ்விஷயத்தில் கர்த்தருடைய தேர்வாக இருக்குமெனத் தாங்கள் நம்புவதை வெளிப்படுத்துகையில், இத்தகுதிகளானது யார் ஒருவராலும் மறக்கப்படக்கூடாது. "அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஒருவருக்கொருவர் தாங்கிக்கொள்வதும், ஒருவருக்கொருவர் விருப்பங்களை, கண்ணோட்டங்களை, ரசனைகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்வதும் எவ்வளவாய் நம் அனைவரையும் மகிமையின் கர்த்தர் போன்று அதிகமதிகமாய் இருக்கச் செய்திடும்! மற்றும் எவ்வளவாய்ச் சிரமங்கள் மற்றும் சுருக்கங்கள் அநேகவற்றை அகற்றி, கர்த்தருடைய ஜனங்களுள்ள ஒவ்வொரு சிறுசிறு

கூட்டத்தார் மத்தியிலும் சமாதானம் கொண்டுவந்திடும்! கல்லறையிலோ அல்லது நித்திரை அறையிலோ நிலவுவதுபோன்ற சமாதானம் மற்றும் அமைதி வகையினை நாடுவதற்காக நாம் எண்ணம்கொள்ளவில்லை, மாறாக விழித்திருப்பவர்கள் மற்றும் ஜீவனுள்ளவர்கள் மற்றும் முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மற்றும் தலைமீதான தங்கள் அன்பின் காரணமாகவும் மற்றும் அவரது அடிச்சுவடுகளில் நடக்க நாடுபவர்கள் அனைவர்மீதான அன்பின் காரணமாகவும் ஒருவரையொருவர் கவனித்துக்கொள்பவர்கள் மற்றும் தாங்கிக் கொள்பவர்கள் மத்தியில் கர்த்தர் அங்கீகரிக்கக் கூடியதான சமாதானம் மற்றும் அமைதியின் வகையையே நாடிடுவதற்கு நாம் எண்ணம் கொண்டவர்களாய் இருக்கின்றோம்.

## அன்பானது தன்னலம் நாடாது

தன்னலம் நாடும் ஆவியைக்குறித்தும், பண்பைக்குறித்தும் அதிகமதிகமாய் வெட்கம் அடைகிறவர்களாகவும் மற்றும் தன்னலம் கருதாமல், மற்றவருடைய அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருடைய நலனுக்காகச் சிந்திக்கின்றதான அன்பின் ஆவியை அதிகமதிகமாய் உணர்ந்துகொள்பவர்களாகவும், கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் படிப்படியாக வந்தாக வேண்டும். ஒரு சகோதரன் சபையில் கர்த்தருடைய ஊழியத்தில் பயன்படுத்துவதற்குப் பிரியம்கொண்டிடும் சில தாலந்துகளை, தான் பெற்றிருப்பதாக எண்ணுவானானால், அவைகளைப் பயன்படுத்திடுவதற்கான வாய்ப்புகளுக்கு அவன் விழிப்பாய் இருப்பது ஏற்றகாரியமாகும்; அதேசமயம் தன்னையோ அல்லது தன்னுடைய ஊழியங்களை யோ சபைமீது கட்டாயப்படுத்துவதை அவன் தவிர்த்துக்கொள்வதும் அவனுக்கு ஏற்றதாயிருக்கும். பணம் வாங்காமல் சபைக்கு இலவசமாய் ஊழியஞ்செய்வதில் அவன் மகிழ்ச்சிக்கொள்பவனாக இருப்பினும், சத்தியத்தின் ஊழியத்திற்காக நேரத்தையும், பலத்தையும், சக்தியையும் மற்றும் அனைத்துத் தாலந்துகளையும் கொடுப்பதில் அவன் மகிழ்ச்சிக்கொள்பவனாக இருப்பினும், சாந்தத்தின் ஆவியும் மற்றும் ஞானத்தின் ஆவியும் - சபையாரால் புரிந்துகொள்ளப்படும் அளவுக்கு மிஞ்சி சபையின்மீது அவனது ஊழியங்களை அவன் குவிப்பதிலிருந்தும் - அவனைத் தவிர்த்திட வேண்டும். நிதானத்துடன் செல்வதும், யார் சபைக்கு ஊழியம் புரியலாம் மற்றும் எந்தளவுக்கு மற்றும் எவ்வளவு காலம் அவர்கள் ஊழியம் புரியலாம் எனும் விஷயத்தில் கர்த்தர் வழிகாட்டி, இறுதியில் சுட்டிக்காண்பிப்பார் என்று அவரை விசுவாசிப்பதும் நல்லது. இதுவே கர்த்தருடைய வழியாகும்; வேத வாக்கியங்களின் அடிப்படையிலான வழியாகும் மற்றும் ஞானமுள்ள வழியாகும் - மற்ற எந்த வழிகளும் சீக்கிரமாகவோ, தாமதமாகவோ, அதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவருக்கும் பிரச்சனைகளைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

# குமாரன் எவனை விடுதலையாக்குவாரோ...

நம்முடைய தனிப்பட்ட சுயாதீனங்கள் தொடர்புடைய விஷயத்தில் சமநிலையில் காணப்படுவதில் நம்மில் அநேகருக்குச் சிரமங்கள் காணப்படுகின்றன. நம்மைச் சுற்றியிருக்கும் வழக்கங்களினாலும், நடைமுறை பழக்கங்களினாலும் நாம் பெரிதும் தாக்கத்திற்குள்ளாகுகின்றோம் மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள அவருடைய குரலுக்கு நாம் தொடர்ச்சியாய்ச் செவிசாய்ப்பது அவசியமாகும். பாபிலோனில் எதுவுமே நியமனம் இல்லாமல் செய்யப்படக் கூடாது எனும் வழக்கம் காணப்படுவதினால், இதற்கொத்த எண்ணங்கள் கிருபையிலும், சத்தியத்திலும் குறைவான வளர்ச்சியுள்ளவர்கள் மத்தியில் சிலசமயம் மெதுவாய் உள்ளே வருகின்றது; உதாரணத்திற்குச் சபையாரால் நியமிக்கப்படும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களில் ஒருவரால் நடத்தப்படும் கூடுகைகளே ஒழிய மற்றப்படி எந்தக் கூட்டங்களும் நடத்தப்படக்கூடாது என்ற எண்ணங்களாகும். சபையாருடைய ஒருமைப்பாடானது அடையாளங்கண்டு கொள்ளப்படுவதினாலும் மற்றும் எங்கு, எப்போது கூட்டங்கள் நடத்தப்பட்டால் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று கூட்டங்களை நியமிப்பதினாலும் மற்றும் மேலான தகுதிகள் பெற்றுள்ளவர்கள் என்று மதிக்கப்படுபவர்களால் அக்கூட்டங்கள் நடத்தப்படுவதினாலும் நன்மைகள் இருக்கின்றன. எனினும் கர்த்தரும் சரி, அப்போஸ்தலர்களும் சரி தனிப்பட்ட நபர்களுடைய சுயாதீனங்களின் விஷயத்தில் எந்தக் கட்டுப்பாடுகளும் வைக்கவில்லை மற்றும் இதனால் நாமும் வைக்கக்கூடாது என்ற விஷயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. "இரண்டுபேராவது, மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள் (மத்தேயு 18:20). இந்த வாக்குத்தத்தமானது அன்றுபோல் இன்றும் உண்மையாகவே இருக்கின்றது மற்றும் இது கர்த்தருடைய ஜனங்களில் எவர்மேலும், எவ்விதமான கட்டுப்பாட்டையும் வைக்கிறதில்லை.

சபையால் ஏற்கெனவே ஏற்பாடுபண்ணப்பட்டதான ஏற்பாடுகளானது தங்களது சிறந்த ஆவிக்குரிய நலன்களைச் சந்திக்கவில்லை என்று கர்த்தருடைய மந்தையில் யாராகிலும் உணர்வார்களானால், அவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் கூட்டத்தை - வேதவாக்கியங்களின் ஏற்பாடுகளுக்கு முரண்படாத வகை கூட்டத்தை ஆரம்பிப்பதற்கான முழுச்சுயாதீனத்தை உடையவர்களாய்

இருக்கின்றார்கள். இப்படியான தேவை எவருக்கேனும் இருக்குமானால், இவர்கள் பொதுவான சபையாரால் முன்னமே நியமிக்கப்பட்டுள்ள கூட்டத்திற்கு இடையூறற்ற விதத்திலுள்ள நேரத்திலும், இடத்திலும் இத்தகைய கூட்டங்களை நியமிக்கும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம். சபை இப்படிப்பட்டதான காரியங்களைப் பொதுவாய் மேற்பார்வையிட வேண்டும் மற்றும் சபை அதன் பொறுப்பினை உணர்ந்துகொண்டு, போதுமான கூட்டங்களையும் மற்றும் விரும்பப்பட்ட வகையிலான கூட்டங்களையும் மற்றும் அன்பார்ந்த ஜனங்களின் தேவைகளைச் சந்திக்கக்கூடிய வழிநடத்துபவரின் கீழ் - அனைவரும் போஷிக்கப்படத்தக்கதாகவும், அனைவரும் பலப்படுத்தப்படத்தக்கதாகவும், அனைவரும் வளரத்தக்கதாகவும் மற்றும் அனைவரும் இருதய ஒருமைப்பாட்டிலும், அன்பிலும், ஐக்கியத்திலும், ஒத்துழைப்பிலும் காத்துக்கொள்ளப்படத்தக்கதாகவும் - கூட்டங்களை ஏற்படுத்திக்கொடுத்திட/நியமித்திட வேண்டும்.

டாண் ஆராய்ச்சி தொகுதி - VI-இல் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளவற்றை மறுபடியும் இங்குக் குறிப்பிடுவதற்கு இது பொருத்தமான தருணமாகும்; அதாவது கர்த்தருடைய எந்த மந்தைகளினுடைய கூடுகைகளில், சாட்சிக்கூட்டங்களுக்கும், பெரோயா வகுப்புகளுக்கும் மற்றும் டாண் ஆராய்ச்சிகளுக்கும் முக்கியமான இடமளிக்கப்படுகின்றதோ, அந்த அருமையான மந்தையினர் கிருபையிலும், பலத்திலும் அதிகமாய் வளருகின்றவர்களாய் இருப்பார்கள் என்பது நம் அபிப்பிராயமாக இருக்கின்றது. இம்மாதிரியான உரையாடல் கூடுகைகளில், அதிலும் விசேஷமாகச் சாட்சிக்கும், ஜெபத்திற்கும், துதி ஏறெடுத்தலுக்குமான கூட்டங்களில், அன்பான நண்பர்கள் ஒருவருக்கொருவர் அனுதாபத்துடன்கூடிய தொடர்புக்குள்ளாக வருவதற்கான வாய்ப்புகளைப் பெற்றிருக்கின்றனர் இது மிகவும் உதவிகரமானதாகும் மற்றும் இது அவர்களை மற்றக் கூட்டங்களைக் காட்டிலும் கிறிஸ்தவ அன்பிற்கான கட்டுகளில் ஒன்றாய்ப் பிணைக்கின்றதாய் இருக்கின்றது. அலிகெனியிலுள்ள சபையில் இந்தக் கூட்டங்களானது ஒவ்வொரு புதன்கிழமை மாலையிலும் நடைபெறுகின்றது மற்றும் பிட்ஸ்பர்க்கிலும் (Pittsburg), புறநகர்களிலுமுள்ள பல்வேறு பகுதிகளில் எட்டு இடங்களில் நடைபெறுகின்றது. இந்த இடங்களில் 150 பேருக்குமேல் கலந்துகொள்கின்றனர் மற்றும் இந்தக் கூடுகைகளினின்று கடந்துவரும் தாக்கமானது, மிகச் சிறந்ததாய் இருக்கின்றது என்றும் நாம் நம்புகின்றோம். முடிகின்ற அன்புக்குரியவர்கள் அனைவரும் கலந்துகொண்டு, அக்கூட்டங்களினுடைய புத்துயிரளிக்கும் தாக்கங்களில் பங்கெடுப்பார்களானால், நாம் எவ்வளவாய்

மகிழ்வோம். ஒருவகைக் கூட்டத்தைத் தெரிந்துகொள்ளும் கடமைக்குள்ளானால், அநேகர் சாட்சிக் கூட்டத்திற்கே வாக்குகள் அளிப்பார்கள் அல்லது சாட்சி எனும் இவ்வம்சமானது ஒரு கூட்டத்தின் முக்கியமான பாகமாக ஆக்கப்படும் என்பதில் நமக்கு நிச்சயமே. இந்தக் கூட்டமே, "நீங்கள் கூடிவந்திருக்கிறபோது" என்று ஆதி திருச்சபையாரைக்குறித்து அப்போஸ்தலனால் விவரிக்கப்பட்டுள்ளதான கூடுகை வகைப் போன்றதாகும் என்பதை நாம் நினைவில் கொள்வோமாக (1 கொரிந்தியர் 14:26).

---

R5131

## அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை

**வே**த மாணவர்கள் அடங்கிய சில சபைகள், class extension work/புதிய வகுப்புகளை உருவாக்கும் (அறுவடை) பணியில் அருமையாய்ப் பணியாற்றுகின்றனர் மற்றும் தவறாமல் விவரங்களையும் தெரிவித்து வருகின்றனர். புதிய வகுப்புகளை உருவாக்குவதற்கான கூடுகைகளில் கலந்துகொள்பவர்களின் வருகையினுடைய எண்ணிக்கையும் நன்றாகவே இருக்கின்றது. பெரும்பாலும் முதல் மூன்று கூட்டங்களானது, அடுத்த மூன்று கூட்டங்களுக்கும் வழிவகுக்கின்றது மற்றும் பின்னர்ப் புதிய சபையானது நிறுவப்படுகின்றது. கூடுமானமட்டும் இப்படிப் புதிதாய் ஏற்படுத்தப்பட்டுள்ள சபையார் தங்கள் உள்ளூர் கூடுகைகளை வாரத்தினுடைய இரவு வேளைகளில் கொண்டிருக்கவும், ஞாயிற்றுக் கிழமைகளிலாகிலும் அறுவடை பணியினை மேற்கொண்ட, ஏற்கெனவே காணப்படும் சபையாரோடு கூடிட பிரயாசம் எடுக்கவும் நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

இந்த வேலைகளுக்கான தகுதியுடைய அநேகம் சகோதரர்களைப் பெற்றிருக்கின்ற சில இடங்களில் காணப்படுகின்றதான பெரிய எண்ணிக்கை யிலுள்ள சபைகளானது, புதிய வகுப்புகளை உருவாக்கும் பணியில் எதையும் செய்யாமல் இருப்பதை அல்லது கொஞ்சமே ஈடுபடுகிறதைக் கண்டு நாங்கள் ஆச்சரியமடைகின்றோம். அறுவடை வேலையில் காணப்படுகின்றதான இந்த வைராக்கிய குறைவிற்கான காரணம் என்னவென்று நாங்கள் சிந்தித்துணர முயற்சிக்கின்றோம். இந்த அருமையான சகோதரரர்கள் வைராக்கியம்

உடையவர்கள் என்பதை அறிந்தவர்களாகவும், அவர்களது தாலந்துகளானது செயலற்று அடங்கிக்கிடப்பதை அறிந்தவர்களாகவும், நாம் பின்வருமாறு முன்வைக்கும் விஷயங்களே காரணங்கள் என்று எண்ணும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருக்கிறோம்: அதாவது இம்மாதிரியான சபைகளில் காணப்படுகின்ற புதிய வகுப்புகளை உருவாக்க திறமைக்கொண்டுள்ளதான சகோதரர்கள் - சபையார் தங்களை மூப்பர்களாக தேர்ந்தெடுக்கத்தக்கதாக மற்றும் புதிய வகுப்புகளை உருவாக்கும் பணியினைத் தாங்கள் மேற்கொள்ளத்தக்கதாக, சபையார் தங்களை அங்கீகரிக்கத்தக்கதாக தாங்கள் முயற்சிப்பவர்களாகச் சபையாருக்குத் தோற்றமளித்திடக்கூடாது என்பதினால், இப்பணியினைக் குறித்து முன்வைக்கும் விஷயத்தில் மிகவும் தன்னடக்கத்துடன் காணப்படுகின்றனர். தன்னடக்கம் என்பது எப்போதுமே அருமையான பண்பாய்க் காணப்படுகின்றது; ஆனால் விசேஷமாக சில தாலந்துமிக்க சகோதரர்களுக்கு, நற்செய்தியைப் பிரகடனம் பண்ணுவதிலிருந்து தங்களைக் கட்டுபடுத்திக்கொள்வதும் - முன்னேறிச்சென்று, தாங்களாகவே சிறு கூட்டங்களை ஏற்படுத்துவதிலிருந்து தங்களைக் கட்டுபடுத்திக்கொள்வதும் மிகவும் சிரமமான காரியமாய் இருக்கும்.

சில சபையார் மத்தியில், புதிய வகுப்புகளை உருவாக்குவதற்குரிய தாலந்துடையவர்கள் இல்லாமல் இருப்பதும் உண்மையே - அதாவது தாலந்துடைய சகோதரர்கள் அனைவரின், அவசியமுடைய சபையார் காணப்படுகின்றனர். ஆனால் விழித்தெழுவதற்கும், சில தாலந்துடைய சகோதரர்களைக் கவனிப்பதற்கும், இவர்கள் தங்கள் நேரத்தையும், பெலத்தையும் புதிய வகுப்புகளை உருவாக்கும் பணிகளில் பயன்படுத்தத்தக்கதாக இவர்களை உற்சாகமூட்டுவதற்குரிய நிலையில் சில சபையார் காணப்படுகின்றனர். ஆகையால் சபையார் தாங்கள் பெற்றிருக்கின்றதான தாலந்துடையவர்களை, விலையேறப்பெற்றச் சொத்துக்களாகக் கருதவும் மற்றும் இந்தச் சொத்துக்களைப் பயன்படுத்தி, கர்த்தரை மகிமைப்படுத்த நாடவும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

தெய்வீகத் திட்டத்தின் விளக்கவுரைக்கான தாலந்துடைய சகோதரர்கள், புதிய வகுப்புகளை உருவாக்கும் வாய்ப்புகளைக் காண்கையில் மற்றும் தாங்களே சமாளிக்கத்தக்கதான நிதி நிலையினைக் கொண்டிருக்கையில், கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம். எனினும் கூடுமானால் அனைவரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும், அனைவரும் நற்பணியிலும், அதன் விளைவான சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்களில் இணைந்து கொள்ளத்தக்கதாகவும் முதலாவதாக இவர்கள் காரியத்தினைச் சபையாருக்குத் தெரிவிப்பதற்கு நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

# புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி
## *(BIBLE STUDY CLASS – EXTENSION)*

பல்வேறு வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளில், சகோதரர்கள் மத்தியில் கிருபையிலும், அறிவிலுமுள்ள வளர்ச்சியினை நாம் காண்கையில், அவர்கள் திராட்சத்தோட்டத்தில் வேலையாட்களென அவர்கள் பயன்படுகிற காரியத்தைக்குறித்து நாம் சிந்தித்தும், ஜெபித்தும் காணப்படுகின்றோம். ஆரம்பக் காலங்களில் சொசைட்டியானது வெளி வேலைகளில் சகோதரர்களில் பலரை ஊக்குவித்தும், ஆதரித்தும் வந்தது. ஆனால் இதே போன்று அங்கீகரிக்கப்படுவதற்கு மற்றவர்கள் வேண்டிக்கொண்டபோது, ஒன்றில் பாத்திரமற்றவர்களுக்கு ஒப்புதலளித்து, ஆதரித்திடுவதன் வாயிலாக அல்லது பாத்திரமானவர்கள் சிலரை ஆதரிக்கத் தவறுவதன் வாயிலாகச் சொசைட்டியானது பிரச்சனைக்குள்ளாகும் என்று நாங்கள் உடனே அடையாளம் கண்டு கொண்டோம். எனினும் சொசைட்டியின் முயற்சியானது எப்போதுமே "பட்சபாதமில்லாமலும், மாயமற்றதாயும்" காணப்பட வேண்டும் எனும் அப்போஸ்தலனின் கட்டளையைப் பின்பற்றுவதாகவே இருந்துள்ளது (யாக்கோபு 3:17).

ஆகையால் வாட்ச் டவருடைய வெளியீட்டின் கடைசிப் பக்கத்தில் இடம்பெறும் அல்லது விசேஷமாய் அறிவிக்கப்பட்டுள்ள வழக்கமான பயண ஊழியர்களுக்கான ஒத்துழைப்புத் தவிர, மற்ற விசேஷித்த ஒத்துழைப்புகள் அனைத்தையும் நிறுத்திவிட்டோம். இவர்களுக்கான பொறுப்பினை நம்மால் தட்டிக்கழிக்க முடியாது மற்றும் குறைக்கண்டுபிடிக்கும் ஆவியினை வளர்த்திட விரும்பாமல், எங்குமுள்ள சொசைட்டியின் அருமையான அங்கத்தினர்கள், பயண ஊழியர்களின் நடத்தை அல்லது போதித்தல்களில் ஏதாகிலும் வசனத்தின் அறிவுரைக்கு மாறாக தங்களுக்குத் தோன்றும்பட்சத்தில் - "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள விசுவாசத்திற்கு" முரணாக தங்களுக்குத் தோன்றும் பட்சத்தில், அதைக் குறித்துத் தகவல் கொடுக்கும்படிக்கு நாம் உள்ளப்பூர்வமாய் வேண்டிக்கொள்கின்றோமென இப்பொழுது கூறுகின்றோம். இம்மாதிரியான காரியங்களைப் புறங்கூறும் வண்ணமாகக் கலந்துரையாடாதீர்கள், மாறாக பரிவுடனும், அன்புடனும் அதைக்குறித்துப் புரூக்கிளினிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு - "பயண ஊழியர்கள்" பிரிவிற்குத் தகவல் அளித்துவிடுங்கள். நாங்கள் உங்களோடு ஒப்புக்கொண்டு, பயண ஊழியரைக் கண்டனம்பண்ணிடு வோம் என்றில்லை. மாறாக பயண ஊழியர்கள் சொசைட்டியின் பிரதிநிதிகளாகக் காணப்படுவதினால், அவர்களது ஜீவியத்தின் செல்வாக்குக் குறித்தும், அவர்களது போதனைகளிலுள்ள ஏதேனும் விநோதம் குறித்தும் நாங்கள் அறிந்துகொள்வது சரியான காரியமேயாகும். தகவல் கொடுப்பவர் உண்மைகளோடு சிலவற்றைச் சேர்த்துச் சொல்லிடுவதற்கும், காரியத்தினைக் குற்றமாக மாற்றிடுவதற்கும் முயற்சிக்கவில்லையெனில், தகவல் கொடுப்பது புறங்கூறுதலாய் இராது.

## புதிய வகுப்புகளை உருவாக்குவதற்குரிய திட்டம்

ஆறு மாதங்களுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டத்தின் வாயிலாக, நூற்றுக்கணக்கான அருமையான சகோதரர்கள், அவர்கள் தங்களது தாலந்துகளை, சத்தியத்தைப் பரப்புவதற்கு என்று செயல்படுத்துவதில், சொசைட்டியானது அவர்களோடுகூட ஒத்துழைத்திட முடியும் என்று நாம் நம்புகின்றோம். இத்திட்டமானது, எங்களால் பார்க்க முடிந்தவரை, மனித திட்டத்திற்கு வரும் எல்லா வகையான மறுப்புகளுக்கு இடமளிக்காததாய்த் தெரிகின்றது. இது பல்வேறு சபையாரைப் புதிய வகுப்புகள் உருவாக்கும் வேலைக்குப் பொறுப்பாளியாக்கிடும் மற்றும் இப்படியாகச் சபையார் வாயிலாகவும் மற்றும் சபையாரோடு சேர்ந்தும் சொசைட்டியானது வேலைகள் புரிந்திடும். இது ஒரு சபையார் ஒரு வகுப்பை அல்லது வரையறை இல்லாமல் அநேகம் வகுப்புகளைத் தலைமையேற்றிடும் ஒரு திட்டமல்ல. தெய்வீக வழிநடத்துதலினால் ஒவ்வொரு சபையிலும் உள்ளூர் காரியங்களைக் கவனித்துக் கொள்வதற்கு முற்றிலும் திறமையுள்ளவர்களாகக் காணப்படும் மற்றும் புதிய வகுப்புகளை உருவாக்கிடும் வேலைகளிலும் ஈடுபட முடிகிறவர்களுமான மூப்பராகிய சகோதரர்கள் படிப்படியாய் எழுப்பப்படுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்கின்றோம் என்பது எங்களது கருத்தாய் இருக்கின்றது. நாங்கள் யோசனையாய் முன்வைக்கும் திட்டமானது, புதிய வகுப்பு உருவாக்குதல் வேலை சம்பந்தப்பட்டது மாத்திரமேயாகும்; அது பின்வருமாறு:

(1) எந்தச் சபையாரும், புதிய சபை உருவாக்கிடும் இவ்வேலையில் இணைந்துகொள்ள வரவேற்கப்படுகின்றனர்; அதுவும் அவர்கள் மத்தியில் வழக்கமாய்த் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்களிடத்தில், சபையாரின் நலனையும், வளர்ச்சியையும் சிரமத்திற்குள்ளாக்காத வண்ணம், வெளி ஊழியங்களில் பங்கெடுப்பதற்கெனப் போதுமான தாலந்துகள் காணப்பட வேண்டும்.

(2) ஒருவேளை ஒரு சபையார், அவர்களின் மூப்பர்களிடத்தில் அதிகமான திறமைகளை, அதுவும் சபையாரின் சொந்த வளர்ச்சிக்குரிய தேவைக்குமதிகமாய்ப் பெற்றிருக்குமானால், சபையார் வகுப்புகள்/சபைகள் இல்லாத தங்கள் சுற்றுப்புறங்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, ஊழியம் புரிவதற்கான பல்வேறு இடங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். சபையார் தங்களது மூப்பர்களில் யார் தெய்வீகத் திட்டத்தின் மூன்று விளக்கவுரைகளைக் கொடுத்திடுவதற்கு நன்கு தகுதியுடையவராய் இருக்கின்றார் என்றும், மூப்பர்களில் யார் பிற்பாடு நியாயத்தீர்ப்பின் நாள், ஈடுபலி மற்றும் திரும்பக் கொடுத்தல் மற்றும் கர்த்தருடைய வருகையின் விதம் குறித்த மூன்று உரைகளைக் கொடுத்திடுவதற்கு நன்கு தகுதியுடையவராய் இருக்கின்றார் என்றும் நம்புகிறவர்களை நியமித்திட வேண்டும். தெய்வீகத் திட்டத்தினுடைய வரைப்படங்களையும் மற்றும் இத்தகைய

பேச்சாளர்களுக்குத் தெய்வீகத் திட்டம் குறித்த மூன்று உரையாடல்களுக்கான (outlines) முக்கிய அம்சங்களைத் தெரிவிக்கும் ஒரு சிறு துண்டுப் பிரசுரத்தையும் அளித்திடுவதற்கு சொசைட்டியானது ஆயத்தமாய்க் காணப்படுகின்றது. அடுத்த மூன்று உரையாடல்களானது, வேதாகமப் பாடங்களில் முன்வைக்கப்பட்டிருப்பவைகளின் அடிப்படையில் கொடுக்கப்படலாம் அல்லது மிகவும் பிரயோஜனமான வழிமுறையாய் இருக்குமானால், அந்த அத்தியாயங்களானது முழுமையான ஆராய்ச்சிக்குப் பிற்பாடு வாசிக்கப்படலாம்.

ஒவ்வொரு உரையாடலின் முடிவிலும், அடுத்துவரும் உரையாடல் குறித்து அறிவிக்கப்பட்டு, கேட்பவர்களும், இவர்களது நண்பர்களும் அன்போடுகூட வரவேற்கப்பட வேண்டும். தெய்வீகத் திட்டத்தின் மூன்றாம் விளக்க உரையினுடைய நிறைவில், பேச்சாளர் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையில் பேசப்போகும் சகோதரன் மற்றும் அவரது தலைப்பின் பெயர்களை அறிவித்திட வேண்டும் மற்றும் வாய்ப்பிற்கேற்ப சில சுவாரசியமான மற்றும் ஆர்வமூட்டும் கருத்துக்களைத் தெரிவித்திடலாம். இரண்டாம் பேச்சாளருடைய மூன்றாம் கூட்டத்தினுடைய நிறைவின்போது, கூட்டத்தில் எத்தனை பேர் - வேதமாணவர்களின் ஒரு வகுப்பென நிரந்தரமாய்த் தவறாமல் கூடிவருமளவுக்கு யுகங்களுக்கடுத்த வேதாகம ஆராய்ச்சியில் போதுமானளவுக்கு விருப்பம் கொண்டிருக்கின்றனர் என்று கேட்டுக்கொள்வது நலமாயிருக்கும். பேச்சாளர் பெரோயா வேத ஆராய்ச்சி வகுப்புகளைக் குறித்து விவரித்து, இவ்வகுப்புகள் நடத்தப்படுவதற்கான மிகப் பொருத்தமான இடம் மற்றும் நேரம் குறித்து ஆலோசித்திட வேண்டும் மற்றும் இவர்கள் விரும்பிடும் பட்சத்தில், இவர்கள் இந்தப் பெரோயா பாடங்களைத் துவங்கிடுவதற்கும் மற்றும் தாங்களே காரியங்களைப் பார்த்துக்கொள்ள முடிகிறது வரையிலும், இவர்களுக்கு உதவத்தக்கதாக, தன்னை அனுப்பின சபையார் தங்கள் மத்தியிலுள்ள யாரோ ஒருவரை அனுப்பிவைப்பார்கள் என்றும் வாக்களித்திட வேண்டும்.

(3) புதிய வகுப்புகளை உருவாக்கிடும் விஷயத்தில் உழைப்பும், செலவும் காணப்படுகின்றது. சில சமயங்களில் வீட்டு முற்றங்களும், சிலசமயங்களில் பள்ளி அறைகளும், சிலசமயங்களில் ஆலயத்தினுடைய விரிவுரை ஆற்றும் அறைகளும், சிலசமயங்களில் பயன்படுத்தப்படாத கிறிஸ்தவ கோவில்களும், சிலசமயங்களில் படக்காட்சி அரங்குகளும், சிலசமயங்களில் இசைப்பள்ளி அறைகளும் - வாய்ப்பிற்கு ஏற்ப பெற்றுக்கொள்ளப்படலாம். கூட்டங்களானது வேதாகம வகுப்புகளுக்காக நடத்தப்படுகிறது என்றும், அனுமதிக் கட்டணம் நியமிக்கப்படவில்லை என்றும், பணம் எதுவும் திரட்டப்படவில்லை என்றும் கட்டிடத்தின் உரிமையாளர்கள் அறிகையில், பெரும்பாலும் அறைகளை இலவசமாகவோ அல்லது வாயிற்காவலருக்கு அல்லது விளக்குகளுக்கு அல்லது வெப்பத்திற்குச் சாதாரணமான ஒரு தொகையைச் செலுத்தச் சொல்பவர்களாகக்

காணப்படுவார்கள். சிலசமயங்கள் சிறுதொகை செலுத்தப்பட வேண்டியிருக்கும். எப்படி இருப்பினும் மூன்று முதல் ஆறு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், அவைகள் குறித்து அடுத்தடுத்த ஞாயிற்றுக்கிழமைகளில் விளம்பரம் பண்ணப்பட வேண்டும் என்றும் புரிய வைக்கப்பட வேண்டும். கட்டணம் முன்னமே செலுத்தப்பட்டு மற்றும் விளம்பரம்பண்ணும் காரியமானது பரப்பப்பட ஆயத்தமாயி ருப்பதற்கு முன்னதாக எவ்விதமான தவறான புரிந்துகொள்ளுதல் உண்டாகாத படிக்கு இரசீது ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(4) இம்மாதிரியான கூட்டங்கள் சம்பந்தப்பட்ட காரியங்களில் ஒத்துழைத்திடுவதற்கு சொசைட்டியானது மகிழ்ச்சியோடு காணப்படுகின்றது. Everybody's Paper-இன் பிரதிகளை இலவசமாய்ச் சொசைட்டியானது அளித்திடும்; இதன் பின்புறத்தில் முதல் மூன்று ஞாயிற்றுக்கிழமைகள் ஒவ்வொன்றிற்கான தெய்வீகத் திட்ட விளக்க உரைகள் குறித்த ஓர் அறிவிப்புக் காணப்படும். அதில் கூட்டம் நடத்தப்படும் இடம் மற்றும் தேதிகள் தவிர, மற்றப்படி அது முழுமையாய் நிரப்பப்பட்டுக் காணப்படும். இவைகள் மிகச் சிறிய செலவில் உள்ளூர் அச்சிடுபவரால் அச்சிடப்படலாம் அல்லது ரப்பர் முத்திரைக்கொண்டு அச்சிடப்படலாம். Papers பரப்பப்படுவது என்பது அநேகம் பிரசங்கங்களைப் பரப்புவதாகும் மற்றும் பொதுக்கூட்டத்திற்கு வருவதற்கென இழுக்கப்படாத வர்களுக்கு நலம் பயக்கின்றதாய் இருக்கும். நாம் இவற்றை எந்த ஒரு பட்டணத்திலோ அல்லது மாவட்டத்திலோ அல்லது மாநகரத்திலோ காணப்படும், ஆங்கிலம் பேசுபவர்களின் ஜனத்தொகையில் ஒவ்வொரு ஆறுபேரில் ஒருவருக்கு என்ற விகிதத்தில் கொடுத்திடுவோம்; ஜனத்தொகையானது குழந்தைகளையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது மற்றும் ஆறில் ஒன்று என்பது பொதுவாய்க் குடும்பங்களின் எண்ணிக்கையினை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இக்கூட்டங்களுக்கான செலவுகளானது பொதுவாகவே சபையாரால் சந்திக்க முடிகிறதாய் இருக்கும் மற்றும் அருகாமையிலுள்ள பட்டணங்களுக்குச் செல்வதற்குரிய பயண செலவுகளும் குறைவாகவே காணப்படும். எனினும் இக்கூட்டங்களுக்கான முழுச்செலவுகளையும் சந்திக்க முடியாத எந்தச் சபையாருக்கு, அதுவும் அனுப்பப்படும் தகவல்களானது செலவுகளை நியாயப்படுத்திடும் பட்சத்தில் ஒத்துழைப்புத் தந்திட சொசைட்டியானது விரும்புகின்றது. தகவல் அறிக்கையை ஆயத்தம்பண்ணுகையில் சபையானது, அதன் செயலாளர் (secretary) வாயிலாக எங்களுக்கு விவரங்களை அளித்து, செலவில் எவ்வளவு விகிதம் சபையார் சந்திக்க ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர் என்றும், காரியத்தை நடத்துவதற்கு சொசைட்டியானது எவ்வளவு பணம் பங்களிப்பாக அளித்திட வேண்டும் என்றும் தெரிவிக்கவும்.

(5) சொசைட்டியானது நேரடியாய்ப் பேச்சாளர்களுடன் இடைப்பட விரும்புகிறதில்லை; மாறாக அவர்கள், அவர்களை அனுப்பிடும் சபையாருக்குக்

கடமைப்பட்டவர்களாகக் காணப்பட விரும்புகின்றது; அதாவது பவுலும், பர்னபாவும், கொரிந்துவிலுள்ள சபையால் முதலாவது அனுப்பிவைக்கப்பட்டதுபோலும், இவர்களும் அவர்களுக்குத் தகவல் அறிக்கைகள் கொடுத்தது போலுமாகும். சபையாரால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் வாயிலாக, நாம் அளிக்கும் அச்சிடப்பட்ட வெறும் காகிதத்தில் மாதந்தோறும் தகவல் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள சொசைட்டியானது விரும்புகின்றது.

(6) (தனிப்பட்ட காரியங்களாகவும் மற்றும் சகோதரர் ரசல் அவர்களால் மாத்திரமே கவனிக்க வேண்டியதாகவும் இருப்பவைகள் தவிர மற்றபடி) அனைத்துக் கடிதங்களும் International Bible Students Associations, புதிய வகுப்புகள் உருவாக்கிடும் வேலை பிரிவிற்கே (Extension Department) எழுதி அனுப்பப்பட வேண்டும். இது விஷயமான அனைத்துக் கடிதங்களும் அமெரிக்காவில் புரூக்கிளின் டேபர்நாக்கிளுக்கும், பிரிட்டனில் லண்டன் டேபர்நாக்கிளுக்கும், ஆஸ்திரேலியாவில் மெல்பர்னுக்கும், ஸ்கேண்டிநாரியன் மற்றும் ஜெர்மன் நாடுகளில் அவரவர் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

(7) ஆங்கில மொழிக்கூட்டங்கள் தொடர்பாக நாம் மேலே சொல்லியுள்ளவை களானது, வாய்ப்புகள் அனுமதிப்பதற்கேற்ப மற்ற மொழி ஊழியங்கள் தொடர்பாகவும் செயல்படுத்தப்படலாம்.

## இந்த வேலை ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது

நாங்கள் மேலே சொல்லியுள்ளவைகளின் அடிப்படையில் ஏற்கெனவே முயற்சித்துப் பார்த்துவிட்டோம். சில விஷயங்களில் சிலர் நம்முடைய கருத்தினை முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்பதாகத் தெரிகின்றது. எனினும் நல்ல வேலையானது ஏற்கெனவே துவங்கிவிட்டது. நூற்று நாற்பத்தைந்து சபைகளிடமிருந்து நாம் ஏற்கெனவே தகவல் அறிக்கைகளைப் பெற்றிருக்கின்றோம். ஏப்ரல் 1-ஆம் தேதி வரையிலான தகவல்களின்படி 16,392-பேர் கலந்துகொண்டுள்ள 512-கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இந்த நல்ல வேலையானது ஞானமாயும், தன்னடக்கமாயும், அன்பாயும், வைராக்கியமாயும் நடந்தேறுவதாக! அறுவடை பெரிதாய் இருக்கின்றது; அறுவடைப்பண்ண வேண்டிய மாபெரும் நிலத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் வேலையாட்கள் குறைவாக இருக்கின்றனர்.

எல்லா விஷயங்கள் தொடர்பான அனைத்துக் கடிதங்களுமே தனிப்பட்ட நபருக்கு என்றில்லாமல், சொசைட்டியின் முகவரியில் அனுப்பப்படுவதாக என்று நாம் மீண்டுமாக வலியுறுத்துகின்றோம்; கூடுமானால் தபாலில், பிரிவின் (Department) பெயரானது எழுதப்பட வேண்டும். வேறுமாதிரி முகவரி எழுதப்பட்டு அனுப்பப்படும் கடிதங்களானது, உடனடியாய்க் கவனிக்கத் தவறுவதற்கு

வாய்ப்பிருக்கின்றது; தனிப்பட்ட நபர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கலாம் அல்லது வராமல் இருக்கலாம், ஆனால் அந்தந்தப் பிரிவுகளானது (Departments) என்றும் இயங்கிக் காணப்பட்டு, உடனே கவனம் கொடுத்திடும்.

---

R5384

## ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை

புதுச்சிருஷ்டிக்குத் தேவபக்தி உண்டாகும் வகையில் வாரம் ஒருமுறை விசேஷித்த கூடுகைகளாக ஜெபம் மற்றும் சாட்சியமளிக்கும் கூடுகைகள் தேவைப்படுகிறது. குறைந்தபட்சம் காலாண்டிற்கு ஒருமுறை ஓர் இரவுபொழுதாவது ஒதுக்கி, பொதுவான வகையில் ஜெபக்கூடுகைகளை ஏற்பாடு செய்தால் நமது நண்பர்களுக்கு அது மிகவும் ஆதாயமளிப்பதாக இருக்கும் என நாம் நம்புகிறோம். எங்களுடைய ஆலோசனையின்படி இம்மாதிரியான கூடுகைகளுக்கு காலாண்டு ஒன்றின்/மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மத்திய புதன்கிழமை மாலை வேளையைத் தேர்ந்தெடுப்பது சிறந்தது ஆகும்; இக்கூடுகை சாட்சிபகருதலைவிட பிரத்தியட்சமாக ஜெபத்திற்கு ஒதுக்குவதாக இருக்க வேண்டும். கூடுகையை நடத்துபவர் ஜெபத்தோடுகூடத் துவங்கி, பின் இரண்டு அல்லது மூன்று ஜெபங்களுக்காகச் சகோதரர்களை அழைக்கலாம். அதன்பின்பு அவ்வாரத்துக் குண்டான வசனப்பகுதியை வாசித்து, மூன்று நிமிடங்களாவது அவ்வசனப் பகுதியைக்குறித்து விவரிக்கலாம் அல்லது நபர்கள் மிகக்குறைவாக இருக்கும் பட்சத்தில் ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம். எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும்பட்சத்தில் இரண்டு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம். வசனங்களுக்கு விளக்கம் தரும் நேரமானது சபையின் எண்ணிக்கையின் அளவைப் பொறுத்ததாகும்.

பின்பு கூட்டத்தலைவர்: இந்த மாலைப்பொழுதானது விசேஷமாக ஜெபத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; நாம் அனைவரும் சந்தேகத்திற் கிடமின்றி அறிந்தபடி, ஒரு கிறிஸ்தவன் கர்த்தரை ஆராதிப்பதும், ஜெப துதிகளை ஏறெடுப்பதும் அவனுடைய விசேஷமான சிலாக்கியம் ஆகும். நாம் இருதயப்பூர்வமாக விசுவாசித்து, வாயினாலே அறிக்கை செய்கிறோம். இக்கூடுகையில் ஒவ்வொருவராகப் பெயர்ச்சொல்லி அழைக்காமல், வந்துள்ள அனைவரும் பங்கெடுக்க வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். ஒரு சில

வார்த்தைகளே கூறமுடியுமாயின் அது ஒரு காரியமல்ல. ஆனாலும் ஜெபமானது மிக நீண்ட ஜெபமாக இருக்கக்கூடாது என்கிற கருத்தை நாம் வலியுறுத்துகிறோம். இப்பொழுது நாம் இரு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி எழுந்துநிற்க வாய்ப்புத் தருவோம். அதன்பின்பு ஒரு கீர்த்தனையைப் பாடலாம். கீர்த்தனையைத் தொடர்ந்து ஒரு சகோதரர் மற்றும் சகோதரிக்கு ஜெபிக்க (கூடுகையில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப) வாய்ப்புத் தந்து, இவ்விதமாக அனைவருக்கும் வாய்ப்புத் தரலாம்.

ஜெபிக்கும் இந்த சிலாக்கியத்தைப் பயன்படுத்தும்போது கர்த்தருடைய பிள்ளைகள்மேல் பெருத்த ஆசீர்வாதம் வரும் எனக் காண்கிறோம். இவ்விதமாக அநேகர் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் அநேகர் தங்களுடைய வாழ்க்கையின் இதுபோன்ற அனுபவங்களை முன்பு பெற்றிருக்கவில்லை.

இவ்விதமாக காலாண்டிற்கு ஒருமுறை/மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஜெப ஆராதனையானது, மாதம் ஒருமுறை நடத்தப்படுவதைக் காட்டிலும், இந்த நோக்கத்தை அதிகம் நிறைவேற்றுகிறதாயிருக்கிறது என நினைக்கிறோம். காலாண்டு ஒன்றில் ஒருமுறைக்கு மேலாக இக்கூடுகைகள் நடத்தப்படுமாயின் கடினமானதொன்றாயிருக்கும். அம்மாதிரியான ஒழுங்குமுறை எந்தவொரு சபையிலும் பின்பற்றப்பட்டால், அது மாற்றப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கிறோம்.

## மாதிரியான சாட்சியக் கூட்டம்

வார இடையிலான கூடுகை, துதி செய்வதற்கும், சாட்சி பகருதலுக்குமான கூடுகையாக ஒதுக்கப்பட வேண்டும். முன்பு கூறப்பட்டதுபோல தன்னுடைய தனிப்பட்ட அனுபவங்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள ஒரு கிறிஸ்தவனுக்கு விசேஷபக்தியுண்டாக்கும் கூடுகைகள் தேவை. சமீபகால சாட்சிகள் மிகவும் உதவிகரமானது. கர்த்தருடைய எல்லா ஜனங்களுக்கும் சோதனைகளும் கஷ்டங்களும் உள்ளது. ஒருவர் மற்றொருவருடைய அனுபவங்களைக் கேட்கும்போது, ஒருவர்மேல் ஒருவர் பரிவிரக்கம் கொள்ளக் கற்றுக்கொள்கிறோம்.

அம்மாதிரியான கூடுகைகள் ஒன்று அல்லது இரு கீர்த்தனைப் பாடல்களோடு ஆரம்பித்து, பின் ஒன்று அல்லது அதிகமான சுருக்கமான ஜெபங்கள் செய்யப்பட வேண்டும். கூடுகையை ஆரம்ப ஜெபத்தோடு துவங்கும் சகோதரர், கூடுகை ஆரம்பிக்கும் முன்பே என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும். துவக்க ஜெபமானது கூடி வந்திருக்கிறவர்கள் சரியான மனநிலையோடு கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, அவர்கள் இருதயத்திலும்,

மனதிலும் தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெறும்படியான விண்ணப்பமாக இருக்கவேண்டும்.

உதாரணமாக, மாலை வேளைக்கான வசனப்பகுதியானது, "ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என இருக்குமாயின், கூட்டத்தலைவர் இவ்விதமாகக் கூறலாம்: இவ்வாரத்திற்கான நம்முடைய வசனப்பகுதியானது இதோ.... (மேற்கூறிய வசனத்தை வாசிக்கவும்) தேவனுடைய பார்வையில், அவருடைய ஜனங்களில் யாரொருவரும் பெற்றிருக்கவேண்டிய குணநலன்களில் தாழ்மையானது மிக முக்கியமான ஒன்றாகும். தாழ்மையை நாம் உடையவர்களாக இருந்தால் தேவனுடைய பார்வையில் அவரை நாம் பிரியப்படுத்துகிறோம் என்று முழு வேதாகமமும் சுட்டிக்காண்பிக்கின்றன. மேலும், நாம் இக்குணத்தைப் பெற்றிருந்தாலொழிய தேவனுடைய இராஜ்யத்திற்கு தகுதியடைய முடியாது. இக்குணத்தின் தேவையிலுள்ள ஞானத்தையும் நம்மால் கவனிக்கமுடிகிறது. தேவன் ஒருவேளை தாழ்மை இல்லாதவர்களை உன்னத நிலைமைக்கு உயர்த்தவேண்டியிருப்பின், பரலோகத்தில் மேலும் ஒரு பிரச்சனைக்கு அது வழிவகுக்கும்.

சாத்தானானவன் தன்னைத் தேவனுக்கு முன்பாக முறையாக ஒப்புக்கொடுத்து கீழ்ப்படுத்தினவனல்ல எனக் காண்கிறோம். அவன் இந்த மேட்டிமையான நிலையை அடைந்தவுடன், தேவனைவிட தான் சிறப்பாகச் செயல்படமுடியும் என அநேகமாக எண்ணியிருக்கக்கூடும். இவ்வெண்ணத்தைக் காண்பிக்கும் பொருட்டு அவன் எடுத்த முயற்சியில் தனக்குத்தானே வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன், மனுக்குலத்தின்மேல் பாவம் மற்றும் மரணத்தைக் கொண்டுவந்தான். பிதாவின் சித்தத்திற்குத் தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்த இயேசுவைக் காண்பிக்கவேண்டியது தேவனுக்கு அவசியமாயிற்று. இவ்விஷயத்தில் இயேசுவினுடைய பாதையை நாம் காண்கிறோம், பின் பிதாவானவர் அவரை எவ்வாறு உயர்த்தினார் என்பதையும் காண்கிறோம். நாமும் தெய்வீக வழிநடத்துதலின்படி நமக்கு வருகிற ஒவ்வொரு காரியத்திலும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். "ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் நம்மை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."

இப்பொழுது, அன்பிற்குரிய நண்பர்களே, நீங்களும்கூட ஒருவேளை இவ்வாரத்தில் தாழ்மையின் அடிப்படையிலும் அல்லது அதன் எதிர்மறையாகிய பெருமையின் அடிப்படையிலும் பெற்ற அனுபவங்களை எங்களிடம் பகிர்ந்து கொள்ளலாம். இது வசனத்தின் மீதான விளக்கவுரையாக இருக்கக்கூடாது. இந்த வசனப்பகுதியின் அர்த்தத்தை நாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறோம். உங்களுடைய சொந்த அனுபவங்களையே பகிர்ந்துகொள்ள நாங்கள் விரும்புகி றோம். நீங்கள் பெற்ற அனுபவங்களில் எந்த அனுபவம் உங்கள் மனதை இந்த

வசனப்பகுதியோடு ஈர்த்ததாக எண்ணுகிறீர்கள்? உங்களுடைய சொந்த அனுபவங்களிலிருந்து சிறுபகுதியை நாங்கள் பெற்றுக்கொள்ளலாமல்லவா! நாம் இப்பொழுது சகோதரர் A-யினிடமிருந்து அறையின் இருபக்கமும் உள்ள சகோதரர்களில், மாறி மாறி எல்லோரும் பங்கேற்கும்படி கடந்துசெல்லலாம். சகோதரரே, இப்பொழுது உங்கள் சாட்சியைத் தருகிறீரா?

## இரட்டிப்பான பலனை எவ்வாறு பெறுவது?

சாட்சிபகர ஒருவரை முன்வரிசையிலும் மற்றொருவரை பின்வரிசையிலுமிருந்து அழைக்கும்போது, இரட்டிப்பான பலனை நாம் பெறலாம். சாட்சியானது ஒருமுனையிலிருந்து ஆரம்பிக்கும்போது, தூரத்தில் உள்ளவர்கள் தங்களுக்கான வாய்ப்பானது நீண்ட நேரமாகாமல் வராது என நினைக்கத்தோன்றும். அதினால் அருகிலுள்ள ஒருவரையும், பின் தூரத்திலுள்ளவரையும் அழைக்கும் முறையை கடைப்பிடித்தோமானால், அது எல்லோரையும் ஜாக்கிரதையாக இருக்கச் செய்வதுடன், முழுக்கூடுகையிலும் அவர்களை விழிப்புடன் இருக்கச்செய்யும்.

ஒரு சாட்சியக்கூட்டத்தை நாமே நடத்தும்போது, ஒரு நல்ல சாட்சியத்தோடு ஆரம்பித்து நல்ல சாட்சியத்தோடு முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தை நாம் சிந்தையில் நிறுத்தவேண்டும். ஆகவே நாம் நல்ல மற்றும் பரவலாக எழுச்சியூட்டும் வகையில் சாட்சிபகரும் ஒருவரோடு துவங்கும்போது, ஆரம்பத்திலேயே நல்ல உத்வேகத்தைத் தரமுடியும். துவக்கப்பாடலை நாம் பாடும்போதே எந்தச் சகோதரன், எந்தச் சகோதரி துவங்க அல்லது முடிக்கவேண்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அப்போது நாம் நல்ல துவக்கத்தை மற்றும் நல்ல நிறைவைப் பெற்றிருக்கிறோம் என உறுதிகூறமுடியும்.

சாட்சி பகருகின்றபோது யாரேனும் இடையில் சிறிது ஸ்தம்பித்து, பின் எப்படித் தொடர்வது எனத் தெரியாமல் இருப்பாராயின், நாம் எவ்விதம் நிலைமையைச் சீராக்குவது எனில்: சகோதரரே (அல்லது சகோதரியே) உங்கள் அனுபவம் அப்படியாய் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டோம் என்று கூறலாம். அவர் அந்தச் சாட்சியை முடிக்கமுடியாமல் உள்ளார் என நாம் நினைத்தால், அவரது கருத்துக்கள் என்று நாம் அனுமானிப்பவைகளை அவருக்காக கூறி முடிக்க வேண்டும். நாம் இதைச் செய்யக்கூடியவராக இருக்கவேண்டும். கூட்டத்தலைவர் ஒருவர் இதைச் செய்ய முடிபவராக, அச்சகோதரரை அன்புடன் உற்சாகப் படுத்துகிறவராக இருப்பார்.

அந்தச் சகோதரரோ, சகோதரியோ: இதுவல்ல! என்று சொல்லுமளவுக்கு வேறுவிதமான கருத்தை நாம் சொல்லாமலிருக்க கவனமாயிருக்கவேண்டும். மாறாக நாம் கொடுக்க முயற்சிக்கும் கருத்தானது சகோ. ரசல் அவர்கள் என் எண்ணத்தைப் புரிந்துகொண்டார் என்று கூறுமளவுக்கு இருக்கவேண்டும். மாறாக

நாம் ஒன்றும் கூறாமலோ அல்லது கடுகடுப்பாகவோ இருந்தோமானால், அந்தச் சகோதரன் (குறிப்பாகச் சகோதரிகள்) அடுத்தமுறை மிகவும் சோர்வடைவதுடன், அமைதியாக இருப்பதே மேல் என்று நினைப்பார்(ள்).

ஒரு சாட்சியக்கூடுகையில், 60-இல் இருந்து 100 பேர் வரைக் கூடிவரும்போது, அது உதவிகரமான கூடுகையாக அமைய வாய்ப்பு இருக்காது. பன்னிரண்டிலிருந்து பதினைந்து வரையே மிகவும் பயனுள்ள எண்ணிக்கையாகும். அப்போது போதுமான அளவு வித்தியாசமான அனுபவங்களும் கிடைக்கும். சாட்சிபகர ஒவ்வொருவருக்கும் அதிகநேரம் கிடைக்காவிட்டாலும், எல்லோருக்கும் சாட்சிபகரப் போதுமான நேரம் கிடைக்கும்.

முதலாவதாகச் சாட்சி பகருகிறவர், அவருடைய சாட்சியில் ஒருவேளை தவறான கருத்தோ அல்லது நடவடிக்கையோ எடுத்திருப்பாராயின், ஒருவேளை அவர் இவ்வாறு கூறலாம்: இவ்வாரம் நான் ஒரு போதகரைச் சந்தித்து உரையாடினேன்; அவர் வேதத்திலுள்ள எல்லாவற்றையும் அறிந்திருப்பவராகத் தன்னை எண்ணிக்கொண்டிருக்கிறார். நான் அவரிடம் பல கேள்விகளைக் கேட்கும்போது அவரால் பதில் சொல்லமுடியவில்லை. மேலும் அதை எல்லா ஜனங்களும் பார்க்க நேர்ந்தது!

இப்பொழுது கூட்டத்தலைவர் அவரிடம் என்ன கூறலாம் என்றால்: "சகோதரரே, நீங்கள் நல்ல நோக்கத்தில் செய்திருக்கிறீர்கள் என்பதில் எனக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை; ஆனால் நீங்கள் ஞானமாகச் செயல்பட்டுள்ளீர்கள் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாது. இதை நீங்கள் இதமாகச் செய்திருந்தால் நலமாக இருக்கும். நாம் முரட்டுத்தனமாக இருக்கக்கூடாது. மாறாக நம்மை எதிர்ப்பவரை இதமாகவும், சாந்தமாகவும் அறிவுறுத்த வேண்டும். இம்மாதிரியான காரியங்களை ஏற்றுக்கொள்ள, அநேக வருடம் போதகராக இருப்பவர்களுக்கும், படிப்பிலும் கனத்திலும் உயர்வாக உள்ளவர்களுக்கும் மிகவும் கடினம் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே பகைமையைத் தூண்டாத வகையில் நீங்கள் இருமடங்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இதமான, சாந்தமான ஒரு சிறுவார்த்தையைப் பயன்படுத்தலாம். நீங்கள் பேசினதுபோல் பேசி இருந்தால், அந்த ஊழியக்காரர் உங்களிடத்தில் போதுமான அளவு தாழ்மை இல்லை என எண்ணி இருந்திருக்கக்கூடும்" என்று கூறலாம்.

வேறு ஒருவர் ஒருவேளை வேறுவகையில் குழப்பிக்கூறுபவராக இருக்கலாம். நன்கு சாட்சிபகரும் கலையைச் சாட்சிக்கூட்டத் தலைவர்கள் சபையில் வளர்க்கவேண்டும். இதைக்குறித்து அவர்கள் சரியான யோசனைகளை உடையவராக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சபை ஜனங்கள் வரக்கூடிய கூட்டங்களில், என்ன நேர்ந்தாலும் முறையான எண்ணங்களோடு கையாளுவார், இந்த வகையில் அவர்களது மனதும் நிலைவரப்படுத்தப்படும்.

## சாட்சிக் கூட்டமானது ஒரு சொற்பொழிவுக்கல்ல

யாராவது ஒருவர் இக்கூடுகையில் பிரசங்கம்பண்ண முற்படுவாராயின், கூட்டத்தலைவர்: "மன்னிக்கவேண்டும் சகோதரா, இது பிரசங்கம் செய்வதற்கான கூடுகையல்ல, இது சாட்சிபகரும் கூடுகை; ஒருவேளை வேறொரு சமயத்தில் நீங்கள் நீண்ட நேரம் சத்தியஉரை நிகழ்த்தலாம்" எனக் கூறலாம்.

சாட்சிபகருதல் என்றால் என்ன என்பதைக்குறித்த விளக்கம் கூட்டத்தலைவர் தந்தால் அது நலமானதாயிருக்கும். அதுகுறித்து பின்வருமாறு: சாட்சியம் என்றால் என்ன என்பதைப்பற்றி ஓரளவிற்கு நாம் தெரிந்திருக்கிறோம். அது ஒரு வசனப்பகுதியின் மேலான சத்திய உரையோ அல்லது விளக்கவுரையோ அல்ல. இக்கூடுகை விசேஷமாகச் சாட்சி பகருதலுக்கே. நான் இந்த மாலைப்பொழுதிற்கான வசனப்பகுதியின் விளக்கவுரையைத் துவக்கத்திலேயே தருகிறேன் என்று கூறினபின்பு, சகோதரருடைய சொந்த அனுபவங்களை அவர்கள் கூறுவதைக் கேட்கலாம்.

நண்பர்கள் அனைவரும் இவ்விஷயத்தை நன்கு புரிந்திருப்பார்கள் என நம்புகிறோம். யாதொரு விஷயம் துல்லியமான முறைமையின்றி இருப்பின், அது முறைமைக்குப் புறம்பானதாக அவர்களால் காணப்படவில்லை என எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கூட்டத்தலைவரோ அவ்வசனப்பகுதியை வாசித்து, அதின் அர்த்தத்தை, ஒருசில வார்த்தைகளில் குறிப்பிடலாம். அதன்பின்பு சாட்சிகள் கேட்கப்பட்டு, என்ன எதிர்ப்பார்க்கப்பட்டதோ அதை அவர்கள் காண்பர். கூட்டமுடிவில் கூட்டத்தலைவரின் சொந்த அனுபவங்கள் தரப்பட்டால், மற்றவர் அனைவரும் முறையான கருத்தைப் பெற்றுக்கொள்வர்.

நம்முடைய கருத்து என்னவெனில்: சகோதரர்கள் வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல முறையற்ற அவசரம் காண்பிப்பது அவர்களுக்கு சிறந்ததல்ல என்பதாகும்; மாறாக நம்முடைய வழக்கத்தின்படி வாழ்த்துத் தெரிவிக்கும்வரைக் காத்திருக்கலாம். இந்த விஷயங்கள் சம்பந்தமாக வசனங்கள் நேரடியாகச் சொல்லப்படவில்லையாதலால், இதை எந்த ஒரு சட்டமாகவோ அல்லது பிரமாணமாகவோ போட நமக்கு உரிமையில்லை. வெறுமனே ஆலோசனை தரமுடியும். என்னவெனில், கூட்டம் முடிகையில் நீண்டநேர சம்பாஷணைகளுக்குள் நுழைவதினால் பிரயோஜனம் இல்லை என்பதேயாகும். கூடுகை முடிந்தபின்பு கூட்டம் போடுவதினால், அக்கூட்டத்தினுடைய பலன்களையும் ஆசீர்வாதங்க ளையும் இழக்கச்செய்யும் அபாயமும் உண்டு. சகோதரர்கள் கூடுகை முடிந்தவுடன் உடனடியாகச் சென்றுவிடும்போது, ஐக்கியத்திற்கான அதிக வாய்ப்பு இல்லை என்பதும் உண்மையே. கூட்டத்தலைவர் வரும் முன்போ அல்லது கூடுகை ஆரம்பிக்கும் முன்போ வரும்போது, சிறிது நட்பின் பரிமாற்றம் நடைபெறலாம்.

அவ்வாறு செய்யும்போது ஒரு சிலருக்கு அது வீண்போகாது. இது ஒரு மிகவும் பயனுள்ள வாய்ப்பாகத் தெரிகிறது.

## ஜெபித்தலில் முறையான மனப்பாங்கு

ஜெபத்திலே கர்த்தரிடத்தில் சேருகிற எந்த ஒரு கிறிஸ்தவனும், அவன் உடலை எவ்விதமாக வைக்கவேண்டும் என்பது பற்றி எந்த வரையறையும் வேதத்தில் இல்லை. ஆனால் நின்றுகொண்டும், முழங்காற்படியிட்டும் ஜெபிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் தெளிந்த புத்தியின் ஆவியில் ஒருவர் வழிநடத்தப்படவேண்டும். அவர் வெளியிலே தெருவில் இருக்கும்போது, முழங்காற்படியிடுவது கண்டிப்பாக விரும்பத்தக்கதல்ல. கற்களாலான தரையில் நிற்கும்போது அங்கும் முழங்காற்படியிடுவது விரும்பத்தக்கதல்ல. தனிமையில் இருக்கும்போது முழங்காற்படியிட்டு ஜெபிப்பது சிறந்தது. இருந்தபோதிலும் முழங்காற்படியிட்டு ஜெபிக்கும்போது தூக்கக்கலக்கமடைகிறோம் எனச் சிலர் தெரிவிக்கிறார்கள். நாம் எவ்வாறு செய்தால் சிறப்பாக இருக்கும் என நம் மனப்பாங்குச் சொல்கிறதோ, அவ்வாறு செய்வதே நம்முடைய விருப்பமாகும். முழங்காற்படியிடும்போது தூக்கக்கலக்கமாக இருக்கிறது என்று நாம் கண்டால், விழித்திருந்து அதேசமயத்தில் ஜெபத்தில் கவனத்தோடு இருக்க வேறு முறையை மேற்கொள்ளலாம்.

சபையாராக ஜெபிக்கும்போது தலைகளைத் தாழ்த்தி அமர்ந்திருந்து ஜெபிப்பது சிறந்தது என்பது எங்களுடைய கருத்தாயும் உள்ளது. எந்த மனப்பான்மையைத் தெரிவுசெய்வது என்பது பெரும்பாலும் பெற்றிருக்கும் அறிவையும், பழக்கவழக்கத்தையும் சார்ந்ததாகும். எங்கும் இருக்கும் நண்பர்களுக்கு நாம் சொல்ல நினைக்கும் கருத்தானது, பொது ஆராதனையில் மேற்சொன்ன முறையே ஜெபிக்கும்போது சிறந்தது ஆகும். சிறிய கூடுகையாயிருந்து தரையில் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தால் முழங்காற்படியிடுவது நன்று.

சாட்சிக்கூட்டங்களைப் பொறுத்தளவு, நம்முடைய கருத்து என்னவெனில், பெரிய கூடுகையாக இல்லாமலிருந்தாலொழிய, அமர்ந்துகொண்டு சாட்சிபகருவது சிறப்பானதாகும்; காரணம் அமர்ந்திருப்பவர்களுக்குச் சாட்சி பகருவது சுலபமாக இருக்கும். எழுந்து நின்று சாட்சி கூறுதல் சிலருக்குக் கடினமானதாகவும், தர்மசங்கடமானதாகவும் இருப்பதுடன், என்ன சொல்லப்போகிறோம் என்பதையும் மறந்துவிடுவர். ஆகவே அமர்ந்திருப்பது அவர்களுடைய பதட்டத்தைக் குறைக்கிறது. பெரிய அளவிலான கூடுகையில் ஒருவர் எழுந்து நின்று பேசும்போது அவருடைய குரல் அனைவருக்கும் கேட்கும்.

## சபையாகப் பாடும்போது எழுந்து நிற்பது

பாடுவதைப் பொறுத்தமட்டில், கிரேட் பிரிட்டனில் உள்ள வழக்கத்தின்படி நின்றுகொண்டு பாடுவது மிகவும் நன்று. துதி ஆராதனையில் ஒன்றன்பின் ஒன்றாக பல பாடல்கள் பாடப்படும்போது நின்றுகொண்டேயிருப்பது மிகக் கடினமானதாகும். ஆனாலும் நின்றுகொண்டு பாடுவது பொதுவாக அனுகூலமானது. நின்றுகொண்டு ஒருவர் பாடும்போது இது ஏற்ற நிலையாகக் காணப்பட்டு, அவருடைய குரல்வளையங்கள் சரியான நிலையில் இருப்பதால் அவரால் நன்றாகப் பாடவும் முடிகிறது. ஆகவே பாடல் அறிவிக்கப்படும்போது, சகோதரர்கள் நிற்பது விரும்பத்தக்க ஒன்றாகும்.

எப்போதும் பொருத்தமான முறையாக, "எழுந்து நிற்க" அழைக்கவேண்டுமே தவிர, கண்டிப்பான முறையில் அழைப்பு விடுக்கக்கூடாது. கூட்டத்தலைவர், "சபையானது எழுந்து நிற்கவும்" என்று கூறாமல், நாம் எழுந்து ஒரு பாடலைப் பாடலாம் எனக் கூறவேண்டும். உடல் நிலையைப் பொறுத்துச் சிலர் உட்கார்ந்து இருப்பதே நன்று. அதினாலேயே, "நாம் எழுந்து பாடுவோம்" என்ற அழைப்பானது எழுந்து நிற்க விருப்பமுடையவர்களுக்கே சொல்லப்பட்டதாக இருக்கும். எழுந்து பாடவும், பின் நின்றவண்ணமாக இருக்க, "சகோதரர் A" ஜெபிப்பார் என்று சிலரைப்போன்று, நாம் கூறுவது பெரிய தவறு என நாங்கள் நினைக்கிறோம். அநேக வேளைகளில் இது உண்மையிலேயே கடினமான இன்னல்களைச் சுமத்துவதாக இருக்கும்.

## அதிகப்படியான இறுமாப்பு

ஆனால் நிறைவு பாடலின்போது, சபையானது எழுந்து நிற்கையில், முடிவு ஜெபத்திற்காக அவர்களை உட்காரச்சொல்வதற்குப் பதிலாக நின்றுகொண்டே இருக்கச் செய்வது நலமானதே. மேலும் அந்த ஜெபமானது ஆசீர் அளிக்கும் விதமாக இருக்கவேண்டுமே தவிர, யாரையும் துன்பப்படுத்தும் வகையில் நீண்ட ஜெபமாக இருக்கக்கூடாது. ஏற்கெனவே ஒரு ஜெபம் செய்யப்பட்டிருக்குமாயின், அதிக வார்த்தைகளால் ஏறெடுக்கப்படும் ஜெபமும் அவசியமானதல்ல. பெரும்பாலான ஜெபங்கள் மிகவும் நீண்ட ஜெபங்களாகவே உள்ளன.

ஜெபத்தில் வழிநடத்துபவர் நீண்ட விண்ணப்பங்களை ஏறெடுப்பதன் மூலம் முழுச்சபையாரின் சுயாதீனம் மற்றும் உரிமைகளில் தலையிடக்கூடாது. நம்முடைய கர்த்தர் மிக நீண்ட ஜெபங்களை ஏறெடுத்தார் என வாசிக்கமுடியாது. தனிமையில் இராமுழுவதும் சில நேரங்களில் ஜெபித்தார் என்பது உண்மையே. ஆனால் பொது இடங்களில் நீண்ட ஜெபங்களை அவர் ஏறெடுக்கவில்லை. கர்த்தர் சீஷருக்குக் கற்றுக்கொடுத்த ஜெபமானது மிகச் சுருக்கமானதாகவும், புள்ளி விவரமானதுமாகும்.

அண்ட சராசரத்தையே எவ்வாறு வழிநடத்தவேண்டும் எனக் கர்த்தருக்கே தெரிவிக்க நினைக்கும் சிலர் சுய அக்கறை உடையோராயும், இறுமாப்பும் உடையவராகவும் இருக்கின்றனர். நம்மையே நாம் இயக்குவதற்கு மிகக் குறைவுள்ளவர்களாக இருப்பதைக் கற்றிருக்கும்போது, சர்வ வல்லவருக்கு அவருடைய விஷயங்களில் ஆலோசனை வழங்கமுடியாது.

## சம்பிரதாயமான ஜெபம் கேலிக்குரியது

முக்கியமான ஊழியக்காரர் ஒருவர், ஏறெடுத்த ஜெபம் சம்பந்தமாக அடுத்ததினம் போஸ்டன் நகர நாளிதழில், குறிப்பிடப்பட்டிருந்த செய்தி என்னவெனில்: போதகர் ___________, போஸ்டன் நகர மக்களுக்காக இதுவரை இல்லாத வகையில், விலாவாரியான ஜெபம் ஏறெடுத்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஜெபம் கர்த்தருக்கு ஏறெடுக்கப்படவில்லை என இதழாசிரியர் (சகோ ரசல்) தெளிவாக அறிந்திருந்தார்! நாம் தெளிந்த புத்தியுள்ள ஆவியை அதிக அளவில் பெற்றிருக்கவேண்டுவது தேவையான ஒன்று. நம்முடைய இருதயத்தின் நோக்கங்கள் நல்லவையாக இருக்க கர்த்தர் நோக்குகிறார் என நாம் யூகிக்கலாம். ஆனால் நம்முடைய ஜெபம் மனிதரால் கேட்கப்பட வேண்டும் என அவர் நமக்குச் சொல்லவில்லை. நாம் கர்த்தரிடமே ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும்.

அந்தரங்கமான ஜெபமானது, "அறைக்குள் பிரவேசித்து கதவைப்பூட்டி" என்று நமக்குச் சொல்லப்பட்டிருப்பதால், நம்முடைய சத்தம் கதவுக்கு வெளியே யாராலும் கேட்கப்படக்கூடாது என நாம் நினைக்கலாம். ஜெபமானது, அந்தரங்கமானதாகவோ அல்லது வெளிப்படையாகவோ இருந்தாலும், பயபக்தியோடு அது சர்வ வல்லவரை நோக்கியே இருக்கவேண்டும். மேலும் அது அந்தத் தருணத்துக்கேற்றவாறு இருதயத்தின் விருப்பங்களை வெளிப்படுத்து கிறதாக இருக்கவேண்டும். கர்த்தரிடத்தில் நாம் எதற்காகச் செல்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். நாம் சொல்வதற்கென்று ஒன்றுமில்லாத நேரத்தில், கிருபாசனத்தை நோக்கி செல்லாமலிருத்தல் நல்லது.

எந்தக் கூடுகையின் முடிவிலும், செய்தியளித்தவர் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் அல்லது ஐந்து நிமிடங்களாவது ஜெபித்தாலும்கூட அது ஞானமற்ற செயல் என நாம் நினைக்கிறோம். இரண்டு அல்லது மூன்று நிமிடங்களே மிக அதிகம் என நாம் நினைக்கிறோம். நம்முடைய தேவைகள் எல்லாவற்றையும் குறித்துக் கர்த்தர் அறிவார், அதோடு நாம் சபையாரைக் கருத்தில் கொண்டவர்களாயிருக்க வேண்டும்.

ஏதாவது ஒரு காரியத்திற்காக ஒருமணி நேரம் உட்கார்ந்திருந்த பிற்பாடு, ஆராதனையை நீளச்செய்யும் பொருட்டு நீண்ட ஜெபங்கள் ஏறெடுப்பது

ஞானமற்றதாய் இருக்கும். நீண்ட ஜெபங்கள் அந்தரங்கமாகச் செய்யப்பட வேண்டியவை. எனினும் சில கிறிஸ்தவர்கள் ஜெபத்தினால் உற்சாகப்படுத்தப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சிலர் எந்த அளவுக்கு ஜெபிக்க வேண்டுமோ அந்த அளவிற்கு ஜெபிக்காதவர்களாக இருக்கின்றனர். ஜெபம் மிகவும் அருமையான சிலாக்கியம். அதை ஒருவர், ஒரேவித கருத்துக்களை திரும்பத்திரும்ப ஓயாமல் சொல்வதன்மூலம் தவறாகப் பயன்படுத்தக்கூடாது.

R5474

## நல்நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள்

கர்த்தருடைய ஜனங்கள் அனைவருமே நல்நோக்கமுடையவர்களாகவே காணப்படுவார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. நல்நோக்கங்கள் இல்லாமல், வேறானவைகளைப் பெற்றிருந்து, அவர்களால் கர்த்தருடைய அங்கீகரிப்பை எப்படிப் பெற்றிட முடியும்? சுயநலமானது உள்ளே நுழைந்து, புதுச்சிருஷ்டியினால் கண்டுபிடிக்க முடியாத சில அளவுகளில், செயல்பாட்டில் காணப்படலாம்; ஆனால் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அது கட்டுப்படுத்தப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டுக் கொல்லப்பட வேண்டும். கர்த்தருடைய பின்னடியார்களுடைய முழு ஜீவியமே - மனம் மற்றும் சரீரத்தினுடைய தனிப்பட்ட அபூரணங்கள் தொடர்பான மற்றும் மற்றவர்களுடைய வார்த்தைகள், நடத்தைக்குறித்துச் சரியாய்ப் புரிந்துகொள்ளுதல் தொடர்பான அனுபவமுடைய ஒன்றாயிருக்கின்றது.

பொதுவில் பேசுதல், அறிமுகம்பண்ணுதல், அடக்க ஆராதனைகள் முதலானவைகளில் ஈடுபடும் சகோதரரின் கவனத்திற்கு நாம் இரண்டு காரியங்களைக் கொண்டுவர விரும்புகின்றோம். எங்களுடைய யோசனைகளும், விமர்சனங்களும், அச்சகோதரர்களுக்கும், நாம் அனைவரும் ஊழியம் புரிந்திட விரும்பும் அந்தக் காரணங்களுக்கும் உதவியாக இருக்கும்படிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

(1) அடக்க ஆராதனைகள் நடந்திடும்போது, சகோதரரில் சிலர் மரணம் மற்றும் நமது இனத்தின் மீதான பாவத்தின் சம்பளம் குறித்தும், தண்டனையிலிருந்து விடுவிக்கும் மீட்பு மற்றும் உயிர்த்தெழுதல் குறித்துமான நற்செய்தியினைச் சொல்லிட வேண்டும் என்ற ஆர்வத்தில், எல்லை மீறிப்போய்விடும் அபாயங்கள் இருப்பதாக எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலசமயங்களில்

இவர்கள் நீண்ட நேரமாய்ப் பிரசங்கம்பண்ணி - அத்தகைய தருணத்திற்குத் தகுதியாய் இருப்பவற்றைக் காட்டிலும் அதிகம் பேசிடுவதற்கு முற்படுகின்றனர். இன்னும் சிலசமயங்களில் மரணம் தொடர்பான சுவிசேஷத்தின் செய்தியையும், வேதாகம விளக்கங்களையும் முன்வைத்திட வேண்டும் என்ற மிகுந்த நோக்கத்தில், துன்பத்தில் காணப்படும் இறந்திருப்பவரினுடைய குடும்பத்தின் அங்கத்தினர் களுக்கு ஆறுதலின் வார்த்தைகளையோ அல்லது இறந்திருப்பவர் குறித்தும், அவரது குணலட்சணம் குறித்தும், தேவனுக்கான அவரது வைராக்கியம் குறித்தும், வேதாகமத்தின் மீதான அவரது ஈடுபாடு அல்லது இழப்பில் காணப்படும் குடும்பத்தினரை ஆறுதல்படுத்தும் உண்மையுள்ள புகழுரை எதையேனும் குறித்தும் குறிப்பிடுவதற்கு மறந்து போய்விடுகின்றனர்.

முழுக்கப் புகழுரையினாலும் மற்றும் மரணம் குறித்த வேதாகமத்தின் போதனைகளுக்குக் கவனம் கொடுக்காமலும் காணப்படும் சாதாரணமான அடக்க ஆராதனை பிரசங்கங்கள் சரியானவை என்று எந்த விதத்திலும் தெரிவித்திடு வதற்கு நாம் விரும்பவில்லை. தெய்வீகத் திட்டம் குறித்த சில விளக்கங்கள் கொடுப்பதும், இறந்திருப்பவர் மற்றும் அவரது குடும்பத்தார் குறித்து சில விஷயங்கள் குறிப்பிடுவதுமாகிய தன்னடக்கமான வழிமுறையானது ஞானமாய் இருக்குமென நாம் யோசனையாக மாத்திரம் தெரிவிக்கின்றோம்.

(2) பொது ஊழியங்களுக்கான பேச்சாளரை அறிமுகப்படுத்திடும் சகோதரனைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் மிகுந்த கவனம் கொடுக்கப்பட வேண்டும். தவறான விதத்தில் அறிமுகம் கொடுத்திடுவதற்குப் பதிலாக, அறிமுகப்படுத்தி வைக்காமல் இருப்பதே சிறந்ததாயிருக்கும். பொது ஊழியங்களுக்கான பேச்சாளரை அறிமுகம்பண்ணிடும் தருணத்தை, ஒருவர் தன்னை மிகைப்படுத்தி, தனது பேச்சுத்திறமையை, வேதாகமம் குறித்த தனது அறிவை வெளிக்காட்டிக்கொள்வதற்குப் பொருத்தமான தருணமெனக் கருதுவாரானால், அவருக்குப் பேச்சாளரை அறிமுகம்பண்ணிடும் வேலைகள் கொடுக்கப்படக்கூடாது. தெய்வீகத் திட்டம் குறித்து, தான் அறிந்திருக்கும் அனைத்தையும் சொல்லிடுவதற்கும், கூட்டத்தாருக்குப் பேச்சாளர் என்ன சொல்லவிருக்கின்றார் என்பதை முன்கூட்டியே கூட்டத்தாருக்குத் தெரிவித் திடுவதற்குமான வாய்ப்பாக, பேச்சாளரை அறிமுகம்பண்ணிடும் தருணத்தினைக் கருதிடும் நபர் பொருத்தமற்ற நபராய் இருப்பார்; அதாவது எப்படித் துவக்க ஜெபம்பண்ணிடுவதற்கு அழைக்கப்பட்டிருக்கும் நபர் ஒருவர், ஜெபத்தைச் செய்தியாக நீட்டிச் சென்று, விலையேறப்பெற்ற நேரத்தை வீணடித்து, தனது தகுதியின்மையினால் அனைவருக்கும் வெறுப்பூட்டிப் பொருத்தமற்ற நபராய் இருப்பாரோ, அப்படியே ஆகும். பேச்சாளர் ஒருவரால் இரண்டு மணி நேரங்களில் ஏற்படுத்திடும் பாதகத்தைக் காட்டிலும், பேச்சாளரை அறிமுகப்படுத்துபவரால் இரண்டு நிமிடங்களில் அதிகமான பாதகத்தினை ஏற்படுத்திட முடியும்.

தாழ்மையும், தன்னடக்கமும் மற்றும் சுருக்கமாய்ப் பேசுதல் என்பவைகள்

எவ்விடத்தில் காணப்பட்டாலும் அவை பிரம்மாண்டமான பண்புகளாக இருக்கின்றன, ஆனால் புதிய வகுப்புகளை உருவாக்கும் கூட்டங்களிலும், பயண ஊழியர்களின் வருகையின் போதான கூட்டங்களிலும் அல்லது வேறு ஏதாவது கூட்டங்களிலும் பேச்சாளரை அறிமுகம் செய்திடுபவருக்கு இவை விசேஷமாய்த் தகுதியான பண்புகளாய் இருக்கும்.

இம்மாதிரியான தருணங்களில், ஜெபம் ஏறெடுக்கின்றவர், ஜெபத்தினை வேண்டுதலாக மாத்திரம் ஏறெடுத்திட வேண்டும். அவர் ஜெபம்பண்ணுவதைக் கேட்பதற்காகக் கூடியிருப்பவர்கள் கூடிவரவில்லை, மாறாக பிரசங்கத்தைக் கேட்கவே வந்திருக்கின்றனர். அவரது ஜெபத்தில் அவ்வேளைக்கான சிலாக்கியத்திற்காகவும், நம்முடைய நாட்களில் அருளப்பட்டிருக்கின்றதான சுயாதீனத்திற்காகவும், சத்தியத்தை அறிந்துகொள்வதற்குரிய இருதய வாஞ்சைக்காகவும், திறக்கப்பட்ட வேதாகமத்திற்காகவும் தேவனுக்கு நன்றி ஏறெடுத்திட வேண்டும். கூட்டத்திலும், கூட்டத்தார் மீதும், பேச்சாளர் மீதும் தெய்வீக ஆசீர்வாதங்கள் கடந்துவருவதற்கும் மற்றும் கர்த்தருடைய நாமமானது மகிமைப்படுவதற்கும், சத்தியமானது மேலானதாகக் காணப்படுவதற்கும், நீதியினை விரும்புபவர்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் என்று விண்ணப்பங்கள் கர்த்தரிடத்தில் ஏறெடுக்கப்பட வேண்டும்.

அறிமுகம் செய்தல் சுருக்கமாய் இருத்தல் வேண்டும். கூட்டத்தாருக்கும், கூட்டத்தாரில் போதகர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணுகிற சிறுகூட்டத்தாருக்கும் இடையில் வேறுபடுத்திக் காண்பிக்கும் விதமாக, "நாங்கள் நம்புபவற்றைப் பேச்சாளர் உங்களுக்குச் சொல்லிடுவார்" என்று சொல்லிடக்கூடாது. மிகுந்த தாழ்மையுடன், "மதிய வேளைக்கான பேச்சாளரை அறிமுகப்படுத்திடுவது எனக்கான சிலாக்கியமாகவும், கனமாகவும் காணப்படுகின்றது. அவர் International Bible Students Association சார்பாக நமக்கு வந்துள்ளார் மற்றும் வேதவார்த்தையிலிருந்து செய்தி ஒன்றினைக் கொண்டுவந்திருக்கின்றார் என்று நாம் நம்புகின்றோம். அது திருப்திகரமாகவும், உற்சாகமூட்டுகிறதாகவும், உதவிகரமாகவும் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம். நாம் சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படுவோம் என்றும், அவரது வசனமே சத்தியம் என்றுமுள்ள ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவில்கொண்டு, செய்தியை யதார்த்தமாய்க் கேட்போமாக. நம்முடைய இருதயங்களுடைய செவிகளினால் கர்த்தருடைய வார்த்தையானது கேட்கப்படும் அளவுக்குத்தக்கதாக நாம் களிகூருவோமாக. இப்பொழுது சகோ________________அவர்களை இதோ உங்களுக்கு அறிமுகம் பண்ணிடுகின்றேன்; இத்தருணத்திற்கான அவரது தலைப்பு________________ ஆகும்" என்பது போன்று காணப்பட வேண்டும்.

---

சமீபத்தில் நாங்கள் பெற்றுக்கொண்ட ஒரு கடிதத்தில், சகோதரர் டி.பி.ஜாக்சன் அவர்கள், நான்குபேர் தன்னுடைய இல்லத்தில் கூடிவந்து, நினைவுகூருதலில் பங்கெடுத்ததைத் தெரிவித்தப் பிற்பாடு, பின்வருபவைகளையும் எழுதியுள்ளார்:

இங்குள்ள எங்களது சிறு ஐக்கியத்தினுடைய கவனத்திற்குச் சமீபமாக வந்துள்ள சில காரியங்களை உங்கள் கவனத்திற்குள் கொண்டுவந்திட நான் விரும்புகின்றேன், அது பின்வருமாறு:

இங்குள்ள சகோதரரில் ஒருவர், M________ என்ற இடத்திலுள்ள சபைக்கு, ஏப்ரல் 5-ஆம் தேதி போய், கர்த்தருடைய இராப்போஜனத்தினை ஆசரித்திட உதவும்படிக்கு வேண்டுகோள் விடப்பட்டது. இது B________ என்ற இடத்திலுள்ள தனது சொந்த கூடுகையில் தான் கலந்துகொள்ள முடியாமல் செய்திடும் என்பதினால், அதுவும் இங்கு இரண்டு குடும்பத்தார் மாத்திரமே காணப்படுகின்றார்கள் என்பதினால், அச்சகோதரன் மறுப்புத் தெரிவித்துவிட்டார். Y__________என்ற இடத்திலுள்ள 'A' என்ற சகோதரன், வேண்டுகோளுக்கு இணங்கி, M__________என்ற இடத்திலுள்ள சபையாரிடத்திற்குச் சென்று, அவர்களுக்கு நினைவுகூருதல் இராப்போஜனத்தை ஆசரித்திட உதவும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றார் மற்றும் இதைப்போன்ற காரியத்திற்காகச் சகோதரர் 'M' - அவர்கள் N__________ என்ற இடத்திலுள்ள சபையாரிடத்திற்குச் செல்கின்றார்.

M__________என்ற இடத்திலுள்ள சபையாரிடத்திற்கு வரும்படியான வேண்டுகோளுக்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் நிமித்தம் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது; ஆனால் மேலும் சிந்தித்துப் பார்த்ததில், சபையின் அங்கத்தினர்கள், நினைவுகூருதல் ஆசரிப்பிற்காய் உதவிடும்படிக்கு மற்றச் சபையாருடைய வழிநடத்துபவர்களையும், முதன்மையான அங்கத்தினர்களையும் அழைக்கும் பழக்கத்தை வைத்துக்கொள்வது பின்வரும் காரணங்களினிமித்தம் ஞானமாய் இராது என்று எங்களுக்குத் தோன்றியது; காரணங்கள் பின்வருமாறு:

(1)பஸ்கா என்பது குடும்ப ஆசரிப்பாகும். இது கர்த்தருடைய இராப்போஜனமானது விசேஷித்த ஆடம்பரமாய்க் காண்பித்துக்கொள்ளும் தருணமாக்கப்படக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

(2)அப்போஸ்தலர் காலங்களில், தங்களுக்கு நினைவுகூருதல் ஆராதனையை நடத்தித் தருவதற்காய், மூப்பர் ஒருவர் வந்து ஊழியம்புரியும்படிக்கு, ஒரு சபையார் இன்னொரு சபையாரிடம் வேண்டிக்கொள்ளும் வழக்கம் காணப்பட்டதாக நமக்கு எந்தப் பதிவுகளுமில்லை.

(3) விசுவாச துரோகம் நடந்திட்டதான சபைகள் யாவற்றிலும் கர்த்தருடைய இராப்போஜனத்தை மையமாகக் கொண்டுதான் குருமார் வகுப்பினர், மோசமான அநேகம் குருமார் சார்ந்த கொள்கைகளை ஏற்படுத்தினார்கள். இதை இன்றைய

நாட்களில் காணப்படும் புரோட்டஸ்டண்ட் குருமார் வகுப்பினர், சாதாரணமான வகுப்பார் மீதான குருமார் வகுப்பாரின் முக்கியத்துவத்தினைப் பெரிதும் மிகைப்படுத்திடுவதற்கான வழிவகையாகப் பெற்றிருக்கின்றனர். கடந்த பனிகாலத்தின்போது, Kentucky-யிலுள்ள Louisville-யின் Presbytery சபையானது, பாதிரி - "நியமிக்கப்பட்ட ஊழியக்காரன்" இல்லாமலேயே சபையின் சாதாரண அங்கத்தினர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிப்பது சரியே என்று போதித்ததற்காக ஊழியக்காரர் ஒருவரைச் சபை நீக்கம் செய்துள்ளது.

(4) கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்க வந்து, உதவும்படிக்கு ஒரு சபை இன்னொரு சபையாரிடத்தில் "வழிநடத்துபவரை," "மூப்பரை" அல்லது முதன்மை வகிக்கும் அங்கத்தினனை அனுப்பும்படிக்கு வேண்டிக்கொள்ளும் பழக்கமானது, ஆதிசபையின் சீர்க்குலைவுக்குக் காரணமாய்க் காணப்பட்டதான கிறிஸ்தவ குருமார்கள் மீதான பற்று ஆர்வத்தின் மற்றும் குருமார் உரிமை கோட்பாட்டின் - அதே ஆவியின் நுணுக்கமான துவக்கமாய் இருக்குமல்லவா? இவ்வழக்கமானது - இந்த ஆசரிப்பை ஆசரிப்பதற்கெனத் தொலைவில் உள்ள சபைக்குச் சென்று உதவும்படிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட வழிநடத்துனனின் மனதை பெரு மகிழ்வுணர்ச்சிக்கொள்ளச்செய்வதற்கு ஏதுவானதல்லவா? மற்றும் ஆசரிப்பை நடத்திடுவதற்கு "வழிநடத்துபவர்களை" மற்றும் "மூப்பர்களைப்" பெற்றிருப்பது அவசியம் அல்லது பயனள்ளது அல்லது முக்கியமுமானது என்ற எண்ணத்தினை அங்கத்தினர்கள் மனதில் உருவாக்கிடுவதற்கு மாத்திரமல்லாமல், தங்கள் சபையின் சொந்த மூப்பரானவர், தொலைவிலுள்ள சபையிலிருந்துவரும் ஒருவரால், இந்த முக்கியமான கடமையின் விஷயத்தில் வலுவூட்டப்படுவதற்கு வெளியிலிருந்துவரும் வழிநடத்துனனின் பங்கு மிகவும் அவசியமாய் இருக்கின்றது என்றுமுள்ள எண்ணத்தினை, அங்கத்தினர்கள் மனதில் உருவாக்கிடுவதற்கு ஏதுவானதல்லவா? தங்களுக்குப் பழக்கப்பட்டிருக்கும் அயலானைக்காட்டிலும், தொலைவிலிருந்து வரும் ஒரு மனுஷனை "பெரிய" மனுஷனாகக் கருதிடுவது, மனுஷீக சுபாவத்தினுடைய பெலவீனமாய் இருக்கின்றது.

(5)சபையில் நற்கருணை ஆராதனையை நடத்திடுவதற்குப் பாஸ்டருக்கு உதவியாக இருக்கும்படிக்கு சமீபமாகக் காணப்படும் சபையிலிருந்து பாதிரி ஒருவரை அழைத்துக்கொள்ளும் வழக்கமானது பிரஸ்பைடீரியன் சபைகளில் சகஜமான ஒரு காரியமாகும் மற்றும் இது ஆசரிப்பின்போது பாதிரி காணப்படுவதின் முக்கியத்துவத்தை உயர்வாய்க் காண்பிக்கும் பொருட்டுச் செய்யப்படுவதாகத் தெரிகின்றது மற்றும் இவ்வழக்கம் அறுவடை காலத்தின்போதான கர்த்தருடைய தாழ்மையுள்ள பின்னடியார்களினால் கைக்கொள்ளப்படுவதைப் பார்க்கிலும், தடைப்பண்ணப்படுவதே கனத்திற்குரியதாய் இருக்குமல்லவா?

கிறிஸ்தவ மதக்குருப் பற்று ஆர்வம் மற்றும் பிரிவினை வெறி மற்றும் குறுகிய நோக்கத்திற்கான சோதனைகளானது, நமக்கான சோதனைகளிலேயே மிகவும்

சாதுரியமான, "பிசாசின் தந்திரங்களிலேயே" மிகவும் வஞ்சகமான சோதனைகளாகக் காணப்படுகின்றது என்று நான் எண்ணுகின்றேன். வரும்படி அழைப்பு விடுத்தவர்களும், அழைப்பினை ஏற்றுக்கொண்டவர்களுமான இந்தச் சகோதரர்களானவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி நல்நோக்கத்திலேயே இதைச் செய்துள்ளனர் மற்றும் இந்த நடைமுறையில் அபாயம் ஏதேனும் காணப்படுமோ என்று கொஞ்சமும் எண்ணிப் பார்க்காதவர்களுமாய்க் காணப்பட்டுள்ளனர் மற்றும் என்னுடைய முதலாம் அபிப்பிராயத்தின்படிதான் நான் இவற்றை உறுதிப்படுத்தியுள்ளேன் மற்றும் இந்தப் பழக்கத்தில் அபாயம் காணப்படுகின்றது என்றும், "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல - தீங்கற்றதாய்த் தோற்றமளிக்கின்றதும் மற்றும் பக்திவிருத்திக்கு ஏதுவான நடைமுறையாகத் தோற்றமளிக்கிறதுமான இந்தப் பழக்கத்தினால் - மனமானது கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்றும், எளிமையினின்றும் விலகும்படி கெடுக்கப்படுமோவென்றும்" பயந்திருக்கிறேன். இதைக்குறித்து நீங்கள் ஆழ்ந்து, ஜெபத்துடன் சிந்திப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

இன்னுமாக இவ்வழக்கமானது பரவலாகிக் கொண்டிருக்கின்றதா என்றும் நான் அறியவிரும்புகின்றேன். இந்தப் பக்கத்திலுள்ள கிட்டத்தட்ட அனைத்துச் சபைகளிலும் இது நடந்துள்ளதாகத் தெரிகின்றது. இப்படித்தான் மற்ற அநேக இடங்களிலும் காணப்படுகின்றதா அல்லது இங்குள்ள இடத்தில் மாத்திரம் இப்படிக் காணப்படுகின்றதா என்பதை அறிந்துகொள்வதும் சுவாரசியமாய் இருக்கும். ஒருவேளை அநேகம் சபைகளில் நடந்துள்ளதெனில், இது சீர்த்திருத்தப்பட்ட சபைகளில் "அக்கிரமத்தின் இரகசியத்தினுடைய" முளைகளைச் சத்துரு நடுவதற்கான பொருத்தமான தருணமாய் இருக்கும்; ஏனெனில் ஒருவேளை இப்பழக்கம் பரவலாகிடும்போது, அதிகம் ஒதுங்கிக் காணப்படும் மற்றும் குறைவான தாலந்துள்ள அங்கத்தினர்கள் தங்களைக் காட்டிலும் இந்த "வழிநடத்துபவர்களே" நினைவுகூருதல் ஆசரித்தல் தொடர்புடைய விஷயத்தில் அதிகம் பங்காற்ற வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்று நிச்சயமாய் எண்ணிடுவார்கள் மற்றும் காலப்போக்கில் மூப்பர்கள் மற்றும் அங்கத்தினர்களுக்கு இடையிலான வேறுபாடானது, இறுதியில் குருக்கள் வகுப்பார் என்பவர்கள் தனித்துத் தெரியும் அளவுக்கு, விரிவடைந்துவரும்.

தங்கள் உண்மையுள்ள,
டேவிட் பி. ஜாக்சன்.

* * * * * * *

மேலே கடிதத்தில் இடம்பெறும் இந்த நண்பர்கள் எவரும், "குருக்கள்/பாதிரிகள் கோட்பாட்டினை" ஊக்குவிப்பதற்குக் கொஞ்சமேனும்

எண்ணம் கொண்டிருக்கவில்லை என்று நாம் ஊகிக்கின்றோம். அழைப்பு விடுத்ததான சபைகளானது, இந்த வருடத்தில் முதல்முறையாக நினைவுகூருதலை ஆசரித்துள்ளார்கள் என்று நாம் எண்ணுகின்றோம் மற்றும் அதிக அனுபவமிக்க யாரேனும் அவற்றைத் துவங்கிவைப்பது சரியே. இது தவிர கடிதத்தில் குறிப்பிடப்படும் அந்தச் சிறுசிறு கூடுகைகளானது Y________என்ற இடத்திலுள்ள சகோதரர்களின் பிரயாசத்தினால் கூட்டிச் சேர்க்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்; Y________என்ற இடத்திலுள்ள சகோதரர்கள்தான் சுவிசேஷகர்களாக, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தவர்களாகவும் இருக்கின்றனர். ஆகையால் இவர்கள் தாங்கள் சத்தியத்தினை ஏற்கெனவே யாருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்களோ, அவர்களோடுகூடி, அவர்களுக்கு நினைவுகூருதல் இராப்போஜனத்தின் ஆசரிப்பை அறிமுகப்படுத்துவது முற்றிலும் சரியானதேயாகும்.

எனினும் திருச்சபையினுடைய குருமாருடைய பிளவுள்ள குழப்பங்களுக்கு எதிராகவும், கர்த்தருடைய ஜனங்களைப் பிரித்திடும் அல்லது நமது அருமை மீட்பரினால் பரஸ்பரமான முறையில் நமக்கு அருளப்பட்டதான சுயாதீனங்களை அடக்க முற்படும் எல்லாவற்றிற்கு எதிராகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியதன் அவசியம் தொடர்புடைய விஷயத்தில் நாம் சகோதரர் ஜாக்சன் அவர்களோடு முற்றிலுமாய் ஒப்புக்கொள்கின்றோம். இந்த ஓர் ஆசரிப்பின் விஷயத்திலும் அல்லது மற்றத் தருணங்களிலும், யார் கர்த்தருடைய ஜனங்களுக்காக ஊழியம் புரிந்திடலாம் என்பதற்குத் தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது - அதாவது மன, ஒழுக்க, சரீர அல்லது ஆவிக்குரிய தகுதியாகும். இக்கடிதத்தினை நாம் வெளியிடுவதற்கான காரணம், அதன் அநேகம் கருத்துகள் நன்றாய் உள்ளது. பஸ்கா என்பது ஒரு குடும்பக்காரியமாகும் மற்றும் இதனிடத்தில் பிற்பாடு இடம்பெறும் நினைவுகூருதல் இராப்போஜனமும்கூட ஒரு குடும்பக் காரியமாகும்; ஆனால் அது பூமிக்குரிய குடும்பம் சம்பந்தப்பட்டதாக இல்லாமல், கர்த்தருடைய குடும்பமாகிய, "விசுவாச வீட்டார்" சம்பந்தப்பட்டதாய் இருக்கின்றது.

---

# நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு

நினைவுகூருதல் இராப்போஜனம் ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்தில் ஆராதனை ஒழுங்குமுறை என்னவென்று சகோதரன் ஒருவர் கேட்டு எழுதியுள்ளார் மற்றும் இது அநேகர் அறியவிரும்பும் காரியமாய் இருப்பதினால், நம்முடைய பதிலின் ஒரு பகுதியை இங்குப் பின்வருமாறு வெளியிட்டுள்ளோம்:

ஆராதனை/கூட்டம் துவங்கின பின்பு, அங்கிருக்கும் தகுதி வாய்ந்த ஒருவர் இக்கட்டளையினுடைய முக்கியத்துவம் குறித்துச் சிறுபிரசங்கம் பண்ணுவாராக. அடுத்து அடையாளங்களினுடைய முக்கியத்துவம் குறித்துப் பிரசங்கம் பண்ணும்விதமாக அப்பத்தைப்பற்றி துவங்கி, அது எதை அடையாளப்படுத்துகின்றது என்று தெரிவித்து, சூழ்நிலைக்கேற்ப விரிவாக அல்லது சுருக்கமாக, அங்குச் செய்யப்படுகிறவைகளின் உண்மையான அர்த்தத்தினை முன் வைத்திடுவதற்கு முயல்வாராக. கர்த்தர் நினைவுகூருதலை நிறுவினபோது, அவர் முதலாவதாக ஸ்தோத்திரித்தார் என்று குறிப்பிடுங்கள். பின்னர் ஒன்றில் நீங்களே ஸ்தோத்திரம் செலுத்துங்கள் அல்லது அங்கிருக்கும் வேறு யாரையாகிலும் ஸ்தோத்திரம் செலுத்த சொல்லுங்கள்; பின்னர்ப் பின்வரும் வார்த்தைகள் சிலவற்றைச் சொல்லுங்கள்:- பஸ்கா இராப்போஜனத்தை, நிழலான ஆட்டுக்குட்டியினைப் புசித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் "அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக்கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். வார்த்தைக்குப் பொருத்தமாக, அப்பத்தைப் [எபிரெயர்களிடமிருந்து வாங்கின புளிப்பற்ற அப்பத்தை (அ) புளிப்பற்றவைகளான சோடா ரொட்டி/பிஸ்கோத்து (Soda Biscuits)] பிட்டுக்கொள்ளுங்கள் மற்றும் கூட்டத்தினுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அதைப் பரிமாறுகிறவர்களின் கைகளில் கொடுங்கள் (அ) நீங்களே பரிமாறுங்கள்.

தியானத்திற்கென்று கொஞ்சம் நேரம், அமைதியாக விடப்படுவது ஏற்றது என்று நாம் எண்ணுகின்றோம். பின்னர்ப் "பாத்திரமானது" அடையாளப்படுத்துகின்ற காரியத்திற்காக யாரேனும் ஒருவர் ஸ்தோத்திரம் செலுத்துவாராக. அடுத்துச் சொல்ல வேண்டியதாவது, "அவர் அந்தப்படியே, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார்." [ஒன்றில் grape juice/திராட்சப்பழச்சாற்றை அல்லது திராட்சப்பழச்சாற்றுடன் மிகக் கொஞ்சமான (wine) திராட்சரசம் மற்றும் சர்க்கரைக் கலவையைப் பயன்படுத்துவது சிறந்தது என்று நாம் அறிவுறுத்துகின்றோம்; திராட்சரசம்/wine சேர்க்கையில், அதன்/alcohol வாசனையோ/சுவையோ கண்டுபிடிக்கமுடியாத அளவுக்கு மிகவும் சிறிய அளவில் பயன்படுத்தப்பட

வேண்டும். இப்படிச் செய்வது என்பது கடந்த காலங்களில் மதுபானங்கள்மீது பிரியம் கொண்டிருந்தவர்களுக்குப் பாதுகாப்பாய்க் காணப்படும்]. இந்த அடையாளச் சின்னத்தைப் பரிமாறின பிற்பாடு, மீண்டுமாக அமைதியாய்ச் சிந்தனை செய்யத்தக்கதாகக் கொஞ்சம்நேரம் விடுங்கள் மற்றும் அடுத்துக் கூறவேண்டியதாவது: "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பிற்பாடு, புறப்பட்டுப்போனார்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. நாமும் இப்படியாகவே செய்வோமாக. அந்த முக்கியமான இரவில், கர்த்தரைக் கெத்செமனே தோட்டத்தினிடத்திற்கும், சீஷர்களோடு அவர் ஜெபம் பண்ணினதையும், விழித்திருந்து ஜெபம்பண்ணும்படிக்கு எச்சரித்ததையும், அவர் காட்டிக் கொடுக்கப்பட்டதையும், கைது செய்யப்பட்டதையும், விசாரிக்கப்பட்டதையும், சிலுவையில் அறையப்பட்டதையும் குறித்துச் சிந்தையில் பின்தொடர்ந்திடுவோமாக.

பிரசங்கம் பண்ணிடுவதற்கு/செய்தி கொடுப்பதற்குப்பதிலாக, ரீப்பிரிண்ட்ஸ் 1289 மற்றும் 1786-லிருந்து வாசிப்பது சில சமயங்களில் நலம் பயக்கின்றதாய்க் காணப்படும்.

---

R5255

## பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக்கூட்டங்கள்

பெரோயா ஆராய்ச்சி வகுப்புகள் மற்றும் சாட்சிக்கூட்டங்களின் மகா முக்கியத்துவத்தைப் பற்றின சரியான புரிந்துகொள்ளுதலுக்குள்ளாக வரத்தக்கதாக, பயண ஊழியர்கள் தாங்கள் சந்திக்க வாய்ப்புப் பெற்றுக்கொள்ளும் வெவ்வேறு சபையாருக்குத் தங்களாலான உதவியினைச் செய்யும்படிக்கு நாம் பயண ஊழியர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளோம். இப்படியாக நாம் ஆலோசனை வழங்கியும், வேதாகமப் பாடங்களின் ஆறாம் தொகுதியில், இவற்றை விவரித்தும்கூட, அருமையான நண்பர்களில் சிலர், இவற்றை முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்பதாகத் தோன்றுகின்றது. இதற்குக் காரணம், அவர்கள் அவற்றை முறையாய் நடத்தப்படுவதை ஒருபோதும் கண்டதில்லை என்று நாம் எண்ணுகின்றோம். எங்கு நல்ல பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளும், சாட்சிக்கூட்டங்களும் சரியாய் நடத்தப்படுகின்றதோ, அங்குப் பிரசங்கங்களைக்

கேட்பதற்கு வாய்ப்பு இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், நிச்சயமாய் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சிக் காணப்படும்.

பயண ஊழியர்களாகிய சகோதரர்கள் - மிகவும் கவனத்தோடும் மற்றும் அவர்கள் கிறிஸ்தவ அனுபவங்களினால் நன்கு வனையப்பெற்றவர்களாகவும், பெரோயா ஆராய்ச்சிகளையும், சாட்சிக் கூட்டங்களையும் நடத்துவதில் அனுபவமுள்ள வர்களாகவும் இருக்கின்றார்கள் என்கிற எண்ணத்தோடும் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். ஆகையால் ஒரு பயண ஊழியக்காரர் இப்படியான கூட்டம் நடத்தப்படாத ஓர் இடத்திற்குப் போகையில், சுவாரசியமான விதத்திலும், பிரயோஜனமான விதத்திலும், ஆறாம் தொகுதியில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட வைகளுக்கேற்ப எப்படி இத்தகையக் கூட்டங்கள் நடத்தப்படலாம் என்பதற்கான மாதிரிகளைக் கொடுத்திடு வதின்மூலம், நண்பர்களுக்குச் சிறப்பாய் ஊழியம் புரிந்திடலாம் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது.

எங்கெல்லாம் இத்தகைய கூட்டங்களானது ஏற்கெனவே நடைமுறைப் படுத்தப்பட்டு மற்றும் ஆர்வமுள்ளவர்களால் கலந்துகொள்ளப்பட்டு வருகின்றதோ, அங்குப் பயண ஊழியர்கள் மாதிரி கூட்டங்களை நடத்திக் காண்பிக்க அவசியமில்லை. எனினும் ஓர் இடத்தில் அவர்கள் ஒரு மாலைக் கூட்டத்திலும் மற்றும் வழக்கமாய் நடைப்பெற்றுவரும் மாலை நேர சாட்சிக்கூட்டத்திலும் பங்கெடுக்க வாய்ப்பு ஏற்படும்போது, பயண ஊழியர் ஆறாம் தொகுதியின் அடிப்படையில் சாட்சிக் கூட்டத்தினை நடத்தி, ஒரு மணி நேரத்தில் முடித்துவிட்டு, பின்னர்ச் சபையாருக்கு மிகவும் உதவிகரமாய்க் காணப்படும் விதத்தில் காலம், இடம் மற்றும் சூழ்நிலைக்கேற்ப கூடுதலாக அரை மணி நேரம் எடுத்து மனம்விட்டுப் பேசுவது நலமாய் இருக்கும். பொதுவில் பேசுகிற சகோதரர்கள் யாவரும் தங்கள் செய்தியினை 60-நிமிடங்களுக்குள்ளாக முடித்துக்கொள்ளவும் மற்றும் கண்டிப்பாக 70-நிமிடங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் நாம் வலியுறுத்தியுள்ளோம் மற்றும் ஏதேனும் காரணத்தினால் அவர்கள் பேசிடுவதற்கு இதற்குமேல் நேரம் எடுப்பார்களானால், அந்தக் குறிப்பிட்ட காரணங்களை அவர்கள் எங்களுக்குத் தயவாய் விவரிப்பார்களாக.

இது சகோதரர்களைத் தடைப்பண்ண வேண்டும் என்பதற்காக இல்லாமல், மாறாக நீண்ட நேர செய்திக்கொடுப்பது என்பது ஜனங்களுக்குக் கடினமாகக் காணப்படும் மற்றும் இது நாம் ஊழியம் புரிந்திட நாடுகின்றதான கர்த்தருடைய

காரணங்களுக்கு இடையூறுபண்ணுகின்றதாய் இருக்கும் என்பதினாலேயே ஆகும். இதற்கு விதிவிலக்கு, இரண்டு அல்லது மூன்று சகோதரர்கள் வழக்கமாய்க் கொண்டிருக்கும் தொடர்க் கூட்டங்களாகும்; ஏனெனில் ஜனங்களைக் கொண்டுவருவதற்கென விசேஷித்தப் பிரயாசங்கள் ஏறெடுக்கையில், இதற்குக் கொஞ்சம் கூடுதல் நேரம் தேவைப்படும்; மேலும் விசேஷமாகக் சுவாரசியமாய்ப் பேசக்கூடிய பேச்சாளர்கள் நீண்ட நேரச் செய்திக்கொடுப்பது ஞானமான காரியமாகும். சராசரியான பேச்சாளனால், இரண்டு மணி நேரங்களில் செய்வதைக் காட்டிலும், ஒரு மணி நேரம் எடுத்துக்கொள்ளும் போதே அதிக நன்மை உண்டுபண்ணிடலாம்.

இந்த ஆலோசனைகளிலும் மற்றும் அனைத்து ஆலோசனைகளிலும் மற்றும் ஒழுங்குகளிலும், கர்த்தரை மகிமைப்படுத்துவதும், அவரது ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதும்தான் எங்களது நோக்கமாகவும், குறிக்கோளாகவும், விருப்பமாகவும் காணப்படுகின்றது என்று நீங்கள் உறுதியாக எடுத்துக்கொள்ளலாம்.

---

## பாகம் - 8

# பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

**[WHAT PASTOR RUSSELL SAID]**

## (Q102:1) சபை - மூப்பர்களுக்குக் கீழ்ப்படிதல்.

கேள்வி (1909)-1- மூப்பர் ஒருவரால் ஆலோசனையாகத் தெரிவிக்கப்படும் ஜெபத்திற்கான ஒழுங்குமுறையினை நாம் ஏற்றுக்கொள்வதற்கு, கீழ்ப்படிதலின் கொள்கையானது நம்மை வழிநடத்திடுமா?

பதில் - சபை ஒழுங்குமுறையின் விஷயத்தில், நாம் ஒன்றுகூடி ஆராதனை பண்ணுகையில், சபையாரின் ஏற்பாடுகளுக்கு நம்மை நாம் கீழ்ப்படுத்துவது நமக்கு மிகவும் ஏற்றகாரியமாக இருக்கும். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாக நாம் காணப்படுவோமானால், கூட்டத்தினுடைய (meeting) முறைமை என்னவாகக் காணப்பட வேண்டும் என்று நாம் சொல்ல வேண்டியவர்களாய் இருப்போம் மற்றும் மூப்பர் இல்லாமல் இருக்கும்போது கூட்டத்தினுடைய முறைமை என்னவாகக் காணப்படவேண்டும் என்று ஒன்றுகூடி ஆராதிப்பவர்கள் சொல்லிடுவதும் தகுதியானதாகும். ஒருவேளை மூப்பர் கலந்துகொள்ள முடியாத தருணங்களில், யார் கூட்டத்தை நடத்திட வேண்டும் என்று மூப்பர் கூறிடுவதும் தகுதியானதே மற்றும் மூப்பரினால் நியமிக்கப்பட்டவர், "ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளுக்கு ஏற்ப, முடிந்தமட்டும் அன்புடன் மூப்பரின் கருத்துகளுக்குக் கீழ்ப்படிந்திடுவதும் தகுதியானதேயாகும். உதாரணத்திற்குச் சகோ. ஷெர்மன் அவர்கள் கூட்டத்தைத் துவக்கிவைத்து, "பாடல் பாடிட நாம் அனைவரும் எழும்பிடுவோமா?" என்று கூறுவாரானால், "நாங்கள் எழும்ப வேண்டும் என்று எங்களுக்குச் சொல்லிட உமக்கு சுதந்திரம் தந்தது யார்?" என்று கேட்பதற்குப் பதிலாக, நாம் எந்தச் சரீர பலவீனங்களையும் பொருட்படுத்தாமல், எழும்பிட வேண்டும். உதாரணத்திற்கு யாரேனும் "ஜெபிப்பதற்கென்று நம்முடைய தலைகளைத் தாழ்த்திடலாமா? என்கிறபோது, ஒருவர்: "நான் ஜெபிக்கும்போது எழும்பி நிற்கும் பழக்கமுடையவன். நான் எழும்பி நிற்க போகிறேன்" என்று சொல்வதற்குப் பதிலாக இசைந்திட வேண்டும். மனசாட்சி சம்பந்தப்படாத காரியங்களில் எல்லாம் இசைந்துபோவதற்கு விருப்பம் கொண்டிருப்பது நல்லதாகும். கர்த்தருடைய ஜனங்கள் அதிகளவில் எதிர்த்துப்போராடும் மனப்பான்மையைப் பெற்றிருப்பார்கள் மற்றும் இந்தத் தன்மையை நாம் பெற்றுக்கொள்ளாதவரையிலும், நாம் ஜெயங்கொண்டவர்களாக முடியாது. ஆனால் இத்தன்மையானது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் படவில்லையெனில், இது நம்மைச் சண்டையிடுகிறவர்களாகவும், ஒத்துப்போகச் சிரமமானவர்களாகவும், அனுசரித்துப்போகக் கஷ்டமானவர்களாகவும் ஆக்கிவிடும். நியாயமான ஒவ்வொரு ஒழுங்குகளுக்கும் நம்மால் முடிந்தமட்டும் நாம்

கீழ்ப்படிந்திட வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உரிமைகளையும், சித்தங்களையும் செயல்படுத்திக் கொண்டிருப்பார்களானால், எப்போதுமே குழப்பம் காணப்படும். நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருப்பது நல்லதே; நம்மைக் கீழ்ப்படுத்துவதற்குக் கற்றுக்கொள்வதும் நல்லதே - ஆனால் விஷயம் மனசாட்சி சம்பந்தப்பட்டதாக இருக்கையில், மனசாட்சியினை நாம் மீறாதபடிக்கு, அந்த மனசாட்சிக்கு இசைவாக நிற்பதற்குப் போதுமான தைரியத்தையும் மற்றும் திடமனதையும் நாம் கொண்டிருக்க வேண்டும். மனசாட்சி சம்பந்தப்படாத அநேக காரியங்கள் உலகத்தில் காணப்படுகின்றது.

## (Q103:1) சபை - தேவன் அங்கத்தினர்களை ஏற்படுத்துகின்றார்.

கேள்வி (1909)-1- 1 கொரி 12:28-ஆம் வசனத்தில் . . . "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும்; இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும்; மூன்றாவது போதகர்களையும்; . . . ஊழியங்களையும், ஆளுகைகளையும் ஏற்படுத்தினார்" என்று நாம் வாசிக்கின்றோம். யார் இந்த ஆளுநர்கள் மற்றும் எந்தளவுக்கு இவர்கள் ஆளுகை செய்வார்கள்?

பதில் - ஆளுநர்கள் என்பதாக வசனம் குறிப்பிடுகிறதில்லை, மாறாக ஆளும் பிரமாணம்/விதிமுறை, ஒழுங்குமுறை அல்லது சட்டம் என்றே குறிப்பிடுகின்றது. முழுச்சபையாரும் தேவனுடைய வார்த்தைகளின் வழிகாட்டுதலில், கூட்டங்களை நடத்திடுவதற்குரிய முறையான ஒழுங்குமுறைக்கடுத்த சில விதிமுறைகளை அங்கீகரிக்கின்றனர். தேவனுடைய பிள்ளையாகவும், கர்த்தருடைய வழியில் வளர்ந்துகொண்டிருப்பவனாகவும் காணப்படும் ஒவ்வொருவனும், கிறிஸ்துவின் சபையிலுள்ள சில ஒழுங்குமுறைகளிலுள்ள ஞானத்தைக் கண்டுகொள்ளும் நிலைக்கு வந்தாக வேண்டும். சபைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதான ஒழுங்குமுறைகளையும், விதிகளையும் அங்கீகரித்திட விரும்பிடாத எவனும், இவ்விதத்தில் கலகவாதியாக இருப்பான். இந்தத் தேசம் அல்லது இந்தப் பட்டணத்தினுடைய சட்டங்களில் நாம் நம்பிக்கை வைத்திருக்கின்றோம். சட்டங்களோ அல்லது விதிகளோ இல்லாமல் இருப்பதைவிட, அவைகள் பூரணமற்றவைகளாக இருப்பினும், அவைகளில் சிலவற்றைப் பெற்றிருப்பது சிறந்ததாகும். மிக அநேக பிரமாணங்களும் மற்றும் ஒழுங்குமுறைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும் இருக்கக்கூடுமென நாம் ஒப்புக்கொள்கின்றோம்; எனினும் கர்த்தருடைய சபையானது, தேவன் கொடுக்கிற சுயாதீனத்தைக்குறித்து அறிந்துகொள்வதற்கும் மற்றும் உணர்ந்துகொள்வதற்கும் மற்றும் அதைப் பயன்படுத்திடுவதற்கும் நாடிட வேண்டும் - அனைத்துமே நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு சபையாருக்கும் நன்மையாய்க்

காணப்படும் அளவுக்குத்தக்கதான சுயாதீனம் காணப்பட வேண்டும் என்பதே ஒவ்வொரு சபையாருடைய நோக்கமாகக் காணப்பட வேண்டும். ஆகையால் தேவனே சபையில் ஒழுங்குமுறையினை நிலைநாட்டினவர் என்று நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

**(Q103:2) சபை - ஒரு சபையார் மத்தியில் பிரச்சனை.**

கேள்வி (1910)-2- சபையில் இரு சகோதரர்களுக்கிடையே சில சிறு கசப்புகள் ஏற்பட்டிருக்க மற்றும் அவர்கள் ஒருவருக்கொருவர் பேச மறுத்துக் காணப்படுகையில், அவர்கள் சரியான உறவுநிலையில் இல்லை என்பது சபையார் யாவருக்கும் தெரிந்திருக்க, இப்படியான சூழ்நிலையில் மூப்பர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அவர்கள் இக்காரியத்தை ஏதேனும் விதத்தில் வெளிக்கொண்டுவர வேண்டுமா அல்லது இக்காரியமானது விசேஷமாக எவ்விதத்திலும் சபைக்கு இடையூறாக இல்லாமல் காணப்படுகையில், அப்படியே விட்டுவிடலாமா?

பதில் - சகோதரனே என்னுடைய கருத்தென்னவெனில் - சில காரியங்கள் தனிப்பட்ட காரியங்களாகக் காணப்படலாம் மற்றும் அவற்றைச் சபையார் கண்டுகொள்ளாமல் இருங்கள் மற்றும் தேவனால் சில விஷயங்களில் கையாளப்பட்ட விதம் குறித்து வேதாகமம் கூறுகின்றதான விதத்தில் கையாளுங்கள் என்பவையேயாகும். தேவன் சிலவற்றைக் காணாதவர்போல் இருந்தார் என்று நாம் வாசிக்கின்றோம். ஆகையால் சபையாரும் சிலவற்றைக் காணாதவர்கள்போல் - அதாவது சிலவற்றை கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும். இரண்டு நபர்கள் இடையே சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், ஒருவேளை சபையானது அதில் தலையிட முற்படுமாயின், சபை அநேகமாக எப்போதுமே (busy) ஓயாது குறுக்கிட்டுக்கொண்டே இருக்கும். ஆனால் காரியத்தைக் காண்பவர்கள் காரியத்தினை, பிரச்சனையில் காணப்படுபவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது தகுதியானதே மற்றும் ஒருவேளை ஒருவரோ அல்லது இருதரப்பினருமே பிரிவினைகளை உண்டாக்கக்கூடியவர்களாக இருக்கும்பட்சத்தில், இது மற்றவர்களால் கவனிக்கப்பட வேண்டும் மற்றும் மிகவும் பரிவுடன் கையாளப்படக்கூடாது - அவர்கள் சகோதர சகோதரிகள் அல்ல என்று புறக்கணிக்கப்படாமல், மாறாக சபையாருக்கான எந்தப் பணிக்கு அல்லது ஊழியத்திற்கு என்று நியமிக்கப்படக்கூடாது மற்றும் அவர்கள் வெளிப்படையாகவே விழிப்பற்று நடந்து, சில பிரிவினைகளை உண்டுபண்ணுகிறவர்களாகவும் இருப்பதினால், அவர்களிடம் கொஞ்சம் பேச்சுக்கொடுக்காமல் நடத்துங்கள். பின்பு மூப்பர்களில் யாரேனும் அந்தச் சகோதரர்களில் ஒருவரோடு தனிப்பட்டமுறையில்

பேசக்கூடிய நல்லதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளதாக எண்ணி, "சகோதரனே உங்களது விவகாரத்தில் நான் உதவ முடிகிற காரியம் ஏதாகிலும் உண்டா? நீங்களும், சகோதரன் Brown/பிரவுண் அவர்களும், சுமூகமாக இல்லை என்பதை நான் கவனிக்கிறேன்; சபையின் மூப்பர் என்ற விதத்தில் நான் உங்களிடத்தில் சொல்ல விரும்புவதாவது: நீங்கள் மத்தேயு 18:15-ஆம் வசனத்தினை மறந்துவிட வேண்டாம்; ஒருவேளை சகோதரன் பிரவுண் அவர்கள் உங்களுக்கு ஏதேனும் தீங்கு செய்திருந்தால், அந்த வேதவாக்கியத்தினை மறந்துவிட வேண்டாம் மற்றும் நான் எவ்விதத்திலாவது உங்களுக்கு உதவிபுரிய வேண்டுமெனில், அதற்கு நான் எப்போதும் தயார்" என்று கூறுவதும் முறையானதேயாகும்.

அச்சகோதரன் பிரதியுத்திரமாக: "நல்லது, அதைக்குறித்து நான் உங்களிடம் சொல்ல வேண்டும்" என்பாரானால்

மூப்பர்: "இல்லை சகோதரனே, அதைக்குறித்து நீங்கள் என்னிடம் சொல்வதை நான் விரும்பவில்லை; அவ்விஷயம்குறித்து நீங்கள் சொல்வதை நான் கேட்பது தவறான காரியமாயிருக்கும்; வேதவாக்கியம் முன்வைக்கிற விதத்திலேயே அவ்விஷயம் என்னிடம் வர வேண்டும். உங்களுக்கும், சகோ. பிரவுண் அவர்களுக்கும் இடையில் கருத்துவேறுபாடு காணப்படுமாயின், அதைக் கேட்பதற்கு நான் பிரியப்படவில்லை; அதை நீங்கள் என்னிடம் கூறும்படிக்கு நான் ஊக்குவிப்பது என்பது தவறான காரியமாய் இருக்கும். இயேசு மத்தேயு 18:15-17 வரையிலான வசனங்களில் கூறியுள்ளதான வழியினைத் தேவன் அருளியிருக் கின்றார். நாம் அதை எவ்வாறு செய்யலாம் என்று அவர் நமக்கு எடுத்துக்கூறுகின்றார் - அதாவது, நீங்கள் முதலாவது சகோ. பிரவுண் அவர்களிடம் சென்று, ஒப்புரவாகிக்கொள்ள முயற்சியுங்கள்; ஒருவேளை இதில் பலன் காணமுடியவில்லையெனில் மற்றும் அவர் உங்களுக்குத் தீமையான சிலவற்றைச் செய்துவருகிறவராகக் காணப்பட்டு மற்றும் அதனால் உங்களால் அவரிடத்தில் அன்புள்ள சகோதரனாகக் காணப்பட முடியவில்லை என்று உணருவீர்களானால், நீங்கள் வந்து, உங்களோடுகூட வருவதற்கு இரண்டு சகோதரர்களை அழைத்திடலாம். உங்களோடுகூட என்னை அழைத்துச்செல்ல நீங்கள் விரும்பும்பட்சத்தில், அப்படி வருவதற்கும், சமாதானத்தையும், ஒற்றுமையையும் கொண்டுவருவதற்கென்று என்னால் செய்யமுடிந்தவற்றைச் செய்வதற்கும் நானும் பிரியப்படுவேன். ஆனால் முன்கூட்டியே எதையும் கேட்டிட நான் விரும்பவில்லை; அப்படிக் கேட்பது சரியாய் இராது; நீங்கள் சொல்வதை நான் செவிகொடுத்துக் கேட்பேனானால், நான் இவைகளைச் செய்திட பொருத்தமற்றவனாய் இருப்பேன். ஒருவேளை சகோ. பிரவுண் அவர்கள் உங்களுக்குத் தீமை செய்திருக்கிறாரெனில், அவரிடமே செல்லுங்கள் மற்றும் இதில் பயனில்லாமல் போயிற்று என்றால் மற்றும் அவ்விஷயம் உங்கள் மனதில் உங்களுக்கும், அவருக்கும் பிளவினை ஏற்படுத்துமளவுக்கு முக்கியமானதாய் இன்னும் தோன்றுமானால், அடுத்தக்கட்டமாக

வேதவாக்கியங்கள் கூறுவதுபோன்று ஒன்றோ, இரண்டோ வேறு சகோதரர்களை அழைத்துச் சென்று அவரிடம் உரையாடுங்கள் மற்றும் தொடர்ந்து செவிசாய்க்கப்படவில்லையெனில் மற்றும் அவராலோ அல்லது உங்களாலோ அக்காரியத்தில் இணக்கத்திற்கு வரமுடியவில்லையெனில், அடுத்தக்கட்டமாக அது - நீங்கள் விரும்பும் பட்சத்தில் சபைக்கு முன்பாகக் கொண்டுவரப்படலாம்; ஆனாலும் இக்கட்டங்களுக்கெல்லாம் முந்தி கொண்டுவரப் படக்கூடாது" என்று கூறிடலாம்.

**(Q104:1) சபை - சபையில் எதிர்ப்பு.**

கேள்வி (1910)-1- எங்களுடைய சபையில் வலிமைவாய்ந்தவர்கள் ஏற்றகால சத்தியத்திற்கு எதிரானவர்களாகக் காணப்படுகின்றனர் மற்றும் மிகவும் உண்மையாய்க் காணப்படுபவர்களோ போதகர்களாக இல்லை மற்றும் சத்தியத் திலும் இளையவர்களாய் இருக்கின்றனர். எதிர்ப்பவர்கள் பெரும்பாலும் மூப்பர்களாய் இருப்பதினால், அவர்களே கூட்டங்களைப் பொறுப்பேற்று நடத்துகின் றார்கள். உண்மையுள்ளவர்களும், பெரும்பான்மையினராய்க் காணப்படும் வலுவற்றவர்களும்/ weak majority என்ன செய்திட வேண்டும்?

பதில் - யாரிடமிருந்து இக்கேள்வி வந்துள்ளது என்பது குறித்து எனக்குத் தெரியவில்லை என்பதினால், மிகுந்த சுதந்திரத்துடன் இக்கேள்விக்கு என்னால் பதிலளிக்கக்கூடும். கர்த்தர் தம்முடைய ஜனங்கள் தொடர்புடைய விஷயத்தில் ஏற்படுத்தியுள்ளவைகள் யாவற்றிலும் சில கொள்கைகள் அடங்கியிருக்கின்றன என்றும், சபையார் மத்தியில் ஆண்டவருக்குப் பிரதிநிதியாகக் காணப்படுவதற்கு மிகுந்த தகுதியுடையவர்களாய் இருப்பவர்களைத் தங்கள் மத்தியிலிருந்து மூப்பர்களாக அல்லது மூப்பர் என்கிற சகோதரர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் நான் காண்கின்றேன். நீண்ட காலமாய்ச் சத்தியத்தில் இருப்பவர்களில், இயல்பாகத் திறமைமிக்கவர்களாக இருப்பவர்களில் எவரேனும், கேள்வி கேட்டுள்ள சகோதரன் எண்ணுவதுபோன்று ஆகியுள்ளாரெனில், இவர்கள் அப்போஸ்தலனின் கண்ணோட்டத்தின்படி இறுமாப்புடையவர்களாகக் கருதப்பட வேண்டும் மற்றும் அடுத்தமுறை இவர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது தேர்ந்தெடுக்காமல் இருத்தல் தொடர்புடைய விஷயத்தில் கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கின்றது என்று தாங்கள் நம்புகிறவற்றின்படி நடந்துகொள்வது சபையாருக்குத் தகுதியானதாய் இருக்கும். இம்மாதிரியான நிலைமையில் காணப்படும் எந்தச் சகோதரரையும் முதன்மையான ஸ்தானங்கள் எதற்கும் தேர்ந்தெடுப்பது என்பது அச்சகோதரருக்குத் தீங்கு விளைவிக்கிறதாய் இருக்கும் என்பது என்னுடைய கருத்தாய் இருக்கிறது. இத்தகையவர்கள் சிறிதுகாலம்

எவ்விதமான போதிக்கும் ஊழியங்களினின்றும் விலகிக் காணப்படும்படிக்கு அனுமதிக்கப்படுவார்களானால், அதுவும் கூட்டங்களின் ஆசீர்வாதமானது தடைபட்டுப்போவது போன்று வெளித்தோற்றத்தில் தோற்றமளித்தாலும் பரவாயில்லை, இப்படி விலகிக் காணப்படும்படிக்கு அனுமதிக்கப்படுவார்களானால், இது அவர்கள் நன்மைக்கு ஏதுவாயும், சிறந்த விதமான உதவியாயும் இருக்கும். அநேகமாய்க் கூட்டங்களின் ஆசீர்வாதமானது தடைப்படாது. ஏனெனில் இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ளதான தவறான மனநிலையில் இருப்பவர் எவரும், ஒவ்வொரு நாளும் மற்றும் ஒவ்வொரு கூட்டத்திலும் நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீமையையே அதிகமாய் நிச்சயமாகச் செய்திடுவார்கள் மற்றும் தாங்களும் நன்மை அடைகிறதைப்பார்க்கிலும் அதிகம் தீமையையே அடைகிறவர் களாகவும் இருப்பார்கள். இக்கேள்வியினை எழுதியுள்ளதான சகோதரனும், காரியத்தினைக்குறித்த சரியான பார்வையினைக் கொண்டிருக்கவில்லை என்பதாகத் தெரிகின்றது. ஒருவேளை இவர் சில தவறான கருத்துக்களைக் கொண்டிருக்கலாம்; நான் கணிப்பதற்கு அறியாதவனாய் இருக்கிறேன்; இவ்விவகாரம் குறித்து ஏதும் அறியேன்; அந்த மூப்பர்களைக் குறித்தும் அறியேன்; கேள்வியினை எழுதினவர் குறித்தும் அறியேன். மேலும் ஊழியம் புரிகின்றதான மூப்பர்களைச் சாந்தத்துடனும், பொறுமையுடனும், பரந்த மனப்பான்மையுடனும் பார்ப்பது இவரது கடமையாய் இருக்கின்றது; ஏனெனில் இப்படிச்செய்வது என்பது இவராலும் மற்றும் இது தொடர்புடைய விஷயத்தில் சபையார் யாவராலும் செய்ய இயலும் காரியமாய் இருக்கின்றது. மேலும் சரியாக இல்லை என்று இச்சகோதரனால் கருதப்படுகின்றதான மூப்பர்கள் ஒவ்வொருவரையும், ஒவ்வொருவராக இவர் அழைப்பித்து, தான் அஞ்சுவதைக்குறித்து அன்பாய்த் தெரிவிப்பதும் மற்றும் தான் நியாயந்தீர்க்க விரும்பவில்லை, மாறாக தான் சில காரியங்களைக் காண்பதாகவும், அவைகளை அவர்கள் கருத்தில் எடுத்துக்கொள்ள - அதாவது எதிராளியானவன் சில விதங்களில் அவர்களைப் பயன்படுத்துகின்றானா என்று சிந்தித்துப்பார்க்க, தான் யோசனை தெரிவிப்பதாகக் கூறுவதும் மற்றும் அன்பானதொரு சகோதர அல்லது சகோதரி உரையாடலைக் கொண்டிருப்பதும் ஞானமான ஒன்றாகவே அநேகமாக இருக்கும். நல்ல திட்டம் என்னவெனில் . . . நீங்கள் காரியத்தினை முன்வைத்த விதத்தில் மிகவும் அன்புடனும், பரிவுடனும் காணப்பட்டிருந்தீர்களானால் மற்றும் ஒருவேளை அவர்கள் சினமடைவார்களானால் - இது ஏதோ தவறு இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். அவர்கள் ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம்; அவர்கள்: "ஏன், சகோதரனே, நீங்கள் என்னைத் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளீர்கள்; நான் அப்படியான விதத்தில் பேசவேயில்லை; நீங்கள் அக்காரியத்தினை மிகவும் குற்றம் காணும் விதத்தில் பார்த்திருக்கின்றீர்கள்; நான் இன்னென்ன விதத்தில்தான் பேசினேன்" என்று சொல்லலாம். எப்படியாக இருப்பினும், இப்படியான தவறான

நிலைமையில் காணப்படுவதாகக் கருதப்படுபவருக்கு உதவும் வண்ணமாகவே பிரயாசம் காணப்பட வேண்டும். இவ்வகையான எந்த ஒரு பிரயாசமும் எடுக்கப்படுவதற்கு முன்னதாக, ஒரு சகோதரனையோ அல்லது சகோதரியையோ சீர்ப்படுத்தும் வண்ணமாகவோ அல்லது யாருக்கேனும் யோசனை கூறுவதற்கோ பிரயாசம் எதையேனும் ஏறெடுக்கும் ஒவ்வொருவருக்கும் நான் அறிவுறுத்துவது என்னவெனில்: அவர்கள் முதலாவதாக இக்காரியத்தினை ஜெபத்தில் வைத்து, தங்கள் சொந்த இருதயமும், மனதும் சரியான நிலைமையில் இருக்கின்றதா என்றும், தங்களிடத்தில் எந்தக் கசப்பும் இல்லை என்றும், தாங்கள் முடிந்தமட்டும் தயவாகவே காரியங்களைக் கண்ணோக்குகின்றார்கள் என்றும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். முதலாவதாக நாம் நம்மைத் திருத்திக்கொள்வோமாக - கர்த்தர் சொன்னதுபோலவே ஒருவேளை இவ்விவகாரம் உன் கண்களினின்று உத்திரத்தை எடுத்துப்போடுவதற்குரிய விவகாரமாக இருக்குமானால், முதலாவது உன் சொந்த கண்களினின்று உத்திரத்தை எடுத்துப்போடு மற்றும் பின்னர் நீ தெளிவான பார்வையை இப்படி அடையப்பெற்று, கண்களில் உத்திரத்தைப் பெற்றிருக்கும் வேறொரு சகோதரனுக்கு நீ ஆசீர்வாதமாயிருக்க முடியும்.

**(Q119:2) சபை - சபையில் கனம்பெறுவதற்கான தகுதியான அடிப்படை.**

கேள்வி (1915)-2- "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்று மத்தேயு 20:27-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் முதன்மையானவனாய் இருக்க விரும்புவது என்பது முறையான விருப்பம்தானா மற்றும் பரலோக இராஜ்யத்தில் ஸ்தானங்களானது, இங்கு நம்மால் ஏறெடுக்கப்படும் ஊழியத்தினுடைய அளவின் அடிப்படையில்தான் வழங்கப்படுமா?

பதில் - தம்முடைய சீஷர்களுக்கு, அவர்களுக்கு இருக்கும் குறிப்பிட்ட பெலவீனம் ஒன்றினை - அதாவது பெரியவர்களாய்க் காணப்படுவதற்கான ஒரு விருப்பத்தினை - அதாவது மனுஷகுடும்பத்தில் பொதுவாய்க் காணப்படுகின்றதான ஒரு விருப்பத்தினை - பேராசையின்/குறிக்கோளின் ஆவியினைக் கர்த்தர் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தார். இவ்வசனத்தினுடைய முந்தின வசனங்களானது, புறஜாதிகள் மத்தியில், சிலர் அடக்கி ஆளும் அதிகாரம் செலுத்துபவர்களாய்க் காணப்பட்டு, மற்றவர்களைத் தங்களுக்குப் பணிவிடைச் செய்யப்பண்ணு கின்றார்கள் என்றும், ஆனால் இவ்விதமாய் இயேசுவின் சீஷர்கள் மத்தியில் காணப்படலாகாது என்றும் தெரிவிக்கின்றது. சீஷர்கள் வேறே ஆவியினால் இயக்கப்படுபவர்களாய் இருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்களிடத்தில் - இறுமாப்பாய் ஆளுவதற்குரிய, மற்றவர்களை அடக்கி ஆளுவதற்குரிய ஆவி

இருத்தல் கூடாது; மாறாக மற்றவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கும், மற்றவர்களுக்காகக் காரியங்களைச் செய்திடுவதற்கும் நாடிடும் அன்பின் ஆவியானது மற்றும் மற்றவர்களுக்காக ஊழியம் புரிய தனது தனிப்பட்ட நலனுக்கடுத்தவைகளைப் பலிச் செலுத்திட விரும்பும் ஆவியானது காணப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் நாம் இவ்வசனத்தினுடைய மற்ற வார்த்தைகளைப் பார்க்கின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் சிலர் முதன்மையானவர் களாய்க் காணப்படுவார்கள்; இப்படியாகவே தாலந்துகளை அதிகமாகப்பெற்ற நிலையிலுள்ள சிலரையும் மற்றும் குறைவாகப்பெற்ற நிலையிலுள்ள சிலரையும் பெற்றிருக்கும் எவ்விடத்திலும் - அதாவது தாலந்துகளில் சமமாய் இராத ஜனங்கள் காணப்படும் எந்த ஒரு கூட்டத்தில் அல்லது வகுப்பில் நிச்சயமாய்க் காணப்படும். யாரோ ஒருவர் முதன்மையானவராய் நிச்சயமாய்க் காணப்பட வேண்டும். முற்றும் முழுமையான சரிசமம் என்பது கூடாத காரியமாகும்.

தேவனுடைய பரிசுத்தவான்கள் மத்தியில், சபையை வழிநடத்திடுவதற்குச் சிலர் காணப்பட வேண்டும் என்பதும்கூடத் தகுதியானதே. அப்படியானால் யார் முதன்மையானவராய் இருக்க வேண்டும் என்பதற்கான தகுதிநிலை என்னவாக இருக்கும்? மற்றவர்களைப் பயமுறுத்தக்கூடிய ஒருவர் முதன்மையானவராய் இருக்கலாமா? இல்லை; இது தகுதிநிலையல்ல. ஆதிக்க வல்லுநராகவும், இனிமையான சொற்களைப் பேசுபவராகவும், ஏதோ சில தாலந்துகளைப் பெற்றிருப்பதன் காரணமாக அல்லது சிறப்பான கல்வியோ, ஐசுவரியமோ பெற்றிருப்பதன் காரணமாக - இவ்வகையான எதையாகிலும் பெற்றிருப்பதன் காரணமாக மாத்திரம் ஆதிக்கம் பண்ணுபவராகவும் இருக்கும் ஒருவர் முதன்மையானவராய் இருக்கலாமா? இல்லை; இது தகுதிநிலையாக இருக்க முடியாது. அப்படியானால், சபையில் முதன்மையானவர்களென அடையாளம் கண்டுகொள்ளப்படுபவர்களுக்குரிய தகுதிநிலை என்னவாக இருக்கும்?

## சுய மகிமைக்காக எந்த ஆசையும் கொள்ளாதீர்

ஊழியம்புரிவதற்கான ஆவியினை மிகுதியாய்ப் பெற்றிருப்பவர்களை நாம் நாடித்தேடிட வேண்டும் என்பதே எங்களுடைய பதிலாய் இருக்கின்றது. பெருமளவில் ஊழியம்புரிந்து, சபையாருக்குப் பெருமளவில் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருபவன் - அதாவது உண்மையாய் ஊழியம் புரிவதற்கென மிகவும் பிரயாசம் எடுக்கிறவன் - இத்தகையவனை முதன்மையான வனாகக் கருதுங்கள். நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளானது, ஒரு தனிப்பட்ட நபருக்கென்று மாத்திரம் இல்லாமல், அப்போஸ்தலர்கள் அனைவருக்குமாகப் பேசப்பட்டபோதிலும், இவ்வார்த்தைகள் தனிநபருக்கும்

பொருந்தும். நம்மில் எவரேனும் ஏதேனும் விசேஷித்த விதத்தில் ஊழியம்புரிய விரும்புவோமானால், நாம் உலகப்பிரகாரமான ஜனங்கள் போன்று செய்திடக் கூடாது என்கிற சிந்தையானது நம் ஒவ்வொருவருடைய இருதயத்திற்குள்ளும் கடந்துவர வேண்டும். நாம் அவர்களுக்கு எதிர்மாறான பாதையினை எடுத்துக்கொண்டு, மனுஷரிடமிருந்து வரும் எந்தக் கனத்தையும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்குத் தகுதியற்றதென முற்றிலுமாய் விட்டுவிட வேண்டும். இக்காரியத்தினைத் தேவன் தமக்கு நலமாய்த் தோன்றும் விதத்தில் கையாளத் தக்கதாக, அவரிடமாய் நாம் விட்டு விட்டு, சகோதரருக்கு ஊழியக்காரனாய் இருப்பதற்கு மாத்திரம் திருப்தியடைந்து இருக்க வேண்டும். இப்படியான விதத்தில் ஊழியம் செய்திடுவதற்கு நீங்கள் எவ்வளவாய் விருப்பமுடையவர்களாய் இருக்கின்றீர்கள் என்று கர்த்தர் காண்பாராக. எந்தக் குறிக்கோளும்/ஆசையும் இல்லாதவர், எதையும் செய்யமாட்டார். நாம் விதைத்தாலும் அல்லது உழுதாலும் அல்லது நாம் எதைச் செய்தாலும் நமக்குக் குறிக்கோள்கள் காணப்பட வேண்டும் - நாம் செய்துகொண்டிருக்கின்ற எதையும், திருப்திகரமான விதத்தில் செய்யும்படிக்குத் தூண்டிடுவதற்கு நமக்குக் குறிக்கோள் தேவையாய் உள்ளது. ஆகையால் சத்தியத்திற்கு ஊழியம்புரிவதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைக்கையில், முடிந்தமட்டும் மிகவும் ஆற்றல்மிக்க விதத்தில் அதற்கு ஊழியம் செய்திட நாம் நாடிட வேண்டும். இல்லையேல் நாம் கர்த்தருக்கு ஆற்றல்மிக்க ஊழியக்காரர்களாய் இருக்க முடியாது.

ஆனால் சுய மகிமைக்காக ஆசைப்பட்டு, முதன்மையானவர்களாக விரும்பும் எந்த ஒரு விருப்பத்தினையும் நாம் புறம்பே தள்ளிட வேண்டும். நம்மால் அறிய முடிந்திருக்கும் சிறந்த விதத்தில் கர்த்தருக்கு ஊழியம்புரிந்திட நாம் நாடிட வேண்டும். என்னைக்காட்டிலும் உங்களால் சில விதங்களில் கர்த்தருக்குச் சிறப்பாய் ஊழியம்புரிய முடிகிறதாய் இருக்கும் பட்சத்தில் மற்றும் உங்களிடமிருந்து நான் சிலவற்றைக் கற்றுக்கொள்ள முடிகிறதென்றால், அது நல்லது, நன்மையுமாகும். பிற்பாடு உங்களால் என்னிடமிருந்து ஏதோ சிலவற்றைக் கற்றுக்கொள்ள முடிகிறதென்றால், அப்படியே காணப்படுவதாக. உண்மைதான் விசேஷமாய்ப் பாராட்டத்தக்கதாய்க் காணப்படும் எதையும் நாம் பின்பற்றுகிறவர் களாய் இருந்து, கர்த்தருடைய காரணங்களை நடந்தேற்ற நம்மால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும். மேலும் இந்த ஊழியமானது, அன்பினால் இயக்கப்பட வேண்டும். அன்பினால் இயக்கப்படாத எந்த ஊழியமும், கர்த்தருடைய பார்வையில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

## தாழ்மை மிக முக்கியமான தேவை

கண்காணி ஊழியத்தினை விரும்புகிறவன் நல்ல ஊழியத்தை

விரும்புகின்றான் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். அது ஓர் உயர்வான ஊழியமாகும். இந்த ஊழியமானது, இன்றைய நாட்களில், பெயர்ச்சபை அமைப்புகளில் உயர்வான அதிகாரப்பூர்வமான பதவியாகப் புரிந்துகொள்ளப் பட்டுள்ளது போன்று அப்போஸ்தலனுடைய நாட்களில் இருக்கவில்லை. அந்நாட்களில் கண்காணி என்பவர், ஆடுகளின் நலனுக்கடுத்தவைகளைப் பார்த்துக்கொள்ளும் சபையின் பெயரற்ற மற்றும் தாழ்மையான ஊழியக்காரன் ஆவார். சபையின் ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னால் முடிந்தமட்டும் தேவனுடைய மந்தையின் மீது திறமிக்க மேற்பார்வையாளராக இருக்க விரும்பிட, நாடிட வேண்டும். இந்த மூத்த சகோதரர்கள் - சபையாருக்கான மேய்ப்பர்கள் மத்தியில், வெவ்வேறு இயல்பான திறமைகளை உடையவர்களாய்க் காணப்படுவார்கள். ஒவ்வொருவரும் தனது தாலந்துகளை, தனது வாய்ப்புகளை, கர்த்தருக்கான, சகோதரருக்கான மற்றும் சத்தியத்திற்கான ஊழியத்தில் பயன்படுத்திடுவதற்கு நாடிட வேண்டும்.

இன்றைய நாட்களிலுள்ள கர்த்தருடைய ஜனங்களில் ஒருவர், ஆண்டவர் இங்கு முன்வைக்கின்றதான நெறிமுறைகளை மறந்துபோவது என்பது பரிதாபத்திற்குரிய காரியமாகும். இத்தகையவர்கள் தாங்கள் மூப்பர் ஊழியத்திற்குச் சபையாருடைய, கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின கூட்டத்தாருடைய vote/வாக்கினால் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், கர்த்தருடைய ஜனங்களின் வாக்கானது, சபையினுடைய குரலாய் இருக்கின்றது என்றும் உணர்ந்து கொள்வதற்குப் பதிலாக, உரிமையின் காரணமாகத் தங்களுக்கு மூப்பர் ஊழியம் கிடைத்துள்ளது என்று எண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர். பிரித்தெடுக்கப்பட்ட வர்களுடைய, சபையினுடைய - vote/வாக்கினை முழுமையாய் ஏற்றுக்கொள்வதற்கு விருப்பமுள்ளவர்களாக, ஒவ்வொருவருடைய மனப்பான்மையும் காணப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவன் மற்றவர்களோடு அனைத்திலும் பங்குகொள்வதன்மூலம், சபையாரில் ஓர் அங்கமாகியுள்ளானெனில், இவ்விதம் அவன் அதிகமான சதவீதத்தில் அல்லது ஓர் எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர் களாய்க் காணப்படும் அதிகாரமுடைய பெரும்பான்மையானவர்கள் பிரதிநிதித்து வப்படுத்தும் ஒழுங்குகளுக்குக் கீழ்ப்பட்டவனாகுகின்றான். இதைச் செய்த பிற்பாடு, அவன் மூப்பனாகவோ அல்லது வேறொருவர் மூப்பனாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இதே மனப்பான்மையினைத் தொடர்ந்து கொண்டிருக்க நாடிட வேண்டும்.

ஏற்ற தகுதிகளைக் கொண்டிராத ஒரு சகோதரனை மூப்பனாக தேர்ந்தெடுக்கும் தவறினைச் சபையார் மிக அடிக்கடி செய்துவருகின்றனர். இது அந்தச் சபையாரில் சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தி, சிலர் பிரிந்துபோய், இன்னொரு சபையினை ஏற்படுத்திடுவதற்கு வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது. இது ஞானமான நடக்கையாய் இராது என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவேளை

அந்தச் சபையார் தவறு செய்துவிட்டார்களெனில், அதை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிடுவதற்குக் கர்த்தர் வல்லவராய் இருக்கின்றார்; மற்றும் பிரிந்துபோய்விடு பவர்கள் தங்களுக்கு விலையேறப்பெற்றதாய்க் காணப்படுவதற்கு ஏதுவான சில அனுபவங்களை இழந்துபோகின்றவர்களாய் இருப்பார்கள்.

எனினும் சபையார் தவறு செய்துவிட்டனர் என்று நாம் எப்போதும் உறுதியாய்ச் சொல்லிட முடியாது. இவ்விஷயத்தில் கர்த்தர் படிப்பினைகள் சிலவற்றை வைத்திருக்கிறார் என்பதை நாம் எப்படி அறிவோம்? தேர்ந்தெடுக்கப் படுபவர் யாராயிருப்பினும், அவருக்காக நாம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தினை வேண்டியிருப்போமானால், அந்தத் தேர்வுடன் நாம் இணங்கிப்போக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படாதவர் ஒருவேளை சத்தியத்தினை நன்றாய் முன்வைத்திடு வதற்கான ஆற்றல் உடையவராகவும், தான் பயன்படுத்தப்படுவதற்கும், பயனாய்க் காணப்படுவதற்கும் ஏதுவான அநேகம் இடங்களை அறிவாரானால், அச்சகோதரன் தனக்கு வரும் எந்த ஒரு வாய்ப்பினையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் சபையை விட்டுப் பிரிந்து செல்ல தேவையில்லை. தன் கையில் கிட்டும் எந்த ஊழியத்தினையும் அவர் புரிந்திடலாம். அநேகமாக அவர் தனது நேரத்தையும், தாலந்துகளையும் புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலையில் (class extension work) பயன்படுத்திடலாம் - இதுவிஷயத்தில், தான் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனும் காரணம் தனக்குத் தடையாக இருக்கின்றது என்று கருதிட வேண்டாம். அவர் கடந்துபோய், ஊழியங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டடையலாம். ஆகையால் மூப்பர்களாக வேறு சகோதரர் வந்திருக்கும் காரியமானது, தேர்ந்தெடுக்கப்படாத சகோதரனுக்கு அல்லது மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படாத சகோதரனுக்கு - அவர் பயனாகும் வேறொரு களத்தினைக் கர்த்தர் சுட்டிக்காட்டுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கூடுதலாய்ப் பயன்படும் விதத்தில் கர்த்தருடைய வழிநடத்துதலானது அவரை நடத்திடலாம்.

உலகத்தின் மனுஷர்கள் நம்மைக்குறித்து என்ன சொல்லுவார்களோ அல்லது என்ன எண்ணுவார்களோ என்ற எண்ணத்தினால் நாம் தாக்கத்திற் குள்ளாகுதல் கூடாது. இது முக்கியமற்றக் காரியமாகும்; மற்றும் சபை என்ன எண்ணுமோ என்பதும் முக்கியத்துவமற்றக் காரியமாகும். நாம் கர்த்தரைப் பிரியப்படுத்திடவே நாடிட வேண்டும். நாம் நம்மைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், நம்முடைய கணிப்பில் மற்றவர்களுக்கு முன்னுரிமைக் கொடுப்போமாக. பரலோக இராஜ்யத்தில் ஸ்தானங்கள் அருளப்படுவது என்பது, பரிசுத்த ஆவியினுடைய கனிகளின் வளர்ச்சியினுடைய அளவின் அடிப்படை யிலேயே ஆகும் என்று நாம் புரிந்திருக்கின்றோம் மற்றும் இது கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியம் கொள்வதற்கு வழிநடத்திடும் அன்பினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

**(Q125:1) சபை - சிலர் யாரையும் சார்ந்திராமல் செயல்படுதல்.**

கேள்வி (1916)-1- ஓர் இடத்திலுள்ள வேதமாணவர்கள், அவ்விடத்திலுள்ள சபையின் அங்கத்தினர்களாக இருந்து, ஒரு குழுவாக யாரையும் சார்ந்திராமல் செயல்படலாமா?

பதில் - ஐயத்திற்கிடமின்றி ஓரளவிற்குக் கிறிஸ்தவ சுயாதீனம் காணப்படவே செய்கின்றது. இதனை ஜனங்கள் செயல்படுத்துகையில் கர்த்தர் பிரியமே கொள்வார் என்று நாம் நம்புகின்றோம். உதாரணத்திற்கு ஒரு சகோதரன், இன்னொரு சகோதரனுடைய இல்லத்திற்குச் செல்கின்றார் என்று வைத்துக் கொள்வோம் மற்றும் மாலை வேளையினைச் செலவழிக்க இரண்டு அல்லது மூன்று அயலகத்தார் வருகின்றார்கள். ஒருவர்: "வாருங்கள் நாம் சதுரங்க விளையாட்டு (chess) விளையாடலாம்" என்று கூற, மற்றவரோ: "வேண்டாம், நாம் வேத ஆராய்ச்சி பண்ணிடலாம்" என்று கூறுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் "இல்லை, நாம் வேத ஆராய்ச்சி செய்திட முடியாது; காரணம் இதற்கு நம்முடைய சபையாரால் அதிகாரம் வழங்கப்படவில்லை; ஆகையால் நாம் சதுரங்க விளையாட்டினை விளையாடலாம்" என்று கூறிடுவது கர்த்தருடைய சித்தமாய் இருக்குமென நாம் எண்ணுகிறதில்லை. இந்த இல்லத்தில் சபையாரால் கூட்டம் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்றாலும், வேத ஆராய்ச்சிச் செய்திடுவதற்கோ அல்லது வேதாகமம் சம்பந்தமாய் உரையாடுவதற்கோ எந்த ஆட்சேபணையும் இல்லை என்று நாம் நியாயமாய்ப் பகுத்தறிந்திடலாம். இல்லத்தின் உரிமையாளரான சகோதரன்: "அடுத்த வாரத்தில் இன்னொரு கூட்டத்திற்கு வரும்படிக்கு நான் இன்னும் சில அயலகத்தாரைக் கேட்டுக்கொள்வேன். இக்காரியங்களைக் குறித்தெல்லாம் நான் அவர்களிடம் கூறுவதற்கு முயற்சித்திருக்கின்றேன் மற்றும் நீங்கள் பேசுவதை அவர்களைக் கேட்கப்பண்ணுவதில் நான் சந்தோஷம் அடைவேன்" என்று கூறிடலாம். இப்படியான நடக்கையில் எந்தத் தவற்றையும் என்னால் காண முடியவில்லை. ஒருவேளை கலந்துகொள்பவர்கள், நிரந்தரமான கூட்டத்தினை விரும்புவார்களானால், அது வழிநடத்துபவர்களை அனுப்பிவைக்கும் I. B. S. A.-இன் உள்ளூர் சபையாரிடத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

ஆனால் சபையாரில் சிலர்: "நாம் வேறொரு நிரந்தர கூட்டத்தினைத் துவங்கலாம்" என்று கூறுவார்களானால், இது முற்றிலும் வேறு விவகாரமாய்க் காணப்படும். அவர்களுக்கு ஒரு புதிய சபையை உருவாக்கிடுவதற்கு உரிமை உண்டு; ஆயினும் அப்படிச்செய்யும்போது, அவர்கள் ஏற்கெனவே இங்குக் காணப்பட்ட சபையாரிடமிருந்து (original ecclesia) பிரிந்து செல்பவர்களாய் இருப்பார்கள். இவர்கள் மறுபடியும் இங்கு வந்து, "இங்கும், நாங்கள் வாக்குகள்

செலுத்துவோம்” என்று கூறிட முடியாது. நாம் செய்கிற செயல்களுக்கு நிலையான தன்மை இருத்தல் வேண்டும். ஒரு சபையில் அங்கத்தினர்களாகிவிடும் அனைவரும், ஒத்துழைப்பின் பலனை அடையத்தக்கதாகக் கிட்டத்தட்ட தங்களது, தனிப்பட்ட சுயாதீனங்களை ஒப்புக்கொடுப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால் இது நாம் வேத ஆராய்ச்சிச் செய்யக்கூடாது, இதற்குப் பதிலாக மாலை வேளையினை விளையாட்டு விளையாடி களித்திட வேண்டும் எனும் அடிமை நிலையினைக் குறிப்பதாகாது.

**(Q101:1) சபை - கீழ்ப்படிதல் விஷயத்தில் மனசாட்சித் தவிர்க்கப்படுதல்/ அடக்கிக்கொள்ளப்படுதல்.**

கேள்வி (1909)-1- நம்முடைய கணிப்புகளானது, கீழ்ப்படிதலுடைய கொள்கை சம்பந்தப்பட்ட விஷயத்தில், நம்மால் எந்தமட்டும் தவிர்க்கப்படலாம்/அடக்கி வைத்துக்கொள்ளப்படலாம்?

பதில் - நம்முடைய கணிப்புகளானது அடக்கிவைக்கப்படுவது என்பது ஒரு காரியமாகவும், நம்முடைய மனசாட்சி அடக்கிவைக்கப்படுவது இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது. நம்முடைய மனசாட்சி அல்லது நம்முடைய கணிப்புகள் - இவற்றில் எது அடக்கப்பட வேண்டும் என்று கேள்வி எழுப்பப்பட்டால், நம்முடைய கணிப்புகள் அடக்கிவைக்கப்படுவதே நலமானதாய் இருக்குமென நான் பதிலளிப்பேன்; ஏனெனில் நமது மனசாட்சியினை நாம் அடக்கிவைக்கக்கூடாது. ஒருவேளை விஷயம், கணிக்க/பகுத்தறிய வேண்டிய விஷயமாக மாத்திரமே இருக்குமானால், மேலும் அவ்விஷயத்தில் கணிக்க/பகுத்தறிய வேண்டிய பொறுப்பும் நம்மீது கடந்துவராததாய் இருக்குமானால், அதைச் சபையாரிடத்திலேயே விட்டுவிடுங்கள். நீங்கள் கணித்தவைகளை/ பகுத்தறிந்தவைகளை மற்றவர்களிடத்தில் ஒப்புவியுங்கள் - உங்கள் கருத்தினை மற்றவர்களுடைய தீர்மானத்திற்கென்று ஒப்புவியுங்கள். மற்றவர்களுடையதைக் காட்டிலும், நீங்கள் பகுத்தறிந்திருப்பவைகள் மேம்பட்டுக் காணப்படும் பட்சத்தில், அதை மற்றவர்களுக்குச் சொல்வதற்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கின்றீர்கள் மற்றும் பிற்பாடு அமைதலாய் இருங்கள். இல்லையேல் நீங்கள் - தான் பார்ப்பதுபோன்று மற்றப் பதினொரு மனிதர்களும் பார்க்கவில்லை என்பதினால், அந்த பதினொரு பேருக்கும் அறிவில்லை என்று சொல்கிற Juryman/முறைகாண் ஆய உறுப்பினர் (நீதிமன்றத்தில் தங்களுக்கு முன்கூறப்பட்ட வழக்கில் முடிவு தெரிவிப்பதாக ஆணையிட்டு அமர்ந்திருக்கும் குழுமத்தின் உறுப்பினர்) போன்று காணப்பட்டு விடுவீர்கள்.

# பொதுவான கேள்விகள்

**(Q8:1)** விளம்பரக்காரியங்கள் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் நடக்கை.

**கேள்வி (1910)-1- சிறு மாநாடுகள் மற்றும் பயண ஊழியர்களின் கூட்டங்கள் (Pilgrim Meetings) குறித்து விளம்பரம் அளிக்கும் விஷயத்தில், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கடமைகளுக்கிடையிலான தொடர்பு என்ன?**

பதில் - விளம்பரக்காரியங்களில் யார் மேற்பார்வையிட வேண்டும் - எங்கிருந்து அறிவுரைகள் எதிர்ப்பார்க்கப்பட வேண்டும்? என்னுடைய கருத்தென்னவெனில்: விளம்பரக்காரியங்களுக்கான அறிவுரைகளானது தலைமை அலுவலகத்திலிருந்து வருவதே தகுதியானதாயிருக்கும்; காரணம் அங்கே நாங்கள் அதிகளவிலான அனுபவங்கள் பெற்றவர்களாய் இருக்கின்றோம்; காரணம் மற்ற ஜனங்களைப்பார்க்கிலும் நாங்கள் ஞானவான்கள் என்பதினால் இல்லாமல், அங்கே இப்பணியானது ஒப்படைக்கப்பெற்றவர்கள் அசாதாரணமான திறமிக்க மற்றும் அதிகளவிலான அனுபவமிக்க நபர்களாகக் கருதப்படுவதினாலேயே ஆகும்; காரணம் நாங்கள் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் அநேகம் விளம்பரத் திட்டங்களைத் திட்டமிட்டு, அதற்கு ஏற்பாடுகள் செய்வதினால், மற்றவர்களுக்கு இல்லாதளவுக்குக் காரியங்களைப் பகுத்தறிந்திடுவதற்கான வாய்ப்பு எங்களுடையதாய் இருப்பதினாலும் ஆகும். ஆகையால் இது விஷயமாக விசேஷித்த அறிவுரைகளானது புரூக்கிளினிலிருந்து (Brooklyn) எதிர்ப்பார்க்கப்படுவது நலமாயிருக்குமென்பது என்னுடைய கருத்தாய் இருக்கின்றது. பொறுப்பேற்பது யார் என்பது தொடர்புடைய விஷயத்தில்: மூப்பர் விசேஷமாய் ஆவிக்குரிய காரியங்களுக்காகவும், சபையினுடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களைக் கவனித்திடுவதற்காகவும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்; விளம்பரக்காரியம்கூடச் சபையாரின் ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களில் ஒரு பாகமாகத்தான் காணப்படுகின்றது; இக்காரியமானது சபையாருடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்தக் காரியத்துடன் மிகவும் தொடர்புடையதாய் இருப்பதினால், எவ்வகையான உங்களது சிறந்த ஆற்றல்களையும் பிரயோகிப்பதற்குப் பாத்திரமானதாகும். இக்காரியமானது மிகவும் ஆற்றல்மிக்க கரங்களிடத்தில் மாத்திரமே கொடுக்கப்படக்கூடாது; உண்மையில் அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து இணைந்திடுவதே சரியான ஆவியாய் இருக்கும் மற்றும் இதில் திறமிக்கவர், ஒருவேளை மூப்பர்கள் மத்தியில் இல்லாமல், உதவிக்காரர்கள் மத்தியில் காணப்படுவாரானால், இப்பணித்தொடர்புடைய விஷயத்தில் அவர் மிகவும் முக்கிய மாய்ப் பங்குவகிக்கத்தக்கதாக அனுமதிப்பதில் அனைவருமே மகிழ்ச்சிகொள்ள வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், சத்தியத்திற்கடுத்த ஒவ்வொரு ஊழியங்களிலும் நாம் அனைத்துத் தனிமனித சிறப்புகளையும் மூழ்கப்பண்ணிட வேண்டும் மற்றும்

நம்முடைய கணிப்பானது நம்மை வழிநடத்துகிறதற்கேற்ப, வழிகாட்டுவதற்கேற்ப சுருக்கமான மற்றும் மிகவும் திருப்திகரமான விதத்தில் சிறந்த வழிமுறைகளைக் கொண்டிருப்பதற்கு முயற்சிப்போமாக மற்றும் அதிகமான ஞானத்திற்காக எதிர்நோக்கியிருப்போமாக.

## (Q30:1) பின்வாங்கிப் போனவர்களை - எப்படியாக வரவேற்பது?

கேள்வி (1909)-1- சபையை விட்டுவிட்டு, நம்மைப் பாபிலோனைக்காட்டிலும் மோசமானவர்கள் என்று அழைக்கின்றவர்களை நாம் எப்படி வரவேற்பது? இப்படியானவர்கள் நம்முடைய கூட்டங்களில் கடந்துவரும்போது, இவர்களை நாம் மனமார வரவேற்றிட வேண்டுமா?

பதில் - இல்லை என்று நான் எண்ணுகின்றேன்; ஏன் நீங்கள் அப்படிச் செய்திட வேண்டும்? என் அருமை மீட்பர் போன்று விசேஷமாய்க் காணப்படுபவர்களிடம், என் மீட்பருடைய குணலட்சணத்திற்கு ஒத்திருக்கும் குணலட்சணங்களை உடையவர்களிடம் நான் விசேஷித்த அன்பார்ந்த விதத்தில் காணப்படுவேன். சபையை விட்டுப் பிரிந்துசென்றவர்கள், வித்தியாசத்தை உணரத்தக்கதாக நான் அவர்களிடம் மிகவும் அன்பார்ந்த விதத்தில் காணப்படமாட்டேன்; இல்லாவிடில், சபையார் மத்தியிலுள்ள மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் தாங்கள் மேலானவர்கள்போன்று எண்ணிவிட நேரிடும்; ஏனெனில் இவர்கள் ஏதோ வகையில் ஒழுங்கில்லாதவர்களாகியுள்ளனர். இப்படிப்பட்டவர்கள் - "பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்கு ஏற்பவே நடத்தப்பட வேண்டும். பிரிவினை உண்டாக்குகிறவர்களைக் கவனித்துக்கொண்டு, அப்படியானவர்களை உங்களது ஆத்துமக் கூட்டாளிகளாக்காதிருங்கள், மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்காதிருங்கள்; ஏனெனில் அது தவறாகும். சண்டையிடும் தன்மை உடையவர்கள் எவரையும் ஊக்கமூட்டாதீர்கள். அப்படியானவனைத் தள்ளிவைத்து விடுங்கள் மற்றும் அவன் அவனோடே சண்டையிட்டுக்கொள்ளட்டும். இவர்களது ஆவியில் எதையேனும், நம்முடைய சொந்த இருதயங்களில் நாம் விருத்திச்செய்யாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருப்போமாக. நாம் சாந்தமாய், ஆனால் உறுதியாய் இருப்போமாக. இப்படியானவர் என்னண்டை வருகையில், நான் அவரோடு கைக்குலுக்கிக்கொள்வேன். உன்னோடு கைக்குலுக்கிக் கொள்வதில்லை என்று நான் சொல்லமாட்டேன். ஆனாலும் அந்நபரை என்னுடைய பிராண கூட்டாளியாக்கிக் கொள்வதில்லை. ஆதிதிருச்சபையில் அப்போஸ்தலர்கள் குறித்து, "அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்று" கூறப்பட்டதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். நமது கர்த்தர் இயேசுவை நம்முடைய பிராண

துணைவராக்கிக்கொள்ள வேண்டும். நாம் இயேசுவோடுகூட இருக்கவேண்டும் மற்றும் அவருடைய குணலட்சணத்திற்கு ஒத்த குணலட்சணத்தைப் பெருமளவில் கொண்டிருப்பவர்கள், அவரைப்போன்று பெருமளவில் காணப்படுவார்கள். இவர்களே கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிருப்பவர்களாய் இருப்பார்கள். தம்முடைய ஆவியை அதிகளவில் பெற்றிருப்பவர்கள் மத்தியிலிருந்து பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் - ஆகியோர் தம்மோடு நெருக்கமாய்க் காணப்பட வேண்டும் என்று இயேசு தேர்ந்தெடுத்தார் மற்றும் அவர்களோடு அதிக நேரம் செலவிட்டார். இந்த மூவருந்தான் அவரோடுகூட மறுரூப மலையில் காணப்பட்டார்கள் மற்றும் கெத்செமனே தோட்டத்திலும் அவருக்கு அருகாமையில் காணப்பட்டனர். கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்பவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் வைத்துக்கொள்ளுங்கள்.

## (Q148:1) அர்ப்பணம் - பிற்பாடு வெளியே இருப்பவர்களிடத்தில் ஐக்கியமாயிருத்தல்.

கேள்வி (1909)-1- வாக்குறுதி (vow), உடன்படிக்கை முதலானவைகளைக் காரணம்காட்டிச் சபையாருடன் கூடுகைகளில் கலந்துகொள்ளாமல் இருப்பவர்களுடன் ஐக்கியத்தினைத் தொடர்ந்து வைத்துக்கொண்டும் மற்றும் சத்தியத்தினை எதிர்ப்பவர்களிடத்தில் தங்களுக்கு அனுதாபம் உள்ளது என்று ஒப்புக்கொண்டும் மற்றும் சத்தியத்தினுடைய உபதேச ரீதியிலான அனைத்து விஷயங்களிலும் இசைவாய் இருப்பது போன்றும் தோற்றமளிப்பவர்களிடத்தில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

பதில் - உரோமர் 16:17-ஆம் வசனத்தில்: "சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் சுருக்கமாய்க் கூறியுள்ளதுபோன்றே, அத்தகையவர்களிடத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டும் என்று நான் எண்ணுவேன். அர்த்தமென்னவெனில் . . . அவர்கள் வேறே ஆவியினை வெளிப்படுத்துகையில், நாம் எப்போதும் கொண்டிருக்கும் அதே இருதயப்பூர்வமான ஐக்கியத்துடன் அவர்களை நடத்திடக்கூடாது என்பதாகும். அவர்கள்பால் கோபத்தின் ஆவியினை வெளிப்படுத்துவதோ அல்லது அவர்களுக்கு ஏதேனும் தீங்கு செய்வதோ அல்லது அவர்கள் யாரைக்குறித்தேனும் எவ்விதமான தீமை பேசுவதோ சரியாய் இராது; அவர்களுடைய நலனுக்காகவும், நம்முடைய நலனுக்காகவும் மற்றும் மற்றவர்களுடைய நலனுக்காகவும் வேண்டி, அவர்களது நடக்கைகளை நாம் ஆதரிக்காமல் இருப்பது என்பது நம் சார்பிலான சரியான

நடக்கையாய் இருக்கும். அவர்களை விட்டு விலகிடுங்கள் மற்றும் சத்தியத்தினுடைய ஆவியிலும், ஐக்கியத்திலும் காணப்படுபவர்களின் தோழமையையே விரும்பிடுங்கள்.

இக்கேள்வியில் "வாக்குறுதி" எனும் வார்த்தைக் குறிப்பிடப்பட்டிருக்கின்றபடியால், ஒருவன் அல்லது ஒருவள் வாக்குறுதியினை எடுத்துக்கொள்ளாத காரணத்தினால், ஐக்கியத்தில் யாரையாவது பிரித்துப்பார்ப்பது சரியானதாகவும், முறையானதாகவும் இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயமாய் இருக்கின்றது என்று நான் சொல்லுகின்றேன்; வாக்குறுதி என்பது ஒரு பிரமாணமல்ல; அது ஒரு சிலாக்கியமாகும். ஒருவேளை நாம் வாக்குறுதியினை எடுத்துக்கொண்டு, அதனால் ஆசீர்வாதம் அடைவோமானால், தேவனுக்கு நன்றி சொல்லுவோமாக. ஒருவேளை அவர்கள் இதைச் செய்ய தவறி, ஆசீர்வாதத்தினை இழந்துபோவார்களானால், அப்பொழுது அவர்களே அவ்விழப்பினால் சிரமப்படுவார்கள். ஆனால் ஒருவேளை அந்நபர் சபையில் மூப்பராகவோ அல்லது போதகராகவோ இருப்பாரானால், அது கொஞ்சம் வித்தியாசமான காரியமாகும். எந்த ஒரு சபையிலும் மூப்பராக இருப்பவர் அல்லது வழிநடத்துபவராகப் பார்க்கப்படும் ஒருவர் வாக்குறுதியினை எடுத்துக்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகின்றார் அல்லது தான் ஏன் அதை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைக் கூறிடுவதற்கு நியாயமாய் எதிர்ப்பார்க்கப்படுவார்; இல்லையேல் இது வாக்குறுதிக்கு முரணான ஏதோ ஒன்று அந்த வழிநடத்தும் சகோதரனின் ஜீவியத்திலோ அல்லது நடத்தையிலோ இருக்கின்றது என்று அச்சபையார் எண்ணிடுவதற்குக் காரணமாகுகின்றது. என்னைப் பொறுத்தமட்டில் வாக்குறுதிக்கு முரண்பாடான எதையாகிலும் தனது மனதிலோ அல்லது நடத்தையிலோ கொண்டிருக்கும் எந்த ஒரு மூப்பரும் அல்லது சகோதரனும் சபையாரின் பிரதிநிதியாய்க் காணப்படுவதற்குப் பொருத்தமானவரல்ல. பகுத்தறியும் மனம் கொண்ட எந்த ஒரு சகோதரனும், வாக்குறுதிக்கு எதிராக என்ன மறுப்புக் கூறிட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இது ஒரு கட்டாயமான கடமையல்ல என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கின்றோம்; ஆனாலும் மூப்பர்களாய் இருப்பவர்களிடத்தில் நாம் மிக அதிகமாய் எதிர்ப்பார்க்கின்றோம் மற்றும் நம் எதிர்ப்பார்ப்பில் தவறில்லை என்பது, அவர்களிடத்தில் பெருமளவில் முன்மாதிரியான நடக்கை இருப்பதைக் காண்கையில் நிரூபணமுமாகின்றது. ஒரு சபையின் பிரதிநிதியாகவோ அல்லது வழிநடத்துபவராகவோ காணப்படுபவர், அப்போஸ்தலன் கூறியுள்ள பிரகாரம் சராசரிக்கு மேலாகக் காணப்பட வேண்டும் மற்றும் சராசரி நிலைக்கு மேலாகக் காணப்படும் ஒருவர் வாக்குறுதிக்கு எதிராக என்ன மறுப்பினைக் கண்டுபிடிக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை யாரேனும் எதையாகிலும் கண்டுபிடித்தால், அவர் அதை எனக்குக் காண்பித்துத்தர நான் விரும்புவேன்.

**(Q162:1) திருத்தங்கள் - எப்படிச் செய்யப்பட வேண்டும்?**

கேள்வி (1908)-1- பெரோயா வகுப்புகளிலோ அல்லது வேறு ஏதேனும் வேதாகம வகுப்புகளிலோ, வழிநடத்துபவரிடமிருந்தோ அல்லது வேறு யாரிடமிருந்தோ வேதவாக்கியங்களுக்கு முரணானது என்று அறியப்பட்டிருக்கிற குழப்பமான கருத்துகள் வருகையில் மற்றும் அவைகள் கிறிஸ்துவுக்குள்ளான குழந்தைகளினால் சத்தியமென ஏற்றுக்கொள்ளப்படும்போது - சத்தியத்தில் உறுதியடைந்திருப்பவர்கள், ஆனால் நியாயந்தீர்க்கவோ அல்லது விமர்சிக்கவோ விருப்பமில்லாதவர்களாய் இருப்பவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அவர்கள் அமைதியுடன் காணப்படவேண்டுமா அல்லது சத்தியத்தினை வெளிக்கொண்டுவரத்தக்கதாக ஏதேனும் சில கேள்விகள் கேட்க வேண்டுமா? ஒருவேளை சத்தியமானது, யாரேனும் ஐக்கியத்தினின்று ஒதுங்கிவிடுவதற்குக் காரணமாகும் பட்சத்தில், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் எப்படி அணுகிட வேண்டும்?

பதில் - அன்பான நண்பர்களே, என்னுடைய பதில் என்னவெனில் . . . சில முக்கியத்துவமற்றக் காரியங்கள் இருக்கின்றன - ஒரு விதத்தில் பார்க்கும்போது, எந்தச் சத்தியமும் முக்கியத்துவமற்றதல்ல - ஆனாலும் சில சத்தியங்களானது, வேறு சில சத்தியங்களின் அளவுக்கு முக்கியமானவைகளல்ல மற்றும் அவைகள் ஒருவேளை கொஞ்சம் மீறப்பட்டாலும், கண்டுகொள்ளாமல் விடப்படலாம். சபையார் மத்தியில் பேசிக்கொண்டிருக்கும் சகோதரனோ அல்லது சகோதரியோ அல்லது பேசுவது யாராயினும், சத்தியம் தொடர்பான அவனது அல்லது அவளது கண்ணோட்டத்தினை முன்வைப்பவர்களாய் இருப்பார்கள் மற்றும் அது அவன் அல்லது அவள் கண்ணோட்டமெனச் சபையாரால் புரிந்துகொள்ளப்பட வேண்டும் மற்றும் பேசும் நபரும், தான் தேவ ஏவுதலால் பேசுவதாகவோ அல்லது தவறிழைக்காத தன்மையுடையவராக இருப்பதாகவோ உரிமைப்பாராட்டுவதில்லை; மாறாக அவன் அக்காரியம் தொடர்பான தனது கண்ணோட்டத்தினைத் தெரிவிப்பதாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்; மேலும் ஒவ்வொருவனும் அக்காரியம் தொடர்பான அவனது அல்லது அவளது கண்ணோட்டத்தினைத் தெரிவித்திடலாம் என்று சபையாரால் புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஒருவேளை இங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது போன்றதொரு சந்தர்ப்பத்தில் நான் காணப்படுவேனாகில், அக்காரியத்தினை சரியான விதத்தில் கேள்வியாக வைக்கத்தக்கதான நிலைமையில் சபையார் காணப்படுவார்கள் என்று நான் நம்புவேன் மற்றும் நான் எதிர்த்துப் போராடும் விதத்தில், "இல்லை, நீங்கள் கூறும் கருத்திற்கு எனக்கு உடன்பாடில்லை" என்று கூறிடுவதற்கு முயலமாட்டேன். காரியங்களைக் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குப் பல்வேறு வழிகள்

காணப்படுகின்றன. நீங்கள்: "சகோதரனே, அக்காரியத்தினை இந்த ஒரு கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ளலாமல்லவா? கருத்தில் எடுத்துக் கொள்வதற்கு இது முரண்பாடற்றக் கண்ணோட்டமாய் இருக்கின்றதல்லவா? சரியாய் இருக்குமென நான் எண்ணுகின்ற கண்ணோட்டத்தினை இதோ விவரிக்கின்றேன்" என்று கூறிடலாம். பின்னர் உங்கள் கண்ணோட்டத்தினைத் தெரிவியுங்கள்; அவர் தனது கண்ணோட்டத்தினைக் கூறிவிட்டார் மற்றும் உங்களது கண்ணோட்டமானது சுருக்கமாயும், அன்பான விதத்திலும் கொடுக்கப் பட்டிருந்தால், உங்கள் கண்ணோட்டத்தினை நீங்கள் கூறிடுவதற்கு அவர் மறுப்புத்தெரிவிக்க முடியாது. நீங்கள் உங்கள் கடமையினைச் செய்து முடித்துவிட்டீர்கள் மற்றும் அக்காரியத்தில் நீங்கள் சண்டையிட அவசியமில்லை மற்றும் கருத்தில் சிறு வேறுபாடு இருப்பதன் நிமித்தம் ஒருவர் ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென முடிவெடுப்பதற்கும் அவசியமில்லை. அவர் காரியம் குறித்த தன்னுடைய புரிந்துகொள்ளுதலைத் தெரிவித்திடுவதற்குரிய தனது வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டு அதைத் தெரிவித்துள்ளார்; சத்தியமானது, அதிலும் விசேஷமாக ஒருவேளை அது ஏதேனும் முக்கியமான காரியமாய் இருக்கும் பட்சத்தில், சத்தியமானது எப்போதும் தெரிவிக்கப்படுகின்றதா என்று பார்த்துக்கொள்ளுங்கள்; ஆனால் ஒருவேளை அது அதிகம் வித்தியாசமற்றவைகளாக இருக்குமானால், அதைக் கவனித்திட வேண்டாம். இப்பொழுது எனக்கு ஒரு சகோதரன் ஞாபகத்திற்கு வருகின்றார்; அவர் மிகவும் நல்ல இருதயம் கொண்ட சகோதரன் ஆவார் என்பதில் எனக்கு நிச்சயமே; ஆனால் ஒரு கருத்து முன்வைக்கப்பட்டால், அக்கருத்தோ அல்லது மற்றக் கருத்தோ, இரண்டில் ஒன்று உறுதியற்றுப் போகுமளவும் போராடிட வேண்டும் எனும் தவறான எண்ணம் கொண்டவராய் இருந்தார். அன்புக்குரிய நண்பர்களே இது தவறான எண்ணமாகும். நண்பர்கள் அனைவருமே தங்கள் சொந்த மனதில் பகுத்தறிந்திட வேண்டும் மற்றும் நீங்களும் சரி, நானும் சரி, நம்முடைய கண்ணோட்டத்தினைக் குறித்துத் தெரிவித்ததில் மிக்க மனநிறைவு கொள்ள வேண்டும் மற்றும் மற்றவர்கள் எதை விரும்புகின்றார்களோ, அக்கண்ணோட்டத்தினை அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும். இதைத்தானே நாம் நடைமுறையில் செய்துகொண்டிருக்கின்றோம்? வாட்ச் டவர் வெளியீட்டில் நீங்கள் சில கண்ணோட்டத்தினைப் பெற்றுக்கொள்கின்றீர்கள்; நீங்கள் அதை நம்பவேண்டும் என்ற கட்டாயம் உங்களுக்கில்லை; மேலும் நீங்கள் அதை நம்பவில்லை என்றால், அதற்காக நான் உங்களிடத்தில் கோபம் கொள்வதில்லை. அது உங்கள் சார்பிலான காரியமாய் இருக்கின்றது. அடுத்த வாட்ச் டவர் வெளியீட்டில் நான் தொடர்ந்து, மறுபடியுமாக எண்ணுவதை நான் தெரிவித்திடுவேன் மற்றும் நீங்கள் எனக்குக் கடிதம் எழுதிடுவதற்கும், நீங்கள் அதை நம்பவில்லை என்று கடிதத்தில் குறிப்பிடுவதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு மற்றும் நானும், "சரி நீங்கள் நம்பவேண்டிய கட்டாயம் உங்களுக்கு இல்லை" என்று சொல்லிடுவேன்.

**(Q175:1) உடன்படிக்கைகள் - கலந்தாய்விற்குப் பின் கருத்துப்பிரிவினை.**

கேள்வி (1910)-1- வாட்ச் டவர் வெளியீட்டிலிருந்து நாங்கள் பெற்றுக் கொண்ட கருத்தின் அடிப்படையில் உடன்படிக்கைகளைக்குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டபோது, மத்தியஸ்தர் குறித்துப் பார்க்கையில், குறிப்பிட்ட சில விஷயங்களானது வகுப்பில் கருத்துப்பிரிவினையைக் கொண்டுவருவதாகத் இருக்கின்றது. எதன் காரணமாகப் கருத்துப்பிரிவினைகள் வந்ததோ அதைத் தொடர்வதா அல்லது அந்த ஆராய்ச்சியினை விட்டுவிட்டு, வேறு எதையாகிலும் ஆராய்வதா, இதில் எது ஞானமானதாய் இருக்குமென நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

பதில் - கலந்தாய்விற்கு உடன்படிக்கைகள் எனும் தலைப்பு மிகவும் பொருத்தமானது என்று நான் எண்ணுகின்றேன் மற்றும் சபையில் வழக்கமாய்க் கலந்துகொள்ளும் சகோதரன் ஒருவர் கலந்தாய்வின்போது காணப்பட்டு, சில வேறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டிருப்பாரெனில், அவர் தான் சொல்ல விரும்புபவற்றைத் தொடர்ச்சியாய்த் தெரிவித்துக்கொண்டிருப்பதற்குரிய கண்ணோட்டத்தில் இல்லாமல் மற்றும் ஒவ்வொரு கலந்தாய்விலும் வகுப்பைத் தொடர்ச்சியாய்க் குறுக்கிடுவதற்குரிய கண்ணோட்டத்தில் இல்லாமல், மாறாக அதைத் தெரிவித்திடுவதற்கு வாய்ப்பளிக்கப்படுவது மிகவும் சரியே என்று நான் எண்ணுகின்றேன். ஒருவேளை அவர் எடுத்துக் கூறிடுவதற்கு ஏதேனும் இருக்கிறதென்றால் மற்றும் அதைச் சுவாரசியமான விதத்தில் அவரால் எடுத்துக்கூறிட முடியுமானால், கூறிடுவதற்கு அவரை விட்டுவிடுங்கள், ஏனெனில் அவருக்கு அந்த உரிமை இருக்கின்றது; சபையாரில் ஓர் அங்கத்தினனாக, அவர் பேசிடுவதற்கான உரிமையினை உடையவராவார்; ஆனால் ஒருவேளை சபையாரில் பெரும்பான்மையானவர்கள், அவர் முன்வைத்திட்டவைகளுக்கு ஆதரவாய் இல்லையெனில் மற்றும் அவர் அதைத் தொடர்ந்து முன்வைப்பதில் அவர்களுக்கு விருப்பமில்லையெனில், அச்சகோதரனிடம், 'சகோதரனே, நாங்கள் உங்களுக்கு ஒரு நல்வாய்ப்பினைக் கொடுத்தோம் மற்றும் நீங்கள் சொல்ல விரும்பியவற்றைச் சபையாரும் கேட்டார்கள் மற்றும் அதைத் தொடர்ந்து சிந்தித்திடுவதற்குச் சபையார் விரும்பவில்லை. ஆகையால் தயவாய் இனிமேல் நீங்கள் அத்தலைப்பின்பேரிலான எங்களது ஆராய்ச்சியினைக் குறுக்கிட வேண்டாம்" என்று கூறி, அச்சகோதரன் தன் வாதத்தினை நிறுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். மேலும் சபையாருடைய விருப்பத்திற்கு இசைவாக, அத்தலைப்புப் பற்றின கலந்தாய்வு தொடரப்படலாம். ஒருவேளை சபையார் யாவரும், அத்தலைப்பின் பேரிலான கலந்தாய்வை நிறுத்திட விரும்புவார்களானால், ஒவ்வொரு விஷயத்திலும் சபையாரிடமே தீர்மானிப்பதற்கான உரிமை

காணப்படுகின்றது என்ற புரிந்துகொள்ளுதலின் காரணமாக, சபையாருடைய அறிவுறுத்தலின்படி செய்வதைத் தவிர வேறு எதையும் நான் அறியேன்.

**(Q226:3) பிரிவினைகள் - ஒழுங்கில்லாதவர்கள் மற்றும் குழம்பியிருப்பவர்கள்.**

கேள்வி (1910)-3- உரோமர் 16:17-ஆம் வசனத்தில் பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. இத்தகையவர்களுக்கும் மற்றும் வெறுமனே குழம்பிக்காணப்படுகிறவர்களுக்கும் அல்லது சத்தியத்தினுடைய ஏதோ சில மேலான கருத்தினை உடனடியாகப் பார்க்க முடியாதவர்களாகக் காணப்படு கிறவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அறிந்திட எக்காரியங்கள் நமக்கு உதவிடும்? தங்களுடைய கருத்துவேறுபாட்டைக் குறித்துத் தெரிவிக்கும் விஷயத்தில் வழக்கத்திற்கு மாறாக ஆவல் உள்ளவர்களாக ஒருவேளை இந்த இரண்டாம் வகுப்பார் காணப்படுவார்களானால், அவர்களை நாம் எப்படிக் கையாள வேண்டும்?

பதில் - அது ஒரு பகுத்துணரும் காரியம் என்றும், கர்த்தருடைய வழிநடத்துதலை வேண்டிக்கொண்டு நீங்கள் உங்கள் சொந்த பகுத்துணர்தலைப் பயன்படுத்திட வேண்டும் என்றும், சகோதரர்கள் யாவரோடும் ஞானமாய் நடந்துக்கொள்ளுங்கள் மற்றும் எப்போதும் இரக்கத்துடனும், அன்புடனும் நடந்துகொள்ளுங்கள் என்றும் நான் சொல்லுவேன்.

பிரிவினைகளை உண்டுபண்ணுகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயி ருக்கும்படி அப்போஸ்தலன் கூறினதற்கான அர்த்தமானது . . . யாரேனும் நம்மிலிருந்து வேறுபட்டுப் பேசுகிறார்கள் என்றால், நாம் அவரோடு பிரச்சனைப் பண்ணி, அவரை வெளியேற்றக்கூடாது என்று நான் புரிந்துகொள்கின்றேன். அவர்கள் தங்கள் கருத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டு அதை முன்வைத்த பிற்பாடும், போராடிக்கொண்டிருக்கும் மனப்பான்மையில் காணப்பட்டு, தொடர்ந்து மோதிக்கொண்டும், பிரிவினையை உண்டாக்கத் தக்கதாகச் செயல்பட்டுக்கொண்டும் காணப்படுவார்களானால், அவர்களை விட்டு விலகிட வேண்டும் என்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் கூறியுள்ளார். அவர் விட்டு விலக வேண்டுமென்று சொல்கையில், அவர்களைக் காட்டு விலங்குகளைப் போன்றோ, எதிர்ப்பவர்களைப்போன்றோ கருதி விட்டுவிலக வேண்டும் என்று நான் புரிந்துகொள்ளவில்லை; மாறாக இசைவான நிலையில் காணப்படுபவர்களோடு நாம் முழுமையாயும், சுதந்தரமாயும் நம் உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புவது போன்று நாம் யாரிடத்தில் வெளிப்படுத்திட விரும்பிடாமல் இருப்போமோ, அத்தகைய நபர்களென அவர்களைக் கருதவேண்டியதைக் குறிப்பதாகப்

புரிந்துகொள்கின்றேன். உதாரணத்திற்கு, ஏதோ ஒரு வேதவாக்கியப் பகுதியின்மீது, ஏதோ சில வேறுபட்ட கருத்தினை ஒரு சகோதரன் கொண்டிருப்பதற்காக, நாம் அவரை விட்டு விலகிடுவதற்கும், அவரைச் சகோதரன் என்று மறுத்திடுவதற்கும் நாம் அனுமதிக்கப்படவில்லை. கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினனாகக் கருதப்பட்டிருக்கும் ஒருவரை ஐக்கியத்தினின்று ஒதுக்கிவைத்திடுவதற்கு ஒரு செயல்முறை, ஒரே ஒரு வழிமுறை காணப் படுகின்றது; முதலாவது சம்பந்தப்பட்டவரிடத்திற்குத் தனிமையில் செல்ல வேண்டும். ஒருவேளை காரியத்தினைக்குறித்த சரியான புரிந்துகொள்ளு தலுக்குள்ளாக வரமுடியவில்லையெனில், உங்களோடுகூட வேறு இரண்டு அல்லது மூன்று பேரை அழைத்துச் செல்லுங்கள். ஒருவேளை இன்னமும் ஒருமனப் பாட்டிற்குள் வரமுடியவில்லையெனில், விஷயமானது முறையான பிரதிநிதிகள் வாயிலாகச் சபையினிடத்திற்குத் தெரிவிக்கப்படலாம். இரண்டு அல்லது மூன்று பேரை அழைத்துச் செல்லும் விஷயத்தில், நீங்கள் சபையினுடைய இரண்டு அல்லது மூன்று மூப்பர்களை அழைத்துச் செல்லலாம்; ஏனெனில் அழைத்துச் செல்லப்படுவதற்கு அவர்கள் மிகப் பொருத்தமான நபர்களாய் இருப்பார்கள். ஒருவேளை அச்சகோதரன் இவர்களுக்குச் செவிக்கொடுக்க மறுப்பாரானால், பின்னர் அது சபையாருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படலாம்; மற்றும் இந்த ஒரு வழியினால் மாத்திரமே மற்றும் ஒன்றுகூடிவரும் தேவனுடைய ஜனங்கள் அடங்கின முழுச்சபையாரின் வாக்குரிமையினால், அதாவது இவ்விஷயத்தில் அவர்களது வாக்கின் (vote/voice) மூலமாக மாத்திரமே, ஒருவர் சகோதரனென ஐக்கியத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட முடியும். சகோதரர்களென நீங்கள் அடையாளம் கண்டுகொள்பவர்களின் மத்தியில், மற்றவர்களைக்காட்டிலும் சிலரிடத்தில் நீங்கள் மிகவும் நெருக்கமான ஐக்கியம் கொண்டிருப்பீர்கள் மற்றும் இவர்களுக்கு நீங்கள் விசேஷித்த கவனம் செலுத்துவீர்கள்; இதற்குக் காரணம் அவர்களது கல்வியோ அல்லது சமுதாய அந்தஸ்தோ அல்லது ஐசுவரியமோ இல்லாமல், மாறாக கர்த்தரிடத்திலான அவர்களது உறவேயாகும்; மற்றும் பிரிவினையை உண்டுபண்ணுகிற ஒருவரிடத்தில், உங்களது ஐக்கியத்தினை அதிகமாய்க் கொடாதிருங்கள்; மேலும் ஒருவேளை அவர் முழுமையான ஐக்கியத்தில் காணப்பட்டும், பிரிவினைகளை உண்டுபண்ணாமலும் இருந்திருந்தால், நீங்கள் அவரிடத்தில் எப்படி நடந்திருந்திருப்பீர்களோ அப்படி நடந்துகொள்வதற்குப் பதிலாக, இப்பொழுது கொஞ்சம் அதிகமாகவே முகம் கொடுத்துப் பேசாதீர்கள். அவர் "முரண் கோட்பாடுடையவர்" (heretics) என்று அவருக்குக் கெட்டப் பெயர் உண்டாக்கிட வேண்டுமென அப்போஸ்தலன் கூறிடவில்லை. அந்நபர் ஆபத்தான நிலையில் இருப்பதை நீங்கள் காணும்பட்சத்தில், அவரை எந்த ஓர் ஊழியத்திற்கும் அல்லது அவருக்கு விசேஷமாய் ஆதரவாகக் காணப்பட வாய்ப்புள்ள எதற்கும் நியமிப்பதைத் தவிர்த்திடுங்கள். அவரைத் தள்ளிவிடாதிருங்கள்; அவருக்கு

உதவிசெய்ய ஆயத்தமாய் இருங்கள் மற்றும் அவருக்குப் பாதகம் செய்யாதிருங்கள்; இதுவே அப்போஸ்தலனின் கருத்தென்று நான் எண்ணுகின்றேன்.

**(Q704:2) போதித்தல் -ஆரோக்கியமற்றப் போதனைகளைச் சகித்துக்கொண்டிருத்தல்.**

கேள்வி (1909)-2- மூப்பர்கள் சார்பிலிருந்தோ அல்லது மற்றவர்கள் சார்பிலிருந்தோ ஆரோக்கியமற்றப் போதனைகள் வருகையில், அவற்றைச் சகோதரர்கள் எந்தமட்டும் சகித்திட வேண்டும் மற்றும் இம்மாதிரியான சூழ்நிலைகளுக்குத் தீர்வு என்ன?

பதில் - அருமையான நண்பர்களே, சகிக்க வேண்டிய சில காரியங்கள் இருக்கின்றன; ஆனாலும் ஆரோக்கியமற்றப் போதனைகளைச் சகித்துக் கொண்டிருப்பது என்பது, தவறான செய்கையில் உடன்படுவதாக இருக்கும் என்றும், நாம் ஆரோக்கியமற்றப் போதனைகளைச் சகிக்கவே கூடாது என்றும் அப்போஸ் தலன் தெரிவிக்கின்றார். இப்படியானவைகளை யாரேனும் சகித்துக் கொண்டிருப்பார்களானால், எதிர்ப்புரைப்பது அவர்களது கடமையாய் இருக்கின்றது என்று நாம் எண்ணுகின்றோம். ஆனால் இதற்கென்று அவரது கண்ணோட்டம்தான் சரி என்றும், மற்றவர்களுடைய கண்ணோட்டம் அனைத்தும் தவறு என்றும் அர்த்தமாகிறதில்லை. ஒருவேளை நான் இங்கு டென்வரிலுள்ள சபையாரின் மத்தியில் ஓர் அங்கத்தினனாகக் காணப்படுகின்றேன் என்று வைத்துக் கொள்ளலாம் மற்றும் யாரோ ஒருவர் பொதுக்கூட்டத்திலோ அல்லது ஒருசிலர் மத்தியிலோ (private) போதிக்கிற ஒரு குறிப்பிட்ட விஷயம், தவறான காரியமாகவும், விசுவாச வீட்டாருக்குப் பாதகமான காரியமாகவும் காணப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் "வேறு ஒருவர்தான் போதிக்கின்றார், நான் ஒன்றும் தவறானவைகளைப் போதிக்கவில்லையே" என்று நான் கூறிக்கொண்டு, அமர்ந்துகொள்வது எனக்குத் தகுதியான காரியமாய் இராது. என்னுடைய அமைதி என்பது ஒப்புதலளிக்கின்றதாய் இருக்கும். அன்புடனும், பொறுமையுடனும், தெளிவாயும் மற்றும் உறுதியாயும் நான் தவறு என்று நம்புகிறவைகளையும் மற்றும் இது விஷயத்திலான வேதாகம போதனைகளையும் முன்வைத்திடுவதற்கான வாய்ப்பிற்காக நான் பார்ப்பது எனக்குத் தகுதியானதாய் இருக்கும். இது விஷயத்தில் என்னுடைய கடமையை நான் செய்தப் பிற்பாடு, அனைவரும் எனது கண்ணோட்டத்திற்கு வரவேண்டும் என்று நான் வலியுறுத்த வேண்டும் என்பதாகாது. நான் என் பங்கிற்குச் சொல்லியிருக்கின்றேன் மற்றும் ஒருவேளை வேறுயாரேனும் விருப்பப்படுவாரானால், அவரும் அவர் பங்கிக்கிற்குக் கூறட்டும். கிறிஸ்துவின் சபையானது குறுகின மனப்பான்மையுடன் காணப்படக்கூடாது, மாறாக அனைவரும் சத்தியத்தினை முன்வைத்திடுவதற்குரிய சிலாக்கியம்

உடையவர்களாய்க் காணப்பட வேண்டும், ஆனாலும் அனைத்தும் நல்லொழுக்கமாகவும், கிரமமாகவும் செய்யப்பட வேண்டும். பலமுறை சொல்வதற்கு எனக்கு அவசியம் ஏற்படாதளவுக்கு, என்னுடைய விமர்சன அறிக்கைகளையும், அவைகளுக்கான காரணங்களையும் நான் சொல்லிடும் தருணத்துடன் எனது கடமை முடிந்திட வேண்டும். நான் வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்களை முன்வைத்திட வேண்டும் மற்றும் அவர்களும் அவர்கள் சார்பிலான காரணங்களை முன்வைத்திட வேண்டும். வேதவாக்கி யங்களின் அடிப்படையிலான காரணங்களைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் உயர்வான போதனைகளென அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். ஒருவேளை சபையாரில் பெரும்பான்மையானவர்கள் இவ்விஷயத் திற்கான எனது கண்ணோட்டத்திற்கு எதிராக தீர்மானிக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம்; அப்படியானால் என்ன செய்வது? நான்: "வேதாகமத்தின் அடிப்படையில் போதிக்காத போதகர் ஒருவர் இங்குக் காணப்படுகின்றார்; ஆகையால் நான் கூட்டங்களில் கலந்துகொள்ளாமலும், சபையாரோடு கூடிக் கொள்ளாமலும் இருந்திடலாமா?" என்று எனக்குள் சொல்லிக்கொள்ளலாமா? இல்லை, நான்: "இவ்வளவாய் என்னுடைய கடமைகளைச் சபையாருக்கு நான் செய்திருக்கின்றேன். நான் தொடர்ந்து செய்வேன் மற்றும் எனது கண்ணோட்டங் களை முன்வைப்பதற்குரிய இன்னொரு வாய்ப்பு அநேகமாகக் கிடைக்கலாம்" என்றே எனக்குள் சொல்லிடுவேன். இன்னொரு வாய்ப்பு வருகையில், நான் சரி என்று கருதுகிற அளவுக்குத்தக்கதாக என்னுடைய நிலைப்பாட்டினில் நின்றிடுவேன்; ஆனாலும் என்னைக் குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவாக்கிக்கொள்ள மாட்டேன்.

வகுப்பில் காணப்படாத மற்றவர்கள் விஷயம் என்ன? "நண்பர்களே, அயலார்களே, உங்களுடைய வார்த்தைகளுக்காக நன்றி; நாங்கள் இவ்விஷயத்தைக் கவனத்தில் எடுத்துப்பார்த்துள்ளோம் மற்றும் காரியத்தினை விட்டுவிட்டோம் மற்றும் இதுகுறித்து நீங்கள் மீண்டுமாகப் பேசிட வேண்டாம்" என்று கூறிடுவேன்.

இதற்கான தீர்வு என்ன? ஒருவேளை ஆரோக்கியமற்ற உபதேசம் மூப்பர் சார்பிலிருந்து வந்திருக்குமானால், தேர்ந்தெடுத்தலுக்கான காலம் சமீபமாய்க் காணப்படுகிறது என்றால் காத்திருந்து, ஆரோக்கியமற்ற/தெளிவற்ற நிலையிலுள்ள எவரையும் தேர்ந்தெடுக்காதபடிக்குப் பார்த்துக் கொள்ளுங்கள். ஒருவேளை அவர் தெளிவில்லாதவர் என்று அவரைத் தேர்ந்தெடுக்கும்போதே அறிந்திருந்தீர்களானால், தவறு உங்களுடையதாகும். சத்தியத்தில் தெளிவில்லாதவர் என்று நீங்கள் அறிந்திருக்கும் ஒருவருக்கு வாக்கு (vote) அளித்திட உங்களுக்கு உரிமையில்லை. இது விஷயமான அனைத்தையும் ஆறாம் தொகுதியில், இது தொடர்பான தலைப்பின் கீழ் நீங்கள் பார்க்கலாம்.

கர்த்தருடைய ஜனங்கள் தயக்கம் கொள்வதையும் மற்றும் "இன்னென்ன

நபர்களுக்கு வாக்களிக்க நான் விரும்பவில்லை; இன்னென்ன நபர் மூப்பர் ஊழியத்திற்குப் பொருத்தமானவர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை" என்று கூறுவதைச் சிலசமயங்களில் நான் பார்த்திருக்கின்றேன். அமைதலாய் இருந்து, அவருக்கு வாக்களிப்பதில் நீங்கள் தவறு செய்பவர்களாய் இருப்பீர்கள். குணலட்சணங்களை உடையவர்களையும், கொள்கைகளை அடையாளம் கண்டுகொண்டவர்களையும் மற்றும் அந்தக் கொள்கைக்கு இசைவாய்ச் செயல்படுபவர்களையும் தம்முடைய சபையில் பெற்றிருக்கத் தேவன் விரும்புகின்றார். உங்களது துணிவின்மையை ஜெயங்கொள்வதற்கு, உங்கள் சார்பில் சில ஜெயங்கொள்ளுதல் காணப்பட வேண்டும் மற்றும் இதன் காரணமாகவே நீங்கள் உங்களது கடமையினைச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றீர்கள்; ஏனெனில் ஜெயங்கொள்பவர்கள் தவிர வேறு எவரும் தெரிந்தெடுக்கப்படும் வகுப்பாரில் காணப்படுவதில்லை. சண்டையிடுவதற்கும், தர்க்கம் பண்ணுவதற்கும், மற்றவர்களுடைய உணர்வுகளைப் புண்படுத்துவதற்கும் விரும்பிடாத பண்புகளை நான் கண்டு வியப்பதுண்டு; நாம் இத்தன்மையினைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் காரியங்களைத் தெளிவாய் முன்வைக்கும் விதத்தில் கூறிடுவதற்கான அன்பான, தயவான விதங்கள் இருக்கின்றன மற்றும் நீங்கள் உங்கள் கடமையினைச் செய்யும்போது, நீங்கள் அன்பான நோக்கங்கள் தவிர, வேறெதுவும் பெற்றிருக்கவில்லை என்பதை அனைவரையும் நீங்கள் அறியப்பண்ணிட வேண்டும். தங்கள் மூப்பர்களாக யார் காணப்பட வேண்டும் என்பது தொடர்புடைய விஷயத்தில் சபை காலம் எடுத்து, நிதானிக்க வேண்டும். நீங்கள் கர்த்தரைப் பிரதிநிதித்துவம் பண்ணுகிறீர்கள் மற்றும் உங்களது வாக்கில் (vote) அவரை நீங்கள் பிரதிநிதித்துவம்பண்ணுகிறீர்கள். கிறிஸ்துவினுடைய சபையில், நம்முடைய வாக்கின் (vote) விஷயத்திலுள்ள பொறுப்பினை நாம் அதிகமதிகமாய் உணர்கின்றவர்களாய் இருத்தல் வேண்டும்.

**(Q534:3) பயண ஊழியர்கள் - உள்ளூர் பயண ஊழியர்களின் வேலை.**

கேள்வி (1910)-3- பயண ஊழியரின் வேலைக்கொத்த ஒரு வேலையினை ஒரு சகோதரன் தானாகவே துவங்கி, பல்வேறு சபையார்களுக்குத் தகவல் கொடுத்தும், தியதிகளை நிர்ணயித்தும், கூட்டங்கள் முதலானவைகளை ஒழுங்குப்படுத்திடுவதற்குக் கேட்டுக்கொண்டும் காணப்படுகையில், இது விஷயத்தில் சபையார் என்ன செய்ய வேண்டும் என்று உங்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

பதில் - சொசைட்டியானது முற்றிலும் சுதந்திரமாய்க் காணப்படுவதற்கும் மற்றும் அது அனைவருமே முற்றிலும் சுதந்திரமாய்க் காணப்படும்படிக்கு

விட்டுவிடுவதற்கும் விரும்புகின்றபடியினால், அது வேலைக்கு விசேஷமாய்த் தகுதியுடையவர்கள் என்று நம்புபவர்களை மாத்திரமே பயண ஊழியர்களாக அனுப்புவதற்கு முயற்சிக்கின்றது. வேலைக்கான தகுதிகள் அநேகவற்றையுடைய மற்றச் சகோதரர்கள் காணப்படுகின்றார்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேக மில்லை மற்றும் அவர்களுக்குத் தகுதிகள் இல்லை என்றும், அவர்களால் எந்த நன்மையும் இல்லை என்றும் தீர்மானிப்பது நமக்கடுத்தக் காரியமல்ல. ஆகையால் எந்தவொரு சபையார் மீதும் அதிகாரத்தினைச் செலுத்திட நாங்கள் முற்படுகிறதில்லை. மாறாக காரியத்தினை முற்றிலுமாகச் சபையாரிடமே விட்டுவிடுகின்றோம். ஒரு சகோதரனை சொசைட்டியானது அனுப்பிவைக்க வில்லை எனும் காரியமானது, அச்சகோதரனை விசேஷமாக சொசைட்டியின் பிரதி நிதியாகக் கருதிடுவதற்கு ஏதுவானவராக, சொசைட்டி நம்பிடும் ஒருவராக - அவரைக் கண்டுகொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் இது ஒருவருக்கெதிராய்ப் பழிச்சுமத்துகிறதாய் இராது. எனக்கு இரண்டு விவகாரங்கள் ஞாபகத்திற்கு வருகின்றது. ஒன்று ஒரு சகோதரனைக்குறித்தது ஆகும்; நான் அறிந்திருக்கிறவரை இவர் மிக அருமையான சகோதரர் ஆவார் மற்றும் இவர் சத்தியத்திற்கு மிகவும் நேர்மையானவர் என்றும், மிக நல்ல சகோதரர் என்றும் நான் நம்புகின்றேன்; ஆனால் அச்சகோதரனுக்குக் கல்வியறிவில் குறைபாடு இருந்தது மற்றும் அவர் ஊழியம் செய்கிறதற்குக் கல்வியறிவு பற்றின காரியம் தடையாக இருக்கும் என்று நாம் வலியுறுத்தவில்லை; எனினும் ஒருவேளை மற்றத் தகுதிகள் இருந்தபோதிலும், சரியான துல்லியத்துடன் ஆங்கில மொழியில் பேசிடும் ஆற்றலில் குறைவுப்பட்டிருக்கும் இவரைப் பயண ஊழியராக அனுப்பி வைப்பது ஞானமானதாகவும், கர்த்தருக்கு மிகமை சேர்க்கிறதாகவும் இராது என்று நாம் எண்ணினோம். இதுவே அச்சகோதரனை மறுப்பதற்கு ஏதுவான ஒரே காரியமாகும்; மற்றப்படி அவரது குணலட்சணத்திற்கு எதிராக எதுவும் இருக்கவில்லை. வேறொரு சகோதரன் சில ஊழியம் புரிவதற்கான வாய்ப்பு உடையவராகக் காணப்பட்டார் மற்றும் இவர் மிகவும் அருமையான சகோதரன் ஆவார் மற்றும் ஒருவேளை அவரது குடும்பம் மற்றும் வீட்டுக் காரியங்களானது அனுமதிக்கும் பட்சத்தில் அவரைப் பயண ஊழியர்களின் வேலையில் பெற்றுக் கொள்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்போம்; இச்சகோதரன் இவ்வூழியத்திற்கென்று தனது நேரத்தைக் கொடுக்கத்தக்கதான விதத்தில் அவரது குடும்பச் சூழ்நிலைகளானது காணப்படவில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியே சென்று நண்பர்களுக்கு ஊழியம் புரிய அவருக்கு வாய்ப்புக்கிடைக்கு மானால் நாம் மிகவும் மகிழ்ச்சிக்கொள்வோம். அனைவருடைய நிலவரங்களும் இவ்விருவரின் நிலவரங்கள் போல் இருப்பதில்லை. எனினும் இவைகளை உங்கள் மனதில் நிலைநிற்கத்தக்கதாக, இந்த இரண்டு நல்ல உதாரணங்களை நான் கொடுக்கின்றேன். ஒவ்வொரு சபையாரும் இம்மாதிரியான நபர்கள் தொடர்புடைய விஷயத்தில் பகுத்தறிய வேண்டும் என்பதும், இத்தகையவர்கள் தங்களுக்கு

ஊழியம் புரிவது தங்களுக்குப் பிரயோஜனமாக இருக்குமா இல்லையா என்று சபையார் அறிந்து கொள்ளும்படிக்குத் தங்களது பகுத்தறிவைப் பயன்படுத்திட வேண்டும் என்பதும் எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. ஒருவேளை பிரயோஜனமாய் இருக்குமென்று சபையார் எண்ணுவார்களானால் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வார்களாக; ஒருவேளை தங்களுக்குப் பிரயோஜனமில்லை என்று எண்ணுவார்களானால் அவர்களை அழைக்காமலிருப்பார்களாக. நாங்கள் அனுப்பிவைக்கிறவர்களுக்குப் பொறுப்பாளிகளாக இருக்கின்றோம் என்றும், ஒருவேளை பயண ஊழியர்கள் ஒழுக்க ரீதியிலும், அறிவு ரீதியிலும், பக்தியின் ரீதியிலும் ஞானமாய் நடந்துகொள்ளவில்லையெனில் அது விஷயம் சொசைட்டிக்கு தகவல் கொடுத்திட, சொசைட்டி விரும்புகிறது என்றும் மாத்திரம் சொசைட்டி கூறிக்கொள்கின்றது. அனுப்பப்படுகிறவர்கள் இவ்வூழியத்திற்கான விஷேசித்தத் தகுதியுடையவர்களாய் இருக்கின்றார்கள் என்றும், இந்தக் காரணத்தின் நிமித்தமாகவே அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் நாம் நம்புகின்றோம்; ஆனால் இது மற்றவர்களுக்கு எதிராய் எதையும் சொல்வதைக் குறிக்காது; சபையார் தங்களுக்குச் சிறந்தது என்று தோன்றும் எதையும் செய்திடுவதற்கு சொசைட்டியானது விட்டுவிடுகின்றது.

**(Q535:2) பயண ஊழியர்களை உபசரித்தல் முதலானவைகளுக்கான சரியான வழிமுறை.**

கேள்வி (1913 - Z.5161)-2- சபையின் மூப்பராக இருந்தும், வாக்குறுதியோடும் (vow), சொசைட்டியின் (society) ஊழியங்களோடும் உடன்பாடு கொண்டிராத ஒருவரால், பிரயாணம் மேற்கொண்டுள்ள பயண ஊழியர் வரவேற்கப்பட்டு, உபசரிக்கப்படுவது ஞானமான அல்லது சரியான காரியமாய் இருக்குமா?

பதில் - மிகவும் உறுதியாய் இல்லை என்பதே பதில். இன்னுமாக இப்படியான மூப்பர் ஒருவரைத் தேர்ந்தெடுத்ததில் சபையார் பெரிதும் தவறுசெய்துள்ளனர் என்று சபையாருக்குப் பயண ஊழியர் தெளிவுபடுத்திட வேண்டும் மற்றும் முடிந்தமட்டிலும் விரைவாய்த் தவறைச் சரிசெய்திடுவதற்கு அவர்களுக்கு உதவிட வேண்டும்.

சொசைட்டியினுடைய ஊழியங்களின் மீது உடன்பாடில்லாத அந்த மூப்பரை ஒருவேளை தொடர்ந்து சபையார் விரும்புவார்களானால், சபையார் பயண ஊழியர்களின் ஊழியத்திற்காக சொசைட்டியிடம் வேண்டிக்கொள்ளக்கூடாது. கர்த்தருடைய அருமையான செம்மறியாடுகளில் சிலர் மிகவும் மதியீனமாய்க் காணப்படுகின்றனர். சாந்தமும், தயவும் பாராட்டத்தகுந்தவைகளே; ஆனால் சிலசமயங்களில் இப்படிச் சாந்தத்தோடும், தயவோடும் காணப்படுவது என்பது தேவனுக்கு நேர்மையற்றிருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

## (Q514:1) உண்மையான ஏற்படுத்துதல் (ordination).

கேள்வி (1915 - Z.5807)-1- சுவிசேஷத்தின் ஊழியக்காரனாய் நீங்கள் எப்பொழுது மற்றும் யாரால் மற்றும் எப்படி ஏற்படுத்தப்பட்டீர்கள்?

பதில் - இக்கேள்விக்கு நான் பதிலளிக்கிறதற்கு முன்னதாக, ஏற்படுத்துதல் (ordination) தொடர்புடைய வேதவாக்கியங்களின் போதனைகளை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். வேதாகமத்தினுடைய கண்ணோட்டத்தின்படி இரண்டு சரியான ஏற்படுத்துதல்கள் காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம். ஒன்று தேவனால் ஏற்படுத்தப்படுதல்; ஒன்று மனுஷனால் ஏற்படுத்தப்படுதல் ஆகும். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது தேவன் சார்பிலான ஏற்படுத்தப்படுதலாக இருக்கின்றது. இது இல்லாமல், யாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடிய அதிகாரம் இருப்பதில்லை. இந்த ஏற்படுத்துதல் இல்லாமல் பிரசங்கிக்கும் எவரும், நாங்கள் புரிந்திருக்கிறவரையில் திவ்விய ஏற்படுத்துதல் இல்லாமல் பிரசங்கிக்கிறவர்களாய் இருப்பார்கள். இவர்கள் தாங்கள் செய்யும்படிக்கு அங்கீகாரம் பெறாத ஒன்றைச் செய்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

தாம் எப்படிப் பிரசங்கிப்பவராகுவதற்கு ஏற்படுத்தப்பட்டார் என்று நமது கர்த்தர் கூறியுள்ளார்; மற்றும் நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும் என்றும், அநேக விதங்களில் அவரைப்போன்றே அனுபவங்கள் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்றும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. சிலுவையின் ஊழியக்காரர்களென, நம்மால் முடிந்தமட்டும் முழுமையாக நாம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிட வேண்டும். ஆனால் அவர் பூரணராய்க் காணப்பட்டார் மற்றும் நாம் அபூரணர்களாய்க் காணப்படுகின்றோம். ஆகையால் நம்முடைய பாவங்களுக்காக நாம் மன்னிப்புப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது; ஆனால் அவருக்கோ எந்தப் பாவங்களு மில்லை. ஆகையால் அவர் தம்முடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் வாயிலாகப் பிதாவினிடத்திற்கு வருபவர்கள் யாவருடைய மன்னிப்பிற்கும் வழிவகையானார். "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" என்று கூறி, அவர் தம்முடைய ஏற்படுத்தப்படுதலைக் குறித்துக் குறிப்பிடுகின்றார் (ஏசாயா 61:1). இயேசுவின் மீது வந்த அந்த ஏற்படுத்துதலானது, பிற்பாடு பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் மீது கடந்துவந்ததாய் இருக்கின்றது மற்றும் சுவிசேஷயுகம் முழுவதிலும் அந்த ஏற்படுத்துதலானது கிறிஸ்துவின் பின்னடியார்கள் மீது வந்து, சுவிசேஷத்தைப்

பிரசங்கிக்கும்படியாக அவர்களை அபிஷேகித்ததாய் இருந்தது (லூக்கா 4:17-21; 1 யோவான் 2:27).

தேவனுடைய ஏற்படுத்தப்படுதலைப் பெற்றுக்கொண்டுள்ள அனைவரும் தங்கள் வாய்ப்புகள் மற்றும் திறமைகளுக்கேற்ப பிரசங்கிப்பதற்கான அதிகாரத்தினை உடையவர்களாய் இருக்கின்றனர். அவர்களில் சிலர் செவிடர்களும் - ஊமையர்களுமாய் இருந்து, மற்றவர்களுக்குக் கேட்கும் விதத்தில் பிரசங்கிக்க முடியாதவர்களாய்க் காணப்படுகின்றனர். வேறு சிலர் பாலினத்தினால் வரையறைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்; சகோதரர்கள் போன்று சகோதரிகளால் பிரசங்கம்பண்ணிட முடியாது; ஆனாலும் "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் விதத்தில்" அவர்களால் பிரசங்கம் பண்ணிடக்கூடும் (1 பேதுரு 2:9). இன்னுமாக அவர்கள் நற்செய்தியினைத் தெரியப்படுத்திடுவதற்கு முழுமையாய் ஏற்படுத்தப்பட்டவர்களாய் (fully ordained) இருக்கின்றனர்; ஆனாலும் அப்போஸ்தலனாகிய பவுலினுடைய வார்த்தைகளுக்கேற்ப பொதுவிடங்களில் அல்ல. தாலந்து அல்லது வாய்ப்பு இல்லாததன் காரணமாக, பொதுவிடங்களில் பிரசங்கிக்க முடியாதவர்களாக சில புருஷர்கள் காணப்படுகின்றனர்; ஆனாலும் அனைத்துப் புருஷர்களும் தங்களை அந்தகாரத்தினின்று ஒளியினிடத்திற்கும் தூக்கியெடுத்தவரும், உளையான சேற்றினின்றும், பயங்கரமான குழியினின்றும் தூக்கியெடுத்து, தங்களது கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, தங்கள் அடிகளை உறுதிப்படுத்தினவருமான மாபெரும் மற்றும் அன்பான தேவனுடைய மகிமையையும், கனத்தையும் தங்களது ஜீவியங்கள் வாயிலாகவும், சம்பாஷணைகள் வாயிலாகவும் அறிவித்திடலாம் (சங்கீதம் 40:2).

இப்பொழுது சுவிசேஷத்தில் ஊழியக்காரர்கள் என்று அழைக்கப்படுபவர் களுக்கான மற்றொரு விசேஷமான ஏற்படுத்துதலுக்கு நாம் வரலாம்; இவ்வகுப்பாரில் நானும் அடங்குபவனாகக் கருதுகின்றேன். இது சபையினால் பண்ணப்படும் ஏற்படுத்தப்படுதலாகும் மற்றும் இது எங்குமுள்ள சபை பிரிவினர் யாவராலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளதாய் இருக்கின்றது; இது சிலரால் வெறும் சடங்கெனக் கருதப்படுகின்றது; சிலரினால் இது மகா புறஆச்சாரத்துடன் ஆசரிக்கப்படுகின்றது மற்றும் வேறு சிலரால் சிறு புற ஆச்சாரத்துடன் ஆசரிக்கப்படுகின்றது. ஆனால் ஒவ்வொரு சபையாரும் தாங்கள் தெரிந்துகொள்பவர்களை, கைகளை நீட்டுவதன் மூலம் - வாக்கு (vote) மூலம் - அதாவது வேதவாக்கியம் முன்வைக்கும் விதத்தில் ஏற்படுத்திட வேண்டும் என்பது எங்களுடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது.

அப்போஸ்தலர் 14:23-ஆம் வசனத்தில் இடம்பெறும் காரியங்களும் மற்றும் அனைத்துச் சபைகள் தொடர்பாக மூப்பர்கள் குறித்து இடம்பெறும் மற்ற வேதவாக்கியங்களும், ஏற்படுத்துதல் என்பதே ஆதிசபையின் நிலையான

வழக்கமாய்க் காணப்பட்டு வந்தது என்னும் கூற்றினை நியாயப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இவ்வசனத்தில் இடம்பெறும் "மூப்பர்கள்" என்னும் வார்த்தையானது சுவிசேஷகர்களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் மற்றும் பொதுவில் விரிவுரையளிப்பவர்களாகிய தீர்க்கத்தரிசிகளையும் உள்ளடக்குகின்றதாய்க் காணப்படுகின்றது. ஆகையாலே "ஏற்படுத்துதல்" (ordained) எனும் வார்த்தையின் அர்த்தம் என்னவென்று நாம் கற்றுக்கொள்வது முக்கியமானதாய்க் காணப் படுகின்றது.

தற்காலத்தில் "ஏற்படுத்துதல்" (ordination) எனும் வார்த்தையானது, பொதுவாக ஸ்தானத்தில் அமர்த்தப்படுவதற்கான அனுசரிப்புச் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படுகின்றது; ஆனால் இது இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் "Cheirotoneo" எனும் கிரேக்க வார்த்தையினுடைய அர்த்தமல்ல. இதன் அர்த்தம் "கைகளை நீட்டுவதன் மூலம் தேர்ந்தெடுத்தலாகும்," vote/வாக்குக் கொடுப்பதற்கான பொதுவான வழக்கமுறையாகும். இந்த ஓர் அர்த்தமானது பேராசிரியர் Young's "Analytical Concordance to the Bible"-இல் கொடுக்கப்பட்டுள்ளது. இது Presbyterian சான்று மேற்கோளாகக் கருதப்படலாம் என்பதினால் நாம் Strong's "Exhaustive Concordance of the Bible" -இல் இடம்பெறும் விளக்கத்தையும் கொடுக்கின்றோம் மற்றும் இது Methodist சான்று மேற்கோளாகக் கருதப்படலாம். Strong's இவ்வார்த்தைக்கு (கைகளை நீட்டுவதன் வாயிலாக) வாக்களிப்பவர் அல்லது கைகளை நீட்டுபவர் என்று விளக்கம் கொடுக்கின்றார்.

வாக்குச் செலுத்துவதற்கெனக் கைகளை நீட்டுவதன் வாயிலான சபையாரின் தேர்ந்தெடுத்தலே, அனைத்துச் சபைகளிலும் மூப்பர்களை ஏற்படுத்துவதற்கான வேதவாக்கிய முறைமையாக இருக்கின்றது. இதைத் தேர்ந்தெடுத்தலுக்கு முன்னதாகச் சபையாருக்கு வலியுறுத்துவது என்பது, வேதவாக்கிய ஒழுங்குமுறையைப் பின்பற்றுவதாக இருக்கும்; இது மூப்பரைப் பலப்படுத்திடும் மற்றும் தேவனுடைய சித்தத்தை, தேவனுடைய தெரிந்தெடுத் தலைத் தெரிவிக்கிறவர்களாய்க் கர்த்தருடைய நாமத்திலும் மற்றும் ஆவியிலும் மூப்பர்களை நியமித்தவர்களெனச் சபையார் கொண்டிருக்கும் அதன் கடமைகளையும், பொறுப்புகளையும் சபையாருக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கும். இதோடுகூட இந்த வேதவாக்கிய ஏற்பாடானது சபையாரின் அங்கத்தினர்களை - மூப்பர்களுடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகள் யாவற்றிலும், அவர்களைத் தங்களது ஊழியக்காரர்களென மற்றும் பிரதிநிதிகளெனக் கண்டுகொள்ளச்செய்திடும். இது சபையார் மூப்பர்களுக்குச் சொந்தமானவர்கள் மற்றும் சபையாரை ஆளுகிறவர்கள் என்று நிலவும் பிரபலமான கருத்தினை எதிர்க்கின்றதாகவும், "கர்த்தருடைய ஜனங்கள்" என்பதற்குப் பதிலாக "எனது ஜனங்கள்" என்ற மூப்பர்களுடைய சிந்தைக்கு முற்றுப்புள்ளியும்

வைக்கின்றதாயும் இருக்கும்.

இந்த இரண்டு விதங்களில் ஏற்படுத்தப்படாத எவரும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் சுவிசேஷத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஊழியர்களல்ல. முதலாவதாகத் திவ்விய ஏற்படுத்துதல் அவசியமாய் இருக்கின்றது; இரண்டாவதாக பூமிக்குரிய ஏற்படுத்துதல் அவசியமாய் இருக்கின்றது; தேவனுடைய கிருபையினால், நான் இந்த இரண்டையும் பெற்றிருக்கின்றேன்.

Watch Tower Bible And Tract Society-இன் பெயரில் பொது ஊழியங்களில் ஈடுபட்டிருப்பவர்கள், மொத்தத்தில் ஏற்படுத்தப்பட்டவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் சொசைட்டியின் பணியாளர்களால் அனுப்பி வைக்கப்படுகின்றனர்; மற்றும் எங்கும் காணப்படுகின்றதான பெரும்பான்மையான சபையார்கள் சொசைட்டியினால் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறபடியாலும் மற்றும் அவர்களும் society-ஐ அடையாளங்கண்டு கொண்டுள்ளதினாலும், அவர்கள் சொசைட்டியின் வாயிலான இந்த ஏற்படுத்துதல்களை அடையாளங் கண்டு கொள்கின்றனர்.

## (Q515:1) ஏற்படுத்துதலுக்கான (ordination) அதிகாரம்.

கேள்வி (1915 - Z.5809)-1- பிரசங்கியாளர்களை அனுப்பிடுவதற்குச் சொசைட்டிக்கு எங்கிருந்து அதிகாரம் கிடைத்தது?

பதில் - பிரசங்கிக்கச் செல்வதற்கென்று பரிசுத்த ஆவியினைப் பெற்றுக்கொண்டுள்ள தம்முடைய ஜனங்கள் அனைவரையும் அங்கீகரிக்கும் கர்த்தரிடமிருந்து, சொசைட்டியானது அதன் அதிகாரத்தினை முதலாவதாக பெற்றுக்கொள்கின்றது. இரண்டாவதாக புத்தகங்கள், பிரதிகள், வரைப்படங்கள் முதலானவைகளை அச்சிடுவதன் வாயிலாகவும் மற்றும் வாயின் வார்த்தையினாலும், அச்சிடப்பட்ட பக்கங்களினாலும், பிரசங்கிக்கும்படிக்குத் தனது பிரதிநிதிகளை அனுப்புவதன் வாயிலாகவும் கர்த்தருக்கான ஊழியத்தில் மதரீதியிலான வேலை புரிவதற்கான அலுவல் அமைப்பாய்ச் சொசைட்டி காணப்படுகின்றது. இதுவே அதன் ஒரே அலுவலாகும். அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையார் கிறிஸ்தவ சமயம் பரப்பும் ஊழியத்தினைச் செய்யும்படிக்கு விசேஷமாய்ப் பவுலையும், பர்னபாவையும் தேர்ந்தெடுத்து, சபையாருக்குரிய பிரதிநிதிகளாக இருக்கும்படிக்கு இவர்களுக்கு வாக்களித்தது (vote) போன்ற அதேவிதத்தில்தான் - சொசைட்டியானது செயல்படுத்துகின்றதாய் இருக்கின்றது (அப்போஸ்தலர் 13:2, 3).

பவுலும், பர்னபாவும் புறப்பட்டபோது அவர்கள் "நாங்கள் எங்கள் நாமத்தில் பிரசங்கிக்கின்றோம்" என்று கூறிடவில்லை. அவர்கள் கர்த்தருடைய நாமத்தில் புறப்பட்டுச் சென்று பிரசங்கித்திடுவதற்கான உரிமையினையுடையவர்களாய்

இருந்தனர் மற்றும் இதோடுகூட, அந்தியோகியா சபையாரிடமிருந்து பண ஆதரவுப் பெற்றிருந்தனர்; அதாவது இன்று நம்முடைய பிரதிநிதிகளுக்கு சொசைட்டியினுடைய ஆதரவுக் காணப்படுவது போன்றதாகும். அவர்கள் ஓரிடத்திற்குச் செல்கையில் அவர்கள்: "நாங்கள் சொசைட்டியின் பிரதிநிதிகளெனச் செயல்படுகின்றோம் என்பதற்கான கடிதம் இதோ உள்ளது" என்று சொல்லிடலாம். ஆகையால் அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் மாத்திரமல்லாமல், சுவிசேஷவேலையினைப் புரிந்துகொண்டிருப்பதாக அறியப்பட்டிருக்கும் இந்தச் சொசைட்டியின் பிரதிநிதிகளெனச் செல்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

**(Q517:1) ஏற்படுத்துதல் (ordination) - கைகளை வைத்தல்.**

கேள்வி (1915 - Z.5807)-1- "ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே," என்று தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்டதான அப்போஸ்தலனின் ஆலோசனையை நாம் எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும்? இது முறையான ஓர் ஏற்படுத்துதலைக் குறிக்கின்றதா?

பதில் - தீமோத்தேயுவுக்குப் பேசப்பட்டதான அப்போஸ்தலன் பவுலினுடைய வார்த்தைகளானது பல்வேறு விதங்களில் புரிந்துகொள்ளப்படலாம். ஒருவேளை நாளைய காலை செய்தித்தாளில் யாரோ ஒருவர் ஒரு மனுஷன்மீது அவசரப்பட்டுக் கைகளை வைத்துவிட்டார் என்று வாசிப்போமாகில், அம்மனுஷன் தாக்கப்பட்டிருக் கின்றார் என்று நாம் புரிந்துகொள்வோம்; ஆனால் இப்படியாக இதற்குக் கிரேக்கில் அர்த்தம் காணப்படுகிறதில்லை. சரியான அர்த்தம் என்று தாங்கள் எண்ணினவற்றை மொழிப்பெயர்ப்பாளர்கள் வழங்கியுள்ளனர் என்று நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆதி சபையினர் தங்களது மூப்பர்கள், உதவிக்காரர்கள் முதலானவர்களின் தலைகளின் மீது கைகளை வைக்கும், ஒரு வழக்கத்தின் ஆசரிப்பைப் பெற்றிருந்தனர். ஆனால் அப்போஸ்தலர்கள் இதைச் செய்த போது, அது பரிசுத்த ஆவி பகிரப்பட்டதைச் சுட்டிக்காட்டினதாய் இருந்தது. இதை அப்போஸ்தலர்கள் அல்லாமல் வேறு யாராலும் அருளிட முடியாது. ஊழியர்களை நியமிக்கும் விஷயத்தில் சபைகள் தங்கள் மத்தியில் சில ஆசரிப்பு வழக்கங்களைப் பெற்றிருந்திருக்கலாம்; அப்படியாக அவர்கள் செய்கையில் அது அவர்கள் அந்நபர்களை அங்கீகரிப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

வாட்ச் டவர் Bible மற்றும் Tract சொசைட்டி ஏதோ ஒருவகை விசேஷித்த ஊழியத்திற்கென ஒரு பயண ஊழியரை அனுப்பிவைக்கையில், மேலே சொல்லப்பட்டுள்ள ஆசரிப்பு வழக்கத்திற்கு ஒத்த ஒன்றைக் கைக்கொள்ளுவதில் எதுவும் தவறு இருக்காது. சொசைட்டியின் பணியாளர்கள் முன்வந்து பயண ஊழியரின் தலையின் மீது தங்கள் கைகளை வைத்து, "நீங்கள் சொசைட்டியுடைய

பிரதிநிதியாகக் காணப்படுகின்றீர்கள்" என்று சொல்லிடலாம். முற்காலத்தில் ஆசாரியர்கள் பலிச் செலுத்தப்படப் போகின்ற விலங்கானது தங்களை அடையாளப் படுத்துகின்றது என்று காண்பிக்கத்தக்கதாக, விலங்கினுடைய தலையின் மீது தங்கள் கைகளை வைத்தார்கள். ஆகையால் ஒருவர் சொசைட்டியால் அனுப்பி வைக்கப்படலாம்; மேலும் கைகளை வைத்தல் ஆசரிப்பானது, பார்வைக்குரியதாய்க் காணப்பட்டு, "நீங்கள் இன்னின்ன ஊழியங்களுக்கென்று நியமிக்கப் பட்டுள்ளீர்கள்" என்ற வார்த்தைகளைத் தவிர வேறெந்த அதிகாரத்தையும் உடையதாய் இருப்பதில்லை.

கர்த்தருடைய ஜனங்கள் அடங்கும் ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாரும், தாங்கள் தேர்ந்தெடுக்கும் எந்த ஓர் ஆசரிப்பு வழக்கத்தையும் பயன்படுத்திடலாம். எப்பிஸ்கோப்பலியன்ஸ் மற்றும் கத்தோலிக்கர்கள் அதிக அளவில் ஆசரிப்பைப் பெற்றிருக்கின்றனர்; மற்றப் பிரிவினர்கள் குறைவான ஆசரிப்பைப் பெற்றிருக் கின்றனர். நாமும் விரும்புகிறதற்கு ஏற்ப பெரிய அல்லது சிறிய ஆசரிப்பைப் பயன்படுத்துவதற்கான உரிமையினைப் பெற்றிருக்கின்றோம் என்று நாம் நம்புகின்றோம். ஏற்படுத்துதல் என்ற வார்த்தைக்கான அர்த்தமானது அங்கீகாரம் அளித்தலாகும். உண்மையான ஏற்படுத்துதல் என்பது, முதலாவதாகப் பரிசுத்த ஆவியினால் ஏற்படுவதாக இருக்கின்றது; இரண்டாவதாகச் சுவிசேஷச் செய்தியுடன் ஊழியக்காரனை அனுப்பி வைத்திடும் அமைப்பினால் ஏற்படுவதாக இருக்கின்றது.

**(Q521:2) மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் ஏற்படுத்துதல் (ordination).**

கேள்வி (1916 - Z.5939)-2- தேவனுடைய ஜனங்கள் அடங்கின சபையாரால் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் யாவரும் திவ்விய ஏற்படுத்துதலின் படியானவர்கள் என்று கருதப்பட வேண்டுமா?

பதில் - இல்லை, பரிசுத்த ஆவியினாலான ஜெநிப்பித்தலை அடையாத எவரும் தெய்வீக ஏற்படுத்துதலின் படியானவர்கள் என்று கருதப்பட முடியாது. தேவனுக்குத் தன்னை முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாகவும், பரிசுத்த ஆவியினாலான ஜெநிப்பித்தலை அடைந்ததாகவும் தன்னைக்குறித்து அறிக்கைப்பண்ணிடாத ஒருவரைச் சபையார் ஊழியராக ஏற்படுத்திக்கொள்வது என்பது, சபையார் செய்திடுவதற்குக் கர்த்தரால் அங்கீகாரம் அளிக்கப்படாத காரியத்தினை, அவர்கள் செய்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அந்நபர், இப்படியாய் இவரை ஊழியராக ஏற்படுத்தின சபையாரின் பிரதிநிதியாகத்தான் இருப்பாரேயொழிய, கர்த்தருடைய பிரதிநிதியாக இருப்பதில்லை.

ஆனால் ஒரு சகோதரன் குறித்த கர்த்தருடைய அங்கீகாரத்தினை ஒரு சபையார் அடையாளம் கண்டுகொள்வார்களானால் மற்றும் இன்னுமாக அச்சகோதரன் போதக சமர்த்தனாய் இருப்பதையும், தெய்வீக வார்த்தைகளுக்கு ஏற்ப ஊழியத்திற்குப் பொருத்தமான பண்புகளை உடையவராய் இருப்பதையும் அடையாளம் கண்டுகொள்வார்களானால், கர்த்தருடைய நாமத்தில் சபையாரின் பிரதிநிதியாகிடுவதற்கு அச்சகோதரனை முறையாய்த் தேர்ந்தெடுத்திட அல்லது ஏற்படுத்திட வேண்டும். கர்த்தருடைய ஜனங்களின் வேண்டுகோளில்லாமல், எந்த ஒரு சகோதரனும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒரு கூட்டத்தாருக்கு ஊழியம் புரிந்திட முற்படக்கூடாது; சபையாருடைய வேண்டுகோள் அல்லது அவர்களது vote/வாக்குகளானது - அந்த ஊழியத்திற்குச் சகோதரனை நியமிக்கின்றதாய் இருக்கின்றது, அதாவது வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் சகோதரனை அவர்கள் ஊழியத்திற்காக ஒரு நாளோ அல்லது ஒரு வருஷக்காலமோ நியமிக்கின்றதாய் அல்லது ஏற்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

**(Q521:1) ஏற்படுத்துதல் (ordination) - மனிதர்களால் அல்ல.**

கேள்வி (1916 - Z.5939)-1- இவ்விதமாய் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் யாவரும் ஏற்படுத்தப்படுவது முறையானது என்றும் மற்றும் ஏற்படுத்தப்படாமல் எவரும் தொடர்ச்சியாய் ஊழியம் புரிந்திட முற்படக்கூடாது என்போமானால், பரிசுத்த பவுல் அடிகளார் "மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயே அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நான்" என்று என்ன அர்த்தத்தில் கூறினார்? (கலாத்தியர் 1:1)

பதில் - ஓர் அப்போஸ்தலனைத் தேர்ந்தெடுப்பதற்கோ அல்லது நியமிப்பதற்கோ எந்த ஒரு மனுஷனோ அல்லது சபையாரோ பொருத்தமானவர்களல்ல. எந்தச் சபையாருடைய வாக்குகளும், சகோதரரில் ஒருவரை அப்போஸ்தலனாக்கிட முடியாது. அது தெய்வீக ஏற்படுத்துதலினால் மாத்திரமேயான ஒரு விசேஷித்த ஊழியம் அல்லது பணியாகும். ஆகவே கர்த்தர் இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களை மாத்திரம் - "ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களை" ஏற்படுத்தினார்; அப்போஸ்தல ஸ்தானத்தினை இழந்திட்டதான யூதாசின் இடத்தினை, பரிசுத்த பவுல் அடிகளார் எடுத்துக்கொண்டார் (வெளிப்படுத்தல் 21:14; சங்கீதம் 109:8; அப்போஸ்தலர் 1:20). இந்த ஒரு விஷயத்தில்தான் உரோம சபையும், இங்கிலாந்து சபையும் மற்றும் கிரேக்க சபையும், தேவனுடைய வார்த்தைகளின் கொள்கையினை மீறுகின்றவர்களாய் இருக்கின்றனர்; அதாவது அப்போஸ்தல அதிகாரமும், வல்லமையும் உடைய கண்காணிகளை - அப்போஸ்தல கண்காணிகளை நியமிப்பதாக வலியுறுத்து

கின்றனர்; ஆனால் உண்மையில் இப்படி ஏற்படுத்திட முடியாது.

தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தின் ஏற்படுத்துதல் ஒருபக்கமிருக்க, மற்றபடி தனக்கான பூமிக்குரிய ஏற்படுத்துதலை தான் பொருட்படுத்தவில்லை என்பதாக நாம் புரிந்துகொள்ள வேண்டுமெனப் பரிசுத்த பவுல் அடிகளார் சொல்லவில்லை. மாறாக அந்தியோகியாவிலுள்ள சபையார் அநேகமாக தங்களது சொந்த செலவில் சுவிசேஷத்தினை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லும் தங்களது பிரதிநிதியாகக் காணப்படும்படிக்குப் பவுலையும், பர்னபாவையும் ஏற்படுத்தினார்கள் மற்றும் பின்னர்ப்பவுலையும், சீலாவையும் ஏற்படுத்தினார்கள். அப்போஸ்தலனாகிய பவுலை, அந்தியோகியா சபை அப்போஸ்தலனாக ஏற்படுத்தாமல், மாறாக தங்களது சுவிசேஷஊழியக்காரனாக அவரை ஏற்படுத்தினார்கள் மற்றும் அவரும் அவர்களது ஏற்படுத்துதலை ஏற்றுக்கொண்டு, அப்போஸ்தலர் நடபடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது போன்று, அவர்களுக்கு அறிக்கை விவரம் கொடுத்தார் என்று பார்க்கின்றோம் (அப்போஸ்தலர் 14:26-28).

**(Q520:4) ஏற்படுத்துதல் (ordination) - Watch Tower Bible and Tract Society-இன் ஊழியர்கள்.**

கேள்வி (1916 - Z.5939)-4- வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டியானது (Watch Tower Bible and Tract Society) அறுவடை வேலைக்காக ஊழியக்காரர்களை அல்லது பிரதிநிதிகளை எப்போதேனும் ஏற்படுத்தினதுண்டா?

பதில் - ஆம் ஏற்படுத்தினதுண்டு. அனைத்துப் பயண ஊழியக்காரர்களுமே ஊழியத்தின் அந்த விசேஷித்த பணிக்காக இவ்விதம் ஏற்படுத்தப்படுகின்றனர், நியமிக்கப்படுகின்றனர் அல்லது தெரிந்தெடுக்கப்படுகின்றனர். சடங்கு என்பது ஏற்படுத்துதலாய் இராமல், மாறாக நியமித்தலும், கட்டளையிடுதலுந்தான் ஏற்படுத்துதலாய் இருக்கின்றது. சொசைட்டியானது, அதனுடைய பிரதிநிதிகளாகவும், அதேவேளையில் கர்த்தருடைய மற்றும் அவரது வார்த்தைகளுடைய பிரதிநிதிகளாகவும் காணப்படும் பயண ஊழியர்களை ஏற்படுத்துகின்றது, அங்கீகரிக்கின்றது, அவர்கள் செல்லும் இடங்களைக் குறித்துக் கட்டளையிடுகின்றது.

**(Q520:3) ஏற்படுத்துதல் (ordination) - பயண ஊழியரின் ஏற்படுத்துதலை நீக்குதல்.**

கேள்வி (1916 - Z.5939)-3- வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டிக்கு, ஒரு பயண ஊழியச் சகோதரனுடைய ஏற்படுத்துதலை நீக்கிடுவதற்கான/withdraw உரிமை உள்ளதா?

பதில் - ஆம், நிச்சயமாக! அதற்கு ஏற்படுத்திடுவதற்கும், கட்டளையிடுவதற்கும் அதிகாரம் இருக்குமானால், முந்தைய காலங்களில் அது செய்திட்டதான நியமித்தல்களையும், கட்டளைகளையும் நீக்கிடுவதற்கும் அதற்கு அதிகாரமுள்ளது.

**(Q520:2) ஏற்படுத்துதலை (ordination) - சொசைட்டி நீக்குதல்.**

கேள்வி (1916 - Z.5939)-2- சொசைட்டியின் ஏற்படுத்துதல் அல்லது நியமித்தலானது நீக்கப்படுதல் என்பது, இப்படியாகக் சொசைட்டியினுடைய ஊழியத்தினின்று தற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பட்டுள்ள பயண ஊழியக்காரன், அதன் பிறகு பிரசங்கம்பண்ணிடுவதற்கு உரிமையற்றவர் என்பதைக் குறிக்குமா?

பதில் - நிச்சயமாக இல்லை! பயண ஊழியக்காரனிடமிருந்து சொசைட்டி யானது அதன் நியமனத்தை நீக்கிடுதல் என்பது, ஏதோ சில காரணங்களினால் அந்தப் பயண ஊழியக்காரன் இனிமேல் சொசைட்டியின் பிரதிநிதியாக இருப்பதில்லை என்பதை, அவருக்கோ அல்லது அவரது போதனைகளுக்கோ அல்லது அவரது நடத்தைக்கோ அல்லது வாழ்க்கை பராமரிப்பிற்கோ இனிமேல் சொசைட்டி பொறுப்பாய் இருக்காது என்பதை மாத்திரம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். பயண ஊழியக்காரர்களுடைய பட்டியலினின்று இப்படியாக நீக்கப்பட்டுள்ளதான அந்தப் பயண ஊழியச் சகோதரன், தொடர்ந்து சகோதரனாகவே காணப்படுவார் மற்றும் இப்படியாகவே சொசைட்டியினாலும் கருதப்படுவார்; ஆனாலும் - குணலட்சணத்தினுடைய சில பெலவீனங்களை வெளிப்படுத்துவதன் காரணமாகவோ அல்லது போதகசமர்த்துவத்தில் சில குறைபாடுகளின் காரணமாகவோ அல்லது ஊக்குவிக்கப்படக் கூடாது என்று சொசைட்டியானது எண்ணுகிற சில காரணங்களுக்காகவோ அல்லது சொசைட்டி பொறுப்பேற்க விரும்பிடாத சில விஷயங்களுக்காகவோ அல்லது பலதரப்பட்ட காரணங்களுக்காகவோ, நோய் முதலானவைகள் என்ற காரணங்களுக்காகவோ - அச்சகோதரன் இனிமேல் சொசைட்டியினுடைய பிரதிநிதியாய் இருப்பதற்குப் பொருத்தமான நபராகக் கருதப்படுவதில்லை.

**(Q520:1) ஏற்படுத்துதல் (ordination) - V. D. M. தலைப்பு.**

கேள்வி (1916 - Z.5939)-1- V. D. M. - என்பதன் அர்த்தம் என்ன? மற்றும் V. D. M. பட்டம்/degree கொடுக்கப்படுவது எதைக் குறிக்கின்றதாய் இருக்கும்?

பதில் - V. D. M. என்பது மிகவும் பழையப் பெயராகும். இப்பெயருடைய பயன்பாடானது நீண்ட காலமாய் வழக்கத்தில் இல்லாதபடியினால், வெகு சிலரே

இதன் அர்த்தத்தினை அறிந்தவர்களாய் இருக்கின்றனர். இந்த மூன்று எழுத்துக்களானது, Verbi Dei Minister எனும் இலத்தீன் வார்த்தைகளைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இதன் ஆங்கில வார்த்தை "Minister of Divine Word"/ "திவ்விய வார்த்தைகளினுடைய ஊழியக்காரன்" என்பதாகும். இருண்ட யுகங்களில் திவ்விய வார்த்தைகள் பயன்பாட்டில் இல்லாமல் போய், இதற்குப் பதிலாக விசுவாசப் பிரமாணங்கள் பயன்பாட்டில் காணப்பட்டபோது, இப்பெயரும் பயன்பாட்டில் இல்லாமல் மற்றும் புறக்கணிக்கப்பட்டுப் போயிற்று. திவ்விய வார்த்தைகளுக்கு ஊழியக்காரன் யாரும் இல்லாமல் போயிற்று; காரணம் திவ்விய வார்த்தையானது பிரசங்கிக்கப்படாமல், இதற்குப் பதிலாக மனுஷருடைய விசுவாசப் பிரமாணங்கள் பிரசங்கிக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய பொது ஊழியர்கள் தொடர்புடைய விஷயத்தில், சரியான சிந்தையினை மிக அருமையாய் வெளிப்படுத்துகின்றதான இந்த எளிமையான வார்த்தைகளையுடைய இப்பெயருக்குப் பதிலாக, இன்று வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாத Reverend/ரெவரண்ட் மற்றும் Doctor of Divinity/வேதசாஸ்திரி போன்ற பகட்டான பட்டங்கள் காணப்படுகின்றது. திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரன் எனும் பட்டம் கொடுக்கப்படுவது என்பது, ஊழியராக ஏற்படுத்தப்படுதலைக் குறிப்பதாய் இராது; மாறாக சொசைட்டியானது இப்பட்டத்தினைக் கொடுக்கையில், அது அந்நபருடைய நற்பெயரை ஆராய்ந்துள்ளது என்பதையும் மற்றும் முடிந்தமட்டும் அந்நபருடைய குணலட்சணத்தையும், விசேஷமாக அந்நபருடைய உபதேச ரீதியிலான வளர்ச்சியையும் ஆராய்ந்துள்ளது என்பதையும் மற்றும் (V. D. M. கேள்விக்கான பதில்களை) மதிப்பீடு செய்யும் குழுவினுடைய அங்கத்தினர்களின் கணிப்பில், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரன் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியானவராய் இருக்கின்றார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் மாத்திரமே இருக்கின்றது.

**(Q519:1) தற்காலத்தில் ஊழியர்களின் ஏற்படுத்துதல் (ordination).**

கேள்வி (1916 - Z.5939)-1- இத்தகைய திவ்விய வார்த்தைக்கான ஊழியர்கள் இப்போது இருக்கின்றார்களா?

பதில் - ஆம், நிச்சயமாக! சொசைட்டியினால் அனுப்பப்படும் ஒவ்வொரு பயண ஊழியக்காரனும், விசுவாச பிரமாணங்களினுடைய அல்லது "அமைப்புகளுடைய/isms" ஊழியக்காரர்களாய் இல்லாமல், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரனாகவே அனுப்பப்படுகின்றான்; உண்மையில் தேவனுடைய வார்த்தைக்கான ஊழியக்காரனாகவே அனுப்பப்படுகின்றான். எந்த ஓர் இடத்திலுமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின சபையார்,

அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள ஒரு தேவனுடைய பிள்ளையை, மூப்பராகத் தேர்ந்தெடுக்கும் போதெல்லாம், சபையார் தங்களுடைய தெரிந்துகொள்ளுதலின் வாயிலாக அல்லது தேர்ந்தெடுத்தலின் வாயிலாக, அந்த மூப்பர் திவ்விய வார்த்தைக்கான ஊழியராய் இருக்கின்றார் - அதாவது தேவனுடைய வார்த்தைகளிலுள்ள சத்தியங்களைப் பிரசங்கிப்பவராய், பரப்புபவராய், பகிர்ந்தளிப்பவராய் இருக்கின்றார் என்று சுட்டிக்காட்டுகின்றவர்களாய் இருக்கின்றனர்.

## (Q518:2) ஏற்படுத்துதல் (ordination) - சொசைட்டியின் கேள்விப்பட்டியலுக்கான நோக்கம்.

கேள்வி (1916 - Z.5939)-2- ஒரு கேள்வி பட்டியலைத் தொகுத்து, இக்கேள்விகளுக்குச் சொசைட்டியிடம் திருப்திகரமான விதத்தில் பதிலளிக்கும் நபர், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரனாகக் கருதப்படுவார் என்று கூறுவதில், சொசைட்டிக்குக் காணப்படும் நோக்கமென்ன?

பதில் - அக்கேள்விகளானது, நீண்டகாலமாய் வாஞ்சிக்கப்பட்டதை நிறைவு செய்யும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அக்கேள்விகளானது, மதவெறியின் அடிப்படையானது அல்ல; அவை யாவும் வேதவாக்கியங்களின் அடிப்படையினாலானதாகும். இப்பொழுது ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பயண ஊழியர்களிடமிருந்து அல்லது எதிர்க்காலத்தில் சொசைட்டியின் பிரதிநிதிகளாய், பயண ஊழியர்களாய்க் காணப்படப் போகின்றவர்களிடமிருந்து, கிறிஸ்துவின் சுவிசேஷம் தொடர்புடையதான இந்த அடிப்படையான கேள்விகள் பற்றின அவர்களது புரிந்துகொள்ளுதல்களையும், அவர்களது கருத்துக்களையும், அவர்களது சிந்தனைகளையும் அறிந்துகொள்வதற்குக் சொசைட்டியானது விரும்புகின்றது. அக்கேள்விகளுக்குப் பதிலளிக்க விரும்பிடாத எந்தச் சகோதரனும், மனதில் குழப்பம் கொண்டிருப்பவராகவும், உறுதியற்றவராகவும், இதினிமித்தம் போதிப்பதற்குத் தகுதியற்றவராக, "போதகசமர்த்தனாய்" இல்லை என்பதாகவும் கருதப்படுவார். இது அவர் தொடர்ந்து சகோதரராக இல்லை என்பதைக் குறிக்கின்றதாய் இராது; மாறாக பயண ஊழியத்திற்குப் பொருத்தமான சகோதரனாக அவர் கருதப்படுவதில்லை என்பதையே குறிக்கின்றதாய் இருக்கும். இன்னுமாக அச்சகோதரன் பிரசங்கிக்கக் கூடாது என்பதைக் குறிப்பதாய் இராது; மாறாக சொசைட்டியானது அவரைத் திவ்விய வார்த்தையின் விரிவுரையாளராய்ப் பரிந்துரைக்காது என்பதை மாத்திரமே குறிக்கின்றதாய் இருக்கும்.

எந்த ஒரு சகோதரன் கேள்விகளுக்குப் பதிலளிக்க விருப்பமுள்ளவனாகக் காணப்பட்டும், ஆனால் தன்னுடைய பதில்களில் கொஞ்சம் குழப்பத்தினை

வெளிப்படுத்துகிறவராக இருப்பாரானால், இது அவர் சொசைட்டிக்கும், தேவனுடைய வார்த்தைத் தொடர்புடையதாக எது சத்தியம் என்று சொசைட்டியினால் நம்பப்படுபவைகளுக்கும் பிரதிநிதியாகிடுவதற்கும் முன்னதாக, இன்னும் அதிகமான போதனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்று எங்களுக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அத்தகைய சகோதரன் அநேகமாக Brooklyn/ புரூக்கிளினுக்குக் கொண்டுவரப்பட்டு, கொஞ்சக்காலம் மற்ற ஊழியங்களில் பங்கெடுப்பதற்கு வாய்ப்பு அருளப்படுவார் மற்றும் ஒவ்வொரு மதிய வேளையிலும் நடைபெறும் வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளிலும் பங்கெடுக்கும் வாய்ப்பினை அடைவார்; இன்னுமாக முழுக்காரியமும் முழுமையாய்ச் சரியாகிவிடவும், தெளிவாய்ப் பார்த்து, புரியப்படத்தக்கதாகவும் சத்தியம் தொடர்பான பாடங்களில், எவ்வகையான கேள்விகளைக் கேட்பதற்கான வாய்ப்பினை முழுச்சுயாதீனத்துடன் பெற்றிருப்பார்.

## சிநேக பாவமான ஒரு யோசனை

பெத்தேல் குடும்பத்திலுள்ள/Bethel family சகோதரிகளில் அநேகர், இக்கேள்விகளைக் குறித்துக் கேள்விப்பட்டவர்களாக, பயிற்சியாய் இருக்கும் மற்றும் அறிவடைதலாய் இருக்கும் எனும் கண்ணோட்டத்தில், இக்கேள்விகளுக்குத் தாங்கள் பதில் கொடுக்கத்தக்கதாக, தங்களுக்கு அக்கேள்வி பட்டியலைத் தரும்படிக்கு விசேஷித்த வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதைப்போலவே பல்வேறு சபைகளிலுள்ள மூப்பர்களும், உதவிக்காரர்களும் கேள்விகளுக்காக வேண்டிக்கொண்டுள்ளனர். சொசைட்டியினுடைய V.D.M. degree/ பட்டத்திற்குத் தகுதியடையத்தக்கதாக, இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முடிகின்றவர்களை, மூப்பர் ஊழியத்திற்குத் தேர்ந்தெடுப்பது என்பது, அனைத்து இடங்களிலுமுள்ள வேதமாணவர்கள் அடங்கியுள்ளதான சபையார் யாவருக்கும் நன்மை பயக்கின்றதாய் இருக்கும். இது மூப்பர்கள் மத்தியில் அநேகம் மாற்றங்களைக் கொண்டுவந்திடும்; ஆனாலும் அவை நன்மையான மாற்றமாய் இருக்குமென நாங்கள் நம்புகின்றோம். இன்னுமாகச் சத்தியத்தினை, அதாவது சத்தியத்தினை மாத்திரம் போதித்திட உள்ளப்பூர்வமாய் விரும்புகின்றதான மூப்பர்கள் யாவரும், இக்கேள்விகளால் கிடைக்கப்பெறும் உதவியினைப் பெற்றுக்கொள்வதில் சந்தோஷமடைவார்கள் என்று நாம் நம்புகின்றோம் .

சிலசமயம் அருமையான நண்பர்களில் சிலர், தாங்கள் மூப்பர்களாகத் தெரிந்துகொள்ளும் அல்லது ஏற்படுத்தும் நபர்களின் விஷயத்தில் எவ்வளவு அஜாக்கிரதையாய்க் காணப்படுகின்றனர் என்று பார்க்கையில் - கர்த்தருடைய வார்த்தைகளின் கட்டளைக்கு முரணாக பெரும்பாலும் நூதன சீஷர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, இப்படியாய் நூதன சீஷனுக்கும், சபையாருக்கும்

பாதகம் உண்டாக்குவதைப் பார்க்கையில் - நமக்கு ஆச்சரியமே ஏற்படுகின்றது (1 தீமோத்தேயு 3:1-7). மூப்பர் ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையை மாத்திரமே தேர்ந்தெடுக்கும் விஷயத்திற்கு அடுத்தப்படியாக இருக்க வேண்டிய கேள்வி - எந்தளவுக்கு அச்சகோதரன் ஆராய்ச்சியையும், அறிவடைவதற்கான சிலாக்கியங்களையும் பயன்படுத்தியுள்ளார்? என்பதேயாகும். ஒருமுறையேனும் வேதாகம பாடங்களின் ஆறு தொகுதிகள்/volumes அனைத்தையும் வாசித்திராத அல்லது வாட்ச் டவர் இதழின் தொடர்ச்சியான வாசகனாக இராத, எந்த ஒரு சகோதரனையும் மூப்பராகத் தேர்ந்தெடுப்பது ஞானமற்றக் காரியமாய் இருக்கும் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. சொசைட்டியானது எந்த அதிகாரத்தையும் செலுத்தவில்லை, எந்த விமர்சனமும் செய்யவில்லை, மாறாக கர்த்தருடைய காரணங்கள் மற்றும் கர்த்தருடைய ஜனங்களின் நலனுக்காய், அறிவுரை மாத்திரமே கொடுப்பதாக நினைவில் வைக்கப்படுவதாக.

## சகோதரிகள்

### (Q200:1) பெண் உதவிக்காரர்களின் (Deaconess) - தேர்ந்தெடுத்தல்.

கேள்வி (1912)-1- ஏதேனும் சூழ்நிலைகளுக்காக, நீங்கள் பெண் உதவிக்காரர்களின் தேர்ந்தெடுத்தல் மற்றும் நியமனத்தைப் பரிந்துரைக்கின் றீர்களா? ஆம் என்றால், எச்சூழ்நிலையின்போது?

பதில் - தற்போது புரூக்கிளின் கூடாரத்தில் நாங்கள் பெண் உதவிக்காரர்கள் யாரையும் பெற்றிருக்கவில்லை; ஆனால் முன்னே பெற்றிருந்தோம் மற்றும் அவர்களைப் பெற்றிருந்ததால் சில நன்மையும் இருந்தது என்று எண்ணுகின்றோம். செய்வதற்கு அவர்களுக்கு ஏதாகிலும் இருந்தால் அல்லது அந்த வேலைக்கு நபர்கள் பொருத்தமானவர்களாய் இருந்தால் தவிர மற்றபடி வெறுமனே ஊழியர்களைப் பெற்றிருப்பதில் எந்தப் பயனுமில்லை. டீக்கனஸ்/Deaconess எனும் வார்த்தையானது பெண் ஊழியர் எனும் அர்த்தத்தினைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. ஒரு சபையிலுள்ள சகோதரிகள் மத்தியில் சகோதரி ஒருவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது, அவர்களிடத்தில் போய், அவர்களுக்கு உதவிடு வதற்கும், அவர்களைப் பராமரித்துப் பார்த்துக்கொள்வதற்கும் ஒருவர் அவசியமாகுவார். இல்லையேல் துன்பத்தில் இருக்கும் சகோதரி ஒருவர் போய்ச் சந்திக்கப்படுவது அவசியமாயிருக்கும் மற்றும் இதைச் செய்திடுவதற்குச் சகோதரர்களுக்கு நேரம் கிடைக்காமல் இருக்கலாம். இம்மாதிரியான

ஊழியங்களைச் சகோதரிகள் பெண் உதவிக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோ அல்லது தேர்ந்தெடுக்கப்படாமலோ செய்திடலாம். பெண் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது கர்த்தருடைய வசனத்திற்கு முரணானதல்ல. ஒரு சபையார் தங்களுக்கு இத்தகைய ஊழியர்கள் அவசியம் என்று கண்டுகொள்வார்களானால், அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான முழு அதிகாரமும் வேதவாக்கியங்களில் காணப்படுகின்றது; எனினும் மிகவும் கவனமாய் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் - அதாவது அவர்கள் செய்யும்படிக்கு அழைக்கப்படும் எந்த வேலைக்கும் பொருத்தமானவர்களாகவும், சகோதரிகளின் மத்தியில் கர்த்தருடைய ஆவியைப் பெற்றவர்களுக்கான உதாரணமாகக் குறிக்கப்பட்டவர்களாகவும், தங்களுடைய நடை, உடை, பாவனையில் சபையாருடைய நியாயமான, அதேசமயம் பட்சமான ஆதரவையும் பெற்றவர்களாகவும் காணப்படுபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

## (Q538:1) ஜெபத்தில் சகோதரிகள் வழிநடத்துதல்.

கேள்வி (1909)-1- சகோதரிகள் ஜெபத்திற்கு நேராய் வழிநடத்தலாம் என்பதையும், அவர்கள் பொது ஆராதனைகளில் ஏதேனும் பங்காற்றலாம் என்பதையும் சுட்டிக்காட்டும் வேதவாக்கியம் ஏதேனும் காணப்படுகின்றதா அல்லது இதற்கு எதிராக ஏதேனும் வேதவாக்கியம் காணப்படுகின்றதா?

பதில் - இக்கேள்விக்குப் பதிலளிப்பது என்பது அநேகம் வேதவாக்கியங்களினுடைய நீண்ட ஆய்வினைக் கொடுக்க வேண்டியதாய்க் காணப்படும் மற்றும் உங்களுக்கு வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியினைக் குறிப்பிடுவதன் மூலம் உங்கள் கேள்விக்குச் சிறந்த பதிலளிக்கின்றேன்.

## (Q660:2) சகோதரிகள் ஜெபக்கூட்டங்களில் பங்கெடுத்தல்.

கேள்வி (1905)-2- நம்முடைய கூட்டங்களில் சகோதரிகள் ஜெபத்தில் பங்கெடுப்பதற்கு நீங்கள் அறிவுறுத்துவீர்களா?

பதில் - வேதவாக்கியங்கள் கூறுவதென்ன? சகோதரிகள் ஜெபத்தில் பங்கெடுத்தார்கள் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். "ஜெபம்பண்ணுகிற போதாவது தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்தச் சகோதரியும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்." வேதவாக்கியங்கள் அங்கீகரிக்கின்றதான எந்த அதிகாரத்தையும் நான் சகோதரிகளிடமிருந்து எடுத்துப்போடுகிறதில்லை.

**(Q662:2) சகோதரிகள் ஜெபத்திற்கு நேராய் நடத்துதல்.**

கேள்வி (1911)-2- ஜெபக்கூட்டம் ஒன்றில் ஒரு சகோதரி ஜெபத்தில் நடத்துவது என்பது வேதவாக்கியங்களுக்கு முரணான காரியமா?

பதில் - பொதுவான ஆராதனை கூடுகைகளில் சகோதரர்களுக்கு இருப்பது போன்ற அதே ஒரு தலைமை நிலையைச் சகோதரிகளுக்கு, வேதவாக்கியங்களானது கொடுக்கிறதில்லை. ஸ்திரீயானவள் சபையை அடையாளப்படுத்துகிறவளாக இருக்கிறாள்; புருஷன் கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறவனாக இருக்கின்றான்; "அப்போஸ்தலன் கூறுவதுபோல ஸ்திரீக்குப் புருஷன் தலையாய் இருக்கின்றான், புருஷனுக்குக் கிறிஸ்து தலையாய் இருக்கின்றார், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாய் இருக்கின்றார்." இந்த வரிசைமுறைமையில் பார்க்கையில் சபைக்கு அடையாளமான ஸ்திரீ, கர்த்தருக்குச் செவிக்கொடுக்க வேண்டுமென்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றதாய் இருக்கின்றது. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில் பொது ஊழியங்களில் சகோதரிகளினால் சிறிய அளவில் முதன்மை ஸ்தானங்கள் எடுக்கப்பட வேண்டும். ஆனால் இது ஒரு சகோதரி ஜெபத்தில் ஈடுபடக்கூடாது என்பதைக் குறிக்கின்றதாக நான் புரிந்து கொள்ளுகிறதில்லை. இதுபோன்ற ஒரு பொதுக்கூட்டத்தில் ஒரு சகோதரி ஜெபத்திற்கு நேராய் வழிநடத்துவது என்பது மிகவும் தகுதியற்றக் காரியமாய் இருக்கும் என்று நான் எண்ணிடுவேன். ஒருவேளை வீட்டுக்கூடுகையாகவோ அல்லது சிறு கூட்டமாகவோ அல்லது குடும்பக்கூடுகையாகவோ இருக்கையில் ஜெபத்திற்கு நேராக வழிநடத்துவதற்கு அவள் கேட்டுக்கொள்ளப்பட்டால் அது முற்றிலும் சரியான காரியமாக இருக்கின்றது என்று புரிந்துகொள்வேன்; மற்றும் அவள் முக்காடிட்டுக்கொள்ள வேண்டுமா என்று கேள்விக் கேட்கப்பட்டால், அப்போஸ்தலன் "ஆம்" என்று பதிலளிக்கின்றார் என்று கூறிடுவேன் - ஒருவேளை அவள் ஜெபம் ஏறெடுத்தால் அவள் தன் தலையின் மீது முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்; தலைமயிர் அவளுக்கு முக்காடாக இருப்பினும், அவள் அதன்மேலும் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும். இது அவள், தான் தலை அல்ல என்பதை அடையாளம் கண்டு கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் மற்றும் இந்த விதத்தில் பேசுபவளாக இல்லாமல், கர்த்தருக்குச் செவிக்கொடுக்கும் சபையை அடையாளப்படுத்துகின்றாள்.

**(Q660:3) ஆறாம் தொகுதியில் சகோதரிகளுக்கான கட்டுப்பாடுகள்.**

கேள்வி (1910)-3- ஆறாம் தொகுதியில் சகோதரிகள் மீது விதிக்கப்பட்டுள்ளதான கட்டுப்பாடுகளானது, சகோதரர்கள் கலந்துகொள்ளும் வேதாகம

ஆராய்ச்சி வகுப்புகளையும் உள்ளடக்குமா என்பதை அறிந்து கொள்வதற்கு நாங்கள் பிரியப்படுகின்றோம். எந்தக் கூட்டங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகளானது பொருந்தும் என்பதைத் தயவாய் எங்களுக்குத் தெரிவியுங்கள்.

பதில் - எனது அன்பு நண்பர்களே, இவைகளை அப்போஸ்தலன் குறிப்பிடுகையில், அப்போஸ்தலன் எதை மனதில் கொண்டிருந்தார் என்பதை ஊகிக்க வேண்டியுள்ளது. அவரது வார்த்தைகளுக்கான நியாயமான விளக்கம் என்று நாம் நம்புவதென்னவெனில் . . . அவர் பொதுவகையான கூட்டங்களையே குறிப்பிட்டாரேயொழிய, மாறாக வேதாகம ஆராய்ச்சிக் கூட்டங்கள் வகையை அல்ல. அவர் தனிமையில் சந்தித்தலையோ அல்லது ஒரு சிலரைக் கொண்டிருக்கும் கூட்டங்களையோ குறிப்பிடாமல், பொதுக் கூட்டங்களையே குறிப்பாய்க் குறிப்பிட்டுள்ளார் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. அதேவேளையில் நான் ஒருவேளை ஒரு வேதாகம வகுப்பில் சகோதரியாகக் காணப்பட்டிருப் பேனாகில், ஒருவேளை அது ஒரு சிறிய எண்ணிக்கையிலான வகுப்பாய் இருக்குமானால், வாய்ப்பு வருகையில், நான் எந்தக் கேள்வியையும் எழுப்பிடுவதற்கு விரும்பிடுவேன் மற்றும் ஒருவேளை வகுப்பில் முன்வைக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியாகிலும் முழுமையாய்ப் பதிலளிக்கப்படவில்லை என்று என்னுடைய கணிப்பில் காணப்படுமானால், நான்: "இப்பதிலானது, இக்கருத்தானது எப்படி இன்னென்ன கேள்விக்கும் பொருந்திடும்?" என்று கூறி, மறைமுகமான விதத்தில், அப்பாடம் தொடர்புடைய எனது கருத்தினை வெளிக்கொணர விரும்புவேன்; இப்படியாக அவ்விஷயம் மீது முழுச்சொற்பொழிவு ஆற்றிடுவது போன்றதற்கு இணையான ஒன்றை, நான் செய்வதுபோன்று எண்ணிடுவேன் மற்றும் இப்படியாகக் கேள்வி கேட்பதன் வாயிலாக அவைகளை மற்றவர்களுக்கு முன்வைத்திடுவேன். அப்போஸ்தலர் கொடுத்த கட்டுப்பாடுகளானது, கேள்விகள் கேட்கும் விஷயத்திற்குப் பொருந்தும் என்று நான் புரிந்துகொள்ளுகிறதில்லை. ஒருவேளை நான் ஒரு சகோதரியாகக் காணப்படுவேனாகில், நான் கேள்விகள் கேட்பதற்குத் தயக்கமில்லாமலிருக்க வேண்டும் மற்றும் என்னுடைய செல்வாக்கினை நான் கவனமாய்க் கையாண்டிட வேண்டும் மற்றும் "நான் உங்கள் கருத்திற்கு ஒத்துக்கொள்கிறதில்லை; நான் இன்னென்ன விதமாய்க் கருதுகின்றேன்" என்று கூறிடுவதற்குப் பதிலாக, "இந்தக் காரியத்துடனும், அந்தக் காரியத்துடனும் எப்படி அக்கருத்து ஒத்துப்போகின்றது?" இல்லையெனில், "அதனோடும், இதனோடும் எப்படி அது ஒத்துப்போகின்றது?" என்று நன்மை பயக்கும் விதமான வடிவத்தில் கேள்வியினை முன்வைப்பதில், நான் என் செல்வாக்கினைப் பயன்படுத்துகின்றேன் என்று நான் உணரமுடிய வேண்டும். ஒருவேளை ஜனங்கள் என்னைக் கேள்விகேட்பதற்கு அனுமதிப்பார்களானால், நான் எல்லாச் சபைகளுக்கும் சென்று, அவைகளைச் சீக்கிரத்தில் தலைக் கீழாக்கிடுவேன். சகோதரிகளுக்கான

கட்டுப்பாடு என்பது என்னைப் பொறுத்தவரையில், விசேஷித்தக் கட்டுப்பாடல்ல; மாறாக சகோதரிகளை இந்தப் பெண்மையின் ஸ்தானத்தில் வைத்துக்கொள்வது சகோதரிகளுக்கு உண்மையில் சிலவிதங்களில் அனுகூலமாகக் காணப்படும்.

## (Q661:1) சகோதரிகள் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளாமல் போதித்தல்.

கேள்வி (1910)-1- உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. ஒருவேளை ஸ்திரீயானவள் புருஷன்மேல் அதிகாரம் செலுத்தாதவளாகக் காணப்பட்டால் அவள் போதிக்கலாம் என்ற அர்த்தத்தில் இவ்வசனம் புரிந்து கொள்ளப்பட வேண்டுமா?

பதில் - ஒருவேளை நான் ஒரு சகோதரி என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் நான் ஒரு புதிய இடத்திற்குக் குடிப்பெயர்ந்துள்ளேன் மற்றும் துண்டுப் பிரதிகள் முதலானவைகளைக் கொடுத்திடுவதின் மூலம் என்னுடைய செல்வாக்கைச் செயல்படுத்திட விரும்புகின்றேன் என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் என்னுடைய அயலார்களில் சிலர் ஒன்றுகூடி என்னிடம் நான் இதைக்குறித்து அதிகமாகப் பேசிட விரும்புகின்றார்கள் என்று கூறுகின்றார்கள் என்று வைத்துக்கொள்ளலாம்; தன்னடக்கத்துடன், அதாவது எந்தச் சகோதரனிடத்திலும் கூட எதிர்ப்பார்க்கப்படுகின்ற முடிந்தமட்டிலுமான தன்னடக்கத்துடன், நான் அறிந்தயாவற்றையும் கூறிடுவதே எனக்கான கர்த்தருடைய சித்தமாய் இருக்கின்றது என்று நான் புரிந்துகொள்வேன். நான் அறிந்திருக்கும் உண்மைகள் மற்றும் சத்தியங்கள் யாவற்றையும் வெளிக்கொணர முயற்சித்திடுவேன் மற்றும் ஒருவேளை அயலகத்தார் மத்தியில் சத்தியம் குறித்த அறிவில்லாதவர்களாய்க் காணப்பட்டவர்களில் சிலர் ஆண்களாய்க் காணப்பட்டு, மேலும் அவர்கள் ஒருவேளை காரியத்தினை விளக்கும்படிக்கு என்னிடத்தில் கேட்கும் பட்சத்தில், அவர்களுக்கு விளக்கம்கொடுக்க எனக்கு எந்தத் தடையுமில்லை. இப்படி விவரிப்பது முற்றிலும் சரியானதாகவே இருக்கும் என்று நான் எண்ணுவேன்.

## (Q662:1) சகோதரிகள் வேதாகம ஆராய்ச்சியில் பங்கெடுத்தல்.

கேள்வி (1910)-1- நீங்கள் பரிந்துரைத்திருக்கும் அதிகாரம் மற்றும் வசனம் ரீதியான வேதாகம ஆராய்ச்சியில் சகோதரிகள் பங்கெடுக்கலாமா?

பதில் - ஒருவேளை இதுகுறித்து ஆறாம் தொகுதியில் நீங்கள் எதையேனும் காண்பீர்களானால் அதில் எழுதியிருப்பவைகளில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை

என்பதைத் தெரியப்படுத்துகின்றேன். அப்போஸ்தலனுடைய கட்டளைக்குப் பின்பாக இருக்கும் பொதுவான கருத்து என்று நான் எண்ணுகிறது என்னவெனில் . . . . . சபையில் ஆண்கள் தலைக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இதனால் சபையின் தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒரு நிழலாய்க் காணப்படு கின்றனர். சபை கிறிஸ்துவுக்குப் போதிக்கக்கூடாது; மாறாக கிறிஸ்துவே சபைக்குப் போதிக்க வேண்டும்; இப்படியாகவே ஆண், பெண் விஷயத்திலும், ஸ்திரீயானவள் புருஷனுக்கு உபதேசிக்கக்கூடாது. இதையே அப்போஸ்தலன் அறிவுறுத்துவதாகத் தெரிகின்றது. இதற்கு மிஞ்சி செல்வது என்பது தவறாக இருக்கும்; அதாவது நண்பர்களில் சிலர் இது பள்ளிக்கூடங்களில் கற்பித்துக்கொடுக்கிறதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று கூறுவது தவறாகும். அப்போஸ்தலன் சபை பற்றிப் பேசுகின்றாரே ஒழிய குடும்பத்தைப் பற்றியல்ல. தாயானவள் குடும்பத்திற்குப் போதிப்பது சரியான காரியமாகும் மற்றும் அது செய்யப்படவும் வேண்டும் மற்றும் அப்போஸ்தலன் கூறியது எதுவும் இதற்கு முரண்படுகிறதாக என் மனதிற்குத் தோன்றவில்லை; சபையில் "உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்" என்று அப்போஸ்தலன்தான் கூறியுள்ளாரே ஒழிய, நான் இப்படிக் கூறவில்லை. நண்பர்களில் சிலர் நான்தான் இப்படிக் கூறுவதாக எண்ணுகின்றனர். நான் இப்படிச் சொல்லவில்லை என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகின்றேன். நான் மறுஎல்லைக்குச் செல்வதற்கும், அவர்களுக்கு அதிகப்படியான சுயாதீனம் கொடுப்பதற்கும் விரும்புபவனாக இருந்திருப்பேன். இவ்விஷயத்தில் எனக்கும் சரி, எனது சகோதரனே அல்லது சகோதரியே - உங்களுக்கும் சரி, நமது விருப்பத்தின்படி முடிவு எடுக்க முடியாது. ஒருவேளை நான் ஒரு சகோதரியுடைய இடத்தில் காணப்பட்டிருப்பேனாகில், அவருடைய சித்தம் செய்ய நான் விரும்பிடுவேன் மற்றும் நான் அவர் சித்தம் செய்யும்பட்சத்தில் அவரும் பிரியம் கொள்வார். ஆகையால் சபையில் நடைபெறும் பொதுவான கூடுகைகளில் சகோதரிகள் இரண்டாம் இடத்தை எடுத்துக்கொள்வதும், அமைதலாய் இருப்பதும் நலமாய் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். ஒரு சிறு கூட்டத்தில், அதுவும் கேள்விகள் சுற்றிக்கேட்கப்பட்டு வரும் ஒரு கூட்டத்தில் ஒரு சகோதரி கேள்வி ஒன்றினைக் கேட்பது தவறாய் இராது என்று புரிந்திருக்கின்றேன். ஒருவேளை நான் ஒரு சகோதரியாக இருந்திருந்தால் மற்றும் கேள்விக் கேட்க அனுமதிக்கப் பட்டிருந்தால், ஒருவேளை வெளிக்கொணர்வதற்குச் சத்தியம் எதையேனும் நான் பெற்றிருக்கும் பட்சத்தில், அதை வெளிக்கொணர்வதற்கு ஏதுவான அத்தகைய கேள்விகளைச் சகஜமாய்க் கேட்டுக்கொள்வேன். ஒருவேளை பல்வேறு சபை பிரிவுகளிலுள்ள நம்முடைய நண்பர்கள் அவர்களது கூட்டங்கள் சிலவற்றிற்குள் வருவதற்கு என்னையும், உங்களையும் அனுமதிப்பார்களானால் மற்றும் சில கேள்விகளை அவர்களிடம் கேட்பதற்கு நாம் அனுமதிக்கப்படுவோமானால், அவர்கள் நமக்கு இறையியல் கருத்துகளை மாத்திரம் கூறிடுவார்கள்.

**(Q663:1) சகோதரிகள் கேட்டுக்கொள்ளப்படாமலேயே கேள்விகளுக்குப் பதில் அளித்தல்.**

கேள்வி (1912)-1- மூப்பர் ஒருவரினால் விசேஷமாகக் கேட்டுக் கொள்ளப்படாமல், சகோதரிகள் கேள்விகளுக்குப் பதிலளிப்பது அல்லது வேதவாக்கியங்களைக் குறிப்பிடுவது வேதவாக்கியங்களுக்கு இசைவாய் இருக்குமா?

பதில் - இது போதித்தல் அல்ல என்பது என் கருத்தாய் இருக்கின்றது. பெரோயா ஆராய்ச்சி வகுப்பில் கேள்விக்குப் பதில் அளிப்பது என்பது போதித்தலாய் இராது. ஒரு பள்ளிக்கூடத்தில் எந்தவொரு வகுப்பிலாகிலும் மாணவர் ஆசிரியரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், மாணவன் ஆசிரியராகிறது இல்லை. அப்படித்தானே? அவன் பதில் கொடுக்கிற காரியமானது தனது பாடங்களை எவ்வளவு மிகத் தெளிவுடன் அவன் புரிந்துகொண்டிருக்கின்றான் என்பதை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கும். பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளின் விஷயத்திலும், கலந்துகொள்ளும் நண்பர்களில் அனைவரும் அதில் பங்கெடுப்பது என்பது முற்றிலும் சரியான காரியமேயாகும். சகோதரிகளால் கொடுக்கப்படும் பதில்களில் சில, மிக அருமையானதாய் ஆகும். பாடம்குறித்து நாம் கொஞ்சம் தியானம் செய்வோமானால் நாம் பதிலைப் பெற்றுக்கொள்வோம் மற்றும் பதிலைப் பெற்றிருப்பவர் ஒரு சகோதரனாகவோ அல்லது சகோதரியாகவோ இருந்தால் என்ன, பதிலை ஏன் மறைத்து வைக்க வேண்டும்?

**(Q685:1) ஞாயிறு பள்ளிகளில் சகோதரிகள் போதிக்கலாமா?**

கேள்வி (1911 - Z. 4797) -1- ஞாயிறு பள்ளி வகுப்புகளில் சகோதரிகள் போதிக்கலாமா?

பதில் - பொதுவாகவே சகோதரர்களைக் காட்டிலும், சகோதரிகள் இளம் வயதினருக்கு நன்கு போதிப்பவர்களாய்க் காணப்படுகின்றனர். இத்தகைய வகுப்பாருக்கு இவர்கள் போதிப்பதற்கு வேத வாக்கியங்களில் எதுவும் மறுப்புத் தெரிவிக்கிறதில்லை. "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறது இல்லை," என்பது அப்போஸ்தலனின் வார்த்தைகளாய் இருக்கின்றது. அவரது வார்த்தைகள் விசேஷமாய்ச் சபைக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

ஞாயிறு பள்ளிகள் தொடர்புடைய விஷயத்தில், வேதாகமப் பாடங்களின்

ஆறாம் தொகுதிகளில் நாம் எழுதியிருப்பவைகளிலிருந்து நம்முடைய கணிப்பு மாறவில்லை.

தங்களுடைய பிள்ளைகள் ஆவிக்குரியவற்றைக் கற்றுக்கொள்ளும் விஷயத்தில், கிறிஸ்தவ பெற்றோர்களே பொறுப்பாளிகளாகத் தேவனால் கருதப்படுகின்றனர் என்றும், இதை அவர்கள் செய்கையில் அவர்கள் விசேஷித்த ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் இன்னமும் நம்பிவருகின்றோம். ஒருவேளை ஞாயிறு பள்ளிகளின் தேவை ஏற்படுமாயின், அது அனாதைப் பிள்ளைகளுக்கு அல்லது உலகப் பிள்ளைகளுக்கு அல்லது இல்லத்தில் ஏற்கெனவே கற்பிக்கப்படும் பிள்ளைகளுக்கு மாத்திரமே அத்தேவைக் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

## (Q704:1) போதித்தல் - ஸ்திரீகள் அமைதியாய் இருத்தல்.

கேள்வி (1909)-1- "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ளவிரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே" (1 கொரிந்தியர் 14:34, 35).

"ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டதுபோலிருக்குமே" (1 கொரிந்தியர் 11:5).

முதலாம் வேதவாக்கியத்தை, இரண்டாம் வேதவாக்கியத்தோடு இசையப்பண்ணி விளக்கவும்?

பதில் - இந்த வேதவாக்கியங்களானது மிகவும் விலாவாரியாகவும், மிகவும் முழுமையாகவும் கையாளப்பட்டிருப்பதையும் மற்றும் இது விஷயத்திலான இன்னும் அநேக காரியங்களும் கையாளப்பட்டிருப்பதையும் ஆறாம் தொகுதியில் நீங்கள் பார்க்கலாம். நீங்கள் ஆறாம் தொகுதியினைப் போதுமான அளவிற்கு ஆராயவில்லையென்று நான் எண்ணுகின்றேன். ஏழாம் தொகுதியானது எப்போது வெளிவரும் என்று அறிய சிலர் விரும்புகின்றனர். ஆனால் ஆறாம் தொகுதியானது முழுமையாய் அதிகம் உள்வாங்கப்படுவது வரையிலும், ஏழாம் தொகுதி வருவதற்குக் கர்த்தர் அனுமதிக்க மாட்டார் என்று நான் எண்ணுகின்றேன்.

**(Q530:2) ஒரு பணம் குறிப்பது என்ன?**

கேள்வி (1917) -2- மத்தேயு 20-ஆம் அதிகாரத்தில் ------------------------------ ------------------------------------- முறுமுறுப்பது என்பது எதைக்குறிக்கின்றதாய் இருக்கும்?

பதில் - ---------------------------------------------------------------------------- ---------------------------------------------------------------------------------------- ---------------------------------------------------------------------------------------- ----------------------------.ஆகையால் முறுமுறுப்பதற்குரிய எந்த ஆவியையும் நாம் தவிர்த்துக்கொள்வோமாக; மற்றும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றதான நம்முடைய சிலாக்கியங்கள் அனைத்திற்குமாக நன்றியுடையவர்களாய் இருப்போமாக; மற்றும் ஒருவேளை ஊழியம் புரிவதற்கான வாய்ப்பானது சகோதரிகளுக்குக் கொடுக்கப்படுகிறதற்காக, அவர்கள் இத்தகைய வாய்ப்புப் பெற்றுக்கொண்டதின் நிமித்தம் நாம் அவர்களுக்கு எதிராய் முறுமுறுப்பதற்கு ஒருகணங்கூடச் சிந்தியாமல் இருப்போமாக.

## மேய்ப்பரது வேலை

**(Q525:3) Pastoral work/மேய்ப்பரது வேலை - மூப்பர்கள் இதைக் கண்காணிப் பவர்களல்ல.**

கேள்வி (1916)-3- செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையினை, சகோதரிகள் மூப்பர்களிடம் கலந்துரையாடாமல் துவங்கலாமா மற்றும் இவ்வேலைக்கு ஒரு மூப்பர் ஆதரவளிக்காமல் இருக்கும் பட்சத்தில் அவள் தொடரலாமா?

பதில் - மேய்ப்பரது வேலையில் மூப்பர்களுக்கு எந்தச் சம்பந்தமுமில்லை. மூப்பர்கள் மூப்பர்களாய் இருக்கின்றனர் மற்றும் மூப்பர்களுக்கான வேலையினை அவர்கள் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றனர். மேய்ப்பரது வேலை என்பது மேய்ப்பனுக்கான வேலை மற்றும் அதை மேய்ப்பன் செய்திட வேண்டும். செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை தொடர்பான குறிப்புகள் அடங்கின கடிதமானது, என்னைத் தங்களது மேய்ப்பனாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டுள்ளதைத் தெரிவித்துள்ளவர்களுக்கே ஒழிய, வேறு யாருக்கும் அனுப்பி வைக்கப்படவில்லை; இவர்கள் என்னைத் தங்களுடைய

மேய்ப்பனாக இருக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டுள்ளபடியால், அந்த வேலையை அவர்களுக்காக நான் செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன். இப்படியான விருப்பம் இல்லாதவர்கள் யாருக்கேனும் அக்கடிதங்கள் ஒருவேளை வந்திருக்குமானால், அவைகளைத் தயவாய்த் திருப்பி அனுப்பிவைக்கும்படியாகக் கேட்டுக் கொள்கின்றேன். ஆனால் எங்கெல்லாம் நான் மேய்ப்பனாகக் காணப்படுகின்றேனோ, அங்கெல்லாம் நான் சிறந்தவர்கள் என்று கருதிடும் சகோதரிகளைப் பயன்படுத்திடுவேன் மற்றும் அச்சகோதரிகளுடன் சேர்ந்து ஊழியம் புரிந்திடுவேன்.

சந்தேகத்திற்கிடமின்றி மறுப்புத் தெரிவித்துள்ளவர் இக்காரியத்தினைப் புரிந்துகொள்ளவில்லை. இதில் மூப்பர்களின் எதிர்ப்பைத் தூண்டிடும் எதுவும் நான் அறிந்தவரை இல்லை மற்றும் தங்களை வேலையில் ஈடுபடுத்திக்கொள்வதற்குப் போதுமான வேலைகள் இல்லாமல் ஏதேனும் மூப்பர்கள் காணப்படுவார்களானால், அவர்கள் தங்களை வேலையில் ஈடுபடுத்தி வைத்துக்கொள்ள முற்படுவது நலமாயிருக்கும். மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் செய்திடுவதற்கு அநேகம் வேலைகள் இருக்கின்றன மற்றும் தங்கள் பொறுப்பில் கர்த்தர் ஒப்புவித்துள்ளதான வேலைகளைச் செய்வதில் அவர்கள் தங்களை (busy) ஈடுபடுத்திக்கொண்டு காணப்பட வேண்டும்; ஆனால் சகோதரிகளுடைய நிலைமைகள் என்பது வேறுபட்டவையாகும் மற்றும் அவர்களை ஈடுபட வைப்பதற்குரிய ஏதாகிலும் காரியங்களைக் கண்டுபிடிப்பதற்கு நாங்கள் முயற்சித்துக்கொண்டுவருகின்றோம் மற்றும் வழி இப்பொழுது திறந்து கொண்டிருப்பதினால் நாம் களிகூருகின்றோம். ஒருவேளை மூப்பர்கள் யாரேனும் இதைத் தடைச் செய்து, இவ்வேலையில் குற்றம் கண்டுபிடிப்பார்களானால், அடுத்த தேர்ந்தெடுத்தல் வரும்போது, அவர்கள் மூப்பராகத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளும்படிக்குச் சபையாருக்கு அறிவுரைக் கூறுகின்றேன். ஒவ்வொருவனும் தனது வேலையினைப் பார்ப்பதற்கும், மற்றவர்களுடைய வேலையில் தலையிடாமல் இருப்பதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இந்தவிதத்தில் - அதாவது ஒவ்வொருவனும் வேலையிலுள்ள தனக்கான பாகத்தினைப் பார்த்துக்கொண்டு செய்வதன் மூலம் - ஊழியமானது செழித்தோங்கும். கர்த்தருடைய வேலையை யாரேனும் தடுக்க முற்படுவார்களானால், அவர்கள் விலக்கிவைக்கப்படுவது நலமாயிருக்கும்; ஏனெனில் இத்தகையவர்கள் இல்லாமல், சபையார் நன்கு முன்னேறுகிறவர்களாய் இருப்பார்கள். "சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது."

**(Q526:1) Pastoral work/மேய்ப்பரது வேலையில் - மூப்பர்கள் மற்றும் சகோதரிகளின் ஒத்துழைப்பு.**

கேள்வி (1916)-1- செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும்

வேலையில், ஒரு சபையிலுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் சகோதரிகளோடு ஒத்துழைத்து வேலைபுரிவது குறித்து இன்னும் கொஞ்சம் அதிகம் விளக்கம் தாருங்கள்.

பதில் - அனுப்பப்பட்டிருக்கும் கடிதங்களில் ஏற்கெனவே விவரிக்கப் பட்டுள்ளவைகளுக்கும் அதிகமாக என்னால் விளக்கமளிக்க இயலாது. செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை தொடர்பான காரியங்களையுடைய இரண்டு கடிதங்களானது, ஒவ்வொரு சபையாருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடிதங்களில் ஒன்று வேலையாளாகவும், லெப்டினன்டாகவும் மேய்ப்பரின் கீழ் வேலைபுரியப்போகும் சகோதரிக்கு அனுப்பப்பட்டுள்ளது; இன்னொன்று மூப்பர்கள் மற்றும் சபையாருக்குப் பொதுவாக அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதங்களானது நான் விவரிக்க விரும்பிய அனைத்தையும் விவரிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் அவைகளை விவரிக்க இப்பொழுது நேரமெடுப்பது விருதாவாகவே இருக்கும். அக்கடிதங்களானது என்னைத் தங்களது மேய்ப்பனாகத் தேர்ந்தெடுத்துள்ளதாகத் தகவல் தெரிவித்துள்ள சபையார்களுக்கு மாத்திரமே அனுப்பி வைக்கப்பட்டிருந்தன என்பதை நான் மறுபடியுமாகக் குறிப்பிடுகின்றேன். அக்கடிதங்களானது காரியங்களை முழுமையாய் விவரிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை ஒருமுறை வாசித்ததில் அக்காரியங்களை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையெனில், மறுபடியும் வாசித்துப்பாருங்கள் மற்றும் தேவைப்படும் பட்சத்தில் உங்களுக்குத் தெளிவாகும்வரைக்கும் இரண்டு, மூன்றுமுறை வாசித்துப் பாருங்கள். ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியாய் எடுத்து வாசியுங்கள். அவைகளில் ஒன்று பொதுவான சபையாருக்கு உரியதாயிராமல், மாறாக இவ்வேலை திட்டத்தினை நடத்தேற்றுகிறவர்களுக்கான அறிவுரைக் குறிப்புகளையும் பெற்றிருக்கும்; மற்றொன்று மூப்பர்களுக்குரியதாகவும், அவர்கள் எப்படி அதில் ஒத்துழைப்புக்கொடுக்கலாம் என்று அவர்களுக்குக் காண்பிக்கிறதாகவும் காணப்படும்.

இந்த வேலையானது நல்லமுறையில் நடைபெறும்போது, இது மிகவும் உற்சாகமளிக்கக்கூடிய ஊழியம் புரிவதற்கான வாய்ப்பினைச் சகோதரிக ளுக்குக் கொடுக்கிறது மாத்திரமல்லாமல், இன்னுமாக மூப்பர்கள் இப்பொழுது செய்துகொண்டிருக்கும் வேலைகளைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்வதற்குரிய வழிகளை, மூப்பர்களுக்குத் திறந்துகொடுக்கின்றதாகவும் மற்றும் மிகவும் தகுதிவாய்ந்த உதவிக்காரர்கள் மூப்பராகிடுவதற்கான வழிகளைத் திறந்து கொடுக்கின்றதாகவும் காணப்படும். செய்யும்படிக்கு மிக அதிகமாய் வேலை காணப்படுவதினால், நாம் கர்த்தருடைய வேலை செய்வோமா அல்லது இல்லையா? என்பதுதான் கேள்வியாய் இருக்கின்றது. நாம் அறுவடையின் காலத்தில்தான்

காணப்படுகின்றோம் என்பதில் நாம் மிகவும் உறுதியாய் இருப்பது போன்று, கர்த்தர் நாம் செய்யும்படிக்கு அளிக்கும் எதையும் செய்திட வேண்டும் என்றும் நாம் மிகவும் உறுதியாய் இருப்போமாக.

இவ்வகையான ஊழியத்தில் முன்பு அனுபவம் பெற்றிராத சகோதரர்களை வேலையில் ஈடுபட வைப்பதற்கு, இவ்வேலை நல்ல வாய்ப்பாக இருக்குமா என்று யாரேனும் கேள்வி எழுப்புகின்றீர்களா? இல்லை; இது அனுபவமற்றவர் வேலைபுரிவதற்குரிய வேலையல்ல என்றே எங்கள் பதில் காணப்படும். இவர்கள் முன்னதாக அனுபவம் பெற்றுக்கொள்ள வேண்டும். இம்மாதிரியான வேலையில் எங்களுக்குக் கற்றுக்குட்டிகள் வேண்டாம். உபதேசத்தின் விஷயத்திலோ அல்லது பேசுவதிலோ "கற்றுக்குட்டிகளாய்" இருப்பவர்கள் class extension work/புதிய வகுப்புகளை உருவாக்கும் இவ்வகையான வேலைகள் எதிலும் ஈடுபடுத்தப்படக்கூடாது. கற்றுக்குட்டிகள் அனுபவம் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் எப்படி? ஒரு சமயத்தில் பிட்ஸ்பர்கில் (இதை நியூயார்க்கில் காணப்பட்ட போது முயற்சித்தேன்) நாங்கள் தீர்க்கத்தரிசிகளின் பள்ளிக்கூடம் என்று அழைக்கப்படும் ஒன்றைத் துவங்கினோம்; இந்தப் பெயரானது ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டபோது, அதற்கிருந்த அர்த்தம் அல்ல, மாறாக புதிய ஏற்பாட்டினுடைய வெளிச்சத்தில் பார்க்கப்படும்போது நம்முன் இருக்கும் வேலைக்கு அது முற்றிலும் பொருத்தமான பெயராய்க் காணப்பட்டது. வேதாகம கோணத்தில் தீர்க்கத்தரிசி என்பவர் பொதுப்பேச்சாளர் ஆவார்; ஞானதிருஷ்டிக்காரனோ, வெளிப்படுத்துதல்களைப் பெற்றவரோ அல்ல, மாறாக ஒரு பொதுப்பேச்சாளராவார்; மேலும் இந்த ஒரு விதத்தில்தான், "ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கத்தரிசன வரத்தை விரும்புங்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினபோது, இந்த ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினவராய் இருந்தார்; இவ்வசனமானது பொதுப் பேச்சாளர்களெனத் திறமை பெற்றுக்கொள்ள நாம் நாடவேண்டும் எனும் கருத்தைத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். சில சகோதரர்கள் பொதுப்பேச்சாளர்களுக்கான திறமையுடையவர்களாக இருக்கின்றார்கள் என நாம் உணர்ந்துகொண்டோம் மற்றும் இவர்கள் ஒரு சிறு வகுப்பாய் ஒன்றுகூடிவரவும், பேசும் விஷயத்தில் ஒருவரையொருவர் விமர்சனம் செய்வதற்கும், குறைகளைச் சுட்டிக்காண்பிப்பதற்கும் நாம் யோசனை தெரிவித்தோம். இவர்கள் பொது ஜனங்களிடத்திலோ அல்லது சபையாரிடத்திலோ பேசவைக்கப்படவில்லை. இவர்கள் விசேஷமாகப் பேசுவதற்கான தகுதிகளைப் பெற்றவர்கள் அல்ல. வெளிக்கொண்டுவரப்படுவதற்கும், அபிவிருத்திச் செய்யப்படுவதற்கும் உரிய ஒரு தன்மையினைப் பெற்றிருந்தனர். தகுதியில்லாத பேச்சாளர்கள் பேசுவதைக் கேட்கவைப்பதற்குச் சபையாரை நாம் கட்டாயப்படுத்துவதற்கு விரும்பவில்லை. சபையாரையோ அல்லது வேறு யாரையோ சலிக்கப்பண்ணுவதற்கு (bore) யாரும் விரும்பிடக்கூடாது. தகுதியுடையவர்களாகவும் மற்றும் தாலந்தும், திறமையும்

இருப்பதை வெளிப்படுத்தி உள்ளவர்களும் மாத்திரந்தான், சபையாருக்கு அல்லது பொது ஜனங்களுக்குப் பேசிடுவதற்கெனத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இந்நோக்கத்திற்கான நம்முடைய அறிவுரைகளும், பயிற்சிகளும் தனித்து, பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்த வகுப்புகளில் ஒருவரை விசேஷித்த விமர்சகராக/ஆய்வுபண்ணுபவராக நாங்கள் நியமித்திருந்தோம் மற்றும் அதில் பங்கெடுத்த அனைவரும் பேசுபவரை விமர்சிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். இந்த வகுப்புகளில் கலந்துகொள்ளும் இந்த இளையப் புருஷர்களில் சிலர், அனைவரும் சோர்ந்து போவதற்கு ஏதுவாக ஒருவரையொருவர் மிகவும் கடுமையாய் விமர்சித்தவர்களாய்க் காணப்பட்டனர். ஆகையால் தோலும், எலும்புகளும் தவிர வேறெதுவும் மிஞ்சிக் காணப்படாத அளவுக்கு மிகவும் கடுமையாய் விமர்சிப்பதற்கு எதிராய் நான் அவர்களை எச்சரிக்க வேண்டியதாய் இருந்தது. சபையாருக்கும், பொதுப்பேச்சாளர் களுக்கும் பயிற்சியளிக்கத்தக்கதாக இத்தகைய பள்ளிக்கூடங்களைப் பெற்றிருப்பதும் மற்றும் தகுதியில்லாத, அனுபவமில்லாத கற்றுக்குட்டிகளைப் பேச்சாளர்களாகக் கொடுத்து பொது ஜனங்களை அல்லது சபையாரைச் சிரமத்திற்குள்ளாக்காமல் இருப்பதும் நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்.

இது மேய்ப்பரது வேலை வெற்றிகரமாய் நடப்பது தொடர்புடைய விஷயத்தில் மிக முக்கியமான காரியமாய் இருக்கும் என்று நாம் நம்புகின்றோம் மற்றும் சகோதரிகளுடன் இணைந்து வேலைபுரிய ஒத்துழைப்பதற்கும் இது சிறந்த மற்றும் மிகவும் பலனுக்கேதுவான வழிகளில் ஒன்றாய் இருக்கும் என்றும் நாம் கருதுகின்றோம்.

**(Q529:1) Pastoral work/மேய்ப்பரது வேலை - சகோதரர்களுக்குரியது அல்ல.**

கேள்வி (1916)-1- செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையினையும் மற்றும் தொகுதி விநியோகிக்கும் வேலையினையும் எடுத்துக்கொள்ளும்படிக்கு, ஒரு சகோதரான் மற்றும் சகோதரி, Eureka Drama மற்றும் தொகுதி விநியோகிக்கும் வேலையை விட்டுவிட்டு வர நீங்கள் அறிவுரை வழங்குவீர்களா?

பதில் - நாம் இப்படிச் செய்திடும்படிக்குச் சகோதரன் ஒருவருக்கும் அறிவுரை வழங்கிடமாட்டோம். ஏனெனில் மேய்ப்பரால் கொடுக்கப்பட்டுள்ள இக்குறிப்பிட்ட வேலையில் சகோதரன் ஒருவன் செய்திடுவதற்கு எதுவும் பெற்றிருப்பதில்லை. கேள்விக் கேட்டுள்ள சகோதரன் இக்காரியத்தைத் தவறான கண்ணோட்டத்தில் புரிந்திருக்கின்றார் என்பதில் உறுதியே. மேய்ப்பரால்

கொடுக்கப்பட்டுள்ள இக்குறிப்பிட்ட வேலை, சகோதரிகளுக்கானதாகும். ஒரு காரணம் சகோதரர்களைக் காட்டிலும் சகோதரிகளுக்குப் பகல் பொழுதில் அதிக நேரம் இருக்கின்றது; சகோதரர்கள் பொதுவாகப் பகற்பொழுதில் தொழிலில் ஈடுபட்டுக் காணப்படுவார்கள்; மற்றும் இரண்டாம் காரணம் சகோதரர்களைப் பார்க்கிலும் அநேக சகோதரிகள் ஜனங்களை அணுகும் விஷயத்தில் அதிகளவு சாமார்த்தியம் உடையவர்களாய் இருக்கின்றனர். சகோதரர்களைப்பார்க்கிலும் அனைத்துச் சகோதரிகளும் அதிக சாமார்த்தியம் உடையவர்களாய் இருக்கின்றனர் என்றல்ல. மாறாக அவர்கள் இவ்வேலையில் தங்கள் பங்கினைச் செய்திடுவதற்கு இது சிறந்த வாய்ப்பாய் இருக்கின்றது மற்றும் இப்படியாகத் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைகளைக் கொடுப்பதற்கும் மற்றும் பிற்பாடு முதலாம் தொகுதியின் ஆராய்ச்சி வகுப்புகளை நடத்திடுவதற்கும் ஏதுவாய்ச் சகோதரர்களுக்குரிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த வேலையினுடைய துவக்கமானது முடிவாக இருக்கின்றது என்று எவ்விதத்திலும் நாம் எண்ணிவிடக்கூடாது. துவக்கம் என்பது உண்மையில் ஆரம்பமாக இருக்கின்றது மற்றும் அது ஆரம்பம் மாத்திரமேயாகும். Drama, பொதுச் சொற்பொழிவுகள் மற்றும் தொகுதி விநியோகிக்கும் ஊழியங்கள் வாயிலாக அவ்வப்போது பெறப்பட்டதான பெயர்ப் பட்டியல்களை புரூக்கிளினிலிருந்து பெற்றுக்கொள்கையில் அந்தப் பட்டியல்களை வைத்துத் துவங்கிடுங்கள் - இதுதான் துவக்கம் - ஆனால் என்னுடைய கருத்து என்னவெனில் . . . அடுத்தச் சில வருடங்களுக்குள்ளாக நடைபெறும் என்று நாம் எதிர்ப்பார்க்கின்றதான அந்த மாபெரும் வேலையைக் கர்த்தர் செய்யப்போகிறார் என்றால், யோர்தானின் இந்த அடித்தலானது உலக முழுவதிலும் பெரும் ஆர்வத்தைத் தூண்டிடும் மற்றும் இதன் விளைவாகக் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை அதிகத் திரளாய் இருக்கும் மற்றும் அதிக எண்ணிக்கையிலான பெயர்களுள்ள பட்டியல் கிடைக்கப்பெறும் மற்றும் இதனிமித்தம் இவ்வேலைப்பாகமானது விரிவடைந்து தொடரும் மற்றும் இதனால் காலம் செல்லச் செல்ல தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைகள் கொடுப்பதற்கும், முதலாம் தொகுதி ஆராய்ச்சி வகுப்புகளுக்குமான வாய்ப்புகளானது பன்மடங்காகிடும். இது தேவனுடைய மாபெரும் திட்டத்தின் ஒருபாகம் என்று நான் புரிந்துகொள்கின்றேன். சகோதரி தொகுதி விநியோகிக்கும் வேலையில் தன்னைக் கர்த்தர் எவ்வளவு காலம் ஆசீர்வதிக்கச் சித்தமாயிருக்கின்றாரோ அவ்வளவு காலம் அதிலேயே தொடர்வாளாக என்பது என்னுடைய ஆலோசனையாகும் மற்றும் இது சகோதரனும் Eureka Drama வேலையில் தொடர வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படிச் செய்வது தற்காலத்தில் சிறந்ததாய் இருக்கும் மற்றும் பிற்பாடு எதிர்க்காலத்தில் கர்த்தர் அருளிடும் பட்சத்தில் மேய்ப்பருக்கு கீழாக வேலைக்குள் கடந்து வருவதோ அல்லது தற்போது இருக்கிற ஊழியத்தை விரிவாக்கின நிலையில் தொடர்வதோ அவர்களுக்கான சிலாக்கியமாயிருக்கும்.

**(Q232:3) மூப்பர்கள் - சபையில் அதிகாரம்.**

கேள்வி (1909)-3- சபையாரை நடத்துவதற்கும் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கும் மாத்திரமே ஒரு மூப்பர் தேர்ந்தெடுக்கப்படுகின்றாரா? அல்லது அவருக்கு இன்னும் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றதா?

பதில் - அதிகாரத்தை அருளியுள்ளவர்களுக்கு இருப்பதைக்காட்டிலும், அதிகாரமானது மூப்பருக்கு அதிகமாய் இருக்க முடியாது. இன்னும் வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், ஒருவேளை சபையார், ஒருவரைத் தேர்ந்தெடுப்பதின் மூலம் அவரிடம் மூப்பருக்குரிய பொறுப்பை அளிப்பார்களானால், இது - முதலில் சபையிடமே அந்த பொறுப்பு இருந்தது என்பதையும், இல்லையேல் சபையானது அப்பொறுப்பினை மூப்பருக்கு அளித்திருக்க முடியாது என்பதையும் மற்றும் இதன் காரணமாகச் சபையார் அனுமதியளிக்கும் அதிகாரத்தையே அந்த மூப்பர் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் தெரியப் படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை அவருடைய மனசாட்சியானது, சில குறிப்பிட்ட விஷயங்களைச் செய்வதற்குச் சம்மதிக்கவில்லையெனில், சபையாரிடம் தனது மனநிலையைப் பற்றி எடுத்து விவரித்துக் கூறுவது தகுதியாகவே இருக்கும் மற்றும் ஒருவேளை அவர்கள் விரும்பும் பட்சத்தில் இவ்வூழியத்திலிருந்து விலகிக் கொள்ளும்படிக்குத் தன்னிடம் கூறப்படலாம் என்றும், தானும் மகிழ்ச்சியோடு விலகிக்கொள்வார் என்றும் கூறுவது தகுதியாகவே இருக்கும். சபையாருக்கு ஊழியம் செய்யும் விஷயத்தில் மூப்பர் தனது மனசாட்சியை மீறிச் செயல்படக்கூடாது. மேலும் மூப்பரைத் தங்களுக்கு ஊழியம் புரியவைக்கும் விஷயத்தில், சபையாருங்கூடத் தங்களது மனசாட்சியை மீறிச் செயல்படவும் வேண்டாம். சபையாரின் விருப்பங்களுக்கு இசைவாக, அதிலும் தன்னுடைய மனசாட்சி தன்னைத் தடை செய்யாத எல்லை வரையிலும், ஒரு மூப்பர் சபையாருக்கு ஊழியம் புரிந்திடலாம்.

இன்னுமாகக் கரங்களை தூக்குவதன் மூலம் மூப்பர், மேற்பார்வையாளராகப் (overseer) பரிசுத்த ஆவியினால் ஏற்படுத்தப்படுகின்றார் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுவதை நான் தெரிவிக்கின்றேன்; இவ்விதமாகப் பரிசுத்த ஆவியானது சபையாரின் மூலமாகவே செயல்படுகின்றது.

**(Q233:1) மூப்பர்கள் - சபையின் நலன்களுக்கடுத்தவைகளைக்குறித்துப் பேசுவதற்குக் கூட்டம் நடத்துதல்.**

கேள்வி (1910)-1- ஒவ்வொரு சபையிலும் அல்லது பல்வேறு சபையிலும் உள்ள மூப்பர்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள சபைகளின் நலன்களுக்

கடுத்தவைகளைக் குறித்துப் பேசுவதற்கு ஒன்று கூடுவது சரியான காரியமாக இருக்கும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? மற்றும் இதனை வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றனவா?

பதில் - இதனை வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றன என்றும், இது பரிந்துரைக்கப்பட வேண்டியது என்றும் நான் எண்ணுகின்றேன். அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களை ஒன்றுகூட அழைத்தது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. சபையின் நலனுக்கடுத்த விஷயங்களைக் கலந்து ஆலோசிக்கும்படிக்கு அவர் மூப்பர்களை ஒன்றுகூடும்படி அழைத்தார். அவர் ஒரு மூப்பருக்கான அல்லது பாஸ்டருக்கான பொறுப்பை உடையவராய் இருந்து, சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்களை அங்கே அவர்களோடு கலந்து பேசிக்கொண்டிருந்தார். ஒருவேளை சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்கள்பற்றி கலந்துபேச மூப்பர்கள் ஒன்றுகூடுவது தவறாக இருக்குமாயின், என்னுடைய கணிப்பின்படி இப்படியானதொரு கூட்டத்தை அப்போஸ்தலனாகிய பவுல் நடத்தினதும் தவறாய் இருந்திருக்கும். சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்களைக் கலந்து ஆலோசிப்பதற்கு மூப்பர்கள் ஒன்றுகூடுவது சரியென்று நான் எண்ணுகின்றேன். ஆனாலும் ஒரு விஷயத்தைக் குறித்து நான் உங்களை எச்சரிக்க வேண்டும். சபையை நடத்துவதற்கடுத்த கருத்துகளைத் தெரிவிப்பது அல்லது இது சம்மந்தமாக முடிவு எடுப்பது தொடர்பானவிதத்தில் ஒருவேளை மூப்பர்கள் ஒன்று கூடுவார்களானால், இது கெடுதலான காரியமாக இருக்கும் என்றே நான் எண்ணுகின்றேன். இது வேறே காரியமாகும். சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்கள் முதலானவைகள் குறித்துச் சிந்திப்பதற்கு ஒன்றுகூடுவதும் மற்றும் பின்னர்ச்சபையை நடத்துவதற்கடுத்தவைகளை மேற்கொள்ள முற்படும் விஷயமும், இரு வேறுபட்ட காரியங்களாகும். மூப்பர்கள் ஒன்றுகூடுவதற்கான வாய்ப்பு வருகின்றது என வைத்துக்கொள்ளுங்கள், மேலும் மூப்பர்களின் கணிப்பின்படி சபையாருக்கு நலமாயிருக்கும் ஏதோ ஒரு காரியத்தை அவர்கள் மனதில் வைத்திருக்கின்றார்கள் என வைத்துக்கொள்வோம். சபையாரால் முழுமையாகப் புரிந்துகொண்டு வாக்கெடுப்பின் (vote) மூலம், மூப்பர்களிடம் விசேஷமாக ஒப்படைக்கப்பட்ட காரியமாய் இருந்தால் ஒழிய மற்றபடி - ஒருவேளை சந்தேகம் அல்லது கேள்விகள் எழும்புவதற்கு ஏதுவான புதிதான திட்டமாக இருக்கும்பட்சத்தில், இந்த மூப்பர்கள் அக்காரியத்தைச் சபையார் முன் வைத்து: "நாங்கள் சபையாரின் நலன்கருதி, இப்படிப்பட்ட ஒரு கருத்தை மனதில் கொண்டுள்ளோம், இப்பொழுது அதை உங்கள் முன் வைத்து, இதற்கான உங்கள் வாக்கை (vote) கேட்கின்றோம்" எனப் பரிந்துரைப்பது சரியான மற்றும் தகுதியான வழிமுறையாகக் காணப்படும் என்று நான் கருதுகின்றேன். இதுவே பாதுகாப்பான திட்டமாக இருக்கும். மிகச் சிறந்த நோக்கங்களையும், மிக நல்ல யோசனை

களையும் உடைய மிகச் சிறந்த சகோதரர்களில் சிலர், சபையாரிடம் கலந்து ஆலோசிக்காமலேயே அந்த ஆலோசனைகளைச் செயல்படுத்த முற்பட்டபோது, அது சபையாருடைய விருப்பத்திற்கு மாறாக இருந்துள்ளதை நான் பார்த்திருக்கின்றேன். ஊதாரணத்திற்கு நீங்கள் நாயினுடைய மயிரை எதிர்திசையில் கோதிவிட முயற்சிப்பீர்களாகில், அப்படிச் செய்வது மென்மையாக இருக்காததால், நாய்க்கு அது பிடிக்காது. இதுபோலவே சபையாரும் இப்படியாகச் செய்யப்படுவதை விரும்புவதில்லை; ஏனெனில் இப்படிச் செய்வது என்பது, அவர்களை ஆளுவது போன்றும், இன்னுமாக அவர்கள் விசேஷமாக அங்கீகாரம் கொடுக்காத ஒன்றைச் செய்வதுபோலும் அவர்களுக்குத் தோன்றும். ஒருவேளை நீங்கள் நாயின் மயிரைக் கோதிவிட வேண்டுமானால், மயிர் வளர்கின்ற திசையில் அதற்குக் கோதிவிடுவது எப்போதும் ஞானமான காரியமாய் இருக்கும் என்பதே என்னுடைய கருத்தாகும். அதுபோலச் சபையாரைக் கையாளும் விஷயத்தில், மனித சுபாவம் ஒரு குறிப்பிட்ட நடைமுறையைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொண்டு, அந்நடைமுறைக்கு இசைவாகவே நடக்க முயற்சியுங்கள் மற்றும் தேவைக்கு மிஞ்சி மனித சுபாவத்தைத் தொல்லைக்குள்ளாக்காதீர்கள். சபையின் ஒவ்வொரு அங்கத்திற்கும் மனித சுபாவம் உள்ளது; அவனுக்கு அழியக்கூடிய சரீரமுள்ளது; மேலும் கொஞ்சம் அல்லது மிகுதியாக எதிர்த்துப்போரிடும் மனப்பான்மையைக் கொண்டிருப்பான்; தான் அலட்சியம் பண்ணப்படக்கூடாது எனும் விருப்பத்தைக் கொஞ்சமாகவோ அல்லது மிகுதியாகவோ கொண்டிருப்பான்; சத்தியத்தில் இருக்கும் அனைவரிடமும் விசேஷமாக, அதிக அளவில் இக்குணங்கள் காணப்படுவதை உங்களால் பார்க்க முடியும். இவர்கள் ஆற்றல்மிக்க குணநலன்கள் கொண்டிருக்க வேண்டும், இல்லையேல் இவர்கள் ஒருபோதும் ஜெயங்கொண்டவர்களாக ஆக முடியாது. மேலும் இன்று அவர்கள் காணப்படும் நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளதும் மற்றும் பாபிலோனிலிருந்து வெளியேறுவதற்கு அவர்களுக்கு உதவியதுமான இந்த பண்புதான் - கொஞ்சம் வாதாடவும், சிலசமயம் கொஞ்சம் போராடவும் விரும்புகின்றது. ஒருவேளை நீங்கள் பின்வருமாறு: "இப்பொழுது நாம் ஒரு புதிய திட்டம்/காரியம் வைத்திருக்கின்றோம்; அதற்கு வாக்குகள் (vote) இன்னமும் பெறப்படவில்லை. சபையார் இதை விரும்புவார்கள் என்று எங்களுக்கு நிச்சயம் உள்ளது; அதை எங்களுடைய பரிந்துரையுடன் கூடச் சபையார் முன் வைக்கின்றோம்" என்று சொல்வீர்களானால் - இப்பொழுது சபையார் உங்களுக்கு ஆதரவாய் இருப்பார்கள்.

**(Q234:1) மூப்பர் - (Presiding Elder) தலைமை மூப்பரின் வேலை.**

கேள்வி (1913)-1- தலைமை மூப்பரின் வேலை என்ன?

பதில் - தலைமை மூப்பருக்கான பணி குறித்து வேதாகமத்தில் விவரிக்கப் படவில்லை. தலைமை மூப்பர் என்ற ஒன்று வேதவாக்கியங்களில் குறிப்பிடப்படவே இல்லை.

**(Q234:2) மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படாததால், ஒருவர் வேறு இடங்களுக்கும் தகுதியற்றவராகிடுவாரா?**

கேள்வி (1914)-2- ஒரு சபையில் அநேக வருடங்களாக அங்கீகரிக்கப்பட்ட மூப்பராக இருந்து வந்துள்ள சகோதரன் ஒருவர், சபையில் ஏற்பட்ட ஒரு பிரச்சனையின் காரணமாக, தேர்ந்தெடுத்தலில் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு சந்தர்ப்பத்தில் - அவர் அறிமுகமானவராகக் காணப்படும் அருகாமையிலுள்ள சபையார் - ஒருவேளை அவரது தேவச் செய்திகள் பயனுள்ளதாய் இருக்கின்றதெனக் கூறி, அவர் தங்களிடத்தில் வருகைத் தருவதை விரும்பும் பட்சத்தில், அவர் தேர்ந்தெடுக்கப்படாத காரியமானது அச்சபையாருக்குத் தேவச் செய்திகள் கொடுப்பதற்கு அவரைத் தகுதியற்றவராக்கிடுமா? அவர் புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலைக்கு/class extension work தகுதியற்றவராகிடுவாரா? இதோடுகூட அவர் உபதேசத்தில் ஆரோக்கியமாயும் இல்லாதிருக்கையில், அவரது சொந்த சபையாரின் சில குறிப்பிட்ட அங்கத்தினர்கள் இத்தகைய ஊழியத்தினைத் தடுப்பதற்குத் தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்துவது நியாயமாய் இருக்குமா?

பதில் - தான் ஊழியம் புரிந்துகொண்டிருந்த சபையின் தேர்ந்தெடுத்தலில் தேர்ந்தெடுக்கப்படாமல்போன அந்த மூப்பர் - ஒருவேளை மற்ற இடங்களிலுள்ள நண்பர்கள், அந்நபர் தங்களுக்கு மூப்பராக ஊழியம் புரிந்திட தகுதியான நபர் என்று நன்கு பகுத்துணர்ந்து எண்ணும்பட்சத்தில் - அவர் மற்ற இடங்களில் ஊழியம் புரிந்திடுவதற்குத் தகுதியற்றவராகிடுவதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் பகுத்துணர்தலைப் பயன்படுத்திடுவதற்கு உரிமை கொண்டிருக்கின்றனர். ஒருவேளை இச்சகோதரனை மறுத்திட்டதான சபையார், அவர் ஒழுக்க ரீதியிலான குணலட்சணத்திலோ அல்லது போதனையிலோ குறைவுற்றிருப்பதன் காரணமாக, அவரை இப்படிச் செய்திருக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் அவரைத் தேர்ந்தெடுத்த மற்றச் சபையாரின் கவனத்திற்குக் காரியத்தினைக் கொண்டுவருவது இந்தச்/சொந்த சபையாரின் கடமையாகவும், சகோதர சிறப்புரிமையாகவும் இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். மற்றச் சபையார் அவரைத் தேர்ந்தெடுத்துள்ளார்களானால், முதலாம் சபையார் பின்வரும் வார்த்தையினை: "அச்சகோதரனுக்கு எதிராக இப்படி ஒரு காரியம் இருக்கின்றது என்று சகோதரர்கள் என உங்களுக்கு நாங்கள் முன்னெச்சரிக்கைத் தர

விரும்புகின்றோம் மற்றும் இதுகுறித்து உங்களுக்குத் தகவல் கொடுப்பது எங்களுடைய கடமையாக இருக்கின்றது என்று நாங்கள் சிந்தித்தோம்" என்று தகவலாக அனுப்பிட வேண்டும்.

புதிய வகுப்புகளை உருவாக்கிடும் வேலையைப் பொறுத்தமட்டில், மூப்பராய் இல்லாத எவரும் சபையாருக்கு, புதிய வகுப்புகளை உருவாக்கிடும் ஊழியத்தினைப் புரிதல் என்பது முறையாய் இராது; ஏனெனில் சொசைட்டியினுடைய ஒத்துழைப்போடு, மூப்பர்களாய் இருப்பவர்களை மாத்திரமே சபையார் இவ்வேலைக்கு அனுப்பி வைக்கின்றனர். இப்படி இல்லாவிடில் சொசைட்டியானது, இவ்விதத்தில் அவர்கள் கடந்து செல்வதற்கு ஒத்துழைப்புக்கொடுக்க விரும்புகிறதில்லை. ஒருவேளை அவர் வேறொரு சபையாரிடத்திற்குச் சென்று, அவர்கள் அவரை மூப்பராய்த் தேர்ந்தெடுத்து, புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலைக்கென அவரை அனுப்பிடுவதற்கு அச்சபையார் முடிவெடுத்தார்களானால், அது அவர்களது மற்றும் அவரது காரியமாக இருக்கும். அல்லது அவர் சபையார் அல்லது சொசைட்டியின் பொறுப்பேற்பில்லாமல் கடந்துபோக முடிவெடுத்தாரானால், அது அவரது காரியமாக இருக்கும். அவர் அவரது சொந்த பொறுப்பில்தான் வேலை புரிகிறவராக இருப்பார். அந்த உரிமையினைத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். ஒருவேளை அவர் செல்வம் மற்றும் பேசுவதற்கான தாலந்தைப் பெற்றிருந்து, அவற்றைப் பயன்படுத்த விரும்புவாரானால், அப்படிச் செய்திடுவதற்கு அவருக்கு முழுமையான உரிமை இருக்கின்றதென நாம் நம்புகின்றோம். அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தாரானால், "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற அழைப்பினை அவர் பெற்றவராய் இருப்பார்.

## (Q235:1) மூப்பர்கள் - ஏன் மூப்பர்கள் கவனமாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்?

கேள்வி (1916 - Z)-1- ஏன் மூப்பர்கள் கவனமாய்த் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்?

பதில் - ஏனெனில் ஊழியம் புரிவதற்கான ஆவி, கிறிஸ்துவின் சபையினுடைய மூப்பர்களின் அல்லது பயண ஊழியர்களின் ஆவியாக மாத்திரம் இராமல், சபையின் ஒவ்வொரு அங்கத்தினருடைய ஆவியாகவும் கூட இருக்கின்றது; காரணம் நம்மில் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய கிருபைக் குறித்த செய்தியை எழுதும் விஷயத்தில், ஊழியக்காரனாக அல்லது வேலைக்காரனாக இருப்பதற்கான சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம்.

நம்முடைய சொந்த இருதயங்களில் ஏற்கெனவே எழுதப்படாத விஷயங்களை, மற்றவருடைய இருதயங்களில் எப்படி எழுத வேண்டும் என்பதை

நாம் அறியாதவர்களாய் இருப்போம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். எனவேதான் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் - ஏற்கெனவே தங்களுடைய இருதயங்களில் கர்த்தருடைய காரியங்களை எழுதப்பெற்றவர்களைக் கண்டுபிடிப்பதில் மற்றும் இதன் காரணமாக வளர்ந்துவரும் சகோதர சகோதரிகளுடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலினால் கர்த்தருக்கு ஒத்த குணலட்சணங்களை எழுதுவதற்குத் தகுதியுள்ள உதவியாளர்களாக இருக்கக்கூடியவர்களைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த கவனம் அவசியமாயுள்ளது.

நம்முடைய இருதயங்களில் பல்வேறு பிரதிநிதிகள் மூலம் பரிசுத்த ஆவியினால் எழுதப்பட வேண்டியுள்ள செய்தி யாது? நிருபம் யாது? அது காலக்கணக்குப்பற்றின சத்தியமா? அது நிழல்கள் குறித்த தெளிவான காரியங்களா? அது வேறு விதமாய்ப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள வேதவாக்கியப் பதிவுகள் தொடர்பான விஷயத்தில், கடினமான இறையியல் கோட்பாடுகளை உடைக்கும் காரியமா? அது யூதர்களின் வரலாறு, உலகத்தின் வரலாறு, சபையின் வரலாறு குறித்த அறிவா? அது கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் வரவிருக்கின்ற காலத்தில் இருக்கும் பல்வேறு உடன்படிக்கைகள் குறித்த புரிந்துகொள்ளுதல் மற்றும் உணர்ந்துகொள்ளுதலா? இல்லை, அது இவைகளில் ஒன்றுமேயில்லை. ஆண்டவருடைய பண்பு இயல்புகளை நம்முடைய இருதயதங்களில் ஆழமாகப் பதியப் பெற்றிருப்போமாகில், "நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு நிறைவாக அருளப்படும்" - 2 பேதுரு 1:8,11.

இந்த அனைத்துப் பாடங்களும் ஏறக்குறைய முக்கியத்துவம் வாய்ந்தவைகள்தான். மேலும் இப்பாடங்கள், கர்த்தர் தம்முடைய ஜனங்களுடைய இருதயங்களில் எழுதப்பட வேண்டியவைகள் தொடர்பாக ஏறக்குறைய பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்துவின் நிருபத்தை எழுதுவது என்பது - ஆண்டவருடைய ஜனங்களின் இருதயங்களில் அவருடைய குணலட்சணத்திற்கு ஒத்த தடத்தைப் பதிப்பது, எழுதுவது என்பது - அதாவது அவருடைய சாந்தம், அவருடைய நற்பண்புகள், அவருடைய பொறுமை, அவருடைய நீடிய பொறுமை, அவருடைய சகோதர சிநேகம், அவருடைய அன்பு, அவருடைய சந்தோஷம், அவருடைய சமாதானம் குறித்து எழுதுவது என்பது வித்தியாசமான காரியமாகும்.

காலக்கணக்கு மற்றும் வரலாறு தொடர்பான அறிவை நாம் அனைவரும் பெற்றிருக்கலாம்; வேதாகமத்தின் ஒவ்வொரு வசனத்தையும் நம்மால் மேற்கோளிட்டுக் கூறமுடியலாம் மற்றும் வசனம் எங்குள்ளது என்றும்கூடக் கூறமுடியலாம்; ஆனாலும் கிறிஸ்துவின் நிருபத்தை நம்முடைய இருதயங்களில் எழுதப்பெறாமலும்கூட இருக்க வாய்ப்புண்டு. இந்த நிருபத்தைக் குறித்துதான் அப்போஸ்தலனாகிய பேதுரு, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து

பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் (சோம்பேறி, பயனற்றவர்) கனியற்றவர்களுமாய் இருக்க வொட்டாது" என்று கூறியுள்ளார்; ஏனெனில் அறிவானது அது செய்ய வேண்டியதைச் செய்திடும்.

## (Q235:2) தேர்ந்தெடுத்தல் - சபையில் பெண் போதகர்கள்.

கேள்வி (1905)-2- அலிகெனியில் (Allegheny) உள்ள சபையில் ஸ்திரீகள் வழிநடத்துபவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களா என்பதை எனக்குத் தயவுக்கூர்ந்து தெரிவிக்கவும்? ஒருவேளை இல்லையெனில் ஏன் தேர்ந் தெடுக்கப்படக்கூடாது? ஸ்திரீகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று சொல்லப்படுகின்றதே.

பதில் - இல்லை, இப்படியாக நடந்ததில்லை. அலிகெனியிலுள்ள சபையில் எந்தச் சகோதரிகளும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சகோதரிகளை அப்போஸ்தலர் களாகவோ அல்லது எழுபது சீஷர்களாகவோ கர்த்தர் தேர்ந்தெடுக்கவில்லை. மேலும் இயேசு, சகோதரிகளை நேசித்தார். அவர் மார்த்தாளையும், மரியாளையும் நேசித்தார். அவர்களுடைய சகோதரனாகிய லாசருவையும் நேசித்தார். கர்த்தர் ஒருபோதும் சகோதரிகளைச் சபையில் பேச்சாளர்களாக (speakers) நியமிக்க வில்லை மற்றும் இதற்கு மாறாய் வித்தியாசமாகப் பேசுவதற்கு நமக்கு அதிகாரமும் இல்லை. கர்த்தருடைய திட்டம் சிறப்பானதென நான் எப்போதும் எண்ணுகின்றேன். இங்குள்ள சபையை நடத்துவதற்கான கர்த்தருடைய திறமையை நான் சந்தேகிக்க ஆரம்பிப்பேனாகில், பரலோகத்தை நடத்துவதற்கான அவருடைய திறமையையும் நான் சந்தேகிப்பவனாகிவிடுவேன். அவருடைய வழியிலேயே நாம் நடக்க வேண்டும். மாறாக நமக்குரிய சொந்த வழியைத் தெரிந்துகொண்டு, கர்த்தரை நம்முடைய வழியில் நடக்க வரும்படி கேட்கக்கூடாது.

## (Q236:1) தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவர்/chairman.

கேள்வி (1909)-1- மூன்று முதல் ஏழு மூப்பர்கள் இருக்கும் ஒரு சபையில் அதிக வேலைகள் குவிந்துக் காணப்படும் தருணங்களில் மூப்பர்களால், கூட்டத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிராக, வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்கள் ஏதேனும் உள்ளதா?

பதில் - இல்லை. உண்மை என்னவெனில், ஒழுங்குக் காணப்பட வேண்டும். யார் கூட்டத்தலைவராக இருக்க வேண்டும் என்பதைச் சபையார் தீர்மானிக்காத

பட்சத்தில், மூப்பர்கள் தாங்களே கூட்டத்தலைவரைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

**(Q236:2) தேர்ந்தெடுத்தல் - வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகள்.**

கேள்வி (1909)-2- மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் தேர்ந்தெடுப்பதற்கான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகளைக் கூறவும்.

பதில் - ஆறாம் தொகுதியைப் (volume) பார்க்கவும். அதில் இப்பாடம் தொடர்பாக நாற்பதுக்கு மேற்பட்ட பக்கங்கள் உள்ளன. தேர்ந்தெடுத்தல் நடைபெறுவதற்கு ஒரு மாதம் முன்னரே வழிநடத்துபவர், இவ்விஷயத்தை கவனத்திற்குக் கொண்டுவருவதும் மற்றும் அனைவரும் இக்காரியத்தை முழுமையாய் மனதில் புரிந்துகொள்ளத்தக்கதாக ஆறாம் தொகுதியில் காணப்படும் இக்காரியங்களை வாசிக்கும்படி யோசனை தெரிவிப்பதும் - நல்லது என்று எண்ணுகின்றேன்.

**(Q236:3) தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மூப்பர்களின் எண்ணிக்கை.**

கேள்வி (1910)-3- நாங்கள் சபையாராக ஆறாம் தொகுதியின் காரியங்களின்படி தேர்ந்தெடுத்தல் செய்ய முற்பட்டுள்ளோம். ஆனால் எங்கள் அனைவராலும் ஒன்றுபோல் புரிந்துகொள்ள முடியவில்லை. மூப்பர்களுக்குத் தகுதியுள்ள அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது போல் ஓரிடத்திலும், வேறொரு இடத்தில் சபையின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது போலவும் காணப்படுகின்றது. எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது; மேலும் அதைக் குறித்து உங்களுக்கு நாங்கள் எழுதினோம். ஏன் பிரச்சனை எழும்பினது என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்தீர்கள். சிலர் புரிந்துகொண்டவிதமே பிரச்சனையாகும்; அதென்னவெனில்: சபையில் மூப்பருக்கான சமநிலை தகுதியுடன் ஆறு பேர் காணப்படுகின்றார்கள் என்றால், அனைவரையும் நாம் தேர்ந்தெடுக்கலாம்; ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை பன்னிரண்டாக அல்லது இருபத்திநான்காகக் காணப்படுமாயின், சபையாரின் எண்ணிக்கையைப் பொறுத்து மாத்திரம் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சிலர் புரிந்திருக்கின்றனர். உதாரணத்திற்கு, ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை பத்து என்றால், நாம் ஒரு மூப்பரைத் தேர்ந்தெடுக்கலாம். ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை இருபத்தைந்து என்றால், நாம் இருவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சிலர் புரிந்திருக்கின்றனர்.

பதில் - மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் இவ்விஷயத்தைக் குறித்து என்ன சொல்லலாம்? மூப்பருக்கான தகுதிகளுடைய அனைவரும் தேர்ந்தெடுக்கப் படலாமா அல்லது சபையாரின் எண்ணிக்கையில் பத்துச் சதவிகிதமாகத் தேர்ந்தெடுக்கப்படலாமா? ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை ஐம்பது என்று வைத்துக்கொள்வோமானால், இவர்களில் பத்துச் சதவிகிதம் என்பது ஐந்து போராக இருக்கும். மேலும் ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை நூறு என்று வைத்துக்கொள்வோமானால், இவர்களில் பத்துச் சதவிகிதம் என்பது பத்துப் பேராக இருக்கும். என்னுடைய பதில் இதுவே: நான் புரிந்துகொண்ட வரையிலும், மூப்பருக்கான தகுதிகளை வெளிப்படுத்தும் அனைவரும் மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆகவே ஒருவேளை ஆறு என்ற எண்ணிக்கையைக் கொண்டுள்ள சபையில், ஆறு பேரும் மூப்பர்களாகப் பணிபுரிய சமநிலையான தகுதியுடையவர்களாக இருப்பார்களானால், நான் அவர்கள் ஆறு பேரையும் தேர்ந்தெடுப்பேன். பின்னர் அவர்கள் பணிபுரிவதற்கு turns/சுழற்சி முறையில் செயல்படும்போது, வெளியே செல்வதற்கும், கூட்டங்கள் நடத்துவதற்கும் வாய்ப்புகள் உண்டாகும். தேவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும் - அதிகமான மூப்பர்கள் இருக்கும் இடம் சிறப்பாய் இருக்கும்! ஆனால் ஆறு பேர் எண்ணிக்கையுள்ள சபையில், ஆறு பேரும் மூப்பருக்கான தகுதியோடு இருப்பார்கள் என்று சொல்ல முடியாது என்று நான் எண்ணுகின்றேன். ஆனால் ஒருவேளை ஆறு பேர் இருப்பார்களானால், அதிலும் ஆறு பேரும் ஊழியம் புரிய தகுதியுடையவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் ஆறு பேரும் ஊழியம் புரிவதையே நான் விரும்புகின்றேன். பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றுள்ள ஒவ்வொருவரும், போதிப்பதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளனர் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது என்று நான் புரிந்திருக்கின்றேன். நமது கர்த்தர் இயேசு குறித்த தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகளை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள் - கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இப்பொழுது யாரெல்லாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கின் றார்களோ, அவர்கள் போதிப்பதற்கெனப் பிதாவிடமிருந்து அபிஷேகம் பெற்றிருக்கின்றனர். இதற்காகவே அபிஷேகம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே போதகம் பண்ணுவதற்கென அவர் கொடுத்த அதிகாரமாகும். இதுவே போதிப்பதற்கான, அவரது ordination/ஏற்படுத்துதலாகும். ஒருவேளை அவனுக்கு நல்ல குரல் வளம் இருக்கின்றது என்றால், அதுவும் இன்னொரு நல்ல விஷயந்தான். ஒருவேளை அவனுக்கு நல்ல ஞாபகசக்தி இருக்கின்றது என்றால், அதுவும் இன்னொரு நல்ல விஷயந்தான். ஒருவேளை இவைகளுக்கு இசைவாக அவனிடத்தில் இன்னும் வேறே விஷயங்கள் இருக்குமாயின், இவைகள் அனைத்தும் அவனுக்கு உதவியாக இருக்கும். மேலும் அவனுடைய தாலந்திற்கேற்ப

போதகம் பண்ண அவனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது சகோதரிகளின் விஷயத்தில் பார்க்கும்போது சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஒரு சகோதரி பொதுவில் போதிக்கக்கூடாது. ஆயினும் போதிப்பதற்கான மற்றப் பல்வேறு வழிகள் ஒரு சகோதரிக்கு உண்டு. நற்செய்தியை அறிவிப்பதற்கும், உதவிகரமாய் இருப்பதற்குமான அநேக வாய்ப்புகள் அவளுக்கு இருக்கின்றன. மேடைகளில் பிரசங்கம் பண்ணுவதற்கான வாய்ப்புடையவர்கள் மாத்திரமல்ல - நாம் அனைவருமே நம்முடைய அன்றாட ஜீவியத்தின் வாயிலாகப் பிரசங்கிக்க முடியும்; ஏனெனில் நாம் அவனைவரும் பிரசங்கிமார்களாய் இருக்கின்றோம் மற்றும் அனைவரும் பிரசங்கிக்கின்றார்கள் என நான் நம்புகின்றேன்.

"உங்களிடம் எத்தனை பிரசங்கிமார்கள் இருக்கின்றனர்?" என்று ஒருமுறை ஒருவர் என்னிடம் கேட்டார். நானோ: "இருபதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் நம்மிடத்தில் இருக்கின்றார்கள்" என்று கூறினேன். அவரோ: "ஆச்சரியமாயிருக்கே!" என்றார். நானோ: "சகோதரரே, நீர் தவறாய்ப் புரிந்துகொள்ள வேண்டாம். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் பிரசங்கம் பண்ணும்படி அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளனர். சிலசமயம் நாங்கள் பொதுவில் பிரசங்கிப்போம் மற்றும் சிலசமயம் தனியே சந்தித்துப் பிரசங்கம் பண்ணுவோம். சிலசமயம் நாங்கள் ஒரு நபருக்கு மாத்திரமே பிரசங்கம் பண்ணுவோம். மேலும் சிலசமயம் இருநூறு பேரைக் கொண்ட சபையாருக்குப் பிரசங்கம் பண்ணுவோம். மேலும் சிலசமயம் பத்தாயிரம் பேரைக் கொண்ட சபையாருக்கும் பிரசங்கம் பண்ணுவோம்" என்றேன்.

## (Q237:1) தேர்ந்தெடுத்தல் - கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப்படுகின்றது.

கேள்வி (1910)-1- ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சபையார் கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்றார்கள் என்று நாம் புரிந்துள்ளோம். நாங்கள் ஒரு சகோதரனை எங்களுக்கு மூப்பராக ஊழியம் புரிவதற்கெனத் தேர்ந்தெடுத்த பின்னர், நாங்கள் அவரைக்குறித்து கருதினவைகளுக்கு ஏற்ப அவர் இல்லை என்று பின்நாட்களில் கண்டுபிடிக்கும்போது, அது சபையாரின் தவறு என்றா? அல்லது கர்த்தருடைய தவறு என்றா? நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்?

பதில் - யாரிடத்தில் தவறு உள்ளது என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. சபையார் போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என்பதே தெரிகின்றது. சபையார் யாரையாவது மூப்பராகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாகவே அவரைக் குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும். நூதன சீஷனைத் (சபையில் புதிதாகச் சேர்ந்த ஒருவரை) தேர்ந்தெடுக்கக்கூடாது என்று அப்போஸ்தலர்

கூறுகின்றார். ஒரு நூதன சீஷனைத் தேர்ந்தெடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை. ஒருவேளை இப்படிச் செய்திருப்பீரானால், இப்பிரச்சனைகள் வேண்டியதே. ஒருவேளை குறிப்பிட்ட காலம் ஒரு நூதன சீஷனை மூப்பராகப் பெற்றிருப்பதின் வாயிலாக நீர் நல்ல படிப்பினையையும் பெற்றுக்கொள்வீர். மேலும் ஒருவேளை சபையிலுள்ள நண்பர்கள் இப்படியானதொரு காரியத்தைச் செய்திருப்பார்களானால், அநேகமாக இது முடிவில் நன்மையாகக் காணப்படும் மற்றும் அவர்களும் அடுத்தமுறை மிகவும் கவனமாகக் இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வார்கள். ஆனால் இவ்விதத்தின் மூலம் அவர்கள் படிப்பினை பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கர்த்தர் அனுமதிக்கும் காரியமானது, கர்த்தரும் அறியாமல் செய்துவிட்டார் என்பதைக் குறிக்காமல், மாறாக தமது கட்டளையைப் பின்பற்றாமல், ஒரு நூதன சீஷனைத் தேர்ந்தெடுத்ததற்காக வருங்காரியங்களை அவர்கள் அனுபவிக்கத்தக்கதாக அவர் அனுமதித்துவிட்டார் என்பதாகவே இருக்கும். நூதன சீஷன் என்பவன் சபையின் விஷயங்களில் புதிதானவன் ஆவான். மேலும் ஒருவேளை அவன் இவ்விஷயங்களில், புதிதாய் இருப்பானானால், இதைக் குறித்துச் சபையார் கண்டிப்பாக அறிந்திருப்பார்கள். ஏனெனில் அவனுக்காக வாக்களிப்பதற்கு (vote) முன்னதாகவே அவன் எப்படிப்பட்டவன் என்பதை அவர்கள் கண்டிப்பாக அறிந்திருப்பார்கள்.

## (Q237:2) தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவியை நியமித்தல்.

கேள்வி (1910)-2- தேர்ந்தெடுத்தல் நடைபெறும்போது, தேர்ந்தெடுத்தலை நடத்தித்தருமாறு எவரையேனும் கூட்டத்தலைவராக வைக்க ஒரு மூப்பர் விரும்பினார் என்றால், இந்நோக்கத்திற்காக ஒரு சகோதரியை அந்த ஸ்தானத்தில் வைப்பது முறையாக இருக்குமா?

பதில் - சபையில் சில தவறான புரிந்துகொள்ளுதல் காணப்பட்டு, மேலும் அங்குச் சகோதரன் அல்லது சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் இருக்கும் ஒருநிலை காணப்பட்டாலொழிய, மற்றபடி ஒரு சகோதரியை நியமனம் செய்யமாட்டேன் என்று நான் எண்ணுகின்றேன். இப்படியான மிக விநோதமான சூழ்நிலைகள் காணப்படும் பட்சத்தில் மாத்திரமே, தேர்ந்தேடுத்தல் கூட்டத்தில் ஒரு சகோதரியைக் கூட்டத்தலைவராகச் (chairman) செயல்படக் கேட்பதற்கு நான் இணங்குவேன். இப்படிப்பட்டதான ஒரு சூழ்நிலை ஒருபோதும் வராது என்று நான் கூறமாட்டேன். ஆயினும் அது அபூர்வமாய்ச் சம்பவிக்கும் சம்பவமாகத்தான் இருக்கும் என நான் எண்ணுகின்றேன்.

**(Q238:1) தேர்ந்தெடுத்தல் - அர்ப்பணம் பண்ணினவர்களும், நீதிமான்களாக்கப்பட்டவர்களும் வாக்குகள் (vote) அளிக்கலாமா?**

கேள்வி (1910)-1- சபையில் நடக்கும் தேர்ந்தெடுத்தலில், அர்ப்பணம் பண்ணியுள்ள விசுவாசிகள் மாத்திரமே வாக்குகள் (vote) செலுத்த வேண்டும் என்று எப்போதும் புரிந்துகொள்ளப்பட வேண்டுமா அல்லது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளும்கூட வாக்குகள் (vote) செலுத்தலாமா?

பதில் - கொஞ்சம் முன்புதான் இதைக் குறித்து நாம் பேசினோம். வாக்குகள் (vote) அளிக்கப்படுவதற்கு முன்பு, அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே, சபை தொடர்பான எக்கேள்விகளுக்கும் அனைத்துத் தருணங்களிலும் வாக்குகள் (vote) செலுத்த உரிமை உடையவர்களாய் இருக்கின்றனர் என்பது தெளிவாய் அறிவிக்கப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். ஏனெனில் மற்றவர்கள் எவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கங்கள் அல்ல. ஒருவேளை எவ்விடத்தில் கூட்டம் நடத்தலாம் என்பது தொடர்பான சில கேள்விகளைச் சபையார் கேட்க விரும்புவது என்பது வேறுபட்ட காரியமாகும்; இவ்விஷயம் தொடர்பாகக் கேள்விக் கேட்கப்படும்போது, நீங்கள்: "கூட்டத்திற்கான இந்த இடத்தை மாற்றி, வேறொரு இடத்தில் கூட்டத்தை நடத்தலாமென நாம் எண்ணுகின்றோம். மேலும் நாம் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களிடம் மாத்திரம் இல்லாமல், அனைத்து நண்பர்களிடமும் கேட்கின்றோம்; ஏனெனில் இவ்விஷயத்தில் அனைவரும் விருப்பம் கொண்டுள்ளனர்; நேரம் மற்றும் இடம் குறித்த தங்கள் கருத்தைத் தெரிவிக்கும்படி முழு விசுவாச வீட்டாரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்" என்று கூறலாம். ஆனால் சபைக்கான ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயம் அல்லது இவ்விஷயம் தொடர்பான எதுவும் அர்ப்பணம் பண்ணினவர்களுக்கு மாத்திரமே உரியதாகும்.

**(Q238:2) தேர்ந்தெடுத்தல் - தொகுதிகள் (volumes) விநியோகம் பண்ணுபவர்கள் வாக்களித்தல் (vote).**

கேள்வி (1910)-2- ஒரு நகரத்தில் குறிப்பிட்ட சில காலம் தொகுதிகள் விநியோகிப்பவர்களாகக் (colporteurs) காணப்பட்டு, அந்நகரத்திலுள்ள சபைக்குச் சென்றுகொண்டிருப்பார்களானால், அவர்கள் வாக்குகள் (vote) அளிக்கலாமா?

பதில் - ஒருவேளை அவருக்கு அச்சபையாரின் சூழ்நிலைகள் குறித்தெல்லாம் எவ்விதமான விஷயமும் தெரியாமல் இருக்கும் பட்சத்தில் அவர் அவர்களை நோக்கி: சகோதரரே, என்னுடைய வாக்கை (vote) நான்

அளிக்கத்தக்கதாக இங்குள்ள எவரையும் பற்றி எனக்குப் போதுமான அளவு தெரியாது. ஆகவே வாக்கு (vote) அளிக்க நான் மறுக்கின்றேன் என்று கூறுவாரானால், அவர் ஞானமாய் நடந்துகொண்டவராய் இருப்பாரென நான் எண்ணுகின்றேன். ஆனால் ஒருவேளை அவர் அவ்விடத்தில் சில நாட்கள் அல்லது சில வாரங்கள் தங்கியிருந்தாரானால், மேலும் சில வாரங்கள் அல்லது மாதங்கள் அவ்விடத்தில் தங்கும் வாய்ப்பு அவருக்கு இருக்கும் பட்சத்தில், மற்றவர்களைப் போன்று அவருக்கும் அங்கு வாக்குச் (vote) செலுத்த உரிமையுண்டு என்று நான் எண்ணுகின்றேன். அவர் தொகுதிகள் விநியோகிப்பவராய் இருப்பதினால் அவர் தடைப்பண்ணப்படக்கூடாது. மாறாக அவருக்கும் நன்மை உண்டாகத்தக்கதாக, அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படலாம். அவர் தனது ஜீவியத்தைத் தத்தம் பண்ணினதின் மூலம், தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்டுபவராக இருக்கின்றார்.

**(Q238:3) தேர்ந்தெடுத்தல் - சபையைச் சந்திக்க வரும் சகோதர சகோதரிகள் வாக்கு (vote) அளித்தல்.**

கேள்வி (1910)-3- வாக்காளருக்கான தகுதி தொடர்பான விஷயத்தில், அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களே வாக்களிக்க (vote) வேண்டுமென்று நீங்கள் கூறினீர்கள். சபையைச் சந்திக்க வருபவர்கள் குறித்து என்ன சொல்லுகின்றீர்கள்? அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வந்து கொண்டிருப்பதோ அல்லது அவர்கள் அங்கேயே தொடர்ந்து வரும்படியான தங்களுடைய நோக்கத்தைத் தெரியப்படுத்துவதோ - அவர்கள் வாக்கு (vote) அளிப்பதற்கு அவர்களைத் தகுதியுள்ளவர்கள் ஆக்குமா?

பதில் - வாக்குகள் (vote) செலுத்தும்படிக்குக் கேட்டுக்கொள்ளப் படும்போது, "இன்று இங்குக் கூடியிருக்கும் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அனைவரும் - இச்சபையில் கூடி வருவதற்கான விருப்பம் கொண்டுள்ளவர்கள், வாக்குகள் (vote) செலுத்தும்படிக்கு ஆவலுடன் அழைக்கப்படுகின்றார்கள் மற்றும் இச்சபையில் தொடர்ந்து கூடுவதற்கு வர வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்கள், வாக்குகள் (vote) செலுத்த வேண்டாம் மற்றும் முழுமையாக அர்ப்பணம் பண்ணாத எவரும் வாக்குகள் (vote) செலுத்த வேண்டாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இதுவே இக்காரியம் தொடர்பான கர்த்தருடைய சித்தமாக இருக்கின்றது" என்று கூறுவது சரியாயிருக்கும் என்பது நமது எண்ணமாக இருக்கின்றது. வாக்கு என்பது ஓர்/ஒவ்வொரு இடத்தில் காணப்படும் சபையாரால் வெளிப்படுத்தப்படும் தேவசித்தமாக இருக்கின்றது. மேலும் அந்தந்த இடங்களில் அர்ப்பணம் பண்ணினவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்களோ, அவர்களே சபையாராய்

இருக்கின்றனர். என்னுடைய கணிப்பின்படி, அப்பட்டணத்தில் வாழும்படிக்குப் புதிதாய் வந்துள்ள ஒரு சகோதரன் அல்லது சகோதரியின் விஷயம் எவ்விதமான வித்தியாசத்தையும் காட்டுவதில்லை. ஏனெனில் நாம் ஜேம்ஸ் டவுனில் அல்லது புரூக்கிளின் அல்லது பிட்ஸ்பர்க் அல்லது நியூ ஓர்லியன் அல்லது வேறு ஏதாகிலும் இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் சரி, நாம் அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றாய் இருக்கின்றோம்.

**(Q239:1) தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களின் நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்படாத பட்சத்தில்.**

கேள்வி (1910)-1- மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சகோதரனிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதெனில், அவருடைய மூப்பருக்கான பணிக்காலம் நிறைவடையும்போது, மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவர் மறுப்புத் தெரிவிப்பது என்பது ஞானமான முறையாக இருக்குமா என்று அறிய விரும்புகின்றேன்?

பதில் - ஒருவேளை நான் இப்படிப்பட்டதான சூழ்நிலையில் காணப்பட்டால், நான் இவ்வாறாகவே நடந்துகொள்வேன் என்று நம்புகின்றேன். சபையிலுள்ள வேறொரு சகோதரனை என் மனதில் நான் கொண்டு, அவரை முன்மொழிவேன் (nominate). ஆனால் ஒருவேளை நான் முன்மொழியப்பட்டால், நான் பின்வருமாறு : "சகோதர சகோதரிகளே, என்னால் முடிந்தமட்டும் உங்களுக்கு ஊழியம் புரிந்துள்ளேன் மற்றும் உங்களைத் திருப்திப்படுத்துவதில் குறைவுபட்டுள்ளேன் என்பதையும் அறிவேன். ஆனாலும் என்னால் முடிந்ததை உங்களுக்குச் செய்தேன் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று விரும்புகின்றேன். எனினும் நான் உங்களை திருப்திப்படுத்தவில்லை என்று அறிவேன். ஏனெனில் நான் திருப்தியாய் நடந்துகொள்ளவில்லை என்பதை உங்களில் அநேகர் என்னிடம் தெரிவித்தீர்கள். மேலும் என்னால் முடிந்தமட்டும் சீர்த்திருத்திக்கொள்ள முயற்சித்தேன். ஆனாலும் போதுமானளவு நான் முன்னேற்றம் அடையவில்லை. இதனால் உங்களில் சிலர் என்னிடத்தில் இன்னமும் குற்றத்தைக் கண்டீர்கள். நான் உங்களைக்குறித்து இப்பொழுது குற்றம் சாட்ட வரவில்லை - குற்றம் என்னிடத்தில் இருக்கின்றது என ஏற்றுக்கொள்கின்றேன். இன்னின்னப்படி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறபடியெல்லாம் என்னால் இருக்க முடியவில்லை மற்றும் நான் உங்களுக்கு எப்படி ஊழியம் புரிய விரும்புகின்றேனோ அப்படி என்னால் ஊழியம் புரியமுடியவில்லை. ஆகவே என்னுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வது உங்களுக்கு நலமாய் இருக்குமென நான் எண்ணுகின்றேன். நான் இன்னின்ன சகோதரரை முன்மொழிந்துள்ளேன். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு - மூன்று

மாதங்கள் அல்லது ஆறு மாதங்கள் அல்லது உங்கள் விருப்பத்திற்கேற்ப இச்சகோதரனை நீங்கள் தேர்ந்தெடுக்க உங்களுக்கு ஆலோசனை கூறுகின்றேன் - அநேகமாக இவர் நம் அனைவரையும் நன்கு திருப்திப்படுத்தலாம். நான் இவருக்கு உதவி செய்ய முயற்சிப்பேன் என்றும், இவருடைய கரங்களைத் தாங்கிபிடிப்பதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்றும் நான் வாக்களிக்கின்றேன்" என்று கூறிடுவேன். மேலும் மற்றச் சகோதரன் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாக நான் உண்மையாய் முயலுவேன். ஆனால் இப்படியெல்லாம் கூறின பிற்பாடும் சபையார் என்னிடம் - "இல்லை. உம்மிடத்தில் நாங்கள் குறைவுகள் கண்டுபிடித்திருந்தாலும் கூட உம்மைதான் நாங்கள் தேர்ந்தெடுக்கப்போகின்றோம்" என்று கூறுவார்களேயானால், நான் அவர்களிடம் பின்வருமாறு : "ஒருவேளை கடந்த காலத்தில் நான் செய்தவைகளைக் காட்டிலும் அடுத்தமுறை என்னால் செய்யமுடியாமல் கூட இருக்கலாம். அதற்கான பொறுப்பு உங்களிடத்திலேயே உள்ளது. காரணம் என்னால் முடிந்தவைகளையே நான் இப்பொழுது செய்து கொண்டிருக்கின்றேன் என்று நான் உங்களிடத்தில் தெரிவிக்கின்றேன். ஆகையால் ஒருவேளை நான் உங்கள் அனைவரையும் திருப்திப்படுத்தாமல் காணப்படும்போது, என்னைக் குறித்து மனஸ்தாபத்திற்குள்ளாகாதீர்கள்" என்று கூறுவேன். இவைகளை நான் சபையாரிடம் உறுதியாகப் பேசிவிடுவேன். இதனால் அவர்கள் என்னைக்குறித்த முடிவிற்கு வரமுடியும். ஆனால் ஒருவேளை அவர்களில் பெரும்பான்மையானவர்கள் (majority) உதாரணத்திற்கு, தொன்னூறு சதவிகிதம் அல்லது சபையாரின் ஓரளவு எண்ணிக்கையானவர்கள் என்னைத் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; நான் அதைக் கர்த்தருடைய சத்தமாகக் கருதி, இப்பொழுது நான் மறுப்புத் தெரிவிக்கமாட்டேன் என்று கூறுவேன். எந்தவிதத்திலும் உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் நான் நிச்சயமாய் மறுப்புத் தெரிவிக்கவுமாட்டேன் மற்றும் நான்: "இல்லை. நீங்கள் என்னிடத்தில் குற்றம் கண்டுபிடித்தீர்கள், ஆகையால் இப்பொழுது மூப்பர் ஊழியத்தை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்" என்று கூறவுமாட்டேன். இப்படிக் கூறுவது தவறாயிருக்கும். இப்படிப்பட்டதான ஆவி நம்மிடத்தில் இருக்க வேண்டாம். இச்சூழ்நிலையில் காணப்படும் சகோதரன் குற்றஞ்சாட்டுவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றது என நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வப்போது ஏதாகிலும் விதத்தில் குற்றம் காணப்படாமல் இருப்பதற்கு நம்மில் எவரும் பூரணர்கள் இல்லை. மேலும் ஒருவேளை சகோதரர்கள் குற்றம் கண்டுபிடிப்பார்களானால், நாம் அதைச் சகிப்போமாக மற்றும் அதன் மூலம் நன்மை பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். மேலும் அவ்விஷயத்தில் தாழ்மையாயிருப்போம். ஒருவேளை இது நாம் இறுமாப்பு அடையாதபடிக்கும், வீழ்ச்சிக்குள்ளாகப் போகாதபடிக்கும் நம்மைக் காத்துக்கொள்ளும்.

**(Q239:2) தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல்.**

கேள்வி (1910)-2- மூப்பர்களுடைய தேர்ந்தெடுத்தலின்போது, அச்சபையாரில் ஒருவர் முன்மொழிவதற்குப் பதிலாக, தற்போது மூப்பராகக் காணப்படும் ஒருவர், முன்மொழிவது சரியாக இருக்குமென்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

பதில் - தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பருக்கான காலப்பகுதி முடிவடைந்த பிற்பாடு, அவர் மூப்பர் அல்ல என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே அவரும் சபையாரிலுள்ள மற்றவர்களைப் போன்றவராகவே காணப்படுகின்றார். மேலும் மற்றவர்களைப் போன்று அவரும் முன்மொழியலாம். ஏனெனில் அவரும் மற்றவர்களைப் போன்றவரே ஆவர். அவருக்கான காலம் முடிந்த பிறகு அவர் மூப்பர் இல்லை. மேலும் தேர்ந்தெடுத்தலின்போது வேறொருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருக்க வாய்ப்பு இருக்கும் பட்சத்தில், முன்பு மூப்பராய் இருந்த ஒருவர் கூட்டத்தலைவராய்ச் செயல்பட்டு, தேர்ந்தெடுத்தலை நடத்துவது என்ற காரியம் மிகவும் ஞானமற்றது என நான் எண்ணுவதை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

அறிவு கூர்மைமிக்க ஒரு சகோதரனை - நேர்மையுடனும், நியாயத்துடனும் நடந்துகொள்ளும் ஒரு சகோதரனை - மூப்பருக்கான தகுதியில்லாதவர் அல்லது தகுதியுடையவராகக் கருதப்படாத ஒரு சகோதரனை - கூடுமானமட்டும் கூட்டத்தலைவராகச் (chairman) செயல்படும்படிக்குக் கேட்டுக்கொள்வது எப்போதும் விரும்புவதற்கு ஏதுவாய்க் காணப்படும். இவ்விதமாய்ச் செய்யப்படும்போது, கூட்டத்தலைவராக இருந்ததின் மூலம் ஒருவர் தனக்கு ஆதரவு சேர்த்துக்கொண்டார் என்று எழும்ப வாய்ப்புள்ள குற்றச்சாட்டிலிருந்து (மூப்பர் தகுதியுள்ள) ஒருவர் தப்பித்துக்கொள்ளலாம்; மற்றும் சபையாரும்கூட முன்மொழியப்பட்டவராகவும், கூட்டத்தலைவராகவும் தங்களுக்கு முன்பு நின்றுகொண்டிருக்கும் ஒருவருக்கு, தங்களுடைய வாக்குகளைச் செலுத்தாத சூழ்நிலையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம் மற்றும் அச்சகோதரனும்கூடச் சபையார் முன் நின்று, முன்மொழியப்பட்டிருக்கும் தனக்கு வாக்களிக்கும்படிக்குக் கேட்க வேண்டிய தர்மச்சங்கடமான நிலைமையினின்றும் தப்பித்துக்கொள்ளலாம்; மற்றும் ஒருவேளை அவர் தேர்ந்தெடுக்கப்படாமல், பெரும்பான்மையானவர்கள் தனக்கு எதிராக காணப்படுவதைப் பார்க்க வேண்டிய தர்மச்சங்கடமான நிலைமையினின்றும் தப்பித்துக்கொள்ளலாம். எப்போதும் சாத்தியமாய் இராவிட்டாலும், ஒருவேளை சாத்தியமாய் இருக்கும்பட்சத்தில் மூப்பராக முன்மொழியப்படுவதற்கான வாய்ப்புள்ள ஒருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருப்பதைப் பார்க்கிலும்,

வேறொருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருப்பது விரும்பப்படுவதற்கு ஏதுவாகக் காணப்படும் என்று நான் எண்ணுகின்றேன்.

**(Q240:1) தேர்ந்தெடுத்தல் - சீட்டு மூலம் வாக்களித்தல்.**

கேள்வி (1910)-1- முன்மொழிதல் (nomination) எதுவும் பண்ணாமலேயே சீட்டு மூலம் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதும் மற்றும் இதில் பெரும்பான்மையான வாக்குகளை உடையவர்களைத் தேர்ந்தெடுப்பதும் மிகவும் இணக்கமான நிலைக்கு வழிநடத்துவதாய் இருக்குமா?

பதில் - நம்முடைய கருத்து அநேகமாகக் கொஞ்சம் குழப்பமாய்க் காணப்படலாம். இரண்டுவிதத்தில் ஏதாகிலும் ஒன்றிற்கு ஆதரவாக என்னால் கூறமுடியும். ஆனாலும் சீட்டு மூலம் வாக்கு (vote) அளிக்கும் முறையைக் கர்த்தர் ஏற்படுத்தவில்லை என்பதே என் மனதில் உள்ளது. கைகளை மேலே உயர்த்துவதின் மூலமே வாக்குகள் (vote) அளிக்கப்படும்படிக்குக் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். சீட்டுகள் மூலம் வாக்குகள் அளிப்பது, அதாவது ஒன்றும் கூறாமலும், நீங்கள் வாக்குகள் அளித்தவிதம் குறித்து எவருக்கும் தெரியாமலும் இருப்பது என்பது எளிமையாக இருக்கும் என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன். ஆனாலும் கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ள வழியை விட்டுவிடுவது ஞானமான காரியமாக இருக்குமா? ஒருவேளை ஓர் இடத்திலிருக்கும் சபை அங்கங்கள் சீட்டு மூலம் வாக்குகள் (vote) செலுத்த முடிவெடுத்திருந்தால், அவர்கள் விஷயத்தில் தலையிடுவது எனக்கடுத்தக் காரியமல்ல. ஒருவேளை நான் அவர்களுக்கு ஆலோசனை கொடுத்த பிற்பாடும்கூட அவர்கள் ஆலோசனையை ஏற்க மறுத்தால், அவர்கள் விஷயத்தில் தலையிடுவது இன்னமும் எனக்கடுத்தக் காரியமல்ல. மீதி பதினொரு jurors/ஜூரி உறுப்பினர்களும் மிகவும் பிடிவாதக்காரர்கள் என்று நினைக்கும் முறைக்காண் juryman/ஜூரி உறுப்பினன் போல இருக்க நான் விரும்பவில்லை. நாம் நினைப்பது போன்று மற்றவர்கள் நினைக்கவில்லை என்ற காரணத்திற்காக, மற்றவர்கள் அனைவரும் பிடிவாதக்காரர்கள் என்று நாம் எண்ணக்கூடாது; ஆகவே எல்லாவற்றையும் விளக்கின பிற்பாடு, காரியத்தைச் சபையார் பகுத்தறிவதற்கும் மற்றும் சபையார் வாக்களிப்பதற்கும் (vote) விட்டுவிடுவோமாக மற்றும் முடிவைக் கர்த்தரிடத்தில் விட்டுவிடுவோம். ஒருவேளை தாங்கள் தவறு செய்துள்ளதை அவர்கள் கண்டுகொண்டால், அதை அடுத்தமுறை நினைவுகூர்ந்து, ஜாக்கிரதையாய் இருப்பார்கள் மற்றும் பாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டவர்களாக இருப்பார்கள். ஒருவேளை நாம் ஞானமாகச் செய்தால், நாம் ஒரு படிப்பினையைக் கற்றுக்கொள்வோம். சகோதர சகோதரிகளே, வேதவாக்கியங்களில்

குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு ஆதரவாகவே என்னுடைய செல்வாக்கை நான் எப்பொழுதும் பயன்படுத்துவேன். மேலும் இம்முறையானது, சபையார் சரியான தைரியம் கொண்டிருக்க வேண்டுமென்பதைப் போதிக்கின்றது என்ற இதன் நன்மையும் எடுத்துரைக்கப்பட வேண்டும். ஒரு நபர் ஊழியத்திற்குப் பொருத்தமற்றவராய் இருந்தும்கூட, அவர் எனக்கு உறவினராக இருப்பதினால், அவருக்கு என் கரங்களை உயர்த்துவேனா? இல்லை, என்னுடைய தேவனுக்கு நான் உண்மையாய் இருக்க வேண்டும்.

## (Q240:2) தேர்ந்தெடுத்தல் - முன்மொழியப்பட்டவரைக் குறித்துக் கருத்துப்பரிமாறுதல் (discuss).

கேள்வி (1910)-2- ஒரு சகோதரன் மூப்பராக முன்மொழியப்பட்டிருக்கும் போது, தேர்ந்தெடுத்தலுக்கு முன் அச்சகோதரனைக் குறித்து எவ்வளவுக்குக் கருத்துப்பரிமாறப்படலாம்? எதுவரை வரம்பு உள்ளது?

பதில் - சபையில் ஊழியம் புரிபவர்களுக்கான தேர்ந்தெடுத்தலுக்காய் முன்மொழியப்பட்டிருப்பவர்களைக் குறித்து அதிகமாய்க் கருத்துப்பரிமாறுவது சரியென்பது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். நாம் ஒருவேளை ஒருவரையொருவர் கடித்துப் பட்சிப்போமானால், ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவோமென்று அப்போஸ்தலர் கொடுக்கும் எச்சரிப்பை நீங்கள் நினைவுகூரலாம். நீங்கள் என் சகோதரனுக்கு எதிராக, அவர் தலையைச் சீவுகிற விதத்தில் அல்லது அவர் அணியும் வஸ்திரங்களின் நிறத்தில் மற்றும் அவர் குடும்பத்தில் அவருக்கு எத்தனை குழந்தைகள் இருக்கின்றார்கள் மற்றும் இது மற்றும் அது என்று குற்றங்கண்டுபிடிக்க தொடங்கினால், ஆராய்வதற்கு/கருத்துப்பரிமாறிடுவதற்கு உங்களுக்கு அநேக காரியங்கள் இருக்கும். மேலும் நீங்கள் அவரைக்குறித்து முற்றும் முழுமையாய் கருத்துப்பரிமாறி முடியும்போது, அவர் அடுத்து, உங்களைக் குறித்து கருத்துப்பரிமாற ஆரம்பிப்பார். சபையார் அனைவரும் இப்படியான அனுபவம் பெற்றிருக்கக்கூடும்; இதனால் நன்மை உண்டாகுவதில்லை. என்னுடைய கருத்துப் பின்வருமாறு: சகோதரருடைய குணநலன்களைக் குறித்து அதிகம் கருத்துப்பரிமாறிடுவதற்கான அவசியமில்லை. ஏனெனில், சபைக்கு ஏதோ விதமான ஊழியம் புரிவதற்கென ஒரு சகோதரனுக்கு வாக்களிக்கும் (vote) ஒவ்வொருவரும், அவரைப் பற்றிக் கொஞ்சமாகிலும் அறிந்திருக்க வேண்டுமென்பதே ஆலோசனையாக வழங்கப்படுகின்றது. மேலும் ஒருவேளை தனிப்பட்ட பழக்கத்தின் வாயிலாக ஒருவருக்கு அவரைப்பற்றித் தெரியவில்லையென்றால், மற்றொரு சகோதரனுடைய கணிப்பை வழிக்காட்டியாகத் தனக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, நான் சமீபத்தில் ஓர் இடத்திலுள்ள

சபையாருடன் சேர்ந்துள்ளேன் மற்றும் அவர்களது எண்ணிக்கைப் பன்னிரண்டு என்று வைத்துக்கொள்ளுங்கள். மேலும் அச்சபையிலுள்ள நண்பர்களுடன் கொஞ்சம் பழக்கமே எனக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் அவர்களில் எவருடைய குறைவுகளும் எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் அனைவருடைய நற்குணங்கள் சிலவற்றை நான் அறிவேன். ஒருவேளை தேர்ந்தெடுத்தலுக்கான(election) வேளை வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்; நான் ஒன்று அல்லது இரண்டு சகோதரர்கள் மிகவும் தெளிவுள்ளவர்களாகவும், மிகவும் ஒளிவுமறைவு அற்றவர்களாகவும் இருப்பதைக் கவனித்து வந்திருக்கிறேன்; மேலும் அவர்கள் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கையும் காணப்படுகின்றது. ஒருவேளை இந்தச் சகோதரன் இன்னொரு சகோதரனை முன்மொழிந்தால், மேலும் முன்மொழியப்பட்ட சகோதரனோடு எனக்குப் பழக்கமும் இல்லை மற்றும் முன்மொழியப்பட்டவருக்கு எதிரான எந்தக் குறைவும் எனக்குத் தெரியாமலும் இருக்கும்போது, முன்மொழியப்பட்டவருக்கு நான் வாக்குகள் (vote) செலுத்துவதில் தவறில்லை என்று எண்ணுகின்றேன்; ஏனெனில் இவரை முன்மொழிந்த சகோதரன் இவருடைய நற்பண்பைப்பற்றி ஏதோ அறிந்தவராக இருக்கின்றார். ஒருவேளை இவரை முன்மொழிந்தச் சகோதரனோடு எனக்குப் பழக்கமிருக்குமாயின், முன்மொழியப்பட்ட சகோதரனோடு எனக்கும் மறைமுகமான/நேரடியற்ற பழக்கமுள்ளது. நான் சொல்வது புரிந்திருக்குமென்று நம்புகின்றேன். ஆகவே எவருடைய குணநலன்கள் குறித்து விசேஷமாகக் கருத்துப்பரிமாறப்படாமலேயே, வாக்குகள் (vote) செலுத்தப்படுவதற்கு முன்பு ஒருவரால் பின்வருபவைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும் - அதாவது வாக்குகள் அளிக்கும் உரிமையைச் செயல்படுத்தப் போகிறவர் ஒவ்வொருவரும் முதலாவதாகக் கர்த்தருடைய விசுவாசியாக இருந்து, பாவத்திலிருந்து திரும்பித் தன்னை முழுமையாக அர்ப்பணம் பண்ணினவனாக இருக்க வேண்டுமென்பதும், அச்சபையாரின் அங்கங்கள் மாத்திரமே வாக்குகள் செலுத்த வேண்டுமென்பதும் மற்றும் வாக்குகள் செலுத்துபவர்கள் தாங்கள் எவ்விதமாய் வாக்குகள் செலுத்த கர்த்தர் விரும்புவார் என்று நம்புகின்றார்களோ அவ்விதத்திலேயே அல்லாமல் வேறுவிதத்தில் செலுத்தக்கூடாது என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இவைகள் போதுமானதென்று நான் நம்புகின்றேன். மேலும் சபையார் ஒரு சகோதரன் குறித்து ஒன்றையும் அறியாமல் அவருக்கு நிர்விசாரமாய் வாக்குகள் செலுத்திவிடாமல், மாறாக தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருக்கும் ஒருவருடைய கணிப்பு அல்லது ஆலோசனையின்படி வழிநடத்தப்படுவதற்கு நாடத்தக்கதாக, மேற்கூறிய காரியங்களானது அவர்கள் மீது போதுமான பொறுப்பை ஏற்படுத்தும் என்றும் நான் நம்புகின்றேன். ஒருவேளை தவறு செய்யப்பட்டால், ஒருவேளை தவறான நபர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் என்ன

சொல்வது? தவறான காரியம் நடந்துவிட்டது என்ற முடிவிற்கு நான் வருவேன். யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் எனும் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற படிப்பினையை அச்சபையார் கற்றுக்கொள்ளப் போகின்றார்கள் என்று எண்ணுவதே சரியான விஷயமாய் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே ஒருவேளை தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அவர்கள் கண்மூடித்தனமாகச் செயல்பட்டிருந்திருப்பார்களானால், இதனால் அவர்களுக்கு நல்லதொரு பாடம் உண்டாகும். அடுத்தமுறை தேர்ந்தெடுத்தல் வரும்போது, அநேகமாக அவர்கள் மிகவும் கவனமாய் இருப்பதற்குக் கற்றுக்கொள்வார்கள். அநேகமாக இச்சபையின் அங்கங்கள் மிகவும் கவனமாய் இருக்கத்தக்கதாக அவர்கள் இவ்விதத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமாகக் கூட இருக்கலாம். எந்தச் சூழ்நிலையிலும் சரி, கர்த்தருடைய ஜனங்களில் யாரையேனும் நார்நாராகக் கிழித்துப்போடப்படக்கூடியதான எத்தகைய காரியத்திற்கும் எதிராக என்னுடைய முழுச்செல்வாக்கை எந்தச் சபையிலும் செலுத்துவேன். சகோதர சகோதரிகளுக்கு உண்மையில் குறைச்சல் உண்டாக்கும் காரியங்கள் பேசப்பட வாய்ப்புள்ள சில சம்பவங்களையும் நான் அறிவேன்; இக்குறைகள் அவர்களுடைய கடந்தகால ஜீவியத்தில் காணப்பட்டது அநேகமாக உண்மைதான்; மேலும் இவைகளை உணர்ந்த மாத்திரத்தில் அவர்கள் தங்களை முற்றிலும் மாற்றிக்கொண்டார்கள். இவ்விஷயத்திலும் சரி, வேறு விஷயத்திலும் சரி என்னுடைய கருத்து ஒன்றுதான். மேலும் கர்த்தருடைய ஆடுகளுக்கு எதிரான இத்தகைய அடிகளுக்கும், பீறிப்போடுதலுக்கும் எதிராக என்னுடைய செல்வாக்கை நான் செலுத்துவேன். இக்காரியங்கள் ஆடுகளில் ஓநாயின் ஆவியை விதைத்து, விருத்தியாக்கும் என நான் எண்ணுகின்றேன்; ஆகவே இவைகள் தடுக்கப்பட வேண்டும். ஒருவேளை சபையார் மத்தியில் முக்கியமானவராகக் காணப்படும் ஒரு சகோதரனிடம் இந்த முன்மொழிதல் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று மற்றவர்களால் கேட்கப்பட்டால் அல்லது அவர் ஏதோ விதத்தில் அதனை குறிப்பிட வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தாரானால், அவர் பின்வருமாறு: "என் அன்பு சகோதரரே, நீங்கள் கேட்ட முன்மொழிதல் குறித்து சில ஆலோசனைகளைக் கொடுக்க நான் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளேன். இதைக்குறித்து நான் சொல்ல விரும்புவது என்னவெனில், நான் இப்படியாக, அப்படியாக வாக்கு செலுத்த வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கின்றது என நான் எண்ணுகின்றேன்" என்று கூறுவது சரியாக இருக்கும். மேலும் இவ்வார்த்தைகள் இவருடைய செல்வாக்குச் செலுத்தப்படும் சகோதரர்களுக்கு ஓரளவுக்கு உதவியாக இருக்கும். மேலும் ஒருவேளை இவருக்குச் செல்வாக்கு இல்லையெனில், இவ்வார்த்தைகள் உதவியாய் இராது.

**(Q242:1) தேர்ந்தெடுத்தல் - வாக்களிக்காதவர்கள் குறித்துப் பதிவு செய்தல்.**

கேள்வி (1910)-1- வாக்களிக்க (vote) தவறுகிறவர்கள் குறித்து ஏதேனும் பதிவுகள் நாம் பதித்து வைத்திருக்க வேண்டுமா?

பதில் - வாக்குகள் (vote) அளிக்கப்படுவதற்கு முன்னதாகவே, கூடியிருக்கும் ஒவ்வொரு சகோதரனும், சகோதரியும் தங்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது என்று உணரத்தக்கதாக அவர்களைத் தெளிவுப்படுத்துவது என்னுடைய வழக்கமாகும்; அதென்னவெனில்: முன்மொழியப்பட்டிருப்பவருக்கு (candidate) எதிராக அல்லது ஆதரவாக வாக்கு (vote) விஷயத்தில் செயல்படுவதற்குரிய பொறுப்புத் தங்களுக்கு இருக்கின்றது என்று அவர்கள் உணர வேண்டும்; மேலும் வாக்குகள் (vote) செலுத்தத்தக்கதாக ஒருவருக்கு போதுமான அறிவு இருக்கிறதென்றால் அல்லது அவர் அர்ப்பணம் பண்ணினவராக இருந்து அச்சபையாரோடு தொடர்ந்து கூடுகைகளில் கலந்துகொள்ள நோக்கம் கொண்டிருந்தால், அவர் வாக்குச் (vote) செலுத்துவதற்கான பொறுப்பை உடையவராய் இருக்கின்றார் என்று உணர வேண்டும்; மேலும் அவர் வாக்குச் செலுத்துவாரா அல்லது இல்லையா என்பது விருப்பத்திற்கு விடப்பட்ட காரியமாக இல்லாமல், மாறாக வாக்குச் செலுத்துவது அவருக்குரிய கடமையாகும் என்று உணர வேண்டும். இக்காரியங்கள் வாக்குகள் (vote) செலுத்தப்படுவதற்கு முன்னதாகவே வலியுறுத்தப்பட்டால், அனைத்து அன்புக்குரிய நண்பர்களும் பொறுப்பை உணர்ந்துகொள்ள முடியும். வெகுசிலரே பின்வாங்குவதற்கு முயற்சிப்பார்கள். இது முன்னதாகவே மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

**(Q242:2) தேர்ந்தெடுத்தல் - ஏழு பேரைத் தேர்ந்தெடுக்கும் அப்போஸ்தலர்களின் வழக்கத்தைப் பின்பற்றுதல்.**

கேள்வி (1911)-2- சபைக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் நாம் அப்போஸ்தலர்களின் மாதிரியைப் பின்பற்றி ஏழு பேரை நியமிக்கலாமா? ஒருவேளை கூடாது என்றால் ஏன் செய்யக்கூடாது?

பதில் - ஏழு பேரை நியமிக்கும் அப்போஸ்தலரின் எந்த மாதிரியையும் நான் அறியேன். ஒருவேளை அப்படிப்பட்டதான ஏதாகிலும் மாதிரி இருக்குமாயின் அதைக்குறித்த அனைத்தையும் கண்டுபிடிக்கும் விஷயத்தில் மிகவும் மகிழ்ச்சிக்கொள்பவர்கள் மத்தியில் நானும் ஒருவராய் இருப்பேன். ஏழு

உதவிக்காரர்களை அப்போஸ்தலர் நியமித்ததைக் குறித்து எனக்கு ஞாபகமுள்ளது. ஏழு மூப்பர்கள் தொடர்பாக நான் ஒருபோதும் கேட்டதில்லை. இது எனக்குப் புதிதாக இருக்கின்றது. ஒருவேளை நாம் உதவிக்காரர்களைக் குறித்துச் சிந்திக்கும்போது அதுவும் ஒவ்வாது. ஏனெனில் சூழ்நிலையின் தேவைக்கு ஏற்ப அவர்கள் அன்று அவ்வளவு உதவிகாரர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஒரு சபையின் எண்ணிக்கை ஆறு என்று வைத்துக்கொள்ளுங்கள், அவர்களால் எப்படி ஏழு மூப்பர்களையும், ஏழு உதவிக்காரர்களையும் நியமிக்கமுடியும்? சபையார் இரண்டு அல்லது மூன்று பேரையுடைய சிறு கூட்டமாக இருப்பார்கள் என்று கர்த்தர் கூறுகின்றார் - "எங்கே என் நாமத்தினிமித்தம் இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருப்பேன்." இவ்விஷயம் குறித்ததான நமது கருத்துக்கள் வேதாகமப் பாடங்களின் ஆறாம் தொகுதியில் மிகவும் குறிப்பாக முன்வைக்கப் படுவதை நீங்கள் பார்க்கலாம்.

## (Q242:3) தேர்ந்தெடுத்தல் - தகுதியுடையவர், ஆனால் ஞானஸ்நானம் பெறாதவர்.

கேள்வி (1911)-3- ஒருவேளை மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு சகோதரன் புதிய ஏற்பாட்டின் காரியங்களுக்கு இசைவாகத் தகுதியுடன் காணப்பட்டபோதிலும், அவர் எவர் மூலமாகவும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவில்லையெனில், இப்படிப்பட்ட சகோதரன் மூப்பராக நியமிக்கப்படாமல் இருப்பதற்கு இதுவே போதுமான காரணமாக இருக்கும் என்பது உங்கள் கணிப்பாக இருக்குமா?

பதில் - அப்படிதான் இருக்கும். நம்முடைய பேப்டிஸ்ட் சபைபிரிவு (Baptist) நண்பர்கள் நினைக்கும் அதே கண்ணோட்டத்தில் நாம் தண்ணீர் ஞானஸ்நானம் முக்கியமானது என்று எண்ணுவதில்லை - அதனை ஓர் அடையாளமாகத் தவிர மற்றபடி நாம் எதுவும் எண்ணுவதில்லை. ஆனால் ஞானஸ்நானமாகிய மிக எளிமையான ஓர் அடையாளத்தை இதுவரையிலும் பார்க்க/உணர்ந்துகொள்ள முடியாத சகோதரன் இவ்விஷயத்தில் குருடனாகவே இருக்க வேண்டும். ஒருவேளை அவர் ஒரு விஷயத்தில் குருடனாக இருப்பாரானால், வேறு எத்தனை விஷயங்களில் அவர் குருடராக இருக்கக்கூடும்? இவரை மற்றவருக்குப் போதிப்பதற்கு அனுமதிப்பதற்கு முன்பு, அதாவது ஒருவேளை இவரைக்காட்டிலும் அதிகமாக ஏற்கெனவே கண்டிருக்கும் ஒருவருக்குப் போதிப்பதற்கு அனுமதிப்பதற்கு முன்பு - அவர் ஞானஸ்நானம் காரியத்தைப் பார்க்க ஆரம்பிப்பது வரையிலும் நான் காத்திருப்பேன். சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தை ஆக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாத ஒரு சகோதரன், நாம் புரிந்துகொண்டவரைக்

கர்த்தருடைய பந்தியில் வரவேற்கபட வேண்டும் அல்லது எல்லாவிதத்திலும் கர்த்தருக்குள் சகோதரனாக வரவேற்கப்பட வேண்டும். ஆனால் ஒருவரைக் கர்த்தருடைய சகோதரனாகவும், சரீரத்தினுடைய அங்கமாகவும் எல்லாவிதத்திலும் அடையாளம் கண்டுகொள்வது என்பது ஒரு காரியமாகவும் மற்றும் அவர் போதிப்பதற்கான தகுதியுடையவர் என்று அடையாளம் கண்டுகொள்வது என்பது வேறுகாரியமாகவும் உள்ளது. என்னைப் பொறுத்தவரையில் புதிய ஏற்பாட்டின் மிகவும் எளிமையான விஷயத்தை - கர்த்தரும், அனைத்து அப்போஸ்தலர்களும் உண்மையான முழுகுதலாகிய அர்ப்பணிப்பிற்கான அடையாளமாகத் தண்ணீர் ஞானஸ்நானத்தில் பங்குகொண்டதுமான விஷயத்தை - ஏற்கெனவே உணர்ந்த வனே போதிப்பதற்குத் தகுதியுடையவனாவான்.

**(Q243:1) தேர்ந்தெடுத்தல் - எப்போது வேண்டுமானாலும் நடத்தப்படலாம். விசேஷமான நாளென்று ஒன்றில்லை.**

கேள்வி (1911)-1- மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படாமலும் மற்றும் ஆவிக்குரிய தகுதிகளையுடையவராய் இருந்தும், சில பூமிக்குரிய சந்தர்ப்பச் சூழ்நிலைகளினிமித்தம் தேர்ந்தெடுக்கப்படுவது தடங்கல்பட்டுள்ள நிலையிலும் சகோதரன் ஒருவர் இருக்க, திறமைமிக்க இச்சகோதரன் விசேஷித்த தருணங்களில் ஒழுங்குச் செய்யப்பட்டிருக்கும் ஒரு கூடுகை நிகழ்ச்சியில் தூது கொடுக்க வாய்ப்பளிக்கப்படுவது குறித்த உங்களது கருத்தென்ன?

பதில் - ஒருவேளை சபையாரும் அவரைத் தேர்ந்தெடுக்க விரும்பினால், அவரைத் தேர்ந்தெடுக்கும் காரியத்தை மிகச் சுலபமாக நடத்தலாம் என்று நான் எண்ணுகின்றேன். இதனை பற்றின யோசனையை முன்வைத்து, வாக்கு (vote) எடுங்கள்; இப்படிச் செய்வது, காரியத்தை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவரும். அவர் எப்போது வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படலாம். குறிப்பிட்ட நாட்களில்தான் மூப்பரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று எதுவுமில்லை. அவரைச் சபையார் தகுதியான நபர் என்று ஒருவேளை கருதினால், மேலும் அவசியம் இருக்கும் பட்சத்தில் அவர் வருடத்தின் நடுவில் அல்லது அடுத்த மாதம் அல்லது வேறு எந்த நேரத்திலும் தேர்ந்தெடுக்கப்படலாம். இதுபோன்றதான சூழ்நிலைகளில், காரியத்தைச் சபையாரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதைக்குறித்து, ஒருமாத காலமாக அல்லது இன்னும் அதிகக்காலமாகச் சிந்தித்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை அன்று, இதற்காகச் சபையாரை வாக்குச் செலுத்தும்படி கேட்டுக்கொள்வது நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். இது சபையாருக்கு முழு வாய்ப்பை அளிக்கின்றது மற்றும் ஒருவேளை அவர்கள் வாக்குச் (vote) செலுத்தினார்களெனில், அவ்வாக்கின்படி தீர்மானம் எடுக்கப்படும்.

**(Q243:2) தேர்ந்தெடுத்தல் - நியமிக்காமல் ஊழியம் செய்தல்.**

கேள்வி (1911)-2- ஒருவேளை தான் ஏற்றுக்கொள்ளப்படும் விஷயத்தில் எவ்விதமான மறுப்புமிராது என்று எந்த ஒரு சகோதரனுக்கு உறுதி இருப்பினும், தேர்ந்தெடுக்கப்படாத நிலையில் அவர் சபையில் வழிநடத்துபவராக, போதகராக, பிரதிநிதியாகப் பொதுப் பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நாம் சில இடங்களில் வாசித்துள்ளோம். மற்ற இடங்களிலும் கூட இப்படியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படியாக இருக்குமானால், சபையில் பத்தொன்பது உதவிக் காரர்களையும் மற்றும் சபையாரையும் சேர்க்காமல், நம்முடைய மூப்பர்கள், கூட்டங்கூடி ஓர் உதவிக்காரரைச் சபையின் மூப்பராக அல்லது போதகராக அல்லது பிரதிநிதியாக நியமிப்பது என்பது - அதாவது முறையான விதத்தில் ஏற்படுத்தப்பட்ட மூப்பர் காணப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறும் மூப்பர் ஸ்தானத்திற்கு நியமிப்பது என்பது தவறுதானே?

பதில் - இக்கேள்வியைக் கருத்தில் எடுத்துக்கொள்ளும்போது, நாம் அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும், கொடுக்கப்பட்டுள்ள வேதாகம உதாரணத்தையும் நினைவில் கொள்ளவேண்டும். பரிசுத்தவானாகிய ஸ்தேவானின் சம்பவம் உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்திலுள்ள பதிவின்படி அவர் சபையில் உதவிக்காரராகத் தெரிந்து கொள்ளப்பட்டார். மேலும் பரிசுத்தவானாகிய ஸ்தேவானுக்குப் பிரசங்கம் பண்ணுவதற்கான நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. வாய்ப்புக் கிடைத்தபோது அவர்: "சகோதரரே, நான் மூப்பனாகத் தெரிவு செய்யப்படவில்லை, அதனால் என்னால் உங்களுக்குப் பதில் தெரிவிக்க முடியாது" என்று கூறவில்லை. மாறாக அவர் நேரே சென்று பிரசங்கம் பண்ணினார் மற்றும் கர்த்தரும் அவரை அதிகளவில் ஆசீர்வதித்தார்; அவருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தது மற்றும் பிற்பாடு கல்லெறிந்து கொல்லப்பட்டார். இன்னுமாக இவர் தனது கர்த்தருக்கு அடுத்தபடியாக, முதலில் இரத்தசாட்சியாக மரித்து, கிறிஸ்தவன் என்ற நற்சான்றும் வாங்கினார். அப்போஸ்தலர் கூறுகின்ற காரியங்களை நாம் மீண்டும் நினைவில் கொள்வோமாக - அவர் கூறின வார்த்தைகளில் கொஞ்சத்தை நான் இங்குக் குறிப்பிடுகின்றேன் - யாரொருவர் உதவிக்காரராக இருந்து, தனக்கான ஸ்தானத்தின்படி ஊழியம் புரிந்து, தன்னுடைய ஊழியத்தில் தாழ்மை காட்டுகின்றாரோ, அவர் தனக்கு நல்ல நிலையைப் பெறுவார் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 தீமோத்தேயு 3:13). அதாவது சுயாதீனம், சிலாக்கியம் மற்றும் வாய்ப்பாகிய நல்ல நிலையைப் பெறுவார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் யார் மூப்பர்களாக ஊழியம் புரியலாம் என்பதற்கு வாக்குச் (vote) செலுத்தும்போது,

சபையார் தாங்கள் முந்தின முறை உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுத்தவர்களையும், அந்த உதவிக்காரர்கள் எவ்வளவு கவனமாய் இருந்தார்கள் என்பதையும் மற்றும் அந்த உதவிக்காரர்கள் எவ்வளவு உண்மையுடன் இருந்தார்கள் என்பதையும் கவனித்தவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் இவர்கள் உதவிக்காரர்கள் என்ற விதத்தில், temporal/ஆவிக்குரியதல்லாத சில வேலைகளைச் செய்வதிலேயே ஒருவேளை உண்மையற்றவர்களாக இருப்பார்களானால், இவர்கள் மூப்பர்களுக்குரிய ஊழியங்களில் உண்மையுடன் இருப்பார்களென்று எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இவ்விதமாக இந்த உதவிக்காரர்கள் தங்களுடைய உதவிக்காரருக்குரிய ஸ்தானத்தில் உண்மையாய் இருந்ததினிமித்தம் சபையில் கனமும், முன்னுரிமையுமாகிய நல்ல நிலையைத் தங்களுக்கென்று பெற்றுக்கொள்வார்கள் என்பதே அப்போஸ்தலனுடைய கருத்தாகும். என்னுடைய கருத்து என்னவெனில், ஆதிசபையில் உதவிக்காரர்கள் எனும் வகுப்பார் படிப்படியாக மூப்பர் ஸ்தானத்திற்கும் மற்றும் சத்தியத்திற்கு மிக முக்கியமான ஊழியம் புரியும் ஸ்தானத்திற்கும் முன்னேறுவதற்கு ஏதுவாக ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆகவே உதவிக்காரர்கள் ஆரம்பத்தில் சில விதமான வேலைகளுக்கென்று தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆனால் இவர்கள் தேவைப்படும் சமயங்களில் பயன்படுத்தப்படுபவர்களாக வைக்கப்பட்டிருப்பார்கள். ஆகையால் ஏதேனும் வேலை புரிவதற்கு ஒரு மூப்பர் இல்லாமல் இருந்தாரானால், committee/மூப்பர் குழுவினர் உதவிக்காரர்களைப்பற்றி: "இன்றைய இரவிலுள்ள கூட்டத்தில் இந்தச் சகோதரனை நாம் பயன்படுத்திப் பார்ப்போமா?" என்றும், வேறொரு தருணத்தில் இதே committee/குழுவினர்: "இன்றைய இரவில் நடக்கும் கூட்டத்திற்கு நாம் அந்த இன்னொரு உதவிக்காரரைப் பயன்படுத்திப் பார்க்கலாமா? இன்றைய இரவு கூட்டத்தில் நமக்கு ஒருவர் அவசியம், இவருக்கு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம்" என்பார்கள். இவ்விதமாக உதவிக்காரர்களின் ஆற்றலைக் காணத்தக்கதாக அவர்களைப் பயன்படுத்திப் பார்த்து அறிந்துகொள்வார்கள். இல்லையேல், உதவிக்காரர்கள் வளர்வதற்கோ அல்லது சபைக்கான ஊழியம் தொடர்புடைய விஷயத்தில் தங்களுடைய திறமை என்னவென்பதை வெளிக்காட்டுவதற்கோ வாய்ப்புகள் இல்லாமல் இருப்பார்கள். இக்கருத்துக்கு எதிரான ஒன்றும் வேதாகம ஆராய்ச்சிப் பாடங்களில் (volumes) எழுதப்படவில்லை. ஏனெனில் இக்கருத்தையே நாம் எப்போதும் கூறிவருகின்றோம். மேலும் இக்கருத்து வேதவாக்கியங்களின் அடிப்படையிலானது என்றும் நாம் நம்புகின்றோம்; இது புரூக்கிளினிலும், மற்ற இடங்களிலும் செயல்படுத்தப்பட்டும் வருகின்றது.

சகோதரன் கேள்வியில் என்ன கேட்க வருகின்றார் என்பதை என்னால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும் என்னுடைய பதில் பின்வருமாறு உள்ளது. ஒருவேளை சபையார் தங்களுக்கு நான்கு அல்லது ஐந்து மூப்பர்களைத்

தேர்ந்தெடுத்திருக்க, அந்த நான்கு அல்லது ஐந்து மூப்பர்கள் ஊழியத்திற்கு வந்த பிற்பாடு, உதவிக்காரர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அந்த உதவிக்காரரை மூப்பராக்குவது என்பது, சரியான காரியமாக இருக்கும் என்று நான் எண்ணுவதில்லை. இப்படிச் செய்வது அவர்களுக்கடுத்த அதிகாரம் இல்லை என்று எண்ணுகின்றேன். ஒருவேளை சபையார் அந்த உதவிக்காரர் சகோதரனை மூப்பராகவும், முறையான ஊழியனாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவார்களானால், அவரை நியமிப்பது அவர்களுடைய பொறுப்பாய் இருக்கும். ஒருவேளை மூப்பர்கள் தங்களுக்குள் போதுமான மூப்பர்கள் இல்லையென்று எண்ணினால், அவர்கள் சபையார் கூடிவரும் ஒரு நாளில் இன்னொரு மூப்பர் தேவையாக இருப்பதினால், இன்னொரு மூப்பரைக் கூடுதலாகத் தேர்ந்தெடுப்பதில் சபையார் பிரியம் கொள்வார்களா எனக் கேட்கலாம். ஆனால் ஒருவேளை தேவைத் தற்காலிகமான தேவையாகத்தான் இருக்கும் பட்சத்தில், தற்காலிகமான அத்தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கு ஏதாவது சில திறமைகளை வெளிப்படுத்தும் உதவிக்காரர்களை அவ்வப்போது மாத்திரமே இந்த மூப்பர்கள் தெரிவுசெய்யச் சபையார் விரும்புகின்றார்கள் எனில், இது சரியான காரியமாக இருக்கும் என்று நான் எண்ணுவேன். ஆனால் சபையார் ஓர் உதவிக்காரனை மூப்பராகத் தெரிந்தெடுக்காதபட்சத்தில், அவரை மூப்பராக நியமிப்பது சரியான காரியமாக இராது.

## (Q244:1) தேர்ந்தெடுத்தல் - மீண்டும் வாக்குச் (vote) செலுத்துதல்.

கேள்வி (அவையோரிடமிருந்து எழும்பினது) (1911)-1- ஒரு சகோதரன் எழுபத்தைந்து சதவிகிதமான வாக்குகளுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்குகள் (vote) குறைவாகப் பெற்றிருப்பாரானால், அவர் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாகப் போதுமான அளவு வாக்குகள் பெற்றுக்கொள்ளும்படிக்கு, இரண்டாம் விசை அவர் சார்பாக வாக்கெடுப்பது ஞானமான காரியமாக இருக்குமா?

பதில் - இதைச் சபையார் ஏகமனதுடன் செய்தால் கூட இதற்கு நாம் மறுப்புத் தெரிவிப்பதில்லை. காரியம் நடந்தால்போதும் என்று நாம் எண்ணாமல், சபையாரின் கருத்தைப் பெற்றுக்கொள்வதும், சபையாருடைய விருப்பத்தைப் பூர்த்திச் செய்ய வேண்டும் என்பதும்தான் நமக்கு வேண்டிய காரியமாகும். பிணக்கு உண்டு பண்ணுவதற்கு மாத்திரமே ஏதுவான எவ்விஷயமும் கூடுமானமட்டும் தவிர்க்கப்பட வேண்டும். ஒருவேளை ஒரு சபையார் தங்களுடைய தேர்ந்தெடுத்தலில் எழுபத்தைந்து சதவிகிதமான விதியை நியமித்தார்களானால், இதே சதவிகிதமான விதிதான் அடுத்த தேர்ந்தெடுத்தலுக்கும் காணப்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை. மாறாக, அவ்விதி அந்த ஒருமுறைக்கு மாத்திரமே கட்டளையாக

இருக்கும். ஒருவேளை அடுத்த தேர்தலிலும் சபையார் அதே எழுபத்தைந்து சதவிகிதம் விதியைத் தெரிந்துகொண்டார்களானால், இன்னுமாக ஒருவர் இந்தச் சதவிகிதமான விதிக்குக் கொஞ்சம் கிட்ட எட்டியும் முழுமைக்கு வரவில்லையெனில், அவர் அடைந்த வாக்குச் சதவிகிதத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு மீண்டும் வாக்கெடுங்கள். மேலும் பின்னர் நியமிக்கப்பட்ட சதவிகிதம் விதி அளவைக் காட்டிலும் அவருக்கு வாக்குகள் அதிகம் கிடைத்திருக்குமாயின், சபையாரின் விருப்பத்திற்கு ஏற்ப சபையார் காரியங்களை முடிவு செய்ய முழு அதிகாரம் உடையவர்களாய் இருக்கின்றார்கள்.

## (Q245:1) தேர்ந்தெடுத்தல் - (ஏகமன நியதி) ஜூரி விதி.

கேள்வி (1911)-1- வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில், சபையில் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திற்குப் பெரும்பான்மையானது போதுமாயிராது, மாறாக (ஏகமன நியதி/Jury rule) ஜூரி விதி நிலவ வேண்டுமென்று நாம் வாசிக்கின்றோம். அப்படியானால், அதுவே உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப் படுகையிலும் பின்பற்றப்பட வேண்டிய ஞானமான வழிமுறையாய் இருக்குமல்லவா? மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் இருவரின் தேர்ந்தெடுத்தலில் ஒரே ஒழுங்குமுறை நிலவ வேண்டுமென நாம் தொகுதியில்/volume வாசிக்கின்றோமே.

பதில் - இந்தக் காரியத்தில், சட்டம் ஒன்றை முன்வைத்திட நாம் நாடுகிறதில்லை; சட்டம் ஒன்றினை இயற்ற நமக்கு உரிமை இல்லை; சபைக்கு ஞானமான வழிமுறையாகக் காணப்படும் என்று நாம் நம்புகிறவற்றை நாம் யோசனையாக வழங்க மாத்திரமே செய்கின்றோம். உதாரணத்திற்கு ஒரு சபையில், (bare majority) குறைந்தளவு எண்ணிக்கையில்/வித்தியாசத்தில் பெரும்பான்மையி னராகினவர்கள், காரியங்களை நிர்ணயிக்க அனுமதிக்கப்படுவார்களாகில், மிகப்பெரிய எண்ணிக்கையிலுள்ள, அதாவது பெரும்பான்மையினரைப் போன்று கிட்டத்தட்ட எண்ணிக்கையில் பெரியதாகக் காணப்படும் சிறுபான்மையினர் முழுக்க அதிருப்திக்குள்ளாவார்கள்; மற்றும் ஒரு எண்ணிக்கையில் பெரும்பான்மை யினராகினவர்கள் அச்சபையை மிகவும் நியாயமற்ற விதத்தில் நடத்துபவர்களாய் இருப்பர்கள். ஆகையால் சபையார் தங்கள் வாக்குகளைச் சரிப்படுத்த முயற்சித்திட வேண்டும் மற்றும் கூடுமானால் சபையிலுள்ள அனைவரையும் பிரியப்படுத்தவும், திருப்திப்படுத்தவும்தக்கதாக மூப்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது எங்கள் யோசனையாக இருக்கின்றது. இப்படியாக முடிந்தமட்டும் mere majority rule/வெறும் பெரும்பான்மை விதியானது புறக்கணிக்கப்பட வேண்டும் மற்றும் முடிந்தமட்டும் (ஏகமன நியதியானது) ஜூரி விதியானது அடையப்பெறவேண்டும் - அது ஏகமன நியதியாக இருக்க வேண்டும் என்று நாம் சொல்லாமல், மாறாக

முடிந்தமட்டும் சபையில் கருத்து வேறுபாடின்மையானது அடையப்பெற வேண்டும் என்று சொல்லுகின்றோம். ஒரு சபையில் யார் உதவிக்காரராக அல்லது மூப்பராக இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், முழுச்சபையாரும் ஒன்றையே சிந்திக்கும் நிலையினை அடைவது எப்போதும் சாத்தியமல்ல; ஆனால் என்ன விதி கைக்கொள்ளப்பட்டாலும், அது மூப்பர்கள் விஷயத்தில் கைக்கொள்ளப்படுவது பொருத்தமாய் இருப்பதுபோன்று, உதவிக்காரர்கள் விஷயத்திலும் கைக்கொள்ளப் படுவது பொருத்தமானதாகவே இருக்கும். எந்த ஓர் ஊழியத்திற்கும், யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், சபையாருக்கு ஊழியக்காரர்களாய்க் காணப்படப் போகிறவர்களிடத்தில், சபையார் அனைவரையும் திருப்தியும், பிரியமும் கொண்ட நிலையில் பெற்றிருக்க நாடும்படியாக, கொள்கைகள் சம்பந்தப்படாதவைகளில் சபையார் ஒருவருக்கொருவர் சிறு சிறு காரியங்களில் முடிந்தமட்டும் விட்டுக்கொடுக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**(Q 245:2) தேர்ந்தெடுத்தல் - வர இயலாதிருக்கும் அங்கத்தினர்கள் கடிதம் மூலம் வாக்குப்பதிவு செய்தல்.**

கேள்வி (1912)-2- இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு முன்னரே தேர்தலுக்கான முன்மொழிதல் இடம்பெற்றிருக்க, கைகளை நீட்டுவதன் மூலம் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, வகுப்பின் இரண்டு (அ) மூன்று அங்கங்கள், நேரில் வரஇயலாதிருக்கும் தருவாயில், தங்கள் வாக்குப்பதிவை கூட்டத் தலைவருக்குக் கடிதத்தின் மூலம் அனுப்புவது அனுமதிக்கத்தகுந்ததா?

பதில் - இதில் மறுப்புக்கிடமானது ஒன்றுமே இல்லை. அரசியலில் ஒரு கட்சி, மற்றக் கட்சிக்கு எதிராக சூழலைச் சாதகமாக்கிக் கொள்ளுகிற கட்சி மனப்பான்மை காணப்படுகிறது. எனினும், இது உங்களிடத்தில் இருக்கலாகாது. மூப்பருக்கான தேர்ந்தெடுத்தலுக்கென்று நீங்கள் ஒன்றுகூடும்போது, ஒவ்வொரு சகோதரன் மற்றும் சகோதரியும் தனது கருத்தைத் வெளிப்படுத்தக்கூடிய முழுமையான வாய்ப்பைப் பெறவேண்டும் என்று நீங்கள் எண்ணிட வேண்டும். இப்படி விரும்புவது மாத்திரமல்லாமல், ஒவ்வொருவரும் தங்கள் கருத்தினை வெளிப்படுத்திட வேண்டும் என்று நீங்கள் காணப்பட வேண்டும். நமக்கு அவர்களுடைய சொந்தக் கருத்து மட்டுமே அவசியமானது அல்ல, மாறாக சபைக்கான தேவனுடைய சித்தம் இன்னது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இவ்விஷயத்தில், தேவனுடைய சித்தமாக இருக்குமென நாம் நினைப்பது எதுவோ அதை நாம் அனைவரும் வெளிப்படுத்துவோமாக. வரஇயலாதிருப்பவர்கள், கூட்டத்தின் கூட்டத்தலைவரிடத்தில் தங்களின் வாக்குப்பதிவை அனுப்பிவைப் பதற்கு எந்தத் தடையும் இருப்பதாக நான் காணவில்லை. நீங்கள் வந்திருப்பீர்க

ளேயானால், நீங்கள் எண்ணியிருப்பவருக்கு உங்கள் வாக்குப்பதிவைக் கொடுக்கலாம். ஆனால் உங்களுக்காக வேறொரு சகோதரன் அல்லது சகோதரி பதிலாளாக இருந்து, தாங்கள் சிறந்தவர்கள் என்று கருதக்கூடியவர்களுக்கு வாக்களிப்பதற்குரிய உரிமைக் கொடுக்கப்படலாகாது. இவ்விஷயத்தில், அதுவே என் கருத்தாகும்.

**(Q246:1) தேர்ந்தெடுத்தல் - ஆங்கில மொழிக் கூடுகைகளுக்காக வெளிநாட்டுச் சகோதரர்கள்.**

கேள்வி (1913)-1- குறைவுகளோடு ஆங்கில மொழியைப் பேசுகின்றதான ஜெர்மனிய அல்லது ஸ்வீடிஷ் மொழி பேசும் வெளிநாட்டுச் சகோதரனைப் பொதுப்பேச்சாளராகத் தேர்ந்தெடுப்பதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

பதில் - ஒருவேளை வகுப்பில் அந்த வெளிநாட்டு மொழியைப் பேசுபவர்கள் போதுமான எண்ணிக்கையில் இருப்பார்களானால், அத்தகைய ஒரு பேச்சாளர் விரும்பப்படத்தக்கவராக இருப்பார் மற்றும் அவரைத் தேர்ந்தெடுப்பது முறையாய் இருக்குமென நான் கருத்துத் தெரிவிக்கின்றேன். உதாரணத்திற்கு, புரூக்கிளின் சபையாரில் பிரெஞ்சு மொழியில் வகுப்பினை நடத்திடுவதற்கு நன்கு தகுதிவாய்ந்த பிரஞ்சு சகோதரன் ஒருவரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். இத்தாலிய மொழியில் வகுப்பினை நடத்திடுவதற்கு நன்கு தகுதிவாய்ந்த இத்தாலிய சகோதரன் ஒருவரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். ஸ்வீடிஷ் சகோதரன் ஒருவரையும் நாங்கள் பெற்றிருக்கின்றோம். வகுப்பிலுள்ள நண்பர்கள் ஆங்கிலம் புரிந்துகொள்ள முடியாதவர்கள் என்றல்ல, மாறாக இவர்கள் தங்கள் மொழியினைக் கொஞ்சம் விரும்புவதினால், இவர்களது சொந்த மொழியினை நன்கு தெரிந்த ஒருவரைப் பெற்றிருக்க விரும்புகின்றனர். இது மிகவும் சரியே என்று நாம் எண்ணுகின்றோம். இப்படியாகவே ஐரோப்பிய இனமில்லாத சகோதரர்கள் விஷயத்திலும் காணப்படுகின்றது; நாங்கள் வெவ்வேறு தேச வகுப்புகளைப் பெற்றிருக்கின்றோம். சபையார் மத்தியில் எத்தனை வெவ்வேறு இன வகைகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்பது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**(Q246:2) தேர்ந்தெடுத்தல் - தகுதியற்றவர்கள் தொடர்பாக.**

கேள்வி (1913)-2- ஓர் இடத்தில் மூப்பருக்கான தகுதிகளைப் பூர்த்திச் செய்திடுவதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் இல்லாததாகத் தோன்றுகையில், மூப்பர்களைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பதற்கும் மற்றும் பாஸ்டர் ரசல் அவர்களை மூப்பராகத் தேர்ந்தெடுப்பதற்கும் நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

பதில் - இம்மாதிரியான கேள்விகள் விவாதிக்கப்படுகையில் கவனமாகக் கையாளப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன மற்றும் எதை அறிவுறுத்துவது சிறந்ததாயிருக்குமென அறிந்துகொள்வதற்கும் கடினமாய்க் காணப்படுகின்றது. நண்பர்களே கூடுமானமட்டும் ஞானத்தோடும், விவேகத்தோடும் நடந்து கொள்ளுங்கள் என்பதே என் பொதுவான பரிந்துரையாய் இருக்கின்றது. இம்மாதிரியான விஷயங்களில் கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துக் கர்த்தருடைய ஜனங்கள் முழுமையாய் உணர்ந்துகொள்ளாததே, ஒரு பிரச்சனையாகக் காணப்பட்டு வந்தது மற்றும் அநேகமாக இன்னமும் காணப்பட்டு வருகின்றது. தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு எழுதுகையில் அப்போஸ்தலன் ஒரு மூப்பனுக்கான தகுதிகளை முன்வைக்கையில், அவர் திட்டவட்டமான விதிகளை முன்வைத்திடுவதாகவும் மற்றும் அந்த நிபந்தனைகள் அனைத்திலும் ஒவ்வொரு மூப்பனும் மிக உயர்ந்த நிலையில் காணப்பட வேண்டும் என்பதாகவும் கர்த்தருடைய ஜனங்கள் எண்ணம் கொண்டிருக்கின்றனர். இப்படியான நிலையில் காணப்படுபவர் பூரணமான மனுஷனாக, மிகவும் நல்லதொரு மூப்பராகக் காணப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. இப்படியாகவே - அதாவது அப்போஸ்தலன் அங்கு எழுதியுள்ளவைகள் யாவற்றின் நிலையினை மற்றக் கிறிஸ்தவர்களும் அடைவார்களானால், இந்தக் கிறிஸ்தவர்கள் யாவரும்கூட இப்படியாகவே காணப்படுவார்கள். அப்போஸ்தலன் உண்மையில் தன்னுடைய வார்த்தைகளானது, நேரடியான விதத்தில் அப்படியே புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று எழுதவில்லையெனில், பின் ஏன் அவர் இப்படித் திட்டவட்டமான வார்த்தைகளைப் பேசியுள்ளார் என்று நீங்கள் கேட்கலாம்? சபை யாவரிடமும் இயேசு வேறொரு தருணத்தில், "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவைப் போன்று நீங்களும் இருக்கக்கடவீர்கள்" என்று கூறின விதத்தைப்போலவே அப்போஸ்தலனும் காரியத்தினை முன்வைக்கின்றார் என்று நாம் பதிலளிக்கின்றோம். நீங்கள் உங்கள் பிதாவைப்போன்று இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? "நான் முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன்" என்று நீங்கள் சொல்லுவீர்கள். என் அன்பு சகோதரனே நீங்கள் சொல்வது சரிதான். சரி உங்கள் பிதாவைப்போன்று இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? சில விதங்களில் நீங்கள் இருக்கின்றீர்கள் - அதாவது உங்கள் மனதில் நீங்கள் இருக்கின்றீர்கள் என்று சொல்லுவீர்கள். சரி வார்த்தைகள் மற்றும் கிரியைகள் மற்றும் சிந்தனைகள் யாவற்றிலும் நீங்கள் இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? இல்லை; நான் பிதாவைப் போன்று அனைத்திலும் இருக்கிறதில்லை; ஆனால் தேவனுக்கு ஒத்த குணலட்சணத்தை அதிகமதிகமாய் அடைந்திட நான் முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன் என்று சொல்லுவீர்கள். நல்லது. இதுபோலத்தான் அப்போஸ்தலன் இங்கு ஒரு மூப்பருக்கான தராதரத்தினை/அளவுகோலினைச் சபைக்கு முன்வைக்கின்றார்; அதாவது ஒரு

மூப்பர் எப்படி இருக்கவேண்டும் என்று சபைக்கு முன்வைக்கின்றார். நீங்கள் மூப்பர்களைக்குறித்துச் சிந்திக்கையில், அதைப் பாருங்கள் மற்றும் சகோதரரை நீங்கள் மதிப்பிடுகையில் அதை மனதில் கொண்டிருங்கள் மற்றும் இந்தத் தகுதிகளைக் கொஞ்சம் கொண்டிராதவர்கள், பொருத்தமானவர்களாய் இருக்கமாட்டார்கள் மற்றும் உங்களால் முடிந்தவரைத் தகுதியானவரைத் தேர்ந்தெடுங்கள். பூரணமான மூப்பர்கள் கிடைக்கும் வரைக் காத்திருப்போமானால், நாம் எந்த மூப்பர்களையும் ஒருபோதும் பெற்றுக்கொள்ள மாட்டோம். ஆகையால் சகோதரர் ரசலும் சரி, வேறு எந்த நபரும் சரி பரிபூரண மூப்பராய் இருந்திடமுடியாது என்று நான் சொல்லுவேன். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் மூப்பராக எவரையும் தேர்ந்தெடுக்காமல் இருப்பது நலமாயிருக்கும் எனும் நிலைமையுள்ள சந்தர்ப்பங்களும் காணப்படக்கூடும் என்று நான் நம்புகின்றேன். அப்படியான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன, ஆனால் மிகவும் அரிதாகவே இருக்கின்றன. அப்படித்தான் என்று நான் நம்புகின்றேன். இது அறிவுரை கூறுவதற்கு மிகக் கடினமான சந்தர்ப்பங்களாய் இருப்பவைகளில் ஒன்றாய் இருக்கின்றது. இவ்விஷயத்தில் அநேகக் காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு சிறு சபையாரும், சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும், முடிந்தமட்டும் ஞானமாயும், முடிந்தமட்டும் முன்யோசனையோடும், ஜாக்கிரதையோடும், முடிந்தமட்டும் தேவனுக்கும், அவரது நீதியின் கொள்கைகளுக்கு நேர்மையாயும் காணப்பட்டு, தெய்வீக வழிநடத்துதலின்படி செய்திடுவதற்கு ஜெபத்தோடு நாடுவார்களாக. ஒருவேளை முழுச்சபையாரும் அல்லது சபையாரில் பெரும்பான்மையினர், ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையினைத் தீர்மானித்திடுவார் களானால், சபையார் வாக்குகள் செலுத்திட்டாலும், உங்கள் சித்தமே செய்யப்பட வேண்டும் என்று எண்ணாதீர்கள்; மாறாக பின்வருமாறு கூறிடுங்கள்: "சரி, பரவாயில்லை; சபையார் வாக்குகள் அளித்துள்ளனர் மற்றும் நியாயமாய்க் காரியம் தெரிவிக்கப்பட்டுள்ளது; நான் என் கருத்தைச் சொல்லியுள்ளேன் மற்றும் நான் சிந்திப்பதுபோன்று, அவர்கள் சிந்திக்கவில்லை; மற்றும் சபையாரை நான் வற்புறுத்திடக்கூடாது; நான் சிறுபான்மையாய் இருப்பவர்களில் ஒருவனாய் இருக்கின்றேன் மற்றும் சபையார் மத்தியிலுள்ள மற்றவர்களுக்கு நான் பணிந்திடுவேன் மற்றும் நான் அவர்களோடுகூட ஒத்துழைப்பேன் மற்றும் நான் சொன்ன வழிதான் சரியான வழி என்றும், ஒருவேளை சபையார் என் வழியில் வரவில்லையெனில் காரியங்கள் அனைத்தும் தவறாகிவிடும் என்றும் காண்பிப்பதற்கென, அவர்களுக்கு எதிராய் நான் காரியங்களைச் செய்திடமாட்டேன். இல்லை, நான் தேவனுக்கு இசைவாய்க் காணப்பட வேண்டும் மற்றும் சபையாரால் எது தீர்மானிக்கப்படுகின்றதோ, அதற்கு என்னுடைய பங்கினைச் சிறந்த விதத்தில் நான் செய்திட வேண்டும்; சமாதானமும், நீதியும் நிலவும்படி அனுமதிக்கத்தக்கதாகவும் மற்றும் சத்தியத்தின் காரணங்களை

முன்னேற்றத்தக்கதாகவும் மற்றும் சமாதானம் பண்ணுகிறவராகிடத்தக்கதாகவும் என்னால் இயன்ற மட்டும் சிறப்பாய் இப்பொழுது ஒத்துழைத்திடுவேன்" என்பதாகும். இதை மறந்துவிட வேண்டாம். தேவனுடைய ஜனங்கள யாவரும், "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்று இயேசு கூறியதைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஜெயங்கொள்பவர்களாகிடுவதற்கு, எதிர்த்துப்போராடும் மனப்பான்மையினைக் கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் ஓரளவுக்குப் பெற்றிருப்பது அவசியம் என்பதை நினைவில் கொள்வோமாக; இதைக் கொஞ்சமேனும் பெற்றிருக்கவில்லையெனில், உங்களால் ஜெயங்கொண்டவராகிட முடியாது. உலகத்தினை ஜெயங் கொள்வதற்குப் போதுமான அளவுக்கு நீங்கள் எதிர்த்துப் போராடுகிறவராயும் மற்றும் சகோதரரோடு சண்டைப்பண்ணாமல் இருப்பதற்குப் போதுமான அளவுக்கு நீங்கள் சமாதானம் பண்ணுகிறவராயும் இருத்தல் வேண்டும். சகோதரரோடு போராடிக்கொண்டிராதீர்கள்; மாறாக உங்களால் முடிகிற அளவுக்குப் பரிவாயும், அனுதாபம் உடையவர்களாயும், உதவிகரமாயும் இருங்கள்.

**(Q247:1) தேர்ந்தெடுத்தல் - யார் வாக்களிக்கலாம்?**

கேள்வி (1913-Z)-1- சபையில் வாக்களிக்க யார் உரிமைப் பெற்றுள்ளனர்?

பதில் - முழு அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைப்பண்ணி மற்றும் அதை வெளிப்படையான அடையாளமாகிய - தண்ணீரில் மூழ்குதல் மூலம் வெளிப்படுத்தியவர்கள் தவிர வேறு யாரும் வாக்களிக்கக்கூடாது என்பதை எப்பொழுதும் கருத்தில்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பை அடையாளத்தில் காட்டாதவர்கள் சகோதரர்கள் அல்ல என்று தள்ளிவிடாமல், மாறாக சபைக்கு ஊழியஞ்செய்யத் தகுதியானவர்கள் யார் என்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்கப் போதிய வளர்ச்சியற்றவர்கள் என்றும், சபையின் ஊழியக்காரர்களாக ஆகுவதற்குத் தகுதி பெறாதவர்கள் என்றும் கருதபட வேண்டும்.

**(Q247:2)தேர்ந்தெடுத்தல் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல்.**

கேள்வி (1913 - Z.5336)-2- குறைந்தளவு எண்ணிக்கையில் (bare majority) பெரும்பான்மை என்பது தேர்ந்தெடுத்தலின் விதியாக இருக்கமுடியுமா?

பதில் - சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப் பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர்

சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டு கின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/ நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும்தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர மற்றபடி சபையில் - ஒரு வாக்கில் (vote) பெரும்பான்மை யானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்ற வர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில் 51-பேர்கள், சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரந்தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதான வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A, B, C, D, E, F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A - அவர்களுக்கு 100-வாக்குகளும்; B - அவர்களுக்கு 90-வாக்குகளும்; C - அவர்களுக்கு 80-வாக்குகளும்; D - அவர்களுக்கு 70-வாக்குகளும்; E -

அவர்களுக்கு 60-வாக்குகளும்; F - அவர்களுக்கு 50-வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறுபேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்கக் குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் கொடுக்கப்பட்டுள்ளதான தகுதிநிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/ கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே - அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார் (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கின்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும் படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

## (Q248:1) தேர்ந்தெடுத்தல் - பதிலாள் மூலம் வாக்கு.

கேள்வி (1913)-1- சபையிலுள்ள அர்ப்பணிக்கப்பட்ட சகோதரன் ஒருவர், மூப்பர் தேர்ந்தெடுக்கப்படும் கூட்டம் ஒன்றில், நோயுற்றிருப்பதன் காரணமாகக் கலந்துகொள்ள முடியாதபோது, மூப்பர் ஊழியத்திற்காக, தான் தேர்ந்தெடுப்ப

வரைக்குறித்துச் சபைக்கு எழுதிக்கொடுத்திடலாமா? அல்லது பதிலாள் வாயிலாக வாக்குச் செலுத்திடலாமா?

பதில் - ஒருவன் இதைச் செய்யலாம் என்று கூறும் எதுவும் வேதாகமத்தில் இல்லை மற்றும் ஒருவன் இதைச் செய்ய இயலாது என்று கூறும் எதுவும் வேதாகமத்தில் இல்லை. நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்? அதைச் சபையாரிடம் விட்டுவிடுங்கள். சபையார் முடிவெடுக்கட்டும்.

**(Q249:1) தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுத்தலுக்கான சதவீதம்.**

கேள்வி (1913)-1- சபையின் தேர்ந்தெடுத்தல் விஷயத்தில், தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றதான வாக்குச் சதவீதத்தில், சபையாரால் பின்பற்றப்படும் அந்த விதிகளானது, உதவிக்காரராக முன்மொழியப் பட்டிருக்கின்ற சகோதரனுக்கான வாக்குகள் விஷயத்திலும் பொருந்துமென நாம் புரிந்துகொள்ள வேண்டுமா?

பதில் - நிச்சயமாக. சபையின் காரியங்களை நிர்வகிப்பது தொடர்புடையதான வேதாகம ஏற்பாடானது, அனைத்துப் பொறுப்பினையும் சபையார் மீதே வைக்கின்றது. நான் பொதுவான அர்த்தத்திலுள்ள சபையாரைக் குறிப்பிடவில்லை, மாறாக சபையை, கிறிஸ்துவின் சரீரமாகிய கூட்டத்தாரை, அதாவது அர்ப்பணிக்கப்பட்டவர்களைக் குறிப்பிடுகின்றேன். ஒவ்வொரு காரியத்தினையும் நிர்வகிக்கும் திட்டவட்டமான விதிகளைக் கர்த்தர் கொடுக்காததால், கர்த்தருடைய திருவசனத்தைக் கொண்டும் மற்றும் வேதவாக்கியங்களிலுள்ள மாதிரிகள் மற்றும் உதாரணங்களையும் கொண்டும், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்பப்படும்படி நாடிடுவதற்கான பொறுப்பு ஒட்டுமொத்த சபையின் மீது விடப்பட்டுள்ளது. ஒருவேளை கர்த்தர் காரியத்தினை மிக எளிமையாயும் மற்றும் தெளிவாயும், அவரது ஜனங்களுடைய கைகளில் விட்டிருப்பாரானால், அதை ஏதோ ஒரு தனிப்பட்ட நபரின் அல்லது குருமார் வகுப்பாரின் கைகளுக்குத் திசைமாற்றிட நீங்களோ அல்லது நானோ முற்படுவது என்பது முற்றிலும் தவறான காரியமாய் இருக்கும். இதற்கு வேதாகமத்தில் எந்த அதிகாரமும் இல்லை. நிர்வாகங்கள் தவறிடுவதுபோல, ஜனங்களும் தவறிடுவது சாதாரண காரியமாய் இருக்கின்றது. உதாரணத்திற்குச், சில தீவுகளில் காணப்படும் ஜனங்கள் தாங்களாகவே நிர்வகித்துக்கொள்வதற்குப் பதிலாக, சில நிர்வாகங்களானது தங்களால் அத்தீவுகளை நன்கு நிர்வகிக்க முடியும் என்று எண்ணுகின்றனர். ஆகையால் ஒருவேளை ஜனங்கள், அதற்கு அடிபணிந்திடுவார்களானால், குருமார் என்று அழைக்கப்படுகின்றதான ஒரு

குறிப்பிட்ட வகுப்பார், தங்களுக்கென அதிகாரத்தினை தகாத விதத்தில் உரிமைகொண்டாடி, சட்டங்களையும், விதிகளையும் இயற்றிவிடுகின்றனர். ஆனால் இதற்கான எளிமையான காரணம் - சபையார் தங்கள் கைகளில் கர்த்தர் அதிகாரத்தைக் கொடுத்துள்ளார் என்பதையும், ஒருபோதும் எந்த ஒரு குருமார் வகுப்பாரை அவர் அங்கீகரித்ததில்லை என்பதையும் அறியாமல் இருப்பதேயாகும். கர்த்தர்தாமே போதகராய் இருப்பார் - நீங்கள் அனைவரும் சகோதரராய் இருக்கின்றீர்கள். கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒரு கூட்டத்தாரெனச் சபையாரால் அடையாளம் கண்டுகொள்ளப்படும் வேற்றுமை தவிர, மற்றபடி சகோதரர்கள் மத்தியில் எந்த வேற்றுமையும் காணப்படக்கூடாது மற்றும் சில குறிப்பிட்ட நபர்களை மூப்பர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்களெனில், பொறுப்புச் சபையாரிடத்திலேயே இருக்கும். சபையாரிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நபரும், மிகுந்த பகுத்துணர்தலையும் மற்றும் விவேகத்தினையும் பயன்படுத்திட வேண்டும் மற்றும் இவ்விஷயத்தில் தாங்கள் கர்த்தருக்காக வாக்களிப்பதாகவும், செயல்படுவதாகவும் நினைவில்கொள்ள வேண்டும். சபையார் தங்களது வழிநடத்துபவர்கள் முதலானவைகள் தொடர்பாக எடுக்கும் தீர்மானம், அக்காரியத்தில் இறுதி தீர்மானமாக இருக்கும் என்பதினால் சபையில் ஒழுங்குமுறைக்குரிய சரியான முறைமை தொடர்பாக, வேதவாக்கியங்களினால் முன்வைக்கப்படுபவைகளை ஆறாம் தொகுதியில் - பிரமாணமாக இல்லாமல், யோசனைகளாகச் சுட்டிக்காட்டிடுவதற்கு நாங்கள் முயற்சித்துள்ளோம்; சதவீதம் குறித்துச் சிலவற்றை நாங்கள் யோசனையாகக் கூறியிருந்தோம்; சதவீதங்கள் குறித்து எதுவும் வேதவாக்கியங்களில் கூறப்படவில்லை; எனினும் உலக ஜனங்களுடைய ஒரு சாதாரணமான கூட்டத்தில், உதாரணத்திற்கு ஒரு விஷயத்திற்கென வாக்கெடுக்கப்படுகிறதெனில், ஓர் எண்ணிக்கையில் பெரும்பான்மையாய் இருப்பவர்கள், காரியத்தைத் தீர்மானிப்பவர்களாக இருப்பார்கள்; 100 பேர்க் கொண்ட சபையார் என்று வைத்துக்கொள்ளுங்கள், இதில் 51-பேர்கள் தீர்மானிப்பவர்களாய் இருப்பார்களானால், மற்ற 49-பேரும் பிரதிநிதி என்று யாரும் இல்லாமல் விடப்படுவார்கள்; இது கர்த்தருடைய ஆவியல்ல என்பது நம்முடைய கருத்தாய் இருக்கின்றது. முழுச்சபையுமே நலனுக்கடுத்த விருப்பங்களில் ஏகத்துவத்தினை/ஒற்றுமையினை உணர்வதே கர்த்தருடைய ஆவியாய் இருக்கின்றது. ஆனால் ஒருவேளை பெரும்பான்மையினராய்க் காணப்படும் 51-பேரும் பின்வருமாறு: "ஆம், இது எங்கள் விருப்பம்; இந்தச் சகோதரனை மூப்பராய்ப் பார்த்திடுவதற்கு நாங்கள் விரும்புகின்றோம்; இவர் நன்கு தகுதியுடையவராகக் காணப்படுகின்றார் என்று நாங்கள் எண்ணுகின்றோம்; மேலும் எங்கள் சகோதரரிலுள்ள 49-பேரின் விருப்பங்கள் என்னவாக இருப்பினும், அதற்கு நாங்கள் கவனம் கொடுக்கமாட்டோம்" என்று கூறுவார்களானால், இது அன்பின் ஆவியாய்க் காணப்படாது. 51-பேருக்கு மாத்திரமல்லாமல், சிறுபான்மையினராகக்

காணப்படும் 49-பேருக்கும் பொருத்தமான பிரயாசம் எடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் யோசனை கூறுகின்றோம்; ஒவ்வொருவனும் தனக்கு விருப்பமானதை மாத்திரம் செய்கிறவனாய் இராமல், மாறாக ஒருவர் இன்னொருவரின் உணர்வுகளை மதிக்கவும், ஒருவரையொருவர் மதிக்கவும், ஒருவரிலொருவர் அக்கறை கொள்ளவும் முயற்சித்திட வேண்டும். ஒருவேளை 100-பேர் எண்ணிக்கையுள்ள சபையாரில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானது, உதவிக்காரர்களின் ஸ்தானத்திற்கு ஒருவரைத் தகுதியாக்கிடும் என்று தீர்மானிக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்வோம். சகோதரர்கள் A, B மற்றும் C என்பவர்கள், சகோதரர்கள் D, E மற்றும் F-ஐ விட நன்கு தகுதியானவர் என்ற மிகவும் தெளிவான கருத்தினை, சபையாரில் ஒருவனாகிய நான் கொண்டிருக்கலாம் மற்றும் அந்த மூவருக்கும் வாக்கு அளிப்பதற்கு எனக்கு உரிமையும் காணப்படுகின்றது; பின்னர் ஒருவேளை யாரோ ஒருவர் சகோதரர்கள் D, E மற்றும் F-ஐ குறித்து நல்லெண்ணம் கொண்டுள்ளாரெனில், நானோ: ஆம்! அந்தச் சகோதரன் இந்த மற்றச் சகோதரர்களை விரும்புகின்றார்; இச்சகோதரர்களுக்கு எதிராக உண்மையில் ஏதாகிலும் எனக்குத் தெரியுமா? என்று எனக்குள்ளாகக் கேட்டிடுவேன். ஒருவேளை இவர்களுக்கு எதிராய் நான் எதையும் அறியேனாகில் மற்றும் மற்றச் சகோதரரில் அநேகர் இச்சகோதரர்களை விரும்புகிற காரியமானது, மற்றச் சகோதரர்கள் இச்சகோதரர்களைப் பெற்றுக்கொள்வதை நான் காண விரும்பிடுவதற்கு நல்ல காரணமாய் அமைந்திடும். ஒருவேளை நான் மூப்பனாகப் போகிறேன் என்றால், mere majority/வெறும் பெரும்பான்மையினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருப்பதைக் காட்டிலும், முழுச்சபையாரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருப்பதே நலமாயிருக்கும். சபையார் யாவரும் தங்கள் மனங்களில் திருப்தியும், மனநிறைவும், மனரம்மியமும் அடைந்திட நான் விரும்பிடுவேன். நான் என்னை அவர்களுடைய இடங்களில் வைத்துப் பார்த்திட விரும்புகின்றேன். எனக்குச் சிறுபான்மையினர் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றேனோ, அதையே நானும் சிறுபான்மையினருக்குச் செய்திட வேண்டுமெனப் பொன்னான பிரமாணமானது எதிர்ப்பார்க்கின்றது. ஒருவேளை நான் சிறுபான்மையினரில் ஒருவராகக் காணப்பட்டு, அவர்கள் பெரும்பான்மையானவர்களாகக் காணப்பட்டிருந்திருப்பார்களானால், என்னைக் குறித்து அவர்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளும்படிக்கு நான் எவ்வளவாய் விரும்பிடுவேன்! நான் கவனிக்கப்படும்படிக்கும்கூட விரும்பிடுவேன். அப்படியானால் நாம் மற்றவர்களைப்போன்று சமமாய்ப் பெருந்தன்மையுடன் காணப்பட வேண்டும். இது உண்மையில் முக்கியமாயுள்ள ஏதாகிலும் காரியத்தைக் குறித்து நாம் கவனம் குறைவாகவோ அல்லது அக்கறையற்றோ காணப்பட வேண்டும் என்று குறிப்பதாய் இராது. ஒருவேளை ஒருவர் மோசமான மனுஷனாகவோ அல்லது அர்ப்பணிக்கப்படாத மனுஷனாகவோ அல்லது ஏதேனும்

விதத்தில் மூப்பனாகுவதற்கு முற்றிலுமாய்த் தகுதியற்றவராய் இருப்பாரெனில், அப்பொழுது நான் முகமுகமாய் எதிர்த்துநின்று, குறிப்பிட்ட காரணங்களினால் என்னால் இந்தச் சகோதரனுக்கு வாக்களிக்க முடியாது என்று கூறிடுவேன். காரணங்களைத் தெரிவிப்பதை என்னால் முடிந்தமட்டும் நான் தவிர்த்துக்கொள்வேன்; ஆனால் ஒருவேளை காரணங்களைத் தெரிவிப்பது அவசியமாகுமானால், அதை என்னால் முடிந்த மட்டிலுமான அன்பான விதத்தில் செய்திடுவேன். நான் எந்தச் சகோதரனைக் குறித்துமான அன்பற்ற வார்த்தையைக் கூறிடவோ அல்லது தீமை பேசவோ மாட்டேன் என்று சகோதர சகோதரிகள் அறிந்திருக்குமளவுக்கும் மற்றும் முழுமையான அவசியம் காரணமாகத்தான் ஒரு சகோதரனை எதிர்க்கும் கடமையினை - அதாவது தேவனுக்கான மற்றும் சபையிடத்திலுமுள்ள இப்படிப்பட்ட கடமையினை நான் செய்கின்றேன் என்று சகோதர சகோதரிகள் அறிந்திருக்குமளவுக்கும், அனைவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலைமை யினை நான் அடைந்திட முற்காலங்களில் பிரயாசம் எடுத்திடுவேன். நாம் ஒருவரிலொருவர் அந்த நம்பிக்கையினை அடைவோமானால், நாம் சொல்லுகிற எதற்கும், அனைத்து மதிப்பும், முக்கியத்துவமும் இருக்கும்.

**(Q250:1) தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல்களை நிறைவுசெய்தல்.**

கேள்வி (1913)-1- ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சி வகுப்பினை நடத்தும்படிக்கு மூப்பர் ஒருவரை நியமித்தல் - தொடர்புடைய விஷயத்தில், ஒருவர் முன்மொழியப்பட்ட பிற்பாடு, இன்னும் முன்மொழியப்படுவதற்கு நேரம் கொடுக்காமல், முன்மொழிதலை நிறைவு செய்வது சரியான காரியமாய் இருக்குமா? இது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சகோதரர்களால் மூப்பர்களாக ஊழியம் புரியப்படும் ஒரு சபைக்குப் பொருந்துமா?

பதில் - பாராளுமன்ற விதிகள் என்று அழைக்கப்படுகின்ற விதிகள் காணப்படுகின்றன. அதாவது பாராளுமன்ற அவைபோன்ற குழுவினுடைய செயல்பாடுகளுக்குப் பொருந்தும் விதிகளாகும் மற்றும் இந்த விதிகளானது மகாசட்டசபைக் கூட்டங்கள் தொடர்பாகவும், சிறு கூட்டங்கள் மற்றும் பெரிய கூட்டங்கள் தொடர்பாகவும் கூடப் பயன்படுத்தப்படுகின்றது. இவைகள் மிகவும் நல்ல விதிகளாகவும், பொதுவாய் மறுப்புத் தெரிவிக்கப்படக் கூடாதவைகளாகவும் காணப்படுகின்றன. இவைகள் பொதுவாகவே நியாயத்திற்குரிய மிகவும் ஞானமான மற்றும் பரிவுள்ள விதிகளாகக் காணப்படுகின்றன. அதேவேளையில் தேர்ந் தெடுத்தலின் விஷயத்திலும் மற்றும் கூட்டங்களுக்கான விதிகளின் விஷயத்திலும், நீதிக்கும் அதிகமாய்க் கடந்துசென்று, அன்பிற்கேற்ப நிர்வகிக்க வேண்டியவர்களாகவும்

மற்றும் அன்பே நியாயப்பிரமாணத்தினுடைய நிறை வேறுதலாய் இருக்கின்றது என்று அறிய வேண்டியவர்களாகவும், இக்காரியங்கள் தொடர்பான நீதியான மற்றும் நியாயமானவைகளுக்கும் மேலாக செய்ய வேண்டியவர்களாகவும் கர்த்தருடைய ஜனங்கள் இருப்பதினால், அவர்கள் வேறுவகையான பொதுக்கூட்டங்களுக்குப் பொருந்தக்கூடிய பிரமாணத்தின் விஷயத்தில், பிரமாணத்தினுடைய எழுத்தினைக் கடைபிடிக்க வேண்டுமென ஒருவரையொருவர் மிகவும் கடுமையாய் வற்புறுத்துகிறவர்களாய்க் காணப்படக்கூடாது. அவர்களுடைய அன்பின் அனுதாப கட்டுகளானது, அவர்கள் அனைவரையும் பிரியப்படுத்துவதற்கு விரும்புமளவுக்குக் காணப்பட வேண்டும். ஒருவேளை இது ஒரு கூட்டம் என்று வைத்துக்கொள்வோம் மற்றும் இங்கு மூப்பர்கள் சிலரை நாம் தேர்ந்தெடுக்கப்போகின்றோம். இங்கு இருப்பவர்களில் சிலர் சகோதரர் "A"-கும் மற்றும் சிலர் சகோதரர் "B"-கும் மற்றும் சிலர் சகோதரர் "C"-கும் மற்றும் சிலர் சகோதரர் "D"-கும் மிகுந்த மதிப்பு வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நான் அறிவேன் என்று வைத்துக்கொள்வோம்; மற்றும் இவர்களில் சகோதரர் "A" மற்றும் "C" எனது விருப்பத்தின் படியானவர்களாய் இருக்கின்றனர்; சகோதரர்கள் "B" மற்றும் "D" குறித்து நான் அவ்வளவுக்கு எண்ணுகிறதில்லை. சகோதரர் "A" மற்றும் "C"-ஐ நான் முன்மொழிந்து, முன்மொழிதலை நிறைவுபண்ணிடுவேன் என்று நான் சொல்லிடலாம். இதனால் மிகவும் துணிவற்றவர்கள் வாய்ப்பில்லாதவர்களாய்ப் போவார்கள். இது அன்பானதாய் இருக்குமா? இல்லை. அன்பே நம்முடைய விதியாய் இருக்கின்றது மற்றும் அன்பானது உலகத்திலுள்ள பாராளுமன்ற விதிகள் அனைத்திற்கும் முன்னதாகக் கடந்துவந்து செயல்படுகின்றது. அன்பானது - இதோ அங்குக் காணப்படும் சகோதரனுக்கும், இதோ அங்குக் காணப்படும் சகோதரிக்கும் மற்றும் அனைத்துச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் நல்ல மற்றும் நியாயமான/பாரபட்சமற்ற வாய்ப்புக் கிடைக்கவேண்டும் மற்றும் இவ்விஷயத்தில் அவர்களது கருத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்று கூறிடும். கர்த்தருடைய ஏற்பாட்டின் கீழ் அவர்களுக்கு உரியதான உரிமைகளை நான் அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ள விரும்புகிறதில்லை. ஒருவேளை நான் நுணுக்கமாக ஆராய்பவராகவும், மிகவும் அனுபவமுடையவ ராகவும் காணப்பட்டு, எனக்குத் தகுந்தாற்போல் அனைத்தையும் மாற்றமுடிபவராகக் காணப்படலாம்; ஆனால் இளையச் சகோதரர்களை மனதில் குழப்பி, அவர்களது சித்தங்களைச் செய்ய விடாமல் ஆக்கிடுவதும், அவர்களை ஏதோ ஒன்றிற்கு வாக்களிக்கப் (vote) பண்ணுவதும் மற்றும் இப்படிச் செய்ததை அவர்கள் அறியாமலிருந்து, ஆனால் பிற்பாடு அதிருப்தியடைந்து,"அக்காரியத்தினை நான் சரியாய்ப் புரிந்திருப்பேனாகில், நான் வேறு மாதிரி செயல்பட்டிருப்பேனே" என்று கூறிடுவதற்கு ஏதுவான நிலையில் இளையச் சகோதரர்களை ஆளாக்குவதும், ஒரு மூத்த சகோதரனான எனக்குத் தகுதியாய் இராது. இது திருப்திகரமான

கூட்டமேயல்ல. ஒரு சபையார் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கெனக் கொண்டிருக்கும் கூட்டமானது, எல்லாருடைய உரிமைகளும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட மற்றும் முடிவுகளில் அனைவருமே மகிழ்ச்சியும், திருப்தியும் உணரத்தக்கதாய் மிகவும் வெளிப்படையாயும் மற்றும் நியாயமாயும் நடைபெறும் ஒரு கூட்டமாகக் காணப்பட வேண்டும். நம் அனைவருக்குமே நம்முடைய வாய்ப்புகள் கிடைத்தது மற்றும் நான் விரும்பத்தக்க விதம் என்று எண்ணின விதத்தில் ஒருவேளை நடைபெறவில்லை என்றாலும், அது நல்லதொரு விதத்தில் செய்யப்பட்டுள்ளது என்று எண்ணிடுவேன்; ஏனெனில் எல்லாருக்கும் நியாயமான பங்குகிடைத்தது - அது ஒருவரையொருவர் கிழித்தெறிவதற்கான பிரயாசமாக இருக்கவில்லை. நாம் ஒருவரையொருவர் கிழித்தெறிய கூடாது. ஒருவேளை ஒருவரை நீங்கள் அறிந்திருக்கவில்லையெனில் மற்றும் நீங்கள் அறிந்திருக்கும் எவராலும் அவருக்குச் சான்று பகிரப்படவில்லையெனில், அவருக்கு வாக்குச் செலுத்திடாமல் இருந்துவிடுங்கள். ஒருவேளை நீங்கள் மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருக்கும் யாரோ ஒருவர் அங்கிருந்து, இச்சகோதரனுக்குச் சான்று பகர்ந்து, நான் அச்சகோதரரை முன்மொழிகின்றேன் என்று கூறுவாரானால்; பின்னர் நீங்களோ: "சகோதரர் ரசல் அவர்கள் சகோதரர் "W" அவர்களை முன்மொழிந்துள்ள காரியமானது, அவர் இவரைக்குறித்து அறிந்திருக்கின்றார், இல்லையேல் அவர் இவரை முன்மொழிந்திருக்க மாட்டார். எனக்குச் சகோதரர் "W" அவர்கள் பரிட்சயமானவரல்ல, ஆனாலும் சகோதரர் ரசல் அவர்கள் இவரை முன்மொழிந்தும் மற்றும் சகோதரர் ஹிரிஷ் அவர்கள் வழிமொழிந்தும் இருக்கின்றனர் மற்றும் அவர்கள் இருவரையும் குறித்து நான் அறிந்திருப்பதினால், சகோதரர் "W" அவர்கள் சரியானவர் என்று அறிந்துகொள்வேன்" என்று எண்ணிட வேண்டும். பிறர் வழியான கூற்றினால் (indirect) பெறப்படும் அறிவின் மீது சார்ந்திருக்கும் ஓர் உரிமையினை நாம் பெற்றிருக்கின்றோம். சகோதரர் "W"-ஐ நமக்கு நன்கு பரிட்சயமில்லை மற்றும் அவருக்கு வாக்களிக்க அவரது காரியங்கள் அனைத்தும் போதுமாய் நமக்குத் தெரியாது; அவருக்கு வாக்களிப்பதற்கு ஏதுவாகச் சுட்டிக்காட்டுவதற்கு ஏதாகிலும் நமக்குக் காணப்பட வேண்டும். ஆனால் ஒருவேளை யாரேனும் அவருக்குச் சான்று பகருவார்களானால், அது வங்கியில் நடைபெறுவது போன்றே காணப்படும்; அதாவது நீங்கள் வங்கிக்குச் செல்கின்றீர்கள் மற்றும் உங்களது பெயர் ஸ்மித் என்று வைத்துக்கொள்ளலாம்.

வங்கியில்: "திரு. ஸ்மித் அவர்களே இந்த வங்கியில் எங்களுக்கு உங்களைத் தெரியாது; மற்றும் நாங்கள் உங்கள் தரப்பினர்களை அறிந்து கொள்ளாதது வரையிலும் எங்களால் உங்களுக்கு எந்தத் தொகைகளையும் செலுத்திட முடியாது. உங்களுக்கு திரு. ஹிரிஷ் அவர்களைத் தெரியுமா?" என்று கேட்கப்படுகின்றது.

நீங்களோ: "ஆம், அவர் எனக்கு உறுதிச் சீட்டு அளிப்பார்" என்று சொல்கின்றீர்கள்.

வங்கியோ: "திரு.ஹிரிஷ் அவர்களே, நீங்கள் திரு. ஸ்மித் அவர்களுக்கு உறுதிச் சீட்டு அளிக்கின்றீர்களா?" என்று கேட்கின்றது.

திரு. ஹிரிஷ் அவர்கள்: "ஓ! ஆம், இது திரு. ஸ்மித் ஆவார்; அவருக்கு நான் உறுதிச் சீட்டு அளிக்கின்றேன்; அவருக்கு உத்தரவாதம் அளிக்கின்றேன்" என்று சொல்கின்றார்.

பின்னர் வங்கியானது: "சரி, திரு ஸ்மித் அவர்களே, உங்களை திரு. ஹிரிஷ் அவர்கள் அறிவார் என்று கூறுகின்றார்; ஆகையால் நாமும் அறிமுகமாகிக் கொள்கின்றோம்" என்று கூறிடும்.

இப்படியே சபையாரிலும்கூடக் காணப்படுகின்றது. யாரோ ஒருவர் சகோதரர் ஸ்மித் அவர்களுக்குச் சான்று பகருகின்றார் மற்றும் நீங்களோ: இச்சகோதரனுக்குச் சான்று பகரப்போகிறவர்களையும் அறிவேன் என்பீர்கள். நீங்கள் அறியாத ஒருவரை நீங்கள் ஒருபோதும் முன்மொழியக்கூடாது; யாரோ ஒருவர் ஸ்மித் என்று கூறினதற்காக மாத்திரம் நீங்கள் அவரை ஒருபோதும் மொழியக்கூடாது. யாரோ ஒருவர் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக விவேகமற்று, ஸ்மித்தையோ அல்லது பிரவுண் அவர்களையோ கூறிவிடாதீர்கள். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்று அறிந்து செயல்படுங்கள் அல்லது அதைச் செய்யாதீர்கள்.

இன்னொரு காரியம்: மூப்பர்களுக்கான இத்தகைய தேர்ந்தெடுத்தலை நாம் பெற்றிருக்கும்போது, நான் பின்வருமாறு: "எனக்குச் சகோதரர் "A" அவர்களையும், சகோதரர் "C" அவர்களையும் பிடிக்கும் மற்றும் என்னைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு சகோதரர்களே மற்றச் சகோதரரைக் காட்டிலும் மிகவும் சிறப்பானவர் களாகத் தெரிகின்றனர் மற்றும் சகோதரர்கள் "A" மற்றும் "C" மூப்பர்களாக இருந்தால்தான் மற்றும் சகோதர்கள் "B" மற்றும் "D" மூப்பர்களாக இல்லாமலும் இருந்தால்தான் சபையாருக்கு நன்கு ஊழியம் புரியப்படலாம் என்று நான் எண்ணுகின்றேன்" என்று வைத்துக்கொள்வோம். இதை நான் திணிக்க முற்பட்டு, முகஸ்துதி செய்து பணியவைத்திடலாம் மற்றும் நயமாய்ப் பேசி அவர்களது வாக்கினைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இப்படிச் செய்வது சரியாய் இருக்காது. மாறாக நான் பின்வருமாறு: "அநேகர் சகோதரர் "B" அவர்களையும் மற்றும் வேறு சிலர் சகோதரர் "D" அவர்களையும் மிகவும் விரும்புகின்றனர் என்று நான் நன்கு அறிவேன்; இவர்கள் இருவருக்குமே, சகோதரர்கள் "A" மற்றும் "C"

போன்று நல்ல தகுதிகள் காணப்படுவதாக எனக்குத் தெரியவில்லை; ஆனால் சிலர் இவர்களை விரும்புகின்றனர் மற்றும் தங்களுக்கு இவர்களால் பிரயோஜனம் உண்டாகும் என்று கூறுகின்றனர் மற்றும் அவர்களது குணங்களுக்கு எதிராய்ச் சொல்லிடுவதற்கு நான் எதையும் அறியேன் மற்றும் மற்றவர்கள் அவர்களுடைய ஊழியத்தினால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்பவர்களாக இருப்பதினால், அவர்களும் ஊழியம் புரிவதில் நான் மகிழ்ச்சிக்கொள்ள வேண்டும்" என்று எண்ணிட வேண்டும். அவர்கள் நல்ல குணலட்சணமுடைய மனிதர்கள் என்று அறிந்து, அவர்களில் யாருக்கேனும் மற்றும் அனைவருக்குமே முன்மொழிவதில் நான் பிரியம்கொள்வேன். இது அவர்கள் சிறந்தவர்கள் என்று நான் எண்ணுவதாகாது, மாறாக நான் விரும்புகிறவர்களையே நான் முன்மொழிந் திடுவேன் மற்றும் ஒருவேளை மற்றவர்களும் முன்மொழியப்பட்டிருக்க மற்றும் வழிமொழிய ஆள் இல்லாமல் இருந்தால், "நான் சகோதரர்கள் "B" மற்றும் "D" அவர்களை வழிமொழிகின்றேன்" என்று கூறிடுவேன். ஏன்? அவர்கள் நீங்கள் விரும்பினவர்கள் இல்லையே என்று நீங்கள் என்னிடம் கேள்விக் கேட்கலாம். இல்லைதான், ஆனாலும் அவர்களை மற்றச் சில சகோதரர்கள் விரும்புகின்றனர் என்று நான் அறிவேன் மற்றும் சபையார் யாவரும் ஊழியம்புரியப்பட நான் விரும்புகின்றேன். நான் சிறந்தவர்கள் என்று எண்ணினவர்களை மாத்திரம் பெற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை, மாறாக மற்றவர்களாலும் சிறந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்; நான் திருப்திக் கொள்வது மாத்திரமல்லாமல், சகோதரர்கள் யாவரும் திருப்தியடைய விரும்புமளவுக்குப் போதுமான அன்பையுடையவனாக நான் இருக்க வேண்டும். இந்த ஆவியே ஒவ்வொரு சபையாரிடத்திலும், ஒவ்வொரு தேர்ந்தெடுத்தலிலும் காணப்பட வேண்டும் மற்றும் அங்குக் குழப்பம் குறைவாகவே காணப்படும் என்று நான் கருதுகின்றேன்.

ஒருவேளை வேறுயாரையாகிலும் பெற்றுக்கொள்வதற்குப் பிரியப்படுகின்ற சிலர் காணப்படுகின்றனர் என்று வைத்துக்கொள்வோம். முற்றிலுமாகப் பொருத்தமற்றவர்கள் என்று நான் கருதிடும் சிலர் முன்மொழியப்பட்டிருக்கின்றனர் என்று வைத்துக்கொள்ளலாம்; அவருக்காய் யாராகிலும் வாக்களித்துவிடுவார்கள் என்று நான் அச்சமடைவேன். நானோ: "அருமையான நண்பர்களே சகோதரர் "W" அவர்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றார். அவருக்கு எதிராய் ஒரு வார்த்தைச் சொல்லிடுவதற்கோ அல்லது அவரைச் சத்துருப்போன்று காண்பித்திடுவதற்கோ நான் விரும்பவில்லை; எனினும் என்னுடைய கணிப்பின்படி, அவரை நாம் மூப்பர்களில் ஒருவராகப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதே சிறந்தது என்று நான் எண்ணினேன். ஆகையால் தேர்வு செய்வது குறித்த காரியங்கள் நடந்துகொண்டிருக்கையில், நான் அவருக்கு வாக்களிப்பதில்லை என்று தெரியப்படுத்துகின்றேன். சகோதரர் "W" அவர்களே நீங்கள் மூப்பராக ஊழியம்

புரியாமலிருப்பது நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகிறதினாலேயே நான் உங்களை எதிர்க்க வேண்டியிருக்கிறதேயொழிய, மற்றப்படி நான் எந்த விதத்திலும் உங்களை எதிர்க்கவில்லை" என்பேன். நான் அவரிடத்தில் முழுமையாய் ஒளிவுமறைவு இன்றிக் காணப்படுவேன் மற்றும் அவருக்கு எதிராய் ஒரு வார்த்தைக்கூடச் சொல்லமாட்டேன் மற்றும் "அவர் பட்டணத்தில் அநேகம் கடன்பட்டிருக்கின்றார் என்பதினால் நான் அவரை எதிர்க்கின்றேன் மற்றும் பட்டணம் எங்கும் இவர் கடன்பட்டிருக்கின்றார் என்பதை அறிவார்கள் மற்றும் அவரால் நம்முடைய சபைக்கு அவமானம் காணப்படுகின்றது" என்று சொல்லமாட்டேன். சகோதரர் "W" அவர்களைக் குறித்து நான் எதுவுமே பேச வேண்டியதில்லை. நானோ: "சகோதரர் 'W' அவர்கள் மூப்பராகிடுவதற்கு என்னால் வாக்கு (vote) அளித்திட முடியாது மற்றும் அவரை மூப்பராகக் காண நான் விரும்பவில்லை; மற்றவர்களால் கர்த்தருடைய காரணங்களானது நன்கு ஊழியம்புரியப்படும் என்று நான் நம்புகின்றேன்" என்று மாத்திரம் கூறிடுவேன். நாம் ஒருவரையொருவர் துண்டுத்துண்டாகக் கிழித்துப் போட அவசியமில்லை. சகோதரர் "W" அவர்கள் பட்டணத்தில் கடன்பட்டிருக்கின்றார் என்பது உண்மையாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஒருவேளை நாம் அவரிடத்தில் கேட்டால், அவர் சில நல்லக் காரணங்களைக் கொடுக்க முடிபவராகக் காணப்படலாம்.

## (Q253:1) கூட்டங்களில் கலந்துகொள்ளாத மூப்பர்களின் தேர்ந்தெடுத்தல்.

கேள்வி (1913)-1- வாரநாட்களில் பிற்பகல் நடக்கும் கூட்டத்திலோ, அனைத்து மாலை கூட்டங்களிலோ மற்றும் பயண ஊழியர் சபைக்கு வரும்போதுகூடக் கலந்துகொள்ளாத மூப்பரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் - ஏதோ சில வேலையின் நிமித்தமாக மதிய கூட்டத்திற்கு அவரால் வரமுடியாமல் போயிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சகோதரன், அவர் பேசக்கூடிய கூட்டத்திற்கு மாத்திரம் வருவாரானால், அவர் அனைத்துக் கூட்டத்திற்கும் வரும்வரை, அவர் தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்படவேண்டும் என்று நான் நினைக்கிறேன். மற்றக் கூட்டத்திற்கு வராமல், தான் பேசக்கூடிய கூட்டத்திற்கு மாத்திரம் வருவது என்பது - அவர் மூப்பருக்குத் தகுதியானவர் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; இன்னுமாக மற்றவர்களால் போதிக்கப்படுவதற்கும், மற்றவர்களின் வார்த்தைகளைக் கேட்பதற்கும் விருப்பம் தெரிவிக்காமல், தான் மாத்திரமே பேச வேண்டும் என்றும், சபையிலுள்ள யாவைரையும் காட்டிலும் தான் மேன்மையாக

இருப்பவர் என்றும் அவர் எண்ணுவதைச் சுட்டிக்காட்டுவதாக நான் நினைக்கிறேன். "நாம் அனைவரும் சகோதரர்கள்." ஒருவர் "நான் சகோதரர்களில் ஒருவரல்ல" என்றும், "தனக்குப் பேசும் வாய்ப்பு இருக்கும்போது மாத்திரமே சபைக்கு வரவேண்டும்" என்றும் நினைக்கின்ற ஒரு சகோதரனுக்காக நான் அஞ்சுகிறேன். அவருடைய நன்மைக்காக அவரைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அந்தச் சகோதரனை இராஜ்யத்திற்குத் தகுதியற்றவராக மாற்றக்கூடிய வேலையை நாம் செய்ய வேண்டாம். நாம் அந்தச் சகோதரனையும், அவருடைய நலனையும், சபை மற்றும் அதன் நலனையும் கருத்தில் கொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

**(Q253:2) தேர்ந்தெடுத்தல் - குழப்பத்திலிருக்கும்போது வாக்களிக்காமல் இருப்பது தவறா?**

கேள்வி (1914)-2- சபையின் காரியங்களினிமித்தமாக வருத்தத்திலும், குழப்பமடைந்த நிலையிலும் காணப்பட்ட ஒரு சகோதரி, தேர்ந்தெடுத்தல் கூட்டத்தில் கலந்துகொண்டும் வாக்களிப்பதில் பங்குகொள்ளவில்லை. அச்சகோதரி வாக்குகள் ஒருவேளை செலுத்தியிருந்தால், யாருக்குச் செலுத்தியிருப்பார்களோ, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் விட்டார்கள். இந்தச் சகோதரி வாக்குச் செலுத்தாதது தவறா? இது பாவமா?

பதில் - அச்சகோதரி தனது சிறந்த பகுத்தறிதலின்படி இதைச் செய்திருக்கிறாள் என்று நான் அனுமானிக்கின்றேன். ஆகையால் இது பாவமல்ல என்று நாம் அறிவோம். உங்கள் மனசாட்சி உங்களை வழித்தவற செய்யக்கூடியதாய் ஒருவேளை இருந்தாலும்கூட, உங்களுடைய மனசாட்சியின்படி நடப்பதினால் ஒருபோதும் நீங்கள் குற்றவாளிகளல்ல. எத்தகைய பிரச்சனைகள் வந்தாலும், உங்கள் மனசாட்சியின்படி நீங்கள் செய்தால், நீங்கள் சரியானவைகளைச் செய்பவர்களாகவே இருப்பீர்கள். ஆகவே, தான் அறிந்துகொண்டதற்கு ஏற்ப, தன்னால் முடிந்ததைச் செய்யும் ஒருவனை அல்லது ஒருத்தியைத் தேவன் பாவஞ்செய்ததற்கான பொறுப்பாளியாகக் கருதுவதில்லை. இதை இப்படியாகக் கருதி விட்டுவிடுங்கள்.

**(Q253:3) தேர்ந்தெடுத்தல் - சபைக்கான தகுதியான ஊழியர்கள்.**

கேள்வி (1915)-3- உயர்வான சமுதாய அந்தஸ்துடைய மனுஷன் ஒருவர் சத்தியத்தின் மீது ஆர்வம் அடைந்தவரானார்; ஆனால் அவர் அர்ப்பணம் பண்ணிடவில்லை. போதிய வசதி வாய்ப்புள்ளவர்களும் மற்றும் இப்போது

சத்தியத்தில் இல்லாதவர்களுமான ஒரு சகோதரி மற்றும் அவளது கணவனின் செல்வாக்கினால் இம்மனுஷன் எங்களது சபையின் வழிநடத்துனனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வேறொரு சகோதரன் அவ்வளவுக்கு அறிவுடையவராக இராதபடியினால், அவரைச் சபையார் தேர்ந்தெடுக்கவில்லை. எங்கள் சபையில் இதன் தாக்கமானது அடிக்கடி உணரப்படுகின்றது மற்றும் எங்கள் சபையின் ஒழுங்கானது, வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியினுடைய காரியங்கள்படியாக இல்லை. இதற்கு உங்களது ஆலோசனை என்ன?

பதில் - அன்பார்ந்த நண்பர்களே, ஆறாம் தொகுதியானது, வேதாகமத்திற்கு முழு இசைவாகவே உள்ளது என்று நாம் எண்ணுகின்றோம். அது வேதாகமத்திற்கு இசைவாய்க் காணப்படுகின்றது என்று நீங்கள் நம்புகிறீர்கள் என்றால், வேதவசனத்தின் அடிப்படையிலான அந்த யோசனைகளை நடைமுறைப்படுத்துவது உங்களது கடமையாக இருக்கும். கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணித்துள்ளதாகத் தன்னைக் குறித்து அறிக்கைப் பண்ணிக் கொள்ளாத ஒரு நபரைப் போதிக்கும் பொறுப்புடைய எந்த ஓர் ஊழியத்திற்கும், மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ தேர்ந்தெடுப்பது என்பது சரியான ஒழுங்காய் நிச்சயமாக இருக்காது என்பது என்னுடைய கணிப்பாய் இருக்கின்றது. அவர் கிறிஸ்துவினுடைய சபையின் அங்கத்தினனே அல்ல; ஆகையால் அவரால் சபையில் எந்த மேற்பார்வை ஊழியத்தினையும் செய்திட முடியாது மற்றும் அவரை இத்தகைய ஊழியத்தில் வைப்பது என்பது வசனத்தினுடைய ஆவிக்கு முரணான காரியமாய் இருக்கும் மற்றும் சபையாரும் இப்படிச்செய்வது தவறாகும். அடுத்த தேர்ந்தெடுத்தலின்போது சபையார் என்ன செய்திட வேண்டும்? அவர்கள் இம்மனுஷனுக்கு வாக்குக் (vote) கொடுத்திடக்கூடாது.

யாரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியாது; ஆனால் ஒருவேளை அது நானாக இருந்தாலும்சரி, எனக்கும் இப்படியே செய்யப்படவேண்டும். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், நான் எவ்வளவுதான் செல்வாக்குடையவனாக இருப்பினும், சபையார் என்னைத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று நான் எண்ணிடுவேன். இவ்விஷயமானது வேறொரு மூப்பனைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏதுவாய்ச் சபையாருக்குக் கருத்து வேறுபாட்டினை உண்டாக்குகிறதென வைத்துக்கொள்ளுங்கள். அப்படியென்றால் இவ்விஷயம் சபையாரைப் கருத்து வேறுபாட்டிற்குள்ளாக்கட்டும். சபையானது கருத்து வேறுபாட்டிற்குள்ளாவதைக் குறித்து நாம் அக்கறையற்று இருக்க வேண்டுமென்றும், மற்றவர்களுடைய உணர்வுகளைக் குறித்து நாம் அக்கறையற்று இருக்கவேண்டுமென்றும் நான் சொல்லவில்லை; மாறாக காரியம் முழுமையாகச் சபையாருக்கு முன்வைக்கப்பட்ட பிற்பாடு, சரியான வழிமுறையைக் காண்பவர்கள், தேவனுடைய பிள்ளை என்று தன்னைக் குறித்து அறிக்கைப்பண்ணுகின்ற ஒருவரைத்தவிர, வேறு எவரும் எந்த

ஊழியமும் செய்திடக்கூடாது என்றும், முழுமையாய் அர்ப்பணம் பண்ணாதவர்கள் தவிர மற்றபடி யாரும் வாக்களிக்கக்கூடாது என்றுமுள்ள உண்மைக்காக நின்றிடவேண்டும். ஒருவேளை இக்கருத்தானது சபையாருடைய கருத்தாகக் கொண்டுவரப்பட முடியவில்லை, உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்கள் பின்வாங்கிட வேண்டும் மற்றும் வேதாகம ஏற்பாட்டின்படி, அவர்கள் ஒரு மகத்தான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நான் எண்ணுகின்றேன்.

**(Q254:1) தேர்ந்தெடுத்தல் - வாக்குறுதி (vow) தொடர்பாக.**

கேள்வி (1915 - Z.5793)-1- நம்மில் அநேகர் மிகவும் உதவிகரமாக உள்ளது என்று கண்டுகொண்டுள்ளதும் மற்றும் அனைவருக்கும் பரிந்துரைக்கப்பட்டதுமான விசேஷித்த வாக்குறுதியை (vow) எடுத்துக்கொள்ளாதவர்கள் சபைக்கான ஊழியக்காரராகத் தேர்ந்தெடுக்கப்படலாமா?

பதில் - கர்த்தர் தாமே விசேஷமாய் அதை இந்தக் காலக்கட்டத்தில் கொண்டு வந்துள்ளார் என்றும், அது ஓரளவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் பரீட்சையாக விளங்கும்படிக்கு நோக்கம் கொண்டுள்ளார் என்றும் நாம் நம்பினாலும், வாக்குறுதியைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் ஆக்கிவிட முடியாது; அதைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக்குவதற்கு வேதமும் நமக்கு அதிகாரம் வழங்கிடவில்லை. மூப்பர்களுக்கான தகுதிகளின் மத்தியில் குறிப்பிடப்படவில்லை என்கிறபோதிலும், முன்மொழியப்படும் சகோதரனுடைய விநோதமான பாணிகள் அல்லது சரியற்ற ஆங்கில மொழிப்பேச்சானது கவனிக்கப்படப் பாத்திரமானவைகளாய் இருப்பதுபோன்று, வாக்குறுதியும் தெய்வீகக் கட்டளையின் காரியமாய் இராமல், மாறாக பகுத்துணரும் காரியமாய்க் காணப்படுகின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள அன்புக்குரிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவருமே - வாக்குறுதி நியாயமான ஒன்று என்றும், அது தெய்வீக வார்த்தைகளுடனும், நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியுடனும் இசைவாய் இருப்பதையும் மற்றும் இவைகளை நிறைவுப்படுத்தும் இளநீல தொங்கல்களாக அது இருக்கின்றது என்றுமுள்ள ஒருமித்தக் கருத்தில் பார்க்கின்றார்கள் என்று நாம் அறிவோமானால், இதனிமித்தம் நாம் பெரிதும் களிகூருவோம். அந்த வாக்குறுதிக்குக் கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி என்ன மறுப்புத் தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் யாராலும் இருக்க முடியாது. அவர்களின் மறுப்பானது, அவர்களின் இருதயத்தினுடைய நோக்கங்களில் ஏதேனும் தவறு காணப்படக்கூடும் அல்லது அவர்களது புரிந்துகொள்ளுதலில் ஏதேனும் குறைபாடு இருக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டுகின்றது

என்று நம்மில் சிலருக்குத் தோன்றலாம். எனினும் மிகவும் நன்றாய் நியாயந்தீர்ப்பதற்கு நாம் வல்லவர்களல்ல. “மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்” என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

வாக்குறுதியை எடுத்துக்கொண்டுள்ளவர்களுக்கும், அதுகுறித்த ஒருமித்த கருத்தினைக் கொண்டிருப்பவர்களுக்கும், மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முன்னுரிமைக் கொடுக்கப்படலாம் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. எனினும் ஒருவேளை சபையாரை வழிநடத்துவதற்குத் திறமிக்கவர்களாய் இருக்கும் சகோதரர்கள், மற்ற அனைத்து விதங்களிலும் ஏற்கத்தகுந்தவர்களாகவும், வாக்குறுதியினை எதிர்க்காதவர் களாகவும் இருப்பார்களானால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாகவே - தங்களால் முடிந்தமட்டும், வாக்குறுதி உள்ளடக்கியுள்ள காரியங்கள் அனைத்திற்கும் இசைவாக தாங்கள் வாழ்வதாகக் கூறிக்கொண்டு, அந்த எளிமையான வாக்குறுதி மற்றவர்களுக்கு உதவியாக இருக்க, அந்த வாக்குறுதியைத் தாங்கள் எடுப்பது என்பது ஏதேனும் விதத்தில் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தினால், அதை எடுக்க மறுக்கிறவர்களாக மாத்திரம் காணப்படுபவர்களுக்கும் பொருந்தும். நம்மால் ஒருவேளை அவர்கள் இருதயங்களினுடைய எண்ணத்தினையோ, அவர்களது மனதின் விவாதங் களையோ புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், எனினும் இம்மாதிரியான தருணங்களில் நம்மால் புரிந்துகொள்ள அல்லது உணர்ந்துகொள்ள முடியாதவைகளை விட்டுவிடலாம்.

**(Q255:1) தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகள்.**

கேள்வி (1915 - Z.5793)-1- மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுப்பதற்குரிய விதிமுறைகள் யாவன?

பதில் - சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/ நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும்

தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும்தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர மற்றபடி சபையில் - ஒரு வாக்கில் (vote) பெரும்பான்மை யானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்ற வர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில் 51-பேர்கள், சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரந்தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதான வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A, B, C, D, E, F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A - அவர்களுக்கு 100-வாக்குகளும்; B - அவர்களுக்கு 90-வாக்குகளும்; C - அவர்களுக்கு 80-வாக்குகளும்; D - அவர்களுக்கு 70-வாக்குகளும்; E - அவர்களுக்கு 60-வாக்குகளும்; F - அவர்களுக்கு 50-வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறுபேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின்

மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்கக் குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் கொடுக்கப்பட்டுள்ளதான தகுதிநிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/ கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே - அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார் (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கின்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

முழுமையான அர்ப்பணம்பண்ணி, அதைத் தண்ணீர் முழுக்கு எனும் வழக்கமான அடையாளத்தின் மூலம் தெரிவித்துள்ளவர்கள் யாவரும் தவிர மற்றபடி எவரும் வாக்களிக்கக்கூடாது என்பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். இப்படியாகத் தங்களது அர்ப்பணத்தினை அடையாளத்தின் மூலமாகத் தெரிவித்திடாதவர்கள், சகோதரர்கள் அல்ல என்று புறக்கணிக்கப்படக்கூடாது, மாறாக சபையாருக்கு ஊழியம் புரிவதற்கு யார் தகுதியானவர்களாய் இருப்பார்கள் என்பதில் தங்களது எண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கு ஆற்றலற்றவர்களாய் இருப்பதினால் மிகவும் வளர்ச்சியற்றவர்களாய் இருப்பவர்களெனக் கருதப்பட வேண்டும் மற்றும் இவர்கள் ஊழியக்காரர்களாகுவதற்கும் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள்.

**(Q256:1) தேர்ந்தெடுத்தல் - மற்றச் சபையார் மத்தியிலிருந்து மூப்பர்களைத் தேர்ந்டெடுத்தல்.**

கேள்வி (1916)-1- மூப்பர்களுக்கான தகுதியுடையவர்கள் சபையில் போதுமான எண்ணிக்கையில் இருக்க, சபையாருடைய மேலான நன்மைக்காக மற்றச் சபையார்கள் மத்தியில் காணப்படும் சகோதரர்களிலிருந்து தங்களுக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமா?

பதில் - மூப்பர்களுக்கான தகுதியுடையவர்கள் சபையார் மத்தியில் போதுமான எண்ணிக்கையில் இருக்க, சபையார் வெளியிலிருந்து மற்ற மூப்பர்களைத் தேர்ந்தெடுக்க முற்படுவது என்பது ஞானமானதாய் இராது. இதைச் சொல்லாமலேயே புரிந்துகொள்ளலாம். ஆனால் சபையார் மத்தியில் போதுமானவர்கள் இருக்கின்றார்களா என்று தீர்மானிப்பவர்கள் யார்? சபையாரே தங்களுக்காக அதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். சபையார் மத்தியில் தங்களுக்குப் போதுமானவர்கள் இருக்கின்றார்களென யாரால் தெரிவித்திட முடியும்? சபையாரே அதைத் தீர்மானித்திட வேண்டுமேயொழிய, சகோதரர் ரசல் அவர்களோ அல்லது வேறொருவரோ அல்ல. ஒருவேளை தங்களிடத்தில் தகுதிவாய்ந்த மூப்பர்கள் இல்லையென்று சபையார் கருதுவார்களானால், அப்படி இருக்கும் பட்சத்தில் வெளியிலிருந்து தேர்ந்தெடுத்துக்கொள்வார்களாக. ஒருவேளை தகுதிவாய்ந்த மூப்பர்கள் அநேகரை அவர்கள் பெற்றிருப்பார்களாகில், தேவன் அருளியுள்ளவைகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்களாக மற்றும் வீட்டில் - சொந்த சபையில் இருக்கும் சகோதரரை ஊக்குவிப்பார்களாக.

**(Q256:2) தேர்ந்தெடுத்தல் - சதவீதம் தொடர்பாக.**

கேள்வி (1916)-2- ஒரு குறிப்பிட்ட வாட்ச் டவர் வெளியீட்டில் (அதன் தேதி எனக்கு ஞாபகமில்லை) ஐம்பது சதவீத (nominating vote) முன்மொழிதலின் வாக்கினையாகிலும் பெற்றிருக்கும் முன்மொழியப்பட்டவர்கள் யாவரும் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனும், ஒரு தேர்ந்தெடுத்தல் வழிமுறையினை நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். பிரச்சனைகளும், பிணக்குகளும் உள்ள ஒரு சபையில் இந்த வழிமுறையைக் கையாளுவது நலமாய் இருக்குமா? அல்லது மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் 75 சதவீத வாக்குகள் வேண்டுமென்று வலியுறுத்துவது நலமாய் இருக்குமா?

பதில் - என்ன செய்யப்படலாம் என்று வேதாகமம் நமக்குத் தெரிவிக்கிறதில்லை என்று முதலாவதாக நாம் நினைவில்கொள்ள வேண்டும். இப்படியிருப்பதினால் இதைச் செய்வதில் மிகவும் அனுகூலமிக்க வழிமுறையாக எது காணப்படும் என்று கண்டுபிடிப்பதில் பகுத்தறிதலே காரியமாகும். எது சிறந்த வழி என்று கண்டுகொள்வதில் பகுத்தறிதலே காரியமாய் இருக்கின்றது. உங்களுடைய பகுத்தறிதலின் அளவிற்கு, என்னுடைய பகுத்தறிதலானது நலமாய்க் காணப்படாமல் இருக்கலாம். இதுபோன்ற எந்த ஒரு தலைப்பின் விஷயத்திலும் வாட்ச் டவர் வெளியீட்டில் எந்தவொரு ஆலோசனைகளையும் முன்வைக்கையில், அவைகள் என் அபிப்பிராயங்களாக மாத்திரமே இருக்கின்றன. சகோதரர் ரசல் கட்டளையிடுவதற்கோ அல்லது எவ்விதத்திலும் சர்வாதிகாரியாகக் காணப்படுவதற்கோ விரும்புகிறது இல்லை. வேதாகமம் எதுவும் பேசிடாத இம்மாதிரியான விஷயங்களில் அவர் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திட முயற்சித்திட மாத்திரமே செய்கின்றார். நான் அறிந்திருக்கிறதைவிடச் சபையார் சில சிறந்த வழியை அறிந்திருப்பார்களாகில் அதில் எனக்குத் திருப்தியே. தேவனுடைய சித்தமானது சபையாரினால் தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும் சபையாருடைய சித்தத்தைத் தள்ளிவிடுகிறவன் தவறு செய்கிறவனாகவும், கர்த்தருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளாதவனுமாய் இருப்பான். விரும்பியதை அடையத்தக்கதாக இரகசியமாய்ச் சிலர் தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்துவது குறித்தும், இப்படியாகத் தற்போதைக்குச் சபையாருடைய நலனுக்கடுத்தவைகள் குறுக்கிடப்படுகிறதைக் குறித்தும் மற்றும் இது நிச்சயமாய்ச் சரியற்றது என்பது குறித்தும் நான் அறிந்திருக்கின்றேன். கர்த்தர் ஏற்பாடுபண்ணியுள்ளவைகளுக்கு மிஞ்சி செல்வதற்கு நாம் முயற்சித்திடக்கூடாது. இப்படியான எதிலும் கர்த்தர் பிரியப்படுகிறது இல்லை. நாம் கர்த்தருக்கும், சகோதரருக்கும் நேர்மையாய்க் காணப்பட்டு, சகோதரர் அனைவரும் பின்வரும் சரியான எண்ணத்தினைப் பெற்றுக்கொள்ள உதவிட வேண்டும்; அதென்னவெனில் - "நான் மூப்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதோ, அல்லது தெரிந்தெடுக்கப்படாமலிருப்பதோ என்னுடைய காரியமல்ல. சபையாருக்கு நலமாய்த் தோன்றுகிறதை அவர்கள் செய்யட்டும். ஒருவேளை அவர்கள் என்னைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்களானால் என்னால் முடிந்த மட்டும் அவர்களுக்கு நன்றாய் ஊழியம் புரிந்திடுவதற்கு நான் முயற்சித்திடுவேன்; ஆனால் ஒருவேளை அவர்கள் என்னைத் தேர்ந்தெடுக்காவிட்டாலும், எந்தவிதத்திலும் என்னால் முடிந்தமட்டும் அவர்களுக்கு நன்கு ஊழியம் புரிந்திட முயற்சித்திடுவேன்" என்பதேயாகும். ஒருவேளை நாம் இத்தகைய ஓர் ஆவியினைப் பெற்றிருப் போமானால் அதை நிச்சயமாய்ச் சபையார் ஏற்றகாலத்தில் காண்பார்கள். கர்த்தர் அதை எப்போதுமே கண்ணோக்கிக் கொண்டிருக்கின்றார் மற்றும் தேவனிடத்தில் நீங்கள் சரியாய்க் காணப்பட்டீர்கள் என்றால், மற்றவர்களிடத்தில் உங்களது நிலைப்பாடு எப்படிக் காணப்படுகின்றது என்பது ஒரு பொருட்டல்ல. ஒருவேளை நாம் 80 அல்லது 75 சதவீதத்தை அல்லது வேறு எதையாகிலும் வைத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் சொல்வீர்களானால், சதவீதம் தொடர்புடைய விஷயத்தில், அதை விதிக்குட்படுத்த

எதுவுமில்லை - வேதாகமத்தில் எதுவுமில்லை. வாக்கு விஷயத்தில் 75 அல்லது 80 சதமானவர்களைப் பிரியப்படுத்துவதைக் காட்டிலும், உங்கள் மனசாட்சியினால் முடிந்தமட்டும் சபையாரிலுள்ள அனைத்துச் சகோதரர்களையும் பிரியப்படுத்துவதற்கும், அனைவருக்கும் திருப்திகரமாய் இருக்கும் ஓர் தேர்ந்தெடுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கும் விரும்புவது நலமாய் இருக்கும் என்று நாங்கள் யோசனை கூறுவோம். சபையாரிலுள்ள ஒவ்வொருவருக்காகவும் அக்கறை கொள்ள வேண்டும் மற்றும் ஒவ்வொருவனும் சரி என்று, தான் கருதுபவைகளைச் செய்திடவும் வேண்டும். அனைவருமே முழுமையாய்த் திருப்தி அடைய மாட்டார்கள் என்று அறிந்த நிலையில், சிறுபான்மையினரின் எண்ணங்களைப் பொருட்படுத்தாமல், பெரும்பான்மையினர் தங்கள் எண்ணங்களின்படி நடந்தேற்றுவது என்பது நிச்சயமாய்ச் சரியாய் இராது. ஒருவேளை ஒரு குறிப்பிட்ட சகோதரன் மூப்பராகிட வேண்டுமென்று நீங்கள் எண்ணுகின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் அச்சகோதரனிடத்தில் எக்குறையினையும் நான் காண்கிறது இல்லை என்று வைத்துக்கொள்ளலாம். நீங்கள் அவர் மூப்பராகிட வேண்டுமென்று விரும்புகின்றீர்கள் என்ற காரியமே, நான் அவருக்காக வாக்களிப்பதற்கு ஒரு காரணமாக அமைகின்றது; எனினும் அவரைத் தகுதியற்றவர் என்று கருதிடுவதற்கு ஏதுவாய் அவரது குணலட்சணம் குறித்து நான் எதையேனும் அறிந்திருப்பேனானால், இச்சூழ்நிலையில் அவருக்கு நான் வாக்களிப்பது என்பது கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாய் இருக்கும். அப்படியானால் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக என்னால் அவருக்கு வாக்களித்திட முடியாது. (வாக்களித்தல் தொடர்புடைய விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க மாத்திரமே செய்கின்றேன்.) முடிந்தமட்டும் நம்முடைய தேர்ந்தெடுத்தலை ஏக மனதுடன் பெற்றிருக்க விரும்புகின்றேன். எனினும் ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் என்னால் அவருக்கு வாக்களிக்க இயலவில்லை. அச்சகோதரனும் இதைச் சரியாய் எடுத்துக்கொண்டு, அவர் பின்வருமாறு: "உங்களது நேர்மையினையும், யதார்த்தத்தையும் நான் பாராட்டுகின்றேன். நான் ஓர் உயர் தரத்திற்கு என்னையே கொண்டுவந்திடுவதற்கு முயற்சித்திடுவேன்" என்று கூறிட வேண்டும். இதுவே சரியாய் இருக்கும்; அதாவது சரியாய்ச் செயல்பட்டு, பின் முழுச்சபையாரையுமே பிரியப்படுத்துவதாயிருக்கும் என்று எதிர்ப்பார்ப்பதாகும்; அதுவும் அவர்களைப் பிரியப்படுத்துகிறதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், சரியானவற்றைச் செய்வதாகும். அதுவும் எவ்வித சுயேட்சையான ஆவியினால் இல்லாமல், மாறாக ஒவ்வொருவரின் மற்றும் அனைவரின் கருத்துக்களையும் முறையே கருத்தில் எடுத்துக்கொள்வதற்குரிய பெருந்தன்மையின் ஆவியினால் செய்யப்பட வேண்டும். 85 சதமான விதியானது நிலைநாட்டப்பட்டும், சபையாரினுடைய சித்தம் உண்மையில் நிறைவேற்றப்படாத நிலையில் காணப்பட்ட சில சந்தர்ப்பங்களை நான் அறிவேன். அது எப்படி? 85 சதமானம் அடையப்பெற்றிருக்குமானால், ஏன் அது சபையாருடைய சித்தமாகக் காணப்பட முடியவில்லை? ஏனெனில் 15 சதமானவர்கள் கட்டுக்கடங்காதவர்களாகிடுவதற்குத் தீர்மானிக்கக்கூடும் மற்றும் 85 சதமானவர்களின்

விருப்பத்தினை அடையவிடக்கூடாது என்று தீர்மானிக்கக்கூடும். பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினர் ஆளமுயல்கின்றனர் மற்றும் இணங்கி விட்டுக்கொடுப்பதில்லை. எனினும் சபையாரினுடைய விருப்பத்தைத் தீர்மானிப்பதற்குப் பெரும்பான்மை மாத்திரமே தேவையாய் இருக்கின்றது; 51 சதமானம் என்பது பெரும்பான்மையாகும். ஒருவேளை 85 சதவீதம் வேண்டுமென்று முன்வைக்கப்படுகிறதென்றால், அது சிறுபான்மையினரைப் பிரியப்படுத்துவதற்கென்றுள்ள பெரும்பான்மையினரின் சார்பிலான சலுகையேயாகும். 51 சதமானவர்கள் நாங்கள் தீர்மானிப்போம் என்றும், எங்கள் வழியின்படி செய்வோம் என்றும் சொல்ல முடியும், ஆனால் அது மற்றவர்களைப் புறக்கணிக்கிற காரியமாய் இருந்து பிரிவினையை உண்டுபண்ணிடலாம். இப்படிச் செய்வது ஞானமான அல்லது அன்பான காரியமாய் இராது. பெரும்பான்மையானவர்கள் சிறுபான்மையினரைக்குறித்துக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; கூடுமானால் ஒவ்வொருவரையும் உள்ளடக்கின நிலையில் 100 சதவீதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம் என்று தெரிவித்திட வேண்டும். ஆனால் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைக் கவனத்தில் கொள்ளாமல் இருந்து, இதனால் சிறுபான்மையினர் சபையாருடைய வேலைக்குத் தடங்கலும், இடர்பாடும் உண்டு பண்ணுவதும், இந்த 85 சதமானவர்களுக்கு இடையூறு உண்டுபண்ணத் தக்கதாக, தங்களால் முடிந்த யாவற்றையும் செய்வோம் என்று கூறுவதும், இவர்கள் - நல்நோக்கங்களை முன்னிலையிலிருந்து நிறைவேற்றுபவர்களைத் தடைச்செய்கிற நோக்கோடு அரசியலில் பயன்படுத்தப்படும் தந்திரமான முறைமைகளை எடுத்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். இது முற்றிலும் தவறாக இருக்கும். இந்தக் காரியங்கள் குறித்த சரியான கண்ணோட்டங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். புரூக்கிளினிலும், நியூயார்க்கிலும் உள்ள சபைகளில் ஏகமனதுடன் கூடிய வாக்கை எப்போதும் நாம் பெற்றிருப்போம். ஏனெனில் வேலை தொடர்புடைய விஷயத்தில் நாம் அறிந்திருக்கிற எல்லாவற்றையும் செய்திடுவதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். ஒருவேளை யாரேனும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட சகோதரனை மூப்பனாகவோ அல்லது உதவிக்காரனாகவோ பெற்றிருக்க விரும்பினால் அவரைப் பெற்றிருப்பதற்கு நாமும் மகிழ்வோம். இப்படியாகவே கிட்டத்தட்ட எல்லாவிடங்களிலும் காணப்படும் சபையார்களின் மனநிலையாக இருக்கும் என்று நாம் நம்புகின்றோம்; ஆனால் சிலசமயங்களில் நம்முடைய மனங்களானது திரித்துக் காணப்படுகின்றது. 85 சதவீதம் பெற்றுக்கொள்ளாததுவரையிலும், எங்களால் எதுவும் செய்ய முடியாது என்று சிறுபான்மையினர் கூறும்போது, நான் ஒரு மாற்றத்தை முன்வைத்து அதை 51 சதவீதமாக்கிடுவேன் மற்றும் 51 சதமானவர்கள் தங்களால் முடிந்தமட்டும் மற்றவர்களிடத்தில் அன்பாய் இருப்பார்களாக; ஆனால் கர்த்தருடைய வேலைக்குத் தடங்கல் உண்டு பண்ணும் எந்தவொரு வழிமுறையையும் நாங்கள் அனுமதிப்பது இல்லையென்று மற்றவர்கள் தெரிந்து கொள்வார்களாக. சபையாரிலுள்ள பெரும்பான்மையானவர்கள் சபையாரை நடத்திடவும், அதன் நடைமுறைகளைத் தீர்மானித்திடவும் வேண்டும் என்று தேவன்

விரும்புகின்றார்; எனினும் பெரும்பான்மையானவர்கள், சிறுபான்மையான வர்களிடத்தில் மிகவும் அன்பாய்க் காணப்படவும் கர்த்தர் விரும்புகின்றார்; அவர்கள் ஒருமித்த மனதில் காணப்படமுடியுமென்றால் அது இன்னும் சிறப்பாய் இருக்கும்.

**(Q525:2) மேய்ப்பர் - நீங்கள் சபையை வந்து சந்திக்க இயலாதிருக்கும் நிலையிலிருக்க, உங்களைத் தேர்ந்தெடுத்தல்.**

கேள்வி (1912)-2- ஒரு சபையார் வாக்களிக்கத் தீர்மானித்து, மேய்ப்பர் ரசல் அவர்களை ஒருவருட காலத்திற்கு அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கென்று தங்களது பாஸ்டராக/மேய்ப்பராகப் பெற்றிடுவதற்கு, அவரை முன்மொழிவது சரியாக அல்லது நல்லதாக இருக்குமா? அதாவது நீங்கள் அச்சடிக்கப்பட்ட பக்கங்கள் வாயிலாக அல்லது கடிதம் எழுதுவதன் வாயிலாக மாத்திரம்தான் அச்சபையாருடன் காணப்பட முடியும் என்பதுதான் கேள்விக்கான காரணமாகும்.

பதில் - என்னால் இக்கேள்வியினுடைய உட்கருத்தை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியவில்லை; எனினும் சில விதங்களில் அது ஒரு ஒழுங்குமுறைக் காரியமாகக் கருதப்படலாம் என்று கூறிடுவேன். தேவனால் வாட்ச் டவர் பத்திரிகையின் வாயிலாகவும் மற்றும் கடிதத் தொடர்பின் வாயிலாகவும் வாட்ச் டவர் பட்டியலில் இடம்பெறும் சிறுசிறு சபைகள் யாவற்றிலும் நான் மேய்ப்பனாகவே நடைமுறையில் காணப்பட்டு வருகின்றேன். ஒருவேளை நண்பர்கள் முறைப்படி வாக்களித்து, என்னை மேய்ப்பனாகத் தேர்ந்தெடுப்பார்களானால், அப்படியான விதத்தில் நான் பிரியமே கொள்வேன் மற்றும் ஒருவேளை அப்படிச் செய்ய அவர்கள் விரும்பவில்லை என்றாலும், அது அவர்களுடைய விருப்பமாகக் காணப்படுகின்றது. அவர்கள் ஒரு வருடக்காலத்திற்கு அல்லது காலவரையறை இல்லாமல் தேர்ந்தெடுக்க விரும்புவதும்கூட அவர்களுடைய விருப்பமாகவே காணப்படுகின்றது.

## கூட்டங்கள்

**(Q476:1) கூட்டங்கள் - Extension work/புதிய வகுப்புகள் உருவாக்கிடும் வேலைக் கான எண்ணிக்கை.**

கேள்வி (1911)-1- சமீபத்தில் வெளிவந்த வாட்ச் டவரின் பத்திரிகையில், ஆறு-கூட்டங்களைக் கொண்டதான வேதாகம புதிய வகுப்புகளை உருவாக்கிடும்

வேலையானது எந்த ஒரு பட்டணத்திலும் நடத்தப்படலாம் என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாம் கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று பேரே ஆர்வமுடையவர்களாக வருகிறார்களெனில், ஆறு கூட்டங்களையும் ஒரே இடத்தில் நடத்தப்பெறுவது நலமானதாக இருக்குமா?

பதில் - இல்லை என்றே நான் பதிலளிக்கின்றேன்; ஒருவேளை ஜனங்கள் யாரும் வரவில்லையெனில், நான் கூட்டங்களைத் தொடர்வதில்லை. நீங்கள் மாத்திரம்தான் கூட்டத்தில் கலந்துகொள்பவராகக் காணப்படுகின்றீர்களானால், கூட்டத்தினை நடத்தாதீர்கள். எத்தனை பேர்கள் கலந்துகொண்டால் கூட்டத்தை நடத்தலாம் என்பதை நீங்கள் முடிவுசெய்ய வேண்டும்.

**(Q477:1) கூட்டங்கள் - புரூக்கிளினிலுள்ள மூப்பர்கள் கூட்டங்களை நடத்துவதற்கென உதவிக்காரர்களை நியமித்தல் தொடர்பாக.**

கேள்வி (1911)-1- புரூக்கிளினிலுள்ள சபையிலுள்ள மூப்பர்கள், சபையாருடைய தேர்ந்தெடுத்தல் முதலானவைகள் இல்லாமலேயே வகுப்புகளை நடத்துவதற்கென்று உதவிக்காரர்களை நியமிப்பதுண்டா?

பதில் - அது மேய்ப்பருக்கான வேலையாகக் கருதப்படுகின்றது மற்றும் அது மூப்பர்களுக்கான வேலையல்ல. புரூக்கிளினிலுள்ள சபையாருக்கான மூப்பர்களில் ஒருவர் கூட்டங்களைப் பார்த்துக்கொள்வதற்குரிய பொறுப்பினைப் பெற்றவராய் இருக்கின்றார் மற்றும் இது விஷயத்தில் அவர் மேய்ப்பருக்கு உதவியாளராகக் காணப்படுகின்றார் மற்றும் மேய்ப்பரது ஒப்புதலின்பேரில் அவ்வப்போது இந்த ஒரு வேலைக்கு என்றும், அந்த ஒரு வேலைக்கு என்றும் உதவிக்காரர் ஒருவர் தெரிந்துகொள்ளப்படுகின்றார். இதுவே மேய்ப்பரைத் தேர்ந்தெடுப்பதற்கான நோக்கமாகக் கருதப்படுகின்றது, அதாவது சபையாருடைய தேவைகளை மேற்பார்வையிட்டு, தேவைக்கேற்ப இங்குமங்குமாய்த் தேவையைப் பூர்த்திச் செய்வதாகும். ஆனாலும் இப்படித் தெரிந்தெடுக்கப்படுபவர்கள், சபையாரினால் மூப்பர் தெரிந்தெடுக்கப்படுவது போன்று, ஓர் ஊழியத்திற்கென்று நிரந்தரமாய் நியமிக்கப்படுவார்கள் என்பதாக இல்லை. அது ஒரு தேவையைப் பூர்த்திச் செய்வதற்குரிய தற்காலிகமான காரியம் மாத்திரமே மற்றும் உதவிக்காரர் பரீட்சித்துப் பார்க்கப்படத்தக்கதாக ஒரு வாய்ப்பளிக்கும் காரியம் மாத்திரமேயாகும்.

**(Q478:1) கூட்டங்கள் - போதகர்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கப்படுதல்.**

கேள்வி (1913)-1- குறிப்பிட்ட ஆராய்ச்சிகளுக்கென்று தனி மனிதச்

சிறப்பின் அடிப்படையில் இல்லாமல், மாறாக அத்தகைய ஆராய்ச்சிக்கென்று திறமையுடையவர் என்ற அடிப்படையில் ஒரு போதகருக்கான விருப்பத்தினை ஒருவர் பெற்றிருப்பது தவறான இருதய நிலைமையாகுமா?

பதில் - அது தவறான இருதய நிலைமையென்று நான் கருதுவதில்லை. போதகரென விசேஷித்த தாலந்து உடையவர்களாகச் சிலர் காணப்படுவார்கள். அதிகளவிலான அறிவுரைகளைக் கொடுக்கும் ஒருவரை ஒருவர் விரும்பிடலாம். இதில் தவறான இருதய நிலைமை காணப்படுவதாக எனக்குத் தெரியவில்லை; ஆனாலும் சபையார் தங்களது தேர்ந்தெடுத்தல்களில் விசேஷித்தத் தகுதியுடைய வர்களையும், போதகசமர்த்தனாக இருப்பவர்களையும் சகோதரர்கள் மத்தியில் கண்டுபிடிக்க நாடிட வேண்டும் என்று நான் சொல்லுவேன்; ஏனெனில் இது அப்போஸ்தலர் கூறுவதுபோல மூப்பருக்கான தகுதிகளில் ஓர் அம்சமாய்க் காணப்படுகின்றது மற்றும் போதகசமர்த்தனாய் இல்லாதவர் தேர்ந்தெடுக்கப்படவே கூடாது. எனினும் வித்தியாசம் வேண்டும் என்கிற கருத்துத் தொடர்ந்து நிலவும்; ஆகையால் இந்தப் பல்வேறு வழிநடத்துபவர்களை மாறி மாறி வழங்கிடுவதே, நண்பர்களுக்கான எங்களது ஆலோசனையாகவும், புரூக்கிளினின் எங்களது நடைமுறையாகவும் இருக்கின்றது; உதாரணத்திற்கு ஒரு வகுப்பைக் குறிப்பிட்ட காலம் நடத்திவரும் ஒருவர், இன்னொரு வகுப்பிற்கு மாற்றப்படலாம் மற்றும் பின்னர் இன்னொரு வகுப்பிற்கு மாற்றப்படலாம்; இப்படியாகச் சுற்றிச் சுற்றி மாற்றப்படும்போது அனைத்து வகுப்புகளுக்கும் சிறந்த மற்றும் சாதாரணமான/ அனைத்து வகையான ஊழியங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

**(Q472:2) கூட்டங்கள் - சந்திக்க வந்திருக்கும் சகோதரர் சபையாருக்குக் கூட்டத்தை நடத்துதல்.**

கேள்வி (1910)-2- சந்திக்க வந்திருக்கும் சகோதரர் ஒருவர், அவர் சந்திக்க வந்திருக்கையில் சபையாருக்குக் கூட்டத்தை நடத்தும்படிக்குக் கேட்டுக் கொள்ளப்படலாமா?

பதில் - சொசைட்டியால் பயண ஊழியர்களென அங்கீகரிக்கப்பட்டவர்கள் அல்லது சபையாருக்கு விசேஷமாய் அறிமுகம்பண்ணப்பட்டவர்கள் தவிர மற்றபடி சந்திக்க வந்திருக்கும் சகோதரனிடம் இப்படிக் கேட்பது என்பது நல்லதாய் இருக்காது என்பது என்னுடைய கருத்தாய் இருக்கின்றது; ஏனெனில் அது ஒரு வழக்கமாக உருவாகிவிடும். மேலும் இரண்டாவதாகக் கூட்டத்தை யார் நடத்துவது என்பதைத் தீர்மானிக்கும் ஸ்தானத்தில் மூப்பர் வைக்கப்படவில்லை. மாறாக அவரும்கூடக் கூட்டத்தை நடத்தும்படிக்கு நியமிக்கவே பட்டிருக்கின்றார்;

ஒருவேளை இத்தகைய ஒரு சகோதரனைச் சபையார் விரும்புவார்கள் என்று மூப்பர் நிச்சயமாய் உணருவாரானால், பின் அவர் தனி மனிதச் சிறப்புகள் யாவற்றையும் தாழ்த்தி, அத்தகைய ஒரு சகோதரன் அத்தருணத்தில் பேசுவதைக் கேட்பதற்குச் சபையார் விரும்புகின்றார்களா இல்லையா என்று கேட்டுக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வது என்பது அக்காரியம் தொடர்பான பொறுப்பினைச் சபையாரின் கரங்களில் வைப்பதாகவும், உறவுகள் முறிபடுவது ஏதேனும் இருக்குமாயின் அதிலிருந்து விடுதலையடைவதாகவும் மற்றும் சபையாரைச் சில சமயங்களில் பிரச்சனைக்குள்ளாக்காமல் தப்புவிக்கச் செய்கிறதாகவும் இருக்குமென்று நான் கருதுகின்றேன். சந்திக்க வருகைத் தந்திருக்கும் எந்தவொரு சகோதரனுக்கும் முன்னுரிமை எப்போதும் கொடுக்கப்படுகிற காரியமானது வழக்கமாய்க் காணப்படுமானால் அது அனுகூலமற்றதாகவே இருக்கும்; ஏனெனில் வருகைத்தந்திருக்கும் அந்தச் சகோதரனைச் சபையார் தேர்ந்தெடுத்திருக்கவில்லை. மாறாக தேர்ந்தெடுக்கப்பட்டவரையே தேர்ந்தெடுத்திருந்தார்கள்; ஆகையால் சபையாரால், வழிநடத்துபவருக்கு ஏதேனும் விசேஷித்த சுயாதீனம் கொடுத்திருந்தாலொழிய, மற்றப்படி தங்களுக்கு யார் கூட்டத்தை நடத்திட வேண்டும் என்பது தொடர்புடைய விஷயத்தில் ஒருவர் நடத்திடலாமா அல்லது இல்லையா என்பதை அச்சபையாரே கூறவேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

## (Q472:1) கூட்டங்கள் - சகோதரர்கள் இல்லாதபோது நடத்துவதற்கான வழிமுறை.

கேள்வி (1910)-1- ஒரு சிறிய சபையார் மத்தியில் தலைமைத்தாங்க சகோதரர் யாரும் இல்லையெனில், பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளில் அல்லது ஆசரிப்புக்கூடார ஆராய்ச்சி வகுப்புகளில் போதிப்பதற்காகக் கையாளப்பட வேண்டிய வழிமுறை என்ன? அதாவது சபையாருக்கு வழிநடத்தும் சகோதரர் யாருமில்லாத ஒரு சந்தர்ப்பத்தில் ஆகும்.

பதில் - சபையாருக்கு வழிநடத்தும் சகோதரன் யாருமில்லை என்று கூறுவதன் அர்த்தம் என்ன?

கேள்வி - சகோதரர்கள் இல்லாமல் சகோதரிகள் மாத்திரமே காணப்படுகின்ற வகுப்பாய் இருக்கின்றதானால், என்ன செய்ய வேண்டும்?

பதில் - சகோதரன் இல்லாமல் அதைச் செய்ய வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். சகோதரர் அவர்களே இம்மாதிரியான கேள்வி ஒன்றிற்கு ஆறாம் தொகுதியில் நான் ஏற்கெனவே யோசனையாகத் தெரிவித்திருப்பது என்னவெனில், அவர்கள் விரும்புவார்களானால் தொகுதியின் ஆசிரியர் அத்தொகுதியினால்

அங்கு அவர்களோடுகூடக் காணப்படுவதாகக் கருதிக்கொள்ளப்படலாம்.

கேள்வி-2- ஒரு சகோதரி கேள்விக் கேட்பது தகுதியானதா?

பதில் - நிச்சயமாக. சகோதரிகள் தொடர்பான ஒரே கருத்து என்னவெனில்: இது ஒரு சகோதரி, சகோதரிகளுக்குக் கற்பிக்கக்கூடாது என்று சொல்லுகிறதில்லை, மாறாக பவுலோ: "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" என்று கூறுகின்றார். இது அவள் குழந்தைகளுக்கும், சகோதரிகளுக்கும் போதிக்கக்கூடாது என்று சொல்லுகிறதில்லை, மாறாக கிறிஸ்துவின் சபையில் புருஷர்களும், ஸ்திரீகளும் காணப்படுகையில் அவள் போதிப்பது என்பது தகுதியற்றதாகவும், தலையாய் இருக்கிற கிறிஸ்து புருஷனால் அடையாளப் படுத்தப்படுகிறதும் மற்றும் சரீரமாகிய சபை ஸ்திரீயானவளில் அடையாளப் படுத்தப்படுகிறதுமான காட்சிக்கும், நிழலுக்கும் இசைவற்றதாய் இருக்கும் என்றும், ஸ்திரீயானவள் போதிப்பது என்பது சபையானவள் கிறிஸ்துவுக்குப் போதிக்கிறதைக் குறிப்பதாக இருக்கும் என்பதினால் தகுதியற்றதாய் இருக்கும் என்றும் அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆகையால் இதைத் தெய்வீகச் சித்தம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார் மற்றும் நாம் அதைக் கடைப்பிடிக்கின்றோம். ஆனால் ஒரு சகோதரி கேள்விக் கேட்டுக் கூட்டத்தைத் துவக்கி, ஜெபம் ஏறெடுப்பதும் நிச்சயமாகவே முற்றிலும் சரியானவைகளாக இருக்கின்றன.

**(Q477:2) உதவிக்காரர்கள் கூட்டங்களை நடத்திடலாமா?**

கேள்வி (1912)-2- மிகவும் திறமிக்கவர்களாய்க் காணப்படுகையில், உதவிக்காரர்களை மூப்பர்களுக்குப் பதிலாகக் கூட்டங்களை நடத்தும்படிக்குக் கேட்டுக்கொள்வது சரியான காரியமாக இருக்குமா?

பதில் - எதிர்மாறாகவே எங்களது கருத்துக் காணப்படுகின்றது. அதென்னவெனில் மூப்பர்கள் என்பவர்கள் வழிநடத்துனர்களாய் இருக்கும்படிக்கு விசேஷமாய்த் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்பதும், உதவிக்காரர்கள் என்பவர்கள் தேவைகளைப் பூர்த்திச் செய்யத்தக்கதாக மாத்திரமே கூட்டங்களை நடத்திடுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதும் எங்களது கருத்தாய் இருக்கின்றது. இது வேதவாக்கியங்களின் மாதிரியைப் பின்பற்றுவதாகும். உதவிக்காரருக்குரிய ஊழியத்தில், ஊழியம் புரியும் ஓர் உதவிக்காரன் தனக்கென நல்ல நிலையை அடைவான் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். அதாவது ஒருவேளை சபையில் temporal/ஆவிக்குரியதல்லாத

காரியங்களில் அவர் உண்மையுள்ளவராய் இருந்தாரானால், சபைக்கடுத்த நலன்களைப் பார்த்துக்கொள்வதில் உண்மையாகவும், நேர்மையாகவும் காணப்படுவாரானால், அவர் இப்படியாகத் தன்னைப் பொருத்தமான நபர் என்று வெளிப்படுத்திச் சபையாருடைய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும் நல்ல நிலையை அடைவார் மற்றும் சபையாரும் பிற்பாடு அவரை மூப்பராக நியமிப்பதற்கான கண்ணோட்டத்தில் அவரைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கிடையில் மூப்பர் கலந்துகொள்ளமுடியாத தருணங்களும் உண்டாகும் மற்றும் இது உதவிக்காரர்களைப் பரீட்சித்துப்பார்ப்பதற்கான நல்வாய்ப்பாய் அமைகின்றது. இது அனைத்துச் சபைகளிலும் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கருதுகின்றேன். மூப்பர்கள் என்பவர்கள் சபையில் மூத்த சகோதரர்களாக இருக்கின்றனர்; வயதில் கண்டிப்பாய் அல்ல, மாறாக விசேஷமாய் ஆவிக்குரியவற்றிலே ஆகும். அவர்கள் எவ்வளவுதான் வயதானவர்களாக அல்லது இளையவர்களாக இருந்தாலும் சரி, குணலட்சணத்தில் ஆவிக்குரிய முதிர்ச்சி என்பதே அவர்களது தகுதியாய் இருக்கின்றது. மூப்பர்களுடைய வேலையின் ஒருபாகம் என்னவெனில் சபையாருடைய நலனுக்கடுத்தவைகளை அவர்கள் பார்த்துக்கொள்கையில், அவர்கள் உதவிக்காரர்களாக ஊழியம் புரிவதற்குத் தகுதியுடையவர்களாய்க் காணப்படும் இளையச் சகோதரர்களைக் கண்டுபிடிக்கவும், அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் (coach) நாட வேண்டும் மற்றும் அவர்களுக்குத் திறமையிருக்குமானால், அவர்கள் மூப்பராகிடுவதற்கு ஆயத்தமாகத்தக்கதாக முன்னே கொண்டுவர வேண்டும். சில தருணங்களில் யாரோ ஒருவர் சில திறமைகளைப் பெற்றவர்களாய்க் காணப்பட்டு, தங்கள் ஊழியத்தைப் பங்கு போட்டுக்கொள்வார்கள் என்ற பொறாமையான எண்ணங்கள் மூப்பர்களின் சார்பில் காணப்படுவதை நான் பார்த்திருக்கின்றேன். இத்தகைய ஆவியானது ஆண்டவருக்குப் பிரியமற்றதாகவும், அந்த மூப்பருக்கு அனுகூலமற்றதாகவும் காணப்படும்; காரணம் தனக்குத் தீங்கு விளைவிக்காத நிலையில் அவனால் தன்னல நாட்டமுள்ள ஆவியினைப் பெற்றிருக்க முடியாது. தன்னலத்தை நாடுபவனாக இராமல் சபையாருடைய நலனுக்கடுத்தவைகளை நாடுவதே அவனது பொறுப்பாய் இருக்கின்றது. ஊழியம் புரிவதற்குத் திறமையுடைய எச்சகோதரனும் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். வேலையானது செய்யப்படாமல் கைவிடப்படுமோ என்று பயப்படாதீர்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்கதாக எந்த ஒரு திறமையைப் பெற்றிருக்கும் ஒவ்வொருவனும் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் புரிவானாக; கர்த்தர் மற்றவர்களுக்கானவைகளைப் பார்த்துக்கொள்வார். நம்மைப்பார்க்கிலும் மிகவும் திறமிக்க விதத்தில் ஊழியம் செய்ய முடிகிறவர்கள் யாரையேனும் நாம் காண்போமானால், தேவனுக்காகச் சிறப்பான விதத்தில் அவர்களால் ஊழியம் புரியப்படுவது குறித்து நாம் சந்தோஷங்கொள்ள வேண்டும்.

போதுமான வேலை இல்லாமல் போய்விடும் என்ற எந்த அபாயமும் இல்லை. புதிய வகுப்புகளை உருவாக்கும் ஊழியங்களும் மற்றும் நூற்றுக்கணக்கான வேறுவிதங்களிலுள்ள மற்ற ஊழியங்களும், வேலையாட்களை அழைத்துக் கொண்டிருக்கின்றது. நாம் தாழ்மையான ஆவியைப் பெற்றிருப்பதற்கு ஏற்ப தேவன் நம்மைப் பயன்படுத்துவார்.

**(Q469:2) கூட்டங்கள் - பயண ஊழியர்களின் கூட்டங்கள், விளம்பரங்கள் முதலானவைகள்.**

கேள்வி (1907)-2- பயண ஊழியர்களின் கூட்டங்கள் தொடர்புடைய விஷயத்தில் உங்களது அறிவுரை என்ன? அறுவடையினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் அறை வாடகைகளுக்கும், விளம்பரங்களுக்கும் என்று அதிகம் செலவழிப்பது தகுதியான காரியமாய் இருக்குமா? அல்லது ஏற்கெனவே விசுவாசத்தில் காணப்படுபவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களில் விசேஷமாய் அதிகம் ஊழியம் புரிவது நலமானதாய் இருக்குமா? இந்த விஷயத்தில் பயண ஊழியர்கள் எந்தளவுக்கு நடவடிக்கை எடுக்கலாம்?

பதில் - அருமையான நண்பர்களே கடைசி கேள்விக்கு முதலாவதாகப் பதிலளிக்க விரும்புகின்றேன்; அதாவது பயண ஊழியர்கள் இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுக்க முற்படவே கூடாது என்று பதிலளிக்கின்றேன். இது பயண ஊழியர்களின் காரியமல்ல. இவ்விஷயம் குறித்த கிட்டத்தட்ட அதிகமான நடவடிக்கைகளை, நாம் வாட்ச் டவர் அலுவலகத்திலிருந்து செய்துவருகின்றோம். அங்கு முன்வைக்கப்பட்டுள்ளதான கொள்கைகளின் பொதுவான காரியங்களை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாய்ப் பயண ஊழியர்கள் இருக்கின்றனர் மற்றும் பயண ஊழியர்களென அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள காரியமானது, அவர்கள் அப்படிச் செய்வதற்குப் பிரியப்படுகின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது அடிமைத்தனத்தைக் குறிப்பதாகாது, மாறாக அந்த நிபந்தனைகளின் கீழ் பயண ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் அவர்கள் திவ்விய மேற்பார்வையின் கீழ் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதான விதிமுறைகளை அடையாளங்கண்டு கொண்டுள்ளதையும் மற்றும் அதில் திருப்தி கொண்டுள்ளதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இது விஷயத்தில் பயண ஊழியர்களுக்கு எதுவும் செய்வதற்கில்லை என்று நான் கூறுகின்றேன். பயண ஊழியர்கள் இப்படிச் செய்வதாக நான் கேள்விப்படவில்லை; ஆனால் ஒருவேளை யாரேனும் இப்படியாகச் செய்திருக்கின்றார்களானால், கவனக்குறைவின் காரணமாகவே இப்படிச் செய்திருப்பார்கள் என்று நான் அனுமானிக்கின்றேன்.

எந்தளவுக்கு விளம்பரங்கள் பண்ணப்படுவது சரியாய் இருக்கும் என்பது தொடர்பாக நான் கூறிடுவது என்னவெனில்: இவ்விஷயத்தை நண்பர்களின் கரங்களிலேயே நாம் விட்டுவிட விரும்புகின்றோம். பயண ஊழியர்களுடைய வருகைகளின் விஷயத்தில் உங்களது விருப்பத்திற்கேற்ப அதிகமாய் விளம்பரங்கள் அல்லது கொஞ்சமாய் விளம்பரங்கள் கொடுங்கள். அதை உங்களது உக்கிராணத்துவத்தின் ஒரு பாகமாகக் கருதிக்கொள்ளுங்கள்; அதை நீங்கள் செய்ய வேண்டும். சொசைட்டியானது மற்றொரு பாகத்தைச் செய்கின்றது, அதாவது பயண ஊழியர்களை அனுப்பிவைத்தல், அவரது செலவுகள் முதலானவைகளைப் பார்த்தல் ஆகியவற்றைச் செய்கின்றது; மற்றும் பயண ஊழியர் மற்றொரு பாகத்தைச் செய்கின்றார். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாகத்தினைச் செய்வார்களானால், அனைத்துமே நேர்த்தியாய்ச் செய்யப்படும். ஆகையால் இது ஒவ்வொரு சாராரும், கர்த்தருடைய சித்தம் எதுவென்று தான் பகுத்தறிந்து நம்புகின்றார்களோ, அதைச் செய்திடுவதற்குரிய பொறுப்பினை ஒவ்வொரு சாராரிடத்திலேயே விட்டுவிடுகின்றதாய் இருக்கின்றது.

அதிகமான பொதுக்கூட்டங்கள் காணப்பட வேண்டாம் என்பது எங்களுடைய அறிவுரையாய் இருக்கின்றது; ஏனெனில் பயண ஊழியர்களுடைய இத்தகைய வருகைக்கான விசேஷித்த நோக்கம், விசுவாச வீட்டாருக்கு ஊழியம் புரிவதேயாகும் மற்றும் பொது ஜனங்கள் மத்தியிலான ஊழியங்களானது, விசுவாச வீட்டாருக்கு மிகவும் பிரயோஜனமாய் எப்போதும் காணப்படுகிறதில்லை. ஆகையால் பொது மற்றும் தனிப்பட்ட கூட்டங்கள் இரண்டுமே காணப்படுகையில், (public meetings) பொதுக்கூட்டங்களானது அனைத்து நேரத்தையும் எடுத்துக்கொள்ளாதபடிக்கும், விசுவாச வீட்டாருடைய விசேஷித்த நலனுக்கடுத்த காரியங்களுக்கெனப் பாதி நேரம் அல்லது பாதிக்கும் மேலான நேரமாகிலும் கொடுக்கப்படும்படிக்கு நாம் எப்போதும் வலியுறுத்துகின்றோம்.

## (Q470:1) கூட்டங்கள் - சிறு எண்ணிக்கையுள்ள வகுப்புத் தொடர்பாக.

கேள்வி (1909)-1- மூன்று அல்லது நான்கு பேரை எண்ணிக்கையாகக் கொண்டிருக்கும் வகுப்பிற்கு, நீங்கள் பெரோயா ஆராய்ச்சியைப் பரிந்துரைப்பீர்களா அல்லது டாண் ஆராய்ச்சியைப் பரிந்துரைப்பீர்களா?

பதில் - இரண்டையும் பெற்றிருப்பது நலமாயிருக்கும் என்று கருதுகின்றேன். நமக்கு அநேகம் வாய்ப்புகள் காணப்படுகின்றபடியால், ஒன்றோடு நிறுத்திக்கொள்ள வேண்டாம். பெரோயா ஆராய்ச்சி வகுப்புகள் என்பது, அநேகமாகப் பொதுவான கூடுகைகளுக்கு சிறந்ததாகவும், கொஞ்சம் ஒழுங்காயும் காணப்படும் மற்றும் டாண் ஆராய்ச்சி வகுப்புகளை மாலையில் பெற்றிருங்கள்.

இது விஷயத்தில் ஒருவரும் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களை மறந்துவிட வேண்டாம் என்று அறிவுரை வழங்குகின்றேன்; ஏனெனில் அவைகள் சபை பெற்றிருக்கும் மிகவும் பிரயோஜனமான கூட்டங்கள் மத்தியில் அடங்குபவை களாகக் காணப்படுகின்றன. எந்தளவுக்கு அவைகள் அதிகமாய்ச் செய்யப் படுகின்றதோ, அவ்வளவாய்ச் சபையாருடைய ஆவிக்குரிய நிலைமையானது நலமார்ந்து காணப்படுவதை நாம் பொதுவாகப் பார்க்க முடிகின்றது மற்றும் இதன் காரணமாக, முடிந்தமட்டும் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களை மறவாமல் இருங்கள் மற்றும் பல வருடங்களுக்கு முன்பாக நடந்தவைகளைச் சாட்சியாகப் பகரும் தவற்றினையும் செய்யாதிருங்கள். ஒரு வாரத்திற்கென்று ஒரு தலைப்பைப் பெற்றிருங்கள் மற்றும் முடிந்தமட்டும் அத்தலைப்புத் தொடர்பாகவேயுள்ள சாட்சிகளையும் கொண்டிருங்கள் என்று நாம் யோசனை தெரிவிக்கின்றோம். சில இடங்களில் சபையார் வாராந்தர பிரசங்கங்களை, ஜெபம் மற்றும் சாட்சிக் கூட்டங்களுக்கான அடிப்படையாக வைத்துக்கொள்கின்றனர் மற்றும் இவைகளின் அடிப்படையில் சாட்சிக்கொடுப்பதற்கு முயற்சிக்கின்றனர் மற்றும் இப்படியாக அப்பாடத்தினை வாரம் முழுவதும் மனதில் பெற்றிருக்கையில், சபையார் அப்பாடத்திற்கு இசைவான சில அனுபவங்களைக் குறித்துக் கவனித்திருப்பார்கள். நியூயார்க்கிலுள்ள சபையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் கொடுக்கப்படும் தூதை, சபையார் வாராந்தர ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டத்திற்கான பாடப்பொருளாக எடுத்துக்கொள்கின்றனர் மற்றும் பிற்பாடு அவர்கள் ஞாயிற்றுக்கிழமையிலும், திங்கட்கிழமையிலும், செவ்வாய்கிழமையிலும் மற்றும் புதன்கிழமையிலும் - நான்கு நாட்களாக தங்களது அனுபவங்களைப் பாடப்பொருளின் அடிப்படையில் கவனிக்கின்றனர். ஒருவேளை தலைப்புப் பொறுமை குறித்தது என்றால், தாங்கள் எந்தளவுக்குப் பொறுமையினை வளர்த்திருக்கின்றனர் என்று கவனித்துக் கொள்வார்கள் மற்றும் பொதுவாகவே அவ்வேளையில் அது தொடர்பான ஏதோ ஓர் அனுபவம் காணப்படுவதையும் காண்பார்கள். புதன்கிழமைக் கூட்டத்திற்குப் பிற்பாடு, அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை வரை அதே எண்ணங்களை மனதில்கொண்டு காணப்பட்டு, இவ்விதமாய் எப்போதும் அதை மனதில் கொண்டவர்களாய் இருக்கின்றனர். இதில் ஓர் அனுகூலம் என்னவெனில், இது நம் அனைவரையும் அப்போது வரையிலான நம் நிலவரம் குறித்து அறியும் நிலைக்குக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்தவ அனுபவம் தொடர்புடைய விஷயத்தில், நீங்கள் நோக்கமின்றிச் சென்று கொண்டிருக்க, அதுவும் நீங்கள் நோக்கமின்றிச் சென்றுகொண்டிருப்பதை அறியாதவர்களாய்க் காணப்பட்டு; இப்படியே ஒருநாள் முழுவதும் வீணாகிபோயிருக்கும் என்பதை நீங்கள் அனைவரும் உங்களது அனுபவங்களில் உணர்ந்திருப்பீர்கள் என்று நான் எண்ணுகின்றேன்; ஆகையால் இந்த அனுபவங்களைக் கவனிப்பதின் மூலம் நாம் தேடுபவைகளை அவற்றில் காணலாம். இப்படியாக உங்கள் மனதிற்கு முன்பாக நீங்கள் எதையும்

நிறுத்திக் கொள்ளவில்லையெனில், உங்களுக்கு இத்தகைய அனுபவம் காணப்படாது மற்றும் கர்த்தர் உங்களை எப்படிப் பராமரித்தார் அல்லது உங்களுக்கு என்ன அனுபவங்கள் காணப்பட்டது என்பவற்றை அறியாமல் காணப்படுவீர்கள். இவைகள் மிகவும் பிரயோஜனமாய் இருப்பதை நாம் கண்டுகொண்டோம்.

## (Q471:1) கூட்டங்களுக்கான ஒழுங்கு.

கேள்வி (1910)-1- ஒரு சபையில் ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு கூட்டங்களும், மீதி வாரத்தில் இரண்டு கூட்டங்களும் இருக்க, அதாவது ஏழு நாட்களில் நான்கு கூட்டங்கள் காணப்படுகையில், அக்கூட்டங்களை நடத்திடுவதற்கு என்ன ஒழுங்குமுறையை நீங்கள் பரிந்துரைக்கின்றீர்கள் மற்றும் அவர்களுக்கு என்ன ஆராய்ச்சிகளை, எந்த அளவில் பரிந்துரைக்கின்றீர்கள்?

பதில் - வாரத்தின் நடுப்பகுதி, சாட்சிக்கூட்டத்தினை - துதிப்பதற்கும், கிறிஸ்தவ ஐக்கியத்திற்கும் மற்றும் ஒருவரோடொருவர் நெருங்கிக் கொள்வதற்குமான கூட்டத்தினைப் பெற்றிருப்பதற்கான நல்ல காலப்பகுதியாகக் காணப்படும் என்பது என்னுடைய அறிவுரையாய்க் காணப்படுகின்றது. சாட்சி மாத்திரமல்ல, இக்கூட்டங்களில் அடையப்பெறும் அனுதாபத்துடன்கூடிய இருதயத்தின் ஒன்றிணைதலே நினைவுகூரப்பட வேண்டும். பிற்பாடு நாம் பரிந்துரைத்துள்ளபடி பெரோயா ஆராய்ச்சிகளானது நல்லதாய்க் காணப்படும் என்று எண்ணுகின்றேன். பின்னர்ச்சபையில் காணப்படும் வழிவகையைச் சார்ந்து பொதுப்பிரசங்கத்தினைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது நலமானதா அல்லது இல்லையா என்பது பார்க்கப்படலாம். சில சந்தர்ப்பங்களில் அப்படிப் பெற்றிருப்பதே சரியானதாய்க் காணப்படும் மற்றும் மற்றச் சந்தர்ப்பங்களில் அது மிகவும் ஞானமற்றக் காரியமாய்க் காணப்படும் என்று எண்ணுகின்றேன். போதிப்பதற்குத் தகுதி வேண்டும் என்றும், போதகசமர்த்தனாய்க் காணப்படுபவர்கள் மாத்திரமே போதகத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், போதகசமர்த்தனாய்க் காணப்படாதவர்கள் போதிப்பதற்கு முற்படாமலிருந்து, பெரோயா ஆராய்ச்சி போன்றவற்றில் ஈடுபடுவது நலம் என்றும் நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமெனக் கருதுகின்றேன். பெரோயா ஆராய்ச்சி வகுப்பிலும்கூடப் போதிப்பதற்கான திறமை அதிகம் வேண்டியிருக்கின்றது மற்றும் சபையாரின் பதில்களை வெளிக்கொணர்வது எப்படியென்று வழிநடத்துபவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கின்றது. இத்தகையக் கூட்டங்களின் அம்சங்கள் தொடர்பாய்க் குறிப்பாய்த் தெரிவிக்கத்தக்கதாக நான் உள்ளே வந்து, ஆலோசனை வழங்குவது எனக்குத் தகுதியாய் இருக்குமென்று நான் கருதுகிறதில்லை; சாட்சிக்கூட்டம் ஒன்றினை வாரத்திற்கு ஒருமுறை பெற்றிருப்பது நலமாயிருக்கு

மென்று கருதுகின்றேன். சபையாருடைய மிகுந்த ஆவிக்குரிய பிரயோஜனத்திற் கேதுவான விதத்தில் சில பெரோயா ஆராய்ச்சி வகுப்புகள் காணப்பட்டிருக்கின்றன மற்றும் இது குறித்துத் தெரிவித்திட சபையார் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் ஒருவேளை தேவைப்படும் பட்சத்தில் தங்களுக்கு மிகவும் சுவாரசியமாகவும், மிகவும் பிரயோஜனமாகவும் எது காணப்படும் என்று அவர்கள் வெவ்வேறு விதங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்; மேலும் மூப்பர்களும், உதவிக்காரர்களும் சபையாரை ஆதிக்கம் செய்யவோ மற்றும் அவர்களை ஆளுவதற்கோ முயற்சிக்காமல் காணப்பட்டு, கர்த்தருடைய ஆவி வழிநடத்துகின்ற விதத்தில் சபையாருக்கு உதவவும், அவர்களை ஆதரிக்கவும் செய்யும்படிக்கு நான் விசேஷமாய் அறிவுரை வழங்குகின்றேன்.

**(Q478:2) கூட்டங்கள் - உதவிக்காரர்கள் கூட்டங்களை நடத்திடலாமா?**

கேள்வி (1914)-2- எங்கள் சபையாரில் பெரும்பான்மையானவர்கள், எங்களது உதவிக்காரர்களில் சிலர் அவ்வப்போது ஜெபக்கூட்டங்களை நடத்துவதற்கு விரும்புகின்றனர்; ஆனால் உதவிக்காரர்கள் கூட்டங்களைத் தலைமைத்தாங்கி நடத்துதல் என்பது வேதவாக்கியங்களுக்குப் புறம்பானது என்றும், வேறுயாருமல்ல, மூப்பர்களே தலைமைத் தாங்கி நடத்திட வேண்டும் என்றும், எங்களது மூப்பர்களில் சிலர் கூறுகின்றனர். அவர்கள் சொல்வது சரிதானா?

பதில் - வேதாகம அதிகாரத்தினிடத்திற்கே திரும்பிச்சென்று பாருங்கள். வேதாகமத்தில் ஆதிசபையினுடைய உதவிக்காரர்களில் சிலர் நல்ல கிறிஸ்தவ வேலைகளைப் புரிந்ததாக நாம் பார்க்கின்றோம்; உதவிக்காரன் ஸ்தேவான் மற்றும் உதவிக்காரன் பிலிப்பு மற்றும் இன்னும் மற்றவர்களை இப்படியாகக் காண்கின்றோம். இவர்கள் அப்போஸ்தலர்கள் அல்ல.

ஆகையால் வேறுயாருமல்ல, மூப்பர் மாத்திரமே கூட்டத்தினைத் தலைமைத் தாங்கி நடத்திட வேண்டுமென்று கூறினதில், மூப்பர்கள் அல்லது சபையார் தவறிழைத்துள்ளதாக எங்களது கணிப்பில் காணப்படுகின்றனர் என்று நாம் சொல்லிடுவோம். இச்சபையார் முன்வைத்திட்ட யோசனையானது மிகவும் நல்லதொரு திட்டம் என்று நாம் கருதுகின்றோம் மற்றும் சபையாரே இதைத் தெரிவித்துள்ளனர் என்ற காரியமானது இதனை சரியானதாகவும் மற்றும் தகுதியானதாகவும் ஆக்கிற்று. உதவிக்காரர்கள் ஓர் ஊழியத்திற்கு என்று தெரிந்தெடுக்கப்படுகின்றனர் மற்றும் "உதவிக்காரருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையை அடைவார்கள்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். எதில் நல்ல நிலை? வேலை தொடர்புடைய விஷயத்தில்

சுயாதீனமாகும். அவர்கள் ஒரு விசேஷித்த வகை வேலைக்கு என்று தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்; ஆனால் ஒருவேளை அவர்கள் மற்றத் தாலந்துகளைப் பெற்றிருப்பதை வெளிப்படுத்துவார்களானால், அவைகளைப் பயன்படுத்தும்படிக்கு அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் மற்றும் சபையார் படிப்படியாக அவர்களை அறியவர வேண்டும் மற்றும் சமயம் வாய்க்கையில் அவர்களை மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒருவேளை அவர்களுக்கு எந்த வாய்ப்பும் கிடைக்கவில்லையெனில் சபையாரும் அவர்களைக்குறித்து ஒருபோதும் அறிந்துகொள்ள மாட்டார்கள்.

சபையார் தாங்கள் செய்ய வேண்டிய சரியான காரியத்தையே தெரிவித்துள்ளனர் மற்றும் அவர்கள் இன்னும் ஒருபடி மேல்சென்று, பொருத்தமானது என்று காண்கிறதற்கு ஏற்ப, கூட்டத்தினை நடத்திடுவதற்கு அல்லது ஒழுங்குப்படுத்திடுவதற்கு உதவிக்காரர் அடிக்கடி கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்று கூறிடலாம் மற்றும் இந்த இளையச் சகோதரர்கள் தங்களது தாலந்துகள் மற்றும் ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்துவதில் அவர்களுக்கு உதவி புரிவதற்கு மூப்பர்கள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்; ஒருவேளை மூப்பர்கள் இவர்களை மூப்பராகிடுவதற்கான தாலந்துடையவர்களாய்க் காண்பார்களானால் தேர்ந்தெடுத்தலின் போது, "நான் இந்தச் சகோதரனுக்கு மற்றும் அந்தச் சகோதரனுக்கு முன்மொழிகின்றேன்; இவர் மிகவும் உண்மையுள்ள உதவிக்காரராக இருந்திருக்கின்றார் மற்றும் இவரை நான் இப்பொழுது மூப்பராக முன்மொழிகின்றேன்" என்று கூறிடுவது முற்றிலும் சரியான காரியமாய் இருக்கும். இப்படியாக மூப்பர் ஒருவர் கூறிடுவது என்பது மிகவும் அருமையான காரியமாய் இருக்கும். தனது இளையச் சகோதரன் முன்னுக்கு வருவதற்கென இவர் உதவி செய்திட வேண்டியவராய் இருக்கின்றார்.

எப்போதுமே நிறையவேலை இருக்கின்றது. மிக அதிகமாய் மூப்பர்களைப் பெற்றிருப்பதில் அச்சம் அடையாதீர்கள். "அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு." களம் இறங்குங்கள் மற்றும் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள் மற்றும் நீங்கள் முயற்சித்துக்கொண்டிருப்பதைத் தேவன் பார்க்கையில் அவர் உங்களுக்கு மற்றக் கதவுகளைத் திறந்தருளுவார்.

**(Q482:2) கூட்டங்கள் - துணைவிதிகளைப் பயன்படுத்துதல்.**

கேள்வி (1916)-2- அலுவல் கூட்டங்கள் முதலானவைகளை நிர்வகிப்பதற்குரிய துணைவிதிகள் சிலவற்றை Los Angeles-இல் உள்ள சபையார் ஏற்படுத்திக்கொள்ள நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

பதில் - சகோதரர்களில் சிலர் துணைவிதிகள் அல்லது சட்டங்களுக்கு

மிகவும் ஆர்வம் கொண்டவர்களாய் இருக்கின்றனர். சில விதிகள் நிச்சயமாகவே அவசியமாய் இருக்கின்றன; ஏனெனில் அவைகள் இல்லையெனில் நாம் ஒழுங்கின்மையுடையவர்களாய் இருப்போம்; எனினும் அன்பு மற்றும் நீதியின் பிரமாணத்தை நாம் கைக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு பிரமாணங்கள் விசேஷமாய்க் கைக்கொள்ளப்பட்டால், இவை கிட்டத்தட்ட அனைத்தையுமே ஒழுங்குப்படுத்துகிறதாக இருக்கும். எனினும் நீதியானது எப்போதும் முதலாவதாக இடம்பெற வேண்டும். நான் எல்லா விஷயத்திலும் உங்களிடத்தில் நீதியுடன் காணப்பட வேண்டும்; எனினும் உங்களிடத்தில் நான் பதிலுக்கு நீதியை எதிர்ப்பார்த்து வற்புறுத்திடக்கூடாது. எனினும் நீதிக்குக் குறைவாக எதையும் எனக்குச் செய்திடுவதற்கு நீங்கள் விரும்பிடக்கூடாது மற்றும் நானும் நீதிக்குக் குறைவாய் எதையும் உங்களுக்குச் செய்திடக்கூடாது. மேலும் நான் கண்டிப்பாய் நீதியைச் செய்ய வேண்டியவனாய் இருப்பினும், அதை நான் உங்களிடத்தில் எதிர்ப்பார்த்திடக்கூடாது; உங்களிடத்தில் குறைவாகவே நான் எதிர்ப்பார்த்திடலாம். நீதி மற்றும் அன்பு எனும் இந்த இரண்டு துணைவிதிகள் செயல்பாட்டில் இருக்கையில் நமக்கு மிக அதிகப் பிரமாணங்கள் தேவைப்படாது. மிக அதிகமாய்த் துணைவிதிகளை நாம் பெற்றிருக்கலாம்; ஆனால் இவ்விரண்டு பிரமாணத்தையும் மனதில் உறுதியாய்ப் பெற்றிருக்கையில், இவைகள் அநேக சந்தர்ப்பங்களில் உதவி செய்கிறதாய் இருக்கும்.

**(Q483:1) கூட்டங்களின் வகை.**

கேள்வி (1916)-1- எவ்வகைக் கூட்டங்கள் மிகவும் பிரயோஜனமானவை களாகக் காணப்படும்?

பதில் - இது சந்தர்ப்பங்களைச் சார்ந்ததாகக் காணப்படும். நாங்கள் அறிந்ததிலேயே மிகவும் பிரயோஜனமான கூட்டமாய்க் காணப்படுவது பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளாகும் மற்றும் மிகவும் பிரயோஜனமாய்க் காணப்படாத சில அரிதான சந்தர்ப்பங்களும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் ஞாயிற்றுக்கிழமை மாலையில் பிரசங்கக் கூட்டமானது மிகவும் பிரயோஜனமானதாகக் காணப்படும்; சில சமயங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு பிரசங்கக் கூட்டங்களானது காணப்படுகின்றது. எனினும் இவை அபூர்வமான சந்தர்ப்பங்களிலேயே ஆகும். பொதுவாக பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளிலிருந்தே மிகுந்த பயன் கிடைக்கின்றது என்று நாம் கருதுகின்றோம்; காரணம் இந்த வகுப்புகளுக்கு ஒவ்வொரு நபரும் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும், தனது பதில்களைக் கூறவும் வேண்டியுள்ளது. நான் குறிப்பாய் ஆலோசனை கொடுக்க நோக்கம்கொள்ளவில்லை, மாறாக பொதுவான விதத்திலேயே கொடுத்து, நான்

இங்குக்கூறுபவைகளை ஒவ்வொரு சபையாரும், அவர்களுக்குரிய விதத்தில் நடைமுறைப்படுத்திடுவதற்கு விட்டுவிடுகின்றேன்.

நாம் எத்தனை கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது எந்த வகையான கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று வேதாகமமானது எதுவும் தெரிவிப்பதில்லை. இக்காரியமானது தெளிந்த புத்தியுள்ள ஆவியினால் தீர்மானிக்கப்படத்தக்கதாக விடப்பட்டுள்ளது. சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுடைய பிரயோஜனம் மற்றும் நன்மைக்குறித்து மனதில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். நாம் "ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்." அதிகமான கூட்டங்கள் தேவை என்று சிலர் எண்ணலாம். ஒருவேளை மிக அதிகமாய்க் கூட்டங்களை ஒழுங்குப்படுத்துவார்களானால், எத்தனை பேர்களுக்கு என்று கூட்டமானது முதலில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்ததோ, அந்த எண்ணிக்கையைவிட, கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையானது படிப்படியாகக் குறைந்துப்போய், அதைத் தொடர்ந்து நடத்த முடியாதளவுக்குப் போவதைப் பார்க்கலாம். ஞாயிற்றுக்கிழமையில் மூன்று கூட்டங்கள் நடத்தப்படுவது போதுமானதாயிருக்கும் என்பது எனது கருத்தாகும். ஆனால் ஒவ்வொருவரும் இதில் சிந்திக்க வேண்டும் மற்றும் பின்னர்ச்சிந்திப்பதற்கும், செயல்படுவதற்குமான அதே சுயாதீனமும், சிலாக்கியங்களும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுவதாக. இதுவே சரியானதும், நியாயமானதுமாகும். நீதி என்கிற இந்தக் கருத்தானது, ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் காணப்பட வேண்டும்; ஏனெனில் நீதியானது தேவனுடைய சிங்காசனத்திற்கான ஆதாரமாய் இருக்கின்றது மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவ நடத்தையினுடைய ஆதாரமாய்க் காணப்பட வேண்டும்; சொல்லப்போனால் நாம் செய்யும் அனைத்திற்கும் நீதியானது ஆதாரமாய்க் காணப்பட வேண்டும். சபையாரில் யாரேனும் ஐந்து கூட்டங்களைப் பெற்றிருக்க விரும்புவார்களானால், நான்: "சரி, ஆனால் என்னால் அனைத்துக்கூட்டங்களிலும் கலந்துகொள்ள முடியாது. எனினும் உங்களுக்கு ஐந்து கூட்டங்கள் வேண்டும் என்றும், அவற்றில் போதுமானவர்கள் நன்கு கலந்துகொள்வார்களென எண்ணுகின்றீர்கள் என்றும் இருந்ததால், நான் ஐந்து கூட்டங்களுக்கென வாக்களித்திடுவேன் (vote)" என்பேன்.

**(Q483:2) கூட்டங்களின் எண்ணிக்கை.**

கேள்வி (1916)-2- Los Angeles-இன் சபையினுடைய ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்கள் பின்வருமாறு:

10.30 AM - Sunday School lesson in the Watch Tower
1.30 PM - The Watch Tower Study Article

3.00 PM - Lecture
7.00 PM - Berean Study sixth volume

சிலர் இன்னும் அதிகமாய்க் கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்; சிலர் நாம் மிக அதிகமாய் இப்போது கூட்டங்களைப் பெற்றிருக்கின்றோம் என்று கூறுகின்றனர்; சிலர் ஒரு தூதிற்குப் பதிலாக நாம் இரண்டு தேவதூதுகளைப் பெற்றிருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். இது விஷயத்தில் சபையாருடைய சிறந்த நலனுக்கடுத்தவைகள் தொடர்பான உங்களது கருத்தென்ன?

பதில் - ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு சபையாரும் தங்களுக்கெனத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் மிக அதிகமாய்க் கூட்டங்களைக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. இந்த ஒரு சந்தர்ப்பத்தில், ஏற்கெனவே நடத்தப்பட்டு வரும் கூட்டங்களின் எண்ணிக்கையினைக் கூட்டிடுவதற்கு நாம் விருப்பங்கொள்ளக்கூடாது. ஒருவேளை நான் அவ்விடத்தில் காணப்பட்டு, இவ்விஷயம் தொடர்பாக வாக்களித்திருப்பேனாகில் (vote), ஐந்திற்குப் பதிலாக மூன்று கூட்டங்களைப் பெற்றிருப்பதற்கு நான் விருப்பம்கொண்டிருப்பேன். உங்களால் முடியுமானால் நான்கைக் கொண்டிருக்கலாம். ஒவ்வொருவருக்கும் வேறுபட்டுக் காணப்படும் என்றாலும், கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் சத்தியத்தில் இல்லாத தங்கள் கணவன், மனைவி அல்லது பிள்ளைகளுக்கான பூலோகக் கடமைகளைப் பெற்றிருக்கின்றனர் மற்றும் இளைப்பாறுதலுக்கும், மாற்றத்திற்கும் வேண்டி பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதான இந்த ஒரு நாளில் கர்த்தருடைய ஜனங்கள், சத்தியத்தில் இல்லாத தங்கள் கணவன், மனைவி அல்லது குழந்தைகளுக்கு எதையாகிலும் செய்யக் கடமைப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள்.

சத்தியத்தில் இல்லாதவராகவும், ஞாயிற்றுக்கிழமை மாத்திரமே இல்லத்தில் காணப்படுபவராகவும் காணப்படும் கணவன், தனது மனைவி அந்த நாளில் மிகவும் வெளியே ஆக்கிரமிக்கப்பட்டுக் காணப்படுவதைக் காண்கையில், அவள் அவரைப் புறக்கணிக்கின்றது போன்று அவருக்குத் தோன்றிடும் மற்றும் நீங்களும் இதைப் போன்ற சந்தர்ப்பங்களில், இதே பார்வையினைக் கொண்டிருப்பீர்கள்; மேலும் சத்தியத்தில் காணப்படாத மனைவி ஞாயிற்றுக்கிழமைகளிலும்கூடத் தனது கணவனை அவ்வளவுக்குக் காணமுடியாத அளவுக்கு, அவர் நாள் முழுவதும் கூட்டங்களிலேயே காணப்படுவாரெனில் அவள், அவருடனான எந்த ஐக்கியத்தினையும் பெற்றிருக்க முடியாது. நிச்சயமாகவே இது சரியாய் இருக்காது. நம்முடைய கணவன்மார்களிடத்தில் அல்லது நம்முடைய மனைவிமார்களிடத்தில் நமக்குப் பூமிக்குரிய வகையான பூலோகக் கடமைகள் காணப்படுகின்றது மற்றும் இவைகளை நாம் கவனியாமல் காணப்படக்கூடாது.

ஒருவேளை சபையார் ஞாயிற்றுக்கிழமைகளில் மிக அதிகமான எண்ணிக்கையில் கூட்டங்களைப் பெற்றிருப்பார்களானால், சில சமயங்களில் ஒரு நபர் எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளாமல் காணப்படுவது ஞானமான காரியமாய் இருக்கும். தன்னால் தனது முழுநாளினையும் கர்த்தருக்கென்று கொடுக்க முடியும் நபர் விஷயத்திலும்கூடத் தனது நேரத்தினை, தான் எவ்வாறு செலவழிக்க வேண்டும் என்ற காரியமானது, அந்நபரின் கரங்களிலேயே காணப்படுகின்றது. அவன் தனது நாளில் ஒரு பகுதியைத் தன்னார்வ ஊழியத்திற்கென்றும் மற்றும் இன்னொரு பகுதியை வேறொரு வேலையினுடைய ஒரு பாகத்திற்கென்றும் மற்றும் கொஞ்சம் பகுதியைப் பெரோயா ஆராய்ச்சிக்கென்றும், கொஞ்சம் பகுதியைப் பிரசங்கிப்பதற்கென்றும் செலவிட விரும்புகின்றவனாய்க் காணப்படுவான். இது விஷயத்தில் அவன் தனது சொந்தப் பகுத்தறிதலை முடிந்தமட்டும் பயன்படுத்திட வேண்டும். ஒருவேளை சபையார் நான்கு கூட்டங்களுக்கு அதிகமான கூட்டங்களைப் பெற்றிருப்பார்களானால், அது ஞானமாய்க் காணப்படாது; மற்றும் ஒருவேளை இந்தக் கூட்டங்கள் அனைத்திற்கும், அனைவரும் வரமுடியும் என்றாலும், "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். பக்திவிருத்திக்கு ஏதுவான கூட்டங்கள் விஷயத்திலும், மற்றக் காரியங்கள் விஷயத்திலும் மிதமாய்க் காணப்பட வேண்டும். நம்முடைய பலம் எல்லைக்குட்பட்டது என்று நாம் நினைவில் கொண்டிட வேண்டும்; மற்றும் நம்மைச் சார்ந்திருப்பவர்களுக்கு - நம்முடைய கணவன், நம்முடைய மனைவி, நம்முடைய பிள்ளை, நம்முடைய அயலார்கள், நம்முடைய உறவினர்களுக்கு நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அனைவருக்குமென்று நாம் சில கடமைகளைப் பெற்றவர்களாகக் காணப்படுவோம்; அதிலும் பிரதானமாய் விசுவாச வீட்டாருக்கும் மற்றும் நம்முடைய குடும்பத்தாருக்கும் என்று கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம்; ஏனெனில் இவர்களே முதலாவதாகக் காணப்படுகின்றனர்.

## (Q479:1) கூட்டங்கள் - மூப்பர்கள் விசாரணை சங்கத்தில் அமர்தல்.

கேள்வி (1960)-1- மூப்பர்கள் விசாரணை சங்கத்தில் அமர்வதுபோல் காணப்படுவதும் மற்றும் ஒழுங்கற்ற விதத்தில் நடப்பவர்களாகத் தென்படுபவர்கள், மூப்பர்கள் முன்பு ஆஜராகும்படிக்கும், நடத்தைகளுக்கான காரணத்தை விளக்கும்படிக்கும் அழைக்கப்படுவதும் மூப்பர்களுக்குத் தகுதியான காரியமாய் இருக்குமா? அல்லது மத்தேயு 18:15-18 வரையிலான வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான கர்த்தருடைய ஆலோசனையானது பின்பற்றப்பட வேண்டுமா?

பதில் - குறிப்பிடப்பட்டிருக்கும் வேதவாக்கிய பகுதியில் இடம்பெறும் கர்த்தருடைய கட்டளைக்கு இசைவாய்க் காரியமானது கையாளப்பட வேண்டும் என்று மேற்காணப்படும் கேள்வியின் வாயிலாய் வெளிப்படும் யோசனையை நான் அங்கீகரிக்கிறேன். மூப்பர்கள் சங்கத்தாரோ அல்லது வேறு எவரோ அந்நிய காரியங்களில் தலையிடுகிறவர்கள் ஆகிடுவதற்குக் கர்த்தருடைய வார்த்தை அங்கீகரிக்கிறதில்லை. இப்படிச் செய்வது என்பது பரிசுத்த விசாரணையின் போதான இருண்ட யுகங்களின் பழக்கங்களுக்குத் திரும்புவதாக இருக்கும் மற்றும் பரிசுத்த விசாரணையை மேற்கொண்டவர்கள் கொண்டிருந்த அதே ஆவியினை நாமும் வெளிப்படுத்துகிறவர்கள் ஆகிடுவோம். கர்த்தர் காரியத்தினை எளிமையான விதத்தில் வைத்துள்ளார் மற்றும் அதனை நாம் மேலும் சிறப்பாக்கிட முடியாது. "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்" என்று வேதாகமம் கூறுகின்றது. இதுவே காரியத்தின் முடிவாக இருக்க வேண்டும். ஒருவேளை இதனால் பலன் உண்டாகவில்லையெனில் வேதவாக்கியங்களானது அடுத்தக்கட்ட நடவடிக்கையைத் தெரிவிக்கின்றது. "அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ" என்று நாம் வாசிக்கின்றோம். ஒருவேளை தவறு செய்தவர் இந்த இரண்டு அல்லது மூன்று பேரின் புத்திமதிக்குச் செவிகொடுத்துத் தனது தவறான செய்கையை நிறுத்திக்கொள்வாரானால் அதுவே காரியத்தின் முடிவாயிருக்கும். அவருக்கு ஏதேனும் வகை தண்டனை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோ அல்லது கொடுப்பதற்கு முற்படுவதோ நமக்கு அடுத்தக் காரியமல்ல. "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்" என்று கூறும் அவருடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவேளை தவறு செய்தவருக்குத் தண்டனை ஏதேனும் அவசியப்படுமானால், கர்த்தர் அதை அவருக்குக் கொடுப்பார் என்று நாம் நம்பிட வேண்டும் மற்றும் அக்காரியத்தினை நம்முடைய சொந்தக் கரத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது. நாம் கர்த்தரிடத்தில் நம்பிக்கைக்கொள்ள வேண்டும். நாம் தவறு செய்தவரை, தவறு செய்வதிலிருந்து நிறுத்திட முற்படுவதே நமக்கடுத்தக் காரியமாகும். ஆனால் ஒருவேளை தவறு செய்தவர் தொடர்ந்து தவறு செய்துகொண்டும், மனந்திரும்பாமலும் காணப்பட்டால் மற்றும் ஒருவேளை காரியமானது போதுமான அளவுக்கு முக்கியமானதாய்க் காணப்படுமாயின், அப்பொழுது காரியமானது சரிச்செய்யப்படத்தக்கதாக நாம் சபையாருடைய கவனத்திற்குக்கொண்டுவர வேண்டும். (மத்தேயு 18:15-18)

சிறு அல்லது அற்பத்தனமான காரியங்கள் எதையும் நாம் சபையின் முன்னிலையில் கொண்டு வரக்கூடாது. என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதான இவ்வகையான காரியங்களானது, நான்கில் மூன்று பகுதி கண்டுகொள்ளாமல் விட்டுவிடப்பட வேண்டியவைகளாகவும், அவைகள் விஷயத்தில் எதுவுமே செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லாதவைகளாகவும் காணப்பட்டுள்ளது. எனினும் சில விவகாரங்களில் காரியங்களானது, தனிப்பட்ட நபரைத் தாண்டி முழுச்சபையாரையும் சம்பந்தப்படுத்தும் அளவிற்குள்ள விவகாரங்களாகக் காணப்படும். இம்மாதிரியான நிகழ்வுகளில், காரியத்தினைத் தனிப்பட்ட விதத்தில் கையாளுவது கூடாத காரியமாய் இருக்கும். அப்போது மூப்பர்கள் குழு/committee ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அவர்களில் ஒருவர் இவ்விவகாரத்தைப் பார்த்துக்கொள்வதற்கும், தவறானது தடுக்கப்பட முடியுமா அல்லது சரிசெய்ய முடியுமா? என்று பார்த்துக்கொள்வதற்கும் என்று ஏற்பாடுபண்ணப்பட வேண்டும். காரியமானது தனிப்பட்ட நபரைத் தாண்டி கடந்துசெல்கிறதானால் தேவனுடைய வார்த்தைக்கு மிஞ்சி எங்களுக்கு எந்த ஆலோசனையும் இல்லை. பாபிலோன் போல் ஆகிடாமலிருப்பதற்கும், விசாரணைகள் நடத்திடாமல் இருப்பதற்கும் மற்றும் குழப்பங்கள் ஏற்படுத்திடாமலிருப்பதற்கும், கவனமாய் இருப்போமாக; தேவனுடைய வார்த்தை நமக்கும் போதுமானதாய் இருக்கின்றது மற்றும் நாம் அதைக் கவனமாய்க் கைக்கொண்டு இப்படியாகக் குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

**(Q482:1) கூட்டங்கள் - உதவிக்காரர்கள் வாக்களித்தல் (voting).**

கேள்வி (1916)-1- இத்தகைய (அலுவல்) கூட்டங்களில், கேள்விகளின் விஷயத்தில், உதவிக்காரர்கள் வாக்களிப்பது சரியா? அல்லது இது மேற்பார்வையாளர்களாகிய மூப்பர்களிடத்தில் விட்டுவிடப்படவேண்டுமா? ஒருவேளை மூப்பர்களைக்காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உதவிக்காரர்கள் இருக்கையில் மற்றும் அனைவரும் வாக்களிக்க வேண்டுமானால், பின்னர் மூப்பர்களுக்குப் பதிலாக உதவிக்காரர்கள் சபையினுடைய அலுவல் காரியங்களைக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கலாமா?

பதில் - மூப்பர்கள் ஆவிக்குரிய காரியங்களைப்பார்க்க வேண்டியவர்களாகவும், வாக்களிக்க வேண்டியவர்களாகவும் (vote) இருக்கின்றனர்; ஆனால் கூட்டங்களின் எண்ணிக்கையைச் சபையார் தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சரியாய் நடத்தப்படுவதற்கும், கலந்துகொள்ளப்படுவதற்கும் ஏதுவான எண்ணிக்கையிலுள்ள கூட்டங்களைப் பெற்றிடுங்கள். இன்னொரு கூட்டத்தைக்கூடக் கூட்டிக்கொள்ளும் விஷயத்தில், ஒப்புதலளிக்க விருப்பம்

இல்லாதவர்களாய்ச் சிலர் காணப்படலாம்; ஆனால் மற்றவர்களுடைய சௌகரியத்தையும், வளர்ச்சியையும் கருத்தில் எடுத்துக்கொள்வது நலமாயிருக்கும். கூடுதலாக ஒரு கூட்டத்தைப் பெற்றிடுவது உங்களுக்கு அவசியம் இல்லாமல் காணப்படலாம், ஆனால் அது அவர்களுக்கு அவசியமாய் இருக்கும். ஆகவே சபையாருடைய நபர்களின் வளர்ச்சிக்கு அவசியமானது என்று சபையாரால் கருதப்படும் எண்ணிக்கையிலான கூட்டங்களைப் பெற்றிருப்பதற்கு ஒப்புதலளிப்பது நலமானதாய் இருக்கும்.

புரூக்கிளினில் ஒருவேளை கூடுதலாகக் கூட்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் ஏற்பட்டால், அது குறித்தத் தகவல் சில சமயங்களில் எனக்கும் மற்றும் சில சமயங்களில் மற்றவர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விஷயத்தினைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, எத்தனை பேர் அக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்று அறிந்துகொள்ள முற்படுவோம். கலந்துகொள்வதற்குப் போதுமான எண்ணிக்கையானவர்கள் காணப்படாதது வரையிலும் நாம் கூட்டத்தினைக்குறித்துப் பரிந்துரைக்க மாட்டோம். கலந்துகொள்வதற்கென ஏழு அல்லது எட்டுப் பேர் இல்லாததுவரையிலும் ஒரு புதியக் கூட்டத்தினைக் குறித்துப் பரிந்துரைப்பதற்கு நாம் சிந்திப்பது இல்லை மற்றும் இப்படியாகக் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை பதினைந்தாக உயரும் என்றும் நாம் எதிர்ப்பார்ப்போம். ஆனால் ஒருவேளை எண்ணிக்கை முப்பதை எட்டும்போது, ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் நன்கு வளர்ச்சியடையத்தக்கதாகக் கூட்டத்தினை இரண்டாகப் பிரித்திடுவது குறித்து நாம் சிந்திப்போம். இயல்பாகவே மந்த நிலையில் காணப்படுபவர்களாகக் கர்த்தருடைய ஜனங்களில் சிலர் காணப்படுகின்றனர் மற்றும் அதிக எண்ணிக்கையானவர்கள் காணப்படுகையில் இத்தகையவர்கள் கவனிக்கப்படாமல் காணப்படுவார்கள்; ஆனால் குறைவான எண்ணிக்கையில் காணப்படும் போது இத்தகையவர்கள் மிகுந்த கவனத்தைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் இது அவர்களது வளர்ச்சிக்கு ஏதுவானதாய்க் காணப்படும்.

## (Q480:2) கூட்டங்களுக்கான ஏற்பாடுகள்.

கேள்வி (1916)-2- அதிக எண்ணிக்கையில் காணப்படும் ஒரு சபையில், மற்றவர்களுக்கு வேலையில் ஒரு குறிப்பிட்ட பாகத்தினை - அதாவது கூட்டங்களுக்காக ஏற்பாடுபண்ணுதல், கூட்டங்களுக்கான நேரம் மற்றும் இடத்தை நிர்ணயித்தல் மற்றும் பல்வேறு கூட்டங்களுக்கான கூட்டத்தலைவர்களை/வழி நடத்துபவர்களை நியமித்தல் போன்ற வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பது தகுதியானதாய் இருக்க - இம்மாதிரியான வேலைகளானது, சபையின் மேற்பார்வையாளர்களென மூப்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்களால்

மாத்திரமே செய்யப்பட வேண்டுமா அல்லது மூப்பர்களோடுகூட உதவிக்காரர்களும் இக்கடமைகளை நிறைவேற்றிட வேண்டுமா?

பதில் - இம்மாதிரியான காரியங்களில் கர்த்தருடைய வார்த்தையானது நமக்கு அதிகளவிலான சுதந்தரத்தைக் கொடுத்துள்ளதாய் இருக்கின்றது. மூப்பர்களுடைய வேலை என்னவாகக் காணப்பட வேண்டும் என்றும், உதவிக்காரர்களின் வேலை என்னவாகக் காணப்பட வேண்டும் என்றும் கர்த்தருடைய வார்த்தைகளானது குறிப்பாய்த் தெரிவிக்கிறதில்லை. அது சௌகரியத்திற்கே பெரிதும் விடப்பட்டுள்ளது என்று நாம் எண்ணுகின்றோம். சபையினுடைய ஆவிக்குரிய வேலைகளை - கூட்டங்களை மற்றும் இவ்வகையான அனைத்தையும் மூப்பர்கள் பொறுப்பேற்றுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இவர்கள் பொதுவில் பேசுவதற்குத் தகுதியான சகோதரர்களாகக் காணப்பட வேண்டும்; அப்போஸ்தலன் கூறுவதுபோன்று இவர்கள் "போதகசமர்த்தனாய்க்" காணப்படவேண்டும். சிலர் பொதுவிடங்களில் பேசிடுவதற்குரிய போதக சமர்த்தர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் அவர்கள் அம்மாதிரியான வேலைக்கு என்று நியமிக்கப்பட வேண்டும்; சிலர் ஒரு சிலருக்குப் போதிப்பதற்குப் போதகசமர்த்தனாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இவர்கள் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளுக்கும் மற்றும் இல்லத்தில் நடைபெறும் கூட்டங்களுக்கும் என்று நியமிக்கப்பட வேண்டும். போதகசமர்த்தன் எனும் வார்த்தைக்குப் பரந்துவிரிந்த அர்த்தம் கொடுக்கப்பட வேண்டும். அது மேடையில் நின்று சொற்பொழிவாற்றுதலை மாத்திரம் குறிக்கிறதில்லை; மாறாக எந்தவொரு விதத்தில் போதிப்பதற்குத் திறமையுடையவராய் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தாங்கள் மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அது தாங்கள் பொதுவிடங்களில் பேசிட வேண்டும் என்று குறிப்பதாகச் சிலர் எண்ணிக்கொள்கின்றனர். ஆனால் அது அப்படியல்ல. போதகசமர்த்தனாய் இருப்பது என்பது பொதுவிலும் மற்றும் தனிமையிலும் போதிப்பதாகிய இரண்டையும் உள்ளடக்கிக் காணப்பட வேண்டும்; சிலருக்கோ பொதுவிடங்களில் (public work) போதிக்கும் பணியும் மற்றும் மற்றவர்களுக்கோ ஒரு சிலருக்குப் போதிக்கும் பணியும் (private work) கொடுக்கப்பட வேண்டும்; எனினும் அனைவரும் போதகசமர்த்தனாய்க் காணப்பட வேண்டும்.

மூப்பர்கள் அனைத்துக் கூட்டங்களையும் நடத்திட வேண்டும்; ஏனெனில் அனைத்துக் கூட்டங்களும் ஆவிக்குரியவைகளாகக் காணப்படுகின்றன. ஒரு நபர் மூப்பராய்க் காணப்படுவதற்குத் தகுதியற்றவராய் இருப்பாரெனில், அப்படியானால் அவர் கூட்டங்களுக்கான கூட்டத்தலைவராகக் காணப்படுவதற்கும் தகுதியற்றவர் ஆவார். உதவிக்காரர்கள் என்ன செய்ய வேண்டும்? உதவிக்காரன் எனும் வார்த்தையின் அர்த்தம், ஊழியக்காரனாகும் மற்றும் இது எவ்வகையான

வேலையையும் புரிய முடிகிற ஒருவரைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு வாயிற்காவலருக்குக் காணப்படும் வேலை போன்ற வேலை அவருக்குக் கொடுக்கப்படலாம் அல்லது புத்தகங்களின் நிர்வகிப்பானது அவரிடத்தில் ஒப்படைக்கப்படலாம் அல்லது தன்னார்வ ஊழியங்களுக்கடுத்த பொறுப்பானது அவரிடத்தில் ஒப்படைக்கப்படலாம். அநேகம் வேலைகள் உதவிக்காரர்களிடத்தில் ஒப்படைக்கப்படலாம் மற்றும் மற்றவர்களைக்காட்டிலும் இவர்கள் இம்மாதிரியான வேலைகளை நன்கு செய்திடலாம். ஆகையால் அவர்களால் நன்கு செய்ய முடிகிற குறிப்பிட்ட வேலைகளை அவர்களுக்குக் கொடுங்கள். தொழிலதிபர்களாய்க் காணப்படும் சகோதரர்கள், போதகசமர்த் தனாய் இல்லையென்றாலும், உதவிக்காரர்களெனச் சிலசமயம் பயன்படுத்தப் படலாம். இம்மாதிரியான ஒருவர், மூப்பரால் செய்ய முடிகிற அளவிற்குத் தன்னார்வ ஊழியங்களைச் செய்ய முடியாதவராய் இருப்பினும், அவரிடம் இவ்வேலைக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, அவ்வேலைக்குத் தலைவரென நியமிக்கப்படலாம். இந்த வேலையானது மூப்பர்களுக்குக் கொடுக்கப்படக்கூடாது; ஏனெனில் மூப்பர்கள் ஈடுபட்டுக் காணப்படுவதற்கு ஆவிக்குரிய வகையான வேலை போதுமானளவில் காணப்படுகின்றன.

இப்பொழுது உதவிக்காரர்கள் மற்றும் மூப்பர்கள் ஒன்றுகூடுவது குறித்தக் காரியத்திற்கு வரலாம். மூப்பர்கள் தங்களது கூட்டங்கள் அனைத்திலும் உதவிக்காரர்களை வரவேற்பது என்பது மிகவும் நல்லதொரு ஏற்பாடு என்று நான் கருதுவேன்; ஏனெனில் நல்ல உதவிக்காரர் என்பவர், தனக்கு ஒப்படைக்கப்பட்ட பல்வேறு கடமைகளில் உண்மையாய்க் காணப்படுவதன் வாயிலாக, அங்கீகரிக்கப்படத்தக்கவராகவும், "தனக்கென்று நல்ல நிலையை அடைபவராகவும்" - அதாவது சுதந்தரத்தின் நல்ல நிலையை அடைபவராகவும் காணப்படுகின்றார் (1 தீமோத்தேயு 3:13). மேலும் அவர் மூப்பர் ஆக்கப்படுவதற்குரிய வாய்ப்பினை எதிர்நோக்கினவராகவும், மூப்பருடைய வேலைக்குரிய வளர்ச்சியினையும், மேம்பாட்டையும் வெளிப்படுத்துகிறவராகவும் காணப்பட வேண்டும். உதவிக்காரர்கள் செய்வதற்கென்று ஒரு வேலை உள்ளது. அவர்கள் மூப்பர்களுக்கு மாத்திரம் வேலை புரிகிறவர்களாய்க் காணப்படாமல், அவர்கள் சபையாருக்கும்கூட வேலை புரிகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். எப்படி மாநாடு சம்பந்தப்பட்ட விஷயத்தில் அநேகம் வேலைகள் காணப்படுகின்றதோ, அதுபோலவே சபையாருக்கான வேலையில் அநேகம் வேலை பிரிவுகள் காணப்படுகின்றன. மாநாடுகளுக்கென்று ஆயத்தப்பணிகள் அநேகம் காணப்படுகின்றன; அதாவது அறைகளை ஏற்பாடு செய்தல், இதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல், மாநாட்டில் கலந்துகொள்பவர்களின் தேவைகளைச் சந்தித்தல் முதலானவைகளாகும்.

மாநாடு தொடர்புடைய விஷயத்தில் ஒரு குழு/committee நியமிக்கப்பட்டு

வருகின்றது என்பதில் ஐயமில்லை மற்றும் இந்தக் குழுவில் மூப்பர்களும் மற்றும் அலுவல் காரியங்களைப் பார்த்துக்கொள்பவர்களும், இருவருமே காணப்படுவது நலம். இவ்வேலையினை மூப்பர்களே செய்துகொள்ளலாம் அல்லது உதவிக்காரர்கள் செய்துகொள்ளலாம். வேலையினைப் புரிவதற்குரிய திறமையுள்ள வர்களின் மீது இவ்வேலையானது சார்ந்துள்ளது. சில சகோதரருக்கு அதிக அளவிலான திறமைகள் காணப்படுகின்றன மற்றும் சிலர் மிகக்குறைவான திறமைகளைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர். உதாரணத்திற்குச் செய்திதாள் வேலை காணப்படுகின்றது; ஒருவேளை ஓர் உதவிக்காரன் தகுதியுடையவராகக் காணப்படுவாரானால், அவர் இந்த வேலையினைச் செய்திடலாம்.

ஆவிக்குரிய காரியங்களுக்கான பொறுப்பு, மூப்பர்களின் கரங்களிலேயே காணப்படுகின்றது. எருசலேமுக்குப் போகையில் அப்போஸ்தலனாகிய பவுல் மிலேத்துப் பட்டணத்தில் தங்கி, எபேசு பட்டணத்திலுள்ள சபையின் மூப்பர்கள் வரும்படியாக அழைத்தனுப்பினார். அவர் அவர்களிடம்: "உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்போஸ்தலர் 20:28) என்று கூறினார். இவர்களுடைய வேலை தேவனுடைய மந்தையை மேய்ப்பதாகும். உதவிக்காரர்கள் மற்றவகையான வேலைகளைச் செய்திடலாம். மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுடைய கூட்டங்கள் அனைத்திலும் மூப்பர்கள் ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தினுடைய பொறுப்பினை எடுத்துக்கொள்ள வேண்டும்; உதவிக்காரர்களோ temporal/ஆவிக்குரியதல்லாத காரியங்களுக்கடுத்த பொறுப்பினை எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் ஆவிக்குரியதல்லாத காரியங்களுக்கடுத்தவைகளில் ஒருவருக்கொருவர் அறிவுரை வழங்கிட வேண்டும். இத்தகைய ஒருங்கிணைந்த கூட்டத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் ஆலோசனை வழங்கிட வேண்டும். ஒருவர் அலுவல் காரியங்களுக் கடுத்தவைகளில் ஆலோசனையைக் கொடுத்துக்கொள்ளலாம் மற்றும் இன்னொருவர் ஆவிக்குரிய காரியங்களுக்கடுத்தவைகளில் ஆலோசனையைக் கொடுத்துக்கொள்ளலாம். இறுதி வாக்கும், பொறுப்பும் மூப்பர்களிடத்திலே காணப்பட்டாலும்கூட, வாக்கெடுப்பதற்குரிய நேரத்தில் உதவிக்காரர்களுடைய எந்த யோசனைகளையும் மூப்பர்கள் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியாய்க் காணப்பட வேண்டும். தகுதியுள்ள உதவிக்காரர்களின் கரங்களில், சபையாருடைய ஆவிக்குரியதல்லாத காரியங்களானது காணப்பட்டாலும், அவர்களுக்கு இவற்றிற்கடுத்த ஆலோசனை வழங்கிடுவதற்கு மூப்பர்கள் திறமிக்கவர்களாய்க் காணப்பட வேண்டும். வாக்கானது பரஸ்பரமானதாகக் காணப்பட வேண்டும்; முடிவு மூப்பர்களின் பொறுப்பில் இருக்கும்.

நீங்கள் மற்ற அனைத்துக் கூட்டங்களினின்றும், உங்களது அலுவல்

கூட்டங்களைப் பிரித்துக் கொண்டுள்ளீர்கள் என்று நான் புரிந்துகொள்கின்றேன். அது நல்லதே. பொதுவாகவே அலுவல் கூட்டங்களானது மற்றக் கூட்டங்களிலிருந்து பிரித்துக்கொள்ளப்பட வேண்டும். சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்கள் முழுவதையும் மூப்பர்களின் கரங்களிலேயே விட்டுவிடாதீர்கள்; ஏனெனில் அவர்கள் கூட்டங்களைத் தாங்களாகவே நடத்திவிடக்கூடும். குறிப்பிட்ட காரியங்களைச் சபையாரின் கரங்களில் வைத்துக்கொள்ளுங்கள்; ஏனெனில் அநேகக் காரியங்கள் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களிடத்தில் விடப்படுவது நலமாயினும், சபையினுடைய காரியங்கள் அனைத்திற்குமான பொறுப்பானது, இறுதியில் சபையாருடைய கரங்களிலேயே காணப்படுகின்றது.

**(Q473:1) கூட்டங்கள் - மூப்பர்கள் அல்லாமல், மற்றவர்கள் கூட்டங்களை நடத்துதல்.**

கேள்வி (1910)-1- சபையில் மூப்பர்கள் அல்லாத வேறே சகோதரர்கள் கொஞ்சம் தலைமை தாங்கி நடத்துவதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

பதில் - சபையே இதைத் தீர்மானித்திட வேண்டும். இக்காரியம் சபையினிடத்திற்கே விட்டுவிடப்பட வேண்டும். ஒரே ஒரு மூப்பரை ஒருவேளை சபைதான் தெரிந்துகொண்டுள்ளதென்றால், அப்பொழுது அது சபையினுடைய பொறுப்பாகின்றது; அதாவது இது மூப்பர்களுக்கான தகுதியுடையவர்களென வேறு எவரையும் சபை கண்டுபிடிக்கவில்லை என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் மூப்பரோ தனக்குச் சபையாரைக் காட்டிலும் நன்கு தெரியும் என்று கூறி, யாரையாகிலும் நியமிப்பது என்பது, சபையின் கணிப்பைக் குறைத்து மதிப்பிடுவதாக இருந்துவிடும், ஏனெனில் மூப்பருக்கான தகுதியுடையவர்களென வேறு எவரும் இருப்பதாகக் கண்டுபிடிக்கவில்லையென்றே சபை கூறியுள்ளது. அந்த ஒரு மூப்பரை மாத்திரம் தேர்ந்தெடுத்தபோது, சபை இப்படியாகக் கூறியிருந்தது. ஆனால் சபையானது, நாங்கள் ஒரு மூப்பரை மாத்திரமே தேர்ந்தெடுப்போம், ஆனால் அந்த மூப்பனார் தனது கணிப்பைப் பயன்படுத்தி, சபையிலிருந்து மற்றச் சில சகோதரர்களை அவர் முன்கொண்டுவருவதற்கும், அவர்களைப் பல்வேறுவிதங்களில் அவர் பயன்படுத்துவதற்கும் (அ) அவர்கள் திறமைக்கு ஏற்ப ஊழியம் புரிந்திடுவதற்கு அவர் அழைப்பதற்கும் நாங்கள் விரும்புகின்றோம் என்று கூறியிருந்ததானால், இத்தகைய ஒரு பொறுப்பை, சபையே அந்த மூப்பனாருக்குக் கொடுத்தவர்களாய் இருக்கின்றார்கள் மற்றும் சபை தனக்குக்கொடுத்துள்ளதை மாத்திரமே அந்த மூப்பனார் பயன்படுத்தலாம் மற்றும் இதற்கு மேலாக எதையும் செய்யக்கூடாது. இம்மாதிரியான சூழ்நிலையில் சபையார் மற்றவர்களை உதவிக்காரர்களாய்த் தெரிந்துகொண்டு, சபையின் மூப்பரை நோக்கி: உங்களால் முடிந்தமட்டும் இந்த உதவிக்காரர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்பட

வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்பதாகத் தயவுகூர்ந்து கருதுங்கள், ஏனெனில் இவர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்படுவதற்கும், ஒருவேளை போகப்போக சபையின் சில முக்கியமான ஊழியங்களுக்குக் கொண்டுவரப் படுவதற்குமெனச் சில தகுதிகள் இவர்களிடத்தில் காணப்படுவதை எங்களால் பார்க்க முடிகின்றதாக நாங்கள் எண்ணியே, இவர்களை உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுத்தோம் என்று கூறுவதும் தகுதியாயிருக்கும். உதவிக்காரருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்பவர்கள், தங்களுக்கு நல்ல நிலையைச் சம்பாதித்துக்கொள்கின்றார்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார்; அதாவது உதவிக்காரர்களென அல்லது உணவின் விஷயத்திலோ (அ) வேறு ஏதாகிலும் விஷயத்திலோ விசாரிப்பதிலும், சேவிப்பதிலும் ஊழியர்களென உண்மையாய் இருப்பதன் மூலம் இவர்கள் சபைக்கடுத்த ஊழியம் புரிவதற்குரிய சரியான ஆவியை வெளிப்படுத்துகிறவர்களாகவும், இன்னும் மற்ற ஊழியங்களுக்கான பொறுப்புத் தங்களிடத்தில் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்படலாம் என்பதையும் வெளிப்படுத்துகின்றவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் பழங்களையோ (அ) பாலையோ அல்லது வேறு ஏதாகிலும் உணவையோ பரிமாறுவதன் மூலம், சபையாருக்கு ஊழியம் புரிந்திட ஓர் உதவிக்காரர் வெட்கப்படுவாரானால், அவர் உதவிக்காராய் இருப்பதற்குத் தகுதியற்றவர் மற்றும் மூப்பராய் இருப்பதற்கு ஆபத்தானவராகவும் இருப்பார்.

**(Q480:1) கூட்டங்கள் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கடமைகள்.**

கேள்வி **(1916)-1-** அதிகம் எண்ணிக்கையுள்ள சபையில், மூப்பர்கள் ஊழியத்தில் முழுமையாய் ஈடுபட்டிருக்க மற்றும் உதவிக்காரர்கள் அனைவரும் கூடத் தங்கள் வாய்ப்புகளுக்கு ஏற்ப முழுமையாய் ஊழியஞ்செய்துகொண்டிருக்க, (அதே சபையில்) வழிநடத்துகிறவர்கள் இல்லாமல் ஒரு கூட்டமானது இன்னமும் காணப்படுகிறதென்றால், மூன்று மூப்பர்கள் அடங்கின அச்சபையின் வழிநடத்துபவர்களின் குழுவானது/committee, சத்தியத்தில் தெளிவானவராக, வழிநடத்துபவராகச் செயல்படுவதற்குத் தகுதியுடையவராக, குழுவின் அங்கத்தினரால் அறியப்பட்டிருக்கும் ஒரு சகோதரனை, சபையார் மத்தியிலிருந்து, உதவியாளராக (assistant) நியமிப்பது சரியாக இருக்குமா?

பதில் - இம்மாதிரியான சூழ்நிலையின் கீழ் இப்படிச் செய்வது சரியானதாகக் காணப்படும் என்று நான் எண்ண வேண்டியவனாய் இருக்கின்றேன். கூட்டங்களை வழிநடத்துவதற்குத் தகுதியுடைய மூப்பர்களின் எண்ணிக்கையைச் சபையார் முடிவு பண்ணுவது சரியான காரியமாய் இருக்கும். எனினும் போதுமானவர்கள் இல்லையெனில் குழுவானது, அச்சூழ்நிலைக்குத் தகுதியானவர் என்று கருதும்

யாரையேனும் தெரிந்தெடுக்க வேண்டியிருக்கும். எனினும் அவசரமான சூழ்நிலைகளைத் தவிர, மற்றபடி சபையார் நிர்ணயித்த எண்ணிக்கையை அவர்கள் தாண்டிவிடக்கூடாது. சாதாரணமான சூழ்நிலைகளில், நியமிக்கப்பட்ட மூப்பர்களே கூட்டங்கள் அனைத்தையும் தலைமை தாங்கி நடத்திட வேண்டும்; ஆனால் சில சந்தர்ப்பங்களில் தகுதியுடைய உதவிக்காரர் ஒருவர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அவசரமான சந்தர்ப்பத்தின்போது, வழிநடத்துவதற்கு நியமிக்கப்படலாம். ஆனால் தகுதிவாய்ந்த மூப்பர்களின் எண்ணிக்கையைச் சபையாரே நியமித்திட வேண்டும் என்பதும், சாதாரணமான சந்தர்ப்பங்களில் மூப்பர்களே கூடுகைகளை ஒழுங்குப்படுத்திட வேண்டும் என்பதும் நன்கு மனதில் நினைவுகொள்ளப்பட வேண்டும். அவசரமான சந்தர்ப்பங்களே ஒழிய மற்றப்படி, மூப்பர்களே செய்திட வேண்டும்.

**(Q473:2) சிறிய எண்ணிக்கையுள்ள சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டங்கள்.**

கேள்வி (1910)-2- புதிதாக ஆரம்பித்துள்ள சிறிய எண்ணிக்கைக் கொண்ட சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டமாக இருக்குமென நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்?

பதில் - புதிதாய் ஆரம்பமாகும் வேத மாணவர்கள் அடங்கிய ஒரு சிறு சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டமாக நாம் எதைக் கருதுவோம்? சகோதரர்களே, வாரம் ஒருமுறை ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களைப் பெற்றிருப்பதையே மிக முக்கியமான கூட்டங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது என்று நான் கருதிடுவேன். ஆனால் இப்படியான எண்ணம் அருமையான நண்பர்கள் அனைவருக்கும் உதித்திருக்காது என்று நான் அறிவேன்; ஆனாலும் உங்களுக்குப் பிரயோஜனம் உண்டாகத்தக்கதாக பிட்ஸ்பர்கில் எங்களுக்குக் கிடைத்த அனுபவத்தை உங்களுக்குக் கூறுகின்றேன். சுமார் முப்பது அல்லது இருபது வருடங்களுக்கு முன்னதாக, சபைக்கு ஆவிக்குரிய ரீதியில் அதிகமாய்த் தேவை காணப்படுகின்றது என்பதைத் தெளிவாய்ப் பார்த்தேன் மற்றும் மற்ற வகையான போஷாக்குகள் சிலவற்றை உட்கொள்வதற்குப் பதிலாக, பலமான ஆகாரத்தை உட்கொள்வதற்கான தீவிரமான விருப்பம் காணப்பட்டதையும் நான் கண்டேன்; மேலும் துதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் மற்றும் விசேஷமாய்ச் சாட்சி பகர்வதற்குமான கூட்டம் ஒன்றிற்காக ஒவ்வொரு வாரமும் ஓர் இரவினை - அதாவது நான் பரிந்துரைத்தப்படி புதன்கிழமை மாலை வேளையை அவர்கள் ஒதுக்கிக்கொள்வது மிகவும் பொருத்தமானதாக இருக்குமென நான் கருதுவதாக, அவர்களிடத்தில் கூறினேன்; அதுவும் நாம் முந்தைய காலங்களில், பல்வேறு சபை பிரிவுகளில் காணப்பட்டபோது சாட்சிக் கூறிவந்திருக்கும் வழக்கத்தின்படியாக

இராமல், மாறாக சாட்சியானது புதியதாகவும், சமீபத்தில் நடந்ததாகவும் அவ்வாரத்தின் அனுபவங்களாகவும் இருப்பவைகளாகக் காணப்படும்படிக்கும், அவை கடந்த காலங்களின் அனுபவங்களுடைய சாட்சியாயிராதபடிக்கும் நான் பரிந்துரைத்தேன். அந்த வாரத்தில் நமக்கு என்ன அனுபவங்கள் காணப்பட்டன? ஞாயிற்றுக்கிழமையின் பாடமானது நம்முடைய ஜீவியத்தில் எத்தகைய தாக்கம் கொண்டிருந்தது? அவைகளை நாம் எவ்வளவுக்கு நடைமுறைப்படுத்த முடிந்தது? அப்பாடங்கள் தொடர்புடைய அனுபவங்களில் - நாம் ஜெயித்தோமா அல்லது தோல்வியைத் தழுவினோமா? என்பது பற்றின சாட்சியாயிருக்கும்படிக்கு நான் பரிந்துரைத்தேன். பிட்ஸ்பர்கின் நண்பர்கள் இதைக்குறித்து அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்பதை என்னால் காணமுடிந்தது; இது சிறந்த வகையான ஒரு கூட்டமாக இருக்குமோ என்று ஐயம் கொண்டார்கள்; இக்கூட்டம் மிகவும் சலிப்புண்டாக்கும் என்றும், இரசனையற்று இருக்கும் என்றும், எல்லாவற்றையும் ஒரு வாரத்தில் கூறி முடித்த பிற்பாடு, அதையே மறுபடியுமாக அடுத்த வாரத்திலும் திரும்பக் கூறவேண்டுமே என்றும் அஞ்சினார்கள். அவர்கள் கருத்தினை - அதாவது புதிதான, சமீபத்திய சாட்சிகளைப் பகரும் கூட்டம் எனும் கருத்தினைக் கிரகித்துக்கொள்ளவில்லை; எனினும் உங்களது ஊழியக்காரன் மற்றும் பேச்சாளராகிய என்னை மதிப்பதின் காரணமாக, நான் அறிவுறுத்தினவைகளுக்கு இசைவாக அவர்கள் வாக்குகள் (vote) அளித்தனர்; அதாவது கொஞ்சக்காலம் அல்லது மூன்று மாதங்கள் ஆகிலும் அக்கூட்டத்தினைப் பெற்றிருப்பதாகவும், ஒவ்வொரு புதன்கிழமை இரவன்று வேறு எதையுமல்ல, மாறாக சாட்சிக்கூட்டத்தினையே பெற்றுக்கொள்வார்கள் என்றும் மற்றும் அந்தவொரு குறிப்பிட்ட காலக்கட்டத்தின் முடிவில் அவர்கள் அக்கூட்டத்தினைத் தொடர்ந்து பெற்றிருக்க விரும்புகின்றார்களா என்பது தொடர்புடைய விஷயத்தில் வாக்கெடுக்கப்படும் என்றும் முடிவெடுத்தார்கள். இதன்விளைவு என்னவெனில்: அந்தவொரு குறிப்பிட்ட காலத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடைபெற்றபோது சபையார் பெருமளவில் அக்கூட்டத்தினை விரும்பும் நிலைக்கு வந்தடைந்திருந்தனர்; எனினும் மிக அதிகமான ஆவலைக்கொண்டவர்களாக அவர்கள் இன்னும் காணப்படவில்லை; ஆனால் ஒருவருடம் தாண்டினபோது அவர்கள் மிகவும் விருப்பம் அடைந்தவர்கள் ஆனார்கள் மற்றும் ஒருவேளை ஒரு வாரத்தில் எந்தக்கூட்டத்தை நடத்தாமல் விட்டுவிடலாம் என்று கேட்கப்பட்டால், பிட்ஸ்பர்க் சபையாரின் அருமையான நண்பர்களில் அநேகர் மற்றக் கூட்டங்கள் யாவற்றையும் இழக்கவும், தங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருப்பதாகத் தங்களால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளதான சாட்சிக் கூட்டத்தினைப் பற்றிக் கொண்டவர்களாயும் இருப்பார்கள் என்பதில் எனக்கு நிச்சயமே. இதுவே மற்ற அநேகருடைய அனுபவமாகவும் இருக்கும் என்று நான் நம்புகின்றேன் மற்றும் உங்களில் அநேகர் இது குறித்து ஆரம்பத்தில் சிந்தித்தவைகளுக்கு நேர்மாறாகவே

பின்னர் ஏற்பட்ட அனுபவம் காணப்பட்டிருக்கும் என்று நான் அறிவேன். இப்படியாகவே உங்களுக்கும் காணப்படும் என்று நான் நம்புகின்றேன்; சாட்சிக்கூட்டங்களானது சமீபக்கால சாட்சியங்கள் அடங்கியதாக இருக்குமாயின், சாட்சிக்கூட்டங்களில் நாம் ஒருவர் இன்னொருவருடன் தொடர்பு கொள்கையில் ஒருவகையான ஆவிக்குரிய விருந்து காணப்படுகின்றது மற்றும் வழிநடத்துனர் கேள்விகளை எழுப்புவதின் மூலமும், ஒவ்வொருவனும் தனது வாய்ப்பு வருகையில் தனது சாட்சியினைச் சொல்ல அனுமதிப்பதின் மூலமும் கூட்டத்தினைச் சுவாரசியமாக்கிடலாம். இதை அவர் ஒரு முனையிலிருந்து துவங்கி கலந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் சாட்சி பகருவதற்கான வாய்ப்பினை அளித்திடலாம்; இப்படியாக அவர்கள் அனைவரும் சாட்சியினை மதித்து உணர்ந்திட முடியும் மற்றும் இது அவர்களுடைய இருதயங்கள் அனைத்திற்கும் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருகிறதாய் இருக்கும்.

இப்பொழுது இரண்டாவதாக அடுத்த மிக முக்கியமான கூட்டமாகப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புக் காணப்படும் என்பது என்னுடைய கருத்தாய் இருக்கின்றது. ஏன்? ஏனெனில் இக்கூட்டத்தில் ஒருவேளை நல்லதொரு வழிநடத்துனர் இருப்பாரானால் சபையாருக்கு மிகவும் சுவாரசியமாய்க் காணப்படும் விதத்தில் கேள்விகள் கொண்டுவரப்படலாம். இதற்கே வழிநடத்துனர் காணப்படுகின்றார். காரியங்களை வெளிக்கொண்டுவரும் விஷயத்தில் வழிநடத்துனருக்கு ஆர்வம் இருக்கவேண்டும், இல்லாவிட்டால் சபையார் வழிநடத்துபவர் இல்லாமலேயே நடத்திக் கொள்ளலாம் மற்றும் முழுவதுமாக, தானே அனைத்தையும் பேசிடும் ஒரு வழிநடத்துபவர், சிறந்த வழிநடத்துபவர் அல்ல. மாறாக மற்றவர்களை இக்கூட்டத்தில் பேச வைக்க முடிபவரே சிறந்தொரு வழிநடத்துனர் ஆவார்; தான் போதுமானளவு பதில்களைப் பேசிடவில்லையென்றும், தான் அதிகமாய்ப் பேசிட வேண்டும் என்றும் வழிநடத்துபவர் எண்ணிடும் அபாயம் காணப்படுகின்றது. இது கொஞ்சம் இலட்சியங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; அநேகமாகக் கொஞ்சம் பெருமை இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அவன் மந்தைக்கு நன்மை செய்திட வேண்டும் என்றுள்ள தனது வாஞ்சையில், தனது தனித்துவங்கள் அனைத்தையும் மற்றும் பெருமை, இலட்சியங்கள் அனைத்தையும் அழித்துப்போட வேண்டும்; மற்றும் யாரொருவர் சபையாரைக் கேள்விகளினால் ஆர்வப்படுத்தி மற்றும் சுவாரசியம் அடையச்செய்து மற்றும் அவர்கள் யாவரிடமிருந்தும் பதிலை வரவழைத்து, இப்படியாகக் கேள்வி மற்றும் பதில் குறித்த முழுமையான புரிந்துகொள்ளுதலை அடையப்பண்ணி மற்றும் சபையாரிடமிருந்து கேள்விக்கான பதிலைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு பதில்களைச் சுருக்கிக் கூறுகின்றாரோ அல்லது புத்தகத்திலிருந்து பதில்களை

வாசிக்கின்றாரோ அல்லது சிறந்த ஏதேனும் விதத்தில் பதிலைச் சுருக்கமாகக் கூறுகின்றாரோ - அவரே சிறந்த/வெற்றிகரமான வழிநடத்துபவர் ஆவார் மற்றும் அவர்களே வெற்றிகரமான சபையாராகக் காணப்படுவார்கள்; காரணம் அவர்கள் பாடத்தைப் புரிந்து கொண்டவர்களாகவும் மற்றும் அவற்றை உணர்ந்து கொண்டவர்களாகவும் காணப்படும் நிலைக்குள் கடந்து வந்தவர்களாய் இருப்பார்கள். ஆனால் உங்களுக்குச் சரியான வழிநடத்துபவர் இல்லையெனில் காரியமானது முற்றிலும் வேறொரு காரியமாகக் காணப்படும். ஒருவேளை அவர் அக்கூட்டத்தின் நேரம் முழுவதிலும் பேச வேண்டும் என்று விரும்பினால் அல்லது கேள்விக்கான பதிலைச் சபையாரிடமிருந்து வெளிக்கொணர்வது எப்படி என்று அறியாதவராய் இருந்தாரானால், அவர் இத்தகைய ஒரு கூட்டத்திற்குத் தகுதியான வழிநடத்துனர் அல்ல. இந்தப் பாகமே எப்படிச் செய்யப்பட வேண்டும் என்று கற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஒருவேளை நம்மில் எவரேனும் கடந்தகாலங்களில் இதில் வெற்றிகரமாய்க் காணப்படவில்லையெனில், ஜனங்களை எப்படி ஆர்வமூட்டுவது, கேள்வியை இந்த ஒரு விதத்தில் மற்றும் அந்த ஒரு விதத்தில் முன்வைத்திடுவதற்கும் மற்றும் அவர்களைச் சுவாரசியப்படுத்திடு வதற்கும், அவர்களைப் பயமுறுத்தாமல் இருப்பதற்கும் கற்றுக்கொள்வோமாக. சிலர் வேறு விதத்தைக் கையாண்டு பின்வருமாறு கூறிடுவதைக் குறித்து நான் அறிவேன், அதாவது "உங்களது பாடம் உங்களுக்குப் புரியவேயில்லை; நீங்கள் இப்பாடத்தினைப் படிக்கவில்லை," என்று கூறுகின்றனர். குழந்தைகள் போல் அச்சுறுத்தப்படுத்துவதற்குச் சபையார் அங்கு வரவில்லை; அவர்கள் கர்த்தருடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளென அங்கும் காணப்படுகின்றனர்; அவர்கள் கூட்டத்திற்கு வந்திருக்கின்றனர் மற்றும் அவர்களுக்கு உதவிபண்ணப்பட வேண்டும்; அவர்களில் சிலருக்குப் படிப்பதற்குப் போதுமான நேரம் இருந்திருக்கவில்லை. அடுத்தக் கூட்டம் வருகையில் தாங்கள் கேள்விகளுக்கான பதிலைக் கொஞ்சம் அறிந்திருக்கத்தக்கதாக தாங்கள் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும் என்றும், "எனக்குப் பதில் தெரியாது" என்று கூறிடக்கூடாது என்றும் அவர்கள் எண்ணத்தக்கதாகச் செய்திடுங்கள். பாருங்கள் காரியத்தினைக் கையாளுவதற்கு வேறே வழிக் காணப்படுகின்றது. வழிநடத்துனனாக - "உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படிக்கு ஜாக்கிரதையாய் இரு." 'Study to shew thyself approved unto God, a workman that needeth not to be ashamed, rightly dividing the word of truth" என்று அப்போஸ்தலன் கூறுவதுபோல, கூட்டத்திற்கான வழிநடத்துனன் கற்றுவர வேண்டும். பவுல் சபையார் அனைவருக்குமாக

எழுதவில்லை, ஒரு வழிநடத்துனனாகிய தீமோத்தேயுவுக்கு அவர் இவற்றை எழுதியுள்ளார். "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாகவும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிற்கும்படி ஜாக்கிரதையாய் இரு." 'Study to shew thyself approved unto God, a workman that needeth not to be ashamed, rightly dividing the word of truth" - காரியத்தினைச் சரியாகவும், நிதானமாய்ப் பகுத்துப் போதித்தும், வெளிக்கொண்டுவர வேண்டும் மற்றும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிப்பது மாத்திரமல்ல, பாடம் தொடர்புடைய விஷயத்திலும் அனைத்தையும் வெளிக்கொண்டுவர வேண்டும். பாருங்கள் இவையனைத்தும் ஒரு வழிநடத்துனனின் சரியான வழிமுறையின் ஒரு பாகமாய் இருக்கின்றது. வழிநடத்துனன் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் எப்படித் தன்னால் இதை நன்கு செய்யமுடியும் என்று பார்க்க வேண்டும்; எப்படி அனைத்துக் கேள்விகளின் விஷயத்திலும் சபையார் யாவரோடும் தான் ஒத்துணர்வுடன் காணப்பட வேண்டும் மற்றும் அவர்களிடமிருந்து தன்னைப் பிரித்துக் காண்பிக்காமலும் மற்றும் அவர்களைக் கீழானவர்கள் போல் நடத்தாமல், மாறாக சகோதரர்கள் என நடத்துவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். யார் சகோதரர்களில் ஒருவரெனச் சரியாய் நடந்துகொள்கின்றார்களோ அவர்களே மந்தை மத்தியில் மிகுந்த செல்வாக்குடையவர்களாய் இருப்பார்கள் என்று நீங்கள் கண்டுகொள்வீர்கள். நீங்களும் சகோதரர்கள்தான். நாம் அனைவரும் ஆடுகளல்லவா? நிச்சயமாகவே. நாம் மேய்ப்பர்களாகக் காணப்பட்டு மேய்க்கும் வேலையினை மாத்திரம் செய்பவர்களல்ல, மாறாக நாமும் ஆடுகளில் உள்ளடங்குபவர்களாகக் காணப்படுகின்றோம். கர்த்தருக்காக மந்தையினுடைய அவரது பிரதிநிதிகளெனப் பேசிடுவதற்கான சிலாக்கியத்தினை அவர் நமக்குக் கொடுத்துள்ளார் என்ற காரியமானது, நாம் இன்னமும் ஆடுகளாய் இருக்கின்றோம் என்ற உண்மையினை மாற்றுகிறதில்லை. நாம் மந்தையையோ அல்லது தேவனுடைய சுதந்திரத்தையோ இறுமாப்பாய் ஆளுகிறவர்களல்ல. நாம் இன்னமும் ஆடுகளாகவும், ஆட்டினுடைய சுபாவத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க வேண்டியவர்களாகவும் மற்றும் அதை வெளிப்படுத்த வேண்டியவர்களாகவும் காணப்படுகின்றோம். ஆகையால் இரண்டாம் முக்கியமான கூட்டம் பெரோயா ஆராய்ச்சி வகுப்பாய் இருக்குமென்று நான் கருதுகின்றேன். பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளானது பல்வேறு வகைகளாகக் காணப்படக்கூடியவைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உதாரணத்திற்கு வாட்ச் டவரில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைக்கும் உரிய அநேகக் கேள்விகளையுடைய பெரோயா ஆராய்ச்சித் தொடரினை நாம் வழங்கிவருகின்றோம்.

அநேகம் சபையார்கள் அப்பாடங்களுடன் இசைவுடன் வராமல் பின்தங்கிக் காணப்படுவதை நான் காண்கின்றேன். இவர்கள் தவறு செய்வதாக நான் கருதுகின்றேன். இவர்களில் சிலர் என்னிடம்: "சகோதரர் ரசல் அவர்களே நாங்கள் ஐந்தாம் தொகுதியிலேயே பின்தங்கி நின்றுகொண்டிருக்கின்றோம்; வேறு ஏதோ ஒரு தொகுதியில் பின்தங்கி நின்றுகொண்டிருக்கின்றோம். நாங்கள் முன்னேறி வந்துகொண்டிருக்கின்றோம்" என்று கூறுவதுண்டு. அது அவர்கள் காரியம்; நான் குற்றம் கண்டுபிடிக்கப் போகிறதில்லை; குற்றம் கண்டுபிடிப்பதும் எனக்கடுத்தக் காரியமல்ல. அது சபையாருடைய காரியமாகும்; அவர்கள் இப்படித்தான் பெற்றிருக்க விரும்புகின்றார்கள் என்றால், தேவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும். அவர்களின் விருப்பப்படியே அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கட்டும்; ஆனால் அவர்கள் ஊர்வலத்தோடு கூடவே நடந்துவரும்படிக்கு நான் அறிவுறுத்துகின்றேன். நடன குழுவினரோடுகூட நடப்பதில் சில பயன்கள் காணப்படுகின்றது. உங்கள் நடைச் சீராக இருக்கும் மற்றும் அனைத்தும் நன்றாய் இயங்கும். இசைக்குழு முன்னே செல்கின்றது மற்றும் நீங்கள் அனைவரும் ஒருசேர சென்று கொண்டிருக்கின்றீர்கள். கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அனைவரும் எங்குக் காணப்பட்டாலும் இந்தப் பாடத்தின் விஷயத்தில் ஒன்றுபோல் போய்க் கொண்டிருக்கின்றனர் என்று காண்பது அருமையாய் உள்ளது.

அநேகமாக அது மனவுணர்ச்சியின் காரியந்தான், அநேகமாக அதற்கு எந்த உண்மையான முக்கியத்துவமும் இல்லை; எனினும் மனவுணர்வின் அடிப்படையிலான ஒவ்வொரு சிறு காரியமும் அந்தக் காரியத்தில் அதன் தாக்கத்தையும், செல்வாக்கையும் பெற்றிருக்கும். நீங்கள் எந்தப் பாடம்வரை வந்திருக்கின்றீர்களோ, அதற்கும் புதிதாய் வெளியிடப்பட்டுள்ள பாடத்திற்கும் இடையிலான பாடங்களை நீங்கள் விட்டுவிடுங்கள் என்பது என்னுடைய ஆலோசனையாய் இருப்பதில்லை. மாறாக அந்த இடைப்பட்ட பாடங்களை, இன்னொரு மாலை வேளையில் கூடிப் பார்த்துக்கொள்ளுங்கள் என்பதேயாகும். தற்போதுள்ள பாடத்துடன் துவங்குங்கள் மற்றும் ஐந்தாம் தொகுதியை நீங்கள் முடிப்பது வரையிலும் மற்ற மீதிப்பாடத்தை இன்னொரு கூட்டத்தில் பாருங்கள். இதை ஒரு நல்ல ஆலோசனையாகக் காண்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். சகோதரர் ரசலோ அல்லது வேறு யாரோ ஆணையிட முடியாது. கர்த்தருடைய சித்தம் என்று நீங்கள் கருதிடும் எதையும் செய்திடுங்கள். வேறுவிதமாய் நீங்கள் செய்யும்படிக்குக் கர்த்தர் விரும்புவதாக நீங்கள் கருதுவீர்களானால் அதையே செய்திடுங்கள். மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபையார் என்ன செய்ய வேண்டும் என்று சகோதரர் ரசலால் தீர்மானிக்க முடியாது என்றும், சபையார் என்ன

செய்ய வேண்டும் என்று சபையாரிலுள்ள யாரோ ஒருவரால் தீர்மானிக்கப்பட முடியாது என்றும், சபையாரே தங்களுக்காகத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக.

மேலும் அருமையான சகோதரர்களில் சிலர் கவனிக்கத் தவறும் ஒரு முக்கியமான காரியம் காணப்படுகின்றது என்று நான் கருதுகின்றேன். இவர்கள் ஆளுகிற கண்ணோட்டத்தில் மூப்பர்த்துவத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து மிகவும் அதிகமாய் எண்ணிக்கொள்கின்றனர். இது இயல்புதான்; இப்படித்தான் காணப்படும்; ஆனால் அதை அடக்கி வைத்துக்கொள்ளுங்கள்; பழைய மனுஷன் எழும்பிடுவதற்கு முயன்றுகொண்டிருப்பவனாக இருக்கின்றான்; அவனை அடக்கி வையுங்கள்; நாம் அனைவரும் புதுச்சிருஷ்டிகளென ஒரு நிலையில் காணப்படுகின்றோம் மற்றும் நாம்: "புதுச்சிருஷ்டிகளென இங்குள்ள கர்த்தருடைய மந்தை அனைவரும், இச்சபையாரிலுள்ள அனைவரும், நான் கருத்துக்களைப் பெற்றிருப்பதுபோல அவர்களும், அவர்களது கருத்தினை வெளிப்படுத்திட நான் விரும்பிட வேண்டும்; நாம் அனைவருமே உரிமையைப் பெற்றிருக்கின்றோம்" என்று கூறிட வேண்டும். மேலும் நீங்கள் செய்பவைகளுக்கு எதிராக சபையார் எதிர்ப்பதில்லை மற்றும் நீங்கள் அவர்களது சுயாதீனங்களையும், உரிமைகளையும் கவனித்துக் காத்துக்கொள்வீர்களானால், இதை அவர்கள் மதித்துணர்வார்கள், மற்றும் நீங்கள் ஒருவேளை அவர்களது அறிவுரையைக் கேட்பீர்களானால், இதை அவர்கள் மதித்துணர்வார்கள். புரூக்கிளின் சபையாரின் மூப்பர், சபையாரை ஆதிக்கம் செய்ய ஒருவேளை முற்படுவாரானால், மூப்பருக்குக் கீழ்ப்படுகிற விஷயத்தில், புரூக்கிளின் சபையாரைக் காட்டிலும் வேறு எந்தவொரு சபையாரும், எந்தவொரு மூப்பருக்கும் அதிகமாய்க் கீழ்ப்படுவார்கள் என்று நான் எண்ணுகிறது இல்லை. ஆனாலும் புரூக்கிளினிலும் சரி, பிட்ஸ்பர்க்கிலும் சரி, எப்போதேனும் சகோதரர் ரசல், சபையாரை ஆதிக்கம் செய்ய முயன்றதுண்டோ? அவர் அறிந்திருக்கிறவரை ஒருபோதும் இப்படியாக அவர் செய்ததில்லை. அவர் இப்பொழுது எப்படி உங்களுக்கு ஆலோசனை கொடுத்துக்கொண்டிருக்கின்றாரோ அதுபோலவே, அவர் அவர்களுக்கும் ஆலோசனை கொடுத்திருந்திருக்கிறார்; எந்தவொரு விதத்திலும் கட்டாயப்படுத்த முற்பட்டதில்லை, மாறாக சபையாருக்கு விவரங்கள் அளித்தப் பிற்பாடு சபையாரைத் தங்கள் பகுத்துணர்வின்படி வாக்களிக்கச் செய்து மற்றும் அக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் சபையாருடைய தீர்ப்பே கர்த்தருடைய தீர்ப்பு என்று ஏற்றுக்கொள்ளவும் மாத்திரம் செய்திருக்கின்றார்.

**(Q161:1) மாநாடுகள் - நீங்கள் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளுக்கு ஒப்புதலளிக்கின்றீர்களா?**

கேள்வி (1912)-1- ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளுக்கு நீங்கள் முழு ஒப்புதலளிக்கின்றீர்களா? வெகு சிலரே ஒவ்வொரு கூட்டத்திலும் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், அதிக எண்ணிக்கையில் கூட்டங்களை ஒரு சபையார் கொண்டிருக்க வேண்டுமென நீங்கள் எண்ணுகின்றீர்களா?

பதில் - ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகள் குறித்து எனக்குக் கொஞ்சம் தெளிவில்லை. ஆனால் தெளிவு இல்லாதபோது, காத்திருக்க வேண்டும் என்பதே, எனக்குள் நான் கொண்டிருக்கும் கோட்பாடாகும். அவை பிரயோஜனமானதா அல்லது பிரயோஜனமற்றதா எனும் விஷயத்தினை நான் ஒப்பிட்டுப்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்; எனினும் நிச்சயம் இல்லாததால், அதைக்குறித்து நான் எதையும் சொல்வதற்கில்லை. ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளைக் குறித்துக் குறிப்பிடும் கடிதம் ஒன்றினை நான் வாட்ச் டவரில் வெளியிட்டது எனக்கு ஞாபகம் இருக்கின்றது. அது சிலரால் எனது ஒப்புதலாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. நான் கவனித்திருந்தேனாகில், கடிதத்தினுடைய அப்பகுதியினை வெளியிட்டிருந்திருக்க மாட்டேன் என்று எண்ணுகின்றேன். எனினும் என்னால் கிரகிக்க முடிந்த வரையின்படியான என்னுடைய அறிவுரை என்னவெனில்: இவ்விஷயத்தில் ஒவ்வொரு சபையாரும் பரத்திலிருந்து வரும் ஞானத்தினை நாடிடுவார்களாக; ஒருவேளை அது ஆவிக்குரிய காரியத்திற்குப் பிரயோஜனமானதாக இருப்பதாகக் கண்டுகொள்வார்களானால், அதைத் தொடருங்கள். அதன் பிரயோஜனத்தைக் குறித்து உங்களுக்கு ஐயப்பாடு இருக்குமானால், அதைத் தொடராதிருங்கள். ஒருவேளை நான் அறிவுரை கொடுக்கவேண்டுமெனில், என் அறிவுரை அதற்கு எதிராகவே காணப்படும்; எனினும் அதுகுறித்து நான் போதுமானளவுக்கு உணர்ந்துகொள்ளவில்லை என்பதால், எதிரிடையான அறிவுரையினை வழங்கிடுவதற்கு நான் ஆயத்தமாயில்லை.

ஒரு சிலரே பங்கெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், அதிக எண்ணிக்கையில் கூட்டங்களைப் பெற்றிருத்தல் தொடர்பாக நான் எண்ணுவது என்னவெனில்: சபையார் பொதுவாகக் கலந்துகொள்ளக்கூடிய பாட வகுப்புகளைப் பெற்றிருப்பது சிறந்ததாய் இருக்கும். பொதுவாகவே வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளில் அதிக எண்ணிக்கை இருப்பதில்லை. ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்களைத்தவிர, மற்றப்படி நான் எப்போதுமே புதன்கிழமை இரவில் ஜெபம்

மற்றும் சாட்சிக் கூட்டங்களைப் பெற்றிருக்க நண்பர்களை ஊக்குவிப்பதுண்டு. பின்வரும் வியாழக்கிழமையினுடைய மன்னாவினை அடுத்த கூடுகைக்கான மையக்கருத்தாகப் பயன்படுத்துவதில், தாங்கள் மிகுந்த ஆசீர்வாதத்தினை அடைவதாக அவர்கள் என்னிடம் கூறுகின்றார்கள். அவ்வாரத்தினுடைய அனுபவங்களானது, அடுத்துவரும் புதன்கிழமையன்று திரளான மற்றும் உதவிகரமான சாட்சியங்களைப் பகிர்ந்திடுவதற்கு ஏதுவாகின்றது. இந்த இடைவாரக் கூட்டங்களானது மிகவும் பரவலாக நண்பர்களினால் நடத்தப்பட்டு வருவதைக் காண்கையில் நாங்கள் மகிழ்ச்சியுறுகின்றோம்.

மற்றக் கூட்டங்கள் தொடர்பாக: பொதுவான கூடுகைகளில் வேதாகமப் பாடங்கள் வாசிக்கப்படுவதை நான் பரிந்துரைப்பதில்லை. ஒவ்வொருவரும் முன்னமே வீட்டிலோ அல்லது பேருந்தில் வரும்போதோ வாசித்துக்கொள்ள வேண்டும். சபையாராய்க் கூடி ஆராய்வது என்பது முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். கேள்விகளை நிச்சயமாகவே நீங்கள் தனிப்பட்ட விதத்தில் படிக்கும்போது பயன்படுத்திக்கொள்ளலாம் மற்றும் அதிலிருந்து மிகுந்த நன்மையும் அடையலாம்; ஆனால் சபையாராய்க் கூடிப்படிக்கையில், கேள்விகள் பயன்படுத்தப்படுவது என்பது மிகவும் உதவிக்கரமாய் இருக்கும். நம்முடையது மிகவும் ஓட்டை ஒழுக்கான பாத்திரங்களாய் இருப்பதினால், நாம் வேதாகமத்தினைத் திரும்பத்திரும்ப வாசிப்பது பலன் தருவதாய் இருக்கும். மேலும் வேதாகமப் பாடங்களானது, வகைப்படுத்தப்பட்ட வடிவிலுள்ள வேதாகமம் மாத்திரம்தான்; தலைப்புவாரியாகப் பிரிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டுள்ள வடிவமைப்பானது என்று சொல்லப்படலாம். நீங்கள் டாண்களை/Dawns வாசிக்கையில், நீங்கள் வேதாகமத்தையே வாசிக்கின்றீர்கள். இவ்விதமாய் வேதாகமத்தினை வாசிப்பவர்கள், வேதாகம அறிவினை மிக அதிகமாய்ப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள். இங்குமங்குமாகத் தொடர்பில்லாமல் வேதாகமத்தினை வாசிப்பது என்பது, தலைப்புவாரியான ஆராய்ச்சி அளவுக்கு அதிகம் தகவல்களைக் கொணர்வதாய் இராது.

சகோதரர்களில் சிலர் தாங்கள் சார்ந்துள்ள சபைகளில், அவர்கள் டாண் ஆராய்ச்சிக் குழுக்களை/Dawn Study League உருவாக்கிக்கொண்டதாக எனக்குத் தெரிவித்தனர். இதன் ஒவ்வொரு அங்கத்தினனும், தன்னால் முடிந்தமட்டும் ஒவ்வொரு நாளும் இத்தனை பக்கங்களை வாசிப்பதாக ஒப்புக்கொள்கின்றான். இது நன்றாய்ப் போய்க்கொண்டிருக்கிறதென என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது. வாட்ச் டவரில் வெளியிட்ட கடிதம் ஒன்றில், யாரோ ஒருவர் கொடுத்திருந்த யோசனை உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அந்த யோசனையை

அநேகர் பின்பற்றிக்கொண்டு ஆறு தொகுதிகளையும் ஆறு முதல் பன்னிரண்டு மாதக் காலம் - நாள் ஒன்றிற்கு இருபத்துநான்கு அல்லது பன்னிரண்டு பக்கங்கள் கொண்டு வாசித்து வருகின்றனர். தொகுதிகளை ஒவ்வொரு வருஷமும் வாசிப்பது என்பது, சத்தியத்தினை ஞாபகத்திலும், இருதயத்திலும் புத்துணர்வுடனும், தெளிவுடனும் வைத்துக்கொள்ளும். அநேகரால் தனிப்பட்ட விதத்தில் பின்பற்றப்பட்டுள்ளதான இத்திட்டமானது, சபையாராய்க் கூடி முயற்சிக்கையில், சந்தேகத்திற்கிடமின்றி நன்மையானதாய் இருக்கும்.

## (Q538:3) ஜெபம் - சாட்சிக்கூட்டம்.

கேள்வி (1911 - Z.4833)-3- புதன்கிழமை மாலை சாட்சிக்கூட்டத்திற்கு எதைத் தலைப்பாக நீங்கள் பரிந்துரைப்பீர்கள்?

பதில் - இந்தக் கூட்டங்களுக்கு வேறுபாடற்ற தலைப்பைப் பெற்றிருப்பதின் நன்மை குறித்து நாம் பல ஆலோசனைகள் கொடுத்திருந்தோம். இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் இடம்பெறும் ஆலோசனையைத் திரும்பக்கூறும் விதமாக, சாட்சிக்கூட்டங்கள் சரியான விதத்தில் நடத்தப்படுகின்ற இடங்களிலும் மற்றும் ஒரு மாதக்காலமாகிலும் சாட்சிக்கூட்டங்களை நண்பர்கள் நடத்தின அனுபவம் காணப்படும் இடங்களிலும், சாட்சிக்கூட்டங்களைக் காட்டிலும் வேறெந்தக் கூட்டங்களும் மிகவும் உதவிகரமாக இருக்கவில்லை என்று நாம் தெரிவிக்கின்றோம். வருடங்களுக்கு முன்னதாக ஒருவர் எப்படி மனமாற்றம் அடைந்தார் அல்லது எப்படி ஒருவர் சத்திய அறிவினைப் பெற்றுக்கொண்டார் என்பது பற்றின சாட்சிகள் பகரப்படுதல் என்பது பொது மாநாடுகள் முதலானவைகளில் மிகவும் அருமையானதாய்க் காணப்படும்; ஆனால் இத்தகைய சாட்சிகளானது வாராந்திர வகுப்புகளில் மிகவும் சோர்வூட்டுகிற மற்றும் சலிப்பூட்டுகிற காரியமாய் இருக்கும் என்று நாம் நிச்சமாய்க் கருதுகின்றோம். இனிமேல் தாங்கள் என்ன செய்ய வேண்டும் மற்றும் என்ன அனுபவங்கள் பெறப்போகின்றார்கள் என்று உங்களிடத்தில் தெரிவிப்பது என்பது நண்பர்களுக்கும் கூடச் சலிப்பூட்டுகின்றதாய்க் காணப்படும். முந்தின வாரத்தினுடைய நெஞ்சைத் தொடும் சம்பவங்களும், அனுபவங்களும் பற்றின தற்போதைய சாட்சியங்களே விரும்பப்படத்தக்கவையாகவும் மற்றும் புத்துணர்வூட்டுபவையாகவும் காணப்படும். இக்கூட்டங்களானது சபையாரிலுள்ள அனைவரையும் தேவனுடைய வழி நடத்துதல்களையும் மற்றும் தினந்தோறுமுள்ள, ஒவ்வொரு மணிநேரமுள்ள

படிப்பினைகளையும் கவனிப்பதில் மிகவும் கவனம்கொள்ளச் செய்திடும். இப்படியாக தினந்தோறும் மிகவும் விலையேறப்பெற்ற அனுபவங்களானது அடையப்பெறக்கூடும் - அதாவது (ஜீவியத்தின்) அக்காரியங்களானது சற்றே கவனிக்கப்பட்டு அல்லது கவனிக்கப்படாமல் கடந்து போவதினால் அடையப் பெறுவதைக் காட்டிலும், தினந்தோறும் மிகவும் விலையேறப்பெற்ற அனுபவங்களானது அடையப்பெறக்கூடும்.

இத்திட்டத்தினை/கூட்டத்தினைப் புதன்கிழமை மாலையில் பெற்றிருப்பதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம் மற்றும் ஒவ்வொரு புதிய வாரத்திற்குமான - அதாவது புதன் இரவு கூட்டத்துடன் நிறைவு பெறும் ஒவ்வொரு புதிய வாரத்திற்குமான தலைப்பாக வியாழக்கிழமையின் மன்னாவானது பயன்படுத்தப்படலாம்.

இந்த யோசனையில், அடிமைத்தனத்திற்கடுத்த எதுவுமில்லை. இதை அங்கீகரிப்பவர்கள், இதை ஏற்றுக்கொண்டிடலாம் மற்றும் இதை அங்கீகரியாதவர்கள், வேறுவிதத்தில் செய்திடலாம். இது ஒவ்வொரு சபையாருடைய காரியமாய் இருக்கின்றது. vow/வாக்குறுதியும், அதன் ஜெபமும் தினந்தோறும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரையும் கிருபையின் சிங்காசனத்திடத்திற்கு இழுத்துக்கொள்வதை அறிந்துகொள்வது நமக்கு மிகவும் அருமையானதாகக் காணப்படுவது மாத்திரமல்லாமல், இன்னுமாக இதேபோல் அனைவருமே ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய வழிநடத்துதல்கள் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருப்பதை அறிந்துகொள்வதும் இனிமையானதாகக் காணப்படும்.

**(Q709:2) சாட்சியம் - குறைவான சத்தமுடைய சகோதரர்கள் சாட்சியைக் கூறலாமா?**

கேள்வி (1915)-2- அனைவருக்கும் கேட்கும் விதத்தில் சத்தமாய்ப் பேசுவதற்கு விருப்பத்துடன் மற்றவர்கள் காணப்பட்டிருக்க, கேட்கும் விதத்தில் சத்தமாய்ப் பேச முடியாத ஒரு சகோதரன் அல்லது சகோதரி சாட்சிக்கூட்டத்தில் சாட்சியைச் சொல்லுவதற்காக நேரம் எடுத்துக்கொள்வது சுயநலமான காரியமாய் இருக்குமா? (இக்கேள்விக்கு அனைவரும் சிரித்தனர்).

பதில் - அதிகம் சத்தமாய்ப் பேசமுடியாதவர்கள் விஷயத்தில் கொஞ்சம் கடிந்துகொள்ளுதல் அவசியப்படுகின்றது. இப்படியாகத்தான் இக்காரியத்தினைப் பேசுவதே சரியென்று நான் எண்ணுகின்றேன். எழும்பி நின்று நீண்ட நேரம் சாட்சியினை மெல்லிய குரலில் கிசுகிசுவென்று சொல்வது, அதுவும் இது ஒரு சிலருக்கு மாத்திரமே கேட்கின்றதாகவும் மற்றும் அநேகமாக யாருக்குமே கேட்காததாகவும் இருக்கும் விதத்தில் சொல்வது கொஞ்சம் சுயநலமென்றே நாம்

கருதிட வேண்டும். ஆசீர்வாதத்தினை அடையத்தக்கதாக நாட்டினுடைய பல்வேறு பாகங்கள் அனைத்திலிருந்தும் அதிகம் செலவு செய்து அருமையான நண்பர்கள் ஒன்றுகூடி வருகையில், நேரத்தினை வீணடிப்பது என்பது மிகவும் மோசமான காரியமாகும். இதே கொள்கையானது வீட்டுக்கூட்டங்களிலும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. கேட்குமளவுக்குப் பேசிட முடியாதவர்களுக்கு நாம் அனுதாபங் கொள்ளுகின்றோம், ஆனால் அவர்கள் கர்த்தருடன் தனித்திருக்கையில் மெல்லிய குரலில் பேசிடுவது நலமாயிருக்கும்; இதனால் அவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும். யாருக்கும் புரியாத அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதைவிட, மற்றவர்களுக்குப் புரியும் வண்ணமான ஐந்து வார்த்தைகளைப் பேசுவதே தனக்கு விருப்பம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியுள்ளதை நீங்கள் அறிவீர்கள் (1 கொரிந்தியர் 14:19). இது ஒரு நல்ல படிப்பினையாகும். புரியப்படும் மொழியில் நாம் பேசிட வேண்டும் மற்றும் அனைவரும் தங்கள் குரலை எக்காளமென உயர்த்திக்கொள்வதற்குக் கற்றுக்கொள்ள முயற்சிப்பதற்கு நாம் யோசனை கூறுகின்றோம். சிலருக்கு மூன்று அல்லது நான்கு எக்காளங்கள் அளவு உயர்த்திட வேண்டியுள்ளது.

ஆனால் அன்பான சகோதரர்களே, உங்களில் யாரையாகிலும் சோர்வுக்குள்ளாக்க வேண்டுமென்று இது எதையும் நாங்கள் கூறிடவில்லை; ஏனெனில் சாட்சி பகிரப்படுவதினால் கர்த்தருடைய ஜனங்களுக்கு ஒரு மாபெரும் ஆசீர்வாதம் கடந்து வருகின்றது என்று நாம் நம்புகின்றோம். ஆகையால் ஒவ்வொருவரும் சாட்சி பகருவதற்கான சில வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது எங்களுடைய எதிர்ப்பார்ப்பாய் இருக்கின்றது. ஆனால் ஒருவேளை உங்களால் அனைவருக்கும் கேட்குமளவுக்குச் சத்தமாய்ப் பேசமுடியாதென்றால், சுமார் ஆறு வார்த்தைகளைப் பேசிவிட்டு, அமர்ந்து கொள்ளுங்கள் என்பது எங்களது அறிவுரையாக இருக்கின்றது. இப்படியாகக் கிறிஸ்துவுக்காய் எழுந்து நிற்பதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் ஓர் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் நீங்கள் யாருக்கும் இடையூறு பண்ணவில்லை என்பதையும் அறிந்துகொள்வீர்கள். உங்களது சாட்சியினைச் சுருக்கமாய்ப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**(Q710:1) சாட்சி பகர்தல் - புத்திமதி கூறுவதற்கல்ல.**

கேள்வி (1911)-1- சாட்சிக் கூட்டத்தில் சகோதரர்கள் நற்கிரியைகளுக்கு ஏவப்படும்படி ஒருவருக்கொருவர் புத்திமதி கூறிட வேண்டுமா அல்லது தங்கள்

சொந்த அனுபவங்கள், ஆசீர்வாதங்கள் முதலானவைகளைச் சொல்வதோடு நிறுத்திக்கொள்ளலாமா?

பதில் - புத்திமதி கூறுதல் என்பது ஒரு காரியமாகவும் மற்றும் சாட்சி பகர்தல் என்பது வேறொரு காரியமாகவும் காணப்படுகின்றது என்று நான் எண்ணுகின்றேன். சாட்சிக் கூட்டமானது, நிச்சயமாகவே புத்திமதி கூறப்படுவதற்கான கூட்டமாகக் கருதப்படக்கூடாது; உங்களது சாட்சியினை நீங்கள் பகிர்ந்து கொள்கையில், அந்தச் சாட்சியே, மற்றவர்கள் சரியான பாதையில் நடக்க முயற்சிப்பதற்கு ஏதுவாய்க் காணப்படும் புத்திமதியாக அமையும் எனும் எண்ணத்தில்தான் சொல்லப்படுகின்றது. இது கொடுக்கப்பட முடிகின்ற மிகவும் ஆற்றல்மிக்க சாட்சியங்களில் ஒன்றாகும். பயபக்தியான வாழ்க்கை வாழ்பவனது அனுபவங்களானது அந்தப் பக்தியான ஜீவியத்திற்குச் சாட்சியைப் பகருகின்றதானால், அந்தச் சாட்சியைப் பகருதல் என்பது, நல்லதொரு ஜீவியம் ஜீவிப்பதற்கு மற்றவர்களுக்கு, இருப்பதிலேயே சிறந்த புத்திமதியைக் கொடுக்கிறதாகக் காணப்படும். அதேவேளையில் ஒருவன் தனது சாட்சியினைப் பகிர்ந்தபிற்பாடு, ஒன்று அல்லது இரண்டு புத்திமதிகளைச் சேர்த்துச் சொல்லுவது குற்றமாக இருக்கும் என்று நான் கருதுகிறதில்லை. ஆனால் சாட்சிபகர்வது என்பது புத்திமதி கொடுப்பதாய் இராமலிருக்க, சாட்சிபகர்வது என்பது புத்திமதி கூறுவதற்குரியது என்று எண்ணுவதில் அநேகர் தவறு செய்கின்றனர் என்பதும், அதிகமாய் அக்கூட்டங்களில் புத்திமதி கூற முற்படுவது தவறு என்பதும் உண்மையே. சாட்சியங்கள் பகிரப்படுவதே நலமென நான் எண்ணுகின்றேன்.

**(Q471:2) கூட்டங்கள் - சாட்சிக்கூட்டங்கள்.**

கேள்வி (1910)-2- இது நீங்கள் பரிந்துரைத்ததான முதலாம் கூட்டம் தொடர்புடைய கேள்வியாகும். ஒவ்வொரு இடமாகப் போய்வருகையில் சகோதரர்கள் அதைச் சரியாய்ப் புரிந்துகொள்ளாததைக் காண்கிறேன். அவர்கள் ஒரு தலைப்பைத் தெரிந்துகொண்டு அதைச் சாட்சிக்கூட்டத்திற்கான தலைப்பாகக் கலந்தாய்வு பண்ணுகின்றனர். இது சரியான கருத்தாகுமா அல்லது சரியான கருத்து எது?

பதில் - சாட்சிக்கூட்டம் தொடர்பாக: சாட்சிக்கூட்டம் என்றால் என்ன? அலிகெனியிலுள்ள நண்பர்களுக்கான நம்முடைய பரிந்துரையென அந்தவொரு

கூட்டத்தில் நான் முன்பு குறிப்பிட்டிருந்தது என்னவெனில் - அவர்கள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பிரசங்கத்தினை/செய்தியினை அவ்வாரம் முழுவதும் சிந்திப்பதற்கான விதையென மனதில் பெற்றிருக்க வேண்டும்; பின்னர் அவர்கள் சாட்சிக்கூட்டத்திற்கெனப் புதன்கிழமை மாலையன்று கூடிவருகையில், அவர்கள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடம் தொடர்புடைய அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள்; இதனால் தாங்கள் ஞாயிற்றுக்கிழமையன்று கேட்டுக் கொண்டவைகளின் பிரயோஜனம் அனைத்தையும் மற்றும் அப்பாடத்தோடு பின்னிப்பிணைந்துள்ள தங்கள் சொந்த அனுபவங்களின் பிரயோஜனம் அனைத்தையும் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் அவைகள் புதன்கிழமை இரவின்போது, அவர்களது மனதில் மிக முழுமையாய்க் காணப்படும். மேலும் புதன்கிழமை இரவன்று அவர்கள் கூடிவருகையில், காய்கறிக் கடைக்காரனோடோ அல்லது இறைச்சிக் கடைக்காரனோடோ அல்லது தங்களது தொழிலிலோ அல்லது தனிப்பட்ட ஆராய்ச்சியிலோ அவர்கள் பெற்றுக்கொண்ட ஜீவியத்தின் அனுபவங்கள் அல்லது நிகழ்வுகள் எதுவாயினும், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பிரசங்கப்பாடம் தொடர்புடையதாகச் சுவாரசியமாய்க் காணப்படும் எதுவாகிலும் - அதுவே அவர்களது கிறிஸ்தவ அனுபவம் தொடர்புடையதாக அவர்கள் பகிர்ந்திடும் சாட்சியாய் இருக்கும்; ஒருவேளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடம் தொடர்பாக அவர்கள் எந்த அனுபவத்தையும் பெற்றிருக்கவில்லையெனில், அவர்கள் சொல்லவிரும்பும் எதுவும் பகிரப்படலாம்; ஆனாலும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடமானது இருதயத்தில் பதியப்பெற்று என்றென்றும் நிலைத்திருக்கத்தக்கதாக, அப்பாடம் சம்பந்தமான அனுபவங்கள் பகிரப்படுவது விரும்பத்தக்கவையாகும். புதன்கிழமை மாலைக்கூட்டத்திற்குப் பிற்பாடு அதே சிந்தனைகளானது அடுத்த ஞாயிறுவரை மனதில் தொடர்ந்து சிந்தித்துக்கொள்ளப்படலாம்; இப்படியாக வாரம் முழுவதும் சிந்தனைகள் ஒருமுகப்படுத்தப்பட்டு, அவை முழுமையாக மெல்லப்பட்டு ஜீரணமாகுகின்றது. இப்படியான விதத்திலேயே அக்கூட்டம் பிரயோஜனமானதாய்க் காணப்படுகின்றது. ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு, அதைக் கலந்தாராய்வது சாட்சிக்கூட்டமே அல்ல. சாட்சி என்பது ஒரு பாடம் சம்பந்தப்பட்ட தன்னுடைய சொந்த அனுபவத்தை ஒருவர் பகிர்ந்துகொள்வதாகும்.

பாகம் - 9

# தொகுதி - VI

## அத்தியாயம் 5 & 6

# புதுச்சிருஷ்டியின் அமைப்பு

[தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## அப்போஸ்தலர்கள், தீர்க்கத்தரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள்

பொதுவாக கிறிஸ்தவ உலகில் காணப்படுகின்ற எண்ணம் என்னவெனில், ஆண்டவர் உருவாக்கிய சபை அமைப்பை முழுமையாக்காமல் விட்டுவிட்டார் என்பதாகும். மேலும் அவருடைய ஜனங்கள் இந்த அமைப்பு சம்பந்தமாக தன்னுடைய சொந்த ஞானத்தை உபயோகப்படுத்த வேண்டுமென்று அவர் எதிர்ப்பார்த்தார் என்றும் எண்ணுகிறார்கள். பலதரப்பட்ட மனதுடைய அநேக மனிதர்கள் அதிக அல்லது குறைவான கண்டிப்புடன் கூடிய அமைப்புகளை விரும்பியிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள், பலதரப்பட்ட முறைகளில், குறைந்த அல்லது கண்டிப்பான முறையில் தங்கள் சபையை ஒழுங்குப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய சபை பிரிவோ அல்லது ஆளுகை செய்யும் விதமோதான் மேன்மையானது என்று கூறுகிறார்கள். இது தவறானது. உலகம் உண்டாவதற்கு முன்னரே, தம்முடைய புதுச் சிருஷ்டியை முன்னறிந்த தேவன், தம்முடைய சொந்த ஜனங்கள் தம்முடைய சொந்த வேலையைக் குறித்த அவருடைய சித்தத்தைப் பற்றிய தெளிவான நோக்கம் இல்லாதபடிக்கும், அவரவருடைய நலனுக்கெனத் தகுதியான அமைப்பு இல்லாமல் விட்டுவிடும்படிக்கும் தேவன் கரிசனையற்றவராக இருந்திருப்பார் என்று நினைப்பது நியாயமானதல்ல. மனிதனுடைய மனது ஒருபுறம் அராஜகத்திற்கு நேராக இருக்கும் அல்லது மறுபுறம் கடினமான அமைப்பு அல்லது அடிமைத்தனத்தை நோக்கியிருக்கும். திவ்விய ஒழுங்கானது இந்த இரண்டு உச்ச அளவையும் தவிர்த்து அடிமைத்தனத்திற்கு ஏதுவான எல்லாவற்றையும் தவிர்த்து வெளிப்படையாகச் சாதாரணமாகக் காணப்படும் ஓர் ஒழுங்குமுறையை புதுச்சிருஷ்டிக்குக் குறிப்பிடுகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண்மையிலேயே வேதம் கட்டளையிடுகிறதாவது: "ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும் அடிமைதனத்தின் நுகத்துக்குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைக்கொண்டிருங்கள்" என்பதாகும். (கலாத்தியர் 5:1)

இந்தத் திவ்விய ஒழுங்கை முன்னால் வைக்கும்போது, நாம் நம்மை முற்றிலுமாக திவ்விய முறைகளுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலருடைய நாட்களிலே "விழுந்துபோகுதல்" முன்னால் சொன்னபடியே கிரியை செய்ய துவங்கிவிட்டது என்பதையும், அப்போஸ்தலர்கள் மரித்த பின்னர் துரிதமாக இது முன்னேறி முதலாவது போப் ஆண்டவரின் ஒழுங்குமுறையில் முடிவடைந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். வேதாகமத்தில் கூறப்பட்டதைக் கருத்தில் கொள்ளும்போது, புதிய ஏற்பாட்டில் உள்ள குறிப்புகளோடு அதேமாதிரியாக நியாயப்பிரமாணத்தின் கீழாக இருந்த

ஒழுங்குகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் அந்த மாதிரிகள் இந்தக் சுவிசேஷ யுகத்திலுள்ள காரியங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதாக மாத்திரமல்ல, வருகின்ற ஆயிரவருட அரசாட்சியின் ஒழுங்குமுறைகளையும் மாதிரியாகக் காட்டியது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, நாம் பார்த்திருக்கிறபடி மீட்பரின் நாளும் அதன் கிரியையும் இந்தச் சுவிசேஷயுகத்திற்கு பிரதிநிதித்துவம் அளிப்பதாக இருந்தது. அந்த நாளிலே பிரதான ஆசாரியன் தன்னுடைய மகிமையான வஸ்திரங்களை உடுத்தவில்லை, ஆனால் சாதாரணமாக பரிசுத்த வஸ்திரங்களை அல்லது சணல்நார் வஸ்திரம் அணிந்திருந்தார். இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஆண்டவரோ அல்லது சபையோ ஒரு முக்கியமான இடத்தையோ அல்லது மனிதரின் பார்வையில் மகிமையான இடத்தையோ ஆக்கிரமிக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக அப்படிச் செய்தார்கள்; அவர்கள் எடுத்துக்கொண்ட நிலையானது சாதாரணமானது, ஆனால் சணல்நார் வஸ்திரம் தூய்மையையும், நீதியையும் காட்டுவதாக இருக்கிறது; சபையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய தலையாய் இருக்கிற ஆண்டவரின் நீதியைக் காட்டுவதாக உள்ளது. பாவநிவாரண நாளுக்குப் பின்னரே பிரதான ஆசாரியன், தன்னுடைய மகிமையான வஸ்திரங்களை உடுத்தினான்; அது ஆயிரவருட அரசாட்சியின்போது கிறிஸ்துவின் அதிகாரத்தையும், வல்லமையையும் காட்டுகின்ற மகிமைகளுக்கும், கனத்திற்கும் அடையாளமாக இருந்தது. அந்த மகிமைகளில் சபையானது அதனுடைய ஆண்டவரோடுகூட இணைத்துக் காட்டப்பட்டுள்ளது; ஏனெனில் பிரதான ஆசாரியனின் தலை நம்முடைய கர்த்தருக்கும், ஆண்டவருக்கும் அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கின்றபடியே, ஆசாரியனின் சரீரம் சபைக்கு அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது. மேலும் மகிமையான வஸ்திரங்கள், அதன்படியே மேன்மைப் படுத்தப்படும் காலம் வரும்போது, முழு இராஜரிக ஆசாரியத்துவத்தின் கம்பீரத்திற்கும், கனத்திற்கும் அடையாளமாக இருக்கும். போப்புகள் கிறிஸ்துவின் ஆட்சியானது அவர்களால் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளால் நிறைவேற்றப் படுகின்றது என்று பொய்யாகக் கூறிக்கொள்வதுடன், போப்புகள் ஆண்டவரின் பிரதிநிதிகள் என்றும், மேலும் கார்டினல்கள் (cardinals), ஆர்ச் பிஷப்புகள் (arch bishops), பிஷப்புகள் (bishops) மகிமையிலும், வல்லமையிலும் சபையின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள் என்றும் பொய்யாகக் கூறுகின்றார்கள். இதனால் அவர்கள் சமுதாய, மதசம்பந்தமான கட்டுப்பாட்டை உலகத்தார்மேல் செலுத்தும்படியாக முயற்சித்து, அவர்கள் பதவியினிமித்தம் அணிகின்ற அலங்காரமான வஸ்திரங்களினால், தெரிந்தெடுக்கப்பட்ட புதுச் சிருஷ்டிக்குரிய மகிமைகளையும், கம்பீரங்களையும் தங்களுக்கென எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையான இராஜரிக ஆசாரியர்கள் இன்னமும் பலியாகிய வெண்வஸ்திரங்களை அணிகிறார்கள்; மாத்திரமல்ல சபையின் உண்மையான

ஆண்டவருக்குக் காத்திருக்கிறார்கள்; மேலும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் கடைசி அங்கத்தினர் பலியில் தனது பங்கை நிறைவேற்றி முடிக்கும்வரை "மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும்" உயர்த்தப்படுவதற்காகக் காத்திருக்கிறார்கள்.

சபை துன்புறுத்தப்படுதல் மற்றும் பலியின் காலத்திற்கான சட்டத் திட்டத்திற்கும் சபை அமைப்பைக் குறித்து உள்ள நம்முடைய வழிநடத்துதலுக்கும் நாம் குறிப்பாக புதிய ஏற்பாட்டைத்தான் பார்க்க வேண்டும். சட்டதிட்டங்கள் ஒரு கச்சிதமான முறையில் அளிக்கப்படவில்லை என்பதால், அவை ஒரு முழுமையான முறைமை என்பதை கண்டுகொள்வதிலிருந்து நாம் பின்வாங்கிவிடக்கூடாது. பிரமாணங்களைப் பற்றிய நம்முயை இயல்பான நெறிதவறிய எதிர்ப்பார்ப்புகளுக்கு எதிராக நாம் போராட வேண்டும்; அதோடு தேவனுடைய குமாரர்களாகிய சபைக்கு "பூரணப் பிரமாணமாகிய சுயாதீன பிரமாணம்" கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் இனி ஒருபோதும் வேலைக்காரர்கள் அல்ல, ஆனால் புத்திரராயிருக் கிறார்கள் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்; அவர்கள் புத்திரருக்குரிய சுயாதீனத்தை உபயோகிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; அதன்படியாக குறிப்பாகப் பிரமாணத்திற்கும், அன்பின் நியமங்களுக்கும் அவர்களுடைய முழுமையான கீழ்ப்படிதலைக் காட்ட வேண்டும்.

அப்போஸ்தலர் நமது மனங்களுக்கு முன்னால் ஒரு புதுச்சிருஷ்டியின் படத்தை வைக்கிறார்; அது முழு விஷயத்தையும் விளக்குகிறது; அந்தப் படம் ஒரு மானிட உருவத்தைக் குறிக்கிறது. அதன் தலை ஆண்டவரையும், பல்வேறு சரீர அங்கங்கள் சபையையும் குறிக்கிறது. 1 கொரிந்தியர் 12-ஆம் அதிகாரத்தில் இந்த விஷயம் அருமையாக விளக்கப்பட்டிருக்கிறது. "சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம், ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப் பிரகாரமாகவே கிறிஸ்துவும் இருக்கிறார் (ஒரு சரீரம் அல்லது கூட்டம், அநேக அங்கங்களை உள்ளடக்கியது). எல்லோரும் (யூதரானாலும், புறஜாதியாரானாலும், அடிமையானாலும், சுயாதீனரானாலும்) ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்." அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகையில் ஒரு மானிட சரீரம் நன்றாக இருப்பது அதன் அங்கங்கள் எல்லாம் பொதுவாக ஒன்றோடொன்று ஒற்றுமையிலும், ஒருமனதுடனும், கூட்டுறவுடனும் இருப்பதைப் பொறுத்தது என்று நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறார், அதோடுகூட கிறிஸ்துவின் சரீரமான சபையோடும் அப்படியே இருக்கிறது என்கிறார். ஓர் அங்கம் வேதனையையோ, அல்லது தாழ்மையையோ அல்லது அவமானத்தையோ அனுபவித்தால் எல்லா அங்கங்களும் விரும்பியோ, விரும்பாமலோ பாதிக்கப்படுகின்றன. மேலும் ஓர் அங்கம் விசேஷமாக ஓரளவுக்கு ஆசீர்வதிக்கப்பட்டால், அல்லது ஆறதல் படுத்தப்பட்டால், அல்லது புத்துணர்வு ஊட்டப்பட்டால், எல்லா அங்கங்களும் அந்த

ஆசீர்வாதத்தில் பங்குபெறுகின்றன. அவர் (23-ஆம் வசனம்) நம்முடைய இயற்கையான சரீரத்தின் பலவீனங்கள், கறைகள் போன்றவைகளை மூடவும், மறைக்கவும் முற்படுகிறோம் என்றும், மேலும் அவைகளிலிருந்து விடுதலைப்பெற உதவிச் செய்கிறோம் என்றும் கூறுகிறார்; அதேபோன்று கிறிஸ்துவின் சரீரமான சபையும் இருக்கவேண்டும் - அதிகமாகக் கறைப்பட்ட அங்கங்கள் அதிகமான பராமரிப்பைப் பெற்று, இரக்கத்தினாலும், அன்பினாலும் மூடப்படல் வேண்டும் என்றும், "சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படி," மிகவும் தாழ்மையுள்ள அங்கத்திற்கும், அதிக கனத்திற்குரிய அங்கத்திற்கும் ஒரே அளவில் கரிசனை காட்டப்பட வேண்டும் - என்றும் குறிப்பிடுகிறார். (வசனம் 24)

இதன்படியாக, ஆண்டவருடைய அமைப்பாகிய சபையானது உண்மையாகவே முழுமை உள்ளதாக இருக்கிறது; அது இயல்பில் இருக்கிறபடியே கிருபையிலும் இருக்கிறது; எங்கெல்லாம் அமைப்பானது முழுமையாக உள்ளதோ அங்கெல்லாம் சிம்புகளும், காயம் கட்டும் துணியும் குறைவாய்க் காணப்படும்; ஒரு மரமானது நுனியிலிருந்து வேர்வரை நன்றாக அமைந்து ஒன்றாக நிலைத்து இருக்கிறது; ஆனால் அதன் கிளைகள் வெளிப்படையான கட்டுகளினால் அல்லது கயிற்றினால் அல்லது திருகு ஆணியினால் அல்லது எழுத்தில் உள்ள சட்டத்திட்டங்களினால் நிற்கவில்லை; அப்படியாகத்தான் கிறிஸ்துவின் சரீரமான சபையும் இருக்கிறது; ஆண்டவர் கொடுத்திருக்கிறபிரகாரம் சரியாகப் பொருத்தி, ஒற்றுமைப்படுத்தி இணைக்கப்பட்டிருந்தால் எல்லா அவயவங்களையும் ஒன்றாக நிறுத்தும்படி கயிறுகளுக்கும், ஆப்புகளுக்கும், திருகு ஆணிகளுக்கும் தேவை இருக்காது; அவைகளை ஒன்றாகக் கொண்டு வரும்படியாக அல்லது நிலை நிறுத்தும்படியாக சட்டத்திட்டங்களுக்கோ, சமய கோட்பாடுகளுக்கோ அவசியம் இருக்காது; ஒரே ஆவி ஐக்கியத்தின் இணைப்பாக இருக்கிறது. உயிர் இருக்கும் வரை, ஒற்றுமை, சரீரத்தின் ஒரே தன்மையும் நிலைத்திருக்க வேண்டும். தேவனுடைய ஆவி நிறைந்திருப்பதைப் பொறுத்து அது ஓர் உறுதியான அல்லது பெலவீனமான ஐக்கியமாக இருக்கும்.

அப்போஸ்தலர் தொடர்ந்து, தேவனே ஏற்படுத்திய புதுச் சிருஷ்டி என்ற அமைப்பின் காரியங்களுக்கு அவரே அதிகாரியாக இருக்கிறார் என்று சுட்டிக்காட்டுகிறார். அவருடைய வார்த்தைகளாவன: "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள். தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலர்களையும், இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவிதமான பாஷைகளையும் ஏற்படுத்தினார்." அவருடைய வசனத்தின்படியும் ஆவியின்படியும் நடத்தப்படுபவர்கள், வழிநடத்துதலுக்காக அவரை நோக்கிப்பார்ப்பார்கள்.

இப்படிப்பட்டவர்கள் மத்தியில்தான் இந்தக் காரியங்களுக்கு அதிகாரியாய் இருப்பவர்களை வைத்திருக்கிறார் என்பது அவருடைய வாக்குத்தத்தமாய் இருக்கிறது. தங்களையும், ஒருவருக்கொருவரையும் சபையில் மகிமை, கனம், நம்பிக்கை, ஊழியம் போன்ற ஸ்தானங்களுக்கு அமர்த்திக்கொள்ளும் அநேகருக்கு, இது ஒரு புதிய சிந்தனையாகக் காணப்படும்.

இது புரிந்துகொள்ளப்படும் என்றால் எவ்வளவு குறைவானவர்கள் பிரதான ஆசனங்களை நாட ஓடுவார்கள், மாத்திரமல்ல கனம் உள்ள பதவிகளுக்காக அரசியலில் காணப்படுகிறபடி செல்வாக்கைப் பயன்படுத்திப்பார்ப்பார்கள். உண்மையான சபையின்மேல் உள்ள திவ்விய பராமரிப்பை உணர்ந்துகொள்வது என்பது, முதலாவது சாதாரண பெயரளவில் உள்ள ஸ்தாபனங்களிலிருந்து உண்மையான சபையைக் கண்டுபிடிப்பதுதான். அதன்பிறகு உண்மையான சபையின் எல்லா ஒழுங்குமுறைகள், ஊழியங்கள், ஊழியக்காரர்களைக் குறித்த திவ்விய சித்தத்தைப் பணிவோடும், பயபக்தியோடும் தேடுவதாகும்.

அப்போஸ்தலர் கேட்கிறார்: "எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா?" அவர் கூற்றின்படி பொதுவாக இவ்விஷயம் இப்படியாகப்பட்டதல்ல என்று ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் அவர் இதில் ஏதாவது ஒரு பதவியை நிரப்புவதில் தெய்வீக நியமனத்தை நிரூபிக்கிற வகையிலும், மனிதனைப் பிரியப்படுத்துகிற மாதிரியாக இல்லாமல் சபையின் மாபெரும் மேற்பார்வையாளராக இருக்கிற அதன் தலைமையானவராகிய ஆண்டவரைப் பிரியப்படுத்துகிறதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் சபையில் காணப்படுகிற இந்த வித்தியாசங்கள் இயற்கையான சரீரத்தில் உள்ள அங்கங்களுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்திற்கு ஒத்திருக்கிறது என்றும், ஒவ்வொரு அங்கமும் அவசியமாய் இருக்கிறபடியால் ஒன்றும் உதாசீனப்படுத்தப்படக்கூடாது என்ற கருத்துக்கு நமது கவனத்தை ஈர்க்கிறார். கண்ணானது காலைப்பார்த்து எனக்கு வேண்டுவதில்லை என்றும், காதைப் பார்த்து எனக்கு வேண்டுவதில்லை என்றும், கையானது எனக்கு வேண்டுவதில்லை என்றும் கூறமுடியாது. "எல்லாம் ஒரே அவயவமாய் இருந்தால் சரீரமெங்கே?" ஏனென்றால், "சரீரமும் ஒரே அவயவமாய் இராமல் அநேக அவயவங்களாக இருக்கிறது." (வசனம் 19, 14)

உண்மைதான், இப்பொழுது சபையிலே இதேமாதிரியான பல்வேறு அங்கங்கள் இல்லை. எப்படியெனில் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டியபடி "அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது." அப்படியாகத்தான் அற்புதங்களும் இருந்தன. ஆவியின் வரங்களைக் கொடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்த அப்போஸ்தலர்களும், அவர்களிடமிருந்து அந்த வரங்களைப் பெற்றவர்களும் மரித்தபோது, இந்த அற்புதங்களும், வரங்களும் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி சபையில்

ஓய்ந்துவிட்டது. இருந்தபோதிலும், சபையில் ஒவ்வொரு மனிதனுக்கும், ஸ்திரீக்கும், ஆண்டவருக்கும், சத்தியத்திற்கும், கிறிஸ்துவின் சரீரமான சபையில் உள்ள உடன் அங்கத்தினர்களுக்கும் சேவை செய்யும் தருணம் அவனவனின் இயற்கையான திறமைக்கு ஏற்ப அளிக்கப்படும். இந்த அற்புதங்கள் ஓய்ந்துபோனபோது, சத்தியத்தை அறிகிற கல்வியும், ஆண்டவரைப் பற்றிய அறிவும், ஆவியின் கிருபைகளும் அவைகளின் இடங்களைப் பிடித்துக்கொண்டன. சுகமாக்குதல், அந்நிய பாஷைகள், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல், அற்புதங்கள் போன்ற சாதாரண வரங்கள் சபையில் இருந்த போதும் அப்போஸ்தலர் சகோதரரிடத்தில் "முக்கியமான வரங்களை நாடுங்கள்" என்று உற்சாகப் படுத்தினார்.

அப்போஸ்தல ஸ்தானத்தை அவர்கள் நியாயமாக நாடவோ எதிர்ப்பார்க்கவோ முடியாது, ஏனெனில் அப்போஸ்தலர் பன்னிருவர் மாத்திரமே; ஆனால் அவர்கள் நாட வேண்டியது அல்லது வாஞ்சிக்க வேண்டியது தீர்க்கத்தரிசிகளாக (விளக்குகிறவர்களாக - வியாக்கியானம் பண்ணுகிறவர்களாக) இல்லையெனில் போதகர்களாக இருக்கும்படியாக மட்டுமே. அப்போஸ்தலர் மேலும் "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று கூறுகிறார்; (வசனம் 31) தொடர்ந்து அவர், இந்த வரங்களில் மேலானது அல்லது சபையில் ஊழியஞ்செய்வதைக் காட்டிலும் மேலான கனமுள்ளது, அதிக அளவில் மேலான அன்பின் ஆவியை உடைமை ஆக்கிக்கொள்வதுதான் என்று காட்டுகிறார்; அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் சபையில் பரிபூரண அன்பை உடைய தாழ்மையுள்ள அங்கத்தினர், ஆண்டவருடைய பார்வையில், அன்பு என்னும் கிருபையில் குறைவுபட்டுள்ள எந்த ஓர் அப்போஸ்தலர் அல்லது தீர்க்கத்தரிசி, அல்லது போதகரைக் காட்டிலும் மேலான இடத்தை அடைந்துவிட்டார் என்பதாகும்; அவர் கூறும்போது, வரங்கள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும் அன்பில் குறைவுபட்டால் ஆண்டவருடைய பார்வையில் முழு விஷயமும் முற்றிலும் திருப்தியற்றதாகவும் காணப்படும். ஒருவர் பூரண அன்பின் நிலைக்கு வராவிட்டால் அந்த நிலைக்குக் குறைந்தபட்சம் முயற்சி பண்ணியிருந்தாலொழிய ஆண்டவருடைய ஆமோதிப்பைப் பெற்று, சபையில் அப்போஸ்தலர், அல்லது தீர்க்கத்தரிசி அல்லது போதகர் என்ற நியமனத்தை வெகுகாலம் தக்கவைத்துக்கொள்ள முடியாது என்பதை உண்மையாகவே நாம் நிச்சயமாக அறிந்துகொள்ளலாம். இல்லையெனில் அவர் நிச்சயமாக அந்தகாரத்திற்குள் மெல்ல மெல்ல செல்ல அனுமதிக்கப்படுவார், இல்லையெனில் ஒருவேளை சத்தியத்தைப் போதிப்பவராக இல்லாமல் தப்பறைகளைப் போதிப்பவராக, சாத்தானின் வேலைக்காரராகச் சகோதரரைச் சலிக்கும்படியாக அனுமதிக்கப்படுவார்.

எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் (எபேசியர் 4:1-16) அப்போஸ்தலர் பவுல் இந்தப் பாடத்தை இப்படியாக வலியுறுத்துகிறார்; சபையின் ஒருமைப்பாடு, ஒரே

சரீரம் அநேக அவயவங்களை உடையதைப்போல் இருக்கிறது; அது ஒரு தலையாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பு என்னும் ஒரே ஆவியினால் இணைக்கப்பட்டிருக்கிறது; இப்படிப்பட்ட அவயவங்கள் எல்லாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாய் இருங்கள் என்று புத்திமதியாகக் கூறுகிறார். இந்த அதிகாரத்தில் சரீரத்தின் பல்வேறு அங்கங்கள் அதற்குரிய விசேஷமான வேலைகளுக்கென நியமிக்கப்பட்டிருக்கின்றன என்றும், அதன் குறிக்கோள் என்ன என்றும் பின்வருமாறு கூறுகிறார். "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்ப்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷஊழியத்தின் வேலைக்காகவும் (அவர்கள் மகிமையான ஊழியத்திற்கு, அல்லது ஆயிரம் வருட இராஜ்யத்தில் ஊழியத்திற்கு ஆயத்தம் பண்ணும்படியாக) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கத்தரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனி...... அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகின்றவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற் கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது." (எபேசியர் 4:11-16)

நமக்காக அப்போஸ்தலர் வரைகின்ற படத்தைக் கவனிக்கிறோம்; அது மானிட உருவத்தைக் குறித்ததாகும், உருவம் சிறியதாகவும் பூரண வளர்ச்சி பெறாததாகவும் இருக்கிறது. எல்லா அவயவங்களும் பூரண வளர்ச்சி பெற வேண்டும், முழுப் பலத்தையும், வல்லமையையும் பெற வேண்டும், "பூரண புருஷராக" வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது என்று அவர் அறிவிக்கிறார். இப்படியான படம் சரியான விதத்தில், முழுமையான நிலைமையில் சபை இருப்பதைக் காட்டுகிறது என்கிறார். அந்த உருவத்தை, காலாகாலமெல்லாம் கடந்து இந்த யுகத்திற்குக் கொண்டுவரும்போது, ஓர் அவயவத்திற்குப் பிறகு இன்னொன்றாக முதலாவது உயிர்த்தெழுதலில் உன்னதமான அமைப்பான ஆயிரம் வருட காலை வேளையை எதிர்ப்பார்த்து நித்திரை அடைந்ததையும், அந்த இடம் தொடர்ந்து நிரப்பப்பட்டதால் சபையானது ஒருபோதும் முழுமை இல்லாமல் இருந்ததில்லை என்பதையும், இருந்தாலும் சில சமயங்களில் ஓர் அவயவத்தில்

அதிக பெலனும் இன்னொன்றில் அதிக பெலவீனமும் இருக்கக்கூடும் என்பதையும் காண்கிறோம். இருந்த போதிலும், எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு அவயவத்தின் முயற்சி தன்னால் இயன்றவரை சரீரத்தைப் பலப்படுத்துவதாக இருக்க வேண்டும்; மேலும், "நாம் அனைவரும்......விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகும் வரை" அவயவங்களைப் பெலப்படுத்தவும், ஆவியின் கிருபைகளில் பூரணம் அடையும்படி செய்யவும் வேண்டும்.

விசுவாசத்தின் ஒருமைப்பாடு என்பது வாஞ்சிக்கப்படத்தக்கது. அதை முயற்சியினால் பெற வேண்டும். இருந்தபோதிலும் அது பொதுவாக நோக்கப்படுகிற ஒருமைப்பாடு போன்றதல்ல. விசுவாசமானது, "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைப்" போன்று, பரிசுத்தத்திலும், எளிமையிலும் இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு அங்கத்தினரும் சிறு விஷயங்களைக் குறித்து பல்வேறு கருத்துக்களை உடையவர்களாயிருக்க முழுச் சுயாதீனம் இருக்க வேண்டும். இதில் அவர்கள் மனுஷீக யூகங்கள், அல்லது தத்துவங்களின்படி கட்டளைகளைப் பெறக்கூடாது. வேதாகமத்தின்படியான ஒருமைப்பாடு என்பது சுவிசேஷத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்திருக்கிறது.

(1) நம்முடைய மீட்பு விலையேறப் பெற்ற இரத்தத்தின் மூலமாகவும், நாம் அதிலே காட்டுகிற விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலுமாக இருக்கிறது.

(2) நம்முடைய பரிசுத்தமாக்கப்படுதல், ஆண்டவருக்கென்று பிரித்தெடுத்தலும், சத்தியமும், அதனால் உண்டான ஊழியமும், சகோதரருக்கான ஊழியமும் உள்ளடங்கியதுமாயிருக்கிறது.

(3) மேற்கூறிய முக்கியமானவைகளைக் கொண்டுதான் ஒற்றுமை வேண்டப்படல் வேண்டும், இவையல்லாமல் வேதத்தின்படியான ஐக்கியம் இருக்க முடியாது. இருந்த போதிலும், திவ்விய திட்டத்தின் ஒவ்வொரு விசேஷஅம்சத்தையும், விவரத்தையும், பார்க்கும்படியாக வாஞ்சிக்கவும், மற்றவர்கள் பார்க்க உதவி செய்யும்படியாகவும், மற்ற விஷயங்கள் ஒவ்வொன்றைக் குறித்தும் முழுச் சுயாதீனம் அளிக்கப்படல் வேண்டும். இப்படியாக கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்தினரான ஒவ்வொருவரும் தன்னுடைய சுயாதீனத்தை தக்கவைத்துக்கொண்டு, இதன்படியாக தலைக்கும் அதன் எல்லா அங்கங்களுக்கும் முற்றுமாக விசுவாசமுள்ளவராக இருக்கிறபடியால், அவர்கள் தனக்கென உள்ள எல்லாவற்றையும் விட்டுவிடவும், தன் ஜீவனையே கொடுப்பதும் சந்தோஷமான காரியமாக இருக்கும்.

நாம் ஏற்கெனவே அப்போஸ்தலர்களின் விசேஷ வேலையையும், அவர்கள் ஓர் அளவான எண்ணிகையிலேயே இருந்தார்கள் என்றும், இன்றைக்கும் அவர்கள்

ஆண்டவருடைய வார்த்தையின் மூலமாக அவரின் வாயாக இருந்து அவருடைய ஜனங்களோடே பேசுகிறதினால், அவர்களுடைய ஊழியம் சபையில் இன்றும் நடக்கிறதைப் பார்க்கிறோம். இப்பொழுது நாம் பொதுச் சபைக்குக் கொடுக்கப்பட்ட ஆண்டவருடைய வரங்கள் என்று அப்போஸ்தலர்கள் குறிப்பிடுகிற மற்றச் சபை ஊழியங்களைக் குறித்து ஆராய்ந்துபார்க்கலாம்.

பொதுச் சபையானது ஆசீர்வதிக்கப்படும்படியாகவும், தற்காலத்திலும், நித்திய காலத்திற்குரிய நன்மைகளைப் பெறுவதற்காகவும் ஆண்டவர் அப்போஸ்தலர்களையும், தீர்க்கத்தரிசிகளையும், சுவிசேஷகர்களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் தருகிறார். ஆண்டவரை தலையாகவும், போதகராகவும், அவருடைய சரீரமாகிய சபையின் வழிகாட்டியாகவும் எண்ணி ஆண்டவர் மேல் ஊக்கத்துடன் சார்ந்து இருப்பவர்கள், இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் அவருடைய வரங்களைக் கவனித்து எதிர்ப்பார்த்து நோக்கியிருக்க வேண்டும். அவர்களுக்கு அவருடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் இருக்குமென்றால், அந்த வரங்களை ஏற்கவும், உபயோகிக்கவும் முடியும். இந்த வரங்கள் சபையின்மேல் பலவந்தப்படுத்தப்படுவதில்லை, அவைகள் கொடுக்கப்படும் போது உதாசீனப்படுத்துபவர்கள், அதற்கேற்றபடி ஓர் இழப்பை அனுபவிப்பார்கள். ஆண்டவர் ஆரம்பத்திலேயே இவைகளைச் சபையில் வைத்து இப்படியாக நமக்குப் பொருத்தமான ஒழுங்குமுறையைக் கொடுத்து, அதன்படியாக அவருடைய ஜனங்கள் நடந்து, அதற்கேற்றபடியான ஆசீர்வாதம் பெறுகிற காரியத்தை அவருடைய ஜனங்களிடத்திலேயே விட்டுவிட்டார்; அல்லது இந்த ஒழுங்குமுறையை ஒதுக்கிவிட்டு அதற்கேற்றபடியாகக் கஷ்டங்களையும், ஏமாற்றங்களையும் அனுபவிப்பதை அவர்களிடத்திலேயே விட்டுவிட்டார். ஆகவே, ஆண்டவரால் வழி நடத்தப்படவும், அவரால் போதிக்கப்படவும் வாஞ்சிக்கிறவர்களாகிய நாம், எப்படி ஆதியிலே அவர் பல்வேறு அங்கங்களை வைத்தார் என்பதையும், அக்காலத்திலிருந்து இந்த மாதிரியான வரங்களில் எவைகளை அவருடைய ஜனங்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதையும் கற்றுக் கொள்ளும்படியாக நாம் நாட வேண்டும்; இதன்மூலமாக நம் பட்சத்தில் இருக்கும் இப்படியான குணாதிசயங்களை உடைய வரங்களை நாம் அறியலாம்; எதிர்காலத்திற்கென்று அதிக வைராக்கியத்துடன் அவைகளை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சரீரமான சபையில் அபிப்பிராய பேதங்கள், பிரிவுகள், பிரிவினைகள் இல்லாது இருப்பது ஆண்டவருக்கு விருப்பமானது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். மனுஷீக முறைமைகளில் பிரிவினைகள் தவிர்க்க இயலாததாகும். ஆனால் போப்பரசின் வெற்றிகரமான காலத்தின்போது, பெயரளவுக்கு இருந்த ஒழுங்குமுறை வலிமைபெற்று, அதனோடு முற்றுமாய் ஒத்துப்போகாதவர்களை ஒடுக்குவதில் கடுமையான முறைகளைக் கையாண்டது. அது பலவந்தத்தினால்

ஏற்பட்ட ஒற்றுமையாகும்; அது வெளிப்புறமான ஒற்றுமையே தவிர இருதயத்தின் ஓர் ஒற்றுமையல்ல. குமாரனால் விடுதலையாக்கப்பட்டவர்கள் ஒருபோதும் இதயபூர்வமாக இப்படிப்பட்ட சங்கமங்களில் பங்கேற்க முடியாது; இப்படிப்பட்டவைகளில் தனி மனிதனின் சுயாதீனம் முற்றிலுமாக அழிக்கப்படுகின்றது. புராடஸ்டண்ட் (Protestant) சபைப் பிரிவுகளில் உள்ள கஷ்டம், அவர்கள் அதிகப்படியான சுதந்தரத்தினால் அநேக சிறு சிறு சபைகளாகப் பிரிந்து விட்டன என்பதல்ல, அதற்கு மாறாக தாய் ஸ்தாபனம் ஒருகாலத்தில் சுயாதீன சிந்தனையை அடக்கவும், ஒடுக்கவும் உபயோகித்த அதிகாரத்தைத் தவிர, தாய் ஸ்தாபனத்தின் அதிகமான ஆவியை இன்னும் அவைகள் கொண்டுள்ளன. இப்பொழுது எங்கும் காணப்படுகின்ற அதிகப்பட்சமான பிரிவினைகளையும், பிளவுகளையும் கொண்டிராதபடி, கிறிஸ்துவின் சபைக்கு உண்மையான தேவை என்னவெனில், ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் எல்லாவிதமான மனுஷீக கட்டுகள், கோட்பாடுகள், நம்பிக்கைகள் போன்றவைகளிலிருந்து விடுபட்டு, சுதந்தரமாக நிற்கும் அதிகமான சுயாதீனம்தான். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அடிமைத்தனத்தின் நுகத்திலிருந்து ஆண்டவர் உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலைகொண்டு, (கலாத்தியர் 5:1; யோவான் 8:32) ஆண்டவருடன் விசுவாசத்திலும், வசனத்திலும் இணைக்கப்பட்டு இருக்கும்போது, வேதாகமம் கற்பிக்கிற ஆதியிலுண்டான ஒற்றுமை, எல்லா உண்மையான ஆண்டவரின் பிள்ளைகளிடத்திலும், புதுச் சிருஷ்டியின் எல்லா அங்கங்களிடத்திலும் வெகு துரிதமாகக் காணப்படும்; அவர்களும் இதேமாதிரியாக சுயாதீனமாயிருக்கிற ஒவ்வொரு அங்கத்திற்கு நேராக ஈர்க்கப்படுவார்கள், மாத்திரமல்ல உலக ஒழுங்குகள், மற்றும் சமுதாயத்தினால் கட்டப்பட்டுள்ள மனிதர்களைக் காட்டிலும், அதிக வலிமையுடன் ஒருவரோடு ஒருவராக அன்பின் கயிற்றினால் கட்டப்படுவார்கள். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது." (எங்களை ஒன்றாக வைத்திருக்கிறது - யங்ஸ்/ Youngs என்பவரின் வேத அகராதி) 2 கொரிந்தியர் 5:14.

ஆரோனின் குடும்பத்தினர் எல்லோருமே ஆசாரியத்துவத்திற்கு தகுதியுள்ளவர்களாய் இருந்தார்கள்; இருந்தபோதிலும், இந்த ஊழியத்தில் சில வரம்புகள், தடைகள், தகுதியின்மைகள் இருந்தன. அதுபோலவே உண்மையான "இராஜரிக ஆசாரியத்துவத்திலும்" இருக்கிறது. எல்லோருமே ஆசாரியர்கள்தான், எல்லாருமே அபிஷேகம் பண்ணப்பட்ட சபையின் அங்கத்தினர்கள்தான்; மேலும், "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும்" என்று எழுதியிருக்கிறபடி, அபிஷேகமானது ஒவ்வொருவருக்கும் பிரசங்கிக்கவும், நற்செய்தியைக் கற்றுக்கொடுக்கவும் ஒரு முழுமையான அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. இந்த வார்த்தைகள் விசேஷமாக கிறிஸ்துவின் தலை, புதுச் சிருஷ்டி, இராஜரிக ஆசாரியத்துவத்திற்குப் பொருந்தும்

என்றாலும் அவைகள் எல்லா அங்கத்தினர்களுக்கும் பொருந்துகிறதாய் இருக்கிறது. ஆகவே, பொதுவாக தேவனுடைய பரிசுத்தமாக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்படி ஒரு முழு அதிகாரம் அல்லது நியமனம் கொடுக்கப்பட்டிருக்கிறது, "நம்மை அந்தகாரத்தினின்று, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாக" கொடுக்கப்பட்டி ருக்கிறது. (1 பேதுரு 2:9)

ஆனால், நிழலான ஆசாரியர்கள் சில குறிப்பிட்ட கறைதிறைகளிலிருந்து விடுதலைப் பெற்றவர்களாய் இருக்க வேண்டும், அவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியிருக்க வேண்டும் என்றிருந்தபடியே, இராஜரிக ஆசாரியத்துவத்திலும் பொதுவான ஊழியத்திற்கென்று மற்றவர்கள் அடைந்திருக்கிற தகுதியில் குறைவுபடுகிறவர்கள் சிலர் இருக்கின்றனர். "உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்." (ரோமர் 12:3, 6) அப்படியே எல்லா அவயவங்களும், ஒவ்வொரு அவயவத்தின் இயற்கையான, ஆவிக்குரிய தகுதிகளையும், அடைந்திருக்கிற நிலைமையையும் கவனத்தில் கொண்டு, அதன்படியாக திவ்விய சித்தத்தை நிதானிக்க வேண்டும். நிழலில் வயது ஒரு காரணமாய் இருந்தது; ஆனால், இது நிஜமான ஆசாரியர்களிடத்தில், அனுபவத்தையும், குணாதிசயத்தை அபிவிருத்தி செய்வதையும் குறிக்கிறது. நிழலில் மாறுகண் என்கிற குறை, நிஜமான ஆசாரியத்துவத்தில் தீர்க்கமான மனதில்லாதிருப்பதையும், ஆவிக்குரிய விஷயங்களைக் குறித்துத் தெளிவான எண்ணம் இல்லாதிருப்பதையும் குறிக்கும். இது சபையின் பொது ஊழியத்திற்குப் பெரிதான ஒரு தடையாக இருக்கும். அதுபோலவே நிஜமான ஆசாரியத்துவத்திற்குத் தடையாய் இருந்த பலவிதமான கறைதிறைகள், நிழலாய் இருந்த ஆசாரியத்துவத்தின் மத்தியில் காணப்பட்ட பலவிதமான ஒழுக்கக்கேடுகள், சரீரப்பிரகாரமான மற்றும் உலகப்பிரகாரமான குறைப்பாடுகள் ஆகியவைகளைக் குறிக்கும்.

இருந்த போதிலும், நிழலில் குறைபாடுள்ள ஆசாரியர்கள் மற்றவர்களுக்குரிய எல்லாச் சலுகைகளையும் - சமுகத்து அப்பத்தைச் சாப்பிடுவது, பலிச்செலுத்துவது போன்றவைகளை அனுபவித்தார்கள்; அதுபோலவே நிஜத்தில் நமக்குள்ளேயும் இருக்கிற அப்படிப்பட்ட குறைப்பாடுகள், கிறிஸ்துவின் சரீரமான சபையின் ஓர் அங்கம் சபையின் பொது ஊழியக்காரனாயும், சத்தியத்தின் ஊழியக்காரனாயும் இராதபடி தடைப்பண்ணவும், அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியிலும், ஆண்டவருடைய ஆவிக்குரிய போஜனத்திலும், கிருபையின் சிங்காசனத்திலும், மற்றவர்களைப் போன்றே அவனுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு என்று அறியப்படாதபடி தடைப்பண்ணவும் அவசியமில்லை. பிரதான ஆசாரியனின்

அலுவல்களை, ஒருவன் சரீரப்பிரகாரமாகக் குறைவுள்ளவனாக இருந்து, குறிப்பிட்ட வயதை அடையாதவனாய் இருந்தால், அவனால் நிறைவேற்ற முடியாது; அதுபோன்றே, "திருவசனத்திலும் உபதேசத்திலும்" சத்தியத்தின் ஊழியக்காரனாக ஊழியஞ்செய்பவர்கள், கற்றுக்குட்டிகளாக இருக்கக்கூடாது; ஆனால் சபையின் அங்கத்தினர்களாக (அங்கங்களாக) அவர்கள் இருக்கும்போது, அவர்களது குணாதிசயத்தில் உள்ள முதிர்ச்சி, அறிவு, மேலும் ஆவியின் கனிகள் அவர்களை இப்படியான ஊழியத்திற்குத் தகுதிப்படுத்தும். இப்படிப்பட்டவர்கள் மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்பட வேண்டும்; ஆனால் மூப்பர்கள் வயதில் மூத்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை, ஆனால் சத்தியத்தைப் பொறுத்த வரையில் முதிர்ச்சிப் பெற்றவர்களாக, மேலும் ஆலோசனை சொல்லக்கூடியவர்களாக, ஆண்டவருடைய திருவசனத்தின்படியாக சகோதரரைச் சீர்ப்பொருந்தப் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும்.

மூப்பர் என்கின்ற வார்த்தையின் பொருளைப் புரிந்துகொள்ளும்போது, சத்தியத்தின் ஆவிக்குரிய ஊழியங்கள் செய்கின்ற அனைவரையும் வேதாகமம் மூப்பர்கள் என்று அழைப்பது சரியானதே என்றும், அப்படி இல்லாத பட்சத்தில் அவர்கள் ஓர் அப்போஸ்தலராக அல்லது தீர்க்கத்தரிசியாக, அல்லது சுவிசேஷகராக, அல்லது போதகராக, அல்லது மேய்ப்பராகப் பணியாற்றிக் கொண்டிருப்பார்கள் என்றும் உணருகிறோம். இந்த ஊழியங்களில் ஏதாவதொன்றை ஒருவர் செய்வதற்கு, அவர் சபையில் மூப்பர் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விதமாக அப்போஸ்தலர்கள் தங்களை மூப்பர்கள் என்று அறிவித்தார்கள். (1 பேதுரு 5:1; 2 யோவான் 1) மேலும் சபையின் ஊழியக்காரர்களைக் குறித்தும் (வேலையாட்கள்) அவர்கள் தெரிந்து கொள்ளப்படுதலைக் குறித்தும் நம்முடைய பொதுவான மொழிப்பெயர்ப்பு வேதாகமத்தில் அவர்கள் மூன்று விதமான பெயர்களால் குறிப்பிடப்படுகிறார்கள்.

## கண்காணிகள், மூப்பர்கள், மேய்ப்பர்கள்

பல்வேறு சபை பிரிவுகளில் இந்த மூன்று சொற்களும் தவறாக உபயோகிக்கப்படுவதால் தவறான அர்த்தத்தைக் காட்டுகின்றது; ஆகவே கண்காணி என்ற வார்த்தை மேற்பார்வையாளர் என்றுதான் பொருள்படுகிறது என்று நாம் விளக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது; ஆகவே நியமிக்கப்பட்ட ஒவ்வொரு மூப்பரும் ஒரு சிறிதான அல்லது பெரிதான ஒரு வேலையை மேற்பார்வையிடுகிறவர் என்று அங்கீகரிக்கப்பட்டார். இவ்விதமாக உதாரணமாக ஒருமுறை அப்போஸ்தலர் எபேசு சபையின் மூப்பர்களால் சந்திக்கப்பட்டபோது, அவர் பிரிவின் அறிவுரையாக "பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறினார்.

(அப்போஸ்தலர் 20:28)

இருந்தபோதிலும், ஆண்டவருடைய அநுக்கிரகத்தினால், இந்த மூப்பர்களில் சிலருக்குச் சபையில் ஒரு விஸ்தாரமான செல்வாக்கு, அல்லது மேற்பார்வை கொடுக்கப்பட்டதினிமித்தம், அவர்களைப் பொதுவான மேற்பார்வையாளர்கள் என்று அழைப்பது பொருத்தமாயிருக்கும். எல்லா அப்போஸ்தலர்களும் இப்படியாக இருந்தார்கள். ஆசியாவிலும் (Asia Minor), தெற்கு ஐரோப்பாவிலும், பொதுவாக புறஜாதி தேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட சபைகளில் பவுலுக்கு அதிக விஸ்தாரமான மேற்பார்வைக்கான வாய்ப்பு இருந்தது. ஆனால் இந்தப் பொதுவான மேற்பார்வை என்ற நிலைமை அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் என்றில்லை, ஆண்டவர் தம்முடைய அநுக்கிரகத்தினால் இப்படியாக சபையில் "இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், தீர்க்கமான மனதை உடையவனுமாயிருந்து" ஆண்டவருக்கும் சகோதரருக்கும் ஊழியஞ்செய்ய வாஞ்சையுடைய அநேகரை எழுப்பினார். முக்கியமாக தீமோத்தேயு, அப்போஸ்தலர் பவுலுக்குக் கீழ், அவருடைய பிரதிநிதியாக அமர்த்தப்பட்டார்; அவர் ஆண்டவருடைய ஜனங்களுடைய பல்வேறு கூட்டங்களுக்கு அல்லது சபைகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டார். ஆண்டவர் அன்று இருந்ததுபோலவே இன்றும் அவருடைய விருப்பத்தின்படி, தொடர்ந்து இப்படிப்பட்ட மேற்பார்வையாளர்களை அனுப்பி, அவருடைய மந்தைக்கு ஆலோசனையும், அறிவுரையும் கூற வல்லவராக இருக்கிறார். ஆண்டவருடைய ஜனங்களும், இப்படியான மேற்பார்வையாளர்களால் அளிக்கப்படும் ஆலோசனையின் தராதரத்தை நிறுத்துப்பார்க்க முற்றிலும் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள். அது தேவபக்தியுள்ள வாழ்க்கையினால், தாழ்மையான நடத்தையால், தியாகம் செய்யும் ஆவியால், கனத்தையும் இழிவான ஆதாயத்தையும் தேடும் முயற்சிகளும் தவிர்க்கப்பட்டு, சாட்சி பகர்கிறதாய் இருக்க வேண்டும். மேலும் போதனைகள் ஆழமான வேதப்பாடங்களின் சோதனைக்கு நிலை நிற்கவேண்டும். எப்படியெனில் அனுதினமும் வேதத்தை ஆராய்ந்து பார்த்து, அவர்களால் அளிக்கப்பட்ட போதனைகள் திருவசனத்தின்படி ஒத்துள்ளதா என்று பார்க்க வேண்டும். இது நாம் பார்த்த வண்ணமாக அப்போஸ்தலருடைய உபதேசங்கள் ஒத்துப்பார்க்கப்பட்டன, அவர்கள் விசேஷமாக அதிகமாகக் குற்றம் கண்டுபிடிக்காதவர்கள், குறைகூறாதவர்களாக, ஆனால் இப்படியாக ஜாக்கிரதையாக இருந்த சகோதரருக்கு அழைப்பு விடுத்து அவ்வாறு செய்துபார்க்குமாறு வேண்டினார்கள். (அப்போஸ்தலர் 16:11)

இருந்தபோதிலும், சபையின் சரித்திரத்திலிருந்து நான் தெரிந்துகொண்டது: போட்டி மனப்பான்மையும், பதவி ஆசையும், எளிமையான பயபக்தி மற்றும் தியாக மனப்பான்மையின் இடத்தை எடுத்துக்கொண்டன; உடனே நம்பிவிடும் தன்மையும், முகஸ்துதியும் வேதாகம ஆராய்ச்சியைக் காட்டிலும் முக்கியத்துவம் பெற்றன; இதினிமித்தமாக மேற்பார்வையிடுகிறவர்கள் படிப்படியாக சர்வாதிகாரம்

பெற்றார்கள்; படிப்படியாக அப்போஸ்தலர்கள் போன்றவர்களோடு சமநிலை வேண்டினார்கள்; கடைசியில் அவர்களிடையே ஒரு போட்டிவந்து, அவர்களில் சிலர் முதன்மை ஸ்தானத்தைப் பெற்று ஆர்ச் பிஷப் என்ற பட்டங்களின் மூலம் அறியப்பட்டார்கள். இப்படியிருக்க, இந்த ஆர்ச் பிஷப்புகளின் மத்தியிலும் எழுந்த போட்டியினால், அவர்களில் ஒருவர் போப் என்ற நிலைக்கு உயர்த்தப்பட வழிவகுத்தது. அதே மனப்பான்மைதான் போப்பரசில் மாத்திரமல்ல, அதனுடைய உதாரணத்தினால் ஏமாற்றப்பட்டு, வழிநடத்தப்பட்டவர்கள் மத்தியிலும் வந்து புராதன காலத்திலுள்ள ஒழுங்குமுறைகளின் எளிமையிலிருந்து வெகு தூரத்திற்குக் கொண்டு சென்றுவிட்டது. இதன் விளைவாக, இன்றைய நாட்களில் இப்படிப்பட்ட ஓர் ஒழுங்குமுறை (சபை), புராதன காலத்தில் காணப்பட்டது போல, சபை பிரிவு பெயரில்லாமலும், கனமும் மகிமையும் இல்லாமலும், எண்ணிக்கையில் சிறுதொகையினர் பெரும்பான்மையோர்மீது அதிகாரம் செலுத்தாமலும், குருகுல வகுப்பார், சபையார் எனப் பிரிவினை இல்லாமலும் இருக்கக்கூடிய ஒரு சபை, அப்படிப்பட்டது ஒரு சபையே கிடையாது என்று கருதப்படுவதைக் காண்கிறோம். இருந்தாலும் இப்படித் தாழ்வாக எண்ணப்படுபவர்கள் மத்தியில் நம்முடைய நிலையை எடுத்துச் சென்று, புராதன சபையின் உதாரணத்தைக் கடைப்பிடிப்பதும், அதனால் காணப்பட்ட இதே மாதிரியான சுயாதீனங்களையும், ஆசீர்வாதங் களையும் அனுபவிப்பதும் நமக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

சபையின் மூப்பர்கள், எல்லாருமே மேற்பார்வையிடுகிறவர்களும், பொறுப்பு வகிப்பவர்களும், சீயோனின் நலன்களை கவனிப்பவர்களாகவும், சிலர் அதே இடத்திலும், சிலர் பொதுவான, ஆனால் பரந்த கருத்தின்படியாக அப்படியிருக்கிறார்கள். அப்படியே ஒவ்வொருவரும் தன்னுடைய தாலந்தின்படியும், திறமையின்படியும், மந்தைக்கு ஊழியஞ்செய்யலாம். ஒருவர் தனது தகுதியின்படி, தனது நிலை அனுமதிக்கிறபடி, நற்செய்தி போன்றவைகளைக் கேட்கக்கூடிய காதுள்ளவர்களைக் கண்டுகொண்டு ஒரு சுவிசேஷகனாக, ஆரம்பநிலையில் உள்ளவர்களுக்கு சத்தியத்தைப் பிரசங்கிக்கலாம். இன்னொருவர் அவருக்கு சமுதாயத்தைப் பார்க்கிற விசேஷமான தகுதியிருப்பதால், தனிப்பட்ட முறையில், தனி நபர் என்ற முறையில் ஆண்டவருடைய ஜனங்களின் நலன்களைப் பார்க்கும்படியாக, அவர்களை அவர்களுடைய வீடுகளில் சந்திப்பது, அவர்களை உற்சாகப்படுத்துவது, அவர்களைத் திடப்படுத்துவது, அவர்களை ஐக்கியத்தில் வைத்திருப்பது, ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டுவரும் ஓநாய்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதுபோன்ற காரியங்களின் மூலம் பாஸ்டர் (மேய்ப்பர்) என்ற முறையில் மந்தைக்கு ஊழியஞ்செய்யலாம். "தீர்க்கத்தரிசிகளுக்கும்" ஊழியத்திற்கென அவர்களுக்கு விசேஷமான தகுதியிருக்கிறது.

"தீர்க்கத்தரிசி" என்ற வார்த்தை, பழங்காலங்களில் உபயோகப்படுத்தப்பட்டது போல இன்றைக்குப் பொதுவாக உபயோகப் படுத்தப்படுவதில்லை. ஆனால் அது

வருங்கால காரியங்களை முன்கூட்டியே சொல்லக்கூடிய ஒருவரைக் குறிக்கிறது. இருந்தாலும், தீர்க்கத்தரிசி என்கின்ற வார்த்தையைச் சரியானபடி சொல்ல வேண்டும் என்றால் அது ஒரு சிறந்த பேச்சாளர் அல்லது நாவன்மையுள்ளவரைக் குறிக்கிறது. தரிசனங்களைக் காண்கின்றவரும் அல்லது வெளிப்பாட்டைப் பெறுகிறவரும்கூட ஒரு தீர்க்கத்தரிசியாக இருக்கலாம், அதை அறிவிக்கிறவரும் அப்படிக் கருதப்படலாம். இருந்தாலும் இரண்டுமே துல்லியமாக வித்தியாசமான வைகள். மோசேயையும், ஆரோனையும் எடுத்துக்கொண்டால் மோசேதான் உயர்ந்தவர். ஏனெனில் அவர் திவ்விய பிரதிநிதியாக இருந்தார், ஆனபடியால் தேவன் அவரிடத்தில் சொன்னார்: "பார், உன்னை நான் பார்வோனுக்குத் தேவனாக்கினேன், உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கத்தரிசியாய் இருப்பான்" - பேசுகிறவராக, வாயாக இருப்பான். (யாத்திராகமம் 7:1) ஒரு விதத்தில் அப்போஸ்தலர்களில் பலர் வரப்போகின்ற காரியங்களை முன்கூட்டியே காண்கிறவர்களாக இருந்தார்கள் என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம்; வரப்போகிற காரியங்களைக் குறித்த ஓர் அறிவு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; அவர்கள் அநேகரும் தீர்க்கத்தரிசிகளாகத்தான் இருந்தார்கள் என்று நாம் கூறுகிறோம்; அதாவது அவர்களில் பேதுருவும் பவுலும் சிறந்த பொதுப்பேச்சாளர்களாக அல்லது தீர்க்கத்தரிசிகளாக இருந்தனர். ஆனாலும் அநேக சிறந்த பொதுப்பேச்சாளர்கள் அல்லது தீர்க்கத்தரிசிகள் இருந்தனர் எனப் பார்க்கிறோம், உதாரணமாக பர்னபாவைச் சொல்லலாம். மேலும் "யூதா, சீலா என்பவர்களும் தீர்க்கத்தரிசிகளாக இருந்தபடியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்தி சொன்னார்கள்" (அப்போஸ்தலர் 15:32) என்று எழுதப்பட்டிருக்கிறது.

எந்த ஒரு நபரும் செய்யப்பட வேண்டிய வேலைக்குத் தகுதியற்றவர் என்று தீர்மானிக்கப்படும்போது, அந்த நிலைமைக்கு அவர் விசேஷமான பொருத்தம் இல்லாதவராக இருக்கும்போது, அவர் ஆண்டவரின் நியமனம் பெற்றவர் என்று கருதப்பட வேண்டும் என்பதற்கு வேதாகமத்தில் ஆதாரம் கிடையாது. ஆனால் அதற்குப் பதிலாக, ஒவ்வொரு அங்கமும் தன்னுடைய தாலந்தின்படி, திறமையின்படி மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்ய வேண்டும் என்பது கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்திற்கு ஒரு கடமையாகும். ஒவ்வொருவரும் ஆண்டவர் தனக்கு அளித்துள்ள தாலந்துகளின் உண்மையான மதிப்பின் பிரகாரமாக மாத்திரமேயன்றி, அதற்கு மேலாக "தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்" நிதானத்துடன் நினைக்கும்படி அடக்கமுடன், தாழ்மையுடன் இருக்க வேண்டும். சபையும்கூட அப்படியாகப் பெரியவர்களாக இருக்க எண்ணுபவர்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக அவர்கள் மூப்பராக இருப்பதற்கோ, அல்லது எந்த ஒரு பகுதியிலாவது ஊழியஞ்செய்வதற்குத் தாழ்மை முக்கியமான தகுதிகளில் ஒன்று என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, இரண்டு

சகோதரர்கள் ஒரே அளவு தாலந்துகளை உடையவர்கள்போல் காணப்பட்டால், அவர்களில் ஒருவர் முன்னேற வேண்டும் என்ற எதிர்நோக்குடனும், மற்றவர் தாழ்மையுடனும் எளிமையுடனும் இருக்கும்போது, ஞானமும் தெளிந்த புத்தியும் என்று அழைக்கப்படுகின்ற தேவ ஆவி, ஆண்டவருடைய ஜனங்களுக்கு, தாழ்மையுள்ள சகோதரனை அதிக முக்கியமான ஊழிய ஸ்தானத்தில் வைக்க ஆண்டவர் விரும்புவார் என்பதைக் கற்றுக்கொடுக்கும்.

ஆண்டவருடைய மந்தையில் வெள்ளாடுகளும், வெள்ளாடு போன்ற செம்மறியாடுகளும் முதன்மையான இடத்திற்கு ஆசைப்படுகின்றன; எஜமானனுடைய சத்தத்தை அறிந்துகொள்ளக்கூடிய, அவருடைய ஆவியை அறிந்திருக்கிற, அவருடைய சித்தத்தை செய்யும்படியாக வாஞ்சிக்கிற உண்மையான ஆட்டைவிட, அப்படியாகக் காணப்படுகிற வெள்ளாடுகளையும் வெள்ளாடு போன்ற செம்மறியாடுகளையும் முதன்மையான இடத்தை எடுத்துக்கொள்ளும்படி சுலபமாக அனுமதிப்பதும் சரியானது அல்ல என்று தோன்றுகிறது. எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பது நல்லதுதான், ஆனால் சமாதானத்திற்கென்று ஆண்டவருடைய திருவசனத்தையும், ஆவியையும் உதாசீனப்படுத்துவது நிச்சயமாக தீமையையே விளைவிக்கும். எல்லோரும் செம்மறியாட்டைப் போன்ற சாதுவான சுபாவம் உடையவர்களாய் இருப்பது நல்லதுதான்; ஆனால் செம்மறியாட்டுக்குரிய குணாதிசயமும் தேவையான ஒன்று, அப்படியில்லாவிட்டால் அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்களாக முடியாது; அவர்களுக்கு நல்ல குணாதிசயம் இருந்தால், அவர்கள் பிரதான மேய்ப்பனின் வார்த்தையை நினைவுகூருவார்கள். அவருடைய திருவசனம் சொல்லுகிறது: "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது (அதற்குக் கீழ்ப்படிகின்றன)...... அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது." "அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல் அவனை விட்டோடிப்போம்." (யோவான் 10:5, 27) ஆகவே, ஒவ்வொரு சகோதரனையும் உள்ளூர் சபைக்கோ, அல்லது பொதுச் சபைக்கோ ஒரு மேற்பார்வையாளராக் குவதற்கு முன்பாக அந்தச் சகோதரனின் தூதையும், நடத்தையையும் கவனித்துப் பார்ப்பது ஒவ்வொரு ஆட்டினுடைய கடமையாகும். முதலாவது அவனுக்குச் சபையில் மூப்பராவதற்குத் தகுதி உள்ளதா என்றும், அவன் சுவிசேஷத்தின் அடிப்படை உபதேசத்தில் - பாவநிவாரணம், இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் உண்டான ஈடுபலி ஆகியவற்றில் - தேறினவனா என்றும், அவனுக்கு முழு அர்ப்பணிப்பு இருக்கிறதா என்றும், அவனுடைய தூது, அவனுடைய சகோதரர்கள் அவனுடைய ஊழியம் என்பவைகளைக் குறித்தும் தீர்க்கமாக அறிந்திருக்க வேண்டும். அவர்கள், ஆவியிலும் நன்னெறியிலும் பலவீனமுள்ள எல்லா ஆட்டுக்குட்டிகளின்மேலும் இரக்கமும், அனுதாபமும் உடையவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட குணமில்லாதவர்களை அவர்களுடைய

தலைவர்களாக அல்லது மூப்பர்களாக தெரிந்துகொள்வது திவ்விய ஒழுங்குமுறைக்கு ஊறு விளைவிப்பதாகும். சபையில் ஒரு முக்கிய இடத்திற்கும், அதிகாரத்திற்கும் முயற்சிக்கிற வெள்ளாடுகளுக்கும், ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு வருகிற ஓநாய்களுக்கும் அவர்கள் இரக்கம் காட்டக்கூடாது.

தங்களுடைய இருதயங்களை நிச்சயமாக தேவனுடைய அன்புக்கு நேராக வழிநடத்தாமல், தந்திரமாக தவறான வழியில் கொண்டுசெல்லும் பொன்போன்ற நாக்குடைய (பேச்சுத்திறமையுடைய) ஒருவர் தலைவராக சபையில் இருப்பதைக் காட்டிலும், சபைக்கென ஒரு பொது ஊழியக்காரர்கூட இல்லாதிருப்பது சபைக்கு மிகவும் நல்லது என்று எண்ணப்பட வேண்டும். இப்படிப்பட்டவர்களைக் குறித்து, நம்முடைய ஆண்டவர் முன்கூட்டியே சபையை எச்சரித்திருந்தார். இதைத்தான் அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகிறார். "உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களை தங்களிடத்தில் (தந்திரமாக மற்றவர்களை தன் பக்கமாக) இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் (தவறான வழிக்கு நடத்துகிற உபதேசங்கள்) போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்." அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார், "அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்." (அப்போஸ்தலர் 20:30; 2 பேதுரு 2:2)

இன்று நாம் அதைக் காண்கிறோம். அநேகர் இராஜ்யத்தின் நற்செய்திகளைப் பிரசங்கிக்காமல் தங்களையே பிரசங்கிக்கிறார்கள். அவர்கள் சீடர்களை, ஆண்டவருடைய சரீரமான சபைக்கு ஈர்த்து ஆண்டவருடன் மாத்திரமே இணைத்துவைக்காது, சீடர்களைத் தங்கள் பக்கமாகவும், தங்கள் சபை பிரிவுகளுக்கு நேராகவும் ஈர்க்கிறார்கள். சபையின் எல்லா அங்கங்களும் நேரடியாக ஆண்டவரையே தங்கள் தலைவராக நோக்கும்படி செய்யாமல், அவர்களே சபையின் தலைவர்களாக இருக்க பிரயத்தனம் பண்ணுகிறார்கள். இப்படிபட்டவர்கள் எல்லாரிடமிருந்தும் நாம் விலக வேண்டும்; உண்மையான ஆடு அவர்களுடைய தவறான வழிக்கு எந்த ஆதரவும் கொடுக்கக்கூடாது. இப்படிப்பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். "தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்." (2 தீமோத்தேயு 3:5) அவர்கள் நாட்கள், முறைகள், சடங்காச்சாரங்கள், சபை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் போன்றவைகளைக் கடுமையாகக் கைக்கொள்ளு வார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலர் அவர்கள் மனிதருக்குள் மேன்மையாக எண்ணப்பட்டாலும் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானவர்கள் என்று கூறுகிறார். உண்மையான ஆடு உண்மையான மேய்ப்பனின் சத்தத்தை அறிந்துகொள்ளுவதில் ஜாக்கிரதையாயிருந்து அவரைப் பின்பற்றுவது மாத்திரமல்ல, தங்கள் சுயநலனையே தேடுபவர்களுக்கு உதவிச்செய்யாமலும், உற்சாகப்படுத்தாமலும் இருக்க மாத்திரமல்ல, பின்பற்றாமலும் இருக்க, நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சபையில் மூப்பராக இருக்கத் தகுதியுள்ளவர் என்கிற

நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கிற ஒவ்வொருவரும், இதற்கு முன்பதாகவே, இப்படிப்பட்ட நம்பிக்கையை நிரூபிப்பதற்கு முன்பதாகவே சபைக்கு நன்கு அறிமுகமாயிருக்க வேண்டும். ஆகவேதான் "கற்றுக்குட்டியாக" இருக்கக்கூடாது என்கிறார். ஒரு கற்றுக்குட்டி பெருமிதம் அடைந்து இதனால் ஆண்டவரை விட்டு வழிவிலகவும், சரியான ஆவியின்றியும், இராஜ்யத்திற்குச் செல்லுகின்ற குறுகலான பாதையைவிட்டு வழிவிலகி சபைக்கு ஊறு விளைவிப்பது மாத்திரமல்லாது, தனக்கும் ஊறு விளைவித்துக்கொள்வர்.

அப்போஸ்தலராகிய பவுல், யார் யாரெல்லாம் சபையின் மூப்பர்களாகச் சரியாகத் தெரிந்துக்கொள்ளப்படலாம் என்பதைக் குறித்து வெகு தெளிவான ஆலோசனையைக் கூறுகிறார். (1 தீமோத்தேயு 3:2; 5:17; 1 தெசலோனிக்கேயர் 5:12; யாக்கோபு 5:14) அவர் அவர்களுடைய குணாதிசயம் போன்றவைகள் எப்படிப்பட்டவைகளாக இருக்கவேண்டும் என்பதையும் விளக்கமாகக் கூறுகிறார். இந்த விஷயத்தைக் குறித்து, தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில், (1 தீமோத்தேயு 3:1-7) சற்று வேறுவிதமாக மறுபடியும் கூறுகிறார். இன்னொரு மேற்பார்வையாளராக இருந்த தீத்துவுக்கு அவர் எழுதும்போது சபைக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்து விவரமாகக் கூறுகிறார். (தீத்து 1:5-11) அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த விஷயத்தைக் குறித்து எழுதும்போது, "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும் . . . நான் புத்தி சொல்லுகிறதென்னவெனில், உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும் அவலட்சனமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள்." (1 பேதுரு 5:1-3)

அவர்கள் அந்நியரை உபசரிக்கிறவர்களாகவும், குற்றஞ்சாட்டப் படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், தன் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தனது பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாய் இருக்க வேண்டும்; ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை அவனால் விசாரிக்க முடியாது. அவன் இரு நாக்குள்ளவனாய் இருக்கக்கூடாது; மாத்திரமல்ல, ஏமாற்றுகிறவனாயும் சண்டைபோடுகிறவனாயும் வாக்குவாதம்பண்ணுகிறவனாயும் இருக்கக்கூடாது; சபைக்கு வெளியே இருக்கிறவர்களிடத்திலும் அவன் நன்மதிப்பைப் பெற்றிருக்கவேண்டும்; உலகம் பரிசுத்தவான்களை எப்பொழுதும் நேசிக்கும் அல்லது பாராட்டும் என்று அல்ல, ஆனால் குறைந்தபட்சம் உலகமானது அவர்களுடைய நேர்மையைக் குறித்தும், நீதிமானாய் இருப்பதைக் குறித்தும், ஒழுக்கத்தைக் குறித்தும், உண்மையைக் குறித்தும் இழிவானதொன்றையும் சொல்ல இயலாமல் இருக்கவேண்டும். சபையில் இந்த எண்ணிக்கை அளவில்தான்

மூப்பர்கள் இருக்கவேண்டுமென்று வரையறுக்கப்படவில்லை.

மேற்கூறிய தகுதிகளோடு, ஒரு மூப்பன் போதிக்க சமர்த்துள்ளவனாய் இருக்க வேண்டும். அது எப்படியெனில் அவர் ஓர் ஆசிரியராக, விவரித்துச் சொல்பவராக, திவ்விய திட்டத்தை வியாக்கியானம் பண்ணத் திறமையுள்ளவராக இருந்து, இப்படியாக ஆண்டவருடைய மந்தைக்கு வசனத்திலும், உபதேசத்திலும் உதவிபுரிகிறவராக இருக்க வேண்டும். மூப்பராய் இருப்பதற்கு தாலந்தோ, அல்லது "தீர்க்கத்தரிசி" அல்லது சிறந்த பொதுப்பேச்சாளர் என்கிற தகுதிகள் உள்ளவராக இருக்க வேண்டும் என்பதோ அவசியமில்லை. ஒரு மூப்பருக்குரிய தகுதிகளான கற்றுக்கொடுக்கும் திறமை, போதகத்திறமை, இன்னும் மற்றத் தகுதிகளுடைய அநேகர் அதே சபையில் இருக்கலாம்; இருந்தபோதிலும் அவர்களில் எவருமே ஒரு பொதுப்பேச்சாளருக்குரிய திறமையோ அல்லது திவ்விய திட்டத்தை எடுத்துக்கூறக்கூடிய திறமையோ இல்லாதவர்களாக இருக்கலாம். தேவைப்படுகிற இப்படியான ஊழியக்காரரை எழுப்பும்படியாக ஆண்டவரை நம்ப வேண்டும்; ஒருவருமே கிடைக்காவிட்டால் உண்மையாகவே தேவை உள்ளதா என்கிற சந்தேகம் எழும்பலாம். இங்கே நாம் குறிப்பிட விரும்புகிறதென்னவென்றால், நல்ல விருத்தியடைந்த சபைகள் சிலவற்றில், பொதுப்பேச்சாளருக்கு அதிகமான வாய்ப்பு இருப்பதில்லை. இதினிமித்தமாக இப்படிப்பட்ட இடங்களில் வேதப்பாடங்கள் கட்டாயம் வேண்டும் என்பதற்காக நடத்தப்படாமல் கடமைக்காக நடத்தப் படுகின்றன. வேதாகமம் தெளிவாகக் காட்டுகிறபடி ஆதிசபையில் கூட இது வழக்கமாக இருந்தது. மேலும் எல்லாரும் கூடிவந்தபோது சரீரமான சபையில் தாலந்துகள் பெற்றிருக்கிற பல்வேறு அங்கங்களுக்கு, அவர்களது தாலந்துகளை உபயோகிக்கும்படியாக ஒருவர் பேசவும், மற்றவர் ஜெபிக்கவும், எல்லோருமே பாடாவிட்டாலும், அநேகர் பாடவும் ஒரு தருணம் அளிக்கப்பட்டது. அனுபவம் காட்டுகிறபடி, இந்தவிதமான ஒழுங்கை நன்கு பின்பற்றுகிற ஆண்டவருடைய ஜனம் அதிகமான அளவுக்கு ஆசீர்வாதத்தைப் பெறுவதுடன் மிக உறுதியான குணாதிசயங்களையும் அபிவிருத்திப் பண்ணிக்கொள்ளுகிறார்கள். ஒரு தனி நபர் தன்னுடைய திறமையை நன்றாக உபயோகித்து, எப்படி நன்றாகப் பேசினாலும், அது எவ்வளவு நல்லதாக இருந்தாலும், அது சாதாரணமாக காதினால் கேட்கப்பட்டு, இருதயத்தில் அவ்வளவாக பதியாததுபோல், நன்றாக நடத்தப்பட்ட வேதப்பாட வகுப்பிலும் நிச்சயமாக இருக்கக்கூடும்; ஆகையால் அதில் எல்லோருமே பங்கெடுக்கும்படி உற்சாகப்படுத்தப்படல் வேண்டும்.

மற்ற மூப்பர்கள் சமர்த்தனா இல்லாதபோது, அவர்கள் ஜெபத்திலும், சாட்சிகூறுகிற கூட்டங்களிலும், தங்களுடைய ஆரம்ப நிலையில் இருக்கலாம். ஆண்டவருடைய ஜனங்கள் கூடிவருகின்ற பல்வேறு கூட்டங்களில் இது ஒரு விசேஷஅம்சமாக இருக்க வேண்டும். புத்தி சொல்லுகின்ற தாலந்து தனக்கு இருக்கிறது என்று உணருகிற ஒருவர் அதைச் செயலற்ற விதத்தில் விட்டுவிடாதபடி

உபயோகிக்க வேண்டும். இப்படிச் செய்யாமல் தனக்கு விசேஷமான ஒரு தாலந்து இல்லாதிருக்கும்போது அதை உபயோகிக்கும்படி முயற்சி செய்யவும் கூடாது. அப்போஸ்தலர் கூறுகிறார்: "புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுவதிலும் தரித்திருக்கக்கடவன்." அவன் தன்னுடைய திறமையையும், சேவையையும் அதற்கென்று கொடுக்கட்டும். "போதிக்கிறவன் (விளக்கிச் சொல்லும் திறமையுள்ளவன் - சத்தியத்தை எளிமையாகக் கூறக்கூடியவன்) போதிக்கிறதிலும் தரித்திருக்கக்கடவன்."

பிஷப் அல்லது கண்காணி என்ற வார்த்தைக்கு அதிகமான அர்த்தம் உள்ளது போன்றே போதகர் என்ற வார்த்தைக்கும் உள்ளது. ஒரு மூப்பரைத் தவிர வேறு எவரும் போதகராக, அல்லது மேற்பார்வையாளராக அல்லது மேய்ப்பவராக இருப்பதற்குத் தகுதியுள்ளவரல்ல. ஒரு போதகர் அல்லது மந்தையின் மேய்ப்பர்தான் மந்தையை மேற்பார்வையிடுகிறவர் ஆகும். இந்த இரண்டு வார்த்தைகளுமே ஒரே அர்த்தம் உடையதாக இருக்கின்றன. வேதவாக்கியத்தின்படி கர்த்தராகிய யேகோவாதான் நம்முடைய பெரிய போதகராக அல்லது மேய்ப்பராக இருக்கிறார். (சங்கீதம் 23:1) நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய ஆத்துமாவுக்கும் எல்லா இடத்திலுள்ள மந்தைக்கும் மேய்ப்பராகவும், கண்காணியாகவும் இருக்கிறார். பொதுவான கண்காணிகளும், "பிரயாண ஊழியக்காரர்களும்" பொதுவான மந்தையின் நலனைப் பார்க்கிற மேய்ப்பர்களாக அல்லது போதகர்களாக இருக்கிறார்கள். மேலும், அந்தந்த இடத்திலுள்ள ஒவ்வொரு மூப்பரும் ஒரு போதகராக, மேய்ப்பராக அல்லது கண்காணியாக அவரவரது தகுதிக்கேற்ப இருக்கிறார்கள். அப்படியென்றால் சபையில் உள்ள மூப்பர்கள், முதலாவது மூப்பராய் இருப்பதற்குப் பொதுவான தகுதியுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இரண்டாவதாக, இயற்கையாகவே அவர்களுக்கு இருக்கின்ற விசேஷ தகுதிகள், எப்படிப்பட்ட ஊழியத்தில் ஆண்டவருக்காக அவர்கள் பயன்படுத்தப்படலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். சிலர் சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியத்திலும், சிலர் ஏற்கெனவே சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட ஆடுகளின் மத்தியில் (ஏற்கெனவே அர்ப்பணம் செய்துகொண்டவர்கள் மத்தியில், ஏற்கெனவே மந்தையில் உள்ளவர்கள் மத்தியில்) மேய்ப்பனின் ஊழியத்திலும், சிலர் உள்ளூரிலும், சிலர் வெளியூர் ஊழியத்திலும் ஈடுபடலாம்.

"நன்றாய் விசாரணை செய்கின்ற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராய் எண்ண வேண்டும்" (1 தீமோத்தேயு 5:17, 18) என்று நாம் வாசிக்கின்றோம். இந்த வசனத்தின் வலிமையைக் கருத்தில் கொண்டு, உலகப்பிரகாரமான சபை விசாரணை செய்யும் மூப்பர்கள் என்ற ஒரு வகுப்பினை ஏற்படுத்தியுள்ளது. இது சகோதரர் மத்தியில் சர்வாதிகார முறையில் இல்லாவிடினும்

எல்லா மூப்பர்களுக்கும் ஒரு விசாரணை செய்யும் அதிகாரம் வேண்டும் என்று கோரியிருக்கிறது. இப்படியான "விசாரணை" செய்வது என்பது இந்த விஷயத்தைக் குறித்து வேதாகமத்தில் காணப்படுவதற்கு எல்லாம் எதிர்மாறாக உள்ளது. ஒரு பொதுவான மேற்பார்வையாளர் அல்லது மூப்பர் என்ற ஸ்தானத்தில் உள்ள தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகிறார். "முதிர்வயதுள்ளவர் களைக் கடிந்துகொள்ளாமல் அவனை ஒரு சகோதரனைப் போல பாவித்து புத்தி சொல்லு." "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைப்பண்ணுகிறவனாய் இராமல் எல்லாரிடத்திலும் சாந்த குணமுள்ளவனாயிருக்க வேண்டும்." இங்கே அதிகாரப்பூர்வ விசாரணையோ, அல்லது சர்வாதிகார தோரணையோ நிச்சயமாக அனுமதிக்கப்படவில்லை. மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்படுகின்றவர்களுக்கு முக்கியமான குணாதிசயங்களாக இருக்க வேண்டியவைகள் சாந்தம், நீடியபொறுமை, சகோதர அன்பு, அன்பு ஆகியவைகளாகும். அந்த வார்த்தையின் பிரகாரம் மந்தைக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆகவே அவர்கள் சர்வாதிகாரம் உடையவர்களாயிருந்தால், மந்தைக்கு உள்ள உதாரணம் அவர்கள் எல்லாரும் சர்வாதிகாரம் உடையவர்களாயிருக்க வேண்டும் என்பதுதான். ஆனால் அவர்கள் சாந்தம், நீடியபொறுமை, பொறுமை, தயவு உள்ளவர்களாய், நேசிக்கிறவர்களாய் இருப்பார்கள் என்றால், எல்லோரும் பெற்றுக்கொள்ளுகின்ற உதாரணம் இப்படியாகத்தான் இருக்கும்.

## உதவிக்காரர்கள், ஊழியக்காரர்கள், வேலையாட்கள்

கண்காணி என்கிற வார்த்தை மேற்பார்வையிடுகிறவர் என்றுதான் பொருள் படுகிறது; மேலும், அது ஒரு விதத்திலும் இறுமாப்பாய் ஆளுகிறவர்களையோ அல்லது எஜமானனையோ குறிக்கவில்லை; ஆனாலும் படிப்படியாக மேற்கூறியபடி ஜனங்களால் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுவிட்டது. அதுபோலவே உதவிக்காரர் என்ற வார்த்தையும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது; உதவிக்காரர் என்ற வார்த்தை சரியான அர்த்தத்தின்படி வேலையாள் அல்லது ஊழியக்காரரைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் தன்னையும், தீமோத்தேயுவையும் "தேவ ஊழியக்காரர்" என்கிறார். (2 கொரிந்தியர் 6:4) இங்கே சொல்லப்படுகிற ஊழியக்காரர்கள் என்ற வார்த்தை *diakonos* என்கிற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது, அது வேலையாட்களைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் மறுபடியும் கூறுகிறதாவது: "புது உடன்படிக்கையின் ஊழியக்காரராய் இருக்கும்படி, அவரே எங்களை தகுதியுள்ளவர்களாக்கினார்." (2 கொரிந்தியர் 3:5, 6) இங்கே *diakonos* என்கிற கிரேக்கப்பதம் ஊழியக்காரர்கள் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. அது வேலையாட்களைக் குறிக்கிறது. உண்மையாகவே அப்போஸ்தலர் கூறும்போது, தானும் தீமோத்தேயுவும் தேவனுடைய ஊழியக்காரர்களாய் (வேலையாட்களாய்)

இருந்தோம் என்றும், மேலும் புதிய உடன்படிக்கையின் - புதிய ஏற்பாட்டின் கண்காணிகளாக (வேலையாட்களாய்) இருந்தோம் என்றும் கூறுகிறார். அப்படியென்றால் நாம் பார்க்கும்போது, சபையின் உண்மையான மூப்பர்கள் எல்லோரும் இப்படியாக உதவிக்காரர்களாகவும், தேவனுக்கும், சபைக்கும், சத்தியத்திற்கும் ஊழியக்காரர்களாகவும் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்கள் மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்படவே கூடாது.

நாங்கள் ஆதி சபையில் ஊழியத்தைக் குறித்து எந்தவிதமான வேறுபாடும் இருந்ததில்லை என்கிற யோசனையைக் கொடுக்க விரும்பவில்லை. ஆனால் இதற்கு மாறாகவே இருந்தது. இங்கே நாங்கள் சொல்லுகிற குறிப்பு என்னவெனில், சபையில் மூப்பர்களாக இருந்த அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளும்கூட உதவிக்காரர்களாய் அல்லது வேலையாட்களாய் இருந்தார்கள் என்பதாகும்; "உங்களில் பெரியவனாய் இருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாய் இருக்கக்கடவன்" என்று ஆண்டவர் கூறியபடியே இருந்தார்கள். (மத்தேயு 23:11) ஊழியக்காரரின் குணாதிசயமும், விசுவாசமும் புதுச் சிருஷ்டியின் சபையில் உள்ள எவருக்கும் கனத்தையும், மரியாதையையும் காட்டுகிற அளவுக்கு இருக்க வேண்டும். தாலந்துகள் போன்றவைகளால் தகுதியுள்ளவர்கள் என்று சொல்லக்கூடாத வேலையாட்கள் மூப்பர்கள் என்று அறியப்படும்படிக்கு, சபையில் இருந்தார்கள். அவர்கள் போதக சமர்த்தத்தில், அல்லது அனுபவத்தில் குறைவுபட்டவர்களாய் இருந்தபடியால், சபையில் எந்த நியமனமும் பெறுவதோடுகூட, அப்போஸ்தலர்களும், தீர்க்கத்தரிசிகளும் (போதகர்கள்) அநேக சமயங்களில், சில பேரை அவர்களுடைய வேலையாட்களாக அல்லது உதவியாளர்களாகத் தெரிந்தெடுத்தார்கள். உதாரணமாக, பவுலும், பர்னபாவும் ஒன்றாக இருந்தபோது அவர்கள் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானைச் சிறிது காலத்திற்கு அவர்களுடைய வேலையாளாக அல்லது உதவியாளராக வைத்திருந்தார்கள். மறுபடியும் பர்னபாவும், பவுலும் பிரிந்தபோது பர்னபா யோவானைக் கூட்டிச் சென்றார். பவுலும், சீலாவும் லூக்காவைத் தங்களுடைய உதவியாளராக கூட்டிச் சென்றார்கள். இந்த உதவியாளர்கள் தங்களை அப்போஸ்தலருக்கு சமமாகவோ அல்லது அவர்களைக் காட்டிலும் அதிக தாலந்துகளும், அனுபவங்களும் உள்ளவர்களுக்கு ஊழியத்தில் சமமாக இருப்பதாகவோ எண்ணவில்லை. ஆனால் அவர்களைத் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணி தேவனுக்கும், சத்தியத்திற்கும் ஊழியக்காரர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுடைய வழிநடத்துதலுக்கு உட்பட்டு உதவியாளர்களாக அல்லது வேலையாட்களாக இருக்க கிடைத்த சிலாக்கியத்தில் களிகூர்ந்தார்கள். சபை தனது வேலையாட்கள் அல்லது உதவிக்காரரைத் தெரிந்துகொண்டதுபோல, அப்போஸ்தலர்களுக்கு இப்படி ஓர் ஊழியஞ்செய்வதற்கு அவர்கள் சபையினால் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை, ஏனெனில் அப்போஸ்தலர்கள்

தங்களுக்கு வேண்டியவர்களைத் தாங்களே தெரிந்தெடுத்தார்கள். அது கட்டாயத்தினால் அல்ல, ஆனால் விருப்பத்தின்படி ஆகும். ஒருவேளை யோவானும், லூக்காவும் தங்களுக்கு இருந்த மற்ற எந்த வாய்ப்பைக் காட்டிலும், இப்படியாக ஆண்டவருக்கு நன்றாக ஊழியஞ்செய்ய முடியும் என்று நினைத்திருக்கக்கூடும் என்று நாம் யூகிக்கலாம். ஆகவே, அது அவர்களுடைய சுயவிருப்பத்தின்படியே ஆயிற்று. மாத்திரமல்ல, எவ்விதமான கட்டாயம் இல்லாமல் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஏனெனில் அவர்கள் தங்களுடைய தாலந்துகளை வேறு எந்த வழியிலாவது அதிக உண்மையுடன் உபயோகித்திருக்கலாம் என்று நம்பியிருந்தால், அதே உரிமையுடன் அந்த ஊழியம் வேண்டாம் என்று கூறியிருக்கலாம்.

இருந்தபோதிலும், உதவிக்காரர் என்கிற இந்த வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சரீரமான சபைக்கு உதவியாளராகவும் பிரயோஜன மாகவும் இருந்த ஒரு சகோதர வகுப்பினருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படியே அவர்கள் கனப்படுத்தப்பட்டார்கள்; ஆனால், அவர்கள் மூப்பர் பதவிக்கு மற்றவர்களைப் போன்று அவ்வளவாகத் தகுதி பெற்றிருக்கவில்லை. ஆனாலும், சபையில் ஒரு விசேஷமான ஊழியத்திற்கென்று அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டது அவர்களது நல்ல ஒரு குணாதிசயத்தையும், சத்தியத்தில் அவர்களது விசுவாசத் தையும், ஆண்டவருக்கும் அவருடைய மந்தைக்கும் ஊழியஞ்செய்யும்படியாக அவர்களுக்குள்ள வைராக்கியத்தையும் குறிப்பதாக இருந்தது. இப்படியாக ஆதிக்கால சபையிலுள்ள எளியவர்களுக்கு உணவு போன்றவை ஒழுங்கு செய்யப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் அந்த வேலையைச் செய்தார்கள்; ஆனால், பின்பு சிலர் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற முணுமுணுப்பு எழுந்தபோது, இந்த வேலைக்கெனத் தகுதியான மனுஷரை உங்களுக்குள்ளேயே தெரிந்து கொள்ளுங்கள், எங்களுடைய நேரத்தையும், அறிவையும், தாலந்துகளையும் வேத வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திற்கெனச் செலவழிப்போம் என்று அப்போஸ்தலர்கள் சொன்னபோது, அவர்கள் இந்த வேலையை விசுவாசிகளி டத்தில் ஒப்புவித்தார்கள். (அப்போஸ்தலர் 6:2-5)

ஏழு உதவிக்காரர்கள் தெரிந்துகொள்ளப்பட்டார்கள் என்பது நினைவிருக் கலாம்; அந்த ஏழு பேரில் ஒருவராய் இருந்தவர் மரணப்பரியந்தம் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறபடியாக கனத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது நபரான ஸ்தேவான் ஆகும், பின்னர் இவர் முதலாவது இரத்த சாட்சியானார். ஸ்தேவான் சபையினால் தெரிந்துகொள்ளப்பட்டார் என்பதினிமித்தம், அவர் தனக்குக் கிடைத்த எல்லா தருணங்களிலும் எப்படியாவது வேத வசனத்தைப் போதிப்பதிலேயே கவனமாக இருந்தார். இப்படியாகப் புராதனக் காலத்தில் சபையிலிருந்த முற்றிலுமான சுயாதீனத்தைக் காண்கிறோம். முழுச்சபையானது, சபையின் அங்கமாயிருந்த எவரிடத்திலாவது தாலந்துகள் காணப்பட்டால், அவரை

ஊழியஞ்செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளலாம். ஆனால், அவர் அதை ஏற்றுக்கொண்டபோது அந்த வேண்டுகோள் அவரை ஒருவிதத்திலும் கட்டுப்படுத்தவில்லை, மாத்திரமல்ல அவருக்குக் கிடைக்கிற வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் அவருக்குப் பிடித்தமான வழியில் அவருடைய தாலந்துகளைப் பிரயோகிப்பதைத் தடைப்பண்ணவில்லை. உதவிக்காரராய் இருந்த ஸ்தேவான், பந்திவிசாரிப்பில் உண்மையுள்ளவராய், சபையின் பணம் சம்பந்தமானக் காரியங்கள் போன்றவைகளைக் கவனித்துக்கொண்ட போது, ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டு, வேத வசனத்தை வெளிப்படையாகப் பிரசங்கிக்கும்படியாக, அவருடைய வைராக்கியத்தையும், தாலந்துகளையும் உபயோகிக்கும்படி சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டார். அவருடைய ஊழியம், சகோதரர்கள் அவருடைய திறமையைப் புரிந்துகொள்வதற்கு முன்னரே ஆண்டவர் அவரை சபையில் ஒரு மூப்பராகத் தெரிந்துகொண்டார் என்பதை வெளிப்படுத்தியது. அவர் இன்னும் அதிகக் காலம் ஜீவித்திருந்தால், காலாகாலத்தில் அவர் மூப்பராவதற்கு இருந்தத் தகுதிகளையும், வேத வசனத்தை அவர் விளக்கிச் சொல்லக்கூடிய திறமையுள்ளவர் என்பதையும் அறிந்துகொண்டிருப்பார்கள்.

நாங்கள் இங்கே வற்புறுத்திச் சொல்ல விரும்புவது என்னவெனில், ஒருவர் தன்னுடைய திறமைக்கேற்ப, ஒருவேளை ஒரு சுவிசேஷகராக புதுச் சிருஷ்டியின் சபையினால் நேரடியாக நியமிக்கப்பட்டிருந்தாலும் அல்லது நியமிக்கப்படாதிருந்தாலும் தன்னுடைய தாலந்துகளை தன் விருப்பப்படி உபயோகிக்க ஒவ்வொருவருக்கும் முழுச் சுயாதீனம் இருந்தது என்பதே ஆகும். (சபையினால் இந்த ஊழியத்திற்கென்று தெரிந்தெடுக்கப்பட்டிராவிடில் ஸ்தேவான் சபையில் போதிக்கத் தகுதியுள்ளவராக இருந்திருக்க மாட்டார்). ஒரு தனி நபரின் மனசாட்சிக்கும், தாலந்துகளுக்கும் இருந்த முழுமையான சுதந்திரம், மேலும் தடைப்பண்ணும்படியாக எந்தவிதமான அதிகாரமோ அல்லது கட்டுப்பாடோ இல்லாதிருந்தது, ஆதிக்கால சபையில் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சமாயிருக்கிறது; இதை நாம் வார்த்தையிலும் செய்கையிலும் பின்பற்றுவது மிகவும் நல்லது. சபைக்குத் தகுதியுள்ள, திறமையுள்ள மூப்பர்கள் போதிப்பதற்கும், சுவிசேஷகர்கள் பிரசங்கிக்கவும் தேவைப்படுகிறார்கள். இவர்கள் தேவனுக்கும், சபைக்கும் ஊழியஞ்செய்பவர்கள். அவர்களுடைய ஊழியத்திற்கு ஏற்ப அவர்கள் கனப்படுத்தப்படுகிறார்கள்; மூப்பர்களும், ஊழியக்காரர்களும் வார்த்தையிலும், போதனைகளிலும் ஊழியஞ்செய்வதினால், அவர்களுடைய ஊழியம் இன்னும் சற்று உயர்ந்ததாகக் கருதப்படுகிறது.

## சபையில் போதகராயிருப்பவர்கள்

நாம் இப்போது பார்த்திருக்கிறபடி போதக சமர்த்தனாயிருப்பது சபையில் மூப்பர்களாக அந்த நிலையில் அல்லது ஊழியத்தில் இருப்பதற்குத் தேவையான ஒரு தகுதியாகும். பரிசுத்த பவுலே, தன்னை ஓர் அப்போஸ்தலனாகவும், ஒரு

மூப்பராகவும், வேலையாளாகவும், மாத்திரமல்ல ஒரு போதகராகவும் கூறிக்கொண்டதற்கு நாம் பல்வேறு பகுதிகளை வேதாகமத்திலிருந்து எடுத்துக்கூறலாம். பவுல் போதகராக பின்வருமாறு கூறினார்: "நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசுகிறோம்." (1 கொரிந்தியர் 2:13) அவர் பாஷைகளையோ, கணிதத்தையோ, வானசாஸ்திரத்தையோ அல்லது எந்த விஞ்ஞானத்தையோ கற்றுக்கொடுக்கிற ஆசிரியராக இல்லாமல், ஆண்டவருடைய சுவிசேஷம், அல்லது நற்செய்திகள் குறிப்பிடுகிற ஒரு பெரிய விஞ்ஞானத்தைத் தவிர வேறொன்றையும் கற்றுக்கொடுக்கிறவராக இருந்ததில்லை. இப்பொழுது அப்போஸ்தலரின் மேற்கூறப்பட்ட வார்த்தையிலுள்ள முக்கியத்துவம் இதுதான். இதை ஆண்டவருடைய மக்கள் அனைவரும் உறுதியாக மனதில் வைத்துக்கொள்ளுவது மிகவும் நல்லது. போதிக்கிறவர்கள், பிரசங்கிக்கிறவர்கள் மாத்திரமல்ல, செவிசாய்க்கிறவர்களுமாக இருக்கிறவர்கள்; இவர்கள் மனுஷஞானத்தினால் அல்ல திவ்விய ஞானத்தினாலேயே போதிக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படியாக அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்குப் புத்தி சொல்லும்போது, "திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு" என்கிறார்; (2 தீமோத்தேயு 4:2) "இவைகளை நீ கட்டளையிட்டுப் போதித்துக்கொண்டிரு" என்கிறார்; (1 தீமோத்தேயு 4:11) "இந்தப்படியே போதித்துப் புத்தி சொல்லு" என்கிறார் (1 தீமோத்தேயு 6:2). இதுமாத்திரமல்ல, மேலும், அப்போஸ்தலர் சபையும், மூப்பர்களும்கூட கள்ள உபதேசங்களையும், தத்துவங்களையும் போதிக்கிறவர்களையும், "ஞானமென்று பொய்யாய் பேர்பெற்றிருக்கிற கொள்கைகளை" போதிக்கிறவர்களையும் சபையின் போதகர்கள் என்று அங்கீகரித்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் சிபாரிசு செய்கிறது என்னவெனில், "ஒருவன் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால்" அவனை விட்டுவிலகு, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினால், அவர்களால் உங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டதைத் தவிர வேறொரு சுவிசேஷம் உங்களுக்கு பிரசங்கிக்கப்பட்டால் அதை ஆதரிக்காதீர்கள் என்பதாகும். (1 தீமோத்தேயு 6:3-5; கலாத்தியர் 1:8)

ஆனாலும், தனிப்பட்ட முறையில் மற்றவர்களுக்கு திவ்விய திட்டத்தை எளிமையான முறையில் எடுத்துக்கூறக்கூடியவர்கள் சிலர் இருக்கலாம்; ஆனால் இவர்களுக்கு பேச்சுத்திறமை, பொதுப்பேச்சுத்திறமை, தீர்க்கத்தரிசன வரம் போன்றவை இல்லாதிருக்கலாம். ஆண்டவரைப் பற்றியும், அவருடைய காரியங்களைக் குறித்தும் தனிப்பட்ட விதத்தில் ஒரு வார்த்தையாவது கூறக்கூடிய இப்படிப்பட்டவர்களை அதைரியப்படுத்தக்கூடாது. ஆனால், அதற்கு மாறாக அவர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செவிசாய்க்க ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு ஊழியஞ்செய்யவும், நம்முடைய ஆண்டவரும்,

இராஜாவுமாயிருக்கிறவரின் துதிகளைச் சொல்லி வருமாறும் உற்சாகப்படுத்தப் படல் வேண்டும். மறுபடியும், நாம் "உபதேசித்தலுக்கும், பிரசங்கித்தலுக்கும்" இடையிலுள்ள வித்தியாசத்தைக் காண வேண்டும். (அப்போஸ்தலர் 15:35) பிரசங்கிப்பது என்பது வெளிப்படையாய், பகிரங்கமாய் மற்றவர்கள் மத்தியில் செய்வது; போதிப்பது என்பது, முக்கியமாக ஒரு வேதபாட வகுப்பிலோ அல்லது தனிப்பட்ட சம்பாஷணையின் மூலமாகவோ தனிப்பட்ட விதத்தில் நல்லமுறையில் பொதுவாக செய்யக்கூடிய ஒன்றாகும். மேலும் நல்ல திறமையுள்ள பிரசங்கிமார்கள், பொதுப் பேச்சாளர்கள் அல்லது தீர்க்கத்தரிசிகளும்கூட சில சமயங்களில் தெரிந்துகொள்வது என்னவெனில், ஆழமான தேவகாரியங்களைச் சிறுகூட்டங்களுக்கு எடுத்துச்சொல்லி, அவைகள் அதிகமாக பகிரங்கமான விதத்தில் அல்லாமல் சாதாரணமாக பிரசங்கிக்கப்பட்டு, அதன் மூலம் அவர்களுடைய ஊழியம் தாங்கப்படும்போது அது நன்றாக விருத்தியடைகிறது என்பதாகும்.

சுவிசேஷகர்களுக்குக் கிடைக்கப்பெற்ற வரமானது, சத்தியத்தை ஆராய்ந்து பார்க்கும்படியாக மனிதருடைய மனதையும், இருதயங்களையும் எழுச்சியுறப் பண்ணுவதாகும்; இது ஆதிகால சபையில் இருந்தவர்களிடம் இருந்ததைக் காட்டிலும், தற்போது எல்லோரிடத்திலும் இருக்கக்கூடிய விசேஷமான வரமாகக் காணப்படவில்லை. மேலும் மாறிவிட்ட நிலைமைகள், ஏறத்தாழ இந்த வேலையின் தன்மையையும் மாற்றிவிட்டது; ஜனங்கள் மத்தியில் பொதுவான கல்வியறிவு இருக்கிறதினிமித்தம், அச்சடிக்கப்பட்ட பிரசுரங்கள் மூலமாக அதிக அளவிற்கு சுவிசேஷவேலையைச் செய்ய முடியும் என்பதைக் காண்கிறோம். இந்தக் காலத்தில் இப்படியாக துண்டுபிரதிகளை விநியோகிப்பதிலும், வேதப்பாடத் தொடர்களைக் கொடுப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சுவிசேஷகர்கள் கடந்தகால முறையின்படியல்ல, இந்தக் காலத்து முறைகளின்படி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த வேலைக்கு எதிரான வாக்குவாதமல்ல; அப்படியாகவே அவர்கள், கால்நடையாக அல்லது ஒட்டகங்கள் மூலமாகச் செய்யாமல் நீராவி அல்லது மின்சார சக்தியின் வண்டிகளில் பிரயாணம் செய்கிறார்கள் என்பதும் வாக்குவாதத்திற்குரியதல்ல. சுவிசேஷ ஊழியம் என்பது, சத்தியத்தை - யுகங்களுக்கான திவ்விய திட்டத்தை - தேவனுடைய திவ்விய வார்த்தையை - "மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை" எடுத்துக்கூறுவதாகும். எங்களுடைய கணிப்பின்படி இதைப் போன்று பெரிய பலன்களைத் தருகின்ற வேறு எந்தச் சுவிசேஷ வேலையும் இன்று கிடையாது. இந்த வேலையில் மற்ற விஷயத்தில் நாட்டம் செலுத்தாதபடி, இந்த வேலையையே செய்யும்படியாக தாலந்துப் பெற்ற, தகுதிகளைப் பெற்ற அநேகருண்டு. திராட்சத்தோட்டத்திற்குள் இன்றும் செல்லாத அநேக அறுவடையாட்கள் உண்டு, அவர்களின் சார்பாக தொடர்ந்து நாங்கள், அறுப்புக்கு ஆண்டவர் அவர்களை

அனுப்பும்படியாகவும், இந்தச் சுவிசேஷஊழியத்தில் ஈடுபடும்போது அவர்களுக்குள்ளான சிலாக்கியங்களையும், சந்தர்ப்பங்களையும் அவர்கள் காணச் செய்தருளும் என்றும் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம்.

சமாரியாவிலுள்ள ஜனங்களுக்கு பிலிப்பு தன்னால் இயன்றதை எல்லாம் செய்து முடித்தப்பின்னர், பேதுருவும், யோவானும் அவர்களிடத்திற்கு அனுப்பப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 8:14) ஆகவே சுவிசேஷத்தை எடுத்துச் சொல்லும் நம்முடைய சுவிசேஷகர்கள், அதைக் கேட்கிறவர்களுடைய சுத்தமான மனங்களை எழுப்பிவிட்ட பின்னர், அவர்களை ஆசிரியர்கள் போன்று, ஆண்டவருடைய வழிகளைப் பற்றி இன்னும் அறிந்துகொள்வதற்கு வேதத்தைக் கற்றுக்கொள்ளும்படி வேதபாடங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். ஆண்டவருடைய தூதர்களாக, பிரதிநிதிகளாக பேதுருவும், பவுலும், யாக்கோபும், யோவானும் விசுவாச வீட்டாருக்கு நிருபங்களை எழுதினார்கள்; அதினிமித்தமாக அவருடைய மந்தையை மேய்த்து ஆலோசனையைச் சொல்லி, உற்சாகப்படுத்தினார்கள். ஆகவே, இப்பொழுது சத்திய சுவிசேஷ புத்தகங்கள் தனிப்பட்ட முறையிலும், பரவலாகவும் நண்பர்களைச் சந்திக்கின்றது; அது அவர்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், அவர்களுடைய குணாதிசயங்களை ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலர்களும் ஏற்படுத்திய வழிப்பிரகாரம் பளிங்குப்போன்று ஆக்குவதற்கும் தேடிவருகின்றது.

## அநேகர் போதிக்கச் சாமர்த்தியம் உள்ளவர்களாயிருக்க வேண்டும்

அப்போஸ்தலர் சிலருக்குப் பின்வருமாறு எழுதினார், "காலத்தைப் பார்த்தால் (நீங்கள் சத்தியத்திற்குள் இருந்த காலம்) போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு (ஆண்டவருக்கென ஒரு வைராக்கியத்தில் குறைவுப்பட்டதாலும், உலகப்பிரகாரமான ஓர் ஆவிக்கு உட்பட்டதின் விளைவாகவும்) தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது." (எபிரெயர் 5:12) பொதுவான கருத்தின்படியாக, இது எதைக் குறிக்கிறது என்றால் குறைந்தபட்சம், முழுச்சபையும், முழு ஆசாரியத்துவமும், புதுச் சிருஷ்டியின் அங்கங்கள் எல்லோரும் "அவர்களிடத்தில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து அவர்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கும்படியாக" அவர்களுடைய பிதாவின் வார்த்தையில் தேறினவர்களாக வேண்டும் என்பதையே. (1 பேதுரு 3:15) இப்படியாக நாம் மறுபடியுமாக பார்ப்பது என்னவெனில், வேதாகமத்தைப் போதிப்பது என்பது ஒரு குருமார்களின் வகுப்பினரை மட்டும் சார்ந்ததல்ல, புதுச்சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் இராஜரிக ஆசாரியத்துவத்தின் அங்கமாக, பிரசங்கிக்கும்படியாக "அபிஷேகம் பண்ணப்பட்டிருக்

கிறார்கள்." ஆகவே இதன்படி, ஒவ்வொரு அங்கமும் தன்னுடைய திறமைக்கேற்ப உண்மையாகவும், தெளிவாகவும் செவிசாய்க்க விருப்பம் உள்ளவர்கள் அனைவருக்கும் நற்செய்திகளை எடுத்துச் சொல்லும்படியாக அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இந்த இடத்தில் இன்னொரு அப்போஸ்தலர் ஒரு விசித்திரமான ஒரு காரியத்தைக் கூறுவதைக் காண்கிறோம்.

## சகோதரரே, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக யாக்கோபு 3:1

இது எதைக் குறிக்கிறது? அப்போஸ்தலர், "அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து" என்று கூறுகிறார். கிறிஸ்துவின் சரீரமான சபையில் மேன்மைக்கேதுவான ஒவ்வொரு படியெடுத்து வைத்து முன்வரும்போது, சோதனைகளும் பொறுப்புகளும் அதிகரிக்கின்றன. ஒருவரும் போதகராகக்கூடாது என்று புத்திமதியாகச் சொல்லவில்லை. ஆனால் போதிப்பதற்கான தாலந்து தனக்கு உண்டு என்று தனக்குள் நினைக்கிற ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், தேவனுடைய வாயாக இருக்க எவ்விதத்திலும் முயற்சி எடுத்துக்கொள்ளுவது ஒரு பொறுப்புள்ள காரியம் என்கிறார். அந்தப் பொறுப்பு என்னவெனில் தேவனுடைய திவ்விய குணாதிசயத் தையும், திட்டத்தையும் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் எந்த ஒரு வார்த்தையும் உச்சரிக்கப்படாமல் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படி ஜாக்கிரதையாக இருப்பதினால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாமலும், கேட்கிறவர்களுக்குத் தீமைவிளைவிக்காதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பரத்திலிருந்து வருகின்ற ஞானத்திற்கும், இந்த ஆலோசனைக்கும் கீழ்ப்படிய எல்லோரும் அறிந்து கொள்வார்களென்றால் அது சபைக்கு நல்லது. இப்பொழுது இருக்கிறதைக் காட்டிலும் அதிகக் குறைவான போதனை இருக்கக்கூடும். ஆனால் போதிக்கிறவர்கள் மற்றும் போதிக்கப்படுகிறவர்மேல் வருகின்ற காரியம் என்னவெனில் ஆண்டவருக்கும் அவருடைய சத்தியத்திற்கும் அதிகமான கனத்தைக் காண்பிக்கும்படியாக உணர்வு மாத்திரமல்ல, குழப்பம் உண்டுபண்ணக்கூடிய தவறுகளிலிருந்து இன்னும் அதிகமான விடுதலையையும் கொடுக்கிறது. இதற்கிசைவாக நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகள் குறிப்பிடுகிற வண்ணம் திவ்விய திட்டத்தோடு முற்றுமாக ஒத்துப்போகாத வண்ணம் போதித்த சிலருக்கு இராஜ்யத்தில் ஒரு பங்கு உண்டு; ஆனால் இதன்விளைவாக, இராஜ்யத்தில் அவர்கள் சிறிய அந்தஸ்தையே பெறுவார்கள்; திவ்விய செய்தியைத்தவிர வேறு ஒன்றையும் போதிக்காமலிருக்க அதிகக் கவனம் எடுத்துக்கொண்டிருந்தால் இந்த நிலை வராது. அவருடைய திருவசனம் கூறுவது என்னவென்றால், "ஆகையால், இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான

தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகத்தில் எல்லாரிலும் சிறியவன் எண்ணப்படுவான்." (மத்தேயு 5:19)

## ஒருவனும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை

"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவனும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக."

"நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக் கிறீர்கள்." (1 யோவான் 2:27, 20)

சபையானது கற்றுக்கொள்ளவும், கிருபையிலும் அறிவிலும் வளரவும், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரையொருவர் பலப்படுத்தவும், மேலும் ஆண்டவர் அப்போஸ்தலர்கள், தீர்க்கத்தரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள் போன்றவர்களை எழும்பப்பண்ணுவார் என்று எதிர்ப்பார்க்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிற வேத பகுதிகள் அநேகம் இருக்க, அப்போஸ்தலராகிய யாக்கோபின் இந்த அறிக்கை, சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படும்வரை மிக விசித்திரமானது போலத் தோன்றுகிறது. இது ஒரு சிலருக்கு ஒரு தடைக்கல் லாயிருந்திருக்கிறது, ஆனாலும் ஆண்டவரோடு நல்ல இருதய நோக்கோடு இருந்தவர்களின் இருதயங்கள் இதனால் பாதிக்கப்படும்படி ஆண்டவர் அனுமதிக்கவில்லை என்பதை நாம் நிச்சயமாக அறிந்துகொள்ளலாம். இந்த வேதப்பகுதி குறிப்பிடுவது வார்த்தைக்கு வார்த்தை, கட்டளைக்குக் கட்டளை எதிர்மாறாக இருப்பதுபோல் தோன்றுகிறது, இதைக்காட்டிலும் வாழ்க்கையின் அனுபவங்களும்கூடத் தாழ்மையான மனதுள்ள எந்த மனுஷனையும், இந்தப் பகுதி மொழிபெயர்க்கப்பட்ட விதத்தில் ஒன்று தவறாக இருக்கிறது, அல்லது இந்தப் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கருத்து தவறாக இருக்கிறது என்று மெய்ப்பித்துக்காட்டப் போதுமானதாயிருக்கிறது. இது தீமை விளைவித்தது என்று சொல்பவர்கள் பொதுவாக தன்னைக்குறித்து அதிகமாக யோசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய தற்பெருமை, ஆண்டவர் தங்களை மற்ற எல்லா புதுச் சிருஷ்டிகளைக் காட்டிலும், வித்தியாசமாக நடத்த வேண்டுமென்று யோசிக்கும்படி வழிநடத்துகிறது. ஆனாலும் இப்படிப்பட்டவர்கள், வேதாகமம் பொதுவாகப் போதிக்கின்ற சபையானது ஒரே சரீரமாயிருக்கிறது, அநேக அவயவங்கள் அதோடு இணைக்கப்பட்டுள்ளன; அதற்குக் கிடைக்கப்பெறுகின்ற ஊட்டச் சத்தானது, அதன் அங்கங்கள் ஊட்டம் பெறும்படியாகவும், பலம்பெறும்படியாகவும், ஒவ்வொரு அங்கத்திற்கும் மற்ற அங்கங்கள் மூலமாக அல்லது ஒன்றாக இணைந்து எடுத்துச் செல்லப்படுகின்றது என்ற கருத்துக்கு

முற்றிலும் மாறுபட்ட கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். இப்படியாக ஆண்டவர், சரீரமான சபையில் எந்தப் பிரிவினையும் இல்லாதிருக்கட்டும் என்கிற நோக்கோடு அவருடைய ஜனங்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்க வேண்டும் என்று எண்ணினார். இப்படியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சபைக்கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள் என்றும், ஒவ்வொரு இடத்திலும், ஒரு சிறு எண்ணிக்கையாகிலும், அவருடைய நாமத்தில் இரண்டு அல்லது மூன்று பேராக, சரீரமான சபைக்கூடுவதில் அவர் சந்தோஷமுள்ளவராக இருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலர்கள் மூலம் புத்திமதி கூறியுள்ளார்.

இந்தப் பகுதியை ஆராய்ந்துபார்க்கும்போது, அவருடைய நாட்களில் இருந்த ஒரு தவறை, சத்தியத்தின் பெயரில், கிறிஸ்தவத்தின் பெயரில், ஆண்டவருக்கு சீஷத்துவம் என்ற பெயரில் வெளியாக்கப்பட்ட எல்லாவற்றையும் ஒன்றுமில்லாத தாக்கிக் கொண்டிருந்தப் பெரிய தவறை மறுத்துக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்தத் தவறான முறை உண்மையான சபைக்கோ அல்லது அதன் உபதேசத்திற்கோ எவ்விதத்திலும் பங்குள்ளதாக இருக்கக்கூடாது என்றும், ஆனால் அதற்கு மாறாக அந்திகிறிஸ்து அல்லது கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள், அவருடைய நாமத்தை உபயோகித்துக்கொண்டே, இப்படியாகத் தவறான வழியில் சென்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். இப்படிப்பட்டவர்களைக் குறித்து அவர் கூறும்போது, "அவர்கள் நம்முடையவர்களாயிராதபடியால் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், (ஒன்று அவர்கள் ஒருபோதும் உண்மையான கிறிஸ்தவர்களாக இருந்ததில்லை, இல்லையென்றால் இப்படிப்பட்டவர்களாக இல்லாமல் போய்விட்டார்கள்) அவர்கள் நம்முடையவர்களாக இருந்திருந்தால் நம்மோடு தரித்திருப்பார்கள் என்கிறார்." (1 யோவான் 2:19) மேசியாவைக் குறித்ததான தீர்க்கத்தரிசனங்கள் எல்லாம் வெறும் உவமைகள்தான், மனுக்குலம் மூலமாக அவைகள் ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்களுடைய இந்தத் தவறைச் சுட்டிக்காட்ட, இது தேவ குமாரன் மாம்சமானார், அவருடைய ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியால் மேசியாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு நம்மை மீட்டார் என்று சுவிசேஷம் அறிவிப்பதை முற்றிலுமாக மறுப்பதாகும் என்று அறிவித்தார்.

அப்போஸ்தலருடைய எண்ணம் என்னவெனில், கிறிஸ்தவர்களான வர்களும், குறைந்த அளவிற்காவது திவ்விய திட்டத்தைப் புரிந்து கொண்டவர்களும், முதலாவது, அவர்கள் எல்லோரும் முன்பு பாவிகளாக இருந்தார்கள் என்பதையும், ஓர் இரட்சகர் அவர்களுக்குத் தேவைப்பட்டார் என்பதையும் கருத்தில் கொண்டுவர வேண்டும்; இரண்டாவதாக, அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசுவானவர், தம்முடைய சொந்த ஜீவனையே பலியாகச் செலுத்தி அவர்களை மீட்டுக்கொண்டார் என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலர் மேலும் கூறும்போது எந்த மனிதனும் இந்த அடிப்படைச் சத்தியத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை என்கிறார். மேலும், வேதாகமத்தின்படி கிறிஸ்து அவர்களுடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதும், அவர்களை நீதிமான்களாக்கும்படி மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்பதும், நாம் நீதிமானாக்கப்படுதலும், அதன் விளைவாக பரிசுத்தமாக்கப்படுதலும் மகிமையின் நம்பிக்கையும், எல்லாமுமே அவர்கள் சார்பில் செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் பலியினாலும், அதற்கான கிரயத்தினாலும் வருகின்றது என்கிற, கிறிஸ்துவத்தின் இந்த அடிப்படைக் காரியங்களையும் அறிந்துகொள்ளாமல் கிறிஸ்தவர்களாக இருக்கவே முடியாது என்கிறார். குமாரன் வெளிப்படுவதற்கு முன்பாக, குமாரன்மேல் விசுவாசம் வைக்காமல் பிதாவை நம்பவும் அவர்மேல் விசுவாசம் வைக்கவும் சாத்தியம் இருந்தாலும்கூட, ஆனால் இப்பொழுது குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையும் மறுதலிக்கிறான் என்றும், அதே வேளையில் ஒருவரும் பிதாவையும், பிதாவே மையமாயிருக்கிற, அவரால் நிறைவேற்றப்படுகிற அவரது திட்டத்தையும் அறிக்கை செய்யாமல் குமாரனை அறிக்கை செய்ய முடியாது என்றும் கூறுகிறார்.

ஆகவே இன்றைக்கு அப்போஸ்தலர் என்ன கூறினார் என்பதைச் சரியாகப் பார்க்க முடியும்; பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட எவனும் முதலாவதாக ஆண்டவராகிய இயேசுவில் ஒரு விசுவாசியாக இருந்திருக்க வேண்டும்; அதாவது அவர் பிதாவின் ஒரே பேறான குமாரன் என்றும், அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்றும், அவர் பரிசுத்தராயிருந்தார் என்றும், குற்றமற்றவராக, பாவிகளிடத்தில் விலகினவராயிருந்தார் என்றும், நமக்காகத் தம்மையே ஈடு பலியாகக் கொடுத்தார் என்றும், அவருடைய பலி பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும், மகிமையான இராஜாவாகவும் மீட்பராகவும் இருக்கும்படியாக அவருடைய உயிர்த்தெழுதல் உறுதிப்பண்ணிற்று என்றும் விசுவாசிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த விசுவாசம் இல்லாமல் ஒருவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க முடியாது. இப்படியாயிருக்க, அபிஷேகம் உடைய ஒருவருக்கு எந்த மனிதனும் இயேசு தேவ குமாரனாக இருந்தாரா இல்லையா என்ற அடிப்படைக் கேள்வியை மேற்கொண்டு விவாதிப்பதில் நேரத்தை வீணாக்கக்கூடாது; மாத்திரமல்ல, அவர் மீட்பராக இருந்தாரா இல்லையா என்பதையும், தேவனுடைய ஏற்ற காலத்தில், வேதாகமத்தின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகின்ற அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாக அவர் இருந்தாரா இல்லையா என்பதையும் விவாதிப்பதில் நேரத்தை வீணாக்கக்கூடாது. “நீங்கள் அவரில் நிலைத்திருக்க வேண்டும் என்று அது கற்பித்தது போன்று” நாம் பெற்றிருக்கின்ற அதே அபிஷேகம் நம்மில் நிலைத்திருந்தால், இந்தக் காரியங்களில் உள்ள சத்தியத்தை நமக்கு விளக்கும். திராட்சச் செடியாகிய அவரில் நிலைத்திராதவர்களெல்லாம் வெட்டி எறியப்பட்ட

கொடிபோன்று இருக்கிறார்கள், நிச்சயமாக வாடிப்போவார்கள்; அவரில் நிலைத்திருக்கிறவர்களெல்லாம், நிச்சயமாகவே அவருடைய ஆவியில் நிலைத்திருப்பார்கள், அவரை அவர்கள் மறுதலிக்க முடியாது.

"நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்." யூத யுகத்தில் பரிசுத்த ஆவி பரிசுத்த எண்ணெய்க்கு ஒப்பிடப்பட்டிருந்தது; அது பிரதான ஆசாரியனின் தலையின்மேல் ஊற்றப்பட்டபோது சரீரம் முழுதும் வழிந்தோடியது. ஆகவே கிறிஸ்துவின் சரீரமான சபையில் உள்ளவர்களெல்லாம் அபிஷேகத்திற்குக் கீழாக இருக்கிறார்கள், ஆவியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருக்கிறார்கள்; மேலும் ஆண்டவருடைய ஆவி எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் அது ஊற்றப்படக் கூடியதாக, மிருதுவாக வழவழப்பாக்குகிறது. அது எல்லா மனிதரோடும் கூடியவரை சமாதானமாக இருக்கும் தன்மையுள்ளது, நேர்மை அனுமதிக்கும் வரம்பிற்கு உண்மையாயிருக்கும்; விரோதத்திற்கும், கோபத்திற்கும், பொறாமைக்கும், எரிச்சலுக்கும், சச்சரவுக்கும் எதிராக இருக்கும். அதன் ஆதிக்கத்திற்குக் கீழாக இருப்பவர்கள், ஆண்டவரால் போதிக்கப்பட சந்தோஷப்படுகிறவர்களாக இருப்பார்கள், மாத்திரமல்ல அவருடைய திட்டத்தோடும் வெளிப்பாடுகளோடும் வாக்குவாதம் பண்ணாமல் எளிதில் அவைகளோடு ஒத்துப்போவார்கள்; இதன் விளைவாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இணக்கம் - அபிஷேகம், அமைதி, சமாதானம், மகிழ்ச்சி, பரிசுத்த மனம் ஆகியவற்றை அடைவார்கள்.

இந்த வார்த்தையின் பிரகாரம் ஆண்டவருடைய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள், அவர்களுடைய இருதயங்களில் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், ஒற்றுமையையும் கொண்டு வருவதோடு, ஆண்டவர் அவர்களை நடத்தியதால் இவைகளை அவர்கள் பெற்றார்கள் என்று அறிந்து, ஆண்டவராகிய இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து அவரை அபிஷேகம் பெற்றவராக ஏற்றுக்கொண்டபடியால் இவைகள் அவர்களுக்குக் கிடைத்தன என்றும் அறிந்திருக்கிறார்கள். ஆகவே இந்த அபிஷேகம் அவர்களுக்கு ஓர் அடையாளமாக மாத்திரமல்லாது ஓரளவிற்கு, அவர்கள் கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக இருக்கிறார்கள் என்பதற்கு மற்றவர்களுக்கும் அடையாளமாக இருக்கிறது. இந்தச் சமாதானம், சந்தோஷம் இல்லாதவர்கள், தங்கள் இருதயங்களில் விரோதங்கள், எரிச்சல், சண்டைச்சச்சரவுகள், பெருமை, வாக்குவாதம், தர்க்கம் ஆகியவைகளால் நிறையப்பண்ணியிருக்கிறவர்கள், நிச்சயமாகவே அபிஷேகத்தின் அடையாளத்திலும் ஆண்டவருடைய ஆவியோடு வருகின்ற இணக்கத்திலும், அமைதிதன்மையிலும் குறைவுபட்டிருப்பார்கள். நாம் எல்லோரும் ஒன்றுபோலில்லை, உண்மைதான் சிலரில் இருப்பதைப் போன்று மற்றவர்களின் காரியங்கள் வெளிப்புறமாக அமைதிதன்மை அதி துரிதமாக வெளிப்படுவதில்லை, ஆனால் கிறிஸ்தவ அனுபவத்தின் வெகு ஆரம்ப நிலையிலே,

இந்த அமைதிதன்மை இருதயத்தில் இருக்க வேண்டும். இது நாம் இயேசுவோடு இருந்திருக்கிறோம், அவரில் கற்றறிந்து அவருடைய ஆவியைப் பெற்றிருக்கிறோம் என்பதற்கு ஓர் அடையாளமாக இருக்கிறது; இதன்பின் கூடிய சீக்கிரத்திலே நம்முடைய அனுதின வாழ்க்கையிலே மற்றவர்கள் காணக்கூடியதாக இருக்க வேண்டும்.

அப்படியென்றால் நாம், போதகர்கள் இருக்க வேண்டியதின் அவசியத்தையும், அவர்கள் மூலமாக ஆண்டவருடைய மனதை அறிந்து கொள்ளுவதற்கும் ஆண்டவருடைய திருவசனம் பொதுவாகக் கூறுகிறபடி, வேதம் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்று காண்கிறோம். ஆண்டவர் போதகர்களைத்தான் சார்ந்து இருக்கிறார் என்று நாம் கூறவில்லை; மாத்திரமல்ல அவரால் கட்டளைப் பிறப்பிக்க, பக்திவிருத்தி அடையப்பண்ண, புதுச் சிருஷ்டியின் அங்கங்களை வேறுவழியில் அல்லது வேறு செயல் முறைப்படி உயர்த்த முடியாதென்றும் நாம் கூறவில்லை; ஆனால் போதிக்கவும் கிறிஸ்துவின் சரீரமான சபையை எழுப்பப்பண்ணவும், இது அவருடைய வழி, செயல்முறை என்று அவருடைய திருவசனம் கூறுகின்றது. இதன்படியாக சரீரமான சபையில் பிரிவினை கிடையாது, ஒவ்வொரு அங்கமும் மற்றவர்களுக்காக இரங்கவும், ஒவ்வொரு அங்கமும் மற்ற அங்கத்திற்கு உதவி செய்யவும், ஒத்துழைக்கவும் செய்கின்றது.

இந்தப் போதகர்கள் தவறு இழைக்காதவர்கள் என்று நாம் எண்ணக்கூடாது என்பதை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம், ஆனால் அவர்களுடைய வார்த்தைகள் திவ்விய திட்ட அழைப்பிற்கு ஏற்ப இருக்கிறதா என்று எடைப் போட்டு, அளந்து பார்க்க வேண்டும். அவைகள் ஆண்டவர், மற்றும் அப்போஸ்தலர், பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் ஆகியோரின் வார்த்தைகளின்படி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவர்கள் அந்த வார்த்தைகளை யுகத்தின் முடிவு வந்திருக்கிற நம்முடைய எச்சரிப்புக்கெனப் பரிசுத்த ஆவியின் உந்துதலினால் பேசினார்கள், எழுதினார்கள். இப்பொழுது அப்போஸ்தலரின் வார்த்தைக்கு உங்கள் கவனத்தை சாய்க்க வேண்டும் என்று கேட்கிறோம். "திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்" (கலாத்தியர் 6:6) என்று அவர் கூறினார்.

## உபதேசிக்கிறவனும், உபதேசிக்கப்படுகிறவனும்

இந்த வேத பகுதி, மற்ற எல்லாப் பகுதிகளோடும் ஒத்திருப்பதோடு தேவன் தம்முடைய ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் உபதேசிக்க வேண்டும் என்பதாக வடிவமைத்துள்ளார் என்பதைக் காட்டுகிறது; மேலும் அவர் மந்தையில் உள்ள மிக எளிமையானவனும் தனக்குள்ளாகவே சிந்தனை செய்து இப்படியாக தன் சொந்த விசுவாசத்தையும், தன் சொந்த குணநலனையும் அபிவிருத்தி பண்ண வேண்டும்

என்பதைக் காட்டுகிறது. அந்தோ பரிதாபம், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிறவர்கள் மத்தியில் இந்த முக்கியமான விஷயம் பொதுவாக கவனிக்கப்படுவதில்லை. வேதாகமம் உபதேசிக்கிறவனையும், மாணாக்கர் களையும் அங்கீகரிக்கின்றது. ஆனால் மாணாக்கர்கள் தாங்கள் விவாதிக்கின்ற பொருளைக் குறித்து தங்கள் கவனத்திற்கு வருகின்ற எந்தவொரு அல்லது எல்லா காரியங்களையும் உபதேசிப்பவருக்கு தன்னிச்சையாக எடுத்துக்கூற சுயாதீனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனாலும் தானே உபதேசியராக வேண்டும் என்ற வாஞ்சையோடு அல்ல, ஆனாலும் ஒரு புத்திசாலியான மாணவனாக, ஒரு மூத்த சகோதரனுக்கு எடுத்துச் சொல்வது போல் சொல்ல வேண்டும்; அவர்கள் இயந்திரம் போன்று இருக்கக்கூடாது; மாத்திரமல்ல எடுத்துக்கூறவும் பயந்திருக்கக்கூடாது; ஆனால் கேள்விகள் கேட்பதின் மூலம் வேதாகமம் தவறான முறையில் அப்பியாசப்படுத்தப்படுவது போன்ற உணர்வு தங்களுக்கு வரும்போது, கிறிஸ்துவின் சரீரமான சபையையும் அவருடைய உபதேசங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கான தங்கள் பங்கைச் செய்ய வேண்டும். இதன்படி அவர்கள், குற்றம் இருப்பின் கண்டுபிடிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் இப்படிச் செய்வதினால் அதைரியப்படாமல் உபதேசம் பண்ணுபவரின் வியாக்கியானங் களைக் குறித்து கேள்வி கேட்கக்கூடாது, உபதேசியாரை கேலி செய்யக் கூடாது என்று மற்றவர்கள் கூறினாலும், அதற்கு மாறாக அவர்கள் எடுத்துரைக்க வேண்டும், குற்றம் இருந்தால் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும்.

இருந்தாலும், ஆண்டவர் பெருமளவில் குற்றம் காணும் இயல்புள்ள ஆவியையோ, சண்டைபோடுகிற அல்லது குற்றம் கண்டுபிடிக்கிற தன்மையையோ ஊக்கவிக்க விருப்பமுள்ளவர் என்று நினைத்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட ஓர் ஆவி பரிசுத்த ஆவிக்கு முற்றிலும் எதிர்மாறானது; அதுமாத்திரமல்ல, அது மிகவும் அபாயகரமானதும் கூட. ஏனெனில் வாக்குவாதம் பண்ண வேண்டும் என்ற நோக்குடன் யாராவது ஒரு மிகைப்படுத்தப்பட்ட அல்லது உத்தேசமான விஷயத்தை, அவரால் உண்மையானது என்று நம்பமுடியாத விஷயத்தை, அவருக்கு எதிராக இருப்பவரைக் குழம்பப்பண்ண வேண்டும் அல்லது ஒரு விவாதம் எழுப்ப வேண்டும் என்பது போன்ற ஒரு நோக்குடன் மாத்திரம் வருவாரானால் அவர் தனக்குத் தீமைவிளைவித்துக்கொள்வது மாத்திரமல்ல, இப்படிப்பட்ட ஒரு முறையால், அவர் மற்றவர்களுக்கும் தீங்கு உண்டுபண்ணுவார் என்று நிச்சயமாகவே நாம் நம்பலாம். சத்தியத்தில் நேர்மை அதில் முன்னேறுவதற்கு ஒரு முக்கியமான விஷயமாகும். ஆனால் விளையாட்டுக்கென அல்லது வேறு எந்தக் காரணத்திற்காகவாவது ஒருவர் சத்தியம் என்று எண்ணுவதை எதிர்ப்பதும், மேலும் ஒருவர் தவறு என்று எண்ணுவதைத் தற்காலிகமாகக்கூட ஆதரிப்பதும் நிச்சயமாகவே ஆண்டவருக்கு அருவருப்பாய் இருக்கும், மாத்திரமல்ல அதற்கான தண்டனையையும் கொண்டுவரும். ஐயோ! எத்தனைபேர் சத்தியம் என்று தாங்கள் அறிந்திருந்த ஒரு

நிலைக்கு எதிராக "எதைச் செய்யலாம்" என்று முயற்சித்து, இப்படியான முறையைப் பின்பற்றினபடியால், சிக்குண்டிருக்கிறார்கள். முற்றிலுமாக அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள், மேலும் குருட்டாட்டத்தில் சிக்குண்டிருக்கிறார்கள். ஆண்டவருக்கு அடுத்தப்படியாக, முழு உலகத்திலும் சத்தியம் என்பது மிகவும் விலையேறப்பெற்றதொன்றாகும்; அது அசட்டைப்பண்ணப்படக்கூடாது; அதோடு விளையாடக்கூடாது, அதோடுக்கூட யாரெல்லாம் இப்படிச் செய்கிறார்களோ அவர்கள் எல்லாரும் தங்களுக்குத் தீமையைத்தான் வரவழைத்துக்கொள்வார்கள். (2 தெசலோனிக்கேயர் 2:10, 11-ஐ பார்க்க)

"செய்தி கொடுத்தல்" என்கிற வார்த்தை மிகவும் விசாலமான பொருள் உடையது என்பதைக் கூறுவது நல்லது. அது ஒருவரின் சிந்தனைகள், உள்ளுணர்வுகள் போன்றவைகளை மாத்திரம் உள்ளடக்கியதல்ல, ஆனால் உபதேசிக்கப்படுகிறவர், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுகிறவர், உபதேசம் பண்ணுகிறவர்களுக்குச் சாதகமாக எந்த ஒரு வழியிலாவது அதைத் தெரியப்படுத்த சந்தோஷமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; அவர்களுடைய தாலந்துகள், முயற்சிகள் ஆகியவைகளினிமித்தம் ஆண்டவருக்கும், சகோதரருக்கும், சத்தியத்திற்கும் கனிக்கொடுப்பதின் மூலம் தெரியப்படுத்தலாம். புதுச் சிருஷ்டியின் மிக அடிப்படையான பரிசுத்த ஒழுங்குமுறை இப்படியாக இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பநிலையிலேயே ஒவ்வொருவரும், "வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்" என்ற அவர்களது ஆண்டவரின் வார்த்தைகளின் அர்த்தத்தைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே நல்ல உண்மையுள்ள இருதயங்களில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட அளவின்படி, பூலோக நன்மைகளிலிருந்து, சத்தியத்தின் ஊழியத்திற்குக் கொடுப்பதற்குக் கொடுக்கும் ஆவியுள்ளவர்கள் சந்தோஷமாகக் கொடுக்கிறார்கள். எப்படிக் கொடுக்க வேண்டும், கொடுப்பதற்கு வேண்டிய ஞானம் பற்றியவைகளை, பின்னர் இன்னொரு தலைப்பின் கீழ்ப் பார்க்கலாம்.

## சபையில் ஸ்திரீயின் பங்கு

இந்தப் பொருளைப் பொறுத்த வரை திவ்விய திட்டத்தில் புருஷனுக்கும் ஸ்திரீக்கும் உள்ள பொதுவான உறவை ஆராய்ந்து பார்த்தப் பின்னர்தான் இதை நன்கு கவனிக்க முடியும். ஆனால் ஒரு முக்கியமான கருத்தின்படி, இதைக் கூறுவதற்கு இது தகுதியான இடமாக இருக்கிறது. இதை ஆமோதிக்கிற மற்றக் கருத்துக்கள், பின்னால் கூறப்பட்டுள்ளன, அவைகள் இப்பொழுது நாம் கூறுவதற்கு ஆதரவு அளிப்பதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

புதுச் சிருஷ்டியாகிய அவரது சபையைத் தெரிந்தெடுப்பதில், ஆண், பெண் என்ற பாகுபாடு ஆண்டவரால் புறக்ககணிக்கப்பட்டது என்பது மிகத் தெளிவாகப்

புரிகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டிருக்கிற "ஒரே சரீரமான" சபையின் அங்கங்களாகும்படி ஆண், பெண் இருபாலரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஆகவே "அவரோடு பாடுகளைச் சகித்தால் அவரோடு ஆளுகைச் செய்வோம்" என்ற பொதுவான நிலையின்படி, ஆண், பெண் இருபாலரும் ஒன்றுபோல முதலாம் உயிர்த்தெழுதலிலும் அதன் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் ஒரு பங்கைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இருபாலருமே நம்முடைய ஆண்டவராலும், அப்போஸ்தலர்களாலும் மதிப்புக்குரிய விதத்தில், உற்சாகமான வார்த்தைகளால் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, குணாதிசயத்திலும் சுவிசேஷ ஊழியத்திலும் ஸ்திரீயின்மேல் வைத்த எல்லை வரம்பு, தடை எல்லாம் மாம்சத்தில் அவள் இருக்கும் இந்தக் காலத்திற்கு மட்டும் உரித்தாகும் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். மேலும் ஆண்களுக்குத்தான் முன்னுரிமை அளித்தார் என்று எண்ணாமல் எந்த ஒரு காரணத்திற்காக என்று நாம் பார்க்க வேண்டும். நாம் இருபாலருக்கும் இடையிலுள்ள பாகுபாடு ஒரு நிழலாக அல்லது உண்மையான முறையில் உள்ளதா என்பதைப் பார்க்க முயற்சி செய்வோம். ஏனெனில் மனுஷன் சபைக்குத் தலையாயிருக்கிற கிறிஸ்து இயேசுவுக்கு ஒப்பாகவும், அதேவேளையில் ஸ்திரீ, திவ்விய நியமனத்தின்படியான தலைக்குக் கீழாக இருக்கிற மணவாட்டிக்கு, சபைக்கு ஒப்பாகவும் கூறப்பட்டுள்ளது.

நம்முடைய ஆண்டவர் அவருடைய தாயாரிடத்திலும், மார்த்தாள், மரியாள் மற்றும் "தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து கொண்டு வந்த கனத்துக்குரிய மற்ற ஸ்திரீகளிடத்திலும்" வைத்த அன்பு, வேத வசனங்களிலிருந்து விளங்குவது மாத்திரமின்றி, அவர்களிடத்தில் "அன்பாயிருந்தார்" என்கிற நேரடியான அறிக்கையிலிருந்தும் விளங்குகின்றது. (யோவான் 11:5) இருந்தபோதிலும், அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும், பின்னர் எழுபது பேரையும் தெரிந்துகொண்டபோது அவர்களில் ஸ்திரீ யாரையும் சேர்க்கவில்லை. இது கவனக்குறைவால் நடந்தது என்று எடுத்துக்கொள்ள முடியாது; அது அப்படியாக கவனக்குறைவால் இல்லாததுபோன்று, கடந்த பதினாறு நூற்றாண்டுகள் வரை பொதுவான ஊழியங்களைப் பொறுத்தவரை லேவி கோத்திரத்தாரின் ஸ்திரீகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். இல்லையென்றால் நம்முடைய ஆண்டவருடைய நண்பர்களின் குடும்பத்தின் ஸ்திரீகள் அவரால் உபயோகப்படுத்தும்படி போதிய கல்வியறிவு பெற்றிருக்கவில்லை என்றும் எண்ண முடியாது; ஏனெனில், தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் குறித்து வேதத்தில் "அவர்கள் பேதமையுள்ளவர்களென்றும் படிப்பறியாதவர்களென்றும்" எழுதப்பட்டுள்ளது. ஆகவே "சகோதர, சகோதரிகள்" மத்தியிலிருந்து ஆண்கள் மட்டுமே விசேஷமான பொதுவான ஊழியக்காரராயிருக்கும்படியாகவும்,

சுவிசேஷத்தின் தூதுவர்களாக இருக்கும்படியாகவும் திவ்விய திட்டத்தின்படி தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்று முடிவு செய்ய வேண்டும். இங்கே புரிந்து கொள்ளப்பட வேண்டியது என்னவெனில், இந்தத் திவ்விய ஒழுங்கு முறையானது சத்துருவின் மாபெரும் திட்டத்திற்கு மாறானது; சத்துரு எப்பொழுதுமே, இருபாலரையுமே தன்னுடைய கருவிகளாக உபயோகப்படுத்த ஆயத்தமாயிருந்தாலும், அவன் ஸ்திரீயானவள் தன்னுடைய மிகச் சிறந்த பிரதிநிதியாக இருப்பதைக் கண்டு கொண்டான்.

முதலாவது ஸ்திரீ சாத்தானுடைய முதலாவது பிரதிநிதியாக இருந்தாள்; முதலாவது மனிதனை தவறான வழியில் நடத்துவதில் வெற்றியுள்ளவளாக இருந்து, முழு உலகத்தையும் பாவத்திற்குள்ளும், மரணத்திற்குள்ளும் தள்ளினாள். கடந்தகாலத்தில் இருந்த சூனியக்காரிகள், தற்காலத்தில் ஆவியோடு தொடர்பு கொள்ளுகிறவர்கள், "கிறிஸ்டியன் சயின்டிஸ்ட்" (Christian Scientists) ஆகிய எல்லோரும் இதற்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள். ஆண்கள் மூலமாக திவ்விய பிரச்சாரம் என்று குறிக்கப்பட்டுள்ளது போன்று சாத்தானின் பிரச்சாரம் ஸ்திரீகள் மூலமாக உள்ளது. மேலும் திவ்விய திட்டமானது, மனிதர்கள் இயற்கையான சுபாவத்தினால் மத ரீதியானக் காரியங்களில் ஸ்திரீகளை விசேஷமாக உயர்வாகக் கருதுவதற்கு - அந்தப் பாலருக்கு உயர்ந்த அளவிலான பரிசுத்தம், ஆன்மீகம், தேவனோடு ஐக்கியம் உண்டென்று கருதுவதற்கு - மாறாக உள்ளது. இந்த உணர்வு கடந்த கால மற்றும் தற்காலத்திலுள்ள குறிப்பேடுகளின் மூலம் விளங்குகிறது. இதற்கு ஆதாரமாக எகிப்திய தேவதை இஸிஸ் (Isis), அசீரிய தேவதை அஸ்ரோத் (Asroth), கிரேக்க தேவதை டயானா (Diana), ஜுனோ (Juno), வீனஸ் (Venus), பெல்லோனா (Bellona) ஆகியோரைக் குறிப்பிடலாம். மனிதனை ஆண்டவர் தன்னுடைய சபையில் சந்தேகத்திற்கிடமின்றி அவருடைய வாயாகவும், பிரதிநிதியாகவும் வைத்திருந்த போதிலும், மரியாள் வணக்கம் கிறிஸ்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கானவர்களை அநேக நூற்றாண்டுகளாக தன் ஆதிக்கத்தில் வைத்திருக்கிறது.

மேற்கூறியவைகள் ஓர் அடையாளமாக ஒரு பக்கம் இருந்தாலும், இருபாலருக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் குறித்து வேறு காரியங்கள் உள்ளனவா என்று ஆண்டவருடைய வார்த்தை நமக்கு அறிவிக்கவில்லை; மேலும் இந்த விஷயத்தைக் குறித்து எங்கள் ஊகங்கள் சரியாக இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். இருந்தாலும் உயர்வாக எண்ணப்படுகின்ற குணாதிசயமுடைய ஸ்திரீயின் இருதயத்தின், உள்ளத்தின் தன்மைகள் அவளைப் பொதுவான ஆன்மீக ஊழியத்திற்குத் தகுதியற்றவளாக்குகிறது. உதாரணமாக, அதிர்ஷ்டவசமாக, இயற்கையாகவே ஸ்திரீயானவள் பிரியப்படுத்தவும், ஏற்றுக்கொள்ளப்படவும்,

புகழப்படவும் வாஞ்சையுள்ளவளாக இருக்கிறாள். இந்தக் குணாதிசயம் வீட்டிற்கு ஓர் அளவிடமுடியாத ஆசீர்வாதமாக இருக்கின்றது; அது பலவிதமான வகைகளில் சுவையான உணவுகளை தயார் செய்வதற்கும், வயதான கன்னிகைகள் அல்லது வயதான பிரம்மச்சாரிகள் வசிக்கும் அறைகளைக் காட்டிலும் அழகுற காட்டுகிறபடி வீட்டிற்குத் தேவையான அழகுப் பொருட்களைச் செய்யவும் உதவுகிறது. உண்மையான மனைவி தன்னுடைய குடும்பத்தைச் சந்தோஷமாக வைக்க முயற்சிக்கிறாள்; அதேவேளையில், அவளையும் அவளுடைய சமையலையும் பாராட்டுவதை விரும்பி வரவேற்கிறாள். இயற்கையாகவே அவள் விரும்புகின்ற, அவளுக்கே உரிய புகழாரங்களை ஒருபோதும் அவளுக்குக் கொடுக்காமல் இருக்கக்கூடாது. இது அவளுடைய தேக ஆரோக்கியத்திற்கும், அவளுடைய முன்னேற்றத்திற்கும் மிகவும் இன்றியமையாதது.

ஸ்திரீயானவள் அவளுடைய நிலையிலிருந்து, மிக முக்கியமான ஒரு பரந்த நிலைமைக்கு உயர்த்தப்படும்போது, இது குறித்து கவிஞர் நன்றாகக் கூறுகிறார்: "தொட்டில் ஆட்டுகிற கைதான் உலகை ஆட்டுகிற கை" என்று; பொதுப்பணியில் அவள் ஆசிரியையாக, ஒரு பேராசிரியையாக அல்லது ஓர் எழுத்தாளராக வந்தால் அவள் ஆபத்தான ஒரு நிலைக்கு வருகிறாள், ஏனென்றால் பெண்மைக்கே உரித்தான சில குணாதிசயங்கள், (அவைகளில் ஒன்றை நாம் குறிப்பிட்டுள்ளோம்) அவளை ஒரு நல்ல ஸ்திரீயாக உருவாக்குகின்றவைகள் உண்மையான மனிதருக்கு கவர்ச்சியாக தோற்றமளிக்கும்போது, மனிதர்கள் இயற்கையான முறையில் இல்லாது, அவளுடைய ஸ்திரீக்கான தன்மைகளைக் கெடுக்கும்படியாக, அவளுடைய தன்மைகள் "ஆண்களைப்" போன்று இருக்கும்படியாக சதியாலோசனை செய்வார்கள். இயற்கையானது இருபாலருக்கும் சரீர உருவகத்திலும், முடி அடுக்குகளில் மாத்திரமல்ல, இருதயத்திலும் தலையிலும் ஒரே மாதிரியான சுபாவங்களைக் கொடுத்திருக்கிறது; அவைகள் ஒன்றோடொன்று நன்றாக இணைந்து செயல்படும்படியாக இருக்கிறபடியால், இயற்கையின் முறைகளை அலட்சியப்படுத்துவது அல்லது அதில் தலையிடுவது, ஒருவேளை தற்காலிகமான நன்மையான மாற்றங்கள் இருப்பதுபோன்று தோன்றினாலும் இறுதியில் நிச்சயமாக தீமை விளைவிக்கும்.

பாராட்டுதலை விரும்பக்கூடிய இப்படிப்பட்ட குணாதிசயத்தை இயற்கையானது ஸ்திரீக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும்போது அவைகள் சரியான முறையில் உபயோகிக்கப்பட்டால், அது அவளுக்கும், அவளுடைய வீட்டிற்கும், அவளுடைய குடும்பத்திற்கும் எவ்வளவோ உதவியாயிருக்கிறது. ஆனால் பொது வாழ்க்கையில் உபயோகிக்கப்படுமானால், சபையின் அல்லது உலகத்தாரின் பாராட்டைப் பெற வேண்டும் என அவள் நினைப்பாளானால் அது

அவளுக்கு ஒரு கண்ணியாக மாறுவது நிச்சயம். பிரகாசிக்க வேண்டும் என்கிற நோக்கம், மற்றவர்களைக் காட்டிலும் ஞானவான், திறமைசாலி என்று தோற்றமளிக்க வேண்டும் என்பவைகள் பொது ஜனத்திற்கு முன்பாக நிற்கிற எல்லாரையும் சூழ்ந்து கொள்ளும் ஓர் ஆபத்தாக இருக்கிறது; இது அநேக மனிதரைப் பெருமையடையப் பண்ணி, இதன் விளைவாக சத்துருவின் ஒரு கண்ணியில் விழப்பண்ணியிருக்கிறது. ஆனால் ஸ்திரீக்கே உள்ள பெண்மையின் குணாதிசயங்கள் அவளை இந்த அபத்தத்திற்குள்ளவளாக விசித்திரமாக ஆக்குகிறது; பிரகாசிக்க வேண்டும் என்ற முயற்சியில் அவள் தடுமாறுகிறது மாத்திரமல்ல, மற்றவர்களையும் தடுமாறப் பண்ணக்கூடும்; ஏனெனில் திசைமாறிப்போகிறவர்களுக்கு, நிச்சயமாகவே சத்துரு போலியான எண்ணெயை ஊற்றுவான்; அவனுடைய பொய்யான வெளிச்சத்தினால் ஆண்டவருடைய வழியைவிட்டு அநேகர் விலகக்கூடும். இதன்படியாக அப்போஸ்தலர் எச்சரிக்கையாகக் கூறுகிறதாவது: "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக." (யாக்கோபு 3:1) இது சகோதரிகளுக்குச் சொல்லப்பட்டால் இன்னும் பிரயோஜனமுள்ளதாக இருக்கும். உண்மையாகவே அவர்களுக்கு ஆபத்து அவ்வளவு அதிகமாக இருப்பதினால், ஒருவரும் உபதேசிக்கிறவர்களாக ஏற்படுத்தப்படவில்லை. மேலும் அப்போஸ்தலர் எழுதுகிறார்: "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்." (1 தீமோத்தேயு 2:11, 12)

ஆனாலும் இந்த உறுதியான, தெளிவான அறிக்கையால், பழைய கதையையே திரும்பத் திரும்ப சொல்லுவதினால், புதுச் சிருஷ்டியின் சகோதரிகள் ஒருபோதும் ஓர் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரமுடியாது என்று கூற முடியாது. இதே அப்போஸ்தலர் அவருடைய நாட்களில் இருந்த கனம் பொருந்திய ஸ்திரீகள் ஊழியத்தில் உதவி செய்பவர்களாக இருந்தார்கள் என்று மிக மரியாதையுடன் குறிப்பிடுகிறார். உதாரணமாக, பிரிஸ்கில்லாவையும், அவளுடைய புருஷனையும் "வேலையாட்களாக" அல்லது "உடன் வேலையாட்களாக" இருந்தார்கள் என்று குறிப்பிடுகிறார். (ரோமர் 16:3) இது அப்போஸ்தலர்களைத் தங்கள் வீட்டில் ஏற்று உபசரிக்கிறவர்களாக இருந்தார்கள் என்பதைக் காட்டிலும் அதிகமான முக்கியத்துவத்தை அளிக்கிறது. அதன் அர்த்தம் என்னவெனில் அவருடைய வேலையில் அவரோடு வேலை செய்தார்கள், கூடாரத்தொழிலில் மாத்திரமல்ல, ஆனால் விசேஷமாக அவருடைய முக்கியமான வேலையான சுவிசேஷஊழியத்தின் வேலையையும் செய்தார்கள். பின்னால் வருகிற வசனத்தில் (வசனம் 6) மரியாளின் ஊழியத்தை வித்தியாசமாக, "எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாள்" என்று

கூறுகிறார். இதைப் பார்க்கும்போது அவள் ஓர் உடன் வேலையாள் இல்லையென்று காண்கிறோம். அவள் அப்போஸ்தலருக்குச் செய்த ஊழியத்தை அவர் பெற்றுக் கொண்டதாக அறிவிக்க விருப்பப்பட்டார். ஒருவேளை அது அவருடைய சொந்த வேலையான, துணி துவைப்பது, அல்லது தைப்பது என்றிருக்கலாம். இதற்கு மாறாக பிரிஸ்கில்லாவினுடைய வேலையை உர்பானுடைய (வசனம் 9) வேலையைப் பற்றிச் சொன்ன அதேவிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆக்கில்லாவுடைய பெயர் பிரிஸ்கில்லாவாகிய அவனுடைய மனைவியின் பெயருக்கு அடுத்தபடியாக சொல்லப்பட்டிருக்கிறபடியால், நாம் முடிவாக எண்ணுகிறதென்னவெனில், இந்த இரண்டு உடன் வேலையாட்களில் மனைவி அதிகத் திறமைசாலியாயிருந்தாள் என்பதாகும். மற்ற இரண்டு சகோதரிகளான திரிபேனாள், திரிபோசாள் (வசனம் 12) ஆகிய இருவரின் ஊழியத்தைக் குறித்து "கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற" வேலை என்று மரியாதையோடு குறிப்பிடப்படுகிறார்.

"கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற" என்ற அப்போஸ்தலர்களின் வார்த்தையை சகோதரிகளுக்கு ஊழியச் சந்தர்ப்பமே வழங்கக்கூடாது என்று புரிந்துகொள்வது தெளிவாய்த் தெரிகிற தவறாகும். ஆராதிக்கவும், துதிக்கவும், ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி அடையப்பண்ணும்படியாக சபையில் கூடிவந்திருக்கும்போது (இரண்டு அல்லது மூன்று பேர் அல்லது அதிகமாக) சகோதரிகள், உபதேசிக்கிறவர்களாக இருக்க முயற்சி செய்யாமல் ஒரு தாழ்ந்த இடத்தை எடுக்க வேண்டும்; அப்படியில்லாவிடில், அது மனுஷன்மேல் அதிகாரம் செலுத்துவதாகும். இயற்கையாகவும், கட்டளையின்படியாகவும், ஆண்டவர் ஊழியங்களைத் தலைமைத் தாங்கி நடத்துமாறு மனுஷன்மேல் பொறுப்பை வைத்திருக்கிறார்; இதை நாம் ஒத்துக்கொள்ள முடியுமோ இல்லையோ, ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி விவேகமான காரணங்களுக்காக அப்படிச் செய்திருக்கிறார்.

அப்போஸ்தலர் விதித்த கட்டுப்பாடுகள், 1 கொரிந்தியர் 14-இல் அவர் வருணிக்கிற கூட்டங்களைப் பற்றி இருப்பதுபோல் தெரிகிறது; இந்தக் கூட்டங்களில் சகோதரிகளும் இருந்தார்கள்; அவர்கள் பாடல்களையும், கீர்த்தனைகளையும் சேர்ந்து பாடினார்கள்; யாரெல்லாம் ஜெபித்தார்களோ; அந்த ஜெபங்களில் பங்கு பெற்றார்கள்; நிச்சயமாகவே அந்தக் கூட்டத்தில் எல்லா ஆசீர்வாதங்களிலும் பங்கடைந்தார்கள்; அவர்கள் எல்லாரும் பயன் அடையும்படியாகக் கூட்டங்களில் ஓர் ஒழுங்கு இருக்க வேண்டும் என்பதின் அவசியத்தை அவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். அவர் தூண்டுதலாகச் சொல்வதென்னவெனில் ஒரு சமயத்தில் ஒருவருக்குமேல் பிரசங்கிக்கவோ, அல்லது தீர்க்கத்தரிசனம் சொல்லவோ கூடாது, மற்றவர்கள் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும்; மாத்திரமல்ல,

ஒரே வேளையில் வெவ்வேறு காரியங்களில் மனதைச் செலுத்தாமலிருக்க ஒரு கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று பேருக்குமேல் பேசவோ, தீர்க்கத்தரிசனம் சொல்லவோ கூடாது என்றும் கூறினார். அதேமாதிரி அந்நிய பாஷையில் பேசுகிறவன் அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் அமைதியாய் இருக்கக்கடவன் என்றார்.

இந்தக் கூட்டங்களில் ஸ்திரீகள் அறவே பேசக்கூடாது, கூட்டங்களுக்கு வெளியே அல்லது "வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்." சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் தங்கள் சொந்த மனிதரிடத்தில் கேட்க வேண்டும், அவர்கள் தங்கள் கருத்தை அல்லது கேள்விகளை, அந்தச் சகோதரர்கள் (மனிதர்கள்) மூலமாகக் கேட்கலாம்; முடிந்தால், அந்தரங்கமாக நெருங்கிப் பழகியவர்களான தங்கள் புருஷர்கள் மூலமாக, அல்லது கூட்டம் முடிந்து வீட்டுக்குத் திரும்பும் வழியில் அவர்கள் பேசின அந்தச் சகோதரர்கள் மூலமாகக் கேட்கலாம். இந்தப் பகுதியில் வீடு என்பது குடும்பம் அல்லது பழக்கமான என்ற அர்த்தமுடையதாகும். இதன் கருத்து என்னவெனில் அவர்கள் தங்கள் கேள்விகளை அவர்களுக்கு அறிமுகமான புருஷரிடத்தில் அல்லது பரிட்சயமானவர்கள் மூலமாகக் கேட்கலாம் என்பதாகும். அப்போஸ்தலர் தொடர்ந்து சொல்லுகிறதாவது: "பேசும்படி அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது." (1கொரிந்தியர் 14:34-36)

கொரிந்து சபையிலே, இருபாலருக்கும் சபையில் உள்ள உரிமைகள் பாகுபாடுக்கு உட்பட்டதல்ல என்று கூறி "ஸ்திரீகளின் உரிமைகள்" என்ற கருத்தை ஆதரித்தார்கள். ஆனால் அப்போஸ்தலர் இந்தக் கருத்தை எதிர்ப்பது மாத்திரமல்ல, ஆனால் அதற்கும் மேலாக, ஆண்டவருடைய ஜனங்களில் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு முறையைத் துவங்கலாம் என்று எண்ணுவதில் அவர்களுக்கிருந்தத் துணிவைக் கண்டித்தார். அவருடைய வார்த்தைகளாவன: "தேவனுடைய வசனம் (தூது) உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்திற்கு மாத்திரம் (வேறு இடத்திலிருந்து) வந்ததா? ஒருவன் தன்னை ஒரு தீர்க்கத்தரிசி என்றாவது ஆவியைப் பெற்றவன் என்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகள் என்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்," இவைகள் என்னுடைய சொந்த, அல்லது விசித்திரமான எண்ணங்கள் அல்ல. ஆகவே, நாம் இவ்விஷயத்தில் கொரிந்தியர்களைக் காட்டிலும், நம்முடைய சொந்த விருப்பங்களையும், கருத்துக்களையும் அப்பியாசப்படுத்த வேண்டும், ஆனால் அப்போஸ்தலருடைய அறிக்கைகளை ஆண்டவருடைய கட்டளை என எண்ணி தலைவணங்க வேண்டும். இந்த விஷயத்தில் அப்போஸ்தலரின் போதனையை யாரேனும் ஒத்துக்கொள்ளவிட்டால்,

அவள் உறுதியாயிருந்து அவர் அப்போஸ்தலரே கிடையாது என்று முழுமையாக நிராகரிக்கட்டும்.

இந்த விஷயத்தில் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து ஆண்டவர் சபைக்குக் கொடுத்த வரங்களைக் குறித்ததான அப்போஸ்தலருடைய வார்த்தையில் கவனத்தைச் செலுத்துவது நல்லது. அவர் சொல்லுகிறதாவது: "பரிசுத்தவான்களை சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கத்தரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்." (எபேசியர் 4:12, 13) கிரேக்க மொழியில் இந்த வார்த்தையின் உருபு, ஆண்பாலையும், பெண்பாலையும், இருபாலரையும் சேராதவர்களையும் குறிக்கிறது. ஆண்டவர் பரிசுத்த ஆவியின் மூலம் எப்படி விசேஷமாக அவருடைய சபைக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் ஆண், பெண் பாகுபாட்டிற்கு ஒரு கோடிட்டார் என்பதைப் பார்ப்பதற்கு இந்தப் பகுதி அருமையானதாகும். மேற்கூறிய பகுதியைக் குறித்த உண்மைகள் எவை? எந்தப் "பால்" கிரேக்க மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது? நாம் பதில் சொல்லுகிறோம் இந்த உருபு "tous" (பன்மை - Accus, ஆண்பால்) அப்போஸ்தலர்களுக்கும், தீர்க்கத்தரிசிகளுக்கும், சுவிசேஷகர்களுக்கும், மேய்ப்பர்களுக்கும் முன்பதாக வருகின்றது, ஆனால் போதகர்களுக்கு முன்பாக இந்த வார்த்தை வரவேயில்லை, இந்த இடத்தில் இந்த வார்த்தை "உதவி செய்பவர்களை" குறிக்கும்படி வருகிறது போன்றிருக்கிறது, இல்லாவிடில், ஆண் அப்போஸ்தலர்களை, ஆண் பேச்சாளர்களை, ஆண் சுவிசேஷகர்களை, ஆண்கள் எல்லாரையும் போதகர்கள் என்று குறிப்பிடுகின்ற முழுமையான அர்த்தத்துடன் வருகின்ற பதமாயிருக்கிறது.

ஒரு சகோதரி தன்னுடைய சொந்த கருத்தை வெளிப்படுத்தாமல், எந்த ஒரு விஷயத்தைக் குறித்தாவது, ஆண்டவருடைய அல்லது அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளைச் சபைக்கூட்டத்தினரின் கவனத்திற்குக் கொண்டுவருவதை, எப்படியாயினும் போதனை என்று எடுத்துக்கொள்ள முடியாது என்று இங்கு நாம் குறிப்பிடுகிறோம். இல்லாவிடில், மனிதனுக்குள்ள அதிகாரத்தைப் பறித்துக்கொள்வது போன்றும் எடுத்துக்கொள்ள முடியாது. அதற்கு மாறாக, அவள் ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட, போதகர்களின் வார்த்தைகளைத்தான் கூறியிருப்பாள். அதேபோன்று மற்றவர்களுக்கு எங்களால் பிரசுரிக்கப்பட்ட வேத விளக்க உரைகளிலிருந்து, அல்லது இந்தப் புஸ்தகத்தி லிருந்து, வாசிப்பது, அல்லது மேற்கோள் காட்டுவது, அவளைப் பொறுத்தவரையில் அது போதனை செய்வதாகாது. ஆனால் அது குறிப்பிடப்பட்ட ஆக்கியோனுடைய

போதனையாக இருக்கும். இங்கு, இப்படியாக, தன் மந்தையைப் பாதுகாப்பதற்காக ஆண்டவர் மேற்கொண்ட ஒழுங்குகளைக் காண்கிறோம். அதேசமயத்தில், ஆண்டவர் அவர்கள் தேவைகள் சந்திக்கப்படத்தக்கதாக அநேக வழிமுறைகளையும் உண்டுபண்ணி வைத்திருப்பதைக் காண்கிறோம்.

எல்லோருமே திவ்விய கட்டளைக்குக் கீழ்ப்படியலாம், ஆனாலும் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி, ஒரு ஸ்திரீ சபைக்கு அடையாளமாக இருக்கிறாள், ஒரு மனிதன் சபைக்குத் தலையாய் இருக்கிற ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறான் என்பதை ஒருவன் அறிந்துகொள்ளாவிட்டால், நிச்சயமாகவே ஒருவனும் அதைப் புரிந்துகொள்ள முடியாது. (பார்க்க எபேசியர் 5:23; 1 கொரிந்தியர் 11:3) சபையானது ஆண்டவருக்கு போதிக்க முயற்சி செய்யாததுபோல, சபைக்கு அடையாளமாய் இருக்கிற ஸ்திரீயும் மனிதனுக்குமேல் போதகர் என்கிற பாத்திரத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது; ஏனெனில் அவன் ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறான். இந்தச் சிந்தை நம் மனதிற்கு முன்பாக இருக்க, வேதாகமம் செய்துள்ள இந்த ஏற்பாடுகளினிமித்தம் எந்த ஒரு சகோதரியும் அலட்சியப்படுத்தப்பட்டதாக எண்ண வேண்டிய அவசியம் இல்லை, எந்த ஒரு சகோதரனும் பெருமையினால் நிறையவும் தேவையில்லை. ஆண்டவர் மாத்திரமே போதகர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும், சகோதரர்கள் தங்கள் சொந்த ஞானத்திலிருந்து கூறக்கூடாது. ஆனால் அவர்களுக்குத் தலையாய் இருக்கிறவர் அவர்களுக்குச் சத்தியம் என்று தெரியப்பண்ணியிருக்கிறதை மற்றவர்களுக்கு அறிவிப்பதை மட்டும் செய்ய வேண்டும். இந்த வசனத்தை (1 தீமோத்தேயு 2:11, 12) ஆண்டவருக்கும், சபைக்கும் நாம் பொருத்திப்பார்ப்போம். இதன்படியாக சபையானது எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாய் இருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். சபையானது உபதேசம் பண்ணவும் கிறிஸ்துவின்மேல் அதிகாரம் செலுத்தவும் நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; சபை அமைதலாயிருக்க வேண்டும்.

## அவள் தலையை முக்காடிட்டுக்கொள்ளக்கடவள்

நமது பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவுக்கு மாதிரியாய் இருந்த பிரதான ஆசாரியன் மாத்திரமே ஆசாரிய வஸ்திரம் தரித்திருந்தபோது தலையை மூடாமல் சென்றார் என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். அவருக்குக் கீழாக (under-priests) இருந்த ஆசாரியர்கள் எல்லோரும், சபையான இராஜரிக ஆசாரியத்துவத்திற்கு அடையாளமாக இருந்தார்கள், அவர்கள் தலையை மூடுவதற்காக தலைப்பாகை (bonnets) அணிந்தார்கள். இப்படியான நிழல் - பொருள் போதகம் நாம்

இப்பொழுதுதான் பார்த்திருக்கிறதற்கு முற்றிலுமாக ஒத்திருக்கிறது; எப்படியெனில் புதுச் சிருஷ்டியின் சபைக்கூட்டங்களில், சகோதரர்கள் மெய்யான பிரதான ஆசாரியரான ஆண்டவரையும், அதேவேளையில் சகோதரிகள் சபை அல்லது இராஜரிக ஆசாரியத்துவத்தையும் அடையாளப்படுத்துகிறார்கள்; இவர்களைப் பற்றி அப்போஸ்தலர், அந்தப் பாடத்தைக் காட்டும் வண்ணம் - ஆண்டவருக்குச் சபை கீழ்ப்பட்டிருப்பதுபோல - இவர்கள் ஒரு தலை முக்காட்டை அணிய வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் இதைப் பற்றி 1 கொரிந்தியர் 11:3-7, 10-15-இல் விளக்கமாகக் கூறுகிறார்.

அப்போஸ்தலர், ஒரு ஸ்திரீயின் நீளமான மயிர் அவளுக்கு முக்காடாக இயற்கையினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதால், அவர் இதைக் காட்டிலும் வேறு ஒன்றும் சொல்லவில்லை என்று சிலர் யூகிக்கிறார்கள்; ஆனால் ஆறாவது வசனம் இதற்கு எதிர்மாறாக தெளிவாகக் காட்டுகிறது. அவர், ஸ்திரீயானவள் இயற்கை கொடுத்திருக்கிறபடி மயிரை நீளமாக வளரவிடுவது மாத்திரமன்றி, மேற்கொண்டும் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்; அதோடு, பத்தாவது வசனத்தில் அவர் அது ஓர் அடையாளம், அல்லது மனிதனுக்குக் கீழ்ப்பட்டு, அல்லது அவனது அதிகாரத்திற்குட்பட்டு இருப்பதற்கு அறிகுறியாக அங்கீகாரம் என்பதோடு, முழுச்சபையும் பிரமாணத்தின்படி கிறிஸ்துவுக்குக் கீழ் இருக்கிறது என்று அர்த்தப்படும்படி போதிக்கிறார். நான்காம் வசனத்தில் கூறப்பட்டுள்ளதை முதன்முறையாகப் பார்க்கும்போது, சபைக்கூட்டங்களில் ஸ்திரீகள் அமைதலோடு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதற்கு முரணானது போன்றிருக்கிறது. நாம் நினைப்பது என்னவெனில் பொதுவான சபை ஆராதனையில் ஸ்திரீகள் பகிரங்கமாகப் பங்குபெறக் கூடாது, இருந்தாலும், வேதவசனம் போதிக்கப்படும் இடத்தில் தவிர, ஜெபத்திற்கும், சாட்சிக்கும் ஒழுங்குப்பண்ணப்பட்ட பொதுவான கூட்டங்களில், சகோதரிகள் தங்கள் தலைகளை முக்காடிட்டுக்கொண்டு பங்குபெறுவதில் எந்தவிதமான ஆட்சேபமும் இருக்க முடியாது.

அடையாளமாக இருக்கும்படி சகோதரிகள் தங்கள் தலைகளை முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்றும், தொடர்ந்து செய்யப்படல் வேண்டும் என்றும் இந்த விஷயத்தைக் குறித்து அப்போஸ்தலர் வலியுறுத்தினாலும், அது ஒரு திவ்விய கட்டளை என்று அவர் கூறவில்லை. அதற்கு மாறாக அவர் தொடர்ந்து "ஆகிலும் ஒருவன் வாக்குவாதம் செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கு அப்படிப்பட்ட வழக்கமில்லை" என்று கூறுகிறார். அது ஒரு முக்கியமான விஷயம் என்று எண்ணப்படக்கூடாது; இருந்தாலும் ஆண்டவருடைய சித்தத்தைச் செய்ய நாடுகிறவர்கள் எல்லோரும், இதைக் குறித்தும், மற்றவைகளைக் குறித்தும், அது ஓர்

"அடையாளம்" என்பது சரியானதுதான் என்று புரிந்துகொள்ளுகிற வேளையிலிருந்து கவனமாய் இருக்க வேண்டும். "தூதர்களினிமித்தம்" என்ற வார்த்தைகள் சபையின் மூப்பர்களைக் குறிக்கிறது, இந்த மூப்பர்கள் சபையின் தலையாகிய ஆண்டவரைக் குறிக்கிறார்கள். (வெளிப்படுத்தல் 2:1)

சுருக்கமாகக் கூறும்போது, சபையின் காரியங்களில் சகோதரிகளுக்கு உள்ள சுயாதீனத்தைக் குறித்து ஆவியினால் உந்தப்பட்டு எழுதப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குப் கூடுமானவரை மிகவும் தாராளமான முறையில் அர்த்தம் கொடுக்கப்படல் வேண்டும் என்று நாம் ஆலோசனைக் கூறுகிறோம். நாம் முடிவாக இவ்வாறு கூறுகிறோம்.

1. சபையின் வேலையாட்களாகிய மூப்பர்களையும், உதவிக்காரரையும் தெரிந்தெடுக்கிற விஷயத்தில் சகோதரரைப் போன்றே சகோதரிகளும் ஒரே சுயாதீனம் பெற்றிருக்கிறார்கள்.

2. சபையில் சகோதரிகள் மூப்பர்களாக அல்லது போதகர்களாக ஊழியஞ்செய்ய முடியாது, ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறார்: "உபதேசம் பண்ணவும்' ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை." (1 தீமோத்தேயு 2:12) இதன்படி, சகோதரிகள் போதிப்பது, உபதேசம் பண்ணுவது போன்றவைகளில் அல்லாமல் ஜெபம், சாட்சிக்கூட்டங்கள், பெரோயா வேதப்பாட கூட்டங்கள் ஆகியவைகளில் பங்குபெறுவதில் தடைப்பண்ணப்படல் வேண்டும் என்று புரிந்துகொள்ளக்கூடாது; ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறபடி, அவள் ஜெபம் பண்ணும்போது அல்லது தீர்க்கத்தரிசனம் (பேசும்போது) சொல்லும் போது அவளுடைய தலையில் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும், இப்படிச் செய்வதன் மூலம் சகோதரர்கள் விசேஷமாக மாபெரும் போதகரான ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறார்கள் என்பதை அவள் ஏற்றுக்கொள்வதாகும். (1 கொரிந்தியர் 11:5, 7, 10) இந்த மாதிரியாகப் பங்குபெறுவது போதிப்பது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது, ஏனெனில் பங்குபெறுகின்ற சகோதரர்களும் போதகர்கள் கிடையாது, எப்படியெனில் "எல்லோரும் போதகர்களா?" என்று அப்போஸ்தலர் கேட்கிறார். இல்லை, போதகர்களும் அல்லது மூப்பர்களும் விசேஷமாகத் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் எப்பொழுதுமே ஆண்களிலிருந்து தெரிந்துகொள்ளப்படுகிறார்கள். (எபேசியர் 4:11; 2 தீமோத்தேயு 2:24; 1 கொரிந்தியர் 12:28, 29)

# புதுச்சிருஷ்டியில் முறையும் ஒழுங்கும்

இந்த விஷயத்தை நாம் கவனிக்கும்போது, சபையின் ஒருமைப்பாட்டை நம்முடைய மனங்களுக்கு முன்பாகத் தெளிவாக வைப்பது நல்லது. மேலும் உலகம் அனைத்துமுள்ள முழுச்சபையும் ஒன்றாக இருந்தாலும், இன்னொரு கருத்தின் பிரகாரம், ஒவ்வொரு தனிக் கூடுதலில், அல்லது ஜனத்திரளிலுள்ள விசுவாசிகள் முழுச்சபைக்கும் ஓர் அடையாளமாக இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு தனிச் சபையும், ஆண்டவரை அதன் தலையாகவும், அப்போஸ்தலர்களைப் பன்னிரண்டு பிரகாசமான நட்சத்திரங்களாகவும், போதகர்களாகவும் எண்ண வேண்டும். இவர்களை ஆண்டவர் விசேஷமாக, தம்முடைய கரத்தில் வைத்து யுகம் முழுவதும், ஒவ்வொரு இடத்திலுள்ள அவருடைய ஒவ்வொரு சபைக்கும் கற்பிக்கும்படி அவருடைய வாயாக உபயோகித்து, நடத்தினார் என்று எண்ண வேண்டும்.

ஒவ்வொரு கூட்டம் அல்லது சபை, அதில் இரண்டு அல்லது மூன்று பேர் இருந்தாலுங்கூட, அதன் காரியங்கள் எல்லாவற்றிலும் ஆண்டவரின் சித்தத்தை அறிய நாட வேண்டும். எல்லா இடத்திலும் அன்பின் மீட்பரின் பலியிலும், தேவனுடைய வாக்குத்தத்தங்களிலும், "ஒரே விலையேறப்பெற்ற விசுவாசம்" உடைய எல்லா அன்பான சபைகளோடு ஓர் ஒருமைப்பாட்டை உணர வேண்டும். அவருடைய நலன்களைக் குறித்துக் கேள்விப்படுவது சந்தோஷமாக இருக்கிறது, மாத்திரமல்ல ஆண்டவர் தமது வேலையின் மேற்பார்வையாளராக, இன்றைக்கு, ஒவ்வொரு காலத்திலும் இருக்கிறதுபோல சபையின் மொத்த வேலைக்காக சில விசேஷ உபகரணங்களைப் பாவிக்கலாம் என்ற கருத்தை அறியவும், அதோடுகூட ஒவ்வொரு சிறிய சபையின் சில அங்கங்களையும் உபயோகிக்கலாம் என்பதும் சந்தோஷமாய் இருக்கிறது. இப்படியாக ஆண்டவர் கண்ணோக்கிப்பார்த்து, அவர் உபயோகப்படுத்துகின்ற ஊழியக்காரரின் குணாதிசயங்களை அறிந்து - தாழ்மையுள்ளவர்கள், வைராக்கியமானவர்கள், நற்சாட்சிப்பெற்றவர்கள், சத்தியத்தில் தெளிவாய் இருக்கிறவர்கள், அபிஷேகமும், ஆவியும் பொழியப் பெற்றவர்களுமாயிருப்பார்கள் - அவர்கள் முழுச் சபையின் தேவைகளுக்கான இப்படிப்பட்ட பொதுவான ஆசீர்வாதத்தில் ஒரு பங்கையும், நம்முடைய ஆண்டவரின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "ஏற்ற வேளையில் வரும் போஜனத்தையும்" பெறுவதற்கு ஆயத்தமாயிருப்பார்கள். இந்த யுகத்தின் முடிவில் அவர் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணின விசேஷ ஆசீர்வாதங்களையும், அவர் தெரிந்து கொள்ளுகிறபடி சரியான வாய்க்கால்கள் மூலம் விசுவாச வீட்டாருக்குப் புதியதும், பழமையானதுமான காரியங்களை அளிப்பார் என்பதையும் அவர்கள் விசேஷமாக நினைவில் வைத்துக்கொள்வார்கள். (மத்தேயு 24:45-47)

இந்த உபகரணங்களை, இந்த ஆசீர்வாதங்களுக்கான வாய்க்கால்களை ஆண்டவர்தாமே மேற்பார்வையிட்டு, வழிநடத்துவார். தலையோடு இணைக்கப்பட்ட

சரீரமான சபையின் அங்கங்கள் எல்லாம் நம்பிக்கை உடையவர்களாக, அவருடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காகக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்; ஆனாலும், யாரிடமிருந்து உபதேசங்கள் வந்தாலும், அவைகளைச் சோதிக்கும்படி, ஆவிகளைச் சோதித்தறியுங்கள். சோதித்தறிவது சத்தியத்திற்கென தெய்வீகத்தால் நியமிக்கப்பட்ட வாய்க்கால்கள் என்று அறியப்பட்டவர்களிடம் நம்பிக்கை இல்லையென்று பொருள்படுவதாகாது. ஆனால் அது ஆண்டவருக்கும் சத்தியத்திற்குமென உள்ள ஓர் உண்மை நிலைமையையும் குறிக்கிறது, ஏனெனில் சத்தியம் எல்லா மனுஷீக போதகர்களுக்கும், அவர்களால் சொல்லப் படுபவைகளுக்கும் மேலாக உயர்ந்திருக்கிறது. அவர்கள் ஒரு மனிதனின் சத்தத்திற்குச் செவி சாய்க்கவில்லை, ஆனால் பிரதான மேய்ப்பனின் சத்தத்திற்குச் செவிசாய்க்கிறார்கள் என்பதை அது குறிக்கிறது. அவருடைய வார்த்தைகளை விருந்துண்டு, அவைகளை நேசிக்கிறார்கள், அவைகளை நன்கு அரைத்து சாப்பிட்டு ஜீரணிக்க விரும்புகிறார்கள் என்பதையும் அது குறிக்கிறது. அவர்கள் ஆண்டவருடைய வழிநடத்துதலுக்கும், போதனைக்கும் அதிகக் கவனம் செலுத்துவதால் சரீரமான சபையின் இப்படிபட்ட அங்கங்கள், ஆண்டவருடைய வல்லமையில் மற்றவர்களைக் காட்டிலும் துரிதமாக வளருவதோடு அவருடைய சத்துவத்திலும் பலப்படுகிறார்கள்.

சரீரமான சபையின் இந்தப் பொதுவான ஒற்றுமை, இந்தப் பொதுவான இரக்கம், அவருடைய இரண்டாவது வருகையில் அவருக்கென அவருடைய சம்பத்தைச் சேர்க்கும்படியாக, ஆண்டவர் கொடுத்துள்ள இந்தப் பொதுவான போதனை, பொதுவான வாய்க்கால் மூலம் வருகிறது. (மல்கியா 3:17; மத்தேயு 24:31) எப்படியாயினும், சிறுகூட்டங்கள் அல்லது சபையில் ஏற்படுத்தப்பட்ட சரியான ஒழுங்கு இருக்கும்போது இது அதில் தலையிடவில்லை. எவ்வளவு சிறிய சபையாக இருந்தாலும் அதில் ஒழுங்கு இருக்க வேண்டும். இந்த "ஒழுங்கு" என்ற வார்த்தையினால், கடுமையாக இருப்பது அல்லது சம்பிரதாயம் என்று பொருள்பட நாம் கூறவில்லை. நன்றாகவும், மிகவும் திருப்திகரமாகவும் வேலை செய்கின்ற ஒழுங்குமுறை என்பது சத்தமில்லாமல் வேலை செய்வதாகும், அதன் பொருள் என்னவெனில் அப்படி வேலை செய்யும் ஒழுங்குமுறை கண்ணில் படவேபடாது. கூட்டமானது அவ்வளவு சிறியதாக, மூன்று அல்லது ஐந்து, அல்லது பத்தாக இருந்தாலும், அவர்களில் மூப்பர்களாக, வயதில் முதிர்ந்தவர்களாக, அல்லது சத்தியத்தில் மிகவும் தேறினவர்களாக, ஏற்கெனவே நாம் ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளைப் பார்த்திருக்கிற பிரகாரம் மூப்பராவதற்கு கீழ்க் குறிக்கப்பட்ட பல்வேறு குணாதிசயங்கள் உள்ளவர்கள் யார் என்று காண்பதற்கு வேண்டிய வழிநடத்துதலுக்காக ஆண்டவரைத்தான் நோக்கிப்பார்க்க வேண்டும். அந்தக் குணாதிசயங்களாவன: சத்தியத்தில் தெளிவு உள்ளவராயிருக்க வேண்டும், போதகச் சமர்த்தனாயிருக்க

வேண்டும், ஒழுக்கத்தைப் பொறுத்தவரை குற்றமற்ற வாழ்க்கை உடையவராயிருக்க வேண்டும், தேவையில்லாத சண்டைச் சச்சரவு இல்லாமல், ஒழுங்கைக் காப்பாற்றுகிறவராக, இவைகள் எல்லாம் அவருடைய குடும்ப வாழ்க்கையில் ஓர் உதாரணமாக இருத்தல் வேண்டும்.

இப்படியாக, இந்தச் சிறு கூட்டம், ஆண்டவருடைய வார்த்தையையும் ஆவியையும் உடையவர்களாயிருந்து, அதன்படி நடக்கிறவர்களாக இருப்பார்கள் என்றால் ஊழியக்காரர்களைத் தெரிந்தெடுப்பதில் அவர்கள் ஒற்றுமையாய் இருந்ததினால் வந்த பலன்களை வைத்து, அந்த விஷயத்தில் அது ஆண்டவருடைய மனவிருப்பத்தின்படி நடந்தது என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். மூப்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், நிச்சயமாகவே அவர்கள் மத்தியில் உள்ளவர்களில் சிறந்தவர்களாக, மிகவும் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள். இருந்தபோதிலும் இப்படித் தெரிவு செய்வது, சரியான கவனமும், ஜெபமும் இல்லாமல் செய்யப்படாமல் இருக்கப்பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே முன்கூட்டியே இதைப் பற்றி அறிவிப்பது நல்லது, மேலும் புதுச் சிருஷ்டியின் அங்கங்களாக இருப்பவர்கள் என்று கூறுபவர்கள் (ஆணும், பெண்ணும்), இந்த விஷயத்தில் ஓட்டுப்போடும் விஷயத்தில் ஆண்டவரின் மனதின் பிரகாரம் நடக்க முயற்சி செய்வார்கள் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். பாவத்திற்கு மனஸ்தாபப்படுகிறவர் என்ற நிலையைக் கடந்துவந்தவராக, அவர்களால் முடிந்தவரை இழந்துபோன எல்லாவற்றையும் சரி செய்தவர்களாக, தேவனோடு அவர்கள் ஒப்புரவாகுவதற்கு ஆண்டவராகிய இயேசுவின் பலியே அடிப்படையாயிருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளுபவர்களாக அதன்பின் ஆண்டவருக்கென தங்களை முற்றும் அர்ப்பணித்தவர்களாக இருப்பார்கள் இதன் விளைவாக "வீட்டின் புத்திரர்களாக" எல்லா சிலாக்கியங்களையும் பெற்றவர்களாக, அபிஷேகம் பெற்றவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே சரீரமான சபையின் தலையாய் இருக்கிறவரின் மனதையும், சித்தத்தையும் அறியவும், வெளிப்படுத்தவும் தகுதியுள்ளவர்களா யிருப்பார்கள் இவர்கள் மாத்திரமே சபையை, கிறிஸ்துவின் சரீரத்தை அமைப்பவர்கள் ஏனையோர், அர்ப்பணிப்பு என்ற படிக்கு வராதவர்கள், ஆனால் விலையேறப்பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை உள்ளவர்கள், விசுவாச வீட்டின் அங்கங்கள் என்று எண்ணப்படலாம், அவர்களுடைய முன்னேற்றம் எதிர்ப்பார்க்கப்பட வேண்டும், அவர்களுடைய நலன்கள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

## ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துதல்

"அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்." (அப்போஸ்தலர் 14:23)

இந்த அறிக்கையும், எல்லா சபைகளிலும் உள்ள மூப்பர்கள் சம்பந்தமாக அடிக்கடி சொல்லப்பட்டவைகளும், சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் இது மாறாத வழக்கமாக இருந்தது என்று முடிவு செய்வது நியாயமாகத்தான் இருக்கிறது. "மூப்பர்கள்" என்ற மேற்கூறிய வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, மேய்ப்பர் களையும், போதகர்களையும், தீர்க்கத்தரிசிகளையும் (அல்லது பொதுவாக வியாக்கியானம் பண்ணுகிறவர்கள்) அந்த வார்த்தை குறிக்கின்றது; ஆகவே "தெரிந்துகொள்ளுதல்" என்கின்ற வார்த்தை எதைக் குறிக்கின்றது என்பதை கற்பது முக்கியமானது. தற்போது இந்த வார்த்தை பொதுவாக நியமனம் செய்கின்ற ஒரு சடங்காச்சாரத்தைக் குறிக்கும்படியாக உபயோகப்படுத்தப்படுகின்றது; ஆனால் இந்த வசனத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள "kirotoneo" என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் இதுவல்ல. அதன் அர்த்தம் "கையை நீட்டுவதன் மூலம் தெரிவு செய்வது," வழக்கமாக ஓட்டுப்போடும் முறையாகும். பேராசிரியர் யங்ஸ் (Prof. Youngs' Analtical Bible Concordance) என்பவரது "ஆராய்ந்துப் பார்க்கக்கூடிய வேதாகம ஒத்த வாக்கிய புத்தகத்தில்" இவ்வாறு சொல்லப் பட்டுள்ளது. அது சபையினரால் சொல்லப்பட்டது என்று நினைக்க ஏதுவாயிருப் பதால், சபையினருடையது என்று எண்ணப்படக்கூடிய "ஸ்ட்டிராங் (Strongs' Exahautive Concordance)" என்பவருடைய பூரணமான ஒத்தவாக்கிய புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறதையும் முன்பாக வைக்கிறோம். பின்னர் குறிக்கப்பட்டுள்ள புத்தகம் அந்த வார்த்தையின் மூலக்கருத்தை இப்படியாகக் கூறுகிறது - கையைத் தொடுகிறவர் அல்லது வாக்குப்போடுகிறவர் (கையை உயர்த்துவதன் மூலம்).

"நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்" என்று நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர்களைக் குறித்துச் சொன்னப்போது முற்றிலும் வித்தியாசமான கிரேக்கப்பதம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. (யோவான் 15:16) அப்போஸ்தலர் தான் தெரிந்து கொள்ளப்பட்டதைக் குறித்துச் சொல்லும்போது "tithemi" என்கிற இதே கிரேக்க வார்த்தையை உபயோகப்படுத்துகிறார். "நான் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும் . . . நியமிக்கப்பட்டிருக்கிறேன்" என்று அவர் கூறுகிறார். (1 தீமோத்தேயு 2:7) ஆனால் இந்தத் தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர் தெளிவாகக் கூறுகிறதாவது: "மனுஷராலுமல்ல மனுஷர் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், பிதாவாகிய தேவனாலும்" என்பதாகும். (கலாத்தியர் 1:1) சபையில் அபிஷேகம் பெற்ற எல்லா அவயவங்களும் தலையாயிருக்கிறவரோடு இணைக்கப்பட்டு, அவருடைய ஆவியில் பங்குள்ளவர்களாக இருக்கிறார்கள், ஆகவே இதே விதமாகத் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள். ஆனால், உண்மையிலேயே பவுலைப்போன்று அப்போஸ்தல ஊழியத்திற்கல்ல, ஒவ்வொருவரும் தனக்குள்ள தாலந்துகள், வாய்ப்புகளின்படி சத்தியத்திற்கென ஊழியக்காரர்களாக (வேலையாட்களாக) இருக்கும்படியாக ஏற்படுத்தப்

படுகிறார்கள். (ஏசாயா 61:1) பன்னிருவர் மாத்திரமே, அப்போஸ்தலர்களாக, அல்லது விசேஷ பிரதிநிதிகளாக முழு வல்லமையுள்ள ஊழியக்காரர்களாக ஏற்படுத்தப்பட்டார்கள்.

மேலே நாம் பார்த்த பிரகாரம், "கைகளை நீட்டுவதன்" மூலம் புதுச் சிருஷ்டியின் சபை மக்கள் (சபை) மூப்பர்களை, ஏற்படுத்தும்போது, அல்லது அறிந்துகொள்ளும்போது, அதை நாம் திரும்பி கவனத்திற்குக் கொண்டுவரும் போது இதுதான் வழக்கத்திலிருந்த முறை என்று பார்க்கின்றோம். ஏனெனில் தீத்து எப்படி, தன் உதவியாளர் ஆனார் என்பதைக் கூறும்போது அப்போஸ்தலர் அதே கிரேக்க பதத்தைதான் உபயோகப்படுத்துகிறார். அவர் கூறுகிறார்: "எங்களுக்கு வழித்துணையாய் இருக்கும்படி அவன் சபைகளால் தெரிந்துகொள்ளப் பட்டவனாயும் இருக்கிறான்." தடித்த எழுத்துக்களில் உள்ள வார்த்தைகள் "kirotoneo" என்ற கிரேக்கப்பதத்திலிருந்து வருவதாகும். அது மேலே கூறப்பட்டபடி "கைகளை நீட்டுவதன் மூலம் தெரிந்துகொள்ளப்படுவது" என்று பொருள்படுகிறது. மேலும் அவனும் "கூட" (ஆங்கில வேதாகமத்தில் "also" என்று இருக்கிறது) என்கிற வார்த்தை இங்கே அப்போஸ்தலனாகிய தானும் இதே முறையில் தெரிந்து கொள்ளப்பட்டார் என்று பொருள்படுகிறது. தீத்து அப்போஸ்தலனாக இருக்கும்படியாக தெரிந்துகொள்ளப்படவோ அல்லது ஏற்படுத்தப்படவோ இல்லை, ஆனால் ஒரு மிஷினெரியாக (missionary) இந்த இடத்தில் சபைகளில் ஒரு பிரதிநிதியாகத் தெரிந்துகொள்ளப்பட்டார், மாத்திரமல்ல அவர்களுடைய செலவில் அனுப்பப்பட்டார் என்பதும் சந்தேகத்திற்கு இடமின்றி தெரிகிறது.

இருந்தபோதிலும், இதன் பின்னர், அப்போஸ்தலரின் சில பிரயாணங்கள் அந்தியோகியா சபையினால் ஆதரவு இன்றி இருந்தன என்பது தெரியவருகிறது. (2 தீமோத்தேயு 1:15) ஆதிகாலத்துச் சபையின் சட்டத்திட்டங்கள் எல்லோரையும் அவர்களுடைய சொந்த மனச்சாட்சியின்படி தங்களுடைய தாலந்துகளையும், உக்கிராணத்துவத்தையும் உபயோகிக்கும்படி விட்டுவிட்டன. சபைகள் (சபை ஜனங்கள்) அப்போஸ்தலர்களுடைய சேவைகளை, அவர்களுடைய விசேஷமான பிரதிநிதிகள் என்றிருந்தாலும்கூட, ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரித்து விடலாம். அப்போஸ்தலர்கள்கூட இப்படிப்பட்ட ஒப்பந்தத்தை தன்னுடைய சொந்த மனசாட்சியை உபயோகிப்பதின் மூலம் ஒன்று ஏற்றுக்கொள்ளலாம் அல்லது புறக்கணித்துவிடலாம்.

இதைக் காட்டிலும், மூப்பர்கள் போன்றவர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள் என்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டதைத் தவிர்த்து வேறு இடத்தில் சொல்லப்படவில்லையா! எல்லா சபைப் பிரிவுகளிலும், மூப்பர்கள், பிரசங்கிகள் போன்றவர்களை அனுமதிப்பது, ஏற்படுத்துவது என்கிற விஷயங்களில் "ordain" என்கிற ஆங்கில பதம் பொதுவாக இப்பொழுது உபயோகிக்ககப்படுவதால் பிரசங்கிப்பதற்கு "அதிகாரம் கொடுப்பது" அல்லது அனுமதியளிப்பது என்று

பொருள்படும்படியான பதம் எதுவுமே இல்லையா! இந்தக் கேள்விகளை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

மூப்பர்களைப் பொறுத்தமட்டில் "ஏற்படுத்துவது" என்கிற வார்த்தை வேறு ஒரு இடத்தில் மாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது, அதுவும்கூட இன்னொரு கிரேக்கப்பதமான "kathestemi" என்பதின் மொழிப்பெயர்ப்பேயாகும். அது யங்ஸ் (youngs') என்பவருடைய வேத வியாக்கியானத்தின்படி "வைப்பது" அல்லது கீழே கொடுப்பது என்று பொருள்படுகின்றது. ஸ்ட்ராங் (Strong) என்பவரின் வேத வியாக்கியானத்தின்படி "இதை கீழே வைப்பது" என்று பொருள்படும். தீத்து 1:5-இல் இந்த வார்த்தை வருகிறது: "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குப்படுத்தும் படிக்கும், நான் உனக்கு கட்டளையிட்டப்படியே பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னை விட்டுவந்தேனே." உதாரணமாக, "நான் ஒழுங்குபண்ணினபடியே" என்பது திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பில், "நான் உன் வசமாகக் கொடுக்கப்பட்டபடியே" என்றிருக்கிறது. இந்தப் பகுதியைப் பார்க்கும் பொழுது இந்த மூப்பர்களை ஏற்படுத்தும்படியாக மூப்பர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடுவதுபோல் உள்ளது, அதுவும் சபையினரின் விருப்பங்களைக் கணக்கில் கொள்ளாதபடி என்று குறிப்பதுபோல் உள்ளது, இந்தக் கருத்தின்மேல்தான் எபிஸ்கோப்பல் (Episcopal) சபைமுறை அமைந்துள்ளது. கத்தோலிக்கர்கள், எபிஸ்கோப்பல் சபையினர், மேலும் மெதடிஸ்ட் - எபிஸ்கோப்பல் (Methodist - Episcopal) சபையினர் அனைவரும், அவர்களுடைய பிஷப்புகள், கைகளை முன் நீட்டாமல், சபை வாக்கெடுப்பில்லாது, சபையினருக்காக மூப்பர்களை, ஏற்படுத்த அல்லது நியமிக்க அல்லது கை வைக்கும்படியாக ஓர் அப்போஸ்தல அதிகாரம் உண்டு என்கிறார்கள்.

இந்த வாக்கியம் இந்தக் கருத்துக்கு மூல வாக்கியமாக உள்ளது. ஆனால் "உன்னை விட்டு வந்தேனே" என்ற கடைசி உட்பிரிவை நாம் பார்க்கும்போது, இது மிக பெலவீனமான ஆதாரமாக உள்ளதுடன், இந்தக் காரியத்தில் அப்போஸ் தலர்கள் தான் செய்ததற்கு வித்தியாசமாக தீத்து செய்யும்படியாக அவருக்கு அவர் நிச்சயமாக "பொறுப்பையோ" அல்லது "கட்டளையையோ" கொடுத்திருக்க மாட்டார் என்பதைத்தான் அது பிரதிபலிப்பதாய் இருக்கிறது. சரியான மொழிப்பெயர்ப்பில், அப்போஸ்தலர்கள் அந்த விஷயத்தில் எப்படிச் செயல்பட்டனர் என்பது வெகு தெளிவாக இருக்கிறது. "அந்தந்தச் சபைகளில் கரங்களைக் காட்டுவதன் மூலம் மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து, ஜெபம் பண்ணி . . . . கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்." (அப்போஸ்தலர் 14:23)

அப்போஸ்தலருடைய ஆலோசனையையும், தீத்துவுடைய ஆலோசனை யையும், தீத்துவை விசேஷமாகச் சத்தியத்திற்காக ஓர் உண்மையான ஊழியக்காரனாக ஒப்புவித்ததும், வாஞ்சிக்கப்படுவது மாத்திரமல்ல, சகோதரர் களால் விரும்பப்பட்டதுமாகும், மாத்திரமல்ல அதைப் பொதுவாகப் பின்பற்றி

னார்கள். ஆனாலும், அப்போஸ்தலரும், அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றின அனைவரும், ஆண்டவர் வைத்த இடத்திலே பொறுப்பை, சபையின்மேல் வைக்க விரும்பினார்கள். சபையின் கரிசனையானது "அந்த ஆவிகள் (போதகங்களும், போதகர்களும்) தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்பதாகும். (1 யோவான் 4:1) "எவனொருவனும் வார்த்தையின்படி பேசாவிட்டால் அவர்களுக்குள் வெளிச்சம் இல்லை;" "இப்படிப்பட்டவர்களிடமிருந்து விலகுங்கள்." மேலும் அப்போஸ்தலர் இப்படிப்பட்டவர்களைத் தெரிந்துகொள்ள வேண்டாம், எவ்விதத்திலும் அவர்களைப் போதகர்கள், மூப்பர்கள் போன்றவர்களாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று ஆலோசனைக் கூறுகிறார்.

எப்படியாயினும், சொல்லப்பட்டபடியே, வாக்குகள் செலுத்தப்படுவதன் மூலமாகவோ அல்லது இல்லையோ சபையின் ஆதரவு தேவை. ஏனெனில் ஒருவேளை தீத்து சகோதரர்களுக்கு ஏற்றவராக இல்லாத மூப்பர்களை ஏற்படுத்தியிருந்தால், எவ்வளவு காலத்திற்குச் சமாதானம் நிலைத்திருக்கும்? சபையினரின் உணர்வுகளுக்குப் பாதிப்பு உண்டாகாதபடி எந்த அளவுக்கு இப்படியான ஒரு மூப்பர், மேய்ப்பனின் ஊழியத்தை அல்லது வேறு ஊழியத்தைச் செய்ய முடியும்? நடைமுறையில் யாராலும் முடியாது.

பரிசுத்தவான்களை "குருவானவர்" என்றும் "பாமர மக்கள்" என்றும் இரண்டு வகுப்பினராக பிரிவு படுத்துவதற்கு குருத்துவம்தான் காரணமேயொழிய, நம்முடைய ஆண்டவருடைய அல்லது அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் போதனைகள் அல்ல. குருத்துவம் என்ற ஆவியும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியும் இயன்ற அளவுக்கு ஆண்டவருடைய ஜனங்களை இறுமாப்பாய் ஆள விரும்புகிறது. அது எந்தச் சபையில் எவ்வளவு அதிக அறியாமை காணப்படுகின்றதோ அந்த அளவுக்கு இறுமாப்பாய் ஆள விரும்புகிறது. ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் மூப்பர்களையல்ல, சபையையே கிறிஸ்துவின் சரீரமாக அங்கீகரிக்கிறார்கள். ஆண்டவருடைய சபையினரின் உண்மையான ஊழியக்காரர்கள் என்று மூப்பர்களுக்கு ஏதாவது கௌரவமோ, அல்லது கனமோ வரும் என்றால், அது அவர்களால் உண்டானதும் அல்ல. அவர்களைத் தெரிந்துகொள்ளுகின்ற சபை அறிந்திருக்க வேண்டும், தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திற்கு ஏற்ப அவர்களுடைய கிறிஸ்தவ கிருபைகளையும் திறமைகளையும் அறிந்திருக்க வேண்டும். இல்லையெனில், இப்படிப்பட்ட ஒரு நிலையையும் அல்லது கனத்தையும் அளிக்க இயலாது. ஆகவே எந்த மூப்பருக்கும் தன்னைத்தான் நியமித்துக்கொள்ளும் அதிகாரம் கிடையாது. உண்மையாகவே, கிறிஸ்துவின் சரீரமான சபையைப் புறக்கணிக்கும் தன்மையையும், தன்னையும், தன்னுடைய யோசனையையும் எல்லோருடையதைக் காட்டிலும் மேலானது என்று எண்ணுவதும், இப்படிப்பட்ட ஒரு சகோதரர் மூப்பராக அறியப்படுவதற்கான தகுந்த நிலைமையில் காணப்படவில்லை என்பதற்கு முதல்தரமான ஆதாரமாக இருக்கிறது.

தாழ்மையும், சபையானது ஆண்டவருடைய சரீரமாய் இருக்கிறது என்று அறியும் ஒருமைப்பாடும், இப்படிப்பட்ட ஓர் ஊழியத்திற்கு இன்றியமையாதது ஆகும்.

தான் ஏற்றுக்கொள்ளப்படுவதைக்குறித்து, எந்தக் கேள்வியும் எழும்பாது என்று நிச்சயமிருந்தாலும், எந்த ஒரு சகோதரனும், தேர்தல் நடத்தப்படாமல், சபையின் தலைவர், பிரதிநிதி போன்ற பொதுவான கடமைகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது. வேதாகம முறையானது, எல்லாச் சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துவது வாக்கு (vote) செலுத்தும்படியாகக் கரங்களை நீட்டுவதின் மூலமாகும். ஊழியம் செய்வதற்கு முன்னர் இப்படி ஒரு தேர்தல் வேண்டும் என்று வற்புறுத்துவது ஏனென்றால் வேதாகம முறையைப் பின்பற்றுவதுதான். அது மூப்பரைப் பலப்படுத்துகின்றது, மேலும் ஆண்டவருடைய நாமத்தினாலும் ஆவியினாலும் மூப்பர்களை ஏற்படுத்தும்போது அது தேவனுடைய விருப்பத்தையும் சித்தத்தையும் வெளிப்படுத்துகிற விதமாக, சபைக்கு உள்ள கடமைகளையும், பொறுப்புகளையும் அது நினைவூட்டுகிறது. மேலும் இந்த வேதாகம ஒழுங்குமுறை, சபையின் அங்கங்களை அவர்களின் வேலையாட்களாகவும், பிரதிநிதியாகவும் இருக்கின்ற மூப்பர்களின் எல்லா வார்த்தைகளிலும், செயல்களிலும் நாட்டம் கொள்ளச் செய்கிறது. மூப்பர்கள் சபையினரை, தங்களால் சொந்தமாக்கிக் கொள்ளப்பட்டவர்கள் என்று அவர்களை ஆட்சி செய்கிறார்கள் என்ற பரவலானக் கருத்தை அது எதிர்க்கிறது, அதுமாத்திரமல்ல மூப்பர்கள் சபையினரை "நான் சேவை செய்யும்படியான ஆண்டவருடைய ஜனங்கள்" என்று சொல்லாமல் அவர்களை "என் ஜனங்கள்" என்று நினைப்பதற்கும், பேசுவதற்கும் அது முற்றுப்புள்ளி வைக்கின்றது.

இவ்வளவு தெளிவாக வேதாகம முறைப்படி இருக்கின்ற விஷயங்கள் ஏன் பொதுவாக விளங்கப்பட்டு, முன்பதாக வைக்கப்படுவதில்லை? ஏனெனில் மனித சுபாவம், கனத்தையும், மெச்சிக்கொள்ளப்படுதலையும் விரும்புவதுடன் இவைகளுக்குச் சாதகமாகக் காணப்படுகின்ற தவறான நிலைமைக்குள் வேகமாக வந்துவிடுகிறது, ஏனென்றால் பதினேழு நூற்றாண்டுக் காலமாக இவைகள் பிரபலமாக இருந்திருக்கின்றன; காரணமென்னவெனில், கிறிஸ்து விடுதலையாக் கக்கூடிய சுயாதீனங்களைக் காட்டிலும் ஜனங்கள் இவைகளை விரும்பி இந்த நிலைமைக்கு இடம் கொடுக்கிறார்கள். அதன் பின்னரும், பாபிலோனின் பழக்கங்கள் சரியாகத்தான் இருக்க வேண்டுமென்று நிச்சயத்திருப்பதால், இந்த விஷயத்தைக் குறித்துத் தேவனுடைய வார்த்தையை ஒருபோதும் படிக்காமல் இருக்கிறார்கள்.

## மூப்பராயிருக்க வேண்டிய காலம்

எவ்வளவு காலத்திற்கென்று ஒரு மூப்பர் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதைக் குறித்து ஆவியின் உந்துதலின்படி எதுவும் சொல்லப்படவில்லை, ஆகவே இந்த விஷயத்தில் நாம் நியாயமானது என்று நினைப்பதை அப்பியாசப்படுத்த

வேண்டும். அநேகர் மூப்பர்களாக இருக்கக்கூடிய கனத்தைப் பெற்றிருக்கலாம், இல்லையென்றால் சகோதரர்களாகச் சபையிலே வளர்ந்திருக்கலாம், அவர்கள் உபயோகமுள்ளவர்களாக, மிகவும் பாராட்டுக்குரியவர்களாக இருக்கலாம், இருந்தாலும் சபையினால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குள், அதன் பிரதிநிதிகளாக, சுவிசேஷகர்களாக, போதகர்களாக, மேய்ப்பர்களாக இருக்க முடியாது. "முதிர்வயதுள்ள ஸ்திரீகள்" (சபையில் ஸ்திரீகளின் நிலைமை, அதிகாரம் 5-இல் பார்க்க) என அப்போஸ்தலர்களால் இப்படியாக பலமுறை மரியாதையுடன் குறிப்பிடப்பட்டுள்ளார்கள், ஆனால் ஓரிடத்தில்கூட அவர்கள் பிரதிநிதியாக இருக்கும்படியான, மூப்பர்களாக அல்லது போதகர்களாகச் சபையில் தெரிந்துகொள்ளப்பட்டார்கள் என்று கூறப்படவில்லை. சபைக்குத் தகுதியான வர்கள் என்று தெரிந்துகொள்ளப்பட்ட சிலர் குறிப்பிடப்பட்டிருந்த தகுதியை இழந்துவிடலாம், அப்படியில்லாவிட்டால் மற்றவர்கள் தேவ வழிநடத்துதலின்படி சபையின் வேலைகளைச் செய்வதற்காக இன்னமும் அதிகமாக திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். இப்படிப்பட்ட வேலைகளுக்கு ஒரு வருடம், அல்லது பாதி, அல்லது கால் வருடம் போதுமானதாக இருக்கலாம். முன்பு சொல்லப்பட்ட காலம் திறமையுள்ளவர்கள் என்று எண்ணப்படுபவர்களுக்கும், பிந்தயக் காலம் அதிகத் திறமையில்லாதவர்கள் என்று கருதப்படுபவர்களுக்காக, சபையில் சட்டம், அல்லது புத்திமதி, அல்லது ஆலோசனை என்று கூட இல்லாவிடில் ஒவ்வொரு சபையும், ஒவ்வொரு விஷயத்திலும் ஆண்டவருடைய சித்தத்தின்படி செயல்படுவது நலமாயிருக்கும்.

## மூப்பர்களின் எண்ணிக்கை

வேதாகமத்தில் மூப்பர்கள் இத்தனை பேர் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் சபையின் அளவைப் பொறுத்தும், திறமைசாலி யானவர்கள், என்பது போன்று இருக்கும் தொகையினரைப் பொறுத்தும் இருக்கும். (யாரையும் ஒரு விசுவாசி, அல்லது முற்றுமாக அர்ப்பணம் செய்தவர் என்று யூகிக்கக்கூடாது. அவர் மூப்பராகத் தெரிந்துகொள்ளப்படுவதற்கு முன்னரே, அவருடைய விசுவாசத்தைக் குறித்து, தன்னுடைய வார்த்தையினாலும், செயலினாலும் தவற்றிற்கு இடமில்லாத வகையில் சாட்சி பகருகிறவராக இருக்க வேண்டும்.) எத்தனை பேர் மேற்சொல்லப்பட்ட தகுதிகள் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்களோ அவர்கள் மத்தியில் வேலைகளைப் பகிர்ந்துக் கொடுக்கும்படியாக இருப்பதை நாம் விரும்புகிறோம். அவர்களில் சிலரை எப்படியாயினும் சில வகையான ஊழிய அல்லது சுவிசேஷ பணியோ ஈர்த்துக்கொள்ளும், சிலரைப் பகுதி நேரத்திற்குக்கூட ஈர்த்துக்கொள்ளக்கூடும். ஒவ்வொரு சபையும், தன்னிடத்திலிருந்து பரவலான இடங்களில் வேலைகளைச்

செய்யும்படியாகத் தொடர்ந்து செல்லக்கூடிய, போதகர்களை அனுப்பக்கூடிய ஒரு வேதாகமப் பல்கலைக்கழகமாக இருக்கும். மற்றவர்கள்மேல் பொறாமைப்படுகின்ற, மற்றவர்கள் ஊழியம் செய்யாதபடி தடைசெய்ய வேண்டும் என்கிற விருப்பமுள்ள மூப்பர்கள் தொடர்ந்து இருக்க தகுதியற்றவர் என்று கருதப்பட வேண்டும். இருந்தாலும் தன்னுடைய கர்வத்தைத் திருப்திப்படுத்தும் வகையில், திறமையற்றவர், அல்லது கற்றுக்குட்டியாக இருக்கிற ஒருவரும் தெரிந்து கொள்ளப்படக்கூடாது. சபையானது, கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக இருக்கிறவர்கள், தலையாயிருக்கிறவர் எப்படி வாக்குப்பதிவு செய்ய விரும்புகிறாரோ, அப்படியே அவர்களும் செய்ய வேண்டும்.

அப்போஸ்தலர்களால், இந்தெந்தத் தகுதிகள் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கும்போது, ஊழியத்திற்கு ஒருவரும் தகுதியில்லையென்று காணப்படும்போது, ஒரு மூப்பரைத் தெரிவு செய்வதைக் குறித்து ஒருவேளை ஓர் எச்சரிப்புக் கொடுப்பது நல்லது. மேலும் திறமையற்றவர்களைத் தெரிவு செய்வதைக் காட்டிலும் மூப்பர்கள் இல்லாமல் இருப்பதே நல்லது. இதற்கு இடையில், ஊழியத்திற்குத் தகுதியான ஒரு சகோதரர் காணப்படும் வரையில், வேதாகமம் ஒரு பாட புத்தகமாக வைக்கப்பட்டு, நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், வேதாகமப் பாடங்களில் போதகராக உங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பராக சகோதரர் ரசல் இருப்பதுபோல், கூட்டங்கள் சாதாரண முறையில் நடைபெறட்டும்.

## யார் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கலாம், எப்படி?

சபை மாத்திரமே (சரீரமான சபை - ஆண்களும், பெண்களும்), புதுச் சிருஷ்டியானவர்கள், தெரிந்தெடுக்கிறவர்களும், வாக்குப்பதிவு செய்பவர்களாயி ருக்கிறார்கள். பொதுவாக "விசுவாச வீட்டார்," அர்ப்பணம் செய்திராத விசுவாசிகள் இப்படிப்பட்ட தெரிந்து கொள்ளுதலோடு ஒரு தொடர்பும் இல்லாதவர்கள். ஏனென்றால் இது ஆண்டவரால் அவருடைய விருப்பத்தின்படி செய்யப்பட வேண்டியதாகும், அவருடைய "சரீரத்தின்" மூலம், அவருடைய ஆவியை உடையவர்கள் மூலம் செய்யப்பட வேண்டும். சபையில் அர்ப்பணம் செய்துகொண்டவர்கள் எல்லாம் வாக்குப்பதிவு செய்ய வேண்டும், இதற்காகக் கூடியிருக்கிற வேளையில் அவர்களில் யாராவது நியமிக்கப்படும்படியாகப் பெயர்களைக் கூறலாம். இதை வாக்குப்பதிவு செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அதைப் பரிசீலனைச் செய்வதற்கு அவகாசம் இருக்கும்படியாகக் கூறலாம்.

சிலர் வாக்குச் செலுத்துவது என்பது சீட்டுமூலம் இருக்கும் என்றால் எல்லோரும் அவர்களுடைய உண்மையான விருப்பப்படி செயல்பட ஏதுவாக இருக்குமென்று வற்புறுத்தி இருக்கிறார்கள். இந்த முறையில் எவ்விதமான

அநுகூலம் இருந்தாலும், அது ஒரு பிரதிகூலம் மூலம் ஈடுசெய்யப்பட்டுவிடுகிறது என்று நாம் கூறுகிறோம். எப்படியெனில் அப்போஸ்தல முறையான "கரங்களை நீட்டுதல்" முறையில் வருகின்ற ஒழுங்கும், குணாதிசயத்தை வளர்ப்பதும் இல்லாமல் போய்விடுகின்றது. ஒவ்வொருவரும், கபடமற்றவராக, வெளிப்படையாகப் பேசுகிறவராக, இருக்க வேண்டும், ஆனாலும் அதே நேரத்தில் அன்புள்ளவராக, மென்மையான உள்ளம் கொண்டவராக இருக்க வேண்டும். வாக்குப்பதிவு செய்வது என்பது, தங்களால் ஆண்டவருடைய சித்தத்தை அறிய, கூடுமானவரை அவருடைய சரீரமான சபையின் அங்கங்களால், செய்யப்பட வேண்டியது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். ஒருவர் ஆண்டவருடைய மனதை அறிந்திருக் கிறேன் என்று நம்புகிறவர், அதைக் கூறுகிறவர் தவிர வேறு எவரும், தன்னுடைய கடமையைத் தள்ளிவிடவோ, ஒருவரை இன்னொருவரைக் காட்டிலும் மேலாக ஆதரிக்கும் உரிமை உள்ளவராக இல்லை.

## பெரும்பான்மையாயிருப்பது போதுமானதல்ல

உலகக் காரியங்களில் ஒரு பெரும்பான்மையினரின் குரலே முடிவு எடுக்கிறது, ஆனால் ஆண்டவருடைய சபையில் அல்லது சரீரத்தில் அப்படியிருக்கவே கூடாது. இதற்கு மாறாக, கூடுமானவரை ஜூரி (Jury - rule) முறையில் ஏகோபித்தத் தீர்மானம் அல்லது முடிவு எடுக்கப்பட வேண்டும். ஒரு சகோதரன் அதிக பட்ச வாக்குப் பெறாதிருக்கும்போது, "அது ஆண்டவருடைய சித்தம்" என்று ஏற்றுக்கொள்வதில் அசௌகரியமாக, சபையினர் உணருவதைக் காட்டிலும் அதிகமாக உணரலாம். வேறொருவர் எல்லோருடைய ஆதரவையும், அல்லது கிட்டத்தட்ட எல்லோருடைய ஆதரவையும் பெற முடிந்தவராயிருப்பாராயின், அவரை ஒவ்வொரு வாரமும் வாக்குப்பதிவுக்குப் பின்னர் இன்னொரு வாக்குப் பதிவு மூலம் அவரை நாட வேண்டும். அவரைத் தேடிப் பிடிக்கும்வரை அப்படிச் செய்ய வேண்டும்; இல்லையென்றால் அந்த விஷயத்தையே விட்டுவிட வேண்டும், இல்லையென்றால் எல்லோரும், இன்னும் இரண்டு அல்லது மூன்றுபேர், தங்கள் எல்லோருடைய யோசனையை நிறைவேற்றும்படி, ஒருவர் பின் ஒருவராக சேவை செய்யக்கூடியவர்களைத் தெரிந்துகொள்ளட்டும். ஆனால் தாலந்துகள் சமமாகக் காணப்படும் பட்சத்தில் ஒருவரையொருவர் கனத்தில் முந்திக் கொள்ளும்படியாகவும் வழிநடத்துதலுக்கான ஜெபமும், சத்தியத்தின்மேலும், ஆண்டவர்மேலும் ஊக்கமான அன்பு காணப்படும் என்றால், இந்தப் பொருளில் ஆண்டவருடைய சித்தம் இன்னதென்று எல்லோரும் அறிந்துகொள்வது பொதுவாக எளிதானதாகக் காணப்படும். "ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமலிருங்கள்." "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்." (பிலிப்பியர் 2:3;

எபேசியர் 4:3)

உதவி செய்பவர்கள் என்று பொருள்பட அழைக்கப்படும் உதவிக்காரர்கள், ஸ்திரீகள் விஷயத்திலும் இதேமுறை பின்பற்றப்படல் வேண்டும். அவர்களுடைய நல்நடத்தையும் ஒரு குணாதிசயமாக எண்ணப்பட வேண்டும். (பார்க்க, 1 தீமோத்தேயு 3:8-13) எந்த வேலைக்கும் இவைகள் தேவைப்படலாம். மூப்பராவதற்குத் தேவைப்படுகிறவைகளில் பெரும்பாலானவைகளோடுகூடப் போதக சாமர்த்தியமும், ஆவியின் கிருபைகளும் இருக்க வேண்டும்.

## பல்வேறு விதமான ஊழியங்கள்

நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி, மூப்பர்கள் ஒன்றில் அல்லது குறிப்பாக வேறு ஒன்றில் விசேஷத் தகுதியுள்ளவர்களாக இருக்கலாம். சிலர் புத்திச் சொல்லுவதிலும், சிலர் தீர்க்கத்தரிசனம் உரைப்பவர்களாக அல்லது சிறந்தப் பேச்சாளராகவும், சிலர் சுவிசேஷகர்களாகவும், சிலர் அவிசுவாசிகளைக் கவரக்கூடியவர்களாகவும், சிலர் மந்தையின் பல்வேறு காரியங்களை, அந்த இடத்தில் அல்லது பொதுவான முறையில் கண்காணிக்கும் போதகர்களாகவும் காணப்படலாம். அப்போஸ்தலர் பவுல் எபேசு சபையின் மூப்பர்களுக்குக் கூறியவைகள் நமக்கு ஊழியத்தைக் குறித்துப் பொதுவான வாய்ப்பைத் தருவதுடன், ஒவ்வொரு தனி நபரும் ஓர் உக்கிராணக்காரனாக தன்னுடைய தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கிறது. ஒரு வேலையின் எந்தப் பகுதியிலும் சேவை செய்யக்கூடிய மூப்பரின் சேவையை ஏற்றுக்கொள்ளுகின்ற எல்லோராலும் கவனமாகவும், ஜெபத்தோடும் கவனிக்கப்பட வேண்டியதாக அவருடைய வார்த்தைகள் உள்ளன. "ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக (வேறு இடத்தில் இந்த வார்த்தை பிஷப்புகள் என்று தவறாகக் கூறப்பட்டுள்ளது) வைத்த மந்தை (சபை) முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்." (அப்போஸ்தலர் 20:28) ஆம், உண்மைதான், மூப்பர்கள் முதலாவது தங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும், அவர்களுடைய நிலைக்குரிய சிறிய கனம் அவர்களைப் பெருமையுள்ளவர்களாக, மற்றவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களாக ஆக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும், இதனோடுகூட தலையான, பிரதான மேய்ப்பனுக்குரிய அதிகாரத்தையும், கனத்தையும் தங்களுக்கென்று எடுத்துக்கொள்ளாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும், எழுதியிருக்கிறபடி மந்தையை மேய்ப்பது அவருடைய காரியமாகும். "மேய்ப்பனைப் போலத் தமது மந்தையை மேய்ப்பார்." (ஏசாயா 40:11) ஆகவே, ஒருவர் மேய்ப்பனாகத் தெரிந்துகொள்ளப்படும்போது, அவர்தானே பிரதான மேய்ப்பனுக்கு அடையாளமாயிருக்கக்கூடும். மந்தையின் மகா பிரதான மேய்ப்பன் தன்னுடைய

சொந்த "போஜனத்தை ஏற்றகாலத்தில் அனுப்பவும்," "புதிதும் பழமையானவைகளையும்" அனுப்பும்படியான வாய்க்காலாக அல்லது கருவியாக அவர் இருக்கும்படியாக அவர் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளார்.

"என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் என் ஆடுகளைப் பராமரியாமல், அவைகளைச் சிதறடித்து அவைகளைத் துரத்திவிட்டீர்கள்; இதோ, நான் உங்கள்பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகளை மேய்க்கத்தக்கவர்களையும் அவைகள்மேல் ஏற்படுத்துவேன்; இனி அவைகள் பயப்படுவதுமில்லை, கலங்குவதுமில்லை, காணாமற்போவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 23:1,2,4)

## மூப்பராகிய சங்கத்தார் கரங்களை மேல் வைப்பது

(1) "**மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது** தீர்க்கதரிசனத்தினால் (வருமுன் கூறுவது) உனக்கு அளிக்கப்பட்ட வரத்தை (கொடுக்கப்பட்டது) பற்றி அசதியாயிராதே." (1 தீமோத்தேயு 4:14)

(2) "அவர்களை (சபையினால் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு உதவிக்காரர்கள்) அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, **அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்.**" (அப்போஸ்தலர் 6:6)

(3) "அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே . . . பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, **அவர்கள் மேல் கைகளை வைத்து,** அவர்களை அனுப்பினார்கள்." (அப்போஸ்தலர் 13:1-3)

(4) "**ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே**; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே . . ." (1 தீமோத்தேயு 5:22)

(5) "அல்லாமலும் பவுல் **அவர்கள் மேல் கைகளை வைத்தபோது,** பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கத்தரிசனம் (பிரசங்கித்தார்கள்) சொன்னார்கள்." (அப்போஸ்தலர் 19:6)

(6) "**அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்,** அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்." (அப்போஸ்தலர் 8:17-19)

(7) "**நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால்** உனக்கு உண்டான

தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்." (2 தீமோத்தேயு 1:6)

புதுச் சிருஷ்டியின் சபையின்மேல் கரங்களை வைப்பதைப் பற்றிய ஆவியின் உந்துதலினால் கொடுக்கப்பட்ட மொத்த சாட்சிகளைக் காட்டுகிறோம். கடைசி மூன்று (5, 6, 7) குறிப்புகளின்படி, ஆரம்பக்கால சபையில் வரங்களை அளிப்பது சாதாரணமான காரியமாக இருந்தது என்று காண்கிறோம். அப்போஸ்தலரின் கரங்கள் இப்படியாக அர்ப்பணம் செய்துகொண்ட எல்லா விசுவாசிகளின்மேல் வைக்கப்பட்டது. சிலருக்கு ஒன்று அல்லது அதற்கு மேலான வரங்கள், "அந்நிய பாஷை," முதலான வரங்கள் கிடைத்தன. "ஒவ்வொருவனுக்கும் அவனுடைய பிரயோஜனத்திற்கென ஓரளவு ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறது." (தொகுதி 5, அதிகாரம் 8-ஐப் பார்க்க) முதல் நான்கு வசனங்கள் (1, 2, 3, 4) பொதுப்படையான உபதேசம் என்று சேர்த்துக் கூறமுடியும். அவையாவன: ஆதரிக்கும்படியானது அல்லது ஆமோதிக்கும்படியானது; ஆனால் உத்தரவு அல்லது அதிகாரம் கொடுப்பதற்கான ஓர் அடையாளமாக அல்ல.

(1) ஊழியத்தில், பவுலினால் தத்தெடுக்கப்பட்ட "குமாரன்" தீமோத்தேயு, ஏற்கெனவே ஞானஸ்நானம் பெற்றதோடு அவன் பவுலோடு எருசலேமுக்குச் சென்றபோது ஏற்கெனவே அப்போஸ்தலரின் கரங்களில் பரிசுத்த ஆவியின் வரத்தையும் பெற்றிருந்தான். (பார்க்க 7) அந்த இடத்தில் "யாக்கோபும் மற்ற எல்லா மூப்பரும்," அப்போஸ்தல மூப்பரும், பவுலோடு தீமோத்தேயுவுக்கு இருந்த பக்தியையும், நெருக்கத்தையும் கண்டுணர்ந்து அதை ஆதரிக்கும் வண்ணம் தங்கள் கரங்களை அவன்மேல் வைத்து ஒருமுகமாக ஆசீர்வதித்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்படியாக அவர்கள் செய்தது ஒரு வழக்கத்தின்படியாக அல்ல, மேலும் பவுலின் கூட்டாளிகள் எல்லோருக்கும் இப்படியாகச் செய்யவில்லை, ஆனால் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டதன் மூலம் ஆண்டவரிடம் இருந்துவந்த கட்டளையின்படி அல்லது ஒரு முன்னறிவிப்பின்படி அப்படிச் செய்யும்படி வழிநடத்தப்பட்டார்கள் என்பது இந்தக் குறிப்பு மூலம் தெரியவருகிறது.

(2) இந்த உதவிக்காரர்கள், அப்போஸ்தலர்கள் தங்கள் கரங்களை அவர்கள்மேல் வைத்ததினிமித்தம் பிரசங்கிக்கும்படி அமர்த்தப்படவோ அல்லது அதிகாரம் கொடுக்கப்படவோ இல்லை, ஏனெனில் அவர்கள் பிரசங்கிக்கும்படி தெரிந்து கொள்ளப்படவில்லை, ஆனால் பந்தி விசாரிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டார்கள். இருந்தபோதிலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருந்தபடியால் அவர்களுடைய தாலந்தின்படியும், கிடைக்கின்ற தருணங்களில் பிரசங்கிக்கும்படி முழு அதிகாரம் பெற்றிருந்தனர். உதவிக்காரர்களில் ஒருவராயிருந்த ஸ்தேவான் யாரிடமிருந்தும் உத்தரவு அல்லது அனுமதி, அல்லது வேறு "ஏற்படுத்தப்படுதல்" இல்லாமல் வைராக்கியமாகப்

பிரசங்கிப்பதையும், அதினிமித்தம் ஆண்டவருக்குப் பின்னர் தன்னுடைய இரத்தத்தால் தன்னுடைய சாட்சியை முத்திரையிட்ட முதலாவது நபராக இருந்தார் என்பதையும் நாம் காண்கிறோம். இப்படியாகக் கரங்களை வைப்பது என்பது அப்போஸ்தல அனுமதியையும், ஆசீர்வாதத்தையும் மாத்திரம் காட்டுகிறது.

(3) பவுல் மேலேயும், பர்னபா மேலேயும் கரங்களை வைத்தது பிரசங்கிப்பதற்கு அனுமதி பெற்றதாக ஆகாது, ஏனெனில் அவர்கள் ஏற்கெனவே மூப்பர்கள் என்று அறியப்பட்டிருந்தார்கள், மேலும் அந்தியோகியா சபையில் ஒரு வருடத்திற்கு மேலாக ஏற்கெனவே பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். (அப்போஸ்தலர் 9:20-29; 11:26 ஒத்துப் பார்க்க) அவர்கள்மேல் கரங்கள் வைக்கப்பட்டது என்பது பவுலாலும், பர்னபாவாலும் செய்யப்படவிருந்த ஊழியத்தை ஆமோதிப்பதாக மாத்திரம் அர்த்தம் உடையதாயிருந்தது. அவ்வேளையில் அந்தியோகியா சபையும் அவர்களுடைய ஊழியத்தில் இணைந்தது, ஒருவேளை அவர்களுடைய செலவைச் சந்தித்திருக்கும்.

(4) இங்கே அப்போஸ்தலர், திராட்சத்தோட்டத்தில் வேலை செய்யும் உடன்வேலையாள்மீது தீமோத்தேயுவின் கரங்கள் வைக்கப்படுவது, தீமோத்தேயு அதை ஆமோதிப்பதாக ஏற்றுக்கொள்வதாக அர்த்தப்படும் என்று கூறுகிறார், ஆகவே அந்த மனிதன் எவ்விதத்திலாவது தகுதியற்றவனாகக் காணப்பட்டால் தீமோத்தேயு அந்தத் தவறில் பங்குபெற்றாக வேண்டும். ஆகவே தன்னால் முடிந்தவரை, ஆண்டவருடைய ஆடுகளுக்கு, நடைமுறைப் பிரகாரமாக அல்லது உபதேசத்தின் மூலமாக தீங்குவிளைவிக்கக்கூடிய ஒரு நபரை அறிமுகப் படுத்தும்படி தன் செல்வாக்கு உபயோகிக்கப்படாதபடி கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆபத்தை விளைவிக்கும் விதமாக துணிச்சலாகச் செயல்பட வேண்டியதில்லை. ஒரு சிபாரிசு கடிதத்தைக் கொடுப்பதிலும், அல்லது பகிரங்கமாக நல்வாழ்த்துகளைக் கூறுவதிலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்த ஆலோசனை இன்றைக்கும் ஆண்டவருடைய ஜனங்கள் அனைவருக்கும், அவர்களுக்கு இருக்கும் செல்வாக்குக்கு ஏற்றவாறு பொருத்தமாயிருக்கிறது. தீமோத்தேயுவின் ஆமோதிப்பைப் பெற்றுதான், பிரசங்கம் பண்ணும் உரிமை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுகிற ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தகுதிக்கு ஏற்ப ஆண்டவரால் கொடுக்கப்படுகிறது.

## சம்பளம் பெறும் ஊழியமா?

பணம் பெற்று ஊழியம் செய்வதென்கிற பழக்கம் இப்பொழுது பொதுவாகக் காணப்படுகின்றது. அது அநேகரால் தவிர்க்க முடியாத ஒன்று என்றும், விட்டுவிட முடியாத ஒன்று என்றும் எண்ணப்படுகிறது. ஆரம்பக்கால சபையில் வழக்கத்தில்

இருந்ததில்லை. வேதத்தில் நாங்கள் பார்த்தவரை ஆண்டவரும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிருவரும் ஒருவேளை யாக்கோபு, யோவான், மத்தேயுவைத் தவிர தரித்திரராகவே இருந்தார்கள்; லேவியருக்குத் தாங்களாகவே கொடுக்கும் பழக்கம் உடையவர்களாயிருந்த யூதர்கள், இந்த வழக்கத்தைத் தேவனுடைய காரியம் என்று அவர்களுக்குத் தென்பட்ட எல்லா மதக்காரியங்க ளுக்கும் இதேமாதிரியாகக் கொடுத்தார்கள். சீஷர்கள் யூதாஸ் (யோவான் 12:6; 13:29) என்னும் பெயருடைய பொக்கிஷதாரரை வைத்திருந்தார்கள். மேலும் அவர்கள் எதிலும் குறைவுப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் அதேவேளையில் ஒருபோதும் காணிக்கைக் கேட்டதில்லை என்றும் தெரிகிறது. நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டிருப்பதில் ஓர் அணு அளவுக்கூட இதைப்பற்றிச் சொல்லப்படவில்லை. பிதா அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பார் என்று அவர்கள் எதிர்ப்பார்த்தனர், சில கனத்துக்குரிய ஸ்திரீகள் தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள். (மத்தேயு 27:55, 56; லூக்கா 8:2, 3)

நம்முடைய ஆண்டவரின் பிரசங்கங்களுக்கும், உவமைகளுக்கும் இடையே பணத்திற்காக வேண்டுகோள் ஆங்காங்கே கொடுக்கப்பட்டிருந்தால், பிரசங்கங்களும், உவமைகளும் பயனற்றதாய்ப் போயிருக்கும். ஆண்டவரிடத்திலும், மற்றும் அவரது விசேஷமாகத் தெரிந்து கொள்ளப்பட்ட சீஷர்களிடத்திலும், வெளிப்படையாகக் காணப்படுகிற சுயநலமற்ற தன்மையைப்போல் வேறொன்றும் நம்மைக் கவருவதில்லை. இதற்கு யூதாஸ் விதிவிலக்காக இருந்தான், அவனுடைய பேராசை அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. (யோவான் 12:5, 6) பாபிலோனில் காணப்பட்ட பண ஆசையும், ஆடம்பரமும், பிச்சைக்கேட்கும் முறையும், இன்றைக்கு அதனுடைய பலமுள்ள செல்வாக்குக்கு எதிராகக் காணப்படுகிறது. முதல் வருகையில் இருந்ததுபோலவே, ஆண்டவருடைய விசுவாசிகள் மத்தியில் இப்படிப்பட்ட ஆவியில்லாமல் இருப்பது, அவர்களுடைய போதகங்களை நன்கு பாராட்டாமல், அவைகளை ஜீவனுள்ள நிருபங்களாகப் படித்துக்கொண்டிருப்பவர்களைப் பற்றி நல்ல எண்ணத்தை உண்டுபண்ணுகிறது. மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் பணத்திற்கென ஒரு வேண்டுகோள்கூட இல்லாமல் அவருடைய அறுவடையின் வேலைக்கென, போதுமானதை தேவன் கொடுத்திருக்கிறார். நாங்களும் இது நிச்சயமாக வேறுவிதமாக இல்லை, ஆண்டவரின் மனதின்படி இருக்கிறது என்று நம்புகிறோம்.

இந்த உலகத்தின் ஆடம்பரங்களின்மேலும், செல்வத்தின்மேலும் ஆசை வைத்திருப்பவர்கள், அவைகளை வியாபாரத்திலோ அல்லது வருமானம் தரக்கூடிய வேலைகளிலோ தேடட்டும்; ஆண்டவர் மேலும், அவருடைய சத்தியத்தின்மேலும், அவர்களுடைய சகோதரர்கள் மேலும் வைக்கக்கூடிய அன்பினிமித்தமே தவிர, வேறெந்த நோக்கமுள்ள எவரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் ஊழியக்காரர்கள் ஆகாதிருப்பார்களாக. அப்படிப்பட்ட ஓர் அன்பு முறுமுறுப்போடல்ல, ஆனால்

மனப்பூர்வமாக வசதிகளையும், செல்வத்தையும், மனிதர்களால் வரும் கனத்தையும் பலியாகச் செலுத்துவதையும் மிகுந்த மகிழ்ச்சியடையும். ஐயோ பரிதாபம்! பெயரளவான கிறிஸ்தவம், மிகவும் அதிகமாகவும் உலகப்பிரகாரமாகவும் வளர்ந்துவிட்டது; அவளுடைய ஊழியக்காரர்கள் போற்றுதலுக்குரிய (Reverend), மிகவும் போற்றுதலுக்குரிய (Most Reverend), வேதசாஸ்திரி (Doctor of Divinity) என்ற பட்டப்பெயர்களால் கனப்படுத்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட கனத்தோடு, பட்டப்பெயர்களோடு சம்பளங்களும் வருகின்றன; அதுவும் ஊழியக்காரரின் தேவைக்கேற்ப அல்ல, ஆனால் அவரால் வியாபார ரீதியில் செல்வாக்குள்ள ஜனங்களையும் சபைக்குப் பெரிய கூட்டங்களையும் ஈர்க்கக்கூடிய அவருடைய தகுதிக்கேற்ப அது கொடுக்கப்படுகிறது. இப்படிச் செய்வதினால் இயற்கையாகவே அதன் பலன்களும் வந்துள்ளன. "அதன் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள், அதன் தீர்க்கத்தரிசிகள் பணத்துக்கு குறிச்சொல்லுகிறார்கள். ஆகிலும் அவர்கள் கர்த்தரைச் சார்ந்துகொண்டு கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள் மேல் வராது என்கிறார்கள்." "அவனுடைய காவற்காரர் எல்லாரும் ஒன்றும் அறியாத குருடர்; அவர்களெல்லாரும் குரைக்கமாட்டாத ஊமையான நாய்கள்; தூக்க மயக்கமாய்ப் புலம்புகிறவர்கள், படுத்துக்கொள்ளுகிறவர்கள், நித்திரைப்பிரியர்; (சௌகரியத்தை விரும்பு கிறவர்கள்) திருப்தியடையாமலிருக்கும் பெருவயிற்று நாய்கள்; பகுத்தறிவில்லாத மேய்ப்பர்; அவர்களில் ஒவ்வொருவனும் தன்தன் வழியையும் (நலன்களையும்), அவனவன் தன்தன் மூலையிலிருந்து (சபைப்பிரிவு) தன்தன் பொழிவையும் நோக்கிக் கொண்டிருக்கிறான்." "அவர்கள் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துப்போகும் காலம்வரும்." (ஏசாயா 56:10, 11; மீகா 3:11; பிலிப்பியர் 3:2; 2 தீமோத்தேயு 4:3, 4)

பெருத்த சம்பளம், இல்லாவிட்டால் சம்பளமே கிடையாது என்ற இரண்டு கடைக்கோடி நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று சிலர் நினைக்கலாம். அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையான "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரமாய் இருக்கிறான்" என்பதையும் பார்க்கும்படிக் கூறலாம்; மேலும் அப்போஸ்தலரின் வார்த்தையான "நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா" என்பதையும் பார்க்கும்படிக் கூறுகிறார்கள். இருந்தாலும், வேதாகமத்திலிருந்து உறுதிபடக் கூறுகிற இவைகள் பெருத்த சம்பளங்களைக் குறிப்பிடாமல், அடிப்படைத் தேவைகளைப் பற்றி மட்டும் கூறுகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். "போரடிக்கிற மாட்டை வாய்கட்டாதே" என்கிற குறிப்பை மேற்கோள் காட்டி அப்போஸ்தலர் இதை விளக்குகிறார். மாடு அதனுடைய வயிற்றுக்காக மட்டும் இலவசமாகச் சாப்பிடலாம், இதைவிட அதிகமாக ஒன்றும்

அது வைத்துக் கொள்வதில்லை. அப்போஸ்தலர் தன்னுடைய சொந்த ஊழியத்தில் வெற்றிக்கான மூலக்கருத்தை இப்படியாகச் சொல்லுகிறார்: "நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை, நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன் . . . நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும் விரும்புகிறேன்." (2 கொரிந்தியர் 12:14, 15)

இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லும்போது அது வருமானத்திற்கு வழிநடத்தாது; அவருடைய பிரதான அப்போஸ்தலனாகிய பவுலின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்றாலும், அப்படி நடக்காது. பவுல், ஆவிக்குரிய ஊழியத்திற்காக, பூலோக நன்மைகளைக் கேட்பது ஒருவிதத்திலும் அநியாயம் ஆகாது என்பதைக் காட்டிய பின்னர், இந்த விஷயத்தில் தான் எடுத்துக்கொண்ட வழியைப் பின்வருமாறு கூறுகிறார்:

"ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும், என்னுடனேகூட, இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டும் என்று எல்லாவிதத்திலும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்." (அப்போஸ்தலர் 20:30-35)

"கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தை (ஆவிக்குரிய நன்மைகளுக்குப் பதிலாக இம்மைக்குரிய நன்மைகளை நீங்கள் பெறும்படியாக) செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம்." (1 கொரிந்தியர் 9:12) "நான் உங்களோடிருந்து குறைவுப்பட்ட போதும், ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர்கள் என் குறைவை நிறைவாக்கினார்கள்." (2 கொரிந்தியர் 11:9)

இந்தக் காரியங்களில் நமக்கு இருக்கிற சுயாதீனங்கள் அப்போஸ்தலர்களுக்கும் இருந்தது. இந்த விஷயத்தில் நமக்கு இருக்கிற நேர்மை, மற்ற எல்லா விஷயங்களில் இருப்பதைப் போன்றே அவர்களுடைய பாதப்படிகளைப் பின்பற்றுமாறு நம்மை வழிநடத்த வேண்டும். ஆண்டவர், அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்கள் கூடப் பிரயாணப்பட்டு அவர்களுடைய முழு நேரத்தையும் சத்தியத்தை அறிவிக்கின்ற ஊழியத்தில் செலவிட்டவர்கள் எல்லாரும், அவர்கள் தங்களுடைய செலவுகளைச் சந்திக்கும்படியாக, சகோதரர்கள் விருப்பத்துடன் கொடுத்தக் காணிக்கைகளை ஏற்றுக்கொண்டார்கள். ஏற்கெனவே கூறப்பட்டபடி, பவுலும், பர்னபாவும் தங்களுடைய முதலாவது ஊழியப் பயணத்தைத் தொடங்க இருந்தபோது அந்தியோகியா சபையினர், அவர்கள்மேல் கரங்களை வைத்தபோது, சபையினர் அவர்களுடைய செலவுகளுக்குப் பொறுப்பானவர்கள் என்று காட்டியதுபோல்

தோன்றுகிறது, அதன்படியே அவர்களுடைய வேலையில் அவர்கள் பங்கு பெற்றார்கள்.

ஆனபோதிலும், வீடுகளில் கூடும் சபையில் ஊழியம் செய்த மூப்பர்கள் நேரடியாகவோ, வேறுவிதமாகவோ ஒரு சம்பளமோ அல்லது செலவுக்கான பணமோ பெற்றார்கள் என்பதற்கான ஓர் அறிவிப்பும் இல்லை. அங்குள்ள சபைக்கு, அவர்களுடைய சொந்த அங்கங்களையே - ஒரு சிலரோ, அநேகரோ, பெரியவர்களோ, சாதாரணமானவர்களோ - அவர்களுடைய சுயவிருப்பத்தின்படி உபயோகப்படுத்துவது பொதுவாகக் காணப்பட்டதாகும் என்று நாம் நம்புகிறோம். இந்த வேதாகம முறைப்படியான செயல் ஆவிக்குரிய விதத்தில் ஆரோக்கியமாக இருக்கிறது. இந்த முறையானது பல்வேறு அங்கங்கள் தங்களுடைய ஆவிக்குரிய வரங்களை உபயோகப்படுத்தும்படி அவர்கள் வெளியே கொண்டுவர உதவுவதுடன், அதிகமதிகமாக ஆண்டவரையே உண்மையான மேய்ப்பனாக நோக்கிப்பார்க்கும்படி வழிநடத்துகிறது, ஆனால் கூலிக்கு உள்ளவர்கள் செய்யும் முறையின்படியல்ல. தகுதியுள்ள போதகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, அந்தியோகியா சபையின் முன்மாதிரி பின்பற்றப்படட்டும்; சிலர் ஊழியக்காரர்களாக, பிரதிகளை விற்கிறவர்களாக, பிரயாண ஊழியர்களாக வேறு இடங்களுக்கு அனுப்பப்படட்டும்.

இருந்தபோதிலும் எந்தச் சபையும், அது பயனுள்ளதாகக் காணப்படும் ஊழியம் மிக விசாலமானது என்று எண்ணுவோமானால், ஒரு சகோதரர் தன்னுடைய முழு நேரத்தையும் நல்லமுறையில் அதற்கும் ஸ்தாபனத்திற்கும் ஊழியம் செய்யும்படியாகக் கொடுக்கமுடியும், அதற்கென மனவிருப்பத்துடன் அவருடைய செலவுக்கெனப் போதுமானளவு கொடுப்பார்களெனில், அதைத் தடைச் செய்யும் எந்த வேத வாக்கியத்தையும் நாம் அறியோம். ஆனால் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் மூப்பரும், தாங்குகின்ற சபையும், கொடுக்கப்பட்ட பணமானது, ஊழியக்காரர் மற்றும் அவரைச் சார்ந்திருக்கிறவர்களின் நியாயமான வாழ்க்கைச் செலவுக்கு அதிகம் ஆகாதப்படி பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் மூப்பரும், சபையும், சபையிலுள்ள அங்கங்கள் அனைவரும், விசேஷமாக மூப்பர் நியமனத்திற்குத் தகுதிப்பெற்றவர்கள் உபயோகப்படும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் பாபிலோனின் ஆவி, பெயர்ச் சபையின் ஆவி நிச்சயம் வளரும்.

## சபையின் ஒழுங்குமுறை
### மத்தேயு 18:15-18

சபையின் ஒழுங்கைக் காக்க வேண்டியது மூப்பர்களை மாத்திரமல்ல முழுச்சபையையும் சார்ந்ததாகும். ஒருவர் குற்றம் அல்லது பாவம் செய்தவர் என்று காணப்பட்டால், அவர் அந்தக் குற்றத்தை யாருக்குச் செய்தாரோ அவர் மாத்திரமே அந்தக் குற்றத்தை அவருக்குச் சுட்டிக்காட்ட வேண்டும், அப்படியில்லையெனில்

அந்தக் குற்றத்தை முதலாவது காண்கிறவர் அப்படிச் செய்ய வேண்டும். அதற்கு அவன் செவி கொடாமற்போனால், தொடர்ந்து அந்தக் குற்றத்தில் அல்லது பாவத்தில் நிலைத்து இருப்பான் என்றால், அப்பொழுது திறந்த மனதுடைய இரண்டு அல்லது மூன்று சகோதரர்கள் அதை விசாரிக்கவும், தர்க்கம் பண்ணுகிறவர்களுக்குப் புத்தி சொல்லவும் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். (எவரும் மூப்பர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி, அவர்களுடைய வயதின் முதிர்ச்சியினால் வரும் நியாயம் எவ்விதமான வழியிலும் தேறினதாயும், அவர்கள் கூறுவது பலமுள்ளதாயும் இருந்தாலொழிய, அவர்களுடைய வயதின் மூப்பு இந்த விஷயத்தில் எவ்வித பலத்தையோ, அதிகாரத்தையோ கூட்டாது). ஆலோசனைக்குழு இரண்டு சாரார்களுக்கிடையில், ஒரு சாரார் பக்கமாக மனப்பூர்வமாகத் தீர்மானிக்கும் என்றால், அந்த விஷயம் சீர்த்திருத்தல் அல்லது இழந்ததைத் திருப்பிக்கொடுத்தல் மூலமாக முடிந்தவரை உடனடியாகச் செய்யப்படுமானால், மற்றவர் அதை ஏற்றுக்கொண்டு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இரு சாராரில் ஒருவர் முந்தைய குற்றத்தில் இன்னும் நிலைத்திருந்தால், ஆரம்பத்தில் குற்றத்தைக் காட்டியவர், அல்லது ஆலோசனைக் குழுவை வரவேண்டும் என்று சொன்னவர்களில் ஒருவர், அல்லது எல்லோருமே கூட்டாக அப்பொழுது (சீக்கிரமாக அல்ல) அந்த விஷயத்தைச் சபைக்கு முன்னர் கொண்டுவருவது நல்லதாக இருக்கும். இதிலிருந்து, மூப்பர்கள் சபையினரின்மேல் நியாயாதிபதிகளாக இருக்கவே கூடாது என்பது விளங்குகின்றது. விசாரிப்பதும், நியாயந்தீர்ப்பதும் அங்குள்ளவர்களை அல்லது சபையைச் சார்ந்ததாகும்.

இந்த இரண்டு ஆரம்பக்கட்ட (மேல் சொல்லப்பட்ட) நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர், மூப்பர்களுக்கு விவரங்கள் விளக்கப்பட்ட பின்னர், ஒரு முடிவை எடுக்கும்படியாக அதன் தலையாக இருக்கிறவரின் நாமத்தினாலும், அவருக்குரிய கனத்தோடும், அந்த விவரங்களை அவர்கள் விசாரிக்கும்படியாக, ஒரு வழக்கு மன்றமாக, சபையை அல்லது சபையின் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவது அவர்களுடைய கடமையாகும். மேலும் விசாரிக்க வேண்டிய விஷயமானது மிகத் தெளிவாக இருக்க வேண்டும், குற்றம் சாட்டப்பட்டவர் நன்கு நடத்தப்படல் வேண்டும், மேலும் எடுக்கப்படும் தீர்மானம் கிட்டத்தட்ட எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாய் இருக்க வேண்டும். இதன்படியாக சபையின் ஒற்றுமையும், சமாதானமும் காக்கப்படும். சபை குற்றம் எனச் சொல்லுவதற்கு முந்திய வினாடிவரை மனஸ்தாபப்படுவது சாத்தியமானது. குற்றம் இழைப்பவருக்குத் தண்டனை என்பது நோக்கமல்ல, ஆனால் இந்த முயற்சிகளின் முக்கியமான நோக்கம் என்னவெனில் குற்றம் செய்தவரை மனஸ்தாபப்பட வைப்பதும், சீர்த்திருத்துவதும் தான் முக்கியமானதாகும். தண்டனையளிப்பது நம்முடையதல்ல அது ஆண்டவருடையது. "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (ரோமர் 12:19) இந்த

முயற்சிகளின்போது, குற்றம் இழைத்தவர் எந்த நிலையிலாவது மனஸ்தாபப்படுவார் என்றால், ஆண்டவருடைய ஆவியுடையவர்கள் எல்லோருக்கும் களிகூருதலுக்கும், நன்றி சொல்லுதலுக்கும் ஒரு காரணமாக இருக்கும், அப்படியில்லாதவர்கள் அவருடைய சரீரமான சபையின் அங்கங்களல்ல. (ரோமர் 8:9)

உண்மையிலேயே குற்றம் செய்தவர் முழுச்சபையின் தீர்மானத்திற்குச் செவிகொடுக்க (கீழ்ப்படிய) மறுத்தாலும், தண்டனைக் கொடுக்கப்படவோ அல்லது கொடுக்க முயற்சிக்கப்படவோ கூடாது. அப்படியென்றால் அதன் பின்னர் என்ன? சபை அவரை அதன் ஐக்கியத்திலிருந்தும், சகோதரத்துவத்தை வெளிப்படுத்தும் எல்லாக் காரியங்களிலிருந்தும் அகற்ற வேண்டும். அதன் பின்னர் குற்றம் இழைத்தவர் "ஒரு அஞ்ஞானியைப்போலவும், ஆயக்காரனைப்போலவும்" நடத்தப்பட வேண்டும். (மத்தேயு 18:17)

இப்படியான முயற்சிகளில் குற்றம் செய்பவரின் தவறுகள் அல்லது குறைவுகள், அவரையும், சபையையும், சபைக்குத் தலையாய் இருக்கிற ஆண்டவரையும் அவதூறு பண்ணும்படி, பொதுப்படையாக்கக் கூடாது. இல்லையென்றாலும் அவர் தனித்துவிடப்பட்டப் பின்னர், அவரைப் பற்றிக் கடினமான வார்த்தைகளைக் கூறக்கூடாது, இல்லாவிடினும், அஞ்ஞானியையும், ஆயக்காரனையும் பற்றிக் கடினமான வார்த்தைகளைக் கூறுவது போன்றும், தூஷிப்பது போன்றும் செய்யக்கூடாது. "ஒருவனையும் தூஷியாமலும்," "எல்லாருக்கும் நன்மை செய்யக்கடவோம்." (தீத்து 3:2; கலாத்தியர் 6:10) "எல்லா மனிதருக்கும்" வேண்டியதைச் செய்யும்படியாக முற்றுமாகக் கீழ்ப்படிவதற்குத் தேவைப்படுவது அன்பு என்ற குணமாகும். அப்படியாயின் அந்த அன்பானது ஒரு "சகோதரர்," கிறிஸ்துவின் சரீரமான சபையின் உடன் அங்கமாயிருக்கிறவர், பொய்யான அல்லது தன்னிச்சையான அறிவிப்புகளினால் தீமையை அனுபவிக்கக்கூடாது என்பது மாத்திரமின்றி, அதற்குமேலாக அவருடைய பெலவீனங்களும் அல்லது பாவங்களும் கவனமாக மூடப்படல் வேண்டும், எவைகளிலிருந்து என்றால், இரக்கமில்லாத உலகத்தாரிடமிருந்து மாத்திரமல்ல, விசுவாச மார்க்கத்தாரிடமிருந்தும்கூட, சபையினரிடமிருந்தும்கூட, கடைசியாக சபைக்குச் சொல்லப்பட வேண்டுமென்ற தவிர்க்க முடியாத நிலை வரும்வரை, ஜாக்கிரதையாக மூடப்பட வேண்டும். ஒவ்வொரு நிலைமையிலும், குற்றம் செய்தவர் சில தவறான எண்ணத்துடன் மனதில் சமாதானம் அற்றுக் காணப்படும்போது, அன்பின் ஆவியானது ஒரு பாவியை தன்னுடைய தப்பிப்போன மார்க்கத்தினின்று திருப்பும்படி, இதன்படியாக (சாத்தியமானால்) ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிக்கும்படியாக ஞானமும், கிருபையும் கொடுக்கப்படும்படியாக ஜெபிக்கும் என்று எதிர்ப்பார்க்கலாம். (யாக்கோபு 5:20)

ஓ! பரிசுத்த ஆவி, அன்பின் ஆவி சபையின் ஒவ்வொரு அங்கத்திலும் அவ்வளவு அதிகமாகத் தங்கியிருக்கட்டும், அவ்விதமான நிலைமைக்

காணப்படும்போது எவரைக் குறித்தாகிலும், விசேஷமாக உடன் அங்கத்தைக் குறித்து ஒரு அவதூறான கதையைக் கேட்கும்போது வேதனையை உண்டுபண்ணும்! இது உடனடியாகப் பிரச்சனையின் பாதியை, அல்லது அதிகமாக நிவிர்த்தி செய்யும். இல்லையென்றாலும் ஆண்டவரால் விளக்கப்பட்ட மேற்கூறப்பட்ட முறைகளைப் பின்பற்றுவது அடிக்கடி வருகின்ற சபைப் பிரச்சனைகளுக்கு வழிநடத்துவதும் இல்லை. இதற்கு மாறாக அது விரோதங்கள் வருவதற்கான சாத்தியத்தை அகற்றுவதோடு, சபையின் தீர்ப்பானது ஆண்டவருடைய தீர்ப்பாயிருக்கிறது என்பதற்கான ஒரு மரியாதையைக் கற்றுத்தரும்; மேலும் சபையின் குரல் கேட்கப்பட்டு, அதற்கேற்றப்படி கீழ்ப்படியப்படும். இதற்கும்மேலாக, ஒழுங்கும் அன்பும் இப்படியாகக் காணப்படும்போது, ஒவ்வொருவரும் தன்னால் இயன்றவரை தன்தன் வேலையை மாத்திரம் கவனிக்க நாடுவர் என்றும், தன்னுடைய சகோதரரைக் கண்டிக்கவோ, திருத்தவோ முற்படமாட்டார் என்றும் நம்பலாம்; மேலும் விஷயத்தை ஆலோசனைக் குழுவிடமோ அல்லது சபையினிடமோ, அந்த விஷயம் தன்னைப்பற்றியதாகவோ அல்லது சபையைப்பற்றியதாகவோ அல்லது சத்தியத்தைக் குறித்தோ முக்கியமானதாக இல்லாதிருந்தால், கொண்டுவர மாட்டார் என்றும் நம்பலாம்.

கேள்விக்கு இடமில்லாமல், சபையில் வரும் பிரச்சனைகளில் பெரும்பாலும் (சமுதாய குடும்ப பிரச்சனைகளும்) தவறு செய்ய வேண்டுமென்ற ஓர் ஆசையில் இருந்தல்ல, வேண்டுமென்று செய்யப்படாத ஒரு தவறிலிருந்தும்கூட அல்ல, ஆனால் தவறாகப் புரிந்து கொள்ளுவதிலிருந்து வருகிறது. நாவுதான் பொதுவாக பிரச்சனைகளை உண்டு பண்ணுவதாகும். அது தெளிந்த புத்தி என்கிற ஆவியின் ஒரு பகுதியாயிருக்கிறது, ஆகவே உதடுகளுக்குக் காவல் வைக்கவும், இருதயத்திலிருந்து புறப்படுகிற பொல்லாத சிந்தனைகள், உதடுகளின் மூலம் வெளியாக்கப்பட்டு தீவிர உணர்ச்சிகளைக் கொழுந்துவிட்டு எரியச்செய்து, அநேக தடவைகளில் மற்றவர்களுக்குத் தீமையை வருவிக்கும் இருதயத்திற்கு காவல் வைக்கும்படியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி புதுச் சிருஷ்டியான சபைக்கு அவர்களுடைய ஆண்டவரும் தலையுமாய் இருக்கிறவரிடத்திலிருந்து கண்டிப்பான கட்டளைகள் இருக்கின்றன. அவர்கள் குற்றம் செய்பவரிடத்தில் தனியாக, சொந்த விருப்பத்தின்படி முன்பு ஆலோசித்தப் பிரகாரம் இல்லாது அல்லது யாரோடும் இதுபற்றிப் பேசாமல் செல்லும்போது அவருடைய அன்பின் ஆவி அவர்களை நிரப்ப வேண்டும். அவர்கள் அப்படிச் செல்வது அவரை (அல்லது அவளை) அவருடைய நடத்தையைக் குறித்து வெட்கப்படும்படிச் செய்வதற்காக அல்ல, அல்லது கடினவார்த்தைகளைப் பேச வேண்டும் அல்லது தண்டிக்க வேண்டும் என்பதற்காக அல்ல, ஆனால் அவர் குற்றஞ்செய்வதை நிறுத்தக் கேட்கும்படியாகவும், முடிந்தால் ஏற்கெனவே

விளைவிக்கப்பட்ட தீமைக்குக் கைமாறு பெறும்படியாகவும் இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு அந்தத் தவறைக் குறித்து, முதலாவதாகவோ அல்லது பின்னரோ அறிவிப்பது அன்பில்லாத, நேசிக்காத காரியமாகும். மேலும் நம்முடைய தலையாயிருக்கிறவரின் வார்த்தைக்கும் ஆவிக்கும் எதிர்மாறானதாகும். ஆலோசனைக் கேட்க வேண்டும் என்பதற்காகக்கூட விஷயம் சொல்லப் படக்கூடாது, நமக்கு ஆண்டவரின் ஆலோசனை உண்டு, அதை நாம் பின்பற்ற வேண்டும். பிரச்சனை விசித்திரமான தொன்றாகக் காணப்பட்டால், உண்மையான பிரச்சனையை அல்லது அதைச் செய்தவரையோ காண்பிக்காமல், உத்தேசமான முறையில், மூப்பர்களில் மிகவும் ஞானமுள்ளவரிடத்தில் ஆலோசனைப் பெறப்படல் வேண்டும்.

பிரச்சனைப் பெரியதாக இல்லாவிட்டால், குற்றம் செய்தவர் செவிக் கொடுத்தாலும் சரி, செவிக்கொடுக்க அல்லது விட்டுவிட மறுத்தாலும் குற்றஞ்செய்பவரிடத்தில் தனிப்பட்ட முறையில் கேட்பதோடு விட்டுவிட வேண்டும். இதற்கும் மேற்கொண்டு அடுத்த நடவடிக்கை தேவை என்றால், ஆலோசனைக் குழுவினரிடம் குற்றஞ்செய்தவர், குற்றஞ்சாட்டுகிறவர் இருவரும் வருவதற்கு முன்னர் பிரச்சனைக் குறித்து எந்த விளக்கமும் கொடுக்கப்படக் கூடாது. இவ்விதமாக "அவதூறான பேச்சு" தவிர்க்கப்படும்; ஆலோசனைக்குழு சகோதரர்கள் திறந்த மனதுடன் வருவார்கள்; இரு சாராருக்கும் ஞானமாக ஆலோசனைச் சொல்ல முடிந்தவர்களாக இருப்பார்கள். ஏனெனில் பிரச்சனை இரு சாரார் மேலும் காணப்படலாம், அல்லது முற்றிலுமாக குற்றஞ்சாட்டுகிறவர் மேலாக இருக்கலாம். எல்லாச் சமயத்திலும், நல்ல நியாயமான ஆலோசனையைப் பார்த்துக் குற்றஞ்சாட்டப்பட்டவர் திருப்தியடைவதுடன், ஆலோசனைக் குழுவினருக்கும் அவருடைய முறை தவறானதாகத் தோன்றுமேயானால், ஆலோசனைக் குழுவினருக்கு உடன்பட சாத்தியமாகும். ஆனால் குழுவினால் குற்றஞ்செய்தவர் என்று ஒருவர் கணிக்கப்படும்போது, அவர் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், முழு விஷயமும் திட்டவட்டமாக இரகசியமாக இருக்க வேண்டும்; மேலும் போதுமான அளவிற்கு அது முக்கியமானது என்று காணப்பட்டால் சபைக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு கடைசியில் தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும்; ஆனால் அதுவரை அந்த விஷயம்பற்றி எவரிடமும் சொல்லக்கூடாது. அதன் பின்னர் முதன்முறையாக அது பரிசுத்தவான்களுக்கு மாத்திரம் உரிய பொதுவான விஷயமாகும்; மேலும் அவர்கள் எவருடைய பெலவீனங்களையும் அல்லது பாவங்களையும் குறித்துத் தேவைக்கு அதிகமானதைச் சொல்லக்கூடாது என்று விரும்புவார்கள். (அதிகாரம் 9, உனது சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றம் இழைத்தால்)

ஆலோசனைக் குழுவினரின் தீர்ப்புகளைச் செயல்முறைப்படுத்தும்போது,

விஷயமானது ஒவ்வொரு தனி நபரிடத்திலும் தங்கியுள்ளது; ஆகவே ஒவ்வொருவரும் தனக்குள்ளாகவே கொடுக்கப்பட்ட தீர்மானத்திலுள்ள நியாயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். சபை ஐக்கியத்திலிருந்து தள்ளி வைப்பது என்கிற தண்டனை நீதியின் பாதையில் திருத்துவதாக அமைக்கப்பட்டுள்ளது, அதையேதான் ஆண்டவரும் கூறுகிறார். அது சபைக்குப் பாதுகாவலாக இருக்கிறது, அன்பின் ஆவியின் பிரகாரம் நடவாமல் ஒழுங்கற்று நடப்பவர்களைப் பிரித்து வைக்க உதவுகிறது. அது நிரந்தரமாகப் பிரித்து வைப்பது என்பதல்ல, ஆனால் கண்டிக்கப்பட்டவர் தன்னுடைய தவறை உணர்ந்து அதை ஆமோதித்து அவரால் முடிந்தவரை பரிகாரம் செய்வதற்காக மாத்திரமே இருக்கும்.

## மூப்பனாருக்கு விரோதமாக வரும் பிராதுகள்

"மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது." (1 தீமோத்தேயு 5:19)

இந்தக் கூற்றில் அப்போஸ்தலர் இரண்டு கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறார். (1) ஒரு மூப்பர் ஏற்கெனவே சபை அங்கங்களால் நல்ல உயர்ந்த குணாதிசயம் கொண்டவர் என்றும், விசேஷமாக சத்தியத்தின்மேல் வாஞ்சையுள்ளவர் என்றும், ஆண்டவர் மேல் பயபக்தியுள்ளவர் என்றும் அறியப்பட்டிருக்கிறார். இப்படியானவர்கள், சபையில் அவர்கள் முக்கியமான இடத்தில் இருக்கிறார்கள் என்கிற காரணத்தினால், சத்துரு அவர்களைத் தாக்குதலுக்கு விசேஷமானவர்களாக எண்ணுவான். நம்முடைய ஆண்டவர் ஏற்கெனவே கூறியபடி, சிலருக்கு பொறாமைப்படும்படியாக, விரோதம், எரிச்சல், சண்டைபோடும்படியான பொருளாக இருப்பார்கள்; "உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்." "அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்." "வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரையே அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" என்று ஆண்டவர் முன்னமே எச்சரிக்கை செய்தார். ஒரு சகோதரர் அதிக உண்மையுள்ளவராக, திறமையுள்ளவராக இருக்கும்போது, கிட்டத்தட்ட அவருடைய ஆண்டவரின் பிரதிபலிப்பாகக் காணப்படுவார் என்றால், மூப்பராக அவர் தெரிந்தெடுக்கப்பட்டது சரியானதாகும். மேலும் மிகவும் உண்மையுள்ள மூப்பராக அவர் இருக்கும்போது, நிச்சயமாகவே அவருக்கு சத்துருக்கள் இருப்பார்கள் என்று அறிந்துகொள்ளலாம். சத்துருவாக சாத்தானும் அவனுடைய தூதர்கள் மாத்திரமின்றி, சாத்தானால் வஞ்சிக்கப்பட்டுத் தவறாக நடத்தப்படுபவர்களும் இருப்பார்கள்.

இந்தக் காரணங்கள், எந்த ஒரு நபரும் சொல்லும் வார்த்தையை வைத்து மூப்பரைக் குற்றப்படுத்தாதபடி உறுதி செய்கின்றனர்; அப்படியில்லாவிடினும்

அவருடைய வாழ்க்கை குற்றமற்றதாக இருக்கலாம். காதில் விழுந்தக் காரியம் அல்லது வதந்திகளைப் பொறுத்தவரையில், அவைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவே கூடாது; ஏனெனில் உண்மையாகவே நுகத்தைச் சுமக்கிற எவனும், ஆண்டவருடைய ஆட்சியைக் கவனத்தில் கொண்டுள்ளவனாய் இருக்கும்போது, வதந்திகளைப் பரப்பமாட்டான், இல்லையெனில் ஆண்டவருடைய நடத்துதல்களை இப்படியாக உதாசீனம் பண்ணுகிறவர்களின் வார்த்தையில் நம்பிக்கை வைக்கமாட்டான். முதலாவதாக, அவைகளுக்குச் செவிகொடுப்பதற்குக் குற்றஞ்சாட்டுபவர்கள் சாட்சிகளாக இருந்ததாகக் கூற வேண்டும். மேலும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் புகார் கூறினாலும் ஏற்கெனவே வரையறுக்கப்பட்டதைக் காட்டிலும் மேலதிகமாக விஷயத்தை விசாரிப்பதற்கு வேறு வழியில்லை. மூப்பருக்கு எதிராகப் புகார் கூறும் எந்த ஒரு நபரும், தனிப்பட்ட ஆலோசனையும் பயனளிக்காதப் பட்சத்தில், அவரோடு இரண்டு அல்லது மூன்று சாட்சிகளை வைத்துக்கொள்வார்; அவர்கள் இவ்விதமாக பிடிவாதமான எதிர்ப்புக்கு சாட்சிகளாவார்கள். அதன் பின்னர், இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கும்போது, தீமோத்தேயுவினால் அல்லது வேறு எவர் மூலமாகவாவது சபையினிடத்திற்குக் கொண்டு வரப்படலாம்.

குற்றஞ்சாட்டுவதற்கு இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இருக்க வேண்டும் என்பது, எல்லா அங்கங்களையும் மதிப்பதற்குத் தேவையானதாகும். உண்மையிலேயே அப்போஸ்தலர், எந்தச் சகோதரருக்கும் மூப்பர் எல்லா உரிமையும், சிலாக்கியத்தையும் கொடுக்க வேண்டுமென்று நினைத்தாரோ என்று யோசிப்பதற்கு இடம் இருக்கிறது. ஒரு மூப்பர் சபைக்கு உள்ளேயும், வெளியேயும் நன்மதிப்பைப் பெற்றவராக இருப்பதினிமித்தம், ஒரு சிறிய குற்றச்சாட்டுக்கும், அவருடைய உயர்ந்த ஸ்தானத்தினிமித்தம் விசாரிக்கப்படல் வேண்டுமா என்று ஒருவேளை சிலர் நினைக்கலாம். ஆனால், அப்போஸ்தலருடைய வார்த்தையின்படி ஒரு மூப்பருக்குக் கிடைக்க வேண்டிய தருணம் மற்றவர்களுக்குக் கிடைப்பதைப் போலவே சரிசமமாக இருக்க வேண்டும்.

இந்தச் சாட்சிகள் என்ற விஷயம் ஒவ்வொரு புதுச் சிருஷ்டியின் மனதிலும் ஆழமாகப் பதிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் தங்களுக்குத் தெரியும் என்று சொல்லுவதும், அவதூறாக அவர்கள் சொல்லுவதும் கேட்கப்படக்கூடாது; மேலும், ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது. ஆண்டவர் கூறியுள்ளபடியே இரண்டு அல்லது மூன்று பேர், யாராவது ஒருவருக்கு எதிராக புகார்களைக் கொண்டு வருவார்களானால், புறம் பேசாமல், அவதூறு பேசாமல், ஆனால் கட்டளையிட்டபடி சபைக்கு முன்பாகக் கொண்டு வரும்போது, அந்த வேளையில் அவைகளை நம்பக்கூட வேண்டியதில்லை; ஆனால், அந்தவேளைதான் சபைச் செவிக் கொடுப்பதற்கு ஏற்றதாகும்; இரு சாராரும் வந்திருக்கும்போது அவர்கள் முன்னிலையில் கேட்க

வேண்டும்; அதன் பின்னர் தேவபயத்துடன் கூடிய தீர்மானத்தையும், எச்சரிப்பையும் கொடுக்க வேண்டும், அதுவும் குற்றஞ் செய்தவரை வெளியிலுள்ள இருளுக்குள் தள்ளாமல், அவரை மறுபடியும் நீதிக்குள்ளாக வரும்படியாக, வார்த்தைகள் கவனமானவைகளாக அவருக்கு உதவி செய்கிறவைகளாக இருக்க வேண்டும்.

## பிரசங்கிக்கும்படியாக அழைப்பு வந்தது என்று தவறாக புரிந்துகொள்வது

அநேகர், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி ஆண்டவரிடத்திலிருந்து ஓர் அழைப்பு அவர்களுக்கு வந்தது என்று சொல்லுகிறார்கள்; ஒருவேளை, உடனேயே ஏன் என்று தெரியவில்லை என்றும் சொல்லக்கூடும்; இல்லையென்றால் ஊழியத்திற்கு என்று அவர்களுக்கு விசேஷமான தகுதிகள் கிடையாது என்பதை அவர்கள் அறிந்துள்ளார்கள் என்றும், இல்லையென்றால் அழைப்பை ஏற்றுக் கொள்ளாதபடி சூழ்நிலைகள் எப்போதும் தடுப்பதுபோல் உள்ளது என்றும் சொல்லுவார்கள். எந்தவிதமான அழைப்பு என்று அவர்களைக் கேட்கும்போது, அது ஒரு கற்பனை அல்லது யூகம் என்று தெரியவருகிறது. ஒருவர் தன்னுடைய அனுபவத்தில் ஏதாவது ஒரு வேளையில் (ஒருவேளை கிறிஸ்தவன் ஆகுவதற்கு முன்னரே) தான் தேவனிடத்தில், பயபக்தியாய் இருக்க வேண்டுமென்றும், ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும், தன்னுடைய சாதாரண சபை அனுபவத்திலிருந்து, தன்னுடைய குடும்பம் ஆராதனையில் கலந்துகொண்ட பெயர் சபை போதகர் மூலமாகவும் அந்த எண்ணம் வந்திருக்கக்கூடும். இன்னொருவர், தன்னுடைய ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சுபாவம் உறுத்தியதினால் அவருக்குள் ளாகவே அவர் சொல்லிக் கொண்டார் - நான் இரண்டாம் தர நிலையில் அல்லது மூன்றாம் தர நிலையில் இருந்தாலும், நான் எப்படி அங்கி அணியவும், ஒரு பிரசங்கிக்குரிய மதிப்பையும், பட்டங்களையும், சம்பளத்தையும் பெற விருப்பமுள்ளவனாக இருப்பேன் என்று தன்னை உயர்வாக எண்ணினாலும்கூட, ஒருவேளை அவர் இப்படியாகவும் நினைத்திருக்கலாம் - தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள், "படிப்பறியாதவர்கள் என்றும், பேதைமையுள்ளவர்கள் என்றும்" அறியப்பட்டு இருந்தபடியால், ஒருவேளை, தனக்கும் குறைவான தாலந்தும், படிப்பும் இருந்தபடியால் தேவன் தன்னை விசேஷமாக மனதில் வைத்திருந்தார் என்று நினைத்திருக்கலாம். தேவன் தம்முடைய காரியத்திற்கெனவும், பிரசங்கிக்கும் படியாகவும் தகுதியில்லாதவர்களின் ஆர்வத்திற்கு வழியைத் திறக்காமல் அநேகரை வைத்திருக்கிறார்.

ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, புதுச் சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் "பிரசங்கிக்கும்படியாக" அழைக்கப்பட்டுள்ளனர்; ஆனால் அவனுடைய ஆர்வத்தினால், அல்லது கற்பனையினால் அல்ல, ஆனால் "உங்களை அந்தகாரத்தினின்று

தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாக" என்ற வசனத்தின்படி, தேவனுடைய கிருபையை விருதாவாய்ப் பெறாதபடி எல்லாரும் அழைக்கப்பட்டுள்ளார்கள். (1 பேதுரு 2:9) ஆகவே இந்த அழைப்பு, சத்திய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட அனைவருக்கும், ஆண், பெண் அடிமையானவர், சுயாதீனமுள்ளவர், பணக்காரர், ஏழை, கல்வியறிவு உள்ளவர், இல்லாதவர், கறுப்பர், மாநிறமுள்ளவர், சிவந்தவர், மஞ்சள் நிறத்தவர், வெள்ளையர் என்ற பாகுபாடின்றி வருகின்றது. "நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்," "கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்துகொள்வார்கள்" என்பவைகளைத் தவிர வேறெந்த அழைப்பு வேண்டும்?

ஆண்டவர் விசேஷமாகத் தெரிந்துகொண்டு, ஒரு விசேஷமான வேலைக்கு, பன்னிரண்டு அப்போஸ்தலர்களை விசேஷமாக அழைத்தது உண்மைதான். அவருடைய ஜனங்கள் அவருடைய வார்த்தைகளுக்குச் செவி சாய்ப்பார்கள் என்றால், அவருக்கு விருப்பமானபடி "அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்." "அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக" ஒன்றை ஒரு வேலைக்கும், மற்றொன்றை வேறு வேலைக்குமாக வைத்தார். (மத்தேயு 25:15) ஆனால், அவர் அநேகர் தங்களை போதகர்களாக "ஏற்படுத்திக்கொள்வார்கள்" என்பதைத் தெளிவாகக் கூறுகிறார். சபையானது தன்னிச்சையான ஆர்வமுள்ள சகோதரர்களைப் பாராமல், அவரையே தங்கள் தலையாகவும், தலைவராகவும் தொடர்ச்சியாக நோக்க வேண்டும். இந்தக் கடமையைச் செய்யத் தவறுவது அவருடைய வார்த்தையை உதாசினப்படுத்துவது என்று அர்த்தப்படும். ஆகவே அன்பும், கீழ்ப்படிதலும் குறைவுபடும். மேலும் இது இப்படிப்பட்ட ஒரு சபைக்கு ஆவிக்குரிய விதத்தில் சேதம் விளைவிப்பதோடு தானாகப் போதகராக ஏற்படுத்திக் கொண்டவருக்கும் சேதத்தை விளைவிக்கும்.

இந்த விஷயத்தில் ஆண்டவருடைய கட்டளைத் தெளிவாக இருக்கிறது. "தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." (லூக்கா 14:11) சபை ஆண்டவரைத் தேடவும், அவர்களது ஆண்டவருக்குக் கீழ்ப்படியவும் இந்தக் கட்டளையை, ஆவியின் இந்தச் சிந்தையைப் பின்பற்ற வேண்டும். வைராக்கியமும், உண்மையும், விடாமுயற்சியையும், நன்மை செய்யும்படியாக சிறிய விஷயங்களில் வெளிப்படுத்திக் காட்டுபவர்களை மாத்திரம் முன்பாக நிறுத்துவது ஆண்டவருடைய செயல்பாடாகும். "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்." (லூக்கா 16:10) "கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்." (மத்தேயு 25:21, 23) கனம் என்கிற ஏணியின் அடிமட்டத்தில் எப்பொழுதுமே அதிகமாக இடம் உண்டு. யாரெல்லாம் இப்படியாக ஆண்டவருக்கும், சத்தியத்திற்கும், சகோதரர்களுக்கும் தாழ்மையான வழிகளில் ஊழியஞ்செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ,

அவர்களெல்லாம் அதற்கேற்ற தருணத்திற்கு அதிகக் காலம் காத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் பெருமையின் ஆவியுள்ளவர்கள், மனுஷர் பார்வையில் கனம் தரக்கூடிய ஊழியத்திற்காக இப்படியான ஊழியத்தை வெறுத்து, ஒதுக்கித் தள்ளுவார்கள். உண்மையாயிருக் கிறவர்கள் எப்படிப்பட்ட ஊழியத்திலும் மகிழ்ச்சியடைவார்கள், ஆண்டவரும் இப்படிப்பட்டவர்களுக்கு விசாலமான வழிகளுக்குமேல் வழியைத் திறந்து கொடுப்பார். இவ்விதமாக அவருடைய சித்தத்தைப் பரத்திலிருந்து வருகிற ஞானம் மூலமாக வெளிக்காட்டி, விசேஷமாக, தலையாயிருக்கிறவரின் சித்தத்தை, கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்கள் தங்கள் கரங்களை நீட்டி தனது வாக்கைப் (vote) போடுவதில் புதுச் சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் பின்பற்றுவதில் கவனமாக இருக்க வேண்டும்.

சுயநலமுள்ள ஒரு சகோதரர் எவ்வளவுதான் திறமையுள்ளவராக இருந்தாலும், ஒதுக்கிவிடப்பட வேண்டும், ஆனால் தாழ்மையுள்ள சகோதரர் மூப்பராக ஆவதற்குத் தெரிந்துகொள்ளபட வேண்டும். எப்படியாயினும் உண்மையான காரணத்தைச் சொல்லாமல் சாதுவான முறையில் எச்சரிப்பது எல்லாருக்கும் நன்மை தரும். ஒரு திறமையுள்ள மூப்பர் சர்வாதிகாரத்தின் ஆவியை வெளிப்படுத்துவாரெனில் அல்லது தான் சபைக்கு மேலாக உள்ளவர், வித்தியாசமானவர் என்று நினைக்கத் தொடங்குவார் என்றால், சபை மூலமாக வராத ஒன்றைப் போதிக்க திவ்விய உரிமையுண்டு என்று எண்ணுவார் என்றால், அவர் இப்படியான சாதுவான எச்சரிப்பை ஏற்று, சத்துருவின் கண்ணியிலிருந்து விடுபடும்வரை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஊழியத்தின் குறைவான மதிப்புள்ள பகுதிக்கு, அல்லது எல்லா விசேஷமான ஊழியங்களிலிருந்தும் நீக்கி வைப்பது, அன்பான காரியமாக மாத்திரமல்ல, கடமையாகவும் இருக்கும்.

மற்ற எல்லாக் குணாதிசயங்களைப் போலவே முன்னேற வேண்டும் என்ற ஆர்வம், சபையிலும், உலகிலும் இருக்க வேண்டியதுதான் என்பதை எல்லாரும் கருத்தில்கொள்ள வேண்டும். ஆனால் புதுச் சிருஷ்டியில், அது முக்கியமானவராக, பெரிய நபராக இருக்க வேண்டுமென்ற சுய இச்சையாக இருக்கக்கூடாது; ஆனால், ஆண்டவருக்கும், அவரது மிகவும் தாழ்மையான நிலையிலுள்ள ஜனங்களுக்கும், ஊழியஞ்செய்யும்படியான அன்புள்ள, ஆர்வமாக அது இருக்க வேண்டும். உயர வேண்டும் என்ற ஆர்வம் எப்படிச் சாத்தானை ஆண்டவருக்கு ஊழியஞ்செய்யும் சிலாக்கியத்திலிருந்தும், அவருடைய கிருபையிலிருந்தும் விழப்பண்ணியது என்று நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம்; அவனுடைய சிருஷ்டிகருக்கு எதிரியாக, அவருடைய நீதியான கட்டளைகள் எல்லாவற்றையும் எதிர்க்கிறவனாக கீழே விழுந்தான். "நான் தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேலாக ஏறுவேன், (நான் தேவ புத்திரருக்கு மேலாக ஏறுவேன்) நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்," (அவர்கள் மத்தியில் ஆட்சி செய்கிறவன், திவ்விய நியமனம் பெறாமல் திவ்விய அதிகாரத்தை அபகரிக்கிறவன், மேலும் திவ்விய கட்டளைகளுக்கு எதிர்மாறாக

இருப்பவன்) என்று கூறிய அவனுடைய வழியைப் பின்பற்றுகிறவர்கள் நிச்சயமாகவே தேவனுடைய பட்சத்தில் இருக்க மாட்டார்கள், அதற்கேற்ற வகையில் ஆண்டவரிடத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களுடைய ஆதிக்கம் சாத்தானுடையது போன்றே நிச்சயமாகவே தீமையை விளைவிக்கும். சாத்தான் ஆபத்தான போதகராக இருப்பதுபோலவே அவனுடைய தன்மையைக் கொண்டவர்கள், வெளிச்சத்திற்குப் பதிலாக அந்தகாரத்திற்குள் வழிநடத்து வார்கள். ஏனெனில், அவர்கள் வெளிச்சத்தைப் பெற்று, அதனை மற்றவர்களுக்கு அளிக்கக்கூடிய தூதர்களாக உபயோகப்படுத்தப்படும்படி, தகுதியான நிலையில் இல்லை.

ஆகவே, குறிப்பிடப்பட்ட பிரகாரம் ஊழியத்திற்கென வாசல் திறக்கப்படாமல் இருக்கும்போது, ஏதோ ஒரு பொதுவான நிலையில் ஏதாவது ஒரு சகோதரன் பிரசங்கிக்கும்படியாக தான் அழைக்கப்பட்டு இருப்பதாக நிச்சயமாக உணர்வார் என்றால் - சபையின் கிட்டத்தட்ட ஏகோபித்த வேண்டுகோள் இல்லாமல், தன்னை அதன்மேல் பலவந்தப்படுத்தப் பார்ப்பார் என்றால் - இல்லாவிடில் ஒருவன் ஒரு தலைவனாக, மூப்பனாகத் தெரிந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து அவனை வெவ்வேறு காலக்கட்டத்தில் பொதுவான வாக்கெடுப்பின் மூலம் அவனது ஊழியம் தேவையெனத் தீர்மானிக்காதிருக்கும்போது, அவன் அந்தப் பதவியில் இருப்பது தனது உரிமை என்று நினைக்க முற்படுவான் என்றால், அந்த விஷயத்தில் அவன் உண்மையான நிலையைப் புரிந்துகொள்ளவில்லை என்றும், சபையில் எந்த ஊழியத்திற்கும் தகுதியற்ற, தவறான, சுயத்தை விரும்புகின்ற ஆவியுடையவர் என்று நாம் புரிந்துகொள்ளலாம். எப்படியிருந்தாலும், ஒரு தேர்தலை நடத்தச் சரியான வேளை வரும் முதல் தருணத்தில் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணுவதே சரியான முறையாகும். ஏற்கெனவே அறிவித்தபடி வருடத்தின் கால்பகுதியில், அல்லது வருடத்தின் முதலாவதாக வருகிற ஞாயிற்றுக்கிழமையில் செய்வது சரியான வேளையாகும், ஞாபகத்திலும் எளிதில் வைத்துக்கொள்ளக் கூடியதாகும்.

## ஒழுங்கில்லாதவர்களை எச்சரியுங்கள்

"மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:14, 15)

இந்தப் புத்திமதி மூப்பர்களுக்கென்று தனியாக இல்லை, ஆனால்

மூப்பர்களையும் உள்ளடக்கிய முழுச்சபைக்கும் உரியதாகும். தேவனுடைய புதுச் சிருஷ்டியாகிய முழுச்சபையுமே கிறிஸ்து இயேசுவுக்குப் புதுச் சிருஷ்டிகளாகப் பூரண நிலையில் இருக்கிறது என்ற உண்மையை அது அறிந்திருந்தாலும், அவர்களெல்லாரும், தனித்தனி நபரும் அவர்களுடைய மாம்சத்தின்படி பூரணமற்ற நிலையில் இருக்கிறார்கள். அது மேலும் நம்முடைய மாம்சீகக் குறைபாடுகள் பலதரப்பட்ட விதங்களில் இருப்பதை நாம் காண்கிறோம் என்பதையும் காட்டுகிறது. ஆகவே பூலோகக் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளில் வித்தியாசமான குணங்கள் பெற்றோரிடமிருந்து வித்தியாசமானப் பராமரிப்பை எதிர்ப்பார்த்திருப்பது போன்று, அதைக்காட்டிலும் அதிகமாக தேவனுடைய குடும்பத்தில் அதிக வித்தியாசமான குணங்கள் இருப்பதினால் ஒருவருக்கொருவர் விசேஷமாகக் கரிசனைக் காட்டுவது அவசியமாகிறது. மற்றவர்களுடைய குறைப்பாடுகளைக் கேலி செய்யும் நிலையிலிருந்து கண்ணோக்குவது, நமக்கே அதிகத் தீமை செய்வதாகும். மேலும் அது மற்றவர்களுடைய பெலவீனங்களை, குறைப்பாடுகளைப் பார்க்கும்படியாக, நம்முடைய இருதயங்களில் ஒரு குற்றம் கண்டுபிடிக்கும் குணத்தை வளர்க்கும்; அதற்கேற்றபடி, ஒருவேளை நம்முடைய சொந்தக் குறைபாடுகளுக்கு நம்முடைய கண்களைக் குருடாக்கும். இப்படியாகக் கேலிச் செய்வது அப்போஸ்தலர் கூறிய புத்திமதியின் நோக்கத்திற்கும், சிந்தைக்கும் புறம்பானது.

சத்திய ஆவியினால், பரிசுத்த ஆவியினால், தாழ்மையின் ஆவியினால், அன்பின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு அவைகள் சொல்லப் பட்டுள்ளன. இப்படியாக, ஆவியின் கிருபைகளில் வளருபவர்கள் பயப்படுவார்கள், முக்கியமான தங்களுடைய குறைப்பாடுகளையே கேலிச் செய்வார்கள். அதே நேரத்தில் அவர்கள் மற்றவர்கள்மேல் வைத்திருக்கிற அன்பினிமித்தம் அவர்களது குறைகளை அதிகமாகக், கூடுமானவரை மனதில் வைக்காமலிருப்பார்கள். ஆனால் இந்த அன்பின் ஆவியானது, சகோதரரின் குற்றங்களையும், பெலவீனங்களையும் மன்னிக்கிற அதே வேளையில், எச்சரிக்கையுடன் இருப்பதோடு, சண்டைப்போடாமல், விரோதம் காட்டாமல், வாக்குவாதம் பண்ணாமல், கடிந்து கொள்ளாமல், குற்றம் கண்டுப்பிடித்து இன்னொருவர்மேல் அவதூறு கூறாமல் ஆண்டவர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். சாதுவாக, பொறுமையோடு, நீடிய பொறுமையோடு, பணிவோடு, ஒருவருடைய பெலவீனங்களுக்கு விட்டுக்கொடுக்க முயல்வதோடு, அதே வேளையில் ஒருவருக்கொருவர் அந்நிலையிலிருந்து வெளிவர உதவி செய்வதோடு, ஒவ்வொருவரும் தனக்குண்டான ஏதாவது பெலவீனத்தை நினைவில் கொண்டுவரவும் உதவும்.

ஒழுங்கீனமாய் நடப்பவர்களை, அவர்களுடைய தவறான வழியில் ஆதரிக்கவோ, ஆறுதல்படுத்தவோ, உற்சாகப்படுத்தவோ கூடாது. ஆனால்,

தேவன் ஒழுங்கில் தேவனாயிருக்கிறார் என்றும், அவருடைய சாயலிலும், சிலாக்கியத்திலும் நாம் வளரும் அளவுக்கு ஏற்றபடி ஒழுங்குமுறைகளை நாம் ஏற்று நடக்க வேண்டுமென்று அவர்களைப் பட்சாதாபத்திலும், அன்பிலும் எச்சரிக்க வேண்டும். திவ்விய ஒழுங்கு முறைக்கு கட்டுப்படாதது அராஜகத்திற்குத் தூரமானதல்ல என்று அவர்களுக்குப் புத்திச்சொல்ல வேண்டும்; மேலும், கொடுங்கோல் ஆட்சியானது அராஜகத்தைவிட ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்ற கருத்தை உலக ஜனங்கள் அறிந்திருப்பதுபோன்று, தெளிந்த புத்தியின் ஆவியையும், பரிசுத்த ஆவியையும் பெற்றிருக்கிற தேவ ஜனங்கள் இதே கருத்து, சபைக்கு உள்ளது என்பதை எவ்வளவு அதிகமாக உணர வேண்டும். அப்போஸ்தலர் ஆண்டவருடைய வேலையின் பொதுவான நலனை மனதில்கொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டுமென்று நமக்குப் புத்திமதிக் கூறுகிறார். நாம் எல்லோரும் பூரணராயிருந்து, ஆண்டவருடைய சித்தத்தைப் பூரணமாக அறிந்திருப்போம் என்றால், நாம் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் சிந்திப்போம்; அப்படியாயின், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும்படியான விசேஷத் தேவையிருக்காது. ஆனால் நாம் யோசிக்கிற விதம் வித்தியாசப்படுமானால், ஒவ்வொருவரும் மற்றவரின் கருத்தையும், அவர் கண்ணோக்குகிற விதத்தையும் நாம் கவனித்துப் பார்ப்பது அவசியமாகிறது. மேலும் பொதுவான சமாதானத்திற்காக ஏதாவது ஒன்றை விட்டுவிடவும், கிறிஸ்துவின் சரீரமான சபையில் சமாதானக்கட்டைக் காத்துக்கொள்வதற்கும், ஆவியின் ஒற்றுமையைக் காப்பதற்கும், இப்படிப்பட்ட செயல் கருத்துக்கு முரண்பாடாக இல்லாதபட்சத்தில், எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்க நாட வேண்டும்.

ஒழுங்கற்று, அல்லது ஒழுங்கீனமாக நடப்பவர்கள், ஒருவேளை அவர்களுடைய நிலைக்கு முழுவதும் பொறுப்பானவர்களாக இருக்கமாட்டார்கள். அநேகர் ஒழுங்கற்ற நிலையில் பிறந்திருப்பார்கள். ஆகவே அவர்கள் உடுத்தும் விதத்திலும், வாழ்க்கையின் எல்லாக் காரியங்களிலும் அப்படியே இருப்பார்கள். ஆகவே அந்த நிலை அவர்களுடைய பெலவீனத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. அதினிமித்தம் அதை அன்போடு, இரக்கத்தோடு கண்ணோக்க வேண்டும். ஆனாலும் தேவனுடைய சபைக்குத் தீமை விளைவிக்கும்படியாக, அது பிரயோஜனமற்றதாகாதபடி, சத்தியத்தைப் படிப்பதிலும், அதற்கு ஊழியஞ் செய்வதிலும் தடையுண்டு பண்ண அது அனுமதிக்கப்படாமலிருக்கக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஒழுங்கற்று நடக்கிறவர்களோடு தொடர்புகொள்வது பெலவீனமானச் செயல் என்ற அளவிற்கு அவருடைய ஜனங்கள் சாந்த குணமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. ஒழுங்கு என்பது பரலோகத்தில் முதலாவது பிரமாணம் என்பதை அவர்களுக்கு அன்பாக, நேசமாக ஆனால் உறுதியாகக் காட்ட வேண்டும். எனவே பரலோகச் சிந்தையுள்ளவர்கள் அனைவர் மத்தியிலும் அது உயர்வாக மதிக்கப்படல்

வேண்டும்; மேலும் தேவனுடைய வார்த்தையில் சொல்லப்பட்ட, திவ்விய கட்டளைகளுக்கு அவன் இருக்கிற சபையினரால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு எதிர்மாறாக சபையின் ஒன்று அல்லது இரண்டு அல்லது அதற்கு மேலானவர்கள் தீமைச் செய்யும்படி அனுமதிப்பது சபைக்குப் பாவமானச் செயலாகும்.

## புத்தி சொல்லுவது என்பது பொதுவான கட்டளையல்ல

இப்படிச் சபைக்குப் பொதுவான முறையில் அப்போஸ்தலர் கூறியது, சபையிலுள்ள ஒவ்வொரு தனி நபரும் புத்தீ சொல்ல வேண்டும் என்பதற்காக என்று எடுத்துக்கொள்வது பெரிய தவறாகும். ஞானமாக, உதவி செய்யக்கூடிய விதத்தில் புத்தி சொல்லுவது என்பது உண்மையிலேயே மிகவும் சாமர்த்தியமானக் காரியமாகும்; மேலும் குறிப்பாக ஒரு சிலரே இதற்கான தாலந்து உள்ளவர்களாக இருக்கிறார்கள். சபைகளில் மூப்பர்களாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவர்கள் அதிகமான அளவில் ஆவிக்குரிய வளர்ச்சிப் பெற்றவர்களாகவும், சபையின் பிரதிநிதிகளாக இருக்கும்படியாக இயற்கையான தகுதியுள்ளவர்க ளாகவும், சபைக் கூட்டங்கள் போன்றவற்றை நடத்தத் திறமையுள்ளவர்களாகவும், ஆனாலும் கூட்டங்களில் ஒழுங்கை நிலைநாட்டவும், ஒழுங்கீனமான முறையில் நடப்பவர்களை, ஞானத்துடன், அன்போடு, உறுதியோடு புத்தி சொல்லக் கூடியவர்களாகவும் இருப்பதினிமித்தமே சபையினர் தெரிந்து கொண்டுள்ளார்கள் என்பதும் தெரிகிறது. இந்தச் சிந்தை அப்போஸ்தலருடைய சிந்தையாயிருக்கிறது என்பது கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வசனங்களிலிருந்து தெளிவாகிறது.

"அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைச் செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திச் சொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்." (1 தெசலோனிக் கேயர் 5:12, 13)

ஒரு சபையின் மூப்பர்களைத் தெரிவு செய்வதில் திவ்விய ஞானமானது சரியான முறையில் தேடப்பட்டு அப்பியாசப்படுத்தப்பட்டிருக்கும் என்றால், இப்படியாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், மிகவும் உயர்வாக எண்ணப் பட்டவர்கள் என்பதைக் காட்டியிருக்கும், கற்றுக்குட்டிகள் தெரிந்து கொள்ளப்படக் கூடாததால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், பாராட்டுக்குரியவர்களாயிருந்து அவர்களுடைய கிரியைகளுக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டார்கள். எப்படியெனில், சகோதரர்கள் அவர்களுக்குள்ளே ஒரு மேலான அளவு அன்பின், ஞானத்தின், சாந்தத்தின் பரிசுத்த ஆவியும், அதோடுகூட இந்த ஊழியத்திற்கென

அவர்களிடத்தில் இயல்பாகவே வரங்களும் தகுதிகளும் இருந்தன என்பதைப் பகுத்து அறிந்து கொண்டார்கள். "உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்" என்று அப்போஸ்தலர் புத்திமதியாகக் கூறுவதின் பொருள் என்னவெனில், சபையின் பிரதிநிதிகளாய் இருக்கும்படியாக இந்த மூப்பர்களைத் தெரிந்துகொண்ட பின்னர், சபை அவர்கள் எந்த ஊழியத்திற்கெனத் தெரிந்து கொள்ளப்பட்டார்களோ அதை நிறைவேற்றுவார்கள் என்று எதிர்ப்பார்ப்பதுடன் ஒவ்வொருவரும் அவர்களுக்குக் கண்டித்து உணர்த்துவது, அல்லது புத்திமதிக் கூறுவது போன்றவைகளை ஒவ்வொருவரும் தன்மேல் விழுந்த கடமை என்று எடுக்க முயற்சிக்க மாட்டார்கள். நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி உண்மையாகவே ஆண்டவருடைய ஜனங்கள் ஒருவரையொருவர் தன்னிச்சையாக நியாயந்தீர்க்கக்கூடாது, சபை மாத்திரமே ஒருமனதாகக் கூட்டத்தின் ஐக்கியத்திலிருந்தும், சிலாக்கியங்களிலிருந்தும் ஒதுக்கி வைக்கலாம். இது நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி, தனிப்பட்ட விதத்தில் பல்வேறு நடவடிக்கைகள் கைக்கொள்ளப்பட்ட பின்னர்தான் வரமுடியும். சீர்த்திருத்தத்தைக் கொண்டுவரும்படியாக எடுக்கப்பட்ட முயற்சிகள் பிரயோஜன மற்றுப் போனபிறகு, குற்றம் செய்பவரின் தவறான வழிமுறைகள் சபையின் பொது நலன்களை வெகுவாகப் பாதிக்கும்போது மாத்திரமே இவ்வாறு செய்ய முடியும். ஆனால் இந்த வசனத்தில் சபையினர் "எண்ணிக்கொள்ளும்படி" என்று புத்திமதியாகக் கூறுகிறார். அப்படியானால், அவர்கள் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிந்துகொண்டவர்களைக் கண்ணோக்க வேண்டும். மேலும் விஷயங்கள் மிகவும் மோசமாகி சபையை ஒரு நியாயஸ்தலமாக ஏற்று அதன்முன் இவைகளைக் கொண்டுவருவதற்கு முன்னர், அவைகள் சபையின் நலன்களைப் பாதுகாக்கவும், ஒழுங்கற்று நடப்பவர்களுக்குப் புத்தி சொல்லவும் எதிர்ப்பார்க்கப்படல் வேண்டும்.

## எல்லோருக்கும் முன்பாகக் கடிந்துகொள்ளுதல் அரிதானது

"மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி பாவஞ்செய்தவர்களை எல்லோருக்கும் முன்பாகக் கடிந்துகொள்" (1 தீமோத்தேயு 5:20) என்று அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்கு யோசனைக் கூறுவதுபோல, சில சந்தர்ப்பங்களில் இந்தப் புத்திமதிக் கூறுதல் சபையினருக்கு முன்பதாக வெளியரங்கமாகச் செய்யப்பட வேண்டியிருக்கும். இப்படியாக எல்லோருக்கும் முன்பதாக என்று கூறும்போது மிகவும் கொடியதான பாவத்தைக் குறித்தது என்று பொருள்படுகிறது. மூப்பர்கள் ஏற்படுத்தியிருக்கிற ஒழுங்குமுறையிலிருந்து சற்று வித்தியாசமாகச் செயல்படும்போது, அன்பின் பிரமாணத்தின் கீழும், ஆண்டவருடைய கட்டளையின்படி (பொன்னான கற்பனை) "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்." அப்படிச்செய்யும்போது,

தனிப்பட்ட முறையில் அந்த நபரோடு ஒரு வார்த்தைப் பேசுவது ஒருவேளை எல்லோருக்கும் முன்பாகக் கடிந்து கொள்ளுதலைவிட அதிகப் பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என்பதையும் அறிந்திருப்பார்கள். எல்லோருக்கும் முன்பாகக் கடிந்து கொள்ளும்போது முற்றிலும் தேவையற்றதான ஒரு காயத்தையோ, அல்லது உணர்ச்சியைப் பாதிக்கக்கூடிய ஒன்றையோ ஏற்படுத்தும் என்ற நிலை இருந்தால், அப்படிச் செய்யாமல் அன்பினால் செய்தால் அந்த விஷயம் வேறு வழியில் சந்திக்கப் பட்டிருக்கலாம். ஒரு மூப்பர் கொடியதான ஒரு பாவத்தை வெளிப்படையாக எல்லோர் முன்பாகக் கடிந்துகொள்ள வேண்டியதிருந்தாலும், அது அன்புடன் கண்டிக்கப்பட்டவர், சீர்திருத்தப்பட்டு, நல்ல நிலைக்குத் திரும்பிவரும்படி உதவி செய்யத்தக்க வகையில் செய்யப்பட வேண்டுமேயன்றி, அவருக்கு வெறுப்பு உண்டாக்க வேண்டும், ஒதுக்கி வைத்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்படக் கூடாது. அப்படியில்லாவிட்டாலும் உண்மையிலேயே சபையினருக் குள்ள சிலாக்கியங்களிலிருந்து தடுத்து நிறுத்துமளவுக்குக் கண்டிப்பது மூப்பரின் வசத்தில் கிடையாது. இப்படியாகக் கண்டிப்பது என்பது நாம் இப்பொழுது பார்த்திருக்கிறபடி சபையின் ஏகோபித்த தீர்மானத்தின்படிதான் வரமுடியும். அதுவும் பூரண விசாரணைக்குப் பின்னர், அதிலும் குற்றஞ்சாட்டப்பட்டவர், தன்னைத் தற்காத்துக்கொள்ள முழுத்தருணம் கொடுக்கப்படுவதுடன், அப்படியில்லை யென்றால் தன்னுடைய வழிகளைச் சரிசெய்து, மன்னிப்பைப் பெறுவதுடன் மாத்திரம் செயல்பட வேண்டும். சபை ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப் பட்டுள்ளது; அது முற்றுமாக அவருடைய பிரதிநிதியாக உள்ளது. மேலும் மூப்பரானவர் சபையின் பிரதிநிதி மாத்திரம்தான், அதாவது மூப்பர் என்பது ஆண்டவருடைய தெரிந்துகொள்ளுதலின் நல்லமுறையில் நியமனமாகும். ஆகவே நியாயஸ்தலம் என்று கடைசி பட்சத்தில் இப்படியான விஷயங்களைப் பார்க்க வேண்டியிருப்பின் அதில் இடம் பெறுவது மூப்பர்கள் அல்ல சபைதான், ஆகவே மூப்பர் கைக்கொள்ளுகின்ற வழிமுறை, ஆண்டவருடைய சித்தத்தின்படி எடுக்கப்பட்ட பொதுவான தீர்மானத்தின்படி, சபையினால் மறுபரிசீலனை செய்யவோ அல்லது திருத்தவோ இடமளிக்கிறதாய் இருக்கிறது.

காரியத்தின் இந்த அம்சத்தைக் கவனித்துப்பார்க்கும்போது, சபை எந்தளவுக்கு நேரிடையாகவோ அல்லது அதன் மூப்பர்கள் மூலமாகவோ, ஒழுங்கீனமாக நடப்பவர்களைக் கடிந்து கொள்ளவோ, காலக்கட்டத்தில் அவர்களைச் சபையிலிருந்து தள்ளி வைக்கவோ முடியும் என்பதைப் பார்க்க ஒரு வினாடி நிற்க வேண்டும். நிரந்தரமாகத் தள்ளி வைப்பது என்பது சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டது அல்ல. தன்னோடு ஆராதிக்கிற ஒரு சகோதரனையோ அல்லது முழுச்சபையைத் துக்கப்படுத்திய ஒரு சகோதரன், திரும்பிவந்து "என்னுடைய தவறான வழிக்கு வருந்துகிறேன், வருங்காலத்தில் என்னால் இயன்றவரை நன்கு நடப்பேன்" அல்லது இதற்கு ஒத்தார்ப்போல் சொல்லும்போது,

எல்லா மீறுதல்களையும் ஆண்டவர் மன்னிப்பார் என்று நாம் நம்புகிற வண்ணம், அவர் முழுமையாக இலவசமாக மன்னிக்கப்படல் வேண்டும். ஆண்டவரைத் தவிர, திராட்சச்செடியிலிருந்து கொடியை வெட்டுவதுபோன்று, எந்த ஒரு தனி நபரையும் நித்திய காலமாகத் தண்டித்து வைக்க அதிகாரம் கிடையாது. மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக் குறித்து வேண்டுதல் செய்வது பிரயோஜனமற்றது என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. (1 யோவான் 5:16) இப்படியான மனப்பூர்வமாய்ச் செய்யப்படுகின்ற பாவத்தின் தண்டனையானது இரண்டாம் மரணமாகும், அந்தப் பாவம் மிகவும் வெளிப்படையாக, துன்மார்க்கமானதாக ஆண்டவரோடு ஐக்கியம் கொண்டுள்ளவர்கள் உடனடியாகப் பகுத்தறியக் கூடியதாக இருக்கும். நாம் யாரையும் அவர்களுடைய இருதயங்களில் என்ன இருக்கிறது என்பதை வைத்து நியாயம் தீர்க்கக்கூடாது, ஏனெனில் நம்மால் அவர்களுடைய இருதயங்களில் உள்ளவற்றை அறிய முடியாது. ஆனால் அவர்கள் மனப்பூர்வமாய் மரணத்திற்கு ஏதுவான பாவம் செய்வார்கள் என்றால், உபதேசத்தின் மீறுதல்கள், பாவநிவாரணத்திற்கெனச் சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற இரத்தத்தை மறுதலிப்பது, இல்லாவிட்டால் அவர்களுடைய ஒழுக்கங்கெட்ட நடத்தைகளினால், மேலும் "கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது" என்பது போன்று, மாம்சத்தின்படியாய் நடக்க திரும்பி இருப்பார்கள் என்றால், அவர்கள் உதடுகளின் மூலமாக நிச்சயமாக வெளிப்படையாகத் தெரியவரும். எபிரெயர் 6:4-8; 10:26-31-இல் இப்படிப்பட்டவர்களைக் குறித்து, அப்போஸ்தலர், அவர்களோடு எவ்விதமான தொடர்பும் வைத்துக்கொள்ள வேண்டாம் என்றும், அவர்களோடு உட்கார்ந்து சாப்பிட வேண்டாம் என்றும், அவர்களை வீட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்றும், அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கிறார். (2 யோவான் 9-11) ஏனெனில் அவர்களோடு சேர்ந்திருப்பவர்கள், அல்லது அவர்களுக்கு வாழ்த்துச் சொல்லுகிறவர்கள், தேவனுக்குச் சத்துருக்கள் என்கிற இடத்தில் உள்ளவர்களாக எண்ணப்படுவார்கள், மாத்திரமல்ல, அவர்கள் துர்க்கிரியையில் பங்குள்ளவர்களாக அல்லது உபதேசத்தில், ஏதாவது ஒன்றில் பங்குள்ளவர்களாக எண்ணப்படுவார்கள்.

ஆனால் "ஒழுங்கீனமாக நடப்பவர்களை" குறித்துக் கட்டளைகள் மிகவும் வித்தியாசமாக உள்ளது. இப்படியாகத் தள்ளிவைக்கப்பட்ட ஒரு சகோதரர் அல்லது சகோதரி ஒரு சத்துருவைப்போல் நடத்தப்படக்கூடாது, மாத்திரமல்ல, அப்படியாக நினைக்கப்படவும் கூடாது, ஆனால் தவறு செய்கிற ஒரு சகோதரனைப்போல எண்ணப்பட வேண்டும். இதைக்குறித்து அப்போஸ்தலர் தன்னுடைய நிருபத்தில் மேலும் கூறுகிறதாவது: "மேலும் இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்திற்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால் (ஒருவன் ஒழுங்கீனமாய் நடந்து, சரியான முறைமைக்கேதுவான தெளிந்த புத்திக்கும், அன்பும், தயாளமுமாய் காணப்படுகின்ற சட்டத்திற்கும் செவிசாய்க்க விருப்பம் இல்லாதிருந்தால்) அவனைக் குறித்துக்கொண்டு அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே

கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி புத்தி சொல்லுங்கள்." (2 தெசலோனிக்கேயர் 3:14, 15) இப்படியான நிலை, அப்போஸ்தலர் தேவனுடைய வாயைப்போலிருந்து சொல்லிய ஒழுங்கு முறைகளுக்குச் சகோதரரிடத்திலிருந்து வெளியரங்கமான ஒரு எதிர்ப்பு வரலாம். இப்படி வெளிப்படையாகச் சரியானக் கட்டளைகளுக்கு வருகின்ற எதிர்ப்பு, சபையார் அவ்வளவு அதிகமாக ஒழுங்கீனமாக இருக்கிறான், அவன் புத்திமதி பெற வேண்டியது அவசியம் என்று சபை தீர்மானிக்கும் என்றால், சபையால் அவன் கண்டிக்கப்பட வேண்டும். அப்போஸ்தலர் மூலமாக ஆண்டவர் தந்துள்ள தெளிந்த வசனத்திற்குக் கட்டுப்படாவிட்டால், அவன் அவ்வளவு தூரம் ஒழுங்குமுறைக்கு அப்பால் இருக்கிறான் என்று எண்ணப்படுவதினால், அவன் இந்த நியாயமான கட்டளைகளுக்குச் செவிசாய்க்கும் வரை சகோதரர்கள் ஐக்கியத்தில் பங்குபெறாமல் இருப்பது நலம் என்று கருதப்பட வேண்டும். சகோதரர்கள் தெருவில் அவரைக் கடந்துச் செல்லும்போது பாராமுகமாய் இருக்கக்கூடாது. ஆனால் அவன் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும். அவன் ஒதுக்கி வைக்கப்படுவது சபையின் உண்மையான விசுவாசிகளுக்குள்ள சிலாக்கியங்கள் மற்றும் சகோதரர் கூட்டங்கள் போன்றவைகளிலிருந்து மாத்திரமே. "அவன் உனக்கு ஒரு அஞ்ஞானியைப் போலவும் பரிசேயனைப் போலவும் இருப்பானாக" என்ற நம்முடைய ஆண்டவருடைய வார்த்தையிலும் விளங்குகிறது. நம்முடைய ஆண்டவர் ஓர் அஞ்ஞானிக்கு அல்லது பரிசேயனுக்குத் தீமை விளைவிக்க வேண்டும் அல்லது அன்பற்ற முறையில் நடத்த வேண்டும் என்று பொருள்படக் கூறவில்லை. ஆனால் இப்படிப்பட்டவர்களோடு சகோதரர்கள் என்ற முறையில் ஐக்கியம் கொள்ளக் கூடாது, அல்லது அவர்களுடைய நம்பிக்கையைப் பெற விரும்பக்கூடாது என்பது மாத்திரமல்ல, புதுச் சிருஷ்டிகளாக நாம் நம்முடைய நம்பிக்கையை அவர்களிடத்தில் காட்டவுங்கூடாது எனப் பொருள்படுகிறது. விசுவாச வீட்டார் பரஸ்பர அன்பினாலும், இரக்கத்தினாலும், ஒருமித்தக் கருத்தினாலும் உறுதியாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படியான சிலாக்கியங்களும், ஆசீர்வாதங்களும் தள்ளி வைக்கப்பட்டுள்ள சகோதரன் தன்னுடைய வழிகளைச் சீர்த்திருத்த வேண்டும், மறுபடியும் சபைக் கூட்டத்திற்கு வர வேண்டும் என்று உணருகிற வரையில் அவனுக்குக் கிடைக்காமல் அதனிமித்தம் அவன் உணர்வடைய வேண்டும். ஆண்டவருடைய சரீரமான சபையின் அங்கங்களாக இருப்பவர்கள் மத்தியில் ஒரு இதயப்பூர்வமான, மனப்பூர்வமான, உண்மையான சகோதரத்துவம் இருக்க வேண்டும் என்று ஒரு யோசனை உள்ளது.

## பலவீனரைத் தாங்குங்கள்

நம்முடைய செய்தியின் பகுதியில் அப்போஸ்தலருடைய வார்த்தைகளைத்

தொடர்ந்து ஆராயும்போது, சபை பலவீனரைத் தாங்க வேண்டும் என்று காண்கிறோம். அதாவது பரிசுத்த ஆவியையைப் பெறுவதால், நம்முடைய பெலவீனங்களை முற்றுமாக மேற்கொள்ளும்படி நம்முடைய அழியக்கூடிய சரீரங்கள் மாறுவதில்லை என்பதை நாம் காண்கிறோம். சிலர் பலவீனமுள்ள சரீரங்களை உடையவர்களாய் இருப்பதைப்போன்று சிலர் பலவீனமுள்ள மனதுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய பலவீனத்திற்கு ஏற்ப இரக்கம் தேவைப்படுகிறது. பலவீனமுள்ள மனங்கள் அற்புதமாக குணப்படுத்துவதற்கில்லை; இல்லாவிட்டாலும் சிலருடைய மனங்கள் பலவீனமுள்ளதாயிருப்பதினால், அவர்களால் திவ்விய திட்டத்தின் ஆழம், அகலம், உயரம், நீளத்தை உணர்ந்து கொள்ளமுடியாதிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சரீரமான சபைக்குரியவர்கள் அல்ல. அதற்கு மாறாக, ஆண்டவர் அவருடைய சபைக்கென, பலமுள்ள, ஆரோக்கியமுள்ள, நன்கு வளர்ச்சிப்பெற்ற சரீரமுள்ளவர்களைத் தேடாததுபோன்று, மனதில் பலமும் ஆரோக்கியமும் உள்ளவர்களை, திவ்விய திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும், அதன் காரணத்தைக் காணவும், ஆராய்ந்துப்பார்க்கவும் முடிந்தவர்களை மாத்திரம் அவர் தேடவில்லை. இப்படியாக சரீரமான சபையில் தகுதியுள்ளவர்கள் இருப்பார்கள். ஆனால் மற்றவர்கள் பலவீன மனதுள்ளவர்கள், அவர்கள் அடிப்படையான, சராசரி அறிவைக்கூட எட்டுவதில்லை. இவர்களுக்கு எப்படிப்பட்ட ஆறுதலை நாம் கொடுக்க வேண்டும்? மூப்பர்கள் சத்தியத்தை அளிக்கும்போதும், சபையிலுள்ள அனைவரும் ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவின் மூலமும், இவர்களைத் தாங்க வேண்டுமென்று நாம் பதில் சொல்லுகிறோம். இப்படிச் செய்யும்போது அவர்களுடைய பலவீன நிலையைச் சுட்டிக்காட்டி மன்னிக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. மேலும் தேவனுடைய குடும்பத்திலுள்ள அங்கங்களில் காணப்படுகின்ற அதே அளவு வல்லுனர்களாக, புரிந்துகொள்ளும் திறமையுள்ளவர்களாக இருப்பார்கள் என்று எதிர்ப்பார்க்காமல் செய்ய வேண்டும். இப்படித் திறமையில் குறைவுப்பட்டவர்கள், சரீரமான சபையைச் சார்ந்தவர்கள் அல்ல என்று ஒருவரும் சொல்லக்கூடாது.

"தளர்ந்த இருதயமுள்ளவர்களைத் தாங்குங்கள்" என்கிற திருத்தப்பட்ட மொழிப்பெயர்ப்பு வசனத்தை ஏற்றுக்கொள்வோம் என்றால் பாடமானது ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. இயற்கையாகவே சிலருக்குத் தைரியமும், போராடும் குணமும் கிடையாது, மேலும் எப்பொழுதும் நல்ல சிந்தையோடும், எப்பொழுதுமே விசுவாசமுள்ள இருதயமுள்ளவர்களாய்ச் சரீரமான சபையிலுள்ள மற்றவர்களைப் போன்று அதே அளவுக்கு வெளிப்படையாகக் "கர்த்தரில் பலப்படவும்" அல்லது "விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தைப் போராடவும்" முடியாது. எனினும் ஆண்டவர் அவர்கள் தைரியம் உள்ளவர்களாய், உண்மையுள்ளவர்களாக இருக்க விரும்பும் அவர்களுடைய சித்தத்தையும் அவர்களுடைய நோக்கத்தையும் பார்க்க

வேண்டும், அப்படியாகவே, சகோதரர்களும் இருக்க வேண்டும் (அவர்களும் ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்ற தரத்தை அடைய வேண்டுமென்றால்).

ஆண்டவர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பது என்பது அவர்களுடைய இருதயங்களின் பிரகாரம் என்பதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். மேலும் இவ்விதமான பலவீனமுள்ள மனதுள்ளவர்கள் அல்லது தளர்ந்த இருதயமுள்ளவர்கள் கிறிஸ்து இயேசுவின் மூலம் வந்த மீட்பின் திவ்விய திட்டத்தின் அடிப்படைக் காரியங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய விருப்பமும், போதுமானளவு மனமும் இருந்திருக்குமென்றால், அவர்கள் மீட்பர்மேல் வைத்த விசுவாசத்தினால் தேவனுடைய பார்வையில் வந்த அவர்களுடைய சொந்த நீதிமானாக்கப்படுதலில் விருப்பமும், போதுமானளவு மனதுள்ளவர்களாய் இருந்திருப்பார்களென்றால், மேலும் இந்த அடிப்படையில் அவர்கள் ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை நடத்தும்படி முயற்சி செய்து கொண்டிருப்பார்கள் என்றால், அவர்கள் ஆண்டவருடைய சரீரமான சபையின் அங்கங்கள் என்று முழுமையாக, ஏகோபித்த வண்ணம் அவர்கள் உணர்ந்துகொள்ள அனுமதிக்கும் விதத்தில் எல்லா வழிகளிலும் நடத்தப்படல் வேண்டும். மேலும் அறிந்துகொள்ளும் விதத்தில், திவ்விய திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒருவேளை தெளிவாகப் பகுத்தறிய முடியாவிட்டாலும் அல்லது விளக்கிக்கூற முடியாவிட்டாலும், மற்றவர்களைப் போல் தைரியமாக அதற்காக வாதாட முடியாவிட்டாலும், அவர்கள் ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அது தடையானது என்று கருதக்கூடாது. அவர்கள் திவ்விய ஊழியத்தில் தியாக மனப்பான்மையோடு முன்னேறிச் செல்ல தைரியப்படுத்தப்படல் வேண்டும், அவர்கள் கரங்களுக்குக் கிட்டுகிறது எதுவோ அந்த ஊழியத்தை ஆண்டவருடைய நாமத்திற்கு மகிமையாகவும், அவருடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி செய்ய தைரியப்படுத்தப்படல் வேண்டும். அப்படிச் செய்யும்போது, ஏற்றக்காலத்தில், அவருடன் நிலைத்திருந்து, அவருடைய ஆவியின் கனிகளில் வளர்ந்து, அவருடைய பலியின் வழிகளில் நடக்கிற அனைவரும் பரிபூரண திறமையுடன் புதிய சரீரங்களைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கையில் ஆறுதலடைவார்கள். அந்த நிலையில் எல்லா அங்கங்களும் அவர்கள் இருக்கிற வண்ணமாக அறிந்துகொள்ள முடியும், இதற்கிடையில் நம்முடைய பெலவீனத்தில் அவருடைய பெலன் பரிபூரணமாய் விளங்கும் என்று ஆண்டவர் உறுதியளிக்கிறார்.

## பெலவீனமானவர்களைத் தாங்குங்கள்

சபையில் சிலர் சரீரப்பிரகாரமாக மாத்திரமல்ல ஆவிக்குரிய பிரகாரமாகவும் மற்றவர்களைக் காட்லும் பெலவீனமானவர்கள் இருக்கிறார்கள் என்பதைக்

காட்டுகிறது. இதன் பொருள் என்னவெனில் மனுஷீக உறுப்புகள் இப்படியாகச் சீரழிந்து இருப்பதினால், புதுச் சிருஷ்டிகளாக அவர்கள் சரீர வளர்ச்சியிலும், ஆவிக்குரிய வளர்ச்சியிலும் அதிகக் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள் என்பதாகும். இப்படிப்பட்டவர்கள் சபையிலிருந்து ஒதுக்கி வைக்கப்படக்கூடாது, ஆனால் அதற்கு மாறாக ஆண்டவர் அவர்களை அவருடைய கிருபையை அறியும் அறிவுக்குத் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணியிருந்தால், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயம் கொடுத்து வாங்கியவர் மூலமாக ஜெயங்கொள்ளுகிறவர்களாக அவர்களைக் கொண்டுவருவதற்கு அவர் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வேதம் தருகின்ற வாக்குத்தத்தங் களினால் அவர்கள் தாங்கப்பட வேண்டும். நம்மில் நாம் பெலவீனமாயிருக்கும் போது, நாம் அவருடைய வல்லமையின் சத்துவத்தில் பலமுள்ளவர்களாக இருக்க முடியும். நம்முடைய கவலைகள் எல்லாவற்றையும் அவர்மேல் வைத்து, விசுவாசத்தினால் அவருடைய கிருபையில் சார்ந்திருக்கும்போது நாம் பலமுள்ளவர் களாக இருக்கமுடியும். அவர்களுடைய பலவீனம் மற்றும் சோதனையின் நேரத்தில் "என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்கிற வாக்குத்தத்தம் நிறைவேறுவதை அவர்கள் காணமுடியும். முழுச்சபையினரும் இப்படி ஆறுதல்படுத்துவதிலும், தாங்குவதிலும் உதவி செய்ய முடியும். ஆனாலும் நிச்சயமாக மூப்பர்களுக்குக்கூட இவர்களைக் குறித்து ஒரு விசேஷமான பாரமும், பொறுப்பும் உண்டு. ஏனெனில், அவர்கள் சபையினால் தெரிந்து கொள்ளப்பட்ட பிரதிநிதிகளாக இருக்கிறார்கள், ஆகவே ஆண்டவருடைய பிரதிநிதியுமாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் சரீரத்தின் பல்வேறு அவயவங்களைக் குறித்துக் கூறிய பிறகு, போதகர்களையும், தீர்க்கத்தரிசிகளையும் குறித்து கூறுகிறார், அதன் பின்னர் "ஊழியங்களை" குறித்துச் சொல்லுகிறார். (1 கொரிந்தியர் 12:28) சபையின் ஒவ்வொரு அங்கமும் உதவியாக இருக்கும் ஓரிடத்தில் இருக்க வேண்டும் என்பது ஆண்டவருடைய விருப்பமாயிருக்கும் என்று தெரிகிறது. சபையின் பிரதிநிதிகளாகத் தெரிந்து கொள்ளப்பட்ட மூப்பர்களுக்கு உதவி செய்வது மாத்திரமல்ல, ஒருவருக்கொருவர் உதவி செய்வதோடுகூட நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்வதோடு, விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மைச் செய்ய வேண்டும்.

## எல்லோரிடத்திலும் பொறுமையாயிருப்பது

எல்லாச் சந்தர்ப்பத்திலும் ஒவ்வொருவரிடத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது என்ற இந்தப் புத்திமதிக்குக் கீழ்ப்படியும்போது புதுச்சிருஷ்டிகள்

தாங்கள் ஒருவருக்கொருவர் சரியான மனப்பாங்கை அப்பியாசப்படுத்துவது மாத்திரமன்றி, அவர்கள் தங்களுக்குள்ளாக பரிசுத்த ஆவியின் மிக உன்னதமான, கிருபையான பொறுமையையும் வளர்த்துக்கொள்ளுகிறார்கள். பொறுமையின் ஆவி ஒரு கிருபையாகும். அது நம்முடைய வாழ்க்கையில் எல்லா விஷயங்களிலும் சபைக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ளவர்களிடத்தில் அப்பியாசப் படுத்துவதற்குத் தருணங்கள் ஏராளம் உண்டு. மேலும் முழு உலகமும் நம்முடைய பொறுமையை எதிர்ப்பார்க்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது. சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுவதைக் குறித்து வேதாகமம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறதைக் குறித்ததான தெளிவான கருத்தை நாம் பெறும்போது மாத்திரமே இதைப் புரிந்துகொள்ளுகிறோம். அதில் வீழ்ச்சியின் கதையையும், அதினால் எப்படி எல்லோரும் தீமையைப் பெற்றோம் என்பதையும் காண்கிறோம். அதில் பாவிகள்மேல் தேவனுக்குள்ள பொறுமையையும், அவர்களுடைய மீட்பில் அவருடைய அற்புதமான அன்பையும், அவருடைய சபையை உளையான சேற்றிலிருந்தும், பாவம், மரணம் என்ற பயங்கர குழியிலிருந்தும் தூக்கியெடுக்கும்படியாக அவர் உண்டுபண்ணியிருக்கிற முன்னேற்பாடுகளையும், மாத்திரமல்ல மனுக்குலம் முழுவதற்குமாக அவர் உண்டுபண்ணின மகிமையான முன்னேற்பாடுகளையும் நாம் காண்கிறோம். அதில்கூட உலகத்தின் பெரிய பிரச்சனை என்னவெனில் அது நம்முடைய சத்துருவின் மாய்மாலத்திற்குக் கீழாக உள்ளது என்று காண்கிறோம். "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" அவர்களைக் குருடராக்கி, அவர்களை ஏமாற்றுகிறான். (2 கொரிந்தியர் 4:4)

நிச்சயமாகவே இந்த அறிவு நமக்குப் பொறுமையைத் தரவேண்டும்! மேலும் உலகத்தாரோடு நமக்குப் பொறுமை இருந்தால், உலகத்தாராக இல்லாதவர்கள்மேல் அதைக் காட்டிலும் அதிகமாகப் பொறுமை இருக்க வேண்டும். அவர்கள் தேவனின் கிருபையினால் கிறிஸ்து இயேசுவின் பாவமன்னிப்பின் நிலைமைக்கு வந்து, அவருடைய குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டு, இப்பொழுது அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வாஞ்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட உடன் சீஷர்களோடு, ஆண்டவருடைய சரீரமான சபையில் அங்கங்களோடு எவ்வளவு அன்பும், நீடிய பொறுமையையும் உடையவர்களாக நாம் இருக்க வேண்டும். நிச்சயமாகவே இவர்கள்மேல் பொறுமையைக் காட்டிலும் வேறொன்றையும் காட்ட முடியாது. அதுமாத்திரமல்ல நம்முடைய கர்த்தரும் ஆண்டவருமாயிருக்கிறவர் நிச்சயமாகவே அவர்களில் யார்மேலேயாவது பொறுமையின்மையைக் காட்டுவோம் என்றால் விசேஷமாக அதை ஆதரிக்கமாட்டார்; ஏதாவது ஒரு விதத்தில் அதைக் கண்டிப்பார். மேலும் மாம்சத்தோடும், சத்துருவோடும், உலகத்தோடும் தற்போதுள்ள துயரம், பெலவீனங்கள், போராட்டங்களிலும்கூட நமக்குப் பொறுமை

இருப்பது அதிக அவசியமாயிருக்கிறது. இந்த உண்மைகளை நாம் உணர்ந்துகொள்வது மற்றவர்கள் எல்லோரோடும் பொறுமையாயிருக்க உதவி செய்யும்.

## ஒருவரும் தீமைக்குத்தீமை செய்யாதிருக்கப் பாருங்கள்

இது ஒரு தனிப்பட்டவரது யோசனையைவிடக் கூடுதலானது. அது முழுச்சபைக்கெனக் கொடுக்கப்பட்ட ஓர் உத்தரவு. மேலும் அது ஆண்டவருடைய ஒவ்வொரு சபை ஜனங்களுக்கும் உரியது. விசுவாச வீட்டாரில் சிலர், பழிவாங்க, எதிர்க்க, தீமைக்குப் பதில் தீமை என்று உடன் சகோதரர்கள் அல்லது வெளியே உள்ளவர்கள்மேல் ஈடுபடும்போது, சபை இப்படி நடப்பதைப் பார்க்கும்போது கண்டும் காணாததுபோல் இருக்கக்கூடாது. இதைக் கவனிக்க வேண்டியது சபையின் கடமையாகும். "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்" என்பதின் அர்த்தம், முறையான ஆவி உங்கள் மத்தியில் சகோதரர்களுக்கு இடையே காணப்பட வேண்டும் என்பதாகும். ஆகவே இப்படியான கட்டளை செயல்படுத்தப்பட வேண்டிய ஒரு தருணம் இருக்கிறது என்பதை மூப்பர்கள் உணருவார்கள் என்றால், சகோதரர்களையோ அல்லது சகோதரிகளையோ ஆண்டவருடைய வார்த்தையிலிருந்து அன்போடு உணர்த்துவது அவர்களுடைய கடமையாகும். அப்படியும் அவர்கள் கேட்காதபட்சத்தில் அந்த விஷயத்தை சபையாரின் கவனத்திற்குக் கொண்டுவருவது மூப்பருடைய கடமையாகும். இங்கேதான் சபைக்குக் கட்டளையாகச் சொல்லப்பட்டிருக்கிறபடி அது இப்படியாக எவரேனும் தவறான வழியில் செல்வார்களென்றால் அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படியாக நாம் ஒருவரையொருவர் காண்பதோடு, ஒவ்வொருவரையும் கனிவான சிரத்தையோடு, பின்மாறுதலுக்கு ஏதுவான வழிகள் கைக்கொள்ளப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால், அதற்கு மாறாக எல்லோருக்கும் நலமானதை நாட வேண்டும். முன்னேற்றம் சரியான வழியில் வருகிறது என்றபோது அதில் களிகூர வேண்டும், மேலும் தனிப்பட்ட விதத்திலும் ஆண்டவருடைய ஜனக்கூட்டமாக நாம் இருக்கும்போது அப்படியானவைகளை உயர்வாக மதிக்க வேண்டும். அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, நாம் நித்தியக் காலமாகக் களிகூரலாம், அதுவும் நல்லக் காரணத்தோடு, ஒருவருக்கொருவர் இப்படியாக உதவிச் செய்வதன் மூலம் கிறிஸ்துவின் சரீரமான சபை அன்பிலே வளரவும், அதிகமதிகமாகத் தலையாயிருக்கிறவரின் சாயலில் வளரவும், இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்தரராக இருக்க அதிகமதிகமாக தகுதியுள்ளவர்களாவதற்கு உதவி செய்கிறபடியால் நாம் நித்தியக் காலமாகக் களிகூரலாம்.

# அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்போம்

## -எபிரெயர் – 10:24-

எவ்வளவு அன்பாக, அழகான சிந்தனை இங்கே வெளிப்படுத்தப் பட்டுள்ளது! மற்றவர்கள், தங்களோடு இருக்கிறவர்கள் குற்றங்கண்டுபிடிக்க அல்லது அதைரியப்படுத்தும்படியாக இருக்கிறார்கள், அல்லது அவர்களுடைய பெலவீனங்களைத் தங்களுக்குச் சாதகமாக, சுயநலத்துடன் செயல்படுகிறார்கள் என்று நினைக்கும்போது, புதுச் சிருஷ்டியானது அதற்கு மாறாகச் செயல்பட வேண்டும். ஒருவருடைய மனதைப் புண்படுத்தக்கூடிய காரியங்களைச் சொல்லாமல், செய்யாமல் இருக்கும்படியாக, கோபத்தைக் கிளரிவிடாதபடி, இன்னும் இதுபோன்ற தேவையற்றக் காரியங்களைச் செய்வதைத் தவிர்க்கும் வண்ணமாக அவரவர்களுடைய குணாதிசயத்தைக் கவனமாகக் கவனிக்க வேண்டும், ஆனால் அவர்கள் மற்றவர்களை நேசிக்கும்படியாகவும், நல் நடத்தையுள்ளவர்களாக இருக்கும்படியாயும் அவர்கள் செயல்பட வேண்டும்.

ஏன் அப்படிச் செய்யக்கூடாது? முழு உலகத்தினுடையது மாத்திரம் அல்லாது, பொறாமை, சுயநலம், தவறான எண்ணத்துடன் நோக்குவது வார்த்தையிலும், செயலிலும், சிந்தனையிலும் பாவம் செய்யும்படியாகத் தூண்டுகின்ற பிசாசின், மாம்சத்தின் நிலையும் அப்படியாக இல்லையா? அப்படியென்றால் கிறிஸ்துவின் சரீரமான சபையின் புதுச் சிருஷ்டிகள் இப்படியானச் செயல்களிலிருந்து தங்களையும், மற்றவர்களையும் காத்துக்கொள்வதோடு, இதற்கு எதிர்மாறான அன்புக்கேதுவாக, நற்கிரியைகளைச் செய்யும்படியாகத் தூண்டக்கூடாதா அல்லது செயல்படக்கூடாதா? இது நிச்சயமாகவே, தேவனுடைய வார்த்தையிலிருந்து வருகின்ற கண்டித்து உணர்த்துதலும், புத்திமதியும், நன்மை விளைவிக்கிறதாயும், நல்லதாயும் இருக்கிறது.

## நாம் சபையாகக் கூடிவருதல்

"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்." (எபிரெயர் 10:25)

"ஏனெனில் இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத்தேயு 18:20) என்ற ஆண்டவருடைய வார்த்தை, அவருடைய ஜனங்கள் கூடிவருதலைக் குறித்து,

கட்டளையாக அப்போஸ்தலர் மூலமாகக் கூறியவைகளுக்கு முழுமையாக, ஒத்ததாக இருக்கிறது. இப்படிச் சபை கூடிவருதலின் நோக்கம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. அவைகள் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய விஷயங்களில் முன்னேறுவதற்காக, ஆண்டவர்மேலும், ஒருவருக்கொருவர் காட்டும் அன்பிலும் அதிகமதிகமாகச் செயல்படத் தூண்டுவதற்கு அல்லது உந்தப்படுவதற்கு ஏற்றதான, மேலும் நம்முடைய பிதாவை மகிமைப்படுத்தும்படியாக, அதிகமான நற்கிரியைகளைச் செய்யும்படியாகக் கிடைக்கின்ற தருணங்களாக உள்ளன. அப்படிச் செய்வது சகோதரர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும், நமக்குத் தருணம் கிடைக்கும்போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்யும்படியாக அது உதவும். தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். (1 யோவான் 4:20) அதே மாதிரி, நான் ஆண்டவருடைய ஆசீர்வாதங்களையும், அவருடைய ஐக்கியத்தையும் அனுபவிக்கும்படியாக அவரோடு இருக்க விரும்புகிறேன் என்று சொல்லியும், சகோதரர்களைச் சந்திக்கும்படியானத் தருணங்களை ஒதுக்கி வைத்து விடுகிறவர்களும், அவர்களோடு இருப்பதையும் அவர்களுடைய ஐக்கியத்தையும் விரும்பாதவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம்.

ஒவ்வொரு மனிதனும் எப்படியாவது ஒரு சகவாசத்தைத் தேடுவது இயற்கையானதுதான், மேலும் "இனம் இனத்தைச்சேரும்" என்ற பழமொழியும் உண்மையானது என்று அவனுடைய அனுபவத்தின் மூலம் அறிந்திருப்பான். ஆகவே ஆவிக்குரிய மனதை உடையவர்களின் சகவாசம் விரும்பப்படாவிட்டால், அதற்காக வாஞ்சிக்காவிட்டால், அதைத் தேடாவிட்டால், அப்படியான சகவாசத்தை விரும்பும்படியானத் தருணங்களை நாம் அதிகரிக்காவிட்டால், இவைகள் நம்முடைய ஆவிக்குரிய நிலைமையைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமற்ற நிலைமைக்கு எடுத்துக்காட்டு என்று எண்ணலாம். சுபாவமுள்ள மனிதன் சுபாவமுள்ளவர்களின் சகவாசத்தையும் ஐக்கியத்தையும் நேசிக்கிறான், பிரியப்படுகிறான், ஆனாலும்கூட புதுச் சிருஷ்டியின் அளவற்ற, விலையேறப்பெற்ற நம்பிக்கைகளோடு, ஒப்பிடும்போது அவர்களுடைய பொதுவான உலகப் பிரகாரமான நம்பிக்கைகளும், திட்டங்களும் ஓரளவுக்கு உட்பட்டதாக இருந்தாலும், தன்னுடைய சகவாசிகளோடு வியாபார சம்பந்தமானக் காரியங்களையும், தனக்கு இஷ்டமானவைகளையும் திட்டமிடுகிறான். பரிசுத்த ஆவியினால் நம்முடைய மனங்கள் புதிதாகிறதினாலே மறுரூபமாவதால், ஐக்கியத்திற்காக நாம் வாஞ்சிப்பது அழிந்து போவதில்லை, ஆனால் நாம் ஐக்கியத்திற்கென அற்புதமான இடத்தையும், ஆராய்ச்சிப் பண்ணவும், விவாதிக்கவும், அதை நாடி விரும்பவும், மாத்திரமல்ல பாவத்தின் சரித்திரத்தையும், புதுச்சிருஷ்டியானது பிரசவ வேதனைப்படுவதையும், கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், மீட்புக்கெனத் தேவனுடைய திட்டத்தையும், நம்முடைய மீட்பு சமீபமாயிருக்கிறது என்பது போன்றவைகளுக்கு

அடையாளமாக இருக்கின்றவைகளையும், நம்முடைய உன்னத அழைப்பையும், ஆண்டவரோடு உடன்சுதந்தரராக இருப்பதையும் காண்பதற்கான வாய்க்கால் களாக மாற்றப்படுகிறோம். கற்றுக்கொள்வதற்கும், ஐக்கியத்திற்கும், தோழமைக்கும் ஏற்றபடி சிந்திப்பதற்கு எவ்வளவு அதிகமான இடமளிக்கிறது பாருங்கள்!

இந்த விஷயங்களைக் குறித்து மற்றவர்களோடு கலந்து ஆலோசிக்கும் சிலாக்கியத்தை விரும்பாத ஒருவரை சில விஷயங்களில் ஆவிக்குரிய விதத்தில் நோயுற்றவராக இருக்கிறார் என்று சொல்வதில் ஆச்சரியமில்லை! அவர் தன்னுடைய வியாதியைத் தன்னால் கண்டுகொள்ள முடிகிறதோ இல்லையோ அவர் அப்படியாகத்தான் எண்ணப்படுகிறார். ஒருவேளை அவர் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கலாம், மேலும் ஒருவிதமான ஆவிக்குரிய பெருமையினால் பீடிக்கப்பட்டிருக்கலாம். இதன் விளைவாக அவர் தனக்குள்ளாகவே சொல்லிக்கொள்வது என்னவெனில், நான் அவரைப் பின்பற்றுகிற மற்றவர்களோடு சேர்ந்து படிக்கும்படியாகக் கிறிஸ்துவின் பொதுவான பள்ளிக்குச் செல்ல அவசியமில்லை, நான் விட்டிலிருந்தபடியே தனிப்பட்ட விதத்தில் ஆண்டவரிடத்தி லிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளுவேன், அவர் எனக்குத் தனியாக அதிக ஆழமான, இன்னும் அதிக ஆவிக்குரியப் பாடங்களை எனக்குக் கற்றுக்கொடுப்பார் என்பார். ஒரு சிலர் இப்படியான ஆவிக்குரிய தற்பெருமையினால் பீடிக்கப்பட்டிருப்பது போலத் தோன்றுகிறது. அவர்கள் ஆண்டவருடைய மற்றச் சகோதரரைக்காட்டிலும் மேலானவர்கள் என்று நினைப்பதுடன் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையின் பிரகாரம் அல்லாமல், தன்னுடைய வழக்கமான முறையிலிருந்தும், அவர்கள் தங்களைக் குறித்துச் சிந்திப்பதற்கு மேலாக அதிக உயர்வாக சுயவிருப்பத்தின்படி நினைப்பதினால் அவர்களுக்கு ஒரு விநோதமான முறையில் ஊழியஞ்செய்வதற்காக தன்னுடைய வழக்கமான முறையிலிருந்தும், வார்த்தையிலிருந்தும் ஆண்டவர் விலகுவார் என்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட சகோதரர், இப்படிப்பட்ட ஓர் இருதய சிந்தையிலும், நடத்தையிலும் இருக்கும்வரை அவர்களுக்கு ஆண்டவருடைய ஆசீர்வாதத்திற்கான ஒரு தனிப்பட்ட வாக்குத்தத்தமும் கிடையாது என்பதை நினைவுக்கூர வேண்டும். இதற்கு எதிர்மாறாக "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்." "நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தையின்படி, அவருடைய கற்பனைகளுக்குச் செவிக்கொடுத்துக் கீழ்ப்படிகிறவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார். சரியான இருதய நோக்கம் உள்ளவர்களுக்கு, நாம் அவருடைய நாமத்தில் கூடிவரும்படி நியமித்திருக் கிறார் என்பதே போதுமானது; மேலும் இரண்டு அல்லது மூன்று பேராக இருந்தாலும், அவருக்குக் கீழ்ப்படிகின்ற ஒரு சிலருக்கே அவர் விசேஷமான

ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்பதும், சபையானது அவருடைய சரீரத்திற்கு அடையாளமாக உள்ளது என்றும், அது "சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்படுகிறது" என்றும், அது தன்னைப் பக்திவிருத்தியடையப்பண்ணி, ஆவியின் கிருபைகளிலும், கனிகளிலும் அங்கங்களாயிருக்கும்படி ஒருவரையொருவர் எழுப்புதல் பண்ண வேண்டும் என்பதை அறிவதே போதுமானது. சில வேளைகளில் பிரச்சனை என்பது ஆவிக்குரிய தற்பெருமையல்ல, ஆனால் ஓரளவுக்கு, தேவனுடைய வார்த்தையை உதாசீனம் பண்ணுவதினாலும், மனுஷீக எண்ணங்களின்மேல் சார்ந்து நிற்பதினாலேயாகும். "எல்லோரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்" என்ற வசனத்தை எடுத்துக்கொண்டு, அது ஒருவரிடத்திலிருந்து ஒருவரைப் பிரித்துத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிற போதனை என்கிறார்கள். ஆனால், அப்போஸ்தலர்களுடைய பழக்கங்களும், அவருடைய உபதேசங்களும், ஆண்டவரின் ஜனங்களின் அனுபவங்களும், இப்படியாக நினைப்பதற்கு எதிர்மாறாக உள்ளது.

இருந்தாலும், இன்னொரு பக்கம், நாம் எண்ணிக்கைக்கும், ஆடம்பரத்திற்கும், புகழ்ச்சிக்கும் யாசிக்கக்கூடாது, ஆனால் ஆண்டவரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் "உங்களில் இரண்டு அல்லது மூன்று பேருக்கு" என்பதாகும், மேலும் அப்போஸ்தலர் மூலமாக வருகின்ற புத்திமதி "சபைக் கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்" என்பதாகும். ஒரு பிரிவினையின் ஆவியை ஆண்டவரும் அப்போஸ்தலரும் இங்கே கற்றுக் கொடுக்கவில்லை, சபைக் கூடிவரும்போது அது உலகப்பிரகாரமானக் கூடுதலாக, ஜனங்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, அப்படியாகக் காணப்படக்கூடாது, ஆனால் அது கிறிஸ்தவ கூடிவருதலாக, ஆண்டவருடைய கிருபையை அறிந்து கொண்டவர்கள் கூடிவருகிற இடமாக இருக்க வேண்டும் என்கிறார். உலகப்பிரகாரமானவர்கள் இந்தக் கூட்டத்திற்கு வரவேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. "நீங்கள் உலகத்தாரல்லாதது" போன்று அவர்களும் உங்களுடையவர்களல்ல. அவர்கள் சங்கீதத்தினாலோ அல்லது வேறு அம்சங்களினாலோ கவரப்பட்டால், ஆண்டவரின் கட்டளையின் நோக்கம் நிறைவேறாது போகும், ஏனெனில் எங்கே உலகப்பிரகாரமானக் காரியங்கள் அதிகமாக ஈர்க்க வேண்டும் என்ற வாஞ்சைக் காணப்படுகிறதோ, அப்போது சபைக் கூடிவருதலின் முக்கிய நோக்கம் மறைந்துபோகும். அந்த முக்கியமான நோக்கம்: "உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொள்ளுவதும்," "ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்வதும்," "மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்பதும்" ஆகும். (யூதா 20; 1 தெசலோனிக்கேயர் 5:11; எபிரெயர் 10:24)

தீய நோக்கம் உள்ளவர்கள் அவர்களுக்கு விருப்பமிருந்தால் ஒன்றாகக் கூடட்டும்; நல் நடத்தையுள்ளவர்கள் தங்களைப் போன்றவர்களோடு ஒன்றாகக்

கூடட்டும்; ஆவியினால் மறுபிறப்பைப் பெற்றவர்கள் சபையாகக் கூடித் தங்களுடைய பக்திவிருத்திக்கு ஏதுவாக ஆண்டவர் தம்முடைய வசனத்தில் காட்டியிருக்கிறபடிச் செய்யட்டும். ஆனால் அவர்கள் இதை உதாசீனப்படுத்தினால், அனுகூலமற்ற விளைவுகளின் குற்றச்சாட்டு சபையின் தலையாயிருக்கிறவர் மேலேயோ, அல்லது சரியான வழியை வற்புறுத்தித் தங்களுடைய சொந்த ஜீவியத்தில் அதை மாதிரியாக நடந்து காட்டிய அப்போஸ்தலர் மேலேயோ சுமத்தக்கூடாது.

வெளியாட்கள் சபைக்கூட்டங்களுக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படக்கூடாது என்பதை இது குறிக்கவில்லை. அவர்கள் உள்ளே வந்து "உங்களுடைய ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பார்கள் என்றால்," உங்களுடைய பரிசுத்த சம்பாஷணையினால் ஆசீர்வதிக்கப்பட்ட நற்கிரியைகளைச் செய்யும் படியாக, அன்பாயிருக்கும்படியான புத்திமதிகளுக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட திவ்விய வார்த்தை போன்றவைகளுக்கு விருப்பம் காட்டி உள்ளே வரவிரும்பினால் அவர்கள் தடை பண்ணப்படக்கூடாது. 1 கொரிந்தியர் 14:24-இல் அப்போஸ்தலர் இதை மிகத் தெளிவாக அறிவிக்கிறார். நாம் குறிப்பிட விரும்புகிற கருத்து என்னவெனில் "சபை கூடிவருதல்" என்பது அவிசுவாசிகள் கூடிவருவது என்பதல்ல, அந்த இடத்தில் பாவிகளுடைய மனங்களை உடைக்கும்படியாக முயற்சிகள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்படுகின்றன. பாவி வருவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும், ஆனால் ஆண்டவருக்கென அர்ப்பணித்தவர்கள் மத்தியில் காணப்படும் கிரமத்தையும், அன்பையும் காணும்படி தனித்து விடப்படல் வேண்டும். இவ்விதமாக அவன் முழுமையாகப் புரிந்துகொள்ளாவிட்டாலும், சபையில் காணப்படுகிற பரிசுத்தத்தின் ஆவியையும், தூய்மையையும் கண்டு அவனுடைய பாவத்தினிமித்தம் கண்டித்து உணர்த்தப்படுவான். மேலும் அவன் ஆண்டவருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படுகின்ற கிரமத்தையும், சத்தியத்திலுள்ள அழகையும் நோக்குவதின் மூலம் உபதேசத்தைக் குறித்த தன்னுடைய பிழைகளை உணர்ந்துகொள்ள வாய்ப்புண்டு. (1 கொரிந்தியர் 14:23-26-ஐ ஒப்பிட்டுப்பார்க்கவும்)

இது ஆண்டவருடைய ஜனங்களின் கூட்டங்களின் பொதுவான நோக்கத்தைப் பார்க்கும்படிச் செய்கிறது.

## கூட்டங்களின் நோக்கம்

முதலாவதாக, மற்றப் பகுதிகளில் கூறியதுபோன்று, இதைக் குறித்துச் சொல்வது என்னவென்றால், ஆண்டவருடைய ஜனங்களுக்கு வார்ப்பு இரும்பு போன்று உறுதியான சட்டதிட்டங்கள் கிடையாது. அவர்கள் தங்களுடைய நாட்டின், நேரத்தின் மாறுபடுகின்ற நிலைமைக்கு ஏற்ப தங்களை அநுசரித்துக்கொள்ளும்படி சுயாதீனத்துடன் இருக்கிறார்கள்; தெளிந்த புத்தியின் ஆவியை அப்பியாசப்படுத்த

சுயாதீனம் உடையவர்களாய் இருக்கிறார்கள்; பரத்திலிருந்து வருகின்ற ஞானத்தை நாடவும், அன்பின் பிரமாணத்தின் கீழாக ஆண்டவரின் குணாதிசயத்தின் சாயலை எந்தளவிற்கு அவர்கள் பெற்றிருக்கிறார்களோ அதை வெளிப்படுத்தவும் சுயாதீனம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். அந்த அன்பின் பிரமாணம், நிச்சயமாகவே ஆரம்பக்காலச்சபையின் பழக்கங்களிலிருந்து, புதியவைகளை அல்லது மாற்றங்களைக் கொண்டுவருவது சம்மந்தமாகப் பணிவை வற்புறுத்தும். அது அடிப்படையான மாற்றங்கள் தேவை என்று அறிந்துகொள்ளும் சமயத்தில் தவிர மற்றச் சமயங்களில் அப்படிச் செய்ய தயக்கம் காட்டும். அப்படியே செய்யும்போதும் ஆதி கால சபையின் பழக்கம், புத்திமதி, கண்டிப்பு ஆகியவற்றின் கருத்துக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

ஆதிகாலச்சபையில், அப்போஸ்தலர்கள் விசேஷமான போதகர்களாக இருந்தார்கள் என்ற உதாரணத்தைப் பார்க்கிறோம். மூப்பர்கள் மேய்ப்பர் வேலையை, சுவிசேஷவேலையை, தீர்க்கத்தரிசனம் சொல்லுவதை அல்லது பொதுவான இடங்களில் பேசுவது போன்றவைகளைச் செய்தார்கள் என்பது நமக்கு உதாரணமாக இருக்கிறது. குறிப்பாக 1 கொரிந்தியர் 14-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஓர் உதாரணத்திலிருந்து நாம் காண்பது என்னவெனில் சபையிலுள்ள ஒவ்வொரு அங்கமும் ஆண்டவரை மகிமைப்படுத்தவும், சகோதரருக்கு ஊழியஞ்செய்யவும், தன்னை இதில் அப்பியாசப்படுத்திக் கொள்வதுடன், ஆண்டவரிலும், சத்தியத்திலும் பலமுள்ளவனாக வளரவும், மற்றவர்களுக்கு உதவிச் செய்யவும், அதினிமித்தம் மற்றவர்களால் உதவிச் செய்யப்படவும், ஒவ்வொருவரும் தனக்குள்ள தாலந்தையும், வரத்தையும் தூண்டிவிடும்படி அப்போஸ்தலர்களால் உற்சாகப்படுத்தப்பட்டனர். அப்போஸ்தலருடைய நாளில் நடந்த ஒரு சாதாரண சபைக் கூட்டத்தைப் பற்றிய விஷயத்தை இந்த நாளில் முழுமையாக விவரமாகப் பார்க்க முடியாது. ஏனெனில் வெளியில் உள்ளவர்களை நம்பச்செய்யும்படி ஆதி சபையினர் மீது தற்காலிகமாகக் கொடுக்கப்பட்ட, விநோதமான "ஆவியின் வரங்கள்" நிமித்தமும், மேலும் இது தனிப்பட்டவரை உற்சாகப்படுத்தும்படி கொடுக்கப்பட்டது; இந்த வரங்கள் கொடுக்கப்பட்டிருக்காவிட்டால், எந்த நபரையும் பக்திவிருத்தியடையப்பண்ணவோ, எவ்விதத்திலாவது பிரயோஜனப்படுத்தியிருக்கவோ முடியாது. இருந்தப்போதிலும், அப்போஸ்தலர்களால் ஆதரிக்கப்பட்ட இந்த ஆரம்பக்காலத்திய பழக்கத்திலிருந்து சில அரிய, பிரயோஜனமுள்ள பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம், இவைகளை ஆண்டவருடைய ஜனங்களின் சிறு கூட்டங்கள் எல்லா இடத்திலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி நடைமுறைப்படுத்திக் கொள்ளலாம்.

இதில் முக்கியமானப் பாடம் என்னவென்றால், "உங்களை மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உறுதிப்படுத்திக்கொண்டு" ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பது என்பதாகும். ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பல மூப்பர்கள்

வழக்கமாக பிரசங்கிப்பது பழக்கமாக இருந்தது கிடையாது, இல்லாவிட்டாலும் எல்லாப் பக்திவிருத்திக்கும் ஏதுவானவைகளைப் போதிப்பது அல்லது எழுப்புதல் செய்யும்படியாக முயற்சிப்பது போன்றவைகள் பழக்கத்திலிருந்தது கிடையாது. ஒவ்வொரு அங்கமும் தன்னுடைய வேலையைச் செய்வதுதான் பழக்கமாயிருந்தது, மூப்பர்களுடைய வேலை முக்கியமானதாக இருந்தது, அது அவர்களுடைய திறமைக்கு, வரங்களுக்கு ஏற்றவாறு இருந்தது. இது மிகவும் உதவிச் செய்யக்கூடிய முறையென்றும், இதன்படி செவிச்சாய்த்தவர்களுக்கு மாத்திரமல்ல அதில் பங்கேற்றவர்களுக்கும் ஓர் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது என்பதைக் காணலாம். மிகவும் மோசமாக பேசக் கூடியவர், அல்லது கல்வியறிவே இல்லாதவர்கூட, அவருடைய இருதயம் ஆண்டவர்மேல் அதிக அன்புள்ளதாயும், அவர்மேல் பக்தியுள்ளதாயும் இருந்தால், செவிக்கொடுக்கிற அனைவருக்கும் விலையேறப்பெற்றதாயிருக்கிற சிந்தனைகளைக் கொடுக்க முடியும் என்பதை யார் அறியாமல் இருக்க முடியும்! அப்போஸ்தலர் இங்கு விவரமாகக் கூறுகின்ற கூட்டங்களின் தரமானது சபையினால் நடத்தப்பட்ட பெருவாரியான கூட்டங்களுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இந்தக் குறிப்புக் காட்டுகிறபடி அது எல்லோரும் கலந்துகொண்ட ஒரு கூட்டமாக இருந்தது; அதை இக்காலத்திற்கு ஏற்றவாறு சொல்ல வேண்டுமென்றால், ஒருவர் புத்திமதிக் கூறலாம், இன்னொருவர் வியாக்கியானம் கூறலாம், இன்னொருவர் ஒரு கீர்த்தனையைப் பாடச் சொல்லலாம், இன்னொருவர் தன்னுடைய மன நிலைக்கும், அனுபவங்களுக்கும் சரியானது என்று தோன்றுகின்ற ஒரு கவிதையை வாசிக்கலாம், இன்னொருவர் கலந்து உரையாடுகின்ற விஷயத்திற்குப் பொருத்தமான சில வேத பகுதிகளைக் குறிப்பிடலாம்; இப்படியாக ஆண்டவர் ஒவ்வொருவரையும், சபையின் எல்லா அங்கங்களையும் ஒவ்வொருவரும் பக்திவிருத்தி அடையவும், ஒவ்வொருவரும் எழுப்பப்படவும், ஒருவருக்கொருவருடைய நலனுக்கேதுவாகப் பாடுபடவும் உபயோகிக்கலாம்.

ஆதி சபையில் ஒருபோதும் பிரசங்கம் இருந்ததில்லை என்பது எங்கள் கருத்தல்ல. அதற்கு மாறாக அப்போஸ்தலர்கள் சென்ற இடமெல்லாம், அவர்கள் தேவனுடைய வார்த்தையை வியாக்கியானம் பண்ணக்கூடிய விசேஷ திறமையுள்ளவர்கள் என்றே கருதப்பட்டார்கள். அவர்கள் ஒருவேளை சிறிது நேரத்திற்கு மட்டுமே இருந்தாலும், அவர்கள் இருந்த வேளையில் அவர்களே பொதுவான இடங்களில் பேசினார்கள், அதேநேரத்தில் எல்லோரும் கலந்து கொள்ளக்கூடிய பொதுவான, சமுதாயத்திற்குரிய கூட்டங்களும் நடைபெற்றன என்று நம்புகிறோம். அப்போஸ்தல உபதேசங்களைக் குறித்த வழக்கத்தின்படி, அப்போஸ்தலர் அல்லாதவர்களும் இந்த வழக்கத்தைப் பின்பற்றினார்கள். உதாரணமாக பர்னபா, தீமோத்தேயு, அப்பொல்லோ, தீத்து போன்றவர்களைக் கூறலாம். இமெனேயும், பிலேத்தும், மற்றவர்களும் இதே சிலாக்கியங்களைப்

பெற்றார்கள், ஆனால் அவர்கள் அவைகளைத் தவறான முறையில் பயன்படுத்தியதோடு, தீமைக்கேதுவான நாட்டம் உடையவர்களாய் இருந்தார்கள்.

எங்கே ஆண்டவர் உறுதியான பிரமாணத்தை ஏற்படுத்தவில்லையோ, அந்த இடத்தில் நாமோ அல்லது மற்றவர்களோ ஒரு பிரமாணத்தை ஏற்படுத்துவது முறையாகாது. இருந்தாலும், நாங்கள் சில யோசனைகளைக் கூறுகிறோம், சபையில் சில ஆவிக்குரிய தேவைகள் உண்டு, அவைகள் கவனிக்கப்பட வேண்டியது அவசியம்.

(1) தீர்க்கத்தரிசனம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும், நல் நடத்தைக்குரிய விஷயங்களிலும், இன்னும் கிறிஸ்தவ கிருபைகளை வளர்க்க வேண்டிய விஷயங்களிலும் போதனை அவசியம்.

(2) பல பாஷையை உபயோகிக்கும் விதத்தில் ஏறக்குறைய வித்தியாசமான முறைகள் இருப்பதால் ஓரளவுக்கு ஒளிவு மறைவற்ற மனது இருப்பதோடு, ஆவிக்குரிய விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடிய திறமை, யாரெல்லாம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறார்கள், யாரெல்லாம் அறிவிலும், கிருபையிலும் முதிர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதை அறியக்கூடிய திறமை எல்லாருக்கும் ஒரே மாதிரியாக இல்லாதபடியால், அவனவன் கற்றுக் கொண்டவைகளைக் குறித்து அவனவனுடைய யோசனையை வெளிப்படுத்தும்படி உற்சாகப்படுத்தப்படல் வேண்டும், அதற்கான தருணம் கொடுப்பது நல்லது.

(3) சபையினால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட சத்தியத்திலிருந்து வித்தியாசமான கருத்தை உடையவருக்கு அதைச் சொல்லக்கூடிய நிறைய தருணங்கள் கொடுக்கப்படும்படி, வழக்கமாக, நடக்கின்ற கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட வேண்டும்.

(4) ஆண்டவருடைய பிள்ளைகளின் கூட்டங்களில் பக்திக்குரிய ஆராதனை மாத்திரம் இருந்தால் போதாது, ஆனால் அனுபவப்பூர்வமாக நோக்கும்போது சகோதரர்கள், தான் ஆண்டவர்மேல் கொண்டுள்ள பக்தியை, சாட்சியின் மூலம், அல்லது ஜெபத்தின் மூலம் தன்னுடைய வாயினால் அறிக்கை செய்யும்போது, அதற்குச் செவிகொடுக்கிற ஒவ்வொருவருக்கும் பிரயோஜனமாக உள்ளது.

## உபதேசம் இன்னும் அவசியம்

முதலாவது ஆலோசனையைப் பற்றிய விளக்கம்: பொதுவாக உபதேசங்களைக் குறித்து அலட்சியமாகப் பேசுகிற ஒரு நேரத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அதுவும்கூடக் கிரியைகளுக்கும், நல் நடத்தைகளுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது உபதேசமும், விசுவாசமும் முக்கியத்துவம் உள்ளது அல்ல என்று நிறைய பேர் சொல்லுகிற காலம் இது. நாம் இதை ஒத்துக்கொள்ள முடியாது, ஏனெனில் இது திவ்விய வார்த்தைக்கு முற்றிலும்

வேறுபட்டிருக்கிறதைக் காண்கிறோம். தேவனுடைய வசனத்தில் விசுவாசம் முதல் இடத்திலும், கிரியைகள் இரண்டாவது இடத்திலும் வைக்கப்பட்டுள்ளன. அதைத்தான் ஆண்டவரும் ஏற்றுக்கொள்ளுகிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம், நம்முடைய விசுவாசத்தின்படி அவர் பலனளிப்பார், இருந்தாலும் ஒரு நல்ல விசுவாசம் நம்முடைய பெலவீனமான மண்பாண்டம் அனுமதிக்கும் அளவுக்கு, நற்கிரியைகளைக் கொண்டு வருமென அவர் எதிர்ப்பார்ப்பது முறையானதே. வேதாகமத்தில் எல்லா இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறபடி விசுவாசத்தின் முறை இதுதான். "விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்." "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." (எபிரெயர் 11:6; 1 யோவான் 5:4) தேவன்மேலும், அவருடைய வாக்குத்தத்தங்கள்மேலும் ஒருவன் விசுவாசம் வைக்காவிட்டால் அவன் சரியான விதத்தில் ஜெயங்கொள்ளு கிறவனாக இருக்க முடியாது. தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மேல் விசுவாசம் வைப்பதற்கு அவன் அவைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். விசுவாசத்தில் பலமுள்ளவனாக வளரும் திறமையும், சந்தர்ப்பமும், யுகத்திற்கெனத் தேவன் வைத்திருக்கின்ற திவ்விய திட்டத்தையும், அதோடு சம்பந்தப்பட்ட மகா மேன்மையும், அருமையான வாக்குத்தத்தங்களையும் அவன் புரிந்து கொள்ளுமளவிற்கும் ஏற்றவாறு இருக்கும். ஆகவே உபதேசம், போதனை மிக முக்கியமானதாக இருக்கிறது. அது தேவனுடைய ஜனங்கள் பெற்றிருக்கவும், அதை அனுபவிக்கவும் தேவனுக்கடுத்தக் காரியங்களில் உலகத்தின் அறிவுக்கு அப்பாலும் அறிவதற்கு மாத்திரமல்ல, ஆனால் விசேஷமாக இந்த அறிவானது எல்லா நம்பிக்கைகளுக்கும், நோக்கங்களுக்கும், நடத்தையின் மீதும் அது காட்டக்கூடிய செல்வாக்குக்காக அது தேவையாயிருக்கிறது. "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1 யோவான் 3:3) என்ற வேதவாக்கியம் மேற்கூறியவைகளோடு முற்றுமாக ஒத்துப்போகிறது. தன்னைச் சுத்திகரிக்க முயற்சிக்கிறவன் அவனுடைய நடத்தையைச் சுத்திகரிக்க, ஜெயங்கொள்ள, வேதம் ஆரம்பிக்கிற மாதிரி இருதயத்தோடு ஆரம்பித்து முன்னேறிச் செல்ல வேண்டும், சுத்திகரிப்புக்கு ஊக்குவிக்கும் வாக்குத்தத்தங்களை உபயோகித்து முன்னேற வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால் கிறிஸ்துவின் உபதேசங்களை அறிந்துகொள்ளுவதாகும்.

இருந்தாலும் கிறிஸ்துவின் உபதேசங்களையும், மனுஷீக உபதேசங் களையும் மிகத் தெளிவாக அறிந்து வேறுபடுத்துவது அவசியம். கிறிஸ்துவின் உபதேசங்கள் என்பது, அவரும், அவரால் ஊக்குவிக்கப்பட்ட அப்போஸ்தலர்களும் புதிய ஏற்பாட்டில் நமக்கு முன்பாக வைத்திருப்பவைகளாகும். மனுஷீக உபதேசங்கள் மனிதனுடைய சமயக் கோட்பாடுகளில் காணப்படுகின்றன, அவைகளில் பெரும்பாலானவைகள், ஆண்டவருடைய உபதேசங்களுக்கு மாறாகவும்,

அபாயமான வகையில் வித்தியாசமாக இருப்பதோடு, ஒன்றுக்கொன்று மாறுபட்டதாயும் உள்ளன. ஆகவே நாம் உபதேசங்களை ஒருமுறை பெற்றுக்கொள்வது போதாது, ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறபடி, தேவகிருபை என்னும் பொக்கிஷத்தை மிகவும் ஒழுகல் உள்ள சாதாரண மண்பாண்டங்களில் பெறுகின்றோம், ஆகவே நாம் பெறுவதை நிறுத்திவிட்டால், நமக்கு இல்லாமல்போகும். இதனால் "வார்த்தைக்கு வார்த்தை கட்டளைக்குக் கட்டளை" என்று நாம் உடையவர்களாய் இருக்க வேண்டும்; மேலும் நாம் தொடர்ந்து, யுகத்திற்கான திவ்விய திட்டத்தை நாம் தேவ வழிமுறைகள் நமக்கு அளிக்கின்ற எவ்விதமான உதவிகள் அல்லது ஒத்தாசைகளைப் பயன்படுத்தி, நம்மால் இயன்றவரை அப்போஸ்தலருடைய கட்டளைகளைக் "கேட்கிறதை மறக்கிறவனா யிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து," கீழ்ப்படிய முயற்சிப்பதோடு அந்த வார்த்தையின்படி செய்கிறவர்களாய் இருக்க வேண்டும். (யாக்கோபு 1:22-25)

இரண்டாவது ஆலோசனை: இது முதலாவது ஆலோசனையைப் போன்று உடனடியாக முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோரும் அல்ல ஆனால் அநேகர் நினைப்பது என்னவென்றால், சத்தியத்தை மிகவும் தெளிவாக, மிகவும் சரளமாக, மிகவும் சரியான விதத்தில் சொல்லத் தகுதியுள்ளவர்கள் மாத்திரம் அதைச் சொல்ல வேண்டும், மற்றவர்கள் அமைதி காத்து, செவி சாய்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாகக் கூறுவது அநேக விதங்களில் சரியாயிருக்கிறது. திவ்விய திட்டத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாதவர்கள், மேலும் போதிக்கத் தகுதியில்லாதவர்கள் யாராயினும் போதிக்கும்படியாக நியமிக்கப்படக் கூடாது, அல்லது அவர்களுடைய வார்த்தைகளைப் போதனை என்று எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்டவர்களை, மூப்பர்கள் விஷயத்தில் உள்ளதுபோன்று போதிக்கும்படி நியமிப்பதற்கும், ஒரு கூட்டம் ஒழுங்குப்படுத்தி அதில் புதுச்சிருஷ்டியின் எல்லா அங்கங்களும் சுருக்கமாக அவர்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்து வதற்கும், கேள்விகள் கேட்பதற்கும் இடையில் ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது. ஆனால் அவர்களுடைய கேள்விகளோ, சந்தேகங்களோ, அல்லது அவர்களால் சொல்லப்பட்டவைகளோ, சபையினால் கூட்டத்தின் கருத்து என்று எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என்ற மனப்பான்மையுடன் செய்யப்பட வேண்டும். கேள்விகள் என்ற முறையில், இந்தக் கூட்டங்களில் ஒருவேளை தவறான கருத்துக்கள் சொல்லப்படலாம், இந்தக் கருத்துக்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு, அல்லது அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல, ஆனால் அவைகள் கேலி செய்யப்பட வேண்டுமென்ற நோக்குடன் சொல்லப்படலாம். ஆனால் தவறான கருத்தை ஆதரிக்கும் எந்த முயற்சியையும், மனச்சாட்சியை மீறி வராதபடி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இப்படியான முறை, சத்தியத்தில் முன்னேற்றம்

அடைந்துள்ள ஒருவருடைய முன்னிலையில், அவருடைய விசுவாசத்திற்கு வேதாகம ரீதியாக ஒரு காரணத்தைக் காட்டக்கூடிய திறமை உள்ளதோடு, ஆண்டவருடைய வழியை இன்னும் பூரணமாகக் காட்டக்கூடியவர் முன்னிலையில் தான் செய்யப்பட வேண்டும். இப்படியான ஒரு வழியினால் என்ன பயன் வரக்கூடும் என்று கேட்கப்படுகிறதா? நாம் பதில் கூறுகிறோம்: அநேக தடவைகளில் பயன்வந்ததைக் கண்டிருக்கிறோம்; அநேக தடவைகளில் கடினமாயும், சில வேளைகளில் விஷயங்களை எளிதான முறையிலும், நேரிடையாகவும் சொல்லுவது முடியாததாய் இருக்கிறது; மேலும் எல்லா மனங்களும், எவ்வளவுதான் உண்மை உள்ளவைகளாக இருந்தாலும், ஒரு விஷயத்தை அதே விளக்கத்திலிருந்து ஒரே மாதிரியாகத் தெளிவுடன் கிரகித்துக்கொள்ளுவது முடியாததாயிருக்கிறது. ஆகவே கேள்விகளின் முக்கியத்துவமும், ஒரே உண்மையை பல்வேறு விதங்களில் சொல்லுவதும், நம்முடைய ஆண்டவருடைய உவமைகளில் விளக்கமாகக் கூறப்படும்போது வித்தியாசமான நிலைமைகளின் வழியாக விஷயத்தை எடுத்துக் கூறுவதும், முழு விஷயத்தையும் குறித்த முழுமையான, எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்தைக் காட்டுகிறது. மேலும் ஓர் உண்மையை முட்டாள்தனமாக, ஏதோ ஒரு விதத்தில் தவறாகக் கூறும்போது, சிலவேளைகளில், அதிகத் தெளிவான, அதிகம் உணர்த்தக்கூடிய வகையில் சொல்லப்பட்ட முறை செய்யத் தவறியதை, அது மனதிற்குள்புக வழிவகுத்துவிடுகிறது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அதாவது பேசுகிறவனின் திறமையின்மையும், கேட்கிறவனின் குறைவான பகுத்தறிவும் சில விதங்களில் ஒத்துப்போகும்போது, அவ்வாறு நடக்கிறது. எப்படிப்பட்ட முறையிலாவது சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு, வாஞ்சையுள்ள இருதயங்களில் நிலைகொள்ளுமானால் நாம் மகிழ்ந்து களிகூரலாம், அப்போஸ்தலர் கூறுகிறபடி: "சிலர் கிறிஸ்துவை வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது அறிவிக்கிறார்கள்." ஆனாலும் சொல்லப்பட்டவைகளுக்குப் பின்னால் தவறான நோக்கம் இருக்கும்போது நாம் மிகவும் துக்கப்பட வேண்டியதிருந்தாலும், மற்ற விஷயத்தில் நாம் கண்டமாதிரி, சொல்லப்பட்டது சரியான முறையில் சொல்லப்படாவிட்டாலும் ஆண்டவரைப் பற்றிய சரியான அறிவுக்குள் எவராவது கொண்டுவரப்படும்போது மாத்திரமே நாம் களிகூரலாம். ஆண்டவரையும், அவருடைய சத்தியத்தையும், சகோதரரையும் நாம் நேசித்து ஊழியம் செய்ய விரும்புகிறோம், ஆகவே நாம் வாஞ்சிக்கிற பலன்களைக் கொண்டுவருகின்ற எதிலும் நாம் களிகூர வேண்டும். மேலும் இது உண்மையான விஷயம் என்று அறியும்போது அதற்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் நாம் ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். கருத்து இல்லாதவர்கள், திறமையற்றவர்கள் சபையில் போதிக்க ஏற்படுத்தப்பட வேண்டுமென்று இது குறிப்பிடவில்லை, அப்படியில்லாவிடினும் கருத்தற்ற முறையில் கூறப்பட்டவைகள்தான் பொதுவாக மிகவும் வெற்றிகரமானதாக இருக்கும் என்றும் கற்பனை செய்யக்கூடாது.

உண்மையான நிலை இதற்கு எதிர்மாறாக உள்ளது. எப்படியாகிலும், சில வேளைகளில் சில மனங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் வாய்க்காலாக இருக்கிறது என்பதைக் காண்கிறபடியால் இதை முற்றிலும் ஒதுக்கி வைத்துவிட முடியாது. ஆதிச்சபையில் இது பழக்கத்தில் இருந்தது.

நம்முடைய மூன்றாவது ஆலோசனை: நம்மிடத்தில் சத்தியமிருக்கிறது என்று திட்டவட்டமாக எவ்வளவுதான் நம்பிக்கையுடையவர்களாக இருந்தாலும், கூட்டத்தின் தலைவரால் அல்லது முழுச்சபையினரால் தவறு என்று கருதப்பட்ட எல்லாவற்றையும் விலக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட எதிர்மாறான கருத்துகளுக்கும், கேள்விகளுக்கும் கதவை அடைத்துப் பூட்டுப்போட்டுவிடுவது நிச்சயமாகவே நமது ஞானமற்ற செயலாகும். முற்றிலுமாக விலக்க வேண்டும் என்பதற்கு ஒரு வரம்பு மாத்திரம் இருக்க வேண்டும். உதாரணமாக புதுச்சிருஷ்டிகள் கூடிவருவது, மதச்சார்பற்ற, உலகப்பிரகாரமான சாஸ்திரங்களையோ, தத்துவங்களையோ ஆராய்வதற்காக அல்ல, ஆனால் திவ்விய வெளிப்பாட்டைப் படிப்பதற்காக மாத்திரமே என்று உணர்ந்துகொள்ள வேண்டும். சபையினர் திவ்விய வெளிப்பாட்டைப் படிக்கும்போது முதலாவதாக, எப்பொழுதுமே கிறிஸ்துவின் உபதேசங்களின் அடிப்படைக் கருத்துக்களுக்கும் (இதை எந்த அவயவமும், மாற்றவோ, திருத்தவோ, அல்லது கேள்வி கேட்க அனுமதிக்கவோ கூடாது) தற்போதைய உபதேசங்களின் கலந்துரையாடலுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும்; ஆழ்ந்த உபதேசத்தைக் குறித்த கலந்துரையாடல் எப்படியாயினும் அடிப்படைக் கருத்துக்களோடு ஒத்ததாகக் காணப்பட வேண்டும். கலந்துரையாடுபவர்களுக்கு எப்பொழுதுமே சொல்லுவதற்குத் தங்குத்தடையின்றி வாய்ப்புக்கள் கொடுக்கப்படல் வேண்டும், அவர்கள் சொல்வதைக் கேட்பதற்கெனக் கூட்டங்கள் இருக்க வேண்டும். ஆனாலும் அவர்கள் சொல்வதைத் திரும்பத்திரும்பக் கேட்க வேண்டும் என்றோ, எல்லாக் கூட்டங்களிலும் ஏதோ விதமான பொழுதுபோக்கு வேளையினால் குழப்பநிலையை உண்டுபண்ணவோ, கவனத்தைத் திசைத்திருப்பவோ அனுமதிக்கப்பட வேண்டுமென்றோ பொருள்படாது. அவருடைய பொழுதுபோக்கு வேலைக்கு, ஒரு தகுதியான நேரத்தில் சத்தியத்தில் நன்கு தேர்ச்சிப்பெற்ற சிலர் முன்னிலையில், செவிசாய்ப்பதற்கும், நல்ல கலந்துரையாடுவதற்கும் வேளைக் கொடுக்கலாம். அப்படிக் கலந்துரையாடல் செய்வது வேதத்திற்கு முரண்பாடானது என்று சபையினர் கூறினால், இப்படிப்பட்ட விஷயத்தை எடுத்துச் சொன்னவரும், அது வேதத்திற்கு முரணானது என்று நிச்சயப்படுத்திக் கொள்ளாவிட்டால், அவர் குறைந்த பட்சம் ஒரு வருடமாவது அந்த விஷயத்தைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதைத் தவிர்ப்பாராக; அதன் பின்னர் தவறான முறையில் இன்னொருமுறை அவர் சொல்வது கேட்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுப்பாராயின், (அது கொடுக்கப்படுகிறதோ இல்லையோ) சபையினர் அவர்

சொல்வதைக் கேட்கவோ பரிசீலிக்கவோ தகுதியுள்ளது, அல்லது தகுதியில்லாதது என்பதைக் குறித்துச் சிந்தித்து முடிவுச் செய்ய வேண்டும்.

நாம் எதை வற்புறுத்துகிறோமென்றால், இப்படியாக, எண்ணத்தை வெளிப்படுத்த சில வழிகள் இல்லாவிட்டால், இரண்டு ஆபத்துக்களைச் சந்திக்கக்கூடும். முதலாவதாக, கிறிஸ்தவ பெயர்ச்சபைகளில் இப்பொழுது காணப்படுகின்ற நிலைமையில் விழும் அபாயம், வழக்கமாக நடைபெறுகிற சபைக்கூட்டங்களில், சொல்ல விரும்புகிறவர்கள், அதைச் செய்ய முடியாதபடி, அவர்கள் கேட்கப்படாதபடி, ஒவ்வொரு வழியும் கவனமாக அடைக்கப்பட்டிருக்கிற படியால், அவர்களால் எதுவும் சொல்ல முடியாது. மற்றொரு அபாயம் என்னவெனில், தனிப்பட்ட ஒருவர் தன்னுடைய கருத்து உண்மையானது என்ற கொள்கையுடன் இருக்கும் போது, அது எவ்வளவுதான் நியாயமற்றதாயும், தவறானதாக இருந்தாலும்கூட, அது ஏற்றமுறையில் கேட்கப்படாத பட்சத்தில், திருப்தியடையவே மாட்டார், ஆனால் அந்த விஷயத்தைத் தொடர்ந்து நிர்பந்தித்துக்கொண்டிருப்பார்; ஆனால் அதே சமயத்தில் ஏற்றமுறையில் அவரிடம் கேட்கப்பட்டிருந்தால், அவருடைய வாதத்திலுள்ள தவறைக்குறித்து அவர் உணர்வடையாவிட்டாலும், ஏற்கெனவே அவருடைய யோசனையைக் கேட்டு நிராகரித்தவர்கள்மேல் அந்த விஷயத்தை மறுபடியும் கொண்டுவருவது பலனளிக்காது என்று அவருக்கு உணர்வு வந்திருக்கும்.

எங்களுடைய நான்காவது ஆலோசனை: அறிவு பெருக்கம், பயபக்தியி லிருந்து குறைவுப்பட அதிக வாய்ப்பளிக்கக்கூடியதாக இருக்கிறது. இது விசித்திரமாகத் தோன்றினாலும் இது இப்படித்தான் இருக்க வேண்டும். நம்முடைய கிரகிக்கும் தன்மை மிகவும் குறைவாக இருக்கிறதைக் காண்கிறோம்; மேலும் மத சம்பந்தமான விஷயங்களுக்கு நமக்கு நேரம் மகிவும் குறைவாகவே இருக்கிறது; நம்முடைய கவனம் வேகத்துடன் ஒரு பக்கமாகத் திருப்பப்படுமென்றால், மற்றப் பக்கங்களில் கவனம் மிகவும் குறைந்துவிடும். ஒரு கிறிஸ்தவன் என்றால் எல்லாம் தலையாக இருந்து, இருதயம் இல்லாமலும், அல்லது எல்லாம் இருதயமாக இருந்து, தலை இல்லாமல் இருக்கக்கூடாது. "தெளிந்த புத்தியின் ஆவி," ஒரு பரிபூரண குணாதிசயத்தை உருவாக்குகிற எல்லாக் கனிகளையும், கிருபைகளையும் வளர்க்கும்படி வழி நடத்துகிறது. இவைகள் நம்முடைய நாட்களிலுள்ள மனப்பான்மை, எல்லா விஷயங்களிலும் எதிர்த் திசையில் உள்ளது - சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதாகும். ஒரு வேலையாள் இந்தப் பகுதியையும், இன்னொரு வேலையாள் மற்றப் பகுதியையும் செய்கிறார், ஆகவே முந்தைய நாட்களில் இருந்ததுபோல் இப்பொழுது கிடையாது; வெகு சில வேலையாட்களே ஒரு தொழிலை முழுமையாகப் புரிந்துகொள்ளுகிறார்கள். புதுச்சிருஷ்டி இந்த மனப்பாங்கை எதிர்ப்பதுடன், "அவனுடைய பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்" என்பதற்கேற்ப செயல்பட வேண்டும், இல்லாவிட்டால்

கிருபையின் ஒரு பகுதியை வளர்க்கும்போது, தேவன் கொடுத்த இன்னொரு மனத்திறனை அல்லது சிலாக்கியத்தைச் சரியான முறையில் பயன்படுத்தாததால் அவன் ஆபத்திற்குள் விழுகிறான்.

எல்லா மனிதரிடத்திலும் பயபக்தியின் தரம், அதிகமாக அல்லது குறைவான அபிவிருத்தி நிலையில் காணப்படுகிறது. மனதின் இத்தகைய தராதரங்கள் பயபக்திக்குரியது, ஆவிக்குரியது என்று அழைக்கப்படுகின்றன; இவைகள் மனச்சாட்சி, நம்பிக்கை, குணம் போன்ற தன்மையைத் தங்களுக்கு உதவிக்கு வரவழைத்துக் கொள்ளுகின்றன. இவைகள் உதாசீனப்படுத்தப்பட்டால், சத்தியத்தின்மேலுள்ள வாஞ்சையும் அன்பும் சீர்க்கெட்டுவிடும். இதன் விளைவாக ஆண்டவருடைய அன்பை அதிகமாக உணர்ந்து, அவரை அதிகமாகப் பிரியப்படுத்தி, கனப்படுத்தி, அவருக்கு உழியஞ்செய்வதற்கு அவருக்கு நேராக நம்முடைய இருதயங்கள் வழிநடத்தப்படுவதற்குப் பதிலாக, கீழ் மட்டத்திலுள்ள தன்மைகள், அதிகமதிகமாகச் சச்சரவில் ஈடுபட்டு மேல் மட்டத்திலுள்ள தன்மைகளின் இடத்திற்கு வருகிறது; நாம் பார்க்கக் கூடியது மனத் தத்துவங்களுக்கு நேராக அவைகள் இருப்பதாகும். இதற்குள் சண்டையும், அழிவும், பேராவலும், விவாதமும் வீண் பெருமையும் பிரவேசிக்கும். ஆகவே புதுச்சிருஷ்டி பக்திக்குரிய ஆராதனைகள், ஜெபம், துதி போன்றவைகளை ஒவ்வொரு கூட்டத்தின் பகுதியாயிருக்கும்படி, இணைப்பது மாத்திரமல்லாது, மேலும் பக்திக்குரிய ஒரு விசேஷமான கூட்டத்தை வாரம் ஒருமுறை வைப்பது அவசியம் என்று நாம் நம்புகிறோம். இதோடு கிறிஸ்தவ அனுபவங்களைக் குறித்துச் சாட்சி சொல்ல சந்தர்ப்பங்களும் கொடுக்கப்பட வேண்டும்; ஆனால் இப்பொழுது இருதயத்தின் நிலைமை எப்படியிருக்கிறது, மேலும் இதே மாதிரியாகக் கடந்த கூட்டத்திற்குப் பிறகு, இந்த வாரத்தில் எப்படியிருந்தது என்று திட்டவட்டமாகக் கூறுதல் வேண்டும். இப்படியான அன்றைய நிலைமையிலுள்ள சாட்சிகள் கேட்பவர்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கிறதைப் பார்க்கிறோம்; சில வேளைகளில் கடந்தகாலத்தில் ஏற்பட்ட நன்மையான அனுபவங்கள், அவர்களை உற்சாகப்படுத்துவதாக உள்ளன; சில வேளைகளில் சோதனைகள், கஷ்டங்கள், மனக்கலக்கங்கள் போன்றவைகளைக் கூறுவதன் மூலம் அவர்களை ஆறுதல்படுத்தலாம், ஏனென்றால் இதன் மூலம் அவர்கள் சோதனையான அனுபவங்களில், சில வேளைகளில் தோல்விகளில் அவர்கள் தனித்து நிற்கவில்லை என்பதைப் புரிந்துகொள்கிறார்கள்.

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி, உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" (1 பேதுரு 4:12) என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகளின் அர்த்தத்தை நாம் எல்லோரும் இவ்விதமாக இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ளலாம். ஆண்டவருடைய ஜனங்களாயிருக்கிற அனைவருக்கும் சோதனைகளும், கஷ்டங்களும்

உண்டென்பதை அவர்கள் அறிந்துகொள்ளுகிறார்கள். இவ்விதமாக ஒவ்வொருவரும் மற்றவரோடு பரிதாபப்பட கற்றுக்கொள்ளுகிறார்கள். மேலும் பரிதாபப்படுதல் என்ற பிணைப்பு வளரும் போது உதவிச் செய்யும் உணர்வு வளர்கிறது, அப்படியே அன்பின் ஆவியாகிய பரிசுத்த ஆவியும் வளருகிறது. இப்படி வாரத்தின் மத்தியில் நடைபெறுகின்ற கூட்டங்களுக்கானப் பொருள் (topic) முந்தய ஞாயிற்றுக்கிழமையில் கூடிவந்தபோது தீர்மானிக்கப்படுவது அநுகூலமாயிருக்கும்; மேலும் இந்தப் பொருள் (topic) சபையினரின் மனதில் இருப்பதால், வாழ்க்கையில் கடந்துபோகின்ற அனுபவங்களை ஒவ்வொருவரும் கவனத்தில் வைத்துக் கொள்ளவும் அது ஊக்குவிக்கும்; விசேஷமாக அந்த வாரத்திற்குரிய பொருள் சம்மந்தமாக அது இருக்க வேண்டும். சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் வெவ்வேறு விதமான அனுபவங்கள் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏராளம் உண்டு. ஆனால் பெரும்பாலானோர், யோசிப்பதில்லை, கவனிப்பதில்லை; இந்த மாதிரியான அருமையான பாடங்கள் கவனிக்கப்படாமல், அவர்களைவிட்டுக் கடந்துசெல்லுகின்றன, அதன் பின்னர் ஆண்டவர் அவருடைய அருளால் அனுதினமும் அவர்களோடு இடைப்படுகிற காரியங்களுக்குக் கவனம் செலுத்துவதன் மூலம் கற்றுக்கொள்ளக்கூடிய நல்ல தருணத்தைவிட்டுவிட்டு, அதன் பின்னர் வாழ்க்கையின் பெரிய, அதிக கசப்பான அனுபவங்களிலிருந்து, முக்கியமாகக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

உதாரணமாக, வாராந்தர ஆராதனைக்கானப் பொருள் (topic) "எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:7) என்ற வசனத்திலுள்ள "தேவ சமாதானம்" என்று வைத்துக்கொள்வோம். சகோதரத்துவத்திலுள்ள ஒவ்வொருவரும், தன்னைப் பொறுத்தவரையில் இந்த வேதவாக்கியம் எந்தளவிற்கு நிறைவேறிற்று என்று கவனித்துப்பார்க்க வேண்டும். மேலும், சமாதானம் நிலைக்கொள்ளாதபடி என்னென்னக் காரியங்கள் தடைப்பண்ணுவது போலவும், குறுக்காக வந்ததுபோலவும் இருந்தது என்பதையும், அதோடுகூட அமைதியின் மையையும், அதிருப்தியையும் கொண்டுவந்தது என்பதையும் கவனிக்க வேண்டும். இந்த அனுபவங்களையும், அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களையும் குழுவில் அதிக திறமையுள்ளவர்களும், குறைவான திறமை உள்ளவர்களும் (ஆண்/பெண்) சொல்லும்போது, கடந்த வாரத்தின் முன்பகுதியில் அவர்கள் பெற்ற அவர்களுடைய அனுபவங்களை ஒவ்வொருவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, பின்பகுதியின்போது அவர்களுடைய அனுபவங்களின் பாடங்களோடு மற்றவர்களுடைய அனுபவங்களும் சேர்க்கப்படும். இப்படிச் செய்வதன் மூலம் அவர்களுடைய பட்சாதாபத்தை அதிகரிப்பதுடன், சமாதானத்திலுள்ள அழகோடு, இருதயத்தில் தேவசமாதானம் தரும் ஆசீர்வாதத்தை அதிகமதிகமாகப் பகிர்ந்துகொள்ளுபவருடன் சண்டைச் சச்சரவுகள் அதற்கு எதிர்மாறாக

இருப்பதையும் காண உதவும். மேலும் நம்முடைய கட்டுப்பாட்டிற்கு அப்பால் காணப்படும் குழப்பம், அமளி அல்லது துயரம் நிறைந்த சூழ்நிலைகள் சுற்றிக் காணப்படும்போதுகூட இந்தச் சமாதானத்தோடு இருப்பது எப்படிச் சாத்தியமாகும் என்பதையும் காண உதவிச் செய்யும். இந்தக் கூட்டங்களில் பக்திக்குரிய அம்சங்கள் இருப்பது அவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். தன்னுடைய குறைகளை அதிகமாகத் துல்லியமாக உணருகிறவன், ஆவியின் கிருபைகளில் வளரும்படியாக அதிக ஊக்கத்துடன் முயற்சிக்கிறவன், அவன் தான் ஆண்டவருடன் அதிக வாஞ்சையுள்ளவனாக இருப்பதுடன், அவருடைய பரிசுத்த ஆவியில் அதிகமதிகமாகப் பங்குபெறும்படியாக வாஞ்சிக்கிறவனாகவும் இருப்பான்.

இந்தக் கூட்டங்களில், மற்றவைகளில் உள்ளது போலவே, ஒழுங்கைக் கடைப்பிடிப்பதன் மூலம் அதிகமான பயனுண்டாகும் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனாலும் அது கூட்டத்தில் ஜீவனற்ற, சுயாதீனமற்ற நிலைமையை உண்டாக்கும் அளவுக்கு இருக்க வேண்டும் என்பதல்ல, ஆனால் அராஜகம் அல்லது ஒழுங்கீனம் இல்லாதபடி, ஞானத்தோடு, அன்போடு, சாதுவான கண்டிப்போடு, கூட்டத்தின் சுயாதீனத்தை நல்லமுறையில் பாதுகாக்குமளவிற்குச் செய்யப்பட வேண்டும். உதாரணமாகக் கூட்டத்தின் நோக்கம் முன்கூட்டியே புரிந்துகொள்ளப்பட வேண்டும், மேலும் கூட்டத்தை ஏற்கெனவே ஒத்துக்கொண்ட குறிப்பிட்ட நோக்கத்தை அடையும்படி தலைவர், நியாயமான முறையில், அதிக கண்டிப்பில்லாத வகையில் நடத்த வேண்டியது அவருடைய கடமையாகும். இந்தக் கூட்டங்கள் பொதுவான கேள்விகள் கேட்கிறதற்கான கூட்டங்கள் அல்லது கலந்துரையாடுவதற்கானக் கூட்டங்கள், அல்லது பிரசங்கிப்பதற்கானவை என்று எண்ணிவிடக் கூடாது; இவைகளுக்கென வேறு கூட்டங்கள் ஒழுங்குப் படுத்தப்பட்டுள்ளன; விருப்பமுள்ளவர்கள் அதில் தாராளமாகக் கலந்து கொள்ளலாம், ஆனால் இத்தகைய கூட்டங்களுக்கு ஒரு குறிப்பிட்ட எல்லை உண்டு. இப்படியாகக் கூட்டத்தைச் சரியான முறையில் நடத்த, ஒருவருக்கொருவர் பதில் சொல்லுவது, விவாதிப்பது போன்றவைகளைத் தடைப்பண்ணும் வண்ணமாக, தலைவர் முழுக்கூட்டத்திற்கும் பொறுப்பானவராக இருப்பதால், அவர் மட்டுமே அதுவும்கூட தேவைப்பட்டால் பதில் சொல்லலாம் அல்லது குறைக்கூறலாம். மேலும் சில சாட்சிகள் அதிக நீளமுள்ளதாக இல்லாததாயும், அதினிமித்தம் மற்றவர்கள் களைப்படையச் செய்யாததாயும், மேலும் அதன் மூலம் மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகாதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும்; மேலும் கூட்டங்கள் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டதற்கு மேலாக அதிக நேரத்திற்கு நீடிக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் காரியங்களெல்லாம் தலைவர்மேல் விழுந்த பொறுப்பாய் இருக்கிறபடியால், அவர் சபையில் ஒரு மூப்பராக இருக்க வேண்டுமென்று விளங்குகிறது. அதிக அனுபவம் இல்லாத ஒரு கற்றுக்குட்டி

மிகவும் நல்ல நோக்கம் இருந்தாலும்கூட, இப்படிப்பட்டச் சூழ்நிலைகளில் செயல்படுவதில் ஒன்று தாராளமாக அல்லது கண்டிப்பாக இருக்க முற்படுவார், அதிகமாக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையால், ஒன்று அவர் கூட்டத்தைக் கெடுத்துவிடலாம் அல்லது ஞானமற்ற முறையில் சொல்லப்பட்ட ஒரு திருத்தத்தினால் அல்லது சரியான விதிகளை ஞானமற்ற முறையில் பயன்படுத்தி, நல்ல ஒரு சகோதரனையோ அல்லது சகோதரியையோ மனம் புண்படச் செய்யலாம். மேலும், இப்படியான ஒரு கூட்டத்தின் தலைவர் ஒரு மூப்பராக இருக்க வேண்டும், இல்லையென்றால் சபையில் மூப்பர் என்ற ஸ்தானத்தில் இருக்கத் திறமை உள்ளவராக இருக்க வேண்டும், ஏனெனில் அவருக்கு வேத வசனத்தைப் பற்றி நல்ல அறிவு இருக்கும், கிருபையில் அனுபவமும், மேலும் சொல்லப்பட்ட சாட்சிகளுக்குப் பதிலளிக்கும் வகையில், உற்சாகப்படுத்தும் வகையில் ஒரு வார்த்தை, அல்லது ஆலோசனை அல்லது உதவிச் செய்யும்படியான புத்திமதியைக் கொடுக்கக்கூடிய வகையில் கற்றுக் கொடுக்கக்கூடிய திறமையுள்ளவராக இருப்பார். "ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!" (நீதிமொழிகள் 15:23) மற்றச் சூழ்நிலைகளிலுள்ள ஒரு முழுச்சொற்பொழிவைக் காட்டிலும், ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை அநேக தடவைகளில் எவ்வளவு அதிகமான உதவியாய் இருக்கும்.

மேலே கூறப்பட்டவைகளில், ஒரு கூட்டம் ஆர்வமுள்ளதாக இருக்கும் படியாகக் கொடுக்கப்பட வேண்டிய பல்வேறு காரியங்களை நாங்கள் குறிப்பிட்டிருந் தாலும், கடைசியில் சொல்லப்பட்டதை மாத்திரம் விளக்கமாகக் கூறியுள்ளோம், சொல்லப்போனால், எல்லாவற்றிலும் மிக முக்கியமாக இருப்பதாக எண்ணுகிறோம், அது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் உதவியாயிருக்கிற ஒரு கூட்டம். இப்பொழுது மற்றக் கூட்டங்களைப் பொறுத்தவரையில் நல்ல ஒழுங்குகள் என்பது எவையாயிருக்கக்கூடும் என்று சற்றுப் பார்க்கலாம். இது சூழ்நிலைக்கு ஏற்றபடி, நிலைமையைப் பொறுத்து, சரீரமான சபையின் எண்ணிக்கையைப் பொறுத்து வித்தியாசப்படும். எண்ணிக்கை ஐம்பது என்று வைத்துக் கொள்வோம், அவர்களில் சிலர் அங்குள்ளோர் முன்னிலையில் பேசுவதில், சத்தியத்தைத் தெளிவாக எடுத்துக் கூறுவதில் விசேஷமாகத் திறமையுள்ளவர்களாக இருந்தால், விசேஷமாக நண்பர்கள், அயலகத்தார் இல்லையென்றால் மற்றவர்கள் அழைக்கப்படும்படியாக, வாரத்தில் ஒருமுறை பிரசங்கங்கள் உள்ள ஆராதனை வைப்பது பொதுவாக அனுகூலமுள்ளதாய் இருக்கக்கூடும் என்று நாங்கள் யோசனைக் கூறுகிறோம். ஆனால் ஆண்டவருடைய முன்னேற்பாட்டில், சபையில் வேதாகம தலைப்பைக் குறித்துத் (topic) தலைப்புக்கு ஏற்றபடி, புத்தியான, நல்ல சொற்பொழிவைக் கொடுக்கக்கூடிய விசேஷமாகத் தகுதிப் பெற்றவர்கள் சபையில் ஒருவரும் இல்லையென்றால், இப்படியான ஒரு கூட்டம் நடத்த முயற்சிக்கக் கூடாது என்று நாம் நம்புகிறோம். இல்லையென்றால், சபை மக்கள் முன்னிலையில் ஒரு வேதாகமச்

செய்தி தலைப்புக்கேற்ற வகையில் பேசும்படியாக ஓரளவு திறமைப் படைத்தவர்கள் சிலர் மத்தியில் அந்த நேரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தலைப்புச்செய்தி ஒன்றாக இருக்க வேண்டும், சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பங்கெடுக்க வேண்டும். இல்லையென்றால் இப்படியாக மூப்பர்கள் இந்த ஞாயிற்றுக்கிழமையில் ஒருவர், அடுத்தவர் அடுத்த ஞாயிற்றுக்கிழமை என்று மாறி மாறி வரலாம், அல்லது இந்த ஞாயிற்றுக்கிழமையில் இன்னும் இரண்டு பேர் என்று மாறிமாறி வரலாம். திறமைக்கு ஏற்ப சகோதரர்கள் எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுப்பதின் மூலம், அவர்களை முன்பாக நிறுத்துவது முழுச்சபையின் நலன்களை நல்லமுறையில் பாதுகாப்பதற்கு உதவிச் செய்யும் என்று தோன்றுகிறது. எப்பொழுதுமே, தாழ்மையும் வார்த்தையில் தெளிவும் மிக முக்கியமானவைகள் என்பதை நிதானித்துப் பார்க்க வேண்டும், பிரமாதமாக அல்லது நாவன்மையுடன் பேசுவது அல்ல.

ஆனால் எங்களுடைய கருத்தின்படி மிகவும் முக்கியமான கூட்டம், மிகவும் உதவி அளிக்கக் கூடியது, முதலாவது விளக்கப்பட்ட பக்திக்குரிய கூட்டத்திற்கு அடுத்தப்படியாக, சபையிலுள்ள எல்லா விசுவாசிகளும், சில வேளைகளில் ஓர் அவைத்தலைவர் அல்லது தலைவர், சில வேளைகளில் மற்றும் ஒருவருக்குக் கீழாகப் பங்குப் பெறுவதுதான். இந்தக் கூட்டங்களுக்கு ஒரு தலைப்போ (topic) அல்லது வேதாகமப் பகுதியோ விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்ளலாம், தலைவர் அந்தப் பொருளைப் பற்றி முன்னதாகவே பார்த்து வைத்திருப்பதுடன், அதைக் கூட்டத்தை நடத்துகின்ற சகோதரர்களுக்கிடையில் பகிர்ந்து கொடுக்கும்படியான பொறுப்பைப் பெற்றிருக்க வேண்டும், முடிந்தால் அவர்களுக்குரிய பகுதியை ஒரு வாரத்திற்கு முன்னரே அவர்களுக்குக் கொடுப்பதன் மூலம், அவர்கள் கூட்டத்திற்கு வரும்போது யோசனைகளைத் தெரிவிக்க ஆயத்தத்துடன் வர இயலும், ஒவ்வொருவரும் தனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பின், தன்னுடைய பகுதியைப் பற்றிய ஆயத்தத்துடன் வர அது உதவும். பங்கெடுப்பவர்களில் முக்கியமானவர்கள் செய்தியை ஆராய்ந்துபார்க்கும்போது (ஒருவேளை இரண்டுபேர் இல்லாவிட்டால் ஒருவேளை ஆறுபேர் அல்லது அதற்கும்மேலாக, சபையினரின் தொகைப்படி, செய்தியின் ஆழமான நிலைமைக்கேற்ப, அல்லது திறமையுள்ள நபர்களின் எண்ணிக்கைக்கேற்ப) வேதாகமப் பாடங்களும் (Studies in the Scripture) மறுபதிப்பும் (Reprints), பெரோயன் வேதாகமம் (Berean Bible) ஆகியவை மிகவும் உதவியாக இருப்பதைக் காண்பார்கள். அவர்கள் செய்தியைத் தங்களுடைய சொந்த வார்த்தையில் கொடுக்கலாம், அல்லது மேற்கூறிய புத்தகங்களிலிருந்து விசேஷமான தேவைப்படும் குறிப்புகளுக்கான சாராம்சத்தை எடுத்துக்கொண்டு செய்திக் கொடுக்கலாம்.

கூட்டம் துதியுடனும், ஜெபத்துடனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போது, ஏற்றவேளையில் செய்தித் தலைப்பு, அவைத்தலைவரால் அறிவிக்கப்படலாம். அதன் பின்னர் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட பேச்சாளர் செய்தியில் தன்னுடைய பகுதியை

வழங்கிய பின்னர், அது முழுச்சபையும் தன்னுடைய அபிப்பிராயங்களையும், கேள்விகளையும் ஏற்கெனவே அந்தச் செய்தியின் முக்கிய பேச்சாளரால் சொல்லப்பட்டவைகளுக்கு இணக்கமாக அல்லது எதிராக வெளிப்படுத்த தருணமளிக்கப்பட வேண்டும். சபையினர் விவாதிக்க விருப்பமில்லாது காணப்பட்டால், அவர்களை அதில் ஈடுபடுத்த வேண்டியதிருந்தால் அவைத் தலைவர் சாமார்த்தியமான கேள்விகள் மூலம் இதைச் செய்ய வேண்டும். அவைத்தலைவர் மாத்திரமே பேச்சாளர்களுடன் பேச வேண்டும் அல்லது அவர்கள் சொன்னவைகளுக்குப் பதில் சொல்ல அல்லது இணக்கம் தெரிவிக்க முயல வேண்டும்; அவர் எந்தப் பேச்சாளரிடமும் அவருடைய நிலையைக் குறித்து அல்லது காரணங்களையும் குறித்து மேலதிகமான விளக்கங்களைக் கேட்கலாம். பேச்சாளர்கள் (செய்தியாளர்கள்) எப்பொழுதுமே அவர்களுடைய குறிப்புகளை அவைத்தலைவரிடம் சொல்ல வேண்டுமே தவிர, ஒருபோதும் ஒருவருக்கொருவர் பேசக்கூடாது. இதன்படியாகத் தனி நபர் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தாமல், வாய்ச் சண்டை ஏற்படக்கூடிய நிலைமையைத் தவிர்க்கலாம். அவைத்தலைவர் விவாதத்தில் மேற்கூறிய விஷயங்களைத் தவிர வேறெந்த பங்கும் எடுக்கக்கூடாது; ஆனால் கூட்டம் துதியுடனும், நன்றி செலுத்துதலுடனும் முற்றுப் பெறுவதற்கு முன்னால், கடைசியில் சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும் அவர் கவனத்தில் கொண்டு, அவருடைய யூகத்தின்படி முழு விஷயத்தையும் சுருக்கமாக எடுத்துக்கூற வேண்டும்.

ஒவ்வொரு குறிப்பையும் நன்றாகக் கவனித்தப் பின்னர், முழு விஷயமும் அலசி ஆராயப்படுவதால் எல்லோரும் அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அல்லது அதிக சிக்கலான விஷயங்களில், ஒவ்வொரு தலைப்பையும் நன்றாகப் பரிசீலித்தப் பின்னர் அவைத் தலைவர் தன்னுடைய கருத்தைக் கொடுக்க முடியும். தேவனுடைய வார்த்தையை ஆழமாகப் படிப்பதற்கு இப்படியான ஒரு கூட்டத்தைத் தவிர வேறெந்த விதமான சிறந்தக் கூட்டத்தையும் நாங்கள் அறியோம். இது வழக்கமான முறையில் பெரும்பாலான ஆண்டவருடைய ஜனங்கள் கூடிவரும்போது பிரசங்கிப்பதைக் காட்டிலும் அனுகூலம் உள்ளதாக இருக்கிறது என்று நாங்கள் எண்ணுகிறோம்.

இப்படியான ஒரு கூட்டம், மேலே சொல்லப்பட்ட 1, 2, 3 என்ற ஆலோசனை களின் எல்லா அம்சங்களையும் கொண்டதாக இருக்கிறது. முதலாவது ஆலோசனையைப் பொறுத்த வரையில், முக்கிய பங்குவகிப்பவர்களுக்கு, அவர்களுக்கு இருக்கிற திறமையெல்லாம் வெளிப்படுத்த முழுச்சந்தர்ப்பமும் உள்ளது. இரண்டாவது ஆலோசனையைப் பொறுத்தவரையில், பல முக்கிய பேச்சாளர்கள் வித்தியாசமான தலைப்புகளின்மேல் பேசிய பின்னர், எல்லோரும் கேள்விகள் கேட்பதற்கும் யோசனைகள் சொல்லுவதற்கும் ஒரு தருணம் உண்டு. மூன்றாவது ஆலோசனைக்கு வரும்போது, அந்த ஆலோசனையும் இப்படியான ஒரு

கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஏனெனில், ஒவ்வொரு வாரத்திற்குரிய தலைப்புகளும் கூடுமானவரை முழுச்சபையால் தீர்மானிக்கப்பட வேண்டும், தலைவரால் அல்ல, அதுவும் அவர்கள் விவாதிப்பதற்குக் குறைந்த பட்சம் ஒரு வாரத்திற்கு முன்னர் தீர்மானிக்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட சபையில் கலந்துகொள்ளுகின்ற எவருக்கும், அவருடைய கேள்வியை அல்லது செய்தியைக் கொடுக்கும் சிலாக்கியம் வழங்கப்பட வேண்டும். அன்பும், இரக்கமும், உதவிச் செய்யும் தன்மையும் நிலவுவதோடு, எல்லோரும் சரியான தலைப்புகளுக்குப் (செய்திகளுக்கு) பயபக்தியுடன் செவிசாய்க்க வேண்டும். ஒரு செய்தி சபையினரின் பொதுவானக் கருத்துகளுக்கு மாறுபட்டதாகத் தோன்றும்போது அதைப்பற்றிய ஒரு விசேஷமான வேண்டுகோள் வரும்போது, சுவிசேஷத்தின் அடிப்படைக் கருத்துகளுக்கு உட்பட்டு, அந்த விஷயம் விவாதிக்கப்பட வேண்டுமென்று விருப்பம் தெரிவிக்கிற நபர்களுக்குப் போதுமான நேரம் கொடுக்கப்பட வேண்டும்; அவர் அவ்வேளையில் முக்கிய பேச்சாளராக இருக்க வேண்டும். மேலும் விஷயத்தின் முக்கியத்துவம், சபையினர் அதில் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்து அவருடைய நேரம் முப்பது நிமிடங்கள், அல்லது அதற்குக் கூட அல்லது குறைய இருக்கும்படி நிர்ணயிக்கப்பட வேண்டும். அவர் அதைச் சொன்னபின்னர், கேள்வியானது சபையிலுள்ள மற்றவர்கள் விவாதிப்பதற்கென விடப்படல் வேண்டும், அதன் பின்னர்க் கேள்வியை எழுப்பினவர் மற்றவர்கள் கொண்டுவரக்கூடிய ஆட்சேபங்களுக்குப் பதில் சொல்லும்படியாக சில நிமிடங்கள் கொடுக்கப்படல் வேண்டும்; ஆனாலும் அவைத்தலைவருக்குக் கூட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் கடைசியான வார்த்தைச் சொல்லும் தருணம் இருக்க வேண்டும்.

வசனத்தைப் படிப்பதில் மிகவும் அனுகூலமாயிருந்த இன்னொரு விதமான கூட்டம் "பெரோயா வேதாகம ஆராய்ச்சிக் குழு (Berean Circle for Bible Study)" என்பதாகும். இவைகள் சாதாரணமான முறையில் வாசிக்கின்ற குழுக்கள் அல்ல, ஆனால் திவ்விய திட்டத்தை எல்லாக் கூட்டங்களிலும், தனித்தனியாகப் பிரித்து முறைப்படி படிப்பதாகும். வேதாகமப் பாடங்கள் (Studies in the Scripture) பல புத்தகங்களை உள்ளடக்கியதாகும், அவைகள் ஆய்வுப்பொருட்களைக் கிரமமான முறையில் கொடுக்கிறபடியால் இப்படிப்பட்ட புத்தகங்கள் (வேதாகமத்தோடு) வேதப்பாட வகுப்புகளுக்குப் பாடப் புத்தகங்களாக இருக்கின்றன. ஆனால் இந்தப் பாடங்களின் மூலம் பயன் பெறுவதற்குத் தலைவரும், சபையினரும், வாசிப்பதற்கும், படிப்பதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைத் தெளிவாகக் கண்டுகொள்ள வேண்டும். வாசிப்பதைப் பொறுத்த வரையில், அன்பான நண்பர்கள் வீட்டில் தாங்களாகவே வாசிப்பார்கள் என்றால் அது நல்லது, ஒருவேளை மிகச் சிறந்ததாயிருக்கும். இந்தப் பாடங்களின் நோக்கம் என்னவெனில் ஒவ்வொரு தலைப்பின் கீழுள்ள சில பகுதிகளை, ஒன்று அல்லது இரண்டு பாராக்களில்

கொடுக்கப்பட்டிருப்பதை எடுத்து, அவர்களுக்குள்ளாகவே முழுமையாக விவாதித்து, அதற்கு ஒத்த வாக்கியங்கள் போன்றவைகளைப் பார்த்து விஷயத்தை நன்றாக அலசிப்பார்த்து, கூடுமானால், விவாதத்திற்குரிய குறிப்பிட்ட விஷயத்தைக் குறித்ததான ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தை வெளிப்படுத்து மாறு கேட்டு அதன் பின்னர் அடுத்தத் தலைப்புக்குப் (topic) போக வேண்டும். சில பெரோயா வேதாகம ஆராய்ச்சிக் குழு (Berean Circle for Bible Study), வேதாகமப் பாடங்களின் ஒரு புத்தகத்தைப் படிப்பதற்கு அதிக ஆர்வத்துடன் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள்கூட எடுத்திருக்கிறார்கள்.

## அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்
### ரோமர் 14:5

சரியான நிலையிலுள்ள எல்லா உள்ளங்களும், கூடுமானவரை சத்தியத்தின் ஒவ்வொரு பகுதியையும் குறித்து ஒரு தீர்மானம் எடுப்பதில் மகிழ்ச்சியுறுகின்றன. "தன்னுடைய மனதிலே" சபையின் ஒவ்வொரு அங்கமும் தனக்கென்று ஊக்கமாக முயற்சிக்க வேண்டுமென்று அப்போஸ்தலர் கூறுகிறார். இருந்தாலும், தனிப்பட்ட நபருக்கான இந்த நல்ல சட்டத்தை ஒரு சபைக்கு அல்லது ஒரு வேதப்பாட வகுப்பிற்கென்று செயல்படுத்த முயற்சிப்பது பொதுவாகச் செய்யப்படுகின்ற ஒரு தவறாகும்; ஆண்டவருடைய வார்த்தையைக் குறித்த ஒரே தீர்மானத்தை அப்படியே எல்லாரும் தீர்மானிக்க வேண்டுமென்று திணிக்க முயற்சிப்பது தவறான கருத்தாகும். எல்லோரும் ஏகோபித்த மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாம் விரும்புவது சரிதான், ஆனால் எல்லோரும் பூரணத்திலிருந்து விழுந்தவர்கள், சரீரப் பிரகாரமாக மாத்திரமல்ல, ஆனாலும் மனதின் பிரகாரமாகவும் என்று நாம் அறியும்போது அந்த விதமாகவே இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமற்றது. மேலும் இந்த மாறுபாடு பல்வேறு திசைகளில் வரும்போது, அவைகள் எந்த ஒரு ஜனக்கூட்டத்திலும் பலதரப்பட்ட வித்தியாசமான தலை உருவங்கள் இருப்பதைப் போல் என்று காட்டப்பட்டுள்ளது. ஒருவருடைய கருத்தைத் தடுக்கவோ அல்லது அதற்கு உதவிச் செய்வதோ, நம்முடைய பல்வேறு பலவிதமான கல்வியின் முக்கியமான அம்சங்களாய் இருக்கின்றன.

ஆனால் நாம் எல்லோரும் ஒரேவிதமாகச் சிறக்க வேண்டுமென்று அப்போஸ்தலர் கூறவில்லையா? மேலும் நாம் எல்லோரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்போம் என்றும் தெளிந்த புத்தியின் ஆவி உள்ளவர்களாக இருப்போம் என்றும் அவர் கூறவில்லையா? மேலும் நாம் எல்லோரும் கிருபையிலும், அறிவிலும் வளர வேண்டும் என்றும் ஒருவரையொருவர் அதிகமான பரிசுத்த

விசுவாசத்தில் எழுப்புதல் பண்ண வேண்டும் என்றும் அவர் கூறவில்லையா?

ஆம், இது எல்லாம் உண்மைதான்; ஆனால் அவைகள் எல்லாவற்றையும் ஒரே கூட்டத்தில் அடைந்துவிட வேண்டுமென்று சொல்லப்படவில்லை. ஆண்டவருடைய ஜனங்கள், வித்தியாசமான வளர்ச்சியுடையவர்கள் மாத்திரமல்ல, கல்வியிலும் அல்லது அனுபவத்திலும் வித்தியாசம் உள்ளவர்கள், ஆனால் இதற்கும் மேலாக புதுச்சிருஷ்டிகளாக வயதிலும் வித்தியாசமானவர்கள், சிலர் குழந்தைகளாக, இளைஞர்களாக, முதிர்ச்சிப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே சிலர் புரிந்துகொள்வதற்கு மற்றவர்களைவிட தாமதிக்கிறார்கள் என்றால் அது நமக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணாது, ஆகவே "தேவனுடைய ஆழமான காரியங்களை" குறித்து தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாய் இருப்பதில் தாமதமாயிருக்கிறார்கள். எல்லோரும் பாவிகளாயிருக்கிறார்கள், நம்முடைய தலைவராயிருக்கிற கிறிஸ்து இயேசு, கல்வாரியில் அவர் செய்து முடித்தப் பலியினால் எல்லோரும் மீட்கப்பட்டோம், நாம் எல்லோரும் இப்போது, போதிக்கப்பட்டு, இராஜ்யத்திற்கும் அதன் ஊழியத்திற்கும் தகுதியுள்ளவர்களாகும்படி கிறிஸ்துவின் பள்ளிக் கூடத்தில் இருக்கிறோம் என்றும், மேலும் தங்களை முழுமையாக ஆண்டவருக்கென அர்ப்பணிக்காவிட்டால் ஒருவரும் அவருடைய பள்ளிக்கூடத்தில் பிரவேசிக்க முடியாது என்ற அடிப்படை உண்மைகளை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இவைகளை எல்லோரும் முற்றுமாக உணர வேண்டும், அப்படியில்லாவிட்டால் அவர்களைப் புதுச்சிருஷ்டியில் குழந்தையான சகோதரர்களாகக்கூட ஏற்றுக்கொள்ள முடியாது; ஆனால் நாம் எல்லோரும் ஒருவரோடொருவர் பொறுமையாயிருக்க வேண்டும், ஒவ்வொருவருடைய விசித்திரமானக் குணங்களை தாங்கிக்கொள்ள வேண்டும், இவைகள் எல்லாவற்றிற்கும் பின்னாக அன்பு இருக்க வேண்டும்; மேலும் ஆவியின் ஒவ்வொரு கிருபையிலும் வளர்ந்து, அதிகமதிகமாக அதன் பூரண தன்மையை அடைய வேண்டும்.

இது இப்படியாயிருக்க, அநேகர் பங்குபெறுகின்ற கூட்டங்களிலுள்ள பதில்களும், குறிப்புகளும், அவைத்தலைவர் வசதியினிமித்தம் பேச்சாளர் கூட்டத்தினரை நேரடியாகப் பார்த்துப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் வேளை தவிர, அங்கே குழுமியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் உரியதாக இருக்கும் (எந்தத் தனிப்பட்ட நபருக்கோ அல்லது எண்ணிக்கையின்படியானவர்களுக்கோ அல்ல); ஆகவே எல்லோருக்கும் பிரதிநிதியாக இருக்கும் அவைத்தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும். ஆகவே தன்னுடைய சொந்தக் கருத்தை வெளிப்படுத்தியப் பின்னர், ஒவ்வொருவரும் அமைதியாய் மற்றவர்களுடைய கருத்தைக் கேட்க வேண்டும், அதை விவாதிப்பதற்கோ, ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்ட அவருடைய நிலைமையை மறுபடியும் சொல்ல வேண்டுமென்று நினைக்கக்கூடாது. அவருடைய தருணத்தை உபயோகித்தப் பின்னர்,

ஒவ்வொருவரும் வழிநடத்தவும், போதிக்கப்படவும், சத்தியத்தைக் காட்டவும் ஆண்டவரை நம்ப வேண்டும்; மேலும் எல்லாப் பகுதிகளையும் (items) தான் காண்கின்ற வண்ணமாகவே மற்றவர்களும் காண வேண்டுமென்று வற்புறுத்தக்கூடாது; முக்கியமானவைகளில் ஒற்றுமை, முக்கியமில்லாதவைகளில் இரக்கம் என்பதைப் பின்பற்றுவதே சரியான விதியாகும்.

இருந்தபோதிலும், சத்தியத்தின் ஒவ்வொரு பகுதியும் முக்கியமானது; சத்தியத்தில் ஒரு சிறிய பகுதி தவறாக இருந்தாலும், அது தீமை விளைவிக்கும் என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம். மேலும் தேவனுடைய ஜனங்கள் ஜெபித்து, அறிவில் ஒற்றுமைக்காக ஊக்கமாக முயற்சிக்க வேண்டும், ஆனால் இதைப் பலவந்தமாக அடைய நாம் முயற்சிக்கக் கூடாது. சத்தியத்தின் முதலாவது அடிப்படைக் கருத்துக்களில் ஒற்றுமையின் ஆவி இருப்பது மிக முக்கியம்; இது காக்கப்படும்போது நம்முடைய ஆண்டவர் அவனவனுக்குத் தேவையான எல்லாச் சத்தியத்தையும் சுதந்தரித்துக் கொள்ளும்படி வழிநடத்துவார் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். இந்த விஷயத்தில்தான் ஆண்டவருடைய மந்தையின் தலைவர்களுக்கு, விசேஷமான ஞானமும், அன்பும், உறுதியான குணாதிசயமும், சத்தியத்தில் தெளிவும் தேவைப்படுகின்றது; ஆகவே ஒவ்வொரு கூட்டத்தின் முடிவிலும் வழிநடத்தியவர் சத்திய விஷயங்களைச் சுருக்கமாகக் கூற முடிந்தவராக இருந்து, எல்லோருடைய மனங்களையும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமையில் விடுவார். அடிப்படைக் கருத்துக்களை அதிகாரப் பூர்வமாகக் கூறுவது தவிர, மற்றபடி அவர் தன்னைத் தெளிவாக, உறுதியாக, அன்பாக எடுத்துக் கூறுபவராக வெளிப்படுத்துவார்.

## அடக்க ஆராதனைகள்

அடக்கம் செய்கின்ற வேளைகளில், வந்திருக்கிற நண்பர்கள் மத்தியில் ஏறக்குறைய பயபக்தியான நிலையிருக்கும்போது, ஜில்லிட்ட அமைதியான சடலம், துக்கமான இருதயங்கள், கண்ணீர் சொரியும் கண்கள், கறுப்புத் துணி போன்றவைகள் எல்லாம் மரணம் என்பது மனுக்குலத்தின் நண்பனல்ல, ஆனால் எதிரி என்ற பொதுவான பாடத்தை அறிவுறுத்த உதவி செய்கின்றது. ஆகவே, இப்படியான வேளை, சத்தியத்தைச் சொல்லுவதற்கு அனுகூலமானதாக இருக்கிறது, ஆகவே அது பயன்படுத்தப்பட வேண்டும். இப்பொழுது சத்தியத்தில் ஆர்வம் காட்டும் அநேகர் அதைக் குறித்ததான கருத்தைத் தெளிவானபடி பெற்றுக்கொண்டது அடக்க ஆராதனையின் போதுதான். இதோடுகூட இப்படியான வேளையில் அதில் கலந்து செவிக்கொடுப்பவர்களில் அநேகர் வழக்கமாக நடக்கின்ற சத்தியத்தின் ஊழியங்களில் ஏதாவது ஒன்றில் கலந்துகொள்வதற்கு அழைப்பைப் பெற்றபோது, நண்பர்களுடைய விருப்பத்திற்கு எதிர்ப்புத்

தெரிவிப்பதற்கு மிகவும் பயந்தவர்களாகவும், தவறான அபிப்பிராயம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். ஆகவே சூழ்நிலை அனுமதிக்கிறபடி, இப்படியான சந்தர்ப்பங்கள் பிரயோஜனமளிக்கும் வகையில் உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்று நாம் யோசனை கூறுகிறோம். இறந்தவர் விசுவாசியாக இருக்கையில், அவருடைய குடும்பத்தினர் அதற்கு எதிராக இருக்கையில், அவர் இறக்கும் தருவாயில் சத்தியத்தை அறிந்த ஒருவர் தன்னுடைய அடக்கத்தின்போது துக்கத்தோடு இருப்பவர்களுக்குப் பிரசங்கிக்கும்படியாக ஒரு வேண்டுகோளை விடுவிக்க வேண்டும். இறந்தது ஒரு குழந்தையாயிருந்து, பெற்றோர்கள் இருவருமே சத்தியத்திற்குள்ளாக இருந்தால், இந்த விஷயத்தைக் குறித்துக் கேள்வியே கிடையாது; ஆனால் பெற்றோர்களில் ஒருவர் சத்தியத்தின்மேல் அனுதாபம் உள்ளவராகவும் மற்றவர் எதிரிடையாக இருந்தால், அதைக் குறித்ததானப் பொறுப்பு தகப்பன்மேல் தங்கியிருக்கும், ஆனாலும் மனைவிக்குப் புருஷனிடத்தில் அந்த விஷயத்தைக் குறித்ததான தன்னுடைய கருத்தைச் சொல்வதற்குப் பூரண உரிமையுண்டு, அவரும் அந்தக் கருத்துக்குத் தேவையானக் கவனத்தைக் கொடுக்க வேண்டும், இருந்தாலும் குடும்பத்தின் தலைவன் என்று தேவன் தந்தப் பொறுப்பைத் தவிர்க்கும்படியாக அது இருக்கக்கூடாது.

அநேக சிறு சபைகளில், எங்களிடமிருந்து, அல்லது எவரிடமிருந்தும் எந்தவிதமான ஆலோசனை இல்லாமலே, மற்ற ஆர்வத்தை ஊட்டக்கூடிய, பயனுள்ள பிரசங்கத்தை, இப்படிப்பட்ட வேளைக்கு ஏற்றபடி செய்வதற்கு நன்கு தகுதிப்பெற்ற சகோதரர்கள் உண்டு. ஆனால் பெரும்பாலான சிறு சபைகளில், அர்ப்பணம் செய்து கொண்டவர்களுக்கு இடையே இப்படியான ஒரு பிரசங்கம் செய்வதற்கு உள்ள விசேஷமான தாலந்து இல்லை. ஆகவேதான் இந்தக் காரணத்திற்காகப் பயனுள்ள முறையில் இப்படியான ஆராதனைகளைச் செய்வதற்குச் சில ஆலோசனைகளை நாம் வழங்குகிறோம். ஆராதனையை நடத்துகின்ற சகோதரர் இறந்தவரின் நெருங்கிய உறவினர்களில் ஒருவராக இல்லாதிருப்பது நல்லது, ஆனாலும் இப்படியானவரைத் தவிர வேறு யாரும் இல்லையென்றால், ஒரு மகனோ அல்லது ஒரு புருஷனோ அல்லது ஒரு தகப்பனோ ஆராதனையை நடத்துவதில் தவறு இல்லை. வெளியிடத்தில் தாராளமாகப் பேசக்கூடாதவராகவும், பேசுகின்ற விஷயத்தை நன்கு அறியாதவராயிருந்தால், கீழே கொடுக்கப்பட்ட ஆலோசனைகளை அந்தச் சமயத்திற்கு ஏற்றபடி, அவர் உபயோகிக்கிறபடி, பொருத்தமாக அமைத்துக்கொள்வது அவருடைய திட்டமாயிருக்க வேண்டும். அவர் கூடியிருக்கிற நண்பர்கள் மத்தியில் வாசிக்கும்படியாகக் கையினால் எழுதப்பட்ட பிரதியை வைத்துக்கொள்ள வேண்டும். எழுதப்பட்டது, கையினால் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டச்சி (டைப்) செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் வெளியரங்கமாக அதை அடக்க ஆராதனையில் வாசிப்பதற்கு முன்னால் சத்தமாக, பலமுறை வாசிக்கப்படல்

வேண்டும்; அதினிமித்தம் அது வாசிக்கப்படும் போது கூடுமானவரை அது இலகுவாகவும், தெளிவாகவும், எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இந்தச் சமயத்திற்கு ஏற்ப தகுதியுள்ள ஒரு சகோதரர் காணப்படாவிட்டால், நாம் மறுபடியும் சொல்லுகிறோம், இதை ஒரு சகோதரி வாசிப்பதில் எந்த முறைக்கேடும் கிடையாது, ஆனால் தலையை மூடுவதற்கு ஏதாவது அணிந்திருக்க வேண்டும்.

ஆண்டவருக்குள் மரித்த ஒரு சகோதரனுடைய அடக்க ஆராதனையை நடத்துவதற்கும், பிரசங்கம் செய்வதற்குமெனக் கீழ்க்கண்ட ஆலோசனைகளை நாங்கள் வழங்குகிறோம்.

(1) மிதமான, மெதுவான இராகத்துடன், அவ்வேளைக்கு ஏற்ற ஒரு கீர்த்தனையைப் பாடுவதோடு ஆராதனையை ஆரம்பிக்க வேண்டும்.

(2) குடும்ப அங்கத்தினரில் எவராவது மற்றச் சபைப்பிரிவைச் சேர்ந்தவராக இருப்பின், மேலும் அவர்களுடைய சபையின் ஊழியருக்கு ஆராதனையில் ஏதாவது ஒரு பங்கு கொடுக்கப்பட வேண்டுமென்று வாஞ்சித்தால், அவர் உயிர்த்தெழுதலைக் குறித்துச் சில வேதவசனங்களை வாசிக்கவோ, அல்லது ஜெபம் செய்யவோ, அல்லது அவர் இரண்டையுமே சேர்த்துச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதற்கு இது ஏற்ற இடமாயிருக்கும். இப்படியான ஒரு வேண்டுகோள் வராவிட்டால், இதை (2) விட்டுவிட்டு, பின்னர் (1)-இலிருந்து (3)-க்குக் கடந்து செல்ல வேண்டும்.

(3) அடக்கத்தின்போது செய்ய வேண்டிய பிரசங்கத்தைப் பற்றிய யோசனை குறிப்புகள்.

அன்பான நண்பர்களே, நம்முடைய நண்பரும், சகோதரனுமானவருக்கு மரியாதைச் செலுத்தும்படி நாம் இங்குக் கூடிவந்திருக்கிறோம். அவருடைய சரீரமானது மண்ணுக்கு மண், சாம்பலுக்குச் சாம்பல் எனக் கல்லறைக்கு ஒப்புக் கொடுக்கும்படியாக வந்திருக்கிறோம். உலகத்தில் மரணத்தைத் தவிர வேறொன்றும் பொதுவானதாக இல்லாதிருக்கும் போது, அதோடுகூட வருகின்ற வியாதி, வேதனை, துக்கம் என்பவைகள் பொதுவாக இருந்தாலும், புத்தியுள்ளவர்களாகிய நாம், இப்படியாக நட்பு, வீடு, அன்பு, சகோதரத்துவம் என்பவைகளின் துக்கமான முறிவுக்கு நம்மைத் தயார்படுத்திக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் எவ்வளவுதான் ஆறுதல் கூறினாலும், இன்னும் அது வேதனையாய் இருக்கிறது, இருந்தாலும் கிறிஸ்தவர்களாகிய நாம், "நம்பிக்கையற்ற மற்றவர்களைப் போல் துக்கிப்பதில்லை." ஆகவே இந்த இடத்தில், கீலேயாத்தின் தைலமாக சுவிசேஷத்தில் நம் முன்பாக வைக்கப்பட்டுள்ள, இந்த நல்ல நம்பிக்கையை ஆராய்ந்துப் பார்ப்பதை காட்டிலும் வேறு எது பொருத்தமாக இருக்கக்கூடும்? இந்தத் தைலத்தைப் போல் பூலோகத்தின் துக்கங்களைக் குணமாக்கக் கூடியது வேறொன்றும் கிடையாது.

ஆகிலும், சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள

நம்பிக்கையை, மரித்தோரின் ஓர் உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கை, இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் அதிக சந்தோஷ நிலையிலுள்ள ஓர் எதிர்க்கால வாழ்க்கையைக் குறித்த நம்பிக்கையைப் பார்ப்பதற்கு முன்னர் நமக்கு முன்பாக ஒரு கேள்வி எழும்புவது தவறல்ல. நமக்கு ஏன் இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை இருக்க வேண்டும்? நமக்கு மரித்தோரிலிருந்து ஓர் உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக நாம் ஏன் மரணத்திலிருந்து தப்புவிக்கப்படக் கூடாது? ஏன் தேவன் நம்மைக் கஷ்டங்கள் நிறைந்த சில நாட்கள் அல்லது வருடங்கள் ஜீவிக்க அனுமதிக்க வேண்டும்? நாம் வாடுகின்ற புல்லைப்போல் பின்னர் ஏன் அறுப்புண்டு போகவேண்டும்? மேலும் இருதயங்கள் ஏன் நொறுங்குண்டுப் போக வேண்டும்? நம்முடைய இனத்தின் பெரிய சத்துருவான இந்த மரணத்தினால் நம்முடைய வீடும், குடும்ப ஒழுங்கும் ஏன் அலங்கோலமடைய வேண்டும்? மரணமானது கடந்த ஆறாயிரம் வருடங்களில் (உத்தேசமாகக் கணக்கிடப்பட்டுள்ளது) நம்முடைய மனுக்குலத்தின் ஐம்பது ஆயிரம் இலட்சங்களுக்கு மேலான மாம்சத்தின்படியான நம்முடைய சகோதரரைக் கொன்றிருக்கிறது. அவர்கள் ஆதாமின் பிள்ளைகளாய் இருந்திருக்கிறார்கள். சிந்திக்கக்கூடிய மனங்களுக்கு இதைக்காட்டிலும் ஆர்வமுள்ள கேள்வி இருக்க முடியாது.

நம்பிக்கையின்மை, சொல்லுவது என்னவெனில் நாம் உயர்தர மிருகங்களாக இருப்பதினிமித்தம், பிறக்கிறோம், ஜீவிக்கிறோம், அதன் பின்னர்க் கொடூரமான மிருகம் மரிப்பதுபோன்று மரிக்கிறோம், நமக்கென்று ஓர் எதிர்க்கால வாழ்வு கொடுக்கப்படவில்லை என்பதாகும். ஆனால் இப்படியான ஒரு சிந்தனையில் நடுநடுங்கும் வேளையில் மேலும், நம்முடைய எவ்விதமான சொந்த அனுபவத்தினாலும் அதற்கு மாறானதை நிரூபிக்க முடியாது இருக்கும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாக, "நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாகச் சமாதானத்தைக்" கூறும் நம்முடைய பிதாவின் வார்த்தையைக் கேட்டிருக்கின்றோம். நம்முடைய அன்பின் மீட்பர் அவரைப் பின்பற்றுகின்ற விஷயங்களை மறுக்கிறதொன்றல்ல, இல்லாவிடினும், துக்கமில்லை, வேதனையில்லை, மரணமில்லை என்ற ஓர் அறிக்கையல்ல, ஆனால் இதற்கு மாறானது. "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று அவர் கூறுகிறார். மறுபடியும் அவர், "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு எழுந்திருப்பார்கள்" என்கிறார். ஆ! நம்பிக்கையின்மையின் சத்தத்திற்கு இந்த மறுப்பு நமக்கு இனிமையாய் இருக்கிறது. அது நம்பிக்கையைக் கொண்டு வருகிறது. மேலும் பிதாவையும், குமாரனையும்கூட நாம் அறியும்படி கற்கும் போதும், நம்பிக்கை வைக்கும் போதும் விசுவாசத்திற்கு ஏற்ப நம்பிக்கை, சமாதானத்தைக் கொண்டு வருகின்றது. அவருடைய வார்த்தைகளை நாம் கேட்டோம், அவர் பிதாவின் கிருபையின் திட்டங்களைச் செயல்படுத்திக்

கொண்டிருக்கிறார்.

ஆனால் ஆண்டவர் இவ்விதமாக ஓர் உயிர்த்தெழுதலைக் கூறுவாரெனில், அந்த உயிர்த்தெழுதலின் செய்தியானது சமாதானத்தையும், இளைப்பாறுதலையும், நம்பிக்கையையும் கொண்டுவருமென்றால், தேவன் ஏன் முதலாவது மனிதனை அழிவுக்கு உட்படுத்த வேண்டும், அதன் பின்னர் உயிர்த்தெழுதலின் மூலம் மனுக்குலத்திற்கு சங்கீதக்காரன் மூலமாக, "மனுபுத்திரரே திரும்புங்கள்" என்கிறார். (சங்கீதம் 90:3) ஏன் அவர்களை ஜீவனோடு வைத்திருக்கக் கூடாது? ஏன் துக்கத்தையும் வேதனையையும், மரணத்தையும் தடுக்கக்கூடாது? வேதாகமம், வேதாகமம் மாத்திரமே, இந்த நிலைமைகளுக்கு விளக்கம் அளிக்கிறது என்று பதில் சொல்லுகிறோம், வேறொன்றும் இந்த விஷயத்தின்மேல் எவ்விதமான தெளிவையும் தருவதில்லை. வேதத்தின் சாட்சியின்படி, தேவன் ஆரம்பத்தில் நம் இனத்தை அவருடைய சாயலில், அவருடைய ரூபத்தில் நேர்மையானவர்களாக, பூரணமுள்ளவர்களாகச் சிருஷ்டித்தார் என்றும் நம்முடைய ஆதி பெற்றோர் கீழ்ப்படியாமையினிமித்தம் அந்த உன்னத நிலையிலிருந்து கீழே விழுந்தார்கள் என்றும் சொல்லுகிறது என்று நாம் பதில் தருகிறோம். இதன் மூலம் பாவத்தின் சம்பளமான மரணத்துக்குட்பட்டது, மேலும் பாவத்திற்குரிய இந்தத் தண்டனை, தகப்பனாகிய ஆதாமுக்கு எதிராகக் கொடுக்கப்பட்டது. இது இயற்கையாகவே அவனுடைய முழு இனத்தையும் பாதிக்கிறது என்றும் நாம் பதில் கூறுகிறோம். மனுக்குலத்தின் சந்ததி பெருகப்பெருகப் பாவமும் பெருகிற்று, அதற்கேற்றவாறு வியாதியும், வேதனையும், மரணமும் துரிதப்படுத்தப்பட்டது.

தகப்பனாகிய ஆதாமின் பாவத்துக்குரிய சம்பளம், சாபம், தண்டனை என்பது நித்திய நரக வேதனை என்றும், ஆதி பாவத்தினால் நாமும் எல்லா மனுக்குலமும் வர்ணிக்க முடியாத அளவிலான தண்டனையைப் பரம்பரையாகப் பெற்றோம் என்றும், இயேசுவைப் பின்பற்றுவோர் மாத்திரம், அதாவது அர்ப்பணம் செய்துகொண்ட பரிசுத்தவான்கள் மாத்திரம் நித்திய நரக வேதனைக்குத் தப்புவார்கள் என்றும் நாம் எல்லோரும் தவறாகக் கற்பிக்கப்பட்டுள்ளோம். ஆனால், அன்பான நண்பர்களே, தேவனுடைய வார்த்தையானது இப்படியான காரணமில்லாத, நியாயமில்லாத, அன்பற்ற திட்டத்தை ஆதரிக்கிறதில்லை என்பதையும், வேதம் இதற்கு எதிர்மாறாக தெளிவாகக் கூறுகிறபடி பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், நித்திய ஜீவன் தேவன் அளிக்கும் ஈவு என்றும், ஆனால் தேவனுடைய பிரியமான குமாரனோடு உறுதியாக இணைந்தவர்களைத் தவிர வேறு ஒருவரும் இந்த ஈவைப் பெறமுடியாது என்பதையும் காண்கின்றோம். ஆகவே துன்மார்க்கர் நித்திய ஜீவனைப் பெறமாட்டார்கள் என்பதால் அவர்கள் நித்திய ஆக்கினையை அனுபவிப்பதும் இல்லை. வேதம் அறிவிக்கிறது மிகத் தெளிவாகவும், நியாயமானதாகவும் இருக்கிறது. "கர்த்தர் துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்." (சங்கீதம் 145:20)

தகப்பனாகிய ஆதாம் சோதிக்கப்பட்ட போது, இது எவ்வளவு தெளிவாகக் கூறப்பட்டது என்பதைக் கவனியுங்கள்; காலத்தைக் குறித்தும், இடத்தைக் குறித்தும், எல்லாவற்றிற்கும்மேலாக, அவருடைய நீதியான கோபாக்கினையைக் குறித்ததான தண்டனையைப் பற்றி நம்முடைய பரலோகப் பிதா கூறுகின்றதை எங்கே பார்க்க வேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். சொல்லப்பட்டது என்னவென்றால் ஆண்டவர் நம்முடைய ஆதிப்பெற்றோருக்கெனப் பரதீசில் ஜீவனைத் தரும் கனி மரங்கள் மூலமாக முன்னேற்பாடுகளைத் தாராளமாகப் பண்ணினார் என்பதும், ஆனால் அவர்கள் கீழ்ப்படிதலைச் சோதிக்கும் வண்ணமாகக் குறிப்பிட்ட ஒரு மரத்தின் கனியைச் சாப்பிடவோ, அல்லது ருசிப்பார்க்கவோ, அல்லது தொடவோ கூடாது என்று தடை உண்டாக்கினார்; இந்தக் கீழ்ப்படியாமைதான், பரதீசிலிருந்தும், ஜீவ விருட்சங்களில் இருந்தும் (தோட்டத்தில்) அவர்களை வெளியேற்றியது; அதன் விளைவாக இப்பொழுதும் இருக்கின்ற மரணத்துக்கு ஏதுவான நிலைமைகளைக் கொண்டு வந்தது; அதுவும், அதிகளவில் கொண்டு வந்தது; ஏனெனில் சராசரியான மனித வாழ்வு தகப்பனாகிய ஆதாம் வாழ்ந்ததைவிட மிகவும் குறுகியதாக உள்ளது என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம்; ஆதாம் 930 வருடங்கள் வாழ்ந்தார்.

ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தையானது "இதைப் புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய்" என்பதாகும். இந்த "நாள்" குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு விளக்கிக் கூறும்போது அது ஆண்டவருடைய ஒரு நாள் என்று கூறுகிறார். "பிரியமானவர்களே கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்." இந்த "நாளுக்குள்ளாகத்தான்" ஆதாம் மரித்தார் என்றும், அவருடைய தலைமுறையினர் ஒருவரும் ஒருபோதும் முழு ஆயிரம் வருட நாள் வாழ்ந்ததில்லை என்றும் கூறுகிறார். ஆதாம் மீறுதலுக்குட்பட்ட போது, தேவன் அவர்களைக் குற்றப்படுத்திச் சொன்ன வார்த்தைகள், அவருடைய சிருஷ்டிகளை உபத்திரவப்படுத்த வேண்டும் என்ற சிந்தை அவருக்குக் கிடையாது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. மேலும் சாபமானது தற்போதைய வாழ்வு அழிக்கப்படுவதைக் காட்டிலும், அதிகமாகச் சொல்லவில்லை என்பதையும் இதன் மூலமாக வந்த உபத்திரவங்கள் மரிக்கும் நிலைமையோடு சம்பந்தமானவைகள் என்பதையும் காட்டுகிறது. ஆதாமுக்குத் தேவன் கொடுத்த சாபமானது "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" என்பதாகும். (ஆதியாகமம் 2:17; 3:17; 2 பேதுரு 3:8)

பயங்கரமான நித்திய நரக வேதனை, அது வழங்கப் பெறுவது, நம்முடைய ஆதிப்பெற்றோர் மேல் மாத்திரமே அல்ல, அவர்களுடைய எல்லாச் சந்ததியினர்

மேலேயும், அவர்களுடைய பிள்ளைகள்மேலும் என்பது, வேதாகமத்திலிருந்து வந்த உபதேசம் அல்ல, ஆனால் "இருண்ட யுகங்களிலிருந்து" வந்தவைகள் என்பதை உணரும் போது அதிக மகிழ்ச்சியுறுவதற்கு ஒரு பெரிய காரணமாயிருக்கிறது. ஆண்டவருடைய வார்த்தையின்படி அப்படியாகக் கூறப்படவில்லை. ஆதியாகமத்தில் சொல்லப்பட்டதோடு ஒத்ததாக பவுல், இதைப்பற்றி விளக்கமாகக் கூறுவதைப் பாருங்கள் (ரோமர் 5:12). "இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுப் பேலாவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." மரணத்தைக் குறித்த இந்தத் திவ்விய விளக்கத்தைக் காட்டிலும் அதிகமாக வேறு எது நியாயமானதாக அல்லது சரியானதாக அல்லது விவேகமானதாக, அல்லது திருப்திகரமானதாக இருக்க முடியும்? அது பாவத்தினால் வரும் விளைவாகும், நம்முடைய தகப்பனாகிய ஆதாம், பரீட்சிக்கப்பட்ட போது, கீழ்ப்படியாமையினால் தன்னுடைய எல்லா உரிமைகளையும் சிலாக்கியங்களையும் இழந்து வியாதி, வேதனை, துக்கம், துன்பம், மரணம் என்ற சாபத்துக்குட்பட்டார்; மேலும் நாம் எந்த விதத்திலும் பரீட்சிக்கப்படாமல் (பாவம் செய்யும் மன நிலையையும், பெலவீனங்களையும் பரம்பரையாகப் பெற்றுக்கொண்ட நம்மைப் பரீட்சிப்பது பிரயோஜனமற்றது). பாவத்திற்கு எதிராகக் கொடுக்கப்பட்ட இதே திவ்விய தண்டனையில், மரணத்தில் நாம் பங்குள்ளவர்களாய் இருக்கிறோம்; மேலும் ஓர் இனமாகக் கீழ்நோக்கி பெலவீனத்திலும், வியாதியிலும், வேதனையிலும், துன்பத்திலும், பிரேதக் குழிக்குள்ளும் போய்க் கொண்டிருக்கிறோமா?

விளக்கமாகக் கூறப்பட்டது நம்முடைய நியாயத்தின்படி திருப்திகரமாக உள்ளது; ஒரு மணி நேரத்திற்கு முன்னர் பிறந்த பாலகனாயினும், அல்லது ஒரு வாரம், அல்லது ஒரு மாதமாயிருந்தாலும் ஒரு சில வருடங்கள் அதிகமாக வாழ்ந்து, சொந்த விருப்பத்தின்படி நீதியின் சட்டத்திற்கு மீறுதலாக ஜீவிக்கிறவர்களாக இருந்தாலும் சரி, வேதனையிலும், மரிக்கும் வழிகளில் பங்குபெறுகின்றார்கள் என்ற கருத்துக்கு உண்மையாய் இருக்கிறது. "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்," "எல்லோரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்கள் ஆனார்கள்."

ஆனால், இப்பொழுது நம்பிக்கை எங்கே? இப்படிப்பட்ட மோசமான நிலைமைக்கு என்ன உதவி இருக்கக்கூடும்? உலகம் முழுவதிலும் உபத்திரவப்பட்டுக்கொண்டும், துக்கப்பட்டுக்கொண்டும், மரித்துக்கொண்டும் இருக்கிறவர்களுக்காக என்ன செய்யப்பட முடியும்? மேலும் ஏற்கெனவே மரணம் என்கின்ற சிறைக்குள் சென்றுவிட்ட ஐம்பதாயிரம் இலட்சம் ஜனங்களுக்கு என்ன செய்யப்பட முடியும்? அவர்களுக்காக அவர்களாகவே ஒன்றுமே செய்ய முடியாது என்று நாம் பதில் கூறுகிறோம். மனுக்குலமானது ஆறாயிரம் வருடங்கள் தன்னை வியாதியிலிருந்தும், வேதனையிலிருந்தும், மரணத்திலிருந்தும் தூக்கி எடுக்க

மனுக்குலமானது செய்த முயற்சிகள் பிரயோஜனமற்றதும், எந்தவிதமான நம்பிக்கைக்கும் ஆதாரம் கிடையாது என்பதையும் நிரூபித்துவிட்டது. நம்பிக்கைக்காக ஏங்குகிறவர்கள் நம்முடைய இரட்சிப்பின் கர்த்தாவாய் இருக்கிற ஆண்டவரை நோக்கிப் பார்க்க வேண்டும். அவர் ஓர் இரட்சிப்பை அறிவித்திருக்கிறார், தேவன் படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிற அவருடைய யுகங்களுக்கான மகிமையின் திட்டத்தை வெளிப்படுத்துவது வேதாகமம் ஆகும். முதல் படி மீட்பின் படியாகும், நமக்கெதிராக இருந்த தண்டனையான மரணத்தண்டனைக்குக் கிரயத்தைச் செலுத்துவது முதல் படியாகும். அது நம்முடைய ஆண்டவரால் செலுத்தப்பட்டது; "கிறிஸ்து நம்மை தேவனிடத்தில் கூட்டிச் சேர்க்கும்படியாக அக்கிரமக்காரருக்காக மரித்தார்." தீர்க்கத்தரிசி கூறியபடி, "ஒருவனும் தன் சகோதரனுக்காக தேவனுக்கு மீட்கும் பொருளைக் கொடுக்க முடியாது." ஆக்கினைக்குள்ளாக்கப்பட்ட இனத்திலுள்ள ஒருவனும் தன்னைத்தான் மீட்டுக்கொள்ள முடியாது. ஆகவே, நிச்சயமாக தீர்க்கத்தரிசி கூறியபடி தன் சகோதரனையும் மீட்டுக்கொள்ள முடியாது. ஆனால் மனிதன் தூரமாகச் சென்றது தேவனுக்குக் கிடைத்தத் தருணமாயிற்று. அவர் இயேசுவை அனுப்பினார், அவர் தம்முடைய களங்கமில்லாத ஜீவனை நமக்காகத் தந்தார், அவருடைய ஜீவியம் "பரிசுத்தமாய், குற்றமற்றதாய், பாவிகளுக்கு விலகினதாய் இருந்தது," மரிக்கின்ற இனத்திற்கு விலகியிருந்தது. இந்த ஜீவனை அதற்கான கிரயமாக தேவன் ஏற்றுக்கொண்டு தகப்பனாகிய ஆதாமின் ஜீவனுக்குப் பதிலாகக் கணக்கில் வைத்துக் கொள்ளுகிறார்; இப்படியாக ஆதாமின் பிள்ளைகளாயிருக்கிற நமக்கு அது சாத்தியமாகிறது, ஏனென்றால் நம்முடைய சொந்த நடத்தையினால், "ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால்" நாம் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டோம். ஆகவே தேவன் நீதிபரராய் இருந்து ஒருவராகிய நம்முடைய ஆண்டவருடைய கீழ்ப்படிதலினிமித்தமும், அவருடைய ஈடுபலியின் நிமித்தமும் நம்மை விடுதலையாக்க முடியும். அவரைக் குறித்துத் "தம்மை எல்லாரையும் மீட்கும் பொருளாக ஒப்புக்கொடுத்தார். இது ஏற்றகாலங்களில் விளங்கிவருகிறது." (1 தீமோத்தேயு 2:6)

அன்பான நண்பர்களே, இதைப் பார்க்கும்போது சபையை மட்டும் இயேசு மீட்கவில்லை, ஆனால் வேதம் தெளிவாக அறிக்கையிடுகிறபடி, "நம்முடைய பாவங்களை (சபையினரின் பாவங்களை) நிவிர்த்திச் செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திச் செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2) என்பதை நாம் கவனிப்போம். இங்கே ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம்! இங்கே நல்ல நம்பிக்கைக்கு ஆதாரமிருக்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறபடி நம்பிக்கையற்ற மற்றவர்களைப் போல, அல்லது கொஞ்சம் நம்பிக்கை உள்ளவர்களைப் போல - ஏனெனில் இவர்களின் நம்பிக்கை, தேவனுடைய வார்த்தைகளில் ஆணித்தரமாக

அறிவிக்கப்பட்டுள்ளவைகளின்மேல் இல்லாதிருக்கின்றது - நாம் துக்கப்படாமல் இருக்க உதவுகிறது.

ஆனால் ஒருவர் கூறுகிறார்: இயேசு மரித்து வெகு காலமாயிற்று; பாவமும், மரணமும் இன்னும் ஆளுகைச் செய்யவும், மனுக்குலத்தை விழுங்கவும் ஏன் அனுமதிக்கப்படுகிறது? நாங்கள் பதில் கூறுகிறோம்: தேவன் நான்காயிரம் வருடங்களாக, பலியை அனுப்புவதற்குத் தாமதித்தார், அதினிமித்தம் வரவேண்டிய, ஏற்கெனவே சம்பாதிக்கப்பட்ட ஆசீர்வாதத்தை அனுப்ப இன்னும் தாமதிக்கிறார், இந்த ஆசீர்வாதம் தேவனுடைய "குறித்தக் காலத்தில்" கிடைக்கும். தாமதத்தின் காரணம் வேதாகமம் விளக்குகின்றபடி இரண்டு விதமாக உள்ளது.

முதலாவது, மனுக்குலமானது, முழு உலகத்தையும் சரியான முறையில் நிரப்பக்கூடிய விதத்தில், அல்லது ஜனப்பெருக்கத்தை உண்டுபண்ணும்படியாகப் போதுமான அளவு மக்கள் பிறப்பு உண்டாக அனுமதிக்கப்படவும், அதன் பின்னர் ஏதேன் தோட்டத்தின் பரிபூரண நிலைக்கும் தேவனால் பெரியளவில் மகத்துவமான முறையில் பழைய நிலையில் அமைக்கப்பட்ட தேவனுடைய பரதீசாக மாற்றப்படவும் ஆகும். இக்காலத்தின்போது இந்த மனுக்குலமானது பாவத்தைக் குறித்தும், மரணத்தைக் குறித்தும் ஓரளவு அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதுடன், பாவம் பெருகியிருப்பதைக் குறித்தும், அது விரும்பத்தகாத ஒன்று என்பதைப் பற்றியும் முக்கியமான பாடத்தின் ஒரு பகுதியைக் கற்றுக்கொள்ள முடியும். ஆண்டவருடைய காலம் இன்னும் வெகு தொலைவில் இல்லையென்று நாம் விசுவாசிக்கிறபடியே, அவருடைய வேளை வந்தவுடன், அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி பூலோகத்தில் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அது சாத்தானைக் கட்டி இப்பொழுது பாவத்திற்கும் மரணத்திற்கும் ஏதுவாகக் கிரியைச் செய்கிற அவனுடைய வல்லமையையும், செல்வாக்கையும் தடுத்து நிறுத்துவார்; அப்பொழுது முழு உலகமும் அவரை அறிகின்ற அறிவால் நிறைந்திருக்கும். கிறிஸ்து இப்படியாக மனுக்குலத்தை ஆசீர்வதித்து, அதை உருவாக்கிய (ஆதாமில் காண்கிற) தேவனுடைய சாயலுக்கு, அந்தப் பரிபூரண நிலைக்கு நேராகப் படிப்படியாக உயர்த்துவார். இந்த ஆசீர்வாதத்தின் காலமானது, ஆயிரம் வருட அரசாட்சி என்று அழைக்கப்படுகின்றது. ஆண்டவர் இதற்காகத்தான், "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக" என்றார். இந்த எல்லா ஆயிரம் வருஷ நாட்களின் ஆசீர்வாதமும், இழந்ததைப் பெறுதலுக்கும், இந்தப் பூமியில் அவருடைய நீதியை உறுதியாக ஸ்தாபிப்பதற்கு மாத்திரமல்ல, மனுக்குலத்தில் யாரெல்லாம் கிறிஸ்துவுக்கு அவர்கள் கீழ்ப்படிவதன் மூலமாக நித்திய ஜீவனுக்குத் தகுதியானவர்கள் என்பதைச் சோதிப்பதற்கும் தேவைப்படுகிறது. முழு அறிவின் மத்தியிலும் பாவத்தை விரும்புகிறவர்கள், இரண்டாம் மரணத்திற்குள்ளாக ஆக்கினைக்கு உட்படுத்தப்படுவார்கள். "தேவனுடைய பிரசன்னத்திலிருந்தும், அவருடைய

வல்லமையின் மகிமையிலிருந்தும் நித்திய அழிவு" அவர்களுக்கு உண்டாகும். இந்த ஆயிரம் வருடமானது இப்பொழுது பூமியில் வசிக்கின்ற 1600 இலட்சம் ஜனங்களுக்கு மாத்திரம் உரியது அல்ல, ஏற்கெனவே மாபெரும் சிறைச்சாலை வீடாகிய மரணம் என்கின்ற பாதாளத்திற்குள் சென்றிருக்கின்ற 50,000 இலட்சம் ஜனங்களுக்கும் உரியதாகும். "நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உள்ள திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 1:18) என்று ஆண்டவர் கூறுகிறபடி அவர்களை அதிலிருந்து இராஜ்யத்தின் வாய்ப்புகளுக்காக அழைப்பார்.

இரண்டாவதாக, அருமையான நண்பர்களே, இந்தச் சுவிசேஷயுகத்தின் போது மனுக்குலத்திலிருந்து அவர் மீட்டெடுத்த ஒரு "சிறு மந்தை," "தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பினர்," சீடர்கள், அவருடைய பாதபடியைப் பின் பற்றுகிறவர்கள், பரிசுத்தவான்கள், பரிசுத்தமாயிருக்கிறவர்கள் என்பவர்களை அவர் கூட்டிச் சேர்க்கும்படியாக, நம்மை நம்முடைய ஆண்டவர் மீட்டெடுத்த காலத்திலிருந்து, உலகத்திற்கான பொதுவான ஆசீர்வாதத்தையும் வாய்ப்புகளையும் கொண்டுவராமல் தாமதித்துள்ளார். இவ்விதமாக அவர் "ஒரு விசேஷமான ஜனங்களை," "ஓர் இராஜரிக ஆசாரியத்துவத்தை," அந்த ஆயிர வருட இராஜ்யத்தில் அவரோடு இணைந்து இருக்கும்படியாகத் தேடிக் கொண்டிருக்கிறார்; ஆனாலும் எவ்வளவுதான் பூரணராக, உன்னத மகிமையோடு காணப்பட்டாலும், மறுபடியும் பூமியின் பழைய நிலைமைக்குக் கொண்டு வரும்படியாக உலகத்தோடு பங்குள்ளவர்களாக அல்ல, எவ்வளவுதான் அருமையாகக் காணப்பட்டாலும் ஓர் ஏதேன் தோட்டத்திற்காக அல்ல, ஆனால் அவர்கள் அவர்களுடைய ஆண்டவரைப் போன்று ஆவிக்குரியவர்களாக, திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், வல்லமைகளுக்கும் மேலாக இருக்கும்படியாக, மேலும் அவருடைய மகிமையில் பங்குள்ளவர்களாகும்படி ஓர் உன்னத நிலைக்கென அவர் தேடிக்கொண்டு இருக்கிறார். இது எவ்வளவு ஓர் ஆச்சரியமான நம்பிக்கையாகவும், அவருடைய அழைப்பைக் கேட்டு அவருடைய ஒரு சீடராகி, இயேசுவைப் பின்பற்றுகின்ற ஒரு நபராய் ஆனவருக்கு மாத்திரமல்ல அவர் நமக்கு ஒரு முன்மாதிரியை வைத்திருப்பது போன்று, அவருடைய பாதப்படியைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்று வாஞ்சிக்கிறவர்களுக்கு, அதன்படியாக இருதயம் கொண்ட ஒவ்வொருவருக்கும் அது எவ்வளவு உற்சாகம் அளிக்கிறதாய் இருக்கிறது. சபைக்கு, முதலாவது உயிர்த்தெழுதலில் அளிக்கப்படுகின்ற மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெறுவது எவ்வளவு ஓர் ஆசீர்வாதமாக அது இருக்கும். மேலும் பிரசவ வேதனைப்படுகின்ற முழுச்சிருஷ்டிக்கும் திவ்விய அனுக்கிரகங்களை வழங்கும்படியாக ஆண்டவரோடு இணைந்து இருப்பது எவ்வளவு உன்னதமான சிலாக்கியமாக இருக்கும்! மேலும் யாரெல்லாம் வாஞ்சையாய் உள்ளார்களோ அவர்கள் எல்லோரையும் ஜீவத் தண்ணீரண்டை வந்து இலவசமாய்ப் பருக அழைப்பதும் எவ்வளவு உன்னதமான

சிலாக்கியமாயிருக்கும்! ஆம், அப்பொழுது, இராஜ்யத்தில் ஆவியும் மணவாட்டியும் "வா" என்று அழைக்கிறார்கள். (ஏனெனில் அவ்வேளையில் ஒரு மணவாட்டி உண்டு, மேலும் இந்தச் சுவிசேஷயுகத்தின் இறுதியில் ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் நடைபெறும்.) "விருப்பமுள்ளவர்கள் ஜீவத் தண்ணீரை இலவசமாக வாங்கிக் கொள்ளக்கடவன்." (வெளிப்படுத்தல் 22:17) கல்வாரியில் மீட்பின் பலி செலுத்தப்பட்டவுடன் தேவன் ஆசீர்வாதத்தை வழங்காமல் தாமதித்தார் என்பதற்கு இந்த இரண்டு காரணங்களும் நல்லவைகளாக இல்லையா! நாம் நிச்சயமாகவே இந்தத் தாமதத்தில் களிகூரலாம், மேலும் நாம் அழைக்கப்படும்படியாகவும், நம்முடைய தெரிந்து கொள்ளுதலை உறுதிப்படுத்திக் கொள்ளவும் நமக்குக் கிடைக்கின்ற வாய்ப்பினிமித்தம் நாம் களிகூரலாம்.

அன்பான நண்பர்களே, இது நம்முடைய சகோதரர் பெற்றிருந்த மகிமையான நம்பிக்கையைக் குறித்ததான ஒரு சுருக்கமான அறிக்கையாகும்; அவரை நினைவுகூர்ந்து, அந்த நினைவை கனப்படுத்துகிறோம். இந்த நம்பிக்கைகள் அவருடைய ஆத்துமாவிற்கு ஒரு நங்கூரத்தைப் போன்று இருந்தது. இது அவர் ஆண்டவர் பக்கத்தில் உறுதியுடன் நிற்கவும், ஆண்டவரை அறிக்கை செய்கிறவர்களோடு சமமாக நிற்கவும், அவரைப் பின்பற்றும்படியாக, அனுதினமும் சிலுவையைச் சுமப்பவர்களோடு சேர்ந்து நிற்கவும் உதவிச் செய்தது. உங்களில் அநேகர் அவரிடத்தில் காணப்பட்ட உயர்வான குணாதிசயங்களை நிச்சயமாகவே அறிந்திருப்பீர்கள். ஆனால் அவர் பூரணராய் இருந்தார் என்று எண்ணி அந்த எண்ணத்தின் மீது எங்களுடைய நம்பிக்கைகளையும், களிகூருதல்களையும் வைக்கவில்லை; ஆனால் கிறிஸ்து இயேசுவே அவர்களுடைய பரிபூரண மீட்பராயிருந்தார். மேலும் அவர்மேல் நம்பிக்கை வைக்கின்ற எவருமே வெட்கப்பட்டுப் போவதில்லை, மேலும், நாம் முடிவில் ஜெயம் கொள்ளுகிறவராக்கப்படுவோம் என்ற அறிவின் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நிச்சயமாகவே நாம் எல்லோரும் பின்பற்றும்படியாக நல்ல குணாதிசயங்கள் சகோதரரிடத்தில் இருந்தன, ஆனால் நாங்கள் உலகப் பிரகாரமான முறையைக் கையாள வேண்டியதில்லை. தேவன் தம்முடைய குமாரனையே ஒரு மகிமையான உதாரணமாகக் கொடுத்துள்ளார். நாம் ஒருவரையொருவர் நோக்கிப் பார்க்காமல், நல்ல முன்மாதிரியாயிருக்கிற இயேசுவை நோக்கிப் பார்ப்பது நல்லது. வீழ்ச்சியின் மூலம் வந்த சுபாவக் கறைகள் எல்லா மனிதரிடத்திலும் உண்டு, ஆனால் அவைகளை நாம் பாராமல், அவைகளெல்லாம் மூடப்பட்டுவிட்டன என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்; மேலும் அவர்கள் ஆண்டவரைப் பின்பற்றுகிறவர்கள், அவருடைய நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்டுள்ளார்கள் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்; மேலும் அதன் பயனாக அவர்கள் "நேசர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள்" என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கடைசியாக, அன்பான நண்பர்களே, தற்போதைய வாழ்க்கையின் ஆயுள் காலம் குறுகியதாய் உள்ளது என்பதைக் குறித்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்வோம். தேவன் உலகத்துக்கென பெரிய ஆசீர்வாதங்களை அளிக்கும்படியாக இருக்கும் வேளையில் அவருடைய கிருபைகளைக் குறித்தும், இயேசுவுக்குள்ளான இரட்சிப்பைக் குறித்தும் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கின்ற நமக்கு விசேஷமான சிலாக்கியங்களும், விசேஷமான வாய்ப்புகளும், ஆனால் அதே வேளையில் நம்முடைய அறிவுக்கு ஏற்றவிதமாக விசேஷமான பொறுப்புகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்போஸ்தலர் கூறுவது போன்று "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவன் எவனும், அவர் சுத்தமுள்ளவராய் இருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்." நாம் ஆண்டவரோடு இருக்க வேண்டும் என்றும், அவருடைய மகிமையில் பங்குகொள்ள வேண்டும் என்றும், எதிர்க்காலத்தில் அவருடைய கிருபையில் இணைந்திருக்க வேண்டுமென்றும் எதிர்ப்பார்த்தால், அதன் அர்த்தமானது, நம்முடைய குணாதிசயம் மறுரூபப்பட வேண்டும், நம்முடைய இருதயத்தின் நோக்கத்தில், நம்முடைய சித்தத்தில், கருத்தில் சுத்தமாயிருக்க வேண்டும், அதைவிட கூடுமானவரை வார்த்தையிலும், செய்கையிலும்கூட சுத்தமாக வேண்டும் என்பதை நாம் அறிவோம். இதைப்போன்றே பல்வேறு சூழ்நிலைகளில், வீழ்ச்சியினிமித்தமாகப் பரிபூரணமற்றதான இந்தச் சரீரங்களைப் புதிதாக்கப்பட்ட மனமும் கூட அடக்குவது சாத்தியமாகலாம். நாம் இயேசுவுக்குள்ளாகவும் நிலைத்திருக்க மறந்து விடக்கூடாது. இதைச் செய்து முடிப்பதற்கு நல்ல தீர்மானங்களை எடுப்பது அதிக உதவி அளிக்கும். ஆகவே இந்த மாதிரியான பயபக்தியான சூழ்நிலைகளில் நாம் புதிய தீர்மானங்களைச் செய்து கொள்வோம்; எப்படியெனில் பயபக்தியோடுகூட மனதில் மகிழ்ச்சிகரமான சிந்தனைகளோடு நம்மால் முடிந்தவரை இனிமேல், ஆண்டவருடைய பாதபடிக்கு மிக நெருக்கமாக நடக்க முயற்சிப்போம்; மேலும் நம்முடைய வாழ்க்கை மூலமாக அவருடைய சத்தியத்தின் வெளிச்சமும், கிருபையும் அதிகமதிகமாகப் பிரகாசிக்க இடமளிப்போம். நாம் வசிக்கின்ற உலகமானது ஒவ்வொரு நாளும் நல்லபடியாகவும், சந்தோஷம் நிறைந்ததாகவும் இருக்கும்படியாக நாம் முயற்சிக்க வேண்டும்; மேலும் நம்மால் இயன்றவரை அவருடையதாய் இருக்கின்ற நம்முடைய சரீரங்கள், ஆவிகள் மூலமாக தேவனை மகிமைப் படுத்துவோம். ஆமென்.

(4) பிரசங்கத்தினைத் தொடர்ந்து, செய்தியாளர் அல்லது சத்தியத்தில் தேர்ச்சிப்பெற்றுள்ள சகோதரர் ஜெபித்து முடிக்கலாம். பிரசங்கம் முடிந்தப் பின்னர், வெளியிலிருந்து ஓர் ஊழியக்காரர் ஒருபோதும் ஜெபிப்பதற்கென அழைக்கப்படக் கூடாது. அவர் தேவனுக்கு அல்லது மனிதருக்காகவே ஜெபத்தை ஏறெடுப்பார் என்பது அதிகளவிற்கு நிச்சயமாக இருக்கும்; மேலும் இந்தப் பிரசங்கத்தின் மூலமாக தங்கள் மனதில் ஜனங்கள் பெற்றுக் கொண்ட நன்மையானவைகளை

அழிக்க முயற்சி செய்வார். ஜெபம் செய்யும் போது, கிறிஸ்து இயேசுவுக்குள் உள்ள கிருபைக்காக தேவனுக்கு விசேஷமாக நன்றிச் செலுத்த வேண்டும்; மேலும் அவருடைய ஆசீர்வாதம் எல்லார் மேலும் குறிப்பாகக் குடும்பத்தில் இழப்பின் மூலம் துன்பப்படுகின்றவர்கள்மேல் விசேஷமாகத் தங்கியிருக்கும்படியும் ஜெபிக்க வேண்டும்.

(5) ஆராதனை, ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுள்ள ஒரு தகுதியான கீர்த்தனையின் ஒன்று அல்லது இரண்டு சரணங்களைப் பாடுவதோடு சரியான முறையில் முடிவுக்குக் கொண்டுவரப்படலாம்.

(6) சவப்பெட்டி இறக்கப்பட்ட பின்னர், கல்லறைத் தோட்டத்தில் ஒரு சில வார்த்தைகள் அடங்கிய ஜெபத்தையே ஆதரிக்கிறோம்.

## வித்தியாசமான சூழ்நிலைக்கு ஏற்ப வித்தியாசமான பிரசங்கங்கள்

மேலே சொல்லப்பட்ட பிரசங்கம் ஒரு "சகோதரிக்குக்" கூட செய்யப்படலாம் தவறல்ல, அவ்வேளையில் சகோதரர் என்ற சொல்லுக்குப் பதிலாக "சகோதரி" என்ற வார்த்தையைப் புகுத்துவதன் மூலமாக அப்படிச் செய்யலாம்; ஆனால் உலகப் பிரகாரமான ஒருவருக்கு அல்லது தன்னை முற்றிலுமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்காத ஒருவருக்காகச் செய்யும்போது, பிரசங்கம் செய்ய தகுதியுள்ள எந்த ஒருவரும் உடனடியாக அறிந்துகொள்ளும் படியாக தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டியதாய் இருக்கும்.

ஒரு குழந்தையாய் இருந்தால், பெற்றோர்கள் விசுவாசிகளாய் அல்லது அவிசுவாசிகளாய் இருந்தால், பிரசங்கம் அதற்கேற்றபடி மாற்றப்பட வேண்டியிருக்கும்; இறந்தவர் "நம்முடைய அருமை நண்பன் தன்னுடைய இளமைப் பருவத்தில் மரணம் என்கின்ற பயங்கரமான அறுவடைக்காரரின் ஆயுதத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார்" என்று கூறப்பட வேண்டும்; குழந்தையாய் இருந்தால் வேதப்பகுதி (எரேமியா 31:15-17) "நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு, உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பி வருவார்கள்" என்பதிலிருந்து எடுக்க வேண்டும். இப்படியான சமயத்தில், வயதில் முதிர்ச்சிப் பெறாத பிள்ளைகள் மரணத்திற்கு ஏதுவான பாவஞ்செய்ய முடியாதவர்கள் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்து என்பதைத் தெளிவாகக் கூறுவது நல்லது; மேலும் ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினிமித்தம்தான் பாவம் உலகத்தில் பிரவேசித்தது என்றும், முழு உலகத்தாரின் கீழ்ப்படியாமையினால் அல்ல அன்றும், இந்தப் பாவத்தின் விளைவாக அல்லது தண்டனையாக மரணம் வந்தது என்று கூற வேண்டும்.

# தசமபாகங்கள், காணிக்கைகள் போன்றவைகள்

"இந்த மார்க்கத்தார்" (அப்போஸ்தலர் 22:4) என்று அழைக்கப்படுகின்ற ஜனங்களில் எவரும், நாம் அறிந்தவரைப் பொதுவான காணிக்கை சேகரிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று ஆதரித்துப் பேசியுள்ளோம்; ஆனால் இந்த முறையில், இது பாவமான காரியம் என்று நாங்கள் நம்புவதினால் அல்ல, இல்லையென்றாலும் இதைக் குற்றமாகக் காட்டும்படியக வேதாகமத்தில் எதுவும் உள்ளது என்பதற்காக அல்ல, ஆனால் அந்தப் பணத்தைப் பற்றிய விஷயம் கிறிஸ்துவத்தின் எல்லாச் சபைப் பிரிவுகளினாலும் மிக முக்கியமாக்கப்பட்டுள்ளபடியால் எங்களுடைய கருத்து என்னவென்றால், அதை முற்றுமாக ஒதுக்குவது ஆண்டவருக்கு மகிமையைக் கொண்டுவரும் என்பதாகும். தங்கள் வாழ்க்கை முழுவதும் பணத்தை இச்சித்தவர்கள், பிரசங்கம் செய்வது, போதிப்பது போன்றவைகள் அதிகமாக வருமானத்துக்காகத்தான் செய்யப்படுகிறது என்று நம்பும் நிலைக்கு வேகமாக வந்து விடுகிறார்கள்; ஒருவேளை வருமானம்தான் முக்கியமான நோக்கம் என்று இல்லாவிட்டாலும், குறைந்தப் பட்ச வருமானத்திற்காகச் செய்யலாம் என்று எண்ணுகிறார்கள்.

ஆண்டவருடைய மக்களில் பெரும்பான்மையினர் இவ்வுலகத்தின் தரித்திரராகத்தான் இருப்பார்கள் என்பது, வேதம் அறிவிப்பது மாத்திரமின்றி, நம்முடைய அனுபவமும் அதை உறுதிச் செய்கின்றது. அதாவது ஐசுவரியவான்கள் அநேகரில்லை, உயர்ந்தவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை, ஆனால் "இந்த உலகத்தின் தரித்திரர் எனப்படுபவர்கள் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாக இருக்கிறார்கள்." இவர்களில் சிலர் இந்தச் சத்தியம் எடுத்துக் கூறப்படும் இடத்திற்கு வரும்வேளையில், உலகப் பிரகாரமான, பணம் பறிக்கும் ஆவி இல்லாமலிருப்பதைக் கண்டு ஒரு நிம்மதியை உணருகிறார்கள் என்று நாம் நிச்சயிக்கலாம்; சில வேளைகளில் இந்த அம்சம்தான் சத்தியத்தை அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறது. இந்தச் சத்தியத்தின் வெளிச்சத்திற்குக் கண்கள் திறக்கப்பட்டவர்கள், சத்தியத்திற்காக ஊழியஞ்செய்ய வேண்டுமென ஒரு வைராக்கியத்தாலும், பலத்தினாலும் பிடிக்கப்படுகிறார்கள்; மேலும் பிதா மற்றும் குமாரனின் மகிமைக்காக அவர்களுடைய வெளிச்சம் பிரகாசிக்க வேண்டுமென்று அவர்களுடைய வாஞ்சை அவ்வளவுப் பெரிதாக இருப்பதால், அனலற்ற அநேக கிறிஸ்தவர்கள் கேட்க விரும்புவது என்னவெனில்: இதன் நோக்கம் என்ன? இதன் குறிக்கோள் என்ன? அது உனக்கு எப்படிச் சம்பளம் கொடுக்கும் அல்லது அதனால் உனக்கு என்ன அநுகூலம் கிடைக்கும், என்னை இதில் பிரியப்பட வைக்கும்படியாகச் செய்வதால், எனக்குப் புத்தகங்கள் இரவலாகக் கொடுப்பதினால், இல்லையென்றால் நீ பார்க்கின்ற இந்த வேதாகம கருத்துகளுக்கு

என்னுடைய கவனத்தை ஈர்க்கும்படியாக உன்னுடைய நேரத்தைச் செலவிடுவதால் உனக்கு என்ன பயனுண்டு? என்பதாகும். கூட்டங்களுக்கு வந்து, வழக்கமான காணிக்கை எடுப்பது, பணத்தை இச்சிப்பது போன்றவை இல்லாதிருப்பதைக் கண்டு, இப்படியாக வினா எழுப்புபவர்கள்தான், அது அன்பினிமித்தமாகச் செய்யப்படுகின்றது, ஆண்டவருக்கென்றும், அவருடைய சத்தியத்திற்கென்றும் அவருடைய மந்தைக்காகவும் செய்யப்படுகிறது என்பதைக் குறித்து அதிகமாக உணர்த்தப்படுகிறார்கள். மேலும் அவர்களைச் சத்தியத்திற்குள்ளாகக் கொண்டுவரும்படியாக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இவைகள்தான் ஊக்கத்தை அளித்திருக்கின்றன. சத்தியத்திற்கு எதிராக ஏதோ ஒரு விதத்தில் தப்பெண்ணம் கொண்டிருந்தாலும்கூட, உண்மையான தாழ்மைக்குச் சாட்சிக் கூறுகின்ற இவைகள், மேலும் தேவனைப் போன்று இரக்கமாய் தயாளமாய் இருக்கின்ற ஆவியும் காணப்படும்போது, அவர்களிடமிருந்து தேவனுடைய ஆவி, அன்பின் ஆவி புறப்பட்டு வந்ததுபோன்று அவர்களை எடுத்துக்காட்டுகிறது.

இந்தக் கருத்தை வற்புறுத்துவதோடு, எல்லா இடங்களிலும் இருக்கின்ற தேவனுடைய மக்களுக்கு மனப்பூர்வமாகச் சிபாரிசு செய்கிற வேளையில், இன்னொரு பக்கம், ஒருவன் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போதும், அவருக்கெனத் தன்னை அர்ப்பணிக்கும் வேளையிலும் அவன் எவ்வளவுதான், இழிவானவனாக, சுயநலக்காரனாக, கஞ்சனாக இருந்தாலும், அவனுடைய சுயநலத் தன்மையிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வெற்றியைப் பெறாமல் "பரலோகத்தில் நாமங்கள் எழுதப்பட்டிருக்கின்ற சபையோடு" அதற்குத் தலையாய் இருக்கின்ற ஆண்டவரோடு இணைந்திருக்க முடியாது. சுயநலமும், கஞ்சத்தனமும் நம்முடைய பலலோகப் பிதாவின் ஆவிக்கும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் ஆவிக்கும் பொருந்தாததாய் இருக்கிறது என்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம். ஆகவே, இறுதியில் அவர்கள், பிதாவினுடைய பிள்ளைகள் என்று அறியப்படுகின்ற அனைவருக்கும் இது பொருத்தமாய் இருக்கலாகாது. இவர்கள் எல்லோரும் குடும்பச் சாயலை உடையவர்களாக இருக்க வேண்டும்; இதன் முக்கியமான குணாதிசயம் அன்பாக, இரக்கமாய் இருக்கிறது. புதுச் சிருஷ்டியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறவரின் அழிந்து போகக்கூடிய சரீரத்தில் இந்தக் கஞ்சத்தன ஆவி பரம்பரைத் தன்மையினாலோ அல்லது துரதிருஷ்டவசமான சூழ்நிலையினாலும், கல்வியினாலும் முக்கியமாக வளர்ந்திருந்தால், கூடிய சீக்கிரத்தில் இது சம்பந்தமாக ஒரு யுத்தம் வருவதை அவன் காணலாம். அப்போஸ்தலர் கூறியபடி மாம்சம் ஆவிக்கு - புதுச் சிருஷ்டிக்கு விரோதமாக இச்சிக்கிறது. ஜெயங்கொள்ளுகிறவர்கள் மத்தியில் இடம்பெற வேண்டுமென்றால், இறுதியில் புதுச் சிருஷ்டியின் மனம் வெற்றி பெற வேண்டும். சுயநலமும், கஞ்சத்தனமும் மேற்கொள்ளப்பட வேண்டும்; இருதயத்திலும், செயலிலும் தேவ பக்தியும், தயாளமும், பெருந்தன்மையும் கவனமாக வளர்க்கப்படல் வேண்டும். இப்படிப்பட்டவர்கள், மரணம்வரைகூட மாம்சத்தோடு போராட வேண்டியதிருக்கும்.

ஆனால், மனதின் புதுச் சித்தத்தைக் குறித்து எந்தக் கேள்வியும் இருக்கக்கூடாது. அவர்களை நன்கு அறிந்தவர்கள், மாம்சத்தின்மேலும், சுயநல மனதின்மேலும் புது மனது வெற்றிப் பெற்றிருக்கிறதை அவர்களுடைய நடத்தையிலிருந்து நிச்சயமாக தெரிந்துகொள்வார்கள்.

ஆகவே சபைக்கூட்டங்களில் காணிக்கைகள், பண விஷயங்களைத் தவிர்க்க வேண்டும் என்பது பற்றிய நம்முடைய எண்ணம், கொடுப்பதை அதைரியப்படுத்த வேண்டும் என்பதல்ல. நாம் கவனித்துள்ளபடி, ஆண்டவருக்கென்று அமோகமாக, இதயப் பூர்வமாக, உற்சாகமாகக் கொடுப்பவர்கள்தான் ஆவிக்குரிய விஷயங்களில் அவரால் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள். "உற்சாகமாய்க் கொடுப்பவனைத் தேவன் நேசிக்கிறார்" என்ற கூற்றைக் குறைத்துக் கூறவில்லை. இந்த வாக்கியம் பொருளினால் செய்யப்படும் உதவியை மட்டும் குறிக்கிறது என்று நாங்கள் மட்டுப்படுத்தவில்லை, ஆனால் உற்சாகமாகக் கொடுக்கப்பட வேண்டியது, ஆண்டவருடைய ஜனங்கள் பலிபீடத்தில் செலுத்தும்படி சிலாக்கியம் பெற்ற எல்லா வெகுமதிகளையும், பலிகளையும் உள்ளடக்கியது என்று நாம் கூறுகிறோம். இதைத் தேவன் நம்முடைய மீட்பரின் புண்ணியத்தினால் பெற்றுக்கொள்ளப் பிரியப்படுகிறார் என்று சொல்லுகிறார். உண்மையாகவே கீழ்க்காணப்படுகின்ற கேள்விகள் எங்கேயும், எப்பொழுதும் கேட்கப்படுகின்றன: நான் தொழில் செய்வதின் மூலம், என் கைகளின் பிரயாசத்தினால் வரும் பலன்களைக் கொடுப்பது, என்னுடைய மூளையைச் செலவிடுவது, இப்படிப்பட்டக் காரியங்களால் சத்தியத்தைப் பரப்புவது நல்லதா? அல்லது என்னுடைய அதிகமான நேரத்தையும், என்னையும் சத்தியத்தின் நலனுக்காகவும், அதை என் நண்பர்கள் அயலகத்தார் மத்தியில் பிரகடனம் செய்வதற்காக நான் இன்னொரு வழியைப் பின்பற்ற வேண்டியிருக்கும்போது குறைவான திறமை, சேவை மனப்பாங்கு என்னிடத்தில் இருந்தாலும் அதோடு நான் திருப்தியடைந்துவிடலாமா? நாங்கள் அளிக்கும் பதில், எல்லோரும் சொல்லுகிறபடி, தேவனுடைய பார்வையில் பணத்தைக் காட்டிலும், சத்தியத்திற்காக நாம் செலவிடும் நம்முடைய நேரமும், செல்வாக்கும் அதிக மேலானதாய் இருக்கிறது என்பதே!

ஆகவே, ஒருவர் சத்தியத்தை எடுத்துக்கூற திறமையுள்ளவர் என்று காணப்படும் பட்சத்தில், மேலும் அவருக்குச் சரியான முறையில் பணம் சம்பாதிக்கும் திறமை இருக்கிறது என்று அறியப்பட்டால், நாம் ஆலோசனையாகக் கூறுவது என்னவெனில், அவன் தன்னால் இயன்றவரை தன்னுடைய நேரத்தையும், கவனத்தையும், பலத்தையும், சத்தியத்தை எடுத்துக் கூறும்படியாக அவருக்கு இருக்கின்ற திறமையை உபயோகப்படுத்தும்படியாக, அவர் தன்னுடைய பணம் சம்பாதிக்கும் திறமையை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மாத்திரம் வைத்துக் கொள்வது நலமாயிருக்கும். புத்தகங்கள், துண்டுபிரதிகள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவது போன்று செய்யப்படும் சத்தியத்தின் ஊழியங்களுக்கும் ஓரளவுக்கு இது பொருந்தும்.

"வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பது ஆசீர்வாதமானது" என்கிற உண்மையை திவ்விய சுபாவத்தில் நல்ல ஒரு முன்னேற்றத்தை அடைந்த தேவனுடைய ஜனங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். தேவன் கொடுப்பதில் மிகச் சிறந்தவர் - அவர் தொடர்ந்து கொடுத்துக்கொண்டே இருக்கிறார். முழுச்சிருஷ்டியும் அதனதின் பங்கில் தேவனுடைய கருணையினால் இருக்கிறது. ஜீவனையும், சந்தோஷங்களையும், அவரோடு நெருங்கி ஜீவிப்பதினால் வரும் ஆசீர்வாதங்களையும், தம்முடைய ஒரே பேறான குமாரனையும் கொடுத்தார். தேவ புத்திரருக்கு அவர் எண்ணிலடங்காத ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். தகப்பனாகிய ஆதாமுக்குள், நம்முடைய இனத்திற்கு, ஜீவ ஆசீர்வாதத்தையும், உலகத்திற்கான அபரிதமான ஆசீர்வாதங்களையும், இப்படிப்பட்ட விழுந்துபோன, இழிவான நிலையிலும் கொடுப்பது ஆச்சரியமானது. நாம் வாசனையை, வாசனையூட்டும் சக்தியை, அழகான வர்ணங்களை, இவைகளின் கலவைகள் ஆகியவைகளை நாம் உணரும்படியாக அவர் நமக்கு ஐம்புலன்களைத் தந்தது மாத்திரமல்ல, இந்தச் சுவைகளை நாம் அனுபவிக்கும்படியாக இயற்கையை அற்புதமாக, அபரிதமாகத் தந்துள்ளார். சாதாரண மனிதனுக்குக் கனிகள், பூக்கள், முத்தான நட்சத்திரங்கள், ஆகாயம் ஆகியவை மூலம் தம்முடைய வெகுமதிகளை வழங்குவதில் தாராளமாக இருந்திருக்கிறார்.

தேவனுடைய வசனத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, புதுச் சிருஷ்டியின் "சிறு மந்தைக்கு" தேவன் அளிக்கும்படியாக வைத்திருக்கின்ற ஆசீர்வாதங்களை நாம் ஆராயும்போது, அவைகள் நாம் கேட்பதற்கும், நினைத்துப் பார்ப்பதற்கும் மேலாக அபரிதமாக இருக்கின்றது என்பதை ஒத்துக் கொள்ளுகிறோம். "எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை காது கேட்கவுமில்லை அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." ஆகவே தயாளம் அல்லது கொடுப்பது, உதவிச் செய்வது, மற்றவர்களை ஆசீர்வதிப்பது ஆகியவைகள் தேவனைப் போன்று இருப்பதின் ஒரு பகுதியாகும். அப்படியென்றால் வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பது உயர்வானது என்று நாம் வாஞ்சிப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

ஆவிக்குரிய விஷயங்களை நாம் வாஞ்சிக்கிற அளவிற்கும், ஆண்டவரோடு ஐக்கியங்கொள்ளும் அளவிற்கும், அவருடைய ஆவியில் பங்குள்ளவர்களாகும் அளவிற்கும், அன்பு, தயாளம், தானம், பெருந்தன்மை ஆகியவை நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டுள்ள அளவிற்கும் தக்கதாக எல்லா மனிதருக்கும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்வதில் நாம் களிகூருவதைக் காண்கிறோம். பரலோகப் பிதாவுக்குள் இருக்கிற அன்பைப்போல், நமக்குள் இருக்கின்ற அன்பு, தன்னுடைய சொந்த விருப்பங்களையும், நலன்களையும் பார்க்கிறதில் மட்டும் இருந்துவிடாமல், மற்றவர்கள்மேல் எப்படிப் பொழியப்படலாம்

என்று தொடர்ந்து பார்ப்பதில் ஜாக்கிரதையாய் இருக்கிறது மாத்திரமல்ல, எப்படி மற்றவர்களுடைய வாழ்க்கையைப் பிரகாசமுள்ளதாக, சந்தோஷமானதாக மாற்றலாம், எப்படி அவர்களுடைய துக்கங்களிலே அவர்களை ஆறுதல்படுத்தலாம், எப்படி அவர்களுடைய தேவைகளில் உதவிச் செய்யலாம் என்பதைப் பார்ப்பதிலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உண்மையிலேயே இந்தப் புதிய மனது நமக்குள்ளே எந்தளவுக்கு ஊற்றப்பட்டு இருக்கிறதோ அந்தளவுக்கு, நம்முடைய மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகிறோம்; மேலும் மகிமையின்மேல் மகிமையடைந்து, நமக்கென, எதிர்க்காலத்தில் தேவன் வைத்திருக்கின்ற பெரிய வேலைகளை - தேவனைப்போன்று செய்கின்ற வேலையாகிய பூமியின் எல்லாக் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கின்ற, அவரோடு ஒருமனப்படுபவர்கள் எல்லோருக்கும் பரலோக ஆசீர்வாதங்களைப் பகிர்ந்தளிக்கும் அவருடைய பிரதிநிதியாக இருக்கிற வேலைகளை - உணருகிறோம். ஆகவே புதுச் சிருஷ்டிகள் கிருபையில் வளருகின்ற அளவின்படி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தனிப்பட்ட மகிமைகளை உணர்ந்திருக்கும் வேளையில், அவர்களுடைய ஆண்டவரோடு உடன்சுதந்திரராய் இருப்பதால் வரக்கூடிய சிலாக்கியங்களை விசேஷமாக அதிகமாக எண்ணுவதோடு, பிரசவ வேதனைப்படுகின்ற சிருஷ்டி, இழந்து போனதைத் திரும்பப் பெறும்படியாக ஊழியஞ்செய்வதையும், அதன் பெருத்த ஆசீர்வாதங்களையும், ஆதாமுக்குள் நாம் விழுந்த நிலையிலிருந்து அவர்களில் மனுக்குலத்தின் பூரணத்திற்கு, அவர்களில் அநேகரை எழுப்புவது குறித்தும் எண்ணுகிறார்கள்.

அன்பின் ஆவியானது, மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும், உதவிச் செய்ய வேண்டுமென்ற இந்த ஆசை, தற்காலத்தில் நம்முடைய இருதயங்களில் வளரும்போது, மற்றவர்களைக் குறித்த தயாள சிந்தைக்கு வழிநடத்துவது மாத்திரமல்ல, நடத்தையிலும், தயாளத்தைக் காட்டும்படி, மற்றவர்களுக்காக நம்முடைய நேரத்தையும் செல்வாக்கையும் பலியாகச் செலுத்தும்படியான விருப்பத்திற்கும் நேராக வழி நடத்துகிறது; அதன்படியாக நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பது போலவே அவர்களும்கூட தற்போதுள்ள சத்தியத்தின் வெளிச்சத்தினால் ஆசீர்வதிக்கும்படியாகச் செய்கிறது; இதே ஆவி, போதிக்கவோ, விளக்கிக்கூறவோ தாலந்து இல்லாதிருக்கும்போது, நம்முடைய நேரம் என்கிற தாலந்தையும், வாய்ப்பையும் பயன்படுத்தித் துண்டுப்பிரதிகள் போன்றவற்றை விநியோகிக்கும்படியாக வழி நடத்துகிறது. இப்படிச் செய்யும் வேளையில், எவ்வளவுதான் சுருக்கமாக இருந்தாலும், காலத்துக்கேற்ற ஒரு சத்திய வார்த்தையைச் சொல்ல வேண்டும். நமக்குப் பணம் என்ற தாலந்து இருக்குமென்றாலும், அதைச் சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்யும் ஆண்டவருடைய ஊழியத்தில் பயன்படுத்தும்படி அந்த ஆவி வழிநடத்துகிறது. காணிக்கைப் பெட்டியிலே இரண்டு காசைப் போட்ட ஏழை விதவையின் மனப்பாங்கை ஆண்டவர் அப்பொழுது ஆதரித்ததுபோல, இன்றைக்கும் ஆதரிக்கிறார் என்று நாம் நம்புகிறோம். அவளுடைய தன்னலமற்ற

செயல், இந்தச் சிறு காணிக்கையின் மூலம் வெளிப்பட்டது; ஆகவே ஆண்டவருடைய பார்வையிலும், பிதாவினுடைய பார்வையிலும், அவள் கொடுப்பதில் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறாள் என்று ஆண்டவருடைய அறிவிப்புக் காட்டியது. அவருடைய இருதயத்தின்படி: "இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்." (லூக்கா 21:4) ஆகவே சொல்லப்போனால், நம்முடைய ஆண்டவர் செய்து வந்தபடியே, பொதுவானக் காரியத்திற்காக, அவளும் தன்னுடைய வழியில் செய்து கொண்டிருந்தாள். ஒரு ஜீவனத்தைக் கொடுத்தது மாத்திரமல்ல, தன்னுடைய ஜீவனையே, அனுதினமும், ஒவ்வொரு மணிநேரமும் மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்வதில் கொடுத்தார்; கடைசியில், கல்வாரியில் முற்றும் முடிய தம்முடைய கிரியையை நிறைவேற்றினார்.

நம்முடைய ஆண்டவர் அந்த ஏழை விதவையைத் தன்னுடைய கடமைக்கு அதிகமாகச் செய்தாள் என்று எச்சரிக்கவில்லை என்று ஆச்சரியப்பட முற்படலாம்; அவளிடத்தில் இரண்டு காசு மாத்திரம் இருந்ததால், அவைகள் இரண்டையும் அவள் வைத்து இருந்திருக்கலாம் அல்லது அவளுடைய தேவைகளுக்கென்று ஒன்றையாவது வைத்து இருந்திருக்கலாம் என்று நினைக்கத் தோன்றலாம். இந்த விதவையின் காணிக்கையைப் பார்த்து, அதைப் புகழ்ந்தவர்கள், அதைக் குறித்து ஒரு வார்த்தையாவது எச்சரிப்பாகச் சொல்லாமல் இருந்தது, நம்முடைய ஆண்டவரோ அல்லது அப்போஸ்தலர்களில் ஒருவரோ இல்லாமல் வேறு யாராவது இருந்திருந்தால், அவர் அந்த எச்சரிப்பின் வார்த்தையைச் சொல்லுவதற்குப் பூரணச் சுதந்திரத்தோடு இருந்திருப்பார். ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது தனக்கானதைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற ரீதியில் எச்சரிக்கப்பட வேண்டும் என்பது ஒரு சிலருக்கே தேவைப்படும் என்று நாம் நம்புகிறோம். தங்களுடைய ஜீவனத்திற்கென்று உள்ளவைகள் எல்லாவற்றையும் கொடுப்பது என்பதற்கு எதிராக ஒரு சிலருக்கே எச்சரிப்புத் தேவை. அப்படி ஒரு சிலர் இருக்கலாம். ஏழை விதவையைப் போன்று ஒரு சிலர் இருக்கலாம் என்று நாம் நம்புகிறோம். ஆனால், அதிகப்பட்ச தாராளம் என்று நாம் எண்ணும் செயல்களுக்கு ஏற்ப ஆண்டவர் அவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் ஈடு செய்வார். கேள்வி எழுப்பப்படும் பக்கமாக தவறு செய்தாலும் பரவாயில்லை (எல்லாவற்றையும் காணிக்கையாக அளிப்பது), ஆனால் அதைக் காட்டிலும் அதற்கு எதிர்மாறாக தவறு செய்யாமல் இருப்பது நல்லது என்று நாம் நிச்சயித்திருக்கிறோம். "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு (இயற்கையானவைகளில் வரும் விருத்தியல்ல, நிச்சயமாகவே அது ஆவிக்குரிய விஷயங்களில் வரும் விருத்தியாகும்), அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் (அதிக ஜாக்கிரதை உள்ளவர்கள், அதிக எச்சரிப்புடன் இருக்கிறவர்கள், இருப்பவர்கள், அதிகமாகத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பவர்கள்) வறுமையடைவாரும் உண்டு." (சில சமயங்களில் பண விஷயத்தில் தரித்திரம் அடையப்பண்ணுகிறது,

ஆனால் எப்பொழுதுமே ஆவிக்குரிய தரித்திரத்திற்கு வழிநடத்துகிறது). (நீதிமொழிகள் 11:24)

ஆண்டவர் தாராள குணத்தைக் குறித்து அவருடைய ஜனத்தின்மேல் எந்தவிதமான சட்டத்தையும் வைக்காமல், தங்களுக்குரிய எல்லாவற்றையும் அவருக்கென்று அர்ப்பணம் செய்து கொண்டவர்களிடத்தில் அந்த விஷயத்தை விட்டுவிட்டபடியால், அவர்களுடைய அர்ப்பணிப்பு, அவர்கள் நடந்துகொள்ளும் விதத்திலிருந்து, அதாவது அவர்களுடைய தியாகங்கள், சுயத்தை வெறுப்பது என்பவைகளிலிருந்து கணக்கிடப்படும் என்பது தெளிவாகிறது. அப்படியென்றால் நம்மில் ஒவ்வொருவருக்கும் முன்பாக, தனித்தனியாக வருகிற சரியானக் கேள்வி, ஆண்டவருக்கென்று எந்தளவிற்கு நம்முடைய நேரத்தை, நம் செல்வாக்கை, நம் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்பதாகும். இப்படியான கேள்வி தன்னை முற்றுமாக அர்ப்பணித்த, புதுச் சிருஷ்டியிடமிருந்து வருமென்றால் அதற்கு ஒரே பதில்தான் இருக்கமுடியும், அது என்னவெனில், அவர் தன்னிடத்திலுள்ள எல்லாவற்றையும் ஆண்டவருக்கென்று அர்ப்பணித்துவிட்டப்படியால், அவருக்குக் கொடுப்பதற்கென்று ஒன்றும் கிடையாது என்று பதில் சொல்லுகிறோம். அவர் தன்னிடமாக ஏதாவது ஒன்றை வைத்துக் கொண்டிருப்பார் என்றால், அப்பொழுது அவர் ஒரு முழுமையான அர்ப்பணிப்பைச் செய்யவில்லை, மேலும் அவர் ஆண்டவரால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை அவர் நிச்சயித்துக்கொள்ளலாம்.

ஆனால், நாம் எல்லாவற்றையும் ஆண்டவருக்கென்று கொடுத்துவிட்டோம் என்று வைத்துக் கொண்டால், இந்த நன்மையைச் செய்யும்படியாக தேவனுடைய சித்தத்தை எப்படி நிர்ணயிப்போம்? ஒவ்வொருவரும் தன்னைக் குறித்துச் சிந்திக்க வேண்டியது எப்படி என்றால், அவரவர் தன்னுடைய சொந்த நேரம், செல்வாக்கு, பணம் போன்றவைகள்மேல் உக்கிராணக்காரனாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று எண்ண வேண்டும் என்று நாம் பதில் கூறுகிறோம். மேலும் ஒவ்வொருவரும் தன்னுடைய திறமைக்கு ஏற்ப இந்தத் தாலந்துகளை ஆண்டவருடைய மகிமைக்கென உபயோகப்படுத்த வேண்டும். கிருபையின் சிங்காசனத்திற்கு வரும்படியான சிலாக்கியம் அவனுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறபடியால், இந்தத் தாலந்துகளை உபயோகப்படுத்துவதைக் குறித்து அவனுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் ஞானத்தைக் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்க வேண்டுமென்று பொருள்படும். பரத்திலிருந்து வருகிற இந்த ஞானத்தினால் வழிநடத்தப்பட்டு, அவனுக்கு இருக்கும் அன்பு, வைராக்கியம் என்பவைகள் சத்தியத்தை அறிகிற அறிவிலும், அதன் தன்மையை அடைவதிலும் நாளுக்கு நாள் வளரும்போது, அவனிடத்தில் இருக்கிற அவனுடைய நேரத்தில், செல்வாக்கில் அதிகமதிகமாக சத்தியத்தின் ஊழியத்திற்கென தான் கொடுப்பதை அவன் கண்டுகொள்ளுவான். மேலும், இதற்கும் அதிகமாக, தன்னுடைய காணிக்கைகளையும் ஜீவ பலியையும்

அதிகமாகச் செலுத்தும்படியாக, தன்னுடைய தனிப்பட்ட, குடும்பப் பொறுப்புகளை எப்படிக் குறைத்துக்கொள்ளலாம் என்று திட்டமிடுவான்.

தேவன் யூதர்களிடம் தசமபாகம் செலுத்தும் ஒரு முறையை உண்டுபண்ணினார் என்பது நன்கு அறிந்த விஷயம். இதன்படியாக எல்லா செல்வப் பெருக்கிலும் பத்தில் ஒரு பங்கு, தானியமானாலும் சரி, அல்லது காய்கறிகள், அல்லது மந்தைகள் அல்லது பறவை அல்லது மிருகக் கூட்டங்கள் அல்லது பணமானாலும் சரி, ஆண்டவருடையது என்று பரிசுத்தமான உபயோகத்திற்கென்று பிரித்துவைக்கப்பட்டுள்ளது; இது பரிசுத்தமானக் காரியங்களுக்கு மாத்திரமே உபயோகப்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால் இந்த ஓர் ஒழுங்கு "ஊழிய வீட்டாருக்கு" மாத்திரமென இருந்தது. ஆனால் இதை ஆண்டவர் "புத்திரரின் வீட்டாருக்கு" வைக்கவில்லை. அவர் பணிவிடைக்காரனைக் காட்டிலும் புத்திரரிடமிருந்து குறைவாக எதிர்ப்பார்க்கிறார் என்று இது அர்த்தப்படுகிறதா! நிச்சயமாக இல்லை. தகப்பனுடைய காரியத்தில், பணிவிடைக்காரனைக் காட்டிலும் அதிக வாஞ்சையில்லாத புத்திரன், புத்திரன் எனும் ஸ்தானத்திற்குத் தகுதி இல்லாதவனாய் இருப்பான், மேலும் அந்த ஸ்தானத்தை அவன் நிச்சயமாக இழந்து போவான்; மேலும் புத்திரனுக்குரிய உண்மையான குணத்தையுடைய இன்னொருவன் கண்டுபிடிக்கப்படுவான்; புத்திரரின் வீட்டைப் பொறுத்தவரை, பத்தில் ஒரு பங்கு மாத்திரமல்ல, எல்லாமே, பரிசுத்தமாக்கப்பட்டுள்ளது, பலியாகச் செலுத்தப்பட்டுள்ளது, எல்லாமுமே தருணம் கிடைக்கும் போதெல்லாம் ஆண்டவருக்கும் அவருடைய வேலைக்காகவும் செயல்படுத்தப்பட வேண்டும். இப்படியாக நம்முடைய ஜீவியத்தை, நமக்கு உண்டான எல்லாவற்றையும், சத்தியத்தின் ஊழியத்திற்கென கொடுப்பதில் தொடர்ந்து முன்னேற வேண்டும்.

பிலிப்பியருக்கு அப்போஸ்தலர் எழுதிய நிருபத்தில் (பிலிப்பியர் 4:17) அவர் அவர்களுடைய உபகாரம் பிரயோஜனமாயிருந்தது என்று மாத்திரமல்ல திருப்தியடையவும் செய்தது என்று கூறும்போது இந்தப் பாடத்தை நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார். மேலும் அவர் "உபகாரத்தை நான் நாடாமல் உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன்" என்றும் கூறுகிறார். அவர்கள் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறபடியால், அது நல்ல கிரியைகளின் கனியையும், தயாளத்தையும் கொண்டு வருமென்று அவர் நிச்சயமாக அறிந்திருந்தார்; மேலும் எவ்வளவு அதிகமான அளவுக்கு தயாளம் காணப்பட்டதோ, அந்தளவு அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியையும் அவரால் காண முடிந்தது; இதைத்தான் அவரும் உண்மையில் வாஞ்சித்தார். இன்றைக்கும் இப்படித்தான் இருக்கிறது. பொன்னும், வெள்ளியும், ஆயிரம் குன்றுகள் மேலுள்ள ஆடுமாடுகளும் அவருடையது என்று ஆண்டவர் சொல்லுகிறார். உண்மையிலேயே நம்முடைய முயற்சிகளும், பணமும் அவருக்குத் தேவையில்லை; ஆனால் அது நம்முடைய நன்மைக்கேதுவாக இருக்கும் என்பதால், நாம் வளருவதில் அது உதவிச்செய்யும் என்பதால், அவருடைய கிரியை இப்படியான ஒரு நிலையிலிருக்க அவர் அனுமதிக்கிறார்; அதன்படி உண்மையாகவே அவருக்குச் சொந்தமானவர்களுடைய

எல்லா முயற்சிகளும், மேலும் அவரை மகிமைப்படுத்தும்படியாக அவர்கள் உபயோகிக்கக்கூடிய எல்லா வழிமுறைகளும் அவருக்குத் தேவைப்படுகிறது.

இந்த ஒழுங்கு எவ்வளவு கிருபையுள்ளதாயிருக்கிறது! ஆண்டவருடைய அன்பான ஜனங்களுக்கு இந்த ஆசீர்வாதங்கள் எப்படிப்பட்ட சிலாக்கியங்களை ஏற்கெனவே கொண்டு வந்துள்ளது! நம்முடைய தாலந்துகளை உபயோகிக்கும்படியான ஆசீர்வாதமான சிலாக்கியங்கள், எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும், ஆண்டவருடைய ஊழியத்தில் பயன்படும் படியாக நம்முடைய ஓட்டத்தின் இறுதிவரை தொடர்ந்து நம்மோடிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏழ்மையான விதவை, அவளுடைய இரண்டு காசுகளை உதாரணமாகப் பார்த்தப் பின்னர், இருதயத்திலுள்ள தங்கள் வாஞ்சையை ஆண்டவருக்குக் காட்ட முடியாதபடி ஒருவரும் கிடையாது என்று நாங்கள் கூறுகிறோம். நம்முடைய ஆண்டவருடைய மதிப்பீட்டின்படி, ஓரிடத்தில் கூறப்பட்டபடி, கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும், அதிகமானச் சந்தர்ப்பங்களிலும் உண்மையுள்ளவனாக இருப்பான்; மேலும் இப்படிப்பட்டவர்களுக்கே ஆண்டவர் எதிர்காலத்தின் பெரிய சந்தர்ப்பங்களையும் மாத்திரமல்ல, தற்காலத்திலுள்ள அதிகப் பெரிதான சந்தர்ப்பங்களையும் கொடுக்க விருப்பமுள்ளவராய் இருப்பார்.

எங்களுடைய ஆலோசனை என்னவெனில், பணத்தைப் பற்றிய காரியம் கூடுமானவரை (முற்றிலுமாக விடப்பட வேண்டுமென்று நாம் நம்புகிறோம்) சபையின் பொதுவான கூட்டங்களில் யோசனைப் பண்ணப்படக்கூடாது என்பதாகும். நாம் ஆலோசனையாகச் சொல்வது என்னவெனில், ஆண்டவருடைய ஆவி வளர்ப்பிக்கப்படல் வேண்டும், அது அதிகமாக நமக்குள் தங்கியிருக்கும்போது, ஒவ்வொருவரும் ஆவிக்குரிய கூட்டத்திற்காகத் தன்னுடைய பங்கைச் செய்ய ஆவலோடு இருப்பார்கள்; அது சபையின் அன்றாட செலவுகள் மாத்திரமல்ல, வாடகையாக ஒருவேளை இருக்கலாம், அல்லது மற்றச் செலவுகளாக இருக்கலாம், இவைகளைக் குறித்து ஆவலோடு இருப்பதோடு, தன்னுடைய ஆத்துமாவிற்கு ஆசீர்வாதமாயிருக்கிற வெளிச்சத்தை இன்னும் இருளில் அமர்ந்திருக்கிற மற்றவர்களுக்கும் பரவச் செய்ய ஆவலுள்ளவனாய் இருப்பான். இதைப்போன்றே வெளியில் உள்ளவர்களிடத்தில் இருந்து பணம் கேட்கப்படக் கூடாது என்று நாங்கள் புத்தியாகக் கூறினாலும், வெளியில் உள்ளவர்களால் கொடுக்கப்பட்ட பணம் மறுக்கப்பட வேண்டும் என்பதற்கானக் காரணத்தை நாங்கள் காணவில்லை. அது அவர்களுடைய அனுதாபத்தைக் காட்டுவதாகக்கூட இருக்கலாம், அது இந்த வாழ்க்கையிலோ அல்லது வரக்கூடிய வாழ்க்கையிலோ, சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக்கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று சொன்னவரிடத்தில் இருந்து ஏதாவது ஒரு நன்மதிப்பும், வெகுமதியும் கிடைக்காமல் போகாது. (மத்தேயு 10:42; மாற்கு 9:41)

ஆமென்!!

புதுச்சிருஷ்டியில் ஒழுங்குமுறைகள்

# அட்டவணை

# ரீப்பிரிண்ட்ஸ் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகளுக்கான அட்டவணை


| ரீப்பிரிண்ட்ஸ் எண் | பக்கம் |
|---|---|
| 241 | 514 |
| 295 | 88 |
| 536 | 3 |
| 664 | 88 |
| 1034 | 587 |
| 1075 | 605 |
| 1136 | 437 |
| 1159 | 429 |
| 1475 | 441 |
| 1521 | 48 |
| 1539 | 587 |
| 1548 | 561 |
| 1720 | 332 |
| 1793 | 757 |
| 1847 | 338 |
| 1866 | 687 |
| 1883 | 46 |
| 1889 | 7 |
| 1900 | 683 |
| 1902 | 585 |
| 1956 | 259 |
| 2079 | 523 |
| 2156 | 648 |
| 2220 | 326 |
| 2264 | 488 |
| 2278 | 652 |
| 2291 | 753 |
| 2442 | 383 |
| 2449 | 125 |
| 2654 | 103 |
| 2924 | 289 |
| 2951 | 362 |
| 2995 | 131 |
| 3004 | 503 |
| 3011 | 307 |
| 3014 | 277 |
| 3033 | 189 |
| 3077 | 438 |
| 3089 | 675 |
| 3135 | 387 |
| 3142 | 402 |
| 3171 | 208 |
| 3210 | 457 |
| 3517 | 709 |
| 3593 | 652 |
| 3613 | 156 |
| 3638 | 162 |
| 3744 | 344 |
| 3745 | 199 |
| 3751 | 357 |
| 3769 | 718 |
| 3795 | 123 |
| 3800 | 715 |
| 3826 | 552 |
| 3864 | 165 |
| 3906 | 449 |
| 3938 | 440 |
| 3943 | 379 |
| 4008 | 719 |
| 4033 | 118 |
| 4121 | 545 |
| 4163 | 125 |
| 4183 | 350 |
| 4197 | 424 |
| 4251 | 460 |
| 4312 | 451 |
| 4345 | 313 |
| 4359 | 471 |
| 4380 | 182 |
| 4417 | 478 |
| 4458 | 290 |
| 4472 | 382 |
| 4501 | 246 |
| 4597 | 645 |
| 4709 | 455 |
| 4770 | 644 |
| 4771 | 515 |
| 4802 | 623 |
| 4821 | 736 |
| 4927 | 445 |
| 4929 | 372 |
| 4968 | 313 |
| 4977 | 412 |
| 4984 | 613 |
| 4994 | 278 |
| 5020 | 263 |
| 5122 * 2 | 511, 643 |
| 5131 | 734 |
| 5142 | 705 |
| 5161 * 2 | 521, 581 |
| 5185 | 268 |
| 5186 | 96 |
| 5255 | 758 |
| 5304 | 275 |
| 5315 | 133 |
| 5321 | 126 |
| 5336 | 346 |
| 5346 | 315 |
| 5350 | 374 |
| 5368 | 377 |
| 5384 | 741 |
| 5388 | 433 |
| 5409 | 466 |
| 5474 | 750 |
| 5501 | 304 |
| 5517 | 622 |
| 5528 | 633 |
| 5587 | 84 |
| 5644 | 410 |
| 5698 | 518 |
| 5703 | 718 |
| 5704 | 505 |
| 5789 | 509 |
| 5793 | 110 |
| 5809 | 96 |
| 5888 * 2 | 473, 485 |
| 5918 | 702 |
| 5921 | 284 |
| 5922 * 2 | 522, 581 |
| 5929 | 407 |
| 5935 | 290 |
| 5939 | 219 |
| 5954 | 475 |
| 5955 | 137 |
| 5981 | 227 |
| 5984 | 588 |
| CR122 | 528 |
| தொகுதி VI | 909 |

# பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்களுக்கான அட்டவணை


| வ. எண். | கேள்வி எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| | | **சபை** | |
| 1. | Q102:1 | சபை - மூப்பர்களுக்குக் கீழ்ப்படிதல் | 763 |
| 2. | Q103:1 | சபை - தேவன் அங்கத்தினர்களை ஏற்படுத்துகின்றார் | 764 |
| 3. | Q103:2 | சபை - ஒரு சபையார் மத்தியில் பிரச்சனை | 765 |
| 4. | Q104:1 | சபை - சபையில் எதிர்ப்பு | 767 |
| 5. | Q119:2 | சபை - சபையில் கனம்பெறுவதற்கான தகுதியான அடிப்படை | 769 |
| 6. | Q125:1 | சபை - சிலர் யாரையும் சார்ந்திராமல் செயல்படுதல் | 774 |
| 7. | Q101:1 | சபை - கீழ்ப்படிதல் விஷயத்தில் மனசாட்சித் தவிர்க்கப்படுதல்... | 775 |
| | | **பொதுவான கேள்விகள்** | |
| 8. | Q8:1 | விளம்பரக்காரியங்கள் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் நடக்கை | 776 |
| 9 | Q30:1 | பின்வாங்கிப் போனவர்களை - எப்படியாக வரவேற்பது? | 777 |
| 10. | Q148:1 | அர்ப்பணம் - பிறபாடு வெளியே இருப்பவர்களிடத்தில் ஐக்கியமாயிருத்தல் | 778 |
| 11. | Q162:1 | திருத்தங்கள் - எப்படிச் செய்யப்பட வேண்டும்? | 780 |
| 12. | Q175:1 | உடன்படிக்கைகள் - கலந்தாய்விற்குப் பின் கருத்துப்பிரிவினை | 782 |
| 13. | Q226:3 | பிரிவினைகள் - ஒழுங்கில்லாதவர்கள் மற்றும் குழம்பியிருப்பவர்கள் | 783 |
| 14. | Q704:2 | போதித்தல் -ஆரோக்கியமற்றப் போதனைகளைச் சகித்துக்கொண்டிருத்தல் | 785 |
| 15. | Q534:3 | பயண ஊழியர்கள் - உள்ளூர் பயண ஊழியர்களின் வேலை | 787 |
| 16. | Q535:2 | பயண ஊழியர்களை உபசரித்தல் முதலானவைகளுக்கான சரியான வழிமுறை | 789 |
| | | **ஏற்படுத்துதல்** | |
| 17. | Q514:1 | உண்மையான ஏற்படுத்துதல் (ordination) | 790 |
| 18. | Q515:1 | ஏற்படுத்துதலுக்கான அதிகாரம் | 793 |
| 19. | Q517:1 | ஏற்படுத்துதல் - கைகளை வைத்தல் | 794 |
| 20. | Q521:2 | மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் ஏற்படுத்துதல் | 795 |
| 21. | Q521:1 | ஏற்படுத்துதல் - மனிதர்களால் அல்ல | 796 |
| 22. | Q520:4 | ஏற்படுத்துதல் - Watch Tower Bible and Tract Society-இன் ஊழியர்கள் | 797 |
| 23. | Q520:3 | ஏற்படுத்துதல் - பயண ஊழியரின் ஏற்படுத்துதலை நீக்குதல் | 797 |
| 24. | Q520:2 | ஏற்படுத்துதலை - சொசைட்டி நீக்குதல் | 798 |
| 25. | Q520:1 | ஏற்படுத்துதல் - V . D . M. தலைப்பு | 798 |

| | | | |
|---|---|---|---|
| 26. | Q519:1 | தற்காலத்தில் ஊழியர்களின் ஏற்படுத்துதல் | 799 |
| 27. | Q518:2 | ஏற்படுத்துதல் - சொசைட்டியின் கேள்விப்பட்டியலுக்கான நோக்கம் | 800 |
| | | **சகோதரிகள்** | |
| 28. | Q200:1 | பெண் உதவிக்காரார்களின் (Deaconess) - தேர்ந்தெடுத்தல் | 802 |
| 29. | Q538:1 | ஜெபத்தில் சகோதரிகள் வழிநடத்துதல் | 803 |
| 30. | Q660:2 | சகோதரிகள் ஜெபக்கூட்டங்களில் பங்கெடுத்தல் | 803 |
| 31. | Q662:2 | சகோதரிகள் ஜெபத்திற்கு நேராய் நடத்துதல் | 804 |
| 32. | Q660:3 | ஆறாம் தொகுதியில் சகோதரிகளுக்கான கட்டுப்பாடுகள் | 804 |
| 33. | Q661:1 | சகோதரிகள் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளாமல் போதித்தல் | 806 |
| 34. | Q662:1 | சகோதரிகள் வேதாகம ஆராய்ச்சியில் பங்கெடுத்தல் | 806 |
| 35. | Q663:1 | சகோதரிகள் கேட்டுக்கொள்ளப்படாமலேயே கேள்விகளுக்குப் பதில் அளித்தல் | 808 |
| 36. | Q685:1 | ஞாயிறு பள்ளிகளில் சகோதரிகள் போதிக்கலாமா? | 808 |
| 37. | Q704:1 | போதித்தல் - ஸ்திரீகள் அமைதியாய் இருத்தல் | 809 |
| 38. | Q530:2 | ஒரு பணம் குறிப்பது என்ன? | 810 |
| | | **மேய்ப்பரது வேலை** | |
| 39. | Q525:3 | Pastoral work/மேய்ப்பரது வேலை - மூப்பர்கள் இதைக் கண்காணிப்பவர்களல்ல | 810 |
| 40. | Q526:1 | மேய்ப்பரது வேலையில் - மூப்பர்கள் மற்றும் சகோதரிகளின் ஒத்துழைப்பு | 811 |
| 41. | Q529:1 | மேய்ப்பரது வேலை | 814 |
| | | **தேர்ந்தெடுத்தல்** | |
| 42. | Q232:3 | மூப்பர்கள் - சபையில் அதிகாரம் | 816 |
| 43. | Q233:1 | மூப்பர்கள் - சபையின் நலன்களுக்கடுத்தவைகளைக்குறித்துப் பேசுவதற்கு... | 816 |
| 44. | Q234:1 | மூப்பர் - தலைமை மூப்பரின் வேலை | 818 |
| 45. | Q234:2 | மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படாததால், ஒருவர் வேறு இடங்களுக்கும்... | 819 |
| 46. | Q235:1 | மூப்பர்கள் - ஏன் மூப்பர்கள் கவனமாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்? | 820 |
| 47. | Q235:2 | தேர்ந்தெடுத்தல் - சபையில் பெண் போதகர்கள் | 822 |
| 48. | Q236:1 | தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவர் | 822 |
| 49. | Q236:2 | தேர்ந்தெடுத்தல் - வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகள் | 823 |
| 50. | Q236:3 | தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மூப்பர்களின் எண்ணிக்கை | 823 |
| 51. | Q237:1 | தேர்ந்தெடுத்தல் - கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப்படுகின்றது | 825 |
| 52. | Q237:2 | தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவியை நியமித்தல் | 826 |
| 53. | Q238:1 | தேர்ந்தெடுத்தல் - அர்ப்பணம் பண்ணினவர்களும்,...வாக்குகள் அளிக்கலாமா? | 827 |

| | | | |
|---|---|---|---|
| 54. | Q238:2 | தேர்ந்தெடுத்தல் - தொகுதிகள் விநியோகம் பண்ணுபவர்கள் வாக்களித்தல் | 827 |
| 55. | Q238:3 | தேர்ந்தெடுத்தல் - சபையைச் சந்திக்க வரும் சகோதர சகோதரிகள் வாக்கு.. | 828 |
| 56. | Q239:1 | தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களின் நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்படாத பட்சத்தில் | 829 |
| 57. | Q239:2 | தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல் | 831 |
| 58. | Q240:1 | தேர்ந்தெடுத்தல் - சீட்டு மூலம் வாக்களித்தல் | 832 |
| 59. | Q240:2 | தேர்ந்தெடுத்தல் - முன்மொழியப்பட்டவரைக் குறித்துக் கருத்துப்பரிமாறுதல் | 833 |
| 60. | Q242:1 | தேர்ந்தெடுத்தல் - வாக்களிக்காதவர்கள் குறித்துப் பதிவு செய்தல் | 836 |
| 61. | Q242:2 | தேர்ந்தெடுத்தல் - ஏழு பேரைத் தேர்ந்தெடுக்கும்...வழக்கத்தைப் பின்பற்றுதல் | 836 |
| 62. | Q242:3 | தேர்ந்தெடுத்தல் - தகுதியுடையவர், ஆனால் ஞானஸ்நானம் பெறாதவர் | 837 |
| 63. | Q243:1 | தேர்ந்தெடுத்தல் - எப்போது வேண்டுமானாலும் நடத்தப்படலாம். விசேஷமான... | 838 |
| 64. | Q243:2 | தேர்ந்தெடுத்தல் - நியமிக்காமல் ஊழியம் செய்தல் | 839 |
| 65. | Q244:1 | தேர்ந்தெடுத்தல் - மீண்டும் வாக்குச் செலுத்துதல் | 841 |
| 66. | Q245:1 | தேர்ந்தெடுத்தல் - (ஏகமன நியதி) ஜூரி விதி | 842 |
| 67. | Q245:2 | தேர்ந்தெடுத்தல் - வர இயலாதிருக்கும் அங்கத்தினர்கள் கடிதம் மூலம்... | 843 |
| 68. | Q246:1 | தேர்ந்தெடுத்தல் - ஆங்கில மொழிக் கூடுகைகளுக்காக வெளிநாட்டுச் சகோ... | 844 |
| 69. | Q246:2 | தேர்ந்தெடுத்தல் - தகுதியற்றவர்கள் தொடர்பாக | 844 |
| 70. | Q247:1 | தேர்ந்தெடுத்தல் - யார் வாக்களிக்கலாம்? | 847 |
| 71. | Q247:2 | தேர்ந்தெடுத்தல் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் | 847 |
| 72. | Q248:1 | தேர்ந்தெடுத்தல் - பதிலாள் மூலம் வாக்கு | 849 |
| 73. | Q249:1 | தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுத்தலுக்கான சதவீதம் | 850 |
| 74. | Q250:1 | தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல்களை நிறைவுசெய்தல் | 853 |
| 75. | Q253:1 | கூட்டங்களில் கலந்துகொள்ளாத மூப்பர்களின் தேர்ந்தெடுத்தல் | 858 |
| 76. | Q253:2 | தேர்ந்தெடுத்தல் - குழப்பத்திலிருக்கும்போது வாக்களிக்காமல் இருப்பது தவறா? | 859 |
| 77. | Q253:3 | தேர்ந்தெடுத்தல் - சபைக்கான தகுதியான ஊழியர்கள் | 859 |
| 78. | Q254:1 | தேர்ந்தெடுத்தல் - வாக்குறுதி தொடர்பாக | 861 |
| 79. | Q255:1 | தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும்...விதிமுறைகள் | 862 |
| 80. | Q256:1 | தேர்ந்தெடுத்தல் - மற்றச் சபையார் மத்தியிலிருந்து மூப்பர்களைத் தேர்ந்டுெத்தல் | 865 |
| 81. | Q256:2 | தேர்ந்தெடுத்தல் - சதவீதம் தொடர்பாக | 865 |
| 82. | Q525:2 | மேய்ப்பர் - நீங்கள் சபையை வந்து சந்திக்க இயலாதிருக்கும் நிலையிலிருக்க... | 869 |
| | | **கூட்டங்கள்** | |
| 83. | Q476:1 | கூட்டங்கள் - புதிய வகுப்புகள் உருவாக்கிடும் வேலைக்கான எண்ணிக்கை | 869 |

For further copies Contact :

8428737474